1 அதிகாரம்

எரேமியாவின் ஊழியக்காலம் (எரே 1:1-3). கர்த்தர் எரேமியாவை தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கிறார். எரேமியா கர்த்தருடைய ஊழியத்தை செய்ய தயங்குகிறார். கர்த்தர் அவருக்கு ஆதரவாகப் பேசி, அவருக்கு ஊழியத்தைக் கொடுக்கிறார் (எரே 1:4-10). வாதுமை மரம், பொங்குகிற பானை ஆகிய தரிசனங்கள். கல்தேயர்கள் யூதாவையும் எருசலேமையும் அழிப்பதற்கு நெருங்கி வருகிறார்கள் (எரே 1:11-16). எரேமியா தன்னுடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யுமாறு கர்த்தர் அவரை உற்சாகப்படுத்துகிறார் (எரே 1:17-19).

எரேமியா
எரே 1:1-3

எரே 1:1. பென்யமீன் தேசத்திலுள்ள ஆனதோத் ஊரிலிருந்த ஆசாரியர்களில் ஒருவனாகிய இல்க்கியாவின் குமாரன் எரேமியாவினுடைய வசனங்கள்:

எரே 1:2. ஆமோனுடைய குமாரனாகிய யோசியா என்கிற யூதாவுடைய ராஜாவின் நாட்களில், அவன் அரசாண்ட பதின்மூன்றாம் வருஷத்தில் இவனுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று.

எரே 1:3. அப்புறம் யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்கிற யூதாவுடைய ராஜாவின் நாட்களிலும், யோசியாவின் குமாரனாகிய சிதேக்கியா என்கிற யூதாவுடைய ராஜாவின் பதினோராம் வருஷத்து முடிவு மட்டாகவும், எருசலேம் ஊரார் ஐந்தாம் மாதத்தில் சிறைப்பட்டுப் போகும்வரைக்கும் கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாயிற்று.

எரேமியா தீர்க்கதரிசியின் வம்சவரலாறும், அவர் தீர்க்கதரிசனம் சொன்ன காலமும் இங்கு முன்னுரையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் இல்க்கியாவின் குமாரன். இல்க்கியா ஆனதோத் ஊரிலிருந்த ஆசாரியர்களில் ஒருவர். எரேமியா என்னும் பெயருக்கு "கர்த்தரால் வளர்க்கப்பட்டவர்" என்று பொருள் சொல்லலாம். எரேமியா ஆசாரியர்களில் ஒருவர். ஆசாரியர்கள் கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களுக்கு போதிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள் சத்தியத்தை உபதேசம் பண்ணுவதற்கு கர்த்தருடைய அதிகாரத்தைப் பெற்றவர்கள்.

எரேமியா ஆசாரிய ஊழியம் செய்தாலும், கர்த்தர் அதோடு சேர்ந்து, அவருக்கு தீர்க்கதரிசன ஊழியத்தையும் கொடுக்கிறார். எரேமியாவைப்போல எசேக்கியேலும், ஆசாரியராகவும் தீர்க்கதரிசயாகவும் ஊழியம் செய்தார். ஜனங்களுடைய பாவங்கள் அதிகரித்தபோது, கர்த்தர் ஆசாரிய ஊழியத்தில் இருந்தவர்களை, தீர்க்கதரிசன ஊழியத்திற்கும் பயன்படுத்தினார். எரேமியாவின் காலத்தில் ஜனங்களுடைய பாவங்கள் அதிகமாயிருந்தது. தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்தது. இஸ்ரவேல் ஜனத்தாரின் ஆவிக்குரிய ஜீவியம் பிரகாசமில்லாமல் மங்கியிருந்தது.

ஆனதோத் என்னும் ஊர் ஆசாரியர்களின் பட்டணமாகும். இது எருசலேமிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ளது. இது பென்யமீன் தேசத்திலுள்ள பட்டணமாகும். ஆசாரியனாகிய அபியத்தாரின் நிலங்கள் ஆனதோத்திலிருந்தது (1இராஜா 2:26). ஆனதோத் பட்டணத்தில் ஏராளமான ஆசாரியர்கள் வாசம்பண்ணினார்கள். அவர்களில் இல்க்கியாவின் குமாரனாகிய எரேமியாவும் ஒருவர்.

எரேமியா தீர்க்கதரிசி யோசியா அரசாண்ட பதிமூன்றாம் வருஷத்தில் தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பித்தார். யோசியா ராஜாவின் ஆட்சிக்காலத்தின், பதிமூன்றாம் வருஷத்தில், யூதேயா தேசத்தில், ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று. அவர் யூதாவையும், எருசலேமையும் சுத்திகரித்தார். மேடைகளையும், தோப்பு விக்கிரகங்களையும் யூதா தேசத்திலிருந்து நீக்கிப்போட்டார்.

"அவன் தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில், தான் இன்னும் இளவயதாயிருக்கையில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்து, பன்னிரண்டாம் வருஷத்தில் மேடைகள் தோப்புகள் சுரூபங்கள் விக்கிரகங்கள் ஆகிய இவைகள் அற்றுப்போகும்படி, யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான்" *(2நாளா 34:3).*

யோசியா யூதாதேசத்தை சுத்திகரித்த நாட்களில், எரேமியா தீர்க்கதரிசி யூதா தேசத்திலே கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய் அறிவித்தார். அப்போது எரேமியாவும், யோசியா ராஜாவும் இளமைப்பிராயத்திலிருந்தார்கள். எரேமியாவின் தீர்க்கதரிசன ஊழியம், யோசியா மேற்கொண்ட சுத்திகரிப்பு ஊழியத்திற்கும், மறுமலர்ச்சி ஊழியத்திற்கும் மிகவும் பிரயோஜனமாயிருந்தது.

யூதா தேசத்தில், ராஜாவும், தீர்க்கதரிசியும் இணைந்து கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறார்கள். இருவருமே இளமைப்பிராயத்திலிருக்கிறார்கள். தேசத்தில் அதிகாரமுள்ளவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது, ஜனங்கள் அவர்களுடைய ஊழியத்திற்கு மதிப்பும் மரியாதையும் கொடுப்பார்கள் என்பதே பொதுவான எதிர்பார்ப்பு. இவ்விதமாக, எஸ்றாவின் காலத்தில் மிகப்பெரிய ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று.

"அப்பொழுது ஆகாய் தீர்க்கதரிசியும், இத்தோவின் குமாரனாகிய சகரியா என்னும் தீர்க்கதரிசியும், யூதாவிலும் எருசலேமிலுள்ள யூதருக்கு இஸ்ரவேல் தேவனின் நாமத்திலே தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அப்பொழுது செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும் யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவும் எழும்பி, எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தைக் கட்டத்தொடங்கினார்கள்; அவர்களுக்குத் திடன்சொல்ல தேவனுடைய தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள்" *(எஸ்றா 5:1,2).*

யோசியா ராஜாவும் எரேமியாவும் கர்த்தருடைய செய்திகளை ஜனங்களுக்கு சொன்னபோது, அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வருவார்கள் என்றும், விக்கிரகாராதனையைவிட்டு விலகி வந்துவிடுவார்கள் என்றும், தேவனுடைய கோபத்திற்கும் அவருடைய நியாயத்தீர்ப்புக்கும் தப்பித்துக்கொள்வார்கள் என்றும் பொதுவான எதிர்பார்ப்பு உண்டாயிற்று. ஆனால் எதிர்பார்த்த பிரகாரம், யூதா தேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாகவில்லை.

யோசியா ராஜா அரசாண்ட பதினெட்டாம் வருஷத்தில், யூதாதேசத்தில் விக்கிரகாராதனை அதிகமாய் நடைபெற்றது. யோசியா ராஜாவும் விக்கிரகங்களை நீக்கிப்போடவில்லை. தேசம் விக்கிரகாராதனையிலிருந்து முழுவதுமாய் சுத்திகரிக்கப்படவில்லை. ஜனங்கள் சீர்திருந்த விரும்பவில்லை. யூதர்களுடைய இருதயம் கடினப்பட்டிருந்தது.

யோசியா ராஜாவும், எரேமியா தீர்க்கதரிசியும் ஜனங்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொன்னாலும், அவர்களோ கர்த்தருடைய வசனங்களைக் கேட்காதபடிக்கு தங்கள் செவிகளை அடைத்துக் கொண்டார்கள். கர்த்தரிடத்தில் வருவதையும், மனந்திரும்புவதையும், கர்த்தரை ஆராதிப்பதையும் வெறுத்தார்கள். இதனால் யூதாதேசம் அழிந்துபோவதை ராஜாவாலும், தீர்க்கதரிசியாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. யூததேசத்தின்மீதும், எருசலேமின்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வந்தது.

யூதா தேசத்தார் கர்த்தரைவிட்டு விலகி, துன்மார்க்கமாய் ஜீவித்து, கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தபோது, எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்கு எச்சரிப்பாய்ச் சொன்னார். தேசத்தின்மீது வரப்போகிற தேவனுடைய நியாயத்தீர்ப்பையும் தீர்க்கதரிசனமாய் அறிவித்தார். ஜனங்கள் தீர்க்கதரிசியின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. ஆனாலும் எரேமியா தீர்க்கதரிசி தன்னுடைய ஊழியத்தை நிறுத்திக்கொள்ளாமல், ஜனங்கள் மத்தியிலே வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்து தொடர்ந்து எச்சரிக்கிறார்.

எரேமியா தீர்க்கதரிசி யோயாக்கீம் ராஜாவினுடைய ஆட்சிக்காலத்திலும், சிதேக்கியா ராஜாவினுடைய ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்து தீர்க்கதரிசன ஊழியம் செய்கிறார். ஒவ்வொருவரும் பதினொரு வருஷம் ஆட்சிபுரிந்தார்கள். எருசலேம் ஊரார் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகும் காலம் வரையிலும், எரேமியா ஜனங்களுக்கு தீர்க்கதரிசனம் சொன்னார் (எரே 1:3). எருசலேமிலும் யூதேயாவிலும், பாபிலோனுக்குக் கொண்டுபோகும்படி, இஸ்ரவேல் ஜனத்தார் சிறைகளாக பிடித்து வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்குள் எரேமியாவும் விலங்கிடப்பட்டிருந்தார். அப்போது எரேமியாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. எரேமியா அப்போதும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார் (எரே 40:1).

யோசியா ராஜா அரசாண்ட பதிமூன்றாம் வருஷத்திலிருந்து, இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போன காலம் வரைக்கும், இடைப்பட்ட காலம் நாற்பது வருஷங்களாகும். எரேமியா தீர்க்கதரிசி இந்த நாற்பது வருஷங்களாக தீர்க்கதரிசன ஊழியம் செய்தார். ஜனங்களுடைய துன்மார்க்கமான ஜீவியங்களுக்கு விரோதமாய் எரேமியா அவர்களை எச்சரித்தார். தேவனுடைய கோபம் அவர்கள்மீது வரும் என்று சொன்னார்.

ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசி எரே 1:4-10

எரே 1:4. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 1:5. நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன் என்று சொன்னார்.

எரே 1:6. அப்பொழுது நான்: ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறுபிள்ளையாயிருக்கிறேன் என்றேன்.

எரே 1:7. ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக.

எரே 1:8. நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லி,

எரே 1:9. கர்த்தர் தமது கரத்தை நீட்டி, என் வாயைத் தொட்டு: இதோ, என் வார்த்தைகளை உன் வாயிலே வைக்கிறேன்.

எரே 1:10. பார், பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் உன்னை நான் இன்றையதினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்தினேன் என்று கர்த்தர் என்னுடனே சொன்னார்.

எரேமியா இளம்பிராயத்திலிருந்தபோது, கர்த்தர் அவரை தம்முடைய தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைத்தார். கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று. கர்த்தர் எரேமியாவிடம், "உன்னை ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாக கட்டளையிட்டேன்" (எரே 1:4) என்று சொன்னார். எரேமியா முதலாவதாக யூததேசத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லவேண்டும். அதன் பின்பு அவர் யூதாதேசத்திற்கு அருகாமையிலுள்ள மற்ற தேசத்தாருக்கும் கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லவேண்டும். எரேமியா அந்த தேசங்களுக்கு கயிறுகளையும் நுகங்களையும் உண்டுபண்ணி அனுப்பவேண்டும்.

"கர்த்தர் என்னை நோக்கி: நீ உனக்குக் கயிறுகளையும் நுகங்களையும் உண்டுபண்ணி, அவைகளை உன் கழுத்திலே பூட்டிக்கொண்டு, அவைகளை எருசலேமுக்குச் சிதேக்கியா ராஜாவினிடத்தில் வரும் ஸ்தானாபதிகள் கையிலே ஏதோமின் ராஜாவுக்கும், மோவாபின் ராஜாவுக்கும், அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கும், தீருவின் ராஜாவுக்கும், சீதோனின் ராஜாவுக்கும் அனுப்பு" (எரே 27:2,3) என்று சொன்னார்.

கர்த்தர் எரேமியாவை பல ஜாதிகளிடத்திற்கு அனுப்பினார். அவர் எல்லா ஜாதிகளுக்கும் கர்த்தருடைய கையிலிருந்து வாங்கின பாத்திரத்தை குடிக்க கொடுக்கவேண்டும். "அப்பொழுது நான் அந்தப் பாத்திரத்தைக் கர்த்தருடைய கையிலிருந்து வாங்கி, கர்த்தர் என்னை அனுப்பின எல்லா ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தேன்" (எரே 25:17).

எரேமியா தீர்க்கதரிசி, தன்னுடைய தீர்க்கதரிசன எழுத்துக்கள் மூலமாய், இக்காலத்திலும் தேசங்களுக்கு தீர்க்கதரிசியாயிருக்கிறார். தேசத்தில் பாவம் அதிகரிக்கும்போது, அந்த தேசத்தின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். இது எரேமியாவின் காலத்தில் நடைபெற்றதுபோல, இக்காலத்திலும் நடைபெறும்.

கர்த்தர் தம்முடைய அநாதி தீர்மானத்தின் பிரகாரமாக, எரேமியாவை, தம்முடைய தீர்க்கதரிசன ஊழியத்திற்கு தெரிந்தெடுத்திருக்கிறார். "நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்" (எரே 1:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா பிறப்பதற்கு முன்பாகவே, கர்த்தர் அவரை தம்முடைய தீர்க்கதரிசன ஊழியத்திற்காக தெரிந்தெடுத்திருக்கிறார். எரேமியா பிறப்பதற்கு முன்பாகவே கர்த்தர் அவரை அறிந்திருக்கிறார். எரேமியா தன் தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிப்படுவதற்கு முன்பாகவே, கர்த்தர் அவரை பரிசுத்தம் பண்ணியிருக்கிறார். எரேமியா தமக்கு தீர்க்கதரிசன ஊழியம் செய்யவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். இதற்காக கர்த்தர் எரேமியாவை, அவருடைய தாயின் கர்ப்பத்திலிருந்தே, தம்முடைய ஊழியத்திற்கு வேறுபிரித்துவிடுகிறார்.

நம்முடைய சுயபுத்தியினாலோ, சுயஞானத்தினாலோ, நம்முடைய படிப்பறிவினாலோ நாம் தீர்க்கதரிசிகளாவதில்லை. கர்த்தரே தம்முடைய ஊழியக்காரர்களை,தமக்கு தீர்க்கதரிசன ஊழியம் செய்யுமாறு அழைக்கிறார். கர்த்தரே தீர்க்கதரிசிகளை நியமித்து, அவர்களுக்கு தம்முடைய வார்த்தைகளைக் கொடுக்கிறார். கர்த்தருடைய சித்தமில்லாமல், எந்த மனுஷனும், தன்னுடைய சுயசித்தத்தினால் கர்த்தருடைய தீர்க்கதரிசியாவதில்லை.

கர்த்தர் எரேமியாவை தம்முடைய தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கிறார். தீர்க்கதரிசன ஊழியம் மகிமையான, உன்னதமான, மேன்மையான ஊழியம். ஆனால் எரேமியாவோ, மகிமையான தீர்க்கதரிசன ஊழியத்தை செய்வதற்கு, தனக்கு தகுதியில்லை என்று நினைத்து, கர்த்தரிடத்தில் பணிவோடு மறுக்கிறார். "ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறுபிள்ளையாயிருக்கிறேன்" (எரே 1:6) என்று எரேமியா சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை திரளான ஜனங்களுக்கு சொல்லவேண்டும். சாதாரண ஜனங்களுக்கு சொல்வதுபோல, ராஜாக்களுக்கும் பிரபுக்களுக்கும் கர்த்தருடைய வெளிப்பாடுகளை சொல்லவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை திக்காமல், திணறாமல் சரளமாய்ப் பேசவேண்டும். பயத்தோடு பேசக்கூடாது. தயக்கத்தோடும், தெளிவில்லாமலும் பேசக்கூடாது. தீர்க்கதரிசிகள், கர்த்தருடைய வார்த்தைகளை, அதிகாரத்தோடு சொல்லவேண்டும். எரேமியாவோ சிறுபிள்ளையாகயிருக்கிறார். தன்னால் அதிகாரத்தோடு பேசமுடியாது என்றும், தன்னால் பெரியவர்களிடத்தில் துணிச்சலாய்ப் பேசமுடியாது என்றும் தயங்குகிறார்.

எரேமியாவைப்போலவே நாமும் பல சமயங்களில் கர்த்தர் கொடுக்கிற ஊழியத்தை செய்ய தயங்குகிறோம். கர்த்தருடைய பலத்தை நோக்கிப் பார்ப்பதற்குப் பதிலாக, நம்முடைய பலவீனத்தையே நோக்கிப் பார்க்கிறோம். கர்த்தர் நமக்குக் கொடுக்கிற தாலந்துகளை தப்பிதமாகப் பயன்படுத்திவிடுவோமோ என்று யோசிக்கிறோம். நம்மை அழைத்த கர்த்தர் உண்மையுள்ளவர். கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்கு நம்மை அழைக்கும்போது, அந்த ஊழியத்தை செய்வதற்கு அவர் நம்மைத் தகுதிப்படுத்துகிறார். நம்மை கர்த்தருடைய கரங்களில் பணிவோடும், மனத்தாழ்மையோடும், விசுவாசத்தோடும் ஒப்புக்கொடுக்கும்போது, கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காகவும், தம்முடைய பிள்ளைகளின் பிரயோஜனத்திற்காகவும், நம்மை அற்புதமாய்ப் பயன்படுத்துவார்.

கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு எரேமியா தயங்கினாலும், கர்த்தர் அவரை உற்சாகப்படுத்துகிறார். எரேமியா யாருக்கும் பயப்படவேண்டாம் என்றும், கர்த்தர் எரேமியாவை காப்பதாகவும், அவரோடு கூடயிருப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார்.

“ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக. நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 1:7,8).

கர்த்தர் நமக்கு ஊழியத்தைக் கொடுக்கும்போது, நம்முடைய வயது கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு தடையாகயிருக்கக்கூடாது. கர்த்தருடைய கட்டளைக்கு எல்லோரும் கீழ்ப்படியவேண்டும். சிறுபிள்ளைகளும், பெரியோரும் கீழ்ப்படியவேண்டும். சிறுபிள்ளைகள் தம்முடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டியதில்லை என்று கர்த்தர் எங்கும் சொல்லவில்லை. கர்த்தர் நம்மை அனுப்புகிற எல்லாரிடத்திற்கும் நாம் போகவேண்டும். கர்த்தர் நமக்கு கட்டளையிடுகிறவைகளையெல்லாம் அவர்களுக்கு சொல்லவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்தார்கள். அவர்களை விடுவித்து வரும் ஊழியத்தை கர்த்தர் மோசேயிடம் ஒப்புக்கொடுத்தார். ஆனால் மோசேயோ தன்னுடைய திக்குவாயையும், மந்தநாவையும் காரணமாகச் சொல்லி, கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்தார். மோசே தம்முடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனதற்காக, கர்த்தர் மோசேயின் மீது கோபங்கொண்டார்.

“அப்பொழுது கர்த்தர் மோசேயின் மேல் கோபமூண்டவராகி: லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவா? அவன் நன்றாய்ப் பேசுகிறவன் என்று அறிவேன்; அவன் உன்னைச் சந்திக்கப்புறப்பட்டுவருகிறான்; உன்னைக்காணும் போது அவன் இருதயம் மகிழும்" (யாத் 4:14).

சாமுவேல் சிறுபிள்ளையாகயிருந்த போதே, அவருக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை சிறுபிள்ளையாகிய சாமுவேல், தன்னைவிட வயதில் அதிகம் மூத்தவரான ஏலியிடம் சொன்னார். கர்த்தருக்கு சித்தமானால், அவர் சிறுபிள்ளைகளையும் தம்முடைய தீர்க்கதரிசிகளாக பயன்படுத்துவார். பாலகர்களுடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகளையும் கர்த்தர் பலப்படுத்துவார். அவர்களையும் தம்முடைய ஊழியத்திற்கு அபிஷேகம்பண்ணுவார். ஊழியம் கர்த்தருடையது. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, தமது ஊழியத்தை நடப்பிக்கிறார்.

தன்னுடைய ஊழியத்தில் அதிகமான எதிர்ப்புக்கள் வருமோ என்று நினைத்து, எரேமியா ஊழியம் செய்ய பயப்படக்கூடாது. கர்த்தர் அவரைப் பாதுகாப்பார். எரேமியா மனுஷருடைய முகத்தைப் பார்த்து பயப்படக்கூடாது. அவர்கள் வயதில் மூத்தவர்களாகயிருந்தாலும், சரீரத்தில் வீரமிகுந்தவர்களாக கெம்பீரமாயிருந்தாலும், எரேமியா அவர்களுக்கு பயப்படக்கூடாது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய நாமத்தினால் பேசுகிறார்கள். கர்த்தரே எரேமியாவை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். எரேமியா தன்னுடைய சுயசித்தத்தையோ, சுயவார்த்தைகளையோ பேசவில்லை. அவர் கர்த்தருடைய வார்த்தையைப் பேசுகிறார். ராஜாதி ராஜாவினுடைய வார்த்தைகளைப் பேசுகிறார். கர்த்தாதி கர்த்தரிடத்திலிருந்து அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டு பேசுகிறார்.

கர்த்தர் தனக்கு கட்டளையிடுகிறவைகளையெல்லாம், எரேமியா பயப்படாமல் பேசவேண்டும். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை நாம் பயப்படாமல் செய்யவேண்டும். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கிற செய்தியை, மனுஷருடைய முகத்திற்குப் பயப்படாமல் பேசவேண்டும்.

“உன் நெற்றியை வச்சிரக்கல்லைப் போலாக்கினேன், கன்மலையைப்பார்க்கிலும் கெட்டியாக்கினேன்; அவர்கள் கலகமுள்ள வீட்டாரென்று நீ அவர்களுக்குப் பயப்படாமலும் அவர்கள் முகங்களுக்குக் கலங்காமலும் இரு என்றார்" (எசே 3:9).

கர்த்தர் எரேமியாவின் வாயை தமது கரத்தினால் தொடுகிறார். தம்முடைய வார்த்தைகளைப் பேசுவதற்கு, கர்த்தர் எரேமியாவை பெலப்படுத்துகிறார், தைரியப்படுத்துகிறார். எரேமியாவின் வாயில் கர்த்தருடைய வார்த்தைகள் நிரம்பியிருக்கிறது. எரேமியா கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நிற்கும்போது, அவருக்கு கர்த்தருடைய மகிமையைக் காணும் தரிசனம் கிடைக்கிறது. கர்த்தருடைய மகிமை தெய்வீக மகிமை. கர்த்தர் தமது கரத்தை நீட்டி எரேமியாவைத் தொடுகிறார். அப்போது எரேமியாவின் உதடுகள் திறக்கிறது. கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை எரேமியாவின் வாயிலே வைக்கிறார்.

கர்த்தர் எரேமியாவின் சிந்தையில் அறிவையும் ஞானத்தையும் கொடுப்பதோடு, அவருடைய வாயிலே வார்த்தைகளையும் கொடுக்கிறார். எரேமியா பேசவேண்டிய வார்த்தைகளை, பரிசுத்த ஆவியானவரே அவருக்குப் போதிக்கிறார். எரேமியா பயத்தோடும் நடுக்கத்தோடும் பேசாமல், கர்த்தருடைய அதிகாரத்தோடு தைரியமாய்ப் பேசவேண்டும்.

"அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்" (1கொரி 2:13).

"நான் இன்றையதினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்தினேன்" (எரே 1:10) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார். எரேமியா இப்போது சாதாரண ஆசாரியராயிருக்கிறார். யூதசமுதாயத்திலே இவர் பிரசித்தி பெற்றவருமல்ல. ஆனால் கர்த்தரோ எரேமியாவை ஜாதிகளின்மேலும், ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்தியிருக்கிறார். எரேமியா, "பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும்" வேண்டும்.

கர்த்தர் எரேமியாவை யூதாதேசத்திற்கு ராஜாவாக ஆக்கவில்லை. பட்டயத்தினால் ஜனங்களை அடக்கி ஆளுகை செய்யக்கூடிய அதிகாரம் எரேமியாவுக்கு கொடுக்கப்படவில்லை. கர்த்தர் எரேமியாவின் கையில் பட்டயத்தைக் கொடுக்காமல், அவருடைய வாயில் தம்முடைய வார்த்தையைக் கொடுக்கிறார். அவருக்கு தீர்க்கதரிசன ஊழியத்தைக் கொடுக்கிறார். கர்த்தர் எரேமியாவை ஜாதிகளின்மேலும் ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்துகிறார். அவர்களிடமிருந்து கப்பம் வசூலிப்பதற்காகவோ, வரிவசூலிப்பதற்காகவோ கர்த்தர் எரேமியாவை ஏற்படுத்தவில்லை. பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், அது மாத்திரமல்ல கட்டவும், நாட்டவும் கர்த்தர் எரேமியாவை ஏற்படுத்துகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி ஜாதிகளின் மத்தியிலும், ராஜ்யங்களின் மத்தியிலும் ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு ஊழியம் செய்யவேண்டும். ஜனங்கள் மத்தியில் காணப்படுகிற விக்கிரகாராதனைகளை அழிக்கவேண்டும். தோப்பு விக்கிரகங்களை இடிக்கவேண்டும். விக்கிரகாராதனைக்கு பயன்படுகிற பச்சையான மரங்களை பிடுங்கவேண்டும். ஜனங்கள் மத்தியில் காணப்படுகிற துன்மார்க்கமான சுபாவங்களை நீக்கிப்போடவேண்டும்.

யூதர்கள் மத்தியிலே விக்கிரகாராதனை பற்றிய பழக்க வழக்கங்களும், தோப்பு விக்கிரகங்களைப்பற்றிய பாரம்பரியங்களும், அவர்களுடைய ஜீவியங்களில் ஆழமாய் வேரூன்றி வளர்ந்திருக்கிறது. எரேமியா தீர்க்கதரிசி விக்கிரகாராதனையின் வேரைப்பிடுங்கவேண்டும். பாவத்தின் ராஜ்யத்தை கவிழ்க்கவேண்டும். ஆவிக்குரிய மறுமலர்ச்சியை உண்டுபண்ணவேண்டும். கர்த்தருடைய வார்த்தையையும், அவருடைய நீதியையும் ஜாதிகளின் மத்தியிலும், ராஜ்யங்களின் மத்தியிலும் கட்டவும் நாட்டவும் வேண்டும்.

எரேமியா தீர்க்கதரிசி ஜனங்களுக்கு முன்பாக ஜீவனையும் மரணத்தையும் வைக்கவேண்டும். நன்மையையும் தீமையையும் வைக்கவேண்டும். ஜனங்கள் ஜீவனையும், நன்மையையும் தெரிந்துகொள்ள அவர்களுக்குப் போதிக்கவேண்டும். மரணத்தையும் தீமையையும் அழிப்பதற்கு ஊழியம் செய்யவேண்டும்.

"பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில், நான் விரோதமாய்ப் பேசின அந்தஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன். கட்டுவேன், நாட்டுவேன் என்றும், ஒரு ஜாதியையும் ஒரு ராஜ்யத்தையும் குறித்து நான் சொல்லுகிறதுமுண்டு. அவர்கள் என் சத்தத்தைக் கேளாமல், என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால், நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்" (எரே 18:7-10).

பாவத்திலும் துன்மார்க்கத்திலும் ஜீவிக்கிறவர்கள் அழிந்துபோவார்கள். அவர்கள் வேரோடு பிடுங்கப்பட்டு ஒன்றுமில்லாமல் போய்விடுவார்கள். தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தருக்கு முன்பாக பயபக்தியாயும், பரிசுத்தமாயும் ஜீவிக்கிறவர்களோ மறுபடியுமாய் கட்டப்படுவார்கள், நாட்டப்படுவார்கள்.

நீ என்னத்தைக் காண்கிறாய் எரே 1:11-19

எரே 1:11. பின்னும் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: எரேமியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்று கேட்டார்; வாதுமைமரத்தின் கிளையைக் காண்கிறேன் என்றேன்.

எரே 1:12. அப்பொழுது கர்த்தர்: நீ கண்டது சரியே; என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார்.

எரே 1:13. கர்த்தருடைய வார்த்தை இரண்டாந்தரம் எனக்கு உண்டாகி, அவர்: நீ காண்கிறது என்ன என்று கேட்டார்; பொங்குகிற பானையைக் காண்கிறேன், அதின் வாய் வடக்கேயிருந்து நோக்குகிறது என்றேன்.

எரே 1:14. அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: வடக்கேயிருந்து தீங்கு தேசத்தினுடைய குடிகள் எல்லார்மேலும் வரும்.

எரே 1:15. இதோ, நான் வடதிசை ராஜ்யங்களின் வம்சங்களையெல்லாம் கூப்பிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் வந்து அவனவன் தன் தன் சிங்காசனத்தை எருசலேமின் ஒலிமுகவாசல்களுக்கும், அதின் சுற்றுமதில்கள் எல்லாவற்றிற்கும் விரோதமாகவும், யூதாதேசத்து எல்லாப் பட்டணங்களுக்கும் விரோதமாகவும் வைப்பார்கள்.

எரே 1:16. அவர்கள் என்னைவிட்டு அந்நிய தேவர்களுக்குத் தூபங்காட்டி, தங்கள் கைகளின் கிரியையைப் பணிந்துகொண்ட அவர்களுடைய சகல தீமைகளினிமித்தமும் நான் என் நியாயத்தீர்ப்புகளை அவர்களுக்கு விரோதமாகக் கூறுவேன்.

எரே 1:17. ஆகையால் நீ உன் அரையைக் கட்டிக்கொண்டு நின்று, நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் அவர்களுக்குச் சொல்; நான் உன்னை அவர்களுக்கு முன்பாகக் கலங்கப்பண்ணாதபடிக்கு, நீ அவர்கள் முகத்துக்கு அஞ்சாதிரு.

எரே 1:18. இதோ, தேசமனைத்துக்கும், யூதாவின் ராஜாக்களுக்கும், அதின் பிரபுக்களுக்கும், அதின் ஆசாரியர்களுக்கும், தேசத்தின் ஜனங்களுக்கும் எதிராக நான் உன்னை இன்றையதினம் அரணிப்பான பட்டணமும், இருப்புத்தூணும், வெண்கல அலங்கமும் ஆக்கினேன்.

எரே 1:19. அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியிடம் தரிசனத்தின் மூலமாய்ப் பேசுகிறார். யூதாவின் புத்திரர்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. கல்தேயர்கள் யூதாவையும் எருசலேமையும் அழித்துப்போடுவார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்.

யூதா தேசத்தார்மீது அழிவு வருகிறது. அவர்களுடைய பாவம் மிகுதியாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இனிமேலும் தாமதமாகாது. யூதா தேசத்திலே அழிவு சீக்கிரத்தில் வரும். அந்த அளவுக்கு, அங்கே பாவம் பெருகியிருக்கிறது. கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியிடம், "எரேமியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய்" (எரே 1:11) என்று கேட்கிறார். அதற்கு எரேமியா, "வாதுமை மரத்தின் கிளையைக் காண்கிறேன்" என்று பதில் சொல்லுகிறார்.

"கிளை" என்பது "கோலைக்" குறிக்கிற வார்த்தை. "கோல்" தண்டனையையும், சிட்சையையும் குறிப்பிடுகிறது. நாம் பாவம் செய்யும்போது கர்த்தர் தம்முடைய கோலால் நம்மைத் தண்டிப்பார். பிரம்பைக் கையாடாதவன் தன் மகனை பகைக்கிறான். நாம் பாவம் செய்யும்போது நம்மை சிட்சிக்கிற பிரம்பு, நமக்கு மேலே தொங்கிக்கொண்டிருக்கிறது. எரேமியா இங்கு பார்க்கிற கோல் வாதுமை மரத்தின் கிளையாகும்.

வசந்தகாலத்தில், யூததேசத்தில் ஏராளமான வாதுமை மரங்கள் முளைத்திருக்கும். மற்ற மரங்களைவிட வாதுமை மரம் சீக்கிரத்தில் துளிர்விட்டு பூ பூக்கும். மற்ற மரங்கள் துளிர்க்க ஆரம்பிப்பதற்கு முன்பாகவே, வாதுமை மரம் பூ பூத்துவிடும். எபிரெய பாஷையிலே, "வாதுமை மரம்" என்பதற்கான எபிரெய பெயருக்கு, "தீவிரமாய் வளருகிற மரம்" என்று பொருள்.

கர்த்தர் எரேமியாவுக்கு தரிசனத்தின் பொருளை விளக்குகிறார். "நீ கண்டது சரியே, என் வார்த்தையை தீவிரமாய் நிறைவேற்றுவேன்" (எரே 1:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா கவனமாகப் பார்க்கிறார். எரேமியா தரிசனத்தைப் பார்த்து, எதைப் புரிந்துகொள்ளவேண்டுமோ, அதை சரியாகப் பார்க்கிறார். கர்த்தர் எரேமியாவுக்கு ஆரம்பத்தில், வாதுமை மரத்தின் கிளையை தரிசனமாகக் காண்பிக்கிறார்.

வாதுமை மரம் தீவிரமாய் வளருகிற மரம். மற்ற மரங்கள் இலைவிட்டு துளிர்ப்பதற்கு முன்பாக, வாதுமை மரம் பூ பூத்துவிடும். வாதுமை மரம் வேகமாக வளரக்கூடியது. அதுபோலவே கர்த்தரும் தம்முடைய வார்த்தையை தீவிரமாய் நிறைவேற்றுவார். கர்த்தர் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றும்போது, அதைப் பார்ப்பதற்கு எரேமியாவும் உயிரோடிருப்பார். கர்த்தருடைய கிரியைகளும், அவருடைய நியாயத்தீர்ப்புகளும், யூதஜனத்தார்மீது, எரேமியாவின் காலத்திலேயே வந்துவிடும்.

யூதாதேசத்தாருக்கு நியமிக்கப்பட்ட அழிவு எப்போது வரும் என்பதை, கர்த்தர் ஒரு தரிசனத்தின் மூலமாய் சொல்லுகிறார். வாதுமை மரத்தின் கிளை சீக்கிரமாய் வளருவதுபோல, கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பும் சீக்கிரமாய் வரும். கர்த்தர் தம்முடைய வார்த்தையை தீவிரமாய் நிறைவேற்றுவார். யூதர்களுக்கு சீக்கிரத்தில் அழிவு வரும்.

கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு இரண்டாந்தரம் உண்டாயிற்று. கர்த்தர் எரேமியாவிடம் மறுபடியுமாக, "நீ காண்கிறது என்ன" (எரே 1:13) என்று கேட்கிறார். எரேமியா இப்போது பொங்குகிற பானையைக் காண்கிறார். அந்தப் பானை எரிகிற அடுப்பின்மீது ஏற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பானை இப்போது பொங்குகிறது. எருசலேமும் யூதாவும், அமைதியில்லாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. கொதிக்கிற தண்ணீரைப்போல, யூதாவின் ஜனத்தார் நிலையில்லாமல், தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு அடையாளமாகவே எரேமியா பொங்குகிற பானையைக் காண்கிறார்.

பானையிலுள்ளது பொங்கும்போது, பானையிலுள்ள தண்ணீரெல்லாம் நீராவியாக மேலே போய்விடும். பானையிலுள்ள தண்ணீரின் அளவும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துகொண்டேபோகும். அதுபோலவே யூதா தேசத்திலுள்ள ஜனங்களின் பெலனும், நம்பிக்கையும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துபோகிறது. அவர்கள் இப்போது பலவீனமாகவும், கலக்கத்தோடும் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தரிடத்தில் பொங்குகிற பானையைப்பற்றிச் சொல்லும்போது, "அதின் வாய் வடக்கேயிருந்து நோக்குகிறது" என்றும் சொல்லுகிறார். எந்த திசையில் அக்கினி அதிகமாய் எரிகிறதோ, அந்த திசையில்தான் பானையும் சீக்கிரத்தில் பொங்கும்.

எரேமியா கண்ட தரிசனத்திற்கு கர்த்தர் விளக்கமும் கொடுக்கிறார். தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு யூதாதேசத்தார்மீது வந்திருக்கிறது. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், அவர்களுக்கு தம்முடைய நியாயத்தீர்ப்பைக் கொடுக்கவேண்டுமென்று, கர்த்தர் ஏற்கெனவே திட்டம்பண்ணி வைத்திருக்கிறார். இதுவரையிலும் கர்த்தர் தம்முடைய இரக்கத்தினாலும், கிருபையினாலும், நீடிய பொறுமையினாலும் யூதாவின் ஜனத்தாரை அழிக்காமல் விட்டு வைத்திருக்கிறார்.

தம்முடைய ஜனங்கள் தங்கள் பாவங்களைவிட்டு விலகி மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் ஆவலாய் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார். அவர்கள் விக்கிரகங்களை ஆராதிப்பதை நிறுத்திவிட்டு, தம்மை ஆராதிக்க வருவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஆனால் அவர்களோ தங்கள் பாவங்களிலும், துன்மார்க்கங்களிலும் நிலைத்திருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது பொறுமையோடிருந்த காலம் முடிந்துவிட்டது. இப்போது, அவர்களை நியாயந்தீர்க்கிற காலம் வந்திருக்கிறது.

தம்முடைய நியாயத்தீர்ப்பு யூதாதேசத்தார்மீது வடக்கு திசையிலிருந்து வரும் என்பதை காண்பிப்பதற்காக, எரேமியா பொங்குகிற பானையைக் காண்கிறார். அதோடு, அதன் வாய் வடக்கேயிருந்து நோக்குகிறதையும் காண்கிறார். "வடக்கேயிருந்து தீங்கு தேசத்தினுடைய குடிகள் எல்லார்மேலும் வரும் (எரே 1:14) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

"இப்போதும் காற்று வீசி ஆகாயமண்டலங்களிலுள்ள மப்பு நீங்கப்பண்ணியிருக்கிற சமயத்தில் வடக்கேயிருந்து பொன்மயமான காந்தி வருகிறபோது, ஆகாயமண்டலத்திலே பிரகாசிக்கிற சூரியனை முதலாய் ஒருவரும் நோக்கிப் பார்க்கக்கூடாதே; தேவனிடத்திலோ பயங்கரமான மகத்துவமுண்டு" *(யோபு 37:21,22)*.

நாம் சில சமயங்களில் மென்மையான காற்றுவீசுமென்று எதிர்பார்ப்போம். நம்முடைய எதிர்பார்ப்புக்கு மாறாக புயல்காற்று வீசும். யூதாஜனத்தார் தங்களுக்கு தீங்கு வராது என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய தீர்மானத்தின் பிரகாரமாக அவர்களுக்கு வடக்கே இருந்து தீங்கு வருகிறது.

கர்த்தர் எரேமியாவிடம் "இதோ, நான் வடதிசை ராஜ்யங்களின் வம்சங்களையெல்லாம் கூப்பிடுவேன்" (எரே 1:15) என்று சொல்லுகிறார். வடதிசையின் ராஜாக்களெல்லாம் ஒன்றாய்க்கூடி, யூதா தேசத்திற்கு விரோதமாய் வருவார்கள். வடதிசையின் ராஜாக்களெல்லாம் நேபுகாத்நேச்சார் ராஜாவுடைய தலைமையின்கீழ் யுத்தம்பண்ண வருவார்கள்.

கர்த்தர் யாரை அழைக்கிறாரோ, அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வருவார்கள். கர்த்தர் கூப்பிடும்போது, யாரும் வரமறுக்க முடியாது. "அவர்கள் வந்து அவனவன் தன் தன் சிங்காசனத்தை எருசலேமின் ஒலி முகவாசல்களுக்கும், அதின் சுற்றுமதில்கள் எல்லாவற்றிற்கும் விரோதமாகவும், யூதாதேசத்து எல்லாப் பட்டணங்களுக்கும் விரோதமாகவும் வைப்பார்கள்" (எரே 1:15) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் எருசலேமையும், யூதாவின் அரணான பட்டணங்களையும் முற்றிக்கையிடுவார்கள்.

எருசலேமின்மீதும், யூதாவின் பட்டணங்கள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது. தேவன் ஒருவரையும் காரணமில்லாமல் நியாயந்தீர்க்கிறவரல்ல. யூதாஜனத்தாருடைய பாவத்தின் நிமித்தமாகவே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. அவர்களுடைய சகல தீமைகளினிமித்தமும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு விரோதமாக வந்திருக்கிறது.

யூதாதேசத்தார் கர்த்தரை விட்டுவிட்டு, அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். கர்த்தரை பணிந்துகொள்ளாமல் தங்கள் கைகளின் கிரியைகளை பணிந்துகொள்கிறார்கள். அவர்கள் சகல தீமையான காரியங்களையும் செய்கிறார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்புகளை அவர்களுக்கு விரோதமாய்க் கூறுகிறார் (எரே 1:16).

இஸ்ரவேலின் பரிசுத்தரே யூதர்களுடைய தேவன். கர்த்தர் மாத்திரமே மெய்யான தேவன். ஆனால் யூதர்களோ கர்த்தரை விட்டுவிடுகிறார்கள். புதிய தெய்வங்களை ஆராதிக்கவேண்டும் என்று விரும்பி அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். அவையெல்லாம் விநோதமான தெய்வங்கள். அவை மெய்யான தெய்வங்களல்ல. அவையெல்லாமே பொய்யானவை.

கர்த்தர் எரேமியாவிடம் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லும்போது, எரேமியா சிறுபிள்ளையாகயிருக்கிறார். அவருக்கு விக்கிரகாராதனை என்றால் என்ன என்பதுகூட தெரிந்திருக்காது. இஸ்ரவேல் ஜனத்தாரின் துன்மார்க்கங்களும், பாவங்களும் என்ன என்பதுகூட அவருக்கு தெரிந்திருக்காது. ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வரப்போகிற நியாயத்தீர்ப்பை எரேமியாவிடம் சொல்லுகிறார்.

ஜனங்களுடைய பாவங்களினிமித்தமும், அக்கிரமங்களினிமித்தமும், அவர்களைத் தண்டிப்பது கர்த்தருடைய நீதியாயிருக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம். எரேமியா சிறுபிள்ளையாகயிருக்கும்போதே, கர்த்தர் தம்முடைய நீதியைப்பற்றியும், நியாயத்தீர்ப்பைப் பற்றியும் அவருக்கு வெளிப்படுத்துகிறார்.

கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு எரேமியா தயங்குகிறார். "நான் பேசஅறியேன், சிறு பிள்ளையாயிருக்கிறேன்" (எரே 1:6) என்று சொல்லி, கர்த்தர் தனக்கு கொடுக்கிற ஊழியத்தை எரேமியா ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். கர்த்தரோ எரேமியாவுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். தம்முடைய ஊழியத்தை செய்யுமாறு கர்த்தர் எரேமியாவை உற்சாகப்படுத்துகிறார்.

கர்த்தர் எரேமியாவுக்கு மிகப்பெரிய ஊழியப்பொறுப்பைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்புகளை அனுப்புவதற்கு முன்பாக, பாவம் செய்கிற ஜனங்களை எச்சரிப்பது கர்த்தருக்கு பிரியமாயிருக்கிறது. எரேமியா யூதா ஜனத்தார் மத்தியிலே கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லவேண்டும். வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்து அவர்களுக்கு தைரியமாய் எடுத்துச் சொல்லவேண்டும்.

ஒரு வேளை பாவிகள் எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்டு, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப வாய்ப்புள்ளது. கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்புக்கும், அவருடைய கோபத்திற்கும் தப்பித்துக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தர் இந்த விருப்பத்தோடுதான், எரேமியாவுக்கு ஜனங்களை எச்சரிக்கிற ஊழியத்தைக் கொடுக்கிறார்.

எரேமியா கர்த்தருடைய ஊழியத்தை தாமதமில்லாமல் விரைவாகச் செய்யவேண்டும். "ஆகையால் நீ உன் அரையைக் கட்டிக்கொண்டு நின்று, நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் அவர்களுக்குச் சொல்" (எரே 1:17) என்று கர்த்தர் எரேமியாவுக்குச் சொல்லுகிறார். எரேமியா உடனே எழும்பி நின்று ஊழியத்தை ஆரம்பித்துவிடவேண்டும். கர்த்தருடைய ஊழியத்தை சுறுசுறுப்பாய்ச் செய்யவேண்டும். சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், கர்த்தர் தனக்கு கட்டளையிடுகிறவைகளையெல்லாம், எரேமியா ஜனங்களுக்கு சொல்லவேண்டும்.

எரேமியா ஜனங்களுக்கு முன்பாக பயப்படக்கூடாது. அவர்களுடைய முகத்திற்கு அஞ்சக்கூடாது. "நான் உன்னை அவர்களுக்கு முன்பாகக் கலங்கப்பண்ணாதபடிக்கு, நீ அவர்கள் முகத்துக்கு அஞ்சாதிரு" (எரே 1:17) என்று கர்த்தர் எரேமியாவுக்குச் சொல்லுகிறார். கர்த்தர் எரேமியாவிடம் ஏற்கெனவே, "நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்" (எரே 1:8) என்று சொன்னார்.

எரேமியா இரண்டு காரியங்களில் கர்த்தருக்கு உண்மையுள்ளவராக ஊழியம் செய்யவேண்டும். அவையாவன : 1. கர்த்தர் தனக்கு கட்டளையிடுகிறவைகளையெல்லாம் அவர்களுக்கு சொல்லவேண்டும். 2. கர்த்தர் தனக்கு கட்டளையிட்டவைகளை, ஏதோ ஒரு மூலையில் அல்லது தன்னுடைய சிநேகிதர்களில் ஒரு சிலருக்கு மாத்திரம் என்று சொல்லக்கூடாது.

கர்த்தர் தனக்கு கட்டளையிடுகிறவைகளை எரேமியா மூடி மறைத்துவிடக்கூடாது. மனுஷருடைய முகத்திற்கு அஞ்சி, வாயைத் திறக்காமல் மூடிக்கொள்ளக்கூடாது. கர்த்தர் சொன்ன வார்த்தைகளை அப்படியே சொல்லிவிட்டால், அவர்களுடைய மனது வேதனைப்படுமே என்று யோசிக்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தேவனுடைய ஆலோசனைகளை முழுவதுமாய் அறிவிக்கவேண்டும். சத்தியத்தை மூடி மறைக்கக்கூடாது.

கர்த்தர் எரேமியாவை ஜாதிகளின்மேலும் ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்தியிருக்கிறார். யூதாவின் ராஜாக்களுக்கு விரோதமாக கர்த்தருடைய செய்தியை சொல்லவேண்டும் என்றாலும், எரேமியா ராஜாக்களுக்கு முன்பாக பயப்படாமல் நின்று, கர்த்தருடைய செய்தியை சொல்லிவிடவேண்டும். துன்மார்க்கமான ராஜாக்களிடத்தில் அன்பு இருக்காது. அவர்களிடத்திலிருந்து ஆதரவை எதிர்பார்க்க முடியாது. அவர்களிடத்தில் துன்மார்க்கமே மிகுதியாயிருக்கும். எரேமியா துன்மார்க்கமான ராஜாக்களைப் பார்த்து பயந்துவிடக்கூடாது.

கர்த்தர் எரேமியாவைப் பார்த்து "இதோ, தேசமனைத்துக்கும், யூதாவின் ராஜாக்களுக்கும், அதின் பிரபுக்களுக்கும், அதின் ஆசாரியர்களுக்கும், தேசத்தின் ஜனங்களுக்கும் எதிராக நான் உன்னை இன்றையதினம் அரணிப்பான பட்டணமும், இருப்புத்தூணும், வெண்கல அலங்கமும் ஆக்கினேன்" (எரே 1:18) என்று சொல்லுகிறார்.

எரேமியா ராஜாக்களுக்கும், அதின் பிரபுக்களுக்கும் கர்த்தருடைய வார்த்தையை பயப்படாமல் சொல்லவேண்டும். ஆசாரியர்கள் தப்பு செய்தாலும் அவர்களுக்கு விரோதமாகவும் கர்த்தருடைய வார்த்தையை எச்சரிப்பாகச் சொல்லவேண்டும். எரேமியா தீர்க்கதரிசியாகயிருந்தாலும், அவரும் ஒரு ஆசாரியர். ஆசாரிய ஊழியம் செய்கிறவர்கள், பயபக்தியோடு, கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். தங்களுடைய ஆசாரிய ஊழியத்தின் கண்ணியத்தைக் காத்துக்கொள்ளவேண்டும்.

எரேமியா யூதாதேசத்தின் ஜனங்களுக்கு விரோதமாகவும் கர்த்தருடைய செய்தியை அறிவிக்கவேண்டும். எரேமியாவும் யூதாதேசத்தை சேர்ந்தவர். தேசத்தின் ஜனங்கள் தன்னுடைய தேசத்தார் என்று நினைத்து, அவர்களுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தையை சொல்லாமல் இருந்துவிடக்கூடாது. அவர்கள் யூதாதேசத்தாராயிருந்தாலும், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்கள். அவர்கள் கர்த்தருடைய பார்வையில் பாவிகளாகவும், துன்மார்க்கராகவும் இருக்கிறார்கள். யூதாதேசத்தார் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கர்த்தர் எரேமியாவை அரணிப்பான பட்டணமும், இருப்புத்தூணும், வெண்கல அலங்கமும் ஆக்கியிருக்கிறார். ஆனாலும் எரேமியா கர்த்தருடைய செய்தியை ஜனங்களுக்கு சொல்ல தயங்குகிறார். தான் சொல்லுகிற செய்தி பொய்யாகிவிட்டால் என்ன செய்வது என்று யோசிக்கிறார். கர்த்தரோ எரேமியாவைப் பார்த்து "நான் உன்னை அவர்களுக்கு முன்பாகக் கலங்கப்பண்ணாதபடிக்கு, நீ அவர்கள் முகத்துக்கு அஞ்சாதிரு" (எரே 1:17) என்று சொல்லுகிறார்.

எரேமியாவிடம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருக்கவேண்டும். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் மனுஷருக்குப் பயப்படமாட்டார்கள். மனுஷருக்கு பயப்படாமலிருக்க வேண்டுமென்றால், கர்த்தருக்குப் பயப்படுவதே மாற்று மருந்து. இந்த உலகத்திலுள்ள எல்லா மனுஷரும் நமக்கு சத்துருவாக வந்தாலும் பரவாயில்லை என்று நினைத்து, கர்த்தருக்கு கீழ்ப்படியவேண்டும். நாம் ஒருபோதும் கர்த்தருக்கு சத்துருவாக மாறிவிடக்கூடாது. கர்த்தரும் நமக்கு சத்துருவாகயிருக்கக்கூடாது.

கர்த்தர் எரேமியாவை பலப்படுத்துகிறார். எரேமியாவைக் காக்கும்படி கர்த்தர் அவரோடு கூடயிருக்கிறார். மேலும் கர்த்தர் எரேமியாவிடம், "உன்னை இன்றையதினம் அரணிப்பான பட்டணமும், இருப்புத்தூணும், வெண்கல அலங்கமும் ஆக்கினேன்" (எரே 1:18) என்று சொல்லுகிறார். எரேமியா கர்த்தருக்கு உண்மையுள்ளவராயிருக்க வேண்டும். எரேமியா சிறுபிள்ளையாயிருந்தாலும், அவர் கர்த்தருடைய வல்லமையினால் நிரப்பப்பட்டிருக்கிறார். கர்த்தரால் அழைக்கப்பட்டிருக்கிறார். கர்த்தரால் அனுப்பப்பட்டும் இருக்கிறார்.

எருசலேம் நகரத்திற்கு அலங்கம் இருக்கிறது. ஆனால் அது பாதுகாப்பான அலங்கமல்ல. எருசலேம் அரணிப்பான பட்டணமுமல்ல. கர்த்தரோ எரேமியாவைப் பலப்படுத்துகிறார். பாதுகாக்கிறார். அவரை அரணிப்பான பட்டணமாக்கியிருக்கிறார். சத்துருக்கள் யாரும் எரேமியாவை நெருங்க முடியாது. அவர்கள் எரேமியாவுக்கு விரோதமாக வந்தாலும், அவர்களால் எரேமியாவுக்கு ஒரு சேதமும் பண்ண முடியாது.

அவர்கள் எரேமியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள். ஆனாலும் அவர்கள் எரேமியாவை மேற்கொள்ளமாட்டார்கள் (எரே 1:19). எப்பக்கத்திலும் நெருக்கம் வந்தாலும் எரேமியா ஒடுங்கிப்போகமாட்டார். ராஜாக்களும் பிரபுக்களும், எரேமியாவுக்கு விரோதமாய், தங்களுடைய முழுவல்லமையோடு வருவார்கள். ஆசாரியர்கள் எரேமியாவுக்கு விரோதமாய் உரத்த குரலிலே பேசுவார்கள். தேவாலயத்தின் சட்டதிட்டங்களை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தி, எரேமியாவின் மீது குற்றம் சொல்லுவார்கள்.

தேசத்தின் ஜனங்கள் எரேமியாவின்மீது அம்புகளை எய்வார்கள். அவருக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளையும், பரியாசமான வார்த்தைகளையும் பேசுவார்கள். எரேமியாவோ அவர்களைப் பார்த்து பயப்படக்கூடாது. எல்லா சூழ்நிலைகளிலும் அவர் கர்த்தரையே பற்றிக்கொள்ளவேண்டும். "உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்" என்று கர்த்தர் எரேமியாவுக்குச் சொல்லுகிறார்.

அவர்கள் எரேமியாவுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண வந்தால், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவேண்டும். சத்துருக்களால் கர்த்தரோடு யுத்தம்பண்ணி ஜெயிக்க முடியாது. அவர்களால் கர்த்தரை மேற்கொள்ள முடியாது. கர்த்தர் எரேமியாவைப் பாதுகாக்கும்படி, அவரோடு கூடயிருப்பதினால், அவர்களால் எரேமியாவையும் மேற்கொள்ள முடியாது. கர்த்தருடைய பலத்த கரத்திற்குள் இருப்பதே நமக்கு மெய்யான பாதுகாப்பு.

2 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற செய்தி எரேமியா தீர்க்கதரிசியின் முதலாவது பிரசங்கச் செய்தியாகும். கர்த்தர் எரேமியாவை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்து, அவரை பிரதிஷ்டைபண்ணுகிறார். கர்த்தர் எரேமியாவை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்தபோது, "நான் பேச அறியேன், சிறு பிள்ளையாயிருக்கிறேன்" (எரே 1:6) என்று எரேமியா சொன்னார். கர்த்தரோ தமது கரத்தை நீட்டி எரேமியாவின் வாயைத் தொட்டார். தம்முடைய வார்த்தைகளை எரேமியாவின் வாயிலே வைத்தார் (எரே 1:9).

ஆகையினால் எரேமியா இனிமேல், "நான் பேச அறியேன்" என்று சொல்ல முடியாது. கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை நம்முடைய வாயிலே வைக்கும்போது, நம்மால் நன்றாகப் பேசமுடியும். நம்மைப்போல தெளிவாகவும், ஞானமாகவும் உலகப்பிரகாரமான ஜனங்களால்கூட பேசமுடியாது. அவர்கள் சாதுரிய வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும், கர்த்தருடைய ஊழியக்காரர்களே மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு பிரயோஜனமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறவர்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணி பாவம் செய்கிறார்கள். கர்த்தருடைய பிரமாணங்களை மீறுகிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி ஜனங்களுடைய மீறுதல்களையும், பாவங்களையும் அவர்களுக்கு உணர்த்தும் வண்ணமாய் பிரசங்கம்பண்ணுகிறார். அவர்களைக் கடிந்துகொள்கிறார். எரேமியாவின் கடிந்துகொள்ளும் வார்த்தைகளைக் கேட்டு, இஸ்ரவேல் ஜனத்தார் மனந்திரும்பவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தாரிடத்தில் விக்கிரகாராதனையே பிரதான பாவமாக நிரம்பியிருக்கிறது.

கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை இஸ்ரவேல் புத்திரர்கள் மறந்துவிடுகிறார்கள். கர்த்தருக்கு நன்றியில்லாதவர்களாக ஜீவிக்கிறார்கள் (எரே 2:1-8). இதுவரையிலும் எந்த தேசத்திலும், ஜனங்கள் தங்கள் தேவர்களை மாற்றியதில்லை. ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ வீணானவைகளுக்காக, தங்கள் மகிமையை மாற்றியிருக்கிறார்கள் (எரே 2:9-13). யூதாதேசத்தார் தங்களுக்கு தாங்களே அழிவை வரவழைத்துக் கொள்கிறார்கள் (எரே 2:14-19).

கர்த்தர் தங்களோடு செய்து கொண்ட உடன்படிக்கைகளை யூதர்கள் முறித்துப்போடுகிறார்கள். அவர்களுடைய ஆவிக்குரிய ஆரம்பம் நன்றாயிருந்தது. ஆனால் காலம் செல்ல செல்ல அவர்கள் கர்த்தரை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள் (எரே 2:20,21). இஸ்ரவேல் ஜனத்தாரிடத்தில் துன்மார்க்கம் மிகவும் அதிகரித்திருக்கிறது. கர்த்தர் அவர்களோடு வழக்காடும் அளவுக்கு அவர்கள் பாவம் செய்கிறார்கள் (எரே 2:22,23,35).

யூதர்கள் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். பாவத்தைவிட்டு விலகி வராமல் தங்கள் பாவத்தில் நிலைத்திருக்கிறார்கள் (எரே 2:23,25,33,36). இஸ்ரவேல் வம்சத்தாரின் விக்கிரகாராதனையின் நிமித்தமாய் அவர்களுக்கு வெட்கமும், அவமானமும் உண்டாகும். அவர்களுடைய விக்கிரகங்கள் அவர்களுக்கு உதவிசெய்யாது (எரே 2:26-29,37).

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருடைய பிள்ளைகளை அடித்தார். ஆனாலும் கர்த்தருடைய சிட்சை விருதாவாயிற்று. அவர்கள் மனந்திரும்பவில்லை (எரே 2:30). யூதர்கள் கர்த்தர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். கர்த்தரிடத்தில் வர மறுக்கிறார்கள் (எரே 2:31,32). விக்கிரகாராதனைக்காரர்கள் குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களின் இரத்தங்களை சிந்துகிறார்கள் (எரே 2:34).

கர்த்தருக்கு துரோகம் பண்ணுகிறார்கள் எரே 2:1-8

எரே 2:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 2:2. நீ போய், எருசலேமின் செவிகள் கேட்கும்படிக் கூப்பிட்டுச் சொல்லவேண்டியது என்னவென்றால்: விதைக்கப்படாத தேசமாகிய வனாந்தரத்திலே நீ என்னைப் பின்பற்றிவந்த உன் இளவயதின் பக்தியையும், நீ வாழ்க்கைப்பட்டபோது உனக்கிருந்த நேசத்தையும் நினைத்திருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 2:3. இஸ்ரவேல் கர்த்தருக்குப் பரிசுத்தமும், அவருடைய விளைவின் முதற்பலனுமாயிருந்தது; அதைப் பட்சித்த யாவரும் குற்றவாளிகளானார்கள்; பொல்லாப்பு அவர்கள்மேல் வந்ததென்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 2:4. யாக்கோபின் குடும்பத்தாரே, இஸ்ரவேல் குடும்பத்தின் வம்சங்களே, நீங்கள் எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 2:5. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினவரும், அவாந்தரவெளியும், பள்ளங்களுமுள்ள தேசமும், வறட்சியும், மரண இருளுமுள்ள தேசமும், ஒருவனும் கடவாமலும் ஒரு மனுஷனும் குடியிராமலும் இருக்கிற தேசமுமான வனாந்தரத்தில் எங்களை நடத்தினவருமாகிய கர்த்தர் எங்கேயென்று உங்கள் பிதாக்கள் கேளாமல்,

எரே 2:6. என்னைவிட்டுத் தூரப்பட்டு, மாயையைப் பின்பற்றி, வீணராய்ப் போகிறதற்கு என்னிடத்தில் என்ன அநியாயத்தைக் கண்டார்கள்?

எரே 2:7. செழிப்பான தேசத்தின் கனியையும் நன்மையையும் சாப்பிடும்படிக்கு நான் உங்களை அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தேன்; ஆனாலும் நீங்கள் அதற்குள் பிரவேசித்தபோது, என் தேசத்தைத் தீட்டுப்படுத்தி, என் சுதந்தரத்தை அருவருப்பாக்கினீர்கள்.

எரே 2:8. கர்த்தர் எங்கேயென்று ஆசாரியர்கள் சொல்லாமலும், வேதத்தைப் போதிக்கிறவர்கள் என்னை அறியாமலுமிருந்து, மேய்ப்பர்கள் எனக்குத் துரோகம் பண்ணினார்கள்; தீர்க்கதரிசிகள் பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனஞ் சொல்லி, வீணானவைகளைப் பின்பற்றினார்கள்.

கர்த்தர் எரேமியாவை எருசலேமிலுள்ள ஜனங்களிடத்திற்கு அனுப்புகிறார். கர்த்தர் தனக்கு கொடுக்கிற வார்த்தைகளை எரேமியா எருசலேமிலே அறிவிக்கவேண்டும். "நீ போய், எருசலேமின் செவிகள் கேட்கும்படிக் கூப்பிட்டுச் சொல்லவேண்டியது என்னவென்றால்" *(எரே 2:2)* என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களைத் தாங்களே ஆராய்ந்து பார்க்கவேண்டும். தாங்கள் சொன்ன செய்தியும், கர்த்தர் தங்களுக்கு கொடுத்த செய்தியும் மாறாமல் ஒத்திருக்கிறதா என்பதை உறுதிபண்ணிக் கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், "கர்த்தர் என்னை அனுப்பினார்" என்றும் சொல்லவேண்டும். அதோடு, "கர்த்தர் இந்தச் செய்தியை சொல்லுவதற்காக என்னை அனுப்பினார்" என்றும் சொல்லவேண்டும். எரேமியா தீர்க்கதரிசி ஆனதோத்திலிருந்து எருசலேமுக்குப் போகவேண்டும். ஆனதோத் விவசாய நிலம் நிரம்பிய அமைதியான வாசஸ்தலம். பட்டணத்தின் ஆரவாரங்களும், சந்தடியுமில்லாமல் ஆனதோத்திலே அமைதியாய் ஜீவிக்கலாம். ஆனதோத்தில் ஏராளமான ஆசாரியர்கள் இருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து கர்த்தருடைய வேதத்தையும், பிரமாணத்தையும் தியானம் பண்ணலாம்.

கர்த்தரோ எரேமியாவை எருசலேமுக்குப் போகுமாறு சொல்லுகிறார். எருசலேம் ஜனங்கள் மிகுந்த பட்டணம். அங்கு சந்தடியும் ஆரவாரமும் அதிகமாயிருக்கும். ஏராளமான ஜனங்கள் வருவோராயும், போவோராயும் இருப்பார்கள். எரேமியா எருசலேமுக்குப்போய், அங்குள்ள ஜனங்களின் செவிகள் கேட்கும்படியாக, கர்த்தர் தனக்கு கொடுத்த வார்த்தைகளை, ஜனங்களை கூப்பிட்டு சொல்லவேண்டும். சத்தமிட்டு சொல்லவேண்டும். அப்போதுதான் எல்லா செவிகளுக்கும் தெளிவாகக் கேட்கும்.

எரேமியா தூரத்திலிருந்து பேசக்கூடாது. ஜனங்களுக்கு அருகாமையில் போய், அவர்களுடைய செவிகள் கேட்கும்படியாய்க் கூப்பிட்டுச் சொல்லவேண்டும். இவர்கள் இதுவரையிலும் கர்த்தருடைய செய்தியைக் கேட்காதபடிக்கு தங்கள் செவிகளை அடைத்துக்கொண்டவர்கள். அவர்கள் தங்கள் செவிகளைத் திறக்கும் வண்ணமாய், அவர்களுக்கு சத்தமிட்டு பிரசங்கம்பண்ணவேண்டும்.

கர்த்தர் எரேமியாவை எருசலேமுக்குப் போகச்சொல்லுகிறார். அங்கு சொல்ல வேண்டிய செய்தியையும் கொடுக்கிறார். எருசலேமிலுள்ள ஜனங்கள் பூர்வகாலத்தில் கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருந்தார்கள். கர்த்தருடைய வசனத்திற்கு செவிகொடுத்து, அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவித்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை இப்போது மறந்துவிட்டார்கள். கர்த்தரை விட்டு விட்டு விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இதற்கு முன்பு செய்த நன்மைகளையெல்லாம் இப்போது நினைவுகூருகிறார். சொற்ப எண்ணிக்கையிலிருந்த ஜனங்களை கர்த்தர் ஒரு தேசமாக ஆசீர்வதித்தார். அவர்களை இஸ்ரவேல் தேசமாய் உருவாக்கினார். "விதைக்கப்படாத தேசமாகிய வனாந்தரத்திலே நீ என்னைப் பின்பற்றிவந்த உன் இளவயதின் பக்தியையும், நீ வாழ்க்கைப்பட்டபோது உனக்கிருந்த நேசத்தையும் நினைத்திருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" *(எரே 2:2).*

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு செய்த நன்மைகளை நினைவுகூருவதுபோல, இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை நினைவுகூரவேண்டும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு தாம் செய்த நன்மைகளை, அவர்களுடைய நன்மைக்காகவே நினைவுகூருகிறார். அவர்கள் தம்மைப் பின்பற்றி வந்த தங்களுடைய இளவயதின் பக்தியை கர்த்தர் இன்னும் மறக்கவில்லை. அவர்கள் தம்மோடு வாழ்க்கப்பட்டபோது, அவர்களுக்கு தம்மீது இருந்த நேசத்தையும் கர்த்தர் மறக்காமல் நினைவில் வைத்திருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஆரம்ப காலத்தில், கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருந்தார்கள். கர்த்தர்மீது அன்பாயும், நேசமாயும் இருந்தார்கள். தங்களுடைய பூர்வகாலத்து பக்தியை நினைத்து இஸ்ரவேல் ஜனங்கள் பெருமைப்படக்கூடாது. ஆனாலும் கர்த்தர் அவர்களுடைய பூர்வகாலத்து பக்தியையும், நேசத்தையும் மறவாமல் நினைவுகூருகிறார். அவர்கள் கர்த்தரிடத்தில் அதிக பக்தியாகவோ, அதிக நேசமாகவோ இல்லை. அவர்களுடைய பக்தியும் நேசமும் குறைவுள்ளதாயிருந்தது. ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால், அவர்களுடைய பக்தியையும் நேசத்தையும் மறந்துவிடாமல் நினைவுகூருகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தபோது அவர்கள் கர்த்தரையும், கர்த்தருடைய தாசனாகிய மோசேயையும் நம்பினார்கள். கர்த்தர் செங்கடலிலே தம்முடைய பிள்ளைகளுக்கு பெரிய அற்புதத்தை செய்தார். அவர்கள் செங்கடலை நடந்து கடந்தபின்பு, கர்த்தரைத் துதித்து துதியின் கீதத்தைப் பாடினார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய் மலையின் அடிவாரத்தில் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள். கர்த்தர் தங்களை செய்ய சொல்லுவதையெல்லாம் தாங்கள் செய்வதாகவும், கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவிப்பதாகவும் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்தில் வாக்குப்பண்ணினார்கள். அவர்களுடைய இளவயதின் பக்தி அந்த அளவுக்கு அதிகமாயிருந்தது. அவர்கள் கர்த்தரோடு வாழ்க்கப்பட்டபோது அவர்களிடத்திலிருந்த நேசமும் மிகவும் அதிகமாயிருந்தது.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரோடு நெருக்கமாய் ஜீவித்தார்கள். "அவர்கள் மெய்யாகவே என்னுடைய ஜனங்கள்" என்று கர்த்தர் சொன்னார். அவர்கள் தமக்கு உண்மையுள்ளவர்களாகயிருப்பார்கள் என்றும், தம்மிடத்தில் பொய் சொல்லமாட்டார்கள் என்றும் கர்த்தர் அவர்கள்மீது நம்பிக்கை வைத்திருந்தார்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே கர்த்தரைப் பின்பற்றி வந்தார்கள். அக்காலம் இஸ்ரவேல் தேசத்திற்கு இளவயதின் காலமாயிருந்தது. கர்த்தர் அவர்களுடைய இளவயதின் பக்தியை நினைவுகூருகிறார். அவர்களுடைய இளவயதில், அவர்களிடத்தில் இரண்டு காரியங்கள் பிரதானமாயிருந்தது. அவையாவன : 1. அவர்கள் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமான அக்கினி ஸ்தம்பத்தையும் மேகஸ்தம்பத்தையும் பின்பற்றி நடந்தார்கள். 2. தங்கள் மத்தியிலே கர்த்தருடைய பிரசன்னம் தங்கியிருப்பதற்காக ஒரு ஆசரிப்புக் கூடாரத்தைக் நிறுவினார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்திலே நாற்பது வருஷங்கள் சுற்றி அலைந்தார்கள். கர்த்தர் அவர்களோடு கூடவே இருந்தார். தங்களுடைய தேவைகளை கர்த்தர் குறைவில்லாமல் சந்திப்பார் என்று இஸ்ரவேல் ஜனத்தார் நம்பினார்கள். அவர்கள் பிரயாணம் செய்தது வனாந்தர தேசம். அது விதைக்கப்படாத தேசம். ஆனாலும் கர்த்தர் தங்களுக்கு போதுமான போஜனத்தைக் கொடுத்து தங்களை ஆதரிப்பார் என்று இஸ்ரவேல் ஜனத்தார் நம்பினார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீணாய்ப்போகவில்லை. கர்த்தர் அவர்களை நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலே திருப்தியாய்ப் போஷித்தார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், தம்முடைய சீஷர்களின் விசுவாசத்தை நினைவுகூருகிறார். "மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடேகூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே" (லூக் 22:28) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது, தங்கள் மத்தியிலே கர்த்தருக்கு ஒரு ஆசரிப்புக்கூடாரத்தை நிறுவினார்கள். அப்போது இஸ்ரவேல் கர்த்தருக்கு பரிசுத்தமாயிருந்தது. அவர்கள் ஆவியிலே ஆரம்பம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடைய பக்தியை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். ஆவியில் ஆரம்பம் பண்ணின தம்முடைய பிள்ளைகள், மாம்சத்தில் முடிந்துபோய்விடக்கூடாது என்று கர்த்தர் அவர்கள்மீது கரிசனையோடிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் மீது மெய்யாகவே அன்பாயிருக்கிறார். கர்த்தர் பல சமயங்களில் அவர்கள்மீது தாம் வைத்திருக்கிற அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார். "இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்; எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன்" (ஓசி 11:1).

கர்த்தர் தம்முடைய நினைவிலிருந்து, தம்முடைய ஜனத்தை ஒருபோதும் நீக்கிப்போடுவதில்லை. அவர்களை தம்முடைய இருதயத்திற்கு அருகாமையிலேயே வைத்திருக்கிறார். இஸ்ரவேல் கர்த்தருடைய விளைவின் முதற்பலனாயிருந்தது. இந்த உலகத்தில், முதன் முதலில், யூதர்கள் மத்தியிலேயே முதலாவது சபை ஸ்தாபிக்கப்பட்டது. அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தரைத் தொழுதுகொண்டார்கள். யூதர்கள் கர்த்தருடைய விளைவின் முதற்பலனாயிருந்தாலும், புறஜாதியார் மத்தியில்தான் முழுமையான அறுவடை உண்டாயிற்று.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு உடன்படிக்கை பண்ணிக்கொண்டார். அவர்கள் கர்த்தரோடு வாழ்க்கைப்பட்டார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையிலும், உடன்படிக்கையிலும் உண்மையுள்ளவர். அவர்களுக்கு சத்துருக்களாயிருந்தவர்கள், கர்த்தருக்கும் சத்துருக்களானார்கள். இஸ்ரவேலை பட்சித்த யாவரும் கர்த்தருடைய பார்வையில் குற்றவாளிகளானார்கள். பொல்லாப்பு அவர்கள்மேல் வந்தது (எரே 2:3).

"நீ அவர் வாக்கை நன்றாய்க் கேட்டு, நான் சொல்வதையெல்லாம் செய்வாயாகில், நான் உன் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், உன் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பேன்" (யாத் 23:22).

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு யாரெல்லாம் தீங்கு செய்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் தங்களுக்கு தாங்களே தீங்குகளை வரவழைத்துக்கொள்கிறார்கள். இஸ்ரவேலை சேதப்படுத்துகிறவர்கள் தங்களை சேதப்படுத்திக்கொள்கிறார்கள். இஸ்ரவேலை அழிக்க முயற்சி பண்ணினவர்கள் அழிந்துபோனார்கள்.

"மீதியானியரை நெருக்கி அவர்களை வெட்டிப்போடுங்கள். பேயோரின் சங்கதியிலும் பேயோரின் நிமித்தம் வாதையுண்டான நாளிலே குத்துண்ட அவர்கள் சகோதரியாகிய கஸ்பி என்னும் மீதியான் பிரபுவினுடைய குமாரத்தியின் சங்கதியிலும், அவர்கள் உங்களுக்குச் செய்த சர்ப்பனைகளினால் உங்களை மோசம்போக்கி நெருக்கினார்களே" (எண் 25:17,18).

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது எவ்வளவு அன்பாகயிருக்கிறார் என்பதையும், அவர்களும் பூர்வகாலத்தில் கர்த்தர்மீது எவ்வளவு அன்பாகயிருந்தார்கள் என்பதையும் எரேமியா தீர்க்கதரிசி எருசலேமிலுள்ள ஜனங்களுக்கு உரத்த சத்தமாய்ச் சொல்லுகிறார். "யாக்கோபின் குடும்பத்தாரே, இஸ்ரவேல் குடும்பத்தின் வம்சங்களே, நீங்கள் எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்" (எரே 2:4) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தரோ தம்முடைய பலத்த புயத்தினாலும், மகாபயங்கரமான கிரியைகளினாலும் அவர்களை விடுவித்தார்.

"அல்லது உங்கள் தேவனாகிய கர்த்தர் எகிப்திலே உங்கள் கண்களுக்கு முன்பாக உங்களுக்குச் செய்தபடியெல்லாம் தேவன் அந்நிய ஜாதிகளின் நடுவிலிருந்து ஒரு ஜனத்தைச் சோதனைகளினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், யுத்தத்தினாலும், வல்லமையுள்ள கரத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரமான செயல்களினாலும், தமக்கென்று தெரிந்துகொள்ள வகைபண்ணினதுண்டோ என்று நீ விசாரித்துப்பார்" (உபா 4:34).

கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஓங்கிய புயத்தினால் விடுவித்தாலும், அவர்களை தம்முடைய மென்மையான புயத்தினாலாயே வனாந்தரத்திலே வழிநடத்தினார். கர்த்தரே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினவர். கர்த்தரே அவர்களை அவாந்தரவெளியும், பள்ளங்களுமுள்ள தேசமும், வறட்சியும், மரண இருளுமுள்ள தேசமும், ஒருவனும் கடவாமலும் ஒரு மனுஷனும் குடியிராமலும் இருக்கிற தேசமுமான வனாந்தரத்தில் வழிநடத்தினவர் (எரே 2:5).

இஸ்ரவேல் ஜனத்தார் அவாந்தர வெளியாகிய வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக நடந்தார்கள். ஆனாலும் அவர்கள் தனிமையாய் நடக்கவில்லை. இஸ்ரவேலின் கர்த்தர் அவர்களோடு கூடயிருந்தார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு வனாந்தரத்திலே ஒரு பந்தியை ஆயத்தம்பண்ணினார்.

"நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும். என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" (சங் 23:4,5).

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, கர்த்தர் அவர்களுக்கு வானத்திலிருந்து மன்னாவை வருஷிக்கப்பண்ணினார். கன்மலையைப் பிளந்து தண்ணீரைக் கொடுத்தார். அவர்களைப் பாதுகாப்பாய் வழிநடத்தினார். ஆனாலும் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர் தங்களுக்கு செய்த உதவிகளை மறந்துவிட்டார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், கர்த்தருடைய ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறோம். நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற ஒவ்வொரு நாளும், நமக்கு வனாந்தர பிரயாணம் போலிருக்கிறது. கர்த்தர் தாமே நமக்கு நாசமும், மோசமும், ஆபத்துக்களும் வராதவாறு, நம்மை இந்தப் பிரபஞ்சத்தில் பாதுகாப்பாய் வழிநடத்துகிறார். நம்முடைய சரீரத்திற்கும், ஆத்துமாவுக்கும் எந்த சேதமும் வந்துவிடாதவாறு கர்த்தர் நம்மைப் பாதுகாக்கிறார். கர்த்தர் நமக்கு செய்கிற நன்மைகளை நாம் மறந்துவிடாமல், அவருக்கு நன்றியுள்ள பிள்ளைகளாய் ஜீவிக்கவேண்டும். நாம் கர்த்தருக்குப் பிரியமுள்ள பிள்ளைகளாயும், பிரயோஜனமுள்ள பிள்ளைகளாயுமிருக்கவேண்டும்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த ஜனங்களை கர்த்தர் விடுவித்து, செழிப்பான கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார். "செழிப்பான தேசத்தின் கனியையும் நன்மையையும் சாப்பிடும்படிக்கு நான் உங்களை அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டுவந்தேன்" (எரே 2:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வசனத்தில் "செழிப்பான தேசம்" என்னும் வாக்கியம் "கர்மேல் தேசத்தை" குறிக்கும். கர்மேல் தேசத்தில் திரளான கனிகள் விளைகிறது. கானான் தேசம் கனிவிருட்சங்களை திரளாய் விளைவிக்கிற பூமி.

"உன் தேவனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணுகிறார்; அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுகளும் ஏரிகளுமுள்ள தேசம். அது கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச்செடிகளும் அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசம்; அது ஒலிவமரங்களும், எண்ணெயும் தேனுமுள்ள தேசம்" (உபா 8:7,8).

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு தம்மை அறியும் அறிவையும் கொடுக்கிறார். கர்த்தருடைய வெளிப்பாடுகள் இருந்தால் மாத்திரமே நம்மால் கர்த்தரைப்பற்றி அறிந்து கொள்ள முடியும். நம்முடைய சுயபுத்தியினாலோ, சுயசக்தியினாலோ கர்த்தரை அறிந்துகொள்ள முடியாது. கர்த்தர் தம்முடைய ஆசாரியர்கள் மூலமாயும், மேய்ப்பர்கள் மூலமாயும், தீர்க்கதரிசிகள் மூலமாயும் தம்முடைய ஜனத்திற்கு தம்மை வெளிப்படுத்துகிறார். தம்முடைய பிள்ளைகள் தம்மோடு ஐக்கியமாயிருப்பதற்கு வாய்ப்புக்களையும் கர்த்தர் நமக்கு கொடுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தாருக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். அவர்களை கானான் தேசத்திலே அழைத்துக் கொண்டு வந்து குடியேற்றியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாக ஜீவிக்கவில்லை. கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாகயிருப்பதற்குப் பதிலாக, அவரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள்.

கர்த்தரிடத்தில் அநீதியில்லை. அவரிடத்தில் அநியாயமும் இல்லை. அவர் நீதிபரர். அவர் தம்முடைய ஜனத்தின்மீது அன்புள்ளவர். அவர்களுக்கு இரக்கமும் கிருபையும் காண்பிக்கிறவர். தம்மைவிட்டு விலகிப்போயிருக்கிற இஸ்ரவேல் ஜனத்தாரிடம் கர்த்தர் வழக்காடுகிறார். "என்னைவிட்டுத் தூரப்பட்டு, மாயையைப் பின்பற்றி, வீணராய்ப் போகிறதற்கு என்னிடத்தில் என்ன அநியாயத்தைக் கண்டார்கள்?" (எரே 2:6) என்று கர்த்தர் கேட்கிறார். தம்மிடத்தில் ஏதாவது அநியாயம் காணப்பட்டால், அதை இஸ்ரவேல் ஜனத்தார் தம்மிடத்தில் சொல்லவேண்டுமென்று கர்த்தர் கேட்கிறார். இஸ்ரவேலின் பரிசுத்தரிடத்தில் அநீதியுமில்லை, அநியாயமுமில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்தபோது ஆளோட்டிகள் அவர்களை அடித்து துன்புறுத்தினார்கள். அவர்களை வேதனைப்படுத்தி கடினமாய் நடத்தினார்கள். தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆளோட்டிகளைப்போல கடினமாய் நடத்தவில்லை. அவர்களுக்கு ஆளோட்டிகளின் கடினமும் தெரியும், கர்த்தருடைய அன்பும் தெரியும். ஆனாலும் அவர்கள் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படியாமல் போய்விடுகிறார்கள். கர்த்தரை ஆராதிப்பதில் அவர்களுக்கு ஒரு கஷ்டமுமில்லை. மிகவும் எளிமையான முறையில், பரிசுத்தத்தோடும், பயபக்தியோடும் தம்முடைய ஜனங்கள் தம்மை ஆராதிக்கவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருடைய பரிசுத்த ஆராதனையைவிட்டு விலகி, விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். மோளேகுக்கு தங்கள் பிள்ளைகளை பலியாகச் செலுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரகங்களை ஆராதித்தாலும், அவர்களுடைய மனதில் சந்தோஷமோ, சமாதானமோ, ஆறுதலோ, திருப்தியோ இல்லை. அவர்களுக்கு ஏமாற்றங்களே உண்டாயிற்று. இந்த ஏமாற்றங்களுக்கு அவர்களே காரணம். கர்த்தர் காரணமல்ல. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதியாமல், மாயையைப் பின்பற்றி, தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டார்கள்.

தேவனுடைய கற்பனைகளும், பிரமாணங்களும் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு மிகவும் எளிமையான, மெதுவான சுமையாகயிருக்கும். கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிக்கிறவர்களுக்கு மிகப்பெரிய ஆசீர்வாதங்கள் உண்டாகும். நாம் தப்பு செய்யும்போது கர்த்தர் நம்மை கண்டித்து திருத்துகிறார். நம்முடைய நன்மைக்காகவே கண்டிக்கிறார். ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைளை சிட்சிப்பதுபோல கர்த்தர் நம்மை சிட்சிக்கிறார். பிரம்பை கையாடாதவன் தன் மகனை பகைக்கிறான். கர்த்தர் நம்மீது அன்பாயிருப்பதினால்தான், நம்முடைய தப்பிதங்களுக்காக நம்மை சிட்சிக்கிறார். கர்த்தரிடத்தில் ஒரு தப்பிதமும் இல்லை. அவர் நமக்கு தீங்கு செய்கிறவரல்ல. நம்முடைய வழிகளில்தான் எல்லாவிதமான பாவங்களும், அக்கிரமங்களும் நிரம்பியிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் தம்மைவிட்டு தூரப்பட்டு போய்விட்டார்கள் என்று கர்த்தர் வேதனையோடு சொல்லுகிறார். அவர்கள் கர்த்தரைவிட்டு சாதாரணமாய் விலகிப்போகாமல், தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். அவர்கள் மாயையை பின்பற்றி, கர்த்தரைவிட்டு தூரப்பட்டு போய்விடுகிறார்கள். மாயையைப் பின்பற்றுவது என்னும் வாக்கியத்திற்கு விக்கிரகங்களை பின்பற்றுவது என்று பொருள்.

அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கும்போது, தங்களுடைய விக்கிரகாராதனையில் துன்மார்க்கமான காரியங்களை தாராளமாய்ச் சேர்த்துக்கொள்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமான எல்லா பாவங்களையும் விக்கிரகங்களுக்கு முன்பாக செய்கிறார்கள். அவை விக்கிரகங்களுக்கு பிரியமானவை என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை கானான் தேசத்திற்குள் அழைத்துக்கொண்டு வந்தார். "செழிப்பான தேசத்தின் கனியையும் நன்மையையும் சாப்பிடும்படிக்கு நான் உங்களை அவ்விடத்துக்கு அழைத்துக்கொண்டுவந்தேன்" (எரே 2:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் கானான் தேசத்திலே, அந்த தேசத்தின் நன்மைகளைப் புசித்தார்கள். அதன் எல்லா ஆசீர்வாதங்களையும் சந்தோஷமாய் அனுபவித்தார்கள். ஆனால் அவர்களுடைய இருதயம் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போயிற்று. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்து, கானான் தேசத்தையும், தங்களையும் தீட்டுப்படுத்தினார்கள்.

"ஆனாலும் நீங்கள் அதற்குள் பிரவேசித்தபோது, என் தேசத்தைத் தீட்டுப்படுத்தி, என் சுதந்தரத்தை அருவருப்பாக்கினீர்கள்" (எரே 2:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். கானான்தேசம் கர்த்தருடைய தேசம். அது பரிசுத்தமான தேசம். அது இம்மானுவேலின் தேசம். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ கானான் தேசத்தை தீட்டுப்படுத்திவிடுகிறார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரிடத்தில் மறுபடியும் திரும்பி வரவேண்டும் என்னும் ஆர்வம் அவர்களிடத்தில் சிறிதுமில்லை. அவர்களில் ஒருவர்கூட கர்த்தரைப்பற்றி விசாரிப்பதில்லை.

ஜனங்கள் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போனதுபோல, ஆசாரியர்களும், வேதத்தைப் போதிக்கிறவர்களும், மேய்ப்பர்களும் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். "கர்த்தர் எங்கே" என்று அவருடைய ஊழியக்காரர்கள்கூட, அவரைப்பற்றி விசாரிப்பதில்லை. கர்த்தருடைய கிருபைகளையும், இரக்கங்களையும், ஆசீர்வாதங்களையும் மறுபடியுமாகப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்னும் வாஞ்சை ஒருவரிடத்திலும் இல்லை. "கர்த்தர் எங்கேயென்று ஆசாரியர்கள் சொல்லாமலும், வேதத்தைப் போதிக்கிறவர்கள் என்னை அறியாமலுமிருந்து, மேய்ப்பர்கள் எனக்குத் துரோகம் பண்ணினார்கள்" (எரே 2:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு வேதத்தைப் போதிக்க வேண்டும். கர்த்தரைப்பற்றிய அறிவை அவர்களுக்கு கற்றுக்கொடுக்கவேண்டும். ஆனால் வேதத்தைப் போதிக்கிறவர்களே கர்த்தரை அறியாமலிருக்கிறார்கள். நியாயப்பிரமாணத்தைக் கற்று தேர்ந்திருக்கவேண்டிய வேதபாரகர்களுக்கு, தேவனைப்பற்றியும் தெரியவில்லை, அவருடைய சித்தத்தைப்பற்றியும் தெரியவில்லை. மேய்ப்பர்கள் மந்தையிலுள்ள ஆடுகளை மேய்க்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடாமல், மேய்ப்பர்கள் அவர்களை பாதுகாப்பாய் வழிநடத்தவேண்டும். ஆனால், மேய்ப்பர்களே கர்த்தருக்கு துரோகம்பண்ணுகிறார்கள். ஜனங்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போவதற்கு மேய்ப்பர்களே காரணமாயிருக்கிறார்கள். கலகக்காரர்களின் கூட்டத்திற்கு மேய்ப்பர்கள் தலைமை வகிக்கிறார்கள்.

"தீர்க்கதரிசிகள் பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி, விணானவைகளைப் பின்பற்றினார்கள்" (எரே 2:8). தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாகச் சொல்லுவதாக சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுடைய வார்த்தையில் உண்மையில்லை. அவர்கள் கர்த்தரைக் கொண்டு தீர்க்கதரிசனம் சொல்லாமல், பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். தீர்க்கதரிசிகள் கர்த்தரை பின்பற்றவில்லை. அவர்கள் வீணான விக்கிரகங்களை பின்பற்றுகிறார்கள்.

தங்கள் தேவர்களை மாற்றினது உண்டோ எரே 2:9-13

எரே 2:9. ஆதலால் இன்னும் நான் உங்களோடே வழக்காடுவேன், உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளோடும் வழக்காடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 2:10. நீங்கள் கித்தீமின் தீவுகள்மட்டும் கடந்துபோய்ப் பார்த்து, கேதாருக்கு ஆள் அனுப்பி நன்றாய் விசாரித்து, இப்படிப்பட்ட காரியம் உண்டோ என்றும்,

எரே 2:11. எந்த ஜாதியாவது தேவர்களல்லாத தங்கள் தேவர்களை மாற்றினது உண்டோ என்றும் பாருங்கள்; என் ஜனங்களோ வீணானவைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றினார்கள்.

எரே 2:12. வானங்களே, இதினிமித்தம் பிரமித்துக் கொந்தளித்து, மிகவும் திடுக்கிடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 2:13. என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி இஸ்ரவேல் ஜனத்தாரின் அவபக்தியையும், மதியீனத்தையும் இங்கு தெளிவாகச் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனங்கள் பாவத்திலும் அக்கிரமத்திலும் ஜீவிக்கிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் பாவிகளைத் தண்டிப்பதற்கு முன்பாக அவர்களோடு வழக்காடுகிறார். அவர்கள் மனந்திரும்புவதற்கு நல்ல வாய்ப்புக்களைக் கொடுக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரோ தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பாமல், தொடர்ந்து துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். "ஆதலால் இன்னும் நான் உங்களோடே வழக்காடுவேன்" (எரே 2:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறவர்கள், தங்கள் முன்னோர்களின் பாரம்பரிய கட்டுக்கதைகளை நம்புகிறார்கள். வீணான பேச்சுக்கள் அவர்களை பாவத்தின் வலையிலும், அக்கிரமத்தின் கண்ணியிலும் சிக்க வைத்துவிடுகிறது. கர்த்தர் நீதியுள்ளவர். அவர் தமக்கு விரோதமாக கலகம்பண்ணுகிற எல்லோரோடும் வழக்காடுகிறார். பெற்றோரோடு வழக்காடுவது போல, அவர்களுடைய பிள்ளைகளோடும் வழக்காடுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார், சந்ததி சந்ததியாக, கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். ஆகையினால் "நான் உங்களோடே வழக்காடுவேன், உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளோடும் வழக்காடுவேன்" (எரே 2:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

புறஜாதி தேசத்தாரிடத்தில் காணப்படாத பாவங்கள்கூட இஸ்ரவேல் ஜனத்தாரிடம் காணப்படுகிறது. புறஜாதி ஜனங்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் மாயையைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் விக்கிரகங்களை ஆராதித்தாலும் தங்களுடைய விக்கிரகாராதனையில் உறுதியாயிருக்கிறார்கள். அவர்கள் ஒருபோதும் தங்கள் தெய்வங்களை மாற்றுவதில்லை.

இஸ்ரவேல் ஜனங்களோ மெய்யான தேவனை ஆராதிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தரைத் தவிர வேறு தெய்வமில்லை. புறஜாதியார் தேவர்களல்லாத தேவர்களை ஆராதிக்கிறார்கள். ஆனாலும் தங்கள் தேவர்களை அவர்கள் மாற்றுவதில்லை. ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேவனை மாற்றிவிடுகிறார்கள். கர்த்தரை விட்டுவிட்டு, விக்கிரகத்தை ஆராதிக்கப்போய் விடுகிறார்கள்.

"எந்த ஜாதியாவது தேவர்களல்லாத தங்கள் தேவர்களை மாற்றினது உண்டோ என்றும் பாருங்கள்; என் ஜனங்களோ வீணானவைகளுக்காகத் தங்கள் மகிமையை மாற்றினார்கள்" (எரே 2:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் பக்கத்து தேசங்களுக்கு கடந்துபோகவேண்டும். அங்கேயுள்ள ஜனங்கள் தங்கள் தேவர்களை மாற்றாமல், அவர்களை எப்படி ஆராதிக்கிறார்கள் என்பதை நன்றாய் விசாரிக்கவேண்டும். அப்போதுதான், தங்களைப்போல தேவனை மாற்றுகிறவர்கள், இந்த உலகத்தில் வேறெங்கும் இல்லை என்பது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தெரியவரும்.

"நீங்கள் கித்தீமின் தீவுகள்மட்டும் கடந்துபோய்ப் பார்த்து, கேதாருக்கு ஆள் அனுப்பி நன்றாய் விசாரித்து, இப்படிப்பட்ட காரியம் உண்டோ என்றும், எந்த ஜாதியாவது தேவர்களல்லாத தங்கள் தேவர்களை மாற்றினது உண்டோ என்றும் பாருங்கள்" (எரே 2:10,11) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

அக்காலத்தில் கித்தீம் தீவுகள் நாகரீகத்தில் வளர்ச்சி பெற்றிருந்தது. இவை ஐரோப்பாவிலுள்ள தீவுகள். இவை கிரேக்கு தேசத்திற்கு முன்னோடியான தீவுகள். இங்குள்ள ஜனங்கள் கல்வியறிவு மிகுந்தவர்கள். நாகரீகம் மிகுந்தவர்கள். கித்தீமின் தீவுகளைப்போலவே, கேதாரும் அக்காலத்தில் நாகரீகம் மிகுந்த தேசமாய் விளங்கிற்று.

இந்த தீவுகளிலோ, இந்த தேசங்களிலோ ஒரு ஜாதிகூட, தேவர்களல்லாத தங்கள் தேவர்களை மாற்றினதில்லை. அவர்கள் தேவர்களல்லாத விக்கிரகங்களை ஆராதனை செய்தாலும், தங்கள் தெய்வங்களிடம் மிகுந்த பக்தியாயும், பற்றுதலாயும் இருக்கிறார்கள். அவர்களுடைய விக்கிரகங்கள் மரத்தினால் செய்யப்பட்டதாயிருந்தாலும், கல்லால் செய்யப்பட்டதாயிருந்தாலும் அதன்மீது பற்றுதலாயிருக்கிறார்கள்.

தங்களுடைய விக்கிரகங்களை, பொன்னால் செய்யப்பட்ட விக்கிரகங்களுக்காகவோ, அல்லது வெள்ளியினால் செய்யப்பட்ட விக்கிரகங்களுக்காகவோ மாற்றுவதில்லை. விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள், ஜீவனுள்ள மெய்த்தேவனாகிய கர்த்தருக்காகவும், தங்கள் விக்கிரகங்களை மாற்றுவதில்லை.

கர்த்தர் புறஜாதி தேசத்தாரின் விக்கிரகாராதனையை புகழ்ந்து பேசவில்லை. இஸ்ரவேல் ஜனங்களுக்கு புரியும் வண்ணமாய், புறஜாதி தேசத்தாரின் சுபாவங்களை எடுத்துச் சொல்லுகிறார். விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள்கூட தங்கள் தெய்வங்களை மாற்றுவதில்லை. ஆனால் இஸ்ரவேலின் பரிசுத்தரை ஆராதிக்கிற யூதர்களோ, கர்த்தரைவிட்டு விட்டு, அவருக்குப் பதிலாக, விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். வீணானவைகளுக்காக தங்கள் மகிமையை மாற்றுகிறார்கள். விக்கிரகங்களுக்காக கர்த்தரை மாற்றுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். அந்த செழிப்பான தேசத்தின் கனியையும் நன்மையையும் சாப்பிடும்படி அவர்களை ஆசீர்வதித்திருக்கிறார். ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு, கர்த்தரைவிட்டு விலகிப்போகவேண்டும் என்னும் அவசியம் எதுவுமில்லை. கர்த்தருக்குப் பதிலாக வேறு தெய்வத்தை ஆராதிக்க வேண்டும் என்பதற்கான காரணமும் அவர்களிடத்தில் இல்லை.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை மாத்திரமே தம்முடைய ஜனமாக தெரிந்துகொண்டார். அவர்கள் மத்தியில் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போகக்கூடாது. தங்கள் தெய்வமாக, கர்த்தரை தவிர, வேறு தெய்வத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது. ஆனால் இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேவனை மாற்றியிருக்கிறார்கள்.

விக்கிரகாராதனைக்காரரிடத்தில், அவர்களுடைய விக்கிரகங்கள்மீது பக்தி வைராக்கியம் இருக்கிறது. தங்கள் விக்கிரகங்களுக்காக அவர்கள் அனலாயிருக்கிறார்கள். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளோ தங்கள் ஆவியிலே அனலாயில்லாமல், குளிர்ந்துபோயிருக்கிறார்கள். கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளாமல், குழப்பத்தோடிருக்கிறார்கள். கர்த்தரை விட்டு விலகிப்போவதற்கு காரணங்களையும் சமயங்களையும் எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் மதியீனமாயிருக்கிறார்கள். நன்மையைவிட்டு விலகி தீமையைப் பற்றிக்கொள்கிறார்கள். தங்களுடைய மதியீனத்தினால் தங்களுக்குத்தாங்களே அழிவையும், தீமையையும் வரவழைத்துக்கொள்கிறார்கள்.

தேவனாகிய கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாரை தம்முடைய ஜனமாக தெரிந்துகொண்டார். சொற்ப ஜனங்களாகயிருந்த அவர்களை, ஒரு தேசமாக பலுகிப்பெருகச் செய்தார். அவர்களுக்கு கனத்தையும், மதிப்பையும், மரியாதையையும், மகிமையையும் கொடுத்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய மகிமையை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம் செய்தபோது, கர்த்தருக்காக ஆசரிப்பு கூடாரத்தை ஸ்தாபித்தார்கள். கர்த்தருடைய மகிமை அங்கே வந்து இறங்கிற்று. இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தருடைய மகிமையை பிரத்தியட்சமாய்த் தரிசித்தார்கள். ஆனாலும் அவர்கள் வீணானவைகளுக்காக தங்கள் மகிமையை மாற்றுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தர் மாத்திரமே நன்மை செய்திருக்கிறார். விக்கிரகங்கள் அவர்களுக்கு ஒரு நன்மையும் செய்ததில்லை. விக்கிரகங்களுக்கு ஜீவனில்லை. தங்களை ஆராதிக்கிறவர்களுக்கு, விக்கிரகங்களால் ஒரு நன்மையும் செய்ய முடியாது. ஆனாலும் இஸ்ரவேல் ஜனத்தார், தங்களுக்கு நன்மை செய்கிற கர்த்தரை விட்டு விலகி, தங்களுக்கு இதுவரையிலும் ஒரு நன்மையும் செய்திராத விக்கிரகங்களைப் பற்றிக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவங்களையும், மதியீனங்களையும் வானங்கள் வந்து பார்க்கவேண்டும் என்று கர்த்தர் வானங்களை அழைக்கிறார். "வானங்களே, இதினிமித்தம் பிரமித்துக் கொந்தளித்து, மிகவும் திடுக்கிடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 2:12). இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைவிட்டு எவ்வளவு தூரமாய் விலகிப்போயிருக்கிறார்கள் என்பதை வானங்கள் பார்த்து பிரமிக்கவேண்டும். இஸ்ரவேல் ஜனங்கள் அந்த அளவுக்கு கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்களின் பின்மாற்றத்தைப் பார்த்து, வானங்கள் மாத்திரமல்ல, நாமும் அதன் நிமித்தமாய் பிரமிக்கவேண்டும். தேவனாகிய கர்த்தர் மனுஷனை தம்முடைய சாயலாக சிருஷ்டித்திருக்கிறார். அவனுக்கு ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ மதியீனமான காரியங்களை செய்கிறார்கள். தங்களுக்கு ஞானமிருப்பதாக நினைக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்தில் ஞானமில்லை. மதியீனமே இருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்வதைப் பார்த்து, விசுவாசிகளாகிய நாம் அவர்கள்மீது கொந்தளிக்கவேண்டும். அவர்களுடைய அவபக்தியினிமித்தமாய், நமக்கும் அவர்கள்மீது பரிசுத்தமான கோபம் வரவேண்டும்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தைப்பற்றிச் சொல்லும்போது, "என் ஜனங்கள் இரண்டு தீமைகளை செய்தார்கள்" (எரே 2:13) என்று சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருக்கு நன்றியில்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மதியீனமான காரியங்களை செய்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் அதை மீறுகிறார்கள். தங்களுடைய கடமைகளை செய்ய தவறிவிடுகிறார்கள். தங்களுடைய நன்மைக்கு பாதகமான காரியங்களை செய்கிறார்கள். அவர்கள் ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய கர்த்தரை விட்டுவிட்டார்கள். தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்.

ஜீவத்தண்ணீர் ஊற்றிலிருந்து எப்போதும் ஜீவத்தண்ணீர் வந்துகொண்டேயிருக்கும். அதை பருகுகிறவர்களுக்கு ஒருபோதும் தாகமுண்டாகாது. ஜீவத்தண்ணீர் அவர்களுக்கு தொடர்ந்து கிடைக்கும். அந்தத் தண்ணீர் அவர்களுக்கு குறைவில்லாமல் தாராளமாய்க் கிடைக்கும். "ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்" *(சங் 36:9).*

கர்த்தருக்குள் நமக்கு போதுமான கிருபையும் பெலமும் இருக்கிறது. நம்முடைய எல்லா ஊற்றுகளும் கர்த்தருக்குள்ளேயே இருக்கிறது. கர்த்தரே நமக்கு ஜீவத்தண்ணீர் ஊற்றாகயிருக்கிறார். இந்த ஊற்று நிரம்பி வழிகிற ஊற்று. இது எப்போதும் ஊருகிற ஊற்று. கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஜீவத்தண்ணீர் ஊற்றாகயிருக்கிறார்.

ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ தங்கள் மதியீனத்தினால், ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய கர்த்தரை விட்டுவிடுகிறார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள். அவர்கள் மாயையைப் பின்பற்றி, கர்த்தருடைய இரக்கங்களையும் கிருபைகளையும் புறக்கணித்துவிடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்காக தொட்டிகளை வெட்டுகிறார்கள். மிகவும் கடினமாய் வேலை செய்து இந்த தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள். ஆனால் இந்த தொட்டிகளோ தண்ணீர் நிற்காத வெடிப்புள்ள தொட்டிகளாயிருக்கிறது. இந்த தொட்டியில் எவ்வளவு தண்ணீர் ஊற்றினாலும், அந்த தண்ணீர் தொட்டிக்குள் நிற்காது. தொட்டியை வெட்டியவர்கள், தங்களுடைய தாகத்தைத் தீர்த்துக்கொள்ள, தொட்டிக்கு அருகாமையில் வரும்போது, அந்த தொட்டியில் தண்ணீர் இருக்காது. அதிலே சகதியும் களிமண்ணும்தான் இருக்கும். கெட்டிக்கிடக்கிற தண்ணீரில் தேங்கிக் கிடக்கிற அசுத்தங்கள்தான் வெடிப்புள்ள தொட்டிகளில் தங்கியிருக்கும். அவர்களுடைய தாகத்தைத் தீர்க்கும் தண்ணீர் அங்கே இருக்காது.

விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களுக்கு, அவர்களுடைய விக்கிரகங்கள் வெடிப்புள்ள தொட்டிகளைப்போலவே இருக்கிறது. விக்கிராராதனைக்காரர்கள் தங்களுக்கு விக்கிரகங்களை செய்கிறார்கள். ஒரு சிலருக்கு பண ஆசையே விக்கிரகமாயிருக்கிறது. வேறு சிலருக்கோ உலகப்பிரகாரமான சிற்றின்பமும், உலகப்பிரகாரமான மேன்மையும் விக்கிரகங்களாயிருக்கிறது. இந்த விக்கிரகங்களை செய்வதற்கு அவர்கள் கடினமாய் உழைத்திருப்பார்கள். ஆனாலும் அவர்கள் வெடிப்புள்ள தொட்டிகளை வெட்டியதுபோலவே வெட்டியிருக்கிறார்கள்.

இவர்கள் தங்கள் விக்கிரகங்களாக, ஏராளமான ஐசுவரியங்களையும், சமுதாயத்தின் அந்தஸ்துகளையும் சம்பாதிக்கிறார்கள். அதை தாங்கள் வெட்டிய தொட்டியிலே சேமித்து வைக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய தொட்டிகளோ வெடிப்புள்ள தொட்டி. அதிலே எதை சேமித்து வைத்தாலும் தங்காது. நமக்கு தாகமாயிருக்கும்போது, வெடிப்புள்ள தொட்டிகளில் நாம் சேகரித்து வைத்திருந்த தண்ணீர், நமக்கு உதவியாயிருக்காது. அதுபோலவே, நாம் ஆசையாய் சேமித்து வைக்கிற ஐசுவரியமும், உலக இச்சைகளும், பெருமைகளும் நமக்கு நிலைத்து நிற்காது. அவை நமக்கு ஒருபோதும் உதவிசெய்யாது.

உஷ்ணம் அதிகமாகும்போது, உடைந்த தொட்டியிலே கீறலும் அதிகரிக்கும். நமக்கு தண்ணீர் தேவைப்படும்போது, அதிலே தண்ணீர் இல்லாமல் போய்விடும். உடைந்த தொட்டி பொத்தலான பைக்கு சமமாயிருக்கிறது. "என் சகோதரர் காட்டாறுபோல மோசம்பண்ணுகிறார்கள்; ஆறுகளின் வெள்ளத்தைப்போலக் கடந்துபோகிறார்கள்" *(யோபு 6:15).*

நம்முடைய நம்பிக்கை ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய கர்த்தர் மீதே இருக்கவேண்டும். அவரிடத்தில் மாத்திரமே நித்திய ஜீவனுக்கு பிரயோஜனமுள்ள வார்த்தைகள் உள்ளன. கர்த்தரை நம்புகிறவர்கள் செழித்திருப்பார்கள். வெடிப்புள்ள தொட்டிகளை நம்புகிறவர்கள் ஏமாந்துபோவார்கள்.

உன் தீமை உன்னைத் தண்டிக்கும்
எரே 2:14-19

எரே 2:14. இஸ்ரவேல் ஒரு வேலைக்காரனோ? அவன் வீட்டில் பிறந்த அடிமையோ? ஏன் கொள்ளையானான்?

எரே 2:15. பாலசிங்கங்கள் அவன்மேல் கெர்ச்சித்து, முழங்கி, அவன் தேசத்தைப் பாழாக்கிவிட்டன; அவன் பட்டணங்கள் குடியிராமல் சுட்டெரிக்கப்பட்டன.

எரே 2:16. நோப், தகபானேஸ் என்னும் பட்டணங்களின் புத்திரரும், உன் உச்சந்தலையை நொறுக்கினார்கள்.

எரே 2:17. உன் தேவனாகிய கர்த்தர் உன்னை வழியிலே நடத்திக்கொண்டுபோகுங் காலத்தில், நீ அவரை விட்டுப்போகிறதினால் அல்லவோ இதை உனக்கு நேரிடப்பண்ணினாய்?

எரே 2:18. இப்போதும் சீகோரின் தண்ணீரைக் குடிப்பதற்கு எகிப்துக்குப் போகிறதினால் உனக்குப் பிரயோஜனம் என்ன? ஐப்பிராத்து நதியின் தண்ணீரைக் குடிப்பதற்கு அசீரியாவுக்குப் போகிறதினால் உனக்குப் பிரயோஜனம் என்ன?

எரே 2:19. உன் தீமை உன்னைத் தண்டிக்கும், உன் மாறுபாடுகள் உன்னைக் கண்டிக்கும்; நீ உன் தேவனாகிய கர்த்தரை விடுகிறதும், என்னைப் பற்றும் பயம் உன்னிடத்தில் இல்லாமலிருக்கிறதும், எத்தனை பொல்லாப்பும் கசப்புமான காரியம் என்று உணர்ந்து கொள் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டார்கள். இது அவர்களுடைய மதியீனம். கர்த்தரைப்பற்றிக் கொள்ளாமல், விக்கிரகங்களுக்கு தூபங்காட்டியதினால், அவர்களுக்கு ஏராளமான வேதனைகளும், உபத்திரவங்களும் உண்டாயிற்று. கர்த்தருடைய சாபம் அவர்கள்மீது வந்தது. யூதா தேசம் முழுவதும் கர்த்தருடைய சாபத்தினால் வேதனைகளை அனுபவித்தது.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை கானான் தேசத்திற்கு அழைத்து வந்து, அங்கே குடியேற்றினார். சொற்ப ஜனமாயிருந்த இஸ்ரவேல் புத்திரரை, ஒரு தேசமாக பலுகிப் பெருகச் செய்தார். கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களுடைய தேசத்தைப் பாதுகாத்து பராமரித்தார்.

கானான் தேசத்திற்கு அருகாமையிலிருந்த தேசத்தார், இஸ்ரவேல் ஜனத்தின்மீது யுத்தம்பண்ணினார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்திற்கு பாதுகாப்பாயிருந்ததினால், சத்துருக்களால் அவர்களை ஜெயிக்க முடியவில்லை.

ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ, கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த பாதுகாப்புக்களையும், பராமரிப்புக்களையும் ஆசீர்வாதங்களையும் மறந்துவிட்டார்கள். கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்காமல், கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விட்டார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் ஜனத்தார்மீது வந்தது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுத்த பாதுகாப்பை விலக்கிகொள்கிறார். இப்போது இஸ்ரவேல் ஜனத்தாருடைய சத்துருக்கள் அவர்கள்மீது யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் யுத்தத்தில் தோற்றுப்போகிறார்கள். அந்நிய தேசத்திற்கு அடிமையாகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரைப்பார்த்து, "இஸ்ரவேல் ஒரு வேலைக்காரனோ? அவன் வீட்டில் பிறந்த அடிமையோ? ஏன் கொள்ளையானான்?" (எரே 2:14) என்று கேட்கிறார்.

இஸ்ரவேல் ஒரு வேலைக்காரன் அல்ல. அவன் கர்த்தருடைய குமாரன், அவருடைய சேஷ்டபுத்திரன். "அப்பொழுது நீ பார்வோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன்" (யாத் 4:22).

இஸ்ரவேல் ஜனத்தார் வேலைக்காரர்களோ அல்லது அடிமைகளோ அல்ல. அவர்கள் கர்த்தருடைய பிள்ளைகள். அவர்கள் ஆபிரகாமின் சந்ததியார். அவர்கள் தங்கள் தேசத்தை ஆளப்பிறந்தவர்கள். மற்ற தேசத்தாருக்கு அடிமை ஊழியம் செய்யப் பிறந்தவர்களல்ல.

ஆனால் இஸ்ரவேல் இப்போது ஒரு வேலைக்காரனைப்போல இருக்கிறார்கள். அவர்கள் எஜமான் வீட்டில் பிறந்த அடிமையைப்போல கட்டுண்டு கிடக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு தங்களை அடிமைப்படுத்தினார்கள். விக்கிரங்களுக்கு தங்களை அடிமைப்படுத்தினார்கள். அவர்கள் வீணானவைகளுக்காக தங்கள் மகிமையை மாற்றினார்கள்.

ஏசா தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தின் சுதந்தரத்தை, பயத்தங்கூழுக்கு விற்றுப்போட்டதுபோல, இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய சிலாக்கியங்களையும், சுதந்தரங்களையும் விக்கிரகங்களுக்காகவும், வீணானவைகளுக்காகவும் விற்றுப் போட்டார்கள். அவர்கள் தங்கள் தலையிலுள்ள மகிமையின் கிரீடத்தை மண்ணிலே தூக்கி எறிந்துவிட்டார்கள்.

பிரபுக்கள் தங்களுடைய ஆளுகையின் கீழுள்ள ஜனங்களை அடிமைகளைப்போல வேலை வாங்குவார்கள். எஜமான்கள் தங்கள் வீட்டிலுள்ள வேலைக்காரர்களை அடிமைப்படுத்துவார்கள்.

"ஆனாலும் அதற்குப்பின்பு அவர்கள் மாறாட்டம்பண்ணி, தாங்கள் சுயாதீனராக அனுப்பிவிட்ட வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் மறுபடியும் அழைப்பித்து, அவர்களை வேலைக்காரரும் வேலைக்காரிகளுமாயிருக்கும்படி அடிமைப்படுத்திக் கொண்டார்கள்" (எரே 34:11).

கர்த்தர் கானான் தேசத்திலே தம்முடைய ஜனத்தை குடியேற்றினார். அவர்களுக்கு சந்தோஷத்தையும், மகிமையையும் கொடுத்தார். ஆனால் இப்போது இஸ்ரவேல் ஜனத்தார் வேதனையிலிருக்கிறார்கள். கானான் தேசம் மகிமையிழந்து பரிதாபமாயிருக்கிறது. துக்கத்திலும், துன்பத்திலும் வேதனைப்படுகிறது. கானான் தேசத்திற்கு அருகாமையிலுள்ள தேசங்களின் ராஜாக்களும், பிரபுக்களும் இஸ்ரவேல்மீது யுத்தம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் ஜனங்களின் வல்லமைகளை முறித்துப்போடுகிறார்கள்.

அந்நிய தேசத்தார், இஸ்ரவேல் ஜனத்தாரை, கானான் தேசத்திலேயே கைதுபண்ணி, அடிமைப்படுத்துகிறார்கள். அவர்களில் சிலரை அந்நிய தேசத்திற்கு இழுத்துச் சென்று, அங்கே அவர்களை அடிமைகளாக விற்றுப்போடுகிறார்கள். அவர்கள் தங்களுடைய அக்கிரமங்களினிமித்தம் விற்கப்பட்டார்கள்.

"கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் தாயை அனுப்பிவிட்டபோது, அவளுக்குக் கொடுத்த தள்ளுதற்சீட்டு எங்கே? அல்லது எனக்குக் கடன்கொடுத்த எவனுக்கு உங்களை நான் விற்றுப்போட்டேன்? இதோ, உங்கள் அக்கிரமங்களினிமித்தம் நீங்கள் விற்கப்பட்டீர்கள்; உங்கள் பாதகங்களினிமித்தம் உங்கள் தாய் அனுப்பிவிடப்பட்டாள்" (ஏசா 50:1).

எரேமியா இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசனத்திற்கு, வேதபண்டிதர்கள் ஆவிக்குரிய வியாக்கியானம் சொல்லுகிறார்கள். "மனுஷனுடைய ஆத்துமா ஒரு வேலைக்காரனோ, அவன் வீட்டில் பிறந்த அடிமையோ" என்று நமக்கு நாமே கேள்வி கேட்டுக்கொள்ளவேண்டும். மெய்யாகவே மனுஷருடைய ஆத்துமா வேலைக்காரனுமல்ல. அது வீட்டில் பிறந்த அடிமையுமல்ல. ஆனாலும் ஆத்துமா கொள்ளையிடப்பட்டிருக்கிறது. மனுஷருடைய ஆசைகளுக்கும், இச்சைகளுக்கும், பாவங்களுக்கும் அவர்களுடைய ஆத்துமா விற்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் மனுஷருடைய ஆத்துமாவுக்கு சுதந்தரமில்லை. அது பாவத்திற்கு அடிமையாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய ஐசுவரியங்களையெல்லாம் இழந்துவிட்டார்கள். கர்த்தர் அவர்களை செழிப்பான தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார். இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தின் கனியையும், நன்மையையும் சாப்பிட்டவர்கள். அவர்களுக்கு கானான் தேசத்தில் திரளான ஆசீர்வாதங்களும் ஐசுவரியங்களும் இருந்தது.

இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவங்களின் நிமித்தமாய், கர்த்தர் அவர்களுக்கு கொடுத்து வந்த தம்முடைய தெய்வீக பாதுகாப்பை, அவர்களை விட்டு நீக்கிப்போட்டார். தங்களுடைய சுயபலத்தினாலும், சுயபராக்கிரமத்தினாலும் அவர்களால் தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. பக்கத்து தேசங்களிலுள்ள அந்நிய தேசத்தார் அவர்கள்மீது யுத்தம் செய்து, அவர்களுடைய ஐசுவரிகளையெல்லாம் கொள்ளையிட்டார்கள். அவர்களுடைய சம்பத்துக்களை தங்கள் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

"பாலசிங்கங்கள் அவன்மேல் கெர்ச்சித்து, முழங்கி, அவன் தேசத்தைப் பாழாக்கிவிட்டன" (எரே 2:15) என்று கர்த்தர் சொல்லுகிறார். சில சமயங்களில், வல்லமையுள்ள ஒரே ஒரு சத்துரு மாத்திரம் இஸ்ரவேல் ஜனத்தார்மீது வந்து அவர்களை மேற்கொண்டான். சில சமயங்களில் வேறொரு சத்துரு வந்தான். சில சமயங்களில் சத்துருக்கள் எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து வந்து, இஸ்ரவேல் ஜனத்தார்மீது விழுந்தார்கள். இஸ்ரவேலை ஜெயித்தார்கள். அவர்களுடைய ஐசுவரியங்களைக் கொள்ளையிட்டார்கள். அவர்கள் தேசத்தின் கனிகளை தங்கள் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களுடைய பட்டணங்களை குடியிராமல் சுட்டெரித்துப்போட்டார்கள்.

சத்துருக்கள் இஸ்ரவேல் ஜனத்தாரைக் கொடுமைப்படுத்தினார்கள். வேதனைப்படுத்தினார்கள். இஸ்ரவேல் ஜனத்தார்மீது யுத்தம்பண்ண வந்த எல்லோருமே அவர்களை அடித்தார்கள். "நோப், தகபானேஸ் என்னும் பட்டணங்களின் புத்திரரும், உன் உச்சந்தலையை நொறுக்கினார்கள்" (எரே 2:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அக்காலத்தில் நோப், தகபானேஸ் ஆகிய பட்டணங்கள் மிகவும் பலவீனமானவை. அவர்களுக்கு இராணுவ பலமோ அல்லது தைரியமோ இல்லை. ஆனாலும், அவர்கள்கூட இஸ்ரவேல் ஜனத்தாரின் உச்சந்தலையை நொறுக்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு கர்த்தருடைய பாதுகாப்பு இல்லை. ஆகையினால் அவர்கள் எல்லோரிடமும் அடிவாங்குகிறார்கள்.

மனாசேயின் ஆட்சிக்காலத்தில் யூதாதேசம் மிகவும் பரிதாபமான நிலமையிலிருந்தது. "ஆகையால் கர்த்தர்: அசீரியா ராஜாவின் சேனாபதிகளை அவர்கள்மேல் வரப்பண்ணினார்; அவர்கள் மனாசேயை முட்செடிகளில் பிடித்து, இரண்டு வெண்கலச் சங்கிலியால் அவனைக் கட்டிப் பாபிலோனுக்குக் கொண்டுபோனார்கள்" (2நாளா 33:11).

இஸ்ரவேல் ஜனத்தார் அனுபவிக்கிற வேதனைகளுக்கும், உபத்திரவங்களுக்கும் அவர்களுடைய பாவங்களும், அக்கிரமங்களுமே காரணம். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவத்தின் நிமித்தமாய், தாங்களே தங்கள்மீது தீங்குகளை வரவழைத்துக்கொண்டார்கள். "உன் தேவனாகிய கர்த்தர் உன்னை வழியிலே நடத்திக்கொண்டுபோகுங் காலத்தில், நீ அவரை விட்டுப்போகிறதினால் அல்லவோ இதை உனக்கு நேரிடப்பண்ணினாய்?" (எரே 2:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவர்கள் அந்நிய தேசத்தாரோடு பாவமான உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனைக்கு ஒத்துப்போனார்கள். தீட்டானவர்களோடு சேர்ந்து, கர்த்தருடைய பிள்ளைகளும் தீட்டானார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை, தமக்குப் பிரியமான வழியிலே நடத்திக்கொண்டு போகிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ, கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தருடைய வழிநடத்தலுக்கும், ஆலோசனைக்கும் கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலுள்ள தேசத்தார், இவர்கள்மீது அன்பாயிருப்பதுபோல் நடிக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்தில் உண்மையான அன்பு இல்லை. அவர்கள் இஸ்ரவேல் தேசத்தாருக்கு உதவி செய்ய வருவதாக வாக்குப்பண்ணுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு உதவி தேவைப்படும்போது, பக்கத்து தேசத்தார் அவர்களுக்கு உதவி செய்ய வரவில்லை. இஸ்ரவேல் புத்திரரின் பாவத்தின் நிமித்தமாய், அவர்களுக்கு உதவியும் ஒத்தாசையும் வருவதற்குப் பதிலாக, தீங்கும் வேதனையும் வருகிறது. அவர்களுடைய பாவங்களே அவர்களுடைய வேதனைகளுக்கு காரணம்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு உதவி வருமென்று எகிப்துதேசத்தையும் அசீரியா தேசத்தையும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அவர்களுடைய எதிர்பார்ப்பு வீணாய்ப்போயிற்று. "இப்போதும் சீகோரின் தண்ணீரைக் குடிப்பதற்கு எகிப்துக்குப் போகிறதினால் உனக்குப் பிரயோஜனம் என்ன? ஐப்பிராத்து நதியின் தண்ணீரைக் குடிப்பதற்கு அசீரியாவுக்குப் போகிறதினால் உனக்குப் பிரயோஜனம் என்ன?" (எரே 2:18) என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் கேட்கிறார்.

ஐபிராத்து நதியின் தண்ணீர் தங்களுடைய தாகத்தைத் தீர்க்கும் என்று இஸ்ரவேல் ஜனங்கள் நினைக்கிறார்கள். இதற்காக அவர்கள் அசீரியாவுக்குப் போகிறார்கள். ஆனால் அசீரியர் மூலமாய் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் மாயையை நம்புகிறார்கள். ஐபிராத்து நதியானது வெடிப்புள்ள தொட்டிகளைப்போல இருக்கிறது.

"உன் தீமை உன்னைத் தண்டிக்கும், உன் மாறுபாடுகள் உன்னைக் கண்டிக்கும்" (எரே 2:19) என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடம் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரின் தீமைகளினிமித்தமும், மாறுபாடுகளினிமித்தமும், கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார், கண்டிக்கிறார். இது அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு வந்திருக்கிற தண்டனை.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை, தம்முடைய நீதியினால் தண்டிக்கும்போது, எகிப்து தேசத்தாராலோ அல்லது அசீரிய தேசத்தாராலோ, இஸ்ரவேல் ஜனத்தாரை தேவனுடைய கோபத்திலிருந்தும், அவருடைய தண்டனையிலிருந்தும் தப்புவிக்க முடியாது. இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் கர்த்தரைப்பற்றிய பயமும் இல்லாமல் போகிறது.

அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தம், கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களுடைய சத்துருக்கள் அவர்களுக்கு மெய்யாகவே சத்துருக்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய சிநேகிதர்களும் அவர்களுக்கு பிரயோஜனமில்லாத ஏமாற்றுக்காரராகவும், மாய்மாலக்காரராகவும் இருக்கிறார்கள்.

கர்த்தரை நம்முடைய தெய்வமாக ஏற்றுக்கொள்ளாதது பாவம். நம்மிடத்தில் பாவம் இருக்கும்போது, நம்முடைய ஆத்துமா கர்த்தரைவிட்டு விலகிப்போகும். நம்மிடத்தில் கர்த்தரைப்பற்றிய பயம் இருக்காது. பாவம் தீமையானது. அதில் சிறிதும் நன்மை இருக்காது. பாவம் பொல்லாப்பாயும் கசப்பாயும் இருக்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம். மரணம் கசப்பானது. பாவம் பொல்லாப்பாயும் கசப்பாயும் இருக்கும்போது, பாவத்தின் விளைவினால் நமக்கு பொல்லாப்பு நேரிடும். அதனால் கசப்பான அனுபவங்கள் நமக்குள்ளே வரும்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் தீமை அவர்களைத் தண்டிக்கிறது. அவர்களுடைய மாறுபாடுகள் அவர்களைக் கண்டிக்கிறது. பாவத்தைத் தொடர்ந்து தண்டனை வரும். பாவமே அவர்களைத் தண்டிக்கும். அவர்களுடைய துன்மார்க்கம் அவர்களை வேதனைப்படுத்தும். கர்த்தருக்கு விரோதமாக பேசியவர்களின் வாய்கள் அடைக்கப்படும். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை, அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாய் தண்டிக்கும்போது, கர்த்தர் நீதியுள்ளவர் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்வார்கள்.

"நீ உன் தேவனாகிய கர்த்தரை விடுகிறதும், என்னைப் பற்றும் பயம் உன்னிடத்தில் இல்லாமலிருக்கிறதும், எத்தனை பொல்லாப்பும் கசப்புமான காரியம் என்று உணர்ந்து கொள் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எரே 2:19).

விக்கிரகாராதனை
எரே 2:20-28

எரே 2:20. பூர்வகாலந்துவக்கி நான் உன் நுகத்தடியை முறித்து, உன் கட்டுகளை அறுத்தேன்; நான் அடிமைப்படுவதில்லையென்று நீயும் சொன்னாயே; ஆகிலும், உயரமான சகல மேட்டின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் நீ வேசியாய்த் திரிகிறாய்.

எரே 2:21. நான் உன்னை முற்றிலும் நற்கனி தரும் உயர்குலத் திராட்சச் செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன?

எரே 2:22. நீ உன்னை உவர்மண்ணினாலே கழுவி, அதிக சவுக்காரத்தைக் கையாடினாலும், உன் அக்கிரமத்தின் கறைகள் எனக்கு முன்பாக இருக்குமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

எரே 2:23. நான் தீட்டுப்படவில்லை; நான் பாகால்களைப் பின்பற்றவில்லை என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? பள்ளத்தாக்கிலே நீ நடக்கிற மார்க்கத்தைப் பார்; நீ செய்ததை உணர்ந்துகொள்; தாறுமாறாய் ஓடுகிற வேகமான பெண்ஒட்டகம் நீ.

எரே 2:24. வனாந்தரத்திலே பழகினதும், தன் இச்சையின் மதவெறியிலே காற்றை உட்கொள்ளுகிறதுமான காட்டுக்கழுதை நீ; அதின் ஆவலை திருத்தி, அதைத் திருப்புகிறவன் யார்? அதைத் தேடுகிறவர்கள் ஒருவரும் வருத்தப்படவேண்டியதில்லை; அதின் மாசத்தில் அதைக் கண்டுபிடிப்பார்கள்.

எரே 2:25. உன் கால் வெறுங்காலாகாதபடிக்கும், உன் தொண்டை வறட்சியடையாதபடிக்கும் அடக்கிக்கொள் என்றால், நீ: அது கூடாதகாரியம்; நான் அப்படிச் செய்யமாட்டேன்; அந்நியரை நேசிக்கிறேன்; அவர்கள் பிறகே போவேன் என்கிறாய்.

எரே 2:26. திருடன் அகப்படுகிறபோது, எப்படி வெட்கப்படுகிறானோ, அப்படியே இஸ்ரவேல் வம்சத்தார் வெட்கப்படுவார்கள்; கட்டையைப் பார்த்து, நீ என் தகப்பன் என்றும்; கல்லைப்பார்த்து, நீ என்னைப் பெற்றாய் என்றும் சொல்லுகிற அவர்களும், அவர்கள் ராஜாக்களும், அவர்கள் பிரபுக்களும், அவர்கள் ஆசாரியர்களும், அவர்கள் தீர்க்கதரிசிகளும் வெட்கப்படுவார்கள்.

எரே 2:27. அவர்கள் தங்கள் முகத்தையல்ல, தங்கள் முதுகை எனக்குக் காட்டினார்கள்; தங்கள் ஆபத்துக்காலத்திலோ எழுந்து எங்களை இரட்சியும் என்கிறார்கள்.

எரே 2:28. நீ உனக்கு உண்டுபண்ணின தேவர்கள் எங்கே? உன் ஆபத்துக்காலத்தில் உன்னை இரட்சிக்கக்கூடுமானால் அவைகள் எழும்பட்டும்; யூதாவே, உன் பட்டணங்களின் இலக்கமும், உன் தேவர்களின் இலக்கமும் சரி.

இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகாராதனைக்காரராயிருக்கிறார்கள். இதுவே அவர்களுடைய பிரதான பாவம். அவர்கள் உயரமான சகல மேட்டின்மேலும், பச்சையான சகல மரத்தின் கீழும் வேசியாய்த் திரிகிறார்கள். அவர்களுக்குள் எந்தவிதமான நிச்சயமுமில்லை. அவர்கள் விக்கிரகாராதனையில் திருப்தியடையவுமில்லை. தங்களுடைய மனதிலே நிம்மதியில்லாமல், அவர்கள் அங்கும் இங்குமாக அலைந்துகொண்டிருக்கிறார்கள்.

"நீ வேசியாய்த் திரிகிறாய்" என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரைப் பார்த்து சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் இப்போது ஆவிக்குரிய வேசித்தனம் பண்ணுகிறார்கள். விக்கிரகாராதனை சம்பந்தப்பட்ட எல்லாவிதமான அசுத்தங்களையும் பண்ணுகிறார்கள்.

கர்த்தர் பூர்வகாலம் துவக்கி இஸ்ரவேல் ஜனத்தாருடைய நுகத்தடியை முறித்தார். அவர்களுடைய கட்டுகளை அறுத்தார். அப்போது அவர்கள், "நான் அடிமைப்படுவதில்லை" என்று சொன்னார்கள் (எரே 2:20). ஆனால் இப்போது அவர்கள் விக்கிரகங்களுக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். வேசிகளாய்த் திரிகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கென்று விக்கிரகங்களை செய்கிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டி அவற்றை ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலுள்ள சாதாரண ஜனங்கள் மாத்திரமல்ல, அவர்களுடைய ராஜாக்களும், பிரபுக்களும், ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வெட்கப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவர்கள் கட்டையைப் பார்த்து, "நீ என் தகப்பன்" என்றும், கல்லைப் பார்த்து, "நீ என்னைப் பெற்றாய்" என்றும் சொல்லுகிறார்கள் (எரே 2:26).

"நீ என் தகப்பன்" என்னும் வாக்கியத்திற்கு, "நீயே என்னுடைய தேவன்" என்றும், "நீயே எனக்கு ஆதாரம், என்னுடைய காரண கர்த்தா" என்றும் பொருள். இஸ்ரவேல் ஜனத்தார் மரக்கட்டையைப் பார்த்து, "நீ என் தகப்பன்" என்று சொல்லி, அதற்கு கீழ்ப்படிய தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்.

கல்லைப் பார்த்து, "நீ என்னைப் பெற்றாய்" என்று சொல்லும்போது, "நீ என் தாய்" என்று சொல்லுகிறார்கள். தாய் பிள்ளையைப் போஷிப்பதுபோல, விக்கிரகத்தின் கல் தங்களைப் போஷிக்கவேண்டும் என்றும், தங்களைப் பாதுகாக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

கர்த்தராகிய தேவனே நம்முடைய பரமபிதா. அவரே சர்வசிருஷ்டிகர். அவரே நம்மை உண்டாக்கினவர். நாம் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ சிறிதுகாலம் கர்த்தரை ஆராதித்துவிட்டு, அதன் பின்பு கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கட்டையையும், கல்லையும் தங்களுக்கு தெய்வங்களாக்குகிறார்கள். அதன் பின்பு கட்டைக்கும் கல்லுக்கும் உருவங்களைக் கொடுக்கிறார்கள். அந்த உருவங்களுக்கு ஆவியும் சக்தியும் இருப்பதாகச் சொல்லி அவற்றைப் பணிந்துகொள்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய சிந்தை குழப்பத்திலிருக்கிறது. அவர்கள் கர்த்தரை ஆராதனை செய்த வரையிலும், அவர்களுக்கு தெளிந்த சிந்தனையிருந்தது. எப்போது மாயையை ஆராதிக்க ஆரம்பித்தார்களோ, அப்போதே அவர்களுடைய சிந்தை பாதிக்கப்பட்டு விட்டது. ஆகையினால்தான் அவர்களுடைய கண்களுக்கு கட்டைகள் தகப்பனாகவும், கல்லுகள் தாயாகவும் தெரிகிறது.

விக்கிரகாராதனைக்காரர்கள் தங்களுக்கு திரளான எண்ணிக்கையில் தெய்வங்கள் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கர்த்தர் மாத்திரமே மெய்யான தேவன். அவர் ஒருவர் மாத்திரமே தேவன். இஸ்ரவேல் ஜனத்தாரோ சேனைகளின் கர்த்தராகிய ஒரே தேவனிடத்தில் திருப்தியாயில்லை. தங்களுக்கு திரளான தெய்வங்கள் வேண்டுமென்று விரும்பி, ஏராளமான தேவர்களை உண்டுபண்ணுகிறார்கள். "யூதாவே, உன் பட்டணங்களின் இலக்கமும், உன் தேவர்களின் இலக்கமும் சரி" (எரே 2:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விக்கிரகங்களாகயிருந்தாலும், அவர்கள் ஒரே விக்கிரகத்திடம் திருப்தியாயிருப்பதில்லை. ஒவ்வொரு பட்டணத்திற்கும் ஒரு விக்கிரகத்தை உண்டுபண்ணுகிறார்கள். திரளான எண்ணிக்கைகளில் பிரியப்படுகிறார்கள். கர்த்தர் ஒருவராகவே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்பதையும், அவர் ஒருவராகவே பலத்த கிரியைகளை நடப்பிக்கிறார் என்பதையும் இஸ்ரவேல் ஜனத்தார் மறந்துவிட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களை ஆராதிப்பதினால் அவர்களிடத்தில் அக்கிரமம் பெருகியிருக்கிறது. கர்த்தருக்கு முன்பாக அவர்களுடைய அக்கிரமத்தின் கறைகள் எப்போதும் இருக்கும். தங்களுடைய அக்கிரமத்தின் கறைகளை அவர்களால் கழுவி சுத்தம்பண்ண முடியாது.

"நீ உன்னை உவர்மண்ணினாலே கழுவி, அதிக சவுக்காரத்தைக் கையாடினாலும், உன் அக்கிரமத்தின் கறைகள் எனக்கு முன்பாக இருக்குமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எரே 2:22).

தாங்கள் விக்கிரகங்களை தெய்வங்களாகப் பாவித்து, அவற்றை ஆராதிக்கவில்லை என்று இஸ்ரவேல் ஜனங்கள் சொல்லுகிறார்கள். தாங்கள் விக்கிரகங்களை பேய்களாகவும், பிசாசுகளாகவும் நினைத்து, அவற்றிற்கு மரியாதை கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். தெய்வத்திற்குரிய மரியாதையை விக்கிரகங்களுக்கு கொடுக்கவில்லையென்று மாய்மாலம் பண்ணுகிறார்கள். தாங்கள் உண்டுபண்ணின விக்கிரகங்களுக்கு சமுதாயத்திலே மரியாதை கொடுத்து, அவற்றை கனம்பண்ணுவதாகச் சொல்லுகிறார்கள். இவையெல்லாம் மாய்மாலமான வார்த்தைகள். உண்மையை மறைப்பதற்கு சொல்லப்படும் சாக்குபோக்குகள்.

"நான் தீட்டுப்படவில்லை, நான் பாகால்களை பின்பற்றவில்லை என்று நீ எப்படி சொல்லுகிறாய்" (எரே 2:23) என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் கேட்கிறார். அவர்கள் விக்கிரகங்களை வெளியரங்கமான இடங்களில் ஆராதிக்காமல், இரகசியமான இடங்களில் ஆராதிக்கிறார்கள். தங்களுடைய அக்கிரமங்களையெல்லாம் மூடி மறைப்பதற்கு முயற்சி பண்ணுகிறார்கள்.

"அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தாரின் மூப்பர்கள் அந்தகாரத்திலே அவரவர் தங்கள் விக்கிரகங்களின் சித்திர விநோத அறைகளில் செய்கிறதை நீ கண்டாயா? கர்த்தர் எங்களைப் பார்க்கிறதில்லை; கர்த்தர் தேசத்தைக் கைவிட்டார் என்று சொல்லுகிறார்களே என்றார்" (எசே 8:12).

தாங்கள் விக்கிரகங்களை ஆராதிப்பதை யாராலும் நிரூபிக்க முடியாது என்று நினைக்கிறார்கள். இந்த துணிகரத்தில்தான், "நான் பாகால்களைப் பின்பற்றவில்லை" என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய அக்கிரமத்தின் கறைகள் கர்த்தருக்கு முன்பாக இருக்கிறது. விக்கிரகாராதனையின் ஓர் அம்சமாக அவர்கள் குற்றமில்லாத இரத்தத்தையும் சிந்துகிறார்கள். உவர்மண்ணினாலும், சவுக்காரத்தினாலும் தங்கள்மேல் படிந்துள்ள இரத்தக்கறைகளை கழுவிவிடலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய அக்கிரமத்தின் கறைகள் கர்த்தருக்கு முன்பாக இருக்கிறது. கர்த்தருக்கு மறைவான இரகசியம் எதுவுமில்லை.

"பள்ளத்தாக்கிலே நீ நடக்கிற மார்க்கத்தைப் பார்" (எரே 2:23) என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் சொல்லுகிறார். அவர்கள் உயர்ந்த மேடுகளில் மாத்திரமல்ல, பள்ளத்தாக்குகளிலும் தங்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் உயரமான சகல மேட்டின்மேலும், பச்சையான சகல மரத்தின் கீழும் வேசியாய்த் திரிக்கிறார்கள்.

"நீங்கள் பச்சையான சகல மரத்தின்கீழும், விக்கிரக தேவர்களோடே மோகாக்கினியில் வெந்து, பள்ளத்தாக்குகளிலே கன்மலை வெடிப்புகளின் கீழ்ப் பிள்ளைகளைக் கொன்று போடுகிறவர்கள். பள்ளத்தாக்குகளிலுள்ள வழவழுப்பான சிலைகளிடத்தில் உன் பங்கு இருக்கிறது; அவைகள், அவைகளே உன் வீதம்; அவைகளுக்கு நீ பானபலியை வார்த்து, போஜனபலியையும் செலுத்துகிறாய்; இவைகளின்மேல் பிரியப்படுவேனோ?" (ஏசா 57:5,6).

"இப்படி இஸ்ரவேலர் பாகால்பேயோரைப் பற்றிக்கொண்டார்கள்; அதனால் இஸ்ரவேலர்மேல் கர்த்தருடைய கோபம் மூண்டது" (எண் 25:3).

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரிடம், "பள்ளத்தாக்கிலே நீ நடக்கிற மார்க்கத்தைப் பார், நீ செய்ததை உணர்ந்துகொள்" (எரே 2:23) என்று சொல்லுகிறார். கர்த்தர் இங்கு "பள்ளத்தாக்கு" என்று சொல்லுவது "இன்னோம் புத்திரரின் பள்ளத்தாக்கு" என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். அங்கே விக்கிரகாராதனைக்காரர்கள் மோளேகுக்கு தங்கள் குழந்தைகளை உயிரோடு பலியிடுவது வழக்கம். புறஜாதி ஜனங்கள் தங்கள் பிள்ளைகளை மோளேகுக்கு பலியிட்டதுபோல, இப்போது இஸ்ரவேல் ஜனங்களும் தங்கள் பிள்ளைகளை மோளேகுக்கு பலியிடுகிறார்கள். இந்த அக்கிரமத்தின் கறைகள் கர்த்தருக்கு முன்பாக இருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். "பூர்வகாலந்துவக்கி நான் உன் நுகத்தடியை முறித்து, உன் கட்டுகளை அறுத்தேன்" (எரே 2:20) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனால் அவர்களோ கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்துவிட்டு, அவருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிறார்கள். அவரை விட்டு விலகி தூரமாய்ப் போய்விடுகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் கட்டுகளை அறுத்தார். இஸ்ரவேல் ஜனங்கள் இதை நினைவுகூர்ந்து தங்களை கர்த்தரோடு கட்டி வைத்துக்கொள்ளவேண்டும். கர்த்தரை விட்டுப் பிரியாமல் அவரோடு ஐக்கியமாய் இணைந்திருக்கவேண்டும். கர்த்தர் தங்களுடைய நுகத்தடியை முறித்தார் என்பதை நினைவுகூர்ந்து, கர்த்தருக்கு அவர்கள் எக்காலத்திலும் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை இஸ்ரவேல் ஜனத்தார் சிறிதுகாலம் நினைவில் வைத்திருக்கிறார்கள். அழகான வார்த்தைகளினால் கர்த்தருக்கு வாக்குப்பண்ணுகிறார்கள். "நான் அடிமைப்படுவதில்லை" என்று கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய பிரமாணங்களையும், அவருடைய வார்த்தைகளையும், கட்டளைகளையும் "நான் மீறுவதில்லை" என்று அழகாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுடைய வார்த்தையில் உண்மையில்லை.

சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாகயிருந்தவர்களை, கர்த்தர் பலுகிப் பெருகச் செய்தார். அவர்களை இஸ்ரவேல் தேசமாக உருவாக்கினார். "நான் உன்னை முற்றிலும் நற்கனி தரும் உயர்குலத் திராட்சச் செடியாக நாட்டினேன்" (எரே 2:21) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனால் அவர்களோ தங்களுடைய சுபாவத்தில் சீரழிந்துபோகிறார்கள். நற்கனிதரும் உயர்குல திராட்சசெடியாக நாட்டப்பட்டவர்கள், காட்டு திராட்சச்செடியின் ஆகாதகொடிகளாக மாறிப்போனார்கள்.

அவர்களுடைய ஜீவியத்தில் மிகப்பெரிய மாற்றமுண்டாயிற்று. ஆரம்பத்தில் அவர்கள் கர்த்தரை ஆராதித்தார்கள். கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தார்கள். யோசுவாவின் நாட்களிலும், யோசுவாவுக்கு பின்பு இஸ்ரவேலின் மூப்பருடைய காலத்திலும் இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரையே சேவித்தார்கள்.

"யோசுவா உயிரோடிருந்த சகல நாட்களிலும், கர்த்தர் இஸ்ரவேலுக்குச் செய்த அவருடைய கிரியைகள் யாவையும் அறிந்து யோசுவாவுக்குப்பின்பு வெகுநாள் உயிரோடிருந்த மூப்பருடைய சகல நாட்களிலும், இஸ்ரவேலர் கர்த்தரைச் சேவித்தார்கள்" (யோசு 24:31).

யோசுவாவின் காலத்திற்கு பின்பு, அடுத்து வந்த சந்ததியார் கர்த்தரையும் அறியவில்லை. கர்த்தர் தங்களுக்கு செய்த நற்கிரியைகளையும் அறியவில்லை.

"அக்காலத்தில் இருந்த அந்தச் சந்ததியார் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டபின்பு, கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று" (நியா 2:10).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு கொஞ்சம் கொஞ்சமாக விலகிப்போனார்கள். அவர்களுடைய ஜீவியத்தில் கர்த்தருக்கு விரோதமான பாவங்களும், துன்மார்க்கங்களும் அதிகரித்தது. முடிவிலே அவர்கள் காட்டு திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாக மாறிப்போனார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகாராதனையில் மிகவும் பிரியமாயிருக்கிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுவதில் வேகத்தையும், விருவிருப்பையும், முரட்டாட்டத்தையும் காண்பிக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையும், அவருடைய தெய்வீக பராமரிப்பும் அவர்களுடைய இருதயத்தில் பேசவில்லை. அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல், விக்கிரகங்களை மாத்திரமே நோக்கிப் பார்க்கிறார்கள்.

கர்த்தர் அவர்களை தாறுமாறாய் ஓடுகிற வேகமான பெண்ஒட்டகம் (எரே 2:23) என்று சொல்லுகிறார். மேலும் கர்த்தர் அவர்களை வனாந்தரத்திலே பழகினதும், தன் இச்சையின் மதவெறியிலே காற்றை உட்கொள்ளுகிறதுமான காட்டுக்கழுதை என்றும் சொல்லுகிறார் (எரே 2:24).

பெண்ஒட்டகமும், காட்டு கழுதையும் வேலை செய்வதற்கு பழக்கப்படவில்லை. வேலை செய்யும் பயிற்சியில்லாததினால், இந்த மிருகங்கள் தாறுமாறாக ஓடுகிறது. தங்களுக்கு இஷ்டமானதை செய்கிறது. காட்டு கழுதையின் ஆவலை நிறுத்த முடியாது. அது போகும் பாதையிலிருந்து அதை திசை திருப்பவும் முடியாது.

பெண்ஒட்டகமும், காட்டு கழுதையும் கர்ப்பந்தரிக்கும் வரையிலும் அங்கும் இங்கும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும். அவை கர்ப்பந்தரித்து, அவற்றின் வயிற்றில் குட்டியிருக்கும்போதோ, அவற்றால் வேகமாக ஓடமுடியாது. காட்டு கழுதையை தேடிக்கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் ஒருவரும் வருத்தப்படமாட்டார்கள். அதன் மாசத்தில் அவற்றை கண்டுபிடிக்க முடியும் என்று எல்லோருக்கும் தெரியும்.

விக்கிரகாராதனை விஷத்தன்மையுள்ளது. விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் மதிமயங்கியிருப்பார்கள். அவர்கள் தாறுமாறாய் ஓடுகிற வேகமான பெண்ஒட்டகம் போலவும், காட்டு கழுதை போலவும் ஒருவருக்கும் அடங்காமலிருப்பார்கள். அவை காட்டிலிருக்கும்போது அவற்றை வேலைக்கு பயன்படுத்தவும் முடியாது.

ஆனாலும் அந்த மிருகங்களுக்கும் ஒருகாலம் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலம் வரும்போது அவை எவ்வளவு வேகமாக ஓடுகிற மிருகங்களாகயிருந்தாலும், எவ்வளவு முரட்டாட்டம் பண்ணுகிற மிருகங்களாகயிருந்தாலும், அவற்றின்மீதும் நுகம் வைக்கப்படும். அந்த மிருகங்களும் வேலை செய்ய பழகும்.

விக்கிரகாராதனைக்காரருக்கு வேதனையும், துன்பமும் அதிகரிக்கும்போது, அவர்களுடைய செவிகள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்கு திறக்கும். உபத்திரவம் அதிகரிக்கும்போது, அது வரையிலும் கடினமாயிருந்த இருதயம் மென்மையாகும். பிரச்சனைகளும், கவலைகளும் அதிகரிக்கும்போது, அது வரையிலும் கர்த்தரை பார்க்காமல் தங்கள் கண்களை மூடிக்கொண்டவர்கள், இனிமேல் தங்கள் கண்களைத் திறந்து கர்த்தரை பார்ப்பார்கள். தங்கள் காதுகளைத் திறந்து கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்பார்கள். கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவார்கள்.

இதுவரையிலும் தாறுமாறாய் ஓடினவர்கள், கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் கட்டுப்பாடாய் ஜீவிப்பார்கள். தன் இச்சையின் மதவெறியில் காட்டு கழுதைகளைப்போல அலைந்து திரிந்தவர்கள், இச்சையடக்கத்தோடும், பயபக்தியோடும், கர்த்தர் நியமித்திருக்கிற இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லுவார்கள். கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் தாறுமாறு இருக்காது. சகலமும் ஒழுங்கும் கிரமமுமாயிருக்கும்.

இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகாராதனையில் பழகிப்போய்விட்டார்கள். அவர்களால் விக்கிரகாராதனையைவிட்டு விலகி வரமுடியவில்லை. அவர்களுக்கு மனமாற்றமுண்டாகவில்லை. அவர்களுடைய ஜீவியத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சியும் ஏற்படவில்லை. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் துணிகரமான பாவங்களை செய்கிறார்கள். கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களுக்கு தூபங்களைக் காட்டுகிறார்கள்.

கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் அவர்களை அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுக்கிறார்.

அவர்கள் கால் வெறுங்காலாயிற்று. அவர்களுடைய தொண்டை வறட்சியடைந்தது. அவர்கள் வெறுங்காலால் அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு நடந்துபோகிறார்கள். அவர்களுடைய தாகத்தை தீர்ப்பதற்கு தண்ணீர் கொடுக்கப்படவில்லை. அவர்கள் ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய கர்த்தரை விட்டு விட்டார்கள். இப்போதோ தொண்டை வறண்டுபோய் தாகத்தால் தவிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை விட்டுவிட்டு அந்நிய தெய்வங்களை பற்றிக்கொண்டார்கள். கர்த்தரை ஆராதிக்கிற முறைமைகளை கைவிட்டுவிட்டு, புதிய முறைமைகளை கற்றுக்கொண்டார்கள். கர்த்தருக்கு முன்பாக தங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டியவர்கள், இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலே, மோளேகுக்கு தங்கள் பிள்ளைகளை உயிரோடு பலிசெலுத்தினார்கள். அந்நிய தெய்வங்களை விரும்பினார்கள். நூதன ஆராதனைகளை விரும்பினார்கள். கர்த்தர் அவர்களை நூதன தேசத்திலே, நூதன ராஜாக்களுக்கு அடிமைகளாக விற்றுப்போட்டார். நூதனத்தை விரும்பியவர்களுக்கு, நூதனத்தைக் கொடுத்துவிட்டார்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டுமென்றும், அவர்கள் கர்த்தரிடத்தில் பயபக்தியாயும், ஐக்கியமாயும் இருக்கவேண்டுமென்றும் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவர்களுக்கு உபதேசம்பண்ணினார்கள். ஆனால் அவர்களோ, "அது கூடாத காரியம், நான் அப்படி செய்யமாட்டேன், அந்நியரை நேசிக்கிறேன், அவர்கள் பிறகே போவேன்" (எரே 2:25) என்று சொன்னார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய கிருபையை அசட்டைபண்ணிவிட்டார்கள்.

விசுவாசிகளாகிய நாம் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் ஒரு போதும் அசட்டை செய்து, அலட்சியம் பண்ணிவிடக்கூடாது. நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு கர்த்தருடைய கிருபை போதுமானதாயிருக்கிறது. நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் வரும்போது, நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு அவர் கிருபை மிகுந்தவராயிருக்கிறார். நம்முடைய பாவங்கள் எவ்வளவு பெரியதாகயிருந்தாலும், நாம் உண்மையாய் மனந்திரும்பி கர்த்தரிடத்தில் வரும்போது, நம்முடைய பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பதற்கும், மறப்பதற்கும், நம்மை சுத்தப்படுத்துவதற்கும், அவர் கிருபையும் இரக்கமும் மிகுந்தவராகவே இருக்கிறார்.

ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகள் தேவனுடைய கிருபையயை ஒருபோதும் அசட்டைபண்ணிவிடக்கூடாது. நம்முடைய பாவங்கள் எவ்வளவு பெரியதாகயிருந்தாலும், நம்முடைய பாவங்களை விட்டுவிலகி, கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய கிருபை நமக்கு அதிகமாய் வேண்டுமென்று ஜெபம்பண்ணவேண்டும்.

நாம் நரகத்திற்கு இக்கரையிலிருக்கும்போது, நமக்கு இன்னும் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. ஒருவன் நரகத்திற்கு போகும் வரையிலும், "நான் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை" என்று சொல்ல முடியாது. நரகத்திற்கு போன பின்பு இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை. அதுவரையிலும் இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது. இதுவே கர்த்தருடைய பெரிதான கிருபை.

இஸ்ரவேல் ஜனங்களோ தங்கள் பாவங்களுக்கு மனம் வருந்தி, கர்த்தரிடத்திலிருந்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளாமல், "அது கூடாத காரியம், நான் அப்படி செய்யமாட்டேன்" (எரே 2:25) என்று துணிகரமாய்ச் சொல்லுகிறார்கள்.

விக்கிரகாராதனைக்காரர்களுக்கு வெட்கமும், இலச்சையும், அவமானமும் உண்டாகும். அவர்கள் கர்த்தரை நம்பாமல் விக்கிரகங்களை நம்புகிறார்கள். தங்களுடைய ஆபத்துக் காலத்தில் தாங்கள் நம்புகிற விக்கிரகங்கள் தங்களுக்கு உதவிபுரியும் என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய விக்கிரகங்கள் ஒருபோதும் அவர்களை இரட்சிக்கப்போவதில்லை. விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை. பெலனுமில்லை.

"திருடன் அகப்படுகிறபோது, எப்படி வெட்கப்படுகிறானோ, அப்படியே இஸ்ரவேல் வம்சத்தார் வெட்கப்படுவார்கள்" (எரே 2:26) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஒருவன் பாவத்திற்கு மனந்திரும்பி இரட்சிக்கப்படும்போது, தன்னுடைய பழைய பாவவாழ்க்கையை நினைத்து வெட்கப்படவேண்டிய அவசியமில்லை. கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிக்கும்போது, அதை முற்றிலுமாய் மன்னித்து மறந்தும் விடுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கோ ஏமாற்றத்தினால் வெட்கமுண்டாகும். அவர்கள் "கட்டையைப் பார்த்து, நீ என் தகப்பன் என்றும்; கல்லைப்பார்த்து, நீ என்னைப் பெற்றாய் என்றும் சொல்லுகிற அவர்களும், அவர்கள் ராஜாக்களும், அவர்கள் பிரபுக்களும், அவர்கள் ஆசாரியர்களும், அவர்கள் தீர்க்கதரிசிகளும் வெட்கப்படுவார்கள்" (எரே 2:26) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவர்கள் கர்த்தருக்கு தங்கள் முகத்தை காண்பியாமல், தங்கள் முதுகை காட்டினார்கள். அவர்கள் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வராமல், அவருடைய சமுகத்தைவிட்டு விலகிப்போனார்கள். அவர்களுக்கு ஆபத்து காலம் வரும்போதோ, கர்த்தரிடத்தில் ஓடிவருகிறார்கள். "எழுந்து எங்களை இரட்சியும்" என்று சொல்லுகிறார்கள். கர்த்தர் அவர்களைப் பார்த்து "நீ உனக்கு உண்டுபண்ணின தேவர்கள் எங்கே? உன் ஆபத்துக்காலத்தில் உன்னை இரட்சிக்கக்கூடுமானால் அவைகள் எழும்பட்டும்" (எரே 2:28) என்று சொல்லுகிறார்.

"நீங்கள் போய், உங்களுக்காகத் தெரிந்துகொண்ட தேவர்களை நோக்கி முறையிடுங்கள்; அவைகள் உங்கள் ஆபத்தின் காலத்தில் உங்களை இரட்சிக்கட்டும் என்றார்" (நியா 10:14).

இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். தங்களுக்கு ஆபத்து வரும்போதோ கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள். கர்த்தர் அவர்களை விக்கிரகங்களிடத்திற்கே அனுப்பி விடுகிறார். விக்கிரகத்திற்கு ஜீவனும் பெலனும் இருக்குமென்றால், அவை எழும்பட்டும் என்றும், அவை அவர்களை இரட்சிக்கட்டும் என்றும் சொல்லிவிடுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் ஆபத்துக்காலத்தில், கர்த்தரிடத்தில் வந்து, "எழுந்து எங்களை இரட்சியும்" என்று சொல்லுகிறார்கள். கர்த்தரோ "விக்கிரகங்கள் எழும்பட்டும்" என்று சொல்லிவிடுகிறார். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டிவிட்டு, ஆபத்துக்காலத்தில் கர்த்தரிடத்தில் வந்து உதவி கேட்பது நியாயமல்ல. அது கர்த்தருக்கு பிரியமாயில்லை.

துரோகம்பண்ணினீர்கள்

எரே 2:29-37

எரே 2:29. என்னோடே நீங்கள் வழக்காடுவானேன்? நீங்கள் அனைவரும் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 2:30. நான் உங்கள் பிள்ளைகளை அடித்தது விருதா; சிட்சையை ஏற்றுக்கொள்ளாமற்போனார்கள்; அழிக்கிற சிங்கத்தைப்போல உங்கள் பட்டயம் உங்கள் தீர்க்கதரிசிகளைப் பட்சித்தது.

எரே 2:31. சந்ததியாரே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைச் சிந்தித்துப்பாருங்கள்; நான் இஸ்ரவேலுக்கு வனாந்தரமும், காரிருளான பூமியுமாக இருந்தேனோ? பின்னை ஏன் என் ஜனங்கள்; நாங்களே எஜமான்கள், இனி உம்மிடத்தில் நாங்கள் வருவதில்லையென்று சொல்லுகிறார்கள்.

எரே 2:32. ஒரு பெண் தன் ஆபரணத்தையும், ஒரு மணவாட்டி தன் ஆடைகளையும் மறப்பாளோ? என் ஜனங்களோ எண்ணிமுடியாத நாட்களாய் என்னை மறந்துவிட்டார்கள்.

எரே 2:33. நேசத்தைத் தேடும்படிக்கு நீ உன் வழிகளை நயப்படுத்துகிறதென்ன? இவ்விதமாய் நீ பொல்லாத ஸ்திரீகளுக்கும் உன் வழிகளைக் கற்றுக்கொடுத்தாய்.

எரே 2:34. உன் வஸ்திர ஓரங்களிலும் குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களின் இரத்தம் காணப்படுகிறது; அதைத் தோண்டித் தேடுகிறதினால் அல்ல, அது எல்லாவற்றின்மேலும் வெளியாயிருக்கிறதினால் அதைக் கண்டுபிடித்தேன்.

எரே 2:35. ஆகிலும்: குற்றமில்லாதிருக்கிறேன் என்றும், அவருடைய கோபம் என்னை விட்டுத் திரும்பிற்று என்றும் சொல்லுகிறாய்; இதோ, நான் பாவஞ்செய்யவில்லையென்று நீ சொல்லுகிறதினிமித்தம் நான் உன்னோடே வழக்காடுவேன்.

எரே 2:36. நீ உன் வழியை மாற்றிமாற்றி இவ்வளவாய் விலகிப்போகிறது என்ன? நீ அசீரியாவினால் வெட்கிப்போனது போல எகிப்தினாலும் வெட்கிப்போவாய்.

எரே 2:37. நீ உன் கைகளை உன் தலையின்மேல் வைத்துக்கொண்டு இவ்விடத்திலிருந்து புறப்பட்டுப் போவாய்; ஏனெனில், உன் நம்பிக்கைகளைக் கர்த்தர் வெறுத்திருக்கிறார்; அவைகளால் உனக்குக் காரியம் வாய்க்காது.

இஸ்ரவேல் ஜனத்தார் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணினார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தரோடு வழக்காடுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாய் துரோகம்பண்ணியவர்கள், கர்த்தரோடு வழக்காடக்கூடாது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவிப்பார்களென்றால், அவர்கள் கர்த்தரோடு வழக்காடலாம்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரின் துரோகங்களை இங்கு ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார். அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாய் கர்த்தர் அவர்களை சிட்சித்தார். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனம் திருந்தி, இரட்சிக்கப்படவேண்டுமென்று கர்த்தர் விரும்பினார். ஆனால் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை அடித்தது எல்லாமே விருதாவாய்ப்போயிற்று. அவர்கள் கர்த்தருடைய சிட்சையை ஏற்றுக்கொள்ளாமல் போனார்கள்.

அவர்களுடைய கடினமான இருதயம் மென்மையாகவில்லை. அவர்களுடைய மனச்சாட்சி உணர்வடையவில்லை. கர்த்தர் அவர்களை சிட்சித்தும், அவர்களுக்கு புத்தி வரவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடமிருந்து அடி வாங்கினார்கள். ஆனாலும் அவர்களுக்கு நன்மை உண்டாகவில்லை. கர்த்தர் அவர்களை அடித்தது எல்லாமே வீணாய்ப்போயிற்று.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே அனுப்பினார். தம்முடைய ஊழியக்காரரின் வாயிலே கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை வைத்தார். அவர்களும் கர்த்தர் தங்களுக்கு கொடுத்த செய்திகளை, இஸ்ரவேல் ஜனங்களுக்கு அறிவித்தார்கள். இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவுமில்லை. தீர்க்கதரிசிகளை ஏற்றுக்கொள்ளவுமில்லை. அவர்கள் தங்களுக்கு நற்செய்தி சொல்ல வந்த தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டார்கள். "அழிக்கிற சிங்கத்தைப்போல உங்கள் பட்டயம் உங்கள் தீர்க்கதரிசிகளை பட்சித்தது" (எரே 2:30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளோடு இன்னும் அன்பாகவே பேசுகிறார். அவர்களை "சந்ததியாரே" என்று அன்பாய் அழைக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் இக்காலத்து சந்ததியை சேர்ந்தவர்கள். "சந்ததியாரே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையை சிந்தித்துப் பாருங்கள்" (எரே 2:31) என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தையை தங்கள் செவிகளால் கேட்டால் மாத்திரம் போதாது, அவர்கள் அதை சிந்தித்தும் பார்க்கவேண்டும்.

"கர்த்தருடைய சத்தம் நகரத்தை நோக்கிக் கூப்பிடுகிறது; ஞானமுள்ளவன் உம்முடைய நாமத்தை மதிப்பான்; மிலாற்றிற்கும் அதை நேமித்தவருக்கும் செவிகொடுங்கள்" (மீகா 6:9). கர்த்தருடைய வார்த்தையே மிலாறாக புறப்பட்டு வருகிறது. வார்த்தைக்கு செவிகொடுப்பதுபோல மிலாறுக்கும் செவிகொடுக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை சிந்தித்துப் பார்க்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையில் தரிசனங்கள் உள்ளது.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை வெளிச்சத்தில் சொல்லுகிறார். இருளிலிருக்கிற ஜனங்கள் வெளிச்சத்திற்கு வரவேண்டும். "நான் இஸ்ரவேலுக்கு வனாந்தரமும் காரிருளான பூமியுமாக இருந்தேனோ" (எரே 2:31) என்று கர்த்தர் கேட்கிறார். கர்த்தருடைய வார்த்தை ஜனங்களுக்கு பிரயோஜனமாயிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதம் உண்டு.

கர்த்தர் சில சமயங்களில் தம்முடைய ஜனத்தை வனாந்தரப் பாதையின் வழியாகவும், காரிருளான பூமியின் வழியாகவும் வழிநடத்துகிறார். அப்போதும் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு போதுமானவராகவே இருக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணியபோது, கர்த்தர் அவர்களை மன்னாவைக்கொண்டு போஷித்தார். கன்மலையைப் பிளந்து ஜனங்களுக்கு தண்ணீர் கொடுத்தார். அக்கினி ஸ்தம்பத்தினாலும், மேகஸ்தம்பத்தினாலும் வழிநடத்தினார். வனாந்தர தேசம் காரிருளான பூமியாயிருந்தாலும் அது அக்கினி ஸ்தம்பத்தினால் வெளிச்சமாயிற்று. இஸ்ரவேல் ஜனங்கள் பிரயாணம் செய்தது வனாந்தர பூமியாயிருந்தாலும், அது அவர்களுக்கு ஆசீர்வாதமான பூமியாயிருந்தது.

இஸ்ரவேல் ஜனங்கள், "நாங்களே எஜமான்கள், இனி உம்மிடத்தில் நாங்கள் வருவதில்லையென்று சொல்லுகிறார்கள்" (எரே 2:31). இஸ்ரவேல் ஜனங்கள் ஒன்றுமில்லாத ஏழைகள். கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்யவில்லையென்றால் அவர்களிடத்தில் ஒன்றுமேயில்லை. ஆனால் அவர்களோ தங்களை எஜமான்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். தங்களை ஐசுவரியவான்கள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். கர்த்தர் அவர்களைப் போஷிக்கவில்லையென்றால், அவர்கள் பட்டினியாய்க் கிடக்கவேண்டும்.

கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கவில்லையென்றால் அவர்கள் தரித்திரராயிருப்பார்கள். கர்த்தர் அவர்களை பாதுகாக்கவில்லையென்றால், சத்துருக்கள் அவர்களைப் பட்சித்துப்போடுவார்கள்.

இஸ்ரவேல் ஜனங்களோ தங்களுடைய உண்மையான நிலமையை புரிந்துகொள்ளாமல், தங்களைப்பற்றி பெருமையாக நினைக்கிறார்கள். "இனி உம்மிடத்தில் நாங்கள் வருவதில்லை" என்று கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்கள். தங்களுக்கு கர்த்தர் தேவையில்லை என்று சொல்லி, அவரை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேவனை மறந்துவிடுகிறார்கள். இதுவே அவர்களுடைய எல்லா துன்மார்க்கத்திற்கும் காரணமாயிருக்கிறது. "என் ஜனங்களோ எண்ணி முடியாத நாட்களாய் என்னை மறந்துவிட்டார்கள்" (எரே 2:39) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களுக்கு தேவனிடத்தில் நெருங்கிச் சேருவதற்கு ஏராளமான வாய்ப்புக்கள் உண்டாயிற்று. தேவனைப்பற்றி சிந்திப்பதற்கும் அவர்களுக்கு அநேக வாய்ப்புக்கள் கிடைத்தது. ஆனால் அவர்களோ அந்த வாய்ப்புக்களையெல்லாம் உதாசீனம் பண்ணிவிடுகிறார்கள். கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். முடிவிலே கர்த்தரையே மறந்துவிடுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜாதியார் கர்த்தரை எண்ணிமுடியாத நாட்களாய் மறந்துவிட்டார்கள். கர்த்தரை எவ்வளவு காலமாய் மறந்திருக்கிறார்கள் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. கர்த்தரைப்பற்றிய சிந்தனை அவர்களுடைய மனதை விட்டே நீங்கிப்போயிற்று.

எரேமியா தீர்க்கதரிசி இஸ்ரவேல் ஜனங்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லும்போது, இந்த வார்த்தையை நம்முடைய ஜீவியத்திலும் நினைத்துப் பார்க்கவேண்டும். நம்முடைய அன்றாட ஜீவியத்தில் நாம் கர்த்தரை நினைத்துப் பார்க்கிறோமா அல்லது அவரை அவ்வப்போது மறந்துவிடுகிறோமா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். கர்த்தரைப்பற்றிய நினைவில்லாமல் எவ்வளவு காலமாய் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும்.

நாம் கர்த்தரோடு ஐக்கியமாய் ஜீவிக்கிற நாட்களே நமக்கு பிரயோஜனமுள்ள நாட்கள். நம்முடைய ஜீவியத்தில் கர்த்தர் இல்லையென்றால், நம்முடைய மனதில் கர்த்தரைப்பற்றிய சிந்தனையில்லையென்றால், நம்முடைய நாட்கள் மாயையான நாட்களாகவும், வெறுமையான நாட்களாகவும் இருக்கும். நம்முடைய வெறுமையான நாட்களை நம்மால் எண்ணிமுடியாது. இஸ்ரவேல் ஜனங்களைப்போலவே, நாமும் எண்ணி முடியாத நாட்களாய் கர்த்தரை மறந்திருப்போம்.

ஒரு பெண் தன் ஆபரணத்தையும், ஒரு மணவாட்டி தன் ஆடைகளையும் மறக்கமாட்டாள். எப்போதுமே அதைப்பற்றி சிந்தித்துக்கொண்டிருப்பாள். எல்லோரிடத்திலும் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பாள். நாமும் அதுபோலவே கர்த்தரைப்பற்றி எப்போதுமே சிந்தித்துக் கொண்டிருக்கவேண்டும். அவரைப்பற்றியே எப்போதும் பேசிக்கொண்டிருக்கவேண்டும். நாம் கர்த்தரை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். அக்கிரமத்தில் ஜீவிக்கிறார்கள். இவர்களுடைய பாவசுபாவங்கள் மற்றவர்களையும் பாதிக்கிறது. "நேசத்தைத் தேடும்படிக்கு நீ உன் வழிகளை நயப்படுத்துகிறதென்ன" (எரே 2:33) என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் கேட்கிறார்.

யேசபேலைப்போல பொல்லாத ஸ்திரீகள் மற்றவர்களை கவருவதற்காக, தங்களுடைய கவர்ச்சிகளை வெளிப்படுத்தி காண்பிப்பார்கள். முகத்திற்கு சாயம் பூசிக்கொண்டு, கண்களுக்கு மையிட்டுக்கொண்டு, தங்கள் தலைமுடியை அலங்காரமாய்ச் சிங்காரித்துக்கொண்டு, தங்களுடைய அழகை வெளிப்படுத்திக் காண்பிப்பார்கள். தங்களுடைய பார்வையினாலும், சிங்காரத்தினாலும் மற்றவர்களைக் கவருவதற்கு முயற்சி பண்ணுவார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் மற்றவர்களை கவருவதற்காக தங்களை சிங்காரித்துக் கொள்கிற ஸ்திரீகளைப்போல இருக்கிறார்கள். தங்களுடைய பாவசுபாவங்களினாலும், பாவமான பழக்க வழக்கங்களினாலும் மற்றவர்களை தங்கள் பக்கமாய் இழுத்துக்கொள்கிறார்கள். அவர்களோடு பாவமான உடன்படிக்கைகளை செய்து கொள்கிறார்கள். தங்களுடைய பாவவழிகளை அவர்களுக்கும் கற்றுக்கொடுக்கிறார்கள். "இவ்விதமாய் நீ பொல்லாத ஸ்திரீகளுக்கும் உன் வழிகளைக் கற்றுக்கொடுத்தாய்" (எரே 2:33) என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மீது குற்றம் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறார்கள். ஒரு காலத்தில் இஸ்ரவேலின் பரிசுத்தரை ஆராதித்தவர்கள், இப்போது விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். பூர்வகாலத்தில் இஸ்ரவேல் ஜனத்தார், தேவனாகிய கர்த்தரை, ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொண்டார்கள். ஆனால் இப்போதோ எல்லா மேடுகளிலும், பச்சையான எல்லா மரங்களின் கீழும் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். மோளேகுக்கு தங்கள் பிள்ளைகளை பலிகொடுக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டுப் பிரிந்துபோனபின்பு, அவர்களுடைய ஆராதனை முறைமைகளில் மிகப்பெரிய மாற்றமுண்டாயிருக்கிறது. அவர்கள் தேவனுடைய பிரமாணங்களை, விக்கிரகாராதனையின் பழக்க வழக்கங்களோடு ஒன்றாய் கலக்கிறார்கள். சுத்தத்தை அசுத்தத்தோடு கலக்கிறார்கள். நீதியை அநீதியோடு கலக்கிறார்கள்.

கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிற ஜனங்கள் துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். விக்கிரகாராதனைக்காரரோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் இருளின் பிள்ளைகள். அவர்களிடத்தில் வெளிச்சமில்லை. அவர்களுடைய கிரியைகளும் இருளின் கிரியைகளாயிருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் அவர்களோடு ஐக்கியமாய் இணைந்து, அவர்களும் இருளின் கிரியைகளை நடப்பிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் துன்மார்க்கம் புறஜாதியாரின் துன்மார்க்கத்தைவிட அதிகமாயிருக்கிறது. தங்களுடைய துன்மார்க்கமான பழக்க வழக்கங்களை, இஸ்ரவேல் ஜனத்தார், புறஜாதியாருக்கும் கற்றுகொடுக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் பிறருக்கு உபகாரம் பண்ண வேண்டும். தங்களால் மற்றவர்களுக்கு உபகாரம் பண்ண முடியவில்லையென்றால், அவர்கள் சும்மாயிருக்கவேண்டும். உபகாரம் பண்ணுவதற்குப் பதிலாக யாருக்கும் உபத்திரவம் பண்ணிவிடக்கூடாது. இஸ்ரவேல் ஜனங்களோ தங்களுடைய பாவமான வழிகளை பொல்லாத ஸ்திரீகளுக்கும் கற்றுக்கொடுத்து, அவர்களுடைய ஜீவனையும் கெடுத்துப் போடுகிறார்கள்.

கர்த்தரைவிட்டு பிரிந்துபோயிருக்கிற இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது கொலைபாதகங்களிலும் பங்குபெறுகிறார்கள். அவர்களுடைய வஸ்திர ஓரங்களில் குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களின் இரத்தம் காணப்படுகிறது. இந்த வாக்கியம் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பிள்ளைகளை இன்னோம் புத்திரரின் பள்ளத்தாக்கிலே, மோளேகுக்கு, பலிகளாகச் செலுத்துவதை குறிக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களின் இரத்தம்" என்னும் வாக்கியம் மனாசே சிந்தின இரத்தத்தைக் குறிக்கலாம் என்றும் சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

"கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்யும்படியாக, மனாசே யூதாவைப் பாவஞ்செய்யப்பண்ணின அந்தப் பாவமும் தவிர, அவன் எருசலேமை நாலு மூலைவரையும் இரத்தப்பழிகளால் நிரப்பத்தக்கதாய், குற்றமில்லாத இரத்தத்தையும் மிகுதியாகச் சிந்தினான்" (2இராஜா 21:16).

இஸ்ரவேல் ஜனத்தார் சிந்துகிற குற்றமில்லாத ஆத்துமாக்களின் இரத்தம் மறைவாகயில்லை. அது வெளியரங்கமாயிருக்கிறது. அந்த இரத்தத்தை தோண்டி கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை. இரத்தக்கறைகள் எல்லாவற்றின் மேலும் வெளிப்படையாயிருக்கிறது.

"அதைத் தோண்டித் தேடுகிறதினால் அல்ல, அது எல்லாவற்றின்மேலும் வெளியாயிருக்கிறதினால் அதைக் கண்டுபிடித்தேன்" (எரே 2:34) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். தாங்கள் குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களின் இரத்தத்தை சிந்தும்போது, கர்த்தர் தங்கள்மீது கோபப்படுவார் என்றோ, அல்லது தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு தங்கள்மீது வரும் என்றோ அவர்களுக்கு சிறிதும் பயமில்லை. அவர்களுடைய மனச்சாட்சியிலும் பாவத்தைக் குறித்த குற்றவுணர்வு உண்டாகவில்லை. கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்ட இஸ்ரவேல் ஜனத்தாரின் மனச்சாட்சியும், கூர்மையாயில்லாமல் மழுங்கிப்போயிற்று.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகவும், குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களுக்கு விரோதமாகவும் பாவம் செய்தாலும், தங்களிடத்தில் ஒரு பாவமும் இல்லை என்று சொல்லுகிறார்கள். தாங்கள் கர்த்தருக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும், குற்றமில்லாதிருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு வழக்காடுகிறார். அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்த விரும்புகிறார். அவர்களோ துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தருடைய நீதியைப்பற்றியும், அவருடைய கோபத்தைப்பற்றியும் அவர்களுக்கு சிறிதும் பயமில்லை. "கர்த்தருடைய கோபம் எங்களை விட்டுத் திரும்பிற்று" (எரே 2:35) என்று இஸ்ரவேல் ஜனத்தார் சொல்லுகிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். அவர்கள் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல், விக்கிரகங்களை நோக்கிப் பார்க்கிறார்கள். அவர்களுடைய கண்களுக்கு கர்த்தருடைய கோபம் தெரியவில்லை. கர்த்தர் தங்கள்மேல் கோபமாயில்லை என்று சொல்லி, தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள்.

"இதோ, நான் பாவஞ்செய்யவில்லையென்று நீ சொல்லுகிறதினிமித்தம் நான் உன்னோடே வழக்காடுவேன்" (எரே 2:35) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களுடைய துணிகரமான பேச்சு கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறது. கர்த்தர் ஒருபோதும் காரணமில்லாமல் கோபப்படமாட்டார். கர்த்தருடைய கோபத்தில் நீதியும், நியாயமும் இருக்கும். இஸ்ரவேல் ஜனத்தார்மீது தாம் கோபமாயிருப்பதையும், தம்முடைய கோபம் நீதியானது என்பதையும், கர்த்தர் அவர்களுக்கு உணர்த்த விரும்புகிறார். அவர்களோடு தொடர்ந்து வழக்காடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களை உணரவேண்டும். அவர்கள் மறுபடியுமாய் கர்த்தரிடத்தில் திரும்பவேண்டும். அவர்கள் கர்த்தரைப்பற்றித் தியானிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு பிரியமுள்ள பிள்ளைகளாகவும், பிரயோஜனமுள்ள பிள்ளைகளாகவும் ஜீவிக்கவேண்டும். அது வரையிலும் கர்த்தர் அவர்களோடு வழக்காடத்தான் செய்தார்.

இஸ்ரவேல் ஜனத்தார் சிருஷ்டிகரை ஆராதியாமல், சிருஷ்டிகளைத் தொழுதுகொள்கிறார்கள். கர்த்தரை நம்பாமல் விக்கிரகங்களை நம்புகிறார்கள். கர்த்தரோடு சிநேகமாயிராமல், அவருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருப்பதற்கு பதிலாக, அவரை விட்டு விலகிப்போகிறார்கள். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். விக்கிரகங்களை நம்புகிறவர்களுக்கோ, வெட்கமும், வேதனையும், அவமானமும் உண்டாகும்.

விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் தங்களுடைய மாம்ச புயத்தின்மீது நம்பிக்கை வைப்பார்கள். அவர்களுடைய இருதயம் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கும். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரோடு ஐக்கியமாயிருந்த வரையிலும், தெளிந்த சிந்தனையோடிருந்தார்கள். அவர்களுடைய பார்வையிலும், பேச்சிலும், செய்கையிலும், நடையிலும் உறுதியிருந்தது. அவர்கள் கர்த்தருடைய வழியில் விலகாமல் நடந்தார்கள். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிப்போனார்கள்.

ஆனால் இப்போதோ இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களைப்பற்றிக் கொள்கிறார்கள். அவர்களுடைய சிந்தையிலும் உறுதியில்லை. வழியிலும் உறுதியில்லை. விக்கிரகங்களை ஆராதிக்கிற இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் வழியை மாற்றி மாற்றி, கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள்.

நாம் கர்த்தரை நம்பும்போது, நம்முடைய வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொண்டு நடப்போம். அவருடைய வார்த்தைக்கும், சித்தத்திற்கும் எப்போதும் கீழ்ப்படிவோம். நம்முடைய வழிகளை மாற்ற வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படாது. கர்த்தருடைய வழியே நம்முடைய வழி. நாம் நம்முடைய சுயவழியில் நடவாமல், கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்போம். நம்முடைய செவிகள் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கும். நம்முடைய ஆத்துமாவில் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுவார். அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவார். கர்த்தர் நம்மை வழிநடத்தும்போது, நம்முடைய வழியை மாற்றி மாற்றி நடக்கவேண்டிய அவசியம் உண்டாகாது. நமக்கு கர்த்தருடைய வழிகளில் ஆறுதலும் ஆசீர்வாதங்களும் உண்டாயிருக்கும்.

கர்த்தரைவிட்டு விலகிப்போன இஸ்ரவேல் ஜனத்தார் முதலாவதாக, தங்கள் உதவிக்கு அசீரியரை நம்பினார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீணாய்ப்போயிற்று. அசீரியர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உதவிசெய்யவில்லை. அவர்கள் முறிந்த நாணலைப்போல பெலனற்றவர்களாயிருந்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுக்கு அசீரியர் மூலமாய் உதவி கிடைக்காது என்பது தெரிந்தவுடன், அவர்கள் தங்கள் உதவிக்கு எகிப்தை நம்பினார்கள். எகிப்து தேசத்தாரும் அவர்களுக்கு உதவிசெய்யவில்லை. "நீ அசீரியாவினால் வெட்கிப்போனதுபோல எகிப்தினாலும் வெட்கிப்போவாய்" (எரே 2:36) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அசீரியாவின் ராஜாவாகிய தில்காத்பில்நேசர் அவனிடத்தில் வந்தான்; அவனை நெருக்கினானே அல்லாமல் அவனைப் பலப்படுத்தவில்லை" (2நாளா 28:20).

இஸ்ரவேல் ஜனத்தாரின் பிரதானிகளும், தூதுவர்களும் எகிப்து தேசத்திலிருந்து ஏமாற்றத்தோடு திரும்பி வருவார்கள். தங்களுடைய ஜனத்தின் பரிதாபமான நிலமையை யோசித்துப் பார்த்து வெகுவாய்ப் புலம்புவார்கள். அவர்கள் தங்கள் கைகளை, தங்கள் தலையின்மேல் வைத்துக்கொண்டு, இவ்விடத்திலிருந்து புறப்பட்டுப்போவார்கள். அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு வெட்கத்தோடும், வேதனையோடும் இழுத்துச் செல்லப்படுவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தை நம்பினார்கள். எகிப்து தங்களுக்கு உதவி செய்யும் என்று நினைத்தார்கள். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தார் சிறைப்பட்டுப்போகும்போது, எகிப்தியர்களால் அவர்களுக்கு உதவி செய்ய முடியவில்லை. கர்த்தருடைய ஜனம் சிறைப்பட்டுப்போவதை எகிப்து தேசத்தாரால் நிறுத்தவும் முடியவில்லை. சிறைப்பட்டுப்போன அவர்களை எகிப்தியரால் விடுவிக்கவும் முடியவில்லை.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரின் நம்பிக்கைகளை வெறுத்திருக்கிறார். அவர்கள் எகிப்தை நம்பாமல், தங்கள் தேவனாகிய கர்த்தரை நம்பவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரை நம்பாமல் அவரை விட்டுத் தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். எகிப்தியரை நம்புகிறார்கள். எகிப்தியர்களால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு காரியம் வாய்க்காது என்று கர்த்தர் தீர்மானமாய்ச் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்களுடைய பாவங்களின் நிமித்தமாய், கர்த்தர் அவர்களை அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுக்கிறார். இது கர்த்தருடைய சித்தம். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. கர்த்தருடைய கிரியைகளை எகிப்தியரால் தடுத்து நிறுத்த முடியாது. கர்த்தரோடு யாரும் யுத்தம்பண்ணவும் முடியாது. கர்த்தருடைய உதவியில்லாமல் யாராலும் யுத்தத்தில் ஜெயம்பெறவும் முடியாது.

3 அதிகாரம்

தம்மைவிட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிற இஸ்ரவேல் ஜனத்தார் மனந்திரும்பி தம்மிடத்தில் திரும்பி வருமாறு கர்த்தர் அவர்களை அன்போடு அழைக்கிறார். இஸ்ரவேல் தேசத்தாரின் பாவங்கள் திரளாய்ப் பெருகியிருக்கிறது. கர்த்தருடைய கிருபையும் குறைவில்லால் பெருகியிருக்கிறது. பாவம் பெருகியிருக்கிற இடத்தில், கர்த்தருடைய கிருபையும் பெருகியிருக்கும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக ஏராளமாய்ப் பாவம் செய்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களை மறுபடியும் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வதற்கு ஆயத்தமாயிருக்கிறார். தங்கள் பாவங்களுக்கு அவர்கள் மனந்திரும்பும்போது, தம்முடைய கிருபைகளை அவர்களுக்குக் கொடுக்க கர்த்தர் சித்தமுள்ளவராயிருக்கிறார் (எரே 3:1-5). யூதாவின் புத்திரர் மனந்திரும்பாமல் சீர்கெட்டுப்போயிருக்கிறார்கள் (எரே 3:6-11).

கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோனவர்கள், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, மறுபடியுமாய் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். அப்போது கர்த்தர் தம்முடைய கிருபைகளையும், இரக்கங்களையும் அவர்களுக்குக் கொடுக்க சித்தமுள்ளவராயிருக்கிறார் (எரே 3:12-19).

கர்த்தருடைய ஜனம் அவரை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள். தம்மை விட்டு தூரமாய் விலகிப்போன தம்முடைய பிள்ளைகளுக்கு விரோதமாக கர்த்தர் வழக்காடுகிறார். ஆனாலும் அவர்கள் தம்மிடத்தில் திரும்பி வருமாறு மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, அவரிடத்தில் திரும்பி வந்தால், அவர்களுக்கு கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், ஆசீர்வாதமும் கிடைக்கும் (எரே 3:20-25).

என்னிடத்திற்குத் திரும்பிவா
எரே 3:1-5

எரே 3:1. ஒரு புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிட, அவள் அவனிடத்திலிருந்து புறப்பட்டுப்போய், அந்நிய புருஷனுக்கு மனைவியானால், அவன் அவளிடத்தில் இனித் திரும்பப்போவானோ? அந்த தேசம் மிகவும் தீட்டுப்படுமல்லவோ? என்று மனுஷர் சொல்லுவார்கள்; நீயோவென்றால் அநேக நேசரோடே வேசித்தனம்பண்ணினாய்; ஆகிலும் என்னிடத்திற்குத் திரும்பிவா என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 3:2. நீ மேடுகளின்மேல் உன் கண்களை ஏறெடுத்து, நீ வேசித்தனம்பண்ணாத இடம் ஒன்று உண்டோ என்று பார்; வனாந்தரத்திலே அரபியன் காத்துக்கொண்டிருக்கிறதுபோல, நீ வழி ஓரங்களில் உன் நேசருக்குக் காத்துக்கொண்டிருந்து, உன் வேசித்தனங்களாலும், உன் அக்கிரமங்களாலும் தேசத்தைத் தீட்டுப்படுத்தினாய்.

எரே 3:3. அதினிமித்தம் மழை வருஷியாமலும், பின்மாரியில்லாமலும் போயிற்று; உனக்கோ, சோரஸ்திரீயின் நெற்றியிருக்கிறது; நீயோ: நாணமாட்டேன் என்கிறாய்.

எரே 3:4. நீ இதுமுதல் என்னை நோக்கி: என் பிதாவே, தேவரீர் என் இளவயதின் அதிபதியென்று சொல்லி,

எரே 3:5. சதாகாலமும் கோபத்தை வைப்பாரோ? அதை என்றென்றைக்கும் காப்பாரோ என்கிறாய் அல்லவோ? இதோ, இப்படி நீ சொல்லியும் பொல்லாப்புகளைச் செய்து, மிஞ்சிப்போகிறாய் என்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தருடைய நீதியான கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் தம்முடைய கோபத்தினால் அவர்களைத் தண்டிக்கிறார். ஆனாலும் தம்முடைய மிகுதியான இரக்கங்களினால், அவர்களுக்கு காயங்கட்டுகிறார். தம்மைவிட்டு விலகிப்போன இஸ்ரவேல் ஜனங்கள், தம்மிடத்தில் திரும்பி வருமாறு அவர்களை மறுபடியும் அழைக்கிறார். கர்த்தர் இந்த வாக்கியங்களின் மூலமாய், அவர்களுக்கு நம்பிக்கையின் வாசலைத் திறக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் அவரைவிட்டு முற்றிலுமாய் விலகிப்போய்விடுகிறார்கள். தங்களுக்கு திரளான விக்கிரகங்களை செய்து அவற்றிற்கு தூபங்காட்டுகிறார்கள். விக்கிரகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தரிடத்தில் சந்தோஷமோ திருப்தியோ உண்டாகவில்லை. தங்களுடைய சந்தோஷத்திற்காக, அவர்கள் விக்கிரகங்களை நாடிப்போகிறார்கள்.

"நீயோவென்றால் அநேக நேசரோடே வேசித்தனம்பண்ணினாய்" (எரே 3:1) என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் சொல்லுகிறார். கர்த்தரைவிட்டு விலகிப்போவதற்கும், விக்கிரகங்களைப் பற்றிக்கொள்வதற்கும், இஸ்ரவேல் ஜனத்தார் வாய்ப்புக்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். அந்நிய தெய்வங்களைப்பற்றி விசாரிப்பதற்கு தங்கள் ஆட்களை அனுப்புகிறார்கள்.

அந்நிய தெய்வங்களைத் தேடி புறஜாதியாரின் பாதையில் அமர்ந்திருக்கிறார்கள். வனாந்தரத்தில் அரபியன் காத்துக்கொண்டிருக்கிறதுபோல விக்கிரகங்களுக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். பாலைவனங்களில் அரபிய கொள்ளைக்காரர்கள் வியாபாரிகளுக்காக காத்துக் கொண்டிருப்பார்கள். வியாபாரக்கூட்டத்தார் தங்கள் ஒட்டகங்களில் வரும்போது, அவர்கள்மீது பாய்ந்து, அவர்களை கொள்ளையிடுவார்கள். இஸ்ரவேல் ஜனங்களும், வனாந்தரத்திலே அரபியன் காத்துக்கொண்டிருப்பது போல, விக்கிரகங்களுக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களினால், தங்களை தீட்டுப்படுத்திக் கொண்டதோடு, தங்களுடைய தேசத்தையும் தீட்டுப்படுத்துகிறார்கள். "உன் வேசித்தனங்களாலும், உன் அக்கிரமங்களாலும் தேசத்தை தீட்டுப்படுத்தினாய்" (எரே 3:2) என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவம், இஸ்ரவேல் தேசத்தின் பாவமாயிற்று. கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் தேசத்தின்மீது பற்றியெரிந்தது.

விக்கிரகங்களை ஆராதிக்கிற இஸ்ரவேல் ஜனத்தாருக்கு சோரஸ்திரீயின் நெற்றியிருக்கிறது (எரே 3:3). அவர்களுடைய முகம் சர்ப்பத்தின் முகத்தைப்போலிருக்கிறது. ஆனாலும் அவர்கள் நாணமடைவதற்கு மறுக்கிறார்கள். தங்களுடைய வேசித்தனத்தின் நிமித்தமாய் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வெட்கமோ, அவமானமோ, நாணமோ உண்டாகவில்லை. அவர்கள் கர்த்தரை மறந்து, விக்கிரகங்களோடு ஐக்கியமாகிவிடுகிறார்கள். கர்த்தரைப்பற்றிய பழைய நினைவுகளெல்லாம், அவர்களுடைய சிந்தையில் மறைந்துபோயிற்று. அவர்களுக்கு இப்போது எல்லாமே விக்கிரகங்கள்தான்.

கர்த்தரைவிட்டு பிரிந்துபோயிருக்கிற இஸ்ரவேல் ஜனத்தார் ஏராளமாய் பாவம் செய்கிறார்கள். துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். கர்த்தரோ தம்முடைய அன்பினாலும், கிருபையினாலும் அவர்களை சிட்சிக்கிறார். அவர்களைக் கண்டித்து, தண்டித்து, அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்துகிறார்.

அவர்களுடைய பாவங்களினிமித்தம், அவர்கள் தேசத்தில் மழை வருஷியாமலும், பின்மாரி இல்லாமலும் போயிற்று. வருஷத்தில் ஒரு சில மாதங்கள் மாத்திரமே மழை பெய்யும். இஸ்ரவேல் தேசத்தாருக்கு அந்த வருஷத்தில், மழை பெய்யாமல், ஒரு சில மாதங்கள் மாத்திரம் தண்டனை உண்டாயிற்று. வருஷம் முழுவதும் தண்டனை கிடைக்கவில்லை.

கர்த்தர் தம்முடைய நீதியினால், தம்மைவிட்டு பிரிந்துபோயிருக்கிற இஸ்ரவேல் ஜனத்தாரை, தம்மிடத்தில் மறுபடியும் சேர்த்துக்கொள்ளாமல், நிரந்தரமாய் ஒதுக்கி தள்ளிவிடலாம். ஒரு புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிடுவதுபோல தள்ளிவிடலாம்.

"அவள் தீட்டுப்பட்டபடியினால், அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் திரும்பவும் அவளை மனைவியாகச் சேர்த்துக்கொள்ளக்கூடாது; அது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பானது; உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தின்மேல் பாவம் வரப்பண்ணாயாக" (உபா 24:4).

ஒரு புருஷன் தன் மனைவியைத் தள்ளிவிட, அவள் அவனிடத்திலிருந்து புறப்பட்டுப்போய், அந்நிய புருஷனுக்கு மனைவியானால், அவன் அவளிடத்தில் இனி திரும்பிப்போகமாட்டான். அவளை தன்னிடமாக மறுபடியும் சேர்த்துக்கொள்ளவுமாட்டான். கர்த்தரும் இந்தப் பிரமாணத்தின்படி, தம்மைவிட்டு விலகி, விக்கிரகங்களோடு சேர்ந்துகொண்ட, இஸ்ரவேல் புத்திரரை, தம்மிடத்தில் மறுபடியும் சேர்த்துக்கொள்ளாமலிருக்கலாம்.

ஆனால் கர்த்தரோ தம்முடைய பிள்ளைகள்மீது இன்னும் அன்பாகவும், கிருபையாகவும், இரக்கமாகவும் இருக்கிறார். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, தம்மிடத்தில் திரும்பி வரவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். "என்னிடத்திற்கு திரும்பி வா" (எரே 3:1) என்று கர்த்தர் அவர்களை அன்போடு அழைக்கிறார்.

கர்த்தர் நமக்காகவே பிரமாணங்களை உண்டுபண்ணியிருக்கிறார். ஆனாலும் நமக்கும் கர்த்தருக்கும் இடையிலுள்ள ஐக்கியம் அவருடைய பிரமாணங்களினால் கட்டப்படவில்லை. தம்முடைய அன்பின் கயிறுகளினால் கர்த்தர் நம்மை தம்மோடு கட்டி வைத்திருக்கிறார். கர்த்தர் மனுஷருடைய பிரமாணங்களின்படி, நம்மீது அன்புகூருவதுமில்லை. அவர் நம்மை வெறுத்து தண்டிப்பதுமில்லை. கர்த்தருடைய அன்பு பெரியது.

தனக்கு விரோதமாக துரோகம் பண்ணின மனைவியை, அவளுடைய புருஷன் மன்னிக்கமாட்டான். அவள் தன்னைவிட்டு விலகிப்போய்விட்டால், அவளை மறுபடியும் தன்னிடத்தில் சேர்த்துக்கொள்ளமாட்டான். அவளை தன்னிடத்தில் சேர்த்துக்கொண்டால், தன்னுடைய தேசம் தீட்டுப்படும் என்று சொல்லுவான்.

கர்த்தரோ தம்முடைய இஸ்ரவேல்மீது மிகவும் அன்பாயிருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு துரோகம்பண்ணி அவரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். விக்கிரகங்களை சேர்ந்துகொள்கிறார்கள். ஆனாலும் இஸ்ரவேல் ஜனத்தார், மனந்திரும்பி, தம்மிடத்தில் திரும்பி வரவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். கர்த்தருடைய அன்பு, உலகப்பிரகாரமான புருஷனுடைய அன்பை விட பெரியது.

தம்மைவிட்டு விலகிப்போன இஸ்ரவேல் ஜனங்கள், தம்மிடத்தில் திரும்பி வரும்போது, என்ன சொல்லவேண்டும் என்றும் கர்த்தர் அவர்களுக்கு வார்த்தைகளைக் கொடுக்கிறார். அவர்கள் கர்த்தரை நோக்கி, "என் பிதாவே, தேவரீர் என் இளவயதின் அதிபதி" (எரே 3:4) என்று சொல்லவேண்டும். அவர்கள் இதுமுதல் கர்த்தரை நோக்கிக் கூப்பிடவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாக தாங்கள் செய்த பாவங்களை நினைத்துப் பார்க்கவேண்டும். "நீ மேடுகளின்மேல் உன் கண்களை ஏறெடுத்து, நீ வேசித்தனம்பண்ணாத இடம் ஒன்று உண்டோ என்று பார்" (எரே 3:2) என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் சொல்லுகிறார். அவர்கள் வழி ஓரங்களில் தங்கள் நேசருக்காக காத்துக்கொண்டிருந்து, தங்கள் வேசித்தனங்களாலும், தங்கள் அக்கிரமங்களாலும் தேசத்தைத் தீட்டுப்படுத்தினார்கள். ஆனாலும் அவர்கள் தம்மிடத்தில் திரும்பி வரவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அவள் தன் நேசர்களைப் பின்தொடர்ந்தும் அவர்களைச் சேருவதில்லை, அவர்களைத் தேடியும் கண்டுபிடிப்பதில்லை; அப்பொழுது அவள்: நான் என் முந்தின புருஷனிடத்துக்குத் திரும்பிப்போவேன்; இப்பொழுது இருக்கிறதைப்பார்க்கிலும் அப்பொழுது எனக்கு நன்மையாயிருந்தது என்பாள்" (ஓசி 2:7).

தம்மைவிட்டுப் பிரிந்துபோன இஸ்ரவேல் ஜனத்தார், தம்மோடு வைத்திருந்த பழைய ஐக்கியத்தை நினைத்துப் பார்த்து, தம்மிடத்திற்கு திரும்பி வருவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவர்கள் தம்மிடத்தில் வந்து, இதுமுதல் தம்மை நோக்கி, "என் பிதாவே, தேவரீர் என் இளவயதின் அதிபதி" என்று சொல்லுவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

கர்த்தரைவிட்டு விலகிப்போன இஸ்ரவேல் ஜனத்தார் நிச்சயமாய் அவரிடத்தில் திரும்பி வருவார்கள். கெட்ட குமாரன் புத்தி தெளிந்து, தன்னுடைய தகப்பனிடத்தில் திரும்பி வந்ததுபோல, இஸ்ரவேல் ஜனத்தாரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வருவார்கள்.

இளவயதுள்ளவர்களுக்கு அதிபதிகள் தேவை. வாலிபர்களை சரியான பாதையில் நடத்துவதற்கு வழிகாட்டிகள் தேவை. கர்த்தரே தம்முடைய ஜனத்திற்கு அதிபதியாயிருக்கிறார். அவரே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். அவரே தம்முடைய ஜனங்களை, தம்முடைய நித்திய வழியிலே, வழிநடத்துகிறார்.

நாம் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் நம்முடைய இளவயதின் அதிபதியாயிருந்து, நம்மை வழிநடத்தியதை, நாம் நன்றியோடு நினைவுகூரவேண்டும். கர்த்தரே நம்மை ஆறுதலின் வழியிலே நடத்துகிறார். அவர் நம்மை ஊழியப்பாதையிலே நடத்துகிறார். நாம் செய்யவேண்டிய கடமைகளை நமக்குப் போதிக்கிறார். கர்த்தரே நமக்கு வழிகாட்டியாயிருக்கிறார். நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்து, கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற இலக்கை நோக்கி முன்னேறிச் செல்லவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வந்து அன்பாய்ப் பேசுகிறார்கள். அவர்களுடைய சரீரம் மாத்திரமே கர்த்தரிடத்தில் திரும்பி வந்திருக்கிறது. அவர்களுடைய இருதயம் இன்னும் கர்த்தரிடத்தில் திரும்பி வரவில்லை. அவர்கள் கர்த்தருக்கு முன்பாக வந்து, அவரை நோக்கி, "கர்த்தர் சதாகாலமும் கோபத்தை வைப்பாரோ?, அதை என்றென்றைக்கும் காப்பாரோ?" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் இப்படி சொல்லியும், பொல்லாப்புகளைச் செய்து மிஞ்சிப்போகிறார்கள் (எரே 3:5).

சீர்கெட்ட இஸ்ரவேலும், யூதா என்கிற துரோகியும் எரே 3:6-11

எரே 3:6. யோசியா ராஜாவின் நாட்களிலே கர்த்தர் என்னை நோக்கி: சீர்கெட்ட இஸ்ரவேல் என்பவள் செய்ததைக் கண்டாயா? அவள் உயரமான சகல மலையின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் போய், அங்கே வேசித்தனம் பண்ணினாள்.

எரே 3:7. அவள் இப்படியெல்லாம் செய்தபின்பு: நீ என்னிடத்தில் திரும்பிவா என்று நான் சொன்னேன்; அவளோ திரும்பவில்லை; இதை அவளுடைய சகோதரியாகிய யூதா என்கிற துரோகி கண்டாள்.

எரே 3:8. சீர்கெட்ட இஸ்ரவேல் என்பவள் விபசாரம்பண்ணின முகாந்தரங்கள் எல்லாவற்றினிமித்தமும் நான் அவளை அனுப்பிவிட்டு, அவளுடைய தள்ளுதற் சீட்டை அவளுக்குக் கொடுத்தபோதும், அவளுடைய சகோதரியாகிய யூதா என்கிற துரோகி பயப்படாமல்; இவளும் போய் வேசித்தனம் பண்ணினாள், இதை நான் கண்டேன்.

எரே 3:9. பிரசித்தமான அவளுடைய வேசித்தனத்தினாலே தேசம் தீட்டுப்பட்டுப் போயிற்று; கல்லோடும் மரத்தோடும் விபசாரம் பண்ணிக் கொண்டிருந்தாள் என்றார்.

எரே 3:10. இவைகளையெல்லாம் கண்டும், யூதா என்கிற அவளுடைய சகோதரியாகிய துரோகி, கள்ளத்தனமாய்த் திரும்பினாளேயன்றி, முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்பவில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 3:11. பின்னும் கர்த்தர் என்னை நோக்கி: யூதா என்கிற துரோகியைப் பார்க்கிலும் சீர்கெட்ட இஸ்ரவேல் என்பவள் தன்னை நீதியுள்ளவளாக்கினாள்.

எரேமியா தீர்க்கதரிசி யோசியா ராஜாவின் நாட்களிலே இந்த பிரசங்கச் செய்தியைச் சொல்லுகிறார். யோசியா யூதா தேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சியை உண்டுபண்ணுவதற்கு ஆர்வமாய் ஊழியம் செய்கிறார். அவருடைய இருதயம் முழுவதிலும் யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாகவேண்டும் என்னும் எண்ணமே நிரம்பியிருக்கிறது. ஆனால் ஜனங்களோ யோசியாவின் எண்ணத்தோடு ஒத்துப்போகவில்லை. அவர்கள் உண்மையாய் மனந்திரும்பவில்லை. அவர்கள் மத்தியிலே மெய்யான ஆவிக்குரிய சீர்திருத்தம் உண்டாகவில்லை.

தாவீது ராஜா சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாயிருந்தார். அதன் பின்பு அவருடைய குமாரன் சாலொமோன் சமஸ்த இஸ்ரவேலை ஞானமாய் ஆட்சி செய்தார். அவருடைய காலத்திற்கு பின்பு சமஸ்த இஸ்ரவேல் தேசம் இரண்டு தேசங்களாக பிரிந்தது. வடக்கு தேசத்திற்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு தேசத்திற்கு யூதாதேசம் என்றும் பெயர். வடக்கு இஸ்ரவேல் தேசத்திலே, தாவீதின் சிங்காசனத்திற்கு விரோதமாய் கலகம்பண்ணின இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார்கள் சேர்ந்து கொண்டார்கள். மீதமுள்ள இரண்டு கோத்திரத்தார் யூதா தேசத்திலிருந்தார்கள். எருசலேமும் அதிலுள்ள தேவாலயமும் தெற்கு யூதாதேசத்திலிருந்தது. எரேமியா தீர்க்கதரிசி இரண்டாகப் பிரிந்த இவ்விரண்டு இஸ்ரவேல் தேசங்களையும் இங்கே ஒப்பிட்டுச் சொல்லுகிறார்.

வடக்கு இஸ்ரவேலைப்பற்றிச் சொல்லும்போது, அதை "சீர்கெட்ட இஸ்ரவேல்" என்று சொல்லுகிறார். அதில் இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் தேவனுடைய தெய்வீக நியமனத்திற்கு எதிராக கலகம்பண்ணினார்கள். தாவீதின் சிங்காசனத்திற்கும், எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கும் விரோதமாய் கலகம்பண்ணி, சமஸ்த இஸ்ரவேல் தேசத்தை விட்டுப் பிரிந்துபோய்விட்டார்கள். கர்த்தர் எரேமியாவிடம், "சீர் கெட்ட இஸ்ரவேல் என்பவள் செய்ததை கண்டாயா" என்று கேட்கிறார் (எரே 3:6).

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் உயரமான சகல மலையின்மேலும், பச்சையான சகல மரத்தின்கீழும் போய், அங்கே வேசித்தனம் பண்ணினார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் உயர்ந்த மேடைகளிலும், தோப்புகளிலும் விக்கிரகங்களை ஆராதனை செய்தார்கள்.

அவர்கள் மனந்திரும்பவேண்டும் என்றும் விக்கிரகாராதனையைவிட்டு விட்டு தம்மிடத்தில் திரும்பி வரவேண்டும் என்றும் கர்த்தர் தீர்க்கதரிசிகள் மூலமாய் உபதேசம்பண்ணினார். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர் மூலமாய் அவர்களை தம்மிடத்தில் அழைத்தார். அவர்களை மனந்திரும்புமாறு உற்சாகப்படுத்தினார். வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் விக்கிரகாராதனையிலிருந்தாலும், கர்த்தர் அவர்களிடத்தில், "நீ என்னிடத்தில் திரும்பி வா" என்று தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் சொல்லுகிறார் (எரே 3:7).

கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் மத்தியிலே, தம்முடைய தீர்க்கதரிசிகளை அனுப்புகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும் என்றும், அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதனை செய்யவேண்டும் என்றும் அவர்களிடத்தில் சொல்லுகிறார்கள். ஊழியக்காரர்கள் வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் மத்தியில் ஊழியம் செய்தபோது, வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் தாவீதின் சிங்காசனத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்றோ, அல்லது தாவீதின் குடும்பத்தாருடைய ஆளுகைக்கு தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்றோ, வற்புறுத்தி சொல்லவில்லை. அவர்கள் ஆரோனுடைய வீட்டாரின் ஆசாரியத்துவத்திற்கு திரும்பி வரவேண்டுமென்றே ஊழியக்காரர்கள் அவர்களிடத்தில் வற்புறுத்தி சொன்னார்கள்.

இஸ்ரவேல் தேசத்தார் மத்தியில் வல்லமையாய் ஊழியம் செய்த எலியா தீர்க்கதரிசிகூட, இஸ்ரவேல் ஜனத்தார் தாவீதின் வீட்டாரிடத்திற்கு திரும்பி வரவேண்டுமென்று எங்குமே உபதேசம்பண்ணவில்லை.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் தனியாக பிரிந்துபோனார்கள். அவர்களிடத்தில் மெய்யான ஆராதனை காணப்படவில்லை. அவர்கள் விக்கிரகாராதனையில் நிலைத்திருந்தார்கள்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் மத்தியில் ஊழியம் செய்த பின்பும், ஜனங்கள் விக்கிரகாராதனையில் நிலைத்திருந்தார்கள். அவர்கள் விக்கிரகாராதனையை விட்டு திரும்பவுமில்லை. கர்த்தரிடத்தில் திரும்ப வரவுமில்லை. கர்த்தர் அவர்களுடைய துன்மார்க்கத்தைப் பார்த்தார். "இதை நான் கண்டேன்" (எரே 3:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போய், விக்கிரகங்களை தொடர்ந்து ஆராதனை செய்ததினால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்தது. கர்த்தர் அவர்களை தம்மிடத்தில் மனந்திரும்பி வருமாறு சொன்னார். ஆனால் அவர்களோ கர்த்தரிடத்தில் திரும்பி வரவில்லை.

இதனால் கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரை, அவர்களுடைய சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்துவிட்டார். "கர்த்தர் அவளை அனுப்பிவிட்டு, அவளுடைய தள்ளுதற்சீட்டை அவளுக்கு கொடுத்தார்" (எரே 3:8).

சீர்கெட்ட இஸ்ரவேல் என்பவள் விபசாரம்பண்ணின முகாந்தரங்கள் எல்லாவற்றினிமித்தமும், கர்த்தர் அவளுடைய தள்ளுதற்சீட்டை அவளுக்கு கொடுத்துவிட்டார். வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் சிதறடிக்கப்பட்டார்கள். கர்த்தர் அவர்களுடைய ஜெபாலயங்கள் எல்லாவற்றையும் பாழாக்கிப்போட்டார். அவர்களுடைய தீர்க்கதரிசிகளின் பாடசாலைகளும் ஒன்றுமில்லாமல் போயிற்று.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரின் முற்பிதாக்கள் கர்த்தரோடு உடன்படிக்கை செய்திருந்தார்கள். அந்த உடன்படிக்கைக்கு, வடக்கு இஸ்ரவேல் தேசத்தில் ஒரு அடையாளமும் இல்லாதவாறு, கர்த்தர் எல்லா அடையாளங்களையும் அழித்துப் போட்டார். தாங்களும் கர்த்தருடைய பிள்ளைகள் என்று சொல்லுவதற்கு, வடக்கு இஸ்ரவேல் தேசத்தாருக்கு ஒரு ஆதாரமும் இல்லாமல் போயிற்று. தமக்கும் அவர்களுக்கும் இடையே இருந்த ஐக்கியத்திற்கு ஆதாரமாயிருந்த எல்லாவற்றையும் கர்த்தர் அழித்துப்போட்டார்.

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாய் தெற்கு யூதாதேசத்தைப்பற்றியும் சொல்லுகிறார். இந்த தேசத்தில் இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்தார் இருக்கிறார்கள். கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தை "சீர்கெட்ட இஸ்ரவேல்" என்று சொல்லுகிறார். தெற்கு யூதாதேசத்தையோ, "யூதா என்கிற துரோகி" என்று சொல்லுகிறார். இஸ்ரவேலும் யூதாவும் சகோதரிகள். இவர்கள் இஸ்ரவேல் என்னும் ஒரே சந்ததியில் வந்தவர்கள். ஆபிரகாம், யாக்கோபு ஆகியோர் இவர்களுடைய முற்பிதாக்கள்.

சீர்கெட்ட இஸ்ரவேலும், அவளுடைய சகோதரியாகிய யூதா என்கிற துரோகியும் கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போனபோது, தெற்கு யூதா தேசத்தார் தங்களை தெய்வபக்தியுள்ளவர்கள் போல காண்பித்துக்கொண்டார்கள். கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறவர்கள் போலவும், கர்த்தரை உண்மையாய் ஆராதிக்கிறவர்கள் போலவும், கர்த்தருடைய வார்த்தைகளை தியானிக்கிறவர்கள் போலவும் தெற்கு யூதாதேசத்தார் தங்களைக் காண்பித்துக் கொண்டார்கள். ஆனால் அவர்களிடத்தில் உண்மையான தெய்வபக்தியில்லை. அவர்களும் கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் தெற்கு யூதாதேசத்தைப்பற்றிச் சொல்லும்போது, "யூதா என்கிற துரோகி" என்று சொல்லுகிறார்.

தெற்கு யூதா தேசத்திலே தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் ராஜாக்களும் ஆசாரியர்களும் நியமனம் செய்யப்பட்டார்கள். தேவனுடைய தெய்வீக ஆளுகை தெற்கு யூதாதேசத்திலே நடைபெற்றது. ஆனாலும் தெற்கு யூதாதேசத்தார் கர்த்தருக்கு விரோதமாக துரோகம்பண்ணினார்கள். தங்களை பக்தியுள்ளவர்கள்போல காண்பித்துக்கொண்டாலும், அவர்களிடத்தில் உண்மையான தெய்வபக்தியில்லை.

கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தை சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்தார். அவர்கள் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்துக் கொண்டுபோனார்கள். அவர்களுடைய சிறையிருப்பை தெற்கு யூதாதேசத்தார் தங்கள் கண்களால் கண்டார்கள். இதைக் கண்டு, தெற்கு யூதாதேசத்தார் மனந்திரும்பவேண்டும். அவர்களுக்கு கர்த்தரைப்பற்றிய பயம் வரவேண்டும். தெற்கு யூதாதேசத்தாருடைய புத்தி தெளியவேண்டும் என்பதற்காகவே, அவர்களுடைய கண்களுக்கு முன்பாக வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் சிறைப்பிடித்து செல்லப்பட்டார்கள். ஆனால் தெற்கு யூதாதேசத்தாரோ, வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரின் சிறையிருப்பைப் பார்த்து மனந்திரும்பவில்லை. அவர்களுக்கு ஆவிக்குரிய பிரயோஜனம் ஒன்றும் உண்டாகவில்லை.

தெற்கு யூதாதேசத்தார் தங்களைப்பற்றி பெருமையாய் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தாவீதின் வம்சத்தார் தங்களை ஆளுகை செய்வதினாலும், லேவியர்கள் தங்களுக்கு ஆசாரியர்களாகயிருப்பதினாலும் தெற்கு யூதா தேசத்திற்கு கர்த்தருடைய பாதுகாப்பு இருக்கும் என்று நம்புகிறார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் சிறைப்பட்டுப்போனபோது, தெற்கு யூதாதேசத்தார் கர்த்தருக்கு விரோதமாய், துணிகரமான பாவங்களை செய்தார்கள்.

"அவளுடைய சகோதரியாகிய யூதா என்கிற துரோகி பயப்படாமல்; இவளும் போய் வேசித்தனம்பண்ணினாள், இதை நான் கண்டேன். பிரசித்தமான அவளுடைய வேசித்தனத்தினாலே தேசம் தீட்டுப்பட்டுப் போயிற்று; கல்லோடும் மரத்தோடும் விபசாரம் பண்ணிக்கொண்டிருந்தாள்" (எரே 3:8,9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மனாசே, ஆமோன் ஆகியோருடைய ஆட்சிக்காலத்தில், தெற்கு யூதாதேசம் சீர்கெட்டுப்போயிற்று. தேசம் முற்றிலுமாய் தீட்டுப்பட்டிருந்தது. நல்ல ராஜாக்கள் நல்லாட்சி செய்யும்போது, ஜனங்கள் மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்த்தார். ஆனால் தெற்கு யூதா தேசத்திலே, ராஜாக்கள் நல்லவர்களாயிருந்தாலும், ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமான பாவங்களை செய்தார்கள். விக்கிரகங்களோடு விபசாரம்பண்ணினார்கள்.

தெற்கு யூதாதேசத்திலே, நல்ல ராஜாக்கள் ஆவிக்குரிய மறுமலர்ச்சியை கொண்டுவருவதற்கு முயற்சி பண்ணினார்கள். அக்காலத்தில் யூதர்கள் கள்ளத்தனமாய் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். அவர்கள் முழுஇருதயத்தோடு கர்த்தரிடத்தில் திரும்பவில்லை. "இவைகளையெல்லாம் கண்டும், யூதா என்கிற அவளுடைய சகோதரியாகிய துரோகி, கள்ளத்தனமாய்த் திரும்பினாளேயன்றி, முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்பவில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 3:10).

யோசியா ராஜாவுக்கு முன்பாக, தெற்கு யூதாதேசத்தை ஆட்சிபுரிந்த ராஜாக்கள், ஜனங்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை உபதேசம்பண்ணினார்கள். ஆனால் அவர்கள் விக்கிரகங்களை அழித்துப் போடவில்லை. யோசியா ராஜாவோ, யூதா தேசத்திலிருந்த விக்கிரகங்களையெல்லாம் அழித்துப்போட்டார். கர்த்தரிடத்தில் தன்னுடைய முழுஇருதயத்தோடும், தன்னுடைய முழுஆத்துமாவோடும் மனந்திரும்பி வந்தார்.

"கர்த்தரிடத்துக்குத் தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் தன் முழு பலத்தோடும் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்றபடியெல்லாம் செய்ய மனதைச் சாய்த்தான்; அவனைப் போலொத்த ராஜா அவனுக்குமுன் இருந்ததுமில்லை, அவனுக்குப்பின் எழும்பினதுமில்லை" (2இராஜா 23:25).

யோசியா ராஜா கர்த்தருக்கு தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்தபோது, அதைப் பார்த்த யூதாஜனங்கள், தங்களையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தார்கள். கர்த்தரிடத்தில் திரும்பி வந்தார்கள். ஆனால் அவர்கள் முழுஇருதயத்தோடு கர்த்தரிடத்தில் திரும்பி வரவில்லை. கள்ளத்தனமாய், அரைகுறை மனதோடு கர்த்தரிடத்தில் திரும்பி வந்தார்கள். ராஜா மனந்திரும்பியதினால், ராஜாவோடு ஒத்துப்போகவேண்டுமே என்று நினைத்து, ஜனங்கள் கர்த்தரிடத்தில் ஏனோதானோவென்று திரும்பி வந்தார்கள். அவர்களிடத்தில் உண்மையான மனமாற்றம் காணப்படவில்லை. அவர்களுடைய இருதயத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்மையாய் உண்டாகவில்லை. அவர்களுடைய இருதயம் கர்த்தரிடத்தில் உண்மையாயில்லை.

"எருசலேமிலும் பென்யமீனிலும் காணப்பட்ட யாவரையும் அதற்கு உட்படப்பண்ணினான்; அப்படியே எருசலேமின் குடிகள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய அந்த தேவனுடைய உடன்படிக்கையின்படியே செய்தார்கள்" (2நாளா 34:32).

"அங்கே வந்திருந்த இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்தில் பஸ்காவையும், புளிப்பில்லாத அப்பப்பண்டிகையையும் ஏழு நாளளவும் ஆசரித்தார்கள்" (2நாளா 35:17).

கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தை தள்ளிவிட்டதுபோலவே, தெற்கு யூதா தேசத்தையும் தம்முடைய முகத்தை விட்டு தள்ளிவிடுகிறார். அவர்களுடைய பாவமும், துன்மார்க்கமும், முரட்டாட்டமுமே அவர்களுடைய அழிவுக்கு காரணமாயிற்று.

"நான் இஸ்ரவேலைத் தள்ளிவிட்டதுபோல யூதாவையும் என் முகத்தை விட்டுத் தள்ளி, நான் தெரிந்துகொண்ட இந்த எருசலேம் நகரத்தையும், என் நாமம் விளங்கும் என்று நான் சொன்ன ஆலயத்தையும் வெறுத்துவிடுவேன் என்று கர்த்தர் சொன்னார்" (2இராஜா 23:27).

நாம் மனப்பூர்வமாய் மனந்திரும்ப வேண்டும். நாம் முழுஇருதயத்தோடு கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். நம்மிடத்தில் உண்மையான மனமாற்றம் இல்லையென்றால், நமக்குள் உண்மையான ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாகாது.

கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தையும், தெற்கு யூதாதேசத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார். இவ்விரண்டு தேசங்களில் யூதாதேசமே மிகவும் மோசமாயிருக்கிறது. "யூதா என்கிற துரோகியைப்பார்க்கிலும் சீர்கெட்ட இஸ்ரவேல் என்பவள் தன்னை நீதியுள்ளவளாக்கினாள்" (எரே 3:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய ஆவிக்குரிய காரியங்களிலும், நாம் பல சமயங்களில், நம்மை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறோம். "நாம் மற்றவர்களைப்போல மோசமானவர்களல்ல" என்று சொல்லுகிறோம். இந்த வாக்கியத்திற்கு "நாம் நல்லவர்களல்ல" என்றுதான் பொருள்.

தெற்கு யூதாதேசம் வடக்கு இஸ்ரவேல் தேசத்தைப் பார்க்கிலும் இரண்டு விஷயங்களில் மோசமாயிருக்கிறது. அவையாவன :

1. கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தைவிட, தெற்கு யூதா தேசத்திடம் அதிகமாய் எதிர்பார்க்கிறார். தெற்கு யூதாதேசத்தில் பரிசுத்தமான ஆராதனைகள் நடைபெறுகிறது. கர்த்தருடைய பிரமாணத்தின்படி பண்டிகைகள் ஆசரிக்கப்படுகிறது. எருசலேமும் அதிலுள்ள தேவாலயமும் யூதாதேசத்திலிருக்கிறது. ஆகையினால் கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரைவிட, தெற்கு யூதாதேசத்தாரிடம் அதிகமாய் எதிர்பார்க்கிறார். கர்த்தர் எதிர்பார்த்த பிரகாரம், தெற்கு யூதாதேசத்தார் தங்கள் முழுஇருதயத்தோடு கர்த்தரிடத்தில் திரும்பவில்லை.

2. வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் கர்த்தருக்கு விரோமாய் பாவம் செய்ததினிமித்தம், கர்த்தர் அவர்களைத் தண்டித்தார். அவர்களை அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தார். வடக்கு இஸ்ரவேல் தேசம் முற்றிலுமாய் அழிந்துபோனது. அவர்களுடைய அழிவை தெற்கு யூதாதேசத்தார் தங்கள் கண்களால் கண்டார்கள். தாங்களும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தால், தங்களுக்கும் இப்படிப்பட்ட பேரழிவு வரும் என்பதை, தெற்கு யூதாதேசத்தார் உணர்ந்துகொள்ளவில்லை. அவர்கள் கர்த்தரை உண்மையாய்ப் பற்றிக்கொள்ளவுமில்லை. கர்த்தரிடத்தில் முழுஇருதயத்தோடு திரும்பி வரவுமில்லை.

சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு எரே 3:12-19

எரே 3:12. நீ போய் வடதிசையை நோக்கிக் கூறவேண்டிய வார்த்தைகள் என்னவென்றால்: சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள்மேல் என் கோபத்தை இறங்கப்பண்ணுவதில்லை; நான் கிருபையுள்ளவரென்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் என்றைக்கும் கோபம் வைக்கமாட்டேன்.

எரே 3:13. நீயோ, உன் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி, பச்சையான சகல மரத்தின்கீழும், அந்நியரோடே சோரமார்க்கமாய் நடந்து, உன் அக்கிரமத்தையும் என் சத்தத்துக்குச் செவிகொடாமற்போனதையும் ஒத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 3:14. சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் நாயகர்; நான் உங்களை ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டுபேருமாகத் தெரிந்து, உங்களைச் சீயோனுக்கு அழைத்துக்கொண்டுவந்து,

எரே 3:15. உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன், அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்.

எரே 3:16. நீங்கள் தேசத்திலே பெருகிப் பலுகுகிற அந்நாட்களிலே, அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியென்று இனிச் சொல்வதில்லை; அது அவர்கள் மனதில் எழும்புவதும் இல்லை; அது அவர்கள் நினைவில் வருவதும் இல்லை; அதைக் குறித்து விசாரிப்பதும் இல்லை; அது இனிச் செப்பனிடப்படுவதும் இல்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 3:17. அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள்; சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமாகச் சேர்வார்கள்; அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள்.

எரே 3:18. அந்நாட்களிலே யூதா வம்சத்தார் இஸ்ரவேல் வம்சத்தாரோடே சேர்ந்து, அவர்கள் ஏகமாய் வடதேசத்திலிருந்து புறப்பட்டு, நான் தங்கள் பிதாக்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தேசத்திற்கு வருவார்கள்.

எரே 3:19. நான் உன்னைப் பிள்ளைகளின் வரிசையிலே வைத்து, ஜனக் கூட்டங்களுக்குள்ளே நல்ல சுதந்தரமாகிய தேசத்தை உனக்குக் கொடுப்பது எப்படியென்று சொன்னேன்; ஆனாலும் நீ என்னை நோக்கி, என் பிதாவே என்று அழைப்பாய்; நீ என்னை விட்டு விலகுவதில்லை என்று திரும்பவும் சொன்னேன்.

இந்த வசனப்பகுதியில் சுவிசேஷத்தின் சாரம் இடம்பெற்றுள்ளது. கர்த்தர் இங்கு சொல்லுகிற வார்த்தைகளை, எரேமியா தீர்க்கதரிசி வடதிசையை நோக்கி கூறவேண்டும். வடதிசையிலே சீர்கெட்ட இஸ்ரவேலர்கள் குடியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே கர்த்தரைவிட்டு விலகி பின்வாங்கிப்போய்விட்டார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்தின் பத்துக்கோத்திரத்தார்களையும், அசீரியா தேசத்தார் தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோய்விடுகிறார்கள். பத்துக்கோத்திரத்தாரும் எருசலேமுக்கு வடக்கேயிருப்பதினால், அவர்களுடைய தேசம் வடக்கு இஸ்ரவேல் தேசம் என்று அழைக்கப்படுகிறது.

எரேமியா தீர்க்கதரிசி வடக்கு இஸ்ரவேல் தேசத்திற்கு, கர்த்தருடைய செய்தியை சொல்லும்போது, தெற்கு யூதாதேசத்திலிருக்கிற ஜனங்களும், அந்த செய்தியைக் கேட்பதற்கு வாய்ப்புகள் உண்டாகும். கர்த்தர் யூதாதேசத்தாருக்கும் தம்முடைய செய்தியை சொல்லுகிறார். அவர்களும் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரைப்போலவே கர்த்தருடைய வார்த்தைக்கு முழுவதுமாய் செவிகொடுக்கவில்லை. அவர்கள் முழுஇருதயத்தோடு கர்த்தரிடத்தில் திரும்பி வரவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் சீர்கெட்டுப்போயிருக்கிறார்கள். கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியிடம், தம்முடைய செய்தியை வடதிசையை நோக்கி சொல்லச் சொல்லுகிறார். வடதிசையிலே, வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போனவர்கள். கர்த்தருடைய செய்தி தங்களுக்கு சொல்லப்படும்போது, அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வருவார்கள். கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்வார்கள். இதனால் சீர்கெட்ட இஸ்ரவேலுக்கு யூதா என்கிற துரோகியைவிட மிகுந்த ஆசீர்வாதமுண்டாகும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய சீஷர்களிடம் சுவிசேஷத்தின் செய்தியை எல்லா தேசத்தாருக்கும் பிரசங்கம்பண்ணுமாறு சொன்னார். அவர்களுடைய பிரசங்கத்தை எருசலேமிலிருந்து ஆரம்பிக்கவேண்டும்.

"அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக் 24:47). வடதிசையை நோக்கி கர்த்தருடைய செய்தியைக் கூறுவது என்பது, எருசலேம் தொடங்கி இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷச் செய்தியை பிரசங்கம்பண்ணுவதற்கு ஒப்பாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரைப் பார்த்து, "சீர் கெட்ட இஸ்ரவேலே, திரும்பு" என்று சொல்லுகிறார். கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போயிருக்கிற வடக்கு இஸ்ரவேல் தேசத்தார், கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்கியம், புறஜாதி ஜனங்களுக்கும் சொல்லப்படுகிறது. புறஜாதியாரும் தேவனை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள். அவர்களும் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும்.

"சீர் கெட்ட இஸ்ரவேலே, திரும்பு" (எரே 3:12) என்னும் வாக்கியத்தை கர்த்தர் மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். "சீர் கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்" (எரே 3:14) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறவர்கள், மறுபடியுமாய் கர்த்தருடைய நல்ல பாதைக்கு திரும்பி வரவேண்டும். அவர்கள் ஒரு காலத்தில் கர்த்தரைப் பின்பற்றிப்போனார்கள். கர்த்தருடைய நல்ல பாதையில் நடந்தார்கள். இப்போது அவர்கள், அந்த நல்ல பாதையிலிருந்து பிரிந்து விலகி, சீர்கெட்டுப்போயிருக்கிறார்கள்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் தம்மிடத்தில் திரும்பி வருமாறு கர்த்தர் அவர்களை உற்சாகப்படுத்துகிறார். அவர்களுடைய பாவத்தினிமித்தமாகவும், துன்மார்க்கத்தினிமித்தமாகவும் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் இறங்கிற்று. ஆனாலும் அவர்கள் கர்த்தரிடத்தில் மறுபடியும் திரும்பி வரும்போது, கர்த்தர் தம்முடைய கோபத்தை அவர்கள்மேல் இறங்கப்பண்ணமாட்டார். "நான் கிருபையுள்ளவர்" என்று கர்த்தர் சொல்லுகிறார், "நான் என்றைக்கும் கோபம் வைக்கமாட்டேன்" என்றும் கர்த்தர் தம்முடைய சுபாவத்தை வெளிப்படுத்துகிறார் (எரே 3:12).

கர்த்தரைவிட்டு விலகி சீர்கெட்டுப்போயிருக்கிற இஸ்ரவேல் ஜனங்கள், தம்மிடத்தில் எப்படி திரும்பி வரவேண்டும் என்றும், கர்த்தர் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார். அவர்கள் தங்களுடைய அக்கிரமத்தை ஒத்துக்கொள்ளவேண்டும். தாங்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடாமல் போனதையும் ஒத்துக்கொள்ளவேண்டும். தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணியதையும், பச்சையான சகல மரத்தின் கீழும் அந்நியரோடே சோரமார்க்கமாய் நடந்ததையும் அவர்கள் ஒத்துக்கொள்ளவேண்டும்.

சீர்கெட்டுப்போன இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய அக்கிரமத்தை ஒத்துக்கொள்ளும்போது, அவர்களுக்கு அவமானமுண்டாகும். வெட்கமுண்டாகும். அவை எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு, அவர்கள் கர்த்தரை கனம்பண்ணவேண்டும்.

தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு, துன்மார்க்கர்கள் சாதாரண காரியங்களை செய்தால் போதும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் தங்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் ஒத்துக்கொள்ளவேண்டும். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கும், கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இதுவே போதுமானது.

அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு, அவர்கள் பெரிய காரியங்களை செய்யவேண்டும் என்றும், பெரிய தியாகங்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் தீர்க்கதரிசிகள் சொல்லியிருந்தால் அவர்கள் அதை சந்தோஷமாய் செய்திருப்பார்கள். கர்த்தர் இப்போது அவர்களிடத்தில், தங்கள் அக்கிரமத்தை ஒத்துக்கொள்ளுமாறு மாத்திரமே சொல்லுகிறார். அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு, கர்த்தர் இந்த சாதாரண காரியத்தையே, அவர்களிடத்தில் எதிர்பார்க்கிறார்.

"அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி: தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம்பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும்போது, அதைச் செய்யவேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள்" (2இராஜா 5:13).

நம்முடைய அக்கிரமத்தை நாம் ஒத்துக்கொள்வதற்கு முன்பாக, நம்முடைய அக்கிரமம் என்ன என்பது நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்காமல் போனோம். நம்முடைய கீழ்ப்படியாமையினால் கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணினோம். நாம் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதித்தோம். இவை எல்லாம் நம்முடைய அக்கிரமங்கள்தான். நம்மிடத்தில் அக்கிரமங்களின் எண்ணிக்கை ஏராளமாயிருந்தாலும், நாம் அவையெல்லாவற்றையும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் தேவனாகிய கர்த்தருக்கு துரோகம் பண்ணினார்கள். பச்சையான சகல மரத்தின் கீழும் அந்நியரோடே சோரமார்க்கமாய் நடந்தார்கள். கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்காமல் போனார்கள். இந்த அக்கிரமங்களையெல்லாம் அவர்கள் ஒத்துக்கொள்ளவேண்டும். தங்களுடைய அக்கிரமங்களை நினைத்து, அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களை முழுவதுமாய்த் தாழ்த்தவேண்டும்.

கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனவர்கள், மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் மறுபடியும் திரும்பி வந்தால், அவர்களுக்கு ஏராளமான ஆசீர்வாதங்கள் கிடைக்கும். தம்மிடத்தில் திரும்பி வருகிற ஜனத்திற்கு, கர்த்தர் அற்புதமான ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தங்களாகச் சொல்லுகிறார். யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்தபோது, இந்த வாக்குத்தத்தங்களின் ஒருபகுதி நிறைவேறிற்று.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தங்கள், புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபையில் பூரணமாய் நிறைவேறும். உலகமெங்கும் சிதறிப்போயிருக்கிற கர்த்தருடைய பிள்ளைகள், அவருடைய சபையிலே கூட்டிச்சேர்க்கப்படுவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருந்தாலும், அவர்கள் சீர்கெட்ட பிள்ளைகளாயிருந்தாலும், அவர்கள் இன்னும் கர்த்தருடைய பிள்ளைகளாகவே இருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களிடத்தில், "சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள், உங்கள் சீர்கேடுகளை குணமாக்குவேன்" (எரே 3:22) என்று சொல்லுகிறார்.

மனைவி துரோகியாயிருந்தாலும், அவள் இன்னும் மனைவியாகத்தான் இருக்கிறாள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு விவாக உடன்படிக்கை செய்திருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய விவாக உறவு இன்னும் முறிந்துபோகவில்லை. மனைவி துரோகியாகயிருந்தாலும், இன்னும் மனைவியாகத்தான் இருக்கிறாள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரைப் பார்த்து, "நான் உங்கள் நாயகர்" (எரே 2:14) என்று சொல்லி, தம்முடைய விவாக உடன்படிக்கையை உறுதிபண்ணுகிறார். கர்த்தர் இந்த விவாக உறவை முறித்துப்போடமாட்டார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்களோடு செய்த உடன்படிக்கையையும் நினைவுகூருகிறார்.

"நான் யாக்கோபோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஈசாக்கோடே பண்ணின என் உடன்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின என் உடன்படிக்கையையும் நினைப்பேன்; தேசத்தையும் நினைப்பேன் (லேவி 26:42).

கர்த்தருடைய பிள்ளைகள் பூமியெங்கும் சிதறிப்போயிருக்கிறார்கள். கர்த்தரோ அவர்கள் எங்கே இருந்தாலும், அவர்களை கூட்டிச்சேர்ப்பதாக வாக்குப்பண்ணுகிறார். "நான் உங்களை ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டுபேருமாகத் தெரிந்து, உங்களைச் சீயோனுக்கு அழைத்துக்கொண்டுவருவேன்" (எரே 3:14) என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

"அந்த ஜனங்களுக்காகமாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்கப்போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்" (யோவா 11:52).

கர்த்தரைவிட்டு விலகி பின்வாங்கிப்போனவர்களில், ஒரு சிலர் மாத்திரமே அவரிடத்திற்கு திரும்பி வருகிறார்கள். ஒரு ஊரில் ஒருவனும், ஒரு வம்சத்தில் இரண்டு பேரும் மாத்திரமே வருகிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை குறைவாயிருந்தாலும், கர்த்தர் தம்முடையவர்களில் ஒருவரையும் இழந்துபோகமாட்டார். கர்த்தருடைய பிள்ளைகள், ஒரு வம்சத்தில் இரண்டு பேர் மாத்திரம், அந்நிய தேசத்தில் சிதறிப்போயிருந்தாலும், கர்த்தர் அவர்களையும் அழைத்துக்கொண்டு வருவார். ஒரு ஊரில் தம்முடைய பிள்ளை ஒருவர் மாத்திரம் இருந்தாலும், கர்த்தர் அவரையும் கைவிடாமல், தம்மிடத்திற்கு அழைத்துக்கொண்டு வருவார்.

கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இந்தப் பூமியில் எல்லா பாகங்களிலும் இருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தின் பிரகாரமாய், சிதறிப்போயிருக்கிற தம்முடைய பிள்ளைகள் எல்லோரையும், தம்முடைய சுவிசேஷ சபைக்கு அழைத்துக்கொண்டு வருவார். "உங்களை சீயோனுக்கு அழைத்துக்கொண்டு வருவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். சீயோன் என்பது சீயோன் பர்வதத்தைக் குறிக்கும். இது பரம எருசலேமைக் குறிக்கும் என்றும், இந்த பரிசுத்த பர்வதத்தின்மீது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஆளுகை செய்கிறார் என்றும் வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

தம்மிடத்தில் திரும்பி வருகிறவர்களுக்கு, கர்த்தர் ஏராளமான ஆசீர்வாதங்களை வாக்குப்பண்ணுகிறார். "உங்களுக்கு என் இருதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன்" (எரே 3:15) என்று கர்த்தர் சொல்லுகிறார். இதுவே முதலாவது ஆசீர்வாதமான வாக்குத்தத்தம். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வந்து, தம்முடைய சபையில் கூட்டிச் சேர்க்கும்போது, அவர்களை வழிநடத்துவதற்கு மேய்ப்பர்கள் வேண்டும்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை சீயோனுக்கு அழைத்துக்கொண்டு வருவதற்கு ஒரு தெய்வீக நோக்கமுண்டு. அவர்கள் தேவனுடைய பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்க பழகிக்கொள்ளவேண்டும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை வனாந்தரத்திலுள்ள காட்டு மிருகங்களைப்போல சீயோனுக்கு அழைத்துக்கொண்டு வரவில்லை. அவர்களை ஆடுகளைப் போல வழிநடத்திக்கொண்டு வருகிறார். ஆடுகளும் தாங்களாகவே வருவதில்லை. ஆடுகளை வழிநடத்துவதற்கு கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கேற்ற மேய்ப்பர்களையும் கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய சபைக்கு ஊழியக்காரர்களைக் கொடுக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், அவருடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாயிருப்பது, சபையாருக்கு மிகுந்த ஆசீர்வாதம். கர்த்தருடைய இருதயமும் ஊழியக்காரருடைய இருதயமும் ஒத்துப்போகும். கர்த்தருடைய சித்தமே ஊழியக்காரருடைய சித்தமாயிருக்கும். கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்கள், தொழுவத்திலுள்ள ஆடுகளை, தங்களுடைய சுயஇஷ்டம்போல மேய்க்காமல், கர்த்தருடைய இஷ்டம்போலவும், கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்தும் மேய்ப்பார்கள், வழிநடத்துவார்கள்.

கர்த்தருக்கு பிரியமான மேய்ப்பர்கள், விசுவாசிகளை ஆளுகை செய்யும்போது, கர்த்தருடைய பிரமாணத்தின் பிரகாரம் ஆளுகை செய்வார்கள். அவர்கள் விசுவாசிகளை கர்த்தருக்காக ஆளுகை செய்வார்கள். கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்களுக்கு, விசுவாசிகளை வழிநடத்துவதற்குத் தேவையான தாலந்துகளைக் கொடுப்பார். கர்த்தரே பிரதான மேய்ப்பர். ஊழியக்காரர்கள் எல்லோரும் பிரதான மேய்ப்பருக்கு கீழே பணிபுரிகிற துணை மேய்ப்பர்கள் அல்லது உதவி மேய்ப்பர்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், விசுவாசிகளை கர்த்தரைப்போலவே ஆளுகை செய்வார்கள்.

கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற மேய்ப்பர்கள், விசுவாசிகளுக்கு போஜனம் கொடுப்பார்கள். மந்தையைத் துரத்திவிடமாட்டார்கள். விசுவாசிகளை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள். கர்த்தருடைய சபையின் மேய்ப்பர்கள், போதகர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் சபையிலுள்ள விசுவாசிகளுக்கு, கர்த்தருடைய வார்த்தையை போஜனமாகக் கொடுப்பார்கள். அப்போது விசுவாசிகளுக்கு இரட்சிப்புக்கேற்ற ஞானம் கிடைக்கும்.

கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோனவர்கள், அவரிடத்தில் திரும்பி வரும்போது, அவர்களுக்கு இனிமேல் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி தேவைப்படாது. இஸ்ரவேல் ஜனத்தார் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது, கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாக, அவர்கள் மத்தியிலே உடன்படிக்கை பெட்டியிருந்தது. "நீங்கள் தேசத்திலே பெருகிப் பலுகுகிற அந்நாட்களிலே, அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியென்று இனிச் சொல்வதில்லை" (எரே 3:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்தப் பூமியில் மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். அது பெருகிப் பலுகும். சபையில் கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி தேவைப்படாது. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் யூதர்கள் சடங்காச்சாரமான பிரமாணங்களை கடைப்பிடித்து, கர்த்தரை ஆராதித்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையில், பழைய சடங்காச்சார ஆராதனை இருக்காது. அதற்கு பதிலாக புதிய ஆராதனை முறை இருக்கும். கர்த்தரைத் தொழுதுகொள்கிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்வார்கள்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த பாரம்பரியமான எல்லா பிரமாணங்களுக்கும், சடங்காச்சாரமான எல்லா பிரமாணங்களுக்கும் அடையாளமாயிருக்கிறார். இயேசு கிறிஸ்துவே சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில், கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாய், உடன்படிக்கை பெட்டியிருந்தது. புதிய ஏற்பாட்டுக்காலத்திலோ, கர்த்தர் தம்மை வார்த்தையின் மூலமாய் வெளிப்படுத்துகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஏராளமான சடங்காச்சார பிரமாணங்களும், ஆராதனை முறைமைகளும், பண்டிகைகளும் ஆசரிக்கப்பட்டன. புதிய ஏற்பாட்டுக்காலத்திலோ, விசுவாசிகளாகிய நமக்கு, கர்த்தர் இரண்டு நியமங்களை மாத்திரம் கொடுத்திருக்கிறார். அவையாவன : 1. தண்ணீர் ஞானஸ்நானம் 2. கர்த்தருடைய பந்தி. இவ்விரண்டு நியமங்களும், பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த, எல்லாவிதமான சடங்காச்சார பிரமாணங்களுக்கும் அடையாளமாயிருக்கிறது. இவ்விரண்டுமே போதுமானது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, உடன்படிக்கை பெட்டிக்கு அடையாளமாயிருக்கிறார். கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியில் கிருபாசனம் இருந்தது. நமக்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே கிருபாசனம். கர்த்தருடைய ஆவிக்குரிய பிரசன்னம் அவருடைய வார்த்தையில் வெளிப்படுகிறது. நாம் கர்த்தருடைய வசனத்தை வாசித்து தியானிக்கும்போது, கர்த்தருடைய ஆவிக்குரிய பிரசன்னத்தை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபையில், கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கிறவர்கள், கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியைப்பற்றி பேசவும் மாட்டார்கள், நினைக்கவுமாட்டார்கள். "அது அவர்கள் மனதில் எழும்புவதும் இல்லை; அது அவர்கள் நினைவில் வருவதும் இல்லை; அதைக் குறித்து விசாரிப்பதும் இல்லை; அது இனிச் செப்பனிடப்படுவதும் இல்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 3:16).

பழைய ஏற்பாட்டுக்காலத்து ஆசரிப்புக்கூடாரத்தில், கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியை மையமாக வைத்தே, ஆராதனைகள் நடைபெற்றது. புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபையிலோ கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி தேவைப்படவில்லை.

"உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும்" (யோவா 4:23,24) என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்.

கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள், தம்மிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் அவர்களுக்கு ஏராளமான ஆசீர்வாதங்களை வாக்குத்தத்தமாய்க் கொடுக்கிறார். அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, எருசலேமை, கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள் (எரே 3:17). சுவிசேஷ சபை "எருசலேம்" என்று அழைக்கப்படும்.

எருசலேமிலே இரண்டு காரியங்கள் விசேஷமாயிருக்கும். அவையாவன: 1. எருசலேம் தேவனுடைய விசேஷித்த வாசஸ்தலம். இங்கே கர்த்தருடைய ஆளுகை இருக்கிறது. 2. எருசலேமிலே புறஜாதியாரும் கூடிவந்து சேருவார்கள்.

எருசலேம் கர்த்தருடைய சிங்காசனம் என்று அழைக்கப்படும். இங்கு கர்த்தருடைய மகிமை விளங்கும். இங்கே அவருடைய ஆளுகை இருக்கும். இங்கே அவருடைய கிருபையும் வெளிப்படும். சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம், அதினிடமாகச் சேருவார்கள். கர்த்தருடைய சிங்காசனத்தின் ஆளுகையை சகல ஜாதியாரும் அங்கீகரிப்பார்கள்.

கர்த்தர் தம்முடைய சபையிலே, ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவார். சபையிலுள்ள விசுவாசிகள் இனி, தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடக்கமாட்டார்கள். தங்கள் சுயஇஷ்டத்திற்கும், விருப்பத்திற்கும், சித்தத்திற்கும் இடங்கொடுக்காமல், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாய் ஜீவிப்பார்கள். கர்த்தருடைய வார்த்தையே அவர்களுடைய ஜீவியத்தின் பிரமாணமாயிருக்கும்.

நம்முடைய இருதயத்தின் பொல்லாத இச்சைகளே நம்மை பாவத்திற்கு வழிநடத்துகிறது. நம்முடைய பொல்லாத இச்சைகளின்படி நடக்கும்போது, அது நமக்கு பாவமாகிறது. பாவத்தில் ஜீவிக்கிறவர்கள், தங்கள் மாம்சத்தின் இச்சைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். இவர்கள் ஆவிக்குரிய சந்தோஷத்தைவிட, உலகப்பிரகாரமான சந்தோஷத்தை அதிகமாய் விரும்புவார்கள். கர்த்தருடைய இரட்சிக்கும் கிருபை, நமக்குள் கிரியை செய்யும்போது, நம்முடைய பொல்லாத இருதயத்தின் இச்சைகள் நம்மைவிட்டு நீங்கிப்போகும். நம்முடைய சுயஇஷ்டத்தின் பிரகாரமாய் நாம் நடக்கமாட்டோம். கர்த்தருடைய சித்தம் நம்மை ஆளுகை செய்யும். நாம் கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகளாயும், பிரயோஜனமான பிள்ளைகளாயும் ஜீவிப்போம்.

கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள் அவரிடத்தில் திரும்பி வரும்போது, அவர்கள் மத்தியிலே மேலும் ஒரு ஆசீர்வாதம் உண்டாகும். யூதாவின் புத்திரரும், இஸ்ரவேல் புத்திரரும் ஒரே சரீரமாய் ஒன்றுசேருவார்கள். "அந்நாட்களிலே யூதா வம்சத்தார் இஸ்ரவேல் வம்சத்தாரோடே சேருவார்கள்" (எரே 3:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவர்கள் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் தேசத்திற்கு திரும்பி வரும்போது, தங்களை யூதர்கள் என்றும், இஸ்ரவேலர்கள் என்றும் வேறுபிரித்து பார்க்கமாட்டார்கள். அவர்கள் எல்லோரும் ஏகமாய் வடதேசத்திலிருந்து புறப்பட்டு வருவார்கள். வடதேசம் என்பது அவர்கள் சிறையிருப்பிலிருந்த பாபிலோன் தேசத்தைக் குறிக்கும். யூதா வம்சத்தாரும், இஸ்ரவேல் வம்சத்தாரும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, கானான் தேசத்திற்கு ஏகமாய்ப் புறப்பட்டு வருவார்கள். "நான் தங்கள் பிதாக்களுக்கு சுதந்தரமாகக் கொடுத்த தேசத்திற்கு வருவார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கானான் தேசத்திலே யூதர்களும், இஸ்ரவேலர்களும் ஒன்றாய்க்கூடி வந்து குடியேறுவார்கள். அவர்கள் எல்லோருமே ஏகஐக்கியத்திலிருப்பார்கள். இது புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபையில், இரட்சிக்கப்பட்ட யூதர்களும், புறஜாதியாரும், ஒன்றாய்க்கூடி வந்து, ஏகஐக்கியத்திலிருப்பதற்கு அடையாளமாயிருக்கிறது. அவர்களுக்கு இடையேயிருந்த பகை நீங்கும். அவர்கள் எல்லோரும் ஒரே மந்தையாயிருப்பார்கள். அவர்கள் ஒரே தொழுவத்திலுள்ள ஆடுகளாயிருப்பார்கள். அவர்கள் எல்லோருக்குமே ஒரே மேய்ப்பர் இருப்பார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, தம்முடைய விசுவாசிகள் எல்லோருக்கும் பிரதான மேய்ப்பராயிருப்பார்.

தம்மைவிட்டு விலகிப்போன ஜனங்கள், தம்மிடத்தில் திரும்பி வரும்போது, அவர்களுக்கு தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் கொடுப்பதாக கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். ஆனாலும் கர்த்தருடைய பிள்ளைகள், அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு சில இடையூறுகள் உள்ளன. "உனக்கு கொடுப்பது எப்படி" (எரே 3:19) என்று கர்த்தர் தம்முடைய பிள்ளைகளிடத்தில் கேட்கிறார். கர்த்தர் மிகுந்த தயக்கத்தோடு, தம்முடைய கிருபைகளையும் இரக்கங்களையும், தம்முடைய பிள்ளைகளுக்கு காண்பிப்பதுபோல இருக்கிறது.

"நான் உன்னைப் பிள்ளைகளின் வரிசையிலே வைத்து, ஜனக் கூட்டங்களுக்குள்ளே நல்ல சுதந்தரமாகிய தேசத்தை உனக்குக் கொடுப்பது எப்படியென்று சொன்னேன்" (எரே 3:19) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு, நம்மிடத்தில் ஒரு தகுதியும் இல்லை. கர்த்தருடைய கிருபையைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் மெய்யாகவே அபாத்திரராயிருக்கிறோம்.

கர்த்தருடைய கிருபைக்கு தகுதியற்றவர்களாயிருக்கிறோம். நம்மிடத்தில் துன்மார்க்கமும், அக்கிரமமும் இருக்கிறது. நம்மிடத்தில் நீதியில்லை. பரிசுத்தமும் இல்லை. நாம் பலவீனராயும், பிரயோஜனமற்றவர்களாயும் இருக்கிறோம். கர்த்தருடைய கிருபைகளைப் பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களாயிருக்கிறோம். கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணினவர்களாயும் இருக்கிறோம். கர்த்தர் நம்மை தம்முடைய பிள்ளைகளின் வரிசையில் வைப்பதற்கு, நமக்கு எந்தவித தகுதியுமில்லை.

ஆனாலும் கர்த்தர், தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், தம்மிடத்தில் திரும்பி வருகிறவர்களை, தம்முடைய பிள்ளைகளின் வரிசைகளிலே வைக்கிறார். நம்மை தம்முடைய பிள்ளைகளின் வரிசையிலே வைக்கும்போது, நமக்கு ஜனக்கூட்டங்களுக்குள்ளே நல்ல சுதந்தரமாகிய கானான் தேசத்தை கொடுக்கிறார். நல்ல சுதந்தரமாகிய தேசம் என்பது பரலோகத்திற்கு அடையாளமாயிருக்கிறது. அங்கே நமக்கு நித்திய சந்தோஷமுண்டாயிருக்கும்.

கர்த்தரைவிட்டு விலகிப்போகிறவர்கள், பரலோகத்தின் சந்தோஷத்தைவிட்டு விலகிப்போகிறார்கள். "அவருடைய வார்த்தையை விசுவாசியாமல், இச்சிக்கப்படத்தக்க தேசத்தை அசட்டை பண்ணினார்கள்" (சங் 106:24). கர்த்தருடைய பிரசன்னத்தை அசட்டைபண்ணுகிறவர்கள், பரலோகத்தை அசட்டைபண்ணுகிறார்கள். பரலோகத்தின் நித்திய சந்தோஷத்தை அசட்டை பண்ணுகிறார்கள். நல்ல சுதந்தரமாகிய பரமகானானை அசட்டைபண்ணுகிறார்கள்.

தம்மைவிட்டு விலகிப்போன பிள்ளைகளிடம், "நல்ல சுதந்தரமாகிய தேசத்தை உனக்குக் கொடுப்பது எப்படி" என்று கர்த்தர் கேட்கிறார். இந்தக் கேள்விக்கு கர்த்தர் தாமே பதிலும் கொடுக்கிறார். "ஆனாலும் நீ என்னை நோக்கி, என் பிதாவே என்று அழைப்பாய்" (எரே 3:19) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு தகுதியில்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் அபாத்திரராயிருக்கிறார்கள். இந்த தடைகளையெல்லாம் எப்படி நீக்குவது என்றும், கர்த்தருடைய கிருபையை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்றும், கர்த்தர் தாமே தம்முடைய பிள்ளைகளுக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறவர்கள், கர்த்தரை நோக்கி, "அப்பா பிதாவே" என்று அன்போடு அழைக்கவேண்டும். "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" (கலா 4:6).

கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள், மறுபடியுமாய் கர்த்தரிடத்தில் திரும்பி வந்து, அவரை "என் பிதாவே" என்று அன்போடு அழைக்கவேண்டும். கர்த்தர் நமக்கு புத்திரசுவீகாரத்தின் ஆவியைக் கொடுத்திருக்கிறார். நாம் கர்த்தரை, நம்முடைய பரம தகப்பனாக அங்கீகரித்து, அவரை நோக்கி, "அப்பா பிதாவே" என்று கூப்பிடும்போது, அவர் நமக்கு புத்திர சுவீகாரத்தைக் கொடுக்கிறார். தம்முடைய ஆசீர்வாதங்களுக்கு நம்மை பங்குள்ளவர்களாக்குகிறார். நல்ல சுதந்தரமாகிய தேசத்தை நாமும் சுதந்தரிப்பதற்கு, நமக்கு கிருபைகளைக் கொடுக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள், அவரை, "என் பிதாவே" என்று அழைக்கும்போது, கர்த்தர் அவர்களைப் பார்த்து, "நீ என்னை விட்டு விலகுவதில்லை" *(எரே 3:19)* என்று திரும்பவும் சொல்லுகிறார். கர்த்தர் நம்முடைய இருதயங்களில், தமக்கு பயப்படும் பயத்தைக் கொடுக்கிறார். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். நம்முடைய இருதயத்தில், கர்த்தருக்குப் பயப்படும் பரிசுத்தமான பயம் இருக்கும்போது, நாம் கர்த்தரைவிட்டு விலகிப்போகமாட்டோம். கர்த்தருடைய சமுகத்தில் முடிவு வரையிலும் நிலைத்திருப்போம்.

இதோ, உம்மிடத்தில் வருகிறோம் எரே 3:20-25

எரே 3:20. ஒரு மனைவி தன் புருஷனுக்குத் துரோகம் செய்வதுபோல, இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள் எனக்குத் துரோகம்செய்தது மெய் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 3:21. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வழியை மாறுபாடாக்கி, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்ததினிமித்தம் அழுதுகொண்டு விண்ணப்பஞ்செய்யும் சத்தம் உயர்ந்த ஸ்தானங்களிலே கேட்கப்படும்.

எரே 3:22. சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்; உங்கள் சீர்கேடுகளைக் குணமாக்குவேன் என்றார். இதோ, உம்மிடத்தில் வருகிறோம்; நீரே எங்கள் தேவனாகிய கர்த்தர்.

எரே 3:23. குன்றுகளையும், திரளான மலைகளையும் நம்புகிறது விருதா என்பது மெய்; இஸ்ரவேலின் இரட்சிப்பு எங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் இருப்பது என்பது மெய்யே.

எரே 3:24. இந்த இலச்சையானது எங்கள் சிறுவயதுமுதல் எங்கள் பிதாக்களுடைய பிரயாசத்தையும், அவர்கள் ஆடுகளையும் மாடுகளையும், அவர்கள் குமாரரையும் குமாரத்திகளையும் பட்சித்துப்போட்டது.

எரே 3:25. எங்கள் இலச்சையிலே கிடக்கிறோம்; எங்கள் அவமானம் எங்களை மூடியிருக்கிறது; நாங்களும், எங்கள் பிதாக்களும் எங்கள் சிறுவயது முதல் இந்நாள்வரைக்கும் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; எங்கள் தேவனாகிய கர்த்தருடைய சொல்லைக் கேளாமலும்போனோம்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் வழியை மாறுபாடாக்கி, கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோய்விடுகிறார்கள். அவர்கள் தேவனோடு விவாக உடன்படிக்கையில் இணைந்தார்கள். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்து, கர்த்தரோடு தாங்கள் ஏற்படுத்திக்கொண்ட விவாக உடன்படிக்கையை முறித்துப்போடுகிறார்கள். கர்த்தரைவிட்டுப் பிரிந்து சீர்கெட்டுப்போகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார். "ஒரு மனைவி தன் புருஷனுக்குத் துரோகம் செய்வதுபோல, இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள் எனக்குத் துரோகம்செய்தது மெய் என்று கர்த்தர் சொல்லுகிறார்" *(எரே 3:20)*.

கர்த்தர் தங்கள்மீது சொல்லுகிற குற்றச்சாட்டுக்களை இஸ்ரவேல் ஜனத்தாரில் சிலர் ஒத்துக்கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்காக வருத்தப்பட்டு, கர்த்தருடைய சமுகத்தில் பாவஅறிக்கை பண்ணுகிறார்கள். அப்போது அவர்கள் விண்ணப்பம் செய்யும் சத்தம் உயர்ந்த ஸ்தானங்களில் கேட்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் வழியை மாறுபாடாக்கி, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். இந்தப் பாவத்தினிமித்தம் அவர்கள் கர்த்தரிடத்தில் அழுதுகொண்டு விண்ணப்பம் செய்கிறார்கள். கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துகிறார்கள். ஒருவர் நேரான வழியில் நடக்கும்போது, பாவம் அவருடைய வழியை மாறுபாடாக்கிவிடும். இது வரையிலும் நேரான பாதையில் சென்றவர்கள், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தால், அவர்கள் தாறுமாறான பாதையில் செல்லுவார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தரை மறப்பதே எல்லா பாவங்களுக்கும் மூலகாரணம். நம்முடைய வழிகளில் நாம் கர்த்தரை நினைப்போமென்றால், நம்முடைய வழி எப்போதுமே நேராகயிருக்கும். அது ஒருபோதும் மாறுபாடாகாது.

கர்த்தருடைய பிள்ளைகள் சீர்கெட்டுப்போய்விட்டார்கள். அவர்கள் தம்மிடமாய்த் திரும்பி வரவேண்டுமென்று, கர்த்தர் அவர்களை அழைக்கிறார். அவர்கள் சீர்கெட்டுப்போனாலும், இன்னும் கர்த்தருடைய பிள்ளைகளாகவே இருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களை அழைக்கும்போது, "சீர் கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்" (எரே 3:22) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளிடம் இன்னும் அன்பாகவே இருக்கிறார். அவர்கள்மீது கரிசனையுடன் இருக்கிறார். அவர்கள் மாறுபாடான வழிகளில் நடந்தாலும், துன்மார்க்கமான பாவங்களை செய்தாலும், தம்மைவிட்டு தூரமாய் விலகிப்போய் சீர்கெட்டுப்போனாலும், கர்த்தர் அவர்கள்மீது இன்னும் அன்பாகவும், கிருபையாகவும் இருக்கிறார். தம்முடைய இரக்கத்தையும், கிருபையையும் அவர்களுக்கு காண்பிக்க விரும்புகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்கு விரோதமாய் துணிகரமான பாவங்களை செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களை கண்டித்து திருத்துகிறார். அவர்களை அடித்தாலும், கர்த்தர் ஒருபோதும் அவர்களை தம்மைவிட்டு புறம்பே தள்ளிவிடுவதில்லை. அவர்கள் இன்னும் கர்த்தருடைய பிள்ளைகளாகவே இருப்பார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகள்மீது அன்பாயிருப்பதுபோல, கர்த்தரும் தம்முடைய பிள்ளைகள்மீது அன்பாயிருக்கிறார். அவர்களுக்கு ஆதரவாயும், கரிசனையாயும் இருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களை உணருகிறார்கள். தங்களுடைய வழி மாறுபாடானதை நினைத்து வேதனைப்படுகிறார்கள். தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்ததினிமித்தம் அழுது புலம்புகிறார்கள். அவர்கள் அழுதுகொண்டு விண்ணப்பம் செய்யும் சத்தம் கர்த்தருடைய செவிகளில் கேட்கிறது. கர்த்தர் அவர்களிடத்தில், "சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்" என்று அன்போடு சொல்லுகிறார்.

தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி வேதனைப்படுகிறவர்களை கர்த்தர் தம்மிடத்தில் அழைக்கிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, வருத்தப்பட்டு பாரம் சுமக்கிற எல்லோரையும் தம்மிடத்தில் வருமாறு அழைக்கிறார். இவ்விரண்டு அழைப்புக்களும் ஒன்றுபோலுள்ளது.

தம்மைவிட்டுத் தூரமாய் விலகிப்போனவர்கள், தம்மிடத்தில் திரும்பி வரும்போது கர்த்தர் அவர்களுடைய சீர்கேடுகளை குணமாக்குவதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் மன்னிக்கும் கிருபையுள்ளவர். அவருடைய இரக்கம் பெரியது. அவருடைய கிருபை எப்போதும் புதிதாயிருக்கிறது. தேவனாகிய கர்த்தர், தம்முடைய மன்னிக்கும் இரக்கத்தினாலேயே, தம்மிடத்தில் திரும்புகிற பிள்ளைகளின் சீர்கேடுகளை குணமாக்கிறார்.

சீர்கெட்டுப்போன இஸ்ரவேல் புத்திரர் தங்கள் ஜீவியத்தில் ஆசீர்வாதமில்லாமல் வேதனையோடிருக்கிறார்கள். துன்பத்தையும், துயரத்தையும் அனுபவிக்கிறார்கள். கர்த்தர் அவர்களை தம்மிடத்தில் திரும்பி வருமாறு அழைக்கும்போது, அந்த அழைப்பை அவர்கள் உடனே ஏற்றுக்கொள்கிறார்கள். கர்த்தருடைய அழைப்பு வல்லமையுள்ளது. அது கிருபையும், ஜீவனுமுள்ளது. அவர் தம்முடைய பிள்ளைகளை அன்போடு அழைக்கிறார்.

நாம் உடைந்து போன சுவர்களுக்கு மத்தியில், நாம் பேசும்போது, உடைந்த சுவற்று பகுதியிலிருந்து எதிரொலி கேட்கும். அதுபோலவே கர்த்தர் "சீர் கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்" என்று அழைக்கும்போது, அவர்களும், "இதோ உம்மிடத்தில் வருகிறோம்" என்று எதிரொலிப்பதுபோல சொல்லுகிறார்கள். அவர்களுடைய இருதயம் உடைந்துபோயிருக்கிறது. "இதோ உம்மிடத்தில் வருகிறோம்" என்று தங்களுடைய உடைந்துபோன இருதயத்தின் ஆழத்திலிருந்து சொல்லுகிறார்கள்.

கர்த்தர் தங்களை அழைக்கும்போது, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிற இஸ்ரவேல் ஜனத்தார், சிறிதும் காலதாமதம்பண்ணாமல், கர்த்தருடைய அழைப்புக்கு உடனே கீழ்ப்படிகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏற்கெனவே கர்த்தரைவிட்டு விலகி பிரிந்து, சீர்கெட்டுப்போனவர்கள். ஆனால் இப்போதோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியத்தில் மறுபடியுமாய் இஸ்ரவேலின் பரிசுத்தரை தங்கள் தேவனாகிய கர்த்தராக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நன்றியுள்ள இருதயத்தோடு கர்த்தரிடத்திற்கு திரும்பி வருகிறார்கள். "நீரே எங்கள் தேவனாகிய கர்த்தர்" என்று பயபக்தியோடு சொல்லுகிறார்கள். நாம் கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோவதற்கு, நம்முடைய பாவங்களும், நம்முடைய மதியீனங்களுமே காரணமாயிருக்கும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, தங்களுக்கு கர்த்தருடைய சமுகத்திலிருந்து மாத்திரமே ஒத்தாசை வரும் என்பதை அங்கீகரிக்கிறார்கள். அவர்கள் இதுவரையிலும் குன்றுகளையும், திரளான மலைகளையும் நம்பினார்கள். "அவற்றை நம்புகிறது விருதா என்பது மெய்" (எரே 3:23) என்று கர்த்தருடைய சமுகத்தில் பயபக்தியோடு சொல்லுகிறார்கள். அவர்கள் இதுவரையிலும் உயரமான சகல மலையின்மேலும், பச்சையான சகல மரத்தின் கீழும் போய் அங்கே வேசித்தனம்பண்ணினார்கள் (எரே 3:6). ஆனால் இப்போதோ, மலைகளின் மேலும், மரத்தின் கீழும் தங்களுக்கு பங்குமில்லை, பாத்தியமுமில்லை என்று அங்கீகரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரை நம்பி அவருடைய சமுகத்திற்கு வருகிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தரே தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நம்பி அவரிடத்தில் வருகிறார்கள். "இஸ்ரவேலின் இரட்சிப்பு எங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் இருப்பது என்பது மெய்யே" (எரே 3:23) என்று பயபக்தியோடு சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு கர்த்தருடைய சமுகத்தில் வருவது, புதிய ஏற்பாட்டுக்காலத்தில் பாவிகள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடம் வருவதற்கு ஒப்பாயிருக்கிறது. இரட்சிப்பு கர்த்தருடையது. அவருடைய இரட்சிப்பு மிகவும் பெரியது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய சுயஇரத்தத்தையே, நம்மை மீட்கும் கிரயமாகச் செலுத்தி, நமக்கு மகாபெரிய இரட்சிப்பைக் கொடுத்திருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டுத் தூரமாய் விலகிப்போய், சீர்கெட்டுப் போயிருந்தார்கள். தங்கள் வேதனைகளுக்கும், துன்பங்களுக்கும், பாடுகளுக்கும், தங்களுடைய பாவங்களே காரணம் என்பதை இப்போது அங்கீகரிக்கிறார்கள். தங்களுடைய பாவங்களினிமித்தமாய் தங்களுக்கு நீதியான தண்டனை கிடைத்திருப்பதையும் ஒத்துக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோய், விக்கிரகங்களை ஆராதனை செய்ததினால் அவர்களுக்கு ஏராளமான உபவத்திரவங்கள் உண்டாயிற்று.

"இந்த இலச்சையானது எங்கள் சிறுவயதுமுதல் எங்கள் பிதாக்களுடைய பிரயாசத்தையும், அவர்கள் ஆடுகளையும் மாடுகளையும், அவர்கள் குமாரரையும் குமாரத்திகளையும் பட்சித்துப்போட்டது" (எரே 3:24).

இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகாராதனையை இலச்சை என்றும், அவமானம் என்றும் சொல்லுகிறார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனை, அவர்களுடைய பிதாக்களின் பிரயாசத்தைப் பட்சித்துப்போட்டது.

இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது தங்கள் பாவங்களிலிருந்து உண்மையாய் மனந்திரும்பியிருக்கிறார்கள். உண்மையாய் மனந்திரும்புகிறவர்கள் பாவத்தை இலச்சை என்று சொல்லக் கற்றுக்கொள்வார்கள். அவர்கள் மனந்திரும்பவில்லையென்றால் தங்கள் பாவங்களை அவர்கள் இன்பம் என்றும், சந்தோஷம் என்றும் சொல்லுவார்கள். பாவம் ஒருபோதும் மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்காது. அவமானத்தையே கொடுக்கும்.

உண்மையாய் மனந்திரும்புகிறவர்கள் தங்களுடைய பாவங்களை மரணம் என்றும், அழிவு என்றும் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரின் முற்பிதாக்கள், தங்கள் பிள்ளைகளுக்கு ஏராளமான நன்மைகளை சேமித்து வைத்திருந்தார்கள். அவர்கள் பிரயாசப்பட்டு அநேக சம்பத்துக்களை இவர்களுக்காக பின்வைத்துப்போனார்கள். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரின் விக்கிரகாராதனை, அவர்களுடைய பிதாக்கள் அவர்களுக்கு பின்வைத்துப்போன எல்லா நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் பட்சித்துப்போட்டது. அவர்கள் ஆடுகளையும், மாடுகளையும் அவர்கள் குமாரரையும், குமாரத்திகளையும் பட்சித்துப்போட்டது.

இஸ்ரவேல் ஜனத்தாரின் விக்கிரகாராதனை அவர்களுடைய ஐசுவரியங்களை அழித்துப்போட்டது. கர்த்தரை நம்பியபோது இஸ்ரவேல் ஜனத்தார் செழித்திருந்தார்கள். கர்த்தரை நம்பாமல் விக்கிரகங்களை நம்பியபோதோ அவர்கள் ஒன்றுமில்லாமல் இருக்கிறார்கள். தங்கள் இலச்சையில் கிடக்கிறார்கள். அவர்களுடைய அவமானம் அவர்களை மூடியிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பிதாக்களின் பிரயாசங்களாக ஆடுகளையும், மாடுகளையும் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் குமாரரையும் குமாரத்திகளையும் பற்றிச் சொல்லுகிறார்கள். ஆனாலும் இவர்களுடைய பாவங்களினிமித்தமாயும், மதியீனத்தினிமித்தமாயும், இவர்களுடைய பிதாக்கள் இவர்களுக்காக பிரயாசப்பட்டு சேமித்து வைத்திருந்த ஆடுகளும், மாடுகளும், குமாரரும், குமாரத்திகளும் இவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கவில்லை. அவர்களுடைய விக்கிரகாராதனை இவை எல்லாவற்றையும் பட்சித்துப்போட்டது.

தங்கள் பிதாக்கள் கொடுத்த ஆடுகளையும் மாடுகளையும் இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகங்களுக்கு பலியிட்டார்கள். ஆனால் இவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை. விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக, இன்னோம் புத்திரரின் பள்ளத்தாக்கிலே, மோளேகுக்கு, தங்கள் குமாரரையும் குமாரத்திகளையும் பலியிட்டார்கள். அதனாலும் அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை. அவர்களுடைய விக்கிரகாராதனை எல்லாவற்றையும் பட்சித்துப்போட்டது.

இப்போது அவர்கள் இலச்சையில் கிடக்கிறார்கள். தங்களுடைய இழப்புகளை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்களுடைய அவமானம் அவர்களை மூடியிருக்கிறது. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு தண்டனை கிடைத்திருக்கிறது. தங்கள் பாவங்களைப்பற்றி நினைக்கும்போது, அவர்களுடைய குற்றவுணர்வுகளும், வேதனைகளும் அவர்களை வருத்தப்படுத்துகிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் சந்ததி சந்ததியாக பாவம் செய்கிறார்கள். "நாங்களும், எங்கள் பிதாக்களும் எங்கள் சிறுவயது முதல் இந்நாள்வரைக்கும் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; எங்கள் தேவனாகிய கர்த்தருடைய சொல்லைக் கேளாமலும்போனோம்" (எரே 3:25) என்று சொல்லுகிறார்கள். இவர்கள் தங்கள் சிறுவயதுமுதல் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். தங்கள் பாவத்தைவிட்டு விலகி வராமல், தங்கள் பாவங்களில் தொடர்ந்து ஜீவித்து வந்திருக்கிறார்கள். இந்நாள் வரைக்கும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்து வருகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை இவர்கள் மத்தியில் பலமுறை அனுப்பினார். அவர்களும் இவர்கள் மத்தியில் வந்து "மனந்திரும்புங்கள்" என்றும், "பாவங்களைவிட்டு விலகி வாருங்கள்" என்றும் உபதேசம்பண்ணினார்கள். இவையெல்லாம் கர்த்தருடைய வார்த்தைகள். ஆனால் இவர்களோ கர்த்தருடைய சொல்லைக் கேட்கவில்லை. அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து மனந்திரும்பவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தாரின் பாவங்களை கர்த்தரும் அங்கீரிக்கிறார். "இஸ்ரவேல் வம்சத்தாராகிய நீங்கள் எனக்கு துரோகம் செய்தது மெய்" (எரே 3:20) என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் வம்சத்தார் என்பது யாக்கோபின் பத்துக்கோத்திரத்தாரைக் குறிக்கும். சிறையிருப்பிலிருந்த இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்களா அல்லது தங்கள் சொந்த தேசத்தில் தங்கியிருந்த இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்களா என்பது தெரியவில்லை. ஆனாலும் அவர்கள் தங்கள் பாவங்களை அங்கீகரித்து, தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்புகிறார்கள். தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்ததினிமித்தம், கர்த்தருக்கு முன்பாக அதுகொண்டு விண்ணப்பம் செய்கிறார்கள். "இதோ உம்மிடத்தில் வருகிறோம், நீரே எங்கள் தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லுகிறார்கள்.

வடக்கு இஸ்ரவேல் தேசத்தார் மனந்திரும்புவதைப் பார்த்து, தெற்கு யூதா தேசத்தாரும் மனந்திரும்பவேண்டும். தங்கள் பாவங்களைவிட்டு விலகி கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். அவர்களுடைய உள்ளங்களில் பரிசுத்தமான பக்தி வைராக்கியம் உண்டாக வேண்டும். எரேமியா தீர்க்கதரிசி இதை மனதில் கொண்டு, வடக்கு இஸ்ரவேல் தேசத்தாருக்கும், தெற்கு யூதாதேசத்தாருக்கும் கர்த்தருடைய செய்தியை பயபக்தியோடு சொல்லுகிறார்.

4 அதிகாரம்

இந்த அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்கள், இதற்கு முந்திய அதிகாரத்தோடு சேர்க்கப்பட்டிருந்தால் சிறப்பாகயிருந்திருக்கும். எரேமியா மூன்றாவது அதிகாரத்தில் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாருக்கு சொல்லப்பட்டிருக்கிற வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களும், வடக்கு இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தாருக்கு சொல்லப்பட்டிருக்கிறது (எரே 4:1,2).

இந்த அதிகாரத்தின் மீதமுள்ள எல்லா வசனங்களும் யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. யூதாவின் மனுஷர் மனந்திரும்பவேண்டும் (எரே 4:3,4). நேபுகாத்நேச்சாரும் அவனுடைய சேனையும், யூதாவுக்கு விரோதமாயும், எருசலேமுக்கு விரோதமாயும் முன்னேறி வருகிறார்கள் (எரே 4:5-18).

யூதா மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் நேபுகாத்நேச்சார் மூலமாய் மிகப்பெரிய தீங்கு உண்டாகும். அதை நினைத்து எரேமியா தீர்க்கதரிசி அழுதுபுலம்புகிறார் (எரே 4:19-31).

இஸ்ரவேலே
எரே 4:1,2

எரே 4:1. இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார்; நீ உன் அருவருப்புகளை என் பார்வையினின்று அகற்றிவிட்டால், நீ இனி அலைந்து திரிவதில்லை.

எரே 4:2. நீ உண்மையோடும், நியாயத்தோடும், நீதியோடும், கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு ஆணையிடுவாய்; புறஜாதிகளும் அவருக்குள் ஆசீர்வதிக்கப்பட்டு, அவருக்குள் மேன்மைபாராட்டுவார்கள்.

கர்த்தர் வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரைப் பார்த்து, "சீர்கெட்ட பிள்ளைகளே, திரும்புங்கள்" (எரே 3:22) என்று சொன்னார். இஸ்ரவேல் ஜனத்தாரும், கர்த்தருடைய அழைப்புக்கு, உடனடியாக கீழ்ப்படிகிறார்கள். "இதோ உம்மிடத்தில் வருகிறோம், நீரே எங்கள் தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் தம்மிடத்தில் சொன்ன வார்த்தைகளை கர்த்தர் நினைவுகூருகிறார்.

"இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு" என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 4:1). இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில், "இதோ உம்மிடத்தில் வருகிறோம்" என்று சொன்னார்கள். அவர்கள் தம்மிடத்தில் வரவேண்டுமென்று விரும்பினால், அவர்களே அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். கர்த்தரிடத்தில் திரும்புவதற்கு அவர்களிடத்தில் மனதிருக்கவேண்டும். "இதோ உம்மிடத்தில் வருகிறோம்" என்னும் வாக்கியத்திற்கு, "இதோ, இஸ்ரவேலின் தேவனாகிய உம்மை ஆராதிக்க வருகிறோம், உம்முடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிகிறோம், உம்மை ஆராதிக்கிற ஆராதனை முறைமைகளை கைக்கொள்கிறோம்" என்பது பொருளாகும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டுமென்றால், அவர்கள் தங்களுடைய எல்லா பாவங்களையும் விட்டு விலகி வரவேண்டும். தங்களுடைய பழைய விக்கிரகாராதனை பழக்க வழக்கங்களுக்கு அவர்கள் மறுபடியுமாய்த் திரும்பிப்போய்விடக்கூடாது. அவர்களிடத்தில் விக்கிரகாராதனையின் நிழல்கள்கூட காணப்படக்கூடாது. "நீ உன் அருவருப்புகளை என் பார்வையினின்று அகற்றிவிடு" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் விக்கிரகாராதனை பழக்க வழக்கங்கள் இலச்சையாகவும், வெட்கமாகவும் இருக்கிறது. அதே வேளையில் அவை கர்த்தருடைய பார்வையில் அருவருப்பாகவும் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் விக்கிரகாராதனையின் அருவருப்புக்களை கர்த்தருடைய பார்வையினின்று அகற்றிவிடவேண்டும். கர்த்தர் அசுத்தத்தை நோக்கிப் பார்க்காத சுத்த கண்ணர். கர்த்தர் தம்முடைய மகிமையுள்ள சுத்த கண்களால் விக்கிரகாராதனையை, பார்க்கும்போது, அது அவருக்கு அருவருப்பாயிருக்கும்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் திரும்பி வந்த பின்பு, அவர்கள் மறுபடியுமாய் விக்கிரகாராதனைக்கு திரும்பிப்போய்விடக் கூடாது. மறுபடியும் பாவத்தில் விழுந்துவிடக்கூடாது. அவர்கள் கர்த்தரிடத்தில் வந்த பின்பு, மறுபடியும் அலைந்து திரியக்கூடாது. கர்த்தரை மாத்திரம் பற்றிக்கொள்ளவேண்டும். அவர்கள் தங்களுடைய விக்கிரகாராதனையின் அருவருப்புக்களை, தம்முடைய பார்வையினின்று அகற்றிவிட்டால், அவர்கள் இனி அலைந்து திரிவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையையும், கனத்தையும் செலுத்தவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுவார்கள். கர்த்தர் ஜீவனோடிருக்கிறார் என்னும் சத்தியம் இஸ்ரவேல் ஜனத்தாருடைய இருதயத்தில் பதிந்திருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடும்போது, பயபக்தியோடு ஆணையிடவேண்டும். உண்மையோடும், நியாயத்தோடும், நீதியோடும் ஆணையிட வேண்டும். கர்த்தரைப்பற்றிய நினைவு அவர்களுக்கு பரிசுத்தமாயிருக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரைப் பார்த்து, "இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால், என்னிடத்தில் திரும்பு" என்று சொல்லுகிறார். அவர்கள் தங்களுடைய தீர்மானத்தில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். வடக்கு இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருவார்கள். தங்களுக்கு ஏற்கெனவே வாக்குப்பண்ணப்பட்டிருந்த கானான் தேசத்தில், அவர்கள் மறுபடியும் வந்து குடியேறுவார்கள்.

"அப்பொழுது அங்கேயிருந்து உன் தேவனாகிய கர்த்தரைத் தேடுவாய்; உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரைக் கண்டடைவாய்" (உபா 4:29).

"உன் தேவனாகிய கர்த்தரிடத்துக்கே திரும்பி, இன்று நான் உனக்குக் கற்பிக்கிறபடியெல்லாம், நீயும் உன் பிள்ளைகளும் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தால், உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார்" (உபா 30:2,3).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்திற்கு திரும்பி வருவது, மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாயிருக்கும். இஸ்ரவேல் ஜனத்தார் ஏற்கெனவே கர்த்தரை அறிந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்திற்கு திரும்பி வரும்போது, கர்த்தரை அறியாத ஜனங்களும், அவரிடத்திற்கு திரும்பி வர உதவியாயிருக்கும்.

"அதினாலே பூமியிலே தன்னை ஆசிர்வதிக்கிறவன் சத்திய தேவனுக்குள் தன்னை ஆசீர்வதிப்பான்; பூமியிலே ஆணையிடுகிறவன் சத்திய தேவன் பேரில் ஆணையிடுவான்; முந்தின இடுக்கண்கள் மறக்கப்பட்டு, அவைகள் என் கண்களுக்கு மறைந்துபோயின" (ஏசா 65:16).

கர்த்தரிடத்திற்கு திரும்பி வருகிறவர்கள், சத்திய தேவனுக்குள் தங்களை ஆசீர்வதிப்பார்கள். அவர்கள் பொய்யான விக்கிரகங்களுக்குள் தங்களை ஆசீர்வதிப்பதில்லை. அவர்கள் கர்த்தருக்குள் மேன்மை பாராட்டுவார்கள். கர்த்தரே தங்களை மேன்மைப்படுத்துகிறவர் என்று சொல்லுவார்கள்.

யூதா மனுஷரே
எரே 4:3,4

எரே 4:3. யூதா மனுஷரோடும், எருசலேமியரோடும் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள், உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்.

எரே 4:4. யூதா மனுஷரே, எருசலேமின் குடிகளே, உங்கள் கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப்போல எழும்பி, அவிப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம் பண்ணி, உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள்.

எரேமியா தீர்க்கதரிசி இப்போது, தேவனுடைய நாமத்தினால் யூதா மனுஷரிடமும், எருசலேமின் குடிகளோடும் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். எரேமியா தீர்க்கதரிசியும் யூதேயா தேசத்தை சேர்ந்தவர். எரேமியா இதுவரையிலும் வடதிசையை நோக்கி கர்த்தருடைய வார்த்தையை கூறினார் (எரே 3:12). வடதிசையிலுள்ள இஸ்ரவேல் தேசத்தார் இப்போது அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். எரேமியா இதுவரையிலும் அவர்களுக்கு கர்த்தருடைய ஆறுதலான செய்தியை சொன்னார்.

வடக்கு இஸ்ரவேல் ஜனத்தார், அந்நிய தேசத்தில், சிறையிருப்பிலிருக்கும்போது, தெற்கு யூதா தேசத்தார் தங்கள் தேசத்தில் செழிப்போடிருக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் சிறையிருப்புக்குட்பட்டிருக்கிறார்கள். யூதாவின் மனுஷர் அவர்களுடைய சிறையிருப்பைப் பார்த்து பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். தங்களுடைய ஆவியில் அனலாயிருக்கவேண்டும். கர்த்தருக்குப் பிரியமானவர்களாயும், பிரயோஜனமானவர்களாயும் ஜீவிக்கவேண்டும்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்கு, கர்த்தருடைய வார்த்தையை சொல்லும்போது, அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப வேண்டுமென்றும், அவர்கள் தங்கள் ஆவியில் புதுப்பிக்கப்படவேண்டும் என்றும் சொல்லுகிறார். யூதாவின் மனுஷரும் பாவத்திலே ஜீவிக்கிறார்கள். இதனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு அருகாமையில் வந்திருக்கிறது. யூதாவின் மனுஷர், கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க வேண்டுமென்றால், தங்கள் பாவங்களை விட்டு விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

எரேமியா தீர்க்கதரிசி, யூதாவின் மனுஷரிடத்தில் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது, அவர்கள் இரண்டு காரியங்களை செய்யவேண்டுமென்று சொல்லுகிறார். அவையாவன : 1. அவர்கள் முள்ளுகளுக்குள்ளே விதைக்கக்கூடாது. தங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்த வேண்டும். 2. அவர்கள் கர்த்தருக்குகென்று தங்களை விருத்தசேதனம்பண்ணி, தங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடவேண்டும்.

நம்முடைய நிலம் நல்ல விளைச்சலைக் கொடுக்கவேண்டுமென்றால், தரிசு நிலத்தை பண்படுத்த வேண்டும். நிலத்தை நன்றாய் உழுது, மண்ணைப் பக்குவப்படுத்த வேண்டும். விதை விதைக்கும்போது, அந்த விதையை நல்ல நிலத்தில் விதைக்கவேண்டும். முள்ளுகளுக்குள்ளே விதைக்கக்கூடாது. நம்முடைய விதைகள் நல்ல விதைகளாகயிருந்தாலும், அதை முள்ளுகளுக்குள்ளே விதைத்தால், நமக்கு ஒரு பலனும் கிடைக்காது. நம்முடைய பிரயாசங்களெல்லாம் வீணாய்ப்போய்விடும்.

யூதாவின் ஜனத்தார் கர்த்தருடைய கிருபைகளையும், இரக்கங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றால் அவர்கள் தங்கள் இருதயத்தைப் பண்படுத்த வேண்டும். கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தடையாகயிருக்கக் கூடிய எல்லா பாவங்களையும் தங்களை விட்டு நீக்கிப்போடவேண்டும். தரிசு நிலத்தை பண்படுத்தினால்தான், அதில் விதைக்கப்படும் விதை நன்றாய் முளைக்கும். அதுபோலவே நம்முடைய இருதயமும், கர்த்தருடைய பிரமாணத்திற்கும், விருப்பத்திற்கும், சித்தத்திற்கும், திட்டத்திற்கும் கீழ்ப்படிந்திருந்தால்தான், கர்த்தருடைய ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கும்.

நிலத்திலே கிடைக்கும் நல்ல அறுவடை நமக்கு பிரயோஜனமாயிருக்கும். கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுவடை செய்வார்கள். நமக்கு நல்ல அறுவடை கிடைக்கவேண்டுமென்றால், நாம் முள்ளுகளில் விதைக்கக்கூடாது. நம்முடைய தரிசு நிலத்தைப் பண்படுத்தவேண்டும். கர்த்தடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, நம்முடைய இருதயத்தைப் பரிசுத்தப்படுத்த வேண்டும்.

நம்முடைய இருதயம் பாவத்தைக் குறித்த உணர்வில்லாமலும், தாழ்மையில்லாமலும் இருக்குமானால், அது தரிசு நிலத்தைப் போன்றதாகவே இருக்கிறது. இது உழப்படாத நிலத்தைப் போலவும், முள்ளுகள் நிரம்பிய நிலத்தைப் போலவும் இருக்கிறது. இந்த நிலத்தை பக்குவப்படுத்த முடியும். அதுபோலவே நம்முடைய இருதயத்தையும் பரிசுத்தப்படுத்த முடியும்.

நம்முடைய நிலம் பண்படுத்தப்பட்ட நிலமாயிருந்தாலும், அதை பாதுகாப்பதற்கு சுற்றிலும் வேலியடைக்கவேண்டும். நிலத்தை சரியாக பராமரிக்கவில்லையென்றால் அதிலே முட்களும், களைகளும் திரளாய் வளரும். நாம் விதைத்த விதை சரியாய் வளராது. நம்முடைய செடிகள் போதுமான அளவு கனிதராது. முட்களும் களைகளும் இயற்கையாகவே வளரக்கூடியவை.

அதுபோலவே, நம்முடைய இருதயமும், இயல்பாகவே திருக்குள்ளதும், கேடுள்ளதுமாயிருக்கிறது. இருதயத்தில் பாவசுபாவம் நிரம்பியிருக்கிறது. இது மனுஷருடைய ஜென்ம சுபாவம். தேவனுடைய கிருபையினால், நம்முடைய இருதயத்தில் காணப்படுகிற பாவசுபாவங்களை நீக்கி, இருதயத்தைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். பண்படுத்தப்படாத நிலத்தில் எவ்வளவுதான் மழை பெய்தாலும், எவ்வளவுதான் சூரிய வெளிச்சம் பட்டாலும், விளைச்சல் இருக்காது. அதுபோலவே, நம்முடைய இருதயம் திருக்குள்ளதாகவும், கேடுள்ளதாகவும் இருக்குமென்றால், நமக்கு ஆசீர்வாதமும் இருக்காது.

"எப்படியெனில், தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும் முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு" (எபி 6:7,8).

நாம் எவ்வளவுதான் விதைகளை விதைத்தாலும், தரிசு நிலத்தைப் பண்படுத்துவதற்கு அதிக கவனம் செலுத்தவேண்டும். நிலத்தில் காணப்படுகிற முட்செடிகளை வேரோடு பிடுங்கி அழிக்கவேண்டும். இல்லையென்றால், முட்செடிகள் வளர்ந்து பெருகி, நம்முடைய பயிர்களையெல்லாம் அழித்துப்போடும். நம்முடைய இருதயங்களை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். கர்த்தருக்கு விரோதமான பாவங்கள் நம்மிடத்தில் காணப்படும்போது, அவற்றை வேரோடு பிடுங்கி அகற்றிப்போடவேண்டும்.

கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, நம்முடைய இருதயங்களை சுத்திகரிப்பதுபோல, நம்முடைய சரீரங்களையும் சுத்திகரிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டுக்காலத்தில், யூதமார்க்கத்தைச் சேர்ந்த புருஷர்கள் எல்லோரும் விருத்தசேதனம் செய்து, கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணிக் கொண்டார்கள். அவர்கள் கர்த்தருக்கென்று தங்களை விருத்தசேதனம் பண்ணிக் கொண்டார்கள். கர்த்தரோ அவர்களுடைய இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடவேண்டுமென்று புதிய கட்டளையைக் கொடுக்கிறார். இந்த வாக்கியத்திற்கு, அவர்கள் தங்கள் மாம்சத்தையும், மாம்சத்தின் இச்சைகளையும் நீக்கிப்போடவேண்டும் என்று பொருள்.

யூதர்கள் தங்கள் சரீரத்தில் விருத்தசேதனம்பண்ணிக் கொள்வதை பெருமையாகச் சொல்லுகிறார்கள். இது ஒரு அடையாளம் மாத்திரமே. விருத்தசேதனத்தின் உண்மையான பொருளை புரிந்துகொள்ளாமல், சரீரப்பிரகாரமாக விருத்தசேதனம் பண்ணுவதினால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது. விருத்தசேதனம் என்பது, கர்த்தருக்கு நம்மை அர்ப்பணிப்பதற்கான அடையாளம்.

யூதர்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளும்போது, அதன் உண்மையான அர்த்தத்தை உணர்ந்து, விருத்தசேதனம்பண்ணிக்கொள்ளவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருக்கு தங்களை பரிசுத்தமாய் ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தருக்குள் தங்களை சுத்திகரித்துக்கொள்ளவேண்டும். அவர்களுடைய இருதயம் கேடில்லாமல் பரிசுத்தமாயிருக்கவேண்டும்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்களுடைய இருதயம் புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் கர்த்தருடைய உக்கிரம் அக்கினியைப்போல எழும்பும். அது அவிப்பாரில்லாமல் எரியும். கர்த்தருடைய கோபம் நமக்கு விரோதமாய் வரும்போது அதை நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. நம்முடைய கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தமாகவே, கர்த்தருடைய உக்கிரம் நமக்கு விரோதமாக வருகிறது. நம்முடைய பாவங்களும் அக்கிரமங்களும், கர்த்தருடைய கோபத்தை அதிகரிக்கச் செய்கிறது. கர்த்தருடைய கோபத்திலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்றால், கர்த்தருடைய மகிமைக்கென்று நம்மை பரிசுத்தம் பண்ணிக்கொள்ளவேண்டும். நாம் தேவனுடைய கிருபையினால் சுத்திகரிக்கப்படவேண்டும்.

தேசத்தில் எக்காளம் ஊதுங்கள் எரே 4:5-18

எரே 4:5. தேசத்தில் எக்காளம் ஊதுங்கள் என்று சொல்லி, யூதாவில் அறிவித்து, எருசலேமில் கேட்கப்பண்ணுங்கள்; நாம் அரணான பட்டணங்களுக்கு உட்படும்படிக்குச் சேருங்கள் என்று சொல்லி, உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள்.

எரே 4:6. சீயோனுக்கு நேரே கொடியேற்றுங்கள்; கூடுங்கள், நிற்காதிருங்கள்; நான் வடக்கேயிருந்து பொல்லாப்பையும், மகாசங்காரத்தையும் வரப்பண்ணுகிறேன்.

எரே 4:7. உன் தேசத்தைப் பாழாக்கி விடும்படிக்குச் சிங்கம் தன் புதரிலிருந்து எழும்பி, ஜாதிகளைச் சங்கரிக்கிறவன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறான்; உன் பட்டணங்கள் குடியிராதபடி அழிக்கப்படும் என்கிறார்.

எரே 4:8. இதினிமித்தம் இரட்டைக் கட்டிக் கொள்ளுங்கள்; புலம்பி அலறுங்கள்; கர்த்தருடைய உக்கிரகோபம் நம்மைவிட்டுத் திரும்பவில்லையே.

எரே 4:9. அந்நாளிலே ராஜாவின் இருதயமும், பிரபுக்களின் இருதயமும் மடிந்துபோம்; ஆசாரியர்கள் திடுக்கிட்டு, தீர்க்கதரிசிகள் திகைப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 4:10. அப்பொழுது நான்: ஆ! கர்த்தராகிய ஆண்டவரே, உங்களுக்குச் சமாதானமிருக்கும் என்று சொன்னதினால், மெய்யாகவே இந்த ஜனத்துக்கும் எருசலேமுக்கும் மிகுதியான மோசத்தை வரப்பண்ணினீர்; பட்டயம் பிராணன்மட்டும் எட்டுகிறதே என்றேன்.

எரே 4:11. வனாந்தரத்திலுள்ள உயர்நிலங்களிலிருந்து, ஒரு தீக்காற்று என் ஜனமாகிய குமாரத்திக்கு நேராக அடிக்கும் என்று அக்காலத்திலே இந்த ஜனத்தோடும் எருசலேமோடும் சொல்லப்படும்; அது தூற்றவுமாட்டாது சுத்திகரிக்கவுமாட்டாது.

எரே 4:12. இதைப்பார்க்கிலும் பலமான காற்று என் காரியமாய் வரும்; இப்பொழுது நானும் அவர்களோடே நியாயம் பேசுவேன்.

எரே 4:13. இதோ, மேகங்களைப்போல எழும்பி வருகிறான்; அவனுடைய இரதங்கள் பெருங்காற்றைப் போலிருக்கிறது; அவன் குதிரைகள் கழுகுகளிலும் வேகமானவைகள்; நமக்கு ஐயோ! நாம் பாழாக்கப்படுகிறோமே.

எரே 4:14. எருசலேமே, நீ இரட்சிக்கப்படும்படிக்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பறக் கழுவு; எந்தமட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும்.

எரே 4:15. தாணிலிருந்து ஒரு சத்தம் வந்து, செய்தியை அறிவிக்கிறது; எப்பிராயீமின் மலையிலிருந்து வந்து, தீங்கைப் பிரசித்தம் பண்ணுகிறது.

எரே 4:16. ஜாதிகளுக்கு அதை நீங்கள் பிரஸ்தாபம்பண்ணுங்கள்; இதோ, காவற்சேவகர் தூரதேசத்திலிருந்து வந்து, யூதாவுடைய பட்டணங்களுக்கு விரோதமாய் உரத்தசத்தமிடுவார்கள் என்று எருசலேமுக்குக் கூறுங்கள்.

எரே 4:17. அதற்கு விரோதமாய் அவர்கள் வயல்வெளிகளின் காவற்காரரைப்போலச் சுற்றிலுமிருப்பார்கள்; அது எனக்கு விரோதமாய்க் கலகஞ்செய்தது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 4:18. உன் நடக்கையும் உன் கிரியைகளுமே இவைகளை உனக்கு நேரிடப்பண்ணின; இது இத்தனை கசப்பாயிருந்து, உன் இருதயமட்டும் எட்டுகிறதற்குக் காரணம் உன் பொல்லாப்புத்தானே.

கர்த்தர் நம்மை தண்டிப்பதற்கு முன்பாக, நம்மை எச்சரிக்கிறார். இது தேவனுடைய பொதுவான திட்டம். அவர் நம்மை சிட்சிப்பதற்கு முன்பாக, நம்முடைய தப்பிதங்களை நமக்கு எச்சரித்துச் சொல்லுகிறார். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்து, துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தமும், பொல்லாத கிரியைகளினிமித்தமும் அந்நிய தேசத்தார் அவர்கள்மீது யுத்தம்பண்ண வருகிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி, இந்த எச்சரிப்பின் செய்தியை யூதாவின் எல்லா பட்டணங்களிலும் சொல்லவேண்டும். எருசலேமின் எல்லா தெருக்களிலும் அறிவிக்கவேண்டும். எல்லோரும் கேட்கும் வண்ணமாக பேசவேண்டும். எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைக் கேட்டு மனந்திரும்பவேண்டும் அல்லது தங்களுக்கு வரப்போகும் தண்டனைக்கு தாங்களே பொறுப்பேற்கவேண்டும்.

யூதா மனுஷருக்கு விரோதமாகவும், எருசலேமின் குடிகளுக்கு விரோதமாகவும் சத்துருக்கள் யுத்தம்பண்ண வருகிறார்கள். யுத்தம் பிரகடனம்பண்ணப்பட்டு விட்டது. ஜனங்களுக்கு யுத்தத்தைப்பற்றிய செய்தியும் அறிவிக்கப்பட்டுவிட்டது. கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் இப்போதும், ஒரு சில வருஷங்களுக்கு முன்பாகவும் யுத்த செய்தியை பிரகடனம்பண்ணியிருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளிடம் "தேசத்தில் எக்காளம் ஊதுங்கள் என்று சொல்லி, யூதாவில் அறிவித்து, எருசலேமில் கேட்கப்பண்ணுங்கள்; நாம் அரணான பட்டணங்களுக்கு உட்படும்படிக்குச் சேருங்கள் என்று சொல்லி, உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள்" (எரே 4:5) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் யூதா தேசத்தில் எக்காளம் ஊதவேண்டும். சீயோனுக்கு நேரே கொடியேற்றவேண்டும். யூதா தேசத்திலுள்ள எல்லா ஜனங்களும் அரணான பட்டணங்களுக்குட்படும்படிக்கு கூடிச்சேரவேண்டும். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் சீயோனுக்கு கூடிவரவேண்டும். அவர்கள் சீயோனைப் பாதுகாப்பதற்காகவோ அல்லது சீயோன் தங்களைப் பாதுகாக்கும் என்று எதிர்பார்த்தோ, சீயோனுக்கு கூடிவரவேண்டும்.

தேசத்தில் யுத்தத்தைப்பற்றிய செய்தி பிரகடனம் பண்ணப்படும்போது, யுத்தவீரர்கள் எல்லோருமே, யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கவேண்டும். யுத்தம் பண்ணுவதற்கு சரீரத்தில் பெலமுள்ளவர்கள் எல்லோரும் கூடிவரவேண்டும். ஒருவரும் சும்மா நிற்கக்கூடாது. அவர்கள் அரணான பட்டணங்களுக்குட்பட்டு, அவற்றை பாதுகாக்கவேண்டும்.

சரீரத்தில் பலவீனமாயிருக்கிறவர்கள், யுத்தம்பண்ண தெம்பில்லாதவர்கள் சும்மா நிற்கக்கூடாது. அவர்கள் ஓரமாய் ஒதுங்கி விலகிப்போய்விடவேண்டும். சோம்பேறிகள் சும்மா நிற்பதை பார்த்தால், மற்றவர்களுக்கும் சோம்பல்தனம் வந்துவிடும். சோம்பல்தனம் ஒரு வியாதியைப்போல பரவிவிடும். தேசத்தில் குஷ்டரோகிகளை பாளயத்திற்கு புறம்பே தள்ளுவதுபோல, சோம்பேறிகளையும், பயப்படுகிறவர்களையும் யுத்தகளத்திலிருந்து புறம்பே தள்ளிவிடவேண்டும்.

பாபிலோன் தேசத்து ராஜாவும், அவனுடைய சேனையும் யூதா தேசத்திற்கு விரோதமாய் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வருகையைப்பற்றிய செய்தி யூதாவின் மனுஷருக்கு அறிவிக்கப்படுகிறது.

எரேமியா தீர்க்கதரிசி பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரை விவரிக்கும்போது அவனுக்கு அநேக பட்டப்பெயர்களைக் கொடுக்கிறார். அவையாவன : 1. புதரிலிருந்து எழும்புகிற சிங்கம் 2. தீக்காற்று 3. மேகங்களும் பெருங்காற்றும் 4. காவற்காரர்.

பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தன் புதரிலிருந்து சிங்கம் எழும்புவதுபோல எழும்பி வருகிறான். அவன் யூதா தேசத்தை பாழாக்கிவிடும்படிக்கு புறப்பட்டுவருகிறான். சிங்கம் பசியாயிருந்து இரை தேட எழும்புவதுபோல, நேபுகாத்நேச்சாரும் யூதாவின் புத்திரரையும் எருசலேமின் குடிகளையும் பட்சித்துப்போட எழும்பி வருகிறான்.

சிங்கத்திற்கு முன்பாக சாதாரண மிருகங்களால் எதிர்த்து நிற்கமுடியாது. அவை சிங்கத்தைப் பார்த்து பயந்து நடுங்கும். சிங்கம் அந்த மிருகங்களை எளிதாக வேட்டையாடி தின்றுபோடும். நேபுகாத்நேச்சாரும் யூதாவின் புத்திரரை பட்சித்துப்போடும்படியாக கர்ஜனையோடு வருகிறான். அவன் ஜாதிகளை சங்கரிக்கிறவன். அவன் புறஜாதியாரை சங்கரிப்பதோடு, யூதர்களையும் சங்கரிக்க வருகிறான். யூதாவின் புத்திரர்கள் இப்போது கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். ஆகையினால் அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் வித்தியாமில்லாமல் போயிற்று.

நேபுகாத்நேச்சார் தன் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறான். பாபிலோன் தேசமே அவனுடைய ஸ்தானம். அவன் யூதா தேசத்தை பாழாக்கிவிடும்படிக்கு புறப்பட்டு வருகிறான். நேபுகாத்நேச்சார் யூதாவின் பட்டணங்களை குடியிராதபடி அழித்துப்போடுவான் (எரே 4:7). நிலத்திலே புல் உயரமாகவும் அதிகமாகவும் வளர்ந்திருப்பதுபோல, நேபுகாத்நேச்சாரும், அவனுடைய சேனையும் யூதாவின் பட்டணங்களை மூடிப்போடுவதற்கு வருகிறார்கள்.

நேபுகாத்நேச்சார் வனாந்தரத்திலுள்ள உவர்நிலங்களிலிருந்து அடிக்கிற தீக்காற்றைப்போல வருகிறான். தீக்காற்று பூமியிலுள்ள விருட்சங்களின் கனிகளையெல்லாம் பட்சித்துப்போடும். விருட்சங்களின் காய்கள் பிஞ்சாகயிருக்கும் போதே உலர்ந்து கீழே விழுந்துவிடும். நேபுகாத்நேச்சார் கொடூர குணமுடையவனாக, தீக்காற்றைப்போல புறப்பட்டு வருகிறான். தீக்காற்று மழையை பிறப்பிக்கும். "வடகாற்று மழையையும், புறங்கூறுகிற நாவு கோபமுகத்தையும் பிறப்பிக்கும்" *(நீதி 25:23).*

தீக்காற்று வனாந்தரத்திலுள்ள உயர்நிலங்களிலிருந்து அடிக்கும். இந்தக் காற்று செல்லும் இடங்களிலெல்லாம், அங்கே உள்ள பயிர் பச்சைகளையும், விருட்சங்களையும் பட்சித்துப்போடும். தீக்காற்று பர்வதங்களின்மேல் வேகமாக வீசும். அது வனாந்தரத்திலுள்ள உவர்நிலங்களிலிருந்து வேகமாய்ப் புறப்பட்டு வரும். தீக்காற்று சமபூமிக்கு வருவதற்கு முன்பாக, உயர்நிலங்களிலுள்ள சகலவற்றையும் அடித்துக்கொண்டு வரும்.

தீக்காற்றின் வேகம் மிகவும் அதிகமாயிருக்கும். அந்தக்காற்று முழுவேகத்தோடு யூதாவின் ஜனமாகிய குமாரத்திக்கு நேராக அடிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதாவின் குமாரத்திகள் இதுவரையிலும் மென்மையான சூழ்நிலையில் வளர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்மீது இதுவரையிலும் தீக்காற்று பட்டதில்லை. எருசலேமின் குமாரத்திகளுக்கு தீக்காற்றைப் பார்ப்பதும், அந்தக்காற்று தங்களுக்கு நேராக அடிப்பதும் புதிய அனுபவமாகவும், அதே வேளையில் அது அவர்களை பட்சிக்கும் அனுபவமாகவும் இருக்கும்.

வனாந்தரத்திலுள்ள உயர்நிலங்களிலிருந்து அடிக்கிற தீக்காற்று, தூற்றவும் மாட்டாது, சுத்திகரிக்கவும் மாட்டாது. அது பலமான காற்றாக இருக்கும். இந்தக் காற்று கர்த்தருடைய காரியமாய் வரும். கர்த்தருடைய சித்தத்தையும், விருப்பத்தையும், திட்டத்தையும் நிறைவேற்றுவதற்காக வரும். கர்த்தரே தீக்காற்றுக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். கர்த்தர் என்ன நோக்கத்திற்காக தீக்காற்றை அனுப்பியிருக்கிறாரோ, அந்த நோக்கம் நிச்சயமாய் நிறைவேறும். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடுவதில்லை. கர்த்தர் யூதாவின் புத்திரரோடு நியாயம் பேசுவார்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் மேகங்களைப்போல எழும்பி வருகிறான். கல்தேயருடைய சேனை பெருங்காற்றைப்போல புறப்பட்டு வரும். அவனுடைய குதிரைகள் கழுகளிலும் வேகமானவைகள். கழுகுகள் இரைகளின் மீது வேகமாக வந்து பாய்வதுபோல, கல்தேயரின் சேனையிலுள்ளவர்கள் யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் வேகமாய் வருவார்கள். கல்தேயரின் இரதங்கள் பெருங்காற்றைப்போல இருக்கும்.

நேபுகாத்நேச்சாரும், அவனுடைய சேனையும், எருசலேமுக்கு விரோதமாய், வயல்வெளிகளின் காவற்காரரைப்போல சுற்றிலும் இருப்பார்கள். தாணிலிருந்து ஒரு சத்தம் வந்து, செய்தியை அறிவிக்கிறது. கானான் தேசத்தின் வடக்கு எல்லைப்பகுதியில் தாண் பட்டணமுள்ளது. வடதிசையின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யூதா தேசத்திற்கு விரோதமாக வரும் செய்தி, முதன்முதலாக தாணுக்கு வந்து சேருகிறது. அவர்கள் அந்தச் செய்தியைப் பெற்றுக்கொண்டு, அதை எருசலேமுக்கு அறிவிக்கிறார்கள். அந்தச் செய்தி எப்பிராயீமின் மலையிலிருந்து வந்து தீங்கை பிரசித்தம் பண்ணுகிறது *(எரே 4:15).*

"ஜாதிகளுக்கு அதை நீங்கள் பிரஸ்தாபம்பண்ணுங்கள்" *(எரே 4:16)* என்று கர்த்தர் சொல்லுகிறார். நேபுகாத்நேச்சார் ராஜா யூதா தேசத்தின்மீது யுத்தம் பண்ண வருகிற செய்தியை, எருசலேம் நகரத்திலும் பிரஸ்தாபம்பண்ணவேண்டும்.

காவற்சேவகர் தூரதேசத்திலிருந்து வந்து யூதாவுடைய பட்டணங்களுக்கு விரோதமாய் உரத்த சத்தமிடுவார்கள். கல்தேயருடைய சேனைகள் காவற்சேவகர்போல இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் காவற்சேவகர்கள். இவர்கள் யூதா தேசத்தாருக்கு தீங்கு செய்ய எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறார்கள். இவர்கள் யூதா மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் அழிப்பதற்கான வாய்ப்புக்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கல்தேயரின் சேனைகள் முழுபலத்தோடு வருகிறார்கள். யூதாவுடைய பட்டணங்களுக்கு விரோதமாய் உரத்த சத்தமிடுகிறார்கள். வயல்வெளிகளின் காவற்காரர், தங்கள் வயல்வெளியை சுற்றிலுமிருப்பதுபோல, கல்தேயரின் சேனைகள், யூதாவின் பட்டணங்களை சுற்றிலுமிருக்கிறார்கள். பட்டணங்களுக்குள்ளே இருந்து ஒருவரும் வெளியே போகமுடியாதபடிக்கும், வெளியே இருந்து ஒருவரும் பட்டணங்களுக்குள்ளே போகமுடியாதபடிக்கும், கல்தேயருடைய சேனைகள் யூதாவின் பட்டணங்களை முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் நேபுகாத்நேச்சாருக்கு கீழ்ப்படியும் வரையிலும் அவர்கள் முற்றிக்கைப்போட்டிருப்பார்கள்.

"உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் உனக்கு வரும் என்றார்" (லூக் 19:43,44).

யூதா மனுஷர்மீதும் எருசலேமின் குடிகள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. அவர்கள் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாய் கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய உக்கிர கோபம் அவர்கள்மீது வந்திருக்கிறது. யூதா மனுஷருடைய வேதனைகளுக்கும், எருசலேமின் குடிகளுடைய பாடுகளுக்கும் அவர்களே காரணம். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் கலகம் செய்தார்கள் (எரே 4:17).

கல்தேயர்கள் யூதாவின் பட்டணங்கள்மீது யுத்தம் பண்ண வருகிறார்கள். அவர்கள் பட்டணங்களைச் சுற்றிலும் கொத்தளங்களை வெட்டி முற்றிக்கைப்போடுகிறார்கள். யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தமாய், யூதாவினுடைய பட்டணங்களின் அலங்கங்களில் திறப்புக்கள் காணப்படுகிறது. கல்தேயர்கள் அந்தத் திறப்புக்கள் வழியாக, யூதாவின் பட்டணங்களுக்குள் பிரவேசித்து, யூதாவின் மனுஷரை நாசம் பண்ணுகிறார்கள்.

யூதா மனுஷருடைய நடக்கையும், எருசலேமின் குடிகளுடைய கிரியைகளுமே இந்த தீங்குகளை அவர்களுக்கு நேரிடப்பண்ணிற்று (எரே 3:18). நம்முடைய எல்லா பிரச்சனைகளுக்கும், நம்முடைய பாவங்களே அடிப்படை காரணம். நம்மீது குற்றம் இருக்கும்போது, நாம் மற்றவர்கள்மீது குற்றம் சொல்லுவதினால் நமக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தமாயும் எருசலேமின் குடிகளுடைய அக்கிரமங்களினிமித்தமாயும் கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வந்திருக்கிறது. கர்த்தருடைய உக்கிர கோபத்தினால், கல்தேயருடைய சேனையும் உக்கிர கோபத்தோடு யூதாவின் பட்டணங்கள்மீது யுத்தம் பண்ண வருகிறார்கள்.

கர்த்தருடைய கோபம் நீதியானது. யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களுக்கு இந்த தண்டனையைக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய தண்டனை நியாயமானது. "இப்பொழுது நானும் அவர்களோடே நியாயம் பேசுவேன்" (எரே 4:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு யூதா மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் வந்திருக்கிறது. இதனால் அவர்களுக்கு பயங்கரமான விளைவுகள் உண்டாயிற்று. தங்கள்மீது யுத்தம் பண்ண வருகிற சத்துருக்கள்மீது, யூதாவின் மனுஷரும் யுத்தம் பண்ணவேண்டும். யுத்தத்திற்கு தங்களை ஆயத்தம் பண்ணவேண்டும். ஆனால் அவர்களோ சோர்ந்துபோயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் பதறுகிறது. அவர்களால் சத்துருக்களுக்கு விரோதமாய் எதிர்த்து நிற்கமுடியவில்லை.

"இது நிமித்தம் இரட்டைக் கட்டிக்கொள்ளுங்கள், புலம்பி அலறுங்கள் (எரே 4:8) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் பார்த்து சொல்லுகிறார். அவர்கள் இடுப்பில் பட்டயங்களை கட்டிக்கொள்வதற்குப் பதிலாக இரட்டைக் கட்டிக்கொள்ளவேண்டும்.

அவர்களுடைய சத்துருக்கள் இன்னும் அவர்களுடைய பட்டணங்களுக்குள் பிரவேசிக்கவில்லை. அவர்கள் யூதாவின் பட்டணங்களைவிட்டு சற்று தூரத்திலிருக்கிறார்கள். சத்துருக்கள் தூரமாயிருக்கும்போதே, யூதாவின் மனுஷர் புலம்பி அலறவேண்டும். "நமக்கு ஐயோ, நாம் பாழாக்கப்படுகிறோமே" (எரே 4:13) என்று கர்த்தரிடத்தில் அழுது புலம்பவேண்டும்.

யூதாவிலும் எருசலேமிலும் ஏராளமான பராக்கிரமசாலிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்தில் பாவம் இருப்பதினால் அவர்களுடைய பராக்கிரமம் அவர்களைவிட்டு நீங்கிப்போயிற்று. அவர்களிடத்தில் தைரியமுமில்லை, தெம்புமில்லை, நம்பிக்கையுமில்லை. கர்த்தர் தங்களுக்கு உதவிசெய்வார் என்னும் நம்பிக்கையும் அவர்களிடத்தில் இல்லாமற்போயிற்று.

நம்முடைய பாவம் நம்மை கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போகச் செய்துவிடும். யூதாவின் பராக்கிரமசாலிகள் பாவிகளாகயிருக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தரிடமிருந்து அநுகூலம் உண்டாகவில்லை. ஆகையினால் பராக்கிரமசாலிகளாகயிருந்தவர்கள் இப்போது, சத்துருக்களைப் பார்த்து பயப்படுகிறார்கள். கர்த்தருக்குப் பயப்படாதவர்கள் மனுஷருக்குப் பயப்படுவார்கள்.

"அந்நாளிலே ராஜாவின் இருதயமும் பிரபுக்களின் இருதயமும் மடிந்துபோம்" (எரே 4:9) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களுடைய ஞானமும் அவர்களுடைய தைரியமும் அவர்களை விட்டு நீங்கிப்போகும். அவர்களுடைய பிரபுக்களும், அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறவர்களும் பயத்திலே நடுங்கிக்கொண்டிருப்பார்கள். ராஜாவின் இருதயம் மடிந்துபோவதுபோல, ராஜாவுக்கு ஆலோசனை சொல்லவேண்டியவர்களின் இருதயமும் மடிந்துபோகும்.

தேசத்திலே துக்கமும், வேதனையும், உபத்திரவமும் வரும்போது, ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் ஜனங்களை உற்சாகப்படுத்த வேண்டும். "பயப்படாதிருங்கள்" என்றும், "உங்கள் இருதயம் சோர்ந்துபோகாமலிருப்பதாக" என்றும் சொல்லி அவர்கள் ஜனங்களுக்கு தைரியம் சொல்லவேண்டும்.

"நீங்கள் யுத்தஞ்செய்யத் தொடங்கும்போது, ஆசாரியன் சேர்ந்துவந்து, ஜனங்களிடத்தில் பேசி: இஸ்ரவேலரே, கேளுங்கள்; இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தஞ்செய்யப் போகிறீர்கள்; உங்கள் இருதயம் துவளவேண்டாம்; நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் கலங்கவும் தத்தளிக்கவும் வேண்டாம்" (உபா 20:2,3).

ஆனால் இப்போதோ ஆசாரியர்கள் திடுக்கிட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் தைரியமில்லை. பயந்து நடுங்குகிறார்கள். அவர்களால் ஜனங்களுக்கு தைரியமான வார்த்தைகளைச் சொல்ல முடியவில்லை. எருசலேம் அழியும்போது மனுஷருடைய இருதயம் பயத்தினால் சோர்ந்து போகும் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

"வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்" (லூக் 21:26).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரை நம்பி ஏமாந்து போய்விட்டார்கள் என்றும், கர்த்தரும் தம்முடைய ஜனத்தை வஞ்சித்துவிட்டார் என்றும் பொருள்படுமாறு எரேமியா இங்கு தன்னுடைய வார்த்தைகளைச் சொல்லுவதுபோல இருக்கிறது.

"அப்பொழுது நான்: ஆ! கர்த்தராகிய ஆண்டவரே, உங்களுக்குச் சமாதானமிருக்கும் என்று சொன்னதினால், மெய்யாகவே இந்த ஜனத்துக்கும் எருசலேமுக்கும் மிகுதியான மோசத்தை வரப்பண்ணினீர்; பட்டயம் பிராணன்மட்டும் எட்டுகிறதே என்றேன்" (எரே 4:10) என்று எரேமியா சொல்லுகிறார்.

எரேமியாவின் வார்த்தைகள் புதுமையாயும், விநோதமாயும் இருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஜனங்களிடத்தில், "உங்களுக்கு சமாதானம் இருக்கும்" என்று சொன்னார். ஆனால் கர்த்தர் அவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்காமல், மிகுதியான மோசத்தை வரப்பண்ணினார் என்று எரேமியா சொல்லுகிறார். பட்டயம் பிராணன் மட்டும் எட்டுகிறது என்றும் எரேமியா வேதனையோடு சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களை வஞ்சித்துவிட்டதுபோல எரேமியா பேசுகிறார். ஆனால் கர்த்தர் ஒருவரையும் வஞ்சிக்கிறவரல்ல. ஜனங்கள்தான் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளும் பொய்களைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களைக் கொடுக்கிறார். ஜனங்களும் ஆசீர்வாதங்களையும், தங்களுக்கு நன்மை செய்யும் வாக்குத்தத்தங்களையும் நம்புகிறார்கள். ஆனாலும் கர்த்தர் இந்த வாக்குத்தத்தங்களோடு, ஒரு சில நிபந்தனைகளையும் சொல்லுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள், கர்த்தர் சொல்லுகிற நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிந்தால், கர்த்தர் சொல்லியிருக்கிற ஆசீர்வாதங்களும், வாக்குத்தத்தங்களும் அவர்களுக்கு சித்திக்கும். இல்லையென்றால் சித்திக்காது.

கர்த்தருடைய பிள்ளைகளோ, கர்த்தர் சொன்ன ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் மாத்திரமே நம்புகிறார்கள். அதே வேளையில் அவர்கள் கர்த்தர் சொல்லியிருக்கிற நிபந்தனைகளுக்கு செவிகொடுப்பதுமில்லை, அவற்றிற்கு கீழ்ப்படிவதுமில்லை. இதனால் கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தம் அவர்களுக்கு நிறைவேறுவதில்லை.

அவர்கள் கர்த்தர் சொன்ன வார்த்தையின் ஒரு பகுதியை மாத்திரம் நம்பி, மற்றொரு பகுதிக்கு கவனம் செலுத்தாமல் போனபடியினாலே, அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்கிறார்கள். ஆகையினால்தான், கர்த்தர், "உங்களுக்கு சமாதானம் இருக்கும்" என்று சொல்லியும், அவர்களுக்கு சமாதானம் உண்டாகவில்லை. அவர்களுக்கு மிகுதியான மோசம் உண்டாயிற்று. ஜனங்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். ஆனால் கர்த்தர் தங்களை வஞ்சித்துவிட்டார் என்றும், தங்களை ஏமாற்றிவிட்டார் என்றும் கர்த்தர்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்வதுபோல, கள்ளத்தீர்க்கதரிசிகளும் அவர்களை வஞ்சிக்கிறார்கள். அவர்களுக்கு பொய்யான தீர்க்கதரிசனங்களைச் சொல்லுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு சொல்லாத வார்த்தைகளை, கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு சொல்லுகிறார்கள். அதையும் கர்த்தருடைய நாமத்தினால் சொல்லுகிறார்கள். ஜனங்களுக்கு சமாதானம் இருக்கும் என்று கர்த்தர் சொல்லவில்லை. ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளோ, ஜனங்களுக்கு சமாதானம் இருக்குமென்று கர்த்தர் சொன்னதாக பொய் சொல்லுகிறார்கள். இந்த வாக்குத்தத்தத்தை கர்த்தர் சொல்லவில்லை. ஆகையினால் இது அவர்களுக்கு நிறைவேறவில்லை.

"அவர்கள் என்னை அசட்டை பண்ணுகிறவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானம் இருக்குமென்று கர்த்தர் சொன்னாரென்று சொல்லுகிறதுமல்லாமல்; தங்கள் இருதயத்தின் கடினத்திலே நடக்கிற யாவரையும் நோக்கி: உங்கள்மேல் பொல்லாப்பு வராதென்றும் சொல்லுகிறார்கள்" *(எரே 23:17)*.

"பாபிலோன் ராஜாவை நீங்கள் சேவிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிற உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும், உங்கள் குறிகாரருக்கும், உங்கள் சொப்பனக்காரருக்கும், உங்கள் நாட்பார்க்கிறவர்களுக்கும், உங்கள் சூனியக்காரருக்கும் நீங்கள் செவிகொடாதிருங்கள்" *(எரே 27:9)*.

யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் வஞ்சிப்பதற்கு கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளை அனுமதிக்கிறார். கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். ஜனங்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளால் வஞ்சிக்கப்படுகிறார்கள். ஜனங்களுக்கு சத்தியத்தின்மீது பிரியமில்லை. அவர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ளவுமில்லை. ஆகையினால் கர்த்தர் அவர்களை கள்ளத்தீர்க்கதரிசிகளின் கபட வார்த்தைகளுக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

எரேமியா இங்கு சொல்லுகிற வாக்கியங்களை, "கர்த்தர் மெய்யாகவே தம்முடைய ஜனங்களை வஞ்சிப்பாரோ"? என்று ஒரு கேள்விக்குறியோடு போட்டு வாசிக்கவேண்டும். ஜனங்கள் சமாதானத்தை எதிர்பார்த்தார்கள். ஆனால் மெய்யாகவே இந்த ஜனத்திற்கும் எருசலேமுக்கும் மிகுதியான மோசம் வந்தது (எரே 4:10). ஜனங்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மெய். கர்த்தர் அவர்களை வஞ்சிக்கவில்லை என்பதும் மெய்.

யார் இவர்களை வஞ்சித்தார்கள் என்னும் சத்தியத்தை நாம் தியானித்துப் பார்க்கவேண்டும். கர்த்தர் தம்முடைய ஜனங்களை ஒருபோதும் வஞ்சிப்பதில்லை. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு வரும் என்று கர்த்தர் பல சமயங்களில் அவர்களுக்கு எச்சரித்துச் சொன்னார். பாவம் செய்கிறவர்களுக்கு சமாதானமில்லை என்பதை கர்த்தர் பல சமயங்களில் அவர்களுக்கு தெளிவுபடுத்தியிருக்கிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகளோ யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் வஞ்சித்துவிடுகிறார்கள். ஜனங்கள் பாவம் செய்தாலும், கர்த்தர் அவர்களுக்கு சமாதானத்தைக் கொடுப்பார் என்று பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு சமாதானம் இருக்கும் என்று பரலோகத்தின் தேவன் சொல்லவில்லை. ஆனால் அவர்களுக்கு சமாதானம் இருக்கும் என்று பூமியிலுள்ள கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் பரலோகத்தின் தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுப்பதற்கு பதிலாக, பூமியிலுள்ள கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைக்கு செவிகொடுக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையில் கண்டிப்பும் கோபமும் இருக்கிறது. இது ஜனங்களுக்கு பிடிக்கவில்லை. கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய வார்த்தையிலோ ஆறுதலும் சமாதானமும் இருக்கிறது. இது ஜனங்களுக்கு அதிகமாய்ப் பிடித்திருக்கிறது. ஆகையினால் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல், கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைக்கு செவிகொடுக்கிறார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள். தங்களுக்குத் தாங்களே அழிவை வரவழைத்துக்கொள்கிறார்கள். வாசற்படியில் யுத்தம் காத்துக் கொண்டிருக்கும்போது, வீட்டிற்குள்ளே சமாதானம் இருக்கும் என்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக்கொள்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். கர்த்தர் அவர்களை வஞ்சிக்கவுமில்லை. ஏமாற்றவுமில்லை. கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். யூதாவின் மனுஷருடைய அழிவுக்கும் எருசலேமின் குடிகளுடைய வேதனைகளுக்கும் அவர்களுடைய பாவங்களே காரணம் என்பதை எரேமியா தீர்க்கதரிசி இங்கு தெளிவுபடுத்துகிறார்.

யூதா மனுஷருடைய நடக்கையும், எருசலேமின் குடிகளுடைய கிரியைகளும் பாவம் நிரம்பியதாகவும், அக்கிரமம் மிகுந்ததாகவும் இருக்கிறது. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களுடைய பாவமான நடக்கையினிமித்தமாகவும், அக்கிரமமான கிரியைகளினிமித்தமாகவும் கர்த்தர் இந்தத் தீங்குகளை அவர்களுக்கு நேரிடப்பண்ணினார். கர்த்தர் அவர்களை அடித்ததினால் அவர்களுக்கு காயமுண்டாயிற்று. அவர்கள் காயத்தின் வேதனைகளில் மாத்திரம் கவனம் செலுத்தாமல், இந்த காயத்திற்கான காரணத்தையும் கண்டுபிடிக்கவேண்டும். அவர்களுடைய பாவங்களும், அவர்களுடைய அக்கிரமங்களுமே அவர்களுடைய காயத்திற்கு காரணம் என்பதை அவர்கள் கண்டுகொள்ள வேண்டும்.

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் ஏற்பட்டிருக்கிற காயங்களும், வேதனைகளும் மிகவும் கசப்பாயிருக்கிறது. அது அவர்களுடைய இருதயம் மட்டும் எட்டியிருக்கிறது. இவையெல்லாவற்றிற்கும் அவர்களுடைய பொல்லாப்பே காரணம். கர்த்தருடைய பிள்ளைகள் பாவம் செய்ததினால், அவர்களுடைய இருதயம் கசப்பாயிருக்கிறது. பட்டயம் பிராணன் மட்டும் எட்டுகிறது (எரே 4:10).

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் தங்களுடைய பாவங்களினிமித்தமாயும், அக்கிரமங்களினிமித்தமாயும் காயம்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயமும், பிராணனும் சேதமடைந்திருக்கிறது. இந்தக் காயத்திலிருந்து எப்படி குணமடைவது என்று எரேமியா தீர்க்கதரிசி ஆலோசனை சொல்லுகிறார். "எருசலேமே, நீ இரட்சிக்கப்படும்படிக்கு உன் இருதயத்தை பொல்லாப்பற கழுவு" (எரே 4:14) என்று எரேமியா சொல்லுகிறார்.

"எருசலேமே" என்னும் வாக்கியம் எருசலேமிலுள்ள ஒவ்வொரு குடிமகனையும் குறிப்பிடுகிற பொதுவான வார்த்தை. கர்த்தர் ஒவ்வொரு மனுஷனுக்கும் தனித்தனியாக இருதயத்தைக் கொடுத்திருக்கிறார். தனித்தனியாக ஆத்துமாவைக் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு மனுஷனும் தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்ப வேண்டும். ஒருவருடைய பாவத்திற்காக வேறொருவர் மனந்திரும்ப முடியாது. எருசலேமிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் மனந்திரும்பும்போது, எருசலேம் நகரமே பரிசுத்தமாகும்.

ஒவ்வொரு மனுஷனும் தன்னுடைய பொல்லாத வழியிலிருந்து திரும்பி வரவேண்டும். ஒவ்வொருவனும் தன்னுடைய பொல்லாத இருதயத்தைக் கழுவவேண்டும். நம்முடைய ஆத்தும இரட்சிப்புக்கு நம்முடைய இருதயம் சுத்திகரிக்கப்படுவதும், நம்முடைய சிந்தை புதுப்பிக்கப்படுவதும் அவசியமாயிருக்கிறது. நம்முடைய இருதயம் சுத்திகரிக்கப்படாமல், அது புதுப்பிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை. நம்முடைய சிந்தை புதுப்பிக்கப்படாமல், நம்முடைய ஆத்துமா புதுப்பிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை.

கர்த்தர் எருசலேமின் குடிகளைப் பார்த்து, "எந்த மட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்திலே தங்கும்" (எரே 4:14) என்று கேட்கிறார். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசுகிறது. இருதயத்தில் அக்கிரமமான நினைவுகள் நிரம்பியிருக்கும்போது, அவர்களுடைய வார்த்தைகளும், கிரியைகளும் அக்கிரமமாகவே இருக்கும்.

"எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்" (மத் 15:19).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தங்கள் உள்ளத்திலே அக்கிரம நினைவுகள் உள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களை கடிந்துகொள்கிறார். ஆனால் கர்த்தர் தங்களைத் தண்டிக்கமாட்டார் என்று, அவர்களுடைய அக்கிரம நினைவுகள் அவர்களுக்கு வஞ்சனையாய்ப் போதிக்கிறது. தாங்கள் பாவம் செய்தாலும் கர்த்தர் தங்கள்மீது அன்பாயிருப்பார் என்றும், தங்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் தங்களை கண்டிக்கமாட்டார் என்றும் அவர்களுடைய அக்கிரம நினைவுகள் அவர்களுக்கு போதித்து, அவர்களை வஞ்சித்துவிடுகிறது.

என் உள்ளம் வேதனைப்படுகிறது
எரே 4:19-31

எரே 4:19. என் குடல்கள், என் குடல்களே நோகிறது, என் உள்ளம் வேதனைப்படுகிறது; என் இருதயம் என்னில் கதறுகிறது; நான் பேசாமல் அமர்ந்திருக்கக் கூடாது; என் ஆத்துமாவே, எக்காளத்தின் சத்தத்தையும், யுத்தத்தின் ஆர்ப்பரிப்பையும் கேட்டாயே.

எரே 4:20. நாசத்துக்குமேல் நாசம் வருகிறதாகக் கூறப்படுகிறது; தேசமெல்லாம் பாழாகிறது; அசுப்பிலே என் கூடாரங்களும், ஒரு நிமிஷத்திலே என் திரைகளும் பாழாக்கப்படுகிறது.

எரே 4:21. நான் எதுவரைக்கும் கொடியைக் கண்டு, எக்காளத்தின் சத்தத்தைக் கேட்பேன்.

எரே 4:22. என் ஜனங்களோ மதியற்றவர்கள், என்னை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்; அவர்கள் பைத்தியமுள்ள பிள்ளைகள், அவர்களுக்கு உணர்வே இல்லை; பொல்லாப்புச்செய்ய அவர்கள் அறிவாளிகள், நன்மை செய்யவோ அவர்கள் அறிவில்லாதவர்கள்.

எரே 4:23. பூமியைப் பார்த்தேன், அது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது; வானங்களைப் பார்த்தேன், அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது.

எரே 4:24. பர்வதங்களைப் பார்த்தேன், அவைகள் அதிர்ந்தன; எல்லாக் குன்றுகளும் அசைந்தன.

எரே 4:25. பின்னும் நான் பார்க்கும்போது, மனுஷனில்லை; ஆகாசத்துப் பறவைகளெல்லாம் பறந்துபோயின.

எரே 4:26. பின்னும் நான் பார்க்கும்போது, கர்த்தராலும், அவருடைய உக்கிரகோபத்தாலும் பயிர்நிலம் வனாந்தரமாயிற்று; அதன் பட்டணங்களெல்லாம் இடிந்து போயின.

எரே 4:27. தேசமெல்லாம் பாழாய்ப்போம்; ஆகிலும் சர்வசங்காரம் செய்யேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 4:28. இதினிமித்தம் பூமி புலம்பும், உயர இருக்கிற வானங்கள் கறுத்துப்போம்; நான் அதைச் சொன்னேன், அதை நிர்ணயம் பண்ணினேன்; நான் மனஸ்தாபப்படுவதும் இல்லை; நான் அதைவிட்டுத் திரும்புவதும் இல்லை.

எரே 4:29. குதிரைவீரரும் வில்வீரரும் இடும் சத்தத்தினாலே சகல ஊராரும் ஓடி, அடர்த்தியான காடுகளில் புகுந்து, கன்மலைகளிலும் ஏறுவார்கள்; ஒரு மனுஷனும் அவைகளிலே குடியிராதபடி எல்லா ஊர்களும் விடப்பட்டிருக்கும்.

எரே 4:30. பாழாய்ப்போன நீ இப்பொழுது என்ன செய்வாய்? நீ இரத்தாம்பரம் உடுத்தாலும், பொன்னாபரணங்களால் உன்னைச் சிங்காரித்தாலும், உன் கண்களில் மையிட்டுக்கொண்டாலும், வீணாய் உன்னை அழகுபடுத்துவாய்; சோரநாயகர் உன்னை அசட்டைபண்ணி, உன் பிராணனை வாங்கத் தேடுவார்கள்.

எரே 4:31. கர்ப்ப வேதனைப்படுகிறவளின் சத்தமாகவும், முதல்விசை பிள்ளை பெறுகிறவளின் வியாகுலமாகவும், சீயோன் குமாரத்தியின் சத்தத்தைக் கேட்கிறேன்; அவள் பெருமூச்சுவிட்டு, தன் கைகளை விரித்து: ஐயோ! கொலைபாதகர்களாலே என் ஆத்துமா சோர்ந்துபோகிறதே என்கிறாள்.

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் வரப்போகும் அழிவை நினைத்து எரேமியா தீர்க்கதரிசி மிகுந்த வேதனைப்படுகிறார். அவருடைய உள்ளம் வேதனைப்படுவதினால், அவருடைய இருதயம் கதறுகிறது. எரேமியா இங்கு சொல்லுகிற வார்த்தைகள் எல்லாமே அவருடைய அழுகையின் வார்த்தைகளாகவும், புலம்பலின் வார்த்தைகளாகவும் இருக்கிறது.

"என் குடல்கள், என் குடல்களே நோகிறது" *(எரே 4:19)* என்று எரேமியா சொல்லுகிறார். "என் உள்ளம் வேதனைப்படுகிறது, என் இருதயம் என்னில் கதறுகிறது" என்றும் எரேமியா அழுது புலம்புகிறார். எரேமியா பரிசுத்தமானவர். மிகவும் நல்லவர். ஆனாலும் அவர் ஜீவிக்கிற இந்த உலகம் மிகவும் மோசமாயிருக்கிறது. மனுஷர் நல்லவர்களாகயிருந்தாலும், உலகம் கெட்டுப்போயிருக்கும்போது, நல்லவர்கள்கூட சந்தோஷமாயிருக்க முடியவில்லை. அவர்கள் வருத்தத்தோடிருக்கிறார்கள். எரேமியாவும் வருத்தமுள்ள மனுஷனாயிருக்கிறார்.

"என் இருதயம் என்னில் கதறுகிறது" என்று எரேமியா சொல்லுகிறார். அவருடைய உள்ளம் வேதனைப்படுகிறது. அவருடைய ஆவி அவருக்குள் பொங்குகிறது. அவரால் பேசாமல் அமர்ந்திருக்க முடியவில்லை. எரேமியாவுக்கோ அல்லது அவருடைய குடும்பத்திலுள்ளவர்களுக்கோ எந்த வேதனையும், நஷ்டமும், துன்பமும் உண்டாகவில்லை. ஆனாலும் அவருடைய உள்ளம் வேதனைப்படுகிறது. இந்த வேதனை அவருக்காக உண்டாகவில்லை. யூதாமனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும் உண்டாகிறது. எரேமியா கர்த்தருடைய பிள்ளைகளின் பாவங்களையும், அக்கிரமங்களையும் நினைத்தும், அவர்களுக்கு வரப்போகும் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளை நினைத்தும் வேதனைப்படுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாவிகளாகயிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் மனந்திரும்பவில்லை. அவர்களுடைய இருதயம் சுத்திகரிக்கப்படவில்லை. அவை புதுப்பிக்கப்படவில்லை. "என் ஜனங்களோ மதியற்றவர்கள்" என்றும், "என்னை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்" (எரே 4:22) என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் யூதாவின் ஜனங்களையும், எருசலேமின் குடிகளையும், "என் ஜனங்கள்" என்றே சொல்லுகிறார். "அவர்கள் பைத்தியமுள்ள பிள்ளைகள்" என்றும், "அவர்களுக்கு உணர்வே இல்லை" என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் பைத்தியமுள்ள பிள்ளைகளாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை தம்முடைய ஜனங்களாக அங்கீகரிக்கிறார்.

யூதாவின் புத்திரரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரை தள்ளிவிட்டாலும், கர்த்தர் அவர்களை தள்ளிவிடவில்லை. "இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன், தள்ளிவிடவில்லையே" (ரோம 11:1).

கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரை அறியாதிருக்கிறார்கள். அவர்கள் அறிவில்லாத பைத்தியமுள்ள பிள்ளைகளாயிருக்கிறார்கள். அவர்கள் பொல்லாப்பை செய்ய அறிவாளிகள். ஏராளமான பாவங்களையும், துன்மார்க்கமான காரியங்களையும் நன்றாய் யோசித்து ஞானமாய்ச் செய்கிறார்கள். மனுஷருக்கு விரோதமாயும், தங்கள் தேசத்திற்கு விரோதமாயும், கர்த்தருக்கு விரோதமாயும் துணிகரமாய் பொல்லாப்பு செய்கிறார்கள். அதையும் அறிவோடும், ஞானத்தோடும் செய்கிறார்கள். தங்கள் பாவங்களை மூடி மறைப்பதிலும், தங்கள் பாவங்களை மறைத்து தங்களை பக்தியுள்ளவர்கள்போல காண்பிப்பதிலும் அவர்கள் அறிவுள்ளவர்கள். ஆனால் நன்மை செய்யவோ அவர்கள் அறிவில்லாதவர்கள். அவர்கள் சிந்தித்து ஒரு நன்மையும் செய்யமாட்டார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் மிகுந்த வேதனையிலிருக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி அவர்களுடைய வேதனைகளைப் பார்த்து அழுது புலம்புகிறார். அவருடைய உள்ளம் வேதனைப்படுகிறது. அவரால் பேசாமல் அமர்ந்திருக்க முடியவில்லை. அவருடைய இருதயம் அவருக்குள் கதறுகிறது. "என் ஆத்துமாவே, எக்காளத்தின் சத்தத்தையும் யுத்தத்தின் ஆர்ப்பரிப்பையும் கேட்டாயே" (எரே 4:19) என்றும், "நான் எதுவரைக்கும் கொடியைக் கண்டு, எக்காளத்தின் சத்தத்தைக் கேட்பேன்" (எரே 4:21) என்றும் எரேமியாவின் இருதயம் அவருக்குள் கதறுகிறது.

எரேமியா தனக்குத்தானே பேசும்போது, "என் ஆத்துமாவே" என்று சொல்லுகிறார். அவர் "என் செவிகளே" என்று தன்னுடைய செவிகளிடத்தில் பேசவில்லை. "என் ஆத்துமாவே... கேட்டாயே" என்றே சொல்லுகிறார். எரேமியா தீர்க்கதரிசனத்தின் ஆவியினால் பேசுகிறார். யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் வரப்போகிற அழிவைக் காண்கிறார். அவருடைய ஆத்துமா ஜனங்களுக்கு வரப்போகும் அழிவின் சத்தத்தைக் கேட்கிறது. அவர் தன்னுடைய சரீரப்பிரகாரமான செவிகளால் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்பதுபோல, தன்னுடைய ஆத்துமாவினால் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கிறார்.

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் வரப்போகிற அழிவை கர்த்தர் எரேமியாவுக்கு முன்னறிவிக்கிறார். ஆனாலும் வரப்போகிற அந்த நாளை எரேமியாவால் சமாதானமாய் பார்க்கமுடியவில்லை. அவருடைய இருதயத்தால் அதைப் பார்த்து கதறாமல் அமைதியாயிருக்க முடியவில்லை. அவரால் கர்த்தருடைய வார்த்தையை பேசாமல் அமந்திருக்கவும் முடியவில்லை.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளுமோ, தங்களுக்கு வரப்போகும் ஆபத்தை நினைத்து அக்கரையில்லாதவர்களாகவும், கரிசனையில்லாதவர்களாகவும், பயமில்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்குள் பரிசுத்தமான பயம் உண்டாகவேண்டும். தங்களுடைய பாவத்தின் நிமித்தமாக கர்த்தர் தங்கள்மீது கோபமாயிருக்கிறார் என்பதை அவர்கள் உணரவேண்டும். அவர்களுடைய பாவத்தினால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு வருகிறது என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்புக்கு தப்பித்துக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு உண்மையாய் மனந்திரும்ப வேண்டும்.

யூதா மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் வரப்போகிற அழிவைப்பற்றி எரேமியா தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். அந்த அழிவு வேகமாகவும் வரும், சடுதியாகவும் வரும். "நாசத்திற்குமேல் நாசம் வருகிறதாக கூறப்படுகிறது" (எரே 4:20) என்று எரேமியா சொல்லுகிறார். தேசமெல்லாம் பாழகிறது. அலங்கங்களிலே உடைப்புகளுக்குமேல் உடைப்புகள் உண்டாகிறது. ஜனங்களுக்கு வேதனைகளுக்கும்மேல் வேதனை வருகிறது.

யூதாதேசத்திற்கு மிகப்பெரிய அழிவு உண்டாயிற்று. யோசியா ராஜா மரித்துப்போனார். மூன்று மாதங்களுக்கு பின்பு, அவருடைய குமாரனாகிய யோவகாசை எகிப்தின் ராஜா கொன்றுபோட்டான். இரண்டு மூன்று வருஷங்களுக்கு பின்பு நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றிக்கையிட்டு அதைப் பிடித்துக்கொண்டான். இதைத் தொடர்ந்து யூதாவின் மனுஷர் மீதும், எருசலேமின் குடிகள்மீதும் நாசத்திற்குமேல் நாசம் வருகிறது. எருசலேம் அழியும் வரையிலும் நாசம் தொடருகிறது.

"அசூப்பிலே என் கூடாரங்களும், ஒரு நிமிஷத்திலே என் திரைகளும் பாழக்கப்படுகிறது" என்று எருசலேமின் அழிவைப்பற்றி எரேமியா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். எருசலேம் நகரத்திற்கு அழிவு வரும்போது, முதலாவதாக அது பாழாக்கப்படுகிறது. தேசத்தில் கூடாரங்களில் குடியிருக்கிற மேய்ப்பர்களும், நாடோடி ஜனங்களும் தங்கள் கூடாரங்களை பிரித்து எடுத்துக்கொண்டு, பாதுகாப்பான இடங்களை நோக்கி போகிறார்கள்.

ரேகாபியர்கள் கூடாரங்களில் குடியிருக்கிறார்கள். கல்தேயரின் சேனை யூதா தேசத்திற்கு விரோதமாக வந்தபோது, அவர்கள் தங்கள் கூடாரங்களை எடுத்துக்கொண்டு, தங்களுடைய பாதுகாப்புக்காக எருசலேமை நோக்கிப் போகிறார்கள்.

"நாங்கள் கூடாரங்களில் குடியிருந்து, எங்கள் தகப்பனாகிய யோனதாப் எங்களுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் கீழ்ப்படிந்து செய்து வந்தோம். ஆனாலும் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இந்த தேசத்தில் வந்தபோது, நாம் கல்தேயருடைய இராணுவத்துக்கும் சீரியருடைய இராணுவத்துக்கும் தப்பும்படி எருசலேமுக்குப் போவோம் வாருங்கள் என்று சொன்னோம்; அப்படியே எருசலேமில் தங்கியிருக்கிறோம் என்றார்கள்" (எரே 35:10,11).

யுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது. யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து ராஜாவுக்கு கீழ்ப்படியவில்லை. நேபுகாத்நேச்சார் ராஜாவுக்கு விரோதமாய், எப்படியெல்லாம் கலகம்பண்ண முடியுமோ, அப்படியெல்லாம் கலகம்பண்ணுகிறார்கள். இதனால் யுத்தம் முடிவுக்கு வரவில்லை. எரேமியா இதைப் பார்த்து "நான் எதுவரைக்கும் கொடியைக் கண்டு எக்காளத்தின் சத்தத்தைக் கேட்பேன்" (எரே 4:21) என்று சொல்லுகிறார். பட்டயம் கர்த்தருடைய ஜனங்களை தொடர்ந்து பட்சிக்குமோ என்று எரேமியா வேதனைப்படுகிறார்.

யூதா தேசமெல்லாம் பாழாகிறது. ஆரம்பத்தில் யூதா தேசத்திற்கு சிறிய அழிவு மாத்திரமே வருகிறது. அழிவு நிற்கவில்லை. அழிவு தொடருவதினால், யூதா தேசம் முழுவதுமாய் பாழாக்கப்படுகிறது. யூதா தேசம் ஒன்றுமில்லாமல் போயிற்று. எரேமியா யூதா தேசத்தைப் பார்க்கிறார். "பூமியைப் பார்த்தேன், அது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது; வானங்களைப் பார்த்தேன், அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது" (எரே 4:23) என்று சொல்லுகிறார். ஆரம்பத்தில், யூதா தேசத்தில் சிறிய அழிவு மாத்திரமே உண்டாயிற்று. அதன் பின்பு அது பேரழிவாயிற்று. தேசமே ஒன்றுமில்லாமல் போயிற்று.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். அதன் பின்பு பூமி அழிந்துபோயிற்று "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது" (ஆதி 1:2) என்று ஆதியாகமம் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருப்பதுபோல, இப்போது யூதா தேசம் ஒழுங்கின்மையாயும் வெறுமையாயும் இருக்கிறது.

எபிரெய பாஷையில் ஒழுங்கின்மை, வெறுமை ஆகிய சொற்களைக் குறிப்பதற்கு, "தோகு", "போகு" ஆகிய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது பரிபூரணமான ஒழுங்கின்மையையும், முழுமையான வெறுமையையும் குறிக்கும் வார்த்தைகள். யூதா தேசம் முற்றிலுமாய் அழிந்துபோயிற்று, அது ஒன்றுமில்லாமல் போயிற்று என்பதைக் குறிப்பதற்கு இங்கே இந்த வாக்கியம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

வானங்களிலும் ஒளியில்லாதிருந்தது என்று எரேமியா சொல்லுகிறார். "ஆழத்தின்மேல் இருள் இருந்தது" (ஆதி 1:2) என்றும் எழுதப்பட்டிருக்கிற பிரகாரமாய், யூதா தேசத்தில் வெளிச்சமில்லாமல், எல்லாம் இருளாயிருக்கிறது. யூதாவின் புத்திரருக்கும் எரேமின் குடிகளுக்கும் பூமியும் உதவிசெய்ய வில்லை. வானமும் உதவிசெய்யவில்லை. அவர்களுக்கு அழிவோடு சேர்ந்து இருளும் வந்துவிடுகிறது. ஆகையினால் தங்களுடைய அழிவின் உக்கிரத்தை அவர்களால் பார்க்கக்கூட முடியவில்லை. இருளில் ஒன்றையும் தெளிவாகப் பார்க்கமுடியாது. யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் மிகுந்த குழப்பத்திலிருக்கிறார்கள்.

கல்தேயர்கள் எருசலேமின்மீதும், யூதாவின் மற்ற பட்டணங்கள்மீதும் யுத்தம் பண்ணுகிறார்கள். பட்டணத்திலுள்ள வீடுகளை தீயிட்டுக்கொளுத்துகிறார்கள். பட்டணங்களெல்லாம் பற்றியெரிகிறது. புகைமண்டலம் பரவுகிறது. புகை அதிகமாயிருப்பதினால் அவர்களுடைய பட்டணங்களெல்லாம் ஒளியில்லாமல் இருளாயிருக்கிறது. எருசலேமின்மீது சூரிய வெளிச்சம்கூட படவில்லை. எரேமியா வானங்களைப் பார்க்கிறார். "அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது" (எரே 4:23) என்று வேதனையோடு சொல்லுகிறார்.

"பூமி" என்பது எருசலேமின் சாதாரண குடிமக்களைக் குறிக்கும் வார்த்தை என்றும், "வானங்கள்" என்பது எருசலேமிலுள்ள ராஜாக்களையும், பிரபுக்களையும் குறிக்கும் வார்த்தை என்றும் வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். சாதாரண ஜனங்கள் பயத்திலும் குழப்பத்திலும் இருக்கிறார்கள். பிரபுக்களோ ஒளியில்லாதவர்களாக, மதியில்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களால் சாதாரண ஜனங்களுக்கு ஆறுதல் சொல்ல முடியவில்லை. பிரபுக்களால் எருசலேமின் குடிகளை வழிநடத்த முடியவில்லை.

"பர்வதங்களைப் பார்த்தேன், அவைகள் அதிர்ந்தன; எல்லாக் குன்றுகளும் அசைந்தன" (எரே 4:24) என்று எரேமியா சொல்லுகிறார். "அவர் நின்று பூமியை அளந்தார்; அவர் பார்த்துப் புறஜாதிகளைக் கரையப்பண்ணினார்; பூர்வ பர்வதங்கள் சிதறடிக்கப்பட்டது, என்றுமுள்ள மலைகள் தாழ்ந்தது; அவருடைய நடைகள் நித்திய நடைகளாயிருந்தது" (ஆப 3:6).

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் உயர்ந்த மேடுகளின்மேல் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். எரேமியா அந்த மேடுகளையும், பர்வதங்களையும், குன்றுகளையும் பார்க்கிறார். "அவைகள் அதிர்ந்தன. எல்லா குன்றுகளும் அசைந்தன" என்று எரேமியா சொல்லுகிறார். பர்வதங்களுக்குக்கூட, யூதா மனுஷரின் பாவம் தெரிந்திருக்கிறது. குன்றுகளுக்குக் கூட அவர்களுடைய அக்கிரமம் புரிந்திருக்கிறது. ஆகையினால் பர்வதங்களும் குன்றுகளும் அதிர்ந்து அசைகிறது.

யூதா தேசத்தினுடைய பாவத்தினிமித்தமாய் பர்வதங்கள் மெதுவாக அசைகிறது. எரேமியா யூதாவின் பட்டணங்களையும் பார்க்கிறார். அங்கே மனுஷன் ஒருவனும் இல்லை. ஆகாசத்து பறவைகள்கூட பட்டணங்களில் காணப்படவில்லை. அவைகள் எல்லாம் பறந்துபோயிற்று. பறவைகள் விருட்சங்களின் கிளைகளில் அமர்ந்து சந்தோஷமாகப் பாடிக்கொண்டிருக்கும். ஆனால் இப்போதோ யூதாவின் பட்டணங்களில் பறவைகளின் பாடல் சத்தத்தைக் கேட்க முடியவில்லை.

யூதா தேசம் இப்போது சோதோமைப் போலாயிற்று. "கர்த்தர் தமது கோபத்திலும் தமது உக்கிரத்திலும் சோதோமையும் கொமோராவையும் அத்மாவையும் செபோயீமையும் கவிழ்த்துப்போட்டதுபோல, இந்த தேசத்தின் நிலங்களெல்லாம் விதைப்பும் விளைவும் யாதொரு பூண்டின் முளைப்பும் இல்லாதபடிக்கு, கந்தகத்தாலும் உப்பாலும் எரிக்கப்பட்டதைக் காணும்போதும், அந்த ஜாதிகளெல்லாம் கர்த்தர் இந்த தேசத்திற்கு ஏன் இப்படிச் செய்தார்; இந்த மகா கோபம் பற்றியெரிந்ததற்குக் காரணம் என்ன என்று சொல்லுவார்கள்" (உபா 29:23,24).

யூதா தேசமெல்லாம் பாழாய்ப்போயிற்று. எரேமியா தீர்க்கதரிசி யூதா தேசத்தைப் பார்த்து மிகவும் வேதனைப்படுகிறார். "பின்னும் நான் பார்க்கும்போது, கர்த்தராலும், அவருடைய உக்கிரகோபத்தாலும் பயிர்நிலம் வனாந்தரமாயிற்று; அதன் பட்டணங்களெல்லாம் இடிந்து போயின" (எரே 4:26) என்று எரேமியா சொல்லுகிறார். பட்டணங்களின் அலங்கங்களும் வாசல்களும் இடிந்துபோயிற்று. அவையெல்லாம் தரைமட்டமாய்க் கிடக்கிறது.

யூதா தேசத்தின் பட்டணங்களை சாதாரணமாகப் பார்த்தால், அதன் அழிவு மாத்திரமே தெரியும். தேசத்தின் பயிர் நிலம் வனாந்தரமாயிருப்பதும், யூதாவின் பட்டணங்களெல்லாம் இடிந்துபோயிருப்பதும் மாத்திரம் தெரியும். எரேமியா தீர்க்கதரிசியோ, இந்த அழிவுகளை, தன்னுடைய தீர்க்கதரிசன கண்களால் பார்க்கிறார். இந்த அழிவுக்குப் பின்பாக கர்த்தரும், அவருடைய உக்கிரகோபமும் கிரியை நடப்பிப்பதைக் காண்கிறார்.

யூதா தேசமெல்லாம் பாழாய்போயிற்று. தேசத்திலுள்ள விளைச்சல் நிலமெல்லாம் வனாந்தரம் போலாயிற்று. தேசத்தின் குடிகள் கல்தேயருக்கு பயந்து ஓடி ஒழிந்துகொள்கிறார்கள். "இதினிமித்தம் பூமி புலம்பும், உயர இருக்கிற வானங்கள் கறுத்துப்போம்; நான் அதைச் சொன்னேன், அதை நிர்ணயம் பண்ணினேன்; நான் மனஸ்தாபப்படுவதும் இல்லை; நான் அதைவிட்டுத் திரும்புவதும் இல்லை" (எரே 4:28) என்று எரேமியா சொல்லுகிறார்.

யூதாவின் புத்திரரும் எருசலேமின் குடிகளும் கல்தேயருக்கு விரோதமாக யுத்தம் பண்ணவில்லை. அவர்களிடத்தில் வீரமும் பெலமுமில்லை. பயமும் நடுக்கமும் காணப்படுகிறது. கல்தேயருடைய குதிரை வீரரும், வில்வீரரும் இன்னும் முற்றிலுமாய் யுத்தம்பண்ண வரவில்லை. கல்தேயர்கள் யூதாவின் புத்திரருக்கு விரோதமாய் சத்தமிடுகிறார்கள். எருசலேமின் குடிகளோ, கல்தேயரின் சத்தத்தைக் கேட்டு பயந்து அடர்த்தியான காடுகளில் புகுந்து ஒழிந்துகொள்கிறார்கள். அவர்களில் சிலர் கன்மலைகளில்கூட ஏறி தப்பித்துக் கொள்கிறார்கள். எருசலேமில் ஒருவருமில்லை. எல்லாரும் ஓடிப்போய்விட்டார்கள்.

எருசலேமுக்கு பூரண அழிவு வரும் என்பதற்கும், யூதா தேசமெல்லாம் பாழாய்ப்போகும் என்பதற்கும் இவையெல்லாம் அடையாளம். யூதாவின் மனுஷர் கல்தேயரின் சத்தத்தைக் கேட்டு பயந்து நடுங்குகிறார்கள். இந்த சத்தத்திற்கு நடுவே யூதாவின் மனுஷருக்கு கர்த்தருடைய ஆறுதலான வார்த்தை, சொல்லப்படுகிறது. "ஆகிலும் சர்வசங்காரம் செய்யேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 4:27). கர்த்தர் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் முற்றிலுமாய் அழித்துப்போடாமல், தமக்கென்று ஒரு சிலரை மீதியாக வைத்திருக்கிறார். எருசலேம் இப்போது அழிந்துபோனாலும், அது திரும்பவும் கட்டப்படும். எருசலேம் நகரத்திலே இப்போது ஒருவரும் குடியில்லாமல் போனாலும், அங்கே கர்த்தருடைய ஜனத்தார் மறுபடியும் வந்து குடியேறுவார்கள். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு பயந்து நடுங்கின ஜனங்களுக்கு, இப்போது கர்த்தருடைய சமுகத்திலிருந்து இந்த ஆறுதலான வார்த்தைகள் வந்திருக்கிறது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய பாவங்களும், துன்மார்க்கங்களும், அக்கிரமங்களும் பெருகியிருக்கிறது. கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது உக்கிரமமாய் வந்திருக்கிறது. அவர்களுக்கு உதவிசெய்ய ஒருவருமில்லை. அவர்களால் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் முடியவில்லை. தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவும் அவர்களுக்கு மனமில்லை.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் வரவேண்டும். அப்போதுதான் அவர்களால் கர்த்தருடைய உதவியை எதிர்பார்க்க முடியும். இல்லையென்றால் கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்யமாட்டார். கர்த்தர் தம்முடைய சித்தத்தையும், திட்டத்தையும் தெளிவாக எடுத்துச் சொல்லுகிறார். "இதினிமித்தம் பூமி புலம்பும், உயர இருக்கிற வானங்கள் கறுத்துப்போம்; நான் அதைச் சொன்னேன், அதை நிர்ணயம் பண்ணினேன்; நான் மனஸ்தாபப்படுவதும் இல்லை; நான் அதைவிட்டுத் திரும்புவதும் இல்லை" (எரே 4:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"உன் கால் வெறுங்காலாகாதபடிக்கும், உன் தொண்டை வறட்சியடையாதபடிக்கும் அடக்கிக்கொள் என்றால், நீ: அது கூடாதகாரியம்; நான் அப்படிச் செய்யமாட்டேன்; அந்நியரை நேசிக்கிறேன்; அவர்கள் பிறகே போவேன் என்கிறாய்" (எரே 2:25). ஆகையினால் கர்த்தரும் "நான் அதைச் சொன்னேன், அதை நிர்ணயம் பண்ணினேன்; நான் மனஸ்தாபப்படுவதும் இல்லை; நான் அதைவிட்டுத் திரும்புவதும் இல்லை" என்று சொல்லிவிடுகிறார். மனுஷர் தங்களுடைய பாவங்களிலிருந்து மனம் மாறவில்லையென்றால், கர்த்தரும் தம்முடைய நியாயத்தீர்ப்பிலிருந்து மனம் மாறமாட்டார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு உறுதியாயிருக்கும்.

யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் அழிவு வந்திருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்ய ஒருவரும் வரவில்லை. அவர்களாலும் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ள முடியவில்லை. "பாழாய்ப்போன நீ இப்பொழுது என்ன செய்வாய்? நீ இரத்தாம்பரம் உடுத்தாலும், பொன்னாபரணங்களால் உன்னைச் சிங்காரித்தாலும், உன் கண்களில் மையிட்டுக்கொண்டாலும், வீணாய் உன்னை அழகுபடுத்துவாய்; சோரநாயகர் உன்னை அசட்டைபண்ணி, உன் பிராணனை வாங்கத் தேடுவார்கள்" (எரே 4:30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரை நம்பாமல் மாயையை நம்புகிறார்கள். விக்கிரகங்களை நம்புகிறார்கள். தங்களுக்கு விக்கிரகங்கள் உதவிசெய்யும் என்று மதியீனமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுடைய விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை. பெலனுமில்லை. அவற்றால் அசையக்கூட முடியாது. விக்கிரகங்கள் மனுஷருக்கு உதவி செய்யாது.

யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் தீங்கு வந்திருக்கிறது. அவர்கள் அழிந்துபோனார்கள். பாழாய்ப்போய்விட்டார்கள். "பாழாய்ப்போன நீ இப்பொழுது என்ன செய்வாய்" என்று எரேமியா தீர்க்கதரிசி, யூதாவின் மனுஷரிடத்தில் கேட்கிறார். அந்நிய தேசத்தார் தங்களுக்கு உதவி செய்வார்கள் என்று யூதா தேசத்தார் நம்பினார்கள். ஆனால் அவர்களுடைய நம்பிக்கை வீணாய்ப்போயிற்று. அவர்கள் யாரை நம்பினார்களோ, அவர்கள் யூதா தேசத்தாருக்கு உதவி செய்ய வரவில்லை.

எருசலேம் ஒரு வேசியைப்போல, எல்லோராலும் கைவிடப்பட்டவளாய் இருக்கிறது. வேசி இரத்தம்பரம் உடுத்தி, பொன்னாபரணங்களால் தன்னை சிங்காரித்து, தன் கண்களில் மையிட்டு, தன்னை அழகுபடுத்தி, சோரநாயகர்களை தேடுவாள். அவர்களை நம்புவாள். ஆனால் அவர்களோ வேசிக்கு உதவி செய்யமாட்டார்கள். சோரநாயகர்கள் வேசியை அசட்டைபண்ணி, அவளுடைய பிராணனை வாங்க தேடுவார்கள்.

யூதா தேசத்தாரும் வேசியைப்போல தங்களை சிங்காரித்துக்கொண்டு, அந்நிய தேசத்தாரை நம்பினார்கள். அவர்கள் தங்களுக்கு உதவிபுரிவார்கள் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களோ யூதா தேசத்தை அசட்டைபண்ணி விடுகிறார்கள். அவர்கள் எருசலேம் குடிகளுடைய பிராணனை வாங்க தேடுகிறார்கள்.

யூதா தேசத்தார் தங்களைப்பற்றி பெருமையாய் நினைத்துக்கொண்டார்கள். தங்களுடைய தேசத்தின் அழகில் மற்ற தேசத்தார் மயங்குவார்கள் என்றும், தங்களுக்கு ஆதரவாகயிருப்பார்கள் என்றும் நினைத்தார்கள். யூதா தேசம் மாயையை நம்பிற்று. தன்னுடைய அழகை நம்பிற்று. தன்னை பெருமைப்படுத்தி காண்பித்தது. தங்களோடு உடன்படிக்கை பண்ணுவது மற்ற தேசங்களுக்கு நல்லது என்பது போல, தங்களை வீணாய் அழகுபடுத்திற்று. யூதா தேசத்தின் தூதர்கள் எல்லா தேசங்களுக்கும் போய், தங்கள் தேசத்தைக் குறித்து பரிந்து பேசினார்கள். யூதா தேசத்தைப்பற்றி பெருமையாய்ச் சொன்னார்கள். அவர்களுடைய பரிந்து பேசும் பேச்சுகளெல்லாம் வீணாய்ப்போயிற்று. அவர்கள் ஒரு வேசியின் அழகை சோரநாயகர்களிடம் வர்ணித்ததுபோல வர்ணித்திருக்கிறார்கள்.

யூதா தேசம் இரத்தாம்பரம் உடுத்தி, பொன்னாபரணங்களால் தன்னை சிங்காரித்தது. யூதா தேசம் ஒரு ஐசுவரியம் மிகுந்த தேசம் என்பதுபோல மற்ற தேசத்தாருக்கு மத்தியில் தன்னை காண்பித்துக்கொண்டது. தேசத்தின் பொக்கிஷங்கள் பூரணமாய் நிரம்பியிருப்பதுபோல ஒரு மாயத்தோற்றத்தை உண்டுபண்ணியது. ஆனால் அவர்களுடைய கஜானாவில் ஒன்றுமில்லை. யூதா தேசம் ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருப்பதுபோல, அவர்களுடைய கஜானாவும் வெறுமையாயிருக்கிறது.

யூதா தேசம் தன் கண்களில் மையிட்டுக்கொண்டது. தன்னுடைய வேதனைகளையும், துக்கங்களையும், அழிவையும் மூடி மறைப்பதற்கு, என்னென்ன சாயங்களை பூசமுடியுமோ, அதையெல்லாம் பூசி, தன்னுடைய சோகத்தை மறைக்கப்பார்த்தது. ஒருவேளை தேசத்தின்மீது பூசப்பட்ட சாயம், சிறிதுகாலத்திற்கு, அதன் துக்கத்தை மறைக்கலாம். ஆனால் பூசப்பட்ட சாயம் சீக்கிரத்தில் கரைந்துபோகும். யூதா தேசத்தின் உண்மையான முகம் வெளிஉலகத்திற்கு தெரியவரும்.

யூதா தேசத்தார் தங்களை அழகுபடுத்துவதற்காக கண்களில் மையிட்டுக் கொண்டாலும், அந்த மையே அவர்களுடைய கண்களை பாதித்துவிடும். தோல்களில் சுருக்கமுண்டாகும். வெடிப்புக்கள் உண்டாகும். தங்களுடைய அழகு தங்களை அசுத்தப்படுத்தியதைப் பார்க்கும்போது, யூதா தேசத்தார் தங்களை வீணாய் அழகுபடுத்திக் கொண்டதைப் புரிந்துகொள்வார்கள். யூதா தேசத்தார் தங்களை மூடிமறைத்து, அழகுபடுத்தி, யாரையெல்லாம் மயக்கவேண்டுமென்று நினைத்தார்களோ, அவர்களுக்கு யூதா தேசத்தின் உண்மையான நிலவரம் தெரியவரும். அவர்கள் யூதாவின் அழிவையும், அது ஒன்றுமில்லாமலிருப்பதையும் காண்பார்கள்.

கல்தேயர்கள் யூதாவின் பட்டணங்கள்மீது யுத்தம் பண்ண வந்து, யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் கொள்ளையிட்டார்கள். அவர்களுடைய ஆபரணங்களையும், பொக்கிஷங்களையும் உரிந்துகொண்டு போய்விட்டார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி எருசலேமின் பாவமான செய்கைகளைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் யேசபேலுக்கு ஒப்பாயிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. யேசபேல் தன்னை அழகுபடுத்தினாள். சிங்காரித்தாள். தன்னுடைய அழிவை மூடி மறைக்கலாம் என்று கற்பனை பண்ணினாள். ஆனால் அவளுடைய சதிஆலோசனை முறிந்துபோயிற்று. அவளுடைய ஆசைகளெல்லாம் வீணாய்ப்போயிற்று.

"யெகூ யெஸ்ரயேலுக்கு வந்தான்; அதை யேசபேல் கேட்டபோது, தன் கண்களுக்கு மையிட்டு, தன் தலையைச் சிங்காரித்துக்கொண்டு, ஜன்னல்வழியாய் எட்டிப்பார்த்து, யெகூ ஒலிமுகவாசலில் வந்தபோது, அவள்: தன் ஆண்டவனைக் கொன்ற சிம்ரிக்ஷேமம் அடைந்தானா என்றாள். அப்பொழுது அவன் தன் முகத்தை அந்த ஜன்னலுக்கு நேராக ஏறெடுத்து:

என் பட்சத்தில் இருக்கிறது யார்? யார்? என்று கேட்டதற்கு, இரண்டு மூன்று பிரதானிகள் அவனை எட்டிப்பார்த்தார்கள். அப்பொழுது அவன்: அவளைக் கீழே தள்ளுங்கள் என்றான்; அப்படியே அவளைக் கீழே தள்ளினதினால், அவளுடைய இரத்தம் சுவரிலும் குதிரைகளிலும் தெறித்தது" (2இராஜா 9:30-33).

கர்ப்பஸ்திரீகள் வேதனைப்பட்டுதான் பிள்ளை பெறமுடியும். யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும், கர்ப்ப ஸ்திரீக்கு வேதனை வந்திருப்பது போல வேதனை வந்திருக்கிறது. இந்த வேதனையிலிருந்து அவர்களால் தப்பிக்க முடியாது. "கர்ப்பவேதனைப்படுகிறவளின் சத்தமாகவும், முதல்விசை பிள்ளை பெறுகிறவளின் வியாகுலமாகவும், சீயோன் குமாரத்தியின் சத்தத்தைக் கேட்கிறேன்" (எரே 4:31) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சீயோன் குமாரத்திகள் அழுது புலம்புகிறார்கள். கல்தேயரோ யுத்தத்தில் வெற்றி பெற்று ஆர்ப்பரிக்கிறார்கள். "தாணிலிருந்து ஒரு சத்தம் வந்து, செய்தியை அறிவிக்கிறது; எப்பிராயீமின் மலையிலிருந்து வந்து, தீங்கைப் பிரசித்தம் பண்ணுகிறது" (எரே 4:15). கல்தேயரின் சத்தத்தைக் கேட்டு எருசலேமின் குமாரத்திகள் பெருமூச்சு விட்டு அழுகிறார்கள். அவர்கள் தங்கள் கைகளை விரித்து, "ஐயோ! கொலைபாதகர்களாலே என் ஆத்துமா சோர்ந்துபோகிறதே" (எரே 4:31) என்று கதறுகிறார்கள்.

கல்தேயர்கள் தங்கள் தேசத்தின்மீது யுத்தம் பண்ண வரும்போது, மற்ற தேசத்தார் தங்களுக்கு உதவியாய் வருவார்கள் என்று சீயோன் எதிர்பார்த்தது. ஆனால் சீயோனின் உதவிக்கு ஒரு தேசமும் வரவில்லை. தன்னுடைய வேதனைகளையும், வியாகுலங்களையும் சீயோன் தனிமையாய் அனுபவிக்கிறது. சீயோன் தன்னுடைய கைகளை விரித்து புலம்புகிறது.

5 அதிகாரம்

இஸ்ரவேல் வம்சத்தாரும் யூதா வம்சத்தாரும் கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை கண்டித்து உணர்த்துகிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும் என்று அவர்களை எச்சரிக்கிறார். இந்த அதிகாரம் முழுவதிலும் பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்துவதும், நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரிப்பதும் எழுதப்பட்டிருக்கிறது. ஜனங்களுடைய பாவங்களைக் குறித்து கண்டித்து உணர்த்தும்போது, அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவதற்கு அதிகமான வாய்ப்புக்கள் உண்டாகும்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களும், யூதா வம்சத்தாரின் பாவங்களும் இங்கு விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஜனங்கள் அநியாயம் செய்கிறார்கள் (எரே 5:1). பொய்யாணையிடுகிறார்கள் (எரே 5:2). மனந்திரும்ப மறுக்கிறார்கள் (எரே 5:3). நீசரும் பெரியோர்களும் மதியற்றவர்களாயும், தேவனுடைய நியாயத்தை அறியாதவர்களாயும் இருக்கிறார்கள் (எரே 5:4,5).

விக்கிரகாராதனையும் விபசாரமும் பெருகியிருக்கிறது (எரே 5:7,8). தேவனுக்கு விரோதமாய் துரோகம்பண்ணுகிறார்கள் (எரே 5:11). கர்த்தரை மறுதலிக்கிறார்கள் (எரே 5:12,13). அவர்களிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயமில்லை (எரே 5:20-24). ஏழைகளை ஒடுக்குகிறார்கள் (எரே 5:26-28). தேசத்தில் சத்தியமில்லை (எரே 5:30,31).

ஜனங்களுடைய பாவங்களினிமித்தமாய், தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும். அந்நிய தேசத்திலிருந்து சத்துரு அவர்கள்மீது படையெடுத்து வருவான் (எரே 5:15-17). அவர்களை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோவான் (எரே 5:19). கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஒரு நன்மையும் வராது (எரே 5:25).

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைத் தண்டித்தாலும், அவர்களை முற்றிலுமாய் அழித்துப்போடமாட்டார். அவர்களை சர்வசங்காரம் செய்யமாட்டார் (எரே 5:10,18). யோசியாவினுடைய ஆட்சிக்காலத்தின் பின்பகுதியிலும், யோயாக்கீமினுடைய ஆட்சிக்காலத்தின் முன்பகுதியிலும் எரேமியா இந்தச் செய்தியைப் பிரசங்கிக்கிறார்.

சீர்கேடுகள்
எரே 5:1-9

எரே 5:1. நியாயஞ்செய்கிற மனுஷனைக் கண்டுபிடிப்பீர்களோ என்றும், சத்தியத்தைத் தேடுகிறவன் உண்டோ என்றும், எருசலேமின் தெருக்களில் திரிந்துபார்த்து, விசாரித்து, அதின் வீதிகளிலே தேடுங்கள்; காண்பீர்களானால் அதற்கு மன்னிப்புத் தருவேன்.

எரே 5:2. அவர்கள்: கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறோம் என்றாலும், பொய்யாணையிடுகிறார்களே.

எரே 5:3. கர்த்தாவே, உம்முடைய கண்கள் சத்தியத்தை அல்லவோ நோக்குகின்றது; அவர்களை அடிக்கிறீர், ஆனாலும் அவர்களுக்கு நோகாது; அவர்களை நிர்மூலமாக்குகிறீர், ஆனாலும் புத்தியை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்கிறார்கள்; தங்கள் முகங்களைக் கன்மலையைப்பார்க்கிலும் கெட்டியாக்கி, திரும்பமாட்டோம் என்கிறார்கள்.

எரே 5:4. அப்பொழுது நான்: இவர்கள் நீசராமே, இவர்கள் மதியற்றவர்கள்; கர்த்தருடைய வழியையும், தங்கள் தேவனுடைய நியாயத்தையும் அறியாதிருக்கிறார்கள் என்றும்;

எரே 5:5. நான் பெரியோர்களிடத்திலே போய், அவர்களோடே பேசுவேன்; அவர்கள் கர்த்தருடைய வழியையும், தங்கள் தேவனுடைய நியாயத்தையும் அறிவார்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ ஏகமாய் நுகத்தடியை முறித்து, கட்டுகளை அறுத்துப்போட்டார்கள்.

எரே 5:6. ஆகையால் காட்டிலிருந்து வரும் சிங்கம் அவர்களைக் கொல்லும், வனாந்தரத்திலுள்ள ஓநாய்கள் அவர்களைப் பீறும், சிவிங்கி அவர்கள் பட்டணங்களின்மேல் நோக்கமாயிருக்கும்; அவைகளிலிருந்து புறப்படுகிறவன் எவனும் பீறப்படுவான்; அவர்கள் மீறுதல்கள் பெருகி, அவர்கள் சீர்கேடுகள் அதிகரித்தது.

எரே 5:7. இவைகளை நான் உனக்கு மன்னிப்பது எப்படி? உன் பிள்ளைகள் என்னை விட்டுவிட்டு, தெய்வம் அல்லாதவைகள் பேரில் ஆணையிடுகிறார்கள்; நான் திருப்தியாக்கின அவர்கள் விபசாரம்பண்ணி, வேசிவீட்டிலே கூட்டங்கூடுகிறார்கள்.

எரே 5:8. அவர்கள் கொழுத்த குதிரைகளைப்போல் காலமே எழும்பி, அவனவன் தன்தன் அயலானுடைய பெண்ஜாதியின் பின்னாலே கனைக்கிறான்.

எரே 5:9. இவைகளை விசாரியாதிருப்பேனோ? இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டாதிருக்குமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எருசலேமிலே ஒருவன்கூட நல்லவனாயில்லை. எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். எல்லோரும் அநியாயம் செய்கிறார்கள். சத்தியத்தை தேடுகிறவன் ஒருவனுமில்லை. எருசலேமிலே நியாயம் செய்கிற மனுஷனை கண்டுபிடிக்க முடியவில்லை. மாம்சமான எல்லோரும் தங்களுடைய வழிகளை தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள்.

கர்த்தர் எருசலேமைக் கண்ணோக்கிப் பார்க்கிறார். எருசலேமின் தெருக்களிலெல்லாம் திரிந்து பார்க்கிறார். அங்கே விசாரித்துப் பார்க்கிறார். எருசலேமின் தெருக்களிலும், வீதிகளிலும், நியாயம் செய்கிற மனுஷனை கண்டுபிடித்தாலும், சத்தியத்தை தேடுகிறவனைக் கண்டுபிடித்தாலும், கர்த்தர் எருசலேம் நகரத்திற்கு மன்னிப்பை தருவதாக வாக்குப்பண்ணுகிறார்.

"நியாயம் பின்னிட்டு அகன்றது; நீதி தூரமாய் நின்றது; சத்தியம் வீதியிலே இடறி, யதார்த்தம் வந்து சேரமாட்டாமற்போகிறது. சத்தியம் தள்ளுபடியாயிற்று; பொல்லாப்பை விட்டு விலகுகிறவன் கொள்ளையாகிறான்; இதைக் கர்த்தர் பார்த்து நியாயமில்லையென்று விசனமுள்ளவரானார்" (ஏசா 59:14,15).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் சோதோம் பட்டணத்திலும் சீர்கேடுகள் மிகுதியாயிருந்தது. அந்தப் பட்டணத்தில் பத்து நீதிமான்கள் இருந்தாலும், கர்த்தர் அந்தப் பட்டணத்தை மன்னிப்பதற்கு ஆயத்தமாயிருந்தார். எருசலேமிலோ கர்த்தர் பத்து நீதிமான்களைத் தேடவில்லை. நியாயம் செய்கிற ஒரு மனுஷன் இருந்தாலும், கர்த்தர் எருசலேமுக்கு மன்னிப்பு தர ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் ஒருவர்கூட இல்லை.

எருசலேமின் குடிகள் பொய்யாணையிடுகிறார்கள். கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறோம் என்று கர்த்தருடைய பெயரை பயன்படுத்துகிறார்கள். ஆனால் அவர்களுடைய வார்த்தைகளில் உண்மையில்லை. அவர்களுடைய இருதயங்களில் கர்த்தருக்குப் பயப்படும் பயமில்லை. அவர்களுடைய கிரியைகளில் நியாயமில்லை. அவர்கள் சத்தியத்தை தேடவுமில்லை.

"எருசலேமில் நியாயம் செய்கிற மனுஷனை கண்டுபிடிப்பீர்களோ" என்று கர்த்தர் மனுஷரைப் பார்க்க சொல்லுகிறார். மனுஷர் தங்களுடைய கண்களைத் திறந்து பார்க்கவேண்டும். எருசலேமின் தெருக்களிலே திரிந்து பார்க்கவேண்டும். அதின் வீதிகளிலே தேடிப்பார்க்கவேண்டும்.

எரேமியா தீர்க்கதரிசியோ, கர்த்தர் பார்க்கவேண்டுமென்று அவரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். "கர்த்தாவே, உம்முடைய கண்கள் சத்தியத்தை அல்லவோ நோக்குகின்றது" (எரே 5:3) என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். கர்த்தர் மனுஷனுடைய உண்மையான சுபாவத்தைப் பார்க்கிறார். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ மனுஷருடைய இருதயத்தைப் பார்க்கிறார்.

மனுஷருடைய முகங்கள் கன்மலையைப் பார்க்கிலும் கெட்டியாயிருக்கிறது. மனுஷர் தங்கள் முகங்களை கன்மலையைப் பார்க்கிலும் கெட்டியாக்கி, திரும்பமாட்டோம் என்கிறார்கள் (எரே 5:3). அவர்கள் புத்தியை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்கிறார்கள். எருசலேமின் குடிகள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களை அடிக்கிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்களை நிர்மூலமாக்குகிறார். ஆனாலும் அவர்கள் மனந்திரும்பமாட்டோம் என்கிறார்கள். கர்த்தர் அவர்களை எப்படி அடித்தாலும், அவர்களுக்கு நோகாது என்று எரேமியா சொல்லுகிறார்.

எருசலேமின் குடிகளில் தரித்திரரும் இருக்கிறார்கள். ஐசுவரியவான்களும் இருக்கிறார்கள். நீசரும் இருக்கிறார்கள். பெரியோர்களும் இருக்கிறார்கள். எல்லோருமே பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள்.

தரித்திரர் நீசராயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் ஞானமுமில்லை அறிவுமில்லை. அவர்கள் மதியற்றவர்கள். அவர்கள் கர்த்தருடைய வழியையும், தங்கள் தேவனுடைய நியாயத்தையும் அறியாதிருக்கிறார்கள் (எரே 5:4). ஜனங்கள் தங்கள் பாவங்களிலிருந்து திரும்பமாட்டோம் என்று பிடிவாதமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜனங்களுக்காக, எரேமியா தீர்க்கதரிசி கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்.

துன்மார்க்கமான பாவிகள் நீசராகயிருக்கிறார்கள். தரித்திரராகயிருக்கிறார்கள். அவர்கள் மதியற்றவர்களாகயிருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல கல்வி கற்பதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அவர்களுக்கு யாரும் கர்த்தருடைய வழியையும், தேவனுடைய நியாயத்தையும் போதிக்கவில்லை. ஆகையினால் அவர்கள் சத்தியத்தைத் தேடவில்லை. அவர்கள் கர்த்தருடைய வழியையும், தேவனுடைய நியாயத்தையும் அறியாதிருக்கிறார்கள்.

நீசர்கள் தங்கள் அறியாமையினால், பாவம் செய்கிறார்கள். இவர்கள் மதியற்றவர்களாகயிருப்பதினால், இவர்களுடைய இருதயத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயமில்லை. இவர்களுடைய பாவங்களுக்கு, இவர்களுடைய அறியாமையும், இவர்களுடைய மதியின்மையுமே காரணம் என்று எரேமியா கர்த்தரிடத்தில் இவர்களுக்காக பரிந்து பேசுகிறார்.

நீசர்கள் என்னும் வார்த்தை தரித்திரரைக் குறிக்கிறது. தரித்திரர்கள் எல்லா நகரங்களிலும் இருப்பார்கள். அவர்களுடைய தரித்திரத்திற்கு பல காரணங்கள் இருக்கலாம். அவர்கள் தரித்திரராயிருந்தாலும் கர்த்தருடைய வழியை அறிந்திருக்கவேண்டும். தங்களுடைய தரித்திரத்திற்கு மத்தியிலும் சத்தியத்தைத் தேடவேண்டும். தேவனுடைய நியாயத்தை அறிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் இவர்களால் கர்த்தருடைய வழியில் நடக்க முடியும். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிய முடியும். கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் ஊழியத்தை உண்மையாய்ச் செய்யமுடியும்.

தரித்திரர்கள் கர்த்தருடைய வழியை அறியவில்லையென்றால், அதற்கு கர்த்தர் பொறுப்பல்ல. அவர்களுடைய அறியாமைக்கு அவர்களே பொறுப்பேற்க வேண்டும். நீசராயிருந்தாலும், ஞானமுள்ளவர்களாயிருக்க முடியும். ஆனால் இவர்களோ நீசராயும் மதியற்றவர்களாயும் இருக்கிறார்கள். தேவனுடைய நியாயத்தையும், பிரமாணத்தையும் கற்றுக்கொள்ளாததினால், இவர்களுக்கு தேவனுடைய பிரமாணம் தெரியவில்லை.

நீசர்கள் மனப்பூர்வமாக மதியற்றவர்களாயிருக்கிறார்கள். சத்தியத்தைத் தேடக்கூடாது என்றும், மதியற்றவர்களாயிருக்கவேண்டும் என்றும், தேவனுடைய நியாயத்தையும், கர்த்தருடைய வழியையும் அறியாதிருக்க வேண்டும் என்றும் தீர்மானித்து, தங்கள் தீர்மானத்தில் உறுதியாயிருக்கிறார்கள்.

நீசராகிய தரித்திரர் மதியற்றவர்களாயும், சத்தியத்தை அறியாதவர்களாயும் இருக்கும்போது, பெரியவர்களாகிய ஐசுவரியவான்களோ பெருமையுள்ளவர்களாயும், துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்களாயும் இருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய வழியையும், தங்கள் தேவனுடைய நியாயத்தையும் அறிந்திருக்கிறார்கள். ஆனாலும், பெரியோர்கள், ஏகமாய் நுகத்தடியை முறித்து, கட்டுகளை அறுத்துப்போடுகிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி, "நான் பெரியோர்களிடத்தில் போய் அவர்களிடத்தில் பேசுவேன்" (எரே 5:5) என்று சொல்லுகிறார். பெரியோர்கள் என்னும் வார்த்தை ஐசுவரியவான்களைக் குறிக்கிறது. அவர்கள் கர்த்தருடைய வழியையும், தங்கள் தேவனுடைய நியாயத்தையும் அறிவார்கள் என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

பெரியோர்களும் ஐசுவரியவான்களும் கர்த்தருடைய வழியையும், தேவனுடைய நியாயத்தையும் அறிந்திருக்கிறார்கள். ஆனால் அவற்றிற்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள். கர்த்தருடைய பிரமாணத்திற்கும், அவருடைய ஆளுகைக்கும் பெரியோர்கள் தங்களை உட்படுத்த மறுத்துவிடுகிறார்கள். தங்களுக்கு எல்லாம் தெரியுமென்றும், தங்களுக்கு யாருடைய உபதேசமும் தேவையில்லை என்றும் துணிகரமாய் நினைக்கிறார்கள்.

தாங்கள் பெரியோர்களாயிருப்பதினால், தங்களை யாரும் திருத்த வேண்டியதில்லை என்றும், திருத்தும் அளவுக்கு தங்களிடத்தில் பாவம் எதுவும் இல்லை என்றும் பெரியோர்கள் பெருமையோடு பேசுகிறார்கள். இவர்கள் மிகவும் பெரியவர்களாகயிருப்பதினால், கர்த்தருடைய நுகத்தடியை, தங்கள்மீது ஏற்றுக்கொள்ளாமல் அதை முறித்துப்போடுகிறார்கள். கட்டுகளையும் அறுத்துப்போடுகிறார்கள். அதை முறிக்கும் அளவுக்கு அவர்களிடத்தில் பெலனிருக்கிறது. கட்டுகளை அறுக்கும் அளவுக்கு அவர்கள் பெரியவர்களாயிருக்கிறார்கள்.

நீசர்கள் அதிக பலவீனராயிருக்கிறார்கள். பெரியோர்களோ அதிக பெலமுள்ளவர்களாகயிருக்கிறார்கள். இவ்விரு பிரிவினருமே கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதில்லை. கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் கடமைகளை பொறுப்பாய் செய்வதில்லை. கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் போவதற்கு, ஒருவர் தன்னுடைய தரித்திரத்தை காரணமாகச் சொல்லுகிறார். மற்றவரோ தன்னுடைய ஐசுவரியத்தை காரணமாகச் சொல்லுகிறார். இவர்கள் எல்லோருமே துணிகரமாய்ப் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் பாவங்களையும் யூதா வம்சத்தாரின் பாவங்களையும் கர்த்தர் வரிசையாகச் சொல்லுகிறார். அவர்களுடைய பாவங்களில் சிலவற்றை இங்கு விசேஷமாய்ச் சொல்லுகிறார். அவர்களுடைய பாவங்களும் மீறுதல்களும் அநேகமாயிருக்கிறது. அவர்களுடைய மீறுதல்கள் பெருகி, அவர்களுடைய சீர்கேடுகள் அதிகரித்திருக்கிறது.

இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதாவின் வம்சத்தாரும் ஆவிக்குரிய விபசாரம் பண்ணுகிறார்கள். அவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தருக்குக் கொடுக்க வேண்டிய மகிமையை, விக்கிரகங்களுக்குக் கொடுக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிட வேண்டும். ஆனால் அவர்களோ தெய்வமல்லாத விக்கிரகங்களின் பேரில் ஆணையிடுகிறார்கள் (எரே 5:7). அவர்கள் விக்கிரகங்களை சேர்ந்துகொண்டு, அவற்றோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதாவின் வம்சத்தாரும் ஏகமாய் விக்கிரகாராதனையில் விழுந்துகிடக்கிறார்கள். அவர்கள் எல்லோரிடத்திலும் ஆவிக்குரிய விபசாரம் காணப்படுகிறது. அவர்கள் கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். கர்த்தரைவிட்டுப் பிரிந்து விக்கிரகங்களைப் பற்றிக்கொள்கிறார்கள். கர்த்தரைத் தூஷித்து விக்கிரகங்களை துதிக்கிறார்கள். கர்த்தரை தூஷிக்கிறவர்கள் தங்களைத் தாங்களே தூஷித்துக்கொள்கிறார்கள். கர்த்தரை அவமானப்படுத்துகிறவர்கள் தங்களைத் தாங்களே அவமானப்படுத்துகிறார்கள். தாங்கள் விக்கிரகாராதனை செய்வதோடு, தங்கள் பிள்ளைகளையும் விக்கிரகாராதனையில் ஈடுபடுத்துகிறார்கள். "உன் பிள்ளைகள் என்னைவிட்டுவிட்டு, தெய்வம் அல்லாதவைகள் பேரில் ஆணையிடுகிறார்கள்" (எரே 5:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"நான் திருப்தியாக்கின அவர்கள் விபசாரம்பண்ணி, வேசி வீட்டிலே கூட்டங்கூடுகிறார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். விபசாரக்காரருக்கு தங்களுடைய பாவத்தைப்பற்றி வெட்கமோ, குற்றவுணர்வோ இல்லை. அவர்கள் தங்கள் பாவத்தை நினைத்து அவமானப்படவுமில்லை. தங்களுடைய பாவத்தினிமித்தமாய், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தங்கள்மீது வரும் என்னும் பயமும் அவர்களிடத்தில் இல்லை. வேசி வீட்டிலே கூட்டங்கூடுவதற்காக அவர்களில் ஒருவனும் வெட்கப்படவுமில்லை.

விக்கிரகாராதனைக்காரரின் மாம்ச இச்சைகள், மிருகங்களின் இச்சைகளைப் போல இருக்கிறது. தங்களுடைய வேசித்தனத்தினாலும், விபசாரத்தினாலும் அவர்கள் மிருகங்களைப்போலவே மாறிவிடுகிறார்கள். "அவர்கள் கொழுத்த குதிரைகளைப்போல் காலமே எழும்பி, அவனவன் தன்தன் அயலானுடைய பெண்ஜாதியின் பின்னாலே கனைக்கிறான்" (எரே 5:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

விபசாரக்காரர்மீதும், வேசிக்கள்ளர்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பும், அவருடைய கோபமும் வருகிறது. அவர்கள் தங்கள் தேசத்தை அசுத்தப்படுத்துகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களை தண்டிக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறார்.

"ஆகையால் காட்டிலிருந்து வரும் சிங்கம் அவர்களைக் கொல்லும், வனாந்தரத்திலுள்ள ஓநாய்கள் அவர்களைப் பீறும், சிவிங்கி அவர்கள் பட்டணங்களின்மேல் நோக்கமாயிருக்கும்" (எரே 5:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

காட்டிலிருந்து வரும் சிங்கம் மனுஷரைக் கொல்லுவதுபோல, சத்துரு அந்நிய தேசத்திலிருந்து எருசலேமுக்கு வந்து, அவர்களைக் கொன்றுபோடுவான். வனாந்தரத்திலுள்ள ஓநாய்கள் மனுஷரை பீறுவதுபோல, சத்துரு அவர்களைப் பீறிப்போடுவான். காட்டிலிருந்து வரும் சிங்கமும், வனாந்தரத்திலிருந்து வரும் ஓநாயும் இரவு வேளையிலே வரும். மிகுந்த பசியோடு வரும். தங்களுடைய கண்களில் எந்த இரை தென்பட்டாலும், அதன் மீது பாய்ந்து, அதைப் பட்சித்துப்போடும். சிங்கம், ஓநாய்கள் ஆகிய காட்டுமிருகங்களைப்போலவே சிவிங்கியும் மிகவும் பயங்கரமான மிருகம். சிவிங்கி என்பது சிறுத்தை புலியைக் குறிக்கிற வார்த்தை. இது வேகமாக பாய்ந்து ஓடி தாக்கக்கூடியது.

சத்துருக்கள் யூதாவின் பட்டணங்களின் மேல் கண்ணோக்கமாயிருக்கிறார்கள். அவர்களைப் பார்க்கும்போது பட்டணத்திலுள்ளவர்களுக்கு மிகுந்த பயமும், குழப்பமும் உண்டாகிறது. பட்டணத்திற்குள்ளே இருந்தால் அவர்கள் பட்டினி கிடந்து சாகவேண்டும். சத்துருக்களுக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினால் சத்துருக்கள் இவர்களை பட்டயத்தால் கொன்றுபோடுவார்கள். யூதாவின் பட்டணங்களுக்குள்ளே இருக்கிற ஜனங்களுக்கு பட்டினி கிடந்து சாவதா அல்லது பட்டயத்தால் சாவதா என்று தெரியவில்லை குழப்பத்திலிருக்கிறார்கள்.

யூதாவின் பட்டணங்களுக்குள்ளே இருக்கிற ஜனங்கள் தங்கள் பட்டணங்களைவிட்டு வெளியே புறப்பட்டு போகமுடியாது. "அவைகளிலிருந்து புறப்படுகிறவன் எவனும் பீறப்படுவான்" (எரே 5:6) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தப் பேரழிவுக்கு அவர்களுடைய மீறுதல்களும், அவர்களுடைய சீர்கேடுகளுமே காரணம். "அவர்கள் மீறுதல்கள் பெருகி, அவர்கள் சீர்கேடுகள் அதிகரித்தது" என்று கர்த்தர் சொல்லுகிறார். பாவத்தின் சம்பளம் மரணம். அவர்களுடைய பாவத்தினால் அவர்களுக்கு அழிவு வந்திருக்கிறது.

"இவைகளை விசாரியாதிருப்பேனோ" (எரே 5:9) என்று கர்த்தர் கேட்கிறார். கர்த்தர் நீதியும் பரிசுத்தமுமுள்ளவர். இஸ்ரவேல் வம்சத்தாரும் யூதாவின் வம்சத்தாரும் பாவிகளாகவும், அசுத்தமானவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய மீறுதல்கள் பெருகியிருக்கிறது. அவர்களுடைய சீர்கேடுகள் அதிகரித்திருக்கிறது. "இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியை சரிக்கட்டாதிருக்குமோ" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 5:9).

மனுஷர் எப்படிப்பட்ட பாவங்களை செய்திருந்தாலும், தங்கள் பாவங்களுக்காக உண்மையாய் மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் வந்தால், கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய இரக்கத்தைக் காண்பிப்பார். இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கரம் ஒருபோதும் குறுகிப்போவதில்லை. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மனாசே இதுபோல பாவம் செய்திருந்தாலும், அவனுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபையும் தயவும் கிடைத்தது.

முழுதேசமும், அல்லது முழுநகரமும், கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வருகிறது. கர்த்தர் அந்த தேசத்தின் பாவங்களை விசாரிக்கிறார். அந்த ஜாதிக்கு தம்முடைய நீதியை சரிக்கட்டுகிறார். கர்த்தர் அவர்களைத் தண்டிக்க வேண்டுமென்றால், அவர்கள் இந்தப் பூமியிலிருக்கிற காலத்தில்தான் அவர்களைத் தண்டிக்க முடியும்.

ஒரு ஜாதி முழுவதும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்யும்போது, கர்த்தர் அந்த ஜாதியைத் தண்டிக்கிறார். அது அவருக்கு நீதியாகவும், நியாயமாகவும் இருக்கிறது. பாவம் செய்த ஜாதியை, கர்த்தர் தண்டியாமல் விட்டுவிட்டால், அது கர்த்தருக்கு மகிமையைக் கொடுக்காது. அவர்கள் மனந்திரும்பினால் கர்த்தர் அவர்களை மன்னிப்பார். அவர்கள் மனந்திரும்பாமல் துணிகரமாய்ப் பாவம் செய்தால் கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார். மனந்திரும்பாத பாவிகள்மீது, கர்த்தர் கோபமாயிருக்கிறார் என்பதற்கு அடையாளமாகவே, அவர்கள்மீது தண்டனை வருகிறது.

நியாயத்தீர்ப்பு
எரே 5:10-19

எரே 5:10. அதின் மதில்கள்மேலேறி அழித்துப் போடுங்கள்; ஆனாலும் சர்வசங்காரம் செய்யாதிருங்கள்; அதின் கொத்தளங்களை இடித்துப் போடுங்கள்; அவைகள் கர்த்தருடையவைகள் அல்ல.

எரே 5:11. இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதா வம்சத்தாரும் எனக்கு விரோதமாய் மிகுதியும் துரோகம்பண்ணினார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 5:12. அவர் அப்படிப்பட்டவர் அல்லவென்றும், பொல்லாப்பு நம்மேல் வராது, நாம் பட்டயத்தையாகிலும், பஞ்சத்தையாகிலும் காண்பதில்லையென்றும்,

எரே 5:13. தீர்க்கதரிசிகள் காற்றாய்ப்போவார்கள்; திருவாக்கு அவர்களில் இல்லை; அவர்களுக்கே அப்படி ஆகக்கடவதென்றும், அவர்கள் சொல்லிக் கர்த்தரை மறுதலித்தார்கள்.

எரே 5:14. ஆகையால் சேனைகளின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் இந்த வார்த்தையைச் சொன்னபடியினால், இதோ, நான் உன் வாயிலிட்ட என் வார்த்தைகளை அக்கினியும், இந்த ஜனத்தை விறகும் ஆக்குவேன், அது அவர்களைப் பட்சிக்கும்.

எரே 5:15. இஸ்ரவேல் வம்சத்தாரே, இதோ, தூரத்திலிருந்து நான் உங்கள்மேல் ஒரு ஜாதியைக் கொண்டுவருவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அது பலத்த ஜாதி, அது பூர்வகாலத்து ஜாதி, அவர்கள் நீ அறியாத பாஷையைப் பேசும் ஜாதி, அவர்கள் பேசுகிறது இன்னதென்று உனக்கு விளங்காது.

எரே 5:16. திறந்த பிரேதக்குழிகளைப்போல் அவர்கள் அம்பறாத்தூணிகள் இருக்கும்; அவர்கள் அனைவரும் பராக்கிரமசாலிகள்.

எரே 5:17. அவர்கள் உன் குமாரரும் உன் குமாரத்திகளும் சாப்பிடவேண்டிய உன் விளைச்சலையும், உன் அப்பத்தையும் சாப்பிட்டு, உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் பட்சித்து, உன் திராட்சப்பழங்களையும் உன் அத்திப்பழங்களையும் சாப்பிட்டு, நீ நம்பின உன்னுடைய அரணான பட்டணங்களைப் பட்டயத்தாலே வெறுமையாக்குவார்கள்.

எரே 5:18. ஆகிலும் நான் அந்நாட்களிலும் உங்களைச் சர்வசங்காரம் செய்யாதிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 5:19. எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இவைகளையெல்லாம் எதினிமித்தம் செய்தார் என்று நீங்கள் கேட்டால், அப்பொழுது நீ அவர்களைப் பார்த்து: நீங்கள் என்னைவிட்டு, உங்களுடைய தேசத்திலே அந்நிய தேவர்களைச் சேவித்ததுபோல, உங்களுடையதல்லாத தேசத்திலே அந்நியர்களைச் சேவிப்பீர்களென்று சொல்வாயாக.

ஜனங்களுடைய பாவங்களே அவர்களுடைய அழிவுக்கு காரணமாயிற்று. இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதா வம்சத்தாரும் கர்த்தருக்கு விரோதமாய் மிகுதியாய்த் துரோகம்பண்ணுகிறார்கள். இவ்விரு வம்சத்தாரும் ஆபிரகாமின் சந்ததியாராயிருந்தாலும், இவர்களுக்கிடையில் ஏராளமான வித்தியாசங்களும், வேறுபாடுகளும் உள்ளன. ஆனாலும், இவ்விரு வம்சத்தாரும், கர்த்தருக்கு விரோதமாய் மிகுதியாக துரோகம்பண்ணுவதில் ஒத்துப்போகிறார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதிப்பதை நிறுத்திவிட்டு விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்களிடத்தில் உண்மையில்லை. மாய்மாலம் இருக்கிறது.

இவ்விரு வம்சத்தாரும் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளை அசட்டைபண்ணுகிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் தங்களுக்கு விரோதமாக எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொன்னாலும், இவர்கள் அதற்கு செவிகொடுப்பதில்லை. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளையும் அசட்டைபண்ணிவிடுகிறார்கள். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளின் வாயில் எச்சரிப்பின் வார்த்தைகளைப் போடுகிறார். ஆனாலும் இஸ்ரவேல் வம்சத்தாருக்கும், யூதா வம்சத்தாருக்கும் இந்த வார்த்தைகள் எச்சரிப்பின் வார்த்தைகளாயில்லை. வெறும் ஓசைகளாகவேயிருக்கிறது.

கர்த்தர் தங்களிடம் எப்போதுமே அன்பாகயிருப்பார் என்றும், அவர் ஒருபோதும் தங்கள்மீது கோபப்படமாட்டார் என்றும் ஏராளமான விசுவாசிகள் நினைக்கிறார்கள். தாங்கள் பாவம் செய்தாலும் கர்த்தர் தங்களை எச்சரிக்கமாட்டார் என்றும், தங்களை எப்போதும் போலவே ஆசீர்வதிப்பார் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். இவர்களைப்போலத்தான், அக்காலத்தில், இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதாவின் வம்சத்தாரும் நினைத்தார்கள். "கர்த்தர் அப்படிப்பட்டவர் அல்லவென்றும், பொல்லாப்பு நம்மேல் வராது, நாம் பட்டயத்தையாகிலும், பஞ்சத்தையாகிலும் காண்பதில்லை" (எரே 5:12) என்றும் சொன்னார்கள்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் இவர்களுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொன்னார்கள். ஜனங்களுடைய பாவங்களைக் குறித்தும், பாவத்தின் நிமித்தமாய் வரப்போகும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்தும், தீர்க்கதரிசிகள் ஜனங்களை எச்சரித்தார்கள். ஆனால் ஜனங்களோ தீர்க்கதரிசிகளை ஏளனம்பண்ணினார்கள். அவர்களுடைய எச்சரிப்பின் வார்த்தைகளை அசட்டைபண்ணினார்கள்.

"தீர்க்கதரிசிகள் காற்றாய்ப்போவார்கள்; திருவாக்கு அவர்களில் இல்லை; அவர்களுக்கே அப்படி ஆகக்கடவதென்றும், அவர்கள் சொல்லிக் கர்த்தரை மறுதலித்தார்கள்" (எரே 5:13). தீர்க்கதரிசிகள் எதை வேண்டுமானாலும் பேசுவார்கள் என்றும், பேசுவதுதான் அவர்களுடைய வேலை என்றும் சொல்லி, தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு ஜனங்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. தீர்க்கதரிசிகள் சொல்லுவது கர்த்தருடைய வார்த்தையல்ல என்றும், அது அவர்களுடைய சொந்த வார்த்தைகள் என்றும், சொல்லி கர்த்தரை மறுதலித்தார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதா வம்சத்தாரும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை அசட்டைபண்ணியதோடு, தீர்க்கதரிசிகளை பயமுறுத்தவும் செய்தார்கள். "தீர்க்கதரிசிகள் காற்றாய்ப்போவார்கள்" என்றும், "அவர்களுக்கே அப்படி ஆகக்கடவது" என்றும் சொல்லி தீர்க்கதரிசிகளை சபித்தார்கள்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பாக ஜனங்களுக்கு பஞ்சம் வரும் என்று தீர்க்கதரிசிகள் எச்சரித்தார்கள். ஜனங்களோ அவர்களுடைய எச்சரிப்பின் வார்த்தைகளைக் கேட்காமல், தீர்க்கதரிசிகள்தான் இடுக்கத்தின் அப்பத்தைப் புசிப்பார்கள் என்று சொல்லி அவர்களை சபித்தார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லையென்றால், ஜனங்களுக்கு விரோதமாய் பட்டயம் வரும் என்று தீர்க்கதரிதரிசிகள் எச்சரித்தார்கள். ஜனங்களோ எச்சரிப்பின் வார்த்தைகளைக் கேட்காமல், தீர்க்கதரிசிகள்தான் பட்டயத்தால் அழிந்துபோவார்கள் என்று சொல்லி, அவர்களுடைய வார்த்தைகளை ஏளனம்பண்ணினார்கள்.

"நான் உங்கள் பிள்ளைகளை அடித்தது விருதா; சிட்சையை ஏற்றுக்கொள்ளாமற்போனார்கள்; அழிக்கிற சிங்கத்தைப்போல உங்கள் பட்டயம் உங்கள் தீர்க்கதரிசிகளைப் பட்சித்தது" (எரே 2:30).

இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதா வம்சத்தாரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பும், தேவன் கொடுக்கும் தண்டனையும் வருகிறது. கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியாகிய எரேமியாவுக்கு தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். "இதோ, நான் உன் வாயிலிட்ட என் வார்த்தைகளை அக்கினியும், இந்த ஜனத்தை விறகும் ஆக்குவேன், அது அவர்களைப் பட்சிக்கும்" (எரே 5:14) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

பாவிகள் தங்களுடைய பாவங்களினால், தங்களைத் தாங்களே விறகாகவும், எரிபொருளாகவும் ஆக்குகிறார்கள். அவர்கள்மீது சத்துரு வருவான். அவர்களை அழிக்கும்படி கர்த்தர் சத்துருக்களுக்கு கட்டளைகொடுப்பார். "அதின் மதில்கள்மேல் ஏறி அழித்துப்போடுங்கள்" (எரே 5:10) என்று கர்த்தர் சத்துருக்களுக்கு கட்டளை கொடுப்பார். அவர்கள் இஸ்ரவேல் வம்சத்தார்மீதும், யூதாவம்சத்தார்மீதும் ஏறி, அவர்களை அழித்துப்போடுவார்கள்.

எருசலேமின் மதில்கள் பெரிய கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. ஆனாலும் கர்த்தருடைய வார்த்தைக்கு முன்பாக, அது சாதாரண மண்சுவரைப்போல இருக்கும். மதில்கள் பலமிழந்துபோகும். கர்த்தர் சத்துருக்களிடம் "அதின் கொத்தளங்களை இடித்துப்போடுங்கள்" என்று சொல்லுவார். சத்துருக்கள் எருசலேமின் கொத்தளங்களை இடித்துப்போடுவார்கள்.

யூதாவின் பட்டணங்கள் அரணிப்பாயிருக்கிறது. சத்துருக்களோ அந்தப் பட்டணங்கள்மீது வந்து, அதன் மதில்கள்மேல் ஏறி, அதன் கொத்தளங்களையெல்லாம் இடித்துப் போடுவார்கள். மதில்களில் திறப்பு உண்டாயிருக்கும். பட்டணங்களுக்குள்ளே வாசல் வழியாகத்தான் பிரவேசிக்க வேண்டும் என்னும் அவசியம் இருக்காது. மதில்களில் ஏராளமான திறப்புக்கள் இருப்பதினால், சத்துருக்கள் அந்தத் திறப்புக்கள் வழியாக, பட்டணங்களுக்குள்ளே தாராளமாய் பிரவேசிப்பார்கள். சத்துருக்களை தடுப்பதற்கு ஒருவரும் இருக்கமாட்டார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் பட்டணங்களின் மதில்களையும், கொத்தளங்களையும் பற்றிச் சொல்லும்போது, "அவைகள் கர்த்தருடையவைகள் அல்ல" (எரே 5:10) என்று சொல்லுகிறார். இதுபோலவே யூதாவின் பட்டணங்களிலுள்ள மதில்களும் கொத்தளங்களும் கர்த்தருடையவைகள் அல்ல. கர்த்தர் அவர்களுடைய பட்டணங்களைப் பாதுகாக்கவில்லை. கர்த்தர் அவர்களுக்கு அரணாகவோ, துருகமாகவோ இல்லை.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கு விரோதமாய், தூரத்திலிருந்து ஒரு ஜாதியை கொண்டு வருவார். அது பலத்த ஜாதியாகவும், பூர்வகாலத்து ஜாதியாகவும் இருக்கும். "அவர்கள் நீ அறியாத பாஷையைப் பேசும் ஜாதி, அவர்கள் பேசுகிறது இன்னதென்று உனக்கு விளங்காது" (எரே 5:15) என்று கர்த்தர் சொல்லுகிறார். தூரத்திலிருந்து வரும் பலத்த ஜாதி கல்தேயருடைய தேசத்தைக் குறிக்கிற வார்த்தை. அவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு வெகுதூரத்திலிருக்கிறார்கள். கர்த்தர் கல்தேயர் ஜாதியை இஸ்ரவேல் வம்சத்தார்மீது கொண்டு வருகிறார்.

கல்தேயர்கள் யூதா தேசத்திற்கு விரோதமாய் வருவார்கள். யூதாவின் பட்டணங்களை சுற்றிலுமாய் கொத்தளங்களை வெட்டி, முற்றிக்கைப்போடுவார்கள். அங்கே நீண்டகாலமாய் தங்கியிருப்பார்கள். அவர்கள் பலத்த ஜாதியாகவும், பூர்வகாலத்து ஜாதியாகவும் இருப்பார்கள். அவர்களுக்கு போஜனத்திற்கும், பானத்திற்கும் குறைவிருக்காது. அவர்களுடைய பூர்வீகமே பலத்த ஜாதியாகயிருக்கிறது. அவர்கள் யுத்தம்பண்ணுவதில் வல்லவர்கள்.

கல்தேயர்கள் சீரிய பாஷையைப் பேசுகிறார்கள். இஸ்ரவேல் ஜனங்களால் கல்தேயரோடு சமாதான உடன்படிக்கையும் பண்ணமுடியாது. யூதர்களுக்கு சீரிய பாஷை தெரியாது. அவர்களுக்கும் எபிரெய பாஷை தெரியாது. ஒருவருடைய பாஷை மற்றொருவருக்கு தெரியாதிருப்பதினால், அவர்களுக்குள் தகவல் தொடர்பு ஏற்படுத்துவதற்கும் வழியில்லாதிருக்கும். கல்தேயர்கள் எல்லோருமே பராக்கிரமசாலிகள். அவர்களுடைய அம்பறாதுணிகள் திறந்த பிரேதக்குழிகளைப்போல இருக்கும்.

"அவர்கள் உன் குமாரரும் உன் குமாரத்திகளும் சாப்பிடவேண்டிய உன் விளைச்சலையும், உன் அப்பத்தையும் சாப்பிட்டு, உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் பட்சித்து, உன் திராட்சப்பழங்களையும் உன் அத்திப்பழங்களையும் சாப்பிட்டு, நீ நம்பின உன்னுடைய அரணான பட்டணங்களைப் பட்டயத்தாலே வெறுமையாக்குவார்கள்" (எரே 5:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய ஆடுகளையும் மாடுகளையும் பர்வதங்களிலுள்ள விக்கிரகங்களுக்கு பலியிட்டார்கள். இனிமேல் பலியிடுவதற்கு அவர்களுக்கு ஆடுகள் இருக்காது. கல்தேயர்கள் அவர்களுடைய ஆடுகளையும் மாடுகளையும் பட்சித்துப்போடுவார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்களுடைய அரணான பட்டணங்களை நம்பினார்கள். அவை தங்களுக்கு பாதுகாப்பைத் தரும் என்று நினைத்தார்கள். ஆனால் கல்தேயர்களோ அவர்களுடைய அரணான பட்டணங்களை தங்கள் பட்டயத்தால் வெறுமையாக்கிப் போடுவார்கள். கர்த்தரை நம்பினால் அவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும். இஸ்ரவேல் வம்சத்தாரோ கர்த்தரை நம்பாமல் அரணான பட்டணங்களை நம்பினார்கள். பட்டணங்கள் அவர்களைப் பாதுகாக்கவில்லை.

இஸ்ரவேல் வம்சத்தார்மீதும், யூதா வம்சத்தார்மீதும் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு வருகிறது. அவர்களுக்கு அழிவு வருகிறது. வேதனைகளும் உபத்திரவங்களும் வருகிறது. இவற்றிற்கு மத்தியில் கர்த்தர் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். "ஆகிலும் நான் அந்நாட்களிலும் உங்களைச் சர்வசங்காரம் செய்யாதிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 5:18). கர்த்தர் அவர்களை சர்வசங்காரம் செய்யாதிருப்பாரென்றால், சத்துருக்களும் அவர்களை சர்வசங்காரம் செய்யமாட்டார்கள். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் மாத்திரமே நடைபெறும். கர்த்தருடைய சித்தத்திற்கும், விருப்பத்திற்கும் விரோதமாய் யாராலும் ஒன்றும் செய்யமுடியாது.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரையும் யூதாவம்சத்தாரையும் தம்முடைய நீதியினாலும், தம்முடைய நியாயத்தினாலும் தண்டிக்கிறார். கர்த்தர் அவர்களைத் தண்டித்தாலும், அவர்களை முற்றிலுமாய் அழித்துப்போடவில்லை. அவர்களை சர்வசங்காரம் செய்யவில்லை. கர்த்தர் இன்னும் கிருபையுள்ளவராகவே இருக்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரும் யூதாவம்சத்தாரும் கர்த்தருடைய பிள்ளைகள். கர்த்தர் தங்களை தண்டிக்கமாட்டார் என்றும், அவர் தங்களைத் தண்டிக்கிறவர் அல்ல என்றும், பொல்லாப்பு தங்கள்மேல் வராது என்றும், தாங்கள் பட்டயத்தையாகிலும் பஞ்சத்தையாகிலும் காண்பதில்லை என்றும் இஸ்ரவேல் புத்திரர் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் நினைத்ததற்கு மாறாக, அவர்களுக்கு காரியங்கள் ஒவ்வொன்றாய் நடைபெறுகிறது. அவர்கள் பஞ்சத்தைக் காண்கிறார்கள். பட்டயத்தைக் காண்கிறார்கள். "எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு இவைகளையெல்லாம் எதினிமித்தம் செய்தார்" என்று தங்களுக்குத் தாங்களே கேட்டுக்கொள்கிறார்கள்.

அவர்கள் இந்தக் கேள்வியை எரேமியா தீர்க்கதரிசியிடமும் கேட்கிறார்கள். அவர்களுடைய கேள்விக்கு என்ன பதில் சொல்லவேண்டுமென்று, கர்த்தர் எரேமியாவுக்கு சொல்லுகிறார். "நீ அவர்களைப் பார்த்து: நீங்கள் என்னைவிட்டு, உங்களுடைய தேசத்திலே அந்நிய தேவர்களைச் சேவித்ததுபோல, உங்களுடையதல்லாத தேசத்திலே அந்நியர்களைச் சேவிப்பீர்களென்று சொல்வாயாக" (எரே 5:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களை பரிசுத்தவான்களைப்போலவும், தங்களுடைய தேசத்தை பக்தியுள்ள தேசம் போலவும் நினைத்துக்கொள்கிறார்கள். அவர்களிடத்தில் காணப்படுகிற பாவங்களும் அசுத்தங்களும் அவர்களுக்கு தெரியவில்லை. அவர்கள் தங்கள் பாவங்களை உணரவுமில்லை. அவர்களுடைய பாவங்களும், தேவனுடைய நியாயத்தீர்ப்பும் அவர்களுக்கு எச்சரிப்பாய்ச் சொல்லப்பட்டது. ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. தங்களுடைய சுயவிருப்பத்திற்கு செவிகொடுத்தார்கள். தங்கள் சுயஇஷ்டம்போல பேசினார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை தண்டிக்கிறார். தாங்கள் இவ்வளவு தண்டனைகளை அனுபவிப்பதற்கு என்ன காரணம் என்பதுகூட இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தெரியவில்லை. தாங்கள் கர்த்தருக்கு விரோதமாக செய்த பாவங்களை பற்றிய உணர்வுகூட அவர்களிடத்தில் காணப்படவில்லை. அவர்களுடைய மனச்சாட்சி கூர்மையாயில்லை. தங்களுடைய பாவங்களே, தாங்கள் அனுபவிக்கிற தண்டனைகளுக்கு காரணம் என்பதைக்கூட அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதனை செய்யவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரை ஆராதியாமல் அவரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தை பரிசுத்தப்படுத்தி ஆசீர்வதித்திருக்கிறார். தம்முடைய தேசத்தில் தம்மை ஆராதிக்கிற ஆராதனை மாத்திரமே நடைபெறவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ, இஸ்ரவேல் தேசத்திலேயே, அந்நிய தேவர்களை சேவித்து, தேசத்தை தீட்டுப்படுத்துகிறார்கள். இதன் நிமித்தமாய் இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசத்திலே, அந்நிய தேவர்களை சேவிப்பார்கள். அதற்காக, கர்த்தர் அவர்களை அந்நிய தேசத்திற்கு துரத்திவிடுகிறார்.

"சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியாமற்போனதினிமித்தம், சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும் தாகத்தோடும் நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்; அவர்கள் உன்னை அழித்துத் தீருமட்டும், இரும்பு நுகத்தடியை உன் கழுத்தின்மேல் போடுவார்கள்" (உபா 28:47,48).

கர்த்தருக்குப் பயப்படும் பயம்
எரே 5:20-24

எரே 5:20. நீங்கள் யாக்கோபின் வீட்டிலே அறிவித்து, யூதாவிலே சொல்லிக் கூறவேண்டியது என்னவென்றால்,

எரே 5:21. கண்கள் இருந்தும் காணாமலும், காதுகள் இருந்தும் கேளாமலுமிருக்கிற அறிவில்லாத ஜனங்களே, கேளுங்கள்.

எரே 5:22. எனக்குப் பயப்படாதிருப்பீர்களோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; அலைகள் மோதியடித்தாலும்மேற்கொள்ளாதபடிக்கும், அவைகள் இரைந்தாலும் கடவாதபடிக்கும், கடக்கக்கூடாத நித்திய பிரமாணமாக சமுத்திரத்தின் மணலை எல்லையாய் வைத்திருக்கிறவராகிய எனக்கு முன்பாக அதிராதிருப்பீர்களோ?

எரே 5:23. இந்த ஜனங்களோ முரட்டாட்டமும் கலகமுமான இருதயமுள்ளவர்கள்; முரட்டாட்டம் பண்ணிப்போய்விடுகிறார்கள்.

எரே 5:24. அந்தந்தப் பருவத்திலே எங்களுக்கு மழையையும், முன்மாரியையும் பின்மாரியையும் கொடுத்து, அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்குத் தற்காக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருப்போம் என்று அவர்கள் தங்கள் இருதயத்திலே சொல்லுகிறதில்லை.

இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதாவம்சத்தாரும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்களை கடிந்துகொள்வதற்காகவும், அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருமென்று எச்சரித்து சொல்லுவதற்காகவும், கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியை அவர்கள் மத்தியிலே அனுப்பினார். எரேமியா தீர்க்கதரிசி கர்த்தர் தனக்கு சொன்ன செய்தியை, இஸ்ரவேல் தேசத்தாருக்கும், யூதாதேசத்தாருக்கும் சொன்னார்.

இப்போது கர்த்தர் மறுபடியுமாக, எரேமியாவுக்கு புதிய செய்தியைக் கொடுத்து, அவரை யூதா தேசத்திற்கு அனுப்புகிறார். யூதா தேசத்தாரிடம் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருக்கவேண்டும். இதுவே எரேமியாவின் பிரதான செய்தி. கர்த்தர் எரேமியாவை அனுப்பும்போது, "நீங்கள் யாக்கோபின் வீட்டிலே அறிவித்து, யூதாவிலே சொல்லிக் கூறவேண்டியது என்னவென்றால்" (எரே 5:20) என்று சொல்லி அனுப்புகிறார்.

யூதாவின் ஜனங்கள் அறிவில்லாதவர்களாயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் கண்கள் இருந்தும் காணாமலும், காதுகள் இருந்தும் கேளாமலும் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார். அவர்கள் கர்த்தரைப்பற்றி தியானிப்பதில்லை. கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும் காண்பதில்லை. கர்த்தருடைய செய்தியைக் கேட்பதுமில்லை. அவர்கள் அறிவில்லாத ஜனங்களாயிருக்கிறார்கள்.

கர்த்தர் யூதாவின் ஜனங்களுக்கு, எரேமியா தீர்க்கதரிசி மூலமாய் தம்முடைய செய்தியை தெளிவாகச் சொல்லி அனுப்புகிறார். கர்த்தர் அவர்களுக்கு சரீரப்பிரகாரமான பராமரிப்புக்களைக் கொடுத்திருக்கிறார். அவர்களுடைய சரீரங்களில் கண்களும், காதுகளும் இருக்கிறது. ஆனால் அவை காணாத கண்களாயும், கேளாதிருக்கிற செவிகளாயும் இருக்கிறது. அவர்களுக்கு கண்களும் காதுகளும் இருந்தும், அவற்றை அவர்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டுமோ, அவ்வாறு பயன்படுத்தவில்லை.

யூதாவின் ஜனத்தார் கலககுணமுள்ளவர்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். "இந்த ஜனங்களோ முரட்டாட்டமும் கலகமுமான இருதயமுள்ளவர்கள்; முரட்டாட்டம்பண்ணிப் போய்விடுகிறார்கள்" (எரே 5:23) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களுடைய முரட்டாட்டமான சுபாவம் அவர்களுடைய கண்களையும், செவிகளையும் அடைத்துப்போடுகிறது. அவர்களை உணர்வில்லாமல் ஆக்கிவிடுகிறது.

யூதாவின் மனுஷரைப்போலவே எல்லா மனுஷரும் முரட்டாட்டமும், கலகமுமான இருதயமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் தேவனுடைய கிருபை வந்து தங்கி, கிரியை நடப்பித்தால் மாத்திரமே, அவர்களுடைய சுபாவத்தில் நல்ல மாற்றமுண்டாகும். அப்போதுதான் அவர்களிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருக்கும். கர்த்தருடைய கிருபை அவர்கள் இருதயத்தில் கிரியை நடப்பிக்கும் வரையிலும், அவர்கள் முரட்டாட்டமும் கலகமுமான இருதயமுள்ளவர்களாகவே இருப்பார்கள்.

யூதா ஜனங்களைப்போலவே, எல்லா ஜனங்களும் பொதுவாக அறிவில்லாத ஜனங்களாகவே இருக்கிறார்கள். மந்தபுத்தியுள்ளவர்களாகவும், சத்தியத்தைப் புரிந்துகொள்ளாதவர்களாகவும் இருக்கிறார்கள். நம்மிடத்தில் மெய்யான அறிவும், மெய்யான ஞானமும் இல்லையென்றால், நமக்கு நன்மையான காரியங்கள்மீது பிரியம் இருக்காது. நம்முடைய இருதயம் சத்தியத்தை விரும்பாது. நீதியையும் நியாயத்தையும் நேசிக்காது. கர்த்தருடைய கிருபை நமக்குள்ளே கிரியை நடப்பிக்கும் வரையிலும் நமக்கு சத்தியத்தின்மீதும், நன்மையான காரியங்கள்மீதும் வெறுப்பு இருக்கும். நம்முடைய இருதயம் முரட்டாட்டம் பண்ணும். பாவத்தையும் தீமையையும் பற்றிக்கொள்ளும்.

யூதாவின் மனுஷரிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் காணப்படவில்லை. "எனக்கு பயப்படாதிருப்பீர்களோ" (எரே 5:22) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரைப் பார்த்து கேட்கிறார். கர்த்தர் யூதாவின் மனுஷரைப் பார்க்கும்போதே, அவர்கள் அறிவில்லாத ஜனங்கள் என்பதைப் புரிந்துகொள்கிறார். அதோடு அவர்கள் தமக்கு பயப்படாதிருக்கிற ஜனங்கள் என்பதையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். யூதாவின் மனுஷர் துணிகரமாயும், முரட்டாட்டமாயும் ஜீவிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக அதிராதிருக்கிறார்கள். இருமாப்பாய் நிற்கிறார்கள்.

கர்த்தர் சர்வவல்லவர். அவருடைய கிரியைகள் எல்லாமே மிகவும் பெரியது. அவர் மகிமையும், மகத்துவமுமுள்ளவர். அலைகள் மோதியடித்தாலும் மேற்கொள்ளாத படிக்கும், அவைகள் இரைந்தாலும் கடவாதபடிக்கும், கடக்கக்கூடாத நித்திய பிரமாணமாக சமுத்திரத்தின் மணலை எல்லையாய் வைத்திருக்கிறவர் (எரே 5:22).

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நன்மை செய்கிறார். அவர்களைப் பாதுகாத்து பராமரிக்கிறார். அவர்களுக்கு மழையைக் கொடுத்து ஆசீர்வதிக்கிறார். அறுவடை காலத்தைக் கொடுக்கிறார். யூதாவின் மனுஷர் கர்த்தரைப்பற்றி நினைக்கும்போது, "அந்தந்தப் பருவத்திலே எங்களுக்கு மழையையும், முன்மாரியையும் பின்மாரியையும் கொடுத்து, அறுப்புக்கு நியமித்த வாரங்களை எங்களுக்குத் தற்காக்கிற எங்கள் தேவனாகிய கர்த்தர்" (எரே 5:24) என்று நினைக்கவேண்டும்.

"எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்திருப்போம்" என்று அவர்கள் தங்கள் இருதயத்தில் சொல்லவேண்டும். ஆனால் அவர்களோ அறிவில்லாத ஜனங்களாகவும், முரட்டாட்டமுள்ள ஜனங்களாகவும், கலக இருதயமுள்ள ஜனங்களாகவும் இருக்கிறார்கள். ஆகையினால், எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பயந்திருப்போம் என்று அவர்கள் தங்கள் இருதயத்தில் சொல்லுகிறதில்லை. அவர்களுடைய சிந்தையிலே தீயஎண்ணங்கள் உண்டாயிற்று. அவர்களுடைய இருதயத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயமில்லை. முரட்டாட்டமும் கலககுணமும் இருக்கிறது. இதன் நிமித்தமாய் அவர்களுடைய இருதயங்களில் நல்ல சிந்தனைகளுக்குப் பதிலாக, தீயசிந்தனைகள் நிரம்பியிருக்கிறது.

நாம் கர்த்தருக்கு பயப்படும்போது அவருடைய மகிமையையும் மகத்துவத்தையும் நினைத்து பயப்படவேண்டும். மேலும் கர்த்தருடைய நன்மையான கிரியைகளை நினைத்தும் நாம் அவருக்குப் பயப்படவேண்டும். கர்த்தர் கடலுக்கு எல்லையை நியமித்திருக்கிறார். சமுத்திரத்தின் மணலை அதற்கு எல்லையாக வைத்திருக்கிறார்.

சமுத்திரத்தின் அலைகள் வேகமாக வீசும். கடற்கரைமீது மோதியடிக்கும். கடற்கரையிலுள்ள மணல் கடல் அலைகளை தடுக்கவில்லையென்றால், இந்தப் பூமியே அழிந்துவிடும். பல சமயங்களில் கடல் அலைகளோடு புயல்காற்றும், சூறாவளி காற்றும் சேர்ந்து, கடல் அலைகளின் வேகத்தை அதிகரிக்கும். கடல் அலைகள் கடற்கரை மணலின்மீது எத்தனை தரம் மோதியடித்தாலும், அது மறுபடியும் கடலுக்கே திரும்பிப்போய்விடும். கடல் அலைகள் கரையை கடப்பதுமில்லை. அது யாருக்கும் சேதம் உண்டுபண்ணுவதுமில்லை.

சமுத்திரமும், சமுத்திரத்தின் அலைகளும், சமுத்திரத்தின் எல்லையாகிய மணலும் கர்த்தருடைய மகத்துவமான கிரியைகள். இவை நம்முடைய வாழ்க்கையில் அன்றாடம் காணக்கூடிய காரியங்கள். இது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயும், அற்புதமாயும் இருக்கிறது. கர்த்தர் சமுத்திரத்தின் அலைகளை கட்டுப்படுத்துவதற்கு மணல் சுவரை வைத்திருக்கிறார். இது சாதாரண மணல் சுவராகயிருந்தாலும், வெண்கல சுவர்போல வலிமையுள்ளது. கடல் அலைகள் எவ்வளவு வேகமாய் மோதியடித்தாலும், அவற்றால் கர்த்தர் வைத்திருக்கிற மணல் எல்லையை தாண்டி வரமுடியாது. மணல் மென்மையானதாகயிருந்தாலும், அது அதிக வலுவுள்ளதாயிருக்கிறது.

நம்முடைய ஜீவியத்திலும், மெதுவான பிரதியுத்தரம், உக்கிரகோபத்தைத் தணிக்கும். நாம் அன்பாய்ப் பேசும்போது, நம்முடைய வார்த்தைகள் பொங்கி எழுகிற கோபத்தைக்கூட ஆறவைத்துவிடும். கோபமான வார்த்தைகள் கற்பாறையைப் போன்றவை. கற்பாறைகள் உடைந்துபோகும். மணல் ஒருபோதும் உடைந்துபோவதில்லை.

கர்த்தர் சமுத்திரத்திற்கு மணலை எல்லையாக வைத்திருக்கிறார். இது தேவனுடைய நிரந்தரமான பிரமாணம். தேவன் ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். சமுத்திரத்தை பூமியிலிருந்து பிரித்தார். அப்போதே கர்த்தர் நித்திய பிரமாணமாக சமுத்திரத்தின் மணலை கடலுக்கு எல்லையாக வைத்துவிட்டார்.

"பின்பு தேவன்: வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன் அது நல்லது என்று கண்டார்" (ஆதி 1:9,10).

"அதை வஸ்திரத்தினால் மூடுவதுபோல ஆழத்தினால் மூடினீர்; பர்வதங்களின்மேல் தண்ணீர்கள் நின்றது. அவைகள் உமது கண்டிதத்தால் விலகியோடி, உமது குமுறலின் சத்தத்தால் விரைந்துபோயிற்று. அவைகள் மலைகளில் ஏறி, பள்ளத்தாக்குகளில் இறங்கி, நீர் அவைகளுக்கு ஏற்படுத்தின இடத்தில் சென்றது. அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக்கொள்ளாதபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர்" (சங் 104:6-9).

"கர்ப்பத்திலிருந்து உதிக்கிறது போல் சமுத்திரம் புரண்டுவந்தபோது, அதைக் கதவுகளால் அடைத்தவர் யார்? மேகத்தை அதற்கு வஸ்திரமாகவும், இருளை அதற்குப் புடவையாகவும் நான் உடுத்தினபோதும், நான் அதற்கு எல்லையைக் குறித்து, அதற்குத் தாழ்ப்பாள்களையும் கதவுகளையும் போட்டு: இம்மட்டும் வா, மிஞ்சி வராதே; உன் அலைகளின் பெருமை இங்கே அடங்கக்கடவது என்று நான் சொல்லுகிறபோதும் நீ எங்கேயிருந்தாய்?" (யோபு 38:8-11).

அலைகள் மோதியடித்தாலும் மேற்கொள்ளாதபடிக்கும், அவைகள் இரைந்தாலும் கடவாதபடிக்கும், கடக்கக்கூடாத நித்திய பிரமாணமாக கர்த்தர் சமுத்திரத்தின் மணலை எல்லையாய் வைத்திருக்கிறார். இது நித்திய பிரமாணமாயிருப்பதினால், இந்நாள் வரைக்கும் சமுத்திரத்தின் அலைகளுக்கு, அதன் மணலே எல்லையாயிருக்கிறது. உலகத்தின் முடிவு பரியந்தமும் கடற்கரையிலுள்ள மணலே சமுத்திரத்திற்கு எல்லையாயிருக்கும். இது கர்த்தருடைய மகத்துவமான கிரியை.

சமுத்திரத்திற்கு நித்திய பிரமாணத்தைக் கொடுத்திருக்கிற கர்த்தருக்கு நாம் பயப்படவேண்டும். அவருக்கு முன்பாக நாம் அதிரவேண்டும். கர்த்தர் யூதாவின் மனுஷரிடத்தில், "எனக்கு பயப்படாதிருப்பீர்களோ" என்றும், "எனக்கு முன்பாக அதிராதிருப்பீர்களோ" என்றும் கேட்கிறார் (எரே 5:22).

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நன்மையான கிரியைகளை நடப்பிக்கிறவர். "பின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பி, தங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும் தேடி, கடைசி நாட்களில் கர்த்தரையும், அவருடைய தயவையும் நாடி அஞ்சிக்கையாய் வருவார்கள்" (ஓசி 3:5).

நாம் தேவனாகிய கர்த்தருக்கு பயந்திருக்கவேண்டும். கர்த்தருக்குப் பயப்படுதல் என்னும் வாக்கியத்திற்கு, கர்த்தரை பயபக்தியோடு ஆராதனை செய்வது என்று பொருள். அவர் நமக்கு தொடர்ந்து நன்மை செய்துகொண்டிருப்பதினால், நாம் கர்த்தருக்கு எப்போதும் நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும். அவருக்கு பயந்திருக்கவேண்டும். அவரை பயபக்தியோடு ஆராதனை செய்யவேண்டும்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு அந்தந்த பருவத்திலே மழையையும் முன்மாரியையும், பின்மாரியையும் கொடுக்கிறார். முன்மாரி விதைப்புக்காலத்திற்கு பின்பு பெய்யும். பின்மாரி அறுவடை காலத்திற்கு முன்பு பெய்யும். இதனால் பயிர்கள் செழித்து வளரும். தானியஅறுவடை சிறப்பாயிருக்கும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு அறுப்புக்கு நியமித்த வாரங்களை தற்காக்கிறார். கர்த்தருடைய கிருபையினால் அந்தந்த பருவத்திலே தானிய அறுவடை சிறப்பாய் நடைபெறுகிறது.

தானியங்கள் விளைவதும், விளைந்த தானியத்தை நாம் அறுவடை செய்வதும் கர்த்தருடைய கிருபை. அறுவடை நாளின்போது கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளையும், அவருடைய வல்லமையையும், பலத்தையும், பராக்கிரமத்தையும் நினைவுகூர்ந்து, நாம் கர்த்தரை பயபக்தியோடு துதிக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளோடு செய்து கொண்ட வாக்குத்தத்தத்தில் உண்மையுள்ளவராயிருக்கிறார். கர்த்தரே மழையைக் கொடுக்கிறவர். அவரே விதைக்கிறவனுக்கு விதையையும், அறுவடைக்கு தானியத்தையும் கொடுக்கிறவர்.

நாம் கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும் நினைத்து அவருக்கு பயப்படவேண்டும். ஆனால் யூதாவின் ஜனங்களோ முரட்டாட்டமும், கலகமுமான இருதயமுள்ளவர்கள். அவர்கள் முரட்டாட்டம் பண்ணி கர்த்தரை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள் (எரே 5:23). கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மழையையும், அறுவடையையும் கொடுத்து அவர்களை ஆசீர்வதிக்கிறார். ஆனால் அவர்களோ, "எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பயந்திருப்போம்" (எரே 5:24) என்று தங்கள் இருதயத்தில் சொல்லுகிறதில்லை.

கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர் எரே 5:25-31

எரே 5:25. உங்கள் அக்கிரமங்கள் இவைகளை விலக்கி, உங்கள் பாவங்கள் உங்களுக்கு நன்மையை வரவொட்டாதிருக்கிறது.

எரே 5:26. குருவிபிடிக்கிறவர்கள் பதுங்குகிறதுபோல் பதுங்கி, மனுஷரைப் பிடிக்கக் கண்ணிகளை வைக்கிற துன்மார்க்கர் என் ஜனங்களில் காணப்படுகிறார்கள்.

எரே 5:27. குருவிகளால் கூண்டு நிறைந்திருக்கிறதுபோல், அவர்கள் வீடுகள் கபடங்களால் நிறைந்திருக்கிறது; ஆதலால் அவர்கள் பெருகி ஐசுவரியவான்களாகிறார்கள்.

எரே 5:28. கொழுத்து, சளுக்குப் பண்ணுகிறார்கள்; துன்மார்க்கனுடைய செயல்களைக் கண்டிக்காமல் விடுகிறார்கள்; திக்கற்றவனுடைய வழக்கை விசாரியாமல், தாங்கள் மாத்திரம் வாழுகிறார்கள்; எளியவர்களின் நியாயத்தைத் தீரார்கள்.

எரே 5:29. இவைகளை விசாரியாதிருப்பேனோ? இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டாதிருக்குமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 5:30. திகைத்துத் திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்துவருகிறது.

எரே 5:31. தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது; ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்?

யூதாவின் புத்திரரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களிடத்தில் அக்கிரமங்களும், அநியாயங்களும், பாவங்களும் அதிகமாயிருக்கிறது. கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, அவர்களுடைய பாவங்களே, அவர்களுக்கு தடையாயிருக்கிறது. "உங்கள் அக்கிரமங்கள் இவைகளை விலக்கி, உங்கள் பாவங்கள் உங்களுக்கு நன்மையை வரவொட்டாதிருக்கிறது" (எரே 5:25) என்று எரேமியா சொல்லுகிறார்.

கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் ஆசீர்வதிப்பதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். ஆனால் அவர்களுடைய பாவங்கள், கர்த்தருடைய சமுகத்திலிருந்து அவர்களுக்கு நன்மை வருவதை தடைபண்ணிவிடுகிறது. அவர்களுடைய பாவங்களினால் பரலோகம் வெண்கலமாகிறது. பூமி இரும்பாகிறது.

யூதா மனுஷருடைய பாவங்களும், எருசலேமின் குடிகளுடைய பாவங்களும் மிகவும் அதிகமாயிருக்கிறது. அவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரை ஆராதனை செய்வதை விட்டுவிடுகிறார்கள். அவர்கள் மத்தியிலே பொதுவான நீதியும், நியாயமும், கண்ணியமும், உண்மையும் காணப்படவில்லை. "துன்மார்க்கர் என் ஜனங்களில் காணப்படுகிறார்கள்" (எரே 5:26) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய பிள்ளைகள். அவர்கள் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். அவர்கள் மத்தியிலும் துன்மார்க்கர் காணப்படுவது மிகவும் மோசமான காரியம்.

"துன்மார்க்கர் என் ஜனங்களில் காணப்படுகிறார்கள்" என்னும் வாக்கியத்திற்கு, "துன்மார்க்கர் தங்களுடைய துன்மார்க்கங்களில் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்றும், "அவர்கள் துன்மார்க்கமான கிரியைகளில் ஈடுபட்டிருக்கும்போது பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்" என்றும் பொருள்.

வேட்டையாடுகிறவர்கள் வலைகளையும் கண்ணிகளையும் விரிப்பார்கள். குருவி பிடிக்கிறவர்கள் பதுங்குவார்கள். அவர்களைப்போலவே கர்த்தருடைய ஜனங்களும் மனுஷரைப் பிடிக்கிறதற்கு கண்ணிகளை வைக்கிறார்கள். குருவி பிடிக்கிறவர்கள் குருவிகளை வைத்து வியாபாரம்பண்ணுவார்கள். அதை சமைத்து புசிப்பார்கள். தங்களுடைய சரீர பசியைப்போக்கிக்கொள்வார்கள். துன்மார்க்கரும் மனுஷரைப் பிடிக்கும்போது, அவர்களை தங்களுடைய சுய ஆதாயத்திற்காகப் பயன்படுத்திக்கொள்வார்கள்.

துன்மார்க்கர் நல்லவர்களுக்கும் தீங்கு செய்கிறார்கள். நீதிமான்களிடத்தில் காணப்படுகிற நீதியும், நல்லவர்களிடத்தில் காணப்படுகிற நன்மையான சுபாவங்களும் துன்மார்க்கருக்கு பிடிப்பதில்லை. நீதிமான்கள் துன்மார்க்கரைக் கடிந்துகொள்கிறார்கள். இதன் நிமித்தமாய் துன்மார்க்கர் நீதிமான்கள்மீது கோபமாயிருக்கிறார்கள்.

"ஒரு வார்த்தையினிமித்தம் மனுஷனைக் குற்றப்படுத்தி, நியாயவாசலில் தங்களைக் கடிந்துகொள்ளுகிறவனுக்குக் கண்ணிவைத்து, நீதிமானை நிர்நிமித்தமாய்த் துரத்தி, இப்படி அக்கிரமஞ்செய்ய வகைதேடுகிற யாவரும் சங்கரிக்கப்படுவார்கள்" (ஏசா 29:21).

துன்மார்க்கர் நல்லவர்களுடைய சொத்துக்களை வஞ்சித்து அபகரித்துக் கொள்கிறார்கள். யேசபேல் நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை அபகரித்துக் கொள்வதற்காக, அவனுக்கு கண்ணியை வைத்தாள். நாபோத்தைக் கொன்றுபோட்டு, அவனுடைய திராட்சத்தோட்டத்தை அபகரித்துக்கொண்டாள்.

துன்மார்க்கருடைய வீடுகள் கபடங்களால் நிறைந்திருக்கிறது. குருவி பிடிக்கிறவர்களின் கூண்டு குருவிகளால் நிறைந்திருப்பதுபோல, துன்மார்க்கரின் வீடுகளும் ஐசுவரியங்களாலும், ஆகாரங்களாலும் நிறைந்திருக்கிறது. அவர்களுடைய வீடுகளும் கபடங்களால் நிறைந்திருக்கிறது. அவர்களிடத்தில் உண்மையில்லை, நீதியும் நியாயமுமில்லை. அவர்கள் கபடம் செய்து, பிறரை வஞ்சித்து, தங்களுக்கு ஐசுவரியத்தை சேமித்துக்கொள்கிறார்கள்.

துன்மார்க்கரோடு யார் சவகாசம் வைத்துக்கொண்டாலும், துன்மார்க்கர் அவர்களை வஞ்சித்துவிடுவார்கள். நயமான வார்த்தைகளைப் பேசுவார்கள். அடித்து துன்புறுத்துவார்கள். அவர்களுடைய இருதயம் முழுவதிலும் கபடங்களே நிறைந்திருக்கிறது. தங்களுடைய களஞ்சியத்தை நிரப்புவதற்கும், பொக்கிஷங்களை நிரப்புவதற்கும் அவர்கள் துணிகரமான பாவங்களை செய்வார்கள். மனுஷர்மீது ஈவு இரக்கம் காண்பிக்கமாட்டார்கள்.

துன்மார்க்கருக்கு, அவர்களுடைய சொந்த நலனே முக்கியமானதாயிருக்கும். பிறருடைய நலனைப்பற்றி சிறிதும் அக்கறை காண்பிக்கமாட்டார்கள். துன்மார்க்கருடைய வீடுகள் கபடங்களால் நிறைந்திருக்கிறது. தங்களுடைய துன்மார்க்கத்தினால் அவர்கள் பெருகி ஐசுவரியவான்களாகிறார்கள்.

ஜனங்கள் துன்மார்க்கராயிருப்பதுபோல, யூதா மனுஷரின் பிரபுக்களும், நியாயாதிபதிகளும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் கொழுத்து, சளுக்குப்பண்ணுகிறார்கள்; துன்மார்க்கருடைய செயல்களைக் கண்டிக்காமல் விடுகிறார்கள்; திக்கற்றவனுடைய வழக்கை விசாரியாமல், தாங்கள் மாத்திரம் வாழுகிறார்கள்; அவர்கள் எளியவர்களின் நியாயத்தைத் தீரார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

துன்மார்க்கமான பிரபுக்கள் நியாயத்தின் போர்வையையும், நீதியின் போர்வையையும், சட்டத்தின் போர்வையையும் தங்கள்மீது போர்த்துக்கொண்டு, தங்களை நல்லவர்கள்போல காண்பித்துக்கொண்டு, துன்மார்க்கமும், அநியாயமும், அக்கிரமமும் செய்கிறார்கள். துன்மார்க்கமான ஜனங்களின் பாவங்களைவிட, துன்மார்க்கமான பிரபுக்களின் பாவங்களே மிகவும் அதிகமாயிருக்கிறது. குருவி பிடிக்கிறவர்கள் சில சமயங்களில் பதுங்குவார்கள். வேறு சில சமயங்களில் பலவந்தமாய்க் குருவிகளைப் பிடிப்பார்கள். துன்மார்க்கமான பிரபுக்களும், சில சமயங்களில் நயமான வார்த்தைகளைப் பேசுவார்கள். வேறு சில சமயங்களிலோ தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, பலவந்தமும் கட்டாயமும் படுத்தி துன்மார்க்கம் பண்ணுவார்கள். ஏழைகளை ஒடுக்கி அவர்களை வஞ்சிப்பார்கள்.

துன்மார்க்கருடைய சம்பத்துக்கள் பெருகுகிறது. அவர்கள் பெருகி ஐசுவரியவான்களாகிறார்கள். இதனால் அவர்களுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கிறது. அவர்களுக்கு மனுஷரைக் குறித்து அக்கரையில்லை. தங்களுடைய திரளான ஐசுவரியத்தைக் குறித்தே அக்கரையோடிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. அது கேடுள்ளதாயும் திருக்குள்ளதாயும் இருக்கிறது.

துன்மார்க்கமான பிரபுக்கள் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துக்களிலிருக்கிறார்கள். தாங்கள் மாத்திரம் வாழுகிறார்கள். இவர்கள் திக்கற்றவனுடைய வழக்கை விசாரிக்கமாட்டார்கள். எளியவர்களின் நியாயத்தை தீர்த்து வைக்கமாட்டார்கள். தாங்கள் பெருகவேண்டும் என்பதும், ஐசுவரியவான்களாகவேண்டும் என்பதுமே இவர்களுடைய பேராசை.

துன்மார்க்கர் சமுதாயத்தில் செழித்திருக்கிறார்கள். கொழுத்திருக்கிறார்கள். சளுக்கு பண்ணுகிறார்கள். சண்டித்தனம் பண்ணுகிறார்கள். மற்றவர்கள் இவர்களைப் பார்த்து ஆச்சரியப்படும்படியாக, இவர்கள் தங்களை மினுக்கிக்கொள்கிறார்கள். இவர்கள் துன்மார்க்கருடைய செயல்களை கண்டிக்காமல் விட்டுவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சமுதாயத்தில் மிகவும் மோசமானவர்கள். பிரபுக்களின் கைகளில் அதிகாரங்கள் இருந்தாலும், அந்த அதிகாரத்தை ஜனங்களின் நன்மைக்காக பயன்படுத்தாமல், தங்களுடைய சொந்த நன்மைக்காகவும், சுயநலத்திற்காகவும், சுயலாபத்திற்காகவும் பயன்படுத்துகிறார்கள்.

துன்மார்க்கமான பிரபுக்கள் திக்கற்றவனுடைய வழக்குளை விசாரிப்பதில்லை. எளியவர்களின் நியாயத்தைத் தீர்ப்பதில்லை. ஆனால் தாங்கள் மாத்திரம் வாழுகிறார்கள். இவர்கள் மாத்திரம் பெருகி ஐசுவரியவான்களாகிறார்கள். கர்த்தர் இவர்களுடைய அநியாயத்தை விசாரிப்பார். "இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டாதிருக்குமோ" (எரே 5:29) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு இந்தப்பிரபஞ்சம் நித்திய வாசஸ்தலமல்ல. உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உலகப்பிரகாரமான காரியங்கள் நன்மையான காரியங்களாகவோ, ஆசீர்வாதமான காரியங்களாகவோ இருக்காது. நாம் இந்த உலகத்தில் ஜீவித்தாலும், இந்த உலகத்திற்குரியவர்களல்ல. இந்த உலகத்தில் பாவிகளாயும், துன்மார்க்கராயும் இருக்கிறவர்கள், உலகப்பிரகாரமான பொருட்களை தங்களுக்கு அதிகமாய்ச் சேர்த்துக்கொள்கிறார்கள். அவர்கள் இந்த உலகத்தில் பெருகி ஐசுவரிவான்களாகிறார்கள். துன்மார்க்கரிடத்தில்தான் உலகத்தின் ஐசுவரியமும், அதன் சம்பத்தும் திரளாயிருக்கிறது.

கர்த்தர் துன்மார்க்கருடைய கிரியைகளை அங்கீகரிக்கவில்லை. அவர்களுடைய வீடுகள் கபடங்களால் நிறைந்திருக்கிறது. கர்த்தர் துன்மார்க்கருடைய கபடங்களில் பிரியப்படவுமில்லை. துன்மார்க்கர் பெருகி ஐசுவரியவான்களாயிருப்பதினால், கர்த்தர் அவர்களுடைய துன்மார்க்கத்தையும், கபடத்தையும் அங்கீகரிக்கிறார் என்பது பொருளல்ல. கர்த்தர் ஒருபோதும் துன்மார்க்கனுக்கு துணைபோகமாட்டார். இப்படிப்பட்ட ஜாதிக்கு கர்த்தருடைய ஆத்துமா நீதியைச் சரிக்கட்டும்.

திகைத்து திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்துவருகிறது (எரே 5:30) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் துன்மார்க்கர்மீது தம்முடைய நீதியைச் சரிக்கட்டுவார். அப்போது தேசத்திலே திகைப்பான காரியங்களும், திடுக்கிடத்தக்க காரியங்களும் நடைபெறும். கொழுத்துசளுக்குபண்ணுகிறவர்கள் தண்டிக்கப்படுவார்கள். துன்மார்க்கனுடைய செயல்கள் தண்டிக்கப்படும்.

கர்த்தரை நம்புகிறவர்கள் செழித்திருப்பார்கள். துன்மார்க்கத்தையும் கபடத்தையும் நம்புகிறவர்கள் தண்டிக்கப் படுவார்கள். அவர்கள் ஒன்றுமில்லாமல் போய்விடுவார்கள். கர்த்தர் ஜனங்கள் மத்தியில் நீதியைச் சரிக்கட்டும்போது, தேசத்திலே திடுக்கிடத்தக்க காரியங்கள் நடைபெறும். சமுதாயத்தில் பெருகியிருந்தவர்கள், உயர்ந்த அந்தஸ்துக்களிலிருந்தவர்களெல்லாம் ஒன்றுமில்லாமல் வெறுமையாய்ப் போய்விடுவார்கள்.

யூதாதேசத்தின் பிரபுக்களும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் துன்மார்க்கருடைய செயல்களைக் கண்டிக்காமலிருக்கிறார்கள். திக்கற்றவர்களுடைய வழக்கை விசாரிப்பதில்லை. எளியவர்களின் நியாயத்தையும் தீர்த்து வைப்பதில்லை. பிரபுக்களைப்போலவே தீர்க்கதரிசிகளும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் (எரே 5:31). தேவனுடைய வெளிப்பாடு என்னும் பேரில், தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். பக்திமார்க்கத்தின் பெயரால் அநீதி நடைபெறுகிறது. தேவனுடைய வெளிப்பாடு என்னும் பெயரால் பொய்யான வார்த்தைகள் அறிவிக்கப்படுகிறது.

ஆசாரியர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள் மூலமாய் ஆளுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் ஐசுவரியவான்களாயும், ஆடம்பரபிரியர்களாயும், சோம்பேறிகளாயும் இருக்கிறார்கள். இதனால் ஜனங்களை திசை திருப்புவது கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும், ஆசாரியர்களுக்கும் எளிதாயிருக்கிறது. "இப்படி இருப்பது என் ஜனத்திற்கு பிரியமாயிருக்கிறது" (எரே 5:31) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் யூதாவின் ஜனத்தை, "என் ஜனம்" என்று சொல்லுகிறார். இவர்கள் கர்த்தருடைய ஜனமாகயிருப்பதினால், கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள ஆசாரியர்களுக்கும் விரோதமாக சாட்சி சொல்லவேண்டும். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எதிர்த்து நிற்கவேண்டும். ஆனால் அவர்களோ கள்ளத்தீர்க்கதரிசனங்களிலும், கள்ள ஆசாரியர்களின் ஆளுகைகளிலும் பிரியமாயிருக்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களுடைய பாவங்களை கண்டித்து உணர்த்துவதில்லை. இதனால் ஜனங்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள் மீது பிரியமாயிருக்கிறார்கள். ஆசாரியர்களும் ஜனங்களுடைய மாம்ச இச்சைகளை நிறைவேற்றும் வண்ணமாய் ஆளுகை செய்கிறார்கள். ஜனங்கள் துன்மார்க்கமாய் ஜீவித்தாலும் ஆசாரியர்கள் அவர்களை கண்டிக்கமாட்டார்கள். இதனால் ஜனங்கள் ஆசாரியர்மீதும் பிரியமாயிருக்கிறார்கள்.

யூதாவின் ஜனங்களும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய வீடுகள் கபடங்களால் நிறைந்திருக்கிறது. பிரபுக்களும், தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். ஜனங்களும் அவர்களுடைய துன்மார்க்கத்தில் பிரியப்படுகிறார்கள். "இவைகளை விசாரியாதிருப்பேனோ? இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டாதிருக்குமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 5:29).

தேவன் கிருபையும் இரக்கமுமுள்ளவர். அதே தேவன் நீதியும் நியாயமுமுள்ளவர். அவர் எல்லா காரியங்களையும் நீதியாய் விசாரித்து, நியாயமான தீர்ப்பு கொடுக்கிறவர். யூதாவின் ஜனங்களும், எருசலேமின் குடிகளும் துணிகரமாய்ப் பாவம் செய்யும்போது, கர்த்தர் அவர்கள்மீது இரக்கமும் காண்பிக்கிறார். அவர்களுடைய பாவங்களை நீதியாய் விசாரிக்கவும் செய்கிறார். இங்கு தேவனுடைய இரக்கத்தைவிட, அவருடைய நீதியான நியாயத்தீர்ப்பே முக்கியமானதாயிருக்கிறது. "இவைகளை விசாரியாதிருப்பேனோ" (எரே 5:29) என்று கர்த்தர் கேட்கிறார்.

தேவன் சர்வஞானமுள்ளவர். அவர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். நீதியும் நியாயமுமுள்ளவர். இரக்கம் அல்லது நீதியுள்ள நியாயத்தீர்ப்பு ஆகிய இவ்விரண்டில் ஒன்றை தெரிந்தெடுக்க வேண்டிய சமயம் வரும்போது, கர்த்தர் தம்முடைய சர்வஞானத்தினால், சரியானதைத் தெரிந்தெடுப்பார். கர்த்தர் இப்போது இரக்கத்தை தெரிந்தெடுக்காமல், நியாயத்தீர்ப்பை தெரிந்தெடுக்கிறார். "இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியை சரிக்கட்டாதிருக்குமோ" (எரே 5:29) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாவிகள் மனந்திரும்ப வேண்டும். அவர்கள் மனந்திரும்பினால், கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், இரக்கங்களினாலும் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார். பாவிகள் மனந்திரும்பாமல், தொடர்ந்து துணிகரமாய்ப் பாவம் செய்தால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும். துணிகரமாய்ப் பாவம் செய்கிற துன்மார்க்கரைப்பார்த்து, "ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்" (எரே 5:31) என்று கர்த்தர் கேட்கிறார். பாவிகள் இப்போது தங்கள் பாவத்திலும், துன்மார்க்கத்திலும், கபடுகளிலும் பிரியமாயிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. அவர்களுடைய பாவங்களுக்கும் ஒரு முடிவு உண்டு. அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு வரப்போகிறது. அப்போது என்ன செய்வீர்கள் என்று, கர்த்தர் பாவிகளைப் பார்த்து கேட்கிறார்.

பாவமான வழிகளில் நடக்கிறவர்கள், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லையென்றால், இன்னும் அதிகமான பாவங்களை செய்வார்கள். முடிவிலே அவர்களுக்கு பேரழிவு உண்டாகும். பாவிகளால் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கும், அவர் கொடுக்கும் தண்டனைக்கும், தங்களுக்கு வரப்போகும் அழிவுக்கும் தப்பிக்க முடியாது.

6 அதிகாரம்

கல்தேயரின் சேனை யூதா தேசத்தார்மீது யுத்தம் பண்ண வருவார்கள் என்றும், அவர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கைப்போடுவார்கள் என்றும் எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார் (எரே 6:1-4). அவர்கள் தேசத்திலுள்ள எல்லா பொருட்களையும் நன்றாய் பொறுக்கிக்கொண்டு போய்விடுவார்கள் (எரே 6:9). தங்கள் தேசத்திற்கு விரோதமாய் கல்தேயர்கள் வருகிறார்கள் என்னும் செய்தியைக் கேட்டு, யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் பயந்து நடுங்குவார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு, யூதாவின்மீதும், எருசலேமின்மீதும் வருகிறது. யூதா தேசத்தார் ஒடுக்கப்படுவார்கள் (எரே 6:7). அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை அசட்டைபண்ணுகிறார்கள் (எரே 6:10-12). யூதா தேசத்தார் உலகப்பிரகாரமாக ஜீவிக்கிறார்கள் (எரே 6:13).

தீர்க்கதரிசிகளும் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் (எரே 6:14). அவர்கள் அருவருப்பானதை வெட்கப்படாமல் செய்கிறார்கள் (எரே 6:15). யூதர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்கு செவிகொடாமல், அதை வெறுத்துவிடுகிறார்கள் (எரே 6:18,19). கர்த்தர் யூதா தேசத்தாரின் பலிகளில் பிரியப்படவில்லை (எரே 6:20). கர்த்தர் யூதாவின் புத்திரரை அழிவுக்கு ஒப்புக்கொடுக்கிறார் (எரே 6:21).

கர்த்தர் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் அழிப்பதற்கு முன்பாக, அவர்களை எச்சரிக்கிறார் (எரே 6:27). யூதாவின் மனுஷர் திருந்தமாட்டார்கள் என்று தீர்மானித்து, கர்த்தர் அவர்களை புறக்கணித்துவிடுகிறார் (எரே 6:28-30).

கர்த்தர் எருசலேமுக்கு எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொன்னாலும், அவற்றிற்கு மத்தியில், அவர்களுக்கு ஆறுதலான செய்தியையும் சொல்லுகிறார். ஆனால் எருசலேம் ஜனத்தார் மனந்திரும்பவில்லை (எரே 6:8,16,17).

யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு எரே 6:1-8

எரே 6:1. பென்யமீன் புத்திரரே, நீங்கள் எருசலேமின் நடுவிலிருந்து ஏகமாய்க் கூடியோடி, தெக்கோவாவில் எக்காளம் ஊதி, பெத்கேரேமின்மேல் அடையாளமாகத் தீவெளிச்சங் காட்டுங்கள்; ஒரு தீங்கும் மகா சங்காரமும் வடக்கேயிருந்து தோன்றுகிறதாயிருக்கிறது.

எரே 6:2. செல்வமாய் வளர்ந்த ரூபவதியான சீயோன் குமாரத்தியைப் பாழாக்குவேன்.

எரே 6:3. மேய்ப்பர் தங்கள் மந்தைகளோடே அவளிடத்துக்கு வருவார்கள்; அவர்கள் அவளுக்கு விரோதமாய்ச் சுற்றிலும் கூடாரம்போட்டு, அவனவன் தன் தன் ஸ்தலத்தில் மேய்த்து,

எரே 6:4. அவளுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய ஆயத்தம்பண்ணுங்கள் என்றும், மத்தியானத்தில்தானே நாம் போயேறும்படிக்கு எழுந்திருங்கள்; ஐயோ! பொழுது சாய்ந்து, அந்தி நிழல்கள் நீண்டுபோகிறதே;

எரே 6:5. எழுந்திருங்கள், நாம் இராக்காலத்திலாகிலும் போயேறி, அவளுடைய அரமனைகளை அழிப்போம் என்றும் சொல்லுவார்கள்.

எரே 6:6. சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், மரங்களை வெட்டி, எருசலேமுக்கு விரோதமாய்க் கொத்தளம் போடுங்கள்; அதுவே விசாரிக்கப்படவேண்டிய நகரம்; அதின் உட்புறமெல்லாம் கொடுமை.

எரே 6:7. ஊற்றானது, தன் தண்ணீரைச் சுரக்கப்பண்ணுமாப்போல, அது தன் தீங்கைச் சுரக்கப்பண்ணுகிறது; அதிலே கொடுமையும் அழிம்பும் கேட்கப்படுகிறது; துக்கமும் காயங்களும் நித்தமும் எனக்கு முன்பாகக் காணப்படுகிறது.

எரே 6:8. எருசலேமே, என் ஆத்துமா உன்னை விட்டுப் பிரியாதபடிக்கும், நான் உன்னைப் பாழும் குடியற்ற தேசமும் ஆக்காதபடிக்கும் புத்திகேள்.

யூதாவின்மீதும், எருசலேமின்மீதும் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு எச்சரிப்பாய்ச் சொல்லப்படுகிறது. எருசலேம் நகரத்திற்கு மேலே மேகம் மந்தாரமாயில்லை. நகரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கிறது. யூதா தேசத்திலுள்ள ஜனங்கள் பாதுகாப்பாயிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரையிலும் அந்நிய தேசத்தார் மூலமாய் ஒரு பிரச்சனையும் வரவில்லை.

யூதர்கள் அமைதியாகயிருந்தாலும், அவர்களுக்கு சீக்கிரத்தில் பிரச்சனை வரப்போகிறது என்று எரேமியா தீர்க்கதரிசி அவர்களை எச்சரிக்கிறார். ஒரு தீங்கும், மகாசங்காரமும் வடக்கேயிருந்து தோன்றுகிறதாயிருக்கிறது (எரே 6:1) என்று எரேமியா சொல்லுகிறார். யூதா தேசத்திற்கு அழிவு வரப்போகிறது. அவர்களுடைய பாவங்களே அவர்களுடைய அழிவுக்கு காரணம்.

எரேமியா தீர்க்கதரிசி யூதஜனங்களுக்கு வரப்போகும் அழிவை தெளிவாகவும், சத்தமாகவும் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினால், தங்களுக்கு வரப்போகிற ஆபத்துக்களுக்கு அவர்கள் தப்பித்துக்கொள்ளலாம்.

கர்த்தருடைய வார்த்தை பென்யமீன் புத்திரருக்கு சொல்லப்படுகிறது. இவர்கள் எருசலேமின் ஒரு பகுதியில் குடியிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தேசத்திலே, தங்களுக்கு பாதுகாப்பைத் தேடிக்கொள்ளவேண்டும். அவர்கள் எருசலேமின் நடுவிலிருந்து ஏகமாய்க்கூடி, தங்களுக்கு பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிப்போகவேண்டும். எருசலேமுக்கு அழிவு வரும்போது, அந்தப் பட்டணத்தைவிட்டு தப்பித்து ஓடுவதுதான், தங்களைப் பாதுகாப்பதற்கு நல்ல வழி.

"தேசத்தில் எக்காளம் ஊதுங்கள் என்று சொல்லி, யூதாவில் அறிவித்து, எருசலேமில் கேட்கப்பண்ணுங்கள்; நாம் அரணான பட்டணங்களுக்கு உட்படும்படிக்குச் சேருங்கள் என்று சொல்லி, உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள். சீயோனுக்கு நேரே கொடியேற்றுங்கள்; கூடுங்கள், நிற்காதிருங்கள்; நான் வடக்கேயிருந்து பொல்லாப்பையும், மகாசங்காரத்தையும் வரப்பண்ணுகிறேன்" (எரே 4:5,6).

பென்யமீன் புத்திரர் தெக்கோவாவில் எக்காளம் ஊதவேண்டும். தங்களுடைய பாதுகாப்புக்கு என்னென்ன செய்யவேண்டுமோ, அதையெல்லாம் செய்வதற்கு அவர்கள் ஆயத்தமாயிருக்கவேண்டும். தெக்கோவா பட்டணம் எருசலேமுக்கு வடக்கே பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ளது.

பென்யமீன் புத்திரர் பெத்கேரேமின் மேல் அடையாளமாகத் தீவெளிச்சங் காட்டவேண்டும். பெத்கேரேம் திராட்சத்தோட்டம் மிகுந்த பகுதி. இது மலைபிரதேசத்தில் அமைந்துள்ளது. இந்த தோட்டங்கள் எருசலேமுக்கும் தெக்கோவாவுக்கும் இடையிலுள்ளது.

தெக்கோவாவில் எக்காளம் ஊதுவதும், பெத்கேரேமின்மேல் தீவெளிச்சங் காட்டுவதும் இங்கு அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. யூதாவின் மனுஷரும் எருசலேம் குடிகளும், தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு எதை செய்தாலும், அவர்களால் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிக்க முடியாது. வரப்போகிற மகா அழிவுக்கு தப்பித்து அவர்களால் எங்கும் ஓடி ஒளிந்துகொள்ள முடியாது. எருசலேம் அழியப்போகிறது. தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு விரோதமாக எருசலேமின் குடிகளால் எதிர்த்து நிற்கமுடியாது.

எருசலேமின் குடிகள் செல்வமாய் வளர்ந்த ரூபவதிகளைப்போல இருக்கிறார்கள். அவர்கள் சீயோன் குமாரத்திகளாக, அழகாகயிருக்கிறார்கள். அவர்கள் இதுவரையிலும் கஷ்டங்களையோ, துன்பங்களையோ, வேதனைகளையோ அனுபவித்ததில்லை. சீயோன் குமாரத்திகளுக்கு உபத்திரவங்களை அனுபவித்து பழக்கமில்லை. அவர்கள் இதுவரையிலும் கடினமான வேலைகளை செய்ததுமில்லை. இவர்களால் சத்துருக்களுக்கு எதிர்த்து நிற்கவும் முடியாது. சத்துருக்கள் மூலமாய் வரும் அழிவை தாங்கிக்கொள்ளவும் முடியாது. கர்த்தர் சீயோன் குமாரத்தியை பாழாக்குவேன் என்று சொல்லுகிறார்.

கல்தேயருடைய சேனைகளும், அவர்களுடைய படைத்தளபதிகளும் மேய்ப்பர்களுக்கும், மந்தைகளுக்கும் ஒப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். "மேய்ப்பர் தங்கள் மந்தைகளோடே அவளிடத்திற்கு வருவார்கள்" (எரே 6:3) என்று கர்த்தர் சொல்லுகிறார். கல்தேயரின் படைத்தளபதிகள், திரளான எண்ணிக்கையுள்ள தங்கள் சேனைகளோடு, எருசலேமுக்கு வருவார்கள். மந்தைகள் மேய்ப்பர்களை பின்பற்றுவதுபோல, கல்தேயரின் சேனையிலுள்ள வீரர்கள், அவர்களுடைய படைத்தளபதிகளை பின்பற்றி வருவார்கள்.

மேய்ப்பர்கள் திறந்த வெளிகளில் தங்குவார்கள். ஆடுகளை திறந்த வெளிகளில் கூடாரம்போட்டு தங்கவைத்து விடுவார்கள். மேய்ப்பர்களுக்கு திறந்த வெளியில் தங்குவது கஷ்டமாயிருக்காது. அவர்களுக்கு இது பழக்கமான விஷயம். திறந்தவெளியில் இருப்பது எல்லாமே, பொதுவான சொத்துக்களாகயிருக்கும். அதற்கு யாரும் சொந்தம் கொண்டாடமாட்டார்கள். அப்படிப்பட்ட இடங்களில் மேய்ப்பர்கள் கூடாரம் போடுவார்கள். கூடாரங்களைச் சுற்றிலுமுள்ள இடங்களில் மந்தைகள் மேயும்.

கல்தேயர்களும், மேய்ப்பர்களைப்போலவும் அவர்களுடைய மந்தைகளைப்போலவும் யூதா தேசத்திற்குள்ளே எளிதாக வருவார்கள். பொதுவான இடங்களில் கூடாரம் போடுவதுபோல, அவர்கள் யூதாவின் பட்டணங்களுக்கு விரோதமாய் சுற்றிலும் கூடாரம் போடுவார்கள். தாங்கள் விரும்பிய இடங்களில் கூடாரம் போட்டு தங்கியிருப்பார்கள். ஆடுகள் கூடாரத்தைச் சுற்றிலும் மேய்வதுபோல, கல்தேயரும் அவனவன் தன்தன் ஸ்தலத்தில் மேய்வான். யூதாதேசத்தை பாழாக்கி பட்சித்துப்போடுவான்.

யூதாவின் பட்டணங்களை அழிப்பதற்கு கர்த்தரே கல்தேயருக்கு அனுமதி கொடுத்திருக்கிறார். கர்த்தர் கல்தேயரைப் பார்த்து, "அவளுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய ஆயத்தம்பண்ணுங்கள் என்றும், மத்தியானத்தில்தானே நாம் போயேறும்படிக்கு எழுந்திருங்கள்" (எரே 6:4) என்றும் சொல்லுகிறார். கர்த்தரே கல்தேயரை எருசலேமுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணச் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் பரிசுத்தர் சேனைகளின் கர்த்தர். அவர் கல்தேயருடைய சேனைகளைப் பார்த்து "மரங்களை வெட்டி, எருசலேமுக்கு விரோதமாய்க் கொத்தளம் போடுங்கள்" (எரே 6:6) என்று சொல்லுகிறார். தேவனுடைய நியாயத்தீர்ப்பு எருசலேமின்மீது வந்திருக்கிறது. எருசலேம் நகரம் கர்த்தரால் விசாரிக்கப்பட வேண்டிய நகரம். அதன் உட்புறமெல்லாம் கொடுமையாயிருக்கிறது.

எருசலேமைச் சுற்றிலும் திறந்த வெளியாயிருக்கிறது. மத்தியான நேரத்தில் வெயிலின் உஷ்ணம் அங்கே அதிகமாயிருக்கிறது. ஆகையினால் கல்தேயர்கள் மத்தியான வேளையிலே எருசலேமின்மீது யுத்தம்பண்ண தயங்குகிறார்கள். வெயிலின் உஷ்ணம் அதிகமாயிருப்பதினால், யுத்தம் பண்ணுவது கஷ்டாயிருக்கும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் சோர்ந்துபோகவில்லை.

எருசலேம் நகரத்தை அழிப்பதற்கு, கர்த்தர் கல்தேயருக்கு அனுமதி கொடுக்கிறார். கல்தேயர் எருசலேமையும் யூதாவின் பட்டணங்களையும் பட்சித்துப்போட ஆயத்தமாயிருக்கிறார்கள். மத்தியான வேளையாகயிருந்தாலும், இராக்காலமாகயிருந்தாலும், அவர்கள் அதைப்பற்றி பெரிதாய் நினைக்கவில்லை. மத்தியான வெயிலிலும், இரவின் இருளிலும் எருசலேமுக்குள் பிரவேசித்து அதைக் கொள்ளையிட ஆயத்தமாயிருக்கிறார்கள்.

மத்தியானத்தில்தானே நாம் போயேறும்படிக்கு எழுந்திருங்கள்" (எரே 6:4) என்றும், "எழுந்திருங்கள், நாம் இராக்காலத்திலாகிலும் போயேறி, அவளுடைய அரமனைகளை அழிப்போம்" (எரே 6:5) என்றும் சொல்கிறார்கள். எருசலேமைக் கொள்ளையிட்டு, அந்தக் கொள்ளைப்பொருட்களையெல்லாம், தங்கள் தேசத்திற்கு கொண்டுபோக ஆயத்தமாயிருக்கிறார்கள். கொள்ளையை சீக்கிரத்தில் நடத்தி முடித்துவிடவேண்டும் என்று நினைக்கிறார்கள். "ஐயோ! பொழுது சாய்ந்து, அந்தி நிழல்கள் நீண்டுபோகிறதே" (எரே 6:4) என்றும் சொல்லுகிறார்கள்.

யூதா மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. அவர்களுடைய பாவங்களும், துன்மார்க்கங்களுமே அவர்கள் அனுபவிக்கிற வேதனைகளுக்கு காரணம். யூதாவின் மனுஷர் தங்கள்மீது தாங்களே அழிவை வரவழைத்துக் கொள்கிறார்கள். தாங்கள் அனுபவிக்கிற கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும், அவர்கள் வேறு யாரையும் குறை சொல்லக்கூடாது. தங்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் குறை சொல்லிக் கொள்ளலாம்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் ஏழைகளை ஒடுக்கினார்கள். திக்கற்றவர்களையும், அநாதைகளையும் ஒடுக்கினார்கள். பிறரை ஒடுக்கியவர்கள் இப்போது ஒடுக்கப்படுகிறார்கள். யூதாவின் மனுஷர் ஒருவருக்கொருவர் தீங்கு செய்துகொண்டார்கள். தங்களுக்கு அதிகாரமும் பெலமும் இருக்கும்போது, அவர்கள் தங்கள் சொந்த சகோதரருக்கே தீங்கு செய்தார்கள். இப்போது அவர்கள்மீது சத்துரு வந்திருக்கிறான்.

கல்தேயர்கள் யூதாதேசத்தின்மீது யுத்தம் பண்ண வருகிறார்கள். அவர்கள் யூதாவின் மனுஷர் எல்லோரையும், எருசலேமின் குடிகள் எல்லோரையும் நெருக்கி ஒடுக்குகிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு தண்டனை வரும். ஊற்றானது, தன் தண்ணீரைச் சுரக்கப்பண்ணுமாப்போல, அது தன் தீங்கைச் சுரக்கப்பண்ணுகிறது (எரே 6:7). ஊற்றிலிருந்து தண்ணீர் தாராளமாயும், இடைவிடாமலும் சுரப்பதுபோல, யூதாவின் மனுஷரிடத்திலிருந்து தீங்கு தாராளமாய் சுரந்து வருகிறது.

சோதோமின் அக்கிரமம் பரலோகத்திலுள்ள தேவனுடைய செவிகளுக்கு எட்டியதுபோலவே, எருசலேமின் அக்கிரமங்களும் கர்த்தருடைய சமுகத்திலே வந்து எட்டுகிறது. எருசலேமிலே கொடுமையும் அழிம்பும் கேட்கப்படுகிறது என்று கர்த்தர் சொல்லுகிறார். பாதிக்கப்பட்டவர்கள் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள். தங்களுடைய சரீரத்திலும் ஆத்துமாவிலும் அநியாயமாய்த் தண்டிக்கப்பட்டவர்கள், கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வந்து வேதனையோடு புலம்புகிறார்கள். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக துக்கமும் காயங்களும் நித்தமும் காணப்படுகிறது.

இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதா வம்சத்தாரும் கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். அவர்கள் கர்த்தருடைய சந்ததியார். கர்த்தரே அவர்களுக்கு பரமபிதாவாயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் கொடுமை செய்கிறார்கள். ஒருவருக்கொருவர் தீங்கு செய்து ஒருவரையொருவர் அழித்துக்கொள்கிறார்கள். அவர்கள் மத்தியிலே துக்கமும் காயங்களும் காணப்படுகிறது. கர்த்தர் நீதியுள்ளவர். அநீதியும் அக்கிரமமும் செய்தவர்களை கர்த்தர் தம்முடைய நீதியினால் தண்டிப்பார். அவர்களுக்கு நீதியான நியாயத்தீர்ப்பைக் கட்டளையிடுவார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கவேண்டுமென்றால், யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவேண்டும். "எருசலேமே, என் ஆத்துமா உன்னை விட்டுப் பிரியாதபடிக்கும், நான் உன்னைப் பாழும் குடியற்ற தேசமும் ஆக்காதபடிக்கும் புத்திகேள்" (எரே 6:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மூலமாகவும், அவருடைய தீர்க்கதரிசிகள் மூலமாகவும் ஜனங்களுக்கு உபதேசமும், புத்தியும் சொல்லப்படுகிறது. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். அவர்கள் புத்தியைக் கேட்டு ஞானமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

கர்த்தருடைய ஆத்துமா மனுஷரைவிட்டுப் பிரிந்துபோய்விட்டால், கர்த்தர் அவர்களை பாழும் குடியற்ற தேசமும் ஆக்கிப்போடுவார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகள்மீது மெய்யாகவே அன்பாகவும், கரிசனையாகவும் இருக்கிறார். ஆகையினால் தான், கர்த்தருடைய ஆத்துமா அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னம் அவருடைய ஜனத்தார் மத்தியிலிருக்கிறது. கர்த்தருக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையிலுள்ள ஐக்கியத்தை பொதுவாக யாராலும் பிரிக்க முடியாது. ஆனாலும் பாவம் இந்த ஐக்கியத்தைப் பாழாக்கிவிடும். பாவம், கர்த்தருடைய ஆத்துமாவை, அவருடைய பிள்ளைகளிடத்திலிருந்து பிரித்துவிடும்.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தருக்கு கோபத்தை உண்டு பண்ணுகிறார்கள். கர்த்தரோ கிருபையும் இரக்கமுமுள்ளவர். தம்முடைய ஜனத்தைவிட்டுப் பிரிந்துபோகும்போது கர்த்தருடைய ஆத்துமா வேதனைப்படும். கர்த்தர் தம்முடைய ஜனத்தோடு ஐக்கியமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறார். கர்த்தருடைய ஜனத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, அவரிடத்திற்கு மறுபடியுமாய்த் திரும்பி வரும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களை தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வார். அவர்கள்மீது வரப்போகும் தம்முடைய நியாயத்தீர்ப்பையும் நிறுத்திப்போடுவார். கர்த்தருடைய கோபத்திலிருந்து தப்பிப்பதற்கு, தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்புவதைத் தவிர யூதாவின் மனுஷருக்கு வேறு வழியில்லை.

யூதாவின் அழிவு
எரே 6:9-17

எரே 6:9. திராட்சக்குலைகளை அறுக்கிறவனைப்போல உன் கையைத் திரும்பக் கூடைகளின்மேல் போடென்று சொல்லி, அவர்கள் இஸ்வேலில் மீதியாயிருந்த கனியைத் திராட்சச்செடியின் கனியைப்போல் நன்றாய்ப் பொறுக்கிக்கொண்டு போவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 6:10. அவர்கள் கேட்கும்படி நான் யாரோடே பேசி எச்சரிப்பேன்? அவர்களுடைய செவி விருத்தசேதனமில்லாதது; அவர்கள் கேட்கமாட்டார்கள்; கர்த்தருடைய வசனம் அவர்களுக்கு நிந்தையாயிருக்கிறது; அதின்மேல் அவர்களுக்கு விருப்பமில்லை.

எரே 6:11. ஆகையால் நான் கர்த்தருடைய உக்கிரத்தால் நிறைந்திருக்கிறேன்; அதை அடக்கி இளைத்துப்போனேன்; வீதிகளிலுள்ள பிள்ளைகளின்மேலும், வாலிபருடைய கூட்டத்தின்மேலும் ஏகமாய் அதை ஊற்றிவிடுவேன்; புருஷரும், ஸ்திரீகளும், கிழவரும், பூரணவயதுள்ளவர்களுங்கூடப் பிடிக்கப்படுவார்கள்.

எரே 6:12. அவர்களுடைய வீடுகளும், அவர்களுடைய காணிபூமிகளும், அவர்களுடைய மனைவிகளோடே ஏகமாய் அந்நியர் வசமாகும்; என் கையை இந்தத் தேசத்தின் குடிகளுக்கு விரோதமாக நீட்டுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 6:13. அவர்களில், சிறியோர்முதல் பெரியோர்மட்டும், ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர்; இதுவுமல்லாமல் தீர்க்கதரிசிகள்முதல் ஆசாரியர்கள்மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர்.

எரே 6:14. சமாதானமில்லாதிருந்தும்: சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்.

எரே 6:15. அவர்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆதலால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்குங் காலத்தில் இடறுண்டுபோவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 6:16. வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்.

எரே 6:17. நான் உங்கள்மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்துக்குச் செவிகொடுங்கள் என்றும் சொன்னேன்; அவர்களோ: நாங்கள் கேட்கமாட்டோம் என்கிறார்கள்.

யூதாவும் எருசலேமும் அழிந்துபோகுமென்று கர்த்தர் எச்சரிக்கிறார். கல்தேயர்கள் அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் செய்ய ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்கள் யூதாவின் பட்டணங்கள்மீது யுத்தம்பண்ணுவதற்கு வேகமாய் வருகிறார்கள். மத்தியானமாயிருந்தாலும், இராக்காலமாயிருந்தாலும், கல்தேயர்கள் யூதாவை அழித்துவிடுவோம் என்று சொல்லுகிறார்கள். கல்தேயரின் சத்தத்தைக் கேட்டு, எருசலேமுக்குள்ளே இருக்கிற ஜனங்கள் பயந்து நடுங்குகிறார்கள்.

கல்தேயர்கள் எருசலேம் நகரம் முழுவதையும் கொள்ளையிட்டாலும், அவர்களுக்கு திருப்தி உண்டாகாது. அவர்கள் திரளான பொக்கிஷங்களை கொள்ளையிட வேண்டுமென்று பேராசையோடு வந்திருக்கிறார்கள். அவர்கள் இஸ்வேலில் மீதியாயிருந்த கனியைத் திராட்சச்செடியின் கனியைப்போல் நன்றாய்ப் பொறுக்கிக்கொண்டு போவார்கள் (எரே 6:9). கல்தேயர்கள் எருசலேம் நகரத்தில் ஒருவரையும் மீதியாக விட்டு வைக்கமாட்டார்கள். திராட்சக்குலைகளை அறுக்கிறவனைப்போல, அவர்கள் தங்கள் கையை திரும்பவும் கூடையில்போடுவார்கள். அந்தக் கூடையிலே இன்னும் எவ்வளவு பழங்களை சேர்க்க முடியுமோ அவ்வளவு பழங்களை சேர்ப்பார்கள். கல்தேயர்களும் எருசலேம் நகரத்தில் எவ்வளவு ஜனங்களை அடிமைப்படுத்த முடியுமோ, அவ்வளவு ஜனங்களையும் அடிமைப்படுத்திவிடுவார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பொருளாசைக்காரரா யிருக்கிறார்கள். "அவர்களில் சிறியோர் முதல் பெரியோர் மட்டும் ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர்" (எரே 6:13) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதாவின் மனுஷர் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை.

"உன் திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்" (லேவி 19:10).

திராட்சத்தோட்டத்தில் சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்கக்கூடாது. அதை ஏழைகளுக்கு விட்டுவிடவேண்டும். ஆனால் யூதாவின் மனுஷரோ சிந்திக்கிடக்கிற பழங்களை ஏழைகளுக்கு விட்டுவிடாமல், தாங்களே பொறுக்கிக்கொண்டார்கள். கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமாய் நடந்து ஏழைகளை வஞ்சித்தார்கள்.

இதன் நிமித்தமாய் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர்மீது வருகிறது. கல்தேயர்கள் யூதாவின் மனுஷரை திராட்சச்செடியின் கனியைப்போல் நன்றாய்ப் பொறுக்கிக்கொண்டு போகிறார்கள். தேசத்தில் ஒருவரையும் மீதியாக வைத்திராமல், எல்லோரையும் சிறைப்பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள்.

கர்த்தருடைய கோபம் வீதிகளிலுள்ள பிள்ளைகளின்மேலும், வாலிபருடைய கூட்டத்தின்மேலும் ஏகமாய் ஊற்றப்படுகிறது. இதன் நிமித்தமாய் கல்தேயர்கள் யூதா மனுஷரின் புருஷரையும், ஸ்திரீகளையும், கிழவரையும், பூர்ணவயதுள்ளவர்களையும் பிடித்துக் கொள்கிறார்கள் (எரே 6:11). யூதாவின் மனுஷர் கல்தேயரோடு யுத்தம்பண்ணி ஜெயிக்க முடியாது. அவர்கள் யுத்தத்தில் மடிந்துபோவார்கள். அல்லது கல்தேயருடைய தேசத்தில் சிறைப்பட்டுப்போவார்கள். அவர்கள் தப்பிப்பதற்கு வேறு வழியே இல்லை.

அவர்களுடைய வீடுகளும், அவர்களுடைய காணிபூமிகளும், அவர்களுடைய மனைவிகளோடே ஏகமாய் அந்நியர் வசமாகும்; என் கையை இந்தத் தேசத்தின் குடிகளுக்கு விரோதமாக நீட்டுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 6:12).

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷர்மீது கோபமான வார்த்தைகளை பயன்படுத்துகிறார். "நான் கர்த்தருடைய உக்கிரத்தால் நிறைந்திருக்கிறேன்" (எரே 6:11) என்று எரேமியா சொல்லுகிறார். எரேமியா அந்த உக்கிரத்தை அடக்கி இளைத்துப்போயிருக்கிறார். எரேமியா, யூதாவின் மனுஷருக்கு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளைச் சொல்லும் போது, அவருக்கு சந்தோஷமுண்டாகவில்லை. ஆனாலும் உக்கிரமான வார்த்தைகளை எரேமியாவால் அடக்கிக்கொள்ளவும் முடியவில்லை. சேனைகளின் கர்த்தருடைய ஆவியானவர் எரேமியாவின் வாயிலே வார்த்தைகளைப் போட்டிருக்கிறார். கர்த்தர் சொன்ன செய்தியை எரேமியா யூதாவின் மனுஷருக்குச் சொல்லவேண்டும். இதுவே அவருடைய ஊழியம். எரேமியா பேசாமல் சும்மாயிருக்க முடியாது.

யூதா தேசத்தில் தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். தீர்க்கதரிசிகள்முதல் ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர். சமாதானமில்லாதிருந்தும்: சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள் (எரே 6:13,14) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஜனங்கள் பாவம் செய்யும்போது, தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் அவர்களுடைய பாவங்களை கண்டித்து உணர்த்தவேண்டும். பாவிகளுக்கு சமாதானமில்லை. ஆனால் தீர்க்கதரிசிகளோ பாவிகளைக் கண்டித்து உணர்த்தாமல், அவர்களுக்கு ஆறுதலான செய்திகளைச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் என்றும் பொய் சொல்லுகிறார்கள்.

தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் மருத்துவர்களைப்போன்றவர்கள். அவர்கள் சரீரத்திலுள்ள காயங்களுக்கு சரியான சிகிச்சை கொடுத்து அதைக் குணப்படுத்தவேண்டும். சில சமயங்களில் அறுவை சிகிச்சை கூட கொடுக்க வேண்டியது வரலாம். அறுவை சிகிச்சை வேதனையானது. மருத்துவர்கள் சரியான சிகிச்சை கொடுக்காமல், காயங்களை மேற்பூச்சாய் குணமாக்கினால், அந்தக் காயம் நிரந்தரமாய்க் குணமாகாது. அதன் உள்காயம் இருந்துகொண்டேயிருக்கும். அது அவர்களுடைய ஜீவனுக்கே ஆபத்தாகிவிடும். மருத்துவர்கள் தவறான சிகிச்சையினால் நோயாளிகளைக் கொன்றுபோடுவதுபோல, தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் பொய்களைச் சொல்லி மனுஷருடைய ஆத்துமாக்களை சேதப்படுத்துகிறார்கள்.

யூதாவின் மனுஷர் பாவங்களிலும் அக்கிரமங்களிலும் இருக்கிறார்கள். அவர்கள் அருவருப்பானதை செய்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தால் அவர்களுக்கு அழிவு வரும். ஆசாரியர்களோ அவர்களுடைய பாவங்களைக் கண்டிக்காமல் விட்டுவிடுகிறார்கள். "சமாதானமில்லாதிருந்தும்: சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனத்தின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்" (எரே 6:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதா மனுஷரின் பாவங்களும், எருசலேம் குடிகளின் பாவங்களும் மிகவும் அதிகமாயிருக்கிறது. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்பும், அவருடைய கோபமும் அவர்கள்மீது வந்து தங்குகிறது. இதனால் யூதா தேசத்திற்கு அழிவு வருகிறது.

அவர்களுக்கு வரப்போகும் ஆபத்தை தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினால் எச்சரிக்கிறார்கள். ஆனால் அவர்களோ கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைக் கேட்க மறுத்துவிடுகிறார்கள். எரேமியா தீர்க்கதரிசியும் யூதாவின் மனுஷருக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தையை சொல்லி, சொல்லி சோர்ந்துபோயிருக்கிறார்.

“அவர்கள் கேட்கும்படி நான் யாரோடே பேசி எச்சரிப்பேன்? அவர்களுடைய செவி விருத்தசேதனமில்லாதது; அவர்கள் கேட்கமாட்டார்கள்; கர்த்தருடைய வசனம் அவர்களுக்கு நிந்தையாயிருக்கிறது; அதின்மேல் அவர்களுக்கு விருப்பமில்லை” (எரே 6:10) என்று எரேமியா சொல்லுகிறார். கேட்காதவர்களிடத்தில் சொல்லி பிரயோஜனமில்லை.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வசனத்தைக் கேட்பதில் பிரியப்படவில்லை. கர்த்தருடைய வசனம் அவர்களுக்கு நிந்தையாயிருக்கிறது. கர்த்தருடைய வசனம் அவர்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் கடிந்துசொல்லுகிறது. அவர்கள்மீது நியாயத்தீர்ப்பு வரும் என்று எச்சரிக்கிறது. யூதாவின் மனுஷர் ஆசீர்வாதமான செய்திகளை மாத்திரமே கேட்கப் பிரியப்படுகிறார்கள். தங்களை கடிந்து சொல்லும் வார்த்தைகளையோ, நியாயத்தீர்ப்பைப்பற்றிய வார்த்தைகளையோ கேட்பதற்கு அவர்கள் பிரியமாயில்லை.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைப்பற்றிக்கொள்ளவில்லை. அவர்கள் கர்த்தரை நம்புமில்லை. கர்த்தர்மீது பிரியமாகவும் இல்லை. அவர்கள் உலகத்தை நம்புகிறார்கள். உலகக்காரியங்களைப்பற்றிக் கொள்கிறார்கள். உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என்பதை மறந்து, உலகத்தோடு சிநேகமாயிருக்கிறார்கள்.

அவர்களில், சிறியோர்முதல் பெரியோர்மட்டும், ஒவ்வொருவரும் பொருளாசைக்காரர்; இதுவுமல்லாமல் தீர்க்கதரிசிகள்முதல் ஆசாரியர்கள்மட்டும் ஒவ்வொருவரும் பொய்யர் (எரே 6:13).

யூதாவின் மனுஷரிடத்தில் உலகத்தைப்பற்றிய சிந்தனை மாத்திரமே இருக்கிறது. அவர்களிடத்தில் கர்த்தரைப்பற்றிய சிந்தனையோ, தங்களுடைய பாவத்தைப்பற்றிய உணர்வோ, தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிய பயமோ இல்லை. அவர்கள் பொருளாசைக்காரராயிருக்கிறார்கள். பொக்கிஷத்தைச் சேர்ப்பதற்காக எந்த பாவத்தையும் செய்வதற்கு துணிந்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் துணிகரமான பாவங்கள் காணப்படுகிறது. தாங்கள் ஐசுவரியவான்களாயிருக்க வேண்டும் என்பதற்காக, அவர்கள் ஏழைகளை ஒடுக்குகிறார்கள். திக்கற்ற பிள்ளைகளுக்கும் விதவைகளுக்கும் அநியாயம் செய்கிறார்கள்.

எருசலேம் நகரம் விசாரிக்கப்படவேண்டிய நகரமாயிருக்கிறது. அதின் உட்புறமெல்லாம் கொடுமை நிறைந்திருக்கிறது. எருசலேம் நகரத்திலும், யூதாவின் பட்டணங்களிலும் கொடுமையும் அழிம்பும் கேட்கப்படுகிறது. துக்கமும் காயங்களும் அந்தப் பட்டணங்களில் நித்தமும் காணப்படுகிறது (எரே 6:6,7). தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாகவும், அவருடைய தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாகவும் யூதாவின் மனுஷர் தங்கள் இருதயங்களை கடினப்படுத்திக் கொள்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் அருவருப்பான பாவங்களை செய்கிறார்கள். ஆனால் அதற்காக அவர்கள் வெட்கப்படவில்லை. தங்கள் அருவருப்பை நினைத்து அவர்கள் நாணவுமில்லை. அவர்களுடைய இருதயம் கடினமாயிருப்பதினால் அவர்களிடத்தில் பாவத்தைப்பற்றி வெட்கமோ, நாணமோ இல்லை. பாவம் ஒரு அருவருப்பான கிரியை என்றுகூட அவர்கள் நினைப்பதில்லை.

அவர்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆதலால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்கும் காலத்தில் இடறுண்டுபோவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 6:15).

யூதா மனுஷருடைய பாவத்தின் நிமித்தமாகவே அவர்களுக்கு வேதனை வருகிறது. ஆனால் அவர்களோ கர்த்தர் தங்களைக் கைவிட்டுவிட்டார் என்றும், கர்த்தர் தங்களுக்கு உதவிசெய்யவில்லை என்றும் கர்த்தர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். தங்கள் அருவருப்பான பாவங்களே, தாங்கள் அனுபவிக்கிற தீங்குகளுக்கும் பிரச்சனைகளுக்கும் காரணம் என்பதை சிந்திக்க மறுத்துவிடுகிறார்கள்.

பாவம் செய்கிறவர்கள் தங்களுடைய பாவத்தை நினைத்து வெட்கப்படவேண்டும். பாவத்தின் அருவருப்பை நினைத்து நாணவேண்டும். இது மனந்திரும்புதலுக்கேற்ற வெட்கமும் துக்கமுமாகும். இந்த வெட்கமும் துக்கமும் இல்லாதவர்கள் அழிவுக்கு தப்பிக்கமாட்டார்கள். அவர்கள் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள். அவர்களிடத்தில் வெட்கமும் நாணமும் இல்லாதபடியினால், விழுகிற மற்றவர்களோடே இவர்களும் சேர்ந்து பாவத்திலும் அழிவிலும் விழுந்துவிடுவார்கள்.

பாவம் செய்கிறவர்கள், தங்களுடைய பாவத்தின் அருவருப்புக்களை நினைத்து, இப்போது வெட்கப்படவில்லையென்றால், விசாரிப்பு நாளின்போது அதிகமாய் வெட்கப்படவேண்டியது வரும். இப்போது நாணவில்லையென்றால் அப்போது வேதனைப்படவேண்டியது வரும். யூதாவின் மனுஷருக்கு அழிவு காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

யூதாவின் மனுஷர் அருவருப்பான பாவங்களை செய்கிறார்கள். பாவங்களுக்காக வெட்கப்படாதபடிக்கு தங்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்திக்கொள்கிறார்கள். கர்த்தர் அவர்களை விசாரிக்கும் காலம் வரும். அப்போது அவர்கள் தங்கள் இருதயத்தை எவ்வளவு கடினப்படுத்தினாலும், அவர்கள் நிச்சயமாய் இடறுண்டு போவார்கள். அவர்களால் அழிவுக்கு தப்பிக்க முடியாது.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை யூதாவின் மனுஷர் மத்தியிலே அனுப்புகிறார். அவர்களும் ஜனங்களுக்கு நல்ல ஆலோசனைகளைச் சொல்லுகிறார்கள். ஆனால் யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தைக்கும் செவிகொடுக்கவில்லை, தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடுக்கவில்லை. அவர்களுடைய நல்ல ஆலோசனைகளினால் ஜனங்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. தீர்க்கதரிசிகளின் பிரசங்கங்களெல்லாம் வீணாய்ப்போயிற்று.

கர்த்தர் இப்போது, யூதாவின் மனுஷரிடத்திலும் எருசலேமின் குடிகளிடத்திலும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பேசாமல், தாமே நேரடியாகப் பேசுகிறார். "வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்" (எரே 6:16) என்று கர்த்தர் அவர்களிடத்தில் சொல்லுகிறார்.

பிரயாணம் பண்ணுகிறவர்கள், தாங்கள் போகிற பாதை சரியான பாதையா, அது நல்ல வழியா என்பதை மற்றவர்களிடத்தில் கேட்டு விசாரித்து, உறுதிபண்ணிக்கொள்வார்கள். சரியான பாதையில் போனால்தான், தாங்கள் போகவேண்டிய இடத்திற்கு அவர்களால் போய்ச்சேரமுடியும். நல்ல வழியில் போனால்தான் அவர்களுடைய பிரயாணம் அதிக களைப்பில்லாமல் இலகுவாகயிருக்கும். இதற்காக பிரயாணம் பண்ணுகிறவர்கள் பூர்வபாதைகளையும், நல்ல வழிகளையும் கேட்டு விசாரிப்பார்கள்.

"ஆகையால், நீர் முந்தின தலைமுறையாரிடத்தில் விசாரித்து, அவர்கள் முன்னோர்களின் செய்தியை ஆராய்ந்துபாரும்" (யோபு 8:8).

"பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார்; உன் தகப்பனைக் கேள், அவன் உனக்கு அறிவிப்பான்; உன் மூப்பர்களைக் கேள், அவர்கள் உனக்குச் சொல்லுவார்கள்" (உபா 32:7).

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, அவருடைய சத்தியத்தின் பாதையே நித்திய வழியாகவும், பூர்வவழியாகவும், நல்ல வழியாகவும் இருக்கிறது. கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லுவதே நமக்கு பாதுகாப்பானது. அதுவே நமக்கு ஆசீர்வாதமானது. கர்த்தருடைய வழிகளில் நடக்கிறவர்கள் செழித்திருப்பார்கள்.

கர்த்தர் யூதாவின் மனுஷரிடத்தில், "பூர்வபாதைகள் எவை என்று கேட்டு விசாரித்து, அதிலே நடவுங்கள்" என்று சொல்லுகிறார். பூர்வபாதைகள் என்பது, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோர் நடந்த விசுவாச பாதையைக் குறிக்கிறது. கர்த்தர் அவர்களுக்கு கானான் தேசத்தை வாக்குப்பண்ணினார். கர்த்தர் தங்களுக்கு வாக்குத்தத்தமாகக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரிப்போம் என்னும் நம்பிக்கையோடு, அவர்கள் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிப்போனார்கள்.

யூதாவின் மனுஷர், "பூர்வபாதைகள்" எவை என்பதையும் கேட்டு விசாரிக்கவேண்டும். அதே வேளையில் அவர்கள் "நல்ல வழி எங்கே" என்றும் பார்க்கவேண்டும். அவர்கள் பூர்வபாதைகளிலும் நடக்கவேண்டும். அந்தப் பாதைகள் நல்ல வழியாகவும் இருக்கவேண்டும். யூதாவின் மனுஷருடைய முந்திய சந்ததியாரில் அநேகர் துன்மார்க்கராயிருந்திருக்கிறார்கள். அவர்களுடைய துன்மார்க்கமான பூர்வபாதைகளில் நாம் நடக்கக்கூடாது.

"அக்கிரம மாந்தர் பூர்வத்தில் நடந்த மார்க்கத்தைக் கவனித்துப் பார்த்தீரோ?" (யோபு 22:15).

நல்ல வழி எது என்பதை கண்டுபிடிப்பதற்காகவே, பூர்வபாதைகள் எவை என்று கேட்டு விசாரிக்கவேண்டும். கர்த்தருடைய பிரமாணமும், அவருடைய கற்பனைகளும், அவரைப்பற்றும் விசுவாசமும் பூர்வபாதைகளாகவும் நல்ல வழியாகவும் இருக்கிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்து பரிசுத்தவான்கள், இந்த நல்ல வழியாகிய பூர்வபாதையிலே, நடந்துபோனார்கள்.

பூர்வபாதைகள் எவை என்று கேட்டு விசாரிப்பதோடு நின்றுவிடக்கூடாது. அதுபோலவே நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதன் பின்பு எங்கும் போகாமல் படுத்து தூங்கிவிடக்கூடாது. நல்ல வழியாகிய பூர்வபாதையில் நாம் நடக்கவேண்டும். "அதிலே நடவுங்கள்" (எரே 6:16) என்று கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு கட்டளை கொடுக்கிறார். நல்ல வழிகளில் அவர்கள் தொடர்ந்து நடக்கவேண்டும். அப்போது அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதா மனுஷர் மத்தியிலே நல்ல தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள், கள்ளத்தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள். எல்லோருமே கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுவதாக சொல்லி, தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும், நல்ல தீர்க்கதரிசிகளையும் கள்ளத்தீர்க்கதரிசிகளையும் அடையாளம் கண்டுகொள்ளவேண்டும். அவர்கள் வழியிலே நின்று, தீர்க்கதரிசிகளைப் பற்றி விசாரித்துக் கேட்கவேண்டும். தீர்க்கதரிசிகள் சொல்லுகிற செய்தி கர்த்தருடைய எழுதப்பட்ட வார்த்தையோடு ஒத்துப்போகிறதா என்பதையும், தேவனுடைய திட்டத்தோடும், சித்தத்தோடும், பராமரிப்போடும் ஒத்துப்போகிறதா என்பதையும் விசாரித்து கேட்கவேண்டும். அப்போதுதான் நல்ல தீர்க்கதரிசிகள் யார் என்பதை கண்டுபிடித்து, அவர்கள் மூலமாய் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கமுடியும்.

நல்ல தீர்க்கதரிசிகளுடைய ஆலோசனைகளின்படி நடக்கும்போது, நம்முடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். நாம் கர்த்தருடைய சமாதானத்தையும் ஆறுதலையும், சந்தோஷத்தையும், ஆசீர்வாதத்தையும் தாராளமாய் அனுபவிப்போம். கர்த்தருக்குப் பிரியமான பாதையில் நாம் நடக்கும்போது, கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடு கூடயிருக்கும். கர்த்தருடைய வழிநடத்துதல் நமக்கு கிடைக்கும்.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. கர்த்தர் அவர்களை நல்ல வழியாகிய பூர்வபாதைகளை கேட்டு விசாரித்து, அதிலே நடவுங்கள் என்று சொல்லுகிறார். ஆனால் அவர்களோ, "நாங்கள் அதிலே நடக்கமாட்டோம்" (எரே 6:16) என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்போது, நம்மை நாமே வெறுக்கவேண்டும். நம்மிடத்தில் உலகஆசை இருக்கக்கூடாது. நாம் பாவத்திற்கு பங்காளிகளாயிருக்கக் கூடாது. பரிசுத்தமாயிருக்கவேண்டும். ஆனால் யூதாவின் மனுஷருக்கு இந்தக் கட்டுப்பாடுகளெல்லாம் பிடிக்கவில்லை.

அவர்கள் உலகப்பிரகாரமாக சந்தோஷமாயிருக்க விரும்புகிறார்கள். தங்கள் மாம்சத்தின் இச்சைகளை அனுபவிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இப்படிப்பட்ட பாவமான ஆசைகளோடு யாரும் கர்த்தருடைய வழிகளில் நடக்க முடியாது. கர்த்தருடைய வழியில் நடக்கும்போது, கர்த்தர் அவர்களை ஆளுகை செய்வார். கர்த்தருடைய சித்தத்திற்கும், அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிகிறவர்களால் மாத்திரமே, அவருடைய வழியில் நடக்க முடியும்.

தம்முடைய ஆலோசனைக்கு கீழ்ப்படிய மறுக்கும் ஜனங்களை கர்த்தர் எச்சரிக்கிறார். அவர்கள்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பு வரும் என்று சொல்லுகிறார். அவர்கள் மத்தியில் தம்முடைய தீர்க்கதரிசிகளை அனுப்புகிறார்.

"நான் உங்கள்மேல் காவலாளரையும் வைத்து, எக்காள சத்தத்திற்கு செவிகொடுங்கள் என்றும் சொன்னேன்" (எரே 6:17) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் காவலாளரைப்போல, அவர்கள் மத்தியிலே கர்த்தருடைய வார்த்தைகளை, எக்காளம் ஊதுவது போல ஊதுகிறார்கள். அவர்களுக்கு வரப்போகும் ஆபத்துக்களை எச்சரித்துச் சொல்லுகிறார்கள்.

"அவர்கள் பட்சத்தில் கர்த்தர் காணப்படுவார்; அவருடைய அம்பு மின்னலைப்போலப் புறப்படும்; கர்த்தராகிய ஆண்டவர் எக்காளம் ஊதி, தென்திசைச் சுழல்காற்றுகளோடே நடந்துவருவார்" (சக 9:14).

"என் குடல்கள், என் குடல்களே நோகிறது, என் உள்ளம் வேதனைப்படுகிறது; என் இருதயம் என்னில் கதறுகிறது; நான் பேசாமல் அமர்ந்திருக்கக் கூடாது; என் ஆத்துமாவே, எக்காளத்தின் சத்தத்தையும், யுத்தத்தின் ஆர்ப்பரிப்பையும் கேட்டாயே" (எரே 4:19).

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். ஆனால் அவர்களோ, "நாங்கள் கேட்கமாட்டோம்" என்கிறார்கள் (எரே 6:17). அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை அசட்டைபண்ணிவிடுகிறார்கள். அவர்களுடைய வார்த்தைகளை ஏளனம்பண்ணுகிறார்கள். இதனால் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் வருகிறது.

ஜாதிகளே, கேளுங்கள்
எரே 6:18-30

எரே 6:18. ஆகையால் ஜாதிகளே, கேளுங்கள்; சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்துகொள்.

எரே 6:19. பூமியே, கேள்; இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளாமலிருந்து, என் நியாயப்பிரமாணத்துக்குச் செவிகொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள்; அவர்கள்மேல் நான் அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன்.

எரே 6:20. சேபாவிலிருந்து வருகிற தூபவர்க்கமும், தூரதேசத்தினுடைய சுகந்தப்பட்டையும் எனக்கு என்னத்துக்கு? உங்கள் சர்வாங்கதகனங்கள் எனக்கு விருப்பமல்ல; உங்கள் பலிகள் எனக்கு இன்பமாயிராது.

எரே 6:21. ஆகையால் இதோ, நான் இந்த ஜனத்துக்கு இடறல்களை வைப்பேன்; அவைகள்மேல் பிதாக்களும், பிள்ளைகளும், குடியானவனும், அவனுக்கடுத்தவனும், ஏகமாய் இடறுண்டு அழிவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 6:22. இதோ, வடதேசத்திலிருந்து ஒரு ஜனம் வந்து, பூமியின் கடையெல்லைகளிலிருந்து ஒரு பெரிய ஜாதி எழும்பும்.

எரே 6:23. அவர்கள் வில்லும் வேலும் பிடித்து வருவார்கள்; அவர்கள் கொடியர், இரக்கம் அறியாதவர்கள்; அவர்கள் சத்தம் சமுத்திர இரைச்சலுக்குச் சமானமாயிருக்கும்; சீயோன் குமாரத்தியே, அவர்கள்உனக்கு விரோதமாக யுத்தசந்நத்தராய்க் குதிரைகளின் மேலேறி அணியணியாக வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 6:24. அவர்கள் வருகிற செய்தியைக் கேட்டோம்; நம்முடைய கைகள் தளர்ந்தது; இடுக்கணும், கர்ப்பவதிக்கு உண்டாகும் வேதனைக்கொப்பான வேதனையும் நம்மைப் பிடித்தது.

எரே 6:25. வயல்வெளியிலே புறப்படாதிருங்கள்; வழியிலும் நடவாதிருங்கள்; சுற்றிலும் சத்துருவின் பட்டயமும் பயங்கரமுமுண்டு.

எரே 6:26. என் ஜனமாகிய குமாரத்தியே, நீ இரட்டைக் கட்டிக்கொண்டு, சாம்பலிலே புரண்டு, ஒரே புத்திரனுக்காகத் துக்கிக்கிறது போல மனங்கசந்து புலம்பு; பாழாக்குகிறவன் சடிதியாய் நம்மேல் வருவான்.

எரே 6:27. நீ என் ஜனத்தின் வழியை அறிந்துகொள்ளவும் சோதித்துப் பார்க்கவும் நான் உன்னை அவர்களுக்குள்ளே துருகமாகவும், அரணாகவும் வைத்தேன்.

எரே 6:28. அவர்களெல்லாரும் முரட்டாட்டமான அகங்காரிகளும், தூற்றித்திரிகிறவர்களுமாயிருக்கிறார்கள்; அவர்கள் வெண்கலமும் இரும்புமானவர்கள்; அவர்களெல்லாரும் கெட்டவர்கள்.

எரே 6:29. துருத்தி வெந்தது; ஈயம் நெருப்பினால் அழிந்தது; புடமிடுகிறனுடைய பிரயாசம் விருதாவாய்ப் போயிற்று; பொல்லாப்புகள் அற்றுப்போகவில்லை.

எரே 6:30. அவர்கள் தள்ளுபடியான வெள்ளி என்னப்படுவார்கள்; கர்த்தர் அவர்களைத் தள்ளிவிட்டார்.

யூதா ஜனத்திற்கு விரோதமாகவும், எருசலேமின் குடிகளுக்கு விரோதமாகவும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. அவர்களுக்கு வரப்போகும் வேதனைகளையும், தீங்குகளையும், உபத்திரவங்களையும் இந்த உலகம் முழுவதும் கேட்கவேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். ஆகையால் "ஜாதிகளே கேளுங்கள்" (எரே 6:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இந்தப் பூமியிலுள்ள எல்லா ஜாதிகளுக்கும் தம்முடைய செய்தியை பொதுவாக சொன்னாலும், "சபையே, அவர்களுக்குள் நடக்கிறதை அறிந்துகொள்" (எரே 6:18) என்று விசேஷமாகவும் சொல்லுகிறார். "சபை" என்னும் வார்த்தை பலவான்களின் கூட்டத்தையும், தேசங்களிலிருக்கிற பராக்கிரமசாலிகளையும் குறிப்பிடுகிறது.

கர்த்தர் யூதாவோடும் எருசலேமோடும் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய உடன்படிக்கையின் ஜனங்கள். கர்த்தரோ அவர்கள்மேல் தீங்கை வரப்பண்ணுகிறார். இந்த தீங்கு அவர்களுடைய நினைவுகளின் பலனாக அவர்களுக்கு வந்திருக்கிறது.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் அந்நிய தேசத்தாரோடு உடன்படிக்கை செய்துகொண்டு, தங்களைப் பலப்படுத்த விரும்புகிறார்கள். அந்நிய தேசத்தார் தங்களுக்கு பாதுகாப்பாயிருப்பார்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் அந்நிய தேசத்தார் மூலமாய், யூதாவின் மனுஷருக்கு பலமுண்டாகாது, பலவீனமே உண்டாகும். கர்த்தரை நம்புவதுதான் அவர்களுக்கு பலன்.

யூதாவின் மனுஷரோ கர்த்தரை நம்பாமல், அவருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படியாமல், தங்களுடைய மனதின் இஷ்டம்போல செயல்படுகிறார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது.

"இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளாமலிருந்து, என் நியாயப்பிரமாணத்துக்குச் செவிகொடாமல் அதை வெறுத்துவிடுகிறார்கள்" (எரே 6:19) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரைப்பற்றியும், எருசலேமின் குடிகளைப்பற்றியும் சொல்லுகிறார். கர்த்தர் அவர்களை தண்டிக்கிறார். "அவர்கள்மேல் நான் அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன்" (எரே 6:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு செவிகொடுக்கவில்லை என்பதையும், அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை என்பதையும் பூமியின் குடிகள் அறிந்திருக்கவேண்டும். கர்த்தர் எருசலேமின் ஜனங்களை நியாயமில்லாமல், அநியாயமாய்த் தண்டித்துவிட்டார் என்று, எந்த ஜாதியாரும் நினைத்துவிடக்கூடாது.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்கள் திரளாயிருக்கிறது. தூபவர்க்கமும் சுகந்த பட்டையும், சர்வாங்க தகனங்களும் தங்களுடைய பாவங்களை நீக்கும் நிவாரணமாக இருக்கும் என்று நினைக்கிறார்கள். தங்களுடைய பாவங்களிலிருந்து தங்களை மீட்பதற்கு இவற்றை மீட்பின் கிரயமாக செலுத்திவிடலாம் என்று தீர்மானம் பண்ணுகிறார்கள்.

கர்த்தரோ யூதாவின் மனுஷருடைய நினைவுகளை அறிந்திருக்கிறார். அவர்களுடைய பலிகள் கர்த்தருக்கு இன்பமாயில்லை. அவர்களுடைய சர்வாங்க தகனங்கள் கர்த்தருக்கு விருப்பமாயில்லை. "சேபாவிலிருந்து வருகிற தூபவர்க்கமும், தூரதேசத்தினுடைய சுகந்தப்பட்டையும் எனக்கு என்னத்துக்கு?" (எரே 6:20) என்று கர்த்தர் கேட்கிறார்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், தேவாலயத்திலுள்ள பொன்னாலாகிய பலிபீடத்தில் சர்வாங்க தகனங்களாக செலுத்த வருகிறார்கள். சேபாவிலிருந்து வருகிற தூபவர்க்கங்கள் விலையேறப்பெற்றவை. அதுபோலவே தூரதேசத்தினுடைய சுகந்த பட்டையும் அதிக மதிப்புள்ளவை. யூதாவின் மனுஷருக்கு இவை முக்கியமானதாயும், விசேஷமானதாயும் இருக்கிறது. ஆனால் அவர்களுடைய பலிகள் கர்த்தருக்கு இன்பமாயில்லை.

காணிக்கைகளையும், சர்வாங்க தகனங்களையும் கர்த்தருடைய ஆலயத்தில் வந்து, அங்கே உள்ள பலிபீடத்தில் செலுத்தவேண்டும் என்பது தேவனுடைய பிரமாணம். கர்த்தரே பலிகளையும், சர்வாங்க தகனங்களையும் நியமனம் பண்ணியிருக்கிறார். இவற்றிற்கு ஆவிக்குரிய அர்த்தங்களும் உள்ளன.

பலிகளையும், சர்வாங்க தகனங்களையும் செலுத்துவது, கர்த்தருக்குள் நாம் வைத்திருக்கிற விசுவாசம் பெருகுவதற்கு உதவியாயிருக்கவேண்டும். இவை நம்முடைய விசுவாசத்தையும், பயபக்தியையும் வர்த்திக்கப்பண்ணவேண்டும்.

இப்படிப்பட்ட நல்ல நோக்கத்தோடு, நாம் பலிகளையும், தூபவர்க்கங்களையும், சர்வாங்க தகனங்களையும் செலுத்தும்போது, கர்த்தர் இவற்றின்மீது பிரியமாயிருக்கிறார். நம்முடைய பலிகள் கர்த்தருக்கு இன்பமாயிருக்கும். அவர் நம்முடைய பலிகளை அங்கீகரிப்பார். நம்முடைய சர்வாங்க தகனங்களும் கர்த்தருக்கு விருப்பமாயிருக்கும். இந்த பலிகளை செலுத்துகிற நம்மீதும் கர்த்தர் இன்பமாயிருப்பார்.

ஆனால் யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் தங்கள் இருதயத்தில் தீயநோக்கத்தோடு, பலிகளையும், சர்வாங்க தகனங்களையும் செலுத்துகிறார்கள். தாங்கள் சர்வாங்க தகனங்களை தாராளமாய்ச் செலுத்தினால், தாராளமாய்ப் பாவம் செய்யலாம் என்று நினைக்கிறார்கள். தாங்கள் சர்வாங்க தகனங்களை செலுத்துவதினால், தாங்கள் பாவம் செய்வதற்கு கர்த்தர் அனுமதி கொடுப்பார் என்று தப்பிதமாக நினைக்கிறார்கள். இந்த எண்ணத்தோடு சர்வாங்க தகனங்களை செலுத்துகிறார்கள்.

நம்முடைய சர்வாங்க தகனங்கள் நம்முடைய பாவங்களை மன்னிப்பதில்லை. இவை நம்முடைய பாவங்களை போக்கும் பாவநிவாரணமுமல்ல. நாம் சர்வாங்க தகனங்களை செலுத்தும்போது, கர்த்தர் இந்தப் பலிகளை, நம்மை மீட்கும் கிரயமாக அங்கீகரிக்கமாட்டார். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளுமோ, கர்த்தர் தங்களுடைய பாவங்களை அங்கீகரிக்கவேண்டும் என்றும், தாங்கள் பாவம் செய்தாலும், கர்த்தர் தங்கள்மீது அன்பாயிருக்கவேண்டும் என்றும் நினைத்து, சர்வாங்க தகனங்களை செலுத்துகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய சர்வாங்க தகனங்கள் தமக்கு விருப்பமில்லை என்று கர்த்தர் சொல்லிவிடுகிறார். அவர்களுடைய பலிகள் தமக்கு இன்பமாயிராது என்று சொல்லி, அவற்றை அங்கீகரிக்க மறுத்துவிடுகிறார்.

யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் தீங்கு வரப்போகிறது. கர்த்தரே அவர்களுக்கு அழிவை திட்டம்பண்ணியிருக்கிறார். அவர்கள் மனந்திரும்புதலை வெறுத்தார்கள். கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். இதனால் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பும் அவருடைய கோபமும், அவர்கள்மீது வந்திருக்கிறது.

"இதோ, நான் இந்த ஜனத்திற்கு இடறல்களை வைப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 6:21). கர்த்தர் அவர்களுக்கு இடறல்களை வைக்கும்போது, அவர்கள் பாவத்தில் விழுந்துவிடவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமல்ல. அவர்களுக்கு தீங்குகளும், வேதனைகளும், பாடுகளும், நெருக்கங்களும், உபத்திரவங்களும் வரவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தை தண்டிக்கும்போது, அவர்களை உடனே அழித்துவிடாமல், மிகவும் கவனமாக தண்டிக்கிறார். அவர்களை அடித்தாலும் மட்டாய் அடிக்கிறார். அவர்கள் பாதுகாப்பாயிருக்க வேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம். கர்த்தர் வடதேசத்திலிருந்து கல்தேயரை வரப்பண்ணுகிறார். அவர்கள் யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் இடறல்களாகயிருப்பார்கள். அவைகள்மேல் பிதாக்களும், பிள்ளைகளும், குடியானவனும், அவனுக்கடுத்தவனும், ஏகமாய் இடறுண்டு அழிவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 6:21).

யூதா மனுஷருடைய பிதாக்கள் ஞானமுள்ளவர்கள். அதிக அறிவுள்ளவர்கள். அவர்களுடைய பிள்ளைகளோ வாலிபர்கள். வீரம் மிகுந்தவர்கள். மனுஷருடைய ஞானத்தினாலோ, அவர்களுடைய பெலத்தினாலோ அவர்களால் வரப்போகும் அழிவுக்கு தப்பிக்க முடியாது. தங்கள் சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குட்படாமல், அவர்களால் ஓடி ஒழிந்துகொள்ள முடியாது. கர்த்தர் எருசலேம் நகரத்திலே இடறல்களை வைக்கும்போது, ஞானமுள்ள பிதாக்களாலும் தப்பிக்க முடியாது. பெலமுள்ள பிள்ளைகளாலும் தப்பிக்க முடியாது.

யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் தண்டிப்பதற்கு கர்த்தர் கல்தேயரை தம்முடைய கருவிகளாகப் பயன்படுத்துகிறார். பாபிலோன் தேசம் எருசலேமுக்கு வடதிசையிலிருக்கிறது. அவர்கள் ஏற்கெனவே பல தேசங்கள்மீது யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்திருக்கிறார்கள். ஏராளமான தேசத்தார் பாபிலோன் தேசத்து ராஜாவோடு உடன்படிக்கை செய்து, அவர்களோடு சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து இப்போது, யூதாவின் பட்டணங்களுக்கு விரோதமாய் வருகிறார்கள்.

வடதிசையிலிருந்து வருகிற ஜனம் பெரிய ஜாதியாகயிருக்கும். அவர்கள் தீவிரமாய் யுத்தம்பண்ணுகிறவர்கள். "இதோ, வடதேசத்திலிருந்து ஒரு ஜனம் வந்து, பூமியின் கடையெல்லைகளிலிருந்து ஒரு பெரிய ஜாதி எழும்பும்" *(எரே 6:22)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் பரிசுத்தர் கல்தேயரைப்பற்றி தம்முடைய பிள்ளைகளிடம் விரிவாகச் சொல்லுகிறார். அவர்கள் கொடூரகுணமுள்ளவர்கள் என்றும், அவர்கள் அணியணியாக, எருசலேமுக்கு விரோதமாக வருவார்கள் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் வில்லும் வேலும் பிடித்து வருவார்கள்; அவர்கள் கொடியர், இரக்கம் அறியாதவர்கள்; அவர்கள் சத்தம் சமுத்திர இரைச்சலுக்குச் சமானமாயிருக்கும்; சீயோன் குமாரத்தியே, அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தசந்நத்தராய்க் குதிரைகளின்மேலேறி அணியணியாக வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் *(எரே 6:23)*.

கல்தேயர்கள் வில்லும் வேலும் பிடித்துவருவார்கள். இந்த ஆயுதங்களை எப்படி பயன்படுத்தவேண்டும் என்று அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும். அவர்கள் குதிரைகளின்மேல் ஏறி வருவதினால், எருசலேமுக்கு விரோதமாக விரைந்து வருவார்கள். யுத்தம் சமீபித்திருக்கிறது. அது பெரிய சேதத்தை உண்டுபண்ணும். கல்தேயரும் கொடியராயும், இரக்கமறியாதவர்களாயும் இருக்கிறார்கள். அவர்கள் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் சங்காரம்பண்ணுவார்கள். அவர்களுடைய எண்ணிக்கையும் அதிகம். அவர்கள் எருசலேமுக்கு விரோதமாக அணியணியாய் வருவார்கள். சத்துருக்கள் கூட்டங்கூட்டமாக வந்து யூதாவின் பட்டணங்களை அழித்துப்போடுவார்கள். யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் சிறைப்பிடித்துக்கொண்டு போவார்கள்.

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக வருகிற செய்தியை எருசலேமின் குடிகள் கேட்கிறார்கள். அவர்களுக்கு பயமும், திகிலும் உண்டாகிறது. அவர்களுடைய கைகள் தளர்ந்துபோகிறது. இடுக்கணும், கர்ப்பவதிக்கு உண்டாகும் வேதனைக்கு ஒப்பான வேதனையும் அவர்களைப் பிடித்துக்கொள்கிறது. எருசலேமின் குடிகளால் கல்தேயரை எதிர்க்க முடியவில்லை. யூதாவின் மனுஷரிடத்தில் கல்தேயருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிற தைரியமுமில்லை, அவர்களுடைய இருதயத்தில் திடனுமில்லை.

குற்றவுணர்வு நம்மைக் குத்தும்போது, நம்முடைய ஆவி சோர்ந்துபோகும். நமக்கு பிரச்சனைகளும், வேதனைகளும் வரும்போது அவற்றை தாங்குவதற்கு நம்மிடத்தில் பெலனிருக்காது.

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாய் வருகிறார்கள். எருசலேமின் குடிகள் எல்லோரும் தங்கள் வீடுகளுக்குள் ஓடி ஒழிந்து கொள்கிறார்கள். சத்துருவுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ணுவதற்குப் பதிலாக, தங்களுடைய வீடுகளில் கோழைகளைப்போல ஒழிந்துகொள்வதே தங்களுக்கு பாதுகாப்பானது என்று நினைக்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் தங்கள் வீடுகளுக்குள் ஒழிந்துகொண்டு, பயந்து நடுங்குகிறார்கள். மற்றவர்களோடு பேசும்போதும் அவர்களுடைய பயம் வெளிப்படுகிறது. "வயல்வெளியிலே புறப்படாதிருங்கள்; வழியிலும் நடவாதிருங்கள்; சுற்றிலும் சத்துருவின் பட்டயமும் பயங்கரமுமுண்டு" (எரே 6:25) என்று ஒருவருக்கொருவர் பயத்தோடு பேசிக்கொள்கிறார்கள்.

சத்துரு எல்லா பக்கத்திலும் இருக்கிறான் என்றும், அவனிடத்தில் பட்டயமும் பயங்கரமும் இருக்கிறது என்றும் நினைத்து பயப்படுகிறார்கள். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் பயந்து நடுங்கும்போது, எரேமியா தீர்க்கதரிசி அவர்களைப் பார்த்து, "என் ஜனமாகிய குமாரத்தியே, நீ இரட்டைக் கட்டிக்கொண்டு, சாம்பலிலே புரண்டு, ஒரே புத்திரனுக்காகத் துக்கிக்கிறதுபோல மனங்கசந்து புலம்பு" (எரே 6:26) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தை மனங்கசந்து புலம்பச் சொல்லுகிறார். அவர்கள் இரட்டுடுத்தி சாம்பலில் அமர்ந்தால் போதாது, அவர்கள் சாம்பலில் புரளவும்வேண்டும். அவர்களுடைய துக்கம் மிகவும் அதிகமாயிருக்கவேண்டும். பெற்றோர் தங்களுடைய ஒரே புத்திரனுக்காக துக்கிக்கிறதுபோல யூதாவின் மனுஷர் மனங்கசந்து புலம்பவேண்டும்.

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியை, யூதாவின் புத்திரர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் அனுப்புகிறார். அவர் எரேமியாவை அவர்களுக்கு நீதிபதியாக வைக்கிறார். எரேமியா யூதா ஜனத்தின் வழியை அறிந்துகொள்ளவேண்டும். அவர்களுடைய வழியை சோதித்துப் பார்க்கவேண்டும். இதற்காக கர்த்தர் எரேமியாவை, அவர்களுக்குள்ளே துருகமாகவும், அரணாகவும் வைக்கிறார் (எரே 6:27).

தேவனுடைய கோபம் எருசலேமின் குடிகள்மேல் வந்திருக்கிறது. யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவத்தினிமித்தமாயும், துன்மார்க்கத்தினிமித்தமாயும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. கர்த்தர் அவர்கள்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை அனுப்புவது, நியாயமானதுதான் என்பதை எரேமியாவும் புரிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய கோபமும் சரியானதுதான் என்பதை எரேமியாவும் அறிந்துகொள்ளவேண்டும்.

கர்த்தரிடத்தில் அநீதியோ, அநியாயமோ இல்லை என்பதை எரேமியா தன்னுடைய கண்களால் காணவேண்டும். இதற்காக கர்த்தர், எரேமியாவை, எருசலேமின் குடிகளுக்குள்ளே துருகமாகவும், அரணாகவும் வைக்கிறார். எருசலேமின் குடிகள் பயத்திலும் அதிர்ச்சியிலும் இருக்கிறார்கள். மிகுந்த துன்பத்தையும் வேதனையையும் அனுபவிக்கிறார்கள். அழுது புலம்புகிறார்கள். கர்த்தரோ எரேமியாவை ஒரு துருகத்தைப்போலவும், அரணைப்போலவும் பலப்படுத்துகிறார். எருசலேமின் குடிகளுக்கு வந்திருக்கிற உபத்திரவத்தைப் பார்த்து, எரேமியா பயந்துவிடக்கூடாது. கலங்கிவிடக்கூடாது. இதற்காகவே கர்த்தர் எரேமியாவின் இருதயத்தை துருகம்போலவும், அரண் போலவும் பெலப்படுத்துகிறார்.

கர்த்தர் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் பற்றிச் சொல்லும்போது, "அவர்களெல்லாரும் முரட்டாட்டமான அகங்காரிகளும், தூற்றித்திரிகிறவர்களுமாயிருக்கிறார்கள்; அவர்கள் வெண்கலமும் இரும்புமானவர்கள்; அவர்களெல்லாரும் கெட்டவர்கள்" (எரே 6:28) என்று சொல்லுகிறார்.

எரேமியா யூதாவின் பட்டணங்களுக்குள்ளே போய், ஜனங்களில் வழியை அறிந்து, சோதித்துப் பார்க்கும்போது, கர்த்தர் அவர்களைப்பற்றிச் சொல்லுவது மெய்தான் என்பதை எரேமியா அறிந்துகொள்வார். அவர்கள் எல்லோருமே கெட்டவர்களாகவும், மோசமானவர்களாகவும், துன்மார்க்கராகவும் இருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் புறங்கூறுகிறார்கள். தூற்றி திரிகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் வெண்கலமும் இரும்புமானவர்கள் என்று சொல்லுகிறார். வெண்கலமும் இரும்பும் சாதாரண உலோகங்கள். கர்த்தருடைய பிள்ளைகள் பொன்னாகவும், வெள்ளியாகவும் இருக்கவேண்டியவர்கள். அவர்கள் கர்த்தருக்குப் பயந்து, ஜீவித்த காலங்களில், அவர்கள் வெள்ளியாகவும், பொன்னாகவும்தான் இருந்தார்கள். இப்போதோ அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். பொன்னாகயிருந்தவர்கள் இப்போது வெண்கலமாகவும், இரும்பாகவும் இருக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் எல்லாரும், எருசலேமின் குடிகள் எல்லாரும் கெட்டவர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் பிறருக்கு தீங்கு செய்கிறவர்கள். அவர்களைக் குணப்படுத்துவது இயலாத காரியம் போலிருக்கிறது. அவர்களை புடமிட்டு சுத்தப்படுத்துவதற்கு கர்த்தர் அநேக உபாயங்களை பயன்படுத்தினார். அவர்களுக்கு பாடுகளையும், வேதனைகளையும், அந்நிய தேசத்து சிறையிருப்புக்களையும் கொடுத்தார். ஆனால் இவையெல்லாமே, அவர்களைத் திருத்துவதற்கு பிரயோஜனமுள்ளதாயில்லை. அவர்கள் திருந்தவில்லை. அவர்கள் எல்லாரும் இன்னும் முரட்டாட்டமான அகங்காரிகளாகவே இருக்கிறார்கள்.

பொன்னை புடமிடுகிறவர்கள், அதை அடுப்பில் வைத்து துருத்தியினால் ஊதுவார்கள். துருத்தி நெருப்புக்கு அருகாமையில் வைக்கப்பட்டிருக்கும். பொன்னை புடமிட முடியவில்லை. அதில் அசுத்தம் அதிகமாயிருக்கிறது. துருத்தியோ ஊதி ஊதி, நெருப்பில் வெந்துபோகிறது. துருத்தி நெருப்பில் வெந்துபோகுமளவுக்கு, ஊதியபோதிலும், பொன்னை புடமிட முடியவில்லை. பொன்னிலுள்ள அசுத்தங்கள் வெளியேறவில்லை.

பொன்னை புடமிடுவதற்கு அதோடு சேர்ந்து ஈயத்தை உருக்குவது வழக்கம். புடமிடும் நெருப்பு அதிகமாய் எரிகிறது. ஈயம் நெருப்பினால் அழிந்துபோகிறது. ஆனால் பொன்னோ, புடமிடாமல், அசுத்தமாகவே இருக்கிறது. ஈயத்தினால் தன்னுடைய வேலையை செய்ய முடியவில்லை.

பொன்னை புடமிடுகிறவர் மிகவும் கடினமாய் உழைக்கிறார். எப்படியாவது பொன்னை புடமிடவேண்டும் என்று பிரயாசப்படுகிறார். ஆனால் அவருடைய பிரயாசமெல்லாம் விருதாவாய்ப்போயிற்று. அவர் பயன்படுத்துகிற துருத்தி நெருப்பிலே வெந்துபோயிற்று. பொன்னை புடமிடுவதற்கு பயன்படுத்திய ஈயமும் நெருப்பிலே அழிந்துபோயிற்று. பொன் இன்னும் புடமிடப்படவில்லை. அதிலுள்ள அசுத்தம் நீங்கவில்லை.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் சுத்திகரிக்கப்படாத பொன்னைப்போல இருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவுதான் உபதேசம் பண்ணினாலும், அவர்களிடத்திலுள்ள பொல்லாப்புகள் அவர்களைவிட்டு அற்றுப்போகவில்லை. அவர்கள் மத்தியிலே கர்த்தருடைய வார்த்தையை உபதேசம்பண்ணின ஊழியக்காரர்களுடைய பிரயாசமெல்லாம் விருதாவாய்ப்போயிற்று. துருத்திகளைப்போன்ற அவர்களுடைய நாவும் வாயும் வெந்துபோனதுபோல வேதனைகளை அனுபவிக்கிறது. யூதாவின் மனுஷரை திருத்துவதற்கு, ஊழியக்காரர்கள் பயன்படுத்திய எல்லா உபகாரங்களும், ஈயத்தைப்போல நெருப்பிலே அழிந்துபோயிற்று. ஆனாலும் யூதா மனுஷருடைய பொல்லாப்புகள் இன்னும் அற்றுப்போகவில்லை.

மனுஷருடைய துன்மார்க்கமும், பொல்லாப்புகளும் அவர்களைவிட்டு நீங்கவேண்டும். இல்லையென்றால் அவர்களுடைய தீயசுபாவங்கள் மற்றவர்களையும் பாதிக்கும். துன்மார்க்கரைப் பார்த்து, மற்றவர்களும் துன்மார்க்கராகி விடுவார்கள். கர்த்தர் யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் தம்முடைய நியாயத்தீர்ப்பைக் கொடுக்கிறார். "அவர்கள் தள்ளுபடியான வெள்ளி என்னப்படுவார்கள்" (எரே 6:30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தள்ளுபடியான வெள்ளி ஒன்றுக்கும் பயன்படாது. அது வெள்ளியைப்போல மின்னும். ஆனாலும் அது மெய்யான வெள்ளியல்ல. வெள்ளியின் சுபாவம் அதில் சிறிதுமிருக்காது. ஜனங்கள் தள்ளுபடியான வெள்ளியை தள்ளிவிடுவதுபோல, கர்த்தரும் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் தள்ளிவிடுகிறார். அவர்களிடத்தில் ஒரு நன்மையும் காணப்படவில்லை. அவர்களுடைய பொல்லாப்புகளும் அவர்களைவிட்டு அற்றுப்போகவில்லை.

தீர்க்கதரிசிகளுடைய ஊழியங்களெல்லாம் விருதவாய்ப்போயிற்று. ஜனங்கள் தங்கள் பாவங்களை உணரவுமில்லை, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவுமில்லை. தங்கள் பாவங்களை விட்டு விலகிவரவுமில்லை. பொல்லாப்பு அவர்களை விட்டு அற்றுப்போகவுமில்லை. அவர்கள் தள்ளுபடியான வெள்ளியைப் போல, ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவர்களாயிருக்கிறார்கள். கர்த்தரும் அவர்களைத் தள்ளிவிடுகிறார்.

பாவிகள் மடிந்துபோகவேண்டும் என்பதோ, அல்லது அவர்கள் அழிந்துபோகவேண்டும் என்பதோ கர்த்தருடைய விருப்பமல்ல. பாவிகளின் மரணத்தில் கர்த்தர் பிரியப்படுகிறவருமல்ல. பாவிகள் எப்படியாவது மனந்திரும்பவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

அவர்களுடைய இரட்சிப்புக்காக, கர்த்தர் எல்லா உபாயங்களையும் பயன்படுத்துகிறார். இரட்சிக்கப்படாதவர்களை கர்த்தர் உடனே அழித்துவிடாமல், அவர்கள் எப்படியாவது இரட்சிக்கப்படுவார்கள் என்று பொறுமையோடு காத்திருக்கிறார்.

வெள்ளியை குகையில் உருக்கும் முன்பாக, வெள்ளியோடு அழுக்கும் கலந்திருக்கும். அழுக்கான வெள்ளியை யாரும் தூரத்தில் எரிந்துவிடமாட்டார்கள். அதை உருக்கி புடமிட்டு சுத்தம்பண்ணுவார்கள். அது தள்ளுபடியான வெள்ளியாக போகும் வரையிலும், அதை எப்படியாவது புடமிட்டு சுத்தப்படுத்த வேண்டுமென்று விரும்புவார்கள்.

கர்த்தரும் நம்முடைய துர்க்குணங்கள் நம்மைவிட்டு நீங்கவேண்டுமென்று விரும்புகிறார். நம்மை புடமிட்டு சுத்தப்படுத்துகிறார். நாம் மனந்திரும்புவதற்கு வாய்ப்பு இருக்கும் வரையிலும் கர்த்தர் நமக்குள்ளே கிரியை நடப்பிக்கிறார். நாம் தள்ளுபடியான வெள்ளியைப்போல, ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத, தள்ளப்பட்ட பாவியாக ஆகும்போதோ, கர்த்தர் நம்மைத் தள்ளிவிடுவார். அது வரையிலும் கர்த்தருடைய கிருபையுள்ள கரம் நமக்குள்ளே கிரியை நடப்பிக்கும்.

7 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசி, தேவனுடைய நாமத்தினால், யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும், அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கடிந்துகொள்கிறார். அவர்கள் தேவனுடைய ஆலயத்திலே ஆராதனை செய்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு கர்த்தர் செவிகொடுக்கமாட்டார் என்று எரேமியா சொல்லுகிறார் (எரே 7:1-11).

சீலோவிலுள்ள தேவனுடைய ஆலயம் அழிந்துபோனது. சீலோவைப்போலவே, எருசலேமும் அழிந்துபோகும்.

யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் ஜனங்கள் விக்கிரகாராதனை செய்கிறார்கள் (எரே 7:17-20). பலிசெலுத்துவதைவிட கீழ்ப்படிதலே உத்தமம் (1சாமு 15:22). யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு கீழ்ப்படியாதிருக்கிறார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தர் அவர்களுடைய பலிகளை அங்கீகரிக்கமாட்டார் (எரே 7:21-28). யூதா வம்சத்தாரின் விக்கிரகாராதனையினிமித்தமாயும், அவர்களுடைய அவபக்தியினிமித்தமாயும், அவர்களுடைய தேசம் பாழாய்ப்போகும் (எரே 7:29-34).

கர்த்தரின் ஆலயம் எரே 7:1-15

எரே 7:1. கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வசனம்:

எரே 7:2. நீ கர்த்தருடைய ஆலயத்தின் வாசலிலே நின்று, அங்கே கூறிச் சொல்லவேண்டிய வசனம் என்னவென்றால், கர்த்தரைப் பணிந்து கொள்ள இந்த வாசல்களுக்குள்ளே பிரவேசிக்கிற யூத ஜனங்களாகிய நீங்களெல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 7:3. இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள், அப்பொழுது உங்களை இந்த ஸ்தலத்திலே குடியிருக்கப்பண்ணுவேன்.

எரே 7:4. கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே என்று சொல்லி, பொய்வார்த்தைகளை நம்பிக்கொள்ளாதிருங்கள்.

எரே 7:5. நீங்கள் உங்கள் வழிகளையும் உங்கள் கிரியைகளையும் நன்றாய்ச் சீர்ப்படுத்தி, நீங்கள் மனுஷனுக்கும் மனுஷனுக்குமுள்ள வழக்கை நியாயமாய்த் தீர்த்து,

எரே 7:6. பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காமலும், குற்றமில்லாத இரத்தத்தை இந்த ஸ்தலத்திலே சிந்தாமலும்; உங்களுக்குக் கேடுண்டாக அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும் இருப்பீர்களேயாகில்,

எரே 7:7. அப்பொழுது நான் உங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசமாகிய இந்த ஸ்தலத்திலே உங்களைச் சதாகாலமும் குடியிருக்கப்பண்ணுவேன்.

எரே 7:8. இதோ, ஒன்றுக்கும் உதவாத பொய்வார்த்தைகளை நீங்கள் நம்புகிறீர்கள்.

எரே 7:9. நீங்கள் திருடி, கொலைசெய்து, விபசாரம்பண்ணி, பொய்யாணையிட்டு, பாகாலுக்குத் தூபங்காட்டி, நீங்கள் அறியாத அந்நிய தேவர்களைப் பின்பற்றி,

எரே 7:10. பிற்பாடு வந்து, என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயத்திலே எனக்கு முன்பாக நின்று: இந்த அருவருப்புகளையெல்லாம் செய்வதற்காக விடுதலை பெற்றிருக்கிறோமென்று சொல்வீர்களோ?

எரே 7:11. என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயம் உங்கள் பார்வைக்குக் கள்ளர்குகையாயிற்றோ? இதோ, நானும் இதைக் கண்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 7:12. நான் முந்தி என் நாமம் விளங்கப்பண்ணின சீலோவிலுள்ள என் ஸ்தலத்துக்கு நீங்கள் போய், இஸ்ரவேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அதற்குச் செய்ததைப் பாருங்கள்.

எரே 7:13. நீங்கள் இந்தக் கிரியைகளையெல்லாம் செய்தீர்கள், நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லி வந்திருந்தும், நீங்கள் கேளாமலும், நான் உங்களைக் கூப்பிட்டும், நீங்கள் உத்தரவுகொடாமலும் போனபடியினால்,

எரே 7:14. என் நாமம் தரிக்கப்பட்டதும், நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறதுமான இந்த ஆலயத்துக்கும், உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த ஸ்தலத்துக்கும், நான் சீலோவுக்குச் செய்ததுபோலச் செய்வேன்.

எரே 7:15. நான் உங்களுடைய எல்லாச் சகோதரருமாகிய எப்பிராயீம் சந்ததி அனைத்தையும் தள்ளிப்போட்டது போல, உங்களையும் என் முகத்தைவிட்டுத் தள்ளிப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி இந்த அதிகாரத்தில் புதிய பிரசங்கச் செய்தியைச் சொல்லுகிறார். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்கள் ஏன் மனந்திரும்பவேண்டும் என்பதற்கான காரணங்களை எரேமியா இந்த அதிகாரத்தில் விரிவாக எடுத்துச் சொல்லுகிறார்.

கர்த்தரால் எரேமியாவுக்கு வசனம் உண்டாயிற்று. எரேமியா கர்த்தருடைய ஆலயத்தின் வாசலில் நின்று, அங்கே கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லவேண்டும். எரேமியா அங்கே கூறிச்சொல்லவேண்டிய வசனம் என்ன என்பதையும், கர்த்தர் அவருக்குச் சொல்லுகிறார். யூதாவின் வம்சத்தார் இந்த வாசல்களுக்குள்ளே பிரவேசித்து, தேவனுடைய ஆலயத்தின் உட்பிரகாரத்திற்குள் போவார்கள். அவர் ஆசாரியர்களின் பாவங்களையும், தீர்க்கதரிசிகளின் அநியாயங்களையும் அவர்களுக்கு சொல்லவேண்டும். தங்கள்மீது குற்றம் சொல்லும்போது, ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும், எரேமியாவின்மீது கோபப்படுவார்கள். ஆனாலும் எரேமியா அவர்களுக்கு பயப்படக்கூடாது.

கர்த்தரைப் பணிந்துகொள்ள, தேவாலயத்தின் வாசல்களுக்குள்ளே பிரவேசிக்கிற யூதஜனங்களுக்கு எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லவேண்டும். யூதர்கள் வருஷத்திற்கு மூன்றுதரம் பண்டிகைகளை ஆசரிப்பது வழக்கம். கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிற இந்தக் காலம், ஒருவேளை மூன்று பண்டிகைகளில் ஏதோ ஒரு பண்டிகையை ஆசரிக்கிற காலமாயிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இந்தப்பண்டிகை நாட்களில் யூதாவின் மனுஷரில் புருஷர்கள் எல்லோரும், எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு வருவார்கள். ஒருவரும் வெறுங்கையோடு வராமல், கர்த்தருக்கு காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள்.

எரேமியாவின் பிரசங்கச் செய்தியில், அவருடைய பிரசங்கத்தின் தலைப்பு இடம்பெற்றுள்ளது. எரேமியா இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தருடைய நாமத்தில், ஜனங்களுக்கு கர்த்தருடைய செய்தியை சொல்லவேண்டும். கர்த்தரே இந்த உலகத்தை சிருஷ்டித்தவர். தம்முடைய சித்தத்தின் பிரகாரமாய் இந்த உலகத்தை ஆளுகை செய்கிறவர். கர்த்தருடைய கட்டளைகளின் பிரகாரம் இந்த உலகம் இயங்குகிறது. கர்த்தர் தம்முடைய ஜனங்களோடு உடன்படிக்கை செய்திருக்கிறார்.

கர்த்தருடைய வார்த்தைகளும், மனுஷருடைய எண்ணங்களும் வேறுபட்டிருக்கிறது. கர்த்தருடைய விருப்பமும் மனுஷருடைய விருப்பமும் ஒன்றாயில்லை. கர்த்தர் நினைப்பதுபோல மனுஷர் நினைப்பதுமில்லை. மனுஷருடைய சித்தத்திற்கு கர்த்தர் ஒத்துவர வேண்டுமென்று மனுஷர் எதிர்பார்க்கக் கூடாது. மனுஷர்தான் கர்த்தருடைய சித்தத்திற்கு ஒத்துப்போகவேண்டும்.

மனுஷர்கள் பாவம் செய்து, கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். அப்போது கர்த்தர் அவர்கள் இழந்துபோன சந்தோஷத்தையும், சமாதானத்தையும், ஆறுதலையும் அவர்களுக்கு திரும்பக் கொடுப்பார். அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு செவிகொடுப்பார். அவர்களுடைய குறைகளையெல்லாம் நீக்குவார். கர்த்தர் தம்முடைய கிருபையோடு அவர்களை சந்திப்பார்.

"உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்படுத்துங்கள்" (எரே 7:3) என்று எரேமியா ஜனங்களுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். அவர்கள் எங்கே, எப்படி சீர்படுத்தவேண்டும் என்றும் கர்த்தர் தெளிவுபடுத்துகிறார். ஜனங்கள் தங்களுடைய வழிகளையும், கிரியைகளையும் சீர்படுத்தினால், கர்த்தர் அவர்களை ஏற்றுக்கொள்வதாக வாக்குப்பண்ணுகிறார். "உங்களை இந்த ஸ்தலத்திலே குடியிருக்கப்பண்ணுவேன்" என்று கர்த்தர் தங்கள் வழிகளையும் கிரியைகளையும் சீர்படுத்துகிற ஜனங்களுக்கு வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் இந்த ஸ்தலத்திலே அமைதலாகவும், பாதுகாப்பாகவும், சமாதானமாகவும் குடியிருப்பார்கள். அவர்களுக்கு ஒரு ஆபத்தும் வராது. அவர்களை யாரும் அச்சுறுத்தமாட்டார்கள். அவர்களுக்கு யாரும் தீங்கு செய்யவுமாட்டார்கள்.

யூதாவின் வம்சத்தார் தங்கள் வழிகளையும் கிரியைகளையும் முற்றிலுமாய் சீர்படுத்தவேண்டும். யூதா தேசம் முழுவதிலும் சீர்திருத்தம் நடைபெற வேண்டும். சீர்திருத்தம் தற்காலிகமானதாகயிருக்கக்கூடாது. அது நிரந்தரமான சீர்திருத்தமாயிருக்கவேண்டும். யூதாவின் மனுஷர், அரைகுறை மனதோடு, ஏனோதானோவென்று, தங்களுடைய வழிகளையும் கிரியைகளையும் சீர்படுத்தக்கூடாது. அவர்கள் முழுமனதோடும், முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும் தங்கள் வழிகளையும், கிரியைகளையும் சீர்படுத்தவேண்டும்.

"நீங்கள் உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் நன்றாய் சீர்படுத்துங்கள்" (எரே 7:5) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் அரையும் குறையுமாக சீர்படுத்தாமல் நன்றாய் சீர்படுத்தவேண்டும். அவர்களுடைய எல்லா கிரியைகளிலும் கண்ணியமும் நியாயமும் இருக்கவேண்டும். அதிகாரத்தில் அமர்ந்திருக்கிறவர்கள் மனுஷனுக்கும் மனுஷக்கும் உள்ள வழக்கை நியாயமாய்த் தீர்த்து வைக்கவேண்டும்.

நியாயாதிபதிகளிடத்தில் பட்சபாதம் இருக்கக்கூடாது. அவர்கள் பரதேசியையும், திக்கற்றவனையும், விதவையையும் ஒடுக்கக்கூடாது. விதவைகளுக்கும் திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஆதரவாக ஒருவரும் இருக்கமாட்டார்கள். பிரபுக்களும், நியாயாதிபதிகளும் அவர்களுக்கு ஆதரவாயிருக்கவேண்டும். குற்றமில்லாத இரத்தத்தை இந்த ஸ்தலத்திலே சிந்தக்கூடாது. குற்றமில்லாத இரத்தத்தை சிந்தும்போது அந்த ஸ்தலம் தீட்டுப்படும். அவர்கள் வாசம்பண்ணுகிற ஸ்தலத்தில், குற்றமில்லாத இரத்தத்தை சிந்துகிற அசுத்தமோ, தீட்டோ காணப்படக்கூடாது.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். இந்த ஸ்தலத்திலே அவர்கள் அந்நிய தேவர்களைப் பின்பற்றக்கூடாது. அவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவர்கள் அந்நிய தேவர்களைப் பின்பற்றினால் அவர்களுக்கு கேடுண்டாகும்.

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு கொடுக்கிற இந்த கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தால், அவர்களுக்கு ஆசீர்வாதமுண்டாகும். "அப்பொழுது நான் உங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசமாகிய இந்த ஸ்தலத்திலே உங்களைச் சதாகாலமும் குடியிருக்கப்பண்ணுவேன்" (எரே 7:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். "இந்த ஸ்தலம்" என்னும் வாக்கியம் கர்த்தருடைய ஆலயத்தைக் குறிக்கும். கர்த்தருடைய ஆலயம் அவர்களுக்கு எப்போதுமே அடைக்கலமாயிருக்கும். கர்த்தருடைய ஆலயத்தில் அவர்கள் பிரவேசித்து தேவனோடு ஐக்கியமாயிருக்கலாம். மனுஷர் ஒருவரையொருவர் சந்திப்பதுபோல, அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரையும் அவருடைய ஆலயத்திலே சந்திக்கலாம்.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது அவர்கள் கானான் தேசத்தில் சதாகாலமும் குடியிருப்பார்கள். எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு வந்து சதாகாலமும் கர்த்தரை ஆராதிப்பார்கள். அவர்களுக்கு ஒரு காலும் கேடுண்டாகாது. அவர்களை யாரும் தொந்தரவு பண்ணமாட்டார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தால், அவர்களுடைய பாவமே அவர்களை, கானான் தேசத்திலிருந்து துரத்திவிடும். நாம் கர்த்தரை உண்மையாகவும், பயபக்தியோடும் ஆராதிக்கும்போது, கர்த்தர் நமக்கு தம்முடைய பரமகானானை சுதந்தரமாய்க் கொடுப்பார். நமக்கு பரலோகத்திலே நித்திய சுதந்தரம் உண்டாயிருக்கும்.

யூதாவின் மனுஷர் பொய் வார்த்தைகளை நம்பக்கூடாது. அவர்கள் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயங்களில் பாவங்களும், துன்மார்க்கமும் நிரம்பியிருக்கிறது. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசுகிறது. அவர்களுடைய இருதயம் கேடுள்ளதாயிருப்பதினால், அவர்கள் பொய் வார்த்தைகளைப் பேசுகிறார்கள். "பொய் வார்த்தைகளை நம்பிக்கொள்ளாதிருங்கள்" (எரே 7:4) என்று கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார்.

எந்த வழி தங்களுக்கு பாதுகாப்பான வழி என்றும், எது தங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் என்றும், யூதாவின் வம்சத்தார் தங்களுக்குள்ளே பேசிக்கொள்கிறார்கள். அவர்கள் பொய் வார்த்தைகளைப் பேசுகிறார்கள். இவர்களுக்கு நல்ல வழி எது என்று தெரியவில்லை. தங்களுடைய மனதிற்கு பிடித்த வழியை நல்ல வழி என்று சொல்லுகிறார்கள். அவர்கள் பொய் வார்த்தைகளை நம்புகிறார்கள். "இதோ, ஒன்றுக்கும் உதவாத பொய் வார்த்தைகளை நீங்கள் நம்புகிறீர்கள்" (எரே 7:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம், கர்த்தரின் ஆலயம் இதுவே" (எரே 7:4) என்று சொல்லுவதே அவர்களுடைய பொய் வார்த்தைகளாயிருக்கிறது. கர்த்தர் இந்த ஆலயத்தில் வாசம்பண்ணுகிறார் என்றும், கர்த்தர் இங்கே ஆராதிக்கப்படுகிறார் என்றும் யூதாவின் மனுஷர் சொல்லுகிறார்கள். இந்த ஆலயத்தில், வருஷத்திற்கு மூன்றுதரம் பண்டிகைகளை ஆசரிக்க வரவேண்டும் என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தில் ராஜாதி ராஜாவாகிய கர்த்தர் வாசம்பண்ணுகிறார் என்றும், இதுவே அவருடைய வாசஸ்தலம் என்றும் சொல்லுகிறார்கள். இந்த வார்த்தைகளெல்லாமே அவர்களுடைய பொய் வார்த்தைகள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வார்த்தைகள் ஒன்றுக்கும் உதவாது என்றும், ஆனாலும் யூதாவின் மனுஷர் இந்த பொய்வார்த்தைகளை நம்புகிறார்கள் என்றும் கர்த்தர் அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறார்.

கர்த்தரின் ஆலயம் எருசலேமில் இருப்பதினால் தங்களுக்கு பாதுகாப்பு கிடைக்குமென்று எருசலேமின் குடிகள் நினைக்கிறார்கள். ஜனங்கள் சீர்கெட்டுப்போயிருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் பாவங்களும், துன்மார்க்கங்களும் நிரம்பியிருக்கிறது. தீர்க்கதரிசிகள் அவர்கள் மத்தியில் வந்து அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு கண்டித்து சொல்லுகிறார்கள். ஆனாலும் யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை.

எருசலேமின் குடிகள் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்திற்கு வருகிறார்கள். கர்த்தரைப் பணிந்துகொள்ள ஆலயத்தின் வாசல் வழியாய் உட்பிரவேசிக்கிறார்கள். தங்களிடத்தில் பாவம் இருந்தாலும், கர்த்தருடைய ஆலயத்தில் வந்து, அவரை ஆராதிக்கும்போது, கர்த்தர் தங்களைப் பாதுகாப்பார் என்று நம்புகிறார்கள்.

"நீங்கள் திருடி, கொலைசெய்து, விபசாரம்பண்ணி, பொய்யாணையிட்டு, பாகாலுக்குத் தூபங்காட்டி, நீங்கள் அறியாத அந்நிய தேவர்களைப் பின்பற்றி, பிற்பாடு வந்து, என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயத்திலே எனக்கு முன்பாக நின்று: இந்த அருவருப்புகளையெல்லாம் செய்வதற்காக விடுதலை பெற்றிருக்கிறோமென்று சொல்வீர்களோ? என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயம் உங்கள் பார்வைக்குக் கள்ளர்குகையாயிற்றோ? இதோ, நானும் இதைக் கண்டேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 7:9-11).

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தாலும், கர்த்தருடைய ஆலயத்தில் அவரை ஆராதிக்க வருகிறார்கள். "கர்த்தரின் ஆலயம் இதுவே" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தங்கள் வாயினால் கர்த்தரை ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய இருதயமோ, கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறது.

கர்த்தருடைய ஆலயம் எருசலேமிலிருப்பதற்காக, எருசலேமின் குடிகள் மிகுந்த சந்தோஷமாயிருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய இருதயத்தில் பெருமை வருகிறது. கர்த்தருடைய வல்லமை தங்களுக்கு பாதுகாப்பாயிருக்குமென்றும், தங்கள் சத்துருக்கள்மீது கர்த்தர் யுத்தம்பண்ணுவார் என்றும் எருசலேமின் குடிகள் நினைக்கிறார்கள். பாவம் செய்கிற தங்களுக்கு விரோதமாக கர்த்தர் யுத்தம் செய்வார் என்பதை அவர்கள் நினைப்பதில்லை.

எருசலேமின் குடிகள் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறார்கள். ஆனாலும் தாங்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு அருகாமையில் இருப்பதற்காக பெருமைப்படுகிறார்கள்.

"எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி, நீ செய்த உன் எல்லாக் கிரியைகளினிமித்தமும் அந்நாளிலே வெட்கப்படாதிருப்பாய்; அப்பொழுது நான் உன் பெருமையைக்குறித்துக் களிகூர்ந்தவர்களை உன் நடுவிலிருந்து விலக்கிவிடுவேன்; நீ இனி என் பரிசுத்த பர்வதத்தில் அகங்காரங்கொள்ளமாட்டாய்" (செப் 3:11).

யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் கர்த்தரின் ஆலயத்தைப் பற்றியும் சரியாக தெரியவில்லை. ஆலயத்தின் கர்த்தரைப்பற்றியும் சரியாக தெரியவில்லை. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் ஏராளமான பாவங்களை செய்திருக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் பாவத்தைக் குறித்த குற்றவுணர்வோ, பாவத்திற்கு மனந்திரும்புலோ இல்லை. கர்த்தருடைய ஆலயத்திற்கு காணிக்கைகளைக் கொண்டு வந்தால், கர்த்தர் தங்களுடைய பாவங்களை மன்னிப்பார் என்று எதிர்பார்க்கிறார்கள். தங்களுடைய ஜெபத்தில் நியாயமில்லை என்பதுகூட அவர்களுக்குத் தெரியவில்லை.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர். இஸ்ரவேல் வம்சத்தாரோ துன்மார்க்கராயிருக்கிறார்கள். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் திருடுகிறார்கள், கொலைசெய்கிறார்கள், விபசாரம்பண்ணுகிறார்கள், பொய்யாணையிடுகிறார்கள், பாகாலுக்கு தூபங்காட்டுகிறார்கள், தாங்கள் அறியாத அந்நிய தேவர்களை பின்பற்றுகிறார்கள். அவர்கள் இவ்வளவு பாவங்களையும் கர்த்தருக்கு விரோதமாகச் செய்துவிட்டு, அதற்கு பிற்பாடு, கர்த்தருடைய நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயத்தில், அவருடைய சமுகத்திற்கு முன்பாக வந்து நிற்கிறார்கள். "இந்த அருவருப்புக்களையெல்லாம் செய்வதற்காக விடுதலை பெற்றிருக்கிறோம்" (எரே 7:9,10) என்று சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் மனந்திரும்பாத பாவிகளாகயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பாரென்றால், மெய்யாகவே அவர் அவர்களுடைய பாவங்களுக்கு துணைபோகிறவராகவும், அவர்களுடைய பாவங்களுக்கு பங்காளியாகவும் இருப்பார்.

யூதாவின் மனுஷர், கர்த்தருக்கு விரோதமாக தங்களால் எவ்வளவு அதிகமாகப் பாவம் செய்யமுடியமோ, அவ்வளவு அதிகமாக பாவம் செய்திருக்கிறார்கள். தங்கள் பாவங்களுக்கு மனம் வருந்தாமலேயே, கர்த்தருடைய ஆலயத்திற்கு முன்பாக, வந்து துணிகரமாக வந்து நிற்கிறார்கள். தங்களுடைய ஜெபத்தைக் கர்த்தர் கேட்பார் என்றும், தங்களை இன்னும் பாவம் செய்வதற்கு அனுமதிப்பார் என்றும் வீணாய் நினைக்கிறார்கள். எல்லா அருவருப்புக்களையும் செய்வதற்கு தாங்கள் விடுதலை பெற்றிருப்பதாகவும், பாவங்களை செய்வதற்கு தங்களுக்கு உரிமை உண்டு என்றும் சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரின் ஆலயத்திற்கு காணிக்கைகளோடு வருகிறார்கள். கர்த்தருக்கு பாவநிவாரண பலிகளையும், சர்வாங்க தகனங்களையும் செலுத்துகிறார்கள். கர்த்தருக்கு பலிகளை செலுத்தின உடனேயே, "நாங்கள் விடுதலை பெற்றிருக்கிறோம்" என்றும், "எங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது" என்றும் சொல்லுகிறார்கள். தங்களுடைய எல்லா குற்றவுணர்வுகளிலிருந்தும், எல்லா பாவங்களிலிருந்தும் கர்த்தர் தங்களை இரட்சித்துவிட்டார் என்றும் சொல்லுகிறார்கள்.

கர்த்தருக்கு பலிகளை செலுத்தியிருப்பதினால், கர்த்தர் இனிமேல் தங்களுடைய பாவங்களை கண்டுகொள்ள மாட்டார் என்றும், தங்களைக் கடிந்துகொள்ள மாட்டார் என்றும் சொல்லுகிறார்கள். தாங்கள் எவ்வளவு பாவங்கள் செய்தாலும், அவை இந்த உலகத்தின் கண்களுக்குத் தெரியாது என்றும், தாங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் பாவம் செய்துகொள்ளலாம் என்றும் சொல்லுகிறார்கள்.

நம்முடைய பாவங்களுக்கு நாம் உண்மையாய் மனந்திரும்பும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், நம்முடைய பாவங்களிலிருந்து நமக்கு விடுதலை கொடுக்கிறார். நாம் கர்த்தரிடத்தில் எவ்வளவு ஜெபம்பண்ணினாலும், எவ்வளவு காணிக்கைகளை செலுத்தினாலும், நாம் பாவங்களை செய்வதற்கு கர்த்தர் ஒருபோதும் நமக்கு அனுமதி கொடுப்பதில்லை. பாவங்களை செய்வதற்காக ஒருவரும் கர்த்தரிடத்திலிருந்து விடுதலை பெறுவதுமில்லை.

கர்த்தரின் ஆலயத்தில் அவருடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தரின் ஆலயம் அவருடைய ராஜ்யத்திற்கு அடையாளம். இந்த உலகத்தில் கிரியை நடப்பிக்கிற சாத்தானுடைய ராஜ்யத்திற்கும், பாவத்தின் ராஜ்யத்திற்கும் விரோதமாக, தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் யூதாவின் மனுஷரோ கர்த்தருடைய ஆலயத்தை கள்ளர் குகையாக நினைக்கிறார்கள். "என் நாமம் தரிக்கப்பட்ட இந்த ஆலயம் உங்கள் பார்வைக்கு கள்ளர் குகையாயிற்றோ" (எரே 7:11) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரிடத்தில் கேட்கிறார்.

கர்த்தருடைய ஆலயம் கள்ளர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிற ஸ்தலமல்ல. திருடுகிறவர்களும், கொலை செய்கிறவர்களும், விபசாரம் பண்ணுகிறவர்களும், பொய்யாணையிடுகிறவர்களும், விக்கிரங்களை ஆராதனை செய்கிறவர்களும் கர்த்தருடைய ஆலயத்திற்கு வரலாம். தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணலாம். ஆனாலும், கர்த்தருடைய ஆலயம் ஒருபோதும் துன்மார்க்கருக்கு அடைக்கலம் கொடுக்கிற ஸ்தலமாகயிருக்காது. துணிகரமாய்ப் பாவம் செய்தவர்கள் கர்த்தருடைய ஆலயத்தில் வந்து ஒழிந்துகொள்ளலாம் என்று நினைக்கக்கூடாது. இதற்காக, ஆலயம் கட்டப்படவில்லை.

பலிபீடத்திலுள்ள கொம்புகளை பிடித்துக்கொண்டு, அறியாமல் பாவம் செய்தவர்கள் அங்கே அடைக்கலம் பெறலாம். அவர்களுக்கு தேவனுடைய சமுகத்திலிருந்து இரக்கம் கிடைக்கும். துணிகரமாய் பிறரை கொலைசெய்தவர்களுக்கு கர்த்தருடைய பலிபீடத்தின் கொம்புகளில் அடைக்கலம் இல்லை.

"ஒருவன் பிறனுக்கு விரோதமாகச் சதிமோசஞ்செய்து, அவனைத் துணிகரமாய்க் கொன்றுபோட்டால், அவனை என் பலிபீடத்திலிருந்தும் பிடித்துக்கொண்டு போய்க் கொலைசெய்யவேண்டும்" (யாத் 21:14).

"யோவாப் கர்த்தரின் கூடாரத்திற்கு ஓடிப்போனான் என்றும், இதோ, பலி பீடத்தண்டையில் நிற்கிறான் என்றும், ராஜாவாகிய சாலொமோனுக்கு அறிவிக்கப்பட்டபோது, சாலொமோன் யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவை அனுப்பி, நீ போய் அவன்மேல் விழு என்றான்" (1இராஜா 2:29).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய கிருபாசனத்தின் பிரமாணத்தை தப்பிதமாகப் புரிந்து கொள்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகவும், மனுஷருக்கு விரோதமாகவும் எவ்வளவு பாவங்களை செய்தாலும், கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்து, பாதுகாப்பாக ஒழிந்து கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். கள்ளர்கள் குகைகளில் வந்து ஒழிந்துகொள்வதுபோல, துன்மார்க்கர்கள் கர்த்தருடைய ஆலயத்தில் வந்து ஒழிந்துகொள்ளலாம் என்று நினைக்கிறார்கள்.

துன்மார்க்கர் வெறுங்கையோடு வராமல், கர்த்தருக்கு காணிக்கைகளைக் கொண்டு வந்தால், தாங்கள் கர்த்தருடைய ஆலயத்தில் வந்து ஒழிந்துகொள்ளலாம் என்று தப்பிதமாய் நினைக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயம் கள்ளருடைய குகையல்ல. ஆனால் துன்மார்க்கர் கர்த்தருடைய ஆலயத்திற்கு துணிகரமாய் வந்து, அதை கள்ளர் குகையைப்போல பயன்படுத்துகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தம்முடைய ஆலயத்திற்கு வருகிறவர்களை கர்த்தர் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர்களிடத்தில் உண்மையான மனந்திரும்புதலும், உண்மையான தெய்வபக்தியும் இருக்கிறதா என்பதை பார்க்கிறார். ஆலயத்திற்கு வருகிறவர்கள் பக்தியின் வேஷத்தைத் தரித்திருக்கிற துன்மார்க்கரா என்பதையும், அவர்கள் உண்மையில்லாத மாய்மாலக்காரரா என்பதையும் கர்த்தர் பார்க்கிறார். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தர் மனுஷனுடைய இருதயத்தைப் பார்க்கிறார். "இதோ நானும் இதைக் கண்டேன்" (எரே 7:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் அவர்களுடைய அவபக்தியையும், அவர்களுடைய பாவத்தையும், பாவத்தினிமித்தமாய் அவர்கள்மீது வரும் தம்முடைய கோபத்தையும் விவரிப்பதற்காக, கர்த்தர் சீலோவிலுள்ள தம்முடைய ஸ்தலத்தை ஒரு எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார்.

"நான் முந்தி என் நாமம் விளங்கப்பண்ணின சீலோவிலுள்ள என் ஸ்தலத்துக்கு நீங்கள் போய், இஸ்ரவேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அதற்குச் செய்ததைப் பாருங்கள்" (எரே 7:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். சீலோவிலே தேவனுடைய வாசஸ்தலம் இருந்தது. ஆனாலும் சீலோ அழிந்துபோயிற்று. ஜனங்களுடைய துன்மார்க்கம் சீலோவிலுள்ள ஆலயத்தை தீட்டுப்படுத்திற்று. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தம் சீலோவிலிருந்த தம்முடைய ஆலயத்தை அழித்துப்போட்டார். தாம் அதற்கு செய்ததை, "நீங்கள் போய் பாருங்கள்" என்று கர்த்தர் யூதாவின் வம்சத்தாருக்குச் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய நாமத்தை முந்தி சீலோவிலே விளங்கப்பண்ணினார். அங்கு கர்த்தருக்கு ஒரு கூடாரம் போடப்பட்டது. "இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் சீலோவிலே கூடி, அங்கே ஆசரிப்புக் கூடாரத்தை நிறுத்தினார்கள். தேசம் அவர்கள் வசமாயிற்று" (யோசு 18:1). ஆசாரிப்புக்கூடாரத்தில் கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னமும் அவருடைய ஷேக்கைனா மகிமையும் வந்து தங்கிற்று.

ஆனால் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வருகிற ஜனங்களோ பரிசுத்தமாயில்லை. அவர்கள் பாவிகளாகவும், பொல்லாதவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் தங்களையும் தீட்டுப்படுத்தி மற்றவர்களையும் பாழாக்கினார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மிகுந்த பொல்லாப்பை செய்தார்கள். "இஸ்ரவேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அதற்கு செய்ததை பாருங்கள்" (எரே 7:12) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரிடத்தில் சொல்லுகிறார்.

சீலோவிலே கர்த்தருடைய ஆசாரிப்புக்கூடாரம் இருந்ததினால், சீலோ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கவில்லை. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், தேவனுடைய கோபம் அவர்கள்மீது வந்தபோது, கர்த்தருடைய ஆசாப்புக்கூடாரம் அவர்களைப் பாதுகாக்கவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தமாய் சீலோவை அழித்துப்போட்டார். தம்முடைய உடன்படிக்கை பெட்டியை கர்த்தர் அந்நியதேசத்து சிறையிருப்புக்கு அனுப்பிவிட்டார். அக்காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆசாரியராயிருந்த ஏலீயின் குடும்பத்தாரையும் கர்த்தர் தம்முடைய கோபத்தினால் அழித்துப்போட்டார்.

"தேவன் அதைக் கேட்டு உக்கிரமாகி, இஸ்ரவேலை மிகவும் வெறுத்து, தாம் மனுஷருக்குள்ளே போட்ட கூடாரமாகிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை விட்டுவிலகி, தமது பலத்தைச் சிறையிருப்புக்கும், தமது மகிமையைச் சத்துருவின் கைக்கும் ஒப்புக்கொடுத்து, தமது ஜனத்தைப் பட்டயத்துக்கு இரையாக்கி, தமது சுதந்தரத்தின்மேல் கோபங்கொண்டார்" (சங் 78:59-62).

கர்த்தர் பூர்வகாலங்களில் நடப்பித்த கிரியைகளை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். "லோத்தின் மனைவியை நினைத்துப் பாருங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். அவள் பின்னிட்டுத் திரும்பிப் பார்த்து உப்புதூணானாள். சீலோவை நினைத்துப்பாருங்கள் என்றும், ஆசியாவிலுள்ள ஏழு சபைகளை நினைத்துப் பாருங்கள் என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியும், தேவாலயத்திலுள்ள விளக்குத்தண்டும் ஒரே இடத்தில் அசையாமலிருப்பதில்லை. அது ஒவ்வொரு இடமாக அசையக்கூடியது. நாம் பரிசுத்தமாய் ஜீவிக்கவில்லையென்றால், கர்த்தர் நம்முடைய விளக்குத்தண்டையும் நம்மை விட்டு நீக்கிப்போடுவார்.

"ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில்வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்" (வெளி 2:5).

"ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத்தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத் 21:43).

எருசலேம் நகரம், சீலோவைப்போல துன்மார்க்கமான நகரமாயிருக்கிறது. எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாப்பு செய்கிறார்கள். சீலோவின் மனுஷர் செய்த பொல்லாப்பான கிரியைகளை எருசலேமின் மனுஷரும் செய்கிறார்கள். "நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிவந்திருந்தும், நீங்கள் கேளாமலும், நான் உங்களைக் கூப்பிட்டும், நீங்கள் உத்தரவுகொடாமலும் போனீர்கள்" (எரே 7:13) என்று கர்த்தர் எருசலேமின் குடிகளைப் பார்த்து சொல்லுகிறார்.

கர்த்தர் சத்தியமான வார்த்தைகளைப் பேசுகிறவர். அவர் யூதாவின் மனுஷர்மீது குற்றம் சொல்லும்போது, கர்த்தர் தங்கள்மீது சுமத்துகிற குற்றச்சாட்டுக்களை அவர்களால் மறுக்கமுடியாது. கர்த்தர் சொன்னார். அவர்கள் கேட்கவில்லை. கர்த்தர் அவர்களைக் கூப்பிட்டார். அவர்கள் கர்த்தருக்கு உத்தரவு கொடுக்கவில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய அழைப்புக்கும் யூதாவின் மனுஷர் செவிகொடுக்கவில்லை. ஆனால் கர்த்தர் தங்கள் அழைப்புக்கு செவிகொடுக்க வேண்டுமென்று ஜனங்கள் விரும்புகிறார்கள். நாம் கர்த்தரை விட்டு விலகிப்போனால், கர்த்தரும் நம்மைவிட்டு விலகிப்போவார். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லையென்றால், கர்த்தரும் நம்முடைய வேண்டுதல்களுக்கும், விண்ணபங்களுக்கும் செவிகொடுக்கமாட்டார்.

எருசலேமிலுள்ள ஆலயத்தில் கர்த்தருடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறது. எருசலேமின் குடிகள் தங்களுடைய பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும், ஆசீர்வாதங்களுக்கும் கர்த்தருடைய ஆலயத்தை நம்புகிறார்கள். கர்த்தரே இந்த ஆலயத்தை அவர்களுக்கும், அவர்களுடைய பிதாக்களுக்கும் கொடுத்திருக்கிறார். ஆனாலும் எருசலேமின் குடிகள் கர்த்தர் சொன்னதை கேளாமல் போனதினிமித்தமாய், தாம் சீலோவுக்கு செய்ததுபோல, எருசலேமுக்கும் செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தம் கர்த்தர் சீலோவை அழித்துப்போட்டார். அதுபோலவே, யூதா மனுஷருடைய பொல்லாப்பினிமித்தம், கர்த்தர் எருசலேமையும், எருசலேமிலுள்ள தேவாலயத்தையும் அழித்துப்போடுவார். எருசலேம் பாழாய்ப்போகும். அதன் அலங்கங்கள் மண்மேடுகளாய்ப்போகும். அது குடியிருப்பாரில்லாத பாழ்தேசமாகும். ஒரு காலத்தில் செழிப்பாயிருந்த தேசம், வனாந்தர தேசம் போலாகும்.

எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு கர்த்தருடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் கர்த்தர் தம்முடைய ஆலயத்தைப் பாதுகாப்பார் என்று எருசலேமின் குடிகள் நினைக்கிறார்கள். ஆலயம் பாதுகாக்கப்படும்போது, எருசலேமும் பாதுகாக்கப்படும் என்றும், எருசலேமிலுள்ள ஜனங்களும் பாதுகாக்கப்படுவார்கள் என்றும் எருசலேமின் குடிகள் கற்பனை பண்ணுகிறார்கள்.

சீலோவின் மனுஷரும் எருசலேமின் குடிகளைப்போலத்தான் நினைத்தார்கள். தங்களுடைய சிந்தனைகளினால் அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொண்டார்கள். அவர்களுடைய பொல்லாப்புகளினிமித்தம், கர்த்தர் அவர்களைத் தள்ளிப்போட்டார்.

கர்த்தர் சீலோவைத் தள்ளிப்போட்டதுபோல, வடக்கு இஸ்ரவேல் ராஜ்யத்தையும் தள்ளிப்போட்டார். வடக்கு இஸ்ரவேல் ராஜ்யத்தில், இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை எப்பிராயீம் சந்ததி என்று சொல்லுகிறார். அவர்களுடைய பொல்லாப்புகளினிமித்தமாய், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தர், வடக்கு இஸ்ரவேல் தேசம் அனைத்தையும் தள்ளிப்போட்டார். அவர்கள் எல்லோரும் தெற்கு யூதா தேசத்தாரின் சகோதரர்கள். தெற்கு யூதா தேசத்தாரைப்போலவே, வடக்கு இஸ்ரவேல் தேசத்தாரும் ஆபிரகாமின் சந்ததியார்.

ஆனாலும் அவர்களுடைய பொல்லாப்புகளினிமித்தமும், அக்கிரமங்களினிமித்தமும், துன்மார்க்கங்களினிமித்தமும் கர்த்தர் எப்பிராயீம் சந்ததி அனைத்தையும் தள்ளிப்போட்டார். யூதாவின் மனுஷரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுக்கும் தண்டனை வரும்.

"நான் உங்களுடைய எல்லாச் சகோதரருமாகிய எப்பிராயீம் சந்ததி அனைத்தையும் தள்ளிப்போட்டதுபோல, உங்களையும் என் முகத்தைவிட்டுத் தள்ளிப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 7:15).

ஜனத்துக்காக விண்ணப்பம் செய்யவேண்டாம் எரே 7:16-20

எரே 7:16. நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் செய்யவேண்டாம்; அவர்களுக்காக மன்றாடவும் கெஞ்சவும் வேண்டாம், என்னிடத்தில் அவர்களுக்காகப் பரிந்துபேசவும் வேண்டாம், நான் உனக்குச் செவிகொடுப்பதில்லை.

எரே 7:17. யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் அவர்கள் செய்கிறதை நீ காணவில்லையா?

எரே 7:18. எனக்கு மனமடிவுண்டாக அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்க்கிறார்கள்; அவர்கள் வானராக்கினிக்குப் பணியாரங்களைச் சுடும்படி பிள்ளைகள் விறகுபொறுக்குகிறார்கள், பிதாக்கள் நெருப்பு மூட்டுகிறார்கள், ஸ்திரீகள் மாப்பிசைகிறார்கள்.

எரே 7:19. அவர்கள் எனக்கா மனமடிவுண்டாக்குகிறார்கள்? தங்கள் முகங்கள் வெட்கத்துக்குட்படும்படி, அவர்கள் தங்களுக்கே அல்லவோ மனமடிவுண்டாக்குகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 7:20. ஆதலால் இதோ, என் கோபமும் என் உக்கிரமும் இந்த ஸ்தலத்தின்மேலும், மனுஷர்மேலும், மிருகங்கள்மேலும், வெளியின் மரங்கள்மேலும், பூமியின் கனிகள்மேலும் ஊற்றப்படும்; அது அவியாமல் எரியும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

தேவாலயமும், தேவாலயத்தில் நடைபெறுகிற ஆராதனைகளும் கர்த்தருடைய சித்தத்திற்கும், விருப்பத்திற்கும் விரோதமாய் இருக்கக்கூடாது. பாவத்தின் சம்பளம் மரணம் என்பதும், பாவம் செய்கிறவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். இது கர்த்தருடைய பிரமாணமாயிருக்கிறது. ஆனாலும் பாவம் செய்தவர்கள், தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் ஜெபிக்கும்போது, கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார். இது கர்த்தருடைய கிருபையின் பிரமாணமாயிருக்கிறது. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படவேண்டுமென்றால், நாம் மனந்திரும்பவேண்டும். பாவநிவாரண பலிகளை செலுத்துவதினாலோ, சர்வாங்க தகனங்களை செலுத்துவதினாலோ ஒருவருடைய பாவமும் மன்னிக்கப்படுவதில்லை.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும் கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார். யூதாவின் மனுஷர் தங்களுக்காக ஜெபிப்பதைவிட, எரேமியாவின் ஜெபம், அவர்களுக்கு மெய்யாகவே அதிக நன்மையைக் கொடுக்கும். ஆனால் யூதாவின் மனுஷருக்காக ஜெபம்பண்ண, கர்த்தர் எரேமியாவுக்கு அனுமதி கொடுக்கவில்லை.

"நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் செய்யவேண்டாம்; அவர்களுக்காக மன்றாடவும் கெஞ்சவும் வேண்டாம், என்னிடத்தில் அவர்களுக்காகப் பரிந்துபேசவும் வேண்டாம்" (எரே 7:16) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார். யூதாவின் மனுஷருக்கு கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண ஆர்வமில்லை. அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்களின் ஜெபங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுமில்லை. யூதாவின் மனுஷருக்கு தேவன்மீதும் பிரியமில்லை, தேவனிடத்தில் ஏறெடுக்கிற ஜெபத்தின்மீதும் பிரியமில்லை. இப்படிப்பட்ட முரட்டாட்டமான ஜனங்களுக்கு, கர்த்தருடைய ஊழியக்காரர்களின் ஜெபம் உதவியாயிருக்கும். கர்த்தரோ இந்த ஜெபஉதவியும் அவர்களுக்கு கிடைக்காதவாறு தடைபண்ணிவிடுகிறார்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். இதனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை தடைபண்ணுமாறு ஜெபம்பண்ணக்கூடாது. அப்படி ஜெபம்பண்ணினால், அது கர்த்தருடைய விருப்பத்திற்கும், நீதிக்கும், சித்தத்திற்கும் விரோதமாய் ஏறெடுக்கிற ஜெபமாயிருக்கும். ஒரு வேளை எரேமியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், யூதாவின் ஜனத்திற்காக விண்ணப்பம் செய்தாலும், "நான் உனக்கு செவிகொடுப்பதில்லை" (எரே 7:16) என்று கர்த்தர் சொல்லிவிடுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் மரணத்திற்கேதுவான பாவம் செய்கிறார்கள். ஆகையினால் அவர்களுடைய சரீரத்தில் ஜீவனுண்டாயிருக்கவேண்டும் என்று எரேமியா ஜெபம்பண்ணக்கூடாது. அவர்களுடைய ஆத்துமாக்கள் கெட்டுப்போகாமல், ஜீவனோடிருக்கவேண்டும் என்று எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபிக்கலாம்.

"மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல்செய்யக்கடவன், அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார்; யாருக்கென்றால், மரணத்துக்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே; மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு, அதைக்குறித்து வேண்டுதல் செய்ய நான் சொல்லேன்" (1யோவா 5:16).

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், கர்த்தரிடத்தில் ஜெபிக்கிற மனுஷராயும் இருக்கிறார்கள். யூதாவுக்கும் எருசலேமுக்கும் வரப்போகிற அழிவை எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். ஆனாலும் இந்த அழிவிலிருந்து கர்த்தர் அவர்களை பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்றும், எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

நாம் சுவிசேஷ ஊழியம் செய்யும்போது பாவிகள்மீது நியாயத்தீர்ப்பு வரும் என்று எச்சரித்துச் சொல்லவேண்டும். அதே வேளையில் அவர்களுடைய ஆத்தும இரட்சிப்புக்காக நாம் ஜெபம்பண்ணவும் வேண்டும். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, புதிய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இந்த நன்மைக்காகவே நாம் மனுஷர் மத்தியில் ஊழியம் செய்கிறோம்.

எரேமியாவை யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் துன்பப்படுத்தினார்கள். அவருக்கு வேதனைகளையும், உபத்திரவங்களையும் கொடுத்தார்கள். ஆனாலும் எரேமியா, அவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறார். கர்த்தரிடத்தில் ஜெபிக்கிற தீர்க்கதரிசிகள், பரலோகத்தின்மீது அதிக வாஞ்சையாயிருப்பார்கள். இந்தப் பூமியில் தங்களுக்கு எவ்வளவு உபத்திரவங்கள் வந்தாலும், அவையெல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக்கொண்டு, கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்வார்கள். இந்தப் பிரபஞ்சத்தின் பாடுகளையும் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு ஆயத்தமாயிருப்பார்கள்.

கர்த்தருடைய நல்ல ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு நல்ல செய்தியை பிரசங்கம் பண்ணுகிறார்கள். ஆனால் ஜனங்களில் பலர் அவர்களுடைய பிரசங்கச் செய்தியைக் கேட்பதில் ஆர்வம் காண்பிப்பதில்லை. ஆனாலும் அந்த ஊழியக்காரர்கள் தங்களுக்காக ஜெபிக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஊழியக்காரர்களின் செய்திகளை கேட்க விரும்பாதவர்களுக்கு, அந்த ஊழியக்காரர்கள் எவ்வளவுதான் ஜெபம்பண்ணினாலும், அந்த ஜெபங்களினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

ஊழியக்காரர்கள் கர்த்தரிடமிருந்து வார்த்தைகளைப் பெற்றுக்கொண்டு ஜனங்களுக்குப் போதிக்கிறார்கள். ஜனங்கள் அவர்களுடைய பிரசங்க வார்த்தைகளைக் கேட்கவில்லையென்றால், அந்த ஊழியக்காரர்கள் ஜனங்களுக்காக ஜெபிக்கும்போது, கர்த்தரும் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்கமாட்டார்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார். ஆனால் ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ண வேண்டாம் என்று கர்த்தர் எரேமியாவை தடைபண்ணுகிறார். தாம் இவ்வாறு தடைபண்ணுவதற்கான காரணத்தையும் கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய் கலகம்பண்ணுகிறார்கள். தங்களுடைய பாவங்களிலும், துன்மார்க்கத்திலும் தொடர்ந்து ஜீவிக்கவேண்டுமென்று அவர்கள் தீர்மானமாயிருக்கிறார்கள். "யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் அவர்கள் செய்கிறதை நீ காணவில்லையா?" (எரே 7:17) என்று கர்த்தர் எரேமியாவிடம் கேட்கிறார்.

யூதாவின் மனுஷர் துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்கள். ஒளிவு மறைவில்லாமல், வெளிப்படையாக, வெட்கமும் இலச்சையுமில்லாமல், பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் சிறிதுமில்லை. அவர்கள் யூதாவின் பட்டணங்களிலும் பாவம் செய்கிறார்கள். எருசலேமின் வீதிகளிலும் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் எரேமியாவிடம், "அவர்கள் செய்கிறதை நீ காணவில்லையா" என்று கேட்கிறார். அவர்கள் எரேமியாவின் கண்களுக்கு முன்பாகவும் பாவம் செய்கிறார்கள்.

எரேமியா யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். ஜனங்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல், கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். எரேமியாவும் அவர்கள் செய்கிற பாவங்களைப் பார்க்கிறார். எரேமியா தங்களைப் பார்த்தாலும், அவர்கள் வெட்கப்படவுமில்லை. தாங்கள் பாவம் செய்வதை நிறுத்தவுமில்லை. அவர்கள் தொடர்ந்து பாவம் செய்கிறார்கள். அவர்கள் பாவம் செய்வதை கர்த்தரும் பார்க்கிறார். தம்முடைய ஊழியக்காரரின் வார்த்தைக்கு செவிகொடுக்காமல், யூதாவின் மனுஷர் பாவம் செய்வது கர்த்தருடைய பார்வையில் விசனமாயிருக்கிறது. கர்த்தருக்கு அவர்கள்மேல் கோபம் வருகிறது.

அவர்கள் "எனக்கு மனமடிவுண்டாக அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்க்கிறார்கள்; அவர்கள் வானராக்கினிக்குப் பணியாரங்களைச் சுடும்படி பிள்ளைகள் விறகு பொறுக்குகிறார்கள், பிதாக்கள் நெருப்பு மூட்டுகிறார்கள், ஸ்திரீகள் மாப்பிசைகிறார்கள்" (எரே 7:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வானராக்கினி என்பது சந்திரனைக் குறிக்கிற வார்த்தை. இதற்கு வானத்தின் ராணி என்று பொருள். யூதாவின் மனுஷர் ஒருவேளை சந்திரனை தெய்வமாக நினைத்து ஆராதித்திருக்கலாம். அல்லது சந்திரனுக்கு ஒரு விக்கிரக உருவத்தைக் கொடுத்து, அதை ஆராதனை செய்திருக்கலாம். அஸ்தரோத் என்னும் பேரில் அவர்கள் சந்திரனை ஆராதனை செய்திருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியேயும் நாங்கள்செய்து, வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்ப்போம்; நாங்களும், எங்கள் பிதாக்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், யூதா பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் செய்ததுபோலவே செய்வோம்; அப்பொழுது நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம்" (எரே 44:17)

"மேலும் நாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்குப்பானபலிகளை வார்த்தபோது, நாங்கள் எங்கள் புருஷரின் அநுமதியில்லாமல் அவளுக்குப் பணியாரங்களைச் சுட்டு, பானபலிகளை வார்த்து, அவளை நமஸ்கரித்தோமோ? என்றார்கள்" (எரே 44:19).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் சிருஷ்டிகரை ஆராதியாமல், சிருஷ்டிகளை தொழுதுகொள்கிறார்கள். வரங்களைக் கொடுக்கிறவரை ஆராதியாமல் வரங்களை ஆராதிக்கிறார்கள். நன்மையான ஈவுகளையும், ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறவரை ஆராதியாமல், நன்மையான ஈவுகளையும், ஆசீர்வாதங்களையும் ஆராதிக்கிறார்கள். ஐசுவரியங்களை கொடுக்கிறவரை ஆராதியாமல், ஐசுவரியங்களை ஆராதிக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் வானராக்கினியையும், அந்நிய தேவர்களையும் ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தரை ஆராதியாமல் விட்டு விடுகிறார்கள். சேனைகளின் கர்த்தராகிய தேவனே மெய்யான தேவன். ஆனால் யூதாவின் மனுஷரோ கர்த்தரை ஆராதியாமல், ஏராளமான அந்நிய தேவர்களை ஆராதனை செய்கிறார்கள். அவர்களுடைய அந்நிய தெய்வங்களின் எண்ணிக்கைக்கு முடிவே இல்லை.

யூதாவின் மனுஷர் தங்களுடைய கைகளின் திறமையினால் தங்களுக்கு தெய்வங்களை உண்டுபண்ணுகிறார்கள். அந்நிய தேவர்களுக்கு பானபலிகளை வார்க்கிறார்கள். வானராக்கினிக்கு பணியாரங்களைச் சுட்டு அவற்றை படைக்கிறார்கள்.

அவர்கள் பானபலிகளை வார்க்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் விறகுபொறுக்குகிறார்கள். பிதாக்கள் நெருப்பு மூட்டுகிறார்கள். ஸ்திரீகள் மா பிசைகிறார்கள். யூதாவின் மனுஷர் தேவனுக்கு விரோதமாக அசுத்தமான காரியங்களை செய்கிறார்கள். அவர்கள் செய்வது எல்லமே பாவமான காரியங்கள்தான். ஆனாலும் அவர்களுடைய கிரியைகளிலிருந்து, நமக்கு பிரயோஜனமான சில காரியங்களை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

நம்முடைய தேவனாகிய கர்த்தரை, நம்முடைய பொருட்களாலும் கனம்பண்ண வேண்டும். நம்மிடத்திலுள்ள எல்லா பொருட்களும் கர்த்தரிடமிருந்தே நமக்கு வந்திருக்கிறது. கர்த்தரே நமக்கு போஜனம் கொடுக்கிறார். நமக்கு போஜனம் கொடுக்கிற கர்த்தருக்கு மகிமையாகவே, நாம் புசிக்கவேண்டும், கர்த்தர் கொடுப்பதை பானம்பண்ண வேண்டும்.

கர்த்தருடைய ஊழியத்தில் நாம் எந்தப் பகுதியையும் செய்வதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். கர்த்தருக்காக மிகவும் இலகுவான வேலைகளை மாத்திரம் செய்துகொண்டு, சற்று கஷ்டமான வேலைகளை செய்யாமல் விட்டுவிடக்கூடாது. கர்த்தருக்கு மகிமையைக் கொடுக்கக்கூடிய எந்த வேலையையும் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கர்த்தரை ஆராதிக்கிற நாம், பலிபீடத்திலே வீணாகநெருப்பை மூட்டுவதில்லை. விக்கிரகாராதனைக்காரர்களோ ஒன்றுமில்லாத அந்நிய தேவர்களுக்காக பானபலிகளை வார்க்கிறார்கள். மெய்யான தேவனை ஆராதிக்கிற நாமோ, கர்த்தருக்காக நம்மையே ஜீவபலியாக வார்க்கவேண்டும்.

யூதா மனுஷருடைய பிதாக்கள் ஒன்றுமில்லாத விக்கிரகங்களுக்கு நெருப்பு மூட்டினார்கள். கர்த்தரை ஆராதிக்கிற நாமோ கர்த்தருடைய பலிபீடத்தில் எப்போதும் நெருப்பு மூட்டவேண்டும். நம்முடைய ஆவி அனலுள்ளதாயிருக்க வேண்டும். நாம் ஒருபோதும் குளிர்ந்துபோய் விடக்கூடாது. நம்முடைய நெருப்பு எப்போதும் மூட்டப்பட்டதாயிருக்கவேண்டும்.

யூதாவின் மனுஷர், தங்களுடைய பிள்ளைகளையும் விக்கிரகாராதனையில் பயன்படுத்தினார்கள். தங்கள் பிள்ளைகளை விறகு பொறுக்கும்படி அனுப்பினார்கள். கர்த்தரை ஆராதிக்கிற நாம், நம்முடைய பிள்ளைகளையும், கர்த்தருடைய ஊழியத்தில் பயன்படுத்தவேண்டும். அவர்களிடத்திலும் ஊழிய பொறுப்புக்களை ஒப்புக்கொடுத்து, அவர்களை கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகளாகவும், அவருக்கு பிரயோஜனமுள்ள பிள்ளைகளாகவும் வளர்க்கவேண்டும்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் அந்நிய தேவர்களுக்கு பானபலிகளை வார்ப்பது, கர்த்தருக்கு மனமடிவுண்டாக்குகிறது. கர்த்தருக்கு அவர்கள்மேல் கோபமுண்டாகிறது. விக்கிரகாராதனையினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகப்போவதில்லை. ஒன்றுமில்லாத காரியங்களுக்காக அவர்கள் பிரயாசப்படுகிறார்கள். ஆனாலும் அவர்களுடைய விக்கிரகாராதனை, கர்த்தரை சீக்கிரத்தில் கோபப்படுத்தி விடுகிறது. கர்த்தருக்கு கோபம் வரும்போது, அதனுடைய விளைவுகளை, யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும்தான் அனுபவிக்கவேண்டும். கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் தான் வரும்.

"அவர்கள் எனக்கா மனமடிவுண்டாக்குகிறார்கள்? தங்கள் முகங்கள் வெட்கத்துக்குட்படும்படி அவர்கள் தங்களுக்கே அல்லவோ மனமடிவுண்டாக்குகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 7:19).

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு மனமடிவுண்டாக்கினாலும், அது கர்த்தரை பாதிக்காது. அவர்களால் கர்த்தருக்கு ஒரு தீங்கும் செய்யமுடியாது. அவர்கள் கர்த்தருக்கு தீங்குசெய்வதாக நினைத்து, தங்களுக்கு தாங்களே தீங்குசெய்து கொள்கிறார்கள்.

தமக்கு விரோதமாகப் பாவம் செய்கிற யூதாவின் மனுஷரை தண்டிக்க வேண்டுமென்று கர்த்தர் தீர்மானம்பண்ணுகிறார். அவர்களுக்கு விரோதமாக தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்காக பரிந்து பேசி ஜெபம்பண்ணினாலும், கர்த்தருடைய கோபம் ஆறவில்லை. ஊழியக்காரரின் ஜெபம், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை தடுத்து நிறுத்தவில்லை.

"ஆதலால் இதோ, என் கோபமும் என் உக்கிரமும் இந்த ஸ்தலத்தின்மேலும், மனுஷர்மேலும், மிருகங்கள்மேலும், வெளியின் மரங்கள்மேலும், பூமியின் கனிகள்மேலும் ஊற்றப்படும்; அது அவியாமல் எரியும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எரே 7:20).

எகிப்து தேசத்தில் வாதைகள் வந்ததுபோல, யூதா தேசத்திலும் வாதைகள் வரும். யூதா தேசத்திலுள்ள எல்லாம் அழிந்துபோகும். பாகாலுக்காக அவர்கள் ஆயத்தம் பண்ணி வைத்திருந்த எல்லா பானபலிகளும், வானராக்கினிக்காக சுட்டு வைத்திருந்த எல்லா பணியாரங்களும் பாழாய்ப்போகும்.

கர்த்தருடைய கோபம் தணியாது. யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய் முரட்டாட்டம் பண்ணுகிறார்கள். கர்த்தருடைய கோபமும் அக்கிரமமும் எப்போதும் எரிந்துகொண்டேயிருக்கும். தீர்க்கதரிசிகளும், கர்த்தருடைய ஊழியக்காரர்களும் ஜெபம்பண்ணினாலும், கர்த்தருடைய உக்கிர கோபம் அவியாது. ஜனங்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வேதனையை தாங்கமுடியாமல், கண்ணீர்விட்டு அழுது புலம்பினாலும், தம்முடைய உக்கிர கோபம் அவியாமல் எரியும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

என் வாக்குக்குச் செவிகொடுங்கள்
எரே 7:21-28

எரே 7:21. இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறதென்னவென்றால்: உங்கள் தகனபலிகளை மற்றப் பலிகளோடுங்கூட்டி, இறைச்சியைச் சாப்பிடுங்கள்.

எரே 7:22. நான் உங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துவந்த நாளிலே, தகனபலியைக்குறித்தும் மற்றப் பலிகளைக் குறித்தும் நான் அவர்களோடே பேசினதையும் கட்டளையிட்டதையும் பார்க்கிலும்,

எரே 7:23. என் வாக்குக்குச் செவிகொடுங்கள், அப்பொழுது நான் உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்; நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மையுண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச்சொல்லிக் கட்டளையிட்டேன்.

எரே 7:24. அவர்களோ அதைக் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும்போய், தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனைகளின்படியும் கடினத்தின்படியும் நடந்து, முன்னிட்டல்ல பின்னிட்டே போனார்கள்.

எரே 7:25. உங்கள் பிதாக்கள் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட நாள்முதல் இந்நாள் மட்டும் நான் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரையெல்லாம் தினந்தினம் உங்களண்டைக்கு ஏற்கனவே அனுப்பிக்கொண்டிருந்தேன்.

எரே 7:26. ஆனாலும் அவர்கள் என் சொல்லைக்கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும்போய், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, தங்கள் பிதாக்களைப்பார்க்கிலும் அதிக பொல்லாப்பு செய்தார்கள்.

எரே 7:27. நீ இந்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்குச் சொன்னாலும், அவர்கள் உனக்குச் செவிகொடுக்கமாட்டார்கள்; நீ அவர்களை நோக்கிக் கூப்பிட்டாலும், அவர்கள் உனக்கு மறுஉத்தரவு கொடுக்கமாட்டார்கள்.

எரே 7:28. ஆகையால் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேளாமலும், புத்தியை ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கிற ஜாதி இதுதான் என்றும், சத்தியம் அழிந்து, அது அவர்கள் வாயிலிருந்து அற்றுப் போனதென்றும் அவர்களுக்குச் சொல்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தேவனுடைய ஆலயத்தை தங்களுடைய பாவங்களினாலும், துன்மார்க்கங்களினாலும் தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையினால் தேவனுடைய ஆலயம் அவர்களைப் பாதுகாக்காது. அவர்கள் தேவனுடைய ஆலயத்திலே வந்து பலிகளையும் தூபவர்க்கங்களையும் செலுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை. தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. ஆகையினால் அவர்களுடைய பலிகள், அவர்களுடைய பாவங்களை நிவிர்த்தி செய்யாது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், யூதருடைய சடங்காச்சார பிரமாணங்களைப் பற்றி அவர்களிடம் சொல்லுகிறார். "இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறதென்னவென்றால்: உங்கள் தகனபலிகளை மற்றப் பலிகளோடுங்கூட்டி, இறைச்சியைச் சாப்பிடுங்கள்" *(எரே 7:21)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவர்கள் தங்கள் தகனபலிகளை மற்ற பலிகளோடு கூட்டிக்கொள்ளவேண்டும். அவர்களுடைய தகனபலிகளை சமாதான பலிகளாக மாற்றவேண்டும். பலி செலுத்திய இறைச்சிகளைப் புசிக்கவேண்டும். இவையெல்லாம் யூதருடைய சடங்காச்சார பிரமாணங்கள். இந்தப் பிரமாணங்களை அப்படியே கடைப்பிடித்தாலும், தகனபலிகளினாலோ அல்லது சமாதான பலிகளினாலோ அல்லது அவர்கள் செலுத்துகிற வேறு எந்த பலிகளினாலோ, அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகாது.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும கர்த்தருக்கு பலிகளை செலுத்துகிறார்கள். ஆனால், கர்த்தர் எதிர்பார்க்கிற பிரகாரமாக, அவர்கள் பயபக்தியோடும், பரிசுத்தத்தோடும் தகனபலிகளையும், மற்ற பலிகளையும் செலுத்தவில்லை. தங்கள் இருதயத்தில் அசுத்தத்தோடும், பாவத்தோடும் பலிகளை செலுத்துகிறார்கள். இப்படிப்பட்ட பலிகள் கர்த்தருக்கு செலுத்தப்பட்ட பலிகளாகயிருக்காது. அவர்கள் புசிப்பதற்காக அடிக்கப்பட்ட மிருகங்களாகயிருக்கும். கர்த்தர் தம்முடைய பலிபீடத்தில் இப்படிப்பட்ட தகனபலிகளை அங்கீகரிக்கமாட்டார்.

யூதர்கள் தங்களுடைய வீடுகளில் புசிப்பதற்காக, இப்படிப்பட்ட மிருகங்களை அடித்து, தங்களுக்கு விருந்து படைத்துக்கொள்ளலாம். தங்களுடைய வீடுகளில் பந்தி பரிமாறிக்கொள்ளலாம். "உங்கள் பலிகளை, நீங்களே சாப்பிடுங்கள்" *(எரே 7:21)* என்று கர்த்தர் சொல்லிவிடுகிறார்.

பலிசெலுத்துவதைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளிடத்திலிருந்து, பலிகளை எதிர்பார்ப்பதைவிட, அவர்களுடைய கீழ்ப்படிதலையே எதிர்பார்க்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் ஆரம்பத்தில் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனங்களாயிருந்தார்கள். கர்த்தர் அவர்களை பலுகிப் பெருகச் செய்தார். அவர்களோ எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திற்கு உட்படுத்தப்பட்டார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால், இஸ்ரவேல் ஜனத்தாரை, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார்.

கர்த்தர் தமக்கு ஆசாரியர்களை நியமனம்பண்ணினார். புறஜாதி ஜனங்கள் தங்கள் விக்கிரகங்களுக்கு, பூஜாசாரிகள் மூலமாய் ஏராளமாய்ப் பலிசெலுத்துவார்கள்.

"அப்பொழுது அவர்: அவர்கள் பலியிட்ட பலிகளின் கொழுப்பைத் தின்று, பானபலி களின் திராட்சரசத்தைக் குடித்த அவர்களுடைய தெய்வங்களும் அவர்கள் நம்பின கன்மலையும் எங்கே? அவைகள் எழுந்து உங்களுக்குச் சகாயம்பண்ணி உங்களுக்கு மறைவிடமாயிருக்கட்டும்" *(உபா 32:37,38).*

அப்படிப்பட்ட பலிகள் தமக்கும் ஏராளமாய் செலுத்தப்பட வேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமல்ல. ஆசாரியர்கள் ஜனங்களுக்கு கர்த்தருடைய பிரமாணத்தைக் கற்றுக்கொடுக்கவேண்டும். அவர்களுக்கு சத்தியத்தை உபதேசம் பண்ணவேண்டும். கர்த்தர் தம்முடைய ஜனங்களோடு நேரடியாகப் பேசுவதற்குப் பதிலாக, தம்முடைய ஆசாரியர்கள் மூலமாய் பேசினார். தம்முடைய ஊழியக்காரர்கள் மூலமாயும், தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாயும் பேசினார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களின் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்தார். அந்த நாளிலே கர்த்தர் அவர்களோடே தகனபலியைக் குறித்தும் மற்ற பலிகளைக் குறித்தும் பேசி கட்டளையிட்டார் *(எரே 7:22).* கர்த்தர் அவர்களுக்கு தகனபலிகளைக் குறித்தும், மற்ற பலிகளைக் குறித்தும் கட்டளையிடுவதற்கு முன்பாகவே, அவர்களுக்கு நீதிநெறி பிரமாணங்களைக் குறித்து கட்டளையிட்டார். சடங்காச்சார பிரமாணங்களுக்கு முன்பாகவே, நீதிநெறி பிரமாணம் நியமிக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய வாக்குக்கு செவிகொடுக்கவேண்டும். அப்பொழுது கர்த்தர் அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்கள் அவருடைய ஜனமாயிருப்பார்கள். "நான் உங்களுக்குக் கற்பிக்கும் எல்லா வழியிலும், நீங்கள் உங்களுக்கு நன்மையுண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தையே அவர்களுக்குச் சொல்லிக் கட்டளையிட்டேன்" *(எரே 7:23)* என்று கர்த்தர் சொல்லுகிறார். எல்லா பிரமாணங்களிலும் "கர்த்தருக்கு கீழ்ப்படிதலே" முக்கியமானதாயிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு பலிசெலுத்துகிற பிரமாணத்தையும் கொடுத்தார். வேதபண்டிதர்கள் இதை லேவியரின் பிரமாணம் என்று அழைக்கிறார்கள். இந்தப் பிரமாணத்தின் ஆரம்பத்தில், "உங்களில் ஒருவன் கர்த்தருக்கு பலிசெலுத்த வந்தால்" *(லேவி 1:2; 2:1)* என்னும் வாக்கியம் ஆரம்ப வாக்கியமாக சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தர் பலிகளில் விருப்பமாயில்லை. ஜனங்கள் தமக்கு பலிசெலுத்த வேண்டுமென்று கர்த்தர் யாரையும் கட்டாயம் பண்ணவுமில்லை. ஆனாலும் அவர்கள் கர்த்தருக்கு பலிசெலுத்த வேண்டும் என்றுவிரும்பினால், அதை எப்படி செலுத்த வேண்டும் என்னும் பிரமாணத்தை கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கிறார். கர்த்தர் பலிசெலுத்தும் முறைமைகளை ஒழுங்குபடுத்துகிறார்.

புறஜாதியாரும் தங்கள் விக்கிரங்களுக்கு பலிசெலுத்துகிறார்கள். அவர்கள் தங்கள் மனதின் விருப்பப்படி விக்கிரகங்களுக்கு பலிசெலுத்துகிறார்கள். விக்கிரகங்களுக்கு செலுத்தும் பலிகளில் எந்தவிதமான ஒழுங்குமுறையோ, கட்டுப்பாட்டு முறையோ இருக்காது. அவர்கள் தங்கள் விக்கிரகங்களுக்கு எதை வேண்டுமானாலும் பலியாகச் செலுத்தலாம். அதை எப்படி வேண்டுமானாலும் செலுத்தலாம்.

கர்த்தருடைய பிள்ளைகளோ அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டுத்தான், அவருக்கு பலிகளை செலுத்தவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தார் புறஜாதி ஜனங்களைப்போல தாறுமாறான ஜனங்களல்ல. அவர்கள் கர்த்தருக்கு விசேஷித்த ஜனங்கள். அவர்கள் ஒழுக்கத்தின் ஜனங்கள். உடன்படிக்கையின் ஜனங்கள்.

"இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது" *(யாத் 19:5).*

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய உடன்படிக்கையைக் கைக்கொள்ளவேண்டும். புறஜாதி ஜனங்களுக்கு உடன்படிக்கையே இல்லை. விக்கிரகங்கள் அவர்களுக்கு பிரமாணங்களைக் கொடுக்கவில்லை. கர்த்தருடைய ஜனம், அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருப்பார்கள். கர்த்தரும் அவர்களுடைய தேவனாயிருப்பார். கீழ்ப்படியாமல் கர்த்தரை ஆராதிக்க முடியாது. செவிகொடுக்காமல் கர்த்தருக்கு கீழ்ப்படிய முடியாது. கர்த்தருடைய பிரமாணத்தில், அவருடைய வாக்குக்கு செவிகொடுப்பதும், தாங்கள் கேட்ட வாக்குக்கு கீழ்ப்படிவதும் மிகவும் முக்கியமானது.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர் நியமித்திருக்கிற பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். கர்த்தர் நியமித்திருக்கிற எல்லைகளுக்குட்பட்டு நடக்கவேண்டும். "நீங்கள் உங்களுக்கு நன்மை உண்டாகும்படிக்கு நடவுங்கள் என்கிற விசேஷத்தை கர்த்தர் அவர்களுக்கு சொல்லி கட்டளையிட்டார்" *(எரே 7:23).*

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளிடத்தில் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். கர்த்தர் சர்வஞானமுள்ளவர். நமக்கு எப்படிப்பட்ட பிரமாணத்தைக் கொடுக்கவேண்டும் என்றும், எப்படிப்பட்ட கட்டளைகளைக் கொடுக்க வேண்டும் என்றும் கர்த்தருக்குத் தெரியும். நமக்கு எது நன்மையானது என்றும், அந்த நன்மையை நமக்கு எப்படி உண்டுபண்ண வேண்டும் என்பதும் கர்த்தருக்கு தெரியும்.

கர்த்தரே நமக்கு ஜீவனைக் கொடுத்திருக்கிறார். நம்முடைய ஜீவன் கர்த்தருக்குரியது. கர்த்தரே நம்மை ஆளுகை செய்கிறார். கர்த்தரே நமக்கு தம்முடைய பிரமாணத்தையும் கொடுத்திருக்கிறார். நம்முடைய ஜீவன் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும்.

சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தம்முடைய பிரமாணங்களைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய வாக்குக்கு செவிகொடுத்து, அவருடைய பிரமாணங்களுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்ப்படியவேண்டும். ஆனால் அவர்களோ அதை கேளாமலும், தங்கள் செவியை சாயாமலும் போனார்கள். தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனையின் படியும் கடினத்தின்படியும் நடந்தார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னிட்டல்ல, பின்னிட்டே போனார்கள் *(எரே 7:24)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார். அவர்கள் தம்முடைய சித்தத்திற்கும், விருப்பத்திற்கும், திட்டத்திற்கும் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். ஆனால் அவர்களோ தங்களுடைய சுயசித்தத்தின்படியும், சுயவிருப்பத்தின்படியும், சுயதிட்டத்தின்படியும் ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய சுயசித்தம் கர்த்தருடைய சித்தத்திற்கு போட்டியாயிருக்கிறது.

ஆகையினால் அவர்கள் கர்த்தருடைய வாக்குக்கு செவிகொடுக்கவுமில்லை. அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவுமில்லை. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவேண்டுமென்று அவர்கள் தங்கள் செவியை சாய்க்கவுமில்லை. அவர்களுடைய இருதயம் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவுமில்லை.

அவர்களுடைய பொல்லாத இருதயத்தின் யோசனைகளே அவர்களை வழிநடத்திற்று. அவர்களுடைய இருதயங்களில் துன்மார்க்கமான சிந்தனைகளும், முரட்டாட்டமான குணங்களும் நிரம்பியிருக்கிறது. மாம்சத்தின் இச்சைகளும், உலகப்பிரகாரமான பேராசைகளும் அவர்களுடைய பொல்லாத இருதயங்களை ஆளுகை செய்கிறது.

அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனைகளுக்கு கீழ்ப்படிந்தார்கள். மாம்சத்தின் இச்சைகளுக்கு கீழ்ப்படிந்தார்கள். உலகப்பிரகாரமான பேராசைகளுக்கு கீழ்ப்படிந்தார்கள். பாவங்களுக்கும் துன்மார்க்கங்களுக்கும் கீழ்ப்படிந்தார்கள். அவர்களுடைய சுயஇச்சைகளே அவர்களுக்கு பிரமாணங்களாயிற்று.

அவர்கள் முன்னிட்டல்ல, பின்னிட்டே போனார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்தார். அவர்களை கானான் தேசத்திற்கு நடத்தி கொண்டு போனார். அவர்கள் வனாந்தர பாதையில் பிரயாணம்பண்ணினார்கள்.

அவர்கள் போகவேண்டிய இடம் கானான். ஆனால் வழியிலே இஸ்ரவேல் ஜனத்தாரில், முரட்டாட்டமான ஒரு கூட்டம் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். கர்த்தரை ஆராதியாமல் ஒரு பொன் கன்றுக்குட்டியை செய்து அதை ஆராதித்தார்கள். கானான் தேசத்திற்குப் போவதற்குப் பதிலாக, எகிப்திற்கு திரும்பிப்போவோம் என்று சொன்னார்கள்.

அவர்கள் தேவனுடைய வாக்குக்கு செவிகொடுத்தால், கானான் தேசத்திற்கு முன்னோக்கி போவார்கள். ஆனால் அவர்களோ தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனைக்கு செவிகொடுத்து, கானான் தேசத்தை நோக்கி முன்னேறிப்போவதற்கு பதிலாக, தாங்கள் எங்கேயிருந்து புறப்பட்டு வந்தார்களோ, அந்த எகிப்து தேசத்திற்கு திரும்பிப்போவோம் என்று சொல்லுகிறார்கள்.

எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபோது, "கர்த்தர் எங்களுக்கு சொல்லுவதையெல்லாம் நாங்கள் செய்வோம்" என்று வாக்குப்பண்ணினார்கள். ஆனால் தங்கள் வார்த்தையில் அவர்கள் உண்மையுள்ளவர்களாயிருக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய வழியில் நடப்பதற்கு பதிலாக பாவத்தின் வழியில் நடந்தார்கள். பாவம் அவர்களை முன்னேறிச் செல்லவிடாமல் தடைபண்ணுகிறது. பாவத்தின் சாபங்கள் அவர்களை பின்னிட்டுப்போக வைக்கிறது.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு சத்தியத்தை உபதேசம்பண்ணுவதற்காகவும், தம்முடைய சித்தத்தையும், விருப்பத்தையும், திட்டத்தையும் அவர்களுக்கு அறிவிப்பதற்காகவும், தீர்க்கதரிசிகளையும், ஊழியக்காரரையும் அனுப்பினார்.

"உங்கள் பிதாக்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாள்முதல் இந்நாள் மட்டும் நான் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரையெல்லாம் தினந்தினம் உங்களண்டைக்கு ஏற்கனவே அனுப்பிக் கொண்டிருந்தேன்" (எரே 7:25) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆனால் அவர்களோ தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் எப்போதும் போலவே கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். கர்த்தர் எல்லா காலத்திலும் தம்முடைய ஜனங்கள் மத்தியில், தம்முடைய ஊழியக்காரரை அனுப்புகிறார். அவர்களுடைய பாவங்களைக் குறித்து அவர்களுக்கு கண்டித்து உணர்த்துகிறார். அவர்களுக்கு வரப்போகும் நியாயத்தீர்ப்பைக் குறித்து சொல்லி அவர்களை எச்சரிக்கிறார். ஆனால் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை.

"ஆனாலும் அவர்கள் என் சொல்லைக்கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும்போய், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தி, தங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் அதிக பொல்லாப்பு செய்தார்கள்" (எரே 7:26) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் சுபாவங்களும், நடத்தைகளும் மாறவில்லை. அவர்கள் எப்போதும் போலவே கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாகவும், துன்மார்க்கத்தின் பிள்ளைகளாகவும் இருக்கிறார்கள். தங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பொல்லாப்பு செய்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய் அநியாயங்களும், அக்கிரமங்களும் செய்கிறார்கள். கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். எரேமியா கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு மத்தியில் சொல்லுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார். எரேமியா அவர்களுக்கு தன்னுடைய செய்தியை எப்படித்தான் பிரசங்கம் பண்ணினாலும், அவர்கள் அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கமாட்டார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"நீ இந்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்குச் சொன்னாலும், அவர்கள் உனக்குச் செவிகொடுக்கமாட்டார்கள்; நீ அவர்களை நோக்கிக் கூப்பிட்டாலும், அவர்கள் உனக்கு மறுஉத்தரவு கொடுக்கமாட்டார்கள்" (எரே 7:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா யூதாவின் மனுஷருக்கு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுவார். ஆனால் அவர்களோ எரேமியாவுக்கு செவிகொடுக்கமாட்டார்கள். கீழ்ப்படிதலுள்ள பிரதியுத்தரம் சொல்லமாட்டார்கள். எரேமியாவின் பிரசங்கச் செய்தியை கேட்பதற்குக்கூட கூடிவரமாட்டார்கள். அவர்கள் முரட்டாட்டமான ஜனங்களாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு தங்கள் செவியை சாய்க்காமல், தங்கள் கழுத்தை கடினப்படுத்துகிறார்கள். ஆனாலும் எரேமியா அவர்கள் மத்தியில் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லவேண்டும்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை கேட்காமலிருக்கிற ஜாதி என்றும், புத்தியை ஏற்றுக்கொள்ளாமலிருக்கிற ஜாதி என்றும் எரேமியா அவர்களுக்கு சொல்லவேண்டும். அவர்களுடைய இருதயத்தில் சத்தியம் அழிந்துபோயிற்று என்றும், அவர்களுடைய வாயிலிருந்து சத்தியம் அற்றுப்போனது என்றும் எரேமியா அவர்களுக்கு சொல்லவேண்டும் (எரே 7:28).

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டியவர்கள். ஆனால் அவர்களோ, தாங்கள் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் என்பதை நிரூபித்துவிடுவார்கள். அவர்கள் கர்த்தருக்கு பலிகளை செலுத்துவார்கள். ஆனாலும் கர்த்தர் தங்களை ஆளுகை செய்ய அனுமதிக்கமாட்டார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கமாட்டார்கள்.

கர்த்தர் தம்முடைய வார்த்தையினாலும், தம்முடைய பிரம்பினாலும், தம்முடைய மிலாறுகளினாலும் தங்களைத் திருத்துவதற்கு அனுமதிக்கவுமாட்டார்கள். யூதாவின் மனுஷர் தங்கள் பொல்லாத வழிகளிலிருந்து மனந்திரும்பவுமாட்டார்கள். அவர்களுடைய இருதயமும் ஜீவியமும் ஒருபோதும் புதுப்பிக்கப்படமாட்டாது. அவர்கள் கர்த்தருக்கும் கெட்டவர்களாகயிருப்பார்கள். மனுஷருக்கும் நல்லவர்களாயிருக்க மாட்டார்கள்.

நீ உயர்தலங்களிலே புலம்பிக்கொண்டிரு எரே 7:29-34

எரே 7:29. நீ உன் தலைமயிரைச் சிரைத்து, எறிந்துவிட்டு, உயர்தலங்களிலே புலம்பிக்கொண்டிரு; கர்த்தர் தமது சினத்துக்கு ஏதுவான சந்ததியை வெறுத்து நெகிழவிட்டார்.

எரே 7:30. யூதா புத்திரர் என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் நாமம் தரித்திருக்கிற ஆலயத்தைத் தீட்டுப்படுத்தத் தங்கள் அருவருப்புகளை அதிலே வைத்தார்கள்.

எரே 7:31. தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் அக்கினியிலே தகனிக்கிறதற்காக, அவர்கள் இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கிலுள்ள தோப்பேத்தின் மேடைகளைக் கட்டினார்கள்; அதை நான் கட்டளையிடவுமில்லை, அது என் மனதில் தோன்றவுமில்லை.

எரே 7:32. ஆதலால், இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்; அப்பொழுது அது அப்புறம் தோப்பேத் என்றும், இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கென்றும் சொல்லப்படாமல், சங்காரப்பள்ளத்தாக்கென்று சொல்லப்படும்; தோப்பேத்திலே இடங்கிடையாமற்போகுமட்டும் சவங்களை அடக்கம்பண்ணுவார்கள்.

எரே 7:33. இந்த ஜனத்தின் பிணங்கள் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்; அவைகளை வெருட்டுவாரும் இல்லாதிருப்பார்கள்.

எரே 7:34. நான் யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் களிப்பின் சத்தத்தையும், மகிழ்ச்சியின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும் ஓயப்பண்ணுவேன்; தேசம் பாழாகும்.

எருசலேம் இப்போது சந்தோஷத்தில் ஆர்ப்பரிக்கிறது. அது ஒரு மகிழ்ச்சியான நகரம். எருசலேம் நகரம் உயர்தலங்களிலே புலம்பவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 7:29). யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் உயரமான எல்லா மேடுகளிலும் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் விக்கிரகங்களுக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். விக்கிரகங்கள் மூலமாய் அவர்களுக்கு துக்கமும் வேதனையும் வந்திருக்கிறது. அவர்களுடைய துக்கத்திற்கு அடையாளமாக, எருசலேம் தன் தலைமயிரை சிரைத்து எரிந்துவிடவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதர்கள் நசரேய விரதமிருக்கிறவர்கள். "உன் தலை மயிரை சிரைத்து எரிந்துவிடு" என்னும் வாக்கியம் நசரேயர்களுக்கு மிகவும் வேதனையாயிருக்கும். அவர்கள் கர்த்தருக்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்டதற்கு அடையாளமாக, தங்கள் தலைமயிரை சிரைக்காமல், நீளமாய் வளர்த்து, நசரேய விரதம் இருக்கிறார்கள்.

எருசலேம் நகரம் தேவனுக்கு நசரேய விரதம் இருக்கிறவர்களைப்போன்ற பரிசுத்தமான நகரமாகும். ஆனால் அந்த நகரம் இப்போது தன்னுடைய தலைமயிரை சிரைத்து எரிந்துவிடவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் நசரேய ஸ்தானத்திலிருந்து தாழ்வான ஸ்தானத்திற்கு கீழே தள்ளப்பட்டிருக்கிறார்கள். தேவனிடத்திலிருந்து பிரிந்து போயிருக்கிறார்கள். கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறவர்களுக்கு, நசரேய விரதத்தினால் ஒரு பிரயோஜனமுமில்லை. கர்த்தரிடத்தில் ஐக்கியமில்லாமல், தங்களுடைய தலைமயிரை நீளமாய் வளர்ப்பதினால் அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகாது.

யூதாவின் மனுஷரும், எருசலேம் குடிகளும் கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள். தேவனுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியத்தில் பரிசுத்தமில்லை. ஆகையினால் அவர்கள் தங்களுடைய உலகப்பிரகாரமான சந்தோஷத்தை எரிந்துவிடவேண்டும். அவர்களிடத்தில் சந்தோஷத்திற்குப் பதிலாக துக்கம் காணப்படவேண்டும். "உயர்தலங்களிலே புலம்பிக்கொண்டிரு" என்று கர்த்தர் எருசலேமுக்குச் சொல்லுகிறார்.

யூதாவின் புத்திரர் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். கர்த்தருடைய நாமம் தரித்திருக்கிற ஆலயத்தை தீட்டுப்படுத்துகிறார்கள். அவர்கள் பரிசுத்தமான ஆலயத்திலே, தங்கள் அருவருப்புகளை அதிலே வைக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் கர்த்தருக்குப் பிரியமான ஜனமாயிராமல், கர்த்தருடைய சினத்திற்கு ஏதுவான சந்ததியாராயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை வெறுத்து நெகிழவிடுகிறார்.

கர்த்தருடைய ஆலயம் பரிசுத்தமானது. அங்கே அவருடைய பரிசுத்த பிரசன்னம் வெளிப்படுகிறது. தேவனுடைய மகிமை அவருடைய ஆலயத்தில் வந்து தங்கியிருக்கிறது. ஆலயத்தின் உள்ளும் புறம்பும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அதனுடைய பிரகாரங்கள் எல்லாமே தீட்டுப்படாமல் சுத்தமாயிருக்கவேண்டும்.

ஆனால் யூதாபுத்திரரோ தேவனுடைய ஆலயத்தை தீட்டுப்படுத்துகிறார்கள். தேவனை ஆராதிக்கிறார்கள். அதே வேளையில் பாகாலையும் ஆராதிக்கிறார்கள். பரலோகத்தையும் விரும்புகிறார்கள். நகரத்தின் பிள்ளைகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய ஆலயத்திற்கு பலிகளையும் கொண்டுவருகிறார்கள். அங்கே தங்கள் அருவருப்புகளையும் வைக்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் செய்கிற பாவங்களை கர்த்தர் அவர்களுக்கு தெளிவாகச் சொல்லுகிறார். அவர்கள் தோப்பேத்திலே மேடைகளைக் கட்டினார்கள். "தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் அக்கினியிலே தகனிக்கிறதற்காக, அவர்கள் இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கிலுள்ள தோப்பேத்தின் மேடைகளைக் கட்டினார்கள்" (எரே 7:31).

தோப்பேத்திலே மோளேகுக்கு ஒரு சிலையை வைக்கிறார்கள். தோப்பேத் இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கிலுள்ளது. இது எருசலேமுக்கு அருகாமையிலுள்ளது. தோப்பேத்திலே யூதாவின் புத்திரர் தங்கள் குமாரரையும், குமாரத்திகளையும், மோளேகுக்கு அக்கினியிலே தகனிக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளை உயிரோடு கொழுத்தி, மோளேகுக்கு பலியிடுகிறார்கள். மோளேகும், மற்ற விக்கிரகங்களும் தங்கள்மீது கோபமாயிருக்கிறது என்றும், அவற்றை சமாதானப்படுத்தவேண்டும் என்றும் தீர்மானித்து, அதற்காக தங்கள் பிள்ளைகளை பலியிடுகிறார்கள்.

கர்த்தர் இப்படிப்பட்ட பலிகளை ஒருபோதும் கட்டளையிடவில்லை. இது கர்த்தருடைய மனதில் தோன்றவுமில்லை. இவையெல்லாம் பிசாசின் கிரியைகள். யூதாவின் மனுஷர் பிசாசுக்கு தங்களை ஒப்புக்கொடுத்து இன்னோம் புத்திரரின் பள்ளத்தாக்கில் தங்கள் பிள்ளைகளை பலிசெலுத்துகிறார்கள். இதனால் தேவனுடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்களைத் தண்டிக்கிறது.

அவர்கள் தேவனுடைய மகிமையை மிருகங்களுக்கு ஒப்பாக மாற்றியிருக்கிறார்கள். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் கர்த்தருக்குப் பிரியமானவர்களாயிருக்கவேண்டும். கர்த்தருடைய சுபாவம் அவர்களிடத்தில் வெளிப்படவேண்டும். கர்த்தர் நம்மை தம்முடைய சாயலாக சிருஷ்டித்திருக்கிறார்.

யூதாவின் மனுஷரோ, மோளேகுக்கு தங்கள் பிள்ளைகளை அக்கினியிலே தகனித்து, தங்களுடைய மிருக சுபாவத்தை வெளிப்படுத்துகிறார்கள். மிருகங்களைவிட மோசமானவர்களாயிருக்கிறார்கள். யூதாவின் மனுஷர் கர்த்தர் கட்டளையிட்டதை கீழ்ப்படிந்து செய்யாமல், அவர் கட்டளையிடாததை செய்கிறார்கள். கர்த்தருடைய பிரமாணம் அவர்களை ஆளுகை செய்யவில்லை. அவர்கள் தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கும், பிசாசின் கிரியைகளுக்கும் ஒப்புக்கொடுத்து, கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள்.

யூதாவின் மனுஷர் தங்கள் பிள்ளைகளை தமக்கு பலியாகச் செலுத்தவேண்டும் என்னும் எண்ணங்கூட கர்த்தருடைய மனதில் தோன்றவில்லை. ஆனால் யூதாவின் மனுஷரோ, கர்த்தருக்குப் பிரியமில்லாத காரியங்களை செய்கிறார்கள். அவர்கள் ஆராதிக்கிற விக்கிரகங்கள் மனுக்குலத்திற்கு சத்துருக்களாயிருக்கிறது. இஸ்ரவேல் சந்ததியார் கர்த்தருக்குப் பிரியமானவர்களாயிருக்கவேண்டும். ஆனால் அவர்களோ தங்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தருடைய சினத்திற்கு ஏதுவான சந்ததியாராயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை வெறுத்து நெகிழவிடுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களை பாவத்திற்கு ஒப்புக்கொடுத்ததினால், தேவனுடைய அன்பு அவர்களைவிட்டு விலகிப்போய்விடுகிறது. தேவனுடைய அன்புக்கு ஏதுவான சந்ததியாயிருக்க வேண்டியவர்கள், தங்களுடைய பாவங்களினால், தேவனுடைய சினத்திற்கு ஏதுவான சந்ததியாயிருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய சினத்திற்கு ஏதுவான சந்ததியை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார். மரணம் அவர்களை ஆளுகை செய்யும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாள் அவர்கள்மேல் வரும். கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வெளிப்படும்.

"அப்பொழுது அது அப்புறம் தோப்பேத் என்றும், இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கென்றும் சொல்லப்படாமல், சங்காரப்பள்ளத்தாக்கென்று சொல்லப்படும்; தோப்பேத்திலே இடங்கிடையாமற்போகுமட்டும் சவங்களை அடக்கம்பண்ணுவார்கள். இந்த ஜனத்தின் பிணங்கள் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்; அவைகளை வெருட்டுவாரும் இல்லாதிருப்பார்கள்" (எரே 7:32,33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரிலும், எருசலேமின் குடிகளிலும் ஏராளமானோர் சங்காரமாவார்கள். சத்துரு எருசலேமை முற்றிக்கைப்போடும்போது, எருசலேமின் குடிகள் சத்துருவின் கைகளிலிருந்து தப்பித்து ஓடுவதற்கு முயற்சி பண்ணுவார்கள். ஆனால் அவர்களால் தப்பிக்க முடியாது. சத்துருக்களின் கைகளில் விழுந்து, அவர்களுடைய பட்டயங்களால் சங்காரமாவார்கள்.

தோப்பேத்திலே யூதாவின் மனுஷர் மோளேகுக்கு தங்கள் பிள்ளைகளை பலியாகச் செலுத்தினார்கள். இதன் நிமித்தமாய் தேவனுடைய தெய்வீக நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. யூதாவின் மனுஷர் எந்த ஸ்தலத்திலே, தங்கள் பிள்ளைகளை மோளேகுக்கு பலியாக செலுத்தினார்களோ, அதே ஸ்தலத்திலேயே, கர்த்தர் யூதாவின் மனுஷரை சங்காரம்பண்ணுகிறார்.

இதன் நிமித்தமாய் தோப்பேத்து இனிமேல் இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கு என்று சொல்லப்படாது. அது சங்காரப் பள்ளத்தாக்கு என்று சொல்லப்படும். அங்கு இனிமேல் யூதாவின் மனுஷர் தங்கள் பிள்ளைகளை மோளேகுக்கு பலியாக செலுத்தமாட்டார்கள். தங்கள் பிள்ளைகளை பலிசெலுத்தின அதே ஸ்தலத்திலேயே, யூதாவின் மனுஷர் சங்காரமாவார்கள். அவர்களுடைய சவங்கள் அங்கே அடக்கம்பண்ணப்படும். அவர்களுடைய சவங்களை அடக்கம் பண்ணுவதற்குகூட தோப்பேத்திலே இடம் கிடைக்காமல் போகும். இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கு முழுவதும் சங்கார பள்ளத்தாக்காயிருக்கும்.

தோப்பேத்து எருசலேமுக்கு அருகாமையிலிருக்கிறது. ஒரு காலத்தில் எருசலேமை முற்றிக்கைப்போட்ட சத்துருக்கள்மீது, எருசலேம் நகரத்தார் யுத்தம்பண்ணி, யுத்தத்தில் அவர்களை ஜெயித்தார்கள். தங்களுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டவர்களை கொன்றுபோட்டார்கள். அவர்களுடைய பிரேதங்களை தோப்பேத்திலே அடக்கம்பண்ணினார்கள். சத்துருக்கள் முற்றிக்கைப்போட்டார்கள். எருசலேமின் குடிகள் முற்றிக்கைப் போடப்பட்டிருந்தார்கள். முற்றிக்கைப்போட்ட சத்துருக்கள் சங்காரமானார்கள்.

ஆனால் இப்போதோ யூதா மனுஷருடைய நிலமை மிகவும் மோசமாயிருக்கிறது. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். சத்துருக்கள் எருசலேமுக்கு விரோதமாய் முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை பாதுகாக்கவில்லை. எருசலேமின் மனுஷருக்கு தோல்வி உண்டாயிற்று. முற்றிக்கைப்போட்டவர்கள், எருசலேமின் மனுஷரை சங்காரம் பண்ணுகிறார்கள். எருசலேமின் மனுஷரை தோப்பேத்திலே அடக்கம் பண்ணுகிறார்கள்.

சத்துருக்களை சங்காரம் பண்ணி அடக்கம்பண்ணிய இடத்தில், இப்போது யூதாவின் மனுஷர் சங்காரமாகி அடக்கம்பண்ணப்படுகிறார்கள். "யூதா மனுஷருடைய பிணங்கள் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்; அவைகளை வெருட்டுவாரும் இல்லாதிருப்பார்கள்" (எரே 7:33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமிலும் மகிழ்ச்சியோ, சந்தோஷமோ இருக்காது. "நான் யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் களிப்பின் சத்தத்தையும், மகிழ்ச்சியின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும் ஓயப்பண்ணுவேன்; தேசம் பாழாகும்" (எரே 7:34) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேசம் பாழாய்ப்போகும். ஆகையினால் அங்கே அறுவடை இருக்காது. மனுஷரெல்லாம் சங்காரமாவார்கள். தேசத்திலே கலியாணம் நடக்காது. சந்தோஷப்படுவதற்கு ஒன்றுமே இருக்காது. எல்லாம் துக்கமாயிருக்கும். பாவம் செய்தவர்களுக்கு, அவர்களுடைய சந்தோஷம் துக்கமாய் மாறும். கர்த்தரை நம்புகிறவர்களுக்கோ, அவர்களுடைய துக்கம் சந்தோஷமாய் மாறும்.

8 அதிகாரம்

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது அழிவை வரவழைக்கிறார். கர்த்தருடைய கிரியை நீதியானது என்று எரேமியா சொல்லுகிறார். யூதா மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. இதன் நிமித்தமாய் அவர்களுக்கு பயங்கரமான சம்பவங்கள் நடைபெறுகிறது. தங்களுக்கு ஜீவனைப் பார்க்கிலும் மரணமே விருப்பமாயிருக்கிறது என்று யூதாவின் மனுஷர் சொல்லுகிறார்கள் (எரே 8:1-3).

யூதாவின் மனுஷர் கர்த்தரை விட்டு வழிதப்பி போகிறார்கள். துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய மதியீனமும், அவர்களுடைய அக்கிரமமுமே அவர்களுடைய அழிவுக்கு காரணம் (எரே 8:4-12). கர்த்தர் யூதா தேசத்தை முற்றிலுமாய் அழித்துப்போடுவார். ஜனங்கள் மத்தியிலே குழப்பம் அதிகமாயிருக்கும் (எரே 8:13-17). யூதாவின் அழிவைப் பார்த்து எரேமியா தீர்க்கதரிசி வேதனைப்படுகிறார். அவருடைய இருதயம் பலட்சயமாயிருக்கிறது (எரே 8:18-22).

ஜீவனைப்பார்க்கிலும் மரணமே விருப்பமாயிருக்கும் எரே 8:1-3

ஏரே 8:1. அக்காலத்திலே யூதாவினுடைய ராஜாக்களின் எலும்புகளையும், அவர்களுடைய பிரபுக்களின் எலும்புகளையும், ஆசாரியர்களின் எலும்புகளையும், தீர்க்கதரிசிகளின் எலும்புகளையும், எருசலேமுடைய குடிகளின் எலும்புகளையும், அவர்களுடைய பிரேதக்குழிகளிலிருந்து எடுத்து,

ஏரே 8:2. அவர்கள் நேசித்ததும், சேவித்ததும், பின்பற்றினதும், நாடினதும், பணிந்துகொண்டதுமாயிருந்த சூரியனுக்கும், சந்திரனுக்கும், வானத்தின் சர்வசேனைக்கும் முன்பாக அவைகளைப் பரப்பிவைப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் வாரி அடக்கம் பண்ணப்படாமல் பூமியின்மேல் எருவாகும்.

எரே 8:3. இந்தத் துஷ்ட வம்சத்தில் மீதியாயிருந்து, என்னால் எல்லா இடங்களிலும் துரத்திவிடப்பட்டு மீந்திருக்கிற யாவருக்கும், ஜீவனைப்பார்க்கிலும் மரணமே விருப்பமாயிருக்குமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர் யூதா தேசத்தின்மீது யுத்தம் பண்ண வருகிறார்கள். அவர்கள் யூதாவின் பட்டணங்களெல்லாவற்றையும் அழித்துப் போடுகிறார்கள். யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் கொன்று போடுகிறார்கள். யூதா தேசத்தில் மிகப்பெரிய அழிவு வந்திருக்கிறது.

பொதுவாக மனுஷருக்கு மரணம் வந்த பின்பு, அவர்களுடைய பிரேதங்களை குழிதோண்டி புதைத்துவிடுவார்கள். அதற்குமேல் கல்லறைகளை கட்டியெழுப்புவார்கள். செத்துப்போன பிரேதங்களை, பொதுவாக கல்லறைகளிலிருந்து யாரும் தோண்டி எடுப்பதில்லை. ஆனால் யூதா தேசத்திலோ, செத்து அடக்கம்பண்ணப்பட்ட பிரேதங்களுக்கும் அமைதியில்லாமல் போயிற்று. கல்தேயர்கள் மரித்தோரின் எலும்புக்கூடுகளை தோண்டி எடுக்கிறார்கள்.

"பூமியின்மேல் ஒருவன் மரத்தை வெட்டிப் பிளக்கிறதுபோல, எங்கள் எலும்புகள் பாதாளவாய்க்கு நேராய்ச் சிதறடிக்கப்பட்டிருக்கிறது" (சங் 141:7).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர்மீது வந்திருக்கிறது. யூதாவின் மனுஷர் எல்லோரும் சங்காரமாகிறார்கள். தோப்பேத்திலே இடங்கிடையாமல் போகுமட்டும் சவங்களை அடக்கம் பண்ணுகிறார்கள். அநேகருடைய பிணங்கள் அடக்கம்பண்ணப்படுவதில்லை. அந்தப் பிரேதங்களை அடக்கம்பண்ணுவதற்கு இடமுமில்லை, ஆட்களும் இல்லை. யூதா ஜனத்தின் பிணங்கள் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாய்ப்போயிற்று. அதே வேளையில், யூதா தேசத்திலே, சமுதாயத்திலே முக்கியமான ராஜாக்களின் பிரேதங்களையும், பிரபுக்களின் பிரேதங்களையும், ஆசாரியர்களின் பிரேதங்களையும் ஒரு சில இடங்களில் அடக்கம்பண்ணுகிறார்கள்.

இவர்களுடைய பிரேதங்கள் பூமியிலே அடக்கம்பண்ணப்பட்டிருந்தாலும், கல்தேயர்கள் யூதாவின் பட்டணங்களுக்குள் வரும்போது, அந்தப் பிரேதக்குழிகளைத் தோண்டி எடுக்கிறார்கள். ராஜாக்களின் பிரேதக்குழிகளில் பொக்கிஷங்களும் சேர்த்து அடக்கம்பண்ணப்பட்டிருக்கும். அந்தப் பேராசையோடு அவர்கள், "அக்காலத்திலே யூதாவினுடைய ராஜாக்களின் எலும்புகளையும், அவர்களுடைய பிரபுக்களின் எலும்புகளையும், ஆசாரியர்களின் எலும்புகளையும், தீர்க்கதரிசிகளின் எலும்புகளையும், எருசலேமுடைய குடிகளின் எலும்புகளையும், அவர்களுடைய பிரேதக்குழிகளிலிருந்து எடுக்கிறார்கள்" (எரே 8:1).

யூதா மனுஷர் தங்களுடைய கல்லறைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது வழக்கம். அவர்கள் தங்கள் தேசத்திலே மரித்தோரை கண்ணியமாய் அடக்கம் பண்ணுவார்கள். ஆனாலும், அவர்களுடைய கல்லறைகள் அவர்களைப் பாதுகாக்கவில்லை. அவர்களுடைய கல்லறைகளுக்கும் பாதுகாப்பு இல்லாமல் போயிற்று.

கல்தேயர்கள் யூதாவின் ராஜாக்களுடைய எலும்புகளை தோண்டி எடுத்ததோடு நிறுத்திக்கொள்ளவில்லை. அவர்கள் ஆசாரியர்களின் எலும்புகளையும், தீர்க்கதரிசிகளின் எலும்புகளையும் தோண்டி எடுக்கிறார்கள். கல்தேயர்கள் இரத்த வெறிபிடித்தவர்களாக யூதா தேசத்திற்குள்ளே சுற்றி அலைகிறார்கள். அவர்களிடத்தில் மனிதாபிமானமோ, மனிதநேயமோ இல்லை. கல்தேயர்கள் ஜனங்களுக்கு இரக்கம் காண்பிக்கமாட்டார்கள் என்று கர்த்தர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

கல்தேயர்கள் மரித்தோரின் எலும்புகளை தோண்டி எடுத்து, அந்த எலும்புகளையெல்லாம் ஒன்று சேர்த்து, பூமியிலே பரப்பி வைக்கிறார்கள். "அவர்கள் நேசித்ததும், சேவித்ததும், பின்பற்றினதும், நாடினதும், பணிந்துகொண்டதுமாயிருந்த சூரியனுக்கும், சந்திரனுக்கும், வானத்தின் சர்வசேனைக்கும் முன்பாக அவைகளைப் பரப்பி வைப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 8:2). யூதாவின் மனுஷர் சந்திரனையும் சூரியனையும் தங்கள் தெய்வங்களாக ஆராதித்தார்கள். இப்போதோ அவற்றிற்கு முன்பாக யூதர்களுடைய எலும்புகள் பரப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய எலும்புகள் வாரி அடக்கம்பண்ணப்படாமல் பூமியின் மேல் எருவாயிருக்கிறது.

பொதுவாக உயிரோடிருக்கிறவர்கள், இன்னும் கொஞ்ச காலத்திற்கு உயிரோடிருக்கவேண்டும் என்றே விரும்புவார்கள். ஒருவரும் சீக்கிரத்தில் மரித்துப்போகவேண்டுமென்று ஆசைப்பட மாட்டார்கள். ஆனால் யூதாவின் மனுஷரோ ஜீவனைப் பார்க்கிலும், மரணத்தையே விரும்புகிறார்கள். ஜீவனோடிருப்பதினால் அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை. அவர்களுடைய ஜீவியத்தில் சந்தோஷமோ, சமாதானமோ, ஆறுதலோ உண்டாகவில்லை. ஆகையினால் ஜீவனோடிருப்பதைவிட, மரித்துப்போவதே மேன்மையானது என்று நினைக்கிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கு மரணத்திற்கு பின்பும் ஒரு ஜீவன் இருக்கிறது என்பது தெரியவில்லை. அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தருடைய வார்த்தையும், அவருடைய உபதேசமும் அவர்களைவிட்டு விலகிப்போயிருக்கிறது. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் மரித்துப்போனாலும், பரலோகத்திலே கர்த்தரோடு நித்திய காலமாய் ஜீவிப்போம். இதுவே நம்முடைய ஆனந்த பாக்கிய நம்பிக்கை.

யூதாவின் மனுஷரோ இந்த உலகத்தையும், தங்களையும், தங்களுடைய விக்கிரகங்களையும் மாத்திரமே பார்க்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்வதினால், அவர்கள்மீது ஏராளமான தீங்குகள் வந்திருக்கிறது. அவர்களால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கல்தேயர்கள் யூதா தேசத்தின்மீது யுத்தம்பண்ணி, ஏராளமான ஜனங்களைக் கொன்று போட்டார்கள்.

கல்தேயர்கள் யூதர்களைக் கொன்றுபோட்டாலும், அவர்களில் ஒரு சிலர் இன்னும் சாகாமலிருக்கிறார்கள். யூதாவின் வம்சத்தார் துஷ்டவம்சத்தாராயிருக்கிறார்கள். கல்தேயரின் பட்டயத்திற்கு தப்பி ஜீவனோடு மீந்திருக்கிற யூதர்களை, கர்த்தர் எல்லா இடங்களுக்கும் துரத்திவிடுகிறார். அவர்களுக்கு ஜீவன் இருக்கிறது. ஆனால் கர்த்தருடைய கிருபையில்லை. அவர்களுக்கு ஜீவனைப் பார்க்கிலும் மரணமே விருப்பமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (எரே 8:3).

தேவனுடைய நியாயத்தீர்ப்பு யூதர்கள்மீது வந்திருக்கிறது. கல்தேயர்கள் அவர்களில் அநேகரை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்துக்கொண்டு போகிறார்கள். கல்தேயருக்கு தப்பியவர்கள் பக்கத்து தேசங்களுக்கு ஓடி ஒழிந்துகொள்கிறார்கள். அங்கே அவர்களுக்கு ஜீவதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. இன்னும் சிலர் தங்களுடைய சொந்த தேசத்திலேயே தேசாந்திரிகளாய் சுற்றி அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஜீவிக்கவேண்டும் என்னும் விருப்பமில்லை. மரித்துப்போக விரும்புகிறார்கள். ஆனால் அவர்களுக்கு மரணமும் வரவில்லை.

என்றைக்கும் வழிதப்பிப் போகிறதென்ன? எரே 8:4-12

எரே 8:4. நீ அவர்களை நோக்கி: விழுந்தவர்கள் எழுந்திருக்கிறதில்லையோ? வழிதப்பிப் போனவர்கள் திரும்புகிறதில்லையோ?

எரே 8:5. ஆனாலும் எருசலேமியராகிய இந்த ஜனம் என்றைக்கும் வழிதப்பிப்போகிறதென்ன? கபடத்தை உறுதியாய்ப் பிடித்திருக்கிறார்கள்; திரும்பமாட்டோம் என்கிறார்கள்.

எரே 8:6. நான் கவனித்துக்கேட்டேன், அவர்கள் யதார்த்தம் பேசவில்லை; என்ன செய்தேனென்று சொல்லி, தன் பொல்லாப்பினிமித்தம் மனஸ்தாபப்படுகிறவன் ஒருவனுமில்லை; யுத்தத்துக்குள் பாய்கிற குதிரையைப்போல அவரவர் வேகமாய் ஓடிப்போனார்கள்.

எரே 8:7. ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த் தன் வேளையை அறியும்; காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்; என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள் என்று கர்த்தர் உரைக்கிறாரென்று சொல்.

எரே 8:8. நாங்கள் ஞானிகளென்றும், கர்த்தருடைய வேதம் எங்களிடத்திலிருக்கிறதென்றும் நீங்கள் சொல்லுகிறதெப்படி? மெய்யாகவே, இதோ, வேதபாரகரின் கள்ள எழுத்தாணி அதை அபத்தமாக்குகிறது.

எரே 8:9. ஞானிகள் வெட்கி, கலங்கிப் பிடிபடுவார்கள்; இதோ, கர்த்தருடைய சொல்லை வெறுத்துப்போட்டார்கள்; அவர்களுக்கு ஞானமேது?

எரே 8:10. ஆகையால் அவர்களுடைய ஸ்திரீகளை அந்நியருக்கும், அவர்களுடைய வயல்களை அவைகளைக் கட்டிக் கொள்பவர்களுக்கும் கொடுப்பேன்; அவர்களிலே சிறியோர்தொடங்கிப் பெரியோர்மட்டும் ஒவ்வொருவரும் பொருளாசைக்காரராயிருக்கிறார்கள்; தீர்க்கதரிசிகள் தொடங்கி ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யராயிருந்து,

எரே 8:11. சமாதானமில்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்.

எரே 8:12. தாங்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களா? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆகையால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்குங்காலத்திலே இடறுண்டு போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியிடம், யூதா ஜனத்தாரின் பாவத்தைப்பற்றியும், அவர்களுடைய மதியீனத்தைப்பற்றியும் விளக்கமாகச் சொல்லுகிறார். கர்த்தர் மனுஷனை தம்முடைய சாயலாக சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தர் சர்வஞானமும், அனந்தஞானமுமுள்ளவர். சர்வசிருஷ்டிகர், மனுபுத்திரருக்கும் ஞானத்தையும், அறிவையும், புத்தியையும் கொடுத்திருக்கிறார். ஆனால் யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளுமோ புத்தியில்லாதவர்களாயிருக்கிறார்கள். மதியீனமான காரியங்களை செய்கிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கு அழிவு வந்திருக்கிறது. அவர்களோ தாங்கள் அழிந்துபோவதற்கான காரணத்தைப்பற்றி சிந்தித்துப் பார்ப்பதில்லை. அவர்களுடைய ஆத்துமா தேவனைப்பற்றி சிந்திப்பதுமில்லை. அவர்கள் உலகப்பிரகாரமான காரியங்களில் மிகுந்த புத்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் கர்த்தருக்கடுத்த காரியங்களிலோ அவர்களுக்கு கொஞ்சமும் புத்தியில்லை.

எரேமியா தீர்க்கதரிசி, யூதாவின் மனுஷரிடத்தில் "விழுந்தவர்கள் எழுந்திருக்கிறதில்லையோ? வழிதப்பிப் போனவர்கள் திரும்புகிறதில்லையோ?" (எரே 8:4) என்று கேட்கவேண்டும். இது கர்த்தர் எரேமியாவுக்குக் கொடுக்கிற கட்டளை. மனுஷர் நடக்கும்போது, கால்தடுமாறி தரையிலே விழுந்துவிட்டால், உடனே எழுந்துவிடுவார்கள். விழுந்த இடத்திலேயே படுத்து கிடக்கமாட்டார்கள். எவ்வளவு சீக்கிரமாக எழுந்திருக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக எழுந்துவிடுவார்கள். ஆனால் யூதாவின் மனுஷரோ கீழே விழுந்தவர்கள், எழுந்திருக்காமல், என்றைக்கும் விழுந்தவர்களாகவே இருக்கிறார்கள்.

பிரயாணம்பண்ணுகிறவர்கள் சரியான பாதையில் போய்க்கொண்டிருப்பார்கள். ஒருவேளை அவர்கள் வழிதப்பிப் போய்விட்டால், உடனே தாங்கள் போகவேண்டிய சரியான வழிக்கு திரும்பி வந்துவிடுவார்கள். பலமுறை பிரயாணம் பண்ணுகிறவர்களும், பாதைகளில் நல்ல பழக்கமுள்ளவர்களும்கூட சில சமயங்களில் வழிதப்பிப்போய்விடுவார்கள். ஆனாலும் அவர்கள் சரியான பாதைக்கு திரும்பி வந்துவிடுவார்கள்.

"ஆனாலும் எருசலேமியராகிய இந்த ஜனம் என்றைக்கும் வழிதப்பிப் போகிறதென்ன?" (எரே 8:5) என்று கர்த்தர் கேட்கிறார். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விட்டார்கள். ஆனால் அவர்கள் மறுபடியும் கர்த்தரிடத்தில் திரும்பி வரவில்லை. அவர்கள் பாவத்தில் விழுந்துவிடுகிறார்கள். ஆனாலும் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி எழும்பி வருவதில்லை.

கர்த்தரைவிட்டு விலகிப்போவது பாவம் என்பது அவர்களுக்குத் தெரியும். கர்த்தருக்கு விரோதமான காரியங்களை செய்வதும், கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் கலகம்பண்ணுவதும் பாவம் என்பதும் அவர்களுக்குத் தெரியும். தெரிந்தும் அவர்கள் பாவம் செய்கிறார்கள். பாவமான வழிகளில் துணிகரமாய்ப் போகிறார்கள்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே நமக்கு வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார். கர்த்தருடைய பாதையே பூர்வபாதை. அதுவே நல்ல வழி. பாவம் செய்கிறவர்கள் நல்ல வழியிலிருந்து விலகி கெட்ட வழியிலே போகிறார்கள். பாவம் அவர்களை திசை திருப்பி விடுகிறது. பாவிகள் தாங்கள் போகவேண்டிய நல்ல வழியில் போகாமல், குறுக்கு வழிகளிலும், கோணலான வழிகளிலும், கர்த்தருக்கு விரோதமான வழிகளிலும் போகிறார்கள். அதன் முடிவு அழிவு. கர்த்தருடைய நல்ல வழியில் போனால் நமக்கு ஜீவன் உண்டாயிருக்கும். பாவமான வழியில் போனால் நமக்கு அழிவு வரும்.

பாவிகளுக்கு இலக்கு இல்லை. அவர்கள் எங்கே போகிறோம் என்று தெரியாமலேயே சுற்றிக்கொண்டிருப்பார்கள். அவர்களுடைய அலைச்சலுக்கு முடிவே இருக்காது. தாங்கள் ஆரம்பித்த இடத்திற்கு மறுபடியும் திரும்பி வந்துவிடுவார்கள். செக்குமாடு எங்கும் போகாமல், சுற்றி சுற்றி வருவதுபோல, பாவிகளும் இலக்கை நோக்கி போகாமல், தங்கள் பாவத்திலே சுற்றிக்கொண்டிருப்பார்கள். அதன் முடிவு அவர்களுக்கு அழிவு. அவர்கள் சுற்றுவதினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

சோதனைக்காரன் மனுஷரை பாவத்தில் பாதையில் வழிநடத்துகிறான். அவன் மனுஷரை பாவத்திற்கு அடிமைப்படுத்திவிடுகிறான். அதன்பின்பு பாவிகள் பாவத்திலேயே தொடர்ந்து அடிமைப்பட்டுகிடக்கிறார்கள். சாத்தான் மனுஷரை வஞ்சிக்கிறான். பாவிகளோ நித்திய காலமாய் வஞ்சிக்கப்பட்டு கிடக்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் தங்களைத் தாங்களே பாவத்திற்கு அடிமைப்படுத்திக்கொள்கிறார்.

சாத்தான் தங்களை வஞ்சித்துவிட்டான் என்று பாவிகள் சொல்லுகிறார்கள். ஆனாலும் சாத்தானுடைய வஞ்சனையிலிருந்து விடுதலை பெறுவதற்கு அவர்களுக்கு மனமில்லை. சாத்தானுடைய வலையில் விழுந்துகிடக்கிற அவர்கள் எழுந்திருப்பதேயில்லை. கர்த்தரை விட்டு வழிதப்பிப்போயிருக்கிற அவர்கள், கர்த்தரிடத்தில் திரும்பி வருவதேயில்லை. அவர்கள் என்றைக்கும் வழிதப்பிப்போகிறார்கள். கபடத்தை உறுதியாய்ப் பிடித்திருக்கிறார்கள். திரும்பமாட்டோம் என்கிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் கர்த்தருடைய வார்த்தையை தொடர்ந்து பிரசங்கம்பண்ணுகிறார். தன்னுடைய பிரசங்கத்தினால் யூதாவின் மனுஷர் மத்தியிலே என்னென்ன விளைவுகள் உண்டாயிருக்கிறது என்பதை எரேமியா ஆராய்ந்து பார்க்கிறார்.

தான் சொன்ன சத்தியங்கள் யூதா மனுஷருடைய இருதயத்தில் எப்படி கிரியை நடப்பிக்கிறது என்பதை அறிந்துகொள்ள எரேமியா விரும்புகிறார். அவர்களுடைய மனச்சாட்சி சுத்திகரிக்கப்பட்டிருக்கிறதா, என்பதையும், அவர்களுடைய பாவங்களைக் குறித்து, அவர்களுடைய மனச்சாட்சி அவர்களை கண்டித்து உணர்த்துகிறதா என்பதையும் எரேமியா தெரிந்துகொள்ள விரும்புகிறார். இதற்காக அவர் அவர்களுடைய மனச்சாட்சியின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்கிறார்.

"நான் கவனித்துக்கேட்டேன்" (எரே 8:6) என்று எரேமியா சொல்லுகிறார். எரேமியாவைப்போலவே, இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரும், யூதாவின் மனுஷருடைய மனச்சாட்சியின் சத்தத்தைக் கவனித்துக்கேட்கிறார். ஆனால் அவர்கள் யதார்த்தம் பேசவில்லை.

"என்ன செய்தேனென்று சொல்லி, தன் பொல்லாப்பினிமித்தம் மனஸ்தாபப்படுகிறவன் ஒருவனுமில்லை; யுத்தத்துக்குள் பாய்கிற குதிரையைப்போல அவரவர் வேகமாய் ஓடிப்போனார்கள்" (எரே 8:6) என்று எரேமியா சொல்லுகிறார். கர்த்தரும் எரேமியாவின் வார்த்தையை அங்கீகரிக்கிறார்.

கர்த்தர் பாவிகளின் மரணத்தில் பிரியமாயிருப்பதில்லை. பாவிகள் மனந்திரும்பவேண்டும் என்றே கர்த்தர் விரும்புகிறார். பாவிகள் மனந்திரும்பினால் கர்த்தர் மிகவும் சந்தோஷப்படுவார். யூதா மனுஷருடைய மனச்சாட்சி மனந்திரும்புதலுக்கேற்ற வார்த்தைகளை பேசினால் கர்த்தரும் எரேமியாவும் சந்தோஷப்பட்டிருப்பார்கள். யூதாவின் மனுஷரிடத்தில் மனந்திரும்புதலுக்கேற்ற துக்கம் காணப்படவில்லை. தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்னும் ஆர்வமும் அவர்களிடத்தில் இல்லை.

யூதா மனுஷருடைய மனச்சாட்சியின் சத்தத்தை கவனித்துக் கேட்கிற எரேமியாவுக்கு ஏமாற்றமே உண்டாயிற்று. அவர்கள் யதார்த்தம் பேசவில்லை. அவர்கள் சத்தியத்தையும், உண்மையையும் பேசவில்லை. அவர்கள் சரியான வார்த்தைகளை பேசவில்லை. அவர்கள் மனந்திரும்புதலுக்கு ஏற்ற வார்த்தைகளையும், பக்திவிருத்திக்கு ஏதுவான வார்த்தைகளையும் பேசவில்லை.

யூதாதேசத்தார் எல்லோருமே துன்மார்க்கராயிருக்கிறார்கள். தேசம் முழுவதிலும் பாவமும், துன்மார்க்கமும் நிரம்பியிருக்கிறது. எரேமியா அவர்கள் மத்தியில் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணுகிறார். தேவாலயத்தின் வாசலில் நின்று, கர்த்தருடைய எச்சரிப்பின் சத்தத்தையும், நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளையும் சொல்லுகிறார். ஆனாலும், எரேமியாவின் பிரசங்கத்திற்கு ஒருவரும் செவிகொடுக்கவில்லை. ஒருவரும் மனந்திரும்பவில்லை. மனந்திரும்புதலுக்கேற்ற ஆரம்ப அடையாளங்கள்கூட அவர்களுடைய ஜீவியத்தில் காணப்படவில்லை. அவர்கள் தங்கள் கபடத்தை உறுதியாய்ப் பிடித்திருக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் எல்லோருமே கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்திருக்கிறார்கள். அவர்கள் துணிகரமாய்ப் பாவம் செய்தாலும், "நாங்கள் என்ன செய்தோம்" என்று கேட்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக தாங்கள் செய்த அநியாயங்களையும், அக்கிரமங்களையும், யூதாவின் மனுஷர் பாவம் என்றே அங்கீகரிக்கவில்லை. தங்களுடைய பொல்லாப்பினிமித்தம் ஒருவனும் மனஸ்தாபப்படவில்லை.

எரேமியா யூதாவின் மனுஷர் மத்தியிலே பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கிறார். அவர்களோ, எரேமியாவின் பிரசங்கச் செய்தியைக் கவனமாய்க் கேட்டு மனந்திரும்பாமல், அவரை அசட்டைபண்ணுகிறார்கள். தங்களுடைய வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். "யுத்தத்திற்குப் பாய்கிற குதிரையைப்போல அவரவர் வேகமாய் ஓடிப்போனார்கள்" என்று எரேமியா சொல்லுகிறார். எரேமியாவின் வார்த்தையை ஒருவரும் பொறுமையோடு கேட்கவில்லை. அந்த இடத்தை விட்டு, குதிரையைப்போல, வேகமாய் ஓடிப்போய்விடுகிறார்கள். பிரசங்கிக்கிற எரேமியா இருக்கிறார். பிரசங்கத்தைக் கேட்கவேண்டிய ஜனங்கள் அந்த இடத்தை விட்டு கடந்துபோய்விடுகிறார்கள்.

கர்த்தருடைய ஜனத்தார் தேவனுடைய தெய்வீக பராமரிப்பையும் புரிந்துகொள்ளவில்லை. அந்தப் பராமரிப்புகளில் வெளிப்படுகிற தேவனுடைய வார்த்தைகளையும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. "என் ஜனங்களோ கர்த்தரின் நியாயத்தை அறியார்கள் என்று கர்த்தர் உரைக்கிறார்" (எரே 8:7). கர்த்தர் தம்முடைய ஜனத்திடம் கிருபையாகவும் இருக்கிறார். கோபமாகவும் இருக்கிறார். அவர்களை ஆசீர்வதிக்கவும் செய்கிறார். அவர்களைத் தண்டிக்கவும் செய்கிறார். ஆனால் அவர்களுக்கோ கர்த்தருடைய கிருபையும் எது என்று தெரியவில்லை. அவருடைய கோபமும் எது என்று தெரியவில்லை. கர்த்தருடைய ஆசீர்வாதத்திற்கும், அவருடைய தண்டனைக்கும் வித்தியாசம் தெரியாதவர்களாயிருக்கிறார்கள்.

தேவனுடைய கிருபை என்றால் என்ன என்பதே தெரியவில்லையென்றால், அவர்களால் தேவனுடைய கிருபையில் வளரவே முடியாது. கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் அனுப்புகிறார். அவர்கள் கர்த்தருடைய செய்தியை ஜனங்களுக்கு சொல்லுகிறார்கள். அவர்களுடைய பாவங்களை கண்டித்து உணர்த்துகிறார்கள். கர்த்தருடைய சத்தம் தீர்க்கதரிசிகள் மூலமாய் பட்டணங்களில் தொனிக்கிறது. ஆனால் யூதாவின் மனுஷருக்கோ கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதில் பிரியமில்லை.

சாதாரண சிருஷ்டிகள்கூட கர்த்தருடைய இயற்கையின் பிரமாணங்களை புரிந்துகொள்கிறது. "ஆகாயத்திலுள்ள நாரை முதலாய்த்தன் வேளையை அறியும்; காட்டுப்புறாவும், கொக்கும், தகைவிலான் குருவியும் தாங்கள் வரத்தக்க காலத்தை அறியும்" (எரே 8:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். தம்முடைய ஜனங்களோ, தம்முடைய நியாயத்தை அறியவில்லை என்று கர்த்தர் வேதனையோடு சொல்லுகிறார்.

சாதாரண பறவைகள்கூட, வரத்தக்க காலங்களை அறிந்து, தங்களுடைய ஸ்தலங்களை இடம் மாற்றும். உஷ்ணகாலம் வருவதற்கு முன்பாகவே, பறவைகள் குளிர்ச்சியான பகுதிகளுக்கு பறந்து இடம் பெயரும். வசந்தகாலம் வரும்போது, மறுபடியும் தாங்கள் இருந்த இடத்திற்கே வந்துவிடும். தாங்கள் இருக்கும் இடத்தில் குளிர்காலம் வரும்போது, தங்களுக்கு இதமான சீதோஷ்ணம் எங்கே கிடைக்கும் என்பதை அறிந்து, சாதாரண பறவைகள்கூட அந்த இடங்களுக்கு பறந்துபோய்விடும்.

ஆனால் யூதாவின் மனுஷருக்கோ கர்த்தருடைய நியாயத்தைப்பற்றித் தெரியவில்லை. தேவனுடைய கோபமும் நியாயத்தீர்ப்பும் தங்கள்மீது வரும்போது, அவற்றிற்கு எப்படி தப்பித்துக்கொள்வது என்பதும் புரியவில்லை. தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப அவர்களுக்கு விருப்பமில்லை. அழிந்துபோவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய வேதவாக்கியங்களையும், கட்டளைகளையும், பிரமாணங்களையும் வேதபாரகர் மூலமாக எழுதிவைத்திருக்கிறார். கர்த்தருடைய சொல்லப்பட்ட வார்த்தை, எழுதப்பட்ட வார்த்தையாயிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் வேதவாக்கியங்களை வாசித்து, ஆராய்ந்து, தியானித்து தேவனுடைய வெளிப்பாடுகளை புரிந்துகொள்ளவேண்டும். ஆனால் அவர்களோ, "நாங்கள் ஞானிகள்" என்று சொல்லுகிறார்கள். ஆகையினால் தங்களுக்கு யாரும் போதிக்கவேண்டியதில்லை என்றும், தாங்கள் யாருடைய உபதேசத்தையும் கேட்கவேண்டிய அவசியமுமில்லை என்றும் சொல்லுகிறார்கள்.

"கர்த்தருடைய வேதம் எங்களிடத்தில் இருக்கிறது" (எரே 8:8) ஆகையினால், "நாங்கள் ஞானிகள்" என்று சொல்லுகிறார்கள். யூதாவின் மனுஷரிடத்தில் நியாயப்பிரமாணம் புஸ்தகமும், அதன் வியாக்கியான புஸ்தகமும் இருக்கிறது.

"ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள்" (உபா 4:6).

யூதாவின் மனுஷரிடத்தில் வேதபுஸ்தகம் இருந்தாலும், அவர்களுடைய வேதபாரகர்கள் நியாயப்பிரமாணத்திற்கு தவறான வியாக்கியானத்தைக் கொடுக்கிறார்கள். யூதாமனுஷருடைய இருதயத்தில் பெருமை இருக்கிறது. அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தைப்பற்றித் தெரிந்திருந்தாலும், அவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிப்பதில்லை. ஆகையினால் அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இருப்பதும் ஒன்றுதான், அது இல்லாமலிருப்பதும் ஒன்றுதான்.

ஆரம்பத்தில் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை வேதபாரகர்கள் எழுதினார்கள். வேதபாரகரின் எழுத்தாணிகள் கர்த்தருடைய வார்த்தையை எழுதிற்று. ஆனால் அவர்களுடைய எழுத்துக்கள் ஜனங்களுக்கு பிரயோஜனமில்லாமல் வீணாய்ப்போயிற்று. ஜனங்கள் அதை வாசிப்பதுமில்லை. வாசித்தவர்கள் அதற்கு கீழ்ப்படிவதுமில்லை. ஜனங்கள் வாசிக்கவேண்டும் என்று விரும்பினாலும், அவர்களுக்கு கலப்படமில்லாத சுத்தமான வேதப்பிரமாணம் கிடைப்பதுமில்லை. "மெய்யாகவே, இதோ, வேதபாரகரின் கள்ள எழுத்தாணி அதை அபத்தமாக்குகிறது" (எரே 8:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதா மனுஷர் மத்தியிலே ஞானிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்கள்தான் தங்களை ஞானிகள் என்றும், தங்களிடத்தில் கர்த்தருடைய வேதம் இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். "ஞானிகள் வெட்கி, கலங்கிப் பிடிபடுவார்கள்; இதோ, கர்த்தருடைய சொல்லை வெறுத்துப்போட்டார்கள்; அவர்களுக்கு ஞானமேது?" (எரே 8:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதா மனுஷர் மத்தியிலே கர்த்தருடைய வேதம் இருந்தாலும், ஞானிகள் அதை சரியாகப் பயன்படுத்தவில்லை. நியாயப்பிரமாணத்திற்கு சரியான வியாக்கியானம் சொல்லவில்லை. அவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவில்லை. ஆகையினால் ஞானிகளுக்கு வெட்கமும், கலக்கமும் உண்டாகிறது.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும், அவர் அனுமதிக்கிற அழிவும் யூதாஜனத்தாரின்மீது வருகிறது. இந்த அழிவுக்கு தப்பித்துக்கொள்ள ஞானிகளுடைய ஞானம் பயன்படவில்லை. அவர்களுடைய ஞானம் அவர்களை அழிவிலிருந்து பாதுகாக்கவில்லை. அவர்கள் தங்களுடைய ஞானத்தைப்பற்றி பெருமையாய்ப் பேசுகிறார்கள். ஆனால் கர்த்தருடைய சொல்லை வெறுத்துப்போடுகிறார்கள். தங்களிடத்தில் ஞானம் இருக்கிறது என்று சொல்லியும், அவர்கள் ஞானமில்லாமல் நடந்துகொள்கிறார்கள். மாய்மாலக்காரராய் ஜீவிக்கிறார்கள்.

"நாங்கள் ஞானிகள் என்றும், கர்த்தருடைய வேதம் எங்களிடத்தில் இருக்கிறது" என்றும் மாய்மாலக்காரர்கள் தங்களைப்பற்றி பெருமையாகப் பேசுகிறார்கள். இவர்கள் கள்ள ஆசாரியர்களாயும், கள்ளத்தீர்க்கதரிசிகளாயும் இருக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி இவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு அவர்கள்மீதும், அவர்களுடைய கு ம்பத்தார் மீதும் வரும் என்றும், அவர்கள் ஒட்டுமொத்தமாய் அழிந்துபோவார்கள் என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளையும், கள்ள ஆசாரியர்களையும் தண்டிப்பார். அவர்களுடைய ஸ்திரீகளை அந்நியருக்குக் கொடுப்பார். யூதாவின் மனுஷர் சிறைப்பிடிக்கப்பட்டு அந்நிய தேசத்திற்கு இழுத்துக்கொண்டு போகப்படுகிறார்கள். யூதா தேசத்திலே அவர்களுக்கு இருந்த நிலமெல்லாம் அந்நிய தேசத்தார் வசமாயிற்று. கல்தேயர்கள் யூதாவின் மனுஷர்மீது யுத்தம்பண்ணி, அவர்களுடைய சம்பத்துக்களையெல்லாம் கொள்ளையிடுகிறார்கள்.

கல்தேயரில் சிறியோர் தொடங்கி பெரியோர் மட்டும் ஒவ்வொருவரும் பொருளாசைக்காரராயிருக்கிறார்கள். அவர்கள் யூதாதேசத்தாரின் ஐசுவரியங்களையும், பொக்கிஷங்களையும், தானியங்களையும் மொத்தமாய்க் கொள்ளையிடுவார்கள். ஒன்றையும் மீதியாய் வைக்கமாட்டார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் ஞானிகளாகயிருந்தாலும், அவர்கள் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள். கர்த்தர் அவர்களை விசாரிக்கும் காலத்தில், அவர்கள் எல்லோரும் இடறுண்டுபோவார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதா ஜனத்தார்மீது வருவதற்கு நியாயமான காரணமுள்ளது.

யூதாவின் மனுஷரில் சிறியோர் தொடங்கி பெரியோர் மட்டும், ஒவ்வொருவரும் பொருளாசைக்காரராயிருக்கிறார்கள். இந்த உலகத்தின்மீதும், இந்த உலகத்தின் காரியங்கள்மீதும் ஆசை வைத்திருக்கிறார்கள். அவர்கள் பேராசைக்காரராயிருக்கிறார்கள்.

"அதின் தலைவர்கள் பரிதானத்துக்கு நியாயந்தீர்க்கிறார்கள்; அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள்; அதின் தீர்க்கதரிசிகள் பணத்துக்குக் குறிசொல்லுகிறார்கள்; ஆகிலும் அவர்கள் கர்த்தரை சார்ந்துகொண்டு: கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ? தீங்கு எங்கள்மேல் வராது என்கிறார்கள்" (மீகா 3:11).

தீர்க்கதரிசிகள் தொடங்கி ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யராயிருக்கிறார்கள். எல்லோருமே பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் உண்மையில்லை. அவர்களுடைய வார்த்தையில் சத்தியமில்லை. அவர்களுடைய கிரியைகளில் கண்ணியமில்லை. தங்களிடத்தில் பாவம் இருந்தாலும், அவர்கள் தங்கள் பாவங்களை மூடிமறைத்து, பரிசுத்தவான்கள்போல மாய்மாலம் பண்ணுகிறார்கள்.

தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் அருவருப்பானதை செய்கிறார்கள். தேசத்திலே சமாதானமில்லை. ஜனங்கள் மத்தியிலே சந்தோஷமோ ஆறுதலோ இல்லை. ஆனாலும் அவர்கள் ஜனங்களுக்கு சமாதானமுள்ளது என்று தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். ஜனங்கள் காயப்பட்டிருக்கும்போது, அவர்களுடைய காயத்தை முற்றிலுமாய்க் குணமாக்குவதற்குப் பதிலாக, அதை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள். காயத்தை எப்படி குணப்படுத்தவேண்டும் என்று கள்ளத்தீர்க்கதரிசிகளுக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு காயத்தின் தன்மையும் தெரியவில்லை, காயத்தை முற்றிலுமாய் குணப்படுத்தவில்லையென்றால் வியாதியஸ்தர் மரித்துப்போவார். நோயாளிக்கு வேதனை அதிகரிக்கும். தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் ஜனங்களுடைய பாவங்களை நீக்குவதற்கு சரியான உபதேசம் பண்ணுவதில்லை. அவர்கள் பாவம் செய்தாலும் அவர்களுக்கு சமாதானம் இருக்கும் என்று கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள ஆசாரியர்களும் அருவருப்பானதை செய்தாலும், வெட்கப்படுவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். "தாங்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களா? பரிச்சேதம் வெட்கப்படார்கள், நாணவும் அறியார்கள்; ஆகையால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்குங்காலத்திலே இடறுண்டு போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 8:12). தீர்க்கதரிசிகளுக்கும் ஆசாரியர்களுக்கும் தேசத்திலே மதிப்பும் இல்லை. மரியாதையும் இல்லை. அவர்களும் கண்ணியமாயில்லை. கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்யவில்லை. அவர்கள் ஜனங்கள் மத்தியில் மதிப்பையும் மரியாதையும் எதிர்பார்ப்பதுமில்லை. ஆகையினால் அவர்கள் அருவருப்பானதை செய்தாலும், அவர்களுக்கு வெட்கம் உண்டாவதில்லை.

அவர்களை முற்றிலும் அழித்துப்போடுவேன் எரே 8:13-20

எரே 8:13. அவர்களை முற்றிலும் அழித்துப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; திராட்சச்செடியிலே குலைகள் இராது, அத்திமரத்திலே பழங்கள் இராது, இலையும் உதிரும், நான் அவர்களுக்குக் கொடுத்தது அவர்களைவிட்டுத் தாண்டிப்போகும் என்று சொல்.

எரே 8:14. நாம் சும்மாயிருப்பானேன்? கூடிவாருங்கள்; நாம் அரணான பட்டணங்களுக்குள் பிரவேசித்து, அங்கே சங்காரமாவோம்; நாம் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைச் சங்காரம்பண்ணி, நமக்குப் பிச்சுக்கலந்த தண்ணீரைக் குடிக்கக்கொடுக்கிறார்.

எரே 8:15. சமாதானத்துக்குக் காத்திருந்தோம், பிரயோஜனமில்லை; ஆரோக்கிய காலத்துக்குக் காத்திருந்தோம், இதோ, ஆபத்து,

எரே 8:16. தாணிலிருந்து அவர்களுடைய குதிரைகளின் மூச்செறிதல் கேட்கப்படுகிறது; அவர்களுடைய பலத்த அஸ்வங்கள் கனைக்கிற சத்தத்தினால் தேசமெல்லாம் அதிருகிறது; அவர்கள் வந்து தேசத்தையும் அதில் உள்ளவைகளையும், பட்டணத்தையும் அதின் குடிகளையும் பட்சிப்பார்கள்.

எரே 8:17. மெய்யாய், இதோ, தடைகட்டப்படாத சர்ப்பங்களையும், கட்டுவிரியன்களையும் உங்களுக்குள் அனுப்புகிறேன், அவைகள் உங்களைக் கடிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 8:18. நான் சஞ்சலத்தில் ஆறுதலடையப்பார்த்தும், என் இருதயம் பலட்சயமாயிருக்கிறது.

எரே 8:19. இதோ, சீயோனில் கர்த்தர் இல்லையோ? அதில் ராஜா இல்லையோ? என்று, என் ஜனமாகிய குமாரத்தி தூரதேசத்திலிருந்து கூப்பிடும் சத்தம் கேட்கப்படுகிறது; ஆனால், அவர்கள் தங்கள் சுரூபங்களினாலும் அந்நியரின் மாயைகளினாலும் எனக்குக் கோபமுண்டாக்கினது என்ன என்கிறார்.

எரே 8:20. அறுப்புக்காலம் சென்றது, கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை.

பாவம் செய்கிற ஜனங்களை அழிக்கப்போவதாக கர்த்தர் அறிவிக்கிறார். யூதாவின் மனுஷரும், இஸ்ரவேலின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய் நீண்டகாலமாக பாவம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய அக்கிரமங்களும் மிகவும் கொடிதாயிருக்கிறது. கர்த்தர் அவர்களை தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் இவ்வளவு காலமாக எச்சரித்து வந்தார். நீடியபொறுமையோடிருந்தார். ஆனால் யூதாவின் மனுஷரோ, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், கர்த்தரை அதிகம் அதிகமாய் கோபப்படுத்துகிறார்கள்.

யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தமாய் "அவர்களை முற்றிலும் அழித்துப்போடுவேன்" (எரே 8:13) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களுடைய தேசத்தில் ஒன்றும் மீதியாயிராது. அவர்களுடைய ஆறுதல்களும், சந்தோஷங்களும் அவர்களைவிட்டு எடுத்துப்போடப்படும். திராட்சச்செடியிலே குலைகள் இராது. அவர்களுடைய இருதயங்களை மகிழப்பண்ணுவதற்கு யூதாதேசத்திலே திராட்சரசமும் இராது. அத்திமரத்திலே பழங்கள் இராது. இலையும் உதிரும்.

"நான் அவர்களுக்கு கொடுத்தது அவர்ளைவிட்டுத் தாண்டிப்போகும்" (எரே 8:13) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் அவர்களுக்கு கிருபையையும் இரக்கத்தையும் கொடுத்தார். அவர்களோ கர்த்தருடைய கிருபையை அசட்டைபண்ணி விட்டார்கள். ஆகையினால் தாம் அவர்களுக்குக் கொடுத்த கிருபைகளையும், ஆசீர்வாதங்களையும் அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ளப்போவதாக கர்த்தர் சொல்லுகிறார்.

"மெய்யாய், இதோ, தடைகட்டப்படாத சர்ப்பங்களையும், கட்டுவிரியன்களையும் உங்களுக்குள் அனுப்புகிறேன், அவைகள் உங்களைக் கடிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 3:17).

கல்தேயருடைய சேனையை கர்த்தர் சர்ப்பங்கள் என்றும், கட்டுவிரியன்கள் என்றும் சொல்லுகிறார். அவர்களை மகுடி ஊதி மயக்க முடியாது. இந்த சர்ப்பங்கள் விநோத சுபாவமுள்ளவை. இவை செவிட்டு விரியனைப்போன்றவை. இவற்றின் செவி எப்போதுமே அடைக்கப்பட்டிருக்கும். மகுடி வாசிக்கிறவனுக்கு முன்பாக மயங்காத சர்ப்பங்களாகயிருக்கும். கல்தேயர்கள் எதற்கும் மயங்கமாட்டார்கள். யூதாவின் பட்டணங்களையும் எருசலேமின் நகரத்தையும் சர்வநாசம்பண்ணுவார்கள். இவர்கள் தடைகட்டப்படாத சர்ப்பங்களைப் போன்றவர்கள். யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் கல்தேயர் மூலமாய் மகாசங்காரமுண்டாகும்.

யூதாவின் மனுஷருக்கு நெருக்கங்களும், பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் உண்டாகும். வேதனைகளைத் தாங்க முடியாமல் அவர்களுடைய இருதயம் கலைந்துபோகும். அவர்கள் ஆபத்திலே மூழ்கிப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் கர்த்தரைக் குறித்த பயமில்லை. ஆகையினால் கர்த்தர் தங்களுக்கு உதவிசெய்வார் என்னும் நம்பிக்கையும் அவர்களிடத்தில் இல்லை.

யூதா மனுஷருடைய பாவங்களும், குற்றவுணர்வுகளும் அவர்களை வருத்துகிறது. அவர்களால் கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியவில்லை. அதே வேளையில் கர்த்தர் அவர்களுக்கு கொடுத்திருக்கிற தண்டனைகளையும் அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வேதனையில் புலம்புகிறார்கள். "நாம் சும்மாயிருப்பானேன்? கூடிவாருங்கள்; நாம் அரணான பட்டணங்களுக்குள் பிரவேசிப்போம்" (எரே 8:14) என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொள்கிறார்கள்.

யூதர்கள் அரணான பட்டணங்களுக்குள் பிரவேசித்தாலும், அங்கேயும் அவர்களுக்கு பாதுகாப்பு கிடைக்காது. அங்கே அவர்களுக்கு சமாதானமோ, ஆறுதலோ உண்டாகாது. அவர்களுடைய பாவத்தினிமித்தமாய் அவர்களுக்கு அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அரணான பட்டணங்களுக்குள் பிரவேசித்தாலும், அங்கே அவர்கள் சங்காரமாவார்கள். தேசத்திலே அழிவு சீக்கிரமாய் வரும். தங்களுடைய அழிவைப்பற்றி யூதர்களுக்கும் தெரிந்திருக்கிறது. ஆகையினால் அவர்கள், "நாம் அரணான பட்டணங்களுக்குள் பிரவேசித்து, அங்கே சங்காரமாவோம்" என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய கோபத்தினால் யூதாவின் மனுஷர்மீது அழிவை நியமித்திருக்கிறார். இந்த அழிவுக்கு அவர்களால் தப்பிக்க முடியாது. கர்த்தருக்கு விரோதமாக அவர்களால் விவாதம் பண்ணவும் முடியாது. அவர்களுடைய முயற்சிகளெல்லாம் வீணாய்ப்போகும். இந்த சூழ்நிலையில் தாங்கள் என்ன செய்யவேண்டும் என்று அறியாமல், யூதாவின் மனுஷர் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தங்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் தங்கள்மீது கோபமாயிருக்கிறார் என்பதை யூதாவின் மனுஷர் புரிந்து கொள்கிறார்கள். "நாம் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால், நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மைச் சங்காரம்பண்ணுகிறார்" (எரே 8:14) என்று யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்கிறார்கள்.

கர்த்தர் தங்களை சங்காரம்பண்ணுவது யூதாவின் மனுஷருக்கு ஆச்சரியமாயிருக்கிறது. கர்த்தர் அவர்களுக்கு ஜீவத்தண்ணீரை குடிக்கக் கொடுப்பதாக வாக்குப்பண்ணினார். ஆனால் அவர்களோ கர்த்தரை நம்பாமல், கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய் விடுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக கலகம் செய்து, பாவம் செய்கிறார்கள். இதன் நிமித்தமாய், கர்த்தர் அவர்களுக்கு பிச்சு கலந்த தண்ணீரைக் குடிக்கக் கொடுக்கிறார். அவர்களுக்கு அதிர்ச்சியின் திராட்சரசத்தை குடிக்கக்கொடுக்கிறார்.

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு விரோதமாயிருக்கிறார். அவர்கள் கர்த்தரோடு எவ்வளவுதான் வழக்காடினாலும், அதனால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகப்போவதில்லை. கர்த்தர் தங்களை வழக்காட விடமாட்டார் என்று யூதர்கள் நினைக்கிறார்கள். கர்த்தர் தங்களை கடினமாய்த் தண்டிக்கிறார் என்றும், கர்த்தரிடத்தில் தங்களுடைய நியாயத்தை எடுத்துப் பேசுவதற்கு தங்களுக்கு வாய்ப்பு கிடைக்காது என்றும் யூதர்கள் நினைக்கிறார்கள்.

"சமாதானத்துக்குக் காத்திருந்தோம், பிரயோஜனமில்லை; ஆரோக்கிய காலத்துக்குக் காத்திருந்தோம், இதோ, ஆபத்து" (எரே 8:15) என்று யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் வேதனையோடு சொல்லுகிறார்கள். கர்த்தருடைய கரம் தங்களுக்கு விரோதமாக நீட்டப்பட்டிருப்பதை யூதாவின் மனுஷர் காண்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தபடியினால், கர்த்தர் தங்கள்மீது கோபமாயிருக்கிறார் என்பதையும், கர்த்தர் தங்களை சங்காரம்பண்ணுகிறார் என்பதையும் புரிந்துகொள்கிறார்கள். தங்களுடைய வேதனைகளுக்கும், நெருக்கங்களுக்கும், உபத்திரவங்களுக்கும் தாங்களே காரணம் என்பதை அங்கீகரிக்கிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் விரோதமாய் கல்தேயர்கள் யுத்தம்பண்ணவருகிறார்கள். அவர்கள் மிகவும் கொடியராகயிருக்கிறார்கள். "தாணிலிருந்து அவர்களுடைய குதிரைகளின் மூச்செறிதல் கேட்கப்படுகிறது" (எரே 8:16) என்று எருசலேமின் குடிகள் சொல்லுகிறார்கள். கல்தேயருடைய சேனைகளின் பலம் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.

கல்தேயருடைய பலத்த அஸ்வங்கள் கனைக்கிற சத்தத்தினால் தேசமெல்லாம் அதிருகிறது; அவர்கள் வந்து தேசத்தையும் அதில் உள்ளவைகளையும், பட்டணத்தையும் அதின் குடிகளையும் பட்சிப்பார்கள்.

கல்தேயர்கள் தங்களுக்கு விரோதமாக வரமாட்டார்கள் என்று யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் நினைத்தார்கள். ஆனால் அவர்கள் நினைத்த பிரகாரம் ஒன்றும் நடைபெறவில்லை. கல்தேயர் அவர்களுக்கு விரோதமாக வந்துவிடுகிறார்கள். அவர்களை எதிர்ப்பார் ஒருவருமில்லை. யூதாவின் மனுஷரிடத்தில் பெலமில்லை. கர்த்தரும் அவர்களுக்கு துணைபுரியவில்லை. அவர்கள் தேசத்தையும், தேசத்தின் குடிகளையும் பட்சித்துப்போடுவார்கள். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கல்தேயருடைய பட்டயத்தினால் சங்காரமாவார்கள்.

கல்தேயர் தங்களுக்கு விரோதமாக வந்தாலும், தேவனாகிய கர்த்தர் தங்களுக்கு உதவியாயிருப்பார் என்றும், தங்களுக்காக யுத்தம்பண்ணுவார் என்றும், தங்களை சத்துருவின் கைகளுக்கு விடுவிப்பார் என்றும் யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த பிரகாரமாய் ஒன்றும் நடைபெறவில்லை.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் சமாதானத்திற்கு காத்திருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு சமாதானம் உண்டாகவில்லை. மற்ற தேசத்திலிருந்து தங்களுக்கு உதவி வரும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களுடைய உதவிக்கு எந்த தேசத்தாரும் வரவில்லை. யூதர்கள் ஆரோக்கியத்திற்காக காத்திருந்தார்கள். தங்கள் தேசத்தில் செழிப்பு உண்டாகும் என்று நம்பினார்கள். ஆனால் அவர்களுக்கு செழிப்பு உண்டாகவில்லை. ஆபத்து உண்டாயிற்று. சமாதானத்தின் செய்திக்காக காத்திருந்தார்கள். அவர்களுக்கு யுத்தத்தின் செய்தி வந்தது.

யூதா தேசத்திலும் எருசலேமிலும் கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள ஆசாரியர்களும் ஏராளமாயிருக்கிறார்கள். அவர்கள் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளை ஜனங்களுக்கு சொல்லாமல், தங்களுடைய சொந்த வார்த்தைகளை சொல்லி, ஜனங்களை கர்த்தரைவிட்டு விலகிப்போக வைத்துவிடுகிறார்கள். சமாதானமில்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள் (எரே 8:11).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் நீண்டகாலமாக சமாதானத்திற்கு காத்திருக்கிறார்கள். அறுப்பு காலம் சென்றது. கோடைகாலமும் முடிந்தது. ஆனாலும் அவர்கள் இரட்சிக்கப்படவில்லை (எரே 8:20). அவர்கள் எதிர்பார்த்த சமாதானமும், இரட்சிப்பும் அவர்களுக்கு உண்டாகவில்லை. அறுப்புகாலம், கோடைகாலம் ஆகிய இரண்டும் சேர்ந்து ஒரு முழுவருஷத்தைக் குறிக்கும். நீண்டகாலமாக யூதாவின் மனுஷர் சமாதானத்திற்காக காத்திருக்கிறார்கள்.

அவர்கள் பலவருஷங்களாக காத்திருக்கிறார்கள். ஒவ்வொரு வருஷமும் அறுப்புக்காலமும், கோடைகாலமும் வருகிறது. ஆனால் அவர்களுக்கு இரட்சிப்பு வரவில்லை. யூதாதேசத்தின்மேல் யுத்தத்திற்கு மேல் யுத்தம் வருகிறது. ஆனால் சமாதானம் வரவில்லை. தேசத்தில் தீமைக்கு மேல் தீமை வருகிறது. ஆனால் நன்மை வரவில்லை. அவர்களுக்கு விடுதலையோ, இரட்சிப்போ உண்டாகவில்லை. "நாமோ இரட்சிக்கப்படவில்லை" (எரே 8:20) என்று யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் மனவேதனையோடு சொல்லுகிறார்கள்.

யூதாதேசத்திலே அறுப்பு காலம் முடிந்துபோயிற்று. கோடைகாலமும் முடிந்துபோயிற்று. இந்தக் காலத்தில்தான் அவர்கள் கிரியை நடப்பிக்க முடியும். ஆனால் அவர்களுக்கு இவ்விரண்டு காலங்களிலும் ஒரு நன்மையும் உண்டாகவில்லை. இப்போது தேசத்தில் குளிர்காலம் வந்திருக்கிறது. இது ஒருவரும் கிரியை செய்ய முடியாத இராக்காலம் போல இருக்கிறது. குளிர்காலம் அவர்களுக்கு வேதனையின் காலமாகவும், துக்கத்தின் காலமாகவும் இருக்கிறது.

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் கர்த்தருடைய உதவி கிடைக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய வெளிச்சத்தில் நடக்கவில்லை. தங்கள் சுயவெளிச்சத்தில் நிற்கிறார்கள். தங்களுடைய வீடுகளின் கதவுகளுக்கு தாழ்ப்பாள்களைப் போட்டுக்கொண்டு, கதவுகளை அடைத்துக்கொண்டு, உள்ளே பதுங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

கர்த்தர் அவர்களுடைய வாசற்படிகளில் வந்து, கதவுகளைத் தட்டுகிறார். அவர்கள்தான் கதவைத் திறக்கவேண்டும். அவர்கள் தங்கள் கதவுகளைத் திறந்தால், கர்த்தர் உள்ளே பிரவேசித்து, அவர்களோடு கூடயிருப்பார். கர்த்தர் தங்களோடு கூடயிருப்பதுதான் யூதாவின் மனுஷருக்கு பெலன். ஆனால் அவர்களோ தங்கள் கதவுகளைத் திறக்காமல், தாழ்ப்பாள்போட்டு அடைத்துக்கொள்கிறார்கள். கர்த்தர் அவர்களை இரட்சிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். ஆனால் அவர்களோ இரட்சிக்கப்படுவதற்கு ஆயத்தமாயில்லை. அவர்கள் இரட்சிக்கப்படாமலிருப்பதற்கு அவர்களுடைய இருதயத்தின் கடினமே காரணம்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரை நம்பாமல் தங்கள் சுரூபங்களையும், அந்நியரின் மாயைகளையும் நம்புகிறார்கள். அவர்கள் மூலமாய் தங்களுக்கு சமாதானமும் இரட்சிப்பும் உண்டாகும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் நம்பின சுரூபங்கள் அவர்களை வஞ்சித்துவிட்டது. அவர்கள் எதிர்பார்த்த பிரகாரமாக, அவர்களுடைய விக்கிரகங்கள் அவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கவில்லை. அவர்களை இரட்சிக்கவுமில்லை.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தூரதேசத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். அந்நிய தேசத்தார் யூதாதேசத்தின்மீது யுத்தம்பண்ண வருகிறார்கள். யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் அந்நிய தேசத்திற்கு சிறைப்பிடித்துக்கொண்டு போகிறார்கள். ஆகையினால் அவர்கள் கூப்பிடும் சத்தம் தூரதேசத்திலிருந்து கேட்கிறது.

"இதோ, சீயோனில் கர்த்தர் இல்லையோ? அதில் ராஜா இல்லையோ? என்று, என் ஜனமாகிய குமாரத்தி தூரதேசத்திலிருந்து கூப்பிடும் சத்தம் கேட்கப்படுகிறது" (எரே 8:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் இதுவரையிலும் இரண்டு காரியங்களை நம்பினார்கள். அவையாவன :

1. தேவனுடைய ஆலயம் எருசலேம் நகரத்திலிருக்கிறது. தேவாலயம் கர்த்தருடைய விசேஷித்த பிரசன்னத்திற்கு அடையாளம். ஆகையினால் அது கர்த்தர் அவர்களோடு கூடயிருக்கிறார் என்பதற்கும் அடையாளமாயிருக்கிறது.

2. யூதா தேசத்தை, தாவீதின் வம்சத்தார் ஆளுகை செய்கிறார்கள். தாவீதின் சிங்காசனம் யூதாதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தாவீதின் சிங்காசனம் நிலைத்திருக்கும் என்பது கர்த்தருடைய வாக்குத்தத்தம்.

ஆகையினால் "இதோ, சீயோனில் கர்த்தர் இல்லையோ? அதில் ராஜா இல்லையோ?" என்று யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தரிடத்தில் கேட்கிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரே சீயோனில் கர்த்தராயிருக்கிறார். அவர் சீயோனின் ராஜாவையும், அவருடைய ராஜ்யத்தையும் பாதுகாப்பார் என்று யூதர்கள் நம்புகிறார்கள்.

யூதாவின் மனுஷர் சீயோனில் கர்த்தர் இல்லையோ என்றும், அதில் ராஜா இல்லையோ என்றும் கர்த்தரை நோக்கி சொல்லுவதினால், கர்த்தர் அவர்களுக்கு உடனடியாக பிரதியுத்தரம் சொல்லுகிறார். சீயோனில் கர்த்தர் இருக்கிறார். அதில் ராஜாவும் இருக்கிறார். "ஆனால், அவர்கள் தங்கள் சுரூபங்களினாலும் அந்நியரின் மாயைகளினாலும் எனக்குக் கோபமுண்டாக்கினது என்ன" (எரே 8:19) என்று கர்த்தர் கேட்கிறார். சீயோனில் கர்த்தரும் ராஜாவும் இருந்தாலும், சீயோனின் மனுஷர் கர்த்தரை நம்பாமல் தங்கள் சுரூபங்களையும், அந்நியரின் மாயைகளையும் நம்பி மோசம்போனார்கள்.

எரேமியாவின் புலம்பல்
எரே 8:21,22

எரே 8:21. என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களினால் நானும் காயப்பட்டேன்; கரிகறுத்திருக்கிறேன்; திகைப்பு என்னைப் பிடித்தது.

எரே 8:22. கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்?

எரேமியாவும் யூதா தேசத்தைச் சேர்ந்தவர். தன்னுடைய தேசம் அழிந்துபோவதைப் பார்க்கும்போது, எரேமியாவின் இருதயம் மிகவும் வேதனைப்படுகிறது. எருசலேமின் மனுஷரும், யூதாவின் குடிகளும் சங்காரமாவதை எரேமியா தன் கண்களால் பார்க்கிறார். "நான் சஞ்சலத்தில் ஆறுதலடையப்பார்த்தும், என் இருதயம் பலட்சயமாயிருக்கிறது" (எரே 8:18) என்று எரேமியா வேதனையோடு சொல்லுகிறார்.

எரேமியாவின் இருதயம் வருத்தத்தினாலும், துக்கத்தினாலும் நிரம்பியிருக்கிறது. தன்னுடைய துக்கத்தைப் போக்குவதற்கு எரேமியா பலமுயற்சிகளை மேற்கொள்கிறார். ஆனாலும் அவருடைய துக்கம் குறையவில்லை. அவருடைய வேதனை அதிகமாகிறது. அவருடைய இருதயம் பலட்சயமாயிருக்கிறது. சிலருடைய துக்கம் ஆறாத துக்கமாயிருக்கும். எரேமியா தன்னுடைய ஜனங்களுக்காக மெய்யாகவே துக்கப்படுகிறார்.

"என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களினால் நானும் காயப்பட்டேன்; கரிகறுத்திருக்கிறேன்; திகைப்பு என்னைப் பிடித்தது" (எரே 8:21) என்று எரேமியா சொல்லுகிறார். எரேமியாவுக்கு சரீரத்தில் வியாதியில்லை. காயமும் உண்டாகவில்லை. ஆனாலும் யூதா மனுஷருடைய காயங்களினால் அவரும் காயப்படுகிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாகவே அவர்களுக்கு காயங்கள் உண்டாயிற்று. அவர்களுடைய காயங்களுக்கும், வேதனைகளுக்கும், துக்கங்களுக்கும் அவர்களே காரணம்.

எரேமியா தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "கரிகறுத்திருக்கிறேன்" என்று சொல்லுகிறார். அவர் கருப்பு நிறத்திலிருக்கிறார். துக்கம் கொண்டாடுகிறவர்களும், ஒப்பாரி பாடுகிறவர்களும், புலம்பற்காரரும் கருப்பு நிறத்திலிருப்பதுபோல எரேமியாவும் கருப்பாயிருக்கிறார். திகைப்பு அவரைப் பிடித்திருக்கிறது. எந்தப் பக்கத்தில் திரும்புவது என்று எரேமியாவுக்குத் தெரியவில்லை.

எரேமியாவின் இருதயத்தில் அன்பும், கரிசனையும், பாசமும் இருக்கிறது. அவரிடத்தில் மனுஷநேயமும் இருக்கிறது. யூதாதேசத்தார் மிகப்பெரிய வேதனைகளை அனுபவிக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது எரேமியாவால் அமைதியாயிருக்க முடியவில்லை. அவருடைய இருதயம் துடிக்கிறது. அவருடைய ஆவி அழுது புலம்புகிறது.

எரேமியா தீர்க்கதரிசி எருசலேமின் அழிவைக் குறித்து தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். எருசலேமின் ஜனங்களோ அவர் சொன்ன செய்தியை நம்பவில்லை. அவருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள். எரேமியாவைத் துன்பப்படுத்தினார்கள். எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன பிரகாரம், எருசலேமுக்கு அழிவு உண்டாயிற்று. தான் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறியதைப் பார்த்தபோது, எரேமியாவுக்கு சந்தோஷமுண்டாகவில்லை. வருத்தமும் வேதனையுமே உண்டாயிற்று.

தனக்கு நற்பெயரும், புகழும் கிடைக்கவேண்டும் என்று எரேமியா விரும்பவில்லை. தன்னை எல்லோரும் "மெய்யான தீர்க்கதரிசி" என்று புகழ்ந்து பேசவேண்டும் என்றும் எரேமியா ஆசைப்படவில்லை. தன்னுடைய நற்பெயரைவிட, யூதாவின் மனுஷர் சந்தோஷமாய், சமாதானமாய், ஆறுதலாய் ஜீவிக்கவேண்டும் என்றே விரும்புகிறார். எருசலேமின் குடிகளுக்கு ஒரு தீங்கும் வரக்கூடாது என்று விரும்புகிறார். அவர்கள் விக்கிரகாராதனையை விட்டு விலகி வரவேண்டும் என்றும், அவர்கள் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும் என்றும் எரேமியா எதிர்பார்க்கிறார்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்தாலும், எரேமியாவின் இருதயத்தில் இன்னும் நம்பிக்கையிருக்கிறது. கர்த்தர் தம்முடைய கிருபையினால், தம்முடைய ஜனங்களுக்கு உதவிசெய்வார் என்று எரேமியா இன்னும் நம்புகிறார். "கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ" (எரே 8:22) என்று எரேமியா வேதனையோடு கேட்கிறார். யூதராஜ்யம் நோய்வாய்ப்பட்டிருக்கிறது. அது மரித்துக்கொண்டிருக்கிறது. அந்த ராஜ்யத்தைக் குணப்படுத்துவதற்கு ஒரு மருந்தும் இல்லையோ என்று எரேமியா வேதனையோடு தனக்குத்தானே கேட்டுக்கொள்கிறார். இந்தப் பிசின் தைலத்தை கர்த்தருடைய கிருபையுள்ள கரம் தடவவேண்டும். அப்போதுதான் தேசம் சொஸ்தமாகும்.

"கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ" என்று எரேமியா சொல்லும்போது, யூதா மனுஷரின் வியாதி குணப்படுத்த முடியாத தீராத வியாதியாயிருக்கிறது என்று பொருள்படுமாறு சொல்லுகிறார். "கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ?" (எரே 8:22) என்று எரேமியா கேட்கும் கேள்விக்கு, "கீலேயாத்திலே பிசின் தைலமும் இருக்கிறது, அங்கே இரணவைத்தியரும் இருக்கிறார்" என்று உறுதியாய் பதில்சொல்லவேண்டும். இது விசுவாசமான வார்த்தை.

கீலேயாத் யூதாதேசத்திலிருக்கிறது. எருசலேமுக்கு மிகவும் அருகாமையிலிருக்கிறது. அங்கே தேவனுடைய நியாயப்பிரமாணமும் இருக்கிறது. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளும் அங்கே இருக்கிறார்கள். அவர்களுடைய உபதேசங்களில், யூதாவின் மனுஷர், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப முடியும். தங்களுக்கு வரும் அழிவுகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

யூதாதேசத்திலே பிரபுக்களும் ஆசாரியர்களும் இருக்கிறார்கள். அவர்கள் ஜனங்களுக்கு கர்த்தருடைய பிரமாணத்தைப் போதிக்கவேண்டும். அவர்களுடைய வேதனைகளையும், துக்கங்களையும், கண்ணீர்களையும் கர்த்தரிடத்தில் சொல்லி, அவர்களுக்காக பரிந்துபேசவேண்டும். கீலேயாத்திலே பிசின் தைலம் இருந்தும், அங்கே இரணவைத்தியன் இருந்தும், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் இன்னும் சொஸ்தமடையாமல், வியாதியஸ்தராகவே இருக்கிறார்கள்.

எரேமியா அதைப் பார்த்து "பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்?" (எரே 8:22) என்று கேட்கிறார். கீலேயாத்திலே பிசின் தைலத்திற்கும் குறைவில்லை. இரணவைத்தியருக்கும் குறைவில்லை. எல்லாம் தாராளமாயிருக்கிறது. ஆனால் இரணவைத்தியரின் சிகிச்சைக்கு, வியாதியஸ்தர்கள் தங்களை ஒப்புக்கொடுப்பதில்லை. தங்களுடைய சரீரத்தின்மீது பிசின் தைலத்தை தடவுவதற்கு, நோய்வாய்ப்பட்டிருக்கிறவர்கள், தங்கள் சரீரத்தைக் காண்பிப்பதில்லை.

நோயாளி ஒத்துழைக்காமல், அவருக்கு மருத்துவ சிகிச்சை கொடுக்க முடியாது. மருத்துவரும் மருந்தும் ஆயத்தமாயிருக்கிறது. வியாதியஸ்தர்களோ மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு ஆயத்தமாயில்லை. மருத்துவரின் சிகிச்சை முறைகளுக்கு ஒத்துழைப்பதில்லை. மருத்துவரின் ஆலோசனைகளைக் கேட்பதுமில்லை. கேட்டாலும் அதற்கு கீழ்ப்படிவதுமில்லை. ஆகையினால்தான் யூதாவின் மனுஷர் இன்னும் சொஸ்தமடையாமலிருக்கிறார்கள்.

யூதாதேசத்தில் கர்த்தருடைய பிரமாணங்களும் உண்டு. அவற்றை உபதேசிக்கிற ஆசாரியர்களும் உண்டு. ஆனால் யூதா மனுஷரோ கர்த்தருடைய ஊழியக்காரர் சொல்லும் வார்த்தைக்கு செவிகொடுப்பதில்லை. கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதுமில்லை. தங்கள் இஷ்டம்போல ஜீவிக்கிறார்கள். வேதனைகளை அனுபவிக்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். யூதாவின் மனுஷருக்கு இப்போது மரணம் வந்திருக்கிறது.

9 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசி யூதா மனுஷருடைய பாவங்களை இந்த அதிகாரத்திலும் கடிந்து சொல்லுகிறார். அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்று எச்சரிக்கிறார். ஆனாலும் யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தமாயும், அவர்கள்மீது வந்திருக்கும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பின் நிமித்தமாயும் எரேமியா தீர்க்கதரிசி மனங்கசந்து அழுகிறார்.

யூதாவும் எருசலேமும் கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்து, துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய பாவத்தின் விளைவாக யூதாதேசத்தில் பேரழிவு உண்டாயிருக்கிறது (எரே 9:1-11). தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு யூதா ஜனத்தார்மீது வந்திருக்கிறது. அவர்களுடைய அழிவுக்கு அவர்களே காரணம் என்று எரேமியா சொல்லுகிறார் (எரே 9:9-16).

யூதா மனுஷரோடு சேர்ந்து மற்றவர்களும் கூடிவந்து அவர்களுக்காக அழுது புலம்பவேண்டுமென்று எரேமியா அழைக்கிறார் (எரே 9:17-22). யூதாவின் மனுஷர் தங்கள் சுயபலத்தையும், சுயஞானத்தையும் நம்புவது மதியீனமான காரியம். கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் இல்லாமல் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது (எரே 9:23-26).

நான் இரவும் பகலும் அழுவேன் எரே 9:1-11

எரே 9:1. ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்; அப்பொழுது என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ணக் கொடுத்தவர்கள் நிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன்.

எரே 9:2. ஆ, வனாந்தரத்தில் வழிப்போக்கரின் தாபரம் எனக்கு இருந்தால் நலமாயிருக்கும்; அப்பொழுது நான் என் ஜனத்தைவிட்டு, அவர்களிடத்தில் இராதபடிக்குப் போய்விடுவேன்; அவர்களெல்லாரும் விபசாரரும் துரோகிகளின் கூட்டமுமாயிருக்கிறார்கள்.

எரே 9:3. அவர்கள் பொய்யைப் பிரயோகிக்கத் தங்கள் நாவாகிய வில்லை வளைக்கிறார்கள்; அவர்கள் இந்தத் தேசத்திலே பலத்துக்கொள்வது சத்தியத்துக்காக அல்ல; பொல்லாப்பிலிருந்து பொல்லாப்புக்கு நடந்தேறுகிறார்கள்; என்னையோ அறியாதிருக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 9:4. நீங்கள் அவனவன் தன் தன் சிநேகிதனுக்கு எச்சரிக்கையாயிருங்கள், எந்தச் சகோதரனையும் நம்பாதிருங்கள்; எந்தச் சகோதரனும் மோசம்பண்ணுகிறான், எந்தச் சிநேகிதனும் தூற்றித்திரிகிறான்.

எரே 9:5. அவர்கள் மெய்யைப் பேசாமல் ஒவ்வொருவரும் தமக்கடுத்தவனை ஏய்க்கிறார்கள்; பொய்யைப்பேசத் தங்கள் நாவைப் பழக்குகிறார்கள், அக்கிரமஞ்செய்ய உழைக்கிறார்கள்.

எரே 9:6. கபடத்தின் நடுவிலே குடியிருக்கிறாய்; கபடத்தினிமித்தம் அவர்கள் என்னை அறியமாட்டோமென்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 9:7. ஆகையால், இதோ, நான் அவர்களை உருக்கி, அவர்களைப் புடமிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; என் ஜனமாகிய குமாரத்தியை வேறெந்தப்பிரகாரமாக நடத்துவேன்?

எரே 9:8. அவர்கள் நாவு கூர்மையாக்கப்பட்ட அம்பு, அது கபடம் பேசுகிறது;அவனவன் தன் தன் அயலானோடே தன் தன் வாயினாலே சமாதானமாய்ப் பேசுகிறான், ஆனாலும் தன் உள்ளத்திலே அவனுக்குப் பதிவிடை வைக்கிறான்.

எரே 9:9. இவைகளினிமித்தம் அவர்களை விசாரியாதிருப்பேனோ? இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டாதிருக்குமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 9:10. மலைகளுக்காக அழுது துக்கங்கொண்டாடுவேன்; வனாந்தரத் தாபரங்களுக்காகப் புலம்புவேன்; ஒருவனும் அவைகளைக் கடந்து போகாதவண்ணமாய் அவைகள் பாழாக்கப்பட்டுக் கிடக்கின்றன; ஆடுமாடுகளின் சத்தம் கேட்கப்படுகிறதுமில்லை; ஆகாசத்துப் பறவைகளும் மிருகஜீவன்களும் எல்லாம் ஓடிச் சிதறிப்போயின.

எரே 9:11. நான் எருசலேமை மண்மேடுகளும் வலுசர்ப்பங்களின் தாபரமுமாக்குவேன்; யூதாவின் பட்டணங்களையும் குடியில்லாதபடி பாழாக்கிப்போடுவேன்.

எருசலேமுக்கு அழிவு வரும் என்றும், யூதா தேசத்தாரின் அழிவுக்கு அவர்களுடைய பாவங்களே காரணம் என்றும் எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் போய்ச் சொல்லவேண்டும். அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு கண்டித்து உணர்த்தவேண்டும்.

கர்த்தர் எரேமியாவுக்கு சொன்ன செய்தி அவருடைய இருதயத்தில் பதிந்திருக்கிறது. எரேமியா யூதா மனுஷர் மத்தியில், கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லும்போது, அவர் தன்னுடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறார். ஒரு இருதயத்திலிருந்து சொல்லப்படும் வார்த்தை, மற்றொரு இருதயத்திற்குப் போய்ச்சேரும். எரேமியாவின் பிரசங்கச் செய்தி, யூதா மனுஷருடைய இருதயங்களைப் போய்ச்சேரவேண்டும்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் மிகுந்த வேதனையிலும், துன்பத்திலும், நெருக்கத்திலும், பாடுகளிலும் இருக்கிறார்கள். அவர்கள் ஏராளமான உபத்திரவங்களை அனுபவிக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி யூதா மனுஷர் அனுபவிக்கிற வேதனைகளைப் பார்த்து, புலம்பி அழுகிறார்.

எருசலேமிலே ஏராளமானோர் மரித்துப்போனார்கள். யூதா மனுஷருடைய இரத்தமெல்லாம் சிந்தப்பட்டிருக்கிறது. எரேமியா தீர்க்கதரிசி அந்த சம்பவங்களையெல்லாம் பார்த்து மனங்கசந்து அழுகிறார். "ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்கும்" (எரே 9:1) என்று எரேமியா சொல்லுகிறார்.

தன்னுடைய கண்கள் கண்ணீர் ஊற்றாயிருக்கவேண்டும் என்று எரேமியா விரும்புகிறார். ஊற்றிலிருந்து நீர் எப்போதும் சுரப்பதுபோல, தன்னுடைய கண்ணீர் ஊற்றிலிருந்து, கண்ணீர் இன்னும் தாராளமாய் சுரக்கவேண்டும் என்று எரேமியா விரும்புகிறார். யூதா மனுஷருடைய வேதனைகளுக்கு அளவே இல்லை. அவர்களுக்காக சிந்தவேண்டிய கண்ணீருக்கும் அளவே இல்லை.

எருசலேம் குடிகள்மீது வேதனைகளுக்குமேல் வேதனைகள் வந்திருக்கிறது. அவர்கள் அனுபவிக்கிற பாடுகளையும், உபத்திரவங்களையும் பார்த்து, எரேமியா இன்னும் அழவேண்டுமென்று விரும்புகிறார். தன்னுடைய கண்கள் இன்னும் ஏராளமாய்க் கண்ணீரை சிந்தவேண்டுமென்று விரும்புகிறார். அவருடைய கண்கள் கண்ணீர் ஊற்றாயிருந்தால்தான், அவரால் தொடர்ந்து கண்ணீர் சிந்தமுடியும்.

"கண்ணீர் ஊற்று" என்னும் வார்த்தையைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிற எபிரெய வார்த்தை, கண்ணையும், நீரூற்றையும் குறிக்கிறது. கர்த்தர் நம்முடைய கண்களை காண்பதற்காக சிருஷ்டித்திருக்கிறார். ஆனாலும் நாம் ஜீவிக்கிற இந்த உலகத்தில் துன்பமும் வேதனைகளும் அதிகமாயிருக்கிறது. நாம் இந்த உலகத்தை நம்முடைய கண்களால் பார்த்து மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக, இந்த உலகத்தின் பாடுகளையும், துன்பங்களையும் பார்த்து, நம்முடைய கண்கள் கண்ணீர் சிந்த வேண்டும். நம்முடைய கண்களுக்கு, காண்பதைவிட, கண்ணீர் சிந்துவதே பிரதான வேலையாயிருக்கிறது.

நம்முடைய இருதயம் திருக்குள்ளதும் கேடுள்ளதுமாயிருக்கிறது. அது பாவத்தின் ஊற்றாயிருக்கிறது. இருதயத்திலிருந்து பாவமான சிந்தனைகள் தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கிறது. இருதயம் பாவத்தின் ஊற்றாயிருப்பதினால், நம்முடைய கண்கள் கண்ணீர் ஊற்றாயிருக்கிறது.

எருசலேமிலே வேதனைகளும், துன்பங்களும் மிகுதியாயிருக்கிறது. "என் ஜனமாகிய குமாரத்தி கொலையுண்ண கொடுப்பவர்களினிமித்தம் நான் இரவும் பகலும் அழுவேன்" (எரே 9:1) என்று எரேமியா சொல்லுகிறார். எருசலேம் நகரத்திலும், யூதேயா தேசத்திலும் ஏராளமான ஜனங்கள் பட்டயத்தினால் மடிந்துபோயிருக்கிறார்கள். யுத்தத்திலே யூதா தேசத்திற்கு தோல்வி உண்டாயிற்று. கல்தேயர்கள் யூதாவின் பட்டணங்களுக்குள் பிரவேசித்து, தேசத்திலிருக்கிற சிறியோரையும் பெரியோரையும் தங்கள் பட்டயங்களால் கொன்றுபோட்டார்கள்.

யூதா மனுஷரிலும், எருசலேமின் குடிகளிலும் பட்டயத்தால் மரித்துப்போனவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம். யுத்தத்தில் ஏராளமான உயிர்ச்சேதங்கள் உண்டாகும். அதைக் கேள்விப்படும்போது நம்முடைய இருதயமும் வேதனைப்படும். யுத்தத்தில் ஜெயிக்கிறவர்களும் மனுஷர்கள்தான். தோற்றுப்போகிறவர்களும் மனுஷர்கள்தான். கொல்லுகிறவர்களும் மனுஷர்கள்தான். கொல்லப்படுகிறவர்களும் மனுஷர்கள்தான். மனுஷருடைய பாவத்தினிமித்தமாய் தேசத்தில் இரத்தம் சிந்துதல் உண்டாகிறது. மனுஷர்கள் பட்டயத்தால் மடிந்துபோவதைப் பார்க்கும்போது, நம்முடைய இருதயத்தில் வேதனையும், கண்களில் கண்ணீரும் வரும்.

யுத்தத்தில் மரித்துப்போனவர்களுடைய உற்றாரும் உறவினரும் அவர்களுக்காக அழுது புலம்புவார்கள். நம்முடைய ஜீவன் நமக்கு அருமையாயிருப்பதுபோல, அவர்களுடைய ஜீவனும் அவர்களுக்கு அருமையாயிருக்கும். யூதா தேசத்திலே, ஏராளமான யூதர்கள் பட்டயத்தால் மடிந்துபோனதை எரேமியா பார்க்கிறார். எரேமியாவும் ஒரு யூதர். தன்னுடைய இனத்தார் யுத்தத்திலே மடிந்துபோனதைப் பார்க்கும்போது, அவருடைய இருதயத்தில் மிகுந்த வேதனை உண்டாயிற்று.

எரேமியா தீர்க்கதரிசி யூதாதேசத்தின் அழிவுக்காக அழுது புலம்புகிறார். யூதாவின் பட்டணங்களும் நகரங்களும் அழிந்துபோயிற்று. ஜனங்கள் அழிந்துபோனதற்காகவும் யூதேயாவின் பர்வதங்கள் அழிந்துபோனதற்காகவும் எரேமியா அழுது புலம்புகிறார். எருசலேமின் பர்வதங்களில் கனிதரும் விருட்சங்கள் ஏராளமாயுள்ளன. அவையெல்லாம் யுத்தத்தில் அழிந்துபோயிற்று. வனாந்தரத்தின் தாபரஸ்தலங்களும் அழிந்துபோயிற்று. மந்தைகளின் மேய்ச்சல் நிலங்களும் அழிந்துபோயிற்று.

கல்தேயரின் சேனை எருசலேம் நகரத்தையும் யூதாவின் பட்டணங்களையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போட்டார்கள். தேசம் முழுவதும் பாழாய்ப்போயிற்று. ஆடு மாடுகளும் மடிந்துபோயின. இதைப் பார்க்கும்போது, எரேமியாவின் இருதயம் மிகுந்த வேதனைப்படுகிறது. அவருடைய கண்களிலிருந்து, கண்ணீர் ஊற்றுபோல, கண்ணீர் சுரந்து வருகிறது. இளகிய மனதுள்ளவர்கள் எல்லோருமே, ஜனங்களுக்கு வரும் அழிவைப் பார்த்து மிகவும் வேதனைப்படுவார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி யூதா தேசத்தின் அழிவைப் பார்த்த பின்பு, அவர் தனிமையாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். கல்தேயர்கள் யூதாதேசத்தின்மீது வந்து, யூதாவின் பட்டணங்களை நாசம்பண்ணிவிடுகிறார்கள். கல்தேயருக்குப் பயந்து, யூதர்கள் அரணான பட்டணங்களுக்கு ஓடிப்போகிறார்கள் (எரே 4:5,6).

ஆனால் எரேமியாவோ, அரணான பட்டணங்களுக்கு ஓடிப்போகாமல் வனாந்தரத்தில் தனிமையாய் இருக்கும்படி விரும்புகிறார். "ஆ, வனாந்தரத்தில் வழிப்போக்கரின் தாபரம் எனக்கு இருந்தால் நலமாயிருக்கும்; அப்பொழுது நான் என் ஜனத்தைவிட்டு, அவர்களிடத்தில் இராதபடிக்குப் போய்விடுவேன்" (எரே 9:2) என்று எரேமியா வேதனையோடு சொல்லுகிறார்.

நாம் வாழ்கிற இந்தப் பிரபஞ்சம் நமக்கு வேதனைகளையும், சஞ்சலங்களையும் கொடுக்கிறது. நாம் இந்த உலகத்தில் ஜீவித்தாலும், இந்த உலகத்திற்குரியவர்களல்ல. நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற காலம் வரையிலும், நாம் இந்த உலகத்தில்தான் ஜீவிக்கவேண்டும். இந்த உலகம் எவ்வளவு மோசமானதாகயிருந்தாலும், நமக்கு நியமிக்கப்பட்ட காலத்திற்கு முன்பாக, நாம் இதைக் கடந்துபோய்விடவேண்டுமென்று நினைக்கக்கூடாது.

எரேமியா தீர்க்கதரிசியினால் எருசலேமிலுள்ள எல்லோருக்கும் நன்மை செய்ய முடியவில்லை. ஒருவேளை அவர் ஒரு சிலருக்கு நன்மை செய்திருக்கலாம். எரேமியா யூதா மனுஷர் மத்தியில் கர்த்தருடைய செய்தியை பிரசங்கம்பண்ணினார். ஜனங்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் தங்கள் பாவங்களில் தொடர்ந்து ஜீவிக்கிறார்கள். தேவனுடைய கோபம் அவர்கள்மீது வருகிறது. அவர்களுடைய அழிவுக்கு அவர்களே காரணமாயிருக்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் துணிகரமாய்ப் பாவம் செய்வதை எரேமியா வேதனையோடு பார்க்கிறார். அவர்கள் விக்கிரகங்களை ஆராதித்து, இஸ்ரவேலின் பரிசுத்தரை தூஷிப்பதையும் பார்க்கிறார். எரேமியா கர்த்தருடைய செய்தியை அவர்களுக்கு தொடர்ந்து பிரசங்கம்பண்ணுகிறார்.

ஆனால் அவர்களோ தங்கள் பாவங்களில் நிலைத்திருக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாய்த் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். தங்களுக்குத் தாங்களே அழிவை வரவழைத்துக் கொள்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். இப்போது யூதாவின் மனுஷர் சத்துருக்களின் பட்டயத்தால் மடிந்து போகிறார்கள். அவர்களுடைய பிரேதங்கள் வீதிகளில் கிடப்பதை எரேமியா வேதனையோடு பார்க்கிறார்.

எரேமியா தேவனுடைய பிரகாரத்திலிருந்தாலும், அவர் வனாந்தரத்திலே, வழிப்போக்கரின் தாபரத்தில் தனிமையாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறார். எரேமியாவுக்கு யூதா மனுஷருடைய பாவங்களையும், பாவத்தின் விளைவாக அவர்கள் அனுபவிக்கிற வேதனைகளையும் பார்ப்பதற்கு மிகவும் கஷ்டமாயிருக்கிறது. "அவர்களெல்லாரும் விபசாரரும் துரோகிகளின் கூட்டமுமாயிருக்கிறார்கள்" (எரே 9:2) என்று எரேமியா சொல்லுகிறார்.

யூதா மனுஷருக்கு துன்பங்களும், வேதனைகளும் வந்திருப்பதினால் எரேமியா அவர்களைவிட்டு தனிமையாய்ப் போய்விடவேண்டும் என்று விரும்பவில்லை. அவர்களுடைய பாவங்களினிமித்தமும், அக்கிரமங்களினிமித்தமுமே, எரேமியா அவர்களைவிட்டு தனிமையாய்ப் போய்விட வேண்டுமென்று விரும்புகிறார். அவர்கள் எல்லோரும் விபசாரராயிருக்கிறார்கள். "அவர்கள் கொழுத்த குதிரைகளைப்போல் காலமே எழும்பி, அவனவன் தன்தன் அயலானுடைய பெண்ஜாதியின் பின்னாலே கனைக்கிறான்" (எரே 5:8).

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் துரோகிகளின் கூட்டத்தாராயிருக்கிறார்கள். கர்த்தரிடத்தில் உண்மையில்லாதவர்கள், மற்றவர்களிடத்திலும் உண்மையுள்ளவர்களாயிருக்கமாட்டார்கள். அவர்கள் ஆலயத்திற்குப் போனாலும், நியாயவிசாரணை நடைபெறும் இடங்களுக்குப் போனாலும், அவர்கள் கூடுகிற கூட்டம் துரோகிகளின் கூட்டமாகவே இருக்கிறது.

யூதா மனுஷரும், எருசலேமின் குடிகளும் திட்டமிட்டு பாவம் செய்கிறார்கள். தீமையை யோசித்து செய்கிறார்கள். அவர்கள் பொய்யைப் பிரயோகிக்கத் தங்கள் நாவாகிய வில்லை வளைக்கிறார்கள். அவர்களுடைய நாவு சாதாரண வார்த்தைகளைப் பேசும்போதே, பொய்யைப் பேசுகிறது. அது வில்லைப்போல் வளைந்து, பொய்பேசுவதற்கு உதவிபண்ணுகிறது. அவர்கள் இந்த தேசத்திலே பலத்துக்கொள்வது சத்தியத்திற்காக அல்ல.

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் அநேக தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற தாலந்துகளையும், வரங்களையும் அவர்கள் நன்மைக்கேதுவாக பயன்படுத்தவேண்டும். அவர்கள் சத்தியத்திற்கு துணைபோக வேண்டும். மனுஷருடைய நன்மைக்காக அவற்றை பயன்படுத்தவேண்டும். ஆனால் அவர்களோ, தங்களுடைய திறமைகளையும், பலத்தையும், சத்தியத்திற்காக பயன்படுத்தாமல், பொல்லாப்புக்கு பயன்படுத்துகிறார்கள்.

சத்தியத்திற்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறவர்கள் தைரியமுள்ளவர்களாயிருக்க வேண்டும். எவ்வளவு எதிர்ப்புக்கள் வந்தாலும், சத்தியத்தை விட்டுவிடக்கூடாது. எதிர்த்து நிற்கும்போது பிசாசு ஓடிப்போவான். இக்காலத்தில் சத்தியத்திற்கு ஏராளமான சத்துருக்கள் இருக்கிறார்கள். விசுவாசிகளாகிய நாமோ சத்திய தேவனுக்கு பிள்ளைகளாயிருக்கிறோம். நம்முடைய வார்த்தையிலும், கிரியையிலும், ஜீவியத்திலும் சத்தியம் வெளிப்படவேண்டும். சத்துருவுக்குப் பயந்து சத்தியத்தைவிட்டு விலகிப்போய்விடக்கூடாது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பொல்லாப்பிலிருந்து பொல்லாப்புக்கு நடந்தேறுகிறார்கள். திட்டமிட்டு பொல்லாப்புகளை செய்கிறார்கள். பொல்லாப்பு செய்வது எப்படி என்று அவர்களுக்கு தெரிந்திருக்கிறது. ஆனால் அவர்கள், "என்னையோ அறியாதிருக்கிறார்கள்" (எரே 9:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சகோதரர்கள் ஒருவரையொருவர் வஞ்சிக்கிறார்கள். ஒருவருக்கொருவர் மோசம்பண்ணுகிறார்கள். அவர்கள் சிநேகிதராயிருந்தாலும் ஒருவருக்கொருவர் தூற்றித்திரிகிறார்கள். யூதாவின் மனுஷர் மத்தியிலே உண்மையான சிநேகமில்லை. அவர்கள் மத்தியில் உண்மையான சகோதரத்துவமும் இல்லை. அவர்கள் எல்லோருமே துரோகிகளின் கூட்டமாயிருக்கிறார்கள்.

"நீங்கள் அவனவன் தன் தன் சிநேகிதனுக்கு எச்சரிக்கையாயிருங்கள், எந்தச் சகோதரனையும் நம்பாதிருங்கள்; எந்தச் சகோதரனும் மோசம்பண்ணுகிறான், எந்தச் சிநேகிதனும் தூற்றித்திரிகிறான். அவர்கள் மெய்யைப் பேசாமல் ஒவ்வொருவரும் தமக்கடுத்தவனை ஏய்க்கிறார்கள்; பொய்யைப்பேசத் தங்கள் நாவைப் பழக்குகிறார்கள், அக்கிரமஞ்செய்ய உழைக்கிறார்கள்" (எரே 9:4,5).

ஒருவரும் பிறருடைய நன்மையை நாடுவதில்லை. யாருடைய பேச்சிலும் உண்மையில்லை. மற்றவர்கள் தங்களுக்குச் செய்த உதவிகளுக்கு, ஒருவரும் நன்றியுள்ளவர்களாயிருப்பதில்லை. எந்த சிநேகிதனும் தூற்றித்திரிகிறான். தங்களுடைய வாயின் வார்த்தைகளைக் குறித்து அவர்கள் கவனமாயிருப்பதில்லை. எப்படிப்பட்ட வார்த்தைகளை வேண்டுமானாலும் பேசிவிடுகிறார்கள். பொய்யைப் பேசுவதற்கு தயங்குவதில்லை.

அவர்கள் பொய்யை பேச தங்கள் நாவை பழக்குகிறார்கள். எப்படி பொய் பேசவேண்டும் என்று பயிற்சி எடுத்திருக்கிறார்கள். அக்கிரமம் செய்வதற்காக உழைக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் சத்தியத்திற்காகவும், நீதிக்காகவும் உழைக்க வேண்டும். அவர்கள் எவ்வளவுதான் பொல்லாப்பு செய்தாலும், ஒருபோதும் சோர்ந்துபோவதில்லை. பொல்லாப்பிலிருந்து பொல்லாப்புக்கு நடந்தேறுகிறார்கள்.

ஒருவனும் ஒரே நாளில் மொத்தமாய்க் கெட்டுப்போவதில்லை. கொஞ்சம் கொஞ்சமாக கெட்டுப்போவான். யூதாவின் மனுஷரும் கொஞ்சம் கொஞ்சமாகப் பொல்லாப்பு செய்து, முடிவிலே பொல்லாப்பு செய்வதில் தேறினவர்களாயிருக்கிறார்கள். அக்கிரமம் செய்வதற்காகவே உழைக்கிறார்கள். பொய் பேசுவதற்காக பயிற்சி எடுத்துக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் யூதாவின் ஜனத்திற்கு விரோதமாக தம்முடைய நியாயத்தீர்ப்பை தீர்மானம்பண்ணியிருக்கிறார். தேவன் அவர்களுடைய பாவங்களைக் குறித்து, அவர்களுக்கு ஏற்கெனவே எச்சரித்திருக்கிறார். அவர்கள் எப்படிப்பட்ட ஜனங்கள் என்பதையும் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர்கள் கபடத்தின் நடுவிலே குடியிருக்கிறார்கள்.

"கபடத்தின் நிமித்தம் அவர்கள் என்னை அறியமாட்டோம் என்கிறார்கள்" (எரே 8:6) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதா தேசத்திலுள்ள எல்லோருமே கபடஸ்தராயிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருடைய இருதயத்திலும் கபட குணம் நிரம்பியிருக்கிறது.

அவர்கள் பொய்யை பிரயோகிக்க தங்கள் நாவாகிய வில்லை வளைக்கிறார்கள். அவர்கள் நாவு கூர்மையாக்கப்பட்ட அம்பு. அது கபடம் பேசுகிறது. கூர்மையான அம்பு சரீரத்தை ஊடுருவிப்பாயும். இப்படிப்பட்ட அம்பு பாயும்போது உயிர்ச்சேதமுண்டாகும். யூதா மனுஷருடைய நாவு கூர்மையாக்கப்பட்ட அம்பைப் போலிருக்கிறது. அது அநேகருடைய மரணத்திற்கு காரணமாயிருக்கிறது.

"அவனவன் தன் தன் அயலானோடே தன் தன் வாயினாலே சமாதானமாய்ப் பேசுகிறான், ஆனாலும் தன் உள்ளத்திலே அவனுக்குப் பதிவிடை வைக்கிறான்" (எரே 9:8). யோவாப் அப்னேரை கொல்லவேண்டும் என்று தீர்மானித்தான். யோவாப் அப்னேரை முத்தம் செய்தான். அவனுடைய முத்தமே அவனைக் கொன்றுபோட்டது. யூதாவின் மனுஷரும் உள்ளத்தில் ஒன்றும் வார்த்தையில் ஒன்றுமாகப் பேசுகிறார்கள். அவர்களுடைய வார்த்தைகள் நயமாயிருக்கிறது. ஆனால் அவர்களுடைய கிரியைகளோ மோசமாயிருக்கிறது.

பாவிகளுக்கு கர்த்தரைப்பற்றி நல்ல உபதேசங்களைக் கொடுக்கலாம். ஆனால் அவர்கள் கற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்களிடத்தில் தேவனைப்பற்றிய அறிவு இருக்காது. ஆகையினால் அவர்களிடத்திலிருந்து நன்மையான காரியங்களை எதையும் எதிர்பார்க்க முடியாது.

"இஸ்ரவேல் புத்திரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; தேசத்துக்குடிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; அதேனென்றால் தேசத்திலே உண்மையும் இல்லை, இரக்கமும் இல்லை; தேவனைப்பற்றிய அறிவும் இல்லை" (ஓசி 4:1).

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் யூதா மனுஷர் மத்தியிலே, கர்த்தரைப்பற்றிய சத்தியங்களைப் போதித்தார்கள். ஆனால் யூதாவின் மனுஷரோ சத்தியத்தைக் கற்றுக்கொள்ளவில்லை. அவர்களிடத்தில் கர்த்தரைப்பற்றிய அறிவு இல்லை. ஆகையினால் அவர்களுடைய உள்ளத்தில் கபடம் மிகுந்திருக்கிறது.

கர்த்தர் யூதாவின் மனுஷரை அழிவுக்கு நியமித்துவிடுகிறார். அவர்களுடைய பாவங்களே, அவர்கள்மேல் வரும் கோபாக்கினைக்கு காரணம். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை, அவர்கள்மீது அனுப்புகிறார்.

யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. தாம் அவர்களை நியாயம் தீர்க்கப்போவதாக, கர்த்தர் மறுபடியும் மறுபடியுமாகச் சொல்லுகிறார்.

"ஆகையால், இதோ, நான் அவர்களை உருக்கி, அவர்களைப் புடமிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; என் ஜனமாகிய குமாரத்தியை வேறெந்தப் பிரகாரமாக நடத்துவேன்?" (எரே 9:7).

"இவைகளினிமித்தம் அவர்களை விசாரியாதிருப்பேனோ? இப்படிப்பட்ட ஜாதிக்கு என் ஆத்துமா நீதியைச் சரிக்கட்டாதிருக்குமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 9:9)

"நான் எருசலேமை மண்மேடுகளும் வலுசர்ப்பங்களின் தாபரமுமாக்குவேன்; யூதாவின் பட்டணங்களையும் குடியில்லாதபடி பாழாக்கிப்போடுவேன்" (எரே 9:11).

கர்த்தரே நமக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார். இந்த சத்தியத்தை அறிந்துகொள்ளாதவர்கள், கர்த்தரே தங்களுடைய நியாயாதிபதி என்பதை சீக்கிரத்தில் அறிந்து கொள்வார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை உருக்கி புடமிடுவார். அவர்களிடத்திலுள்ள பாவங்களையும், அசுத்தங்களையும், துன்மார்க்கங்களையும் நீக்கிப்போடுவார். அவர்களை உருக்கி புடமிட்டு சுத்திகரிப்பார்.

கர்த்தருடைய பிரயாசம் ஒருபோதும் வீணாய்ப்போகாது. அவர்கள் தள்ளுபடியான வெள்ளியாகயிருப்பார்களென்றால், அவர்களை புடமிடுவதினால் பிரயோஜனமுண்டாகாது (எரே 6:29,30). யூதாவின் மனுஷர் தள்ளுபடியான வெள்ளியைப்போல, தங்கள் பாவத்திலும், துன்மார்க்கத்திலும் துணிகரமாயிருப்பார்கள் என்றால், அவர்களை உருக்கி புடமிடமுடியாது. துருத்தி வெந்துபோகும். ஈயம் நெருப்பினால் அழிந்துபோகும். புடமிடுகிறவருடைய பிரயாசமும் வீணாய்ப்போகும். அவர்களுடைய பொல்லாப்புகளும் அற்றுப்போகாது. அவர்கள் சுத்தமாக மாட்டார்கள்.

தம்முடைய பிள்ளைகள் மனந்திரும்ப வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்துவதற்கு என்னென்ன உபாயங்களையெல்லாம் கையாளவேண்டுமோ அவையெல்லாவற்றையும் கையாளுகிறார். கர்த்தர் கொடுக்கும் வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். மற்றவர்கள் அழிந்துபோவார்கள்.

யூதாமனுஷருடைய கிரியைகள் துன்மார்க்கமாயிருக்கிறது. மனந்திரும்புவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்களோ அதைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. "இவைகளினிமித்தம் அவர்களை விசாரியாதிருப்பேனோ" (எரே 9:9) என்று கர்த்தர் கேட்கிறார்.

கர்த்தர் பாவத்தை வெறுக்கிறவர். பாவம் செய்கிற ஜாதிக்கு விரோதமாக கர்த்தருடைய ஆத்துமா நீதியைச் சரிக்கட்டும். யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய் தொடர்ந்து பாவம் செய்கிறார்கள். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுத்துவிடுகிறார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது.

"நான் எருசலேமை மண்மேடுகளும் வலுசர்ப்பங்களின் தாபரமுமாக்குவேன்; யூதாவின் பட்டணங்களையும் குடியில்லாதபடி பாழாக்கிப்போடுவேன்" (எரே 9:11) என்று கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை எருசலேமுக்கு அறிவிக்கிறார்.

தேசம் பாழாக்கப்படுகிற முகாந்தரம் எரே 9:12-16

எரே 9:12. இதை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? தேசம் அழிந்து, ஒருவனும் கடந்து போகாதபடி அது பாழாக்கப்படுகிற முகாந்தரமென்னவென்று கர்த்தருடைய வாய் தன்னுடனே சொல்லுகிறதைக் கேட்டு அறிவிக்கத்தக்கவன் யார்?

எரே 9:13. நான் அவரவருக்கு விதித்த என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் விட்டு, என் சொல்லைக் கேளாமலும், அதின்படி நடவாமலும்,

எரே 9:14. தங்களுடைய இருதயத்தின் கடினத்தையும், தங்கள் பிதாக்கள் தங்களுக்குக் கற்றுக்கொடுத்தபடி பாகால்களையும் பின்தொடர்ந்தார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 9:15. ஆதலால், இதோ, நான் இந்த ஜனத்துக்குப் புசிக்க எட்டியையும், குடிக்கப்பிச்சுக்கலந்த தண்ணீரையும் கொடுத்து,

எரே 9:16. அவர்களும், அவர்கள் பிதாக்களும் அறியாத புறஜாதிகளுக்குள்ளே அவர்களைச் சிதறடித்து, பட்டயம் அவர்களை நிர்மூலமாக்குமட்டும் அதை அவர்களுக்குப் பின்னாக அனுப்புவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவுக்கும் எருசலேமுக்கும் விரோதமாக அழிவு சமீபித்து வருகிறது. எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் வரப்போகிற அழிவை எச்சரித்துச் சொல்லுகிறார். தேவனுடைய நீதியை ஜனங்களுக்கு தெளிவுபடுத்துகிறார். அவர்கள்மீது வரும் அழிவுக்கு கர்த்தர் காரணமல்ல. அவர்களுடைய பாவங்களே அவர்களுடைய அழிவுக்கு காரணம்.

யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினால், வரப்போகிற அழிவுக்கு தப்பித்துக் கொள்ளலாம். அவர்களுடைய இருதயம் புதுப்பிக்கப்பட்டால் கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மனந்திரும்புவதற்கு முயற்சி பண்ணாமல், தொடர்ந்து பாவம் செய்தால் தேவனுடைய கோபம் அவர்கள்மேல் வரும். அவர்களால் அழிவுக்கு தப்பிக்க முடியாது.

தேவன் பாவிகளை நேசித்தாலும், அவர்களுடைய பாவங்களை வெறுக்கிறார். மனுஷருடைய பாவங்களினிமித்தமாய் அவர்களைத் தண்டிக்கிறார். தேவன் தண்டிக்கும்போது அவருடைய கோபம் வெளிப்படுகிறது. தேவனுடைய கிரியைகள் பயங்கரமாயிருக்கிறது. கர்த்தருடைய கிரியைகளை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அவர் காரணமில்லாமல் கோபப்படுகிறவரல்ல. தேவன் அன்பாயிருக்கிறார். ஆனாலும் அவர் பாவங்களை வெறுக்கிறார். அநியாயங்களையும், அக்கிரமங்களையும் வெறுக்கிறார். "இதை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்" (எரே 9:12) என்று எரேமியா கேட்கிறார்.

தங்களிடத்தில் ஞானமிருக்கிறது என்று யூதர்கள் பெருமையாகச் சொல்லுகிறார்கள். தங்கள் மத்தியில் ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள் என்றும் எருசலேமின் குடிகள் பெருமையோடு சொல்லுகிறார்கள். "தேசம் அழிந்து, ஒருவனும் கடந்து போகாதபடி அது பாழாக்கப்படுகிற முகாந்தரமென்னவென்று கர்த்தருடைய வாய் தன்னுடனே சொல்லுகிறதைக் கேட்டு அறிவிக்கத்தக்கவன் யார்?" (எரே 9:12) என்று எரேமியா கேட்கிறார்.

தேவன் தம்முடைய ஜனங்களோடு வழக்காடுகிறார். இந்த வழக்குக்கான காரணங்களை தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டும். ஞானமுள்ளவர்கள் கர்த்தருடைய கோபத்திற்கான காரணத்தைப் புரிந்துகொள்ளவேண்டும். யூதா தேசம் எதற்காக அழியப்போகிறது என்பதை ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

இஸ்ரவேலின் பரிசுத்தரே தம்முடைய ஜனங்களுக்கு, கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்தார். அவர் அதைப் பாதுகாத்து பராமரித்தார். அதை செழிப்புள்ள தேசமாக ஆசீர்வதித்தார். ஆனால் இப்போதோ, கர்த்தர் யூதா தேசத்தைப் புறக்கணித்துவிடுகிறார். அதைப் பாதுகாத்து பராமரிக்காமல் கைவிட்டுவிடுகிறார்.

கர்த்தர் தமக்கு பிரியமான கானான் தேசத்தை பாழாக்குவதற்கு என்ன முகாந்தரம் என்பதை ஞானமுள்ளவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் இதற்கான காரணங்களை அறிந்துகொண்டு, அதை ஜனங்களிடத்தில் சொல்லவேண்டும்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு சொல்லுகிறார். கர்த்தர் கேட்கச் சொல்லுகிற கேள்விகளை, எரேமியா யூதாவின் மனுஷரிடத்திலும், எருசலேமின் குடிகளிடத்திலும் கேட்கிறார். இந்தக் கேள்விகளுக்கு ஜனங்களால் பதில் சொல்ல முடியவில்லை. கர்த்தருடைய கேள்விக்கு பதில் சொல்லும் அளவுக்கு ஒருவரிடத்திலும் ஞானமில்லை. ஆகையினால் கர்த்தரே தம்முடைய கேள்விக்கு பதிலும் சொல்லுகிறார்.

"நான் அவரவருக்கு விதித்த என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் விட்டு, என் சொல்லைக் கேளாமலும், அதின்படி நடவாமலும், தங்களுடைய இருதயத்தின் கடினத்தையும், தங்கள் பிதாக்கள் தங்களுக்குக் கற்றுக்கொடுத்தபடி பாகால்களையும் பின்தொடர்ந்தார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 9:13,14).

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விசேஷித்தவர்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். கர்த்தருடைய ஆளுகைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தைக் கைவிட்டுவிடுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதுமில்லை. அதன்படி நடப்பதுமில்லை. அவர்கள் கர்த்தரைக் கைவிட்டதினால், கர்த்தரும் அவர்களுடைய தேசத்தை கைவிட்டு விடுகிறார். அவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை கைவிட்டதினால், கர்த்தரும் அவர்களைக் கைவிட்டுவிடுகிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தரை மாத்திரமே தங்கள் தேவனாக ஆராதிக்கவேண்டும். அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். ஆனால் எருசலேமின் குடிகளோ கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரை தங்களுடைய ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் அங்கீகரியாமல், பாகால்களை ஆராதிக்கிறார்கள். கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள்.

அவர்கள் கர்த்தருக்கும் அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிந்து ஜீவிக்காமல், பாகால்களுக்கு கீழ்ப்படிகிறார்கள். அவர்களுடைய மாம்சத்தின் இச்சைகள் அவர்களை ஆளுகை செய்கிறது. தேவனுடைய சித்தத்திற்கு அவர்கள் தங்களை ஒப்புக்கொடுக்கவில்லை. தங்கள் சுயசித்தத்தின் பிரகாரமாய் நடந்து கொள்கிறார்கள். யூதாவின் மனுஷர் தங்களுடைய இருதயத்தின் கடினத்தை பின்தொடருகிறார்கள் என்று கர்த்தர் அவர்கள்மீது குற்றம் சொல்லுகிறார்.

அவர்கள் தங்கள் மனதிற்கு பிரியமானபடி நடக்கிறார்கள். கர்த்தருக்குப் பிரியமானது என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க தவறிவிடுகிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சி, அவர்களுடைய பாவங்களை கண்டித்து உணர்த்தவில்லை. யூதாவின் மனுஷர் கர்த்தரைப் பின்பற்றுவதற்குப் பதிலாக பாகால்களைப் பின்பற்றுகிறார்கள். இந்த வசனத்தில் "பாகால்கள்" என்று பன்மையில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு பல பாகால்கள் இருக்கிறது. பாகால் பேயோ, பாகால் பேரீத் ஆகியவை ஒரு சில பாகால்கள். அவை எருசலேமிலும் இருக்கிறது. யூதாவின் எல்லா பட்டணங்களிலும் இருக்கிறது.

யூதா மனுஷருடைய பிதாக்கள் அவர்களுக்கு பாகால்களையும், பாகால்களை ஆராதிக்கிற முறைமைகளையும் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய முன்னோர்கள் காலத்திலிருந்தே விக்கிரகாராதனை நடைபெற்று வருகிறது. முற்பிதாக்களின் காலத்திலிருந்தே கர்த்தர் விக்கிரகாராதனையை தடைபண்ணியிருக்கிறார். ஆனால் யூதாவின் மனுஷரோ சந்ததி சந்ததியாக, விக்கிரகங்களை ஆராதித்து வருகிறார்கள் இதன் நிமித்தமாய் யூதாதேசம் அழிந்துபோகிறது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். "ஆதலால், இதோ, நான் இந்த ஜனத்துக்குப் புசிக்க எட்டியையும், குடிக்கப்பிச்சுக்கலந்த தண்ணீரையும் கொடுத்து, அவர்களும், அவர்கள் பிதாக்களும் அறியாத புறஜாதிகளுக்குள்ளே அவர்களைச் சிதறடித்து, பட்டயம் அவர்களை நிர்மூலமாக்குமட்டும் அதை அவர்களுக்குப் பின்னாக அனுப்புவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" *(எரே 9:15,16)*.

கர்த்தர் செய்ய நினைக்கிற காரியத்தை யாராலும் தடைபண்ண முடியாது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை எந்த மனுஷனாலும் மாற்ற முடியாது. கர்த்தருடைய பிரமாணம் நீதியானது. அது மாறாதது. அது போலவே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும் மாறாதது. யூதர்கள் இப்போது கர்த்தருக்கு விரோதமாய் துணிகரமான பாவங்களை செய்கிறார்கள். தங்கள் வீடுகளிலே சந்தோஷமாய்க் குடியிருக்கிறார்கள். தங்களுக்கு வரப்போகும் ஆபத்துக்களை உணராதவர்களாயிருக்கிறார்கள்.

கர்த்தரோ, யூதாவின் மனுஷருக்கு புசிக்க எட்டியையும், குடிக்க பிச்சு கலந்த தண்ணீரையும் கொடுக்கப்போவதாக சொல்லுகிறார். பிச்சு கலந்த தண்ணீர் கசப்பமாயிருக்கும். அதில் விஷத்தன்மை அதிகமாயிருக்கும். யூதாவின் மனுஷரைச் சுற்றிலும் பயங்கரமான காரியங்கள் நடக்கும். அவர்களுக்கு திகிலும் கலக்கமும் உண்டாகும். கர்த்தர் அவர்களுடைய ஆசீர்வாதங்களை சபித்துப்போடுவார்.

"நீங்கள் கேளாமலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால், நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்; ஆம், நீங்கள் அதைச் சிந்தியாமற்போனதினால் அவைகளைச் சபித்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" *(மல் 2:2)*.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் புறஜாதிகளுக்குள்ளே சிதறடிக்கப்படுவார்கள். பட்டயம் அவர்களை நிர்மூலமாக்கும். அவர்களுடைய பெருமையெல்லாம் அவர்களைவிட்டு நீங்கிப் போகும். பட்டயத்தினால் அவர்களுடைய ஜீவனுக்கும் சேதமுண்டாகும். அவர்கள் தேவனுடைய பிரமாணத்தைக் கைவிட்டார்கள். கர்த்தரும் அவர்களை கைவிட்டுவிட்டார்.

தேசத்தில் நீதியில்லை, நியாயமில்லை. மனுஷர் ஒருவருக்கொருவர் தீங்கு செய்கிறார்கள். கர்த்தரோ தம்முடைய நீதியினால் யூதாவின் மனுஷர் எல்லோரையும் தண்டிக்கிறார். அவர்களை புறஜாதிகளுக்குள்ளே சிதறடிக்கிறார். யூதா மனுஷருடைய கைகளும் அசுத்தமாயிருக்கிறது. அவர்களுடைய கைகளின் கிரியைகளும் பொல்லாப்பாயிருக்கிறது. அவர்களுடைய பாவமான கிரியைகளினிமித்தமாய் யூதாதேசத்திற்கு அழிவு வருகிறது.

புலம்பற்காரிகள்
எரே 9:17-22

எரே 9:17. நீங்கள் யோசனைபண்ணி, புலம்பற்காரிகளை வரவழைத்து, அதிலே பழகின ஸ்திரீகளைக் கூட்டியிடுங்களென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 9:18. அவர்கள் சீக்கிரமாய் வந்து, நம்முடைய கண்கள் கண்ணீராய்ச் சொரியத்தக்கதாகவும், நம்முடைய இமைகள் தண்ணீராய் ஓடத்தக்கதாகவும், ஒப்பாரி சொல்லக்கடவர்கள்.

எரே 9:19. எத்தனையாய்ப் பாழாக்கப்பட்டோம்! மிகவும் கலங்கியிருக்கிறோம்; நாங்கள் தேசத்தை விட்டுப்போகிறோம், எங்கள் வாசஸ்தலங்களை அவர்கள் கவிழ்த்துப்போட்டார்கள் என்று சீயோனிலிருந்து உண்டாகிற புலம்பலின் சத்தம் கேட்கப்படும்.

எரே 9:20. ஆதலால் ஸ்திரீகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; உங்கள் செவி அவருடைய வாயின் வசனத்தை ஏற்றுக்கொள்ளட்டும்; நீங்கள் உங்கள் குமாரத்திகளுக்கு ஒப்பாரியையும், அவளவள் தன் தன் தோழிக்குப் புலம்பலையும் கற்றுக்கொடுங்கள்.

எரே 9:21. வீதியிலிருக்கிற குழந்தைகளையும், தெருக்களிலிருக்கிற இளைஞரையும் சங்காரம்பண்ணச் சாவு நம்முடைய பலகணிகளிலேறி, நம்முடைய அரமனைகளில் பிரவேசித்தது.

எரே 9:22. மனுஷரின் சவங்கள் வயல்வெளியின் மேல் எருவைப்போலவும், அறுக்கிறவனுக்குப் பின்னாலே ஒருவனும் வாரிக்கொள்ளாதிருக்கிற அரியைப்போலவும் கிடக்கும் என்று கர்த்தர் உரைத்தாரென்று சொல்.

யூதா மனுஷர்மீதும் எருசலேமின் குடிகள்மீதும் அழிவு வந்திருக்கிறது. இன்னும் வந்துகொண்டிருக்கிறது. இனிமேலும் வரப்போகிறது. அந்த அழிவையும், சங்காரத்தையும் சந்திப்பதற்கு தேசம் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்காக கர்த்தர் யூதா மனுஷரிடத்தில், "நீங்கள் யோசனைபண்ணி, புலம்பற்காரிகளை வரவழைத்து, அதிலே பழகின ஸ்திரீகளைக் கூப்பிடுங்கள்" (எரே 9:17) என்று சொல்லுகிறார்.

புலம்பற்காரிகள் துக்கவீட்டை சேர்ந்தவர்களல்ல. இவர்கள் கூலிக்காக புலம்புகிறவர்கள். துக்கவீட்டிலுள்ளவர்கள் அழுது புலம்புவதற்கு உதவியாக, புலம்பற்காரார்கள் புலம்பல் பாடல்களைப் பாடுவார்கள். அவர்களுக்கு எப்படி புலம்பவேண்டும் என்று நன்றாய்த் தெரியும். தங்களுடைய புலம்பல் பாடல்களினால் எல்லோரையும் அழவைத்துவிடுவார்கள்.

புலம்பற்காரார்களில், மிகவும் தேர்ச்சி பெற்ற ஸ்தரீகள் இருக்கிறார்கள். இவர்கள் மிகுந்த துக்கத்தோடு புலம்பல் பாடல்களைப் பாடுவார்கள். களைப்படையாமல் அதிகநேரம் புலம்புவார்கள். அப்படிப்பட்ட புலம்பற்காரிகளைக் கூப்பிடுங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"அவர்கள் சீக்கிரமாய் வந்து, நம்முடைய கண்கள் கண்ணீராய்ச் சொரியத்தக்கதாகவும், நம்முடைய இமைகள் தண்ணீராய் ஓடத்தக்கதாகவும், ஒப்பாரி சொல்லக்கடவர்கள்" (எரே 9:18) என்று யூதாவின் மனுஷர் தங்களுக்குள் சொல்லிக்கொள்கிறார்கள். அவர்கள் இதுவரையிலும் சந்தோஷ கீதத்தைக் கேட்டிருக்கிறார்கள். இனிமேல் அவர்கள் புலம்பல் பாடல்களைக் கேட்கவேண்டும்.

எரேமியா இங்கு சொல்லுகிற வாக்கியம், யூதா மனுஷருடைய மதியீனத்தை வெளிப்படுத்துகிறது என்றும் வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பைப்பற்றிய அறிவு இல்லை. அவர்களுடைய இருதயம் தேவனுடைய சித்தத்தோடும், விருப்பத்தோடும் ஒத்துப்போகவில்லை. தங்களுடைய பாவத்தினிமித்தமாய், கர்த்தர் தங்கள்மீது கோபமாயிருக்கிறார் என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

கர்த்தர் புலம்புகிற தீர்க்கதரிசிகளையும், அழுகிற தீர்க்கதரிசிகளையும் அவர்கள் மத்தியிலே அனுப்பினார். அவர்களுக்காக புலம்புமாறு சொன்னார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை தம்முடைய தீர்க்கதரிசிகளின் வாயிலே வைத்தார். கர்த்தருடைய தீர்க்கதரிசிகளும், கர்த்தர் தங்களுக்கு சொன்ன செய்திகளை, மிகுந்த பாரத்தோடு ஜனங்களுக்கு சொன்னார்கள். ஆனால் யூதாவின் மனுஷரோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை.

தங்களுக்கு வரப்போகும் அழிவை நினைத்து, யூதர்களும் தீர்க்கதரிசிகளோடு சேர்ந்து அழவேண்டும். ஆனால் அவர்களோ தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை ஏளனம் செய்கிறார்கள். தங்களுடைய அழிவைப்பற்றிய செய்தியைக் கேட்டு, அழுவதற்குப் பதிலாக நகைக்கிறார்கள். தங்களுக்கு அழிவு வராது என்று துணிகரமாயிருக்கிறார்கள்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் பிரகாரம், யூதா தேசத்தின்மீது அழிவு வருகிறது. யூதாவின் ஜனங்களும் எருசலேமின் குடிகளும் தங்களுடைய அழிவை நினைத்து புலம்புகிறார்கள். இவர்களுக்காக அழ புலம்பற்காரிகள் தேவைப்படவில்லை. அவர்களுடைய வேதனைகளை நினைத்து அவர்களே அழுகிறார்கள்.

"எத்தனையாய்ப் பாழாக்கப்பட்டோம்! மிகவும் கலங்கியிருக்கிறோம்; நாங்கள் தேசத்தை விட்டுப்போகிறோம், எங்கள் வாசஸ்தலங்களை அவர்கள் கவிழ்த்துப் போட்டார்கள் என்று சீயோனிலிருந்து உண்டாகிற புலம்பலின் சத்தம் கேட்கப்படும்" (எரே 9:19).

சீயோனிலிருந்து உண்டாகிற புலம்பலின் சத்தம் கேட்கப்படும். இது புலம்பற்காரிகளின் பாடலாயிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஒருவேளை புலம்பற்காரிகள் இந்த ஒப்பாரி பாடலைப் பாடும்போது, எருசலேமின் ஜனங்களும் அவர்களோடு சேர்ந்து ஒப்பாரி பாடியிருக்கலாம். சீயோனிலே எங்குபோனாலும் புலம்பலின் சத்தமே கேட்கிறது.

ஒரு காலத்தில் சீயோனில் ஆனந்த சத்தமும், சந்தோஷ கீதமும், கர்த்தரைத் துதிக்கும் துதியின் கீதசத்தமும் கேட்டது. அக்காலத்தில் ஜனங்கள் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தார்கள். பரிசுத்தமாய் ஜீவித்தார்கள். இப்போது அவர்களுடைய இருதயங்களில் பாவம் பிரவேசித்திருக்கிறது. இதனால் அவர்களுடைய சந்தோஷ கீதம் புலம்பல் பாடலாய் மாறிற்று. சந்தோஷம் துக்கமாய் மாறிற்று. இப்போது யூதாவின் மனுஷர் தாங்கள் பாழாக்கப்பட்டதை உணருகிறார்கள்.

எருசலேமின் குடிகள் தங்கள் தேசத்தை விட்டு வெளியேறுகிறார்கள். அவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். கல்தேயர்கள் அவர்களை விலங்கிட்டு, சிறைப்பிடித்துக் கொண்டுபோகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய வாசஸ்தலங்களை கவிழ்த்துப்போடவில்லை. அவர்களுடைய சத்துருக்களே அதைக் கவிழ்த்துப்போட்டார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு தீங்கு வந்திருக்கிறது.

யூதா மனுஷரின் இருதயங்களில் மனத்தாழ்மையில்லை. அவர்கள் இருதயத்தில் பெருமையோடிருக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாய் துணிகரமான பாவங்களை செய்கிறார்கள். அவர்களுடைய மீறுதல்களும், அக்கிரமங்களும் அவர்களுடைய அழிவுக்கு காரணமாயிற்று.

"நீங்கள் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே பிறந்தவனானாலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியனானாலும் இந்த அருவருப்புகளில் ஒன்றையும் செய்ய வேண்டாம்" (லேவி 18:28).

இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர், எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாய், யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் தம்முடைய செய்தியைச் சொல்லுகிறார். "ஆதலால் ஸ்திரீகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; உங்கள் செவி அவருடைய வாயின் வசனத்தை ஏற்றுக்கொள்ளட்டும்; நீங்கள் உங்கள் குமாரத்திகளுக்கு ஒப்பாரியையும், அவளவள் தன்தன் தோழிக்குப் புலம்பலையும் கற்றுக்கொடுங்கள்" (எரே 9:20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதா தேசத்திலுள்ள புருஷர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவில்லை. அவர்களிடத்தில் கேட்குமளவுக்கு பொறுமையில்லை. கர்த்தருடைய வார்த்தையை புருஷர்கள் கேட்காவிட்டாலும், ஸ்திரீகள் கேட்கவேண்டும். எரேமியா தீர்க்கதரிசி புருஷர்கள் மத்தியில் மாத்திரமல்ல, ஸ்திரீகள் மத்தியிலும் கர்த்தருடைய செய்தியை சொல்லுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்.

ஸ்திரீகள் தங்கள் குமாரத்திகளுக்கு ஒப்பாரியைக் கற்றுக்கொடுக்கவேண்டும். தேசத்தில் எல்லா இடங்களிலும் அழிவு இருக்கிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் அழிவு வருகிறது. வீதியிலும் தெருக்களிலும் சங்காரமுண்டாகிறது. ஆகையினால் ஒப்பாரி பாடுவதற்கும், புலம்பல் பாடுவதற்கும் ஏராளமான புலம்பற்காரிகள் தேவைப்படுகிறார்கள். அவளவள் தன்தன் தோழிக்கு புலம்பலைக் கற்றுக்கொடுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர்மீது மிகவும் பயங்கரமாய் வருகிறது. "வீதியிலிருக்கிற குழந்தைகளையும், தெருக்களிலிருக்கிற இளைஞரையும் சங்காரம்பண்ணச் சாவு நம்முடைய பலகணிகளிலேறி, நம்முடைய அரமனைகளில் பிரவேசித்தது. மனுஷரின் சவங்கள் வயல்வெளியின் மேல் எருவைப்போலவும், அறுக்கிறவனுக்குப் பின்னாலே ஒருவனும் வாரிக்கொள்ளாதிருக்கிற அரியைப்போலவும் கிடக்கும்" (எரே 9:21,22) என்று கர்த்தர் எரேமியாவை சொல்லச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் ஏராளமானோர் சங்காரமாவார்கள். மரணம் எல்லா இடங்களிலும் ஜெயமாக பிரவேசிக்கும். யாராலும் மரணத்திற்கு தப்பிக்க முடியாது. சாதாரண வீடுகளிலும் மரணம் பிரவேசிக்கும். அது அரமனைகளிலும் பிரவேசிக்கும். மரித்துப்போனவர்களின் சரீரங்கள் அடக்கம்பண்ணப்படாமல் வீதிகளில் கிடக்கும்.

மேன்மைபாராட்டுகிறவன் எரே 9:23,24

எரே 9:23. ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்.

எரே 9:24. மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து பயம் இருக்கவேண்டும். கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு பயப்படவில்லை. ஆனாலும் தங்களிடத்தில் ஞானம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். தங்கள் ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிறார்கள். "ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்" என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி யூதா மனுஷர் மத்தியிலே தேவனுடைய நியாயத்தீர்ப்பைப்பற்றிச் சொன்னார். அவர்களோ நியாயத்தீர்ப்புக்கு பயப்படவுமில்லை. நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள, தங்களுக்கு தேவனுடைய கிருபையும் இரக்கமும் வேண்டும் என்று நினைக்கவுமில்லை. அவர்கள் தேவனை நம்பவுமில்லை. தேவனிடத்தில் விண்ணப்பம்பண்ணவுமில்லை.

யூதாவின் மனுஷர் கர்த்தரை நம்பாமல், தங்கள் சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும், தங்கள் ஐசுவரியத்தையும், ஞானத்தையும் நம்புகிறார்கள். யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு முன்பாக தங்களை தாழ்த்தாமல், தங்கள் இருதயத்தில் பெருமையோடிருக்கிறார்கள். அவர்களுடைய மனதின் பெருமையும் அவர்களுடைய அழிவுக்கு ஒரு காரணமாயிருக்கிறது.

இஸ்ரவேலின் பரிசுத்தராகிய தேவன் தம்முடைய ஜனத்தோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். ஆனால் யூதாவின் மனுஷரோ உடன்படிக்கையை முறித்துப் போடுகிறார்கள். கர்த்தரை நம்பாமல் உலகப்பிரகாரமான காரியங்களை நம்புகிறார்கள். யூதாவின் மனுஷர் ஞானமுள்ளவர்கள்தான். ஆனால் அது உலகப்பிரகாரமான ஞானம். அவர்களுடைய ஞானம் ஆவிக்குரிய ஞானமோ, அல்லது தெய்வீக ஞானமோ அல்ல. வரப்போகிற அழிவுக்கு, அவர்களுடைய ஞானம் அவர்களை தப்பிக்க வைக்காது. ஆகையினால் ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மை பாராட்டுவதினால், அவனுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

நம்முடைய ஞானம் நமக்கு உதவி செய்யாது. நம்முடைய திட்டங்களும், கற்பனைகளும் நமக்கு உதவிசெய்யாது. கர்த்தர் மாத்திரமே நமக்கு உதவிசெய்யக்கூடியவர். அவர் மாத்திரமே நமக்கு போதுமானவர். யூதாவின் மனுஷரோ, தங்கள் ஞானத்தை நம்புவதுபோல, தங்கள் பராமக்கிரமத்தையும் நம்புகிறார்கள். "பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யுத்தத்தில் யார் வேண்டுமானாலும் ஜெயிக்கலாம். பராக்கிரமசாலிகள்தான் ஜெயிக்கவேண்டும் என்னும் நிபந்தனை எதுவுமில்லை. தாவீது கோலியாத்தோடு யுத்தம்பண்ணினார். கோலியாத் ஒரு பராக்கிரமசாலி. தாவீது அப்போது ஒரு சிறு பையன். சரீர பெலமில்லாதவன். ஆனாலும் இந்த யுத்தத்தில் கோலியாத் தோற்றுப்போனான். தாவீது ஜெயித்தற்கு, கர்த்தருடைய உதவிதான் காரணம். கர்த்தர் தாவீதோடு கூடயிருந்தார். தாவீதுக்கு ஜெயமுண்டாயிற்று.

நமக்கும் தேவனுடைய உதவியும், ஒத்தாசையும் தேவை. தேவனுடைய உதவியில்லாமல், நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. மனுஷர் தங்கள் வல்லமையினால் எல்லாவற்றையும் செய்ய முடியும் என்று நினைக்கிறார்கள். ஆனால் இது தப்பான எண்ணம். தேவனுடைய உதவியில்லையென்றால், நம்முடைய பெலனும், பராக்கிரமமும் ஒன்றுக்கும் உதவாது.

யூதாவின் மனுஷரிடத்தில் ஐசுவரியம் இருக்கிறது. கல்தேயர்கள் தங்கள் தேசத்தின்மீது யுத்தம் பண்ண வந்தாலும், தங்களுடைய ஐசுவரியம் தங்களைப் பாதுகாக்கும் என்று யூதர்கள் நினைக்கிறார்கள். தங்கள் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிறார்கள். கர்த்தரோ அவர்களைப் பார்த்து, "ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்" என்று சொல்லுகிறார்.

பணத்தால் எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என்று ஒரு சிலர் தப்பிதமாக நினைக்கிறார்கள். ஐசுவரியவானுடைய சம்பத்து அவனுக்கு அரணான கோட்டையைக் போலிருக்கும் என்று சொல்லுகிறார்கள். பணத்தால் எல்லாவற்றையும் விலைக்கு வாங்கமுடியாது. இந்த உலகத்தில் கிரயத்திற்கு வாங்கக்கூடிய பொருட்களும் உள்ளது. எவ்வளவு கிரயம் செலுத்தினாலும் வாங்கமுடியாத பொருட்களும் உள்ளது. ஆகையினால் ஐசுவரியவான் தங்கள் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மை பாராட்டக்கூடாது.

யூதா மனுஷருடைய ஐசுவரியம் கல்தேயரிடமிருந்து அவர்களைக் காப்பாற்றாது. ஆனால் யூதர்களோ தங்களுடைய ஞானத்தை நம்புகிறார்கள். கல்தேயருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண, தங்களுடைய ஞானிகள் தங்களுக்கு ஞானமுள்ள யோசனைகளையும், போர் தந்திரங்களையும் வகுப்பார்கள் என்று நினைக்கிறார்கள். இந்த யுத்தத்தில் தங்களுடைய பராக்கிரமசாலிகள் கல்தேயருக்கு விரோதமாய் தைரியமாய் யுத்தம்பண்ணுவார்கள் என்று திட்டமிடுகிறார்கள். யுத்தம் பண்ண பணம் வேண்டும். தங்களுடைய ஐசுவரியவான்கள், யுத்தம் பண்ணுவதற்கு ஆகும் செலவுகளை பொறுப்பேற்றுக் கொள்வார்கள் என்று யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் நினைக்கிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கு வருவதுபோலவே, எல்லோருக்கும் பாடுகளும், பிரச்சனைகளும் வருகிறது. நாம் பிரச்சனைகளை சந்திக்கும்போது, நம்முடைய கடமைகளை நாம் செய்தோம் என்று நினைத்து ஆறுதலடைகிறோம். நம்மால் என்ன செய்ய முடியுமோ அதை செய்து பார்த்தோம் என்று மனநிம்மதியோடு சொல்லுகிறோம். யூதாவின் மனுஷரும் இதுபோலத் தான் சொல்லுகிறார்கள். தங்களுடைய ஞானத்தையும், பராக்கிரமத்தையும், ஐசுவரியத்தையும் செலவுபண்ணி பார்ப்போம் என்று சொல்லுகிறார்கள். நாம் செய்ய வேண்டிய கடமைகளை நாம் செய்வோம் என்று சொல்லுகிறார்கள்.

ஆனாலும் அவர்கள் கர்த்தரை அறியமாட்டோம் என்கிறார்கள். கர்த்தரே தங்களுடைய தேவன் என்றும், கர்த்தருடைய வார்த்தைக்கு தாங்கள் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. நம்முடைய ஜீவியத்தில் நாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு பிரியமான பிள்ளைகளாகவும், பிரயோஜனமுள்ள பிள்ளைகளாகவும் ஜீவிக்கவேண்டும். இப்படி ஜீவிக்கும்போது, நமக்கு பாடுகளும் வேதனைகளும் வந்தால், அந்த வேதனைகளுக்கு மத்தியிலும் நம்மால் சந்தோஷமாயிருக்க முடியும். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது என்று நம்மால் சமாதானமாய்ச் சொல்ல முடியும். கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்று நமக்கு நாமே ஆறுதல் சொல்ல முடியும்.

நாம் எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரை நம்பவேண்டும். கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற கடமைகளை நிறைவேற்றவேண்டும். அப்போதுதான் நம்மால் கர்த்தருக்குள் சந்தோஷமாயும், ஆறுதலாயும் இருக்க முடியும். கர்த்தர் நமக்கு போதுமானவர் என்று நம்மால் விசுவாசத்தோடு சொல்ல முடியும்.

கர்த்தர் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும், நீதியையும் செய்கிறவர். நாம் கர்த்தரை அறிந்து உணர்ந்து கொள்ளும்போது, அவருடைய தெய்வீக சுபாவத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் கர்த்தருக்குள் நம்மால் சந்தோஷமாயிருக்க முடியும். நாம் எங்கேயிருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்தாலும், கர்த்தரும் நம்மோடு கூடயிருக்கிறார் என்னும் நம்பிக்கை நமக்குள் உருவாகும். அதோடு கர்த்தர் நமக்கு கிருபையையும், நியாயத்தையும், நீதியையும் செய்வார் என்னும் விசுவாசமும் நமக்குள் உண்டாகும்.

கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவர் எல்லா ஜீவராசிகளிடத்திலும் அன்பாயிருக்கிறார். எல்லோருக்கும் நீதியைச் செய்கிறார். தம்முடைய பிள்ளைகளுக்கு நன்மையான ஈவுகளைக் கொடுக்கிறார். அவர்களைப் பாதுகாத்து பராமரிக்கிறார். நாம் வேதனையிலும் வருத்தத்திலும் இருக்கும்போது கர்த்தரே நமக்கு ஆறுதல் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக சுபாவங்களில் பிரியமாயிருக்கிறார்.

கர்த்தர் நல்லவர். அவர் கிருபை என்றுமுள்ளது. தம்மை நோக்கிக் கூப்பிடுகிற எல்லோருக்கும் அவர் சமீபமாயிருக்கிறார். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். அவர்கள் செழித்திருப்பார்கள். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளுமோ கர்த்தரை நம்பாமல், அவருடைய இரக்கத்தையும், நியாயத்தையும், நீதியையும் நம்பாமல், தங்களுடைய ஞானத்தையும், பராக்கிரமத்தையும், ஐசுவரியத்தையும் நம்புகிறார்கள்.

இதோ, நாட்கள் வரும் எரே 9:25,26

எரே 9:25. இதோ, நாட்கள் வரும்; அப்பொழுது விருத்தசேதனமில்லாதவர்களோடுங்கூட விருத்தசேதனமுள்ள யாவரையும்,

எரே 9:26. எகிப்தையும், யூதாவையும், ஏதோமையும், அம்மோன் புத்திரரையும், மோவாபையும், கடைசி எல்லைகளிலுள்ள வனாந்தரக்குடிகளான யாவரையும் தண்டிப்பேன்; புறஜாதியார் அனைவரும் விருத்தசேதனமில்லாதவர்கள்; ஆனாலும், இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரும் இருதயத்திலே விருத்தசேதனமில்லாதவர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி யூதா மனுஷர் மத்தியில் அவர்களுடைய பாவங்களைக் கண்டித்து உணர்த்துகிறார். யூதர்கள் விருத்தசேதனம் செய்திருக்கிறார்கள். இது அவர்கள் கர்த்தரோடு செய்துகொண்ட சரீரப்பிரகாரமான உடன்படிக்கை. யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தமாய், தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும் என்று எரேமியா எச்சரிக்கிறார். ஆனால் அவர்களோ சரீரப்பிரகாரமாக உடன்படிக்கையான விருத்தசேதனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேலின் ஆண்மக்கள் தங்கள் சரீரத்தில் விருத்தசேதனம் செய்திருப்பதினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தங்கள்மேல் வராது என்றும், கர்த்தருடைய கோபம் தங்கள்மீது வராது என்றும், தாங்களோ, தங்களுடைய தேசமோ அழியாது என்றும் யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மெய்யாகவே கர்த்தருடைய ஜனங்கள். இதற்கு அடையாளமாக அவர்கள் தங்கள் சரீரத்தில் விருத்தசேதனம் செய்திருக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோருமே சரீரத்தில் விருத்தசேதனமுள்ளவர்கள். புறஜாதியார் அனைவரும் விருத்தசேதனமில்லாதவர்கள். ஆனால் கர்த்தரோ துன்மார்க்கர் எல்லோரையும் தண்டிப்பதாக சொல்லுகிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாளின்போது, சரீரப்பிரகாரமான விருத்தசேதனத்திற்கு முக்கியத்துவம் இருக்காது. பாவம் செய்தவர்கள் எல்லோருக்குமே தண்டனை கிடைக்கும்.

இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் சரீரத்தில் விருத்தசேதனம் செய்துகொண்டால் மாத்திரம் போதாது. அவர்களுடைய இருதயத்திலும் விருத்தசேதனம் பண்ணவேண்டும். அவர்களுடைய இருதயம் சுத்தமாயிருக்க வேண்டும். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரின் இருதயமோ திருக்குள்ளதும், கேடுள்ளதுமாயிருக்கிறது. அவர்களுடைய இருதயங்களில் பொல்லாப்பு நிரம்பியிருக்கிறது. அவர்களுடைய கிரியைகள் துன்மார்க்கமாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய நீதியின் பிரகாரமாய் துன்மார்க்கரைத் தண்டிக்கிறார். அவர்கள் விருத்தசேதனமுள்ளவர்களா அல்லது விருத்தசேதனமில்லாதவர்களா என்று கர்த்தர் வித்தியாசம் பார்ப்பதில்லை. பாவம் செய்த யாவரையும் கர்த்தர் தண்டிக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் விருத்தசேதனம் செய்ததினால், அவர்களுக்கு கர்த்தரிடத்திலிருந்து எந்த சலுகையும் கிடைக்கவில்லை. கர்த்தர் அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாய், அவர்களை பட்சபாதமில்லாமல் தண்டித்துவிடுவார்.

தேவனாகிய கர்த்தர் சர்வலோகத்திற்கும் அதிபதியாகவும், நியாயாதிபதியாகவும் இருக்கிறார். அவரிடத்தில் பட்சபாதம் எதுவுமில்லை. கர்த்தருக்கு பணத்தைக் கொடுத்தோ அல்லது காணிக்கைகளை செலுத்தியோ அல்லது சரீரத்தில் விருத்தசேதனம் செய்தோ கர்த்தருடைய நியாயத்தீர்ப்பிலிருந்து யாராலும் தப்பிக்க முடியாது. நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால் கர்த்தர் நம்மை மன்னிப்பார். நாம் மனந்திரும்பாமல், பாவத்தில் துணிகரமாயிருந்தால் கர்த்தர் நம்மைத் தண்டிப்பார். இதுவே கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு.

கர்த்தர் யூதா தேசத்தாரை நியாயந்தீர்ப்பதுபோல, எகிப்தையும், யூதாவையும், ஏதோமையும், அம்மோன் புத்திரரையும், மோவாபையும், கடைசி எல்லைகளிலுள்ள வனாந்தரக்குடிகளான யாவரையும் நீதியாய் நியாயந்தீர்ப்பார். அவர்கள் யாராகயிருந்தாலும், எந்த தேசத்தாராயிருந்தாலும், எந்த ஜாதியாராயிருந்தாலும், எந்த ஜனத்தாராயிருந்தாலும் கர்த்தர் அவர்கள் எல்லோரையும் நீதியாய் நியாயந்தீர்ப்பார்.

கடைசி எல்லைகளிலுள்ள வனாந்தர குடிகள் என்னும் வாக்கியம் கெதரேனரைக் குறிக்கும் என்றும், ஆத்சோரின் ராஜ்யங்களிலுள்ளவர்களைக் குறிக்கும் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முறியடிக்கும் கேதாரையும் காத்சோருடைய ராஜ்யங்களையும் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: எழும்பி, கேதாருக்கு விரோதமாகப் போய், கீழ்த்திசைப்புத்திரரைப் பாழாக்குங்கள். அவர்களுடைய கூடாரங்களையும் அவர்களுடைய மந்தைகளையும் வாங்கி, அவர்களுடைய திரைகளையும் அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்டுகளையும் அவர்களுடைய ஒட்டகங்களையும் தங்களுக்கென்று கொண்டுபோய், எத்திசையும் பயம் என்று சொல்லி, அவர்கள்மேல் ஆர்ப்பரிப்பார்கள்" (எரே 49:28-29).

"காத்சோரின் குடிகளே, ஓடி, தூரத்தில் அலையுங்கள்; பள்ளத்தில் ஒதுங்கிப் பதுங்குங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் உங்களுக்கு விரோதமாக ஆலோசனை செய்து, உங்களுக்கு விரோதமாக உபாயங்களைச் சிந்தித்திருக்கிறான். அஞ்சாமல் நிர்விசாரமாய்க் குடியிருக்கிற ஜாதிக்கு விரோதமாக எழும்பிப்போங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அதற்கு வாசல்களுமில்லை, தாழ்ப்பாள்களுமில்லை; அவர்கள் தனிப்படத் தங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய ஒட்டகங்கள் கொள்ளையும், அவர்களுடைய ஆடுமாடுகளின் ஏராளம் சூறையுமாகும்; நான் அவர்களைச் சகல திசைகளுமான கடையாந்தர மூலைகளில் இருக்கிறவர்களிடத்துக்குச் சிதறடித்துவிட்டு, அதினுடைய சகல பக்கங்களிலுமிருந்து அவர்களுக்கு ஆபத்தை வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 49:30-32).

எகிப்தியர், ஏதோமியர், அம்மோன் புத்திரர், மோவாபியர், கடைசி எல்லைகளிலுள்ள வனாந்தர குடிகள் ஆகியோர் யாவரும் விருத்தசேதனமில்லாதவர்கள். யூதா வம்சத்தார் அனைவரும் விருத்தசேதனமுள்ளவர்கள். ஆனாலும் யூதாவின் வம்சத்தாரும் இவர்களுடைய அட்டவணையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் சரீரத்தில் விருத்தசேதனமுள்ளவர்களாயிருந்தாலும், இருதயத்திலே விருத்தசேதனமில்லாதவர்கள். விருத்தசேதனம் ஒரு அடையாளம். அவர்களிடத்தில் அடையாளமிருக்கிறது. ஆனால் இந்த அடையாளம் எதைக் குறிக்கிறதோ அந்த சத்தியம் அவர்களிடத்தில் இல்லை.

"யூதா மனுஷரே, எருசலேமின் குடிகளே, உங்கள் கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப்போல எழும்பி, அவிப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம் பண்ணி, உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள்" (எரே 4:4).

10 அதிகாரம்

கல்தேயர்கள் யூதா தேசத்தின்மீது யுத்தம்பண்ணுகிறார்கள். அவர்கள் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். கல்தேயருடைய தேசத்திலே விக்கிரகாராதனை அதிகமாயிருக்கிறது. யூதாவின் மனுஷர் அந்நிய தேசத்து சிறையிலிருப்பிலிருக்கும் போது, அவர்கள் புறஜாதிகளுடைய மார்க்கத்தை கற்றுக்கொள்ளக்கூடாது என்று கர்த்தர் அவர்களை எச்சரிக்கிறார் (எரே 10:1,2).

கல்தேயருடைய விக்கிரகாராதனையும், வானசாஸ்திரங்களும் மதியீனமானவை (எரே 10:3-5). கல்தேயர்கள் மிருககுணமும் மதியீனமுமுள்ளவர்கள் (எரே 10:8,9). கர்த்தருடைய விசாரிப்பின் நாளிலே விக்கிரகங்கள் எல்லாம் அழியும் (எரே 10:14,15).

கர்த்தருக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. யூதாவம்சத்தார் இஸ்ரவேலின் பரிசுத்தரை மாத்திரமே தங்கள் தேவனாக அங்கீகரிக்கவேண்டும். அவரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும் (எரே 10:10-13). கர்த்தருடைய ஜனத்தார் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள் (எரே 10:16).

கல்தேயர்கள் யூதாதேசத்தாரை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்து சென்றாலும், யூதாவின் மனுஷரில் சிலர் யூதா தேசத்திலேயே தங்கிவிடுகிறார்கள். அவர்களுக்கு தேசத்திலே பாதுகாப்பு இல்லை (எரே 10:17,18). அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்கள்மீது, அந்நிய தேசத்திலிருந்து சத்துருவை வரப்பண்ணுவார் (எரே 10:20-22).

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் அனுபவிக்கிற உபத்திரவங்களை நினைத்து மனவேதனைப்படுகிறார். அவர்களுக்காக அழுது புலம்புகிறார் (எரே 10:19). கர்த்தர் தம்முடைய ஜனத்தை மட்டாய்த் தண்டிக்கவேண்டுமென்று எரேமியா விண்ணப்பம்பண்ணுகிறார் (எரே 10:23-25).

விக்கிரகங்கள்
எரே 10:1-5

எரே 10:1. இஸ்ரவேல் வீட்டாரே, கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிற வசனத்தைக் கேளுங்கள்:

எரே 10:2. புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளாதிருங்கள்; வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குகிறார்களே என்று சொல்லி, நீங்கள் அவைகளாலே கலங்காதிருங்கள்.

எரே 10:3. ஜனங்களின் வழிபாடுகள் வீணாயிருக்கிறது; காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறார்கள்; அது தச்சன் கையாடுகிறவாச்சியால் பணிப்படும்.

எரே 10:4. வெள்ளியினாலும் பொன்னினாலும் அதை அலங்கரித்து, அது அசையாதபடிக்கு அதை ஆணிகளாலும் சுத்திகளாலும் உறுதியாக்குகிறார்கள்.

எரே 10:5. அவைகள் பனையைப்போல நெட்டையாய் நிற்கிறது, அவைகள் பேசமாட்டாதவைகள், அவைகள் நடக்கமாட்டாததினால் சுமக்கப்பட வேண்டும்; அவைகளுக்குப் பயப்பட வேண்டாம்; அவைகள் தீமைசெய்யக் கூடாது, நன்மைசெய்யவும் அவைகளுக்குச் சக்தி இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷரிடத்தில் புறஜாதியாரின் விக்கிரகாராதனைக்கு விரோதமாய் எச்சரித்துச் சொல்லுகிறார். கர்த்தர் நமக்கு சொல்லுகிற வசனத்தை நாம் கேட்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய நன்மைக்காகவே, கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை, வேதபுஸ்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். நாம் பாவத்தைவிட்டு விலகுவதற்கும், பரிசுத்தமாய் ஜீவிப்பதற்கும், கர்த்தருடைய வசனம் நம்மை வழிநடத்தும். பாவத்திற்கு விலகி ஜீவிக்கும்போது, நாம் கர்த்தருடைய மிலாறுகளுக்குத் தப்பித்துக்கொள்ளலாம்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் புறஜாதி மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளக்கூடாது என்று எரேமியா அவர்களுக்கு பொதுவான எச்சரிப்பைச் சொல்லுகிறார். இஸ்ரவேல் வீட்டார், கர்த்தர் தங்களுக்கு சொல்லுகிற வசனத்தைக் கேட்கவேண்டும். அவர்கள் புறஜாதியாருடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளக்கூடாது. கர்த்தருடைய மார்க்கத்தை மாத்திரமே கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் புறஜாதியாரின் மார்க்கத்தை அங்கீகரிக்கவும் கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் புறஜாதி மார்க்கம் கலந்துவிடக்கூடாது. யூதாவின் மனுஷர் புறஜாதியாரின் பழக்க வழக்கங்களை கற்றுக்கொண்டு, அவற்றை தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்ளக்கூடாது. புறஜாதியார் வானத்தின் அடையாளங்களால் கலங்குகிறார்கள். அவர்கள் வானத்திலுள்ள கிரகங்களை தங்கள் தெய்வங்களாக அங்கீகரித்து, அவற்றை ஆராதிக்கிறார்கள். சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் ஆகியவையெல்லாமே புறஜாதிகளுக்கு தெய்வங்களாயிருக்கிறது.

புறஜாதிகள் வானத்திலுள்ள சந்திரன், சூரியன் ஆகியவற்றிடமிருந்து தங்களுக்கு தெய்வீக உதவிகளை எதிர்பார்க்கிறார்கள். அவற்றை தெய்வங்களாக நம்பி கனம்பண்ணுகிறார்கள். அவர்கள் வானத்தின் அடையாளங்களால் கலங்குவதுபோல, கர்த்தருடைய பிள்ளைகள் கலங்கக்கூடாது. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் திசைமாறிவிட்டால், புறஜாதியாருக்கு பயமும் கலக்கமும், நடுக்கமும் உண்டாகும்.

புறஜாதியார்கள் வானத்தின் நட்சத்திரங்களை நம்புகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ, நட்சத்திரங்களை நம்பாமல், நட்சத்திரங்களை சிருஷ்டித்தவரையே நம்பவேண்டும். நாம் கர்த்தருக்கு மாத்திரமே பயப்படவேண்டும்.

நாம் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்தால், நமக்குள் சந்தோஷமும் சமாதானமும் இருக்கும். நாம் வானத்தின் அடையாளங்களைப் பார்த்து கலங்கமாட்டோம். கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் மனுஷருக்கும், வானத்தின் அடையாளங்களுக்கும் பயப்படமாட்டார்கள். நாம் கர்த்தரோடு சமாதானமாயிருக்கும்போது, சந்திரனும் சூரியனும், நட்சத்திரங்களும் நம்முடைய சமாதானத்தை கெடுத்துப்போடாது. கர்த்தரை நம்புகிறவர்களுக்கு கலக்கமில்லை.

புறஜாதி ஜனங்களின் வழிபாடுகள் வீணாயிருக்கிறது. அவர்களுடைய விக்கிரகங்களும், விக்கிரகாராதனைகளும் மாயையாயிருக்கிறது. கல்தேயர்கள் வானத்திலுள்ள சந்திரனையும், சூரியனையும், நட்சத்திரங்களையும் தங்கள் தெய்வங்களாக நம்பி, அவற்றை ஆராதிக்கிறார்கள். தங்களுக்கு வானசாஸ்திரம் தெரிந்திருப்பதினால், மற்ற ஜாதிகளைவிட, தங்களுக்கு அதிக ஞானமுண்டு என்று கல்தேயர்கள் நினைக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசியோ, கல்தேயருடைய விக்கிரக வழிபாடுகள் வீணாயிருக்கிறது என்று சொல்லுகிறார்.

விக்கிரகங்களை ஆராதிக்கிற கல்தேயருக்கு பொதுவான ஞானமில்லை. அவர்களுக்கு பொதுவான அறிவுமில்லை. அவர்கள் ஆராதிக்கிற விக்கிரகங்கள் மரத்தினால் செய்யப்பட்டிருக்கிறது. "அவர்கள் காட்டில் ஒரு மரத்தை வெட்டுகிறார்கள்; அது தச்சன் கையாடுகிறவாச்சியால் பணிப்படும். வெள்ளியினாலும் பொன்னினாலும் அதை அலங்கரித்து, அது அசையாதபடிக்கு அதை ஆணிகளாலும் சுத்திகளாலும் உறுதியாக்குகிறார்கள்" (எரே 10:3,4).

கர்த்தரே மனுஷனை சிருஷ்டித்திருக்கிறார். அவர் நம்முடைய சிருஷ்டிகராகவும், நாம் அவருடைய சிருஷ்டிகளாகவும் இருக்கிறோம். விக்கிரகாரானைக்காரரோ, தங்களுக்கு தெய்வங்களை உண்டுபண்ணுகிறார்கள். விக்கிரகங்கள் எல்லாம் மனுஷருடைய கைகளின் கிரியைகளாயிருக்கிறது.

"கொல்லன் இரும்பைக் குறட்டால் இடுக்கி, உலையிலே காயவைத்து, சுத்திகளால் அதை உருவாக்கி, தன் புயபலத்தினால் அதைப் பண்படுத்துகிறான்; பட்டினியாயிருந்து பெலனற்றுப்போகிறான்; தண்ணீர் குடியாமல் களைத்துப்போகிறான். தச்சன் நூல்பிடித்து, மட்டப் பலகையால் மரத்துக்குக் குறிபோட்டு, உளிகளினால் உருப்படுத்தி, கவராசத்தினால் அதை வகுத்து, மனுஷ சாயலாக மனுஷரூபத்தின்படி உருவமாக்குகிறான்; அதைக் கோவிலிலே நாட்டி வைக்கிறான்" (ஏசா 44:12,13) என்று ஏசாயா விக்கிரகங்களைப்பற்றிச் சொல்லுகிறார்.

மரத்தினால் செய்யப்படும் கதவு, நிலை, ஜன்னல், மேஜை ஆகியவற்றிற்கும், விக்கிரகங்களுக்கும் வித்தியாசமில்லை. இவையெல்லாமே தச்சனுடைய கையின் கிரியைகள். விக்கிரகங்கள் மரத்தினால் செய்யப்பட்டாலும், அந்த மரத்தை மூடி மறைப்பதற்காக அதை வெள்ளியினாலும், பொன்னினாலும் மூடி அலங்கரிக்கிறார்கள். அது அசையாதபடிக்கு, அதன்மீது ஆணிகளை அடித்து உறுதிபண்ணுகிறார்கள். விக்கிரகங்களை ஆணியடித்து பாதுகாக்கவில்லையென்றால் அவை கீழே விழுந்துவிடும். விக்கிரகங்கள் பொன்னாலும் வெள்ளியாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. விக்கிரகங்களை சரியாக பாதுகாக்கவில்லையென்றால், திருடர்கள் அதை கொள்ளையடித்து சென்றுவிடுவார்கள்.

மனுஷருடைய கைகளால் செய்யப்பட்ட விக்கிரகங்கள் பனையைப்போல நெட்டையாய் நிற்கிறது. பல விக்கிரகங்கள் பார்வைக்கு கம்பீரமாயிருக்கும். அது மனுஷரிடத்திலே பேசுவதற்கு ஆயத்தமாயிருப்பதுபோல, தன் வாயை விரிவாய்த் திறந்திருக்கும். ஆனால் விக்கிரகங்களால் பேசமுடியாது. அவற்றால் நடக்கவும் முடியாது. சில விக்கிரகங்கள் குதிரைகள்மேல் ஏறி நிற்கும். குதிரையும் ஓடாது. விக்கிரகங்களும் நடக்காது. அவைகள் நடக்கமாட்டாததினால், அவற்றை சுமக்கவேண்டும்.

விக்கிரகங்களுக்கு பயப்படவேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைசெய்யக்கூடாது, நன்மைசெய்யவும் அவைகளுக்குச் சக்தி இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 10:5). விக்கிரகங்கள் மரத்தால் செய்யப்பட்டிருக்கிறது. அவை பொன்னாலும், வெள்ளியாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. விக்கிரகங்களை எப்படித்தான் அலங்காரம் பண்ணினாலும், அவை நம்முடைய ஆராதனைக்கு பாத்திரமானவையல்ல. விக்கிரகமும், அதைப்பற்றிய போதனையும் மாயையாயிருக்கிறது (எரே 10:8).

விக்கிரகங்களைப்பற்றிய போதனைகளில் உண்மையில்லை. அவையெல்லாம் பொய்யும் கட்டுக்கதைகளுமாயிருக்கிறது. விக்கிரங்களை ஆராதிக்கிறவர்களுக்கு தேவனைப்பற்றிய சத்தியம் தெரியாது. விக்கிரகங்களை மரத்தினால் செய்திருந்தாலும், அதில் மனுஷருடைய வேலைப்பாடுகள் ஏராளமாயிருக்கும். தச்சர்கள் மிகுந்த சிரமப்பட்டு, அதிக பிரயாசப்பட்டு விக்கிரகங்களை செய்திருப்பார்கள். விக்கிரகங்களை விசேஷித்த வழிகளில் செய்யவேண்டும். தச்சர் தன்னுடைய கைத்திறமைகளை அதில் அதிகமாய் பயன்படுத்தவேண்டும். அப்போதுதான் காட்டில் வெட்டப்பட்ட மரங்களுக்கு உருவத்தைக் கொடுக்க முடியும்.

விக்கிரகங்களை அலங்கரிப்பதற்காக பயன்படுத்தப்படும் வெள்ளியும், பொன்னும் அதிக விலைமதிப்புள்ளவை. சுத்தப்பொன்னும், சுத்தவெள்ளியும் விக்கிரகாராதனையில் பயன்படுத்தப்படுகிறது.

தகடாக்கப்பட்ட வெள்ளி தர்ஷீசிலும், பொன் ஊப்பாசிலுமிருந்து கொண்டுவரப்பட்டு, அவைகள் தொழிலாளியினாலும், தட்டான் கைகளினாலும் செய்யப்படுகிறது; இளநீலமும் இரத்தாம்பரமும் அவைகளின் உடுமானம்; அவைகளெல்லாம் தொழிலாளிகளின் கைவேலையாயிருக்கிறது (எரே 10:9).

காட்டிலுள்ள சாதாரண மரத்தினால் தச்சர் விக்கிரகத்தை செய்கிறார். விக்கிரகத்தை எப்படித்தான் அலங்காரம் பண்ணினாலும், அது அடிப்படையில் ஒரு மரம் தான். அது வெளிப்பார்வைக்கு அழகாகயிருக்கும். உள்ளே அது மரமாகத்தான் இருக்கும். தட்டார் அனைவரும் தாங்கள் வார்ப்பித்த சுரூபங்களாலே வெட்கிப்போவார்கள். அவர்கள் வார்ப்பித்த விக்கிரகங்களில் ஆவியில்லை. விக்கிரகம் பொய்யே என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 10:14).

தட்டாரும் தச்சரும் மிகவும் கஷ்டப்பட்டு விக்கிரகத்தை செய்கிறார்கள். அந்த விக்கிரகங்களிடமிருந்து அவர்கள் பெரிய காரியங்களை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அவைகளுக்கு சக்தியில்லை. அவைகளால் ஒரு கிரியையும் நடப்பிக்க முடியாது. நன்மையும் செய்ய முடியாது, தீமையும் செய்ய முடியாது.

விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள், தாங்கள் வார்ப்பித்த சுரூபங்களை தங்கள் தெய்வங்களாக நம்புகிறார்கள். விக்கிரகங்களே தங்களுக்கு ஜீவனையும், சுவாசத்தையும் கொடுத்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் விக்கிரகங்களுக்கே ஜீவனில்லை. அவற்றிற்கே சுவாசமில்லை. ஜீவனும் சுவாசமும் இல்லாத விக்கிரகத்தால், தங்களுக்கு ஜீவனையும் சுவாசத்தையும் கொடுக்க முடியாது என்னும் உபதேசம் விக்கிராகாராதனைக்காரருக்குப் புரியவில்லை. மனுஷர் அனைவரும் அறிவில்லாமல், மிருககுணமுள்ளவர்களானார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 10:14).

விக்கிரகங்கள் மாயையும், மகாஎத்தான கிரியையுமாயிருக்கிறது. அவைகளில் ஆவியுமில்லை. ஜீவனுமில்லை. விக்கிரகங்களுக்கு தெய்வத்துவ சுபாவங்களுமில்லை. விக்கிரகங்கள் அசையாது, நடக்காது, பேசாது, நன்மையோ தீமையோ செய்யாது. அது இருந்த இடத்திலிருக்கும். அது எங்கேயாவது போகவேண்டுமென்றால், மனுஷர்தான் அதை தூக்கி சுமக்கவேண்டும்.

மிருகங்களுக்குகூட ஜீவனும் ஆவியும் உண்டு. அவை இயங்கும். விக்கிரகங்களோ இயங்காது. அவை மாயையும் மகாஎத்தான கிரியையுமாயிருக்கிறது. அவைகள் விசாரிக்கப்படும் நாளிலே அழியும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 10:15).

தச்சரும், தட்டாரும் தாங்கள் விரும்பிய பிரகாரம் விக்கிரகங்களை செய்கிறார்கள். அவர்கள் யாவரும் மிருககுணமும் மதியீனமுமுள்ளவர்கள். விக்கிரகமாகிய அந்தக் கட்டை மாயையான போதகமாயிருக்கிறது (எரே 10:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" (ரோம 1:21)

"தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்". (ரோம 1:28).

சேனைகளின் கர்த்தர்
எரே 10:6-16

எரே 10:6. கர்த்தாவே, உமக்கு ஒப்பானவன் இல்லை; நீரே பெரியவர்; உமது நாமமே வல்லமையில் பெரியது.

எரே 10:7. ஜாதிகளின் ராஜாவே, உமக்குப் பயப்படாதிருப்பவன் யார்? தேவரீருக்கே பயப்படவேண்டியது; ஜாதிகளுடைய எல்லா ஞானிகளிலும், அவர்களுடைய எல்லா ராஜ்யத்திலும் உமக்கு ஒப்பானவன் இல்லை.

எரே 10:8. அவர்கள் யாவரும் மிருககுணமும் மதியீனமுமுள்ளவர்கள்; அந்தக் கட்டைமாயையான போதகமாயிருக்கிறது.

எரே 10:9. தகடாக்கப்பட்ட வெள்ளி தர்ஷீசிலும், பொன் ஊப்பாசிலுமிருந்து கொண்டுவரப்பட்டு, அவைகள் தொழிலாளியினாலும், தட்டான் கைகளினாலும் செய்யப்படுகிறது; இளநீலமும் இரத்தாம்பரமும் அவைகளின் உடுமானம்; அவைகளெல்லாம் தொழிலாளிகளின் கைவேலையாயிருக்கிறது.

எரே 10:10. கர்த்தரோ மெய்யான தெய்வம்; அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா; அவருடைய கோபத்தினால் பூமி அதிரும்; அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள்.

எரே 10:11. வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள், பூமியிலும் இந்த வானத்தின்கீழும் இராதபடிக்கு அழிந்துபோகும் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள்.

எரே 10:12. அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினால் விரித்தார்.

எரே 10:13. அவர் சத்தமிடுகையில் வானத்திலே திரளான தண்ணீர் உண்டாகிறது; அவர் பூமியின் கடையாந்தரத்திலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டகசாலைகளிலிருந்து புறப்படப்பண்ணுகிறார்.

எரே 10:14. மனுஷர் அனைவரும் அறிவில்லாமல் மிருககுணமுள்ளவர்களானார்கள்; தட்டார் அனைவரும் வார்ப்பித்த சுரூபங்களாலே வெட்கிப்போகிறார்கள்; அவர்கள் வார்ப்பித்த விக்கிரகம் பொய்யே, அவைகளில் ஆவி இல்லை.

எரே 10:15. அவைகள் மாயையும், மகா எத்தான கிரியையுமாயிருக்கிறது; அவைகள் விசாரிக்கப்படும் நாளிலே அழியும்.

எரே 10:16. யாக்கோபின் பங்காயிருக்கிறவர் அவைகளைப்போல் அல்ல, அவர் சர்வத்தையும் உருவாக்கினவர்; இஸ்ரவேல் அவருடைய சுதந்தரமான கோத்திரம்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மாத்திரமே ஜீவனுள்ளவர். அவர் மாத்திரமே மெய்யான தேவன். கர்த்தருக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. நாம் கர்த்தரோடு எந்த மனுஷனையும் ஒப்பிட்டுச் சொல்லவும் கூடாது. மனுஷனை கர்த்தரோடு ஒப்பிடுவது, மகாபரிசுத்தமான தேவனை தூஷிக்கிற காரியமாகவே இருக்கும்.

எரேமியா தீர்க்கதரிசி இதுவரையிலும் புறஜாதியாருடைய விக்கிரகங்களைப்பற்றி விரிவாகச் சொல்லிக்கொண்டு வந்தார். இப்போதோ இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும் விரிவாகச் சொல்லுகிறார்.

"கர்த்தாவே, உமக்கு ஒப்பானவன் இல்லை; நீரே பெரியவர்; உமது நாமமே வல்லமையில் பெரியது. ஜாதிகளின் ராஜாவே, உமக்குப் பயப்படாதிருப்பவன் யார்? தேவரீருக்கே பயப்படவேண்டியது; ஜாதிகளுடைய எல்லா ஞானிகளிலும், அவர்களுடைய எல்லா ராஜ்யத்திலும் உமக்கு ஒப்பானவன் இல்லை" (எரே 10:6,7) என்று எரேமியா சர்வவல்லமையுள்ள தேவனைப்பற்றிச் சொல்லுகிறார்.

மனுஷனுடைய மகிமை தேவனுடைய மகிமைக்கு ஒப்பானதல்ல. மனுஷன் தன்னுடைய ஞானத்தினால் அநேக யுக்திகளை கண்டுபிடித்திருக்கிறான். தன்னுடைய வல்லமையினால் தேசங்களை ஸ்தாபிக்கிறான். ஆனாலும் தேவனுடைய மகிமையோடு மனுஷனுடைய மகிமையை ஒப்பிட்டுச் சொல்லமுடியாது. புறஜாதியார் தங்களுடைய ராஜாக்களை தெய்வத்தோடு ஒப்பிடுவது வழக்கம். ஒருசில தேசங்களில் தங்கள் ராஜாவையே தெய்வமாக நினைத்து, ராஜாவை ஆராதிக்கிறார்கள். கர்த்தரோ ராஜாதி ராஜாவாயிருக்கிறார்.

கர்த்தரே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். அவரே மனுஷருக்குள் ஆவியை உண்டுபண்ணியிருக்கிறார். கர்த்தர் சர்வவியாபகராக இருப்பதுபோல அவருடைய ராஜ்யமும் சர்வவியாபகமுள்ளது. கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். இந்த உலகத்தில் வல்லமையுள்ள ராஜாக்கள் அநேகர் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய வல்லமையை, தேவனுடைய வல்லமையோடு ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. தேவன் சர்வவல்லமையுள்ளவர். ஆகையினால்தான் எரேமியா தீர்க்கதரிசி, கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "கர்த்தாவே, உமக்கு ஒப்பானவனில்லை" என்று சொல்லுகிறார். கர்த்தரே பெரியவர். அவருடைய நாமமே வல்லமையில் பெரியது.

கர்த்தர் சர்வலோகத்திற்கும் அதிபதியாயிருக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தார் எல்லோரும், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரை தங்கள் தேவனாக அங்கீகரித்து ஆராதிக்கவேண்டும். இஸ்ரவேல் வம்சத்தார் மாத்திரமல்ல, இந்தப் பூமியிலுள்ள எல்லா ஜாதியாரும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை, தங்கள் கர்த்தராக அங்கீரித்து ஆராதிக்கவேண்டும். கர்த்தரே எல்லா ஜாதிகளுக்கும் ராஜாவாயிருக்கிறார்.

கர்த்தரோ மெய்யான தெய்வம்; அவர் ஜீவனுள்ள தேவன், நித்திய ராஜா; அவருடைய கோபத்தினால் பூமி அதிரும்; அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள் (எரே 10:10).

விக்கிரகங்கள் மனுஷருடைய கண்டுபிடிப்புக்கள். அவை மனுஷரால் செய்யப்பட்டவை. கர்த்தரோ சத்தியமுள்ளவர். அவர் சத்தியத்திற்கும் தேவனாயிருக்கிறார். சத்தியத்தின் தேவனாயும் இருக்கிறார். அவர் சத்தியமாயும் இருக்கிறார். கர்த்தர் ஜீவனுள்ள தேவன். அவர் ஜீவனாயும் இருக்கிறார். அவரே சர்வசிருஷ்டிக்கும் ஜீவனைக் கொடுக்கிறார். எல்லா ஜீவராசிகளுக்கும் கர்த்தரே ஜீவஆதாரமாயிருக்கிறார்.

புறஜாதியாரின் விக்கிரகங்களுக்கு ஜீவனில்லை. கர்த்தரோ ஜீவனுள்ளவராகவும் இருக்கிறார். அவர் நித்திய தேவனாயும், நித்திய ராஜாவாயும் இருக்கிறார். கர்த்தருடைய ராஜ்யம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். இந்தப் பூமியிலுள்ள எல்லா தேசங்களும் ஒன்றுசேர்ந்தாலும், அவர்களால் கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியாது. கர்த்தருடைய கோபத்தினால் பூமி அதிரும். அவருடைய உக்கிரத்தை ஜாதிகள் சகிக்கமாட்டார்கள்.

கர்த்தரே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினால் விரித்தார். அவர் சத்தமிடுகையில் வானத்திலே திரளான தண்ணீர் உண்டாகிறது; அவர் பூமியின் கடையாந்தரத்திலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டகசாலைகளிலிருந்து புறப்படப் பண்ணுகிறார் (எரே 10:12,13).

இயற்கையில் நாம் பார்க்கிற எல்லாவற்றையும் கர்த்தரே சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தர் சர்வசிருஷ்டிகர். இந்த வானமும் பூமியும், அவற்றிலுள்ள யாவையும் கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்டவை. எதுவும் தானாக உண்டாகவில்லை. அவரே எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருக்கிறார். கர்த்தரே எல்லா ஜீவனுக்கும் ஜீவஊற்றாயிருக்கிறார். இயற்கையின் எல்லா வல்லமைகளும் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து இயங்கும். அவை கர்த்தர் சொல்ல ஆகும். அவர் சொல்ல நிற்கும்.

இந்த வானமும் பூமியும் தானாய் உண்டாகிவிடவில்லை. கர்த்தர் தம்முடைய வார்த்தையினால் இவற்றை சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை வல்லமையுள்ளது. அவர் சர்வவல்லமையுள்ள தேவன். விக்கிரகங்களுக்கு ஜீவனுமில்லை. பெலனுமில்லை. எந்த விக்கிரகத்தாலும், கர்த்தரைப்போல வானத்தையும் பூமியையும் சிருஷ்டிக்க முடியாது. விக்கிரகங்கள் பேசவும் செய்யாது. ஜீவனில்லாத விக்கிரகங்களை புறஜாதியார் தங்கள் தெய்வங்களாக நம்புகிறார்கள்.

கர்த்தரே நம்மையும், வானத்திலும் பூமியிலுமுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினவர். இந்தப் பூமியில் ஏராளமான ஐசுவரியங்கள் உள்ளன. பூமிக்குள்ளேயும் திரளான கனிவளங்கள் உள்ளன. பூமியின்மேல் கனிவிருட்சங்கள் செழிப்பாய் முளைக்கின்றன. கர்த்தரே பூமிக்குள்ளே உள்ளவற்றையும், பூமிக்கு மேலே உள்ளவற்றையும் சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய வல்லமையினால் பூமியை உண்டாக்கினார். தம்முடைய ஞானத்தினால் பூச்சக்கரத்தைப் படைத்தார். தம்முடைய அறிவினால் வானத்தை விரித்தார்.

பூமியானது வானத்தில் எந்தவித ஆதரவுமில்லாமல், அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது. கர்த்தருடைய வல்லமையே பூமியை ஆகாயத்தில் நிறுத்தி வைத்திருக்கிறது. கர்த்தர் இந்தப் பூமியை மனுஷர் வாழும் ஸ்தலமாக ஆசீர்வதித்துக் கொடுத்திருக்கிறார். நமக்கு வித்தியாசமான சீதோஷ்ண காலங்களைக் கொடுத்து, பூமியை செழிப்பாக்குகிறார். கர்த்தருடைய கிருபையினால்தான், பூமியிலுள்ள ஜீவராசிகளுக்கு ஆகாரம் கிடைக்கிறது.

வானத்தில் பூமியைப்போல, சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் போன்ற ஏராளமான கிரகங்கள் உள்ளன. இவையெல்லாமே கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் இயங்குகின்றன. "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" (சங் 19:1).

வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தும்போது, மனுபுத்திரராகிய நாமும் அவருடைய மகிமையை வெளிப்படுத்தவேண்டும். கர்த்தர் வானத்தின் மூலமாயும், பூமியின் மூலமாயும் நமக்குக் கொடுத்திருக்கிற எல்லாவிதமான ஆசீர்வாதங்களுக்காகவும் நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும். கர்த்தரையே மகிமைப்படுத்தவேண்டும்.

நம்முடைய கண்களை ஏறிட்டு, வானத்தை நோக்கிப் பார்க்கும்போது தேவனுடைய மகத்துவமான கிரியைகளையும், அவருடைய கிருபையுள்ள பராமரிப்புக்களையும் பார்க்க முடியும். கர்த்தர் சத்தமிடுகையில் வானத்திலே திரளான தண்ணீர் உண்டாகிறது; கர்த்தர் பூமியின் கடையாந்தரத்திலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டகசாலைகளிலிருந்து புறப்படப் பண்ணுகிறார் (எரே 10:13).

கர்த்தரே இந்தப் பூமியின்மீது மழையைப் பெய்யப்பண்ணுகிறவர். கர்த்தர் கட்டளையிடும்போது, வானத்திலிருந்து இந்தப் பூமியில் மழை பெய்கிறது. வானத்திலிருந்து பூமிக்கு மழை பெய்வது போலவே, பூமியிலிருந்து வானத்திற்கு மேகமும் எழும்புகிறது. பூமியிலுள்ள தண்ணீர் நீராவியாகி, வானத்திற்கு மேலே போகிறது. வானத்திலிருந்து மறுபடியுமாய் பூமிக்கு மழை பெய்கிறது. இவையெல்லாமே கர்த்தருடைய அற்புதமான கிரியைகள்.

பூமியிலுள்ள மனுபுத்திரர் எல்லோரும் வானத்திலுள்ள மேகங்களுக்காக, கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும். இந்தப் பூமிக்கு தேவையான ஆசீர்வாதமான மழை, கர்த்தருடைய கிருபையினால், பூமியின்மீது பெய்கிறது. பூமி நனைகிறது. விருட்சங்களும், பயிர் வகைகளும் விளைகிறது.

ஒரு தேசத்திற்கு பணம் எவ்வளவு அவசியமோ, அதுபோல இந்தப் பூமிக்கு மழை அவ்வளவு அவசியமாயிருக்கிறது. சரீரத்திற்கு இரத்தம் எந்த அளவுக்கு முக்கியமானதோ, அந்த அளவுக்கு மழையும் பூமிக்கு முக்கியமானது. சரீரத்தில் இரத்த ஓட்டம் எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும். இரத்த ஓட்டம் நின்றுவிட்டால் ஜீவன் போய்விடும். இரத்தம் சரீரத்தின் எல்லா அவயவங்களுக்கும் ஜீவனைக் கொடுக்கிறது. இரத்தம் சரீரத்தின் எல்லா பாகங்களுக்கும் ஓடுகிறது.

மழையும் இந்தப் பூமிக்கு ஜீவாதாரமாயிருக்கிறது. பூமியின் நன்மைக்காக மழை பெய்கிறது. பூமியில் மழை பெய்யவில்லையென்றால், இங்கே ஒரு விருட்சமும் வளராது. எல்லாம் காய்ந்து பட்டுப்போகும். பூமியின்மீது மழை தொடர்ந்து பெய்துகொண்டேயிருக்கவேண்டும். அதுதான் நமக்கு ஆசீர்வாதம். கர்த்தர் தம்முடைய ஞானத்தினால் பூமியின்மீது மழையை பெய்யப்பண்ணுகிறார்.

கர்த்தரே பூமியை சிருஷ்டித்தவர். அவர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தர் தம்முடைய ஞானத்தினால் பூமியை சிருஷ்டித்து, தம்முடைய வல்லமையினால் ஆளுகை செய்கிறார். நாம் பூமியையும், வானத்தையும் பார்க்கும்போது, இவற்றை சிருஷ்டித்த சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகிமையையும், மகத்துவத்தையும் காணவேண்டும். கர்த்தரை மகிமைப்படுத்த வேண்டும்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனங்களோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். யாக்கோபின் பங்காயிருக்கிறவர். சர்வத்தையும் உருவாக்கினவர். இஸ்ரவேல் அவருடைய சுதந்தரமான கோத்திரம். சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம் (எரே 10:16). வானமும் பூமியும் கர்த்தருடையது. நமக்கென்று சொந்தமாக இந்தப் பூமியில் ஒன்றுமில்லை. கர்த்தர் நம்மோடு உடன்படிக்கை பண்ணியிருப்பதினால், கர்த்தர் மூலமாய் இவையெல்லாம் நமக்கு சுதந்தரமாகக் கிடைத்திருக்கிறது.

யாக்கோபின் பங்காயிருக்கிற கர்த்தர், விக்கிரகங்களைப்போலல்ல. விக்கிரங்களுக்கு ஜீவனில்லை. அவை ஒன்றும் செய்யவுமில்லை. அவற்றால் ஒன்றும் செய்யவும் முடியாது. கர்த்தரோ சர்வத்தையும் உருவாக்கினவர். "தங்கள் கன்மலை நம்முடைய கன்மலையைப்போல் அல்ல என்று நம்முடைய சத்துருக்களே தீர்மானிக்கிறார்கள்" (உபா 32:31).

கர்த்தர் நம்முடைய பங்காயிருக்கிறார். நாம் இந்த சத்தியத்தை தியானித்து, கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய பங்காயிருக்கிறார் என்பதை நினைவுகூர்ந்து, நாம் கர்த்தருக்குள் திருப்தியாயிருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய ஜனமாயிருப்பது நமக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். இஸ்ரவேல் கர்த்தருடைய சுதந்தரமான கோத்திரம். நாம் கர்த்தருக்கு விசேஷித்தவர்கள். கர்த்தர் தம்முடைய சுதந்தரத்தின் கோலால் நம்மை தமக்கு சொந்தமாக்கிக்கொள்கிறார்.

நாம் கர்த்தருக்குரியவர்கள். நாம் கர்த்தருக்குள் ஜீவிக்கிறோம். கர்த்தரால் ஜீவிக்கிறோம். கர்த்தரை துதிப்பதும், அவருக்காக ஊழியம் செய்வதும் நமக்கு கிடைத்திருக்கிற சிலாக்கியம். சர்வத்தையும் உருவாக்கின கர்த்தர், நம்முடைய தேவனாயிருப்பது நமக்கு பாக்கியம். அதுவே நம்முடைய மனதிற்கு ஆறுதல். அதுவே நம்முடைய இருதயத்திற்கு ஆசீர்வாதம்.

எரேமியா தீர்க்கதரிசி புறஜாதி தெய்வங்களை, இஸ்ரவேலின் தேவனோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். எல்லா விக்கிரகங்களும் அழிந்துபோகும். புறஜாதியாரின் விக்கிரகங்களில் ஆவியில்லை. அவர்கள் வார்ப்பித்த விக்கிரகம் பொய்யே. அவைகள் மாயையும், மகத்தான கிரியையுமாயிருக்கிறது. அவைகள் விசாரிக்கப்படும் நாளிலே அழியும் (எரே 10:15).

புறஜாதியாரின் விக்கிரகங்கள் அழிந்துபோகும் என்று எரேமியா தீர்க்கதரிசி சொல்லுகிறார். அதன் பின்பு அவர், தேவனுடைய நாமத்தினால், யூதருக்கு சத்தியத்தை உபதேசம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தாரும் புறஜாதியாரிடத்தில் பேசவேண்டும். கர்த்தருடைய மகிமையை அவர்களுக்கு சொல்லவேண்டும். அவர்களுடைய விக்கிரப்ங்கள் அழிந்துபோகும் என்னும் உண்மையை அவர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

"வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள், பூமியிலும் இந்த வானத்தின்கீழும் இராதபடிக்கு அழிந்துபோகும் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள்" (எரே 10:11) என்று எரேமியா யூதாவின் மனுஷரிடத்திலும், எருசலேமின் குடிகளிடத்திலும் சொல்லுகிறார்.

ஆதித்திருச்சபையின் விசுவாசிகளுக்கு ஏராளமான உபத்திரவங்கள் உண்டாயிற்று. அந்நிய தெய்வங்களையும், விக்கிரகங்களையும் ஆராதிக்கவேண்டுமென்று புறஜாதியார் அவர்களைக் கட்டாயப்படுத்தினார்கள். அவர்களைத் துன்பப்படுத்தினார்கள். அக்காலத்தில் திருச்சபையின் விசுவாசிகள், புறஜாதி ஜனங்களிடம் இந்த வசனத்தை சாட்சியாய்ச் சொன்னார்கள். "வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தெய்வத்தை மாத்திரமே நாங்கள் ஆராதிப்போம்" என்று தைரியமாய்ச் சாட்சி சொன்னார்கள். "நாங்கள் புறஜாதி தெய்வங்களை ஆராதிக்கவேண்டுமென்றால், அவை வானத்தையும் பூமியையும் உண்டாக்கட்டும்" என்று அவர்களிடத்தில் தைரியமாய்ப் பேசினார்கள்.

விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள், அவற்றை ஆராதித்து சோர்ந்து போயிருக்கிறார்கள். விக்கிரகங்கள் மூலமாய் அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை. ஆகையினால் அவர்கள் விக்கிரகங்களை விட்டு சந்தோஷமாய் விலகிவருகிறார்கள்.

"பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும் அந்நாளிலே, அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப் பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் வெடிப்புகளிலும் குன்றுகளின் சந்துகளிலும் புகுந்துகொள்ளும்படிக்கு, மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன் விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளுக்கும் துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான்" *(ஏசா 2:20,21).*

அரணில் குடியிருக்கிறவளே எரே 10:17,18

எரே 10:17. அரணில் குடியிருக்கிறவளே, தேசத்திலிருந்து உன் பொருள்களைச் சேர்த்துக்கொள்.

எரே 10:18. இதோ, நான் இந்த முறை தேசத்தின் குடிகளைக் கவண்கொண்டெறிந்து, அவர்கள் கண்டு உணரும்படி அவர்களுக்கு நெருக்கமுண்டாக்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவுக்கும் எருசலேமுக்கும் அழிவு வரப்போகிறது. ஜனங்களுக்கு சீக்கிரத்தில் வரப்போகிற அழிவை எரேமியா தீர்க்கதரிசி தேவனுடைய நாமத்தினால், எச்சரித்துச் சொல்லுகிறார். கல்தேயர்கள் யூதா தேசத்தின்மீது யுத்தம்பண்ணி, ஜனங்களை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்துக்கொண்டு போனார்கள். யூதர்களில் சிலர் கல்தேயருக்கு தப்பித்து தங்கள் தேசத்திலேயே குடியிருக்கிறார்கள். தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக நினைக்கிறார்கள். தாங்கள் அரணில் குடியிருக்கிறவர்கள் என்று தங்களைப்பற்றி பெருமையாகச் சொல்லுகிறார்கள்.

யூதாவின் பட்டணங்கள் அவர்களுக்கு பலத்த துருகமாயும், அரணிப்பான குடியிருப்பாயும் இருந்தது. இந்தப் பாதுகாப்பு அவர்களுக்கு நிலைத்திருக்கவில்லை. யூதஜனத்தாரில் அநேகர் கல்தேயருடைய தேசத்திற்கு சிறைப்பட்டுப்போயிருக்கிறார்கள். யூதாவின் பட்டணங்களில் இருக்கிறவர்களோ, தாங்கள் பாதுகாப்பாய் குடியிருப்பதாக நினைக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி இவர்களுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். தங்களுடைய யூதசகோதரர்களைப்போல, தாங்களும் சிறைப்பட்டுப்போக ஆயத்தமாயிருக்கவேண்டும் என்று சொல்லி எரேமியா அவர்களை எச்சரிக்கிறார். "தேசத்திலிருந்து உன் பொருளை சேர்த்துக்கொள்" (எரே 10:17) என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

யூதாவின் பட்டணங்களில் குடியிருக்கிற யூதஜனத்தாரிடம் ஏராளமான சம்பத்துக்கள் இருக்கிறது. வீட்டுஉபயோக பொருட்களும் திரளாயிருக்கிறது. இவையெல்லாவற்றையும் பயன்படுத்துவதற்கு, அவர்கள் தங்கள் தேசத்தில் இருக்கமாட்டார்கள். சீக்கிரத்திலே அந்நியதேசத்து சிறையிருப்புக்குப் போகபோகிறார்கள். சிறையிருப்புக்குப் போகும்போது தங்களுடைய எல்லா உடமைகளையும் அவர்களால் தூக்கி செல்ல முடியாது. ஆகையினால் அவர்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை மாத்திரம் சேகரித்து, சிறையிருப்புக்குப்போக ஆயத்தமாயிருக்க வேண்டும்.

கல்தேயர்கள் மறுபடியுமாய் யூதாதேசத்தின்மேல் வரப்போகிறார்கள். யூதர்களுடைய பொருட்கள் அங்கும் இங்குமாய் சிதறிக்கிடக்கக்கூடாது. கல்தேயர்கள் வந்து அவர்களுடைய சம்பத்துக்கள் எல்லாவற்றையும் கொள்ளையிடுவார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பு யூதாஜனத்தார்மீது வரப்போகிறது. கல்தேயருடைய கொள்ளைக்கு தப்பித்துக் கொள்ளவேண்டுமென்றால், யூதர்கள் தங்கள் தேசத்திலுள்ள தங்கள் பொருட்களை சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆனால் யூதர்களோ, தங்கள் தேசத்தில் நித்தியகாலமாக குடியிருக்கப்போவதுபோல, ஆடம்பரமாயும், சுகஜீவிகளாயும், உலகத்தை அனுபவிக்கிறார்களாயும் ஜீவிக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கிறது. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்த் தொடர்ந்து பாவம் செய்துகொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் பாவம் செய்யும்போது, கர்த்தர் அவர்களை ஒவ்வொரு முறையும் தண்டிக்கிறார். அவர்களுடைய பாவங்களும் அதிகரிக்கிறது. கர்த்தர் கொடுக்கும் தண்டனைகளும் அதிகரிக்கிறது. "இதோ, நான் இந்த முறை யூதாதேசத்தின் குடிகளை கவண்கொண்டெறிவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். "அவர்கள் கண்டு உணரும்படி அவர்களுக்கு நெருக்கமுண்டாக்குவேன்" என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் யூதாவின் பட்டணங்களைச் சுற்றிலுமாய் முற்றிக்கையிடுகிறார்கள். பல சமயங்களில் அவர்களால் யூதாவின் பட்டணங்களுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. ஆகையினால் அவர்கள் முற்றிக்கையைத் தளர்த்தி தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போய்விடுகிறார்கள். சில சமயங்களில் யூதாவின் பட்டணங்களுக்குள் பிரவேசித்து, யூதாவின் மனுஷரை சங்காரம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய உடமைகளைக் கொள்ளையிடுகிறார்கள்.

இந்த முறை, கல்தேயர்கள், யூதாவின் பட்டணங்களுக்குள் பாதுகாப்பாகயிருக்கும் யூதர்கள்மீது, கவண்கொண்டெறிவார்கள். அலங்கத்தின் கதவுகள் திறக்கப்படாவிட்டாலும், கோட்டைச் சுவர்களில் உடைப்பு காணப்படாவிட்டாலும், கவண்கள் மூலமாய் எரியப்படும் ஆயுதங்கள், அலங்கத்தைத் தாண்டி, பட்டணத்திற்குள்ளே இருக்கிறவர்கள்மீது வந்து விழும். யூதாவின் பட்டணங்களுக்குள் இருக்கிறவர்களுக்கு நெருக்கமுண்டாகும். தங்களுக்கு ஏற்படும் நெருக்கத்தைப் பார்த்து, அவர்கள் கர்த்தருடைய கோபத்தை உணருவார்கள்.

யூதாவின் பட்டணங்களுக்குள் இருக்கிற யூதர்களுக்கு பாதுகாப்பு இருக்காது. அவர்கள் எங்கே ஓடி ஒழிந்தாலும், கவண்கள், அவர்கள்மீது வந்து விழும். அவர்களுக்கு தொடர்ந்து நெருக்கமுண்டாகும். கர்த்தர் தங்களைத் தண்டிக்கமாட்டார் என்று யூதர்கள் இதுவரையிலும் இருமாப்பாயிருந்தார்கள். தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடாமல் போனார்கள். தீர்க்க தரிசிகளை ஏளனம்பண்ணினார்கள். தங்கள் பாவங்களை அவர்கள் உணரவில்லை.

இப்போதோ யூதாவின் பட்டணங்களுக் குள்ளே இருக்கும் ஜனங்களுக்கு நெருக்கமுண்டாகிறது. இந்த நெருக்கம் கர்த்தரால் உண்டாயிற்று என்பதை அவர்கள் உணருகிறார்கள். தங்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் தங்கள்மீது கோபமாயிருக்கிறார் என்பதையும், கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு தங்கள்மீது வந்திருக்கிறது என்பதையும், யூதாவின் மனுஷர் உணருகிறார்கள்.

விசாலமாயிருக்கும்போது தங்கள் பாவத்தை உணராத ஜனங்கள், நெருக்கத்திலிருக்கும்போது உணருகிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம் என்பதைப் புரிந்துகொள்கிறார்கள். தேவன் நீதியுள்ளவர் என்பதையும், அவரிடத்தில் பட்சபாதமில்லை என்பதையும், அவர் எல்லோரையும் நீதியாய் நியாயந்தீர்க்கிறவர் என்பதையும் அறிந்துகொள்கிறார்கள்.

ஐயோ! நான் நொறுக்கப்பட்டேன் எரே 10:19-22

எரே 10:19. ஐயோ! நான் நொறுக்கப்பட்டேன்; என் காயம் கொடிதாயிருக்கிறது; ஆனாலும் இது நான் சகிக்கவேண்டிய என் நோய் என்று நான் சொல்லுவேன்.

எரே 10:20. என் கூடாரம் அழிந்துபோயிற்று, என் கயிறுகளெல்லாம் அறுப்புண்டுபோயின; என் பிள்ளைகள் என்னை விட்டுப்போய்விட்டார்கள்; அவர்களில் ஒருவனுமில்லை; இனி என் கூடாரத்தை விரித்து, என் திரைகளைத் தூக்கிக்கட்டுவாரில்லை.

எரே 10:21. மேய்ப்பர்கள் மிருககுணமுள்ளவர்களாகி, கர்த்தரைத் தேடாமற்போனார்கள்; ஆகையால், அவர்கள் காரியம் வாய்க்காமற்போய், அவர்கள் மந்தையெல்லாம் சிதறடிக்கப்பட்டது.

எரே 10:22. இதோ, யூதாவின் பட்டணங்களைப் பாழும் வலுசர்ப்பங்களின் தாவுமாக்கிப்போடும் செய்தியின் சத்தமும், வடதேசத்திலிருந்து பெரிய கொந்தளிப்பும் வருகிறது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் மிகுந்த வேதனைகளையும், துன்பங்களையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி அவர்களுடைய வேதனைகளைப் பார்த்து புலம்புகிறார். "ஐயோ, நான் நொறுக்கப்பட்டேன்" (எரே 10:19) என்று எரேமியா கதறி அழுகிறார். எரேமியா தனக்காக அழவில்லை. தன்னுடைய யூதாதேசம் அழிந்துபோனதற்காகவும், யூதாவின் மனுஷர் வேதனைகளை அனுபவிப்பதற்காகவும் எரேமியா புலம்பி அழுகிறார்.

"ஐயோ, நான் நொறுக்கப்பட்டேன்" என்னும் வாக்கியத்தை யூதாவின் மனுஷரே சொல்லி புலம்புவதாக வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். யூதா தேசத்தில் திரளான ஜனங்கள் இருந்தாலும் அவர்கள் எல்லோரும் ஒரே தேசமாகயிருக்கிறார்கள். அவர்கள் ஒரே சரீரமாயிருப்பதினால், இங்கு "நான் நொறுக்கப்பட்டேன்" என்று ஒருமையில் சொல்லப்பட்டிருக்கிறது.

யூதாவின் மனுஷர் அழுது புலம்ப வேண்டிய வார்த்தைகளை, எரேமியா தீர்க்கதரிசி அவர்களுடைய வாயிகளில் போடுகிறார். எருசலேமின் குடிகளும், யூதாவின் மனுஷரும் எரேமியா சொல்லுகிற வார்த்தைகளைப் பயன்படுத்தி, அப்படியே அழுகிறார்களா என்பது தெரியவில்லை. ஆனாலும் அழுது புலம்புவதற்கு பயன்படும் வார்த்தைகளை எரேமியா அவர்களுக்கு சொல்லுகிறார்.

"ஐயோ, நான் நொறுக்கப்பட்டேன்" என்று எரேமியா சொல்லுகிறார். எரேமியா பயப்படவில்லை. ஆனாலும் தன்னுடைய இருதயத்தின் உணர்வுகளை அவர் அப்படியே வெளிப்படுத்துகிறார். எரேமியாவுக்கு இலேசான காயமுண்டாகவில்லை. "என் காயம் கொடிதாயிருக்கிறது" என்று எரேமியா சொல்லுகிறார். எரேமியா எதற்காக இப்படி அழுது புலம்புகிறார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. "ஆனாலும் இது நான் சகிக்கவேண்டிய என் நோய் என்று நான் சொல்லுவேன்" (எரே 10:19) என்றும் எரேமியா சொல்லுகிறார்.

எரேமியா தன்னுடைய நோயை சகித்துக்கொள்கிறார். சகித்துக்கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் அவருக்கு இல்லை. ஆனாலும் தன்னுடைய நோயை சகித்துக்கொள்வதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை. சகித்துக்கொள்ளுமாறு எரேமியா கட்டாயம்பண்ணப்படுகிறார். "இது நான் சகிக்கவேண்டிய என் நோய்" என்னும் வாக்கியத்திற்கு, "இது ஒரு நோய், இதை நான் சகிக்கவேண்டும், எனக்கு வேறு வழியில்லை" என்று பொருள் சொல்லலாம்.

நமக்கு நோய்களும், வேதனைகளும் வரும்போது, தேவனுடைய ஆறுதலான வார்த்தைகளை தியானிப்போம். தேவன் சொல்லுகிற கிருபையுள்ள வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்போம். கர்த்தர் நமக்கு உதவிசெய்வார் என்றும், அவர் நம்மைக் கைவிடமாட்டார் என்றும் விசுவாசத்தோடு சொல்லுவோம். நம்முடைய வார்த்தையில் இதுபோன்ற விசுவாசம் இருந்தாலும், "கர்த்தர் தமக்கு சித்தமானதை செய்யட்டும்" என்றும், "அவர் தமக்கு பிரியமானதைச் செய்யட்டும்" என்றும் நாம் சொல்லவேண்டும். கர்த்தர் நம்முடைய நோயைக் குணப்படுத்தினாலும், குணப்படுத்தாவிட்டாலும், கர்த்தருக்கு சித்தமான காரியம் நடைபெறும் என்று விசுவாசிக்கவேண்டும்.

யூதா தேசம் அழிந்துபோயிற்று. "என் கூடாரம் அழிந்துபோயிற்று, என் கயிறுகளெல்லாம் அறுப்புண்டுபோயின; என் பிள்ளைகள் என்னை விட்டுப்போய்விட்டார்கள்; அவர்களில் ஒருவனுமில்லை; இனி என் கூடாரத்தை விரித்து, என் திரைகளைத் தூக்கிக்கட்டுவாரில்லை" (எரே 10:20) என்று எரேமியா சொல்லுகிறார்.

எருசலேம் நகரம் அரணிப்பான பட்டணமாயிருந்தது. ஆனால் இப்போதோ அது பலவீனமாயிற்று. அவர்களுடைய ராஜாங்கம் அழிந்துபோயிற்று. தேசம் சீரழிந்துபோயிற்று. விளைச்சல் நிலங்களெல்லாம் வனாந்தர நிலம்போலாயிற்று. தேசத்தில் குடியிருப்பார் ஒருவருமில்லை. யூதா தேசம் முற்றிலுமாய் அழிந்துபோயிற்று. அவர்களுக்கு ஆதரவாயிருந்தது எல்லாமே பலனற்றுப்போயிற்று. ஆதரவுகள் கீழே விழுந்துவிட்டது. யூதா தேசத்தில் எல்லாமே அழிந்துவிட்டது. யூதாவின் பட்டணங்களும், யூதாவின் மனுஷரும் அழிந்துபோனார்கள். தேசத்திற்கு வந்த அழிவை அவர்களால் பழுதுபார்க்க முடியவில்லை. "என் கயிறுகளெல்லாம் அறுப்புண்டுபோயின" என்று யூதாவின் மனுஷர் சொல்லுகிறார்கள்.

கல்தேயர்கள் யூதாவின் பட்டணங்களில் யுத்தம்பண்ணுகிறார்கள். தேசத்தில் மிகப்பெரிய சங்காரமுண்டாகிறது. யூதா மனுஷருடைய பிள்ளைகளில் சிலர் கல்தேயரிடத்தில் அகப்படாமல் தப்பித்து ஓடிப்போகிறார்கள். கையில் பிடிப்பட்ட பிள்ளைகளை கல்தேயர்கள் கொன்றுபோடுகிறார்கள். ஏராளமான பிள்ளைகளை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகிறார்கள். இப்போது யூதாதேசத்தில் பிள்ளைகள் இல்லை. "என் பிள்ளைகள் என்னை விட்டுப்போய் விட்டார்கள், அவர்களில் ஒருவனுமில்லை" (எரே 10:20) என்று யூதாவின் மனுஷர் அழுதுபுலம்புகிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கு உதவி செய்ய ஒருவருமில்லை. "இனி என் கூடாரத்தை விரித்து, என் திரைகளை தூக்கிகட்டுவாரில்லை" என்று யூதர்கள் அழுது புலம்புகிறார்கள். அவர்களுக்கு உதவிசெய்ய, அவர்களுடைய பிள்ளைகள்கூட அவர்களோடு கூடயில்லை. தேசத்தின் தலைவர்களும், அழிவை சீர்படுத்தவில்லை.

"மேய்ப்பர்கள் மிருககுணமுள்ளவர்களாகி, கர்த்தரைத் தேடாமற்போனார்கள்; ஆகையால், அவர்கள் காரியம் வாய்க்காமற்போய், அவர்கள் மந்தையெல்லாம் சிதறடிக்கப்பட்டது" (எரே 10:21) என்று எரேமியாவும் யூதாவின் மனுஷரும் வேதனையோடு புலம்புகிறார்கள்.

யூதாவின் கூடாரம் அழிந்துபோயிற்று. மேய்ப்பர்கள்தான் பொதுவாக கூடாரங்களில் தங்கியிருப்பார்கள். மேய்ப்பரின் கூடாரங்களெல்லாம் அழிந்துபோயிற்று. ஆனால் மேய்ப்பர்களோ மிருககுணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். மேய்ப்பர்கள் தான் தங்கள் கூடாரங்களை மறுபடியும் தூக்கி கட்டவேண்டும். ஆனால் அவர்களோ புத்தியில்லாத மேய்ப்பர்களாயிருக்கிறார்கள்.

தேசத்திற்கு அழிவு வரும்போது, இராஜாக்களும் பிரபுக்களும் ஜனங்களுக்கு உதவிசெய்யவேண்டும். ஆனால் பிரபுக்களோ ஜனங்களுடைய நன்மையைப்பற்றி சிந்தித்துப் பார்க்கவில்லை. அவர்கள் சுயநலமுள்ளவர்களாயிருக்கிறார்கள். எருசலேமிலுள்ள தேவாலயம் அழிந்துபோயிற்று. கர்த்தருடைய கூடாரம் அழிந்துபோயிற்று. கர்த்தருடைய கூடாரத்திலுள்ள ஆசாரியர்களும் லேவியர்களும், அழிந்துபோன கூடாரத்தை தூக்கி கட்டுவதற்கு ஒரு முயற்சியும் ஏறெடுக்கவில்லை.

யூதாமனுஷர் மத்தியில் கர்த்தருடைய வார்த்தையும் இல்லாமல் போயிற்று. ஆசாரியர்களோ ஜனங்களுக்கு கர்த்தருடைய சத்தியத்தை உபதேசம் பண்ணவில்லை. இதனால் ஜனங்கள் கர்த்தரைத் தேடவில்லை. தாங்கள் பாவம் செய்ததினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தங்கள்மீது வந்திருக்கிறது என்னும் உணர்வும் அவர்களிடத்தில் இல்லை. அவர்கள் தங்கள் பாவங்களையும் அங்கீகரிக்கவில்லை, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பையும் அங்கீகரிக்கவில்லை.

யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணினால், கர்த்தர் அவர்களை தண்டியாமல், அவர்களுக்கு இரக்கம் காண்பிப்பார். யூதாவின் மேய்ப்பர்களோ கர்த்தரைத் தேடாமல் போனார்கள். ஜனங்களை கர்த்தரிடத்தில் வழிநடத்த தவறிவிடுகிறார்கள். ஜனங்களுக்கு அழிவு வரும்போது, கர்த்தருடைய கரத்திலிருந்து உதவி வருவதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் ஜனங்கள் மத்தியில் தேவனைப்பற்றிய அறிவுமில்லை. தேவனைத் தேடவேண்டும் என்னும் உணர்வுமில்லை. ஆகையால் அவர்கள் காரியம் வாய்க்காமல் போயிற்று. அவர்கள் மந்தையெல்லாம் சிதறடிக்கப்பட்டது.

கல்தேயர்கள் யூதாவின் பட்டணங்கள்மீது யுத்தம்பண்ணும்போது, யூதர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ள எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்கிறார்கள். ஆனால், அவர்கள் கர்த்தரைத் தேடவுமில்லை. கர்த்தரை நம்பவுமில்லை. தங்கள் சுயபலத்தை நம்புகிறார்கள். சுயஞானத்தையும், சுயபராக்கிரமத்தையும், சுயஐசுவரியத்தையும், அந்நிய தேசத்தாரையும் நம்புகிறார்கள். ஆதலால் அவர்களுடைய முயற்சிகளெல்லாம் வாய்க்காமல் போயிற்று.

கர்த்தரை நம்புகிறவர்கள் மாத்திரமே செழித்திருப்பார்கள். கர்த்தரை நம்பாதவர்கள் சிதறடிக்கப்படுவார்கள். நம்முடைய வழிகளில் நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். விசுவாசத்தோடும் ஜெபத்தோடும், நாம் கர்த்தரைப்பற்றிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் நம்முடைய காரியம் வாய்க்கும்.

கல்தேயர்கள் யூதா தேசத்திற்கு அருகாமையில் வந்துவிடுகிறார்கள். "இதோ, யூதாவின் பட்டணங்களைப் பாழும் வலுசர்ப்பங்களின் தாவுமாக்கிப்போடும் செய்தியின் சத்தமும், வடதேசத்திலிருந்து பெரிய கொந்தளிப்பும் வருகிறது" (எரே 10:22) என்று எரேமியா சொல்லுகிறார். ஆரம்பத்தில் கல்தேயர்கள் வருகிறார்கள் என்னும் செய்தி மாத்திரமே யூதாவின் பட்டணங்களுக்கு வருகிறது. இப்போதோ அந்த செய்தியின் சத்தத்தோடு, பெரிய கொந்தளிப்பும் வருகிறது. ஏற்கெனவே வந்த செய்தி உண்மை என்பது உறுதியாயிற்று.

வடதேசத்திலிருந்து பெரிய கொந்தளிப்பு வருகிறது என்று எரேமியா சொல்லுகிறார். கல்தேயர்கள் வடதேசத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் வந்து யூதாவின் பட்டணங்களை பாழும், வலுசர்ப்பங்களின் தாவுமாக்கிப் போடுவார்கள். கல்தேயர்கள் யூதர்களை சங்காரம்பண்ணுவார்கள். யூதாவின் பட்டணங்களை சுட்டெரித்துப்போடுவார்கள். தேசத்தில் ஒன்றும் மீதமாயிராது. யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் பெரிய நாசமும், பெரிய சங்காரமும் உண்டாகும்.

கர்த்தாவே என்னை மட்டாய்த்தண்டியும் எரே 10:23-25

எரே 10:23. கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன்நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்.

எரே 10:24. கர்த்தாவே, என்னைத் தண்டியும்; ஆனாலும் நான் அவமாய்ப்போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே அல்ல, மட்டாய்த் தண்டியும்.

எரே 10:25. உம்மை அறியாத ஜாதிகளின்மேலும், உமது நாமத்தைத் தொழுதுகொள்ளாத வம்சங்களின் மேலும், உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும்; அவர்கள் யாக்கோபைப் பட்சித்து, அவனை விழுங்கி, அவனை நிர்மூலமாக்கி, அவன் வாசஸ்தலத்தைப் பாழாக்கினார்களே.

எரேமியா தீர்க்கதரிசி இதுவரையிலும் யூதாவின் மனுஷரோடும், எருசலேமின் குடிகளோடும் பேசினார். இப்போது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரோடு பேசுகிறார். யூதா மனுஷரோடு இனிமேலும் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்று தீர்மானித்து கர்த்தரிடத்தில் பேசுகிறார்.

கர்த்தரே சர்வஆளுகையுள்ளவர். அவர் சர்வசிருஷ்டிகளையும் சிருஷ்டித்து, தம்முடைய தெய்வீக பராமரிப்பினால் போஷிக்கிறார். எல்லா ஜீவராசிகளையும் ஆளுகை செய்கிறார். நம்முடைய காலங்கள், நம்முடைய கரத்தில் இல்லாமல், கர்த்தருடைய கரத்தில் உள்ளது. தேவனுடைய சித்தத்தின் பிரகாரமும், அவருடைய விருப்பத்தின் பிரகாரமுமே எல்லா காரியங்களும் நடைபெறுகிறது. கர்த்தருக்கு சித்தமான காரியம் அவருடைய கரத்தினால் வாய்க்கிறது.

ஒவ்வொரு மனுஷனும் தன்னுடைய விருப்பம் நிறைவேறவேண்டும் என்று விரும்புகிறான். பல சமயங்களில் நம்முடைய விருப்பத்திற்கும், எதிர்பார்ப்புக்கும் மாறாக காரியங்கள் நடைபெறுகிறது. கர்த்தர் தங்களை பாதுகாப்பார் என்று யூதாவின் மனுஷர் எதிர்பார்த்தார்கள். ஆனால் கல்தேயர்கள் அவர்களை அழித்துப்போட்டார்கள்.

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே, கல்தேயர்கள் யூதா தேசத்தின்மீது யுத்தம் பண்ண வருகிறார்கள். கர்த்தர் அனுமதி கொடுத்ததினால்தான், கல்தேயரால் யூதர்களை அழிக்க முடிந்தது. யூதாதேசத்தை நாசம்பண்ண முடிந்தது. கர்த்தர் அனுமதிக்கவில்லையென்றால், கல்தேயரால் யூதாதேசத்திற்குள் பிரவேசித்திருக்க முடியாது. கர்த்தர் எந்த அளவுக்கு அனுமதிக்கிறாரோ, அந்த அளவுக்கு மாத்திரமே, கல்தேயரால் யூதாதேசத்தை நாசம்பண்ண முடியும்.

கர்த்தர் எல்லாவற்றிற்கும் ஒரு எல்லையை நியமித்து வைத்திருக்கிறார். சமுத்திரத்தின் எல்லைகளுக்கு கடற்கரையின் மணலை எல்லையாய் நியமித்திருக்கிறார். அந்த மணலைத்தாண்டி கடல் அலைகளால் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாது. கர்த்தருடைய பிரமாணம் மாறாததாயிருப்பதுபோல, அவருடைய திட்டமும், விருப்பமும், சித்தமும் மாறாததாயிருக்கிறது.

எரேமியா தீர்க்கதரிசி யூதா மனுஷருக்கு நேரிட்டிருக்கிற அழிவை கண்ணோக்கிப் பார்க்கிறார். எருசலேம் குடிகளுடைய மனதின் விருப்பம் என்னவென்று எரேமியாவுக்குத் தெரியும். ஆனால் அவர்களுடைய விருப்பம் நிறைவேறவில்லை. எரேமியா இதைப் பார்த்து, "கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன்நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரே 10:23) என்று சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், அக்கிரமங்களையும் அநியாயங்களையும் துணிகரமாய் செய்கிறார்கள். இதனால் தேவனுடைய கோபாக்கினை அவர்கள்மீது வருகிறது. தேவனுடைய இஸ்ரவேல்மீது கர்த்தருடைய கோபம் வராமலிருக்கவேண்டும் என்று எரேமியா விரும்புகிறார்.

"கர்த்தாவே என்னைத் தண்டியும்" (எரே 10:24) என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். எரேமியா கர்த்தரிடத்தில் தனக்காக மாத்திரம் பேசாமல், தன்னுடைய தேசத்தார் எல்லார் சார்பாகவும் பொதுவாகப் பேசுகிறார். கர்த்தருடைய தண்டனையை ஒருவராலும் தாங்கிக்கொள்ள முடியாது. ஆகையினால் அவர் தன்னை மட்டாய்த் தண்டிக்கவேண்டும் என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். "ஆனாலும் நான் அவமாய்ப்போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே அல்ல, மட்டாய்த் தண்டியும்" (எரே 10:24) என்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

பிரம்பை கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான். கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் மீது அக்கறையுள்ளவராயிருக்கிறார். ஆகையினால்தான் அவர்களை சிட்சிக்கிறார். கர்த்தர் தம்முடைய கோபத்தினால் நம்மைத் தண்டித்தால், அந்தத் தண்டனையை நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. கர்த்தர் தம்முடைய அன்பினால் நம்மைத் தண்டிக்கும் போது, அதை நாம் தாங்கிக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய தண்டனையினால் நமக்கு நன்மை உண்டாகும்.

கர்த்தர் தம்முடைய அன்பினால் நம்மைத் தண்டிக்கும்போதுநாம் அவமாய்ப்போகமாட்டோம். நாம் கர்த்தரிடமாய்த் திரும்பி வருவோம். கர்த்தரோடு கூடயிருப்போம். கர்த்தர் நம்மைத் தண்டித்தாலும், அவரே நம்முடைய கர்த்தராயும், இரட்சகராயும் இருக்கிறார். கர்த்தர் நம்மை காயப்படுத்தும்போது, அவர் நிச்சயமாகவே நம்முடைய காயங்களுக்கு மருந்து போட்டு குணப்படுத்துவார். நம்மைக் காயப்படுத்துகிறவரும் கர்த்தரே. நம்முடைய காயங்களுக்கு கட்டுப்போடுகிறவரும் கர்த்தரே.

கர்த்தர் நம்முடைய பாவங்களினிமித்தமாய் நம்மைத் தண்டிக்கும்போது, தம்முடைய கோபத்தினால் நம்மைத் தண்டிப்பார். எரேமியாவைப்போல நாமும் கர்த்தரிடத்தில், "கர்த்தாவே உம்முடைய கோபத்தினால் என்னைத் தண்டியாதேயும்" என்று விண்ணப்பம்பண்ண வேண்டும். "உமது அன்பினால் என்னை மட்டாய்த்தண்டியும்" என்று பணிவோடு சொல்லவேண்டும்.

கர்த்தர் நம்மை தண்டிக்கவே கூடாது என்று யாராலும் ஜெபம்பண்ண முடியாது. நமக்கு கர்த்தருடைய சிட்சை தேவை. கர்த்தர் நம்முடைய நன்மைக்காகவே நம்மைத் தண்டிக்கிறார் என்பது நம்முடைய மனச்சாட்சிக்கு நன்றாய்த் தெரியும். நம்முடைய பாவங்களினிமித்தமாயும், மீறுதல்களினிமித்தமாயும் கர்த்தர் நம்மை தண்டித்து திருத்துகிறார் என்பதை நம்முடைய மனச்சாட்சி ஏற்றுக்கொள்ளும். கர்த்தர் யாரை நேசிக்கிறாரோ அவர்களை அவர் சிட்சிக்கிறார்.

தேவனுடைய கோபம் யூதாமனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் வராமல் புறஜாதி ஜனங்கள்மீது வரவேண்டும் என்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். "உம்மை அறியாத ஜாதிகளின்மேலும், உமது நாமத்தைத் தொழுதுகொள்ளாத வம்சங்களின் மேலும், உம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடும்" (எரே 10:25) என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

எரேமியாவுக்கு சத்துருக்களை பழிவாங்கவேண்டும் என்னும் எண்ணமில்லை. பழிவாங்குதல் கர்த்தருக்குரியது என்பது எரேமியாவுக்குத் தெரியும். தேவனுடைய நீதி புறஜாதியார்மீது வெளிப்படவேண்டும் என்னும் விருப்பத்தோடு எரேமியா ஜெபம் பண்ணுகிறார். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்து, அவரைக் கோபப்படுத்தியிருக்கிறார்கள். புறஜாதி ஜனங்களோ யூதாவின் மனுஷரைவிட கர்த்தருக்கு விரோதமாய் ஏராளமாய்ப் பாவம் செய்து, கர்த்தரை அதிகம் அதிகமாய்க் கோபப்படுத்தியிருக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் தங்களை தம்முடைய அன்பினால் தண்டிக்க வேண்டுமென்றும், புறஜாதி ஜனங்களை தம்முடைய உக்கிர கோபத்தினால் தண்டிக்கவேண்டுமென்றும் எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய பிள்ளைகள். கல்தேயரோ கர்த்தருடைய சத்துருக்கள். தேவனுடைய கோபம் யூதாவம்சத்தார்மீது வராமல், புறஜாதி ஜனங்கள்மீது வரவேண்டும் என்று எரேமியா விண்ணப்பம்பண்ணுகிறார்.

கல்தேயர்கள் கர்த்தரை அறியாத ஜாதிகள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளமாட்டார்கள். கர்த்தரை அறிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆர்வமும் அவர்களிடத்தில் இல்லை. அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவுமாட்டார்கள். கர்த்தருடைய வேதத்தைத் தியானிக்கவுமாட்டார்கள். கர்த்தர் அவர்கள்மீது தம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடவேண்டுமென்று எரேமியா விண்ணப்பம்பண்ணுகிறார்.

புறஜாதி ஜனங்கள் கர்த்தருடைய ஜனத்தைத் துன்பப்படுத்துகிறார்கள். "அவர்கள் யாக்கோபைப் பட்சித்து, அவனை விழுங்கி, அவனை நிர்மூலமாக்கி, அவன் வாசஸ்தலத்தைப் பாழாக்கினார்களே" (எரே 10:25) என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் பேராசைக் காரராயிருக்கிறார்கள். இரத்தவெறி பிடித்தவர்களாகயிருக்கிறார்கள். குற்றமில்லாத இரத்தங்களைச் சிந்துகிறார்கள். அவர்களிடத்தில் இரக்ககுணமும் மனநேயமுமில்லை. அவர்கள் யூதாமனுஷரை நிர்மூலமாக்குவதோடு, அவர்களுடைய வாசஸ்தலத்தையும் பாழாக்குகிறார்கள். யூதாவிலே எருசலேம் இருக்கிறது. எருசலேம் தேவனுடைய நகரம். அங்கே கர்த்தருடைய ஆலயம் இருக்கிறது. கர்த்தர் தம்முடைய ஆலயத்தில் வாசம்பண்ணுகிறார். அந்த வாசஸ்தலத்தை கல்தேயர்கள் பாழாக்கிவிடுகிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்கள்மீது தம்முடைய உக்கிரத்தை ஊற்றிவிடவேண்டும் என்று எரேமியா விண்ணப்பம்பண்ணுகிறார்.

11 அதிகாரம்

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களுடைய முற்பிதாக்களோடு உடன் படிக்கை செய்திருக்கிறார் (எரே 11:1-7). ஆனால் எருசலேமின் குடிகளும், யூதாவின் வம்சத்தாரும் கர்த்தருடைய உடன்படிக்கைக்கு கீழ்ப்படியாமல் போய்விடுகிறார்கள் (எரே 11:8-10). யூதா மனுஷருடைய கீழ்ப்படியாமையினிமித்தமாய் கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார். அவர்களுக்கு அழிவு வரும் (எரே 11:11,13).

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தரை ஆராதியாமல், புறஜாதியாரின் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். விக்கிரகங்கள் அவர்களை இரட்சிக்காது (எரே 11:12). யூதா மனுஷருடைய தீர்க்கதரிசிகள் அவர்களுக்காக ஜெபம்பண்ண வேண்டியதில்லை (எரே 11:14). யூதாவின் மனுஷர் தங்களுடைய பாவங்களினிமித்தமாய் தங்கள்மீது அழிவை வரவழைத்துக்கொள்கிறார்கள் (எரே 11:15-17).

ஆனதோத்தின் மனுஷர் எரேமியாவுக்கு விரோதமாய் சதிஆலோசனை பண்ணுகிறார்கள். கர்த்தர் இந்த சதிஆலோசனையை எரேமியாவுக்கு வெளிப்படுத்துகிறார் (எரே 11:18,19). எரேமியா ஆனதோத்தின் மனுஷருக்கு விரோதமாய் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார் (எரே 11:20). ஆனதோத் மனுஷர்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்று எரேமியா முன்னறிவிக்கிறார் (எரே 11:21-23).

உடன்படிக்கையின் வார்த்தைகள் எரே 11:1-10

எரே 11:1. கர்த்தராலே எரேமியாவுக்கு உண்டான வசனம்:

எரே 11:2. நீங்கள் கேட்டு யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்லவேண்டிய உடன்படிக்கையின் வார்த்தைகளாவன:

எரே 11:3. என் சத்தத்தைக்கேட்டு, நான் உங்களுக்குக் கற்பிக்கிறபடியே எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள்; அப்பொழுது நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்;

எரே 11:4. நான் உங்கள் பிதாக்களை இருப்புக்காளவாயாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாளிலே அவர்களுக்குக் கற்பித்த இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கேளாத மனுஷன் சபிக்கப்பட்டவனென்று, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறாரென்று அவர்களுக்குச்சொல்லு.

எரே 11:5. இன்றையதினம் இருக்கிறபடி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களுக்கு இட்ட ஆணையை நான் திடப்படுத்தும்படி. இப்படி ஆகும் என்றார்; அதற்கு நான் பிரதியுத்தரமாக, அப்படியே ஆகக்கடவது கர்த்தாவே என்றேன்.

எரே 11:6. அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: நீ யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் இந்த வார்த்தைகளையெல்லாம் கூறி: இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நீங்கள் கேட்டு, அவைகளின்படியே செய்யுங்கள்.

எரே 11:7. நான் உங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின நாள்முதல், இந்நாள்மட்டும் நான் அவர்களுக்குத் திடச்சாட்சியாய் என் சத்தத்தைக்கேளுங்களென்று ஏற்கனவே சாட்சி விளங்கத்தக்கவிதமாய் எச்சரித்துவந்தேன்.

எரே 11:8. ஆனாலும் அவர்கள் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும் போய், அவரவர் தம்தம் பொல்லாத இருதய கடினத்தின்படி நடந்தார்கள்; ஆதலால் நான் அவர்கள் செய்யும்படி கட்டளையிட்டதும், அவர்கள் செய்யாமற்போனதுமான இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்குப் பலிக்கப்பண்ணுவேன் என்று சொல் என்றார்.

எரே 11:9. பின்னையும் கர்த்தர் என்னை நோக்கி: யூதாவின் மனுஷருக்குள்ளும் எருசலேமின் குடிகளுக்குள்ளும் ஒரு கட்டுப்பாடு காணப்படுகிறது.

எரே 11:10. அவர்கள் என் வார்த்தைகளைக் கேட்கமாட்டோமென்று அந்நிய தேவர்களைச் சேவிக்க அவைகளைப்பின்பற்றி, தங்களுடைய முன்னோர்களின் அக்கிரமங்களுக்குத் திரும்பினார்கள்; நான் தங்கள் பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கையை இஸ்ரவேல் குடும்பத்தாரும் யூதா குடும்பத்தாரும் மீறிப்போட்டார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய வார்த்தையை கேளாமலும், அவருடைய வார்த்தைக்கு தங்கள் செவியை சாயாமலுமிருக்கிறார்கள். கர்த்தருடைய கட்டளைகளுக்கு அவர்கள் துணிகரமாய்க் கீழ்ப்படியாமலிருக்கிறார்கள். இதனால் தேவனுடைய கோபம் யூதர்கள்மீது வந்திருக்கிறது.

எரேமியா கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் சொல்லவேண்டும். மூலபாஷையில் "நீங்கள் சொல்லவேண்டும்" (எரே 11:2) என்று பன்மையில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் எரேமியாவோடு தனிப்பட்ட முறையில் பேசினாலும், கர்த்தர் சொல்லுகிற செய்தி, அவருடைய தீர்க்கதரிசிகள் எல்லோருக்கும் பொதுவானது. கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை, எரேமியா யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்வதுபோல, கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் எல்லோருமே சொல்லவேண்டும். கர்த்தருடைய கட்டளை எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் பொதுவானதாயிருக்கிறது.

தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை மாத்திரமே சொல்லவேண்டும். கர்த்தர் மோசேக்கு வெளிப்படுத்தின பிரமாணத்தை, மோசே ஜனங்களுக்கு சொன்னார். அந்தப் பிரமாணத்தையே தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு சொல்லவேண்டும். தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளைத் தவிர, வேறு எந்த வார்த்தைகளையும் சொல்லக்கூடாது ஜனங்களிடத்தில் தங்களுடைய சுயவார்த்தைகளை பேசக்கூடாது.

"என் சத்தத்தைக் கேட்டு, நான் உங்களுக்கு கற்பிக்கிறபடியே, எல்லா காரியங்களையும் செய்யுங்கள்" (எரே 11:3) என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா இந்த வார்த்தைகளை யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் கூறவேண்டும். "இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நீங்கள் கேட்டு, அவைகளின்படியே செய்யுங்கள்" (எரே 11:6) என்று எரேமியா யூதா மனுஷரிடத்தில் சொல்லவேண்டும்.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டு, அவர் தங்களுக்கு கற்பிக்கிறபடியே எல்லா காரியங்களையும் செய்யும்போது, அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருப்பார்கள். கர்த்தர் அவர்களுடைய தேவனாயிருப்பார் (எரே 11:3). கர்த்தர் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் தம்முடைய உடன்படிக்கையின் மூலமாய் தம்மோடு சேர்த்துக்கொள்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளில் உண்மையுள்ளவராயிருப்பதுபோல, யூதாவின் மனுஷரும் தங்கள் வார்த்தைகளில் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

கர்த்தர் யூதாதேசத்தை தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தைகளினால் ஸ்தாபித்திருக்கிறார். யூதாதேசத்திற்கு கர்த்தருடைய உடன்படிக்கையே அஸ்திபாரமும், ஆதாரமுமாயிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய தேவனாயிருப்பது அவர்களுக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற பாக்கியம்.

ஆனால் யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை மறந்து விடுகிறார்கள். கர்த்தருடைய உடன் படிக்கையின் வார்த்தைகளுக்கு ஏற்றபடி ஜீவிக்காமல், தங்களுடைய மனதிற்கு ஏற்றபடி ஜீவிக்கிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினார். அந்நாள் முதல் இந்நாள் மட்டும், கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை அவர்களுக்கு திடசாட்சியாய் அறிவித்து வந்திருக்கிறார் (எரே 11:7). யூதாவின் மனுஷர் கர்த்தருடைய சத்தத்தைக் கேட்கவேண்டும். கர்த்தர் தம்முடைய சாட்சி விளங்கத்தக்க விதமாய், அவர்களுக்கு ஏற்கெனவே எச்சரித்து வந்திருக்கிறார்.

"என் சத்தத்தைக்கேட்டு, நான் உங்களுக்குக் கற்பிக்கிறபடியே எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள்; அப்பொழுது நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்" (எரே 11:3) என்று கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கும், யூதாவின் வம்சத்தாருக்கும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை கேளாத மனுஷன் சபிக்கப்பட்டவன். கர்த்தர் யூதா மனுஷருடைய பிதாக்களை இருப்புக்காளவாயாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார். அந்த நாளிலேயே கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை கற்பித்தார். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதா வம்சத்தாருமோ கர்த்தருடைய உடன் படிக்கையின் வார்த்தைகளைக் கேட்கவில்லை. அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை. தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கேளாத மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறார் (எரே 11:4).

யூதாவின் மனுஷரோ கர்த்தருக்கு விரோதமாய்த் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையைக் கேளாமலும், அவருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளுக்கு தங்கள் செவியை சாயாமலும் ஜீவிக்கிறார்கள். கர்த்தருடைய சத்தத்தைக் கேட்காவிட்டாலும், அவர் தங்களுக்கு கற்பிக்கிறபடி ஒரு காரியத்தையும் செய்யாவிட்டாலும், தாங்கள் கர்த்தருடைய ஜனமாகயிருப்போம் என்றும், கர்த்தர் தங்களுடைய தேவனாகயிருப்பார் என்றும் நினைக்கிறார்கள். யூதாவின் மனுஷர் கர்த்தருடைய சித்தத்திற்கும், திட்டத்திற்கும், விருப்பத்திற்கும் விரோதமாய் நினைக்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் யூதமார்க்கத்தின் சடங்காச்சார பிரமாணங்களைக் கைக்கொள்கிறார்கள். தங்கள் முன்னோர்களுடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களைக் கைக்கொள்கிறார்கள். இவற்றை மாத்திரம் கைக்கொண்டால் போதுமானது என்றும், கர்த்தர் தங்களுக்கு இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைத்தான் சொல்லியிருக்கிறார் என்றும் நினைக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை சரியாகக் கேட்கவுமில்லை. சரியாகப் புரிந்துகொள்ளவுமில்லை. ஆகையினால் எரேமியா தீர்க்கதரிசியும், கர்த்தருடைய மற்ற தீர்க்கதரிசிகளும் யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் கர்த்தருடைய உடன் படிக்கையின் வார்த்தையைச் சொல்லவேண்டும். அவர்கள் யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் வீதிகளிலும் இந்த வார்த்தைகளையெல்லாம் கூறவேண்டும்.

கர்த்தர் யூதாவின் மனுஷரிடத்திலும், எருசலேமின் குடிகளிடத்திலும் சடங்காச்சார பிரமாணங்களையும், முன்னோர்களின் பாரம்பரியங்களையும் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. "தம்முடைய சத்தத்தைக் கேட்டு, தாம் அவர்களுக்கு கற்பிக்கிறபடியே எல்லா காரியங்களையும் செய்யவேண்டும்" என்றே கர்த்தர் எதிர்பார்க்கிறார். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செய்யவேண்டும். கர்த்தர் அவர்களிடத்தில் இதைத்தான் எதிர்பார்க்கிறார். பலியைவிட கீழ்ப்படிதலே உத்தமம்.

தம்முடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும் என்று கர்த்தர் மறுபடியும் மறுபடியுமாய்ச் சொல்லுகிறார் (எரே 11:4,7). அப்பொழுது யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய ஜனமாயிருப்பார்கள். கர்த்தர் அவர்களுடைய தேவனாயிருப்பார். கர்த்தருடைய ஜனத்தார், கர்த்தர் அவர்களுக்கு கற்பிக்கிற எல்லா காரியங்களையும் செய்வார்கள். மார்க்க பிரகாரமான காரியங்களில் உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள். மனுஷர் மீது அன்புள்ளவர்களாயிருப்பார்கள். அவர்களுடைய மனச்சாட்சி சுத்தமாயிருக்கும். யூதாதேசத்தில் கர்த்தர் தங்களுக்கு நியமித்திருக்கிற உடன்படிக்கையின் வார்த்தைகளுக்கு உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை தம்முடைய சொந்த ஜனமாகத் தெரிந்தெடுத்து, அவர்களோடு உடன்படிக்கை பண்ணிக்கொண்டார். இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்களை இருப்புக்காளவாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாளிலேயே, கர்த்தர் அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டார் (எரே 11:4,7).

இஸ்ரவேல் வம்சத்தார் எகிப்து தேசத்திலே அடிமைத்தனத்திலிருந்தார்கள். எகிப்தியரின் ஆளோட்டிகள் அவர்களை அடித்து ஒடுக்கினார்கள். கடினமாய் வேலை வாங்கினார்கள். இஸ்ரவேல் ஜனத்திற்கு சுதந்தரமே இல்லை. அவர்கள் முற்றிலுமாய் அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் தம்மை சேவிப்பதற்காக இஸ்ரவேல் ஜனத்தாரை தெரிந்துகொண்டார்.

"தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்" (லூக் 1:74,75).

கர்த்தருக்கும் இஸ்ரவேல் ஜனத்திற்கும் இடையே உடன்படிக்கையின் ஐக்கியமுண்டாயிற்று. கர்த்தர் அவர்களுக்கு உடன்படிக்கையின் வார்த்தைகளை நியமித்தார். கர்த்தருடைய வார்த்தைக்கு அவர்கள் கீழ்ப்படியவேண்டும். கர்த்தர் அவர்களுக்கு கற்பிக்கிற எல்லா காரியங்களையும் செய்யவேண்டும். அப்போதுதான் இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஜனமாயிருப்பார்கள். கர்த்தர் அவர்களுடைய தேவனாயிருப்பார்.

கர்த்தர் இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளின் பிரகாரமாக அவர்களுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்தார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரிடம், "இன்றையதினம் இருக்கிறபடி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களுக்கு இட்ட ஆணையை நான் திடப்படுத்தும்படி இப்படி ஆகும் என்றார்; அதற்கு நான் பிரதியுத்தரமாக, அப்படியே ஆகக்கடவது" (எரே 11:5) என்று சொன்னார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாளிலே, கர்த்தர் அவர்களுக்கு கற்பித்த இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை அவர்கள் எல்லோரும் கேட்டு, அதன் பிரகாரம் எல்லா காரியங்களையும் செய்யவேண்டும். இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை கேளாத மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறார்.

"சபிக்கப்பட்டவன்" என்று இந்த வாக்கியம் ஒருமையில் சொல்லப்பட்டாலும், இது இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரையும் பொதுவாகக் குறிப்பிடுகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருமே ஒரே தேசத்தாராயிருக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு ஒரு மனுஷன் கீழ்ப்படியாவிட்டால் அவன் சபிக்கப்பட்டவனாயிருப்பான். ஒரு தேசத்தார் முழுவதும் கீழ்ப்படியாவிட்டால், அந்த தேசமே சபிக்கப்பட்டதாயிருக்கும்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தர் சொன்ன உடன் படிக்கையின் வார்த்தைகளை அவ்வப்போது மறந்துவிடுகிறார்கள். ஆகையினால் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய், தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை, தம்முடைய ஜனத்திற்கு நினைவுபடுத்துகிறார்.

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியிடம் தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தையை சொல்லுகிறார். "இன்றையதினம் இருக்கிறபடி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று நான் அவர்களுக்கு இட்ட ஆணையை நான் திடப்படுத்தும்படி இப்படி ஆகும்" (எரே 1:5) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார். அதற்கு எரேமியா பிரதியுத்தரமாக, "அப்படியே ஆகக்கடவது கர்த்தாவே" என்று சொல்லுகிறார்.

எரேமியா கர்த்தரிடத்தில், "அப்படியே ஆகக்கடவது" என்று சொல்லுவது அவருடைய சொந்த வார்த்தையாகயிருக்கலாம். அவர் கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை அங்கீகரித்து, அதற்கு அடையாளமாக, "அப்படியே ஆகக்கடவது கர்த்தாவே" என்று சொல்லுவதாக வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்க்ள. கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளினால் யூதாமனுஷர் எல்லோருக்கும் ஆசீர்வாதம் வருகிறது. தம்முடைய ஜனங்கள், தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தைகளினால் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம்.

எரேமியா கர்த்தரிடத்தில், "அப்படியே ஆகக்கடவது" என்று பிரதியுத்தரம் சொல்லும்போது, அவர் யூதா மனுஷரின் சார்பாகவும், எருசலேம் குடிகளின் சார்பாகவும் பேசுவதாக வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். எரேமியா ஜனங்களுடைய நாமத்தினால் பிரதியுத்தரம் சொல்லுகிறார். யூதாவின் மனுஷர், "அப்படியே ஆகக்கடவது கர்த்தாவே" என்று சொல்லுவதாக, எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கவில்லை. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பதற்கு தங்கள் செவியை சாய்க்கவில்லை. அவரவர் தம்தம் பொல்லாத இருதயக்கடினத்தின்படி நடக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை மீறிவிடுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம் பண்ணுவதும், கர்த்தருடைய உடன் படிக்கையை மீறுவதும் யூதாமனுஷருடைய சுபாவமாயிருக்கிறது.

கர்த்தர் யூதாவின் மனுஷரிடத்திலும், எருசலேமின் குடிகளிடத்திலும், "என் சத்தத்தைக்கேட்டு, நான் உங்களுக்குக் கற்பிக்கிறபடியே எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள்; அப்பொழுது நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்" (எரே 11:3) என்று சொன்னார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், தங்களுடைய பொல்லாத இருதயக்கடினத்தின்படி நடக்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய விருப்பத்திற்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய சித்தத்தின்படி செயல்படவேண்டும். ஆனால் அவர்களோ தங்கள் மனவிருப்பத்தின்படி நடக்கிறார்கள். தங்களுக்கு பிரியமானதை செய்கிறார்கள். தங்களுடைய கிரியைகள் சரியானதா அல்லது தப்பிதமானதா என்பதையோ, அது கர்த்தருக்கு பிரியமானதா அல்லது கர்த்தருக்கு பிரியமில்லாததா என்பதையோ அவர்கள் சிந்தித்துப்பார்க்கவில்லை.

தங்களுடைய பேச்சுக்களும், கிரியைகளும் நீதியானதா, அல்லது அநீதியானதா என்பதையோ அல்லது, அவை கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்கு ஏற்றதா அல்லது விரோதமானதா என்பதையோ ஒருவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அவரவர் தம்தம் பொல்லாத இருதயக்கடினத்தின்படி நடக்கிறார்கள். "அவர்களோ அதைக் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும்போய், தங்கள் பொல்லாத இருதயத்தின் யோசனைகளின் படியும் கடினத்தின்படியும் நடந்து, முன்னிட்டல்ல பின்னிட்டே போனார்கள்" (எரே 7:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாதவர்கள், கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்களை எதிர்பார்க்க முடியாது. கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தால், யூதாவின் மனுஷருக்கு ஆசீர்வாதம் கிடைக்கும். அவர்கள் கீழ்ப்படியவில்லையென்றால், உடன் படிக்கையின் பிரகாரம் அவர்களுக்கு சாபமும் அழிவும் வரும்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமலிருப்பதையும், உடன்படிக்கைக்கு விரோதமாய் ஜீவிப்பதையும் கர்த்தர் பார்க்கிறார். கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை, எரேமியா மூலமாக, அவர்களுக்கு சொல்லி அனுப்புகிறார். "ஆதலால் நான் அவர்கள் செய்யும்படி கட்டளையிட்டதும், அவர்கள் செய்யாமற் போனதுமான இந்த உடன் படிக்கையின் வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்குப் பலிக்கப்பண்ணுவேன் என்று சொல்" (எரே 11:8) என்று கர்த்தர் தம்முடைய நீதியினால் ஆணையிடுகிறார்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இந்த விஷயத்தில் அவர்கள் ஒற்றுமையாயிருக்கிறார்கள். "யூதாவின் மனுஷருக்குள்ளும் எருசலேமின் குடிகளுக் குள்ளும் ஒரு கட்டுப்பாடு காணப்படுகிறது. அவர்கள் என் வார்த்தைகளைக் கேட்க மாட்டோமென்று அந்நிய தேவர்களைச் சேவிக்க அவைகளைப் பின்பற்றி, தங்களுடைய முன்னோர்களின் அக்கிரமங்களுக்குத் திரும்பினார்கள்" (எரே 11:9,10) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

இந்த வசனத்தில் "கட்டுப்பாடு" என்னும் வார்த்தைக்கு "சதிஆலோசனை" என்று பொருள் சொல்லலாம். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளுக்கு விரோதமாகவும் சதிஆலோசனை பண்ணுகிறார்கள். கர்த்தரைவிட்டு விலகிப்போகவேண்டும் என்றும், அந்நிய தேவர்களை சேவிக்கவேண்டும் என்றும் அவர்கள் தீர்மானம்பண்ணுகிறார்கள். யூதாதேசத்தில் இங்கு ஒருவரும், அங்கு ஒருவருமாக இப்படி தீர்மானம்பண்ணாமல், முழுதேசத்தாரும் கட்டுப்பாடு பண்ணி, கர்த்தருக்கு விரோதமாய் சதிஆலோசனை பண்ணுகிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் பார்க்கிறார். அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் துணிகரமாய்ப் பாவம் செய்வதையும், கர்த்தருக்கு விரோதமாக வெளிப்படையாகவே கலகம்பண்ணுவதையும் எரேமியா பார்க்கிறார். எரேமியா தன் கண்களால் பார்ப்பதைவிட, யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் அதிகமாய்க் கேடுசெய்கிறார்கள். துன்மார்க்கத்தில் அதிகமாய் ஜீவிக்கிறார்கள். அவர்களுக்குள் ஒரு கட்டுப்பாடு காணப்படுகிறது என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

கர்த்தரே இஸ்ரவேல் தேசத்திற்கு ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். கர்த்தரே அவர்களை ஆளுகை செய்கிறார். இஸ்ரவேல் தேசத்தில் தேவனுடைய தெய்வீக ஆளுகை நடைபெறுகிறது. இஸ்ரவேல் வம்சத்தார் மத்தியில் தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தேவனுக்கு விரோதமாகவும், அவருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளுக்கு விரோதமாகவும் சதிஆலோசனை பண்ணுகிறார்கள். தங்களுடைய தேசத்தில் தேவனுடைய ஆளுகையை அகற்றிப்போட்டு விட்டு, அங்கே அந்நிய தேவர்களின் ஆளுகையை கொண்டு வரவேண்டுமென்று அவர்கள் சதிபண்ணுகிறார்கள். தேவனுடைய ராஜ்யத்தை நீக்கிவிட்டு, அங்கு பிசாசின் ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு அவர்கள் கட்டுப்பாடு பண்ணி, சதிபண்ணுகிறார்கள்.

யூதாதேசத்திலே தேவனுடைய வெளிப்பாடுகளை மறைப்பதற்கு ஜனங்கள் சதிபண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்காதபடிக்கும், கர்த்தருடைய மகிமையை காணாதபடிக்கும் யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கட்டுப்பாடு பண்ணி, ஜனங்களை திசை திருப்பிவிடுகிறார்கள். அவர்களுக்கு கர்த்தரைவிட அந்நிய தேவர்களே இப்போது முக்கியமானவர்களாகத் தெரிகிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தரே இஸ்ரவேலின் தேவனாயிருக்கிறார். ஆனால் அவர்களோ தங்களுக்கு அந்நிய தெய்வங்களை உண்டுபண்ணுகிறார்கள்.

யூதாமனுஷரில் சிலருக்கு சுயமரியாதையும், வேறு சிலருக்கு மனுஷருடைய ஞானமும் தெய்வமாகத் தெரிகிறது. ஒரு சிலருக்கு வெளிச்சம் தெய்வமாகத் தெரிகிறது. வேறு சிலருக்கு நீதியும் நியாயமும் தெய்வமாகத் தெரிகிறது. எருசலேமின் குடிகளில் அநேகர் தேவதூதர்களையும், பரிசுத்தவான்களையும் தங்களுடைய தெய்வங்கள் என்று சொல்லுகிறார்கள். இவை உண்மையான தெய்வங்களல்ல. நீதியும் நியாயமும் தெய்வமாகாது. கர்த்தரே தெய்வம். அவரே நீதியும் நியாயமுமுள்ளவர். கர்த்தர் அன்புள்ளவர். ஆனால் அன்பு ஒருபோதும் தெய்வமாகாது. அன்பு தேவனுடைய சுபாவம்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தங்கள் தேசத்தில் நூதன உபதேசங்களைப் போதிக்கிறார்கள். கர்த்தரை ஆராதியாமல் அந்நிய தேவர்களை சேவிக்கிறார்கள். கர்த்தரைப் பின்பற்றாமல் புறஜாதியாரின் தெய்வங்களைப் பின்பற்றுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரின் முற்பிதாக்களோடே உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் குடும்பத்தாரும் யூதா குடும்பத்தாரும், தங்களுக்குள்ளே கட்டுப்பாடு பண்ணி, கர்த்தருடைய வார்த்தைகளை கேட்க மறுக்கிறார்கள். கர்த்தரைப் பின்பற்றாமல் அந்நிய தெய்வங்களை பின்பற்றுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணி கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை மீறிப்போடுகிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகவும், அவரால் அபிஷேகம்பண்ணப்பட்டவருக்கு விரோதமாகவும் சதிஆலோசனை பண்ணுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிற விஷயத்தில் இஸ்ரவேல் குடும்பத்தாரும், யூதாகுடும்பத்தாரும் கட்டுப்பாடு பண்ணி ஒற்றுமையாயிருக்கிறார்கள்.

வடக்கு இஸ்ரவேல் ராஜ்யத்தில் இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் இருக்கிறார்கள். தெற்கு யூதாதேசத்தில் இஸ்ரவேலின் மீதமுள்ள இரண்டு கோத்திரத்தார் இருக்கிறார்கள். இவ்விரண்டு தேசங்களும் ஒருபோதும் ஒத்துப்போனதில்லை. இவ்விரு தேசங்களுக்கு இடையே அடிக்கடி யுத்தங்கள் நடைபெறுவது வழக்கம். ஆனாலும் தேவனுடைய வார்த்தைகளை கீழ்ப்படியாத விஷயத்திலும், கர்த்தரை சேவியாமல் அந்நிய தேவர்களை சேவிக்கிற விஷயத்திலும் இஸ்ரவேல் குடும்பத்தாரும், யூதா குடும்பத்தாரும் ஒற்றுமையாயிருக்கிறார்கள்.

இக்காலத்திலும் ஜனங்கள் தங்களுக்குள் பிரிந்திருந்தாலும், தங்களுக்குள் சண்டைபோட்டுக்கொண்டாலும், கர்த்தரையும் அவருடைய உபதேசத்தையும் எதிர்க்கிற காரியங்களிலும், மீறுகிற காரியங்களிலும் ஒற்றுமையாயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்களோடே உடன்படிக்கை பண்ணினார். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திர பிதாக்களோடும் கர்த்தர் உடன்படிக்கை பண்ணினார். ஆரம்பத்தில் இஸ்ரவேல் குடும்பத்தார் மாத்திரமே கர்த்தருடைய உடன்படிக்கையை மீறினார்கள். அவர்களுடைய கட்டுப்பாடு யூதா குடும்பத்தாரிடமும் காணப்பட்டது. சிறிது காலத்திற்கு பின்பு யூதா குடும்பத்தாரும், கர்த்தருடைய உடன்படிக்கையை மீறிவிடுகிறார்கள்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எரே 11:11-17

எரே 11:11. ஆகையினால் இதோ, அவர்கள் தப்பித்துக்கொள்ளமாட்டாத தீங்கை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்; அப்பொழுது என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் அவர்களைக் கேளாதிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 11:12. அப்பொழுது யூதாபட்டணங்களின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் போய்த் தாங்கள் தூபங்காட்டியிருந்த தேவர்களை நோக்கிக் கூப்பிட்டும், அவைகள் அவர்களுடைய ஆபத்துக்காலத்தில் அவர்களை இரட்சிப்பதில்லை.

எரே 11:13. யூதாவே, உன் பட்டணங்களின் இலக்கமும் உன் தேவர்களின் இலக்கமும் சரி; எருசலேமுடைய வீதிகளின் இலக்கமும், நீங்கள் பாகாலுக்குத் தூபங்காட்டும்படி அந்த இலச்சையான காரியத்துக்கு ஸ்தாபித்த பீடங்களின் இலக்கமும் சரி.

எரே 11:14. ஆதலால் நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் பண்ணவேண்டாம், அவர்களுக்காக மன்றாடவும் கெஞ்சவும் வேண்டாம்; அவர்கள் தங்கள் ஆபத்தினிமித்தம் என்னை நோக்கிக் கூப்பிடுங்காலத்திலே நான் அவர்களைக் கேளாதிருப்பேன்.

எரே 11:15. துர்ச்சனரோடு மகா தீவினை செய்யும்போது, என் பிரியமானவளுக்கு என் வீட்டில் என்ன இருக்கிறது? பரிசுத்த மாம்சத்தை உன்னை விட்டுத் தாண்டிப்போகப் பண்ணுவார்கள்; உன் பொல்லாப்பு நடக்கும்போது நீ களிகூருகிறாயே.

எரே 11:16. நல்ல கனி உண்டாயிருக்கிற நேர்த்தியும் பச்சையுமான ஒலிவமரமென்னும் பேரைக் கர்த்தர் உனக்கு இட்டார்; ஆனால் மகா அமளியின் சத்தமாய் அதைச் சுற்றிலும் நெருப்பைக்கொளுத்துகிறார், அதின் கொம்புகள் முறிக்கப்பட்டது.

எரே 11:17. பாகாலுக்குத் தூபங்காட்டுகிறதினாலே எனக்குக் கோபமுண்டாக்க இஸ்ரவேல் குடும்பத்தாரும், யூதா குடும்பத்தாரும் தங்களுக்குக் கேடாகச் செய்த பொல்லாப்பினிமித்தம் உன்மேல் தீங்கை வரப்பண்ணுவேன் என்று உன்னை நாட்டின சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

யூதா மனுஷர்மீதும் இஸ்ரவேல் குடிகள்மீதும் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பும், அவருடைய கோபமும் வருகிறது. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கும் தண்டனையும் அவர்களுக்கு வருகிறது. இந்த தண்டனையிலிருந்து அவர்களால் தப்பித்துக்கொள்ள முடியாது. அவர்களுக்கு ஒருவரும் உதவிசெய்யமாட்டார்கள். அவர்களால் தங்களுக்குத் தாங்களே உதவிசெய்து கொள்ளவும் முடியாது.

அவர்கள் தப்பித்துக்கொள்ளாமாட்டாத தீங்கை கர்த்தர் அவர்கள்மீது வரப்பண்ணியிருக்கிறார். தங்களுக்கு தீங்கும், ஆபத்தும், உபத்திரவமும் வரும்போது அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள். யூதாவின் மனுஷர் செழித்திருந்த காலத்தில், அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடவில்லை. கர்த்தருக்கு நன்றிசொல்லவில்லை. கர்த்தரை மறந்துவிட்டார்கள். ஆனால் இப்போதோ அவர்களுக்கு தீங்கு வந்திருக்கிறது. அவர்களுக்கு உதவி தேவைப்படுகிறது. அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்.

கர்த்தரோ அவர்களுடைய விண்ணபத்திற்கு செவிகொடுக்க மறுத்துவிடுகிறார். "நான் அவர்களை கேளாதிருப்பேன்" (எரே 11:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கேளாமலும், தங்கள் செவியை சாயாமலும் போய், அவரவர் தம்தம் பொல்லாத இருதயக்கடினத்தின்படி நடக்கிறார்கள்.

கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் செவிகொடுக்கவில்லையென்றால், கர்த்தர் நம்முடைய வார்த்தைக்கு செவிகொடுக்க மாட்டார். யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தையை கேட்கவில்லை. கர்த்தர் இப்போது, அவர்களுடைய வார்த்தையை கேட்க மறுத்துவிடுகிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாத யூதாமனுஷருடைய ஜெபம், கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கிறது.

தங்களுடைய விண்ணப்பத்திற்கு கர்த்தர் செவிகொடுக்கவில்லை என்பதை யூதா மனுஷர் புரிந்துகொள்கிறார்கள். அதன்பின்பு அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணாமல், அந்நிய தேவர்களிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

"அப்பொழுது யூதாபட்டணங்களின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் போய்த் தாங்கள் தூபங்காட்டியிருந்த தேவர்களை நோக்கிக் கூப்பிட்டும், அவைகள் அவர்களுடைய ஆபத்துக்காலத்தில் அவர்களை இரட்சிப்பதில்லை" (எரே 11:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மாத்திரமே தம்முடைய பிள்ளைகளுக்கு, ஆபத்துக்காலத்தில் ஏற்ற துணையாகயிருக்கிறார். கர்த்தர் நமக்கு நல்ல சிநேகிதராகவும் இருக்கிறார். விக்கிரகங்கள் நம்மிடத்திலிருந்து ஆதாயங்களை எதிர்பார்க்கிறது. நமக்கு உதவிசெய்கிற வல்லமையும் ஜீவனும் அவற்றிற்கு இல்லை. யூதாவின் மனுஷரும் கர்த்தரை நம்பாமல், விக்கிரகங்களை நம்புகிறார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களுக்கு தூபங்களைக் காட்டுகிறார்கள்.

இஸ்ரவேலின் பரிசுத்தராகிய தேவன் மாத்திரமே மெய்யான தேவன். அவர் ஒருவர் மாத்திரமே தேவன். அவர் மாத்திரமே ஜீவனுள்ள தேவன். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ, ஒரே தேவனாகிய கர்த்தர்மீது திருப்தியாயில்லை. தங்களுக்கு ஏராளமான தெய்வங்கள் வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். புறஜாதி ஜனங்கள் தங்களுக்கு ஏராளமான விக்கிரகங்களை வைத்திருக்கிறார்கள். அவர்களைப்போலவே தங்களுக்கும் ஏராளமான எண்ணிக்கையில் தெய்வங்கள் வேண்டும் என்று ஆசைப்பட்டு, தங்களுக்கு திரளான தேவர்களை உண்டுபண்ணுகிறார்கள்.

"யூதாவே, உன் பட்டணங்களின் இலக்கமும் உன் தேவர்களின் இலக்கமும் சரி; எருசலேமுடைய வீதிகளின் இலக்கமும், நீங்கள் பாகாலுக்குத் தூபங்காட்டும்படி அந்த இலச்சையான காரியத்துக்கு ஸ்தாபித்த பீடங்களின் இலக்கமும் சரி" (எரே 11:13) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதாவின் மனுஷருக்கு ஏராளமான விக்கிரகங்கள் இருந்தாலும், அவர்களுடைய ஆற்றத்துக் காலத்தில், அந்த விக்கிரகங்கள் அவர்களை இரட்சிப்பதில்லை.

எரேமியா யூதாவின் மனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் எரேமியாவின் விண்ணப்பத்தையும் அங்கீகரிக்கவில்லை. "நீ இந்த ஜனத்திற்காக விண்ணப்பம் பண்ணவேண்டாம்" (எரே 11:14) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதாமனுஷர்மீது வந்திருக்கிறது. ஆகையினால் தம்முடைய தீர்க்கதரிசிகள் அவர்களுக்காக தம்மிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டாம் என்று கர்த்தர் அவர்களைத் தடைபண்ணுகிறார்.

"ஆதலால் நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் பண்ணவேண்டாம், அவர்களுக்காக மன்றாடவும் கெஞ்சவும் வேண்டாம்; அவர்கள் தங்கள் ஆபத்தினிமித்தம் என்னை நோக்கிக் கூப்பிடுங்காலத்திலே நான் அவர்களைக் கேளாதிருப்பேன்" (எரே 11:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் யூதாவின் மொத்த ஜனங்களுக்காக ஜெபம்பண்ணாவிட்டாலும், அவர்களில் மீதியாயிருக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ண வேண்டும். அவர்களுக்கு கல்தேயர் மூலமாய் இப்போது வந்திருக்கிற ஆபத்துக்களிலிருந்து அவர்கள் இரட்சிக்கப் படவேண்டும் என்று ஜெபம்பண்ணக்கூடாது. ஆனாலும் அவர்களுடைய நித்திய இரட்சிப்புக்காக தீர்க்கதரிசிகள் ஜெபிக்கவேண்டும்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் ஒரு காலத்தில் கர்த்தருக்கு பிரியமான ஜனங்களாயிருந்தார்கள். அப்போது, அவர்களுக்கு தேவனுடைய வீட்டில் ஓரிடம் இருந்தது. தேவனுடைய பலிபீடத்திலும் அவர்கள் பயபக்தியோடு பலிகளை செலுத்தினார்கள். அவர்கள் சமாதானபலிகளை செலுத்தியபோது, பலியாக செலுத்தப்பட்ட மிருகத்தின் ஒரு பங்கு அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. கர்த்தர் அந்த மாம்சத்தை, "பரிசுத்த மாம்சம்" (எரே 11:15) என்று இங்கு சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஜனங்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்திருக்கிறார். தம்முடைய உடன்படிக்கையின் பிரகாரம் அவர்களைப் பாதுகாத்து பராமரித்து வந்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். அவர்கள் துர்ச்சனரோடு சேர்ந்து மகாதீவினை செய்கிறார்கள். ஒரு காலத்தில் அவர்கள் கர்த்தருக்கு பிரியமானவர்களாயிருந்தார்கள். இப்போதோ தீவினை செய்து, கர்த்தரைவிட்டு பிரிந்துபோயிருக்கிறார்கள். அவர்களுக்கு, "என் வீட்டில் என்ன இருக்கிறது" (எரே 11:15) என்று கர்த்தர் கேட்கிறார்.

யூதாவின் மனுஷர் தீவினைகளை செய்தாலும், தங்கள் பாவத்தில் பெருமைப்படுகிறார்கள். தங்கள் அக்கிரமத்தில் பிரியப்படுகிறார்கள். தங்கள் சுயபலத்தையும், விக்கிரகங்களின் எண்ணிக்கையையும் நம்புகிறார்கள். அவர்களுடைய வீணான நம்பிக்கை அவர்களை வஞ்சித்துவிடுகிறது. கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய வாசஸ்தலத்தில் அநேக சிலாக்கியங்களைக் கொடுத்திருந்தார். ஆனால் அவர்களோ அந்த சிலாக்கியங்களை அசட்டைபண்ணி விடுகிறார்கள். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தை தீட்டுப்படுத்துகிறார்கள். பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டியவர்கள், துர்ச்சனலோடு சேர்ந்து மகாதீவினைகளை செய்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ஆனால் அவர்களோ விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டு பிரிந்துபோய்விடுகிறார்கள். இதன் நிமித்தமாய் அவர்களுக்கு கர்த்தருடைய வாசஸ்தலத்தில் பங்குமில்லை, பாத்தியமுமில்லை. கர்த்தருடைய ஆலயம் அவர்களுக்கு பாதுகாப்பாயிருக்காது. "அவர்கள் தங்கள் ஆபத்தினிமித்தம் என்னை நோக்கி கூப்பிடும் காலத்திலே நான் அவர்களை கேளாதிருப்பேன்" (எரே 11:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேவனுடைய பலிபீடம் அவர்களுக்கு திருப்தியைத் தராது. யூதாவின் மனுஷர் விக்கிரகங்களுக்கு பலிகளைச் செலுத்தினாலும், கர்த்தருடைய ஆலயத்தில் வந்து கர்த்தருக்கும் பலிகளைச் செலுத்துகிறார்கள். பலியாகச் செலுத்தப்பட்ட பரிசுத்தமான மாம்சத்தை புசிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பலிபீடம் சீக்கிரத்தில் அழிந்துபோகும். அவர்களுக்கு பலிசெலுத்தப்பட்ட பரிசுத்த மாம்சம் இனிமேல் கிடைக்காது.

"பரிசுத்த மாம்சத்தை உன்னைவிட்டுத் தாண்டிப்போகப் பண்ணுவார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கல்தேயர்கள் எருசலேமுக்குள் வந்து தேவாலயத்தை இடித்துப்போடுவார்கள். பலிபீடமும் இடிக்கப்படும். யூதர்களால் தேவாலயத்திலுள்ள பலிபீடத்தில் இனிமேல் பலிகளைச் செலுத்த முடியாது. அவர்களுக்கு இனிமேல் பரிசுத்த மாம்சம் கிடைக்காது.

கல்தேயர்கள் பரிசுத்த மாம்சத்தை அவர்களைவிட்டுத் தாண்டிப்போகப் பண்ணுவார்கள். யூதர்களுக்கு இனிமேல் பரிசுத்த மாம்சம் கிடைக்காதபடிக்கு, பலிபீடத்தையே இடித்துப்போடுவார்கள். யூதர்கள், எருசலேமில், தேவனுடைய ஆலயத்தில் பலியாகச் செலுத்தப்பட்ட பரிசுத்த மாம்சத்தைக் குறித்து பெருமைப்படுகிறார்கள். ஆனால் இனிமேல் அவர்களுக்கு பெருமைப்பட ஒன்றுமே இருக்காது.

யூதா மனுஷருடைய இருதயமும் சுத்தமாயில்லை. பரிசுத்த மாம்சம் அவர்களை விட்டு தாண்டிப்போனாலும், அவர்களுடைய இருதயம் பரிசுத்தமாயிருந்தால் அது அவர்களுக்கு ஆறுதலாயிருக்கும். ஆனால் அவர்களுடைய இருதயமோ திருக்குள்ளதும் கேடுள்ளதுமாயிருக்கிறது. அவர்கள் துர்ச்சனரோடு மாகாதீவினை செய்கிறார்கள். உள்ளத்திலே பரிசுத்தமில்லை. பரிசுத்த மாம்சமும் அவர்களுக்கு கிடைக்கவில்லை.

நம்முடைய இருதயத்தில் தேவனுடைய கிருபை நிரம்பியிருக்கவேண்டும். நம்முடைய இருதயம் பரிசுத்தமாயிருந்தால் தான், பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே வாசம்பண்ணுவார். ஒரு வேளை நம்முடைய ஜீவியத்தில், பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் பிரத்தியட்சமாய் வெளிப்படவில்லையென்றாலும், நமக்குள்ளே பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுவது நமக்கு ஆறுதலைத் தரும். நம்மிடத்தில் பரிசுத்தஆவியானவரின் கிரியைகளும் பிரத்தியட்சமாய் வெளிப்படாமல், நமக்குள்ளே பரிசுத்த ஆவியானவரும் வாசம்பண்ணாமல் இருந்தால், நம்முடைய நிலமை மிகவும் பரிதாபமாயிருக்கும்.

யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் பரிதாபமான நிலமை உண்டாயிருக்கிறது. அவர்களுடைய இருதயத்திலும் பரிசுத்தமில்லை. அவர்களுக்கு பரிசுத்த மாம்சமும் கிடைக்கவில்லை. பரிசுத்த ஆவியானவரும் அவர்களைவிட்டுத் தாண்டிப்போய்விடுகிறார். பரிசுத்த மாம்சமும் அவர்களைவிட்டுத் தாண்டிப்போய்விடுகிறது. எருசலேமின் குடிகளுக்கு தேவாலயமுமில்லை. தேவனுடைய பிரசன்னமுமில்லை. அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போகிறார்கள். கர்த்தர் அவர்களைவிட்டு விலகிப்போய்விடுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கும், யூதா வம்சத்தாருக்கும் ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். அவர்களுக்கு அநேக கிருபைகளையும் சிலாக்கியங்களையும் காண்பித்திருக்கிறார். ஆனால் இப்போது அவர்களுக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்கவில்லை. யூதாவின் மனுஷர் ஒரு காலத்தில் கர்த்தருக்கு மிகவும் பிரியமானவர்களாகயிருந்தார்கள். கர்த்தர் அவர்களுக்கு, "நல்ல கனி உண்டாயிருக்கிற நேர்த்தியும் பச்சையுமான ஒலிவமரம்" (எரே 11:16) என்னும் பேரையிட்டார். நல்ல கனி உண்டாயிருக்குமாறு கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்தார். கர்த்தரே அவர்களை நாட்டினார்.

சொற்ப ஜனமாயிருந்த இஸ்ரவேல் புத்திரரை, கர்த்தர் பலுகிப்பெருகச் செய்தார். அவர்கள் ஒரு தேசமாக வளர்ந்தார்கள். கர்த்தர் அவர்களை அதிகமாய் ஆசீர்வதித்தார். அவர்கள் செழித்தார்கள். இஸ்ரவேல் தேசத்தில் தேவனுடைய பிரமாணம் ஜனங்களை ஆளுகை செய்தது. தேசம் செழித்திருந்தது. ஜனங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தபோது, அவர்களுக்கு ஆசீர்வாதமுண்டாயிற்று.

கர்த்தர் யூதா மனுஷரை நேர்த்தியும் பச்சையுமான ஒலிவமரமாக நாட்டினார். ஆனால் அவர்களோ காட்டு ஒலிவமரமாக மாறிப்போனார்கள்.

"சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால், நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள்" (ரோம 11:17,18).

இஸ்ரவேல் குடும்பத்தாரும் யூதா குடும்பத்தாரும் பொல்லாப்பு செய்தார்கள். இரண்டு குடும்பத்தாருமே கர்த்தருக்கு கோபத்தை உண்டாக்கினார்கள். அவர்கள் பாகாலுக்கு தூபங்காட்டினார்கள். மேசியாவே கர்த்தருக்கும் அவருடைய ஜனத்திற்கும் நடுவே மத்தியஸ்தராயிருக்கிறார். ஆனால் அவர்களோ தங்களுக்கு மேசியாவைத் தவிர, இன்னும் ஏராளமான அந்நிய தேவர்களை மத்தியஸ்தர்களாக நியமித்துக்கொண்டார்கள்.

கர்த்தர் யூதாவின் மனுஷரை நல்ல ஒலிவமரமாக நாட்டினார். அந்த மரத்திலிருந்து நேர்த்தியான நல்ல ஒலிவபழங்களை கர்த்தர் எதிர்பார்த்தார். ஆனால் கர்த்தர் நாட்டின நல்ல ஒலிவமரங்கள், காட்டொலிவமரங்களாக மாறிற்று. அவை இனிப்பான பழங்களைக் கொடுக்காமல் கசப்பான பழங்களைக் கொடுத்தது. ஆகையினால் கர்த்தர் அதைச் சுற்றிலும் நெருப்பைக் கொளுத்துகிறார். மகா அமளியின் சத்தமாய் அது எரிகிறது.

ஒலிவமரங்கள் இன்னும் பட்டுப்போக வில்லை. அவை பச்சையாயிருக்கிறது. அதில் பழங்கள் இருக்கிறது. இனிப்பான நல்ல பழங்களுக்குப் பதிலாக, கசப்பான கெட்ட பழங்கள் இருக்கிறது. கர்த்தரோ அந்த மரங்களை, அவையிருக்கும் வண்ணமாகவே நெருப்பினால் பழங்களோடு கொளுத்திவிடுகிறார்.

"இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக் கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களுமாயிருக்கிறார்கள்" (யூதா 12).

யூதாவின் மனுஷர் நேர்த்தியும் பச்சையுமான ஒலிவமரங்களாயிருந்தார்கள். அதன் கிளைகளெல்லாம் அடர்த்தியாய் வளர்ந்தது. ஆனால் கர்த்தரோ அதன் கொம்புகளையும் முறித்துப்போடுகிறார். யூதா தேசத்திலுள்ள பிரபுக்களையும் ஆசாரியர்களையும் முறித்துப்போடுகிறார். யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பொல்லாப்பு செய்தார்கள். ஆனாலும் அவர்கள் தங்களுக்கு கேடாகவே இந்தப் பொல்லாப்புகளைச் செய்தார்கள். அவர்களுடைய பொல்லாப்புகளினிமித்தமாய், கர்த்தர் அவர்கள்மேல் தீங்கை வரப்பண்ணுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி
எரே 11:18-20

எரே 11:18. அதைக் கர்த்தர் எனக்கு அறிவித்ததினாலே அறிந்து கொண்டேன்; அவர்களுடைய செய்கைகளை அப்பொழுது எனக்குத் தெரியக்காட்டினீர்.

எரே 11:19. மரத்தை அதின் கனிகளோடுங்கூட அழித்துப் போடுவோமென்றும், அவன் ஜீவனுள்ளோருடைய தேசத்திலி ராமலும், அவன் பேர் இனிநினைக்கப் படாமலும்போக அவனைச் சங்கரிப்போ மென்றும், எனக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணினார்கள் என்பதை அறியாதிருந்து, நான் அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்படும் சாதுவான ஆட்டுக் குட்டியைப்போல் இருந்தேன்.

எரே 11:20. சேனைகளின் கர்த்தாவே, உள்ளிந்திரியங்களையும் இருதயத்தையும் சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதியே, நீர் அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிறதைப் பார்ப்பேனாக; என் வழக்கை உமக்கு வெளிப்படுத்திவிட்டேன் என்றேன்.

எரேமியா தீர்க்கதரிசி தன்னுடைய தீர்க்கதரிசனப் புஸ்தகத்தில், தன்னைப் பற்றியும் ஓரளவுக்கு எழுதியிருக்கிறார். அவர் யூதா தேசத்தில் வாசம்பண்ணிய காலம் பிரச்சனை நிரம்பிய காலமாயிருந்தது. அவருக்கு ஏராளமான வருத்தங்களும் நெருக்கங்களும் உண்டாயிற்று. எரேமியா யூதாமனுஷர் மத்தியில் கர்த்தருடைய செய்தியை அறிவித்தார். ஆனால் அவர்களோ அவர் சொன்ன செய்தியையும் ஏற்றுக் கொள்ளவில்லை, அவரையும் ஏற்றுக்கொள்ள வில்லை.

எரேமியா ஆனதோத் ஊரைச்சேர்ந்தவர். இது ஆசாரியரின் பட்டணம். இந்தப் பட்டணத்து ஜனங்களே எரேமியாவுக்கு விரோதமாய் எழும்பினார்கள். அவருக்கு விரோதமாய் சதிபண்ணினார்கள். "மரத்தை அதின் கனிகளோடுங்கூட அழித்துப்போடுவோமென்றும், அவன் ஜீவனுள்ளோருடைய தேசத்திலிராமலும், அவன் பேர் இனி நினைக்கப்படாமலும்போக அவனைச் சங்கரிப்போமென்றும், எனக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணினார்கள் என்பதை அறியாதிருந்து, நான் அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்படும் சாதுவான ஆட்டுக்குட்டியைப்போல இருந்தேன்" (எரே 11:19) என்று எரேமியா தனக்கு ஏற்பட்டிருக்கிற பிரச்சனையைப்பற்றிச் சொல்லுகிறார்.

ஆனதோத் ஊரின் மனுஷர் எல்லோரும் ஒன்றாய்க்கூடி, எரேமியாவைக் கொன்றுபோடுவதற்கு சதிஆலோசனை பண்ணுகிறார்கள். "மரத்தை அதின் கனிகளோடுங்கூட அழித்துப்போடுவோம்" என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த வாக்கியம் யூதருடைய பழமொழி வாக்கியமாகும். வேரையும், அதன் கிளையையும் மொத்தமாய் அழித்துப் போடுவோம் என்பது இந்த வாக்கியத்தின் பொருள். இந்த வாக்கியத்திற்கு, "தீர்க்கதரிசியையும், அவருடைய தீர்க்கதரிசனத்தையும் அழித்துபோடுவோம்" என்றும் பொருள் சொல்லலாம். அவர்கள் எரேமியாவைக் கொன்றுபோட்டால், அவரோடுகூட அவருடைய தீர்க்கதரிசனமும் மரித்துப்போகும். ஒன்று மற்றொன்றை தோற்கச் செய்ய வேண்டும் என்பதுதான் அவர்களுடைய திட்டம்.

எரேமியாவுக்கு யூதா மனுஷர் மத்தியில் இதுவரையிலும் நற்பெயர் இருந்து வருகிறது. கர்த்தருடைய வார்த்தை அவர் மூலமாய் வெளிப்படுகிறது. எரேமியாவுக்கு பெயரும் புகழும் வருவதை, அவருடைய சொந்த ஊர் ஜனங்களே விரும்பவில்லை. எரேமியாவின் புகழை அழித்துப்போட வேண்டும் என்றும், அதன் பின்பு அவருடைய தீர்க்கதரிசனத்திற்கு மதிப்பும் மரியாதையும் இருக்காது என்றும், ஆனதோத் ஊர் ஜனங்கள் நினைக்கிறார்கள்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்துகிறவர்கள், அவர்களைக் கொன்றுபோடவேண்டும் என்று தீர்மானம்பண்ணுகிறார்கள். ஊழியக்காரரின் ஜீவனுக்கு குறைவானது எதுவும் அக்கிரமக்காரருக்கு திருப்தியைத் தராது. கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாகவும் கலகம்பண்ணுகிறவர்கள், தீர்க்கதரிசிகளின் ஜீவனுக்கு கண்ணி வைக்கிறார்கள்.

எரேமியாவைக் கொன்றுபோடவேண்டும் என்பது ஆனதோத் ஊர் மனுஷரின் திட்டம். அதற்காக அவர்கள் சதிஆலோசனைகளை பண்ணுகிறார்கள். ஆனால் எரேமியாவோ அவர்களுடைய கண்ணிகளுக்கு தப்பி ஜீவனோடிருக்கிறார். எரேமியாவின் பெயர் இனி நினைக்கப்படாமல் போகும் வண்ணமாக அவரை சங்கரிக்கவேண்டுமென்று சத்துருக்கள் திட்டமிடுகிறார்கள். ஆனால் எரேமியாவோ கர்த்தருடைய கிருபையினால் ஜீவனோடிருக்கிறார். கர்த்தர் நியமித்திருக்கும் காலம் வரையிலும் எரேமியா ஜீவனோடிருப்பார்.

தனக்கு விரோதமாக சத்துருக்கள் செய்கிற சதிஆலோசனை எரேமியாவுக்குத் தெரியவில்லை. ஆனால் கர்த்தர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். சத்துருக்கள் தங்களுடைய சதிஆலோசனையை இரகசியமாய்ச் செய்கிறார்கள். எரேமியாவுக்கு எதுவும் தெரியாதபடிக்கு, தங்களுடைய வலையை எரேமியாவுக்கு விரோதமாக இரகசியமாய் விரிக்கிறார்கள். ஆனாலும் எரேமியாவின் ஜீவனுக்கு விரோதமாக, ஆனதோத் ஊரார் செய்கிற சதிஆலோசனைகளை கர்த்தர் எரேமியாவுக்கு வெளிப்படுத்துகிறார்.

"அதைக் கர்த்தர் எனக்கு அறிவித்ததினாலே அறிந்துகொண்டேன்; அவர்களுடைய செய்கைகளை அப்பொழுது எனக்குத் தெரியக்காட்டினீர்" (எரே 11:18) என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

எரேமியா ஆனதோத் ஊருக்கு கள்ளம் கபடமில்லாமல், ஒரு ஆட்டுக்குட்டியைப்போல வருகிறார். தனக்கு விரோதமாய் அவர்கள் விரித்திருக்கிற வலையைப்பற்றியும், தனக்காக அவர்கள் தோண்டியிருக்கிற குழியைப்பற்றியும், தனக்கு வைக்கப்பட்டிருக்கிற கண்ணியைப்பற்றியும், எரேமியாவுக்கு ஒன்றும் தெரியவில்லை. மந்தையிலுள்ள ஆடுகள் மேய்ச்சலுக்கு வழக்கம் போல் போவதுபோல, எரேமியாவும் கர்த்தருடைய ஊழியத்தை செய்ய ஆனதோத் ஊருக்கு வழக்கம்போல் போகிறார். ஆனால் அவர் அடிக்கப்படுவதற்கு கொண்டுபோகப்படும் சாதுவான ஆட்டுக்குட்டியைப்போல இருக்கிறார். எரேமியாவுக்கும் மரணத்திற்கும் இடையில் ஒரு அடி தூரம் மாத்திரமே இருக்கிறது. அவர் மரணத்திற்கு மிகவும் அருகாமையிலிருக்கிறார்.

எரேமியாவின் ஜீவனுக்கு விரோதமாக ஆனதோத் ஊரார் சதிஆலோசனை பண்ணுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், அவர்களுடைய சதிஆலோசனையை, எரேமியாவுக்கு வெளிப்படுத்துகிறார். ஒருவேளை சொப்பனத்தின் மூலமாகவோ, தரிசனத்தின் மூலமாகவோ, அல்லது தன்னுடைய ஆவியில் ஏவப்பட்டோ எரேமியாவுக்கு கர்த்தருடைய வெளிப்பாடு கிடைத்திருக்கலாம். எரேமியா தனக்கு வரப்போகிற ஆபத்துக்கு தப்பித்துக்கொள்ள வேண்டும்.

இஸ்ரவேலின் ராஜா எலிசாவின் வார்த்தையைக்கேட்டு தன்னைக் காத்துக் கொண்டதுபோல, எரேமியாவும் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும். "அப்பொழுது இஸ்ரவேலின் ராஜா தேவனுடைய மனுஷன் தன்னை எச்சரித்து, தனக்குக் குறித்துச்சொன்ன ஸ்தலத்திற்கு மனுஷரை அனுப்பிப்பார்த்து எச்சரிக்கையாயிருந்து, இப்படி அநேகந்தரம் தன்னைக் காத்துக்கொண்டான்" (2இராஜா 6:10).

கர்த்தர் தனக்கு வரப்போகும் ஆபத்துக்களை அறிவித்ததினால், எரேமியா அதை அறிந்துகொள்கிறார். கர்த்தர் சத்துருக்களுடைய சதிஆலோசனைகளையும், செய்கைகளையும் எரேமியாவுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளைப் பாதுகாக்கிறார். அவர்கள்மீது கரிசனையோடிருக்கிறார். தம்முடைய பிள்ளைகளுக்கு விரோதமாக யாரும் தீங்கு செய்யாதபடிக்கு, கர்த்தர் அவர்களைப் பாதுகாத்து பராமரிக்கிறார். சத்துருக்களுடைய சதிஆலோசனைகள் எதுவும் சித்திக்கவில்லை. எரேமியாவுக்கு விரோதமாக எழும்பிய ஆயுதங்களெல்லாம் வாய்க்காமல் போயிற்று.

தனக்கு வரப்போகும் ஆபத்தை கர்த்தர் வெளிப்படுத்தியவுடன், எரேமியா உடனே கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார். "சேனைகளின் கர்த்தாவே, உள்ளிந்திரியங்களையும் இருதயத்தையும் சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதியே, நீர் அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிறதைப் பார்ப்பேனாக; என் வழக்கை உமக்கு வெளிப்படுத்திவிட்டேன்" என்று ஜெபம்பண்ணுகிறார் (எரே 11:20).

மனுஷர் நமக்கு விரோதமாக அநியாயம் செய்யும்போது, கர்த்தர் நமக்கு ஆதரவாக நீதி செய்கிறார். கர்த்தர் நம்மோடு கூடயிருக்கிறார். அவர் நம்முடைய வழக்கின் நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறார். நாம் ஆடுகளைப்போல கள்ளம் கபடமில்லாதவர்களாயிருந்தாலும், நம்முடைய பிரதான மேய்ப்பர் நல்ல மேய்ப்பராயிருக்கிறார். தேவனுடைய கிருபையும், இரக்கமும், அவருடைய நீதியும் நம்மைப் பாதுகாக்கும்.

கர்த்தருடைய நீதி துன்மார்க்கருக்கு பயங்கரமானதாயிருந்தாலும், கர்த்தரை நம்புகிற நமக்கோ அதுவே ஆறுதலாயிருக்கிறது. மனுஷன் முகத்தைப் பார்க்கும்போது, கர்த்தர் மனுஷனுடைய இருதயத்தைப் பார்க்கிறார். கர்த்தர் எரேமியாவின் இருதயத்தையும், அவருக்கு விரோதமாய் சதிஆலோசனைபண்ணுகிற சத்துருக்களின் இருதயத்தையும் பார்க்கிறார்.

எரேமியாவின் இருதயத்தில் உண்மையிருக்கிறது. எல்லோருக்கும் நன்மை செய்யவேண்டும் என்னும் விருப்பம் இருக்கிறது. அவருடைய சத்துருக்களின் இருதயமோ திருக்குள்ளதும் கேடுள்ளதுமாயிருக்கிறது. தங்களுடைய சதிஆலோசனைகளை மூடி மறைக்கவேண்டுமென்று சத்துருக்கள் நினைக்கிறார்கள். ஆனால் கர்த்தருக்கு மறைவாக அவர்களால் எதையும் ஒளித்துவைக்க முடியவில்லை. கர்த்தருக்கு மறைவான இரகசியம் ஒன்றுமேயில்லை.

கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டவேண்டுமென்றும், தான் அதை தன்னுடைய கண்களால் பார்க்கவேண்டுமென்றும் எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமும், விருப்பத்தின் பிரகாரமும், தனக்கும் தன்னுடைய சத்துருக்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற வழக்கை நீதியாய் விசாரிக்கவேண்டும் என்று எரேமியா ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் நீதிபரர். அவர் மனுஷருடைய வழக்குகளை, முகத்தாட்சணியம் பாராமல், நியாயமாய் விசாரித்து, நீதியான தீர்ப்பு சொல்லுகிறவர்.

"நீர் அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிறதை பார்ப்பேனாக" என்று எரேமியா ஜெபம்பண்ணும்போது, அவருடைய வார்த்தையில் மனுஷனுடைய பலவீனமான சுபாவம் வெளிப்படுவதாக வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய சத்துருக்களுக்காக நாம் ஜெபம்பண்ண வேண்டும். நமக்கு தீங்கு செய்தவர்களுக்கு நாம் நன்மை செய்யவேண்டும். இதுவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உபதேசம். ஆனால் எரேமியாவோ, தன்னுடைய சத்துருக்களுக்கு விரோதமாக ஜெபம்பண்ணுகிறார்.

எரேமியா தன்னுடைய வழக்கை கர்த்தருடைய நீதிக்கு ஒப்புக்கொடுக்கிறார். "என் வழக்கை உமக்கு வெளிப்படுத்திவிட்டேன்" என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது அவரிடத்தில் எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை. அவருடைய மனதில் இரகசியமான விருப்பங்கள் எதுவும் மறைந்திருக்கவில்லை. கர்த்தர் எதை செய்தாலும், அதை ஏற்றுக்கொள்ள எரேமியா ஆயத்தமாயிருக்கிறார்.

நாம் தப்பு செய்தாலும், நம்முடைய தப்பிதத்திற்காக மனம் வருந்தி கர்த்தரிடத்தில் மன்னிப்பு கேட்கும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்மை மன்னிக்கிறார். நமக்கு விரோதமாக மற்றவர்கள் தீங்கு செய்யும்போது, நாம் அவர்களைப்பற்றி கர்த்தரிடத்தில் முறையிடலாம். எரேமியாவைப்போல நாமும், "என் வழக்கை உமக்கு வெளிப்படுத்திவிட்டேன்" என்று கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி மனஆறுதலைப் பெற்றுக்கொள்ளலாம்.

நாம் கர்த்தருக்கு கட்டளை கொடுக்கக்கூடாது. ஆனாலும் கர்த்தரிடத்தில் முறையிடுவதற்கு நமக்கு உரிமை உண்டு. நம்முடைய வழக்கை கர்த்தரிடத்தில் தாராளமாய் வெளிப்படுத்தலாம். வழக்கின் தீர்ப்பு இப்படித்தான் இருக்கவேண்டும் என்று நாம் கர்த்தருக்கு கட்டளை கொடுக்கக்கூடாது.

ஆனதோத்தின் மனுஷர் எரே 11:21-23

எரே 11:21. ஆதலால் நீ எங்கள் கையினாலே சாகாதபடிக்குக் கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் சொல்லவேண்டாம் என்று சொல்லி, உன் பிராணனை வாங்கத்தேடுகிற ஆனதோத்தின் மனுஷரைக்குறித்துக் கர்த்தர் சொல்லுகிறார்:

எரே 11:22. இதோ, இதினிமித்தம் உங்களை விசாரிப்பேன்; இளவயதுள்ளவர்கள் பட்டயத்தாலே சாவார்கள்; அவர்கள் குமாரரும் அவர்கள் குமாரத்திகளும் பஞ்சத்தாலே சாவார்கள்.

எரே 11:23. அவர்களில் மீதியாய் இருப்பவர்களில்லை; நான் ஆனதோத்தின் மனுஷரை விசாரிக்கும் வருஷத்திலே அவர்கள்மேல் ஆபத்தை வரப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

ஆனதோத்தின் மனுஷர் எரேமியாவை சங்கரிப்பதற்கு சதிஆலோனை பண்ணுகிறார்கள். அவர்கள் எரேமியாவை துன்பப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு ஆனதோத் மனுஷருக்கு விரோதமாய் வருகிறது. எரேமியா தன்னுடைய வழக்கை எருசலேமில் போய் சொல்லவில்லை. எருசலேமிலுள்ள நீதிமன்றங்களில் நீதியில்லை. நியாயமுமில்லை. அங்கேயுள்ள ஆசாரியர்களும் பிரபுக்களும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். எருசலேமிலுள்ள ஆசாரியர்கள், ஆனதோத் ஊர் ஆசாரியர்களோடு ஒத்துப்போவார்கள். ஆகையினால் எரேமியா தன்னுடைய வழக்கை எருசலேமிலுள்ள ஆசாரியரிடத்தில் சொல்லாமல், கர்த்தருடைய சமுகத்தில் சொல்லுகிறார்.

கர்த்தரும் எரேமியாவின் வழக்கை விசாரித்து, அவருடைய சத்துருக்களுக்கு விரோதமாக தம்முடைய நீதியான தீர்ப்பை சொல்லுகிறார். கர்த்தருடைய தீர்ப்பு சத்தியத்தின் பிரகாரம் இருக்கும். அவர்கள் எரேமியாவை கொன்றுபோடவேண்டுமென்று தீர்மானித்திருந்தார்கள். மரத்தை அதின் கனிகளோடுங்கூட அழித்துப்போடுவதுபோல, அவர்கள் எரேமியாவை வேரோடு அழிக்க சதிஆலோசனைபண்ணினார்கள். எரேமியாவை சங்கரிப்பதற்கு முயற்சிபண்ணினார்கள்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை யூதாமனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும் என்று எச்சரித்தார். தங்களுக்கு வரப்போகும் அழிவிலிருந்து தப்பிக்க, அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்று போதித்தார். ஆனால் யூதாவின் மனுஷரோ எரேமியாவின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. தங்களுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்ன எரேமியாவைக் கொன்றுபோட சதிஆலோசனைபண்ணுகிறார்கள். எரேமியா செத்துப்போய்விட்டால், தங்களுக்கு விரோதமாய் ஒருவரும் பேசமாட்டார்கள் என்று ஆனதோத் ஊரார் நினைக்கிறார்கள்.

எரேமியா கர்த்தருடைய நாமத்தினால் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். எருசலேமிலுள்ள தீர்க்கதரிசிகளும் கர்த்தருடைய நாமத்தினால்தான் பேசுவார்கள். ஆனால் அவர்கள் எரேமியாவைப்போல கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைப்பற்றி ஒன்றும் சொல்லமாட்டார்கள். அவர்கள் ஜனங்களுக்கு ஆறுதலான செய்திகளையும், மகிழ்ச்சியான செய்திகளையும் மாத்திரமே சொல்லுகிறார்கள். எரேமியாவோ அவர்களைப்போல மாய்மாலம்பண்ணவில்லை. கர்த்தர் தன் வாயில்போட்ட செய்திகளை, எரேமியா அப்படியே பேசிவிடுகிறார்.

கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களுக்கு இந்தப் பிரபஞ்சத்தில் ஏராளமான பாடுகளும், உபத்திரவங்களும் வருகிறது. ஊழியக்காரர்களைக் கொன்றுபோட்டால் அவர்களுடைய ஊழியம் நின்றுபோகும் என்று சத்துருக்கள் நினைக்கிறார்கள். ஊழியக்காரர்களின் வாயை அடைப்பதற்கு, அவர்களுடைய மூச்சை அடைப்பதுதான் சிறந்த வழி என்று நினைத்து, ஊழியக்காரர்களைக் கொன்று போட சதியாலோசனை பண்ணுகிறார்கள்.

ஆனதோத் மனுஷர் எரேமியாவின்மீது கோபப்பட்டு, அவரை நோக்கி, "நீ எங்கள் கையினாலே சாகாதபடிக்குக் கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் சொல்லவேண்டாம்" (எரே 11:21) என்று சொல்லி, அவரை எச்சரிக்கிறார்கள். எருசலேமிலே ஆலோசனைச்சங்கத்தார் கூடியிருக்கிறார்கள். அங்கே கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு பாதுகாப்பு இருக்க வேண்டும். ஆனால் எருசலேமில்தான் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளுக்கு பாதுகாப்பு இல்லாமல் போயிற்று. ஆனதோத்தின் மனுஷர் எரேமியாவின் ஜீவனுக்கு விரோதமாய் சதிஆலோசனை பண்ணுகிறார்கள். அவர்கள் எரேமியாவின் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாய்த் தீங்கு செய்ய நினைக்கிறவர்கள் அழிந்துபோவார்கள்.

எரேமியாவின் பிராணனை வாங்கத் தேடுகிற ஆனதோத் மனுஷரைக் குறித்து கர்த்தர் தம்முடைய நீதியான தீர்ப்பைச் சொல்லுகிறார். "இதோ, இதினிமித்தம் உங்களை விசாரிப்பேன்; இளவயதுள்ளவர்கள் பட்டயத்தாலே சாவார்கள்; அவர்கள் குமாரரும் அவர்கள் குமாரத்திகளும் பஞ்சத்தாலே சாவார்கள்" (எரே 11:22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த வாக்கியத்தில், "இளவயதுள்ளவர்கள்" என்னும் வார்த்தை, இளவயதிலுள்ள ஆசாரியரைக் குறிக்கும். ஆனதோத்தின் மனுஷர் எல்லோருமே ஆசாரியர்கள். அது ஆசாரியரின் பட்டணம். அவர்கள் எரேமியாவின் பிராணனை வாங்கத் தேடினார்கள். மரத்தை அதின் கனிகளோடுகூட அழித்துப்போடுவதுபோல, எரேமியாவை வேரோடு அழிக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தார்கள். எரேமியாவின் பேர் இனி நினைக்கப்படாமல் போகவேண்டுமென்று விரும்பினார்கள். எரேமியாவை சங்கரிக்கவேண்டுமென்று சொன்னார்கள். கர்த்தரோ எரேமியாவுக்கு விரோதமாய் சதிஆலோசனைபண்ணின ஆனதோத் மனுஷரைத் தண்டிக்கிறார்.

ஆனதோத் மனுஷரில் "மீதியாய் இருப்பவர்களில்லை; நான் ஆனதோத்தின் மனுஷரை விசாரிக்கும் வருஷத்திலே அவர்கள்மேல் ஆபத்தை வரப்பண்ணுவேன்" (எரே 11:23) என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆனதோத் ஊராருக்கு சர்வநாசமும், சர்வமோசமும், சர்வசங்காரமும் உண்டாகும். அவர்கள் எல்லோருமே கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் அழிந்துபோவார்கள். சிறியோரும் பெரியோரும் அழிந்துபோவார்கள். மாரரும் குமாரத்திகளும், அவர்களுடைய பெற்றோரும் அழிந்துபோவார்கள்.

கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பின் பிரகாரம், ஆனதோத் மனுஷர்மீது ஆபத்தை வரப்பண்ணுகிறார். இஸ்ரவேலின் பரிசுத்தர் சேனைகளின் கர்த்தராயிருக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரருக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறவர்கள், சேனைகளின் கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். மனுஷரால் கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியாது.

12 அதிகாரம்

ஆகாதவர்களும் துரோகம் செய்கிறவர்களும் செழித்திருக்கிறார்கள் (எரே 12:1,2). எரேமியா தீர்க்கதரிசி தன்னுடைய உத்தமத்தை கர்த்தருக்கு முன்பாக அறிக்கை செய்கிறார். துன்மார்க்கருடைய பொல்லாப்புகளெல்லாம் முடிவுக்கு வரவேண்டும் என்று ஜெபிக்கிறார் (எரே 12:3,4). கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியை கடிந்துகொள்கிறார். எரேமியா துன்மார்க்கருடைய செழிப்பான வாழ்க்கையைப் பார்த்து மனம் தளர்ந்துபோய்விடக்கூடாது (எரே 12:5,6).

தேவனுடைய இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது வேதனையிலும் உபத்திரவத்திலும் இருக்கிறார்கள். அவர்களுடைய தேசம் பாழாய்ப்போயிருக்கிறது (எரே 12:7-13). கர்த்தருடைய ஜனத்திற்கு அவருடைய இரக்கம் கிடைக்கும். இஸ்ரவேலின் சத்துருக்கள்மீது தேவனுடைய கோபம் வரும். அவர்களும் கர்த்தருடைய பிள்ளைகளோடு ஐக்கியமாயிருந்தால், அவர்களுக்கும் கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதங்களில் பங்கு இருக்கும் (எரே 12:14-17).

ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? எரே 12:1-6

எரே 12:1. கர்த்தவே, உம்மோடே நான் வழக்காடப்போனால், தேவரீர் நீதியுள்ளவராமே; ஆகிலும் உம்முடைய நியாயங்களைக் குறித்து உம்மோடே நான் பேசும்படி வேண்டுகிறேன்; ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ்செய்துவருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன?

எரே 12:2. நீர் அவர்களை நாட்டினீர், வேர் பற்றித் தேறிப்போனார்கள், கனியும் கொடுக்கிறார்கள்; நீர் அவர்கள் வாய்க்குச் சமீபமும், அவர்கள் உள்ளிந்திரியங்களுக்கோ தூரமுமாயிருக்கிறீர்.

எரே 12:3. கர்த்தாவே, நீர் என்னை அறிந்திருக்கிறீர், என்னைக் காண்கிறீர்; என் இருதயம் உமக்கு முன்பாக எப்படிப்பட்டதென்று சோதித்து அறிகிறீர்; அடிக்கப்படும் ஆடுகளைப் போல அவர்களைப் பிடுங்கிப்போட்டு, கொலை நாளுக்கு அவர்களை நியமியும்.

எரே 12:4. எதுமட்டும் தேசம் புலம்பி, எல்லா வெளியின் புல்லும் வாடி, அதின் குடிகளுடைய பொல்லாப்பினிமித்தம் மிருகங்களும் பறவைகளும் அழியவேண்டும்! எங்கள் முடிவை அவன் காண்பதில்லையென்கிறார்கள்.

எரே 12:5. நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்னசெய்வாய்?

எரே 12:6. உன் சகோதரரும், உன் தகப்பன் வம்சத்தாரும் உனக்கு துரோகம் பண்ணி, அவர்களும் உன்னைப் பின் தொடர்ந்து மிகவும் ஆரவாரம்பண்ணினார்கள்; அவர்கள் உன்னோடே இனிய வார்த்தைகளைப் பேசினாலும் அவர்களை நம்பவேண்டாம்.

தேவனுடைய சித்தத்தையும் திட்டத்தையும் நாம் அறிந்திருக்கவேண்டும். எரேமியாவுக்கு கர்த்தருடைய சித்தம் நன்றாய்த் தெரியும். ஆனாலும், கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய சித்தத்தையும், திட்டத்தையும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இந்த வாக்கியங்களை எழுதுகிறார்.

எரேமியா கர்த்தரோடு வழக்காடுகிறார். அவர் கர்த்தரோடு வாக்குவாதம் பண்ணவில்லை. தன்னுடைய மனதில் எழும்புகிற சந்தேகங்களை, எரேமியா கர்த்தருடைய சமுகத்திலே பணிவோடு சொல்லுகிறார். கர்த்தருடைய திட்டத்திலோ, அவருடைய சித்தத்திலோ, அவருடைய செய்கையிலோ ஒரு குறையுமில்லை. கர்த்தருடைய நடவடிக்கைகளில் எரேமியா எந்த தப்பும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் கர்த்தருடைய செய்கைகளுக்கான காரணம் அவர்களுக்குப் புரியவில்லை. அதை கர்த்தரிடத்திலேயே கேட்டு தெரிந்து கொள்ளலாம் என்று தீர்மானித்து, எரேமியா கர்த்தரோடு வழக்காடுகிறார்.

"கர்த்தவே, உம்மோடே நான் வழக்காடப்போனால், தேவரீர் நீதியுள்ளவராமே; ஆகிலும் உம்முடைய நியாயங்களைக் குறித்து உம்மோடே நான் பேசும்படி வேண்டுகிறேன்" (எரே 12:1) என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

எரேமியாவின் மனதில் இரண்டு கேள்விகள் எழும்பியிருக்கிறது. அவையாவன: 1. ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? 2. துரோகஞ்செய்துவருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன?

தன் மனதில் ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தை, எரேமியா கர்த்தரிடத்தில் கேட்டு தெளிவுபடுத்த விரும்புகிறார். நம்முடைய சிருஷ்டிகரோடு நாம் வழக்காடக்கூடாது. ஆனாலும் நம்முடைய மனதிலுள்ள சந்தேகங்களை கர்த்தரிடத்தில் கேட்டு, அதற்கு தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சில சமயங்களில் தேவன் செய்கிற காரியங்கள் நமக்கு புரியாத புதிராயிருக்கும். அதன் சரியான விளக்கத்தைப் புரிந்துகொள்ளாமல் நாம் இருளிலிருப்பதுபோல தடுமாறுவோம். சந்தேகத்தோடு இருளிலிருப்பது நல்லதல்ல. சந்தேகத்தை நீக்கிவிட்டு, தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொண்டு, வெளிச்சத்திலிருப்பதுதான் நமக்கு நல்லது. நாம் இருளின் பிள்ளைகளல்ல. நாம் வெளிச்சத்தின் பிள்ளைகள்.

நம்மிடத்தில் தேவனைப்பற்றி சரியான சிந்தனையும் தெளிவும் இருக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய சிருஷ்டிகளுக்கு ஒருபோதும் தீங்கு செய்யமாட்டார். அவரிடத்தில் அநீதியோ, அநியாயமோ இருக்காது. பல சமயங்களில் தேவனுடைய கிரியைகளை நம்மால் புரிந்துகொள்ள முடியாமல் போகலாம். பல காரியங்கள் நமக்கு புரியாத இரகசியமாக இருக்கலாம்.

புரிந்துகொள்ள முடியாத இரகசியங்கள் கர்த்தருக்கே உரியது. நம்மால் சில இரகசியங்களை புரிந்துகொள்ள முடியவில்லையென்றாலும், நம்மிடத்தில் கர்த்தரைப்பற்றி தெளிவான சிந்தனையிருக்க வேண்டும். கர்த்தரைப்பற்றிய அடிப்படை சத்தியங்கள் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் அஸ்திபாரமாயிருக்கவேண்டும். கர்த்தரைப்பற்றிய அடிப்படை சத்தியங்களும், அவருடைய கிருபையுள்ள கிரியைகளும் மாறாதவை.

நம்முடைய கர்த்தர் நீதியுள்ளவர். அவர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் குழம்பிப்போயிருந்தாலும், கர்த்தரைப்பற்றிய நம்முடைய விசுவாசம் குழம்பி விடக்கூடாது. கர்த்தரைப்பற்றிய அறிவு நமக்குள் தெளிவாயிருக்கவேண்டும். "சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்" (சங் 73:1).

தேவன் தம்முடைய தெய்வீக பராமரிப்பினால், சர்வசிருஷ்டிகளையும் ஆளுகை செய்கிறார். ஆனாலும் தேவனுடைய தெய்வீக பராமரிப்புக்களில் சில காரியங்கள் எரேமியாவுக்குப் புரியவில்லை. கர்த்தர் நீதியுள்ளவர். அவர் நீதிமான்களை ஆசீர்வதிக்கிறவர். ஆனால் இந்த உலகத்தில் ஆகாதவர்களின் வழி வாய்க்கிறது. துரோகம் செய்து வருகிற அனைவரும் சுகித்திருக்கிறார்கள். துன்மார்க்கர் செழித்திருக்கிறார்கள். பிறருக்கு தீங்கு செய்கிறவர்கள் சுகமாய் ஜீவிக்கிறார்கள். நீதிமான்கள்தான் செழித்திருக்கவேண்டும். ஆனால் துன்மார்க்கர் செழித்திருக்கிறார்கள்.

மாய்மாலக்காரரும், அக்கிரமக்காரரும் சுகமாய் ஜீவிக்கிறார்கள். இவர்களுடைய ஆரம்பம் நன்றாயிருந்தாலும், இவர்களுடைய முடிவு மோசமாயிருக்கும். கர்த்தரே அவர்களை நாட்டினார். அவர்கள் வேர்பற்றி தேறிப்போனார்கள். அவர்கள் கனியும் கொடுக்கிறார்கள். கர்த்தர் துன்மார்க்கருடைய எல்லா கிரியைகளையும் ஆசீர்வதிப்பதில்லை. கர்த்தர் அவர்களுடைய வாய்க்கு சமீபமும், அவர்கள் உள்ளிந்திரியங்களுக்கு தூரமாயும் இருக்கிறார் (எரே 12:2).

கர்த்தர் துன்மார்க்கரையும் நல்ல நிலத்தில்தான் நாட்டியிருக்கிறார். பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தில்தான் அவர்கள் நாட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் புறஜாதி தேசத்தில் நாட்டப்படவில்லை.

“தேவரீர் உம்முடைய கையினாலே ஜாதிகளைத் துரத்தி, இவர்களை நாட்டி; ஜனங்களைத் துன்பப்படுத்தி, இவர்களைப் பரவப்பண்ணினீர்” (சங் 44:2) “நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக்கொடியைக் கொண்டுவந்து, ஜாதிகளைத் துரத்திவிட்டு, அதை நாட்டினீர்” (சங் 80:8).

ஆகாதவர்களும், துரோகம் செய்கிறவர்களும், துன்மார்க்கரும் கர்த்தருடைய தேசத்திலே வேர்பற்றி, தேறியிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியம் செழிப்பாயிருக்கிறது. அவர்கள் பிறருக்கு தீங்குசெய்தாலும், அவர்களுக்கு ஒரு தீமையும் வருவதில்லை. அவர்கள் செழித்திருக்கிறார்கள். அவர்கள் குறைவில்லாமல் சுகித்திருக்கிறார்கள். அவர்கள் கனியும் கொடுக்கிறார்கள். துன்மார்க்கர் நற்கனிகளைக் கொடுக்கமாட்டார்கள். அவர்கள் கெட்ட கனிளைக் கொடுப்பார்கள். கர்த்தரோ துன்மார்க்கரை அழித்துப்போடாமல், அப்படியே விட்டு வைத்திருக்கிறார்.

துன்மார்க்கரிடத்தில் தேவனைப்பற்றிய சிந்தனையில்லை. அவர்களுக்கு தேவன்மீது பயமுமில்லை. பக்தியுமில்லை. அவர்கள் கர்த்தரிடத்தில் அன்பாயில்லை. ஆனாலும் அவர்கள் கர்த்தரைப்பற்றி பெருமையாகப் பேசுகிறார்கள். அவர்கள் துன்மார்க்கராயிருந்தாலும், கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய வாய்க்கு சமீபமாயிருக்கிறார். துன்மார்க்கர் தங்கள் வாயினால் கர்த்தரை துதிக்கிறார்கள். கர்த்தரை கனம்பண்ணுகிறார்கள். ஆனால் அவர்களுடைய இருதயமோ கர்த்தரை விட்டுத் தூரமாய் விலகியிருக்கிறது.

துன்மார்க்கர் தங்கள் வாயைத் திறந்தாலே, கர்த்தருடைய நாமத்தை பலதடவை சொல்லுவார்கள். அவர்களுடைய ஒவ்வொரு பேச்சுக்களையும் கேட்கும்போது, அவர்கள் மிகுந்த பக்தியுள்ளவர்கள்போல தெரியும். ஆனால் அவர்கள் இருதயத்திலோ கர்த்தரைப்பற்றிய பயமிருக்காது. கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் ஆர்வமும், தாகமும் இருக்காது. கர்த்தர் அவர்களுடைய உள்ளிந்திரியங்களுக்கு தூரமாயிருக்கிறார்.

எரேமியா தன்னுடைய உத்தம குணத்தைப்பற்றி கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். “கர்த்தாவே, நீர் என்னை அறிந்திருக்கிறீர், என்னைக் காண்கிறீர்; என் இருதயம் உமக்கு முன்பாக எப்படிப்பட்டதென்று சோதித்து அறிகிறீர்” (எரே 12:3) என்று எரேமியா சொல்லுகிறார். கர்த்தர் தன்னை அறிந்திருப்பது எரேமியாவுக்கு ஆறுதலாயிருக்கிறது. எரேமியா பிறரை வஞ்சிக்கிறவரல்ல. பிறருக்கு துரோகம் செய்கிறவருமல்ல. அவர் கள்ளத்தீர்க்கதரிசியுமல்ல.

எரேமியா கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ளவராயிருக்கிறார். ஆனால் யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் அவருக்கு விரோதமாய்க் குற்றம் சொல்லுகிறார்கள். அவரைத் தூஷிக்கிறார்கள். அவர்களுக்கு எரேமியாவைப்பற்றித் தெரியாது.

“அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே” (1கொரி 2:8).

நம்முடைய இருதயம் எப்படியிருக்கிறதோ அப்படியே நாமும் இருப்போம். நாம் எப்படியிருக்கிறோமோ, அப்படியே நம்முடைய இருதயமும் இருக்கும். நம்முடைய இருதயம் கெட்டதாயிருந்தால், நாமும் கெட்டவர்களாயிருப்போம். நம்முடைய இருதயம் நல்லதாயிருந்தால் நாமும் நல்லவர்களாயிருப்போம். நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப்பற்றிய சிந்தனை நிரம்பியிருக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய இருதயத்தில் வாசம்பண்ண வேண்டும். அவர் நம்முடைய இருதயத்தை ஆளுகை செய்யவேண்டும். அப்போதுதான் நாம் கர்த்தருக்கு பிரியமானவர்களாயும், பிரயோஜனமுள்ளவர்களாயும் இருப்போம்.

கர்த்தர் துன்மார்க்கரை தண்டிக்கவேண்டுமென்று எரேமியா விண்ணப்பம்பண்ணுகிறார். ஆகாதவர்களின் வழி வாய்க்கிறது. துரோகம் செய்து வருகிற அனைவரும் சுகித்திருக்கிறார்கள். துன்மார்க்கர் செழித்திருக்கக்கூடாது என்று எரேமியா விரும்புகிறார். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரவேண்டுமென்று எரேமியா விண்ணப்பம்பண்ணுகிறார். "அடிக்கப்படும் ஆடுகளைப்போல அவர்களைப் பிடுங்கிப் போட்டு, கொலை நாளுக்கு அவர்களை நியமியும்" (எரே 12:3) என்று எரேமியா கர்த்தரிடத்தில் பணிவோடு ஜெபம்பண்ணுகிறார்.

துன்மார்க்கரும் துரோகம் செய்கிறவர்களும் பசுமையான இடங்களில் மேய்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் செழிப்பான இடங்களில் மேய்ந்து கொழுத்திருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை வேறுபிரித்து எடுத்து, அடிக்கப்படும் இடத்திற்கு அனுப்பிவிடவேண்டும் என்று எரேமியா விரும்புகிறார்.

ஆடுகள் செழிப்பான இடங்களில் மேய்ந்தாலும், அவை அடிக்கப்படும் நாளுக்காக வளர்க்கப்படுகிறது. "இஸ்ரவேல் அடங்காத கிடாரியைப் போல் அடங்காதிருக்கிறது; இப்போது கர்த்தர் அவர்களை விஸ்தாரமான வெளியிலே ஆட்டுக்குட்டியைப்போல் மேய்ந்து அலையப்பண்ணுவார்" (ஓசி 4:16).

கர்த்தர் துன்மார்க்கரையும் துரோகம் செய்கிறவர்களையும் சிறிதுகாலம் செழித்திருக்க அனுமதிக்கிறார். அப்போது அவர்களுடைய பெருமையும், ஆடம்பரமும் அதிகரிக்கும். அவர்களுடைய அக்கிரமமும் அதிகரிக்கும். அவர்களுடைய அக்கிரமத்தின் அளவு அதிகரிக்கும்போது, அவர்கள் அழிவுக்கு ஆயத்தமாயிருப்பார்கள். கொழுத்திருக்கிற ஆடு அடிக்கப்படுவதற்கு ஆயத்தமாயிருப்பதுபோல, செழித்திருக்கிற துன்மார்க்கரும் அழிக்கப்படுவதற்கு ஆயத்தமாயிருப்பார்கள்.

"எந்தமட்டும் தேசம் புலம்பி, எல்லா வெளியின் புல்லும் வாடி, அதின் குடிகளுடைய பொல்லாப்பினிமித்தம் மிருகங்களும் பறவைகளும் அழியவேண்டும்!" என்று எரேமியா கர்த்தரிடத்தில் கேட்கிறார் (எரே 12:4). துன்மார்க்கர் எவ்வளவு காலத்திற்கு செழித்திருப்பார்கள் என்று தெரியவில்லை. அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம் மிருகங்களும் பறவைகளும் அழிந்துபோகிறது. வயல் வெளியிலுள்ள புல்லுகள்கூட வாடிப்போகிறது. துன்மார்க்கர் நிமித்தமாய் தேசம் புலம்புகிறது.

தேசத்தில் துன்மார்க்கர் அதிகரிக்கும்போது, அந்த தேசம் செழித்திருக்காது. தேசத்திலே பசியும் பஞ்சமும் அதிகரிக்கும். யோசியாவின் ஆட்சிக்காலத்தின் பின்பகுதியிலும், யோயாக்கீமின் ஆட்சிக்காலத்தின் முன்பகுதியிலும் தேசத்தில் மிகப்பெரிய பஞ்சமுண்டாயிற்று. தேசத்தின் குடிகள் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்தார்கள்.

"அதினிமித்தம் மழை வருஷியாமலும், பின்மாரியில்லாமலும் போயிற்று; உனக்கோ, சோரஸ்திரீயின் நெற்றியிருக்கிறது; நீயோ: நாணமாட்டேன் என்கிறாய்" (எரே 3:3).

"அவர்களை முற்றிலும் அழித்துப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; திராட்சச்செடியிலே குலைகள் இராது, அத்திமரத்திலே பழங்கள் இராது, இலையும் உதிரும், நான் அவர்களுக்குக் கொடுத்தது அவர்களைவிட்டுத் தாண்டிப்போகும் என்று சொல்" (எரே 8:13).

"மலைகளுக்காக அழுது துக்கங்கொண்டாடுவேன்; வனாந்தரத் தாபரங்களுக்காகப் புலம்புவேன்; ஒருவனும் அவைகளைக் கடந்துபோகாதவண்ணமாய் அவைகள் பாழாக்கப்பட்டுக் கிடக்கின்றன; ஆடுமாடுகளின் சத்தம் கேட்கப்படுகிறது மில்லை; ஆகாசத்துப் பறவைகளும் மிருகஜீவன்களும் எல்லாம் ஓடிச் சிதறிப்போயின. நான் எருசலேமை மண்மேடுகளும் வலுசர்ப்பங்களின் தாபரமுமாக்குவேன்; யூதாவின் பட்டணங்களையும் குடியில்லாதபடி பாழாக்கிப்போடுவேன். இதை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? தேசம் அழிந்து, ஒருவனும் கடந்து போகாதபடி அது பாழாக்கப்படுகிற முகாந்தரமென்னவென்று கர்த்தருடைய வாய் தன்னுடனே சொல்லுகிறதைக் கேட்டு அறிவிக்கத்தக்கவன் யார்?" (எரே 9:10-12).

தேசத்தில் துன்மார்க்கர் வாசம்பண்ணுவதினிமித்தமாய், செழிப்பான தேசம் வனாந்தர தேசமாயிற்று. கனிவிருட்சங்களெல்லாம் பட்டுப்போயிற்று. ஆகையினால் துன்மார்க்கர் தேசத்தில் இராதபடிக்கு, அவர்களுடைய பாவங்களினிமித்தம், கர்த்தர் அவர்களைக் கொன்றுபோடவேண்டுமென்று எரேமியா ஜெபம்பண்ணுகிறார். அவர்கள் நிமித்தமாய் தேசத்திலுள்ள நல்லவர்கள் கஷ்டங்களை அனுபவிக்கக்கூடாது.

"எங்கள் முடிவை அவன் காண்பதில்லை என்கிறார்கள்" (எரே 12:4). தங்களுடைய முடிவு எப்படியிருக்கும் என்பது எரேமியாவுக்குத் தெரியாது என்று துன்மார்க்கர் சொல்லுகிறார்கள். எரேமியா ஒரு கள்ளத்தீர்க்கதரிசி என்றும், அவருக்கு கர்த்தருடைய வெளிப்பாடு கிடையாது என்றும், தங்களுடைய முடிவை எரேமியா காண்பதில்லை என்றும் துன்மார்க்கர் நினைக்கிறார்கள்.

கர்த்தர் எரேமியாவின் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நல்ல உபதேசங்களைக் கற்றுக்கொள்ளவும் வேண்டும். நல்ல உபதேசங்களைப் போதிக்கவும் வேண்டும். ஊழியக்காரர்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுத்து கேட்கவேண்டும். அவர்கள் மற்றவர்களுக்கு பிரசங்கம்பண்ணுவதற்கு முன்பாக, தங்களுக்குத் தாங்களே பிரசங்கம்பண்ணிக்கொள்ளவேண்டும்.

ஆனதோத் மனுஷருடைய துன்மார்க்கத்தைப்பற்றி எரேமியா கர்த்தரிடத்தில் முறையிடுகிறார். அவர்கள் துன்மார்க்கராயிருந்தாலும் செழித்திருக்கிறார்கள். எரேமியா கர்த்தரோடு வழக்காடுவது போல பேசுகிறார். கர்த்தரே எரேமியாவை தம்மோடு வழக்காடுவதற்கு அனுமதித்திருக்கிறார்.

"உன் சகோதரரும், உன் தகப்பன் வம்சத்தாரும் உனக்கு துரோகம் பண்ணி, அவர்களும் உன்னைப் பின் தொடர்ந்து மிகவும் ஆரவாரம்பண்ணினார்கள்" (எரே 12:6) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார். "உன் சகோதரர், உன் தகப்பன் வம்சத்தார்" என்னும் வாக்கியம் ஆனதோத் ஊரிலுள்ள ஆசாரியர்களைக் குறிக்கிறது. அவர்கள் எல்லோருமே எரேமியாவுக்கு சிநேகிதர்களைப்போல இருக்கிறார்கள். அவர்கள் எரேமியாவோடே இனிய வார்த்தைகளைப் பேசுகிறார்கள். ஆனாலும் எரேமியா அவர்களை நம்பக்கூடாது என்று கர்த்தர் எச்சரிக்கிறார்.

ஆனதோத் ஊரின் மனுஷர்கள் எரேமியாவுக்கு விரோதமாக துரோகம்பண்ணுகிறார்கள். அவர்கள் எரேமியாவைப் பின்தொடர்ந்து மிகவும் ஆரவாரம்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்களோடு திரளான ஆசாரியர்களைச் சேர்த்துக்கொண்டு, எரேமியாவைப் பகைக்கிறார்கள். எரேமியா அவர்களை நம்பக்கூடாது. அவர்கள் இனிய வார்த்தைகளைப் பேசினாலும், எரேமியா அவர்களுடைய வார்த்தையில் மயங்கிவிடக் கூடாது. அவர்கள் வெளிப்பார்வைக்கு சிநேகிதர்களாயிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் எரேமியாவுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள்.

ஆனதோத்தின் மனுஷர் எரேமியாவின் இருதயத்தை இளைக்கப்பண்ணியிருக்கிறார்கள். எரேமியாவும் ஆனதோத் ஊரைச் சேர்ந்தவர். அவருடைய சொந்த ஊர் ஜனங்கள் மூலமாய் வரும் பிரச்சனைகளையே, எரேமியாவால் சகித்துக்கொள்ள முடியவில்லை. யூதா தேசம் சமாதானமுள்ள தேசம். எரேமியாவும், ஆனதோத் ஊராரும் யூதா தேசத்திலிருக்கிறார். அவர்கள் எரேமியாவுக்கு வேதனைகளையும், தொந்தரவுகளையும் கொடுக்கும்போது, அவர் சமாதானமுள்ள யூதாதேசத்திலேயே அடைக்கலம் தேடுகிறார்.

எரேமியாவின் சொந்த ஜனங்களே அவருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். அந்த வேதனையை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவருடைய இருதயம் இளைத்துப்போகிறது. அவருடைய மனதிற்கு இளைப்பாறுதல் இல்லாமல் போகிறது. எரேமியா கர்த்தருடைய தீர்க்கதரிசி. கர்த்தர் தனக்கு சொல்லுகிற செய்தியை எரேமியா ஜனங்களுக்கு சொல்லவேண்டும். இதுவே அவருடைய ஊழியம்.

ஆனால் யூதா தேசத்து மனுஷரோ எரேமியாவுக்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள். இதன் நிமித்தமாய் எரேமியாவுக்கு ஊழியத்தில் சோர்வு உண்டாயிற்று. தீர்க்கதரிசனம் சொல்லும்போது அவருடைய இருதயம் இளைத்துப்போகிறது. கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தைவிட்டு விலகிப்போய்விடலாமா என்றுகூட எரேமியா யோசிக்கிறார்.

எரேமியாவுக்கு இப்போது வந்திருக்கிறது வருத்தத்தின் ஆரம்பம்தான். அவர் துக்கத்தின் துவக்கத்திலிருக்கிறார். அவருக்கு இன்னும் அதிகமான துக்கங்களும், அதிகமான வேதனைகளும் வரப்போகிறது. எரேமியாவுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. அவருக்கு கொஞ்சம் துக்கம் வந்தவுடனேயே மனம் கலங்கிவிடுகிறார். அவருடைய இருதயம் சோர்ந்துவிடுகிறது. உபத்திரவகாலமும், வேதனையின் உச்சகாலமும் தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை எரேமியா இன்னும் புரிந்துகொள்ளவில்லை.

சிறிய வேதனைகளை சகித்துக் கொண்டால்தான், பெரிய வேதனைகளை சந்திக்க முடியும். சின்ன பிரச்சனைகளை சமாளிக்கத் தெரிந்தால்தான், பெரிய பிரச்சனைகளை சமாளிக்க முடியும். எரேமியா இப்போது வேதனையின் ஆரம்பகாலத்திலிருக்கிறார். இப்போது இந்த வேதனையை அவர் தாங்கிக்கொண்டால் தான், இனிமேல் வரப்போகும் மகாபெரிய வேதனைகளை அவரால் சந்திக்க முடியும். எரேமியா இப்போதே சோர்ந்துபோய்விட்டால், அவருக்கு பெரிய பிரச்சனைகள் வரும்போது, அவரால் ஒன்றும் செய்ய முடியாது. செயலிழந்து போய்விடுவார். ஊழியம் செய்ய முடியாமல் காணமல் போய்விடுவார்.

கர்த்தர் எரேமியாவின் மனக்கலக்கத்தையும், அவருடைய சோர்வையும் அவருக்கு எடுத்துச் சொல்லுகிறார். "நீ காலாட்களோடே ஓடும் போதே உன்னை இளைக்கப் பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்னசெய்வாய்?" (எரே 12:5) என்று கர்த்தர் எரேமியாவிடம் கேட்கிறார்.

ஆனதோத் மனுஷர் மூலமாய் ஏற்பட்டிருக்கிற பிரச்சனைகள் எரேமியாவுக்கு பெரியதாய்த் தெரிகிறது. அவர்கள் மூலமாய் தான் அதிகமாய்க் காயப்பட்டிருப்பதாகவும், அந்த வேதனையை தன்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்றும் நினைத்து எரேமியா சோர்ந்து போயிருக்கிறார். இது வேதனையின் ஆரம்பம்தான். எருசலேமின் பிரபுக்களும் பிரதான ஆசாரியர்களும் யூதமார்க்கத்தின் அதிகாரத்திலிருக்கிறார்கள். அவர்கள் எரேமியாவுக்கு விரோதமாய்த் தீங்கு செய்வார்கள். ஆனதோத் ஊரிலுள்ள ஆசாரியர் மூலமாய் வரும் பிரச்சனைகளையே எரேமியாவால் தாங்க முடியவில்லை என்றால், எருசலேமிலுள்ள பிரதான ஆசாரியர் மூலமாயும், பிரபுக்கள் மூலமாயும் வரப்போகிற பிரச்சனைகளை தாங்குவது எரேமியாவுக்கு மிகவும் கடினமாயிருக்கும்.

"எரேமியா இந்த வார்த்தைகளைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறதை ஆசாரியனான இம்மேருடைய குமாரனும், கர்த்தருடைய ஆலயத்துப் பிரதான விசாரணைக் கர்த்தனுமாகிய பஸ்கூர் கேட்டபோது, எரேமியா தீர்க்கதரிசியைப் பஸ்கூர் அடித்து, அவனைக் கர்த்தருடைய ஆலயத்திலே பென்யமீன் கோத்திரத்தாரைச்சேர்ந்த மேல்வாசலில் இருக்கும் காவலறையிலே போட்டான்" (எரே 20:1,2).

"அப்பொழுது பாபிலோன் ராஜாவின் சேனை எருசலேமை முற்றிக்கை போட்டிருந்தது; எரேமியா தீர்க்கதரிசியோ, யூதா ராஜாவின் அரமனையிலுள்ள காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருந்தான்" (எரே 32:2).

எரேமியா இப்போது சமாதானமுள்ள தேசத்திலிருக்கிறார். அவர் இந்த தேசத்திலேயே அடைக்கலம் தேடுகிறார். இனிமேல் யோர்தான் பிரவாகித்து வரப்போகிறது. இரண்டு கரைகளையும் முட்டி மோதிக்கொண்டு பெருவெள்ளம் பிரவாகித்து வரப்போகிறது.

"இதோ, புரண்டு ஓடுகிற யோர்தானிடத்திலிருந்து சிங்கம் வருவதுபோல் பலவானுடைய தாபரத்துக்கு விரோதமாக வருகிறான்; அவனைச் சடிதியிலே அங்கேயிருந்து ஓடிவரப்பண்ணுவேன்; நான் அதற்கு விரோதமாய்க் கட்டளையிட்டு அனுப்பத்தெரிந்துகொள்ளப்பட்டவன் யார்? எனக்குச் சமானமானவன் யார்? எனக்கு மட்டுக்கட்டுகிறவன் யார்? எனக்கு முன்பாக நிலைநிற்கப்போகிற மேய்ப்பன் யார்?" (எரே 49:19).

நமக்கு சிறிய சோதனைகளும், சிறிய பிரச்சனைகளும் வரும்போது நாம் உடனே சோர்ந்துபோய்விடக்கூடாது. பிரச்சனைகளை சந்திக்கவேண்டும். கர்த்தர் கொடுக்கும் பலத்தினால் அவற்றை சமாளிக்கவேண்டும். பிரச்சனைகளைப் பார்த்து நம்முடைய இருதயம் சோர்ந்துவிடக்கூடாது. நம்முடைய ஆவி கலங்கிவிடக்கூடாது. எல்லா சூழ்நிலைகளிலும் நாம் கர்த்தரையே நோக்கிப் பார்க்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் தியானிக்கவேண்டும்.

பந்தயத்திலே ஓடுகிறவர்கள் இலக்கை நோக்கி ஓடுவார்கள். பந்தயப்பொருளை பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காகவே ஓடுவார்கள். ஓடும்போது அவர்களுக்கு பல தடைகளும், இடையூறுகளும் வந்தாலும், அவர்கள் அந்தத் தடைகளை நோக்கிப் பார்க்கமாட்டார்கள். தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற இலக்கையும், தாங்கள் அடையப்போகிற பந்தயப்பொருளையுமே நோக்கிப் பார்ப்பார்கள். ஆவிக்குரிய ஜீவியத்தில் ஓடுகிறவர்களாகிய நாமும், எந்த சூழ்நிலையில் ஓடினாலும், கர்த்தரை மாத்திரமே நோக்கிப் பார்க்கவேண்டும். நம்முடைய பந்தயப்பொருளை பெற்றுக் கொள்வோம் என்னும் நம்பிக்கையோடு ஓடவேண்டும்.

கர்த்தருடைய உக்கிரகோபம் எரே 12:7-13

எரே 12:7. நான் என் வீட்டை விட்டுவிட்டேன், என் சுதந்தரத்தை நெகிழவிட்டேன்; என் ஆத்துமா நேசித்தவளை அவளுடைய சத்துருவின் கையிலே ஒப்புக்கொடுத்தேன்.

எரே 12:8. என் சுதந்தரம் காட்டிலுள்ள சிங்கத்தைப்போல் எனக்காயிற்று; அது எனக்கு விரோதமாய் கெர்ச்சிக்கிறது; ஆதலால் அதை வெறுக்கிறேன்.

எரே 12:9. என் சுதந்தரம் பலவர்ணமான பட்சியைப்போல எனக்காயிற்று; ஆகையால், பட்சிகள் அதைச் சுற்றிலும் வருவதாக; வெளியில் சகல ஜீவன்களே அதைப் பட்சிக்கும்படி கூடிவாருங்கள்.

எரே 12:10. அநேக மேய்ப்பர்கள் என் திராட்சத்தோட்டத்தை அழித்து, என் பங்கைக் காலால் மிதித்து, என் பிரியமான பங்கைப் பாழான வனாந்தரமாக்கினார்கள்.

எரே 12:11. அதைப் பாழாக்கிவிட்டார்கள்; பாழாய்க் கிடக்கிற அது என்னை நோக்கி புலம்புகிறது; தேசமெல்லாம் பாழாயிற்று; ஒருவனும் அதை மனதிலே வைக்கிறதில்லை.

எரே 12:12. கொள்ளைக்காரர் வனாந்தரத்திலுள்ள எல்லா உயர்நிலங்களின்மேலும் வருகிறார்கள்; கர்த்தருடைய பட்டயம் தேசத்தின் ஒருமுனை தொடங்கித் தேசத்தின் மறுமுனைமட்டும் பட்சித்துக் கொண்டிருக்கும்; மாம்சமாகிய ஒன்றுக்கும் சமாதானமில்லை.

எரே 12:13. கோதுமையை விதைத்தார்கள், முள்ளுகளை அறுப்பார்கள்; பிரயாசப்படுவார்கள், பிரயோஜனமடையார்கள்; கர்த்தருடைய உக்கிரகோபத்தினால் உங்களுக்கு வரும் பலனைக்குறித்து வெட்கப்படுங்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். தேவனுடைய உக்கிர கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் யூதா தேசத்து ஜனங்களை அழிவுக்கு ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தர் யூதாதேசத்தாரைப்பற்றிச் சொல்லும்போது, "நான் என் வீட்டை விட்டுவிட்டேன்" (எரே 12:7) என்று சொல்லுகிறார். இது கர்த்தருடைய வாயிலிருந்து வரும் பயங்கரமான வார்த்தையாகும். யூதாவின் மனுஷர் கர்த்தருக்குப் பிரியமானவர்கள். ஆனால் கர்த்தரோ அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், அவர்களைவிட்டு விலகிப்போய்விடுகிறார். தம்முடைய ஜனத்தை விட்டுவிடுகிறார். எருசலேமிலுள்ள தம்முடைய ஆலயத்தை விட்டுவிடுகிறார். அவர்கள் மத்தியிலே தாம் வாசம்பண்ணும் வாசஸ்தலத்தையும் விட்டுவிடுகிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய ஆலயத்தைத் தீட்டுப்படுத்துகிறார்கள். யூதாதேசத்தில் விக்கிரகங்களை ஆராதனை செய்து, அவற்றிற்கு பலிகளை செலுத்தி தீட்டுப்படுத்துகிறார்கள். கர்த்தர் பரிசுத்தர். அவர் பரிசுத்தமான ஸ்தலத்தில் மாத்திரமே வாசம்பண்ணுகிறவர். யூதாதேசமோ தீட்டாயிருக்கிறது. அங்கே அசுத்தம் நிரம்பியிருக்கிறது. இஸ்ரவேலின் பரிசுத்தர் யூதாதேசத்தை விட்டு கடந்துபோய்விடுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய சுதந்தரமாயிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பாவங்களினிமித்தமாயும், அக்கிரமங்களினிமித்தமாயும், கர்த்தர் "என் சுதந்தரத்தை நெகிழவிட்டேன்" (எரே 12:7) என்று சொல்லுகிறார். கர்த்தர் இனிமேல் யூதாமனுஷருடைய நன்மைகளை விசாரிக்கமாட்டார். அவர்களை பாதுகாத்து பராமரிக்கமாட்டார்.

இதுவரையிலும் கர்த்தருடைய ஆத்துமா யூதாதேசத்தாரை நேசித்தது. அவர்கள் செழித்திருந்தார்கள். அவர்கள் கர்த்தருக்கு சொந்தமானவர்களாயிருந்தார்கள். கர்த்தர் அவர்களுக்குத் தேவையான எல்லா ஆசீர்வாதங்களையும் கொடுத்து, அவர்களை சத்துருக்களின் கைகளிலிருந்து பாதுகாத்தார். இப்போதோ கர்த்தர் தம்முடைய கோபத்தினால் அவர்களைக் கைவிட்டுவிடுகிறார். அதோடு அவர்களை, அவர்களுடைய சத்துருவின் கையிலும் ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

யூதாவின் மனுஷர் இதுவரையிலும் கர்த்தருக்குப் பிரியமானவர்களாயிருந்தார்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதித்தார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். இப்போதோ அவர்களுடைய இருதயத்தில் பாவம் பிரவேசித்திருக்கிறது. அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார்கள். அவர்கள் தங்களை கர்த்தருடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக அவர்களை உருவாக்கவில்லை. அவர்களோ தங்கள் சுயஇஷ்டம்போல சிந்தித்து, தங்களுடைய மாம்சத்தின் இச்சைகேற்ற பிரகாரம் கிரியை நடப்பிக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தரோடு கூடயிருந்த வரையிலும், அவர்கள் கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகளாயிருந்தார்கள். இப்போதோ அவர்கள் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகியிருக்கிறார்கள். அவர்களிடத்தில் மனுஷசுபாவத்திற்கு பதிலாக மிருக சுபாவம் வந்துவிடுகிறது. "என் சுதந்தரம் காட்டிலுள்ள சிங்கத்தைப்போல் எனக்காயிற்று" (எரே 12:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். காட்டிலுள்ள சிங்கத்தை யாரும் நேசிக்கமாட்டார்கள். சிங்கத்தோடு சிநேகமாய் பழகமாட்டார்கள். எல்லோரும் சிங்கத்தைப் பார்த்து விலகிப்போய்விடுவார்கள். யூதாவின் மனுஷரும் இப்போது காட்டிலுள்ள சிங்கத்தைப்போலவே இருக்கிறார்கள்.

காட்டிலுள்ள சிங்கத்திற்கு புத்தியிருக்காது. அதற்கு நல்லவர் யார், தீயவர் யார் என்று வித்தியாசம் பார்க்கத் தெரியாது. காட்டிலுள்ள சிங்கம் யாரைப் பார்த்தாலும், அவர்களை பட்சித்துக் கொன்றுபோடும். யூதாவின் மனுஷர் இப்போது காட்டிலுள்ள சிங்கத்தைப் போலிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைப் பார்த்து கெர்ச்சிக்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களை வெறுத்துவிடுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பேசுகிறார்கள். கர்த்தருடைய நாமத்தினால் தீர்க்கதரிசனம் சொல்லுகிற, தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக கெர்ச்சிக்கிறார்கள். கர்த்தருடைய நாமத்தைத் தூஷிக்கிறார்கள். கர்த்தருடைய அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள். கர்த்தருடைய நீதிக்கும் நியாயத்திற்கும் விரோதமாய்க் கிரியை செய்கிறார்கள். இவ்வாறாக அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் கெர்ச்சிக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் இப்போது காட்டிலுள்ள சிங்கங்களைப்போல இருந்தாலும் அவர்கள் எல்லோரும் ஒரு காலத்தில், தேவனுடைய தொழுவத்திலுள்ள ஆடுகளாகவே இருந்தார்கள். ஆடுகள் சிங்கங்களாக மாறிற்று. அமைதியாக கர்த்தரை பின்பற்றியவர்கள், இப்போது கர்த்தருக்கு விரோதமாய்க் கெர்ச்சிக்கிறார்கள். இதற்கு முன்பு யூதாவின் மனுஷர் யாருக்கும் தீங்கு செய்ததில்லை. இப்போதோ அவர்கள், காட்டிலுள்ள சிங்கங்களைப்போல எல்லோரையும் பட்சிக்கிறார்கள்.

காட்டிலுள்ள சிங்கத்தைப் பழக்க முடியாது. அது தன் இஷ்டப்படி அலையும். ஆகையினால் கர்த்தர் அதை வெறுக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றியபோது, கர்த்தர் அவர்கள்மீது பிரியமாயிருந்தார். அவர்களுடைய நற்குணங்களையும், நற்கிரியைகளையும் பார்த்து கர்த்தர் மிகுந்த சந்தோஷப்பட்டார். ஆனால் இப்போதோ அவர்கள் கெர்ச்சிக்கிற சிங்கங்களாகயிருக்கிறார்கள். எல்லோரையும் பட்சித்துப்போடுகிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது அன்பாயில்லை.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பல வர்ணமான பட்சியைப்போல இருக்கிறார்கள். "என் சுதந்தரம் பல வர்ணமான பட்சியைப்போல எனக்காயிற்று" (எரே 12:9) என்று கர்த்தர் சொல்லுகிறார். தேவனுடைய ஆலயத்தில் இப்படிப்பட்ட பறவைகளை காணிக்கைகளாக செலுத்தமாட்டார்கள். பட்சிக்கிற மிருகங்களையும், பட்சிக்கிற பறவைகளையும் தேவனுடைய ஆலயத்தில் காணிக்கையாக படைக்கக்கூடாது. யூதாவின் மனுஷர் ஒரு காலத்தில் புறாக்களைப்போல அமைதியாயிருந்தார்கள். ஆனால் இப்போதோ பட்சிக்கிற பறவைகளைப்போல இருக்கிறார்கள்.

பல வர்ணமான பட்சி இயற்கையான சுபாவத்திலிருந்து வேறுபட்டிருக்கிறது. யூதா மனுஷருடைய தெய்வபக்தியும், நற்குணங்களும் மாறியிருக்கிறது. அவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை, கர்த்தருக்கு கீழ்ப்படியும் சுபாவமுமில்லை. அவர்கள் பல வர்ணமான பட்சிகளைப்போல, விநோதகுணமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

சாதாரண பறவைதான் இப்போது பல வர்ணமான பட்சியாயிருக்கிறது. இந்தப் பறவையின்மீது வர்ணம் தெளிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பறவை இரை தேடும்போது, அது புசிக்கும் இரையிலுள்ள இரத்தம், அந்தப் பறவையின்மீது படுகிறது. அது இரத்தம் தெளிக்கப்பட்ட பறவையாயிருக்கிறது. "ஆகையால், பட்சிகள் அதைச் சுற்றிலும் வருவதாக; வெளியில் சகல ஜீவன்களே அதைப் பட்சிக்கும்படி கூடிவாருங்கள்" (எரே 12:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பல வர்ணமான பட்சிகள், மற்ற பறவைகளை கடித்து குதறிவிடும். ஆகையினால் மற்ற பறவைகள் பல வர்ணமான பட்சியை விரும்புவதில்லை. யூதாவின் மனுஷரும் மற்றவர்களை பட்சிக்கிற பட்சிகளைப்போல இருக்கிறார்கள். குற்றமற்றவர்களின் இரத்தம் அவர்கள்மீது தெளிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சரீரங்கள் பல வர்ணமான பட்சியைப்போல இரத்தக்கறை படிந்திருக்கிறது. ஆகையினால் அவர்களை ஒருவரும் நேசிப்பதில்லை. அவர்களுக்கு அருகாமையில் யாரும் வருவதில்லை.

புறஜாதி மார்க்கத்திலுள்ளவர்கள் பல வர்ணமான பட்சியை தங்கள் தெய்வமாக நினைத்து அதை ஆராதிக்கிறார்கள். இந்தப் பட்சிக்கு தெய்வீக குணம் உண்டு என்று சொல்லுகிறார்கள். யூதாவின் மனுஷர் ஒரு காலத்தில் கர்த்தரை மாத்திரமே ஆராதித்தார்கள். இப்போதோ அவர்கள் விக்கிரகாராதனையின் ஒரு பகுதியாக இருக்கிறார்கள். விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள், தங்கள் தேவர்களை பல வர்ணங்கள் பூசி அழகுபடுத்துவார்கள். அவை பார்ப்பதற்கு பல வர்ணமான பட்சிகளைப்போல இருக்கும். யூதாவின் மனுஷரும் கர்த்தரை நேசியாமல், கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், பல வர்ணமான பட்சியைப்போல, தங்களுடைய சுபாவத்தை மாற்றிக்கொள்கிறார்கள். விக்கிரகங்கள்மீது பிரியப்பட்டு அவற்றை ஆராதனை செய்கிறார்கள்.

சத்துருக்கள் யூதா மனுஷர்மீதும் எருசலேமின் குடிகள்மீதும் வந்து விழுந்து அவர்களை சங்காரம்பண்ணுவார்கள். யூதாதேசத்தை அழித்துப்போடுவார்கள். யூதாவின் பட்டணங்களும் எருசலேமும், பாழான தேசம் போலவும், அழிந்துபோன பட்டணம் போலவும் இருக்கும். யூதாவின் மனுஷர் பல வர்ணமான பட்சிகளைப்போல இருக்கிறார்கள் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். கோட்டான்களும் ஆந்தைகளும், விநோத நிறமுள்ள பறவைகளைப் பார்த்து, விநோதமாக சத்தமிடும். அவற்றின் பல வர்ணங்களை விரும்பும். மற்ற பறவைகள் பல வர்ணமான பறவைகளை ஆச்சரியத்தோடு பார்க்கும்.

இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஜனத்தார் மத்தியில், கர்த்தருடைய ஜனம் விசேஷமானவர்களாகயிருக்கிறார்கள். மற்ற ஜாதியார் கர்த்தருடைய பிள்ளைகளைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். பல வர்ணமான பட்சியைப் பார்த்து ஆச்சரியப்படுவதுபோலவும், அதை அதிசயம்போல பார்ப்பதுபோலவும், அந்நிய தேசத்தார், யூதாவின் மனுஷரைப் பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். ஆனால் யூதாவின் மனுஷரோ, தங்களுடைய மதியீனத்தினால், தங்களைத் தாங்களே கெடுத்துக்கொள்கிறார்கள். தங்களுக்கு தாங்களே கேடு வரவழைத்துக்கொள்கிறார்கள்.

பல வர்ணமான பட்சியைப்போல இருக்கிற யூதாவின் மனுஷரை கர்த்தர் வெறுத்து ஒதுக்கிவிடுகிறார். கர்த்தர் இந்தப் பறவைகளை வெறுக்கும்போது, மற்ற பறவைகளும் அவற்றை வெறுத்துவிடும். "ஆகையால் பட்சிகள் அதைச் சுற்றிலும் வருவதாக" என்று கர்த்தர் சொல்லுகிறார். கல்தேயரின் சேனை எருசலேமைச் சுற்றிலும் வந்திருக்கிறார்கள். அவர்கள் யூதாதேசத்தை முற்றிலுமாய் அழிக்கப்போகிறார்கள். யூதாவின் மனுஷருக்கும், எருசலேமுக்கும் அழிவு சமீபமாய் வந்திருக்கிறது.

யூதாவின் குடிகள் எல்லோரும் கல்தேயரின் பட்டயங்களினால் சாகப்போகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய மரணத்தைப் பார்த்து வேதனைப்படமாட்டார். பாவிகள் மரித்துப்போவதைப் பார்த்து கர்த்தர் கவலைப்படமாட்டார். யூதாவின் மனுஷரும் கர்த்தருடைய பார்வையில் பாவிகளாகயிருக்கிறார்கள். அவர்கள் சங்காரமாவதைக் கண்டு கர்த்தர் மனவேதனையடையமாட்டார். கர்த்தருடைய பார்வையில் யூதாவின் மனுஷரும், பாவிகளான புறஜாதி ஜனங்களும் ஒன்றாகவே இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்குள் வித்தியாசம் காணவில்லை.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய் விடுகிறார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களை உடனே தண்டித்துவிடாமல், அவர்களுடைய பாவங்களைக் குறித்து அவர்களுக்கு கண்டித்து உணர்த்துகிறார். தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை கர்த்தர் நினைவுகூருகிறார். யூதாவின் மனுஷர் பாவிகளாகயிருந்தாலும், யூதாதேசம் அசுத்தமாகவும், தீட்டாகவும் இருந்தாலும், கர்த்தர் அவர்கள்மீது இன்னும் அன்பாகவே இருக்கிறார்.

கர்த்தர் யூதாதேசத்தையும், யூதாவின் மனுஷரையும் பற்றிச் சொல்லும்போது, "என் திராட்சத்தோட்டம்" என்றும், "என் பங்கு" என்றும், "என் பிரியமான பங்கு" (எரே 12:10) என்று பாசத்தோடு சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய சபையின்மீது பிரியமாயிருக்கிறார். சபையில் குழப்பங்களும், சண்டை சச்சரவுகளும் இருந்தாலும், கர்த்தருடைய சபையானது அவருக்கு பிரியமான பங்காகவே இருக்கிறது.

யூதா தேசத்தாருக்கு விரோதமாக கல்தேயர்கள் திரளான எண்ணிக்கையில் வருகிறார்கள். கர்த்தர் அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, அவர்களை "திரளான மேய்ப்பர்கள்" என்று சொல்லுகிறார். கல்தேயருடைய படைத்தளபதிகள், யூதா தேசத்தின்மீது தங்களைத் தாங்களே தலைவர்களாக நியமித்துக்கொள்கிறார்கள். அவர்கள் யூதாதேசத்தை மேய்வதுபோல கொள்ளையிடுகிறார்கள்.

அரபியர்கள் தங்களுடைய ஆட்டுமந்தைகளை இரை கிடைக்கும் இடத்திலெல்லாம் மேயவிடுவார்கள். தரையில் பழுத்த பழங்கள் இருந்தாலும், பசுமையான புல் இருந்தாலும் அந்த ஆடுகள் அந்த ஆடுகள் அதை மேயும். அரேபியரின் ஆடுகள் மேய்ச்சல் நிலத்தில் மேயும்போது, அதிகமான சேதத்தை உண்டுபண்ணும். அவை திராட்சத்தோட்டத்திற்குள் புகுந்து, தோட்டத்தையே அழித்துப்போடும். நல்ல மேய்ச்சல் நிலத்தின்மீது காலால் மிதிக்கும். அதை பாழான வனாந்தரம் போலாக்கிவிடும்.

கல்தேயரின் படைத்தளபதிகள், தங்களுடைய படையிலுள்ள ஏராளமான வீரர்களை, யூதாவின் பட்டணங்களுக்குள்ளும், எருசலேமுக்குள்ளும் அழைத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் யூதா தேசத்தை அழித்துப்போடுகிறார்கள். காலால் மிதித்துப்போடுகிறார்கள். செழிப்பாயிருந்த எருசலேமை, பாழான வனாந்தரமாக்குகிறார்கள்.

"அநேக மேய்ப்பர்கள் என் திராட்சத்தோட்டத்தை அழித்து, என் பங்கைக் காலால் மிதித்து, என் பிரியமான பங்கைப் பாழான வனாந்தரமாக்கினார்கள். அதைப் பாழாக்கிவிட்டார்கள்" (எரே 12:10,11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதா தேசம் ஒரு காலத்தில் செழிப்பான தேசமாயிருந்தது. அது பாலும் தேனும் ஓடுகிற தேசம். ஆனால் இப்போதோ அது பாழான வனாந்தரமாயிருக்கிறது. யுத்தத்தின் பட்டயம் எருசலேமின்மீது வந்திருக்கிறது. யூதாவின் மனுஷர் பட்டயத்தால் அழிந்துபோகிறார்கள். கல்தேயர்கள் கொள்ளைக்காரர்போல வருகிறார்கள். அவர்கள் வனாந்தரத்திலுள்ள எல்லா உயர்நிலங்கள்மேலும் வருகிறார்கள்.

"கொள்ளைக்காரர் வனாந்தரத்திலுள்ள எல்லா உயர்நிலங்களின்மேலும் வருகிறார்கள்; கர்த்தருடைய பட்டயம் தேசத்தின் ஒருமுனை தொடங்கித் தேசத்தின் மறுமுனைமட்டும் பட்சித்துக்கொண்டிருக்கும்; மாம்சமாகிய ஒன்றுக்கும் சமாதானமில்லை" (எரே 12:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சத்துருவின் சேனையிலுள்ளவர்கள் யூதாதேசம் முழுவதையும் பாழாக்கிப்போடுகிறார்கள். கல்தேயருடைய பட்டயம், யூதாதேசத்தின் ஒருமுனை தொடங்கி, தேசத்தின் மறுமுனை மட்டுமுள்ள யூதர்கள் அனைவரையும் பட்சித்துப்போடுகிறது. மாம்சமான யாவருக்கும் அழிவும் நாசமும் வருகிறது. இதன் நிமித்தமாய் மாம்சமாகிய ஒன்றுக்கும் சமாதானமில்லை.

"கர்த்தருடைய பட்டயம்" யூதாவின் மனுஷரை பட்சிக்கும். கர்த்தருடைய பிள்ளைகள் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கும்போது, கர்த்தருடைய பட்டயம் அவர்களுக்கு பாதுகாப்பாயிருக்கும். கிதியோனுக்கு கர்த்தருடைய பட்டயம் துணையாயிருந்ததுபோல, கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிற பிள்ளைகளுக்கும் அவருடைய பட்டயம் துணை செய்யும்.

கர்த்தருடைய ஜனம் அவருக்கு விரோதமாய்ப் பாவம் செய்து, அவரை விட்டு விலகிப்போகும்போது, கர்த்தருடைய பட்டயம் அவர்களுக்கு துணைசெய்யாது. அது மாத்திரமல்ல கர்த்தருடைய பட்டயம் அவர்களை அழித்துப்போடும். கர்த்தருடைய பட்டயம் இப்போது கல்தேயருடைய கரங்களிலிருக்கிறது. அவர்கள் தேசத்தின் ஒருமுனை தொடங்கி, தேசத்தின் மறுமுனை மட்டும், கர்த்தருடைய பட்டயத்தினால், கர்த்தருக்கு கீழ்ப்படியாத யூதாவின் மனுஷரை சங்காரம்பண்ணுகிறார்கள்.

கர்த்தருடைய உக்கிரகோபம் யூதாவின் மனுஷர்மீது வந்திருக்கிறது. யூதா மனுஷருடைய பாவமும், அவர்களுடைய அக்கிரமமும் கர்த்தரை அவர்களுக்கு சத்துருவாக்கிற்று. கர்த்தருடைய உக்கிர கோபத்தினிமித்தமாய் யூதாதேசம் பாழாய்க்கிடக்கிறது. சத்துருக்கள் "அதைப் பாழாக்கிவிட்டார்கள்; பாழாய்க் கிடக்கிற அது என்னை நோக்கி புலம்புகிறது; தேசமெல்லாம் பாழாயிற்று; ஒருவனும் அதை மனதிலே வைக்கிறதில்லை" (எரே 12:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாதேசம் வனாந்தரம் போல பாழாய்க்கிடக்கிறது. அது கர்த்தரை நோக்கி புலம்புகிறது. ஆனால் யூதாதேசத்தில் குடியிருக்கிற யூதர்களோ தங்களுடைய பாவத்திற்கு மனந்திரும்பாமலிருக்கிறார்கள். தங்களுடைய தேசம் பாழாய்ப்போனதைப்பற்றி, அந்த தேசத்திலுள்ள ஒருவரும் அதை மனதில் வைக்கிறதில்லை. தங்கள் தேசத்திற்காக ஒருவரும் புலம்பி அழவில்லை. அவர்களுடைய தேசம் புலம்புகிறது. ஜனங்கள் புலம்பவில்லை.

யூதாவின் மனுஷர் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். கல்தேயர்கள் தங்கள் தேசத்திற்கு விரோதமாக வரும்போது, யூதர்கள் கர்த்தரை நம்பாமல் தங்கள் சுயபலத்தை நம்புகிறார்கள். தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள முடியும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சிகளெல்லாம் வீணாய்ப்போகும். "கோதுமையை விதைத்தார்கள், முள்ளுகளை அறுப்பார்கள், பிரயாசப்படுவார்கள், பிரயோஜனமடையார்கள்" (எரே 12:13) என்று கர்த்தர் யூதாமனுஷருடைய மதியீனத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கல்தேயருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண தங்களை ஆயத்தம்பண்ணுகிறார்கள். யுத்தம் பண்ண பணம் தேவை. தங்களிடத்தில் கல்தேயருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண போதுமான அளவு ஐசுவரியம் இருப்பதாக நினைக்கிறார்கள். ஒருவேளை தங்களுடைய பொன்னையும் ஐசுவரியத்தையும் கல்தேயருக்கு அன்பளிப்பாகக் கொடுத்து, யுத்தத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்றும் யூதர்கள் நினைத்திருக்கலாம்.

யூதர்களிடத்தில் ஏராளமான ஐசுவரியம் இருக்கிறது. பொன்னும் வெள்ளியும் இருக்கிறது. ஆனாலும் அவை அவர்களுக்கு பிரயோஜனப்படாது. அவர்களுடைய ஐசுவரியம் அவர்களுக்கு ஜெயத்தைக் கொடுக்காது. வெட்கத்தையே கொடுக்கும். கர்த்தருடைய உக்கிரகோபம் யூதர்கள்மீது வந்திருக்கிறது. அவர்களுடைய பொன்னும் பொருளும், கர்த்தருடைய கோபத்திலிருந்து அவர்களைத் தப்புவிக்காது.

"கர்த்தருடைய உக்கிரகோபத்தினால் உங்களுக்கு வரும் பலனைக் குறித்து வெட்கப்படுங்கள்" (எரே 12:13) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரிடத்தில் சொல்லுகிறார். கர்த்தருடைய கோபத்தின் நாளில் பொன்னும் வெள்ளியும் பிரயோஜனப்படாது. கீழ்ப்படிதலுள்ள இருதயமும், கர்த்தருக்குப் பயப்படும் பயமுமே நமக்கு பிரயோஜனமாயிருக்கும்.

துஷ்டரான அயலார்
எரே 12:14-17

எரே 12:14. இதோ, நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்குக் காணியாட்சியாகக் கொடுத்த என் சுதந்தரத்தைத் தொடுகிற துஷ்டரான அயலார் அனைவரையும் தங்கள் தேசத்தில் இராதபடிக்குப் பிடுங்கிப்போடுவேன் என்று, கர்த்தர் அவர்களைக்குறித்துச் சொல்லுகிறார்; யூதா வம்சத்தாரையும் அவர்கள் நடுவில் இராதபடிக்குப் பிடுங்கிப்போடுவேன்.

எரே 12:15. அவர்களை நான் பிடுங்கிப்போட்ட பிற்பாடு, நான் திரும்பவும் அவர்கள் மேல் இரங்கி, அவர்களைத் தங்கள் தங்கள் சுதந்தரத்துக்கும் தங்கள் தங்கள் பூமிக்கும் திரும்பப்பண்ணுவேன்.

எரே 12:16. அப்புறம் அவர்கள் என் ஜனத்துக்குப் பாகாலின்மேல் ஆணையிடக்கற்றுக்கொடுத்ததுபோல, கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு என்று சொல்லி, என் நாமத்தின்மேல் ஆணையிடும்படி என் ஜனத்தின் வழிகளை நன்றாய்க் கற்றுக் கொண்டால், அவர்கள் என் ஜனத்தின் நடுவிலே ஊன்றக்கட்டப்படுவார்கள்.

எரே 12:17. கேளார்களேயாகில், நான் அப்படிப்பட்ட ஜாதியை வேரோடே பிடுங்கிப்போட்டு அழித்துவிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏராளமான ஜனங்கள், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக, ஏராளமான ஜாதியார் ஏதாவது ஒரு வழியில் தீங்கு செய்கிறார்கள். கர்த்தர் அவர்கள் எல்லோருக்கும் விரோதமான பொதுவான செய்தியை இங்கு சொல்லுகிறார். கர்த்தர் அவர்களோடு வழக்காடுகிறார். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு துஷ்டரான அயலாயிருக்கிறார்கள்.

"இதோ, நான் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்குக் காணியாட்சியாகக் கொடுத்த என் சுதந்தரத்தைத் தொடுகிற துஷ்டரான அயலார் அனைவரையும் தங்கள் தேசத்தில் இராதபடிக்குப் பிடுங்கிப்போடுவேன் என்று, கர்த்தர் அவர்களைக்குறித்துச் சொல்லுகிறார்" (எரே 12:14).

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கானான் தேசத்தைச் சுற்றிலும் துஷ்டரான அயலார் இருந்தார்கள். அதுபோலவே இக்காலத்திலும், கர்த்தருடைய சபைக்கு விரோதமாக துஷ்டரான அயலார் இருக்கிறார்கள். அவர்கள் சபைக்கு விரோதமாக செய்கிற தீமையான காரியங்களை, கர்த்தர் தமக்கு விரோதமாகச் செய்யும் தீங்குகளாக பாவிக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கானான் தேசத்தாருக்கு அம்மோனியர், மோவாபியர், சீரியர், ஏதோமியர், எகிப்தியர் ஆகியோர் துஷ்டரான அயலாராயிருந்தார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரும் யூதாவின் வம்சத்தாரும் தேவனாகிய கர்த்தரை ஆராதியாதபடிக்கு இந்தத் துஷ்டர்கள் எல்லோரும் அவர்களுக்கு தடைபண்ணினார்கள். கர்த்தரை விட்டு விலகிப்போக உதவிசெய்தார்கள். இப்போது அந்த துஷ்ட தேசத்தார் எல்லோரும் கல்தேயரோடு உடன்படிக்கை செய்து, அவர்களோடு சேர்ந்து, யூதாதேசத்திற்கு விரோதமாக வருகிறார்கள்.

யூதாதேசத்தார் கர்த்தருடைய ஜனங்கள். கானான் தேசம், கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு காணியாட்சியாகக் கொடுத்த அவருடைய சுதந்தரம். கானான் தேசத்தை கர்த்தரே தம்முடைய ஜனத்திற்கு சுதந்தரமாய்க் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் வம்சத்தாரும் யூதா வம்சத்தாரும், கர்த்தர் தங்களுக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிற கானான் தேசத்தில் குடியிருந்து, அதின் நன்மைகளை அனுபவிக்கவேண்டும்.

ஆனால் இஸ்ரவேல் தேசத்தை சுற்றிலுமிருக்கிற துஷ்டரான அயலாரோ, கானான் தேசத்தை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்கிறார்கள். அந்த தேசத்தின் நன்மைகளை அயலார் அனுபவிக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய விசேஷித்த ஜனமாகிய யூதாவின் ஜனத்திற்கு கொடுத்த ஆசீர்வாதங்களை, துஷ்டரான அயலார் அவர்களிடத்திலிருந்து பலவந்தமாய் அபகரித்துக்கொள்கிறார்கள். சத்துருக்கள் கர்த்தருடைய பிள்ளைகளையும், தொடக்கூடாது. அவர்களுடைய சுதந்தரத்தையும் தொடக்கூடாது.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்கள், கர்த்தருக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகிறார்கள். தம்முடைய பிள்ளைகளுக்கு தீங்கு செய்கிற துஷ்டரான அயலார் அனைவரையும், கர்த்தர் அவர்கள் தேசத்திலிராதபடிக்கு பிடுங்கிப்போடுவார்.

கர்த்தருடைய ஜனத்தின்மீது அந்நியதேசத்தார் அதிகாரம் செலுத்துகிறார்கள். துஷ்டரான அயலார் கர்த்தருடைய பிள்ளைகளை ஆளுகை செய்கிறார்கள். கர்த்தர் அந்நிய தேசத்தாரின் அதிகாரத்தையும், ஆளுகையையும் பிடுங்கிப்போடுவார்.

அதோடு "யூதா வம்சத்தாரையும் அவர்கள் நடுவிலிராதபடிக்கு பிடுங்கிப்போடுவேன்" (எரே 12:14) என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நியதேசத்தார் கர்த்தருடைய பிள்ளைகளை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்துக்கொண்டு போயிருக்கிறார்கள். ஒருவேளை யூதாவின் மனுஷர் தங்களுடைய பாதுகாப்புக்காக அந்நிய தேசத்திலே போய் ஓடி ஒழிந்திருக்கலாம். அந்த தேசத்தார் யூதாவின் மனுஷரை சிறைப்பிடித்திருக்கலாம். கர்த்தர் யூதா மனுஷரை அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிப்பார். யூதாவின் வம்சத்தாரை அந்நிய தேசத்தார் நடுவிலிராதபடிக்கு பிடுங்கிப்போடுவார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை விடுதலைபண்ணுவார்.

கர்த்தருடைய ஆவியானவர் பலத்த கிரியை நடப்பிப்பார். அப்போது கர்த்தருடைய பிள்ளைகளை இதுவரையிலும் ஒடுக்கியவர்களால், இனிமேல் ஒடுக்க முடியாது. யூதாவின் வம்சத்தாரை இதுவரையிலும் சிறைப்பிடித்திருந்தவர்களால், இனிமேலும் சிறைப்பிடிக்க முடியாது. கர்த்தருடைய ஜனத்தை இதுவரையிலும் அடக்கி ஆளுகை செய்தவர்களால், இனிமேலும் அடக்கி ஆளுகை செய்ய முடியாது. கர்த்தர் யூதாவம்சத்தாரை அவர்கள் நடுவிலிராதபடிக்கு பிடுங்கிப்போடுவார்.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். எகிப்தியரின் ஆளோட்டிகள் கர்த்தருடைய பிள்ளைகளை அடக்கி ஆளுகை செய்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு எகிப்து தேசத்தில் ஒரு சுதந்தரமும் இல்லை. அவர்கள் முற்றிலுமாய் எகிப்தியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். கர்த்தருடைய ஆவியானவர், தம்முடைய இஸ்ரவேல் ஜனத்தாரை, எகிப்து தேசத்திலிராதபடிக்கு பிடுங்கிப்போட்டார். எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், அவசரம் அவசரமாக, இஸ்ரவேல் ஜனத்தாரை விடுதலைபண்ணினான். தங்கள் தேசத்தைவிட்டு சீக்கிரமாய் புறப்பட்டுப்போய்விடுமாறு, எகிப்தியரும் இஸ்ரவேல் ஜனத்தாரைத் துரிதப்படுத்தினார்கள்.

கர்த்தர் எகிப்து தேசத்தில் நடத்திய அதே அற்புதங்களையும், பலத்த கிரியைகளையும், தம்முடைய பிள்ளைகளுக்காக மறுபடியும் நடத்துவார். யூதா வம்சத்தாரை ஒடுக்குகிறவர்களையும், அடக்குகிறவர்களையும் கர்த்தர் தண்டிப்பார். சத்துருக்களின் தேசத்தில் வாதைகள் வரும். துஷ்டரான அயலார் கர்த்தருடைய பிள்ளைகளை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்துக்கொண்டு போனார்கள். அவர்கள்மீது வாதை வரும். கர்த்தர் அவர்கள் அனைவரையும், தங்கள் தேசத்திலிராதபடிக்கு பிடுங்கிப்போடுவார். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும் காலமாயிருக்கிறது. ஆனாலும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் முடிந்துவிடுவதில்லை. தேவனுடைய நியாயத்தீர்ப்பு துஷ்டரான அயல்தேசத்தார் வீட்டிலும் தொடரும்.

கர்த்தருடைய ஜனத்திற்கு உதவி செய்கிறவர்களுக்கும், அவர்களோடு சேர்ந்துகொள்கிறவர்களுக்கும் கர்த்தருடைய கிருபையும் ஆசீர்வாதமும் கிடைக்கும். அந்நிய தேசத்தார் கர்த்தருடைய ஜனங்களை, கர்த்தரிடத்திலிருந்து பிரித்து, விக்கிரகங்களிடத்திற்கு அழைத்துக்கொண்டு போனார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். இஸ்ரவேலின் பரிசுத்தர் மாத்திரமே மெய்யான தேவன். கர்த்தருடைய ஜனத்தார் மறுபடியும் கர்த்தரை ஆராதிப்பதற்கு உதவிசெய்கிற அந்நிய தேசத்தாருக்கு கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் கிடைக்கும். தேவனுடைய இஸ்ரவேலுக்கு என்னென்ன ஆசீர்வாதங்களெல்லாம் வாக்குப்பண்ணப் பட்டிருக்கிறதோ, அந்த ஆசீர்வாதங்களெல்லாம், கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பதற்கு உதவிபுரிகிற அந்நிய ஜனத்தாருக்கும் கொடுக்கப்படும்.

இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுதலை பெற்றார்கள். அப்போது அவர்களுக்கு துஷ்டரான அயலாராயிருந்தவர்கள்கூட, இஸ்ரவேலின் கர்த்தரை தங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டு, யூதமார்க்கத்தைத் தழுவிக்கொண்டார்கள். இவர்கள் "யூதமார்க்கத்தமைந்தவர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

யூதர்கள் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்தபோது, துஷ்டரான அயலாரும், இவர்களோடு சேர்ந்து, இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பி வந்தார்கள். இவர்கள் ஒரு காலத்தில் யூதாவின் மனுஷருக்கு துஷ்டரான அயலாயிருந்தார்கள். இப்போதோ அவர்களுக்கு சிநேகிதராயிருக்கிறார்கள்.

“அவர்களை நான் பிடுங்கிப்போட்ட பிற்பாடு, நான் திரும்பவும் அவர்கள் மேல் இரங்கி, அவர்களைத் தங்கள் தங்கள் சுதந்தரத்துக்கும் தங்கள் தங்கள் பூமிக்கும் திரும்பப்பண்ணுவேன். அப்புறம் அவர்கள் என் ஜனத்துக்குப் பாகாலின்மேல் ஆணையிடக் கற்றுக்கொடுத்ததுபோல, கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு என்று சொல்லி, என் நாமத்தின்மேல் ஆணையிடும்படி என் ஜனத்தின் வழிகளை நன்றாய்க் கற்றுக்கொண்டால், அவர்கள் என் ஜனத்தின் நடுவிலே ஊன்றக்கட்டப்படுவார்கள்” (எரே 12:15,16).

கர்த்தர் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசனத்தின் ஒரு பகுதி, பழைய ஏற்பாட்டுக்காலத்தில், இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதாவின் வம்சத்தாரும் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்தபோது, நிறைவேறிற்று.

புதிய ஏற்பாட்டுக்காலத்தில் புறஜாதியாரும் இரட்சிக்கப்பட்டு சபையிலே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவர்கள் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருப்பார்கள். கர்த்தருடைய சபையில் யூதமார்க்கத்திலிருந்து வந்த விசுவாசிகளும் இருப்பார்கள், புறஜாதி மார்க்கத்திலிருந்து வந்த விசுவாசிகளும் இருப்பார்கள். இக்காலத்தில் கர்த்தர் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசனம் முழுமையாய் நிறைவேறும்.

கர்த்தர் மனுஷருடைய பாவங்களினிமித்தமாய், அவர்களைப் பிடுங்கிப்போடுவார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட பிற்பாடு, கர்த்தர் அவர்கள்மேல் இரங்குவார்.

கர்த்தர் புறஜாதியார்மீதும் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார். கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கும் ஆசீர்வாதம் ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டிருக்கிறது. கர்த்தர் புறஜாதியாரை ஆசீர்வதிக்க வேண்டுமென்றால், அவர்கள் கர்த்தருடைய ஜனத்தின் வழிகளை நன்றாய்க் கற்றுக்கொள்ளவேண்டும். “கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு என்று சொல்லி” கர்த்தருடைய நாமத்தின்மேல் ஆணையிடுவதற்கு கற்றுக்கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய ஜனத்தின் வழி விசேஷமானது. அது பூர்வபாதையாகவும், நல்லவழியாகவும் இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளின் வழி பரிசுத்தமான வழியாகவும், பரலோகத்திற்குப்போகும் வழியாகவும் இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் இந்தப் பூமியில் ஜீவித்தாலும், அவர்கள் பரலோகத்திற்குரியவர்கள். அவர்களிடத்தில் பரலோகத்தைப்பற்றிய சிந்தையே அதிகமாயிருக்கும். அவர்கள் அன்பையும் சமாதானத்தையும் விரும்புவார்கள். ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். கர்த்தருடைய ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிப்பார்கள். கர்த்தருடைய பிரமாணத்திற்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிவார்கள். இவையே கர்த்தருடைய ஜனத்தின் வழி.

கர்த்தரை ஏற்றுக்கொள்கிற புறஜாதி ஜனங்கள், கர்த்தருடைய ஜனத்தின் வழிகளை நன்றாய்க் கற்றுக்கொள்ளவேண்டும். “கர்த்தர் ஜீவிக்கிறார்” என்று தங்கள் இருதயத்தின் ஆழத்திலிருந்து சொல்ல வேண்டும். புறஜாதி ஜனங்கள் இதுவரையிலும் பாகாலின்மேல் ஆணையிட்டார்கள். அவர்கள் பாகாலின்மேல் ஆணையிடுவதற்கு கர்த்தருடைய ஜனத்திற்கு கற்றுக் கொடுத்தார்கள். அப்படி கற்றுக்கொடுத் தவர்கள், இப்போது, கர்த்தருடைய ஜனத்தின் வழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

நம்முடைய மனமாற்றம் நன்மைக்கேதுவாக இருக்கவேண்டும். தீமைக்கு துணைபோய்விடக்கூடாது. தீமை செய்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாக மாறவேண்டும். நல்லவர்கள் தீயவர்களாக மாறிவிடக்கூடாது. புறஜாதி ஜனங்கள் கர்த்தருடைய ஜனங்களை தங்களுடைய விக்கிரகாராதனைக்கு வழிநடத்தினார்கள். இப்போதோ அவர்களும் மனந்திரும்பி இஸ்ரவேலின் தேவனை தங்கள் தேவனாக அங்கீரிக்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்தமான வழிகளைக் கற்றுக்கொள்கிறார்கள்.

புறஜாதி மார்க்கத்தார் இஸ்ரவேலின் பரிசுத்தரை தங்கள் தேவனாக ஏற்றுக்கொண்டு, அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியும்போது, கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்களுக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார். வஞ்சிக்கப்பட்டவர்கள் மனந்திரும்பும்போது, அவர்களை வஞ்சித்தவர்களும் மனந்திரும்புகிறார்கள். ஒரே குழியில் விழுந்தவர்கள், ஒருவருக்கொருவர் உதவிசெய்து, குழியிலிருந்து வெளியேறி வருகிறார்கள். இதுவே கர்த்தருடைய கிருபை.

புறஜாதி மார்க்கத்தார் கர்த்தருடைய ஜனத்தை வஞ்சித்தார்கள். கர்த்தருடைய ஜனத்தாரும் அப்போது கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கிறார். அதன் பின்பு கர்த்தருடைய பிள்ளைகளை வஞ்சித்த புறஜாதியாரும் இரட்சிக்கப்படுகிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தரை தங்கள் தெய்வமாய் ஏற்றுக்கொள்கிறார்கள். கர்த்தர் அவர்களையும் ஆசீர்வதிக்கிறார். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. கர்த்தர் தம்மிடத்தில் வருகிற எல்லோரையும் அன்போடு ஏற்றுக்கொள்கிறார்.

மனுஷர் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தரும் அவர்களிடத்தில் திரும்பி வருகிறார். "அவர்களை நான் பிடுங்கிப்போட்ட பிற்பாடு, நான் திரும்பவும் அவர்கள் மேல் இரங்கி, அவர்களைத் தங்கள் தங்கள் சுதந்தரத்துக்கும் தங்கள் தங்கள் பூமிக்கும் திரும்பப்பண்ணுவேன்" (எரே 12:15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறவர்கள் எல்லோருமே, தேவனுடைய இஸ்ரவேலாயிருப்பார்கள். கர்த்தர் இஸ்ரவேலின் பரிசுத்தர். அவருடைய ஜனத்தார் கர்த்தருடைய இஸ்ரவேலர். அவர்கள் புறஜாதியாராயிருந்தாலும், கர்த்தர் அவர்களை தம்முடைய ஜனத்தின் நடுவிலே ஊன்றக்கட்டுவார் (எரே 12:16). கர்த்தருடைய வீட்டிலே அவர்களுக்கும் இடமுண்டாயிருக்கும். கர்த்தருடைய ஆலயத்தில் புறஜாதியாருக்கென்று ஒரு பிரகாரம் கட்டப்படும். அவர்களும் கர்த்தருடைய ஜனத்தின் நடுவிலே ஊன்றக்கட்டப்படுவார்கள்.

புறஜாதி ஜனங்கள், கர்த்தருடைய வார்த்தையைக் கேட்காவிட்டாலும், கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாவிட்டாலும், கீழ்ப்படியாத அந்த ஜாதியை கர்த்தர் வேரோடே பிடுங்கிப்போட்டு அழித்துவிடுவார். அவர்கள் மொத்த ஜாதியாராகயிருந்தாலும், ஒரு குடும்பத்தாராயிருந்தாலும், ஒரு தனிநபராகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை அழித்துப்போடுவார். கர்த்தருக்கு கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதமுண்டு. கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லையென்றால் சாபமுண்டு.

13 அதிகாரம்

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாவத்தில் நிலைத்திருக்கிறார்கள். மனந்திரும்ப மறுக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் ஜனத்தாருக்கு கர்த்தருடைய செய்தியை தொடர்ந்து சொல்லி வருகிறார். கர்த்தர் இதுவரையிலும் எரேமியாவிடம் நேரடியாகவும், வெளிப்படையாகவும் பேசினார். இப்போதோ அடையாளங்கள் மூலமாய்ப் பேசுகிறார்.

முதலாவது அடையாளம் சணல் கச்சையாகும். கெட்டுப்போன சணல் கச்சை ஒன்றுக்கும் உதவாமல் போவதுபோல, யூதாவின் மனுஷரும் ஒன்றும் உதவாமல் அழிந்துபோவார்கள் (எரே 13:1-11). இரண்டாவது அடையாளம் சகல ஜாடிகளும் திராட்சரசத்தினால் நிரப்பப்படும் என்பதாகும். யூதா மனுஷருடைய ஆலோசனைகள் அவமாய்ப்போகும் என்பது இந்த அடையாளத்தின் பொருள் (எரே 13:12-14).

யூதாமனுஷர் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டுமென்று எரேமியா அவர்களுக்கு புத்திமதி சொல்லுகிறார் (எரே 13:15-20). யூதாமனுஷருடைய துன்மார்க்கத்தினிமித்தமாய், தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது (எரே 13:22-27).

சணல்கச்சை
எரே 13:1-7

எரே 13:1. கர்த்தர் என்னை நோக்கி: நீ போய் உனக்கு ஒரு சணல்கச்சையை வாங்கி, அதை உன் அரையிலே கட்டிக்கொள்; அதைத் தண்ணீரிலே படவொட்டாதே என்றார்.

எரே 13:2. நான் கர்த்தருடைய வார்த்தையின்படியே ஒரு கச்சையை வாங்கி, அதை என் அரையிலே கட்டிக்கொண்டேன்.

எரே 13:3. இரண்டாம்விசை கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 13:4. நீ வாங்கினதும் உன் அரையிலிருக்கிறதுமான கச்சையை எடுத்துக்கொண்டு எழுந்து, ஐப்பிராத்து நதி மட்டும் போய், அதை அங்கே ஒரு கன்மலை வெடிப்பிலே ஒளித்துவை என்றார்.

எரே 13:5. நான் போய், கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டபடியே அதை ஐப்பிராத்து நதியின் ஓரத்தில் ஒளித்துவைத்தேன்.

எரே 13:6. அநேகநாள் சென்றபின்பு கர்த்தர் என்னை நோக்கி: நீ எழுந்து ஐப்பிராத்து நதிக்குப்போய் அங்கே ஒளித்து வைக்க நான் உனக்கு கட்டளையிட்ட கச்சையை அவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டுவா என்றார்.

எரே 13:7. அப்பொழுது நான் ஐப்பிராத்து நதிக்குப்போய், கச்சையை ஒளித்துவைத்த இடத்திலே தோண்டி அதை எடுத்தேன்; ஆனால், இதோ, அந்தக் கச்சை கெட்டு ஒன்றுக்கும் உதவாமற்போயிற்று.

சணல் கச்சை கெட்டுப்போய்விட்டால் அது ஒன்றுக்கும் உதவாது. யூதா மனுஷரும் எருசலேமின் குடிகளும் தங்கள் பாவத்தினாலும் அக்கிரமத்தினாலும் கெட்டுப்போயிருக்கிறார்கள். அவர்களும் ஒன்றுக்கும் உதவாமல் போவார்கள். கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியிடம், "ஒரு சணல் கச்சையை வாங்கி, அதை உன் அரையில் கட்டிக்கொள்" (எரே 13:1) என்று சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையின்படியே, ஒரு கச்சையை வாங்கி அதை தன் அரையில் கட்டிக்கொள்கிறார். ஐப்பிராத் நதியில் ஒரு கன்மலை வெடிப்புள்ளது. எரேமியா தான் வாங்கிய கச்சையை, அவர் தன் அரையில் சிறிதுகாலம் கட்டிக்கொண்டு அதன் பின்பு அந்தக் கச்சையை ஐப்பிராத்து நதியிலுள்ள கன்மலை வெடிப்பிலே ஒளித்து வைக்கவேண்டும். இது கர்த்தருடைய கட்டளை.

எரேமியா தான் வாங்கிய சணல் கச்சையை, தன்னுடைய உள்ளாடையாக அணிந்துகொண்டார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். "கச்சையானது மனுஷனுடைய அரைக்கு சேர்க்கையாயிருக்கிறது" (எரே 13:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா ஒருவேளை தான் வாங்கிய சணல் கச்சையை, தான் அணிந்திருக்கிற வஸ்திரங்களுக்கு மேலாகவும் கட்டியிருக்கலாம். அரசு உயர் அதிகாரிகள் இதுபோன்ற கச்சைகளை தங்கள் வஸ்திரத்தின்மீது கட்டிக்கொள்வது வழக்கம். எரேமியா சணல் கச்சையை தண்ணீரிலே நனைத்துவிடக்கூடாது. சணல் கச்சையின்மீது தண்ணீர் பட்டுவிட்டால் அது பாழாய்ப்போகும். சணல் கெட்டுப்போகும். அந்தக் கச்சையை மறுபடியும் அணியமுடியாது. சணல் கச்சையை தண்ணீரில் நனைத்துவிட்டால், அந்தக் கச்சை மென்மையாயிருக்கும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் தீர்க்க தரிசிகள் வலுவான சணல் கச்சையையே கட்டுவது வழக்கம். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், யோவான்ஸ்நானன் கூட, சணல் கச்சையை கட்டியிருந்தார். சணல் கச்சையை கட்டியிருப்போரைப் பார்க்கும்போது, அவர்கள் விநோதமாய்த் தோற்றமளிப்பார்கள். அக்காலத்தில் தீர்க்கதரிசிகள் தங்கள் சரீரத்தில் சணல் கச்சையைக் கட்டி, மற்ற ஜனங்களிடமிருந்து தங்களை வேறுபிரித்துக் காண்பித்துக்கொண்டார்கள்.

எரேமியா தான் வாங்கிய சணல் கச்சையை, கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், தன் அரையில் சிறிதுகாலம் கட்டிக்கொள்கிறார். அதை தண்ணீரில் படவொட்டாமல் காத்துக்கொள்கிறார். அப்போது இரண்டு விசை கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று.

"நீ வாங்கினதும் உன் அரையிலிருக்கிறதுமான கச்சையை எடுத்துக்கொண்டு எழுந்து, ஐப்பிராத்து நதி மட்டும் போய், அதை அங்கே ஒரு கன்மலை வெடிப்பிலே ஒளித்துவை" (எரே 13:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியாவும், கர்த்தர் தனக்கு கட்டளையிட்டபடியே, சணல் கச்சையை, ஐப்பிராத்து நதியின் ஓரத்தில் ஒளித்துவைக்கிறார். நதியின் நீர்மட்டம் உயரும்போது, சணல் கச்சை தண்ணீரில் நனையும். நதியின் நீர்மட்டம் குறையும்போது, சணல் கச்சை உலர்ந்து காய்ந்துபோகும்.

சணல் கச்சை மாறி மாறி தண்ணீரில் நனைகிறது. பின்பு காய்ந்துபோகிறது. இதனால் அது சீக்கிரத்தில் கெட்டுப்போகிறது. எரேமியா ஐப்பிராத்து நதியின் ஓரத்தில் ஒளித்து வைத்திருந்த சணல் கச்சை அங்கே அநேக நாட்களாகயிருக்கிறது. அப்போது கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு மறுபடியுமாய் உண்டாயிற்று.

"நீ எழுந்து ஐப்பிராத்து நதிக்குப்போய் அங்கே ஒளித்து வைக்க நான் உனக்கு கட்டளையிட்ட கச்சையை அவ்விடத்திலிருந்து எடுத்துக்கொண்டுவா" (எரே 13:6) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

எரேமியாவும் கர்த்தர் சொன்ன பிரகாரம் ஐப்பிராத்து நதிக்குப்போகிறார். அங்கே தான் கச்சையை ஒளித்து வைத்த இடத்தில் தோண்டி அதை எடுக்கிறார். ஆனால் அந்தக் கச்சை கெட்டு ஒன்றுக்கும் உதவாமல் போயிற்று.

கச்சையை ஒளித்து வைப்பதற்காகவும், அதை மறுபடியும் எடுப்பதற்காகவும் எரேமியா இரண்டுதரம் ஐப்பிராத்து நதிக்குப்போகிறார். ஆனதோத் ஊரிலிருந்து ஐப்பிராத்து நதி வெகுதொலைவிலுள்ளது. ஆனாலும் எரேமியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, இரண்டுதரம் நீண்ட பிரயாணத்தை மேற்கொள்கிறார்.

எரேமியா தீர்க்கதரிசி ஐப்பிராத்து நதிக்கு பிரத்தியட்சமாய்ப் போகவில்லையென்றும், இந்த சம்பவங்களெல்லாம் அவருடைய தரிசனத்தில் உண்டாயிற்று என்றும் வேதபண்டிதர்களில் சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். கர்த்தர் எரேமியாவுக்கு இந்த தரிசனத்தின் வியாக்கியானத்தைச் சொல்லுகிறார். இந்த வியாக்கியானம் யூதாவின் மனுஷர் எல்லோருக்கும் சொல்லப்படாமல், எரேமியாவுக்கு மாத்திரம் தனிப்பட்ட முறையில் சொல்லப்படுகிறது.

கச்சையைப்போலாவார்கள்
எரே 13:8-11

எரே 13:8. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 13:9. இப்படியே நான் யூதாவுடைய பெருமையையும், எருசலேமுடைய மிகுந்த பெருமையையும் கெட்டுப்போகப்பண்ணுவேன்.

எரே 13:10. என் வார்த்தைகளைக் கேட்கமாட்டோம் என்று மறுத்து, தங்கள் இருதயத்தின் கடினத்தின்படி நடந்து, அந்நிய தேவர்களைச் சேவிக்கவும் அவர்களைப் பணிந்துகொள்ளவும் அவர்களைப் பின்பற்றுகிற இந்தப் பொல்லாத ஜனங்கள் ஒன்றுக்கும் உதவாமற்போன இந்தக் கச்சையைப்போலாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 13:11. கச்சையானது மனுஷனுடைய அரைக்குச் சேர்க்கையாயிருக்கிறதுபோல், நான் இஸ்ரவேல் குடும்பத்தார் அனைவரையும் யூதாவின் குடும்பத்தார் அனைவரையும், எனக்கு ஜனங்களாகவும், கீர்த்தியாகவும், துதியாகவும், மகிமையாகவும் சேர்க்கையாக்கிக்கொண்டேன்; ஆனாலும் அவர்கள் செவிகொடாமற் போனார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்குரியவர்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரையும், யூதா வம்சத்தாரையும், கச்சையைப்போல தம்மிடத்தில் சேர்த்து வைத்திருந்தார். அவர்களோடு உடன்படிக்கை செய்து, அவர்களை தமக்கு சொந்தமாக்கிக் கொண்டார். கர்த்தர் யூதா ஜனத்தோடு ஐக்கியமாயிருந்தார். கச்சையானது மனுஷனுடைய அரைக்கு சேர்க்கையாயிருக்கிறது. கச்சை மனுஷனுடைய சரீரத்தோடு ஒட்டி, மிகவும் நெருக்கமாக கட்டப்பட்டிருக்கும். அதுபோலவே கர்த்தர் யூதாவின் மனுஷரை தமக்கு நெருக்கமாக சேர்த்து வைத்திருந்தார்.

கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தார் அனைவரையும், யூதாவின் குடும்பத்தார் அனைவரையும் தமக்கு ஜனங்களாகவும், கீர்த்தியாகவும், துதியாகவும், மகிமையாகவும் சேர்க்கையாக்கிக்கொண்டார். கர்த்தர் தம்முடைய ஜனங்களை தமக்கு மிகவும் அருகாமையில் சேர்த்துக்கொண்டார். கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய நியாயப்பிரமாணத்தைக் கொடுத்து, அவர்களை தம்மோடு நெருக்கமாக வைத்திருந்தார்.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் மத்தியில் அனுப்பினார். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் சொல்லி, அவர்களை ஆசீர்வதித்தார்கள். கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர் மூலமாய், தம்முடைய கிருபைகளையும், நன்மைகளையும், இரக்கங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பித்தார்.

கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாரையும், யூதாவின் குடும்பத்தாரையும் தம்முடைய ஜனமாகச் சேர்த்துக்கொண்டார். கர்த்தர் அவர்களை தமக்கு கீர்த்தியாகவும், துதியாகவும், மகிமையாகவும் சேர்க்கையாக்கிக்கொண்டார். மனுஷனுடைய அரைக்கு கச்சை சேர்க்கையாயிருப்பதுபோல, இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தருக்கு சேர்க்கையாயிருந்தார்கள். கச்சை மனுஷனுக்கு மகிமையாயிருப்பதுபோல, யூதாவின் ஜனத்தாரும் கர்த்தருக்கு மகிமையாகயிருக்க வேண்டும்.

பிரதான ஆசாரியருடைய அங்கியில் அணியப்பட்டிருக்கிற ஏபோத்து, அவருக்கு மகிமையாகவும் அலங்காரமாகவும் இருப்பதுபோல, கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்கு மகிமையாகவும் கீர்த்தியாகவும் இருக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் அவரைத் துதிக்கவேண்டும்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு கீர்த்தியாகவும், துதியாகவும், மகிமையாகவும் இருக்க வேண்டியவர்கள். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைகளை கேட்கமாட்டோம் என்று மறுத்துவிடுகிறார்கள்.

யூதாவின் மனுஷர், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் நடவாமல், தங்கள் இருதயக்கடினத்தின்படி நடக்கிறார்கள். அந்நிய தேவர்களை சேவிக்கிறார்கள். விக்கிரகங்களை பணிந்துகொள்கிறார்கள். கர்த்தருடைய ஜனங்களாகயிருந்தவர்கள் இப்போது, கர்த்தருக்கு விரோதமான ஜனங்களாகயிருக்கிறார்கள். அவர்கள் பொல்லாத ஜனங்களாயிருக்கிறார்கள். கர்த்தருக்கு பிரியமுள்ள ஜனங்களாகவும், பிரயோஜனமுள்ள ஜனங்களாகவும் இருந்தவர்கள், இப்போது ஒன்றுக்கும் உதவாமல் போய்விடுகிறார்கள்.

விக்கிரகாராதனையினாலும், பாவங்களினாலும், அக்கிரமங்களினாலும் யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரை நம்புகிறவர்கள் செழித்திருப்பார்கள். அவர்களோ கர்த்தரை நம்பாமல் சீரழிந்துபோகிறார்கள். அவர்களுடைய சரீரங்கள் பூமியிலே புதைக்கப்படுகிறது. யூதா மனுஷருடைய சரீரங்களில் பல அந்நிய தேசத்திலும் புதைக்கப்படுகிறது.

அவர்கள் விக்கிரகங்களோடும் விக்கிரகங்களை ஆராதனை செய்கிறவர்களோடும் கலந்துவிடுகிறார்கள். கர்த்தருடைய ஜனமாயிருந்த வரையிலும் அவர்கள் பிரயோஜனமுள்ள வர்களாயிருந்தார்கள். இப்போதோ அவர்கள் ஒன்றுக்கும் உதவாமற்போன பொல்லாத ஜனங்களாயிருக்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல் அந்நிய தேவர்களை நோக்கிப் பார்த்தார்கள். அவர்கள் கர்த்தருடைய சமுகத்தைத் தேடாமல் விக்கிரகங்களைத் தேடி ஐப்பிராத்து நதியண்டைக்குப்போனார்கள். கர்த்தருடைய ஜனத்தார் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்க வேண்டும். அந்நிய தெய்வங்களையும் ஆராதித்து, கர்த்தரையும் ஆராதிப்பது என்பது இயலாத காரியம். கர்த்தர் அவர்களுடைய ஆராதனையை அங்கீகரிக்கமாட்டார். யூதாவின் மனுஷர் இப்போது அந்நிய தேவர்களை சேவித்து, அவர்களுடைய விக்கிரகங்களை பணிந்து, கெட்டுப்போன கச்சையைப்போல, ஒன்றுக்கும் உதவாமல் போயிருக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால், தமக்கு விரோதமாகப் பாவம் செய்த யூதாவின் ஜனங்களை தம்மைவிட்டு விலக்கி வைத்துவிடுகிறார். அவர்களை அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு அனுப்பி வைத்துவிடுகிறார். அவர்கள் கர்த்தரோடு இருந்தவரையிலும் அரையிலே கட்டப்பட்ட சணல் கச்சையைப்போல இருந்தார்கள். கச்சையானது மனுஷனுடைய அரைக்கு சேர்க்கையாயிருக்கிறதுபோல, கர்த்தரும் தம்முடைய ஜனங்களை தம்மோடு சேர்த்து வைத்திருந்தார். ஆனால் அவர்களோ கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டார்கள். இப்போது அவர்கள் கெட்டுப்போன கச்சையைப்போல இருக்கிறார்கள். கெட்டுப்போன கச்சை ஒன்றுக்கும் உதவாது. அதுபோலவே யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் ஒன்றுக்கும் உதவாத ஜனங்களாயிருக்கிறார்கள்.

கர்த்தர் யூதாவுடைய பெருமையையும், எருசலேமுடைய மிகுந்த பெருமையையும் கெட்டுப்போகப்பண்ணுகிறார். யூதாவின் ஜனங்கள் தங்களுடைய தேசத்தைக் குறித்து பெருமைப்பட்டார்கள். வடக்கு இஸ்ரவேல் தேசத்தைவிட, தெற்கு யூதா தேசமே கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட தேசம் என்று பெருமையோடு சொன்னார்கள். எருசலேமின் குடிகளோ, யூதாவின் மற்ற பட்டணத்தாரை விட, மிகுதியாய்ப் பெருமைப்பட்டார்கள். எருசலேமில் தேவனுடைய ஆலயமும், ராஜாவின் அரண்மனையும் இருக்கிறது. அங்கே ஆசாரியரும் லேவியரும் இருக்கிறார்கள். எருசலேமின் குடிகள் இதையெல்லாம் பார்த்து மிகவும் பெருமைப்படுகிறார்கள்.

அழிவுக்கு முன்னானது அகந்தை. இருதயத்தில் பெருமை வந்துவிட்டால், அது அந்த மனுஷனை அழித்துவிடும். கர்த்தர் பெருமையுள்ளவனுக்கு எதிர்த்து நிற்கிறார். எருசலேமுக்கு பெருமையாகயிருந்த தேவாலயமும், கெட்டுப்போன கச்சையைப் போல ஒன்றுக்கும் உதவாமல் போயிற்று. எருசலேமும், அதிலுள்ள தேவாலயமும் இடிந்து மண்மேடாய்ப்போயிற்று. கல்தேயர்கள் தேவாலயத்தை இடித்து தீயினால் சுட்டெரித்துவிடுகிறார்கள். கல்தேயர்கள் தேவாலயத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுக்களையெல்லாம் தங்கள் தேசத்திற்கு தூக்கிகொண்டு போய்விடுகிறார்கள்.

சகல ஜாடிகளும் திராட்சரசத்தினாலே நிரப்பப்படும் எரே 13:12-14

எரே 13:12. சகல ஜாடிகளும் திராட்சரசத்தினாலே நிரப்பப் படுமென்று, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறார் என்கிற வார்த்தையை அவர்களுடனே சொல்; அதற்கு அவர்கள்: சகல ஜாடிகளும் திராட்சரசத்தினாலே நிரப்பப்படுவது எங்களுக்குத் தெரியாதா என்று உன்னுடனே சொல்லுவார்கள்.

எரே 13:13. அப்பொழுது நீ அவர்களை நோக்கி: இதோ, இந்தத் தேசத்தின் குடிகளெல்லாரையும், தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிற ராஜாக்களையும், ஆசாரியர்களையும், தீர்க்க தரிசிகளையும், எருசலேமின் குடிகள் எல்லாரையும் நான் வெறியினால் நிரப்பி,

எரே 13:14. பிதாக்களும் பிள்ளைகளுமாகிய அவர்களை ஒருவர்மேல் ஒருவர் மோதி விழும்படிப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்களை அழிப்பதேயன்றி மன்னிப்பதுமில்லை, தப்பவிடுவதுமில்லை, இரங்குவது மில்லையென்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

யூதாவின் மனுஷருக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. சகல ஜாடிகளும் திராட்சரசத்தினாலே நிரப்பப்படுமென்று, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறார் (எரே 13:12). யூதாவின் மனுஷருடைய பாவங்களினால் அவர்களுடைய ஜாடிகள் தேவனுடைய கோபாக்கினையினால் நிரப்பப்பட்டிருக்கிறது. அவை அழிவுக்கு, நியமிக்கப்பட்டிருக்கிறது. ஜாடிகள் திராட்சரசத்தினால் நிரப்பப்படுவதுபோல, ஜனங்கள் தேவனுடைய கோபத்தினால் நிரப்பப்பட்டிருக்கிறார்கள்.

பழைய துருத்தியில் புதிய திராட்சரசத்தை வார்த்து வைத்தால், துருத்தி கிழிந்துபோகும். "புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கிறதும் இல்லை; வார்த்து வைத்தால், துருத்திகள் கிழிந்துபோம், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்; புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைப்பார்கள், அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும்" (மத் 9:17) என்று இயேசு சொல்லுகிறார்.

சகல ஜாடிகளும் திராட்சரசத்தினால் நிரப்பப்படும். ஜாடிகளின் விழிம்பு வரையிலும் திராட்சரசம் நிரம்பியிருக்கும். யூதா தேசத்தின் குடிகள் எல்லாரும் வெறியினால் நிரம்பியிருப்பார்கள்.

"எழும்பு, எழும்பு, கர்த்தருடைய உக்கிரத்தின் பாத்திரத்தை அவர் கையில் வாங்கிக் குடித்திருக்கிற எருசலேமே, எழுந்துநில், தத்தளிக்கச்செய்யும் பாத்திரத்தின் வண்டல்களை உறிஞ்சிக் குடித்தாய்" (ஏசா 51:17).

யூதாவின் மனுஷர் திராட்சரசத்தைக் குடித்து வெறித்திருப்பதினால், அவர்களுடைய சிந்தையில் தெளிவு இருக்காது. அவர்களுடைய மனதில் நிதானம் இருக்காது. அவர்கள் தீர்க்க தரிசிகளுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கமாட்டார்கள். தீர்க்க தரிசிகளை ஏளனம்பண்ணுவார்கள். "சகல ஜாடிகளும் திராட்சரசத்தினாலே நிரப்பப்படுவது எங்களுக்குத் தெரியாதா" (எரே 13:12) என்று எரேமியாவிடம் சொல்லுவார்கள்.

எரேமியாவின் வார்த்தைகள் யூதா மனுஷருடைய இருதயத்தைத் தொடுகிறது. ஆனால் அவர்களுக்குள் மனமாற்றமுண்டாக வில்லை. அவர்களுடைய மனச்சாட்சி அவர்களுடைய பாவங்களை கண்டித்து உணர்த்தவில்லை. அவர்கள் குடித்து வெறித்திருப்பதுபோல நிதானமில்லாமல் இருக்கிறார்கள். குடிகாரர்கள் இன்னும் அதிகமாய்க் குடிக்கவேண்டுமென்று விரும்புவார்கள். தங்களுக்கு சொல்லப்படும் புத்திமதிகளுக்கு செவிகொடுக்கமாட்டார்கள்.

"பின்பு கர்த்தர் என்னை நோக்கி: அந்நிய தேவர்களை மதித்து, திராட்சரசமுள்ள பாத்திரங்களை விரும்புகிறவர்களான இஸ்ரவேல் புத்திரர்பேரில் கர்த்தர் வைத்திருக்கிற அன்புக்கு ஒப்பாக நீ இன்னும் போய், தன் நேசரால் நேசிக்கப்பட்டவளும், விபசாரியுமான ஒரு ஸ்திரீயை நேசித்துக்கொள் என்று சொன்னார்" (ஓசி 3:1).

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை யூதாவின் மனுஷருக்கு சொல்லுகிறார். "சகல ஜாடிகளும் திராட்சரசத்தினாலே நிரப்பப்படுமென்று, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறார்" என்கிற வார்த்தையை எரேமியா அவர்களுடனே சொல்லுகிறார். அவர்கள் விரும்புகிற திராட்சரசத்தினால், அவர்களுடைய ஜாடிகள் நிரம்பியிருக்காது. தேவனுடைய கோபாக்கினையினால் ஜாடிகள் நிரம்பியிருக்கும்.

ஜாடிகள் திராட்சரசத்தினால் நிரம்பியிருப்பதுபோல, யூதாவின் மனுஷரும் மதுபான வெறியினால் நிரம்பியிருக்கிறார்கள். குடித்து வெறித்திருக்கிறவர்கள், மதுபானத்தால் நிரப்பப்பட்டிருக்கிற ஜாடிகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். ஜாடியில் மதுபானம் நிரம்பியிருந்தால், அந்த ஜாடி ஒன்றுக்கும் உதவாது. அதுபோலவே மனுஷரும் குடித்து வெறித்திருந்தால், அவர்களுடைய ஞானம், அறிவு, மரியாதை எதுவும் யாருக்கும் பிரயோஜனப்படாது.

கர்த்தர் எருசலேமின் குடிகள் எல்லோரையும் வெறியினால் நிரப்பப்போவதாக எச்சரிக்கிறார். குடிகாரர்களால் தெளிவாக சிந்திக்க முடியாது. யூதா மனுஷருடைய ஆலோசனைகள், குடிகாரரின் பேச்சுபோல குழப்பமாகிவிடும். குடிகாரர்கள் தடுமாறுவதுபோல, எருசலேமின் குடிகளும் தடுமாறுவார்கள். குடிகாரர்களை ஒருவரும் மதிக்கமாட்டார்கள். அவர்களைத் தூஷிப்பார்கள். எருசலேமின் மனுஷரும், குடிகாரர்களைப்போல, எல்லோருடைய ஏச்சுக்கும், தூஷண வார்த்தைகளுக்கும் உட்படுவார்கள்.

யூதாதேசத்தின் குடிகள் எல்லோருமே குடிகாரர்களைப்போல வெறியினால் நிரம்பியிருக்கிறார்கள். யூதாதேசத்தாரும், எருசலேமின் குடிகளும், தங்கள் இருதயத்தில் தெளிவில்லாமல், சிந்தையில் நிலையில்லாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறார்கள்.

யூதாதேசத்தின் "குடிகளெல்லாரையும், தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிற ராஜாக்களையும், ஆசாரியர்களையும், தீர்க்கதரிசிகளையும், எருசலேமின் குடிகள் எல்லாரையும் நான் வெறியினால் நிரப்புவேன்" (எரே 13:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

குடிவெறியினால் நிரம்பியிருக்கிறவர்களுக்கு நிதானமிருக்காது. அவர்களுடைய சிந்தையில் தெளிவு இருக்காது. அவர்கள் தங்களுக்குத் தாங்களே தீங்கு செய்வார்கள். மற்றவர்களுக்கும் தீங்கு செய்வார்கள். "பிதாக்களும் பிள்ளைகளுமாகிய அவர்களை ஒருவர்மேல் ஒருவர் மோதி விழும்படிப்பண்ணுவேன்" (எரே 13:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

குடிகாரர்களின் அழிவுக்கு அவர்களே காரணமாயிருப்பார்கள். அவர்கள் யாருக்கு தீங்கு செய்தார்களோ, அவர்களும் அவர்களை அழித்துப்போடுவார்கள். குடிகாரன் அழிந்துபோவதற்கு எல்லோரும் உதவிசெய்வார்கள். கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் அழித்துப்போடவேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறார்.

"நான் அவர்களை அழிப்பதேயன்றி மன்னிப்பதுமில்லை, தப்பவிடுவதுமில்லை, இரங்குவதுமில்லையென்று கர்த்தர் உரைக்கிறார்" (எரே 13:14).

"தன் தோழருக்குக் குடிக்கக் கொடுத்துத் தன் துருத்தியை அவர்களண்டையிலே வைத்து, அவர்களுடைய நிர்வாணங்களைப் பார்க்கும்படிக்கு, அவர்களை வெறிக்கப்பண்ணுகிறவனுக்கு ஐயோ! நீ மகிமையினால் அல்ல, இலச்சையினால் நிரப்பப்படுவாய்; நீயும் குடித்து விருத்தசேதனமில்லாதவன் என்று விளங்கு; கர்த்தருடைய வலதுகையில் இருக்கிற பாத்திரம் உன்னிடத்திற்குத் திரும்பும்; உன் மகிமையின்மேல் இலச்சையான வாந்திபண்ணுவாய்" (ஆப 2:15,16).

நீங்கள் செவிகொடுத்துக் கேளுங்கள் எரே 13:15,16

எரே 13:15. நீங்கள் செவிகொடுத்துக் கேளுங்கள்; மேட்டிமையாய் இராதேயுங்கள்; கர்த்தர் விளம்பினார்.

எரே 13:16. அவர் அந்தகாரத்தை வரப்பண்ணுவதற்கு முன்னும், இருண்ட மலைகளில் உங்கள் கால்கள் இடறுவதற்கு முன்னும், நீங்கள் வெளிச்சத்துக்குக் காத்திருக்கும்போது, அவர் அதை அந்தகாரமும் காரிருளுமாக மாறப்பண்ணுவதற்கு முன்னும், உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துங்கள்.

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் நல்ல ஆலோசனைகள் சொல்லப்படுகிறது. அவர்கள் இந்த ஆலோசனைகளைக் கேட்டு, அதன் பிரகாரம் நடந்துகொண்டால், வரப்போகிற அழிவுக்கு தப்பித்துக்கொள்ளலாம். கர்த்தருடைய பலத்த கரத்திற்கு முன்பாக அவர்கள் தங்களைத் தாழ்த்தவேண்டும். அவர்கள் மேட்டிமையாயிருக்கக்கூடாது. இதுவே இப்போது அவர்களுக்குத் தேவையான நல்ல ஆலோசனை.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் மனமேட்டிமையாயும், பெருமையாயும் இருக்கிறார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தர் அவர்களோடு வழக்காடுகிறார். கர்த்தர் யூதாவுடைய பெருமையையும், எருசலேமுடைய மிகுந்த பெருமையையும் கெட்டுப்போகப் பண்ணுவார் (எரே 13:9). கர்த்தர் பெருமையுள்ளவனுக்கு எதிர்த்து நிற்கிறார். மனத் தாழ்மையுள்ளவனுக்கோ கிருபையளிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் யூதாவின் மனுஷரோடு பேசுகிறார். அவர்கள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை செவிகொடுத்து கேட்கவேண்டும். தங்களுக்கு யாரும் ஆலோசனை சொல்ல வேண்டியதில்லை என்று இறுமாப்பாயிருக்கக் கூடாது. தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று ஆணவமாயும் பேசக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் கற்றுக்கொள்ளும் ஆவியிருக்கவேண்டும். கர்த்தருடைய சத்தியத்தை நாம் பயபக்தியோடு கேட்க வேண்டும். மனமேட்டிமையாயிருக்கக்கூடாது.

மனமேட்டிமையுள்ளவர்கள் தங்களுக்கும், தங்களுடைய சொந்த ஆலோசனைகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பார்கள். தங்களைப்பற்றி பெருமையாய் நினைப்பார்கள். ஆனால் அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையைச் செலுத்தவேண்டும் (எரே 13:16). விக்கிரகங்களுக்கும், அந்நிய தேவர்களுக்கும் மகிமையை செலுத்தக்கூடாது.

யூதாவின் மனுஷர் தாங்கள் செய்த பாவங்களுக்காக மனம்வருந்தி, அவற்றை கர்த்தரிடத்தில் அறிக்கை செய்து, கர்த்தருக்கு மகிமையை செலுத்தவேண்டும். தங்களுடைய பாவங்களினிமித்தமாயும், அக்கிரமங்களினிமித்தமாயும் கர்த்தர் தங்களுக்கு கொடுக்கும் தண்டனையை பணிவோடு ஏற்றுக்கொண்டு கர்த்தருக்கு மகிமையை செலுத்தவேண்டும்.

தங்களுடைய இருதயம் மனந்திரும்பி புதுப்பிக்கப்படுவதினால், அவர்கள் கர்த்தருக்கு மகிமையை செலுத்தவேண்டும். அப்போதுதான் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு நல்ல நோக்கம் இருக்கும். அவர்கள் கர்த்தருக்குப் பிரியமுள்ளவர்களாகவும், பிரயோஜனமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். கர்த்தருக்கு மகிமையை செலுத்துவதில் காலதாமதம் பண்ணக்கூடாது.

"அவர் அந்தகாரத்தை வரப்பண்ணுவதற்கு முன்னும், இருண்ட மலைகளில் உங்கள் கால்கள் இடறுவதற்கு முன்னும், நீங்கள் வெளிச்சத்துக்குக் காத்திருக்கும்போது, அவர் அதை அந்தகாரமும் காரிருளுமாக மாறப்பண்ணுவதற்கு முன்னும், உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையைச் செலுத்துங்கள்" (எரே 13:16).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதா வம்சத்தாருடைய வாசற்படியில் காத்துக் கொண்டிருக்கிறது. கர்த்தர் அவர்கள்மீது அந்தகாரத்தை வரப்பண்ணப்போகிறார். அவர்களால் கர்த்தருடைய ஆக்கினைத் தீர்ப்புக்கு தப்பிக்கவே முடியாது. அவர்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க வேண்டுமென்று முயற்சிபண்ணினால், அவர்களுக்கு சீக்கிரத்தில் அழிவு வந்துவிடும். அவர்களுடைய கால்கள் இருண்ட மலைகளில் இடறும். அவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்தை விட்டு விலகி சீக்கிரமாய் ஓடும்போது, அவர்கள் இருண்ட மலைகளில் நிலை தடுமாறி ஓடிக்கொண்டிருப்பார்கள்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பித்து ஓடுகிறவர்கள், அழிவின் பாதையில் ஓடிக்கொண்டிருப்பார்கள். அவர்களுடைய பாதை செம்மையாயிராது. அதில் ஏராளமான தடைகற்கள் இருக்கும். அவர்களுக்கு நம்பிக்கையே இருக்காது. ஏமாற்றமுண்டாகும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பித்து ஓடுகிற ஜனங்கள், வெளிச்சத்திற்கு காத்திருப்பார்கள். ஆனால் கர்த்தரோ அந்த வெளிச்சத்தை அந்தகாரமும் காரிருளுமாக மாறப்பண்ணுவார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தின் அடிமைகளாகயிருந்தார்கள். எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், இஸ்ரவேல் ஜனத்தாரை விடுதலைபண்ணாமல், தன்னுடைய இருதயத்தைக் கடினப் படுத்தினான். அவனுடைய இருதயம் கடினமானதினால், எகிப்து தேசத்தில் காரிருள் உண்டாயிற்று. எகிப்து தேசத்தார் தங்கள் தேசத்தை மூடியிருக்கிற காரிருளை உணர்ந்தார்கள். நம்முடைய இருதயத்தை நாம் கடினப்படுத்தினால் அது சீக்கிரத்தில் அழிந்துபோகும். நம்முடைய இருதயத்தை கர்த்தருடைய கிருபைக்கு ஒப்புக்கொடுத்தால், கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் நம்முடைய இருதயத்தை உருவாக்குவார்.

நீங்கள் இதைக் கேளாமற்போனீர்களானால் எரே 13:17-21

எரே 13:17. நீங்கள் இதைக் கேளாமற்போனீர்களானால், என் ஆத்துமா மறைவிடங்களில் உங்கள் பெருமையினிமித்தம் துக்கித்து, கர்த்தருடைய மந்தை சிறைப்பட்டுப்போனதென்று என் கண் மிகவும் அழுது கண்ணீர் சொரியும்.

எரே 13:18. நீங்கள் ராஜாவையும் ராஜாத்தியையும் நோக்கி: தாழவந்து உட்காருங்கள்; உங்கள் சிரசின் சிங்காரமாகிய உங்கள் மகிமையின் கிரீடம் விழுந்ததென்று சொல்லுங்கள்.

எரே 13:19. தெற்கிலுள்ள பட்டணங்கள் அடைக்கப்பட்டன; அவைகளைத் திறப்பார் இல்லை; யூதா அனைத்தும் குடிவிலக்கப்பட்டுப்போம்; அது சமூலமாய்ச் சிறைப்பட்டுப்போம்.

எரே 13:20. உங்கள் கண்களை ஏறெடுத்து, வடக்கேயிருந்து வருகிறவர்களைப் பாருங்கள்; உனக்குக் கொடுக்கப்பட்டிருந்த மந்தையும், உன் மகிமையான ஆட்டுக்கிடையும் எங்கே?

எரே 13:21. அவர் உன்னை விசாரிக்கும்போது என்ன சொல்லுவாய்? அவர்கள் உன்மேல் ஆதிக்கக்காரரும் தலைவருமாயிருக்க, நீ அவர்களைப் பழக்குவித்தாயே; கர்ப்பவதிக்குப் பிரசவவேதனை உண்டாகும்போது உண்டாகும் வேதனைகளைப்போல் வேதனைகள் உன்னைப் பிடிப்பதில்லையோ?

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய செய்தியைச் சொல்லுகிறார். அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளை சொல்லுகிறார். அவர்கள் அந்த ஆலோசனைகளை செவிகொடுத்து கேட்கவேண்டும். அவர்கள் அதைக் கேளாமல் போனால் தேவனுடைய கோபம் அவர்கள்மீது வரும். அதே வேளையில், எரேமியாவின் ஆத்துமா, அவர்களுடைய பெருமையினிமித்தம் மறைவிடங்களில் துக்கித்துப் புலம்பும். "கர்த்தருடைய மந்தை சிறைப்பட்டுப்போனதென்று என் கண் மிகவும் அழுது கண்ணீர் சொரியும்" (எரே 13:17) என்று எரேமியா வேதனையோடு சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தையைக்கேட்டு, அதற்கு கீழ்ப்படியவேண்டும். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து கலகம்பண்ணினால், எரேமியாவின் கண்களும், அவருடைய ஆத்துமாவும் மறைவிடங்களில் துக்கித்திருக்கும்.

யூதா மனுஷருடைய துன்மார்க்கங்களையும், பாவங்களையும் பார்க்கும்போது எரேமியாவின் மனது வேதனைப்படும். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், துணிகரமாய்ப் பாவம் செய்யும்போது, எரேமியாவின் ஆத்துமா துக்கமாயிருக்கும். யூதா மனுஷருடைய இருதயத்தில் பெருமையிருக்கிறது. அவர்கள் மாயையை நம்புகிறார்கள். தங்கள் பாவங்களில் பிடிவாதமாய் நிலைத்திருக்கிறார்கள்.

எரேமியாவின் பிரசங்கச் செய்தி அவர்களுடைய இருதயத்தில் ஒரு கிரியையையும் நடப்பிக்கவில்லை. அவர்களுக்கு மனமாற்றமுண்டாகவில்லை. எரேமியாவின் செய்தியைக்கேட்டு ஒருவர்கூட தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. எரேமியாவால் அவர்களைத் திருத்த முடியவில்லை. வார்த்தையால் திருத்த முடியாத அவர்களை, எரேமியா தன் ஆத்தும வருத்தத்தினால் திருத்துவதற்கு முயற்சி பண்ணுகிறார்.

நம்மால் செய்ய முடியாத காரியங்களை கர்த்தருடைய சமுகத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும். மறைவிடங்களில் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும். யூதாவின் மனுஷர் இருதயத்தில் பெருமையோடிருக்கிறார்கள். எரேமியாவின் செய்தியை கேட்க மறுக்கிறார்கள். எரேமியாவோ அவர்களுடைய பிடிவாத குணத்தினிமித்தமும், பெருமையினிமித்தமும் கர்த்தருடைய சமுகத்தில் துக்கித்து அழுகிறார்.

யூதா மனுஷருடைய அக்கிரமங்களினிமித்தமாயும், பாவங்களினிமித்தமாயும் அவர்களுக்கு அழிவு வந்திருக்கிறது. அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்கிறார்கள். ஜனங்களுக்கு வந்திருக்கும் அழிவு அரண்மனைக்கும் வருகிறது. ராஜாவும் ராஜாத்தியும் அழிந்துபோகப்போகிறார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு ராஜாவாலும் ராஜாதியாலும் தப்பிக்க முடியாது.

அழிவுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற யூதாவின் மனுஷர், ராஜாவையும் ராஜாத்தியையும் நோக்கி, "நீங்கள் தாழவந்து உட்காருங்கள்" என்றும், "உங்கள் சிரசின் சிங்காரமாகிய உங்கள் மகிமையின் கிரீடம் விழுந்தது" (எரே 13:18) என்றும் சொல்லவேண்டும். யூதா தேசத்தில் ராஜாவும் ராஜாத்தியும் மகாபிரதானமானவர்களாகயிருந்தாலும், அவர்களும் மேட்டிமையாயிருக்கக்கூடாது. அவர்களும் தங்களைத் தாழ்த்தி, தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு மகிமையை செலுத்தவேண்டும். உண்மையாய் மனந்திரும்பி கர்த்தருக்கு மகிமை செலுத்தவேண்டும். தங்கள் தேசத்திலுள்ள ஜனங்களுக்கு ராஜாவும் ராஜாத்தியும் நல்ல முன்மாதிரியானவர்களாக ஜீவிக்கவேண்டும்.

யூதா மனுஷரும், எருசலேமின் குடிகளும் சிறைப்பிடித்து செல்லப்படும்போது, அவர்களுக்கு ராஜாவும் இருக்கமாட்டார், ராஜாத்தியும் இருக்கமாட்டாள். எல்லோருமே சிறைக்கைதிகளாகத்தான் இருப்பார்கள். அவர்களுடைய மகிமையின் கிரீடம் கீழே விழுந்துகிடக்கும். யூதா தேசத்திலுள்ள சாதாரண குடிமக்களுக்கும், யூதா தேசத்து ராஜாவுக்கும் இடையே எந்த ஒரு வித்தியாசமும் இருக்காது. யூதா தேசத்தின் ராஜாத்தி, தன் தேசத்திலுள்ள சாதாரண குடிமகளைப்போல சிறைப்பட்டுப்போவாள். கர்த்தர் பட்சபாதமில்லாமல் பாவம் செய்கிறவர்களை நியாயந்தீர்ப்பார்.

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் அழிவு வரும். இந்த அழிவு அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு வந்திருக்கிறது. அவர்களால் இந்த அழிவுக்கு தப்பிக்க முடியாது. "தெற்கிலுள்ள பட்டணங்கள் அடைக்கப்பட்டன" (எரே 13:19) என்று கர்த்தர் சொல்லுகிறார். தெற்கிலுள்ள பட்டணங்கள் என்னும் வாக்கியம் எகிப்து தேசத்தின் பட்டணங்களைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

எகிப்து தேசம் யூதா தேசத்திற்கு தெற்கிலுள்ளது. அவர்கள் எகிப்திலிருந்து தங்களுக்கு உதவியும் ஒத்தாசையும் வரும் என்று நம்பினார்கள். ஆனால் அவர்களுடைய நம்பிக்கை வீணாய்ப்போயிற்று. அவர்களுக்கு எகிப்து தேசத்திலிருந்து ஒரு உதவியும் கிடைக்கவில்லை. யூதாவின் மனுஷரால் எகிப்து தேசத்தாரின் உதவியை கேட்கக்கூட முடியவில்லை. எகிப்தின் பட்டணங்கள் யூதர்களுக்கு விரோதமாக அடைக்கப்பட்டன. அவைகளைத் திறப்பார் ஒருவருமில்லை. கர்த்தர் ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்கு அடைக்கிறவர். ஒருவரும் அடைக்கக்கூடாதபடிக்கு திறக்கிறவர்.

"யூதா அனைத்தும் குடிவிலக்கப்பட்டுப்போம்; அது சமூலமாய்ச் சிறைப்பட்டுப்போம்" (எரே 13:19) என்று கர்த்தர் சொல்லுகிறார். சிதேக்கியா ராஜாவின் காலத்தில் யூதா தேசத்தார் எல்லோரும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போனார்கள். யூதர்கள் ஒருவரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தமாய் அவர்கள் சிறைப்பட்டுப்போனார்கள். "யூதா சமூலமாய் சிறைப்பட்டுப்போம்" (எரே 13:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"உங்கள் கண்களை ஏறெடுத்து, வடக்கேயிருந்து வருகிறவர்களைப் பாருங்கள்" (எரே 13:20) என்று கர்த்தர் சொல்லுகிறார். வடக்கேயிருந்து வருகிறவர்கள் என்னும் வாக்கியம் கல்தேயர் தேசத்தாரைக் குறிக்கிறது. அவர்கள் யூதாதேசத்திற்கு விரோதமாக விரைந்து வருகிறார்கள். சீறிப்பாய்ந்து வருகிறார்கள்.

யூதாதேசத்திற்கு விரோதமாய் சத்துருக்கள் வரும்போது, கர்த்தர் யூதா தேசத்து ஜனங்களிடம் பொதுவாகப் பேசாமல், யூதாதேசத்து ராஜாவிடம் நேரடியாகப் பேசுகிறார். "உனக்குக் கொடுக்கப்பட்டிருந்த மந்தையும், உன் மகிமையான ஆட்டுக்கிடையும் எங்கே?" (எரே 13:20) என்று கர்த்தர் கேட்கிறார். ஒருவேளை இந்த வாக்கியம் எருசலேம் நகரத்திடமோ அல்லது யூதாதேசத்திடமோ சொல்லப்படும் வாக்கியமாயிருக்கலாம். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள, "உனக்கு", "உன்" ஆகிய பிரதிபெயர்ச்சொற்கள் பெண்பால் சொற்களாக பயன்டுத்தப்பட்டுள்ளது.

கர்த்தர் தம்முடைய ஜனத்தை ராஜாக்களின் பொறுப்புக்களில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவர்கள் எருசலேம் நகரத்திலும், யூதாவின் பட்டணங்களிலும் பாதுகாப்பாயிருக்கவேண்டும். தேசத்து ஜனங்கள் எல்லோரும், ராஜாக்களிடம் ஒப்புக்கொடுக்கப்பட்ட மந்தையைப்போலவும், ஆட்டுக்கிடையைப்போலவும் இருக்கிறார்கள். ராஜாக்கள் தங்கள் தேசத்தாரை வழிநடத்துகிற மேய்ப்பர்களாயிருக்கிறார்கள். இவை மகிமையான ஆட்டுக்கிடை.

கல்தேயருடைய தேசத்தைச் சேர்ந்தவர்கள் வடக்கேயிருந்து யூதாதேசத்தார்மீது, பட்சிக்கிற ஓநாய்களைப்போல பாய்ந்து வருகிறார்கள். யூதாவின் ராஜாக்களும், அதன் பட்டணங்களும் யூதா ஜனத்தாரைப் பாதுகாக்கவேண்டும். கர்த்தர் அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிற மந்தையைப் பாதுகாக்கவேண்டும்.

கர்த்தர் யூதாதேசத்து தலைவர்களிடம் கேட்ட அதே கேள்வியை, இன்று எல்லா விசுவாசிகளிடமும் கேட்கிறார். நம்முடைய குடும்பத்திற்கு நாம் தலைவர்களாகயிருப்போமென்றால், நம்முடைய பிள்ளைகளை கர்த்தர் நம்முடைய பொறுப்பில் ஒப்புக்கொடுக்கிறார். பிள்ளைகள் போதுமான கல்வியறிவு இல்லாதவர்களாகவும், தேவனைப்பற்றிய ஆவிக்குரிய சத்தியங்களை தெரியாதவர்களாகவும் இருந்தால், கர்த்தர் நம்மிடத்தில் கணக்கு கேட்பார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விசுவாசிகளுக்கு சத்தியத்தைப் போதிக்கவேண்டும். அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் உத்திரவாதம் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களிடத்திலும் கணக்கு கேட்பார். "உனக்கு கொடுக்கப்பட்டிருந்த மந்தையும், உன் மகிமையான ஆட்டுக்கிடையும் எங்கே" என்று கர்த்தர் கேட்பார்.

"கர்த்தர் உன்னை விசாரிக்கும்போது என்ன சொல்லுவாய்" (எரே 13:21) என்று எரேமியா யூதாதேசத்து பிரபுக்களிடமும், ராஜாக்களிடமும், பிரதான ஆசாரியர்களிடமும் கேட்கிறார். அவர்களால் எரேமியாவின் கேள்விக்கு பதில்சொல்ல முடியாது. கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை அவர்கள்மீது வரப்பண்ணுவார். யூதாதேசத்தாரின் வாசற்படியில் அழிவு வந்திருக்கிறது.

யூதாதேசத்து ஜனங்களால் கர்த்தருடைய கோபத்தைத் தாங்கிக்கொள்ள முடியாது. அவர்களுக்கு உண்டாகும் வேதனை கர்ப்பவதிக்கு பிரசவ வேதனை உண்டாகும்போது உண்டாகும் வேதனைகளைப்போல இருக்கும். யூதாவின் மனுஷருக்கு அதிகமான துக்கங்களும், அதிகமான வேதனைகளும் உண்டாகும். அதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியாது.

யூதாதேசம் தன்னுடைய பிரபுக்களுக்கும், ராஜாக்களுக்கும் பயிற்சி கொடுத்து, அவர்களை ஜனங்கள்மேல் ஆதிக்கக்காரராகவும், தலைவருமாகவும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் இப்போதோ தேசத்திற்கு அழிவு வருகிறது. அழிவினிமித்தமாய் வேதனை வருகிறது. கர்த்தர் யூதாதேசத்தை தம்முடைய நீதியினால் விசாரிக்கிறார்.

எருசலேமே, உனக்கு ஐயோ எரே 13:22-27

எரே 13:22. இவைகள் எனக்கு நேரிட்டது ஏதென்று நீ உன் இருதயத்தில் சொன்னாயாகில், உன் திரளான அக்கிரமத்தினிமித்தமே உன் வஸ்திரத்து ஓரங்கள் விலக்கப்பட்டு, உன் பாதங்கள் பலவந்தஞ்செய்யப்படுகின்றன.

எரே 13:23. எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மைசெய்யக்கூடும்.

எரே 13:24. ஆதலால் வனாந்தரக் காற்றால் பறக்கடிக்கப்படும் துரும்பைப்போல அவர்களைச் சிதறடிப்பேன்.

எரே 13:25. நீ என்னை மறந்து, பொய்யை நம்பினபடியினாலே, இது உன்னுடைய வீதமும், என்னால் உனக்கு அளக்கப்படும் உன்னுடைய பங்குமாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 13:26. உன் மானம் காணப்பட நான் உன் வஸ்திரத்து ஓரங்களை உன் முகமட்டாக எடுத்துப்போடுவேன்.

எரே 13:27. உன் விபசாரங்களையும், உன் கனைக்குதல்களையும், வெளியிலே மேடுகளின்மேல் நீ பண்ணின வேசித்தனத்தின் முறைகேடுகளாகிய உன் அருவருப்புகளையும் நான் கண்டேன்; எருசலேமே, உனக்கு ஐயோ! நீ சுத்திகரிக்கப்படமாட்டாயா? இது இன்னும் எத்தனை காலத்துக்குப்பின் நடக்கும்? என்கிறார்.

யூதர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப் போவார்கள் என்னும் எச்சரிப்பு இங்கு மறுபடியும் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு குறைச்சல் உண்டாகும். அவர்கள் அந்நியருக்கு அடிமைகளாயிருப்பார்கள். அவர்களுடைய வஸ்திரங்கள் உரிக்கப்படும். அவர்களுடைய வஸ்திரத்து ஓரங்கள் விலக்கப்படும். அவர்கள் பாதங்களில் பாதரட்சைகள் இருக்காது. அவர்களுடைய சரீரங்களை மூடுவதற்கு மேல்வஸ்திரங்கள் இருக்காது.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், யுத்தத்தில் ஜெயித்தவர்கள், தோற்றுப்போனவர்களை சிறைப்பிடித்துக் கொண்டு போவது வழக்கம். அவர்களை வெறுங்காலாகவும், அம்மணமாகவும் இழுத்துக்கொண்டு போவார்கள்.

"சீரியா ராஜா, தான் சிறைபிடிக்கப்போகிற எகிப்தியரும், தான் குடிவிலக்கப்போகிற எத்தியோப்பியருமாகிய இளைஞரையும் கிழவரையும் வஸ்திரமில்லாமலும் வெறுங் காலுமாய் எகிப்தியருக்கு வெட்கமுண்டாகும்படி, இருப்பிடம் மூடப்படாதவர்களாய்க் கொண்டுபோவான்" (ஏசா 20:4).

யூதாதேசத்தார் அந்நிய தேசத்திற்கு சிறைப்பிடிக்கப்பட்டுப்போவார்கள். கர்த்தர் அவர்களை வனாந்தர காற்றால் பறக்கடிக்கப்படும் துரும்பைப்போல சிதறடிப்பார் (எரே 13:24). கர்த்தர் அவர்களுடைய வஸ்திரத்து ஓரங்களை அவர்களுடைய முகமட்டாக எடுத்துப்போடுவார். அவர்களுடைய மானம் காணப்படும். அவர்கள் சரீரத்தில் வஸ்திரமில்லாமல் நிர்வாணமாயிருப்பார்கள். அவர்கள் வேசிகளைப்போல வெட்கப்பட்டுப் போவார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் மிகுந்த வேதனைகளையும், நெருக்கங்களையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். இவைகள் தங்களுக்கு ஏன் நேரிட்டது என்று, தங்களுடைய இருதயத்தில் சொல்லிக்கொள்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய இருதயத்தில் எழும் கேள்விகளுக்கு பதில் சொல்லுகிறார். "உன் திரளான அக்கிரமத்தினிமித்தமே உன் வஸ்திரத்து ஓரங்கள் விலக்கப்பட்டு, உன் பாதங்கள் பலவந்தஞ்செய்யப்படுகின்றன" (எரே 13:22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாக ஏராளமான பாவங்களை செய்திருக்கிறார்கள். துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். கர்த்தரை கோபப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை தங்கள்மேல் வரவழைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் அழிந்துபோவதற்கு அவர்களே காரணம். அவர்களுடைய பாவங்களும் அக்கிரமங்களும் அவர்களுடைய கண்களுக்குத் தெரியவில்லை. ஆனால் தாங்கள் அனுபவிக்கிற வேதனைகளும், உபத்திரவங்களும் அவர்களுக்கு தெரிகிறது. "இவைகள் எனக்கு நேரிட்டது ஏது" என்று யூதர்கள் தங்கள் இருதயத்தில் சொல்லிக்கொள்கிறார்கள்.

தேவன் நீதியுள்ளவர். அவர் நீதியாய் நியாயம் விசாரிக்கிறவர். கர்த்தருடைய கிரியையில் அநீதி எதுவும் இருக்காது. கர்த்தர் தம்முடைய நீதியினால் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் தண்டிக்கிறார். பாவிகளுக்கு என்ன தண்டனை உண்டோ, அந்தத் தண்டனை அவர்களுக்கு வந்திருக்கிறது. கர்த்தர் பாவிகளைத் தண்டிக்கும் முன்பாக, அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு வரப்போகும் தண்டனைகளைப்பற்றியும் சொல்லி, அவர்களை எச்சரிக்கிறார். பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப வாய்ப்பு கொடுக்கிறார். அவர்கள் மனந்திரும்பினால், கர்த்தர் அவர்களைத் தண்டியாமல், தமது பெரிதான கிருபையினால் இரட்சிப்பார்.

யூதாவின் மனுஷரோ கர்த்தருக்கு விரோதமாய் அதிகமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய அக்கிரமங்கள் திரளாயிருக்கிறது. சிறிய தப்பிதம் செய்தவுடனேயே, கர்த்தர் அவர்களை சங்காரம்பண்ணிவிடுவதில்லை. பாவிகளைத் தண்டிப்பது கர்த்தருக்குப் பிரியமானதுமல்ல. பாவிகள் தங்கள் பாவங்களைவிட்டு விலகி மனந்திரும்ப வேண்டும் என்பதே கர்த்தருக்குப் பிரியம்.

ஆனால் யூதா மனுஷரோ திரளாய் அக்கிரமம் செய்கிறார்கள். எல்லாவிதமான பாவங்களையும் செய்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக எதையெல்லாம் செய்யக்கூடாதோ, அதையெல்லாம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய திரளான அக்கிரமங்களினிமித்தமாகவே, அவர்களைத் தண்டிக்கிறார். ஒரு சிலர் மிகப்பெரிய பாவங்களை செய்வார்கள். அதிகமான பாவங்களை செய்யமாட்டார்கள். ஒன்றோ அல்லது இரண்டோ பெரிய பாவங்களை செய்துவிடுவார்கள். கர்த்தர் அப்படிப்பட்ட பெரிய பாவிகளைத்தான் தண்டிப்பார் என்றும், சிறிய பாவிகளைத் தண்டிக்கமாட்டார் என்றும் ஒரு சிலர் நினைக்கிறார்கள்.

சிறிய பாவங்களை செய்கிறவர்கள், திரளான பாவங்களை செய்யும்போது, அவர்களுடைய அக்கிரமம் அதிகமாயிருக்கும். பெரிய பாவிகளாகயிருந்தாலும், சிறியபாவங்களை திரளாய் செய்கிறவர்களாகயிருந்தாலும், அவர்களெல்லோருமே கர்த்தருடைய பார்வையில் பாவிகளாகத்தான் இருக்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். மரணத்தில் சிறிய மரணம் என்றோ, பெரிய மரணம் என்றோ வித்தியாசமில்லை.

கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு பாவிகள்மேல் வரும். பெரிய பாவங்களைவிட திரளான சிறிய அக்கிரமங்கள் மிகவும் கொடியது. இப்படிப்பட்டவர்கள் எல்லாவிதமான பாவங்களையும் செய்வார்கள். பாவம் செய்யாதவர்கள்போல நடித்து, தங்களை பரிசுத்தவான்களைப்போல காண்பித்துக் கொள்வார்கள். மாய்மாலமாய் ஜீவிப்பார்கள். கர்த்தருக்கு மறைவான காரியம் ஒன்றுமில்லை. அவர் மனுஷருடைய எல்லா அக்கிரமங்களையும் அறிந்து வைத்திருக்கிறார்.

யூதா மனுஷருடைய அக்கிரமங்கள் திரளாயிருக்கிறது. அவர்கள் தங்கள் அக்கிரமங்களைவிட்டு விலகி வரவில்லை. தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. தங்கள் அக்கிரமங்களில் நிலைத்திருக்கிறார்கள். இதன் நிமித்தமாயும் கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வருகிறது. பாவம் செய்வது அவர்களுக்கு வாடிக்கையாயிற்று. அவர்களால் பாவம் செய்யாமலிருக்க முடியவில்லை. கர்த்தர் அவர்களுடைய பாவங்களை ஒரு உவமையினால் எடுத்துச்சொல்லுகிறார்.

"எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மைசெய்யக்கூடும்" (எரே 13:23) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சிவிங்கியின் தோலில் புள்ளிகள் இயற்கையாகவே இடம்பெற்றிருக்கிறது. அதை நீக்க முடியாது. அதுபோலவே எத்தியோப்பியன் பிறக்கும்போதே கறுப்பு நிறத்தில் பிறக்கிறான். அவனுடைய நிறத்தை மாற்றவுமுடியாது. இவையெல்லாம் அவற்றின் இயற்கையான சுபாவங்கள். அதுபோலவே யூதா மனுஷரும் இயற்கையாகவே பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவசுபாவங்களை மாற்றுவது இயலாத காரியம். அவர்கள் தீமை செய்யப் பழகியிருக்கிறார்கள். அவர்களால் நன்மை செய்ய முடியவில்லை. தீமை செய்வதில் பிரியப்படுகிறார்கள். தங்கள் பாவங்களை நினைத்து பெருமைப்படுகிறார்கள்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் யூதா மனுஷர் மத்தியிலே அவர்களுடைய பாவங்களை எச்சரித்துச் சொன்னார்கள். ஆனால் யூதா மனுஷருடைய அக்கிரமங்கள் திரளாயிருப்பதினாலும், அவர்கள் தீமை செய்ய பழகிவிட்டபடியினாலும், அவர்களால் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்க முடியவில்லை. யூதா மனுஷருடைய மனச்சாட்சி மழுங்கிப்போய் விட்டது. அது அவர்களுடைய பாவங்களைக் கண்டித்து உணர்த்தவில்லை.

பாவம் செய்வதினால் அவர்களுக்கு பயமோ வெட்கமோ உண்டாகவில்லை. பாவம் செய்வது அவர்களுக்கு வாடிக்கையாய்ப்போயிற்று. அவர்களுடைய பாவங்கள், அவர்களுடைய ஆத்துமாவையே பாழாக்கிப்போட்டது. அவர்களுடைய இருதயம் திருக்குள்ளதும் கேடுள்ளதுமாயிருக்கிறது. அவர்களுடைய சொந்த முயற்சியினால், அவர்களுடைய பாவங்களிலிருந்து அவர்களால் விலகி வரமுடியாது.

எத்தியோப்பியன் தன்னுடைய சுயமுயற்சியினால் தன்னுடைய தோலின் கறுப்பு நிறத்தை மாற்ற முடியாது. அதுபோலவே சிவிங்கியும் என்ன செய்தாலும், அதன் தோலிலுள்ள புள்ளிகளை மாற்ற முடியாது. எல்லாவற்றையும் மாற்றக்கூடியவர் சர்வவல்லமையுள்ள தேவன். அவரால் கூடாதகாரியம் ஒன்றுமேயில்லை. அவரால் எத்தியோப்பியனுடைய தோலின் நிறத்தையும் மாற்ற முடியும். சிவிங்கியினுடைய புள்ளிகளையும் மாற்ற முடியும்.

தீமை செய்யப் பழகின யூதர்களை, நன்மை செய்ய பண்ணவும் முடியும். இது தேவனுடைய கிருபை. யூதர்கள் தங்களைத் தாழ்த்தி, தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் தங்களை உண்மையாய் ஒப்புக்கொடுத்தால், கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார். பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய பொல்லாத இருதயங்களில் கிரியை நடப்பித்து, அவர்களுடைய இருதயங்களை பரிசுத்தப்படுத்துவார். அவர்கள் அதற்குமேல் தீமைகளை செய்யாமல், நன்மைகளை செய்வார்கள்.

மனந்திரும்பவேண்டும் என்னும் விருப்பம் மனுஷருக்கு உண்டாகவேண்டும். அப்போதுதான் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் கிரியை நடப்பிப்பார். கர்த்தர் யாரையும் மனந்திரும்புமாறு கட்டாயப்படுத்துகிறவரல்ல. கேட்கிறவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்படும். தேடுகிறவர்கள் மாத்திரமே கண்டுபிடிப்பார்கள். தட்டுகிறவர்களுக்கு மாத்திரமே திறக்கப்படும். யூதர்கள் நன்மை செய்யவேண்டுமென்றால், நன்மை செய்யவேண்டும் என்னும் ஆர்வம் அவர்களுடைய இருதயத்தில் உண்டாகவேண்டும். அவர்கள் தங்களையும், தங்களுடைய கிரியைகளையும் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் சத்திய தேவனை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். அவர்கள் கர்த்தரை மறந்து பொய்யை நம்புகிறார்கள். ஆகையினால், "இது உன்னுடைய வீதமும், என்னால் உனக்கு அளக்கப்படும் உன்னுடைய பங்குமாயிருக்கும்" (எரே 13:25) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதாவின் மனுஷர் அந்நிய தேசத்திற்கு சிறைப்பிடிக்கப்பட்டுப்போவது அவர்களுடைய பங்காயிருக்கிறது. ஏராளமான பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிப்பது கர்த்தரால் அவர்களுக்கு அளக்கப்படும் அவர்களுடைய பங்காயிருக்கிறது.

யூதாவின் மனுஷர் கர்த்தரை மறந்தார்கள். கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் மறந்தார்கள். கர்த்தருடைய பரிசுத்தத்தை மறந்தார்கள். அவருடைய சர்வவல்லமையையும், சர்வஆளுகையையும், சர்வஞானத்தையும் மறந்தார்கள். கர்த்தரை மறப்பதே எல்லா பாவங்களுக்கும் அடிப்படை காரணமாயிருக்கிறது. கர்த்தரை மறந்தவர்கள், பொய்யை நம்புகிறார்கள்.

கர்த்தரை நினைவுகூருகிறவர்கள் பரிசுத்தமாய் ஜீவிப்பார்கள். தங்கள் சிருஷ்டிகரை நினைக்கிறவர்கள் சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் கர்த்தரைப் பற்றிய நம்பிக்கை நிரம்பியிருக்கும். சர்வஆளுகையுள்ள தேவன் தங்களை ஆளுகை செய்கிறார் என்பதை நினைவுகூர்ந்து, அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிவார்கள். கர்த்தருடைய சித்தமும், விருப்பமும் அவர்களுடைய சித்தமாகவும், அவர்களுடைய விருப்பமாகவும் இருக்கும். கர்த்தருடைய தெய்வீக திட்டத்திற்கு அவர்கள் கீழ்ப்படிவார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரை மறந்து, அவரைவிட்டு விலகிப்போய், விக்கிரகங்களை பற்றிக்கொள்கிறார்கள். கர்த்தரை ஆராதனை செய்யவேண்டிய ஜனங்கள் அந்நிய தேவர்களையும், விக்கிரகங்களையும் ஆராதனை செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வருகிறது. கர்த்தர் அவர்களுடைய மானம் காணப்பட அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களுடைய வஸ்திரத்து ஓரங்களை, அவர்களுடைய முகமட்டாக எடுத்துப்போடுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரை, ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். ஆனால் அவர்களோ விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். சகலவிதமான அசுத்தங்களையும் ஆசையாய்ச் செய்கிறார்கள். அவர்களிடத்தில் விபசாரங்கள் அதிகமாயிருக்கிறது. அவர்கள் வெளியிலே மேடுகளின்மேல் வேசித்தனத்தின் முறைகேடுகளைப் பண்ணுகிறார்கள். அவர்கள் அருவருப்பான காரியங்களை செய்தாலும், அதை நினைத்து அவர்கள் வெட்கப்படவில்லை. அவர்களுக்கு அருவருப்பு உண்டாகவில்லை.

கர்த்தர் யூதா மனுஷருடைய அக்கிரமங்களையும், அருவருப்புக்களையும் பார்க்கிறார். "உன் விபசாரங்களையும், உன் கனைக்குதல்களையும், வெளியிலே மேடுகளின்மேல் நீ பண்ணின வேசித்தனத்தின் முறைகேடுகளாகிய உன் அருவருப்புகளையும் நான் கண்டேன்" (எரே 13:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதா மனுஷர் சகல மேடுகளிலும், பச்சையான சகல மரங்களின் கீழும் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்கள் செய்யும் முறைகேடுகள் அவர்களுக்கு அருவருப்பாயில்லை. விக்கிராராதனையை நினைத்து அவர்கள் வெட்கப்படவுமில்லை. கர்த்தர் அவர்களுடைய அக்கிரமங்களையும், அருவருப்புக்களையும் பார்த்து, "எருசலேமே, உனக்கு ஐயோ" என்று சொல்லி சபிக்கிறார்.

கர்த்தர் யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் கோபமாயிருந்தாலும், அவருடைய அன்பு இன்னும் குறையவில்லை. கர்த்தர் கிருபையும் இரக்கமும் நிரம்பியவர். யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு எப்படியாவது மனந்திரும்பவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவர்களைத் தண்டிப்பது கர்த்தருக்கு பிரியமல்ல. பாவம் செய்தவர்களைத் தண்டிப்பது கர்த்தருடைய நீதி. ஆனாலும் பாவிகள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம்.

நாம் ஜீவனோடிருக்கும் வரையிலும், நாம் மனந்திரும்புவதற்கு வாய்ப்புள்ளது. மனந்திரும்புதலுக்கேற்ற சுவிசேஷ செய்தியை சிறியோருக்கும் சொல்லவேண்டும். பெரியோருக்கும் சொல்ல வேண்டும். இளைஞர்களுக்கும் சொல்லவேண்டும். வயதுமுதிர்ந்தவர்களுக்கும் சொல்லவேண்டும். கர்த்தர் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் பார்த்து, "நீ சுத்திகரிக்கப்படமாட்டாயா" (எரே 13:27) என்று அன்போடு கேட்கிறார்.

யூதாவின் குடிகள்மீது கர்த்தருடைய கிருபை வெளிப்படுகிறது. பாவிகள் மனந்திரும்பவேண்டுமென்று கர்த்தர் பிரியப்படுகிறார். அவர்கள் நீண்டகாலமாக கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்களுடைய அக்கிரமங்கள் திரளாயிருந்தது. அவர்கள் அநேக காலமாக தீமை செய்ய பழகினவர்கள். கர்த்தர் அவர்களிடத்திலிருந்து நன்மையை எதிர்பார்க்கிறார். அவர்களுடைய இருதயம் சுத்திகரிக்கப்பட்டால்தான், அவர்களால் நன்மை செய்ய முடியும்.

கர்த்தர் தங்களிடத்தில் கிருபையாய் இரங்கி வரும்போது, யூதாவின் குடிகளும் கர்த்தருடைய சமுகத்தில் பயபக்தியோடு வந்துசேரவேண்டும். கர்த்தர் அவர்களுடைய விபசாரங்களையும், வேசித்தனத்தின் முறைகேடுகளையும், அருவருப்புக்களையும் காண்கிறார். கண்டபின்பும், "நீ சுத்திகரிக்கப்படமாட்டாயா" என்று அவர்களிடத்தில் அன்போடு கேட்கிறார்.

அவர்கள் கர்த்தருடைய கிருபையை தங்களுடைய இரட்சிப்புக்கேதுவாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அவர்கள் இரட்சிக்கப்பட்டால் அவர்களுக்குத்தான் நன்மை உண்டாகும். ஆனால் யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளுமோ மதியீனத்திலிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை மறக்கிறார்கள். கர்த்தருடைய கிருபையை மறக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையை நம்பவில்லை. அவர்கள் பொய்யை நம்புகிறார்கள். மனந்திரும்ப வேண்டிய நேரத்தில் மனந்திரும்பாமல் போகிறார்கள். இரட்சிக்கப்படுவதற்கு கர்த்தர் ஒரு வாய்ப்பைக் கொடுக்கும் நேரத்தில், அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளாமல் போகிறார்கள். யூதர்கள் மனந்திரும்பவேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

"நீ சுத்திகரிக்கப்படமாட்டாயா" என்று கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்கியம், எல்லா பாவிகளுக்கும் பொதுவாக சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தர் பாவிகளைப் பார்த்து, "நீ உன் பாவத்திற்கு மனந்திரும்ப மாட்டாயா" என்று அன்போடு கேட்கிறார். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புகிற பாவிகளை இரட்சிப்பதற்கு, கர்த்தரிடத்தில் ஏராளமான கிருபையும் இரக்கமுமுள்ளது. இரட்சிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கரம் ஒருபோதும் குறுகிப்போகவில்லை.

"நீ சுத்திகரிக்கப்படமாட்டாயா" என்று கர்த்தர் யூதர்களைப் பார்த்து கேட்டுவிட்டு, "நீ ஒருபோதும் சுத்திகரிக்கப்படமாட்டாய்" என்று சொல்லி, கர்த்தர் அவர்களுடைய இரட்சிப்பின் வாசலை அடைத்துப்போடவில்லை. அவர்கள் இன்னும் சுத்திகரிக்கப்படவில்லை. ஆனாலும் அவர்கள் சுத்திகரிக்கப்படுவதற்கான வாசல் இன்னும் திறந்தேயிருக்கிறது. "இது இன்னும் எத்தனை காலத்திற்குப் பின் நடக்கும்" (எரே 13:27) என்று கர்த்தர் ஏக்கத்தோடு கேட்கிறார். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் எப்போது சுத்திகரிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்.

14 அதிகாரம்

யூதா தேசத்தில் மழைத்தாழ்ச்சி உண்டாயிற்று. யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் குடிப்பதற்குகூட தண்ணீர் இல்லை. யோசியா ராஜாவினுடைய ஆட்சிக்காலத்தின் பின்பகுதியில் தேவனுடைய இந்த நியாயத்தீர்ப்பு ஆரம்பமாயிற்று. யோயாக்கீமினுடைய ஆட்சிக்காலத்தின் ஆரம்பம் வரையிலும், யூதாதேசத்தில் மழை பெய்யவில்லை. பரிசுத்த வேதாகமத்தில் இந்த மழைத்தாழ்ச்சியைக் குறித்து பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் எரேமியா புஸ்தகத்தில், இந்த அதிகாரத்தில், யூதாவுக்கு ஏற்பட்டிருக்கிற மழைத்தாழ்ச்சியைப்பற்றி முழுமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மழைத்தாழ்ச்சியின் சோகமான விளக்கம் (எரே 14:1-6). கர்த்தர் இந்த துன்பத்தை நீக்கிப்போடவேண்டுமென்று எரேமியா ஜெபம்பண்ணுகிறார் (எரே 14:7-9). யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாய் தொடர்ந்து பாவம் செய்கிறார்கள். இதனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பும் அவர்கள்மீது தொடர்ந்து வருகிறது (எரே 14:10-12).

ஜனங்களுடைய பாவங்களுக்கு கள்ளத்தீர்க்கதரிசிகளின் பொய்யான உபதேசங்களே காரணம் என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார் (எரே 14:13-16). யூதா மனுஷருக்காக விண்ணப்பம்பண்ணாமல், அவர்களுக்காக துக்கித்துப் புலம்புமாறு கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார் (எரே 14:17-22).

மழைத்தாழ்ச்சி
எரே 14:1-6

எரே 14:1. மழைத்தாழ்ச்சியைக் குறித்து எரேமியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்:

எரே 14:2. யூதா துக்கிக்கிறது, அதின் வாசல்கள் பெலனற்றுக் கிடக்கிறது; தரை மட்டும் குனிந்து, கரிகறுத்துத் திரிகிறார்கள்; எருசலேமின் கூக்குரல் எழும்புகிறது.

எரே 14:3. அவர்களில் பிரபலமானவர்கள் தங்கள் சிறுவர்களைத் தண்ணீருக்கு அனுப்புகிறார்கள்; இவர்கள் பள்ளங்களுக்குப் போய் தண்ணீரைக் காணாமல் வெறும் பாத்திரங்களோடே திரும்பிவருகிறார்கள்; வெட்கி நாணி, தங்கள் தலையை மூடிக்கொள்ளுகிறார்கள்.

எரே 14:4. தேசத்தின்மேல் மழை இல்லாததினால் தரை வெடித்திருக்கிறது; பயிர் செய்கிறவர்கள் வெட்கி, தங்கள் தலையை மூடிக்கொள்ளுகிறார்கள்.

எரே 14:5. வெளியின் பெண்மானும் குட்டி போட்டு, புல்லில்லாததினால் அதை விட்டு ஓடிப்போகும்.

எரே 14:6. காட்டுக்கழுதைகள் மேடுகளில் நின்று, வலுசர்ப்பங்களைப் போல் காற்றை உட்கொள்ளுகிறது; புல் இல்லாததினால் அவைகளுடைய கண்கள் பூத்துப் போகிறது என்றார்.

யூதாவின் மனுஷருக்கு இயற்கையும் ஆதரவாயில்லை. யூதாதேசத்தில் மழை பெய்யவில்லை. வானம் வெண்கலத்தைப் போலிருப்பதினால், வானத்திலிருந்து பனித்துளி பூமிக்கு இறங்கி வரவில்லை. பூமியும் இரும்பைப்போலிருக்கிறது. ஆகையினால் பூமியில் விருட்சங்கள் எதுவும் கனிதரவில்லை. வானமும் உலர்ந்துபோயிருக்கிறது. பூமியும் காய்ந்துபோயிருக்கிறது. யூதாதேசத்தார் எல்லோரும் மழையில்லாமல் மிகுந்த துன்பங்களை அனுபவிக்கிறார்கள்.

தேசத்தில் மழை பெய்யாமல், ஜனங்கள் எல்லோரும் வேதனையிலிருக்கும்போது, மழைத்தாழ்ச்சியைக் குறித்து எரேமியாவுக்கு கர்த்தருடைய வசனம் உண்டாயிற்று (எரே 14:1). யூதாதேசத்தில் மழை பெய்யவில்லை. யூதா துக்கிக்கிறது. அது தன் பாவங்களுக்காக துக்கிக்கவில்லை. தன்மீது மழை பெய்யவில்லை என்பதற்காக துக்கிக்கிறது. யூதாவின் வாசல்கள் பெலனற்று கிடக்கிறது. யூதாவின் வாசல் வழியாக உள்ளே போவோரும், வெளியே வருவோரும் துக்கிக்கிறார்கள்.

மனுஷருக்கு போஜனமும், தண்ணீரும் ஜீவாதாரமாயிருக்கிறது. தண்ணீரில்லாமல் மனுஷனால் ஜீவிக்க முடியாது. தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர் மீது வந்திருக்கிறது. அந்த தேசத்தின்மீது மழைபெய்யாதபடிக்கு, கர்த்தர் வானத்தை அடைத்துவிடுகிறார். இதனால் யூதாதேசத்து வாசல்வழியாக போவோரும் வருவோரும் மிகுந்த துக்கத் தோடிருக்கிறார்கள். யூதாவின் வாசல்களும் பெலனற்று கிடக்கிறது. தேசத்தில் பஞ்சமுண்டாயிற்று. அங்கே தண்ணீரும் இல்லை அப்பமும் இல்லை.

யூதாவின் மனுஷர், தண்ணீரையும் அப்பத்தையும் பெற்றுக்கொள்வதற்கு, மற்ற தேசங்களுக்குப் போகிறார்கள். அவர்கள் யூதாவின் வாசல் வழியாய்ப்போகும்போது, மிகுந்த துக்கத்தோடு போகிறார்கள். இதுவரையிலும் மற்ற தேசத்தார் யூதா தேசத்திற்கு வந்து, தங்கள் தானியத்தையும், அப்பத்தையும் பெற்றுக்கொள்வார்கள். யூதா தேசத்தார் மற்ற தேசத்தாருக்கு அப்பத்தை கொடுப்பார்கள். இப்போதோ யூதா தேசத்திலே பஞ்சமுண்டாயிற்று. இது தேவனுடைய நியாயத்தீர்ப்பு. அவர்கள் அப்பத்திற்காக அந்நிய தேசத்திற்கு போகிறார்கள்.

யூதாதேசத்தின் வாசல்களில் அமர்ந்திருக்கிறவர்களும் மழைத்தாழ்ச்சியை நினைத்து கண்ணீர்விட்டு அழுகிறார்கள். அவர்கள் தரைமட்டும் குனிந்து, கரிகறுத்து திரிகிறார்கள். ஒப்பாரி பாடுகிறவர்களும், புலம்பல் பாட்டு பாடுகிறவர்களும் கறுப்பு வஸ்திரங்களை அணிந்திருப்பார்கள். அவர்கள் தரையில் அமர்ந்து ஒப்பாரி பாடல்களைப் பாடுவார்கள். பிச்சைக்காரர்களும் தரையில் அமர்ந்து, தங்களுடைய பரிதாப நிலமைகளை புலம்பல் பாடலாகப் பாடி, பிச்சை கேட்பார்கள். யூதாவின் மனுஷரும் கறுப்பு வஸ்திரங்களைத் தரித்து, கரிகறுத்து திரிகிறார்கள்.

யூதா மனுஷருக்கு தண்ணீருமில்லை, அப்பமுமில்லை. அவர்களுடைய சரீரத்தில் பெலனுமில்லை. சரீரத்தில் பெலவீனம் ஏற்பட்டிருப்பதினால், அவர்களால் எழுந்து நிற்கமுடியவில்லை. நடக்க முடியவில்லை. அவர்கள் தரைமட்டும் குனிந்து கிடக்கிறார்கள்.

எருசலேமின் கூக்குரல் எழும்புகிறது (எரே 14:2). எருசலேமின் குடிகள் கூக்குரலிடுகிறார்கள். எருசலேம் நகரத்திற்குத் தேவையான அப்பமும் தண்ணீரும், அதைச் சுற்றிலுமுள்ள வயல்நிலங்களிலிருந்து வரவேண்டும். தேசத்தின் மேல் மழையில்லாதினால் தரை வெடித்திருக்கிறது. ஒருவரும் பயிர் செய்யவில்லை. விளைச்சலுமில்லை. தானிய அறுவடையுமில்லை. எருசலேம் நகரத்தார் தானியமும் அப்பமும் இல்லாமல் அழுது புலம்புகிறார்கள். அவர்களுடைய கூக்குரல் எழும்புகிறது.

எருசலேமில் தேவனுடைய ஆலயம் இருக்கிறது. யூதாதேசம் முழுவதிலும் மழை பெய்யவில்லை. மழைத்தாழ்ச்சியினால் யூதா துக்கிக்கிறது. யூதாவின் எல்லா பட்டணங்களிலுமுள்ள ஜனங்களும், மழைக்காக ஜெபிக்க, எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு வருகிறார்கள். தங்கள் சத்தத்தை உயர்த்தி கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய கூக்குரலின் சத்தம் எருசலேமில் எழும்புகிறது.

தண்ணீருமில்லாமல், அப்பமுமில்லாமல் ஜீவிப்பது கடினம். யூதாவின் மனுஷருக்கு மிகுந்த துன்பமும், வேதனையும் உண்டாயிருக்கிறது. தங்களுடைய வேதனைகளை சகித்துக்கொள்ள முடியாமல் யூதாவின் மனுஷர் அழுது புலம்புகிறார்கள். அவர்களுடைய கூக்குரல் எருசலேமில் எழும்புகிறது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், துணிகரமாய் அக்கிரமம் செய்கிறார்கள். இதனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. தேசத்திலுள்ள பிரபலமானவர்கள், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தங்கள்மீது வந்திருப்பதை உணர்ந்துகொள்கிறார்கள்.

அவர்களில் பிரபலமானவர்கள் தங்கள் சிறுவர்களை தண்ணீருக்கு அனுப்புகிறார்கள். "சிறுவர்கள்" என்னும் வார்த்தை அவர்களுடைய வேலைக்காரரைக் குறிக்கிறது. பிரபுக்கள் தங்களுடைய வேலையாட்களை தண்ணீருக்காக வெளியே அனுப்புகிறார்கள். ஆனால் அவர்களுக்கு எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. அவர்கள் எல்லா பள்ளங்களுக்கும் தண்ணீரைத் தேடி போகிறார்கள். ஒரு பள்ளத்திலும் தண்ணீர் இல்லை. அவர்கள் தண்ணீரைக் காணாமல் வெறும் பாத்திரத்தோடே திரும்பி வருகிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கு முன்மாரியுமில்லை, பின்மாரியுமில்லை. தேசத்தில் மழைத்தாழ்ச்சி உண்டாயிற்று. குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. பயிர் நிலங்களும் காய்ந்துபோயிருக்கிறது. தேசத்தின்மேல் மழையில்லாததினால் தரையும் வெடித்திருக்கிறது. வேலைக்காரர்கள் தண்ணீரில்லாமல் வெறும் பாத்திரங்களோடே திரும்பி வருவதைப் பார்க்கும்போது, அவர்களுடைய எஜமான்கள் வெட்கி நாணுகிறார்கள். வெட்கத்தினாலும் வேதனையினாலும் தங்கள் தலையை மூடிக்கொள்கிறார்கள்.

தேசத்தில் மழையில்லாததினால் ஜனங்களுக்கு மிகுந்த கஷ்டமுண்டாயிற்று. குடிப்பதற்குகூட தண்ணீரில்லை. இதனால் நகரத்தின் ஜனங்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். நகரத்திற்கு மழைத்தாழ்ச்சியினால் பிரச்சனை வந்தது போலவே, கிராமங்களுக்கும் பிரச்சனை வந்திருக்கிறது. பயிர் செய்கிறவர்கள் வெட்கி, தங்கள் தலையை மூடிக்கொள்கிறார்கள். அவர்களுடைய விளைச்சல் நிலமெல்லாம் காய்ந்துபோயிருக்கிறது. தண்ணீரில்லாமல் தரை வெடித்திருக்கிறது.

பயிர் நிலங்கள் கடினமாயிருப்பதினால் நிலத்தை உழமுடியவில்லை. நிலத்தைப் பண்படுத்த முடியவில்லை. அவர்களால் விவசாய வேலை செய்ய முடியவில்லை. விவசாயி ஒருபோதும் சும்மாயிருக்கமாட்டார். சும்மாயிருப்பது அவர்களுக்கு வெட்கமாயிருக்கும். பயிர் செய்கிறவர்களுக்கு வேறு வேலை எதுவுமில்லாமல், சும்மாயிருப்பதினால், அவர்கள் வெட்கி, தங்கள் தலையை மூடிக்கொள்கிறார்கள்.

எல்லா ஜீவராசிகளும் கர்த்தருடைய தெய்வீக பராமரிப்பையே சார்ந்திருக்கிறது. கர்த்தர் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இந்தப் பூமியின்மேல் மழை பெய்யப்பண்ணவில்லையென்றால், பூமியில் விவசாயம் நடைபெறாது. விளைச்சல் இருக்காது. தானிய அறுவடை இருக்காது. மனுஷர் புசிக்கிறதற்கு தானியமும் அப்பமும் இருக்காது.

"தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர்; தண்ணீர் நிறைந்த தேவநதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்; இப்படி நீர் அதைத் திருத்தி, அவர்களுக்குத் தானியத்தை விளைக்கிறீர். அதின் வரப்புகள் தணியத்தக்கதாய் அதின் படைச்சால்களுக்குத் தண்ணீர் இறைத்து, அதை மழைகளால் கரையப்பண்ணி, அதின் பயிரை ஆசீர்வதிக்கிறீர். வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்; உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது" (சங் 65:9-11).

மழைத்தாழ்ச்சியினால் மனுஷர் கஷ்டப்படும்போது, மிருகங்களும் குடிப்பதற்கு தண்ணீரில்லாமல் கஷ்டப்படுகிறது. வெளியின் பெண்மானும் குட்டி போட்டு, புல்லில்லாததினால் அதை விட்டு ஓடிப்போகிறது. காட்டுக்கழுதைகள் மேடுகளில் நின்று, வலுசர்ப்பங்களைப் போல் காற்றை உட்கொள்ளுகிறது; புல் இல்லாததினால் அவைகளுடைய கண்கள் பூத்துப் போகிறது (எரே 14:5,6).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது. பெண்மானும் காட்டுக்கழுதையும் ஒரு பாவமும் செய்யவில்லை. பெண்மான் சாதுவான மிருகம். அது யாருக்கும் தீங்குசெய்யாது. பெண்மான் குட்டிபோடும் போது, தன்னுடைய குட்டியை அன்பாய்ப் பராமரிக்கும். ஆனால் இப்போதோ தேசத்தில் மழை பெய்யவில்லை. பெண்மானுக்கு குடிப்பதற்கு தண்ணீரில்லை. புசிப்பதற்கு புல் இல்லை. வெளியின் பெண்மான் குட்டிபோட்டு, புல் இல்லாததினால், தன் குட்டியை விட்டு ஓடிப்போகிறது. இது பெண்மானின் இயல்பான சுபாவமல்ல. ஆனாலும் யூதா தேசத்தில் மழைத்தாழ்ச்சி உண்டாயிருப்பதினால், பெண்மான் கூட தன் குட்டியை விட்டுவிட்டுப் போய்விடுகிறது.

பெண்மான் பல இடங்களுக்கும் ஓடிச்சென்று புல்லை சம்பாதிக்கும். புல் கிடைத்தால் தானும் புசித்து, தன்னுடைய குட்டிக்கும் கொடுக்க அதனிடத்தில் திரும்பி வரும். புல் கிடைக்கவில்லையென்றால், பெண்மான் தன் குட்டியை விட்டு, நிரந்தரமாய் ஓடிப்போய்விடும். பெண்மானுக்கும் புல் இல்லை. அதன் குட்டிக்கும் புல் இல்லை. எப்படியாவது தன் குட்டிக்கு இரை கொடுக்கவேண்டும் என்னும் பாசத்தில், அது பல இடங்களுக்கும் புல்லைத் தேடி ஓடிப்போகிறது.

புருஷர்கள் தங்கள் குடும்பத்திற்கு தலைவர்களாயிருக்கிறார்கள். உத்தியோகம் புருஷருடைய இலட்சணம். புருஷர்கள் வேலை செய்து, சம்பாதித்து, தங்களுடைய குடும்பத்திலுள்ளவர்களுக்கு போஜனம் கொடுக்கவேண்டும். அவர்களை பராமரிக்க வேண்டும். ஒரு சில புருஷர்கள் ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருந்து பொழுதைப் போக்குவார்கள். வீட்டின் தேவைக்கு ஒன்றும் தரமாட்டார்கள். சோம்பேறியான புருஷர்கள், பெண்மானின் குணத்தைப் பார்த்து புத்தி தெளியவேண்டும். தங்கள் சோம்பல்தனத்தை நினைத்து வெட்கப்படவேண்டும்.

தேசத்தில் மழை இல்லாததினால் பெண்மானைப்போல காட்டுக்கழுதைகளும் கஷ்டப்படுகிறது. காட்டுக்கழுதைகள் மேடுகளில் நின்று, வலுசர்ப்பங்களைப்போல் காற்றை உட்கொள்கிறது. மழை பெய்யாததினால் தரை வெடித்திருக்கிறது. பூமியின்மீது சூரியவெப்பம் பட்டு, தரை அதிக உஷ்ணமாயிருக்கிறது. தரையை குளிரச் செய்வதற்கு மழை பெய்யவில்லை. ஆகையினால் காட்டுக்கழுதைகள் தரையில் நிற்காமல், உயரமான மேடுகளுக்குப் போய் அங்கே நிற்கிறது. மேடுகளின்மீது குளிர்ந்த காற்று வீசும். காட்டுக்கழுதைக்கு உணவு இல்லை. நல்ல காற்றையாவது சுவாசிக்கலாம் என்று நினைத்து, அவை மேடுகளில் நின்று, காற்றை உட்கொள்கிறது.

வலுசர்ப்பங்கள் காற்றை அதிகமாய் உட்கொள்ளும். சர்ப்பம் சீறும். மூச்சுவிடுவதற்கு கஷ்டமாகயிருந்தாலும், வலுசர்ப்பங்கள் காற்றை உட்கொள்ளும். காட்டுக்கழுதைகளும் இப்போது வலுசர்ப்பங்களைப்போல காற்றை உட்கொள்கிறது. கழுதைகளுக்கு போஜனமான புல் தேசத்தில் எங்கும் கிடைக்கவில்லை. காற்றே அதற்கு உணவாயிற்று. புல் இல்லாததினால் காட்டுக் கழுதைகளின் கண்கள் பூத்துப்போகிறது. அவற்றிற்கு பெலனில்லை. ஜீவாதாரமான புல் கிடைக்கவில்லை. தேசத்தில் மழைத்தாழ்ச்சி ஏற்படும்போது, பூமியிலுள்ள எல்லா ஜீவராசிகளும் வேதனைகளை அனுபவிக்கிறது. மனுஷருடைய பாவத்தினால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. மனுஷர் வேதனைப்படும்போது, அவர்களோடு சேர்ந்து மிருகங்களும் வேதனைப்படுகிறது.

இஸ்ரவேலின் நம்பிக்கை
எரே 14:7-9

எரே 14:7. கர்த்தாவே, எங்கள் அக்கிரமங்கள் எங்களுக்கு விரோதமாய்ச் சாட்சியிட்டாலும், உம்முடைய நாமத்தினிமித்தம் கிருபைசெய்யும்; எங்கள் சீர்கேடுகள் மிகுதியாயிருக்கிறது; உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோம்.

எரே 14:8. இஸ்ரவேலின் நம்பிக்கையே, ஆபத்துக்காலத்தில் அதின் இரட்சகரே, நீர் தேசத்தில் பரதேசியைப் போலவும், இராத்தங்க இறங்குகிற வழிப்போக்கனைப்போலவும் இருப்பானேன்?

எரே 14:9. நீர் விடாய்த்துப்போன புருஷனைப்போலவும், இரட்சிக்க மாட்டாத பராக்கிரமசாலியைப் போலவும் இருப்பானேன்? கர்த்தாவே, நீர் எங்கள் நடுவிலிருக்கிறவராமே; உம்முடைய நாமம் எங்களுக்குத் தரிக்கப்பட்டுமிருக்கிறதே; எங்களை விட்டுப் போகாதிரும்.

யூதாவின் ஜனங்கள் மிகுந்த வேதனைகளை அனுபவித்தாலும், அவர்கள் இன்னும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண முன்வரவில்லை. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. ஆனால் அவர்களோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. கர்த்தர் தங்கள்மீது கிருபையாய் இரங்கவேண்டுமென்று அவரிடத்தில் ஜெபம்பண்ணவுமில்லை. யூதாவின் மனுஷருக்காகவும் எருசலேமின் குடிகளுக்காகவும் எரேமியா தீர்க்கதரிசி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

எரேமியா தங்களுக்காக ஜெபம்பண்ணுவதைப் பார்த்து, யூதாவின் மனுஷரும் தங்களுக்காக ஜெபம்பண்ண முன்வரவேண்டும். எரேமியா தன்னுடைய ஜெபத்தில் கிருபை நிரம்பிய வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். யூதாவின் மனுஷர் அனுபவிக்கும் வேதனைகளுக்காக எரேமியா துக்கித்துப் புலம்புகிறார். எருசலேமின் குடிகள்மீது வந்திருக்கும் வேதனைக்காக கர்த்தரிடத்தில் வழக்காடுகிறார். யூதாவின் மனுஷர் எரேமியாவின் ஜெபத்தைப் பார்த்து, அவர்களும் ஜெபம்பண்ணக் கற்றுக்கொள்ளவேண்டும்.

எரேமியா தன்னுடைய ஜெபத்தில் மூன்று காரியங்களை முன்வைக்கிறார். அவையாவன : 1. பாவங்களை மனத்தாழ்மையாக அறிக்கைபண்ணுகிறார். 2. தேவனுடைய கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும் கர்த்தரிடத்தில் கெஞ்சி மன்றாடுகிறார். 3. கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கிருபையாய் இரங்கவேண்டுமென்றும், அவர்கள் கர்த்தரிடத்தில் எதிர்பார்க்கும் காரியம் அவர்களுக்கு கொடுக்கப்படவேண்டும் என்றும் விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தர் நீதியுள்ளவர். அவருடைய கிரியைகளெல்லாமே நீதியாயும், நியாயமாயும் இருக்கும். கர்த்தர் ஒருவருக்கும் ஒருபோதும் அநியாயம் செய்கிறவரல்ல. அவருடைய நியாயத்தீர்ப்புகளும் நீதியாயும் நியாயமாயும் இருக்கும். நாம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய கோபம் நமக்கு விரோதமாக வரும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் விளைவாக, நாம் வேதனைகளை அனுபவிக்கிறோம். அப்போது, கர்த்தர் நமக்கு அநீதி செய்கிறார் என்று அவரோடு வழக்காடக்கூடாது. கர்த்தர் நம்மீது அன்பாகயில்லை என்றும் அவர்மீது குற்றம் சொல்லக்கூடாது. பாவத்தின் சம்பளம் மரணம். நம்முடைய பாவத்தினிமித்தமாய் கர்த்தர் நம்மை நீதியாய்த் தண்டிக்கிறார்.

எரேமியா, கர்த்தரிடத்தில் யூதாவின் மனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும் ஜெபம்பண்ணும்போது, யூதா மனுஷரின் அக்கிரமங்களை அங்கீகரிக்கிறார். "எங்கள் சீர்கேடுகள் மிகுதியாயிருக்கிறது" என்றும், "உமக்கு விரோதமாய் பாவம் செய்தோம்" (எரே 14:7) என்றும் எரேமியா கர்த்தரிடத்தில் பணிவோடு சொல்லுகிறார். கர்த்தர் தாமே, தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், தங்களுடைய சீர்கேடுகளையும், பாவங்களையும், தமது கிருபையினால் மன்னித்தருள வேண்டுமென்று ஜெபம்பண்ணுகிறார்.

நமக்கு கர்த்தருடைய கிருபை தேவை. அவர் நமக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய நாமத்தினிமித்தமாய் நமக்கு கிருபை செய்தால்தான், நம்மால் சமாதானமாயும், சந்தோஷமாயும் ஜீவிக்க முடியும். எரேமியா தீர்க்கதரிசி இந்த சத்தியத்தை உணர்ந்தவராக, "கர்த்தாவே, எங்கள் அக்கிரமங்கள் எங்களுக்கு விரோதமாய்ச் சாட்சியிட்டாலும், உம்முடைய நாமத்தினிமித்தம் கிருபைசெய்யும்" (எரே 14:7) என்று பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்.

எரேமியா மனந்திரும்பிய பாவிகளைப்போலவும், பிறரிடத்தில் உதவி கேட்கிறவர்களைப்போலவும், யூதா மனுஷருடைய விண்ணப்பங்களை கர்த்தருக்கு தெரியப்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய நாமத்தினிமித்தம் தங்களுக்கு கிருபை செய்யவேண்டுமென்றும், கர்த்தர் தமக்கு பிரியமான பிரகாரம் தங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்றும் எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

"இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி: பாவஞ்செய்தோம், தேவரீர் உம்முடைய பார்வைக்கு நலமானதை எங்களுக்குச் செய்யும்; இன்றைக்குமாத்திரம் எங்களை இரட்சித்தருளும் என்று சொல்லி, அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்; அப்பொழுது அவர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார்" (நியா 10:15,16).

கர்த்தரிடத்தில் வழக்காடுவதற்கு நம்மிடத்தில் எந்த நீதியுமில்லை. கர்த்தரே நீதியும் நியாயமுமுள்ளவர். கர்த்தருடைய நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நம்மிடத்தில் எந்தத் தகுதியுமில்லை. கர்த்தர் தம்முடைய இரக்கத்தினாலும், தம்முடைய நாமத்தினிமித்தமாகவும், நமக்கு கிருபை செய்வார். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமும், விருப்பத்தின் பிரகாரமும் தம்முடைய கிரியைகளை நடப்பிப்பார்.

எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது "எங்களை விட்டுப்போகாதிரும்" (எரே 14:9) என்று சொல்லி ஜெபம்பண்ணுகிறார். தேவனுடைய கிருபையும், அவருடைய பரிசுத்த பிரசன்னமும் தங்களைவிட்டு விலகிப்போய்விடக்கூடாது என்று எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறார். யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரும் தம்முடைய நீதியினால் அவர்களைவிட்டு விலகிப்போய்விடுகிறார். ஆனால் எரேமியாவோ, யூதாவின் மனுஷருக்காக கர்த்தரிடத்தில் பரிந்துபேசுகிறார். "எங்களை விட்டுப்போகாதிரும்" என்று எரேமியா கர்த்தரிடத்தில் பணிவோடு சொல்லுகிறார்.

இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதா வம்சத்தாரும் கர்த்தருக்குப் பிரியமானவர்கள். கர்த்தர் அவர்களை தம்முடைய சுதந்தரமாக தெரிந்தெடுத்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். யூதாவின் மனுஷரோ கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்திருக்கிறது. யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் மிகுந்த வேதனைகளையும், துன்பங்களையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருந்தாலும், கர்த்தர் தங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து எதிர்பார்க்கிற காரியங்களை, எரேமியா தன்னுடைய ஜெபத்தில் பணிவோடு சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே, இஸ்ரவேலின் நம்பிக்கையாயிருக்கிறார். அவரே ஆபத்துக்காலத்தில் அதன் இரட்சராகயிருக்கிறார். கர்த்தருடைய நாமம் அவர்களுக்கு தரிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் அவர்கள் நடுவிலிருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு சொந்தமானவர்கள். ஆகையினால் கர்த்தர் தங்களைவிட்டு போகாதிருக்க வேண்டும் என்றும், கர்த்தர் தாமே தங்களுடைய ஆபத்துக்களிலிருந்து தங்களை பாதுகாக்கவேண்டும் என்றும் யூதாவின் மனுஷர் எதிர்பார்க்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய சமுகத்தில் அவருடைய நியாயத்தீர்ப்புக்குப் பதிலாக, அவருடைய கிருபையையும் இரக்கத்தையும் எதிர்பார்க்கிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை நம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. அவருடைய கிருபையும் இரக்கமுமே நமக்கு மெய்யான சந்தோஷத்தைத் தரும். கர்த்தருடைய பிள்ளைகள் அவருக்குள் நம்பிக்கையாயிருக்க வேண்டும். எரேமியா தீர்க்கதரிசி கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது, "இஸ்ரவேலின் நம்பிக்கையே" என்றும், "ஆபத்துக்காலத்தில் அதின் இரட்சகரே" என்றும் சொல்லுகிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேலின் பரிசுத்தராகவும், இஸ்ரவேலின் கன்மலையாகவும் இருக்கிறார். இஸ்ரவேலுக்கு அவரே நம்பிக்கையாயிருக்கிறார். கர்த்தர் தம்மைத் தாமே இஸ்ரவேலின் நம்பிக்கையாக ஏற்படுத்தியிருக்கிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "நீர் எங்கள் நடுவிலிருக்கிறவராமே" என்று சொல்லுகிறார்கள். தேவனுடைய தெய்வீக பிரசன்னத்தின் விசேஷித்த அடையாளங்கள் அவர்கள் மத்தியிலிருக்கிறது. தேவனுடைய ஆலயம், அவருடைய உடன்படிக்கை பெட்டி, அவருடைய பிரமாணங்கள் ஆகியவையெல்லாமே யூதா மனுஷரின் நடுவிலிருக்கிறது. இவையெல்லாம் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம்.

யூதாவின் மனுஷருக்கு கர்த்தருடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தேவனுடைய இஸ்ரவேல் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆகையினால் கர்த்தர் தங்களைவிட்டு விலகிப்போய்விடமாட்டார் என்று நம்புகிறார்கள். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்குரியவர்கள். ஆகையினால் கர்த்தர் தங்களை இரட்சிக்கவேண்டுமென்று யூதா ஜனத்தார் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் கர்த்தரோ யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் உடனே இரட்சித்துவிடவில்லை. அவர்களை இரட்சிப்பதற்காக கர்த்தர் அவர்களிடத்தில் வரவுமில்லை. இதை நினைக்கும்போது யூதா மனுஷரின் இருதயம் மிகவும் வேதனைப்படுகிறது.

யூதாவின் மனுஷர் மிகுந்த வேதனைகளையும், துன்பங்களையும், கஷ்டங்களையும் அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய இரட்சராகிய கர்த்தரும், அவர்களை இரட்சிக்க வரவில்லை. இதனால் அவர்கள் மிகுந்த வேதனையோடு கர்த்தரிடத்தில் அழுது புலம்புகிறார்கள். "நீர் தேசத்தில் பரதேசியைப் போலவும், இராத்தங்க இறங்குகிற வழிப்போக்கனைப்போலவும் இருப்பானேன்?" என்றும், "நீர் விடாய்த்துப்போன புருஷனைப் போலவும், இரட்சிக்கமாட்டாத பராக்கிரமசாலியைப் போலவும் இருப்பானேன்?" (எரே 14:8,9) என்றும் கர்த்தரிடத்தில் வேதனையோடு சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்தார்கள். கர்த்தர் அவர்களை தம்முடைய பலத்த புயத்தினால் விடுவித்து, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் அவருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள். கர்த்தரோ தம்முடைய கோபத்தினால் அவர்களை அழித்துப்போட சித்தமாயிருந்தார். அப்போது மோசே, இஸ்ரவேல் ஜனங்களுக்காக, கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார்.

"ஒரே மனிதனைக் கொல்லுகிறதுபோல இந்த ஜனங்களையெல்லாம் நீர் கொல்வீரானால், அப்பொழுது உம்முடைய கீர்த்தியைக் கேட்டிருக்கும் புறஜாதியார்: கர்த்தர் அந்த ஜனங்களுக்குக் கொடுப்போம் என்று ஆணையிட்டிருந்த தேசத்திலே அவர்களைக் கொண்டுபோய் விடக்கூடாதே போனபடியினால், அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோட்டார் என்பார்களே" (எண் 14:15,16) என்று மோசே கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

இதே போன்ற ஜெபவார்த்தையை, எரேமியாவும், தன்னுடைய ஜெபத்தில் பயன்படுத்துகிறார். அவர் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "இஸ்ரவேலின் நம்பிக்கையே" என்றும், "ஆபத்துக்காலத்தில் அதின் இரட்சகரே" என்றும் சொல்லுகிறார். ஆனால் கர்த்தரோ, யூதா மனுஷரை பாதுகாக்காமல், அவர்களுக்கு நன்மை செய்யாமல், "தேசத்தில் ஒரு பரதேசியைப்போல இருக்கிறார்" என்றும், "இராத்தங்க இறங்குகிற வழிப்போக்கனைப் போல இருக்கிறார்" என்றும் ஜனங்கள் சொல்லுவார்களே என்று எரேமியா கர்த்தரிடத்தில் மிகுந்த மனவேதனையோடு சொல்லுகிறார்.

எருசலேமில் தேவனுடைய ஆலயம் இருக்கிறது. அது அவருடைய நித்திய வாசஸ்தலம். ஆனால் கர்த்தரோ தம்முடைய வாசஸ்தலத்தில், அதன் உரிமையாளரைப் போல தங்கியிராமல், பரதேசியைப்போலவும், இராத்தங்க இறங்குகிற வழிப்போக்கனைப் போலவும் இருப்பதாக நினைத்து ஜனங்கள் வேதனைப்படுகிறார்கள். கர்த்தருக்கு தம்முடைய தேசத்தின்மீது அக்கறையில்லை என்றும், தமக்கு சுதந்தரமான ஜனங்கள்மீது பிரியமில்லை என்றும் யூதர்கள் நினைக்கிறார்கள்.

கர்த்தருடைய ஜனங்கள் வேதனைகளை அனுபவிக்கும்போது, புறஜாதி ஜனங்கள் அவர்களைப் பார்த்து, "அவர்களுடைய கர்த்தர் அவர்களை ஏன் பாதுகாக்கவில்லை" என்றும், "அவர்களுக்கு ஏன் நன்மை செய்யவில்லை" என்றும் நினைப்பார்கள். யூதருடைய உபத்திரவங்களைப் பார்த்து அந்நிய ஜாதியார் ஆச்சரியப்படுவார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தரைப்பற்றி சொல்லும்போது, "அவர் விடாய்த்துப்போன புருஷன்" போலவும், "இரட்சிக்கமாட்டாத பராக்கிரமசாலி" போலவும் இருப்பதாக சொல்லுகிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தர் மனுஷனல்ல. அவர் கர்த்தாதி கர்த்தர். அவர் சர்வலோகத்தையும் சிருஷ்டித்து, சர்வசிருஷ்டிகளையும் ஆளுகை செய்கிறவர். அவர் சர்வவல்லமையுள்ளவர். அவர் ஒருபோதும் விடாய்த்துப்போவதில்லை. இரட்சிக்கமாட்டாதபடிக்கு அவருடைய கரம் ஒருபோதும் குறுகிப்போவதுமில்லை. யூதாவின் மனுஷரோ கர்த்தரைப்பற்றி நினைக்கும்போது, அவரை மனுஷனோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார்கள்.

தேவன் பரிசுத்தர். அவர் பரிபூரணமானவர். கர்த்தர் நம்முடைய நடுவிலிருக்கும்போது, அவர் ஒரு பரதேசியைப்போலவோ, வழிப்போக்கரைப் போலவோ இருப்பதில்லை. அவர் நம்முடைய கர்த்தராகவே நம் நடுவிலிருக்கிறார். கர்த்தரே உலகஇரட்சகர். அவர் ஒருபோதும் இரட்சிக்கமாட்டாதவரல்ல. நாம் இரட்சிக்கப்படாமலிருக்கிறோமென்றால், நம்முடைய பாவங்களும், நாம் மனந்திரும்பாலிருப்பதும், கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்த் தொடர்ந்து பாவம் செய்வதுமே காரணம். நம்முடைய பாவங்களுக்கு கர்த்தர் காரணமல்ல. நாம் இரட்சிக்கப்படாமலிருப்பதற்கும் கர்த்தர் காரணமல்ல.

கர்த்தர் சொல்லுகிறார்
எரே 14:10-12

எரே 14:10. அவர்கள் தங்கள் கால்களை அடக்கிக்கொள்ளாமல், அலைய விரும்புகிறார்களென்று கர்த்தர் இந்த ஜனத்தைக்குறித்துச் சொல்லுகிறார்; ஆகையால், கர்த்தர் அவர்கள்மேல் பிரியமாயிராமல், இப்பொழுது அவர்கள் அக்கிரமத்தை நினைத்து, அவர்கள் பாவங்களை விசாரிப்பார்.

எரே 14:11. கர்த்தர் என்னை நோக்கி: நீ இந்த ஜனத்துக்கு நன்மையுண்டாக விண்ணப்பம்பண்ணவேண்டாம்.

எரே 14:12. அவர்கள் உபவாசித்தாலும், நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பதில்லை; அவர்கள் தகனபலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தினாலும், நான் அவர்கள்மேல் பிரியமாயிருப்பதில்லை; பட்டயத்தினாலும் பஞ்சத்தினாலும் கொள்ளைநோயினாலும் நான் அவர்களை நிர்மூலமாக்குவேன் என்றார்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தருக்கும் எரேமியா தீர்க்கதரிசிக்கும் நடுவே விவாதம் நடைபெறுவது போலிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து திராட்சத்தோட்டத்து எஜமானையும், தோட்டத்தில் வேலை பார்க்கிற ஒரு வேலைக்காரரையும் பற்றி உவமையாய்ச் சொல்லியிருக்கிறார்.

திராட்சத்தோட்டத்திற்கு நடுவே ஒரு அத்திமரம் கனிகொடுக்காமல் வளர்ந்திருக்கிறது. திராட்சத்தோட்டத்து எஜமான், கனிகொடுக்காத அத்திமரத்தை வெட்டிப்போடலாம் என்று சொல்லுகிறார். வேலைக்காரரோ மரத்திற்கு கொத்தி எருபோடலாம் என்றும், அதை வெட்டிப்போட வேண்டாம் என்றும் அந்த மரத்திற்காக பரிந்து பேசுகிறார். கர்த்தருக்கும் எரேமியாவுக்கும் இடையே நடைபெறும் உரையாடல், இயேசுகிறிஸ்து சொன்ன உவமைக்கு ஒப்பாயிருக்கிறது.

"அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங்காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்" (லூக் 13:6-9).

எரேமியா கர்த்தருடைய சமுகத்தில் யூதாவின் மனுஷருக்காக பரிந்துபேசுகிறார். "எங்களை விட்டுப்போகாதிரும்" என்று கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். ஆனால் கர்த்தரோ எரேமியாவின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருக்கு சாதகமான பிரதியுத்தரம் சொல்லவில்லை. கர்த்தர் யூதா மனுஷரின் பாவங்களையும், அவர்களுடைய முறைகேடுகளையும் அறிந்திருக்கிறார். அவர்கள் தங்கள் கால்களை அடக்கிக்கொள்ளாமல் அலைய விரும்புகிறார்கள்.

ஆகையால் கர்த்தர் அவர்கள்மேல் பிரியமாயில்லை. கர்த்தர் இப்பொழுது அவர்களை அக்கிரமத்தை நினைத்து, அவர்கள் பாவங்களை விசாரிப்பார் (எரே 14:10). கர்த்தர் யூதா ஜனத்தைப்பற்றிச் சொல்லும்போது, அவர்களை "என்னுடைய ஜனம்" என்று உரிமையோடும் பாசத்தோடும் சொல்லவில்லை. அதற்கு பதிலாக, "அவர்கள்" என்றும், "இந்த ஜனம்" என்றும் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தரோடு தாங்கள் பண்ணிக்கொண்ட உடன் படிக்கையை முறித்துப்போடுகிறார்கள். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தையில் உண்மையுள்ளவராயிருக்கிறார். ஆனால் யூதாவின் மனுஷரோ, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அவரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள்.

கர்த்தருடைய நாமம் இஸ்ரவேல் வம்சத்தாருக்கும், யூதா வம்சத்தாருக்கும் தரிக்கப்பட்டிருக்கிறது என்பது மெய்தான். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவருக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறார்கள். கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். இதனால் கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறார்.

நம்முடைய பாவங்களுக்கு நாம் உண்மையாய் மனந்திரும்பினால், கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிப்பார். ஆனால் யூதாவின் மனுஷரோ கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெறுவதற்கு தகுதியில்லாதவர்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு, அவர்களிடத்தில் எந்த நன்மையுமில்லை. அவர்களுடைய பொல்லாப்பு அதிகமாயிருக்கிறது. அவர்கள் கர்த்தரைவிட்டு அநேகந்தரம் விலகிப்போயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வந்தால், கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆனால் இந்த ஜனமோ தங்கள் கால்களை அடக்கிக்கொள்ளாமல் அலைய விரும்புகிறார்கள். கர்த்தரிடத்தில் திரும்பி வருவதற்கு மனதில்லாமலிருக்கிறார்கள். கர்த்தருடைய சமுகத்தில் திரும்பி வந்து அமைதலாயிருப்பதற்குப் பதிலாக அங்கும் இங்குமாக அலைவதையே விரும்புகிறார்கள். கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போவது, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமலிருப்பது ஆகியவையே இவர்களுக்கு பிரியமாயிருக்கிறது. தங்கள் பாவத்தைக் குறித்து அவர்கள் வருத்தப்படவோ, வெட்கப்படவோ இல்லை.

யூதாவின் மனுஷர் அங்கும் இங்கும் அலையவேண்டும் என்னும் அவசியமில்லை. அவர்களுக்குத் தேவையான எல்லா ஆசீர்வாதங்களும், எல்லா கிருபைகளும் கர்த்தரிடத்திலிருக்கிறது. ஆனால் அவர்களோ கர்த்தருடைய கிருபைகளை அசட்டை செய்துவிட்டு, கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய், அலைந்து திரிகிறார்கள்.

கர்த்தர் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் எச்சரித்தார். ஆனால் அவர்களோ எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. அலைந்து திரிகிற தங்கள் கால்களை அவர்கள் அடக்கவில்லை. யூதா மனுஷருடைய பொல்லாத கிரியைகள் கர்த்தருடைய பார்வைக்கு அருவருப்பாயிருக்கிறது. ஆகையினால் கர்த்தர் அவர்கள்மேல் பிரியமில்லாமல், அவர்களுடைய அக்கிரமங்களை நினைக்கிறார். அவர்களுடைய பாவங்களை விசாரிக்கிறார்.

யூதாதேசத்தின்மேல் மழைபெய்யாமல் போயிற்று. மழைத்தாழ்ச்சி உண்டாயிற்று. கர்த்தர் யூதாதேசத்திற்கு மழையைக் கொடுக்க மறுத்துவிடுகிறார். கர்த்தர் அவர்களுடைய அக்கிரமங்களை நினைப்பதினாலும், அவர்களுடைய பாவங்களை விசாரிப்பதினாலும், அவர்களுக்கு மழைத்தாழ்ச்சி உண்டாயிற்று. அவர்களுடைய செழிப்பான தேசம் வனாந்தர தேசம் போலாயிற்று. விருட்சங்கள் கனிகொடாமல் போயிற்று. தேசத்தின்மேல் மழையில்லாததினால் தரை வெடித்திருக்கிறது. பயிர் நிலத்தில் தானியம் விளையவில்லை. ஜனங்களுக்கு அப்பமும் தண்ணீரும் கிடைக்கவில்லை.

கர்த்தருக்கு பலிசெலுத்தினால், கர்த்தர் தங்களுக்கு நன்மை செய்வார் என்று யூதாவின் மனுஷர் நம்புகிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களுடைய விண்ணப்பத்தை கேட்கப்போவதில்லை என்று தீர்மானமாய்ச் சொல்லுகிறார். "அவர்கள் உபவாசித்தாலும், நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பதில்லை; அவர்கள் தகனபலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தினாலும், நான் அவர்கள்மேல் பிரியமாயிருப்பதில்லை; பட்டயத்தினாலும் பஞ்சத்தினாலும் கொள்ளைநோயினாலும் நான் அவர்களை நிர்மூலமாக்குவேன்" (எரே 14:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் யூதா மனுஷர்மேல் பிரியமாயில்லை. அவர்களைப்பற்றி நினைக்கும் போது கர்த்தருக்கு சந்தோஷமுண்டாகவில்லை. அவர்களோ உபவாசம் பண்ணுகிறார்கள். தங்களுடைய பாவங்களுக்கு தாங்கள் மனந்திரும்பியிருப்பதையும், தங்களுடைய இருதயம் புதுப்பிக்கப்பட்டிருப்பதையும் வெளிப்படுத்தும் வண்ணமாக அவர்கள் உபவாசமிருக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு தகனபலிகளையும் காணிக்கைகளையும் செலுத்துகிறார்கள். மத்தியஸ்தர்மேல் தாங்கள் வைத்திருக்கும் விசுவாசத்திற்கு அடையாளமாக அவர்கள் காணிக்கைகளை செலுத்துகிறார்கள். கர்த்தருடைய பிரமாணத்தில் சொன்ன பிரகாரம் அவர்கள் உபவாசம்பண்ணுகிறார்கள். காணிக்கைகளை செலுத்துகிறார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்கள்மேல் பிரியமாயிருப்பதில்லை என்று சொல்லிவிடுகிறார். கர்த்தர் அவர்களுடைய காணிக்கைகளை அங்கீகரிக்க மறுத்துவிடுகிறார். அவர்கள் உபவாசம்பண்ணினாலும் அவர்களுடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்க மறுத்துவிடுகிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு காணிக்கைகளை செலுத்தினாலும், அவர்களிடத்தில் மனத்தாழ்மையில்லை. அவர்களுடைய இருதயத்தில் பெருமையும், மேட்டிமையான சிந்தையும் நிரம்பியிருக்கிறது. கர்த்தருக்குப் பயப்படும் பயம் அவர்களிடத்தில் இல்லை. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு உண்மையாய் மனந்திரும்பவில்லை. அவர்கள் இருதயம் கர்த்தருக்குள் புதுப்பிக்கப்படவுமில்லை. அவர்கள் இன்னும் தங்கள் கால்களை அடக்கிக்கொள்ளாமல் அலையவே விரும்புகிறார்கள்.

ஆகையினால், "அவர்கள் உபவாசித்தாலும், நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பதில்லை; அவர்கள் தகனபலிகளையும் காணிக்கைகளையும் செலுத்தினாலும், நான் அவர்கள்மேல் பிரியமாயிருப்பதில்லை" (எரே 14:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் யூதாவின் மனுஷரையும், தம்முடைய ஜனமாக அங்கீகரிக்கவில்லை, அவர்களுடைய கிரியைகளையும் பக்திவிருத்திக்கேதுவான கிரியைகளாக ஏற்றுக்கொள்ளவில்லை.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய சமுகத்தில் யூதாவின் மனுஷருக்காக ஜெபம்பண்ணுகிறார். ஆனால் யூதா மனுஷரோ எரேமியாவின் பிரசங்கச் செய்தியை செவிகொடுத்து கேட்பதுமில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவுமில்லை. தீர்க்கதரிசியின் மூலமாய் வெளிப்பட்ட கர்த்தருடைய வார்த்தையை அவர்கள் அசட்டைபண்ணிவிடுகிறார்கள். அதன் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள். ஆகையினால் "யூதா மனுஷருக்காக ஜெபிக்கவேண்டாம்" என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லிவிடுகிறார். "நீ இந்த ஜனத்திற்கு நன்மை உண்டாக விண்ணப்பம் பண்ணவேண்டாம்" (எரே 14:11) என்று கர்த்தர் எரேமியாவை நோக்கி சொல்லுகிறார்.

கர்த்தர் பல சமயங்களில் எரேமியாவிடம் இதுபோன்ற வார்த்தையை சொல்லியிருக்கிறார். எரேமியா கர்த்தருடைய ஜனத்திற்காக விண்ணப்பம்பண்ணுவதை, கர்த்தரே பல சந்தர்ப்பங்களில் தடைபண்ணியிருக்கிறார்.

"நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் செய்யவேண்டாம்; அவர்களுக்காக மன்றாடவும் கெஞ்சவும் வேண்டாம், என்னிடத்தில் அவர்களுக்காகப் பரிந்துபேசவும் வேண்டாம், நான் உனக்குச் செவிகொடுப்பதில்லை" (எரே 7:16).

"ஆதலால் நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் பண்ணவேண்டாம், அவர்களுக்காக மன்றாடவும் கெஞ்சவும் வேண்டாம்; அவர்கள் தங்கள் ஆபத்தினிமித்தம் என்னை நோக்கிக் கூப்பிடுங்காலத்திலே நான் அவர்களைக் கேளாதிருப்பேன்று" (எரே 11:14).

எரேமியா யூதா மனுஷர்மீது பிரியமாயிருக்கிறார். அவர்களுக்கு நன்மை உண்டாகவேண்டும் என்று விரும்புகிறார். இதில் தவறு ஒன்றுமில்லை. கர்த்தரும் எரேமியாவின் நல்ல விருப்பங்களை தடைபண்ணவில்லை. ஆனால் யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அது வரையிலும் அவர்களுக்கு கர்த்தருடைய சமுகத்திலிருந்து ஒரு நன்மையும் உண்டாகாது. எரேமியா அவர்களுக்காக ஜெபம்பண்ணினாலும், அவர் கர்த்தரிடத்திலிருந்து யூதாவின் மனுஷருக்கு ஒரு நன்மையும் எதிர்பார்க்கக்கூடாது.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை கேட்க மறுக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையைக் கேட்காதபடிக்கு தங்களுடைய செவிகளை விலக்கிக்கொள்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்கள்மேல் பிரியமாயிருக்க மாட்டார். அவர்களை "பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், கொள்ளைநோயினாலும் நிர்மூலமாக்குவேன்" (எரே 14:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்களே எரே 14:13

எரே 14:13. அப்பொழுது நான்: ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நீங்கள் பட்டயத்தைக் காண்பதில்லை, உங்களுக்குப் பஞ்சமும் வருவதில்லை; உறுதியான சமாதானத்தையே இவ்விடத்தில் உங்களுக்குத் தருவோமென்றார் என்று தீர்க்கதரிசிகள் அவர்களுக்குச் சொல்லுகிறார்களே என்றேன்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும், கர்த்தருடைய சமுகத்தில் இன்னும் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்களுக்கு அவர்கள் காரணமல்ல என்றும், கள்ளத்தீர்க்கதரிசிகளின் பொய்யான உபதேசங்களே காரணம் என்றும் எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

நல்ல தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினால் பேசுவதுபோல, கள்ளத்தீர்க்கதரிசிகளும் கர்த்தருடைய நாமத்தினால் பேசுகிறார்கள். தங்களுக்கு பரலோகத்திலிருந்து கர்த்தருடைய வார்த்தை உண்டாயிருக்கிறது என்று சொல்லி மாய்மாலம் பண்ணுகிறார்கள். மனுஷர் மத்தியிலே சத்தியத்தைப் பேசாமல் பொய்யைப் பேசுகிறார்கள். "நீங்கள் பட்டயத்தைக் காண்பதில்லை, உங்களுக்குப் பஞ்சமும் வருவதில்லை; உறுதியான சமாதானத்தையே இவ்விடத்தில் உங்களுக்குத் தருவோமென்றார்" (எரே 14:13) என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினால் சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கு சமாதானமில்லாதிருந்தும், கள்ளத் தீர்க்கதரிசிகள் அவர்களுக்கு சமாதானத்தை வாக்குப்பண்ணுகிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி இதை கர்த்தரிடத்தில் மிகுந்த மனவேதனையோடு சொல்லுகிறார். "ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ" என்று புலம்பலின் வார்த்தைகளைப் பேசுகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளும், கர்த்தருடைய நாமத்தை தங்கள் இஷ்டப்படி பயன்படுத்துகிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கு கர்த்தர் சமாதானத்தைக் கட்டளையிடுவார் என்றும், கர்த்தரிடத்திலிருந்து அவர்களுக்கு வாதைகளும் வேதனைகளும் வராது என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினால் சொல்லுகிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசியோ, கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு நேர்விரோதமாகப் பேசுகிறார். கர்த்தர் அவர்களுக்கு சமாதானத்தைக் கொடுக்கமாட்டார் என்றும், அவர்களுக்கு வாதைகளும் வேதனைகளும் வரும் என்றும் எரேமியா சொல்லுகிறார். எரேமியாவும் கர்த்தருடைய நாமத்தினால் பேசுகிறார். ஜனங்களோ இவ்விரண்டு விதமான செய்திகளைக் கேட்டு குழப்பத்திலிருக்கிறார்கள்

கள்ளத்தீர்க்கதரிசிகளின் எண்ணிக்கை திரளாயிருக்கிறது. எரேமியாவோ ஒருவராய் அவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார். கள்ளத்தீர்க்கதரிசிகள் அதிகாரத்திலிருக்கிறார்கள். அவர்களுக்கு பிரபுக்களின் ஆதரவு இருக்கிறது. அதனால் ஜனங்கள் மத்தியில் அவர்களால் பொய்யை எளிதாக விதைக்க முடிகிறது. யூதாவின் மனுஷரும் அவர்களுடைய பொய்யான வார்த்தைகளை கேட்டு, அது உண்மையென்று நம்பி, கெட்டுப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய தலைவர்கள் அவர்களை தவறான பாதையில் வழிநடத்துகிறார்கள்.

கர்த்தர் யூதா மனுஷருடைய பாவங்களை கிருபையாக மன்னித்து, அவர்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். எரேமியா மூலமாய் அவர்களுக்கு தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தைகள் சொல்லப்பட்டிருந்தாலும், கள்ளத்தீர்க்கதரிசிகள் மூலமாய் பொய்யான வார்த்தைகளும் அவர்கள் மத்தியில் சொல்லப்பட்டிருக்கிறது. இவையெல்லாவற்றையும் கேட்டு யூதாவின் மனுஷர் குழம்பிப்போயிருக்கிறார்கள்.

அவர்கள் பாவம் செய்தாலும், அந்தப் பாவங்கள் துணிகரமாய் செய்யப்பட்ட பாவங்களல்ல. இவை அவர்களுடைய அறியாமையினால் செய்யப்பட்ட தப்பிதங்கள். கர்த்தர் தாமே அவர்களுடைய தப்பிதங்களை மன்னித்து, அவர்களுக்கு கிருபையும், இரக்கமும், நன்மையும் காண்பிக்கவேண்டுமென்று எரேமியா யூதாவின் மனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும் பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்.

தீர்க்கதரிசிகளின் பொய்
எரே 14:14-16

எரே 14:14. அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக்கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அவர்களோடே பேசினதுமில்லை; அவர்கள் கள்ளத் தரிசனத்தையும், கள்ள சகுனத்தையும், இல்லாத விசேஷத்தையும், தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே, உங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள்.

எரே 14:15. ஆதலால், நான் அனுப்பாதிருந்தும், என் நாமத்தைக் கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி, இந்தத் தேசத்திலே பட்டயமும் பஞ்சமும் வருவதில்லையென்கிற தீர்க்கதரிசிகளைக்குறித்து: இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சாவார்கள்.

எரே 14:16. அவர்களிடத்தில் தீர்க்கதரிசனம் கேட்கும் ஜனங்களும், எருசலேமின் வீதிகளிலே பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்து, அவர்களும் அவர்கள் மனைவிகளும், அவர்கள் குமாரரும், அவர்கள் குமாரத்திகளும் அடக்கம் பண்ணுவாரில்லாமல் கிடப்பார்கள்; அவர்களுடைய பொல்லாப்பை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எரேமியாவின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. கள்ளத்தீர்க்கதரிசிகள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள். கர்த்தர் குருட்டுத்தலைவர்களையும் தண்டிக்கிறார். அவர்களை கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுகிற குருடர்களையும் தண்டிக்கிறார். அவர்கள் எல்லோருமே குழியில் விழுவார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு பொய்யாத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். கர்த்தர் அவர்களைப்பற்றிச் சொல்லும்போது, "நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அவர்களோடே பேசினதுமில்லை; அவர்கள் கள்ளத் தரிசனத்தையும், கள்ள சகுனத்தையும், இல்லாத விசேஷத்தையும், தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே, உங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள்" (எரே 14:14) என்று சொல்லுகிறார்.

தீர்க்கதரிசனம் சொல்லுவதற்கு, கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய உத்தரவைப் பெற்றுக்கொள்ளவில்லை. கர்த்தர் அவர்களை தீர்க்கதரிசன ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணவுமில்லை. அவர்கள் தங்களுடைய சுயமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். தங்களுடைய சொந்த வார்த்தைகளை கர்த்தருடைய வார்த்தைகள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தங்கள் இருதயத்தின் கபடத்தை ஜனங்களுக்கு தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள். இதனால் அவர்களுக்கு அழிவு வரும்.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகள்மீது தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். "ஆதலால், நான் அனுப்பாதிருந்தும், என் நாமத்தைக் கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி, இந்தத் தேசத்திலே பட்டயமும் பஞ்சமும் வருவதில்லையென்கிற தீர்க்கதரிசிகளைக்குறித்து: இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சாவார்கள்" (எரே 14:15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேசத்தில் சமாதானம் இல்லாதிருந்தும், சமாதானம் இருக்குமென்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய ஜீவியத்தில் சமாதானம் இருக்காது. தேசத்தில் பட்டயமும் பஞ்சமும் வருவதில்லை என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். ஆகையினால் அவர்கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். பொய்யை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னவர்கள்மீது கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு வருகிறது. அவர்கள் தங்களுடைய வாயின் வார்த்தைகளால் அழிந்துபோகிறார்கள். தங்கள்மீது தாங்களே தீமைகளை வரவழைத்துக்கொள்கிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசனம் சொன்னவர்களுக்கு கர்த்தருடைய தண்டனை வருவதுபோல, அவர்களிடத்தில் தீர்க்கதரிசனம் கேட்கும் ஜனங்களுக்கும் கர்த்தருடைய தண்டனை வரும். "அவர்களிடத்தில் தீர்க்கதரிசனம் கேட்கும் ஜனங்களும், எருசலேமின் வீதிகளிலே பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்து, அவர்களும் அவர்கள் மனைவிகளும், அவர்கள் குமாரரும், அவர்கள் குமாரத்திகளும் அடக்கம் பண்ணுவாரில்லாமல் கிடப்பார்கள்" (எரே 14:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவர்களுடைய சரீரங்களை அடக்கம்பண்ணுவதற்குகூட ஆட்கள் இருக்கமாட்டார்கள். செத்துப்போனவர்களின் எண்ணிக்கை திரளாயிருக்கும். கர்த்தர் அவர்களுடைய பொல்லாப்பை அவர்கள்மேல் வரப்பண்ணுகிறார். அவர்களுடைய பாவங்களுக்கும், துன்மார்க்கங்களுக்கும், பொல்லாப்புகளுக்கும் கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய நீதியான தண்டனையைக் கொடுக்கிறார். கள்ளத்தீர்க்கதரிசனத்தை கேட்கும் ஜனங்கள், அவர்களுடைய குடும்பத்தோடு அழிந்துபோவார்கள்.

என் கண்களிலிருந்து கண்ணீர்
எரே 14:17,18

எரே 14:17. என் கண்களிலிருந்து இரவும் பகலும் ஓயாமல் கண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும்; என் ஜனமென்கிற குமாரத்தியாகிய கன்னிகை மகா வேதனையுள்ள அடியினாலும் கொடிய காயத்தினாலும் சேதப்பட்டிருக்கிறாள்.

எரே 14:18. நான் வெளியே போனால், இதோ, பட்டயத்தால் கொல்லப்பட்டவர்கள்; நகரத்தில் வந்தால் இதோ, பஞ்சத்தால் வருந்துகிறவர்கள்; தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் ஒன்றும் அறியாமல் தேசத்தில் அலைகிறார்கள் என்னும் இந்த வார்த்தையை அவர்களுக்குச் சொல் என்றார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் மிகுந்த வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய பாடுகளை பார்த்து எரேமியாவும் வேதனைப்படுகிறார். அவர்களுக்காக துக்கித்துப் புலம்புகிறார். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். எரேமியாவின் புலம்பலும், அவருடைய ஜெபமும் தெய்வீக வழிநடத்துதலின்படி நடைபெறுகிறது. கர்த்தரே எரேமியாவுக்கு புலம்பலின் வார்த்தைகளைக் கொடுக்கிறார். "இந்த வார்த்தையை அவர்களுக்குச் சொல்" (எரே 14:18) என்று கர்த்தர் எரேமியாவுக்குச் சொல்லுகிறார்.

எரேமியாவின் வார்த்தைகள் புலம்பலின் வார்த்தைகளாகவும், யூதா மனுஷருக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசும் வார்த்தைகளாகவும் இருக்கிறது. கர்த்தரோ எரேமியாவிடம், "நீ இந்த ஜனத்திற்கு நன்மை உண்டாக விண்ணப்பம்பண்ண வேண்டாம்" (எரே 14:11) என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். கர்த்தர் தன்னை தடைபண்ணியிருந்தும், எரேமியாவால் ஜெபிக்காமல் இருக்க முடியவில்லை. அவரால் யூதாவின் மனுஷருக்காக பரிந்து பேசாமல் அமைதியாயிருக்க முடியவில்லை.

யூதாதேசமும் எருசலேம் நகரமும் அழிந்துகொண்டிருக்கிறது. அதன் அழிவுகளைப் பார்த்து எரேமியா அழுது புலம்புகிறார். எரேமியா இந்த வார்த்தைகளை தனக்குத்தானே சொல்லிக்கொள்கிறார். அதே வேளையில் அவர் இந்த வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கும் சொல்லுகிறார்.

"என் கண்களிலிருந்து இரவும் பகலும் ஓயாமல் கண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும்" என்று எரேமியா சொல்லுகிறார். யூதா தேசத்தின்மீது வரப்போகிற பட்டயத்தை எரேமியா தீர்க்கதரிசனமாய்க் காண்கிறார். தேசத்தின்மீது இன்னும் ஒரு பஞ்சம் வரப்போவதையும் எரேமியா தன்னுடைய தரிசனத்தில் பார்க்கிறார். யூதாவின் பட்டணங்களெல்லாம் அந்நிய தேசத்தாரால் முற்றிக்கைப்போடப்படும். சத்துருக்கள் யூதா தேசத்தின்மீது ஏற்கெனவே வந்துவிட்டதைப் போல எரேமியா வேதனைப்படுகிறார்.

கல்தேயர்கள் யூதா தேசத்திற்கு விரோதமாக வரப்போகிறார்கள். அவர்கள் எருசலேமையும், யூதாவின் மற்ற பட்டணங்களையும் முற்றிக்கை போடப்போகிறார்கள். கல்தேயர்கள் யூதா தேசத்தை நாசம்பண்ணுவார்கள். அவர்கள் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் சங்காரம்பண்ணுவார்கள். "என் ஜனமென்கிற குமாரத்தியாகிய கன்னிகை மகா வேதனையுள்ள அடியினாலும் கொடிய காயத்தினாலும் சேதப்பட்டிருக்கிறாள்" (எரே 14:17) என்று எரேமியா சொல்லுகிறார்.

எருசலேமின் குமாரத்திகளுக்கு இதுவரையிலும் இப்படிப்பட்ட வேதனைகளும், அடிகளும், கொடிய காயங்களும், சேதங்களும் உண்டானதில்லை. அவர்கள் பட்டயத்தால் கொல்லப்படுவார்கள். சத்துருக்களின் பட்டயத்திற்கு ஏராளமானோர் இரையாவார்கள். தேசத்தில் பஞ்சம் மிகுதியாயிருக்கும். ஜனங்களுக்கு போஜனம் இருக்காது. நகரத்திலுள்ள ஜனங்கள் பஞ்சத்தால் வருந்துவார்கள். புசிப்பதற்கு போஜனமில்லாமல் பட்டினியால் செத்துப்போவார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ள ஆசாரியர்களும் யூதா மனுஷர் மத்தியிலே பொய்யான வார்த்தைகளை பேசுகிறார்கள். ஆசாரியர்களிடத்தில் பரிசுத்தமில்லை. அவர்கள் துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசிகளை, கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ளஆசாரியர்களும் துன்பப்படுத்தி, அவர்களை யூதாதேசத்தைவிட்டே துரத்திவிடுகிறார்கள்.

"தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் ஒன்றுமறியாமல் தேசத்தில் அலைகிறார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வாக்கியம் கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசிகளையும், உண்மையான ஆசாரியர்களையும் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். இவர்கள் தேசத்திலிருந்து துரத்தப்பட்டு, தேசாந்திரிகளாக சுற்றி அலைகிறார்கள். தங்களுக்கு எங்கே புகலிடம் கிடைத்தாலும், அங்கே போய் தங்குகிறார்கள். "ஒன்றும் அறியாமல்" என்னும் வாக்கியத்திற்கு, "தங்களுக்குத் தெரியாத அந்நிய தேசத்தில்" என்று பொருள்.

"தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும்" என்னும் வாக்கியம் எசேக்கியேலையும், தானியேலையும் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். இவர்கள் கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர்கள். பாபிலோன் தேசத்தார் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்துக்கொண்டுபோனபோது, எசேக்கியேலும் தானியேலும் அவர்களோடுகூட சிறைப்பட்டுப்போனார்கள்.

யூதா தேசத்தில் நடைபெறுகிற வேதனையான சம்பவங்களைப் பார்த்து, எரேமியாவின் கண்களிலிருந்து இரவும் பகலும் ஓயாமல் கண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. யூதாவின் மனுஷர் எரேமியாவின் கண்ணீரைப் பார்த்து மனந்திரும்பவேண்டும். கர்த்தருடைய எச்சரிப்பின் சத்தத்திற்கு அவர்கள் செவிகொடுக்கவேண்டும். யூதா தேசத்திற்கு மெய்யாகவே அழிவு வரப்போகிறது. யூதாவின் மனுஷர்மீது பட்டயம் வரப்போகிறது. தேசத்தில் பஞ்சம் வரப்போகிறது. யூதா தேசத்தில் சமாதானம் இருக்காது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும், வரப்போகும் அழிவுக்கு தப்பித்துக்கொள்ளவேண்டுமென்றால், அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். தாங்கள் செய்த பாவங்களுக்கு மனம் வருந்தவேண்டும். பாவம் செய்வதை நிறுத்தவேண்டும். அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும். கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும். பரலோகத்திலிருந்து வரும் எச்சரிப்பின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்தால், பூமியிலே நமக்கு சமாதானம் உண்டாகும். நம்முடைய ஜீவியம் ஆசீர்வதிக்கப்படும்.

ஜீதாவை முற்றிலும் வெறுத்தீரோ? எரே 14:19-22

எரே 14:19. யூதாவை முற்றிலும் வெறுத்தீரோ? சீயோன் உம்முடைய ஆத்துமாவுக்கு அரோசிகமாயிற்றோ? நாங்கள் ஆரோக்கியம் அடையக் கூடாதபடி எங்களை ஏன் அடித்தீர்? சமாதானத்துக்குக் காத்திருந்தோம், ஒரு நன்மையுமில்லை; ஆரோக்கிய காலத்துக்குக் காத்திருந்தோம், இதோ, ஆபத்து.

எரே 14:20. கர்த்தாவே, எங்கள் தீமையையும் எங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் நாங்கள் அறிந்திருக்கிறோம்; உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோம்.

எரே 14:21. உம்முடைய நாமத்தினிமித்தம் எங்களை அருவருக்காதிரும், உமது மகிமையின் சிங்காசனத்தைக் கனவீனப்படுத்தாதேயும்; எங்களோடே உமக்கு இருக்கிற உடன்படிக்கை அபத்தமாகாதபடி எங்களை நினைத்தருளும்.

எரே 14:22. புறஜாதிகளுடைய வீணான தேவர்களுக்குள் மழை வருஷிக்கப் பண்ணத்தக்கவர்கள் உண்டோ? அல்லது, வானங்கள் தானாய் மழைகளைக் கொடுக்குமோ? எங்கள் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நீரல்லவோ அதைச் செய்கிறவர்; ஆகையால், உமக்குக் காத்திருக்கிறோம்; தேவரீர் இவைகளையெல்லாம் உண்டுபண்ணினீர்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும் தேவனிடத்தில் பரிந்து பேசுகிறார். அவரோடு கூட, யூதாவின் மனுஷரில் சிலரும் சேர்ந்துகொண்டு, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்கள். அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து எரேமியாவின் ஜெபத்திற்கு "ஆமென்" என்று சொல்லுகிறார்கள்.

யூதா மனுஷருடைய வழக்குகளை எரேமியா கர்த்தருடைய சமுகத்தில் மிகுந்த பணிவோடு சமர்ப்பிக்கிறார். அவர்கள் தேவனிடத்திலிருந்து நன்மையை எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த நன்மை அவர்களுக்கு கிடைக்கவில்லை.

கர்த்தர் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் தம்முடைய ஜனமாகத் தெரிந்துகொண்டார். ஆனால் இப்போதோ கர்த்தர் யூதாவை முற்றிலுமாய் வெறுத்துவிட்டதுபோல தெரிகிறது. சீயோன் கர்த்தருடைய ஆத்துமாவுக்கு பிரியமாயிருந்தது. ஆனால் இப்போதோ அது அவருடைய ஆத்துமாவுக்கு அரோசிகமாயிற்று. சீயோனில் நடைபெறுகிற ஆராதனைகளையும் கர்த்தர் அருவருக்கிறார். யூதாவின் மனுஷர் எருசலேமிலுள்ள தேவாலயத்தில் கர்த்தருக்கு தகனபலிகளையும், காணிக்கைகளையும் செலுத்துகிறார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்கள்மேல் பிரியமாயில்லை.

யூதாவின் மனுஷருக்கு கர்த்தரிடத்திலிருந்து ஒரு நன்மையும் உண்டாகவில்லை. கர்த்தர் மேல் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையெல்லாம் வீணாய்ப்போயிற்று. "நாங்கள் ஆரோக்கியமடையக்கூடாதபடி எங்களை ஏன் அடித்தீர்" (எரே 14:19) என்று யூதாவின் மனுஷர் கர்த்தரிடத்தில் கேட்கிறார்கள். அவர்களுடைய காயங்கள் அதிகமாயிற்று.

"சமாதானத்துக்குக் காத்திருந்தோம், ஒரு நன்மையுமில்லை; ஆரோக்கிய காலத்துக்குக் காத்திருந்தோம், இதோ, ஆபத்து" (எரே 14:19) என்று யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள். கர்த்தர் அவர்களை அடிக்கிறார். அவர்களுடைய காயங்களும் அதிகமாயிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் அவர்களை குணப்படுத்தவில்லை.

புயலுக்குப் பின் அமைதி உண்டாகும். யூதாதேசத்தில் புயல் அடிப்பதுபோல தீங்கு உண்டாயிற்று. யூதாவின் மனுஷர் எல்லோரும் தீங்குகளையும், வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள். இதற்கு பின்பு தங்களுக்கு அமைதியும், சமாதானமும் உண்டாகும் என்று காத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு சமாதானமுண்டாகவில்லை. அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை.

கர்த்தர் யூதாவின் மனுஷரை அடிக்கிறார். இது அவர்களுக்கு அடிபடும் காலமாயிருக்கிறது. காயப்படும் காலமாயிருக்கிறது. இதற்கு பின்பு அவர்கள் ஆரோக்கிய காலத்திற்கு காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அடிகளுக்கு மேல் அடிகள் கிடைக்கிறது. பெருமூச்சுவிட்டு இளைப்பாறுவதற்கு, தங்களுக்கு காலஅவகாசம் உண்டாகும் என்று நினைக்கிறார்கள். ஆனால் ஆபத்து அவர்களுடைய வாசற்படியில் காத்திருக்கிறது. தேசத்தில் சமாதானமுண்டாகும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் சமாதானத்திற்குப் பதிலாக ஆபத்து உண்டாகிறது. கர்த்தர் யூதாவின் மனுஷர்மீது கோபமாயிருக்கிறார். அவர்களுக்கு தம்முடைய இரக்கத்தையும் கிருபையையும் காண்பிக்க மறுக்கிறார்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, யூதா மனுஷருடைய பாவங்களையெல்லாம் அறிக்கையிடுகிறார். அவரோடு சேர்ந்து யூதாவின் மனுஷர் எல்லோரும், தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்திருக்கவேண்டும். ஆனால் யூதா மனுஷர் அனைவரும் மனந்திரும்பவில்லை. ஒரு சிலர் மாத்திரமே எரேமியாவோடு சேர்ந்து, தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்கிறார்கள்.

"கர்த்தாவே, எங்கள் தீமையையும் எங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும் நாங்கள் அறிந்திருக்கிறோம்; உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோம்" (எரே 14:20) என்று எரேமியாவும், அவரோடு சேர்ந்து யூதாவின் குடிகளில் ஒரு சிலரும் தங்களுடைய பாவங்களை கர்த்தருடைய சமுகத்தில் அறிக்கையிடுகிறார்கள்.

யூதா மனுஷருடைய பாவங்களும், எருசலேமின் குடிகளுடைய அக்கிரமங்களும் திரளாயிருக்கிறது. தங்களுடைய பிதாக்களைப்போல இவர்களும் அக்கிரமம் செய்கிறார்கள். அவர்கள் மூலமாய் அக்கிரமம் செய்ய கற்றுக்கொள்கிறார்கள். யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. இப்போது அவர்கள் தங்களுடைய பாவங்களை கர்த்தரிடத்தில் அறிக்கை பண்ணுகிறார்கள். இரக்கமுள்ள கர்த்தர், தம்முடைய இரட்சிக்கும் கிருபையினாலும், நீதியினாலும் தங்களுடைய பாவங்களை மன்னிப்பார் என்று யூதாவின் மனுஷர் எதிர்பார்க்கிறார்கள்.

இஸ்ரவேலின் பரிசுத்தர் யூதாவின் மனுஷர்மீது பிரியமாயில்லை. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், பரிசுத்தமான தேவன், அவர்களை அருவருக்கிறார். எரேமியா தீர்க்கதரிசி கர்த்தரிடத்தில், "உம்முடைய நாமத்தினிமித்தம் எங்களை அருவருக்காதிரும்" என்று விண்ணப்பம் பண்ணுகிறார். கர்த்தர் தங்களை வேதனைகளுக்குட்படுத்தினாலும், தங்களை அடித்தாலும், தங்களை காயப்படுத்தினாலும், கர்த்தர் தங்களை அருவருக்கக்கூடாது என்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய கரம் யூதாவின் மனுஷருக்கு விரோதமாய்த் திரும்பியிருக்கிறது. கர்த்தருடைய கரம் தங்களுக்கு விரோதமாயிருந்தாலும், கர்த்தருடைய இருதயம் தங்களுக்கு விரோதமாய்த் திரும்பக்கூடாது என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். கர்த்தருடைய சிந்தை தங்களைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடக்கூடாது என்று பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்.

தங்களுடைய பாவத்தினிமித்தமாய், கர்த்தர் தங்களை தம்முடைய நீதியினால் அருவருக்கிறார் என்பதை யூதாவின் மனுஷர் அங்கீகரிக்கிறார்கள். ஆனாலும் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் முன்வைத்து, "உம்முடைய நாமத்தினிமித்தம் எங்களை அருவருக்காதிரும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறார்கள்.

யூதாவின் மனுஷரும் கர்த்தருடைய நாமத்தினால் அழைக்கப்படுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிறார். யூதாவின் மனுஷரோ கர்த்தருடைய இஸ்ரவேலாயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலின் தேவன். யூதர்கள் இஸ்ரவேலின் ஜனங்கள்.

கர்த்தருடைய ஆலயம் மகாபரிசுத்தமானது. அது மகிமை நிரம்பியது. யூதாவின் மனுஷர் கர்த்தரிடத்தில், "உமது மகிமையின் சிங்காசனத்தை கனவீனப்படுத்தாதேயும்" என்று விண்ணப்பம் பண்ணுகிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தின் மகிமையையும் கனத்தையும் முன்வைத்து, கர்த்தருடைய இரக்கத்திற்காக கெஞ்சுகிறார்கள். கர்த்தர் யூதாவின் மனுஷரை அருவருக்கும்போது, அது அவருடைய மகிமையின் சிங்காசனத்திற்கு கனவீனமாயிருக்கும்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கும், ஆக்கினைத்தீர்ப்புக்கும் அவர்கள் பாத்திரவான்களாயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய நீதியான கோபத்தினால் யூதா தேசத்தையும், எருசலேம் நகரத்தையும், எருசலேமிலுள்ள தேவாலயத்தையும் சத்துருக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார். இது கர்த்தருடைய நீதி. யூதாவின் மனுஷரும் இந்த நீதியான நியாயத்தீர்ப்புக்கு பாத்திரவான்களாயிருக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில், யூதாவின் மனுஷர் கர்த்தருடைய இரக்கத்திற்காக கெஞ்சி மன்றாடுகிறார்கள். தாங்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்ததை அங்கீகரிக்கிறார்கள். தங்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் தங்களை அடிக்கிறார் என்பதையும், கர்த்தர் தங்களை காயப்படுத்துகிறார் என்பதையும் ஒத்துக்கொள்கிறார்கள். ஆனாலும் எருசலேமிலுள்ள தேவாலயத்தை சத்துருக்கள் அழித்துப்போடும்போது, கர்த்தருடைய மகிமையின் சிங்காசனம் கனவீனமடையும் என்று வேதனையோடு சொல்லுகிறார்கள்.

எருசலேமிலுள்ள தேவாலயத்தில் புறஜாதியாரும் வந்து கர்த்தரை ஆராதிக்கிறார்கள். அவர்களுக்காகவே ஆலயத்தில் வெளிப்பிரகாரம் கட்டப்பட்டிருக்கிறது. புறஜாதியார் அந்த ஸ்தலத்தில் வந்து கர்த்தரை ஆராதிப்பார்கள். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலம் அழிந்துபோனால், புறஜாதியார் மத்தியில் கர்த்தருடைய நாமம் கனவீனப்படும். கர்த்தர் இந்தப் பூமியிலுள்ள தம்முடைய மகிமையின் சிங்காசனத்தை கனவீனப்படுத்தமாட்டார் என்று யூதாவின் மனுஷர் நிச்சயமாய் நம்புகிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய வார்த்தைக்கும் அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படியவில்லை. கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகளையும் அவர்கள் மதிக்கவில்லை. ஆனாலும் அவர்கள் கர்த்தருக்கு முன்பாக வந்து, "எங்களோடே உமக்கு இருக்கிற உடன்படிக்கை அபத்தமாகாதபடி எங்களை நினைத்தருளும்" (எரே 14:21) என்று விண்ணப்பம்பண்ணுகிறார்கள். யூதாவின் மனுஷர் தங்களைத் தாழ்த்தி கர்த்தருடைய கிருபாசனத்திற்கு முன்பாக தைரியமாய்க் கிட்டிச்சேருகிறார்கள். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையின் வார்த்தைகளை ஒருபோதும் மீறவில்லை. யூதாவின் மனுஷர்கள்தான் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் மீறியிருக்கிறார்கள்.

யூதா தேசத்தில் இப்போது மழை இல்லை. குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. புசிப்பதற்கு போஜனம் இல்லை. நிலத்தில் விளைச்சல் இல்லை. தானிய அறுவடையும் இல்லை. கர்த்தர் யூதா தேசத்தில் மழைத்தாழ்ச்சியை அனுமதித்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய கிருபையினால், தங்கள் தேசத்தின்மீது மழையை வருவிக்கப்பண்ணுவார் என்று, யூதாவின் மனுஷர் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கிறார்கள். தங்கள் தேசத்தில் மழைபெய்வதற்கு, அவர்கள் புறஜாதியாரின் தேவர்களிடத்திலோ, அவர்களுடைய விக்கிரகங்களிடத்திலோ விண்ணப்பம்பண்ணவில்லை.

தேசத்தின்மீது மழை வருஷிக்கப் பண்ண விக்கிரகங்களால் முடியாது. இதை யூதாவின் மனுஷர் அறிந்திருக்கிறார்கள். "புறஜாதிகளுடைய வீணான தேவர்களுக்குள் மழை வருஷிக்கப் பண்ணத்தக்கவர்கள் உண்டோ? அல்லது, வானங்கள் தானாய் மழைகளைக் கொடுக்குமோ? எங்கள் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நீரல்லவோ அதைச் செய்கிறவர்" (எரே 14:22) என்று கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்தில், ஆகாப் ராஜாவின் ஆட்சிக்காலத்தில் மிகப்பெரிய பஞ்சமுண்டாயிற்று. இக்காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தரை ஆராதியாமல் பாகாலை ஆராதித்தார்கள். பாகாலுக்கு பலிகளை செலுத்தினார்கள். தங்கள் தேசத்தில் பஞ்சம் நீங்கி மழை பெய்யவேண்டுமென்று பாகாலிடம் விண்ணப்பம்பண்ணினார்கள். ஆனால் பாகால் அவர்களுக்கு மழையைக் கொடுக்கவில்லை.

எலியாவுக்கும், பாகாலுடைய தீர்க்கதரிசிகளுக்கும் விவாதம் நடைபெற்ற போது, "அக்கினியினால் பதில் சொல்லுகிற தேவனே மெய்யான தேவன்" என்று எலியா சொன்னார். இஸ்ரவேலின் பரிசுத்தர் அக்கினியினால் பதில் சொன்னார். அதே தேவன் மழையினாலும் பதில் சொல்ல வல்லவராயிருக்கிறார். புறஜாதிகளுடைய வீணான தேவர்களுக்குள் மழை வருஷிக்கப்பண்ணத்தக்கவர்கள் ஒருவருமில்லை.

தேவனுடைய உத்தரவு இல்லாமல் வானத்திலிருந்து மழை பெய்யாது. கர்த்தரே மேகங்களின் திறவுகோலை தம்முடைய கரங்களில் வைத்திருக்கிறார். அவரே வானத்தின் ஊற்றுக்கண்களைத் திறக்கிறவர். அவரே பூமியின்மீது மழையைப் பெய்யப்பண்ணுகிறவர். வானங்கள் தானாய் மழையைக் கொடுக்காது. கர்த்தர் அதற்கு கட்டளையிட்டால்தான் மழையைக் கொடுக்கும். தங்களுடைய எல்லா ஜீவாதாரங்களுக்கும் யூதாவின் மனுஷர் கர்த்தரையே நம்பவேண்டும். கர்த்தரிடத்திலிருந்து மாத்திரமே தங்களுக்கு நன்மை வரும் என்று எதிர்பார்த்து காத்திருக்கவேண்டும்.

தேவனாகிய கர்த்தரே பூமியின்மீது மழையை வருஷிக்கப்பண்ணுகிறவர். கர்த்தரிடமிருந்தே நமக்கு தேவையான நன்மையான எல்லா ஈவுகளும் வருகிறது. அவரே நம்முடைய ஜீவியத்திற்கு ஆதாரத்தைக் கொடுக்கிறவர். அவரே நமக்கு ஜீவாதாரமாயிருக்கிறவர். கர்த்தரே தம்முடைய பிரமாணத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். தம்முடைய சித்தத்தின் பிரகாரம் கர்த்தரே கட்டளைகொடுக்கிறார்.

அவர் சொல்ல எல்லாம் ஆகும். கர்த்தர் ஏற்ற காலத்தில் மழையைக் கொடுப்பார் என்று, நாம் கர்த்தருடைய சமுகத்தில் காத்திருக்கவேண்டும். யூதாவின் மனுஷர் கர்த்தருடைய மகத்துவத்தைப் புகழ்ந்து சொல்லி, "ஆகையால் உமக்கு காத்திருக்கிறோம், தேவரீர் இவைகளையெல்லாம் உண்டுபண்ணினீர்" (எரே 14:22) என்று பயபக்தியோடு சொல்லுகிறார்கள்.

"பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள்; அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல்வெளியில் அவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்" (சக 10:1).

15 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும் கர்த்தரிடத்தில் பரிந்து பேசுகிறார். ஆனால் கர்த்தரோ தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பில் உறுதியாயிருக்கிறார். யூதா ஜனத்திற்கு விரோதமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வருகிறது (எரே 15:1-9).

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருக்கிறார். எரேமியாவிடத்தில் அநீதி எதுவுமில்லை. ஆனாலும் யூதாவின் மனுஷர் அவரை சபிக்கிறார்கள் (எரே 15:10). கர்த்தர் எரேமியாவுக்கு சகாயம் செய்வதாகவும், யூதாதேசத்திற்கு பொதுவான அழிவு வந்தாலும், கர்த்தர் எரேமியாவை விசேஷமாய் பாதுகாத்துக்கொள்வதாகவும் வாக்குப்பண்ணுகிறார் (எரே 15:11-14).

கர்த்தர் எரேமியாவை தீர்க்கதரிசன ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணியிருக்கிறார். எரேமியாவும் தன்னுடைய தீர்க்கதரிசன ஊழியத்தில் உண்மையுள்ளவராயிருக்கிறார் (எரே 15:15-18). எரேமியா கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ளவராயிருக்கவேண்டும். அப்போது அவருக்கு கர்த்தருடைய விசேஷித்த பாதுகாப்பும், பராமரிப்பும், கிருபைகளும் கிடைக்கும் (எரே 15:19-21).

எருசலேமே
எரே 15:1-9

எரே 15:1. கர்த்தர் என்னை நோக்கி: மோசேயும் சாமுவேலும் என் முகத்துக்கு முன்பாக நின்றாலும், என் மனம் இந்த ஜனங்கள் பட்சமாய்ச் சாராது; இவர்கள் என் முகத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகும்படி இவர்களைத் துரத்திவிடு.

எரே 15:2. எங்கே புறப்பட்டுப்போவோம் என்று இவர்கள் உன்னைக் கேட்டால், நீ அவர்களை நோக்கி: சாவுக்கு ஏதுவானவர்கள் சாவுக்கும், பட்டயத்துக்கு ஏதுவானவர்கள் பட்டயத்துக்கும், பஞ்சத்துக்கு ஏதுவானவர்கள் பஞ்சத்துக்கும், சிறையிருப்புக்கு ஏதுவானவர்கள் சிறையிருப்புக்கும் நேராய்ப் போகவேண்டும் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்லு.

எரே 15:3. கொன்றுபோடப் பட்டயமும், பிடித்து இழுக்க நாய்களும், பட்சித்து அழிக்க ஆகாயத்துப் பறவைகளும், பூமியின் மிருகங்களும் ஆகிய நான்கு விதமான வாதைகளை நான் அவர்கள்மேல் வரக் கட்டளையிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 15:4. எசேக்கியாவின் குமாரனும், யூதாவின் ராஜாவுமாகிய மனாசே எருசலேமில் செய்தவைகளினிமித்தம் அவர்களைப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலையப்பண்ணுவேன்.

எரே 15:5. எருசலேமே, யார் உன்மேல் இரங்குவார்கள்? யார் உன்மேல் பரிதபிப்பார்கள்? யார் உன்னிடத்திற்குத் திரும்பி, உன் சுகசெய்தியை விசாரிப்பார்கள்?

எரே 15:6. நீ என்னைவிட்டுப் பின்வாங்கிப் போனாய்; ஆகையால், என் கையை உனக்கு விரோதமாய் நீட்டி, உன்னை அழிப்பேன்; நான் பொறுத்துப் பொறுத்து இளைத்துப்போனேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 15:7. தேசத்தின் வாசல்களில் அவர்களைத் தூற்றுக்கூடையால் தூற்றிப் போடுவேன்; என் ஜனங்கள் தங்கள் வழிகளைவிட்டுத் திரும்பாதபடியினால் நான் அவர்களைப் பிள்ளைகள் அற்றவர்களாக்கி அழிப்பேன்.

எரே 15:8. கடற்கரை மணலைப்பார்க்கிலும் அதிக விதவைகள் அவர்களில் உண்டாயிருப்பார்கள்; பட்டப்பகலிலே பாழாக்குகிறவனைத் தாயின்மேலும் பிள்ளைகளின்மேலும் வரப்பண்ணுவேன்; அவர்கள்மேல் பட்டணத்தின் கலகத்தையும், பயங்கரங்களையும் விழப்பண்ணுவேன்.

எரே 15:9. ஏழு பிள்ளைகளைப் பெற்றவள் களைத்துப்போகிறாள்; அவள் தன் பிராணனை விட்டுவிட்டாள்; இன்னும் பகலாயிருக்கையில் அவளுடைய சூரியன் அஸ்தமித்தது; வெட்கமும் இலச்சையும் அடைந்தாள்; அவர்களில் மீதியாகிறவர்களையோ அவர்களுடைய சத்துருக்களுக்கு முன்பாகப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதா மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தருக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறார்கள். அவர்கள்மீது தேவனுடைய கோபம் வந்து இறங்குகிறது. இதனிமித்தமாய் அவர்களுக்கு ஏராளமான வாதைகளும், வேதனைகளும் உண்டாகிறது. அந்த வேதனைகளைப்பற்றி இந்த வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில், யூதருக்கு ஏற்பட்டிருக்கும் உபத்திரவங்களைப்பற்றி, மற்ற வசனங்களில் சொல்லப்பட்டிருப்பதைவிட இந்த வசனங்களில் மிகவும் அதிகமாயும், தெளிவாயும், முழுமையாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும் கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணுகிறார். அவரோடுகூட யூதாவின் மனுஷரில் சிலர் மாத்திரம் சேர்ந்துகொண்டு, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்கள். ஆனாலும் யூதர்கள் மத்தியில் ஆவிக்குரிய மனமாற்றமுண்டாகவில்லை. தேவனுடைய கோபமும் குறையவில்லை. அவர்களுடைய ஜெபத்தினால் மிகப்பெரிய பலன் எதுவும் உண்டாகவில்லை.

யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தமாகவே, கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். "எசேக்கியாவின் குமாரனும், யூதாவின் ராஜாவுமாகிய மனாசே எருசலேமில் செய்தவைகளினிமித்தம் அவர்களைப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலையப்பண்ணுவேன்" (எரே *15:4*) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"மனாசே தன் எல்லாச் செய்கைகளினாலும் செய்த பாவங்களினிமித்தம் யூதாவைத் தமது சமுகத்தை விட்டு அகற்றும்படி கர்த்தருடைய கட்டளையினால் அப்படி நடந்தது. அவன் சிந்தின குற்றமற்ற இரத்தத்திற்காகவும் எருசலேமைக் குற்றமற்ற இரத்தத்தால் நிரப்பினதற்காகவும் கர்த்தர் மன்னிக்கச் சித்தமில்லாதிருந்தார்" *(2இராஜா 24:3,4).*

மனாசே விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருந்தான். அவன் குற்றமற்ற இரத்தத்தை சிந்தினான். இதனால் கர்த்தர் மனாசேயையும், எருசலேமையும் மன்னிக்க சித்தமில்லாதவரானார். கர்த்தர் மனாசேயின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சம்பவத்தை இங்கு நினைவுகூர்ந்து சொல்லுகிறார். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும், மனாசேயின் காலத்தில் நடந்ததுபோலவே, இப்போது விக்கிரகாராதனையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போய்விட்டார்கள் (எரே 15:6). கர்த்தருக்கு செய்ய வேண்டிய ஊழியத்தை செய்ய தவறிவிடுகிறார்கள். கர்த்தரை ஆராதிப்பதையும் நிறுத்திவிடுகிறார்கள்.

மனாசேயின் காலத்தில் யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகிப்போனார்கள். விக்கிரகங்களைப் பற்றிக்கொண்டார்கள். அதன்பின்பு அவர்கள் மறுபடியுமாய் கர்த்தரிடத்தில் திரும்பி வந்தார்கள். ஆனால் இப்போதோ, யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும், மறுபடியுமாய் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போகிறார்கள். அவர்கள் கர்த்தர் எதிர்பார்த்த பிரகாரம் ஜீவிக்கவில்லை.

அவர்கள் அழிவின் பாதையில் போய்கொண்டிருக்கிறார்கள். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தங்கள் பாவமான வழிகளைவிட்டுத் திரும்பவில்லை (எரே 15:7). ஆகையினால் தேவனுடைய கோபம் அவர்கள்மீது வந்திருக்கிறது. யூதாவின் மனுஷர் தங்களுடைய மாம்ச இச்சைகளின் பிரகாரமும், தங்களுடைய இருதய யோசனையின் பிரகாரமும் நடக்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவமான வழிகளைவிட்டு, கர்த்தருடைய வழிக்கு திரும்பி வரவேண்டும். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும்.

கர்த்தரிடத்தில் திரும்பி வந்தால் அவருடைய கிருபையையும், இரக்கத்தையும் பெற்றுக்கொள்ளலாம். கர்த்தரைவிட்டு நிரந்தரமாய் பின்வாங்கிப்போய்விட்டால், கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்களுக்கு கிடைக்காது. அவர்களால் கர்த்தரிடமிருந்து ஒரு நன்மையையும் பெற்றுக்கொள்ள முடியாது.

தம்மைவிட்டு பின்வாங்கிப்போன யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் கர்த்தர் தம்முடைய நீதியினால் தண்டிக்கிறார். "என் மனம் இந்த ஜனங்கள் பட்சமாய் சாராது" (எரே 15:1) என்று சொல்லிவிடுகிறார். கர்த்தர் தம்முடைய பரிசுத்தமான நீதியினாலும், பரிசுத்தமான கோபத்தினாலும் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார். "இவர்கள் என் முகத்தை விட்டு புறப்பட்டுப்போகும்படி இவர்களைத் துரத்திவிடு" (எரே 15:1) என்றும் கர்த்தர் கோபத்தோடு சொல்லுகிறார்.

கர்த்தர் இனிமேலும் யூதாவின் மனுஷருக்காகவும், எருசலேமின் குடிகளுக்காகவும் பரிதாபப்பட விரும்பவில்லை. கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக இனிமேலும் தம்முடைய ஆவியில் கலங்க சித்தமாயில்லை.

எரேமியா யூதாவின் மனுஷருக்காக கர்த்தருடைய சமுகத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார். ஆனால் அவர்களுக்காக தம்மிடத்தில் யாரும் பரிந்து பேசி ஜெபம்பண்ணவேண்டாம் என்று கர்த்தர் தடைபண்ணுகிறார். "மோசேயும் சாமுவேலும் என் முகத்திற்கு முன்பாக நின்றாலும், என் மனம் இந்த ஜனங்கள் பட்சமாய் சாராது" (எரே 15:1) என்று கர்த்தர் சொல்லிவிடுகிறார்.

தங்கள் ஜெபத்தினாலும், பலிகளினாலும், காணிக்கைகளினாலும் கர்த்தரோடு ஒப்புரவாகிவிடலாம் என்று யூதாவின் மனுஷர் நினைக்கிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு செவிகொடுக்க மறுத்துவிடுகிறார். அவர்களைப்பற்றி நினைத்துப் பார்ப்பதற்குக்கூட கர்த்தருக்கு விருப்பமில்லை.

யூதாவின் மனுஷர் எல்லோருக்கும், எருசலேமின் குடிகள் எல்லோருக்கும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். அவர்கள் எல்லோருமே அழிந்துபோவார்கள். கர்த்தர் யூதாவின் மனுஷரை தம்முடைய பிரசன்னத்தைவிட்டு நீக்கிப்போடுகிறார். "இவர்கள் என் முகத்தைவிட்டு புறப்பட்டுப் போகும்படி இவர்களைத் துரத்திவிடு" என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

எரேமியா யூதாவின் மனுஷரிடத்தில் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது அவர்கள், "எங்கே புறப்பட்டுப்போவோம்" (எரே 15:2) என்று கேட்பார்கள். யூதா மனுஷருடைய இருதயத்தில் எப்படிப்பட்ட சிந்தனைகளெல்லாம் இருக்கிறது என்பதையும் கர்த்தர் அறிந்து வைத்திருக்கிறார். நம்முடைய வாயில் சொல் பிறவாததற்கு முன்னமேயே, கர்த்தர் நம்முடைய மனதின் ஆலோசனைகளை அறிந்து வைத்திருக்கிறார்.

"எங்கே புறப்பட்டுப்போவோம் என்று இவர்கள் உன்னைக் கேட்டால், நீ அவர்களை நோக்கி: சாவுக்கு ஏதுவானவர்கள் சாவுக்கும், பட்டயத்துக்கு ஏதுவானவர்கள் பட்டயத்துக்கும், பஞ்சத்துக்கு ஏதுவானவர்கள் பஞ்சத்துக்கும், சிறையிருப்புக்கு ஏதுவானவர்கள் சிறையிருப்புக்கும் நேராய்ப் போகவேண்டும் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்லு" (எரே 15:2) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் நான்குவிதமான வாதைகளை நியமித்திருக்கிறார். அவையாவன: 1. சாவு 2. பட்டயம் 3. பஞ்சம் 4. சிறையிருப்பு. இந்த நான்கு வாதைகளில் ஏதாவது ஒரு வாதை யூதாவின் மனுஷருக்கு வரும். ஒவ்வொரு வாதைக்கும், அதற்கேதுவான ஜனங்களை கர்த்தர் ஏற்கெனவே தீர்மானம்பண்ணியிருக்கிறார். அவரவர்கள் அவரவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற வாதையினால் அழிந்துபோவார்கள்.

தாவீது கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தபோது, கர்த்தர் அவருக்கு இரண்டு வாதைகளை நியமித்தார். இவ்விரண்டில் ஒன்றை தெரிந்து கொள்ளுமாறு கர்த்தர் தாவீதுக்கு சொன்னார்.

"அப்பொழுது தாவீது காத்தை நோக்கி: கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன்; இப்போது நாம் கர்த்தருடைய கையிலே விழுவோமாக; அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிருப்பேனாக என்றான்" (2சாமு 24:14).

தாவீது மகாஇடுக்கணில் அகப்பட்டுக்கொண்டதுபோல, யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும், அதைவிட மகாபெரிய இடுக்கணில் அகப்பட்டுக்கொள்கிறார்கள். கர்த்தர் தாவீதுக்கு இரண்டு வாதைகளை மாத்திரமே கொடுத்தார். யூதாவின் மனுஷருக்கோ நான்கு வாதைகளைக் கொடுக்கிறார்.

கர்த்தர் சொல்லுகிற நான்கு வாதைகளில், சிறையிருப்பு நான்காவது வாதையாகவும், கடைசி வாதையாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது எல்லோருக்கும் வரப்போகிற உறுதியான நியாயத்தீர்ப்பு. அவர்களுடைய இடுக்கண் தொடரும்.

கர்த்தர் பட்டயத்தைப்பற்றி மறுபடியுமாய்ச் சொல்லுகிறார். "கொன்றுபோட பட்டயம்.... அவர்கள்மேல் வர கட்டளையிடுவேன்" (எரே 15:3) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் இங்கு மேலும் நான்கு வாதைகளைப்பற்றிச் சொல்லுகிறார். இந்த நான்கு வாதைகளில் பட்டயமே முதலாவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பட்டயத்திற்கு தப்புகிறவர்கள் பஞ்சத்தினாலும், கொள்ளைநோயினாலும் மடிந்துபோவார்கள். அல்லது அவர்கள் சிறையிருப்புக்கு இழுத்துச் செல்லப்படுவார்கள். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பட்டயத்திற்கு தப்பினாலும், தேவனுடைய கோபாக்கினைக்கு தப்ப முடியாது.

தமக்கு விரோதமாகப் பாவம் செய்து, துன்மார்க்கமாய் ஜீவிக்கிற யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் கொன்றுபோட கர்த்தர் பட்டயத்திற்கு கட்டளையிடுவார். நகரத்திலே அவர்களைப் பிடித்து இழுக்க நாய்களுக்கு கட்டளையிடுவார். அவர்களை பட்சித்து அழிக்க ஆகாயத்து பறவைகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் கட்டளையிடுவார். அவர்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் அழிவு வரும். ஒருவராலும் அழிவுக்கு தப்பிக்க முடியாது.

"எசேக்கியாவின் குமாரனும், யூதாவின் ராஜாவுமாகிய மனாசே எருசலேமில் செய்தவைகளினிமித்தம் அவர்களைப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலையப்பண்ணுவேன்" (எரே 15:4) என்று கர்த்தர் சொல்லுகிறார். காயீன் இந்தப் பூமியில் தேசாந்திரியாக அலைந்து திரிந்ததுபோல, யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிவார்கள்.

கர்த்தருடைய கோபத்திற்கு ஒருவராலும் தப்பிக்க முடியாது. அவர்கள் எல்லோரும் செத்து மடிவார்கள். மரணத்திற்கு தப்பித்தவர்கள் சிறையிருப்புக்குப் போவார்கள். கர்த்தருடைய சமுகத்திலிருந்து அவர்களுக்கு கிருபையோ, இரக்கமோ காண்பிக்கப்பட மாட்டாது. கர்த்தர் மறுபடியுமாய் யூதா மனுஷருக்கு விரோதமாயும், எருசலேமின் குடிகளுக்கு விரோதமாயும் வருகிறார். "என் கையை உனக்கு விரோதமாய் நீட்டி, உன்னை அழிப்பேன்" (எரே 15:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போயிருக்கிறார்கள். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். கர்த்தர் அவர்களை அழிக்காமல் நீடியபொறுமையோடிருந்தாலும், அவர்கள் கர்த்தருடைய பொறுமையை அசட்டைபண்ணுகிறார்கள். கர்த்தரோ, யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தம், அவர்களை உடனே அழித்துப்போடாமல், பொறுமையோடு காத்திருக்கிறார். ஆனாலும் அவர்கள் மனந்திரும்ப மறுக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் கர்த்தர், "நான் பொறுத்து பொறுத்து இளைத்துப்போனேன்" (எரே 15:6) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதா மனுஷர்மீது இன்னும் அதிகமாய் வருகிறது. கர்த்தருடைய கோபம் அதிகரிக்கிறது. கர்த்தர் யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் இன்னும் ஏராளமான தீங்குகள் வருவதற்கு அனுமதி கொடுக்கிறார். அவர்களுடைய சொந்த தேசத்தாரே அவர்களை தங்கள் தேசத்தை விட்டு வெளியேற்றிவிடுவார்கள். "தேசத்தின் வாசல்களில் அவர்களை தூற்றுக்கூடையால் தூற்றிப்போடுவேன்" (எரே 15:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"தேசத்தின் வாசல்கள்" என்னும் வாக்கியம் யூதா தேசத்தின் வாசல்களைக் குறிக்கும், அல்லது பூமியின் வாசல்களைக் குறிக்கும் அல்லது யூதா தேசத்தைச் சுற்றிலுமுள்ள அந்நிய தேசத்தாரின் பட்டணங்களைக் குறிக்கும். கர்த்தர் யூதாவின் மனுஷரை அவர்களுடைய தேசத்திலிருந்து துரத்திவிடுகிறார்.

"என் ஜனங்கள் தங்கள் வழிகளைவிட்டுத் திரும்பாதபடியினால் நான் அவர்களைப் பிள்ளைகள் அற்றவர்களாக்கி அழிப்பேன்" (எரே 15:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். தாங்கள் அழிந்துபோனாலும், தங்களுடைய சந்ததியார் செழித்திருப்பார்கள் என்று யூதாவின் மனுஷர் நம்புகிறார்கள். ஆனால் அவர்களுடைய நம்பிக்கை வீணாய்ப்போகும். கர்த்தர் அவர்களை பிள்ளைகள் அற்றவர்களாக்கி அழிப்பதாக சொல்லுகிறார்.

நேபுகாத்நேச்சார் ராஜா யூதாதேசத்தின் மீது வருவான். அவன் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் சங்காரம்பண்ணுவான். புருஷர்களையெல்லாம் கொன்றுபோடுவான். இதனால் யூதாதேசத்தில் கடற்கரை மணலைப்பார்க்கிலும் அதிக விதவைகள் உண்டாயிருப்பார்கள்.

"பட்டப்பகலிலே பாழாக்குகிறவனை தாயின்மேலும் பிள்ளைகளின்மேலும் வரப்பண்ணுவேன்" (எரே 15:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். "பட்டப்பகலிலே பாழாக்குகிறவன்" என்னும் வாக்கியம் நேபுகாத்நேச்சாரைக் குறிக்கும். அவன் இரவிலே திருடன் வருகிற பிரகாரமாக வரமாட்டான். தன்னை யாரும் கண்டு பிடித்துவிடுவார்களோ என்று திருடர்கள் பயப்படுவார்கள். அதனால் அவர்கள் பகலில் வராமல் இரவில் வருவார்கள். நேபுகாத்நேச்சாருக்கோ யார்மீதும் பயமில்லை. ஆகையினால் அவன் பட்டப்பகலிலே யூதாதேசத்தின்மீது வந்து, ஜனங்களை பாழாக்குவான்.

"பட்டப்பகலிலே பாழாக்குகிறவனை தாயின்மேலும் பிள்ளைகளின்மேலும் வரப்பண்ணுவேன்" என்னும் வாக்கியத்திற்கு, "பட்டப்பகலிலே பாழாக்குகிறவனாகிய பிள்ளையை தாயின்மேல் வரப்பண்ணுவேன்" என்று வேதபண்டிதர்களில் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள். நேபுகாத்நேச்சார் ராஜா, யூதாவின்மீது முதன்முதலாக யுத்தம்பண்ண வந்தபோது, அவன் வாலிபவயதிலிருந்தான். அவனுடைய ஆட்சிக்காலத்தின் முதலாம் வருஷத்தில் அவன் யூதாவுக்கு விரோதமாக வந்தான்.

இந்த வாக்கியத்திற்கு, "பட்டப்பகலிலே பாழாக்குகிறவனை பிள்ளையின் தாயின்மேல் வரப்பண்ணுவேன்" என்று கர்த்தர் சொல்லுவதாகவும் சிலர் பொருள் சொல்லுகிறார்கள். "தாய்" என்னும் வார்த்தை எருசலேம் நகரத்தை குறிக்கிறது. இது யூதாவிலுள்ள எல்லா பட்டணங்களுக்கும் தாய்ப்பட்டணமாயிருக்கிறது. இங்கே வாலிபருடைய குடும்பத்தார் ஏராளமாயிருக்கிறார்கள். கர்த்தர் பாழாக்குகிறவனை அவர்கள்மேல் வரப்பண்ணுவார்.

"அவர்கள்மேல் பட்டணத்தின் கலகத்தையும் பயங்கரங்களையும் விழப்பண்ணுவேன்" (எரே 15:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். சத்துருக்கள் சடுதியாய் வருவார்கள். திடீரென்று வருவார்கள். அவர்கள் மூலமாய் பட்டணத்தில் பயங்கரங்கள் உண்டாகும்.

இந்த வாக்கியத்தில் "கலகம்" என்னும் வார்த்தைக்கு "காவலாளன்" என்று பொருள். தானியேல் தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில், "காவலாளன்" என்னும் வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்டிருக்கிற எபிரெய வார்த்தையே, இந்த வசனத்தில், "கலகம்" என்னும் வார்த்தைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"நான் படுத்திருக்கையில் என் தலையில் தோன்றின தரிசனங்களைக் காணும்போது, காவலாளனாகிய பரிசுத்தவான் ஒருவன் வானத்திலிருந்து இறங்கக்கண்டேன்" (தானி 4:13).

"இந்த விருட்சத்தை வெட்டி, இதை அழித்துப்போடுங்கள்; ஆனாலும் இதின் வேர்களாகிய அடிமரம் தரையில் இருக்கட்டுமென்றும், இரும்பும் வெண்கலமுமான விலங்கு இடப்பட்டு, வெளியின் பசும்புல்லிலே தங்கி, ஆகாயத்துப் பனியிலே நனைவதாக; ஏழு காலங்கள் அவன்மேல் கடந்துபோகுமட்டும் மிருகங்களோடே அவனுடைய பங்கு இருக்கக்கடவதென்றும், வானத்திலிருந்து இறங்கிச் சொன்ன பரிசுத்த காவலாளனை ராஜாவாகிய நீர் கண்டீரே" (தானி 4:23).

கல்தேயரின் யுத்தவீரர்கள், "காவற்சேவகர்" என்று அழைக்கப்படுகிறார்கள். "ஜாதிகளுக்கு அதை நீங்கள் பிரஸ்தாபம்பண்ணுங்கள்; இதோ, காவற்சேவகர் தூரதேசத்திலிருந்து வந்து, யூதாவுடைய பட்டணங்களுக்கு விரோதமாய் உரத்தசத்தமிடுவார்கள் என்று எருசலேமுக்குக் கூறுங்கள்" (எரே 4:16).

யூதா தேசத்திலே மிகப்பெரிய சங்காரமுண்டாகும். அங்கே கடற்கரை மணலைப் பார்க்கிலும் அதிக விதவைகள் உண்டாயிருப்பார்கள். மனைவிகள் தங்கள் புருஷரை சாகக்கொடுத்து அழுது புலம்புவார்கள்.

புருஷர்கள் பட்டயத்தினால் செத்துப்போனாலும், அவர்களுடைய விதவைகளுக்கு கர்த்தருடைய சமுகத்திலிருந்து கிருபையும் இரக்கமும் கிடைக்கிறது. தேவனுடைய நீதியின் பட்டயத்தினால் யூதா தேசத்து புருஷர்கள் சங்காரமாகிறார்கள். அவர்களுடைய விதவைகளோ, கர்த்தருடைய கிருபையுள்ள கரத்தினால் பாதுகாக்கப்படுகிறார்கள்.

இஸ்ரவேலின் பரிசுத்தர் விதவைகளின் தேவனாயும் இருக்கிறார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை சாகக்கொடுத்திருக்கிறார்கள். தன்னுடைய பிள்ளைகள் பட்டயத்தால் செத்து மடிவதைப் பார்க்கும்போது, அவர்களுடைய தாயார், "தன் பிராணனை விட்டுவிடுகிறாள்" (எரே 15:9). தாயின் உயிரும், அவளுடைய பிள்ளையின் உயிரும் ஒன்றாய் இணைத்து கட்டப்பட்டிருக்கிறது. தன் பிள்ளை சாவதைப் பார்க்கும்போது, அந்த வேதனையை தாங்கமுடியாமல், பிள்ளையும் தாயும் செத்துப்போகிறாள்.

"இன்னும் பகலாயிருக்கையில் அவளுடைய சூரியன் அஸ்தமித்தது" (எரே 15:9) என்று கர்த்தர் சொல்லுகிறார். தன்னுடைய குடிகளெல்லாம் செத்துப்போனதற்காக யூதா தேசமும், எருசலேம் நகரமும் அழுது புலம்புகிறது. தன்னுடைய பிள்ளைகள் செத்துப் போனதற்காக, அதன் தாய் அழுகிறாள். யூதா தேசத்தில் இன்னும் ஒரு சிலர் உயிரோடிருக்கிறார்கள். தேசம் இன்னும் பகலாகவே இருக்கிறது. அவர்களுக்கு முழுமையான சங்காரமோ, சூரிய அஸ்தமனமோ இன்னும் வரவில்லை. ஆனாலும் பிள்ளைகளை பறிகொடுத்த தாய்மார்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கை இருளடைந்துவிடுகிறது. அவளுடைய சூரியன் அஸ்தமித்து விடுகிறது.

ஏழு பிள்ளைகளைப் பெற்றவள் களைத்துப்போகிறாள். ஏராளமான பிள்ளைகளை பெற்றதினால் அவள் களைத்துப்போகவில்லை. அவளுடைய கண்களுக்கு முன்பாக, அவளுடைய பிள்ளைகள் எல்லோரும், பட்டயத்தால் கொல்லப்படுகிறார்கள். தன் பிள்ளைகள் மடிந்துபோவதைப் பார்க்கும்போது, அவளும் தன் பிராணனை விட்டுவிடுகிறாள். அவளுடைய சூரியன் அஸ்தமித்துவிடுகிறது. அவள் வெட்கமும் இலச்சையும் அடைகிறாள்.

யூதா தேசத்தில் இன்னும் ஒரு சிலர் உயிரோடிருக்கிறார்கள். அவர்கள் பட்டயத்தாலோ, பஞ்சத்தாலோ இன்னும் சாகவில்லை. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீதும் வருகிறது. உயிரோடு மீதியாயிருக்கிறவர்கள் சிறையிருப்புக்கு ஏதுவானவர்கள். அவர்கள் சிறையிருப்புக்கு நேராக போகவேண்டும். "அவர்களில் மீதியாயிருக்கிறவர்களையோ அவர்களுடைய சத்துருக்களுக்கு முன்பாகப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பேன்" (எரே 15:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எருசலேமின் ஜனங்கள் செத்து மடிகிறார்கள். ஆனால் அவர்களுக்காக இரங்குகிறவர்கள் ஒருவருமில்லை. கர்த்தர் அவர்களை தம்முடைய முகத்தைவிட்டு துரத்திவிடுகிறார். அவர்களுக்கு வாதைகள் வரும்போது, அவர்களுடைய சிநேகிதர்களோ அல்லது அவர்களுடைய சத்துருக்களோ அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கவில்லை. "எருசலேமே, யார் உன்மேல் இரங்குவார்கள்? யார் உன்மேல் பரிதபிப்பார்கள்? யார் உன்னிடத்திற்குத் திரும்பி, உன் சுகசெய்தியை விசாரிப்பார்கள்?" (எரே 15:5) என்று கர்த்தர் கேட்கிறார்.

என் தாயே
எரே 15:10

எரே 15:10. என் தாயே, தேசத்துக்கெல்லாம் வழக்குக்கும் வாதுக்கும் உள்ளானவனாயிருக்கும்படி என்னை நீ பெற்றாயே; ஐயோ! நான் அவர்களுக்கு வட்டிக்குக் கொடுத்ததுமில்லை, அவர்கள் எனக்கு வட்டிக்குக் கொடுத்ததுமில்லை; ஆனாலும் எல்லாரும் என்னைச் சபிக்கிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி இதுவரையிலும் கர்த்தருடைய வார்த்தையை யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் பிரசங்கம்பண்ணினார். இப்போதோ அவர் தனிமையான இடத்திற்கு வந்து கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். இந்த வசனத்திலும், இதை தொடர்ந்து வரும் வசனங்களிலும், எரேமியாவுக்கும் கர்த்தருக்கும் இடையே நடைபெறுகிற சம்பாஷணை எழுதப்பட்டிருக்கிறது.

எரேமியாவின் ஊழியத்தில் ஏராளமான இடையூறுகள் உண்டாயிற்று. யூதாவின் மனுஷரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. இதனால் எரேமியா தன் ஆவியில் சோர்ந்துபோயிருக்கிறார். தன்னுடைய மனதின் வேதனைகளையும், சோர்வுகளையும் எரேமியா கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் எரேமியாவுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள். அவருடைய வாயின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள். எரேமியா வழக்கும் வாதும் உள்ள மனுஷனாயிருக்கிறார். நகரத்தாரும் கிராமத்தாரும் அவரோடு விவாதம்பண்ணுகிறார்கள்.

எரேமியாவோ சமாதானத்தை விரும்புகிறவர். ஆனாலும் அவர் வழக்குக்கும் வாதுக்கும் உட்பட்டவராயிருக்கிறார். அவர் யாரோடும் எதிர்த்து வழக்காடமாட்டார். சமாதானத்தை விரும்புவதினால், பணிந்து பேசுவார். சண்டை போடாமல் சமாதான வார்த்தைகளைப் பேசுவார். ஆனால் யூதாவின் மனுஷர் எரேமியாவின் வார்த்தைகளில் குற்றம் கண்டுபிடிக்கிறார்கள். எரேமியா சமாதானமான வார்த்தைகளைச் சொன்னாலும் அவர்கள் அவரோடு சண்டைக்கு வந்துவிடுகிறார்கள்.

எரேமியா கர்த்தருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். யூதா மனுஷருடைய ஆத்துமாவைக் குறித்து கரிசனையுள்ளவராயும் இருக்கிறார். யூதாவின் மனுஷரோ கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். எரேமியா அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார். அவர்கள் தங்களுக்குத் தாங்களே அழிவை வரவழைத்துக்கொள்கிறார்கள் என்று எரேமியா அவர்களை எச்சரிக்கிறார். கர்த்தருடைய கோபாக்கினைக்கும், தங்களுக்கு வரப்போகும் அழிவுக்கும் தப்பித்துக்கொள்வதற்கு, அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று எரேமியா அவர்களுக்கு உபதேசம்பண்ணுகிறார்.

யூதாவின் மனுஷரோ எரேமியாவின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் எரேமியாவுக்கு விரோதமாய்த் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். அவர்கள் எரேமியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசியாக மதிப்பதில்லை. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் சமாதானத்தின் சுவிசேஷமாகும். ஆனாலும் சுவிசேஷம் மனுஷர்களுக்குள் பிரிவினையை உண்டுபண்ணி விடுகிறது.

"பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்பவந்தேன். எப்படியெனில், மகனுக்கும் தகப்பனுக்கும், மகளுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமிக்கும் பிரிவினையுண்டாக்க வந்தேன்"(மத் 10:34,35).

"பூமியின்மேல் அக்கினியைப் போடவந்தேன், அது இப்பொழுதே பற்றி எரியவேண்டு மென்றுவிரும்புகிறேன்". "நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்கவந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்கவந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக் 12:49,51).

யூதாவின் மனுஷர் எரேமியாவுக்கு விரோதமாய்த் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். அதைக் கேட்டு எரேமியாவின் மனது வேதனைப்படுகிறது. அவருடைய இருதயம் கலங்குகிறது. அவர் யூதா மனுஷரோடு வாக்குவாதம்பண்ணாமல், கர்த்தருடைய சமுகத்தில் தன்னுடைய மனதின் வேதனைகளைச் சொல்லுகிறார். "என் தாயே, தேசத்துக்கெல்லாம் வழக்குக்கும் வாதுக்கும் உள்ளானவனாயிருக்கும்படி என்னை நீ பெற்றாயே" (எரே 15:10) என்று எரேமியா வேதனையோடு புலம்புகிறார்.

எரேமியாவின் வார்த்தைகள் கோபம் நிரம்பியதாகயிருக்கிறது. அவர் வழக்குக்கும் வாதுக்கும் உட்பட்டவராயிருக்கிறார். தன்னுடைய பரிதாபமான நிலமையை நினைத்து எரேமியா அழுது புலம்புகிறார். ஒரு சிலர் சமாதானமாயிருப்பார்கள். எல்லோரோடும் சமாதானமாய்ப் பழகுவார்கள். ஆனாலும் அவர்களுக்கும் வழக்கும் வாதும் வந்துவிடும்.

நாம் முடிந்த வரையிலும் எல்லோரோடும் சமாதானமாயிருக்க வேண்டும். யாரோடும் வாக்குவாதம்பண்ணக் கூடாது. நம்முடைய அயலகத்தாரோடு நம்மால் சமாதானமாய் ஜீவிக்க முடியவில்லையென்றால், நமக்கு ஏராளமான பிரச்சனைகள் வந்துவிடும். நம்முடைய சமாதானத்திற்கு ஆபத்து உண்டாகும். நாம் எல்லா சூழ்நிலைகளிலும் பொறுமையோடிருக்கவேண்டும். சமாதானமான வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டும்.

யூதா மனுஷர் மூலமாய் எரேமியாவுக்கு ஏராளமான பிரச்சனைகள் வருகிறது. அவர் நிந்தைகளையும் அவமானங்களையும் சந்திக்கிறார். எரேமியா மனுஷர் மத்தியில் பிரிவினை உண்டுபண்ணுகிறார் என்று யூதாவின் மனுஷர் அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். அவர் தேசத்தில் வழக்கையும், வாதையும் விதைக்கிறார் என்றும் அவரைப்பற்றி தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்லுகிறார். கர்த்தருடைய சத்தியத்தின் வெளிப்பாடு எரேமியாவுக்கு உண்டாயிருக்கிறது. கர்த்தர் தன்னுடைய வாயில் போடுகிற வார்த்தைகளை, எரேமியா யூதா மனுஷரிடத்தில் அப்படியே சொல்லுகிறார். அவரிடத்தில் பொய்யில்லை. யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் எரேமியாவின் ஊழியத்திற்காக அவருக்கு நன்றி சொல்லவேண்டும். எரேமியா கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்வதைப் பார்த்து, அவர்கள் கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

யூதாவின் மனுஷரோ எரேமியாவுக்கு நன்றி சொல்லாமல், அவரை சபிக்கிறார்கள். எரேமியாவுக்கு என்னென்ன பிரச்சனைகளையெல்லாம் கொடுக்க முடியுமோ அவையெல்லாவற்றையும் கொடுக்கிறார்கள். எரேமியாவின் சமாதானத்தை எடுத்துப்போடுகிறார்கள். எரேமியாவால் கர்த்தருடைய ஊழியத்தை சமாதானத்தோடு செய்ய முடியவில்லை. அவருடைய மனதில் ஆறுதல் இல்லை.

யூதாவின் மனுஷர் எரேமியாவை பொருளாதார விஷயங்களில் குற்றப்படுத்துகிறார்கள். அவரிடத்தில் உண்மையில்லை என்றும், அவர் ஒரு பேராசைக்காரர் என்றும் சொல்லி எரேமியாவைத் தூஷிக்கிறார்கள். எரேமியா அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு, மனம் உடைந்து, தன்னுடைய நிலமையை கர்த்தருடைய சமுகத்தில் சொல்லுகிறார்.

"ஐயோ! நான் அவர்களுக்கு வட்டிக்குக் கொடுத்ததுமில்லை, அவர்கள் எனக்கு வட்டிக்குக் கொடுத்ததுமில்லை; ஆனாலும் எல்லாரும் என்னைச் சபிக்கிறார்கள்" (எரே 15:10) என்று எரேமியா கர்த்தரிடத்தில் அழுது புலம்புகிறார்.

உலகப்பிரகாரமான காரியங்களில் அதிகமாய் ஈடுபடுகிறவர்களுக்கு வழக்குகளும் வாதுகளும் உண்டாகும். எரேமியாவோ கர்த்தருடைய தீர்க்கதரிசி. அவர் கர்த்தருடைய ஊழியத்தை மாத்திரம் செய்கிறவர். அவருக்கு உலகப்பிரகாரமான தொழிலோ அல்லது உலகப்பிரகாரமான வியாபாரமோ இல்லை. ஆனாலும் யூதாவின் மனுஷர் எரேமியாவை வட்டிக்கு கடன்கொடுக்கிறவர்போலவும், வட்டிக்கு கடன் வாங்குகிறவர்போலவும் பாவித்து பேசுகிறார்கள்.

எரேமியா எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர். அவரிடத்தில் வஞ்சனையோ, பிறரை ஏமாற்றுகிற குணமோ இல்லை. எரேமியா யாரோடும் கொடுக்கல் வாங்கல் வியாபாரமும் பண்ணவில்லை. கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்கள், உலகப்பிரகாரமான காரியங்களில் சிக்கிக்கொள்ளக்கூடாது. தங்களுடைய நற்சாட்சியையும், நற்பெயரையும் கெடுத்து விடக்கூடாது. தன்னுடைய பெயருக்கு களங்கம் ஏற்பட்டுவிடாதவாறு எரேமியா மிகுந்த கவனத்தோடிருக்கிறார்.

எரேமியா வட்டிக்கு கடன்கொடுக்கிறவரல்ல. அவர் யாருக்கும் வட்டிக்கு கடன்கொடுத்து வியாபாரம் பண்ணவில்லை. அவர் உலகப்பிரகாரமான வேறு வியாபாரங்கள் எதையும் செய்யவில்லை. அவர் யாரிடத்திலும் வட்டிக்கு பணம் வாங்கவுமில்லை.

எரேமியாவுக்கு மனைவியுமில்லை. பிள்ளைகளுமில்லை. அவருக்கு குடும்ப பொறுப்பு எதுவுமில்லை. அவர் தனிநபராகவே இருக்கிறார். "கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: நீ பெண்ணை விவாகம்பண்ண வேண்டாம்; இவ்விடத்தில் உனக்குக் குமாரரும் குமாரத்திகளும் இருக்க வேண்டாம் என்றார்" (எரே 16:1,2).

ஆனால் யூதாவின் மனுஷரோ எரேமியாவின்மீது பொய்யான குற்றச் சாட்டுக்களைச் சொல்லுகிறார்கள். அவர் பணத்தாசையுள்ளவர் என்றும், பணவிஷயங்களில் உண்மையில்லாதவர் என்றும் அவர்மீது பொய்யான குற்றத்தைச் சொல்லுகிறார்கள். எரேமியாவை வழக்குக்கும் வாதுக்கும் உட்படுத்துகிறார்கள்.

உனக்குச் சகாயஞ்செய்வேன் எரே 15:11,12

எரே 15:11. உன்னில் மீதியாயிருப்பவர்கள் நன்மையடைவார்கள்; தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ்செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்.

எரே 15:12. வடக்கேயிருந்து வரும் இரும்பையும் வெண்கலத்தையும் இரும்பு நொறுக்குமோ?

எரேமியா தன்னுடைய வேதனைகளை கர்த்தரிடத்தில் முறையிடுகிறார். கர்த்தரும் அவருடைய முறையீடுகளுக்கு உடனே பதில் கொடுத்துவிடுகிறார். கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு ஆறுதலாயிருக்கிறது. கர்த்தர் எரேமியாவுக்கு சகாயம் செய்வதாக வாக்குப்பண்ணுகிறார். எரேமியாவின் சத்துருக்களும், அவரை துன்பப்படுத்துகிறவர்களும் அழிந்துபோவார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் எரேமியாவின்மீது ஏராளமான குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறார்கள். அவற்றில் உண்மையில்லை. "உன்னில் மீதியாயிருப்பவர்கள் நன்மையடைவார்கள்" (எரே 15:11) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார். எரேமியா தன்னுடைய உண்மையையும், உத்தமத்தையும் காத்துக் கொள்ளவேண்டும். கர்த்தருக்கு பிரியமுள்ளவராயும், பிரயோஜனமுள்ளவராயும் இருக்கவேண்டும். அப்போது எரேமியாவின் மீதமுள்ள ஆயுசுகாலம் நன்மையால் நிரம்பியிருக்கும்.

"மீதியாயிருப்பவர்கள்" என்னும் வார்த்தைக்கு, "மீதமுள்ள ஆயுசுகாலம்" என்று பொருள். எரேமியாவுக்கு இதுவரையிலும் கிடைத்த கர்த்தருடைய நன்மைகளைவிட, இனிமேல் அவருடைய மீதமான ஆயுசுகாலத்தில் அதிக நன்மை உண்டாகும். எரேமியாவின் முடிவுகாலம் நன்மையுள்ளதாயும் சம்பூரணமானதாயும் இருக்கும்.

எரேமியா கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளையும், எச்சரிப்பின் வார்த்தைகளையும் யூதா மனுஷரிடத்தில் சொல்லும்போது, அந்த வார்த்தைகளை மிகுந்த மனபாரத்தோடு சொல்லுகிறார். வரப்போகிற அழிவை அவர்களுக்கு எச்சரித்துச் சொல்லும்போது, எரேமியாவின் இருதயம் மிகுந்த பாரத்தோடு அதைச் சொல்லுகிறது. எரேமியாவின் வார்த்தைகளை அவருடைய சிநேகிதர்கள்கூட ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய சத்துருக்கள் அவருடைய வார்த்தைகளை நிச்சயமாய் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எரேமியாவின் சத்துருக்கள் அவருக்கு அதிமான தீங்குகளை செய்வார்கள்.

கர்த்தரோ எரேமியாவுக்கு ஆறுதலான வார்த்தைகளைப் பேசுகிறார். எரேமியாவால் தனக்கு விரோதமாக எழும்பும் சிநேகிதர்களைக்கூட சமாளிக்க முடியவில்லை. அவருடைய சத்துருக்களை அவரால் நிச்சயம் சமாளிக்க முடியாது. இந்த சூழ்நிலையில் கர்த்தர் எரேமியாவுக்கு உதவி செய்ய முன்வருகிறார். "தீங்கின் காலத்திலும், நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்கு சகாயஞ்செய்வேன்" (எரே 15:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் இந்த வாக்கியத்தைச் சொல்லும்போது, "மெய்யாகவே சொல்லுகிறேன்" என்று சொல்லி, தம்முடைய வார்த்தைகளை உறுதிபண்ணுகிறார்.

எரேமியாவின் சத்துருக்கள் அவரை சூழ்ந்துகொள்ளும்போது, கர்த்தர் அவர்களை அழித்துப்போடுவார். யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் எரேமியாவுக்காக யுத்தம்பண்ணுவார். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால் எரேமியாவின் சத்துருவுக்கு எதிர்ப்படுவார். அதே வேளையில் கர்த்தர் எரேமியாவுக்கு சகாயஞ்செய்வதாகவும் வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசனம் சீக்கிரத்தில் நிறைவேறிற்று. நேபுகாத்நேச்சார் யூதாவின் பட்டணங்களையும், எருசலேம் நகரத்தையும் பிடித்தான். அப்போது அவன் தன்னுடைய படைத்தளபதியிடம், எரேமியாவை பட்சமாய் நடத்துமாறு கட்டளையிட்டான். எரேமியாவுக்கு தேவையான உதவிகளையும் செய்துகொடுத்தான்.

"ஆனாலும் எரேமியாவைக் குறித்து, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதானை நோக்கி: நீ அவனை அழைப்பித்து, அவனுக்கு ஒரு பொல்லாப்பும் செய்யாமல், அவனைப் பத்திரமாய்ப் பார்த்து, அவன் உன்னோடே சொல்லுகிறபடியெல்லாம் அவனை நடத்தென்று கட்டளைகொடுத்தான்" (எரே 39:11,12).

கர்த்தர் எரேமியாவிடம், "வடக்கேயிருந்து வரும் இரும்பையும் வெண்கலத்தையும் இரும்பு நொறுக்குமோ?" (எரே 15:12) என்று கேட்கிறார். கர்த்தர் எரேமியாவுக்கு ஏற்கெனவே வாக்குத்தத்தம் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் எரேமியா இருப்புத்தூணும், வெண்கல அலங்கமுமாயிருக்கிறார்.

"இதோ, தேசமனைத்துக்கும், யூதாவின் ராஜாக்களுக்கும், அதின் பிரபுக்களுக்கும், அதின் ஆசாரியர்களுக்கும், தேசத்தின் ஜனங்களுக்கும் எதிராக நான் உன்னை இன்றையதினம் அரணிப்பான பட்டணமும், இருப்புத்தூணும், வெண்கல அலங்கமும் ஆக்கினேன்" (எரே 1:18). இந்த வாக்குத்தத்தம் எரேமியாவுக்கு ஆறுதலைக் கொடுக்கிறது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் எரேமியாவுக்கு விரோதமாக எப்போதும் வாக்குவாதம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் முரட்டுக்குணமுள்ளவர்கள். இரும்பைப்போல கடின இருதயமுள்ளவர். எரேமியாவோ உன்னதத்திலிருந்து வரும் பெலத்தினால் தரிப்பிக்கப்பட்டிருக்கிறார். எரேமியா வடக்கேயிருந்து வரும் இரும்பைப்போல இருக்கிறார். கர்த்தரே எரேமியாவை இருப்புத்தூணாக்கியிருக்கிறார். வடக்கேயிருந்து வரும் இரும்பு மற்ற இரும்புகளைவிட வலுவானது. கெட்டியானது. அது அதிக உறுதியானது.

எரேமியா வடக்கேயிருந்து வரும் இருப்புத்தூணைப்போலவும், வெண்கல அலங்கத்தைப்போலவும் இருக்கிறார். இந்த இரும்பையும் வெண்கலத்தையும் சாதாரண இரும்பால் நொறுக்கமுடியாது. சாதாரண இரும்பை விட வடக்கேயிருந்து வரும் இரும்பு அதிக பெலமுள்ளது. எரேமியாவை அவருடைய சத்துருக்களால் ஜெயிக்க முடியாது.

"மனுபுத்திரனே, நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; அவர்கள் வார்த்தைகளுக்கும் அஞ்சவேண்டாம்; நெரிஞ்சில்களுக்குள்ளும் முள்ளுகளுக்குள்ளும் நீ தங்கியிருந்தாலும், நீ தேள்களுக்குள் வாசம்பண்ணினாலும், நீ அவர்கள் வார்த்தைகளுக்குப் பயப்படாமலும் அவர்கள் முகத்துக்குக் கலங்காமலுமிரு; அவர்கள் கலகவீட்டார்" (எசே 2:6).

"இதோ, உன் முகத்தை அவர்கள் முகத்துக்கு எதிராகவும், உன் நெற்றியை அவர்கள் நெற்றிக்கு எதிராகவும் கெட்டியாக்கினேன். உன் நெற்றியை வச்சிரக்கல்லைப்போலாக்கினேன், கன்மலையைப்பார்க்கிலும் கெட்டியாக்கினேன்; அவர்கள் கலகமுள்ள வீட்டாரென்று நீ அவர்களுக்குப் பயப்படாமலும் அவர்கள் முகங்களுக்குக் கலங்காமலும் இரு என்றார்" (எசே 3:8,9).

உன்னுடைய எல்லாப் பாவங்களினிமித்தமும் எரே 15:13,14

எரே 15:13. உன்னுடைய எல்லாப் பாவங்களினிமித்தமும், உன்னுடைய எல்லா எல்லைகளிலும், நான் உன் ஆஸ்தியையும், உன் பொக்கிஷங்களையும் கிரயமில்லாமல் சூறையிடுவிப்பேன்.

எரே 15:14. நீ அறியாத தேசத்தில் உன் சத்துருக்கள் வசமாக நான் உன்னைத் தாண்டிப்போகப் பண்ணுவேன்; உங்கள்மேல் எரியப்போகிற அக்கினி என் கோபத்தினாலே மூண்டது என்று கர்த்தர் சொன்னார்.

எரேமியாவின் சத்துருக்களும், அவரைத் துன்பப்படுத்துகிறவர்களும் புயல்காற்றிலே காணாமல் போவதைப்போல காணாமல் போய்விடுவார்கள் என்று கர்த்தர் அவருக்கு வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் இதுவரையிலும் எரேமியாவிடம் பேசிவிட்டு இப்போது யூதா மனுஷரிடத்தில் பேசுகிறார். "வடக்கேயிருந்து வரும் இரும்பையும் வெண்கலத்தையும் இரும்பு நொறுக்குமோ" (எரே 15:12) என்னும் வாக்கியம் யூதா மனுஷருக்கு சொல்லப்படுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

யூதாவின் மனுஷர் தங்களுடைய சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும் நம்புகிறார்கள். தங்களுக்கு தைரியம் இருப்பதாகவும், தங்களால் தேவனுடைய ஆலோசனைக்கு விரோதமாக எதிர்த்து நிற்கமுடியும் என்றும் நினைக்கிறார்கள்.

கல்தேயருடைய சேனை யூதா தேசத்திற்கு விரோதமாய் வருகிறது. தங்களுடைய சுயபலத்தினால் அவர்களோடு எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியும் என்று யூதாவின் மனுஷர் நினைக்கிறார்கள். கல்தேயரின் சேனையிலுள்ளவர்கள் வடக்கேயிருந்து வரும் இரும்பைப்போல இருக்கிறார்கள். உறுதியான நெஞ்சமுடையவர்கள். யாருக்கும் ஈவு இரக்கம் காண்பிக்கமாட்டார்கள். கல்தேயர்கள் தங்கள் கைகளில் அகப்படும் எதிரி தேசத்தாரை சங்காரம்பண்ணிவிடுவார்கள்.

யூதா மனுஷருடைய சுயபலமும், சுயதைரியமும், சுயபராக்கிரமமும், சாதாரண இரும்பைப்போல இருக்கிறது. இவர்களால் வடக்கேயிருந்து வரும் கல்தேயரை எதிர்த்து நிற்கமுடியாது. கல்தேயர்கள் வடக்கேயிருந்து வரும் இரும்பைப்போலவும், வெண்கலத்தைப் போலவும் உறுதியாயிருக்கிறார்கள். அவர்கள் யூதா மனுஷருடைய எல்லா எல்லைகளிலும் வந்து, யூதா தேசத்தை சூறையிடுவார்கள்.

கல்தேயர்கள் யூதா மனுஷருடைய பொக்கிஷங்களையும், எருசலேம் குடிகளுடைய ஆஸ்திகளையும் கிரயமில்லாமல் சூறையிடுவார்கள். யூதர்களுடைய எல்லா பாவங்களினிமித்தம் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமும், சித்தத்தின் பிரகாரமும் யூதாவின் மனுஷருக்கு இந்தத் தண்டனை உண்டாயிற்று.

எரேமியா தீர்க்கதரிசி ஒரு செல்வந்தரல்ல. அவர் ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்தவர். கல்தேயர்கள் யூதா மனுஷருடைய ஆஸ்தியையும், பொக்கிஷங்களையும் கொள்ளையிடும்போது, எரேமியாவுக்கு ஒரு இழைப்பும் உண்டாகாது. இழந்துபோவதற்கு அவரிடத்தில் ஆஸ்தியோ, பொக்கிஷங்களோ ஒன்றுமில்லை. இதன் நிமித்தமாய் கல்தேயர்கள் எரேமியாவை நன்றாய் விசாரிப்பார்கள். அவரைப் பட்சமாய் நடத்துவார்கள்.

யூதாவின் மனுஷரிடத்திலோ திரளான பொக்கிஷங்களும், ஏராளமான ஆஸ்திகளும் இருக்கிறது. கல்தேயர்கள் அவர்களை சூறையாடுவார்கள். கல்தேயர்கள் அவர்களுடைய பொக்கிஷங்களை சூறையாடுவதற்காக, அவர்களை சங்காரம்பண்ணிப்போடுவார்கள். இந்த பேரழிவு யூதா தேசத்தின் எல்லா எல்லைகளிலும் உண்டாகும். தேசத்தின் கடைசி எல்லையிலுள்ளவர்களும் சங்காரமாவார்கள்.

யூதா தேசத்தின் பாவத்திலும் அக்கிரமத்திலும், அதன் குடிமக்கள் எல்லோருக்குமே பங்கு இருக்கிறது. தேசம் முழுவதும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, பாவத்திற்கு வரும் தண்டனையில் தேசத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் பங்கு இருக்கும்.

யூதா தேசத்தாரின் பாவங்களினிமித்தமாய் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. கர்த்தர் அவர்களிடத்தில், "நீ அறியாத தேசத்தில் உன் சத்துருக்கள் வசமாக நான் உன்னை தாண்டிப்போகப்பண்ணுவேன்" (எரே 15:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். இது கர்த்தருடைய கோபமான வார்த்தை. கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய கரங்களிலிருந்து நியாயத்தீர்ப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் தண்டனைகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். அவர்களுடைய எல்லா பாவங்களினிமித்தமும், கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது.

"உங்கள்மேல் எரியப்போகிற அக்கினி என் கோபத்தினாலே மூண்டது" (எரே 12:14) என்று கர்த்தர் யூதா மனுஷரிடத்தில் சொல்லுகிறார். யூதாவின் மனுஷருக்கு சமாதானம் இருக்காது. அவர்களுக்கு ஆறுதலும் உண்டாகாது. கர்த்தரிடத்திலிருந்து அவர்களுக்கு ஒரு நன்மையும் கிடைக்காது.

கர்த்தாவே
எரே 15:15-18

எரே 15:15. கர்த்தாவே, நீர் அதை அறிவீர்; தேவரீர் என்னை நினைத்து, என்னை விசாரித்து, என்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு என்னிமித்தம் நீதியைச் சரிக்கட்டும்; உம்முடைய நீடிய பொறுமையினிமித்தம் என்னை வாரிக்கொள்ளாதிரும்; நான் உம்முடைய நிமித்தம் நிந்தையைச் சகிக்கிறேன் என்று அறியும்.

எரே 15:16. உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது.

எரே 15:17. நான் பரியாசக்காரருடைய கூட்டத்தில் உட்கார்ந்து களிகூர்ந்ததில்லை; உமது கரத்தினிமித்தம் தனித்து உட்கார்ந்தேன்; சலிப்பினால் என்னை நிரப்பினீர்.

எரே 15:18. என் நோவு நித்தியகாலமாகவும், என் காயம் ஆறாத கொடிய புண்ணாகவும் இருப்பானேன்? நீர் எனக்கு நம்பப்படாத ஊற்றைப்போலவும், வற்றிப் போகிற ஜலத்தைப்போலவும் இருப்பீரோ?

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தரிடத்தில் பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார். "கர்த்தாவே, நீர் அதை அறிவீர்" என்று சொல்லுகிறார். எரேமியா கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியக்காரர். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் எரேமியாவின் ஊழியத்தைப் புரிந்துகொள்ள வில்லை. அவர் தங்களுக்கு நன்மை உண்டாகவே ஊழியம் செய்கிறார் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ள வில்லை. ஆனால் எரேமியாவையும், அவருடைய ஊழியத்தையும் கர்த்தர் அறிந்திருக்கிறார். எரேமியாவின் ஊழியத்தினிமித்தமாய், அவர் அனுபவிக்கிற எல்லா பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் கர்த்தர் அறிந்திருக்கிறார்.

எரேமியாவின் வேதனை யூதாவின் மனுஷருக்கு தெரியவில்லை. அவர்கள் அதைத் தெரிந்துகொள்ளவும் விரும்பவில்லை. தன்னைப்பற்றி கர்த்தர் அறிந்திருந்தால், அதுவே தனக்கு போதுமானது என்று எரேமியா நினைக்கிறார். கர்த்தர் தன்னை நினைக்கவேண்டும். அவர் தன்னை அறிந்துகொள்ளவேண்டும். இதுவே எரேமியாவின் விருப்பம்.

கர்த்தர் எரேமியாவை விசாரிக்கும் போது, அவருக்கு ஆறுதலும், பெலமும் உண்டாகும். எரேமியா இதை எதிர்பார்த்து, "தேவரீர், என்னை நினைத்து, என்னை விசாரியும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

யூதா தேசத்தார் எல்லோருமே எரேமியாவுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கை அதிகம். ஆனால் எரேமியாவோ தனி மனுஷனாக அவர்கள் மத்தியில் ஊழியம் செய்கிறார். கர்த்தர் தன் பக்கத்திலிருந்து, தன்னை நினைத்து, தன்னை விசாரித்து, தனக்கு உதவிசெய்யவேண்டுமென்று எரேமியா எதிர்பார்க்கிறார். "தேவரீர், என்னை துன்பப்படுத்துகிறவர்களுக்கு என்னிமித்தம் நீதியைச் சரிக்கட்டும்" என்று எரேமியா கர்த்தரிடத்தில் பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்.

பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. கர்த்தரே நீதியைச் சரிக்கட்டுகிறவர். யூதா மனுஷரில் அநேகர் எரேமியாவுக்கு சத்துருவாயிருக்கிறார்கள். அவருக்கு தீங்கு செய்கிறார்கள். எரேமியாவைத் துன்பப் படுத்துகிறார்கள். தன்னைத் துன்பப் படுத்துகிறவர்களை கர்த்தர் சர்வநாசம் பண்ணவேண்டும் என்றோ, அவர்களுடைய குடும்பத்தார் சர்வசங்காரமாகவேண்டும் என்றோ எரேமியா விண்ணப்பம்பண்ண வில்லை. அப்படிப்பட்ட தண்டனை அவர்களுக்கு வரவேண்டும் என்பது எரேமியாவின் விருப்பமுமல்ல.

தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு, கர்த்தர் நீதியைச் சரிக்கட்டவேண்டும் என்றே எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களும், தங்களைப்போல பிறரை நேசிக்கிறவர்களும் எரேமியாவைப் போலத்தான் ஜெபம்பண்ணுவார்கள். தங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு இதைவிட பெரிய தண்டனை வரவேண்டுமென்று எதிர்பார்க்கமாட்டார்கள்.

கர்த்தர் நீதியுள்ளவர். எரேமியாவும் ஒரு நீதிமான். அவர் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிறவர். இந்த உண்மையை இந்த உலகமும் அறிந்துகொள்ளவேண்டும், அதிலும் விசேஷமாக யூதாவின் மனுஷர் அறிந்து கொள்ளவேண்டும். இதன் நிமித்தமாகவே தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு, கர்த்தர் நீதியைச் சரிக்கட்டவேண்டும் என்று எரேமியா விண்ணப்பம்பண்ணுகிறார்.

எரேமியா, தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு விரோதமாக ஜெபம்பண்ணினாலும், கர்த்தர் தன்மீது கிருபையாயிருக்கவேண்டும் என்றும் ஜெபம்பண்ணுகிறார். எரேமியாவினிடத்தில் மனத்தாழ்மையிருக்கிறது. அவர் தன்னை மிகப்பெரிய பரிசுத்தவான்போல காண்பித்துக் கொள்ளவில்லை. யூதாவின் மனுஷரைப் போலவே, தன்னிடத்திலும் தப்பிதங்கள் இருக்கலாம் என்று நினைக்கிறார். கர்த்தர் தம்முடைய நீதியினால், தன்னைத் தண்டித்துவிடக்கூடாது என்று நினைத்து, எரேமியா கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்துகிறார். "உம்முடைய நீடிய பொறுமையினிமித்தம் என்னை வாரிக்கொள்ளாதிரும்" (எரே 15:15) என்று எரேமியா விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய கிருபையினால் தனக்கு பூரண ஆயுசு கிடைக்கவேண்டும் என்று எரேமியா எதிர்பார்க்கிறார். எரேமியா ஒரு சமயம், தன்னுடைய மனவேதனையினாலும், வருத்தத்தினாலும், தான் பிறந்ததைப்பற்றி வேதனையோடு சொன்னார். "என் தாயே, தேசத்திற்கெல்லாம் வழக்குக்கும் வாதுக்கும் உள்ளானவனாயிருக்கும்படி என்னை நீ பெற்றாயே" (எரே 15:10) என்று எரேமியா வேதனையோடு சொன்னார்.

ஆனாலும் இப்போது தனக்கு சீக்கிரத்தில் மரணம் வந்துவிடக்கூடாது என்று எரேமியா எதிர்பார்க்கிறார். எரேமியாவின் காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தர் தனக்கு நியமித்திருக்கிற காலம் வரையிலும், தான் இந்தப் பூமியில் ஜீவிக்கவேண்டுமென்று எரேமியா விரும்புகிறார். தேவனுடைய கிருபை எரேமியாவுக்கு கிடைக்கும்போது, இந்தப் பூமியில் அவருடைய ஜீவியம் அநேகருக்கு பிரயோஜனமுள்ளதாயிருக்கும்.

எரேமியாவுக்கு விரோதமாக யூதாவின் மனுஷரில் ஏராளமானோர் எழும்பியிருக்கிறார்கள். அவர்கள் எரேமியாவுக்கு சத்துருக்களாயும், அவரைத் துன்பப்படுத்துகிறவர்களாயும், அவர்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சொல்லுகிறவர்களாயும் இருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், தன்னை சத்துருக்களிடமிருந்து விலக்கிப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்று எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய நாமம் மகிமைப்பட வேண்டும். இதுவே எரேமியாவின் விருப்பம். தான் பாடுகளை அனுபவித்தாலும், கர்த்தர் துதிக்கும், கனத்திற்கும், மகிமைக்கும் உரியவர் என்பதில் எரேமியா உறுதியாயிருக்கிறார். "நான் உம்முடைய நிமித்தம் நிந்தையை சகிக்கிறேன்" என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். இந்த உண்மையை கர்த்தரும் அறிந்துகொள்ளவேண்டும் என்று எரேமியா விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருக்கு ஊழியம் செய்கிறதற்காக எரேமியாவுக்கு நிந்தை உண்டாயிற்று. நன்மை செய்ததினிமித்தமாய் எரேமியா பாடுகளை அனுபவிக்கிறார். நீதியை செய்வதினிமித்தமாய் எரேமியாவுக்கு துன்பம் உண்டாயிற்று. எரேமியா கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறார். இதனால் யூதாவின் மனுஷர் எரேமியாவைத் தூஷிக்கிறார்கள். எரேமியாவுக்கு விரோதமாகப் பேசுகிறார்கள்.

கர்த்தருடைய நாமம் எப்படியாவது மகிமைப்படவேண்டும் என்பதில் எரேமியா மிகுந்த ஆர்வத்தோடிருக்கிறார். தனக்கு நிந்தை வந்தாலும், கர்த்தருக்கு மகிமை வரவேண்டுமென்று எரேமியா ஆசைப்படுகிறார். கர்த்தருடைய நாமமகிமையினிமித்தம், எரேமியா நிந்தையையும், தூஷண வார்த்தைகளையும் சகித்துக்கொள்கிறார் "சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது" (எரே 15:16) என்று எரேமியா சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி தேவனுடைய வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கு பிரசங்கம் பண்ணுகிறார். மற்றவர்களுக்கு பிரசங்கம்பண்ணுவதற்கு முன்பாகவே, எரேமியா கர்த்தருடைய வார்த்தைகளை தனக்குத்தானே பிரசங்கம்பண்ணிக் கொள்கிறார். தன்னுடைய ஆத்துமாவில், கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தியங்களை அனுபவிக்கிறார். இதனால் ஆவியானவர் அவருக்குள் கிரியை நடப்பிக்கிறார். தேவனுடைய தெய்வீக கிருபைகளையும், விசேஷித்த சிலாக்கியங்களையும், நன்மையான ஈவுகளையும் பிரயோஜனமுள்ள தாலந்துகளையும் பெற்றுக்கொள்வதற்கு, பரிசுத்த ஆவியானவர் எரேமியாவைத் தகுதிப்படுத்துகிறார்.

எரேமியா தீர்க்கதரிசியும் கர்த்தருடைய வார்த்தைகளின் மகத்துவத்தை உணர்ந்துகொண்டவராக, "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்" (எரே 15:14) என்று பயபக்தியோடு சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைகளை ருசிபார்த்தது மாத்திரமல்ல, அவர் அதை புசிக்கவும் செய்கிறார். அதன் நன்மைகளை அனுபவிக்கிறார்.

பசியோடிருக்கிறவர்கள் போஜனத்தை ஆசையாய்ப் புசிப்பதுபோல, எரேமியா தீர்க்கதரிசியும் கர்த்தருடைய வார்த்தைகளை ஆர்வத்தோடு உட்கொள்கிறார்.

"மனுபுத்திரனே, நீ அந்தக் கலகவீட்டாரைப்போலக் கலகக்காரனாயிராமல், நான் உன்னோடே சொல்லுகிறதைக் கேள்; உன் வாயைத் திறந்து நான் உனக்குக் கொடுக்கிறதைப் புசி என்றார்" (எசே 2:8).

"நான் தூதனிடத்தில் போய்: அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன். அதற்கு அவன்: நீ இதை வாங்கிப் புசி; இது உன் வயிற்றுக்குக் கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதுரமாயிருக்கும் என்றான்" (வெளி 10:9).

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை உட்கொண்டவுடனே, அந்த வார்த்தைகள் அவருக்கு சந்தோஷமும், அவருடைய இருதயத்திற்கு மகிழ்ச்சியுமாயிருக்கிறது. இதற்குமேல் புசிப்பதற்கு அவருக்கு ஒன்றும் தேவைப்படவில்லை. கர்த்தருடைய வார்த்தைகளே அவருக்குப் போதுமானதாயிருக்கிறது. அவருக்கு திருப்தியும் சந்தோஷமும் உண்டாயிற்று.

எரேமியா தீர்க்தரிசி கர்த்தருடைய வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் சொல்லவேண்டும். யூதா தேசம் அழியப்போகிறது என்பதை எரேமியா ஜனங்களுக்கு முன்னறிவிக்கவேண்டும். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் பட்டயத்தினால் சங்காரமாகப்போகிறார்கள் என்னும் செய்தியை எரேமியா ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகள் பயங்கரமானதாகயிருந்தாலும், அந்த வார்த்தைகள் எரேமியாவுக்கு சந்தோஷமாயிருக்கிறது. அது அவருடைய இருதயத்திற்கு மகிழ்ச்சியாயிருக்கிறது.

யூதாதேசம் அழியும்போது, எருசலேமின் குடிகள் சங்காரமாகும்போது எல்லோருக்கும் வேதனை உண்டாகும். எரேமியாவும் யூதா தேசத்தைச் சேர்ந்தவர். அவருக்கும் அந்த அழிவிலும் வேதனையிலும் பங்கு இருக்கும். வேதனை ஒரு பக்கம் இருந்தாலும், கர்த்தருடைய நாமம் மகிமைப்படவேண்டும் என்பதே எரேமியாவின் பிரதான நோக்கம். தனக்கு வேதனை வந்தாலும், தேவனுடைய நீதி நிலைநிறுத்தப்படவேண்டும் என்று எரேமியா விரும்புகிறார். கர்த்தருடைய மகிமையைப் பற்றியும் அவருடைய நீதியைப்பற்றியும் எரேமியா பக்திவைராக்கியத்தோடிருக்கிறார்.

எரேமியா சொல்ல வேண்டிய செய்தி எச்சரிப்பின் செய்தியாகயிருந்தாலும், அவர் பேசவேண்டிய வார்த்தைகள் தேவனுடைய கோபாக்கினையின் வார்த்தைகளாகயிருந்தாலும், அந்தச் செய்தியும் வார்த்தைகளும் கர்த்தரிடத்திலிருந்தே வந்திருக்கிறது. அது கர்த்தருடைய செய்தி. அது கர்த்தருடைய வார்த்தைகள். இந்த வார்த்தைகள் எரேமியாவுக்கு சந்தோஷமாயிருக்கிறது. அது அவருடைய இருதயத்திற்கு மகிழ்ச்சியாயிருக்கிறது.

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் தேவனிடத்திலிருந்து எச்சரிப்பின் வார்த்தை வந்திருக்கிறது. யூதாவின் மனுஷர் கர்த்தருடைய எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்டு, தங்கள் இருதயத்தில் எச்சரிக்கப்படுவார்கள் என்றும், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்றும், எரேமியா எதிர்பார்க்கிறார். தங்கள் தேசத்தின்மீதும், தங்கள்மீதும் வரப்போகிற அழிவுக்கு அவர்கள் தப்பித்துக் கொள்வார்கள் என்றும், எரேமியா எதிர்பார்க்கிறார். யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவதினால், தேவன் தம்முடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றமாட்டார் என்றும், தாம் அவர்களுக்கு கொடுக்க நினைத்த தண்டனையை தள்ளிவிடுவார் என்றும், கர்த்தருடைய கோபம் தணியும் என்றும் எரேமியா எதிர்பார்க்கிறார். இதனால் கர்த்தருடைய வார்த்தைகள் அவருக்கு சந்தோஷமாயிருக்கிறது. அவை எரேமியாவின் இருதயத்திற்கு மகிழ்ச்சியாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் சொல்லுமாறு, எரேமியாவுக்கு கட்டளைகொடுக்கிறார். எரேமியா கர்த்தருடைய இந்த வார்த்தைகளைச் சொல்லும் போது, அவருக்கு பெயரும் புகழும் உண்டாகாது. அவருக்கு ஒரு நன்மையும் கிடைக்காது. உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் எதுவும் எரேமியாவுக்கு வராது.

எரேமியா கர்த்தருடைய வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கு சொல்லும்போது, அவர்கள் எரேமியாவின்மீது கோபப்படுவார்கள். அவரைத் தூஷிப்பார்கள். அவரைப் பிடித்து துன்பப்படுத்துவார்கள். எரேமியாவை மிகுந்த உபத்திரவத்திற்குட்படுத்துவார்கள். ஆனாலும் எரேமியாவுக்கு கர்த்தருடைய வார்த்தை சந்தோஷமாயிருக்கிறது. அது அவருடைய இருதயத்திற்கு மகிழ்ச்சியாயிருக்கிறது.

"இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" (யோவா 4:34).

எரேமியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தர் தன்னுடைய வாயில் போட்ட வார்த்தைகளை, யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் பயப்படாமல் அறிவிக்கவேண்டும். கர்த்தரும் எரேமியாவோடு கூடயிருந்து, அவருக்கு உதவிசெய்வதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்.

"நீ அவர்களுக்குப் பயப்படவேண்டாம்; உன்னைக் காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொன்னார்" (எரே 1:8). கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிற உதவிகளையும் ஒத்தாசைகளையும் நினைக்கும்போது, கர்த்தருடைய வார்த்தைகள் அவருக்கு சந்தோஷமாயிருக்கிறது. அது அவருடைய இதயத்திற்கு மகிழ்ச்சியாயிருக்கிறது.

எரேமியா கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிறார். உற்சாகமாய்ச் செய்கிறார். தன்னைத்தானே வெறுத்து, கர்த்தருடைய ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். ஆனால் கர்த்தருடைய ஊழியத்தில் எரேமியாவுக்கு பூரண திருப்தியோ, சந்தோஷமோ கிடைக்கவில்லை. எரேமியாவுக்கு ஊழியத்தில் சற்று சலிப்பு உண்டாயிற்று.

"நான் பரியாசக்காரருடைய கூட்டத்தில் உட்கார்ந்து களிகூர்ந்ததில்லை; உமது கரத்தினிமித்தம் தனித்து உட்கார்ந்தேன்; சலிப்பினால் என்னை நிரப்பினீர்" (எரே 15:17) என்று எரேமியா வருத்தத்தோடு சொல்லுகிறார்.

எரேமியா ஜெபத்திலே தனித்து உட்கார்ந்திருக்கிறார். கர்த்தரோடு ஜெபம்பண்ண அதிகநேரம் செலவிடுகிறார். கர்த்தருடைய கரம் எரேமியாவின்மேல் அமர்ந்திருக்கிறது. அவருடைய கரம் பலமுள்ளது. அது பலத்த கிரியைகளை நடப்பிக்கும். தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு, கர்த்தர் தம்முடைய கரத்தை எரேமியாவின்மீது வைத்திருக்கிறார். கர்த்தர் எரேமியாவை கரம்பிடித்து வழிநடத்துகிறார்.

"ஆவி என்னை உயர எடுத்துக் கொண்டது; நான் என் ஆவியின் உக்கிரத்தினாலே மனங்கசந்துபோனேன்; ஆனாலும் கர்த்தருடைய கரம் என்மேல் பலமாக இருந்தது" (எசே 3:14) என்று எசேக்கியேல் சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி யூதா மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் செய்தியையும், அவருடைய கோபாக்கினையின் செய்தியையும் சொல்லவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளில் கிருபையும் இரக்கமும் இல்லை. அதில் கோபமும், நியாயத்தீர்ப்பும் இருக்கிறது. கர்த்தருடைய கோபமான வார்த்தைகளை எரேமியா சொல்லும்போது, அவருடைய இருதயத்தில் பயமும், வேதனையும், துக்கமும், வருத்தமும் உண்டாயிற்று.

எரேமியாவால் கர்த்தருடைய ஊழியத்தை சந்தோஷமாய்ச் செய்யமுடியவில்லை. கர்த்தர் எரேமியாவின் வாயில் சந்தோஷமான வார்த்தைகளைப் போடவில்லை. கர்த்தர் எரேமியாவின் வாயில் கோபமான வார்த்தைகளையும், நியாயத்தீர்ப்புக்கேதுவான வார்த்தைகளையும் போட்டிருக்கிறார். எரேமியா கர்த்தர் கொடுத்த வார்த்தையைத்தான் சொல்லவேண்டும். அவர் தன்னுடைய சுயவிருப்பத்தின் பிரகாரம் ஒன்றும் பேசக்கூடாது. யூதா தேசத்திற்கு வரப்போகிற அழிவை நினைத்து, எரேமியாவுக்கு வருத்தமும் மனவேதனையும் உண்டாயிற்று.

எரேமியா கர்த்தருடைய சமுகத்தில் தனித்து உட்கார்ந்து அழுது புலம்புகிறார். வரப்போகிற நியாயத்தீர்ப்பினிமித்தமாய், எரேமியா யூதா மனுஷருக்காக கர்த்தரிடத்தில் பரிந்துபேசுகிறார். அவரால் பரியாசக் காரருடைய கூட்டத்தில் உட்கார்ந்து களிகூர முடியவில்லை. எரேமியாவின் வாயில் சந்தோஷமான வார்த்தைகளோ, சீர்வாதமான வார்த்தைகளோ, ஆறுதலான வார்த்தைகளோ இல்லை. அதனால் அவருக்கும் சந்தோஷமில்லை. எரேமியாவால் தன் ஊழியத்தை நினைத்து களிகூரமுடியவில்லை.

எரேமியா யூதா மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிறார். கர்த்தர் அவருடைய வாயில் போட்ட கோபாக்கினையின் வார்த்தைகளையும், நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளையும் யூதா மனுஷர் மத்தியில் சொல்லுகிறார். ஆனால் யூதாவின் மனுஷரோ எரேமியாவின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. வரப்போகிற அழிவை நினைத்து அவர்கள் வருத்தப்படவுமில்லை.

அவர்கள் எரேமியாவைத் தூஷிக்கிறார்கள். எரேமியா சொல்லுவது கர்த்தருடைய வார்த்தை என்பதை நம்ப மறுக்கிறார்கள். அவர்கள் எரேமியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசியாக அங்கீகரிக்க வில்லை. இதனால் எரேமியாவின் இருதயத்தில் வருத்தமும், வேதனையும் உண்டாயிற்று. எரேமியா கர்த்தருடைய சமுகத்தில், வேதனையோடு அமர்ந்து, "சலிப்பினால் என்னை நிரப்பினீர்" (எரே 15:17) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் கிருபையும் இரக்கமும் நிரம்பியவர். அவர் எரேமியாவுக்கு வாக்குத்தத் வார்த்தைகளைக் கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் எரேமியாவைப் பலப்படுத்துவதாகவும், சத்துருக்களிடமிருந்து அவரை பாதுகாப்பதாகவும் வாக்குப் பண்ணியிருக்கிறார். ஆனால் எரேமியாவுக்கோ வேதனையும், வருத்தங்களும் உண்டாயிற்று. அவருக்கு நோயும் காயங்களும் வந்திருக்கிறது. "என் நோவு நித்தியகாலமாகவும், என் காயம் ஆறாத கொடிய புண்ணாகவும் இருப்பானேன்?" (எரே 15:18) என்று எரேமியா கர்த்தரிடத்தில் கேட்கிறார்.

கர்த்தர் எரேமியாவுக்கு ஆபத்துக்காலத்திலே உதவி செய்வதாக வாக்குப்பண்ணியிருக்கிறார். ஆனால் அவருக்கு கர்த்தரிடத்திலிருந்து உதவி உடனே கிடைக்கவில்லை. எரேமியா கர்த்தரை நம்பி ஊழியம் செய்கிறார். ஆனால் கர்த்தர் தன்னுடைய நம்பிக்கைக்கு பாத்திரமாயில்லை என்னும் சந்தேகமும், வேதனையும் எரேமியாவுக்கு உண்டாயிற்று. "நீர் எனக்கு நம்பப்படாத ஊற்றைப்போலவும், வற்றிப் போகிற ஜலத்தைப்போலவும் இருப்பீரோ?" (எரே 15:18) என்று எரேமியா கர்த்தரிடத்தில் வேதனையோடு கேட்கிறார்.

கர்த்தர் தன்னைக் கைவிடமாட்டார் என்பது எரேமியாவுக்குத் தெரியும். பொய் சொல்லுவதற்கு கர்த்தர் ஒரு மனுஷரல்ல. அவர் எப்போதுமே நம்முடைய நம்பிக்கைக்கு பாத்திரமான நீரூற்றாகவே இருக்கிறார். அவர் நமக்கு வற்றாத ஜலமாகயிருக்கிறார். கர்த்தருடைய ஜீவஊற்று நமக்கு வற்றாத நீரூற்றாயிருக்கும். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

உன்னை விடுவிப்பேன்
எரே 15:19-21

எரே 15:19. இதினிமித்தம்: நீ திரும்பினால் நான் உன்னைச் திரும்பச் சீர்ப்படுத்துவேன்; என் முகத்துக்கு முன்பாக நிலைத்துமிருப்பாய்; நீ தீழ்ப்பானதினின்று விலையேறப் பெற்றதைப் பிரித்தெடுத்தால், என் வாய் போலிருப்பாய்; நீ அவர்களிடத்தில் திரும்பாமல், அவர்கள் உன்னிடத்தில் திரும்புவார்களாக என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 15:20. உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம் பண்ணுவார்கள், ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள்; உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத் தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 15:21. நான் உன்னைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவித்து, உன்னைப் பலவந்தரின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன் என்கிறார்.

எரேமியாவின் விண்ணப்பத்திற்கு இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தர் தமது கிருபையினால் பதில்கொடுக்கிறார். கர்த்தர் எரேமியாவிடமிருந்து சில காரியங்களை எதிர்பார்க்கிறார். எரேமியா கர்த்தருடைய ஊழியக்காரர். அவர் கர்த்தருக்கு சொந்தமானவர். தம்முடைய பிள்ளைகள், தமக்குப் பிரியமானவர்களாகவும், தமக்கு பிரயோஜனமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமென்று கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

முதலாவதாக எரேமியா தன்னுடைய கோபத்தைவிட்டு விலகி வரவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் ஒருபோதும் அவரை குறைசொல்லக்கூடாது. எரேமியா கர்த்தரிடத்தில், "நீர் எனக்கு நம்பப்படாத ஊற்றைப்போலவும், வற்றிப்போகிற ஜலத்தைப்போலவும் இருப்பீரோ" (எரே 15:17) என்று அவிசுவாச வார்த்தைகளைக் கேட்டார். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசக்கூடாது.

கர்த்தர் எரேமியாவிடம், "நீ திரும்பினால் நான் உன்னை திரும்ப சீர்படுத்துவேன்" (எரே 15:19) என்று சொல்லுகிறார். எரேமியா தன்னுடைய ஊழியத்திற்கு மறுபடியுமாய்த் திரும்பி வரவேண்டும். தன்னுடைய மனதில் இருக்கக்கூடிய கோபங்கள், அவிசுவாசங்கள் ஆகிய எல்லாவற்றையும் உதறி தள்ளிவிட்டு, கர்த்தரிடத்தில் விசுவாசத்தோடு திரும்பி வரவேண்டும். எரேமியாவின் இருதயத்தில் கர்த்தருக்கு விரோதமான சிந்தனைகள் எதுவும் இருக்கக்கூடாது. அவர் மறுபடியுமாய் கர்த்தருடைய ஊழியத்திற்கு தன்னை முற்றிலுமாய் ஒப்புக்கொடுக்கவேண்டும். விசுவாசமில்லாமல் கர்த்தருடைய ஊழியத்தை செய்வது இயலாத காரியம்.

கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தில் உண்மையாயிருக்கவேண்டுமென்று, எரேமியா தீர்மானம்பண்ண வேண்டும், எரேமியா கர்த்தரை நம்பாமலிருப்பதற்கு, அவரிடத்தில் ஒரு காரணமுமில்லை. கர்த்தர் எரேமியாவுக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. அவரைக் கைவிடவில்லை. ஆனாலும் எரேமியா தன்னுடைய அவிசுவாசத்தினால் கர்த்தர்மீது குற்றம் சொல்லுகிறார். எரேமியாவின் இருதயம் சுத்தமாயிருக்கிறது. கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்யவேண்டும் என்னும் ஆர்வம் அவருடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது.

கர்த்தர் எரேமியாவின் இருதயத்தைப் பார்க்கிறார். அவருடைய இருதயத்தில் தப்பிதம் ஒன்றுமில்லை. ஆனாலும் எரேமியாவின் வாய் அவிசுவாசமான வார்த்தைகளைப் பேசுகிறது. ஆகையினால் கர்த்தர் எரேமியாவை இப்போதே எச்சரிக்கவேண்டும் என்று தீர்மானிக்கிறார். ஆரம்பத்திலேயே எச்சரித்துவிட்டால், எரேமியா சரியான பாதையில் நடப்பார். கர்த்தருடைய அடிச்சுவடுகளை உண்மையாய்ப் பின்பற்றுவார்.

தீழ்ப்பானதிலிருந்து விலையேறப் பெற்றதை பிரித்தெடுத்ததுபோல எரேமியா சுத்தமாயிருக்கவேண்டும். அப்போதுதான் அவரால் கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக நிலைத்திருக்க முடியும். எரேமியா கர்த்தருடைய வாய் போல் இருப்பார். நீதிமான்கள் கர்த்தருடைய பார்வைக்கு அருமையானவர்கள். அவர்கள் சமுதாயத்தில் ஏழைகளாகயிருந்தாலும், சாதாரண ஜனங்களாகயிருந்தாலும், அவர்கள் எப்படிப்பட்ட சமுதாய அந்தஸ்துக்களிலிருந்தாலும் நீதிமான்கள் எல்லோருமே கர்த்தருக்கு பிரியமானவர்கள்தான்.

துன்மார்க்கரோ கர்த்தருக்கு அருவருப்பானவர்கள். அவர்கள் ஐசுவரியவான்களாகயிருந்தாலும், பிரபுக்களாகயிருந்தாலும், சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துக்களிலிருந்தாலும், துன்மார்க்கர்கள் எல்லோரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்தான். சமுதாயத்தில் நீதிமான்களும் துன்மார்க்கரும் கலந்திருக்கிறார்கள். கோதுமை மணியும், பதரும் ஒரே நிலத்தில் இருப்பதுபோல, இவர்கள் மனுஷர் மத்தியில் கலந்திருக்கிறார்கள். அவர்களுடைய பெயர்களை வைத்து, அவர்களை வேறுபிரிக்க முடியாது. நாம் அவர்களுடைய சுபாவங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

நாம் மனுஷருடைய முகத்தைப் பார்க்கிறோம். கர்த்தரோ மனுஷருடைய இருதயங்களைப் பார்க்கிறார். கர்த்தர் அவரவர்களுக்குரிய பங்கை கொடுக்கிறார். நீதிமான்களுக்கு நன்மையையும், துன்மார்க்கருக்கு தீமையையும் வரப்பண்ணுகிறார். நீதிமான்களுக்கு சமாதானமும், சந்தோஷமும், ஆறுதலும் உண்டாயிருக்கும். துன்மார்க்கருக்கோ சாபங்களும், வேதனைகளும், உபத்திரவங்களும் உண்டாயிருக்கும். பரிசுத்தவான்கள் கர்த்தருக்குப் பிரியமானவர்கள். பாவிகள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்.

"நீ அவர்களிடத்தில் திரும்பாமல் அவர்கள் உன்னிடத்தில் திரும்புவார்களாக" (எரே 15:19) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தனக்குக் கொடுத்த ஊழியத்தை எரேமியா நிறைவேற்றவேண்டும். தன்னால் முடிந்த வரையிலும், கர்த்தர் அனுமதிக்கிற எல்லா இடங்களுக்கும் சென்று, எரேமியா கர்த்தருடைய வார்த்தையை யூதாவின் மனுஷருக்கு சொல்லவேண்டும். தேவனுடைய சித்தத்தையும், திட்டத்தையும், விருப்பத்தையும் மனுஷருக்கு தெளிவுபடுத்த வேண்டும். கர்த்தருடைய சிந்தையைப் புரிந்துகொள்ள ஜனங்களுக்கு உதவிபுரியவேண்டும். இதுவே எரேமியாவின் ஊழியம். இந்த ஊழியத்தில் அவர் உண்மையுள்ளவராயிருக்கவேண்டும்.

எரேமியா யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் கர்த்தருடைய வார்த்தையைப் பிரசங்கம் பண்ணியபோது, ஏராளமான ஜனங்கள் அவரை விட்டு தூரமாய் விலகிப்போய்விட்டார்கள். "அவர்கள் உன்னிடத்தில் திரும்புவார்களாக" என்று கர்த்தர் எரேமியாவுக்குச் சொல்லுகிறார். எரேமியாவை விட்டு விலகிப்போனவர்கள், எரேமியாவின் பிரசங்கச்செய்தியை மறுபடியுமாய் சிந்தித்துப் பார்ப்பார்கள். அவர் சொன்னது கர்த்தருடைய வார்த்தைதான் என்பதைப் புரிந்துகொள்வார்கள். எரேமியா மூலமாய் கர்த்தருடைய வார்த்தைகளை இன்னும் அதிகமாய்க் கேட்கவேண்டும் என்று விரும்பி அவர்கள் எரேமியாவினிடத்தில் திரும்புவார்கள்.

எரேமியா யூதாவின் மனுஷரிடத்திலும், எருசலேமின் குடிகளிடத்திலும் திரும்பிப்போய்விடக்கூடாது. அவர்களுடைய அக்கிரமங்களுக்கும், பாவங்களுக்கும் துணை போய்விடக்கூடாது. எருசலேமின் குடிகளும், யூதாவின் ஜனங்களும் கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறார்கள். எரேமியாவும் அவர்களைப்போல கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடக்கூடாது. தான் சொல்ல வேண்டிய செய்தியை, எரேமியா அவர்களுக்காக மாற்றிச் சொல்லிவிடக் கூடாது. மனுஷரை பிரிப்படுத்தவேண்டும் என்பதற்காக சத்தியத்தை விட்டு விலகிப்போய்விடக்கூடாதுகர்த்தர் தன்னுடைய வாயில் போட்ட வார்த்தைகளைத்தான் எரேமியா யூதாவின் மனுஷருக்குச் சொல்லவேண்டும். யூதாவின் மனுஷரும் கர்த்தருடைய வார்த்தைகளைத்தான் கேட்கவேண்டும்.

எரேமியா கர்த்தரிடத்தில் திரும்பி வந்தால், கர்த்தர் அவரை சீர்படுத்துவதாக வாக்குப்பண்ணுகிறார். அப்போது எரேமியா கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக நிலைத்திருப்பார். கர்த்தர் எரேமியாவின் சிந்தையை மாற்றுவார். அவருடைய இருதயத்தைப் புதுப்பிப்பார். அவருடைய மனதில் காணப்படுகிற அவிசுவாசத்தை நீக்கிப்போடுவார். அவரை விசுவாசத்தில் ஊன்றக்கட்டுவார்.

"அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்" (சங் 23:3).

எரேமியா கர்த்தரிடத்தில் திரும்பும்போது, அவர் கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக நிலைத்திருப்பார். எரேமியா கர்த்தருடைய தீர்க்கதரிசி. அவர் கர்த்தரிடத்தில் திரும்பி வரும்போது, கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கிற தீர்க்கதரிசன ஊழியத்தை தொடர்ந்து நிறைவேற்றுவார். கர்த்தரும் எரேமியாவை தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துவார்.

எரேமியா கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நிலைத்திருக்கும்போது, அவர் கர்த்தரிடமிருந்து வார்த்தைகளையும், பிரமாணங்களையும் பெற்றுக்கொள்வார். கர்த்தர் எரேமியாவின் வாயில் தம்முடைய வார்த்தைகளைப் போடுவார்.

ஒரு வேலைக்காரன் தன்னுடைய எஜமானிடத்திலிருந்து கட்டளைகளைப் பெற்றுக்கொள்வதுபோல, எரேமியாவும் கர்த்தரிடத்திலிருந்து கட்டளைகளைப் பெற்றுக்கொள்வார். அப்போது எரேமியா கர்த்தருடைய வாய் போலிருப்பார் (எரே 15:19). கர்த்தருடைய செய்தி எரேமியாவின் வாயில் நிரம்பியிருக்கும். யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் பிரசங்கம்பண்ணுவதற்கு கர்த்தருடைய செய்தி எரேமியாவின் வாயிலிருந்து புறப்பட்டுவரும்.

ராஜா தன்னுடைய தூதுவர்களிடம் தன்னுடைய செய்தியைக் கொடுத்து அனுப்புவதுபோல, கர்த்தர் எரேமியாவை தம்முடைய செய்தியோடு அனுப்புகிறார். தூதுவர்கள் தங்கள் ராஜாவுக்கு வாயாகயிருப்பதுபோல, தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வாயாகயிருக்கிறார்கள்.

எரேமியா கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்போது, அவருக்கு பல பிரச்சனைகளும், பாடுகளும் வரலாம். அவர் பல கஷ்டங்களை சந்திக்க வேண்டியது வரலாம். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் எரேமியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள். இப்போது எரேமியாவின் இருதயம் சோர்ந்துபோயிருக்கிறது. கர்த்தர் எரேமியாவை யூதா ஜனத்திற்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குகிறார் (எரே 15:20). கர்த்தர் எரேமியாவைப் பலப்படுத்தும்போது, எரேமியா இனிமேல் ஒருபோதும் சோர்ந்துபோகமாட்டார். வெண்கல அலங்கத்தின்மீது புயல் வீசலாம். கடுங்காற்று அதன்மீது மோதலாம். ஆனாலும் அவற்றால் வெண்கல அலங்கத்தை அசைக்க முடியாது.

யூதாவின் மனுஷர் எரேமியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள். எரேமியாவோ அவர்களுக்கு எதிரே அரணான வெண்கல அலங்கத்தைப்போலிருப்பார். அவர்களால் எரேமியாவை மேற்கொள்ள முடியாது. எரேமியா கர்த்தரையும், கர்த்தருடைய பலத்த புயத்தையும் நம்பவேண்டும். எரேமியா அவிசுவாசியாகவோ, கோழையாகவோ இருக்கக்கூடாது. தன்னுடைய பிரச்சனைகளை நினைத்துப் பார்த்து சோர்ந்துபோய்விடக்கூடாது. அவர் கர்த்தரை மாத்திரமே நோக்கிப் பார்க்கவேண்டும். அவருடைய கிருபையை நினைத்துப் பார்க்கவேண்டும். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நம்பவேண்டும். கர்த்தருடைய பலத்தையும், பராக்கிரமத்தையும் தியானிக்கவேண்டும். "உன்னை இரட்சிப்பதற்காகவும், உன்னைத் தப்புவிப்பதற்காகவும், நான் உன்னுடனே இருக்கிறேன்" (எரே 15:20) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது, நமக்கு விரோதமாக ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது. இந்த உலகத்தில் இருப்பவனைப்பார்க்கிலும், நமக்குள்ளே இருக்கிற கர்த்தர் மிகவும் பெரியவர். அவரே சர்வவல்லவர். சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம். கர்த்தர் எரேமியாவோடு கூடயிருந்து, அவரை எல்லா தீங்குகளுக்கும், எல்லா ஆபத்துக்களுக்கும் தப்புவிப்பார்.

கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது, கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஞானமும் பெலமும் நமக்கு போதுமானதாயிருக்கும். கர்த்தருடைய கரம் நம்மைப் பலப்படுத்தும். சத்துருக்களோடு யுத்தம்பண்ணுவதற்கு கர்த்தர் நம்மைப் பெலப்படுத்துவார். "நான் உன்னைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவித்து, உன்னைப் பலவந்தரின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்" (எரே 15:21) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

நமக்கு விரோதமாக வருகிற சத்துருக்களின் எண்ணிக்கை அதிகமாயிருக்கலாம். அவர்களுடைய ஆயுதங்களும் அநேகமாயிருக்கலாம். கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது, சத்துருக்களால் நம்மை மேற்கொள்ள முடியாது. நமக்கு விரோதமாக எழும்பும் எல்லா ஆயுதங்களும் வாய்க்காதே போகும்.

16 அதிகாரம்

யூதா தேசத்தின்மீது மிகப்பெரிய அழிவு வந்திருக்கிறது. இது அவர்களுக்கு அழிவு காலம். இக்காலத்தில் எரேமியா தனக்கு குடும்பத்தை உண்டுபண்ணக்கூடாது (எரே 16:1-4). அவர் துக்க வீட்டிலும் பிரவேசிக்கக்கூடாது (எரே 16:5-7). எரேமியா விருந்து வீட்டிலும் பிரவேசிக்கக்கூடாது (எரே 16:8,9).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. யூதா மனுஷருடைய அக்கிரமங்களே, அவர்கள்மீது வந்திருக்கும் அழிவுக்கு காரணம் (எரே 16:11-13). கர்த்தரிடத்தில் யூதா மனுஷருக்கு கிருபையும் இரக்கமுமுள்ளது (எரே 16:14,15). பாவிகள் மனந்திரும்பவேண்டும். இதற்காகவே கர்த்தர் அவர்களுக்கு தண்டனை கொடுக்கிறார் (எரே 16:16-21).

நீ பெண்ணை விவாகம்பண்ண வேண்டாம்
எரே 16:1-4

எரே 16:1. கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 16:2. நீ பெண்ணை விவாகம்பண்ண வேண்டாம்; இவ்விடத்தில் உனக்குக் குமாரரும் குமாரத்திகளும் இருக்க வேண்டாம் என்றார்.

எரே 16:3. இவ்விடத்திலே பிறக்கிற குமாரரையும் குமாரத்திகளையும், இந்த தேசத்தில் அவர்களைப் பெற்ற தாய்களையும் அவர்களைப் பெற்ற பிதாக்களையுங்குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்,

எரே 16:4. மகா கொடிய வியாதிகளால் சாவார்கள், அவர்களுக்காகப் புலம்புவாரும், அவர்களை அடக்கம் பண்ணுவாருமில்லை, நிலத்தின்மேல் எருவாவார்கள்; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் மடிந்துபோவார்கள்; அவர்களுடைய பிரேதம் ஆகாசத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் அடையாளமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறார். எரேமியா யூதா மனுஷருக்கு முன்பாக முன்மாதிரியாக இருக்கவேண்டும். இல்லையென்றால், யூதாவின் மனுஷர் எரேமியாவின் வார்த்தைக்கு செவிகொடுக்கமாட்டார்கள். எரேமியா தான் சொன்னபடி ஜீவிக்கிறாரா என்பதை ஜனங்கள் ஆராய்ந்து பார்ப்பார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், தாங்கள் சொல்லுவதை செய்யவேண்டும். செய்வதை சொல்லவேண்டும். நம்முடைய வார்த்தைகளுக்கும் கிரியைகளுக்கும் முரண்பாடு இருக்கக்கூடாது.

யூதாவின் பட்டணங்களும், எருசலேம் நகரமும் சீக்கிரத்தில் அழியப்போகிறது. யூதாதேசம் அழியப்போவதினால், எரேமியாவும் அந்த அழிவை சந்திப்பதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். அழிவு வரப்போகிறது என்பதை உணர்ந்து, எரேமியா அதற்கு ஏற்ற பிரகாரம் ஜீவிக்கவேண்டும். அழிவு சீக்கிரத்தில் வரப்போகிறது.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. கர்த்தருடைய வார்த்தையில் எரேமியா பூரண திருப்தியோடிருக்கிறார். யூதாதேசம் அழியப்போவதினால், கர்த்தர் எரேமியாவுக்கு சில விசேஷித்த கட்டளைகளைக் கொடுக்கிறார். எரேமியா விவாகம்பண்ணக் கூடாது. அவர் துக்கவீட்டில் பிரவேசிக்கக் கூடாது. விருந்து வீட்டிற்கும் போகக்கூடாது. எரேமியாவினிடத்தில் துக்கமும் இருக்கக் கூடாது. சந்தோஷமும் இருக்கக்கூடாது.

"நீ பெண்ணை விவாகம்பண்ண வேண்டாம்" (எரே 16:2) என்று கர்த்தர் எரேமியாவுக்குச் சொல்லுகிறார். அவருக்கு குடும்பம் இருக்கக்கூடாது. அவருக்கு குமாரரும் குமாரத்திகளும் இருக்கக்கூடாது. எரேமியா உலகப்பிரகாரமான குடும்ப உறவுக்கு விலகியிருக்கவேண்டும். யூதர்கள் பொதுவாக இளவயதிலேயே விவாகம் செய்து கொள்வார்கள். தங்களுக்கு ஏராளமான பிள்ளைகள் பிறக்கவேண்டுமென்று யூதர்கள் விரும்புவார்கள். ஆனால் எரேமியாவோ திருமணம் செய்துகொள்ளாமல், அண்ணகராக ஜீவிக்கவேண்டும்.

யூதாதேசம் மிகப்பெரிய அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. தேசத்திற்கு பேரழிவு வரும்போது, எரேமியா தன்னுடைய திருமண வாழ்க்கையைப்பற்றியும், குடும்பத்தைப்பற்றியும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கக்கூடாது. கர்த்தர் இங்கு சொல்லுகிற கட்டளை, யூதாதேசத்திற்கு ஏற்பட்டிருக்கிற அழிவின் காலத்திற்கு மாத்திரமே பொருந்தும். "நீ பெண்ணை விவாகம்பண்ணவேண்டாம்" என்று கர்த்தர் சொல்லும் கட்டளையை, எல்லா காலத்திற்கும் பொதுவானது என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. கர்த்தர் திருமண வாழ்க்கையை தடைபண்ணவில்லை. விவாகமஞ்சம் கர்த்தருக்கு கனமுள்ளது.

"அதென்னவெனில், இப்பொழுது உண்டாயிருக்கிற துன்பத்தினிமித்தம் விவாகமில்லாமலிருக்கிறது மனுஷனுக்கு நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன்" *(1கொரி 7:26)* என்று பவுல் சொல்லுகிறார். குடும்ப வாழ்க்கையும் பாரமானது. மனுஷருக்கு துன்பம் வரும்போது, அது அவர்களுக்கு பாரமாயிருக்கும். இந்த பாரத்தோடு குடும்ப பாரமும் சேர்ந்துவிடக்கூடாது என்று பவுல் சொல்லுகிறார்.

யூதா தேசத்திற்கு அழிவு நெருங்கிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட அழிவின் காலத்தில், தேசத்தின் ஜனங்கள் எல்லோரும் மிகுந்த ஞானமாய் நடந்துகொள்ளவேண்டும். அதிலும் விசேஷமாக கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், உலகப்பிரகாரமான பாரங்களிலிருந்து விலகி, கர்த்தருடைய செய்தியை ஆத்தும பாரத்தோடு சொல்லவேண்டும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களை குடும்ப பாரம் நெருக்கினால், அவர்களால் கர்த்தருடைய ஊழியத்தை சரியாய்ச் செய்யமுடியாது. தங்கள் குடும்பத்தை கவனிப்பதற்கே அவர்களுக்கு நேரம் போதாது. குடும்பத்தைப்பற்றிய கவலைகளையும், பயங்களையும், பிரச்சனைகளையும் சமாளிப்பதற்கே அவர்களுக்கு நேரம் இருக்காது. இதற்கு மத்தியில் கர்த்தருடைய ஊழியத்தை முழுமையாய்ச் செய்யவேண்டும் என்பது இயலாத காரியம்.

கர்த்தர் எரேமியாவிடம், "நீ பெண்ணை விவாகம்பண்ண வேண்டாம்" என்று சொல்லுவதற்கு முக்கியமான காரணம் ஒன்று உள்ளது. ஏனெனில் இவ்விடத்திலே பிறக்கிற குமாரரும், குமாரத்திகளும் அவர்களைப் பெற்ற தாய்களும், பிதாக்களும் மகாகொடிய வியாதிகளால் சாவார்கள். பிள்ளைகளை பெற்றெடுத்தவர்கள் அவர்கள்மீது பிரியமாகவும், பாசமாகவும் இருப்பார்கள். தங்கள் பிள்ளைகளைவிட்டுப் பிரிந்துபோக பெற்றோருக்கு மனமிருக்காது. ஆனாலும் அவர்களாலும் மரணத்திற்கு தப்பிக்க முடியாது. பெற்றோருக்கும் மரணம் வரும். பிள்ளைகளுக்கும் மரணம் வரும்.

தங்களுடைய பிள்ளைகள் மரிப்பதைப் பார்க்கும்போது, அவர்களுடைய பெற்றோரும் மரணவேதனைப்படுவார்கள். பெற்றோருக்கும் மரணம் உண்டானதுபோலிருக்கும். தங்கள் பிள்ளைகள் கொடிய வியாதிகளால் சாவதைப்பார்த்து, அவர்களுடைய பெற்றோரால் தாங்கிக்கொள்ள முடியாது. மிகுந்த வேதனை உண்டாகும். ஆகையினால்தான், "இவ்விடத்தில் உனக்கு குமாரரும், குமாரத்திகளும் இருக்க வேண்டாம்" என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

"நான் எப்பிராயீமைத் தீருவின் திசைமட்டும் இருக்கிறதைப் பார்க்கிறபோது, அது நல்ல வசதியான ஸ்தலத்திலே நாட்டப்பட்டிருக்கிறது; ஆனாலும் எப்பிராயீமர் தங்கள் குமாரரைக் கொலைசெய்கிறவனிடத்தில் வெளியே கொண்டுபோய் விடுவார்கள். கர்த்தாவே, நீர் அவர்களுக்குக் கொடுப்பதைக் கொடும்; அவர்களுக்கு விழுந்துபோகிற கர்ப்பத்தையும் பாலற்ற முலைகளையும் கொடும். *(ஓசி 9:13,14)*.

தங்கள் பிள்ளைகள் தங்கள் கண்களுக்கு முன்பாக செத்துப்போவதை, எந்தப் பெற்றோராலும் தாங்கிக்கொள்ள முடியாது. தங்கள் பிள்ளைகள் சாவதைப் பார்ப்பதற்குப் பதிலாக, தங்களுக்கு பிள்ளைகளே பிறவாமலிருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் என்று பெற்றோர் நினைப்பார்கள். தாங்களும் செத்துப்போகவேண்டும் என்று பெற்றோர் தீர்மானம்பண்ணிவிடுவார்கள்.

தேசத்தில் மகாகொடிய வியாதி வரும். பிள்ளைகளும் செத்துப்போவார்கள். பெற்றோரும் செத்துப்போவார்கள். இதனால் அவர்களுக்காக புலம்புவாரும் இருக்க மாட்டார்கள். செத்துப்போனவர்களின் பிரேதங்களை அடக்கம்பண்ணுவாரும் இருக்கமாட்டார்கள். அவர்களுடைய பிரேதங்கள் நிலத்தின்மேல் எருவாக யிருக்கும். செத்துப்போன சரீரங்கள் அடக்கம்பண்ணப்படாததினால், அவை பூமியின்மேல் மக்கிப்போயிருக்கும். துர்நாற்றம் வீசும்.

யூதாவின் மனுஷர்கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் மடிந்துபோவார்கள். அவர்களுடைய பிரேதம் ஆகாசத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பார்த்து, அவர்களை ஆசையாய்க் கொஞ்ச முடியாது. பிள்ளைகளுக்கு உயிர் இருக்காது. அவர்கள் செத்துப்போன பிரேதங்களாயிருப்பார்கள்.

உயிரோடிருக்கிற பிள்ளைகளை பராமரிப்பதற்கு பெற்றோரும் உயிரோடிருக்க மாட்டார்கள். ஜனங்களுக்கு மப்பாசங்கார முண்டாகும். ஆகையினால் கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியிடம், "நீ பெண்ணை விவாகம்பண்ண வேண்டாம்" என்றும், "இவ்விடத்தில் உனக்கு குமாரரும் குமாரத்திகளும் இருக்கவேண்டாம்" என்றும் சொல்லுகிறார்.

நீ துக்கவீட்டில் பிரவேசியாயாக எரே 16:5-7

எரே 16:5. ஆகையால் நீ துக்கவீட்டில் பிரவேசியாமலும், புலம்பப்போகாமலும், அவர்களுக்குப் பரிதபிக்காமலும் இருப்பாயாக என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சமாதானத்தையும், கிருபையையும், இரக்கத்தையும், இந்த ஜனத்தைவிட்டு எடுத்துப்போட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 16:6. இந்த தேசத்தில் பெரியோரும் சிறியோரும் சாவார்கள்; அவர்களை அடக்கம்பண்ணுவாரில்லை; அவர்களுக்காகப் புலம்புவாருமில்லை; அவர்கள் நிமித்தம் கீறிக்கொண்டு, மொட்டையடித்துக்கொள்வாருமில்லை.

எரே 16:7. செத்தவர்கள் நிமித்தம் உண்டான துக்கத்தை ஆற்ற அவர்களுக்கு அப்பம் பங்கிடப்படுவதுமில்லை; ஒருவனுடைய தகப்பனுக்காவது, ஒருவனுடைய தாய்க்காவது துக்கப்படுகிறவர்களுக்குத் தேற்றரவின் பாத்திரத்தைக்குடிக்கக் கொடுப்பாருமில்லை.

யூதா தேசத்து ஜனங்கள் மகாகொடிய வியாதியால் சாவார்கள். எரேமியாவின் உற்றார் உறவினர்களும் செத்துப்போவார்கள். எரேமியா அவர்களுடைய வீட்டிற்கு துக்கம் விசாரிக்கப் போகக்கூடாது. "நீ துக்கவீட்டில் பிரவேசியாமலும், புலம்பப்போகாமலும், அவர்களுக்குப் பரிதபிக்காமலும் இருப்பாயாக" (எரே 16:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய உற்றார் உறவினர் யாராவது மரித்துப்போனால், அவர்களுடைய வீட்டிற்குப்போய், மரித்துப்போனவர்களுக்காக புலம்புவதும், அவர்களுக்காக பரிதபிப்பதும் பொதுவான வழக்கம். யூதா தேசத்திலே, தங்களுடைய குடும்பத்தாராரில் யாராவது செத்துப்போனால், அவர்களுடைய குடும்பத்தாரும், உற்றார் உறவினரும், செத்துப்போனவருக்காக புலம்புவார்கள். பரிதபிப்பார்கள்.

செத்துப்போனவர் நிமித்தம், அவர்கள் தங்கள் சரீரத்தைக் கீறிக்கொள்வார்கள். தலையை மொட்டையடித்துக்கொள்வார்கள். செத்தவர்கள் நிமித்தம் உண்டான துக்கத்தை ஆற்ற அவர்களுக்கு அப்பம் பங்கிடப்படும். துக்கப்படுகிறவர்களுக்கு தேற்றரவின் பாத்திரத்தைக் குடிக்க கொடுப்பார்கள். இவையெல்லாம் மரித்தோருக்காக உயிரோடிருப்பவர்கள் தங்கள் துக்கத்தை வெளிப்படுத்தும் அடையாளங்கள்.

இப்படிப்பட்ட காரியங்கள் மோசேயின் பிரமாணத்தில் தடைபண்ணப்பட்டிருக்கிறது. ஆனாலும் யூதர்கள் இந்தப் பழக்க வழக்கங்களை கடைப்பிடித்து வருகிறார்கள். "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் பிள்ளைகள்; செத்தவனுக்காகக் கீறிக்கொள்ளாமலும், உங்கள் கண்களுக்கு இடையிலே சவரம்பண்ணாமலும் இருப்பீர்களாக" (உபா 14:1).

லாசரு மரித்துப்போனபோது, அவருடைய சகோதரிகளாகிய மார்த்தாளையும் மரியாளையும் தேற்றுவதற்கு, அவர்களுடைய உற்றார் உறவினர் எல்லோரும் அவர்களுடைய வீட்டிற்கு வந்து துக்கம் விசாரித்தார்கள். இது யூதருடைய பழக்கம். அவர்களுடைய துக்கத்தில் மற்றவர்களும் பங்கெடுத்துக் கொள்வார்கள். அவர்களுடைய ஆவிகள் கலங்கிப்போயிருக்கும்போது, அவர்களுக்கு தேற்றரவின் பாத்திரத்தைக் குடிக்க கொடுப்பார்கள்.

யூதா தேசத்தில் பெரியோரும் சிறியோரும் சாவார்கள். கர்த்தர் தம்முடைய சமாதானத்தையும், கிருபையையும், இரக்கத்தையும் யூதாஜனத்தைவிட்டு எடுத்துப்போடுகிறார். ஆகையினால் செத்துப்போகிறவர்களின் எண்ணிக்கை திரளாயிருக்கிறது. பெரியோரும் சிறியோரும் மகாகொடிய வியாதிகளால் செத்துப்போகிறார்கள்.

செத்துப்போனவர்களை அடக்கம் பண்ணுவாரில்லை; அவர்களுக்காகப் புலம்புவாருமில்லை; அவர்கள் நிமித்தம் கீறிக்கொண்டு, மொட்டையடித்துக் கொள்வாருமில்லை. செத்தவர்கள் நிமித்தம் உண்டான துக்கத்தை ஆற்ற அவர்களுக்கு அப்பம் பங்கிடப்படுவதுமில்லை; ஒருவனுடைய தகப்பனுக்காவது, ஒருவனுடைய தாய்க்காவது துக்கப்படுகிறவர்களுக்குத் தேற்றரவின் பாத்திரத்தைக் குடிக்கக்கொடுப்பாருமில்லை (எரே 16:6,7).

செத்துப்போனவர்களுக்காக, அவர்களுடைய குடும்பத்தாரும், உற்றார் உறவினரும் துக்கித்துப் புலம்பும் போது, எரேமியாவும் அவர்களுடைய துக்கத்தில் பங்குபெறவேண்டும். ஆனால் "நீ துக்கவீட்டில் பிரவேசியாமலும், புலம்பப்போகாமலும், அவர்களுக்குப் பரிதபிக்காமலும் இருப்பாயாக" என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார். எரேமியா மற்றவர்களுடைய துக்கத்திலும் பங்குபெறக்கூடாது.

பொதுவாக தங்கள் சொந்த குடும்பத்தாரின் மரணம், மற்ற ஜனங்களுக்கு உண்டாகும் பொதுவான மரணத்தைவிட, அதிகமான துக்கத்தைக் கொடுக்கும். நம்முடைய சொந்த பெற்றோரும், சொந்த பிள்ளைகளும் செத்துப்போனால் நமக்கு அதிக துக்கமுண்டாகும். இப்போது யூதா தேசம் முழுவதிலும் ஏராளமானோர் செத்துப்போயிருக்கிறார்கள். தேசம் முழுவதிலும் துக்கம் நிரம்பியிருக்கிறது.

எரேமியாவின் வீட்டில் யாராவது செத்துப்போனால், எரேமியா அவர்களுக்காக அதிகமாய்த் துக்கப்படுவார். தேசத்தில் மற்றவர்கள் செத்துப்போனதைக் குறித்து அதிகமாய் நினைத்துப் பார்க்கமாட்டார். எரேமியா அவருடைய குடும்பத்திற்கு மாத்திரம் சொந்தமானவரல்ல. அவர் யூதாதேசம் முழுவதிற்கும் சொந்தமானவர். அவர் எருசலேமின் குடிகளுக்கும், யூதாவின் மனுஷருக்கும் பொதுவானவர். ஆகையினால் எரேமியா தனக்கு நெருக்கமான துக்கவீட்டில் பிரவேசித்து, அவர்களுக்காக புலம்பி, பரிதபித்து, மற்றவர்களை மறந்துவிடக்கூடாது. இதன் நிமித்தமாகவே கர்த்தர் எரேமியாவை துக்கவீட்டில் பிரவேசிக்க வேண்டாம் என்று சொல்லுகிறார்.

யூதாதேசத்தில் பேரழிவு வந்திருக்கிறது. பெரியோரும் சிறியோரும் செத்துப்போயிருக்கிறார்கள். வீடுகளில் அடிக்கடி சாவு உண்டாகிறது. இதனால் செத்துப்போனவர்களை அடக்கம் பண்ணுவதற்குகூட யூதாவின் மனுஷருக்கு நேரமில்லை. மரித்துப்போவோரின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதினால், துக்கப்பட்டு துக்கப்பட்டு, அவர்களுடைய இருதயங்களும் கடினமாய்ப்போயிற்று. மரணம் வாடிக்கையாயிற்று. இதனால் யூதாவின் மனுஷரால் செத்துப்போனவர்களுக்காக ஒருவரும் புலம்புவதில்லை. தங்கள் சரீரங்களை கீறிக்கொள்ளவுமில்லை. மொட்டையடித்துக் கொள்ளவுமில்லை. அதிகமான மரணம் உண்டாவதினால், அவர்களால் தங்களுடைய பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் முடியவில்லை.

எல்லா வீடுகளிலும் துக்கமுண்டாயிருக்கிறது. ஆகையினால் எல்லோரும் புலம்பவேண்டும். புலம்புகிறவர்களை தேற்றுவதற்குகூட ஒருவருமில்லை. எல்லோரும் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் யூதா ஜனத்தைவிட்டு, தம்முடைய சமாதானத்தையும், கிருபையையும், இரக்கத்தையும் எடுத்துப்போட்டார். இதனால் எல்லோருக்கும் துக்கமுண்டாயிற்று.

கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் யூதா மனுஷரைவிட்டு எடுத்துப்போடப்பட்டதினால், அவர்களுக்கு சமாதானமில்லை. ஆறுதலில்லை. ஆசீர்வாதமில்லை. அவர்களின் சரீரங்களில் ஆரோக்கியமில்லை. அவர்களுக்கு போஜனமுமில்லை. சிநேகிதருமில்லை. பெரியோரும் சிறியோரும் செத்துப்போகிறார்கள். அவர்களுக்கு ஆறுதல் சொல்லவும் ஒருவருமில்லை. எல்லோரும் துக்கத்தினால் புலம்பி அழுகிறார்கள்.

கர்த்தருடைய சமாதானமே நிலைத்திருக்கும். அந்த சமாதானம் பரிசுத்தமானது. கர்த்தருடைய சமாதானத்தை மாத்திரமே நம்மால் அனுபவிக்க முடியும். கர்த்தர் கொடுக்கும் சமாதானம் அவருடைய ஈவு. கர்த்தர் நமக்கு சமாதானத்தைக் கொடுக்கும்போது, யாராலும் நம்முடைய இருதயத்தைக் குழப்ப முடியாது. நம்முடைய இருதயத்தில் தேவசமாதானம் நிரம்பியிருக்கும்போது, அங்கே கலக்கமிருக்காது.

கர்த்தர் நமக்கு கொடுக்கும் சமாதானத்தை நாம் காத்துக்கொள்ள வேண்டும். அந்த சமாதானத்தை நமக்கும் மற்றவர்களுக்கும் பிரயோஜனமுள்ள வழிகளில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய சமாதானத்தை நாம் அசட்டைபண்ணினால், கர்த்தர் நம்மிடத்திலிருந்து தம்முடைய சமாதானத்தை எடுத்துப்போடுவார். நம்மைவிட்டு சமாதானம் நீங்கும்போது, நம்மிடத்திலுள்ள எல்லா ஆசீர்வாதங்களும் நம்மைவிட்டு நீங்கும்.

கர்த்தர் தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் நமக்குக் கொடுக்கவில்லையென்றால், நம்மிடத்தில் நன்மையான காரியம் எதுவும் இருக்காது. நாம் ஒன்றுமில்லாதவர்களாயிருப்போம். கர்த்தரால் மாத்திரமே நமக்கு ஜீவனைக் கொடுக்க முடியும். அவரால் மாத்திரமே நம்முடைய ஜீவனை பரிபூரணப்படுத்தவும் முடியும்.

நீ விருந்துவீட்டிலும் பிரவேசியாயாக
எரே 16:8,9

எரே 16:8. நீ அவர்களோடே புசித்துக் குடிக்க உட்காரும்படி விருந்துவீட்டிலும் பிரவேசியாயாக.

எரே 16:9. ஏனெனில், இதோ, இவ்விடத்திலே நான் உங்கள் கண்களுக்கு முன்பாகவும், உங்கள் நாட்களிலுமே, சந்தோஷத்தின் சத்தத்தையும், மகிழ்ச்சியின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும் ஓயப்பண்ணுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா துக்கவீட்டிலும் பிரவேசிக்கக்கூடாது. விருந்து வீட்டிலும் பிரவேசிக்கக்கூடாது. கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை யூதாவின் மனுஷருக்குக் கொடுக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். இப்போது கர்த்தருடைய கோபாக்கினை அவர்களுக்கு விரோதமாக வருகிறது. கர்த்தர் நம்மைத் தண்டிக்கும்போது, நாம் கர்த்தருடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்தவேண்டும். யூதர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்தவேண்டும்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நம்மீது வந்திருக்கும்போது, நம்மிடத்தில் விருந்து கொண்டாடுதல் இருக்கக்கூடாது. உபவாசமும் ஜெபமும் இருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களுடைய சுயத்தை வெறுக்கவேண்டும். எப்போதும் விருந்து வீட்டில் பிரவேசித்து, பெருந்தீனி உண்ணவேண்டுமென்று பேராசைப்படக்கூடாது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் மற்ற ஜனங்களுக்கு முன்மாதிரியாயிருக்கவேண்டும்.

யூதாவின் மனுஷர் தங்கள் வீடுகளில் விருந்து கொண்டாடுகிறார்கள். புசித்து குடிக்கிறார்கள். சந்தோஷமாகயிருக்கவேண்டும் என்று நினைத்து, விருந்தை ஆடம்பரமாய்ச் செய்கிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களுடைய வீட்டு வாசல்படியில் காத்திருக்கிறது. ஆனால் அவர்களோ அதைப்பற்றிய உணர்வில்லாமல், வீட்டிற்குள்ளே புசித்து குடிக்கிறார்கள்.

யூதா மனுஷருடைய சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கர்த்தர் எடுத்துப்போடுவார். அவர்களுடைய விருந்து முடிந்துபோகும். விருந்து வீடு துக்கவீடாய் மாறும். அவர்கள் விருந்து செய்து, புசித்து குடித்திருக்கவேண்டும் என்னும் அவசியமில்லை. இப்பொழுது சந்தோஷமாக இருக்கிறவர்கள், சீக்கிரத்திலே அழுது புலம்பப்போகிறார்கள். தேசத்திலே பெரியோரும் சிறியோரும் சாகப்போகிறார்கள். அவர்கள் மகாகொடிய வியாதிகளால் சாவார்கள். இது யூதாவின் மனுஷருக்கு புலம்பலின் காலம். விருந்தின் காலமல்ல.

கர்த்தர் எரேமியாவிடம், "நீ அவர்களோடே புசித்துக் குடிக்க உட்காரும்படி விருந்துவீட்டிலும் பிரவேசியாயாக" *(எரே 16:8)* என்று சொல்லுகிறார். தாம் இப்படி சொல்லுவதற்கான காரணத்தையும், கர்த்தர் எரேமியாவுக்குத் தெளிவுபடுத்துகிறார்.

"ஏனெனில், இதோ, இவ்விடத்திலே நான் உங்கள் கண்களுக்கு முன்பாகவும், உங்கள் நாட்களிலுமே, சந்தோஷத்தின் சத்தத்தையும், மகிழ்ச்சியின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும் ஒயப்பண்ணுவேன்" *(எரே 16:9)* என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷருக்கு சந்தோஷப்பட ஒரு காரணமும் இருக்காது. அவர்கள் புசித்து குடிப்பதற்கு ஒரு விருந்தும் நடைபெறாது. அவர்களைச் சுற்றிலும் துக்கமும் வேதனையும், அழுகையும், புலம்பலும் நிரம்பியிருக்கிறது. துக்கத்திற்கு புலம்புவார்கூட தேசத்திலிருக்கமாட்டார்கள். அந்த அளவுக்கு துக்கம் அதிகமாயிருக்கும்.

எருசலேம் நகரம், "சந்தோஷமான நகரம்" என்றும், "மகிழ்ச்சியான நகரம்" என்றும் அழைக்கப்படுகிறது. எருசலேமின் குடிகள் எப்போதும் சந்தோஷமாயிருப்பார்கள். அவர்களுடைய வீடுகளில் அடிக்கடி விருந்துகள் நடைபெறும். அப்போது அவர்கள் புசித்து குடிப்பதற்கு உட்காருவார்கள். வீடு முழுவதும் சந்தோஷத்தின் சத்தமும் உண்டாயிருக்கும்.

ஆனால் எருசலேம் நகரத்திலும், யூதாவின் பட்டணங்களிலும் இனிமேல் சந்தோஷமுண்டாகாது. அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தமாயும், விக்கிரகாராதனையினிமித்தமாயும், அங்கே அழுகையும் புலம்பலும் உண்டாகும். கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால், யூதா தேசத்திலே சந்தோஷத்தின் சத்தத்தையும், மகிழ்ச்சியின் சத்தத்தையும் ஒயப்பண்ணுவார்.

யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளின் சத்தமும் கேட்கப்படாது. யூதாவின் மனுஷரும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கமாட்டார்கள். தேசத்தில் குடும்ப ஆசீர்வாதங்களும் உண்டாகாது. திருமண காரியங்களும் நடைபெறாது. யூதா மனுஷருடைய பொல்லாப்புகளினிமித்தமாய், கர்த்தர் யூதா தேசத்திலே, மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும் ஒயப்பண்ணுகிறார். யூதாவின் மனுஷர் கலியாண வீடுகளில் விசேஷித்த பாடல்களைப் பாடி சந்தோஷமாயிருப்பார்கள். அவையெல்லாம் ஒய்ந்துபோயிற்று.

"நான் யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் களிப்பின் சத்தத்தையும், மகிழ்ச்சியின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும் ஒயப்பண்ணுவேன்; தேசம் பாழாகும்" *(எரே 7:34)*.

நீங்கள் அதிக கேடாக நடந்தீர்களே
எரே 16:10-13

எரே 16:10. நீ இந்த வார்த்தைகளையெல்லாம் இந்த ஜனத்துக்கு அறிவிக்கும்போது, அவர்கள் உன்னை நோக்கி: கர்த்தர் எங்கள்மேல் இத்தனை பெரிய தீங்கைக்கூறுவானேனென்றும், நாங்கள் செய்த அக்கிரமம் என்ன? நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகச் செய்த எங்கள் பாவம் என்ன? என்றும் கேட்பார்களானால்,

எரே 16:11. நீ அவர்களை நோக்கி: உங்கள் பிதாக்கள் என்னைவிட்டு அந்நியதேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்துகொண்டு, என் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல் என்னை விட்டுவிட்டார்களே.

எரே 16:12. நீங்கள் உங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் அதிக கேடாக நடந்தீர்களே; இதோ, உங்களில் ஒவ்வொருவரும் என் சொல்லைக் கேளாதபடிக்கு, உங்கள் பொல்லாத இருதய கடினத்தின்படி நடக்கிறீர்கள்.

எரே 16:13. ஆதலால், உங்களை இந்த தேசத்திலிருந்து நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேசத்திற்குத் துரத்திவிடுவேன்; அங்கே இரவும் பகலும் அந்நிய தேவர்களைச் சேவிப்பீர்கள்; அங்கே நான் உங்களுக்குத் தயை செய்வதில்லை.

கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு யூதா மனுஷர்மீதும் எருசலேம் குடிகள் மீதும் வந்திருக்கிறது. எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கு அறிவிப்பார். அப்போது அவர்கள் எரேமியாவிடம், "கர்த்தர் எங்கள்மேல் இத்தனை பெரிய தீங்கைக்கூறுவானேனென்றும், நாங்கள் செய்த அக்கிரமம் என்ன? நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகச் செய்த எங்கள் பாவம் என்ன?" என்றும் கேட்பார்கள் (எரே 16:10).

தங்கள்மீது இத்தனை பெரிய தீங்கு வருவதற்கு தாங்கள் என்ன பாவம் செய்தோம் என்று யூதாவின் மனுஷர் கேட்பார்கள். தாங்கள் செய்த தப்பிதம் என்ன என்று விவாதம்பண்ணுவார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளும், கோபாக்கினையின் வார்த்தைகளும் தங்களுக்கு விரோதமாக வெளிப்படும்போது, யூதாவின் மனுஷர் தங்களை கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தவேண்டும். தங்களுடைய பாவங்களை அங்கீகரிக்கவேண்டும். தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தருடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் விண்ணப்பம்பண்ண வேண்டும்.

ஆனால் யூதாவின் மனுஷரோ கர்த்தருக்கு முன்பாக தங்களை தாழ்த்தவில்லை. தங்களுடைய சுயநீதியையும், சுயபரிசுத்தத்தையும் பார்க்கிறார்கள். தாங்கள் கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமாகவும், மனுஷருக்கு முன்பாக குற்றமற்றவர்களாகவும் இருப்பதாக நினைக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு இவ்வளவு பெரிய தண்டனையைக் கொடுத்து, அவர் தப்பு பண்ணுகிறார் என்று சொல்லுகிறார்கள். தாங்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களல்ல என்றும், தங்களிடத்தில் அக்கிரமமோ, பாவமோ இல்லையென்றும் சாதிக்கிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை யூதாவின் மனுஷருக்கு அறிவிக்கிறார். அவர்கள்மீது பெரிய தீங்கு வரும் என்று சொல்லுகிறார். ஆனால் தங்களிடத்தில் ஒரு பாவமும் இல்லை என்று யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாக விவாதம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் ஒருபோதும் காரணமில்லாமல் கோபப்படமாட்டார். கர்த்தரிடத்தில் அநீதியில்லை. அவருடைய வார்த்தைகளில் உண்மையிருக்கும். அவர் சத்திய தேவன். அவருடைய நியாயத்தீர்ப்பில் நீதியும் நியாயமும் இருக்கும். யூதாவின் மனுஷர் தங்களிடத்தில் பாவமில்லை என்று விவாதம்பண்ணும்போது, கர்த்தர் அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர்மீது பெரிய தீங்கு வரப்போகிறது. அவர்கள் அழிந்துபோகப்போகிறார்கள். இந்த அழிவுக்கு அவர்களே காரணம். யூதாவின் மனுஷரிடத்தில் அக்கிரமமும், பாவமும் நிரம்பியிருக்கிறது. ஆனால் அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களை தாழ்த்தவில்லை. தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களுக்கு அழிவு வருவதற்கான காரணங்களையும் கர்த்தர் சொல்லுகிறார்.

"உங்கள் பிதாக்கள் என்னைவிட்டு அந்நியதேவர்களைப் பின்பற்றி, அவர்களைச் சேவித்து, அவர்களைப் பணிந்துகொண்டு, என் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல் என்னை விட்டுவிட்டார்களே. நீங்கள் உங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் அதிக கேடாக நடந்தீர்களே; இதோ, உங்களில் ஒவ்வொருவரும் என் சொல்லைக் கேளாதபடிக்கு, உங்கள் பொல்லாத இருதய கடினத்தின்படி நடக்கிறீர்கள்" (எரே 16:11,12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர்களும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பிதாக்களும் கர்த்தரைவிட்டுவிட்டு, அந்நிய தேவர்களைப் பின்பற்றினார்கள். அவர்கள் விக்கிரகங்களை சேவித்து, அவற்றை பணிந்துகொண்டார்கள். அவர்கள் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை. கர்த்தருடைய பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல், அவரைவிட்டு விலகிப்போய்விட்டார்கள்.

விக்கிரகாராதனைக்காரருக்கு ஒழுங்கும் கட்டுப்பாடும் கிடையாது. அவர்கள் தங்களுடைய மனம் விரும்பிய பிரகாரம் விக்கிரகங்களை ஆராதிப்பார்கள். கர்த்தரை ஆராதிக்கிறவர்களோ, அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும். ஆராதனை முறைமைகள் ஒழுங்காயும், கிரமமாயும் நடைபெறவேண்டும். யூதாவின் மனுஷரும், அவர்களுடைய பிதாக்களும் புதுமையை விரும்பி, அந்நிய தேவர்களுக்கு பின்னால் போய்விடுகிறார்கள்.

யூதா மனுஷருடைய பிதாக்கள் மாத்திரமல்ல, யூதா மனுஷரும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். தங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் அதிக கேடாக நடக்கிறார்கள். அவர்களுடைய பிதாக்கள் செய்த பாவங்களுக்கு, கர்த்தர் அவர்களைத் தண்டித்தார். யூதாவின் மனுஷர் பூர்வ காலங்களை நினைத்துப் பார்க்கவேண்டும். தங்களுடைய பிதாக்களை கர்த்தர் தண்டித்தற்கான காரணங்களை யோசித்துப் பார்க்கவேண்டும். அவர்களைப்போல கேடாக நடக்காமல், கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். ஆனால் யூதாவின் மனுஷரோ, தங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் அதிக கேடாக நடக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருந்தால், கர்த்தர் தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் அவர்களுக்கு காண்பித்திருப்பார். அவர்களுக்கு வரப்போகும் அழிவிலிருந்து அவர்களை தப்புவிக்கச் செய்திருப்பார். யூதா தேசம் முழுவதையும் மன்னித்திருப்பார். ஆனால் யூதாவின் மனுஷரோ கர்த்தருக்கு விரோதமாய்த் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பிதாக்களின் கேடுகளைவிட அதிக கேடாய் நடக்கிறார்கள்.

யூதர்களுடைய மனச்சாட்சி அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு கண்டித்து உணர்த்தவில்லை. விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் உரத்த சத்தத்தோடு ஆர்ப்பரிப்பார்கள். அவர்களுடைய மனச்சாட்சியின் சத்தத்தைக் கேட்பதற்கு அவர்களுக்கு மனதிருக்காது. அவர்கள் கர்த்தருடைய சொல்லைக் கேட்கவில்லை. தங்கள் இருதயத்தை கடினப்படுத்துகிறார்கள். அவர்களுடைய இருதயம் பொல்லாததாயிருக்கிறது. யூதாவின் மனுஷர் தங்கள் பொல்லாத இருதயக்கடினத்தின்படி நடக்கிறார்கள்.

யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்களை தம்முடைய நீதியினால் நியாயந்தீர்க்கிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், அவர்களுக்கு வரப்போகும் தண்டனையை அறிவிக்கிறார். "ஆதலால், உங்களை இந்த தேசத்திலிருந்து நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேசத்திற்குத் துரத்திவிடுவேன்; அங்கே இரவும் பகலும் அந்நிய தேவர்களைச் சேவிப்பீர்கள்; அங்கே நான் உங்களுக்குத் தயை செய்வதில்லை" (எரே 16:13) என்று கர்த்தர், யூதா மனுஷருக்கு விரோதமாக, தம்முடைய நீதியான தீர்ப்பை அறிவிக்கிறார்.

கானான் தேசம் வெளிச்சத்தின் தேசம். இது தரிசனப்பள்ளத்தாக்குள்ள தேசம். கர்த்தர் கானான் தேசத்தை ஆசீர்வதித்திருக்கிறார். கானான் தேசத்தில் பாலும் தேனும் ஓடுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கும், யூதா வம்சத்தாருக்கும் கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். யூதாவின் மனுஷரோ கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரராய்ப் போனார்கள். கர்த்தர் அவர்களை கானான் தேசத்திலிருந்து, அந்நிய தேசத்திற்கு துரத்திவிடுகிறார். அந்நிய தேசத்தை அவர்களும், அவர்களுடைய பிதாக்களும் இதற்கு முன்பு அறியவில்லை.

கர்த்தரை ஆராதிக்கும்போது நம்முடைய ஆத்துமாவுக்கு ஆறுதலாயும் இன்பமாயும் இருக்கும். யூதாவின் மனுஷருக்கு அந்நிய தேசத்தில் கர்த்தரை ஆராதிக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அவர்கள் அங்கே இரவும் பகலும் அந்நிய தேவர்களை சேவிப்பார்கள். கர்த்தரும் அவர்களுக்கு தயை செய்யமாட்டார். அவர்களுடைய ஆத்துமாவிலே சந்தோஷமும் சமாதானமும் இருக்காது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரை ஆராதிக்க வேண்டியவர்கள். ஆனால் அவர்களோ அந்நிய தேவர்களை சேவிக்குமாறு கட்டாயம்பண்ணப்படுவார்கள். விக்கிரகாராதனை அவர்களுடைய இருதயத்திற்கு இலச்சையாயிருக்கும். அவர்கள் கர்த்தரை ஆராதித்து பழக்கப்பட்டவர்கள். இப்போதோ விக்கிரகங்களை ஆராதிக்குமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் கர்த்தரை மறந்தார்கள். கர்த்தரைவிட்டு விலகிப்போனார்கள். கர்த்தரும் அவர்களைவிட்டு விலகிப்போய் விடுகிறார். கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு தயை செய்ய மறுத்துவிடுகிறார்.

அந்நிய தேசத்தில் யூதாவின் மனுஷருக்கு சந்தோஷமும் சமாதானமும், ஆறுதலும் இருக்காது. ஆளோட்டிகள் யூதா மனுஷரை கடினமாய் வேலை வாங்குவார்கள். அவர்கள் கானான் தேசத்திலிருந்தபோது கர்த்தருடைய ஓய்வுநாளை அசட்டைபண்ணி, அதை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள். இப்போது அவர்களுக்கு அந்நிய தேசத்தில் ஓய்வு நாளே இல்லை. அவர்கள் எல்லா நாளிலும் கடினமாய் வேலை செய்யவேண்டும்.

கர்த்தருடைய தயவு இல்லையென்றால் வேதனைகளும், உபத்திரவங்களும் பெருகும். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், தங்களுடைய பாவங்களினிமித்தமாகவும், அக்கிரமங்களினிமித்தமாகவும், அந்நிய தேசத்தில் பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள்.

என் நாமம் யேகோவா
எரே 16:14-21

எரே 16:14. ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு இனிமேல் சத்தியம்பண்ணாமல்,

எரே 16:15. இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சத்தியம்பண்ணுவார்கள்; நான் அவர்கள் பிதாக்களுக்குக்கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 16:16. இதோ, நான் மீன்பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன், இவர்கள் அவர்களைப் பிடிப்பார்கள்; அதற்குப் பின்பு வேட்டைக்காரராகிய அநேகரை அழைத்தனுப்புவேன், இவர்கள் அவர்களை எல்லா மலைகளிலும், எல்லாக் குன்றுகளிலும், கன்மலைகளின் வெடிப்புகளிலும் வேட்டையாடுவார்கள்.

எரே 16:17. என் கண்கள் அவர்களுடைய எல்லா வழிகளின்மேலும் நோக்கமாயிருக்கிறது; அவைகள் என் முகத்துக்கு முன்பாக மறைந்திருக்கிறதில்லை; அவர்களுடைய அக்கிரமம் என் கண்களுக்கு முன்பாக மறைவாயிருக்கிறதுமில்லை.

எரே 16:18. முதலாவது நான் அவர்களுடைய அக்கிரமத்துக்கும், அவர்களுடைய பாவத்துக்கும் இரட்டிப்பாய் நீதியைச் சரிக்கட்டுவேன்; அவர்கள் என் தேசத்தைத் தீட்டுப்படுத்தி, என் சுதந்தரத்தைச் சீயென்று அருவருக்கப்படத்தக்க தங்கள் காரியங்களின் நாற்றமான விக்கிரகங்களினாலே நிரப்பினார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 16:19. என் பெலனும், என் கோட்டையும், நெருக்கப்படுகிற நாளில் என் அடைக்கலமுமாகிய கர்த்தாவே, புறஜாதிகள் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து உம்மிடத்தில் வந்து: மெய்யாகவே, எங்கள் பிதாக்கள் பிரயோஜனமில்லாத பொய்யையும் மாயையையும் கைப்பற்றினார்கள் என்பார்கள்.

எரே 16:20. மனுஷன் தனக்கு தேவர்களை உண்டுபண்ணலாமோ? அவைகள் தேவர்கள் அல்லவே.

எரே 16:21. ஆதலால், இதோ, இப்பொழுது நான் அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன்; என் கரத்தையும் என் பெலத்தையுமே அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன்; என் நாமம் யேகோவா என்று அறிந்துகொள்வார்கள்.

இந்த வசனப்பகுதியில் கர்த்தருடைய இரக்கமும் அவருடைய நியாயத்தீர்ப்பும் கலந்து எழுதப்பட்டிருக்கிறது. இந்த வசனங்கள் சுவிசேஷத்தின் காலத்திற்கும் ஏற்றதாயிருக்கிறது.

கர்த்தர் விக்கிரகாராதனைக்காரர்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை நிச்சயமாக வரப்பண்ணுவார். கர்த்தருக்கு மறைவான இரகசியம் ஒன்றுமில்லை. கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறார். "என் கண்கள் அவர்களுடைய எல்லா வழிகளின்மேலும் நோக்கமாயிருக்கிறது; அவைகள் என் முகத்துக்கு முன்பாக மறைந்திருக்கிறதில்லை; அவர்களுடைய அக்கிரமம் என் கண்களுக்கு முன்பாக மறைவாயிருக்கிறதுமில்லை" (எரே 16:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் சர்வஞானமுள்ளவர். மனுஷருடைய அக்கிரமங்களும் பாவங்களும் அவருக்கு மறைவாயிராது. "முதலாவது நான் அவர்களுடைய அக்கிரமத்துக்கும், அவர்களுடைய பாவத்துக்கும் இரட்டிப்பாய் நீதியைச் சரிக்கட்டுவேன்" (எரே 16:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவர்களுடைய பாவங்களுக்குத்தக்க தண்டனையில், இரட்டிப்பான தண்டனையை கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கமாட்டார். அவர்களுடைய பாவங்களுக்கு கர்த்தருடைய நீதியினால் எவ்வளவு தண்டனை கொடுக்கப்படுமோ அது மாத்திரமே அவர்களுக்கு கொடுக்கப்படும். இரட்டிப்பான தண்டனை என்பது, அவர்கள் எதிர்பார்க்கிற தண்டனையில் இரட்டிப்பான தண்டனை என்று பொருள்.

கர்த்தர் யூதா மனுஷருடைய பாவத்தையும், எருசலேமின் குடிகளுடைய அக்கிரமத்தையும் கண்ணோக்கிப் பார்க்கிறார். அவர்கள் கர்த்தருடைய தேசத்தை தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் "என் சுதந்தரத்தைச் சீயென்று அருவருக்கப்படத்தக்க தங்கள் காரியங்களின் நாற்றமான விக்கிரகங்களினாலே நிரப்பினார்கள்" (எரே 16:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கானான் தேசம் கர்த்தருடைய தேசம். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். கானான் தேசத்தில் அந்நிய தேவர்களை ஆராதனை செய்வதற்கோ, விக்கிரகாராதனை செய்வதற்கோ இடமில்லை. ஆனால் யூதாவின் மனுஷர், தங்கள் தேசத்தில் விக்கிரகங்களை ஆராதித்து, யூதா தேசத்தை தீட்டுப்படுத்தியிருக்கிறார்கள். விக்கிரகங்கள் அருவருப்பானவை. கர்த்தர் விக்கிரகங்களையும், விக்கிரகாராதனையையும் அருவருக்கிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதித்து, கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களைத் தண்டிப்பதற்கு, தம்முடைய கோபாக்கினையின் கருவிகளைப் பயன்படுத்துகிறார். யூதா மனுஷருடைய விக்கிராகாராதனையினிமித்தமாய், கர்த்தர் அவர்களை யூதாதேசத்திலிருந்து, அந்நிய தேசத்திற்கு துரத்திவிடுகிறார்.

"ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு இனிமேல் சத்தியம்பண்ணமாட்டார்கள்" (எரே 16:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயருடைய சேனையிலுள்ளவர்கள் மீன்பிடிக்கிறவர்கள் போல இருக்கிறார்கள். அவர்களுக்கு கண்ணி வைக்க தெரியும். மிகுந்த கவனமாகயிருந்தால்தான் மீன்களைப் பிடிக்க முடியும். மீன்கள் வலையில் சிக்காமல் ஏமாற்றும். மீன்களுக்கு மறைவாக கண்ணிகளை வைத்து, வலைகளை விரித்து அவற்றைப் பிடிக்கவேண்டும். கல்தேயர்கள் யூதாவின் மனுஷரை, மீன்களைப் பிடிப்பதுபோல பிடித்துக்கொள்வார்கள்.

மலைகளிலும், குன்றுகளிலும், கன்மலைகளின் வெடிப்புகளிலும் வேட்டையாடுகிறவர்கள் முரட்டு குணமுள்ளவர்கள். பலமிக்கவர்கள். அவர்கள் விலங்குகளை தந்திரமாகவும் பிடிப்பார்கள். துரத்தி சென்றும் பிடிப்பார்கள். நேருக்கு நேராக மோதியும் பிடிப்பார்கள். கல்தேயரின் சேனையிலுள்ளவர்கள் மீன்பிடிக்கிறவர்போல தந்திரமுள்ளவர்களாயும், வேட்டைக்காரரைப் போல முரட்டுகுணமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். அவர்கள் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் தப்பவிடாமல் பிடித்துக்கொள்வார்கள். அவர்களை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஒருகாலத்தில் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் அவர்களை தம்முடைய பலத்த புயத்தினால் விடுதலை செய்து, கானான் தேசத்திற்கு அழைத்து வந்து, அங்கே அவர்களை குடியேற்றினார். யூதர்கள் இப்போது பாபிலோன்தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவித்து, அவர்களுடைய சொந்த தேசத்திலே, மறுபடியும் குடியேற்றுவார். கர்த்தர் தம்முடைய ஜனத்தை அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்போவதையும், அவர்களை அவர்களுடைய சொந்த தேசத்தில் மறுபடியும் குடியேற்றப்போவதையும் வாக்குத்தத்தமாய்ச் சொல்லுகிறார்.

"ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு இனிமேல் சத்தியம்பண்ணாமல், இஸ்ரவேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணுவார்கள்; நான் அவர்கள் பிதாக்களுக்குக்கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 16:15,16).

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அடிமைத்தனத்திற்குட்படுத்தப் பட்டார்கள். அவர்கள் ஆரம்பத்தில், எகிப்து தேசத்தில் சுகமாயிருந்தார்கள். அதன் பின்பு தான் அவர்கள் அடிமைப்படுத்தப்பட்டார்கள். ஆரம்பத்திலிருந்ததைவிட, வருஷங்கள் செல்ல செல்ல, அவர்களுடைய அடிமைத்தனத்தின் பாடுகளும், வேதனைகளும் அதிகரித்தது.

பாபிலோன் தேசத்து சிறையிருப்போ யூதாவின் மனுஷர் மீது திடீரென்று வந்தது. மகாபயங்கரம் திடீரென்று வருவதுபோல, கல்தேயர்கள் யூதா தேசத்தின் மீது திடீரென்று வந்தார்கள். எருசலேமின் குடிகளையும், யூதாவின் மனுஷரையும் அவர்கள் மொத்தமாய்ச் சிறைப்பிடித்துக்கொண்டுபோனார்கள். அவர்களைத் தங்கள் தேசத்தில் அடிமைப்படுத்தினார்கள். யூதர்களுக்கு பாபிலோன் தேசத்து சிறையிருப்பின் ஆரம்பத்திலேயே பாடுகளும், வேதனைகளும் உண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தபோது, அவர்கள் கோசேனில் தங்கியிருந்தார்கள். கோசேன் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஒதுக்கப்பட்ட இடம். அது விளைச்சல் நிலம். அவர்களுடைய ஆடுகளை மேய்ப்பதற்கு ஏற்ற மேய்ச்சல் நிலம். பாபிலோன் தேசத்தில், யூதாவின் மனுஷருக்கு, கோசேனைப்போல, தனியாக எந்த ஒரு இடமும் கிடைக்கவில்லை.

எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைகளாகயிருந்தபோது, அவர்கள் செங்கல் அறுக்கிற வேலையைச் செய்தார்கள். இது எகிப்தியருக்கு பிரயோஜனமுள்ள வேலை. எகிப்தியரும் இஸ்ரவேல் ஜனத்தாரின் வேலையை விரும்பினார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரை விடுதலை பண்ணுவதற்கு, எகிப்தியருக்கு விருப்பமே இல்லை.

பாபிலோன் தேசத்திலோ, யூதாவின் மனுஷருக்கு பிரயோஜனமுள்ள வேலை எதுவும் இல்லை. பாபிலோன் தேசத்தார் யூதர்களை வெறுத்தார்கள். யூதர்களும் பாபிலோன் தேசத்தாரை வெறுத்தார்கள். பாபிலோன் தேசத்தில், யூதா மனுஷர்மீது, தேவனுடைய நியாயத்தீர்ப்பு வித்தியாசமாக வந்திறங்கிற்று.

கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் சிட்சிக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தை சிட்சித்தாலும், அவர்களுக்கு போதித்து, அவர்களைத் திருத்துகிறார். "மனுஷன் தனக்கு தேவர்களை உண்டுபண்ணலாமோ? அவைகள் தேவர்கள் அல்லவே" (எரே 15:20) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரிடத்தில் கேட்கிறார். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். தங்களுக்கு அந்நிய தேவர்களை உண்டுபண்ணுகிறார்கள். விக்கிரகங்கள் உண்மையான தெய்வமல்ல. சேனைகளின் கர்த்தர் மாத்திரமே மெய்யான தேவன்.

யூதா மனுஷருடைய விக்கிரகாராதனை யினிமித்தமாய், கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். தம்முடைய நியாயத்தீர்ப்பை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். அவர்கள் கர்த்தருடைய பலத்த கரத்தைப் புரிந்து கொள்வார்கள். பாவம் செய்கிறவர்கள்மீது கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு வரும் என்பதை அறிந்துகொள்வார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவருக்கு விரோதமாக அக்கிரமமான கிரியைகளில் ஈடுபடுகிறார்கள். கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களைத் தண்டிக்கிறார். ஆனாலும் அவர் தம்முடைய ஜனத்தின்மீது கிருபையாய் இரங்குகிறார். சேனைகளின் கர்த்தராகிய தேவன், கிருபையுள்ளவராகவும் இருக்கிறார்.

கர்த்தர் யூதா மனுஷருடைய பாவங்களை விசாரித்து, அவர்களுக்கு கடுமையான நியாயத்தீர்ப்பை சொல்லுகிறார். "ஆதலால், உங்களை இந்த தேசத்திலிருந்து நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேசத்திற்குத் துரத்திவிடுவேன்; அங்கே இரவும் பகலும் அந்நிய தேவர்களைச் சேவிப்பீர்கள்; அங்கே நான் உங்களுக்குத் தயை செய்வதில்லை" (எரே 16:13) என்று கர்த்தர் யூதா மனுஷரிடத்தில், தம்முடைய கோபமான வார்த்தைகளைச் சொன்னார். அவர்களுக்கு இனிமேல் தயை செய்யப்போவதில்லை என்று ஆணையிட்டார்.

கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் அந்நிய தேசத்திற்கு துரத்திவிடப்போவதாகச் சொன்னாலும், கர்த்தருடைய வாயிலிருந்து அவர்களுக்கு ஆறுதலின் வார்த்தைகளும் உண்டாயிற்று. "இதோ, நாட்கள் வரும்" (எரே 16:14) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தரே யூதாவின் மனுஷரை அந்நிய தேசத்திற்கு துரத்திவிடுகிறார். கர்த்தருடைய கரமே அவர்களை, யூதா தேசத்திலிருந்து, அந்நிய தேசத்திற்கு துரத்திவிடுகிறது. கர்த்தருடைய அதே கரமே, அவர்களை அவர்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்பி வரப்பண்ணுகிறது.

கர்த்தர் யூதாவின் மனுஷரை அந்நிய தேசத்திற்கு துரத்திவிடுகிறார். ஆனாலும் கர்த்தர் அவர்களை துரத்தி அழித்துவிடவில்லை. "நான் அவர்கள் பிதாக்களுக்கு கொடுத்த அவர்களுடைய தேசத்திற்கு அவர்களை திரும்பி வரப்பண்ணுவேன்" (எரே 16:15) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதாவின் மனுஷர் தங்கள் தேசத்தில் மறுபடியுமாய் குடியேறுவார்கள்.

யூதாவின் மனுஷர் அந்நிய தேசங்களில் சிறைப்பட்டுப்போயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை கூட்டிச்சேர்த்து, திரும்பவும் அவர்களுடைய தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வர விரும்புகிறார். இதற்காக கர்த்தர் மீன்பிடிக்கிறவர்களையும் வேட்டைக்காரரையும் அனுப்புவதாக வாக்குப்பண்ணுகிறார். அந்நிய தேசங்களில் சிதறிப்போயிருக்கிற யூதாவின் மனுஷரை, தேடி கண்டுபிடித்து, அவர்களுடைய தேசத்திற்கு மறுபடியும் அழைத்துக்கொண்டு வரவேண்டும். இதுவே கர்த்தருடைய சித்தம்.

கர்த்தர் மேதியரையும், பெர்சியரையும் எழுப்புகிறார். இவர்கள் மீன்பிடிக்கிறவர்களைப் போலவும் வேட்டைக்காரரைப்போலவும் இருக்கிறார்கள். இவர்கள் சிதறிப்போயிருக்கிற யூதர்களை தேடி கண்டுபிடிக்கிறார்கள். மேதியரும் பெர்சியரும் யூதா தேசத்தாரை கண்டுபிடித்து, கானான் தேசத்திற்கு அவர்களை திரும்பவும் அனுப்புகிறார்கள். யூதா தேசத்தாரை அவர்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்பி வரப்பண்ண, கர்த்தர் மேதியரையும் பெர்சியரையும், மீன்பிடிக்கிறவர்களைப் போலவும், வேட்டைக்காரரைப்போலவும் பயன்படுத்துகிறார்.

யூதாவின் மனுஷர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்படுவது, எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரர் விடுவிக்கப்பட்டதைவிட மிகவும் விசேஷமாயிருக்கும். கர்த்தர் யூதா மனுஷர்மீது தம்முடைய புதிய கிருபைகளையும், புதிய இரக்கங்களையும் வெளிப்படுத்துவார். அது யூதாவின் மனுஷருக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கும். கர்த்தருடைய கிருபையை எருசலேமின் குடிகள் மனதார ஏற்றுக்கொள்வார்கள்.

கர்த்தருடைய கிருபை புதிதாயிருப்பதினாலும், அது விசேஷமாயிருப்பதினாலும், கர்த்தர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை விடுவித்ததைக்கூட, யூதாவின் மனுஷர்கள் மறந்துவிடுவார்கள். கர்த்தருடைய புதிய கிருபை கிடைக்கும்போது, அவருடைய பழைய கிருபைகளை மறந்துவிடுவது வழக்கம்.

கர்த்தர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, இஸ்ரவேல் புத்திரரை தம்முடைய பலத்த புயத்தினாலும், வல்லமையினாலும் விடுவித்து வந்தார். கர்த்தர் யூதாவின் மனுஷரை, பாபிலோன் தேசத்து சிறைப்பிருப்பிலிருந்து, சேனைகளின் கர்த்தருடைய ஆவியினால் விடுதலைபண்ணி, அவர்களை அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அழைத்து வருகிறார்.

"அப்பொழுது அவர்: செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (சக 4:6).

யூதாவின் மனுஷர், கர்த்தருக்கு விரோதமாகச் செய்த பாவங்களினால், பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களுக்கு இரங்கி, அவர்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுதலை பண்ணுகிறார். எகிப்து தேசத்தில் இஸ்ரவேல் புத்திரர், அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அடிமைப்படுத்தப்படவில்லை. பாபிலோன் தேசத்திலோ, யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தமாகவே, அவர்கள் சிறைப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர் யூதா மனுஷருடைய பாவங்களுக்கு கொடுக்கும் தண்டனையைவிட, தமது கிருபையினால் அவர்களுக்கு காண்பிக்கும் இரக்கமே மிகவும் அதிகமாயிருக்கிறது.

யூதாவின் மனுஷர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்படும்போது, அவர்களுடைய ஜீவியங்களில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாகும். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படும். அவர்கள் அந்நிய தேசத்தில் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். அங்கே இரவும் பகலும் அந்நிய தேவர்களை சேவித்தார்கள். அவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பி வரும்போது, அவர்களிடத்தில் காணப்பட்ட விக்கிரகாராதனை என்னும் நோயை கர்த்தர் குணப்படுத்துகிறார். யூதாவின் மனுஷர் தங்கள் யூததேசத்தையே விக்கிரகாராதனையினால் தீட்டுப்படுத்தி விடுகிறார்கள். கர்த்தருடைய சுதந்தரமான கானான் தேசத்தை நாற்றமான விக்கிரகங்களினால் நிரப்பினார்கள். அவர்களுடைய கிரியைகள் கர்த்தருக்கு அருவருப்பாயிருந்தது (எரே 15:18).

யூதாமனுஷருடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு அனுப்பிவிடுகிறார். கர்த்தர் அவர்கள்மீது கோபமாயிருந்தாலும், தம்முடைய இரக்கத்தையும் அவர்களுக்கு காண்பிக்கிறார். தமது கிருபையினால் அவர்களை சிறையிருப்பிலிருந்து விடுவிக்கிறார். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட யூதர்கள், தங்களை கர்த்தருக்கு முன்பாக தாழ்த்துகிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்தில் மறுபடியுமாய்த் திரும்பி வருகிறார்கள்.

அப்போது அவர்கள் கர்த்தருக்கு முன்பாக பணிவோடு வந்து நின்று, "என் பெலனும், என் கோட்டையும், நெருக்கப்படுகிற நாளில் என் அடைக்கலமுமாகிய கர்த்தாவே, புறஜாதிகள் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து உம்மிடத்தில் வந்து: மெய்யாகவே, எங்கள் பிதாக்கள் பிரயோஜனமில்லாத பொய்யையும் மாயையையும் கைப்பற்றினார்கள் என்பார்கள்" (எரே 16:19).

புறஜாதியாரும் கர்த்தரிடத்தில் வருவார்கள். பூமியின் கடையாந்தரங்களிலிருந்து புறஜாதி ஜனங்கள் கர்த்தரை ஆராதிப்பதற்காக அவரிடத்தில் வந்து சேருவார்கள். புறஜாதியார் இரட்சிக்கப்படுவதை யூதாவின் மனுஷர் பார்ப்பார்கள். தாங்களும் கர்த்தரிடத்தில் தீவிரமாய்த் திரும்பி வரவேண்டும் என்று தீர்மானித்து, யூதர்கள் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக பணிவோடும், பயபக்தியோடும், ஓடோடி வருவார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி, கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, அவர் "என் பெலனும், என் கோட்டையும், நெருக்கப்படுகிற நாளிலே என் அடைக்கலமுமாகிய கர்த்தர்" என்று சொல்லுகிறார். எரேமியாவின் ஊழியம் எளிதாயிற்று. கர்த்தர் தமது கிருபையினால் திரளான ஜனங்களை தம்மிடத்தில் அழைத்து வருகிறார், யூதரும், புறஜாதியாரும் கர்த்தரிடத்திற்கு வருகிறார்கள்.

கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறவர்கள் தங்களுடைய பாவங்களையும், தங்கள் பிதாக்களுடைய பாவங்களையும் அறிக்கை செய்வார்கள். "மெய்யாகவே, எங்கள் பிதாக்கள் பிரயோஜனமில்லாத பொய்யையும், மாயையையும் கைப்பற்றினார்கள்" என்பார்கள். விக்கிரகங்களினால் அவர்களுக்கு ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை.

யூதா மனுஷருடைய பிதாக்கள் விக்கிரகாராதனையினால் வஞ்சிக்கப்பட்டார்கள். விக்கிரகங்களுக்கு ஜீவனில்லை. அவற்றிற்கு வல்லமையுமில்லை. ஆனால் யூதா மனுஷருடைய பிதாக்களோ, மதியீனமாய் விக்கிரகங்களைப் பின்பற்றினார்கள். விக்கிரகங்கள் அவர்களை வஞ்சித்துப்போட்டது.

யூதாவின் மனுஷர் விக்கிரகாராதனையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கர்த்தரிடத்தில் திரும்பி வருவதற்கான காரணங்களையும் சொல்லுகிறார்கள். "மனுஷன் தனக்கு தேவர்களை உண்டுபண்ணலாமோ? அவைகள் தேவர்கள் அல்லவே" (எரே 16:20). இந்த வாக்கியம் யூதர்களுடைய விசுவாச அறிக்கையாகவும், பாவங்களை அறிக்கை செய்வதாகவும் இருக்கிறது.

கர்த்தரிடத்தில் திரும்பி வந்திருக்கிற யூதர்கள், அவரை ஆராதிக்கிறார்கள். அவரைக் கனம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய நாமத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் தம்மைப்பற்றிய சத்தியங்களை அவர்களுக்கு தெரியப்பண்ணுகிறார். "ஆதலால், இதோ, இப்பொழுது நான் அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன்; என் கரத்தையும் என் பெலத்தையுமே அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன்" (எரே 16:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பலத்த புயத்தினால், யூதாவின் மனுஷர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தருடைய தெய்வீக கிருபைகளும், அவருடைய இரக்கங்களுமே, யூதாவின் மனுஷரை அவர்களுடைய தேசத்திற்கு மறுபடியுமாய் அழைத்து வருகிறது.

கர்த்தர் மகிமையுள்ளவர் என்பதையும், அவர் சர்வவல்லமையுள்ளவர் என்பதையும், அவர் கிருபையும் இரக்கமும் நிரம்பியவர் என்பதையும் யூதாவின் மனுஷர் அறிந்துகொள்கிறார்கள். கர்த்தருடைய நன்மைகளை அனுபவிக்கிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தர் தங்களுக்கு நன்மை செய்கிறவராகவே இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய சுபாவங்களை யூதாவின் மனுஷருக்கு வெளிப்படுத்துகிறார். அவர்களும், கர்த்தருடைய நாமம் "யேகோவா" என்று அறிந்துகொள்கிறார்கள். யேகோவா என்பது கர்த்தருடைய நாமம். அவர் சேனைகளின் கர்த்தர். கர்த்தர் கிருபையும், இரக்கமும் மிகுந்தவர்.

யூதாவின் மனுஷர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய விடுதலை, புதிய ஏற்பாட்டுக்காலத்தில், மேசியாவாகிய இயேசுகிறிஸ்து மூலமாய், மனுக்குலத்திற்கு உண்டாயிருக்கும் ஆத்தும இரட்சிப்புக்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகளை, தம்மிடமாகக் கூட்டிச்சேர்க்கிறார். விசுவாசிகளைத் தம்முடைய தொழுவத்திற்கு அழைத்து வருகிறார். இரட்சிக்கப்படுகிறவர்கள் கர்த்தருடைய சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

17 அதிகாரம்

யூதாவின் மனுஷர் விக்கிரகாராதனை செய்கிறார்கள். இந்த பாவத்தின் நிமித்தமாய் கர்த்தர் அவர்களை அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார் (எரே 17:5-11). எரேமியாவுக்கு விரோதமாக அவருடைய சத்துருக்கள் சதிஆலோசனை பண்ணுகிறார்கள். அவருக்கு தீங்கு செய்கிறார்கள். எரேமியா தன்னை கர்த்தருடைய பாதுகாப்புக்கு ஒப்புக்கொடுக்கிறார் (எரே 17:12-18).

யூதாவின் மனுஷர் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவில்லை. கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசி மூலமாய் அவர்களுடைய பாவத்தைக் குறித்து அவர்களை எச்சரிக்கிறார். அவர்கள் ஓய்வுநாள் பிரமாணத்தை மீறினால், அவர்களுடைய வேதனைகள் அதிகரிக்கும் (எரே 17:19-27).

யூதாவின் பாவம்
எரே 17:1-4

எரே 17:1. யூதாவின் பாவம் இரும்பெழுத்தாணியினாலும், வைரத்தின் நுனியினாலும் எழுதப்பட்டு, அவர்களுடைய இருதயத்தின் பலகையிலும் உங்கள் பலிபீடங்களுடைய கொம்புகளிலும் பதிந்திருக்கிறது.

எரே 17:2. உயர்ந்த மேடுகளின்மேல் பச்சையான மரங்களண்டையில் இருந்த அவர்களுடைய பலிபீடங்களையும் அவர்களுடைய தோப்புகளையும் அவர்கள் பிள்ளைகள் நினைக்கும்படி இப்படிச் செய்திருக்கிறது.

எரே 17:3. வயல்நிலத்திலுள்ள என் மலையே, நீ உன் எல்லைகளிலெல்லாம் செய்த பாவத்தினிமித்தம் நான் உன் ஆஸ்தியையும், உன் எல்லாப் பொக்கிஷங்களையும், உன் மேடைகளையுங்கூடச் சூறையிடுவிப்பேன்.

எரே 17:4. அப்படியே நான் உனக்குக் கொடுத்த சுதந்தரத்தை நீதானே விட்டுவிடுவாய்; நீ அறியாத தேசத்தில் உன்னை உன் சத்துருக்களுக்கு அடிமையுமாக்குவேன்; என்றென்றைக்கும் எரியத்தக்க என் கோபத்தின் அக்கினியை மூட்டிவிட்டீர்களே.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷரிடத்தில், தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றி எச்சரிக்கிறார். அவர்களோ தங்களிடத்தில் ஒரு பாவமும் இல்லையென்றும், தாங்கள் ஒரு அக்கிரமமும் செய்யவில்லை என்றும் எரேமியாவிடம் சொல்லுவார்கள். "கர்த்தர் எங்கள்மேல் இத்தனை பெரிய தீங்கைக் கூறுவானேனென்றும், நாங்கள் செய்த அக்கிரமம் என்ன? நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகச் செய்த எங்கள் பாவம் என்ன?" (எரே 16:10) என்று யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் எரேமியாவிடம் கேட்பார்கள்.

யூதாவின் மனுஷர் தங்களிடத்தில் ஒரு பாவமும் இல்லை என்று சொல்ல முடியாது. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் திரளான அக்கிரமங்களை செய்திருக்கிறார்கள். அவர்களுடைய பாவங்களும், அக்கிரமங்களும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பாவங்களை குறித்து, அவர்களுடைய மனச்சாட்சியே, அவர்களுக்கு விரோதமாக சாட்சி சொல்லும். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக செய்கிற பாவங்களும் அக்கிரமங்களும் முழுஉலகத்திற்கும் முன்பாக பிரத்தியட்சமாயிருக்கிறது. அவர்களுடைய பாவங்கள் மறைவாயில்லை.

யூதாமனுஷருடைய பாவங்கள் கர்த்தருக்கு முன்பாக பிரத்தியட்சமாய் எழுதப்பட்டிருக்கிறது. அவை மிகவும் தெளிவாகவும், எளிதாக படிக்கக்கூடிய விதத்திலும் சுத்தமாக எழுதப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பாவங்கள் அசுத்தமாயிருந்தாலும், அதைப்பற்றிய எழுத்துக்கள் சுத்தமாயும் தெளிவாயும் இருக்கிறது. எளிதில் அழிந்துவிடாதபடி அது ஆழமாய்ப் பதிந்திருக்கிறது.

"இது என்னிடத்தில் வைத்து வைக்கப்பட்டு, என் பொக்கிஷங்களில் இது முத்திரை போடப்பட்டிருக்கிறதில்லையோ?" (உபா 32:34).

அவர்களுடைய பாவங்கள் இரும்பு எழுத்தாணியினாலும், வைரத்தின் நுனியினாலும் எழுதப்பட்டிருக்கிறது. இப்படி எழுதினால் அது ஒரு காலத்திலும் அழிந்துபோகாது. எழுத்தும் தேய்ந்துபோகாது. பாவிகளுடைய பாவங்களும் அப்படித்தான் இருக்கிறது. அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டால்தான் அவை மறையும். மன்னிக்கப்படாத பாவங்கள் ஒரு காலத்திலும் அழியாமல், மறையாமல், நித்திய காலமாய் நிலைத்திருக்கும். கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிக்கும்போது, அதை மன்னித்து மறந்துவிடுகிறார். மன்னிக்கப்படாத பாவங்களை கர்த்தர் ஒருபோதும் மறப்பதில்லை.

யூதா மனுஷருடைய பாவங்கள் அவர்களுடைய இருதயத்தின் பலகையிலும், அவர்களுடைய பலிபீடங்களுடைய கொம்புகளிலும் பதிந்திருக்கிறது. இருதயத்தில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளை அழிக்க முடியாது. யூதா மனுஷருடைய பாவங்கள் பலிபீடங்களுடைய கொம்புகளிலும் பதிந்திருக்கிறது. எந்த மனுஷனானாலும் பலிபீடத்தின் கொம்புகளைத் தாண்டி, கர்த்தருக்கு அருகாமையில் போகமுடியாது. நம்மால் கர்த்தருடைய கிருபாசனத்தண்டையில் மாத்திரமே கிட்டிச்சேரமுடியும்.

யூதா மனுஷருடைய பாவங்கள் பலிபீடங்களுடைய கொம்புகளிலும் பதிந்திருக்கிறது. அவர்களுடைய பலிபீடம் கர்த்தருடைய பலிபீடமல்ல. இது விக்கிரகாராதனையில் பயன்படுத்தப்படும் விக்கிரகங்களின் பலிபீடம். யூதாவின் மனுஷர் விக்கிரகங்களுக்கு பலிகளை செலுத்தி, அதன் இரத்தத்தை தங்கள் பலிபீடங்களில் தெளிக்கிறார்கள். அவர்கள் அதை ஒருவருக்கும் தெரியாமல் மறைவாய்ச் செய்யவில்லை. இது இரகசியமான பாவமுமல்ல. எல்லோருக்கும் முன்பாக வெளியரங்கமாகயிருக்கிற பிரத்தியட்சமான பாவம்.

யூதா மனுஷருடைய பக்கத்து தேசத்தார் எல்லோரும், அவர்களுடைய விக்கிரகாராதனைக்கு சாட்சி சொல்லுவார்கள். அவர்களுடைய பிள்ளைகளும் இதை நினைக்கும்படி, அவர்கள் விக்கிரகங்களுக்கு பலிசெலுத்திய இரத்தத்தை பலிபீடங்களுடைய கொம்புகளில் தெளிக்கிறார்கள்.

உயர்ந்த மேடுகளின்மேல் பச்சையான மரங்களண்டையில் இருந்த அவர்களுடைய பலிபீடங்களையும் அவர்களுடைய தோப்புகளையும் அவர்கள் பிள்ளைகள் நினைக்கும்படி இப்படிச் செய்திருக்கிறது (எரே 17:2).

யூதாவின் மனுஷருக்கு விக்கிரகங்களை ஆராதிக்கும்போது வெட்கமோ, அவமானமோ, இலச்சையோ உண்டாகவில்லை. அவர்கள் மிகுந்த சந்தோஷமாயும், மனப்பூர்வமாயும் விக்கிரகங்களுக்கு பலிகளை செலுத்தி, விக்கிரகாராதனை செய்கிறார்கள். அவர்களுடைய மனதும் இருதயமும் விக்கிரகங்களின் பட்சமாயிருக்கிறது. அவர்களை கர்த்தருடைய வார்த்தையாலும் திருத்த முடியவில்லை. கர்த்தருடைய கோலாலும் திருத்த முடியவில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கக்கூடாது என்று தீர்மானமாயிருக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் விக்கிரகங்களோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். அவர்களுடைய பாவங்கள் விக்கிரகங்களின் பலிபீடங்களுடைய கொம்புகளில் பதிந்திருக்கிறது. அது இரும்பு எழுத்தாணியினாலும், வைரத்தின் நுனியினாலும் எழுதப்பட்டிருக்கிறது. தங்களுடைய பெயர்களை விக்கிரகங்களுக்கு கொடுக்கிறார்கள். விக்கிரகங்களின் பெயர்களை தங்களுக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் வைத்துக்கொள்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும். எருசலேமின் குடிகளும் விக்கிரகாராதனையினால் கட்டப்பட்டிருக்கிறார்கள். கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அன்பின் கயிற்றால் கட்டப்பட்டிருப்பார்கள். விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்களோ பாவக்கயிற்றால் கட்டப்பட்டிருப்பார்கள்.

யூதா மனுஷருடைய பாவங்கள் உறுதிபண்ணப்பட்டிருக்கிறது. அவர்கள்மீது கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு வருகிறது. "வயல்நிலத்திலுள்ள என் மலையே, நீ உன் எல்லைகளிலெல்லாம் செய்த பாவத்தினிமித்தம் நான் உன் ஆஸ்தியையும், உன் எல்லாப் பொக்கிஷங்களையும், உன் மேடைகளையுங்கூடச் சூறையிடுவிப்பேன்" (எரே 17:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதா மனுஷருடைய பொக்கிஷங்களையெல்லாம் அந்நிய தேசத்தார் களவாடிக்கொண்டு போய்விடுவார்கள். எருசலேம் வயல் நிலத்திலுள்ள மலையின்மீது இருக்கிறது. எருசலேமிலுள்ள தேவாலயம் சமபூமிக்கு நடுவிலே உள்ள பரிசுத்த பர்வதத்தின்மீது கட்டப்பட்டிருக்கிறது. எருசலேம் செல்வ செழிப்பு மிக்க தேசம். எருசலேமின் குடிகளிடத்தில் மிகுந்த ஆஸ்தியும், ஏராளமான பொக்கிஷங்களும் இருக்கிறது. கர்த்தரோ அவர்களுடைய சம்பத்துக்களை அந்நிய தேசத்தார் வசமாக ஒப்புக்கொடுத்துவிடுகிறார். கர்த்தருக்கு விரோதமாக அவர்கள் செய்யும் பாவங்களினிமித்தமாயும், அக்கிரமங்களினிமித்தமாயும், அவர்களுக்கு இந்த தண்டனை வந்திருக்கிறது.

"அவர்களைத் தமது பரிசுத்த ஸ்தலத்தின் எல்லைவரைக்கும், தமது வலதுகரம் சம்பாதித்த இந்தப் பர்வதமட்டுக்கும் அழைத்துக்கொண்டு வந்தார்" (சங் 78:54).

"நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசமோ, மலைகளும் பள்ளத்தாக்குகளுமுள்ள தேசம்; அது வானத்தின் மழைத்தண்ணீரைக் குடிக்கும் தேசம்" (உபா 11:11).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும், கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்தை, தங்களுக்கு உயர்ந்த மேடைகளாக மாற்றிக்கொள்கிறார்கள். இதன் மீது தங்களுடைய விக்கிரகங்களை வைத்து ஆராதனை செய்கிறார்கள். கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்தில் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ஆனால் யூதாவின் மனுஷரோ, பரிசுத்த பர்வதத்தில் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். கர்த்தரை ஆராதிக்க வேண்டிய பரிசுத்த பர்வதத்தை, விக்கிரகங்களை ஆராதிக்கும் உயர்ந்த மேடைகளாக்கிவிடுகிறார்கள்.

யூதாவின் மனுஷர் தங்கள் தேசத்தின் எல்லைகளிலெல்லாம் விக்கிரகங்களை வைத்து, விக்கிரகாராதனை செய்கிறார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதா மனுஷர்மீது வருகிறது. கர்த்தர் அவர்களுடைய ஆஸ்தியையும், அவர்களுடைய எல்லா பொக்கிஷங்களையும், அவர்களுடைய மேடைகளையும் அந்நிய தேசத்தாரிடம் ஒப்புக்கொடுத்துவிடுகிறார். அவர்கள் யூதா தேசத்திற்கு வந்து இவையெல்லாவற்றையும் சூறையாடிக் கொண்டுபோய்விடுவார்கள்.

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தர் தங்களுக்கு கொடுத்த சுதந்தரத்தை விட்டுவிடுவார்கள். அந்நிய தேசத்திற்கு சிறைப்பட்டுப்போவார்கள். "அப்படியே நான் உனக்குக் கொடுத்த சுதந்தரத்தை நீதானே விட்டுவிடுவாய்; நீ அறியாத தேசத்தில் உன்னை உன் சத்துருக்களுக்கு அடிமையுமாக்குவேன்; என்றென்றைக்கும் எரியத்தக்க என் கோபத்தின் அக்கினியை மூட்டிவிட்டீர்களே" (எரே 17:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்தினால் அழிவும் மோசமும் வருகிறது. கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதங்களையும், ஆறுதலையும் பெற்றுக்கொள்வதற்கு மனுஷருடைய பாவம் தடையாயிருக்கிறது. கர்த்தருடைய ஆறுதல்கள் நமக்கு கிடைக்காதபடிக்கு பாவம் அதை நிறுத்துப்போடுகிறது. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியாதபடிக்கு, பாவம் தடையாயிருக்கிறது.

நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பினால், கர்த்தர் நமக்கு கொடுக்கும் சுதந்தரங்களை, நாம் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இழந்துபோனதை திரும்பக் கொடுப்பதற்கு மனுஷகுமாரன் இந்தப் பூமியிலே வந்திருக்கிறார். நாம் கர்த்தருடைய ஆசீர்வாதங்களை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிற நாம், மறுபடியுமாய் கர்த்தரிடத்தில் திரும்பி வரவேண்டும்.

நாம் கர்த்தரைவிட்டு விலகிப்போகும் போதும், விக்கிரகங்களை ஆராதிக்கும் போதும், கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்யும்போதும், நாம் கர்த்தருடைய கோபத்தின் அக்கினியை மூட்டிவிடுகிறோம். கர்த்தருடைய கோபம் என்றென்றைக்கும் எரிந்துகொண்டிருக்கும்.

சபிக்கப்பட்டவன் எரே 17:5,6

எரே 17:5. மனுஷர்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 17:6. அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப்போலிருந்து, நன்மைவருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் கர்த்தருடைய செய்தியை பிரசங்கம் பண்ணுகிறார். இந்த செய்தி தீர்க்கதரிசன செய்தியல்ல. இது அவர்களுக்கு அன்றாட வாழ்க்கையில் பிரயோஜனமாயிருக்கும் நடைமுறை செய்தியாகும்.

யூதாவின் குடிகள் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் சந்தோஷமும் சமாதானமுமில்லை. அவர்களுடைய ஜீவியத்தில் ஆசீர்வாதமில்லை. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தரும் அவர்களுக்கு உதவிசெய்யவில்லை.

கர்த்தருடைய கிருபையும், உதவியும், ஒத்தாசையும் கிடைக்காவிட்டாலும், தங்களுடைய வாழ்க்கையில் எப்படியாவது முன்னேறவேண்டுமென்று யூதாவின் மனுஷர் பேராசைப்படுகிறார்கள். சத்துருக்கள் யூதாவின் மனுஷர்மீது வருகிறார்கள். கர்த்தரும் அவர்களுக்கு உதவி செய்யவில்லை. இந்த சூழ்நிலையில் யூதாவின் குடிகள் விக்கிரகங்களையும், தங்கள் சுயபலத்தையும் நம்புகிறார்கள். கர்த்தர்மீது நம்பிக்கை வைப்பதற்கு பதிலாக மனுஷர்மீது நம்பிக்கை வைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"மனுஷர்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 17:5).

மனுஷனை நம்புகிறவர்கள் முறிந்துபோன நாணலை நம்பி, அதன்மீது சாய்ந்திருக்கிறவர்கள். முறிந்துபோன நாணல் ஒருபோதும், யாருக்கும் ஆதரவாயிருக்காது. யூதாவின் மனுஷர் தங்களுடைய பாவங்களை, தங்களுக்கு புயபலமாக்கிக்கொள்கிறார்கள். தங்களுக்காக விக்கிரகங்களை செய்து, அவற்றை நம்புகிறார்கள். கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். தங்களுடைய கைகளின் கிரியைகளாகிய விக்கிரகங்கள் தங்களுக்கு உதவிபுரியும் என்று நம்புகிறார்கள்.

கர்த்தரே தம்முடைய பிள்ளைகளுக்கு புயமாகயிருக்கிறார். "கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும், உமக்குக் காத்திருக்கிறோம்; தேவரீர் காலையில் அவர்கள் புயமும், இக்கட்டுக்காலத்தில் எங்கள் இரட்சிப்புமாயிரும்" (ஏசா 33:2). யூதாவின் மனுஷரோ மெய்யான, பலமான புயத்தை நம்பாமல், பொய்யான, மாயையான புயத்தை நம்புகிறார்கள். அவர்கள் ஜீவனுள்ள தேவனை நம்பாமல், ஜீவனில்லாத விக்கிரகங்களை நம்புகிறார்கள். அவர்களுடைய இருதயம் கெட்டுப்போயிருக்கிறது. தங்கள் வாயினால் கர்த்தரை துதிக்கிறார்கள். அவர்களுடைய இருதயமோ கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறது.

நாம் துரவை நம்பி நீரூற்றை விட்டுவிடக்கூடாது. நமக்கு கர்த்தராகிய ஜீவஊற்று தேவை. துரவை நம்பி, நீரூற்றை விட்டு விலகிப்போகிறவர்கள், மிகுந்த வேதனைகளை அனுபவிப்பார்கள். கர்த்தரை நம்பாமல் மனுஷர்மேல் நம்பிக்கை வைக்கிறவர்கள் மோசம் போய்விடுவார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள்.

மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைவிட்டு விலகிப்போகிறவன், "அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப்போலிருந்து, நன்மைவருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்" (எரே 17:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அந்தர வெளியில் கறளையாய்ப்போன செடி ஒன்றுக்கும் உதவாது. அது கனிதராது. நிழல் கூட தராது. இப்படிப்பட்ட செடிகளை நம்புகிறவர்கள் மோசம் போவார்கள். மனுஷன்மேல் நம்பிக்கை வைக்கிறவர்களுக்கு ஏமாற்றமுண்டாகும். கர்த்தரை நம்புகிறவர்களோ செழித்திருப்பார்கள்.

கர்த்தரைவிட்டு விலகிப்போகிறவர்களுக்கு, நன்மைகள் வந்தாலும், அவர்கள் அதை காணமாட்டார்கள். அந்த நன்மையில் அவர்களுக்கு பங்கும் இருக்காது. பாத்தியமும் இருக்காது. வனாந்தரத்தில் செழிப்பான இடம் இருக்காது. வனாந்தரத்தில் தங்குகிறவர்கள் வறட்சியான இடங்களில் தங்கவேண்டும். கர்த்தரை நம்பாமல் மனுஷரை நம்புகிறவர்கள் வனாந்தரங்களிலுள்ள வறட்சியான இடங்களில் தங்குகிறவர்களைப்போல இருப்பார்கள்.

நல்ல நிலத்தில் வளருகிற விருட்சங்கள் கனிதரும். நல்ல வயலில் பயிரிடப்பட்ட தானியத்தில் நல்ல விளைச்சல் உண்டாகும். தானிய அறுவடை அதிகமாயிருக்கும். அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடிக்கு அறுவடை காலமிருக்காது. அவர்களை நம்புகிறவர்களும் ஏமாந்துபோவார்கள்.

நம்முடைய நம்பிக்கை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மீதும், அவருடைய கிருபையின்மீதும் இருக்கவேண்டும். நம்முடைய சுயநீதியையும், சுயபலத்தையும் நம்பினால் நாம் ஏமாந்துபோவோம். கர்த்தருடைய கிருபையை நம்பாமல், மனுஷன்மேல் நம்பிக்கை வைக்கிறவன், மாம்சமானதை தன் புயபலமாக்கிக் கொள்கிறவன். அவனுடைய ஆத்துமா செழிக்காது. அவர்களால் தேவனுக்குப் பிரியமான கனிகளைக் கொடுக்க முடியாது. இவர்களிடத்திலிருந்து நன்மையான கனிகளை மற்றவர்களும் பெற்றுக்கொள்ள முடியாது. இவர்கள் அந்தரவெளியில் வறட்சியாய் வளருகிற செடியைப்போன்றவர்கள். இவர்களுக்கும் தண்ணீர் கிடைக்காது. இவர்கள் மற்றவர்களுக்கும் கனிகொடுக்கமாட்டார்கள்.

பாக்கியவான்
எரே 17:7,8

எரே 17:7 கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

எரே 17:8. அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்.

கர்த்தரை நம்புகிறவர்கள் செழித்திருப்பார்கள். கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து ஜீவிக்கிறவர்களுக்கு அநேக நன்மைகள் உண்டாகும். அவர்கள் கர்த்தரிடத்திலும், கர்த்தருடைய அன்பிலும் நம்பிக்கை வைத்திருப்பதினால், அவர்களுடைய ஜீவியகாலம் சமாதானமும் ஆறுதலும் நிரம்பியதாகயிருக்கும். "கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (எரே 17:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள், தங்களுக்கு நன்மையான ஈவுகள் கர்த்தரிடத்திலிருந்து வரும் என்று எதிர்பார்ப்பார்கள். கர்த்தருடைய வல்லமையே நம்மைப் பலப்படுத்தும் என்று விசுவாசித்து அவரையே சார்ந்திருப்பார்கள். கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்டிருக்கிற மனுஷன், தண்ணீரண்டையிலே நாட்டப்பட்ட மரத்தைப்போலிருப்பான். அவன் கனிகொடுப்பான். பட்டுப்போகமாட்டான். அப்படிப்பட்ட மனுஷனே பாக்கியவான்.

கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்டிருக்கிற மனுஷன், எப்படியெல்லாம் ஆசீர்வதிக்கப்படுவான் என்று கர்த்தர் இவ்வாறு சொல்லுகிறார். "அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்" (எரே 17:8).

கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறவன், தண்ணீரண்டையில் நாட்டப்பட்ட மரத்தைப்போலிருப்பான். இந்த மரம் நல்ல நிலத்தில் நாட்டப்பட்டிருக்கிறது. இதற்கு விசேஷித்த கவனமும், பராமரிப்பும், பாதுகாப்பும் கொடுக்கப்படும். இந்த மரம் கால்வாய் ஓரமாக தன் வேர்களை விடும். வேர்கள் ஆழமாய்ப் பதியும். மரமும் உறுதியாய் நிலைத்திருக்கும். இந்த மரத்திற்கு தேவையான தண்ணீர் கால்வாயிலிருந்து தாராளமாய்க் கிடைக்கும். இப்படிப்பட்ட மரத்திற்கு ஒரு குறைவும் உண்டாகாது.

கர்த்தரை தன்னுடைய நம்பிக்கையாக கொண்டிருக்கிற மனுஷனுடைய ஜீவியம் சந்தோஷமும், சமாதானமும் நிரம்பியதாயிருக்கும். அவனுக்கு ஒரு பிரச்சனையும் வராது. கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் அவனுக்கு தொடர்ந்து கிடைக்கும். இப்படிப்பட்ட மனுஷன் பாக்கியவானாயிருப்பான். இவன் உணவுக்காகவோ, உடைக்காவோ கவலைப்படமாட்டான். இவனுக்குத் தேவையான எல்லா ஆசீர்வாதங்களையும் கர்த்தர் கொடுப்பார்.

தண்ணீரண்டையிலே நாட்டப்பட்ட மரம் உஷ்ணம் வருகிறதை காணாது. வெயிலின் உஷ்ணம் அதிகமாயிருந்தாலும், அது இந்த மரத்தை பாதிக்காது. கோடைகாலத்து வெயிலைத் தாங்கமுடியாமல் இந்த மரம் பட்டுப்போகாது. இதன் வேர்கள் கால்வாய் ஓரமாக படர்ந்திருக்கிறது. நிலம் தண்ணீரில்லாமல் காய்ந்துபோனாலும், இந்த மரத்தின் வேர்களுக்கு கால்வாயிலிருந்து தண்ணீர் கிடைக்கும். கோடைகாலத்தை தாங்கிக்கொள்ளும் அளவுக்கு இதற்குத் தேவையான நீர் ஆதாரங்கள் கிடைக்கும்.

தண்ணீரண்டையில் நாட்டப்பட்ட மரத்தின் இலைகள் பச்சையாயிருக்கும். அதன் இலைகள் ஒருபோதும் பட்டுப்போவதில்லை. அவை கோடைகாலத்து வெயிலில் காய்ந்து போவதுமில்லை. இப்படிப்பட்ட மரம் தனக்குத் தானே சந்தோஷமாயும் இருக்கும். இலை பச்சையாயிருக்கிற மரத்தைப் பார்க்கும்போது, அது நம்முடைய கண்களுக்கும் பசுமையாயிருக்கும். கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்டிருக்கிற மனுஷனுக்கு உள்ளான சாமாதானமும், உள்ளான திருப்தியும் உண்டாயிருக்கும்.

தண்ணீரண்டையில் நாட்டப்பட்ட மரம் மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றி தப்பாமல் கனிகொடுக்கும். பூமியின்மீது மழை பெய்யவில்லையென்றாலும், இந்த மரத்திற்கு தேவையான சத்து ஆதாரங்கள், கால்வாயிலிருந்து வேர்கள் மூலமாய் அதற்கு கிடைக்கும். மரத்தில் விதையிருப்பதுபோல, இந்த மரத்திற்குத் தேவையான தண்ணீரும் அதற்குள்ளே இருக்கும்.

நமக்கு ஒரு வற்றாத நீரூற்று இருக்கும் வரையிலும், நாம் துரவைத் தோண்ட வேண்டும் என்னும் அவசியமுமில்லை. துரவைப்பற்றிய கவலையும் நமக்குத் தேவையில்லை. கர்த்தரே நமக்கு வற்றாத நீரூற்றாகவும், ஜீவத்தண்ணீராகவும் இருக்கிறார். கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள், கர்த்தரிடத்திலிருந்து கிருபையையும் பெலத்தையும் பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் எக்காலத்திலும் நல்ல கனிகளைக் கொடுப்பார்கள்.

இருதயம் கேடுள்ளதாயிருக்கிறது எரே 17:9,10

எரே 17:9. எல்லாவற்றைப்பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?

எரே 17:10. கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும் படிக்கும், இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதிக்கிறவருமாயிருக்கிறேன்.

மனுஷருடைய இருதயம் திருக்குள்ளதும் கேடுள்ளதுமாயிருக்கிறது. கர்த்தர் மனுஷனுடைய இருதயத்தை எப்போதும் ஆராய்ந்து பார்க்கிறார். கர்த்தர் மனுஷனுடைய உள்ளிந்திரியங்களை சோதித்தறிகிறார். மனுஷன் முகத்தைப் பார்க்கும்போது, கர்த்தர் நம்முடைய இருயத்தை ஆராய்ந்து அறிகிறார். மனுஷன்மேல் நம்பிக்கை வைப்பதும், மாம்சமானதை நம்முடைய புயபலமாக்கிக்கொள்வதும் மதியீனமான காரியம். மனுஷன் நம்மை வஞ்சித்துவிடுவான். மனுஷனால் நமக்கு உதவிபண்ண முடியாது.

நாம் பல சமயங்களில் கர்த்தரை நம்புவதாக நமக்குள்ளே நினைத்துக் கொண்டிருப்போம். ஆனால் மெய்யாகவே நாம் கர்த்தர்மேல் நம்பிக்கை வைக்கமாட்டோம். இதனால் நம்முடைய நம்பிக்கைகளும் பயங்களும் நமக்குள்ளே ஏற்றதாழ்வோடு காணப்படுகிறது. நம்முடைய இருதயத்தில் சந்தோஷமும் வேதனையும் மாறிமாறி வருகிறது.

கர்த்தரை நம்புகிறவர்கள் கலங்கமாட்டார்கள். அவர்களுடைய இருதயம் சமாதானமாயும், ஆறுதலாயும் இருக்கும். அவர்கள் கர்த்தர்மேல் தங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை தங்கள் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எந்த சூழ்நிலையிலும் கலங்கமாட்டார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் உலகத்தை கலக்குகிறவர்களாக இருப்பார்களேயல்லாமல், உலகத்தைப் பார்த்து கலங்குகிறவர்களாக இருக்கமாட்டார்கள்.

ஆனால் மனுஷனுடைய இருதயமோ திருக்குள்ளதும், மகாகேடுள்ளதுமாயிருக்கிறது. இது நமக்கே தெரியவில்லை. நம்முடைய இருதயம் கேடுள்ளது என்பதை நாமே நம்புவதில்லை. ஆனால் நம்முடைய திருக்குள்ள இருதயம் கேடான காரியங்களை சிந்திக்கிறது. அது நன்மையை தீமையென்று சொல்லுகிறது. தீமையை நன்மையென்று சொல்லுகிறது. நம்முடைய இருதயம் சுத்தமாயில்லை என்றால், நம்முடைய மனக்கண்கள் மங்கிப்போய்விடும். நம்மால் உண்மை நிலையை அறியமுடியாது. எல்லாவற்றின்மேலும் மாயையான சாயத்தைப் பூசி, அதன் உண்மை நிலையை மறைத்துவிடுவோம்.

மனுஷனுடைய கேடுள்ள இருதயம் தேவனைப்பற்றி ஓரளவு சிந்தித்துப் பார்த்து, "இந்த உலகத்தில் தேவன் இல்லை" என்று சொல்லுகிறது. "தேவனைப் பார்க்க முடியாது" என்றும் மனுஷனுடைய கேடான இருதயம் அவனுக்கு சொல்லுகிறது. கர்த்தருக்கு விரோதமான ஏராளமான பொய்களை திருக்குள்ள இருதயம் தாராளமாய் உற்பத்தி பண்ணும். மனுஷனுடைய இருதயம் அவனையே வஞ்சித்துவிடும்.

மனுஷனுடைய இருதயத்தின் நிறைவினால் அவனுடைய வாய் பேசுகிறது. நம்முடைய மனச்சாட்சி சுத்தமாயும் தெளிவாயும் இருக்கவேண்டும். இல்லையென்றால் நம்முடைய பாவங்களை நம்மால் உணரமுடியாது. நம்மிடத்தில் பாவங்களும் அக்கிரமங்களும் இருக்கிறது என்பதை அங்கீரிக்கவுமாட்டோம். நம்முடைய இருதயமே எல்லா பாவங்களுக்கும் பிறப்பிடமாகயிருக்கிறது. நம்முடைய இருதயம் திருக்குள்ளதும், மகாகேடுள்ளதுமாயிருக்கும்போது, நம்முடைய கிரியைகளும் கேடானதாயிருக்கும்.

மனுஷனுடைய இருதயம் கேடுள்ளதாயிருந்தாலும், அதை அறியத்தக்கவன் ஒருவனுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தரால் மாத்திரமே மனுஷருடைய இருயத்தை அறியமுடியும். "கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கும், இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதிக்கிறவருமாயிருக்கிறேன்" (எரே 17:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நம்முடைய இருதயத்தையே நம்மால் அறியமுடியாமல் இருக்கும்போது, மற்றவர்களுடைய இருதயத்தை நாம் அறிந்துகொள்வது என்பது இயலாத காரியம். ஆகையினால் நாம் மனுஷன்மேல் நம்பிக்கை வைக்கக்கூடாது. மாம்சமானதை நம்முடைய புயபலமாக்கிக்கொள்ளக்கூடாது. மனுஷரை நம்பினால் நமக்கு ஏமாற்றமுண்டாகும். மற்றவர்களுடைய இருதயம் எந்த அளவுக்கு திருக்குள்ளது என்பதும், அது எந்த அளவுக்கு மகாகேடுள்ளது என்பதும் நமக்குத் தெரியாது. மனுஷரை நம்புகிறவர்கள், தங்கள் கண்களை மூடிக்கொண்டு, குழியிலே விழுகிறவர்களுக்கு ஒப்பானவர்கள். இவர்கள் முறிந்துபோன நாணல்மீது சாய்ந்துகொள்ளலாம் என்று நினைக்கிறார்கள்.

அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் எரே 17:11

எரே 17:11. அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங்காத்தும், குஞ்சுபொரிக்காமற் போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான்; அவன் தன் பாதி வயதிலே அதைவிட்டு, தன் முடிவிலே மூடனாயிருப்பான்.

அநியாயமாய் ஐசுவரியத்தை சம்பாதிக்கிறவனுக்கு சந்தோஷமோ சமாதானமோ இருக்காது. கர்த்தருடைய ஆசீர்வாதம் அவன்மீது தங்கியிருக்காது. அநியாயமாய் சம்பாதிக்கிற ஐசுவரியத்தின்மீது கர்த்தருடைய சாபம் தங்கியிருக்கும். பணத்தை நம்புகிறவர்கள் ஏமாந்து போவார்கள். அநியாயமாய் ஐசுவரியத்தை சம்பாதிக்கிறவர்கள், கர்த்தரை நம்பாமல், தங்கள் ஐசுவரியங்களை நம்புவார்கள். ஐசுவரியம் தங்களுக்கு சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொடுக்கும் என்று எதிர்பார்ப்பார்கள். ஆனால் அவர்களுடைய ஐசுவரியம், அவர்கள் எதிர்பார்த்த சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அவர்களுக்கு கொடுக்காது.

ஐசுவரியத்தினால் சந்தோஷம் வந்தாலும், அது நிலைத்திருக்காது. உலகப்பிரகாரமான சந்தோஷம் தற்காலிகமானது. கர்த்தர் கொடுக்கிற சந்தோஷமே நிலைத்திருக்கும். அதுவே நித்திய சந்தோஷம். அநியாயமாய் ஐசுவரியத்தை சம்பாதிக்கிறவனின் நாவு பொய் நாவாயிருக்கும். அது வீண்பெருமையை பேசும். அவனுக்கு ஐசுவரியம் மிகுதியாய்ச் சேர்ந்தவுடன், "நான் ஒரு ஐசுவரியவான்" என்று பெருமையாய்ப் பேசுவான். அவனிடத்திலிருந்து ஐசுவரியம் எடுத்துக்கொள்ளப்பட்டால், அவன் ஒன்றுமில்லாமல் போய்விடுவான். ஐசுவரியம் எந்த மனுஷனுக்கும் கடைசி வரையிலும் உதவி செய்யாது.

உலகப்பிரகாரமான ஐசுவரியத்தைவிட கர்த்தருடைய கிருபையே மிகுந்த பெலமுள்ளது. ஆவிக்குரிய ஐசுவரியங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் பிரயோஜனமுள்ளதாயிருக்கும். கர்த்தரை நம்புகிறவர்களின் மரணமும் சமாதானமாயிருக்கும். அவர்கள் மரித்த பின்பும் சமாதானமாய் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பார்கள்.

"உன் அந்தியகாலத்தில் நீ ஞானமுள்ளவனாயிருக்கும்படி, ஆலோசனையைக்கேட்டு, புத்திமதியை ஏற்றுக்கொள்" (நீதி 19:20).

உலகப்பிரகாரமான ஐசுவரியத்தை நம்புகிறவர்கள் பொய்யையும், மாயையையும் நம்புகிறார்கள். ஐசுவரியம் தங்களை வஞ்சித்துவிட்டது என்பதைக்கூட அவர்களால் உடனே உணரமுடியாது. காலம் கடந்துதான் உணருவார்கள். எல்லாம் முடிந்துபோன பின்பு, புத்தி தெளிந்து ஒரு பிரயோஜனமுமில்லை.

கவுதாரி முட்டையிட்டு அவயங்காக்கும். ஆனால் குஞ்சு பொரிக்காமல் போய்விடும். அதுபோலவே அநியாயமாய் ஐசுவரியத்தை சம்பாதிக்கிறவனும், தன் பாதி வயதிலே, தான் சம்பாதித்த ஐசுவரியத்தை இழந்துபோவான். தன்னுடைய முடிவிலே மூடனாயிருப்பான்.

"தீக்குருவிகள் தங்கள் செட்டைகளை அசைவாட்டி ஓடுகிற ஓட்டம், நாரை தன் செட்டைகளாலும் இறகுகளாலும் பறக்கிறதற்குச் சமானமல்லவோ? அது தன் முட்டைகளைத் தரையிலே இட்டு, அவைகளை மணலிலே அனலுறைக்க வைத்துவிட்டுப்போய், காலால் மிதிபட்டு உடைந்து போம் என்பதையும், காட்டுமிருகங்கள் அவைகளை மிதித்துவிடும் என்பதையும் நினைக்கிறதில்லை. அது தன் குஞ்சுகள் தன்னுடைய தல்லாததுபோல அவைகளைக் காக்காத கடினகுணமுள்ளதாயிருக்கும்; அவைகளுக்காக அதற்குக் கவலையில்லாதபடியினால் அது பட்ட வருத்தம் விருதாவாம்" (யோபு 39:13-16)

"ஒரு குருவிக்கூட்டைக் கண்டுபிடிக்கிறதுபோல் என் கை ஜனங்களின் ஆஸ்தியைக் கண்டுபிடித்தது; விட்டு விடப்பட்ட முட்டைகளை வாரிக்கொள்வதுபோல் பூமியையெல்லாம் நான் வாரிக்கொண்டேன்; ஒருவரும் செட்டையை அசைத்ததுமில்லை, வாயைத் திறந்ததுமில்லை, கீச்சென்று சத்தமிட்டதுமில்லை என்று சொல்லுகிறான்" (ஏசா 10:14).

ஐசுவரியவான் மிகுந்த பிரயாசப்பட்டு தனக்கு ஐசுவரியத்தை சம்பாதிக்கிறான். பாவமான வழிகளையும், அக்கிரமமான வழிகளையும் பயன்படுத்தி, தன்னுடைய ஐசுவரியத்தை அநியாயமாய் சம்பாதிக்கிறான். அவனுக்கு ஐசுவரியமும் சேருகிறது. தன்னுடைய ஐசுவரியத்தின்மீது கவுதாரி முட்டையிட்டு அடைகாப்பதுபோல உட்கார்ந்திருக்கிறான். அநியாயமாய் சம்பாதிக்கப்பட்ட ஐசுவரியம் அவனுக்கு உதவிசெய்யாது. அது அவனுக்கு ஆறுதலையும் திருப்தியையும் தராது.

கர்த்தாவே
எரே 17:12-18

எரே 17:12. எங்கள் பரிசுத்த ஸ்தானம் ஆதிமுதற்கொண்டு உயர்ந்த மகிமையுள்ள சிங்காசனமாயிருக்கிறது.

எரே 17:13. இஸ்ரவேலின் நம்பிக்கையாகிய கர்த்தாவே, உம்மைவிட்டு விலகுகிற யாவரும் வெட்கப்படுவார்கள்; அவர்கள் ஜீவனுள்ள தண்ணீரின் ஊற்றாகிய கர்த்தரை விட்டு விலகிப்போனபடியால், உம்மைவிட்டு அகன்றுபோகிறவர்களின் பெயர் புழுதியில் எழுதப்படும்.

எரே 17:14. கர்த்தாவே, என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்; என்னை இரட்சியும், அப்பொழுது இரட்சிக்கப்படுவேன்; தேவரீரே என் துதி.

எரே 17:15. இதோ, இவர்கள் என்னைப் பார்த்து: கர்த்தருடைய வார்த்தை எங்கே? அது இப்பொழுது வரட்டும் என்கிறார்கள்.

எரே 17:16. நானோ உம்மைப் பின்பற்றுகிற மேய்ப்பன், இதற்கு நான் மிஞ்சி நடக்கவில்லை; ஆபத்துநாளை விரும்புகிறதுமில்லையென்று நீர் அறிவீர்; என் உதடுகளிலிருந்து புறப்பட்டது உமக்கு முன்பாகச் செவ்வையாயிருந்தது.

எரே 17:17. நீர் எனக்குப் பயங்கரமாயிராதேயும்; தீங்குநாளில் நீரே என் அடைக்கலம்.

எரே 17:18. நான் வெட்கப்படாமல், என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் வெட்கப்படுவார்களாக; நான் கலங்காமல், அவர்கள் கலங்குவார்களாக; தேவரீர் தீங்கு நாளை அவர்கள்மேல் வரப்பண்ணி, இரட்டிப்பான நொறுக்குதலால் அவர்களை நொறுக்கும்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய சமுகத்தில் தனிமையாய் வந்து ஜெபம்பண்ணுகிறார். தன்னுடைய மனதின் விருப்பங்களையும், வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு ஏராளமான கிருபைகளையும், பெரிய சிலாக்கியங்களையும் கொடுத்திருக்கிறார். கர்த்தரைப்பற்றிய வெளிப்பாடு யூதா மனுஷருக்கு கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய ஆலயமும் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

"எங்கள் பரிசுத்த ஸ்தானம் ஆதிமுதற்கொண்டு உயர்ந்த மகிமையுள்ள சிங்காசனமாயிருக்கிறது" (எரே 17:12) என்று எரேமியா சொல்லுகிறார்.

எருசலேமிலுள்ள தேவாலயத்தில் கர்த்தருடைய பிரசன்னம் பிரத்தியட்சமாய் வெளிப்பட்டிருக்கிறது. யூதாவின் மனுஷர் தேவாலயத்திற்கு வந்து, அவருடைய தெய்வீக பிரசன்னத்திற்கு முன்பாக நின்று, கர்த்தரை ஆராதிக்கிறார்கள். கர்த்தருடைய சர்வவல்லமையையும், சர்வமகிமையையும் நினைவுகூர்ந்து, அவருடைய பரிசுத்த ஸ்தலத்திற்கே வந்து, அவரைத் துதிப்பது யூதாவின் மனுஷருக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம்.

யூதாவின் மனுஷர் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குட்பட்டிருந்தாலும், கர்த்தருடைய மகிமையும், அவருடைய பிரசன்னமும் அவர்களோடு தங்கியிருக்கிறது. கர்த்தருடைய பரிசுத்த ஸ்தானம், அவருடைய மகிமையுள்ள சிங்காசனமாகும். கர்த்தர் எங்கே வாசம்பண்ணுகிறாரோ, அதுவே அவருடைய வாசஸ்தலம். கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மத்தியில் வாசம்பண்ணுகிறார். யூதாவின் மனுஷர் மத்தியில் கர்த்தருடைய உயர்ந்த மகிமையுள்ள சிங்காசனம் இருக்கிறது.

எருசலேம் மகாராஜாவின் நகரம் என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரவேலின் ராஜாவும் எருசலேமிலிருக்கிறார். கர்த்தரோ ராஜாதி ராஜாவாயிருக்கிறார். கர்த்தர் முழுபூமியையும் ஆளுகை செய்கிறார். ஆகையினால் இந்த உலகத்திற்கு, எருசலேம் நகரம், மகாராஜாவின் நகரமாயிருக்கிறது. கர்த்தர் ஆதிமுதற்கொண்டே, எருசலேமில் வாசம்பண்ணுகிறார். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தானமும், அவருடைய உயர்ந்த மகிமையுள்ள சிங்காசனமும் எருசலேமிலிருக்கிறது. "நான் கட்டப்போகிற ஆலயம்பெரியதும் ஆச்சரியப்படத்தக்கதுமாயிருக்கும்" (2நாளா 2:9).

எரேமியா தீர்க்கதரிசி, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது எருசலேமைப்பற்றிச் சொல்லுகிறார். யூதா தேசத்திற்கும், எருசலேம் நகரத்திற்கும், கர்த்தருடைய விசேஷித்த பாதுகாப்பும், பராமரிப்பும் உண்டாயிருக்கவேண்டும் என்பதற்காக, எரேமியா கர்த்தரிடத்தில் எருசலேமைப்பற்றிச் சொல்லியிருக்கலாம்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். கர்த்தருடைய உயர்ந்த மகிமையுள்ள சிங்காசனம் எருசலேமிலிருந்தாலும், எருசலேமின் குடிகள் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தருடைய பரிசுத்த ஸ்தானம் ஆதிமுதற்கொண்டு எருசலேமிலிருப்பதினால், கர்த்தர் தமது கிருபையினால் எருசலேமை பாதுகாக்கவேண்டும் என்று எரேமியா விண்ணப்பம்பண்ணுகிறார்.

தேவன் நீதியுள்ளவர். அவர் பாவிகளுக்கு தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பைக் கொடுக்கிறார். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணுகிறார்கள். அக்கிரமங்களை செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. கர்த்தர் யூதாவின் மனுஷரையும், அவர்களுடைய தேசத்தையும் அழிவுக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

கர்த்தரே இஸ்ரவேலின் நம்பிக்கையாயிருக்கிறார். கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரை தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான் (எரே 17:7). கர்த்தரைவிட்டு விலகுகிறவர்கள் யாவரும் வெட்கப்படுவார்கள். கர்த்தரைவிட்டு விலகுகிறவர்கள் "வெட்கப்படவேண்டும்" என்று எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபிப்பதாகவும், வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு விளக்கம் சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார்கள். தங்களுடைய பாவங்களை நினைத்து அவர்கள் வெட்கப்படவேண்டும். தங்கள் பாவங்களுக்கு மனம் வருந்தவேண்டும். அப்போதுதான் தேவனுடைய கிருபை அவர்களுக்கு கிடைக்கும். எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, அவருடைய கிருபை யூதாமனுஷர்மீது வரவேண்டுமென்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தரைவிட்டு விலகுகிறவர்கள், அவருடைய வார்த்தையைவிட்டும், அவருடைய பிரமாணத்தைவிட்டும் விலகிப்போய்விடுகிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை யூதாவின் மனுஷர் மத்தியில் பிரசங்கம்பண்ணுகிறார். எரேமியாவின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல், அவரைவிட்டு விலகிப்போகிறவர்கள், கர்த்தரைவிட்டே விலகிப்போகிறார்கள்.

கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறவர்கள், அவருடைய தீர்க்கதரிசிகளிடத்திலும் திரும்பி வருகிறார்கள். "இதினிமித்தம்: நீ திரும்பினால் நான் உன்னைத் திரும்பச் சீர்ப்படுத்துவேன்; என் முகத்துக்குமுன்பாக நிலைத்துமிருப்பாய்; நீ தீழ்ப்பானதினின்று விலையேறப்பெற்றதைப் பிரித்தெடுத்தால், என் வாய் போலிருப்பாய்; நீ அவர்களிடத்தில் திரும்பாமல், அவர்கள் உன்னிடத்தில் திரும்புவார்களாக என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 15:19).

கர்த்தரைவிட்டு அகன்றுபோகிறவர்களின் பெயர் புழுதியில் எழுதப்படும் என்று எரேமியா சொல்லுகிறார். துன்மார்க்கருடைய பெயர்கள் ஜீவப்புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்படும். புழுதியில் எழுதப்படும் பெயர் சீக்கிரத்தில் அழிந்துபோகும். கர்த்தரைவிட்டு அகன்றுபோகிறவர்களும் சீக்கிரத்தில் அழிந்து நிர்மூலமாவார்கள்.

அவர்கள் ஜீவனுள்ள தண்ணீரின் ஊற்றாகிய கர்த்தரைவிட்டு விலகிப்போகிறார்கள். ஊற்றைவிட்டுவிட்டு, உடைந்த தொட்டியை நாடிப்போகிறார்கள். ஜீவனுள்ள தேவனை விட்டுவிட்டு, ஜீவனில்லாத விக்கிரகங்களை தேடிப்போகிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தன்னைக் குணமாக்கவேண்டுமென்று, எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார். "கர்த்தாவே, என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்; என்னை இரட்சியும், அப்பொழுது இரட்சிக்கப்படுவேன்; தேவரீரே என் துதி" (எரே 17:14) என்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

யூதாவின் மனுஷர் எரேமியாவின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் அவரைத் தூஷித்து ஏளனம் பண்ணினார்கள். எரேமியாவுக்கு சத்துருக்கள் மூலமாய் மனதிலும் இருதயத்திலும், ஆவியிலும் காயங்கள் உண்டாயிற்று. அவர்கள் பலமுறை எரேமியாவைக் காயப்படுத்தியிருக்கிறார்கள். எரேமியாவை கர்த்தரால் மாத்திரமே குணப்படுத்த முடியும். கர்த்தரே பரமவைத்தியர். அவரே நம்முடைய ஆத்துமாவின் காயங்களை குணப்படுத்தக் கூடியவர். கர்த்தர் குணப்படுத்தினால், எரேமியா குணமாவார்.

யூதாவின் மனுஷர் துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். எரேமியா அவர்களுடைய துன்மார்க்கத்துக்கு விரோதமாக, அவர்களை எச்சரிக்கிறார். கர்த்தருடைய நாமத்தினால் அவர்களை கடிந்துகொள்கிறார். இதனால் யூதாவின் மனுஷருக்கு எரேமியாவின்மேல் கோபம் வருகிறது. அவர்கள் ஒன்றுகூடி எரேமியாவை எதிர்க்கிறார்கள். எரேமியாவைக் காயப்படுத்துகிறார்கள். கர்த்தரால் மாத்திரமே, எரேமியாவை, அவருடைய சத்துருக்களின் கைகளுக்கு விலக்கி காத்துக்கொள்ள முடியும். எரேமியா இந்த சத்தியத்தை உணர்ந்தவராக, "கர்த்தாவே, என்னை இரட்சியும், அப்போது இரட்சிக்கப்படுவேன்" என்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தர் எரேமியாவின் ஜீவனைப் பாதுகாத்தால் மாத்திரமே, அவரால் ஜீவனோடிருக்க முடியும். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. எரேமியா தன்னுடைய ஜீவகாலமெல்லாம், கர்த்தரைத் துதிப்பதற்கும், கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கும், தன்னை ஒப்புக்கொடுக்கிறார். "தேவரீரே என் துதி" என்று சொல்லுகிறார். கர்த்தரே எரேமியாவின் துதியாகவும், மகிமையாகவும் இருக்கிறார். கர்த்தர் தன்னைக் குணப்படுத்தி, தன்னை இரட்சிக்க வேண்டும் என்றும், அதனால் அவர் துதிக்கப்படவேண்டும் என்றும், மகிமையடையவேண்டும் என்றும் எரேமியா விரும்புகிறார். கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காகவே நம்மைக் குணப்படுத்துகிறார். அவருடைய நாமமகிமைக்காகவே நம்மை இரட்சிக்கிறார்.

யூதாவின் மனுஷரில் அநேகர் எரேமியாவுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார்கள். எரேமியா யூதா மனுஷர் மத்தியில் கர்த்தருடைய செய்தியை அறிவிக்கிறார். அவர்களுடைய ஆத்துமாவுக்கு நன்மை உண்டாகும் ஆலோசனைகளைச் சொல்லுகிறார். ஆனால் அவர்களோ துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்களுக்கு எரேமியாவின்மீது அன்புமில்லை. கர்த்தர்மீது பக்தியுமில்லை. ஆனாலும் எரேமியா, கர்த்தர் தன்னுடைய வாயில் போட்ட வார்த்தைகளை, யூதா மனுஷரிடத்தில் உண்மையாய்ச் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று எரேமியா எதிர்பார்க்கிறார். அவர்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வந்து, அவரைத் துதிப்பார்கள் என்று விரும்புகிறார். ஆனால் அவர்களோ கர்த்தரையும் மகிமைப்படுத்தவில்லை. எரேமியாவையும் நேசிக்கவில்லை. அவர்கள் எரேமியாவைப் பார்த்து, "கர்த்தருடைய வார்த்தை எங்கே? அது இப்பொழுது வரட்டும்" (எரே 17:15) என்று சொல்லுகிறார்கள்.

"நாம் பார்க்கும்படி அவர் தீவிரித்துத் தமது கிரியையைச் சீக்கிரமாய் நடப்பிக்கட்டுமென்றும், இஸ்ரவேலின் பரிசுத்தருடைய ஆலோசனையை நாம் அறியும்படி அது சமீபித்து வரட்டுமென்றும் சொல்லுகிறவர்களுக்கு ஐயோ" (ஏசா 5:19).

யூதாவின் மனுஷர் எரேமியா தீர்க்கதரிசியை துன்பப்படுத்துகிறார்கள். அவருடைய வாயிலிருந்து புறப்பட்டு வரும் சத்தியத்தை மறுதலிக்கிறார்கள். எரேமியா சொல்லுகிற தீர்க்கதரிசனங்கள் மெய்யாகயிருக்குமென்றால், அவை ஏன் இன்னும் நிறைவேறவில்லை என்று கேட்கிறார்கள். அவர்கள் எரேமியாவின் வார்த்தைகளை அங்கீகரிக்கவில்லை. கர்த்தர் தம்முடைய வல்லமையின் பிரகாரம் தங்களைத் தண்டிக்கட்டும் என்று யூதாவின் மனுஷர் ஏளனமாய்ப் பேசுகிறார்கள்.

யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார் என்று எரேமியா சொல்லுகிறார். ஆனால் அவர்களோ எரேமியாவின் வார்த்தையை நம்பவில்லை. கர்த்தர் தங்களை தண்டிக்கமாட்டார் என்று நினைக்கிறார்கள். எரேமியா பொய் சொல்லுகிறார் என்று நினைக்கிறார்கள். ஆகையினால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தங்கள்மீது இப்பொழுது வரட்டும் என்று ஏளனமாய்ப் பேசுகிறார்கள்.

"கர்த்தருடைய நாளை விரும்புகிறவர்களுக்கு ஐயோ! அதினால் உங்களுக்கு என்ன உண்டு? கர்த்தருடைய நாள் வெளிச்சமாயிராமல் அந்தகாரமாயிருக்கும்" (ஆமோ 5:18).

சித்திரத்தில் வரையப்பட்டிருக்கிற சிங்கம் தீங்கு செய்யாது. அந்த சிங்கம் மெய்யாகவே வந்தால்தான், அதன் பயங்கரம் எல்லோருக்கும் தெரியும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு, இப்போது வார்த்தைகளாகத்தான் வெளிப்பட்டிருக்கிறது. யூதாவின் மனுஷர் அதை உண்மையென்று நம்பவில்லை. அதன் பயங்கரத்தைப் புரிந்துகொள்ளவில்லை. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும்போதுதான், அதன் பேரழிவை அவர்கள் உணருவார்கள். அதுவரையிலும் ஏளனம்பண்ணிக்கொண்டுதான் இருப்பார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருக்கு முன்பாக உண்மையுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை உண்மையாயும் உத்தமமாயும் செய்கிறார். எரேமியா கர்த்தருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்து வருகிறார். அவருடைய ஊழியத்திற்கு விரோதமாக ஏராளமான எதிர்ப்புக்கள் உண்டாயிற்று. சத்துருக்கள் அவரைத் தூஷித்தார்கள். எரேமியாவைக் காயப்படுத்தினார்கள். இவையெல்லாவற்றிற்கும் மத்தியில், "நானோ உம்மைப் பின்பற்றுகிற மேய்ப்பன்" (எரே 17:16) என்று எரேமியா கர்த்தரிடத்தில் தன்னைப்பற்றிச் சாட்சியாகச் சொல்லுகிறார்.

கர்த்தர் எரேமியாவுக்கு கொடுத்த ஊழியத்தை அவர் நிறுத்திவிடவில்லை. அவர் எதிர்ப்புக்களைப் பார்த்து பயப்படவுமில்லை. ஊழியத்திலே பிரச்சனைகளும் சோர்வுகளும் உண்டாயிற்று. ஆனாலும் எரேமியா, கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தில் உண்மையுள்ளவராயிருக்கிறார். "இதற்கு நான் மிஞ்சி நடக்கவில்லை" என்றும் எரேமியா சொல்லுகிறார்.

யோனாவின் ஊழியத்திலும் பிரச்சனைகள் இருந்தது. யோனாவோ பிரச்சனைகளுக்கு பயந்து, நினிவே பட்டணத்திற்குப்போய் கர்த்தருடைய ஊழியத்தை செய்யாமல், தர்சீஸ் பட்டணத்திற்கு பயந்து ஓடிப்போய்விட்டார். எரேமியா ஒருபோதும் கர்த்தருடைய சித்தத்திற்கும், விருப்பத்திற்கும் திட்டத்திற்கும் விரோதமாய் நடக்கவில்லை. கர்த்தருடைய வார்த்தையை மீறவேண்டும் என்னும் எண்ணங்கூட அவரிடத்தில் இல்லை.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் எரேமியாவுக்கு விரோதமாக எழும்பினாலும், எரேமியா அவர்கள்மீது இன்னும் அன்பாகவே இருக்கிறார். அவர்கள் எரேமியாவைத் தூஷித்தாலும், எரேமியா அவர்கள்மீது மனதுருக்கமாகவே இருக்கிறார்.

"ஆபத்துநாளை விரும்புகிறதுமில்லை என்று நீர் அறிவீர்" என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். எரேமியா சொன்ன தீர்க்கதரிசனங்கள் யூதாவின் மனுஷர்மீது நிறைவேறும்போது, அது அவர்களுக்கு ஆபத்து நாளாயிருக்கும். அது அவர்களுக்கு தீங்கு நாளாகவும், அழிவின் நாளாகவும் இருக்கும். எருசலேமுக்கு ஆபத்து வரும். யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் ஆபத்து வருவதை எரேமியா விரும்பவில்லை. எருசலேம் நகரம் அழிந்துபோகிற ஆபத்து நாளையும் எரேமியா நேசிக்கவில்லை. அப்படிப்பட்ட அழிவின் நாளும், ஆபத்தின் நாளும் யூதா மனுஷர்மீது வரக்கூடாது என்றே எரேமியா விரும்புகிறார்.

தேவன் பாவிகளுடைய மரணத்தில் பிரியப்படுகிறவரல்ல. தேவனுடைய ஊழியக்காரர்களும், பாவிகள் அழிந்துபோக வேண்டுமென்று விரும்பக்கூடாது. பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதும், அவர்களும் அழிந்துபோகாமல் ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதுமே கர்த்தருடைய சித்தம். இதுவே அவருடைய ஊழியக்காரர்களின் விருப்பமாகவும் இருக்கவேண்டும்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு, யூதா மனுஷர்மீது வரக்கூடாது என்று எரேமியா விரும்பினாலும், கர்த்தர் தன்னுடைய வாயில் போட்ட வார்த்தைகளை, எரேமியா யூதாவின் மனுஷருக்கு அப்படியே அறிவித்துவிடுகிறார். "என் உதடுகளிலிருந்து புறப்பட்டது உமக்கு முன்பாக செவ்வையாயிருந்தது" (எரே 17:16) என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தருடைய கிருபை யூதா மனுஷருக்கு கிடைக்கவேண்டுமென்று எரேமியா விரும்புகிறார். எரேமியா அவர்களைக் கடிந்துகொள்ளும்போது பயங்கரமான வார்த்தைகளை பயன்படுத்தவில்லை. ஆனாலும் கர்த்தருடைய செய்தியை அப்படியே சொல்லிவிடுகிறார். ஊழியத்தில் உண்மையுள்ளவராயிருக்கிறார். எரேமியா தன்னுடைய மனதின் விருப்பங்களை கர்த்தரிடத்தில்தான் முறையிடுகிறார். யூதாவின் மனுஷரிடத்திலோ, கர்த்தருடைய செய்தியை கலப்படமில்லாமல் அறிவித்துவிடுகிறார்.

கர்த்தர் தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், தான் கர்த்தருக்கு சொந்தமானவன் என்றும் எரேமியா கர்த்தரிடத்தில் பணிவோடு சொல்லுகிறார். கர்த்தரே தனக்கு அடைக்கலம் என்றும், அவரே தன்னை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றும் எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கிற ஊழியத்தை, எரேமியா சந்தோஷமாகவும், உற்சாகமாகவும் செய்ய விரும்புகிறார்.

"நீர் எனக்குப் பயங்கரமாயிராதேயும்; தீங்குநாளில் நீரே என் அடைக்கலம்" (எரே 17:17) என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். கர்த்தரே எரேமியாவை ஊழியத்திற்கு அனுப்பியிருக்கிறார். கர்த்தருக்கு ஊழியம் செய்வதினால், தனக்கு ஆறுதலும், சந்தோஷமும் உண்டாகவேண்டுமென்று எரேமியா எதிர்பார்க்கிறார். கர்த்தரே எரேமியாவுக்கு நம்பிக்கையாயிருக்கிறார். கர்த்தரே அவருக்கு அடைக்கலமாயும் இருக்கிறார். ஆகையினால் எரேமியா மனுஷருக்குப் பயப்படாமல், கர்த்தருடைய ஊழியத்தை தைரியமாய்ச் செய்யவேண்டும். எரேமியா கர்த்தரையே நம்பியிருக்கிறார். ஆகையினால் கர்த்தர் தனக்கு பயங்கரமாயிருக்கக்கூடாது என்றும் எரேமியா விரும்புகிறார்.

கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற ஊழியத்தை எரேமியா தைரியமாய்ச் செய்யவேண்டும் என்று விரும்புகிறார். எரேமியா யூதாவின் மனுஷரிடத்தில் கர்த்தருடைய செய்தியை பிரசங்கம்பண்ணுகிறார். ஆனால் அவர்களோ எரேமியாவைத் துன்பப்படுத்துகிறார்கள். அவரைத் தூஷிக்கிறார்கள்.

எரேமியா தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார். "நான் வெட்கப்படாமல், என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் வெட்கப்படுவார்களாக; நான் கலங்காமல், அவர்கள் கலங்குவார்களாக" (எரே 17:18) என்று எரேமியா கர்த்தரிடத்தில் முறையிடுகிறார். யூதாவின் மனுஷர் எரேமியாவுக்கு விரோதமாக தீங்கு நினைக்கிறார்கள்.

எரேமியா கர்த்தரை நம்புகிறார். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போக மாட்டார்கள். கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய ஊழியக்காரருக்கு விரோதமாகவும் தீங்கு நினைக்கிறவர்களும், தீங்கு செய்கிறவர்களும் வெட்கப்பட்டுப் போவார்கள்.

யூதாவின் மனுஷர்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரவேண்டும் என்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். "தேவரீர் தீங்கு நாளை அவர்கள்மேல் வரப்பண்ணி, இரட்டிப்பான நொறுக்குதலால் அவர்களை நொறுக்கும்" (எரே 17:18) என்று எரேமியா ஜெபிக்கிறார். அவர்கள் தன்னைத் துன்பப்படுத்துவதினால், தான் வெட்கப்பட்டுப்போகக்கூடாது என்றும், தான் கலங்கிப்போகக்கூடாது என்றும் எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

எரேமியாவைத் துன்பப்படுத்துகிறவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரவேண்டும். அவர்கள் வெட்கப்பட்டுப்போனால், தங்கள் வாயை அடைத்துக்கொண்டு மவுனமாயிருப்பார்கள். எரேமியாவின் செய்தியை கேட்பதற்கு ஜனங்களைத் தடைபண்ணமாட்டார்கள். இரட்சிக்கப்படக்கூடியவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். அவர்களுடைய இரட்சிப்புக்கு, எரேமியாவைத் துன்பப்படுத்துகிறவர்கள் தடையாகயிருக்கமாட்டார்கள்.

தேசத்தில் ஒரு சிலர் இரட்சிக்கப்படும்போது, கர்த்தர் அந்த தேசத்தை அழிக்காமல் விட்டுவிடுவார். தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு துன்மார்க்கர்மீது வரும்போது, அவர்களுக்கு அழிவு உண்டாகும். ஆனால் தேசம் அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ளும். இதுவே எரேமியாவின் விருப்பம்.

ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்குங்கள் எரே 17:19-27

எரே 17:19. கர்த்தர் என்னை நோக்கி: நீ போய் யூதாவின் ராஜாக்கள் வரத்தும் போக்குமாயிருக்கிற இந்த ஜனங்களின் புத்திரருடைய வாசலிலும் எருசலேமின் எல்லா வாசல்களிலும் நின்றுகொண்டு,

எரே 17:20. அவர்களுடனே சொல்லவேண்டியது என்னவென்றால்: இந்த வாசல்களில் பிரவேசிக்கிற யூதாவின் ராஜாக்களும், எல்லா யூதரும், எருசலேமின் எல்லாக் குடிகளுமாகிய நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 17:21. நீங்கள் ஓய்வுநாளில் சுமைகளை எடுத்து, அவைகளை எருசலேமின் வாசல்களுக்குள் கொண்டுவராதபடிக்கும்,

எரே 17:22. ஓய்வுநாளில் உங்கள் வீடுகளிலிருந்து சுமையை வெளியே கொண்டு போகாதபடிக்கும், ஒரு வேலையையும் செய்யாதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களுக்காக எச்சரிக்கையாயிருந்து, நான் உங்கள் பிதாக்களுக்குக் கட்டளையிட்டபடி ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்குங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 17:23. அவர்களோ கேளாமலும் தங்கள் செவிகளைச் சாயாமலும் போய், கேளாதபடிக்கும் புத்தியை ஏற்றுக்கொள்ளாதபடிக்கும், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினார்கள்.

எரே 17:24. நீங்களோவெனில், ஓய்வுநாளில் இந்த நகரத்தின் வாசல்களுக்குள்ளே சுமையைக் கொண்டுவராதபடிக்கும், ஓய்வுநாளில் ஒரு வேலையையும் செய்யாமல் அதைப் பரிசுத்தமாக்கும்படிக்கும் என் சொல்லைக் கேட்பீர்களானால்,

எரே 17:25. அப்பொழுது தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறவர்களும், இரதங்களின்மேலும் குதிரைகளின் மேலும் ஏறுகிறவர்களுமாகிய ராஜாக்களும் ராஜகுமாரர்களும், அவர்கள் பிரபுக்களும், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் இந்த நகரத்தின் வாசல்களுக்குள் பிரவேசிப்பார்கள்; இந்த நகரமும் என்றைக்கும் குடியுள்ளதாயிருக்கும்.

எரே 17:26. யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் சுற்றுப்புறமான ஊர்களிலும், பென்யமீன் தேசத்திலும், பள்ளத்தாக்கான சீமையிலும், மலைநாட்டிலும், தெற்கிலுமிருந்து ஜனங்கள் சர்வாங்க தகனங்களையும், பலிகளையும், போஜனபலிகளையும், தூபவர்க்கங்களையும், ஸ்தோத்திரபலி களையும் கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவருவார்கள்.

எரே 17:27. நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கும்படிக்கும் ஓய்வுநாளிலே சுமையை எருசலேமின் வாசல்களுக்குள் எடுத்துவராதிருக்கும்படிக்கும், என் சொல்லைக் கேளாமற்போனீர்களாகில், நான் அதின் வாசல்களில் தீக்கொளுத்துவேன்; அது எருசலேமின் அரமனைகளைப் பட்சித்தும், அவிந்து போகாதிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒய்வுநாளை பரிசுத்தப்படுத்துவது சம்பந்தமாக எரேமியா இந்த வசனப்பகுதியில் பிரசங்கம்பண்ணுகிறார். யோசியா ராஜாவின் நாட்களில், ஓய்வுநாளை பரிசுத்தப்படுத்துவது சம்பந்தமான செய்திகள் யூதாவின் மனுஷருக்கு அதிகமாய் பிரசங்கிக்கப்பட்டது. எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷர் மத்தியில், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைப்பற்றிச் சொல்லும்போது, ஓய்வுநாள் பிரமாணத்தைப்பற்றியும் பிரசங்கம்பண்ணுகிறார். இதுவும் கர்த்தரிடத்திலிருந்து எரேமியாவுக்கு வந்திருக்கிற கட்டளையாயிருக்கிறது.

எரேமியா கர்த்தருடைய செய்தியை யூதாவின் புத்திரருடைய வாசலிலும், எருசலேமின் எல்லா வாசல்களிலும் நின்றுகொண்டு சொல்லவேண்டும். இந்த வாசல்கள் வழியாக யூதாவின் ராஜாக்கள் போக்கும் வரத்துமாயிருக்கிறார்கள்.

"நீ போய் யூதாவின் ராஜாக்கள் வரத்தும் போக்குமாயிருக்கிற இந்த ஜனங்களின் புத்திரருடைய வாசலிலும் எருசலேமின் எல்லா வாசல்களிலும் நின்றுகொண்டு, அவர்களுடனே சொல்லவேண்டியது என்னவென்றால்" (எரே 17:19,20) என்று கர்த்தர் எரேமியாவுக்கு சொல்லுகிறார்.

எரேமியா முதலாவதாக, பிரகாரத்தின் வாசலில் கர்த்தருடைய செய்தியை சொல்லவேண்டும். அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். ஓய்வுநாள் பரிசுத்தமாய் ஆசரிக்கப்படவேண்டும். இதை முதலாவதாக ராஜாக்களுக்கும் பிரபுக்களும் சொல்லவேண்டும்.

தேசத்தின் ராஜாக்களும் பிரபுக்களும் ஜனங்களை அதிகமாய் வேலை வாங்குகிறார்கள். வாரத்தில் ஒருநாள் ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருந்தால், வேலையை செய்து முடிப்பதில் காலதாமதம் ஏற்படும் என்று எஜமான்கள் நினைக்கிறார்கள். வேலை செய்கிறவர்கள் ஓய்வெடுக்காமல், கடினமாய் வேலை செய்யவேண்டும். இதுவே எஜமான்களின் விருப்பம். ஆகையினால் கர்த்தர் எரேமியாவிடம், ஓய்வுநாளைப்பற்றிய செய்தியை, முதலாவதாக, ராஜாக்களும், பிரபுக்களும், எஜமான்களும் இருக்கிற வாசலில் சொல்லச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய செய்தியை ராஜாக்களுக்கும், பிரபுக்களுக்கும் சொன்னால் மாத்திரம் போதாது அதை சாதாரண ஜனங்களுக்கும் சொல்லவேண்டும். கர்த்தர் எரேமியாவிடம் "எருசலேமின் எல்லா வாசல்களிலும் நின்றுகொண்டு" அவர்களிடத்தில் தம்முடைய செய்தியை சொல்லுமாறு கட்டளையிடுகிறார். ஓய்வுநாள் பிரமாணத்தை யூதா தேசத்தார் அனைவரும், எருசலேமின் குடிகள் எல்லோரும் கடைப்பிடிக்கவேண்டும். இது முழுதேசத்திற்கும் உரிய பொதுவான பிரமாணம்.

"இந்த வாசல்களில் பிரவேசிக்கிற யூதாவின் ராஜாக்களும், எல்லா யூதரும், எருசலேமின் எல்லாக் குடிகளுமாகிய நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்" (எரே 17:20) என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையை யூதாவின் மனுஷர் எல்லோருக்கும் அறிவிக்கவேண்டும்.

ஓய்வுநாளை எப்படி பரிசுத்தப்படுத்துவது என்றும், ஓய்வுநாள் பிரமாணம் என்ன என்பது பற்றியும் எரேமியா யூதாவின் மனுஷருக்கு தெளிவுபடுத்துகிறார். அவர்கள் ஓய்வுநாளில் உலகப்பிரகாரமான வேலைகள் எதுவும் செய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டும்.

"நீங்கள் ஓய்வுநாளில் சுமைகளை எடுத்து, அவைகளை எருசலேமின் வாசல்களுக்குள் கொண்டுவராதபடிக்கும், ஓய்வுநாளில் உங்கள் வீடுகளிலிருந்து சுமையை வெளியே கொண்டு போகாதபடிக்கும், ஒரு வேலையையும் செய்யாதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களுக்காக எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (எரே 17:21,22). இதுவே கர்த்தர் அவர்களுடைய பிதாக்களுக்கு கட்டளையிட்ட ஓய்வுநாள் பிரமாணம். இந்த கட்டளையின் பிரகாரம் அவர்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாக்கவேண்டும்.

யூதாவின் மனுஷர் பட்டணங்களிலும் வேலை செய்யக்கூடாது. வயல்வெளியிலும் வேலை செய்யக்கூடாது. நகரத்திற்குள்ளேயும் வேலை செய்யக்கூடாது. நகரத்திற்கு வெளியேயும் வேலை செய்யக்கூடாது. விவசாயம் பண்ணுகிறவர்கள் தானியங்களை சுமந்துகொண்டு போகக்கூடாது. நிலத்தில் பயிரிடப்பட்டிருக்கிற செடிகளுக்கு ஓய்வுநாளிலே கொத்தி எருப்போடவும் கூடாது.

வியாபாரிகளும் ஓய்வுநாளிலே வியாபாரம்பண்ணக்கூடாது. வியாபார சுமைகளை சுமக்கக்கூடாது. குதிரைகள்மேலோ, கழுதைகள் மேலோ, வண்டிகளிலோ சுமைகளை ஏற்றக்கூடாது. ஓய்வுநாளின்போது சுமை சுமக்கிற கழுதைகள், குதிரைகள் வண்டிகள் ஆகிய எதுவும் தெருக்களிலோ, சாலைகளிலோ நடக்கவும்கூடாது.

இது கர்த்தருக்கு பரிசுத்தமான ஓய்வுநாள். ஓய்வுநாளை வேலை நாளாக மாற்றிவிடக்கூடாது. "ஓய்வுநாளை பரிசுத்தமாக்குங்கள்" (எரே 17:22) என்று கர்த்தர் கட்டளையிடுகிறார். கர்த்தருடைய நாமமகிமைக்காக ஓய்வுநாளை பரிசுத்தம் பண்ணவேண்டும். அந்த நாளை கர்த்தரை ஆராதிப்பதற்காகவும், கர்த்தருக்கு ஊழியம் செய்வதற்காகவும் செலவு பண்ணவேண்டும். ஓய்வுநாளில் உலகப்பிரகாரமான வேலைகள் எதுவும் செய்யக்கூடாது.

ஒய்வுநாள் கர்த்தருக்கு பிரியமான நாள். இந்நாளில் நம்முடைய ஆத்துமாவுக்கும், இருதயத்திற்கும், ஆவிக்கும் பிரயோஜனமுள்ள, ஆவிக்குரிய காரியங்களில் மாத்திரமே ஈடுபடவேண்டும். யூதாவின் மனுஷர் ஓய்வுநாளில் ஒரு வேலையும் செய்யாதபடிக்கு, தங்கள் ஆத்துமாக்களுக்காக எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். ஜனங்கள் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவில்லையென்றால், அவர்களுடைய ஆத்துமாவுக்கு அழிவு வரும்.

வாரத்தில் ஒருநாள் கர்த்தருக்குரியது. யூதாவின் மனுஷர் கர்த்தருக்குரியதை தங்களுக்கென்று களவாடி விடக்கூடாது. கர்த்தர் தமக்கென்று பரிசுத்தமாக்கியிருக்கிற ஓய்வுநாளை, மனுஷன் தன்னுடைய சுயநலத்திற்காகவோ, சுயஆதாயத்திற்காகவோ பயன்படுத்திவிடக்கூடாது. கர்த்தருக்குரியதை கர்த்தருக்கு செலுத்தவேண்டும்.

ஒய்வுநாளின்போது நம்முடைய சரீரம் வேதனைப்படக்கூடாது. உலகப்பிரகாரமான கவலைகளையும், பாரங்களையும் நாம் ஓய்வுநாளில் சுமக்கக்கூடாது. ஓய்வுநாள் கர்த்தருக்குரியது. அந்த நாளில் நாம் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். கர்த்தருக்கு பிரியமான காரியங்களை மாத்திரமே செய்யவேண்டும். அந்த நாளில் நம்முடைய ஆத்துமா உலகக்கவலைகளினால் பாரமடையக்கூடாது.

ஒய்வுநாள் பிரமாணம் யூதாவின் மனுஷருக்கு இப்போதுதான் கொடுக்கப்பட்டிருக்கிற பிரமாணமல்ல. அது அவர்களுடைய பிதாக்களின் காலத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. "நான் உங்கள் பிதாக்களுக்கு கட்டளையிட்டபடி ஓய்வுநாளை பரிசுத்தமாக்குங்கள்" (எரே 17:22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆனால் யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவுமில்லை. அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவுமில்லை. அவர்கள் ஓய்நாளை பரிசுத்த குலைச்சலாக்கினார்கள்.

"அவர்களோ கேளாமலும் தங்கள் செவிகளைச் சாயாமலும் போய், கேளாதபடிக்கும் புத்தியை ஏற்றுக்கொள்ளாத படிக்கும், தங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினார்கள்" (எரே 17:23) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதா மனுஷருடைய பிதாக்கள், கர்த்தருடைய ஓய்வுநாள் பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், தங்கள் கழுத்தை கடினப்படுத்தினதோடு, மற்ற பிரமாணங்களுக்கும் கீழ்ப்படியாமல், தங்கள் கழுத்தை மேலும் அதிகமாய்க் கடினப்படுத்தினார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதா வம்சத்தாரும் ஓய்வுநாளை பரிசுத்தப்படுத்தாமல், அதைப் புறக்கணித்த போது, அவர்களுடைய ஆவிக்குரிய காரியங்களெல்லாம் சீரழிந்துபோயிற்று. ஓய்வுநாளை கர்த்தருக்கு கொடுக்காமல், தாங்களே வைத்துக்கொண்டதினால், அவர்களால் கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்தில் இருக்கமுடியவில்லை. கர்த்தருடைய வார்த்தையையும், உபதேசத்தையும், பிரமாணத்தையும் அவர்களால் கேட்க முடியவில்லை.

அவர்கள் ஓய்வுநாளை பரிசுத்தம் பண்ணாமல், கொஞ்சம் கொஞ்சமாக கர்த்தரைவிட்டு விலகிப்போய்விட்டார்கள். முடிவில், கர்த்தரைவிட்டு தூரமாய் விலகி, அந்நிய தேவர்களையும், விக்கிரகங்களையும் ஆராதிப்பதற்கு போய்விடுகிறார்கள்.

யூதாவின் மனுஷர் ஓய்வுநாளை பரிசுத்தம்பண்ணினால், அவர்களுக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்கும். இது கர்த்தருடைய வாக்குத்தத்தம்.

"நீங்களோவெனில், ஓய்வுநாளில் இந்த நகரத்தின் வாசல்களுக்குள்ளே சுமையைக் கொண்டுவராதபடிக்கும், ஓய்வுநாளில் ஒரு வேலையையும் செய்யாமல் அதைப் பரிசுத்தமாக்கும்படிக்கும் என் சொல்லைக் கேட்பீர்களானால், அப்பொழுது தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிறவர்களும், இரதங்களின்மேலும் குதிரைகளின்மேலும் ஏறுகிறவர்களுமாகிய ராஜாக்களும் ராஜகுமாரர்களும், அவர்கள் பிரபுக்களும், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் இந்த நகரத்தின் வாசல்களுக்குள் பிரவேசிப்பார்கள்; இந்த நகரமும் என்றைக்கும் குடியுள்ளதாயிருக்கும்" (எரே 17:24,25) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் ஜனங்கள் ஓய்வுநாளை பரிசுத்தம் பண்ணும்போது, அவர்களுடைய தேசம் ஆசீர்வதிக்கப்படும். அவர்களுடைய ராஜாக்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். ராஜகுமாரர்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்களுடைய அரண்மனையும் ஆசீர்வதிக்கப்படும். ராஜாக்களின் பிரபுக்களும், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். எருசலேம் நகரமும் ஆசீர்வதிக்கப்படும். "இந்த நகரமும் என்றைக்கும் குடியுள்ளதாயிருக்கும்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்து, ஜனங்களை நியாயம் விசாரிக்கிற ராஜாக்களும், ராஜகுமாரர்களும், பிரபுக்களும் எருசலேம் நகரத்தின் வாசல்களுக்குள் பிரவேசிப்பார்கள். அவர்களுடைய நகர பிரவேசம் கம்பீரமாயும் ஆடம்பரமாயும் இருக்கும். எருசலேம் பரிசுத்த நகரமாகவே இருக்கும். அது செழித்திருக்கும். அது அழிந்துபோகாமல் நிலைத்திருக்கும். அந்த நகரத்தில் என்றென்றைக்கும் குடியுள்ளதாயிருக்கும். எருசலேமுக்கு ஆபத்து வராது. அது கர்த்தருடைய நகரம். அதை யாராலும் அழிக்க முடியாது. தேசம் செழித்திருப்பதுபோல எருசலேம் நகரமும் செழித்திருக்கும்.

யூதாவின் பட்டணங்களிலிருந்தும், பென்யமீன் தேசத்திலிருந்தும் திரளான ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்திற்கு வருவார்கள். அவர்கள் சமாதானமாய் ஜீவிப்பார்கள். அவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாமல், சம்பூரண ஆசீர்வாதமுண்டாயிருக்கும். தேசம் செழித்திருக்கும்போது தேவாலயமும் செழித்திருக்கும்.

"யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் சுற்றுப்புறமான ஊர்களிலும், பென்யமீன் தேசத்திலும், பள்ளத்தாக்கான சீமையிலும், மலைநாட்டிலும், தெற்கிலுமிருந்து ஜனங்கள் சர்வாங்க தகனங்களையும், பலிகளையும், போஜனபலிகளையும், தூபவர்க்கங்களையும், ஸ்தோத்திரபலிகளையும் கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவருவார்கள்" (எரே 17:26) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய ஓய்வுநாளை பரிசுத்தம்பண்ணும்போது, அவர்களுக்கு இம்மைக்குரிய ஆசீர்வாதமும், மறுமைக்குரிய ஆசீர்வாதமும் சம்பூரணமாய் உண்டாயிருக்கும். ஓய்வுநாள் பிரமாணம் கர்த்தருடைய பிரமாணத்தில் ஒரு பகுதி. இந்த பகுதி மிகவும் முக்கியமான பகுதி. யூதாவின் மனுஷர் ஓய்வுநாளை பரிசுத்தம்பண்ணும்போது, அவர்கள் ஆவிக்குரிய எல்லா காரியங்களையும் பரிசுத்தம்பண்ணுவார்கள். தங்களுடைய ஆவியையும், ஆத்துமாவையும், சரீரத்தையும் பரிசுத்தம்பண்ணுவார்கள்.

ஓய்வுநாளை பரிசுத்தம்பண்ணும் போதுதான், யூதாவின் மனுஷரால், கர்த்தருடைய சமுகத்தில் நெருங்கி வரமுடிகிறது. கர்த்தரிடத்தில் நெருங்கி வந்தால்தான், அவருடைய வார்த்தைகளை தெளிவாக கேட்கமுடியும். தெளிவாக கேட்டால்தான், கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிய முடியும். கீழ்ப்படிந்தால்தான் கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதம் வரும். இவ்வாறாக யூதா மனுஷருடைய எல்லா ஆசீர்வாதங்களுக்கும், ஓய்வுநாளை பரிசுத்தம் பண்ணுவதே ஆதாரமாயிருக்கிறது.

அவர்கள் ஓய்வுநாளை பரிசுத்தக்குலைச்சலாக்கினால், எல்லாவற்றையும் இழந்துபோவார்கள். கர்த்தரிடத்தில் தாங்கள் வைத்திருக்கிற பயபக்தியை இழந்துவிடுவார்கள். கர்த்தருடைய பிரமாணத்தைக் கேட்கும் வாய்ப்புக்களை இழந்துவிடுவார்கள். தங்களுக்கு கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதங்களை இழந்துவிடுவார்கள். முடிவில் எல்லாவற்றையும் இழந்து ஒன்றுமில்லாமலிருப்பார்கள்.

நதிக்கரையின் உயரத்தைப் பொருத்துதான், நதி ஆழமாகவோ அல்லது ஆழமில்லாமலோ இருக்கும். கரை உயரமாயிருந்தால் நதியும் ஆழமாயிருக்கும். கரையின் உயரம் குறைவாகயிருந்தாலும், நதியின் ஆழமும் குறைவாகயிருக்கும். ஓய்வுநாளை யூதாவின் மனுஷர் எந்த அளவுக்கு அதிகமாய்ப் பரிசுத்தப்படுத்துகிறார்களோ, அந்த அளவுக்கு அவர்களிடத்தில் ஆழமான சத்தியங்கள் நிரம்பியிருக்கும். ஓய்வுநாளை சரியாகப் பரிசுத்தம் பண்ணவில்லையென்றால், அவர்களுடைய இருதயத்தில் ஆவிக்குரிய சத்தியங்களும் வேரூன்றி இருக்காது. அவர்களும் கர்த்தருக்குள் நிலைத்திருக்கமாட்டார்கள்.

யூதாவின் மனுஷர் ஓய்வுநாளை பரிசுத்தம்பண்ணவில்லையென்றால் அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். அவர்கள் ஓய்வுநாளை பரிசுத்தக்குலைச்சலாக்கினால், கர்த்தர் அவர்களை தண்டிப்பார்.

"நீங்கள் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கும்படிக்கும் ஓய்வுநாளிலே சுமையை எருசலேமின் வாசல்களுக்குள் எடுத்துவராதிருக்கும்படிக்கும், என் சொல்லைக் கேளாமற்போனீர்களாகில், நான் அதின் வாசல்களில் தீக்கொளுத்துவேன்; அது எருசலேமின் அரமனைகளைப் பட்சித்தும், அவிந்து போகாதிருக்கும்" (எரே 17:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஓய்வுநாள் விசேஷமானது. வாரத்தின் மற்ற நாட்களுக்கும், ஓய்வுநாளுக்கும் வித்தியாசமுண்டு. ஓய்வுநாளை பரிசுத்தப்படுத்துவது தேவனுடைய தெய்வீக பிரமாணத்தின்படி நியமிக்கப்பட்டிருக்கிறது. யூதாவின் மனுஷர், தேவனுடைய தெய்வீக பிரமாணத்தை மீறும்போது, கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வரும்.

ஓய்வுநாளிலே எருசலேமின் வாசல்களுக்குள் சுமைகளை எடுத்துக்கொண்டு வந்தால், கர்த்தர் அதின் வாசல்களில் தீக்கொளுத்திப்போடுவார். எங்கு கீழ்ப்படியாமை காணப்படுகிறதோ, அங்கு கர்த்தருடைய தண்டனை வருகிறது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும் காலமாயிருக்கிறது.

எருசலேமின் மனுஷர், பாவத்திற்கு விரோதமாக எருசலேமின் கதவுகளை அடைக்கவில்லை. கதவுகளை திறந்தே வைத்திருந்தார்கள். பாவம் உட்பிரவேசித்தது. கர்த்தரோ, எந்த வாசல்கள் வழியாக பாவம் உட்பிரவேசித்ததோ, அந்த வாசல்களில் தீக்கொளுத்திப்போடுகிறார். நம்முடைய இருதயத்திலும் பாவம் பிரவேசித்துவிடாதபடி, நம்முடைய இருதயத்தைப் பாதுகாக்கவேண்டும். இருதயத்திற்கு பாதுகாப்பு இல்லையென்றால், பாவம் அதற்குள் பிரவேசித்துவிடும். நம்முடைய இருதயம் பரிசுத்தமாயிராமல், திருக்குள்ளதும், மகாகேடுள்ளதுமாக மாறும். நமக்கும் கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு வரும்.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். கர்த்தருடைய பிரமாணங்களெல்லாவற்றையும் கைக்கொள்ளவேண்டும். ஓய்வுநாளை பரிசுத்தம் பண்ணும்போது கர்த்தருடைய நாமம் மகிமைப்படுகிறது. நமக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் உண்டாகிறது. வேலை நாட்களில் வேலைசெய்வதும், ஓய்வுநாளில் ஓய்ந்திருப்பதும் கர்த்தருக்கு பிரியமானதாகவும், அவருக்கு சித்தமானதாகவும் இருக்கிறது.

18 அதிகாரம்

கர்த்தர் தேசங்களையும் ராஜ்யங்களையும் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாய் ஆளுகை செய்கிறார். கர்த்தருடைய வழிகளைப்பற்றி இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது (எரே 18:1-6). துன்மார்க்கர் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களை அழித்துப்போடுவதாக எச்சரிக்கிறார். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பும்போது, கர்த்தர் தம்முடைய பெரிதான கிருபையினால் அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை தம்மிடத்தில் மறுபடியுமாய்ச் சேர்த்துக்கொள்ளும்போது, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக மறுபடியுமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களை மறுபடியுமாய்த் தண்டிக்கிறார். கர்த்தருடைய கிருபைகளையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வதற்கு, அவர்களுடைய பாவங்களே, அவர்களுக்கு தடையாயிருக்கிறது (எரே 18:7-10).

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், தங்களுடைய மதியீனத்தினால், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தேவர்களையும் விக்கிரகங்களையும் பின்பற்றிப்போகிறார்கள் (எரே 18:11-17).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் எரேமியாவுக்கு விரோதமாக சதிஆலோசனை பண்ணுகிறார்கள். அவருக்கு தீங்கு செய்கிறார்கள். எரேமியா கர்த்தருடைய சமுகத்தில் தன்னுடைய சத்துருக்களுக்கு விரோதமாக ஜெபம்பண்ணுகிறார் (எரே 18:18-23).

குயவன் வீடு
எரே 18:1-4

எரே 18:1. கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வசனம்:

எரே 18:2. நீ எழுந்து, குயவன் வீட்டிற்குப் போ; அங்கே என் வார்த்தைகளை உனக்குத் தெரிவிப்பேன் என்றார்.

எரே 18:3. அப்படியே நான் குயவன் வீட்டிற்குப் போனேன்; இதோ, அவன் திரிகையினாலே வனைந்துகொண்டிருந்தான்.

எரே 18:4. குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்.

கர்த்தர் எரேமியாவை குயவன் வீட்டிற்கு போகச் சொல்லுகிறார். அங்கே அவர் கர்த்தருடைய செய்தியை பிரசங்கம்பண்ண வேண்டியதில்லை. ஆனால் எரேமியா குயவன் வீட்டிலே ஒரு பிரசங்கச் செய்தியை ஆயத்தம் பண்ணப்போகிறார். பிரசங்கச் செய்தி ஏற்கெனவே அங்கு ஆயத்தமாயிருக்கிறது. எரேமியா குயவன் வீட்டிலே போய், அந்தப் பிரசங்கச் செய்தியைப் பெற்றுக்கொள்ளப்போகிறார்.

"நீ எழுந்து, குயவன் வீட்டிற்குப் போ; அங்கே என் வார்த்தைகளை உனக்குத் தெரிவிப்பேன்" (எரே 18:2) என்று கர்த்தர் எரேமியாவுக்குச் சொல்லுகிறார். எரேமியா குயவனுடைய வீட்டிற்குப்போய், அங்கே அவன் மண்பாண்டம் வனைந்துகொண்டிருக்கிற விதத்தை கவனித்துப் பார்க்கவேண்டும். அங்கே கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை, எரேமியாவுக்கு தெரிவிக்கப்போகிறார்.

கர்த்தர் எரேமியாவிடம் உரத்த சத்தமாகப் பேசவில்லை. ஆனாலும் கர்த்தருடைய செய்தி அவருக்கு தெளிவாகச் சொல்லப்படுகிறது. "என் வார்த்தைகளை உனக்கு தெரிவிப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் மெல்லிய சத்தத்தில் பேசினாலும், அவருடைய வார்த்தைகளை நாம் கவனமாய்க் கேட்கவேண்டும்.

கர்த்தர் எரேமியாவிடம் யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்ல வேண்டிய செய்தியை தெரிவிக்கிறார். எரேமியா கர்த்தருடைய செய்தியை முழுவதுமாய்ப் பெற்றுக்கொண்டு, அதை அவர்களிடம் தெளிவாய்ச் சொல்லவேண்டும்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரமாக, குயவன் வீட்டிற்குப் போகிறார். அங்கே குயவன் திரிகையினாலே ஒரு பாத்திரத்தை வனைந்துகொண்டிருக்கிறான். குயவன் மண்பாண்டத்தை திரிகையினாலே வனைந்துகொண்டிருக்கிற விதத்தை எரேமியா கவனமாய்ப் பார்க்கிறார்.

"குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம் அவன் கையிலே கெட்டுப்போயிற்று; அப்பொழுது அதைத் திருத்தமாய்ச் செய்யும்படிக்கு, தன் பார்வைக்குச் சரியாய்க் கண்டபடி குயவன் அதைத் திரும்ப வேறே பாண்டமாக வனைந்தான்" (எரே 18:4).

குயவன் களிமண்ணை எடுத்து திரிகையினாலே மண்பாண்டம் செய்யும்போது, மண் கடினமாயிருக்கிறது. மண்ணோடு கல் கலந்திருக்கிறது. மண்பாண்டம் குயவன் கையிலே கெட்டுப்போயிற்று. குயவன் எதிர்பார்த்த உருவம் அந்த மண்பாண்டத்திற்கு உண்டாகவில்லை. அதை மறுபடியும் திருத்தமாய்ச் செய்யவேண்டுமென்று குயவன் தீர்மானம் பண்ணுகிறான். குயவன் அதே மண்ணை பயன்படுத்தி, திரிகையினாலே, திரும்ப வேறே பாண்டமாக வனைகிறான். இப்போது மண்பாண்டத்திற்கு குயவன் விரும்பிய உருவம் கிடைக்கிறது. அது அவனுடைய பார்வைக்கு செம்மையாயும், திருத்தமாயும் இருக்கிறது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், இந்த உலகத்தில் எங்குபோனாலும், கர்த்தருடைய செய்திகளைப் பெற்றுக்கொள்ளலாம். அவர்கள் தேவனுடைய இரகசியங்களை மனுஷருக்கு தெளிவாகச் சொல்லவேண்டும். அவர்கள் புரியும் விதத்திலே பிரசங்கம்பண்ணவேண்டும். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலைகளையும் கவனித்து பார்த்து கர்த்தருடைய சத்தியங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய வாக்கியங்களை மனுஷருக்கு தெளிவாய்ப் போதிக்கவேண்டும். இதற்காக நல்ல எடுத்துக்காட்டுக்களையும், நல்ல உவமைகளையும் பயன்படுத்தலாம். உலகநடைமுறையில் நாம் அன்றாடம் பயன்படுத்தும் காரியங்களோடும், மனுஷருடைய நடைமுறை அனுபவங்களோடும் ஒப்பிட்டுச் சொல்லி, தேவனுடைய சத்தியத்தை விளக்கலாம்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, குயவனுடைய வீட்டிற்கு போனபோது, அங்கே கர்த்தரால் எரேமியாவுக்கு வசனம் உண்டாயிற்று. கர்த்தர் எரேமியாவின் மனக்கண்களைத் திறக்கிறார். இஸ்ரவேல் வீட்டாருக்கு பிரசங்கம்பண்ணவேண்டிய இரண்டு முக்கியமான செய்திகளை கர்த்தர் எரேமியாவுக்கு தெரிவிக்கிறார்.

கர்த்தருடைய வசனம் எரே 18:5,6

எரே 18:5. அப்பொழுது கர்த்தருடைய வசனம் எனக்கு உண்டாகி, அவர்:

எரே 18:6. இஸ்ரவேல் குடும்பத்தாரே, இந்தக் குயவன் செய்ததுபோல நான் உங்களுக்குச் செய்யக்கூடாதோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; இதோ, இஸ்ரவேல் வீட்டாரே, களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்.

கர்த்தர் சர்வவல்லமையும், சர்வஅதிகாரமும், சர்வஆளுகையுமுள்ளவர். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக தேசங்களையும் ராஜ்யங்களையும் ஸ்தாபிக்கிறார். கர்த்தர் செய்கிற எல்லா கிரியைகளிலும், அவருடைய விருப்பமும், திட்டமும் நிறைவேறும். ஒரு குயவன் தன் பார்வைக்கு சரியாய்க் கண்டபடி ஒரு பாத்திரத்தை செய்கிறான். அதுபோலவே கர்த்தரும் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக மனுஷரை உருவாக்குகிறார். "இஸ்ரவேல் குடும்பத்தாரே, இந்த குயவன் செய்ததுபோல நான் உங்களுக்கு செய்யக்கூடாதோ" (எரே 18:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருக்கு நம்மீது சர்வஅதிகாரமும், சர்வஉரிமையும், சர்வஆளுகையுமிருக்கிறது. "இதோ, இஸ்ரவேல் வீட்டாரே, களிமண் குயவன் கையிலிருக்கிறதுபோல நீங்கள் என் கையிலிருக்கிறீர்கள்" (எரே 18:6) என்று கர்த்தர் சொல்லுகிறார். நாம் எல்லோருமே கர்த்தருடைய கரத்திலிருக்கிறோம். குயவன் தன் கையிலுள்ள களிமண்ணை, தனக்கு விருப்பமான பாத்திரமாய்ச் செய்கிறான். அவன் கையில் களிமண் இருந்தால்தான் அவனால் பாத்திரம் செய்யமுடியும். குயவனால் களிமண்ணை செய்யமுடியாது.

கர்த்தரால் எல்லாம் ஆகும். அவர் களிமண்ணையும் உண்டாக்குகிறார். அந்தக் களிமண்ணைக்கொண்டு, தமக்கு சித்தமான பாத்திரத்தையும் உண்டாக்குகிறார். நாம் கர்த்தருடைய கையிலுள்ள களிமண்ணைப்போல இருக்கிறோம். கர்த்தரே நம்மை உண்டாக்கினவர். அவரே நம்மை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாய் உருவாக்குகிறவர். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் நடைபெறும். அதை ஒருவராலும் தடைபண்ண முடியாது.

கர்த்தருக்கு நம்மீது சர்வஅதிகாரமுள்ளது. தம்முடைய சித்தத்தின் பிரகாரம் நம்மை ஆளுகை செய்வதற்கு, அவருக்கு நம்மீது உரிமையுமுள்ளது. களிமண்ணால் குயவனோடு வழக்காட முடியாது. தனக்கு பிரியமான பாத்திரமாய் தன்னை வனையவேண்டுமென்று களிமண்ணால் குயவனுக்கு கட்டளைகொடுக்க முடியாது. அதுபோலவே, கர்த்தர் நம்மை இப்படித்தான் உருவாக்கவேண்டுமென்று, நம்மாலும் கர்த்தருக்கு கட்டளை கொடுக்க முடியாது.

நான் கர்த்தருடைய கையிலிருக்கிற வரையிலும், கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாய் நம்மை உருவாக்குவார். கர்த்தருடைய விருப்பமும் சித்தமும் நிறைவேறும். சில சமயங்களில் நாம் கர்த்தருடைய கையைவிட்டு விலகிப்போய்விடுகிறோம். மண் திரிகையிலிருந்தால்தான், குயவனால் தன்னுடைய சித்தத்தின் பிரகாரம் பாத்திரத்தை வனையமுடியும். குயவன் திட்டமிட்ட பாத்திரத்தை உண்டுபண்ண முடியும். களிமண் திரிகையைவிட்டு விலகி கீழே விழுந்துவிட்டால், அது தானாகவே ஒரு பாத்திரமாக வனைந்து கொள்ளாது. நாமும் சில சமயங்களில் திரிகையைவிட்டு கீழே விழுந்துவிடுகிற களிமண்ணைப்போல இருக்கிறோம்.

மண் திரிகையைவிட்டு கீழே விழுந்துவிட்டாலும், குயவன் அந்த மண்ணை மறுபடியும் எடுத்து, அதை திரிகையின்மீது வைத்து, தனக்குப் பிரியமான பாத்திரமாக வனைவான். ஏற்கெனவே பாதி வனையப்பட்ட பாத்திரம் கீழே விழுந்துவிட்டாலும், குயவன் அதை மறுபடியும் எடுத்து, அந்த மண்ணை சரிப்படுத்தி, அதோடு சேர்க்க வேண்டியதை சேர்த்து, நீக்க வேண்டியதை நீக்கி, மறுபடியும் அதை திரிகையின்மீது வைத்து, புதிய பாத்திரத்தை வனைவான். அவன் ஏற்கெனவே வனைந்த வேலைகளெல்லாம் வீணாய்ப்போகும். ஆனாலும் அதை விட்டு விடமாட்டான். கீழே விழுந்த மண்ணை ஒதுக்கி தள்விடமாட்டான். தனக்குப் பிரியமான பாத்திரம் செய்யப்படும் வரையிலும், குயவன் அதை திரிகையின்மீது வைத்து, திரும்பத் திரும்ப வனைந்துகொண்டிருப்பான்.

குயவன் கையில் களிமண் இருக்கிறதுபோல, நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தர் இங்கு யூதா தேசம் முழுவதையும் இந்த உவமையினால் விவரிக்கிறார்.

"அவர் ஜாதிகளைப் பெருகவும் அழியவும் பண்ணுகிறார்; அவர் ஜாதிகளைப் பரவவும் குறுகவும் பண்ணுகிறார்" (யோபு 12:23).

"அவர் ஆறுகளை அவாந்தரவெளியாகவும், நீரூற்றுகளை வறண்ட ஸ்தலமாகவும், குடிகளுடைய பொல்லாப்பினிமித்தம் செழிப்பான தேசத்தை உவர் நிலமாகவும் மாற்றுகிறார். அவர் அவாந்தரவெளியைத் தண்ணீர்த்தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றுகளாகவும் மாற்றுகிறார்" (சங் 107:33-35).

"மாயக்காரன் ஆளாதபடிக்கும், ஜனங்கள் சிக்கிக்கொள்ளப்படாதபடிக்கும், ஒரு ஜனத்துக்கானாலும் ஒரு மனுஷனுக்கானாலும், அவர் சமாதானத்தை அருளினால் யார் கலங்கப்பண்ணுவான்? அவர் தமது முகத்தை மறைத்தால் அவரைக் காண்கிறவன் யார்?" (யோபு 34:29,30).

குயவன் செய்த பாத்திரம். ஏதாவது ஒரு காரியத்திற்கு பயன்படும். சில பாத்திரங்கள் கனமுள்ள வேலைக்கும், வேறு சில பாத்திரங்கள் கனவீனமான வேலைக்கும் பயன்படும். குயவனும் தன்னிடத்திலுள்ள மண்ணை எப்படியாவது ஒரு பாத்திரமாக வனைந்துவிட வேண்டுமென்று, கடினமாய் முயற்சி செய்வான். கர்த்தரும் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக நம்மை உருவாக்கவேண்டுமென்று விரும்புகிறார்.

நாம் கர்த்தரோடு ஒத்துழைக்கும்போது, கர்த்தர் நம்மை எளிதாக உருவாக்கிவிடுவார். நாம் கர்த்தருடைய கையிலிருந்து விலகிப்போகும்போது, அல்லது அவருடைய சமுகத்திலிருந்து விலகிப்போகும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையினால் நம்மைக் கைவிட்டு விடாமல், நம்மை மறுபடியும் உருவாக்குகிறார். நாம் கர்த்தருடைய கிருபா பாத்திரங்களாக யிருக்கிறோம். அவருடைய கிருபையினால் உருவாக்கப்பட்டிருக்கிறோம். நாம் கர்த்தருடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் அடையாளங்களாகவும், எடுத்துக்காட்டுக்களாகவும் இருக்கிறோம். கர்த்தருடைய கிருபைக்கு அடையாளமாயிராதவர்கள், அவருடைய நீதிக்கும் நியாயத்தீர்ப்புக்கும் அடையாளமாயிருப்பார்கள்.

கர்த்தர் நம்மை மண்ணிலிருந்து உருவாக்கியிருக்கிறார். நாம் இன்னும் கர்த்தருடைய கையிலுள்ள மண்ணாகவே இருக்கிறோம்.

"இதோ, உம்மைப்போல நானும் தேவனால் உண்டானவன்; நானும் மண்ணினால் உருவாக்கப்பட்டவன்" (யோபு 33:6).

"இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை" (ஏசா 64:8).

கர்த்தர் அருள் செய்வார் எரே 18:7-10

எரே 18:7. பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில்,

எரே 18:8. நான் விரோதமாய்ப் பேசின அந்தஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்.

எரே 18:9. கட்டுவேன், நாட்டுவேன் என்றும், ஒரு ஜாதியையும் ஒரு ராஜ்யத்தையும் குறித்து நான் சொல்லுகிறதுமுண்டு.

எரே 18:10. அவர்கள் என் சத்தத்தைக் கேளாமல், என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால், நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்.

கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவரே எல்லா ஜீவராசிகளுக்கும் ஜீவாதாரமாகயிருக்கிறவர். கர்த்தரே சர்வஆளுகையுமுள்ளவர். கர்த்தர் தம்முடைய அதிகாரத்தையும், ஆளுகையையும், தம்முடைய சிருஷ்டிகள்மீது, தம்முடைய சித்தத்தின் பிரகாரமாகவும், விருப்பத்தின் பிரகாரமாகவும் செயல்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய விருப்பத்தின் பிரகாரம் கிரியை நடப்பித்தாலும், அவருடைய விருப்பமும், அவருடைய பிரமாணமும் ஒருபோதும் முரண்படுவதில்லை. கர்த்தருடைய எல்லா கிரியைகளும், அவருடைய பிரமாணத்திற்கு உட்பட்டேயிருக்கிறது. அதன் பிரகாரமாகவே மனுஷருக்கு நன்மையும் தீமையும் உண்டாகிறது.

கர்த்தர் தம்முடைய சர்வஆளுகையினால் எல்லா ஜீவராசிகளையும் ஆளுகை செய்கிறார். மனுக்குலத்திற்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். அவர்களுக்கு தெய்வீக சிலாக்கியங்களையும் ஆசீர்வாதங்களையும் கட்டளையிடுகிறார். தீங்கு செய்கிறவர்களைத் தண்டிக்கிறார். கர்த்தர் யாரையும் அநியாயமாய்த் தண்டிப்பதில்லை. கர்த்தருடைய எல்லா கிரியைகளும் அவருடைய நீதிக்குட்பட்டிருக்கிறது. தமக்கு சர்வஅதிகாரம் இருக்கிறது என்பதற்காக, கர்த்தர் யாரையும் காரணமில்லாமல் தண்டிக்கவுமாட்டார். அவர் ஒருவருக்கும் அநீதியும் அநியாயமும் செய்யவுமாட்டார்.

பாவத்தின் சம்பளம் மரணம். நாம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, அவருடைய நீதியான நியாயத்தீர்ப்பு நம்மீது வரும் என்பது நிச்சயம். ஆனாலும் நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பும்போது, கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை நமக்குக் கொடுக்காமல், தம்முடைய கிருபையை நமக்கு காண்பிக்கிறார். கர்த்தருடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும், நாம் தேவனுடைய கோபத்திற்கும், அவருடைய தண்டனைக்கும், அதன் மூலமாய் வரும் அழிவுக்கும் தப்பித்துக்கொள்கிறோம். நாம் மனந்திரும்பி கர்த்தரிடத்தில் வரும்போது, கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை நம்மீது அனுப்பாமல், அதை தடைபண்ணுகிறார்.

"பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில், நான் விரோதமாய்ப் பேசின அந்தஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்" (எரே 18:7,8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிரமாணம் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நீதியாய் செயல்படுத்தப்படுவதுபோல, ஒவ்வொரு தேசத்திற்கும் செயல்படுத்தப்படும். ஒரு தேசம் பாவம் செய்யும்போது, அந்த தேசம் முழுவதின்மேலும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். கர்த்தர் அந்த ஜாதியை அல்லது அந்த ராஜ்யத்தை, "பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன்" என்று சொல்லுகிறார்.

கர்த்தர் தமக்கு பிரியமான ஜாதியையும், தேசத்தையும், தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் பாதுகாத்து பராமரிக்கிறார். அதைச் சுற்றிலுமாய் வேலியடைத்து காத்துக்கொள்கிறார். தேசத்தை செழிப்படையச் செய்வதற்காக அதில் கனிவிருட்சங்களை நாட்டுகிறார். கர்த்தரோ தம்முடைய நியாயத்தீர்ப்பினால், ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு ராஜ்யத்திற்கு விரோதமாகவும் எழும்பும்போது, தாம் போட்ட வேலியைப் பிடுங்கிப்போடுகிறார். தாம் நட்டிய விருட்சங்களை பிடுங்கிப்போடுகிறார். அந்த தேசத்தையே அழித்துப்போடுகிறார்.

தேசத்திலுள்ள திராட்சத்தோட்டங்களெல்லாம் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பினாலும், அவருடைய கோபத்தினாலும் அழிக்கப்படும். பட்டணம் இடிக்கப்படும். தேசத்தின் அழிவுக்கு அவர்களுடைய பாவங்களே காரணம். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அபாத்திரராய்ப் போகிறார்கள். அவர்கள் பாவம் செய்வதினால், அவர்கள்மீது, கர்த்தருடைய ஆசீர்வாதம் வராமல், அவருடைய சாபம் வருகிறது. இது தேவனுடைய நீதியின் பிரமாணம்.

நீதியுள்ள தேவன் கிருபையுள்ள தேவனாகவும் இருக்கிறார். கர்த்தரிடத்தில் நீதியின் பிரமாணமும் இருக்கிறது. கிருபையின் பிரமாணமும் இருக்கிறது. ஒரு ஜாதியும் ராஜ்யமும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்யும்போது, கர்த்தர் அவர்களை பிடுங்குவார், இடிப்பார், அழிப்பார். ஆனால் அதே ஜாதியும், அதே ராஜ்யமும், தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் வரும்போது, கர்த்தர் அவர்களை இடிக்காமல் கட்டுகிறார். அவர்களை பிடுங்காமல் நாட்டுகிறார். அவர்கள்மீது தாம் செய்ய நினைத்த தீங்கை செய்யாதபடிக்கு மனம் மாறுகிறார். இதுவே அவருடைய இரக்கத்தின் பிரமாணம்.

"கட்டுவேன், நாட்டுவேன் என்றும், ஒரு ஜாதியையும் ஒரு ராஜ்யத்தையும் குறித்து நான் சொல்லுகிறதுமுண்டு. அவர்கள் என் சத்தத்தைக் கேளாமல், என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால், நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்" (எரே 18:9,10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறவர்கள், தங்கள் பாவங்களைவிட்டு, உண்மையாய் மனந்திரும்பி, பயபக்தியோடு வரவேண்டும். அவர்களிடத்தில் கர்த்தரைப்பற்றும் விசுவாசம் உறுதியாயிருக்கவேண்டும். கர்த்தரால் கூடாதகாரியம் ஒன்றுமேயில்லை. அவரால் இடிக்கவும் முடியும். கட்டவும் முடியும். அவரால் பிடுங்கவும் முடியும். நாட்டவும் முடியும். ஆனாலும் கர்த்தர் எதை செய்தாலும், தம்முடைய பிரமாணத்திற்குட்பட்டே செய்கிறார்.

களிமண் குயவன் கையிலிருக்கிறதுபோல, நாமும் கர்த்தருடைய கையிலிருக்கிறோம். குயவன் வனைந்துகொண்டிருந்த மண்பாண்டம், அவன் கையிலே கெட்டுப்போகும்போது, அதை தன்னுடைய விருப்பத்தின் பிரகாரம், திரும்ப வேறே பாண்டமாக வனைகிறான். குயவனால் அதை செய்ய முடியும். கெட்டுப்போன மண்பாண்டத்தை மறுபடியுமாய் சீர்திருத்த முடியும். அவனால் அதை வேறே பாண்டமாய்ச் செய்ய முடியும்.

அதுபோலவே கர்த்தராலும் நம்மை சீர்திருத்த முடியும். நமக்கு புதிய ஜீவனைக் கொடுக்க முடியும். நம்மை அழிவுக்கு விலகிக் காத்துக்கொள்ளமுடியும். நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பி, கர்த்தருடைய கரத்தில் நம்மை ஒப்புக்கொடுக்கும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையினால், நம்மை மறுபடியுமாய் உருவாக்குகிறார். நாம் கர்த்தருக்கு சித்தமான, பிரியமான பாத்திரமாக உருவாக்கப்படுவோம்.

கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் நம்மை உருவாக்க விரும்புகிறார். நம்முடைய பாவங்களே கர்த்தருடைய சித்தத்திற்கு தடையாகயிருக்கும். கர்த்தர் தம்முடைய விருப்பத்தின் பிரகாரம் நம்மை உருவாக்காதபடிக்கு, நம்முடைய பாவங்களினாலும், அக்கிரமங்களினாலும், நாம் கர்த்தருடைய சமுகத்தைவிட்டு விலகிப்போய்விடுகிறோம். கர்த்தருடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிருக்காமல், கலகம்பண்ணிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய அழிவுக்கு நம்முடைய பாவங்களும், அக்கிரமங்களும், கலககுணங்களுமே காரணமாயிருக்கிறது. கர்த்தர் நம்மை உருவாக்க விரும்பும்போது, நாம் அவருடைய சித்தத்திற்கும் விருப்பத்திற்கும் ஒப்புக்கொடுக்க வேண்டும்.

தேவனுக்கும் நமக்கும் இடையிலுள்ள பரிசுத்தமான ஐக்கியத்தை நம்முடைய பாவங்கள் பாழாக்கிப்போடும். கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் பெற்றுக்கொள்ள முடியாதபடிக்கு, நம்முடைய பாவங்கள் நம்மைத் தடைபண்ணிவிடும். நம்முடைய ஜெபங்களுக்கு பதில் கிடைக்காதபடிக்கு நம்முடைய பாவங்கள் தடையாயிருக்கும். பாவங்களும் அக்கிரமங்களும் அதிகரிக்கும்போது, நம்மால் கர்த்தருடைய சமுகத்தில் பயபக்தியோடு ஜெபிக்க முடியாத சூழ்நிலைகள் உருவாகிவிடும்.

கர்த்தர் கிருபையும் இரக்கமும் மிகுந்தவர். அவர் நம்மீது மிகுந்த அன்போடும், கரிசனையோடும் இருக்கிறார். கர்த்தர் நம்மீது கரிசனை காண்பிக்காதபடிக்கு, நம்முடைய பாவங்கள் தடையாயிருக்கும்.

"நான் என் ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போதும், நான் இஸ்ரவேலை குணமாக்க விரும்பும்போதும், எப்பிராயீமின் அக்கிரமமும் சமாரியாவின் பொல்லாப்புகளும் வெளிப்படுத்தப்படும்; அவர்கள் வஞ்சனை செய்கிறார்கள்; திருடன் உள்ளே வருகிறான்; வெளியே பறிகாரரின் கூட்டத்தார் கொள்ளையிடுகிறார்கள்" (ஓசி 7:1).

அது கூடாத காரியம்
எரே 18:11,12

எரே 18:11. இப்பொழுதும், நீ யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் நோக்கி: இதோ, நான் உங்களுக்கு விரோதமாக ஒரு தீங்கை உருப்படுத்தி, உங்களுக்கு விரோதமாக ஒரு காரியத்தை யோசிக்கிறேன்; ஆகையால், உங்களில் ஒவ்வொருவரும் தன்தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பி, உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்படுத்துங்களென்று கர்த்தர் உரைக்கிறாரென்று சொல்.

எரே 18:12. ஆனாலும் அவர்கள்: அது கூடாத காரியம், நாங்கள் எங்கள் யோசனைகளின்படியே நடந்து, அவரவர் தம்தம் பொல்லாத இருதயத்தினுடைய கடினத்தின்படியே செய்வோம் என்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய பொதுவான பிரமாணத்தை விளக்குவதற்காக, "களிமண் குயவன் கையிலிருக்கிறதுபோல நீங்கள் என் கையிலிருக்கிறீர்கள்" (எரே 18:6) என்று உவமையாகச் சொன்னார். இப்போது அந்த உவமையை யூதர்களுக்கு புரியுமாறு விவரிக்கிறார். கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியிடம், "இப்பொழுதும், நீ யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் நோக்கி: இதோ, நான் உங்களுக்கு விரோதமாக ஒரு தீங்கை உருப்படுத்தி, உங்களுக்கு விரோதமாக ஒரு காரியத்தை யோசிக்கிறேன்" (எரே 18:11) என்று சொல்லச் சொல்லுகிறார்.

யூதா மனுஷருக்கு விரோதமாகவும் எருசலேமின் குடிகளுக்கு விரோதமாகவும் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது. கர்த்தர் அவர்களை அழிப்பதற்கு சித்தங்கொண்டிருக்கிறார். யூதா தேசத்தில் நடைபெறுகிற ஒவ்வொரு காரியமும், அவர்களுடைய அழிவுக்கு ஏதுவாய் நடைபெறுகிறது.

யூதா தேசத்தார் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினால், அவர்கள் தங்கள்மீது வரும்அழிவுக்கு தப்பித்துக்கொள்ளலாம். யூதாதேசத்தார் தங்களை சீர்படுத்திக்கொள்ளவேண்டும். "ஆகையால், உங்களில் ஒவ்வொருவரும் தன்தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பி, உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்படுத்துங்களென்று கர்த்தர் உரைக்கிறாரென்று சொல்" (எரே 18:11) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் தங்களுடைய பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பும்போது, கர்த்தர் தம்முடைய கோபத்தை விட்டுத் திரும்புவார். யூதாவின் மனுஷர் தங்களுடைய வழிகளையும், தங்கள் கிரியைகளையும் சீர்படுத்தும்போது, கர்த்தர் அவர்களை அழிக்காமல் விட்டுவிடுவார். அவர்களை மறுபடியுமாய் சீர்படுத்துவார்.

திரிகையில் வனையப்படும் மண்பாண்டம் கெட்டுப்போகும்போது, குயவன் அதை உடனடியாக, திரும்பவும் வேறே பாண்டமாக வனைகிறான். அதுபோலவே யூதாவின் மனுஷரும் தங்களுடைய பொல்லாத வழியைவிட்டுத்திரும்பி, தங்களுடைய வழிகளையும் கிரியைகளையும் சீர்படுத்தும் போது, கர்த்தர் தம்முடைய கிருபையினால், அவர்களை அழித்துப்போடாமல், மறுபடியுமாய் உருவாக்குகிறார். தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும், அன்பையும், ஆதரவையும் அவர்களுக்கு மறுபடியும் காண்பிக்கிறார்.

கர்த்தருடைய வார்த்தை யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் தெளிவாகச் சொல்லப்படுகிறது. கர்த்தருடைய பிரமாணம் நீதியானது. அது தெளிவாகயிருக்கிறது. பாவம் செய்தால் தண்டனை. பாவத்திற்கு மனந்திரும்பினால் தண்டனையிலிருந்து விடுதலை. இதுவே கர்த்தருடைய அடிப்படை பிரமாணம். ஆனால் யூதாவின் மனுஷரோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

"ஆனாலும் அவர்கள்: அது கூடாத காரியம், நாங்கள் எங்கள் யோசனைகளின்படியே நடந்து, அவரவர் தம்தம் பொல்லாத இருதயத்தினுடைய கடினத்தின்படியே செய்வோம் என்கிறார்கள்" (எரே 18:12).

தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்னும் எண்ணமோ, விருப்பமோ யூதா மனுஷரிடத்தில் காணப்படவில்லை. அவர்கள் கர்த்தருடைய விருப்பத்தின்படி நடவாமல், தங்களுடைய விருப்பத்தின்படி நடக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் பொல்லாததாயிருக்கிறது. அது பாவத்தினால் கடினப்பட்டிருக்கிறது.

அவர்கள் மத்தியில் கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் அநேகர், கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள். தங்களுக்கு இனிமேல் தீர்க்கதரிசிகளின் உபதேசம் தேவையில்லை என்று யூதாவின் மனுஷர் அவர்களை ஒதுக்கி தள்ளுகிறார்கள். "அவரவர் தம்தம் பொல்லாத இருதயத்தினுடைய கடினத்தின்படியே செய்வோம்" என்று தீர்மானமாய்ச் சொல்லுகிறார்கள்.

தீர்க்கதரிசிகள் அவர்கள் மத்தியில் ஊழியம் செய்தும், ஒரு பிரயோஜனமும் உண்டாகவில்லை. அவர்கள் தேவனுடைய தெய்வீக பிரமாணத்திற்கு கீழ்ப்படியக்கூடாது என்று தீர்மானமாயிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, தங்கள் பொல்லாத இருதயத்திற்கு கீழ்ப்படிந்து, தங்களுடைய இருதயக்கடினத்தின்படியே செய்யவேண்டும் என்றும் தீர்மானமாயிருக்கிறார்கள்.

கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவது அடிமைத்தனம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் எந்த பிரமாணத்திற்கும் கீழ்ப்படியாமல் சுதந்தரமாய் வாழவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாதவர்கள், தங்களுடைய சுயஆசைகளுக்கும், மாம்சத்தின் இச்சைகளுக்கும் கீழ்ப்படிவார்கள். மாம்சத்தின் இச்சைகளுக்கு அடிமையாயிருப்பதே மிகவும் மோசமான அடிமைத்தனம்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், தங்களுடைய மதியீனத்தினால் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் போகிறார்கள். மனந்திரும்புவதை வெறுக்கிறார்கள். கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு தம்முடைய பிரமாணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார், தம்முடைய வல்லமையையும், தம்முடைய பரிசுத்த பிரசன்னத்தையும் வெளிப்படுத்துகிறார். ஆனால் அவர்களோ தங்களுடைய பொல்லாத வழிகளைவிட்டு திரும்புவதும், தங்களுடைய வழிகளையும், கிரியைகளையும் சீர்படுத்துவதும் "இயலாத காரியம்" என்று சொல்லிவிடுகிறார்கள்.

திடுக்கிடத்தக்க காரியம் எரே 18:13

எரே 18:13. ஆகையால் கர்த்தர் சொல்லுகிறார்: இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டவன் யார் என்று புறஜாதிகளுக்குள்ளே விசாரித்துப் பாருங்கள்; மிகவும் திடுக்கிடத்தக்க காரியத்தை இஸ்ரவேல் என்னும் கன்னிகை செய்கிறாள்.

கர்த்தர் யூதாவின் மனுஷரிடத்திலும், எருசலேமின் ஜனங்களிடத்திலும், தம்முடைய கோபத்தை வெளிப்படுத்துகிறார். "இப்படிப்பட்டவைகளை கேள்விப்பட்டவன் யார் என்று புறஜாதிகளுக்குள்ளே விசாரித்து பாருங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். புறஜாதி ஜனங்களுக்கு கர்த்தருடைய தெய்வீக வெளிப்பாடு கிடைக்கவில்லை. கர்த்தருடைய பிரமாணங்களும், அவருடைய கற்பனைகளும் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் அவர்கள் மத்தியிலே வந்து கர்த்தருடைய சத்தியத்தைப் போதிக்கவுமில்லை.

"இப்படிப்பட்டவைகளை கேள்விப்பட்டவன் யார்" என்று புறஜாதிகளிடம் விசாரித்துப் பார்க்கலாம். யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும்போல தங்கள் இருதயங்களை கடினப்படுத்தினவர் ஒருவருமில்லை. நினிவேயின் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்களுடைய பாவங்களைக் குறித்தும், தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பைக் குறித்தும், அவர்களுக்கு எச்சரித்து சொல்லப்பட்டது. நினிவேயின் ஜனத்தார் கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, தங்களுடைய பொல்லாத வழிகளையும், பொல்லாத கிரியைகளையும் விட்டு விலகி வந்தார்கள். தங்களுடைய ஜீவியத்தை சீர்படுத்தினார்கள். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களோ, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துகிறார்கள்.

"மிகவும் திடுக்கிடத்தக்க காரியத்தை இஸ்ரவேல் என்னும் கன்னிகை செய்கிறாள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இஸ்ரவேல் தேசத்தார் தங்களுடைய பாவத்திற்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சியின் சத்தத்திற்கு செவிகொடுக்கவும், அதற்கு கீழ்ப்படியவும் மறுக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு இதுவரையிலும் கொடுத்து வந்த, தெய்வீக பாதுகாப்பையும், பராமரிப்பையும் நினையாமல் போகிறார்கள். கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்.

யூதா தேசத்தார் திடுக்கிடத்தக்க காரியத்தை செய்கிறார்கள். அவர்கள் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், முரட்டாட்டமாய் ஜீவிக்கிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதா வம்சத்தாரும் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்களாய் ஜீவிக்கவேண்டும். அவர்கள் தங்களுடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமான மணவாட்டியாக, கற்புள்ள கன்னிகையாக தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரிடத்தில் திரும்பி வர மறுக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப மறுக்கிறார்கள். துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமாக துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்கள், தங்களைத் தாங்களே அழித்துக்கொள்கிறார்கள். தங்களுடைய ஜீவனை தாங்களே கொன்றுபோடுகிறார்கள். இதுவே இஸ்ரவேல் தேசத்தார் மத்தியில் திடுக்கிடத்தக்க காரியமாகவும், பயங்கரமான காரியமாகவும் இருக்கிறது.

என் ஜனங்களோ என்னை மறந்தார்கள்
எரே 18:14-17

எரே 18:14. லீபனோனின் உறைந்த மழை வயல்வெளியின் கன்மலையிலிருந்து அற்றுப்போகிறதுண்டோ? ஓடிவருகிற அந்நியதேசத்துக்குக் குளிர்ந்த தண்ணீர்கள் வடிந்துபோகிறதுண்டோ?

எரே 18:15. என் ஜனங்களோ என்னை மறந்து, மாயையான விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டுகிறார்கள்; செப்பனிடப்படாத பாதைகளிலும் வழியிலும் அவர்கள் நடக்கும்படி, அவைகள் அவர்களைப் பூர்வ பாதைகளாகிய அவர்களுடைய வழிகளிலிருந்து இடறும்படி செய்கிறது.

எரே 18:16. நான் அவர்களுடைய தேசத்தைப் பாழாக்கவும் என்றென்றைக்கும் ஈசலிட்டு நிந்திக்கும் நிந்தையாக்கவும் செய்யும்படி இப்படிச் செய்கிறார்கள்; அதைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, தன் தலையைத் துலுக்குவான்.

எரே 18:17. கொண்டல்காற்றுப் பறக்கடிக்கும்மாப்போல் நான் அவர்களை அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாகப் பறக்கடிப்பேன்; அவர்களுடைய ஆபத்தின் நாளிலே என் முகத்தையல்ல, என் முதுகை அவர்களுக்குக் காட்டுவேன் என்று சொல் என்றார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய மதியீனத்தை வெளிப்படுத்துகிறார். யூதாவின் மனுஷர், இஸ்ரவேலின் பரிசுத்தரை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். ஜீவனுள்ள தேவனை விட்டுவிட்டு, ஜீவனில்லாத விக்கிரகங்களைப் பின்பற்றுகிறார்கள். இது அவர்களுடைய மதியீனம். விக்கிரகாராதனை என்னும் பாவத்தினால் வரும் விளைவுகளையும், கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பையும் அவர்கள் அறியாதிருக்கிறார்கள். இதுவும் அவர்களுடைய மதியீனம்.

கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். மாயையான விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். வனாந்தரமான வழியில் தாகத்தோடு பிரயாணம்பண்ணுகிறவர், தண்ணீரைப் பார்த்தால், அதைப் பருகாமல்விட்டு விலகிப்போகமாட்டார். உறைந்த மழையை பார்க்கும்போது, அது உருகும் வரையிலும் காத்திருந்து, அதன் தண்ணீரை பருகி, தன் தாகத்தைத் தீர்த்துக்கொள்வார்.

லீபனோனின் கன்மலையிலிருந்து உறைந்த மழையாகிய பனி வயல்வெளிக்கு இறங்கி வருகிறது. அது உருகி தண்ணீராக ஓடி வருகிறது. உறைந்த மழையின் தண்ணீர் வயல்வெளியின் கன்மலைகள் வழியாக ஓடுகிறது. அது சுத்தமான தண்ணீர். அது அசுத்தமில்லாமல் தெளிவாகயிருக்கிறது. பருகுவதற்கு சுவையாகயிருக்கிறது.

தாகத்தோடிருக்கிறவர்கள் சுத்தமான இந்தத் தண்ணீரையே பருகவேண்டும் என்று விரும்புவார்கள். சுத்தமான தண்ணீரை விட்டுவிட்டு, குளம் குட்டைகளில் கெட்டிக்கிடக்கிற அசுத்தமான தண்ணீரை பருகவேண்டும் என்று யாரும் விரும்பமாட்டார்கள். யூதாவின் மனுஷரோ ஜீவதண்ணீரின் நீரூற்றாகிய கர்த்தரை விட்டுவிட்டு, கெட்டிக்கிடக்கிற அசுத்தமான தண்ணீரைப்போன்ற விக்கிரகங்களிடத்திற்கு வருகிறார்கள்.

"லீபனோனின் உறைந்த மழை வயல்வெளியின் கன்மலையிலிருந்து அற்றுப்போகிறதுண்டோ?" (எரே 18:14) என்று கர்த்தர் கேட்கிறார். கோடைகாலத்தில் உஷ்ணமாயிருந்தாலும், உறைந்த மழையானது வெயிலின் உஷ்ணத்தினால் உருகி, குளிர்ந்த தண்ணீராக ஓடிவரும். வெயிலின் களைப்பில் பிரயாணம்பண்ணுகிறவர்களுக்கு தாகம் அதிகமாயிருக்கும். உறைந்த மழையின் குளிர்ந்த தண்ணீர் அவர்களுடைய தாகத்தைத் தணிக்கும். பிரயாணம் செய்து தாகத்தோடும், களைப்போடும் இருக்கிறவர்கள், சுத்தமான தண்ணீரை பருகி, தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்வார்கள்.

வயல்வெளி என்பது சமமான விளைச்சல் நிலத்தைக் குறிக்கும் வார்த்தை. கன்மலை என்பது மேடுபள்ளங்களைக் குறிக்கிறது. வயல்வெளி பிரயாணம் பண்ணுவதற்கு எளிதாகயிருக்கும். கன்மலையில் பிரயாணம்பண்ணுவது கடினம். பிரயாணம் பண்ணுகிறவர்கள் சமமான வயல்வெளியையே விரும்புவார்கள்.

கரடுமுரடான கன்மலையில் பிரயாணம்பண்ண விரும்பமாட்டார்கள். "வயல்வெளியின் கன்மலையிலிருந்து அற்றுப்போகிறதுண்டோ" என்னும் வாக்கியத்திற்கு, "பிரயாணம் பண்ணுகிறவர்கள், சமனான வயல்வெளியில் பிரயாணம்பண்ணாமல், மேடுபள்ளமான, கரடுமுரடான கன்மலையில் பிரயாணம் பண்ணுவார்களோ" என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"ஓடி வருகிற அந்நிய தேசத்து குளிர்ந்த தண்ணீர்கள் வடிந்துபோகிறதுண்டே" என்னும் வாக்கியத்திற்கு, "பிரயாணம் பண்ணுகிறவர்கள், ஓடிவருகிற தெளிவான தண்ணீரை விட்டுவிட்டு, அந்நிய தேசத்தின் குளிர்ந்த தண்ணீரை பருகவேண்டுமென்று அங்கும் இங்கும் தேடி அலைவார்களோ" என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். ஆனால், "என் ஜனங்களோ என்னை மறந்துவிட்டார்கள்" (எரே 18:15) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் ஜீவத்தண்ணீரின் நீரூற்றை மறந்துவிட்டு, உடைந்த தொட்டியிலுள்ள அசுத்தமான தண்ணீரைக் குடிப்பதற்காக அதை நாடிப்போகிறார்கள்.

அவர்கள் மாயையான விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். விக்கிரகங்கள் மாயையானவை. அவை தங்களுடைய உண்மையான சுபாவத்தை வெளிப்படுத்திக் காண்பிக்காது. விக்கிரகங்களுக்கு ஜீவன் இல்லாவிட்டாலும், தங்களுக்கு ஜீவன் இருப்பதுபோல ஒரு மாயையான தோற்றத்தைக் கொடுக்கும். அவற்றிற்கு வல்லமையில்லாவிட்டாலும், தங்களுக்கு வல்லமையிருப்பதுபோல காண்பித்துக்கொள்ளும்.

யூதாவின் மனுஷர் விக்கிரகங்களை நம்புகிறார்கள். விக்கிரகங்களால் அவர்களுக்கு ஒரு உதவியும் செய்ய முடியாது. ஆனாலும் தங்களால் அவர்களுக்கு எல்லா உதவியும் செய்யமுடிவதுபோல, விக்கிரகங்கள் ஒரு மாயத்தோற்றத்தை உண்டுபண்ணுகிறது. இஸ்ரவேல் வம்சத்தாரும் மாயையை நம்பி, மாயையான விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். அவற்றை தெய்வங்கள் என்று நம்புகிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பூர்வபாதைகளைவிட்டு விலகிப்போகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தார் இந்தப் பூர்வ பாதையில்தான் நடக்க வேண்டுமென்று, தேவனுடைய பிரமாணம் தீர்மானித்திருக்கிறது. கர்த்தருடைய பரிசுத்தவான்களும், அவர்களுடைய முற்பிதாக்களுக்கும் இந்தப் பூர்வபாதையின் வழியாகத்தான் நடந்து வந்திருக்கிறார்கள். இந்தப் பாதையே அவர்களுக்கு நல்ல வழி. இதுவே அவர்களுக்கு பாதுகாப்பான வழி. இந்த வழியில் போனால் அவர்கள் இடறிப்போகமாட்டார்கள். அவர்கள் போய்ச் சேரவேண்டிய இலக்கை சென்றடைவார்கள்.

விக்கிரகங்களோ யூதாவின் மனுஷரை செப்பனிடப்படாத பாதைகளிலும், வழிகளிலும் நடத்துகிறது . இவை பாவத்தின் பாதைகள். இந்தப் பாதைகள் பூர்வபாதைகளாகிய கர்த்தருடைய பாதைக்கு நேர்விரோதமாயிருக்கிறது. விக்கிரகங்களை பின்பற்றிப்போகிறவர்கள் தங்கள் அழிவை நோக்கிப்போகிறார்கள். விக்கிரகங்கள் மனுஷருடைய மனக்கண்களை குருடாக்குகிறது. விக்கிரகங்கள் அவர்களை பூர்வபாதையில் நடவாதபடி, இடறிவிழச்செய்கிறது.

கர்த்தருடைய பாதையே சரியான பாதை. அவருடைய வழியே நல்ல வழி. யூதாவின் மனுஷரோ நேர்பாதையில் நடவாமல், குறுக்குப் பாதையில் நடக்கிறார்கள். கர்த்தருடைய வழி ராஜாவின் பிரதான வழியாயிருக்கிறது. அது பிரபுக்களும் மகாராஜாக்களும் கடந்து செல்ல வேண்டிய பாதை. யூதாவின் மனுஷரோ கர்த்தர் நியமித்திருக்கிற பூர்வபாதையில் நடக்காமல், விக்கிரகாராதனையின் பாதையில் நடக்கிறார்கள். தங்கள் அழிவை நோக்கி வேகமாகப் போகிறார்கள்.

ஜீவனுள்ள தேவனை ஆராதியாமல், விக்கிரகங்களை ஆராதிக்கிறவர்கள் அழிந்துபோவார்கள். விக்கிரகாராதனையின் முடிவு அழிவு என்பது தெரியாமலேயே, அவர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். கர்த்தர் விக்கிரகாராதனைக்காரரை தம்முடைய நீதியினால் தண்டிப்பார். அவர்களுடைய தேசத்தைப் பாழாக்கிப்போடுவார். அவர்களுடைய தேசம் அவர்களை நிந்திக்கும் நிந்தையாயிருக்கும்.

யூதாதேசம் பாழாய்ப்போயிருக்கும். அந்த தேசத்தை கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, தன் தலையை துலுக்குவான். ஒரு சிலர் ஆச்சரியப்பட்டு தங்கள் தலையை துலுக்குவார்கள். வேறு சிலரோ யூதா தேசத்திற்கு வந்திருக்கும் அழிவைப் பார்த்து, மிகுந்த வேதனையோடு, தங்கள் தலைகளை துலுக்குவார்கள். வேறு சிலரோ, யூதாதேசத்திற்கு வந்திருக்கும் அழிவு, தங்களுக்கு ஜெயத்தைக் கொடுப்பதாக நினைத்து, வெற்றிக்களிப்புடன், தங்கள் தலையை துலுக்குவார்கள்.

ஒரு காலத்தில் யூதாதேசம் எல்லா தேசங்களுக்கும் மகிமையான தேசமாயிருந்தது. ஆனால் இப்போதோ மகிமையான தேசம் பாழாய்ப்போயிருக்கிறது. யூதா தேசம் யூதர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிற தேசமாகயிருந்தது. இப்போதோ அவர்களுடைய தேசம் என்றென்றைக்கும் ஈசலிட்டு, அவர்களை நிந்திக்கிற தேசமாயிருக்கிறது.

யூதாதேசத்திற்கு வரும் அழிவு எப்படி இருக்கும் என்பதை கர்த்தர் தெளிவுபடுத்துகிறார். "கொண்டல்காற்றுப் பறக்கடிக்குமாப்போல் நான் அவர்களை அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாகப் பறக்கடிப்பேன்" (எரே 18:17) என்று கர்த்தர் சொல்லுகிறார். கொண்டல்காற்று, புயல்காற்றுபோல பலமாய் வீசும். அது எல்லாவற்றையும் பறக்கடித்துவிடும். யூதாவின் மனுஷரும் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக தோற்று ஓடிப்போய்விடுவார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தரைவிட்டு விலகிப் போய்விடுகிறார்கள். கர்த்தரும் தம்முடைய நீதியினால் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறார். அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பும், ஆலோசனையும், பராமரிப்பும் கிடைக்கவில்லை. "அவர்களுடைய ஆபத்தின் நாளிலே என் முகத்தையல்ல, என் முதுகை அவர்களுக்குக் காட்டுவேன்" (எரே 18:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நமக்கு எவ்வளவு பெரிய ஆபத்துக்கள் வந்தாலும், கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் நமக்கு கிடைத்தால், நம்மை எந்த ஆபத்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. தீங்கு நம்மை அணுகாது. இந்த உலகத்திலிருக்கிறவனிலும், நமக்குள்ளே இருக்கிற கர்த்தர் மிகவும் பெரியவர். அவர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தருடைய பாதுகாப்பு நமக்கு கிடைக்கும் வரையில் தான், நமக்கு சத்துருவினிடத்திலிருந்து பாதுகாப்பு உண்டாயிருக்கும். கர்த்தர் நம்மைவிட்டு விலகிப்போய்விட்டால், நமக்கு ஒரு பாதுகாப்பும் இல்லை.

நம்முடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள முடியாது. கர்த்தர் நம்மீது பிரியமாயிருந்தால் அவர் நம்மோடு கூடயிருப்பார். ஆபத்து நாளிலே அவர் தம்முடைய முகத்தை நமக்கு காண்பிப்பார். நம்மை கருத்தாய் விசாரிப்பார்.

கர்த்தர் நம்மீது பிரியமாயிராவிட்டால், ஆபத்து நாளிலே, கர்த்தர் தம்முடைய முகத்தை நமக்கு காண்பிக்கமாட்டார். அவர் தம்முடைய முதுகை நமக்கு காண்பிப்பார். நம்முடைய ஜெபத்திற்கும், வேண்டுதல்களுக்கும், விண்ணப்பங்களுக்கும் செவிகொடுக்கமாட்டார். நமக்கு கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும், உபகாரமும், பாதுகாப்பும், பராமரிப்பும் கிடைக்காது. கர்த்தர் நம்மை தனியே விட்டுவிட்டால் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. நாம் பெலமிழந்தவர்களாக யிருப்போம். பெலவீனர்களாகயிருப்போம். கர்த்தர் நம்மோடு கூடயிருப்பதே நமக்குப் பெலன்.

எரேமியாவுக்கு விரோதமாக ஆலோசனை எரே 18:18

எரே 18:18. அதற்கு அவர்கள்: எரேமியாவுக்கு விரோதமாக ஆலோசனை செய்வோம் வாருங்கள்; ஆசாரியரிடத்திலே வேதமும், ஞானிகளிடத்திலே ஆலோசனையும், தீர்க்கதரிசிகளிடத்திலே வசனமும் ஒழிந்துபோவதில்லை. இவன் வார்த்தைகளை நாம் கவனியாமல், இவனை நாவினாலே வெட்டிப்போடுவோம் வாருங்கள் என்றார்கள்.

எரேமியா இப்போது கர்த்தரிடத்தில் தனக்காக ஜெபம்பண்ணுகிறார். தன்னுடைய சொந்த நிலமையை கர்த்தரிடத்தில் முறையிடுகிறார். எரேமியாவின் ஜெபம் நமக்கு நல்ல சத்தியங்களை உபதேசம்பண்ணுகிறது. எரேமியாவின் சத்துருக்கள் அவரைத் துன்பப்படுத்துகிறார்கள். எரேமியாவை வேதனைப்படுத்துவதற்கு அவர்கள் என்னென்ன வழிகளை கையாளுகிறார்கள் என்பது இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது.

எரேமியாவின் சத்துருக்கள் அவருக்கு விரோதமாக ஆலோசனை செய்வதற்கு ஒன்றுகூடி வந்திருக்கிறார்கள். எரேமியா கர்த்தருடைய செய்தியை யூதாவின் மனுஷருக்கு சொன்னார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. தங்கள்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை சொன்ன எரேமியாவின் மீது கோபப்படுகிறார்கள். அவர் இனிமேல் ஒன்றும் பேசமுடியாதபடி, அவருடைய நாவை அடைப்பதற்கு சதிஆலோசனை பண்ணுகிறார்கள்.

"எரேமியாவுக்கு விரோதமாக ஆலோசனை செய்வோம் வாருங்கள்" என்று தங்களுக்குள் சொல்லிக்கொண்டு ஒன்றுகூடுகிறார்கள். அவர்கள் எரேமியாவுக்கு விரோதமாகவும் ஆலோசனை பண்ணுகிறார்கள். எரேமியா தங்களுக்கு சொன்ன தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு விரோதமாகவும் ஆலோசனை பண்ணுகிறார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் மாய்மாலமாய் ஜீவிக்கிறார்கள். கர்த்தரிடத்தில் தங்களுக்கு அதிகமான பக்தியிருப்பதாகவும், யூதாவின் மனுஷர்மீது தங்களுக்கு அதிகமான அக்கரையும், கரிசனையும் இருப்பதாகவும் காண்பித்துக்கொள்கிறார்கள்.

அவர்களுக்கு கர்த்தர்மீது பக்தியுமில்லை, கர்த்தருடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து வைராக்கியமுமில்லை. எரேமியா தொடர்ந்து பிரசங்கம்பண்ணினால், தங்களுடைய மாய்மாலம் வெளிப்பட்டுவிடும் என்று யோசிக்கிறார்கள். ஆகையினால் அவர்களால் எரேமியாவின் பிரசங்கச் செய்தியை தாங்கிக்கொள்ள முடியவில்லை.

"ஆசாரியரிடத்தில் வேதமும், ஞானிகளிடத்தில் ஆலோசனையும், தீர்க்கதரிசிகளிடத்திலே வசனமும் ஒழிந்துபோவதில்லை" என்று எரேமியாவின் சத்துருக்கள் தங்களுக்குள்ளே சொல்லிக்கொள்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு ஜீவன் இருக்கும் வரையிலும், அவர்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்துகொண்டேயிருப்பார்கள். அவர்களுடைய ஊழியத்தை தடைபண்ண முடியாது.

அவர்களுடைய மூச்சு நின்றுபோனால்தான், அவர்களுடைய பேச்சு நிற்கும். ஊழியக்காரரின் ஜீவன் போனால்தான், அவர்களுடைய ஊழியம் நின்றுபோகும். எரேமியாவின் சத்துருக்களுக்கு கர்த்தருடைய ஊழியக்காரர்களைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கிறது. ஆகையினால் எரேமியாவைக் கொன்றுபோடலாம் என்று தங்களுக்குள்ளே சதிஆலோசனை பண்ணுகிறார்கள்.

"சத்தியவேதம் அவன் வாயில் இருந்தது; அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை; அவன் என்னோடே சமாதானமும் யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்து, அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான்" (மல் 2:6).

எரேமியாவின் சத்துருக்கள் உயர்ந்த அதிகாரங்களிலிருக்கிறார்கள். அவர்கள் தேவாலயத்தில் பிரதான ஆசாரியர்களாயும், ஜனங்களை ஆளுகை செய்கிற பிரபுக்களாயும் இருக்கிறார்கள். நியாயம் விசாரிப்பதும், ஜனங்களுக்கு தண்டனை கொடுப்பதும் அவர்களுடைய கரங்களிலிருக்கிறது. நியாயம் விசாரணை செய்யப்படும் இடங்களில், அவர்களுடைய யோசனைகள்தான் நிறைவேறும். அவர்களுடைய வார்த்தைக்கு விரோதமாக அங்கே யாராலும் எதிர்த்து பேசமுடியாது.

எரேமியாவின் சத்துருக்கள் அவருக்கு விரோதமாக சதிஆலோசனைபண்ணுகிறார்கள். எரேமியா உண்மையான தீர்க்கதரிசியல்ல என்று அவர்கள் தீர்மானம்பண்ணுகிறார்கள். அவர் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியென்று எரேமியாவின்மீது தவறான முத்திரை குத்துகிறார்கள்.

ஆசாரியர்கள் எல்லோரும் எரேமியாவின் சத்துருக்கள் பக்கமாயிருக்கிறார்கள். அந்த ஆசாரியர்கள் எல்லோருமே எரேமியாவின் தீர்க்கதரிசன ஊழியத்தை அங்கீகரிக்கவில்லை. எரேமியாவின் தீர்க்கதரிசன வார்த்தைகள், மற்ற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளோடு ஒத்துப்போகவில்லை. ஆகையினால் எரேமியாவின் சத்துருக்கள் அவரை, கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று அங்கீகரிக்கவில்லை.

எரேமியா கர்த்தருடைய தீர்க்கதரிசி அல்ல என்றால், அவர் சொல்லுவதும் கர்த்தருடைய வார்த்தையாக இருக்கமுடியாது என்று தீர்மானம் பண்ணுகிறார்கள். எரேமியா தீர்க்கதரிசிகளைப்பற்றியும், ஆசாரியர் களைப்பற்றியும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். அவர்கள் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள் என்றும் அவர்களைப்பற்றிச் சொல்லிவிடுகிறார்.

"தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது; ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்?" (எரே 5:31)

"அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக்கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அவர்களோடே பேசினதுமில்லை; அவர்கள் கள்ளத் தரிசனத்தையும், கள்ள சகுனத்தையும், இல்லாத விசேஷத்தையும், தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே, உங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள். ஆதலால், நான் அனுப்பாதிருந்தும், என் நாமத்தைக் கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி, இந்தத் தேசத்திலே பட்டயமும் பஞ்சமும் வருவதில்லையென்கிற தீர்க்கதரிசிகளைக் குறித்து: இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சாவார்கள்" (எரே 14:14,15).

"அந்நாளிலே ராஜாவின் இருதயமும், பிரபுக்களின் இருதயமும் மடிந்துபோம்; ஆசாரியர்கள் திடுக்கிட்டு, தீர்க்கதரிசிகள் திகைப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 4:9).

"ஞானிகள் வெட்கி, கலங்கிப் பிடிபடுவார்கள்; இதோ, கர்த்தருடைய சொல்லை வெறுத்துப்போட்டார்கள்; அவர்களுக்கு ஞானமேது? ஆகையால் அவர்களுடைய ஸ்திரீகளை அந்நியருக்கும், அவர்களுடைய வயல்களை அவைகளைக் கட்டிக்கொள்பவர்களுக்கும் கொடுப்பேன்; அவர்களிலே சிறியோர்தொடங்கிப் பெரியோர்மட்டும் ஒவ்வொருவரும் பொருளாசைக்காரரா யிருக்கிறார்கள்; தீர்க்கதரிசிகள் தொடங்கி ஆசாரியர்கள் மட்டும் ஒவ்வொருவரும் பொய்யராயிருந்து, சமாதானமில்லாதிருந்தும், சமாதானம் சமாதானம் என்று சொல்லி, என் ஜனமாகிய குமாரத்தியின் காயங்களை மேற்பூச்சாய்க் குணமாக்குகிறார்கள்" (எரே 8:9-11)

"அப்பொழுது நீ அவர்களை நோக்கி: இதோ, இந்தத் தேசத்தின் குடிகளெல்லாரையும், தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிற ராஜாக்களையும், ஆசாரியர்களையும், தீர்க்கதரிசிகளையும், எருசலேமின் குடிகள் எல்லாரையும் நான் வெறியினால் நிரப்பி, பிதாக்களும் பிள்ளைகளுமாகிய அவர்களை ஒருவர்மேல் ஒருவர் மோதி விழும்படிப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்களை அழிப்பதேயன்றி மன்னிப்பதுமில்லை, தப்பவிடுவதுமில்லை, இரங்குவதுமில்லையென்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்" (எரே 13:13,14).

எரேமியாவுக்கு யூதா மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் ஓரளவுக்கு நல்ல பெயர் உள்ளது. எரேமியாவின் சத்துருக்கள் அவருடைய நல்ல பெயரை எப்படியாவது கெடுத்துப்போடவேண்டும் என்று சதிபண்ணுகிறார்கள். "இவனை நாவினால் வெட்டிப்போடுவோம்" என்று தங்களுக்குள் சொல்லிக்கொள்கிறார்கள்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது, அதை ஒரு சிலராவது கவனித்துக் கேட்கவேண்டும். ஒருவரும் கேட்கவில்லையென்றால் அவர்கள் பேசியும் பிரயோஜனமில்லை. யாராலும் ஆகாயத்திற்கு பிரசங்கம்பண்ண முடியாது. மனுஷருக்குத்தான் பிரசங்கம்பண்ண வேண்டும். எரேமியாவின் செய்தியைக் கேட்காதபடிக்கு, யூதாவின் மனுஷரை தடைபண்ணிப்போடவேண்டும் என்று சத்துருக்கள் ஆலோசனை பண்ணுகிறார்கள். எரேமியாவின் வார்த்தைகளை நாம் கவனிக்கக்கூடாது என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொள்கிறார்கள்.

எரேமியாவின் வார்த்தைகளை ஒருவரும் கேட்கவில்லையென்றால், அவர் சோர்வடைந்துவிடுவார். தான் பேசுவதை நிறுத்திக்கொள்வார். அவருடைய வார்த்தையை யாரும் கேட்கவுமாட்டார்கள். ஒருவரும் மனந்திரும்பவும்மாட்டார்கள். எரேமியாவின் பிரசங்கச் செய்தி மனுஷருடைய செவிகளுக்கும், அவர்களுடைய இருதயங்களுக்கும் போய்ச்சேராது.

"இவன் வார்த்தைகளை நாம் கவனியாமல்" என்று எரேமியாவின் சத்துருக்கள் சொல்லுகிறார்கள். எரேமியா பேசுவது கர்த்தருடைய வார்த்தை. அது எரேமியாவின் சொந்த வார்த்தையல்ல. ஆனால் எரேமியாவின் சத்துருக்களோ, அவர் பேசுகிற வார்த்தைகளை, கர்த்தருடைய வார்த்தைகள் என்று அங்கீகரிக்கவில்லை. அவையெல்லாமே எரேமியாவின் சொந்த வார்த்தைகள் என்று சொல்லுகிறார்கள். ஆகையினால் எரேமியா என்ன சொன்னாலும், அது அவருடைய வார்த்தைகள் என்றே சொல்லுகிறார்கள். அவை கர்த்தருடைய வார்த்தைகள் என்பதை நம்ப மறுக்கிறார்கள்.

எரேமியாவின் சத்துருக்கள் அவரை கொன்றுபோடவும் தீர்மானம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய சதிஆலோசனை எரேமியா வுக்குத் தெரிந்திருக்கிறது. "கர்த்தாவே, அவர்கள் எனக்கு விரோதமாகச் செய்யும் கொலை பாதக யோசனையையெல்லாம் நீர் அறிவீர்" (எரே 18:23) என்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். எரேமியாவின் மூச்சு நின்றால்தான், அவருடைய பேச்சு நிற்கும் என்று அவருடைய சத்துருக்கள் நினைக்கிறார்கள்.

கர்த்தாவே, நீர் என்னைக் கவனியும்
எரே 18:19-23

எரே 18:19. கர்த்தாவே, நீர் என்னைக் கவனித்து, என்னோடே வழக்காடுகிற வர்களின் சத்தத்தைக் கேளும்.

எரே 18:20. நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டலாமோ? என் ஆத்துமாவுக்குப் படுகுழியை வெட்டுகிறார்களே; உம்முடைய உக்கிரத்தை அவர்களை விட்டுத் திருப்பும்படிக்கு நான் அவர்களுக்காக நன்மையைப் பேச உமக்கு முன்பாக நின்றதை நினைத்தருளும்.

எரே 18:21. ஆகையால், அவர்களுடைய பிள்ளைகளைப் பஞ்சத்துக்கு ஒப்புக் கொடுத்து, அவர்களைப் பட்டயத்துக்கு இரையாக்கிவிடும்; அவர்கள் மனைவிகள் பிள்ளை களற்றவர்களும் விதவைகளுமாகி, அவர்கள் புருஷர்கள் கொலை செய்யப்பட்டு, அவர்கள் வாலிபர்கள் யுத்தத்திலே பட்டயவெட்டால் மடியக்கடவர்கள்.

எரே 18:22. நீர் சடிதியில் அவர்கள்மேல் இராணுவத்தை வரப்பண்ணுகையால், கூக்குரல் அவர்கள் வீடுகளிலிருந்து கேட்கப்படக்கடவது; என்னைப் பிடிக்கப் படுகுழியை வெட்டி, என் கால்களுக்குக் கண்ணிகளை வைத்தார்களே.

எரே 18:23. ஆனாலும் கர்த்தாவே, அவர்கள் எனக்கு விரோதமாய்ச் செய்யும் கொலைபாதக யோசனையெல்லாம் நீர் அறிவீர்; அவர்களுடைய அக்கிரமத்தை உமது கண்ணுக்கு மறைவாக மூடாமலும், அவர்கள் பாவத்தைக் குலைக்காமலும் இருப்பீராக; அவர்கள் உமக்கு முன்பாகக் கவிழ்க்கப்படக்கடவர்கள்; உமது கோபத்தின் காலத்திலே இப்படி அவர்களுக்குச் செய்யும்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு இந்த உலகத்தில் ஏராளமான சத்துருக்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஊழியக்காரர்களை துன்பப்படுத்துகிறார்கள், வேதனைப்படுத்துகிறார்கள், உபத்திரவப்படுத்துகிறார்கள். ஊழியக்காரர்கள் அவர்களோடு யுத்தம்பண்ணக்கூடாது. அவர்கள் மூலமாய் தங்களுக்கு வரும் பிரச்சனைகளை, ஊழியக்காரர்கள் கர்த்தருடைய சமுகத்தில் ஒப்புவிக்கவேண்டும். தனக்கு விரோதமாக சத்துருக்கள் செய்கிற சதிஆலோசனைகள் எல்லாவற்றையும் எரேமியா அறிந்திருக்கிறார். உடனே எரேமியா கர்த்தருடைய சமுகத்தில் தன்னை ஒப்புக்கொடுக்கிறார். தன்னுடைய வழக்குகளை கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதி. எரேமியாவின் சத்துருக்கள் அவரோடு வழக்காடுகிறார்கள். எரேமியா கர்த்தரிடத்தில் அவர்களுடைய வழக்குகளையும், தன்னுடைய நியாயத்தையும் தெரியப்படுத்துகிறார். அவர்கள் எரேமியா சொல்லுகிற வார்த்தைகளுக்கு செவிகொடுப்ப தில்லை. எரேமியா அவர்களிடத்தில் தன்னுடைய நியாயத்தைப்பற்றிச் சொன்னாலும், அது அவர்களுக்கு நியாயமாய்த் தெரிவதில்லை. தன்னுடைய பிரச்சனைகளை அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னாலும், அவர்கள் அதை தீர்த்து வைக்க வரமாட்டார்கள். அவர்கள் எரேமியாவை கவனிக்கமாட்டார்கள்.

ஆகையினால் எரேமியா கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி, "கர்த்தாவே, நீர் என்னைக் கவனியும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறார்" (எரே 18:19). "என்னோடே வழக்காடுகிறவர்களின் சத்தத்தைக் கேளும்" என்று எரேமியா கர்த்தரிடத்தில் பணிவோடு சொல்லுகிறார்.

எரேமியாவின் சத்துருக்கள் சத்தமாய்ப் பேசுகிறார்கள். அவர்களுடைய வார்த்தைகளில் உண்மையில்லை. ஆனாலும் பொய்யை உண்மைபோல பேசுகிறார்கள். எரேமியா தனிமையாய், ஒருவராயிருக்கிறார். அவர்களோ எண்ணிக்கையில் பெருத்தவர்களாகயிருக்கிறார்கள். அவர்களுக்கு சாதுரிய வார்த்தைகளைப் பேச தெரிந்திருக்கிறது. அவர்கள் துன்மார்க்கராயிருந்தாலும், தங்களை நல்லவர்கள்போல காண்பித்துக்கொள்கிறார்கள். மாய்மாலம் பண்ணுகிறார்கள்.

கர்த்தர் தாமே அவர்களுடைய வாயின் வார்த்தைகளினால் அவர்களை நியாயந்தீர்க்கவேண்டும் என்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். அவர்கள் சொல்லுகிற சாபவார்த்தைகள் அவர்கள்மீதே வந்து விழவேண்டும் என்று எரேமியா எதிர்பார்க்கிறார்.

எரேமியா கர்த்தருடைய சமுகத்தில் தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறார். கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதி. நம்முடைய வழக்குகளையும், நம்முடைய நியாயங்களையும் கர்த்தருடைய சமுகத்தில் சொல்லுவதற்கு நமக்கு உரிமை உண்டு. "நன்மைக்கு தீமையை சரிக்கட்டலாமோ" (எரே 18:20) என்று எரேமியா கர்த்தரிடத்தில் கேட்கிறார். அப்படிப்பட்டவர்கள் தண்டிக்கப்படாமல் போகலாமோ என்று எரேமியா சொல்லுகிறார். நன்மைக்கு தீமை செய்தவர்களை கர்த்தர் நியாயம் விசாரிப்பார்.

எரேமியாவின் சத்துருக்கள், அவருடைய ஆத்துமாவுக்கு படுகுழியை வெட்டுகிறார்கள். அவருக்கு விரோதமாக கொலைபாதக ஆலோசனை பண்ணுகிறார்கள். எரேமியாவை தந்திரமாகக் கொன்றுபோடவேண்டுமென்று சதிபண்ணுகிறார்கள். அவர்களிடத்தில் உண்மையில்லை. அவர்கள் கோழைத்தனமாய் யோசனைபண்ணுகிறார்கள்.

"உம்முடைய வேதத்துக்கு விரோதமாய் அகங்காரிகள் எனக்குக் குழிகளை வெட்டினார்கள்" (சங் 119:85). கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் பரிசுத்த ஆவியானவரின் பெலன் இருக்கும். அவர்களிடத்தில் உலகப்பிரகாரமான பலமோ, சரீர பலமோ இருக்காது. ஆகையினால் சத்துருக்கள் ஊழியக்காரர்களுக்கு விரோதமாக, எளிதாக தீங்குசெய்துவிடுகிறார்கள்.

தன்னுடைய சத்துருக்களை பழிவாங்கும் எண்ணம் எரேமியாவிடம் இல்லை. தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கும் எரேமியா நன்மை செய்கிறார். "நான் அவர்களுக்காக நன்மையை பேச உமக்கு முன்பாக நின்றதை நினைத்தருளும்" (எரே 18:20) என்று எரேமியா கர்த்தரிடத்தில் பணிவோடு சொல்லுகிறார். நம்மை சபிக்கிறவர்களையும் நாம் ஆசீர்வதிக்கவேண்டும். நமக்கு விரோதமாக தீங்கு செய்கிறவர்களுக்கும் நாம் நன்மை செய்யவேண்டும். எரேமியா கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியக்காரராயிருக்கிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், அவர்களை அழித்துப்போடுவதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். எரேமியா கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பை ஜனங்களிடத்தில் சொன்னாலும், கர்த்தர் அவர்களை அழித்துப்போடக்கூடாது என்று, எரேமியா அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசி ஜெபம்பண்ணுகிறார். கர்த்தருக்கும் யூதாவின் குடிகளுக்கும் நடுவே எரேமியா மத்தியஸ்தராயிருக்கிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தரையே மறந்துவிடுகிறார்கள். கர்த்தரை மறந்துவிடுகிறவர்கள் தங்களுக்கு நன்மை செய்கிற சிநேகிதரையும் மறந்துவிடுவார்கள். யூதாவின் மனுஷருக்கு எரேமியா அநேக நன்மைகளை செய்திருக்கிறார். ஆனால் அவர்களோ எரேமியா செய்த நன்மைகளையும் மறந்துவிடுகிறார்கள். எரேமியாவின் சிநேகத்தையும் மறந்துவிடுகிறார்கள். எரேமியாவை தங்கள் சத்துருவாகப் பாவித்து, அவருக்கு விரோதமாக கொலைபாதக யோசனைபண்ணுகிறார்கள். எரேமியா அவர்களுடைய துன்மார்க்கமான சிந்தனைகளை நினைத்து வேதனைப்படுகிறார்.

"அவர்கள் வியாதியாயிருந்தபோது இரட்டு என் உடுப்பாயிருந்தது; நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரப்படுத்தினேன்; என் ஜெபமும் என் மடியிலே திரும்பவந்தது" (சங் 35:13).

"நன்மைக்குப் பதிலாக எனக்குத் தீமைசெய்கிறார்கள், என் சிநேகத்துக்குப் பதிலாக என்னைப் பகைக்கிறார்கள்" (சங் 109:4).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யூதா ஜனத்தாருக்கு அநேக நன்மைகளை செய்தார். பிதாவின் சமுகத்தில் அவர்களுக்காக பரிந்து பேசினார். யூதர்களோ தங்கள் மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்தார்கள். அவருக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசினார்கள். இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் தம்முடைய திருஇரத்தத்தை, மீட்பின் கிரயமாக செலுத்திக்கொண்டிருக்கும்போதே, யூதர்கள் அவருக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைப் பேசினார்கள். இயேசுகிறிஸ்து அவர்கள் செய்த பாவங்களை மன்னிக்குமாறு பிதாவினிடத்தில் பரிந்துபேசிக் கொண்டிருக்கும்போதே, யூதர்கள் அவருக்கு விரோதமாக தீமையான வார்த்தைகளைப் பேசினார்கள்.

எரேமியாவுக்கு விரோதமாக அவருடைய சத்துருக்கள் சதிஆலோசனைபண்ணுகிறார்கள். அவர்கள் தனக்கு விரோதமாக சதிபண்ணினாலும், தன்னிடத்தில் அவர்களுக்கு விரோதமாக ஒரு குற்றமும் இல்லை என்று நினைத்து, எரேமியா தன் ஆத்துமாவில் ஆறுதலடைந்திருக்கிறார். அவர்கள் எரேமியாவுக்கு விரோதமாக கொலைபாதக யோசனை செய்யும்போது, எரேமியா கர்த்தருடைய சமுகத்தில் அவர்களுக்கு முன்பாக நன்மையைப் பேச நின்றுகொண்டிருக்கிறார். அவர்களோ மனுஷர் மத்தியிலே, எரேமியாவுக்கு விரோதமாக தீமையை பேசுகிறார்கள்.

பாவிகள் மற்ற பாவிகளோடு சேர்ந்து ஊழியக்காரருக்கு விரோதமாக தீமையான வார்த்தைகளைப் பேசினாலும், ஊழியக்காரர்கள் கர்த்தருடைய சமுகத்தில் வந்து நின்று, அவர்களுக்காக நன்மையான வார்த்தைகளையே பேசவேண்டும்.

எரேமியாவின் சத்துருக்கள், அவருடைய ஆத்துமாவுக்கு படுகுழியை வெட்டினாலும், எரேமியாவின் ஆத்துமா சமாதானமாயிருக்கிறது. கர்த்தருக்கு முன்பாக அது ஆறுதலடைந்திருக்கிறது. எரேமியாவின் ஆத்துமாவில் குழப்பமில்லை.

தனக்கு விரோதமாக தீங்கு செய்ய நினைக்கிற சத்துருக்கள்மீது தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு வரவேண்டும் என்று எரேமியா ஜெபம்பண்ணுகிறார். அவர்களை பழிவாங்கவேண்டும் என்னும் எண்ணம் எரேமியாவினிடத்தில் இல்லை. ஆனாலும் அவர்களுடைய துன்மார்க்கத்தினிமித்தமாய், கர்த்தர் தம்முடைய நீதியான தண்டனையை அவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று எரேமியா எதிர்பார்க்கிறார்.

"ஆகையால், அவர்களுடைய பிள்ளைகளைப் பஞ்சத்துக்கு ஒப்புக்கொடுத்து, அவர்களைப் பட்டயத்துக்கு இரையாக்கிவிடும்; அவர்கள் மனைவிகள் பிள்ளைகளற்றவர்களும் விதவைகளுமாகி, அவர்கள் புருஷர்கள் கொலை செய்யப்பட்டு, அவர்கள் வாலிபர்கள் யுத்தத்திலே பட்டயவெட்டால் மடியக்கடவர்கள். நீர் சடிதியில் அவர்கள்மேல் இராணுவத்தை வரப்பண்ணுகையால், கூக்குரல் அவர்கள் வீடுகளிலிருந்து கேட்கப்படக்கடவது; என்னைப் பிடிக்கப் படுகுழியை வெட்டி, என் கால்களுக்குக் கண்ணிகளை வைத்தார்களே" (எரே 18:21,22) என்று எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபிக்கிறார்.

சத்துருக்கள்மீது கர்த்தருடைய கோபம் வருவதுபோல, அவர்களுடைய குடும்பத்தின்மீதும் கர்த்தருடைய கோபம் வரவேண்டும் என்று எரேமியா ஜெபம்பண்ணுகிறார். அவர்களுடைய குடும்பத்திலுள்ளவர்கள் புசிப்பதற்கு ஆகாரம் கிடைக்காமல், பசியினாலும் பட்டினியினாலும் வேதனைப்படவேண்டும்.

தன்னுடைய சத்துருக்களை கர்த்தர் பஞ்சத்திற்கு ஒப்புக்கொடுத்தால் மாத்திரம் போதாது, அவர்களை பட்டயத்திற்கும் இரையாக்கிவிடவேண்டும் என்று எரேமியா ஜெபம்பண்ணுகிறார். தேசத்தின்மீது யுத்தம் வரவேண்டும் என்றும், எதிரி தேசத்தாரின் பட்டயம், தன்னுடைய சத்துருக்களின் குடும்பத்தாரையெல்லாம் கொன்றுபோடவேண்டும் என்றும் எரேமியா ஜெபிக்கிறார். தனக்கு விரோதமாக கொலைபாதக யோசனைபண்ணின சத்துருக்களும் செத்துப்போகவேண்டும், அவர்களுடைய குடும்பத்திலுள்ளவர்களும் செத்துப்போகவேண்டும் என்பதே எரேமியாவின் ஜெபம்.

யுத்தத்தின் பயங்கரங்களும், அதன் அழிவுகளும் தன்னுடைய சத்துருக்கள்மீது சடுதியில் வரவேண்டுமென்று எரேமியா ஜெபிக்கிறார். அவர்கள் எதிர்பாராத நேரத்தில் அவர்கள்மீது அழிவு வரவேண்டும். அவர்களுடைய பாவங்களுக்கு ஏற்ற தண்டனை, அவர்களுக்கு சீக்கிரத்தில் கொடுக்கப்படவேண்டும்.

கர்த்தர் தன்னுடைய சத்துருக்களின் பாவங்களை மன்னிக்கக்கூடாது என்றும், அவர்களுடைய பாவங்களுக்கு ஏற்ற தண்டனை அவர்களுக்கு நிச்சயம் கிடைக்கவேண்டும் என்றும் எரேமியா ஜெபம்பண்ணுகிறார். "அவர்களுடைய அக்கிரமத்தை உமது கண்ணுக்கு மறைவாக மூடாமலும், அவர்கள் பாவத்தை குலைக்காமலும் இருப்பீராக" (எரே 18:23) என்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார். பாவிகள் ஒருவரும் கர்த்தருடைய தண்டனைக்கு தப்பக்கூடாது என்பது எரேமியாவின் விருப்பம்.

கர்த்தருடைய கோபம் தன்னுடைய சத்துருக்களுக்கு விரோதமாக வரும்போது, அது அவர்களை அழித்துப்போடவேண்டும் என்று எரேமியா ஜெபம்பண்ணுகிறார். "அவர்கள் உமக்கு முன்பாக கவிழ்க்கப்படக்கடவர்கள்" (எரே 18:23) என்று எரேமியா சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய கோபத்தின் காலத்திலே, தனக்கு விரோதமாக கொலைபாதக யோசனைபண்ணின சத்துருக்களுக்கு இப்படியெல்லாம் செய்யவேண்டும் என்று எரேமியா ஜெபம்பண்ணுகிறார்.

எரேமியாவின் ஜெபவார்த்தைகளை நாமும் அப்படியே பின்பற்றவேண்டும் என்பதற்காக இந்த வசனப்பகுதி இங்கு எழுதப்படவில்லை. எரேமியா கர்த்தருடைய தீர்க்கதரிசி. அவர் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் இவ்வாறு ஜெபம்பண்ணுகிறார். தன்னைத் துன்பப்படுத்துகிறவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரப்போகிறது என்பதையும், அவர்கள் அழிந்துபோகப்போகிறார்கள் என்பதையும் எரேமியா தீர்க்கதரிசனமாகப் பார்த்து, இவ்வாறு ஜெபம்பண்ணுகிறார்.

நம்முடைய ஜெபம் எரேமியாவின் ஜெபம்போல இருக்கக்கூடாது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு ஜெபம்பண்ணக் கற்றுக்கொடுத்திருக்கிறார். நம்மை சபிக்கிறவர்களை நாம் ஆசீர்வதிக்கவேண்டும். நமக்கு விரோதமாகத் தீங்கு செய்கிறவர்களுக்கு நாம் நன்மை செய்யவேண்டும். இதுவே இயேசுகிறிஸ்துவின் உபதேசம். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் அவருடைய உபதேசத்திற்கு கீழ்ப்படிந்து ஊழியம் செய்யவேண்டும்.

19 அதிகாரம்

யூதாவின்மீதும் எருசலேமின்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரப்போகிறது. அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் அவர்களுக்கு அழிவை நியமித்திருக்கிறார். எரேமியா தீர்க்கதரிசி அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு முன்பாக சொல்லவேண்டும் (எரே 19:4,5).

யூதா தேசத்தார்மீது ஒரு குறிப்பிட்ட நியாயத்தீர்ப்பு வரப்போகிறது. அதை எரேமியா அவர்களுக்கு விரிவாக சொல்லவேண்டும் (எரே 19:6-9). எரேமியா தேவனுடைய நியாயத்தீர்ப்பை தோப்பேத் பள்ளத்தாக்கிலே சொல்லவேண்டும் (எரே 19:2,3). எரேமியா ஜனத்தின் மூப்பரிலும், ஆசாரியர்களின் மூப்பரிலும் சிலரை கூட்டிக்கொள்ளவேண்டும் (எரே 19:1).

எரேமியா கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை ஒரு அடையாளத்தின் மூலமாய் அவர்களுக்கு விளக்கவேண்டும். தன்னோடே கூட வந்த மனுஷர்களுக்கு முன்பாக தன் கையிலுள்ள கலசத்தை உடைத்துப்போடவேண்டும் (எரே 19:10-13). எரேமியா இந்தக் காரியத்தை செய்து முடித்த பின்பு, அவர் தோப்பேத்திலிருந்து வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்திலே நின்றுகொண்டு, ஜனங்களுக்கு கர்த்தருடைய செய்தியை சொல்லவேண்டும் (எரே 19:14,15).

சங்கார பள்ளத்தாக்கு
எரே 19:1-9

எரே 19:1. கர்த்தர் சொன்னது: நீ போய்க் குயவன் வேலையான ஒரு கலசத்தைக் கொண்டு, ஜனத்தின் மூப்பரிலும் ஆசாரியர்களின் மூப்பரிலும் சிலரைக் கூட்டிக்கொண்டு,

எரே 19:2. கிழக்கு வாசலுக்கு எதிரான இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கிலே புறப்பட்டுப்போய், நான் உன்னோடே சொல்லும் வார்த்தைகளை அங்கே பிரசித்தப்படுத்து.

எரே 19:3. நீ அவர்களை நோக்கி: யூதாவின் ராஜாக்களே, எருசலேமின் குடிகளே, கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளுங்கள்; இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: இதோ, நான் இந்த ஸ்தலத்தின்மேல் ஒரு பொல்லாப்பை வரப்பண்ணுவேன்; அதைக் கேட்கிற யாவருடைய காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும்.

எரே 19:4. அவர்கள் என்னை விட்டுவிட்டு, இந்த ஸ்தலத்தை அந்நிய ஸ்தலமாக்கி, தாங்களும், தங்கள் பிதாக்களும், யூதாவின் ராஜாக்களும், அறியாதிருந்த அந்நிய தேவர்களுக்கு அதிலே தூபங்காட்டி, இந்த ஸ்தலத்தைக் குற்றமில்லாதவர்களின் இரத்தத்தினாலே நிரப்பினபடியினாலும்,

எரே 19:5. தங்கள் பிள்ளைகளைப் பாகாலுக்குத் தகனபலிகளாகத் தகனிக்கும்படி பாகாலின் மேடைகளைக் கட்டினபடியினாலும் இப்படி வரப்பண்ணுவேன்; இவைகளை நான் கற்பித்ததுமில்லை, சொன்னதுமில்லை, இவைகள் என் இருதயத்தில் தோன்றினதுமில்லை.

எரே 19:6. ஆகையால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இந்த ஸ்தலம் தோப்பேத்தென்றும், இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கென்றும் இனிச் சொல்லப்படாமல், சங்கார பள்ளத்தாக்கென்று சொல்லப்படும்.

எரே 19:7. அப்பொழுது நான் யூதாவுக்கும் எருசலேமுக்கும் கொண்டிருந்த ஆலோசனையை இந்த ஸ்தலத்திலே வெறுமையாக்கி, அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாக அவர்களைப் பட்டயத்தினாலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையினாலும் விழப்பண்ணி, அவர்கள் பிரேதங்களை ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் இரையாகக்கொடுத்து,

எரே 19:8. இந்த நகரத்தைப் பாழாகவும், ஈசலிட்டு நிந்திக்கிற நிந்தையாகவும் வைப்பேன்; அதைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, அதின் எல்லா வாதைகளினிமித்தமும் ஈசலிடுவான்.

எரே 19:9. அவர்களுடைய சத்துருக்களும் அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களும், அவர்களை இறுகப்பிடிக்கப்போகிற முற்றிக்கையிலும் இடுக்கத்திலும், நான் அவர்களைத் தங்கள் குமாரரின் மாம்சத்தையும் தங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் தின்னப்பண்ணுவேன்; அவனவன் தனக்கு அடுத்தவனுடைய மாம்சத்தைத் தின்பான் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று நீ சொல்லி,

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியிடம் தம்முடைய செய்தியைச் சொல்லுகிறார். ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிற செய்தியே இங்கு மறுபடியுமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. எரேமியா தன்னோடு ஜனத்தின் மூப்பரிலும், ஆசாரியர்களின் மூப்பர்களிலும் சிலரைக் கூட்டிக்கொள்ளவேண்டும். இவர்கள் தேவாலயத்திற்கும், தேசத்திற்கும் பிரதான மானவர்கள். எரேமியா சொல்லப் போகிற செய்திக்கு இவர்கள் சாட்சிகளாயிருப்பார்கள்.

ஜனத்தின் மூப்பரும், ஆசாரியரும் எரேமியாவின்மீது பிரியமாயில்லை. அவருடைய ஊழியத்தைக் குறித்து அதிருப்தியோடிருக்கிறார்கள். எரேமியாவின்மீது கோபமாயிருக்கிறார்கள். ஆனாலும் எல்லோரும் எரேமியாவின்மீது கோபமாயில்லை. மூப்பர்களில் ஒரு சிலர், எரேமியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று அங்கீகரிக்கிறார்கள். அவர் சொல்லுகிற செய்திக்கு செவிகொடுக்கிறார்கள். எரேமியாவின் தரிசனங்கள் பரலோகத்திலிருந்து வந்திருக்கிறது என்று நம்புகிறார்கள்.

எரேமியா இன்னோமுடைய குமாரரின் பள்ளத்தாக்குக்குப் புறப்பட்டுப் போகவேண்டும். அங்கே கர்த்தர் அவருக்கு கொடுத்திருக்கிற வார்த்தைகளை, தன்னோடுகூட வந்திருக்கிறவர்களுக்கு சொல்லவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை ஒரு குறிப்பிட்ட இடத்தில் மாத்திரமே பிரசங்கம்பண்ண வேண்டும் என்னும் கட்டுப்பாடு எதுவுமில்லை. கர்த்தருடைய வார்த்தையை எல்லா இடங்களிலும் பிரசங்கம்பண்ணலாம்.

கர்த்தர் எரேமியாவுக்கு தம்முடைய செய்தியை கொடுத்திருக்கிறார். இந்தச் செய்தியை தேவாலயத்தின் வாசலிலும் பிரசங்கம்பண்ணலாம். தோப்பேத்தின் பள்ளத்தாக்கிலும் பிரசங்கம்பண்ணலாம். இயேசுகிறிஸ்து மலையிலும் பிரசங்கம் பண்ணினார். படவின்மீது அமர்ந்தும் பிரசங்கம்பண்ணினார்.

கர்த்தர் எரேமியாவுக்கு கொடுத்திருக்கிற செய்தியை, அவர் இன்னோமுடைய குமாரரின் பள்ளத்தாக்கிலே பிரசித்தப்படுத்தவேண்டும். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் இந்தப் பள்ளத்தாக்கில் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். இங்கே மோளேகுக்கு தங்கள் பிள்ளைகளை பலியாக செலுத்துகிறார்கள். யூதாவின் மனுஷர் இந்தப் பள்ளத்தாக்குக்கு வரும்போதே, அவர்களுடைய விக்கிரகாராதனையைப் பற்றிய சிந்தனைகள் அவர்களுக்குள் எழும்பும். கர்த்தருக்கு விரோதமாக அவர்கள் செய்த பாவங்கள் அவர்களுக்கு நினைவுபடுத்தப்படும்.

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் அழிவு நியமிக்கப் பட்டிருக்கிறது.அவர்களுடைய வேதனைகளும், துக்கங்களும், துன்பங்களும் மிகவும் அதிகமாயிருக்கும். அவர்கள் தங்களுக்கு வரப்போகும் வேதனைகளை உணரவேண்டும். இதற்காகவே கர்த்தர் எரேமியாவையும், ஜனத்தின் மூப்பரையும் தோப்பேத்துக்கு அனுப்புகிறார். இந்தப் பள்ளத்தாக்கு சங்கார பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படுகிறது. அந்த அளவுக்கு இது மிகவும் பயங்கரமானது. மரித்தவர்களை இங்கு அடக்கம்பண்ணுவது வழக்கம்.

எருசலேம் நகரம் மிகவும் அழகான நகரம். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எருசலேமின்மீது வரப்போகிறது. அப்போது நகரம் அழிந்துபோகும். அதன் அழகும், மேன்மையும் அதைவிட்டு கடந்துபோகும். அழகான எருசலேம் நகரம், இன்னோமுடைய குமாரரின் அசிங்கமான பள்ளத்தாக்கைப்போல இருக்கும். நகரம் பாழாய்ப்போய்விடும்.

கர்த்தர் எரேமியாவிடம், "நான் உன்னோடே சொல்லும் வார்த்தைகளை இன்னோம் குமாரருடைய பள்ளத்தாக்கிலே பிரசித்தப்படுத்து" (எரே 19:2) என்று சொல்லுகிறார். எரேமியா என்ன செய்தியை சொல்லவேண்டுமென்று கர்த்தர் இன்னும் அவருக்கு வெளிப்படுத்தவில்லை. பள்ளத்தாக்குக்குப் போகும்போதுதான் கர்த்தருடைய செய்தி எரேமியாவுக்கு கிடைக்கும். பொதுவாக கர்த்தர் தம்முடைய செய்தியை தம்முடைய வேளை வரும்போதுதான் வெளிப்படுத்துவார். அவர்கள் செய்தியை எப்போது சொல்லவேண்டுமோ, அப்போதுதான் கர்த்தர் அவர்களுக்கு செய்தியை கொடுப்பார்.

யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் சீக்கிரத்தில் அழிவு வரப்போகிறது என்னும் செய்தியை எரேமியா எல்லா ஜனங்களுக்கும் பொதுவாக சொல்லவேண்டும். "யூதாவின் ராஜாக்களே, எருசலேமின் குடிகளே, கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளுங்கள்" (எரே 19:3) என்று எரேமியா சொல்லவேண்டும். கர்த்தருடைய வார்த்தை மிகவும் பயங்கரமான வார்த்தையாயிருக்கிறது. ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவேண்டும்.

ஜனங்களை ஆளுகை செய்கிறவர்களும், ஆளுகை செய்யப்படுகிற ஜனங்களும் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கவேண்டும். யூதாவின் ராஜாக்களும், அவருடைய குடும்பத்தாரும், அவருடைய பிரபுக்களும் பிரதானிகளும் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவேண்டும். தாங்கள் ராஜாவாகயிருப்பதினால், யாருடைய வார்த்தையையும் கேட்கவேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் இருமாப்பாயிருக்கக்கூடாது.

கர்த்தர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். கர்த்தரே எல்லா ராஜாக்களுக்கும் மேலானவர். அவரே உன்னதமானவர். கர்த்தர் ஒரு வார்த்தையைச் சொல்லும்போது, பூமியின் ராஜாக்கள் அதை பயபக்தியோடும், பணிவோடும், முழுஇருதயத்தோடும் கேட்கவேண்டும்.

கர்த்தருடைய வார்த்தையை யூதாவின் ராஜாக்கள் மாத்திரம் கேட்டால் போதாது. எருசலேமின் குடிகளும் அவருடைய வார்த்தையைக் கேட்கவேண்டும். யூதா தேசத்தில் எல்லோருமே பாவம் செய்கிறார்கள். ராஜாக்களும் பாவம் செய்கிறார்கள். எருசலேமின் குடிகளும் பாவம் செய்கிறார்கள். தேசத்தின் அழிவுக்கு அவர்கள் எல்லோருமே காரணம். தேசம் அழிவுக்குத் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்றால், அவர்கள் எல்லோருமே மனந்திரும்பவேண்டும். இல்லையென்றால் மொத்ததேசமும் அழியும். ராஜாக்களும் அழிவார்கள். யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் ராஜாக்களோடு சேர்ந்து அழிவார்கள்.

ஏலியின் குடும்பத்தார் எல்லோரும் பாவம் செய்தார்கள். கர்த்தர் ஏலியின் குடும்பம் முழுவதையும் அழித்துப்போட்டார். "கர்த்தர் சாமுவேலை நோக்கி: இதோ, நான் இஸ்ரவேலில் ஒரு காரியத்தைச் செய்வேன்; அதைக் கேட்கிற ஒவ்வொருவனுடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும். நான் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாகச் சொன்ன யாவையும், அவன்மேல் அந்நாளிலே வரப்பண்ணுவேன்; அதைத் தொடங்கவும் அதை முடிக்கவும் போகிறேன்" (1சாமு 3:11,12).

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, கேட்கப்போகிற யாவருடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும் படியான பொல்லாப்பை நான் எருசலேமின்மேலும் யூதாவின்மேலும் வரப்பண்ணி, எருசலேமின்மேல் சமாரியாவின் மட்டநூலையும் ஆகாப் வீட்டின் தூக்குநூலையும் பிடிப்பேன்; ஒருவன் ஒரு தாலத்தைத் துடைத்துப் பின்பு அதைக் கவிழ்த்துவைக்கிறதுபோல எருசலேமைத் துடைத்துவிடுவேன்" (2இராஜா 21:12,13).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு விளக்கமாய்ச் சொல்லவேண்டும். அவர்கள் தேவனை விட்டுவிடுகிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தரே மெய்யான தேவன். ஆனால் அவர்களோ கர்த்தரை மறந்துவிடுகிறார்கள்.

"அவர்கள் என்னை விட்டுவிட்டு, இந்த ஸ்தலத்தை அந்நிய ஸ்தலமாக்கி, தாங்களும், தங்கள் பிதாக்களும், யூதாவின் ராஜாக்களும், அறியாதிருந்த அந்நிய தேவர்களுக்கு அதிலே தூபங்காட்டி, இந்த ஸ்தலத்தைக் குற்றமில்லாதவர்களின் இரத்தத்தினாலே நிரப்பினபடியினாலும், தங்கள் பிள்ளைகளைப் பாகாலுக்குத் தகனபலிகளாகத் தகனிக்கும்படி பாகாலின் மேடைகளைக் கட்டினபடியினாலும் இப்படி வரப்பண்ணுவேன்; இவைகளை நான் கற்பித்ததுமில்லை, சொன்னதுமில்லை, இவைகள் என் இருதயத்தில் தோன்றினதுமில்லை" (எரே 19:4,5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரையும், யூதாவம்சத்தாரையும் தம்முடைய ஜனமாகத் தெரிந்துகொண்டார். அவர்களுக்கு அநேக கிருபைகளையும், சிலாக்கியங்களையும் காண்பித்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய கிருபையை அசட்டைபண்ணிவிடுகிறார்கள். தங்களுடைய சிலாக்கியங்களை அவமாக்கிப்போடுகிறார்கள்.

எருசலேம் நகரத்திலே கர்த்தருடைய ஆலயம் இருப்பது அவர்களுடைய பாக்கியம். ஆனால் எருசலேமின் குடிகளோ, இந்த ஸ்தலத்தை அந்நிய ஸ்தலமாக்கிவிடுகிறார்கள். அதிலே அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். இந்த ஸ்தலத்தை குற்றமில்லாதவர்களின் இரத்தத்தினால் நிரப்புகிறார்கள்.

எருசலேமின் குடிகள் கர்த்தர்மீது மாத்திரமே பிரியமாயிருக்கவேண்டும். அவரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ஆனால் அவர்கள் கர்த்தரை ஆராதியாமல், அந்நிய தேவர்களை ஆராதிக்கிறார்கள். அந்நிய தெய்வங்களைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. அந்த தெய்வங்களின் பூர்வீகமும் தெரியாது. அவர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களுடைய பிதாக்களும், அவர்களுடைய ராஜாக்களும், இந்த அந்நிய தேவர்களை அறிந்திருக்கவில்லை.

தங்களுக்கு புதிது புதிதாய் தெய்வங்கள் வேண்டுமென்று விரும்பி, அந்நிய தெய்வங்களை தேடிப் போகிறார்கள். தங்களுடைய ஆராதனையில் மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். புதுமையையும் நூதனத்தையும் எதிர்பார்க்கிறார்கள். மற்ற தேசங்களிலிருப்பதுபோல, தங்கள் தேசத்திலும் விக்கிரகாராதனையும், மேடைகளும், தோப்புகளும் அதிகமாய் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.

கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவது அவர்களுடைய மனதிற்கு வருத்தமாயிருக்கிறது. கீழ்ப்படிவதை அடிமைத்தனம் என்று நினைக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், தங்கள் இஷ்டம்போல ஜீவிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டு, கர்த்தரைவிட்டே விலகிப்போய்விடுகிறார்கள்.

கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாதவர்கள், ஒரு கட்டுப்பாடுமில்லாமல் ஜீவிப்பார்கள். அவர்களுடைய மனச்சாட்சியும் மழுங்கிப்போயிருக்கும். கொலைசெய்வதற்கும் அவர்கள் பயப்படுவதில்லை. அவர்கள் பிறரை மறைந்திருந்து கொல்லாமல், வெளிப்படையாக, துணிகரமாக கொன்றுபோடுகிறார்கள். கர்த்தருடைய ஸ்தலத்தை குற்றமில்லாதவர்களின் இரத்தத்தினாலே நிரப்புகிறார்கள்.

விக்கிரகாராதனையும், கொலைபாதகமும் கர்த்தருக்கு விரோதமான பாவம். இந்தப் பாவங்கள் போதாதென்று, தங்களுடைய சொந்த பிள்ளைகளையே பாகாலுக்கு தகனபலிகளாக தகனித்துவிடுகிறார்கள். பாகாலுக்கு மேடைகளை கட்டி, அதன்மீது தங்கள் பிள்ளைகளை அக்கினியினால் சுட்டெரிக்கிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி யூதா மனுஷருடைய பாவங்களையும், எருசலேமின் குடிகளுடைய அக்கிரமங்களையும் அவர்களுக்கு சொல்லுகிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்கள்மீது வரப்போகும் தேவனுடைய நியாயத்தீர்ப்பையும் அவர்களுக்கு அறிவிக்கிறார். யூதாதேசமும், எருசலேம் நகரமும் தேவனுடைய கோபத்தினால் அழியப்போகிறது. யூதாவின் மனுஷருக்கு சீக்கிரத்தில் அழிவு வரப்போகிறது.

கர்த்தர் இன்னோமுடைய குமாரரின் பள்ளத்தாக்குக்கு புதிய பெயரைக் கொடுக்கப்போகிறார். "ஆகையால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இந்த ஸ்தலம் தோப்பேத்தென்றும், இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கென்றும் இனிச் சொல்லப்படாமல், சங்கார பள்ளத்தாக்கென்று சொல்லப்படும்" (எரே 19:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதா மனுஷரில் ஏராளமானோர் பட்டயத்தால் செத்துப்போவார்கள். சத்துருக்கள் யூதாவின் பட்டணங்களுக்கு விரோதமாக வரும்போது, யூதாவின் பட்டணங்களிலுள்ளவர்கள், சத்துருக்களுக்கு பயந்து ஓடுவார்கள் அப்போது, சத்துருக்கள் அவர்களை தங்கள் பட்டயத்தால் கொன்றுபோட்டிருக்கலாம்.

ஒருவேளை யூதாவின் மனுஷர், தங்கள் சுயபலத்தை நம்பி, சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களோடு யுத்தம்பண்ண முடியாமல் செத்துப் போயிருக்கலாம். சத்துருக்கள் யூதாவின் பட்டணங்களைப் பிடித்து, அதற்குள்ளே பிரவேசித்து, பட்டணங்களின் உள்ளேயிருக்கிற எல்லோரையும் தங்கள் பட்டயங்களால் கொன்றுபோடுகிறார்கள். யூதா மனுஷரிலும், எருசலேமின் குடிகளிலும் மரித்தோரின் எண்ணிக்கை ஏராளமாயிருக்கிறது.

கர்த்தர் யூதாவையும் எருசலேமையும் ஆசீர்வதிக்க வேண்டுமென்று விரும்பினார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, கர்த்தரைவிட்டே விலகிப்போய்விடுகிறார்கள். இதனால் கர்த்தர் எருசலேமை ஆசீர்வதிக்கவில்லை. தம்முடைய ஆலோசனையை இந்த ஸ்தலத்திலே வெறுமையாக்கிவிடுகிறார்.

கல்தேயர்கள் யூதாவின் பட்டணங்களுக்கு விரோதமாகவும், எருசலேமுக்கு விரோதமாகவும் வருகிறார்கள். கர்த்தரோ யூதாவின் மனுஷரை சத்துருக்களின் பட்டயங்களுக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார். கல்தேயர்கள் யூதா மனுஷருடைய பிராணனை வாங்கத் தேடுகிறார்கள். கர்த்தருடைய பாதுகாப்பு யூதா மனுஷருக்குக் கிடைக்கவில்லை. கல்தேயரோ யூதாவின் மனுஷரைப் பிடித்து, அவர்களை தங்கள் பட்டயத்தால் கொன்றுபோடுகிறார்கள்.

யூதா மனுஷருடைய பிரேதங்களும், எருசலேம் குடிகளுடைய பிரேதங்களும் தெருக்களில் விழுந்துகிடக்கிறது. கர்த்தர் அவர்களுடைய பிரேதங்களை ஆகாயத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாக கொடுக்கிறார் (எரே 19:7).

எருசலேம் குடிகளுடைய பாவங்களினிமித்தம், கர்த்தர் அவர்களுடைய நகரத்தை சபிக்கிறார். "இந்த நகரத்தைப் பாழாகவும், ஈசலிட்டு நிந்திக்கிற நிந்தையாகவும் வைப்பேன்; அதைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, அதின் எல்லா வாதைகளினிமித்தமும் ஈசலிடுவான்" (எரே 19:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சத்துருவின் பட்டயங்களுக்கு ஒரு சிலர் தப்பித்துக்கொள்கிறார்கள். தங்கள் ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள மறைவான இடங்களுக்கு ஓடி ஒளிந்துகொள்கிறார்கள். இவர்கள் சத்துருவின் பட்டயங்களுக்கு தப்பித்தாலும், இவர்களால் தேசத்தில் உண்டாயிருக்கிற பஞ்சத்திற்கு தப்பிக்க முடியவில்லை. யூதாவின் பட்டணங்களில் புசிப்பதற்கு போஜனமில்லை. சத்துருக்கள் தேசத்திலுள்ள எல்லா தானியங்களையும் கொள்ளையிட்டு, தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். யூதாவின் பட்டணங்களும், எருசலேம் நகரமும் தானியமும் போஜனமும் இல்லாமல் வெறுமையாயிருக்கிறது. தேசத்தில் மிகப்பெரிய பஞ்சம் உண்டாயிருக்கிறது.

புசிப்பதற்கு போஜனமில்லை. அவர்களால் பட்டினியாக இருக்கவும் முடியவில்லை. பசியின் கொடுமையினால் அவர்கள் தங்கள் குமாரரின் மாம்சத்தையும், தங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் தின்கிறார்கள். தங்கள் பிள்ளைகளை தின்றுமுடித்த பின்பு அவனவன் தனக்கு அடுத்தவனுடைய மாம்சத்தைத் தின்கிறான். கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு யூதா தேசத்தின்மீது மிகவும் பயங்கரமாய் வந்திருக்கிறது. தேசம் அழிந்துபோகிறது.

"அவர்களுடைய சத்துருக்களும் அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களும், அவர்களை இறுகப்பிடிக்கப்போகிற முற்றிக்கையிலும் இடுக்கத்திலும், நான் அவர்களைத் தங்கள் குமாரரின் மாம்சத்தையும் தங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் தின்னப்பண்ணுவேன்; அவனவன் தனக்கு அடுத்தவனுடைய மாம்சத்தைத் தின்பான் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 19:9).

எருசலேம் நகரத்தார் எல்லோரும் அழிந்துபோகிறார்கள். அதன் பின்பு நகரமும் அழிந்துபோகிறது. "இந்த நகரத்தை பாழாக்கவும், ஈசலிட்டு நிந்திக்கிற நிந்தையாகவும் வைப்பேன்" (எரே 19:8) என்று கர்த்தர் தம்முடைய கோபத்தினால் சொல்லுகிறார். எருசலேம் நகரம் பரிசுத்த நகரமாயிருந்தது. இதன் பரிசுத்தமே முழுதேசத்திற்கும் சந்தோஷத்தைக் கொடுத்தது. எருசலேம் நகரத்தில் பாவம் பிரவேசித்தபோது, முழுதேசத்திற்கும் துக்கமுண்டாயிற்று.

எரேமியா தீர்க்கதரிசி எருசலேமின்மீது வரப்போகிற கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை யூதாவின் மனுஷருக்கு சொல்லுகிறார். இந்த அழிவுக்கு தப்பிக்க யூதாவின் மனுஷர் தங்கள் சுயபலத்தினால் முயற்சி பண்ணலாம். அவர்கள் தங்கள் சுயபராக்கிரமத்தையும் நம்பலாம். ஒருவேளை அவர்கள் அந்நிய தேசத்து உதவியை நாடலாம். ஆனாலும் அவர்களுடைய முயற்சிகள் எதுவும் அவர்களை அழிவிலிருந்து காப்பாற்றாது.

அழிவு கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் வந்திருக்கிறது. தங்கள் பாவங்களுக்கு அவர்கள் மனந்திரும்பினால் மாத்திரமே, அவர்களால் தேவனுடைய கோபத்திற்கு தப்பிக்க முடியும். இல்லையென்றால் அவர்கள் தேவனுக்கு விரோதமாகவும், அவருடைய சித்தத்திற்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணுகிறவர்களாகவே இருப்பார்கள்.

கர்த்தர் யூதாவின் ஆலோசனையையும், எருசலேமின் ஆலோசனையையும் வெறுமையாக்கிப்போடுவார். அவர்களுடைய எண்ணங்கள் ஒன்றும் சித்திக்காது. அவர்களால் தேவனுடைய நீதிக்கு தப்பித்து ஓடவும் முடியாது. கர்த்தருடைய இரக்கத்திற்கு ஓடிவருகிறவர்களால் மாத்திரமே, தேவனுடைய கோபத்திற்கு விலகி ஓடமுடியும். இல்லையென்றால் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு நிச்சயமாய் வரும்.

கலசத்தை உடைத்துப்போடு எரே 19:10-13

எரே 19:10. உன்னோடே கூடவந்த மனுஷருடைய கண்களுக்கு முன்பாக அந்தக் கலசத்தை உடைத்துப்போட்டு,

எரே 19:11. அவர்களை நோக்கி: திரும்பச் செப்பனிடப்படக்கூடாத குயவனுடைய மண்பாண்டத்தை உடைத்துப்போட்டவண்ணமாக நான் இந்த ஜனத்தையும் இந்த நகரத்தையும் உடைத்துப்போடுவேன்; புதைக்கிறதற்கு இடமில்லாததினால் தோப்பேத்திலே சவங்களைப் புதைப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 19:12. இவ்விதமாக நான் இந்த ஸ்தலத்துக்கும் இதின் குடிகளுக்கும் செய்து, இந்த நகரத்தைத் தோப்பேத்துக்குச் சரியாக்குவேன்.

எரே 19:13. எந்த வீடுகளின்மேல் வானத்தின் சகல சேனைக்கும் தூபங்காட்டி, அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்த்தார்களோ, அந்த வீடுகளாகிய எருசலேமின் வீடுகளும் யூதாவுடைய ராஜாவின் வீடுகளும் தோப்பேத் என்கிற ஸ்தலத்தைப்போல் தீட்டுப்பட்டவைகளாய் இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

கர்த்தர் எரேமியாவின் மூலமாய் ஏற்கெனவே சொன்ன வார்த்தைகளை, இங்கு மறுபடியுமாய் உறுதிபண்ணுகிறார். எரேமியா தன்னோடுகூட, இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்குக்கு குயவன் வேலையான ஒரு கலசத்தை கொண்டுபோகிறார். யூதா ஜனத்தின் மூப்பரையும், ஆசாரியரின் மூப்பரையும் தன்னோடுகூட அங்கே அழைத்துக்கொண்டு போகிறார். அவர்கள் மத்தியிலே எரேமியா கர்த்தர் தனக்கு சொன்ன செய்தியை சொல்லுகிறார். அதன் பின்பு அவர், தன்னோடு கூடவந்த மனுஷருடைய கண்களுக்கு முன்பாக அந்தக் கலசத்தை உடைத்துப்போடவேண்டும்.

யூதாவின் மனுஷர் குயவன் கையிலுள்ள களிமண்ணைப்போல இருக்கிறார்கள் என்று இதற்கு முந்திய அதிகாரத்தில் ஒப்புமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் திரிகையில் வனையப்படும்போது கெட்டுப்போகிற மண்பாண்டம் போல இருக்கிறார்கள். யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயமும் கெட்டுப்போயிருக்கிறது. அவர்கள் கர்த்தரைவிட்டு தூரமாகவும், அதிககாலமாகவும் விலகிப்போயிருக்கிறார். அதினால், அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் அவர்கள் குயவன் கையிலிருந்த ஈரப்பதமான மண்ணைப்போல இருந்தார்கள். இப்போதோ காய்ந்துபோன கலசத்தைப்போல இருக்கிறார்கள். கலசத்தின் ஓடு உலர்ந்துபோய் கடினமாயிருக்கிறது. அவர்களால் விக்கிரகாராதனையிலிருந்து விடுதலை பெற்று வரமுடியவில்லை.

யூதா மனுஷருடைய நிலமை எரேமியாவுக்கும் புரிகிறது. அவர்கள் எப்படியிருந்தாலும், மண்பாண்டம் உடைக்கப்பட்டதுபோல அவர்களும் உடைக்கப்படுவார்கள். "திரும்பச் செப்பனிடப்படக்கூடாத குயவனுடைய மண்பாண்டத்தை உடைத்துப்போட்ட வண்ணமாக நான் இந்த ஜனத்தையும் இந்த நகரத்தையும் உடைத்துப்போடுவேன்" (எரே 19:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

உலர்ந்த பாத்திரத்தை யார் வேண்டுமானாலும் உடைத்துப்போடலாம். ஈரப்பதமான களிமண்ணை குயவனால் மாத்திரமே பாத்திரமாக வனையமுடியும். களிமண் ஈரமாயிருக்கும்போது, அது கெட்டுப்போனாலும், அதை மறுபடியும் திரிகையின்மேல் பாத்திரமாக வனைவதற்கு வாய்ப்புள்ளது. கலசம் உடைந்துபோனாலோ, அதன் ஓடுகள் உடைந்து சிதறிப்போகும். அதை மறுபடியும் ஒரு பாத்திரமாகவோ அல்லது ஒரு கலசமாகவோ வனையமுடியாது. உடைந்து போன கலசத்தை மறுபடியும் ஒட்டவைப்பது இயலாத காரியம்.

யூதாவின் மனுஷர் திரும்ப செப்பனிடப்படக்கூடாத, உடைந்துபோன கலசம்போல இருக்கிறார்கள். பூர்வகாலத்தில் ஆவிக்குரிய சத்தியங்களை இதுபோன்ற எடுத்துக்காட்டுக்களால் விவரிப்பது வழக்கம். அந்த வழக்கத்தின் பிரகாரம், யூதாவின் மனுஷர் உடைந்துபோன கலசத்தோடு ஒப்புமையாய்ச் சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

மண்பாண்டம் எளிதில் உடைந்துபோகும். உடைந்துபோன பாண்டத்தை மறுபடியும் ஒட்டவைக்க முடியாது. அதுபோலவே, கல்தேயரின் சேனை யூதாவையும் எருசலேமையும் உடைத்துப்போடுவார்கள். தேசத்தைப் பாழாக்கிப்போடுவார்கள். யூதாதேசத்தை மறுபடியும் செப்பனிடுவது என்பதும், உருவாக்குவது என்பதும் இயலாத காரியம்.

யூதாவின் மனுஷர் தங்களுடைய சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும் நம்புகிறார்கள். தங்களுடைய முன்னோர்களின் பாரம்பரிய பழக்க வழங்களையும், பூர்வகாலத்து வழிபாட்டு முறைமைகளையும் நம்புகிறார்கள். தங்களுடைய சொந்த பிரமாணங்களில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து, யூதர்களுடைய இருதயத்தைக் கடினப்படுத்திவிட்டது. அவர்களுடைய இருதயம் உலர்ந்துபோன கலசம் போல இருக்கிறது.

தாங்கள் வெண்கல கலசம்போல இருப்பதாக யூதாவின் மனுஷர் நினைக்கிறார்கள். அவர்கள் வெண்கல கலசம் போல இல்லையென்றும், குயவனுடைய மண்கலசம் போல இருக்கிறார்கள் என்றும் எரேமியா சொல்லுகிறார். மண்கலசம் எவ்வளவுதான் கடினமானதாகயிருந்தாலும், வலுவானதாகயிருந்தாலும் அது கீழே விழுந்தால் உடைந்துபோகும். மண்பாண்டத்தை உடைப்பது கடினமான வேலையல்ல. வெண்கல கலசத்தை உடைப்பதுபோல, மண்கலசத்தை கஷ்டப்பட்டு உடைக்கவேண்டிய அவசியம் இருக்காது. மண்கலசம் கீழே விழுந்தாலே உடைந்துவிடும்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய கையிலுள்ள மண்ணைப்போல இருந்தார்கள். கர்த்தரே அவர்களை தமக்குப் பிரியமான பாத்திரமாக உருவாக்கினார். இப்போதோ அவர்களை, திரும்ப செப்பனிடப்படக்கூடாதபடிக்கு, மண்பாண்டத்தை உடைத்துப்போடும் வண்ணமாக, உடைத்துப்போட சுத்தமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் யூதாவின் ஜனத்தையும், எருசலேமின் குடிகளையும், எருசலேம் நகரத்தையும் உடைத்துப்போடுவதாகச் சொல்லுகிறார்.

"இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர் என்று சொன்னார்" (சங் 2:9).

"அவன் இருப்புக்கோலால் அவர்களை ஆளுவான்;அவர்கள் மண்பாண்டங்களைப் போல நொறுக்கப்படுவார்கள்" (வெளி 2:27).

கர்த்தர் புறஜாதியாரை உடைத்துப்போடுவதுபோல, இப்போது எருசலேம் நகரத்தையும் உடைத்துப் போடுகிறார்.

"அவர்களை அவர் தப்பவிடாமல் உடையும்படி குயக்கலத்தை நொறுக்குவது போல அவர்களை நொறுக்குவார்; அடுப்பிலே நெருப்பு எடுக்கிறதற்கும், குளத்திலே தண்ணீர் மொள்ளுகிறதற்கும் நொறுங்கின துண்டுகளில், ஒரு ஓடாகிலும் அகப்படாதேபோம்" (ஏசா 30:14).

குயவனுடைய மண்பாண்டத்தை உடைத்துப்போட்டால், அதை மறுபடியும் ஒட்டவைத்து புதிய மண்பாண்டமாக மாற்ற முடியாது. அதுபோலவே எருசலேம் உடைந்துபோகும்போது, அதை மறுபடியுமாய் செப்பனிடமுடியாது. எருசலேமுக்கு பூரண அழிவு உண்டாகும். அது நித்திய அழிவாயிருக்கும்.

யாருடைய கரத்தாலும் எருசலேமை செப்பனிட முடியாது. கர்த்தருடைய கரத்தால் மாத்திரமே எருசலேமை மறுபடியும் செப்பனிட முடியும். கர்த்தரே உடைக்கிறவர். அவரே ஒன்றுசேர்க்கிறவர். எருசலேம் மறுபடியும் எடுத்து கட்டப்பட வேண்டுமென்றால், எருசலேமின் குடிகள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி கர்த்தருடைய சமுகத்தில் திரும்பி வரவேண்டும். கர்த்தரே காயப்படுத்துகிறவர். அவரே காயங்கட்டி குணப்படுத்துகிறவர். அவரே பரமவைத்தியர். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

எரேமியா தன் கையிலுள்ள கலசத்தை தோப்பேத்திலே உடைத்துப்போடுகிறார். அவரோடு கூட வந்த மனுஷர்கள் இந்த சம்பவத்தை தங்கள் கண்களால் பார்க்கிறார்கள். "புதைக்கிறதற்கு இடம் இல்லாததினால், தோப்பேத்திலே சவங்களை புதைப்பார்கள்" (எரே 19:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா தன் கையிலுள்ள கலசத்தை தோப்பேத்திலே உடைத்துப்போடுகிறார். கர்த்தர் "இவ்விதமாக நான் இந்த ஸ்தலத்துக்கும் இதின் குடிகளுக்கும் செய்து, இந்த நகரத்தைத் தோப்பேத்துக்குச் சரியாக்குவேன்" (எரே 19:12) என்று சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தோப்பேத்திலுள்ள மோளேகுக்கு தங்களுடைய பிள்ளைகளை பலிசெலுத்துகிறார்கள். அவர்களுடைய பிரேதங்கள் தோப்பேத்தின் பள்ளத்தாக்கில் நிரம்பியிருக்கிறது. கர்த்தர் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை யூதாவின் மனுஷருக்கு கொடுக்கிறார். தங்களுடைய பிள்ளைகளை மோளேகுக்கு பலி செலுத்தியவர்கள், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் செத்துப்போகிறார்கள். அவர்களுடைய சவங்கள் தோப்பேத்தின் பள்ளத்தாக்கில் நிரம்பியிருக்கிறது.

தோப்பேத்திலே செத்துப் போனவர்களின் சவங்களோடு, நகரத்தின் மற்ற அசுத்தங்களும் குவிந்திருக்கும். அவையெல்லாவற்றையும் சுட்டெரிப்பதற்கு, தோப்பேத்தில் எப்போதும் அக்கினி எரிந்துகொண்டிருக்கும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நரகத்தைப்பற்றிச் சொல்லும்போது, அங்கு அக்கினி எப்போதும் எரிந்துகொண்டிருக்கும் என்று சொல்லுகிறார். தோப்பேத்திலே எப்போதும் அக்கினி எரிந்துகொண்டிருக்கும்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், யூதாவுடைய ராஜாக்களும் தங்கள் வீடுகளின்மேல் வானத்தின் சகல சேனைகளுக்கும் தூபங்காட்டினார்கள். அந்நிய தேவர்களுக்கு பானபலிகளை வார்த்தார்கள். "அந்த வீடுகளாகிய எருசேலமின் வீடுகளும் யூதாவுடைய ராஜாவின் வீடுகளும் தோப்பேத் என்கிற ஸ்தலத்தைப்போல் தீட்டுப்பட்டவைகளாய் இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 19:13).

யூதாவின் மனுஷர் சகல மேடுகளிலும், பச்சையான மரங்களின் கீழும், தோப்புகளிலும் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். அவர்களுடைய வீட்டின் மேல்மாடி சமதளமாகயிருப்பதினால், தங்கள் வீடுகளின்மேல் அந்நிய தெய்வங்களுக்கு தூபங்காட்டி பானபலிகளை வார்க்கிறார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்தில், வீட்டின் மேலறையில் ஜெபம்பண்ணுவது வழக்கம் (அப் 10:9). விக்கிரகாராதனைக்காரரோ, தங்கள் வீட்டின் மேலறைகளில் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். அவற்றிற்கு பானபலிகளை வார்த்து விக்கிராராதனை செய்கிறார்கள்.

வானத்தின் சகல சேனைகளாகிய சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் ஆகியவற்றை வீட்டின் மேல்மாடியிலிருந்து பார்க்கும்போது, அவை பிரத்தியட்சமாய்த் தெரியும். யூதாவின் மனுஷர் வானத்தின் சேனைகளைத் தங்கள் கண்களால் பார்த்து, அவற்றிற்கு தூபங்காட்டுகிறார்கள். சந்திரனுக்கும், சூரியனுக்கும், நட்சத்திரங்களுக்கும் பானபலிகளை வார்க்கிறார்கள்.

"வீடுகளின்மேல் வானசேனையைப் பணிகிறவர்களையும், கர்த்தர்பேரில் ஆணையிட்டு, மல்காமின் பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்களையும், கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களையும், கர்த்தரைத் தேடாமலும், அவரைக் குறித்து விசாரியாமலுமிருக்கிறவர்களையும், இவ்விடத்தில் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவேன்" (செப் 1:5,6).

யூதாவின் மனுஷர் தங்கள் வீடுகளின்மேல் விக்கிரகங்களை ஆராதித்தார்கள். கர்த்தருடைய சாபம் அவர்களுடைய வீடுகளுக்குள் வருகிறது. கூரையின்மேல் பாவமும், கூரையின்கீழ் சாபமும் தங்கியிருக்கிறது.

கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரம்
எரே 19:14,15

எரே 19:14. பின்பு எரேமியா, கர்த்தர் தன்னைத் தீர்க்கதரிசனஞ்சொல்ல அனுப்பின தோப்பேத்திலிருந்து வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்திலே நின்றுகொண்டு, எல்லா ஜனங்களையும் பார்த்து:

எரே 19:15. இதோ, நீங்கள் என் வார்த்தைகளைக் கேளாதபடிக்கு உங்கள் கழுத்தைக் கடினப்படுத்தினபடியினால் நான் இந்த நகரத்துக்கு விரோதமாய்ச் சொன்ன எல்லாத் தீங்கையும் இதின் மேலும் இதற்கடுத்த பட்டணங்களின் மேலும் வரப்பண்ணுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை, தோப்பேத்திலே, யூதாவின் மனுஷருக்கு முன்பாக சொல்லிவிட்டு, இப்போது கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்திற்கு வருகிறார். "பின்பு எரேமியா, கர்த்தர் தன்னைத் தீர்க்கதரிசனஞ்சொல்ல அனுப்பின தோப்பேத்திலிருந்து வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்திலே நின்றுகொண்டு, எல்லா ஜனங்களையும் பார்த்து" (எரே 19:14) பேசுகிறார். எரேமியா தோப்பேத் பள்ளத்தாக்கில் சொன்னதை, கர்த்தருடைய ஆலயத்தில் வந்து மறுபடியும் உறுதிபண்ணுகிறார்.

எரேமியாவின் தீர்க்கதரிசனம், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பாக யூதாவின் மனுஷர்மீது வரப்போகிறது. எரேமியாவின் வார்த்தையில் உண்மையில்லை என்றும், தங்களை பயமுறுத்துவதற்காகவே எரேமியா இதுபோன்ற கடினமான வார்த்தைகளைப் பேசுவதாகவும் யூதாவின் மனுஷர் சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷர், இதுபோன்ற தீமையான நினைவுகளினால், தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள் என்று எரேமியா சொல்லுகிறார். இந்த வார்த்தை மெய்யாகவே இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிற வார்த்தை. எரேமியா தேவனுடைய ஆலயத்தின் பிரகாரத்தில் நின்றுகொண்டு, எல்லா ஜனங்களையும் பார்த்து உறுதியாய்ப் பேசுகிறார்.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றுவார். அவர் சர்வவல்லமையுள்ளவர். தம்முடைய வார்த்தைகளில் உண்மையுள்ளவர். யூதாவின் மனுஷரோ எரேமியாவின் வார்த்தைகளை கேளாதபடிக்கு, தங்கள் கழுத்தை கடினப்படுத்தினார்கள்.

கர்த்தர் அவர்களுடைய பாவங்களுக்கு விரோதமாகவும், அவர்களுக்கு விரோதமாகவும் எழும்புவார். எரேமியா எருசலேம் நகரத்திற்கு விரோதமாய் சொன்ன எல்லா தீங்கையும், சேனைகளின் கர்த்தர், எருசலேம் நகரத்தின்மேலும், இதற்கடுத்த பட்டணங்களின்மேலும் வரப்பண்ணுவார். யூதாவின் மனுஷர் தங்களுடைய கழுத்தை கடினப்படுத்தின படியினாலும், கர்த்தருடைய வார்த்தைகளை கேளாதபடியினாலும் அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது.

20 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் அறிவிக்கிறார். அவர்கள் தங்களை தாழ்த்தி, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். ஆனால் யூதாவின் மனுஷரிடத்தில் தாழ்மையில்லை. அவர்களுடைய இருதயம் திருக்குள்ளதும், கேடுள்ளதுமாயிருக்கிறது. தங்களுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொன்ன எரேமியாவின்மீது அவர்கள் கோபப்படுகிறார்கள். எரேமியாவைத் துன்பப்படுத்துகிறார்கள்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தைகளை பிரசங்கம் பண்ணியதினிமித்தம், பஸ்கூர் என்பவன் எரேமியாவை காவலறையில் போடுகிறான் (எரே 20:1,2). எரேமியா பஸ்கூரை கர்த்தருடைய நாமத்தினால் கடிந்துகொள்கிறார். எரேமியாவின் பிரசங்க வார்த்தைகள் உறுதிபண்ணப்படுகிறது (எரே 20:3-6).

தனக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சனைகளை எரேமியா கர்த்தரிடத்தில் முறையிடுகிறார் (எரே 20:7-10). எரேமியா கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்தி, உற்சாகப்படுத்திக் கொள்கிறார். தன்னுடைய மனதின் பாரங்களையெல்லாம் எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். தனக்கு துன்பங்களும் வேதனைகளும் வந்தாலும் எரேமியா கர்த்தரை தொடர்ந்து கனம்பண்ணுகிறார். கர்த்தரைத் துதிக்கிறார் (எரே 20:11-13).

எரேமியா கர்த்தரைத் துதித்தாலும், தன்னுடைய பிறந்த நாளை சபிக்கிறார் (எரே 20:14-18). எரேமியா கர்த்தருடைய தீர்க்கதரிசியாயிருந்தாலும், அவரும் நம்மைப்போல சாதாரண பாடுள்ள மனுஷராகவே இருக்கிறார்.

பஸ்கூர்
எரே 20:1-6

எரே 20:1. எரேமியா இந்த வார்த்தைகளைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறதை ஆசாரியனான இம்மேருடைய குமாரனும், கர்த்தருடைய ஆலயத்துப் பிரதான விசாரணைக் கர்த்தனுமாகிய பஸ்கூர் கேட்டபோது,

எரே 20:2. எரேமியா தீர்க்கதரிசியைப் பஸ்கூர் அடித்து, அவனைக் கர்த்தருடைய ஆலயத்திலே பென்யமீன் கோத்திரத்தாரைச்சேர்ந்த மேல்வாசலில் இருக்கும் காவலறையிலே போட்டான்.

எரே 20:3. மறுநாளிலே பஸ்கூர் எரேமியாவைக் காவலறையிலிருந்து வெளியே போகவிட்டான்; அப்பொழுது எரேமியா அவனை நோக்கி: கர்த்தர் உன்னைப் பஸ்கூர் என்று அழைக்காமல், மாகோர் மீசாபீப் என்று அழைக்கிறார்.

எரே 20:4. மேலும் கர்த்தர்: இதோ, நான் உன்னையும், உன் எல்லாச் சிநேகிதரையும் பயத்துக்கு ஒப்புக்கொடுக்கிறேன்; உன் கண்கள் காண இவர்கள் சத்துருக்களின் பட்டயத்தால் விழுவார்கள்; யூதா அனைத்தையும் நான் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பேன்; அவன் அவர்களைச் சிறைபிடித்து, சிலரைப் பாபிலோனுக்குக் கொண்டுபோய், சிலரைப் பட்டயத்தால் வெட்டிப்போடுவான்.

எரே 20:5. இந்த நகரத்தின் எல்லாப் பலத்தையும், அதின் எல்லாச் சம்பத்தையும், அதின் அருமையான எல்லாப் பொருள்களையும், யூதா ராஜாக்களின் எல்லாப் பொக்கிஷங்களையும், நான் அவர்கள் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன்; அவர்கள் அவைகளைக் கொள்ளையிட்டு, பாபிலோனுக்குக் கொண்டுபோவார்கள்.

எரே 20:6. பஸ்கூரே, நீயும் உன் வீட்டில் வாசமாயிருக்கிற யாவரும் சிறைப்பட்டுப்போவீர்கள்; நீயும் உன் கள்ளத்தீர்க்கதரிசனத்துக்குச் செவிகொடுத்த உன் சிநேகிதர் யாவரும் பாபிலோனுக்குப் போய், அங்கே மரித்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவீர்களென்று சொல்லுகிறார் என்றான்.

எரேமியா யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும், கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார். யூதாவின் மனுஷரில் அநேகர் எரேமியாவின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல், அவர்மீது கோபப்படுகிறார்கள். பஸ்கூர் ஒரு ஆசாரியன். அவன் ஆசாரியனாகிய இம்மேருடைய குமாரன். அவன் கர்த்தருடைய ஆலயத்து பிரதான விசாரணை கர்த்தன். எரேமியாவின் பிரசங்கச் செய்தியை பஸ்கூரும் கேட்கிறான். அவனுக்கு எரேமியாவின்மீது கோபமுண்டாயிற்று.

பஸ்கூரைப்போலவே எரேமியாவும் ஒரு ஆசாரியன். ஒரு ஆசாரியன் மற்றொரு ஆசாரியனுக்கு உதவி செய்யவேண்டும். பஸ்கூர் எரேமியாவைப் பாதுகாக்கவேண்டும். எரேமியா ஆசாரியனாகவும் இருக்கிறார், கர்த்தருடைய தீர்க்கதரிசியாகவும் இருக்கிறார். ஆசாரியர்கள் தீர்க்கதரிசிகளிடத்தில் போய் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு விசாரிக்கவேண்டும். ஆனால் பஸ்கூரோ கர்த்தருக்கு விரோதமாக கிரியை செய்கிறான். எரேமியாவுக்கு நன்மை செய்வதற்கு பதிலாக, அவருக்கு தீங்கு செய்கிறான்.

பஸ்கூர் ஆசாரிய வகுப்பில் பதினாறாவது வகுப்பைச் சேர்ந்தவன். இவன் இம்மேருடைய குமாரன். தாவீது ராஜா ஆசாரியர்களை வகுப்பு வாரியாக பிரித்தபோது, இம்மேருக்கு பதினாறாவது வகுப்பில் சீட்டு விழுந்தது.

"பதினைந்தாவது பில்காவின் பேர்வழிக்கும், பதினாறாவது இம்மேரின் பேர் வழிக்கும்" (1நாளா 24:14) சீட்டு விழுந்தது. எரேமியா 21:1-ஆவது வசனத்தில் மேலும் ஒரு பஸ்கூரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. "சிதேக்கியா ராஜா மல்கியாவின் குமாரனாகிய பஸ்கூரையும் ஆசாரியனான மாசெயாவின் குமாரனாகிய செப்பனியாவையும் எரேமியாவினிடத்தில் அனுப்பி" (எரே 21:1). இந்த பஸ்கூர் ஐந்தாம் வகுப்பைச் சேர்ந்தவன். இவர்கள் இருவருக்கும் பஸ்கூர் என்னும் ஒரே பெயர் இருந்தாலும், இவர்கள் இருவரும் வெவ்வேறு நபர்கள்.

பஸ்கூர் கர்த்தருடைய ஆலயத்து பிரதான விசாரணை கர்த்தன். ஒரு குறுகிய காலத்திற்கு மாத்திரம் இவனுக்கு இந்த உயர்ந்த பதவி கொடுக்கப்பட்டிருக்கிறது. பஸ்கூர் பதினாறாம் ஆசாரிய வகுப்பை சேர்ந்தவனாகயிருந்தாலும், அதன் தலைமைப்பொறுப்பு அவனுக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை. தன்னுடைய பதவிக்காலத்திற்காக பஸ்கூர் காத்திருக்கிறான். அதுவரையிலும் கர்த்தருடைய ஆலயத்திற்கு பிரதான விசாரணை கர்த்தனாக பணிபுரிகிறான். இவன் எரேமியாவுக்கு பெரிய சத்துருவாயிருக்கிறான்.

எரேமியா தோப்பேத் பள்ளத்தாக்குக்கு போனபோது, தன்னோடு ஆசாரியரில் மூப்பர்களை அழைத்துக்கொண்டு போனார். அவர்கள் எல்லோரும் எரேமியா சொன்ன தீர்க்கதரிசனத்தை அங்கே கேட்டார்கள். பஸ்கூர் அவர்களோடு கூட தோப்பேத் பள்ளத்தாக்குக்கு போகவில்லை. அவருக்கு எரேமியாவைப் பிடிக்காது.

எரேமியா தோப்பேத் பள்ளத்தாக்கில் கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன பின்பு, தோப்பேத்திலிருந்து வந்து, கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்தில் நின்றுகொண்டு, எல்லா ஜனங்களையும் பார்த்து, கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார் (எரே 19:14,15). அங்கே பஸ்கூரும் இருந்திருக்கவேண்டும். எரேமியா இந்த வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன போது, பஸ்கூரும் அதைக் கேட்டிருக்கவேண்டும்.

கர்த்தருடைய ஆலயத்தில் எரேமியா பிரசங்கம்பண்ணுவதை பஸ்கூரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பஸ்கூர் கர்த்தருடைய ஆலயத்து பிரதான விசாரணை கர்த்தன். பஸ்கூரின் அனுமதியில்லாமல், எரேமியா கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்தில் பிரசங்கம்பண்ணியிருக்க வேண்டும். இதைக்கேட்டு பஸ்கூருக்கு எரேமியாவின்மீது கோபம் வந்திருக்கவேண்டும். எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன செய்தியும் பஸ்கூருக்கு பிடிக்கவில்லை.

பஸ்கூருக்கு எரேமியாவின்மீது மிகுந்த கோபமுண்டாயிற்று. பஸ்கூர் எரேமியா தீர்க்கதரிசியை கோபத்தினால் அடித்துவிடுகிறான். பஸ்கூர் தன்னுடைய கையினாலோ அல்லது கோலாலோ எரேமியாவை அடித்திருக்கவேண்டும். பஸ்கூரிடம் அதிகாரமுள்ளது. அவன் தேவாலயத்தில் பிரதான விசாரணை கர்த்தன். பஸ்கூர் எரேமியாவை அடித்து, அவரை அவமானப்படுத்த நினைத்திருக்கலாம். பஸ்கூர் எதேச்சையாக முடிவெடுத்து, எரேமியாவை அடிக்கக்கூடாது. அது யூதமார்க்கத்து தேவாலய சட்டத்திற்கு புறம்பானது.

பஸ்கூர் தன்னுடைய பிரச்சனைகளை பிரதான ஆசாரியரிடத்திலும், மற்ற ஆசாரியர்களிடத்திலும் சொல்லவேண்டும். யூதர்களுக்கு ஆலோசனைச்சங்கமுள்ளது. அந்த சங்கத்தில் எரேமியாவைப்பற்றிய பிரச்சனைகளை மற்ற ஆசாரியர்களோடு கலந்து ஆலோசிக்கவேண்டும். எரேமியாவுக்கும் தன்னுடைய நியாயத்தை சொல்ல வாய்ப்பு கொடுக்கப்படவேண்டும். ஆனால் பஸ்கூரோ எந்த சட்டத்தையும் பின்பற்றவில்லை. தனக்கு கோபம் வந்தவுடன், அவன் எரேமியாவை அடித்துவிடுகிறான்.

எருசலேமிலுள்ள தேவாலயத்தில் சட்டங்கள் இருந்தாலும், அந்தச் சட்டங்கள் சரியாக கடைப்பிடிக்கப்படவில்லை. பெயரளவுக்குத்தான் சட்டம் இருக்கிறது. எல்லோருமே சட்டத்தை மீறுகிறார்கள். சாதாரண ஜனங்களும் சட்டத்தை மீறுகிறார்கள். ஆசாரியரும், லேவியரும் தேவாலயத்தின் சட்டங்களை மீறுகிறார்கள்.

பஸ்கூரோ எரேமியாவை அடிக்க வேண்டுமென்றும், அவரை அவமானப்படுத்த வேண்டுமென்றும், தீர்க்கதரிசன ஊழியத்திலிருந்து அவரை துரத்திவிட வேண்டுமென்றும் தீர்மானமாயிருக்கிறான். பஸ்கூரை எதிர்த்து கேட்பதற்கு அங்கே ஒருவருமில்லை.

பஸ்கூர் எரேமியா தீர்க்கதரிசியை அடித்தது மாத்திரமல்ல, அவரை காவலறையிலும் போட்டுவிடுகிறான். கர்த்தருடைய ஆலயத்தில் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த மேல்வாசல் இருக்கிறது. அங்கு ஒரு காவலறை இருக்கிறது. அந்தக் காவலறையில், பஸ்கூர் எரேமியாவை காவலில் போடுகிறான். பஸ்கூர் எரேமியாவை ஒருவருக்கும் தெரியாமல், இரகசியமாக துன்பப்படுத்தவில்லை. சகலமும் எல்லோருக்கும் வெளிப்படையாக, பொதுவான இடத்தில் நடைபெறுகிறது. கர்த்தருடைய ஆலயத்தில், பென்யமீன் கோத்திரத்தாரைச் சேர்ந்த மேல்வாசலில் இந்த சம்பவம் நடைபெறுகிறது.

தேவாலயத்திற்கு வருகிறவர்கள் பென்யமீன் வாசல் வழியாக ஆலயத்திற்குள் பிரவேசிப்பார்கள். அங்கே தேவாலயத்திற்கு வருவோரும் போவோருமாக, ஏராளமான ஜனங்கள் நடந்துகொண்டிருப்பார்கள். ஜனநடமாட்டம் அதிகமுள்ள பகுதியில்தான் பஸ்கூர் எரேமியாவைத் துன்பப்படுத்துகிறான். எரேமியா கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசியல்ல என்றும், அவர் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி என்றும் ஜனங்களுக்கு காண்பிக்கவேண்டும் என்பதே பஸ்கூரின் நோக்கம். ஜனங்கள் எரேமியாவுக்கும், அவர் சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கும் செவிகொடுக்க வேண்டியதில்லை என்பதை பஸ்கூர் தன்னுடைய செய்கையின் மூலமாக பிரகடனம்பண்ணுகிறான்.

பஸ்கூரின் செய்கை எரேமியாவுக்கு விரோதமாகவும், கர்த்தருக்கு விரோதமாகவும் இருக்கிறது. தம்முடைய தீர்க்கதரிசியை அடித்த பஸ்கூர்மீது கர்த்தர் பிரியமாயில்லை. மறுநாளிலே பஸ்கூர் எரேமியாவை காவலறையிலிருந்து வெளியே போகவிடுகிறான் (எரே 20:3). அப்போது எரேமியாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. பஸ்கூர் எரேமியாவை விடுதலைபண்ணின உடனேயே, கர்த்தர் எரேமியாவின் வாயில் தம்முடைய வார்த்தைகளைப் போடுகிறார். பஸ்கூருக்கு உண்மையான மனச்சாட்சி இருக்குமென்றால், கர்த்தருடைய வார்த்தை அவனை உணர்த்தும். கர்த்தருடைய வார்த்தை அவனுடைய மனச்சாட்சியோடும், இருதயத்தோடும் பேசும். கர்த்தருடைய வார்த்தை பஸ்கூரின் மனச்சாட்சியை தட்டியெழுப்பும்.

எரேமியா பஸ்கூரின் தப்பிதங்களை ஜனங்களுக்கு வெளிப்படுத்தி சொல்லுகிறார். இதனால் ஜனங்கள் மத்தியில் பஸ்கூரின் மதிப்பு குறைந்துபோகிறது. எரேமியாவின் வாயை அடைத்துவிட்டால், ஜனங்கள் மத்தியில் தன்னுடைய மதிப்பையும், மரியாதையையும் காத்துக்கொள்ளலாம் என்று பஸ்கூர் நினைக்கிறான். பஸ்கூர் கர்த்தருடைய ஆலயத்து பிரதான விசாரணை கர்த்தனாயிருக்கிறான். தேவாலயத்தில் இது ஒரு உயர்ந்த பதவி. பஸ்கூர் இந்தப் பதவியை தனக்கு தக்க வைத்துக்கொள்வதற்காக, எரேமியாவைத் துன்பப்படுத்துகிறான்.

பஸ்கூரின் முயற்சிகள் வெற்றி பெறாது. அவன் எரேமியாவுக்கு விரோதமாக மாத்திரமல்ல, கர்த்தருக்கு விரோதமாகவும் எதிர்த்து நிற்கிறான். ஒரு வேளை பஸ்கூர் எரேமியாவை அடித்து, அவரை பேசவிடாமல் செய்துவிடலாம். எரேமியாவும் கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சொல்லாமல் அமைதியாகயிருந்துவிடலாம். ஆனாலும் பஸ்கூரின் மனச்சாட்சி அமைதியாயிருக்காது. அது அவனோடு பேசும். அவனுடைய சமாதானமும், ஆறுதலும், சந்தோஷமும் அவனை விட்டு நீங்கும்.

பஸ்கூர் எரேமியாவை காவலறையிலிருந்து வெளியே போகவிடுகிறான். "அப்பொழுது எரேமியா அவனை நோக்கி: கர்த்தர் உன்னைப் பஸ்கூர் என்று அழைக்காமல், மாகோர் மீசாபீப் என்று அழைக்கிறார்" (எரே 20:3) என்று சொல்லுகிறார். இந்தப் பெயருக்கு "எப்பக்கத்திலும் பயம்" என்றும், "சுற்றிலும் பயங்கரம்" என்றும் பொருள் சொல்லலாம். பஸ்கூருக்கு எல்லா பக்கத்திலும் நெருக்கங்களும் பயமும் உண்டாயிற்று. பஸ்கூரை திகில் சூழ்ந்துகொள்கிறது.

ஒருவரும் துரத்தாமலிருக்கும்போதே துன்மார்க்கன் பயந்து ஓடுவான். பயமே இல்லாத வேளையில்கூட, துன்மார்க்கன் பயப்படுவான். பஸ்கூருக்கு இப்படிப்பட்ட நிலமை உண்டாயிற்று. "நான் உன்னையும், உன் எல்லாச் சிநேகிதரையும் பயத்துக்கு ஒப்புக்கொடுக்கிறேன்" (எரே 20:4) என்று கர்த்தர் பஸ்கூருக்கு சொல்லுகிறார். அவனுடைய சொந்த சிந்தனைகளும், சொந்த கற்பனைகளும் அவனுக்கு பயத்தைக் கொடுக்கிறது. பஸ்கூர் நிம்மதியையும், சமாதானத்தையும் இழந்துவிடுகிறான்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் மூலமாய், தங்களுடைய தப்பிதங்களை கேட்காதவர்கள், தங்களுடைய மனச்சாட்சியின் சத்தத்தைக் கேட்க வேண்டியதுவரும். துன்மார்க்கர் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவேண்டும் அல்லது தங்களுடைய மனச்சாட்சியின் சத்தத்தைக் கேட்கவேண்டும். ஒன்றையும் கேட்காமல் தப்பித்துக்கொள்ள முடியாது. துன்மார்க்கரின் மனச்சாட்சி அவர்களைக் கண்டிக்கும்.

கர்த்தர் பஸ்கூரையும் அவனுடைய எல்லா சிநேகிதரையும் பயத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார். பஸ்கூர் தன்னுடைய சிநேகிதரோடு பேசும்போதே பயத்தோடுதான் பேசமுடியும். இதனால் பஸ்கூரின் சிநேகிதர்கள் அவனைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். பஸ்கூர் தனிமைப்படுத்தப்படுகிறான். தன்னுடைய பாவங்களுக்கான மொத்த தண்டனைகளையும் பஸ்கூர் தனியாகவே அனுபவிக்கிறான்.

பஸ்கூரின் சிநேகிதர்கள் அவனுக்கு உதவி செய்யவில்லை. பஸ்கூரின் ஜீவியம் வேதனை நிரம்பியதாயிற்று. அவன் பரிதபிக்கப்படத்தக்கவனாயிருக்கிறான். காயீன் தத்தளிக்கும் தேசத்தில் ஜீவித்ததுபோல, பஸ்கூரும் பயத்தின் தேசத்தில் ஜீவிக்கிறான். அவன் எங்குபோனாலும் பயம் அவனை சூழ்ந்துகொள்கிறது. பஸ்கூரைப் பார்க்கிறவர்களெல்லாரும், "நீ ஏன் இவ்வளவு பயப்படுகிறாய்" என்றும், "நீ ஏன் எப்போதும் பயத்தினால் நிரம்பியிருக்கிறாய்" என்றும் கேட்கிறார்கள்.

அவர்களுடைய கேள்விக்கு பஸ்கூர் பதில் சொல்லவில்லையென்றாலும், அவனுடைய மனச்சாட்சி அவனுக்கு பதில் சொல்லும். பஸ்கூர் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எரேமியாவை அடித்து காவலறையில் போட்டான். கர்த்தருடைய கரம் இப்போது பஸ்கூரை அடிக்கிறது. கர்த்தர் பஸ்கூரை பயத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார் அவன் பயந்து நடுங்குகிறான். இதுவே பஸ்கூரின் பயத்திற்கு மெய்யான காரணம்.

பஸ்கூர் பயந்து நடுங்கும்போது, அவனுடைய சிநேகிதர்கள் அவனுக்கு ஆறுதல் சொல்லவேண்டும். பஸ்கூருக்கு உதவிசெய்ய முன்வரவேண்டும். ஆனால் பஸ்கூரின் சிநேகிதர்கள் பட்டயத்தால் விழுகிறார்கள். "உன் கண்கள் காண இவர்கள் சத்துருக்களின் பட்டயத்தால் விழுவார்கள்" (எரே 20:4) என்று கர்த்தர் பஸ்கூரின் சிநேகிதரைப்பற்றி அவனிடத்தில் சொல்லுகிறார்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு பஸ்கூரின்மீது வருவதற்கு ஆயத்தமாயிருக்கிறது. "பஸ்கூரே, நீயும் உன் வீட்டில் வாசமாயிருக்கிற யாவரும் சிறைப்பட்டுப்போவீர்கள்; நீயும் உன் கள்ளத்தீர்க்கதரிசனத்துக்குச் செவிகொடுத்த உன் சிநேகிதர் யாவரும் பாபிலோனுக்குப் போய், அங்கே மரித்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவீர்கள்" (எரே 20:6) என்று கர்த்தர் சொல்லுகிறார். பஸ்கூருக்கு அழிவு பூரணமாய் வருகிறது. அவனும், அவனுடைய குடும்பத்தாரும், அவனுடைய சிநேகிதரும், அந்நியதேசத்து சிறையிருப்புக்குப்போய் அங்கேயே மரித்துப்போவார்கள்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதாவின்மீதும் எருசலேமின்மீதும் வரும் என்று எரேமியா தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். இதனால் யூதாவின் ஜனங்களும் எருசலேமின் குடிகளும் கலக்கத்திலிருக்கிறார்கள். மனக்குழப்பத்திலிருக்கிறார்கள். அவர்களுக்கு சமாதானத்தையும் ஆறுதலையும் உண்டுபண்ணவேண்டுமென்று பஸ்கூர் விரும்புகிறான். எரேமியா கர்த்தருடைய தீர்க்கதரிசியல்ல என்றும், அவர் ஒரு கள்ளத்தீர்க்கதரிசி என்றும் ஜனங்கள் மத்தியில் விளம்பரம்பண்ணினால், ஜனங்கள் எரேமியாவின் வார்த்தைகளைக் கேட்கவுமாட்டார்கள். கேட்டாலும் கலங்கமாட்டார்கள். இதன் நிமித்தமாகவே பஸ்கூர் எரேமியாவை அடித்து, அவரை காவலறையிலே போடுகிறான்.

எரேமியா தீர்க்கதரிசிக்கு விரோதமாக, பஸ்கூர் கள்ளத்தீர்க்கதரிசிகளை நியமிக்கிறான். "நீயும் உன் கள்ளத்தீர்க்கதரிசனத்திற்கு செவிகொடுத்த யாவரும்" (எரே 20:6) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதாவின் ஜனங்களுக்கு அழிவு வராது என்றும், அவர்களுக்கு சமாதானமும் ஆறுதலும் உண்டாகும் என்றும் பஸ்கூரின் கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களிடத்தில் பொய்சொல்லுகிறார்கள்.

எரேமியாவின் தீர்க்கதரிசனமும், பஸ்கூருடைய கள்ளத்தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனமும் முரண்பட்டிருக்கிறது. ஜனங்களுக்கு எதை நம்பவேண்டும் என்று தெரியவில்லை. அவர்களும் குழப்பத்திலிருக்கிறார்கள். இதனால் பஸ்கூருக்கு எரேமியாவின்மீது கோபமுண்டாகிறது. எரேமியாவை ஒழித்துவிட்டால், தன்னுடைய மனதின் விருப்பங்களை, தன்னுடைய கள்ளத்தீர்க்கதரிசிகள் மூலமாக, ஜனங்கள் மத்தியில் சொல்லலாம் என்று பஸ்கூர் நினைக்கிறான்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். "யூதா அனைத்தையும் நான் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுப்பேன்; அவன் அவர்களைச் சிறைபிடித்து, சிலரைப் பாபிலோனுக்குக் கொண்டுபோய், சிலரைப் பட்டயத்தால் வெட்டிப்போடுவான்" (எரே 20:4) என்பது கர்த்தருடைய வார்த்தை.

யூதா தேசம் அநேக வருஷங்களாக கர்த்தருடைய தேசமாயிருக்கிறது. ஆனால் இப்போதோ கர்த்தர் தம்முடைய தேசத்தை, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கைகளில் ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தரே இதுவரையிலும் இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்தார். இனிமேல் இந்த தேசத்தை ஆளுகை செய்கிற பொறுப்பு நேபுகாத்நேச்சாருக்கு கொடுக்கப்படுகிறது. அவன் தன்னுடைய இஷ்டம்போல யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் ஆளுகை செய்வான். அவனுக்கு விரோதமாக யாரும் எழும்ப முடியாது. அவனுடைய தண்டனைக்கு யாரும் தப்பவும் முடியாது.

எருசலேம் நகரமும் அழிந்துபோகும் என்று கர்த்தர் சொல்லுகிறார். "இந்த நகரத்தின் எல்லாப் பலத்தையும், அதின் எல்லாச் சம்பத்தையும், அதின் அருமையான எல்லாப் பொருள்களையும், யூதா ராஜாக்களின் எல்லாப் பொக்கிஷங்களையும், நான் அவர்கள் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன்; அவர்கள் அவைகளைக் கொள்ளையிட்டு, பாபிலோனுக்குக் கொண்டுபோவார்கள்" (எரே 20:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து ராஜா, யூதா தேசத்திலுள்ள எல்லா பொக்கிஷங்களையும், தன்னுடைய தேசத்திற்கு கொண்டுபோய்விடுவான். "நகரத்தில் எல்லா பலன்" என்னும் வாக்கியம், யூதா மனுஷருடைய ராணுவ தளவாடங்களைக் குறிக்கிறது. பாபிலோன் தேசத்து ராஜா இஸ்ரவேல் தேசத்தாரின் ராணுவ ஆயுதங்களையெல்லாம் கைப்பற்றி, அந்த ஆயுதங்களை இஸ்ரவேல் ஜனத்திற்கு விரோதமாகப் பயன்படுத்துவான்.

நேபுகாத்நேச்சார் எருசலேம் நகரத்தின் அருமையான எல்லா பொருள்களையும் கொள்ளையிட்டு பாபிலோனுக்கு கொண்டுபோய்விடுவான். யூதர்களுடைய வீடுகள், பணிமுட்டுக்கள் எல்லாமே அவர்களுக்கு அருமையானவைகள். அவையெல்லாம் பாபிலோன் தேசத்தார் வசமாகும். யூதா ராஜாக்களின் எல்லா பொக்கிஷங்களும் பாபிலோன் ராஜாவின் அரண்மனையில் சேர்க்கப்படும். யூதாதேசம் வெறுமையாகும். பாபிலோன் தேசம் யூதாவின் சம்பத்துக்களால் நிரம்பியிருக்கும். இது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு. யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், அவர்கள்மீது தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது.

கர்த்தாவே
எரே 20:7-13

எரே 20:7. கர்த்தாவே என்னை இணங்கப் பண்ணினீர், நான் இணங்கினேன்; நீர் என்னிலும் பலத்தவராயிருந்து, என்னை மேற்கொண்டீர்; நாள்தோறும் நகைப்புக்கு இடமானேன்; எல்லாரும் என்னைப் பரிகாசம்பண்ணுகிறார்கள்.

எரே 20:8. நான் பேசினது முதற்கொண்டு கதறுகிறேன்; கொடுமையென்றும் பாழ்க்கடிப்பென்றும் சத்தமிட்டுக் கூறுகிறேன்; நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும், பரிகாசமுமாயிற்று.

எரே 20:9. ஆதலால், நான் அவரைப் பிரஸ்தாபம்பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன்; ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது; அதைச் சகித்து இளைத்துப்போனேன்; எனக்குப் பொறுக்கக்கூடாமற்போயிற்று.

எரே 20:10. அநேகர்சொல்லும் அவதூறைக் கேட்டேன்; பயஞ்சூழ்ந்திருந்தது; அறிவியுங்கள், அப்பொழுது நாங்கள் அதை அறிவிப்போம் என்கிறார்கள்; என்னோடே சமாதானமாயிருந்த அனைவரும் நான் தவறிவிழும்படிக் காத்திருந்து: ஒருவேளை இணங்குவான், அப்பொழுது அவனை மேற்கொண்டு, அவனில் குரோதந் தீர்த்துக்கொள்வோம் என்கிறார்கள்.

எரே 20:11. கர்த்தரோ பயங்கரமான பராக்கிரமசாலியாய் என்னோடு இருக்கிறார், ஆகையால் என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல் இடறுவார்கள்; தங்கள் காரியம் வாய்க்காதபடியால் மிகவும் வெட்கப்படுவார்கள்; மறக்கப்படாத நித்திய இலச்சை அவர்களுக்கு உண்டாகும்.

எரே 20:12. ஆனாலும் நீதிமானைச் சோதித்தறிந்து, உள்ளந்திரியங்களையும் இருதயத்தையும் பார்க்கிற சேனைகளின் கர்த்தாவே, நீர் அவர்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிறதைக் காண்பேனாக; என் காரியத்தை உம்மிடத்தில் சாட்டிவிட்டேன்.

எரே 20:13. கர்த்தரைப் பாடுங்கள், கர்த்தரைத் துதியுங்கள்; அவர் எளியவனுடைய ஆத்துமாவைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவிக்கிறார்.

எரேமியா தன்னுடைய மாம்சபலவீனத்திலிருக்கிறார். அவருக்குள் குழப்பங்களும், போராட்டங்களும் உண்டாயிற்று. அவர் பல காரியங்களை நினைத்து கலங்குகிறார். மனம் பதறுகிறார். பஸ்கூர் எரேமியாவை ஒங்கி அடித்துவிட்டான். எரேமியாவின் சரீரத்தில் காயமுண்டாயிற்று. அதே வேளையில் எரேமியாவுக்கு அவமானமும் நிந்தையும் உண்டாயிற்று. இது அவருடைய இருதயத்தைக் காயப்படுத்திற்று. எரேமியா கர்த்தருடைய கிருபையையும், பஸ்கூரின் துன்மார்க்கமான கிரியையையும் சிந்தித்துப் பார்க்கிறார்.

பஸ்கூர் தனக்கு செய்த தீங்குகளை எரேமியா கர்த்தரிடத்தில் முறையிடுகிறார். பஸ்கூர் எரேமியாவை பரியாசம்பண்ணினான். அவனைப் பார்த்து நகைத்தான். எரேமியாவின் பேச்சும் செய்கையும் பஸ்கூருக்கு நகைப்பாயிருக்கிறது. இதனால் எரேமியா நாள்தோறும் நகைப்புக்கு இடமாயிருக்கிறார். எல்லோரும் அவரை பரியாசம்பண்ணுகிறார்கள்.

எரேமியாவிடம் தீங்கு ஒன்றும் காணப்படவில்லை. அவர் கர்த்தருக்கு விரோதமாகப் பேசவில்லை. கர்த்தர் தன் வாயில் போட்ட செய்திகளை, எரேமியா அப்படியே சொல்லிவிடுகிறார். கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை எரேமியா உண்மையாயும், உற்சாகமாயும் செய்கிறார்.

எரேமியா தன்னுடைய ஊழியத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நான் பேசினது முதற்கொண்டு கதறுகிறேன்; கொடுமையென்றும் பாழ்க்கடிப்பென்றும் சத்தமிட்டுக்கூறுகிறேன்; நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும், பரிகாசமுமாயிற்று" (எரே 20:8) என்று சொல்லுகிறார்.

எரேமியா பரியாச வார்த்தைகளைப் பேசவில்லை. அவர் தனிப்பட்ட முறையில் யாரையும் குற்றப்படுத்தவுமில்லை. ஆனாலும் எரேமியாவின் பிரசங்க வாக்கியங்கள் அவர்களுக்கு நகைப்பாயிருக்கிறது. எரேமியா பேசுகிற வார்த்தைகள் அவருடைய சொந்த வார்த்தைகளுமல்ல. அவை கர்த்தருடைய வார்த்தைகள். எரேமியா கர்த்தருடைய வார்த்தையை மாத்திரமே பேசுகிறார். ஆனாலும், "நான் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும் பரியாசமும் ஆயிற்று" என்று சொல்லி எரேமியா வேதனைப்படுகிறார்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணும் விதத்தைப்பார்த்து எருசலேமின் குடிகள் நகைக்கிறார்கள். அவர் பிரசங்கம்பண்ணுகிற செய்தியைக் கேட்டு அவர்கள் எரேமியாவை பரியாசம்பண்ணுகிறார்கள்.

எரேமியா பேசினது முதற்கொண்டு கதறுகிறார். அவர் கர்த்தருடைய செய்தியை ஏனோதானோவென்று, ஆர்வமில்லாமல் பேசுகிறவரல்ல. எரேமியாவின் பிரசங்கத்தில் ஜீவன் இருக்கும். அவர் பிரசங்கம்பண்ணுவதை நேசிக்கிறார். மனுஷருக்கு எப்படி சொன்னால் புரியுமோ, அப்படி பிரசங்கம்பண்ணுகிறார்.

எரேமியா கர்த்தருடைய நாமத்தினாலே பிரசங்கம்பண்ண ஆரம்பித்த நாளிலிருந்து, அவர் உண்மையாயும், உத்தமமாயும், ஆர்வமாயும் ஊழியம் செய்கிறார். கர்த்தருடைய செய்தியை மிகுந்த வாஞ்சையோடு சொல்லுகிறார். "நான் பேசினது முதற்கொண்டு.......... சத்தமிட்டு கூறுகிறேன்" என்று எரேமியா சொல்லுகிறார். பிரசங்கச்செய்தியை கேட்கிறவர்கள் ஆர்வமில்லாமலிருந்தாலும், பிரசங்கிக்கிறவர்கள் அவர்களுக்கு புரியும்படி சொல்லவேண்டும். அவர்களுடைய மனதில் ஆர்வத்தை உண்டுபண்ணவேண்டும்.

எரேமியா "கொடுமை என்றும், பாழ்கடிப்பு என்றும்" சத்தமிட்டு கூறுகிறார் (எரே 20:8). யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் ஒருவரையொருவர் பலவந்தம் பண்ணுகிறார்கள். ஒருவருக்கொருவர் ஏமாற்றிக்கொள்கிறார்கள். தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். அவர்கள் எல்லோரும் மொத்தமாக கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். இதனால் அவர்கள்மீது கொடுமையும் பாழ்க்கடிப்பும் கர்த்தர் கொடுக்கும் தண்டனையாக வரும்.

எரேமியா சரியாக பேசவில்லையென்று யூதாவின் மனுஷர் அவரைப் பரியாசம்பண்ணினார்கள். இப்போதோ அவர் அதிகமாய்ப் பேசுகிறார் என்று சொல்லி அவரை நிந்திக்கிறார்கள். யூதாவின் மனுஷரிடத்தில் நல்ல சுபாவமில்லை. அவர்களுக்கு கர்த்தர்மீதும் பிரியமில்லை. அவருடைய ஊழியக்காரர்கள்மீதும் பிரியமில்லை. கர்த்தருடைய வார்த்தையை செவிகொடுத்து கேட்கவேண்டும் என்னும் ஆர்வமுமில்லை.

யூதாவின் மனுஷரிலும் எருசலேமின் குடிகளிலும் அநேகர் எரேமியாவுக்கு விரோதமாக அவதூறான வார்த்தைகளைப் பேசுகிறார்கள். எரேமியாவைக் கொன்றுபோட சதிஆலோசனைபண்ணுகிறார்கள். எரேமியா பலவீனமானவன் என்று சொல்லி அவரை பரியாசம்பண்ணுகிறார்கள். இப்போதோ எரேமியா மோசமானவன் என்று சொல்லி அவரை நிந்திக்கிறார்கள். எரேமியா யூதாஜனங்களுக்கும், யூதாதேசத்திற்கும் ஆபத்தானவர் என்று அவர்மீது பொய்யாய் குற்றம் சொல்லுகிறார்கள்.

எரேமியாவின் சத்துருக்கள் தந்திரமாய்ப் பேசுகிறார்கள். மோசமான சதிஆலோசனைகளை பண்ணுகிறார்கள். அவர்கள் எதை பேசினாலும், எரேமியாவுக்கு முன்பாக நேருக்கு நேராக பேசமாட்டார்கள். அவருடைய முதுகுக்கு பின்பாக பேசுவார்கள். அவர்கள் பேசுவது எரேமியாவுக்கு மறைவாயிராது. அவர்களுடைய வார்த்தைகள் எரேமியாவின் செவிகளில் விழும். "அநேகர் சொல்லும் அவதூறைக்கேட்டேன், பயம் சூழ்ந்திருந்தது" (எரே 20:10) என்று எரேமியா சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஆலயத்தில் பஸ்கூர் மாத்திரமே பிரதான விசாரணை கர்த்தனாயிருக்கிறான். கர்த்தர் அவனுடைய பெயரை மாற்றி "மாகோர் மீசாபீப்" என்று அழைக்கிறார். இப்போது எரேமியாவுக்கு முன்பாக ஏராளமானோர் மாகோர் மீசாபீப்புக்களாகயிருக்கிறார்கள். பஸ்கூரைப்போல கொடிய குணமுள்ளவர்கள் அங்கு ஏராளமானோர் இருக்கிறார்கள்.

எரேமியா யூதா மனுஷருடைய மனதில் திகிலையும், பயத்தையும், நடுக்கத்தையும் உண்டுபண்ணுகிறார் என்று அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். எரேமியாவின் பிரசங்கத்தினால் யூதாமனுஷர் மத்தியில் சந்தோஷமும், சமாதானமும், ஆறுதலும் நீங்கிப்போயிற்று என்று சொல்லுகிறார்கள். எரேமியா யூதாமனுஷருக்கு விரோதமாக பேசுகிறார் என்றும் அவர்மீது குற்றம் சுமத்தப்படுகிறது. எரேமியாவை ஒரு கலகக்காரர் என்று சொல்லுகிறார்கள்.

எரேமியாவின் சத்துருக்கள் யூதாமனுஷரிடத்தில் "அறிவியுங்கள், அப்பொழுது அதை நாங்கள் அறிவிப்போம்" (எரே 20:10) என்று சொல்லுகிறார்கள். எரேமியாவைப்பற்றி அவர்கள் எப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்களைச் சொன்னாலும், அதை அரண்மனையில் அறிவிப்பதற்கு அவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். குற்றச்சாட்டுக்கள் பொய்யாகயிருந்தாலும், அதை ஜோடித்து, எரேமியாவுக்கு கெட்ட பெயரை உருவாக்க முயற்சிபண்ணுகிறார்கள். எரேமியாவுக்கு விரோதமாக சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களை பெரிதுபடுத்தி, அவருக்கு அதிகமான தண்டனை கொடுக்கப்படுவதற்கு முயற்சிபண்ணுகிறார்கள்.

எரேமியாவின் சத்துருக்கள் அவருடைய முகத்திற்கு நேராக தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். எரேமியா இந்த வார்த்தைகளைக் கேட்டு அமைதியாகயிருக்கமாட்டார் என்றும், கோபப்பட்டோ அல்லது அவசரப்பட்டோ ஏதாவது பேசிவிடுவார் என்றும் எதிர்பார்க்கிறார்கள். அவருடைய வார்த்தைகளில் குற்றம் கண்டுபிடித்து, அவர்மீது வழக்கு தொடரலாம் என்று எரேமியாவின் சத்துருக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இயேசுகிறிஸ்து ஊழியம் செய்தபோதும், அவருடைய வார்த்தையில் குற்றம் கண்டுபிடிக்கும்படிக்கு, பரிசேயரும் பிரதான ஆசாரியரும் அவருக்கு விரோதமாக தங்களுடைய வேவுகாரரை அனுப்பினார்கள்.

“அவர்கள் சமயம்பார்த்து, தேசாதிபதியின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக்கொடுக்கும்படி அவருடைய பேச்சிலே குற்றங்கண்டுபிடிக்கலாமென்று, தங்களை உண்மையுள்ளவர்களாய்க் காண்பிக்கிற வேவுகாரரை அவரிடத்தில் அனுப்பினார்கள்” (லூக் 20:20).

“இவைகளை அவர்களுக்கு அவர் சொல்லுகையில், வேதபாரகரும் பரிசேயரும் அவர்மேல் குற்றஞ்சாட்டும் பொருட்டு, அவர் வாய்மொழியில் ஏதாகிலும் பிழை கண்டுபிடிக்கவேண்டும் என்று உபாயம்பண்ணி அவரை மிகவும் நெருக்கவும், அநேக காரியங்களைக்குறித்துப் பேசும்படி அவரை ஏவவும் தொடங்கினார்கள்” (லூக் 11:53,54).

எரேமியாவின் சத்துருக்கள் அவரோடு சமாதானமாயிருப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள். எரேமியா தவறி விழும்படிக்கு அவர்கள் காத்திருக்கிறார்கள். “ஒருவேளை இணங்குவான், அப்பொழுது அவனை மேற்கொண்டு, அவனில் குரோதம் தீர்த்துக்கொள்வோம்” என்று எரேமியாவுக்கு விரோதமாய் சதிஆலோசனை பண்ணுகிறார்கள்.

எரேமியான் சத்துருக்கள், அவரிடத்தில் சமாதானமாயிருப்பதுபோல நடித்து, அவரிடத்தில் பேசுகிறார்கள். வார்த்தைகள் அதிகரிக்கும்போது, எரேமியாவின்மீது குற்றம் கண்டுபிடித்துவிடலாம் என்று தங்களுக்குள் யோசிக்கிறார்கள்.

எரேமியா யூதா மனுஷரின் தப்பிதங்களையும், தேவனுடைய நியாயத்தீர்ப்பையும் பற்றிச்சொல்லுவார். யூதாதேசத்திற்கு அழிவுவருமென்று தேசத்திற்கு விரோதமாய்ப் பேசுவார். அப்போது அவர்மீது குற்றம் கண்டுபிடிக்கலாம் என்று சத்துருக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

எரேமியாவின் சத்துருக்கள் அவருக்கு விரோதமாய் சதிஆலோசனைபண்ணும்போது, எரேமியாவுக்கு மற்றொரு சோதனையும் வருகிறது. கர்த்தரே எரேமியாவை தம்முடைய தீர்க்கதரிசியாக நியமித்திருக்கிறார். கர்த்தருடைய வார்த்தையை எரேமியா அறிவிக்கவேண்டும். ஆனால் எரேமியாவோ கர்த்தரோடு வழக்காட விரும்புகிறார்.

“கர்த்தாவே என்னை இணங்கப் பண்ணினீர், நான் இணங்கினேன்” என்று எரேமியா கர்த்தரிடத்தில் சொல்லுகிறார். இந்த வாக்கியத்திற்கு, “கர்த்தாவே என்னை ஏமாற்றினீர், நான் ஏமாந்துபோனேன்” என்று பொருள். எரேமியா தன்னுடைய மதியீனத்தினாலும், மனதின் குழப்பத்தினாலும் இப்படி பேசுகிறார்.

எரேமியாவின் காலத்திற்கு முன்பாக, ஏராளமான தீர்க்கதரிசிகள் கர்த்தருக்கு ஊழியம் செய்திருக்கிறார்கள். சத்துருக்கள் அவர்களை எப்படி துன்பப்படுத்தினார்கள் என்பது எரேமியாவுக்குத் தெரியும். எல்லா தீர்க்கதரிசிகளுக்கும் உபத்திரவம் வருவதுபோலவே, எரேமியாவுக்கும் உபத்திரவம் வந்திருக்கிறது. ஊழியக்காரர்களுக்கு துன்பமும் வேதனையும் வருவது புதுமையல்ல.

கர்த்தர் எரேமியாவின் ஊழியத்தைப்பற்றி ஏற்கெனவே அவருக்கு விவரமாகச் சொல்லியிருக்கிறார். “இதோ, தேசமனைத்துக்கும், யூதாவின் ராஜாக்களுக்கும், அதின் பிரபுக்களுக்கும், அதின் ஆசாரியர்களுக்கும், தேசத்தின் ஜனங்களுக்கும் எதிராக நான் உன்னை இன்றையதினம் அரணிப்பான பட்டணமும், இருப்புத்தூணும், வெண்கல அலங்கமும் ஆக்கினேன். அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ளமாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்” (எரே 1:18,19).

எரேமியா யூதாவின் மனுஷருக்கும் பிரபுக்களுக்கும் விரோதமாக கர்த்தருடைய வார்த்தையை சொல்லவேண்டும். எரேமியாவின் ஊழியத்திற்கு எதிர்ப்பு உண்டாகும். இயேசுகிறிஸ்துவும் தம்முடைய சீஷர்களுக்கு வரும் எதிர்ப்புக்களைப் பற்றியும், உபத்திரவங்களைப்பற்றியும், அவர்களுக்கு முன்னறிவித்து, அவர்களை எச்சரித்திருக்கிறார். ஊழியத்தில் எதிர்ப்புக்கள் வரும்போது சீஷர்கள் இடறலடைந்துவிடக்கூடாது.

"நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். அவர்கள் உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்" (யோவா 16:1,2).

"கர்த்தாவே என்னை இணங்கப்பண்ணினீர், நான் இணங்கினேன்" (எரே 20:7) என்னும் வாக்கியத்திற்கு, "கர்த்தாவே என்னை ஏமாற்றினீர், நான் ஏமாந்துபோனேன்" என்று பொருள் கூறுவதற்குப் பதிலாக, "கர்த்தாவே என்னை சம்மதிக்கப்பண்ணினீர், நான் சம்மதித்தேன்" என்று பொருள் சொல்லுவது சிறப்பாயிருக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

எரேமியா கர்த்தருடைய தீர்க்கதரிசன ஊழியத்தை செய்வதற்கு ஆரம்பத்திலேயே தயங்கினார். தான் சிறுபிள்ளையாகயிருப்பதாகவும், தன்னால் கர்த்தருடைய ஊழியத்தை சரியாக செய்ய முடியாது என்றும் எரேமியா கர்த்தரிடத்தில் தன்னுடைய இயலாமையைப்பற்றிச் சொன்னார். ஆனால் கர்த்தரோ தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு எரேமியாவை சம்மதிக்கப்பண்ணினார்.

"அப்பொழுது நான்: ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நான் பேச அறியேன்; சிறுபிள்ளையாயிருக்கிறேன் என்றேன். ஆனாலும் கர்த்தர்: நான் சிறுபிள்ளையென்று நீ சொல்லாதே, நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக" (எரே 1:6,7) என்று சொன்னார்.

கர்த்தரே எரேமியாவுக்கு தீர்க்கதரிசன ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் கர்த்தர் இந்த ஊழியத்தில் தனக்கு ஆதரவாகவும், துணையாகவும் இல்லை என்று எரேமியா கர்த்தரிடத்தில் முறையிடுகிறார். தனக்கு தீர்க்கதரிசன ஊழியம் வேண்டுமென்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவில்லை. தீர்க்கதரிசன ஊழியத்தின்மீது எரேமியா பிடிவாதமாயிருந்து, இந்த ஊழியத்தை அவர் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளவுமில்லை. கர்த்தரே தீர்க்கதரிசன ஊழியத்தை எரேமியாவுக்கு கொடுத்திருக்கிறார். இந்த ஊழியத்தை செய்வதற்கு எரேமியாவுக்கு ஆரம்பத்தில் விருப்பமில்லை. ஆனாலும் இந்த ஊழியத்தை செய்யுமாறு கர்த்தர் எரேமியாவை சம்மதிக்கப்பண்ணினார். எரேமியாவும் கர்த்தருடைய வார்த்தைக்கு மறுப்பு சொல்லாமல், தீர்க்கதரிசன ஊழியத்தை செய்ய சம்மதித்தார்.

எரேமியாவுக்கு ஊழியத்தில் ஏராளமான எதிர்ப்புக்கள் உண்டாயிற்று. எரேமியா யூதாமனுஷர் மத்தியில் கர்த்தருடைய வார்த்தையை சொன்னார். அவர்களோ எரேமியாவின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. செவிகொடுத்தவர்களும் தங்கள் பாவத்திற்கு மனந்திரும்பவில்லை. அவர்கள் எரேமியாவின்மீதே கோபப்படுகிறார்கள். எரேமியாவை பரியாசம்பண்ணுகிறார்கள். அவருக்கு விரோதமாக சதிஆலோசனைகளை பண்ணுகிறார்கள்.

இதனால் எரேமியா தன்னுடைய ஊழியத்தைவிட்டு விலகிவிடலாம் என்று நினைக்கிறார். "ஆதலால், நான் அவரைப் பிரஸ்தாபம்பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன் என்றேன்" (எரே 20:9) என்று எரேமியா சொல்லுகிறார். ஆனாலும் எரேமியாவால் கர்த்தருடைய வார்த்தையை சொல்லாமல் அமைதியாயிருக்க முடியவில்லை. கர்த்தருடைய வார்த்தை எரேமியாவின் எலும்புகளில், அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல், அவருடைய இருதயத்திலிருக்கிறது.

எரேமியாவுக்கு ஊழியத்தில் பிரச்சனைகள் வந்தாலும், அவர் கர்த்தருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை உண்மையாயும், உத்தமமாயும், நேர்த்தியாயும் செய்கிறார். கர்த்தருடைய ஊழியத்தை செய்வதற்கு தேவனுடைய கிருபை மாத்திரமே போதுமானது. கர்த்தருடைய கிருபை, அவருடைய ஊழியத்தை செய்ய நம்மைப் பலப்படுத்தும்.

எரேமியா கர்த்தருடைய கிருபையையும், சத்துருக்கள் மூலமாய் வரும் எதிர்ப்பையும் சிந்தித்துப் பார்க்கிறார். எதிர்ப்பைவிட கர்த்தருடைய கிருபையே எரேமியாவுக்கு பிரதானமாயிருக்கிறது. எரேமியா அவசரப்பட்டு, "நான் அவரை பிரஸ்தாபம்பண்ணாமலும், இனி கர்த்தருடைய நாமத்திலே பேசாமலும் இருப்பேன்" (எரே 20:9) என்று சொன்னார். ஆனால் இப்போதோ எரேமியா, தான் அவசரப்பட்டு பேசியதற்காக மனம் வருந்துகிறார்.

கர்த்தர் எரேமியாவுக்கு கொடுத்த வார்த்தைகள் அவருடைய இருதயத்திலிருக்கிறது. அது அவருடைய எலும்புகளில் அடைப்பட்டு எரிகிற அக்கினியைப்போல பற்றியெரிந்து கொண்டிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தையை வெளியே சொல்லாமல், எரேமியாவால் அதை அடைக்கி வைத்துக்கொள்ள முடியவில்லை. அதை சகித்து இளைத்துப்போய்விடுகிறார். அது அவருக்கு பொறுக்கக்கூடாமல்போயிற்று. எரேமியாவால் கர்த்தருடைய வார்த்தையை பேசாமல் இருக்கமுடியவில்லை.

"என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன். நான் மவுனமாயி, ஊமையனாயிருந்தேன், நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன்; ஆனாலும் என் துக்கம் அதிகரித்தது;என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது; அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன்" *(சங் 39:1-3).*

"வார்த்தைகள் எனக்குள் நிறைந்திருக்கிறது; என் உள்ளத்திலுள்ள ஆவி என்னை நெருக்கி ஏவுகிறது. இதோ, என் உள்ளம் அடைக்கப்பட்டிருந்து, புதுத் துருத்திகளை முதலாய்ப் பீறப்பண்ணுகிற புதுரசத்தைப் போலிருக்கிறது. நான் ஆறுதலடையும்படி பேசுவேன்; என் உதடுகளைத் திறந்து பிரதியுத்தரம் சொல்லுவேன்" *(யோபு 32:18-20).*

எரேமியாவால் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணாமல் இருக்கமுடியவில்லை. அதை தன் இருதயத்திற்குள் அடக்கி வைத்து, எரேமியா இளைத்தைப்போயிருக்கிறார். எரேமியாவைப்போலவே, கர்த்தருடைய ஊழியக்காரர்களால், ஊழியம் செய்யாமலிருக்க முடியாது. கர்த்தர் கொடுத்த வார்த்தைகளை அவர்களால் பிரசங்கம்பண்ணாமல் அடக்கி வைத்துக்கொள்ளவும் முடியாது. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு வார்த்தைகளையும் கொடுக்கிறார். அதை பிரய்ங்கம்பண்ணவேண்டுமென்று உணர்த்தவும் செய்கிறார்.

"சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" *(1கொரி 9:16)* என்று அப்போஸ்தலர் பவுல் சொல்லுகிறார்.

எரேமியாவுக்கு விரோதமாக ஏராளமான சத்துருக்கள் எழும்பியிருக்கிறார்கள். கர்த்தரோ எரேமியாவோடு கூடயிருக்கிறார். கர்த்தருடைய கிருபையும் அவருக்கு கிடைத்திருக்கிறது. "கர்த்தரோ பயங்கரமான பராக்கிரமசாலியாய் என்னோடு இருக்கிறார், ஆகையால் என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல் இடறுவார்கள்; தங்கள் காரியம் வாய்க்காதபடியால் மிகவும் வெட்கப்படுவார்கள்; மறக்கப்படாத நித்திய இலச்சை அவர்களுக்கு உண்டாகும்" *(எரே 20:11)* என்று எரேமியா சொல்லுகிறார்.

கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது, நமக்கு விரோதமாக சத்துருவால் ஒன்றும் செய்யமுடியாது. கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுவார். நமக்கு ஜெயத்தைக் கொடுப்பார். "இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோம 8:31) என்று பவுல் சொல்லுகிறார்.

எரேமியாவுக்கு அதிகமான பாரங்கள் வந்தாலும், அந்த பாரங்களை தாங்குவதற்கும் சுமப்பதற்கும் கர்த்தருடைய கிருபை எரேமியாவோடு கூடயிருக்கும். கர்த்தரே எரேமியாவின் வாயில் தம்முடைய வார்த்தைகளைப் போட்டிருக்கிறார். எரேமியாவின் சத்துருக்கள் அவருக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசும்போது, அவர்களோடு பேசவேண்டிய பிரதியுத்தர வார்த்தைகளை, கர்த்தர் தாமே எரேமியாவுக்குக் கொடுப்பார். கர்த்தர் பயங்கரமான பராக்கிரமசாலியாய் எரேமியாவோடு கூடயிருக்கிறார். கர்த்தரைப்பற்றிய பயம் அவர்களை மேற்கொள்ளும்.

நமக்கு விரோதமாக சத்துருக்கள் எழும்பும்போது, நாம் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தால் நமக்குள் சோர்வும் பயமும் வந்துவிடும். நாம் மனுஷரைப் பார்க்காமல் கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். நாம் கர்த்தரை பார்க்கும்போது, அவரை பயங்கரமான பராக்கிரமசாலியாய் காணவேண்டும்.

"அதை நான் பார்த்து எழும்பி, பிரபுக்களையும் அதிகாரிகளையும் மற்ற ஜனங்களையும் நோக்கி: அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; நீங்கள் மகத்துவமும் பயங்கரமுமான ஆண்டவரை நினைத்து, உங்கள் சகோதரருக்காகவும், உங்கள் குமாரருக்காகவும், உங்கள் மனைவிகளுக்காகவும், உங்கள் வீடுகளுக்காகவும் யுத்தம்பண்ணுங்கள் என்றேன்" (நெகே 4:14).

எரேமியா இப்பொழுது தன்னுடைய சிந்தையில் குழப்பமில்லாமல் தெளிவாயிருக்கிறார். கர்த்தர்மீது நம்பிக்கை வைத்து பூரண நிச்சயத்தோடு பேசுகிறார். கர்த்தர் பயங்கரமான பராக்கிரமசாலியாய் தன்னோடு கூடயிருப்பதினால், தன்னை துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல் இடறுவார்கள் என்று எரேமியா முழுநிச்சயத்தோடு சொல்லுகிறார். சத்துருக்கள் நம்மைப் பின்தொடருவார்கள். ஆனால் அவர்கள் நம்மை மேற்கொள்ளமாட்டார்கள்.

"என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறிவிழுந்தார்கள்" (சங் 27:2). எரேமியாவுக்கு விரோதமாக சத்துருக்கள் சதிஆலோசனை பண்ணினார்கள். அவருக்கு தீங்கு செய்ய முயற்சிசெய்தார்கள். ஆனால் அவர்களுடைய காரியம் வாய்க்காதேபோகும். இதனால் அவர்களுக்கு மிகுந்த வெட்கமுண்டாகும். மறக்கப்படாத நித்திய இலச்சை அவர்களுக்கு உண்டாகும். எரேமியாவுக்கு விரோதமாக அவர்கள் மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் அவமாய்ப்போகும்.

கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதி. எரேமியா தன்னுடைய வழக்குகளை கர்த்தருடைய சமுகத்தில் ஒப்புக்கொடுத்து விடுகிறார். கர்த்தர் தன்னுடைய சத்துருக்கள்மீது நீதியான நியாயத்தீர்ப்பைக் கொடுக்கவேண்டுமென்று எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் நீதிமானை சோதித்தறிகிறவர். அவர் சேனைகளின் கர்த்தர் மனுஷன் முகத்தைப் பார்க்கும்போது, கர்த்தரோ மனுஷருடைய இருதயத்தைப் பார்க்கிறார். அவர் நம்முடைய உள்ளிந்திரியங்களை ஆராய்ந்து பார்க்கிறார்.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பில் நீதியும் நியாயமும் இருக்கும். அவருடைய வார்த்தையிலும், செய்கையிலும் ஒருபோதும் அநீதி இருக்காது. கர்த்தர் மனுஷருடைய ஒவ்வொரு வார்த்தையையும், செய்கையையும் ஆராய்ந்து அறிந்திருக்கிறார். கர்த்தர் சர்வஞானமும் சர்வவல்லமையும், சர்வஆளுகையுமுள்ளவர். எரேமியா தன்னுடைய காரியத்தை கர்த்தரிடத்தில் சாட்டிவிடுகிறார்.

நம்முடைய வழக்குகள் எல்லாவற்றையும் கர்த்தரிடத்தில் சாட்டிவிடவேண்டும். கர்த்தர்மேல் பாரத்தை வைத்துவிட்டு, நாம் அவருடைய சமுகத்தில் அமைதியாயிருக்க வேண்டும். கர்த்தருக்கு எரேமியாவைப்பற்றி நன்றாய்த் தெரியும். அவருடைய வழக்குகளின் ஆதாரமும் கர்த்தருக்கு புரியும். கர்த்தருக்கு எல்லாம் தெரிந்தாலும், நம்முடைய காரியங்களை நாம் கர்த்தரிடத்தில் சொல்லவேண்டுமென்று அவர் எதிர்பார்க்கிறார். நம்முடைய பிரச்சனைகளை நாம் கர்த்தரிடத்தில் முறையிடும்போது, நம்முடைய மனதிற்கு ஆறுதல் உண்டாகும். நம்முடைய இருதயத்தில் சமாதானம் உண்டாகும். நம்முடைய நன்மைக்காகவே, நாம் நம்முடைய வழக்குகளை, கர்த்தரிடத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

எரேமியா கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார். தன்னுடைய சத்துருக்களிடமிருந்து கர்த்தர் தன்னை நிச்சயமாய் மீட்டுக்கொள்வார் என்று உறுதியாய் நம்புகிறார். இதன் நிமித்தமாய் எரேமியா கர்த்தரை நன்றியோடு துதிக்கிறார்.

"கர்த்தரைப் பாடுங்கள், கர்த்தரைத் துதியுங்கள்; அவர் எளியவனுடைய ஆத்துமாவைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவிக்கிறார்" *(எரே 20:13)* என்று எரேமியா கர்த்தரைத் துதித்துப்பாடுகிறார்.

எரேமியா கர்த்தரைத் துதிப்பதை மற்றவர்களும் பார்த்து அவர்களும் கர்த்தரைத் துதிப்பார்கள். எரேமியாவின் உள்ளத்தில் மிகப்பெரிய மாற்றமுண்டாயிருக்கிறது. அவர் கர்த்தருடைய சமுகத்தில் தன்னுடைய வழக்குகளை சொல்ல ஆரம்பித்தபோது, மிகவும் சோர்ந்துபோயிருந்தார். இப்போதோ தன்னுடைய காரியத்தை கர்த்தரிடத்தில் சாட்டி விட்டபின்பு, எரேமியா கர்த்தருக்குள் மிகுந்த சந்தோஷமாயிருக்கிறார்.

எரேமியாவைச் சுற்றிலுமிருந்த மேகங்கள் அவரை விட்டு விலகிப்போயிற்று. அவருக்கு விரோதமாக குற்றம் சொன்னவர்களும், பரியாச வார்த்தைகளைப் பேசியவர்களும் இப்போது பேசமுடியாமல் அமைதியாயிருக்கிறார்கள். எரேமியாவின் துக்கம் சந்தோஷமாய் மாறிற்று. அவருடைய முறையீடுகள் ஸ்தோத்திர வார்த்தைகளாக மாறிற்று. எரேமியா கர்த்தரை நம்பினார். அவருடைய நம்பிக்கை வீண்போகவில்லை. கர்த்தர் எரேமியாவின் இருதயத்தில் சந்தோஷமான மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கிறார்.

எரேமியாவின் வாயில் கர்த்தர் போட்ட வார்த்தை இருக்கிறது. அவருடைய இருதயத்தில் சந்தோஷமும், ஆறுதலும் இருக்கிறது. எரேமியாவால் கர்த்தருடைய வார்த்தையை வெளியே சொல்லாமல் அடக்கி வைக்க முடியவில்லை. அவரால் தனக்குள்ளே இருக்கிற சந்தோஷத்தையும் வெளிப்படுத்தாமல் அடக்கி வைக்க முடியவில்லை. ஆகையினால் கர்த்தரை நன்றியுள்ள இருதயத்தோடு துதித்துப் பாடுகிறார்.

எரேமியா மிகுந்த பாடுகளிலும் வேதனைகளிலும் இருந்தபோது கர்த்தரே அவருக்கு ஆதரவாயிருந்து, அவருடைய பிரச்சனைகளிலிருந்து அவரை விடுவித்தார். அதன் பின்பு பஸ்கூரின் கைக்கும் கர்த்தர் எரேமியாவைத் தப்புவித்தார். இது வரையிலும் தனக்கு உதவிசெய்த கர்த்தர், இனிமேலும் உதவிசெய்வார் என்று எரேமியா நம்புகிறார்.

"அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" *(2கொரி 1:10)*.

கர்த்தர் எரேமியாவின் ஆத்துமாவை பாவத்திற்கு தப்புவிக்கிறார். சத்துருக்கள் எரேமியாவைத் துன்பப்படுத்தியபோது, அவருடைய ஆத்துமா பாவத்தில் விழுந்துவிடும் ஆபத்திலிருந்தது. கர்த்தரோ எரேமியாவை பாவத்தின் ஆபத்துக்களுக்கும், கண்ணிகளுக்கும், வலைகளுக்கும், குழிகளுக்கும் விலகிக் காத்துக்கொள்கிறார். கர்த்தர் எளியவனுடைய ஆத்துமாவை பொல்லாதவர்களின் கைக்கு தப்புவிக்கிறவர்.

நான் பிறந்தநாள் சபிக்கப்படுவதாக எரே 20:14-18

எரே 20:14. நான் பிறந்தநாள் சபிக்கப்படுவதாக; என் தாயார் என்னைப் பெற்ற நான் ஆசீர்வதிக்கப்படாதிருப்பதாக.

எரே 20:15. உமக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்ததென்று என் தகப்பனுக்கு நற்செய்தியாக அறிவித்து, அவனை மிகவும் சந்தோஷப்படுத்தின மனுஷன் சபிக்கப்படக்கடவன்.

எரே 20:16. அந்த மனுஷன், கர்த்தர் மனம்மாறாமல் கவிழ்த்துப்போட்ட பட்டணங்களைப் போலிருந்து, காலமே அலறுதலையும் மத்தியான வேளையிலே கூக்குரலையும் கேட்கக்கடவன்.

எரே 20:17. என் தாயார் எனக்குப் பிரேதக்குழியும், நான் என்றைக்கும் பிரசவியாத சூலுமாய் இருக்கத்தக்கதாகக் கர்ப்பத்திலே நான் கொலைசெய்யப்படாமற் போனதென்ன?

எரே 20:18. நான் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் கண்டு, என் நாட்கள் வெட்கமாய்க் கழியும்படிக்கு நான் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டதென்ன?

மனுஷனுடைய நாவு மிகவும் விநோதமானது. நாம் ஒரே நாவினாலே கர்த்தரைத் துதிக்கிறோம். அதே நாவினாலே மனுஷரை சபிக்கிறோம். துதிப்பதும் சபிப்பதும் ஒரே நாவிலிருந்து புறப்படுவது மிகவும் விநோதமாயிருக்கிறது.

எரேமியா தீர்க்கதரிசி சற்று நேரத்திற்கு முன்பு, "கர்த்தரைப் பாடுங்கள், கர்த்தரைத் துதியுங்கள்" *(எரே 20:13)* என்று சந்தோஷமாக பாடினார். இப்போதோ, "நான் பிறந்தநாள் சபிக்கப்படுவதாக" *(எரே 20:14)* என்று சாபவார்த்தைகளைச் சொல்லுகிறார். எரேமியாவுக்கு துக்கமும் இன்பமும் மாறி மாறி வருகிறது. அவர் கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்.

எரேமியாவின் சத்துருக்கள் அவரை அதிகமாய் நெருக்குகிறார்கள். கர்த்தர் எரேமியாவை அவருடைய நெருக்கங்களிலிருந்தும், பாடுகளிலிருந்தும் விடுவிக்கிறார். எரேமியாவின் ஜீவியத்தில் மனுஷர் மூலமாய் வரும் வேதனையும், கர்த்தர் மூலமாய் வரும் ஆறுதலும் மாறி மாறி வருகிறது.

எரேமியாவுக்கு மனுஷர் மூலமாய் எவ்வளவு பிரச்சனைகள் வந்தாலும், அவர் கர்த்தரை உறுதியாய்ப் பற்றிக்கொள்ள வேண்டும். கர்த்தர்மேல் பாரத்தை வைத்துவிட்டு ஆறுதலடையவேண்டும். எரேமியாவுக்கோ புதிது புதிதாய் சோதனைகள் வருகிறது. கர்த்தர் நம்முடைய ஆத்துமாவை பொல்லாதவர்களின் கைக்கு தப்புவிக்கிறார். கர்த்தர் நமக்கு இதுவரையிலும் செய்த நன்மைகளை நினைத்து, நம்முடைய விசுவாசத்தைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும். நம்முடைய சொந்த பலவீனத்தையும், சொந்த மதியீனத்தையும் நினைத்துக்கொண்டிருந்தால் சோர்ந்துபோய்விடுவோம். நாம் கர்த்தருடைய நன்மையையும், அவருடைய பலத்தையும் நம்பவேண்டும். கர்த்தருடைய வார்த்தையில் விசுவாசம் வைக்கவேண்டும்.

எரேமியாவுக்கு சோதனை வருகிறது. இந்த சோதனையில் அவர் தன்னுடைய பிறந்தநாளை சபிக்கிறார். யோபு வியாதியினால் வேதனைப்பட்டபோது, தன்னுடைய பிறந்தநாளை சபித்தார்.

"அதற்குப்பின்பு யோபு தன் வாயைத்திறந்து, தான் பிறந்த நாளைச் சபித்து, வசனித்துச் சொன்னது என்னவென்றால்" *(யோபு 3:1,2)*. தான் இந்த உலகத்தில் பிறவாதிருந்திருந்தால், அதுவே தனக்கு நன்மையாயிருந்திருக்கும் என்று எரேமியா நினைக்கிறார்.

யூதாஸ்காரியோத்து இந்த உலகத்தில் பிறவாதிருந்திருந்தால், அது அவனுக்கு நன்றாயிருந்திருக்கும் என்று இயேசு கிறிஸ்துவே சொல்லுகிறார். "மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்" *(மத் 26:24)*.

யூதாஸ்காரியோத்தைத் தவிர, வேறு யாருக்கும் இப்படிப்பட்ட வாக்கியம் சொல்லப்படவில்லை. நாம் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், விருப்பத்தின் பிரகாரமாகவும் இந்த உலகத்தில் பிறந்திருக்கிறோம். நாம் கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டியவர்கள். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் விசுவாசத்தோடு ஓடவேண்டும். கர்த்தருடைய கிருபையினால் நம்முடைய இலக்கை அடைவோம் என்னும் நம்பிக்கை நமக்குள் காணப்படவேண்டும்.

நாம் கர்த்தருடைய கிருபா பாத்திரங்களாயிருக்கிறோம். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. நாம் கெட்டுப்போனாலும் கர்த்தர் நம்மை மறுபடியுமாய் உருவாக்குவார். கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் பெரிது. கர்த்தர் நம் ஒவ்வொருவருடைய ஜீவியத்திற்கும், ஒரு நோக்கத்தையும், இலக்கையும் நியமித்திருக்கிறார். கர்த்தருடைய சித்தம் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறவேண்டும். கர்த்தர் நமக்கு நியமித்து வைத்திருக்கும் இலக்கை நாம் அடையவேண்டும். விசுவாசிகளாகிய நமக்குள் இப்படிப்பட்ட சிந்தனைகள் மாத்திரமே காணப்படவேண்டும். சோதனை வந்தவுடன் நம்முடைய பிறந்தநாளை சபித்துவிடக்கூடாது.

எரேமியா தன்னுடைய பிறந்தநாளை சபிக்கும்போது "என் தாயார் என்னை பெற்றநாள் ஆசீர்வதிக்கப்படாதிருப்பதாக" (எரே 20:14) என்று சொல்லுகிறார். தன்னுடைய பிறந்தநாளை சபிப்பதோடு, தன்னுடைய தகப்பனுக்கு தன்னுடைய பிறந்த செய்தியை சொன்ன மனுஷனையும் எரேமியா சபிக்கிறார். அந்த மனுஷனுக்கு நித்திய துக்கமும், நித்திய வேதனையும், நித்திய துன்பமும் வரவேண்டுமென்று எரேமியா அந்த மனுஷனை சபிக்கிறார்.

"உமக்கு ஒரு ஆண்பிள்ளை பிறந்ததென்று என் தகப்பனுக்கு நற்செய்தியாக அறிவித்து, அவனை மிகவும் சந்தோஷப்படுத்தின மனுஷன் சபிக்கப்படக்கடவன். அந்த மனுஷன், கர்த்தர் மனம்மாறாமல் கவிழ்த்துப்போட்ட பட்டணங்களைப் போலிருந்து, காலமே அலறுதலையும் மத்தியான வேளையிலே கூக்குரலையும் கேட்கக்கடவன்" (எரே 20:15,16)

எரேமியாவுக்கு தன்னுடைய பிறப்பைக் குறித்து கோபம் வருகிறது. தன்னுடைய தாயின் வயிற்றிலேயே, தான் செத்துப்போயிருக்க வேண்டும் என்று எரேமியா விரும்புகிறார். தன்னுடைய முதல் மூச்சே கடைசி மூச்சாகயிருக்கவேண்டும் என்பது எரேமியாவின் விருப்பம். "என் தாயார் எனக்குப் பிரேதக்குழியும், நான் என்றைக்கும் பிரசவியாத சூலுமாய் இருக்கத்தக்கதாகக் கர்ப்பத்திலே நான் கொலைசெய்யப்படாமற்போனதென்ன?" (எரே 20:17) என்று எரேமியா கோபத்தோடு கேட்கிறார்.

தான் இந்த உலகத்தில் பிறவாதிருக்க வேண்டும் என்று நினைப்பதும், இந்த உலகத்தில் பிறப்பதற்கு முன்பாகவே தான் செத்துப்போகவேண்டும் என்று நினைப்பதும் எரேமியாவின் பார்வைக்கு சரியாகத் தெரிகிறது. தன்னுடைய சிந்தனை நீதியானது என்று எரேமியா நினைக்கிறார். "நான் வருத்தத்தையும் சஞ்சலத்தையும் கண்டு, என் நாட்கள் வெட்கமாய்க் கழியும்படிக்கு நான் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டதென்ன?" (எரே 20:18) என்று எரேமியா சொல்லுகிறார்.

எரேமியா தன் தாயின் கர்ப்பத்திலிருந்தபோது, அங்கே அவர் சத்துருக்களுக்கு மறைவாயிருந்தார். அவர் தீமையறியாதவராயிருந்தார். அவருக்கு ஒருவரும் தீங்குசெய்யவில்லை. அவருடைய தாயின் கர்ப்பமே அவருக்கு பாதுகாப்பான ஸ்தலமாகயிருந்தது. தன்னுடைய தாயின் கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்ட நாள், எரேமியாவுக்கு துக்க நாளாயிருக்கிறது.

எரேமியா இங்கு சொல்லுகிற வார்த்தைகளை, நம்முடைய ஜீவியத்தில் பின்பற்றக்கூடாது. இந்த வசனங்களிலிருந்து நாம் நல்ல பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். மனுஷருடைய ஜீவியம் மாயையாயிருக்கிறது. நம்முடைய ஆவி சஞ்சலம் நிரம்பியதாக இருக்கிறது.

பாவிகள் தங்கள் ஜீவியகாலமெல்லாம் பாவம் செய்கிறார்கள். மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றவேண்டுமென்று விரும்புகிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அழிவை நோக்கி போய்க்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய காலம் இவர்களுக்கு சபிக்கப்பட்டதாகவே இருக்கும். பாவிகள் தங்களுக்கு ஆசீர்வாதம் கிடைக்குமென்று நினைக்கிறார்கள். துன்மார்க்கருக்கு சந்தோஷமுமில்லை, ஆசீர்வாதமுமில்லை.

எரேமியா தன்னுடைய பிறந்த நற்செய்தியை, தன் தகப்பனுக்கு சொன்ன மனுஷனை சபிக்கிறார். செய்தியினிமித்தமாய், செய்தியை சொன்னவரை சபிக்கிறார். இது எரேமியாவின் மதியீனம். இயேசுகிறிஸ்து தம்முடைய நற்செய்தியை யூதர்கள் மத்தியில் சுவிசேஷமாய் அறிவித்தார். யூதர்களோ இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. இயேசுகிறிஸ்து சொன்ன வார்த்தைகளினிமித்தமாய், அவர்கள் அவரையும் ஏற்றுக்கொள்ளவில்லை. மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவை யூதர்கள் பகைத்தார்கள்.

இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும். நம்முடைய இருதயத்தில் கோபம் நிரம்பியிருக்கும்போது, அது கோபமான வார்த்தைகளையே பேசும். நம்முடைய நாவின் வார்த்தைகளை கட்டுப்படுத்தவேண்டும். நாவுக்கு கடிவாளம் போடவேண்டும்.

"என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன்" *(சங் 39:1).*

21 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் பிரசங்கம் பண்ணுகிறார். அவருடைய தீர்க்கதரிசன செய்திகள், அவர் பிரசங்கம்பண்ணிய வரிசையின் பிரகாரம், இந்தப் புஸ்தகத்தில் கோர்க்கப்படவில்லை. இந்த அதிகாரத்தில் சிதேக்கியா ராஜாவைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்திற்கு பின்பு யோவாகாஸ், யோயாக்கீம், கோனியா ஆகியோரைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இவர்களுடைய ஆட்சிக்காலம், சிதேக்கியா ராஜாவின் ஆட்சிக்காலத்திற்கு முந்தியதாகும்.

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்கள், சிதேக்கியா ராஜா யூதாதேசத்தை ஆட்சிபுரிந்த காலத்தில் சொல்லப்பட்டவையாகும். சிதேக்கியா தன்னுடைய தீர்க்கதரிசியை எரேமியாவிடம் அனுப்புகிறார். கர்த்தரிடத்தில் தங்களுக்காக விண்ணப்பம்பண்ணுமாறு சிதேக்கியா எரேமியாவுக்கு செய்தி சொல்லியனுப்புகிறார் (எரே 21:1,2).

எரேமியா தேவனுடைய நாமத்தில் சிதேக்கியா ராஜாவுக்கு பதில் சொல்லுகிறார். எரேமியாவின் செய்தி சிதேக்கியாவுக்கு நற்செய்தியல்ல. எருசலேம் நகரம் நிச்சயமாகவே அழிந்து போகும் என்று எரேமியா முன்னறிவிக்கிறார் (எரே 21:3-7). யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து ராஜாவிடம் போகுமாறு எரேமியா ஆலோசனை சொல்லுகிறார் (எரே 21:8-10). சிதேக்கியா ராஜாவும் அவருடைய குடும்பத்தாரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்கள் இருதயத்தைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுமென்று எரேமியா ஆலோசனை சொல்லுகிறார் (எரே 21:11-17).

கர்த்தரிடத்தில் விசாரியும்
எரே 21:1-7

எரே 21:1. சிதேக்கியா ராஜா மல்கியாவின் குமாரனாகிய பஸ்கூரையும் ஆசாரியனான மாசெயாவின் குமாரனாகிய செப்பனியாவையும் எரேமியாவினிடத்தில் அனுப்பி:

எரே 21:2. நீர் எங்களுக்காகக் கர்த்தரிடத்தில் விசாரியும்; பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எங்களுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்கிறான்; ஒருவேளை கர்த்தர் தம்முடைய எல்லா அற்புதச் செயலின்படியேயும் எங்களுக்கு அநுக்கிரகஞ்செய்து, அவனை எங்களைவிட்டுப் போகப்பண்ணுவார் என்று சொல்லியனுப்பினபோது,

எரே 21:3. எரேமியா அவர்களைப்பார்த்து, நீங்கள் சிதேக்கியாவுக்குச் சொல்லவேண்டியது:

எரே 21:4. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, உங்களை அலங்கத்துக்கு வெளியே முற்றிக்கைபோட்ட பாபிலோன் ராஜாவோடும் கல்தேயரோடும், நீங்கள் யுத்தம்பண்ணும்படி உங்கள் கைகளில் பிடித்திருக்கிற யுத்த ஆயுதங்களை நான் திருப்பிவிட்டு, அவர்களை இந்த நகரத்தின் நடுவிலே சேர்த்து,

எரே 21:5. நான் நீட்டின கையினாலும் பலத்த புயத்தினாலும் கோபமும் உக்கிரமும் மகா கடுமையுமாக உங்களோடே யுத்தம்பண்ணி,

எரே 21:6. இந்த நகரத்தின் குடிகளையும், மனுஷரையும், மிருகங்களையும் சங்கரிப்பேன்; மகா கொள்ளைநோயால் சாவார்கள்.

எரே 21:7. அதற்குப்பின்பு நான் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவையும், அவன் ஊழியக்காரரையும், ஜனத்தையும், இந்த நகரத்திலே கொள்ளைநோய்க்கும் பட்டயத்துக்கும் பஞ்சத்துக்கும் தப்பி மீதியானவர்களையும் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய கையிலும், அவர்கள் சத்துருக்களின் கையிலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்; அவன் அவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டுவான்; அவன் அவர்களைத் தப்பவிடுவதுமில்லை, அவன் மன்னிப்பதுமில்லை, இரங்குவதுமில்லையென்று கர்த்தர் உரைக்கிறார் என்றான்.

சிதேக்கியா ராஜாவுக்கு மிகுந்த நெருக்கமுண்டாயிற்று. கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை சிதேக்கியா தன்னுடைய துக்கநாட்களில் அறிந்துகொள்ள விரும்புகிறார். இதற்காக பஸ்கூரையும் செப்பனியாவையும் எரேமியா தீர்க்கதரிசியினிடத்தில் அனுப்புகிறார். சிதேக்கியாவுக்கு எரேமியாவின் உதவி தேவைப்படுகிறது. கர்த்தருடைய ஆலோசனை எரேமியா மூலமாய் வெளிப்படும். எரேமியா தீர்க்கதரிசியின் உதவியைப்பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சிதேக்கியா விரும்புகிறார். சிதேக்கியா இந்த மட்டும் தன்னைத் தாழ்த்துகிறார். ஆனால் எரேமியா சொல்லுகிற ஆலோசனையின்படி செயல்படுவதற்கும், கர்த்தர் தன்னை ஆளுகை செய்வதற்கும் சிதேக்கியா தன்னை ஒப்புக்கொடுக்கவில்லை. சிதேக்கியா அந்த அளவுக்கு தன்னை கர்த்தருடைய சமுகத்தில் முற்றிலுமாய்த் தாழ்த்தவில்லை.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாதேசத்திற்கு விரோதமாக யுத்தம் பண்ண வருகிறான். அவன் தேசத்தின் நிலங்களையெல்லாம் பிடித்துக்கொண்டான். இப்போது எருசலேம் நகரத்தை சுற்றிலுமாய் முற்றிக்கைப் போட்டிருக்கிறான். எருசலேம் நகரத்திலுள்ள ஜனங்களை தன்னுடைய பட்டயத்தால் கொன்றுபோட்டு, யூதா மனுஷருடைய பொக்கிஷங்களையெல்லாம் கொள்ளையிட்டு, அதைத் தன்னுடைய தேசத்திற்கு கொண்டு போகவேண்டுமென்று பாபிலோன் ராஜா ஆசைப்படுகிறான். இந்தச் செய்தியைக் கேட்டு சிதேக்கியா மனங்கலங்குகிறான்.

சிதேக்கியா எரேமியாவிடம் நேரடியாகப் போகவில்லை. பஸ்கூரையும், செப்பனியாவையும் எரேமியாவினிடத்தில் அனுப்புகிறான். பஸ்கூர் மல்கியாவின் குமாரன். செப்பனியா ஆசாரியனான மாசெயாவின் குமாரன். சிதேக்கியா ராஜா எரேமியாவினிடத்தில் தன்னுடைய தூதுவர்களை அனுப்பாமல், தானே நேரடியாகப் போயிருந்தால், அது அவனுக்கு நன்றாயிருந்திருக்கும் . ஆனால் சிதேக்கியாவோ அந்த அளவுக்கு தன்னைத் தாழ்த்தவில்லை.

சிதேக்கியா ராஜாவின் கட்டளைப் பிரகாரம் பஸ்கூரும் செப்பனியாவும் எரேமியாவினிடத்திற்கு போகிறார்கள். இவர்கள் இருவரும் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர்கள். ராஜா தங்களுக்கு சொன்ன செய்தியை, இவர்கள் எரேமியாவினிடத்தில் பணிவோடும் மரியாதையோடும் அறிவிக்கப்போகிறார்கள். எரேமியா தீர்க்கதரிசியும் ஒரு ஆசாரியர். பஸ்கூரும் செப்பனியாவும் எரேமியாவைப்போய் பார்ப்பதினால், எரேமியா ஆசாரியர்களுக்கு மத்தியில் உயர்த்தப்படுகிறார். எரேமியாவுக்கு கனமும் மகிமையும் உண்டாயிற்று.

"நீர் எங்களுக்காக கர்த்தரிடத்தில் விசாரியும்" *(எரே 21:2).* இதுவே சிதேக்கியா ராஜா எரேமியாவுக்கு அனுப்பிய செய்தி. கல்தேயரின் சேனையிலுள்ளவர்கள், எருசலேம் நகரத்தின் எல்லையைச் சுற்றிலும் நிற்கிறார்கள். அவர்கள் நகரத்தை முற்றிக்கைபோட்டிருக்கிறார்கள். எருசலேம் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கு அவர்கள் ஆயத்தமாயிருக்கிறார்கள். தேசத்திலும், அரண்மனையிலும் பயமும் குழப்பமும் சூழ்ந்திருக்கிறது.

சிதேக்கியா ராஜாவும், அரண்மனையிலுள்ள பிரதானிகளும் எரேமியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று நம்புகிறார்கள். ஆனாலும் அவர்களுக்கு எரேமியாவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய அவர்களுக்கு மனதில்லை.

அவர்கள் கர்த்தரிடத்தில் நேரடியாக ஜெபம்பண்ணாமல், எரேமியா தங்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். எரேமியா கர்த்தருடைய சிநேகிதர். கர்த்தர் எரேமியாவின் ஜெபத்திற்கு பதில் கொடுப்பார் என்றும், தாங்கள் ஜெபம்பண்ணினால் கர்த்தர் பதில் கொடுக்கமாட்டார் என்றும் யூதாவின் மனுஷர் நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட நினைவு அவர்களுடைய பாவத்தினால் வந்திருக்கிறது. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்து, கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறார்கள். கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போயிருக்கிறார்.

"நீர் எங்களுக்காக கர்த்தரிடத்தில் விசாரியும்" என்று சிதேக்கியா தன்னுடைய மனுஷர் மூலமாய் எரேமியாவுக்கு செய்தி சொல்லி அனுப்புகிறார். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யூதா தேசத்தாருக்கு விரோதமாக யுத்தம் செய்கிறான். தேசத்தில் நெருக்கமுண்டாயிருக்கிறது. இந்த சூழ்நிலையில் தாங்கள் என்ன செய்யவேண்டும் என்று சிதேக்கியா அறிந்துகொள்ள விரும்புகிறான்.

சிதேக்கியா ராஜாவும், யூதாவின் மனுஷரும் இதுவரையிலும் தங்களுடைய சுயபலத்தினாலும், சுயபராக்கிரமத்தினாலும் நேபுகாத்நேச்சாரோடு யுத்தம்பண்ணினார்கள். யுத்தத்தில் யூதாவின் மனுஷருக்கு இதுவரையிலும் தோல்வி உண்டாயிற்று. கர்த்தருக்கு கீழ்ப்படிந்து யுத்தம்பண்ணினால் தங்களுக்கு ஜெயம் கிடைக்கும் என்று சிதேக்கியா ராஜா நம்புகிறான். இதற்காகவே, எரேமியா கர்த்தருடைய செய்தியை விசாரித்து, தங்களுக்கு சொல்லவேண்டும் என்று சிதேக்கியா விரும்புகிறான்.

கர்த்தர் தம்முடைய கிருபையின் வழியை நமக்கு காண்பிக்கிறார். நம்மோடு அன்பாய்ப் பேசுகிறார். நம்முடைய பாவத்தின் வழிகளிலிருந்து விலகி வருவதற்கு, கர்த்தருடைய கிருபை நமக்கு உதவிபுரியும். கிருபையின் காலத்தில் கர்த்தரிடத்தில் திரும்பி வருவது நமக்கு நல்லது. இல்லையென்றால், நம்முடைய பாவங்களினிமித்தமாய், நமக்கு துன்பங்களும், வேதனைகளும் வரும். கர்த்தருடைய கிருபையும் நம்மைவிட்டு விலகிப்போகும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் மிகுந்த சிரமத்தோடு, கர்த்தருடைய முகத்தைத் தேடவேண்டியதுவரும்.

கர்த்தர் நமக்கு அருகாமையிலிருக்கும் காலத்தை, நம்முடைய நன்மைக்கேதுவாக பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் நமக்கு துன்பங்களும், வேதனைகளும் வரும்போது, மனதில் சந்தோஷமும் சமாதானமுமில்லாமல், கலக்கங்களும் குழப்பங்களும் நிரம்பி, நாம் கர்த்தருடைய சமுகத்திற்கு வேதனையுடன் வரவேண்டியது வரும்.

"நீர் எங்களுக்காக கர்த்தரிடத்தில் விசாரியும்" என்னும் வாக்கியத்திற்கு, "நீர் எங்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசும்" என்று பொருள். கர்த்தர் தங்களுடைய முற்பிதாக்களுக்கு அநேக நன்மைகளையும், அற்புதங்களையும் செய்திருக்கிறார் என்பதை சிதேக்கியா அறிந்து வைத்திருக்கிறார். எரேமியா தீர்க்கதரிசி தங்களுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, கர்த்தர் ஒருவேளை தம்முடைய எல்லா அற்புத செயலின்படி, தங்களுக்கு அநுக்கிரகம் செய்வார் என்றும், நேபுகாத்நேச்சாரை தங்களைவிட்டு போகப்பண்ணுவார் என்றும் (எரே 21:2) சிதேக்கியா நினைக்கிறான்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதிராக எழும்பும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும். நமக்கு விரோதமாக எழும்புகிற சத்துருக்கள் பெலனற்றுப்போவார்கள். கர்த்தர் நமக்காக யுத்தம் செய்வார். நம்முடைய சத்துருக்களால் கர்த்தரோடு யுத்தம்பண்ண முடியாது. அவர்கள் நம்மைவிட்டு விலகிப்போய்விடுவார்கள். சிதேக்கியா இதை நம்பி, எரேமியா தங்களுக்காக கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டுமென்று, தன்னுடைய மனுஷர் மூலமாய் சொல்லி அனுப்புகிறான்.

சிதேக்கியா ராஜாவுக்கும், யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் நேபுகாத்நேச்சார் மூலமாக பிரச்சனை வந்திருக்கிறது. தாங்கள் இந்தப் பிரச்சனையிலிருந்து விடுவிக்கப்படவேண்டும் என்பதுதான் சிதேக்கியாவின் விருப்பம். யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப விரும்பவில்லை. தேவனோடு ஒப்புரவாக விரும்பவில்லை. தேவனோடு சமாதானமாய் ஜீவிக்கவும் விரும்பவில்லை. ஆனால் நேபுகாத்நேச்சார் மூலமாய் தங்களுக்கு வந்திருக்கும் பிரச்சனைகள் தங்களை விட்டு நீங்கவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

"அவனை (நேபுகாத்நேச்சாரை) எங்களைவிட்டுப் போகப்பண்ணுவார்" என்பதே சிதேக்கியாவின் விருப்பம். "கர்த்தர் எங்களிடத்திற்கு திரும்பி வருவார்" என்பது சிதேக்கியாவின் விருப்பமல்ல.

"இந்த ஒரு முறைமாத்திரம் நீ என் பாவத்தை மன்னிக்கவேண்டும்; உங்கள் தேவனாகிய கர்த்தர் இந்தச் சாவைமாத்திரம் என்னைவிட்டு விலக்க அவரை நோக்கி விண்ணப்பம்பண்ணுங்கள்" (யாத் 10:17) என்று எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சொன்னான்.

சனகெரிப் எருசலேம் நகரத்தை முற்றிக்கையிட்டபோது, சேனைகளின் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு அற்புதமாய் உதவிசெய்தார். ஏசாயா யூதாதேசத்திற்காக கர்த்தரிடத்தில் பரிந்துபேசினார்.

"இதினிமித்தம் ராஜாவாகிய எசேக்கியாவும் ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா தீர்க்கதரிசியும் பிரார்த்தித்து, வானத்தை நோக்கி அபயமிட்டார்கள். அப்பொழுது கர்த்தர் ஒரு தூதனை அனுப்பினார்; அவன் அசீரியருடைய ராஜாவின் பாளயத்திலுள்ள சகல பராக்கிரமசாலிகளையும், தலைவரையும், சேனாபதிகளையும் அதம்பண்ணினான்; அப்படியே சனகெரிப் செத்தமுகமாய்த் தன் தேசத்திற்குத் திரும்பினான்; அங்கே அவன் தன் தேவனுடைய கோவிலுக்குள் பிரவேசிக்கிறபோது, அவனுடைய கர்ப்பப்பிறப்பான சிலர் அவனைப் பட்டயத்தால் வெட்டிப்போட்டார்கள்" (2நாளா 32:20,21).

கர்த்தர் ஏசாயாவின் ஜெபத்தைக் கேட்டு யூதாவின் மனுஷருக்கு உதவிசெய்தார். அதுபோலவே இப்போது, கர்த்தர் எரேமியாவின் ஜெபத்தைக் கேட்டு தங்களுக்கும் உதவிசெய்வார் என்று சிதேக்கியா நம்புகிறான். எரேமியா தங்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்து பேசும்போது, கர்த்தர் தங்களுடைய சத்துருக்கள் எல்லோரையும் அழித்துப்போடுவார் என்று சிதேக்கியா நம்புகிறான்.

எசேக்கியாவின் சுபாவம் வேறு. சிதேக்கியாவின் சுபாவம் வேறு. எசேக்கியாவின் காலத்தில் யூதா மனுஷருடைய சுபாவம் வேறு. சிதேக்கியாவின் காலத்தில் யூதா மனுஷருடைய சுபாவம் வேறு. எசேக்கியாவின் காலத்தில் யூதாதேசத்திலுள்ள மனுஷர் எல்லோரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினார்கள். மக்கள் மத்தியில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று. யூதாதேசத்தார் எல்லோரும் கர்த்தருக்கு முன்பாக பயபக்தியாயிருந்தார்கள்.

ஆனால் இப்போது, சிதேக்கியாவின் காலத்தில், ராஜாவும் துன்மார்க்கமாயிருக்கிறான். யூதாதேசத்திலுள்ள ஜனங்களும் துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். இதனால் கர்த்தருடைய இரக்கமும் கிருபையும் அவர்கள்மீது வராமல், தேவனுடைய நியாயத்தீர்ப்பும், கோபமும், தண்டனையும் அவர்கள்மீது வருகிறது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், எரேமியா மூலமாய் கேட்கப்பட்ட சிதேக்கியாவின் விண்ணப்பத்திற்கு, உடனே பதில் கொடுத்துவிடுகிறார். எரேமியாவின் இருதயம் சிதேக்கியா ராஜாவின் இருதயத்தைவிட செம்மையாயிருக்கிறது. மற்ற ஆசாரியர்களின் இருதயத்தைவிடவும், எரேமியாவின் இருதயம் கர்த்தருக்கு முன்பாக சீராயிருக்கிறது. யூதாவின் மனுஷர் ஜெபம்பண்ணும்போது கர்த்தர் அவர்களுக்கு பிரதியுத்தரம் கொடுக்கவில்லை. எரேமியா ஜெபம்பண்ணியபோதோ, கர்த்தர் உடனே பதில்கொடுக்கிறார்.

பஸ்கூரும் செப்பனியாவும் எரேமியாவினிடத்தில் சிதேக்கியா ராஜாவின் வார்த்தையோடு வந்திருக்கிறார்கள். எரேமியா அவர்கள் மூலமாய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைத்த வார்த்தைகளை சொல்லி அனுப்புகிறார். யூதாவின் மனுஷர் தேவனாகிய கர்த்தரை, "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்" என்று அழைக்கலாம். கர்த்தர் இதுவரையிலும் இஸ்ரவேலுக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். அவர்களுக்கு இன்னும் அநேக நன்மைகளை செய்வதற்கு ஆயத்தமாயிருக்கிறார்.

சிதேக்கியா ராஜாவின் காலத்தில், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் இஸ்ரவேல் வம்சத்தார் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் பெயரளவில் இஸ்ரவேல் புத்திரராயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் கர்த்தருடைய கிருபையும், இரக்கமும் காணப்படவில்லை. கர்த்தர் அவர்களை தம்முடைய இஸ்ரவேலாக அங்கீகரிக்கவில்லை.

எருசலேமின் குடிகள் தங்களுடைய நகரத்தைப் பாதுகாத்துக்கொள்ள, தங்கள் சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும் நம்புகிறார்கள். பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேம் நகரத்தைச் சுற்றிலும் முற்றிக்கைப்போட்டிருக்கிறான். கல்தேயரின் சேனையிடமிருந்து தங்களுடைய நகரத்தை, தங்கள் சுயவல்லமையாலும், சுயமுயற்சியினாலும் பாதுகாத்துக் கொள்ளலாம் என்று யூதாவின் மனுஷர் நினைக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்கள் சித்திக்காது. அவர்களுடைய விருப்பங்கள் நிறைவேறாது. அவர்களுடைய சுயபலமும், சுயபராக்கிரமமும் அவமாய்ப்போகும்.

கல்தேயரின் சேனை இப்போது எருசலேம் நகரத்திற்கு வெளியே, அதைச் சுற்றிலுமாய் முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். கர்த்தரோ அவர்களை எருசலேம் நகரத்திற்கு நடுவிலே பிரவேசிக்கப் பண்ணுவார். அலங்கத்திற்கு வெளியே இருந்தவர்கள், நகரத்திற்குள்ளே வந்துவிடுவார்கள். யூதா மனுஷருடைய பலமும், பராக்கிரமமும் கல்தேயரோடு யுத்தம்பண்ணுவதற்கு போதுமானதாயிராது. யூதா மனுஷருடைய ஐசுவரியங்களும் இந்த யுத்தத்தில் பயன்படாது. கர்த்தர் எருசலேமுக்கு விரோதமாகவும், யூதா மனுஷருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணுகிறார். கர்த்தர் அவர்களை அழிப்பதற்கு, கல்தேயரை தம்முடைய கருவியாகவும் பட்டயமாகவும் பயன்படுத்துகிறார்.

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், இதோ, உங்களை அலங்கத்துக்கு வெளியே முற்றிக்கைபோட்ட பாபிலோன் ராஜாவோடும் கல்தேயரோடும், நீங்கள் யுத்தம்பண்ணும்படி உங்கள் கைகளில் பிடித்திருக்கிற யுத்த ஆயுதங்களை நான் திருப்பிவிட்டு, அவர்களை இந்த நகரத்தின் நடுவிலே சேர்த்துவிடுவார்" (எரே 21:4) என்று எரேமியா சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் இதுவரையிலும் கர்த்தருடைய ஜனமாயிருந்தார்கள். அவர்கள் தேவனுடைய இஸ்ரவேலாயிருந்தார்கள். கர்த்தரும் இஸ்ரவேலின் தேவனாயிருந்தார். இப்போதோ யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார்கள். கர்த்தரும் அவர்களைவிட்டு விலகிப்போயிருக்கிறார். கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு சகாயராயில்லாமல் சத்துருவாயிருக்கிறார்.

கர்த்தர் யூதர்களோடு கூடயிருந்த வரையிலும், அவர்களுக்கு பெலனாயிருந்தார். இப்போதோ கர்த்தர் யூதாவின் மனுஷரோடு கூடயில்லை. கர்த்தர் அவர்களுக்கு சகாயராயில்லை. கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு சிநேகிதராயில்லையென்றால், எரேமியாவும் அவர்களுக்கு சிநேகிதராயிருக்கமாட்டார்.

"நான் நீட்டின கையினாலும் பலத்த புயத்தினாலும் கோபமும் உக்கிரமும் மகா கடுமையுமாக உங்களோடே யுத்தம்பண்ணி, இந்த நகரத்தின் குடிகளையும், மனுஷரையும், மிருகங்களையும் சங்கரிப்பேன்; மகா கொள்ளைநோயால் சாவார்கள்" (எரே 21:5,6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நாம் கர்த்தருக்கு விரோதமாக கலகம்பண்ணினால், கர்த்தர் நமக்கு சகாயராயிருக்கமாட்டார். நம்முடைய ஆபத்து வேளைகளில் அவர் நமக்கு உதவி செய்ய வரமாட்டார். நம்முடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் நமக்கு ஆபத்துக்களை அனுமதிப்பார். கர்த்தர் தம்முடைய நீதியினால் நம்மோடு யுத்தம்பண்ணுவார். கர்த்தர் நமக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, நம்முடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ நம்மால் யுத்தத்தில் ஜெயிக்க முடியாது.

யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் அழிப்பதற்கு, கர்த்தர் கல்தேயரை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார். கர்த்தர் கல்தேயரின் வேலையைக் குறைத்து, அவர்களுடைய பிரயாசங்களை எளிதாக்குவார். கல்தேயர்கள் தங்கள் பட்டயத்தால் எருசலேமின் குடிகளை அழிப்பதற்கு முன்பாகவே, கர்த்தர் அந்த நகரத்தின் குடிகளையும், மனுஷரையும், மிருகங்களையும் சங்கரிப்பார். அவர்கள்மீது மகாகொள்ளைநோயை அனுப்புவார். கல்தேயரின் பட்டயத்தால் செத்துப்போகிற யூதர்களைவிட, கர்த்தர் அனுப்பின மகாகொள்ளைநோயால் செத்துப்போகிற யூதர்களின் எண்ணிக்கை அதிகமாயிருக்கும். இந்த யுத்தத்தில் கல்தேயருக்கு சேதமுண்டாகாது. யூதருக்கு நாசமுண்டாகும்.

யூதாதேசத்திற்கும், எருசலேம் நகரத்திற்கும் அழிவு வரும்போது, சிதேக்கியா ராஜாவும் அழிந்துபோவான். அவனுடைய ஊழியக்காரரும், எருசலேமின் குடிகளோடு அழிந்துபோவார்கள். பட்டயத்திற்கும் பஞ்சத்திற்கும், கொள்ளை நோய்க்கும் தப்பியவர்கள், கல்தேயருடைய கரங்களில் விழுவார்கள். கல்தேயர்கள் ஒருவரையும் தப்பவிடமாட்டார்கள். யாரையும் மன்னிக்கமாட்டார்கள். யாருக்கும் இரக்கம் காண்பிக்கமாட்டார்கள்.

கர்த்தர் சிதேக்கியா ராஜாவுக்கு வரப்போகும் அழிவை எரேமியா மூலமாய் முன்னறிவிக்கிறார். எரேமியா தங்களுக்காக கர்த்தரிடத்தில் விசாரிக்கவேண்டும் என்று சிதேக்கியா விரும்பினான். கர்த்தர் தங்களுக்கு ஆறுதலான செய்தியைக் கொடுப்பார் என்றும், தங்களை நேபுகாத்நேச்சாரிடமிருந்து காத்துக்கொள்வார் என்றும் எதிர்பார்த்தான்.

ஆனால் கர்த்தரோ சிதேக்கியாவின்மீதும், யூதாதேசத்தின்மீதும் கோபமாயிருக்கிறார். அவர்களுடைய பாவங்களே அவர்கள்மீது வந்திருக்கிற நியாயத்தீர்ப்புக்கு காரணம். அவர்கள் எப்படி அழியப்போகிறார்கள் என்பதை, கர்த்தர் எரேமியா மூலமாய் வெளிப்படுத்துகிறார்.

"அதற்குப்பின்பு நான் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவையும், அவன் ஊழியக்காரரையும், ஜனத்தையும், இந்த நகரத்திலே கொள்ளை நோய்க்கும் பட்டயத்துக்கும் பஞ்சத்துக்கும் தப்பி மீதியானவர்களையும் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய கையிலும், அவர்கள் சத்துருக்களின் கையிலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்; அவன் அவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டுவான்; அவன் அவர்களைத் தப்பவிடுவதுமில்லை, அவன் மன்னிப்பதுமில்லை, இரங்குவதுமில்லையென்று கர்த்தர் உரைக்கிறார்" (எரே 21:7).

ஜனங்களை நோக்கி எரே 21:8-10

எரே 21:8. பின்னையும் அவர், இந்த ஜனங்களை நோக்கி: இதோ, நான் உங்கள் முன்னே ஜீவவழியையும் மரணவழியையும் வைக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 21:9. இந்த நகரத்திலே தரிக்கிறவன் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவான்; உங்களை முற்றிக்கைபோடும் கல்தேயர் வசமாய்ப் புறப்பட்டுப் போய்விடுகிறவனோ பிழைப்பான்; அவன் பிராணன் அவனுக்குக் கிடைத்த கொள்ளைபொருளைப்போல் இருக்கும்.

எரே 21:10. என் முகத்தை இந்த நகரத்துக்கு விரோதமாய் நன்மைக்கு அல்ல, தீமைக்கே வைத்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அது பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படும்; அவன் அக்கினியால் அதைச் சுட்டெரிப்பானென்று சொல் என்றார்.

சிதேக்கியா ராஜாவும், யூதாவின் மனுஷரும் எரேமியாவின் தீர்க்கதரிசன ஊழியத்தை நம்புகிறார்கள். எரேமியாவின்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தருடைய வார்த்தை யூதாதேசத்திற்கு விரோதமாகவே வருகிறது. எரேமியா தங்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லுவார் என்று சிதேக்கியா எதிர்பார்க்கிறார். ஆனால் சிதேக்கியாவுக்கு கர்த்தருடைய சமுகத்திலிருந்து கோபமான வார்த்தைகளே புறப்பட்டு வருகிறது.

சிதேக்கியாவும், யூதாவின் மனுஷரும் எரேமியாவின்மீது வைத்திருந்த கொஞ்ச நம்பிக்கையும், மதிப்பும், மரியாதையும் அற்றுப்போகிறது. எரேமியா கர்த்தருடைய கோபமான வார்த்தைகளை ராஜாவுக்கும், யூதாவின் மனுஷருக்கும் சொல்லுவதினால், அவர்கள் எரேமியாவின்மீது கோபப்படுகிறார்கள். யூதர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப ஆயத்தமாயில்லை. எரேமியாவின் வார்த்தைகளை கேட்க கேட்க, யூதா மனுஷரின் கோபம் அதிகரிக்கிறது.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கல்தேயருக்கு தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று எரேமியா ஆலோசனை சொல்லுகிறார். தங்களுடைய ஜீவனைக் காத்துக்கொள்ள வேண்டுமென்றால், அவர்களுக்கு இதை தவிர வேறு உபாயம் எதுவும் நியமிக்கப்படவில்லை என்று எரேமியா தெளிவுபடுத்துகிறார்.

யூதாதேசத்திலே ஏராளமான கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யான வார்த்தைகளை பிரசங்கம்பண்ணுகிறார்கள். கர்த்தர் யூதாவின் மனுஷர்மீது பிரியமாயிருப்பதாக அவர்கள் பொய் சொல்லுகிறார்கள். கர்த்தர் யூதாதேசத்தை பாதுகாப்பார் என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். யூதாவின் மனுஷர் இதுவரையிலும் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை அதிகமாய்க் கேட்டார்கள். இப்போதோ எரேமியாவின் மூலமாய், கர்த்தருடைய உண்மையான வார்த்தைகள் வெளிப்படுகிறது. அதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"இந்த நகரத்திலே தரிக்கிறவன் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவான்" (எரே 21:9). "என் முகத்தை இந்த நகரத்துக்கு விரோதமாய் நன்மைக்கு அல்ல, தீமைக்கே வைத்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 21:10). கர்த்தர் தம்முடைய கோபத்தை வெளிப்படுத்துகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளோ கர்த்தருடைய கோபத்தை மூடிமறைக்க முயற்சிபண்ணுகிறார்கள்.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு தம்முடைய செய்தியை வெளிப்படுத்தவில்லை. அவர்கள் தங்களுடைய மனதின் விருப்பம்போல தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். தங்களுடைய சொந்த வார்த்தைகளை, கர்த்தர் சொல்லுவதாக சொல்லி மாய்மாலம் பண்ணுகிறார்கள்.

எருசலேமின் குடிகள் தங்களுடைய நகரத்தின் அலங்கத்தை நம்புகிறார்கள். அந்நிய தேசத்தார் தங்களுக்கு உதவிபுரிவார்கள் என்று நினைத்து அவர்களையும் நம்புகிறார்கள். தங்களுடைய சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும் நம்புகிறார்கள். நேபுகாத்நேச்சார் எருசலேமின் அலங்கத்திற்கு வெளியே முற்றிக்கைப்போட்டிருந்தாலும், அவனை தங்களால் ஜெயிக்க முடியும் என்று யூதாவின் மனுஷர் நம்பிக்கையோடிருக்கிறார்கள்.

ஆனால் நேபுகாத்நேச்சாரை யூதாவின் மனுஷரால் ஜெயிக்க முடியாது. யூதாவின் மனுஷர் நேபுகாத்நேச்சாரோடு யுத்தம்பண்ணும்போது, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணவேண்டும். யூதாவின் மனுஷர்மீது நேபுகாத்நேச்சார் ஒரு பக்கத்திலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மற்றொரு பக்கத்திலும் யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தம்முடைய நீட்டிய கையினாலும், பலத்த புயத்தினாலும், கோபமும், உக்கிரமும் மகாகடுமையுமாக அவர்களோடு யுத்தம்பண்ணுகிறார்.

எருசலேம் நகரம் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 21:10). அவன் நகரத்தை அழிப்பதோடு, அதை அவன் அக்கினியால் சுட்டெரிப்பான் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தாமே தம்முடைய முகத்தை எருசலேம் நகரத்திற்கு விரோதமாய், நன்மைக்கல்ல, தீமைக்கு வைத்திருக்கிறார். இந்த பேரழிவிலிருந்து யூதாவின் மனுஷராலும், எருசலேமின் குடிகளாலும் தப்பிக்கவே முடியாது.

யூதாவின் மனுஷர் கல்தேயருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதை நிறுத்துவிட்டு, அவனுடைய இரக்கத்திற்காகவும் தயவுக்காகவும் கெஞ்சி மன்றாடவேண்டும். யூதர்கள் கல்தேயர் வசமாய்ப் புறப்பட்டுப் போய்விடவேண்டும். அப்படிப்போனவர்கள் மாத்திரமே பட்டயத்திற்கு தப்பித்து பிழைப்பார்கள். அவர்களுடைய பிராணன் அவர்களுக்கு கிடைத்த கொள்ளைப்பொருள் போல் இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயரோடு யுத்தம்பண்ணினால் மரணமுண்டாகும். அவனுக்கு கீழ்ப்படிந்து, அவனுடைய தேசத்திற்கு சிறைப்பட்டுப்போனால், மரணத்திற்கு தப்பித்துக்கொள்ளலாம். கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு விரோதமாயிருக்கிறார். அவர்கள்மீது கோபமாயிருக்கிறார். இந்த சூழ்நிலையில், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கல்தேயர் வசமாய் புறப்பட்டுப்போவதே அவர்களுக்கு நன்மையானது.

கர்த்தர் யூதாமனுஷருக்கு முன்பாக ஜீவவழியையும், மரணவழியையும் வைக்கிறார். எந்த வழியை தெரிந்தெடுக்கவேண்டுமென்று யூதாவின் மனுஷரே தீர்மானம்பண்ண வேண்டும். யூதர்களுக்கு இது தீர்மானம்பண்ணவேண்டிய காலம். கர்த்தரும் அவர்களுக்கு விரோதமாகயிருக்கிறார். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களுக்கு மறுபடியும் ஒரு வாய்ப்பு கொடுக்கிறார். அவர்கள் ஜீவவழியை தெரிந்துகொண்டால் மரணத்திற்கு தப்பிப்பார்கள். மரணவழியை தெரிந்துகொண்டால் செத்துமடிவார்கள். கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிற வழியே ஜீவவழி.

"நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொள்" (உபா 30:19).

கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும், அழித்துப்போட வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறார். கர்த்தருடைய தீர்மானத்தில் மாற்றம் ஒன்றும் இல்லை. ஆனாலும், "இதோ, நான் உங்கள் முன்னே ஜீவவழியையும், மரணவழியையும் வைக்கிறேன்" (எரே 21:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வாக்கியத்தின் மூலமாக, அவர்கள் தப்பித்துக்கொள்வதற்கு கர்த்தர் எந்த வாய்ப்பையும் கொடுக்கவில்லை. அவர்களுக்கு அழிவு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அவர்களால் அழிவுக்கு தப்பிக்க முடியாது.

கர்த்தர் எருசலேமின் குடிகளுக்கு இரண்டுவிதமான அழிவை தீர்மானம் பண்ணியிருக்கிறார். அலங்கத்திற்கு வெளியே கல்தேயர்கள் பட்டயத்தோடிருக்கிறார்கள். அலங்கத்திற்குள்ளே பஞ்சமும் கொள்ளைநோயும் வந்திருக்கிறது. எருசலேம் நகரத்தில் தரிக்கிறவன், நகரத்திற்குள்ளே இருக்கிற பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் சாவான். எருசலேம் நகரத்தைவிட்டு தப்பித்து ஓடிப்போகவேண்டும் என்று தீர்மானம்பண்ணினால், அவனால் தப்பிக்க முடியாது. அலங்கத்திற்கு வெளியே இருக்கிற கல்தேயர்கள் தப்பி ஓடுகிற எருசலேமின் குடிகளை தங்கள் பட்டயத்தால் வெட்டிப்போடுவார்கள்.

எருசலேமின் குடிகள் தங்கள் சுயபலத்தையோ, சுயபராக்கிரமத்தையோ, அந்நிய தேசத்தாரின் உதவியையோ நம்பாமல், கல்தேயர் வசமாய்ப் புறப்பட்டுப்போய்விட வேண்டும். தங்களை முற்றிக்கைப்போட்டிருக்கும் கல்தேயரிடத்தில் சரணடையவேண்டும். அப்படி சரணடைகிறவர்கள் மாத்திரம் மரணத்திற்கு தப்பிப்பார்கள். அவர்களுடைய பிராணன் அவர்களுக்கு கிடைத்த கொள்ளைப்பொருள் போல் இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். கல்தேயரிடம் சரணடைகிற யூதர்கள், பலவான் கையிலிருந்து மீட்கப்பட்டவர்கள் போல இருப்பார்கள்.

யூதா மனுஷரின் முன்னோர்கள் கர்த்தருக்கு பயந்து ஜீவித்தார்கள். கர்த்தரும் அவர்களோடு கூடயிருந்து அவர்களுக்கு உதவிசெய்தார். அசீரியர் யூதாதேசத்தின்மீது யுத்தம்பண்ண வந்தபோது, கர்த்தர் அசீரியரைத் துரத்திவிட்டார். அசீரியருக்கு தோல்வி உண்டாயிற்று. அப்பொழுது நடந்ததுபோலவே, இப்போது, தங்களால் கல்தேயரின் பாளயத்தை சூறையாடிப் போடமுடியும் என்று யூதர்கள் நினைக்கிறார்கள்.

"உன் கயிறுகள் தளர்ந்துபோம்; பாய்மரத்தைக் கெட்டிப்படுத்தவும், பாயை விரிக்கவுங்கூடாமற்போம்; அப்பொழுது திரளான கொள்ளைபொருள் பங்கிடப்படும்; சப்பாணிகளும் கொள்ளையாடுவார்கள்" *(ஏசா 33:23).*

கர்த்தர் இப்பொழுது யூதாவின் மனுஷருக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தம் ஒன்றும் கொடுக்கவில்லை. அவர்கள் தங்களுக்குத் தாங்களே வாக்குத்தத்தம் சொல்லிக்கொள்கிறார்கள். கர்த்தர் அவர்களை சபிக்கிறார். ஆனால் அவர்களோ தங்களைத் தாங்களே ஆசீர்வதிக்கிறார்கள். கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு ஒரே ஒரு வாய்ப்பு மாத்திரமே கொடுக்கிறார். அவர்கள் தங்களை முற்றிக்கைப்போடும் கல்தேயர் வசமாய் புறப்பட்டுப்போய்விட வேண்டும். கல்தேயரிடத்தில் சரணடையவேண்டும். அப்போது அவர்களுடைய பிராணன் தப்பிக்கும். இந்த ஆலோசனையே, கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு முன்பாக வைக்கும் ஜீவவழியாகும்.

யூதாராஜாவின் குடும்பத்தாரையும் நோக்கி எரே 21:11,12

எரே 21:11. யூதாராஜாவின் குடும்பத்தாரையும் நோக்கி: கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 21:12. தாவீதின் குடும்பத்தாரே, உங்கள் செய்கைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப்போல் புறப்பட்டு, அவிக்கிறவன் இல்லாமல் எரியாதபடிக்கு, நீங்கள் ஏற்கனவே நியாயங்கேட்டு, பறிகொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்குத் தப்புவியுங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் ராஜாவும், அவருடைய பிரபுக்களும் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படவேண்டும். கர்த்தர் யூதாவின் ஜனங்களுக்கு பொதுவான கட்டளையை சொல்லுகிறார். யூதாராஜாவின் குடும்பத்தாருக்கோ இங்கு விசேஷித்த கட்டளையைச் சொல்லுகிறார்.

யூதாவின் ராஜாவும், அவனுடைய பிரபுக்களும் நீதியாய் நியாயம் விசாரிக்கவேண்டும். ஜனங்களுடைய வழக்குகளை விசாரிக்கும்போது, பட்சபாதமில்லாமல், நீதியான தீர்ப்பு சொல்லவேண்டும். பறிகொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்கு தப்புவிக்கவேண்டும்.

வழக்குகளை விசாரித்து தீர்ப்பு சொல்லுவதில் காலதாமதம் இருக்கக்கூடாது. துன்மார்க்கருக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காக, வழக்கை விசாரிக்காமல் காலதாமதம் பண்ணக்கூடாது. நியாயாசனத்தில் அமர்ந்திருக்கிறவர்கள், கர்த்தருடைய பிரதிநிதிகளாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு பயந்து வழக்குகளை விசாரித்து, நீதியான தீர்ப்பு சொல்லவேண்டும்.

அநீதியான தீர்ப்பு சொல்லுகிறவர்கள்மீது, தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு வரும். அநியாயக்காரர்கள் தங்களுக்குத் தாங்களே அழிவை வரவழைத்துக்கொள்வார்கள்.

"உங்கள் செய்கைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப்போல் புறப்பட்டு, அவிக்கிறவன் இல்லாமல் எரியாதபடிக்கு" *(எரே 21:12)* தாவீதின் குடும்பத்தார், நியாயமான தீர்ப்பு சொல்லவேண்டும். திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் நன்மை செய்யவேண்டும்.

தாவீதின் குடும்பத்தார் ஏழைகளுக்கு தீங்கு செய்தால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வரும். தாவீதின் குடும்பத்தாரும் தீங்குகளை அனுபவிப்பார்கள். தாவீதின் வம்சத்தில் வந்திருக்கிறவர்கள் நன்மையான செய்கைகளை செய்யவேண்டும். அவர்களுடைய செய்கைகள் பொல்லாப்பாயிருக்கும்போது, கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது அக்கினியைப்போல புறப்பட்டு வரும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தாவீதின் குடும்பத்தாரும் தப்பிக்க முடியாது.

தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்காக ஜெபம்பண்ணும்போது, கர்த்தருடைய கிருபை அவர்கள்மீது வந்து இறங்கும். தீர்க்கதரிசிகளின் ஜெபங்களை விரும்புகிறவர்கள், அவர்களுடைய வார்த்தைகளையும் விரும்பவேண்டும். அவர்களுடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். தீர்க்கதரிசிகள், ஜனங்களுடைய பாவங்களை கண்டித்து உணர்த்தும்போது, யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். ராஜாவும், அவனுடைய பிரபுக்களும் தங்களுடைய பாவங்களைவிட்டு விலகிவரவேண்டும்.

யூதா மனுஷர் மத்தியில், ராஜாக்களும், பிரபுக்களும் ஜனங்களுக்கு முன்பாக நல்ல முன்மாதிரியாயிருக்கவேண்டும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும் காலமாயிருக்கிறது. தாவீதின் குடும்பத்தார் முதலாவதாக மனந்திரும்ப வேண்டும். அவர்களே முதலாவதாக தங்கள் பாவங்களைவிட்டு விலகிவரவேண்டும். ராஜாவும், அவருடைய பிரபுக்களும் பரிசுத்தமாயிருந்தால்தான், ஜனங்கள் மத்தியில் அவர்களால் பரிசுத்தத்தைப்பற்றி பேசமுடியும். ராஜாவின் இருதயம் புதுப்பிக்கப்பட்டால்தான், ஜனங்களின் இருதயம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று, ராஜாவால் சொல்ல முடியும்.

கர்த்தர் யூதா ராஜாவின் குடும்பத்தாருக்கு விசேஷித்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் ஏழைகளை ஒடுக்குகிறவர்களையும், துன்மார்க்கரையும் நீதியாய்த் தண்டிக்கவேண்டும். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, பறிகொடுத்தவர்களை, ஒடுக்குகிறவனுடைய கைக்கு தப்புவிக்கவேண்டும்.

எரேமியா தீர்க்கதரிசி யூதா ராஜாவின் குடும்பத்தாரைப்பற்றிச் சொல்லும்போது, அவர்களை, "தாவீதின் குடும்பத்தாரே" என்று அழைக்கிறார். அவர்கள் தாவீதின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கவேண்டும். தாவீது சமஸ்த இஸ்ரவேலருக்கும் நன்மை செய்தார். அவர்களுடைய வழக்குகளை நீதியாயும் நியாயமாயும் விசாரித்தார். அவர்களுக்கு நீதியான தீர்ப்புக்களைச் சொன்னார். தாவீதின் குடும்பத்தாரும், தாவீதின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவர்களும் நீதியான தீர்ப்பு சொல்லவேண்டும்.

பள்ளத்தாக்கில் வாசம்பண்ணுகிறவளே எரே 21:13,14

எரே 21:13. இதோ, பள்ளத்தாக்கில் வாசம்பண்ணுகிறவளே, சமனான இடத்தில் கன்மலையாய் இருக்கிறவளே, எங்களுக்கு விரோதமாய் வருகிறவன் யார் என்றும், எங்கள் வாசஸ்தலங்களுக்குள் வருகிறவன் யார் என்றும் சொல்லுகிற உனக்கு நான் எதிராளியாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 21:14. நான் உங்கள் கிரியைகளின் பலனுக்குத்தக்கதாய் உங்களை விசாரிப்பேன்; நான் அதின் காட்டிலே தீக்கொளுத்துவேன்; அது அதைச் சுற்றிலுமுள்ள யாவையும் பட்சிக்கும் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படவில்லை. அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி மாயையைப்பற்றிக் கொள்கிறார்கள். மாயையான காரியங்களை நம்புகிறார்கள். எருசலேம் பள்ளத்தாக்கில் வாசம் பண்ணுகிறவர்களின் நகரமாயிருக்கிறது. எருசலேமுக்கு எல்லா பக்கங்களிலும் உயர்ந்த பர்வதங்கள் இயற்கையான அரணாயிருக்கிறது. இந்த பர்வதங்களெல்லாம் எருசலேமுக்கு இயற்கையாய் அமைந்துள்ள அரண்களைப் போலவும், அலங்கங்களைப்போலவும் இருக்கிறது. இதனால் சத்துருக்கள் எருசலேம் நகரத்திற்குள் எளிதாய்ப் பிரவேசிக்க முடியாது.

எருசலேம் சமனான இடத்தில் கன்மலையைப்போல இருக்கிறது. கன்மலையை யாராலும் எளிதாக அசைக்க முடியாது. சத்துருக்கள் எருசலேமுக்குள் பிரவேசிக்கவும் முடியாது. எருசலேமை அசைக்கவும் முடியாது. கர்த்தர் எருசலேமுக்கு இயற்கையான பாதுகாப்புக்களைக் கொடுத்திருக்கிறார். எருசலேமின் குடிகளோ, தங்களுக்கு பாதுகாப்பு கொடுத்திருக்கிற கர்த்தரை நம்பாமல், இந்தப் பாதுகாப்புக்களை நம்புகிறார்கள்.

கர்த்தரே தங்களுக்கு அரணாகவும், அடைக்கலமாகவும் இருக்கிறார் என்று நம்பாமல், யூதர்கள் உயர்ந்த பர்வதங்களையும், தங்கள் கோட்டையின் அலங்கங்களையும் நம்புகிறார்கள். கர்த்தருடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் நம்பாமல், அவர்கள் தங்கள் சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும் நம்புகிறார்கள். "எங்களுக்கு விரோதமாய் வருகிறவன் யார் என்றும், எங்கள் வாசஸ்தலங்களுக்குள் வருகிறவன் யார் என்றும் சொல்லுகிறார்கள்" (எரே 21:13). எருசலேமின் குடிகள் வீண்பெருமையாய்ப் பேசுகிறார்கள். கர்த்தர் அவர்களைப் பார்த்து, "உனக்கு நான் எதிராளியாயிருக்கிறேன்" என்று சொல்லுகிறார்.

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு விரோதமாகவும், எருசலேமின் குடிகளுக்கு விரோதமாகவும் நியாயாதிபதியாய் வருகிறார். அவர்களுடைய கிரியைகளின் பலனுக்குத்தக்கதாய் கர்த்தர் அவர்களை விசாரிப்பார். தம்முடைய நீதியான பிரமாணத்தின் பிரகாரம், கர்த்தர் அவர்களுடைய வழக்குகளை விசாரித்து, அவர்களுக்கு நீதியான தீர்ப்புக்கொடுப்பார்.

எருசலேமின் குடிகள் பள்ளத்தாக்கிலே வாசம்பண்ணுகிறார்கள். அவர்களிடத்தில் பாவங்களும், அக்கிரமங்களும் நிரம்பியிருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய வழக்குகளை விசாரித்து, "அதின் காட்டிலே தீக்கொளுத்துவேன்" என்றும், "அது அதைச்சுற்றிலுமுள்ள யாவரையும் பட்சிக்கும்" (எரே 21:14) என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர்மேலும், எருசலேமின் குடிகள்மேலும் வரும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு யாராலும் தப்பிக்க முடியாது.

22 அதிகாரம்

எரேமியா யூதா ராஜாவின் அரண்மனைக்குப்போய், அங்கே சொன்ன வசனம் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எரேமியா யூதாவின் ராஜாக்களுக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறார். யோயாக்கீமின் ஆட்சிக்காலத்தில் எரேமியா இந்த வாக்கியங்களைச் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தை தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ராஜாக்களுக்கு, இந்த அதிகாரத்தில் விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

எரேமியா யோவாகாசுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். யோவாகாஸ் எகிப்து தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகப்பட்டார். யோவாகாசுக்குப் பின்பு யோயாக்கீம் யூதாதேசத்தை ஆட்சி செய்தார். எரேமியா யோயாக்கீமுக்கும் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார் (எரே 22:1-9). யோவாக்கீம் இந்த அதிகாரத்தில் சல்லூம் என்று அழைக்கப்படுகிறார் (எரே 22:10-12).

எரேமியா கர்த்தருடைய நாமத்தினால் யோயாக்கீமை கடிந்துகொள்கிறார். அவருக்கு அழிவு வரும் என்று எச்சரித்துச் சொல்லுகிறார் (எரே 22:13-19). யோயாக்கீம் இந்த அதிகாரத்தில் கோனியா என்று அழைக்கப்படுகிறார். யோயாக்கீமின் குமாரனாகிய யோயாக்கீனின் ஆட்சிக்காலத்தில் கர்த்தருடைய செய்தி எரேமியாவின் மூலமாய் சொல்லப்படுகிறது. கோனியா கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்க மறுக்கிறார். இதனால் தாவீதின் சிங்காசனம் வீழ்ந்துபோகும் என்று எரேமியா எச்சரித்துச் சொல்லுகிறார் (எரே 22:20-30).

யூதாவின் ராஜாவே
எரே 22:1-5

எரே 22:1. கர்த்தர் சொன்னது: நீ யூதா ராஜாவின் அரமனைக்குப்போய், அங்கே சொல்லவேண்டிய வசனம் என்னவென்றால்.

எரே 22:2. தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற யூதாவின் ராஜாவே, நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இந்த வாசல்களுக்குள் பிரவேசிக்கிற உம்முடைய ஜனமும் கர்த்தருடைய வார்த்தையைக்கேளுங்கள்.

எரே 22:3. நீங்கள் நியாயமும் நீதியும் செய்து, பறிகொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்குத் தப்புவியுங்கள்; நீங்கள் பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காமலும், கொடுமைசெய்யாமலும், இவ்விடத்தில் குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தாமலும் இருங்கள்.

எரே 22:4. இந்த வார்த்தையின்படியே நீங்கள் மெய்யாய்ச் செய்வீர்களாகில், தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிற ராஜாக்கள் இரதங்கள் மேலும் குதிரைகள்மேலும் ஏறி, அவனும் அவன் ஊழியக்காரரும் அவன் ஜனமுமாக இந்த அரமனை வாசல்களின் வழியாய் உட்பிரவேசிப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 22:5. நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளாமற் போனீர்களேயாகில் இந்த அரமனை பாழாய்ப்போம் என்று என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாராஜாவின் அரண்மனைக்குப்போய் அங்கே யூதாவின் ராஜாவுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லவேண்டும். "யூதாவின் ராஜாவே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்" (எரே 22:2) என்று எரேமியா ராஜாவுக்கு முன்பாக கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கவேண்டும்.

யூதாவின் ராஜாவைப்பற்றி இங்கே சொல்லப்படும்போது, அவர் "தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. தாவீதின் இருதயம் கர்த்தருக்கு ஏற்ற இருதயமாயிருந்தது. தாவீது சமஸ்த இஸ்ரவேல் தேசத்தை நீதியாயும், நியாயமாயும் ஆட்சிசெய்தார். ராஜாவுக்குரிய கண்ணியம் அவரிடத்திலிருந்தது. கர்த்தர் தாவீதோடு உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்.

தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற யூதாவின் ராஜாக்கள், தாவீதின் முன்மாதிரியை பின்பற்றவேண்டும். தாவீதைப்போலவே நீதியும், நியாயமும், நற்குணமும் உள்ளவர்களாயிருக்கவேண்டும். அப்போதுதான், கர்த்தர் தாவீதுக்கு வாக்குப்பண்ணிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்கள், யூதாவின் ராஜாக்களுக்கும் சித்திக்கும்.

எரேமியா யூதாராஜாவின் அரண்மனைக்குப்போய், அங்கே கர்த்தருடைய செய்தியை சொல்லவேண்டும். அவர் சொல்ல வேண்டிய செய்தியையும் கர்த்தர் அவருடைய வாயில் போடுகிறார். தேவனாகிய கர்த்தர் யூதாவின் ராஜாக்களிடத்தில் நல்ல சுபாவங்களை எதிர்பார்க்கிறார். அவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பாத்திரராயிருக்க வேண்டும். மிகுந்த கவனத்தோடு ஆட்சி புரியவேண்டும்.

யூதாவின் ராஜாக்கள் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து யூதாவின் ஜனத்தையும் எருசலேமின் குடிகளையும் ஆளுகை செய்கிறார்கள். அவர்களிடத்தில் ஜனங்களை ஆளுகை செய்யும் அதிகாரமும் பொறுப்புமுள்ளது. யூதாவின் ராஜாக்கள் தங்களிடத்திலுள்ள அதிகாரத்தை ஜனங்களுடைய நன்மைக்காக பயன்படுத்தவேண்டும். அவர்கள் யூதாவின் குடிகளுக்கு நன்மை செய்யவேண்டும். அவர்கள் நீதியும் நியாயமும் செய்யவேண்டும். பறிகொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்கு தப்புவிக்கவேண்டும். காயமடைந்தவர்களை பாதுகாத்து அவர்களுக்கு நீதி செய்யவேண்டும்.

யூதாவின் ராஜாக்கள், தங்களிடத்திலுள்ள அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தக்கூடாது. யாருக்கும் தீங்கு செய்யக்கூடாது. அவர்கள் பரதேசியையும், திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்கக்கூடாது. அவர்களுக்கு கொடுமை செய்யக்கூடாது. தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, அந்த ஸ்தலத்தில் குற்றமில்லாத இரத்தத்தை சிந்தக்கூடாது (எரே 22:3).

"அந்நியனைச் சிறுமைப்படுத்தாமலும் ஒடுக்காமலும் இருப்பீர்களாக; நீங்களும் எகிப்து தேசத்தில் அந்நியர்களாயிருந்தீர்களே. விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்காமல் இருப்பீர்களாக" (யாத் 22:21,22).

யூதாவின் ராஜாக்கள் நீதியும் நியாயமும் செய்யவேண்டும். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் கடமைகளை உண்மையாய் நிறைவேற்றவேண்டும். ஜனங்களுக்கு நீதி செய்வதாக உத்திரவாதம் கொடுக்கவேண்டும். அப்போது அவர்களுடைய தேசத்திற்கு நன்மை உண்டாகும். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பார். யூதாதேசத்தார் கர்த்தருடைய நன்மைகளைப் பெற்று செழித்திருப்பார்கள். தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆட்சிபுரிவதற்கு யூதா தேசத்தில் ராஜாக்கள் தொடர்ச்சியாய் இருந்துகொண்டிருப்பார்கள். அவர்கள் எல்லோருமே கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள். தாவீது ராஜாவின் கண்ணியத்தைக் காத்துக்கொள்வார்கள்.

யூதாவின் ராஜாக்கள் கர்த்தருக்கு பிரியமானவர்களாகவும், அவருக்கு பிரயோஜனமானவர்களாகவும் இருக்க வேண்டும். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் கடமைகளை உண்மையாயும் நேர்த்தியாயும் நிறைவேற்றவேண்டும். யூதாதேசத்தின் கண்ணியத்தையும், மரியாதையையும் காத்துக்கொள்ளவேண்டும். ராஜாக்கள் தங்களுடைய கடமைகளை உண்மையாய்ச் செய்யும்போது, அவர்களுடைய தேசம் செழிக்கும்.

யூதாவின் ராஜாக்கள் நியாயமும் நீதியும் செய்து, அநியாயமும் அநீதியும் செய்யாதிருக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து தேசத்தை ஆளுகை செய்யும்போது, கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்கள்மீதும், அவர்களுடைய சந்ததிமீதும் வந்து தங்கும்.

"இந்த வார்த்தையின்படியே நீங்கள் மெய்யாய்ச் செய்வீர்களாகில், தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிற ராஜாக்கள் இரதங்கள் மேலும் குதிரைகள்மேலும் ஏறி, அவனும் அவன் ஊழியக்காரரும் அவன் ஜனமுமாக இந்த அரமனை வாசல்களின் வழியாய் உட்பிரவேசிப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 22:4).

கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாதவர்கள்மீது தேவனுடைய கோபம் வரும். யூதாவின் ராஜாக்கள் கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து பாவம் செய்தால், அவர்களும், அவர்களுடைய சந்ததியும், அவர்களுடைய தேசமும் அழிந்து போகும்.

"நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளாமற்போனீர்களேயாகில் இந்த அரமனை பாழாய்ப்போம் என்று என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 22:5).

ராஜாக்களின் பாவத்தினால் அவர்களுடைய அரண்மனை அழிந்துபோகிறது. தேசம் எவ்வளவு பலமுள்ளதாகயிருந்தாலும், ராஜாக்களின் பாவங்கள் தேசத்தை பலவீனப்படுத்திவிடுகிறது. அவர்கள் எவ்வளவு செல்வசெழிப்போடிருந்தாலும், ராஜாக்கள் நீதியையும் நியாயத்தையும் செய்யவில்லையென்றால், அவர்களுடைய சந்ததி அழிந்துபோகும். அவர்களுடைய அரண்மனை பாழாய்ப்போகும். பாவம் பிரபுக்களினுடைய வீட்டை அழிப்பதுபோல, அது துன்மார்க்கரின் வீட்டையும் அழித்துபோடுகிறது.

கர்த்தர் யூதா தேசத்திற்கு அழிவு வரும் என்று சொல்லும்போது, தம்முடைய வார்த்தையை உறுதிபண்ணுவதற்காக, "என் பேரில் ஆணையிட்டேன்" என்று சொல்லுகிறார். கர்த்தர் ஆணையிடுவதற்கு, அவரைவிட பெரியவர் யாருமே இல்லை. அவரே பெரியவர். ஆகையினால் கர்த்தர் தம்முடைய நாமத்தினால் ஆணையிட்டு, தம்முடைய வார்த்தைகளை உறுதிபண்ணுகிறார்.

யூதா ராஜாவின் அரமனை
எரே 22:6-9

எரே 22:6. யூதா ராஜாவின் அரமனையைக் குறித்துக் கர்த்தர்: நீ எனக்குக் கீலேயாத்தைப்போலவும் லீபனோனின் கொடுமுடியைப்போலவும் இருக்கிறாய்; ஆனாலும் மெய்யாகவே நான் உன்னை வனாந்தரத்தைப்போலவும், குடியில்லாத பட்டணங்களைப் போலவும் ஆக்கிவிடுவேன்.

எரே 22:7. சங்காரக்காரரை அவரவர் ஆயுதங்களோடுங்கூட நான் உனக்கு விரோதமாக ஆயத்தப்படுத்துவேன்; உன் உச்சிதமான கேதுருக்களை அவர்கள் வெட்டி, அக்கினியிலே போடுவார்கள்.

எரே 22:8. அநேகம் ஜாதிகள் இந்த நகரத்தைக் கடந்துவந்து, அவனவன் தன் தன் அயலானை நோக்கி: இந்தப்பெரிய நகரத்துக்குக் கர்த்தர் இப்படிச்செய்தது என்னவென்று கேட்பார்கள்.

எரே 22:9. அதற்குப் பிரதியுத்தரமாக: அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரின் உடன்படிக்கையை விட்டுவிட்டு, அந்நிய தேவர்களைப் பணிந்துகொண்டு, அவைகளுக்கு ஆராதனை செய்தபடியினால் இப்படியாயிற்று என்பார்கள் என்று சொல்லுகிறார்.

யூதாவின் ராஜாக்கள் கர்த்தருடைய வார்த்தைகளை கேளாமல் போனால், அவர்களுடைய அரமனை பாழாய்ப்போகும். யூதாவின் ராஜாக்கள் நீதியும், நியாயமும் செய்யவில்லையென்றால், ராஜாக்களும் பிரபுக்களும் அழிந்துபோவார்கள். அவர்களுடைய சந்ததியும் அழிந்துபோகும். தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருப்பதற்கு யூதாவின் ராஜகுடும்பத்தில் ஒருவரும் இருக்கமாட்டார்கள். யூதாவின் ராஜாக்கள் பாவம் செய்யும்போது, அவர்களுடைய அரமனை அழிவதுபோல, அவர்களுடைய ராஜதானி பட்டணமாகிய எருசலேம் நகரமும் அழிந்துபோகும்.

யூதாவும் எருசலேமும் கர்த்தருடைய பார்வையில் மிகவும் விசேஷமானது. "நீ எனக்குக் கீலேயாத்தைப்போலவும் லீபனோனின் கொடுமுடியைப்போலவும் இருக்கிறாய்" (எரே 22:6) என்று கர்த்தர் சொல்லுகிறார். கீலேயாத் ஐசுவரியமுள்ளது. ஆனந்த சந்தோஷம் நிரம்பியது. எருசலேம் நகரம் கீலேயாத்தைப்போல ஐசுவரியம் நிரம்பியதாயிருக்கிறது.

லீபனோன் வலிமையான கொடுமுடியாகும். எருசலேம் நகரமும் லீபனோனைப்போல மிகவும் வலிமையானது. லீபனோனின் கோட்டை பலமுள்ளது. அதுபோலவே எருசலேமின் கோட்டையும் பலமிக்கது. லீபனோன் நகரத்தார் தங்களுடைய பாதுகாப்புக்கு, தங்களுடைய வலிமையான கோட்டையின்மீது நம்பிக்கை வைக்கிறார்கள்.

யூதாதேசம் கீலேயாத்தைப்போல செழிப்புள்ளதாயிருக்கிறது. அங்கே ஏராளமான கனிவிருட்சங்கள் இருக்கிறது. கர்த்தரோ யூதா தேசத்தை வனாந்தரத்தைப்போல ஆக்கிவிடுவதாக எச்சரிக்கிறார். யூதாவின் பட்டணங்கள் லீபனோனைப்போல, பெலமுள்ளதாயிருக்கிறது. கர்த்தரோ யூதாவின் பட்டணங்களை குடியில்லாத பட்டணங்களைப்போல ஆக்கிவிடுவதாக எச்சரிக்கிறார் (எரே 22:6).

கர்த்தர் யூதாவுக்கு விரோதமாகவும், எருசலேமுக்கு விரோதமாகவும் சத்துருக்களை நியமிக்கிறார். "சங்காரக்காரரை அவரவர் ஆயுதங்களோடுங்கூட நான் உனக்கு விரோதமாக ஆயத்தப்படுத்துவேன்" (எரே 22:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வாக்கியத்தில் "ஆயத்தப்படுத்துவேன்" என்னும் வார்த்தைக்கு, "பரிசுத்தப்படுத்துவேன்" அல்லது "பிரதிஷ்டைப்படுத்துவேன்" என்று பொருள் சொல்லலாம். யூதாவுக்கு விரோதமாக கர்த்தரே சங்காரக்காரரை ஆயத்தம்பண்ணுகிறார். அவர்களுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறவர்கள், கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கவேண்டும். கர்த்தரோடு யுத்தம்பண்ணி யாராலும் ஜெயிக்க முடியாது.

கர்த்தர் ஆயத்தம்பண்ணின சங்காரக்காரர்கள், யூதா தேசத்தின் உச்சிதமான கேதுருக்களை வெட்டிப்போடுவார்கள். அந்தக் கேதுருக்களை அக்கினியிலே போடுவார்கள். யூதா தேசத்தாரால் அவர்களை தடைபண்ணவும் முடியாது. அவர்களுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ணவும் முடியாது. சங்காரக்காரர்கள் யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுவார்கள்.

எருசலேம் நகரத்திற்கு மகாபெரிய அழிவு உண்டாகும். இது இரகசியமான அழிவாகயிருக்காது. எருசலேமின் அழிவு, எல்லோருக்கும் தெரியும் வண்ணமாக, பிரத்தியட்சமான பேரழிவாயிருக்கும். அநேகம் ஜாதிகள் அழிந்துபோயிருக்கிற எருசலேம் நகரத்தை கடந்துவருவார்கள். ஒரு காலத்தில் எருசலேம் நகரம் அழகுள்ளதாகவும், மகிமையுள்ளதாகவும் விளங்கிற்று. இப்போதோ அது வனாந்தரம் போலவும் குடியில்லாத பட்டணத்தைப்போலவும் இருக்கிறது.

எருசலேமுக்கு மிகப்பெரிய அழிவு வந்திருக்கிறது. நகரத்தை கடந்துவருகிற பல ஜாதிகள், அழிந்துபோயிருக்கிற எருசலேம் நகரத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். அவனவன் தன்தன் அயலானை நோக்கி: "இந்தப்பெரிய நகரத்துக்குக் கர்த்தர் இப்படிச்செய்தது என்ன" என்று கேட்பார்கள் (எரே 22:8).

அநேகம் ஜாதிகள் கேட்கும் கேள்விக்கு அவர்களே பதிலும் சொல்லுவார்கள். ஒவ்வொரு அயலானும் தங்களுடைய கேள்விகளுக்கு பதில் சொல்லிக்கொள்வான். "அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரின் உடன்படிக்கையை விட்டுவிட்டு, அந்நிய தேவர்களைப் பணிந்துகொண்டு, அவைகளுக்கு ஆராதனைசெய்தபடியினால் இப்படியாயிற்று" (எரே 22:9) என்று அவர்கள் பிரதியுத்தரம் சொல்லிக்கொள்வார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். அந்நிய தேவர்களைப் பணிந்துகொள்கிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். இதனால் தேவனுடைய கோபம் அவர்கள்மீது வந்திருக்கிறது. கர்த்தர் யூதா தேசத்தை வனாந்தரத்தைப்போலவும், எருசலேம் நகரத்தை குடியில்லாத பட்டணத்தைப்போலவும் அழித்துப்போடுகிறார். இந்த அழிவுக்கு யூதா மனுஷரின் பாவங்களே காரணம். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் எருசலேம் குடிகள்மீது தேவனுடைய கோபம் வந்திருக்கிறது.

சல்லூம்
எரே 22:10-12

எரே 22:10. மரித்தவனுக்காக அழவேண்டாம், அவனுக்காகப் பரிதபிக்கவும் வேண்டாம், சிறைப்பட்டுப் போனவனுக்காகவே அழுங்கள்; அவன் இனித் திரும்பிவருவதுமில்லை, தன் ஜநந பூமியைக் காண்பதுமில்லை.

எரே 22:11. தன் தகப்பனாகிய யோசியாவின் பட்டத்துக்கு வந்து, அரசாண்டு, இவ்விடத்திலிருந்து புறப்பட்டுப்போன யூதாவின் ராஜாவாயிருந்த யோசியாவின் குமாரனாகிய சல்லூமைக்குறித்து: அவன் இனி இங்கே திரும்ப வராமல்,

எரே 22:12. தான் கொண்டுபோகப்பட்ட ஸ்தலத்திலே மரிப்பான்; இந்த தேசத்தை அவன் இனிக் காண்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

சல்லூமின் அழிவைப்பற்றி இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. யோவாகாஸ் என்பவனே இங்கு சல்லூம் என்று அழைக்கப்படுகிறான். இவன் யூதாவின் ராஜாவாயிருந்த யோசியாவின் குமாரன். தேசத்தின் ஜனங்கள் யோவாகாசை ராஜாவாக்கினார்கள்.

"மரணமடைந்த அவனை அவனுடைய ஊழியக்காரர் ரதத்தின்மேல் ஏற்றி, மெகிதோவிலிருந்து எருசலேமுக்குக் கொண்டுவந்து, அவனை அவன் கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள்; அப்பொழுது தேசத்தின் ஜனங்கள் யோசியாவின் குமாரனாகிய யோவாகாசை அழைத்து, அவனை அபிஷேகம்பண்ணி, அவன் தகப்பன் ஸ்தானத்தில் அவனை ராஜாவாக்கினார்கள்" *(2இராஜா 23:30).*

"அப்பொழுது ஜனங்கள் யோசியாவின் குமாரனாகிய யோவாகாசை அழைத்து, அவனை எருசலேமிலே அவன் தகப்பன் ஸ்தானத்திலே ராஜாவாக்கினார்கள்" *(2நாளா 36:1).*

யோவாகாஸ் மூத்த குமாரனல்ல. ஆனாலும் தேசத்தின் ஜனங்கள் யோவாகாஸ் என்ற சல்லூமை ராஜாவாக்கினார்கள். இவனே தேசத்தை ஆளுகை செய்வதற்கு ஏற்றவன் என்று ஜனங்கள் தீர்மானித்தார்கள். தேசத்தின் ஜனங்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு விரோதமாக தீங்கு நினைத்தார்கள். தீங்கு செய்தார்கள். அவர்களுடைய செய்கை சரியானதல்ல என்பதை கர்த்தர் அவர்களுக்கு புரிய வைத்தார்.

யோவாகாஸ் என்ற சல்லூம், ராஜா ஆக்கப்பட்ட மூன்று மாதத்திற்குள், எகிப்தின் ராஜா, யூதா தேசத்தின்மீது யுத்தம்பண்ண வந்தான். அவன் யோவாகாஸ் என்ற சல்லூமை எகிப்து தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோனான். கர்த்தர் முன்னறிவித்த பிரகாரமாக இந்த சம்பவம் நிறைவேறிற்று.

"இனிக் காணாதிருப்பாய் என்று நான் உனக்குச் சொன்னவழியாய், கர்த்தர் உன்னைக் கப்பல்களிலே எகிப்திற்குத் திரும்பிக் கொண்டுபோகப்பண்ணுவார்; அங்கே உங்கள் சத்துருக்களுக்கு வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் விற்கப்படுவீர்கள்; உங்களைக் கொள்வாரும் இல்லாதிருப்பார்கள் என்றான்" (உபா 28:68).

யோவாகாஸ் என்ற சல்லூமோடு யூதா தேசத்து ஜனங்களில் வேறு யாரும் எகிப்து தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போகப்படவில்லை. இந்த சரித்திர சம்பவம் 2இராஜாக்கள் புஸ்தகத்திலும், 2நாளாகமம் புஸ்தகத்திலும் எழுதப்பட்டிருக்கிறது.

"யோசியாவின் குமாரனாகிய எலியாக்கீமை அவன் தகப்பனாகிய யோசியாவின் ஸ்தானத்தில் ராஜாவாக வைத்து, அவன் பேரை யோயாக்கீம் என்று மாற்றி, யோவாகாசைக் கொண்டுபோய் விட்டான்; இவன் எகிப்திலே போய் அங்கே மரணமடைந்தான்" (2இராஜா 23:34).

"அவனுடைய அண்ணனாகிய எலியாக்கீமை யூதாவின்மேலும் எருசலேமின் மேலும் ராஜாவாக்கி, அவன் பேரை யோயாக்கீம் என்று மாற்றினான்; அவன் தம்பியாகிய யோவாகாசை எகிப்தின் ராஜாவாகிய நேகோ எகிப்திற்குக் கொண்டுபோனான்" (2நாளா 36:4).

யோசியா ராஜா மரித்துப்போனான். ஜனங்கள் மரித்துப்போன யோசியாவுக்காக அழவேண்டாம் என்றும், அதற்கு பதிலாக யோசியாவின் குமாரனாகிய சல்லூமுக்காக அழுமாறும் கர்த்தர் சொல்லுகிறார். "மரித்தவனுக்காக அழவேண்டாம், அவனுக்காகப் பரிதபிக்கவும்வேண்டாம், சிறைப்பட்டுப்போனவனுக்காகவே அழுங்கள்; அவன் இனித் திரும்பிவருவதுமில்லை, தன் ஜநந பூமியைக் காண்பதுமில்லை" (எரே 22:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியாவும் மரித்துப்போன யோசியாவுக்காக அழுது புலம்பினார். "எரேமியா யோசியாவின்மேல் புலம்பல் பாடினான்; சகல பாடகரும் பாடகிகளும் இந்நாள் வரைக்கும் தங்கள் புலம்பல்களில் யோசியாவின்மேல் பாடுகிறார்கள்; அவைகள் இந்நாள்வரைக்கும் இஸ்ரவேலிலே வழங்கி வருகிறது; அவைகள் புலம்பலின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது" (2நாளா 35:25).

எரேமியா இப்போது யோசியாவுக்காக அழுவதை நிறுத்திவிடுகிறார். ஜனங்களும் யோசியாவுக்காக அழுவதை நிறுத்திவிடுகிறார்கள். இனிமேல் அவர்கள் மரித்துப்போன யோசியாவுக்காக அழாமல், அவருடைய குமாரனாகிய சல்லூமுக்காக அழவேண்டும். சல்லூமுக்கு யோவாகாஸ் என்னும் மறுபெயருமுள்ளது. யோவாகாஸ் இப்போது எகிப்து தேசத்தில் சிறையிருப்பிலிருக்கிறான். யோசியாவோ தன்னுடைய கல்லறையில் சமாதானமாகவும், மரியாதையாகவும் அடக்கம்பண்ணப் பட்டிருக்கிறான்.

மரித்துப்போன யோசியாவுக்காக அழவேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். யோசியாவின் குமாரனாகிய சல்லூம் என்னும் யோவாகாஸ் மிகுந்த வேதனையிலும், நெருக்கத்திலும், உபத்திரவத்திலும் இருக்கிறான். எகிப்து தேசத்து சிறையிருப்பிலிருக்கிறான். அவனுடைய ஜீவயமும் நெருக்கமுள்ளதாயிருக்கிறது. அவனுடைய மரணமோ மரியாதையில்லாத, அகாலமரணமாயிருக்கும். சல்லூம் ஒரு அடிமையைப்போல செத்துப்போவான்.

நாமும் மரித்துப்போன பரிசுத்தவான்களுக்காக அழவேண்டியதில்லை. அவர்களுக்காக பரிதபிக்க வேண்டிய அவசியமுமில்லை. அவர்கள் கர்த்தருடைய சமுகத்தில் பிரவேசித்திருக்கிறார்கள். அவர்களுக்கு நித்திய சந்தோஷமும், நித்திய சமாதானமும் உண்டாயிருக்கும். நாம் மரித்துப்போன பரிசுத்தவான்களுக்காக பரிதபிக்காமல், உயிரோடிருக்கிற பாவிகளுக்காக பரிதபிக்கவேண்டும்.

சல்லூம் இப்போது எகிப்து தேசத்து சிறையிருப்பிலிருக்கிறான். அவனுக்கு சிறையிருப்பிலிருந்து விடுதலை கிடைக்காது. சல்லூமும், யூதாதேசத்து ஜனங்களும், அவன் கர்த்தரால் விடுவிக்கப்படுவான் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் சல்லூமுக்கு விடுதலை கிடைக்காது என்று கர்த்தர் சொல்லிவிடுகிறார். அவன் எகிப்து தேசத்தில், அடிமையாகவே மரித்துப்போவான்.

"தன் தகப்பனாகிய யோசியாவின் பட்டத்துக்கு வந்து, அரசாண்டு, இவ்விடத்திலிருந்து புறப்பட்டுப்போன யூதாவின் ராஜாவாயிருந்த யோசியாவின் குமாரனாகிய சல்லூமைக்குறித்து: அவன் இனி இங்கே திரும்ப வராமல், தான் கொண்டுபோகப்பட்ட ஸ்தலத்திலே மரிப்பான்; இந்த தேசத்தை அவன் இனிக் காண்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 22:11,12).

கர்த்தர் சல்லூமைக்குறித்து சொல்லுகிற செய்தியை யூதாவின் மனுஷரால் நம்பமுடியவில்லை. கர்த்தருடைய வார்த்தை அவர்கள் எதிர்பார்த்த பிரகாரமாகயில்லை. ஆகையினால் சல்லூமைக்குறித்த செய்திகள் மறுபடியும் மறுபடியுமாக சொல்லப்படுகிறது.

சல்லூம் தன்னுடைய தகப்பனைப்போல நீதிமானாய் ஜீவிக்கவில்லை. அவன் யோசியாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவில்லை. சல்லூம் தன்னுடைய மூத்த சகோதரனுடைய ஆட்சி உரிமையை பறித்துக்கொண்டான். துன்மார்க்கமாய் ஜீவித்தான். கர்த்தர் சல்லூமின் பாவத்திற்கு ஏற்ற தண்டனையை அவனுக்கு கொடுத்துவிடுகிறார்.

யோயாக்கீம்
எரே 22:13-19

எரே 22:13. தனக்கு விஸ்தாரமான வீட்டையும், காற்று வீசும் விசாலமான மேலறைகளையும் கட்டுவேனென்று சொல்லி, பலகணிகளைத் தனக்குத்திறந்து, கேதுரு பலகைகளை வைத்து, ஜாதிலிங்கவருணம் பூசி,

எரே 22:14. அநீதியினாலே தன் வீட்டையும், அநியாயத்தினாலே தன் மேலறைகளையும் கட்டி, தன் அயலான் செய்யும் வேலைக்குக் கூலிகொடாமல், அவனைச் சும்மா வேலைகொள்ளுகிறவனுக்கு ஐயோ!

எரே 22:15. நீ கேதுருமர மாளிகைகளில் உலாவுகிறபடியினாலே ராஜாவாயிருப்பாயோ? உன் தகப்பன் போஜனபானம்பண்ணி, நியாயமும் நீதியுஞ்செய்தபோது அவன் சுகமாய் வாழ்ந்திருக்கவில்லையோ?

எரே 22:16. அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்; அப்படிச் செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 22:17. உன் கண்களும் உன் மனதுமோவென்றால் தற்பொழிவின் மேலும், குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்துவதின் மேலும், இடுக்கமும் நொறுக்குதலும் செய்வதின்மேலுமே அல்லாமல் வேறொன்றின்மேலும் வைக்கப்படவில்லை.

எரே 22:18. ஆகையால் கர்த்தர் யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்கிற யூதாவின் ராஜாவைக்குறித்து: ஐயோ! என் சகோதரனே, ஐயோ! சகோதரியே, என்று அவனுக்காகப் புலம்புவதில்லை; ஐயோ! ஆண்டவனே, ஐயோ! அவருடைய மகத்துவமே, என்று அவனுக்காகப் புலம்புவதில்லை.

எரே 22:19. ஒரு கழுதை புதைக்கப்படுகிற வண்ணமாய் அவன் எருசலேமின் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து புதைக்கப்படுவான் என்று சொல்லுகிறார்.

யோவாகாஸ் என்ற சல்லூமுக்குப் பின்பு யோயாக்கீம் யூதாதேசத்தின் ராஜாவாக ஆட்சிபுரிகிறான். அவனும் தேசத்தை நீதியாய் ஆட்சிசெய்யவில்லை. யோயாக்கீமின் ஜீவியகாலம் மிகவும் பரிதாபமாக முடிவுபெற்றது. கர்த்தர் யோயாக்கீமுக்கு அழிவை நியமித்துவிடுகிறார். எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாய் யோயாக்கீமின் பாவங்கள் அவனுக்கு கண்டித்து உணர்த்தப்படுகிறது. யோயாக்கீம் விக்கிரகங்களை ஆராதிக்கவில்லை. அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டவில்லை. ஆனால் அவனிடத்தில் பெருமையும், பேராசையும் இருந்தது. அவன் சிறுமையும் எளிமையுமானவர்களை வஞ்சித்து அவர்களுடைய சம்பத்துக்களை அபகரித்துக்கொண்டான். தனக்கு அநியாயமாய் ஐசுவரியத்தை சேமித்து வைத்தான். இதனால் கர்த்தருடைய சாபம் யோயாக்கீமின்மீது வருகிறது.

யோயாக்கீம் யூதாவின் ராஜாவாக ஆட்சிபுரிகிறான். அவனிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. அவனுடைய மனதில் தாழ்மையில்லை. அவன் தன்னைப்பற்றி எப்போதுமே பெருமையாக நினைத்துக் கொண்டிருக்கிறான். ஆடம்பரமாக ஜீவிக்கிறான். தன்னை அழகுபடுத்துவதிலும், தனக்கு பெரிய வீடுகளைக் கட்டுவதிலும் கவனம் செலுத்துகிறான். ஒரு தேசத்தின் ராஜா சுயநலமுள்ளவனாகயிருக்கக்கூடாது. தேசத்து ஜனங்களின் நலனையும் கவனிக்கவேண்டும். ஆனால் யோயாக்கீமோ தன்னுடைய நன்மையை மாத்திரம் விசாரிக்கிறான்.

யோயாக்கீம் தனக்கு விஸ்தாரமான வீட்டையும், காற்று வீசும் விசாலமான மேலறைகளையும் கட்டுவேனென்று சொல்லி, பலகணிகளைத் தனக்குத்திறந்து, கேதுரு பலகைகளை வைத்து, ஜாதிலிங்கவருணம் பூசி,அநீதியினாலே தன் வீட்டையும், அநியாயத்தினாலே தன் மேலறைகளையும் கட்டினான் (எரே 22:13,14).

ராஜா தனக்கு வீட்டைக்கட்டுவது தவறல்ல. ஆனால் அவனோ தன் அயலான் செய்யும் வேலைக்கு கூலிகொடாமல் அவனை சும்மா வேலைகொண்டான். வேலைக்கு தகுந்த சம்பளம் கொடுக்கவில்லை. கடினமாய் வேலை செய்கிறவர்களை வஞ்சித்து, தனக்கு பெரிய வீட்டைக்கட்டினான்.

தங்களுக்கு வீட்டைக்கட்டுகிறவர்கள், மிகுந்த பயபக்தியோடு வீட்டைக் கட்டவேண்டும். தங்களுடைய வீடுகளை அழகுபடுத்துகிறவர்களும், விஸ்தாரம் பண்ணுகிறவர்களும், அவ்வப்போது தங்களுடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும். நம்முடைய இருதயம் சுத்தமாயிருக்கவேண்டும். நம்முடைய மனச்சாட்சி நம்முடைய வேலையோடு ஒத்துவரவேண்டும். நம்முடைய வீட்டைக்கட்டுவதற்கு மனச்சாட்சி நமக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். நாம் கர்த்தருக்கு முன்பாக குற்றமற்றவர்களாக நின்று, நம்முடைய வீட்டைக்கட்டும்போது, நமக்கு கர்த்தருடைய ஆசீர்வாதம் கிடைக்கும். நாம் கன்மலையின்மேல் வீடு கட்டினவர்கள்போல இருப்போம். வீண்பெருமைக்காகவும், ஆடம்பரத்திற்காகவும் வீடுகளைக் கட்டுவதை கர்த்தர் அங்கீகரிப்பதில்லை.

எகிப்து தேசத்தின் ராஜா, யோயாக்கீமை யூதாதேசத்திற்கு ராஜாவாக நியமித்தான். யோயாக்கீமும் முதன் மூன்று வருஷம், எகிப்து தேசத்து ராஜாவினுடைய அனுமதியின் பிரகாரம் யூதாதேசத்தை ஆட்சிபுரிந்தான். அதன் பின்பு, தன்னுடைய மீதமுள்ள ஆட்சிக்காலத்தை, பாபிலோன் தேசத்து ராஜாவினுடைய அனுமதியின் பிரகாரம் ஆட்சிசெய்தான். யோயாக்கீம் பூரண அதிகாரமுள்ள ராஜாவல்ல. இவனுக்கு மேல் எகிப்தின் ராஜாவும், பாபிலோனின் ராஜாவும் அதிகாரம் செலுத்தினார்கள். அவர்களுடைய உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டுத்தான் யோயாக்கீமால் ஆட்சி புரியமுடியும். ஆனால் யோயாக்கீமோ, தன்னை ஒரு பேரரசன் போலவும், பெரிய சக்கரவர்த்தி போலவும் காண்பித்துக்கொள்வதில் பிரியப்பட்டான்.

யோயாக்கீம் கேதுரு மர மாளிகைகளில் குடியிருக்கிறான். தன்னுடைய வீடு ஆடம்பரமாயும், அழகாயும் இருப்பதினால், தனக்கு விரோதமாக யாரும் வரமாட்டார்கள் என்றும், தன்னுடைய ஜீவியகாலமெல்லாம் தான் ராஜாவாகயிருக்க முடியும் என்றும் நம்பிக்கொண்டிருக்கிறான். கர்த்தரோ யோயாக்கீமைப் பார்த்து, "நீ கேதுருமர மாளிகைகளில் உலாவுகிறபடியினாலே ராஜாவாயிருப்பாயோ?" (எரே 22:15) என்று கேட்கிறார்.

யோயாக்கீம் தேவனுடைய ஆலயத்தைக் கொள்ளையிட்டு தன்னுடைய வீட்டை அழகுபடுத்துகிறான். தேவாலயத்திலுள்ள கேதுரு பலகைகளை தன்னுடைய வீட்டிற்கு கொண்டு வந்து, தனக்கு பலகணிகளையும் மேலறைகளையும் கட்டுகிறான். இந்த பலகைகள் தேவாலயத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. இது யாருக்கும் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காக, அதன்மீது ஜாதிலிங்க வர்ணம் பூசுகிறான். தன்னுடைய பாவத்தை மனுஷருடைய கண்களுக்கு மறைக்கிறான். ஆனால் கர்த்தருடைய பார்வைக்கு மறைவானது ஒன்றுமில்லை.

யோயாக்கீம் தனக்கு விஸ்தாரமான வீட்டையும், மேலறைகளையும் கட்டும்போது, ஏழைகளை ஒடுக்குகிறான். தனக்கு அதிகமாய் வேலை செய்யுமாறு வேலை செய்கிறவர்களை கட்டாயப்படுத்துகிறான். அவர்களுக்கு சரியான சம்பளம் கொடுக்காமல் அவர்களை வஞ்சிக்கிறான். தனக்கு வீட்டைக்கட்டுகிற வேலையாட்களுக்கு அநீதி செய்கிறான். அவன் துன்மார்க்கனாயிருக்கிறான். யோயாக்கீம் அநீதியினாலே தன் வீட்டையும், அநியாயத்தினாலே தன் மேலறைகளையும் கட்டினான் (எரே 22:14) என்று கர்த்தர் அவன்மீது குற்றம் சொல்லுகிறார்.

அநியாயமாய் சம்பாத்தியம் பண்ணின பணத்தினால் வீடுகட்டும்போது, அந்த வீட்டில் கர்த்தருடைய பிரசன்னமும், அவருடைய ஆசீர்வாதமும் தங்கியிருக்காது. பொருட்களை பாவமான பணத்தில் வாங்குவது கர்த்தருக்கு விரோதமான பாவம். நாம் நேர்மையாக உழைக்கவேண்டும். நம்முடைய உழைப்புக்கு, நாம் பெற்றுக்கொண்ட பணத்தினால் நமக்கு வீட்டைக்கட்டவேண்டும். இதுவே நமக்கு ஆசீர்வாதம்.

வீட்டைக்கட்டுவதற்கு நியாயமான வழியில் சம்பாதித்த பணத்தை பயன்படுத்தவேண்டும். வீட்டைக்கட்டுகிற வேலையாட்களுக்கும் நியாயமான சம்பளத்தைக் கொடுக்கவேண்டும். வேலை செய்கிறவர்களை வஞ்சிக்கக்கூடாது. "தன் அயலான் செய்யும் வேலைக்குக் கூலிகொடாமல், அவனைச்சும்மா வேலைகொள்ளுகிறவனுக்கு ஐயோ" (எரே 22:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நாம் வீடுகளைக் கட்டும்போது கர்த்தர் அதை கவனித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துக்களிலிருக்கிறவர்களும், பிரபுக்களும், ஐசுவரியவான்களும் தங்களுக்கு வீடுகளைக் கட்டுகிறார்கள். வேலைக்காரர்கள் அவர்களுக்காக கடினமாய் உழைக்கிறார்கள். எஜமான்கள் தங்கள் வேலையாட்களுக்கு நியமிக்கப்பட்ட சம்பளத்தைக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு அநீதி செய்யக்கூடாது. அவர்களுடைய சம்பளத்தை அவர்களுக்கு கொடுக்காமல் அநியாயம் பண்ணக்கூடாது.

அநீதியினாலும் அநியாயத்தினாலும் கட்டப்படுகிற வீட்டின் அஸ்திபாரம் உறுதியாயிருக்காது. அது திருக்குள்ளதும், கபடுள்ளதுமாயிருக்கும். பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. பேராசையுள்ளவர்களின் கண்களும் இருதயமும், தாங்கள் இச்சிப்பதையெல்லாம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று ஆசைப்படும்.

பேராசைக்காரரின் இருதயங்களும் கண்களும் எல்லாவற்றின்மீதும் ஆசைப்படும். கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய கண்களின் இச்சைகளுக்கு அடிமையாகிவிடக்கூடாது.

"ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1யோவா 2:16,17).

"என் நடைகள் வழியைவிட்டு விலகினதும், என் இருதயம் என் கண்களைப் பின்தொடர்ந்ததும், ஏதாகிலும் ஒரு மாசு என் கைகளில் ஒட்டிக்கொண்டதும் உண்டானால், அப்பொழுது நான் விதைத்ததை வேறொருவன் புசிப்பானாக; என் பயிர்கள் வேரற்றுப்போகக்கடவது" (யோபு 31:7,8).

யோயாக்கீமின் தகப்பன் மிகவும் நல்லவன். யோயாக்கீமோ தன்னுடைய தகப்பனின் நற்குணங்களைப் பெற்றுக்கொள்ளவில்லை. அவனுடைய நல்ல முன்மாதிரிகளைப் பின்பற்றவுமில்லை. தன்னுடைய தகப்பன் மூலமாய் நல்ல சுபாவங்களை கற்றுக்கொள்ளவுமில்லை. இதனால் யோயாக்கீமின் பாவங்கள் கர்த்தருடைய பார்வையில் பெரிதாய்த் தெரிகிறது.

கர்த்தர் யோயாக்கீமிடம், அவனுடைய தகப்பனின் நற்குணங்களைப்பற்றிச் சொல்லுகிறார். "உன் தகப்பன் போஜனபானம்பண்ணி, நியாயமும் நீதியுஞ்செய்தபோது அவன் சுகமாய் வாழ்ந்திருக்கவில்லையோ? அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்" (எரே 22:15,16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யோயாக்கீமோ யாருடைய நியாயத்தையும் விசாரிக்கவில்லை. யாருக்கும் நன்மை செய்யவில்லை. தனக்கு வேலை செய்தவர்களைக்கூட வஞ்சித்துவிடுகிறான். அநீதியினாலே தன் வீட்டையும், அநியாயத்தினாலே தன் மேலறைகளையும் கட்டுகிறான். பிறரை வஞ்சித்து ஆடம்பரமாய் ஜீவிப்பதுதான் சுகமான வாழ்வு என்று யோயாக்கீம் நினைக்கிறான். கர்த்தரோ யோயாக்கீமின் அக்கிரமமான கிரியைகளை அங்கீரிக்கவில்லை. யோயாக்கீமினுடைய தகப்பனின் நற்கிரியைகளை அங்கீகரிக்கிறார். யோயாக்கீமின் தகப்பனுடைய கிரியைகளைப்போல "செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு" (எரே 22:16) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யோயாக்கீம் தன்னுடைய தகப்பனைப் போல நற்குணமுள்ளவனாயிருக்க வேண்டும். நற்கிரியைகளைச் செய்யவேண்டும். யோயாக்கீமின் தகப்பன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்ததுபோல, யோயாக்கீமும் நியாயத்தை விசாரிக்கவேண்டுமென்று எரேமியா அவனுக்கு சொல்லுகிறார்.

யோயாக்கீமின் தகப்பன் தன்னுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம்பண்ணவில்லை. தவறான காரியங்களை செய்வதற்கு தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தவில்லை. நன்மை செய்வதற்கே தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தினான். யோயாக்கீமின் தகப்பன் நீதியாய் நியாயம் விசாரிப்பதற்கு தன்னுடைய அதிகாரத்தை நல்ல முறையில் பயன்படுத்தினான்.

கர்த்தரும் யோயாக்கீமின் தகப்பனை ஆசீர்வதித்தார். அவன் சுகமாய் வாழ்ந்தான். தன்னுடைய தகப்பனாரின் ஆசீர்வாதங்களை யோயாக்கீம் அனுபவிக்கிறான். ஆனால் யோயாக்கீம் தன் தகப்பனைப்போல நன்மை செய்யவில்லை. இதனால் கர்த்தருடைய வார்த்தை யோயாக்கீமுக்கு விரோதமாய் வந்திருக்கிறது. யோயாக்கீம் தன்னுடைய கடமைகளை நீதியாயும், நியாயமாயும், நேர்த்தியாயும் நிறைவேற்றவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யோயாக்கீமின் தகப்பனையும், அவனுடைய நற்கிரியைகளையும் கர்த்தர் அங்கீகரிக்கிறார். "அப்படி செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு" என்று கர்த்தர் சொல்லுகிறார். யோயாக்கீமின் தகப்பனுக்கு ஒரு குறையும் இல்லை. அவன் சுகமாக வாழ்ந்தான். தன் அரமனையில் போஜனபானம் பண்ணினான். அவனுடைய மனதில் சமாதானமும், சந்தோஷமும் இருந்தது. யோயாக்கீமின் தகப்பன் கர்த்தருக்கு பயந்து நீதிமானாய் ஜீவித்தான். கர்த்தரும் அவன்மீது பிரியமாயிருந்தார்.

"ராஜா குலமகனுமாய், பிரபுக்கள் வெறிக்க உண்ணாமல் பெலன்கொள்ள ஏற்றவேளையில் உண்கிறவர்களுமாயிருக்கப்பட்ட தேசமே, நீ பாக்கியமுள்ளது" (பிர 10:17).

கர்த்தர் யோயாக்கீமின் தகப்பனை அதிகமாய் ஆசீர்வதித்தார். அவனுடைய தேவைகளையெல்லாம் சந்தித்தார். அவனுக்கு ஒரு குறைவும் உண்டாகவில்லை. அவன் சுகமாய் வாழ்ந்தான். அவன் யாருக்கும் அநீதி செய்யவில்லை. கர்த்தர் தனக்கு கொடுத்த ஆசீர்வாதங்களை, அவன் பிறருக்கும் பகிர்ந்துகொடுத்தான். தனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை நல்ல காரியங்களுக்கு பயன்படுத்தினான். நியாயமும் நீதியும் செய்தான். சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான். அவனிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமும் மனத்தாழ்மையும் இருந்தது.

யோயாக்கீமிடம் கர்த்தருக்கு பயப்படும் பயமுமில்லை. அவனுடைய மனதில் தாழ்மையுமில்லை. யோயாக்கீம் தன் இருதயத்தில் பெருமையுள்ளவனாயிருக்கிறான். தன்னுடைய மனதின் பெருமையினால் தனக்கு விஸ்தாரமான வீட்டைக்கட்டுகிறான். காற்று வீசும் விசாலமான மேலறைகளை கட்டவேண்டுமென்று ஆசைப்படுகிறான்.

யோசியா யோயாக்கீமுக்கு நேர்விரோதமாயிருக்கிறான். யோசியா தன்னுடைய வீட்டை ஒழுங்குபடுத்துகிறான். அதைப் பரிசுத்தப்படுத்துகிறான். யோசியாவின் வீடு விஸ்தாரமாகயில்லையென்றாலும், அதில் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருக்கிறது. யோசியா கர்த்தரை நன்றியுள்ள இருதயத்தோடு துதிக்கிறான்.

நம்முடைய வீடு யோசியாவின் வீட்டைப்போல விஸ்தாரமாயில்லாவிட்டாலும், அது கர்த்தருக்கு பிரியமான வீடாகவும், அவருக்கு பிரயோஜனமான வீடாகவும் இருக்கவேண்டும். நாம் நன்மை செய்யவேண்டும். யாருக்கும் அநீதி செய்யாமல், கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும்.

யோயாக்கீமைப்போல, எல்லோரையும் ஏமாற்றி, விஸ்தாரமான வீட்டைக்கட்டி நிம்மதியில்லாமல் ஜீவிப்பதைவிட, யோசியாவைப்போல சாதாரணமான வீட்டைக்கட்டி, நம்மால் முடிந்த அளவுக்கு பிறருக்கு நன்மை செய்து, சந்தோஷமாகவும், சமாதானமாகவும் ஜீவிப்பதே நமக்கு மெய்யான ஆசீர்வாதம்.

கடன் வாங்கி, யோயாக்கீமைப்போல விஸ்தாரமான வீட்டைக்கட்டிவிட்டு, அதன் பின்பு கடனை திரும்ப செலுத்த முடியாமல் அவஸ்தைப்படுவதைவிட, யோசியாவைப்போல, செல்லும் செலவைக் கணக்குப் பார்த்து, கடனில்லாமல் வீட்டைக்கட்டி, சந்தோஷமாயும், சமாதானமாயும் ஜீவிப்பதே மெய்யான ஆசீர்வாதம்.

கர்த்தருடைய பிள்ளைகள் அன்பினால் ஒருவருக்கொருவர் கடன்பட்டிருக்க வேண்டுமேயல்லாமல், அவர்களுக்கு வேறு எந்தவிதமான பொருளாதார கடனும் இருக்கக்கூடாது.

கர்த்தருடைய கோபம் யோயாக்கீமின்மீது வருகிறது. எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை யோயாக்கீமுக்கு அறிவிக்கிறார்.

"ஆகையால் கர்த்தர் யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்கிற யூதாவின் ராஜாவைக்குறித்து: ஐயோ! என் சகோதரனே, ஐயோ! சகோதரியே, என்று அவனுக்காகப் புலம்புவதில்லை; ஐயோ! ஆண்டவனே, ஐயோ! அவருடைய மகத்துவமே, என்று அவனுக்காகப் புலம்புவதில்லை. ஒரு கழுதை புதைக்கப்படுகிற வண்ணமாய் அவன் எருசலேமின் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து புதைக்கப்படுவான் என்று சொல்லுகிறார்" (எரே 22:18,19).

எரேமியா யோயாக்கீமின் விஸ்தாரமான, ஆடம்பரமான வீட்டைப்பார்த்து, அவன்மீது பொறாமைப்பட்டு, அவனுக்கு அவர் அழிவின் வார்த்தைகளை சாபமாய் சொல்லவில்லை. எரேமியாவுக்கு யோயாக்கீமின்மீது பொறாமையில்லை. எரேமியா சொல்லுவது கர்த்தருடைய வார்த்தை. யோயாக்கீமைக் குறித்து, கர்த்தர் தன் வாயில் போட்ட வார்த்தைகளை, எரேமியா அப்படியே சொல்லுகிறார். இது எரேமியாவின் ஊழியம்.

யோயாக்கீம் மரிக்கும்போது அவனுக்காக ஒருவரும் புலம்பமாட்டார்கள். அவனுடைய மரணம் பரிதாபமாயிருக்கும். அவன் அயலான் செய்யும் வேலைக்கு கூலி கொடாமல், அவர்களை வஞ்சித்து, சும்மா வேலைகொண்டான். ஏழைகளை ஒடுக்கினான். ஆகையினால் யோயாக்கீம் சாகும்போது ஒருத்தருக்கும் வருத்தமுண்டாகவில்லை. யாருடைய கண்களிலும் கண்ணீர் வரவில்லை. அவனுடைய உற்றார் உறவினர்கூட அவனுடைய மரணத்தை நினைத்து அழுது புலம்பவில்லை.

யூதா தேசத்திலுள்ளவர்களும் அவனுக்காக அழவில்லை. பொதுவாக யூதாவின் ராஜாக்கள் மரிக்கும்போது, ராஜாவின் பிரேதத்தை, ராஜாக்களின் கல்லறையில் கொண்டுபோய் மரியாதையாக வைப்பார்கள். அங்கே மரித்துப்போன ராஜாவுக்கு துக்கம் கொண்டாடுவார்கள். புலம்பற்காரர்கள் ஒப்பாரி பாடுவார்கள். இப்படிப்பட்ட மரியாதை எதுவும் யோயாக்கீமுக்கு கொடுக்கப்படவில்லை.

யோயாக்கீம் மரிக்கும்போது, அவனை செத்துப்போன கழுதையை புதைப்பதுபோல புதைப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். யோயாக்கீமுக்கு கண்ணியமான அடக்க ஆராதனை இருக்காது. அவனுடைய சரீரத்தை கழுதையினுடைய சரீரத்தை புதைப்பதுபோல, குழியிலே தள்ளிவிடுவார்கள். ராஜாக்களின் கல்லறையில் அவனை அடக்கம்பண்ணாமல், அவனை எருசலேமின் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து, குழியிலே புதைப்பார்கள்.

லீபனோனின்மேலேறிப் புலம்பு எரே 22:20-23

எரே 22:20. லீபனோனின் மேலேறிப் புலம்பு, பாசானில் உரத்த சத்தமிடு, ஆபரீமிலிருந்து கூப்பிட்டுக்கொண்டிரு; உன் நேசர் அனைவரும் முறிந்தார்கள்.

எரே 22:21. நீ சுகமாய் வாழ்ந்திருக்கையில் நான் உனக்குச் சொன்னேன், நீ கேளேன் என்றாய்; உன் சிறுவயதுமுதல் நீ என் சத்தத்தைக் கேளாமற்போகிறதே உன் வழக்கம்.

எரே 22:22. உன் மேய்ப்பர்கள் எல்லாரையும் காற்று அடித்துக் கொண்டுபோகும்; உன் நேசர் சிறைப்பட்டுப்போவார்கள்; அப்போதல்லவோ உன் எல்லாப்பொல்லாப்பினிமித்தமும் நீ வெட்கப்பட்டு இலச்சையடைவாய்.

எரே 22:23. லீபனோனில் வாசமாயிருந்து, கேதுமரங்களில் கூடுகட்டிக்கொண்டிருக்கிறவளே, வேதனைகளும் பிள்ளைப் பெறுகிறவளுக்கொத்த வாதையும் உனக்கு வருகையில், நீ எவ்வளவு பரிதபிக்கப்படத்தக்கவளாயிருப்பாய்!

கோனியா அல்லது யோயாக்கீன் ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் யூதா தேசத்திற்கு ஆசீர்வாதமில்லை. யோயாக்கீமின் குமாரனாகிய யோயாக்கீன் யூதா தேசத்தை மூன்று மாதம் ஆட்சிசெய்தான். அதன் பின்பு அவன் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகப்பட்டான். யோயாக்கீன் பாபிலோன் தேசத்தில் அநேக வருஷங்கள் வாழ்ந்தான்.

"யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனுடைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் இருபத்தைந்தாம் தேதியிலே, ஏவில்மெரொதாக் என்னும் பாபிலோன் ராஜா, தான் ராஜாவான வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச் சிறைச்சாலையிருந்து வெளிப்படப்பண்ணி, அவன் தலையை உயர்த்தி, அவனோடே அன்பாய்ப் பேசி, அவனுடைய ஆசனத்தைத் தன்னோடே பாபிலோனில் இருந்த ராஜாக்களுடைய ஆசனங்களுக்கு மேலாகவைத்து, அவனுடைய சிறையிருப்பு வஸ்திரங்களை மாற்றினான்; அவன் உயிரோடிருந்த சகல நாளும் தன் சமுகத்தில் நித்தம் போஜனம்பண்ணும்படி செய்தான்" (எரே 52:31-33).

கர்த்தருடைய வார்த்தை எரேமியாவின் மூலமாய் சொல்லப்படுகிறது. இந்த அதிகாரத்தில், இந்த வசனப்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசனங்கள் கோனியாவின் ஆட்சிக்காலத்திலோ அல்லது யோயாக்கீனுடைய ஆட்சிக்காலத்திலோ நிறைவேறும் என்று வேதபண்டிதர்கள் கணித்தார்கள்.

யூதா தேசத்திற்கும் எருசலேம் நகரத்திற்கும் அழிவு சீக்கிரத்தில் வரப்போகிறது. எருசலேமும் யூதாவும், "நீ" என்று ஒருமைப்பெயரில் சொல்லப்பட்டிருக்கிறது. "நீ சுகமாய் வாழ்ந்திருக்கையில் நான் உனக்குச் சொன்னேன், நீ கேளேன் என்றாய்; உன் சிறுவயதுமுதல் நீ என் சத்தத்தைக் கேளாமற்போகிறதே உன் வழக்கம்" (எரே 22:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சுகமாய் வாழ்கிறவர்கள் பொதுவாக கர்த்தருடைய வார்த்தையைக்கு செவிகொடுக்கமாட்டார்கள். அவர்கள் கர்த்தரையும் அசட்டைபண்ணுவார்கள். அவருடைய வார்த்தைகளையும் அசட்டை பண்ணுவார்கள். யூதா தேசமும் எருசலேம் நகரமும் சுகமாய் வாழ்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு சொல்லும் வார்த்தைகளை கேளாதிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சிறுவயதுமுதல் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவில்லை. யூதா தேசம் ஸ்தாபிக்கப்பட்ட காலத்திலிருந்தே அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு செவிகொடுக்கவில்லை.

யூதா தேசத்திற்கு ஆபத்து வரும். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைவிட்டு விலகிப்போகிறார்கள். அந்நிய தெய்வங்களை பின்பற்றுகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். அவர்களுடைய ஆபத்துக்காலத்தில், அவர்கள் நம்புகிற விக்கிரகங்கள், அவர்களுக்கு உதவி செய்யாது. யூதாவின் மனுஷர் கர்த்தரை நம்பாமல் அந்நிய தேசத்தாரை நம்புகிறார்கள். யூதாவுக்கு ஆபத்து வரும்போது, அவர்கள் நம்பின அந்நிய தேசத்தாரும் அவர்களுக்கு உதவிசெய்யமாட்டார்கள்.

யூதாவும் எருசலேமும் மிகுந்த ஆபத்திலும், நெருக்கத்திலும் இருக்கும்போது, அவர்கள் உதவி கேட்டு அழுது புலம்புவார்கள். கர்த்தர் அவர்களைப் பார்த்து "லீபனோனின்மேலேறிப் புலம்பு, பாசானில் உரத்த சத்தமிடு, ஆபரீமிலிருந்து கூப்பிட்டுக்கொண்டிரு" (எரே 22:20) என்று சொல்லுகிறார். அவர்கள் எங்கேயிருந்து புலம்பினாலும், எவ்வளவு உரத்த சத்தமாய்க் கூப்பிட்டாலும், அவர்களுக்கு உதவி செய்ய ஒருவரும் வரமாட்டார்கள். அவர்கள் நம்பின அவர்களுடைய நேசர்கள் அனைவரும் ஏற்கெனவே முறிந்து விழுந்துவிட்டார்கள். அவர்களால் தங்களுக்கே உதவிசெய்ய முடியவில்லை. அவர்களால் யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் நிச்சயமாய் உதவிசெய்யமுடியாது. ஆகையினால் யூதாவின் குடிகள் எவ்வளவுதான் புலம்பினாலும், எவ்வளவுதான் உரத்த சத்தமாய்க் கூப்பிட்டாலும், அவர்களுக்கு உதவிபுரிய யாரும் வரமாட்டார்கள்.

யூதாதேசத்திற்கும் எருசலேம் நகரத்திற்கும் கர்த்தரால் நியமிக்கப்பட்ட அழிவு வரும். "உன் மேய்ப்பர்கள் எல்லாரையும் காற்று அடித்துக்கொண்டுபோகும்; உன் நேசர் சிறைப்பட்டுப்போவார்கள்; அப்போதல்லவோ உன் எல்லாப் பொல்லாப்பினிமித்தமும் நீ வெட்கப்பட்டு இலச்சையடைவாய்" (எரே 2:22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மேய்ப்பர்கள் யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் ஆதரவாயிருக்கவேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். ஆனால் அவர்கள் எல்லோரையும் காற்று அடித்துக்கொண்டு போய்விடும். அவர்களுக்கே பாதுகாப்பு இருக்காது. யூதாவின் மனுஷர் அந்நிய தேசத்தாரை நம்பினார்கள். யூதர்கள் கர்த்தரை நம்பவில்லை.

கர்த்தர் அவர்களுக்கு நேசராயிராமல், அந்நிய தேசத்தார் அவர்களுக்கு நேசராயிருந்தார்கள். அவர்களுடைய நேசர்கள் சிறைப்பட்டுப்போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களால் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள முடியாது. அவர்கள் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் பாதுகாப்பதற்கு வரமாட்டார்கள்.

யூதாவின் குடிகளுக்கு உதவிசெய்ய ஒருவரும் இருக்கமாட்டார்கள். அவர்களுக்கு சிநேகமாயிருந்த அந்நிய தேசத்தார் எல்லோரும் ஏற்கெனவே அழிந்துபோய்விடுவார்கள். இதனால் யூதாவின் மனுஷருக்கு வெட்கமும் இலச்சையும் உண்டாகும். யூதர்கள் தங்களுடைய எல்லா பொலாப்பினிமித்தமும் வெட்கப்பட்டு இலச்சையடைவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 22:22).

யூதா தேசத்தார் லீபனோனில் வாசமாயிருக்கிறவர்கள் என்று இங்கு எழுதப்பட்டிருக்கிறது. யூதா தேசத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் லீபனோனின் அழகிய வனம் இருக்கிறது. இது இயற்கையான வனம். இந்த வனம் அடர்த்தியாகயிருக்கும். எருசலேம் நகரத்திற்கும், யூதாவின் மற்ற பட்டணங்களுக்கும் லீபனோனின் வனம் இயற்கையான பாதுகாப்பைக் கொடுக்கிறது. அவர்கள் லீபனோனை நினைத்து பெருமைப்படுகிறார்கள். கேதுரு மரங்களில் கூடு கட்டிக்கொண்டு, ஆனந்தமாயும், பாதுகாப்பாயும் வாழலாம் என்று யூதாவின் மனுஷர் நினைக்கிறார்கள்.

தங்களுக்கு ஆபத்து வராது என்றும், எல்லா ஆபத்துக்களுக்கும் விலகி தாங்கள் பாதுகாப்பாய் ஜீவிப்பதாகவும் யூதாவின் மனுஷர் நினைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வாதைகள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்போது அவர்கள் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்பார்கள். "வேதனைகளும் பிள்ளைப் பெறுகிறவளுக்கொத்த வாதையும் உனக்கு வருகையில், நீ எவ்வளவு பரிதபிக்கப்படத்தக்கவளாயிருப்பாய்" (எரே 22:23) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரிடத்தில் மனத்தாழ்மையில்லை. அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களை தாழ்த்தவில்லை. கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். இதனால் கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தங்கள் அவர்களுக்கு நிறைவேறவில்லை. தாங்கள் லீபனோனில் வாசமாயிருப்பதாகவும், கேதுரு மரங்களில் கூடு கட்டிக்கொண்டிருப்பதாகவும் பெருமையாய் நினைத்தார்கள். தங்களுக்கு தீங்கு வராது என்று சொன்னார்கள். அவர்களுடைய ஐசுவரிமும், ஆடம்பரமும் அவர்களை பாதுகாக்கவில்லை. அவர்களுக்கு பிள்ளைபெறுகிறவர்களுக்கு ஒத்த வாதை வந்திருக்கிறது. அவர்களுக்கு யாராலும் ஆறுதல் சொல்ல முடியாது. அவர்களுடைய வேதனைகளை அவர்களே அனுபவிக்கவேண்டும்.

கர்த்தர் அவர்களுக்கு வேதனையை நியமித்திருக்கிறார். இது கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு. அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க முடியாது. யூதாவின் மனுஷர் வேதனைகளினாலும், பயங்களினாலும் நிரம்பியிருக்கிறார்கள். அவர்களுடைய ஆபரணங்களோ, ஐசுவரியங்களோ அவர்களுக்கு ஆறுதலைக் கொடுக்கவில்லை. சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொடுக்கவில்லை. அவர்கள் துக்கத்திலும், வேதனையிலும், வாதையிலும் நிரம்பியிருக்கிறார்கள்.

கோனியா
எரே 22:24-30

எரே 22:24. யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமின் குமாரன் கோனியா, என் வலது கையின் முத்திரை மோதிரமாயிருந்தாலும், அதிலிருந்து உன்னைக் கழற்றிஎறிந்துபோடுவேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 22:25. உன் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும், நீ பயப்படுகிறவர்களின் கையிலும் உன்னை ஒப்புக்கொடுப்பேன்; பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும் கல்தேயரின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்.

எரே 22:26. உன்னையும், உன்னைப்பெற்ற தாயையும், உங்கள் ஜநநபூமியல்லாத அந்நியதேசத்திலே துரத்திவிடுவேன். அங்கே சாவீர்கள்.

எரே 22:27. திரும்புவதற்குத் தங்கள் ஆத்துமா வாஞ்சிக்கும் தேசத்துக்கு அவர்கள் திரும்பவருவதில்லை.

எரே 22:28. கோனியா என்கிற இந்த மனுஷன் அவமதிக்கப்பட்ட உடைந்த சிலையோ? ஒருவரும் விரும்பாத பாத்திரமோ? அவனும் அவன் சந்ததியும் தள்ளுண்டதும், தாங்கள் அறியாத தேசத்திலே துரத்திவிடப்பட்டதும் ஏது?

எரே 22:29. தேசமே! தேசமே! தேசமே! கர்த்தருடைய வார்த்தையைக்கேள்.

எரே 22:30. இந்தப்புருஷன் சந்தானமற்றவன், தன் நாட்களில் வாழ்வடையாதவன் என்று இவனைக்குறித்து எழுதுங்கள்; அவன் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, யூதாவில் அரசாளப்போகிறதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் கோனியா ராஜாவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். இவன் யோயாக்கீமின் குமாரன். கோனியாவுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தை வெளிப்பட்டிருக்கிறது. இவன் அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுக்கப்படுவான். இவனுடைய வாழ்நாள் முழுவதும் அந்நிய தேசத்து அடிமைத்தனத்திலேயே முடிவடைந்துவிடும். கர்த்தர் கோனியாவைக் கைவிட்டுவிடுகிறார்.

கோனியா கர்த்தருடைய வலதுகையின் முத்திரை மோதிரமாயிருந்தான். ஆனாலும், கர்த்தர் கோனியாவை தம்முடைய வலதுகையிலிருந்து கழற்றி எறிந்துபோடுகிறார் (எரே 22:24). யூதா தேசத்திலே கர்த்தருக்கு பயந்து, பரிசுத்தமாய் ஆட்சி நடத்திய எல்லோருமே, கர்த்தருடைய வலதுகையின் முத்திரை மோதிரமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு நெருக்கமாகவும், சிநேகமாகவும் இருக்கிறார்கள். யூதா தேசத்தின் பயபக்தியுள்ள ராஜாக்கள் கர்த்தருக்கு பிரியமானவர்கள். கர்த்தரும் அவர்கள் மூலமாய் மகிமைப்பட்டார்.

பாபிலோன் தேசத்து ராஜா கோனியாவை சிறைப்பிடிப்பான். "பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும், கல்தேயரின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்" (எரே 22:25) என்று கர்த்தர் கோனியாவைப்பற்றிச் சொல்லுகிறார். கோனியா கர்த்தருக்கு விரோதமாய் பாவம் செய்கிறான். துன்மார்க்கமாய் ஜீவிக்கிறான். ஆனாலும் அவனுடைய பாவத்தைக் குறித்து அவனுக்குள் குற்றவுணர்வு எதுவுமில்லை. கர்த்தர் அவனை அந்நிய தேசத்து ராஜாவின் கையிலே ஒப்புக்கொடுக்கும் போதுதான், தன்னுடைய பாவம் என்ன என்பது கோனியாவுக்கு தெரியவருகிறது.

கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு கிடைக்காது. அவர்கள் தங்களைத் தாங்களே, கர்த்தருடைய பாதுகாப்பிலிருந்து விடுவித்துக்கொள்கிறார்கள். அவர்களுடைய பாவங்கள் அவர்களை கர்த்தரிடத்திலிருந்து பிரித்துவிடுகிறது. "உன் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும், நீ பயப்படுகிறவர்களின் கையிலும் உன்னை ஒப்புக்கொடுப்பேன்" (எரே 22:25) என்று கர்த்தர் கோனியாவைக் குறித்து சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கோனியாவை சிறைப்பிடிக்கும்போது, அவனுடைய குடும்பத்தாரையும் சிறைப்பிடித்து, தன்னுடைய தேசத்திற்கு அடிமைகளாக இழுத்துச் செல்லுகிறான். அவர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பில் மிகுந்த துன்பங்களையும், உபத்திரவங்களையும் அனுபவிப்பார்கள். அவர்களுடைய காலங்கள் துக்கநாட்களாக கடந்துபோகும்.

"உன்னையும், உன்னைப்பெற்ற தாயையும், உங்கள் ஜநநபூமியல்லாத அந்நியதேசத்திலே துரத்திவிடுவேன். அங்கே சாவீர்கள்" (எரே 22:26) என்று கர்த்தர் கோனியாவைக் குறித்து சொல்லுகிறார். பாபிலோன் தேசத்தில் கோனியா ராஜாவுக்கோ, அவனுடைய ராஜகுடும்பத்தாருக்கோ யாரும் தயவு காண்பிக்கமாட்டார்கள். பாபிலோன் தேசத்தார் எல்லோரும் யூதாவின் மனுஷருக்கு அந்நியர்கள்.

கோனியா ராஜாவும் அவனுடைய குடும்பத்தாரும் பாபிலோன் தேசத்தில் மிகுந்த உபத்திரவங்களை அனுபவிப்பார்கள். அந்த கஷ்டங்களை தாங்கிக்கொள்ள முடியாமல், அங்கிருந்து, தங்கள் யூதா தேசத்திற்கு திரும்பிப்போய்விட வேண்டுமென்று விரும்புவார்கள். அவர்களுடைய ஆத்துமா யூதாதேசத்தை வாஞ்சிக்கும். ஆனாலும் "திரும்புவதற்குத் தங்கள் ஆத்துமா வாஞ்சிக்கும் தேசத்துக்கு அவர்கள் திரும்பவருவதில்லை" (எரே 22:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யோவாகாஸ் எகிப்து தேசத்திற்கு சிறைப்பிடித்து செல்லப்பட்டான். எகிப்து தேசம் யூதா தேசத்திற்கு தென்திசையுள்ளது. கோனியாவோ பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து செல்லப்பட்டான். இந்த தேசம் யூதா தேசத்திற்கு வடதிசையுள்ளது. இவர்கள் இருவரும் ஒருவரையொருவர் மறுபடியுமாய் சந்திக்கமாட்டார்கள். யூதா தேசத்தில் வீசுகிற காற்றை இவர்கள் இனிமேல் சுவாசிக்கவேமாட்டார்கள். இவர்கள் ஜநந பூமியல்லாத அந்நிய தேசத்தில் துரத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் யூதா தேசத்திற்கு திரும்பி வராமல், அந்நிய தேசங்களில் செத்துப்போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கோனியா யூதாதேசத்தின் ராஜாவாயிருந்தபோது, யூதாதேசத்திற்கு அருகாமையிலிருந்த தேசத்தார் எல்லோரும் அவனுக்கு மதிப்பும் மரியாதையும் காண்பித்தார்கள். இப்போதோ கோனியா பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறான். யூதாவுக்கு அருகாமையிலுள்ளவர்கள் கோனியாவின் முடிவை ஆச்சரியத்தோடு நினைத்துப் பார்க்கிறார்கள். "கோனியா என்கிற இந்த மனுஷன் அவமதிக்கப்பட்ட உடைந்த சிலையோ? ஒருவரும் விரும்பாத பாத்திரமோ?" (எரே 22:28) என்று அவர்கள் கோனியாவைப்பற்றி தங்களுக்குள்ளே சொல்லிக்கொள்கிறார்கள். "அவனும் அவன் சந்ததியும் தள்ளுண்டதும், தாங்கள் அறியாத தேசத்திலே துரத்திவிடப்பட்டதும் ஏது?" என்று அவர்கள் தங்களுக்குள்ளே ஆச்சரியப்பட்டு பேசிக்கொள்கிறார்கள்.

கோனியாவின் பெருமை அவனைவிட்டு நீங்கிப்போயிற்று. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், கோனியாவையும், அவனுடைய குடும்பத்தாரையும் அவமானப்படுத்திவிட்டான். கோனியாவின் தகப்பனாகிய யோயாக்கீம் மரித்துப்போனபோது, யூதாதேசத்தாரும், யூதாதேசத்திற்கு அருகாமையிலுள்ளவர்களும், கோனியாவை ராஜாவாக்கினார்கள். கோனியா சிங்காசனத்தில் வீற்றிருந்த அழகைப் பார்த்து ரசித்தார்கள். இப்போதோ கோனியா பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போயிருக்கிறான். மதிப்பும் மரியாதையோடும் இருந்தவன் இப்போது அவமானப்பட்டுப்போயிருக்கிறான். அவன் அவமதிக்கப்பட்ட உடைந்த சிலையைப்போல இருப்பதாக யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், யூதாதேசத்திற்கு அருகான தேசத்திலுள்ளவர்களும் கோனியாவைப்பற்றி நினைக்கிறார்கள்.

கோனியாவின் சந்ததியில் யாரும் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து யூதாதேசத்தை ஆட்சி செய்யமாட்டார்கள். கோனியாவும், அவனைப்பெற்ற தாயும், அவனுடைய ராஜகுடும்பத்தார் எல்லோரும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் அந்நிய தேசத்திலேயே செத்துப்போகிறார்கள். கோனியாவின்மீது வந்திருக்கிற நியாயத்தீர்ப்பு, எல்லா ஜனங்களுக்கும் எச்சரிப்பாக இங்கு எழுதப்பட்டிருக்கிறது.

கோனியாவின் முன்னோர்கள் கர்த்தருக்கு பிரியமானவர்களாயிருந்தார்கள். கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவர்களாயிருந்து, தேசத்தை நீதியாய் ஆட்சி செய்தார்கள். கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்தார். அவர்களுடைய குடும்பத்தை ஆசீர்வதித்தார். அவர்களுடைய காலத்தில் கர்த்தர் யூதாதேசத்தையும் ஆசீர்வதித்தார்.

கோனியாவின் காலத்திலோ யூதாதேசத்தில் கர்த்தருக்குப் பயப்படும் இல்லாமல் போயிற்று. யூதாவின் ராஜாவாகிய கோனியாவே கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தான். அவன் கர்த்தரைவிட்டுப் பிரிந்துபோனான். கர்த்தரும் அவனைவிட்டுப் பிரிந்துபோனார். கோனியாவின் பாவங்களினிமித்தமாய் அவன்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வந்தது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பில் பாரபட்சம் எதுவுமில்லை.

கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பினால், கோனியாவுக்கு யூதா ராஜ்யத்தை ஆளுகை செய்கிற வாரிசுகள் யாரும் பிறக்கவில்லை. "இந்தப்புருஷன் சந்தானமற்றவன்" (எரே 22:30) என்று கர்த்தர் கோனியாவைக் குறித்து சொல்லுகிறார். கோனியாவின் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடையப்போவதுமில்லை, அவர்களில் ஒருவனாகிலும் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, யூதாவை அரசாளப்போகிறதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். "இந்தப்புருஷன் சந்தானமற்றவன், தன் நாட்களில் வாழ்வடையாதவன் என்று இவனைக்குறித்து எழுதுங்கள்" (எரே 22:30) என்று கர்த்தர் கோனிவைக் குறித்து சொல்லுகிறார்.

கோனியாவும் அவனுடைய குடும்பத்தாரும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது, கோனியாவுக்கு குழந்தைகள் பிறந்தது என்று சிலர் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். "அவனும், அவன் சந்ததியும்" (எரே 22:28) என்னும் வார்த்தையை ஆதாரமாகக் கொண்டு இந்த வியாக்கியானம் சொல்லப்படுகிறது. ஆனாலும் கோனியாவின் பிள்ளைகள், அவனுடைய கண்களுக்கு முன்பாகவே கொல்லப்பட்டிருக்கவேண்டும் என்றும் இவர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

1நாளாகமம் புஸ்தகத்தில் கோனியாவின் சந்ததியைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. "கட்டுண்ட எகோனியாவின் குமாரர் சலாத்தியேல். மல்கீராம், பெதாயா, சேனாசார், யெகமியா, ஒசாமா, நெதபியா என்பவர்கள்" (1நாளா 3:17,18). "எக்கோனியா" என்னும் பெயர் கோனியாவைக் குறிக்கும். கோனியாவுக்கு ஏழுகுமாரர்கள் இருக்கிறார்கள். இவர்களில் சலாத்தியேல் மூத்தவர். கோனியாவின் குமாரர்களாகிய ஏழுபேரும், அவனுக்கு பிறந்த பிள்ளைகளல்ல என்றும், கோனியா இந்த ஏழுபிள்ளைகளையும் தனக்கு தத்தெடுத்துக் கொண்டான் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் எகோனியாவின் புத்திரரைப்பற்றி இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. "பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போன பின்பு, எகொனியா சலாத்தியேலைப் பெற்றான்" (மத் 1:12). ஆனாலும் லூக்கா எழுதின சுவிசேஷத்தில், சலாத்தியேலின் வம்சவரலாற்றைப்பற்றி, "சலாத்தியேல் நேரியின் குமாரன்" என்று எழுதப்பட்டிருக்கிறது.

"யோவன்னா ரேசாவின் குமாரன்; ரேசா சொரொபாபேலின் குமாரன்; சொரொபாபேல் சலாத்தியேலின் குமாரன்; சலாத்தியேல் நேரியின் குமாரன்" (லூக் 3:27). "எலியாக்கீம் மெலெயாவின் குமாரன்; மெலெயா மயினானின் குமாரன்; மயினான் மாத்தாத்தாவின் குமாரன்; மாத்தாத்தா நாத்தானின் குமாரன்; நாத்தான் தாவீதின் குமாரன்" (லூக் 3:31).

கோனியாவுக்கு குமாரர்கள் பிறந்தார்களா, அல்லது பிறக்கவில்லையா என்பது முக்கியமல்ல. கோனியாவின் சந்ததியைச் சேர்ந்தவர்களில் ஒருவனும் வாழ்வடையவில்லை. கோனியாவின் குமாரரில் ஒருவனும் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து யூதாதேசத்தை ஆளுகை செய்யவில்லை. கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு கோனியாவின்மீது வந்திருக்கிறது.

எரேமியா தீர்க்கதரிசி, கர்த்தருடைய வார்த்தையை யூதாதேசத்தாருக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார். "தேசமே! தேசமே! தேசமே! கர்த்தருடைய வார்த்தையைக்கேள்" (எரே 22:29) என்று எரேமியா யூதாதேசத்தார் எல்லோருக்கும் கர்த்தருடைய வார்த்தையை பொதுவாய் அறிவிக்கிறார்.

23 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசி, தேவனுடைய நாமத்தினாலே, கள்ளத்தீர்க்கதரிசிகளை கடிந்துகொள்கிறார். பிரபுக்களும் மேய்ப்பர்களும் ஜனங்களை கவனமாய் ஆளுகை செய்யவில்லை. ஜனங்கள்மீது அவர்களுக்கு கரிசனையாயில்லை (எரே 23:1,2). கர்த்தர் தம்முடைய ஆடுகளில் மீதமாயிருக்கிறவர்களை ஒன்றுகூட்டி சேர்ப்பதாக வாக்குப்பண்ணுகிறார் (எரே 23:3-8).

யூதாதேசத்திலே கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ளஆசாரியர்களும் கர்த்தருடைய நாமத்தினாலே பொய்பேசுகிறார்கள். தாங்களும் கர்த்தருக்கு ஊழியம் செய்வதாக மாய்மாலம்பண்ணுகிறார்கள். அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் (எரே 23:9-32). தேவனுடைய மெய்யான தீர்க்கதரிசிகளை துன்பப்படுத்துகிறவர்கள் மீதும் கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு வரும் (எரே 23:33-40).

மேய்ப்பர்களுக்கு ஐயோ
எரே 23:1,2

எரே 23:1. என் மேய்ச்சலின் ஆடுகளைக்கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:2. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தை மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு விரோதமாகச் சொல்லுகிறது என்னவென்றால், நீங்கள் என் ஆடுகளைப் பராமரியாமல், அவைகளைச் சிதறடித்து அவைகளைத் துரத்திவிட்டீர்கள்; இதோ, நான் உங்கள்பேரில் உங்கள் செய்கைகளின் பொல்லாப்புக்கேற்ற தண்டனையை உங்கள்மேல் வருவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் பொறுப்புக்களையும், கடமைகளையும் மேய்ப்பர்கள் சரிவர நிறைவேற்றவில்லை. அவர்கள் கர்த்தருடைய மேய்ச்சலின் ஆடுகளை கெடுத்து, சிதறடித்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட மேய்ப்பர்களுக்கு "ஐயோ" என்று கர்த்தர் சொல்லுகிறார். மேய்ப்பர்கள் என்னும் வார்த்தை, யூதாதேசத்தின் ராஜாக்களையும், பிரபுக்களையும் குறிக்கும். இவர்கள் ஜனங்களை ஆளுகை செய்கிறவர்கள். மேய்ப்பர்கள் என்னும் வார்த்தை ஆசாரியரையும் குறிக்கும். இவர்கள் ஜனங்களுக்கு ஆவிக்குரிய சத்தியத்தை உபதேசம்பண்ணி, அவர்களுக்கு ஆவிக்குரிய போஜனம்கொடுக்கிறவர்கள்.

மேய்ப்பர்கள் தங்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற ஆடுகளை வழிநடத்தவேண்டும். அவர்களைப் போஷிக்க வேண்டும். அவர்களைப் பாதுகாத்து பராமரிக்கவேண்டும். மேய்ப்பர்கள் ஆடுகளின் சொந்தக்காரர்களல்ல. ஆடுகள் கர்த்தருக்கு சொந்தமானவை. கர்த்தர் ஆடுகளைப்பற்றிச் சொல்லும்போது, "என் மேய்ச்சலின் ஆடுகள்" என்று சொல்லுகிறார். கர்த்தரே ஆடுகளுக்கு சொந்தக்காரர். அவரே பிரதான மேய்ப்பர். அவரே நம்முடைய நல்ல மேய்ப்பர்.

கர்த்தர் தம்முடைய ஆடுகளுக்கு பசுமையான விளைச்சல் நிலத்தை ஆயத்தம்பண்ணிக் கொடுத்திருக்கிறார். ஆடுகளும் கர்த்தருடையது. பசுமையான மேய்ச்சல் நிலங்களும் கர்த்தருடையது. மேய்ப்பர்கள் தொழுவத்திலுள்ள ஆடுகளை, மேய்ச்சல் நிலங்களுக்கு அழைத்து சென்று, அங்கே அவர்களை மேய்க்கவேண்டும். கொடிய மிருகங்களிடமிருந்து ஆடுகளை பாதுகாக்கவேண்டும்.

கர்த்தர் தம்முடைய மேய்ச்சலின் ஆடுகளை மேய்க்கிற பொறுப்பை மேய்ப்பர்களிடம் ஒப்புக்கொடுத்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய மேய்ச்சலின் ஆடுகளை ஒழுங்காய் மேய்ப்பதில்லை. அவர்கள் ஆடுகளை கெடுத்து, சிதறடிக்கிறார்கள். ஆடுகளை அடித்து துன்புறுத்துகிறார்கள். ஆடுகளை அன்பாய் வழிநடத்துவதற்குப் பதிலாக, அவற்றை தேவையில்லாமல் கோலால் அடிக்கிறார்கள். ஆடுகளைத் துன்பப்படுத்தி ஒடுக்குகிறார்கள்.

மேய்ப்பர்களும் கர்த்தருடைய ஆடுகளை சிதறடிக்கிறார்கள். கொடிய மிருகங்கள் ஆடுகளை பட்சிக்கிற வருகிறது. மேய்ப்பர்கள் தங்கள் பொறுப்பிலுள்ள ஆடுகளை பாதுகாக்கவேண்டும். ஆனால் அவர்களோ தங்களுடைய கடமைகளை சரிவர செய்யாமல் அசட்டையாயிருக்கிறார்கள். ஆடுகளுக்கு மேய்ப்பர்களின் பாதுகாப்பு கிடைக்கவில்லை. இதனால் கொடிய மிருகங்களும் ஆடுகளை கெடுத்து சிதறடிக்கிறது.

இந்தப் பிரச்சனைகளுக்கு மேய்ப்பர்களின் கவனக்குறைவே காரணம். அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களையும், கடமைகளையும் சரியாய் நிறைவேற்றாமல் அசட்டையாயிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களை நல்ல மேய்ப்பர்கள்போல காண்பித்துக் கொள்கிறார்கள். அவர்களிடத்தில் மாய்மாலம் இருக்கிறது. கர்த்தர் அப்படிப்பட்ட மேய்ப்பர்களைப் பார்த்து, "உங்களுக்கு ஐயோ" என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே பிரதான மேய்ப்பராயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருமே கர்த்தருடைய ஜனமாகவும், அவருடைய ஆடுகளாகவும் இருக்கிறார்கள். தேசத்தின் ராஜாக்களும், பிரபுக்களும், அதிகாரிகளும், ஆசாரியர்களும் கர்த்தருடைய ஜனத்தை மேய்க்கிற மேய்ப்பர்களாயிருக்கிறார்கள். ஆனால் அவர்களோ கர்த்தருடைய ஜனத்தை சரியாய் மேய்க்கவில்லை. தங்கள் கடமைகளை சரியாய் நிறைவேற்றாமல் அசட்டையாயிருக்கிறார்கள்.

இதன் நிமித்தமாய் தேவனுடைய கோபமும், அவருடைய நீதியான நியாயத்தீர்ப்பும் மேய்ப்பர்கள்மீது வந்திருக்கிறது. கர்த்தர் தமது ஜனத்தை மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு விரோதமாக, தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பைச் சொல்லுகிறார்.

"நீங்கள் என் ஆடுகளைப் பராமரியாமல், அவைகளைச் சிதறடித்து அவைகளைத் துரத்திவிட்டீர்கள்; இதோ, நான் உங்கள்பேரில் உங்கள் செய்கைகளின் பொல்லாப்புக்கேற்ற தண்டனையை உங்கள்மேல் வருவிப்பேன்" (எரே 23:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆடுகளை பராமரிக்கவேண்டியவர்களே, அவர்களை சிதறடிக்கிறார்கள். ஆடுகளை ஒன்றுகூட்டி சேர்க்கவேண்டிய மேய்ப்பர்களே அவர்களை துரத்திவிடுகிறார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு மேய்ப்பர்கள்மீது வருகிறது.

ஆடுகளில் மீதியாயிருப்பவைகள் எரே 23:3,4

எரே 23:3. நான் என் ஆடுகளில் மீதியாயிருப்பவைகளைத் துரத்தியிருந்த எல்லா தேசங்களிலுமிருந்து சேர்த்து, அவைகளைத் திரும்ப அவைகளின் தொழுவங்களுக்குக் கொண்டுவருவேன்; அப்பொழுது அவைகள் பலுகிப்பெருகும்.

எரே 23:4. அவைகளை மேய்க்கத்தக்கவர்களையும் அவைகள் மேல் ஏற்படுத்துவேன்; இனி அவைகள் பயப்படுவதுமில்லை, கலங்குவதுமில்லை, காணாமற் போவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

துரத்தப்பட்ட ஆடுகளுக்கு கர்த்தர் ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். இந்த ஆடுகள் சரிவர பராமரிக்கப்படவில்லை. இவை கர்த்தருடைய மேய்ச்சலின் ஆடுகளாயிருந்தாலும், இவர்களை மேய்க்கிற மேய்ப்பர்கள், இவர்களை கெடுத்து சிதறடித்து விட்டார்கள். இவர்களை பராமரியாமல் துரத்திவிட்டார்கள். கர்த்தருடைய ஆடுகளை மேய்ப்பதற்காக, கர்த்தரால் நியமிக்கப்பட்ட மேய்ப்பர்கள், தங்களுடைய கடமைகளை சரியாகச் செய்யவில்லை.

ஆனாலும் கர்த்தர் தம்முடைய மேய்ச்சலின் ஆடுகள்மீது கரிசனையுள்ளவராகவும், அன்புள்ளவராகவும் இருக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார்.

கர்த்தர் கானான் தேசத்தை தம்முடைய ஜனத்திற்கு சுதந்தர தேசமாக கொடுத்தார். ஆனால் கர்த்தருடைய ஜனமோ, அந்நிய தேசங்களுக்கு சிதறிப்போயிருக்கிறார்கள். சிதறிப்போன தம்முடைய ஜனங்களை கர்த்தர் மறுபடியும் கூட்டிச்சேர்த்து, அவர்களுடைய தேசத்திற்கு அழைத்து வந்து, அங்கே அவர்களை மறுபடியும் குடியேற்றுவதாக வாக்குப்பண்ணுகிறார்.

"நான் என் ஆடுகளில் மீதியாயிருப்பவைகளைத் துரத்தியிருந்த எல்லா தேசங்களிலுமிருந்து சேர்த்து, அவைகளைத் திரும்ப அவைகளின் தொழுவங்களுக்குக் கொண்டுவருவேன்" (எரே 23:3) என்று கர்த்தர் சொல்லுகிறார். சிதறிப்போன யூதர்கள், தங்கள் தேசத்திற்கு திரும்பி வருவார்கள். அங்கே அவர்கள் பலுகிப்பெருகுவார்கள். கர்த்தருடைய மேய்ச்சலின் ஆடுகள், தொழுவத்திற்கு திரும்பி வந்து, அங்கே பலுகிப்பெருகும்.

கர்த்தருடைய மேய்ச்சலின் ஆடுகளில் ஏராளமான ஆடுகள் சத்துருக்களால் சங்காரமாயிற்று. ஆனாலும் கர்த்தர் தமக்கென்று ஒரு கூட்டம் ஜனத்தை மீதியாக வைத்திருக்கிறார். இவர்கள் கர்த்தருடைய ஆடுகளில் மீதியாயிருப்பவர்கள். கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் இவர்கள் மூலமாய் நிறைவேறும். கர்த்தருடைய ஆடுகளில் மீதியாயிருப்பவைகள், எல்லா தேசங்களிலும் சிதறிப்போயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள் எல்லோரையும் கூட்டிச் சேர்ப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் எந்தெந்த தேசங்களிலெல்லாம் துரத்தப்பட்டிருந்தார்களோ, அந்தந்த தேசங்களிலிருந்து, கர்த்தர் அவர்களை கூட்டிச்சேர்த்து, அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அவர்களை மறுபடியும் அழைத்து வருகிறார்.

கர்த்தருடைய ஜனம் பலுகிப்பெருகும். இதுவே கர்த்தருடைய விருப்பமும், சித்தமுமாயிருக்கிறது. சிதறிப்போன ஆடுகள் மறுபடியும் தொழுவத்திற்குள் வரும். கர்த்தர் தம்முடைய ஆடுகளில் மீதியானவைகளை, தம்முடைய தொழுவத்திற்குள் திரும்பவும் அழைத்து வந்து, அங்கே அவர்களை போஷிப்பார், பாதுகாப்பார். திரும்பி வந்த ஆடுகளும் கர்த்தருடைய பராமரிப்பில் பாதுகாப்பாயிருக்கும். சத்துருக்களின் பயமுறுத்துதல்களில்லாமல், கர்த்தருடைய தொழுவத்தில் அமைதலோடே வாசம்பண்ணும்.

தம்முடைய மேய்ச்சலின் ஆடுகளை மேய்க்கிறதற்காக, கர்த்தர் முதலில் நியமித்த மேய்ப்பர்கள், தங்களுடைய கடமைகளை சரியாக நிறைவேற்றவில்லை. ஆடுகள் அந்த மேய்ப்பர்களுக்கு பயப்பட்டது. தங்களுக்கு விரோதமாக வரும் சத்துருக்களுக்கு பயப்பட்டது. கள்ளமேய்ப்பர்களின்கீழே கர்த்தருடைய மேய்ச்சலின் ஆடுகள் கெடுத்து சிதறடிக்கப்பட்டது. இதனால் ஆடுகள் கலங்கிப்போயிற்று. கர்த்தருடைய மேய்ச்சலின் ஆடுகளில் ஏராளமான ஆடுகள் காணாமலும் போயிற்று.

கர்த்தர் தம்முடைய ஆடுகளில் மீதியாயிருப்பவைகளை மேய்ப்பதற்கு, புதிய மேய்ப்பர்களை ஏற்படுத்துகிறார். இவர்கள் கர்த்தருடைய ஆடுகளை மேய்க்கத்தக்கவர்களாயிருப்பார்கள். இவர்கள் பிரதான மேய்ப்பரின்கீழ், உண்மையுள்ள மேய்ப்பர்களாயிருப்பார்கள். "அவைகளை மேய்க்கத்தக்கவர்களையும் அவைகள்மேல் ஏற்படுத்துவேன்; இனி அவைகள் பயப்படுவதுமில்லை, கலங்குவதுமில்லை, காணாமற்போவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்" *(எரே 23:4)*.

யோயாக்கீம், கோனியா ஆகியோர் யூதாதேசத்தில் ராஜாக்களாக ஆட்சிபுரிந்தார்கள். இவர்கள் கர்த்தருடைய ஜனத்தை மேய்க்கவேண்டிய ராஜாக்கள். இந்த ராஜாக்கள் ஆடம்பரமாக ஜீவித்தார்கள். இவர்கள் ஜனங்கள் மூலமாய் ஏராளமான நன்மைகளை அனுபவித்தார்கள். ஆனால் இவர்களோ தங்கள் தேசத்து ஜனங்களை உண்மையாய் ஆளுகை செய்யவில்லை. அவர்களை பாதுகாத்து பராமரிக்கவில்லை. அவர்களை சரியாக மேய்க்கவில்லை. இவர்கள் ஆடுகளை கெடுத்து சிதறடித்துப்போட்டார்கள்.

கர்த்தர் இவர்களுக்கு பதிலாக, செருபாபேல், நெகேமியா ஆகிய புதிய மேய்ப்பர்களை ஏற்படுத்தினார். இவர்கள் யோயாக்கீமைப்போலவோ அல்லது கோனியாவைப்போலவோ ஆடம்பரமாய் ஜீவிக்கவில்லை. இவர்கள் கர்த்தருக்கு உண்மையுள்ள மேய்ப்பர்களாக ஊழியம் செய்தார்கள். இவர்கள் கர்த்தருடைய மேய்ச்சலின் ஆடுகளுக்கு ஆசீர்வாதமான மேய்ப்பர்களாயிருந்தார்கள். கள்ளமேய்ப்பர்களோ கர்த்தருடைய மேய்ச்சலின் ஆடுகளுக்கு கொள்ளைநோயைப்போல கேடுசெய்தார்கள்.

நமது நீதியாயிருக்கிற கர்த்தர் எரே 23:5,6

எரே 23:5. இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

எரே 23:6. அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே இஸ்ரவேல் ஜனத்திற்கு மேசியாவாகவும், ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் இருக்கிறார். கிறிஸ்துவானவரே நல்ல மேய்ப்பர். அவரே கர்த்தருடைய மேய்ச்சலின் ஆடுகளுக்கு பிரதான மேய்ப்பர். பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, ஏற்ற காலம் வரும்போது, கர்த்தருடைய ஆடுகளில் மீதியாயிருப்பவர்களை மேய்ப்பதற்காக, அவரை பிரதான மேய்ப்பராக ஏற்படுத்தினார். கிறிஸ்துவானவரே கர்த்தருடைய ஆடுகளை மேய்க்கத்தக்க நல்ல மேய்ப்பர்.

கிறிஸ்து தம்முடைய சபைக்கு தலையாகயிருக்கிறார். சபையை ஆசீர்வதிப்பதற்காக கிறிஸ்து எழுப்பப்பட்டிருக்கிறார். "இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:5). கர்த்தர் நியமித்திருக்கிற இந்த நாட்களில், தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து, பிரதான மேய்ப்பராக, இந்தப் பூமியில் வெளிப்படுவார். அவர் கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனங்களுக்கு மகிமையாயிருப்பார்.

கர்த்தர் எரேமியா மூலமாக இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது, யூதாதேசம் அழிவுக்கு நேராக போய்க்கொண்டிருக்கிறது. தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆளுகை செய்வதற்கு, அவருடைய சந்ததியில் வந்தவர்கள் ஒருவருமில்லை. பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யூதாவின் ராஜாவாகிய கோனியாவையும், அவனுடைய குடும்பத்தாரையும் தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோய் விடுகிறான். அவர்களெல்லோருமே அந்நிய தேசத்தில் செத்துப்போகிறார்கள். தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து யூதாதேசத்தை ஆளுகை செய்வதற்கு, தாவீதின் சந்ததியில் ஒருவருமில்லை.

கர்த்தர் கோனியாவின்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பான வார்த்தைகளைச் சொன்னார். "இந்தப்புருஷன் சந்தானமற்றவன், தன் நாட்களில் வாழ்வடையாதவன் என்று இவனைக்குறித்து எழுதுங்கள்; அவன் வித்தில் ஒருவனாகிலும் வாழ்வடைந்து, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து, யூதாவில் அரசாளப்போகிறதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 22:30).

கர்த்தர் சொன்னபிரகாரம் யூதாதேசத்திற்கு அழிவு உண்டாயிற்று. யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் அந்நிய தேசத்திற்கு சிறைப்பட்டுப்போனார்கள். அவர்கள் பல தேசங்களுக்கும் துரத்திவிடப்பட்டார்கள். யூதர்கள் சிதறடிக்கப்பட்டார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், கர்த்தர் தம்முடைய வார்த்தையை வாக்குத்தத்தமாய் சொல்லுகிறார். "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்" (எரே 23:5) என்று கர்த்தருடைய வார்த்தை வெளிப்படுகிறது.

கர்த்தர் தாவீதோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தையிலும் உடன்படிக்கையிலும் உண்மையுள்ளவர். யூதாதேசம் அழிந்துகொண்டிருக்கிற இக்காலத்தில், கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை மறுபடியுமாய் நினைவுகூருகிறார். யூதாதேசம் அழிந்துபோயிருந்தாலும், தாவீதின் சந்ததியார் ஒன்றுமில்லாமல் வெறுமையாய்ப்போயிருந்தாலும், கர்த்தர் ஒன்றுமில்லாத வெறுமையிலிருந்து தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகிறார். "தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்" (எரே 23:5) என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

"நீதியுள்ள கிளை" என்னும் வாக்கியம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது. ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி ஏராளமான தீர்க்கதரிசன வாக்கியங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. எரேமியா தீர்க்கதரிசி, ஏசாயாவைப்போல, மேசியாவைப்பற்றி அதிகமான தீர்க்கதரிசனங்களைச் சொல்லவில்லை. ஆனாலும் இங்கு எரேமியா இயேசுகிறிஸ்துவைப்பற்றிச் சொல்லுகிற தீர்க்கதரிசனம் மிகவும் முக்கியமானதாகும்.

தீர்க்கதரிசனத்தின் ஆரம்பத்தில், "இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:5) என்னும் வார்த்தைகளோடு எரேமியா தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பிக்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு ஏற்றவேளை வரப்போகிறது. எரேமியா இந்த தீர்க்கதரிசனத்தைச் சொன்னபோது, கர்த்தர் சொன்ன அந்த நாள் வரவில்லை. ஆனாலும் அந்த நாள் வருவதை எரேமியா தீர்க்கதரிசனமாய்க் காண்கிறார்.

தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவதாக கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். இந்த வாக்கியம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது. ஒரு மரத்தின் கிளை எழும்பும்போது, அது ஆரம்பத்தில் உருவத்தில் சிறியதாயிருக்கும். அதன் தோற்றம் மிகவும் சாதாரணமானதாகயிருக்கும். ஒரு கிளை பூமியிலிருந்து முளைத்து எழும்பும்போது, அது மிகவும் எளிமையான தோற்றத்தோடு இருக்கும். அந்தக் கிளை வளர்ந்து பெரிதாகும்போதோ, அதுவே பெரிய விருட்சமாக வளரும். அந்த விருட்சம் முழுவதிலும் கனிகள் நிரம்பியிருக்கும்.

"தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்" என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் தாவீதின் குடும்பத்தில் யூதாவின் ராஜாவை எழும்பப்பண்ணுவார். அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரீகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நீதியுள்ள கிளை பூமிக்கு மேலே எழும்புவதற்கு முன்பாக, அது பூமிக்குள்ளே புதைந்து கிடக்கிற வேராயிருந்தது. அந்த வேர் முளைத்தெழுவதற்கு வாய்ப்பில்லை என்று எல்லோரும் நினைத்தார்கள். மண்ணில் புதைந்து கிடந்த வேர், கர்த்தர் நியமித்த காலம் வரும் வரையிலும், முளைத்தெழும்பவில்லை. அது பட்டுப்போன வேரைப்போலவும், செத்துப்போன வேரைப்போலவும் பூமிக்கடியில் கிடந்தது.

காலங்கள் நிறைவேறும்போது, கர்த்தர் பூமிக்கடியில் புதைந்து கிடந்த வேரை, ஒரு கிளையாக முளைத்தெழும்பச் செய்கிறார். ஜீவனற்றதுபோல பூமிக்கடியில் கிடந்த வேருக்கு கர்த்தர் ஜீவனைக்கொடுக்கிறார். கர்த்தருடைய வல்லமையினாலே அந்த வேர் நீதியுள்ள கிளையாக முளைத்தெழும்புகிறது.

"அங்கே தாவீதுக்காக ஒரு கொம்பை முளைக்கப்பண்ணுவேன்; நான் அபிஷேகம்பண்ணுவித்தவனுக்காக ஒரு விளக்கை ஆயத்தம்பண்ணினேன். அவன் சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்துவேன்; அவன்மீதிலோ அவன் கிரீடம் பூக்கும் என்றார்" (சங் 132:17,18).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமக்குதாமே நீதியுள்ளவராயிருக்கிறார். அவர் மூலமாக ஏராளமானோர் நீதிமான்களாக ஆக்கப்படுகிறார்கள். கர்த்தர் தமக்குரியவர்கள் எல்லோரையும் நீதிமான்களாக்குகிறார். நாமும் கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம். எரேமியா தீர்க்கதரிசி, மேசியாவாகிய கிறிஸ்துவைப் பற்றிச் சொல்லும்போது, அவரை "நீதியுள்ள கிளை" என்று சொல்லுகிறார். கிறிஸ்துவே நம்முடைய நீதியாயிருக்கிறார்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும்போது, "அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரீகம் பண்ணுவார்" என்றும் சொல்லுகிறார். கிறிஸ்துவானவரே தம்முடைய சபையின் ராஜாவாயிருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பூமியிலே தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார்.

கர்த்தருடைய சபைக்கு விரோதமாக எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும், இயேசுகிறிஸ்து சபைக்கு கொடுக்கும் பாதுகாப்பினாலும், பராமரிப்பினாலும், பலத்தினாலும், சபைக்கு ஜெயமுண்டாகும். கிறிஸ்துவின் சபையானது எல்லா சோதனைகளையும், எல்லா பாடுகளையும், எல்லா வேதனைகளையும் தாங்கிக்கொள்ளவும் செய்யும், அவற்றை மேற்கொள்ளவும் செய்யும்.

கர்த்தர் தம்முடைய ராஜ்யத்தில் ஞானமாய் ராஜரீகம்பண்ணுவார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் நித்திய சுவிசேஷமாகும். அது காலத்தினால் பழசாய்ப் போவதுமில்லை, அழிந்துபோவதுமில்லை. கிறிஸ்துவானவர் ஜெயகிறிஸ்துவாக எழும்புகிறார். ராஜாதி ராஜாவாகிய இயேசுகிறிஸ்து ஜெயிக்கிறவராகவும், ஜெயங்கொள்ளுகிறவராகவும் இருக்கிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய சுவிசேஷத்தினால், சாத்தானுடைய சகல அந்தகார வல்லமைகளையும் முறித்துப்போடுகிறார். சாத்தானுடைய அதிகாரத்தை அவமாக்கிப்போடுகிறார். அவனை அதம்பண்ணிப்போடுகிறார். கர்த்தர் நீதியும் பரிசுத்தமுமுள்ளவர். கிறிஸ்துவானவர் தம்முடைய பரிசுத்தமான ஜீவியத்தினால், தம்முடைய ராஜ்யத்தில் ஞானமாய் ராஜரீகம்பண்ணுகிறார்.

அவர் பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் எங்கெல்லாம் பிரசங்கிக்கப்படுகிறதோ, இயேசுகிறிஸ்துவின் ராஜ்யம் எங்கெல்லாம் ஸ்தாபிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் அவருடைய நியாயமும் நீதியும் ஆளுகை செய்யும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்தில், அவருடைய ஜனமாயிருக்கிற விசுவாசிகள் எல்லோருக்கும், இயேசுகிறிஸ்துவின் தெய்வீக பாதுகாப்பும், தெய்வீக பராமரிப்பும் கிடைக்கும். நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும் போது, கர்த்தர் தம்முடைய பரிசுத்தமான பாதுகாப்பை நமக்குக் கொடுத்து, நம்மைப் பாதுகாக்கிறார். நம்முடைய சிந்தையில் தெளிவையும் பரிசுத்தத்தையும் கொடுத்து நம்மை ஆசீர்வதிக்கிறார்.

"அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும்" (எரே 23:6) என்று எரேமியா சொல்லுகிறார். அந்த நாட்களில் இஸ்ரவேல் சுகவாய் வாசம்பண்ணும். நம்முடைய ஆத்துமாவில் இயேசுகிறிஸ்துவின் ஆளுகை நடைபெறும்போது, நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படும். நம்முடைய ஆத்துமா சுகமாய் வாசம்பண்ணும். நம்முடைய ஆத்துமா செழித்திருக்கும்.

"தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்" (லூக் 1:74,75).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமது நீதியாயிருக்கிற கர்த்தராயிருக்கிறார். கர்த்தர் நித்தியமானவர். அவர் நித்திய காலத்திலும் இருக்கிறவர். அவர் தாமாகவே இருக்கிறவர். கர்த்தரை யாரும் சிருஷ்டிக்கவில்லை. அவரே ஆதியும் அந்தமுமாயிருக்கிறவர். அவரே அல்பாவும் ஓமெகாவுமாக இருக்கிறவர். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, பிதாவாகிய தேவனுக்கும் நமக்கும் இடையே மத்தியஸ்தராயிருக்கிறார். அவரே நமது நீதியாயிருக்கிற கர்த்தர்.

மனுஷர்கள் எல்லோருமே தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகயிருக்கிறோம். எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறோம். கர்த்தருக்கு முன்பாக நம்முடைய சுயநீதியை வெளிப்படுத்தி, நம்மால் ஆத்தும இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய சுயநீதி தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக அற்பபிரயோஜனமுள்ளது. அது ஒன்றுக்கும் உதவாது.

நாம் பாவிகளாகயிருக்கையில், தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து, நமது நீதியாயிருக்கிற கர்த்தராயிருக்கிறார். பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நீதியை அங்கீகரிக்கிறார். மனுஷரிடத்தில் நீதியில்லை. கர்த்தர் மனுஷருடைய நீதியை அங்கீகரிப்பதுமில்லை. ஆனால் பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நீதியை அங்கீகரிக்கிறார்.

கிறிஸ்துவானவர் நமது நீதியாயிருக்கிற கர்த்தராயிருப்பதினால், கர்த்தர் நம்மையும் நீதிமான்களாக அங்கீகரிக்கிறார். இயேசுகிறிஸ்துவின் நீதியினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். நாம் சுகமாய் வாசம்பண்ணுகிறோம். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நம்முடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் உண்டாயிருக்கிறது.

கிறிஸ்துவானவர் நம்மோடு கிருபையின் உடன்படிக்கை ஏற்படுத்தியிருக்கிறார். நாம் கிறிஸ்துவின் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளும்போது கிறிஸ்துவானவர் நமக்கு, நமது நீதியாயிருக்கிற கர்த்தராயிருக்கிறார். கிறிஸ்துவின் நீதி நம்முடைய நீதியாகிறது. மேசியாவாகிய இயேசுகிறிஸ்து நித்திய நீதியுள்ளவர். அவர் சர்வவல்லமையும், சர்வஆளுகையுமுள்ளவர். அவருடைய நீதி மாத்திரமே, தேவனுக்கு முன்பாக நம்மை நீதிமான்களாக்குவதற்கு போதுமானதாயிருக்கிறது.

நம்மை இரட்சிப்பதற்கு இயேசுகிறிஸ்துவின் நீதியைத் தவிர வேறு உபாயம் எதுவும் தேவையில்லை. இயேசுகிறிஸ்துவின் நீதியோடு நம்முடைய சுயநீதியையோ அல்லது மற்றவர்களின் நீதியையோ கூட்டிச்சேர்க்கவேண்டும் என்னும் அவசியமுமில்லை. கிறிஸ்துவின் நீதி மாத்திரமே நம்மை இரட்சிப்பதற்குப் போதுமானது. கிறிஸ்துவானவர் நமது நீதியாயிருக்கிற கர்த்தராயிருக்கும்போது, நாமும் கர்த்தருக்கு முன்பாக நீதிமான்களாயிருக்கிறோம்.

நம்மிடத்திலுள்ள நீதி நம்முடைய சுயத்தினால் உண்டானதல்ல. நம்முடைய நீதி நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்து நமக்கு வந்திருக்கிறது. நாம் இயேசுகிறிஸ்துவின் நீதியை உடையவர்களாகயிருக்கிறோம். இயேசுகிறிஸ்துவிடமிருந்து அவருடைய நீதியை பெற்றுக்கொண்டவர்களாயிருக்கிறோம். நம்முடைய நீதிக்கும், இரட்சிப்புக்கும் இயேசு கிறிஸ்துவின் நீதியே ஆதாரமாயிருக்கிறது.

ஆகையினால் கிறிஸ்துவின் நாமம், "நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" என்று வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நாம் இயேசுகிறிஸ்துவைப்பற்றித் தியானிக்கும் போது, "அவர் நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" என்றே தியானிக்கவேண்டும். அவர் நம்முடைய கர்த்தராகயில்லையென்றால், நம்மிடத்தில் நீதியில்லை என்பதுதான் இந்த வாக்கியத்தின் பொருளாகும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமது நீதியாயிருக்கிற கர்த்தராயிருக்கிறார். நாம் தேவனுக்கு முன்பாக, இயேசுகிறிஸ்துவின் நீதியினால் நியாயந்தீர்க்கப்படுகிறோம். நம்மிடத்தில் பாவங்களும், அக்கிரமங்களும், அசுத்தங்களும் இருந்தாலும், இயேசுகிறிஸ்துவின் நீதி, நம்முடைய நீதியாகயிருப்பதினால், நம்முடைய பாவங்களின் தண்டனைகளுக்கு நாம் விடுதலை பெறுகிறோம். கர்த்தர் நம்மை நியாயம் விசாரிக்கும்போது, அவர் நம்மிடத்திலுள்ள பாவங்களையும், அக்கிரமங்களையும் பார்க்காமல், நம்மிடத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நீதியையே பார்க்கிறார். ஆகையினால்தான் நமக்கு இரட்சிப்பு கிடைத்திருக்கிறது.

பாவத்தின் சம்பளம் மரணம். நம்முடைய பாவங்களினிமித்தமாய் நமக்கு மரணம் உண்டாகவேண்டும். ஆனால் கர்த்தரோ நம்முடைய பாவங்களை பார்க்காமல், இயேசுகிறிஸ்துவின் நீதியைப் பார்க்கிறார். ஆகையினால் நமக்கு மரணத்தை தண்டனையாகக் கொடுப்பதற்குப் பதிலாக ஜீவனை ஆசீர்வாதமாகக் கொடுக்கிறார். கர்த்தருடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம், இயேசுகிறிஸ்துவுக்குள் சுகமாய் வாசம்பண்ணுகிறோம்.

கர்த்தர் நம்முடைய பாவங்களை பார்க்காமல், நம்மிடத்தில் நீதியாயிருக்கிற இயேசுகிறிஸ்துவைப் பார்ப்பதினால், நாம் இரட்சிக்கப்படுகிறோம். கர்த்தர் நம்மை பாவிகளாக பார்க்காமல், நீதிமான்களாகப் பார்க்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாகயிருக்கிறோம். கர்த்தர் நம்மை தண்டனைக்கு நியமிக்காமல், தம்முடைய கிருபைகளையும், சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வதற்கு, நம்மை பாக்கியவான்களாக ஏற்றுக்கொள்கிறார். நாம் கர்த்தருடைய கிருபாசனத்தண்டையில் தைரியமாய்க் கிட்டிச்சேருவதற்கு, இயேசுகிறிஸ்துவின் நீதியைத் தவிர, நம்மிடத்தில் வேறொரு தகுதியுமில்லை.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக கல்வாரி சிலுவையில் மரித்தார் என்றும், நம்மை மீட்பதற்காக அவர் தம்முடைய சுயஇரத்தத்தையே மீட்பின் கிரயமாகச் செலுத்தினார் என்றும், மரித்து அடக்கம்பண்ணப்பட்ட இயேசுகிறிஸ்து மூன்றாம்நாளில் உயிரோடு எழும்பினார் என்றும் நாம் விசுவாசிக்கிறோம். இந்த விசுவாசத்தினால் நாம் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, நமக்கு, "நமது நீதியாயிருக்கிற கர்த்தராயிருக்கிறார்".

இதோ, நாட்கள் வரும்
எரே 23:7,8

எரே 23:7. ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்த கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணாமல்,

எரே 23:8. இஸ்ரவேல் வீட்டின் சந்ததியாரைத் தங்கள் சுயதேசத்தில் குடியிருக்கும்படிக்கு வடதேசத்திலும், நான் அவர்களைத் துரத்தியிருந்த எல்லா தேசங்களிலுமிருந்து அழைத்து வழிநடத்திக்கொண்டுவந்த கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம் பண்ணுவார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய பலத்த புயத்தினால், தம்முடைய ஜனத்தை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவித்து, அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வருவார். அங்கே அவர்களை மறுபடியுமாய் குடியேற்றுவார். அப்போது இஸ்ரவேல் வம்சத்தாருக்கும், யூதாவம்சத்தாருக்கும் மிகப்பெரிய இரட்சிப்பு உண்டாகும்.

இஸ்ரவேல் ஜனத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போவதற்கு முன்பாக, அவர்கள் ஏற்கெனவே எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இரண்டு விடுதலைகள் உண்டாயிற்று. அவற்றில் ஒன்று எகிப்து தேசத்திலிருந்து விடுதலை. மற்றொன்று பாபிலோன் தேசத்திலிருந்து விடுதலை. இவ்விரண்டு விடுதலைகளில், எகிப்திலிருந்து பெற்ற விடுதலையைவிட, பாபிலோன் தேசத்திலிருந்து பெற்ற விடுதலையே மிகவும் அற்புதமானது.

யூதாவம்சத்தாரும், எருசலேம் வம்சத்தாரும் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு போவதற்கு முன்பாக, அவர்கள் சத்தியம் பண்ணும்போது, "இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணுவது வழக்கம்" (எரே 23:7).

கர்த்தருடைய ஜனத்தார் பாபிலோன் தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பின்பு, அவர்கள் சத்தியம் பண்ணும்போது "இஸ்ரவேல் வீட்டின் சந்ததியாரைத் தங்கள் சுயதேசத்தில் குடியிருக்கும்படிக்கு வடதேசத்திலும், நான் அவர்களைத் துரத்தியிருந்த எல்லா தேசங்களிலுமிருந்து அழைத்து வழிநடத்திக்கொண்டுவந்த கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணுவார்கள்" (எரே 23:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வாக்கியத்தில் வடக்கு தேசம் என்பது பாபிலோன் தேசத்தைக் குறிக்கும்.

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்தபோது, மேசியாவாகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சுவிசேஷ ஆலயத்தைக் கட்டுவார்.

யூதர்கள் பாபிலோன் தேசத்திலிருந்து விடுதலைபெற்று தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்த பின்பு, கர்த்தருடைய ஆலயத்தை மறுபடியும் எடுப்பித்துக் கட்டுவார்கள். யூதர்கள் மத்தியில் கர்த்தருடைய நியாயப்பிரமாணம் வாசிக்கப்படும். யூதர்கள் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, பயபக்தியோடு ஜீவிப்பார்கள். முந்தின விடுதலையைவிட பிந்தின விடுதலை மிகுந்த சிறப்புள்ளதாயிருக்கும். அந்நாட்களில் யூதாஇரட்சிக்கப்படும். இஸ்ரவேல் சுகமாய வாசம்பண்ணும்.

கள்ளத்தீர்க்கதரிசிகள்
எரே 23:9

எரே 23:9. தீர்க்கதரிசிகளினிமித்தம் என் இருதயம் என் உள்ளத்திலே நொறுங்கியிருக்கிறது; என் எலும்புகளெல்லாம் அதிருகிறது; கர்த்தர்நிமித்தமும், அவருடைய பரிசுத்த வார்த்தைகளினிமித்தமும் நான் வெறித்திருக்கிற மனுஷனைப்போலவும் மதுபானம் மேற்கொண்டவனைப் போலவும் இருக்கிறேன்.

எரேமியா கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையை எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார். எரேமியா அவர்களைப்பற்றி இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்.

"அப்பொழுது நான்: ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நீங்கள் பட்டயத்தைக் காண்பதில்லை, உங்களுக்குப் பஞ்சமும் வருவதில்லை; உறுதியான சமாதானத்தையே இவ்விடத்தில் உங்களுக்குத் தருவோமென்றார் என்று தீர்க்கதரிசிகள் அவர்களுக்குச் சொல்லுகிறார்களே என்றேன்" (எரே 14:13).

யூதாதேசத்திற்கு பொதுவான அழிவு வரும்போது, அந்த அழிவில் கள்ளத்தீர்க்கதரிசிகளும் அழிந்துபோவார்கள். அவர்கள் தங்களுக்குத் தாங்களே தீமையை வருவித்துக்கொள்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள்மீது தேவனுடைய கோபம் எழும்பியிருக்கிறது.

கள்ளத்தீர்க்கதரிசிகளும் கர்த்தருடைய நாமத்தினாலே பேசுகிறார்கள். கர்த்தர் தங்களுக்கு தெய்வீக வெளிப்பாடுகளை கொடுத்திருப்பதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய வார்த்தைக்கு விரோதமாகவும் பேசுவதின் மூலமாக, கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களுக்குத் தாங்களே அழிவைத் தேடிக் கொள்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்டு, அதை நம்புகிறவர்களும் அழிந்துபோகிறார்கள்.

கள்ள "தீர்க்கதரிசிகளினிமித்தம் என் இருதயம் என் உள்ளத்திலே நொறுங்கியிருக்கிறது; என் எலும்புகளெல்லாம் அதிருகிறது" என்று எரேமியா சொல்லுகிறார். யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் எரேமியாவும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளும் பொய்யான தீர்க்கதரிசனங்களைச் சொல்லுகிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது எரேமியாவின் உள்ளம் மிகவும் வேதனைப்படுகிறது. அவருடைய இருதயம் அவர் உள்ளத்திலே நொறுங்கியிருக்கிறது. அவர் மதுபானம் குடித்து வெறித்திருக்கிற மனுஷனைப்போல இருக்கிறார்.

எரேமியா கர்த்தர் கொடுத்த செய்தியை மாத்திரம் பேசுவார். கர்த்தருடைய வார்த்தைகள் எரேமியாவின் இருதயத்தில் நிரம்பியிருக்கும். யூதாதேசத்திற்கு விரோதமாக சில துரோகச் செயல்கள் நடைபெறும்போது, எரேமியா அதைப் பார்த்து மனம் பதறுகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளின் பொய்யான வார்த்தைகள் எரேமியாவின் இருதயத்தை வேதனைப்படுத்துகிறது. அவர்களுடைய பொய்யான செய்திகளைக் கேட்டு எரேமியாவின் இருதயம் நொறுங்கிப்போகிறது.

கள்ளத்தீர்க்கதரிசிகள் கள்ளவார்த்தைகளைப் பேசுகிறார்கள். அவர்கள் பாவத்திலும், அக்கிரமத்திலும் ஜீவிக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமான செய்திகளைச் சொல்லுகிறார்கள். அவர்களுடைய வார்த்தைகளும் துன்மார்க்கமாயிருக்கிறது. அவர்களுடைய செய்கைகளும் துன்மார்க்கமாயிருக்கிறது. ஆனாலும் கர்த்தரிடத்திலிருந்து தங்களுக்கு செய்திகளும், வெளிப்பாடுகளும் வந்திருப்பதாக கள்ளத்தீர்க்கதரிசிகள் மாய்மாலம் பண்ணுகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களை பக்தியுள்ளவர்கள்போலவும், பரிசுத்தவான்களைப்போலவும், தேவனுக்காக பேசுகிறவர்கள்போலவும் காண்பித்துக் கொள்கிறார்கள். இதன் நிமித்தமாய் எரேமியாவின் இருதயம் அவருடைய உள்ளத்திலே நொறுங்கியிருக்கிறது. அவருடைய எலும்புகளெல்லாம் அதிருகிறது.

கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய பொய்யான வார்த்தைகளினிமித்தமாய், அவர்கள்மீது தேவனுடைய கோபமும், அவருடைய ஆக்கினைத்தீர்ப்பும் வரும். அவர்களுடைய வார்த்தைகளைக்கேட்டு, அதை நம்புகிறவர்கள் மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு அழிவு வருவதுபோல, அவர்கள் நிமித்தமாய் யூதாதேசத்திற்கும் அழிவு வரும். கர்த்தருடைய சமுகத்திலிருந்து வெளிப்படுத்தப்படும் கோபத்தை நினைத்துப் பார்த்து எரேமியாவின் இருதயம் அவருடைய உள்ளத்திலே நொறுங்கியிருக்கிறது.

"கர்த்தர் நிமித்தம்" என்னும் வாக்கியத்திற்கு, "கர்த்தருடைய சமுகத்திலிருந்து" என்றும், "கர்த்தருடைய பரிசுத்தமான வார்த்தையினிமித்தம்" என்றும் பொருள் சொல்லலாம். எரேமியா தீர்க்கதரிசி கர்த்தர் நிமித்தமும், அவருடைய பரிசுத்த வார்த்தைகளினிமித்தமும் வெறித்திருக்கிற மனுஷனைப்போல இருக்கிறார். மதுபானம் மேற்கொண்டவனைப்போலவும் வெறித்திருக்கிறார்.

தேசம் சாபத்தினால் துக்கிக்கிறது எரே 23:10

எரே 23:10. தேசம் விபசாரக்காரரால் நிறைந்திருக்கிறது, தேசம் சாபத்தினால் துக்கிக்கிறது, வனாந்தரத்தின் மேய்ச்சல்கள் வாடிப்போகிறது; அவர்கள் ஓட்டம் பொல்லாதது; அவர்கள் பெலன் அநியாயமாயிருக்கிறது.

யூதாதேசத்தில் பாவமும், அக்கிரமமும், அநியாயமும் நிரம்பியிருக்கிறது. இதன் நிமித்தமாய் தேவனுடைய கோபம் யூதாதேசத்தின்மீதும், யூதாவின் மனுஷர்மீதும் வந்திருக்கிறது. தேசம் சாபத்தினல் துக்கிக்கிறது. யூதாதேசம் விபசாரக்காரரால் நிறைந்திருக்கிறது. யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார்கள். அந்நிய தேவர்களைப் பின்பற்றி, விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும், ஆவிக்குரிய விபசாரமும், மாம்சப்பிரகாரமான விபசாரமும் நிறைந்திருக்கிறது.

யூதா மனுஷரின் பாவத்தினிமித்தமாய் தேவனுடைய சாபம் யூதாதேசத்தின்மீது வந்திருக்கிறது. தேசத்தில் செழிப்பு இல்லை. பஞ்சமுண்டாயிற்று. வனாந்தரத்தின் மேய்ச்சல்கள் வாடிப்போயிற்று. புசிப்பதற்கு போஜனமில்லை. நிலத்தில் தானிய அறுவடையில்லை. ஆடுகளுக்கு பசுமையான மேய்ச்சல் நிலமுமில்லை. அனைத்தும் வாடிப்போயிற்று. தேசம் வறண்டுபோயிற்று. தேசத்தில் மழைத்தாழ்ச்சி உண்டாயிற்று.

யூதாதேசத்தின்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும், சாபமும் வந்திருக்கிறது. யூதாவின் மனுஷர் மிகுந்த வேதனையிலிருக்கிறார்கள். தேசம் சாபத்தினால் துக்கிக்கிறது. ஆனாலும் யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பவில்லை. தங்களுக்கு வரப்போகும் தேவனுடைய நியாயத்தீர்ப்பை நினைத்து அவர்கள் மனம் பதறவுமில்லை. தங்களுடைய அக்கிரமங்களுக்காக அவர்களுடைய இருதயம் துக்கிக்கவுமில்லை.

யூதாவின் மனுஷர் பாவம் செய்ய வேண்டுமென்று உறுதியாயிருக்கிறார்கள். அவர்கள் பாவத்தில் நிலைத்திருக்கிறார்கள். தங்களுடைய பொல்லாத வழிகளில் நடக்கிறார்கள். அவர்கள் ஓட்டம் பொல்லாதது. தவறான பாதையில் சென்றாலும் அதைவிட்டு நேரான பாதைக்கு திரும்பிவர மனமில்லாதவர்களாயிருக்கிறார்கள். பாவம் செய்யவேண்டும் என்னும் வைராக்கியம் அவர்களிடத்தில் இருக்கிறது. கர்த்தருக்கு பயந்து, பயபக்தியாய் ஜீவிக்கவேண்டும் என்னும் ஆர்வம் யூதாவின் மனுஷரிடத்தில் சிறிதுமில்லை.

கர்த்தர் அவர்களுடைய பொல்லாப்பைக் காண்கிறார். அவர்கள் பெலன் அநியாயமாயிருக்கிறது. தங்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் தங்களைத் தண்டிக்கிறார் என்பதை யூதாவின் மனுஷர் அறிந்திருக்கிறார்கள். தங்கள்மீது வந்திருக்கும் சாபத்தை நினைத்து துக்கிக்கிறார்கள். ஆனாலும் நன்மை செய்யவேண்டும் என்னும் விருப்பம் அவர்களுடைய மனதில் உண்டாகவில்லை. யூதாவின் மனுஷர் தீமைக்குத் துணைபோகிறார்கள். பாவத்திற்கு பங்காளிகளாயிருக்கிறார்கள்.

தீர்க்கதரிசியும் ஆசாரியனும் மாயக்காரராயிருக்கிறார்கள் எரே 23:11-20

எரே 23:11. தீர்க்கதரிசியும் ஆசாரியனும் மாயக்காரராயிருக்கிறார்கள்; என் ஆலயத்திலும் அவர்களுடைய பொல்லாப்பைக் கண்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:12. ஆதலால், அவர்கள் வழி அவர்களுக்கு இருட்டிலே சறுக்கலான வழியாயிருக்கும், துரத்துண்டு அதிலே விழுவார்கள்; அவர்கள் விசாரிக்கப்படும் வருஷத்திலே அவர்கள்மேல் பொல்லாப்பை வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:13. சமாரியாவின் தீர்க்கதரிசிகளிலோ மதிகேட்டைக் கண்டேன்; பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி, இஸ்ரவேல் என்னும் என் ஜனத்தை மோசம்போக்கினார்கள்.

எரே 23:14. எருசலேமின் தீர்க்கதரிசிகளிலும் திடுக்கிடத்தக்க காரியத்தைக் காண்கிறேன்; விபசாரம்பண்ணி, வஞ்சகமாய் நடந்து, ஒருவனும் தன் பொல்லாப்பை விட்டுத் திரும்பாதபடிக்குப் பொல்லாதவர்களின் கைகளைத் திடப்படுத்துகிறார்கள்; அவர்கள் எல்லாரும் எனக்குச் சோதோமைப்போலும், அதின் குடிகள் கொமோராவைப்போலும் இருக்கிறார்கள்.

எரே 23:15. ஆதலால் சேனைகளின் கர்த்தர் தீர்க்கதரிசிகளைக்குறித்து: இதோ, நான் அவர்களுக்குப் புசிக்க எட்டியையும், குடிக்கப் பிச்சுக்கலந்த தண்ணீரையும் கொடுப்பேன்; எருசலேமின் தீர்க்கதரிசிகளிலிருந்து மாயமானது தேசமெங்கும் பரம்பிற்றே என்று சொல்லுகிறார்.

எரே 23:16. உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள்; அவர்கள் உங்களை வீண்பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள்; கர்த்தருடைய வாக்கை அல்ல, தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:17. அவர்கள் என்னை அசட்டை பண்ணுகிறவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானம் இருக்குமென்று கர்த்தர் சொன்னாரென்று சொல்லுகிறதுமல்லாமல்; தங்கள் இருதயத்தின் கடினத்திலே நடக்கிற யாவரையும் நோக்கி: உங்கள்மேல் பொல்லாப்பு வராதென்றும் சொல்லுகிறார்கள்.

எரே 23:18. கர்த்தருடைய ஆலோசனையில் கூடநின்று, அவருடைய வார்த்தையைக் கேட்டறிந்தவன் யார்? அவருடைய வார்த்தையைக் கவனித்துக்கேட்டவன் யார்?

எரே 23:19. இதோ, கர்த்தருடைய பெருங்காற்றாகிய கொடிய புசல் புறப்பட்டது; அது துன்மார்க்கருடைய தலையின்மேல் உக்கிரமாய் மோதும்.

எரே 23:20. கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை நடப்பித்து நிறைவேற்றுமளவும், அவருடைய கோபம் தணியாது, கடைசிநாட்களில் அதை நன்றாய் உணருவீர்கள்.

எரேமியா தீர்க்கதரிசி, கள்ளத்தீர்க்கதரிசிகள்மீதும் ஆசாரியர்கள் மீதும் குற்றம் சொல்லுகிறார். அவர்கள் மாயக்காரராயிருக்கிறார்கள். பொல்லாத காரியங்களை செய்கிறார்கள். ஆசாரியர்கள் தேவனுடைய பிரமாணங்களை தீட்டுப்படுத்துகிறார்கள். அவர்களிடத்தில் மாய்மாலமும் பொல்லாப்பும் காணப்படுகிறது. "என் ஆலயத்திலும் அவர்களுடைய பொல்லாப்பைக் கண்டேன்" (எரே 23:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஆசாரியரும் கர்த்தருடைய ஆலயத்திலேயே பாவம் செய்கிறார்கள்.

ஆசாரியர்கள் தேவனுடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதுபோல மாய்மாலம்பண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய பிரமாணத்தை மீறி நடக்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளும் கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு சொல்லுவதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள். அவர்களிடத்தில் உண்மையில்லை. கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஆசாரியரும் மாயக்காரராயிருக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அவர்கள்மீது பரிசுத்தம் என்னும் போர்வை போர்த்தப்பட்டிருக்கிறது. அவர்கள் வெளிப்பார்வைக்கு பரிசுத்தவான்களைப்போல தோற்றமளிக்கிறார்கள். அவர்களுடைய இருதயமோ திருக்குள்ளதும், கேடுள்ளதுமாயிருக்கிறது. அவர்கள் பொல்லாத காரியங்களை சிந்திக்கிறார்கள்.

கர்த்தர் அவர்களுடைய பொல்லாப்பை தம்முடைய ஆலயத்திலேயே பார்க்கிறார். கர்த்தருடைய ஆலயத்தில் ஆசாரியர்கள் பலிபீடத்திற்கு முன்பாக ஊழியம் செய்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் தேவனுடைய ஆலயத்தில் கர்த்தருடைய வார்த்தை என்னும் பேரில் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

அவர்கள் கர்த்தருடைய நாமத்தினால் ஊழியம் செய்தாலும், அவர்களுடைய உள்ளத்தில் விக்கிரகாராதனை நிரம்பியிருக்கிறது. அவர்கள் அந்நிய தேவர்களைப் பின்பற்றுகிறார்கள். விக்கிரகங்களுக்கும் தூபங்காட்டுகிறார்கள். அவர்களுடைய ஜீவியத்தில் பரிசுத்தமில்லை. அவர்கள் விபசாரக்காரராயும், வேசிமார்க்கத்தாராயும் இருக்கிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளின் துன்மார்க்கத்தினிமித்தம் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும். கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளையும், கள்ள ஆசாரியர்களையும் தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பினால் தண்டிப்பார். அவர்கள் ஜனங்களுக்கு சமாதானமுண்டாகும் என்று வாக்குப்பண்ணுகிறார்கள். கர்த்தரோ அவர்களுக்கு சமாதானமில்லை என்று சொல்லுகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினால் பேசினாலும், கர்த்தருடைய வார்த்தைக்கு நேர்விரோதமாய் பேசுகிறார்கள். உண்மையைப் பேசாமல் பொய்யைப் பேசுகிறார்கள். சமாதானம் இல்லாதிருந்தும், சமாதானம் இருக்கும் என்று சொல்லுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு சமாதானம் இருக்காது.

கள்ளத்தீர்க்கதரிசிகள்மீதும், கள்ள ஆசாரியர்கள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். அவர்கள் எதிர்பாராத தீங்குகள் அவர்கள்மேல் வந்து விழும். அவர்கள் வழி அவர்களுக்கு இருட்டிலே சறுக்கலான வழியாகயிருக்கும். அவர்கள் துரத்துண்டு அதிலே விழுவார்கள் (எரே 23:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள ஆசாரியர்களும் தங்களை கர்த்தருடைய ஊழியக்காரர்களாக வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்கள். ஜனங்களை கர்த்தருடைய பாதையில் வழிநடத்துவதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள். ஆனால் அவர்களுக்கே பாதை தெரியாது. அவர்கள் இருட்டில் நடக்கிறவர்களைப்போல இருப்பார்கள். அவர்களுடைய வழியும் உறுதியான வழியாகயிருக்காது. அது சறுக்கலான வழியாக இருக்கும். இருட்டிலே, சறுக்கலான வழியில் நடப்பது மிகவும் கடினம். கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள ஆசாரியர்களும் மாறுபாடான வழிகளில் கர்த்தருக்கு விரோதமாக நடக்கிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள ஆசாரியர்களும் ஜனங்களுக்கு மாயையான வாக்குத்தத்தங்களைச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு தேவனுடைய பாதுகாப்பும், ஆசீர்வாதமும், சந்தோஷமும், சமாதானமும் உண்டாயிருக்கும் என்று பொய்சொல்லுகிறார்கள். ஜனங்களுக்கு நிச்சயமான வார்த்தைகளை சொல்லுகிற கள்ளத்தீர்க்கதரிசிகளின் ஜீவியமே நிச்சயமில்லாதிருக்கும். அவர்களுடைய வழி உறுதியாயிராது. சறுக்கலான வழியாயிருக்கும்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் சாதுரிய வார்த்தைகளைப் பேசி ஜனங்களை மயக்குவார்கள். நூதன உபதேசங்களைச் சொல்லி மக்களை தங்கள் பக்கமாய் இழுத்துக்கொள்வார்கள். கர்த்தர் சொல்லாததையெல்லாம், கர்த்தர் சொன்னார் என்று ஆசையான வார்த்தைகளைப் பேசுவார்கள். கர்த்தருடைய நாமத்தினால் ஏராளமான வாக்குத்தத்தங்களையும், உறுதிமொழிகளையும், நிச்சயங்களையும் சொல்லுவார்கள். ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளின் ஜீவியம் உறுதியாயிராது. அவர்களால் நிலைத்திருக்க முடியாது. அவர்கள் துரத்தப்படுவார்கள் என்று கர்த்தர் அவர்களைக் குறித்து சொல்லுகிறார்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு கள்ளத்தீர்க்கதரிசிகளையும், கள்ள ஆசாரியர்களையும் துரத்தும். அவர்களோ தேவனுடைய கோபத்தை தாங்கமுடியாமல் தப்பித்து ஓடுவார்கள். ஆனாலும் அவர்கள் இருட்டிலே சறுக்கலான வழியில் ஓடுவதினால், அதிலே இடறிவிழுவார்கள். தாங்கள் வெட்டிய குழியில் தாங்களே விழுவார்கள். தாங்கள் விரித்த வலையிலும், கண்ணியிலும் தாங்களே சிக்கிக்கொள்வார்கள்.

ஜனங்களை பயமுறுத்துவதற்காக, கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ள ஆசாரியர்களும், "ஜனங்கள்மீது தீங்கு வரும்" என்று சொல்லுவார்கள். ஜனங்களை பயமுறுத்துவதற்காக அவர்களுக்கு "அழிவு வரும்" என்று சத்தமாய்ச் சொல்லுவார்கள். மற்றவர்களுக்கு அழிவு வரும் என்று சொன்ன கள்ளத்தீர்க்கதரிசிகள்மீது, தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பும், தேவனால் வரும் அழிவும் வரும். கர்த்தர் அவர்களை விசாரிப்பார். "அவர்கள் விசாரிக்கப்படும் வருஷத்திலே, அவர்கள்மேல் பொல்லாப்பை வரப்பண்ணுவேன்" (எரே 23:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். மேலும், "நான் அவர்களுக்கு புசிக்க எட்டியையும், குடிக்க பிச்சுக்கலந்த தண்ணீரையும் கொடுப்பேன்" (எரே 23:15) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

"ஆதலால், இதோ, நான் இந்த ஜனத்துக்குப் புசிக்க எட்டியையும், குடிக்கப்பிச்சுக்கலந்த தண்ணீரையும் கொடுத்து, அவர்களும், அவர்கள் பிதாக்களும் அறியாத புறஜாதிகளுக்குள்ளே அவர்களைச் சிதறடித்து, பட்டயம் அவர்களை நிர்மூலமாக்குமட்டும் அதை அவர்களுக்குப் பின்னாக அனுப்புவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 9:15,16).

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகள்மீதும், கள்ள ஆசாரியர்கள்மீதும் இரண்டு குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறார். அவையாவன : 1. அவர்கள் தங்களுடைய ஜீவியத்தின் மூலமாய் ஜனங்களுக்கு பாவங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். 2. அவர்கள் தங்கள் கள்ளவார்த்தைகள் மூலமாய் ஜனங்களை பாவம் செய்யுமாறு உற்சாகப்படுத்துகிறார்கள்.

எருசலேமிலுள்ள கள்ளத்தீர்க்கதரிசிகள் சமாரியாவின் தீர்க்கதரிசிகளைப்போல இருக்கிறார்கள். இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் வடக்கு இஸ்ரவேல் தேசமாய்ப் பிரிந்துபோனார்கள். அவர்களுக்கு சமாரியா தலைநகரமாயிருந்தது. கர்த்தருடைய கோபத்தினாலும், ஆக்கினைத்தீர்ப்பினாலும், பல வருஷங்களுக்கு முன்பாகவே சமாரியா அழிந்து மண்மேடாய்ப்போயிற்று.

கர்த்தர் எருசலேமின் கள்ளத்தீர்க்கதரிசிகளை சமாரியாவின் தீர்க்கதரிசிகளோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். சமாரியாவின் தீர்க்கதரிசிகள் பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனம் சொன்னார்கள். தங்கள் பொய்யான வார்த்தைகளினால் இஸ்ரவேல் ஜனத்தை மோசம்போக்கினார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரை ஆராதிக்க வேண்டாம் என்றும், பாகாலை ஆராதிக்கவேண்டும் என்றும் சமாரியாவின் தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்குப் போதித்தார்கள் (எரே 23:13).

எருசலேமின் கள்ளத்தீர்க்கதரிசிகளோ சமாரியாவின் தீர்க்கதரிசிகளைப்போல பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனம் சொல்லவில்லை. அவர்கள் சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினாலேயே தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். சமாரியாவின் தீர்க்கதரிசிகள் கர்த்தருக்கு மதிப்பும், மரியாதையும், முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. அவர்கள் நேரடியாகவே பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனம் சொன்னார்கள். எருசலேமின் தீர்க்கதரிசிகளுக்கும் கர்த்தர்மீது பயமோ, பக்தியோ இல்லை. ஆனாலும் தங்களுடைய கள்ளவார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுவதற்கு கர்த்தருடைய நாமத்தையே பயன்படுத்துகிறார்கள்.

சமாரியாவின் தீர்க்கதரிசிகள் தங்களுடைய துன்மார்க்கங்களினாலும், விக்கிரகாராதனையினாலும், வேசித்தனங்களினாலும் இஸ்ரவேல் ஜனங்களை மோசம்போக்கினார்கள். அவர்களை அசுத்தத்திற்கு நேராக வழிநடத்தினார்கள். எருசலேமின் தீர்க்கதரிசிகள் பரிசுத்தமான தேவனுடைய நாமத்தைப் பயன்படுத்தினாலும், அவர்களுடைய ஜீவியங்களிலும் துன்மார்க்கமும், விக்கிரகாராதனையும், வேசித்தனமும் நிரம்பியிருக்கிறது. ஜனங்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளின் பாவமான ஜீவியங்களைப் பார்த்து, அவர்களும் பாவம் செய்ய கற்றுக்கொள்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் பரிசுத்தமான தேவனுடைய நாமத்தினால், ஜனங்கள் மத்தியில் அசுத்தத்தையும் வேசித்தனத்தையும் விக்கிரகாராதனையையும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

"எருசலேமின் தீர்க்கதரிசிகளிலும் திடுக்கிடத்தக்க காரியத்தைக் காண்கிறேன்; விபசாரம்பண்ணி, வஞ்சகமாய் நடந்து, ஒருவனும் தன் பொல்லாப்பை விட்டுத் திரும்பாதபடிக்குப் பொல்லாதவர்களின் கைகளைத் திடப்படுத்துகிறார்கள்" (எரே 23:14) என்று கர்த்தர் எருசலேமின் கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றிச் சொல்லுகிறார்.

ஜனங்கள் தீர்க்கதரிசிகளின் முன்மாதிரிகளைப் பார்த்து பாவம் செய்கிறார்கள். மாணாக்கர்களால் ஆசிரியர்களைவிட பரிசுத்தமாய் ஜீவிக்க முடியாது. பரிசுத்தத்தைப் போதிக்கிற ஆசாரியர்களே பாவம் செய்யும்போது, ஜனங்கள் அவர்களுடைய பாவங்களைப் பார்த்து, பாவம் செய்யக் கற்றுக்கொள்கிறார்கள். யூதாவின் மனுஷர் கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறார்கள்.

கள்ளஆசாரியர்கள் இருட்டிலே சறுக்கலான வழியில் நடப்பதுபோல யூதாவின் மனுஷரும் அந்த வழியிலே நடந்து, அதிலே விழுகிறார்கள். கர்த்தருடைய பார்வையில் யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் சோதோமைப்போலவும் கொமோராவைப் போலவும் இருக்கிறார்கள். கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் தம்முடைய கோபத்தினால் அழித்ததுபோல, யூதாவையும் எருசலேமையும் அழித்துப்போடுவார்.

கர்த்தருடைய கோபம் எருசலேமின் கள்ளத்தீர்க்கதரிசிகள்மீது வருகிறது. அவர்கள் ஜனங்களுக்கு முன்மாதிரியாயிருக்க வேண்டும். அவர்களிடத்தில் பரிசுத்தமும், கர்த்தருக்கு பயப்படும் பயமும் இருக்கவேண்டும். சமாரியாவின் தீர்க்கதரிசிகள் தங்களுடைய வார்த்தைகளினால் இஸ்ரவேல் ஜனங்களை மோசம்போக்கினார்கள். எருசலேமின் தீர்க்கதரிசிகளோ தங்களுடைய செய்கைகளினாலும், தங்களுடைய பாவமான முன்மாதிரியினாலும் யூதாவின் ஜனங்களை மோசம்போக்கினார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் கள்ளத்தீர்க்கதரிசிகள்மீதும், கள்ளஆசாரியர்கள்மீதும் வருகிறது.

"ஆதலால் சேனைகளின் கர்த்தர் தீர்க்கதரிசிகளைக்குறித்து: இதோ, நான் அவர்களுக்குப் புசிக்க எட்டியையும், குடிக்கப் பிச்சுக்கலந்த தண்ணீரையும் கொடுப்பேன்; எருசலேமின் தீர்க்கதரிசிகளிலிருந்து மாயமானது தேசமெங்கும் பரம்பிற்றே என்று சொல்லுகிறார்" *(எரே 23:15)*.

எருசலேமின் கள்ளத்தீர்க்கதரிசிகள், சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினால் பொய்சொல்லுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். பாவம் செய்வதினால் ஒரு தீங்கும் வராது என்றும், அக்கிரமம் செய்வதினால் ஒரு வாதையும் வராது என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு பொய்சொல்லுகிறார்கள். ஜனங்களை பாவம் செய்ய தூண்டும் வண்ணமாய், கள்ளத்தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும் ஜனங்களுக்கு முன்பாக பாவம் செய்கிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்கக்கூடாது என்று கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் எச்சரிக்கிறார். "உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள்; அவர்கள் உங்களை வீண்பெருமை கொள்ளும்படி செய்கிறார்கள்; கர்த்தருடைய வாக்கை அல்ல, தாங்கள் யூகித்த தரிசனத்தைச் சொல்லுகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" *(எரே 23:16)*.

யூதாவின் மனுஷர் கர்த்தர் சொல்லுவதைக் கேட்கவேண்டும். கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுவதைக் கேட்கக்கூடாது. கர்த்தருடைய வார்த்தை நிலைத்துநிற்கும். கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளோ காணாமல் போய்விடும். பாவிகளுக்கு சமாதானம் இருக்கும் என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். அவர்கள்மேல் பொல்லாப்பு வராது என்றும் நயமான வார்த்தைகளைப் பேசுகிறார்கள் *(எரே 23:17)*.

கர்த்தருடைய பெருங்காற்றாகிய கொடிய புசல் துன்மார்க்கருடைய தலையின்மேல் உக்கிரமமாய் மோதும் என்று கர்த்தர் சொல்லுகிறார் *(எரே 23:19)*. கர்த்தர் உண்மையைப் பேசுகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்பேசுகிறார்கள். ஆகையினால் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை கேளாதிருங்கள் என்று கர்த்தர் யூதாவின் மனுஷரை எச்சரிக்கிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு யாரிடத்தில் பேசவேண்டும் என்று தெரிந்திருக்கிறது. கர்த்தரை அசட்டை பண்ணுகிறவர்களிடத்திலும், தங்கள் இருதயத்தின் கடினத்திலே நடக்கிறவர்களிடத்திலும் கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களுடைய கள்ளவார்த்தைகளைப் பேசுகிறார்கள். கர்த்தரை அசட்டைபண்ணுகிறவர்களை நோக்கி "உங்களுக்குச் சமாதானம் இருக்குமென்று கர்த்தர் சொன்னாரென்று சொல்லுகிறதுமல்லாமல்; தங்கள் இருதயத்தின் கடினத்திலே நடக்கிற யாவரையும் நோக்கி: உங்கள்மேல் பொல்லாப்பு வராதென்றும் சொல்லுகிறார்கள்" (எரே 23:17).

பாவிகள் பாவத்தில் நிலைத்திருந்தாலும் அவர்களுக்கு ஒரு பொல்லாப்பும் வராது என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் வாக்குப்பண்ணுகிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். கள்ளத்தீர்க்கதரிசிகள் பாவம் செய்வதினால் அவர்களுக்கும் பாவத்தின் சம்பளமாக மரணம் வரும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு யாரும் தப்பிக்க முடியாது. நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குகிற காலமாயிருக்கிறது.

கள்ளத்தீர்க்கதரிசிகள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருவதுபோல, கர்த்தருடைய ஆலயத்திலே ஊழியம் செய்கிற கள்ளஆசாரியர்கள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யைச் சொல்லும்போது, அந்தப் பொய்யை, "கர்த்தர் சொன்னார்" என்றும் சொல்லுகிறார்கள். தங்களுடைய பாவங்களுக்கு கர்த்தரையும் துணைக்கு சேர்த்துக்கொள்கிறார்கள். கர்த்தர் ஒருபோதும் பாவிகளோடு சம்பந்தங்கலக்கிறவரல்ல. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமில்லை. பாவத்திற்கும் பரிசுத்தத்திற்கும் சம்பந்தமில்லை. கர்த்தருக்கும் விக்கிரகத்திற்கும் சம்பந்தமில்லை. கர்த்தர் பரிசுத்தர். அவருடைய வார்த்தைகளும் பரிசுத்தமானது.

கர்த்தருடைய கோபம் தணியாது என்றும், கடைசிநாட்களில் அதை நன்றாய் உணருவீர்கள் என்றும் எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். "கர்த்தருடைய ஆலோசனையில் கூடநின்று, அவருடைய வார்த்தையைக் கேட்டறிந்தவன் யார்? அவருடைய வார்த்தையைக் கவனித்துக்கேட்டவன் யார்? இதோ, கர்த்தருடைய பெருங்காற்றாகிய கொடிய புசல் புறப்பட்டது; அது துன்மார்க்கருடைய தலையின்மேல் உக்கிரமாய் மோதும். கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை நடப்பித்து நிறைவேற்றுமளவும், அவருடைய கோபம் தணியாது, கடைசிநாட்களில் அதை நன்றாய் உணருவீர்கள்" (எரே 23:18-20) என்று எரேமியா சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் பரிசுத்தர் மனம் மாறுகிறவரல்ல. மனம் மாற அவர் ஒரு மனுஷரல்ல. அவர் சேனைகளின் கர்த்தர். கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை நடப்பிக்கிறவர். கர்த்தரால் கூடாதகாரியம் ஒன்றுமேயில்லை. அவர் சொல்ல எல்லாம் ஆகும். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபட்டுப்போவதில்லை. கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும், பலத்தையும், பராக்கிரமத்தையும், கடைசி நாட்களில் எல்லோரும் நன்றாய் உணருவார்கள். அனுபவித்து உணருவார்கள்.

அந்தத் தீர்க்கதரிசிகளை நான் அனுப்பவில்லை
எரே 23:21,22

எரே 23:21. அந்தத் தீர்க்கதரிசிகளை நான் அனுப்பாதிருந்தும் அவர்கள் ஓடினார்கள்; அவர்களோடே நான் பேசாதிருந்தும் அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.

எரே 23:22. அவர்கள் என் ஆலோசனையிலே நிலைத்திருந்தார்களேயாகில், அப்பொழுது அவர்கள் என் வார்த்தைகளை ஜனங்களுக்குத் தெரிவித்து, அவர்களைத் தங்கள் பொல்லாத வழிகளையும் தங்கள் செய்கைகளின் பொல்லாப்பையும் விட்டுத் திருப்புவார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளை தம்முடைய ஊழியக்காரர்களாக அங்கீகரிக்கவில்லை. "அந்தத் தீர்க்கதரிசிகளை நான் அனுப்பாதிருந்தும் அவர்கள் ஓடினார்கள்; அவர்களோடே நான் பேசாதிருந்தும் அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்" (எரே 23:21) என்று கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளைப் பற்றிச் சொல்லுகிறார்.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு தம்முடைய செய்தியை வெளிப்படுத்தவில்லை. அவர்களை ஊழியத்திற்கு பிரதிஷ்டை பண்ணவுமில்லை. தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு கர்த்தர் அவர்களுக்கு அனுமதி கொடுக்கவுமில்லை. ஆனாலும் அவர்கள் தங்களைத் தாங்களே ஊழியத்திற்கு நியமித்துக்கொள்கிறார்கள். கர்த்தர் அனுப்பாதிருந்தும் அவர்கள் ஓடுகிறார்கள்.

கர்த்தருடைய நல்ல தீர்க்கதரிசிகள்கூட பல சமயங்களில் கர்த்தருடைய வார்த்தைகளை தயங்கி தயங்கி பேசுவார்கள். தாங்கள் பேசுகிற வார்த்தைகள் கர்த்தருடைய வார்த்தைகளாகயிருக்கவேண்டும் என்று மிகுந்த கவனத்தோடும் எச்சரிப்போடும் பேசுவார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளோ எதையும் தயங்காமல் பேசிவிடுவார்கள். அவர்கள் தங்கள் சொந்த வார்த்தைகளையே பேசுகிறார்கள். பொய்சொல்லுகிறவர்களுக்கு தடுமாற்றம் இருக்காது.

கள்ளத்தீர்க்கதரிசிகள் பாவிகளைப் பார்த்து, "உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும்" என்று கர்த்தருடைய நாமத்தினால் சொல்லுகிறார்கள். "கர்த்தருடைய ஆலோசனையில் கூடநின்று, அவருடைய வார்த்தையைக் கேட்டறிந்தவன் யார்? அவருடைய வார்த்தையைக் கவனித்துக்கேட்டவன் யார்?" (எரே 23:18) என்று கர்த்தர் கேட்கிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யைப் பேசினாலும், அதை தயங்காமல் முழுநிச்சயத்தோடு பேசுகிறார்கள். அவர்கள் தாங்கள் சொல்லுகிற செய்திகளை கர்த்தரிடத்தில் விசாரித்து பெற்றுக்கொள்ளவில்லை. தாங்கள் பேசுகிற வார்த்தைகளை, ஏற்கெனவே வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவனுடைய வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவுமில்லை. கள்ளத்தீர்க்கதரிசிகள் திரும்ப திரும்ப பொய்களைப் பேசுவதினால், அவர்கள் பொய்களை மெய்களைப்போல ஜோடித்து பேசிவிடுகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக வந்து ஜெபம்பண்ணமாட்டார்கள். கர்த்தருடைய வார்த்தைகளை செவிகொடுத்தும் கேட்கமாட்டார்கள். அவர்கள் கர்த்தருடைய ஆலோசனையில் நிலைத்திருக்கவும் மாட்டார்கள். தாங்கள் சொன்ன வார்த்தைகள் நிறைவேறுமா என்பதைப்பற்றியெல்லாம் கள்ளத்தீர்க்கதரிசிகள் கவலைப்படுவதில்லை. தங்களுடைய மனதில் தோன்றுவதை கர்த்தருடைய வார்த்தை என்று தைரியமாய்ப் பேசுவார்கள்.

"அவர்கள் என் ஆலோசனையிலே நிலைத்திருந்தார்களேயாகில்" (எரே 23:22) என்று கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளைப் பற்றிச் சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை சொல்லுவதாக மாய்மாலம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அவருடைய ஆலோசனையில் நிலைத்திருக்கவேண்டும். வேதவாக்கியங்கள் அவர்களை வழிநடத்தவேண்டும். சத்திய வசனங்களே அவர்களுடைய செய்திக்கு ஆதாரமாயிருக்கவேண்டும்.

"அவர்கள் என் ஆலோசனையிலே நிலைத்திருந்தார்களேயாகில், அப்பொழுது அவர்கள் என் வார்த்தைகளை ஜனங்களுக்குத் தெரிவிப்பார்கள்" (எரே 23:22) என்று கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றிச் சொல்லுகிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தையில் உண்மையில்லை. அவர்களுக்கு தெளிவான நோக்கமுமில்லை. அவர்களுடைய சிந்தையும் குழப்பமாயிருக்கிறது.

ஜனங்கள் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டு திரும்பவேண்டும். இதுவே கர்த்தருடைய விருப்பம். கர்த்தருடைய விருப்பமே தீர்க்கதரிசிகளின் விருப்பமாகவும் இருக்கும். ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை தெரிவித்து, அவர்களை தங்களுடைய பொல்லாத வழிகளையும், தங்கள் செய்கைகளின் பொல்லாப்பையும் விட்டுத் திருப்பவேண்டும். இதுவே தீர்க்கதரிசிகளின் ஊழியம்.

இந்த ஊழியத்தை தீர்க்கதரிசிகள் உண்மையாய்ச் செய்யவேண்டுமென்றால், அவர்கள் கர்த்தருடைய ஆலோசனையில் நிலைத்திருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு தெரிவிக்கவேண்டும். அப்போதுதான் அவர்களால் ஜனங்களை இரட்சிப்பின் பாதையில் வழிநடத்தமுடியும். அவர்களுடைய பொல்லாத வழிகளையும், செய்கைகளின் பொல்லாப்பையும் விட்டுத் திருப்பமுடியும். ஊழியக்காரர்கள் கர்த்தருடைய ஆலோசனையில் நிலைத்திருக்கவில்லையென்றால், அவர்களுடைய பிரசங்கத்தினால் யாருக்கும் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

நான் தூரத்திற்கும் தேவன் எரே 23:23,24

எரே 23:23. நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:24. யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும் மனந்திரும்பவேண்டும். அவர்கள் தங்களுடைய மனதின் விருப்பத்தின் பிரகாரமாக பேசாமல், கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய் அறிவிக்கவேண்டும். அவர்கள் தங்களுடைய தப்பிதங்களை உணர்ந்து, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் வந்தால், கர்த்தர் அவர்களை தம்முடைய ஊழியக்காரர்களாக ஏற்றுக்கொள்வார். அவர்களை தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்துவார். அவர்கள் கர்த்தருக்கு பிரியமான ஊழியக்காரர்களாயும், பிரயோஜனமான ஊழியக்காரர்களாயும் இருப்பார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களை மிகுந்த ஞானமுள்ளவர்கள் என்று நினைத்துக்கொள்கிறார்கள். ஜனங்களுக்கு ஒன்றும் தெரியாது என்றும், அவர்களுக்கு அடிப்படை ஞானமில்லை என்றும், தாங்கள் என்ன சொன்னாலும் அதை அவர்கள் அப்படியே நம்புவார்கள் என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் நினைக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய சுபாவத்தைப்பற்றி இங்கு வெளிப்படுத்துகிறார். அவர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தர் சர்வவியாபகர். அவர் சர்வஞானமுள்ளவர். கர்த்தருடைய சிங்காசனம் பரலோகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் பூமியானது கர்த்தருக்கு தூரத்திலில்லை. நம்முடைய பார்வைக்கு வானத்திற்கும் பூமிக்கும் மிகுந்த இடைவெளி இருப்பதுபோல தெரிகிறது. பூமியிலிருந்து பரலோகம் வெகுதூரத்திலிருப்பதுபோல நாம் நினைக்கிறோம். கர்த்தரோ வானத்திலும் இருக்கிறார். பூமியிலும் இருக்கிறார். வானம் அவருடைய சிங்காசனம். பூமி அவருடைய பாதபடி. "நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:23).

கர்த்தருடைய கண்கள் பரலோகத்தில் எப்படி நோக்கிப் பார்க்கிறதோ, அப்படியே பூமியிலும் நோக்கிப் பார்க்கிறது. கர்த்தருடைய வல்லமை பரலோகத்தில் எப்படியிருக்கிறதோ, அப்படியே பூமியிலும் இருக்கிறது. கர்த்தருடைய மகிமை பரலோகத்திலுள்ள தேவதூதர்கள் மத்தியில் எப்படி வெளிப்படுகிறதோ, அப்படியே பூமியில் மனுஷர் மத்தியிலும் வெளிப்படுகிறது.

மனுஷரைப் பொறுத்தளவில் சமீபமாயிருப்பதும், தூரமாயிருப்பதும் இரண்டு வெவ்வேறு காரியங்கள். நம்மால் சமீபத்திலிருக்கிறவர்களை மாத்திரமே பார்க்க முடியும். தூரத்திலிருக்கிறவர்களைப் பார்க்க முடியாது. தூரத்திலிருக்கிறவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதுகூட நமக்குத் தெரியாது. அவர்கள் நம்முடைய கண்களுக்கு மறைவாகயிருக்கிறார்கள்.

கர்த்தரோ சர்வவியாபகர். அவர் ஒரே வேளையில் எல்லா இடங்களிலும் இருக்கிறவர். கர்த்தருக்கு மறைவான காரியம் ஒன்றுமேயில்லை. கர்த்தர் காணாதபடி யாராலும் தங்களை மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ள முடியாது. கர்த்தரே வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் வானத்தில் நிரம்பியிருப்பதுபோல, இந்தப் பூமியிலும் நிரம்பியிருக்கிறது.

கர்த்தர் வெளிச்சத்திலும் பார்க்கிறார். இருளிலும் பார்க்கிறார். மனுஷருடைய கண்களால் இருட்டில் ஒன்றையும் பார்க்க முடியாது. கர்த்தருடைய கண்கள் பூமியின் எல்லா இடங்களையும் சுற்றிப்பார்க்கிறது. நம்மால் மனுஷருடைய முகத்தை மாத்திரமே பார்க்க முடியும். கர்த்தரால் நம்முடைய இருதயங்களையும், இருதயங்களின் யோசனைகளையும், இருதயங்களில் நிரம்பியிருக்கிற மறைவான இரகசியங்களையும் பார்க்க முடியும்.

"யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்" *(எரே 23:24)*. நம்முடைய சுபாவங்களையும், நம்முடைய ஆலோசனைகளையும் கர்த்தருக்கு மறைவாக ஒளித்து வைக்க முடியாது. கர்த்தர் சர்வவியாபகர். அவர் எல்லா இடங்களிலும் இருக்கிறவர். அவருக்கு மறைவிடம் என்று எதுவுமேயில்லை. கர்த்தருக்கு எல்லாமே பிரதியட்சமான இடங்கள்தான்.

கர்த்தரே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். அவரே அதை ஆளுகை செய்கிறவர். கர்த்தர் வானத்தையும் பூமியையும் தம்முடைய பரிசுத்தமான பிரசன்னத்தில் நிரப்புகிறவர்.

"உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்" *(சங் 139:7,8)*.

கர்த்தரை ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் நம்மால் அடைத்து வைக்க முடியாது. அதே வேளையில் கர்த்தர் இல்லாத இடம் என்று எதுவுமேயில்லை. அவர் எல்லா இடத்திலும் இருக்கிறார்.

சொப்பனங்கண்டேன்
எரே 23:25-27

எரே 23:25. சொப்பனங்கண்டேன், சொப்பனங்கண்டேன் என்று, என் நாமத்தைச் சொல்லிப் பொய்த்தீர்க்கதரிசனம் உரைக்கிற தீர்க்கதரிசிகள் சொல்லுகிறதைக் கேட்டேன்.

எரே 23:26. எதுவரைக்கும் இப்படியிருக்கும்? பொய்த்தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் இருதயத்தில் ஏதாகிலுமுண்டோ? இவர்கள் தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறவர்கள்.

எரே 23:27. என் ஜனத்தின் பிதாக்கள் பாகாலினிமித்தம் என் நாமத்தை மறந்ததுபோல, இவர்கள் தங்கள் அயலாருக்கு விவரிக்கிற தங்கள் சொப்பனங்களினாலே என் நாமத்தை அவர்கள் மறக்கும்படி செய்யப்பார்க்கிறார்கள்.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு தம்முடைய செய்தியை வெளிப்படுத்தவில்லை. அவர்களுக்கு தம்முடைய வார்த்தையைக் கொடுக்கவில்லை. தம்முடைய ஊழியத்தைச் செய்யுமாறு கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளை அனுப்பவுமில்லை. ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளோ கர்த்தருடைய நாமத்தினால் பேசுகிறார்கள். தீர்க்கதரிசிகள் என்னும் போர்வையில் மறைந்துகொண்டு, தங்களுடைய மனதின் நினைவுகளை, தீர்க்கதரிசனம் போல சொல்லுகிறார்கள்.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளின் நினைவுகளை அறிந்திருக்கிறார். அவர்கள் தெய்வீக வெளிப்பாடு என்னும் பேரில் பொய்களை பேசுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்கள் இருயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறார்கள் *(எரே 23:26)*.

கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். நல்ல தீர்க்கதரிசிகளைப் போல மாய்மாலம்பண்ணுகிறார்கள். "சொப்பனங்கண்டேன், சொப்பனங்கண்டேன்" என்று கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி பொய்தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள். அவர்களுடைய பொய்யான வார்த்தைகளை கர்த்தரும் கேட்கிறார். கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களுடைய பொய்யான வார்த்தைகளினால் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் சத்தியமில்லை.

"எதுவரைக்கும் இப்படியிருக்கும்? பொய்த்தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் இருதயத்தில் ஏதாகிலுமுண்டோ?" (எரே 23:26) என்று கர்த்தர் கேட்கிறார். யூதா மனுஷரின் முற்பிதாக்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். கர்த்தரைவிட்டு விலகிப்போனார்கள். அந்நிய தேவர்களைப் பின்பற்றினார்கள். பாகாலுக்கு தூபங்காட்டினார்கள். அவர்களுக்கு பாகாலே முக்கியமானதாகயிருந்தது. பாகாலின் நிமித்தம் அவர்கள் கர்த்தருடைய நாமத்தை மறந்தார்கள்.

பாகாலுக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள் கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பாகாலை நினைக்கிறவர்கள் கர்த்தரை மறந்து விடுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளும் சொப்பனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். எப்போதுமே தங்கள் சொப்பனங்களைப்பற்றியே பேசுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளின் சொப்பனங்கள், ஜனங்களை மயக்குகிற மாயவலையாயிருக்கிறது. அவர்களுடைய சொப்பனங்கள் ஜனங்களுக்கு மறைவாக வைக்கப்பட்டிருக்கிற கண்ணியைப்போல இருக்கிறது.

"என் ஜனத்தின் பிதாக்கள் பாகாலி னிமித்தம் என் நாமத்தை மறந்ததுபோல, இவர்கள் தங்கள் அயலாருக்கு விவரிக்கிற தங்கள் சொப்பனங்களினாலே என் நாமத்தை அவர்கள் மறக்கும்படி செய்யப்பார்க்கிறார்கள்" (எரே 23:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகளை சாத்தான் ஆளுகை செய்கிறான். ஜனங்கள் கர்த்தரை மறக்கவேண்டும். இதுவே சாத்தானுடைய விருப்பம். ஜனங்கள் கர்த்தரை மறப்பதற்கு, சாத்தான் ஏராளமான தந்திர உபாயங்களை பண்ணுகிறான். ஜனங்கள் கர்த்தரை மறந்துவிட்டால், சாத்தானை நினைப்பார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் சாத்தான் பாகாலை அனுப்பினான். ஜனங்கள் கர்த்தரை மறந்தார்கள். பாகாலைப் பின்பற்றிப்போனார்கள். பாகாலுக்கு அடிமையானார்கள். நாட்கள் செல்ல செல்ல இஸ்ரவேல் ஜனங்கள், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தருடைய நாமத்தையே மறந்துவிட்டார்கள். கர்த்தரே மெய்யான தெய்வம் என்னும் சிந்தனைகூட இஸ்ரவேல் ஜனங்களிடம் காணப்படவில்லை. அவர்களுக்கு எல்லாமே பாகாலாயிற்று. கர்த்தருடைய பிள்ளைகளாகயிருந்தவர்கள் பாகாலின் அடிமைகளானார்கள். பரிசுத்தமாய் ஜீவித்தவர்கள், பாகாலுக்கு தூபங்காட்டி, விக்கிரகாராதனையிலும், விபசார மார்க்கத்திலும் ஜீவித்தார்கள்.

கர்த்தருடைய வார்த்தை எரே 23:28,29

எரே 23:28. சொப்பனங்கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக; கோதுமைக்குமுன் பதர் எம்மாத்திரம்? என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:29. என் வார்த்தை அக்கினியைப்போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கும், கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கும் வித்தியாசமுண்டு. கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தையைப் பேசுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளோ தங்கள் இருதயத்தின் வஞ்சகத்தையே தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய வார்த்தை அக்கினியைப் போலும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலவும் இருக்கிறது (எரே 23:29).

கள்ளத்தீர்க்கதரிசிகள் சொப்பனங்கண்டேன் என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தினால் பொய்த்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். "சொப்பனங்கண்ட தீர்க்கதரிசி சொப்பனத்தை விவரிப்பானாக; என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக" (எரே 23:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் சொப்பனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் எதை வேண்டுமானாலும் சொப்பனங்கண்டதாக சொல்லிவிடலாம். தங்களுடைய மனதின் விருப்பத்தையெல்லாம் சொப்பனம் என்னும் போர்வையினால் போர்த்தி, அதை ஜனங்களுக்கு உண்மையைப்போல பேசிவிடலாம்.

கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசிகளினால், தங்களுடைய மனதின் இஷ்டப்படி பேசமுடியாது. அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை மாத்திரமே சொல்லவேண்டும். அதை உண்மையாகவும் சொல்லவேண்டும். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் உண்மையையும் சொல்ல வேண்டும், உண்மையை உண்மையாயும் சொல்லவேண்டும்.

நல்ல தீர்க்கதரிசிகள் தாங்கள் சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகளை மிகுந்த கவனத்தோடும், பயபக்தியோடும் சொல்லவேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஆலோசனையில் நிலைத்திருக்கவேண்டும். தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்கிறவர்களும், கர்த்தருடைய சமுகத்தில் பயபக்தியோடு நிற்கவேண்டும்.

அப்போதுதான் அவர்களால் கள்ளத்தீர்க்கதரிசிகளின் பொய்வார்த்தைகளுக்கும், நல்லதீர்க்கதரிசிகளின் மெய்யான வார்த்தைகளுக்கும் வித்தியாசம் கண்டுபிடிக்க முடியும். இல்லையென்றால் எல்லாவற்றிலும் சத்தியம் இருப்பதுபோல அவர்களுடைய மனதில் ஒரு மாயத்தோற்றம் உண்டாகிவிடும்.

கள்ளத்தீர்க்கதரிசிகளின் சொப்பனங்களுக்கும், நல்ல தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளன. நல்ல தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தைகளை மாத்திரமே சொல்லுகிறார்கள். கர்த்தர் தங்கள் வாயில் போட்ட வார்த்தைகளை, தீர்க்கதரிசிகள் ஜனங்கள் மத்தியில் உண்மையாய்ப் பேசுகிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய மனக்கண்கள் பிரகாசமுள்ளதாயிருக்கவேண்டும். அது மங்கிப்போய்விட்டால், நம்மால் சத்தியத்திற்கும் பொய்க்கும் வித்தியாசத்தை காணமுடியாது.

"கோதுமைக்கு முன் பதர் எம்மாத்திரம்" என்று கர்த்தர் சொல்லுகிறார். மனுஷருடைய மாய்மாலங்கள் பதரைப்போல பிரயோஜனமற்றவை. காற்றடிக்கும்போது பதர் பறந்துபோய்விடும். கர்த்தருடைய வார்த்தையோ கோதுமையைப் போன்றது. கோதுமையில் சத்தும் சாரமுமுள்ளது. அதுவே நம்முடைய ஆத்துமாவுக்கு ஆகாரம். கர்த்தருடைய வார்த்தையே நமக்கு ஜீவஅப்பம்.

தம்முடைய வார்த்தை அக்கினியைப்போல இருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தை வல்லமையுள்ளது. அக்கினி பலவிதமான விளைவுகளை உண்டுபண்ணும். அக்கினியை பல வேலைகளுக்கு பயன்படுத்துகிறோம். அக்கினியினால் களிமண்ணை சுடுகிறோம். மெழுகை உருக்குகிறோம். பொன்னைப் புடமிடுகிறோம். வெள்ளியிலிருந்து கழிம்பை நீக்கிப்போடுகிறோம். அக்கினியானது ஒரு பொருளை அழிக்கவும் செய்கிறது. ஆக்கவும் செய்கிறது. கர்த்தருடைய வார்த்தையும் அக்கினியைப்போல வல்லமையுள்ளது.

நாம் கர்த்தருடைய வார்த்தையை நம்முடைய இருதயத்தில் எப்படி ஏற்றுக்கொள்கிறோமோ, அப்படியே அது நமக்குள் கிரியை நடப்பிக்கும். கர்த்தருடைய வார்த்தை சிலருக்கு ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும், வேறு சிலருக்கோ மரணத்திற்கேதுவான மரணவாசனையாகவும் இருக்கிறது.

கர்த்தருடைய தம்முடைய வார்த்தையைப்பற்றிச் சொல்லும்போது, அது கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போல இருக்கிறது என்றும் சொல்லுகிறார். கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தப்படாத இருதயங்களெல்லாம், பாறையைப்போல கடினமாயிருக்கிறது. அக்கினியினால் உருக்க முடியாத பொருட்களை சம்மட்டியினால் அடித்து நொறுக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தை அக்கினியைப்போலவும் இருக்கிறது. சம்மட்டியைப்போலவும் இருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை நம்முடைய கடினமான இருதயத்தை உருக்கும். நம்முடைய இருதயம் உருகவில்லையென்றால், கர்த்தருடைய வார்த்தை சம்மட்டியைப்போல கிரியை செய்து, நம்முடைய இருதயத்தை நொறுக்கிப்போடும்.

நான் விரோதி
எரே 23:30-32

எரே 23:30. ஆகையால், இதோ, ஒவ்வொருவராய்த் தன் தன் அயலாரிடத்தில் என் வார்த்தையைத் திருட்டுதனமாய் எடுக்கிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:31. இதோ, தங்கள் நாவின் சொல்லையே வழங்கி: அவர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:32. இதோ, பொய்ச் சொப்பனங்களைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லி, அவைகளை விவரித்து, என் ஜனத்தைத் தங்கள் பொய்களினாலும், தங்கள் வீம்புகளினாலும், மோசம்போக்குகிறவர்களுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை; அவர்கள் இந்த ஜனத்துக்கு ஒரு பிரயோஜனமாய் இருப்பதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களுடைய சொப்பனங்களை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய ஜனங்களை தங்கள் பொய்களினாலும், வீம்புகளினாலும் மோசம்போக்குகிறார்கள். கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்கு இவர்களை அழைக்கவுமில்லை. அனுப்பவுமில்லை. ஆனாலும் இவர்கள் கர்த்தருடைய பெயரைச் சொல்லி பொய்யான வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய் அறிவிக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய பெயரைச் சொன்னாலும், கர்த்தர் இவர்களுக்கு விரோதமாயிருக்கிறார் என்பதை இவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். இந்த வசனப்பகுதியில் கர்த்தர் மூன்றுமுறை "நான் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு விரோதி" (எரே 23:30,31,32) என்று சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தையை திருட்டுத்தனமாய் எடுக்கிறார்கள். இவர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் இல்லை. இவர்களிடத்தில் தீர்க்கதரிசனத்தின் ஆவியும் இல்லை. இவர்கள் கர்த்தருக்கும் அவருடைய ஆவியானவருக்கும் அந்நியராயிருக்கிறார்கள். ஆனாலும் உண்மையான தீர்க்கதரிசிகளின் ஆவி தங்களிடத்தில் இருப்பதுபோல நடிக்கிறார்கள். நல்ல தீர்க்கதரிசிகளைப்போலவே பேச கற்றுக்கொள்கிறார்கள். நல்ல தீர்க்கதரிசிகள் சொல்லுகிற வார்த்தைகளில் சிலவற்றை, இவர்கள் மனப்பாடம் செய்துகொண்டு, அங்கும் இங்குமாக பயன்படுத்துகிறார்கள். நல்ல தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளை தங்களுடைய சொந்த வார்த்தைகளைப் போல பேசுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தையில் ஜீவனுமில்லை. தேவனுடைய கிருபையுமில்லை.

ஜனங்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகளைக் கேட்கும்போது, அந்த வார்த்தைகள் கர்த்தரிடத்திலிருந்துதான் தங்களுக்கு வந்திருக்கிறது என்று நம்புகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தைகளை நல்ல தீர்க்கதரிசிகளின் இருதயங்களிலிருந்து களவாடிக்கொள்கிறார்கள். பொல்லாங்கன் இருதயத்தில் விதைக்கப்பட்ட விதையை பறித்துக் கொள்வதுபோல, கள்ளத்தீர்க்கதரிசிகளும் கர்த்தருடைய வார்த்தைகளை நல்லதீர்க்க தரிசிகளிடத்திலிருந்து பறித்துக் கொள்கிறார்கள்.

"ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்" (மத் 13:19).

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு தம்முடைய ஊழியத்தை செய்யும் அதிகாரத்தைக் கொடுக்கவில்லை. ஆனால் அவர்களோ கர்த்தர் தங்களுக்கு அதிகாரம் கொடுத்திருப்பதாகச் சொல்லி, கர்த்தருடைய நாமத்தினால் பேசுகிறார்கள். கர்த்தருடைய வார்த்தைகளையும், தங்களுடைய சொந்த வார்த்தைகளையும் கலந்து கலப்பாய்ப் பேசுகிறார்கள். அவர்களுடைய வார்த்தைகளில் சுத்தமில்லை. கர்த்தருடைய வார்த்தை அக்கினியைப்போலவும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலவும் இருக்கிறது. கள்ளத்தீர்க்கதரிசிகளின் பொய் வார்த்தைகளோ ஒரு பிரயோஜனமும் இல்லாதது. கர்த்தருடைய வார்த்தை ஜீவனுள்ளது. கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தை ஜீவனில்லாதது.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு விரோதியாயிருக்கிறார். "ஆகையால், இதோ, ஒவ்வொருவராய்த் தன்தன் அயலாரிடத்தில் என் வார்த்தையைத் திருட்டுதனமாய் எடுக்கிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:30).

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வாயிலே தம்முடைய வார்த்தையைப் போடவில்லை. கர்த்தர் அவர்களுடைய நாவுகளை ஆளுகை செய்யவுமில்லை. இதனால் கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களுக்குப் பிரியமானபடி, தங்களுடைய நாவைப் பயன்படுத்துகிறார்கள். ஜனங்களுக்கு எது பிரியமானது என்பதை கண்டுபிடித்து, அதையே கர்த்தருடைய வார்த்தையாகச் சொல்லிவிடுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்கள் சுயமாய்ப் பேசினாலும், அதை "கர்த்தர் சொல்லுகிறார்" என்று சொல்லி, தங்களுடைய சொந்த வார்த்தைகளுக்கு கர்த்தருடைய அங்கீகாரத்தையும் கொடுத்துவிடுகிறார்கள். கர்த்தர் இப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் விரோதியாயிருக்கிறார்.

"இதோ, தங்கள் நாவின் சொல்லையே வழங்கி: அவர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:31).

கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளில் உண்மையில்லை. அவர்கள் தங்களுடைய சொப்பனங்களை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள். சொப்பனங்களோடு மேலும் சில கட்டுக்கதைகளையும் சேர்த்து, அதை விவரிக்கிறார்கள். கர்த்தருடைய ஜனங்களை தங்கள் பொய்களினாலும், வீம்புகளினாலும் மோசம்போக்குகிறார்கள். கர்த்தர் இப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் விரோதமாயிருக்கிறார். "கர்த்தர் சொல்லுகிறார்" என்று இவர்கள் சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகளெல்லாமே, இவர்களுடைய சொந்த கண்டுபிடிப்புக்கள். இவர்களுடைய சொந்த கற்பனைகள். இவர்களுடைய வார்த்தைகள் கர்த்தரிடத்திலிருந்து வரவில்லை. இது இவர்களுடைய கபடான இருதயத்திலிருந்து வந்திருக்கிறது.

கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு நாம் செவிகொடுக்கக்கூடாது. அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு, அதற்கு முக்கியத்துவம் கொடுப்பது நம்முடைய தப்பிதமாகும். இது நம்முடைய பலவீனம். கள்ளத்தீர்க்கதரிசிகள் நம்மை மோசம்போக்குகிறார்கள். நாம் அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு மோசம் போய்விடக்கூடாது.

கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய ஊழியக்காரர்களல்ல. "நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை; அவர்கள் இந்த ஜனத்துக்கு ஒரு பிரயோஜனமாய் இருப்பதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:32).

கர்த்தராலே சுமரும் பாரம் எரே 23:33-40

எரே 23:33. கர்த்தராலே சுமரும் பாரம் என்னவென்று இந்த ஜனமாகிலும் ஒரு தீர்க்கதரிசியாகிலும் ஒரு ஆசாரியனாகிலும் உன்னைக் கேட்டால், உங்களைத் தள்ளிவிடுவேன் என்பதே பாரம் என்று நீ அவர்களுடனே சொல்லவேண்டும்.

எரே 23:34. கர்த்தரால் சுமரும் பாரம் என்று சொல்லுகிற தீர்க்கதரிசியாகிலும் ஆசாரியனாகிலும் ஜனமாகிலும் சரி, அப்படிச் சொல்லுகிற மனுஷனையும் அவன் வீட்டாரையும் தண்டிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 23:35. கர்த்தர் என்ன மறு உத்தரவு கொடுத்தார்? கர்த்தர் என்ன சொன்னார்? என்று நீங்கள் அவரவர் தங்கள் அயலானையும் அவரவர் தங்கள் சகோதரனையும் கேட்பீர்களாக.

எரே 23:36. ஆனால் கர்த்தரால் சுமரும் பாரம் என்கிற சொல்லை இனி வழங்காதிருப்பீர்களாக, அவனவன் வார்த்தையே அவனவனுக்குப் பாரமாயிருக்கும்; அதேனென்றால், நமது தேவனாகிய சேனைகளின் கர்த்தர் என்கிற ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகளைப் புரட்டுகிறீர்கள்.

எரே 23:37. கர்த்தர் உனக்கு என்ன மறுஉத்தரவு கொடுத்தார்? கர்த்தர் என்ன சொன்னார்? என்று நீ தீர்க்கதரிசியைக் கேட்பாயாக.

எரே 23:38. நீங்களோவெனில், கர்த்தரால் சுமரும் பாரம் என்று சொல்லுகிறபடியினாலே: கர்த்தரின் பாரம் என்று சொல்லாதிருங்களென்று நான் உங்களுக்குச் சொல்லி அனுப்பியும், நீங்கள் இந்த வார்த்தையைக் கர்த்தரின் பாரம் என்று சொல்லுகிறீர்களே.

எரே 23:39. ஆதலால், இதோ, நான் உங்களை மறக்கவே மறந்து, உங்களையும், நான் உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் கொடுத்த நகரத்தையும், எனக்கு முன்பாக இராதபடிக்குக் கைவிட்டு,

எரே 23:40. மறக்கப்படாத நித்திய நிந்தையையும், நித்திய இலச்சையையும் உங்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"கர்த்தரால் சுமரும் பாரம்" என்னும் வாக்கியத்திற்கு, "இருதயத்தை பாரப்படுத்துவதற்கு அல்லது இருதயத்தை வேதனைப்படுத்துவதற்கு கர்த்தர் மனுஷர்மீது சுமத்தும் அல்லது மனுஷருக்கு சொல்லும் அவருடைய கோபமான வார்த்தை" என்று பொருள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளைப்போலவே, ஆசாரியர்களும், யூதாவின் ஜனங்களும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்களிடத்தில் கர்த்தரைப்பற்றிய அறிவும், அவருடைய வார்த்தையைப்பற்றிய தெளிவுமில்லை. "கர்த்தர் சொன்னார்" என்று யார் எதை சொன்னாலும் அதை அப்படியே நம்பிவிடுகிறார்கள். இது அவர்களுடைய மதியீனம். யூதாதேசம் முழுவதிலும் இந்த மதியீனம் காணப்படுகிறது.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள், தங்களுடைய பிரசங்கத்தில், அவ்வப்போது "கர்த்தராலே சுமரும் பாரம்" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார்கள். இந்த வாக்கியம் மிகவும் முக்கியமானதாகும். இந்த வாக்கியத்தை தீர்க்கதரிசிகள் அதிகமாய்ப் பயன்படுத்துகிறார்கள். இதை மிகுந்த கவனத்தோடும், பயபக்தியோடும் பயன்படுத்தவேண்டும்.

கர்த்தருடைய வார்த்தை மிகவும் முக்கியமானது. தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய வார்த்தையைப் பேசும்போது, அந்த வார்த்தைகள் ஜனங்களுடைய இருதயத்தில் பதியவேண்டும். கர்த்தருடைய வார்த்தையை கனம்பண்ணுவதற்காகவும், அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காகவும், "கர்த்தராலே சுமரும் பாரம்" என்னும் வாக்கியத்தை தீர்க்கதரிசிகள் பயன்படுத்துகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும், "கர்த்தராலே சுமரும் பாரம்" என்னும் வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார்கள். இவர்களுக்கு இந்த வாக்கியத்தின் அர்த்தம் தெரியாது. கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைப்போல தாங்களும் பேசவேண்டும் என்று நினைத்து, அந்த வாக்கியத்தை மாய்மாலமாய் பயன்படுத்துகிறார்கள்.

"கர்த்தராலே சுமரும் பாரம்" என்பது ஆவிக்குரிய வாக்கியம். கர்த்தர் தம்முடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுப்பதுபோல, இந்த வாக்கியத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார். ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளோ இந்த வாக்கியத்தின் முக்கியத்துவத்தை அசட்டைசெய்து, தங்கள் இஷ்டம்போல இந்த வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் இந்த வாக்கியத்தை பயன்படுத்தும்போது, அவர்கள் கர்த்தருடைய நல்ல தீர்க்கதரிசிகளை ஏளனம்பண்ணுகிறார்கள். அவர்களை பரியாசம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களை பரியாசம்பண்ணுவது, அவர்கள் சொல்லுகிற செய்தியை பரியாசம்பண்ணுவதற்கு ஒப்பாயிருக்கிறது. தீர்க்கதரிசியை பரியாசம்பண்ணுகிறவன், தீர்க்கதரிசன வார்த்தையையும் பரியாசம் பண்ணுகிறான். தீர்க்கதரிசியை அனுப்பின கர்த்தரையும் பரியாசம்பண்ணுகிறான்.

கர்த்தருடைய வார்த்தையானது, "கர்த்தருடைய பாரம்" என்று அழைக்கப்படுகிறது. கர்த்தருடைய ஆசீர்வாதமான வாக்கியங்களெல்லாம் "கர்த்தருடைய வார்த்தை" என்றும், கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளும், அவருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளும், அவருடைய கடிந்துகொள்ளும் வார்த்தைகளும், "கர்த்தருடைய பாரம்" என்றும் அழைக்கப்படுகிறது.

தீர்க்கதரிசிகள் "கர்த்தருடைய பாரம்" என்று சொல்லும்போதே, கர்த்தர் ஜனங்கள்மீது கோபமாயிருக்கிறார் என்று ஜனங்கள் புரிந்துகொள்வார்கள். கர்த்தர் ஜனங்களுக்கு ஆறுதலின் வார்த்தைகளையும், ஆசீர்வாதமான வார்த்தைகளையும் சொல்லாமல், கடிந்துகொள்ளும் வார்த்தைகளையும், நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளையும், கோபாக்கினையின் வார்த்தைகளையும் சொல்லப்போகிறார் என்று ஜனங்கள் எதிர்பார்ப்பார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களிடத்தில் அநியாயமும் அக்கிரமமும் நிரம்பியிருக்கிறது. கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளோ, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு பிரசங்கிக்கிறார்கள். கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளால் பிரசங்கிக்கப்பட வேண்டிய கள்ளத்தீர்க்கதரிசிகள், ஜனங்களுக்கு பிரசங்கிக்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளைப் போலவே, ஆசாரியர்களில் அநேகரும், யூதாஜனங்களில் பலரும் பாவிகளாயிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை அசட்டைசெய்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்களை பரியாசம்பண்ணுகிறார்கள்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் தங்களிடத்தில் வரும்போதே, பாவிகள் அவர்களிடம் "கர்த்தராலே சுமரும் பாரம்" என்ன என்று கேட்டு, அவர்களை பரியாசம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் சமாதானமான வார்த்தைகளை சொல்லமாட்டார்கள் என்றும், கர்த்தருடைய கோபத்தின் வார்த்தைகளையே சொல்லுவார்கள் என்றும் எதிர்பார்க்கிறார்கள். தீர்க்கதரிசிகளை பரியாசம்பண்ணும் விதமாய், "இன்று கர்த்தருடைய கோபமான வார்த்தை என்ன" என்று கேட்கும் வண்ணமாக, இன்று "கர்த்தராலே சுமரும் பாரம் என்ன" என்று கேட்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களை பரியாசம்பண்ணுகிறவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். அவர்கள்மீது கர்த்தருடைய கோபம் வந்து தங்கும். பாவிகள் தீர்க்கதரிசிகளிடம், "கர்த்தராலே சுமரும் பாரம் என்ன" என்று கேட்கும்போது, தீர்க்கதரிசிகள் அவர்களுக்கு எப்படிப்பட்ட பிரதியுத்தரம் சொல்லவேண்டும் என்றும் கர்த்தர் அவர்களுக்கு சொல்லுகிறார்.

"கர்த்தராலே சுமரும் பாரம் என்னவென்று இந்த ஜனமாகிலும் ஒரு தீர்க்கதரிசியாகிலும் ஒரு ஆசாரியனாகிலும் உன்னைக் கேட்டால், உங்களைத் தள்ளிவிடுவேன் என்பதே பாரம் என்று நீ அவர்களுடனே சொல்லவேண்டும்" (எரே 23:33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களை பரியாசம்பண்ணுகிறவர்களை கர்த்தர் தண்டிப்பார். கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள ஆசாரியர்களும், பாவியான மனுஷர்களும் தீர்க்கதரிசிகளை பரியாசம்பண்ணும் வண்ணமாக "கர்த்தரால் சுமரும் பாரம் என்ன" என்று கேட்கிறார்கள். கர்த்தர் அப்படி கேட்பவர்களை தண்டிக்கப்போவதாகச் சொல்லுகிறார்.

"கர்த்தரால் சுமரும் பாரம் என்று சொல்லுகிற தீர்க்கதரிசியாகிலும் ஆசாரியனாகிலும் ஜனமாகிலும் சரி, அப்படிச் சொல்லுகிற மனுஷனையும் அவன் வீட்டாரையும் தண்டிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:34).

பாவிகளும், பரியாசக்காரரும் கர்த்தருடைய ஊழியக்காரர்களை ஏளனம்பண்ணுகிறார்கள். அவர்களை பரியாசம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் தங்களை பரியாசம்பண்ணுகிறவர்களுக்கு எப்படிப்பட்ட பிரதியுத்தரம் சொல்லவேண்டுமென்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய வார்த்தையாகிய பாரத்தை அவர்களுக்கு சொல்லவேண்டும்.

"ஆதிராக் தேசத்துக்கு விரோதமானதும், தமஸ்குவின்மேல் வந்து தங்குவதுமான கர்த்தருடைய வார்த்தையாகிய பாரம்; மனுஷரின் கண்களும் இஸ்ரவேலுடைய சகல கோத்திரங்களின் கண்களும் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக்கும்" (சக 9:1).

"மல்கியாவைக்கொண்டு கர்த்தர் இஸ்ரவேலுக்குச் சொன்ன வார்த்தையின் பாரம்" (மல் 1:1). "நினிவேயின் பாரம். எல்கோசானாகிய நாகூமின் தரிசனப் புஸ்தகம்" (நாகூ 1:1). "ஆபகூக் என்னும் தீர்க்கதரிசி தரிசனமாய்க் கண்ட பாரம்" (ஆப 1:1).

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் எப்படி ஊழியம் செய்யவேண்டும் என்று கர்த்தர் அவருக்கு ஏற்கெனவே கற்றுக்கொடுத்திருக்கிறார்.

"இதினிமித்தம்: நீ திரும்பினால் நான் உன்னைச் திரும்பச் சீர்ப்படுத்துவேன்; என் முகத்துக்குமுன்பாக நிலைத்துமிருப்பாய்; நீ தீழ்ப்பானதினின்று விலையேறப்பெற்றதைப் பிரித்தெடுத்தால், என் வாய் போலிருப்பாய்; நீ அவர்களிடத்தில் திரும்பாமல், அவர்கள் உன்னிடத்தில் திரும்புவார்களாக என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 15:19).

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் இனிமேல், "கர்த்தரால் சுமரும் பாரம்" என்னும் வாக்கியத்தை சொல்லவேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். "கர்த்தரால் சுமரும் பாரம் என்கிற சொல்லை இனி வழங்காதிருப்பீர்களாக" (எரே 23:36) என்று கர்த்தர் சொல்லுகிறார். "கர்த்தரால் சுமரும் பாரம்" என்னும் வாக்கியத்தை ஒருவரும் கவனக்குறைவாகவோ, அசட்டையாகவோ, பரியாச வார்த்தைகளாகவோ பயன்படுத்தக்கூடாது.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள், "கர்த்தரால் சுமரும் பாரம்" என்னும் வாக்கியத்தை இனிமேல் சொல்லமாட்டார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள ஆசாரியர்களும், பாவியான ஜனங்களும், "கர்த்தரால் சுமரும் பாரம்" என்னும் வாக்கியத்தைச் சொல்லும்போது, "அவனவன் வார்த்தையே அவனவனுக்கு பாரமாயிருக்கும்" (எரே 23:36) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகளை புரட்டுகிறார்கள். இஸ்ரவேலின் தேவன் சேனைகளின் கர்த்தராயிருக்கிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கோ கர்த்தரிடத்தில் பயமுமில்லை. பக்தியுமில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை அசட்டை பண்ணுகிறார்கள். தங்களுடைய மனதில் தோன்றியதையெல்லாம், "கர்த்தர் சொன்னார்" என்று சொல்லுகிறார்கள். கர்த்தருடைய நல்ல தீர்க்கதரிசிகள், "கர்த்தரால் சுமரும் பாரம்" என்னும் வாக்கியத்தை சொல்லும்போதே, கள்ளத்தீர்க்கதரிசிகள் அவர்களை ஏளனம்பண்ணுகிறார்கள். நல்லதீர்க்கதரிசிகளைப் போலவே, கள்ளத்தீர்க்கதரிசிகளும், "கர்த்தரால் சுமரும் பாரம்" என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய செய்தியை, அவருடைய தீர்க்கதரிசிகள் ஜனங்களிடத்தில் போய், "கர்த்தரால் சுமரும் பாரம்" என்று சொல்லக்கூடாது. அதற்குப் பதிலாக ஜனங்கள் தீர்க்கதரிசிகளிடத்தில் வந்து, கர்த்தருடைய செய்தியை கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

"கர்த்தர் உனக்கு என்ன மறுஉத்தரவு கொடுத்தார்? கர்த்தர் என்ன சொன்னார்? என்று நீ தீர்க்கதரிசியைக் கேட்பாயாக" (எரே 23:37) என்றும், "கர்த்தர் என்ன மறு உத்தரவு கொடுத்தார்? கர்த்தர் என்ன சொன்னார்? என்று நீங்கள் அவரவர் தங்கள் அயலானையும் அவரவர் தங்கள் சகோதரனையும் கேட்பீர்களாக" (எரே 23:35) என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

ஜனங்கள் தங்களிடத்தில் கர்த்தருடைய செய்தியை கேட்கவரும்போது, கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் அவர்களிடத்தில், "கர்த்தரால் சுமரும் பாரம்" என்னும் வாக்கியத்தைச் சொல்லக்கூடாது என்று கர்த்தர் அவர்களுக்கு கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். "கர்த்தரால் சுமரும் பாரம் என்கிற சொல்லை இனி வழங்காதிருப்பீர்களாக" என்று கர்த்தர் கட்டளை கொடுக்கும்போது, அவருடைய நல்ல தீர்க்கதரிசிகள், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார்கள். "கர்த்தரால் சுமரும் பாரம்" என்னும் வாக்கியத்தை வழங்காமலிருக்கிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுப்பதுமில்லை, கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டாலும், அவர்கள் அதற்கு கீழ்ப்படிவதுமில்லை.

"நீங்களோவெனில், கர்த்தரால் சுமரும் பாரம் என்று சொல்லுகிறபடியினாலே: கர்த்தரின் பாரம் என்று சொல்லாதிருங்களென்று நான் உங்களுக்குச் சொல்லி அனுப்பியும், நீங்கள் இந்த வார்த்தையைக் கர்த்தரின் பாரம் என்று சொல்லுகிறீர்களே" (எரே 23:38) என்று கர்த்தர் தமக்கு கீழ்ப்படியாத கள்ளத்தீர்க்கதரிசிகளைப் பார்த்து சொல்லுகிறார்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை பரியாசம்பண்ணக்கூடாது. "கர்த்தரால் சுமரும் பாரம்" என்று சொல்லக்கூடாது என்று கர்த்தர் தடைபண்ணியிருக்கிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளோ, கர்த்தர் தடைபண்ணியிருக்கிற வார்த்தைகளை, தங்கள் இஷ்டம்போல பயன்படுத்துகிறார்கள். இதனால் தேவனுடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது.

"கர்த்தரால் சுமரும் பாரம் என்று சொல்லுகிற தீர்க்கதரிசியாகிலும் ஆசாரியனாகிலும் ஜனமாகிலும் சரி, அப்படிச் சொல்லுகிற மனுஷனையும் அவன் வீட்டாரையும் தண்டிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:34).

"கர்த்தரால் சுமரும் பாரம்" என்று யாரெல்லாம் சொல்லுகிறார்களோ, அவர்களுடைய வார்த்தைகளே அவர்களுக்கு பாரமாயிருக்கும். கர்த்தருடைய ஆக்கினைத்தீர்ப்பு அவர்கள்மேல் வரும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாத கள்ளத்தீர்க்கதரிசிகளை, கர்த்தர் அதிகமாய்த் தண்டிப்பார்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகளிடத்தில் யாராவது வந்து, "கர்த்தரால் சுமரும் பாரம்" என்ன என்று கேட்டால், "உங்களைத் தள்ளிவிடுவேன் என்பதே பாரம்" (எரே 23:33) என்று அவர்களுக்கு பதில் சொல்லவேண்டும்.

கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், கர்த்தரையும் அவருடைய வார்த்தையையும் அசட்டைசெய்து, கர்த்தருடைய ஊழியக்காரர்களை பரியாசம் பண்ணுகிற கள்ளத்தீர்க்கதரிசிகள்மீதும், கள்ள ஆசாரியர்கள்மீதும், பாவியான ஜனங்கள்மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். கர்த்தர் அவர்களைத் தண்டிப்பார்.

"ஆதலால், இதோ, நான் உங்களை மறக்கவே மறந்து, உங்களையும், நான் உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் கொடுத்த நகரத்தையும், எனக்கு முன்பாக இராதபடிக்குக் கைவிட்டு, மறக்கப்படாத நித்திய நிந்தையையும், நித்திய இலச்சையையும் உங்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 23:39,40).

நாம் கர்த்தரை கனம்பண்ணுவதுபோல, அவருடைய வார்த்தையையும் கனம்பண்ண வேண்டும். கர்த்தருடைய வார்த்தையை பரியாசம்பண்ணுகிறவர்கள், கர்த்தரையே பரியாசம்பண்ணுகிறார்கள்.

24 அதிகாரம்

எரேமியா இதற்கு முந்திய அதிகாரத்தில் எருசலேம் அழிந்துபோகும் என்று பொதுவான தீர்க்கதரிசனத்தைச் சொன்னார். எருசலேமின் அழிவை நினைத்துப் பார்த்து எரேமியாவின் இருதயத்தில் மிகுந்த வருத்தமும் துக்கமும் உண்டாயிற்று.

இந்த அதிகாரத்தில் கர்த்தர் எரேமியாவை உற்சாகப்படுத்துகிறார். யூதாதேசம் முழுவதிலும் பொதுவான அழிவு வந்தாலும், யூதாவின் குடிகள் எல்லோருக்கும் அழிவு ஒன்றுபோலிருக்காது. கர்த்தர் நீதிமான்களையும் துன்மார்க்கரையும் வேறுபிரிப்பார். கோனியா பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போன காலத்திலேயே, யூதா மனுஷரில் அநேகர் அவனோடுகூட, பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போனார்கள். அவர்கள் சிறைப்பட்டுப்போனது அவர்களுக்கு நன்மைக்கு ஏதுவாகயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போகாத மீதமானவர்களோ தங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தி, யூதாதேசத்தில் தங்கிவிடுகிறார்கள். அவர்கள் பாவத்தில் ஜீவிக்கிறார்கள். அவர்களும் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எரேமியாவுக்கு அத்திபழங்களுள்ள இரண்டு கூடைகளை தரிசனமாகக் காண்பிக்கிறார். ஒரு கூடையில் நல்ல அத்திப்பழங்களும், மற்றொரு கூடையில் கெட்ட அத்திப்பழங்களும் இருக்கிறது (எரே 24:1-3).

கர்த்தர் எரேமியாவுக்கு அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளின் தரிசனத்தை விவரிக்கிறார். பாபிலோன் தேசத்திற்கு ஏற்கெனவே சிறைப்பட்டுப் போனவர்கள் நல்ல அத்திப்பழங்களுள்ள கூடைக்கு ஒப்பாயிருக்கிறார்கள். சிறையிருப்பு அவர்களுக்கு நன்மையைக் கொடுக்கும் (எரே 24:4-7).

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு ஏற்கெனவே போகாமல், இனிமேல் சிறையிருப்புக்கு போகப்போகிறவர்கள் கெட்ட அத்திப்பழங்களுள்ள கூடைக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவர்களுக்கு தீங்கு உண்டாகும் (எரே 24:8-10).

அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகள்
எரே 24:1-3

எரே 24:1. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யோயாக்கீமின் குமாரனாகிய எகொனியா என்கிற யூதாவின் ராஜாவையும், யூதாவின் பிரபுக்களையும், எருசலேமிலுள்ள தச்சரையும் கொல்லரையும் சிறைப்பிடித்து, பாபிலோனுக்குக் கொண்டுபோனபின்பு, இதோ, கர்த்தருடைய ஆலயத்தின் முன் வைக்கப்பட்டிருந்த அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளைக் கர்த்தர் எனக்குக் காண்பித்தார்.

எரே 24:2. ஒரு கூடையிலே முதல் கந்தாயத்து அத்திப்பழங்களுக்குச் சமானமான மிகவும் நல்ல அத்திப்பழங்களும், மற்றக் கூடையிலே புசிக்கத்தகாத மிகவும் கெட்ட அத்திப்பழங்களும் இருந்தது.

எரே 24:3. கர்த்தர் என்னை நோக்கி: எரேமியாவே, நீ என்னத்தைக் காண்கிறாய் என்றார்; அதற்கு நான்: அத்திப்பழங்களைக் காண்கிறேன்; நல்லவைகளான அத்திப்பழங்கள் மிகவும் நல்லவைகளும், கெட்டவைகளோ புசிக்கத்தகாத மிகவும் கெட்டவைகளுமாயிருக்கிறது என்றேன்.

தேவனுடைய தெய்வீக பராமரிப்பு பல சமயங்களில் ஒன்றுபோல் வருகிறது. ஆனாலும் அதன் விளைவுகள் வித்தியாசமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் ஒன்றாயிருந்தாலும், அது ஒருசிலருக்கு ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும், வேறுசிலருக்கோ மரணத்திற்கேதுவான மரணவாசனையாகவும் இருக்கிறது. தேவனுடைய கிருபையினாலேயே நமக்கு ஜீவன் உண்டாகிறது.

மனுஷருக்கு பொதுவான துன்பங்களும், வேதனைகளும் வருகிறது. இது பொல்லாதவர்களுக்கு வருவதுபோல, நல்லவர்களுக்கும் வருகிறது. துன்மார்க்கர் பாடுகளை அனுபவிப்பதுபோல, நீதிமான்களும் பாடுகளை அனுபவிக்கிறார்கள். துன்மார்க்கரோ தங்களுடைய பாவங்களுக்கு தண்டனையாக பாடுகளை அனுபவிக்கிறார்கள். நீதிமான்களோ தங்களுக்கு நன்மை உண்டாக பாடுகளையும் வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள். தேவனுடைய தெய்வீக திட்டம் நீதிமான்களுக்கு ஒருவிதமாகவும், துன்மார்க்கருக்கு வேறுவிதமாகவும் இருக்கிறது.

கர்த்தருடைய கரம் நீதிமான்களை ஆசீர்வதிக்கிறது. அவருடைய அதே கரம் துன்மார்க்கரை தண்டிக்கிறது. பிதாவாகிய தேவன் அன்பும், கரிசனையுமுள்ளவர். அவர் துன்மார்க்கரை திருத்துவதற்காக, அவர்களை பிரம்பினால் தண்டிக்கிறார்.

கர்த்தர் எரேமியாவுக்கு அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளை தரிசனமாய்க் காண்பிக்கிறார். இந்த தரிசனத்தின் காலமும் இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், எகொனியா என்கிற யூதாவின் ராஜாவை தன் தேசத்திற்கு சிறைப்பிடித்துக் கொண்டுபோகிறான். இந்த சம்பவம் நடைபெற்ற சிறிதுகாலத்திற்கு பின்பு, கர்த்தர் எரேமியாவுக்கு அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளை தரிசனமாய்க் காண்பிக்கிறார்.

எகொனியா உடைந்த பாத்திரத்தைப் போல பிரயோஜனமற்றவனாயிருக்கிறான். நேபுகாத்நேச்சார் எகொனியாவை தன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகும்போது, அவனோடுகூட எருசலேமிலுள்ள தச்சரையும், கொல்லரையும், யூதாவின் பிரபுக்களையும் சிறைப்பிடித்து கொண்டு போகிறான். எகொனியா பிரயோஜனமற்றவனாயிருந்தாலும், அவனோடுகூட சிறைப்பட்டுப்போகிறவர்கள் பிரயோஜனமுள்ளவர்கள். அவர்களில் எசேக்கியேலும் ஒருவர்.

"முப்பதாம் வருஷம் நாலாம் மாசம் ஐந்தாந்தேதியிலே, நான் கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும்போது, சம்பவித்தது என்னவென்றால், வானங்கள் திறக்கப்பட, நான் தேவதரிசனங்களைக் கண்டேன். அது யோயாக்கீன் ராஜாவுடைய சிறையிருப்பின் ஐந்தாம் வருஷமாயிருந்தது" (எசே 1:1,2).

கல்தேயருடைய தேசத்தில் குறிசொல்லுகிறவர்களும், ஜோசியம் பார்க்கிறவர்களும், மந்திரவாதிகளும் ஏராளமானோர் இருக்கிறார்கள். ஆனாலும் அந்த தேசத்தில் தச்சரும் கொல்லரும் போதுமான எண்ணிக்கையில் இல்லை. கல்தேயருடைய தொழிலுக்கு ஏராளமான தச்சர்களும் கொல்லர்களும் தேவைப்படுகிறார்கள். இதன் நிமித்தமாகவே நேபுகாத்நேச்சார், எகொனியாவோடு எருசலேமிலிருந்து ஏராளமான தச்சரையும் கொல்லரையும் பாபிலோனுக்கு சிறைப்பிடித்து கொண்டுபோகிறான்.

எகொனியா மோசமானவனாகவும், பிரயோஜனமற்றவனாகவும் இருந்தாலும், அவனோடுகூட பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகிறவர்கள் மிகவும் பிரயோஜனமுள்ளவர்கள். அவர்கள் நற்குணமுள்ளவர்கள். பாவிகளும் துன்மார்க்கரும் சிறைப்பட்டுப்போகும்போது, அவர்களோடுகூட நீதிமான்களும், பரிசுத்தவான்களும் சிறைப்பட்டுப் போகிறார்கள்.

யூதாதேசத்தார் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போவதை எரேமியா பார்க்கிறார். பரிசுத்தவான்கள் சிறைப்பட்டுப்போவதைப் பார்க்கும்போது எரேமியாவின் இருதயம் கலங்குகிறது. அவருடைய மனது வேதனைப்படுகிறது. யூதாமனுஷரில் சிலர் சிறைப்பட்டுப்போகாமல் தங்கள் தேசத்திலேயே தங்கிவிடுகிறார்கள். அவர்கள் சிறைப்பட்டுப்போகிறவர்களை பாவிகள் என்றும், துன்மார்க்கர் என்றும் சொல்லி பரியாசம்பண்ணுகிறார்கள். தாங்கள் யூதாதேசத்தில் தங்கியிருப்பதினால், அவர்கள் தங்களை பரிசுத்தவான்கள் என்று எண்ணிக்கொள்கிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி, சிறைப்பட்டுப் போனவர்களையும், சிறைப்பட்டுப்போகாமல் யூதாதேசத்தில் தங்கியிருப்பவர்களையும் நினைத்து, தன்னுடைய மனதில் கலங்கிக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் அவருக்கு அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளை தரிசனமாகக் காண்பிக்கிறார். இந்த தரிசனமும், இதன் வெளிப்பாடும் எரேமியாவின் குழப்பத்தை நீக்கி, அவருடைய மனதில் தெளிவையும், ஆறுதலையும் கொடுக்கிறது.

எரேமியா கர்த்தருடைய ஆலயத்தின் முன் வைக்கப்பட்டிருந்த அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளை காண்கிறார். இந்த தரிசனத்தை கர்த்தரே அவருக்கு காண்பிக்கிறார். இந்தப் பழங்கள் கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்த ஆயத்தமாயிருக்கிறது. இவை விளைச்சலின் முதற்பலன்கள். இவை தரத்தில் உயர்ந்தவை. இந்தப் பழங்கள் கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தப்பட, கர்த்தருடைய ஆலயத்தின்முன் இரண்டு கூடைகளில் வைக்கப்பட்டிருக்கிறது.

ஒரு கூடையிலுள்ள அத்திப்பழங்கள் மிகவும் நல்லவை. அவை முதல் கந்தாயத்து அத்திப்பழங்களுக்கு சமமானவை. இரண்டாவது கூடையில் இருக்கிற அத்திப்பழங்களோ மிகவும் கெட்டவை. அவை புசிப்பதற்கு தகாதவை.

மனுபுத்திரர் எல்லோருமே அத்திமரத்து பழங்களைப்போல இருக்கிறார்கள். அத்திப்பழங்கள் கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தப்படுவதற்கு ஏதுவானவை. அதுபோலவே மனுஷரும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்திப்பழங்கள் மனுஷருக்கு பிரயோஜனமானவை. அதுபோலவே எல்லா மனுஷரும், மற்ற மனுஷருக்கு பிரயோஜனமுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

"அப்பொழுது மரங்கள் அத்திமரத்தைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது. அதற்கு அத்திமரம்: நான் என் மதுரத்தையும் என் நற்கனியையும் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ என்றது" (நியா 9:10,11).

எல்லா பழங்களும் ஒன்றுபோலிருப்பதில்லை. பழங்களின் தரத்தில் வித்தியாசமிருக்கும். ஒரு சில அத்திப்பழங்கள் புசிக்கத்தகுந்ததாகவும், நல்ல சுவையுள்ளதாகவும் இருக்கும். வேறு சில அத்திப்பழங்களோ புசிக்கத்தகாததாகவும், கெட்ட அத்திப்பழங்களாகவும் இருக்கும். கெட்ட அத்திப்பழங்கள் சீக்கிரத்தில் அழுகிப்போகும். அவை துர்நாற்றம் வீசும். கெட்ட அத்திப்பழங்களைப் புசித்தால் சரீர ஆரோக்கியம் கெட்டுப்போகும்.

நல்ல அத்திப்பழங்கள் முதல் கந்தாயத்து பழங்களைப்போல இருக்கிறது. இவை விருட்சங்களில் முதலாவதாக பழுத்தவை. முதல் பழங்களின் ருசி மிகவும் நன்றாயிருக்கும். பழங்களை புசிக்கிறவர்கள் முதல் கந்தாயத்து அத்திப்பழங்களை விரும்பி புசிப்பார்கள். இதன் மதிப்பும் கிரயமும் அதிகமாயிருக்கும்.

"ஐயோ! உஷ்ணகாலத்துக் கனிகளைச் சேர்த்து, திராட்ரசப்பழங்களை அறுத்தபின்பு வருகிறவனைப்போல் இருக்கிறேன்; புசிக்கிறதற்கு ஒரு திராட்சக்குலையும் என் ஆத்துமா இச்சித்த முதல் அறுப்பின் கனியும் இல்லை" (மீகா 7:1).

கெட்ட அத்திப்பழங்கள் புசிக்கத்தகாதவை. அவை துர்நாற்றம் வீசும். பார்ப்பதற்கும் அழகாயிராது. அவையெல்லாம் அழுகி கெட்டுப்போயிருக்கும். மனுஷரில் சிலர் கெட்ட அத்திப்பழங்களைப்போல இருக்கிறார்கள். கெட்ட அத்திப்பழங்கள் யாருக்கும் பிரயோஜனப்படாது. அதுபோலவே கெட்ட மனுஷர்கள் கர்த்தரை கனம்பண்ணமாட்டார்கள். கர்த்தருடைய நாமமகிமைக்காக ஜீவிக்கவும் மாட்டார்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யவும் மாட்டார்கள்.

கெட்ட அத்திப்பழங்களை ஒருவரும் புசிக்கமாட்டார்கள். இவற்றைப்போல இருக்கிற கெட்ட மனுஷரும், யாருக்கும் பிரயோஜனமாயிருக்கமாட்டார்கள். இவர்கள் மூலமாய் ஒரு நன்மையும் உண்டாகாது.

நல்ல அத்திப்பழங்களை கூடையில் வைத்து, கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு வந்து, அதை கர்த்தருக்கு முன்பாக பிரதிஷ்டைபண்ணுவார்கள். அதை கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்துவார்கள். நல்ல பழங்கள் தேவனுடைய ஆலயத்தின் பிரகாரத்தில் அங்கீகரிக்கப்பட்ட பழங்களாகயிருக்கும். இந்தப் பழங்களைப்போலவே, பரிசுத்தவான்களும் நீதிமான்களும், கர்த்தருடைய சமுகத்தில் அங்கீகரிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள்.

கெட்ட அத்திப்பழங்களை மனுஷர் தள்ளிவிடுவார்கள். அவை புசிப்புக்கு ஏற்றவையல்ல. அவை கெட்டுப்போன பழங்களாயிருப்பதினால், அவற்றை புசிக்கவும் முடியாது. கெட்டுப்போன அத்திப்பழங்களை வெளியிலே கொண்டுபோய் கொட்டிவிடுவார்கள். அவற்றை வீட்டில் வைத்திருந்தால், அவற்றிலிருந்து வீசும் துர்நாற்றம் வீடுமுழுவதையும் பாழாக்கிவிடும்.

துன்மார்க்கரும் பாவிகளும் கெட்ட அத்திப்பழங்களைப்போல இருக்கிறார்கள். கர்த்தர் இவர்களை தம்முடைய சமுகத்திலிருந்து துரத்திவிடுகிறார். துன்மார்க்கர் மற்றவர்களையும் கெடுத்துப்போடுவார்கள். கர்த்தர் துன்மார்க்கருக்கு அழிவை நியமித்திருக்கிறார்.

நல்ல அத்திப்பழங்கள் எரே 24:4-7

எரே 24:4. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 24:5. நான் இவ்விடத்திலிருந்து, கல்தேயர் தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகவிட்ட யூதரை நான் இந்த நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு, அவர்களுக்கு நன்மையுண்டாக அவர்களை அங்கிகரிப்பேன்.

எரே 24:6. அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள்மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பிவரப்பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன்.

எரே 24:7. நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எரேமியாவுக்கு, ஆலயத்தின் முன் வைக்கப்பட்டிருந்த அத்திப்பழங்களுள்ள இரண்டு கூடைகளை தரிசனமாக காண்பிக்கிறார். இந்த தரிசனத்தின் விளக்கத்தை கர்த்தர் எரேமியாவுக்கு வெளிப்படுத்துகிறார். கர்த்தர் ஒரு தெய்வீக நோக்கத்தோடும், சித்தத்தோடும், எரேமியாவுக்கு இந்த தரிசனத்தைக் காண்பித்திருக்கிறார்.

நேபுகாத்நேச்சார் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்துக்கொண்டு போயிருக்கிறான். சிறைப்பட்டுப்போனவர்களின் இருதயம் மிகுந்த வேதனையோடும் கலக்கத்தோடும் இருக்கிறது. அவர்கள் தங்கள் ஆவியில் கலங்கிப் போயிருக்கிறார்கள். சிறைப்பட்டுப்போனவர்கள் சந்தோஷமாய்த் திரும்பி வருவார்கள் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

இருதயத்தில் பெருமையுள்ளவர்களை கர்த்தர் தாழ்த்துகிறார். யூதர்களில் சிலர் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போகாமல், எருசலேமிலேயே தங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் பெருமையின் மேட்டிமையும் அடைந்திருக்கிறது. இவர்களும் சிறையிருப்புக்குப்போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இவர்களுடைய சிறையிருப்போ இவர்களுக்கு மிகுந்த வேதனையையும், துக்கத்தையும், தீங்கையும் கொடுக்கும். ஏற்கெனவே சிறைப்பட்டுப்போனவர்களுக்கோ நன்மை உண்டாகும்.

நல்ல அத்திப்பழங்கள் முதல் கந்தாயத்து அத்திப்பழங்களுக்கு சமானமாயிருக்கிறது. பாபிலோன் தேசத்திற்கு ஏற்கெனவே சிறைப்பட்டுப்போனவர்கள், முதல் கந்தாயத்து அத்திப்பழங்களுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அத்திமரத்தில் நன்றாக பழுத்த பழங்களை முதலாவது பறிப்பார்கள். இதுவே முதல் கந்தாயத்து அத்திப்பழங்கள். இந்தப் பழங்களைப்போலவே, எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களும் நீதிமான்களும் பாபிலோன் தேசத்திற்கு முதலாவதாக சிறைப்பட்டுப்போகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் அந்நிய தேசத்திற்கு சிறைப்பட்டுப்போனாலும், அங்கும் அவர்கள் கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவர்களாயிருக்க வேண்டும். தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் தங்களை ஆயத்தம்பண்ணிக்கொள்ள வேண்டும். அந்நிய தேசத்து சிறையிருப்பின் பாடுகளும், வேதனைகளும் கர்த்தருடைய பிள்ளைகளை பக்குவப்படுத்துகிறது. கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்வதற்கு சிறையிருப்பின் வேதனை அவர்களை தகுதிப்படுத்துகிறது.

அந்நிய தேசத்து சிறையிருப்பில் தங்களுக்கு வேதனைகள் உண்டானாலும், அந்த வேதனைகளுக்கு மத்தியிலும் அவர்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். கர்த்தரை கனம்பண்ணுகிறார்கள். பாபிலோன் தேசத்து சிறையிருப்பு, முதலாவதாக சிறையிருப்புக்கு வந்தவர்களுக்கு நன்மைக்கேதுவாக அமைந்திருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய நற்குணங்களைப் பார்த்து மிகவும் சந்தோஷப்படுகிறார். அவர்கள்மீது பிரியமாயிருக்கிறார். முதல் கந்தாயத்து நல்ல அத்திப்பழங்களை கவனமாய்ப் பாதுகாப்பதுபோல, கர்த்தர் பாபிலோன் சிறையிருப்புக்கு முதலாவதாக வந்த தம்முடைய பிள்ளைகளை மிகுந்த கவனத்தோடு பாதுகாத்து பராமரிக்கிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் யூதாதேசத்தைத் தண்டிக்கிறார். யூதாவின் குடிகளை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார். தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர்மீது வந்திருக்கிறது. நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தின்மீது யுத்தம்பண்ணி, யூதர்களை தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்துக் கொண்டுபோகிறான்.

முதலாவதாக சிறைப்பிடித்து கொண்டுபோகப்பட்டவர்கள், தீங்குகளையும், பாடுகளையும், வேதனைகளையும் முதலாவதாக அனுபவிக்கிறார்கள். நாம் ஆரம்பகாலத்திலேயே பாடுகளை அனுபவித்து பழகிவிட்டால், அது நம்முடைய பிற்காலத்துக்குப் பிரயோஜனமுள்ளதாயிருக்கும். சீக்கிரத்தில் பாடுகளை அனுபவிப்பது, சீக்கிரத்தில் கர்த்தருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாயிருக்கும். பிள்ளைகளை அவர்களுடைய சிறுவயதிலேயே கண்டித்து, தண்டித்து வளர்த்தால், அவர்களுடைய பிற்காலம் ஒழுக்கம் நிரம்பியதாயிருக்கும்.

பாபிலோன் தேசத்திற்கு முதலாவதாக சிறைப்பட்டுப்போனவர்கள், தகப்பன் நேசிக்கிற குமாரரைப்போல இருக்கிறார்கள். சிறுவயதிலேயே தங்கள் தப்பிதங்களுக்கு கண்டித்து வளர்க்கப்பட்ட ஒழுக்கமுள்ள பிள்ளைகளாயிருக்கிறார்கள். இவர்கள் நம்பிக்கையிருக்கும்போதே திருத்தப்பட்டவர்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போகாமல், யூதாதேசத்திலேயே தங்கிவிட்ட யூதர்கள், பெற்றோரின் கவனிப்பு இல்லாத குழந்தைகளைப் போன்றவர்கள். இவர்கள் தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ளவேண்டும். இவர்கள் தப்பிதம் செய்யும்போது, இவர்களை கண்டித்து திருத்துவதற்கு இவர்களுடைய பெற்றோரும் இல்லை. ஆகையினால் இவர்கள் தங்கள் இஷ்டம்போல வளருகிற குழந்தைகளைப்போல வளருவார்கள்.

இவர்களை பிற்காலத்தில் திருத்துவது என்பது இயலாத காரியம். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பதுபோல கெட்டுப்போவார்கள். இவர்கள் தங்களுடைய இளவயதிலேயே திருந்தாமல் வளர்ந்து, தங்களுடைய பிற்காலத்தில் துன்மார்க்கர்களாகவும், கடின இருதயமுள்ளவர்களாகவும் தீங்கு செய்வார்கள்.

"தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது. அவரே அதைத் தன்மேல் வைத்தாரென்று அவன் தனித்திருந்து மௌனமாயிருக்கக்கடவன்" (புல 3:27,28).

கர்த்தரே யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு அனுப்புகிறார். கர்த்தரும் தம்முடைய செய்கையை அங்கீகரிக்கிறார். "நான் இவ்விடத்திலிருந்து, கல்தேயர் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகவிட்ட யூதர்" (எரே 25:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பு யூதர்களுக்கு பொன்னைப் புடமிடும் இடம்போல இருக்கிறது. தம்முடைய ஜனத்தைப் புடமிடுவதற்காக, கர்த்தர் யூதர்களை யூதாதேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தருடைய கரமே அவர்களை புடமிடுகிறது. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் யூதர்களை புடமிடுகிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமே பரிசுத்தவான்களுக்கும் நீதிமான்களுக்கும் பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் வருகிறது.

துன்மார்க்கருக்கு தண்டனை சிறைச்சாலையின் அதிகாரிகள் மூலமாய் வரும். இவர்கள் ஆளோட்டிகள்போலவும், சிறைச்சாலையில் தண்டனையை நிறைவேற்றுகிறவர்கள் போலவும் துன்மார்க்கரைக் கடினமாய் நடத்தி தண்டிப்பார்கள். நீதிமான்களுக்கோ கர்த்தருடைய கரத்திலிருந்து தண்டனை வரும். ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளையை அன்பாய்க் கண்டித்து திருத்துவதுபோல, கர்த்தரும் தம்முடைய பிள்ளைகளை, தம்முடைய அன்பினால் கண்டித்து திருத்துகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு யூதாதேசத்திலுள்ள பரிசுத்தவான்களும் உட்படுத்தப்படுகிறார்கள். அங்கே அவர்கள் அடிமைத்தனத்தின் வேதனைகளை அனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு அந்நிய தேசத்திலே துக்கங்களும் உபத்திரவங்களும் உண்டாயிற்று. யூதாதேசத்திலே அவர்களுக்கு இருந்த சொத்துக்களும் சம்பத்துக்களும் அழிந்துபோயிற்று. அவர்கள் தங்கள் தேசத்தில் விடுதலையோடு இருந்தார்கள். இப்போதோ அவர்கள் பாபிலோன் தேசத்தில் அடிமைகளாக சிறைப்பட்டுக்கிடக்கிறார்கள்.

பாபிலோன் தேசத்தில் சிறைப்பட்டிருக்கிற கர்த்தருடைய பரிசுத்தவான்களின் இருதயங்கள் உடைந்துபோயிருக்கிறது. அவர்களுடைய ஆவிகள் சோர்ந்துபோயிருக்கிறது. கர்த்தருடைய பிரமாணங்கள் மூலமாயும், வாக்குத்தத்தங்கள் மூலமாயும் அவர்களுக்கு நன்மை கிடைக்கவில்லை. கர்த்தர் தங்களை மறந்துவிட்டாரோ என்றும், கர்த்தருடைய நன்மைகளும் ஆசீர்வாதங்களும் தங்களுக்கு ஏன் கிடைக்கவில்லை என்றும், கர்த்தர் தங்களை ஏன் பாதுகாக்கவில்லை என்றும் நினைத்து யூதர்கள் மனம் குழம்பிப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய ஜீவியத்தில் சோதிக்கப்படுகிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கு, பாபிலோன் தேசத்து சிறையிருப்பு, அவர்களுடைய நன்மைக்கேதுவாகவே அமைந்திருக்கிறது. கர்த்தர் யூதர்களின் நன்மையை, திட்டமிட்டு , அதை தம்முடைய சித்தத்தின் பிரகாரம் நிறைவேற்றுகிறார். யூதர்களுக்கு பாபிலோன் தேசத்து சிறையிருப்பின் மூலமாக பாடுகளும் உபத்திரவங்களும் உண்டாயிற்று. இதன் மூலமாக அவர்களுடைய பாவங்கள் உணர்த்தப்படுகிறது. அவர்கள் கர்த்தருடைய கரங்களில் தங்களை ஒப்புக்கொடுத்து, கர்த்தருக்கு முன்பாக தங்களை வெகுவாய்த் தாழ்த்துகிறார்கள். சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் உலகசிநேகத்தைவிட்டு விலகிவருகிறார்கள். உலகத்தின் இச்சைகளை மறக்கிறார்கள். ஜெபம் பண்ண கற்றுக்கொள்கிறார்கள். தங்களுடைய பாவங்களுக்கும் அக்கிரமங்களுக்கும் விலகி ஜீவிக்கிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் மிகுந்த துன்பங்களை அனுபவித்தாலும், கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிறார்கள். யூதாதேசத்திலே, இவர்கள் விட்டு வந்திருக்கிற, இவர்களுடைய உற்றாரும் உறவினரும் இவர்கள்மீது அன்பாயில்லை. இவர்களை கைவிட்டுவிட்டார்கள். சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை மனுஷர் கைவிட்டாலும், கர்த்தர் கைவிடாமல் ஏற்றுக்கொள்கிறார். "அவர்களுக்கு நன்மை உண்டாக அவர்களை அங்கீகரிப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"நான் இவ்விடத்திலிருந்து, கல்தேயர் தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகவிட்ட யூதரை நான் இந்த நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிட்டு, அவர்களுக்கு நன்மையுண்டாக அவர்களை அங்கிகரிப்பேன். அவர்களுக்கு நன்மையுண்டாக நான் என் கண்களை அவர்கள்மேல் வைத்து, அவர்களை இந்த தேசத்துக்குத் திரும்பிவரப்பண்ணி, அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்கமாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களைப் பிடுங்கமாட்டேன்" (எரே 24:5,6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதர்களுக்கு நன்மை உண்டாகவே, அவர்கள் சிறையிருப்புக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். கர்த்தரே அவர்களை அனுப்பியிருக்கிறார். ஆகையினால் யூதர்கள் பாபிலோன் தேசத்தில் ஒன்றையும் இழந்துபோகமாட்டார்கள். பொன்னைப் புடமிடுவதற்காக, அதை குகையில் வைத்து உருக்குவதுபோல, கர்த்தர் யூதர்களை சுத்தப்படுத்துவதற்காக, பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் வைத்திருக்கிறார். புடமிடுகிறவர் பொன்னை உருக்கும்போது, அவருடைய பார்வை முழுவதும் உருகிக்கொண்டிருக்கிற பொன் மீதே இருக்கும். பொன்னுக்கு சேதம் வந்துவிடாதவாறு அதை கவனமாய் உருக்குவார்.

கர்த்தருடைய கண்களும் சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள்மீது மிகுந்த கவனமாயிருக்கிறது. "அவர்களுக்கு நன்மை உண்டாக நான் என் கண்களை அவர்கள்மேல் வைப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய கண்கள் யூதர்களை மிகுந்த கவனமாயும், கரிசனையாயும் நோக்கிப் பார்க்கும். அவர்களுக்கு ஒரு சேதமும், நாசமும், மோசமும் வந்துவிடாதவாறு, கர்த்தருடைய கண்கள் அவர்கள் மேலேயே இருக்கும்.

பொன்னைப் புடமிடுகிறவர், பொன்னை உருக்கி முடித்த பின்பு, அதை சூளையிலிருந்து வெளியே எடுப்பார். உருக்கிய பொன்னை தனக்கு விருப்பமான ஆபரணமாய்ச் செய்வார். பொன்னை உருக்குகிறவர் அதை சுத்தப்படுத்த வேண்டும் என்றும், தனக்கு சித்தமான ஆபரணமாய் அதை உருவாக்கவேண்டும் என்றும் நல்ல நோக்கத்தோடுதான் உருக்குகிறார்.

அதுபோலவே கர்த்தர் யூதர்களுக்கு நன்மை உண்டாகவேண்டும் என்பதற்காகவே, அவர்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுக்கிறார். அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் உருக்கப்படுகிறார்கள். சுத்திகரிக்கப்படுகிறார்கள். கர்த்தர் அவர்களை சுத்திகரித்த பின்பு, அவர்களை மறுபடியுமாய் அவர்களுடைய தேசத்திற்கு திரும்பி வரப்பண்ணுகிறார்.

யூதாதேசத்தார் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது, அவர்கள் மிகுந்த கட்டுப்பாடுகளையும், ஒழுக்க வரைமுறைகளையும் கடைப்பிடித்தார்கள். அங்கே அவர்கள் பலவிதமான பயிற்சிகளை மேற்கொண்டார்கள். கர்த்தர் அவர்களை சிறையிருப்பிலே புடமிட்டார். அவர்களிடத்திலுள்ள அசுத்தங்களையெல்லாம் நீக்கிப்போட்டார். அவர்களை சுத்திகரித்தார். அவர்கள் சுத்திகரிக்கப்பட்ட பின்போ, கர்த்தர் அவர்களை, அவர்களுடைய பிதாவின் வீட்டிற்கு திரும்பவுமாய் அழைத்து வருகிறார்.

பொன்னைப் புடமிடுகிறவர், பொன்னை உருக்கிய பின்பு, அதை தனக்கு விருப்பமான ஆபரணமாய்ச் செய்வார். அதுபோலவே கர்த்தரும், யூதர்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் புடமிட்ட பின்பு, அவர்களை மறுபடியும் அவர்களுடைய தேசத்திற்கு திரும்ப அழைத்து வந்து, அங்கே அவர்களை தமக்குப் பிரியமான, பிரயோஜனமான பாத்திரமாய் உருவாக்குகிறார். புடமிடப்பட்ட யூதர்கள் கர்த்தருக்கு பிரயோஜனமுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய மகிமையான பாத்திரங்களாயும், எந்த நற்கிரியையயும் செய்வதற்கு தகுதியுள்ளவர்களாயும் இருப்பார்கள்.

கர்த்தர் யூதர்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குட்படுத்தி, அங்கே அவர்களை தமக்கு சித்தமான பிரகாரம் உருக்குகிறார். புடமிடுகிறார். அவர்களுக்கு கடினமான பயிற்சிகளைக் கொடுக்கிறார். அவர்களை, அவர்களுடைய தேசத்திற்கு திரும்பி வரப்பண்ணிய பின்பு, கர்த்தர் அவர்களை கட்டுகிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் மத்தியிலே வாசம்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய ஜனங்களை இஸ்ரவேல் தேசத்தில் திரும்பக்கட்டும்போது, தாம் வாசம்பண்ணுவதற்கு ஏதுவான வாசஸ்தலமாக அவர்களைக் கட்டுகிறார். கர்த்தர் அவர்களை நாட்டுகிறார். அவர்களை தமக்குப் பிரியமான திராட்சத்தோட்டமாக உண்டுபண்ணுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தைக் கொண்டு தமக்கு மாளிகையைக் கட்டுகிறார். யூதர்கள் சிறையிருப்புக்கு வருவதற்கு முன்பாக ஒழுங்கற்ற கற்களாயிருந்தார்கள். கர்த்தரோ அவர்களை சிறையிருப்புக்குட்படுத்தி, அவர்களை செதுக்கி, தம்முடைய திட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கு உருவத்தைக் கொடுத்து, தம்முடைய மாளிகையைக் கட்டுவதற்கு ஏற்ற, தகுதியான கற்களாக அவர்களை பயன்படுத்துகிறார்.

யூதர்கள் சிறையிருப்புக்குட்படுத்தப் படுவதற்கு முன்பாக, கிளை தரிக்கப்படாத அலங்கோலமான மரங்களாயிருந்தார்கள். கர்த்தரோ அவர்களுடைய சிறையிருப்பின் மூலமாய், அவர்களிடத்தில் காணப்பட்ட தேவையற்ற கிளைகளை தரித்துப்போடுகிறார். அந்தக் கிளைகளை மறுபடியும் நட்டவைப்பதற்கு தகுதியுள்ள கிளைகளாக மாற்றுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு தற்காலிக ஆசீர்வாதங்களும் தேவைப்படுகிறது. நித்திய ஆசீர்வாதங்களும் தேவைப்படுகிறது. தற்காலிக ஆசீர்வாதங்கள் எல்லாமே உலகப்பிரகாரமானவை. நித்திய ஆசீர்வாதங்கள் ஆவிக்குரியவை. கர்த்தர் அவர்களை தம்முடைய நித்திய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, தகுதியுள்ளவர்களாக்குகிறார். அவர்கள்மீது தம்முடைய ஆவிக்குரிய கிருபைகளையும், இரக்கங்களையும், வரங்களையும் அருள்மாரியாக பொழிகிறார். கர்த்தர் அவர்களை சுத்திகரிக்கிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும், தங்கள் சொந்த தேசத்திலிருந்தபோது, கர்த்தரைப்பற்றி அவருடைய பிரமாணங்கள் மூலமாயும், கற்பனைகள் மூலமாயும் கற்றுக்கொண்டார்கள். இப்போது அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். இப்போது அவர்கள் கர்த்தரைப்பற்றி, அவருடைய தெய்வீக பராமரிப்புக்கள் மூலமாய் கற்றுக்கொள்கிறார்கள். கர்த்தரைப்பற்றி எருசலேமில் கற்றுக்கொண்டதைவிட, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலே அதிகமாய்க் கற்றுக்கொள்கிறார்கள்.

"கர்த்தர் யூதர்களுக்கு, "கொடுப்பேன்" என்று வாக்குப்பண்ணுகிறார். "நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்" (எரே 24:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் அவர்களுக்கு உலகப்பிரகாரமான ஞானத்தையோ, புத்தியையோ, அறிவையோ கொடுப்பதாக வாக்குப்பண்ணவில்லை. உலகஞானம் அற்பபிரயோஜனமுள்ளது. நம்முடைய சுயபுத்தியினாலோ, சுயஞானத்தினாலோ கர்த்தரை அறிந்துகொள்ள முடியாது. கர்த்தரே நமக்கு தம்மைப்பற்றி வெளிப்படுத்தவேண்டும். கர்த்தர் நமக்கு தம்மை அறியும் இருதயத்தைக் கொடுக்கவேண்டும். கர்த்தரை அறியும் இருதயமே, அவரை அறியவேண்டிய பிரகாரமாக அறியும்.

யூதர்கள் "தங்கள் முழுஇருதயத்தோடும் என்னிடத்திற்கு திரும்புவார்கள்" (எரே 24:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தரே அவர்களை தம்மிடமாய்த் திருப்புகிறார். கர்த்தர் திருப்பும்போது, அவர்கள் கர்த்தரிடமாய்த் திரும்புகிறார்கள். கர்த்தர் யூதாவின் மனுஷரோடு மறுபடியுமாய் உடன்படிக்கை பண்ணுகிறார். "அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போனவர்கள், கர்த்தரிடத்தில் மறுபடியுமாய்த் திரும்பிவரவேண்டும். தம்மிடத்தில் வருகிறவர்கள் யாரையும் கர்த்தர் புறம்பே தள்ளமாட்டார். கர்த்தரிடத்தில் வருகிறவர்கள் முழுமனதோடும், முழுஇருதயத்தோடும் திரும்பிவரவேண்டும். தம்மிடத்தில் பயபக்தியோடு வருகிறவர்களோடு, கர்த்தர் உடன்படிக்கை பண்ணுகிறார். கர்த்தருடைய உடன்படிக்கையின் சிலாக்கியங்கள், ஆசீர்வாதங்கள், ஆறுதல்கள் எல்லாவற்றிற்கும் அவர்கள் சொந்தக்காரராயிருப்பார்கள். யூதாவின் ஜனங்களும், எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போனதினால், அவர்களுக்கு நன்மை உண்டாயிற்று.

கெட்ட அத்திப்பழங்கள் எரே 24:8-10

எரே 24:8. புசிக்கத்தகாத கெட்ட அத்திப்பழங்களைத் தள்ளிவிடுவது போல, நான் சிதேக்கியா என்கிற யூதாவின் ராஜாவையும் அவனுடைய பிரபுக்களையும், இந்தத் தேசத்திலே மீதியான எருசலேமின் குடிகளையும், எகிப்து தேசத்தில் குடியிருக்கிறவர்களையும் தள்ளிவிட்டு,

எரே 24:9. அவர்களுக்குத் தீமையுண்டாக அவர்களை பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களாகவும், நான் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா இடங்களிலும் நிந்தையாகவும், பழமொழியாகவும், வசைச் சொல்லாகவும், சாபமாகவும் வைத்து,

எரே 24:10. அவர்களுக்கும் அவர்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த தேசத்தில் அவர்கள் இராதபடிக்கு நிர்மூலமாகுமட்டும், அவர்களுக்குள்ளே பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளை நோயையும் அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எரேமியாவுக்கு கெட்ட அத்திப்பழங்களின் வியாக்கியானத்தை விவரிக்கிறார். யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவும், அவனுடைய பிரபுக்களும் இன்னும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகவில்லை. யூதாதேசத்திலே மீதியான எருசலேமின் குடிகளும் அவர்களோடு பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போகாமல், தங்கள் தேசத்திலேயே இருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய இருதயத்தில் பெருமையும் மனமேட்டிமையும் உண்டாயிற்று. நேபுகாத்நேச்சாரிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ள, தங்களுக்கு போதுமான பாதுகாப்பு இருப்பதாக இவர்கள் நினைக்கிறார்கள்.

"அப்பொழுது அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இவர்கள் இந்த நகரத்திலே அக்கிரமமான நினைவுகளை நினைத்து, துராலோசனை சொல்லுகிற மனுஷர். இது வீடுகளைக் கட்டுவதற்குக் காலமல்ல என்றும், இந்த நகரம் பானை, நாங்கள் அதிலுள்ள இறைச்சியென்றும் சொல்லுகிறார்கள். ஆகையால் அவர்களுக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசனஞ்சொல்லு, மனுபுத்திரனே, தீர்க்கதரிசனஞ்சொல்லு என்றார்" (எசே 11:2-4).

நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தின்மீது யுத்தம்பண்ணியபோது, யூதர்களில் அநேகர் தங்களுடைய ஜீவனை காப்பாற்றிக்கொள்ள எகிப்து தேசத்திற்கு ஓடிப்போனார்கள். எகிப்து தேசமே தங்களுக்கு பாதுகாப்பான தேசம் என்று நினைத்து, அந்த தேசத்தில் அடைக்கலம் பெற்றுக்கொண்டார்கள். இவர்கள் தேவனுடைய கட்டளைக்கு விரோதமாக எகிப்து தேசத்திற்கு ஓடிப்போனவர்கள். ஆனாலும் தாங்கள் சூழ்நிலைக்கேற்ப மிகவும் ஞானமாய் நடந்துகொண்டதாக, தங்களைப்பற்றி பெருமைப்படுகிறார்கள். எகிப்து தேசத்தில் இவர்கள் பாதுகாப்பாய் தங்கியிருப்பதாக நினைக்கிறார்கள். இதன் நிமித்தமாய் அவர்களுடைய இருதயத்தில் பெருமையும், மனதிலே மேட்டிமையும் உண்டாயிற்று.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போகாமல், யூதாதேசத்திலும், எகிப்து தேசத்திலும் தங்கியிருப்பவர்கள் தங்களைப்பற்றி பெருமையாய் நினைப்பதோடு, சிறைப்பட்டுப்போன யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் பற்றி ஏளனமாய் நினைக்கிறார்கள். கர்த்தரோ பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போகாமல், யூதாதேசத்திலேயே தங்கியிருக்கிற ஜனங்களுக்கும், எகிப்து தேசத்திற்கு ஓடிப்போன ஜனங்களுக்கும் விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

"புசிக்கத்தகாத கெட்ட அத்திப்பழங்களைத் தள்ளிவிடுவதுபோல, நான் சிதேக்கியா என்கிற யூதாவின் ராஜாவையும் அவனுடைய பிரபுக்களையும், இந்தத் தேசத்திலே மீதியான எருசலேமின் குடிகளையும், எகிப்து தேசத்தில் குடியிருக்கிறவர்களையும் தள்ளிவிடுவேன்" (எரே 24:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போனவர்கள், அந்நிய தேசமாகயிருந்தாலும், அந்த ஒரே தேசத்திலேயே தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு பாபிலோன் தேசத்தில் இளைப்பாறுதல் கிடைத்திருக்கிறது. அந்நிய தேசத்திலிருந்தாலும் அவர்கள் ஆறுலடைந்திருக்கிறார்கள். ஆனால் பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போகாமல், யூதாதேசத்திலேயே தங்கிவிடுகிறவர்கள், பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிவார்கள் (எரே 24:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப் போனவர்கள் தங்களுக்கு நன்மை உண்டாகவே அங்கே போயிருக்கிறார்கள். பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போகாமல், யூதாதேசத்திலே தங்கியிருக்கிறவர்களை, கர்த்தர் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிய வைப்பார். அவர்கள் துரத்திவிடப்பட்ட எல்லா இடங்களிலும், கர்த்தர் அவர்களை நிந்தையாகவும், பழமொழியாகவும், வசைச்சொல்லாகவும், சாபமாகவும் வைப்பார் (எரே 24:9).

பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போனவர்கள் அந்நிய தேசத்திலிருந்தாலும், அவர்கள் அங்கேயும் கர்த்தருடைய ஜனமாகவே இருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய தேவனாகவே இருக்கிறார் (எரே 24:7). பாபிலோன் சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு கர்த்தருடைய ஆறுதலும், தெய்வீக பராமரிப்பும் கிடைக்கும். அவர்களுடைய இக்கட்டுக்காலத்தில் கர்த்தரே அவர்களுக்கு துணையாயிருப்பார்.

பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போகாமல் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்கள், தாங்கள் அலையும் எல்லா இடங்களிலும், அங்கேயுள்ள ஜனங்களுக்கு நிந்தையாகவே இருப்பார்கள். அவர்கள் எந்த தேசத்தில் அலைந்து திரிந்தாலும், அந்த தேசத்தின் ஜனங்களுக்கு அவர்கள் பழமொழியாகவும், வசைச்சொல்லாகவும், நிந்தையாகவும், சாபமாகவும் இருப்பார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் தங்கள் முழுஇருதயத்தோடு கர்த்தரிடத்திற்கு திரும்புவார்கள். கர்த்தர் அவர்களுக்கு நன்மை உண்டாக, தம்முடைய கண்களை அவர்கள்மேல் வைத்து, அவர்களை அவர்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்பி வரப்பண்ணுவார். அங்கே அவர்களைக் கட்டுவார். அங்கே அவர்களை நாட்டுவார். கர்த்தர் இனிமேல் அங்கே அவர்களை இடிக்கவுமாட்டார், பிடுங்கவுமாட்டார் (எரே 24:6).

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போகாமல், பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிற யூதர்கள் தங்கள் தேசத்தை மறுபடியும் பார்க்கமாட்டார்கள். அவர்கள் அந்நிய தேசங்களிலேயே செத்துப்போவார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போனவர்களுக்கு கர்த்தர் நன்மையை நியமித்திருக்கிறார். பாபிலோனுக்குப் போகாமல் யூதாதேசத்திலேயே தங்கியிருக்கிறவர்களுக்கோ, கர்த்தர் தீமையையும், சாபத்தையும் நியமித்திருக்கிறார். இவர்கள் தங்கள் தேசத்தில் இருக்கவேண்டும் என்று விரும்பினாலும், இவர்களால் தங்கள் தேசத்தில் இருக்கமுடியாது. கர்த்தர் அவர்களுக்குள்ளே பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளைநோயையும் அனுப்புவார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போகாமல், யூதாதேசத்திலேயே தங்கியிருக்கிற யூதர்கள், கர்த்தர் அவர்களுக்கும், அவர்கள் பிதாக்களுக்கும் கொடுத்த தேசத்தில் இராதபடிக்கு நிர்மூலமாவார்கள். கர்த்தர் அவர்களை அழித்துப்போடுவார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்கியம் ரோமப்பேரரசின் ஆட்சிக்காலத்தில் நிறைவேறிற்று என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். ரோமப்பேரரசின் காலத்தில் யூதர்கள் சங்காரம்பண்ணப்பட்டார்கள். ரோமப்பேரரசார் யூதாவின் பட்டணங்களெல்லாவற்றையும் அழித்துப்போட்டார்கள். அவர்கள் எருசலேமையும், எருசலேமிலுள்ள தேவாலயத்தையும் இடித்துப்போட்டு, அதை தீயிட்டுகொழுத்திப்போட்டார்கள்.

ரோமப்பேரரசின் காலத்தில் யூதர்களுக்கு மிகுந்த உபத்திரவமுண்டாயிற்று. இக்காலத்தில்கூட, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்மை நம்பின யூதர்களை, ரோமப்பேரரசின் உபத்திரவத்திற்கு தப்புவித்து அவர்களை காத்துக்கொண்டார். கர்த்தரை நம்பாதவர்களோ எல்லா தேசங்களுக்கும் சிதறடிக்கப்பட்டார்கள். அவர்கள் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களானார்கள். அவர்கள் எல்லா இடங்களிலும் நிந்தையாகவும், சாபமாகவும் ஆனார்கள்.

25 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற தீர்க்கதரிசன வாக்கியங்கள், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அரசாண்ட முதலாம் வருஷத்தில் சொல்லப்பட்டது. இந்த வருஷம் மிகவும் முக்கியமான வருஷமாகும். இந்த வருஷத்தில் கர்த்தர் தம்முடைய பட்டயத்தை வெளியே எடுத்திருக்கிறார்.

கடந்த பல வருஷங்களாக, யூதாவுக்கும் எருசலேமுக்கும் ஏராளமான தீர்க்கதரிசனங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. எரேமியா தீர்க்கதரிசியும், மேலும் பல தீர்க்கதரிசிகளும் அவர்களுக்கு தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்களோ தீர்க்கதரிசிகளுக்கு செவிகொடுக்கவில்லை (எரே 25:1-7).

பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாவையும் எருசலேமையும் அழித்துப்போடுவான். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு இந்த பேரழிவு வரும் (எரே 25:12-14). நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தை அழித்ததுபோல, இன்னும் அநேக தேசங்களை அழித்துப்போடுவான். அவர்களுக்கு உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரம் கொடுக்கப்படும் (எரே 25:15-28). அவர்கள் மத்தியில் பட்டயம் அனுப்பப்படும் (எரே 25:29-33). மேய்ப்பர்களுக்கும், அவர்களுடைய மந்தைகளுக்கும், மேய்ச்சல் நிலங்களுக்கும் அழிவு வரும் (எரே 25:34-38).

என் சொல்லைக் கேளாமற்போனீர்கள் எரே 25:1-7

எரே 25:1. யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்கிற யூதாவுடைய ராஜாவின் நாலாம் வருஷத்துக்குச் சரியான, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அரசாண்ட முதலாம் வருஷத்திலே யூதாவின் ஜனம் அனைத்தையும் குறித்து எரேமியாவுக்கு உண்டான வார்த்தை;

எரே 25:2. அதைத் தீர்க்கதரிசியாகிய எரேமியா யூதாவின் ஜனம் அனைத்துக்கும், எருசலேமின் குடிகள் எல்லாருக்கும் அறிவிக்கிறதற்காக அவர்களை நோக்கி:

எரே 25:3. ஆமோனின் குமாரனாகிய யோசியாவின் பதின்மூன்றாம் வருஷம் துவக்கி இந்நாள்மட்டும் சென்ற இந்த இருபத்துமூன்று வருஷமாகக் கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாயிற்று; அதை நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிக் கொண்டுவந்தும் நீங்கள் கேளாமற்போனீர்கள்.

எரே 25:4. கர்த்தர் உங்களிடத்திற்குத் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய சகல ஊழியக்காரரையும் ஏற்கனவே அனுப்பிக் கொண்டேயிருந்தும், நீங்கள் கேளாமலும், கேட்கும்படிக்கு உங்கள் செவிகளைச் சாயாமலும்போனீர்கள்.

எரே 25:5. அவர்களைக்கொண்டு அவர்: உங்களில் அவனவன் தன்தன் பொல்லாத வழியையும், உங்கள் கிரியைகளின் பொல்லாப்பையும் விட்டுத் திரும்பி, கர்த்தர் உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் கொடுத்த தேசத்தில் சதாகாலமும் குடியிருந்து,

எரே 25:6. அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும்; அவைகளுக்கு ஆராதனைசெய்யாமலும், அவைகளைப் பணியாமலுமிருந்து, நான் உங்களுக்குத் தீமை செய்யாதபடிக்கு உங்கள் கைகளின் செய்கைகளால் எனக்குக் கோபமுண்டாக்காமலும் இருங்கள் என்று சொல்லியனுப்பினேன்.

எரே 25:7. நீங்களோ, உங்களுக்குத் தீமையாக உங்கள் கைகளின் செய்கைகளாலே எனக்குக் கோபமூட்டும்படிக்கு, என் சொல்லைக் கேளாமற்போனீர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

யூதாவின் ஜனம் அனைத்தையும் குறித்து எரேமியாவுக்கு கர்த்தரிடத்திலிருந்து வார்த்தை வந்திருக்கிறது (எரே 25:1). கர்த்தர் சொன்ன செய்தியை எரேமியா யூதாவின் ஜனம் அனைத்திற்கும், எருசலேமின் குடிகள் எல்லாருக்கும் அறிவிக்கவேண்டும் (எரே 25:2). கர்த்தர் எரேமியாவை எல்லா ஜனங்களுக்கும் முன்பாக அனுப்புகிறார். எரேமியா கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிற இந்தக் காலம், ஒருவேளை பண்டிகை காலமாகயிருக்கலாம். பண்டிகையை ஆசரிப்பதற்கு யூதாதேசத்திலுள்ள எல்லோரும் எருசலேமுக்கு கூடிவந்திருக்கலாம்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிற காலம் யூதாவுடைய ராஜாவாகிய யோயாக்கீமின் நாலாம் வருஷமும், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அரசாண்ட முதலாம் வருஷமும் ஆகும். நேபுகாத்நேச்சார் உலகம் முழுவதிற்கும் பேரரசனாக எழும்புகிறான். கர்த்தரோ அவனை தம்முடைய ஊழியக்காரன் என்று சொல்லுகிறார் (எரே 25:9).

நேபுகாத்நேச்சார் தன்னுடைய சொந்த முயற்சியினால் பாபிலோன் தேசத்தை விஸ்தாரம்பண்ணவுமில்லை. அதை வலுப்படுத்தவுமில்லை. தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக நேபுகாத்நேச்சாருக்கு பேரும் புகழும், யுத்தங்களில் வெற்றியும் உண்டாயிற்று. நேபுகாத்நேச்சாரின் வெற்றியில் கர்த்தர் ஒரு நோக்கம் வைத்திருக்கிறார். அவன் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும். அவன் கர்த்தருடைய விருப்பத்தின் பிரகாரம் நடந்துகொள்ள வேண்டும்.

எரேமியா தீர்க்கதரிசியும், இன்னும் ஏராளமான தீர்க்கதரிசிகளும் யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார்கள். ஆனால் ஜனங்களோ அவர்களுடைய செய்திகளை கவனித்து கேட்கவில்லை. தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அவர்கள் கர்த்தரைவிட்டுவிட்டு அந்நிய தேவர்களைப் பின்பற்றுகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். இதனால் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் ஜனத்தாருக்கு மத்தியில் இருபத்து மூன்று வருஷங்களாக கர்த்தருடைய செய்தியை தொடர்ந்து பிரசங்கம்பண்ணிக்கொண்டு வருகிறார். கர்த்தரும் இத்தனை வருஷங்களாக எரேமியாவுக்கு தம்முடைய செய்திகளை வெளிப்படுத்தி, அவரை யூதர்களுக்கு மத்தியில் அனுப்பிக்கொண்டிருக்கிறார். "இந்நாள் மட்டும் சென்ற இந்த இருபத்து மூன்று வருஷமாக கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாயிற்று" (எரே 25:3) என்று எரேமியா சொல்லுகிறார்.

தேவனுடைய ஆவியானவர் யூதாவின் மனுஷரோடு போராடிக்கொண்டிருக்கிறார். "அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார்" (ஆதி 6:3).

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை ஜனங்கள் மத்தியில் உண்மையாய்ப் பிரசங்கம்பண்ணுகிறார். கர்த்தருடைய ஊழியத்தை சோர்ந்துவிடாமல் உற்சாகமாய்ச் செய்துகொண்டு வருகிறார். தேவனுடைய ஆலோசனைகளை ஜனங்களுக்கு வெளிப்படுத்துகிறார். எரேமியா கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்கு சொல்லிக்கொண்டு வந்தும், அவர்கள் எரேமியாவின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. கர்த்தருடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளவில்லை.

கர்த்தர் எரேமியாவோடுகூட மேலும் பல தீர்க்கதரிசிகளையும் யூதாமனுஷர் மத்தியில் அனுப்புகிறார். செய்தி ஒன்றுதான். அந்தச் செய்தியை அநேகர் சொல்லுகிறார்கள். அவர்களுடைய பிரசங்கச் செய்திகளெல்லாம் வேதாகமத்தில் எழுதப்படவில்லை. கர்த்தர் அவர்களிடத்திற்கு தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய சகல ஊழியக்காரரையும் ஏற்கெனவே அனுப்பிக்கொண்டேயிருக்கிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தங்கள் பொல்லாத வழிகளில் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கிரியைகளெல்லாம் பொல்லாப்பு நிரம்பியதாயிருக்கிறது. யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் அந்நிய தேவர்களைப் பின்பற்றுகிறார்கள். அவைகளுக்கு ஆராதனை செய்கிறார்கள். அவைகளைப் பணிந்துகொள்கிறார்கள். எருசலேமின் குடிகள் தங்களுடைய கைகளின் செய்கைகளால் கர்த்தருக்கு கோபமூட்டுகிறார்கள்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் யூதா மனுஷருடைய விக்கிரகாராதனையைக் கடிந்துகொள்கிறார்கள். கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியின் மூலமாய் எருசலேமின் குடிகளுக்கு தம்முடைய செய்தியை சொல்லி அனுப்புகிறார். "அந்நிய தேவர்களைப் பின்பற்றாமலும்; அவைகளுக்கு ஆராதனைசெய்யாமலும், அவைகளைப் பணியாமலுமிருந்து, நான் உங்களுக்குத் தீமை செய்யாதபடிக்கு உங்கள் கைகளின் செய்கைகளால் எனக்குக் கோபமுண்டாக்காமலும் இருங்கள் என்று சொல்லியனுப்பினேன்" (எரே 25:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்களுடைய ஜீவியம் புதுப்பிக்கப்படவேண்டும். ஒரு தெரு சுத்தமாகயிருக்கவேண்டுமென்றால், அந்த தெருவிலுள்ள ஒவ்வொரு வீடும் பெருக்கி சுத்திகரிக்கப்பட்டிருக்கவேண்டும். "அவனவன் தன் தன் பொல்லாத வழியையும், தங்கள் கிரியைகளின் பொல்லாப்பையும் விட்டு திரும்பவேண்டும்" (எரே 25:5).

தேசம் சாபத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமென்றால், தேசத்திலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். ஒவ்வொருவருடைய இருதயமும் புதுப்பிக்கப்படவேண்டும். அவனவன் தன் தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பவேண்டும்.

யூதா ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினால், கர்த்தருடைய ஆசீர்வாதம் அவர்களுக்கு கிடைக்கும். அவர்கள் தங்களுடைய பொல்லாத வழியையும், தங்களுடைய கிரியைகளின் பொல்லாப்பையும்விட்டு திரும்பினால், கர்த்தர் அவர்களுக்கும் அவர்களுடைய பிதாக்களுக்கும் கொடுத்த தேசத்திலே சதாகாலமும் குடியிருப்பார்கள். அவர்களுடைய பாவங்களே அவர்களை அவர்களுடைய தேசத்திலிருந்து துரத்திவிடும். ஜனங்கள் பொல்லாத வழியையும், தங்கள் கிரியைகளின் பொல்லாப்பையும் விட்டுத் திரும்பவில்லையென்றால், அவர்களுடைய தேசம் அவர்களைவிட்டுத் திரும்பிப் போய்விடும்.

எரேமியா யூதா மனுஷர் மத்தியில் கர்த்தருடைய செய்தியை அறிவிக்கிறார். அவர் ஜனங்கள்மீது அன்புகூர்ந்து பிரசங்கம் பண்ணுகிறவர். அவர்கள் அழிந்துபோகக் கூடாது என்று, அவர்கள்மீது கரிசனையோடிருக்கிறவர். ஆனால் அவர்களோ எரேமியா சொன்ன செய்தியைக் கேட்கவில்லை. அவருடைய வார்த்தைக்கு தங்கள் செவிகளை சாய்க்கவுமில்லை.

பாவத்தைவிட்டு விலகி வருவதே, தேவனுடைய கோபத்தைவிட்டு விலகி வருவதற்கு வழி. வேறு உபாயம் எதுவுமில்லை. எரேமியாவோடு இன்னும் பல தீர்க்கதரிசிகள் யூதா மனுஷர் மத்தியில் ஊழியம் செய்கிறார்கள். கர்த்தர் தம்முடைய சகல ஊழியக்காரரையும் யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் அனுப்பிக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்கள் தீர்க்கதரிசிகளின் செய்தியைக் கேட்கவுமில்லை, அதைக் கேட்கும்படி தங்கள் செவிகளை சாய்க்கவுமில்லை (எரே 25:4).

எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள் எரே 25:8-11

எரே 25:8. நீங்கள் என் வார்த்தைகளைக் கேளாமற்போன படியினால்,

எரே 25:9. இதோ, நான் வடக்கேயிருக்கிற சகல வம்சங்களையும், என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவையும் அழைத்தனுப்பி, அவர்களை இந்த தேசத்துக்கு விரோதமாகவும், இதின் குடிகளுக்கு விரோதமாகவும், சுற்றிலுமிருக்கிற இந்த எல்லா ஜாதிகளுக்கும் விரோதமாகவும் வரப்பண்ணி, அவைகளைச் சங்காரத்துக்கு ஒப்புக்கொடுத்து, அவைகளைப் பாழாகவும் இகழ்ச்சிக் குறியாகிய ஈசல் போடுதலாகவும், நித்திய வனாந்தரங்களாகவும் செய்வேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 25:10. மகிழ்ச்சியின் சத்தத்தையும், சந்தோஷத்தின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும், ஏந்திரத்தின் சத்தத்தையும் விளக்கின் வெளிச்சத்தையும் அவர்களிலிருந்து நீங்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 25:11. இந்தத் தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் எடுத்துச் சொன்னார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய சொல்லைக் கேளாமல் போனார்கள். பாவிகள் தங்கள் பாவங்களிலிருந்து விடுதலை பெற்று வெளியேறவேண்டும். இல்லையென்றால், அவர்கள் தங்கள் பாவங்களில் அழிந்துபோவார்கள்.

கர்த்தர் யூதாமனுஷருடைய பாவங்களை அவர்களுக்கு விவரித்துச் சொல்லுகிறார். அவர்களோ கர்த்தருடைய சொல்லைக் கேளாமல் போகிறார்கள். ஆகையினால் அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்களுக்கு அழிவு வருமென்று கர்த்தர் எச்சரிக்கிறார்.

பாபிலோன் தேசத்து ராஜா யூதாதேசத்தை அழித்துப்போடுவான். கர்த்தர் யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் தம்முடைய தீர்க்கதரிசிகளாகிய ஊழியக்காரரை அனுப்பினார். அவர்கள் கர்த்தருடைய செய்தியை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. ஆகையினால் கர்த்தர் இப்போது தம்முடைய ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவை அழைத்தனுப்புகிறார்.

யூதாதேசத்தார் கர்த்தருடைய இரக்கத்தையும் கிருபையையும் அறிவித்த ஊழியக்காரர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையினால் கர்த்தர் தம்முடைய கோபத்தை அறிவிக்கப்போகிற, தம்முடைய ஊழியக்காரர்களை இப்போது யூதாதேசத்தின்மீது அனுப்பப்போகிறார். நேபுகாத்நேச்சார் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவன். அவன் மெய்யான தேவனாகிய கர்த்தருக்கு அந்நியன். ஆனாலும் கர்த்தர் நேபுகாத்நேச்சாரை, "என் ஊழியக்காரன்" (எரே 25:9) என்று சொல்லுகிறார்.

தம்முடைய ஜனத்தைத் திருத்துவதற்கு, கர்த்தர் நேபுகாத்நேச்சாரை தம்முடைய கரத்தில் ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார். அவன் கர்த்தருடைய திட்டங்கள் நிறைவேறுவதற்கு ஒத்துழைக்கிறான். அவன் தனக்குத்தானே நன்மை செய்துகொள்வதாக நினைக்கிறான். ஆனால் அவன் உண்மையில் கர்த்தருடைய சித்தத்தையே நிறைவேற்றுகிறான்.

இந்த உலகத்தில் ஏராளமான ராஜாக்களும், பிரபுக்களும் இருக்கிறார்கள். இவர்கள் அதிகாரம் மிகுந்தவர்கள். படைபலமுள்ளவர்கள். இவர்கள் எல்லோருமே கர்த்தருடைய ஊழியக்காரர்கள். நேபுகாத்நேச்சார் தேவனுடைய கோபாக்கினையின் கருவியாக செயல்படுகிறான். கோரேசு ராஜா கர்த்தருடைய இரக்கத்தின் கருவியாக செயல்பட்டு, அவருக்கு ஊழியக்காரனாயிருந்தான். நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய கோபத்தின் கருவியாக செயல்பட்டு, அவருக்கு ஊழியக்காரனாயிருந்தான்.

கர்த்தருடைய கோபத்தினால் யூதாதேசமும், அதைச் சுற்றிலுமுள்ள அண்டை தேசங்களும் மொத்தமாய் அழிந்துபோகும். தேசங்கள் அழிந்துபோகும்போது, அந்த தேசங்களுக்கு மற்ற தேசங்கள் மத்தியிலிருந்த மதிப்பும் மரியாதையும் குறைந்துபோகும். ஒரு தேசம் அழிந்துபோவதைப் பார்க்கும்போது மற்ற தேசத்தாருக்கு மிகுந்த ஆச்சரியமாயிருக்கும்.

யூதாதேசத்திலும், அதைச் சுற்றிலுமுள்ள தேசங்களிலும் கர்த்தர் அழிவை நியமிக்கிறார். அங்கே "மகிழ்ச்சியின் சத்தத்தையும், சந்தோஷத்தின் சத்தத்தையும், மணவாளனின் சத்தத்தையும், மணவாட்டியின் சத்தத்தையும், எந்திரத்தின் சத்தத்தையும் விளக்கின் வெளிச்சத்தையும் அவர்களிலிருந்து நீங்கப்பண்ணுவேன்" (எரே 25:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அந்நிய தேசத்தார் யூதாதேசத்திலுள்ள தானியங்களையெல்லாம் கொள்ளையடித்து கொண்டுபோய்விடுகிறார்கள். இதனால் தேசத்தில் எந்திரத்தின் சத்தத்தைக் கேட்க முடியவில்லை. எந்திரம் அரைப்பது நின்றுபோயிற்று. எல்லா தொழில்களும், வியாபாரங்களும் நின்றுபோயிற்று. கடைகளிலோ அல்லது வீடுகளிலோ விளக்கை ஏற்றி வைக்கவேண்டிய அவசியமில்லாமல் போயிற்று.

யூதாதேசத்தார் பாபிலோன் தேசத்திலே சிறையிருப்புக்குட்படுத்தப்படுவார்கள். அவர்கள் அங்கே எழுபது வருஷங்கள் சிறையிருப்பிலிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"இந்தத் தேசமெல்லாம் வனாந்தரமும் பாழுமாகும்; இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பார்கள்" (எரே 25:11).

சிறையிருப்பின் காலம் எழுபது வருஷம் என்று நியமிக்கப்பட்டிருக்கிறது. யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போவார்கள் என்பது நிச்சயமாய் நடைபெறப்போகிற சம்பவம். அவர்கள் எழுபது வருஷங்கள் சிறையிருப்பிலிருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருப்பதினால், இந்த தீர்க்கதரிசனம் உறுதிபண்ணப்படுகிறது. மேலும் துக்கத்திலும் வேதனையிலும் இருக்கிற ஜனங்களுக்கு, ஒரு ஆறுதலும் உண்டாகிறது. சிறையிருப்பு காலம் நியமிக்கப்பட்டிருப்பதினால், அந்தக் காலம் நிறைவேறின பின்பு, அவர்களுக்கு விடுதலை கிடைக்கும் என்னும் நம்பிக்கை உண்டாயிற்று.

எழுபது வருஷம் நிறைவேறின பின்பு
எரே 25:12-14

எரே 25:12. எழுபது வருஷம் நிறைவேறின பின்பு, நான் பாபிலோன் ராஜாவினிடத்திலும், அந்த ஜாதியினிடத்திலும், கல்தேயருடைய தேசத்தினிடத்திலும், அவர்களுடைய அக்கிரமத்தை விசாரித்து, அதை நித்திய பாழிடமாக்கி,

எரே 25:13. நான் அந்தத் தேசத்துக்கு விரோதமாய் உரைத்த என் வார்த்தைகளையெல்லாம், எரேமியா சகல ஜாதிகளுக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னதும், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதுமான யாவையும் அதின்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 25:14. அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவர்களை அடிமை கொள்வார்கள்; நான் அவர்களுக்கு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாகவும், அவர்கள் கைகளின் செய்கைகளுக்குத்தக்கதாகவும் பதில் அளிப்பேன் என்கிறார்.

எரேமியா தீர்க்கதரிசி, பாபிலோன் தேசமும் அழிந்துபோகும் என்று தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். யூதாதேசத்தாரை அழித்தவர்கள், அழிந்துபோவார்கள். யூதாதேசத்தார் பாபிலோன் தேசத்திலே எழுபது வருஷம் சிறையிருப்பிலிருந்த பின்பு, பாபிலோன் தேசம் அழிந்துபோகும். இந்த எழுபது வருஷத்தை, எந்த வருஷத்திலிருந்து ஆரம்பித்து கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நிச்சயமாய்த் தெரியவில்லை.

நேபுகாத்நேச்சார் ராஜாவின் ஆட்சிக்காலத்தினுடைய முதலாவது வருஷத்திலிருந்து இந்த எழுபது வருஷத்தை கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலரோ யோயாக்கீம் ராஜா சிறைப்பட்டுப்போன நான்காம் வருஷத்திலிருந்து கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். நேபுகாத்நேச்சார் ஆட்சிப் பொறுப்பேற்று எட்டு வருஷங்களுக்கு பின்பு யோயாக்கீன் சிறையிருப்புக்குட்படுத்தப்பட்டான். இந்த எழுபது வருஷத்தை யோயாக்கீனின் காலத்திலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் சிலர் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் யூதாதேசத்திற்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்தும் காலத்தை நியமித்திருக்கிறார். அந்தக் காலம் நிறைவேறும்போது, கர்த்தர் நேபுகாத்நேச்சாரின் அக்கிரமத்தை விசாரிப்பார். அவன் செய்த எல்லா தீங்குகளையும், கொடுமைகளையும் கர்த்தர் விசாரித்து அவனுக்கு தண்டனை கொடுப்பார். முடிவில் பாபிலோன் தேசம் நித்திய பாழிடமாகும்.

"எழுபது வருஷம் நிறைவேறின பின்பு, நான் பாபிலோன் ராஜாவினிடத்திலும், அந்த ஜாதியினிடத்திலும், கல்தேயருடைய தேசத்தினிடத்திலும், அவர்களுடைய அக்கிரமத்தை விசாரித்து, அதை நித்திய பாழிடமாக்குவேன்" (எரே 25:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் பாபிலோன் தேசத்துக்கு விரோதமாக மேதிய-பெர்சிய தேசத்தாரை எழுப்புவார். அவர்கள் கர்த்தருடைய திட்டத்தின்படி பாபிலோன் தேசத்தை அழித்துப்போடுவார்கள். கர்த்தர் பாபிலோன் தேசத்தாருடைய அக்கிரமத்தை விசாரித்து, அவர்களுடைய தேசத்தை நித்திய பாழிடமாக்கிப்போடுவார். பாபிலோன் தேசத்திற்கு கர்த்தரால் நியமிக்கப்பட்ட அழிவு, மேதிய-பெர்சிய தேசத்தார் மூலமாய் வரும்.

"நான் அந்தத் தேசத்துக்கு விரோதமாய் உரைத்த என் வார்த்தைகளையெல்லாம், எரேமியா சகல ஜாதிகளுக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னதும், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதுமான யாவையும் அதின்மேல் வரப்பண்ணுவேன்" (எரே 25:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்தார் கர்த்தருடைய பிரமாணங்களையெல்லாம் மீறினார்கள். அவர்கள் கர்த்தருடைய சித்தத்தையும் நோக்கத்தையும் நிறைவேற்றினாலும், அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் ஜீவித்தார்கள். தேசத்தில் ஒழுக்கமில்லாமல் போயிற்று.

"அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவர்களை அடிமைகொள்வார்கள்; நான் அவர்களுக்கு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாகவும், அவர்கள் கைகளின் செய்கைகளுக்குதக்கதாகவும் பதில் அளிப்பேன்" (எரே 25:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அநேகம் ஜாதிகளும், பெரிய ராஜாக்களும் கோரேசு ராஜாவோடு சேர்ந்துகொள்வார்கள். பெர்சியா தேசம் பூமியில் எல்லா பாகங்களுக்கும் விஸ்தாரமாகும். மேதிய-பெர்சிய தேசத்து ராஜாக்கள், மற்ற தேசங்களையும் ராஜாக்களையும், தங்கள் பாதபடிகளாக்கிப் போடுவார்கள். மேதிய-பெர்சிய சாம்ராஜ்யம் உலகின் பல பகுதிகளுக்கும் பரவியிருக்கும்.

உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரம்
எரே 25:15-29

எரே 25:15. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் என்னை நோக்கி: நான் உன்னை அனுப்புகிற ஜாதிகள் குடித்து, நான் தங்களுக்குள் அனுப்பும் பட்டயத்தால் அவர்கள் தள்ளாடி, புத்திகெட்டுப் போகும்படிக்கு,

எரே 25:16. இந்த உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரத்தை நீ என் கையிலிருந்து வாங்கி, அவர்கள் எல்லாருக்கும் அதிலே குடிக்கக்கொடு என்றார்.

எரே 25:17. அப்பொழுது நான் அந்தப் பார்த்திரத்தைக் கர்த்தருடைய கையிலிருந்து வாங்கி, கர்த்தர் என்னை அனுப்பின எல்லா ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தேன்.

எரே 25:18. எருசலேமுக்கும் யூதாவின் பட்டணங்களுக்கும், அதின் ராஜாக்களுக்கும், அதின் பிரபுக்களுக்கும், அவர்களை இந்நாளிலிருக்கிறபடி வனாந்தரமும் பாழும் இகழ்ச்சிக்குறியாகிய ஈசல்போடுதலும் சாபமுமாக்கிப்போடும்படி குடிக்கக்கொடுத்தேன்.

எரே 25:19. எகிப்தின் ராஜாவாகிய பார்வோனுக்கும், அவன் ஊழியக்காரருக்கும், அவன் பிரபுக்களுக்கும், அவனுடைய எல்லா ஜனத்துக்கும்,

எரே 25:20. கலந்து குடியிருக்கிற அனைவருக்கும், ஊத்ஸ் தேசத்தினுடைய எல்லா ராஜாக்களுக்கும், பெலிஸ்தருடைய தேசத்தில் இருக்கிற எல்லா ராஜாக்களுக்கும், அஸ்கலோனுக்கும், காசாவுக்கும் எக்ரோனுக்கும், அஸ்தோத்தில் மீதியானவர்களுக்கும்,

எரே 25:21. ஏதோமுக்கும், மோவாபுக்கும், அம்மோன் புத்திரருக்கும்,

எரே 25:22. தீருவினுடைய எல்லா ராஜாக்களுக்கும், சீதோனுடைய எல்லா ராஜாக்களுக்கும், சமுத்திரத்துக்கு அக்கரையான தீவுகளின் ராஜாக்களுக்கும்,

எரே 25:23. தேதானுக்கும், தேமாவுக்கும், பூசுக்கும், கடையாந்தரங்களிலுள்ள அனைவருக்கும்,

எரே 25:24. அரபிதேசத்து எல்லா ராஜாக்களுக்கும், வனாந்தரத்தில் கலந்து குடியிருக்கிறவர்களுடைய எல்லா ராஜாக்களுக்கும்,

எரே 25:25. சிம்ரியினுடைய எல்லா ராஜாக்களுக்கும், ஏலாமினுடைய எல்லா ராஜாக்களுக்கும், மேதியாவினுடைய எல்லா ராஜாக்களுக்கும்,

எரே 25:26. வடக்கேயிருக்கிற எல்லா ராஜாக்களுக்கும், சமீபமானவர்களும் தூரமானவர்களுமாகிய அவரவர்களுக்கும், பூமியின்மீதிலுள்ள சகல தேசத்து ராஜ்யங்களுக்கும் குடிக்கக்கொடுத்தேன்; சேசாக்கு என்கிற ராஜாவும் அவர்களுக்குப் பிற்பாடு குடிப்பான் என்றார்.

எரே 25:27. நீங்கள் குடித்து, வெறித்து, வாந்திபண்ணி, நான் உங்களுக்குள் அனுப்பும் பட்டயத்தாலே எழுந்திராதபடிக்கு விழுங்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று நீ அவர்களுக்குச் சொல்லு.

எரே 25:28. அவர்கள் குடிக்கிறதற்கு அந்தப் பாத்திரத்தை உன் கையில் வாங்கமாட்டோம் என்று சொல்வார்களானால், நீ அவர்களை நோக்கி: நீங்கள் குடித்துத் தீரவேண்டும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லு.

எரே 25:29. இதோ, தீங்கைக் கட்டளையிட நான் என் நாமம் தரிக்கப்பட்ட நகரத்திலே துவக்கும் போது, நீங்கள் தண்டனைக்குத் தப்புவீர்களோ? நீங்கள் தப்புவதில்லை; நான் பூமியின் எல்லாக் குடிகளின் மேலும் பட்டயத்தை வரவழைக்கிறேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எல்லா தேசத்திற்கும் பொதுவான அழிவு வரப்போகிறது. தேசத்திற்கு வரும் அழிவை விவரிப்பதற்கு மதுபானத்தின் பாத்திரம் ஓர் அடையாளமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பாத்திரம் எல்லா தேசத்திற்கும் சுற்றி வரும். கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியிடம் "இந்த உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரத்தை நீ என் கையிலிருந்து வாங்கி, அவர்கள் எல்லாருக்கும் அதிலே குடிக்கக்கொடு" (எரே 25:16) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய கரத்திலிருந்து பட்சிக்கும் பட்டயம் வரப்போகிறது. கர்த்தர் துன்மார்க்கரை தம்முடைய பட்டயமாகப் பயன்படுத்தப்போகிறார். "கர்த்தாவே, நீர் எழுந்திருந்து, அவனுக்கு எதிரிட்டு, அவனை மடங்கடியும்; கர்த்தாவே, என் ஆத்துமாவைத் துன்மார்க்கனுடைய கைக்கு உம்முடைய பட்டயத்தினால் தப்புவியும்" (சங் 17:13).

கர்த்தருடைய பட்டயம் உக்கிரமமாகிய மதுபானத்தின் பாத்திரமாயிருக்கும். இது தேவனுடைய நீதியான கோபத்தின் பாத்திரம். கர்த்தருடைய கோபத்தினால் நியாயத்தீர்ப்பு வருகிறது. கர்த்தருடைய கோபத்தை விவரிப்பதற்கு, "மதுபானத்தின் பாத்திரம்" ஓர் ஒப்புமையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மதுபானத்தை எல்லோருக்கும் குடிக்க கொடுக்கவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் துன்மார்க்கருக்கும், கொடிய குணமுள்ளவர்களுக்கும் மரணதண்டனை கொடுப்பார்கள். தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, அதன் வேதனையைக் குறைப்பதற்கு, அவர்களுக்கு மதுபானத்தைக் குடிக்க கொடுப்பது வழக்கம்.

துன்மார்க்கர் தேவனுடைய கோபத்தின் பாத்திரத்தில் பானம் பண்ணுகிறார்கள். "அவனுடைய அழிவை அவனுடைய கண்கள் காணும், சர்வவல்லவருடைய உக்கிரத்தைக் குடிப்பான்" (யோபு 21:20).

"அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்" (வெளி 14:10).

கர்த்தர் தம்முடைய உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரத்தை எரேமியாவிடம் கொடுக்கிறார். எரேமியா அந்தப் பாத்திரத்தை கர்த்தருடைய கையிலிருந்து வாங்கி, எல்லோருக்கும் குடிக்க கொடுக்கவேண்டும். கர்த்தர் எரேமியாவை ஜாதிகளின்மேல் நியாயாதிபதியாக ஏற்படுத்தியிருக்கிறார்.

"பார், பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் உன்னை நான் இன்றையதினம் ஜாதிகளின் மேலும் ராஜ்யங்களின்மேலும் ஏற்படுத்தினேன் என்று கர்த்தர் என்னுடனே சொன்னார்" (எரே 1:10).

எரேமியா கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை ஜாதிகளுக்கு அறிவிக்கவேண்டும். நேபுகாத்நேச்சாருடைய கையின் மூலமாய் ஜாதிகளுக்கு அழிவு வரும். எரேமியா கர்த்தருடைய கையிலிருந்து, அவருடைய உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரத்தை வாங்கிக்கொள்ளவேண்டும். அதை ஜாதிகளுக்கு குடிக்க கொடுக்கவேண்டும். அவர்கள் மதுபானத்தை குடிப்பதற்கு, அவர்களை கட்டாயம்பண்ணவேண்டும்.

கர்த்தர் எரேமியாவிடம் உக்கிரமமாகிய மதுபானத்தின் பாத்திரத்தைக் கொடுக்கிறார். எரேமியா அந்தப் பாத்திரத்தை கர்த்தருடைய கையிலிருந்து வாங்குகிறார். கர்த்தர் தன்னை அனுப்பின எல்லா ஜாதிகளுக்கும் அதைக் குடிக்க கொடுக்கிறார்.

இஸ்ரவேல் தேசத்தாரோடு தொடர்பு வைத்திருந்த எல்லா ஜாதியாருக்கும், கர்த்தருடைய உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரம் குடிக்க கொடுக்கப்படுகிறது. அவர் அந்தப் பாத்திரத்தை எல்லா ஜாதிகளுக்கும் குடிக்க கொடுக்கிறார். எல்லா ஜாதிகளுக்கும் வரும் பொதுவான அழிவில், ஒவ்வொரு தேசத்திற்கும் எப்படிப்பட்ட அழிவு வரும் என்று எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். தேசங்கள்மீது வரும் பேரழிவில், எல்லா தேசங்களுக்கும் பங்கு இருக்கிறது.

கர்த்தருடைய கோபத்தினால் பல தேசங்களுக்கு அழிவு வரும் என்று இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அழிவு முதலாவதாக எருசலேமுக்கும், யூதாவின் பட்டணங்களுக்கும் வரும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவருடைய வீட்டிலும், அவருடைய பரிசுத்த ஆலயத்திலும் முதலாவதாக துவங்குகிறது.

“நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?” (1பேது 4:17).

“முதியோரையும், வாலிபரையும், கன்னிகைகளையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும், சங்கரித்துக் கொன்று போடுங்கள்; அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள், என் பரிசுத்த ஸ்தலத்திலே துவக்குங்கள் என்று என் காதுகள் கேட்கச் சொன்னார்; அப்பொழுது அவர்கள் ஆலயத்துக்கு முன்னே இருந்த மூப்பரிடத்தில் துவக்கம் பண்ணினார்கள்” (எசே 9:6).

கர்த்தர் எரேமியாவுக்கு வெளிப்படுத்தியிருக்கிற இந்தத் தீர்க்கதரிசன செய்தி ஏற்கெனவே நிறைவேற ஆரம்பித்துவிடுகிறது. யோயாக்கீம் ராஜாவின்மீது கர்த்தருடைய கோபம் முதலாவதாக வெளிப்படுகிறது. அதன்பின்பு எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்மீது தேவனுடைய கோபம் வருகிறது. பார்வோன் முறிந்த நாணலைப்போல பலவீனமாயிருக்கிறான். யூதர்களோ பார்வோனை நம்புகிறார்கள்.

யூதாதேசத்தில் மீதமுள்ளவர்கள் எகிப்திற்கு ஓடிப்போகிறார்கள். எரேமியாவும் யூதாவின் மனுஷரோடு எகிப்து தேசத்திற்குப் போகிறார். அவர் எகிப்து தேசத்திலிருக்கும்போது, அந்த தேசத்தின் அழிவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

“அவர்களை நோக்கி: இதோ, என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவை நான் அழைத்தனுப்பி, நான் புதைப்பித்த இந்தக் கற்களின்மேல் அவனுடைய சிங்காசனத்தை வைப்பேன்; அவன் தன் ராஜகூடாரத்தை அவைகளின் மேல் விரிப்பான். அவன் வந்து, எகிப்துதேசத்தை அழிப்பான்; சாவுக்கு ஏதுவானவன் சாவுக்கும், சிறையிருப்புக்கு ஏதுவானவான் சிறையிருப்புக்கும், பட்டயத்துக்கு ஏதுவானவன் பட்டயத்துக்கும் உள்ளாவான்” (எரே 43:10,11).

கானான் தேசத்தைச் சுற்றிலும் பல ராஜ்யங்கள் அதன் எல்லைப் பகுதியிலுள்ளன. கர்த்தர் எருசலேமுக்கு தம்முடைய உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரத்தை குடிக்க கொடுக்கிறார். எருசலேமுக்கு அருகாமையிலுள்ள அண்டை தேசத்தார் எல்லோரும் கர்த்தருடைய கோபத்தின் பாத்திரத்தில் பானம் பண்ணவேண்டும்.

கர்த்தருடைய உக்கிரமமாகிய மதுபானத்தின் பாத்திரம் யாருக்கெல்லாம் குடிக்க கொடுக்கப்படவேண்டும் என்று இந்த வசனப்பகுதியில் ஒரு விரிவான அட்டவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களின் விவரம் வருமாறு : 1. கலந்து குடியிருக்கிற ஜனங்கள். இவர்கள் அரபியரைக் குறிக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். 2. ஊத்ஸ் தேசத்தினுடைய ராஜாக்கள். 3. பெலிஸ்தருடைய தேசத்திலிருக்கிற ராஜாக்கள். 4. அத்தோத்தில் மீதியானவர்கள். 5. பெலிஸ்தருடைய தேசத்திலிருக்கிற ராஜாக்கள்.

6. அஸ்கலோனுக்கும், காசாவுக்கும் எக்ரோனுக்கும், அஸ்தோத்தில் மீதியானவர்களுக்கும், ஏதோமுக்கும், மோவாபுக்கும், அம்மோன் புத்திரருக்கும், தீருவினுடைய எல்லா ராஜாக்களுக்கும், சீதோனுடைய எல்லா ராஜாக்களுக்கும், சமுத்திரத்துக்கு அக்கரையான தீவுகளின் ராஜாக்கள்.

7. தேதானுக்கும், தேமாவுக்கும், பூசுக்கும், கடையாந்தரங்களிலுள்ள அனைவருக்கும், 8. அரபிதேசத்து எல்லா ராஜாக்களுக்கும், வனாந்தரத்தில் கலந்து குடியிருக்கிறவர்களுடைய எல்லா ராஜாக்கள். 9. சிம்ரியினுடைய எல்லா ராஜாக்களுக்கும், ஏலாமினுடைய எல்லா ராஜாக்களுக்கும், மேதியாவினுடைய எல்லா ராஜாக்கள்.

10. வடக்கேயிருக்கிற எல்லா ராஜாக்களுக்கும், சமீபமானவர்களும் தூரமானவர்களுமாகிய அவரவர்களுக்கும், பூமியின்மீதிலுள்ள சகல தேசத்து ராஜ்யங்கள். 11. சேசாக்கு என்கிற ராஜா.

இந்த வாக்கியத்தில் தேதானைப்பற்றியும், மேலும் பலதேசங்களைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தேசங்களெல்லாம் இதுமேயாவிலும், அரபிய பாலைவனங்களிலுமுள்ளது. ஏலாமிலுள்ளவர்கள் பெர்சியர்கள். இவர்களோடு மேதியரும் சேர்ந்து கொண்டார்கள்.

வடக்கேயிருக்கிற ராஜாக்கள் பாபிலோன் தேசத்திற்கு அருகாமையிலிருக்கிறார்கள். நேபுகாத்நேச்சார் ராஜா இவர்களை யுத்தத்தில் ஜெபிப்பான். பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களும் நேபுகாத்நேச்சாருடைய மனவிருப்பத்தின் பிரகாரம், அவனுக்கு காணிக்கையாகக் கொடுக்கப்படும். அவன் எல்லா தேசங்கள்மீதும் யுத்தம்பண்ணி அவற்றை ஜெயிப்பான். அலெக்சாண்டர் உலகத்தை ஜெயித்தவன் என்று ஒரு பழமொழி சொல்லுகிறார்கள். ரோமப்பேரரசே இங்கு உலகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறந்தது" (லூக் 2:1).

நேபுகாத்நேச்சார் எல்லா தேசங்களோடும் யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கிறான். அவனுடைய பாபிலோன் பேரரசு உலகம் முழுவதும் பரவுகிறது. தேசங்கள் மத்தியிலே போர்செய்கிற இச்சைகள் உள்ளது.

"உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினாலல்லவா?" (யாக் 4:1).

"சேசாக்கு பிடியுண்டு, பூமிமுழுதும் புகழும் புகழ்ச்சி அகப்பட்டது எப்படி? ஜாதிகளுக்குள்ளே பாபிலோன் பிரமிப்பானது எப்படி?" (எரே 51:41).

பாபிலோன் தேசத்தின் மூலமாய் ஏராளமான தேசங்களுக்கு அழிவு உண்டாயிற்று. முடிவில் பாபிலோன் தேசமும் அழிந்துபோகும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"எழுபது வருஷம் நிறைவேறின பின்பு, நான் பாபிலோன் ராஜாவினிடத்திலும், அந்த ஜாதியினிடத்திலும், கல்தேயருடைய தேசத்தினிடத்திலும், அவர்களுடைய அக்கிரமத்தை விசாரித்து, அதை நித்திய பாழிடமாக்கி, நான் அந்தத் தேசத்துக்கு விரோதமாய் உரைத்த என் வார்த்தைகளையெல்லாம், எரேமியா சகல ஜாதிகளுக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னதும், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதுமான யாவையும் அதின்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 25:12,13).

யூதா தேசத்தைச் சுற்றிலுமுள்ள எல்லா ராஜ்யங்களுக்கும் அழிவு வரும். "இந்த உக்கிரமாகிய மதுபானத்தின் பாத்திரத்தை, நீ என் கையிலிருந்து வாங்கி, அவர்கள் எல்லோருக்கும் அதிலே குடிக்க கொடு" (எரே 25:14) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார். அவர்கள் மதுபானத்தை அதிகமாய்க் குடித்ததினால், வெறித்து, வாந்திபண்ணி, எழுந்திருக்க முடியாதபடி கீழே விழுந்துகிடப்பார்கள். அதிகமாக குடித்ததின் விளைவினால் அவர்களுக்கு அழிவு வருகிறது.

"நீங்கள் குடித்து, வெறித்து, வாந்திபண்ணி, நான் உங்களுக்குள் அனுப்பும் பட்டயத்தாலே எழுந்திராதபடிக்கு விழுங்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று நீ அவர்களுக்குச் சொல்லு" (எரே 25:27) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார். அதிகமாக குடித்து வெறித்திருக்கிறவர்கள் கீழே விழுந்துவிடுவார்கள். அவர்களால் மறுபடியும் எழுந்திருக்க முடியாது. குடிப்பது ஒரு பாவம். தங்கள் பாவத்தின் தண்டனையை குடிகாரர்கள் கீழே விழுந்து அனுபவிக்கிறார்கள்.

கர்த்தர் ஒரு தேசத்திற்கு விரோதமாக தம்முடைய பட்டயத்தை அனுப்பும்போது, அது அந்த தேசம் முழுவதையும் அழித்துப்போடும். அந்த தேசம் குடித்து வெறித்திருக்கிற குடிகாரனைப்போல நிலையில்லாமல் தடுமாறும். தேசத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். தேசத்திலுள்ள ஆலோசனைக்காரர்களெல்லாம் குடிகாரர்களைப்போல நிதானமில்லாமலும், புத்தியில்லாமலும் உளருவார்கள். தாங்கள் என்ன பேசுகிறோம் என்பது அவர்களுக்கே தெரியாது.

தேசத்தின்மீது நாசத்திற்குமேல் நாசம் வரும்போது, மனுஷருடைய இருதயம் கரைந்துபோகும். அவர்களுடைய பெலம் குன்றிப்போகும். தங்களுடைய சத்துருக்களை அவர்களால் எதிர்த்து நிற்கமுடியாது. குடிகாரர்கள் எழுந்திருக்க முடியாதபடிக்கு கீழே விழுந்துவிடுவதுபோல, கர்த்தரால் தண்டிக்கப்படும் ஜனங்களும், அவர்களுடைய சத்துருக்களுக்கு முன்பாக விழுந்துகிடப்பார்கள். அவர்களுடைய சத்துருக்களோடு அவர்களால் யுத்தம்பண்ணவும் முடியாது. தங்களுக்குத் தாங்களே உதவிசெய்து அவர்களால் எழுந்து நிற்கவும் முடியாது.

எரேமியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அந்தப் பாத்திரத்தை, கர்த்தருடைய கையிலிருந்து வாங்கி, கர்த்தர் தன்னை அனுப்பின எல்லா ஜாதிகளுக்கும் குடிக்க கொடுக்கிறார் (எரே 25:17). ஆனாலும் ஒரு சில ஜாதிகள் அந்தப் பாத்திரத்தை எரேமியாவின் கையிலிருந்து வாங்க மறுக்கிறார்கள். அவர்களுக்கு என்ன பிரதியுத்தரம் சொல்லவேண்டுமென்று கர்த்தர் எரேமியாவுக்கு கட்டளை கொடுக்கிறார்.

"அவர்கள் குடிக்கிறதற்கு அந்தப் பாத்திரத்தை உன் கையில் வாங்கமாட்டோம் என்று சொல்வார்களானால், நீ அவர்களை நோக்கி: நீங்கள் குடித்துத் தீரவேண்டும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லு" (எரே 25:28) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் எரேமியாவின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள். அவர்களால் எரேமியாவுக்கு முக்கியத்துவம் கொடுக்க முடியவில்லை. எரேமியாவைக் கனம்பண்ண அவர்களுக்கு விருப்பமில்லை. எரேமியா சொல்லுவது அவருடைய சொந்த வார்த்தையல்ல. அது கர்த்தருடைய வார்த்தை. எரேமியா அவர்களை நோக்கி, தான் சொல்லுவது, "சேனைகளின் கர்த்தருடைய வார்த்தை" என்று சொல்லவேண்டும்.

எரேமியா அவர்களுக்கு கொடுத்த பாத்திரத்தை அவர்கள் குடிக்க மறுக்கும்போது, அவர்கள் எரேமியாவுக்கு விரோதமாய் எதிர்த்து நிற்கவில்லை. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள். கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது என்பது இயலாத காரியம். எரேமியா அவர்களைப் பார்த்து, "நீங்கள் குடித்து தீரவேண்டும்" என்று சேனைகளின் கர்த்தருடைய நாமத்தினால் கட்டளையிடவேண்டும்.

இது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் காலம். கர்த்தர் ஜாதிகள் மத்தியிலே தம்முடைய நீதியை விசாரித்துக்கொண்டு வருகிறார். இது கர்த்தர் பழிவாங்குகிற காலம். தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவருடைய வீட்டில் துவங்கும் காலமாயிருக்கிறது. கர்த்தர் எருசலேம் நகரத்திலேயே தீங்கை கட்டளையிட்டிருக்கிறார். எருசலேமுக்கே தீங்கு வரும்போது, மற்ற நகரங்களுக்கு தீங்கு வருவது சாதாரண காரியம்.

எருசலேம் நகரத்திற்கு கர்த்தருடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறது. "இதோ, தீங்கைக் கட்டளையிட நான் என் நாமம் தரிக்கப்பட்ட நகரத்திலே துவக்கும்போது, நீங்கள் தண்டனைக்குத் தப்புவீர்களோ? நீங்கள் தப்புவதில்லை" (எரே 25:29) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் பூமியின் எல்லா குடிகளின்மேலும் தம்முடைய நீதியின் பட்டயத்தை வரவழைக்கிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு எந்த தேசத்தாரும் தப்பிக்க முடியாது.

எருசலேமின் குடிகள் கர்த்தருக்குப் பிரியமானவர்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே தங்களுடைய தேவனாக அங்கீகரித்து, அவரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, கர்த்தரை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். அந்நிய தெய்வங்களை பின்பற்றிப் போகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள்.

எருசலேமின் ஜனங்கள் புறஜாதியாரிடத்திலிருந்து விக்கிரகாராதனையை கற்றுக் கொள்கிறார்கள். விக்கிரகாராதனையை கற்றுக்கொண்டவர்களுக்கு கர்த்தருடைய தண்டனை வரும்போது, விக்கிரகாராதனையை கற்றுக்கொடுத்தவர்களுக்கு கர்த்தருடைய தண்டனை நிச்சயமாய் வரும். பாவத்தை கற்றுக்கொண்டவனையும் கர்த்தர் தண்டிக்கிறார். பாவத்தை கற்றுக்கொடுத்தவனையும் கர்த்தர் தண்டிக்கிறார்.

"நான் பூமியின் எல்லா குடிகளின் மேலும் பட்டயத்தை வரவழைக்கிறேன்" (எரே 25:29) என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இந்தக் குடிகள் எல்லோரும் எருசலேமின் அழிவுக்கு காரணமாயிருந்தவர்கள். எருசலேமின் குடிகள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்வதற்கு இவர்கள் உதவிசெய்தவர்கள். எருசலேமை பாவத்தில் வழிநடத்தின எல்லா குடிகளையும் கர்த்தர் தண்டிக்கிறார்.

கர்த்தர் பூமியை நியாயம் விசாரிக்கிறார். கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதி. பூமியிலுள்ள எல்லா தேசங்களும் கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்புக்கு எல்லா தேசத்தாரும் கீழ்ப்படியவேண்டும். தம்முடைய ஜனத்திற்கு தீங்கு செய்தவர்களை கர்த்தர் நிச்சயமாய்த் தண்டிப்பார். அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். கர்த்தர் அவர்கள்மீது தீங்கை கட்டளையிடுவார். தம்முடைய நீதியின் பிரகாரம் அவர்களை விசாரிப்பார்.

கர்த்தருடைய வார்த்தையின் பாரம், அவர்களுக்கு, கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளின் பாரமாயிருக்கும். கர்த்தருடைய ஜனத்திற்கு தீங்கு செய்த அந்நிய தேசத்தாருக்கு விரோதமாக ஏசாயா ஏற்கெனவே கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார்.

"ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா பாபிலோன்மேல் வரக்கண்டபாரம்" (ஏசா 13:1). "ராஜ்யங்களுக்குள் அலங்காரமும், கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல கவிழ்க்கப்படும்" (ஏசா 13:19).

ஏசாயா சொன்ன தீர்க்கதரிசனங்களெல்லாம் இப்போது நிறைவேறும் காலமாயிருக்கிறது. நேபுகாத்நேச்சார் தன்னுடைய சுயபலத்திலும், சுயபராக்கிரமத்திலும் மிகவும் பெருமைப்பட்டான். அவனுடைய ஆணவத்தினால், அவனால் நன்மை தீமை இன்னதென்பதை வேறுபிரித்து காணமுடியவில்லை. அவன் விரும்பியது எல்லாமே அவனுக்கு நன்மையாய்த் தெரிந்தது. அவனுடைய காலத்தில் நேபுகாத்நேச்சார் மிகப்பெரிய வீரனாக விளங்கினான். அவன் உலகத்தை தலைகீழாக புரட்டிப்போட்டான். தன்னையே தெய்வம் என்று சொல்லி தனக்கு சிலைகளை பண்ணுவித்தான். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவன்மீது வந்தது. அவன் ஒன்றுமில்லாமல் போனான்.

நேபுகாத்நேச்சாரைப் போலவே அலெச்சாண்டரும் தன்னை பெரிய வீரனாக காண்பித்துக்கொண்டான். மற்ற தேசத்தாரோ அலெக்சாண்டரை மகாபெரிய கொள்ளைக்காரன் என்று சொன்னார்கள். அவன் தன்னைத்தான் பெருமையாக நினைத்தாலும், மனுஷர் மத்தியிலே அவனுக்கு மதிப்பும் மரியாதையும் கிடைக்கவில்லை. கர்த்தரால் வரும் ஆசீர்வாதம் மாத்திரமே தங்கும். நம்முடைய சுயமுயற்சியினாலும், சுயபிரயாசத்தினாலும் நாம் சம்பாதிக்கிற மகிமையும் மேன்மையும் நிலைத்திருக்காது.

கர்த்தருடைய கோபத்தின் எரிச்சல்
எரே 25:30-38

எரே 25:30. ஆதலால் நீ அவர்களுக்கு விரோதமாக இந்த வார்த்தைகளையெல்லாம் தீர்க்கதரிசனமாக உரைத்து, அவர்களை நோக்கி: கர்த்தர் உயரத்திலிருந்து கெர்ச்சித்து, தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து தம்முடைய சத்தத்தைக் காட்டி, தம்முடைய தாபரத்துக்கு விரோதமாய்க் கெர்ச்சிக்கவே கெர்ச்சித்து, ஆலையை மிதிக்கிறவர்கள் ஆர்ப்பரிப்பதுபோல் பூமியினுடைய எல்லாக் குடிகளுக்கும் விரோதமாக ஆர்ப்பரிப்பார் என்று சொல் என்றார்.

எரே 25:31. ஆரவாரம் பூமியின் கடையாந்தரமட்டும் போய் எட்டும்; ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது; மாம்சமான யாவரோடும் அவர் நியாயத்துக்குள் பிரவேசிப்பார்; துன்மார்க்கரைப் பட்டயத்துக்கு ஒப்புக்கொடுப்பார் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 25:32. இதோ, ஜாதிஜாதிக்குத் தீமை பரம்பும், பூமியின் எல்லைகளிலிருந்து மகா புசல் எழும்பும்.

எரே 25:33. அக்காலத்திலே பூமியின் ஒருமுனை துவக்கிப் பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்; அவர்கள் புலம்பப்படாமலும் சேர்க்கப்படாமலும் அடக்கம் பண்ணப்படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்.

எரே 25:34. மேய்ப்பர்களே, அலறுங்கள்; மந்தையில் பிரஸ்தாபமானவர்களே, சாம்பலில் புரண்டு கதறுங்கள்; நீங்கள் வெட்டப்படவும் சிதறடிக்கப்படவும் உங்கள் நாட்கள் நிறைவேறின; உச்சிதமான பாத்திரம்போல் விழுந்து நொறுங்குவீர்கள்.

எரே 25:35. மேய்ப்பர்கள் ஓடிப்போகிறதற்கும், மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் தப்பித்துக் கொள்ளுகிறதற்கும் இடமிராது.

எரே 25:36. தங்கள் மேய்ச்சலைக் கர்த்தர் பாழாக்கினதினிமித்தம் மேய்ப்பர்கள் கூப்பிடுகிறதும், மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் அலறுகிறதுமான சத்தமுண்டாகும்.

எரே 25:37. அவர்கள் சுகித்திருந்த தாபரங்கள் கர்த்தருடைய கோபத்தின் எரிச்சலாலே சங்காரமாயின.

எரே 25:38. அவர் பதிவிருந்து புறப்படும் சிங்கத்தைப்போலிருப்பார்; ஒடுக்குகிறவனுடைய உக்கிரத்தினாலும், அவனுடைய உக்கிரகோபத்தினாலும் அவர்கள் தேசம் பாழாயிற்றென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும், அவனுடைய சேனையும், எருசலேமையும், அதைச் சுற்றிலுமுள்ள எல்லா தேசங்களையும் அழித்துப் போடுவார்கள். அவர்களுக்கு பேரழிவும் மகா சங்காரமும் உண்டாகும். நேபுகாத்நேச்சார் தங்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணப்போகிறான் என்பதை அந்த தேசத்தார் புரிந்துகொள்வார்கள். அவர்கள் எல்லோரும் அந்நிய தேசத்தார். அவர்கள் நேபுகாத்நேச்சாரைத்தான் பார்க்கிறார்கள். அவர்கள் கர்த்தரை பார்க்கவில்லை. கர்த்தரே அவர்கள்மீது யுத்தம்பண்ணுகிறார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசிக்கு தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். நேபுகாத்நேச்சார் ராஜா அவர்கள்மீது யுத்தம்பண்ண வந்தாலும், இந்த யுத்தம் கர்த்தரால் உண்டாயிற்று என்றும், கர்த்தரே அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார் என்றும் எரேமியா அந்த தேசத்தாரிடம் சொல்லவேண்டும்.

"ஆதலால் நீ அவர்களுக்கு விரோதமாக இந்த வார்த்தைகளையெல்லாம் தீர்க்கதரிசனமாக உரைத்து, அவர்களை நோக்கி: கர்த்தர் உயரத்திலிருந்து கெர்ச்சித்து, தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து தம்முடைய சத்தத்தைக் காட்டி, தம்முடைய தாபரத்துக்கு விரோதமாய்க் கெர்ச்சிக்கவே கெர்ச்சித்து, ஆலையை மிதிக்கிறவர்கள் ஆர்ப்பரிப்பதுபோல் பூமியினுடைய எல்லாக் குடிகளுக்கும் விரோதமாக ஆர்ப்பரிப்பார் என்று சொல்" (எரே 25:30) என்று கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

கர்த்தர் உயரத்திலிருந்து கெர்ச்சிப்பார். அவர் தமது பரிசுத்த வாசஸ்தலத்திலிருந்து தம்முடைய சத்தத்தைக் காட்டுவார். கர்த்தர் பதிவிருந்து புறப்படும் சிங்கத்தைப் போலிருப்பார் (எரே 25:38). ஜாதிகளோடே கர்த்தருக்கு வழக்கு இருக்கிறது. அவர்களுடைய துன்மார்க்கத்தினிமித்தமாயும், அவர்களுடைய பாவங்களினிமித்தமாயும் கர்த்தர் அவர்களோடு வழக்காடுகிறார்.

கர்த்தர் உயரத்திலிருந்து கெர்ச்சித்து, பூமியினுடைய எல்லா குடிகளுக்கு விரோதமாக ஆர்ப்பரிப்பார். கர்த்தருடைய ஆரவாரம் பூமியின் கடையாந்தரம் மட்டும் போய் எட்டும் . கர்த்தர் மாம்சமான யாவரோடும் நியாயத்திற்குள் பிரவேசிப்பார். துன்மார்க்கரை பட்டயத்திற்கு ஒப்புக்கொடுப்பார் (எரே 25:31). அவர்கள் கர்த்தருக்கு கோபத்தை உண்டு பண்ணினார்கள். இதன் நிமித்தமாகவே அவர்களுக்கு அழிவு வருகிறது.

ஆரவாரம் பூமியின் கடையாந்தரமட்டும் போய் எட்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் அவர்கள்மீது யுத்தம்பண்ண வரப்போகிறார் என்பதற்கு ஆரவாரம் ஓர் அடையாளமாயிருக்கிறது. கர்த்தர் யுத்தம் பண்ணும்போது எக்காள சத்தமோ அல்லது யுத்த வாத்தியங்களின் சத்தமோ அடையாளமாக ஒலிக்கப்படாது. பூமியின் எல்லைகளிலிருந்து மகாபுசல் எழும்பும் (எரே 25:32). இதுவே கர்த்தருடைய யுத்தத்திற்கு அடையாளம். அப்போது ஜாதி ஜாதிக்கு தீமை பரம்பும்.

கல்தேயருடைய சேனை மகாபுசல் போல எழும்பி வருவார்கள். அவர்கள் சூறாவளி காற்றைப்போல வேகமாய் வருவார்கள். அவர்களுக்கு விரோதமாக யாராலும் எதிர்த்து நிற்கமுடியாது. அவர்களைத் தடுத்து நிறுத்தவும் முடியாது. கல்தேயர்கள் வேகமாக பிரவாகித்து வரும் வெள்ளம் போல சீறிப்பாய்ந்து வருவார்கள். அவர்கள் வருகிற வேகத்தைப் பார்த்து மேய்ப்பர்கள் அலறுவார்கள். மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் சாம்பலில் புரண்டு கதறுவார்கள். ராஜாக்களும், பிரபுக்களும், பிரதானிகளும் தங்களுக்கு வரும் ஆபத்தையும் அழிவையும் பார்த்து அலறுவார்கள், கதறுவார்கள்.

ராஜாக்களும் பிரபுக்களும் சாதாரண ஜனங்களைவிட அதிக தைரியமுள்ளவர்கள். ஆனால் கல்தேயரின் சேனைகளைப் பார்த்து, அவர்களுடைய இருதயங்களே கரைந்துபோகும். அவர்கள் கல்தேயரை பார்த்தவுடனேயே சாம்பலில் புரண்டு கதற ஆரம்பித்துவிடுவார்கள். தேசத்தில் மேய்ப்பர்களின் அலறல் சத்தம் கேட்கும். அங்கே மந்தையில் பிரஸ்தாபமானவர்களின் கதறல் சத்தமும் கேட்கும். "நீங்கள் வெட்டப்படவும் சிதறடிக்கப்படவும் உங்கள் நாட்கள் நிறைவேறின; உச்சிதமான பாத்திரம்போல் விழுந்து நொறுங்குவீர்கள்" (எரே 25:34) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய கோபத்தின் எரிச்சல் அவர்கள்மேல் வந்திருக்கிறது. இதனால் அவர்கள் சுகித்திருந்த தாபரங்கள் சங்காரமாயிற்று. கர்த்தருடைய கோபம் தேசங்கள்மேல் வரும்போது, அவர்களுக்கு மகாசங்காரம் உண்டாகும்.

மேய்ப்பர்கள் ஓடிப்போகிறதற்கும், மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் தப்பித்துக் கொள்ளுகிறதற்கும் இடமிராது. தங்கள் மேய்ச்சலைக் கர்த்தர் பாழாக்கினதினிமித்தம் மேய்ப்பர்கள் கூப்பிடுகிறதும், மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் அலறுகிறதுமான சத்தமுண்டாகும் (எரே 25:35,36).

கர்த்தர் பதிவிருந்து புறப்படும் சிங்கத்தைப்போலிருப்பார். சிங்கம் கெர்ச்சிக்கும் சத்தத்தைக் கேட்டவுடன் மேய்ப்பர்கள் அலறுவார்கள். மந்தையில் பிரஸ்தாபமாவர்கள் கதறுவார்கள். சிங்கம் மந்தைக்கு அருகாமையில் வரும்போது, மேய்ப்பர்கள் ஓடிப்போகிறதற்குகூட இடமிராது. மந்தையில் பிரஸ்தாபமானவர்கள் தப்பித்துக் கொள்கிறதற்கும் இடமிராது. அவர்களால் தங்களையும் பாதுகாத்துக்கொள்ள முடியாது. தங்களுடைய பொறுப்பிலுள்ள ஆடுகளையும் பாதுகாத்துகொள்ள முடியாது.

நம்முடைய பக்கத்துவீடு தீப்பற்றி எரியும்போது, நம்முடைய வீட்டிற்கும் தீ பரவி வந்துவிடாதவாறு, நம்முடைய வீட்டை பாதுகாப்பது மிகவும் அவசியம். கர்த்தர் ஒரு தேசத்தின்மீது யுத்தம்பண்ணும்போது, மற்ற தேசத்தார் கர்த்தரோடு யுத்தம் பண்ணாமல் அவரோடு சமாதானம் பண்ணுவது மிகவும் அவசியமாயிருக்கிறது. கர்த்தருடைய கெர்ச்சிக்கும் சத்தத்தைக் கேட்டு ஜாதிகள் நடுங்கவேண்டும். கர்த்தருடைய பாதத்தில் விழுந்து தங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்கவேண்டும். கர்த்தரோடு சமாதானமாய் ஜீவிப்பதே நமக்கு மெய்யான ஆசீர்வாதம். கர்த்தரோடு யுத்தம்பண்ணி ஜெயிப்பது என்பது இயலாத காரியம்.

கல்தேயர்கள் யூதாதேசத்தின்மீதும், அவர்களுக்கு அருகாமையிலுள்ள மற்ற தேசங்கள்மீதும் யுத்தம்பண்ணினார்கள். கல்தேயர்கள் அந்த தேசத்தார்மீது இரக்கம் காண்பிக்காமல், அவர்களை தங்களுடைய பட்டயங்களினால் கொன்றுபோட்டார்கள்.

"அக்காலத்திலே பூமியின் ஒருமுனை துவக்கிப் பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்; அவர்கள் புலம்பப்படாமலும் சேர்க்கப்படாமலும் அடக்கம்பண்ணப்படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்" (எரே 25:33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மரித்துப்போனவர்களை அடக்கம் பண்ணுவதற்கு அவர்களுடைய சிநேகிதர்கள் யாரும் உயிரோடிருக்கமாட்டார்கள். அவர்களுடைய சத்துருக்களும் அவர்கள்மீது இரக்கம் காண்பித்து, அவர்களை அடக்கம் பண்ணமாட்டார்கள். ஒடுக்குகிறவனுடைய உக்கிரத்தினாலும், அவனுடைய உக்கிரகோபத்தினாலும் அவர்கள் தேசம் பாழாயிற்று (எரே 25:38).

கர்த்தருடைய கோபத்தின் எரிச்சல் தேசத்தின்மீது வரும்போது, அந்த தேசத்தில் மகாசங்காரமுண்டாகும். ஏராளமானோர் பட்டயத்தால் செத்துப்போவார்கள். அவர்கள் உச்சிதமான பாத்திரம் போல விழுந்து நொறுங்குவார்கள் (எரே 25:34). செத்துப்போனவர்களில் சாதாரண ஜனங்களும் இருப்பார்கள். மிகவும் முக்கியமான பிரதானிகளும் இருப்பார்கள். அவர்கள் எவ்வளவு பிரஸ்தாபமானவர்களாயிருந்தாலும், கர்த்தருடைய கோபத்திற்கு அவர்களால் தப்பிக்க முடியாது. அவர்கள் எல்லோருமே கர்த்தருடைய பட்டயத்தினால் கொலையுண்டவர்களாய்க் கிடப்பார்கள். இப்போது அவர்கள் மந்தையின் பிரஸ்தாபமானவர்களாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களை தம்முடைய பட்டயத்தினால் கொன்றுபோடும்போது, அவர்களுடைய பிணங்கள் அடக்கம்பண்ணப்படாமல் பூமியின்மேல் எருவாய்க் கிடக்கும்.

கர்த்தருடைய கோபத்தின் எரிச்சல் அவர்கள்மேல் வருவதற்கு முன்பு, அவர்களுடைய வாசஸ்தலங்கள் சமாதானத்தினால் நிரம்பியிருக்கும். ஆனாலும் கர்த்தருடைய கோபத்தின் எரிச்சலாலே, அவர்கள் சுகித்திருந்த தாபரங்கள் சங்காரமாகும் (எரே 25:37). அமைதியாக வாசம் பண்ணுகிறவர்கள், பிறருக்கு தீங்கு செய்யாதவர்கள், எல்லோரோடும் சமாதானமாய் வாழ்கிறவர்கள், ஒருவருக்கும் கோபத்தை உண்டுபண்ணாதவர்கள் ஆகிய எல்லோருமே சங்காரமாவார்கள். அவர்கள்மீது அழிவு வரும்போது, அவர்கள் ஓடிப்போகிறதற்கும், தப்பித்துக்கொள்கிறதற்கும் இடமிராது. இதுவே யுத்தத்தின் பேரழிவு. இதுவே யுத்தத்தின் பின்விளைவு. கர்த்தருடைய கோபத்தின் எரிச்சல் ஜாதிகள்மேல் வரும்போது, அவர்கள் எல்லோரும் சங்காரமாவார்கள்.

26 அதிகாரம்

அப்போஸ்தலர் நடபடிகள் புஸ்தகத்தில், அப்போஸ்தலர்களுடைய பிரசங்கங்களும், அவர்கள் அனுபவித்த பாடுகளும் பின்னிபிணைந்து எழுதப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலருடைய காலத்தில், அவர்களுடைய ஊழியங்களையும், அவர்கள் அனுபவித்த உபத்திரவங்களையும் வேறுபிரிப்பது மிகவும் கடினமாகும். அதுபோலவே எரேமியா தீர்க்கதரிசியின் அனுபவமும் உள்ளது.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை ஜனங்களுக்கு உண்மையாய்ப் பிரசங்கிக்கிறார் (எரே 26:1-7). ஆசாரியரும் தீர்க்கதரிசிகளும் எரேமியாவின் ஊழியத்தினிமித்தமாய் அவரைத் துன்பப்படுத்துகிறார்கள் (எரே 26:7-11). தனக்கு உபத்திரவங்கள் வந்தாலும், தன்னைத் துன்பப்படுத்துகிறவர்களுக்கு முன்பாக, எரேமியா தன்னுடைய ஊழியத்தில் உண்மையுள்ளவராயிருக்கிறார் (எரே 26:12-15).

யூதாவின் பிரபுக்களில் சிலரும், அவர்களுடைய மூப்பர்களில் சிலரும் எரேமியாவை அற்புதமாய் பாதுகாக்கிறார்கள் (எரே 26:16-19). எரேமியாவைப்போலவே உரியா என்னும் தீர்க்கதரிசியும் கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னார். ஆனால் யோயாக்கீம் ராஜா உரியாவைக் கொன்றுபோட்டார் (எரே 26:20-23). எரேமியாவுக்கோ கர்த்தருடைய கண்களில் கிருபையும் மனுஷருடைய கண்களில் தயவும் கிடைத்திருக்கிறது (எரே 26:24).

இந்த ஆலயத்தைச் சீலோவாவைப்போலாக்குவேன் எரே 26:1-6

எரே 26:1. யோசியாவின் குமாரனும் யூதாவின் ராஜாவுமாகிய யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே கர்த்தரால் உண்டான வார்த்தை:

எரே 26:2. நீ கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரத்திலே நின்றுகொண்டு, கர்த்தருடைய ஆலயத்திலே பணியவருகிற யூதாவுடைய பட்டணங்களின் குடிகள் அனைவரோடும் சொல்லும்படி நான் உனக்குக் கற்பித்த எல்லா வார்த்தைகளையும் அவர்களுக்குச் சொல்லு; ஒரு வார்த்தையையும் குறைத்துப்போடாதே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 26:3. அவர்கள் செய்கைகளுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அவர்களுக்குச் செய்ய நினைக்கிற தீங்குக்கு நான் மனஸ்தாபப்படத்தக்கதாக ஒருவேளை அவர்கள் கேட்டு, அவரவர் தம்தம் பொல்லாத வழியைவிட்டுத் திரும்புவார்கள்.

எரே 26:4. நீ அவர்களை நோக்கி: நான் உங்களிடத்துக்கு ஏற்கனவே அனுப்பிக் கொண்டிருந்தும், நீங்கள் கேளாமற்போன என் ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை நீங்கள் கேட்கும்படிக்கும்,

எரே 26:5. நான் உங்கள் முன்வைத்த என் நியாயப்பிரமாணத்தின்படி நீங்கள் நடக்கும்படிக்கும், நீங்கள் என் சொல்லைக் கேளாமற்போனால்,

எரே 26:6. நான் இந்த ஆலயத்தைச் சீலோவாவைப்போலாக்கி, இந்த நகரத்தைப் பூமியிலுள்ள எல்லா ஜாதிகளுக்கும் முன்பாகவும் சாபமாக்கிப்போடுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் உண்மையாய்ப் பிரசங்கம் பண்ணுகிறார். இதனால் அவருடைய ஜீவனுக்கு ஆபத்து உண்டாயிற்று. மனுஷர் மத்தியிலே நல்லவர்களும் இருக்கிறார்கள். பொல்லாதவர்களும் இருக்கிறார்கள். எல்லா காலங்களிலுமே மனுஷர்கள் இப்படித்தான் இருக்கிறார்கள். நாம் அவர்களுக்கு மத்தியில் கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறோம். ஒரு சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். வேறு சிலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். ஒரு சிலர் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு ஆதரவாயிருக்கிறார்கள். வேறு சிலரோ கர்த்தருடைய ஊழியக்காரர்களை எதிர்க்கிறார்கள்.

கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று. இந்த வார்த்தை யோசியாவின் குமாரனும் யூதாவின் ராஜாவுமாகிய யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டாயிற்று (எரே 26:1). எரேமியா கர்த்தருடைய வார்த்தையை எங்கே பிரசங்கம்பண்ணவேண்டும் என்றும், கர்த்தர் அவருக்கு சொல்லுகிறார்.

"நீ கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரத்திலே நின்றுகொண்டு, கர்த்தருடைய ஆலயத்திலே பணியவருகிற யூதாவுடைய பட்டணங்களின் குடிகள் அனைவரோடும் சொல்லும்படி நான் உனக்குக் கற்பித்த எல்லா வார்த்தைகளையும் அவர்களுக்குச் சொல்லு" (எரே 26:2) என்று கர்த்தர் எரேமியாவுக்குச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஆலயத்தில் ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்கள். இவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள். இவர்கள் எல்லோரும் எரேமியாவின் ஊழியத்தை எதிர்க்கிறவர்கள். எரேமியா அவர்களுக்கு மத்தியில் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்ல வேண்டும். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தையை எரேமியா குறைத்துப்போடக் கூடாது. கூட்டவும் கூடாது. கர்த்தர் சொன்னதை அப்படியே சொல்லவேண்டும்.

எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு கர்த்தரை ஆராதிக்க ஏராளமான ஜனங்கள் வருவார்கள். அவர்கள் ஆசாரியர்களோடு சேர்ந்துகொண்டு, எரேமியாவுக்கு விரோதமாக ஆசாரியரின் கரங்களை பலப்படுத்துவார்கள். தனக்கு வரும் எதிர்ப்புக்களைப் பார்த்து எரேமியா பயந்துவிடக்கூடாது. கர்த்தர் தனக்கு கொடுத்த வார்த்தையை பிரசங்கம் பண்ணாமல் அமைதியாயிருக்கக்கூடாது. பிரசங்கச்செய்தியைக் கேட்கிறவர்கள் நம்மீது கோபப்பட்டாலும், நாம் கர்த்தருடைய வார்த்தையை அறிவிப்பதை நிறுத்திவிடக்கூடாது.

எரேமியா தனக்கு வரும் எதிர்ப்புக்களை பார்த்து ஒருவேளை சோர்ந்துபோகலாம். கர்த்தர் அவருக்கு வார்த்தையைக் கொடுத்து, அதை அப்படியே சொல்லுமாறு உற்சாகப்படுத்துகிறார். "நீ ஒரு வார்த்தையையும் குறைத்துப்போடாதே" (எரே 26:2) என்றும் கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார்.

கர்த்தரே எரேமியாவுக்கு பிரசங்கச் செய்தியைக் கொடுக்கிறார். ஜனங்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். பாவத்தின் சம்பளம் மரணம். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இதனால் தேவனுடைய கோபம் அவர்கள்மீது வந்திருக்கிறது. தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்களுடைய வாசற்படியில் காத்திருக்கிறது.

எரேமியா கர்த்தருடைய செய்தியை ஜனங்களுக்கு சொல்லவேண்டும். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். அவர்கள் மனந்திரும்பினால், கர்த்தர் அவர்களுக்கு தீங்கு செய்யமாட்டார்.

"அவர்கள் செய்கைகளுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அவர்களுக்குச் செய்ய நினைக்கிற தீங்குக்கு நான் மனஸ்தாபப்படத்தக்கதாக ஒருவேளை அவர்கள் கேட்டு, அவரவர் தம்தம் பொல்லாத வழியைவிட்டுத் திரும்புவார்கள்" (எரே 26:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாவிகள் மனந்திரும்பவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம். யாரையும் தேவையில்லாமல் தண்டிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமல்ல. ஆனாலும் மனுஷர் பாவம் செய்யும்போது, கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களைத் தண்டிப்பதற்கு முன்பாக, அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப, கர்த்தர் அவர்களுக்கு வாய்ப்புக்களைக் கொடுக்கிறார். அவர்கள் மனந்திரும்புவார்கள் என்று கர்த்தர் தம்முடைய கிருபையினால் காத்துக்கொண்டிருக்கிறார்.

மனுஷருடைய பாவங்களை உணர்த்துவதற்காகவும், தங்களுடைய பொல்லாத செய்கைகளிலிருந்து மனந்திரும்ப அவர்களுக்கு உதவிசெய்வதற்காகவும் கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரை ஜனங்கள் மத்தியில் அனுப்புகிறார். அவர்களுடைய இரட்சிப்புக்காக கர்த்தர் பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்துகிறார். ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும்.

ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல், தங்களுடைய பாவங்களில் தொடர்ந்து நிலைத்திருக்கும் போது, கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வரும். "நீ அவர்களை நோக்கி: நான் உங்களிடத்துக்கு ஏற்கனவே அனுப்பிக் கொண்டிருந்தும், நீங்கள் கேளாமற்போன என் ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை நீங்கள் கேட்கும்படிக்கும், நான் உங்கள் முன்வைத்த என் நியாயப்பிரமாணத்தின்படி நீங்கள் நடக்கும்படிக்கும், நீங்கள் என் சொல்லைக் கேளாமற்போனால்" *(எரே 26:4,5)* என்று கர்த்தர் தம்முடைய எச்சரிப்பின் வார்த்தையைச் சொல்லுகிறார். கர்த்தருடைய சொல்லைக் கேட்டு கீழ்ப்படியவில்லையென்றால், கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு ஜனங்கள்மேல் வரும்.

"நீங்கள் என் சொல்லைக் கேளாமற்போனால், நான் இந்த ஆலயத்தைச் சீலோவாவைப்போலாக்கி, இந்த நகரத்தைப் பூமியிலுள்ள எல்லா ஜாதிகளுக்கு முன்பாகவும் சாபமாக்கிப்போடுவேன்" *(எரே 26:6)* என்று கர்த்தர் உரைக்கிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு முன்பாக, தம்முடைய நியாயப்பிரமாணத்தை வைத்திருக்கிறார். அவர்கள் அதன்படி நடக்கவேண்டும். மோசேயின் பிரமாணங்களும், கர்த்தருடைய கற்பனைகளும், கட்டளைகளும் ஜனங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது. ஜனங்கள் கர்த்தருடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்கவேண்டும். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

கர்த்தரே தம்முடைய பிரமாணத்தை யூதாவின் மனுஷருக்கு முன்பாகவும், எருசலேமின் குடிகளுக்கு முன்பாகவும் வைத்திருக்கிறார். தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய ஊழியக்காரர்கள். கர்த்தரே அவர்களை தம்முடைய ஜனங்களுக்கு முன்பாக அனுப்பியிருக்கிறார். அவர்கள் கர்த்தருடைய செய்தியை அவர்களுக்கு பிரசங்கம்பண்ணியிருக்கிறார்கள். ஆனால் அவர்களோ கர்த்தருடைய ஊழியக்காரரின் வார்த்தைகளைக் கேட்கவில்லை. ஜனங்கள் இதுவரையிலும் கர்த்தருடைய சொல்லையும் கேட்கவில்லை, அவருடைய நியாயப்பிரமாணத்தின்படி நடக்கவுமில்லை, கர்த்தருடைய ஊழியக்காரரின் வார்த்தைகளையும் கேட்கவில்லை.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தையே அவர்களுடைய ஜீவியங்களை ஆளுகை செய்யும் பிரமாணமாயிருக்க வேண்டும். அவர்கள் கர்த்தருடைய சொல்லைக் கேளாமல்போனால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வரும். கர்த்தர் எருசலேமிலுள்ள ஆலயத்தை சீலாவைப்போலாக்குவார். எருசலேம் நகரத்தை பூமியிலுள்ள எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக சாபமாக்கிப்போடுவார்.

சீலோவிலுள்ள ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவி கொடுக்கவில்லை. அவர்கள்மீது சாபமும் அழிவும் வந்தது. யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லையென்றால், எருசலேமின்மீது சாபமும் அழிவும் வரும்.

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு ஏற்கெனவே இதுபோல எச்சரித்துச் சொல்லியிருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தையைக் கேட்காதபடிக்கு, தங்களுடைய செவிகளை தொடர்ந்து அடைத்துக்கொள்கிறார்கள். தங்களுடைய இருதயங்களை தொடர்ந்து கடினப்படுத்துகிறார்கள்.

"நான் முந்தி என் நாமம் விளங்கப்பண்ணின சீலோவிலுள்ள என் ஸ்தலத்துக்கு நீங்கள் போய், இஸ்ரவேல் ஜனத்தினுடைய பொல்லாப்பினிமித்தம் நான் அதற்குச் செய்ததைப் பாருங்கள். நீங்கள் இந்தக் கிரியைகளையெல்லாம் செய்தீர்கள், நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லி வந்திருந்தும், நீங்கள் கேளாமலும், நான் உங்களைக் கூப்பிட்டும், நீங்கள் உத்தரவுகொடாமலும் போனபடியினால், என் நாமம் தரிக்கப்பட்டதும், நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறதுமான இந்த ஆலயத்துக்கும், உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்த ஸ்தலத்துக்கும், நான் சீலோவுக்குச் செய்ததுபோலச் செய்வேன்" (எரே 7:12-14).

எரேமியாவுக்கு விரோதமாய்க் கூடினார்கள்
எரே 26:7-9

எரே 26:7. எரேமியா இந்த வார்த்தைகளையெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே சொல்லும்போது, ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும், சகல ஜனங்களும் கேட்டார்கள்.

எரே 26:8. சகல ஜனங்களுக்கும் சொல்லக் கர்த்தர் தனக்குக் கற்பித்தவைகளையெல்லாம் எரேமியா சொல்லிமுடித்தபோது, ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் சகல ஜனங்களும் அவனைப் பிடித்து: நீ சாகவே சாகவேண்டும்.

எரே 26:9. இந்த ஆலயம் சீலோவைப்போலாகி, இந்த நகரம் குடியில்லாமல் பாழாய்ப்போம் என்று, நீ கர்த்தருடைய நாமத்திலே தீர்க்கதரிசனம் சொல்வானேன் என்று சொல்லி, ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய ஆலயத்திலே எரேமியாவுக்கு விரோதமாய்க் கூடினார்கள்.

கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை எரேமியா ஜனங்கள் மத்தியில் அப்படியே சொல்லுகிறார். ஜனங்களோ கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு மனந்திரும்புவதற்குப் பதிலாக, தங்களுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொன்ன எரேமியாவின்மீது கோபப்படுகிறார்கள். ஜனங்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. தங்கள் பாவங்களில் தொடர்ந்து ஜீவிக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள்.

எரேமியாவோ ஜனங்களுடைய பாவங்களை கண்டித்து உணர்த்துகிறார். ஜனங்களோ அவருடைய பிரசங்கச்செய்திக்கு செவிகொடுக்கவில்லை. எரேமியா சொன்ன செய்தி அவர்களுடைய இருதயத்தில் உணர்த்தவில்லை. அவர்களுடைய மனதில் பாவத்தைக் குறித்து குற்றவுணர்வு ஏற்படவில்லை. ஆனால் தங்களுக்கு பிரசங்கம்பண்ணின எரேமியாவின்மீது அவர்களுக்கு கோபம் வருகிறது.

எரேமியா இந்த வார்த்தைகளையெல்லாம் கர்த்தருடைய ஆலயத்திலே சொல்லும்போது, ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும், சகல ஜனங்களும் கேட்கிறார்கள் (எரே 26:7). இவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள். ஆசாரியர்கள் தேவாலயத்திலிருந்தாலும், அவர்களும் கள்ளஆசாரியர்களாகவே இருக்கிறார்கள்.

"நான் இந்த ஆலயத்தை சீலாவைப்போலாக்குவேன்" என்று கர்த்தர் சொன்னதாக எரேமியா சொல்லுகிறார். இந்த வார்த்தையைக் கேட்டு கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும், ஆசாரியர்களுக்கும் எரேமியாவின்மீது மிகுந்த கோபமுண்டாயிற்று. எரேமியாவின் வார்த்தையில் நீதியும் நியாயமும் இல்லை என்று ஜனங்கள் தீர்மானிக்கிறார்கள்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். "நான் இந்த ஆலயத்தை சீலாவைப்போலாக்குவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். இது எரேமியாவின் வார்த்தையல்ல. ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளோ உண்மையைத் திரித்து பேசுகிறார்கள். "இந்த ஆலயம் சீலாவைப்போலாகும்" *(எரே 26:9)* என்று எரேமியா சொல்லுவதாக அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

"இந்த ஆலயம் சீலோவைப்போலாகி, இந்த நகரம் குடியில்லாமல் பாழாய்ப்போம் என்று, நீ கர்த்தருடைய நாமத்திலே தீர்க்கதரிசனம் சொல்வானேன் என்று சொல்லி, ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய ஆலயத்திலே எரேமியாவுக்கு விரோதமாய்க் கூடினார்கள்" *(எரே 26:9)*.

எரேமியா கர்த்தருடைய நாமத்தினால் பேசினார். ஆனால் கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் கர்த்தரை விட்டுவிட்டு, எரேமியாவைப் பிடித்துக்கொள்கிறார்கள். "நீ சாகவே சாகவேண்டும்" என்று எரேமியாவிடம் சொல்லுகிறார்கள்.

"சகல ஜனங்களுக்கும் சொல்லக் கர்த்தர் தனக்குக் கற்பித்தவைகளையெல்லாம் எரேமியா சொல்லிமுடித்தபோது, ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் சகல ஜனங்களும் அவனைப் பிடித்து: நீ சாகவே சாகவேண்டும்" *(எரே 26:8)* என்று சொல்லுகிறார்கள்.

எரேமியா தேவனுடைய ஆலயத்திற்கு விரோதமாக தேவதூஷணம் சொல்லுகிறார் என்பது அவர்மீது சொல்லப்படும் குற்றச்சாட்டு. அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை கேளாமல் போனால், கர்த்தர் இந்த ஆலயத்தை சீலாவைப்போலாக்குவார். இது தேவனுடைய நியாயத்தீர்ப்பு. ஆசாரியர்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. ஆனாலும் எருசலேமிலுள்ள தேவாலயம் சீலாவைப்போல அழிந்துபோகக்கூடாது என்று ஜனங்கள் எதிர்பார்க்கிறார்கள். தாங்கள் பாவமும் செய்யவேண்டும், கர்த்தரும் தங்களை ஆசீர்வதிக்கவேண்டும் என்பது துன்மார்க்கரின் எதிர்பார்ப்பு.

கள்ளத்தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும், சகல ஜனங்களும் எரேமியாவின்மீது குற்றம் சொன்னது போலவே, புதிய ஏற்பாட்டுக்காலத்தில் யூதர்கள் இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாகவும், ஸ்தேவானுக்கு விரோதமாகவும் குற்றம் சொன்னார்கள்.

ஆசாரியர்கள் எரேமியாவின்மீது சொல்லுகிற குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. ஆகையினால் அவர்களுடைய நியாயத்தீர்ப்பில் நீதியுமில்லை. அவர்கள் எரேமியாவைக் குறித்து "நீ சாகவே சாகவேண்டும்" என்று சொல்லுகிறார்கள். ஆசாரியர்கள் தேவாலயத்தில் ஊழியம் செய்கிறவர்கள். அவர்கள் வழக்குகளை நியாயமாய் விசாரித்து நீதியாய்த் தீர்ப்பு செய்யவேண்டும். ஆனால் ஆசாரியர்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும், நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

எரேமியா இங்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய நீதியான வார்த்தைகளை தம்முடைய ஜனங்களுக்கு ஏற்கெனவே வெளிப்படுத்தியிருக்கிறார். எருசலேமிலுள்ள தேவாலயத்தின்மீது வரப்போகும் நியாயத்தீர்ப்பையும் கர்த்தர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

"நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்னைவிட்டுப் பின்வாங்கி, நான் உங்களுக்கு முன்வைத்த என் கற்பனைகளையும் என் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போய் வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்து கொள்வீர்களாகில், நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி, என் நாமம் விளங்க நான் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தை என் சமுகத்தைவிட்டுத் தள்ளுவேன்; அப்பொழுது இஸ்ரவேல் சகல ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் வசைச் சொல்லாகவும் இருப்பார்கள். அப்பொழுது உன்னதமாயிருக்கிற இந்த ஆலயத்தைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, பகிடியாய் ஈசலிட்டு: கர்த்தர் இந்த தேசத்துக்கும் இந்த ஆலயத்துக்கும் இப்படிச் செய்தது என்ன? என்று கேட்பார்கள்" (1இராஜா 9:6-8).

கர்த்தர் ஏற்கெனவே சொன்ன வார்த்தையைத்தான் எரேமியா இங்கு சொல்லுகிறார். தேவாலயத்திலுள்ள ஆசாரியர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் கர்த்தருடைய வார்த்தை தெரியும். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல், கர்த்தருடைய வார்த்தையைச் சொன்ன எரேமியாவைக் குறித்து, "நீ சாகவே சாகவேண்டும்" என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்தின் பிரகாரத்தில் எரேமியா தனிமனிதனாக நின்றுகொண்டு, கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். எரேமியாவைச் சுற்றிலும் ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும், சகல ஜனங்களுமாகிய திரளான ஜனங்கள் நின்றுகொண்டு, அவர் சொல்லுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சத்துருக்களின் எண்ணிக்கை திரளாயிருக்கிறது. ஜனங்கள் எல்லோரும் சேர்ந்து எரேமியாவை பீறிப்போடுவார்கள்.

எரேமியா தனியாகயிருந்தாலும், கர்த்தருடைய பாதுகாப்பு அவரோடு கூடயிருக்கிறது. எரேமியா கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, அவருடைய வார்த்தையை ஜனங்களுக்கு சொல்லுகிறார்.

யூதாவின் பிரபுக்கள்
எரே 26:10,11

எரே 26:10. யூதாவின் பிரபுக்கள் இந்த வர்த்தமானங்களைக் கேட்டு, ராஜாவின் வீட்டிலிருந்து கர்த்தருடைய ஆலயத்துக்குப்போய், கர்த்தருடைய புதிய வாசலில் உட்கார்ந்தார்கள்.

எரே 26:11. அப்பொழுது ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும், பிரபுக்களையும் சகல ஜனங்களையும் நோக்கி: இந்த மனுஷன் மரண ஆக்கினைக்குப் பாத்திரன்; உங்கள் செவிகளாலே நீங்கள் கேட்டபடி, இந்த நகரத்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொன்னானே என்றார்கள்.

ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் தேவாலயத்தில் ஊழியம் செய்ய வேண்டியவர்கள். ஜனங்களுடைய வழக்குகளை விசாரிக்க அவர்களுக்கு அனுமதியில்லை. யூதாவின் பிரபுக்களே வழக்குகளை விசாரிக்கவேண்டியவர்கள். கர்த்தருடைய ஆலயத்தில் எரேமியாவுக்கு விரோதமாக ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும், ஜனங்களும் கூட்டங்கூடியிருப்பதை யூதாவின் பிரபுக்கள் கேள்விப்படுகிறார்கள். அவர்கள் எல்லோரும் ராஜாவின் வீட்டிலிருக்கிறார்கள்.

யூதாவின் பிரபுக்கள் இந்த வர்த்தமானங்களைக் கேட்டு, ராஜாவின் வீட்டிலிருந்து கர்த்தருடைய ஆலயத்துக்குப்போய், கர்த்தருடைய புதிய வாசலில் உட்காருகிறார்கள் (எரே 26:10). கர்த்தருடைய ஆலயத்தில் வழக்கு விசாரணை ஆரம்பமாகிறது. ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் எரேமியாவின்மீது கோபமாயிருக்கிறார்கள்.

அப்பொழுது ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும், பிரபுக்களையும் சகல ஜனங்களையும் நோக்கி: இந்த மனுஷன் மரண ஆக்கினைக்குப் பாத்திரன்; உங்கள் செவிகளாலே நீங்கள் கேட்டபடி, இந்த நகரத்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொன்னானே என்று எரேமியாவின்மீது குற்றம் சொல்லுகிறார்கள் (எரே 26:11).

எரேமியா மரணத்திற்கு பாத்திரவானா இல்லையா என்பதே வழக்கு. ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் எரேமியாவைப் பிடித்து, அவன் சாகவே சாகவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். அவர்களுடைய தீர்மானத்திற்கு பிரபுக்களின் ஆதரவும், ஜனங்களின் ஆதரவும் வேண்டும். இந்த ஆதரவு கிடைத்தால் அவர்கள் எரேமியாவைக் கொன்றுபோடுவார்கள். "இந்த மனுஷன் மரண ஆக்கினைக்கு பாத்திரன்" என்று ஆசாரியர்கள் எரேமியாவின்மீது குற்றம் சொல்லுகிறார்கள்.

எரேமியா ஏற்கெனவே யூதாவின் ராஜகுடும்பத்தாருக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார். "கர்த்தர் சொன்னது: நீ யூதா ராஜாவின் அரமனைக்குப் போய், அங்கே சொல்லவேண்டிய வசனம் என்னவென்றால். தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிற யூதாவின் ராஜாவே,நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இந்த வாசல்களுக்குள் பிரவேசிக்கிற உம்முடைய ஜனமும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். நீங்கள் நியாயமும் நீதியும் செய்து, பறிகொடுத்தவனை ஒடுக்குகிறவனுடைய கைக்குத் தப்புவியுங்கள்; நீங்கள் பரதேசியையும் திக்கற்றவனையும் விதவையையும் ஒடுக்காமலும், கொடுமை செய்யாமலும், இவ்விடத்தில் குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தாமலும் இருங்கள் (எரே 22:1-3).

இந்த வார்த்தையின்படியே நீங்கள் மெய்யாய்ச் செய்வீர்களாகில், தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிற ராஜாக்கள் இரதங்கள் மேலும் குதிரைகள்மேலும் ஏறி, அவனும் அவன் ஊழியக்காரரும் அவன் ஜனமுமாக இந்த அரமனை வாசல்களின் வழியாய் உட்பிரவேசிப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளாமற்போனீர்களேயாகில் இந்த அரமனை பாழாய்ப்போம் என்று என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரே 22:4,5).

எரேமியா தீர்க்கதரிசி யூதா ராஜாவின் அரண்மனையில் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை சொன்னபோது, அரண்மனையில் இருந்தவர்கள் துன்மார்க்கராயிருந்தாலும், எரேமியாவின் வார்த்தைக்கு செவிகொடுத்தார்கள். அவர்கள் எரேமியாவைப் பிடித்து கொன்றுபோட வேண்டுமென்று நினைக்கவில்லை.

எரேமியா இப்போது கர்த்தருடைய ஆலயத்திற்கு விரோதமாக பேசுகிறார். ஆசாரியருக்கும், கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் விரோதமாகப் பேசுகிறார். தங்கள்மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களை ஆசாரியர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல், எரேமியாவைப் பிடித்து கொன்றுபோடவேண்டுமென்று முயற்சி பண்ணுகிறார்கள்.

"தீர்க்கதரிசிகள் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது; ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்?" (எரே 5:31).

எரேமியா மரண ஆக்கினைக்குப் பாத்திரன் என்பதில் ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் உறுதியாயிருக்கிறார்கள். தங்களுடைய தீயஎண்ணம் நிறைவேறுவதற்காக இவர்கள் ஒன்றுகூடி வந்திருக்கிறார்கள். பிரபுக்களின் ஆதரவையும், ஜனங்களின் ஆதரவையும் தங்களுக்கு சாதகமாகப் பெற்றுக்கொள்ள முயற்சிபண்ணுகிறார்கள்.

அப்பொழுது ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும், பிரபுக்களையும் சகல ஜனங்களையும் நோக்கி: இந்த மனுஷன் மரண ஆக்கினைக்குப் பாத்திரன்; உங்கள் செவிகளாலே நீங்கள் கேட்டபடி, இந்த நகரத்துக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொன்னானே என்றார்கள் (எரே 26:11).

கர்த்தர் என்னை அனுப்பினார் எரே 26:12-15

எரே 26:12. அப்பொழுது எரேமியா எல்லாப் பிரபுக்களையும், எல்லா ஜனங்களையும் நோக்கி: நீங்கள் கேட்ட எல்லா வார்த்தைகளையும் இந்த ஆலயத்துக்கும் இந்த நகரத்துக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லக் கர்த்தர் என்னை அனுப்பினார்.

எரே 26:13. இப்பொழுதும் நீங்கள் உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்தி, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேளுங்கள்; அப்பொழுது கர்த்தர் உங்களுக்கு விரோதமாய்ச் சொன்ன தீங்குக்கு மனஸ்தாபப்படுவார்.

எரே 26:14. நானோவெனில், இதோ, உங்கள் கையில் இருக்கிறேன்; உங்கள் பார்வைக்கு நன்மையும் நியாயமுமாயிருக்கிறதை எனக்குச் செய்யுங்கள்.

எரே 26:15. ஆகிலும் நீங்கள் என்னைக் கொன்றுபோட்டால், நீங்கள் குற்றமில்லாத இரத்தப்பழியை உங்கள்மேலும் இந்த நகரத்தின்மேலும் இதின் குடிகளின்மேலும் சுமத்திக் கொள்வீர்களென்று நிச்சயமாய் அறியுங்கள்; இந்த வார்த்தைகளையெல்லாம் உங்கள் செவிகளிலே சொல்லக் கர்த்தர் மெய்யாகவே என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார் என்று சொன்னான்.

எரேமியா தீர்க்கதரிசி பிரபுக்களுக்கு முன்பாகவும், ஜனங்களுக்கு முன்பாகவும் தன்னுடைய வழக்கின் நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறார். தான் சொன்ன வார்த்தையை எரேமியா மறுதலிக்கவில்லை. கர்த்தர் தனக்கு கொடுத்த வார்த்தையை எரேமியா சொன்னார். அந்த வார்த்தையில் அவர் உறுதியாய் நிலைத்திருக்கிறார். தன்னுடைய ஜீவனுக்கு மரணமோசம் வருவதாகயிருந்தாலும், எரேமியா சத்தியத்தைவிட்டு விலகிப்போகவில்லை.

எரேமியா கர்த்தருடைய ஆலயத்திற்கும், எருசலேம் நகரத்திற்கும் விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்னார். இதைச் சொல்லுவதற்காகவே கர்த்தர் எரேமியாவை அவர்கள் மத்தியிலே அனுப்பியிருக்கிறார். எரேமியா மனுஷருடைய வார்த்தையைக் கேட்டு, அந்த வார்த்தைகளை சொல்ல வரவில்லை. கர்த்தருடைய அதிகாரத்தினால் வந்திருக்கிறார்.

"அப்பொழுது எரேமியா எல்லாப் பிரபுக்களையும், எல்லா ஜனங்களையும் நோக்கி: நீங்கள் கேட்ட எல்லா வார்த்தைகளையும் இந்த ஆலயத்துக்கும் இந்த நகரத்துக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லக் கர்த்தர் என்னை அனுப்பினார்" (எரே 26:12) என்று எரேமியா சொல்லுகிறார்.

தன்னுடைய விவாதத்தின் முடிவில் "ஆகிலும் நீங்கள் என்னைக் கொன்று போட்டால், நீங்கள் குற்றமில்லாத இரத்தப்பழியை உங்கள்மேலும் இந்த நகரத்தின்மேலும் இதின் குடிகளின்மேலும் சுமத்திக்கொள்வீர்களென்று நிச்சயமாய் அறியுங்கள்; இந்த வார்த்தைகளையெல்லாம் உங்கள் செவிகளிலே சொல்லக் கர்த்தர் மெய்யாகவே என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார்" (எரே 26:15) என்று எரேமியா சொல்லுகிறார்.

"நீங்கள் கேட்ட எல்லா வார்த்தைகளையும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்ல கர்த்தர் என்னை அனுப்பினார்" (எரே 26:12) என்பதும் "இந்த வார்த்தைகளையெல்லாம் உங்கள் செவிகளிலே சொல்ல கர்த்தர் மெய்யாகவே என்னை உங்களிடத்திற்கு அனுப்பினார்" என்பதும் எரேமியாவின் விவாதம்.

நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கும்போது, நாம் மனுஷருக்கு பயப்படவேண்டிய அவசியமில்லை. பரலோகத்திலிருந்து வரும் கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியும்போது, பூமியிலிருந்து வரும் எதிர்ப்புகளுக்கு நாம் பயப்படவேண்டியதில்லை. நாம் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்யும்போது, கர்த்தர் நம்மோடு கூடயிருப்பார். கர்த்தருடைய பாதுகாப்பு நமக்குக் கிடைக்கும். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள்.

எரேமியா யூதாவின் பிரபுக்களிடத்திலும், ஜனங்களிடத்திலும் தன்னுடைய நியாயத்தை எடுத்துச் சொல்லும்போது, கர்த்தர் தனக்கு கொடுத்த ஊழியத்தை அவர்களுக்கு மறுபடியும் நினைவுபடுத்துகிறார்.

"இப்பொழுதும் நீங்கள் உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்தி, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேளுங்கள்; அப்பொழுது கர்த்தர் உங்களுக்கு விரோதமாய்ச் சொன்ன தீங்குக்கு மனஸ்தாபப்படுவார்" (எரே 26:13) என்று எரேமியா மறுபடியும் அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

எரேமியா இப்பொழுது பிரபுக்களின் கையிலிருக்கிறார். ஆசாரியரும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எரேமியாவைச் சூழ்ந்திருக்கிறார்கள். திரளான ஜனங்கள் அங்கு கூடியிருக்கிறார்கள். தன்னுடைய மாம்சபலத்தினால், எரேமியாவால் அவர்களுடைய கைகளுக்கு தப்பித்து ஓடமுடியாது. எரேமியா தன்னுடைய உண்மை நிலமையை அவர்கள் மத்தியிலே அங்கீகரிக்கிறார். "நானோவெனில், இதோ, உங்கள் கையிலிருக்கிறேன்" என்று சொல்லுகிறார்.

எரேமியாவுக்கு சத்துருக்கள் மூலமாய் ஆபத்து உண்டாயிற்று. ஆனாலும் அவர் சத்தியத்தைப் புரட்டவில்லை. கர்த்தர் தனக்குக் கொடுத்த ஊழியத்தை நிறுத்திவிடவில்லை. தன்னுடைய ஜீவனுக்கு மோசம் வந்தாலும், எரேமியா கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்கிறார். கர்த்தருடைய நாமத்தினால் தனக்கு விரோதமாக எழும்பியிருக்கும் சத்துருக்களை எச்சரிக்கிறார்.

எரேமியாவின் சத்துருக்கள் பலத்திருக்கிறார்கள். அவர்களை எதிர்த்துப் போராடும் வல்லமை எரேமியாவுக்கு இல்லை. அவர்களிடத்திலிருந்து தன்னுடைய ஜீவனை பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்னும் ஆர்வமும் எரேமியாவுக்கு இல்லை. கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு சொல்லப்பட வேண்டும். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு மனந்திரும்பவேண்டும். கர்த்தர் அவர்களை அழித்துப்போடக்கூடாது. இதுவே எரேமியாவின் விருப்பம்.

எரேமியா தன்னுடைய நிலமையை உணர்ந்து, "நானோவெனில், இதோ, உங்கள் கையில் இருக்கிறேன்; உங்கள் பார்வைக்கு நன்மையும் நியாயமுமாயிருக்கிறதை எனக்குச் செய்யுங்கள்" (எரே 26:14) என்று சொல்லுகிறார். ஆனாலும் தன்னைக் கொன்றுபோட்டால், அவர்கள்மீது இரத்தப்பழி வரும் என்றும் எச்சரிக்கிறார். "ஆகிலும் நீங்கள் என்னைக் கொன்றுபோட்டால், நீங்கள் குற்றமில்லாத இரத்தப்பழியை உங்கள்மேலும் இந்த நகரத்தின்மேலும் இதின் குடிகளின்மேலும் சுமத்திக்கொள்வீர்களென்று நிச்சயமாய் அறியுங்கள்" (எரே 26:15) என்றும் சொல்லி, எரேமியா அவர்களை எச்சரிக்கிறார்.

இந்த மனுஷன் மரண ஆக்கினைக்குப் பாத்திரனல்ல எரே 26:16

எரே 26:16. அப்பொழுது பிரபுக்களும் சகல ஜனங்களும், ஆசாரியர்களையும் தீர்க்கதரிசிகளையும் நோக்கி: இந்த மனுஷன் மரண ஆக்கினைக்குப் பாத்திரனல்ல; நம்முடைய தேவனாகிய கர்த்தரின் நாமத்திலே நம்முடனே பேசினான் என்றார்கள்.

பிரபுக்களும் சகல ஜனங்களும் எரேமியாவை குற்றவாளியென்று தீர்மானிக்கவில்லை. எரேமியா மரண ஆக்கினைக்கு பாத்திரனல்ல என்று பிரபுக்கள் தீர்மானம்பண்ணுகிறார்கள். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை எரேமியா சொன்னார். எரேமியா எருசலேமுக்கு விரோதமாகவும், தேவாலயத்திற்கு விரோதமாகவும் பேசினாலும், அவர் தன்னுடைய சொந்த வார்த்தைகளை பேசவில்லை. கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளையே அவர் பேசினார்.

ஆசாரியர்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எரேமியாவைப் பிடித்து, அவரை கொன்றுபோட வேண்டுமென்று விரும்புகிறார்கள். எரேமியாவுக்கு விரோதமாக தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென்று விவாதம் பண்ணுகிறார்கள். ஆனால் பிரபுக்களும் சகல ஜனங்களும் ஆசாரியர்களோடும் கள்ளத்தீர்க்கதரிசிகளோடும் ஒத்துப்போகவில்லை. எரேமியா தேவனாகிய கர்த்தரின் நாமத்தினாலே தங்களுடன் பேசியதாக அவர்கள் உறுதிபண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே அவர்களுக்கும் தேவனாயிருக்கிறார். கர்த்தருடைய நாமத்தினால் வார்த்தைகள் வெளிப்படும்போது, அதை ஜனங்கள் பயபக்தியோடு கேட்கவேண்டும். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிய வேண்டும்.

எரேமியா தேவனாகிய கர்த்தரின் நாமத்தினாலே தங்களோடு பேசுவதை ஜனங்கள் அங்கீகரித்தாலும், அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பவுமில்லை.

எரேமியாவை மரணத்திற்கு பாத்திரவானாக தீர்மானிக்கவுமில்லை. தாங்களும் அழிவுக்கு விலகி, தப்பித்துக் கொள்ளவில்லை. பிரபுக்களும் ஜனங்களும் எரேமியாவுக்கு தீங்கு செய்யவுமில்லை. அவர்கள் தங்களுக்கு நன்மை செய்யவுமில்லை.

எருசலேமும் தேவாலயமும் அழியக்கூடாது என்றால், எரேமியாவை கொல்லாமல் விட்டுவிட்டால் மாத்திரம் போதாது. அவர்கள் தங்கள் வழிகளையும், தங்கள் கிரியைகளையும் சீர்படுத்தவேண்டும். தங்களுடைய பொல்லாப்புகளிலிருந்து விலகி, கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கவேண்டும்.

மொரேசா ஊரானாகிய மீகா எரே 26:17-19

எரே 26:17. தேசத்திலே மூப்பரானவர்களில் சிலர் எழும்பி, சபையாகிய ஜனங்களை நோக்கி:

எரே 26:18. யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் நாட்களில் மொரேசா ஊரானாகிய மீகா தீர்க்கதரிசனஞ்சொல்லி, யூதாவின் சகல ஜனங்களையும் பார்த்து: சீயோன் வயல்வெளியாக உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம்; இந்த ஆலயத்தின் பர்வதம் காட்டிலுள்ள மேடுகளாய்ப்போம் என்று சேனைகளின் கர்த்தர் உரைத்தார் என்று சொன்னான்.

எரே 26:19. அவனை யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவும் மற்ற யூதர்களும் சேர்ந்து கொன்றுபோட்டார்களா? அவன் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரின் முகத்தை நோக்கிக் கெஞ்சினானல்லவா? அப்பொழுது கர்த்தர் அவர்களுக்கு விரோதமாகச் சொல்லியிருந்த தீங்குக்கு மனஸ்தாபப்பட்டார்; இப்போதும், நாம் நம்முடைய ஆத்துமாவுக்கு விரோதமாக மகா பொல்லாப்பை வரப்பண்ணுகிறவர்களாயிருக்கிறோமே.

தேசத்திலே மூப்பரானவர்களில் சிலர் எரேமியாவை விடுதலைபண்ணுவதற்கு பழைய சம்பவங்களை காரணமாகச் சொல்லுகிறார்கள். மூப்பர்கள் சாதாரண ஜனங்களைவிட அதிக ஞானமுள்ளவர்கள். அவர்களுக்கு தேசத்தின் யதார்த்தம் தெரிந்திருக்கிறது. வழக்குகள் நடைபெறும்போது மூப்பர்கள் எழுந்து தங்களுடைய கருத்துக்களை சொல்லுவது வழக்கம். அதுபோலவே இப்போது தேசத்திலே மூப்பரானவர்களில் சிலர் எழும்பி, சபையாகிய ஜனங்களை நோக்கி, தங்களுடைய கருத்துக்களை சொல்லுகிறார்கள்.

யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவின் நாட்களில் மொரேசா ஊரானாகிய மீகா என்பவன் தீர்க்கதரிசனம் சொல்லி வந்தான். மீகா யூதாவின் சகல ஜனங்களையும் பார்த்து: சீயோன் வயல்வெளியாக உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம்; இந்த ஆலயத்தின் பர்வதம் காட்டிலுள்ள மேடுகளாய்ப்போம் என்று சேனைகளின் கர்த்தர் உரைத்தார் என்று சொன்னான் *(எரே 26:18).*

மீகாவைப்போலவே எரேமியாவும் இப்போது எருசலேமுக்கு விரோதமாகவும் தேவாலயத்திற்கு விரோதமாகவும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். எசேக்கியாவின் நாட்களில், யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று. எரேமியா இப்போது தேவாலயத்தில் வெளிப்படையாகப் பேசுவதுபோலவே, அக்காலத்தில் மீகாவும் வெளிப்படையாகப் பேசினார். சீயோன் வயல்வெளியாக உழப்படும் என்றும், எருசலேம் மண்மேடுகளாய்ப்போகும் என்றும் சொன்னார்.

எருசலேமிலுள்ள தேவாலயம் பர்வதத்தின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. மீகா தேவாலயத்தின் பர்வதத்தைப்பற்றிச் சொன்னபோது அது காட்டிலுள்ள மேடுகளாய்ப்போகும் என்று சொன்னார். இந்த வார்த்தைகளை சேனைகளின் கர்த்தர் உரைத்தார் என்றும் மீகா சொன்னார்.

"ஆகையால் உங்கள்நிமித்தம் சீயோன் வயல்வெளியைப்போல உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளாய்ப்போம், ஆலயத்தின் பர்வதம் காட்டுமேடுகளாய்ப்போம்" *(மீகா 3:12)*.

மீகா சீயோனுக்கு விரோதமாகவும், எருசலேமுக்கு விரோதமாகவும் தீர்க்கதரிசனம் சொன்னார். அவை அழிந்துபோகும் என்று நிச்சயமாய்ச் சொன்னார். அவர் எருசலேமுக்கு விரோதமாகப் பேசினாலும், அவர் கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசியாகவே கருதப்படுகிறார். ஒருவர் தேவாலயத்திற்கு விரோதமாகப் பேசுவதினாலோ அல்லது எருசலேமுக்கு விரோதமாகப் பேசுவதினாலோ, அவர் கள்ளத்தீர்க்கதரிசியாகிவிடுவதில்லை. கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறவர்கள் எல்லோருமே நல்ல தீர்க்கதரிசிகள்தான். கர்த்தர் சொல்லாததை, கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லுகிறவர்களே கள்ளத்தீர்க்கதரிசிகள்.

மீகா சீயோனுக்கு விரோதமாகவும், எருசலேமுக்கு விரோதமாகவும், தேவாலயத்தின் பர்வதத்திற்கு விரோதமாகவும் தீர்க்கதரிசனம் சொன்னபோதிலும், யூதாவின் ராஜாவாகிய எசேக்கியாவும், மற்ற யூதர்களும் சேர்ந்து மீகாவைக் கொன்றுபோடவில்லை. எசேக்கியா கர்த்தருக்குப் பயந்து, கர்த்தரின் முகத்தை நோக்கி கெஞ்சினான். கர்த்தர் அவர்களுக்கு இரக்கம் காண்பித்தார். அப்பொழுது கர்த்தர் அவர்களுக்கு விரோதமாகச் சொல்லியிருந்த தீங்குக்கு மனஸ்தாபப்பட்டார்.

தேசத்திலே மூப்பரானவர்களில் சிலர் எழும்பி, மீகா சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளையும், எசேக்கியா ராஜா மீகாவைக் கொன்றுபோடாமல், கர்த்தருக்குப் பயந்து கர்த்தரின் முகத்தை நோக்கி கெஞ்சின சம்பவத்தையும் ஜனங்களுக்கு நினைவுபடுத்துகிறார்கள். "இப்போதும், நாம் நம்முடைய ஆத்துமாவுக்கு விரோதமாக மகா பொல்லாப்பை வரப்பண்ணுகிறவர்களாயிருக்கிறோமே" *(எரே 26:19)* என்று மூப்பரானவர்கள் தங்களுடைய ஆலோசனைகளைச் சொல்லுகிறார்கள்.

எசேக்கியா ராஜாவைப்போலவே, யூதாவின் பிரபுக்களும், எரேமியாவின் வார்த்தைகளைக் கேட்டு, அவரைக் கொன்றுபோடாமல், கர்த்தருக்குப் பயந்து, அவருடைய முகத்தை நோக்கி கெஞ்சவேண்டும். எரேமியா மூலமாக வெளிப்படுத்தப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவேண்டும். கர்த்தருடைய விருப்பத்திற்கு கீழ்ப்படியவேண்டும்.

எசேக்கியா ராஜா யூதாவின் மனுஷருக்கு ஒரு நல்ல முன்மாதிரியை நியமித்திருக்கிறார். அவர் கர்த்தருக்குப் பயந்து ஜீவித்தார். மீகாவின் வார்த்தைகளைக் கேட்டு எசேக்கியா அவருக்கு விரோதமாக தன்னுடைய கைகளை ஓங்கவில்லை. அதற்குப் பதிலாக, கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக, தன்னுடைய முழங்கால்களை முடக்கி, கர்த்தரின் முகத்தை நோக்கி கெஞ்சினார். கர்த்தர் தங்களுக்கு விரோதமாக நியமித்திருக்கிற நியாயத்தீர்ப்பை நிறுத்தி வைக்கவேண்டுமென்று, எசேக்கியா கர்த்தரிடத்தில் மன்றாடினார்.

கர்த்தரும் அவர்களுக்கு விரோதமாக சொல்லியிருந்த தீங்குக்கு மனஸ்தாபப்பட்டார். சீயோனும், எருசலேமும், ஆலயத்தின் பர்வதமும் அழிவுக்கு தப்பிற்று. கர்த்தர் யூதாவின் மனுஷரைத் தண்டிக்காமல் அவர்களுக்கு இரக்கம் காண்பித்தார்.

கர்த்தர் தம்முடைய தேவதூதனை அவர்கள் மத்தியில் அனுப்பி, அசீரியரின் சேனையை சங்காரம்பண்ணினார். அசீரியர்கள் சீயோனை வயல்வெளியாக உழப்போவதாகச் சொன்னார்கள். அவர்களால் கர்த்தருடைய சீயோனுக்கு விரோதமாய் ஒன்றும் செய்ய முடியவில்லை. அசீரியர்கள் அழிந்துபோனார்கள்.

இப்போதும் எரேமியாவுக்குத் தீங்கு செய்யாமல், எரேமியா சொன்ன கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால், கர்த்தர் எருசலேமையும், தேவாலயத்தையும் அழிக்கமாட்டார். இந்த சத்தியத்தை தேசத்திலே மூப்பரானவர்களில் சிலர், யூதாவின் பிரபுக்களுக்கும் ஜனங்களுக்கும் ஆலோசனையாக சொல்லுகிறார்கள்.

செமாயாவின் குமாரன் உரியா எரே 26:20-23

எரே 26:20. கீரியாத்யாரீம் ஊரானாகிய செமாயாவின் குமாரன் உரியா என்னும் ஒரு மனுஷனும் கர்த்தருடைய நாமத்திலே தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனாயிருந்தான்; அவன் எரேமியாவின் வார்த்தைகளுக்குச் சரியாக இந்த நகரத்துக்கும் இந்த தேசத்துக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொன்னான்.

எரே 26:21. யோயாக்கீம் ராஜாவும் அவனுடைய சகல பராக்கிரமசாலிகளும் பிரபுக்களும் அவன் வார்த்தைகளைக் கேட்டபோது, ராஜா அவனைக் கொன்றுபோடும்படி எத்தனித்தான்; அதை உரியா கேட்டு, பயந்து, ஓடிப்போய், எகிப்திலே சேர்ந்தான்.

எரே 26:22. அப்பொழுது யோயாக்கீம் ராஜா அக்போரின் குமாரனாகிய எல்நாத்தானையும் அவனோடேகூட வேறே சிலரையும் எகிப்துவரைக்கும் அனுப்பினான்.

எரே 26:23. இவர்கள் உரியாவை எகிப்திலிருந்து கொண்டுவந்து, அவனை யோயாக்கீம் ராஜாவினிடத்தில் விட்டார்கள்; அவன் பட்டயத்தாலே அவனை வெட்டி, அவன் உடலை நீச ஜனங்களின் பிரேதக்குழிகளிடத்திலே எறிந்துவிட்டான் என்றார்கள்.

எரேமியாவைப்போலவே, மற்றொரு தீர்க்கதரிசியும் கர்த்தருடைய நாமத்தினால் தீர்க்கதரிசனம் சொன்னார். அவர் கீரியாத்யாரீம் ஊரானாகிய செமாயாவின் குமாரன் உரியா என்பவன். இவன் எரேமியாவின் வார்த்தைகளுக்கு சரியாக தீர்க்கதரிசனம் சொன்னான். எருசலேம் நகரத்திற்கும், யூதாதேசத்திற்கும் விரோதமாக, கர்த்தருடைய வார்த்தை உரியாவின் மூலமாய் வெளிப்பட்டது.

மொரேசா ஊரானாகிய மீகாவைப்பற்றிய சம்பவத்தை தேசத்திலே மூப்பரானவர்களில் சிலர் சபையாகிய ஜனங்களிடத்தில் எடுத்துச் சொல்லுகிறார்கள். செமாயாவின் குமாரன் உரியாவைப்பற்றிய சம்பவத்தை, கள்ளத்தீர்க்கதரிசிகளும், கள்ள ஆசாரியர்களும் ஜனங்கள் மத்தியில் சொல்லுகிறார்கள் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். உரியாவின் சம்பவம், எரேமியாவைக் கொன்றுபோடுவதற்கு சாதகமாயிருக்கிறது. உரியாவின் தீர்க்கதரிசனமும், எரேமியாவின் தீர்க்கதரிசனமும் ஒன்றுபோலிருக்கிறது. யோயாக்கீம் ராஜா உரியாவைக் கொன்றுபோட்டான். அதுபோலவே இப்போது எரேமியாவைக் கொன்றுபோடலாம் என்று, எரேமியாவின் சத்துருக்கள் விவாதம்பண்ணுகிறார்கள்.

தேசத்திலே மூப்பரானவர்கள் எரேமியாவுக்கு சாதகமாய்ப் பேசுகிறார்கள். எரேமியாவைக் கொன்றுபோட்டால், "நாம் நம்முடைய ஆத்துமாவுக்கு விரோதமாக மகாபொல்லாப்பை வரப்பண்ணுகிறவர்களாயிருக்கிறோமே" (எரே 26:19) என்று மூப்பரானவர்கள் ஆலோசனை சொல்லுகிறார்கள். எரேமியாவைக் கொன்றுபோட்டால் யூதாமனுஷர்மீது பாவத்திற்குமேல் பாவம் வந்துசேரும்.

எரேமியா யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே கர்த்தர் சொன்ன இந்த வாக்கியத்தைச் சொல்லுகிறார். யோயாக்கீம் ஏற்கெனவே உரியா என்னும் தீர்க்கதரிசியை கொன்றுபோட்டவன். இப்போது அவன் எரேமியாவையும் கொன்றுபோட்டால், கர்த்தருடைய ஊழியக்காரர்களை அநியாயமாய்க் கொன்றுபோட்ட பாவம் அவன்மீது வந்து சுமரும். யோயாக்கீம் ராஜாவும், ஜனங்களும் தங்களுடைய ஆத்துமாவுக்கு விரோதமாக மகாபொல்லாப்பை வரப்பண்ணுகிறவர்களாயிருப்பார்கள்.

உரியா எரேமியாவின் வார்த்தைகளுக்கு சரியாக, எருசலேம் நகரத்திற்கும், யூதாதேசத்திற்கும் விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்னான். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் தங்களுடைய சாட்சிகளில் ஒற்றுமையாயிருப்பார்கள். கர்த்தர் ஒருவரே. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் அநேகர். கர்த்தர் தம்முடைய செய்தியை ஜனங்கள் மத்தியில் திரும்பத் திரும்ப சொல்லுகிறார். இதனால் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் ஒத்துப்போகிறது. இதன் பிரகாரம் எரேமியாவின் வார்த்தைகள் உரியாவின் வார்த்தைகளுக்கு சரியாக இருக்கிறது. அநேக தீர்க்கதரிசிகளின் மூலமாக சொல்லப்பட்ட வார்த்தைகளினால், கர்த்தருடைய சத்தியம் உறுதிபண்ணப்படுகிறது. அநேகருடைய சாட்சிகளினால் சத்தியம் நிரூபிக்கப்படுகிறது.

உரியா கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னபோது, யோயாக்கீம் ராஜாவுக்கு உரியாவின்மீது கோபமுண்டாயிற்று. யோயாக்கீம் ராஜாவும் அவனுடைய சகல பராக்கிரமசாலிகளும் பிரபுக்களும் அவன் வார்த்தைகளைக் கேட்டபோது, ராஜா அவனைக் கொன்றுபோடும்படி எத்தனித்தான் (எரே 26:21).

யோயாக்கீம் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தையைக் கேட்டு, அவன் கர்த்தருக்குப் பயந்து, கர்த்தருடைய முகத்தை நோக்கி கெஞ்சுவான் என்று உரியா எதிர்பார்த்தான். ஆனால் யோயாக்கீம் ராஜாவோ உரியாவைக் கொன்றுபோடும்படி எத்தனித்தான். அதை உரியா கேட்டு, பயந்து, ஓடிப்போய், எகிப்திலே சேர்ந்தான்.

உரியா தன் விசுவாசத்தில் பலவீனமாயிருந்தான். அவன் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லிவிட்டு, கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொள்ளவேண்டும். கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும். உரியாவோ கர்த்தரை நம்பாமல் எகிப்தை நம்பினான். கர்த்தர் தனக்கு கொடுத்த ஸ்தானத்தில் நிலைத்திருக்காமல் எகிப்திற்கு ஓடிப்போனான். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தரை நம்பவேண்டும். கர்த்தரை நம்பி ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருக்காக ஊழியம் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு, கர்த்தரை நம்பாமலிருப்பது முரண்பாடான காரியம்.

யூதாதேசத்தில் அநேக தீர்க்கதரிசிகள் இருந்தாலும், யோயாக்கீம் ராஜாவுக்கு தம்முடைய வார்த்தையைச் சொல்ல கர்த்தர் உரியாவையே தெரிந்தெடுத்தார். இது கர்த்தருடைய கிருபை. உரியாவிடம் கர்த்தருடைய கிருபை அதிகமாயிருந்தது. ஆனால் உரியாவிடம் தைரியமில்லை. ஊழியக்காரர்கள் உரியாவைப்போல இருக்கக்கூடாது. கர்த்தருடைய கிருபையைப் பெற்றிருக்கிறவர்கள், கர்த்தர் கொடுக்கிற தைரியத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களில் சிலர் ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். அதே வேளையில் அவர்கள் மனுஷருக்கு பயப்படுகிறவர்களாயும் இருக்கிறார்கள். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படக் கூடாது. மனுஷருக்குப் பயப்படுகிறவர்களால் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்யமுடியாது.

உரியாவுக்கு யோயாக்கீமைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கிறது. யோயாக்கீமின் துர்க்குணத்தை தெரிந்துதான், உரியா அவனுக்கு பயந்து எகிப்திற்கு ஓடிப்போய்விடுகிறான். யோயாக்கீமோ தன்னுடைய துன்மார்க்கத்தில் உறுதியாயிருக்கிறான். எருசலேமுக்கு விரோதமாகவும், யூதாதேசத்திற்கு விரோதமாகவும் தீர்க்கதரிசனம் சொன்ன உரியாவைக் கொன்றுபோடவேண்டுமென்று யோயாக்கீம் ராஜா நிச்சயமாயிருக்கிறான்.

அப்பொழுது யோயாக்கீம் ராஜா அக்போரின் குமாரனாகிய எல்நாத்தானையும் அவனோடேகூட வேறே சிலரையும் எகிப்துவரைக்கும் அனுப்பினான். இவர்கள் உரியாவை எகிப்திலிருந்து கொண்டுவந்து, அவனை யோயாக்கீம் ராஜாவினிடத்தில் விட்டார்கள்; அவன் பட்டயத்தாலே அவனை வெட்டி, அவன் உடலை நீச ஜனங்களின் பிரேதக்குழிகளிடத்திலே எறிந்து விட்டான் (எரே 26:22,23).

யோயாக்கீமின் பார்வைக்கு உரியா கர்த்தருடைய தீர்க்கதரிசியாகத் தெரியவில்லை. ஆகையினால் உரியாவை பட்டயத்தாலே வெட்டி, அவன் உடலை நீசஜனங்களின் பிரேதக்குழிகளிடத்திலே எறிந்துவிடுகிறான். இப்படி செய்வதினால், மற்ற தீர்க்கதரிசிகளும் தனக்குப் பயப்படுவார்கள் என்றும், எருசலேமுக்கு விரோதமாக ஒருவரும் தீர்க்கதரிசனம் சொல்லமாட்டார்கள் என்றும் யோயாக்கீம் நினைத்தான்.

ஆனால் யோயாக்கீமின் சிந்தனை வீணாய்ப்போயிற்று. உரியா செத்துப் போனாலும், இப்போது எரேமியா கர்த்தருடைய வார்த்தையைப் பேசுகிறார். ஒரு ஊழியக்காரரைக் கொன்று போடுவதினால், கர்த்தருடைய ஊழியத்தை நிறுத்திவிடமுடியாது. கர்த்தர் யாரை வேண்டுமானாலும் எழுப்பி, தம்முடைய ஊழியத்தை தொடர்ந்து செய்வார்.

யோவான்ஸ்நானன் ஏரோது ராஜாவுக்கு விரோதமாகப் பேசினான். ஏரோது யோவான்ஸ்நானனை சிரச்சேதம் பண்ணினான். யோவான் செத்துப் போனதினால், தன்னுடைய பிரச்சனையும் அதோடு முடிந்தது என்று ஏரோது நினைத்தான். ஆனால் இயேசுகிறிஸ்துவின் பிரசங்கச் செய்தியைக் கேட்டு, யோவான்ஸ்நானன் மறுபடியும் உயிரோடு எழும்பிவிட்டானோ என்னும் பயம் ஏரோதுக்கு உண்டாயிற்று. பாவம் செய்தவர்கள் தங்கள் பாவங்களில் பயந்தே மரித்துப்போவார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாத்திரமே நம்முடைய பாவங்களுக்கு பரிபூரணமான விடுதலையைக் கொடுக்கிறவர்.

சாப்பானுடைய குமாரனாகிய அகீக்காம்
எரே 26:24

எரே 26:24. ஆகிலும் எரேமியாவைக் கொல்ல ஜனங்களின் கையில் ஒப்புக்கொடாதபடி, சாப்பானுடைய குமாரனாகிய அகீக்காம் அவனுக்குச் சகாயமாயிருந்தான்.

யோயாக்கீம் உரியாவைக் கொன்றுபோடுகிறான். கர்த்தரோ எரேமியாவை அற்புதமாய்ப் பாதுகாக்கிறார். எரேமியா யோயாக்கீமுக்குப் பயந்து எங்கும் ஓடிப்போகவில்லை. கர்த்தர் தனக்கு கொடுத்த ஸ்தானத்தில் எரேமியா உறுதியாய் நிலைத்து நிற்கிறார். கர்த்தர் நமக்கு விசேஷித்த ஊழியத்தைக் கொடுக்கும்போது, அவர் நமக்கு விசேஷித்த பாதுகாப்பையும் கொடுப்பார்.

எரேமியாவின் ஊழியம் விசேஷமானது. அவர் எருசலேமின் தேவாலயத்தில், கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். ஆசாரியர்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எரேமியாவுக்கு விரோதமாக எழும்பினாலும், எரேமியாவுக்கு உதவிசெய்ய கர்த்தர் ஒரு சகாயனையும் அங்கே எழுப்புகிறார். கர்த்தர் சாப்பானுடைய குமாரனாகிய அகீக்காமை எரேமியாவுக்கு உதவி செய்ய எழுப்புகிறார். அவன் எரேமியாவுக்கு சகாயனாயிருக்கிறான். எரேமியாவைக் கொல்ல ஜனங்களின் கையில் ஒப்புக்கொடாதபடி அகீக்காம் எரேமியாவுக்கு உதவிசெய்கிறான்.

அகீக்காம் எரேமியாவுக்கு உதவி செய்கிறான். சத்துருக்களின் கைகளிலிருந்து அகீக்காம் எரேமியாவைப் பாதுகாக்கிறான். அகீக்காம் யோசியாவின் காலத்திலிருந்த ஒரு ஊழியக்காரன்.

"ஆசாரியனாகிய இல்க்கியாவுக்கும், சாப்பானின் குமாரனாகிய அகீக்காமுக்கும், மிகாயாவின் குமாரனாகிய அக்போருக்கும், சம்பிரதியாகிய சாப்பானுக்கும், ராஜாவின் ஊழியக்காரனாகிய அசாயாவுக்கும் ராஜா கட்டளையிட்டது" *(2இராஜா 22:12).*

அகீக்காமுக்கு யூதாவின் பிரபுக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கு இருந்தது. அகீக்காம் தன்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி எரேமியாவைக் காப்பாற்றுகிறான். கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் எரேமியாவுக்கு கிடைக்கிறது.

27 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசி யூதாமனுஷர் மத்தியிலே கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. இதனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு யூதாதேசத்தின்மீது வருகிறது. யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி வந்தால், அவர்களுடைய தேசம் அழிக்கப்படாமல் தப்பித்துக்கொள்ளும். ஆனால் யூதாவின் மனுஷரோ கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவில்லை.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாவிட்டாலும், அவருடைய தெய்வீக பராமரிப்புக்கு கீழ்ப்படியவேண்டுமென்று எரேமியா இந்தப் பகுதியில் பிரசங்கம்பண்ணுகிறார். யூதாவின் மனுஷர் பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும். அவனுக்கு கீழ்ப்படிந்து கப்பம் செலுத்தவேண்டும். இதுவே இப்போது அவர்கள் செய்யக்கூடிய புத்தியுள்ள செய்கை. நேபுகாத்நேச்சாருக்கு கீழ்ப்படிவதன் மூலமாய், யூதாவின் மனுஷர் தங்கள் தேசத்தை அக்கினிக்கும் பட்டயத்திற்கும் இரையாகாமல் தப்புவிக்கச் செய்யலாம்.

எரேமியா தீர்க்கதரிசி தேவனுடைய நாமத்தினாலே ஆலோசனைகளைச் சொல்லுகிறார். யூதாதேசத்திற்கு அருகாமையிலுள்ள தேசத்தாரும் பாபிலோன் ராஜாவை சேவிக்கவேண்டும். அவர்களுக்கும் வேறு வழி எதுவுமில்லை. நேபுகாத்நேச்சாரை சேவித்தால் அவர்களுடைய தேசம் அழிவுக்கு தப்பித்துக்கொள்ளும். அவர்கள் பாபிலோன் ராஜாவை எழுபது வருஷங்கள் சேவிக்கவேண்டியது வரும் (எரே 27:1-11).

எரேமியா தன்னுடைய ஆலோசனையை யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவுக்கு விசேஷமாய்ச் சொல்லுகிறார் (எரே 27:12-15). பாபிலோன் ராஜா எருசலேமுக்கு விரோதமாக வருவான் என்று எரேமியா ஆசாரியர்களுக்கும், ஜனங்களுக்கும் சொல்லுகிறார். அவன் மூலமாக யூதாதேசத்திற்கு பேரழிவு வரும். அழிவுக்கு தப்பிக்கவேண்டுமென்றால் அவர்கள் பாபிலோன் ராஜாவுக்கு கீழ்ப்படியவேண்டும் (எரே 27:16-22).

கயிறுகளையும் நுகங்களையும் உண்டுபண்ணு
எரே 27:1-11

எரே 27:1. யோசியாவின் குமாரனும் யூதாவின் ராஜாவுமாகிய யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வார்த்தை:

எரே 27:2. கர்த்தர் என்னை நோக்கி: நீ உனக்குக் கயிறுகளையும் நுகங்களையும் உண்டுபண்ணி, அவைகளை உன் கழுத்திலே பூட்டிக்கொண்டு,

எரே 27:3. அவைகளை எருசலேமுக்குச் சிதேக்கியா ராஜாவினிடத்தில் வரும் ஸ்தானாபதிகள் கையிலே ஏதோமின் ராஜாவுக்கும், மோவாபின் ராஜாவுக்கும், அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கும், தீருவின் ராஜாவுக்கும், சீதோனின் ராஜாவுக்கும் அனுப்பி,

எரே 27:4. அவர்கள் தங்கள் எஜமான்களுக்குச் சொல்லும்படிக் கற்பிக்கவேண்டுமென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்,

எரே 27:5. நான் பூமியையும் மனுஷனையும் பூமியின்மேலுள்ள மிருகஜீவன்களையும் என் மகா பலத்தினாலும் ஓங்கிய என் புயத்தினாலும் உண்டாக்கினேன்; எனக்கு இஷ்டமானவனுக்கு அதைக் கொடுக்கிறேன்.

எரே 27:6. இப்பொழுதும் நான் இந்த தேசங்களையெல்லாம் என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலேகொடுத்தேன்; அவனுக்கு ஊழியஞ்செய்யும்படி வெளியின் மிருகஜீவன்களையும் கொடுத்தேன்.

எரே 27:7. அவனுடைய தேசத்துக்குக் காலம் வருகிறவரையில் சகல ஜாதிகளும் அவனையும் அவனுடைய புத்திரபௌத்திரரையும் சேவிப்பார்கள்; அதின் பின்பு அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவனை அடிமைகொள்வார்கள்.

எரே 27:8. எந்த ஜாதியாவது, எந்த ராஜ்யமாவது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்பவனைச் சேவியாமலும், தன் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தாமலும்போனால், அந்த ஜாதியை நான் அவன் கையாலே நிர்மூலமாக்குமளவும், பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் தண்டிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 27:9. பாபிலோன் ராஜாவை நீங்கள் சேவிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிற உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும், உங்கள் குறிகாரருக்கும், உங்கள் சொப்பனக்காரருக்கும், உங்கள் நாட்பார்க்கிறவர்களுக்கும், உங்கள் சூனியக்காரருக்கும் நீங்கள் செவிகொடாதிருங்கள்.

எரே 27:10. நான் உங்களை உங்கள் தேசத்திலிருந்து தூரப்படுத்துகிறதற்கும், உங்களைத் துரத்திவிடுகிறதற்கும், நீங்கள் அழிகிறதற்குமாக அவர்கள் உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

எரே 27:11. ஆனாலும் எந்த ஜாதி தன் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தி, அவனைச் சேவிக்குமோ, அந்த ஜாதியைத் தன் தேசத்தைப் பயிரிட்டு, அதிலே குடியிருந்து தாபரிக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா இந்த தீர்க்கதரிசனத்தை சொன்ன காலத்தைக்குறித்து வேதபண்டிதர்கள் விரிவாய் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே கர்த்தரால் எரேமியாவுக்கு இந்தத் தீர்க்கதரிசன வார்த்தை உண்டாயிற்று. இக்காலத்தில் எரேமியா கயிறுகளையும் நுகங்களையும் உண்டுபண்ணி, அவைகளை தன் கழுத்தில் பூட்டிக்கொள்கிறார். பாபிலோன் தேசத்து ராஜாவுக்கு யூதாதேசம் அடிமைப்பட்டிருக்கும் என்பதற்கு அடையாளமாக, எரேமியா தன்னுடைய கழுத்தில் நுகங்களையும் கயிறுகளையும் பூட்டிக்கொள்கிறார். எரேமியா தனக்கு கயிறுகளையும் நுகங்களையும் உண்டுபண்ணியது, யோயாக்கீமுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே நடைபெற்ற சம்பவமாகும்.

இதன் பின்பு, சிதேக்கியா ராஜாவின் ஆட்சிக்காலத்தில், எரேமியா தான் செய்த கயிறுகளையும் நுகங்களையும் யூதாதேசத்திற்கு அருகாமையிலுள்ள தேசங்களின் ராஜாக்களுக்கு அனுப்புகிறார்.

யூதாதேசத்தை சுற்றிலுமுள்ள எல்லா தேசங்களும் பாபிலோன் தேசத்து ராஜாவுக்கு அடிமைப்பட்டுப்போகும். இதற்கு அடையாளமாக எரேமியா தனக்கு கயிறுகளையும் நுகங்களையும் உண்டுபண்ணுகிறார். உழவு உழுகிற மாடுகளின் கழுத்திலும், வண்டிகளை இழுக்கிற மாடுகளின் கழுத்திலும் நுகங்களை மாட்டுவார்கள். அந்த நுகங்கள் கீழே விழுந்துவிடாமல் மாடுகளின் கழுத்தோடு எப்போதும் சேர்ந்தே இருக்கவேண்டும் என்பதற்காக, அந்த நுகங்களை கயிற்றால் கட்டிவைப்பார்கள்.

இந்த சம்பவத்தை விளக்குவதற்கு எரேமியா தன்னுடைய கழுத்தில் நுகத்தை மாட்டிக்கொள்கிறார். அதை தன்னுடைய கழுத்தோடு கயிற்றால் கட்டி வைத்துக்கொள்கிறார். எரேமியாவைப் பார்க்கிறவர்களெல்லோரும், அவருடைய கழுத்தில் சுமத்தப்பட்டிருக்கிற நுகத்திற்கு அடையாளம் என்ன என்று விசாரிக்கிறார்கள்.

எரேமியாவின் கழுத்தில் நுகம் இருந்ததற்கான விவரம் எரே 28:10 -ஆவது வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "அப்பொழுது அனனியா என்கிற தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை எடுத்து அதை உடைத்துப்போட்டான்" (எரே 28:10).

எரேமியா தனக்கு கயிறுகளையும் நுகங்களையும் உண்டுபண்ணி, அவைகளை தன் கழுத்திலே பூட்டிக்கொண்டு, கர்த்தருடைய செய்தியை பிரசங்கம் பண்ணவேண்டும். யூதாதேசத்திற்கு அருகாமையிலுள்ள எல்லா ராஜாக்களுக்கும் கர்த்தர் எரேமியா மூலமாக தம்முடைய செய்தியை சொல்லியனுப்புகிறார். இவர்கள் எல்லோரும் கானான் தேசத்திற்கு அருகாமையிலிருக்கிற ராஜாக்கள். ஏதோமின் ராஜா, மோவாபின் ராஜா, அம்மோன் புத்திரரின் ராஜா, தீருவின் ராஜா, சீதோனின் ராஜா ஆகியோரைப்பற்றி இங்கு சொல்லப்பட்டிருக்கிறது (எரே 27:3).

யூதாவின் ராஜாவுக்கும், இந்த ராஜாக்களும் இடையே இராணுவ ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இவர்கள் எல்லோரும் எருசலேமிலே கூடிவந்து தங்களுடைய ஒப்பந்தங்களைப் புதுப்பித்துக்கொள்வது வழக்கம். இதன் பிரகாரமாக யூதாவுக்கு அண்டை தேசத்திலுள்ள ராஜாக்களின் ஸ்தானாபதிகள் எருசலேமுக்கு சிதேக்கியாவினிடத்தில் வருகிறார்கள். பாபிலோன் ராஜா தங்கள் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வரும்போது, இந்த ராஜாக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, தங்களுடைய தேசங்களைக் காத்துக்கொள்ளவேண்டும். பாபிலோன் ராஜாவை எதிர்க்கவேண்டும்.

சிதேக்கியா ராஜாவும், கானான் தேசத்திற்கு அருகாமையிலுள்ள மற்ற ராஜாக்களும் தங்களுடைய இராணுவ பலத்தில் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கூட்டாகச் சேர்ந்திருப்பதினால், இவர்களுடைய பெலன் மிகுதியாயிருக்குமென்று இவர்கள் நம்புகிறார்கள். பாபிலோன் தேசத்து ராஜாவை தங்களுடைய கூட்டு முயற்சியினால் எதிர்க்க முடியும் என்றும் இவர்கள் நம்புகிறார்கள்.

யூதாதேசத்திற்கு அருகாமையிலுள்ள தேசங்களுடைய ராஜாக்களின் ஸ்தானாபதிகள் எருசலேமுக்கு வருகிறார்கள். எருசலேமிலுள்ள சிதேக்கியா ராஜாவினிடத்தில் தங்களுடைய கூட்டு முயற்சிகளை உறுதிபண்ணிக்கொள்கிறார்கள். இதன் பின்பு ஸ்தானாபதிகள் தங்கள் ராஜாக்களிடத்திற்கு திரும்பிப்போக ஆயத்தமாயிருக்கும்போது, எரேமியா ஒவ்வொரு ஸ்தானாதிபதியையும் சந்திக்கிறார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கயிறையும் நுகத்தையும் கொடுத்து, அவற்றை அவர்கள் தங்கள் ராஜாக்களிடத்தில் கொடுக்குமாறு சொல்லுகிறார்.

அவர்கள் எல்லோரும் பாபிலோன் ராஜாவுக்கு அடிமையாவார்கள் என்பது எரேமியாவின் செய்தியாகும். யூதாதேசத்தாரும், யூதாவுக்கு அருகாமையிலுள்ள மற்ற தேசத்தாரும் பாபிலோன் தேசத்தின் நுகத்தை சுமக்கவேண்டும் என்பதற்கு அடையாளமாக, எரேமியா அவர்கள் எல்லோருக்கும் கயிறுகளையும் நுகங்களையும் கொடுத்தனுப்புகிறார்.

ஸ்தானாபதிகள் தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போகும்போது, அவர்கள் தங்கள் எஜமான்களுக்கு சொல்லவேண்டிய செய்தியையும் எரேமியா அவர்கள் மூலமாய் சொல்லியனுப்புகிறார். "அவர்கள் தங்கள் எஜமான்களுக்குச் சொல்லும்படிக் கற்பிக்கவேண்டுமென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்" (எரே 27:4) என்று கர்த்தர் அவர்களுக்கு சொல்லும் செய்தியை சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய இஷ்டத்தின் பிரகாரமாக, பூமியையும் பூமியிலுள்ள மிருகஜீவன்களையும், தமக்கு இஷ்டமானவர்களுக்கு கொடுக்கிறார். "நான் பூமியையும் மனுஷனையும் பூமியின்மேலுள்ள மிருகஜீவன்களையும் என் மகா பலத்தினாலும் ஓங்கிய என் புயத்தினாலும் உண்டாக்கினேன்; எனக்கு இஷ்டமானவனுக்கு அதைக் கொடுக்கிறேன்" (எரே 27:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரே சர்வசிருஷ்டிகர். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். கர்த்தர் தம்முடைய மகாபலத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் பூமியை உண்டாக்கினார். கர்த்தர் இந்தப் பூமியை எப்படி சிருஷ்டித்தாரோ, அப்படியே இந்தப் பூமி இந்நாள் வரையிலும் இருக்கிறது. பூமியில் ஒரு மாற்றமும் உண்டாகவில்லை. இந்தப் பூமியில் பல சந்ததிகள் கடந்துபோயிருக்கிறார்கள். ஒரு சந்ததி போகிறது. மற்றொரு சந்ததி வருகிறது. ஆனாலும் இந்தப் பூமி மாறாமல் அப்படியே இருக்கிறது.

கர்த்தர் தம்முடைய சிருஷ்டிப்பின் கிரியைகளை முடித்துக்கொள்ளவில்லை. கர்த்தருடைய கிரியை தொடர்ந்து நடைபெறுகிறது. கர்த்தர் மனுஷனையும் பூமியின் மேலுள்ள மிருகஜீவன்களையும் தொடர்ந்து சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறார். கர்த்தருடைய மகாபலத்தினாலும், ஓங்கிய புயத்தினாலும் இவையெல்லாம் உண்டாக்கப்படுகிறது.

கர்த்தர் தம்முடைய கிருபையினால் மனுபுத்திரருக்கு இந்தப் பூமியைக் கொடுத்திருக்கிறார். "வானங்கள் கர்த்தருடையவைகள்; பூமியையோ மனுபுத்திரருக்குக் கொடுத்தார்" (சங் 115:16). ஒவ்வொரு மனுஷனும் இந்தப் பூமியில் தனக்குரிய பங்கைப் பெற்றுக்கொள்கிறான்.

தேவனாகிய கர்த்தர், இந்தப் பூமியிலுள்ள எல்லா தேசங்களையும், தம்முடைய ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். எல்லா தேசங்களும் சம்பத்துக்களும், ஐசுவரியங்களும் நேபுகாத்நேச்சாரின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. வெளியின் மிருகஜீவன்களும் அவனுடைய கைகளில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"இப்பொழுதும் நான் இந்த தேசங்களையெல்லாம் என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவின் கையிலே கொடுத்தேன்; அவனுக்கு ஊழியஞ்செய்யும்படி வெளியின் மிருகஜீவன்களையும் கொடுத்தேன்" (எரே 27:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஒரு துன்மார்க்கன். அவன் தன் இருதயத்தில் பெருமை மிகுந்தவன். விக்கிரகங்களை ஆராதிக்கிறவன். ஆனாலும் கர்த்தர், தம்முடைய தெய்வீக தீர்மானத்தின் பிரகாரமாகவும், தெய்வீக பராமரிப்பின் பிரகாரமாகவும், அவனுடைய கைகளில், இந்தப் பூமியிலுள்ள தேசங்களையெல்லாம் ஒப்புக்கொடுக்கிறார். சகலவற்றையும் அவனுடைய ஆளுகைக்கு கீழ்ப்படுத்துகிறார்.

இந்த உலகத்தின் காரியங்கள் மேன்மையானவையல்ல. உலகப்பிரகாரமான காரியங்களெல்லாம் அற்பமான காரியங்கள். கர்த்தர் இந்தப் பூமியிலுள்ள துன்மார்க்கரின் கையில், இந்தப் பிரபஞ்சத்தின் காரியங்களில் அதிக பங்குகளை கொடுக்கிறார். துன்மார்க்கர் கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிறார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களுடைய கைகளில் உலகத்தின் சம்பத்துக்களையும், ஐசுவரியங்களையும் அதிகமாய் ஒப்புக்கொடுக்கிறார்.

கிருபையை ஆதாரமாக வைத்து ஆளுகை நியமிக்கப்படவில்லை. நேபுகாத்நேச்சார் ஒரு துன்மார்க்கன். ஆனாலும் கர்த்தர் அவனை தம்முடைய ஊழியக்காரன் என்று அழைக்கிறார். கர்த்தர் தம்முடைய தெய்வீக பராமரிப்பில், கர்த்தர் நேபுகாத்நேச்சாரை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார். தேசங்களை தண்டித்து திருத்துவதற்கு கர்த்தர் அவனை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துவதினால், அவனும் கர்த்தருடைய ஊழியக்காரனாயிருக்கிறான்.

நேபுகாத்நேச்சாருடைய தேசத்துக்குக் காலம் வருகிறவரையில் சகல ஜாதிகளும் அவனையும் அவனுடைய புத்திர பௌத்திரரையும் சேவிப்பார்கள் (எரே 27:7). எல்லா தேசத்தாரும் பாபிலோன் தேசத்தை சேவிப்பார்கள். நேபுகாத்நேச்சாருடைய குமாரன் ஏவில்மெரொதாக். இவனுடைய குமாரன் பெல்சாத்சார். பெல்சாத்சாருடைய காலத்தில் நேபுகாத்நேச்சாருடைய குடும்பத்தார் பாபிலோன் தேசத்தின்மீது தங்களுடைய ஆட்சிப்பொறுப்பை இழந்து விடுகிறார்கள்.

கர்த்தர் நேபுகாத்நேச்சாரை விசாரிக்கும் காலம் வருகிறது. அப்போது அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் மேதிய பெர்சிய தேசமாக எழும்பி வருகிறார்கள். "அதன் பின்பு அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவனை அடிமை கொள்வார்கள்" (எரே 27:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அநேகம் ஜாதிகளும் பெரிய ராஜாக்களும் அவர்களை அடிமை கொள்வார்கள்; நான் அவர்களுக்கு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாகவும், அவர்கள் கைகளின் செய்கைகளுக்குதக்கதாகவும் பதில் அளிப்பேன்" (எரே 25:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எல்லா தேசங்களும் நேபுகாத்நேச்சாரை சேவிக்கவேண்டும். எந்த ஜாதியாவது, எந்த ராஜ்யமாவது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்பவனைச் சேவியாமலும், தன் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தாமலும்போனால், அந்த ஜாதியை நான் அவன் கையாலே நிர்மூலமாக்குமளவும், பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் தண்டிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 27:8).

யூதாமனுஷர் மத்தியில் கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு மாயையான நம்பிக்கையைக் கொடுக்கிறார்கள். யூதாவின் மனுஷர்களும், எருசலேமின் குடிகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கக்கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பாபிலோன் ராஜாவை நீங்கள் சேவிப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிற உங்கள் தீர்க்கதரிசிகளுக்கும், உங்கள் குறிகாரருக்கும், உங்கள் சொப்பனக்காரருக்கும், உங்கள் நாட்பார்க்கிறவர்களுக்கும், உங்கள் சூனியக்காரருக்கும் நீங்கள் செவிகொடாதிருங்கள்" (எரே 27:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் யூதாமனுஷரின் நன்மைக்கேதுவான வார்த்தைகளைச் சொல்லாமல், தீமைக்கேதுவான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். அவர்கள் சத்தியமான வார்த்தைகளைச் சொல்லாமல் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்டால், ஜனங்களுக்கு அழிவு வரும். அவர்கள் தங்கள் தேசத்திலிருந்து துரத்திவிடப்படுவார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளை நம்புகிறவர்கள் அழிந்துபோவார்கள்.

"நான் உங்களை உங்கள் தேசத்திலிருந்து தூரப்படுத்துகிறதற்கும், உங்களைத் துரத்திவிடுகிறதற்கும், நீங்கள் அழிகிறதற்குமாக அவர்கள் உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்" (எரே 27:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகளும், குறிகாரரும், சொப்பனக்காரரும், நாள்பார்க்கிறவர்களும், சூனியக்காரரும் நட்சத்திரங்களை நோக்கிப் பார்க்கிறார்கள். அவர்கள் அசுத்த ஆவிகளால் ஏவப்பட்டு ஜனங்களுக்கு பொய்யான வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள். ஜனங்களுக்கு சமாதானமுண்டாகும் என்றும், அவர்கள் விடுதலையோடிருப்பார்கள் என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுகிற பொய்வார்த்தைகள் ஒன்றும் நிறைவேறாது.

கர்த்தர் எல்லா தேசங்களையும் பாபிலோன் ராஜாவின் கையிலே ஒப்புக்கொடுத்திருக்கிறார். ஆகையினால் சகலஜாதிகளும் பாபிலோன் ராஜாவை சேவிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய திட்டம். கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளாயிருக்கிறார்கள். இவர்கள் தங்களுடைய விருப்பங்களையும், மனுஷருடைய விருப்பங்களையும் சிந்தித்துப் பார்த்து, அதற்கேற்ற பிரகாரமாய் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் ஒருபோதும் கர்த்தருடைய சித்தத்தையும், அவருடைய விருப்பத்தையும், அவருடைய திட்டத்தையும் சொல்லுவதில்லை.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கக்கூடாது. அவர்களுடைய வார்த்தைகளைக்கேட்டு, அதன் பிரகாரம் நடந்தால் அவர்களுக்கு அழிவு வரும். யூதாதேசத்தார் மாத்திரமல்ல, யூதாதேசத்திற்கு அருகாமையிலிருக்கிற பக்கத்து தேசத்தாரும், பாபிலோன் ராஜாவை சேவிக்கவேண்டும். இல்லையென்றால் அவர்களுக்கும் அழிவு வருமென்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 25; 48; 49 ஆகிய அதிகாரங்கள்).

தங்களுக்கு வரும் அழிவுக்கு தப்பிக்கவேண்டுமென்றால், இந்த தேசங்கள் என்ன செய்யவேண்டுமென்று கர்த்தர் ஆலோசனை சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தை மெய்யானது. அது நிச்சயமாய் நிறைவேறும்.

"எந்த ஜாதி தன் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தி, அவனைச் சேவிக்குமோ, அந்த ஜாதியைத் தன் தேசத்தைப் பயிரிட்டு, அதிலே குடியிருந்து தாபரிக்கப்பண்ணுவேன்" (எரே 27:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். எல்லா ஜாதிகளும் நேபுகாத்நேச்சாரை சேவிக்கவேண்டும். பாபிலோன் தேசத்திற்கு கப்பம் கட்டவேண்டும். அவர்கள் எழுபது வருஷங்கள் பாபிலோன் தேசத்தின் ஆளுகைக்கு தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

எருசலேமிலுள்ள ஆசாரியர்களும் தீர்க்கதரிசிகளும் எரேமியாவின் வார்த்தைகளை யோசித்துப் பார்த்து, இது கர்த்தருடைய வார்த்தை அல்ல என்று தீர்மானிக்கிறார்கள். எரேமியா ஜனங்களுக்கு விடுதலையின் வார்த்தையைச் சொல்லாமல், பாபிலோன் தேசத்திற்கு அடிமைப்பட்டுப் போகும் வார்த்தையைச் சொல்லுகிறார்.

இருதயத்தில் பெருமையுள்ளவர்கள் எரேமியாவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படியமாட்டார்கள். மனத்தாழ்மையும், பணிந்த ஆவியுமுள்ளவர்கள் மாத்திரமே பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போக சம்மதிப்பார்கள். கர்த்தருக்கு உண்மையாய் கீழ்ப்படிகிறவர்கள், அவருடைய வார்த்தைகளுக்கு எல்லா சூழ்நிலைகளிலும் கீழ்ப்படிவார்கள். கர்த்தர் தீமையை நன்மையாக்குகிறவர். அவர் தீமையை நன்மையால் வெல்லுகிறவர். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது, யூதா ஜனங்களுக்கு எழுபது வருஷங்களுக்கு சிறையிருப்பு உண்டாகும். அதன் பின்பு கர்த்தர் அவர்களை விடுதலைபண்ணுவார். இதுவே தேவனுடைய தெய்வீக பராமரிப்பு.

கர்த்தர் தம்முடைய ஜனத்திடம் பணிவை எதிர்பார்க்கிறார். அந்நிய தேசத்து ராஜாவை சேவிக்கும் மனப்பக்குவத்தை எதிர்பார்க்கிறார். யூதாவின் மனுஷர் பாபிலோன் தேசத்து ராஜாவுக்கு முன்பாக தங்களை தாழ்த்தவில்லையென்றால், அவர்களுக்கு அழிவு வரும். இந்த அழிவுக்கு தப்பிக்கவேண்டுமென்றால், அவர்கள் நேபுகாத்நேச்சாரை சேவிப்பதைத் தவிர வேறு வழி எதுவுமில்லை.

யூதாவின் மனுஷருக்கு முன்பாக சிறையிருப்பும் அழிவும் வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இவ்விரண்டில் ஒன்றை தெரிந்துகொள்ள வேண்டும். சுமக்க முடியாத பாரத்தை நமது தலையின்மீது இழுத்துப்போட்டு சுமப்பதைவிட, இலகுவான பாரத்தை சுமப்பது நமக்கு நல்லது. சிறையிருப்பு இலகுவான பாலம். அது எழுபது வருஷத்திற்கு மாத்திரம் என்று நியமிக்கப்பட்டிருக்கிறது. தேசத்தின்மீது வரும் அழிவு கனமான பாரம். அது நித்திய அழிவு.

யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா
எரே 27:12-15

எரே 27:12. இந்த எல்லா வார்த்தைகளின்படியே நான் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவோடு பேசி: உங்கள் கழுத்தைப் பாபிலோன் ராஜாவின் நுகத்துக்குக் கீழ்ப்படுத்தி, அவனையும் அவன் ஜனத்தையும் சேவியுங்கள்; அப்பொழுது பிழைப்பீர்கள்.

எரே 27:13. பாபிலோன் ராஜாவைச் சேவியாமற்போகிற ஜாதிக்கு விரோதமாகக் கர்த்தர் சொன்னதின்படியே, நீயும் உன் ஜனமும் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் சாவானேன்?

எரே 27:14. நீங்கள் பாபிலோன் ராஜாவைச் சேவிப்பதில்லையென்று உங்களுடனே சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள்; அவர்கள் உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

எரே 27:15. நான் அவர்களை அனுப்பினதில்லை; நான் உங்களைத் துரத்திவிடுகிறதற்கும், நீங்களும் உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளும் அழிந்துபோகிறதற்கும் அல்லவோ இவர்கள் என் நாமத்தைச் சொல்லி, பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றேன்.

கர்த்தர் இதுவரையிலும் சொன்ன வார்த்தைகள் யூதாதேசத்திற்கும், அதைச் சுற்றிலுமுள்ள சகல தேசங்களுக்கும் சொன்ன பொதுவான வார்த்தைகளாகும். கர்த்தர் சகல ஜாதிகளுக்கும் பொதுவான செய்தியைச் சொன்னாலும், யூதர்களுக்கு விசேஷித்த செய்தியையும் சொல்லுகிறார். மற்ற ஜாதிகள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்காவிட்டாலும், யூதாவின் மனுஷர் அவருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவேண்டும். எரேமியா யூதாமனுஷர்மீதும் எருசலேமின் குடிகள்மீதும் அதிக அக்கரையோடும், அதிக கரிசனையோடும் இருக்கிறார்.

யூதாவும் எருசலேமும் பாபிலோன் தேசத்து ராஜாவோடு ஏற்கெனவே யுத்தம்பண்ணியிருக்கிறார்கள். இந்த யுத்தத்தில் யூதாவுக்கு தோல்வியும், அதிகமான சேதமும் உண்டாயிற்று. பாபிலோன் தேசத்தார் யூதாவின் மனுஷரில் அநேகரை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோய்விட்டார்கள். எருசலேமிலும், தேவாலயத்திலுமுள்ள பொக்கிஷங்களையும், பணிமுட்டுக்களையும் தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள்.

பாபிலோன் தேசத்து ராஜாவுக்கு தப்பினவர்கள் மாத்திரம் இப்போது எருசலேமிலிருக்கிறார்கள். அவர்களில் சிலர் தங்களை தீர்க்கதரிசிகள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். பாபிலோன் தேசத்து ராஜா தங்கள் தேசத்திலிருந்து எடுத்துக்கொண்டு போன எல்லா பொக்கிஷங்களும் தங்கள் தேசத்திற்கு சீக்கிரத்தில் திரும்பி வரும் என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். யூதாதேசத்திற்கு சமாதானம் உண்டு என்றும், அவர்கள் தைரியமாயிருக்க வேண்டுமென்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினால் பேசுகிறார்கள்.

இந்த சூழ்நிலையில் கர்த்தர் எரேமியாவை யூதாவின் மனுஷர் மத்தியில் அனுப்புகிறார். யூதாவின் மனுஷர் நேபுகாத்நேச்சாரோடு எதிர்த்து நிற்கக்கூடாது என்றும், அவனுக்கு கீழ்ப்படிந்து அவனை சேவிக்கவேண்டும் என்றும் எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். தாங்கள் ஏற்கெனவே இழந்துபோனதை இப்போது திரும்பப் பெற்றுக்கொள்ள இயலாது என்று எரேமியா சொல்லுகிறார். தாங்கள் இழந்துபோனதைப் பெற்றுக்கொள்வதற்காக, பாபிலோன் ராஜாமீது யுத்தம்பண்ணினால், யூதாவின் மனுஷருக்கு தோல்வி உண்டாகும் என்றும், யூதாதேசத்திலுள்ள மீதமான பொருட்களையும் அவர்கள் இழந்துபோகவேண்டியது வரும் என்றும் எரேமியா எச்சரிக்கிறார்.

எரேமியா மிகுந்த பணிவோடு யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவோடு பேசுகிறார். சிதேக்கியா ராஜா தன்னுடைய தேசத்தின் சார்பாக செயல்படவேண்டும். ஆகையினால் எரேமியா சிதேக்கியாவோடு பேசும்போது, அவனோடும், யூதாமனுஷரோடும் பொதுவாகப் பேசுகிறார். "உங்கள் கழுத்தை பாபிலோன் ராஜாவின் நுகத்திற்கு கீழ்ப்படுத்துங்கள்" என்றும், "அவனையும் அவன் ஜனத்தையும் சேவியுங்கள்" (எரே 27:12) என்றும் எரேமியா சிதேக்கியாவிடம் சொல்லுகிறார். "அப்பொழுது பிழைப்பீர்கள்" என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். பாபிலோன் ராஜாவுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், யூதாவின் மனுஷர் அழிந்துபோவார்கள்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கொடிய குணமுள்ளவன். அவனுடைய நுகம் இலகுவானதல்ல. அது இரும்பைப்போல கடினமானது. பாபிலோன் ராஜாவின் இருப்பு நுகத்திற்கு தங்களை கீழ்ப்படுத்துவது ஞானமுள்ள செயலாக இருக்குமா என்று யூதாவின் ராஜாவும், யூதாவின் மனுஷரும் யோசிக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நமக்கு கர்த்தர் தம்முடைய நுகத்தைக் கொடுத்திருக்கிறார். வருத்தப்பட்டு பாரம் சுமக்கிற நாம் நம்முடைய பாரமான வருத்தங்களை கர்த்தருடைய சமுகத்தில் இறக்கி வைத்துவிடலாம். கர்த்தருடைய மென்மையான, இலகுவான, இனிமையான நுகத்தை நம்மீது ஏற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய நுகத்திற்கு நம்மை கீழ்ப்படுத்தி, அவரை சேவிக்கவேண்டும். அப்போது நாம் பிழைப்போம். நம்முடைய ஆத்துமா பிழைக்கும்.

நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை, நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளுக்கு நாம் கீழ்ப்படியவேண்டும். அப்போது நம்முடைய ஆவியும் ஆத்துமாவும் பிழைக்கும். நாம் பரலோகத்தின் மகிமையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்வோம்.

பாபிலோன் ராஜாவை சேவியாதவர்கள்மீது பட்டயமும், பஞ்சமும், கொள்ளைநோயும் வரும். சிதேக்கியா ராஜாவும் யூதாவின் மனுஷரும் நேபுகாத்நேச்சாருக்கு கீழ்ப்படிந்து, அவரை சேவிக்கவில்லையென்றால் அவர்கள்மீதும் அழிவு வரும்.

"பாபிலோன் ராஜாவைச் சேவியாமற்போகிற ஜாதிக்கு விரோதமாகக் கர்த்தர் சொன்னதின்படியே, நீயும் உன் ஜனமும் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் சாவானேன்?" (எரே 27:13) என்று எரேமியா யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவிடம் சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவோடு கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். ஏற்கெனவே ஏராளமான கள்ளத்தீர்க்கதரிசிகள் சிதேக்கியா ராஜாவிடம் பொய்யான தீர்க்கதரிசனங்களைச் சொல்லியிருக்கிறார்கள். "நீங்கள் பாபிலோன் ராஜாவை சேவிப்பதில்லை" என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சிதேக்கியாவிடம் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். இவர்கள் சொல்லுவது கர்த்தருடைய வார்த்தையல்ல. ஆனாலும் பொய்யை மெய்யைப்போல சாதிக்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள் என்று கர்த்தரும் சொல்லுகிறார்.

கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளை சிதேக்கியா ராஜாவினிடத்திலும், யூதாவின் மனுஷரிடத்திலும் அனுப்பவில்லை. ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய நாமத்தை சொல்லி பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். ஜனங்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேட்டு நடந்தால், கர்த்தர் அவர்களை ஏற்றுக்கொள்ளமாட்டார். அவர்களைத் துரத்திவிடுவார். அவர்களுக்கு பொய்யான தீர்க்கதரிசனம் சொன்ன கள்ளத்தீர்க்கதரிசிகளையும் கர்த்தர் அழித்துப்போடுவார்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவிடம் கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றியும் எச்சரித்துச் சொல்லுகிறார். சிதேக்கியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும். யூதாவின் ராஜாவும், யூதாவின் மனுஷரும் தங்கள் கழுத்தை பாபிலோன் ராஜாவின் நுகத்திற்கு கீழ்ப்படுத்தவேண்டும். நேபுகாத்நேச்சாரையும், பாபிலோன் தேசத்து ஜனங்களையும் சேவிக்கவேண்டும். இந்தச் செய்தியை எரேமியா சிதேக்கியா ராஜாவினிடத்தில் அமைதியாகச் சொல்லுகிறார்.

ஆசாரியருக்கும் எல்லா ஜனங்களுக்கும் கர்த்தருடைய வார்த்தை எரே 27:16-17

எரே 27:16. மேலும் நான் ஆசாரியரையும் இந்த எல்லா ஜனங்களையும் நோக்கி: இதோ, கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகள் இப்பொழுது சீக்கிரத்திலே பாபிலோனிலிருந்து திரும்பிக் கொண்டுவரப்படுமென்று, உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற உங்களுடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

எரே 27:17. அவர்களுக்குச் செவிகொடாதிருங்கள்; பாபிலோன் ராஜாவைச் சேவியுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; இந்த நகரம் பாழாய்ப்போகவேண்டியதென்ன?

எரேமியா இதுவரையிலும் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவோடு கர்த்தருடைய வார்த்தையைப் பேசினார். இப்போது ஆசாரியருக்கும், எல்லா ஜனங்களுக்கும் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். அவர்கள் எல்லோரும் பாபிலோன் ராஜாவை சேவிக்கவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் பிழைப்பார்கள். இல்லையென்றால் அவர்கள் அழிந்துபோவார்கள். அவர்களுடைய நகரமும் பாழாய்ப்போகும்.

யூதாவின் ராஜா மாத்திரம் நேபுகாத்நேச்சாரை சேவித்தால் போதாது. யூதாவிலுள்ள எல்லா மனுஷரும் பாபிலோன் ராஜாவை சேவிக்கவேண்டும். கள்ளத்தீர்க்கதரிசிகள் சிதேக்கியா ராஜாவினிடத்தில் பொய்யான தீர்க்கதரிசனம் சொன்னதுபோல, ஆசாரியரிடத்திலும், எல்லா ஜனங்களிடத்திலும் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

"இதோ, கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகள் இப்பொழுது சீக்கிரத்திலே பாபிலோனிலிருந்து திரும்பிக் கொண்டுவரப்படும்" (எரே 27:16) என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் எல்லா ஜனங்களுக்கும், ஆசாரியர்களுக்கும் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். தேவாலயத்தின் பணிமுட்டுக்கள், பாபிலோன் தேசத்திலிருந்து, சீக்கிரத்தில் தேவாலயத்திற்கு திரும்பி வருவதை எல்லோரும் விரும்புகிறார்கள். ஆசாரியர்கள் இதை அதிகமாய் விரும்புகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளோ அவர்களுடைய மனதின் விருப்பத்திற்கேற்ற பிரகாரம் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

"உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற உங்களுடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைக் கேளாதிருங்கள்" (எரே 27:16) என்று கர்த்தர் சொல்லுகிறார். எரேமியா தீர்க்கதரிசியோ கர்த்தருடைய வார்த்தையை அப்படியே சொல்லுகிறார். "கள்ளத்தீர்க்கதரிசிகள் உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். அவர்களுக்குச் செவிகொடாதிருங்கள்; பாபிலோன் ராஜாவைச் சேவியுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; இந்த நகரம் பாழாய்ப்போகவேண்டியதென்ன?" (எரே 27:16,17) என்று எரேமியா ஆசாரியரிடத்திலும், யூதாவின் எல்லா ஜனங்களிடத்திலும் சொல்லுகிறார்.

மீதியான பணிமுட்டுகள்
எரே 27:18-22

எரே 27:18. அல்லது அவர்கள் தீர்க்கதரிசிகளாயிருந்து, அவர்களிடத்திலே கர்த்தருடைய வார்த்தை இருந்தால், கர்த்தருடைய ஆலயத்திலும், யூதா ராஜாவின் அரமனையிலும், எருசலேமிலும் மீதியான பணிமுட்டுகள் பாபிலோனுக்குப் போகாதபடிக்கு அவர்கள் சேனைகளின் கர்த்தரை நோக்கி மன்றாடட்டுமே.

எரே 27:19. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யோயாக்கீமின் குமாரனாகிய எகொனியா என்னும் யூதாவின் ராஜாவையும், யூதாவிலும் எருசலேமிலுமிருந்த பெரியோர் அனைவரையும் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச் சிறை பிடித்துக் கொண்டுபோகையில்,

எரே 27:20. எடுக்காமல் விட்ட சகல தூண்களையும், கடல்தொட்டியையும், ஆதாரங்களையும், இந்த நகரத்தில் மீதியான மற்றப் பணிமுட்டுகளையுங்குறித்துச் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்,

எரே 27:21. கர்த்தருடைய ஆலயத்திலும், யூதாராஜாவின் அரமனையிலும், எருசலேமிலும் மீதியான அந்தப் பணிமுட்டுகள் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படுமென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 27:22. நான் அவைகளை விசாரிக்கும் நாள்வரைக்கும் அவைகள் அங்கே இருக்கும்; பின்பு அவைகளைத் திரும்ப இந்த ஸ்தலத்திற்குக் கொண்டுவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றேன்.

யூதாவின் ராஜாவும், யூதாவின் எல்லா ஜனங்களும், ஆசாரியர்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கிறார்கள். அவர்களுடைய வார்த்தைகளின் பிரகாரம் யூதாதேசத்திற்கு சமாதானம் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். பாபிலோன் தேசத்தார் எருசலேமின் தேவாலயத்திலிருந்து எடுத்துக்கொண்டு போன பணிமுட்டுகளெல்லாம், தங்கள் தேசத்திற்கு சீக்கிரத்தில் திரும்பி வரும் என்றும் காத்திருக்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் அவர்களுக்கு பொய்யான தீர்க்கதரிசனங்களை சொன்னதினால், ஜனங்கள் அவர்களுடைய ஆசை வார்த்தைகளை நம்புகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை கேளாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 27:14;16). இவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளல்ல. கர்த்தர் இவர்களை அனுப்பவுமில்லை. இவர்கள் தங்களைத் தாங்களே தீர்க்கதரிசிகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். யூதாவின் ஜனங்களை சந்தோஷப்படுத்துவதுதான் இவர்களுடைய வேலை. கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய்ச் சொல்லவேண்டும் என்னும் வாஞ்சை இவர்களிடத்தில் இல்லை.

கள்ளத்தீர்க்கதரிசிகள் இரண்டு பொய்களை சொல்லியிருக்கிறார்கள். அவையாவன : 1. நீங்கள் பாபிலோன் ராஜாவை சேவிப்பதில்லை (எரே 27:14). 2. கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகள் இப்பொழுது சீக்கிரத்தில் பாபிலோனிலிருந்து திரும்பிக்கொண்டு வரப்படும் (எரே 27:16).

பாபிலோன் ராஜா ஏற்கெனவே யூதாதேசத்தின்மீது யுத்தம் பண்ணியிருக்கிறான். தேவாலயத்தின் பணிமுட்டுகளையும், எருசலேமிலுள்ள ஐசுவரியங்களையும் தன்னுடைய தேசத்திற்கு எடுத்துக்கொண்டுபோய்விட்டான். யூதாவின் மனுஷரையும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோய்விட்டான். ஆனாலும் யூதாவின் மனுஷர் பாபிலோன் ராஜாவை சேவிப்பதில்லை என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள்.

பாபிலோன் தேசமும், பாபிலோன் ராஜாவும் சீக்கிரத்தில் அழிந்துபோவார்கள் என்பது கள்ளத்தீர்க்கதரிசிகளின் செய்தி. ஆகையினால் யூதாவின் மனுஷர் தங்கள் கழுத்தை பாபிலோன் ராஜாவின் நுகத்திற்கு கீழ்ப்படுத்தவேண்டியதில்லை என்றும், அவனை சேவிக்கவேண்டியதில்லை என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்கள் மத்தியில் பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். பாபிலோன் ராஜாவை சேவிக்குமாறு யூதாவின் மனுஷரை யாரும் கட்டாயம் பண்ணமாட்டார்கள் என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னாலும், அவர்கள் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள் (எரே 27:15). கர்த்தரே தங்களை அனுப்பியதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்கள். "நான் அவர்களை அனுப்பினதில்லை" (எரே 27:15) என்று கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றி தீர்மானமாய்ச் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளைப்பற்றியும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். இந்தப் பணிமுட்டுகளை பாபிலோன் தேசத்து ராஜா ஏற்கெனவே தேவாலயத்திலிருந்து எடுத்து, தங்கள் தேசத்திற்கு கொண்டு போய்விட்டான். கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகள் சீக்கிரத்தில் பாபிலோனிலிருந்து திரும்பிக்கொண்டு வரப்படும் என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள் (எரே 27:16).

தேவாலயத்திலுள்ள ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகள் மீது பிரியமாயிருக்கிறார்கள். அவர்கள் தேவாலயத்தின் பொன்னை அதிகமாய் நேசிக்கிறார்கள். பொன்னை பரிசுத்தம் பண்ணுகிற தேவாலத்தைவிட, பொன்னே ஆசாரியர்களுக்கு முக்கியமானதாயிருக்கிறது.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யோயாக்கீமின் குமாரனாகிய எகொனியா என்னும் யூதாவின் ராஜாவை எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு சிறைப்பிடித்து கொண்டு போனான். அப்போது கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளையும் தன்னோடு எடுத்துக்கொண்டு போய்விட்டான். எகொனியாவோடு யூதாவிலும் எருசலேமிலும் இருந்த பெரியோர் அனைவரையும் பாபிலோனுக்கு சிறைப்பிடித்து கொண்டுபோய்விட்டான் (எரே 27:20).

இந்த சோகசரித்திர சம்பவம் 2இராஜாக்கள் புஸ்தகத்திலும், 2நாளாகமம் புஸ்தகத்திலும் எழுதப்பட்டிருக்கிறது.

"அங்கேயிருந்து கர்த்தருடைய ஆலயத்தின் சகல பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரமனையின் பொக்கிஷங்களையும் எடுத்துக்கொண்டு, இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்தில் உண்டாக்கியிருந்த பொன் பணிமுட்டுகளையெல்லாம், கர்த்தர் சொல்லியிருந்தபடியே உடைத்துப்போட்டு, எருசலேமியர் அனைவரும் சகல பிரபுக்களும் சகல பராக்கிரமசாலிகளுமாகிய பதினாயிரம்பேரையும், சகல தச்சரையும் கொல்லரையும் சிறைபிடித்துக் கொண்டுபோனான்; தேசத்தில் ஏழை ஜனங்களே அல்லாமல் வேறொருவரும் மீதியாயிருக்கவில்லை. அவன் யோயாக்கீனையும், ராஜாவின் தாயையும், ராஜாவின் ஸ்திரீகளையும், அவன் பிரதானிகளையும், தேசத்தின் பராக்கிரமசாலிகளையும் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச் சிறைபிடித்துக்கொண்டுபோனான்" (2இராஜா 24:13-15).

"மறுவருஷத்தின் ஆரம்பத்திலே நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா அவனையும், கர்த்தருடைய ஆலயத்தின் திவ்வியமான பணிமுட்டுகளையும் பாபிலோனுக்குக் கொண்டுவரப்பண்ணி, அவன் சிறிய தகப்பனாகிய சிதேக்கியாவை யூதாவின் மேலும் எருசலேமின்மேலும் ராஜாவாக்கினான்" (2நாளா 36:10).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தேவாலயத்தை நினைத்து பெருமையோடிருக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அவர்களோடு கூடயிருப்பதற்கு தேவாலயம் ஓர் அடையாளமாயிருக்கிறது. பாபிலோன் ராஜாவோ தேவாலயத்திலுள்ள பொன்னையெல்லாம் தன்னுடைய தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விடுகிறான்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இதனால் தேவனுடைய பிரசன்னம் தேவாலயத்தைவிட்டு நீங்கிப்போய்விடுகிறது என்று கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகிப்போனதினால், கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறார் என்றும், கர்த்தருடைய பாதுகாப்பும் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்றும் நல்ல தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள்.

கர்த்தர் யூதாவின் மனுஷரைவிட்டு விலகிப்போனதினால்தான், நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பணிமுட்டுகளை தன்னுடைய தேசத்திற்கு தூக்கிக்கொண்டுபோய்விட்டான் என்றும் நல்ல தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள். யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், கர்த்தர் அவர்களைவிட்டு விலகிப்போய்விட்டார் என்பதே மெய்யான தீர்க்கதரிசன செய்தி.

கள்ளத்தீர்க்கதரிசிகளோ சத்தியத்தைப் புரட்டுகிறார்கள். கர்த்தர் யூதாவின் மனுஷரைவிட்டு விலகிப்போய்விடவில்லை என்றும், அவர் எப்போதுமே அவர்களோடு கூடயிருக்கிறார் என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்சொல்லுகிறார்கள். தங்களுடைய பொய்யை உறுதிபண்ணுவதற்கு, பாபிலோன் தேசத்திலுள்ள தேவாலயத்தின் பணிமுட்டுகள், சீக்கிரத்தில் அங்கிருந்து எருசலேமுக்கு கொண்டு வரப்படும் (எரே 27:16) என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளைப்பற்றி இரண்டுவிதமான தீர்க்கதரிசனம் சொல்லப்படுகிறது. பணிமுட்டுகள் இப்போது பாபிலோன் தேசத்திலிருக்கிறது. அவை பாபிலோன் தேசத்திலிருந்து சீக்கிரமாய் எருசலேமுக்கு கொண்டு வரப்படும் என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள்.

எரேமியாவோ பாபிலோனிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகள் எருசலேமுக்கு சீக்கிரத்தில் திரும்ப கொண்டு வரப்படாது என்றும், மேலும் இப்போது எருசலேமில் மீதியான பணிமுட்டுகளும், பாபிலோனுக்கு கொண்டு போகப்படும் (எரே 27:21) என்றும் எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி கள்ளத்தீர்க்கதரிசிகளைக் கடிந்துகொள்கிறார். அவர்களிடத்தில் கர்த்தருடைய வார்த்தை இல்லை என்று தெளிவுபடுத்துகிறார். "அவர்கள் தீர்க்கதரிசிகளாயிருந்து, அவர்களிடத்திலே கர்த்தருடைய வார்த்தை இருந்தால், கர்த்தருடைய ஆலயத்திலும், யூதா ராஜாவின் அரமனையிலும், எருசலேமிலும் மீதியான பணிமுட்டுகள் பாபிலோனுக்குப் போகாதபடிக்கு அவர்கள் சேனைகளின் கர்த்தரை நோக்கி மன்றாடட்டுமே" (எரே 27:18) என்று எரேமியா கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றிச் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகளிடத்தில் கர்த்தருடைய வார்த்தை இருக்குமென்றால், அவர்கள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண வேண்டும். அவர்கள் ஜீவனுள்ளோருக்கும் மரித்துப்போனோருக்கும் இடையே மத்தியஸ்தராக நிற்கவேண்டும். தங்களுடைய பிரச்சனைகளை கர்த்தரிடத்தில் ஒப்புவிக்க வேண்டும்.

பாபிலோனுக்கு ஏற்கெனவே எடுத்துக்கொண்டு போகப்பட்ட கர்த்தருடைய பணிமுட்டுகளுக்கும், இப்போது எருசலேமில் மீதியாயிருக்கிற கர்த்தருடைய பணிமுட்டுகளுக்கும் நடுவே கள்ளத்தீர்க்கதரிசிகள் நிற்கவேண்டும். பாபிலோனிலுள்ள பணிமுட்டுகள் சீக்கிரத்தில் எருசலேமுக்கு திரும்ப கொண்டு வரப்பட வாய்ப்பில்லை. இதுபற்றி கள்ளத்தீர்க்கதரிசிகள் சொன்ன பொய்யான தீர்க்கதரிசனங்கள் நிறைவேறாது.

கள்ளத்தீர்க்கதரிசிகளிடத்தில் கர்த்தருடைய வார்த்தை இருக்குமென்றால், அவர்கள் எருசலேமின் மீதியான பணிமுட்டுகள் பாபிலோனுக்கு போகாதபடி கர்த்தரிடத்தில் மன்றாடவேண்டும். இவர்கள் மெய்யான தீர்க்கதரிசிகளென்றால் சேனைகளின் கர்த்தர் இவர்களுடைய மன்றாட்டைக் கேட்டு, எருசலேமிலுள்ள மீதியான பணிமுட்டுகள் பாபிலோனுக்கு போகாதபடிக்கு தடுத்து நிறுத்துவார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுவதற்குப் பதிலாக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். மனுஷரிடத்தில் பொய்யான வார்த்தைகளை அடுக்கடுக்காய் சொல்லுவதற்குப் பதிலாக சேனைகளின் கர்த்தரை நோக்கி மன்றாடவேண்டும்.

நேபுகாத்நேச்சார் எருசலேமிலுள்ள பொன்பணிமுட்டுகள் எல்லாவற்றையும் தன்னுடைய தேசத்திற்கு கொண்டு போய்விட்டான். இப்போது எருசலேமில் பொன்பணிமுட்டுகள் எதுவுமில்லை. இங்கே வெண்கல பணிமுட்டுகள் மாத்திரமே இருக்கிறது. சகல தூண்களையும், கடல் தொட்டியையும், ஆதாரங்களையும், எருசலேம் நகரத்தில் மீதியான மற்ற பணிமுட்டுகளையும் நேபுகாத்நேச்சார் பாபிலோன் தேசத்திற்கு கொண்டுபோகாமல் இங்கேயே விட்டுவிட்டான். இவையெல்லாம் பொன்னாயிருந்தால், இவற்றை ஏற்கெனவே தன்னோடு கொண்டு போயிருந்திருப்பான். அவை வெண்கலமாயிருந்ததினால், அவற்றை எருசலேமிலேயே விட்டுவிட்டு போய்விட்டான். இந்த வெண்கல பணிமுட்டுகளும் பாபிலோன் தேசத்திற்கு கொண்டுபோகப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"கர்த்தருடைய ஆலயத்திலும், யூதாராஜாவின் அரமனையிலும், எருசலேமிலும் மீதியான அந்தப் பணிமுட்டுகள் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படுமென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" *(எரே 27:21).*

நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு விரோதமாக நிச்சயமாகவே மறுபடியும் திரும்பி வருவான். கர்த்தருடைய ஆலயத்திலும், ராஜாவின் அரண்மனையிலும் மீதியான எல்லா பணிமுட்டுகளையும் தன்னோடு தூக்கிக்கொண்டு போய்விடுவான். இந்தப் பணிமுட்டுகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் பாபிலோன் தேசத்திலேயே இருக்கும். "நான் அவைகளை விசாரிக்கும் நாள் வரையிலும் அவைகள் அங்கே இருக்கும்" *(எரே 27:22)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"பின்பு அவைகளைத் திரும்ப இந்த ஸ்தலத்திற்குக் கொண்டுவரப்பண்ணுவேன்" *(எரே 27:22)* என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளெல்லாம் தேவனுடைய தெய்வீக பராமரிப்பின் பிரகாரம், பாபிலோன் தேசத்திலே பாதுகாப்பாயிருக்கும். தம்முடைய ஆலயத்தின் பணிமுட்டுகளை உருக்கி சேதப்படுத்துவதற்கு கர்த்தர் யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை. அவை கர்த்தருடைய ஆலயத்தில் இருந்த பிரகாரமாக, இப்போது பாபிலோன் தேசத்தில் பாதுகாப்பாயிருக்கிறது. கர்த்தர் அவைகளை விசாரிக்கும் நாள் வரைக்கும் அவைகள் அங்கே பாதுகாப்பாயிருக்கும்.

நேபுகாத்நேச்சார் ராஜா பாபிலோன் தேசத்திற்கு எடுத்துக்கொண்டுபோன தேவாலயத்தின் பணிமுட்டுகளெல்லாம், மறுபடியுமாய் எருசலேமுக்கு திரும்பக் கொண்டு வரப்பட்ட சம்பவம் எஸ்றாவின் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆலயத்தின் பணிமுட்டுகளுக்கு ஒரு சேதமும் உண்டாவில்லை.

"அவைகளைப் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ் பொக்கிஷக்காரனாகிய மித்திரேதாத்தின் கையினால் எடுக்கச்செய்து, யூதாவின் அதிபதியாகிய சேஸ்பாத்சாரிடத்தில் எண்ணிக்கொடுத்தான்" *(எஸ்றா 1:8).*

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இந்தப் பிரபஞ்சத்தில் அநேக காரியங்களை இழந்துபோயிருக்கலாம். நாம் இழந்துபோனதை கர்த்தர் நமக்கு நிச்சயமாய்த் திரும்பக் கொடுப்பார். ஒருவேளை நாம் அவற்றை நம்முடைய காலத்தில் திரும்பப் பெற்றுக்கொள்ளாவிட்டாலும், கர்த்தருக்கு ஏற்ற காலத்தில், அவை நிச்சயமாய் நம்மிடத்தில் திரும்ப வரும். நாம் இழந்துபோன நன்மைகளை நம்முடைய சந்ததியார் பெற்றுக்கொள்வார்கள்.

28 அதிகாரம்

எரேமியா இதற்கு முந்திய அதிகாரத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னார். பாபிலோன் ராஜாவின் நுகம் சீக்கிரத்தில் முறிக்கப்படும் என்றும், தேவாலயத்தின் பணிமுட்டுகள் பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமிலுள்ள ஆலயத்திற்கு சீக்கிரத்தில் திரும்பக் கொண்டுவரப்படும் என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். எரேமியா அவர்களுக்கு விரோதமாக எதிர்த்து நின்று கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய்ச் சொல்லுகிறார்.

இந்த அதிகாரத்தில் அனனியா என்னும் கள்ளத்தீர்க்கதரிசியோடு எரேமியா விவாதம்பண்ணும் சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. நேபுகாத்நேச்சாரின் அதிகாரம் சீக்கிரத்தில் முறிந்துபோகும் என்றும், பாபிலோன் தேசத்தில் சிறைப்பட்டிருக்கிற யூதர்களும், தேவாலயத்தின் பணிமுட்டுகளும் எருசலேமுக்கு சீக்கிரத்தில் திரும்பிவரும் என்று அனனியா பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான் (எரே 28:1-4). தான் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறும் என்பதற்கு அடையாளமாக அனனியா எரேமியாவின் கழுத்திலிருந்த நுகத்தை எடுத்து அதை உடைத்துப்போடுகிறான் (எரே 28:10,11).

அனனியா சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறவேண்டுமென்று எல்லோரும் விரும்புகிறார்கள். அனனியா சொன்ன வார்த்தையின்படியே கர்த்தர் செய்வார் என்று எரேமியாவும் சொல்லுகிறார். ஆனாலும் அனனியா சொன்னது கர்த்தருடைய வார்த்தையல்ல என்பதை எரேமியா தெளிவுபடுத்துகிறார் (எரே 28:5-9).

வஞ்சிக்கப்பட்டவர்கள்மீதும், வஞ்சிக்கிறவர்கள்மீதும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு வருகிறது. யூதாதேசத்தாருக்கு மரநுகத்திற்குப் பதிலாக இருப்பு நுகம் கொடுக்கப்படும் (எரே 28:12-14). அனனியா தீர்க்கதரிசியும் சீக்கிரத்தில் மரித்துப்போவான் (எரே 28:15-17).

அனனியா தீர்க்கதரிசி
எரே 28:1-4

எரே 28:1. யூதாவுடைய ராஜாவாகிய சிதேக்கியா அரசாளத் துவக்கின நாலாம் வருஷம் ஐந்தாம் மாதத்திலே, அசூரின் குமாரனாகிய அனனியா என்னப்பட்ட கிபியோன் ஊரானாகிய தீர்க்கதரிசி கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியர்களும் சகல ஜனங்களும் பார்த்திருக்க என்னை நோக்கி:

எரே 28:2. இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், பாபிலோன் ராஜாவின் நுகத்தை முறித்தேன்.

எரே 28:3. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இவ்விடத்திலிருந்து எடுத்துப் பாபிலோனுக்குக் கொண்டு போன கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளையெல்லாம் நான் இரண்டு வருஷகாலத்திலே இவ்விடத்துக்குத் திரும்பக் கொண்டுவரப்பண்ணுவேன்.

எரே 28:4. யோயாக்கீமின் குமாரனாகிய எகொனியா என்கிற யூதாவுடைய ராஜாவையும் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு போகப்பட்ட யூதர் அனைவரையும் நான் இவ்விடத்துக்குத் திரும்பிவரப் பண்ணுவேன்; பாபிலோன் ராஜாவின் நுகத்தை உடைப்பேன் என்றார் என்று சொன்னான்.

கள்ளத்தீர்க்கதரிசிக்கும் நல்ல தீர்க்கதரிசிக்கும் இடையே வாக்குவாதம் நடைபெறுகிறது. இந்த சம்பவம் யூதாவுடைய ராஜாவாகிய சிதேக்கியாவின் ஆட்சிக்காலத்தில் நடைபெறுகிறது. சிதேக்கியா அரசாள துவக்கின நாலாம் வருஷம், ஐந்தாம் மாதத்திலே அனனியா என்னும் கள்ளத்தீர்க்கதரிசி கர்த்தருடைய நாமத்தினால் பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான்.

சிதேக்கியா ராஜா அரசாள துவங்கின முதல் நான்கு வருஷங்கள், அவருடைய ஆட்சியின் ஆரம்பகாலமாகும். இந்த வருஷங்களில் சிதேக்கியா பாபிலோன் ராஜாவினுடைய நேரடி மேற்பார்வையின் கீழும், அவருடைய கட்டளையின் கீழும் ஆட்சிபுரிகிறார். சிதேக்கியா பாபிலோன் ராஜாவுக்கு கப்பம் செலுத்தி, அவருக்கு கீழ்ப்படிந்து ஆட்சிசெய்கிறார்.

சிதேக்கியா ராஜாவின் மீதமுள்ள ஆட்சிக்காலம் அவருடைய ஆட்சியின் பிற்காலமாகும். சிதேக்கியாவினுடைய ஆட்சிக்காலத்தின் முன்பகுதிக்கும், பின்பகுதிக்கும் ஏராளமான வித்தியாசங்கள் உள்ளது. அவர் முதல் நான்கு வருஷங்களில், பாபிலோன் ராஜாவுக்கு கீழ்ப்படிந்து, அவருக்கு கப்பம் செலுத்தி ஆட்சிசெய்தார். அதன் பின்பு சிதேக்கியா பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாக கலகம்பண்ணினார்.

சிதேக்கியா தன்னுடைய ஆட்சிக்காலத்தின் நாலாம் வருஷத்தில் பாபிலோன் தேசத்திற்குப் போனார். "யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா ராஜ்யபாரம்பண்ணும் நாலாம் வருஷத்திலே பாபிலோனுக்குப் போன சமயத்தில் அவனோடே கூடப்போன மசெயாவின் மகனாகிய நேரியாவின் குமாரனும் சாந்தகுணமுள்ள பிரபுவுமாகிய செராயாவுக்கு எரேமியா தீர்க்கதரிசி கற்பித்த வார்த்தை" (எரே 51:60).

சிதேக்கியா ராஜா பாபிலோனுக்கு நேரடியாகப் போனதினால், அவருக்கும் பாபிலோன் ராஜாவுக்கும் இடையே ஏற்பட்டிருக்கிற கருத்து வேறுபாடுகள் முடிவுக்கு வந்துவிடும் என்று ஜனங்கள் நம்பினார்கள். நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தின்மீது யுத்தம்பண்ணுவதை நிறுத்திவிடுவார் என்றும் யூதாவின் மனுஷர் எதிர்பார்த்தார்கள். இந்த சூழ்நிலையில் கள்ளத்தீர்க்கதரிசிகள், தங்களுடைய கற்பனையான வார்த்தைகளைச் சொல்லி, சிதேக்கியா ராஜாவை திசை திருப்புகிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசனம் சொன்னவர்களில் அனனியா என்பவனும் ஒருவன்.

அனனியா அசூரின் குமாரன். இவன் கிபியோன் ஊரைச் சேர்ந்தவன். அனனியா கர்த்தருடைய ஆலயத்திலே ஆசாரியர்களும் சகல ஜனங்களும் பார்த்திருக்க, எரேமியாவை நோக்கி தீர்க்கதரிசனம் சொல்லுகிறான். கர்த்தருடைய ஆலயத்தில் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தாலும், அனனியாவின் பார்வை எரேமியாவின் பக்கம் திரும்பியிருக்கிறது. அவன் எரேமியாவுக்கு விரோதமாய் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான். அவன் எரேமியா சொன்ன வார்த்தைகளுக்கு எதிர்த்து நிற்கிறான். எரேமியா கர்த்தருடைய நாமத்தினால் பொய்வார்த்தைகளை சொல்லுகிறான் என்று அனனியா எரேமியாவின்மீது குற்றம் சொல்லுகிறான்.

பாபிலோன் தேசத்தார் இப்போது யூதாவின்மீதும் எருசலேமின்மீதும் ஆட்சிசெய்கிறார்கள். பாபிலோன் ராஜாவின் நுகம் சீக்கிரத்தில் முறிந்துபோகும் என்பதே அனனியாவின் தீர்க்கதரிசனம். இன்னும் இரண்டு வருஷகாலத்தில் பாபிலோன் ராஜாவின் நுகத்தை கர்த்தர் முறித்துப்போடுவார் என்று, அனனியா கர்த்தருடைய நாமத்தினாலே பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான்.

மேலும் "பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இவ்விடத்திலிருந்து எடுத்துப் பாபிலோனுக்குக் கொண்டுபோன கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளையெல்லாம் நான் இரண்டு வருஷகாலத்திலே இவ்விடத்துக்குத் திரும்பக் கொண்டுவரப்பண்ணுவேன்" (எரே 28:3) என்றும் கர்த்தர் சொல்லுவதாக அனனியா சொல்லுகிறான்.

தேவாலயத்தின் பணிமுட்டுகள் எருசலேமுக்கு திரும்பக் கொண்டு வரப்படும்போது, பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போனவர்கள் எல்லோரும் எருசலேமுக்கு திரும்பி வருவார்கள் என்றும் அனனியா தீர்க்கதரிசனம் சொல்லுகிறான்.

"யோயாக்கீமின் குமாரனாகிய எகொனியா என்கிற யூதாவுடைய ராஜாவையும் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்ட யூதர் அனைவரையும் நான் இவ்விடத்துக்குத் திரும்பிவரப்பண்ணுவேன்" (எரே 28:4) என்று கர்த்தர் சொன்னதாக அனனியா சொல்லுகிறான். தான் ஏற்கெனவே சொன்னதுபோல, இப்போது மறுபடியுமாக "பாபிலோன் ராஜாவின் நுகத்தை உடைப்பேன்" என்று கர்த்தர் சொன்னதாக அனனியா சொல்லுகிறான்.

எரேமியா சொன்ன தீர்க்கதரிசனமோ, அனனியா சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு நேர்விரோதமாகயிருக்கிறது. பாபிலோன் ராஜாவின் நுகம் யூதாவின் மனுஷர்மீது கயிறுகளால் இறுகக்கட்டப்பட்டிருக்கும் என்றும், யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்தில் எழுபது வருஷங்களாக சிறையிருப்பிலிருப்பார்கள் என்றும் எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லியிருக்கிறார். அனனியாவோ, சிறையிருப்புக்காலம் இரண்டு வருஷத்தில் முடிந்துபோகும் என்று சொல்லுகிறான்.

அனனியாவும் எரேமியாவும் கர்த்தருடைய நாமத்தினால் தான் பேசுகிறார்கள். ஆனால் அவர்களுடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் வித்தியாசமாயிருக்கிறது. இவர்களில் யார் சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறதோ, அவர் மாத்திரமே கர்த்தருடைய மெய்யான தீர்க்கதரிசி. மற்றவர் கள்ளத்தீர்க்கதரிசி. யூதாவின் மனுஷர்கள் மாறுபாடான தீர்க்கதரிசன செய்திகளைக் கேட்டு குழப்பத்திலிருக்கிறார்கள்.

அனனியா யூதாவின் மனுஷருக்கு சந்தோஷமான செய்தியைத்தான் சொல்லுகிறார். கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு சந்தோஷத்தைக்கொடுக்கும் செய்திகளைச் சொல்லுவதற்குப் பதிலாக, கர்த்தருடைய செய்தியை உண்மையாய்ச் சொல்லவேண்டும். ஜனங்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்ப அவர்களை வழிநடத்தவேண்டும். தாங்கள் இழந்துபோன ஆசீர்வாதங்கள் தங்களுக்கு சீக்கிரத்தில் வரவேண்டும் என்பதைவிட, தாங்கள் கர்த்தரிடத்தில் சீக்கிரத்தில் திரும்பவேண்டும் என்று ஜனங்கள் எதிர்பார்க்கவேண்டும்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களுடைய பாவங்களை கண்டித்து உணர்த்தவில்லை. ஜெபம்பண்ணுவதற்கு அவர்களை வழிநடத்தவில்லை. கர்த்தருடைய முகத்தைத் தேடவேண்டுமென்று அவர்களுக்கு ஆலோசனை சொல்லவுமில்லை. கர்த்தரிடத்தில் திரும்பி வருவதற்கு ஏற்ற உபதேசங்களையும் கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு சொல்லவில்லை. அவர்களுக்கு ஆசீர்வாதம் மறுபடியும் வரும் என்று மாத்திரமே சொல்லுகிறார்கள். அவர்கள் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். கர்த்தர் அவர்கள் மத்தியில் வாசம்பண்ணவேண்டும். அதுவே அவர்களுக்கு மெய்யான ஆசீர்வாதம்.

அனனியா தீர்க்கதரிசி கர்த்தருடைய நாமத்தினால் யூதாவின் மனுஷருக்கு தற்காலிகமான ஆசீர்வாதங்களை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களைப்பற்றி அனனியா அதிகமாய்ப் பேசுகிறார். ஆவிக்குரிய நன்மைகளைப்பற்றி அனனியா ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. கர்த்தர் எப்போதுமே தம்முடைய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய கிருபைகளையும், ஆவிக்குரிய இரக்கங்களையும் வாக்குப்பண்ணுகிறார்.

"நான் கர்த்தர் என்று அறியும் இருதயத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்; அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 24:7).

நம்மிடத்தில் உலகப்பிரகாரமான ஐசுவரியம் எவ்வளவு இருக்கிறது என்பது முக்கியமல்ல. நம்மிடத்தில் கர்த்தரை அறியும் இருதயம் இருக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய தேவனாயிருக்கவேண்டும். நாம் கர்த்தருடைய பிள்ளைகளாயிருக்கவேண்டும். இதுவே நமக்கு மெய்யான ஆசீர்வாதம்.

எரேமியா தீர்க்கதரிசி
எரே 28:5-9

எரே 28:5. அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசி ஆசாரியர்கள் பார்த்திருக்கவும், கர்த்தருடைய ஆலயத்தில் நின்றிருந்த ஜனங்களெல்லாரும் பார்த்திருக்கவும் அனனியா தீர்க்கதரிசியை நோக்கி:

எரே 28:6. ஆமென், கர்த்தர் அப்படியே செய்வாராக; கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளையும் சிறைப்பட்டுப்போன அனைவரையும் பாபிலோனிலிருந்து திரும்பிவரப்பண்ணுவாரென்று நீ தீர்க்கதரிசனமாகச் சொன்ன உன் வார்த்தைகளைக் கர்த்தர் நிறைவேற்றுவாராக.

எரே 28:7. ஆகிலும், உன் செவிகளும் சகல ஜனத்தின் செவிகளும் கேட்க நான் சொல்லும் வார்த்தையைக் கேள்.

எரே 28:8. பூர்வகாலமுதல் எனக்கு முன்னும் உனக்கு முன்னும் இருந்த தீர்க்கதரிசிகள் அநேகம் தேசங்களுக்கு விரோதமாகவும், பெரிய ராஜ்யங்களுக்கு விரோதமாகவும், யுத்தத்தையும் பஞ்சத்தையும் கொள்ளைநோயையும் குறித்துத் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

எரே 28:9. சமாதானம் வரும் என்று தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் சொல்லியிருக்க, அந்தத் தீர்க்கதரிசி சொன்ன வார்த்தையின்படியே வந்தால், அப்பொழுது அவன் கர்த்தர் மெய்யாய் அனுப்பின தீர்க்கதரிசியாக விளங்குவானென்று எரேமியா தீர்க்கதரிசி சொன்னான்.

அனனியாவின் கள்ளத்தீர்க்கதரிசனத்திற்கு எரேமியா பிரதியுத்தரம் சொல்லுகிறார். அனனியா தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன வார்த்தைகள் நிறைவேறவேண்டுமென்று எரேமியாவும் விரும்புகிறார். அனனியா யூதாதேசத்துக்கு நன்மையான வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார். அனனியாவுக்கு யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும், யூதாதேசத்தின்மீதும் மிகுந்த அன்பு இருக்கிறது. தேசத்தின்மீதுள்ள அன்பின் மிகுதியினால், அனனியா கர்த்தருடைய நாமத்தினால், யூதாதேசத்திற்கும், யூதாவின் மனுஷருக்கும் ஆசீர்வாதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

அனனியாவைப்போலவே எரேமியாவும் யூதாமனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் அன்பாயிருக்கிறார். ஆகையினால் அனனியா தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சொன்னபோது, "ஆமென், கர்த்தர் அப்படியே செய்வாராக" *(எரே 28:6)* என்று எரேமியா அனனியாவின் வார்த்தைகளை அங்கீகரிக்கிறார். யூதாதேசம் அழிந்துபோகக்கூடாது என்று எரேமியாவும் விரும்புகிறார்.

அனனியா கர்த்தருடைய நாமத்தினால் பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொன்னாலும், அவர் யூதாதேசத்திற்கு நன்மையான வார்த்தைகளையே சொல்லுகிறார். அவர் சொன்ன வார்த்தைகள் நிறைவேறினால் அது எல்லோருக்கும் நலமாயிருக்கும் என்று எரேமியாவும் எதிர்பார்க்கிறார். இதன் நிமித்தமாக, அனனியா சொன்ன வார்த்தைகள் நிறைவேறவேண்டுமென்று, எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்.

"ஆமென், கர்த்தர் அப்படியே செய்வாராக; கர்த்தருடைய ஆலயத்தின் பணிமுட்டுகளையும் சிறைப்பட்டுப்போன அனைவரையும் பாபிலோனிலிருந்து திரும்பிவரப்பண்ணுவாரென்று நீ தீர்க்கதரிசனமாகச் சொன்ன உன் வார்த்தைகளைக் கர்த்தர் நிறைவேற்றுவாராக" *(எரே 28:6)* என்று எரேமியா சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி இந்த வார்த்தைகளை அனனியாவிடம் தனிப்பட்ட முறையில் இரகசியமாய்ச் சொல்லவில்லை. கர்த்தருடைய ஆலயத்தில் ஆசாரியர்கள் பார்த்திருக்கவும், ஜனங்கள் எல்லோரும் பார்த்திருக்கவும், எரேமியா தீர்க்கதரிசி அனனியா தீர்க்கதரிசியிடம் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

எரேமியா ஏற்கெனவே யூதாவின் மனுஷருக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம் செய்திருக்கிறார். எரேமியா யூதாவின் மனுஷருக்கு விரோதமாகவும், எருசலேமின் குடிகளுக்கு விரோதமாகவும் கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னாலும், எரேமியா பல சமயங்களில் அவர்களுக்காக கர்த்தரிடத்தில் பரிந்துபேசுகிறார். ஜனங்கள் அழிந்துபோகவேண்டுமென்பது எரேமியாவின் விருப்பமல்ல. இது கர்த்தருடைய விருப்பமுமல்ல. ஜனங்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். இதுவே தீர்க்கதரிசியின் விருப்பம். பாவிகளெல்லோரும் செத்துப்போக வேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பமல்ல. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம்.

அனனியா சொன்ன வார்த்தைகளை கர்த்தர் நிறைவேற்றவேண்டும் என்று எரேமியாவும் விரும்புகிறார். ஆனால் அவை கர்த்தருடைய வார்த்தைகளல்ல என்பது எரேமியாவுக்கு தெரிந்திருக்கிறது. தீர்க்கதரிசிகள் சொன்ன வார்த்தைகள் நிறைவேறினால் மாத்திரமே அவர்கள் மெய்யான தீர்க்கதரிசிகள். கர்த்தர் அவர்களை மாத்திரமே தம்முடைய ஊழியத்திற்கு அனுப்பியிருக்கிறார். தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் நிறைவேறவில்லையென்றால் அவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள். அவர்கள் தங்களுடைய சொந்த வார்த்தைகளை கர்த்தருடைய நாமத்தினால் சொல்லுகிறார்கள். கர்த்தர் கள்ளத்தீர்க்கதரிசிகளை அனுப்பவுமில்லை. அவர்கள் சொன்ன வார்த்தைகளை அங்கீகரிக்கவுமில்லை.

எரேமியா தீர்க்கதரிசி அனனியாவிடம் தீர்க்கதரிசன ஊழியத்தைப்பற்றி விரிவாகச் சொல்லுகிறார். "உன் செவிகளும், சகல ஜனத்தின் செவிகளும் கேட்ட நான் சொல்லும் வார்த்தையைக் கேள்" (எரே 28:7) என்று எரேமியா தெய்வீக அதிகாரத்தோடு அனனியாவிடம் பேசுகிறார்.

"பூர்வகாலமுதல் எனக்கு முன்னும் உனக்கு முன்னும் இருந்த தீர்க்கதரிசிகள் அநேகம் தேசங்களுக்கு விரோதமாகவும், பெரிய ராஜ்யங்களுக்கு விரோதமாகவும், யுத்தத்தையும் பஞ்சத்தையும் கொள்ளைநோயையும் குறித்துத் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்" (எரே 28:8) என்று எரேமியா இதுவரையிலும் தீர்க்கதரிசனம் சொன்னவர்களின் சரித்திரத்தை இங்கு சுருக்கமாகச் சொல்லுகிறார். இவர்கள் எல்லோருமே கர்த்தருடைய நாமத்தினால் தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

நல்ல தீர்க்கதரிசிகள் கர்த்தருக்கு பயந்து, கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய்ச் சொல்லுவார்கள். தேசங்களுக்கு விரோதமாகவும், பெரிய ராஜ்யங்களுக்கு விரோதமாகவும் கர்த்தருடைய வார்த்தையை பயப்படாமல் பேசுவார்கள். அனனியாவோ மனுஷருக்குப் பயப்படுகிறான். மனுஷரை பிரியப்படுத்த விரும்புகிறான். இதனால் அவன் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லாமல், தன்னுடைய சொந்த வார்த்தைகளை, மனுஷர் விரும்பும் பிரகாரமாகப் பேசுகிறான்.

பூர்வகாலம் முதல் ஏராளமான தீர்க்கதரிசிகள் யுத்தத்தையும், பஞ்சத்தையும், கொள்ளைநோயையும் குறித்து தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அவர்களைப் போலவே எரேமியாவும் இதைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். மற்ற தீர்க்கதரிசிகள் பஞ்சத்தைப்பற்றியும் கொள்ளைநோயைப்பற்றியும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும்போது, அவை கர்த்தரிடத்திலிருந்து வந்திருக்கிற வார்த்தை என்று ஜனங்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இதே வார்த்தையை எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும்போது, அவர்கள் எரேமியாவின்மீது குற்றம் சொல்லுகிறார்கள். எரேமியாவோ மற்ற தீர்க்கதரிசிகளைப்போலவே கர்த்தருடைய செய்தியைச் சொல்லுகிறார்.

அனனியாவைப்போல கள்ளத்தீர்க்கதரிசிகள் "சமாதானம் வரும்" என்று தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். அவர்கள் சொன்னதுபோல சமாதானம் வந்தால், அவர்கள் மெய்யாகவே கர்த்தர் அனுப்பின தீர்க்கதரிசிகள். சமாதானம் வரவில்லையென்றால், கர்த்தர் அவர்களை அனுப்பவில்லை. அவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகள்.

மரநுகத்தை உடைத்துப்போட்டான் எரே 28:10,11

எரே 28:10. அப்பொழுது அனனியா என்கிற தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை எடுத்து அதை உடைத்துப் போட்டான்.

எரே 28:11. பின்பு அனனியா சகல ஜனங்களுக்கு முன்பாகவும்: இந்தப்பிரகாரமாக இரண்டு வருஷகாலத்திலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய நுகத்தைச் சகல ஜாதிகளின் கழுத்திலுமிருந்து விலக உடைத்துப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசி தன் வழியே போனான்.

அனனியா என்னும் கள்ளத்தீர்க்கதரிசி எரேமியாவுக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறான். அவன் பொய்யனாகயிருந்தாலும், எரேமியாவுக்கு விரோதமாக சதி ஆலோசனைபண்ணுகிறான். எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்தில் மரநுகம் மாட்டப்பட்டிருக்கிறது. நேபுகாத்நேச்சார் தேசங்களை அடிமைப்படுத்துவான் என்பதற்கு எரேமியாவின் கழுத்திலிருக்கும் நுகம் ஒரு அடையாளமாகும். எரேமியா சொல்லுகிற தீர்க்கதரிசன செய்திக்கு, அவருடைய கழுத்திலுள்ள நுகம் அவருக்கு சாட்சி சொல்லுகிறது.

அனனியாவோ எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த மரநுகத்தை எடுத்து அதை உடைத்துப்போடுகிறான். இப்போது எரேமியாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறும் என்பதற்கு அடையாளமில்லாமல் போயிற்று. மரநுகத்தை உடைத்துப் போட்டதினால், எரேமியா சொன்ன வார்த்தைகள் பொய்யாய்ப்போகும் என்று அனனியா நினைக்கிறான். அனனியாவினிடத்தில் பொய்யின் ஆவி கிரியை நடப்பிக்கிறது. பொய்யின் ஆவி கள்ளத்தீர்க்கதரிசியின் நாவை ஆளுகை செய்கிறது. பொய் பேசுகிறவர்கள் சத்தியத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள்.

அனனியா எரேமியாவின் கழுத்திலிருந்த நுகத்தை எடுத்து உடைத்துப்போட்டதுமல்லாமல், அதற்கான காரணத்தையும் சொல்லுகிறான். கர்த்தருடைய வழிநடத்துதலினால் தான் மரநுகத்தை உடைத்துப்போட்டதாக அனனியா பொய்சொல்லுகிறான். அனனியா எரேமியாவின் கழுத்திலிருந்த நுகத்தை உடைத்துப்போட்டு, "இந்தப்பிரகாரமாக இரண்டு வருஷகாலத்திலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய நுகத்தைச் சகல ஜாதிகளின் கழுத்திலுமிருந்து விலக உடைத்துப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 28:11) என்று சொல்லுகிறார்.

அனனியா இந்த வார்த்தையை சகல ஜனங்களுக்கும் முன்பாக துணிந்து சொல்லுகிறான். அனனியா பொய்சொன்னாலும், அவனுடைய வார்த்தையில் கலக்கமோ, நடுக்கமோ, தயக்கமோ இல்லை. பொய்யின் ஆவி அவனை ஆளுகை செய்கிறது. அவன் பொய்யை மெய்யைப்போல தெளிவாகவும், நிதானமாகவும் பேசுகிறான்.

அனனியா பொய்சொல்லும்போது, கர்த்தருடைய நாமத்தையும் பயன்படுத்துகிறான். கர்த்தர் பாபிலோன் ராஜாவினுடைய நுகத்தை சகல ஜாதிகளின் கழுத்திலிருந்து விலக உடைத்துப்போடுவார் என்று அனனியா சொல்லுகிறான். இது கர்த்தர் சொல்லாத வார்த்தை. அனனியா இந்த வார்த்தையை சுயமாய்க் கற்பனை செய்து பேசுகிறான். தன்னுடைய பொய்யின் வார்த்தைக்கு கர்த்தருடைய நாமத்தையும் பயன்படுத்திக்கொள்கிறான். இந்த சம்பவம் இன்னும் இரண்டு வருஷகாலத்தில் நிறைவேறும் என்று சொல்லி, தன்னுடைய பொய்த்தீர்க்கதரிசனத்தை, உண்மைபோல பேசுகிறான்.

அனனியா கர்த்தருக்கு விரோதமாகவும், எரேமியாவுக்கு விரோதமாகவும் பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொன்னாலும், எரேமியா நீடிய பொறுமையோடிருக்கிறார். அனனியா தன்னுடைய வார்த்தைகளை சொல்லும் வரையிலும் எரேமியா அதை பொறுமையோடு கேட்டுவிட்டு அதன்பின்பு, எரேமியா தன் வழியே போகிறார். எரேமியாவால் அனனியாவுக்கு மறுஉத்தரவு கொடுக்க முடியும். ஆனாலும் தேவனுடைய சித்தம் நிறைவேறும் வரையிலும் தான் காத்திருக்கவேண்டும் என்று எரேமியா தீர்மானம்பண்ணுகிறார். துன்மார்க்கனுக்கு நாம் பதில் செய்வதைவிட, கர்த்தர் பதில் செய்வதே நீதியாயிருக்கும்.

எரேமியாவுக்கு அனனியாவைக் குறித்து இதற்குமேல் ஒரு வார்த்தையும் வரவில்லை. கர்த்தருடைய வார்த்தை வரும் வரையிலும் எரேமியா பொறுமையோடு காத்திருக்கிறார். கர்த்தர் அனனியாவுக்கு ஒரு விசேஷித்த செய்தியைக் கொடுப்பார் என்று எரேமியா எதிர்பார்க்கிறார். அது வரையிலும் எரேமியா அனனியாவினிடம் தன்னுடைய சொந்த வார்த்தைகளைப் பேசாமல், தன் வழியே அமைதியாகப் போய்விடுகிறார்.

இருப்பு நுகம்
எரே 28:12-17

எரே 28:12. அனனியா என்கிற தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை உடைத்துப்போட்ட பிற்பாடு, கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:

எரே 28:13. நீ போய், அனனியாவை நோக்கி: நீ மர நுகத்தை உடைத்தாய்; அதற்குப் பதிலாக இருப்பு நுகத்தை உண்டுபண் என்று கர்த்தர் சொன்னார்.

எரே 28:14. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைச் சேவிக்கும்படிக்கு இருப்பு நுகத்தை இந்த எல்லா ஜாதிகளுடைய கழுத்தின்மேலும் போட்டேன்; அவர்கள் அவனைச் சேவிப்பார்கள். வெளியின் மிருகஜீவன்களையும் அவனுக்கு ஒப்புக்கொடுத்தேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

எரே 28:15. பின்பு எரேமியா தீர்க்கதரிசி அனனியா என்கிற தீர்க்கதரிசியை நோக்கி: இப்போதும் அனனியாவே, கேள்; கர்த்தர் உன்னை அனுப்பினதில்லை; நீயோ இந்த ஜனத்தைப் பொய்யை நம்பும்படிச் செய்தாய்.

எரே 28:16. ஆகையால், இதோ, உன்னைப் பூமியின்மேல் இராதபடிக்கு அகற்றிவிடுவேன்; இந்த வருஷத்திலே நீ சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்; கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் உண்டாகப் பேசினாயே என்றான்.

எரே 28:17. அப்படியே அனனியா என்கிற தீர்க்கதரிசி அவ்வருஷத்திலேதானே ஏழாம் மாதத்தில் செத்துப்போனான்.

எரேமியா எதிர்பார்த்த பிரகாரம் கர்த்தருடைய வார்த்தை அவருக்கு உண்டாயிற்று. அனனியா என்கிற தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை உடைத்துப்போட்ட பிற்பாடு, கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று (எரே 28:12).

எரேமியாவுக்கும் கள்ளத்தீர்க்கதரிசியாகிய அனனியாவுக்கும் இடையேயுள்ள வழக்கில் கர்த்தர் தம்முடைய நீதியான தீர்ப்பைச் சொல்லுகிறார். எரேமியாவின் கழுத்திலிருந்த நுகத்தை அனனியா உடைத்துப்போட்ட பின்பு, எரேமியா தீர்க்கதரிசி தன் வழியே அமைதியாகப் போய்விடுகிறார். அனனியாவுக்கு விரோதமாக எரேமியா தூஷண வார்த்தைகள் ஒன்றையும் பேசவில்லை. எரேமியா அனனியாவைக் கடிந்துகொள்ளவுமில்லை. ஆனாலும் கர்த்தர் சீக்கிரத்தில் எரேமியாவின் வாயில் தம்முடைய வார்த்தைகளைப் போடுகிறார்.

எரேமியாவுக்கு கர்த்தர் மீதுள்ள நம்பிக்கை இன்னும் குறையவில்லை. கர்த்தர் தனக்கு கொடுத்த செய்தியை மாத்திரமே, எரேமியா யூதாவின் மனுஷருக்கு தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். அவர் தேவனுடைய நாமத்தினால் பேசினார். எரேமியாவின் மனதில் குழப்பம் எதுவுமில்லை. ஆனால் அனனியா எரேமியாவுக்கு விரோதமாக குழப்பத்தை உண்டுபண்ணுகிறான். அவன் எரேமியாவுக்கு எதிர்த்து நிற்கிறான்.

நாம் கர்த்தருடைய வார்த்தையைப் பேசும்போது, கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். கர்த்தருடைய சத்தியத்தைச் சொல்ல வேண்டும். மனுஷர் நம்முடைய வார்த்தைகளுக்கு ஆதரவு கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், நாம் கர்த்தருடைய வார்த்தையை அறிவிப்பதில் உண்மையுள்ளவர்களாகயிருக்கவேண்டும். மனுஷருடைய விருப்பத்தின் பிரகாரம் ஊழியம் செய்யாமல், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் ஊழியம் செய்யவேண்டும். நாம் பேசுகிறது கர்த்தருடைய சத்திய வார்த்தை. சத்தியம் எப்போதுமே ஜெயிக்கும்.

எரேமியாவின் கழுத்தில் மரத்தினால் செய்யப்பட்ட நுகம் பூட்டப்பட்டிருந்தது. அனனியா அந்த மரநுகத்தை எடுத்து அதை உடைத்துப்போடுகிறான். கர்த்தரோ எரேமியாவிடம், மரநுகத்திற்குப் பதிலாக, இருப்பு நுகத்தை உண்டுபண்ணச் சொல்லுகிறார். இருப்பு நுகத்தை எளிதில் உடைக்க முடியாது.

"பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைச் சேவிக்கும்படிக்கு இருப்பு நுகத்தை இந்த எல்லா ஜாதிகளுடைய கழுத்தின்மேலும் போட்டேன்; அவர்கள் அவனைச் சேவிப்பார்கள். வெளியின் மிருகஜீவன்களையும் அவனுக்கு ஒப்புக் கொடுத்தேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்" (எரே 28:14) என்று எரேமியா அனனியாவிடம் சொல்லவேண்டும்.

இருப்பு நுகம் அதிகபாரமாயிருக்கும். மரநுகத்தை சாதாரண கயிற்றால் கட்டிவிடலாம். இருப்பு நுகத்தை இரும்பு சங்கிலிகளால் கட்டவேண்டும். பாபிலோன் ராஜாவின் நுகம் யூதாவின் மனுஷர் மீது இருப்பு நுகத்தைப்போல சுமத்தப்படும். கர்த்தர் எல்லா ஜாதிகளுடைய கழுத்தின்மேலும் இருப்பு நுகத்தைப் போடுகிறார். கர்த்தர் சகல ஜாதிகளையும் நேபுகாத்நேச்சாரை சேவிக்கும்படி ஒப்புக்கொடுக்கிறார். மனுஷரோடு சேர்ந்து, அவர்களுடைய வெளியின் மிருகஜீவன்களையும் கர்த்தர் நேபுகாத்நேச்சாருக்கு ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

மனுஷர்கள் தங்களுடைய துன்மார்க்கத்தினால் மிருகங்களைப்போல அழிந்துபோகிறார்கள். மிருகங்களைப்போல இருக்கிற மனுஷர்களை மிருகங்களைப் போலவே நடத்தவேண்டும். மிருகங்களுடைய கழுத்தின்மீது நுகங்களைப்போட்டு அடிமைப்படுத்துவதுபோல, பாவியான மனுஷர்களுடைய கழுத்தின்மீதும் நுகங்கள் போடப்பட்டு அடிமைப்படுத்தப்படுகிறார்கள். நேபுகாத்நேச்சார் யூதாவின் மனுஷரையும், சகல ஜாதிகளையும் மனுஷரைப்போல நடத்தாமல் மிருகங்களைப்போலவே நடத்துகிறான். அவன் அந்த அளவுக்கு கொடிய குணமுள்ளவன். அவன் மனுஷர்மீது இரக்கம் காண்பிக்கமாட்டான். பாபிலோன் ராஜா தனக்குப் பிடித்தவனை உயிரோடு வைத்திருப்பான். மற்றவர்களை தன்னுடைய பட்டயத்தால் வெட்டி கொன்றுபோடுவான். அவனுக்கு விரோதமாக யாராலும் எதிர்த்து கேள்வி கேட்கமுடியாது.

கர்த்தர் அனனியாவை அனுப்பினதில்லை. ஆனாலும் அவன் தன்னுடைய சாதுரிய வார்த்தைகளினாலும், நயமான பொய்வார்த்தைகளினாலும் இந்த ஜனத்தை பொய்யை நம்பும்படி செய்தான். ஆகையினால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவன்மீது வருகிறது. அனனியா கர்த்தருக்கு விரோதமாக கலகமுண்டாக பேசினான். "ஆகையால், இதோ, உன்னைப் பூமியின்மேல் இராதபடிக்கு அகற்றிவிடுவேன்; இந்த வருஷத்திலே நீ சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 28:16). கர்த்தருடைய வார்த்தை வெளிப்பட்ட பிரகாரமாகவே, அனனியா என்கிற கள்ளத்தீர்க்கதரிசி, அவ்வருஷத்திலேதானே, ஏழாம் மாதத்தில் செத்துப்போகிறான் (எரே 28:17).

அனனியாவுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை எரேமியா தைரியமாய்ச் சொல்லுகிறார். அனனியா கர்த்தருடைய நாமத்தை தன்னுடைய சொந்த லாபத்திற்கு பயன்படுத்தினான். தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது. அனனியாவோ ஜனங்கள் மத்தியில் பொய்யாய்த் தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்தினான். அவர்களை பொய்யை நம்பும்படியாகவும் செய்தான்.

அனனியா ஜனங்கள் மத்தியில் தீர்க்கதரிசனம் சொன்னபோது, "இன்னும் இரண்டு வருஷத்தில் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் நுகம் முறிந்துபோகும்" என்று சொன்னான். சிதேக்கியா அரசாள துவங்கின ஐந்தாம் மாதத்தில் அனனியா இந்த வார்த்தைகளைச் சொன்னான். ஆனால் ஏழாம் மாதத்தில் அனனியா செத்துப்போகிறான். இரண்டு வருஷத்தில் நேபுகாத்நேச்சாரின் நுகம் முறிந்துபோகும் என்று அனனியா சொன்னான். ஆனால் அனனியாவின் நுகம் இரண்டு மாதத்திலேயே முறிந்துபோயிற்று. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும் காலமாயிருக்கிறது.

29 அதிகாரம்

எரேமியாவுக்கும் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் இடையே வாக்குவாதம் நடைபெறுகிறது. இதுவரையிலும் அவர்கள் பிரசங்கச் செய்திகள் மூலமாய் விவாதம் பண்ணினார்கள். இந்த அதிகாரத்திலோ அவர்கள் நிருபங்களை எழுதி வாக்குவாதம்பண்ணுகிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்களுக்கு எரேமியா எருசலேமிலிருந்து நிருபத்தை எழுதுகிறார். தன்னுடைய நிருபத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு விரோதமான செய்திகளையும் சொல்லுகிறார் (எரே 29:1-3). பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்கள், பாபிலோன் தேசத்தின் சமாதானத்தைத் தேடவேண்டும். பாபிலோன் தேசத்திற்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவேண்டும் (எரே 29:4-7).

பாபிலோன் தேசத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகள் கர்த்தருடைய நாமத்தினால் பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் சீக்கிரத்தில் விடுவிக்கப்படுவார்கள் என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். அவர்களுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கக்கூடாது என்று எரேமியா சிறையிருப்பிலிருக்கிற யூதாவின் மனுஷரை எச்சரிக்கிறார் (எரே 29:8,9). அவர்கள் எழுபது வருஷம் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்க வேண்டுமென்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார் (எரே 29:10-14).

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போகாமல் யூதாதேசத்திலே தங்கியிருக்கிறவர்களுக்கு அழிவு வரும் (எரே 29:15-19). பாபிலோன் தேசத்தில் கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிற இரண்டு தீர்க்கதரிசிகள் அழிந்து போவார்கள் என்றும் எரேமியா சொல்லுகிறார். இந்த தீர்க்கதரிசிகள் பாவத்தில் ஜீவிக்கிறார்கள். அவர்கள் ஜனங்களுக்கு தவறான முன்மாதிரிகளாயிருக்கிறார்கள் (எரே 29:20-23).

பாபிலோன் தேசத்தில் செமாயா என்னும் கள்ளத்தீர்க்கதரிசி எருசலேமிலுள்ள ஆசாரியர்களுக்கு ஒரு நிருபம் எழுதுகிறான். எரேமியாவைத் துன்பப்படுத்துமாறு அவர்களைத் தூண்டிவிடுகிறான் (எரே 29:24-29). இப்படிப்பட்ட நிருபம் எழுதியதற்காக செமாயாவின்மீது கர்த்தருடைய கோபம் வரும் (எரே 29:30-32).

எரேமியாவின் நிருபம் எரே 29:1-7

எரே 29:1. எகொனியா என்னும் ராஜாவும், ராஜஸ்திரீயும், பிரதானிகளும், யூதாவிலும் எருசலேமிலுமுள்ள பிரபுக்களும், தச்சரும், கொல்லரும் எருசலேமை விட்டுப் புறப்பட்டுப்போன பிற்பாடு,

எரே 29:2. எரேமியா தீர்க்கதரிசி சிறைப்பட்டுப்போன மூப்பர்களில் மீதியானவர்களுக்கும், ஆசாரியர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும், நேபுகாத்நேச்சார் சிறைப்படுத்தி எருசலேமிலிருந்து பாபிலோனுக்குக் கொண்டுபோன சகல ஜனங்களுக்கும் எழுதி,

எரே 29:3. யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரிடத்தில் கொடுக்கும் படி சாப்பானின் குமாரனாகிய எலெயாசாரின் கையிலும், இல்க்கியாவின் குமாரனாகிய கெமரியாவின் கையிலும் கொடுத்து, எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு அனுப்பின நிருபத்தின் விபரம்:

எரே 29:4. இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர், தாம் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போகப் பண்ணின அனைவருக்கும் அறிவிக்கிறது என்னவென்றால்,

எரே 29:5. நீங்கள் வீடுகளைக் கட்டி, குடியிருந்து, தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைச் சாப்பிடுங்கள்.

எரே 29:6. நீங்கள் பெண்களை விவாகம்பண்ணி, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்று, உங்கள் குமாரருக்குப் பெண்களைக்கொண்டு, உங்கள் குமாரத்திகளைப் புருஷருக்குக் கொடுங்கள்; இவர்களும் குமாரரையும் குமாரத்திகளையும் பெறட்டும்; நீங்கள் அங்கே குறுகாமல் பெருகி,

எரே 29:7. நான் உங்களைச் சிறைப்பட்டுப்போகப் பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம் பண்ணுங்கள்; அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்களுக்கு, எரேமியா கர்த்தருடைய நாமத்தினால் ஒரு நிருபத்தை எழுதுகிறார். எகொனியா என்னும் ராஜாவும், ராஜஸ்திரீயும், பிரதானிகளும், யூதாவிலும் எருசலேமிலுமுள்ள பிரபுக்களும், தச்சரும், கொல்லரும் எருசலேமைவிட்டு பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகிறார்கள் (எரே 29:1).

யூதாவிலும் எருசலேமிலுமுள்ள பிரபுக்கள் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகும்போது, அவர்களோடுகூட தச்சரும், கொல்லரும் பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போகிறார்கள். எருசலேமின் அலங்கத்தில் இனிமேல் பழுது ஏற்பட்டால், அதைப் பழுதுபார்ப்பதற்கு அங்கே தச்சரோ அல்லது கொல்லரோ ஒருவருமில்லை. பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போகாமல், எருசலேமில் தங்கிவிடுகிறவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்புமில்லை.

எருசலேமிலே தங்கிவிட்டால் நேபுகாத்நேச்சார் தங்களைக் கொடுமைப்படுத்துவான் என்று பயந்து, ராஜாவும் ராஜஸ்திரீயும் பிரதானிகளும், பிரபுக்களும், தச்சரும், கொல்லரும் எருசலேமைவிட்டு பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போகிறார்கள். இதன் மூலமாய் நேபுகாத்நேச்சாரின் கோபம் தணியும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் நேபுகாத்நேச்சாரின் கோபம் குறையவில்லை. அவன் மறுபடியும் எருசலேமின்மீது யுத்தம்பண்ண வருகிறான். அப்போது நேபுகாத்நேச்சார் எருசலேமில் தங்கியிருக்கிற மூப்பர்களில் மீதியானவர்களையும், ஆசாரியர்களையும், தீர்க்கதரிசிகளையும் சிறைப்படுத்தி, பாபிலோனுக்கு கொண்டுபோகிறான் (எரே 29:2).

பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போகாமல் எருசலேமில் தங்கியிருக்கிறவர்கள் தங்கள் இருதயத்தில் பெருமையோடிருக்கிறார்கள். சிறைப்பட்டுப்போனவர்கள் எல்லோரும் தங்களைவிட மகாபாவிகள் என்று இவர்கள் தங்களுக்கு தாங்களே நினைத்துக் கொள்கிறார்கள். எருசலேமில் தங்கியிருக்கிறவர்கள் பரிசுத்தவான்கள் என்றும், பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போனவர்கள் மகாபாவிகள் என்றும், சிறைப்பட்டுப்போனவர்களும் நினைக்கிறார்கள்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு ஆறுதல் சொல்லும் வண்ணமாக எரேமியா இந்த நிருபத்தை அவர்களுக்கு எழுதுகிறார். யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு கப்பம் செலுத்தி, எருசலேமில் தங்கியிருக்கிறான். அவன் கப்பம் செலுத்துவதற்காக தன்னுடைய பிரதானிகளை பாபிலோன் தேசத்திற்கு அனுப்புகிறான். அவர்கள் நேபுகாத்நேச்சாருக்கு சிதேக்கியா கொடுத்த பொக்கிஷங்களையெல்லாம் கொடுத்து, தங்களுடைய அடிமைத்தனத்தைப் புதுப்பித்துக்கொள்ள பாபிலோனுக்குப் போகிறார்கள்.

நேபுகாத்நேச்சார் ராஜாவை சந்திப்பதற்கு, சிதேக்கியா ராஜா அனுப்புகிற பிரதானிகள் மூலமாய், எரேமியா தன்னுடைய நிருபத்தையும் கொடுத்தனுப்புகிறார். எரேமியாவின் நிருபம் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிற செய்தி. கர்த்தருடைய வார்த்தையை முக்கியமானவர்கள் மூலமாய் எரேமியா கொடுத்தனுப்புகிறார். சாப்பானின் குமாரனாகிய எலெயாசாரும், இல்க்கியாவின் குமாரனாகிய கெமரியாவும் சிதேக்கியா ராஜாவின் தூதர்களாக பாபிலோன் தேசத்திற்குப் போகிறார்கள். அவர்கள் நேபுகாத்நேச்சாரை சந்தித்து, சிதேக்கியா ராஜா கொடுத்தனுப்பிய பகுதி பணத்தையும், கப்பத்தொகையையும் பாபிலோன் தேசத்தில் கொடுக்கப்போகிறார்கள். எரேமியா இவ்விரு பிரதானிகள் மூலமாய், பாபிலோன் தேசத்தில் சிறைப்பட்டிருக்கிற யூதர்களுக்கு, தான் எழுதின நிருபத்தை கொடுத்தனுப்புகிறார்.

இந்த நிருபத்தை எரேமியா எழுதினாலும், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தரே, இந்த நிருபத்திலுள்ள செய்தியை சொல்லியிருப்பதாக எரேமியா எழுதுகிறார். "இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர், தாம் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போகப் பண்ணின அனைவருக்கும் அறிவிக்கிறது என்னவென்றால்" (எரே 29:4) என்னும் வாக்கியத்தை தன்னுடைய நிருபத்தின் ஆரம்பத்தில் எரேமியா எழுதுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். "இஸ்ரவேலின் தேவன் சேனைகளின் கர்த்தராயிருக்கிறார்" என்னும் வாக்கியத்தை வாசிக்கும்போது அவர்களுடைய இருதயத்தில் மிகுந்த ஆறுதல் உண்டாகும். கர்த்தரால் தங்களுக்கு உதவிசெய்ய முடியும் என்றும், அவரால் தங்களை சிறையிருப்பிலிருந்து விடுதலை பண்ண முடியும் என்றும் அவர்களுக்குள் நம்பிக்கை பிறக்கும்.

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், அவர்களுடைய தேவன் இன்னும் இஸ்ரவேலின் தேவனாகவே இருக்கிறார். அவர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கும்போது, கர்த்தர் தங்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவுகூருகிறார்கள். பாபிலோன் தேசத்தில் விக்கிரகாராதனை அதிகமாயிருக்கிறது. அந்நிய தெய்வங்களைப் பின்பற்றாமலும், விக்கிரகங்களுக்கு தூபங்காட்டாமலும், கர்த்தரையே தங்கள் தெய்வமாக ஆராதிப்பதற்கு, கர்த்தருடைய உடன்படிக்கையின் வார்த்தைகள் அவர்களுக்கு உதவியாயிருக்கிறது.

எரேமியா எழுதின நிருபத்தில், சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு ஆறுதலான வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சிறையிருப்பிலிருந்தாலும், அவர்கள் இன்னும் கர்த்தருடைய ஜனமாகவே இருக்கிறார்கள். சோர்ந்துபோயிருக்கிற அவர்களை எரேமியா தன்னுடைய நிருபத்தின் மூலமாய் உற்சாகப்படுத்துகிறார். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற தம்முடைய ஜனத்தை கர்த்தர் இன்னும் கைவிட்டுவிடவில்லை, அவர்களை இன்னும் ஒதுக்கி தள்ளிவிடவில்லை என்பதை எரேமியாவின் நிருபம் உறுதிபண்ணுகிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். கர்த்தரைவிட்டு விலகிப்போனார்கள். அந்நிய தெய்வங்களை பின்பற்றினார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்தது. அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்தி, அவர்களை கண்டித்து திருத்த வேண்டும் என்பதற்காக, கர்த்தர் அவர்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தார்.

யூதர்கள் அந்நிய தேசத்து சிறையிருப்பிலே அதிகமான துன்பங்களை அனுபவித்தார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தாலும், அவர்களை கைவிட்டுவிடவில்லை. அவர்களை ஒதுக்கி தள்ளிவிடவுமில்லை. அவர்கள் இன்னும் கர்த்தருடைய இஸ்ரவேலாகவே இருக்கிறார்கள். கர்த்தர் இன்னும் இஸ்ரவேலின் தேவனாகவே இருக்கிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே தம்முடைய ஜனங்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தார். கர்த்தரே இஸ்ரவேல் ஜனங்களை பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போகப் பண்ணினார் (எரே 29:4,7). கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாரை பாபிலோனுக்கு சிறைப்பட்டுப் போகப்பண்ணினதினால், கர்த்தர் தங்களை அழித்துப்போடமாட்டார் என்றும், தங்களை தீங்கு அணுகுவதற்கு அனுமதிக்கமாட்டார் என்றும் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தர்மீது நம்பிக்கையாயிருக்கலாம். இஸ்ரவேல் ஜனங்களை அழிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய நோக்கமல்ல. அவர்களை கண்டித்து திருத்தவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கும்போது, அவர்கள் அந்த தேசத்தின் நன்மைகளை அனுபவிக்கவேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். அவர்கள் அங்கே குறுகாமல் பெருகவேண்டும். "நீங்கள் வீடுகளைக் கட்டி, குடியிருந்து, தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைச் சாப்பிடுங்கள். நீங்கள் பெண்களை விவாகம்பண்ணி, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்று, உங்கள் குமாரருக்குப் பெண்களைக்கொண்டு, உங்கள் குமாரத்திகளைப் புருஷருக்குக் கொடுங்கள்; இவர்களும் குமாரரையும் குமாரத்திகளையும் பெறட்டும்" *(எரே 29:5,6)* என்று பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களைக் குறித்து கர்த்தர் சொல்லுகிறார்.

மேலும் "நான் உங்களைச் சிறைப்பட்டுப்போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம்பண்ணுங்கள்; அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும்" *(எரே 29:7)* என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறவர்களுக்கு சீக்கிரத்தில் விடுதலை கிடைக்காது. கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். இன்னும் இரண்டு வருஷத்திற்குள் அவர்கள் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். ஜனங்கள் இதை நம்பி, பாபிலோன் தேசத்தில் தங்களுக்கு வீடுகளைக் கட்டாமல், தோட்டங்களை நாட்டாமல், தங்களுடைய விடுதலையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் சொன்ன பிரகாரம் அவர்களுக்கு இரண்டு வருஷத்திற்குள் விடுதலை கிடைக்காது. அவர்கள் எழுபது வருஷங்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கவேண்டும். ஆகையினால் அவர்கள் பாபிலோன் தேசத்தில் வீடுகளைக்கட்டி குடியிருக்கவேண்டுமென்று கர்த்தர் சொல்லுகிறார். தோட்டங்களை நாட்டி அவைகளின் கனிகளை சாப்பிடுமாறு சொல்லுகிறார். பெண்களை விவாகம் செய்து குடும்ப வாழ்க்கையை நடத்துமாறும் கர்த்தர் சொல்லுகிறார். தங்கள் சொந்த தேசத்தில் அவர்கள் எப்படி ஜீவிப்பார்களோ, அப்படியே அவர்கள் பாபிலோன் தேசத்திலும் ஜீவிக்கவேண்டும்.

யூதாவின் மனுஷர் பாபிலோன் தேசத்திலிருந்தாலும், அவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்க வேண்டும். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள், கர்த்தர் அனுப்புகிற எல்லா தேசங்களிலும் சமாதானமாயும், சந்தோஷமாயும், ஆறுதலாயும் ஜீவனம்பண்ணுவார்கள். பாபிலோன் தேசத்திலும் அவர்களால் சந்தோஷமாயிருக்க முடியும்.

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது, பல சமயங்களில் சீயோனை நினைத்து கண்ணீர்விட்டு அழுகிறார்கள். அவர்களுடைய அழுகையின் கண்ணீர் விதை விதைப்பதற்கு தடையாக இருக்கக்கூடாது. கண்ணீரோடு விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடு அறுவடை செய்வார்கள்.

நம்முடைய ஜீவியத்திலும் நமக்கு பலவிதமான ஏற்றதாழ்வுகள் உண்டாகலாம். துக்கமும் சந்தோஷமும் மாறி மாறி வரலாம். எல்லாம் ஒன்றுபோலிருக்காது. நாம் காலத்தை பிரயோஜனப்படுத்த பழகிக்கொள்ள வேண்டும். நாம் விரும்புகிற சூழ்நிலை நமக்கு கிடைக்காவிட்டாலும், கர்த்தர் நமக்கு அனுமதிக்கிற சூழ்நிலையில் சந்தோஷமாயிருக்க பழகிக்கொள்ளவேண்டும்.

எல்லோருக்குமே அவர்களுடைய சொந்த தேசத்தின்மீது பிரியமாயிருக்கும். மற்ற தேசங்களைவிட தங்கள் சொந்த தேசங்களை நேசிப்பார்கள். நாம் ஊழியத்தினிமித்தமாய் வேறு ஸ்தலங்களுக்கோ அல்லது வேறு தேசங்களுக்கோ போகவேண்டியது வந்தாலும், அது கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற தேசம் என்று நினைத்து, அங்கே கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்க வேண்டும்.

வானமும் கர்த்தருடையது. பூமியும் கர்த்தருடையது. பூமியிலுள்ள எல்லா தேசங்களும் கர்த்தருடையது. கர்த்தருடைய பிள்ளைகள் எந்த தேசத்திற்கு போனாலும், அவர்கள் கர்த்தருடைய தேசத்திற்குத்தான் போகிறார்கள். தங்கள் பரலோகப்பிதாவின் பூமியில் ஜீவிக்கிறார்கள். நாம் அந்நிய தேசத்தில் ஜீவிக்கும்போது, அந்த தேசத்தைக் குறித்த அணுகுமுறைகளை, கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக சிந்திக்கப் பழகிக்கொள்ளவேண்டும்.

யூதாவின் மனுஷர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே தாங்கள் சிறையிருப்பிலிருப்பதை நினைத்து, கர்த்தருக்குள் ஆறுதல் பெறவேண்டும்.

யூதாவின் மனுஷர் பாபிலோன் தேசத்தில் சிறைப்பட்டுப்போயிருக்கிறார்கள். அவர்கள் அந்த தேசத்திற்காக கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணவேண்டும். தங்களை சிறைப்பிடித்திருக்கிற தேசத்தாரின் நன்மைகளை யூதர்கள் நாடவேண்டும். பாபிலோன் தேசத்திற்கு சமாதானமிருக்கையில் யூதர்களுக்கும் சமாதானம் இருக்கும். பாபிலோன் தேசம் செழித்திருக்கும்போது யூதர்களும் செழித்திருப்பார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் இப்போது பாபிலோன் ராஜாவுக்கு அடிமைகளாகயிருக்கிறார்கள். யூதர்கள் பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணக்கூடாது. பாபிலோன் தேசத்தின் சமாதானத்தை கெடுத்துப் போடுவதற்கு ஒரு முயற்சியும் மேற்கொள்ளக்கூடாது. யூதர்கள் பாபிலோன் ராஜாவுக்கு கீழே அமைதியாகவும், சமாதானமாகவும் ஜீவனம்பண்ணவேண்டும். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு உண்மையுள்ளவர்களாகவும், கண்ணியமுள்ளவர்களாகவும் தங்களுடைய கடமைகளை செய்யவேண்டும்.

யூதா மனுஷருடைய கழுத்தின்மீது பாபிலோன் ராஜாவின் நுகம் சுமத்தப்பட்டிருக்கிறது. இந்த நுகத்தை தங்களைவிட்டு அகற்றிப்போடுவதற்கு யூதர்கள் சதிஆலோசனை ஒன்றும் பண்ணக்கூடாது. யூதாவின் மனுஷர் தங்களுடைய பாரங்களெல்லாவற்றையும் கர்த்தர்மீது வைத்துவிடவேண்டும். கர்த்தர் தமக்கு ஏற்ற வேளையில், தங்கள்மீது சுமத்தப்பட்டிருக்கிற அந்நிய தேசத்து நுகத்தை எடுத்துப்போடுவார் என்று நம்பி, அதற்காக பொறுமையோடு காத்திருக்கவேண்டும். பாபிலோன் தேசத்திற்கு சமாதானம் இருந்தால்தான் யூதர்களுக்கு சமாதானம் இருக்கும்.

ஆதித்திருச்சபையின் விசுவாசிகளும், தாங்கள் எந்த தேசத்திலிருந்தாலும், அந்த தேசத்தின் நன்மைக்காக கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினார்கள். அந்த தேசத்தின் சமாதானத்தை நாடினார்கள். பல சமயங்களில் அதிகாரத்திலுள்ளவர்கள் விசுவாசிகளை துன்பப்படுத்தினாலும், உபத்திரவப் படுத்தினாலும், விசுவாசிகள் அவர்களுடைய நன்மைகளுக்காக ஜெபம்பண்ணினார்கள். கப்பலில் பிரயாணம் பண்ணுகிற எல்லோருக்குமே, அந்த கப்பலின் பாதுகாப்பைக் குறித்த பொறுப்புள்ளது. ஒரு தேசத்தின் எல்லா பிரஜைகளும் சேர்ந்து, அந்த தேசத்தின் நன்மைகளுக்காக பாடுபடவேண்டும்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் எரே 29:8,9

எரே 29:8. மேலும், உங்கள் நடுவிலிருக்கிற உங்கள் தீர்க்கதரிசிகளும் உங்கள் குறிகாரரும் உங்களை மோசம்போக்க வொட்டாதிருங்கள்; சொப்பனம் காணப்பண்ணுகிற உங்கள் சொப்பனக்காரருக்குச் செவிகொடாமலும் இருங்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:9. அவர்கள் என் நாமத்தைச் சொல்லி உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள்; நான் அவர்களை அனுப்பினதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் தவறான நம்பிக்கையின்மீது தங்களுடைய ஜீவியத்தைக் கட்டியெழுப்பக்கூடாது. பொய்யான அஸ்திபாரம் பலவீனமானது. அது எப்போதுமே ஆபத்தானது. யூதர்கள் மத்தியில் கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பியிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை அனுப்பவில்லை. ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய நாமத்தினால் பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். இந்த சிறையிருப்பின் காலம் சீக்கிரத்தில் முடிந்துபோகும் என்றும், யூதர்களுக்கு பாபிலோன் தேசத்திலிருந்து சீக்கிரமாய் விடுதலை உண்டாகும் என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்கள் மத்தியிலே பொய்சொல்லுகிறார்கள். ஆகையினால் யூதர்கள் பாபிலோன் தேசத்தில் வீடுகளைக் கட்டவேண்டாம் என்றும், தோட்டங்களை நாட்டவேண்டாம் என்றும் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார்கள்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களை மோசம் போக்குகிறார்கள். "உங்கள் நடுவிலிருக்கிற உங்கள் தீர்க்கதரிசிகளும் உங்கள் குறிகாரரும் உங்களை மோசம்போக்க வொட்டாதிருங்கள்; சொப்பனம் காணப்பண்ணுகிற உங்கள் சொப்பனக்காரருக்குச் செவிகொடாமலும் இருங்கள்" (எரே 29:8) என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்களின் விருப்பத்திற்கேற்ற பிரகாரம் செப்பனம் காண்கிறார்கள். எந்த வார்த்தைகளைச் சொன்னால் ஜனங்களுக்கு சந்தோஷமாகயிருக்குமோ அந்த வார்த்தைகளை கள்ளத்தீர்க்கதரிசிகள் தேடி கண்டுபிடித்து சொல்லுகிறார்கள். அவர்களுடைய தீர்க்கதரிசனங்களும், சொப்பனங்களும் பொய்யாயிருக்கிறது.

சிறையிருப்பிலிருக்கிற யூதாவின் மனுஷர் சொப்பனக்காரருக்கு ஆதரவாயிருக்கிறார்கள். ஜனங்களே சொப்பனக்காரர்களை சொப்பனம் காணப்பண்ணுகிறார்கள். ஜனங்கள் தங்களை உற்சாகப்படுத்துவதினால், சொப்பனக்காரர்களும் ஏராளமான சொப்பனங்களைக்கண்டு, அவர்களுக்கு கள்ளத்தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். தங்களுடைய வார்த்தைகளினால் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள்.

"இவர்கள் தரிசனக்காரரை நோக்கி: தரிசனங் காணவேண்டாம் என்றும், ஞானதிருஷ்டிக்காரரை நோக்கி: யதார்த்தமாய் எங்களுக்குத் தரிசனஞ்சொல்லாமல், எங்களுக்கு இதமான சொற்களை உரைத்து, மாயமானவைகளைத் திருஷ்டியுங்கள் என்றும், நீங்கள் வழியை விட்டு, பாதையினின்று விலகி, இஸ்ரவேலின் பரிசுத்தரை எங்கள் முன்பாக இராமல் ஒயப்பண்ணுங்கள் என்றும் சொல்லுகிறார்கள்" *(ஏசா 30:10,11).*

உங்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் எரே 29:10-14

எரே 29:10. பாபிலோனிலே எழுபதுவருஷம் நிறைவேறினபின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பிவரப்பண்ணும்படிக்கு உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:11. நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.

எரே 29:12. அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுது கொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம்பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்.

எரே 29:13. உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்.

எரே 29:14. நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பி, நான் உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலும் எல்லா இடங்களிலுமிருந்து உங்களைச் சேர்த்து, நான் உங்களை விலக்கியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்பிவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் யூதாவின் மனுஷருக்கு பொய்யான அஸ்திபாரத்தைப் போடுகிறார்கள். அந்த அஸ்திபாரத்தின்மீது அவர்கள் தங்கள் நம்பிக்கையை கட்டியெழுப்பினால், முடிவில் அவர்கள் எல்லோரும் அழிந்துபோவார்கள். அவர்களுடைய நம்பிக்கை நிறைவேறாது. எரேமியா தீர்க்கதரிசி யூதாவின் மனுஷருக்கு நல்ல அஸ்திபாரத்தைப் போடுகிறார். கர்த்தருடைய மெய்யான வார்த்தையே பலமான அஸ்திபாரம். இதன்மீது அவர்கள் தங்கள் நம்பிக்கையை கட்டியெழுப்பவேண்டும்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு உடனே விடுதலை கிடைக்காது. கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிற பிரகாரம் அவர்களால் இரண்டு வருஷத்திற்குள் தங்கள் தேசத்திற்கு திரும்பிப் போகமுடியாது. அவர்கள் பாபிலோன் தேசத்தில் எழுபது வருஷங்களுக்கு சிறையிருப்பிலிருக்க வேண்டும். அதன் பின்பு கர்த்தர் தம்முடைய ஜனங்களை சந்திப்பார். அவர்களை தங்கள் தேசத்திற்கு திரும்பி வரப்பண்ணுவார். அப்போது பாபிலோன் தேசத்தில் யூதர்களுடைய சிறையிருப்புக்காலம் முடியும்.

"பாபிலோனிலே எழுபதுவருஷம் நிறைவேறினபின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பிவரப்பண்ணும்படிக்கு உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப் பண்ணுவேன்" *(எரே 29:10)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாதேசத்து மனுஷர் அந்நிய தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகும்போது அவர்கள் எல்லோரும் சிதறடிக்கப்பட்டார்கள். அவர்கள் வெவ்வேறு தேசங்களில் சிறைவைக்கப்பட்டார்கள். கர்த்தரே அவர்களை அநேக ஜாதிகள் மத்தியில் துரத்திவிட்டார். "நான் உங்களை துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலும் எல்லா இடங்களிலும் இருந்து உங்களைச் சேர்ப்பேன்" (எரே 29:14) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தரே அவர்களை துரத்திவிட்டவர். கர்த்தரே அவர்களை கூட்டிச்சேர்க்கப்போகிறவர். இவையெல்லாம் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, அவருக்கு ஏற்ற வேளையில் நடைபெறும்.

பல ஜாதிகளுக்கும், பல இடங்களுக்கும் சிதறிப்போன யூதர்களை கர்த்தர் கூட்டிச்சேர்ப்பார். கர்த்தர் அவர்களை விலக்கியிருந்த ஸ்தலத்திற்கே, அவர்களை திரும்பி வரப்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் அவர்களுடைய சிறையிருப்பைத் திருப்புவார். கர்த்தருக்கு ஏற்ற வேளை வரும்போது கர்த்தர் அவர்களுக்கு காணப்படுவார் (எரே 29:14). சிதறிப்போன யூதர்கள் மறுபடியும் ஒரே தேசமாக கூட்டிச்சேர்க்கப்படுவார்கள். அவர்கள் ஒரே தேசமாக கட்டியெழுப்பப்படுவார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தம்முடைய வாக்குத்தத்தத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் அவருடைய நல்வார்த்தையாகயிருக்கிறது. கர்த்தர் சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை விடுவித்து, அவர்களுடைய தேசத்திற்கு திரும்பி வரப்பண்ணுவார். அப்போது கர்த்தர் அவர்கள்மேல் சொன்ன தம்முடைய நல்வார்த்தையை நிறைவேறப்பண்ணுவார் (எரே 29:10).

யூதாவின் மனுஷர் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் தேசத்திற்கு சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் திரும்பி வருவார்கள். அவர்களுடைய மனதில் ஆறுதலும் மகிழ்ச்சியும் நிரம்பியிருக்கும். கர்த்தருடைய நல்ல வார்த்தை அவர்களுடைய ஜீவியத்தில் நிறைவேறும். கர்த்தருடைய கிருபையுள்ள வாக்குத்தத்தம் தங்களுக்கு நிறைவேறுவதை யூதர்கள் புரிந்துகொள்வார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்களுக்கு விடுதலை கிடைக்குமென்று யூதர்கள் நம்புகிறார்கள். இந்த விடுதலைக்காக அவர்கள் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். "நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்" (எரே 29:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரே தம்முடைய ஜனத்திற்கு நினைவுகளைக் கொடுக்கிறார். கர்த்தருடைய நினைவுகளும், இஸ்ரவேல் ஜனத்தாரின் நினைவுகளும் ஒன்றுபோலிருக்கிறது. ஆனாலும் அவர்களுடைய நினைவுகள் அவர்களுடைய சித்தத்தின் பிரகாரமாகவும், அவர்கள் எதிர்பார்க்கிற வேளையிலும் நிறைவேறவில்லை. அதற்குப் பதிலாக கர்த்தருடைய நினைவுகள், அவருடைய வேளையில், அவருடைய சித்தத்தின் பிரகாரமாக நிறைவேறுகிறது. கர்த்தர் அவர்களுடைய நினைவுகளை அறிந்திருக்கிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்திற்கேதுவான நினைவுகளே என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 29:11).

சிறையிருப்பிலுள்ள யூதர்களுடைய மனதில் சமாதானத்திற்கேதுவான நினைவுகள் நிரம்பியிருக்கிறது. இந்த நினைவுகள் நிறைவேறும் காலத்திற்காக அவர்கள் பொறுமையோடு காத்திருக்கவேண்டும். ஒரு விருட்சத்தில் பூ பூத்து, காய் காய்த்து, அது பழுக்கும் காலம் வரையிலும் பொறுமையோடு காத்திருப்பதுபோல, யூதர்களும் கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கும் நினைவுகள் நிறைவேறும் காலத்திற்காக பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

யூதாவின் மனுஷர் எதிர்பார்க்கும் முடிவை கர்த்தர் அவர்களுக்கு கொடுப்பார். கர்த்தர் கொடுத்திருக்கும் நினைவுகள் சமாதானத்திற்கு ஏதுவானவைகளாகயிருந்தாலும், யூதர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் உபத்திரவங்களை அனுபவிக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு நன்மையான காலங்களை நியமித்திருக்கிறார். ஆனால் அவர்கள் இப்பொழுது உபத்திரவத்தின் காலத்திலிருக்கிறார்கள்.

நாம் இப்போது எப்படிப்பட்ட காலத்திலிருந்தாலும், கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற நல்ல காலம் வரும் என்று பொறுமையோடு காத்திருக்கவேண்டும். கர்த்தருடைய சித்தம் நிறைவேறும். கர்த்தர் நமக்கு செய்கிற காரியங்கள் எல்லாமே பரிபூரணமானதாகவும், மகிமையுள்ளதாகவும் இருக்கும்.

கர்த்தரே ஆதியில் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். அவரே மனுஷரையும் சிருஷ்டித்தவர். கர்த்தர் வானத்தையும் பூமியையும் தம்முடைய நன்மைகளால் நிரப்பியிருக்கிறார். மனுபுத்திரருக்கு தம்முடைய ஆசீர்வாதங்களைக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய கிரியைகளெல்லாமே பரிபூரணமானது. கர்த்தர் எந்த காரியத்தையும் நேர்த்தியாகச் செய்து முடிக்காமல், அரையும் குறையுமாக செய்து அப்படியே விட்டுவிடமாட்டார். கர்த்தருடைய சித்தமும் பரிபூரணமானது. அவருடைய கிரியையும் பரிபூரணமானது.

சிறையிருப்பிலிருக்கிற யூதாவின் மனுஷர் தங்களுக்கு ஒரு ஆசீர்வாதமான நல்ல முடிவு வரும் என்று எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். கர்த்தர் அவர்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை அவர்களுக்குக் கொடுப்பார். இதற்காக கர்த்தர் அவர்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிந்திருக்கிறார். அவர்களுக்கு எப்படிப்பட்ட முடிவை கொடுக்கவேண்டும் என்பதும், அதை எப்போது கொடுக்க வேண்டும் என்பதும் கர்த்தருடைய மனதில் ஏற்கெனவே தீர்மானம்பண்ணப்பட்டிருக்கிறது.

நாம் பயப்படுகிற காரியங்களுக்கு தக்கபடி கர்த்தர் நமக்கு பதில்கொடுப்பதில்லை. நாம் விரும்புகிறதெல்லாவற்றையும் கர்த்தர் நமக்கு கொடுப்பார் என்னும் நிச்சயமுமில்லை. கர்த்தர் நம்முடைய தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பார். கர்த்தர் தமக்கு சித்தமானதெல்லாவற்றையும் நமக்குக் கொடுப்பார். நாம் விசுவாசத்தோடு எதிர்பார்க்கிற காரியங்களை கர்த்தர் நிச்சயமாகவே நமக்குக் கொடுப்பார். கர்த்தரே நமக்கு எதிர்பார்ப்பைக் கொடுக்கிறவர். நாம் எதிர்பார்க்கிற காரியம் நிறைவேறும் என்னும் விசுவாசத்தையும் கர்த்தரே நமக்குக் கொடுக்கிறவர்.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய சமுகத்தில் கூடிவந்து அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும். அப்போது கர்த்தர் அவர்களுடைய வேண்டுதல்களுக்கும், விண்ணப்பங்களுக்கும் செவிகொடுப்பார். "உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்" *(எரே 29:13)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நாம் கர்த்தரை முழுஇருதயத்தோடு தேடும்போது கர்த்தர் நமக்கு காணப்படுவார். நாம் கர்த்தரைத் தேடும்போது அவரைக் கண்டுபிடிப்போம். நாம் கர்த்தருடைய சமுகத்தில் கூடிவந்து, அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். நம்முடைய இரட்சிப்புக்காக ஜெபம்பண்ணவேண்டும். கர்த்தர் நம்முடைய விண்ணப்பத்தைக் கேட்டு, நமக்கு இரட்சிப்பைக் கொடுக்கும்போது, நம்முடைய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் ஜெபத்தில் ஆயத்தமாயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு செவிகொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். "நான் உங்களுக்கு காணப்படுவேன்" *(எரே 29:16)* என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

நாம் கர்த்தருடைய வார்த்தையை நம்பவேண்டும். அவருடைய வார்த்தையின்மீது சார்ந்திருக்கவேண்டும். "என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்" என்று கர்த்தர் சொல்லும்போது, அவருடைய வார்த்தையை நம்பி, கர்த்தரைத் தேடவேண்டும். தேடும்போது நிச்சயமில்லாதவர்களாகத் தேடக்கூடாது. கர்த்தரைத் தேடினால், அவரைக் கண்டுபிடிப்போம் என்னும் நம்பிக்கை நமக்குள் காணப்படவேண்டும்.

கர்த்தரைத் தேடுகிறவர்கள் தங்கள் முழுஇருதயத்தோடு தேடவேண்டும். அப்போதுதான் அவரைக் கண்டுபிடிக்க முடியும். விசுவாசமில்லாமல், அரைகுறை மனதோடும், அரைகுறை இருதயத்தோடும், கர்த்தரைத் தேடினால், அவரைக் கண்டுபிடிப்பதற்கு வாய்ப்பில்லை. அரைகுறையாகத் தேடினால் கர்த்தர் நமக்கு காணப்படமாட்டார்.

பாபிலோனிலும் தீர்க்கதரிசிகள் எரே 29:15-23

எரே 29:15. கர்த்தர் எங்களுக்குப் பாபிலோனிலும் தீர்க்கதரிசிகளை எழுப்பினார் என்று சொல்லுகிறீர்கள்.

எரே 29:16. ஆனால் தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிற ராஜாவைக் குறித்தும், உங்களோடே கூடச் சிறையிருப்பில் புறப்பட்டுப் போகாமல் இந்த நகரத்தில் குடியிருக்கிற உங்கள் சகோதரராகிய எல்லா ஜனங்களைக் குறித்தும்,

எரே 29:17. இதோ, நான் பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளைநோயையும் அவர்களுக்குள் அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; புசிக்கத்தகாத கெட்டுப்போன அத்திப்பழங்களுக்கு அவர்களை ஒப்பாக்குவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:18. அவர்கள் என் வார்த்தைகளைக் கேளாமற்போன படியால், நான் அவர்களைப் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் பின்தொடர்ந்து, அவர்களைப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களாகவும், நான் அவர்களைத் துரத்துகிற எல்லா ஜாதிகளிடத்திலும் சாபமாகவும், பாழாகவும், ஈசலிடுதலுக்கிடமாகவும், நிந்தையாகவும் வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:19. நான் உங்களிடத்திற்குத் தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரை ஏற்கனவே அனுப்பிக்கொண்டேயிருந்தும், நீங்கள் செவிகொடாமற்போனீர்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:20. இப்போதும் சிறையிருக்கும்படி நான் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு அனுப்பிவிட்ட நீங்களெல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 29:21. என் நாமத்தைச் சொல்லி, உங்களுக்குப் பொய்யான தீர்க்கதரிசனம் உரைக்கிற கொலாயாவின் குமாரனாகிய ஆகாபையும், மாசெயாவின் குமாரனாகிய சிதேக்கியாவையுங்குறித்து: இதோ, நான் அவர்களைப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலே ஒப்புக்கொடுக்கிறேன்; அவன் அவர்களை உங்கள்கண்களுக்கு முன்பாகக் கொன்றுபோடுவான்.

எரே 29:22. பாபிலோன் ராஜா அக்கினியினால் சுட்டுப்போட்ட சிதேக்கியாவுக்கும் ஆகாபுக்கும் கர்த்தர் உன்னைச் சமானமாக்கக்கடவரென்று; அவர்களைக் குறித்து ஒரு சாபவார்த்தை பாபிலோனிலே சிறையிருக்கிற யூதா அனைவருக்குள்ளும் வழங்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:23. அவர்கள் இஸ்ரவேலிலே மதிகெட்ட காரியத்தைச் செய்து, தங்கள் அயலாருடைய பெண்ஜாதிகளோடே விபசாரம்பண்ணி, நான் அவர்களுக்குக் கற்பியாத பொய்யான வார்த்தையை என் நாமத்தைச் சொல்லி உரைத்தார்கள்; நான் அதை அறிவேன்; அதற்கு நானே சாட்சி என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதினான்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களில் சிலர் எரேமியாவின் ஆலோசனைகளுக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை நம்புகிறார்கள். சொப்பனக்காரருடைய பொய்யான ஊழியங்கள்மீது அவர்கள் பிரியமாயிருக்கிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி தன்னுடைய நிருபத்தை பாபிலோன் தேசத்திலுள்ள யூதர்களுக்கு அனுப்பியபோது, அவர்கள் எரேமியாவின் நிருபத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. "கர்த்தர் எங்களுக்கு பாபிலோனிலும் தீர்க்கதரிசிகளை எழுப்பினார்" (எரே 29:15) என்று சொல்லுகிறார்கள். தங்களுக்கு பாபிலோனிலேயே தீர்க்கதரிசிகள் இருப்பதினால், எரேமியாவின் தீர்க்கதரிசன ஊழியம் தங்களுக்கு தேவைப்படாது என்று சொல்லிவிடுகிறார்கள்.

பாபிலோன் தேசத்திலுள்ள யூதர்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுடைய ஊழியங்களில் திருப்தியடைந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிற பொய்யான தீர்க்கதரிசனங்களை நம்புகிறார்கள். அவர்களுக்கு பாபிலோன் தேசத்திலேயே தீர்க்கதரிசிகள் இருக்கும்போது, எருசலேமிலிருந்து அவர்களுக்கு தீர்க்கதரிசிகள் தேவைப்படவில்லை. எருசலேமிலிருந்து சொல்லப்படும் தீர்க்கதரிசன செய்திகளை, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலுள்ள யூதர்கள் கேட்பதற்கு ஆயத்தமாயில்லை.

பாபிலோன் தேசத்திலே இப்போது சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் சீக்கிரத்தில் விடுவிக்கப்படுவார்கள் என்றும், யூதாதேசத்திலுள்ளவர்களில் யாரும் இனிமேல் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டு வரமாட்டார்கள் என்றும் கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்வார்த்தைகளைச் சொல்லுகிறார்கள்.

ஆனால் கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசிகளின் செய்திகளோ, கள்ளத்தீர்க்கதரிசிகளின் செய்திகளுக்கு நேர்விரோதமாயிருக்கிறது. எருசலேமிலேயே தங்கியிருக்கிற யூதர்களுக்கு அழிவு வருமென்று கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள்.

"ஆனால் தாவீதின் சிங்காசனத்தில் உட்கார்ந்திருக்கிற ராஜாவைக் குறித்தும், உங்களோடேகூடச் சிறையிருப்பில் புறப்பட்டுப்போகாமல் இந்த நகரத்தில் குடியிருக்கிற உங்கள் சகோதரராகிய எல்லா ஜனங்களைக் குறித்தும், இதோ, நான் பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளைநோயையும் அவர்களுக்குள் அனுப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; புசிக்கத்தகாத கெட்டுப்போன அத்திப்பழங்களுக்கு அவர்களை ஒப்பாக்குவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 29:16,17).

இப்போது சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் சீக்கிரத்தில் விடுவிக்கப்பட்டு, தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போகும்போது, அங்கே சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ராஜாவும், மற்ற ஜனங்களும் தங்களை வரவேற்பார்கள் என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். ஆனால் இவர்களை வரவேற்க யூதாதேசத்தில் ஒருவரும் இருக்கமாட்டார்கள். பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகாமல், யூதாதேசத்திலேயே குடியிருக்கிற ஜனங்கள்மீது, கர்த்தர் பட்டயத்தையும், பஞ்சத்தையும், கொள்ளைநோயையும் அனுப்புவார். அவர்களுக்கு அழிவு வரும். அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஒன்றின்மீது ஒன்றாக வரும்.

"அவர்கள் என் வார்த்தைகளைக் கேளாமற்போனபடியால், நான் அவர்களைப் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் பின்தொடர்ந்து, அவர்களைப் பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் அலைந்து திரிகிறவர்களாகவும், நான் அவர்களைத் துரத்துகிற எல்லா ஜாதிகளிடத்திலும் சாபமாகவும், பாழாகவும், ஈசலிடுதலுக்கிடமாகவும், நிந்தையாகவும் வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 29:18).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போகும்போது, அவர்களை வரவேற்பதற்கு, அவர்களுடைய தேசத்தில் ஒருவரும் மீதியாயிருக்க மாட்டார்கள். தேசத்தில் தங்கியிருக்கிறவர்கள் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். அவர்களெல்லோரும் அழிந்துபோவார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளோ சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு பொய்யான வார்த்தைகளைச் சொல்லி, அவர்களை வஞ்சிக்கிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போகாமல், எருசலேம் நகரத்திலேயே தங்கிவிடுகிறவர்கள் புசிக்கத்தகாத கெட்டுப்போன அத்திப்பழங்களுக்கு ஒப்பாயிருப்பார்கள். அத்திப்பழ கூடையைப்பற்றிய தரிசனம் எரேமியாவுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிறது (எரே 24-ஆவது அதிகாரம்).

சிறையிருப்புக்குப்போகாமல், யூதாதேசத்திலேயே தங்கிவிடுகிறவர்கள் ஏன் புசிக்கத்தகாதவர்களாயும், கெட்டுப்போன அத்திப்பழங்களுக்கு ஒப்பானவர்களாயும் இருப்பார்கள் என்பதற்கான காரணத்தையும் கர்த்தர் இங்கு சொல்லுகிறார். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கவில்லை. கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் பாபிலோன் தேசத்து ராஜாவுக்கு கீழ்ப்படியவில்லை. நேபுகாத்நேச்சாரின் நுகத்தை தங்கள் கழுத்தின்மீது ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் கீழ்ப்படியாத யூதர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது.

கர்த்தர் எருசலேமில் தங்கியிருக்கிற யூதர்களுக்கும், பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன யூதர்களுக்கும் தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார். முதலாவதாக சிறையிருப்புக்குப்போகாமல், எருசலேமிலேயே தங்கிவிட்ட யூதர்கள் மத்தியில், கர்த்தர் தம்முடைய ஊழியக்காரரை ஏற்கெனவே அனுப்பிக்கொண்டேயிருந்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடாமல் போனார்கள் (எரே 29:19).

கர்த்தர் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். "இப்போதும் சிறையிருக்கும்படி நான் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு அனுப்பிவிட்ட நீங்களெல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்" (எரே 29:20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்தில் சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் மத்தியிலே கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யான வார்த்தைகளை பிரசங்கம்பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி, அவர்களுக்கு பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். அவர்களில் இரண்டுபேரை பற்றி கர்த்தர் இங்கு சொல்லுகிறார். அவர்களில் ஒருவன் கொலோயாவின் குமாரனாகிய ஆகாப் மற்றொருவின் மசெயாவின் குமாரனாகிய சிதேக்கியா.

இவர்கள் இருவரும் கள்ளத்தீர்க்கதரிசிகள். இவர்கள் இருவருமே கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி, ஜனங்களுக்கு பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். இவர்கள் இஸ்ரவேலிலே மதிகெட்ட காரியத்தைச் செய்கிறார்கள். தங்கள் அயலாருடைய பெண்ஜாதிகளோடே விபசாரம் பண்ணுகிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு கற்பியாத பொய்யான வார்த்தையை, கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி உரைக்கிறார்கள். அவர்களுடைய பொய்யான வார்த்தைகளை கர்த்தரும் அறிந்திருக்கிறார். அவர்கள் சொல்லுகிற கள்ளத்தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு கர்த்தரும் சாட்சியாயிருக்கிறார். எரேமியா கர்த்தர் சொன்ன இந்த செய்திகளையெல்லாம் தன்னுடைய நிருபத்தில் எழுதி பாபிலோன் தேசத்திலே சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு அனுப்புகிறார்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யான வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லும்போது, தங்களுடைய சுயநாமத்தைப் பயன்படுத்தாமல், கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்துகிறார்கள். மற்றவர்கள் செய்கிற பாவங்களையும் இவர்களால் கடிந்து சொல்ல முடியவில்லை. கள்ளத்தீர்க்கதரிசிகளே பாவத்தில் ஜீவிக்கிறார்கள். இவர்கள் பாவிகளைக் கடிந்துகொள்ள வேண்டுமென்றால், முதலாவதாக இவர்கள் தங்களைத் தாங்களே கடிந்துகொள்ள வேண்டும். அதன் பின்புதான் இவர்களால் மற்ற பாவிகளைக் கடிந்துகொள்ள முடியும்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் மத்தியில் கள்ளத்தீர்க்கதரிசிகளாயிருக்கிற ஆகாபின்மீதும், சிதேக்கியாவின்மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. கர்த்தர் அவர்களை பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலே ஒப்புக்கொடுக்கிறார். நேபுகாத்நேச்சார் அவர்களை சிறையிருப்பிலிருக்கிற யூதாமனுஷரின் கண்களுக்கு முன்பாக கொன்றுபோடுவான் என்று கர்த்தர் தீர்மானமாய்ச் சொல்லுகிறார் (எரே 29:21).

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், சிதேக்கியாவையும் ஆகாபையும் அக்கினியினால் சுட்டுப்போடுகிறான். அவர்கள் இருவருக்கும் பரிதாபமான மரணமுண்டாயிற்று. சிதேக்கியாவும் ஆகாபும் பாவம் செய்ததினாலோ அல்லது கர்த்தருக்கு விரோதமாக கள்ளத்தீர்க்கதரிசனம் சொன்னதினாலோ நேபுகாத்நேச்சார் அவர்களை அக்கினியினால் சுட்டெரிக்கவில்லை. அவர்கள் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள், ஜனங்கள் மத்தியில் சமாதானத்தைக் கெடுத்துப்போட்டு குழப்பம் பண்ணினார்கள். இதனால் நேபுகாத்நேச்சார் அவர்கள்மீது கோபப்பட்டு, அவர்களை அக்கினியினால் சுட்டுப்போட்டான்.

பாபிலோனிலே சிறையிருக்கிற யூதர்கள் அனைவர் மத்தியிலும் சிதேக்கியாவைக் குறித்தும் ஆகாபைக் குறித்தும் சாபவார்த்தை வழங்கப்படுகிறது. இவர்கள் இருவரும் கள்ளத்தீர்க்கதரிசிகளாகயிருந்தார்கள். ஜனங்களை வஞ்சித்தார்கள். இவர்கள் சபிக்கப்பட்டார்கள். இவர்களுடைய பெயர்கள் சாபவார்த்தைகளாயிற்று. யூதர்கள் யாரையாவது சபிக்கும்போது, "கர்த்தர் உங்களை ஆகாபைப்போலவும் சிதேக்கியாவைப்போலவும் தண்டிப்பாராக" என்று சபிப்பது வழக்கம்.

செமாயாவின் நிருபம்
எரே 29:24-28

எரே 29:24. பின்னும் கர்த்தர் என்னை நோக்கி: நீ நெகெலாமியனாகிய செமாயாவுக்கும் சொல்லியனுப்பவேண்டியது என்னவென்றால்:

எரே 29:25. நீ எருசலேமிலிருக்கிற எல்லா ஜனங்களுக்கும், மாசெயாவின் குமாரனாகிய செப்பனியா என்னும் ஆசாரியனுக்கும், மற்ற ஆசாரியர்களுக்கும் உன் நாமத்திலே நிருபத்தை எழுதியனுப்பினது என்னவென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 29:26. இவனுக்கு அவன் எழுதியிருந்த நிருபமாவது: நீங்கள் கர்த்தருடைய ஆலயத்தின் விசாரிப்புக்காரராயிருக்கும்படிக்கும், பிரமைகொண்டு தன்னைத் தீர்க்கதரிசியாக்கிக்கொள்ளுகிறவனாகிய எந்த மனுஷனையும் நீர் காவல் அறையிலும் தொழுவிலும் போடும்படிக்கும், கர்த்தர் உம்மை ஆசாரியனாயிருந்த யோய்தாவின் ஸ்தானத்திலே ஆசாரியனாக வைத்தாரே.

எரே 29:27. இப்போதும் உங்களுக்குத் தீர்க்கதரிசனம் கூறிவருகிற ஆனதோத் ஊரானாகிய எரேமியாவை நீர் கடிந்துகொள்ளாமற்போனதென்ன?

எரே 29:28. இந்தச் சிறையிருப்பு நெடுங்காலமாக இருக்கும்; நீங்கள் வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைச் சாப்பிடுங்களென்று பாபிலோனில் இருக்கிற எங்களுக்குச் சொல்லியனுப்பினானென்று எழுதியிருந்தான்.

பாபிலோன் தேசத்தில் சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு எரேமியா கர்த்தருடைய நாமத்தினாலே நிருபத்தை எழுதியனுப்புகிறார். பாபிலோனிலுள்ள யூதர்களில் அநேகர் எரேமியாவின் நிருபத்தை வாசித்து அவர்மீது கோபப்படுகிறார்கள். எரேமியாவின் நிருபத்தில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளுக்கு இவர்கள் செவிகொடுக்கவில்லை. பாபிலோன் தேசத்திலே எரேமியாவுக்கு விரோதமாக அநேக யூதர்கள் எழும்புகிறார்கள். அவர்களில் செமாயா என்பவன் ஒருவன்.

செமாயா ஒரு சொப்பனக்காரன். இவன் நெகெலாமியனாகிய செமாயா என்று அழைக்கப்படுகிறான். தான் சொல்லுகிற எல்லா தீர்க்கதரிசனங்களையும், கர்த்தர் தனக்கு சொப்பனத்தில் வெளிப்படுத்துவதாக, இவன் தன்னைப்பற்றிச் சொல்லிக்கொள்கிறான். எரேமியா பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு எழுதியனுப்பின நிருபத்தின் நகல் ஒன்று செமாயாவின் கையில் கிடைத்திருக்கிறது. எரேமியாவின் நிருபத்தை வாசித்தபோது செமாயாவுக்கு எரேமியாவின்மீது மிகுந்த கோபமுண்டாயிற்று.

செமாயா எரேமியாவின் நிருபத்திற்கு ஒரு பதில் நிருபம் எழுதவேண்டுமென்று விரும்புகிறான். ஆனால் அவன் தன்னுடைய பதில் நிருபத்தை எரேமியாவுக்கு எழுதாமல், எருசலேமிலிருக்கிற எல்லா ஜனங்களுக்கும், மாசெயாவின் குமாரனாகிய செப்பனியா என்னும் ஆசாரியனுக்கும், மற்ற ஆசாரியர்களுக்கும் எழுதியனுப்புகிறான். எரேமியாவுக்கு பதில் எழுதவேண்டுமென்றால், எரேமியாவுக்குத்தான் எழுதவேண்டும். ஆனால் செமாயாவோ எரேமியாவுக்கு பதில் நிருபம் எழுதாமல், தன்னுடைய நிருபத்தை எருசலேமிலுள்ள மற்ற எல்லாருக்கும் எழுதியனுப்புகிறான்.

எருசலேமிலுள்ள ஆசாரியர்களும், மற்ற ஜனங்களும் எரேமியாவைப் பிடித்து தண்டிக்கவேண்டும். இதுவே செமாயாவின் விருப்பம். செமாயா தன்னுடைய நிருபத்தை எழுதும்போது, அதை தன்னுடைய நாமத்தினாலேயே எழுதுகிறான். எருசலேமிலுள்ள சகல ஜனங்கள்மீதும், எல்லா ஆசாரியர்கள்மீதும் தனக்கு அதிகாரம் இருப்பதாக நினைத்துக் கொண்டு, அவர்களுக்கு தன்னுடைய நாமத்தினால் நிருபம் எழுதுகிறான்.

செமாயாவின் நிருபம் பொதுவாக எழுதப்பட்டிருந்தாலும், இது மாசெயாவின் குமாரனாகிய செப்பனியா என்னும் ஆசாரியனுக்கு விசேஷமாய் எழுதப்பட்டிருக்கிறது. இவன் ஆசாரியரின் இருபத்து நான்காம் வகுப்பைச் சேர்ந்தவன். இந்த வகுப்புக்கு மாசெயா தலைவன். செப்பனியா ஆசாரிய வகுப்புக்கு தலைவனோ அல்லது பிரதான ஆசாரியனோ அல்ல. இவன் பிரதான ஆசாரியனுக்கு மிகவும் வேண்டியவன். தேவாலயத்தில் இவனுக்கு விசேஷித்த அதிகாரமுள்ளது. பஸ்கூரைப்போலவே செப்பனியாவும் செல்வாக்கு மிகுந்தவன்.

"எரேமியா இந்த வார்த்தைகளைத் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறதை ஆசாரியனான இம்மேருடைய குமாரனும், கர்த்தருடைய ஆலயத்துப் பிரதான விசாரணைக் கர்த்தனுமாகிய பஸ்கூர் கேட்டபோது, எரேமியா தீர்க்கதரிசியைப் பஸ்கூர் அடித்து, அவனைக் கர்த்தருடைய ஆலயத்திலே பென்யமீன் கோத்திரத்தாரைச்சேர்ந்த மேல்வாசலில் இருக்கும் காவலறையிலே போட்டான்" (எரே 20:1,2).

செமாயா தன்னுடைய நிருபத்தில் மூன்று காரியங்களை முக்கியப்படுத்தி எழுதியிருக்கிறான். அவையாவன : 1. செப்பனியாவும், மற்ற ஆசாரியர்களும் தங்களுடைய ஆசாரிய ஸ்தானத்தைக் குறித்து மிகுந்த பொறுப்புள்ளவர்களாயிருக்க வேண்டும் (எரே 29:26). 2. பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு எரேமியா எழுதின நிருபத்திலுள்ள செய்திகளை, எருசலேமிலுள்ள ஆசாரியர்களும் அறிந்திருக்கவேண்டும் (எரே 29:28). 3. எருசலேமிலுள்ள ஆசாரியர்கள் எரேமியாவைக் கடிந்துகொள்ள வேண்டும் (எரே 29:27).

கர்த்தரே மாசெயாவின் குமாரனாகிய செப்பனியாவை ஆசாரிய ஸ்தானத்திலே வைத்திருக்கிறார் என்பதை செமாயா செப்பனியாவுக்கு நினைவுபடுத்துகிறான். கர்த்தர் செப்பனியாவை யோய்தாவின் ஸ்தானத்திலே ஆசாரியனாக வைத்திருக்கிறார். யோய்தா செப்பனியாவுக்கு முன்பு ஆசாரியனாயிருந்தவன்.

யோய்தா என்பவன் யோவாசின் காலத்தில், யூதாதேசத்தில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாவதற்கு முக்கிய பங்கு வகித்தவனாக இருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

ஒருவேளை இந்த யோய்தா செப்பனியாவுக்கு முன்பு ஆசாரிய ஊழியம் செய்த வேறொரு சாதாரண ஆசாரியனாக இருந்திருக்கவேண்டும் என்றும் சிலர் கருத்து சொல்லுகிறார்கள். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமிலுள்ள ஆசாரியர்களை சிறைப்பிடித்து தன்னுடைய தேசத்திற்கு கொண்டுபோனபோது, அவன் ஆசாரியனாகிய யோய்தாவையும் பாபிலோனுக்கு சிறைப்பிடித்து கொண்டு போயிருக்கவேண்டும்.

யோய்தா சிறைப்பட்டுப்போனதினால், அவனுடைய ஸ்தானத்தில் ஆசாரியனாக ஊழியம் செய்யும் பொறுப்பு செப்பனியாவுக்கு உண்டாயிற்று. செப்பனியா எதிர்பார்த்த காலத்திற்கு முன்பாகவே அவன் ஆசாரியனாக நியமிக்கப்படுகிறான். தேவாலயத்தில் அவனுக்கு பொறுப்பும் அதிகாரமும் கொடுக்கப்படுகிறது.

ஆசாரியர்கள் தேவாலயத்தில் ஊழியம் செய்யும்போது, கர்த்தருடைய பெயரைச் சொல்லி தீர்க்கதரிசனம் சொல்லுகிற தீர்க்கதரிசிகளை நிதானித்து அறியவேண்டும். ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்தின் விசாரிப்புக்காரராயிருக்கிறார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகள் பிரமைகொண்டு தங்களை தீர்க்கதரிசிகளாக்கிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகளை ஆசாரியர்கள் கண்டுபிடித்து, அவர்களை காவலறையிலும், தொழுவிலும் போடவேண்டும். இதுவும் ஆசாரியருக்கு கொடுக்கப்பட்டிருக்கிற ஊழியப்பொறுப்பு.

கர்த்தரே இந்த ஊழியத்தை ஆசாரியருக்கு கொடுத்திருக்கிறார். கள்ளத்தீர்க்கதரிசிகளை காவலறையிலும் தொழுவிலும் போடுமாறு கர்த்தர் ஆசாரியர்களை அவர்களுடைய ஆசாரிய ஸ்தானத்தில் வைத்திருக்கிறார். மாசெயாவின் குமாரனாகிய செப்பனியாவுக்கு கர்த்தர் இந்த விசேஷித்த ஸ்தானத்தையும், விசேஷித்த அதிகாரத்தையும் கொடுத்திருப்பதாக செமாயா தன்னுடைய நிருபத்தில் எழுதுகிறான்.

கள்ளத்தீர்க்கதரிசிகள் சொப்பனங்கண்டு பிரமை கொள்ளுகிறார்கள். தங்களுடைய மனதின் சிந்தனைகளை, கர்த்தருடைய நாமத்தைப் பயன்படுத்தி, பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். இவர்கள் தங்களுடைய சாதுரிய வார்த்தைகளினாலும், இச்சையான பேச்சுக்களினாலும் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். ஆசாரியர்கள் இப்படிப்பட்ட கள்ளத்தீர்க்கதரிசிகளைக் கண்டுபிடித்து, அவர்களைத் தண்டிக்கவேண்டும். செமாயா செப்பனியாவுக்கு நிருபம் எழுதும்போது, எரேமியா கள்ளத்தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும், செப்பனியா எரேமியாவைப் பிடித்து, அவரை விசாரித்து, அவரை காவலறையிலும் தொழுவிலும் போடவேண்டுமென்றும் செமாயா செப்பனியாவுக்கு மறைமுகமாக எழுதுகிறார்.

"இப்போதும் உங்களுக்குத் தீர்க்கதரிசனம் கூறிவருகிற ஆனதோத் ஊரானாகிய எரேமியாவை நீர் கடிந்து கொள்ளாமற்போனதென்ன?" *(எரே 29:27)* என்று செமாயா செப்பனியாவிடம் கேட்கிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு எரேமியா எழுதின நிருபத்தின் விவரத்தை செமாயா செப்பனியாவுக்கும், மற்ற ஆசாரியர்களுக்கும், யூதாவின் ஜனங்களுக்கும் தெளிவுபடுத்துகிறான். யூதாவின் மனுஷருக்கு சிறையிருப்பே வராது என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொன்னார்கள்.

"அப்பொழுது நான்: ஆ கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, நீங்கள் பட்டயத்தைக் காண்பதில்லை, உங்களுக்குப் பஞ்சமும் வருவதில்லை; உறுதியான சமாதானத்தையே இவ்விடத்தில் உங்களுக்குத் தருவோமென்றார் என்று தீர்க்கதரிசிகள் அவர்களுக்குச் சொல்லுகிறார்களே என்றேன்" (எரே 14:13).

எரேமியாவோ யூதாவின் மனுஷருக்கு சிறையிருப்பு வரும் என்று சொன்னார். எரேமியா சொன்ன பிரகாரமாக பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும், தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோய்விட்டான். இதன் மூலமாய் எரேமியா சொன்ன வார்த்தைகள் உண்மையான தீர்க்கதரிசனம் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

எரேமியா மெய்யான தீர்க்கதரிசியாகயிருந்தாலும், அவர் சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகள் செமாயாவுக்குப் பிடிக்கவில்லை. செமாயா தன்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி, எரேமியாவை கள்ளத்தீர்க்கதரிசியாக சித்தரிக்கிறான். எரேமியாவுக்கு விரோதமாக தண்டனை கொடுக்கப்படவேண்டுமென்று வாதாடுகிறான். எரேமியா பிரமை கொண்டவன் என்றும், அவனுக்கு தெளிவான சிந்தனையில்லை என்றும், அவன் கர்த்தருடைய தீர்க்கதரிசியல்ல என்றும் அவன் தன்னைத்தானே தீர்க்கதரிசியாக்கிக்கொள்கிறான் என்றும் செமாயா எரேமியாவின் குற்றம் சொல்லுகிறான். எருசலேமிலுள்ள ஜனங்களும், ஆசாரியர்களும் தன்னுடைய வார்த்தைகளைக் கேட்டு, எரேமியாவை காவலறையிலும் தொழுவிலும் போடுவார்கள் என்று செமாயா எதிர்பார்க்கிறான்.

எருசலேமிலுள்ளவர்கள் எரேமியாவைத் தண்டிக்கும்போது, பாபிலோன் தேசத்திலுள்ள யூதர்கள் மத்தியில் எரேமியாவின் வார்த்தைக்கு மதிப்பு இல்லாமல் போகும். எரேமியாவின் செய்திக்கு யாரும் முக்கியத்துவம் கொடுக்கமாட்டார்கள். பாபிலோன் தேசத்தில் செமாயா சொல்லுகிற கள்ளத்தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு யூதாவின் மனுஷர் மத்தியில் அதிக முக்கியத்துவம் கிடைக்கும். செமாயா இதையெல்லாம் எதிர்பார்த்து, செப்பனியாவிடம், "இப்போதும் உங்களுக்குத் தீர்க்கதரிசனம் கூறிவருகிற ஆனதோத் ஊரானாகிய எரேமியாவை நீர் கடிந்து கொள்ளாமற்போனதென்ன?" (எரே 29:27) என்று கேட்கிறான்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை மாத்திரமே யூதாவின் மனுஷருக்கு அறிவிக்கிறார். மனுஷரை பிரியப்படுத்த வேண்டும் என்பதற்காக எரேமியா ஒருபோதும் கர்த்தருடைய சித்தத்தையும், விருப்பத்தையும் விட்டு விலகிப்போவதில்லை. எரேமியா கர்த்தர் சொல்லாததை சொல்லவுமில்லை. கர்த்தர் சொன்னதை சொல்லாமலிருந்ததுமில்லை. கர்த்தரும் எரேமியாவின் வாயிலிருந்து சொல்லப்பட்ட வார்த்தைகளை உறுதிபண்ணுகிறார்.

எரேமியா தங்களுக்கு பிரியமான வார்த்தைகளையும், தாங்கள் எதிர்பார்க்கிற வார்த்தைகளையும் சொல்லாததினால், அவர்கள் எரேமியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது அவர்கள் எரேமியாவைத் துன்பப்படுத்துவதற்கு ஒன்றுகூடுகிறார்கள். கர்த்தருடைய தீர்க்கதரிசியை பரியாசம்பண்ணுகிறார்கள்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் மனுஷருடைய பாவங்களைக் கடிந்துசொல்லுகிறார்கள். தங்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை தெளிவாய்ச் சொன்ன தீர்க்கதரிசிகளை துன்பப்படுத்துவதினாலோ அல்லது உபத்திரவப்படுத்துவதினாலோ, அவர்களுடைய பாவங்கள் நிவிர்த்தியாவதில்லை. தேவனுடைய கிருபை அவர்கள் மத்தியில் கிரியை செய்யவேண்டும். பாவிகள் தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பவேண்டும்.

"மூடனை உரலில் போட்டு உலக்கையினால் நொய்யோடே நொய்யாகக் குத்தினாலும், அவனுடைய மூடத்தனம் அவனை விட்டு நீங்காது" (நீதி 27:22).

எரேமியாவின் வார்த்தை எரே 29:29-32

எரே 29:29. இந்த நிருபத்தைச் செப்பனியா என்கிற ஆசாரியன் எரேமியா தீர்க்கதரிசியின் காதுகள் கேட்க வாசித்தான்.

எரே 29:30. ஆதலால், கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:

எரே 29:31. சிறையிருக்கிற அனைவருக்கும் நீ சொல்லியனுப்பவேண்டியது என்னவென்றால்: நெகெலாமியனாகிய செமாயாவைக்குறித்து, கர்த்தர்: செமாயாவை நான் அனுப்பாதிருந்தும், அவன் உங்களுக்குத் தீர்க்கதரிசனஞ் சொல்லி, உங்களைப் பொய்யை நம்பப்பண்ணுகிறபடியினால்,

எரே 29:32. இதோ, நான் நெகெலாமியனாகிய செமாயாவையும், அவன் சந்ததியையும் தண்டிப்பேன்; இந்த ஜனத்தின் நடுவிலே குடியிருப்பவன் ஒருவனும் அவனுக்கு இல்லாதிருப்பான்; நான் என் ஜனத்துக்குச் செய்யும் நன்மையை அவன் காண்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்; கர்த்தருக்கு விரோதமாய்க் கலகமுண்டாகப் பேசினான் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

செப்பனியா செமாயாவின் நிருபத்தை எரேமியா தீர்க்கதரிசியின் காதுகள் கேட்க வாசிக்கிறான். செப்பனியாவுக்கு எரேமியாவின்மீது அதிக மதிப்பு இருக்கிறது. செப்பனியா எரேமியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசியாக அங்கீகரிக்கிறான். ஆகையினால் எரேமியாவை அவருடைய சத்துருக்களின் கைகளிலிருந்து பாதுகாக்கவேண்டும் என்று விரும்புகிறான்.

"சிதேக்கியா ராஜா மல்கியாவின் குமாரனாகிய பஸ்கூரையும் ஆசாரியனான மாசெயாவின் குமாரனாகிய செப்பனியாவையும் எரேமியாவினிடத்தில் அனுப்பினான்" *(எரே 21:1).*

"சிதேக்கியா ராஜாவோவெனில், செலேமியாவின் குமாரனாகிய யூகாலையும், மாசெயாவின் குமாரனாகிய செப்பனியா என்னும் ஆசாரியனையும் எரேமியா தீர்க்கதரிசியினிடத்தில் அனுப்பி: நீ நம்முடைய தேவனாகிய கர்த்தரை நோக்கி எங்களுக்காக விண்ணப்பம்பண்ணவேண்டும் என்று சொல்லச்சொன்னான்" *(எரே 37:3).*

செமாயா செப்பனியாவுக்கு எழுதின நிருபத்தில், எரேமியாவை காவலறையில் போடுமாறும், தொழுவில் போடுமாறும் எழுதியிருக்கிறான். அந்த நிருபத்திலுள்ள செய்தியை எரேமியாவும் தெரிந்துகொள்ளவேண்டுமென்று செப்பனியா விரும்புகிறான். சிறையிருப்பிலிருக்கிற யூதர்களில் சிலரும் எரேமியாவுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள் என்பதை எரேமியா புரிந்துகொள்ளவேண்டும். எரேமியா பாபிலோன் தேசத்திலுள்ள யூதர்களுக்கு நிருபத்தை எழுதினாலும், அவர்கள் எரேமியாவின் நிருபத்திற்கு செவிகொடுக்கவில்லை.

கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாக செமாயா நிருபம் எழுதியிருக்கிறான். இதனால் எரேமியாவுக்கு செமாயாவின்மீது கோபம் வருகிறது. இப்படிப்பட்ட துர்ச்செய்தியோடு நிருபம் எழுதியதற்காக, எரேமியா செமாயாவை கர்த்தருடைய நாமத்தினால் கடிந்துகொள்கிறார். கர்த்தருடைய வார்த்தை செமாயாவுக்கு விரோதமாக எரேமியாவுக்கு உண்டாயிற்று. கர்த்தர் தம்முடைய கோபத்தினால்தான் யூதாவின் மனுஷரை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு அனுப்பியிருக்கிறார். சிறைப்பட்டுப் போனவர்களில் செமாயாவும் ஒருவன். அவனோ இன்னும் குணப்படவில்லை. செமாயா கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய ஊழியக்காரருக்கு விரோதமாகவும் சதிஆலோசனை பண்ணுகிறான்.

கர்த்தர் செமாயாவை தம்முடைய தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அனுப்பவில்லை. ஆனாலும் அவன் கர்த்தருடைய நாமத்தினால் பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிறான். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை, செமாயா பொய்யை நம்பப்பண்ணுகிறான். கர்த்தர் செமாயா மூலமாய்ப் பேசவில்லை. ஆனால் செமாயாவோ தன்னுடைய வார்த்தைகளெல்லாவற்றையும் கர்த்தரே சொல்லுவதாகச் சொல்லி, ஜனங்களை வஞ்சிக்கிறான்.

சிறையிருப்பிலிருக்கிற யூதாஜனங்களுக்கு சமாதானமுண்டாகும் என்று செமாயா சொல்லுகிறான். ஆனால் கர்த்தர் இந்த வார்த்தையை யாருக்கும் வெளிப்படுத்தவில்லை. செமாயா ஜனங்களுக்கு பொய்யான ஆறுதலை பிரசங்கம்பண்ணுகிறான். இதனால் அவர்கள் மெய்யான ஆறுதலிலிருந்து விலகிப்போய்விடுகிறார்கள்.

செமாயா கர்த்தருக்கு விரோதமாய்க் கலகமுண்டாகப் பேசுகிறான். அனனியாவைப் போல செமாயாவும் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறான்.

"ஆகையால், இதோ, உன்னைப் பூமியின்மேல் இராதபடிக்கு அகற்றிவிடுவேன்; இந்த வருஷத்திலே நீ சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்; கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் உண்டாகப் பேசினாயே என்றான்" (எரே 28:16).

செமாயா தன்னுடைய பொய்யான வார்த்தைகளினால் ஜனங்களை மோசம் பண்ணுகிறான். கர்த்தருடைய ஜனங்களை வஞ்சிக்கிறவர்கள் மோசம்போவார்கள். செமாயாவுக்கும் முடிவில் மோசமுண்டாகும்.

"அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங்காத்தும், குஞ்சுபொரிக்காமற்போகிற கவுதாரிக்குச் சமானமாயிருக்கிறான்; அவன் தன் பாதி வயதிலே அதைவிட்டு, தன் முடிவிலே மூடனாயிருப்பான்" (எரே 17:11).

கர்த்தர் செமாயாவையும், அவனுடைய குடும்பத்தையும் தண்டிக்கப்போவதாகச் சொல்லுகிறார். "இதோ, நான் நெகெலாமியனாகிய செமாயாவையும், அவன் சந்ததியையும் தண்டிப்பேன்; இந்த ஜனத்தின் நடுவிலே குடியிருப்பவன் ஒருவனும் அவனுக்கு இல்லாதிருப்பான்; நான் என் ஜனத்துக்குச்செய்யும் நன்மையை அவன் காண்பதில்லை" (எரே 29:32) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

30 அதிகாரம்

இதுவரையிலும் கர்த்தருடைய வார்த்தை ஜனங்களை கடிந்துகொள்ளும் வண்ணமாக வெளிப்பட்டது. இந்த அதிகாரத்திலும் இதற்கு அடுத்த அதிகாரத்திலும் கர்த்தர் தம்முடைய ஆறுதலான வார்த்தைகளையும், வாக்குத்தத்தத்தின் வார்த்தைகளையும் யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்லுகிறார். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்து அங்கே குடியேறுவார்கள் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். இந்த சம்பவம் மேசியாவின் நாட்களில், கர்த்தருடைய சபை பெற்றுக்கொள்ளும் மகிமையான ஆசீர்வாதங்களுக்கு ஒப்பாயிருக்கிறது.

கர்த்தர் எரேமியாவுக்கு சொல்லுகிற வார்த்தைகளை அவர் ஒரு புஸ்தகத்தில் எழுதவேண்டும். இனிமேல் வரப்போகிற சந்ததியாருக்கு ஆறுதலான செய்திகளை கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார் (எரே 30:1-3). சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு இனிமேல் சந்தோஷமுண்டாகும். அவர்களுடைய துக்கம் சந்தோஷமாய் மாறும்.

யூதர்கள் பாபிலோன் தேசத்திலே இப்போது பயங்கரமான சூழ்நிலையிலிருக்கிறார்கள் (எரே 30:4-7). யூதர்களை ஒடுக்குகிறவர்கள் பலமுள்ளவர்களாகவும், யூதர்கள் பலவீனமானவர்களாகவும் இருக்கிறார்கள் (எரே 30:8-10). யூதர்கள் இன்னும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்படவில்லை (எரே 30:11). யூதர்கள் விடுதலை பெறுவதற்கான எல்லா வாய்ப்புக்களும் தோல்வியுற்றதுபோல இருக்கிறது (எரே 30:12-14).

கர்த்தரே யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு அனுப்பியிருக்கிறார் (எரே 30:15,16). யூதர்கள் ஆதரவற்றவர்களைப் போலவும், தள்ளுண்டவர்களைப்போலவும் இருக்கிறார்கள் (எரே 30:17).

கர்த்தர் யூதாமனுஷருடைய சிறையிருப்பைத் திருப்புவார். அவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்து குடியேறுவார்கள். அவர்களுடைய இடிந்துபோன கட்டிடங்களும் நகரங்களும் மறுபடியும் திரும்பக் கட்டப்படும் (எரே 30:18). கர்த்தர் அவர்களை வர்த்திக்கப்பண்ணுவார். அவர்கள் எண்ணிக்கையில் விருத்தியடைவார்கள் (எரே 30:19,20).

கர்த்தர் மறுபடியும் யூதாமனுஷருடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் (எரே 30:21). கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை யூதாவின் மனுஷரோடும் எருசலேமின் குடிகளோடும் புதுப்பிப்பார் (எரே 30:22). யூதாமனுஷருடைய சத்துருக்கள் அழிந்துபோவார்கள் (எரே 30:23,24).

ஒரு புஸ்தகத்தில் எழுதிக் கொள் எரே 30:1-3

எரே 30:1. கர்த்தராலே எரேமியாவுக்கு உண்டான வார்த்தை:

எரே 30:2. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நான் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் ஒரு புஸ்தகத்தில் எழுதிக் கொள்.

எரே 30:3. இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தினுடைய சிறையிருப்பைத் திருப்பி, நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவேன்; அதை அவர்கள் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எரேமியாவுக்கு சொல்லுகிற வார்த்தைகளை, அவர் ஒரு புஸ்தகத்தில் எழுதிக்கொள்ளவேண்டும். யூதர்களுக்கு ஓய்வுநேரம் கிடைக்கும்போதெல்லாம், அவர்கள் இந்தப் புஸ்தகத்தை வாசித்து, கர்த்தருடைய வாக்குத்தத்தங்களைத் தியானிக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகள் நிறைவேறும் காலத்திற்காக யூதர்கள் பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

எரேமியா கர்த்தர் சொன்ன வார்த்தைகளையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து அதை ஒரு புஸ்தகமாகக் கோர்க்கவேண்டும். கர்த்தர் எரேமியாவுக்கு தம்முடைய வார்த்தைகளை தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறார். கர்த்தருடைய வார்த்தைகள் எல்லா சந்ததியாருக்கும் பொதுவானது. இனிமேல் வரப்போகிற சந்ததிக்கும் கர்த்தர் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். அந்த சந்தியார் கர்த்தருடைய வார்த்தைகள் நிறைவேறுவதை காண்பார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகள் தெரிந்திருக்கவேண்டும். கர்த்தர் அந்த வார்த்தைகளை இப்போது எரேமியாவுக்கு வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் எரேமியாவுக்குச் சொன்ன எல்லா வார்த்தைகளையும் அவர் ஒரு புஸ்தகத்தில் எழுதிக்கொள்ளவேண்டும். முக்கியமான ஆவணங்களையும், சுவடிகளையும் பாதுகாப்பதுபோல எரேமியா கர்த்தருடைய வார்த்தை எழுதப்பட்ட புஸ்தகத்தையும் பாதுகாக்கவேண்டும். கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை எழுதிக்கொள்வது மிகவும் நல்லது. கர்த்தர் சொன்ன ஒவ்வொரு தீர்க்கதரிசன வார்த்தைகளும் எவ்வாறு நிறைவேறுகிறது என்பதை, இந்தப் புஸ்தகத்தை வாசித்து உறுதிபண்ணிக்கொள்ளலாம்.

"சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளுதலைக்குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள்" (ரோம 11:28).

கர்த்தர் இஸ்ரவேலும் யூதாவுமாகிய அவருடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்புவார். கர்த்தர் அவர்கள் பிதாக்களுக்கு கொடுத்த தேசத்திற்கு அவர்களை திரும்பி வரப்பண்ணுவார். அவர்கள் அந்த நல்ல தேசத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள்.

கர்த்தர் இஸ்ரவேலையும் யூதாவையுங்குறித்துச் சொன்ன வார்த்தைகள் எரே 30:4-9

எரே 30:4. இவைகள் கர்த்தர் இஸ்ரவேலையும் யூதாவையுங்குறித்துச் சொன்ன வார்த்தைகளே.

எரே 30:5. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: தத்தளிப்பின் சத்தத்தைக் கேட்கிறோம்; திகிலுண்டு, சமாதானமில்லை.

எரே 30:6. ஆணாய்ப் பிறந்தவன் பிரசவிக்கிறதுண்டோ என்று கேட்டுப்பாருங்கள்; பிரசவிக்கிற ஸ்திரீயைப்போல் புருஷர் யாவரும் தங்கள் இடுப்புகளின்மேல் தங்கள் கைகளை வைத்திருக்கிறதையும், முகங்களெல்லாம் மாறி வெளுத்திருக்கிறதையும் நான் காண்கிறதென்ன?

எரே 30:7. ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்.

எரே 30:8. அந்நாளில் நான் அவன் நுகத்தை உன் கழுத்தின்மேல் இராதபடிக்கு உடைத்து, உன் கட்டுகளை அறுப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அந்நியர் இனி அவனை அடிமை கொள்வதில்லை.

எரே 30:9. தங்கள் தேவனாகிய கர்த்தரையும், நான் தங்களுக்கு எழுப்பப்போகிற தங்கள் ராஜாவாகிய தாவீதையுமே சேவிப்பார்கள்.

எரேமியா புஸ்தகத்தில் எழுதவேண்டிய வார்த்தைகளை கர்த்தர் அவருக்கு சொல்லுகிறார். இவையெல்லாம் கர்த்தர் இஸ்ரவேலையும் யூதாவையும் குறித்து சொன்ன வார்த்தைகள். இவை பரிசுத்த ஆவியானவரின் உபதேச வார்த்தைகள். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த துன்பத்தையும், வேதனையையும், உபத்திரவத்தையும் அனுபவிக்கிறார்கள். யூதர்கள் இப்போது அனுபவிக்கிற வேதனைகளை எரேமியா முதலாவதாக எழுதவேண்டும். கல்தேயர்கள் அவர்களை கொடுமைப்படுத்துகிறார்கள்.

"தத்தளிப்பின் சத்தத்தைக் கேட்கிறோம்; திகிலுண்டு, சமாதானமில்லை" (எரே 30:5) என்று கர்த்தர் சொல்லுகிறார். பாபிலோன் தேசத்தில், யூதர்கள் மத்தியில் அலறுதலின் சத்தமும், ஆபத்திலே கூக்குரலிடுகிற சத்தமும் கேட்கப்படுகிறது. அவர்களுக்கு சமாதானமுண்டாகும் என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு சமாதானமில்லை. சமாதானத்திற்குப் பதிலாக திகில் உண்டாயிருக்கிறது.

ஆணாய்ப்பிறந்தவன் பிரசவிப்பதில்லை. ஆனால் புருஷர் யாவரும் பிரசவிக்கிற ஸ்திரீயைப்போல் தங்கள் இடுப்புகளின்மேல், தங்கள் கைகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய முகங்களெல்லாம், பிரசவிக்கிற ஸ்திரீகளின் முகங்களைப்போல, மாறி வெளுத்திருக்கிறது. தேசம் முழுவதிலும் துன்பமும் வேதனையும் வந்திருக்கிறது. யூதர்கள் மத்தியிலே தத்தளிப்பின் சத்தம் கேட்கப்படுகிறது. இந்த வேதனைக்கு ஒருவரும் தப்பிக்கவில்லை. தங்களால் தப்பிக்க முடியாது என்பது யூதாவின் மனுஷருக்குத் தெரிந்திருக்கிறது.

கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பின் நாளைப்பற்றி இங்கு தெளிவுபடுத்துகிறார். அந்த நாள் பெரியது என்று சொல்லுகிறார். "ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்" (எரே 30:7).

"கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்" (யோவே 2:31).

"தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்" (யூதா 6).

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து எருசலேமுக்கு வரும் கடைசி அழிவைப்பற்றி சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறார். "ஏனெனில், உலகமுண்டானது முதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனி மேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்" (மத் 24:21).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நாள் யாக்கோபுக்கு இக்கட்டுக்காலமாகயிருக்கும். எல்லா ஜனங்களுக்கும் வேதனை உண்டாகும். ஆனாலும் கர்த்தருடைய ஜனங்களுக்கு வேதனை அதிகமாயிருக்கும். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற காலம், யாக்கோபுக்கு இக்கட்டு காலமாயிருக்கிறது. எரேமியா கர்த்தர் சொல்லுகிற இந்த வார்த்தைகளை ஒரு புஸ்தகத்தில் எழுதவேண்டும்.

யாக்கோபுக்கு இப்போது இக்கட்டுக்காலமாகயிருந்தாலும், அவர்களுடைய முடிவு சந்தோஷமாயிருக்கும். அவர்களுடைய துக்கநாட்கள் முடிந்துபோகும். அவர்களுடைய துக்கம் சந்தோஷமாய் மாறும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். இது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலமாகயிருந்தாலும், "அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்" (எரே 30:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யாக்கோபை துன்பப்படுத்துகிற அந்நியர்களால், இனிமேல் யாக்கோபை துன்பப்படுத்த முடியாது. "அந்நியர் இனி யாக்கோபை அடிமைகொள்வதில்லை" (எரே 30:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் நாளின்போது, கர்த்தர் யாக்கோபின் கழுத்தின்மேல் அந்நியருடைய நுகம் இராதபடிக்கு, அவனுடைய கட்டுகளை அறுப்பார். சேனைகளின் கர்த்தர் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

யாக்கோபினுடைய கழுத்தின்மேல் நீண்டகாலமாக பாரமான நுகம் சுமத்தப்பட்டிருக்கிறது. அது யாக்கோபின் கழுத்திற்கு வேதனையைக் கொடுக்கிறது. சேனைகளின் கர்த்தரோ யாக்கோபின் கட்டுகளை அறுப்பதாக வாக்குப் பண்ணுகிறார். கர்த்தர் நுகத்தை அறுத்துப்போடும்போது, அதை மறுபடியும் ஒருவராலும் கட்டமுடியாது. யாக்கோபுக்கு விடுதலை உண்டாகும். இனிமேல் அந்நியர்களால் யாக்கோபை அடிமைகொள்ள முடியாது.

கர்த்தருடைய கிருபை யாக்கோபின்மீது வந்து தங்கும். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரையும், தங்கள் ராஜாவாகிய தாவீதையும் சேவிப்பார்கள். யாக்கோபு இனிமேல் விக்கிரகங்களுக்கு அடிமையாகயிருக்கமாட்டான். அவன் அந்நிய தேவர்களைப் பின்பற்றிப்போகமாட்டான். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டவும் மாட்டான். அந்நிய தேசத்து ராஜாக்களை சேவிக்கவும் மாட்டான். கர்த்தர் அவர்களுக்காக எழுப்பப்போகிற, தங்கள் ராஜாவாகிய தாவீதை மாத்திரமே, யாக்கோபின் வம்சத்தார் சேவிப்பார்கள் (எரே 30:9).

கர்த்தருடைய நாள் வரும்போது யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் பூரண விடுதலை உண்டாயிருக்கும். அவர்களுடைய தத்தளிப்பின் சத்தம் நின்றுபோகும். அவர்களுக்கு திகில் இருக்காது. சமாதானம் இருக்கும். யாக்கோபின் இருதயம் தங்கள் தேவனாகிய கர்த்தரை சேவிக்கும். கர்த்தர் அவர்களுக்கு தம்மை சேவிக்கிற நல்ல இருதயத்தைக் கொடுப்பார். அவர்களுடைய இருதயத்தை தகுதிப்படுத்துவார். கர்த்தரை சேவிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புக்களைக் கொடுப்பார். தம்மை சேவிப்பதற்காகவே, கர்த்தர் நம்மை, நம்முடைய சத்துருக்களின் கைகளிலிருந்து விடுவித்திருக்கிறார்.

"தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும் படிக்கு, தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்" (லூக் 1:74,75).

யாக்கோபின் சந்ததியார் தங்கள் தேவனாகிய கர்த்தரை சேவிப்பார்கள். கர்த்தரை சேவிக்குமாறு அவர்களை யாரும் கட்டாயம்பண்ணமாட்டார்கள். அவர்கள் தாங்களாகவே முன்வந்து, மனப்பூர்வமாய், தங்கள் தேவனாகிய கர்த்தரை சேவிப்பார்கள். யாக்கோபின் சந்ததியார் சிறையிருப்பிலிருந்த காலத்தில் அவர்கள் அந்நிய தேவர்களை சேவித்தார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுமாறு அந்நியர்கள் அவர்களை கட்டாயம்பண்ணினார்கள். இப்போதோ கர்த்தர் அவர்களுக்கு விக்கிரகாராதனையிலிருந்து விடுதலையைக் கொடுத்திருக்கிறார். யாக்கோபின் சந்ததியார் தங்கள் தேவனாகிய கர்த்தரை மனப்பூர்வமாயும், பூரண விடுதலையோடும் சேவிக்கிறார்கள்.

யாக்கோபின் சந்ததியார் தங்கள் ராஜாவாகிய தாவீதை சேவிப்பார்கள். தாவீதின் சந்ததியில் வந்த ராஜாக்களை சேவிப்பார்கள். கர்த்தர் செருபாபேலைப்போல, தாவீதின் சந்ததியில் ராஜாக்களை எழுப்புகிறார். தாவீதின் சிங்காசனத்தில் அவருடைய சந்ததியைச் சேர்ந்த ராஜாக்கள், யாக்கோபின் சந்ததியாரை ஆளுகை செய்வார்கள். தாவீதின் சந்ததியில், தாவீதின் குமாரனாகிய மேசியாவாகிய கிறிஸ்து அவதரித்திருக்கிறார். யாக்கோபின் வம்சத்தார் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை சேவிப்பார்கள். யூதர்கள் இயேசுகிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த பின்பு, அவர்கள், கர்த்தர் தங்களுக்கு எழுப்பப்போகிற தங்கள் ராஜாவாகிய மேசியாவை சேவிப்பார்கள். மேசியா தாவீதின் குமாரன். அவரே ராஜாவாகிய தாவீது.

"கிறிஸ்துவைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்றுகேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள்" *(மத் 22:42).*

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் தாவீதின் குமாரன் என்னும் நாமத்தினால் ஜனங்களுக்கு பதில் கொடுத்தார்.

"அவர்கள் பேசாதிருக்கும்படி ஜனங்கள் அவர்களை அதட்டினார்கள். அவர்களோ: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள். இயேசு நின்று, அவர்களைத் தம்மிடத்தில் அழைத்து: நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறீர்கள் என்றார்" *(மத் 20:31,32).*

பிதாவாகிய தேவன், தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை ராஜாதி ராஜாவாக எழுப்பியிருப்பதாக புதிய ஏற்பாட்டில் பல சம்பவங்களில் சொல்லியிருக்கிறார்.

"அவர் உங்களெல்லாரையும் உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை எழுப்பி, முதலாவது உங்களிடத்திற்கே அவரை அனுப்பினார் என்றான்" *(அப் 3:26)*

"அவனுடைய சந்ததியிலே தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படியே இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார்" *(அப் 13:23).*

"இயேசுவை எழுப்பினதினாலே தேவன் நம்முடைய பிதாக்களுக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார் என்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம்" *(அப் 13:33).*

கர்த்தரை தங்கள் தேவனாக சேவிக்கிறவர்கள், தாங்களைத் தாங்களே இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். கிறிஸ்துவானவர் தங்களை ஆளுகை செய்வதற்கு, அவர்கள் தங்களை இயேசுகிறிஸ்துவின் பாதபடியில் சமர்ப்பிக்கவேண்டும். எல்லா மனுஷரும் பிதாவாகிய தேவனை கனம்பண்ணுவதுபோல, குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் கனம்பண்ணவேண்டும். கிறிஸ்துவானவரே தேவனுக்கும் நமக்கும் நடுவே மத்தியஸ்தராயிருக்கிறார். நாம் இயேசுகிறிஸ்து கொடுக்கும் இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அவர் கொடுக்கும் நுகத்தையும் நம்மீது ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இஸ்ரவேலே கலங்காதே
எரே 30:10-17

எரே 30:10. ஆகையால் என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே; இஸ்ரவேலே கலங்காதே என்று கர்த்தர் சொல்லுகிறார்; இதோ, நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியைத் தங்கள் சிறையிருப்பின் தேசத்திலும் இராதபடிக்கு இரட்சிப்பேன்; யாக்கோபு திரும்பி வந்து அமர்ந்து சுகித்திருப்பான்; அவனைத் தத்தளிக்கப்பண்ணுகிறவனில்லை.

எரே 30:11. உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்; உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய் தண்டிப்பேன்.

எரே 30:12. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் புண் ஆறாததாயும் உன் காயம் கொடிதாயும் இருக்கிறது.

எரே 30:13. உன் காயங்களைக் கட்டும்படி உனக்காக ஏற்படுவாரில்லை; உன்னைச் சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களுமில்லை.

எரே 30:14. உன் நேசர் யாவரும் உன்னை மறந்தார்கள்; அவர்கள் உன்னைத் தேடார்கள்; திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும், உன் பாவங்கள் பலத்துப்போனதினிமித்தமும், சத்துரு வெட்டும் வண்ணமாகவும், கொடியவன் தண்டிக்கிற வண்ணமாகவும் நான் உன்னை தண்டித்தேன்.

எரே 30:15. உன் நொறுங்குதலினாலும் உன் வேதனையின் மிகுதியினாலும் நீ கூக்குரலிடுவானேன்? திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும் பலத்துப்போன உன் பாவங்களினிமித்தமும் இப்படி உனக்குச் செய்தேன்.

எரே 30:16. ஆதலால் உன்னைப் பட்சிக்கிறவர்கள் யாவரும் பட்சிக்கப்படுவார்கள்; உன் சத்துருக்களெல்லாரும் சிறைப்பட்டுப்போவார்கள்; உன்னைச் சூறையாடுகிறவர்கள் சூறையாடப்படுவார்கள்; உன்னைக் கொள்ளையிடுகிற அனைவரையும் கொள்ளைக்கு ஒப்புக்கொடுப்பேன்.

எரே 30:17. அவர்கள்: உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளுண்டவள் என்று பேரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். அங்கே அவர்களுக்கு மிகுந்த துன்பமும், வேதனையும், உபத்திரவமும் உண்டாயிருக்கிறது. அவர்கள் சிறையிருப்பிலிருந்தாலும், கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய அற்புதமான வாக்குத்தத்தங்களைக் கொடுக்கிறார்.

கர்த்தரே யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும், அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு அனுப்பினார். கர்த்தரே அவர்களை யூதாதேசத்திலிருந்தும், எருசலேமிலிருந்தும் சிதறிப்போகப்பண்ணினார். "திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும் பலத்துப்போன உன் பாவங்களினிமித்தமும் இப்படி உனக்கு செய்தேன்" (எரே 30:15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைகளை சிட்சிப்பதுபோல, கர்த்தர் யூதாவின் மனுஷரை சிட்சித்திருக்கிறார். அவர்களை இரட்சிப்பதற்காகவே கர்த்தர் அவர்களோடு கூடயிருக்கிறார். அவர்களை திருத்துவதற்காகவே கர்த்தர் அவர்களை சிதறிப்போகப்பண்ணினார். ஆனாலும் கர்த்தர் யூதாவின் மனுஷரை நிர்மூலமாக்கவில்லை. அதே வேளையில் அவர்களை முற்றிலும் தண்டியாமல் விட்டுவிடவுமில்லை. அவர்களை மட்டாய்த் தண்டிக்கிறார் (எரே 30:11).

கர்த்தர் யூதாவின் மனுஷரை அவர்களுடைய பாவங்களுக்குத் தக்க பிரகாரம் தண்டிக்கிறார். அவர்களால் எவ்வளவு தண்டனைகளை தாங்கிக்கொள்ள முடியுமோ, அந்த அளவுக்கு மாத்திரமே கர்த்தர் அவர்களைத் தண்டிக்கிறார். அவர்களை முற்றிலும் நிர்மூலமாக்கிவிடாமல், மட்டாய்த் தண்டிக்கிறார். யூதா மனுஷருடைய பாவமும் பெரியதாயிருக்கிறது. அவர்களுடைய அக்கிரமங்கள் திரளாயிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் அவர்களை அதிகமாய்த் தண்டியாமல், தம்முடைய கிருபையினால் மட்டாய்த் தண்டிக்கிறார்.

கர்த்தர் பாவங்களை வெறுக்கிறவர். தமக்கு அருகாமையிலிருக்கிற ஜனங்களிடத்தில் பாவங்களும் அசுத்தங்களும் இருக்கக்கூடாது என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். தூரயிருக்கிறவர்களுடைய பாவங்களைவிட, தமக்கு சமீபமாயிருக்கிறவர்களுடைய பாவங்களை கர்த்தர் அதிகமாய் வெறுக்கிறார். கர்த்தருக்கு அருகாமையிலிருக்கிறவர்கள், மிகுந்த பயபக்தியோடும், மிகுந்த பரிசுத்தத்தோடும் இருக்கவேண்டும்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு அருகாமையிலிருக்கிறார்கள். ஆனாலும் அவர்களுடைய அக்கிரமங்கள் திரளாயிருக்கிறது. அவர்களுடைய பாவங்கள் பலத்துப்போயிருக்கிறது. கர்த்தர் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், அவர்களைத் தண்டிக்கிறார்.

"திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும், உன் பாவங்கள் பலத்துப்போனதினிமித்தமும், சத்துரு வெட்டும் வண்ணமாகவும், கொடியவன் தண்டிக்கிற வண்ணமாகவும் நான் உன்னை தண்டித்தேன்" *(எரே 30:14)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் யூதாவின் மனுஷரை தண்டிக்கும்போது அவர்கள் நொறுக்கப்படுகிறார்கள். அவர்களுடைய வேதனை மிகுதியாகிறது. "உன் நொறுங்குதலினாலும் உன் வேதனையின் மிகுதியினாலும் நீ கூக்குரலிடுவானேன்? திரளான உன் அக்கிரமத்தினிமித்தமும் பலத்துப்போன உன் பாவங்களினிமித்தமும் இப்படி உனக்குச் செய்தேன்" *(எரே 30:15)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் யூதாவின் மனுஷரை, ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைகளைத் தண்டிப்பதுபோல தண்டிக்கிறார். ஆனால் கர்த்தர் அவர்கள்மேல் கோபமாயிருப்பதாக ஜனங்கள் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். சத்துரு வெட்டும்வண்ணமாகவும் கொடியவன் தண்டிக்கிற வண்ணமாகவும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை தண்டிப்பதாக ஜனங்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். கர்த்தரும் யூதாவின் மனுஷரை கடினமாகத் தண்டிப்பதை அங்கீகரிக்கிறார். அவர்களுடைய அக்கிரமங்கள் திரளாயிருப்பதினிமித்தமாயும், அவர்களுடைய பாவங்கள் பலத்துப் போனதினிமித்தமாயும் அவர்களுக்கு இவ்வளவு கடுமையான தண்டனை வந்திருக்கிறது *(எரே 30:14)*.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை கடினமாய்த் தண்டிக்கும்போது, அவர் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதுபோல இருக்கிறது.

"அவர்களோ கலகம்பண்ணி, அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள்; அதினால் அவர் அவர்களுக்குச் சத்துருவாய் மாறி, அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார்" *(ஏசா 63:10)*.

"அவர் புசலினால் என்னை முறிக்கிறார்; முகாந்தரமில்லாமல் அநேகம் காயங்களை எனக்கு உண்டாக்குகிறார்" *(யோபு 9:17)* என்று யோபுவும் தன்னுடைய வேதனையில் புலம்புகிறார்.

யூதா மனுஷருடைய சிநேகிதர்கள் அவர்களைக் கைவிட்டுவிடுகிறார்கள். நமக்கு துன்பங்களும், நெருக்கங்களும், பாடுகளும், வேதனைகளும் வரும்போது, நம்முடைய சிநேகிதர்கள் நமக்கு உதவிபுரிய வருவார்கள் என்று நாம் எதிர்பார்ப்போம். நாம் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது நம்முடைய சிநேகிதர்கள் நமக்கு காயம் கட்ட வருவார்கள் என்று எதிர்பார்ப்போம். நம்முடைய நோயை விசாரிப்பதற்கு அவர்கள் வருவார்கள் என்று காத்திருப்போம்.

யூதா மனுஷருடைய புண் ஆறாததாயிருக்கிறது. அவர்களுடைய காயம் கொடிதாயும் இருக்கிறது. ஆனால் அவர்களுடைய காயங்களைக் கட்டும்படி, அவர்களுக்காக ஏற்படுவார் ஒருவருமில்லை அவர்களை சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களும் இல்லை. அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது அவர்களை விசாரிப்பதற்கு ஒருவரும் வரவில்லை. அவர்களுடைய நேசர்கள் யாவரும் அவர்களை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் யூதாவின் மனுஷரை தேடவுமில்லை. தங்களுடைய அன்பையும் கரிசனையையும் அவர்களுக்கு காண்பிக்க வரவுமில்லை *(எரே 30:12,13)*.

கர்த்தர் ஒரு ஜனத்திற்கு விரோதமாக எழும்பும்போது, அவர்களுக்கு ஆதரவாக ஒருவரும் வரமாட்டார்கள். கர்த்தர் நம் பட்சத்திலிருக்கும்போது எல்லோரும் நம் பட்சத்தில் வருவார்கள். கர்த்தர் நமக்கு விரோதமாக எழும்பும்போது எல்லோரும் நம்மைவிட்டு விலகிப்போய்விடுவார்கள்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் மிகுந்த வேதனையிலிருக்கிறார்கள். அவர்களுடைய வருத்தமும் மிகுதியாயிருக்கிறது. அதிகமாக வருத்தப்பட்டதினாலும், அதிகமாக வேதனைகளை அனுபவித்ததினாலும் அவர்களுடைய இருதயமே வேதனையினால் கடினப்பட்டுப்போயிற்று. அவர்களைப் பார்த்து மற்றவர்களும் தூஷிக்கிறார்கள். சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை "விசாரிப்பாரற்ற சீயோன்" என்று ஜனங்கள் ஏளனம்பண்ணுகிறார்கள். அவர்களுக்கு "தள்ளுண்டவள்" என்று பட்டப்பெயரையும் கொடுக்கிறார்கள்.

யூதர்களுடைய சிநேகிதர்கள் அவர்களைக் கைவிட்டாலும், கர்த்தர் அவர்களை கைவிடாதிருக்கிறார். ஜனங்கள் யூதர்களை, விசாரிப்பாரற்ற சீயோன் என்றும், தள்ளுண்டவள் என்றும் சொன்னாலும், கர்த்தர் அவர்களுக்கு ஆரோக்கியம் வரப்பண்ணுகிறார். அவர்களுடைய காயங்களை ஆற்றுவதாக கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். யூதாவின் மனுஷரை ஜனங்கள் கைவிட்டாலும், கர்த்தர் கைவிடாதிருக்கிறார்.

சீயோன் இப்போது அழிந்துபோயிருக்கிறது. அதை நேசிப்பார் ஒருவருமில்லை. சீயோனைத் தேடி இப்போது ஒருவரும் வரவில்லை. ஒரு காலத்தில் சீயோனிலே வாசம்பண்ணின கர்த்தருடைய பிள்ளைகள் செழித்திருந்தார்கள். இப்போதோ அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் வேதனைகளை அனுபவிக்கிறார்கள். அவர்களைப் பார்க்கிறவர்கள், அவர்களைப்பற்றி ஏளனமாய்ப் பேசுகிறார்கள். அவர்கள் விசாரிப்பாரற்ற சீயோன் என்றும், தள்ளுண்டவள் என்றும் சொல்லி ஏளனம்பண்ணுகிறார்கள்.

சீயோன் இப்போது விசாரிப்பார் அற்றவளாகயிருந்தாலும், அவள் தள்ளுண்டவளாகயிருந்தாலும் கர்த்தர் அவர்களை விசாரிக்கிறார். கர்த்தர் அவர்களைத் தள்ளிவிடவில்லை. கர்த்தர் தமக்கு ஏற்ற வேளையில், சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை விடுதலைபண்ணுவார். அவர்களுக்கு தம்முடைய இரட்சிப்பைக் கட்டடளையிடுவார்.

கர்த்தர் இப்போது யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் விட்டு தூரத்திலிருப்பதுபோல இருக்கிறார். ஆனாலும் கர்த்தருடைய பிரசன்னம் அவர்களோடு கூடவே இருக்கும். "உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன்" (எரே 30:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் ஒருபோதும் தம்முடைய ஜனத்தைவிட்டு தூரமாய் விலகிப்போவதில்லை. அவர்களைக் கைவிடுவதுமில்லை.

கர்த்தர் சிறையிருப்பிலிருக்கிற யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் பார்த்து, "என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே, இஸ்ரவேலே, கலங்காதே" என்று கர்த்தர் சொல்லுகிறார். "இதோ, நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியைத் தங்கள் சிறையிருப்பின் தேசத்திலும் இராதபடிக்கு இரட்சிப்பேன்; யாக்கோபு திரும்பி வந்து அமர்ந்து சுகித்திருப்பான்; அவனைத் தத்தளிக்கப்பண்ணுகிறவனில்லை" (எரே 30:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதர்கள் இப்போது தங்கள் தேசத்தைவிட்டு, தூரத்திலுள்ள பாபிலோன் தேசத்தில் அடிமைப்பட்டிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களை இரட்சிப்பதாக வாக்குப்பண்ணுகிறார். "நான் உன்னை தூரத்திலும், உன் சந்ததியை தங்கள் சிறையிருப்பின் தேசத்திலும் இராதபடிக்கு இரட்சிப்பேன்" (எரே 30:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் பயத்தினால் நிரம்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு சமாதானமும், சந்தோஷமும், ஆறுதலும் இல்லை. அவர்கள் தவித்து, தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். கர்த்தரோ அவர்களுக்கு சமாதானத்தை வாக்குப்பண்ணுகிறார். "யாக்கோபு திரும்பி வந்து அமர்ந்து சுகித்திருப்பான்; அவனைத் தத்தளிக்கப்பண்ணுகிறவனில்லை" (எரே 30:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் பல தேசங்களுக்கும் சிதறிப்போனார்கள். பல ஜாதிகள் எருசலேமின் குடிகளை சிதறடித்தார்கள். யூதர்களை சிதறடித்த எல்லா ஜாதிகளையும் கர்த்தர் நிர்மூலமாக்குவதாக வாக்குப்பண்ணுகிறார். ஆனாலும் யூதர்களுக்கு ஒரு சேதமும் வராது. கர்த்தர் யூதாவை நிர்மூலம் பண்ணமாட்டார் (எரே 30:11).

யூதர்கள் இப்போது சிறையிருப்பில் பாடுகளை அனுபவிக்கிறார்கள். அவர்கள் பல தேசங்களுக்கும் சிதறிப்போயிருக்கிறார்கள். யூதாதேசம் அழிந்துபோனதுபோல இருக்கிறது. ஆனாலும் கர்த்தர் யூதாவை நிர்மூலம் பண்ணமாட்டார். அவர்களை இரட்சிப்பார். அவர்களை முற்றிலும் தண்டித்து அழித்துப்போடாமல், மட்டாய்த் தண்டித்து திருத்துவார்.

கர்த்தர் யாக்கோபுடைய கூடாரங்களின் சிறையிருப்பைத் திருப்புவார். அவர்களுடைய வாசஸ்தலங்களுக்கு இரக்கம் செய்வார். எருசலேம் நகரம் இப்போது மண்மேடாய்க் கிடக்கிறது. ஆனாலும் அந்த நகரம் மறுபடியும் மண்மேட்டின்மேல் கட்டப்படும். அரண்மனை முன்போல நிலைப்படும் (எரே 30:18).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்களுடைய அக்கிரமங்கள் திரளாயிருந்தது. அவர்களுடைய பாவங்கள் பலத்துப்போயிற்று. கர்த்தர் அவர்களை தம்முடைய நீதியினால் தண்டிக்கிறார். சத்துரு வெட்டும் வண்ணமாகவும், கொடியவன் தண்டிக்கும் வண்ணமாகவும், கர்த்தர் யூதாவின் மனுஷரைத் தண்டிக்கிறார். கர்த்தர் தம்முடைய கோபத்தினாலும் நீதியினாலும் அவர்களைத் தண்டித்தாலும், அவர் தமது கிருபையினால் அவர்களுக்கு இரங்குகிறார். தேவன் இஸ்ரவேல் அவர்களுக்கு ஜனங்களை இரட்சிக்கும் காலம் வரும்போது, அவர்களுடைய இரட்சிப்புக்கு அவர்களுடைய பாவங்கள் தடையாயில்லை. அவர்களுடைய பாவங்களைவிட, கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் மிகவும் பெரியதாயிருக்கிறது.

யூதாவின் மனுஷருக்கு விரோதமாக எழும்பியிருக்கிற சத்துருக்கள் பலத்திருக்கிறார்கள். அவர்கள் யூதர்களை பட்சிக்கிறார்கள். யூதர்கள் பலவீனமாயிருக்கிறார்கள். கர்த்தரோ தம்முடைய ஜனமாகிய யூதாமனுஷரோடு கூடயிருக்கிறார்.

"உன்னைப் பட்சிக்கிறவர்கள் யாவரும் பட்சிக்கப்படுவார்கள்; உன் சத்துருக்களெல்லாரும் சிறைப்பட்டுப் போவார்கள்; உன்னைச் சூறையாடுகிறவர்கள் சூறையாடப்படுவார்கள்; உன்னைக் கொள்ளையிடுகிற அனைவரையும் கொள்ளைக்கு ஒப்புக்கொடுப்பேன்" (எரே 30:16) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் பார்த்து சொல்லுகிறார்.

யூதாவின் காயங்கள் பெரிதாயிருக்கிறது. அவர்களை சொஸ்தப்படுத்தும் ஔஷதங்களும் இல்லை. ஆனாலும் கர்த்தர் அவர்களுக்கு ஆரோக்கியம் வரப்பண்ணுவார். அவர்களுடைய காயங்களை ஆற்றுவார் (எரே 30:17).

யூதர்கள் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். சத்துருக்களுக்கு பயந்து நடுங்குகிறார்கள். பாபிலோன் தேசத்தாரைப் பார்த்து தத்தளிக்கிறார்கள். வேதனையின் மிகுதியினால் கூக்குரலிடுகிறார்கள். யூதர்கள் சிறையிருப்பில் கஷ்டப்பட்டாலும், கர்த்தருடைய அற்புதமான வாக்குத்தத்தங்கள் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அவர்கள் கர்த்தருடைய நல்ல வார்த்தைகளைத் தியானித்துப் பார்த்து, தங்களுடைய கூக்குரலை நிறுத்திப்போட வேண்டும். "உன் நொறுங்குதலினாலும் உன் வேதனையின் மிகுதியினாலும் நீ கூக்குரலிடுவானேன்" (எரே 30:15) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரைப் பார்த்து கேட்கிறார்.

யாக்கோபு பாபிலோன் தேசத்தாரைப் பார்த்து பயப்படக்கூடாது. கர்த்தருடைய நல்ல வாக்குத்தத்தங்களை நினைத்து தைரியம் கொள்ளவேண்டும். "என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே, இஸ்ரவேலே கலங்காதே" (எரே 30:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் நம்பிக்கையில்லாதவர்கள் பயப்படுவதுபோல பயப்படக்கூடாது. கர்த்தரும் அவருடைய வார்த்தையும் அவர்களுக்கு நம்பிக்கையாயிருக்கிறது.

யூதா மனுஷருடைய திரளான அக்கிரமங்களினிமித்தமும், அவர்களுடைய பலத்துப்போன பாவங்களினிமித்தமும் கர்த்தர் அவர்களைத் தண்டித்திருக்கிறார். அவர்கள் தங்கள் நொறுங்குதலினாலும், தங்கள் வேதனையின் மிகுதியினாலும் கூக்குரலிடுவதற்குப் பதிலாக, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். தங்களுடைய பாவங்களினிமித்தமாகவே கர்த்தர் தங்களை இப்படி தண்டித்திருக்கிறார் என்பதை அவர்கள் உணரவேண்டும். மனம் பதறுவதற்குப் பதிலாக மனந்திரும்பவேண்டும். இதுவே கர்த்தருடைய சித்தம்.

அரமனை முன்போல நிலைப்படும் எரே 30:18-24

எரே 30:18. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் யாக்கோபுடைய கூடாரங்களின் சிறையிருப்பைத் திருப்பி, அவன் வாசஸ்தலங்களுக்கு இரக்கஞ்செய்வேன்; நகரம் தன் மண்மேட்டின்மேல் கட்டப்பட்டு, அரமனை முன்போல நிலைப்படும்.

எரே 30:19. அவைகளிலிருந்து ஸ்தோத்திரமும் ஆடல்பாடலின் சத்தமும் புறப்படும்; அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன், அவர்கள் குறுகிப்போவதில்லை; அவர்களை மகிமைப்படுத்துவேன், அவர்கள் சிறுமைப்படுவதில்லை.

எரே 30:20. அவர்கள் பிள்ளைகள் முன்போலிருப்பார்கள்; அவர்கள் சபை எனக்கு முன்பாகத் திடப்படும்; அவர்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன்.

எரே 30:21. அவர்களுடைய பிரபு அவர்களில் ஒருவனாயிருக்க, அவர்களுடைய அதிபதி அவர்கள் நடுவிலிருந்து தோன்றுவார்; அவரைச் சமீபித்து வரப்பண்ணுவேன், அவர் சமீபித்து வருவார், என்னிடத்தில் சேரும்படி, தன் இருதயத்தைப் பிணைப்படுத்துகிற இவர் யார்? என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 30:22. நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்.

எரே 30:23. இதோ, கோராவாரிக் காற்றாகிய கர்த்தருடைய பெருங்காற்று உக்கிரமாயெழும்பி, அடித்து, துன்மார்க்கருடைய தலையின்மேல் மோதும்.

எரே 30:24. கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை நடப்பித்து நிறைவேற்றுமளவும், அவருடைய உக்கிர கோபம் தணியாது; கடைசிநாட்களில் அதை உணர்ந்துகொள்வீர்கள்.

யூதா மனுஷருடைய துக்கநாட்கள் முடிந்த பின்பு, கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு தாராளமாய்க் கொடுக்கப்படும். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக ஏராளமான ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையும் வைத்திருக்கிறார். எருசலேம் நகரமும் தேவாலயமும் திரும்பக் கட்டப்படும். யாக்கோபுடைய கூடாரங்கள் இடிந்து விழுந்துவிட்டது. அவர்களுடைய வாசஸ்தலங்களெல்லாம் மண்மேடாய்ப் போயிற்று.

கர்த்தர் யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்புவார். அவர்களுடைய வாசஸ்தலங்களுக்கு இரக்கம் செய்வார். எருசலேம் நகரம் தன் மண்மேட்டின்மேல் மறுபடியும் கட்டப்படும். அவர்களுடைய அரமனை முன்போல நிலைப்படும். அவர்களுடைய வாசஸ்தலங்கள்மீது கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் வந்து தங்கியிருக்கும். தேவனுடைய நீதியினாலே யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் அழிவு உண்டாயிற்று. அவர்கள் அந்நிய தேசங்களுக்கு துரத்தப்பட்டார்கள். பாபிலோன் தேசத்தார் அவர்களை சிறைப்பிடித்து கொண்டு போனார்கள்.

எருசலேம் நகரம் இப்போது இடிந்து மண்மேடாய்க் கிடக்கிறது. இந்த மண்மேட்டின்மீது எருசலேம் மறுபடியும் கட்டப்படும். கர்த்தரே தம்முடைய சித்தத்தின் பிரகாரம் பட்டணத்தை மண்மேடாக்குகிறார். கர்த்தரே தம்முடைய கிருபையினால் மண்மேடாயிருப்பதை திரும்பவும் கட்டியெழுப்புகிறார்.

"நீர் நகரத்தை மண்மேடும், அரணான பட்டணத்தைப் பாழுமாக்கினீர்; அந்நியரின் ராஜதானியை ஊராயிராதபடிக்கும், என்றைக்கும் கட்டப்படாதபடிக்கும் செய்தீர்" (ஏசா 25:2).

"அரமனை முன்போல நிலைப்படும்" (எரே 30:18) என்று கர்த்தர் சொல்லுகிறார். அரமனை என்பது கர்த்தருடைய வாசஸ்தலமாகிய தேவாலயத்தைக் குறிக்கிற வார்த்தை. கர்த்தருடைய ஆலயம் ஏற்கெனவே இருந்ததுபோல மறுபடியும் திரும்பக் கட்டப்படும். தேவாலயம் தன்னுடைய பழைய வடிவத்தின் பிரகாரமாக புதுப்பித்துக் கட்டப்படும்.

எருசலேம் நகரத்தில் பரிசுத்தமான பண்டிகைகள் மறுபடியும் ஆசாரிக்கப்படும். எருசலேம் நகரத்திலிருந்தும், தேவாலயத்திலிருந்தும், யாக்கோபின் கூடாரங்களிலிருந்தும் கர்த்தரைத் துதிக்கும் ஸ்தோத்திரமும், ஆடல் பாடலின் சத்தமும் புறப்படும். கர்த்தர் அவர்களை வர்த்திக்கப்பண்ணுவார். அவர்கள் குறுகிப்போகமாட்டார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை மகிமைப்படுத்துவார். அவர்கள் சிறுமைப்படுவதில்லை.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன யூதர்கள் இப்போது எண்ணிக்கையில் கொஞ்சம் பேராயிருக்கிறார்கள். அவர்கள் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாயிருந்தாலும், கர்த்தர் அவர்களை வர்த்திக்கப்பண்ணுவார். அவர்கள் திரளாய்ப் பெருகுவார்கள். கர்த்தர் அவர்களை மகிமைப்படுத்தும்போது, அவர்கள் உயர்ந்திருப்பார்கள்.

இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அநுதினமும் தம்முடைய சபையில் சேர்த்துக்கொண்டு வருகிறார். இதனால் சபை எண்ணிக்கையில் வளர்ந்து பெருகுகிறது. சபையிலே புதிய விசுவாசிகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். கர்த்தருடைய சபை அவருக்கு முன்பாக திடப்படும்.

"அவர்கள் பிள்ளைகள் முன்போலிருப்பார்கள்; அவர்கள் சபை எனக்கு முன்பாகத் திடப்படும்; அவர்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன்" (எரே 30:20) என்று கர்த்தர் சொல்லுகிறார். சபையில் கர்த்தரை உண்மையாய்த் தொழுதுகொள்கிறவர்கள் நிரம்பியிருப்பார்கள். பரிசுத்தவான்களின் எண்ணிக்கையினால் சபை பெருகும்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களை நல்லவர்கள் ஆட்சிசெய்வார்கள். கர்த்தர் அவர்களுடைய தேசத்தை ஆசீர்வதிப்பார். "அவர்களுடைய பிரபு அவர்களில் ஒருவனாயிருக்க, அவர்களுடைய அதிபதி அவர்கள் நடுவிலிருந்து தோன்றுவார்" (எரே 30:21) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும், யூததேசத்தைச் சேர்ந்தவர்களே ஆளுகை செய்வார்கள். அவர்களுடைய பிரபுக்களும், அதிபதிகளும் அவர்களில் ஒருவராயிருப்பார்கள். அந்நியர்கள் இனிமேல் அவர்களை ஆளுகை செய்யமாட்டார்கள்.

பாபிலோன் தேசத்து ராஜா இதுவரையிலும் யூதர்களை ஆளுகை செய்தான். அவன் அந்நியனாயிருந்தாலும், கர்த்தர் தம்முடைய ஜனத்தை அவனுடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுத்தார். இனிமேல் அந்நிய தேசத்தார் கர்த்தருடைய ஜனத்தை ஆளுகை செய்யமாட்டார்கள். யூதர்களுடைய அதிபதி, யூதர்களின் நடுவிலிருந்தே தோன்றுவார். அவர்களை ஆளுகை செய்கிற பிரபு யூதர்களில் ஒருவராயிருப்பார். அவர்களுடைய பிரபுவும் அதிபதியும், அவர்களைப்போலவே பாபிலோன் தேசத்து சிறையிருப்பின் கஷ்டங்களையும், வேதனைகளையும் அனுபவித்தவராயிருப்பார்.

கர்த்தர் இங்கு பிரபு என்றும், அதிபதி என்றும் சொல்லுகிற வார்த்தைகள், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிப்பிடுகிறது. யூதர்கள், "தங்கள் தேவனாகிய கர்த்தரையும், நான் தங்களுக்கு எழுப்பப்போகிற தங்கள் ராஜாவாகிய தாவீதையுமே சேவிப்பார்கள்" (எரே 30:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கிறிஸ்துவானவர் நம்மில் ஒருவராயிருக்கிறார். கிறிஸ்துவானவர் எல்லா விஷயங்களிலும் தம்முடைய சகோதரரைப்போலவே இருந்தார். அவர் நம்மைப்போலவே மனுஷரூபமெடுத்தார். கர்த்தர் அவரை சமீபித்து வரப்பண்ணுவார். அவரும் சமீபித்து வருவார்.

"அவரை சமீபித்து வரப்பண்ணுவேன், அவர் சமீபித்து வருவார்" (எரே 30:21) என்னும் வாக்கியத்திற்கு வேதபண்டிதர்கள் இரண்டுவிதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இந்த வாக்கியம் யாக்கோபையும், இஸ்ரவேலையும் குறிக்கும் என்பது ஒரு வியாக்கியானம். இந்த வாக்கியமானது அவர்களுடைய அதிபதியைக் குறிக்கும் என்பது மற்றொரு வியாக்கியானம்.

கர்த்தர் யாக்கோபையும் இஸ்ரவேலையும் தமக்கு சமீபித்து வரப்பண்ணுவார். அவர்கள் தேவாலயத்தில் கர்த்தருக்கு அருகாமையில் வந்து அவரை ஆராதிப்பார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரும், யூதாவின் புத்திரரும் இதற்கு முன்பு கர்த்தருடைய ஜனமாயிருந்தார்கள். கர்த்தரும் அவர்களுடைய தேவனாயிருந்தார். அதுபோலவே, இனிமேலும் அவர்கள் கர்த்தருடைய ஜனமாயிருப்பார்கள். கர்த்தர் அவர்களுடைய தேவனாயிருப்பார் (எரே 30:22).

"அவரை சமீபித்து வரப்பண்ணுவேன், அவர் சமீபித்து வருவார்" (எரே 30:21) என்னும் வாக்கியம் யூதர்களுடைய அதிபதியை குறிக்கும் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். அதிபதி என்னும் வார்த்தை ஒரு தனிநபரை ஒருமையில் சொல்லுகிறது. யூதர்களுடைய அதிபதி அவர்கள் நடுவிலிருந்து தோன்றுவார். கர்த்தர் அவரை தமக்கு சமீபித்து வரப்பண்ணுவார். அதிபதி கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் சகல காரியங்களையும் நடப்பிப்பார். கர்த்தருடைய ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக, அதிபதி கர்த்தருக்கு சமீபித்து வருவார்.

அதிபதி என்னும் வார்த்தை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கும் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். கிறிஸ்துவானவரே தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராயிருக்கிறார். மத்தியஸ்த ஊழியம் செய்கிற கிறிஸ்துவானவர், தேவனுக்கு சமீபித்து வருவார். அவர் நமக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுவார். அவர் பிரதான ஆசாரியராயிருந்து, தம்முடைய பிதாவினிடத்தில் நமக்காக வேண்டிக்கொள்வார்.

பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை தம்மிடத்தில் சமீபித்து வரப்பண்ணுவார். குமாரனும் பிதாவுக்கு சமீபித்து வருவார். பிதாவானவர் இதற்காகவே தம்முடைய குமாரனை விசேஷமாய் அபிஷேகம்பண்ணியிருக்கிறார். அவரில் பிரியமாயிருக்கிறார். குமாரன் பிதாவின் சித்தத்தையல்லாமல் தம்முடைய சுயசித்தம் எதையும் நிறைவேற்றுவதில்லை.

"என்னிடத்தில் சேரும்படி தன் இருதயத்தை பிணைப்படுத்துகிற இவர் யார்" (எரே 30:21) என்று கர்த்தர் சொல்லுகிறார். பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இருதயத்தை அறிந்திருக்கிறார். பிதாவின் இருதயமும், குமாரனாகிய கிறிஸ்துவின் இருதயமும் ஒரே இருதயமாய் பிணைக்கப்பட்டிருக்கிறது. இருவருடைய இருதயமும் ஒன்றையே சிந்திக்கிறது. ஒன்றையே நாடுகிறது. பிதாவுக்கும் குமாரனுக்கும் நடுவே முரண்பாடு எதுவுமில்லை.

கர்த்தர் இஸ்ரவேலின் முற்பிதாக்களோடு உடன்படிக்கை பண்ணிக்கொண்டார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை இப்போது யாக்கோபின் சந்ததியாரோடு மறுபடியுமாய் புதுப்பித்துக்கொள்கிறார். "நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்" (எரே 30:22) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் நம்மை தம்முடைய ஜனமாக அங்கீகரிக்கிறார். இது கர்த்தருடைய கிருபை. இது அவர் நமக்கு செய்யும் நற்கிரியை.

"தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளும்படி முதல்முதல் அவர்களுக்குக் கடாட்சித்தருளின விதத்தைச் சிமியோன் விவரித்துச் சொன்னாரே" (அப் 15:14).

கர்த்தருடைய பிள்ளைகளை ஒடுக்கின சத்துருக்களை கர்த்தர் தண்டிப்பார். "அவர்கள் பிள்ளைகள் முன்போலிருப்பார்கள்; அவர்கள் சபை எனக்கு முன்பாகத் திடப்படும்; அவர்களை ஒடுக்கின யாவரையும் தண்டிப்பேன்" (எரே 30:20) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவர்களைத் தொடுவது மிகவும் ஆபத்தானது. கர்த்தருடைய பிள்ளைகளைத் தொடுகிறவர்கள், கர்த்தரைத் தொடுகிறார்கள்.

"நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்குசெய்யாமலும் இருங்கள் என்றார்" (சங் 105:15).

எரே 30:23,24 ஆகிய இரண்டு வசனங்களும், எரே 23:19,20 ஆகிய வசனங்களில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

"இதோ, கர்த்தருடைய பெருங்காற்றாகிய கொடிய புசல் புறப்பட்டது; அது துன்மார்க்கருடைய தலையின்மேல் உக்கிரமாய் மோதும். கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை நடப்பித்து நிறைவேற்றுமளவும், அவருடைய கோபம் தணியாது. கடைசிநாட்களில் அதை நன்றாய் உணருவீர்கள்" (எரே 23:19,20).

எரே 23:19,20 ஆகிய வசனங்களில் தேவனுடைய கோபம் இஸ்ரவேலில் துன்மார்க்கம் பண்ணுகிற மாய்மாலக்காரர்மீது வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எரேமியா 30:23,24 ஆகிய வசனங்களில், தேவனுடைய கோபம் அவருடைய பிள்ளைகளை ஒடுக்குகிறவர்கள்மீது வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"இதோ, கோராவாரிக் காற்றாகிய கர்த்தருடைய பெருங்காற்று உக்கிரமாயெழும்பி, அடித்து, துன்மார்க்கருடைய தலையின்மேல் மோதும். கர்த்தர் தம்முடைய இருதயத்தின் நினைவுகளை நடப்பித்து நிறைவேற்றுமளவும், அவருடைய உக்கிர கோபம் தணியாது; கடைசிநாட்களில் அதை உணர்ந்துகொள்வீர்கள்" (எரே 30:23,24).

கர்த்தருடைய கோபம் துன்மார்க்கர்மீது பெருங்காற்றைப்போல மோதும். இது கோராவாரிக் காற்றைப்போல உக்கிரமமான காற்றாயிருக்கும். இந்தப் பெருங்காற்றுக்கு யாராலும் எதிர்த்து நிற்கமுடியாது. பொதுவாக சுழல்காற்று சிறிதுநேரம்தான் வீசும். ஆனாலும் அதன் சேதம் மிகுதியாயிருக்கும்.

கர்த்தருடைய கோபம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றும். அதுவரையிலும் அவருடைய கோபம் தணியாது. கர்த்தருடைய கோபத்திற்கான காரணமும், அவருடைய கிருபைக்கான காரணமும் நிச்சயம் நிறைவேறும். கர்த்தருடைய கோபமும், அவருடைய அன்பும் அவருடைய சித்தத்தை நிறைவேற்றும். கர்த்தருடைய இருதயத்தின் நினைவுகள் நிச்சயமாய் நிறைவேறும். "கடைசி நாட்களில் அதை உணர்ந்துகொள்வீர்கள்" (எரே 30:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

31 அதிகாரம்

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு கர்த்தர் ஆறுதலான வார்த்தைகளை வாக்குத்தத்தமாய்ச் சொல்லுகிறார். அவர்களை சிறையிருப்பிலிருந்து விடுதலைபண்ணி, அவர்களுடைய சொந்த தேசத்தில் அவர்களை மறுபடியும் கூட்டிச்சேர்ப்பதாய் கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் மறுபடியும் பெரிய தேசமாகவும், செழிப்பான தேசமாகவும், ஆசீர்வதிக்கப்பட்ட தேசமாகவும் இருப்பார்கள்.

கர்த்தர் இந்த உலகத்தில் தம்முடைய மேசியாவை அனுப்புவார். அவர் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். தேவனுடைய ராஜ்யத்தில் அவருடைய வாக்குத்தத்தங்களெல்லாம் முழுமையாய் நிறைவேறும்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், தாங்கள் இழந்துபோன சமாதானத்தையும் சந்தோஷத்தையும் திரும்பப் பெற்றுக்கொள்வார்கள் (எரே 31:1-14). தங்களுடைய பிள்ளைகளை இழந்ததினால் ஏற்பட்ட துக்கமும் புலம்பலும் முடிவுக்கு வரும் (எரே 31:15-17).

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் தங்கள் பாவங்களுக்கு மனம் திரும்புவார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களை ஏற்றுக்கொள்வார் (எரே 31:18-20). யூதர்களுடைய பிள்ளைகளும், அவர்களுடைய மிருகஜீவன்களும் எண்ணிக்கையில் பெருகுவார்கள் (எரே 31:21-30). கர்த்தர் யூதாவின் மனுஷரோடு தம்முடைய உடன்படிக்கையை புதுப்பித்து, அவர்களுக்கு ஏராளமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுப்பார் (எரே 31:31-34).

கர்த்தர் யூதர்களுடைய விடாய்த்த ஆத்துமாவை சம்பூரணமடையப்பண்ணுவார் (எரே 31:25-37). எருசலேம் நகரம் கர்த்தருக்கென்று கட்டப்படும் (எரே 31:38-40).

நான் இஸ்ரவேலின் வம்சங்களுக்கெல்லாம் தேவனாயிருப்பேன் எரே 31:1-6

எரே 31:1. அக்காலத்திலே நான் இஸ்ரவேலின் வம்சங்களுக்கெல்லாம் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:2. பட்டயத்திற்குத் தப்பி, மீந்தஜனம் வனாந்தரத்தில் இரக்கம் பெற்றது; இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிடப்போகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:3. பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்.

எரே 31:4. இஸ்ரவேல் என்னும் கன்னிகையே, மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன், நீ கட்டப்படுவாய்; மறுபடியும் நீ மேளவாத்தியத்தோடும் ஆடல்பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடும் புறப்படுவாய்.

எரே 31:5. மறுபடியும் சமாரியாவின் மலைகளிலே திராட்சத்தோட்டங்களை நாட்டுவாய்; நாட்டுகிறவர்கள் அவைகளை நாட்டி, அதின் பலனை அநுபவிப்பார்கள்.

எரே 31:6. எழுந்திருங்கள், சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எப்பிராயீமின் மலைகளிலுள்ள ஜாமக்காரர் கூறுங்காலம் வரும்.

கர்த்தர் பாபிலோன் தேசத்தின் சிறையிருப்பிலிருக்கிற தம்முடைய ஜனத்திற்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்முடைய ஜனத்தோடு தம்முடைய உடன்படிக்கையை மறுபடியும் உறுதிபண்ணுகிறார். கர்த்தர் இஸ்ரவேலின் தேவன். அவர்கள் கர்த்தருடைய இஸ்ரவேலர்கள். கர்த்தர் தம்முடைய அன்பினால் இஸ்ரவேல் ஜனத்தாரை தமக்கு சொந்தமாகத் தெரிந்துகொண்டார்.

"அக்காலத்திலே இஸ்ரவேலின் வம்சங்களுக்கெல்லாம் தேவனாயிருப்பேன்" (எரே 31:1) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதாவின் இரண்டு கோத்திரங்களுக்கு மாத்திரம் என்றல்ல, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் கர்த்தர் தேவனாயிருப்பார். இஸ்ரவேல் வம்சத்தாரின் குடும்பங்களுக்கெல்லாம் கர்த்தரே தலைவராயிருப்பார். கர்த்தருடைய ஜனங்கள் அவரோடு விசேஷித்த ஐக்கியத்திலிருப்பார்கள்.

நாமும் நம்முடைய வீட்டாரும் கர்த்தரை சேவிக்கும்போது, கர்த்தர் நம்மையும் நம்முடைய வீட்டாரையும் பாதுகாப்பார். நம்மை ஆசீர்வதிப்பார். "துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கிறது, நீதிமான்களுடைய வாசஸ்தலத்தையோ, அவர் ஆசீர்வதிக்கிறார்" (நீதி 3:33).

இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை விடுவித்து, அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வருவார். இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்கள் ஏற்கெனவே எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் அவர்களுடைய முற்பிதாக்களை விடுவித்து, அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்ததுபோல, இப்போதும் இஸ்ரவேல் ஜனத்தாரை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவித்து, அவர்களுடைய சொந்த தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வருவார்.

"பட்டயத்திற்கு தப்பி மீந்த ஜனம் வனாந்தரத்தில் இரக்கம் பெற்றது" (எரே 31:2). எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், எபிரெயர்களின் ஆண்பிள்ளைகள் எல்லோரையும் பிறந்தவுடனேயே பட்டயத்தால் கொன்று போட்டான். பார்வோனின் பட்டயத்திற்கு தப்பி மீந்த ஜனம் வனாந்தரத்தில் இரக்கம் பெற்றார்கள். கர்த்தர் அவர்களை வனாந்தர பாதையின் வழியாக வழிநடத்தி கொண்டு வந்தார்.

கர்த்தர் தங்களை மறந்துவிட்டாரோ என்று யூதர்கள் நினைத்தார்கள். தாங்கள் வனாந்தரத்தில் பாதை தெரியாமல் காணாமல் போய்விட்டோமோ என்று யூதர்கள் பயந்தார்கள். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அவர்களோடு கூடயிருந்தது. கர்த்தர் அவர்களை இரவிலே அக்கினி ஸ்தம்பத்தினாலும், பகலிலே மேகஸ்தம்பத்தினாலும் வழிநடத்தினார். கர்த்தருடைய கண்களில் அவர்களுக்கு தயவும் கிருபையும் கிடைத்தது.

இஸ்ரவேல் ஜனத்தாரின் முற்பிதாக்களுக்கு தாம் செய்த உதவிகளை, கர்த்தர் இப்போது அவர்களுடைய பின்சந்ததியாருக்கு நினைவுபடுத்துகிறார். இவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தர் இவர்களுடைய முற்பிதாக்களுக்கு எகிப்து தேசத்திலும், வனாந்தரத்திலும் உதவிசெய்ததுபோல, இப்போது இவர்களுக்கு உதவிசெய்வார். அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்ததுபோல, இவர்களையும் இவர்களுடைய சொந்த தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வருவார்.

எகிப்து தேசத்திலே அடிமைத்தனத்திலிருந்த ஜனங்களுக்கு கர்த்தர் கானான் தேசத்திலே இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார். அதுபோலவே இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலை கட்டளையிடப்போவதாக கர்த்தர் சொல்லுகிறார் (எரே 31:2). கர்த்தர் மாறாதவர். அவருடைய கிருபை என்றும் மாறுவதில்லை. அவர் தம்முடைய ஜனத்தின்மீது மாறாத அன்புகூருகிறார்.

கர்த்தர் தங்களுடைய முற்பிதாக்களுக்கு செய்த நன்மைகளை, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற இஸ்ரவேலர்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். அவர்கள் பூர்வகாலத்தை மறந்துவிடக் கூடாது. ஆனால் இப்போதோ இஸ்ரவேல் ஜனத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் அதிகமான துன்பங்களையும், வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது கிருபையாகயிருக்கிறார் என்பதற்கு ஒரு அடையாளம்கூட வெளிப்படவில்லை.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், கிதியோனின் நாட்களில் இஸ்ரவேல் ஜனத்தார் சத்துருக்கள் மூலமாய் மிகுந்த துன்பங்களை அனுபவித்தார். இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்கள், கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளையெல்லாம் இவர்களுக்கு சாட்சியாக சொல்லியிருக்கிறார்கள். அந்த அற்புதங்களெல்லாம் எங்கே என்று கிதியோன் கேட்டார். கிதியோனைப்போலவே, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களும், கர்த்தர் செய்யும் அற்புதங்கள் எங்கே என்று கேட்கும் நிலமையிலிருக்கிறார்கள்.

பூர்வ வருஷங்களெல்லாம் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு மகிமையுள்ளதாயிருக்கிறது. ஆனால் இப்போதோ அவர்களுக்கு கர்த்தருடைய மகிமை வெளிப்படுத்தப்படவில்லை. கர்த்தர் இப்போது இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தம்முடைய முகத்தை மறைத்துக்கொண்டவர்போல இருக்கிறார். கர்த்தர் தங்களுடைய முற்பிதாக்களுக்கு அநேக அற்புதங்களை செய்திருந்தாலும், இப்போது அவர் தம்முடைய முகத்தை மறைத்துக் கொள்வதினால், தங்களுக்கு என்ன பயன் என்று சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் யோசிக்கிறார்கள்.

"இஸ்ரவேலின் தேவனும் இரட்சகருமாகிய நீர் மெய்யாகவே உம்மை மறைத்துக்கொண்டிருக்கிற தேவனாயிருக்கிறீர்" (ஏசா 45:15).

கர்த்தர் சிறையிருப்பிலிருக்கிற யூதா மனுஷருடைய இருதயத்தின் நினைவுகளை அறிந்திருக்கிறார். அவர்களுக்கு கர்த்தர் தம்முடைய அன்பை உறுதிபடுத்துகிறார். "அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தேன், ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்கிறேன்" (எரே 31:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய அன்பு நித்தியமானது. அவருடைய அன்பு ஒருபோதும் குறைந்துபோவதில்லை. சில காலங்களில் கர்த்தருடைய பிள்ளைகளால், அவருடைய அன்பை ருசித்துப் பார்க்க முடியாமல் போகிறது. கர்த்தர் தம்முடைய முகத்தை அவர்களுக்கு சிறிதுகாலம் மறைத்துக்கொள்கிறார். ஆனாலும் கர்த்தருடைய அன்பை விட்டு அவர்களை பிரிக்க முடியாது. கர்த்தர் அவர்களை அநாதி சிநேகத்தால் சிநேகிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய அன்பினால் இஸ்ரவேல் ஜனத்தாரோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார். அவர்களுக்கு தம்மை வெளிப்படுத்துகிறார். அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய ஆத்துமாக்களில் கிரியை நடப்பிக்கிறார். அவர்களும் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய காருணியத்தினால் தம்முடைய பிள்ளைகளை தம்மோடு இழுத்துக் கொள்கிறார். கர்த்தருடைய அன்பை ருசித்துப் பார்க்கிறவர்கள் "பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்கு தரிசனையானார்" என்று சொல்லுவார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதாவின் மனுஷரை, கர்த்தர் மறுபடியுமாய் தம்முடைய ஜனமாகக் கூட்டிச்சேர்ப்பார். அவர்களை சிறையிருப்பிலிருந்து விடுவித்து, அவர்களுடைய சொந்த தேசத்தில், அவர்களை மறுபடியுமாய் குடியேற்றுவார். "இஸ்ரவேல் என்னும் கன்னிகையே, மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன், நீ கட்டப்படுவாய்" (எரே 31:4) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்திலே சிறையிருப்பில் கஷ்டப்படுகிற யூதர்கள், தங்கள் இசைக்கருவிகளை அலறிச்செடிகளின்மேல் கட்டி தொங்கவிட்டிருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் மேளவாத்தியமோ, ஆடல் பாடலோ காணப்படவில்லை. அவர்கள் புலம்பலின் பாடல்களைப் பாடுகிறார்கள். தங்கள் வேதனைகளை சோககீதங்களாக வெளிப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை மறுபடியும் கட்டுவிப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் அலறிச்செடிகளில் தொங்கிக்கொண்டிருக்கும் தங்களுடைய கீதவாத்தியங்களை மறுபடியும் மீட்டு இசைப்பார்கள். அவர்கள் மத்தியில் மேளவாத்தியங்களும், ஆடல் பாடலும் நடைபெறும். சந்தோஷம் மிகுதியாயிருக்கும். "மறுபடியும் நீ மேளவாத்தியத்தோடும் ஆடல்பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடும் புறப்படுவாய்" *(எரே 31:4)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எருசலேம் நகரத்தில் சந்தோஷமுண்டாயிருக்கும். யூதாதேசம் மகிழ்ந்து களிகூரும். தேசத்தில் மறுபடியும் விளைச்சல் உண்டாயிருக்கும். "மறுபடியும் சமாரியாவின் மலைகளிலே திராட்சத்தோட்டங்களை நாட்டுவாய்; நாட்டுகிறவர்கள் அவைகளை நாட்டி, அதின் பலனை அநுபவிப்பார்கள்" *(எரே 31:5)* என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் தேசத்திற்கு சமாரியாவின் மலையே தலைநகரம் போலிருக்கிறது. யூதாவுக்கு எருசலேம் தலைநகரமாயிருப்பதுபோல, இஸ்ரவேலுக்கு சமாரியா தலைநகரமாகயிருக்கிறது. இனிமேல் கானான் தேசம் வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாய்ப் பிரிந்திருக்காது. அது சமஸ்த இஸ்ரவேல் தேசமாய் இணையும்.

"அவர்களை இஸ்ரவேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவேன்; ஒரே ராஜா அவர்கள் எல்லாருக்கும் ராஜாவாக இருப்பார்; அவர்கள் இனி இரண்டு ஜாதிகளாக இருப்பதில்லை; அவர்கள் இனி இரண்டு ராஜ்யங்களாகப் பிரிவதுமில்லை" *(எசே 37:22)*.

யூதாதேசத்தாருக்கும் இஸ்ரவேல் தேசத்தாருக்கும் இனிமேல் யுத்தங்கள் நடைபெறாது. அவர்கள் சமாதானமாய் ஜீவிப்பார்கள். இரண்டு தேசங்களும் ஒன்றாய் இணைந்திருப்பதினால், இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருமே, சமஸ்த இஸ்ரவேலின் நன்மையை நாடுவார்கள். சமாரியாவின் மலைகளிலே திராட்சத்தோட்டங்களை நாட்டுவார்கள்.

சமஸ்த இஸ்ரவேல் தேசம், வடக்கு இஸ்ரவேல் என்றும் தெற்கு யூதா என்றும் பிரிந்திருந்தபோது, அந்நிய தேசத்தார் அவர்கள் தேசத்திற்குள் பிரவேசித்து, அவர்களுடைய விளைச்சலின் பலன்களை திருடிச் சென்றார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் திராட்சத்தோட்டங்களை நாட்டுவார்கள். அந்நிய தேசத்தார் அவர்களுடைய பழங்களை பறித்துச் செல்வார்கள்.

இப்போதோ கர்த்தருடைய ஆசீர்வாதமும், பாதுகாப்பும், பராமரிப்பும் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கிடைத்திருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாரே சமாரியாவின் மலைகளில் திராட்சத்தோட்டங்களை நாட்டுவார்கள். அவற்றை நாட்டுகிறவர்களே, அதின் பலனை அனுபவிப்பார்கள். அந்நியர்களுக்கு இஸ்ரவேல் ஜனத்தாரின் ஆசீர்வாதங்களில் பங்குமில்லை, பாத்தியமுமில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை விடுதலையோடு ஆராதிப்பார்கள். கர்த்தர் அவர்களுக்கு நியமித்திருக்கிற பிரமாணங்களுக்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிவார்கள்.

"எழுந்திருங்கள், சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எப்பிராயீமின் மலைகளிலுள்ள ஜாமக்காரர் கூறுங்காலம் வரும்" *(எரே 31:6)* என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்தக் காலம் மகிமையான காலமாயிருக்கும். ஜாமக்காரர்கள் இதுவரையிலும் சத்துருக்கள் வருவதை நடுக்கத்தோடு அறிவித்தார்கள். இப்போது இஸ்ரவேல் தேசத்திற்கு ஒரு ஆபத்தும் வரவில்லை. ஜாமக்காரர்கள் சத்துருக்களைப் பற்றி எச்சரிக்க வேண்டிய அவசியமுமில்லை. அவர்கள் ஆபத்தைப்பற்றிச் சொல்லுவதற்குப் பதிலாக, கர்த்தரை ஆராதிப்பதைப்பற்றிச் சொல்லுகிறார்கள்.

ஜாமக்காரர்கள் கர்த்தரைத் துதிப்பதற்கு ஜனங்களை வழிநடத்துகிறார்கள். அவர்களுடைய வாயில் எச்சரிப்பின் சத்தத்திற்குப் பதிலாக துதியின் சத்தம் நிரம்பியிருக்கிறது. எப்பிராயீமின் மலையிலுள்ள ஜாமக்காரர், எருசலேமிலே கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனைக்கு துணையாயிருக்கிறார்கள்.

"எப்பிராயீமின் காவற்காரர் என் தேவனோடு எதிர்த்து நிற்கிறார்கள்; தீர்க்கதரிசி தன் வழிகளிலெல்லாம் குருவிபிடிக்கிறவனுடைய கண்ணியாகவும், தன் தேவனுடைய ஆலயத்திலே பகையாளியாகவும் இருக்கிறான்" (ஓசி 9:8).

"ஆசாரியர்களே, இதைக் கேளுங்கள்; இஸ்ரவேல் வம்சத்தாரே, கவனியுங்கள்; ராஜாவின் வீட்டாரே, செவிகொடுங்கள்; இந்த நியாய விசாரிப்பு உங்கள்மேல் செல்லும்; நீங்கள் மிஸ்பாவில் கண்ணியும் தாபோரின்மேல் விரிக்கப்பட்ட வலையுமானீர்கள்" (ஓசி 5:1).

எப்பிராயீமின் ஜாமக்காரர் இதுவரையிலும் கர்த்தருடைய ஆலயத்திற்கு சத்துருக்களாயிருந்தார்கள். தேவாலயத்திற்கு ஆராதனை செய்ய வருகிறவர்களுக்கு அவர்கள் கண்ணிகளாயிருந்தார்கள். ஆனால் இப்போதோ எப்பிராயீமின் ஜாமக்காரர் மனதிலே கர்த்தர் ஒரு மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கிறார். அவர்கள் ஜனங்களிடம் "எழுந்திருங்கள், சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்கு போவோம் வாருங்கள்" என்று சொல்லுகிறார்கள். ஜாமக்காரர் கர்த்தரை ஆராதிப்பதற்கு ஜனங்களை வழிநடத்துகிறார்கள்.

இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன் எரே 31:7-9

எரே 31:7. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: யாக்கோபினிமித்தம் மகிழ்ச்சியாய் கெம்பீரித்து, ஜாதிகளுடைய தலைவரினிமித்தம் ஆர்ப்பரியுங்கள்; சத்தத்தைக் கேட்கப்பண்ணி, துதித்து: கர்த்தாவே, இஸ்ரவேலில் மீதியான உமது ஜனத்தை இரட்சியும் என்று சொல்லுங்கள்.

எரே 31:8. இதோ, நான் அவர்களை வடதேசத்திலிருந்து வரப்பண்ணி, அவர்களைப் பூமியின் எல்லைகளிலிருந்து கூட்டிவருவேன்; குருடரும், சப்பாணிகளும், கர்ப்பவதிகளும், பிள்ளைத்தாய்ச்சிகளுங் கூட அவர்களில் இருப்பார்கள்; மகா கூட்டமாய் இவ்விடத்துக்குத் திரும்புவார்கள்.

எரே 31:9. அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள்; அவர்களை வழி நடத்துவேன்; அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கு இடறாத செம்மையான வழியிலே நடக்கப்பண்ணுவேன்; இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன், எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான்.

கர்த்தருடைய கிருபையினால் அவருடைய ஜனத்திற்கு ஆசீர்வாதமான மாற்றங்கள் உண்டாகும். இதனால் அவர்களுடைய சந்தோஷமும் ஆறுதலும் பெருகும். கர்த்தருடைய நாமம் மகிமைப்படும். "யாக்கோபினிமித்தம் மகிழ்ச்சியாய் கெம்பீரித்து, ஜாதிகளுடைய தலைவரினிமித்தம் ஆர்ப்பரியுங்கள்" (எரே 31:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். யாக்கோபோடு சேர்ந்து அவர்களுடைய சிநேகிதர்களும், அவர்களுடைய நன்மையை விரும்புகிறவர்களும் மகிழ்ச்சியாய்க் கெம்பீரிக்கவேண்டும். கர்த்தரைத் துதிக்கவேண்டும்.

"ஜாதிகளே, அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூருங்கள்; அவர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளித்து, தமது தேசத்தின்மேலும் தமது ஜனங்களின்மேலும் கிருபையுள்ளவராவார்" (உபா 32:43).

யாக்கோபின் சந்ததியாரோடு சேர்ந்து புறஜாதியாரும் மகிழ்ந்து களிகூரவேண்டும். "மேலும், புறஜாதிகளே, அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூருங்கள் என்கிறார்" (ரோம 15:10).

யாக்கோபின் நிமித்தம், கர்த்தருடைய ஜனங்கள் எல்லோரும் சந்தோஷமாய் ஆர்ப்பரித்து, கர்த்தரைத் துதிக்கவேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் துதிகளுக்கு பாத்திரராயிருக்கிறார். அவரே கனமும் மகிமையுமுள்ளவர்.

"கர்த்தாவே, இஸ்ரவேலில் மீதியான உமது ஜனத்தை இரட்சியும் என்று சொல்லுங்கள்" (எரே 31:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை கர்த்தர் விடுதலைபண்ணுவார். அவர்களை அவர்களுடைய சொந்த தேசத்திற்கு மறுபடியும் அழைத்துக்கொண்டு வருவார். "இதோ, நான் அவர்களை வடதேசத்திலிருந்து வரப்பண்ணி, அவர்களைப் பூமியின் எல்லைகளிலிருந்து கூட்டிவருவேன்" (எரே 31:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் சந்தோஷத்தோடு தங்கள் தேசத்திற்கு திரும்பி வருவார்கள். அவர்கள் மகாகூட்டமாய் தங்கள் தேசத்திற்கு திரும்பி வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். குருடரும், சப்பாணிகளும், கர்ப்பவதிகளும், பிள்ளைத்தாய்ச்சிகளும்கூட அவர்களில் இருப்பார்கள்.

யூதாவின் மனுஷர் பல ஜாதிகள் மத்தியிலே சிதறடிக்கப்பட்டார்கள். அவர்கள் தூரதேசங்களுக்கு சிதறிப்போனார்கள். கர்த்தரோ அவர்களை பூமியின் எல்லைகளிலிருந்து கூட்டி வருவதாக வாக்குப்பண்ணுகிறார்.

அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களில் அநேகரால் பிரயாணம் பண்ணவே முடியாது. அவர்களுடைய சரீரத்தில் பெலனில்லை. அவர்கள் பலவீனமானவர்களாகவும், அங்கவீனமானவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் குருடராயும், சப்பாணிகளாயும் இருக்கிறார்கள். அவர்களுடைய சரீரத்தின் குறைபாடுகள் அவர்களுடைய பிரயாணத்திற்கு தடையாகயிருக்கும்.

அவர்கள் குருடராகயிருந்தாலும், சப்பாணிகளாகயிருந்தாலும் அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுதலை பெற்று, தங்கள் தேசத்திற்கு சந்தோஷமாய்த் திரும்பி வருவார்கள். அவர்களுடைய கண்களும் கால்களும் பழுதடைந்திருந்தபோதிலும், அவர்களுடைய இருதயம் பழுதடையாமலிருக்கிறது. தங்கள் தேசத்திற்கு திரும்பி வரவேண்டுமென்ற உற்சாகமும், வேகமும் அவர்களுடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. ஆகையினால் தாங்கள் குருடராயிருப்பதையும், சப்பாணியாயிருப்பதையும் ஒரு காரணமாகச்சொல்லி, அவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பி வராமல், அந்நிய தேசத்திலேயே தங்கிவிடவில்லை.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிற யூதர்களில் அநேகருக்கு கண்கள் நன்றாய்த் தெரிகிறது. அவர்களுடைய கால்கள் நன்றாய் நடக்கிறது. அவர்கள் தங்களோடுகூட, தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகிற குருடர்களுக்கும், சப்பாணிகளுக்கும் உதவிசெய்கிறார்கள். நல்ல சரீர ஆரோக்கியமுள்ளவர்கள், குருடருக்கு கண்களாயும், சப்பாணிகளுக்கு கால்களாயும் இருக்கிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் அவர்களைப்போலவே ஒருவருக்கொருவர் உதவிசெய்யவேண்டும். நம்முடைய பரலோக பிரயாணத்தில், இடறிவிழுந்து விடுகிறவர்களை, வலதுகரம் பிடித்து தூக்கிவிட்டு, அவர்களும் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு உதவிபுரியவேண்டும்.

"நான் குருடனுக்குக் கண்ணும், சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன்" (யோபு 29:15) என்று யோபு தன்னைப்பற்றிச் சொல்லுகிறார்.

குருடர்களுக்கும் சப்பாணிகளுக்கும் மனுஷருடைய உதவி கிடைப்பதுபோல, அவர்களுக்கு கர்த்தருடைய உதவியும் கிடைக்கிறது. கர்த்தரே குருடரை வழிகாட்டுகிறார். அவரே சப்பாணிகளுக்கு பெலன் தருகிறார். இதனால் குருடருக்கும் சப்பாணிகளுக்கும் மற்ற மனுஷருடைய உதவிகள் அதிகமாய்த் தேவைப்படவில்லை.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகிறவர்களில் கர்ப்பவதிகளும், பிள்ளைத்தாய்ச்சிகளும் கூடயிருக்கிறார்கள். அவர்களால் சரீரப்பிரகாரமாக நடக்கவே முடியாது. அவர்கள் கர்ப்பவேதனையிலிருந்தாலும், சீயோனுக்குத் திரும்பிப்போகிறோம் என்னும் சந்தோஷம் அவர்களுடைய வேதனைகளை நீக்கிப்போடுகிறது. கர்ப்பவதிகளுக்குக்கூட பிரயாணம் களைப்பாயில்லை.

கர்த்தர் நம்மை அழைக்கும்போது, நம்முடைய சரீர பலவீனத்தையோ, அல்லது வேறு காரணங்களையோ சாக்குப்போக்காகச் சொல்லி, கர்த்தருடைய அழைப்பை அசட்டைபண்ணிவிடக்கூடாது. கர்த்தருக்கு கீழ்ப்படிய நம்மால் முடியாது என்று நினைக்கவும் கூடாது. சொல்லவும் கூடாது. நம்மை அழைக்கிறவர் கர்த்தர். அவர் நமக்கு உதவிசெய்வார். அவர் நம்மை பெலப்படுத்துவார். குருடரையும், சப்பாணியையும், கர்ப்பவதியையும், பிள்ளைத்தாய்ச்சியையும் வழிநடத்துகிற கர்த்தர், நம்மையும் வழிநடத்துவார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிற யூதர்கள் அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள். அவர்கள் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட சந்தோஷத்திலிருந்தாலும், அவர்களுடைய பாவங்களைக் குறித்த குற்றவுணர்வு அவர்களுடைய இருதயத்தை வேதனைப்படுத்தும். கர்த்தருக்கு விரோதமாக தாங்கள் செய்த பாவங்களையும், பொல்லாப்புகளையும் நினைத்து யூதாவின் மனுஷர் அழுது புலம்புவார்கள். தங்களுடைய பாவங்களை மன்னிக்குமாறு கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுவார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிறவர்கள் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுவார்கள். அவர்கள் தங்களுடைய பாவங்களினிமித்தமாய் அழுது கண்ணீர் வடிக்கும்போது, கர்த்தர் அவர்களுடைய கண்ணீரைத் துடைப்பார். அவர்களை வழிநடத்துவார்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிறவர்களுக்கு தேவைப்படும் எல்லா உதவிகளையும் கர்த்தர் செய்வார். அவர்கள் கடந்து வரும் பாதைகள் வனாந்தரமான பாதையாகயிருந்தாலும், தண்ணீரில்லாத வறட்சியான இடமாகயிருந்தாலும், கர்த்தர் அவர்களுக்கு தேவையான எல்லா உதவிகளையும் செய்வார். "அவர்களை வழி நடத்துவேன்; அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கு இடறாத செம்மையான வழியிலே நடக்கப்பண்ணுவேன்" (எரே 31:9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சில நதிகள் கோடைகாலத்தில் வற்றிப்போயிருக்கும். மழைகாலத்தில் அந்த நதிகளில் பெருவெள்ளம் பிரவாகித்து வரும். கர்த்தரோ தம்முடைய ஜனத்தை, வற்றாத நதிகளண்டைக்கு வழிநடத்துகிறார். அந்த நதிகளில் எப்போதும் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும். அது கோடையில் வற்றிப்போகாது. மழைகாலத்தில் அங்கு பெருவெள்ளம் பிரவாகித்து ஓடாது. ஜனங்களுக்கு தேவையான தண்ணீர் அந்த நதியில் ஓடும்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகிற ஜனங்கள், வனாந்தரத்தின் வழியாக நடக்கவேண்டும். வனாந்தரத்தில் பாதை இருக்காது. ஆனாலும் கர்த்தர் அவர்களை இடறாத செம்மையான வழியிலே நடக்கப்பண்ணுவார். அவர்கள் பாதை தவறி காணாமல் போய்விடமாட்டார்கள். தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போவதற்குப் பதிலாக, வேறு தேசங்களுக்கு பாதை மாறிப்போய்விடமாட்டார்கள். அவர்கள் வழியில் இடறுவதில்லை. அவர்கள் செம்மையான வழியிலே நடப்பார்கள்.

கர்த்தருடைய அழைப்பு நமக்கு தெளிவாகயிருக்கும்போது, அவர் நம்மை வழிநடத்துகிற பாதையும் தெளிவாயிருக்கும். அவர் நம்மை இடறாத செம்மையான வழியிலே நடக்கப்பண்ணுவார். நாம் கர்த்தருடைய அழைப்புக்கு கீழ்ப்படியும்போது, வழியிலே இடறி விழுந்துவிடுவோமோ என்று நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. கர்த்தரே நம்மை கரம்பிடித்து வழிநடத்துகிறவர். நாம் கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கும்போது நாம் ஒருபோதும் இடறிவிழுவதில்லை.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகிற ஜனங்களை கர்த்தர் வழிநடத்துகிறார். அவர்களை தாம் வழிநடத்துவதற்கான காரணத்தையும் கர்த்தர் இங்கு தெளிவுபடுத்துகிறார். "இஸ்ரவேலுக்கு நான் பிதாவாயிருக்கிறேன். எப்பிராயீம் என் சேஷ்டபுத்திரனாயிருக்கிறான்" *(எரே 31:9)* என்று கர்த்தர் சொல்லுகிறார். இதன் நிமித்தமாகவே கர்த்தர் சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிற யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் வழிநடத்துகிறார்.

"தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்" *(சங் 103:13).*

எப்பிராயீம் கர்த்தரைவிட்டு விலகிப்போனாலும், கர்த்தர் அவனை தம்முடைய சேஷ்டபுத்திரனாக அங்கீகரிக்கிறார். அவன் கர்த்தருடைய புத்திரன் என்று அழைக்கப்படுவதற்கு பாத்திரவானாயிராவிட்டாலும், கர்த்தர் அவனைத் தள்ளிவிடாமல், தம்முடைய சேஷ்டபுத்திரனாக அங்கீகரிக்கிறார். கர்த்தர் எப்பிராயீமுக்கு சேஷ்டபுத்திர சுதந்தரமாகிய இரட்டிப்பான ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் முற்பிதாக்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் இப்போது என்ன காரணத்திற்காக, தம்முடைய ஜனத்தை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுதலை பண்ணினாரோ, அதே காரணத்திற்காகவே, கர்த்தர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்த, இஸ்ரவேல் ஜனத்தாரின் முற்பிதாக்களையும் விடுதலைபண்ணினார்.

"அப்பொழுது நீ பார்வோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன். எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன்; அவனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்டபுத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்றுசொல் என்றார்" *(யாத் 4:22,23).*

இஸ்ரவேல் கர்த்தருடைய சேஷ்டபுத்திரன். அவன் பார்வோனுக்கு அடிமை ஊழியம் செய்யவேண்டியவனல்ல. அவன் கர்த்தரை சேவிக்கவேண்டியவன். பார்வோன் கர்த்தருடைய சேஷ்டபுத்திரனை அடிமைப்படுத்தக்கூடாது. கர்த்தரை சேவிப்பதற்காக பார்வோன் இஸ்ரவேலை விடுதலைபண்ணவேண்டும்.

இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொள்வார் எரே 31:10-14

எரே 31:10. ஜாதிகளே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, தூரத்திலுள்ள தீவுகளில் அறிவித்து, இஸ்ரவேலைச் சிதறடித்தவர் அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும்வண்ணமாக அதைக் காப்பார் என்று சொல்லுங்கள்.

எரே 31:11. கர்த்தர் யாக்கோபை மீட்டு, அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார்.

எரே 31:12. அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக்குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடிவருவார்கள்; அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம்போலிருக்கும்; அவர்கள் இனித் தொய்ந்துபோவதில்லை.

எரே 31:13. அப்பொழுது கன்னிகைகளும், வாலிபரும், முதியோருங்கூட ஆனந்தக்களிப்பாய் மகிழுவார்கள்; நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்.

எரே 31:14. ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவேன்; என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மீது அன்பாகயிருக்கிறார். ஜாதிகள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவேண்டும். கர்த்தர் சொல்லுகிற வார்த்தை அவருடைய கிரியையின் தீர்க்கதரிசன வார்த்தையாகும். கர்த்தருடைய வார்த்தை தூரத்திலுள்ள தீவுகளிலும் அறிவிக்கப்படவேண்டும். “இஸ்ரவேலை சிருஷ்டித்தவர் அதை சேர்த்துக்கொள்வார்” என்றும், “ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும் வண்ணமாக கர்த்தர் இஸ்ரவேலைக் காப்பார்” (எரே 31:10) என்றும் கர்த்தருடைய வார்த்தையை தூரத்திலுள்ள தீவுகளுக்கு அறிவிக்க வேண்டும். கர்த்தருடைய நற்செய்தியை உலகம் முழுவதற்கும் அறிவிக்கவேண்டும்.

கர்த்தரே இஸ்ரவேலை சிதறடித்தவர். இவர்கள் பல தேசங்களிலும், பல ஜாதிகள் மத்தியிலும் சிதறிப்போயிருக்கிறார்கள். கர்த்தர் சிதறிப்போன இஸ்ரவேலை மறுபடியும் கூட்டிச்சேர்ப்பார். இஸ்ரவேலை சிதறடித்தவர் அதை சேர்த்துக்கொள்வார். அவர்களை ஒரே சரீரமாக கூட்டிச்சேர்ப்பார். ஒரே தொழுவத்திலுள்ள ஒரே மந்தையாக கூட்டிச்சேர்ப்பார். அவர்கள் மறுபடியும் அந்நிய தேசத்தார் மத்தியிலே சிதறிப்போய்விடக்கூடாது. இதற்காக கர்த்தர் இஸ்ரவேலை, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும் வண்ணமாக அதைக் காப்பார்.

இஸ்ரவேல் ஜனங்கள் அந்நிய தேசத்தார் மத்தியில் அடிமைகளாக விற்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது அந்நிய தேசத்திலே அடிமைகளாயிருக்கிறார்கள். அவர்களை மீட்பதற்கு மீட்பின் கிரயத்தை செலுத்த வேண்டும். இஸ்ரவேலை அடிமைப்படுத்தியிருக்கிறவர்கள், அவர்களை விட பலத்தவர்கள். “கர்த்தர் யாக்கோபை மீட்டு, அவனிலும் பலத்தவனுடைய கைக்கு அவனை நீங்கலாக்கி விடுவிக்கிறார்” (எரே 31:11).

யாக்கோபை அடிமைப்படுத்தியிருக்கிறவர்கள் யாக்கோபைவிட பலத்தவர்களாகயிருந்தாலும், கர்த்தர் எல்லோரையும்விட பலத்தவர். அவர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தர் யாக்கோபை கிரயம் செலுத்தி மீட்காமல், தம்முடைய வல்லமையினால் மீட்கிறார். யாக்கோபைவிட பலத்தவனுடைய கைக்கு, கர்த்தர் தம்முடைய வல்லமையைப் பயன்படுத்தி, யாக்கோபை அவனுடைய சத்துருவுக்கு நீங்கலாக்கி விடுவிக்கிறார்.

கர்த்தருடைய வல்லமையினால் விடுவிக்கப்பட்டவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை கனம்பண்ணுகிறார்கள். மீட்கப்பட்டவர்கள் வந்து சீயோனின் உச்சியிலே கெம்பீரிக்கிறார்கள். “அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக்குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடிவருவார்கள்” (எரே 31:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மீட்கப்பட்டவர்கள் சீயோனின் உச்சியிலே ஏறி, கர்த்தரை கெம்பீரித்து துதிப்பார்கள். சீயோன் பரிசுத்த பர்வதம். பரிசுத்த பர்வதத்தின்மேல் ஏறி நின்று, கர்த்தருடைய ஜனத்தார், கர்த்தரை துதித்து மகிமைப்படுத்துவார்கள். எருசலேமிலே தேவாலயத்திற்கு மறுபடியும் அஸ்திபாரம் போடப்பட்டபோது, யூதர்கள் சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து கர்த்தரைத் துதித்தார்கள்.

"கர்த்தர் நல்லவர், இஸ்ரவேலின்மேல் அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று அவரைப் புகழ்ந்து துதிக்கையில், மாறிமாறிப் பாடினார்கள்; கர்த்தரைத் துதிக்கையில், ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்படுகிறதினிமித்தம் மகா கெம்பீரமாய் ஆரவாரித்தார்கள்" (எஸ்றா 3:11).

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கு கர்த்தர் நன்மையான ஈவுகளை ஆசீர்வாதமாய்க் கொடுக்கிறார். அவர்கள் இந்த நன்மைகளுக்காக கர்த்தரிடத்தில் ஓடிவருவார்கள். "அவர்களுடைய ஆத்துமா நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போலிருக்கும் அவர்கள் இனி தொய்ந்துபோவதில்லை" (எரே 31:12) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய ஆலயத்தில், அவருடைய ஆசீர்வாதங்கள், தண்ணீருள்ள நதிகளைப்போல ஓடிவரும். கர்த்தருடைய நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு, யூதாவின் மனுஷர், அவருடைய ஆலயத்திற்கு ஓடிவருவார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிற யூதர்கள் கர்த்தருடைய நன்மைகளை நினைத்து, அவரைத் துதித்துப் பாடுவதற்காக, கர்த்தருடைய ஆலயத்திற்கு கூடிவருவார்கள். தங்களுக்கு கர்த்தருடைய ஆசீர்வாதங்களும், அநுக்கிரகங்களும் தொடர்ந்து கிடைக்கவேண்டுமென்று கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுவார்கள். கர்த்தர் அவர்களுக்கு கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக்குட்டிகள் ஆகிய நன்மைகளை அருளுகிறார். யூதாவின் மனுஷர் தங்கள் விளைச்சலின் முதற்பலனால் கர்த்தருக்கு காணிக்கைகளை செலுத்தி, அவரைத் துதிக்க தேவாலயத்திற்கு வருகிறார்கள். கர்த்தருடைய பலிபீடத்திற்கு முதற்பலன்களை காணிக்கைகளாகக் கொண்டுவருகிறார்கள்.

கர்த்தருடைய ஆவியானவர் தம்முடைய கிருபையினால் நம்முடைய ஆத்துமாவை செழிப்புள்ளதாக்குகிறார். நம்முடைய ஆத்துமாவும் நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போலிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் இனி தோய்ந்துபோவதில்லை. அவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடுவதில்லை. அவர்களுக்கு இனிமேல் வருத்தங்களோ, வேதனைகளோடு உண்டாவதில்லை. இது கர்த்தருடைய அற்புதமான வாக்குத்தத்தமாகும். இந்த வாக்குத்தத்தம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு புதிய எருசலேமில் நிறைவேறும்.

கர்த்தர் புதிய எருசலேமிலே நம்முடைய கண்ணீர்கள் யாவையும் துடைப்பார். "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை; துக்கமுமில்லை; அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது" (வெளி 21:4).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகிற யூதர்களுக்கு துக்கம் இருக்காது. அவர்கள் இதுவரையிலும் அந்நிய தேசத்தில் பாடுகளையும், வேதனைகளையும் அனுபவித்தார்கள். அதன் நிமித்தமாய் அவர்களுக்கு துக்கமுண்டாயிற்று. இப்போது கர்த்தர் அவர்களை, அவர்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்ப அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்திருக்கிற யூதாவின் மனுஷருக்கு துக்கமோ, அழுகையோ இருக்காது.

"அப்பொழுது கன்னிகைகளும், வாலிபரும், முதியோருங்கூட ஆனந்தக்களிப்பாய் மகிழுவார்கள்; நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்" (எரே 31:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஊழியம் செய்கிறவர்களும், ஜனங்களும் சந்தோஷமாயிருப்பார்கள். "ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவேன்; என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 31:14).

ஜனங்கள் தேவாலயத்திற்கு ஏராளமான காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள். கர்த்தருடைய பலிபீடத்திலே திரளான பலிகள் செலுத்தப்படும். ஆசாரியரின் பங்கும் அதிகமாயிருக்கும். ஆசாரியர்களின் ஆத்துமா கொழுமையானவைகளினால் பூரிப்பாயிருக்கும். பலிபீடத்தில் செலுத்தப்படும் காணிக்கைகளில் ஆசாரியருக்கு ஒரு பங்குள்ளது. காணிக்கைகள் ஏராளமாயிருப்பதினால், ஆசாரியரின் பங்கும் அதிகமாயிருக்கும். அவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. ஆசரியர்களின் குடும்பத்தார் திருப்தியாய்ப் புசிப்பார்கள். அவர்கள் கொழுமையானவைகளினால் பூரிப்பாயிருப்பார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் நன்மையான ஈவுகளை அருளுவார். அவர்களும் திருப்தியாயிருப்பார்கள்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தங்கள், இயேசுகிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்படும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கொடுக்கும் ஆத்தும இரட்சிப்பின் சந்தோஷம் கோதுமையை விடவும், திராட்சரசத்தை விடவும், எண்ணெயை விடவும் மேன்மையானதாகும்.

உன் கிரியைக்குப் பலனுண்டு எரே 31:15-17

எரே 31:15. ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது;ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:16. நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள்.

எரே 31:17. உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போனவர்களில் அநேகர் தங்களுடைய பிள்ளைகளை இழந்துவிட்டார்கள். கல்தேயர்கள் அவர்களை சிறைப்பிடித்த போது, அவர்களுடைய பிள்ளைகளை பட்டயத்தினால் வெட்டிக்கொன்றுபோட்டார்கள். தங்கள் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் புலம்பி அழுதார்கள். ராமாவிலே புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரல் கேட்கப்பட்டது. கல்தேயர்கள் யூதாவின் மனுஷரை சிறைப்பிடித்து சென்றபோது, யூதாதேசம் முழுவதிலும் புலம்பலும் கசப்பான அழுகையுமாகிய கூக்குரலும் கேட்கப்பட்டது.

யூதாதேசத்திலே பொதுவான அழுகையும் கூக்குரலும் கேட்கப்பட்டாலும், ராமாவிலே புலம்பலின் கூக்குரலும், அழுகையின் கூக்குரலும் மிகவும் அதிகமாயிருந்தது. நேபுசராதான் சிறைப்பிடிக்கப்பட்ட யூதர்களையெல்லாம் ராமாவிலே ஒன்றாய்க் கூட்டி வைத்திருந்தான். நேபுசராதான் எரேமியாவை ராமாவிலிருந்து விடுவித்து அனுப்பிவிட்டான்.

"பாபிலோனுக்குக் கொண்டுபோகும்படி எருசலேமிலும் யூதாவிலும் சிறைகளாய்ப் பிடித்துவைக்கப்பட்ட ஜனங்களுக்குள் விலங்கிடப்பட்டிருந்த எரேமியாவைக் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் விடுதலையாக்கி ராமாவிலிருந்து அனுப்பிவிட்ட பின்பு, எரேமியாவுக்குக் கர்த்தரால் உண்டான வசனம்" (எரே 40:1).

ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, தன் பிள்ளைகள் இல்லாதபடியால் அவைகளினிமித்தம் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 31:5). ராகேலின் கல்லறை ராமாவுக்கும் பெத்லகேமுக்கும் நடுவிலுள்ளது. இரண்டு கோத்திரத்தாரில் ஒரு கோத்திரமாகிய பென்யமீன் கோத்திரத்தாரும், பத்துக்கோத்திரத்தாருக்கு தலைமைக் கோத்திரமான எப்பிராயீம் கோத்திரத்தாரும், ராகேலின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். ராகேல் இரண்டு குமாரர்களை பெற்றெடுத்தாள்.

யாக்கோபு பென்யமீன் மீது மிகவும் அன்பாயிருந்தான். "அவனுடைய குமாரர் குமாரத்திகள் எல்லாரும் அவனுக்கு ஆறுதல் சொல்ல வந்து நின்றார்கள்; ஆனாலும் அவன் ஆறுதலுக்கு இடங்கொடாமல், நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன் என்றான். இவ்விதமாய் அவனுடைய தகப்பன் அவனுக்காக அழுதுகொண்டிருந்தான்" (ஆதி 37:35).

ராகேல் தன்னுடைய பிள்ளையைப் பெற்றெடுக்கும்போதே, அதற்கு "பெனானி" என்று பேரிட்டாள். இந்த பெயருக்கு "வருத்தத்தின் குமாரன்" என்று பொருள். ராமாவின் ஜனங்கள் தங்களுடைய குமாரர்களுக்காகவும், தங்களுடைய குமாரத்திகளுக்காகவும் இங்கே வந்து அழுது புலம்புவது வழக்கம். அவர்களுடைய அழுகையின் கூக்குரல் மிகுதியாயிருக்கும். அவர்களை ஆறுதல் படுத்துவது மிகவும் சிரமமான காரியம்.

கல்தேயர்கள் யூதாவின் மனுஷரை சிறைப்பிடித்து கொண்டுபோனபோது, அவர்களுடைய பிள்ளைகளை பெற்றோரிடமிருந்து பிரித்துவிட்டார்கள். சில பிள்ளைகளை பட்டயத்தால் கொன்று போட்டார்கள். வேறுசில பிள்ளைகளை அவர்களுடைய தாய்களிடமிருந்து பிரித்தார்கள். பெற்றோருக்கு தங்கள் பிள்ளைகளை மறுபடியும் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இதனால் அவர்களுடைய புலம்பலும், கசப்பான அழுகையுமாகிய கூக்குரலும் ராமாவிலே கேட்கப்பட்டது.

இயேசுகிறிஸ்துவின் காலத்தில் ஏரோது ராஜா, பெத்லகேமிலுள்ள இரண்டு வயதிற்குட்பட்ட ஆண்பிள்ளைகள் எல்லோரையும் கொன்றுபோடுமாறு உத்தரவிட்டான். இதனால் பெத்லகேமிலே புலம்பலும், கசப்பான அழுகையுமாகிய கூக்குரலும் கேட்கப்பட்டது. எரேமியா சொன்ன தீர்க்கதரிசனம் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் நிறைவேறிற்று.

"புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கங்கொண்டாடலுமாகிய கூக்குரல் ராமாவிலே கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளுக்காக அழுது, அவைகள் இல்லாதபடியால் ஆறுதலடையாதிருக்கிறாள் என்று, எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறைவேறிற்று" (மத் 2:17-18).

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் புலம்பினாலும், அழுதாலும், கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கக்கூடாது. நம்முடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட சோகசம்பவம் நடைபெற்றாலும், "நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள்" (எரே 31:16) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏனென்றால் நம்முடைய கிரியைகளுக்கு பலனுண்டு.

நாம் இப்போது வேதனைகளை அனுபவித்தாலும், நமக்கு சந்தோஷமான முடிவு உண்டாகும். நாம் இப்போது உபத்திரவத்திலிருந்தாலும், நம்முடைய முடிவு சமாதானமாயிருக்கும். நாம் இப்போது உபத்திரவத்தை அனுபவித்தாலும், நம்முடைய கிரியைக்கு முடிவிலே பலனுண்டு என்பதை நாம் விசுவாசிக்கவேண்டும். நம்முடைய துக்கம் நம்மிடத்தில் நிரந்தரமாக தங்குவதில்லை. கர்த்தருக்கு ஏற்ற வேளை வரும்போது, நம்முடைய துக்கம் சந்தோஷமாய் மாறும்.

எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனத்தாரில், ஒரு சந்ததியார் வனாந்தரத்திலே பிரேதங்களாக விழுந்தார்கள். ஆனாலும் அவர்களுடைய பின்சந்ததியார் கானான் தேசத்திலே வந்து குடியேறினார்கள்.

"உன் கிரியைக்கு பலனுண்டு" (எரே 31:16) என்று கர்த்தர் சொல்லுகிறார். நம்முடைய துக்க நாளுக்கு ஈடாக, நமக்கு சந்தோஷமான நாட்கள் அருளப்படும். நம்முடைய துக்கத்திற்கு சரியாக நமக்கு சந்தோஷமுண்டாயிருக்கும். கர்த்தர் நம்முடைய கிரியைகளுக்கு ஏற்ற பலனைக்கொடுப்பார்.

"ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" (ரோம 8:18).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள், செத்துப்போன தங்களுடைய பிள்ளைகளை நினைத்து அழுது புலம்புகிறார்கள். அவர்கள் அழாதபடிக்கு தங்கள் சத்தத்தை அடக்கிகொள்ளவேண்டுமென்றும், அவர்கள் கண்ணீர் விடாதபடிக்கு தங்கள் கண்களைக் காத்துக்கொள்ளவேண்டுமென்றும் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பி வருவார்கள் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

"உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு; உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 31:17). தங்களுடைய பிள்ளைகள் செத்துப் போனார்கள் என்று சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் வேதனையோடு அழுது புலம்புகிறார்கள். ஆனால் அவர்களுடைய பிள்ளைகள் தங்கள் தேசத்திற்கு திரும்பி வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் கர்த்தருக்குள் மரித்தவர்கள் பரமகானானுக்குள் பிரவேசிப்பார்கள். அவர்கள் கர்த்தர் தங்களுக்கு நியமித்த சுதந்தரத்தை பெற்றுக்கொள்வார்கள்.

நீரே என் தேவனாகிய கர்த்தர் எரே 31:18,19

எரே 31:18. நீர் என்னை தண்டித்தீர், நான் பணியாத மாடுபோல் அடிக்கப்பட்டேன்; என்னைத் திருப்பும், அப்பொழுது திருப்பப்படுவேன்; நீரே என் தேவனாகிய கர்த்தர்.

எரே 31:19. நான் திரும்பினபின்பு மனஸ்தாபப்பட்டுக்கொண்டிருக்கிறேன், நான் என்னை அறிந்துகொண்டதற்குப் பின்பு விலாவில் அடித்துக் கொண்டிருக்கிறேன், வெட்கி, நாணிக்கொண்டுமிருக்கிறேன், என் இளவயதின் நிந்தையைச் சுமந்துவருகிறேன் என்று எப்பிராயீம் துக்கித்துப் புலம்பிக்கொண்டிருக்கிறதை நிச்சயமாய்க் கேட்டேன்.

எப்பிராயீம் தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி கர்த்தரிடத்திற்கு திரும்பி வருகிறான். எப்பிராயீமின் மனுஷர், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போனார்கள். கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். இப்போது எப்பிராயீம் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாக தாங்கள் செய்த பாவங்களுக்கு மனம் வருந்துகிறார்கள்.

எப்பிராயீம் தன்னுடைய பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருக்கிறான். எப்பிராயீம் கோத்திரத்தார், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கு தலைவர்களைப் போல இருக்கிறார்கள். ஆகையினால் இங்கு எப்பிராயீமைப்பற்றி விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

"இவனுடைய குமாரன் சாபாத்; இவனுடைய குமாரர் சுத்தேலாக், எத்சேர், எலியாத்; இவர்கள் தேசத்தில் பிறந்த காத்தூராருடைய ஆடுமாடுகளைப் பிடிக்கப் போனபடியால் அவர்கள் இவர்களைக் கொன்றுபோட்டார்கள். அவர்கள் தகப்பனாகிய எப்பிராயீம் அநேகநாள் துக்கங்கொண்டாடுகையில், அவன் சகோதரர் அவனுக்கு ஆறுதல் சொல்லவந்தார்கள்" (1நாளா 7:21,22).

எப்பிராயீம் இளகிய மனதுள்ளவன். அவனுடைய இருதயம் மென்மையாயிருக்கிறது. தன்னுடைய ஒரே குமாரனுக்காக துக்கித்து புலம்புவதுபோல, எப்பிராயீம் தன்னுடைய பாவங்களுக்காக மனங்கசந்து அழுகிறான்.

எப்பிராயீமின் பாவத்தினிமித்தமாய் கர்த்தர் அவனை கண்டித்து திருத்துகிறார். கர்த்தர் தன்னை தண்டிக்கும்போது, எப்பிராயீமால் அந்தத் தண்டனையை பொறுமையோடு தாங்கிக்கொள்ள முடியவில்லை. தன்னுடைய வேதனைகளை அடக்கிக்கொள்ளாமல் அதை அப்படியே வெளிப்படுத்துகிறான். "நீர் என்னைத் தண்டித்தீர்" (எரே 31:17) என்று எப்பிராயீம் கர்த்தரிடத்தில் சொல்லுகிறான்.

எப்பிராயீம் கர்த்தருடைய கோலுக்கு கீழிருக்கிறான். எப்பிராயீமுக்கு பிரம்பு தேவைப்படுகிறது. கர்த்தர் தம்முடைய நீதியினால் எப்பிராயீமைத் தண்டிக்கிறார். அவனைத் திருத்துகிறார். எப்பிராயீம் பணியாத மாடுபோல் இருக்கிறான். கர்த்தர் பணியாத மாட்டை அடிப்பதுபோல, எப்பிராயீமை அடிக்கிறார். "நான் பணியாத மாடுபோல் அடிக்கப்பட்டேன்" என்று எப்பிராயீமும் சொல்லுகிறான். பணிகிற மாடு நுகத்தை தன் கழுத்தில் ஏற்றுக்கொள்ளும். பணியாத மாடு நுகத்தை ஏற்றுக்கொள்ளாது. அது கீழ்ப்படியாது.

எப்பிராயீமிடம் பணிவு இல்லை. அவன் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவில்லை. கர்த்தருக்கு விரோதமாக எப்பிராயீம் கலகம்பண்ணினான். கர்த்தர் அவனைத் தண்டித்தார். "என்னைத் திருப்பும், அப்பொழுது திருப்பப்படுவேன்" என்று எப்பிராயீம் சொல்லுகிறான். எப்பிராயீம் தன் இளவயதின் நிந்தையை சுமந்துவருகிறான். அவனுடைய வாலிப நாட்களின் பாவம் மிகுதியாயிருக்கிறது. வாலிபத்தில் பாவங்களை நினைக்கும்போது, எப்பிராயீமுக்கு மனவேதனையாயும், நிந்தையாயும் இருக்கிறது.

எப்பிராயீம் தன்னுடைய பாவத்தை நினைத்து, தனக்குத்தானே கோபப்படுகிறான். "நான் திரும்பினபின்பு மனஸ்தாபப்பட்டுக்கொண்டிருக்கிறேன், நான் என்னை அறிந்துகொண்டதற்குப் பின்பு விலாவில் அடித்துக்கொண்டிருக்கிறேன், வெட்கி, நாணிக்கொண்டுமிருக்கிறேன்" (எரே 31:19) என்று எப்பிராயீம் வேதனையோடு சொல்லுகிறான்.

ஆயக்காரன் ஜெபாலத்தில் கர்த்தருக்கு முன்பாக ஜெபம்பண்ணும்போது, கர்த்தரை நோக்கிப் பார்க்கவும் துணியவில்லை. தன்னுடைய பாவங்களினால் மனம் வேதனைப்பட்டு, ஆயக்காரன் தன்னுடைய மார்பிலே அடித்துக்கொள்கிறான். அதுபோலவே எப்பிராயீம் தன்னுடைய விலாவில் அடித்துக்கொள்கிறான். விலாவில் அடித்துக்கொள்வது வெட்கப்படுவதற்கும், வேதனைப்படுவதற்கும் அடையாளம். எப்பிராயீம் தன்னுடைய பாவங்களை நினைத்து வெட்கி நாணுகிறான்.

எப்பிராயீம் தன் சுயபலத்தினால் கர்த்தருக்கு அருகாமையில் போகமுடியாது. அவன் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணியவன். கர்த்தர் தம்முடைய கிருபையினால் எப்பிராயீமை இழுத்துக் கொள்ளவேண்டும். எப்பிராயீம் கர்த்தருடைய சமுகத்தில் பயபக்தியோடு, "என்னைத் திருப்பும், அப்பொழுது திருப்பப்படுவேன், நீரே என் தேவனாகிய கர்த்தர்" (எரே 31:18) என்று சொல்லுகிறான்.

எப்பிராயீம் கர்த்தரிடத்தில் சொல்லுவது, எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுவது போலிருக்கிறது. "கர்த்தாவே, என்னைக் குணமாக்கும், அப்பொழுது குணமாவேன்; என்னை இரட்சியும், அப்பொழுது இரட்சிக்கப்படுவேன்; தேவரீரே என் துதி" (எரே 17:14).

எப்பிராயீமுக்கு தேவனுடைய கிருபையில் மிகுந்த நம்பிக்கையிருக்கிறது. கர்த்தர் தன்னுடைய ஜெபத்தைக் கேட்பார் என்று எப்பிராயீம் நம்புகிறான். கர்த்தர் தன்னைத் திருப்பும்போது, தான் திருப்பப்படுவதாக எப்பிராயீம் பூரண நிச்சயத்தோடிருக்கிறான். "நான் திரும்பி பின்பு மனஸ்தாபப்பட்டுக்கொண்டிருக்கிறேன்" (எரே 31:19) என்றும் எப்பிராயீம் சொல்லுகிறான்.

நம்முடைய இருதயம் கர்த்தருக்கு நேராக திரும்பவேண்டும். கர்த்தருடைய கிருபை நமக்குள் கிரியை நடப்பிக்கவேண்டும். அப்போது நம்முடைய இருதயத்தில் கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் நிரம்பியிருக்கும். நம்முடைய இருதயம் கர்த்தருக்கு நேராக திரும்பும். பாவிகளாகயிருக்கிறவர்கள் கர்த்தரைப்பற்றிய அறிவுக்கு வரவேண்டும். அவர்கள் கர்த்தரைப்பற்றிய சரியான அறிவைப் பெற்றுக்கொள்ளும்போது, அவர்கள் மெய்யாகவே சரியான பாதையில் நடப்பார்கள். கர்த்தரைப்பற்றிய அறிவு ஒரு பாவியை, அவனுடைய தவறான பாதையிலிருந்து, சரியான பாதைக்கு திருப்பும். கர்த்தர் அவனைத் திருப்புவார். அவன் கர்த்தரிடத்திற்கு திரும்புவான்.

எப்பிராயீம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தான். கர்த்தர் அவனைத் தண்டித்தார். ஆனாலும் அந்த தண்டனை அவனுக்கு போதுமானதாயில்லை. கர்த்தர் அவனைத் தண்டித்தும், அவன் முற்றிலுமாய் மனந்திரும்பவில்லை. அவன் பணியாத மாடுபோலிருந்தான். கர்த்தரோ பணியாத மாட்டை அடிப்பதுபோல, எப்பிராயீமை அடித்தார்.

தேவனுடைய ஆவியானவர் எப்பிராயீமைத் திருத்துகிறார். எப்பிராயீமின் இருதயத்தில் கிரியை நடப்பிக்கிறார். அவனுக்கு சத்தியத்தை உபதேசம் பண்ணுகிறார். ஆவியானவரின் உபதேசத்தோடு, கர்த்தர் கொடுக்கும் சிட்சையும் சேர்ந்துகொள்கிறது. உபதேமும் சிட்சையும் ஒன்று சேரும்போது, கர்த்தருடைய சித்தம் இலகுவாய் நிறைவேறுகிறது.

எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ எரே 31:20

எரே 31:20. எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப் பேசினது முதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்; ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது; அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எப்பிராயீமின்மீது மனதுருக்கமாயிருக்கிறார். எப்பிராயீமுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபையும் இரக்கமும் கிடைத்திருக்கிறது. கர்த்தர் எப்பிராயீமை தமக்கு அருமையான குமாரனாக அங்கீகரிக்கிறார். அவன் தமக்கு பிரியமான பிள்ளை என்று கர்த்தர் சாட்சி சொல்லுகிறார். எப்பிராயீம் பணியாத மாடுபோல, கர்த்தருக்கு கீழ்ப்படியாமலிருந்தாலும், அவன் கர்த்தருக்கு அருமையான குமாரனாகவும், அவருக்கு பிரியமான பிள்ளையாகவும் இருக்கிறான். எப்பிராயீம் கெட்ட குமாரனாகயிருந்தாலும், தன் தகப்பனுக்கு சேஷ்டபுத்திரனாயிருக்கிறான்.

கர்த்தர் எப்பிராயீமைப்பற்றிச் சொல்லும்போது, "எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரனல்லவோ? அவன் எனக்கு பிரியமான பிள்ளையல்லவோ" என்று சொல்லுகிறார். எப்பிராயீம் இப்போது தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருக்கிறான். தன்னுடைய பாவங்களை நினைத்து தன்னுடைய விலாவில் அடித்துக் கொண்டிருக்கிறான். கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் போனதை நினைத்து வெட்கி, நாணிக்கொண்டிருக்கிறான். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணியதை நினைத்து துக்கித்துப் புலம்பிக் கொண்டிருக்கிறான்.

கர்த்தர் எப்பிராயீமை நினைத்துக் கொண்டேயிருக்கிறார். எப்பிராயீமைப்பற்றி கர்த்தருடைய இருதயத்தில் சமாதானமான சிந்தனைகளே நிரம்பியிருக்கிறது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை அடித்தாலும், அவர் ஒருபோதும் அவர்களை மறந்துவிடுகிறவரல்ல. கர்த்தர் யூதாவின் மனுஷரை அவர்களுடைய தேசத்திலிருந்து துரத்திவிட்டாலும், கர்த்தர் ஒருபோதும் அவர்களை தம்முடைய கண்பார்வையிலிருந்து துரத்திவிடவில்லை. தம்முடைய இருதயத்தின் சிந்தனைகளிலிருந்து கர்த்தர் அவர்களை விலக்கிவிடவுமில்லை.

கர்த்தர் கிருபையும், இரக்கமும், நீடிய பொறுமையுமுள்ளவர். எப்பிராயீமின் பாவத்தினிமித்தமாய் கர்த்தர் அவனைத் தண்டித்தார். அவன் பணியாத மாடுபோல அடிக்கப்பட்டான். கர்த்தர் எப்பிராயீமைத் தண்டித்தாலும், அவருடைய உள்ளம் அவனுக்காக கொதிக்கிறது.

"எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக்கொடுப்பேன்? நான் உன்னை எப்படி ஆத்துமாவைப்போலாக்குவேன்? உன்னை எப்படி செபோயீமைப் போல வைப்பேன்? என் இருதயம் எனக்குள் குழம்புகிறது; என் பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகிறது. என் உக்கிர கோபத்தின்படியே செய்யமாட்டேன்; எப்பிராயீமை அழிக்கும்படித் திரும்பமாட்டேன்; ஏனென்றால் நான் மனுஷனல்ல, தேவனாயிருக்கிறேன்; நான் உன் நடுவிலுள்ள பரிசுத்தர்; ஆகையால் பட்டணத்துக்கு விரோதமாக வரேன்" (ஓசி 11:8,9).

கர்த்தர் எப்பிராயீமின்மீது வைத்திருக்கிற அன்பு இன்னும் மாறவில்லை. "அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் எப்பிராயீமுக்கு நன்மை செய்வதாக வாக்குப்பண்ணுகிறார். எப்பிராயீமை கர்த்தர் திருப்பியிருக்கிறார். அவன் கர்த்தருக்கு சமீபமாக திருப்பப்பட்டிருக்கிறான். எப்பிராயீம் திரும்பின பின்பு மனஸ்தாபப்பட்டுக் கொண்டிருக்கிறான். "நீரே என் தேவனாகிய கர்த்தர்" என்று எப்பிராயீம் கர்த்தரிடத்தில் சொல்லுகிறான். கர்த்தர் அவனுக்கு உருக்கமாய் இரங்குகிறார்.

இஸ்ரவேலாகிய குமாரத்தியே, திரும்பு
எரே 31:21,22

எரே 31:21. உனக்குக் குறிப்படையாளங்களை நிறுத்து; உனக்குத் தூண்களை நாட்டு; நீ நடந்த வழியாகிய பாதையின்மேல் உன் மனதை வை; இஸ்ரவேலாகிய குமாரத்தியே, திரும்பு; இந்த உன்னுடைய பட்டணங்களுக்கே திரும்பு.

எரே 31:22. சீர்கெட்டுப்போன குமாரத்தியே, எந்தமட்டும் விலகித் திரிவாய்? கர்த்தர் பூமியிலே ஒரு புதுமையைச் சிருஷ்டிப்பார், ஸ்திரீயானவள் புருஷனைச் சூழ்ந்து கொள்ளுவாள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை விடுவிக்கப்போவதாகவும், அவர்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்ப அழைத்து வந்து, அங்கே அவர்களை குடியேற்றப்போவதாகவும் வாக்குப் பண்ணுகிறார். அவர்கள் சீயோனுக்கு திரும்பி வர தங்களை ஆயத்தம் பண்ணிக்கொள்ளவேண்டும். அவர்கள் இடறிவிழுந்துவிடக்கூடாது. தங்களுடைய ஆவியில் சோர்ந்துபோய்விடக்கூடாது.

சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பிப் போக பிரயாண ஆயத்தம்பண்ணவேண்டும். காலத்தை வீணாக்கிவிடாமல், பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டும். "இஸ்ரவேலாகிய குமாரத்தியே, திரும்பு" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், அவர்கள் இன்னும் கன்னிகையாகவே இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தேவனுக்கு மணவாட்டியாகவும், நிச்சயம் பண்ணப்பட்டவளாகவும் இருக்கிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு நியமிக்கப்பட்டிருக்கிற, கன்னிகையாகிய இஸ்ரவேல் என்னும் குமாரத்தி, தன்னுடைய பட்டணங்களுக்கு திரும்பவேண்டும்.

"இந்த உன்னுடைய பட்டணங்களுக்கே திரும்பு" (எரே 31:21) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரைப் பார்த்து சொல்லுகிறார். அவர்களுடைய பட்டணங்கள் இப்போது சீரழிந்துபோயிருக்கிறது. மண்மேடாய்க் கிடக்கிறது. ஆனாலும் அந்தப் பட்டணங்களே அவர்களுடைய பட்டணங்கள். இப்போது பாழாய்ப்போயிருக்கிற பட்டணங்களே, கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த பட்டணங்கள். அந்தப் பட்டணங்களுக்கே யூதாவின் மனுஷர் திரும்பிப்போகவேண்டும்.

கல்தேயர்கள் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்துகொண்டு போனார்கள். அவர்கள் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு எந்த வழியாகப் போனார்களோ, அந்த வழியாகவே அவர்கள் பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு திரும்பிப்போகவேண்டும். அவர்கள் எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு போனபோது வேதனையோடு அழுதுகொண்டு போனார்கள். துக்கத்தோடு புலம்பிக்கொண்டு போனார்கள். அவர்களுடைய பிதாக்கள் தங்களுடைய வேதனைகளையும், துக்கங்களையும் அவர்களுக்கு ஏராளமாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்திலிருந்து எருசலேமுக்கு, தாங்கள் வந்த வழியாகவே திரும்பிப்போகவேண்டும். போகும் வழியில் தங்கள் முற்பிதாக்கள், தங்களுக்கு விவரித்துச் சொன்ன சோகமான சம்பவங்களெல்லாம் அவர்களுடைய நினைவுக்கு வரும். கர்த்தர் தங்களை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவித்ததை அவர்கள் நன்றியோடு நினைவுகூருவார்கள். அவர்களுடைய முற்பிதாக்கள் பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போனதை இவர்களுக்கு சொல்லியிருக்கிறார்கள். இவர்களோ பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போவதை சந்தோஷமாய் அனுபவிக்கிறார்கள்.

பாவத்தின் அடிமைத்தனத்தில் சிக்கி தவித்த நம்மை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து விடுதலை பண்ணியிருக்கிறார். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள், தங்களுடைய ஆவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு புறப்பட்டுப்போக வேண்டும். அவர்கள் இதுவரையிலும் செய்யத் தவறிய நற்கிரியைகளையெல்லாம், இனிமேல் துரிதமாய் செய்வதற்கு தங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போகிறவர்களிடம், "உனக்குக் குறிப்படையாளங்களை நிறுத்து; உனக்குத் தூண்களை நாட்டு; நீ நடந்த வழியாகிய பாதையின்மேல் உன் மனதை வை" (எரே 31:21) என்று கர்த்தர் சொல்லுகிறார். பாபிலோனிலிருந்து சீயோனுக்கு திரும்பிப்போகும் பாதை, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து கர்த்தருடைய மகிமையான விடுதலைக்குப் போகும் பாதையாயிருக்கிறது. பாவிகள் தாங்கள் போகவேண்டிய பாதையின்மேல் தங்கள் மனதை வைக்கவேண்டும். இது கர்த்தருடைய பெரும்பாதை. இதுவே கர்த்தர் நியமித்திருக்கிற பரிசுத்தமான பாதை.

நம்முடைய மனதை நாம் இந்தப் பாதையின்மேல் வைக்கவில்லையென்றால், நம்மால் இந்தப் பாதையில் நடக்க முடியாது. நம்முடைய மனதில் இரட்சிக்கப்படவேண்டும் என்னும் விருப்பம் இருந்தால் மாத்திரமே, நாம் இரட்சிப்பின் பாதையில் கடந்து வருவோம். இரட்சிக்கப்படவேண்டும் என்னும் விருப்பம் நம்முடைய மனதில் இல்லையென்றால், நம்முடைய இரட்சிப்புக்காக நாம் ஜெபம்பண்ணவே மாட்டோம்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து சீயோனுக்கு திரும்பிப்போகிறவர்கள், தங்களுக்கு குறிப்படையாளங்களை நிறுத்தவேண்டும் என்றும், தங்களுக்கு தூண்களை நாட்டவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் தாங்கள் போகவேண்டிய பாதையில் பாதை மாறிப்போய்விடக்கூடாது. மிகுந்த கவனமாக முன்னேறிச் செல்லவேண்டும். நாம் இரட்சிப்பின் பாதையில் மிகுந்த எச்சரிப்போடும், கவனத்தோடும் முன்னேறிச் செல்லவேண்டும். இல்லையென்றால் பாதை விலகி, நம்முடைய இரட்சிப்பை இழந்துவிடக்கூடிய ஆபத்து வந்துவிடும்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து, சீயோனுக்கு திரும்பி வருகிற ஜனங்களில், முதலாவதாக வருகிறவர்கள் மிகுந்த கவனத்தோடு வரவேண்டும். அவர்களுக்கு தாங்கள் போகும் பாதையைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். தங்களை பின்பற்றி வருகிற ஜனங்களுக்கு குறிப்படையாளங்களை நிறுத்தவேண்டும். அவர்களுக்கு தூண்களை நாட்டவேண்டும். இவர்களுக்கு பின்னால் வருகிறவர்கள், இவர்கள் நிறுத்திய குறிப்படையாளங்களையும், இவர்கள் நாட்டிய தூண்களையும் பார்த்து, பாதையில் காணாமல் போய்விடாமல், அவர்களை பின்பற்றி வருவதற்கு உதவியாயிருக்கும்.

"சீர்கெட்டுப்போன குமாரத்தியே, எந்த மட்டும் விலகி திரிவாய்" (எரே 31:22) என்று கர்த்தர் கேட்கிறார். சிறையிருப்பிலிருந்து சீயோனுக்கு திரும்பிப்போகிறவர்கள் தெளிந்த சிந்தையுள்ளவர்களாயிருக்கவேண்டும். சீயோனுக்கு திரும்பிப்போகிறோம் என்னும் முழுநிச்சயம் அவர்களுக்குள் காணப்பட வேண்டும். பயமோ அல்லது கவலையோ அவர்களை திசை திருப்பிவிடக்கூடாது. தங்கள் பாரங்களையெல்லாம் கர்த்தர்மீது வைத்துவிட்டு, சீயோனை நோக்கிப் பார்த்து, தாங்கள் வந்த பாதையிலேயே, திரும்பிப் போகவேண்டும்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். சீயோனுக்கு திரும்பிப்போகிறவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளை தியானித்துப் பார்த்து, கர்த்தருக்குள் தங்களை உற்சாகப்படுத்திக்கொள்ள வேண்டும். "கர்த்தர் பூமியிலே ஒரு புதுமையை சிருஷ்டிப்பார், ஸ்திரீயானவள் புருஷனை சூழ்ந்துகொள்வாள்" (எரே 31:22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய சபையானது பலவீனமான ஸ்திரீயைப்போல இருக்கிறது. கர்த்தருடைய ஜனம் சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டும். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளோ பலவீனமாயிருக்கிறார்கள். சத்துருக்கள் கர்த்தருடைய பிள்ளைகளை முற்றிக்கைப் போட்டிருக்கிறார்கள். சத்துருக்கள் கர்த்தருடைய ஜனத்தை மேற்கொள்கிறார்கள். உலகத்தை கலக்க வேண்டிய கர்த்தருடைய பிள்ளைகள், உலகத்தைப் பார்த்து கலங்கிப்போயிருக்கிறார்கள்.

"கைவிடப்பட்டு மனம்நொந்தவளான ஸ்திரீயைப்போலவும், இளம்பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப்போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார்" (ஏசா 54:6).

கர்த்தர் சபையை ஒரு ஸ்திரீயோடு ஒப்பிட்டுச் சொல்லுகிறார். "அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன" (வெளி 12:1).

கர்த்தருடைய பரிசுத்தவான்கள் ஒரு சேனையைப்போல இருக்கிறார்கள். சத்துருக்கள் பரிசுத்தவான்களை வளைந்துகொண்டாலும், கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக யுத்தம்பண்ணுவார். பரிசுத்தவான்கள் தங்கள் சத்துருக்களை மேற்கொள்வார்கள்.

"அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது" (வெளி 20:9).

"கர்த்தர் பூமியிலே ஒரு புதுமையை சிருஷ்டிப்பார்" (எரே 31:22) என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறார். புதுமை என்பது இயேசுகிறிஸ்துவின் அபிஷேகத்தைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இயேசுகிறிஸ்துவின் அபிஷேகம் இந்த உலகத்திற்கு ஓர் அடையாளமாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

"ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" (ஏசா 7:14).

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" (ஏசா 9:6).

"ஸ்திரீயானவள் புருஷனை சூழ்ந்துகொள்வாள்" (எரே 31:22) என்னும் வாக்கியத்திற்கு "கன்னிமரியாளாகிய ஸ்திரீயானவள், தன்னுடைய கர்ப்பத்தில், சர்வவல்லமையுள்ள இயேசுகிறிஸ்துவை சுமப்பாள்" என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். இந்த வாக்கியத்தில் "புருஷன்" என்னும் வார்த்தைக்கு "கேபேர்" என்னும் எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சர்வவல்லமையுள்ள தேவனே, இங்கு "கேபேர்" என்று, அதாவது "புருஷன்" என்று அழைக்கப்படுகிறார்.

"ஆயிரம் தலைமுறைகளுக்கும் கிருபை செய்கிறவரும், பிதாக்களுடைய அக்கிரமத்தை அவர்களுடைய பின்னடியார் பிள்ளைகளின் மடியிலே சரிக்கட்டுகிறவருமாகிய சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள மகத்துவமும் வல்லமையுமுள்ள தேவனே, யோசனையிலே பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிறீர்; அவனவனுக்கு அவனவனுடைய வழிக்குத்தக்கதாகவும், அவனவனுடைய கிரியைகளின் பலனுக்குத்தக்கதாகவும் அளிக்கும்படி, உம்முடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின் மேலும்நோக்கமாயிருக்கின்றன" (எரே 32:18,19).

ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் குறிப்பதற்கு "கேபேர்" என்னும் எபிரெய வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து "எல் கிபோர்" ஆக, அதாவது சர்வவல்லமையுள்ள தேவனாகயிருக்கிறார்.

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" (ஏசா 9:6)

கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கக்கடவர்
எரே 31:23-26

எரே 31:23. இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் அவர்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, அவர்கள்: நீதியின் வாசஸ்தலமே, பரிசுத்த பர்வதமே, கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கக்கடவரென்கிற வார்த்தையை யூதாவின் தேசத்திலும் அதின் பட்டணங்களிலும் சொல்லுவார்கள்.

எரே 31:24. அதிலே யூதாவும், அதனுடைய எல்லாப் பட்டணங்களின் மனுஷரும் பயிரிடுங் குடிகளும், மந்தைகளை மேய்த்துத் திரிகிறவர்களும் ஏகமாய்க் குடியிருப்பார்கள்.

எரே 31:25. நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப் பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன்.

எரே 31:26. இதற்காக நான் விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்; என் நித்திரை எனக்கு இன்பமாயிருந்தது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வந்து, அங்கே மறுபடியும் சந்தோஷமாய்க் குடியேறுவார்கள். அவர்களுடைய அயலகத்தார் எல்லோரும் அவர்களுக்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார்கள். அவர்களுக்காக ஜெபம்பண்ணுவார்கள்.

இப்போது யூதாதேசமும், எருசலேம் நகரமும் பாழாய்க்கிடக்கிறது. அது மண்மேடாய்ப்போயிற்று. அதை பார்க்கிறவர்கள் எல்லோரும் ஈசலிடுகிறார்கள். யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் அவதூறாய்ப் பேசுகிறார்கள். அப்படிப்பட்ட தூஷண வார்த்தைகள் யூதா தேசத்திலே இனிமேல் கேட்கப்படாது. கர்த்தர் அவர்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது அவர்களுடைய அயலகத்தார் எல்லோரும், "நீதியின் வாசஸ்தலமே, பரிசுத்த பர்வதமே, கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கக்கடவர்" (எரே 31:23) என்று ஆசீர்வாதமான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார்கள். இந்த வார்த்தைகளை யூதாவின் தேசத்திலும் அதின் பட்டணங்களிலும் சொல்லுவார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகிற யூதாவின் மனுஷர் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய மனதில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்கள் எல்லோருக்கும் பிரத்தியட்சமாய்த் தெரிகிறது. யூதாவின் பட்டணங்கள் இதுவரையிலும் கொள்ளைக்காரர்களின் கூடாரங்களாயிருந்தது. இப்போதோ அங்கு நீதி வாசமாயிருக்கிறது. இஸ்ரவேல் பர்வதம் பரிசுத்த பர்வதமாயிருக்கிறது. சீயோன் பர்வதத்தில் நீதி வாசமாயிருக்கிறது.

யூதாதேசத்தில் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் சந்தோஷமாய்க் குடியேறுகிறார்கள். அவர்களுக்கு அங்கே ஒரு குறைவுமில்லை. எல்லாம் தாராளமாயும், சம்பூரண நிறைவாயும் இருக்கிறது. யூதாதேசத்திலே யூதாவும், அதனுடைய எல்லாப் பட்டணங்களின் மனுஷரும், பயிரிடுங் குடிகளும், மந்தைகளை மேய்த்துத் திரிகிறவர்களும் ஏகமாய்க் குடியிருப்பார்கள் (எரே 31:24).

யூதாதேசம் இதுவரையிலும் பாழாய்க் கிடந்தது. அதன் பட்டணங்களெல்லாம் மண்மேடாய்ப்போயிற்று. அது பல வருஷங்களாக ஒன்றுக்கும் பிரயோஜனப்படாத வனாந்தரம் போலிருந்தது. அந்த தேசத்திலே ஒரு காலத்தில் காயீனும் ஆபேலும் தங்கள் மந்தைகளை மேய்த்து, அங்கே பயிரிட்டு குடியிருந்தார்கள்.

"பின்பு அவனுடைய சகோதரனாகிய ஆபேலைப் பெற்றாள்; ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான், காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான்" (ஆதி 4:2).

பூர்வகாலத்தில், கானான் தேசத்தில் சொற்ப எண்ணிக்கையான ஜனங்களே குடியிருந்தார்கள். கர்த்தர் கானான் தேசத்தை மறுபடியுமாய் ஆசீர்வதிக்கிறார். அங்கே இப்போது பயிரிடும் குடிகளும், மந்தைகளை மேய்த்து திரிகிறவர்களும் ஏகமாய்க் குடியிருக்கிறார்கள்.

சிறையிருப்பிலிருந்த யூதர்களின் ஆத்துமா விடாய்த்துப்போயிருக்கிறது. அவர்கள் சிறையிருப்பின் வேதனைகளையும், பாடுகளையும் உபத்திரவங்களையும் அனுபவித்து வருத்தத்தோடிருக்கிறார்கள். கர்த்தரோ, "விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன்" (எரே 31:25) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தம், இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு வாக்குப் பண்ணப்பட்டிருக்கிற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்லுகிறார். கர்த்தருடைய வார்த்தைகள் ஆசீர்வாதமான வார்த்தைகளாகவும், யூதர்களை உற்சாகப்படுத்துகிற வார்த்தைகளாகவும் இருக்கிறது. இதனால் எரேமியா மிகுந்த மகிழ்ச்சியடைகிறார். கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது எரேமியாவுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று.

எரேமியா இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லவேண்டும் என்றுதான் இதுவரையிலும் காத்துக்கொண்டிருந்தார். எரேமியா தன்னுடைய சுயமாய் ஒன்றும் சொல்லக்கூடாது. கர்த்தர் தன்னுடைய வாயில் போட்ட வார்த்தைகளை மாத்திரமே அவர் ஜனங்களுக்கு சொல்லவேண்டும். இப்போது எரேமியா எதிர்பார்த்த வார்த்தைகளை, கர்த்தர் அவர் மூலமாய் சொல்லுகிறார். "இதற்காக நான் விழித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்" (எரே 31:26) என்று எரேமியா சொல்லுகிறார்.

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் எச்சரிப்பின் வார்த்தைகளையும், நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளையும் எரேமியாவின் மூலமாய்ச் சொன்னார். அந்த வார்த்தைகளை சொன்னபோது எரேமியாவின் உள்ளம் கலங்கியது. அவருக்கு நித்திரை வரவில்லை. இப்போதோ கர்த்தர் எரேமியா மூலமாய் ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். எரேமியா இந்த வார்த்தைகளை ஜனங்களுக்கு சொல்லும்போது, அவருடைய உள்ளத்தில் சமாதானமுண்டாயிற்று. அவருடைய நித்திரை அவருக்கு இன்பமாயிருக்கிறது. நன்றாய் நித்திரை பண்ணுகிறவர்கள் களைப்பு நீங்கி உற்சாகமாயிருப்பார்கள். அதுபோலவே எரேமியாவும் இப்போது, களைப்பும், சோர்வும், கவலையும், கலக்கமும் நீங்கி, சமாதானமாயும், சந்தோஷமாயும், உற்சாகமாயும் இருக்கிறார்.

கட்டவும் நாட்டவும் அவர்கள்பேரில் ஜாக்கிரதையாயிருப்பேன் எரே 31:27,28

எரே 31:27. இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தையும் யூதா குடும்பத்தையும் மனுஷவித்தினாலும், மிருகவித்தினாலும் விதைப்பேன்.

எரே 31:28. அப்பொழுது நான் பிடுங்கவும் இடிக்கவும் நிர்மூலமாக்கவும் அழிக்கவும் தீங்குசெய்யவும் அவர்கள்பேரில் எப்படி ஜாக்கிரதையாயிருந்தேனோ, அப்படியே கட்டவும் நாட்டவும் அவர்கள்பேரில் ஜாக்கிரதையாயிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் செழித்திருப்பார்கள். அவர்கள் எண்ணிக்கையில் பெருகுவார்கள். கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தையும் யூதாகுடும்பத்தையும் மனுஷவித்தினாலும் மிருகவித்தினாலும் விதைப்பேன் என்று சொல்லுகிறார். யூதாவின் மனுஷருடைய எண்ணிக்கையும் பெருகும். அவர்களுடைய மிருகங்களின் எண்ணிக்கையும் பெருகும்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தம், புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபை அற்புதமாய் வளர்ந்து பெருகும் என்பதற்கு அடையாளமாயிருக்கிறது. கர்த்தரே அவர்களை கட்டுவார். கர்த்தர் அவர்களை நாட்டுவார். கர்த்தர் தம்முடைய ஜனத்தின் பேரில் ஜாக்கிரதையாயிருப்பார்.

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கும் இஸ்ரவேல் குடிகளுக்கும் நன்மையான காரியங்களை செய்வார். அதை தம்முடைய சித்தத்தின் பிரகாரம், தமக்கு சித்தமான காலத்தில் செய்வார். "இதோ நாட்கள் வரும்" என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்போது கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் ஆசீர்வதிப்பார். அவர்களை பலுகிப் பெருகச் செய்வார். அவர்களை கட்டுவார். அவர்களை நட்டுவார்.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தபோது, கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்தது. அவர்கள் கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனார்கள். கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். இதனால் கர்த்தர் யூதாவின் மனுஷர்மீது கோபமாயிருந்தார். அவர்களை பிடுங்கவும், இடிக்கவும், நிர்மூலமாக்கவும் , அழிக்கவும், தீங்கு செய்யவும் கர்த்தர் அவர்கள் பேரில் ஜாக்கிரதையாயிருந்தார்.

இப்போதோ கர்த்தருடைய நாள் வந்திருக்கிறது. கர்த்தர் அவர்களை கட்டவும் நாட்டவும் அவர்கள் பேரில் ஜாக்கிரதையாயிருக்கிறார். கர்த்தரால் நாட்டப்பட்டவர்கள் உறுதியாய் நிலைத்திருப்பார்கள். அவர்கள் பலுகிப்பெருகுவார்கள். திரளான கனிகளைக் கொடுப்பார்கள். கர்த்தருடைய ஜனத்தார் அவருக்கு பிரியமானவர்களாகவும், பிரயோஜனமானவர்களாகவும் இருப்பார்கள்.

அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான் எரே 31:29,30

எரே 31:29. பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள்.

எரே 31:30. அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்.

யூதாமனுஷரின் முற்பிதாக்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்களுடைய பாவங்களை கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளிடத்தில் இனிமேல் விசாரிக்கமாட்டார். இயேசுகிறிஸ்துவின் காலத்தில் துன்மார்க்கமான யூதர்கள், தங்களுடைய முற்பிதாக்களின் பாவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேசினார்கள். அவர்களுடைய பாவங்களினால் தங்களுக்கு சாபம் வருவதாக சொன்னார்கள். இயேசுகிறிஸ்துவின் நாட்களில், யூதர்களுடைய முற்பிதாக்கள் பாவம் செய்ததுபோல, அவர்களுடைய பிள்ளைகளும் பாவம் செய்தார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் பெற்றோர்மீதும் வந்தது, அவர்களுடைய பிள்ளைகள்மீதும் வந்தது.

"நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின்மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள். இவைகளெல்லாம் இந்தச் சந்ததியின்மேல் வருமென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' *(மத் 23:35,36).*

"பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின'' *(எரே 31:29)* என்று யூதர்கள் தங்களுடைய முற்பிதாக்களின் பாவங்களைக் குறித்து சொல்லுவது வழக்கம். முன்னோர்களுடைய பாவங்களின் விளைவினால் தங்களுக்கு சாபங்கள் வந்திருப்பதாக பிள்ளைகள் சொல்லுவது வழக்கம். ஆனால் கர்த்தருடைய நாட்களில் இதுபோல சொல்லமாட்டார்கள்.

"அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்'' *(எரே 31:30)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் பெற்றோரின் பாவங்களை அவர்களுடைய பிள்ளைகளிடத்தில் விசாரிக்கமாட்டார். ஆனாலும் கர்த்தர் அவர்களுடைய முற்பிதாக்களோடு தாம் செய்து கொண்ட உடன்படிக்கையை மறந்துவிடாமல் நினைவுகூருவார். அந்த உடன்படிக்கையின் பிரகாரமாக, கர்த்தர் அவர்களுடைய பிள்ளைகளுக்கு நன்மை செய்வார். பிதாக்கள் பாவம் செய்தாலும், பிள்ளைகள் பாவம் செய்யவில்லையென்றால், கர்த்தர் பிள்ளைகளை மெய்யாகவே ஆசீர்வதிப்பார். பிதாக்கள் செய்த பாவங்களுக்காக பாவம் செய்யாத அவர்களுடைய பிள்ளைகளை நீதியான கர்த்தர் தண்டிக்கமாட்டார்.

அவனவன் தன் தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான். ஒருவனும் தன்னுடைய பிதாக்களின் அக்கிரமத்தினிமித்தமாய் சாவதில்லை. தமக்கு விரோதமாக யார் பாவம் செய்கிறார்களோ அவர்களை மாத்திரமே கர்த்தர் நியாயந்தீர்ப்பார். பாவம் செய்கிறவனுடைய ஆத்துமா சாகும்.

புது உடன்படிக்கை
எரே 31:31-34

எரே 31:31. இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்.

எரே 31:32. நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:33. அந்நாட்களுக்குப் பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:34. இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்.

கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதாகுடும்பத்தோடும் தம்முடைய உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொள்வார். அவர்களோடு புதுஉடன்படிக்கை பண்ணுவார். அவர்களுக்கு வரும் எல்லா ஆசீர்வாதங்களும் ஏதோ எதேச்சையாக வந்தவையல்ல. அவையெல்லாம் கர்த்தருடைய உடன்படிக்கையின் பிரகாரமாகவும், அவருடைய வாக்குத்தத்தின் பிரகாரமாகவும் அவர்களுக்கு வந்திருக்கிறது.

கர்த்தர் இங்கு சொல்லுகிற புதிய உடன்படிக்கை, புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபையில் பூரணமாய் நிறைவேறும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். "இதோ நாட்கள் வரும்" (எரே 31:31) என்று கர்த்தர் சொல்லுகிறார். இது சுவிசேஷத்தின் நாட்களைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"அவர்களைக் குற்றப்படுத்தி, அவர்களை நோக்கி: இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப் போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (எபி 8:8,9).

"அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை. ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எபி 8:10-12).

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களோடு கர்த்தர் புதுஉடன்படிக்கை பண்ணுகிறார். இது கிருபையின் உடன்படிக்கை. கர்த்தர் தம்முடைய புதுஉடன்படிக்கையை இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதாகுடும்பத்தோடும் பண்ணுகிறார். இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் எல்லோரும் கர்த்தருடைய இஸ்ரவேலாயிருக்கிறார்கள். இவர்கள் சுவிசேஷ சபையை சேர்ந்தவர்கள். இவர்கள்மீது கர்த்தருடைய பூரண சமாதானம் தங்கியிருக்கும்.

"இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக" (கலா 6:16).

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் எல்லோரும், விசுவாசிக்கிற ஆபிரகாமின் ஆவிக்குரிய வித்தாகவும், ஜெபிக்கிற யாக்கோபின் ஆவிக்குரிய வித்தாகவும் இருக்கிறார்கள். சாலொமோன் ராஜாவின் காலம் வரையிலும் இஸ்ரவேல் தேசம் ஒரே தேசமாயிருந்தது. அது சமஸ்த இஸ்ரவேல் தேசமாய் ஆளுகை செய்யப்பட்டது. அதன் பின்பு சமஸ்த இஸ்ரவேல் தேசம் யூதாதேசமென்றும், இஸ்ரவேல் தேசமென்றும் இரண்டாய்ப் பிரிந்தது.

அந்நிய தேசத்து சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேல் குடும்பத்தாரும், யூதாகுடும்பத்தாரும் தங்கள் தேசத்திற்கு திரும்பி வரும்போது அவர்கள் இரண்டு தேசங்களாக பிரிந்திராமல், மறுபடியும் ஒரே தேசமாக இணைந்துகொள்வார்கள். கர்த்தரே அவர்களை இணைப்பார். அவர்கள் மறுபடியும் சமஸ்த இஸ்ரவேலாயிருப்பார்கள். கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களை யூதாவும் இஸ்ரவேலும் பொதுவாய் அனுபவிப்பார்கள்.

கர்த்தருடைய புதிய உடன்படிக்கையில், அவருடைய சபையில் யூதரும் புறஜாதியாரும் ஒன்றாய்க் கலந்திருப்பார்கள். கர்த்தருடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் அவர்கள் எல்லோருக்கும் பொதுவாயிருக்கும்.

கர்த்தருடைய புதிய உடன்படிக்கை எப்படியிருக்காது என்று கர்த்தர் தெளிவுபடுத்துகிறார். "நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல" (எரே 31:32) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய பிரமாணங்களும், அவருடைய வாக்குத்தத்தங்களும் ஆவிக்குரியவை. அவை பரலோக ராஜ்யத்திற்குரியவை. கர்த்தருடைய வார்த்தையில் குழப்பம் எதுவுமில்லை. சகலமும் தெளிவாயிருக்கிறது. அவருடைய பிரமாணங்களும் தெளிவாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் அவர்களை கானான் தேசத்திற்கு வழிநடத்தி கொண்டு வந்தார். கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து விடுதலைபண்ணி கரம்பிடித்து வழிநடத்தினார். அவர்களோ குருடர்களைப் போலவும், சப்பாணிகளைப்போலவும் பலவீனராயிருந்தார்கள். கர்த்தர் அவர்களோடு பண்ணிய உடன்படிக்கையை மீறினார்கள். "நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே" (எரே 31:32) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தோடு உடன்படிக்கை பண்ணினார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையை மீறவுமில்லை. அவமாக்கிப்போடவுமில்லை. ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரோடு பண்ணிய உடன்படிக்கையில் உண்மையுள்ளவர்களாயில்லை. அவர்கள் உடன்படிக்கையை மீறி, அதை அவமாக்கிப்போட்டார்கள். இரட்சிப்பு கர்த்தருடையது. பாவங்களும் சாபங்களும் அழிவும் நம்முடையது.

கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை மாத்திரமே வாக்குப்பண்ணியிருக்கிறார். "நான் அவர்களுக்கு கானான் தேசத்தையும், மிகுதியான ஐசுவரியங்களையும் கொடுப்பேன்" என்று கர்த்தர் வாக்குப்பண்ணவில்லை. அதற்கு பதிலாக, "நான் அவர்களுக்கு பாவமன்னிப்பையும், சமாதானத்தையும், கிருபையையும், நற்புத்தியையும், தெளிந்த சிந்தனையையும், நல்ல இருதயங்களையும் கொடுப்பேன்" என்றே கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு பொறுப்புக்களைக் கொடுக்கிறார். நம்முடைய பொறுப்புக்களை செய்வதில் நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். "நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" *(எரே 31:33)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தை தம்மோடு சேர்த்துக்கொள்கிறார். அவர்களோடு ஐக்கியமாகயிருக்கிறார். கர்த்தர் தமக்கும் அவர்களுக்கும் இடையிலுள்ள உறவை உறுதிபண்ணுகிறார். "நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் அவர்களுக்கு போதுமானவராயிருப்பார். ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து உண்மையுள்ளவர்களாயிருப்பார்கள்.

கர்த்தருடைய நாமத்தை உண்மையாய் அறிந்துகொள்கிறவர்கள், அவரை உண்மையாய்த் தேடுவார்கள். கர்த்தரை சேவிப்பார்கள். கர்த்தர்மீது நம்பிக்கை வைப்பார்கள். "இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி: கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை; அவர்களில் சிறியவன்முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள்" *(எரே 31:34)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஜனங்கள் கர்த்தரை அறியவேண்டிய பிரகாரமாய் அறிந்துகொள்வார்கள். தம்மைப்பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு கர்த்தர் எல்லோரையுமே அன்போடு அழைக்கிறார். அவர்களுக்கு கர்த்தரை அறிந்துகொள்ளும் சிலாக்கியம் உண்டாயிருக்கும். கர்த்தருடைய வழிகள் பூமியிலுள்ள எல்லா குடிகளுக்கும் பிரத்தியட்சமாய் வெளிப்படுத்தப்படும்.

அநேக வருஷங்களாக யூதாமாத்திரமே கர்த்தரை அறிந்திருந்தார்கள். இஸ்ரவேல் கோத்திரத்தாரைத் தவிர, மற்ற புறஜாதி ஜனங்களுக்கு கர்த்தரை அறிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கவில்லை.

தேவாலயத்தில் ஆசாரியர்களும் கர்த்தரைப்பற்றி ஓரளவு மாத்திரமே பிரசங்கம்பண்ணினார்கள். புறஜாதி ஜனங்கள் வெளிப்பிரகாரத்தில் நின்று கர்த்தரைப் பற்றிய சத்தியங்களை ஓரளவு மாத்திரமே கேட்டார்கள். ஆனால் இப்போதோ கர்த்தரைப் பற்றி அறிந்துகொள்வதற்கு யாருக்கும் எந்த தடையுமில்லை. கர்த்தரை தேடுகிறவர்கள் எல்லோரும் அவரைக் கண்டுகொள்ளலாம். கர்த்தருடைய சபை ஆராதனையில் இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லோருமே பங்குபெறலாம். சபை ஆராதனையின் ஒரு பகுதியாக, கர்த்தரைப்பற்றிய சத்தியம் விசுவாசிகளுக்கு போதிக்கப்படுகிறது.

புதிய ஏற்பாட்டுக்காலத்து சபையில், இதுவரையிலும் இல்லாத பிரகாரம், இப்போது இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சுவிசேஷமும், கர்த்தரைப்பற்றிய சத்தியமும், அதிகமாய்ப் போதிக்கப்படுகிறது.

"நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமானதினாலே அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" *(2தீமோ 1:10)*.

கர்த்தருடைய கிருபையினால், அவருடைய ஜனங்கள் இப்போது கர்த்தரைப்பற்றிய தெளிவான அறிவையும் ஞானத்தையும் பெற்றிருக்கிறார்கள்.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்திரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும், தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்" (எபே 1:17-19).

"நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்" (எரே 31:34) என்று கர்த்தர் சொல்லுகிறார். இதனால் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு சமாதானமும், சந்தோஷமும், ஆறுதலும் உண்டாயிருக்கும்.

நியமங்கள்
எரே 31:35-37

எரே 31:35. சூரியனைப் பகல் வெளிச்சத்துக்காகவும் சந்திரநட்சத்திர நியமங்களை இராவெளிச்சத்துக்காகவும் கட்டளையிட்டவரும், அலைகள் கொந்தளிக்கத்தக்கதாகச் சமுத்திரத்தைக் குலுக்குகிறவரும், சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ளவருமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:

எரே 31:36. இந்த நியமங்கள் எனக்கு முன்பாக இல்லாதபடிக்கு ஒழிந்துபோனால், அப்பொழுது இஸ்ரவேல் சந்ததியும் எனக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 31:37. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: மேலே இருக்கிற வானங்கள் அளக்கப்படவும், கீழே இருக்கிற பூமியின் அஸ்திபாரங்கள் ஆராயப்படவும் கூடுமானால், நான் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரையும் அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் வெறுத்து விடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இந்த பூமி இருக்கும் வரைக்கும் கர்த்தருடைய சபையும் நிலைத்திருக்கும். கர்த்தர் வானத்திற்கும் பூமிக்கும் மாறாத நியமங்களை ஏற்படுத்தியிருக்கிறார். கர்த்தர் தம்முடைய சர்வசிருஷ்டிகளையும் பாதுகாத்து பராமரிக்கிறார். கர்த்தருடைய கிருபையினால் வானமும் பூமியும் மாறாத நியமங்களினால் பாதுகாக்கப்படுவதுபோல, கர்த்தருடைய சபையும் பாதுகாக்கப்படுகிறது.

சபையின் ஆவிக்குரிய காரியங்களில் ஏற்றதாழ்வுகள் இருக்கலாம். சபையின் வளர்ச்சி சில சமயங்களில் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம். சபை சில சமயங்களில் தாழ்ந்திருந்தாலும், அது மறுபடியும் திரும்ப எழும்பும். சபையின் ஊழியங்கள் இப்போது நடைபெறவில்லையென்றாலும் அல்லது இப்போது ஊழியங்கள் குறைவாக நடைபெற்றாலும், கர்த்தருக்குகேற்ற வேளை வரும்போது, சபையின் ஊழியங்கள் பரிபூரண நிறைவோடிருக்கும். சபையானது இயேசுகிறிஸ்துவாகிய கன்மலையின்மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. பாதாளத்தின் வாசல்கள் அதை ஒருபோதும் மேற்கொள்வதில்லை.

கர்த்தர் இந்த உலகத்தை படைத்து, இதை உறுதிபண்ணியிருக்கிறார். கர்த்தரே வானத்தையும் பூமியையும்சிருஷ்டித்தவர். கர்த்தருடைய மாறாத நியமங்களினால் வானமும் பூமியும் உறுதியாயிருக்கிறது. இது கர்த்தருடைய வல்லமைக்கும், அவருடைய உண்மைக்கும் அடையாளம். வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த கர்த்தர், இந்தப் பூமியில் தம்முடைய சபையையும் ஸ்தாபித்திருக்கிறார். வானமும் பூமியும் உறுதியாயிருப்பதுபோல, கர்த்தருடைய சபையும் உறுதியாயிருக்கும்.

கர்த்தரே எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர். அவரே முதலாவதாக எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர். "ஏனெனில், எந்த வீடும் ஒருவனால் உண்டாக்கப்படும்; எல்லாவற்றையும் உண்டுபண்ணினவர் தேவன்" (எபி 3:4).

நாம் இயற்கையிலுள்ள காரியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, கர்த்தருடைய கிருபையும், அவருடைய சர்வவல்லமையும் பிரத்தியட்சமாய்த் தெரியும். நாம் தேவனுடைய தெய்வீக வாக்குத்தத்தங்களை தாராளமாய் நம்பலாம். அவருடைய கிருபையும், ஆளுகையும், நியமங்களும் ஒருபோதும் மாறுவதில்லை. கர்த்தர் மாறாதவர். அவருடைய வாக்குத்தத்தங்களும் மாறாதவை.

கர்த்தர் சூரியனை பகல் வெளிச்சத்திற்காகவும், சந்திரநட்சத்திர நியமங்களை இராவெளிச்சத்திற்காகவும் கட்டளையிட்டிருக்கிறார். கர்த்தர் சூரியனையும் சந்திரனையும், நட்சத்திரங்களையும் எப்படி படைத்தாரோ, அப்படியே அவை இன்றும் இருக்கிறது. அவற்றிற்கு ஒரு மாற்றமும் உண்டாகவில்லை. சூரியன் ஆதியிலிருந்து இன்று வரையிலும் பகலுக்கு வெளிச்சத்தைக் கொடுத்து வருகிறது. அதுபோலவே சந்திரநட்சத்திரங்களும் இரவுக்கு வெளிச்சத்தைக் கொடுத்து வருகிறது.

சூரியவெளிச்சத்தினால் பூமியின்மீது உஷ்ணம் உண்டாகிறது. பூமிக்கு வெளிச்சம் கிடைக்கிறது. இது கர்த்தருடைய மாறாத நியமம். ஆதியிலே சூரியன் வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் கொடுத்ததுபோல, இன்றும் வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் கொடுத்து கொண்டு வருகிறது. கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவரே பிரதான சிருஷ்டிகர். அவரே சூரியனையும், சந்திர நட்சத்திரங்களையும் சிருஷ்டித்தவர். அவை தங்களுடைய இயக்கங்களுக்காக, தங்களை சிருஷ்டித்த கர்த்தரையே சார்ந்திருக்கிறது.

சூரியனுடைய இயக்கமும், சந்திரநட்சத்திரங்களின் இயக்கமும் "நியமங்கள்" என்று அழைக்கப்படுகிறது. இது கர்த்தருடைய மாறாத பிரமாணம். கர்த்தருடைய நியமத்தின் பிரகாரம், இவையெல்லாம் மாறாமல் இயங்கிக்கொண்டு வருகிறது.

"அறுமீன் நட்சத்திரத்தின் சுகிர்த சம்பந்தத்தை நீ இணைக்கக்கூடுமோ? அல்லது மிருகசீரிஷத்தின் கட்டுகளை அவிழ்ப்பாயோ? இராசிகளை அதினதின் காலத்திலே வரப்பண்ணுவாயோ? துருவச் சக்கர நட்சத்திரத்தையும் அதைச் சேர்ந்த நட்சத்திரங்களையும் வழிநடத்துவாயோ? வானத்தின் நியமங்களை நீ அறிவாயோ? அது பூமியையாளும் ஆளுகையை நீ திட்டம்பண்ணுவாயோ?" (யோபு 38:31-33).

கர்த்தர் அலைகள் கொந்தளிக்கத் தக்கதாக சமுத்திரத்தை குலுக்குகிறார். சேனைகளின் கர்த்தர் சமுத்திரத்தை அமைதிப்படுத்துகிறார். கர்த்தர் சமுத்திரத்தைக் குலுக்கும்போது அது கொந்தளிக்கிறது. கர்த்தர் கட்டளையிடும் போது கொந்தளிக்கிற சமுத்திரம் அமைதியாகிறது.

கர்த்தரே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். கர்த்தர் சிருஷ்டித்த வானங்களை யாராலும் அளக்க முடியாது. அதுபோலவே கீழேயிருக்கிற பூமியின் அஸ்திபாரங்களை யாராலும் ஆராயவும் முடியாது.

கர்த்தர் தம்முடைய வாயின் வார்த்தையினால் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். கர்த்தர் சிருஷ்டித்த வானமும் பூமியும் மகாபெரியது. வானத்தை நம்மால் அளக்க முடியாவிட்டாலும், வானத்தை கர்த்தர் நட்சத்திர மண்டலங்களால் நிரப்பியிருக்கிறார். கர்த்தர் பூமியையும் தம்முடைய நன்மைகளால் நிரப்பியிருக்கிறார்.

கர்த்தர் வானத்தையும் பூமியையும்போல இன்னும் ஏராளமானவற்றையும் சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தருடைய சிருஷ்டிப்பில் வானமும் பூமியும் ஒரு பகுதி மாத்திரமே. இந்த சிறிய பகுதியைக்கூட மனுஷரால் அளக்கவோ, அதின் அஸ்திபாரங்களை ஆராயவோ முடியாது. கர்த்தர் சிருஷ்டித்த சர்வசிருஷ்டிகளையும் மனுஷரால் புரிந்துகொள்ளவே முடியாது.

கர்த்தருடைய சிருஷ்டிகளெல்லாமே நிலைத்திருக்கிறது. கர்த்தருடைய நியமங்கள் எல்லாம் அவருக்கு முன்பாக எப்போதும் நிலைத்திருக்கும். அவை ஒருபோதும் அவருக்கு முன்பாக இல்லாதபடிக்கு ஒழிந்துபோகாது.

"உம்முடைய உண்மை தலைமுறை தலைமுறையாக இருக்கும்; பூமியை உறுதிப்படுத்தினீர், அது நிலைத்திருக்கிறது. உம்முடைய பிரமாணங்களை நிறைவேற்றும்படி அவைகள் இந்நாள்வரைக்கும் நிற்கிறது; சமஸ்தமும் உம்மைச் சேவிக்கும்" (சங் 119:90,91).

வானத்தில் மேகம் சூழ்ந்திருக்கிறது. சந்திரனையும் சூரியனையும் மேகம் மறைத்துக்கொள்கிறது. சில சமயங்களில் சூரியகிரகணமும், சந்திரகிரகணமும் உண்டாகிறது. பூமியில் பூமியதிர்ச்சி ஏற்படுகிறது. கடலும் பல சமயங்களில் கொந்தளிக்கிறது. ஆனாலும் இவையெல்லாம் தங்கள் இடத்தைவிட்டு இடம் பெயர்ந்துபோவதில்லை. பூமி அதிரலாம். கடல் கொந்தளிக்கலாம். ஆனாலும் பூமியும் கடலும் இருந்த இடத்தில்தான் இருக்கும். அது ஒருபோதும் இடம் மாறாது.

கர்த்தர் இயற்கையின் பிரமாணத்தை தம்முடைய ஜனங்களுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லி, தம்முடைய கிருபையின் ராஜ்யத்தை விளக்குகிறார். கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்தாரை ஒரு தேசமாக ஸ்தாபித்தார். இஸ்ரவேல்தேசம் ஒருபோதும் அழிந்துபோவதில்லை.

"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேது 2:9).

இஸ்ரவேலில் வித்து அல்லது இஸ்ரவேலின் சந்ததி என்பது மாம்சப்பிரகாரமான வித்தையோ அல்லது மாம்சப்பிரகாரமான சந்ததியோ குறிப்பதில்லை. மாம்சப்பிரகாரமாக இஸ்ரவேலாயிருக்கிறவர்களுக்கு கர்த்தருடைய வாக்குத்தத்தம் பொருந்தாது. வாக்குத்தத்தத்தின் பிரகாரம் கர்த்தருடைய பிள்ளைகளாகயிருக்கிறவர்களே, இஸ்ரவேலின் வித்தாகயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவரை விட்டு விலகிப்போனார்கள். அந்நிய தெய்வங்களை பின்பற்றினார்கள். விக்கிரகங்களை ஆராதித்தார்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களைக் கைவிட்டுவிடவில்லை. அவர்களை வெறுத்து ஒதுக்கிவிடவில்லை.

கர்த்தர் தம்முடைய கிருபையை வெளிப்படுத்துவதற்கு, வானங்களையும் பூமியையும் உவமையாகச் சொல்லுகிறார். வானங்களை அளக்க முடியாது. பூமியின் அஸ்திபாரங்களை ஆராயமுடியாது. வானங்களை அளக்க முடியுமென்றால், பூமியின் அஸ்திபாரங்களை ஆராயமுடியுமென்றால், கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரையும், அவர்கள் செய்த எல்லா பாவங்களினிமித்தமும், அவர்களை வெறுத்துவிடுவார். ஆனால் யாராலும் வானங்களை அளக்க முடியாது. பூமியின் அஸ்திபாரங்களையும் ஆராயமுடியாது. ஆகையினால் கர்த்தரும் இஸ்ரவேல் வம்சத்தாரை வெறுத்துவிடமாட்டார் (எரே 31:37).

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். அவரே இந்தப் பூமியில் தம்முடைய சபையை ஸ்தாபித்திருக்கிறார். கர்த்தரால் அவருடைய சபையை பாதுகாக்க முடியும். கர்த்தர் என்னும் நாமமுள்ளவர் சேனைகளின் கர்த்தராயிருக்கிறார். அவர் தம்முடைய வாயின் வார்த்தையினால் வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தவர். அவரே சூரியனை பகல் வெளிச்சத்திற்காகவும், சந்திரநட்சத்திர நியமங்களை இராவெளிச்சத்திற்காகவும் கட்டளையிட்டார். கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் சகலமும் நடைபெறுகிறது. அவருடைய வார்த்தைக்கு மீறி எதுவும் நடைபெறாது.

வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த கர்த்தரிடமிருந்து நமக்கு ஒத்தாசை வருகிறது. அவர் சர்வவல்லமையுள்ளவர். அவரால் கூடாதகாரியம் ஒன்றுமில்லை. கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காகவே சகல காரியங்களையும் நடப்பிக்கிறார். கர்த்தருடைய கிரியைகளெல்லாமே அவருடைய நாமத்தை மகிமைப்படுத்துகிறது. கர்த்தருடைய கிரியைகளும் அவருடைய மகிமையும் எப்போதும் இசைவாயிருக்கும்.

கர்த்தருடைய சபையார் அவருடைய நாமத்தைத் துதிக்கவேண்டும். தம்மைத் துதிப்பதற்காகவே, கர்த்தர் இஸ்ரவேலைத் தெரிந்தெடுத்திருக்கிறார். தம்மை துதிக்கும் ஜனங்களை, கர்த்தர் சபையாகக் கூட்டிச்சேர்த்திருக்கிறார். கர்த்தருடைய சித்தத்தில் ஒருபோதும் மாற்றம் ஏற்படுவதில்லை. அவருடைய சித்தமும், விருப்பமும் உறுதியாயிருக்கும். கர்த்தருடைய நியமங்கள் அவருக்கு முன்பாக எப்போதும் நிலைத்திருக்கும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே இஸ்ரவேல் சந்ததி அவருக்கு முன்பாக, ஒரு ஜாதியாக என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறது.

கர்த்தருடைய நியமங்கள் ஒழிந்து போனால், இஸ்ரவேல் சந்ததியும் ஒழிந்துபோகும். ஆனால் கர்த்தருடைய நியமங்கள் ஒருபோதும் ஒழிந்துபோகாது. ஆகையினால் இஸ்ரவேல் சந்ததியும், கர்த்தருக்கு முன்பாக, என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போகாது (எரே 31:36).

கர்த்தர் சிருஷ்டித்தவையெல்லாமே மாறாமலிருக்கிறது. அவற்றிற்கு மாற்றம் தேவைப்படவில்லை. கர்த்தர் அவற்றை சிருஷ்டிக்கும்போதே, தம்முடைய தெய்வீக ஞானத்தினால் சிந்தித்து, திட்டமிட்டு, அவற்றை எப்படி சிருஷ்டிக்கவேண்டுமோ அப்படி சிருஷ்டித்திருக்கிறார். ஆகையினால் கர்த்தருடைய பிரமாணங்களும், அவருடைய நியமங்களும் மாறாதவைகளாயிருக்கிறது. அவற்றிற்கு மாற்றம் தேவைப்படுவதில்லை.

கர்த்தருடைய பிரமாணங்களைப் போலவே, அவருடைய கிருபையும் மாறாமலிருக்கிறது. அவருடைய நியமங்களில் மாற்றம் தேவையில்லை. அதுபோலவே அவருடைய கிருபையிலும் மாற்றம் தேவையில்லை. கர்த்தரே ஆரம்பத்தில் எல்லாவற்றையும் சிருஷ்டித்திருக்கிறார். அவருடைய சிருஷ்டிப்பு பூரணமானது. கர்த்தருடைய சிருஷ்டிப்பு எதிலும் மாற்றம் தேவைப்படவில்லை.

கர்த்தரே தம்முடைய சபையை ஸ்தாபித்திருக்கிறார். அவருடைய சபையிலும் மாற்றம் எதுவும் தேவையில்லை. கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் சபைக்குப் போதுமானதாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய சபைக்குக் கொடுக்கும் வாக்குத்தத்தங்களும், அதற்கு போதுமானதாயிருக்கிறது. சபைக்கு ஒரு குறைவும் இல்லை. இந்தப் பூமி உள்ளவரையிலும், கர்த்தருடைய சபையும் நிலைத்திருக்கும். இந்தப் பூமி உறுதியாயிருப்பதுபோல, கர்த்தருடைய சபையும் உறுதியாயிருக்கும். இயற்கையிலுள்ள நியமங்கள் தங்களை சிருஷ்டித்த கர்த்தரை சார்ந்திருப்பதுபோல, சபையும் கர்த்தரை சார்ந்திருக்கிறது.

கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உண்மையுள்ளவர். தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறவர். கர்த்தர் தம்முடைய சிருஷ்டிகளுக்கு கட்டளையிட்டதுபோல, தம்முடைய சபைக்கும் கட்டளைகொடுத்திருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை அவருடைய சபையின் மூலமாய் நிறைவேறும். கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்.

இந்த நகரம் கர்த்தருக்கென்று கட்டப்படும் எரே 31:38-40

எரே 31:38. இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்; அப்பொழுது இந்த நகரம் அனானெயேலின் கோபுர முதல் கோடிவாசல்மட்டும் கர்த்தருக்கென்று கட்டப்படும்.

எரே 31:39. அப்புறமும் அளவுநூல் அதற்கு எதிராய்க் காரேப் என்னும் மேட்டின்மேல் சென்று கோவாத்புறமாக சுற்றிப்போம்.

எரே 31:40. பிரேதங்களைப் புதைக்கிறதும், சாம்பலைக் கொட்டுகிறதுமான பள்ளத்தாக்கனைத்தும், கீதரோன் வாய்க்காலுக்கு இப்பாலே கிழக்கே இருக்கிற குதிரைவாசலின் கோடிமட்டும் உண்டான சகல நிலங்களும் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்; அப்புறம் அது என்றென்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை இடிக்கப்படுவதுமில்லை என்கிறார்.

எருசலேம் நகரம் இப்போது அழிந்து கிடக்கிறது. அது மண்மேடாயிருக்கிறது. எருசலேம் நகரம் திரும்பக் கட்டப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த நகரம் கர்த்தருக்கென்று கட்டப்படும். "இந்த நகரம்" என்னும் வார்த்தை பரமஎருசலேமைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். பரமஎருசலேம் என்பது புதியஏற்பாட்டுக் காலத்திலுள்ள சுவிசேஷ சபையாகும். கர்த்தர் தம்முடைய சபைக்கு மகத்துவமான காரியங்களைச் செய்வார்.

"இதோ நாட்கள் வரும்" (எரே 31:38) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஒருவேளை கர்த்தருடைய நாட்கள் வருவதில் காலதாமதம் ஏற்படலாம். ஆனாலும் கர்த்தருடைய நாட்கள், அவருடைய சித்தத்தின் பிரகாரமாக, கர்த்தர் நியமித்த காலத்தில், நிச்சயமாகவே வரும். அப்போது எருசலேம் கர்த்தருக்குகென்று மறுபடியும் கட்டப்படும். எருசலேம் இதற்கு முன்பு எவ்வளவு விஸ்தாரமாக பரவியிருந்ததோ, அந்த அளவுக்கு மறுபடியும் விஸ்தாரமாய்க் கட்டப்படும்.

நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டினார். கர்த்தர் சொன்ன தீர்க்கதரிசனம் நெகேமியாவின் காலத்தில் நிறைவேறிற்று. இந்த நகரம் அனானெயேலின் கோபுரமுதல் கோடிவாசல் மட்டும் கர்த்தருக்கென்று கட்டப்படும்.

"அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும், அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழுந்து, ஆட்டுவாசலைக் கட்டினார்கள்; அதைக் கட்டி, அவர்கள் பிரதிஷ்டைபண்ணி, அதின் கதவுகளை வைத்து, மேயா என்கிற கொம்மைமுதல் அனானெயேலின் கொம்மைமட்டும் கட்டிப் பிரதிஷ்டை பண்ணினார்கள்" (நெகே 3:1).

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே எருசலேமின் வாசல்களும், அலங்கங்களும் நெகேமியாவின் காலத்தில் கட்டப்பட்டது. இதில் சொல்லப்பட்டிருக்கிற வாசல்களைப்பற்றியும், அலங்கங்களைப் பற்றியும் வேதபண்டிதர்கள் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். எருசலேம் திரும்பக் கட்டப்பட்டவுடன் அது கர்த்தருக்கென்று பிரதிஷ்டைபண்ணப்படும். எருசலேம் கர்த்தருடைய ஊழியத்திற்காகவே கட்டப்பட்டிருக்கிறது. எருசலேம் நகரம் மாத்திரமல்ல, அதைச் சுற்றிலுமுள்ள வெளியின் நிலங்களும் கர்த்தருக்கு பரிசுத்தமானது.

பிரேதங்களை புதைக்கிற இடம், சாம்பலைக் கொட்டுகிற பள்ளத்தாக்கு, கீதரோன் வாய்க்காலுக்கு கிழக்கேயிருக்கிற குதிரை வாசலின் கோடிமட்டும் உண்டான சகல நிலங்கள் ஆகியவையெல்லாமே கர்த்தருக்கு பரிசுத்தமாயிருக்கும் (எரே 31:40).

எருசலேம் நகரம் அனானெயேலின் கோபுரமுதல், கோடிவாசல்மட்டும் கர்த்தருக்கென்று கட்டப்படும். அளவுநூல் அதற்கு எதிராக காரேப் என்னும் மேட்டின்மேல் சென்று கோவாத் புறமாக சுற்றிப்போகும் (எரே 31:39).

எருசலேம் நகரம் முழுவதுமே தேவாலயம் போல கட்டப்படுகிறது. அதன் சகல நிலங்களும் கர்த்தருக்கு பரிசுத்தமாயிருக்கிறது. புதிய எருசலேமில் தேவாலயம் இருக்காது. ஏனெனில் புதிய எருசலேம் முழுவதுமே தேவாலயமாயிருக்கும். அதுபோலவே கர்த்தருக்கென்று கட்டப்படும் இந்த நகரமும், கர்த்தருக்கு பரிசுத்தமான தேவாலயமாயிருக்கும்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசனம் புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபையில் நிறைவேறும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளே ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்து சுவிசேஷ சபை கர்த்தருடைய பரிசுத்தமான நகரம் போல இருக்கிறது. கர்த்தருடைய சபை என்றென்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை, இடிக்கப்படுவதுமில்லை (எரே 31:40). கர்த்தருடைய சபை, கிறிஸ்துவாகிய கன்மலையின்மீது கட்டப்பட்டிருக்கிறது. பாதாளத்தின் வாசல்கள் அதை ஒருபோதும் மேற்கொள்வதில்லை.

32 அதிகாரம்

எருசலேம் அழியுமென்றும், சிதேக்கியா ராஜா சிறைப்பட்டுப்போவான் என்றும் எரேமியா தீர்க்கதரிசனம் சொன்னார். இதன் நிமித்தமாய் யூதாராஜாவின் அரமனையிலுள்ள காவற்சாலையின் முற்றத்திலே எரேமியா அடைக்கப்பட்டிருக்கிறார் (எரே 32:1-5).

தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக எரேமியா தனக்கு ஒரு நிலத்தை வாங்குகிறார். கர்த்தருக்கேற்ற வேளையில் இப்போதுள்ள துன்பம் நீங்கும் என்றும், முடிவு மகிழ்ச்சியாயிருக்கும் என்றும் எரேமியா நிலத்தை வாங்கிய சம்பவம் உறுதிபண்ணுகிறது (எரே 32:6-15). கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் எரேமியா நிலத்தை வாங்கி, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார் (எரே 32:16-25).

ஜனங்களுக்கு சொல்ல வேண்டிய செய்தியை கர்த்தர் எரேமியாவிடம் ஒப்புக்கொடுக்கிறார். யூதாவும் எருசலேமும், அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அழிந்துபோகும் (எரே 32:26-35). அழிவு பூரணமாயிருந்தாலும், அது அவர்களுக்கு முடிவல்ல (எரே 32:36-44).

காவற்சாலையின் முற்றத்திலே எரேமியா
எரே 32:1-5

எரே 32:1. நேபுகாத்நேச்சரின் பதினெட்டாம் வருஷத்துக்குச் சரியான யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா அரசாண்ட பத்தாம் வருஷத்தில், கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வார்த்தை:

எரே 32:2. அப்பொழுது பாபிலோன் ராஜாவின் சேனை எருசலேமை முற்றிக்கை போட்டிருந்தது; எரேமியா தீர்க்கதரிசியோ, யூதா ராஜாவின் அரமனையிலுள்ள காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருந்தான்.

எரே 32:3. ஏனென்றால், இதோ, இந்த நகரத்தைப் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கிறேன்; அவன் இதைப் பிடிப்பான் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்றும்,

எரே 32:4. யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா கல்தேயருடைய கைக்குத் தப்பிப்போகாமல், பாபிலோன் ராஜாவின் கையில் நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப்படுவான்; அவன் வாய் இவன் வாயோடே பேசும்; அவன் கண்கள் இவன் கண்களைக் காணும்.

எரே 32:5. அவன் சிதேக்கியாவைப் பாபிலோனுக்குக் கொண்டுபோவான்; நான் அவனைச் சந்திக்குமட்டும் அங்கே அவன் இருப்பான்; நீங்கள் கல்தேயரோடே யுத்தம்பண்ணினாலும் உங்களுக்கு வாய்ப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறாரென்றும், நீ தீர்க்கதரிசனஞ் சொல்லவேண்டியது என்ன என்று சொல்லி, யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா அங்கே அவனை அடைத்து வைத்தான்.

கல்தேயர்கள் யூதாவையும் எருசலேமையும் கொஞ்சம் கொஞ்சமாய் அழித்துக்கொண்டு வருகிறார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் வருகிறது. ஆனால் அவர்களோ தங்கள் பாவங்களுக்கு இன்னும் மனந்திருந்தவில்லை. சிதேக்கியா ராஜா அரசாண்ட பதினோராம் வருஷத்திலே எருசலேம் முற்றிலுமாய் அழிந்துபோயிற்று. இந்த வசனப்பகுதியில், சிதேக்கியா அரசாண்ட பத்தாம் வருஷத்தில் நடைபெற்ற சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. பாபிலோன் தேசத்து ராஜாவும், அவனுடைய சேனையும் எருசலேமை முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். முற்றிக்கை பெலமாயிருக்கிறது.

எருசலேம் நகரமும், யூதாராஜாவின் அரமனையும் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படும் என்று எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். எருசலேம் கர்த்தருடைய நகரம். கர்த்தரே எருசலேமை இதுவரையிலும் பாதுகாத்து வந்தார். ஆனால் எருசலேமின் குடிகள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் யூதாவின் மனுஷர்மீது கோபப்பட்டு, எருசலேமுக்கு தாம் கொடுத்த பாதுகாப்பை விலக்கிக்கொள்கிறார்.

சிதேக்கியா பாபிலோன் ராஜாவின் கைகளில் அகப்படாமல் தப்பித்து ஓடுகிறான். ஆனாலும் பாபிலோனின் சேனையிலுள்ளவர்கள் சிதேக்கியா ராஜாவை பின்தொடர்ந்து பிடிக்கிறார்கள். சிதேக்கியாவைக் கைதுபண்ணி பாபிலோன் ராஜாவின் கைகளில் ஒப்புக்கொடுக்கிறார்கள்.

பாபிலோன் ராஜா சிதேக்கியாவுக்கு தண்டனை கொடுக்கிறான். அவனுடைய அழிவை அறிவிக்கிறான். "அவன் வாய் இவன் வாயோடே பேசும், அவன் கண்கள் இவன் கண்களைக் காணும்" (எரே 32:4) என்று கர்த்தர் சொன்ன வாக்கியம் நிறைவேறிற்று.

"இதோ, இந்த நகரத்தைப் பாபிலோன் ராஜாவின்கையில் ஒப்புக் கொடுக்கிறேன்; அவன் இதைப் பிடிப்பான் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்றும், யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா கல்தேயருடைய கைக்குத் தப்பிப்போகாமல், பாபிலோன் ராஜாவின் கையில் நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப்படுவான்" (எரே 32:3,4) என்று கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை எரேமியா மூலமாய் அறிவித்தார்.

"அவன் சிதேக்கியாவைப் பாபிலோனுக்குக் கொண்டுபோவான்; நான் அவனைச் சந்திக்குமட்டும் அங்கே அவன் இருப்பான்" (எரே 32:5) என்றும் கர்த்தர் சொன்னார். கர்த்தர் சொன்ன பிரகாரமாக நேபுகாத்நேச்சார், சிதேக்கியாவை பாபிலோனுக்கு சிறைப்பிடித்து கொண்டுபோனான். சிதேக்கியா பாபிலோன் தேசத்திலே சாகும் வரையிலும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தான். சிதேக்கியாவுக்கு இயற்கையான மரணமுண்டாயிற்று.

கர்த்தர் சிதேக்கியாவின் ஜீவனை எடுத்துக்கொள்வதற்கு முன்பாகவே, நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவின் கண்களைத் தோண்டியெடுத்து, அவனைக் குருடாக்கிவிட்டான். சிதேக்கியாவின் வாழ்க்கை மிகவும் பரிதாபமாயிருந்தது. அவனுடைய முடிவும் பரிதாபமாய் முடிந்தது.

"நீங்கள் கல்தேயரோடே யுத்தம்பண்ணினாலும் உங்களுக்கு வாய்ப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 32:5) என்று எரேமியா தீர்க்கதரிசனம் சொன்னார். இதன் நிமித்தமாய் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா எரேமியாவை, தன்னுடைய அரமனையிலுள்ள காவற்சாலையின் முற்றத்திலே அடைத்து வைத்தான்.

எரேமியா யூதாவின் ராஜாவுக்கு விரோதமாகவும், யூதாதேசத்திற்கு விரோதமாகவும் கர்த்தருடைய வார்த்தையை சொன்னதினால், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் எரேமியாவின்மீது அதிகமாய்க் கோபப்பட்டார்கள். தேசத்தில் எரேமியாவுக்கு விரோதமாகக் கலகமுண்டாகும் என்று நினைத்து, சிதேக்கியா எரேமியாவை தன் அரமனையிலுள்ள காவற்சாலையின் முற்றத்திலே அடைத்து வைத்தான். யூதாஜனங்களின் கைகளிலிருந்து எரேமியாவைப் பாதுகாத்தான்.

"தன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்; அவன் கர்த்தருடைய வாக்கை உரைத்த எரேமியா என்கிற தீர்க்கதரிசிக்குமுன்பாகத் தன்னைத் தாழ்த்தவில்லை" (2நாளா 36:12). சிதேக்கியா இப்போது எரேமியாவுக்கு விரோதமாக தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்துகிறான்.

சிதேக்கியா இதற்கு முன்பு எரேமியாவின் வார்த்தைகளைக் கேட்பதற்கு ஆயத்தமாயிருந்தான். எரேமியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று அங்கீரித்தான்.

"நீர் எங்களுக்காகக் கர்த்தரிடத்தில் விசாரியும்; பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எங்களுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்கிறான்; ஒருவேளை கர்த்தர் தம்முடைய எல்லா அற்புதச் செயலின்படியேயும் எங்களுக்கு அநுக்கிரகஞ்செய்து, அவனை எங்களைவிட்டுப் போகப்பண்ணுவார் என்று சொல்லியனுப்பினான்" (எரே 21:2).

எரேமியாவோ "இதோ, இந்த நகரத்தைப் பாபிலோன் ராஜாவின்கையில் ஒப்புக் கொடுக்கிறேன்; அவன் இதைப் பிடிப்பான்" (எரே 32:3) என்று கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னார்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னதினிமித்தமாய், சிதேக்கியா எரேமியாவின்மீது கோபப்பட்டு, எரேமியாவை தன் அரமனையிலுள்ள காவற்சாலையின் முற்றத்திலே அடைத்துவிடுகிறான். எரேமியா இனிமேல் தனக்கு விரோதமாகவோ அல்லது எருசலேமுக்கு விரோதமாகவோ தீர்க்கதரிசனம் சொல்லக்கூடாது என்று நினைத்து, சிதேக்கியா எரேமியாவை காவற்சாலையின் முற்றத்திலே அடைத்துவைத்தான்.

கர்த்தருடைய வார்த்தை எரே 32:6-15

எரே 32:6. அதற்கு எரேமியா சொன்னது: கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்:

எரே 32:7. இதோ, உன்பெரிய தகப்பனாகிய சல்லூமின் குமாரன் அனாமெயேல் உன்னிடத்தில் வந்து: ஆனதோத்திலிருக்கிற என் நிலத்தை நீ வாங்கிக்கொள்; அதைக் கொள்ளுகிறதற்கு உனக்கே மீட்கும் அதிகாரம் அடுத்ததென்று சொல்வான் என்று உரைத்தார்.

எரே 32:8. அப்படியே என் பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேல், கர்த்தருடைய வார்த்தையின்படி காவற்சாலையின் முற்றத்தில் என்னிடத்துக்கு வந்து: பென்யமீன் நாட்டு ஆனதோத்தூரிலுள்ள என் நிலத்தை நீர் வாங்கிக்கொள்ளும்; சுதந்தரபாத்தியம் உமக்குண்டு, அதை மீட்கும் அதிகாரம் உமக்கு அடுத்தது; அதை வாங்கிக்கொள்ளும் என்றான்; அப்பொழுது அது கர்த்தருடைய வார்த்தை என்று அறிந்துகொண்டேன்.

எரே 32:9. ஆகையால் என் பெரியதகப்பன் மகனாகிய அனாமெயேலின் கையில், நான் ஆனதோத்திலிருக்கிற அவனுடைய நிலத்தைக்கொண்டு, அதின் விலைக்கிரயமாகிய பதினேழு சேக்கலிடை வெள்ளியை அவனுக்கு நிறுத்துக்கொடுத்தேன்.

எரே 32:10. நான் பத்திரத்தில் கையெழுத்தையும், முத்திரையையும் போட்டு சாட்சிகளை வைத்து, வெள்ளியைத் தராசிலே நிறுத்துக்கொடுத்த பின்பு,

எரே 32:11. நான் சட்டத்துக்கும் வழக்கத்துக்கும் ஏற்றபடி முத்திரை போடப்பட்ட கிரயப்பத்திரத்தையும் திறந்திருக்கிற பிரதியையும் எடுத்து,

எரே 32:12. என்பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேலுடைய கண்களுக்கு முன்பாகவும், கிரயப்பத்திரத்தில் கையெழுத்துப்போட்ட சாட்சிகளுடைய கண்களுக்கு முன்பாகவும், காவற்சாலையின் முற்றத்தில் உட்கார்ந்திருந்த எல்லா யூதருடைய கண்களுக்கு முன்பாகவும், அதை மாசெயாவின் குமாரனாகிய நேரியாவின் மகனான பாருக்கினிடத்தில் கொடுத்து,

எரே 32:13. அவர்களுடைய கண்களுக்கு முன்பாகப் பாருக்கை நோக்கி:

எரே 32:14. இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நீ முத்திரை போடப்பட்ட கிரயப்பத்திரமும், திறந்திருக்கிற பிரதிபத்திரமுமாகிய இந்தச் சாசனங்களை வாங்கி, அவைகள் அநேகநாளிலிருக்கும்படிக்கு அவைகளை ஒரு மண்பாண்டத்திலே வை.

எரே 32:15. ஏனெனில் இனி இந்த தேசத்தில் வீடுகளும் நிலங்களும் திராட்சத்தோட்டங்களும் கொள்ளப்படுமென்று, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றேன்.

எரேமியா தீர்க்கதரிசி யூதாராஜாவின் அரமனையிலுள்ள காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் சிறைச்சாலையிலிருந்தாலும் தன்னுடைய நெருங்கிய உறவினர் ஒருவருடைய நிலத்தை கிரயத்திற்கு வாங்குகிறார். இந்த நிலம் ஆனதோத்திலிருக்கிறது.

கர்த்தர் யூதாவின் பட்டணங்களுக்கு விரோதமாக தம்முடைய வார்த்தையைச் சொல்லியிருக்கிறார். யூதாதேசம் பாழாய்ப்போகும் என்றும், அதன் பட்டணங்கள் மண்மேடாய்ப்போகும் என்றும் எரேமியாவுக்குத் தெரியும். கல்தேயர்கள் யூதாதேசத்தை பிடித்துக்கொள்வார்கள் என்பதும் எரேமியாவுக்கு தெரியும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் எரேமியா ஆனதோத்திலிருக்கிற ஒரு நிலத்தை கிரயத்திற்கு வாங்குவது, மிகவும் விநோதமாயிருக்கிறது.

எரேமியா இந்த நிலத்தை வாங்கவேண்டுமென்பது கர்த்தருடைய சித்தம். எரேமியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார். எரேமியாவின் பெரிய தகப்பனாகிய சல்லூமின் குமாரன் அனாமெயேலுக்கு, ஆனதோத்தில் ஒரு நிலமுள்ளது. அனாமெயேல் எரேமியாவினிடத்தில் வந்து, "ஆனதோத்திலிருக்கிற என் நிலத்தை நீ வாங்கிக்கொள்; அதைக் கொள்ளுகிறதற்கு உனக்கே மீட்கும் அதிகாரம் அடுத்ததென்று சொல்வான்" (எரே 32:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா தனக்கு நிலத்தை வாங்கவேண்டுமென்று அனாமெயேலைத் தேடிப்போகவில்லை. அனாமெயேலே எரேமியாவைத் தேடி வருகிறார். அனாமெயேல் எரேமியாவுக்கு நெருங்கிய உறவினர். அந்த நிலத்தை கிரயத்திற்கு வாங்கி, அதை மீட்கும் அதிகாரம் எரேமியாவுக்கு மாத்திரமே உள்ளது.

எரேமியா அனாமெயேலின் நிலத்தை கிரயத்திற்கு வாங்கவில்லையென்றால், எரேமியா உறவின் மீட்பர் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்ற தவறிவிடுகிறார் என்று பொருள். ஆனதோத் ஆசாரியரின் பட்டணம். ஆனதோத்தும், அதைச்சுற்றிலுமுள்ள விளைச்சல் நிலங்களும் ஆசாரியருக்கு பங்கு வீதமாக பிரித்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அனாமெயேலும் ஒரு ஆசாரியன்.

எரேமியா அனாமெயேலின் நிலத்தை கிரயத்திற்கு வாங்கவில்லையென்றால், அந்த நிலத்தை வேறு யாராவது ஒருவர் கிரயத்திற்கு வாங்க வாய்ப்புள்ளது. அனாமெயேலின் நிலத்தை வாங்குகிறவர் ஆசாரிய கோத்திரத்தை சேர்ந்தவராயிராமல், வேறு கோத்திரத்தை சேர்ந்தவராயிருப்பதற்கும் வாய்ப்புள்ளது. இதனால் ஆசாரியரின் சுதந்தரம் வேறுகோத்திரத்தாருக்கு மாறிப்போகும். ஆனதோத்தில் இதன் நிமித்தமாய் பிரச்சனைகள் உண்டாகும். ஆசாயரின் நிலத்தை வேறு கோத்திரத்தாருக்கு விற்பது நியாயப்பிரமாணத்திற்கு முரணான காரியம்.

அனாமெயேலுக்கு இப்போது பணம் தேவைப்படுகிறது. அவருக்கு அவசர செலவு இருக்கலாம். ஆகையினால்தான் அவர் தன்னுடைய சுதந்தரவீதமாகிய நிலத்தை விற்க முன்வருகிறார். எரேமியா தன்னுடைய நெருங்கிய உறவினருக்கு உதவிசெய்யவேண்டும். இது உறவின்முறை மீட்பரின் கடமை.

அனாமெயேல் எரேமியாவினிடத்தில் வருவான் என்று கர்த்தரும் எரேமியாவுக்கு முன்னறிவிக்கிறார். அனாமெயேலின் நிலத்தை வாங்குவது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. எரேமியாவும் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிகிறார். கர்த்தர் சொன்ன பிரகாரமாக எரேமியாவுடைய பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேல், கர்த்தருடைய வார்த்தையின்படி, காவற்சாலையின் முற்றத்திற்கு வருகிறார். அங்கே எரேமியா காவற்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

அனாமெயேல் காவற்சாலையில் அடைக்கப்பட்டிருக்கிற எரேமியாவினிடத்தில் "பென்யமீன் நாட்டு ஆனதோத்தூரிலுள்ள என் நிலத்தை நீர் வாங்கிக்கொள்ளும்; சுதந்தரபாத்தியம் உமக்குண்டு, அதை மீட்கும் அதிகாரம் உமக்கு அடுத்தது; அதை வாங்கிக்கொள்ளும்" (எரே 32:8) என்று சொல்லுகிறான். அப்பொழுது, ஆனதோத் சொல்லுவது கர்த்தருடைய வார்த்தை என்பதை எரேமியா அறிந்துகொள்கிறார்.

எரேமியாவும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, தன் பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேலின் கையில், ஆனதோத்திலிருக்கிற அவனுடைய நிலத்தை கிரயத்திற்கு வாங்குகிறார். அதன் விலைக்கிரயம் பதினேழு சேக்கல் எடையுள்ள வெள்ளியாகும். எரேமியா அதன் விலைக்கிரயமாகிய பதினேழு சேக்கலிடை வெள்ளியை அனாமெயேலுக்கு நிறுத்துக்கொடுக்கிறார்.

எரேமியா நிலத்திற்கான கிரயத்தைக் கொடுப்பதில் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் யாரையும் வஞ்சிக்கவில்லை. தாங்கள் பேசிக்கொண்ட பிரகாரம் எரேமியா வெள்ளியை அனாமெயேலுக்கு நிறுத்துக்கொடுக்கிறார். கடன் சொல்லவில்லை.

ஒரு நிலத்திற்கு பதினேழு சேக்கல் வெள்ளி என்பது மிகவும் குறைவான கிரயம். கல்தேயர்கள் யூதாவை முற்றிக்கையிட்டிருக்கிற காலத்தில், யூதாவின் நிலங்களுக்கு மதிப்பு இல்லாமல் போயிற்று. நிலத்தை வாங்குவதற்கு ஒருவரும் முன்வரவில்லை. இதனால் மிகவும் குறைந்த விலையிலேயே அனாமெயேலால் தன்னுடைய நிலத்தை விற்கமுடிகிறது.

எரேமியா அனாமெயேலின் நிலத்தை வாங்கி, முறைப்படி பத்திரம் எழுதுகிறார். கிரயப்பத்திரத்தில் கையெழுத்தையும் முத்திரையையும் போடுகிறார். அதற்கான சாட்சிகளையும் வைக்கிறார். நிலத்திற்கு கிரயமான பதினேழு சேக்கல் வெள்ளியை அனாமெயேலுக்கு தராசிலே நிறுத்து கொடுக்கிறார்.

எரேமியா சட்டத்துக்கும் வழக்கத்துக்கும் ஏற்றபடி முத்திரைபோடப்பட்ட கிரயப்பத்திரத்தையும் திறந்திருக்கிற பிரதியையும் எடுத்து, தன்னுடைய பெரிய தகப்பன் மகனாகிய அனாமெயேலுடைய கண்களுக்கு முன்பாகவும், கிரயப்பத்திரத்தில் கையெழுத்துப்போட்ட சாட்சிகளுடைய கண்களுக்கு முன்பாகவும், காவற்சாலையின் முற்றத்தில் உட்கார்ந்திருந்த எல்லா யூதருடைய கண்களுக்கு முன்பாகவும், அதை மாசெயாவின் குமாரனாகிய நேரியாவின் மகனான பாருக்கினிடத்தில் கொடுக்கிறார் (எரே 32:11,12).

எரேமியா பாருக்கை நோக்கி, "நீ முத்திரைபோடப்பட்ட கிரயப்பத்திரமும், திறந்திருக்கிற பிரதிபத்திரமுமாகிய இந்தச் சாசனங்களை வாங்கி, அவைகள் அநேகநாளிருக்கும்படிக்கு அவைகளை ஒரு மண்பாண்டத்திலே வை" (எரே 32:14) என்று சொல்லுகிறார்.

ஏனெனில் இனி இந்த தேசத்தில் வீடுகளும் நிலங்களும் திராட்சத்தோட்டங்களும் கொள்ளப்படுமென்று, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் (எரே 32:15).

எரேமியா முத்திரைப்போடப்பட்ட கிரயப்பத்திரத்தையும், திறந்திருக்கிற பிரதியையும் பாருக்கிடம் கொடுத்து, அந்த சாசனங்களை ஒரு மண்பாண்டத்தில் வைக்குமாறு சொல்லுகிறார். மண்பாண்டத்தில் அவை அநேகநாட்களுக்கு பத்திரமாயிருக்கும். எரேமியாவின் பின்சந்ததியாருக்கு இந்த சாசனங்கள் பிரயோஜனமாயிருக்கும். அவர்கள் ஆனதோத்திலுள்ள இந்த நிலத்தை சட்டப்படி பயன்படுத்திக்கொள்ளலாம்.

எரேமியா அனாமெயேலின் நிலத்தை கிரயத்திற்கு வாங்கும்போது, கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கைப் போட்டிருக்கிறார்கள். யூதாதேசம் முழுவதும் சீக்கிரத்தில் பாழாக்கப்படக்கூடிய நிலமையிலிருக்கிறது. எருசலேமும் சீக்கிரத்திலே மண்மேடாய்ப்போகக்கூடிய சூழ்நிலையிலிருக்கிறது. ஆனாலும் "இனி இந்த தேசத்தில் வீடுகளும் நிலங்களும் திராட்சத்தோட்டங்களும் கொள்ளப்படும்" (எரே 32:15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய வார்த்தைகள் நிறைவேறும். இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறும் என்பதை உறுதிபண்ணும் அடையாளமாக எரேமியா ஆனதோத்திலுள்ள நிலத்தை கிரயத்திற்கு வாங்குகிறார். எரேமியா திருமணம் செய்துகொள்ளவில்லை. எரேமியா திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்றும், அவருக்கு குடும்பத்திலே பிள்ளைகள் யாரும் இருக்கக்கூடாது என்றும் கர்த்தர் ஏற்கெனவே கட்டளையிட்டிருக்கிறார். ஆனாலும் எரேமியா தன்னுடைய குடும்பத்தாருக்காக அனாமெயேலின் நிலத்தை கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார்.

எருசலேம் இப்போது அழிந்துபோனாலும், கர்த்தர் அந்த நகரத்தை திரும்பக்கட்டுவார். அது இப்போது மண்மேடாயிருந்தாலும், அதிலுள்ள அரமனைகளும், வீடுகளும் திரும்பக் கட்டப்படும். எருசலேமிலுள்ள தேவாலயமும் முன்பு இருந்ததுபோலவே மறுபடியும் கட்டப்படும். இது கர்த்தருடைய தீர்க்கதரிசன வார்த்தை. கர்த்தர் சொன்ன வார்த்தைகள் நிறைவேறும் என்பதை உறுதிபண்ணுவதற்காகவே எரேமியா அனாமெயேலின் நிலத்தை கிரயத்திற்கு வாங்கியிருக்கிறார். எரேமியா கர்த்தருடைய வார்த்தைகளை நம்பி கிரியை செய்கிறார்.

எரேமியாவின் ஜெபம் எரே 32:16-25

எரே 32:16. நான் கிரயப்பத்திரத்தை நேரியாவின் குமாரனாகிய பாருக்கினிடத்தில் கொடுத்தபின்பு, நான் கர்த்தரை நோக்கிப் பண்ணின விண்ணப்பமாவது:

எரே 32:17. ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்; உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை.

எரே 32:18. ஆயிரம் தலைமுறைகளுக்கும் கிருபை செய்கிறவரும், பிதாக்களுடைய அக்கிரமத்தை அவர்களுடைய பின்னடியார் பிள்ளைகளின் மடியிலே சரிக்கட்டுகிறவருமாகிய சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள மகத்துவமும் வல்லமையுமுள்ள தேவனே,

எரே 32:19. யோசனையிலே பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிறீர்; அவனவனுக்கு அவனவனுடைய வழிக்குத்தக்கதாகவும், அவனவனுடைய கிரியைகளின் பலனுக்குத்தக்கதாகவும் அளிக்கும்படி, உம்முடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின் மேலும் நோக்கமாயிருக்கின்றன.

எரே 32:20. இஸ்ரவேலிலும் மற்ற மனுஷருக்குள்ளும் இந்நாள்வரைக்கும் விளங்குகிற அடையாளங்களையும் அற்புதங்களையும் தேவரீர் எகிப்துதேசத்திலே செய்து, இந்நாளில் நிற்கும் கீர்த்தியை உமக்கு உண்டாக்கி,

எரே 32:21. இஸ்ரவேலாகிய உமது ஜனத்தை அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகா பயங்கரத்தினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி,

எரே 32:22. அவர்களுடைய பிதாக்களுக்கு நீர் கொடுப்பேன் என்று ஆணையிட்ட பாலும் தேனும் ஓடிய தேசமாயிருக்கிற இந்த தேசத்தை அவர்களுக்குக் கொடுத்தீர்.

எரே 32:23. அவர்கள் அதற்குள் பிரவேசித்து, அதைச் சுதந்தரித்துக் கொண்டார்கள்; ஆனாலும் அவர்கள் உமது சத்தத்துக்குச் செவிகொடாமலும், உமது நியாயப்பிரமாணத்தில் நடவாமலும், செய்யும்படி நீர் அவர்களுக்குக் கற்பித்தவொன்றையும் செய்யாமலும் போனார்கள்; ஆதலால் இந்தத் தீங்கையெல்லாம் அவர்களுக்கு நேரிடப்பண்ணினீர்.

எரே 32:24. இதோ, கொத்தளங்கள் போடப்பட்டிருக்கிறது; நகரத்தைப் பிடிக்க வருகிறார்கள்; பட்டயத்தினிமித்தமும், பஞ்சத்தினிமித்தமும், கொள்ளை நோயினிமித்தமும் இந்த நகரம் அதற்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிற கல்தேயரின் கையிலே கொடுக்கப்படுகிறது; நீர் சொன்னபடி சம்பவிக்கிறது; இதோ, நீர் அதைப்பார்க்கிறீர்.

எரே 32:25. கர்த்தராகிய ஆண்டவரே, நகரம் கல்தேயரின் கையிலே கொடுக்கப்படுகிறதாயிருந்தும், தேவரீர் என்னை நோக்கி: நீ உனக்கு ஒரு நிலத்தை விலைக்கிரயமாகக்கொண்டு, அதற்குச் சாட்சிகளை வையென்று சொன்னீரே என்றேன்.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை எரேமியாவின் வாயிலே போடுகிறார். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள்மீது கர்த்தருடைய கோபம் வருகிறது. கர்த்தர் யூதாதேசத்தை அழித்துப்போடுவதாக தம்முடைய கோபத்திலே சொல்லுகிறார். அதே வேளையில், ஏற்றவேளை வரும்போது, கர்த்தர் தமது கிருபையினால், அழிந்துபோயிருக்கும் யூதாதேசத்தை திரும்பக் கட்டுவதாகவும் வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தருடைய வார்த்தைகள் எரேமியாவுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. எரேமியா கர்த்தருடைய வார்த்தைகளை உண்மையாய் அறிவிக்கிறார். ஆனாலும் கர்த்தர் சொல்லுகிற சத்தியங்களை நினைத்து எரேமியா மிகவும் ஆச்சரியப்படுகிறார். கர்த்தருடைய சித்தம் எரேமியாவுக்கு சரியாப் புரியவில்லை. எரேமியாவின் இருதயம் கலக்கத்திலிருக்கிறது. அவருக்குள் அமைதியில்லை. இந்த சூழ்நிலையில் எரேமியா தன்னுடைய ஆத்துமாவின் வருத்தங்களையும் பாரங்களையும் கர்த்தருடைய சமுகத்திலே இறக்கி வைக்கிறார். எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்.

எரேமியா இப்போது காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருக்கிறார். அங்கே அவர் மிகுந்த வேதனைகளையும் துன்பங்களையும் அனுபவிக்கிறார். இந்த வேளையில் கர்த்தருடைய வார்த்தை அவருக்கு உண்டாயிற்று. கர்த்தர் சொன்ன வார்த்தைகளின் அர்த்தங்களும், அவருடைய பராமரிப்புக்களும் எரேமியாவுக்கு புரியவில்லை. கர்த்தர் தாமே தம்முடைய சத்திய வார்த்தைகளை தனக்கு தெளிவுபடுத்தி காண்பிக்கவேண்டும் என்று எரேமியா கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்.

"நான் கிரயப்பத்திரத்தை நேரியாவின் குமாரனாகிய பாருக்கினிடத்தில் கொடுத்தபின்பு, நான் கர்த்தரை நோக்கிப் பண்ணின விண்ணப்பமாவது" (எரே 32:16) என்று சொல்லி எரேமியா தன்னுடைய ஜெபவார்த்தைகளை ஆரம்பிக்கிறார்.

எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபிக்கும் போது கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். அவரைக் கனம்பண்ணுகிறார். கர்த்தரே சர்வசிருஷ்டிகர். அவரே சர்வவல்லவர். கர்த்தர் தம்முடைய சர்வவல்லமையினால் சகலத்தையும் சிருஷ்டித்திருக்கிறார். கர்த்தருடைய பராமரிப்புக்களும், அவருடைய நோக்கங்களும் சில சமயங்களில் நமக்கு தெளிவாய்ப் புரியவதில்லை. கர்த்தருடைய நாமத்தை நம்முடைய சுயஞானத்தால் புரிந்துகொள்ளமுடியாது. பலசமயங்களில் கர்த்தருடைய சித்தத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் நாம் குழப்பத்திலிருக்கிறோம்.

கர்த்தருடைய ஞானத்தைப்போலவே அவருடைய வல்லமையையும் நம்மால் புரிந்துகொள்ள முடியாது. கர்த்தர் நல்லவர். தம்மை நம்புகிறவர்களுக்கு அவருடைய கிரியைகளெல்லாமே நன்மைக்கேதுவாகயிருக்கும். எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது அவரை நன்றியோடு துதிக்கிறார். கர்த்தரை கனம்பண்ணுகிறார். எல்லா ஜீவன்களுக்கும் கர்த்தரே ஊற்றாகவும், ஊற்றின் கண்ணாகவும் இருக்கிறார். சகல வல்லமைகளும் கர்த்தரிடமிருந்தே வருகிறது.

கர்த்தராகிய ஆண்டவர் தம்முடைய மகாபலத்தினாலும், நீட்டப்பட்ட தம்முடைய புயத்தினாலும் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். கர்த்தரால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. அவரால் எல்லாம் கூடும்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவராகயிருந்தாலும், அவர் கிருபையும் இரக்கமுமுள்ளவராகயிருக்கிறார். கர்த்தர் ஆயிரம் தலைமுறைகளுக்கு கிருபை செய்கிறவர். அவருடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் அளவே இல்லை. கர்த்தருடைய கிருபை ஒருபோதும் குறைந்துபோவதில்லை. கர்த்தர் தம்முடைய கிருபையை இங்கும் அங்குமாக, ஒரு சில இடங்களில் மாத்திரம் வெளிப்படுத்துகிறவரல்ல. அவர் ஆயிரம் தலைமுறைகளுக்கு கிருபை செய்கிறவர். அவர் ஆயிரக்கணக்கானோருக்கு கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கிறவர்.

கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. அவர் நீதிபரர். வழக்குகளை நியாயமாய் விசாரித்து நீதியாய்த் தீர்ப்பு சொல்லுகிறவர். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பில் ஒரு தப்பிதமும் இருக்காது. அவர் பிதாக்களுடைய அக்கிரமத்தை, அவர்களுடைய பின்னடியார் பிள்ளைகளின் மடியிலே சரிக்கட்டுகிறவர். கர்த்தர் மகத்துவமும் வல்லமையுமுள்ளவர். சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய மகிமையான நாமம்.

கர்த்தர் சர்வஆளுகையுள்ளவர். கர்த்தர் சர்வலோகத்தையும் சிருஷ்டித்து, எல்லா தேசங்களையும் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாய் ஆளுகை செய்கிறார். அவர் யோசனையில் பெரியவர். கர்த்தர் செயலிலே வல்லவர். அவர் மகத்துவமும் வல்லமையுமுள்ளவர். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சேனைகளின் கர்த்தர்.

கர்த்தர் சர்வஞானமுள்ளவர். அவருடைய யோசனையில் அவருடைய ஞானம் வெளிப்படுகிறது. கர்த்தர் யோசனையில் பெரியவராகவும், செயலிலே வல்லவராகவும் இருக்கிறார். கர்த்தர் ஒவ்வொரு காரியத்தையும் தம்முடைய தெய்வீக ஞானத்தினால் திட்டமிட்டு செய்து முடிக்கிறார். கர்த்தர் எதையும் அரைகுறையாக செய்கிறவரல்ல. அவர் பரிபூரணர். அவர் எல்லா காரியங்களையும் நேர்த்தியாயும், பரிபூரணமாயும் செய்து முடிக்கிறவர்.

கர்த்தருக்கு மறைவான காரியம் ஒன்றுமேயில்லை. அவருக்கு தெரியாத இரகசியம் என்று எதுவுமேயில்லை. கர்த்தருடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின்மேலும் நோக்கமாயிருக்கின்றன. அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதும், என்ன செய்கிறார்கள் என்பதும் கர்த்தருக்கு தெரியும். மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ மனுஷனுடைய இருதயத்தை ஆராய்ந்து பார்க்கிறார்.

கர்த்தர் ஒவ்வொரு மனுஷனுக்கும், அவனவனுடைய வழிக்கு தக்கதாகவும் கிரியைகளின் பலனுக்குத்தக்கதாகவும் பலனளிப்பார். இதற்காகவே கர்த்தருடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின்மேலும் நோக்கமாயிருக்கின்றன. மனுஷர் செய்கிற எல்லா நன்மையான காரியங்களும், எல்லா தீமையான காரியங்களும் கர்த்தருக்கு பிரத்தியட்சமாய்த் தெரியும். மனுஷருடைய எல்லா வழிகளையும், எல்லா நடைகளையும் கர்த்தர் அறிந்து வைத்திருக்கிறார்.

நம்முடைய வழிகளும், நம்முடைய கிரியைகளும் கர்த்தருக்கு தெரிந்திருந்தும், அவர் அதை கண்டும் காணாதவர் போல் சும்மாயிருப்பதில்லை. கர்த்தர் நீதியான நியாயாதிபதி. நம்முடைய வழிகளையும் கிரியைகளையும் நியாயந்தீர்ப்பதற்காக, கர்த்தருடைய கண்கள் நம்மைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. கர்த்தர் நம்முடைய ஒவ்வொரு கிரியைகளையும் நியாயந்தீர்ப்பார். நாம் கர்த்தரைத் தேடினால் அவரைக் கண்டுபிடிக்கலாம். கர்த்தரோ நம்மை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு இதுவரையிலும் அநேக அற்புதங்களையும், நன்மைகளையும், அடையாளங்களையும் செய்திருக்கிறார். இஸ்ரவேல் கர்த்தருடைய சேஷ்டபுத்திரன். கர்த்தருடைய ஜனத்தார் அவருக்கு பிரியமான இஸ்ரவேலாயிருக்கிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தர் அவர்களுடைய தேவனாயிருக்கிறார். அவர் இதுவரையிலும் தம்முடைய ஜனத்திற்கு செய்த நன்மைகளை, எரேமியா தன்னுடைய ஜெபத்தில் நன்றியோடு நினைவுகூருகிறார்.

கர்த்தர் இஸ்ரவேலிலும் மற்ற மனுஷருக்குள் இந்நாள் வரைக்கும் விளங்குகிற அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்தார். தேவரீர் தம்முடைய ஜனத்திற்கு எகிப்து தேசத்திலே அநேக அற்புதங்களைச் செய்து, தமக்கு இந்நாள் வரைக்கும் நிற்கும் கீர்த்தியை உண்டாக்கியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்து தேசத்திலே அடிமைப்பட்டிருந்தார்கள்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபண்ணினார். கர்த்தர் தங்களுக்கு செய்த இந்த நன்மையை நினைவுகூருவதற்காக, இஸ்ரவேல் ஜனங்கள் ஒவ்வொரு வருஷமும் பஸ்கா பண்டிகையை ஆசரிப்பது வழக்கம். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்து, தமக்கு நிலைத்து நிற்கிற நற்கீர்த்தியை உண்டுபண்ணியிருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்திற்கு செய்த நன்மைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் அவர்களுடைய அண்டை தேசத்தாரும் பார்க்கிறார்கள். அவர்களும் கர்த்தரை போற்றிப் புகழுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் மகிமைப்படுவதுபோல, புறஜாதி ஜனங்கள் மத்தியிலும் மகிமைப்படுகிறார். இஸ்ரவேலின் தேவன் மகிமையுள்ளவர். அவருடைய கீர்த்தி புறஜாதி ஜனங்கள் மத்தியிலும் பரம்பியிருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேலாகிய தமது ஜனத்தை அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், மகாபயங்கரத்தினாலும் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார். கர்த்தர் அவர்களுடைய பிதாக்களுக்கு கொடுப்பேன் என்று ஆணையிட்ட பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை, அவர்களுக்கு சுதந்தரமாகக் கொடுத்தார். கர்த்தரே எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் ஜனத்தாரை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தார்.

கானான் தேசத்தைப்பற்றிய வாக்குத்தத்தம் இஸ்ரவேல் ஜனத்தாரின் பிதாக்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் கானான் தேசத்தை அவர்களால் சுதந்தரிக்க முடியவில்லை. அவர்களுடைய பிள்ளைகள் கானான் தேசத்தை சுதந்தரித்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கானான் தேசத்திற்குள் பிரவேசித்து அதை சுதந்தரித்துக் கொண்டார்கள். எரேமியா கர்த்தர் செய்த நன்மைகளையெல்லாம் நினைவுகூருகிறார்.

எரேமியாவைப்போலவே விசுவாசிகளாகிய நாமும் கர்த்தர் செய்த நன்மைகளையெல்லாம் மறந்துவிடாமல் நினைவுகூரவேண்டும். கர்த்தர் நமக்கும், நம்முடைய சபைக்கும் அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்திருக்கிறார். தம்முடைய வல்லமையினால் நமக்கு சத்துருக்களிடமிருந்து விடுதலையைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் நம்மை தம்முடைய பிள்ளையாக அங்கீகரித்து, தம்மிடத்தில் நம்மைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார். தம்முடைய சபையை கர்த்தர் ஸ்தாபிக்கும்போது ஏராளமான அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்கிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிபண்ணுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் கானான் தேசத்தை சுதந்தரித்துக்கொண்டார்கள். அவர்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவேண்டும். அவருடைய நியாயப்பிரமாணத்தில் நடக்கவேண்டும். கர்த்தர் அவர்களுக்கு கற்பித்த எல்லாவற்றையும் செய்யவேண்டும். கானான் தேசத்தில் குடியேறிய கர்த்தருடைய பிள்ளைகள், அவருக்கு பிரியமான பிள்ளைகளாகவும், பிரயோஜனமான பிள்ளைகளாகவும் ஜீவிக்கவேண்டும்.

ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடாமலும், அவருடைய நியாயப்பிரமாணத்தில் நடவாமலும், செய்யும்படி கர்த்தர் அவர்களுக்குக் கற்பித்ததொன்றையும் செய்யாமலும் போனார்கள்; ஆதலால் இந்தத் தீங்கையெல்லாம் கர்த்தர் அவர்களுக்கு நேரிடப்பண்ணினார்.

கானான் தேசத்தில் குடியேறிய இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்காமல், அவருக்கு விரோதமாகப் பாவம் செய்ததுபோல, இப்போது யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்காமல், அவருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இதன் நிமித்தமாய் தேவனுடைய கோபம் அவர்கள்மேல் வந்திருக்கிறது. யூதாதேசத்தாரும், எருசலேம் நகரத்தாரும் இப்போது அநேக தீங்குகளை அனுபவிக்கிறார்கள். கர்த்தரே இந்தத் தீங்கையெல்லாம் அவர்களுக்கு நேரிடப்பண்ணியிருக்கிறார்.

கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் அவர்களுடைய பாவங்களின் நிமித்தமாய் எச்சரித்தார். அவர்கள் பாவத்தில் தொடர்ந்து நீடித்தால் எருசலேம் அழிந்துபோகும் என்றும், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பினால் அழிவுக்கு தப்பித்துக்கொள்ளலாம் என்றும் கர்த்தர் அவர்களுக்கு எச்சரிப்பாய்ச் சொன்னார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை.

கர்த்தர் யூதாதேசத்துக்கும், எருசலேம் நகரத்திற்கும் தம்முடைய நியாயத்தீர்ப்பைச் சொல்லுகிறார். "இதோ, கொத்தளங்கள் போடப்பட்டிருக்கிறது; நகரத்தைப் பிடிக்க வருகிறார்கள்; பட்டயத்தினிமித்தமும், பஞ்சத்தினிமித்தமும், கொள்ளை நோயினிமித்தமும் இந்த நகரம் அதற்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிற கல்தேயரின் கையிலே கொடுக்கப்படுகிறது" (எரே 32:24) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சொன்ன பிரகாரமாகவே எருசலேமுக்கு சம்பவிக்கிறது.

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக கொத்தளம்போட்டு, நகரத்தின் மதில் சுவர்களையும், நகரத்திலுள்ள கட்டிடங்களையும் இயந்திரங்களினால் இடிக்கிறார்கள். எருசலேம் நகரம் அழிந்துபோவதை கர்த்தரும் பார்த்துக்கொண்டிருக்கிறார். கர்த்தர் தம்முடைய நாமத்திற்கு மகிமையாக எருசலேமைத் தெரிந்துகொண்டார். ஆனால் அதே எருசலேம் நகரத்தை கல்தேயர்கள் இப்போது இடிக்கிறார்கள். நகரம் மண்மேடாய்ப்போயிற்று.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, எருசலேமுக்கு ஏற்பட்டிருக்கும் அழிவுக்காக அவரைக் குற்றம் சொல்லவில்லை. இந்த சூழ்நிலையில் கர்த்தர் என்ன செய்யவேண்டுமென்று எரேமியா அவருக்கு ஆலோசனை சொல்லவுமில்லை. எரேமியா எருசலேம் நகரத்தைப்பற்றியோ அல்லது யூதாதேசத்தைப்பற்றியோ ஒரு விண்ணப்பமும் பண்ணவில்லை. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் யூதாதேசத்திற்கும், எருசலேம் நகரத்திற்கும் நடைபெறுகிறது என்பதை எரேமியா புரிந்துகொள்கிறார். கர்த்தருடைய சித்தத்தை அங்கீகரிக்கிறார்.

எருசலேமுக்கு அழிவு வந்தாலும், கர்த்தர் அதைப் பார்க்கிறார். தாம் என்ன செய்யவேண்டும் என்பது கர்த்தருக்கு தெரியும். எருசலேமைப்போலவே நாமும் பல சமயங்களில் கஷ்டத்திலும், வேதனையிலும் இருப்போம். கர்த்தர் நம்முடைய கஷ்டங்களை பார்க்கவில்லை என்றும், கர்த்தர் நம்மை மறந்துவிட்டார் என்றும் நாம் நினைப்போம். ஆனாலும் கர்த்தர் ஒருபோதும் நம்மை மறக்கிறவரல்ல. கர்த்தர் நம்மையும் பார்க்கிறார். நம்முடைய கஷ்டங்களையும் பார்க்கிறார். நம்முடைய கஷ்டங்களிலிருந்து நம்மை எப்படி, எப்போது விடுவிக்கவேண்டும் என்பது கர்த்தருக்கு தெரியும். கர்த்தருக்கு சித்தமான காரியம், அவருக்கு சித்தமான வேளையில் நடைபெறும்.

எருசலேம் நகரம் கல்தேயரின் கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் கர்த்தர் இந்த வேளையில், "நீ உனக்கு ஒரு நிலத்தை கிரயமாகக் கொண்டு, அதற்கு சாட்சிகளை வை" (எரே 32:25) என்று எரேமியாவிடம் சொல்லுகிறார். எரேமியாவும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தர் சொன்ன நிலத்தை கிரயத்திற்கு வாங்குகிறார். அதற்கு சாட்சிகளை வைத்து பத்திரமும் எழுதுகிறார்.

நகரம் சத்துருவின் கையில் கொடுக்கப்படும்போது, நகரத்திற்குள்ளே இருக்கிறவர்கள் ஒருவரும் நிலத்தை கிரயத்திற்கு வாங்கமாட்டார்கள். எல்லோரும் உயிருக்கு போராடிக்கொண்டிருப்பார்கள். தேசத்தில் சமாதானம் இருக்கும்போதுதான் நிலத்தை வாங்குவதும் விற்பதும் நடைபெறும். ஆனால் இப்போதோ யூதாதேசத்தில் சமாதானமில்லை. எருசலேமில் ஆறுதல் இல்லை. எருசலேம் நகரம் கல்தேயரின் கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த சூழ்நிலையில் கர்த்தர் எரேமியாவிடம், "நீ உனக்கு ஒரு நிலத்தை கிரயமாகக் கொள்" என்று சொல்லுகிறார். கர்த்தருடைய சித்தமும் நோக்கமும் எரேமியாவுக்கு புரியவில்லை. ஆனாலும் எரேமியா கர்த்தருடைய வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிகிறார். கர்த்தர் சொன்ன பிரகாரம் தனக்கு ஒரு நிலத்தைக்கொண்டு, அதற்கு சாட்சிகளை வைத்து பத்திரத்தை எழுதுகிறார்.

கர்த்தர் நமக்கும் பல கட்டளைகளைக் கொடுக்கிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு நாம் உடனே கீழ்ப்படியவேண்டும். நம்முடைய சுயபுத்தியை நம்பி, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டுமா அல்லது கீழ்ப்படிய வேண்டாமா என்று யோசனைபண்ணிக்கொண்டிருக்கக்கூடாது. பலிசெலுத்துவதைவிடவும் கர்த்தருக்கு கீழ்ப்படிவதே உத்தமம். கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். கர்த்தருக்கு கீழ்ப்படிவதே ஞானமுள்ள காரியம். கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளைப் பற்றியும், அவருடைய நியமங்களைப்பற்றியும் நாம் அவரோடு வழக்காடக்கூடாது.

"நாளைக்கு உன் புத்திரன்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கட்டளையிட்ட இந்த சாட்சிகளும் கட்டளைகளும் நியாயங்களும் என்ன என்று உன்னிடத்தில் கேட்டால்; நீ உன் புத்திரனை நோக்கி: நாங்கள் எகிப்திலே பார்வோனுக்கு அடிமைகளாயிருந்தோம்; கர்த்தர் பலத்த கையினாலே எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்" என்று சொல்லவேண்டும் (உபா 6:20,21).

யூதாவின் பாவம்
எரே 32:26-35

எரே 32:26. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:

எரே 32:27. இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?

எரே 32:28. ஆதலால், இதோ, நான் இந்த நகரத்தைக் கல்தேயரின் கையிலும், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும் ஒப்புக்கொடுக்கிறேன், அவன் இதைப் பிடிப்பான் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 32:29. இந்த நகரத்துக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிற கல்தேயர் உட்பிரவேசித்து, இந்த நகரத்தைத் தீக்கொளுத்தி, இதைச் சுட்டெரிப்பார்கள்; எனக்குக் கோபமுண்டாக்கும்படி எந்த வீடுகளின்மேல் பாகாலுக்குத் தூபங்காட்டி, அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்த்தார்களோ, அந்த வீடுகளையும் சுட்டெரிப்பார்கள்.

எரே 32:30. இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் தங்கள் சிறுவயதுமுதல் என் பார்வைக்குப் பொல்லாப்பானதையே செய்து வந்தார்கள்; இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளின் செய்கையினாலே எனக்குக் கோபத்தையே உண்டாக்கி வந்தார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 32:31. அவர்கள் இந்த நகரத்தை கட்டின நாள்முதற் கொண்டு, இந்நாள்வரைக்கும் அது எனக்குக் கோபமுண்டாகவும், எனக்கு உக்கிரமுண்டாகவும், நான் அதை என் முகத்தை விட்டு அகற்றுகிறதற்கு ஏதுவாகவும் இருந்தது.

எரே 32:32. எனக்குக் கோபமுண்டாகும்படிக்கு இஸ்ரவேல் புத்திரரும், யூதா புத்திரரும், அவர்கள் ராஜாக்களும், அவர்கள் பிரபுக்களும், அவர்கள் ஆசாரியர்களும், அவர்கள் தீர்க்கதரிசிகளும், யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் செய்த எல்லாப் பொல்லாப்பினிமித்தமும் இப்படி நடக்கும்.

எரே 32:33. முகத்தையல்ல, முதுகை எனக்குக் காட்டினார்கள்; நான் ஏற்கனவே அவர்களுக்கு உபதேசித்தும் அவர்கள் புத்தியை ஏற்றுக்கொள்ளச் செவிகொடாமற்போனார்கள்.

எரே 32:34. அவர்கள் என் நாமம் தரிக்கப்பட்ட ஆலயத்தைத் தீட்டுப்படுத்தும்படிக்கு, தங்கள் அருவருப்புகளை அதிலே வைத்தார்கள்.

எரே 32:35. அவர்கள் மோளேகுக்கென்று தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணும்படி இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கிலிருக்கிற பாகாலின் மேடைகளைக் கட்டினார்கள்; யூதாவைப் பாவஞ்செய்யப்பண்ணுவதற்கு அவர்கள் இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யவேண்டுமென்று நான் அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அது என் மனதிலே தோன்றினதுமில்லை.

எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் அவருடைய ஜெபத்திற்கு உடனே பதிலும் கொடுக்கிறார். எரேமியாவின் மனது குழப்பத்திலிருக்கிறது. கர்த்தருடைய வார்த்தை எரேமியாவின் குழப்பத்தை நீக்கி அவருக்கு ஆறுதலையும், சமாதானத்தையும், தெளிந்த சிந்தனையையும் கொடுக்கிறது. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் கோபமாயிருக்கிறார். தேவனுடைய கோபத்திற்கு காரணமுண்டு.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள். இதனால் தேவனுடைய கோபம் அவர்கள்மேல் வந்திருக்கிறது. ஆனாலும் கர்த்தர் இனிமேல் வரப்போகிற அவர்களுடைய பின்சந்ததியாருக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கிறார். எரேமியா கர்த்தரைத் துதித்து பாடவிரும்புகிறார். கர்த்தருடைய இரக்கத்தை நினைத்து பாடுவதா அல்லது அவருடைய நியாயத்தீர்ப்பை நினைத்து பாடுவதா என்று எரேமியாவுக்குத் தெரியவில்லை. கர்த்தருடைய இரக்கத்தையும் நியாயத்தீர்ப்பையும் ஒன்றாய் இணைத்து, எப்படி பாடுவது என்பதும் எரேமியாவுக்கு புரியவில்லை.

கர்த்தர் எரேமியாவுக்கு தம்முடைய இரக்கத்தைப்பற்றியும், நியாயத்தீர்ப்பைப் பற்றியும் உபதேசம்பண்ணுகிறார். கர்த்தர் எரேமியாவிடம் ஆனதோத் ஊரிலுள்ள ஒரு நிலத்தை கிரயத்திற்கு வாங்குமாறு சொன்னார். அப்போது கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். எரேமியா கர்த்தர் சொன்ன வார்த்தையைக் கேட்டு, கல்தேயர்கள் முற்றிக்கையை அகற்றிவிட்டு தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போய்விடுவார்கள் என்று எரேமியா எதிர்பார்க்கிறார்.

ஆனால் கல்தேயர்கள் தங்களுடைய முற்றிக்கையை தளர்த்தவில்லை. கல்தேயரின் முற்றிக்கை எருசலேமுக்கு விரோதமாய் பலமாயிருந்தது. கல்தேயரின் முற்றிக்கையை நீக்கிப்போட கர்த்தர் ஒரு கிரியையும் நடப்பிக்கவில்லை. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எருசலேமின்மீது வந்திருக்கிறது. எருசலேம் அழிந்துபோகும் என்பது கர்த்தருடைய வார்த்தை. எரேமியா ஆனதோத் ஊரிலே தனக்கு ஒரு நிலத்தை கிரயத்திற்கு வாங்கினாலும், கல்தேயர்கள் எருசலேமை அழித்துப்போடுவார்கள். எருசலேம் மண்மேடாய்ப்போகும். அப்போது ஆனதோத் ஊரிலே எரேமியா வாங்கின நிலமும் மண்மேடாய்ப்போகும். அந்த நிலமும் பாழாய்ப்போகும்.

எருசலேமுக்கு இப்படிப்பட்ட பிரச்சனை இருக்கும்போது, கர்த்தர் தன்னை ஏன் ஒரு நிலத்தை கிரயத்திற்கு வாங்கச்சொன்னார் என்பது எரேமியாவுக்குப் புரியவில்லை. கர்த்தர் யூதாவின் மனுஷர்மேலும், எருசலேமின் குடிகள்மேலும் இப்போது கோபமாயிருந்தாலும், அவர் அவர்கள்மீது கிருபையும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆசீர்வதிக்க விரும்புகிறார். அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போவார்கள். அவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தபின்பு, கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவர்கள்மீது விசேஷித்த வழியில் வந்து தங்கும்.

யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வரும்போது, அவர்கள் குடியேறுவதற்கு அவர்களுக்கு நிலம் இருக்கும். அவர்கள் தங்கள் சொந்த நிலத்தில் மறுபடியும் குடியேறுவார்கள். தங்கள் சொந்த நிலத்தில் பயிரிடுவார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிற ஜனங்களுக்கு, கர்த்தர் கொடுக்கிற ஆசீர்வாதங்கள், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு அடையாளமாயிருக்கிறது. சீயோனுக்கு திரும்பி வருகிறவர்களை கர்த்தர் அதிகமாய் ஆசீர்வதிப்பார். விளைச்சல் நிலங்களையும், திராட்சத்தோட்டங்களையும்விட கர்த்தருடைய வார்த்தையே நமக்கு மெய்யான ஆசீர்வாதத்தைத் தரும்.

கர்த்தர் எரேமியாவுக்கு தம்முடைய வார்த்தைகளைக் கொடுக்கிறார். யூதாமனுஷரின் பாவங்களினிமித்தமாய், கர்த்தர் முதலாவதாக அவர்களை எச்சரிக்கிறார். அதன்பின்பு கர்த்தர் அவர்கள்மீது வைத்திருக்கிற அன்பின் நிமித்தமாய், அவர்களுக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களைக் கொடுக்கிறார். பழைய ஏற்பாட்டில், கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளும், அவருடைய ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களின் வார்த்தைகளும் பல சம்பவங்களில் கலந்து சொல்லப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய பிள்ளைகள், அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி சீராய் நடப்பதற்கு, கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளும் தேவைப்படுகிறது. அவருடைய ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களின் வார்த்தைகளும் தேவைப்படுகிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளையும், அவருடைய ஆறுதலின் வார்த்தைகளையும் பாரபட்சமில்லாமல் தியானிக்கவேண்டும். அதுவே நமக்கு மெய்யான ஆசீர்வாதம்.

எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியபோது, கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று. யூதாவும் எருசலேமும் அழிந்துபோகும் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் மாம்சமான யாவருக்கும் தேவனானவர். அவரால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமேயில்லை. கர்த்தர் நித்தியமானவர். அவரே ஆதியும் அந்தமுமானவர் (எரே 32:27).

கர்த்தர் எருசலேமை கல்தேயரின் கையில் ஒப்புக்கொடுப்பார். பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமைப் பிடிப்பான். அதை இடிப்பான். அதை அழிப்பான். "இதோ, நான் இந்த நகரத்தைக் கல்தேயரின் கையிலும், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும் ஒப்புக்கொடுக்கிறேன், அவன் இதைப் பிடிப்பான்" (எரே 32:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர் எருசலேம் நகரத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். அவர்கள் எருசலேமுக்குள் உட்பிரவேசித்து, எருசலேமை தீக்கொளுத்துவார்கள். அதைச் சுட்டெரிப்பார்கள் (எரே 32:29). எருசலேமில் கர்த்தருடைய ஆலயமும், யூதாராஜாவின் அரமனையும் இருக்கிறது. கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை சுட்டெரிக்கும்போது, அவர்கள் ராஜாவின் அரமனையையும், கர்த்தருடைய ஆலயத்தையும் சுட்டெரித்துப்போடுவார்கள். ஒன்றும் அழிவுக்குத் தப்பிக்காது. எல்லாம் அழிந்துபோகும். எருசலேம் நகரம் தீக்கொளுத்தப்படும்.

கர்த்தருடைய கோபம் யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் வந்திருக்கிறது. கர்த்தர் எருசலேம் நகரத்தை அழிப்பதற்கு ஒரு காரணமுண்டு. அவர்களுடைய பாவங்களே அவர்களுடைய அழிவுக்கு காரணம். எருசலேம் நகரத்தார் தங்கள் வீடுகளின்மேல் பாகாலுக்கு தூபங்காட்டினார்கள். அங்கே அந்நிய தேவர்களுக்கு பானபலிகளை வார்த்தார்கள். இதனால் கர்த்தருக்கு கோபமுண்டாயிற்று. எந்த வீடுகளின்மேல் விக்கிரகாராதனை நடைபெற்றதோ, அந்த வீடுகளை கர்த்தர் அழிவுக்கு ஒப்புக்கொடுக்கிறார். கல்தேயர்கள் அந்த வீடுகளை அக்கினியால் சுட்டெரிப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 32:29).

கர்த்தருடைய ஜனத்தார் கர்த்தரை ஆராதிக்கவேண்டும். அவருக்கு பிரியமானவர்களாயும், பிரயோஜனமுள்ளவர்களாயும் இருக்க வேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு கோபமுண்டாக்கும் ஜனங்களாயிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களையும், யூதாபுத்திரரின் பாவங்களையும் இங்கு தெளிவுபடுத்துகிறார்.

"இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் தங்கள் சிறுவயதுமுதல் என் பார்வைக்குப் பொல்லாப்பானதையே செய்துவந்தார்கள்; இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளின் செய்கையினாலே எனக்குக் கோபத்தையே உண்டாக்கி வந்தார்கள்" (எரே 32:30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தை ஒரு தேசமாக உருவாக்கினார். அவர்கள் அக்காலத்திலிருந்தே கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்து வந்தார்கள். தங்களுடைய பாவமான செய்கைகளினால் கர்த்தருக்கு கோபத்தை உண்டாக்கினார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை வனாந்தரத்திலே வழிநடத்தினார். கர்த்தருடைய பிரசன்னம் அவர்கள் மத்தியில் அக்கினி ஸ்தம்பமாகவும், மேகஸ்தம்பமாகவும் இருந்தது. ஆனால் அவர்களோ கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்து, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள்.

எருசலேம் கர்த்தருக்கு பரிசுத்தமான நகரம். ஆனால் எருசலேமின் குடிகளோ, எருசலேம் நகரத்தை கட்டின நாள்முதற்கொண்டு, இந்நாள் வரைக்கும் கர்த்தருக்கு கோபமுண்டாக்குகிறார்கள். எருசலேம் நகரம் கர்த்தருக்கு பரிசுத்தமான நகரமாகயிருந்தாலும், அது கர்த்தருக்கு உக்கிரமுண்டாக்குகிறது. இதனால் கர்த்தர் தம்முடைய முகத்தை, எருசலேம் நகரத்தைவிட்டு அகற்றிவிடுகிறார். கர்த்தர் எருசலேமைவிட்டு விலகிப்போவதற்கு, அவர்களுடைய பாவங்களே காரணமாயிற்று.

யூதாதேசத்தில் அங்கு ஒருவரும், இங்கு ஒருவருமாக, ஒரு சிலர் மாத்திரம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள் என்று சொல்ல முடியவில்லை. எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரும், யூதாபுத்திரரும், ஏகமாக கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவருக்கு கோபமுண்டாக்குகிறார்கள். தேசம் முழுவதிலும் பாவம் நிரம்பியிருக்கிறது. இதனால் யூதாதேசம் முழுவதற்கும் அழிவு வருகிறது.

இஸ்ரவேல் புத்திரர் ஏற்கெனவே எருசலேமுக்கு விரோதமாகவும், தேவாலயத்திற்கு விரோதமாகவும் கலகம் பண்ணினார்கள். அவர்கள் சமாரியாவிலே கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டி, அங்கே கர்த்தரையும், பொன்கன்றுக்குட்டிகளையும் ஆராதனை செய்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு கோபமுண்டாக்கினார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மாத்திரமல்ல, எருசலேமிலிருக்கிற யூதாவின் புத்திரரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவருக்கு கோபமுண்டாக்குகிறார்கள். தம்முடைய ஜனம் மனந்திரும்பவேண்டுமென்று கர்த்தர் மறுபடியும் மறுபடியுமாக அவர்களுக்கு சொல்லுகிறார். ஆனால் அவர்களோ கர்த்தருக்கு தங்கள் முகத்தைக் காட்டாமல், தங்கள் முதுகைக் காட்டுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரும், யூதாபுத்திரரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து அவருக்கு கோபமுண்டாக்குகிறார்கள். ஜனங்களைப்போலவே, அவர்களுடைய ராஜாக்களும் அவர்களுடைய பிரபுக்களும், அவர்களுடைய ஆசாரியர்களும், அவர்களுடைய தீர்க்கதரிசிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாக ஏராளமான பொல்லாப்புகளைச் செய்கிறார்கள். தங்கள் பாவங்களினாலும் அக்கிரமங்களினாலும் கர்த்தருக்கு கோபமுண்டாக்குகிறார்கள்.

கர்த்தர் அவர்களுக்கு ஏற்கெனவே தம்முடைய சத்தியத்தை உபதேசித்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தர் கொடுக்கும் புத்தியை ஏற்றுக்கொள்ள செவிகொடாமல் போயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு சத்தியங்களை உபதேசம் பண்ணுகிறார். எருசலேமிலுள்ள ஜனங்களுக்கு தேவாலயத்தில் கர்த்தருடைய வார்த்தைகள் உபதேசம்பண்ணப்படுகிறது. ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. உபதேசங்களெல்லாம் வீணாய்ப்போயிற்று.

கர்த்தருடைய சத்திய வார்த்தை யூதாவின் மனுஷருக்கு அவருடைய தேவாலயத்தில் பிரசங்கிக்கப்படுகிறது. ஆனால் அவர்களோ கர்த்தருடைய நாமம் தரிக்கப்பட்ட ஆலயத்தை தீட்டுப்படுத்தும்படிக்கு, தங்கள் அருவருப்புகளை அதிலே வைக்கிறார்கள். கர்த்தருடைய ஆலயத்தில் விக்கிரகங்களைக் கொண்டு வந்து வைத்து, அதற்கு தூபங்காட்டுகிறார்கள்.

கர்த்தர் கற்பித்த வார்த்தைகளுக்கு இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்ப்படியவில்லை. அதே வேளையில், கர்த்தர் கற்பிக்காத காரியங்களை அவர்கள் செய்கிறார்கள். "அவர்கள் மோளேகுக்கென்று தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்திகளையும் தீக்கடக்கப்பண்ணும்படி இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கிலிருக்கிற பாகாலின் மேடைகளைக் கட்டினார்கள்" (எரே 32:35).

கர்த்தர் யூதாமனுஷருடைய பாவங்களை நினைத்து ஆச்சரியப்படுகிறார். அதே வேளையில் கர்த்தர் மனவேதனைப்படவும் செய்கிறார். "யூதாவைப் பாவஞ்செய்யப்பண்ணுவதற்கு அவர்கள் இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யவேண்டுமென்று நான் அவர்களுக்குக் கற்பித்ததுமில்லை, அது என் மனதிலே தோன்றினதுமில்லை" (எரே 32:35) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாதேசம் முழுவதிலும் விக்கிரகாராதனை நிரம்பியிருக்கிறது. எருசலேமின் அக்கிரமம் மிகுதியாயிருக்கிறது. எருசலேமின் குடிகள் தங்கள் வீடுகளை விக்கிரகங்களினால் தீட்டுப்படுத்தியதுபோல, கர்த்தருடைய ஆலயத்தையும் தீட்டுப்படுத்துகிறார்கள். விக்கிரகங்களை தேவாலயத்திற்கே கொண்டு வந்து வைக்கிறார்கள். கர்த்தருடைய நாமம் தரிக்கப்பட்ட ஆலயத்தில் விக்கிரகாராதனை நடைபெறுகிறது.

எருசலேம் திரும்பக் கட்டப்படும் எரே 32:36-44

எரே 32:36. இப்படியிருக்கையில் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும், பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டுப்போம் என்று நீங்கள் சொல்லுகிற இந்த நகரத்தைக் குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்:

எரே 32:37. இதோ, என் சினத்திலும், என் கோபத்திலும், என் மகா உக்கிரத்திலும், நான் அவர்களைத் துரத்தின எல்லா தேசங்களிலுமிருந்து அவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களை இந்த ஸ்தலத்துக்குத் திரும்பிவரவும் இதிலே சுகமாய்த் தங்கியிருக்கவும் பண்ணுவேன்.

எரே 32:38. அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.

எரே 32:39. அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னடியாருக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும்படிக்கு, நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு,

எரே 32:40. அவர்களுக்கு நன்மைசெய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்றுபோகாதபடிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து,

எரே 32:41. அவர்களுக்கு நன்மைசெய்யும்படி அவர்கள்மேல் சந்தோஷமாயிருந்து, என் முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் அவர்களை இந்த தேசத்திலே நிச்சயமாய் நாட்டுவேன்.

எரே 32:42. நான் இந்த ஜனத்தின்மேல் இந்தப் பெரிய தீங்கையெல்லாம் வரப்பண்ணினதுபோல, அவர்களைக் குறித்துச் சொன்ன எல்லா நன்மையையும் அவர்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 32:43. மனுஷனும் மிருகமுமில்லாதபடிக்குப் பாழாய்ப் போயிற்று என்றும், கல்தேயரின் கையிலே ஒப்புக்கொடுக்கப்பட்டுப் போயிற்று என்றும், நீங்கள் சொல்லுகிற இந்த தேசத்திலே நிலங்கள் கொள்ளப்படும்.

எரே 32:44. பென்யமீன் தேசத்திலும், எருசலேமின் சுற்றுப்புறங்களிலும், யூதாவின் பட்டணங்களிலும், மலைக்காடான பட்டணங்களிலும், பள்ளத்தாக்கான பட்டணங்களிலும், தென்திசைப் பட்டணங்களிலும், நிலங்கள் விலைக்கிரயமாகக் கொள்ளப்படுகிற பத்திரங்களில் கையெழுத்துப் போடுகிறதும் முத்திரையிடுகிறதும் அதற்குச் சாட்சிவைக்கிறதும் உண்டாயிருக்கும்; அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

கர்த்தர் யூதாவையும் எருசலேமையும் திரும்பக் கட்டப்போவதாக வாக்குப்பண்ணுகிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்தும்போது, தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் நினைவுகூருகிறார். கர்த்தர் ஒரு நாளை நியமித்திருக்கிறார். கர்த்தர் நியமித்த அந்தநாள் வரும்போது, அவர் சீயோனுக்கு இரக்கம் காண்பிப்பார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் நீண்டகாலமாக வேதனைகளையும் உபத்திரவங்களையும் அனுபவித்து வருகிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு சீக்கிரத்தில் வரப்போகிறது. ஆனால் யூதாவின் மனுஷரோ நியாயத்தீர்ப்புக்கு பயப்படாமலிருக்கிறார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வரும்போது, நியாயத்தீர்ப்புக்கு தப்பித்துக்கொள்ள அவர்களுக்கு ஒரு வழியும் இருக்காது. வரப்போகும் அழிவுக்கு தப்பிக்க அவர்களுக்கு நம்பிக்கையிருக்காது.

எருசலேமின் குடிகள் தங்கள் நகரத்தைப்பற்றிச் சொல்லும்போது, "பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் கொள்ளைநோயாலும் பாபிலோன் ராஜாவின் கையில் எருசலேம் நகரம் ஒப்புக்கொடுக்கப்பட்டுப்போகும்" *(எரே 32:36)* என்று சொல்லுகிறார்கள். யூதாதேசத்தின் நிலங்களைப்பற்றி அவர்கள் சொல்லும்போது, "மனுஷனும் மிருகமும் இல்லாதபடிக்கு பாழாய்ப்போயிற்று என்றும், அது கல்தேயரின் கையிலே ஒப்புக்கொடுக்கப்பட்டுப்போயிற்று" *(எரே 32:43)* என்றும் சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் வரப்போகிற அழிவுக்கு தப்பிக்க வழியில்லை. இந்த வேதனையிலிருந்தும், உபத்திரவத்திலிருந்தும் அவர்களை அவர்களால் மீட்டுக்கொள்ளவும் முடியவில்லை. கர்த்தர் எருசலேம் நகரத்தை கல்தேயரின் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

கர்த்தருடைய கிருபையும் இரக்கமுமே அவர்களுக்கு நம்பிக்கையைத் தருகிறது. கர்த்தருடைய கிருபையைத் தவிர அவர்களுக்கு வேறு நம்பிக்கை எதுவுமில்லை. அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு உட்படுத்தப்படுவார்கள். அவர்களுடைய பிரேதங்கள் அந்நிய தேசத்திலே விழும். அவர்கள் சிறையிருப்பிலிருக்கிற தேசத்திலேயே செத்துப்போவார்கள். ஆனாலும் அவர்களுடைய பிள்ளைகள், யூதாதேசத்தை மறுபடியும் காண்பார்கள். எருசலேம் நகரத்தில் கர்த்தர் காண்பிக்கிற நன்மைகளை அவர்களுடைய பிள்ளைகள் அனுபவிப்பார்கள்.

யூதாவின் மனுஷருடைய பிள்ளைகளும், எருசலேம் குடிகளின் பிள்ளைகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். அவர்கள் மறுபடியும் தங்கள் சொந்த தேசத்தில் வந்து குடியேறுவார்கள். இந்த விடுதலை அவர்களுடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ உண்டாவதில்லை. இது கர்த்தருடைய கிருபையினால் உண்டாகும்.

"இதோ, என் சினத்திலும், என் கோபத்திலும், என் மகா உக்கிரத்திலும், நான் அவர்களைத் துரத்தின எல்லா தேசங்களிலுமிருந்து அவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களை இந்த ஸ்தலத்துக்குத் திரும்பிவரவும் இதிலே சுகமாய்த் தங்கியிருக்கவும் பண்ணுவேன்" *(எரே 32:37)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தரே யூதாவின் மனுஷரை தம்முடைய கோபத்தினால் அந்நிய தேசங்களுக்கு துரத்தினார். அவர்கள் பல தேசங்கள் மத்தியிலே சிதறிப்போனார்கள். அவர்கள் தங்கள் சத்துருக்களின் கைகளில் விழுந்தார்கள். அவர்களுடைய சத்துருக்களும் யூதாவின் மனுஷரை ஒன்றுசேரவிடாமல், அவர்களை சிதறிப்போகப்பண்ணினார்கள். யூதாவின் மனுஷர் மத்தியிலே ஐக்கியமுண்டாவதற்கு வாய்ப்பில்லாமல் போயிற்று.

யூதாவின் மனுஷர் பல தேசங்களுக்கு சிதறிப்போன சம்பவத்திலும், அவர்கள் பல தேசங்களிலிருந்து தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்த சம்பவத்திலும் கர்த்தருடைய பலத்த கரம் இருக்கிறது. கர்த்தரே அவர்களை, தம்முடைய கோபத்தினால், பல தேசங்களுக்கு சிதறிப்போகப்பண்ணினார். கர்த்தரே அவர்களை, தம்முடைய கிருபையினால், பல தேசங்களிலிருந்து அவர்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்பவும் அழைத்து வருகிறார்.

"உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார். உன்னுடையவர்கள் வானத்தின் கடையான திசைமட்டும் துரத்துண்டிருந்தாலும், உன் தேவனாகிய கர்த்தர் அங்கே இருக்கிற உன்னைக் கூட்டி, அங்கேயிருந்து உன்னைக் கொண்டுவந்து, உன் பிதாக்கள் சுதந்தரித்திருந்த தேசத்தை நீ சுதந்தரிக்கும்படிக்கு, உன் தேவனாகிய கர்த்தர் அதில் உன்னைச் சேர்த்து, உனக்கு நன்மைசெய்து, உன் பிதாக்களைப்பார்க்கிலும் உன்னைப் பெருகப்பண்ணுவார்" (உபா *30:3-5*).

கர்த்தர் தம்முடைய இரக்கத்தையும் கிருபையையும் யூதாவின் மனுஷருக்கு வெளிப்படுத்துகிறார். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புகிறார்கள். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படுகிறது. அவர்கள் தேவனிடத்திற்கு திரும்பி வருகிறார்கள். அவர்களுடைய சொந்த மனச்சாட்சிகளோ,அல்லது வெளியேயிருக்கிற சத்துருக்களோ அவர்களை அச்சுறுத்தவில்லை. கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவர்களுக்கு போதுமானதாயிருக்கிறது.

"அவர்களுக்கு நன்மைசெய்யும்படி அவர்கள்மேல் சந்தோஷமாயிருந்து, என்முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் அவர்களை இந்த தேசத்திலே நிச்சயமாய் நாட்டுவேன்" (எரே *32:41*) என்று கர்த்தர் சொல்லுகிறார். எருசலேமின் குடிகளுக்கு, எருசலேம் நகரத்திலே கர்த்தருடைய பரிசுத்தமான பாதுகாப்பு கிடைக்கும். அவர்கள் மறுபடியுமாய் யூதாதேசத்திலே நாட்டப்பட்டிருப்பார்கள். அவர்கள் வேர்பற்றி செழித்திருப்பார்கள். கர்த்தர் அவர்களை யூதா தேசத்திலே நிச்சயமாய் நாட்டுவார். அவர்கள் அங்கே உறுதியாய் நிலைத்திருப்பார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரோடு ஏற்கெனவே உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையில் உண்மையுள்ளவர். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தர் பண்ணிய உடன்படிக்கையை மீறிவிடுகிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தோடு, மறுபடியும் புதிய உடன்படிக்கை பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். இந்த உடன்படிக்கை அவருடைய கிருபையின் உடன்படிக்கையாயிருக்கும். கர்த்தர் பழைய உடன்படிக்கையை புதுப்பிக்கிறார். புதிய உடன்படிக்கையில், கர்த்தருடைய ஜனத்திற்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் ஏராளமாய் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய புதிய உடன்படிக்கை, "நித்திய உடன்படிக்கை" என்று அழைக்கப்படுகிறது.

கர்த்தருடைய புதிய உடன்படிக்கையின்படி, இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஜனமாயிருப்பார்கள். கர்த்தர் அவர்களுடைய தேவனாயிருப்பார்.

"அவர்கள் தங்களுக்கும், தங்கள் பின்னடியாருக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மையுண்டாகும்படி சகல நாட்களிலும் எனக்குப் பயப்படும்படிக்கு,நான் அவர்களுக்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிட்டு,அவர்களுக்கு நன்மைசெய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்றுபோகாதபடிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைப்பேன்" (எரே *32:39,40*) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய புதிய உடன்படிக்கையின் விளைவுகளெல்லாம், அவர்களுக்கு நித்தியகாலமாய் நிலைத்திருக்கும். கர்த்தரும் தம்முடைய புதிய உடன்படிக்கைக்கு நித்திய காலமாய் உண்மையுள்ளவராயிருப்பார். கர்த்தருடைய புதிய உடன்படிக்கை மாம்சப்பிரகாரமான இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு மாத்திரம் என்று மட்டுப்படுத்தப்படாமல், கர்த்தரை விசுவாசிக்கிற எல்லா விசுவாசிகளுக்கும் பொதுவான நித்திய உடன்படிக்கையாயிருக்கும். விசுவாசிகளெல்லோரும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறார்கள்.

விசுவாசிகள் கர்த்தருடைய சமுகத்தில் வரும்போது, தங்களுடைய விண்ணப்பங்களையும் வேண்டுதல்களையும் கர்த்தரிடத்தில் தாராளமாய்ச் சொல்லலாம். விசுவாசிகள் கர்த்தரோடு உரிமையோடு பேசலாம். ஏனெனில் விசுவாசிகளெல்லோருமே கர்த்தருடைய ஜனமாயிருக்கிறார்கள். கர்த்தர் விசுவாசிகளுடைய தேவனாயிருக்கிறார். கர்த்தருக்கும், அவரை விசுவாசிக்கிற அவருடைய ஜனத்திற்கும் இடையே நெருங்கிய ஐக்கியமுண்டாயிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் இருதயத்தில் கிரியை நடப்பிக்கிறார். தமக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்தில் வைக்கிறார். விசுவாசிகள் கர்த்தருடைய பிள்ளைகளாயிருப்பதற்கு தேவையான எல்லா தகுதிகளையும், நற்கிரியைகளையும், நல்ல சுபாவங்களையும், நல்ல எண்ணங்களையும் கர்த்தர் அவர்களுடைய இருதயத்திலே வைக்கிறார். அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாய் உருவாக்குகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஒரே இருதயத்தையும் ஒரே வழியையும் கட்டளையிடுகிறார். கர்த்தர் அவர்களுடைய இருதயத்தில் தமக்குப் பயப்படும் பயத்தை வைக்கிறார். அவர்கள் தங்களுக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும் நன்மை உண்டாகும்படி சகல நாட்களிலும் கர்த்தருக்கு பயப்படுவார்கள்.

கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறவர்களின் இருதயத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும் கனம்பண்ணவேண்டும். கர்த்தருடைய அதிகாரத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். கர்த்தருடைய ஜனம் தங்கள் முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும் கர்த்தரை சேவிக்கவேண்டும்.

கர்த்தருக்கு விரோதமாய் தாங்கள் பாவம் செய்தால், கர்த்தருடைய கோபம் தங்கள்மீது வரும் என்னும் பயம் அவர்களுடைய இருதயத்தில் நிரம்பியிருக்க வேண்டும். கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். ஆகையினால் கர்த்தர் தம்முடைய ஜனத்தின் இருதயத்தில் தமக்குப் பயப்படும் பயத்தை வைக்கிறார். கர்த்தருக்கு பயப்படும் பயம் அவர்களுடைய இருதயத்தில் கிரியை நடப்பிக்கும். இந்த பரிசுத்தமான பயமே, அவர்களுடைய பேச்சுக்களையும், சிந்தனைகளையும், கிரியைகளையும் ஆளுகை செய்யும்.

ஆசிரியர்கள் நமக்கு நல்ல பாடங்களைக் கற்றுக்கொடுப்பார்கள். நம்முடைய மூளையில் அறிவை வைப்பார்கள். கர்த்தரால் மாத்திரமே நம்முடைய இருதயத்தில், அவருக்கு பயப்படும் பயத்தை வைக்க முடியும். நம்முடைய இருதயத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்கும்போது, அந்த பயம் நம்மை கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிய வைக்கும். கர்த்தருடைய சித்தத்தை செய்வதற்கு அந்த பயம் நம்மை வழிநடத்தும்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தை தம்முடைய கிருபையினால் பாதுகாக்கிறார். கர்த்தர் தமக்கும் தம்முடைய ஜனத்திற்கும் நித்திய உடன்படிக்கையை பண்ணியிருக்கிறார். அவர்கள் கர்த்தரைவிட்டு அகன்றுபோக மாட்டார்கள். கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போகமாட்டார். கர்த்தர் ஒருபோதும் அவர்களை கைவிடமாட்டார். அவர்களுக்கு நன்மையான ஈவுகளைக் கொடுப்பார்.

கர்த்தருடைய கிருபை அவருக்கு பயப்படுகிறவர்கள்மீது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். கர்த்தர் சில சமயங்களில், சிறிதுகாலம், தம்முடைய ஜனத்தைவிட்டு விலகிப்போனதுபோல இருக்கும். ஆனாலும் அவர் தம்முடைய காருணியத்தினால், தம்முடைய ஜனங்களை தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வார்.

"அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்" (ஏசா 54:8).

கர்த்தர் நம்மைவிட்டு விலகிப்போய்விடுவாரோ என்று நாம் பயப்படவேண்டிய அவசியமில்லை. நம்மிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் மாத்திரமே இருக்கவேண்டும். கர்த்தர் நம்மைவிட்டு விலகிப்போய்விடுவாரோ என்னும் பயமோ அல்லது கர்த்தர் நம்மை கைவிட்டுவிடுவாரோ என்னும் பயமோ நம்மிடத்தில் இருக்கக்கூடாது.

"உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமைகொள்ள விடாதே; நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு. நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது" (நீதி 23:17,18).

கர்த்தர் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் ஆசீர்வதிக்கும்போது, அவர்களுடைய பின்னடியாரையும், அவர்களுடைய பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பதாக வாக்குப்பண்ணுகிறார். யூதாவின் மனுஷருக்கு கர்த்தர் மூலமாய் நன்மை உண்டாவதுபோல, அவர்களுடைய பிள்ளைகளுக்கும் கர்த்தர் மூலமாய் நன்மை உண்டாகும்.

இஸ்ரவேல் வம்சத்தாரும் யூதாவம்சத்தாரும் கர்த்தரைவிட்டு விலகிப்போனதினால் அவர்களுக்கும் தீமை உண்டாயிற்று. அவர்களுடைய பிள்ளைகளுக்கும் தீமை உண்டாயிற்று. இப்போது இஸ்ரவேல் வம்சத்தாரும் யூதாவம்சத்தாரும் கர்த்தரிடத்தில் திரும்பி வந்திருக்கிறார்கள். இதனால் அவர்களுக்கும் நன்மை உண்டாகும், அவர்களுடைய பிள்ளைகளுக்கும் நன்மை உண்டாகும்.

நம்முடைய குடும்பத்தில் கர்த்தர் நம்முடைய பிள்ளைகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்றால், அவர்களை கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் வளர்க்கவேண்டும். அவர்களும் கர்த்தரை சேவிப்பதற்கு அவர்களை வழிநடத்த வேண்டும். நம்முடைய குடும்பத்தில் கர்த்தரை பயபக்தியோடு ஆராதிக்கிற ஆராதனை நடைபெறவேண்டும். நம்முடைய குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருடைய இருதயத்திலும் கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்கவேண்டும். இதுவே நம்முடைய குடும்பத்திற்கு மெய்யான ஆசீர்வாதம்.

"நான் இந்த ஜனத்தின்மேல் இந்தப் பெரிய தீங்கையெல்லாம் வரப்பண்ணினது போல, அவர்களைக்குறித்துச் சொன்ன எல்லா நன்மையையும் அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்" (எரே 32:42) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் இஸ்ரவேல் ஜனத்தின்மீது பெரிய தீங்குகள் வந்தது. கர்த்தருடைய கிருபையுள்ள இரக்கத்தினால் அவர்கள்மீது எல்லா நன்மைகளும் வரும். கர்த்தருடைய கிருபையும் இரக்கமுமே அவருடைய மகிமையாயிருக்கிறது.

கர்த்தர் யூதாவின் மனுஷரோடும், எருசலேமின் குடிகளோடும் புதிய உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். அவர்கள் தங்கள் சொந்த தேசத்தில் மறுபடியும் குடியேறுவார்கள். யூதாதேசமும், எருசலேம் நகரமும், கர்த்தருடைய ஆலயமும் திரும்பவும் கட்டப்படும். கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் என்பதற்கு அத்தாட்சியாக யூதாதேசத்திலுள்ள நிலங்கள், வீடுகள் ஆகியவற்றின் விலைக்கிரயம் அதிகமாயிருக்கும்.

இப்போது யூதாதேசத்தில் மனுஷனுமில்லை. மிருகமுமில்லை. தேசம் பாழாய்க்கிடக்கிறது. கர்த்தர் இந்த தேசத்தை மறுபடியும் ஆசீர்வதிக்கும்போது, யூதாதேசத்திலே நிலங்கள் கொள்ளப்படும்.

"பென்யமீன் தேசத்திலும், எருசலேமின் சுற்றுப்புறங்களிலும், யூதாவின் பட்டணங்களிலும், மலைக்காடான பட்டணங்களிலும், பள்ளத்தாக்கான பட்டணங்களிலும், தென்திசைப் பட்டணங்களிலும்,நிலங்கள் விலைக்கிரயமாகக் கொள்ளப்படுகிற பத்திரங்களில் கையெழுத்துப் போடுகிறதும் முத்திரையிடுகிறதும் அதற்குச் சாட்சிவைக்கிறதும் உண்டாயிருக்கும்" (எரே 32:44) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும் என்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது.

யூதாதேசத்தில் மறுபடியும் வியாபாரம் விறுவிறுப்பாய் நடைபெறும். தொழில்கள் வேகமாய் முன்னேறும். நிலங்களில் பயிரிடுவதும், மேய்ச்சல் நிலங்களில் மந்தைகளை மேய்ப்பதும் மறுபடியும் செழிக்கும். தேசத்தில் மறுபடியும் சட்டமும் ஒழுங்கும் நிலைநிறுத்தப்படும். விலைக்கிரயமாய் கொள்ளப்படுகிற பத்திரங்களில் கையெழுத்து போடுகிறதும், முத்திரை போடுகிறதும் இருக்கும்.

எரேமியா - விரிவுரை
JEREMIAH - COMMENTARY

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

எரேமியா கர்த்தருடைய வார்த்தையின் பிரகாரம் ஆனதோத் ஊரிலே ஒரு நிலத்தை கிரயத்திற்கு வாங்குகிறார். யூதாதேசம் அழியப்போகும்போது, இந்த நிலத்தை தான் ஏன் கிரயத்திற்கு வாங்கவேண்டும் என்பது எரேமியாவுக்கு புரியவில்லை. கர்த்தர் இந்த சத்தியத்தின் மூலமாய், தம்முடைய வார்த்தைகளை எரேமியாவுக்கு புரிய வைக்கிறார்.

கர்த்தர் யூதாமனுஷரின் சிறையிருப்பைத் திருப்புவார். அவர்களுடைய தேசத்தில் அவர்களை மறுபடியும் குடியேற்றுவார். அவர்களை யூதாதேசத்திலே நிச்சயமாய் நாட்டுவார். அவர்கள்மேல் எல்லா நன்மைகளையும் வரப்பண்ணுவார். யூதாதேசம் மறுபடியும் செழித்திருக்கும்.

எரேமியா ஆனதோத் ஊரிலே அனாமெயேலின் நிலத்தை கிரயத்திற்கு வாங்கினார். தான் வாங்கின நிலத்தை எரேமியாவால் போய் பார்க்கமுடியவில்லை. தன் கண்களால் பார்க்காமலேயே, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, எரேமியா அந்த நிலத்தை கிரயத்திற்கு வாங்குகிறார்.

எரேமியா வாங்கிய நிலம், பரமகானானுக்கு அடையாளமாயிருக்கிறது. நாம் பரமகானானுக்கு போகும் வரையிலும், நம்முடைய பிரத்தியட்சமான கண்களால் அதை தரிசிக்க முடியாது. நாம் போகவேண்டிய பரமகானானை நம்முடைய விசுவாசத்தினால் தரிசித்து, பரமகானானுக்குள் பிரவேசிக்க நம்மை ஆயத்தம்பண்ணிக்கொள்ளவேண்டும். நம்முடைய இருதயத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் இருந்தால் மாத்திரமே நம்மால் பரமகானானுக்குள் பிரவேசிக்க முடியும்.

33 அதிகாரம்

யூதாதேசத்தையும் எருசலேம் நகரத்தையும் கல்தேயர்கள் அழித்துப் போடுகிறார்கள். யூதாவின் மனுஷர் பல தேசங்களுக்கும் சிதறடிக்கப்படுகிறார்கள். பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் யூதர்கள் மிகுந்த வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்கிறார்கள். கர்த்தர் சிறையிருப்பிலிருக்கிற யூதர்களை விடுவித்து, அவர்களை திரும்பவும் அவர்களுடைய தேசத்திற்கு அழைத்துக் கொண்டு வந்து, அங்கே குடியேற்றுவதாக வாக்குப்பண்ணுகிறார். யூதாவில் பாழாய்ப்போன பட்டணங்கள் திரும்பவும் கட்டப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் இங்கு சொல்லுகிற வாக்குத்தத்தம், புதிய ஏற்பாட்டுக்காலத்து சபைக்கு கர்த்தர் வாக்குப்பண்ணுகிற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு அடையாளமாயிருக்கிறது. எருசலேம் நகரம் மறுபடியும் கட்டப்படும் என்றும், அது மறுபடியும் ஸ்தாபிக்கப்படும் என்றும் கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார் (எரே 33:1-6). சிறையிருப்பிலிருக்கிற யூதர்களின் பாவங்கள் மன்னிக்கப்படும். கர்த்தர் அவர்களை திரும்பவும் தம்மிடத்தில் சேர்த்துக்கொள்வார் (எரே 33:7,8).

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு செய்யும் நன்மைகளினால் அவருடைய நாமம் மகிமைப்படும் (எரே 33:9). யூதாதேசம் சந்தோஷமாய் செழித்திருக்கும் (எரே 33:10-14). மேசியாவின் வருகைக்கு வழி ஆயத்தமாக்கப்படும் (எரே 33:15,16). தாவீதின் குடும்பத்தாரும் லேவியின் குடும்பத்தாரும், இஸ்ரவேல் குடும்பத்தாரும் மறுபடியும் செழித்திருப்பார்கள். கிறிஸ்துவின் ராஜ்யம் நிலைத்திருக்கும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியமும், அவருடைய சபையும், இந்த உலகம் உள்ளவரையிலும் நிலைத்திருக்கும் (எரே 33:17-26).

பரிபூரண சமாதானமும் சத்தியமும் எரே 33:1-9

எரே 33:1. எரேமியா இன்னும் காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருக்கையில், கர்த்தருடைய வார்த்தை இரண்டாந்தரம் அவனுக்கு உண்டாகி, அவர்:

எரே 33:2. இதைச் செய்கிற கர்த்தருமாய், இதைத் திடப்படுத்தும்படிக்கு இதை உருவேற்படுத்துகிற கர்த்தருமாயிருக்கிற யேகோவா என்னும் நாமமுள்ளவர் சொல்லுகிறது என்னவென்றால்:

எரே 33:3. என்னை நோக்கிக் கூப்பிடு,அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.

எரே 33:4. எதிர்க் கொத்தளங்களினாலும் பட்டயத்தாலும் இடிக்கப்பட்டவைகளாகிய இந்த நகரத்தின்வீடுகளையும், யூதா ராஜாக்களின் வீடுகளையுங்குறித்து:

எரே 33:5. இந்த நகரத்தின் எல்லாப் பொல்லாப்பினிமித்தமும் நான் என் முகத்தை மறைத்தபடியினாலே என் கோபத்திலும் உக்கிரத்திலும் வெட்டுண்ட மனுஷப் பிரேதங்களினாலே அவைகளை நான்நிரப்பும்படியாகவே, அவர்கள் கல்தேயரோடே யுத்தம்பண்ணப் போகிறார்கள்.

எரே 33:6. இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.

எரே 33:7. நான் யூதாவின் சிறையிருப்பையும், இஸ்ரவேலின் சிறையிருப்பையும் திருப்பி, முன்னிருந்தது போல அவர்களைக் கட்டுவித்து,

எரே 33:8. அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து, அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின அவர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன்.

எரே 33:9. நான் அவர்களுக்குச் செய்யும் நன்மையையெல்லாம் கேட்கப்போகிற பூமியின் எல்லா ஜாதிகளுக்குமுன்பாக அது எனக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும் புகழ்ச்சியாயும் மகிமையாயும் இருக்கும்; நான் அவர்களுக்கு அருளிச்செய்யும் எல்லா நன்மையினிமித்தமும், எல்லாச் சமாதானத்தினிமித்தமும் இவர்கள் பயந்து நடுங்குவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாதேசத்தின் நிலமை மிகவும் மோசமாகிக்கொண்டே வருகிறது. கல்தேயர்கள் எருசலேம் நகரத்தையும், யூதாவின் மற்ற பட்டணங்களையும் முற்றிக்கையிட்டிருக்கிறார்கள். எரேமியா இன்னும் யூதாராஜாவின் அரமனையிலுள்ள காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப் பட்டிருக்கிறார். அப்போது கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு இரண்டாந்தரம் உண்டாயிற்று. கர்த்தர் தம்முடைய ஜனத்தை மறுபடியுமாய் உற்சாகப்படுத்துகிறார்.

நாம் கர்த்தருக்கு கீழ்ப்படியாமலிருக்கும்போது, கர்த்தருடைய வார்த்தை நமக்கு திரும்ப திரும்ப உபதேசம்பண்ணப்படுகிறது. கர்த்தர் தம்முடைய ஆலோசனைகளை நமக்கு மறுபடியும் மறுபடியுமாய்ச் சொல்லிக்கொண்டு வருகிறார். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற ஊழியங்களை சரிவர செய்யும் வரையிலும், கர்த்தர் நம்முடைய கடமைகளை நமக்கு நினைவுபடுத்திக்கொண்டேயிருப்பார்.

நாம் பல சமயங்களில் கர்த்தருடைய வார்த்தைகளையும், அவருடைய வாக்குத்தத்தங்களையும் மறந்துவிடுகிறோம். நம்முடைய ஆறுதலுக்காகவும், நம்முடைய சந்தோஷத்திற்காகவும், அவற்றை நமக்கு ஞாபகப்படுத்துவது மிகவும் அவசியமாயிருக்கிறது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் இப்போது மிகவும் நெருக்கத்திலிருக்கிறார்கள். எரேமியாவும் காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருக்கிறார். கர்த்தர் தம்முடைய ஆறுதலான வார்த்தைகளையும், ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களையும் எரேமியா மூலமாக ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். ஆனாலும் தம்முடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் தம்முடைய ஜனங்களுக்கு மறுபடியும் சொல்லுவது கர்த்தருக்கு பிரியமாயிற்று.

கர்த்தர் தம்முடைய வார்த்தைகளையும், வாக்குத்தத்தங்களையும் சொல்லுவதற்கு முன்பாக, தம்மைப்பற்றிச் சொல்லுகிறார். "இதைச் செய்கிற கர்த்தருமாய், இதைத் திடப்படுத்தும்படிக்கு இதை உருவேற்படுத்துகிற கர்த்தருமாயிருக்கிற யேகோவா என்னும் நாமமுள்ளவர் சொல்லுகிறது என்னவென்றால்" (எரே 33:2) என்று சொல்லி கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை ஆரம்பிக்கிறார்.

கர்த்தரே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர். அவரே எருசலேமை திடப்படுத்துகிறவர். அவரே சீயோனை உருவேற்படுத்துகிறவர். கர்த்தரே எருசலேமையும் சீயோனையும் கட்டினார். அவரால் எருசலேமையும் சீயோனையும் மறுபடியுமாய் கட்டமுடியும். கர்த்தர் தம்முடைய நாமமகிமைக்காக எருசலேமைக் கட்டினார். கர்த்தருடைய மகிமை ஒருபோதும் குறைந்துபோவதில்லை. அவருடைய வல்லமையும், மகத்துவமும் மங்கிப்போவதில்லை. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, எருசலேமையும் சீயோனையும் திரும்பக் கட்டுவதாக வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தர் எருசலேமைப்பற்றிய வாக்குத்தத்தத்தைக் கொடுக்கிறார். கர்த்தரே சீயோன் மலையின்மீது எருசலேமைக் கட்டினார். கல்தேயர்கள் எருசலேமை இடித்துப்போட்டாலும், கர்த்தர் அதை திரும்பவும் புதுப்பித்துக்கட்டுவதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தரால் செய்ய முடியாத அற்புதம் ஒன்றுமேயில்லை.

கர்த்தர் தாம் சொல்லுகிறதை செய்கிறவர். தாம் செய்கிறதை சொல்லுகிறவர். கர்த்தருடைய நாமம் யெகோவா என்பதாகும். அவர் இருக்கிறவராகவே இருக்கிறார். கர்த்தரால் அவருடைய சித்தத்தையும், வாக்குத்தத்தத்தையும் நிறைவேற்ற முடியும். கர்த்தரே தம்முடைய சித்தத்தை நிறைவேற்றும் திட்டங்களை வகுக்கிறார். தம்முடைய திட்டங்களை அவர் உருவேற்படுத்துகிறார். கர்த்தருடைய சர்வஞானத்தினால் திட்டங்கள் உருவாகிறது. அவருடைய சர்வவல்லமையினால் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

"சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன்; ஆனாலும் யேகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை" *(யாத் 6:3).*

கர்த்தர் எதை செய்தாலும் அதை நேர்த்தியாயும், பரிபூரணமாயும் செய்கிறவர். கர்த்தர் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். அவர் அதை மறுபடியும் சிருஷ்டிக்க வேண்டிய அவசியமில்லை. கர்த்தர் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த பின்புதான், அவர் யெகோவா என்று அழைக்கப்படுகிறார். அது வரையிலும் கர்த்தருக்கு யெகோவா என்னும் நாமம் வழங்கப்படவில்லை.

"தேவனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்கின நாளிலே, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே" *(ஆதி 2:4).* இந்த வசனத்தில் "தேவனாகிய கர்த்தர்" என்னும் பெயருக்கு "யெகோவா" என்னும் எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஆறுதலையும், ஆசீர்வாதங்களையும் கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார். இவற்றை நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றால், நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்" *(எரே 33:3)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் பிதாவாகிய தேவனை நோக்கிக் கூப்பிட்டார்.

"தீர்மானத்தின் விவரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி: நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன். என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" *(சங் 2:7,8).*

நாம் கர்த்தரை நோக்கி கூப்பிடும்போது, நாம் அறியாததும், நமக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை கர்த்தர் நமக்கு அறிவிப்பார். நாம் அறியாத காரியங்கள், கடந்த காலத்தில் நமக்கு ஓரளவு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆயினும் நாம் அதை பூரணமாய் அறிந்துகொள்ளவில்லை.

நம்முடைய ஜெபத்தை உற்சாகப்படுத்துவதற்காக கர்த்தர் நமக்கு வாக்குத்தத்தங்களைக் கொடுக்கிறார். நாம் ஜெபத்தில் தரித்திரிந்து கர்த்தருடைய வார்த்தைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்போது கர்த்தர் நாம் அறியாத இரகசியங்களை நமக்கு தெளிவுபடுத்துவார். நமக்கு புரியாத சத்தியங்களுக்கு வியாக்கியானம் கொடுப்பார்.

"கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் இதை அநுக்கிரகஞ்செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ண வேண்டும்; மந்தை பெருகுகிறதுபோல் அவர்களில் மனிதரைப் பெருகப்பண்ணுவேன்" *(எசே 36:37).*

எருசலேம் இப்போது பரிதாபமான நிலமையிலிருக்கிறது. அதற்கு கர்த்தருடைய ஆறுதல் தேவைப்படுகிறது. எருசலேம் நகரத்தின் வீடுகள் எதிர்கொத்தளங்களாலும், பட்டயத்தாலும் இடிக்கப் பட்டவைகளாயிருக்கிறது. யூதாராஜாக்களின் வீடுகளும் இடிக்கப்பட்டிருக்கிறது. கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிட்டு, ஏந்திரங்களினால் யூதாவிலுள்ள வீடுகளையெல்லாம் இடித்துப்போடுகிறார்கள். அவர்கள் எல்லா ஆயுதங்களையும் பயன்படுத்தி ராஜாக்களின் வீடுகளையும் இடித்துப்போடுகிறார்கள்.

வலுவான பெரிய கட்டிடங்களெல்லாம் தரைமட்டமாய்க் கிடக்கிறது. யூதாவின் மனுஷரோ கல்தேயரோடு யுத்தம்பண்ணப் போகிறார்கள். இந்த யுத்தத்தினால் யூதாவின் மனுஷருக்கு நன்மை உண்டாகப்போவதில்லை. அவர்களுக்கு தீமையே உண்டாகும். யூதாவின் மனுஷரால் கல்தேயரை ஜெயிக்க முடியாது. அவர்கள் கல்தேயரோடு யுத்தம்பண்ணுவதினால், கல்தேயரின் கோபம் அதிகரிக்கும். அவர்கள் எருசலேமின் ஜனத்தார்மீது மிகுந்த கோபமடைந்து, அவர்களை பட்டயத்தால் வெட்டிப்போடுவார்கள். எருசலேம் நகரத்தின் வீதிகளிலே வெட்டுண்ட மனுஷர்களின் பிரேதங்கள் நிரம்பியிருக்கும்.

எருசலேமின் நகரத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாப்பு செய்கிறார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தர் தம்முடைய முகத்தை அவர்களுக்கு மறைக்கிறார். அவர்கள்மீது உக்கிர கோபங்கொள்கிறார். கர்த்தருடைய கோபத்திலும், உக்கிரத்திலும், எருசலேமின் ஜனங்கள் வெட்டுண்டு போகிறார்கள். சத்துருக்களின் பட்டயம் கர்த்தருடைய பட்டயமாயிருக்கிறது. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், கல்தேயர்கள் எருசலேமின் குடிகளை பட்டயத்தினால் வெட்டிப்போடுகிறார்கள்.

எருசலேம் குடிகளின் மரணத்திற்கு அவர்களுடைய பொல்லாப்பே காரணம். அவர்களுடைய பொல்லாப்பினிமித்தமாய் கர்த்தர் தம்முடைய முகத்தை அவர்களுக்கு மறைக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு பாதுகாப்பு இல்லாமல் போகிறது. மேலும் கர்த்தருடைய கோபமும் உக்கிரமமும் அவர்கள்மீது வெளிப்படுகிறது.

கல்தேயர்கள் அவர்களை பட்டயத்தினால் வெட்டிப்போடுகிறார்கள். எருசலேம் நகரத்தாருடைய வெட்டுண்ட பிரேதங்கள், எருசலேம் நகரம் முழுவதிலும் நிரம்பியிருக்கிறது.

கர்த்தர் யூதாவையும் எருசலேமையும் தம்முடைய ஆசீர்வாதங்களினால் நிரப்புவதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். அவர்களுடைய துக்கங்கள் சந்தோஷமாய் மாறும். அவர்களுடைய வேதனைகளும், கஷ்டங்களும் அவர்களை விட்டு நீங்கிப்போகும். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் குணப்படுத்த முடியாத வியாதிலிருப்பதுபோல இருக்கிறார்கள்.

"கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரணவைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்?" (எரே 8:22).

"இன்னும் நீங்கள் ஏன் அடிக்கப்படவேண்டும்? அதிகம் அதிகமாய் விலகிப்போகிறீர்களே; தலையெல்லாம் வியாதியும், இருதயமெல்லாம் பலட்சயமுமாய் இருக்கிறது" (ஏசா 1:5).

கர்த்தரோ அவர்களுக்கு சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணுவதாக வாக்குப்பண்ணுகிறார். அவர்களை குணமாக்குவதாகவும் கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார் (எரே 33:6).

கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் குணப்படுத்துவார். அப்போது அவர்கள் வியாதி நீங்கி சுகமாயிருப்பார்கள்.

"அவர்கள்: உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளுண்டவள் என்று பேரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 30:17).

எருசலேமின் பாவங்களே அவர்களுக்கு வியாதியாயிருக்கிறது. அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்கள் இருதயத்தில் சுத்திகரிக்கப்படும்போது, அவர்களுடைய வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கும். அவர்கள் மறுபடியும் ஆரோக்கியமடைவார்கள்.

"உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் அதிலே சுகமேயில்லை; அது காயமும், வீக்கமும், நொதிக்கிற இரணமுமுள்ளது; அது சீழ் பிதுக்கப்படாமலும், கட்டப்படாமலும், எண்ணெயினால் ஆற்றப்படாமலும் இருக்கிறது" (ஏசா 1:6).

கர்த்தர் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் குணமாக்கி, அவர்களுக்கு பரிபூரண சமாதானத்தையும், சத்தியத்தையும் வெளிப்படுத்துவதாக வாக்குப்பண்ணுகிறார் (எரே 33:6).

இந்த வாக்கியத்தில் சமாதானம் என்னும் வார்த்தை, கர்த்தர் கொடுக்கும் எல்லா நன்மைகளையும் குறிப்பிடுகிறது. கர்த்தர் அவர்களுக்கு சமாதானத்தையும் உண்மையான மார்க்கபோதனைகளையும் கொடுப்பார். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கும்போது, அவர்கள் சமாதானத்தையும், கர்த்தரை உண்மையாய்த் தொழுதுகொள்ளும் ஆராதனை முறைமைகளையும் பெற்றுக்கொள்வார்கள்.

யூதாவின் மனுஷர் இதுவரையிலும் மாயையைப் பின்பற்றினார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். மாயையான விக்கிரகங்கள் அவர்களை வஞ்சித்தது. அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போனார்கள். அந்நிய தெய்வங்களை பின்பற்றினார்கள். கர்த்தரோ அவர்களை மறுபடியும் தம்மிடத்தில் அழைத்து வந்து, அவர்களுக்கு சமாதானத்தையும், சத்தியத்தையும் வெளிப்படுத்துவதாக வாக்குப்பண்ணுகிறார்.

சமாதானமும் சத்தியமும் தேவனுடைய தெய்வீக வெளிப்பாடு. கர்த்தரால் மாத்திரமே நமக்கு சமாதானத்தையும், சத்தியத்தையும் கொடுக்க முடியும். கர்த்தர் கொடுக்கும் சமாதானமே மெய்யான சாமாதானம்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்கும், யூதாவம்சத்தாருக்கும் சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவதாக வாக்குப்பண்ணுகிறார். இந்த வாக்குத்தத்தம் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு அடையாளமாயிருக்கிறது. பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாய், நமக்கு சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். கர்த்தருடைய சத்தியம் நம்மை வழிநடத்துகிறது. கர்த்தருடைய சமாதானம் நமக்கு ஆறுதலைத் தருகிறது.

இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு கிருபையும் சத்தியமும் தாராளமாய்க் கொடுக்கப்படுகிறது. சமாதானமும் சத்தியமும் நம்முடைய ஆத்துமாவுக்கு ஜீவனைப் போன்றது. கிறிஸ்து நமக்கு ஜீவனைக்கொடுக்கவும், நம்முடைய ஜீவனை பரிபூரணப்படுத்தவும் இந்த உலகத்திற்கு வந்தார். கிறிஸ்துவானவர் தம்முடைய சத்திய வல்லமையினால் ஆளுகை செய்கிறார்.

"அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீ சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்" (யோவா 18:37).

தேவன் தம்முடைய சத்தியத்தின் வல்லமையினால் நமக்கு சமாதானத்தை தாராளமாய்த் தருகிறார்.

"அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான்; சந்திரனுள்ளவரைக்கும் மிகுந்த சமாதானம் இருக்கும்" (சங் 72:7). "கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும், நீதியும் சமாதானமும் ஒன்றையொன்று முத்தஞ்செய்யும்" (சங் 85:10).

கர்த்தர் வெளிப்படுத்தும் தம்முடைய தெய்வீக சமாதானத்தையும் சத்தியத்தையும், நாம் விசுவாசத்தால் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்போது நமக்கு சவுக்கியமும் ஆரோக்கியமும் உண்டாகும்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பலதேசங்களிலே சிதறிப்போயிருக்கிறார்கள். அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் அடிமைகளாயிருக்கிறார்கள். "நான் யூதாவின் சிறையிருப்பையும், இஸ்ரவேலின் சிறையிருப்பையும் திருப்பி, முன்னிருந்தது போல அவர்களைக் கட்டுவிப்பேன்" (எரே 33:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் யூதாவின் சிறையிருப்பை மாத்திரம் திருப்புவேன் என்று சொல்லாமல், யூதாவின் சிறையிருப்பையும், இஸ்ரவேலின் சிறையிருப்பையும் திருப்புவேன் என்று வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தை யூதா என்றும், இஸ்ரவேல் என்றும் பிரித்து பார்ப்பதில்லை. கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. கர்த்தருடைய ஜனம் எல்லோருமே அவருக்கு சமஸ்த இஸ்ரவேலராயிருக்கிறார்கள்.

யூதாவம்சத்தாரும் இஸ்ரவேல் வம்சத்தாரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்களுடைய அக்கிரமங்களினிமித்தமாய், அவர்கள் இப்போது சிறையிருப்பையும், தீங்குகளையும், வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள். கர்த்தரோ தமக்கு விரோதமாக அவர்கள் செய்த எல்லா குற்றங்களையும், எல்லா அக்கிரமங்களையும் அவர்களுக்கு மன்னிப்பதாகவும், அவர்களை சுத்திகரிப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார்.

பாவத்தின் சம்பளம் மரணம். யூதா மனுஷருடைய பாவங்களினிமித்தமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்திருக்கிறது. கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பதினால், நியாயத்தீர்ப்பின் வேர் அறுக்கப்படுகிறது. நியாயத்தீர்ப்பு பெலனற்றுப்போகிறது.

"அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து, அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணின அவர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன்" (எரே 33:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில், மோசேயின் பிரமாணத்தின்படி, தீட்டுப்பட்டவர்களும், அசுத்தமானவர்களும் கர்த்தருடைய ஆசரிப்புகூடாரத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது. அவர்கள் மறுபடியும் கர்த்தருடைய சமுகத்தில் பிரவேசிக்கவேண்டுமென்றால், அவர்கள்மீது சுத்திகரிப்பின் ஜலம் தெளிக்கப்படவேண்டும். அப்போது அவர்களுடைய தோஷமும், தீட்டும் நீங்கி, அவர்கள் சுத்திகரிக்கப்படுவார்கள்.

இப்போது யூதாதேசமும், யூதாவின் மனுஷரும் தீட்டுப்பட்டு அசுத்தமாயிருக்கிறார்கள். அவர்களால் யூதாதேசத்திற்குள் பிரவேசிக்க முடியவில்லை. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்ச் செய்த குற்றங்களும், அவர்களுடைய அக்கிரமங்களும், அவர்களுடைய தேசத்திற்குள் அவர்கள் பிரவேசிக்க முடியாதபடிக்கு, அவர்களுக்கு தடையாயிருக்கிறது.

கர்த்தரோ அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் நீங்கலாக்கி அவர்களை சுத்திகரிப்பதாக வாக்குப்பண்ணுகிறார். அவர்களுடைய எல்லா துரோகங்களையும், எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பதாக கர்த்தர் சொல்லுகிறார். இதனால் யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும், தங்கள் அசுத்தமான தீட்டுகள் நீங்கி சுத்திகரிக்கப்படுகிறார்கள்.

யூதாமனுஷருடைய பாவங்களும், அவர்கள் அனுபவிக்கிற பாடுகளும் கர்த்தருடைய நாமத்தைத் தூஷித்தது. இப்போது அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மறுபடியுமாய்க் கர்த்தரைத் துதிக்கிறார்கள். இதனால் கர்த்தருக்கு மகிமை உண்டாகிறது. யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தங்கள் பாவங்கள் நீங்கி சுத்திகரிக்கப்படுவது கர்த்தருக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும், புகழ்ச்சியாயும், மகிமையாயும் இருக்கிறது.

"நான் அவர்களுக்குச் செய்யும் நன்மையையெல்லாம் கேட்கப்போகிற பூமியின் எல்லா ஜாதிகளுக்குமுன்பாக அது எனக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும் புகழ்ச்சியாயும் மகிமையாயும் இருக்கும்; நான் அவர்களுக்கு அருளிச்செய்யும் எல்லா நன்மையினிமித்தமும், எல்லாச் சமாதானத்தினிமித்தமும் இவர்கள் பயந்து நடுங்குவார்கள்" (எரே 33:9) என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் தேசத்தாருக்கு அருகாமையிலுள்ள தேசத்தாரும், ஜாதிகளும், இஸ்ரவேல் ஜனங்களை கவனித்துப் பார்க்கிறார்கள். இஸ்ரவேல் தேசம் ஒரு பெரிய தேசமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது. அவர்கள் பலமிக்கவர்களாகயிருக்கிறார்கள். இதனால் பக்கத்து தேசத்தார் இஸ்ரவேல் தேசத்தாரைப் பார்த்து பயப்படுகிறார்கள். அவர்களைப் பகைத்துக் கொள்ள அஞ்சுகிறார்கள்.

விசுவாசிகளாகிய நம்முடைய பாவங்களையும் கர்த்தர் மன்னிக்கவேண்டும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய இரத்தத்தினால் நம்மை கழுவி சுத்திகரிக்கவேண்டும். அப்போது கர்த்தர் நமக்கு எல்லா நன்மைகளையும், எல்லா சமாதானத்தையும் அருளுவார். உலகப்பிரகாரமான ஜனங்கள் நாம் அனுபவிக்கிற நன்மையையும் சமாதானத்தையும் பார்த்து, நமக்கு விரோதமாக எழும்பமாட்டார்கள். நம்மைப் பார்த்து பயந்து நடுங்குவார்கள். இந்த உலகத்திலிருக்கிறவனிலும், நமக்குள்ளிருக்கிற கர்த்தர் பெரியவர். உலகப்பிரகாரமான ஜனங்கள் நம்மைப் பார்க்கும்போது, நமக்குள்ளிருக்கிற கர்த்தரைப்பார்த்து பயந்து நடுங்குவார்கள்.

யூதாதேசத்தில் மகிழ்ச்சியின்சத்தம் கேட்கப்படும் எரே 33:10-14

எரே 33:10. மனுஷனில்லாமலும் மிருகமில்லாமலும் அவாந்தரவெளியாய்க் கிடக்கிறதென்று, நீங்கள் சொல்லுகிற இவ்விடத்திலும், யூதாவின் பட்டணங்களிலும் மனுஷனாவது மிருகமாவது இல்லாத பாழான எருசலேமின் வீதிகளிலும்,

எரே 33:11. இன்னும் களிப்பின் சத்தமும், மகிழ்ச்சியின்சத்தமும், மணவாளனின் சத்தமும், மணவாட்டியின் சத்தமும்: சேனைகளின் கர்த்தரைத் துதியுங்கள், கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளதென்று சொல்லுகிறவர்களின் சத்தமும், கர்த்தருடைய ஆலயத்துக்கு ஸ்தோத்திரபலிகளைக்கொண்டு வருகிறவர்களின் சத்தமும் கேட்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் முன்னிருந்ததுபோலிருக்கும்படி தேசத்தின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 33:12. மனுஷனும் மிருகமும் இல்லாமல் அவாந்தரவெளியாய்க்கிடக்கிற இவ்விடத்திலும், இதற்கடுத்த பட்டணங்களிலும், ஆட்டுமந்தையை மேய்த்துமடக்குகிற மேய்ப்பர்களின் தாபரங்கள் உண்டாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 33:13. மலைத்தேசமான பட்டணங்களிலும், பள்ளத்தாக்குகளான பட்டணங்களிலும், தென்திசைப் பட்டணங்களிலும் பென்யமீன் நாட்டிலும், எருசலேமின் சுற்றுப்புறங்களிலும், யூதாவின் பட்டணங்களிலும், ஆட்டுமந்தைகள் தங்களைத் தொகையிடுகிறவனுடைய கைக்குள்ளாகக் கடந்துவரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 33:14. இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலின் குடும்பத்துக்கும், யூதாவின் குடும்பத்துக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்து அங்கே குடியேறுவார்கள். அப்போது யூதாதேசத்தில் களிப்பின் சத்தமும் மகிழ்ச்சியின் சத்தமும் கேட்கப்படும். யூதாவிலும் எருசலேமிலும் ஜனங்கள் மத்தியில் சந்தோஷமும், ஆரவாரமும் மிகுதியாயிருக்கும். இந்த சம்பவம் மேசியாவின் ராஜ்யத்தில் உண்டாயிருக்கும் சந்தோஷத்திற்கு அடையாளமாயிருக்கிறது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் பல வருஷங்களாக பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் வேதனைகளை அனுபவித்தார்கள். கர்த்தர் அவர்களுடைய துக்கங்களை சந்தோஷமாய் மாற்றுவதாக வாக்குப்பண்ணுகிறார். யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கும்போது தங்கள் தேசத்தைப்பற்றி நினைத்துப் பார்க்கிறார்கள். அது மனுஷனில்லாமலும் மிருகமில்லாமலும் அவாந்தரவெளியாய்க் கிடக்கிறது என்று சொல்லுகிறார்கள். மேலும் யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் மனுஷனாவது, மிருகமாவது இல்லாமல் அது பாழான பட்டணமாயிருக்கிறது என்றும் வேதனையோடு சொல்லுகிறார்கள் (எரே 33:10).

அவர்கள் தங்கள் தேசத்திற்காகவும், தங்கள் பட்டணங்களுக்காகவும் கண்ணீர் விட்டு அழுகிறார்கள். அவர்கள் சிறிதுகாலம் அழுதாலும், அவர்களுடைய அழுகை சீக்கிரத்தில் நீங்கும். கர்த்தர் அவர்களுக்கு மறுபடியும் சந்தோஷத்தைக் கொடுப்பார். யூதாதேசம் முழுவதிலும், பொதுவான சந்தோஷம் நிரம்பியிருக்கும். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பார்கள். யூதாதேசத்தில் மணவாளனின் சத்தமும், மணவாட்டியின் சத்தமும் கேட்கப்படும். எருசலேமிலும், யூதாவிலும் மறுபடியும் திருமண சுபகாரியங்கள் நடைபெறும். அவர்களுடைய வீடுகளில் கலியாண விருந்துகளும், சந்தோஷமான ஆடல்பாடல்களும் நடைபெறும்.

யூதாதேசத்திலே, யூதர்களுடைய வீடுகளில் சந்தோஷமுண்டாயிருப்பதுபோல, கர்த்தருடைய ஆலயத்திலும் சந்தோஷ முண்டாயிருக்கும். யூதாவின் மனுஷர் தங்கள் குடும்ப காரியங்களில் சந்தோஷமாய் ஈடுபடுவதுபோல, கர்த்தருக்கடுத்த ஆவிக்குரிய காரியங்களிலும் சந்தோஷமாய் ஈடுபடுவார்கள். எருசலேமிலே, "சேனைகளின் கர்த்தரைத் துதியுங்கள், கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளதென்று சொல்லுகிறவர்களின் சத்தமும், கர்த்தருடைய ஆலயத்துக்கு ஸ்தோத்திரபலி களைக்கொண்டுவருகிறவர்களின் சத்தமும் கேட்கப்படும்" (எரே 33:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவன் சேனைகளின் கர்த்தராயிருக்கிறார். அவர் நல்லவராகவும் கிருபையுள்ளவராகவும் இருக்கிறார். இந்தப் பாடல் யூதர்களுக்கு பழைய பாடலாகயிருந்தாலும், அவர்கள் மறுபடியுமாய் இதன் உள்ளான அர்த்தத்தைப் புரிந்து கொண்டு, நன்றியுள்ள இருதயத்தோடும், சந்தோஷத்தோடும், கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார்கள். இந்தப் பாடல் புதிய அர்த்தத்தோடு பாடப்படுவதினால், யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும், இது புதிய பாடலாகவே இருக்கிறது.

"அவர்கள் முன்னிருந்ததுபோலி ருக்கும்படி தேசத்தின் சிறையிருப்பைத் திருப்புவேன்" (எரே 33:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் தேசத்திற்கு திரும்பி வரும்போது, கர்த்தர் இங்கு சொல்லுகிற தீர்க்கதரிசனம் பிரதியட்சமாய் நிறைவேறுகிறது.

"கர்த்தர் நல்லவர், இஸ்ரவேலின்மேல் அவருடைய கிருபை என்றுமுள்ளது என்று அவரைப் புகழ்ந்து துதிக்கையில், மாறிமாறிப் பாடினார்கள்; கர்த்தரைத் துதிக்கையில், ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்படுகிறதினிமித்தம் மகா கெம்பீரமாய் ஆரவாரித்தார்கள்" (எஸ்றா 3:11).

கர்த்தருடைய பலிபீடத்தில் செலுத்தப்படும் எல்லா பலிகளும், கர்த்தரைத் துதிப்பதற்காகவே செலுத்தப்படுகிறது. ஆடுகளையும், மாடுகளையும் செலுத்துவது போலவே, இஸ்ரவேல் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, நன்றியுள்ள இருதயத்தோடு கர்த்தரைத் துதிக்கிறார்கள். தங்கள் உதடுகளின் காளைகளாகிய ஸ்தோத்திர பலிகளை கர்த்தருக்கு ஏறெடுக்கிறார்கள்.

"வார்த்தைகளைக்கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவரை நோக்கி: தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கி, எங்களைத் தயவாய் அங்கீகரித்தருளும்; அப்பொழுது நாங்கள் எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோம்" (ஓசி 14:2).

யூதாதேசமும், எருசலேம் நகரமும், யூதாவின் பட்டணங்களும் அவாந்தர வெளியாய்க் கிடக்கிறது. அங்கே மனுஷருமில்லை. மிருகமுமில்லை. கர்த்தர் யூதாதேசத்தை மறுபடியும் மனுஷராலும், மிருகங்களாலும் நிரப்பப்போவதாக வாக்குப்பண்ணுகிறார்.

"மனுஷனும் மிருகமும் இல்லாமல் அவாந்தரவெளியாய்க்கிடக்கிற இவ்விடத்திலும், இதற்கடுத்த பட்டணங்களிலும், ஆட்டுமந்தையை மேய்த்துமடக்குகிற மேய்ப்பர்களின் தாபரங்கள் உண்டாயிருக்கும்" (எரே 33:12) என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் பட்டணங்களிலும், பென்யமீனின் பட்டணங்களிலும் ஆட்டு மந்தைகளும், ஆட்டுமந்தையை மேய்க்கிற மேய்ப்பர்களும் நிரம்பியிருப்பார்கள். யூதாவின் வம்சத்தாரும், எருசலேம் வம்சத்தாரும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்து, தங்கள் சொந்த தேசத்தில் குடியேறுவார்கள். அவர்கள் ஒன்றுமில்லாத தரித்திரர்களாயிருக்கமாட்டார்கள். அவர்கள் ஆட்டுமந்தைகளுள்ள மேய்ப்பர்களாயிருப்பார்கள்.

யாக்கோபின் சந்ததியார் ஆரம்பத்தில் ஆடுமாடுகளை மேய்க்கிற மேய்ப்பர்களாயிருந்தார்கள். இதுவே அவர்களுடைய பூர்வீக தொழில்.

"பார்வோன் அவனுடைய சகோதரரை நோக்கி: உங்கள் தொழில் என்ன என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: உமது அடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் மந்தை மேய்க்கிறவர்கள் என்று பார்வோனிடத்தில் சொன்னதுமன்றி, கானான் தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருக்கிறது; உமது அடியாரின் மந்தைகளுக்கு மேய்ச்சல் இல்லாமையால், இத்தேசத்திலே தங்கவந்தோம்; உமது அடியாராகிய நாங்கள் கோசேன் நாட்டிலே குடியிருக்கும்படி தயவுசெய்யவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்" (ஆதி 47:3,4).

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து, கானான் தேசத்திற்கு திரும்பி வந்தபின்பு, மறுபடியும் தங்களுடைய பூர்வீக தொழிலுக்கு திரும்புகிறார்கள். அவர்கள் ஆட்டுமந்தையை மேய்த்து மடக்குகிறார்கள். கானான் தேசத்தில் தங்களுக்கு தாபரங்களைப் போடுகிறார்கள். தங்கள் கைக்குள்ளாக கடந்து வரும் ஆட்டுமந்தைகளை தொகையிடுகிறார்கள். தங்களுடைய மந்தையிலுள்ள ஆடுகளின் எண்ணிக்கை சரியாகயிருக்கிறதா என்பதையும், ஆடுகளில் ஏதாவது காணாமல்போய்விட்டதா என்பதையும் தொகையிட்டு பார்க்கிறார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் இப்போது ஆட்டுமந்தைகளை மேய்க்கிற சாதாரண மேய்ப்பர்களாயிருந்தாலும், யூதாதேசத்திலே கர்த்தர் கொடுக்கும் சந்தோஷமும், சமாதானமும் நிரம்பியிருக்கிறது. அங்கே களிப்பின் சத்தமும் மகிழ்ச்சியின் சத்தமும் கேட்கப்படுகிறது. யூதாதேசத்தில் மணவாளனின் சத்தமும் மணவாட்டியின் சத்தமும் கேட்கப்படுகிறது. சேனைகளின் கர்த்தரைத் துதியுங்கள், கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று சொல்லி, கர்த்தரைத் துதிக்கிற ஸ்தோத்திரபலிகளின் சத்தமும் கேட்கப்படுகிறது. யூதாவின் மனுஷர் ஆடுகளை மேய்க்கிற ஏழைகளாக, கானான் தேசத்தில் மறுபடியும் குடியேறினாலும், அவர்கள் கர்த்தருக்குள் ஐசுவரியவான்களாயிருக்கிறார்கள்.

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலின் குடும்பத்துக்கும், யூதாவின் குடும்பத்துக்கும் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவேன்" (எரே 33:14) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய நாளில், தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார். கர்த்தர் நல்லவர். அவர் கிருபை என்றுமுள்ளது.

நீதியாயிருக்கிற கர்த்தர் எரே 33:15,16

எரே 33:15. அந்நாட்களிலும், அக்காலத்திலும் தாவீதுக்கு நீதியின் கிளையை முளைக்கப்பண்ணுவேன்; அவர் பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

எரே 33:16. அந்நாட்களில் யூதா இரட்சிக்கப்பட்டு, எருசலேம் சுகமாய்த் தங்கும்; அவர் எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

கர்த்தர் இஸ்ரவேலின் குடும்பத்திற்கும் யூதாவின் குடும்பத்திற்கும் ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களைச் சொல்லுகிறார். தாம் சொன்ன நல்லவார்த்தைகளை நிச்சயமாய் நிறைவேற்றப்போவதாக கர்த்தர் வாக்குப் பண்ணுகிறார். கர்த்தர் சொன்ன ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களில், மேசியாவைப்பற்றிய வாக்குத்தத்தம் மிகவும் விசேஷமானது. மேசியா நித்திய நீதியுள்ளவராயிருப்பார்.

"இதோ நாட்கள் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 33:14) அப்போது கர்த்தர் இஸ்ரவேலின் குடும்பத்திற்கும், யூதாவின் குடும்பத்திற்கும் தாம் சொன்ன நல்வார்த்தையை நிறைவேற்றுவார். கர்த்தருடைய நாளில் யூதாவும் இஸ்ரவேலும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருவார்கள். அவர்கள் அங்கே சந்தோஷமாய்க் குடியேறுவார்கள். சிறையிருப்பிலிருந்தவர்கள் இனிமேல் சுயாதீனமாய் ஜீவிப்பார்கள்.

பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போன காலம் முதல், இயேசுகிறிஸ்துவின் காலம் வரையிலுமுள்ள இடைப்பட்ட காலம், மிகவும் விசேஷமான காலமாகும். "இவ்விதமாய் உண்டான தலைமுறைகளெல்லாம் ஆபிரகாம் முதல் தாவீது வரைக்கும் பதினாலு தலைமுறைகளும்; தாவீதுமுதல் பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலம் வரைக்கும் பதினாலு தலைமுறைகளும்; பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன காலமுதல் கிறிஸ்து வரைக்கும் பதினாலு தலைமுறைகளுமாம்" (மத் 1:17).

கர்த்தர் இங்கு மேசியாவைப்பற்றி வாக்குத்தத்தமாய்ச் சொல்லுகிறார். "அந்நாட்களிலும், அக்காலத்திலும் தாவீதுக்கு நீதியின் கிளையை முளைக்கப்பண்ணுவேன்" (எரே 33:15) என்று கர்த்தர் மேசியாவைப்பற்றி வாக்குத்தத்தமாய்ச் சொல்லுகிறார்.

இதற்கு முன்பாகவே, கர்த்தர் மேசியாவைப்பற்றி வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன்; அவர் ராஜாவாயிருந்து, ஞானமாய் ராஜரிகம்பண்ணி, பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார். அவர் நாட்களில் யூதா இரட்சிக்கப்படும், இஸ்ரவேல் சுகமாய் வாசம்பண்ணும்; அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே" (எரே 23:5,6).

கர்த்தர் மேசியாவைப்பற்றி ஏற்கெனவே சொன்ன வாக்குத்தத்தம், இங்கே மறுபடியுமாய் உறுதிபண்ணப்படுகிறது. பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து யூதர்கள் விடுதலைபெற்று, தங்கள் தேசத்திற்கு திரும்பி வருவார்கள். அவர்கள் யூதாதேசத்தில் குடியேறின பின்பு அங்கே ஆட்டுமந்தையை மேய்த்து மடக்குகிற மேய்ப்பர்களின் தாபரங்கள் உண்டாயிருக்கும் (எரே 33:12). மேலும் யூதாவின் பட்டணங்களில் ஆட்டுமந்தைகள் தங்களைத் தொகையிடுகிறவனுடைய கைக்குள்ளாக கடந்துவரும் (எரே 33:14).

கர்த்தர் ஆட்டுமந்தைகளைப்பற்றியும், மேய்ப்பரைப்பற்றியும் சொல்லுகிற தீர்க்கதரிசனம், மேசியாவைப்பற்றியும், அவருடைய ராஜ்யத்திலுள்ள விசுவாசிகளைப் பற்றியும் சொல்லுவதாக வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள். மேய்ப்பர், மந்தை ஆகியவற்றிற்கு ஆவிக்குரிய வியாக்கியானம் சொல்லுவது மிகவும் சிறப்பாகயிருக்கும்.

கர்த்தர் இங்கு கிறிஸ்துவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். கிறிஸ்துவானவர் நீதியுள்ள ராஜாவாயிருப்பார். அவர் தாவீதுக்கு நீதியின் கிளையாயிருப்பார். கிறிஸ்துவானவர் ஏனோதானோவென்று, எதேச்சையாய், ஏதோ ஒரு மரத்தில் முளைத்த கிளையல்ல. அவர் தாவீதின் வம்சத்தின் நீதியின் கிளையாய் முளைத்தவர்.

கிறிஸ்துவானவர் நீதியுள்ள ராஜாவாயிருப்பார். தம்முடைய பிரமாணங்களை நீதியாய் நிறைவேற்றுவார். யுத்தங்களை நடத்தி நியாயத்தீர்ப்புக்களைக் கொடுப்பார். தவறு செய்தவர்களைத் தண்டிப்பார். அநியாயமாய்த் தண்டிக்கப் படுகிறவர்களை விடுவிப்பார். மேசியா பூமியிலே நியாயத்தையும் நீதியையும் நடப்பிப்பார்.

கிறிஸ்துவானவர் பலமுள்ள ராஜாவாயிருப்பார். தம்முடைய ஜனங்களுக்கு எந்த தீங்கும் அணுகாதவாறு அவர்களைப் பாதுகாப்பார். கிறிஸ்துவின் நாட்களில் யூதாஇரட்சிக்கப்படும். தேவனுடைய கோபத்திற்கும், சாபத்திற்கும் யூதாவிலகியிருக்கும். எருசலேம் சுகமாய்த் தங்கும். எருசலேமுக்கு சத்துருவைக் குறித்த பயமோ, தீங்குகளைக் குறித்த பயமோ இருக்காது. அவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் மாத்திரமே இருக்கும். கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள்.

கிறிஸ்துவானவர் தம்முடைய ஜனத்திற்கு சமாதான பிரபுவாயிருப்பார். கிறிஸ்துவின் பிள்ளைகளுடைய இருதயத்தில் குழப்பம் இருக்காது. அவர்களுக்கு தெளிந்த சிந்தனையிருக்கும்.

கிறிஸ்துவானவர் நீதியின் ராஜாவாயிருப்பார். அவருடைய ராஜ்யத்திலுள்ள அவருடைய பிள்ளைகள், தங்கள் ராஜாவாகிய கிறிஸ்துவைப் போற்றிப் புகழுவார்கள். கிறிஸ்துவானவரைக் கனம்பண்ணுவார்கள். "அவர் எங்கள் நீதியாயிருக்கிற கர்த்தர் என்பது அவருடைய நாமம்" என்று சொல்லி விசுவாசிகள் கிறிஸ்துவானவரைப் போற்றிப் புகழ்ந்து கனம்பண்ணுவார்கள்.

கல்தேயருடைய வேதாகமத்திலும், சீரியாக் மொழியிலுள்ள வேதாகமத்திலும், "விசுவாசிகள் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லி அவரைத் துதிப்பார்கள்" என்று எழுதப்பட்டிருக்கிறது. எருசலேம் நகரத்திற்கு, "கர்த்தர் எங்கள் நீதியாயிருக்கிறார்" என்று பொருள். கர்த்தருடைய மகிமை எருசலேம் நகரத்தாருடைய நீதியாயிருக்கிறது. கிறிஸ்துவுக்கு கொடுக்கப்படும் பெயர், எருசலேம் நகரத்திற்கும் கொடுக்கப்படுகிறது. எருசலேம் மேசியாவின் நகரம். அது கிறிஸ்துவின் சபை.

கிறிஸ்துவானவர் தாவீதுக்கு நீதியின் கிளையாய் முளைத்தெழும்புவார். அவர் தம்முடைய பிள்ளைகளுக்கு நீதியாயிருக்கிற கர்த்தர். எருசலேம் நகரத்திற்கும் "கர்த்தர் எங்கள் நீதியாயிருக்கிறார்" என்று பொருள்படும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய நாமத்தைப் பெற்றிருக்கிற எருசலேம் நகரத்தில் நீதி வாசம்பண்ண வேண்டும். இந்த நீதி மனுஷருடைய நீதியல்ல. இது கிறிஸ்துவின் நீதி. மேசியாவின் நீதி, அவருடைய ராஜ்யத்திலுள்ள ஜனங்களை ஆளுகை செய்யும். கிறிஸ்துவின் ராஜ்யம் அவருடைய நீதியினால் நிரம்பியிருக்கும்.

கர்த்தருடைய உடன்படிக்கை எரே 33:17-26

எரே 33:17. இஸ்ரவேல் வம்சத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காரத்தக்க புருஷன் தாவீதுக்கு இல்லாமற்போவதில்லை.

எரே 33:18. தகனபலியிட்டு, போஜனபலி செலுத்தி, நாள்தோறும் பலியிடும் புருஷன் எனக்கு முன்பாக ஆசாரியருக்கும் லேவியருக்கும் இல்லாமற் போவதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

எரே 33:19. பின்னும் எரேமியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்:

எரே 33:20. குறித்த நேரங்களில் பகற்காலமும் இராக்காலமும் உண்டாகாதபடிக்கு, நீங்கள் பகற்காலத்தைக் குறித்து நான் பண்ணின உடன்படிக்கையையும், இராக்காலத்தைக் குறித்து நான் பண்ணின உடன்படிக்கையையும் அவமாக்கினால்,

எரே 33:21. அப்பொழுது என் தாசனாகிய தாவீதோடே நான் பண்ணின உடன் படிக்கையும், அவன் சிங்காசனத்தில் அரசாளும் குமாரன் அவனுக்கு இல்லாமற்போகும்படியாக அவமாகும்; என் ஊழியக்காரராகியலேவியரோடும் ஆசாரியரோடும் நான் பண்ணின உடன்படிக்கையும் அப்பொழுது அவமாகும்.

எரே 33:22. வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததும் கடற்கரை மணல் அளக்கப்படாததுமாயிருக்கிறது போல, நான் என் தாசனாகிய தாவீதின்சந்ததியையும் எனக்கு ஊழியஞ்செய்கிற லேவியரையும் வர்த்திக்கப் பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

எரே 33:23. பின்னும் எரேமியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்:

எரே 33:24. கர்த்தர் தெரிந்துகொண்ட இரண்டு வம்சங்களையும் வெறுத்துப்போட்டாரென்று இந்த ஜனம் சொல்லி, தங்களுக்கு முன்பாக என் ஜனம்இனி ஒரு ஜாதியல்லவென்று அதைத் தூஷிக்கிறார்களென்பதை நீ காண்கிறதில்லையோ?

எரே 33:25. வானத்துக்கும் பூமிக்கும் குறித்திருக்கிற நியமங்களை நான் காவாமல், பகற்காலத்தையும் இராக்காலத்தையுங்குறித்து நான் பண்ணின உடன்படிக்கை அற்றுப்போகிறது உண்டானால்,

எரே 33:26. அப்பொழுது நான் யாக்கோபின் சந்ததியையும், என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் தள்ளி, நான் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களின் சந்ததியை ஆளத்தக்கவர்களை அதிலிருந்து எடுக்காதபடிக்கு வெறுத்துப்போடுவேன்; அவர்களுடைய சிறையிருப்பை நான் திருப்பி, அவர்களுக்கு இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

கர்த்தர் மூன்று உடன்படிக்கைகளை பண்ணுகிறார். கர்த்தர் ராஜ்யபார உடன்படிக்கையை தாவீதோடும், அவருடைய சந்ததியாரோடும் பண்ணுகிறார். ஆசாரிய உடன்படிக்கையை ஆரோனோடும், அவருடைய சந்ததியாரோடும் பண்ணுகிறார். கர்த்தர் ஆபிரகாமோடும் அவருடைய சந்ததியாரோடும் உடன்படிக்கைபண்ணினார். ஆனால் இந்த உடன்படிக்கை முறிந்துபோயிற்று. ஆபிரகாமின் சந்ததியார் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போனபோது கர்த்தர் அவர்களோடு பண்ணின உடன்படிக்கை முறிந்துபோயிற்று.

யூதா வம்சத்தாரும் எருசலேம் வம்சத்தாரும் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போனாலும், கர்த்தர் அவர்களை மறந்துவிடவில்லை. அவர்களோடு புதிய உடன்படிக்கையை பண்ணுகிறார். இந்த உடன்படிக்கை கர்த்தருடைய நித்திய உடன்படிக்கையாயிருக்கிறது.

கர்த்தருடைய புதிய உடன் படிக்கையானது, புதிய ஏற்பாட்டுக்காலத்தில் கர்த்தருடைய சபையார் பெற்றுக்கொள்கிற ஆசீர்வாதங்களுக்கு அடையாளமாயிருக்கிறது. பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்த யூதர்களை கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். இந்த ஆசீர்வாதம், புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களுக்கு அடையாளமாகும்.

கர்த்தர் தாவீதோடு ராஜரீக உடன்படிக்கைபண்ணுகிறார். "இஸ்ரவேல் வம்சத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காரத்தக்க புருஷன் தாவீதுக்கு இல்லாமற்போவதில்லை" (எரே 33:17) என்று கர்த்தர் சொல்லுகிறார். இயேசுகிறிஸ்து தாவீதின் குமாரன். கிறிஸ்துவானவர் இந்தப் பூமியிலே தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறார். கர்த்தருடைய உடன் படிக்கையின் வாக்குத்தத்தம் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பூரணமாய் நிறைவேறியிருக்கிறது.

இஸ்ரவேல் வம்சத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போனபோது, இஸ்ரவேல் வம்சத்தின் சிங்காசனம் கவிழ்ந்துபோயிற்று. அந்த சிங்காசனத்தில் உட்காரத்தக்க புருஷன் ஒருவனும் இஸ்ரவேல் வம்சத்தில் இல்லை. அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்து, அங்கே சந்தோஷமாய்க் குடியேறினார்கள். அப்போது தாவீதின் குடும்பத்தார் மறுபடியும் முளைத்தெழும்புகிறார்கள்.

தாவீதின் வம்சத்தில் பல ராஜாக்கள் தோன்றினார்கள். ஆனாலும் கர்த்தர் இங்கு, "இஸ்ரவேல் வம்சத்தின் சிங்காசனத்தின்மேல் உட்காரத்தக்க புருஷன் தாவீதுக்கு இல்லாமற்போவதில்லை" (எரே 33:17) என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவைக் குறிப்பிடுகிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். அதுவே தேவனுடைய மகிமையான சிங்காசனம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சீயோனின் பரிசுத்த பர்வதத்தின்மீது ராஜாவாய் அமர்ந்து ஆட்சிசெய்கிறார். கிறிஸ்துவானவரே எல்லாவற்றிற்கும் தலையாயிருக்கிறார்.

தாவீதுக்கு தன்னுடைய சிங்காசனத்தில் வீற்றிருக்க, தன்னுடைய வம்சத்தில் ஒருவரும் தேவைப்படவில்லை. கர்த்தர் தாவீதோடு பண்ணின உடன்படிக்கை சிறையிருப்பு காலத்தில் முறிந்துபோயிற்று. அதை கர்த்தர் தாவீதுக்கு புதுப்பித்து தரவேண்டிய அவசியமில்லாமலும் போயிற்று.

"அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" (லூக் 1:32,33).

கர்த்தர் தாவீதோடு பண்ணிய உடன்படிக்கை, தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவில் உறுதியாய் நிலைத்திருக்கிறது. கர்த்தருடைய உடன்படிக்கை பரலோகத்தின் பிரமாணத்தைப்போல உறுதியாயிருக்கிறது. கர்த்தர் தாவீதோடு பண்ணிய உடன்படிக்கையை, "பகற்காலத்தையும் இராக்காலத்தையும் குறித்து கர்த்தர் பண்ணின உடன்படிக்கை" (எரே 33:20,25) என்று இந்த வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

குறித்த நேரங்களில் பகற்காலமும் இராக்காலமும் உண்டாகும். கர்த்தர் பகற்காலத்தைக் குறித்தும், இராக்காலத்தை குறித்தும் உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார். வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார். தேவன் வெளிச்சத்திற்கு பகல் என்று பேரிட்டார். இருளுக்கு இரவு என்று பேரிட்டார் (ஆதி 1:1-5). தேவன் பகலை ஆள பெரிய சுடரும், இரவை ஆள சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும் நட்சத்திரங்களையும் உண்டாக்கினார் (ஆதி 1:16).

கர்த்தருடைய உடன்படிக்கை மாறாத நித்திய உடன்படிக்கையாயிருக்கிறது. கர்த்தருடைய நியமத்தின் பிரகாரமாக பகலும் இரவும், தங்களுக்கு நியமிக்கப்பட்ட காலங்களில் வருகிறது.

"கடையாந்தர இடங்களில் குடியிருக்கிறவர்களும் உம்முடைய அடையாளங்களினிமித்தம் பயப்படுகிறார்கள்; காலையையும் மாலையையும் களிகூரப்பண்ணுகிறீர்" (சங் 65:8).

அருணோதயத்திற்கு எப்போது உதிக்கவேண்டும் என்று தெரியும். அது தன்னுடைய இடத்தையும், தன்னுடைய வேளையையும் அறிந்திருக்கிறது. இந்த உலகம் உள்ளவரையிலும், கர்த்தர் குறித்த நேரங்களில் பகற்காலமும் இராக்காலமும் உண்டாகும். கர்த்தருடைய உடன்படிக்கை மாறாத நித்திய உடன்படிக்கை. கர்த்தருடைய உடன்படிக்கையை யாரும் முறித்துப்போட முடியாது.

"குறித்த நேரங்களில் பகற்காலமும் இராக்காலமும் உண்டாகாதபடிக்கு, நீங்கள் பகற்காலத்தைக் குறித்து நான் பண்ணின உடன்படிக்கையையும், இராக்காலத்தைக் குறித்து நான் பண்ணின உடன்படிக்கையையும் அவமாக்கினால், அப்பொழுது என் தாசனாகிய தாவீதோடே நான் பண்ணின உடன் படிக்கையும், அவன் சிங்காசனத்தில் அரசாளும் குமாரன் அவனுக்கு இல்லாமற்போகும்படியாக அவமாகும்" (எரே 33:20,21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் பகற்காலத்தைக்குறித்தும், இராக்காலத்தைக் குறித்தும் உறுதியான உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். அதுபோலவே தம்முடைய தாசனாகிய தாவீதைக்குறித்தும் கர்த்தர் உறுதியான உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். அதுபோலவே, தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்தும், அவர் மூலமாய் உண்டாகும் ஆத்தும இரட்சிப்பைக்குறித்தும் கர்த்தர் உறுதியான உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்.

கிறிஸ்து தம்முடைய சபையை இந்தப் பூமியில் ஸ்தாபித்திருக்கிறார். இந்தப் பூமி இருக்கும் வரையிலும், இந்தப் பூமியில், இயேசுகிறிஸ்துவின் சபையும் இருக்கும். இந்த உலகத்தின் முடிவுக்கு பின்பு காலங்களும் நாட்களும் இருக்காது. உலகம் உள்ளவரையிலும் காலங்களும், நாட்களும் இருக்கும். அதுவரையிலும் கிறிஸ்துவின் சபையும் இருக்கும்.

கிறிஸ்துவின் ராஜ்யம் நித்தியமான ராஜ்யம். இந்த உலகத்திற்கு முடிவு வரும்போது, குமாரனாகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய ராஜ்யத்தை, பிதாவாகிய தேவனுடைய கையில் ஒப்புக்கொடுப்பார். அதுவரையிலும் கிறிஸ்துவின் ராஜ்யம் இந்தப் பூமியில் நிலைத்திருக்கும். குறித்த நேரங்களில், இந்தப் பூமியின்மீது பகற்காலமும் இராக்காலமும் உண்டாகும். அதுபோலவே கிறிஸ்துவின் ராஜ்யத்தில் சந்தோஷமும் துக்கமும், செழிப்பும் தாழ்ச்சியும், அடிமைத்தனமும் சுயாதீனமும் உண்டாகும்.

ஒவ்வொரு நாள் மாலையிலும் சூரியன் மறைகிறது. மறுநாள் காலையில் சூரியன் மறுபடியும் உதிக்கிறது. நாம் சூரியன் உதிப்பதையும், மறைவதையும் கவனித்துப் பார்த்தாலும், கவனித்துப் பார்க்காவிட்டாலும், சூரியன் உதிப்பதும் மறைவதும் தொடர்ந்து நடைபெறும். இது கர்த்தருடைய மாறாத பிரமாணம். அதுபோலவே இந்த உலகத்திலுள்ள கிறிஸ்துவின் ராஜ்யத்தில், பாடுகளும் வேதனைகளும் இருக்கும். குறித்த வேளை வரும்போது பாடுகளும் வேதனைகளும் நீங்கும். சந்தோஷமும் சமாதானமும் உண்டாகும். துக்கமும் சந்தோஷமும் மாறி மாறி வரும். ஒவ்வொன்றும் அதற்கென்று நியமிக்கப்பட்ட காலத்தில் உண்டாகும்.

வானத்து நட்சத்திரங்களை எண்ணமுடியாது. அதுபோலவே கடற்கரை மவ்லையும் அளக்க முடியாது. இவை இரண்டும் எண்ணமுடியாதவை. அளக்க முடியாதவை. அதுபோலவே கர்த்தருடைய தாசனாகிய தாவீதின் சந்ததியும் எண்ண முடியாததும், அளக்க முடியாததுமாயிருக்கும். கர்த்தர் தாவீதின் சந்ததியை வர்த்திக்கப் பண்ணுவார். "வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாததும் கடற்கரை மணல் அளக்கப்படாததுமாயிருக்கிறது போல, நான் என் தாசனாகிய தாவீதின் சந்ததியை வர்த்திக்கப் பண்ணுவேன்" (எரே 33:22) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு இரட்சிக்கப் பட்டவர்களெல்லோருமே கிறிஸ்துவின் ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மேசியாவின் ஆவிக்குரிய சந்ததியாராயிருக்கிறார்கள். இவர்கள் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் பிறந்தவர்கள். கிறிஸ்துவின் சந்ததியைச் சேர்ந்தவர்கள் தாவீதின் சந்ததியை சேர்ந்தவர்களைப் போன்றவர்கள் அல்ல. தாவீதும் ராஜாவாயிருக்கிறார். அவருடைய சந்ததியாரும் ராஜாவாயிருக்கிறார்கள். கிறிஸ்து மாத்திரமே தம்முடைய சந்ததியாருக்கு ராஜாவாயிருக்கிறார். விசுவாசிகள் கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கிற பிரஜைகளாயிருக்கிறார்கள். கர்த்தருடைய நாள் வரும். அப்போது கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களும், அவரோடுகூட ஆளுகை செய்வார்கள்.

கர்த்தர் லேவியின் குடும்பத்தாரோடு உடன்படிக்கை பண்ணுகிறார். "தகனபலி யிட்டு, போஜனபலி செலுத்தி, நாள்தோறும் பலியிடும் புருஷன் எனக்கு முன்பாக ஆசாரியருக்கும் லேவியருக்கும் இல்லாமற் போவதுமில்லை" (எரே 33:18) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் லேவியரையும் ஆசாரியரையும் குறித்து சொல்லியிருக்கிற ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்கள் நிச்சயமாய் நிறைவேறும்.

குறித்த நேரங்களின் பகற்காலமும், இராக்காலமும் உண்டாவதுபோல, கர்த்தர் தம்முடைய ஊழியக்காரராகிய லேவியரோடும் ஆசாரியரோடும் பண்ணின உடன்படிக்கையும் நிலைத்திருக்கும் (எரே 33:21). கர்த்தர் தமக்கு ஊழியம் செய்கிற லேவியரை வர்த்திக்கப்பண்ணுவார் (எரே 33:22).

இஸ்ரவேல் வம்சத்தாரும் யூதாவம்சத்தாரும் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தபோது, அங்கே அவர்களுக்கு தேவாலயமும் இல்லை, பலிபீடமும் இல்லை. தேவாலய ஊழியமும் நடைபெறவில்லை. பாபிலோன் தேசத்தில் ஆசாரியர் செய்ய வேண்டிய ஊழியம் என்று எதுவுமே இல்லை. ஆனாலும் அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வந்து, அங்கே குடியேறும்போது, ஆசாரிய ஊழியமும், லேவியரின் ஊழியமும் மறுபடியும் புதுப்பிக்கப்படும்.

பாபிலோன் தேசத்திலிருந்து யூதாவின் மனுஷர் எருசலேமுக்கு திரும்பி வந்தவுடன் ஆசாரியரும், லேவியரும் பலிபீடத்தில் பலிசெலுத்த ஆயத்தமாயிருப்பார்கள்.

"அப்பொழுது யோசதாக்கின் குமாரனாகிய யெசுவாவும், அவன் சகோதரராகிய ஆசாரியரும், செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும், அவன் சகோதரரும் எழும்பி, தேவனுடைய மனிதனாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி சர்வாங்க தகனங்களைப் பலியிடும்படிக்கு, இஸ்ரவேலுடைய தேவனின் பலிபீடத்தைக் கட்டினார்கள். அவர்கள் அத்தேசத்தின் ஜனங்களுக்குப் பயந்ததினால், பலிபீடத்தை அதின் ஆதாரங்களின்மேல் ஸ்தாபித்து, அதின்மேல் அவர்கள் கர்த்தருக்கு அந்திசந்தி சர்வாங்க தகனபலிகளைச் செலுத்தினார்கள்" (எஸ்றா 3:2,3).

"தகனபலியிட்டு, போஜனபலி செலுத்தி, நாள்தோறும் பலியிடும் புருஷன் எனக்கு முன்பாக ஆசாரியருக்கும் லேவியருக்கும் இல்லாமற் போவதுமில்லை" (எரே 33:18) என்று கர்த்தர் சொன்னார். கர்த்தர் சொன்ன பிரகாரமாகவே ஆசாரியர்களும் லேவியரும் கர்த்தருக்கு முன்பாக நாள்தோறும் தகனபலியிட்டு, போஜனபலிகளைச் செலுத்துவார்கள்.

சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள் மத்தியில் ஆசாரிய ஊழியம் புதுப்பிக்கப்பட்டது. ஆனாலும் ஆசாரியர்கள் தங்கள் ஊழியத்தை ஒழுங்காய்ச் செய்யவில்லை. அவர்கள் தங்கள் ஆசாரிய ஊழியத்தைக் கறைப்படுத்தினார்கள். ஆசாரியர்களும் லேவியர்களும் தங்கள் ஊழியங்களை கெடுத்துப்போட்டார்கள்.

"நீங்களோ வழியைவிட்டு விலகி, அநேகரை வேதத்தைக்குறித்து இடறப்பண்ணினீர்கள்; லேவியின் உடன்படிக்கையைக் கெடுத்துப்போட்டீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல் 2:8).

ரோமப்பேரரசார் எருசலேமை முற்றிலுமாய் அழித்துப்போட்டார்கள். தேவாலயத்தை தீயினால் எரித்துவிட்டார்கள். அத்தோடு ஆசாரியரின் ஊழியமும், லேவியரின் ஊழியமும் முடிந்துபோயிற்று.

இயேசுகிறிஸ்துவின் ஆசாரிய ஊழியம் ஆரோனின் ஆசாரிய ஊழியத்தைவிட மேன்மையானது. ஆரோனின் ஆசாரிய ஊழியம் நிழலாயிருக்கிறது. கிறிஸ்துவின் ஆசாரிய ஊழியமே மெய்யானது. கிறிஸ்துவே நம்முடைய பிரதான ஆசாரியர்.

"இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்; இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்" (எபி 7:3).

"நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்" (எபி 7:17).

இயேசுகிறிஸ்துவே நம்முடைய நித்திய பிரதான ஆசாரியர். இப்போது இயேசுகிறிஸ்துவின் சபைகளில் ஆசாரியரும் லேவியரும் ஊழியம் செய்யவில்லை. ஆரோனின் கோத்திரத்தார் யாரும் சபையிலே ஆசாரிய ஊழியத்தை செய்யவில்லை. கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியக்காரர்கள் கர்த்தருக்கு ஆவிக்குரிய ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் சபை ஆராதனையை நடத்துகிறார்கள். ஜெபத்தை நடத்துகிறார்கள். துதிஆராதனைகளை நடத்துகிறார்கள். கர்த்தர் புதிய ஏற்பாட்டுக்காலத்து ஊழியர்களுக்கு, தம்முடைய உன்னதமான ஆசாரிய ஊழியத்தில், ஒரு பங்கைக் கொடுத்திருக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் ஆசாரியர்களும் லேவியர்களும் பலிபீடத்தில் ஊழியம் செய்ததுபோல, புதியஏற்பாட்டுக் காலத்து அப்போஸ்தலர்களும், கர்த்தருடைய ஊழியர்களும், கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாக நின்று, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள்.

"ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலி பீடத்திலுள்ளவைகளில் பங்குஉண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1கொரி 9:13,14).

கிறிஸ்துவின் உண்மையான விசுவாசிகள் எல்லோருமே பரிசுத்த ஆசாரிய கூட்டமாகவும், ராஜரீகமான ஆசாரிய கூட்டமாகவும் இருக்கிறார்கள்.

"ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்" (1பேது 2:5).

"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேது 2:9).

"நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (வெளி 1:6).

கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் கர்த்தருக்கு ஆவிக்குரிய பலிகளைச் செலுத்துகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பலிகளை அங்கீகரிக்கிறார். நாம் கர்த்தருக்கு நம்முடைய பலிகளையும் காணிக்கைகளையும் செலுத்துவதற்கு முன்பாக, நம்மையே ஜீவனுள்ள பலியாக முதலாவதாக ஒப்புக்கொடுக்கவேண்டும். தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரவேலர் எல்லோருமே, அவருடைய ஆவிக்குரிய ஆசாரியராயிருக்கிறார்கள்.

"தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள்" (வெளி 5:9,10).

"இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்" (வெளி 7:9).

"ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்" (வெளி 7:15).

இஸ்ரவேல் வம்சத்தாரும் யூதா வம்சத்தாரும் கர்த்தருக்கு விசேஷித்த ஜனமாயிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தோடு விசேஷித்த உடன்படிக்கை செய்து, அவர்களை தமக்கு விசேஷித்த ஜாதியாகத் தெரிந்துகொண்டார். ஆனாலும் கர்த்தர் தெரிந்துகொண்ட இந்த இரண்டு வம்சங்களையும் வெறுத்துப்போட்டார். இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதாவம்சத்தாரும் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போக கர்த்தர் அனுமதி கொடுத்தார். தாம் தெரிந்துகொண்டவர்களையே கர்த்தர் வெறுத்துப்போட்டதினால், அவர்களுக்கு சிறையிருப்பு உண்டாயிற்று. அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த காலத்தில் கர்த்தருடைய உடன்படிக்கை அவர்களுக்கு முறிந்துபோயிற்று.

"கர்த்தர் தெரிந்துகொண்ட இரண்டு வம்சங்களையும் வெறுத்துப்போட்டாரென்று இந்த ஜனம் சொல்லி, தங்களுக்கு முன்பாக என் ஜனம்இனி ஒரு ஜாதியல்லவென்று அதைத் தூஷிக்கிறார்களென்பதை நீ காண்கிறதில்லையோ?" *(எரே 33:24)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலுக்கு சத்துருவாயிருக்கிறவர்களும், கர்த்தரை விசுவாசியாத இஸ்ரவேலரும், கர்த்தரோடு பண்ணிக்கொண்ட உடன்படிக்கையை முறித்துப்போடுவார்கள். கர்த்தரோ தம்முடைய ஜனத்தோடு பண்ணிக்கொண்ட உடன் படிக்கையில் உண்மையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய உடன்படிக்கை மாறாத, நித்திய உடன்படிக்கையாயிருக்கிறது.

இஸ்ரவேல் வம்சத்தாரும், யூதாவம்சத்தாரும் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போனபோது, புறஜாதி ஜனங்கள் கர்த்தருடைய ஜனத்தைத் தூஷிக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை வெறுத்துப்போட்டார் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக இனி ஒரு ஜாதியாக இருக்கமாட்டார்கள் என்று சொல்லி அவர்களைத் தூஷிக்கிறார்கள். தம்முடைய ஜனத்திற்கு கர்த்தர் இனிமேல் ஆசீர்வாதங்களையும், சிலாக்கியங்களையும் கொடுக்கமாட்டார் என்று சொல்லுகிறார்கள். கர்த்தருடைய ஜனமாயிருப்பதினால் ஒரு நன்மையும் உண்டாகாது என்பது புறஜாதியாரின் விவாதம்.

கர்த்தரோ தம்முடைய வார்த்தையிலும், தம்முடைய உடன்படிக்கையிலும் உறுதியாயிருக்கிறார். கர்த்தர் வானத்திற்கும் பூமிக்கும் குறித்திருக்கிற நியமங்களைக் காத்துக்கொள்கிறார். கர்த்தர் தம்முடைய நியமங்களை ஒருபோதும் மறப்பதில்லை. கர்த்தர் குறித்த நேரங்களில் பகற்காலமும் இராக்காலமும் உண்டாகும்படிக்கு உடன் படிக்கை பண்ணியிருக்கிறார். கர்த்தர் பகற்காலத்தையும் இராக்காலத்தையும் குறித்து பண்ணின உடன்படிக்கை நிலைத்திருக்கும். அது ஒருபோதும் அற்றுப்போவதில்லை. அதுபோலவே கர்த்தர் யாக்கோபின் சந்ததியோடும் தம்முடைய தாசனாகிய தாவீதின் சந்ததியோடும் பண்ணிய உடன்படிக்கையும் நிலைத்திருக்கும்.

யாக்கோபின் சந்ததி என்னும் வாக்கியம், யாக்கோபின் மாம்சப்பிரகாரமான சந்ததியைக் குறிக்காது. கர்த்தர் யாக்கோபின் மாம்சப்பிரகாரமான சந்ததியாரை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குத் தள்ளிவிட்டார். அவர்களை அந்நிய ஜாதியார் மத்தியில் துரத்திவிட்டார். யாக்கோபின் சந்ததி என்னும் வாக்கியம், யாக்கோபின் ஆவிக்குரிய சந்ததியைக் குறிக்கும். இவர்கள் கிறிஸ்துவின் சபையார். இயேசுகிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களெல்லாம், அவருடைய விசுவாசிகளுக்கு நிறைவேறும்.

"இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன், தள்ளிவிடவில்லையே; நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரவேலன். தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை. எலியாவைக்குறித்துச் சொல்லிய இடத்தில், வேதம் சொல்லுகிறதை அறியீர்களா? அவன் தேவனை நோக்கி: கர்த்தாவே, உம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலைசெய்து, உம்முடைய பலிபீடங்களை இடித்துப்போட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன், என் பிராணனையும் வாங்கத்தேடுகிறார்களே என்று இஸ்ரவேலருக்கு விரோதமாய் விண்ணப்பம்பண்ணினபோது, அவனுக்கு உண்டான தேவ உத்தரவு என்ன? பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம்பேரை எனக்காக மீதியாக வைத்தேன் என்பதே" *(ரோம 11:1-4).*

கர்த்தருடைய தாசனாகிய தாவீதின் சந்ததியில் கிறிஸ்துவானவர் பிறந்திருக்கிறார். இவரே ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களின் ஆவிக்குரிய சந்ததியை ஆளத்தக்கவர். இயேசுகிறிஸ்துவின் ராஜ்யமும், அவருடைய ஆளுகையும் நிலைத்திருக்கும். கர்த்தர் வானத்திற்கும் பூமிக்கும் குறித்திருக்கிற நியமங்களும், கர்த்தர் பகற்காலத்தையும் இராக்காலத்தையும் குறித்து பண்ணின உடன்படிக்கையும் நிலைத்திருப்பதுபோல, இயேசுகிறிஸ்துவின் ராஜ்யமும், அவருடைய ஆளுகையும் நிலைத்திருக்கும்.

"அவர்களுடைய சிறையிருப்பை நான் திருப்பி அவர்களுக்கு இரங்குவேன்" (எரே 33:26) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வாக்குத்தத்தமும் புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளுக்கு உரியது. கிறிஸ்துவானவர் நம்முடைய பாவத்தின் கட்டுக்களிலிருந்து நம்மை விடுவிப்பார். கர்த்தர் நமக்கு இரக்கம் காண்பிப்பார்.

"இந்தப் பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும், தேவனுடைய இஸ்ரவேலருக்கும், சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக" (கலா 6:16). கிறிஸ்துவை விசுவாசிக்கிற விசுவாசிகளே தேவனுடைய இஸ்ரவேலராயிருக்கிறார்கள்.

34 அதிகாரம்

கர்த்தர் எரேமியா மூலமாய் இரண்டு செய்திகளை அனுப்புகிறார். முதலாவது செய்தி யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவைப்பற்றியது. அவன் பாபிலோன் ராஜாவின் கைகளில் விழுவான். சிதேக்கியா பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போவான். சிதேக்கியா தன்னுடைய சிறையிருப்பில் சமாதானமாய் மரித்துப்போவான் (எரே 34:1-7).

இரண்டாவது செய்தி பிரபுக்களையும் ஜனங்களையும் பற்றியது. அவர்கள் தங்கள் யூதஜாதியாராகிய எபிரெய அடிமைகளை, கர்த்தரோடு உடன்படிக்கை செய்து விடுதலைபண்ணினார்கள். ஆனாலும் அதற்கு பின்பு அவர்கள் மாறாட்டம் பண்ணி, தாங்கள் சுயாதீனராக அனுப்பிவிட்ட வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் மறுபடியும் அழைப்பித்து, அவர்களை அடிமைப்படுத்திக்கொண்டார்கள் (எரே 34:8-11).

யூதாமனுஷரின் பாவங்களினிமித்தமாய், கர்த்தர் கல்தேயரை மறுபடியும் அவர்களுக்கு விரோதமாக அனுப்புவார் (எரே 34:12-22).

யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவே எரே 34:1-7

எரே 34:1. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் அவனுடைய சர்வசேனையும், அவன் ஆளுகைக்குட்பட்ட பூமியின் சகல ராஜ்யங்களும், சகல ஜனங்களும் எருசலேமுக்கும் அதைச் சேர்ந்த சகல பட்டணங்களுக்கும் விரோதமாக யுத்தம்பண்ணுகையில் எரேமியாவுக்குக் கர்த்தரால் உண்டான வார்த்தை:

எரே 34:2. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நீ போய், யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவினிடத்தில் பேசி, அவனுக்குச் சொல்லவேண்டியது: இதோ, நான் இந்த நகரத்தைப் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கிறேன்; அவன் இதை அக்கினியால் சுட்டெரிப்பான்.

எரே 34:3. நீ அவன் கைக்குத் தப்பிப் போகாமல், நிச்சயமாய்ப் பிடிபட்டு, அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாய்; உன் கண்கள் பாபிலோன் ராஜாவின் கண்களைக் காணும்; அவன் வாய் உன்வாயோடே பேசும்; நீ பாபிலோனுக்குப் போவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 34:4. ஆகிலும் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவே, கர்த்தருடைய வார்த்தையைக் கேள்; உன்னைக்குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீ பட்டயத்தாலே சாவதில்லை.

எரே 34:5. சமாதானத்தோடே சாவாய்; உனக்கு முன்னிருந்த ராஜாக்களாகிய உன் பிதாக்களினிமித்தம் கந்தவர்க்கங்களைக் கொளுத்தினதுபோல உன்னிமித்தமும் கொளுத்தி, ஐயோ! ஆண்டவனே, என்று சொல்லி, உனக்காகப் புலம்புவார்கள்; இது நான் சொன்ன வார்த்தையென்று கர்த்தர் உரைத்தார் என்று சொல் என்றார்.

எரே 34:6. இந்த வார்த்தைகளையெல்லாம் தீர்க்கதரிசியாகிய எரேமியா எருசலேமிலே யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவினிடத்தில் சொன்னான்.

எரே 34:7. அப்பொழுது பாபிலோன் ராஜாவின் சேனைகள் எருசலேமுக்கு விரோதமாகவும், யூதாவின் எல்லாப் பட்டணங்களிலும் மீந்த பட்டணங்களாகிய லாகீசுக்கும், அசெக்காவுக்கும் விரோதமாகவும் யுத்தம் பண்ணிக் கொண்டிருந்தது; யூதாவின் அரணிப்பான பட்டணங்களில் இவைகளே மீந்திருந்தவைகள்.

கர்த்தர் சிதேக்கியாவைக்குறித்தும், யூதாவின் மனுஷரைக் குறித்தும் எரேமியா மூலமாய் தம்முடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார். சிதேக்கியா பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு போவதற்கு முன்பாக கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு வெளிப்படுத்தப்பட்டது.

"யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா கல்தேயருடைய கைக்குத் தப்பிப்போகாமல், பாபிலோன் ராஜாவின் கையில் நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப்படுவான்; அவன் வாய் இவன் வாயோடே பேசும்; அவன் கண்கள் இவன் கண்களைக் காணும்" (எரே 32:4).

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் அவனுடைய சர்வசேனையும், அவன் ஆளுகைக்குட்பட்ட பூமியின் சகல ராஜ்யங்களும், சகலஜனங்களும் எருசலேமுக்கும் அதைச் சேர்ந்த சகல பட்டணங்களுக்கும் விரோதமாக யுத்தம் பண்ணுகிறார்கள் (எரே 34:1). அப்போது எரேமியாவுக்கு கர்த்தரால் வார்த்தை உண்டாயிற்று.

நேபுகாத்நேச்சார் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறான். அவன் யூதாவின் பட்டணங்களில் பலவற்றை அழித்துப்போட்டான். லாகீசும், அசெக்காவும் இன்னும் அழியவில்லை. நேபுகாத்நேச்சார் இந்த இரண்டு பட்டணங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணிக் கொண்டிருக்கிறான். லாகீசுக்கும் அசெக்காவுக்கும் விரோதமாக நேபுகாத்நேச்சார் யுத்தம்பண்ணும்போது, எருசலேமுக்கு விரோதமாகவும் யுத்தம் பண்ணுகிறான் (எரே 34:7).

சிதேக்கியா ராஜாவால் நேபுகாத்நேச்சாரை எதிர்க்க முடியவில்லை. யூதாவின் பல பட்டணங்கள் அழிந்துபோயிற்று. யூதாதேசம் முற்றிலுமாக அழியக்கூடிய நிலமைக்கு வந்திருக்கிறது. ஆனாலும் சிதேக்கியா இன்னும் நேபுகாத்நேச்சாருக்கு பணியாமல், அவனுக்கு விரோதமாக யுத்தம்பண்ண நினைக்கிறான்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கும், யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவுக்கும் இடையே யுத்தம் நடைபெறும்போது, எரேமியா தீர்க்கதரிசி சிதேக்கியாவினிடத்தில் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

"இதோ, நான் இந்த நகரத்தைப் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கிறேன்; அவன் இதை அக்கினியால் சுட்டெரிப்பான். நீ அவன் கைக்குத்தப்பிப்போகாமல், நிச்சயமாய்ப் பிடிபட்டு, அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாய்; உன் கண்கள் பாபிலோன் ராஜாவின் கண்களைக் காணும்; அவன் வாய் உன்வாயோடே பேசும்; நீ பாபிலோனுக்குப் போவாய்" (எரே 34:2,3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எருசலேம் நகரமும் அழிக்கப்படும். சிதேக்கியா ராஜாவும் கைதுபண்ணப்படுவான். அவன் நேபுகாத்நேச்சாருக்கு முன்பாக நொறுக்கப்படுவான். அதன் பின்பு சிதேக்கியா பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போகப்படுவான்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி சிதேக்கியா ராஜாவைப்பற்றி தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். சிதேக்கியா பாபிலோனைப் பார்க்கமாட்டான் என்று எசேக்கியேல் சொல்லுகிறார். சிதேக்கியாவின் கண்களை நேபுகாத்நேச்சார் பிடுங்கிப்போட்டான். ஆகையினால் அவன் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போன போது, கண்கள் பிடுங்கப்பட்ட குருடனாகவே போனான். அவனால் பாபிலோன் தேசத்தை பார்க்க முடியவில்லை.

"நான் என் வலையை அவன்மேல் வீசுவேன், அவன் என் கண்ணியிலே பிடிபடுவான்; அவனைக் கல்தேயர் தேசமாகிய பாபிலோனுக்குக் கொண்டுபோவேன்; அங்கே அவன் சாவான்; ஆகிலும் அதைக் காணமாட்டான்" (எசே 12:13).

சிதேக்கியாவுக்கு எப்படிப்பட்ட மரணமுண்டாகும் என்றும் கர்த்தர் எரேமியா மூலமாய்ச் சொல்லுகிறார். "நீ பட்டயத்தாலே சாவதில்லை. சமாதானத்தோடே சாவாய்; உனக்கு முன்னிருந்த ராஜாக்களாகிய உன் பிதாக்களினிமித்தம் கந்தவர்க்கங்களைக் கொளுத்தினதுபோல உன்னிமித்தமும் கொளுத்தி, ஐயோ! ஆண்டவனே, என்று சொல்லி, உனக்காகப் புலம்புவார்கள்" (எரே 34:4,5) என்று கர்த்தர் சிதேக்கியாவின் மரணத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

சிதேக்கியா யூதாதேசத்தின் ராஜாவாயிருந்தபோது கர்த்தருக்கு விரோதமாக அநேகம் பாவங்களைச் செய்தான். ஆனாலும் அவன் பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் அடைக்கப்பட்டிருந்த போதோ, தன்னுடைய பாவங்களுக்கெல்லாம் மனந்திரும்பினான். கர்த்தரோடு ஒப்புரவானான். கர்த்தரும் சிதேக்கியாவின் பாவங்களை மன்னிக்கிறார். "நீ சமாதானத்தோடே சாவாய்" என்று கர்த்தர் சிதேக்கியாவுக்கு வாக்குப்பண்ணுகிறார்.

சிதேக்கியா ராஜா யூதாதேசத்து சிங்காசனத்தில் வீற்றிருந்தபோது, கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினான். அவனுடைய இருதயம் பெருமையினால் நிரம்பியிருந்தது. அவன் சிறைப்பட்டுப்போனபோதோ அவனுக்கு அநேகம் வேதனைகளும், துன்பங்களும், உபத்திரவங்களும் உண்டாயிற்று. சிதேக்கியா அனுபவித்த பாடுகளும் வேதனைகளும் அவனுடைய சுபாவத்தை மாற்றிற்று. சிதேக்கியா உயிரோடிருந்தகாலத்தில் அவனால் சமாதானமாயிருக்க முடியவில்லை. ஆனாலும் தன்னுடைய முடிவுகாலத்தில், அவன் கர்த்தருக்கு பயந்து ஜீவித்ததினால் சிதேக்கியா சமாதானத்தோடே செத்துப்போனான்.

ஒரு அரண்மனையில் பாவியாக ஜீவிப்பதைவிட, ஒரு சிறைச்சாலையில் கர்த்தருக்கு பயந்து பரிசுத்தவானாய் ஜீவிப்பதே மேன்மையானது. அவிசுவாசியாய் அரண்மனையின் ஆடம்பரமான சுகங்களை அனுபவிப்பதைக் காட்டிலும், விசுவாசியாய் சிறைச்சாலையின் வேதனைகளை அனுபவிப்பது நல்லது.

சிதேக்கியா ராஜாவின் சகோதரன் யோயாக்கீம் மரித்துப்போனபோது அவனுக்காக யாரும் புலம்பவில்லை.

"ஆகையால் கர்த்தர் யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்கிற யூதாவின் ராஜாவைக்குறித்து: ஐயோ! என் சகோதரனே, ஐயோ! சகோதரியே, என்று அவனுக்காகப் புலம்புவதில்லை; ஐயோ! ஆண்டவனே, ஐயோ! அவருடைய மகத்துவமே, என்று அவனுக்காகப் புலம்புவதில்லை. ஒரு கழுதை புதைக்கப்படுகிற வண்ணமாய் அவன் எருசலேமின் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து புதைக்கப்படுவான் என்று சொல்லுகிறார்" (எரே 22:18,19).

சிதேக்கியா ராஜா மரித்துப்போனபோதோ, ஜனங்கள் அவனுக்காக அழுது புலம்பினார்கள். "உனக்கு முன்னிருந்த ராஜாக்களாகிய உன் பிதாக்களினிமித்தம் கந்தவர்க்கங்களைக் கொளுத்தினதுபோல உன்னிமித்தமும் கொளுத்தி, ஐயோ! ஆண்டவனே, என்று சொல்லி, உனக்காகப் புலம்புவார்கள்" (எரே 34:5) என்று கர்த்தர் சிதேக்கியாவின் மரணத்தைக் குறித்து சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய்ச் சொல்லுகிறார். அவர் கர்த்தருக்கு உண்மையுள்ள தீர்க்கதரிசி. கர்த்தர் சொன்ன வார்த்தையைக்கேட்டு சிதேக்கியா ராஜா எரேமியாவின்மீது கோபப்படுகிறார். இதன் நிமித்தமாய் சிதேக்கியா எரேமியாவை சிறையில் அடைத்துவிடுகிறார். ஆனாலும் கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை யெல்லாம், தீர்க்கதரிசியாகிய எரேமியா, எருசலேமிலே, யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவினிடத்தில் சொல்லுகிறார் (எரே 34:6).

சுயாதீனராக அனுப்பிவிட வேண்டும்
எரே 34:8-22

எரே 34:8. ஒருவனும் யூதஜாதியானாகிய தன் சகோதரனை அடிமைகொள்ளாதபடிக்கு, அவனவன் எபிரெயனாகிய தன் வேலைக்காரனையும், எபிரெய ஸ்திரீயாகிய தன் வேலைக்காரியையும் சுயாதீனராக அனுப்பிவிடவேண்டு மென்று அவர்களுக்கு விடுதலையைக் கூறும்படி,

எரே 34:9. ராஜாவாகிய சிதேக்கியா எருசலேமில் இருக்கிற எல்லா ஜனத்தோடும் உடன்படிக்கை பண்ணினபின்பு, எரேமியாவுக்குக் கர்த்தரால் வார்த்தை உண்டாயிற்று.

எரே 34:10. ஒவ்வொருவனும் தன் வேலைக்காரனையும் தன் வேலைக்காரியையும் இனி அடிமை கொள்ளாதபடிக்கு, சுயாதீனராக அனுப்பிவிடவேண்டுமென்று உடன் படிக்கைக்கு உட்பட்ட எல்லாப் பிரபுக்களும் எல்லா ஜனங்களும் கேட்டபோது, செவிகொடுத்து அவர்களை அனுப்பிவிட்டார்கள்.

எரே 34:11. ஆனாலும் அதற்குப்பின்பு அவர்கள் மாறாட்டம்பண்ணி, தாங்கள் சுயாதீனராக அனுப்பிவிட்ட வேலைக் காரரையும் வேலைக்காரிகளையும் மறுபடியும் அழைப்பித்து, அவர்களை வேலைக்காரரும் வேலைக்காரிகளுமாயிருக்கும்படி அடிமைப்படுத்திக் கொண்டார்கள்.

எரே 34:12. ஆதலால், கர்த்தராலே எரேமியாவுக்கு வார்த்தை உண்டாகி, அவர்:

எரே 34:13. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், அவனவன் தனக்கு விற்கப்பட்ட எபிரெயனாகிய தன் சகோதரனை முடிவிலே நீங்கள் ஏழாம் வருஷத்திலே அனுப்பிவிடவேண்டும் என்றும், அவன் உனக்கு ஆறுவருஷம் அடிமையாயிருந்தபின்பு, அவனை உன்னிடத்தில் வைக்காமல் சுயாதீனனாக அனுப்பிவிடவேண்டும் என்றும்,

எரே 34:14. நான் உங்கள் பிதாக்களை அடிமைவீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாளிலே அவர்களோடே உடன்படிக்கை பண்ணினேன்; ஆனாலும் உங்கள் பிதாக்கள் என் சொல்லைக் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும் போனார்கள்.

எரே 34:15. நீங்களோ, இந்நாளிலே மனந்திரும்பி, அவனவன் தன் அயலானுக்கு விடுதலையைக் கூறினவிஷயத்திலே என் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, என் நாமம் தரிக்கப்பட்ட ஆலயத்திலே இதற்காக என் முகத்துக்குமுன் உடன்படிக்கைபண்ணியிருந்தீர்கள்.

எரே 34:16. ஆனாலும் நீங்கள் மாறாட்டம்பண்ணி, என்நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, நீங்கள் அவனவன் விடுதலையாகவும் சுயாதீனராகவும் அனுப்பிவிட்ட தன் வேலைக்காரனையும் தன் வேலைக் காரியையும் திரும்ப அழைத்து வந்து, அவர்களை உங்களுக்கு வேலைக்காரரும் வேலைக்காரிகளுமாயிருக்கும்படி அடிமைப்படுத்தினீர்கள்.

எரே 34:17. ஆகையால் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நீங்கள் அவனவன் தன் சகோதரனுக்கும் அவனவன் தன் அயலானுக்கும் விடுதலையைக் கூறினவிஷயத்தில் என் சொல்லைக் கேளாமற்போனீர்களே; இதோ, நான் உங்களைப் பட்டயத்துக்கும், கொள்ளை நோய்க்கும், பஞ்சத்துக்கும் ஒப்புக்கொடுக்கிற விடுதலையை உங்களுக்குக் கூறுகிறேன்; பூமியின் ராஜ்யங்களிலெல்லாம் அலைகிறதற்கும் உங்களை ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 34:18. என் முகத்துக்குமுன் பண்ணின உடன்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றாமல், என் உடன்படிக்கையை மீறின மனுஷரை நான் துண்டங்களின் நடுவாகக் கடந்துபோகும்படி அவர்களை இரண்டாகத் துண்டித்த கன்றுக்குட்டியைப்போல் ஆக்குவேன்.

எரே 34:19. கன்றுக்குட்டியின் துண்டுகளின் நடுவே கடந்துபோன யூதாவின் பிரபுக்களையும், எருசலேமின் பிரபுக்களையும், பிரதானிகளையும், ஆசாரியர்களையும், தேசத்தின் சகல ஜனங்களையும் அப்படிச் செய்து,

எரே 34:20. நான் அவர்களை அவர்கள் சத்துருக்களின்கையிலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்; அவர்களுடைய பிரேதம் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்.

எரே 34:21. யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவையும் அவனுடைய பிரபுக்களையும் அவர்கள் சத்துருக்களின் கையிலும்; அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும், உங்களை விட்டுப்பேர்ந்து போன பாபிலோன் ராஜாவினுடைய சேனைகளின் கையிலும் ஒப்புக் கொடுப்பேன்.

எரே 34:22. இதோ, நான் கட்டளைகொடுத்து, அவர்களை இந்த நகரத்துக்குத் திரும்பப்பண்ணுவேன்; அவர்கள் அதற்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதைப்பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்; யூதாவின் பட்டணங்களையும், ஒருவரும் அவைகளில் குடியிராதபடிப் பாழாய்ப்போகப்பண்ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

கர்த்தர் எரேமியா மூலமாய் இரண்டு தீர்க்கதரிசனங்களை வெளிப்படுத்துகிறார். ஒன்று சிதேக்கியா ராஜாவின் மரணத்தைப் பற்றியது. மற்றொன்று யூதாதேசத்து பிரபுக்களின் அக்கிரமத்தைப்பற்றியது.

கல்தேயரின் சேனை எருசலேம் நகரத்தை முற்றிக்கையிடுகிறார்கள். அப்போது எருசலேம் குடிகள் மத்தியில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று. அவர்கள் கர்த்தரோடு அநேக காரியங்களை பொருத்தனைபண்ணிக்கொள்கிறார்கள்.

ஒருவனும் யூதஜாதியானாகிய தன் சகோதரனை அடிமைகொள்ளாதபடிக்கு, அவனவன் எபிரெயனாகிய தன் வேலைக்காரனையும், எபிரெய ஸ்திரீயாகிய தன் வேலைக்காரியையும் சுயாதீனராக அனுப்பிவிடவேண்டுமென்று அவர்களுக்கு விடுதலையைக் கூறும்படி, ராஜாவாகிய சிதேக்கியா எருசலேமில் இருக்கிற எல்லா ஜனத்தோடும் உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள் (எரே 34:8,9).

தேவனுடைய பிரமாணம் மிகவும் தெளிவாகயிருக்கிறது. யூதாதேசத்தார், மற்ற யூதர்களை ஆறுவருஷங்களுக்கு மாத்திரமே வேலைகொள்ள முடியும். ஏழாவது வருஷத்தில் அவர்களுக்கு விடுதலையை அறிவிக்கவேண்டும். ஏழாவது வருஷம் யூபிலி வருஷம் என்னும் விடுதலையின் வருஷமாகும்.

எபிரெய புருஷரும், ஸ்திரீகளும் தாங்கள் பட்ட கடனை அடைக்கமுடியாமல், பிரபுக்களுக்கும், தங்கள் எஜமான்களுக்கும் அடிமை வேலை செய்வதற்கு தங்களை ஒப்புக்கொடுப்பார்கள். சில சமயங்களில் நியாயாதிபதிகள் குற்றவாளிகளைத் தண்டிக்கும்போது, அவர்களை அடிமைகளாக ஒப்புக்கொடுப்பது வழக்கம்.

யூதாதேசத்தில் எபிரெய புருஷரும், ஸ்திரீகளும் அடிமைகளாயிருந்ததுபோல அந்நிய தேசத்தாரும் அடிமைகளாயிருந்தார்கள். யூதாதேசத்தார் மற்ற தேசத்தின்மீது யுத்தம் செய்து, அந்நிய தேசத்தின் புருஷரையும் ஸ்திரீகளையும், தங்கள் தேசத்திற்கு அடிமைப்படுத்திக் கொண்டுவந்தார்கள். சில சமயங்களில் அடிமைகளை விற்பனை செய்யும் சந்தைகளில், அவர்களை கிரயத்திற்கு வாங்கிக்கொண்டு வந்தார்கள்.

யூதர்கள் அந்நிய தேசத்து அடிமைகளை, தங்களுக்கு நிரந்தர அடிமைகளாக வைத்துக்கொள்ளலாம். ஆனால் எபிரெயராக இருக்கிற அடிமைகளை தங்களுக்கு நிரந்தர அடிமைகளாக வைத்துக்கொள்ளக்கூடாது. எபிரெயர்கள் எல்லோரும் சகோதரர்கள். யூதர்கள் தங்களிடத்தில் அடிமைப்பட்டிருக்கிற எபிரெயர்களை ஆறுவருஷத்திற்கு மாத்திரமே அடிமைகொள்ளவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு காலத்தில் எகிப்து தேசத்திலே அடிமைகளாகயிருந்தார்கள். கர்த்தர் அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களை சுயாதீனராக்கினார். அப்போது கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் பற்றிய பிரமாணத்தைக் கொடுத்தார்.

"எபிரெயரில் ஒரு அடிமையைக் கொண்டாயானால், அவன் ஆறுவருஷம் சேவித்து, ஏழாம் வருஷத்திலே ஒன்றும் கொடாமல் விடுதலைபெற்றுப் போகக்கடவன்" (யாத் 21:2).

கர்த்தர் ஏற்கெனவே இந்தப் பிரமாணத்தை அவர்களுக்கு சொல்லியிருந்தும், இப்போது அதை மறுபடியுமாய் யூதாவின் மனுஷருக்கு நினைவுபடுத்துகிறார். யூதாவின் முற்பிதாக்கள் கர்த்தருடைய சொல்லைக் கேளாமலும், கர்த்தருடைய பிரமாணத்திற்கு தங்கள் செவியை சாயாமலும் போனார்கள்.

"இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், அவனவன் தனக்கு விற்கப்பட்ட எபிரெயனாகிய தன் சகோதரனை முடிவிலே நீங்கள் ஏழாம் வருஷத்திலே அனுப்பிவிடவேண்டும் என்றும், அவன் உனக்கு ஆறுவருஷம் அடிமையாயிருந்தபின்பு, அவனை உன்னிடத்தில் வைக்காமல் சுயாதீனனாக அனுப்பிவிடவேண்டும் என்றும், நான் உங்கள் பிதாக்களை அடிமைவீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாளிலே அவர்களோடே உடன்படிக்கை பண்ணினேன்" (எரே 34:13,14) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரோடும், எருசலேமின் குடிகளோடும் சொல்லுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து அழைத்து வந்தார். கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை இஸ்ரவேல் வம்சத்தார் நன்றியோடு நினைவுகூர வேண்டும். கர்த்தர் தங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பண்ணியதை இஸ்ரவேல் ஜனத்தார் மறந்துவிடக்கூடாது.

தாங்களும் ஒரு காலத்தில் எகிப்து தேசத்தில் அடிமைகளாகயிருந்தோம் என்பதை இஸ்ரவேல் ஜனத்தார் மறந்துவிடக்கூடாது. தங்களுடைய வீடுகளில் மற்ற எபிரெயரை அடிமைகளாக வேலைகொள்ளும்போது, அவர்களை மிகவும் கடினமாய் நடத்தக்கூடாது. எகிப்தியரின் ஆளோட்டிகள் தங்களை கடினமாய் நடத்தியதை இஸ்ரவேல் ஜனத்தார் நினைவுகூரவேண்டும். தங்களிடத்தில் அடிமை வேலை பார்க்கிற எபிரெய வேலைக்காரர்களையும், வேலைக்காரிகளையும் மனிதாபிமானத்தோடு நடத்தவேண்டும்.

கர்த்தர் நம்மீது கிருபையாயிருக்கும் போது, நாமும் மற்ற சகோதரர்மீது கிருபையாயிருக்கவேண்டும். கர்த்தர் நம்மிடத்தில் அன்புகூரும்போது நாமும் மற்றவர்களிடத்தில் அன்பு கூரவேண்டும். கர்த்தர் நம்முடைய கடன்களை மன்னிக்கும்போது நாமும் மற்றவர்களுடைய கடன்களை மன்னிக்கவேண்டும். கர்த்தர் நம்மை விடுவிக்கும்போது, நாமும் நம்மிடத்தில் அடிமைப்பட்டிருக்கிற அடிமைகளை விடுவிக்கவேண்டும்.

தனக்கு விற்கப்பட்ட எபிரெயனாகிய தன் சகோதரனை ஏழாம் வருஷத்திலே விடுவித்து அனுப்பிவிடவேண்டும். அவன் ஆறுவருஷம் மாத்திரமே அடிமை வேலை செய்வான். ஏழாம் வருஷம் அடிமைக்கு விடுதலையின் வருஷம். இது கர்த்தருடைய பிரமாணம். ஆனால் இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவில்லை. அவர்கள் கர்த்தருடைய சொல்லை கேட்கவுமில்லை. கர்த்தருடைய பிரமாணத்திற்கு தங்கள் செவியை சாய்க்கவுமில்லை.

இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்கள் உலகப்பிரகாரமான ஆதாயத்திற்கே முக்கியத்துவம் கொடுத்தார்கள். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் என்னும் ஆர்வமோ அல்லது அக்கறையோ அவர்களிடத்தில் காணப்பட வில்லை. கர்த்தருடைய உடன்படிக்கையைவிட உலகஆசீர்வாதமே அவர்களுக்கு பெரிதாய்த் தெரிந்தது.

எபிரெயர்கள் தங்கள் வீடுகளில் அடிமைகளை வேலைக்கு வைத்து, அதன் மூலமாய் நன்மைகளை அனுபவித்தார்கள். பிரபுக்களுக்கும் ஐசுவரியவான்களுக்கும் தேவையான எல்லா வேலைகளையும் அடிமைகள் செய்து கொடுத்தார்கள். ஏழுவருஷ காலத்தில் அடிமைகளும் எல்லா வேலைகளையும் செய்ய பழகிக்கொண்டார்கள்.

அடிமைகளுக்கு விடுதலை கொடுத்துவிட்டால், அவர்கள் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும், அவர்களுடைய எஜமான்களே செய்ய வேண்டும். எஜமான்கள் ஒருவேலையும் செய்ய ஆயத்தமாயில்லை. ஆகையினால் எஜமான்கள் தங்கள் அடிமைகளை, ஏழாம் வருஷத்தில் விடுவிக்கவில்லை. அவர்கள் தங்கள் அடிமைகளை ஏழாம் வருஷத்தில் விடுவிக்காமல், தங்களுக்கு அவர்களை நிரந்தர அடிமைகளைப்போல வைத்துக் கொண்டார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்களைப்போலவே, இப்போதுள்ள யூதர்களும், தங்களுடைய எபிரெய அடிமைகளை விடுதலை பண்ணாமலிருக்கிறார்கள். இவர்களுடைய முற்பிதாக்கள் இவர்களுக்கு தவறான முன்உதாரணத்தை வைத்துப்போனார்கள். தங்கள் முற்பிதாக்களைப்போலவே, யூதாவின் மனுஷரும் கர்த்தருடைய சொல்லைக் கேளாமலும், அவருக்கு தங்கள் செவியை சாயாமலும் பாவம் செய்கிறார்கள். கர்த்தரோ அவர்களுடைய தப்பிதங்களை விசாரிக்கிறார். அவர்களுக்கு நீதியான தீர்ப்பு கொடுக்கிறார்.

கல்தேயர்கள் யூதாவின் பட்டணங்களை முற்றிக்கையிடுகிறார்கள். அப்போது கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. கர்த்தருடைய பிரமாணத்திற்கு தாங்கள் மீறி நடப்பதை யூதாவின் மனுஷர்கள் உணர்ந்துகொள்கிறார்கள். தங்களிடத்திலுள்ள எபிரெய அடிமைகளை ஏழாம் வருஷத்தில் விடுதலைபண்ணாமல், அவர்களை தங்களுக்கு நிரந்தர அடிமைகளைப்போல வைத்திருப்பதை நினைத்து, மனம்வேதனைப்படுகிறார்கள். தாங்கள் செய்த பாவங்களை கர்த்தரிடத்தில் அறிக்கை செய்கிறார்கள்.

கல்தேயர்கள் யூதாவின் பட்டணங்களுக்கு விரோதமாக முற்றிக்கைப் போட்டிருக்கும்போது, பட்டணங்களுக்குள்ளே இருக்கும் யூதர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புகிறார்கள். யூதர்கள் ஒவ்வொருவரும், தங்கள் அயலானுக்கு விடுதலையை கூறின விஷயத்திலே, கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை செய்கிறார்கள். அவர்கள் இதன் நிமித்தமாக, கர்த்தருடைய நாமம் தரிக்கப்பட்ட அவருடைய ஆலயத்திலே, கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக உடன்படிக்கை பண்ணுகிறார்கள்.

கர்த்தர் பார்வோன்மீதும், எகிப்து தேசத்தின்மீதும் வாதைகளை அனுப்பினார். வாதைகளின் வேதனைகளை தாங்கமுடியாமல், எகிப்தியர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை அவர்களுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுதலைபண்ணி, தங்கள் தேசத்திலிருந்து சுயாதீனராக வெளியேறிப்போக அனுமதித்தார்கள். பார்வோனுக்கு வாதையும் வேதனையும் வந்ததுபோல, இப்போது யூதாவின் மனுஷருக்கும், எருசலேமின் குடிகளுக்கும் கல்தேயர் மூலமாய் வேதனை வந்திருக்கிறது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தங்களிடத்தில் அடிமைப்பட்டிருக்கிற எபிரெய வேலைக் காரர்களை, விடுதலைபண்ணாமல், அவர்களைத் தங்களுக்கு நிரந்தர அடிமைகளைப்போல பாவித்து வேலை வாங்குகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் யூதா மனுஷரின் பாவங்களை உணர்த்தும்போது, அவர்கள் மனந்திரும்புகிறார்கள். தங்களிடத்தில் வேலை பார்க்கிற எபிரெய ஸ்திரீகளையும், எபிரெய புருஷர்களையும் விடுதலைபண்ணி அனுப்பிவிடுகிறார்கள்.

ஒவ்வொருவனும் தன் வேலைக்காரனையும் தன் வேலைக்காரியையும் இனி அடிமைகொள்ளாதபடிக்கு, சுயாதீனராக அனுப்பிவிடவேண்டுமென்று உடன்படிக்கைக்கு உட்பட்ட எல்லாப் பிரபுக்களும் எல்லா ஜனங்களும் கேட்டபோது, செவிகொடுத்து அவர்களை அனுப்பிவிட்டார்கள் (எரே 34:10)

கர்த்தருடைய பிரமாணத்திற்கு ராஜாவும், பிரபுக்களும், யூதாமனுஷரும் கீழ்ப்படிகிறார்கள். அவர்கள் எல்லோருமே தங்களிடத்தில் வேலை பார்க்கிற எபிரெயர்களை சுயாதீனராக அனுப்பிவிடுகிறார்கள். யூதாவின் மனுஷர் எல்லோருமே எபிரெயர்களை உடன் படிக்கையை மீறி நீண்ட காலத்திற்கு அடிமைகளாக வைத்திருந்த பாவத்திற்காக மனந்திரும்புகிறார்கள். அவர்களை விடுதலை பண்ணுவதாகவும், இதுபோன்ற பாவத்தை இனிமேல் செய்வதில்லை என்றும், அவர்கள் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள். அவர்கள் தேவனோடும், மற்ற எபிரெயரோடும் இந்த உடன்படிக்கையை உறுதிபண்ணுகிறார்கள்.

இது ஒரு முக்கியமான உடன்படிக்கை. யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய பரிசுத்தமான ஆலயத்திலேயே இந்த உடன்படிக்கையை பண்ணுகிறார்கள். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக இந்த உடன்படிக்கை உறுதிபண்ணப்படுகிறது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய ஆலயத்திலே, கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக உடன்படிக்கை பண்ணி, அதை ஒரு முக்கியமான அடையாளத்தினால் உறுதிபண்ணுகிறார்கள். அவர்கள் ஒரு கன்றுக்குட்டியை இரண்டாகத் துண்டித்து, கன்றுக்குட்டிகளின் துண்டுகளின் நடுவே கடந்துபோகிறார்கள் (எரே 34:18,19).

தாங்கள் கர்த்தரோடு செய்த உடன்படிக்கையில் மீறாமல் இருப்போம் என்பது இதன் அடையாளமாகும். அப்படி அவர்கள் மீறி நடந்தால் கர்த்தர் அவர்களை இரண்டாகத் துண்டித்த கன்றுக்குட்டியைப்போல ஆக்குவார். கர்த்தருக்கு முன்பாக தாங்கள் செய்து கொண்ட உடன்படிக்கையை மீறினால், கர்த்தர் தங்களை எப்படி தண்டிப்பார் என்பது யூதாவின் மனுஷருக்குத் தெரியும். ஆகையினால் அவர்கள் கர்த்தரோடு பண்ணிய உடன்படிக்கையில் உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். எபிரெய அடிமைகள் தங்களிடத்தில் ஆறுவருஷம் அடிமையாகயிருந்தபின்பு, அவர்களை சுயாதீனராக அனுப்பிவிடுகிறார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து உடன்படிக்கை பண்ணும்போது கல்தேயர்கள் எருசலேமைச் சுற்றிலும் முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். வாசற்படியில் ஆபத்து காத்திருக்கிறது. ஆனாலும் அவர்கள் கர்த்தருக்கு முன்பாக உடன்படிக்கை செய்து, கர்த்தருக்கு கீழ்ப்படிகிறார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தரோடு உடன்படிக்கை பண்ணி, தங்களிடத்தில் ஆறுவருஷம் அடிமையாயிருந்த எபிரெய அடிமைகளை, சுயாதீனராக அனுப்பிவிட்ட பின்பு, கர்த்தருடைய கிருபையும், ஆதரவும் யூதாவின் மனுஷருக்கு கிடைக்கிறது. அது வரையிலும் பாபிலோன் ராஜா யூதாவின் பட்டணங்களை முற்றிக்கையிட்டிருந்தான்.

யூதர்கள் கர்த்தரோடு உடன்படிக்கை செய்து, அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிந்தபோது, பாபிலோன் ராஜா முற்றிக்கையை விலக்கிவிட்டு, எருசலேமை விட்டுப்போய்விடுகிறான். முற்றிக்கை தளர்த்தப்படுகிறது. யூதர்கள் செய்த நன்மையான காரியத்தினிமித்தமாய், அவர்களை நோக்கி வந்த தீமைகள் அவர்களைவிட்டு விலகிப்போயிற்று.

தங்களை நெருங்கி வந்த ஆபத்து தங்களைவிட்டு நீங்கிப்போனவுடன், யூதாவின் மனுஷர் கர்த்தரோடு பண்ணின உடன்படிக்கையை மீறுகிறார்கள். கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக மாறாட்டம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குகிறார்கள்.

"நீங்கள் அவனவன் விடுதலையாகவும் சுயாதீனராகவும் அனுப்பிவிட்ட தன் வேலைக்காரனையும் தன் வேலைக்காரியையும் திரும்ப அழைத்து வந்து, அவர்களை உங்களுக்கு வேலைக்காரரும் வேலைக்காரிகளுமாயிருக்கும்படி அடிமைப்படுத்தினீர்கள்" (எரே 34:16) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரைப் பார்த்து சொல்லுகிறார்.

இதன் நிமித்தமாய் எருசலேமைவிட்டு விலகிப்போன பாபிலோனின் ராஜாவும், அவனுடைய சேனையும் எருசலேமுக்கு விரோதமாக மறுபடியும் திரும்பி வந்து, அதை முற்றிக்கைப்போடுவார்கள்.

"யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவையும் அவனுடைய பிரபுக்களையும் அவர்கள் சத்துருக்களின் கையிலும்; அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும், உங்களை விட்டுப்போர்ந்துபோன பாபிலோன் ராஜாவினுடைய சேனைகளின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன். இதோ, நான் கட்டளைகொடுத்து, அவர்களை இந்த நகரத்துக்குத் திரும்பப்பண்ணுவேன்; அவர்கள் அதற்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதைப்பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்; யூதாவின் பட்டணங்களையும், ஒருவரும் அவைகளில் குடியிராதபடிப் பாழாய்ப்போகப்பண்ணுவேன்" என்று கர்த்தர் உரைக்கிறார் (எரே 34:21,22).

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போட்டிருக்கிறபோது, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் தன்னுடைய சேனையை கல்தேயருக்கு விரோதமாக அனுப்புகிறான். இதனால் கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிடுவதை தற்காலிகமாக விலக்கிக்கொள்கிறார்கள்.

"பார்வோனின் சேனையோவென்றால், எகிப்திலிருந்து புறப்பட்டது; எருசலேமை முற்றிக்கைபோட்ட கல்தேயர் அவர்களுடைய செய்தியைக்கேட்டு, எருசலேமை விட்டு நீங்கிப்போனார்கள்" (எரே 37:5).

யூதாவின் மனுஷர் கர்த்தரோடு பண்ணிய உடன்படிக்கையை முறித்துப்போடுகிறார்கள். அவர்கள் மாறாட்டம்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்குகிறார்கள். சுயாதீனராக அனுப்பிவிட்ட தங்கள் வேலைக்காரனையும் வேலைக்காரியையும் திரும்ப அழைத்து வந்து, அவர்களை தங்களுக்கு மறுபடியும் அடிமைப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் பரிசுத்தமானவர். அவருடைய நாமம் பரிசுத்தமானது. கர்த்தர் தம்முடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்க அனுமதிக்கமாட்டார். கர்த்தர் தம்மை பரியாசம்பண்ணவொட்டார். கர்த்தருடைய சுபாவத்தை நாம் அறிந்துகொள்ளவேண்டும். யாரும் நம்மை வஞ்சித்துவிடாதவாறும், மோசம்போக்கிவிடாதவாறும் நாம் எச்சரிப்போடிருக்கவேண்டும்.

ஒரு சிலர் கர்த்தரை வஞ்சித்துவிட்டதாகவும், அவரை ஏமாற்றிவிட்டதாகவும் நினைக்கிறார்கள். இதனால் தங்களுக்கு லாபம் கிடைத்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள். வேறு சிலரோ தங்கள் இருதயத்தில் முழுவதுமாய்க் குணப்படாமல் ஓரளவு மாத்திரம் குணப்பட்டு, பக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொள்கிறார்கள். தங்களை மகாபரிசுத்தவான்கள்போல காண்பித்துக் கொள்கிறார்கள். கர்த்தரை ஏமாற்ற நினைக்கிறவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள். கர்த்தரை வஞ்சிக்க நினைக்கிறவர்கள் தங்கள் ஆத்துமாக்களை வஞ்சிக்கிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் தங்களிடத்திலுள்ள எபிரெய வேலைக்காரர்களை, அவர்கள் ஆறுவருஷம் அடிமையாயிருந்த பின்பு, அவர்களை சுயாதீனராக அனுப்பிவிடவில்லை. இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதாமனுஷர்மேல் வருகிறது.

"நீங்கள் அவனவன் தன் சகோதரனுக்கும் அவனவன் தன் அயலானுக்கும் விடுதலையைக் கூறினவிஷயத்தில் என் சொல்லைக் கேளாமற்போனீர்களே; இதோ, நான் உங்களைப் பட்டயத்துக்கும், கொள்ளை நோய்க்கும், பஞ்சத்துக்கும் ஒப்புக் கொடுக்கிற விடுதலையை உங்களுக்குக் கூறுகிறேன்; பூமியின் ராஜ்யங்களிலெல்லாம் அலைகிறதற்கும் உங்களை ஒப்புக்கொடுப்பேன்" (எரே 34:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதர்கள் தங்கள் எபிரெய வேலைக்காரர்களுக்கு விடுதலையை அறிவிக்கவில்லை. ஆனால் கர்த்தரோ யூதாவின் மனுஷரை தம்மிடத்திலிருந்து விடுவித்து வெளியேற்றிவிடுகிறார். அவர்கள் இனிமேல் கர்த்தருடைய ஊழியத்தை செய்ய முடியாது. அவர்களால் கர்த்தரை சேவிக்க முடியாது. கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் அவர்களுக்கு இனிமேல் கிடைக்காது. யூதாவின் மனுஷர் கர்த்தரோடு பண்ணிய உடன்படிக்கையை மீறுகிறார்கள். இதன் நிமித்தமாய் அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போகிறார்கள். கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறார்.

கர்த்தர் அவர்களுக்கு மூன்று விதமான தண்டனைகளைக் கொடுக்கிறார். பட்டயம், கொள்ளைநோய், பஞ்சம் ஆகிய மூன்று வாதைகளில், அவர்கள் ஏதாவது ஒரு வாதையைத் தெரிந்துகொள்ளலாம். இம்மூன்றுமே அவர்களுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பாக வந்திருக்கிறது. தாங்கள் ஏற்கெனவே சுயாதீனராக விடுதலை செய்து அனுப்பிய எபிரெய வேலைக்காரர்களை, அவர்கள் திரும்பவும் அழைத்து வந்து, அவர்களை அடிமைப்படுத்தினார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தர் யூதாவின் மனுஷரை பூமியின் ராஜ்யங்களிலெல்லாம் அலைகிறதற்கு ஒப்புக்கொடுக்கிறார். யூதாவின் மனுஷர் அந்நிய தேசங்களிலே அடிமைகளாயிருப்பார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக உடன்படிக்கை பண்ணியபோது, கன்றுக்குட்டியை இரண்டாகத் துண்டித்து, அதன் நடுவாகக் கடந்துபோனார்கள். தாங்கள் உடன் படிக்கையில் உண்மையுள்ளவர்களாயிருப்போம் என்பதற்கு இது அடையாளம். ஆனால் அவர்களோ தங்கள் உடன்படிக்கையில் உண்மையுள்ளவர்களாயிருக்கவில்லை.

கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக பண்ணின உடன்படிக்கையை யூதாவின் மனுஷர் மீறிவிடுகிறார்கள். இதனால் கர்த்தரும் யூதாவின் மனுஷரை பாதுகாக்காமல், பராமரிக்காமல் அவர்களை கைவிட்டுவிடுகிறார். கர்த்தர் அவர்களை இரண்டாகத் துண்டித்த கன்றுக்குட்டியைப் போல் ஆக்கிவிடுகிறார்.

யூதாவின் மனுஷர் எல்லோருமே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். இதன் நிமித்தமாய் அவர்கள் எல்லோருக்கும் பொதுவான அழிவு வரும்.

"கன்றுக்குட்டியின் துண்டுகளின் நடுவே கடந்துபோன யூதாவின் பிரபுக்களையும், எருசலேமின் பிரபுக்களையும், பிரதானிகளையும், ஆசாரியர்களையும், தேசத்தின் சகல ஜனங்களையும் அப்படிச் செய்து, நான் அவர்களை அவர்கள் சத்துருக்களின் கையிலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்; அவர்களுடைய பிரேதம் ஆகாயத்தின் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்" (எரே 34:19,20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் மறுபடியும் தங்கள் பாவத்திற்கு திரும்புகிறார்கள். அவர்கள் கர்த்தரோடு பண்ணிய உடன்படிக்கையை மீறுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களுக்கு ஏற்ற தண்டனையைக் கொடுக்கிறார். கல்தேயர் யூதாவின் பட்டணங்களைவிட்டு விலகிப்போனார்கள். கர்த்தர் அவர்களை மறுபடியும் அழைத்துக்கொண்டு வருவதாகச் சொல்லுகிறார். கல்தேயர்கள் திரும்பி வந்து, யூதாவின் பட்டணங்களுக்கு விரோதமாய் மறுபடியும் முற்றிக்கையிடுவார்கள்.

"இதோ, நான் கட்டளைகொடுத்து, அவர்களை இந்த நகரத்துக்குத் திரும்பப்பண்ணுவேன்; அவர்கள் அதற்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதைப்பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்; யூதாவின் பட்டணங்களையும், ஒருவரும் அவைகளில் குடியிராதபடிப் பாழாய்ப்போகப்பண்ணுவேன்" என்று கர்த்தர் உரைக்கிறார் (எரே 34:22).

யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்போது, யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவின்மீதும், அவனுடைய பிரபுக்கள்மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். "யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவையும் அவனுடைய பிரபுக்களையும் அவர்கள் சத்துருக்களின் கையிலும்; அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும், உங்களை விட்டுப்போர்ந்துபோன பாபிலோன் ராஜாவினுடைய சேனைகளின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன்" (எரே 34:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

நாம் வாக்குப்பண்ணின நல்ல காரியங்களிலிருந்து விலகிப்போகும்போது, கர்த்தரும் நமக்கு வாக்குப்பண்ணின நல்ல காரியங்களை நம்மைவிட்டு விலக்கிவிடுகிறார்.

"புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடுள்ளவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர்" (சங் 18:26).

35 அதிகாரம்

யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களை உணரவேண்டும். தங்களுடைய பாவங்களுக்கு அவர்கள் மனந்திரும்ப வேண்டும். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை உணர்த்துவதற்கு பல்வேறு உபாயங்களை கையாளுகிறார். ஜனங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் பாவம் செய்கிறார்கள். கர்த்தருக்கு கீழ்ப்படியவில்லையென்றால் தேவனுடைய கோபம் அவர்கள்மேல் வரும். இந்தச் சத்தியத்தை கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் எச்சரிப்பான வார்த்தைகளினால் பிரசங்கம்பண்ணுகிறார்கள்.

ஜனங்கள் தங்கள் பாவங்களில் தொடர்ந்து நிலைத்திருந்தால், தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல் கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து கலகம்பண்ணினால் அவர்களுடைய முடிவு எப்படியிருக்கும் என்பதையும் தீர்க்கதரிசிகள் அவர்களுக்கு விவரித்து சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமலும், அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமலும் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து கர்த்தரை கனம்பண்ணவில்லை.

ரேகாபியரின் குடும்பத்தார், அவர்களுடைய முன்னோராகிய யோனதாபின் வார்த்தைக்கு செவிகொடுத்து, இந்நாள் வரையிலும் அதற்கு கீழ்ப்படிந்து வருகிறார்கள் (எரே 35:1-11). யூதர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய ஊழியக்காரரின் வார்த்தைக்கும் செவிகொடாமலும், கீழ்ப்படியாமலும் இருக்கிறார்கள் (எரே 35:12-15).

யூதர்களுடைய கீழ்ப்படியாமையினிமித்தமாய் தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் அவர்கள்மேல் வரும் என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார் (எரே 35:16,17). ரேகாபியர்கள் தங்களுடைய முன்னோருக்கு கீழ்ப்படிந்து ஜீவிப்பதினால் தேவனுடைய ஆசீர்வாதம் அவர்கள்மேல் தங்கியிருக்கும் (எரே 35:18-19).

ரேகாபியர் திராட்சரசம் குடிக்கிறதில்லை
எரே 35:1-11

எரே 35:1. யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாட்களில் எரேமியாவுக்குக் கர்த்தரால் உண்டான வார்த்தை:

எரே 35:2. நீ ரேகாபியருடைய வீட்டுக்குப் போய், அவர்களோடே பேசி, அவர்களைக் கர்த்தருடைய ஆலயத்தின் அறைகளில் ஒன்றிலே அழைத்துவந்து, அவர்களுக்குத் திராட்சரசம் குடிக்கக் கொடு என்றார்.

எரே 35:3. அப்பொழுது நான் அபசினியாவின் குமாரனாகிய எரேமியாவுக்கு மகனான யசினியாவையும், அவனுடைய சகோதரரையும், அவனுடைய குமாரர் எல்லாரையும், ரேகாபியருடைய குடும்பத்தார் அனைவரையும் அழைத்து;

எரே 35:4. கர்த்தருடைய ஆலயத்திலே பிரபுக்களுடைய அறையின் அருகேயும், வாசலைக்காக்கிற சல்லூமின் குமாரனாகிய மாசெயாவினுடைய அறையின்மேலுமுள்ள இத்தலியாவின் குமாரனும் தேவனுடைய மனுஷனுமாகிய ஆனான் என்னும் புத்திரருடைய அறையிலே அவர்களைக் கூட்டிக் கொண்டுவந்து,

எரே 35:5. திராட்சரசத்தினால் நிரப்பப்பட்ட குடங்களையும் கிண்ணங்களையும் ரேகாபியருடைய குடும்பத்தைச் சேர்ந்த புத்திரரின் முன்னே வைத்து, அவர்களை நோக்கி: திராட்சரசம் குடியுங்கள் என்றேன்.

எரே 35:6. அதற்கு அவர்கள்: நாங்கள் திராட்சரசம்குடிக்கிறதில்லை; ஏனென்றால், ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாப், நீங்கள் பரதேசிகளாய்த் தங்குகிற தேசத்தில் நீடித்திருக்கும்படிக்கு,

எரே 35:7. நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் திராட்சரசம் குடியாமலும், வீட்டைக் கட்டாமலும், விதையை விதையாமலும், திராட்சத்தோட்டத்தை நாட்டாமலும், அதைக் கையாளாமலும், உங்களுடைய எல்லா நாட்களிலும் கூடாரங்களிலே குடியிருப்பீர்களாக என்று எங்களுக்குக்கட்டளையிட்டார்.

எரே 35:8. அப்படியே எங்களுடைய எல்லா நாட்களிலும் நாங்களும் எங்கள் ஸ்திரீகளும் எங்கள் குமாரரும் எங்கள் குமாரத்திகளும் திராட்சரசம் குடியாமலும்,

எரே 35:9. நாங்கள் குடியிருக்க வீடுகளைக் கட்டாமலும், ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாபின் சத்தத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம்; எங்களுக்குத் திராட்சத்தோட்டமும்வயலும் விதைப்பாடுமில்லை.

எரே 35:10. நாங்கள் கூடாரங்களில் குடியிருந்து, எங்கள் தகப்பனாகிய யோனதாப் எங்களுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் கீழ்ப்படிந்து செய்து வந்தோம்.

எரே 35:11. ஆனாலும் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இந்த தேசத்தில் வந்தபோது, நாம் கல்தேயருடைய இராணுவத்துக்கும் சீரியருடைய இராணுவத்துக்கும் தப்பும்படி எருசலேமுக்குப் போவோம் வாருங்கள் என்று சொன்னோம்; அப்படியே எருசலேமில் தங்கியிருக்கிறோம் என்றார்கள்.

கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று. இந்த வார்த்தை யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதாராஜாவின் நாட்களில் உண்டாயிற்று. யோயாக்கீமின் ஆட்சிக் காலத்தின் பின்பகுதியில் கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று. இக்காலத்தில் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தன்னுடைய சேனையோடு யூதாதேசத்திற்கு விரோதமாக வந்திருக்கிறான் (எரே 35:11). இந்த சம்பவம் 2இராஜாக்கள் புஸ்தகத்திலும் எழுதப்பட்டிருக்கிறது.

"அப்பொழுது கர்த்தர் கல்தேயரின் தண்டுகளையும், சீரியரின் தண்டுகளையும், மோவாபியரின் தண்டுகளையும், அம்மோன் புத்திரரின் தண்டுகளையும் அவன் மேல் வரவிட்டார்; தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு கர்த்தர் சொன்ன வார்த்தையின்படியே அவர் அவைகளை யூதாவை அழிக்கும்படிக்கு வரவிட்டார்" *(2இராஜா 24:2).*

அவன் நாட்களிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வந்தான்; யோயாக்கீம் மூன்று வருஷம் அவனைச் சேவித்து, பின்பு அவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான் (2இராஜா 24:1).

நேபுகாத்நேச்சாருக்கு கீழ்ப்படியாமல் கலகம்பண்ணுகிற யூதாவின் மனுஷருக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. எரேமியா அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லும்போது, ரேகாபியரின் கீழ்ப்படிதலை ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். யாக்கோபின் வம்சத்தாரில், ரேகாபியருடைய வீட்டார் விசேஷித்த குணாதிசயங்களோடிருக்கிறார்கள். மற்ற யூதாவின் ஜனத்தைப்போலல்லாமல், இவர்கள் வித்தியாசமாய் ஜீவிக்கிறார்கள்.

ரேகாபியர்கள் பூர்வத்திலே கேனியர்களாகயிருந்தார்கள். "யாபேசில் குடியிருந்த கணக்கரின் வம்சங்கள், திராத்தியரும் சிமாத்தியரும் சுக்காத்தியருமே; ரேகாப் வீட்டாரின் தகப்பனாகிய அம்மாத்தின் சந்ததியாரான கேனியர் இவர்களே" *(1நாளா 2:55).*

மோசேயின் மாமன் கேனியரின் வம்சத்தைச் சேர்ந்தவர். இவர்கள் இஸ்ரவேல் தேசத்தில் குடியேறினார்கள். கேனியரின் ஒரு குடும்பத்தார் ரேகாபியர் என்று அழைக்கப்படுகிறார்கள்.

"மோசேயின் மாமனாகிய கேனியனின் புத்திரரும் யூதாவின் புத்திரரோடேகூடப் பேரீச்சமரங்களின் பட்டணத்திலிருந்து ஆராத்திற்குத்தெற்கேயிருக்கிற யூதாவின் வனாந்தரத்திற்கு வந்துஜனங்களோடே குடியேறினார்கள்" (நியா 1:16).

"சவுல் கேனியரை நோக்கி: நான் அமலேக்கியரோடேகூட உங்களையும் வாரிக்கொள்ளாதபடிக்கு, நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு விலகிப்போங்கள்; இஸ்ரவேல் எகிப்திலிருந்து வந்தபோது, நீங்கள் அவர்கள் எல்லாருக்கும் தயவுசெய்தீர்கள் என்றான்; அப்படியே கேனியர் அமலேக்கியரின் நடுவிலிருந்து விலகிப்போனார்கள்" (1சாமு 15:6).

"சிசெரா கால்நடையாய்க் கேனியனான ஏபேரின் மனைவி யாகேலுடைய கூடாரத்திற்கு ஓடிவந்தான்; அப்பொழுது யாபீன் என்னும் ஆத்சோரின் ராஜாவுக்கும், கேனியனான ஏபேரின் வீட்டுக்கும் சமாதானம் உண்டாயிருந்தது" (நியா 4:17).

யோனதாப் ரேகாபின் குமாரன். தன்னுடைய காலத்தில் யோனதாப் ஞானத்தில் சிறந்தவனாகவும், கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவனாகவும் விளங்கினான். இஸ்ரவேலின் ராஜாவாகிய யெகூவின் காலத்தில் யோனதாப் பிரசித்திப்பெற்றவன்.

"அவன் அவ்விடம்விட்டுப் புறப்பட்டபோது, தனக்கு எதிர்ப்பட்ட ரேகாபின் குமாரனாகிய யோனதாபைச் சந்தித்து, அவனை உபசரித்து: என் இருதயம் உன் இருதயத்தோடே செம்மையாய் இருக்கிறதுபோல உன் இருதயமும் செம்மையாயிருக்கிறதா என்று கேட்டான். அதற்கு யோனதாப்: அப்படியே இருக்கிறது என்றான்; அப்படியிருக்கிறதானால், உன் கையைத் தா என்று சொன்னான்; அவன் தன் கையைக் கொடுத்தபோது, அவனைத் தன்னிடத்தில் இரதத்தின்மேல் ஏறிவரச் சொல்லி, நீ என்னோடே கூடவந்து கர்த்தருக்காக எனக்கு இருக்கிற பக்திவைராக்கியத்தைப் பார் என்றான்; அப்படியே இவனை அவன் இரதத்தின்மேல் ஏற்றினார்கள்" (2இராஜா 10:15,16).

எரேமியா இங்கு ரேகாபியரை ஓர் எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறார். இவர்கள் எரேமியாவுக்கு சுமார் 300 வருஷங்களுக்கு முன்பு இஸ்ரவேல் தேசத்தில் வாழ்ந்தவர்கள்.

யோனதாப் கர்த்தரிடத்தில் பயபக்தியுள்ளவன். அவன் தன்னுடைய பிள்ளைகளுக்கும், அவர்களுடைய சந்ததியாருக்கும் ஆவிக்குரிய பிரமாணங்களை கற்றுக்கொடுத்தார். அவர்கள் தாங்கள் பரதேசியாய்த் தங்குகிற தேசத்தில், யோனதாப் தங்களுக்கு சொன்ன கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

யோனதாப்பின் கட்டளையில் இரண்டு அம்சங்கள் உள்ளன. அவையாவன: 1. அவர்கள் திராட்சரசம் குடிக்கக்கூடாது. 2. அவர்கள் தங்களுக்கு வீடுகளைக் கட்டாமல் கூடாரங்களில் குடியிருக்கவேண்டும்.

நசரேயர்கள் திராட்சரசம் குடிப்பதில்லை. யோனதாப்பின் கட்டளைகளும் நசரேயரின் விரதத்திற்கு ஏற்ற கட்டளைகளாயிருக்கிறது. யூதாவின் மனுஷரில் அநேகர் திராட்சரசம் குடித்து தங்களுடைய சரீர ஆரோக்கியத்தைக் கெடுத்துக்கொண்டார்கள். மதுபானம் அருந்துகிறவர்களுக்கு புத்தி தெளிவாயிருக்காது.

கர்த்தருக்காக ஜீவிக்கிறவர்கள் தங்களைத் தாங்களே வெறுக்கவேண்டும். தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றவேண்டுமென்று ஆசைப்படாமல், கர்த்தருடைய சித்தத்தையும் விருப்பத்தையும் நிறைவேற்றுவதற்கு பிரயாசப்படவேண்டும்.

தீமோத்தேயு தன் சரீரத்தில் பலவீனமாயிருந்தார். பவுல் தீமோத்தேயுவிடம் "நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்" (1தீமோ 5:23) என்று சொன்னார். இதுபோன்ற விசேஷமான சந்தர்ப்பங்களில் மாத்திரமே திராட்சரசம் பருகுவதை பவுல் அனுமதிக்கிறார். மற்றபடி மதுபானம் குடித்து வெறித்திருப்பதை அப்போஸ்தலர் பவுல் அங்கீகரிப்பதில்லை.

ரேகாபியர்கள் தாங்கள் பரதேசிகளாய் தங்குகிற தேசத்தில், தங்களுக்கு வீட்டைக் கட்டக்கூடாது. தங்களுடைய எல்லா நாட்களிலும் கூடாரங்களில் குடியிருக்க வேண்டும் (எரே 35:7). வீட்டைக்கட்டாமல் கூடாரத்தில் குடியிருப்பது சுயத்தை வெறுக்கும் செயல். கூடாரங்கள் வசதியான குடியிருப்புக்களல்ல. சமுதாயத்தில் கூடாரங்களுக்கு உயர்வான அந்தஸ்துமில்லை. ஏழை எளியவர்களும், தரித்திரர்களும் கூடாரங்களில் குடியிருப்பார்கள். ரேகாபியர்கள் மனுஷருக்கு முன்பாகவும், கர்த்தருக்கு முன்பாகவும் தங்களைத் தாழ்த்துவதற்கு அடையாளமாக கூடாரங்களில் குடியிருக்கிறார்கள்.

பனிகாலத்தில் கூடாரத்திற்குள்ளே குளிர் அதிகமாயிருக்கும். ரேகாபியர்கள் குளிரைத் தாங்கிக்கொள்ளவேண்டும். வெளியேயுள்ள இயற்கையான சீதோஷ்ண நிலையை தாங்கிக்கொள்ளும் வண்ணமாக, ரேகாபியர்கள் தங்களுடைய சரீரத்தின் ஆரோக்கியத்தைக் காத்துக்கொள்ள வேண்டும்.

கூடாரங்கள் நிலையான வாசஸ்தலமல்ல. அவற்றை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாக பெயர்த்து எடுத்துச் செல்லமுடியும். நம்முடைய குடியிருப்பு இந்தப் பூமியில் இல்லை. பரலோகமே நம்முடைய நித்திய வாசஸ்தலம். இதை எப்போதும் நினைவுகூரும் வண்ணமாக, ரேகாபியர் இந்தப் பூமியிலே தங்களுக்கு வீடுகளைக் கட்டாமல், எளிமையான கூடாரங்களில் குடியிருக்கிறார்கள்.

வசதியுள்ளவர்களும், தங்களுக்கென்று வீடுகள் உள்ளவர்களும் சிறிது காலத்திற்கு கூடாரங்களில் பொழுது போக்கிற்காக குடியிருப்பார்கள். ரேகாபியரோ தங்களுடைய எல்லா நாட்களிலும் கூடாரங்களிலே குடியிருக்கவேண்டும். கடினமான வாழ்க்கை வாழ்வதற்கு ரேகாபியர்கள் தங்களை பழக்கிக்கொள்ள வேண்டும்.

ரேகாபின் குமாரனாகிய யோனதாப், ரேகாபியர் எல்லோரையும் தன்னிடத்தில் அழைத்து, "நீங்கள் பரதேசிகளாய்த் தங்குகிற தேசத்தில் நீடித்திருக்கும்படிக்கு, நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் திராட்சரசம் குடியாமலும், வீட்டைக் கட்டாமலும், விதையை விதையாமலும், திராட்சத் தோட்டத்தை நாட்டாமலும், அதைக் கையாளாமலும், உங்களுடைய எல்லா நாட்களிலும் கூடாரங்களிலே குடியிருப்பீர்களாக" (எரே 35:6,7) என்று கட்டளையிட்டார்.

யோனதாப் தன்னுடைய புத்திரர்களுக்கும், அவர்களுடைய பின்சந்ததியாருக்கும் இப்படிப்பட்ட கட்டளைகளைக் கொடுத்ததற்கு முக்கியமான காரணங்கள் உண்டு. இந்த கட்டளை யோனதாபின் ஞானத்தை வெளிப்படுத்துகிறது. யோனதாப் மெய்யாகவே ரேகாபியரின் வீட்டார்மீது கரிசனையோடிருக்கிறார். அவர்களுடைய நன்மைகளை நாடுகிறார். ரேகாபியர்கள் எல்லோரும் தன்னுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டுமென்று, யோனதாப் அவர்களை உடன்படிக்கை பண்ணச் சொல்லவுமில்லை. அவர்களை ஆணையிடுமாறு கட்டாயம்பண்ணவுமில்லை.

யோனதாப் அவர்களுக்கு ஆலோசனையாகவே தன்னுடைய கட்டளைகளைச் சொல்லுகிறார். அவர்கள் ஒழுக்க கட்டுப்பாட்டோடே ஜீவிக்க கற்றுக்கொள்ளவேண்டும். தாறுமாறாக ஜீவிக்கக்கூடாது. அவர்கள் கர்த்தருக்கு பயந்து எளிமையாய் ஜீவிக்கவேண்டும். எந்த சூழ்நிலையிலும் அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடக்கூடாது.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதா தேசத்தில் வந்தார்கள். அப்போது ரேகாபியர்கள் கல்தேயருடைய இராணுவத்திற்கும் சீரியருடைய இராணுவத்திற்குத் தப்பும்படி எருசலேமுக்குப்போய், அங்கே தங்கியிருக்கிறார்கள் (எரே 35:11). அவர்கள் எங்கு குடியிருந்தாலும் அல்லது எங்கு பிரயாணம்பண்ணினாலும் ஒற்றுமையாயிருப்பது வழக்கம். ரேகாபியரின் குடும்பத்தார் எல்லோரும் தங்கள் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும், மனஉறுதியையும் காத்துக்கொள்கிறார்கள்.

யோனதாபின் முன்னோர்கள் தங்களை ஆசாரிய ஊழியத்தில் ஈடுபடுத்திக் கொண்டார்கள். தன்னுடைய பின்சந்ததியாரும் ஆசாரிய ஊழியத்தில் ஈடுபடவேண்டும் என்று யோனதாப் விரும்பினார்.

"மீதியான் தேசத்து ஆசாரியனுக்கு ஏழு குமாரத்திகள் இருந்தார்கள்; அவர்கள் தங்கள் தகப்பனுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டும்படிக்கு அங்கே வந்து, தண்ணீர் மொண்டு, தொட்டிகளை நிரப்பினார்கள்" *(யாத் 2:16)*.

ரேகாபிரியன் குடும்பத்தார் இஸ்ரவேலின் மற்ற வம்சத்தாரோடு கலந்து ஜீவிக்கவேண்டும் என்று மோசே விரும்பினார். "நீ எங்களோடே கூட வந்தால், கர்த்தர் எங்களுக்குச் செய்தருளும் நன்மையின்படியே உனக்கும் நன்மை செய்வோம் என்றான்" *(எண் 10:32)*. ஆனால் ரேகாபியரோ யோனதாபின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேலின் மற்ற வம்சத்தாரைப்போல் ஜீவிக்காமல், விசேஷமாய் ஜீவித்தார்கள். அவர்கள் இஸ்ரவேலரோடு நகரங்களில் தங்களுக்கு வீடுகளை கட்டிக்கொள்ளவில்லை. அவர்கள் தாங்கள் தங்குகிற தேசத்தில் பரதேசிகளாகவே இருந்தார்கள்.

ரேகாபியர்கள் தங்களுக்கென்று சொத்துக்களை சேர்ப்பதில்லை. அவர்கள் விதை விதைப்பதில்லை. திராட்சத்தோட்டத்தை நாட்டுவதில்லை. அதை கையாளுவதுமில்லை. மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சொத்துக்களை சுதந்தரமாக வைத்துப்போவதுமில்லை. தங்களுடைய அன்றாட ஜீவனத்திற்காக ஏதாவது வேலை செய்வார்கள். கிடைப்பதை புசிப்பார்கள். கர்த்தரைத் துதிப்பார்கள்.

ரேகாபியரிடத்தில் மிகுந்த மனத்தாழ்மையிருந்தது. அவர்களிடத்தில் போதும் என்கிற நல்ல சுபாவமும் இருந்தது. மனத்தாழ்மையும், போதும் என்கிற சுபாவமுமே மனுஷனுக்கு மெய்யான பாதுகாப்பு. பேராசையும், திருப்தியின்மையும் மனுஷனை அழித்துப்போடும். பொறாமை ஒரு எலும்புருக்கி.

யோனதாப் தன்னுடைய ஞானத்தினால் மனுஷருடைய ஜீவியங்களை ஆராய்ந்து பார்க்கிறார். அவர்கள் தங்களுக்கு வீடுகளைக் கட்டுவதற்கும், திராட்சத் தோட்டங்களை நாட்டுவதற்கும் வீணாய்ப் பிரயாசப்படுவதைப் பார்க்கிறார். திராட்சரசம் குடித்து ஜனங்கள் மதியில்லாமலிருப்பதையும் பார்க்கிறார். தன்னுடைய வம்சத்தில் வருகிறவர்கள் இதுபோன்று வீணாய்ப் பிரயாசப்படக்கூடாது என்றும், மதியீனமாய் ஜீவிக்கக்கூடாது என்றும் யோனதாப் தன்னுடைய வம்சத்தாருக்கு, தன்னுடைய நல்ல ஆலோசனைகளை கட்டளைகளாகச் சொல்லுகிறார்.

எப்பிராயீமின் சந்ததியார் திராட்சரசம் குடித்து சீர்கெட்டுப்போனார்கள். அவர்களைப்போலவே தன்னுடைய சந்ததியாரும் சீர்கெட்டுப்போய்விடக்கூடாது என்பதில் யோனதாப் மிகுந்த அக்கரையோடிருக்கிறார். இதன் நிமித்தமாய் அவர் தன்னுடைய பிள்ளைகளையும், அவர்களுடைய சந்ததியாரையும் பார்த்து, "நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் திராட்சரம் குடியாமலிருப்பீர்களாக" என்று கட்டளையிட்டார்.

ரேகாபியர்கள் இந்த உலகத்தால் கறைபடமாட்டார்கள். அவர்கள் இந்த தேசத்திலே நித்திய வாசிகளாக குடியிருப்பதுபோல தங்களுக்கு வீடுகளை கட்டி, இந்த உலகத்தோடு பந்தமாயிருப்பதில்லை. அதற்கு பதிலாக அவர்கள் எந்த தேசத்தில் தங்கினாலும், அந்த தேசத்திலே, பரதேசிகளைப்போலவே இருந்தார்கள். அந்த தேசத்தின் சட்டத்திற்கு புறம்பான எந்தக் காரியத்திலும் அவர்கள் ஈடுபடமாட்டார்கள். அநியாயமான காரியங்களிலோ அல்லது சட்டத்திற்கு விரோதமான காரியங்களிலோ அவர்கள் சந்தோஷப்படமாட்டார்கள்.

எல்லா மனுஷரும் ஏகமாய்ப் பாவம் செய்து சீர்கெட்டு அழிந்துபோவதை யோனதாப் தீர்க்கதரிசனமாய்ப் பார்க்கிறார். அவர்கள் தேவமகிமையற்றவர்களாகி கறைபடிந்திருப்பதையும் யோனதாப் கண்டு, தன்னுடைய சந்ததியைக் குறித்து எச்சரிப்பாயிருக்கிறார். ரேகாபியரிடத்தில் பேராசையில்லை. அவர்கள் இருப்பதில் திருப்தியோடிருப்பார்கள். அவர்களிடத்தில் போதுமென்கிற மனதிருக்கிறது. பணத்தை சேர்க்கவேண்டும், வீடுகளைக் கட்டவேண்டும், திராட்சத்தோட்டங்களை நாட்டவேண்டும் என்று பேராசைப்பட்டு, தங்களுடைய எல்லா முயற்சிகளையும் அதற்காகவே செலவுபண்ண அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் உலகப்பிரகாரமான காரியங்களில் அதிகமாய்ப் பிரயாசப்படாமல், இலகுவாய்ப் பிரயாசப்பட்டார்கள். உலகபாரத்தை கடினமாக்காமல் லேசாக்கிக்கொண்டார்கள்.

ரேகாபியர்கள் தேசத்தின் சட்டங்களுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள். தங்கள் ஜீவியத்தில் அநேக ஒழுக்க கட்டுப்பாடுகளை வகுத்துக்கொண்டு, அவற்றிற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள். ரேகாபியரைப்போல ஒழுக்கமாயும் கட்டுப்பாடோடும் ஜீவிப்பது நமக்கும் நல்லது. நம்முடைய சந்ததியாருக்கும் நல்லது. யோனதாப் தன்னுடைய பிள்ளைகளுக்கு எளிமையாயும், ஒழுக்கமாயும் ஜீவிக்க கற்றுக்கொடுத்ததுபோல, நாமும் நம்முடைய பிள்ளைகளுக்கு நல்ல சுபாவங்களைக் கற்றுக்கொடுக்கவேண்டும்.

யோனதாபின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, ரேகாபியர்கள் ஒழுக்கமாயும் கட்டுப்பாடோடும் ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய சந்ததியார் எல்லோருமே யோனதாபின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள்.

"அப்படியே எங்களுடைய எல்லா நாட்களிலும் நாங்களும் எங்கள் ஸ்திரீகளும் எங்கள் குமாரரும் எங்கள் குமாரத்திகளும் திராட்சரசம் குடியாமலும், நாங்கள் குடியிருக்க வீடுகளைக் கட்டாமலும், ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாபின் சத்தத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம்; எங்களுக்குத் திராட்சத்தோட்டமும்வயலும் விதைப்பாடு மில்லை. நாங்கள் கூடாரங்களில் குடியிருந்து, எங்கள் தகப்பனாகிய யோனதாப் எங்களுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் கீழ்ப்படிந்து செய்து வந்தோம்" (எரே 35:8-10) என்று ரேகாபியர் தங்களுடைய வாழ்க்கை முறையை விவரிக்கிறார்கள்.

ரேகாபியர்கள் கானான் தேசத்திலே ஜீவித்தார்கள். அங்கே பாலும் தேனும் ஓடுகிறது. கானான் தேசத்தில் திராட்சத் தோட்டங்களுக்கும், திராட்சப்பழங்களுக்கும், திராட்சை ஆலைகளுக்கும், திராட்சரசத்திற்கும் குறைவில்லை. ஆனாலும் ரேகாபியர் எல்லோருமே திராட்சரசம் குடியாமல் ஜீவிக்கிறார்கள்.

ரேகாபியர் தங்களுக்கு வீடுகளைக் கட்டவில்லை. திராட்சத்தோட்டங்களை நாட்டவில்லை. ரேகாபியர் தங்களுடைய ஆடுமாடுகளை மேய்த்து, அவற்றை ஆதாரமாக வைத்து ஜீவித்தார்கள். தேவைப்படும்போது மாத்திரமே, ரேகாபியர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயருவார்கள்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தில் வந்தான். கல்தேயருடைய இராணுவத்திற்கும், சீரியருடைய இராணுவத்திற்கும் தப்பும்படி ரேகாபியர்கள் எருசலேமுக்கு வந்து அங்கே தங்கியிருக்கிறார்கள் (எரே 35:11). இதுவரையிலும் அவர்கள் கூடாரங்களில் குடியிருந்தார்கள். எருசலேமில் கூடாரம் போடுவதற்கு இடமில்லை. ஆகையினால் அவர்கள் எருசலேமிலுள்ள வீடுகளில் தங்கியிருப்பதற்கு வாய்ப்புள்ளது.

ரேகாபியர்கள் ஒழுக்க கட்டுப்பாடோடு ஜீவிக்கிறவர்கள். ஆனாலும் அத்தியாவசியமான தேவைகள் வரும்போது, தங்களுடைய கட்டுப்பாடுகளை தளர்த்தி, யாருக்கும் பாதிப்பில்லாமல் ஜீவிப்பது வழக்கம். மனுஷருடைய நன்மைக்காகவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்திற்காக மனுஷர் உண்டாக்கப்படவில்லை. தன்னுடைய சந்ததியாரின் நன்மைக்காகவே யோனதாப் கட்டளைகளைக் கொடுத்தார். தங்களுக்கு நன்மை உண்டாகுமென்றால், ரேகாபியர் அந்த கட்டளைகளை சற்று தளர்த்திக்கொள்ள தயங்குவதில்லை.

ரேகாபியர் ஒருவேளை கர்த்தரை சோதித்துப் பார்த்திருக்கவேண்டும். அல்லது கர்த்தர்மீது நம்பிக்கையில்லாதிருந்திருக்க வேண்டும். தங்களுடைய பாதுகாப்புக்காக ரேகாபியர் கர்த்தரை நம்பாமல், வேறு எதையோ நம்பியிருக்கவேண்டும். கர்த்தருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் தங்கள் குடும்பத்தின் சட்டதிட்டங்களுக்கும், பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கவேண்டும். இதன் நிமித்தமாய் எரேமியாவுக்கு ரேகாபியரைப் பற்றி கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று.

கர்த்தர் எரேமியாவிடம், "நீ ரேகாபியருடைய வீட்டுக்குப் போய், அவர்களோடே பேசி, அவர்களைக் கர்த்தருடைய ஆலயத்தின் அறைகளில் ஒன்றிலே அழைத்துவந்து, அவர்களுக்குத் திராட்சரசம் குடிக்கக் கொடு" (எரே 35:2) என்று சொல்லுகிறார். எரேமியா அவர்களை தீர்க்கதரிசியின் அறைக்கு அழைத்து வருகிறார். எரேமியாவுக்கு கர்த்தரிடத்திலிருந்து வார்த்தை உண்டாயிருக்கிறது.

கர்த்தர் தனக்கு சொன்ன பிரகாரமாக, எரேமியா அபசினியாவின் குமாரனாகிய எரேமியாவுக்கு மகனான யசினியாவையும், அவனுடைய சகோதரரையும், அவனுடைய குமாரர் எல்லாரையும், ரேகாபியருடைய குடும்பத்தார் அனைவரையும் அழைத்து; கர்த்தருடைய ஆலயத்திலே பிரபுக்களுடைய அறையின் அருகேயும், வாசலைக்காக்கிற சல்லூமின் குமாரனாகிய மாசெயாவினுடைய அறையின்மேலுமுள்ள இத்தலியாவின் குமாரனும் தேவனுடைய மனுஷனுமாகிய ஆனான் என்னும் புத்திரருடையஅறையிலே அவர்களைக் கூட்டிக் கொண்டுவருகிறார் (எரே 35:3,4).

ரேகாபியர் திராட்சரசம் குடிக்க மாட்டார்கள். அது எரேமியாவுக்குத் தெரியும். ஆனாலும் எரேமியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, "திராட்சரசத்தினால் நிரப்பப்பட்ட குடங்களையும் கிண்ணங்களையும் ரேகாபியருடைய குடும்பத்தைச் சேர்ந்த புத்திரரின் முன்னே வைத்து,அவர்களை நோக்கி: திராட்சரசம் குடியுங்கள்" (எரே 35:5) என்று சொல்லுகிறார். எரேமியா அவர்களுடைய விசுவாசத்தையும், கட்டுப் பாட்டையும் சோதிக்கிறார். திராட்சரசத்தினால் நிரப்பப்பட்ட குடங்களையும் கிண்ணங்களையும் அவர்களுக்கு முன்பாக வைத்து, அவர்களை குடிக்கச் சொல்லுகிறார்.

ரேகாபியர்கள் கூடாரங்களில் குடியிருக்க வேண்டியவர்கள். ஆனால் அவர்களோ இப்போது கல்தேயருடைய இராணுவத்திற்கும், சீரியருடைய இராணுவத்திற்கும் தப்பும்படி எருசலேமுக்கு வந்திருக்கிறார்கள். எருசலேமிலே கூடாரங்களில் குடியிராமல் வீடுகளில் குடியிருக்கிறார்கள். யோனதாப் தங்களுக்கு சொன்ன கட்டளைகளில் ஒன்றை மீறியிருக்கிறார்கள். அவர்கள் ஒரு கட்டளையை மீறியதினால், மற்ற எல்லா கட்டளைகளையும் மீறுவார்களா என்பதை எரேமியா சோதித்துப் பார்க்கவேண்டும்.

இதற்காக எரேமியா அவர்களிடத்தில், "திராட்சரசம் குடியுங்கள்" என்று சொல்லுகிறார். அவர்களோ திராட்சரசம் குடிப்பதை தீர்மானமாய் மறுத்து விடுகிறார்கள். "எங்களுடைய எல்லா நாட்களிலும் நாங்களும் எங்கள் ஸ்திரீகளும் எங்கள் குமாரரும் எங்கள் குமாரத்திகளும் திராட்சரசம் குடியாமலிருப்போம்" (எரே 35:8) என்று ஒருமித்த குரலில் சொல்லுகிறார்கள். தங்களுக்கு திராட்சத்தோட்டமும், வயலும், விதைப்பாடுமில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ரேகாபியர் தங்களுடைய தீர்மானத்தில் உறுதியாயிருப்பதை எரேமியா புரிந்துகொள்கிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய புத்தியை ஏற்றுக்கொள்கிறதில்லை எரே 35:12-19

எரே 35:12. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:

எரே 35:13. இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், நீ போய், யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் நோக்கி: நீங்கள் என் வார்த்தைகளைக்கேட்டு, புத்தியை ஏற்றுக் கொள்ளுகிறதில்லையோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 35:14. திராட்சரசம் குடியாதபடிக்கு, ரேகாபின் குமாரனாகிய யோனதாப் தன் புத்திரருக்குக்கட்டளையிட்ட வார்த்தைகள் கைக்கொள்ளப்பட்டு வருகிறது; அவர்கள் இந்நாள்மட்டும் அதைக்குடியாமல், தங்கள் தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள்; ஆனாலும் நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிக் கொண்டேயிருந்தும், எனக்குக் கீழ்ப்படியாமற்போனீர்கள்.

எரே 35:15. நீங்கள் அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்களைப் பின்பற்றாமல், அவனவன் தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பி, உங்கள் நடக்கையைச் சீர்திருத்துங்கள், அப்பொழுது உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்ததேசத்திலே குடியிருப்பீர்கள் என்று சொல்லி, தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரையெல்லாம் நான் உங்களிடத்துக்கு ஏற்கனவே அனுப்பிக்கொண்டிருந்தும், நீங்கள் உங்கள் செவியைச் சாயாமலும் எனக்குக் கீழ்ப்படியாமலும் போனீர்கள்.

எரே 35:16. இப்போதும், ரேகாபின் குமாரனாகிய யோனதாபின் புத்திரர் தங்கள் தகப்பன் தங்களுக்குக் கட்டளையிட்ட கற்பனையைக் கைக்கொண்டிருக்கும்போது, இந்த ஜனங்கள் எனக்குக் கீழ்ப்படியாமற் போனபடியினாலும்,

எரே 35:17. இதோ, நான் அவர்களிடத்தில் பேசியும்அவர்கள் கேளாமலும், நான் அவர்களை நோக்கிக் கூப்பிட்டும் அவர்கள் மறுஉத்தரவு கொடாமலும் போனபடியினாலும், யூதாவின் மேலும் எருசலேமின் குடிகள் எல்லாரின் மேலும் நான் அவர்களுக்கு விரோதமாகச் சொன்ன எல்லாத்தீங்கையும் வரப்பண்ணுவேன் என்று இஸ்ரவேலின் தேவனும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

எரே 35:18. பின்னும் எரேமியா ரேகாபியருடைய குடும்பத்தாரை நோக்கி: நீங்கள் உங்கள் தகப்பனாகிய யோனதாபின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவனுடைய கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டு, அவன் உங்களுக்குக் கட்டளையிட்டபடி யெல்லாம் செய்துவந்தீர்களென்று, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 35:19. ஆதலால் சகல நாட்களிலும் எனக்கு முன்பாக நிற்கத்தக்க புருஷன் ரேகாபின் குமாரனாகிய யோனதாபுக்கு இல்லாமற்போவதில்லையென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

ரேகாபியர்கள் தங்களுடைய கொள்கையில் உறுதியாயிருக்கிறார்கள். அவர்கள் தீங்குகளுக்கு விலகி ஜீவிக்க வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறார்கள். அவர்களுடைய ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் கர்த்தர் இங்கு அடையாளமாகச் சொல்லுகிறார்.

ரேகாபியர்கள் தங்களுடைய முன்னோர்களின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள். யூதர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுப்பதுமில்லை. அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதுமில்லை. எரேமியா தீர்க்கதரிசி, யூதாவின் மனுஷரிடத்தில், "நீங்கள் என் வார்த்தைகளைக் கேட்டு புத்தியை ஏற்றுக்கொள்கிறதில்லையோ" (எரே 35:13) என்று கர்த்தருடைய நாமத்தினால் கேட்கிறார்.

ரேகாபியர்கள் தங்களுடைய முன்னோர்களின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள். "திராட்சரசம் குடியாதபடிக்கு, ரேகாபின் குமாரனாகிய யோனதாப் தன் புத்திரருக்குக்கட்டளையிட்ட வார்த்தைகள் கைக்கொள்ளப்பட்டு வருகிறது; அவர்கள் இந்நாள்மட்டும் அதைக்குடியாமல், தங்கள் தகப்பனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள்" (எரே 35:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளுமோ கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதில்லை. "நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிக்கொண்டேயிருந்தும், எனக்குக் கீழ்ப்படியாமற்போனீர்கள். நீங்கள் அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படி அவர்களைப் பின்பற்றாமல், அவனவன் தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பி, உங்கள் நடக்கையைச் சீர்திருத்துங்கள், அப்பொழுது உங்களுக்கும் உங்கள் பிதாக்களுக்கும் நான் கொடுத்ததேசத்திலே குடியிருப்பீர்கள் என்று சொல்லி, தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரையெல்லாம் நான் உங்களிடத்துக்கு ஏற்கனவே அனுப்பிக்கொண்டிருந்தும், நீங்கள் உங்கள் செவியைச் சாயாமலும் எனக்குக் கீழ்ப்படியாமலும் போனீர்கள்" (எரே 35:14,15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ரேகாபியர் யோனதாபின் கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள். யோனதாப் அவர்களைப் போலவே ஒரு மனுஷனாகயிருந்தாலும், அவர்கள் அவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள். யூதர்களோ இஸ்ரவேலின் பரிசுத்தரும், நித்திய தேவனுமாயிருக்கிற கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள். கர்த்தர் சர்வசிருஷ்டிகர். அவர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தரே அவர்களை ஆளுகை செய்கிறார். ஆனால் யூதாவின் மனுஷரோ கர்த்தருடைய கட்டளைகளுக்கும், அவருடைய ஆளுகைக்கும் தங்களை கீழ்ப்படுத்தவில்லை.

யோனதாபின் கட்டளைகளை ரேகாபியருக்கு நினைவுபடுத்த வேண்டிய அவசியம் இருந்ததில்லை. யோனதாபின் ஊழியக்காரர் என்று யாரும் ரேகாபியர் மத்தியில் வந்து, அவர்கள் கீழ்ப்படியவேண்டிய கடமைகளை அவர்களுக்கு ஞாபகப்படுத்தவில்லை.

கர்த்தரோ தம்முடைய வார்த்தைகளை, யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்லிக்கொண்டே வருகிறார். தம்முடைய தீர்க்கதரிசிகளாகிய ஊழியக்காரரையெல்லாம் அவர்களிடத்திற்கு ஏற்கெனவே அனுப்பிக்கொண்டே வருகிறார். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க தங்கள் செவியை சாய்க்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவுமில்லை.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு நல்ல தேசத்தைக் கொடுத்திருக்கிறார். பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசம் யாக்கோபின் சந்ததியாருக்கு சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தால், கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த தேசத்தில் குடியிருப்பார்கள். ஆகையினால் அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியமாயிருக்கிறது. கர்த்தர் தங்களுக்கு கானான் தேசத்தைக் கொடுத்ததற்காக, அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கவேண்டும். கர்த்தருடைய பிரமாணங்களுக்கு நன்றியுள்ள இருதயத்தோடு கீழ்ப்படியவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு தங்கள் செவியை சாய்க்கவில்லை. கர்த்தருடைய பிரமாணத்திற்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்கவில்லை. கர்த்தர் அவர்களை நோக்கி கூப்பிட்டும், அவர்கள் மறுஉத்தரவு கொடுக்கவில்லை. இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு யூதாவின் மனுஷர்மீது வருகிறது. நியாயத்தீர்ப்பு நாளிலே ரேகாபியர்கள் யூதாவின் மனுஷருக்கு விரோதமாக சாட்சி சொல்லுவார்கள். ரேகாபின் குமாரனாகிய யோனதாபின் புத்திரர் தங்கள் தகப்பன் தங்களுக்கு கட்டளையிட்ட கற்பனையை கைக்கொண்டு வருகிறார்கள். ஆனால் யூதாஜனங்களோ கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் இருக்கிறார்கள் (எரே 35:14).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். இதனால் கர்த்தர் அவர்களுக்கு விரோதமாகச் சொன்ன எல்லா தீங்கையும் வரப்பண்ணுவார். கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் மூலமாயும், அவருடைய தீர்க்கதரிசிகள் மூலமாயும், கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு விரோதமாக அநேக தீங்குகளை சொல்லியிருக்கிறார். கர்த்தர் அந்த தீங்குகள் எல்லாவற்றையும் அவர்கள்மேல் வரப்பண்ணுவார்.

கர்த்தர் தம்முடைய வார்த்தையினால் யூதாவின் மனுஷரோடு பேசினார். தம்முடைய பராமரிப்புக்கள் மூலமாக தம்முடைய அன்பையும், பாதுகாப்பையும், பிரமாணத்தையும் வெளிப்படுத்தினார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவுமில்லை. கர்த்தர் அவர்களை நோக்கி கூப்பிட்டபோது அவர்கள் மறுஉத்தரவு கொடுக்கவுமில்லை.

கர்த்தர் ரேகாபியரின் குடும்பத்தாருக்கு ஆசீர்வாதங்களைக் கட்டளையிடுகிறார். அவர்கள் தங்கள் தகப்பனாகிய யோனதாபின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கிறார்கள். அவர்கள் யோனதாபின் கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டு வருகிறார்கள். யோனதாப் அவர்களுக்கு கட்டளையிட்டபடியெல்லாம் செய்து வருகிறார்கள். ரேகாபியரின் கீழ்ப்படிதலுக்கும், ஒழுக்கமான ஜீவியத்திற்கும் கர்த்தர் சாட்சியாயிருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாரோ கர்த்தருக்கு கீழ்ப்படியாமல், அவருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினார்கள். கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தார்மீது தீங்கை வரப்பண்ணுகிறார். தங்களுடைய முன்னோர்களின் கட்டளைகளுக்கும், கற்பனைகளுக்கும் கீழ்ப்படிந்து ஜீவிக்கிற ரேகாபியரையோ கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்.

"சகல நாட்களிலும் எனக்கு முன்பாக நிற்கத்தக்க புருஷன் ரேகாபின் குமாரனாகிய யோனதாபுக்கு இல்லாமற்போவதில்லை" (எரே 35:19) என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

ரேகாபியருக்கு திராட்சத்தோட்டங்களோ, வயலோ, விதைப்பாடோ, வீடுகளோ இல்லை. தங்களுடைய பின்சந்ததியாருக்கு சுதந்தரவீதமாகக் கொடுப்பதற்கு அவர்களிடத்தில் சொத்து எதுவுமில்லை. ஆனாலும் ரேகாபியரின் வம்சத்தார் அழிந்துபோகமாட்டார்கள். அவர்களுடைய பின்சந்ததியார் ஒழிந்துபோகமாட்டார்கள். அவர்கள் செழித்திருப்பார்கள்.

ரேகாபியர்கள் ஆசாரியர்களோ அல்லது லேவியர்களோ அல்ல. அவர்களுக்கு தேவாலய ஊழியத்தில் பங்குவீதம் எதுவுமில்லை. ஆனாலும் சகல நாட்களிலும் கர்த்தருக்கு முன்பாக நிற்கத்தக்க புருஷர்கள் ரேகாபியரின் குடும்பத்தில் இருப்பார்கள். அவர்கள் கர்த்தரை சேவிப்பார்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள். கர்த்தருக்கு பயந்து ஜீவிப்பார்கள். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நின்று அவரை சேவிப்பார்கள்.

36 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்லுகிறார். அந்த வார்த்தைகளையெல்லாம் ஒரு புஸ்தக சுருளில் எழுதுமாறு கர்த்தர் எரேமியாவிடம் சொல்லுகிறார். எரேமியா அவர்களுக்கு இதுவரையிலும் பிரசங்கம் பண்ணிய செய்திகளின் சுருக்கத்தை, அவர் இந்தப் புஸ்தக சுருளிலே எழுதவேண்டும்.

நேரியாவின் குமாரனாகிய பாருக்கு என்பவர். எரேமியா சொன்ன வார்த்தைகளையெல்லாம் ஒரு புஸ்தகத்திலே எழுதுகிறார் (எரே 36:1-4). பாருக்கு தான் எழுதின வார்த்தைகளை, கர்த்தருடைய ஆலயத்தில், உபவாச நாளிலே, ஜனங்களுடைய செவிகள் கேட்க வாசிக்கிறார் (எரே 36:5-10). இதன் பின்பு பாருக்கு புஸ்தக சுருளிலுள்ள செய்திகளை யூதாவின் பிரபுக்களுக்கு வாசிக்கிறார் (எரே 36:11-19).

பாருக்கு எழுதின புஸ்தக சுருளிலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளை யெகுதி என்பவன் ராஜாவுக்கு முன்பாக வாசிக்கிறான் (எரே 36:20,21). யோயாக்கீம் ராஜா, பாருக்கு எழுதின புஸ்தக சுருளை அக்கினியிலே எரித்துப்போடுகிறான். பாருக்கையும் எரேமியாவையும் பிடித்து சிறையிலடைக்குமாறு ராஜா கட்டளை கொடுக்கிறான் (எரே 36:22-26). கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை மறைக்கிறார்.

எரேமியா வேறொரு சுருளை எடுத்து, தம்முடைய வார்த்தைகளை மறுபடியும் எழுதுமாறு கர்த்தர் கட்டளைகொடுக்கிறார். யோயாக்கீம் முதலாம் சுருளிலிருந்த முந்தின வார்த்தைகளை எரித்துப்போட்டதினால், தேவனுடைய நியாயத்தீர்ப்பு யோயாக்கீமின் மீது வருகிறது. யோயாக்கீமுக்கு அழிவு வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

புஸ்தகச்சுருள்
எரே 36:1-8

எரே 36:1. யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலே கர்த்தரால் எரேமியாவுக்கு உண்டான வார்த்தை என்னவென்றால்:

எரே 36:2. நீ ஒரு புஸ்தகச்சுருளை எடுத்து, யோசியாவின் நாட்களிலே நான் உன்னுடனே பேசின நாள் முதற்கொண்டு இந்நாள்மட்டும் இஸ்ரவேலைக்குறித்தும், யூதாவைக்குறித்தும், சகல ஜாதிகளைக் குறித்தும் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் அதிலே எழுது.

எரே 36:3. யூதாவின் குடும்பத்தார், அவரவர் தங்கள்பொல்லாத வழியைவிட்டுத் திரும்பும்படியாகவும், தங்கள் அக்கிரமத்தையும் தங்கள் பாவத்தையும் நான் மன்னிக்கும்படியாகவும், தங்களுக்கு நான் செய்ய நினைத்திருக்கிற தீங்குகளைக் குறித்து ஒருவேளை அவர்கள் கேட்பார்கள் என்றார்.

எரே 36:4. அப்பொழுது எரேமியா நேரியாவின் குமாரனாகிய பாருக்கை அழைத்தான்; பாருக்கு என்பவன் கர்த்தர் எரேமியாவுடனே சொல்லிவந்த எல்லா வார்த்தைகளையும் அவன் வாய் சொல்ல ஒரு புஸ்தகச்சுருளில் எழுதினான்.

எரே 36:5. பின்பு எரேமியா பாருக்கை நோக்கி: நான் அடைக்கப்பட்டவன்; நான் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக்கூடாது.

எரே 36:6. நீ உள்ளே பிரவேசித்து, என் வாய் சொல்ல நீ எழுதின சுருளிலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளைக் கர்த்தருடைய ஆலயத்தில் உபவாசநாளிலே ஜனங்களுடைய செவிகள் கேட்க வாசிப்பதுமன்றி, தங்கள் பட்டணங்களிலிருந்து வருகிற எல்லா யூதா கோத்திரத்தாரும் கேட்கும்படி அவைகளை வாசிப்பாயாக.

எரே 36:7. ஒருவேளை அவர்கள் கர்த்தருடைய முகத்துக்கு முன்பாகப் பணிந்து விண்ணப்பம்பண்ணி, அவரவர் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்புவார்கள்; கர்த்தர் இந்த ஜனத்துக்கு விரோதமாகக் கூறியிருக்கிற கோபமும் உக்கிரமும் பெரியது என்று சொன்னான்.

எரே 36:8. அப்படியே நேரியாவின் குமாரனாகிய பாருக்கு அந்தப் புஸ்தகத்தில், கர்த்தருடைய ஆலயத்தில் கர்த்தருடைய வார்த்தைகளை வாசிக்கும்படி எரேமியா தீர்க்கதரிசி தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தான்.

எசேக்கியேலின் தீர்க்கதரிசன ஊழியத்தின் ஆரம்பத்தில் அவர் ஒரு புஸ்தக சுருளை தரிசனமாகக் காண்கிறார்

"அப்பொழுது இதோ, என்னிடத்திற்கு நீட்டப்பட்ட ஒரு கையைக் கண்டேன்; அந்தக் கையிலே ஒரு புஸ்தகச் சுருள் இருந்தது. அவர் அதை எனக்கு முன்பாக விரித்தார்; அதில் உள்ளும் புறம்பும் எழுதப்பட்டிருந்தது; அதிலே புலம்பல்களும், தவிப்பும், ஐயோ என்பதும் எழுதியிருந்தது" *(எசே 2:9,10).*

"பின்பு அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, நீ காண்கிறதைப் புசி; இந்தச் சுருளை நீ புசித்து, இஸ்ரவேல் சந்ததியாரிடத்தில் போய் அவர்களோடே பேசு என்றார்" *(எசே 3:1).*

இங்கு எரேமியாவினுடைய ஊழியக்காலத்தின் முடிவில், ஒரு புஸ்தக சுருளைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இது தரிசனத்தில் காணப்படுகிற புஸ்தக சுருள் அல்ல. பிரத்தியட்சமான புஸ்தக சுருள். எரேமியாவின் பிரசங்கச் செய்திகளெல்லாம் இந்தப் புஸ்தக சுருளில் சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை சொல்ல ஆரம்பித்த நாளிலிருந்து, இன்று வரையிலும், அவர் சொன்ன தீர்க்கதரிசன வாக்கியங்களை இந்தப் புஸ்தகத்தில் சுருக்கமாக எழுதவேண்டும் என்று கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று. இந்த வார்த்தை யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதாராஜாவின் நாலாம் வருஷத்திலே எரேமியாவுக்கு உண்டாயிற்று. யோயாக்கீம் ராஜாவின் நாலாம் வருஷம் என்பது யோசியா ராஜாவின் பதிமூன்றாம் வருஷமாகும்.

கர்த்தர் இந்த வருஷத்தில், எரேமியாவிடம், "நீ ஒரு புஸ்தகச்சுருளை எடுத்து, யோசியாவின் நாட்களிலே நான் உன்னுடனே பேசின நாள் முதற்கொண்டு இந்நாள்மட்டும் இஸ்ரவேலைக்குறித்தும், யூதாவைக்குறித்தும், சகல ஜாதிகளைக் குறித்தும் உன்னோடே சொன்ன எல்லா வார்த்தைகளையும் அதிலே எழுது" *(எரே 36:2)* என்று சொல்லுகிறார்.

ஜனங்கள் எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாய் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கிறார்கள். அவர்கள் ஒரு தரம் கேட்ட கர்த்தருடைய வார்த்தைகளை, திரும்ப திரும்ப கேட்கவேண்டும். அப்போதுதான் கர்த்தருடைய வார்த்தைகளை அவர்கள் மறந்துபோகாமல், தங்கள் நினைவில் வைத்திருப்பார்கள்.

ஒருவேளை முதல் தடவை கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டபோது, அதை ஜனங்கள் சரியாக புரிந்துகொள்ளாமலிருந்திருக்கலாம். அதே வார்த்தையை மறுபடியும் கேட்கும்போது, அதை புரிந்துகொள்வதற்கு அதிக வாய்ப்புள்ளது. ஒருவேளை அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை முதல் தடவை கேட்டபோது, கர்த்தருடைய கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படியாமலிருந்திருக்கலாம். அதே வார்த்தையை இரண்டாந்தரம் கேட்கும்போது, அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய அதிக வாய்ப்புள்ளது.

எரேமியா தீர்க்கதரிசி ஒரு புஸ்தக சுருளை எடுத்து, கர்த்தர் அவருக்கு சொன்ன எல்லா வார்த்தைகளையும் அதிலே எழுதவேண்டும். கர்த்தர் இவ்வாறு கட்டளையிடுவதற்கு ஒரு முக்கியமான காரணமுண்டு. யூதாவின் மனுஷர் தங்கள் பாவங்களில் அழிந்துபோய்விடக்கூடாது. அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்க வேண்டும். அவர்கள் வரப்போகிற தீங்குக்கு தப்பித்துக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் எரேமியாவிடம் புஸ்தக சுருளிலே தம்முடைய வார்த்தைகளை எழுதுமாறு கட்டளைகொடுக்கிறார். அதைத் தொடர்ந்து, அந்த வார்த்தைகளை ஏன் எழுதவேண்டும் என்பதற்கான காரணத்தையும் கர்த்தர் தெளிவுபடுத்துகிறார். "யூதாவின் குடும்பத்தார், அவரவர் தங்கள்பொல்லாத வழியைவிட்டுத் திரும்பும்படியாகவும், தங்கள் அக்கிரமத்தையும் தங்கள் பாவத்தையும் நான் மன்னிக்கும்படியாகவும், தங்களுக்கு நான் செய்ய நினைத்திருக்கிற தீங்குகளைக் குறித்து ஒருவேளை அவர்கள் கேட்பார்கள்" (எரே 36:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாவிகள் மனந்திரும்பவேண்டும். இதுவே ஊழியக்காரரின் விருப்பம். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், பாவிகள் மத்தியில் பிரசங்கம்பண்ணும்போது, அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்னும் பிரதான குறிக்கோளோடு பிரசங்கம்பண்ண வேண்டும். ஊழியக்காரரின் பிரசங்கம் பிரயோஜனமில்லாமல் விருதாவாய்ப் போய்விடக்கூடாது. எந்தவிதமான நோக்கமும், குறிக்கோளும் இல்லாமல் பிரசங்கிக்கப்படுகிற பிரசங்கச் செய்தி, ஒரு பிரயோஜனத்தையும் தராது.

ஊழியக்காரரின் பிரசங்கத்தின் மூலமாய், அவருடைய நோக்கம் நிறைவேறவில்லையென்றால், அவருடைய பிரசங்கத்தினால் ஒரு பயனும் உண்டாகவில்லை என்று பொருள். கர்த்தருடைய சித்தமும், ஊழியக்காரரின் நோக்கமும் ஒன்றாயிருக்கவேண்டும். கர்த்தர் ஜனங்களின் அக்கிரமங்களையும் பாவங்களையும் மன்னிக்க விரும்புகிறார். இதுவே கர்த்தருடைய திட்டம். தம்முடைய சித்தத்தையும் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்காகவே, கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை ஜனங்கள் மத்தியில் அனுப்புகிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்களுக்கு செய்ய நினைத்திருக்கிற தீங்குகளைக் குறித்து ஒருவேளை அவர்கள் கேட்பார்கள். கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் ஒருவேளை தங்கள் பொல்லாத வழியை விட்டுத் திரும்புவார்கள். கர்த்தர் அவர்கள் மனந்திரும்புவதைப் பார்த்து, அவர்களுடைய அக்கிரமத்தையும், பாவத்தையும் மன்னிப்பார்.

பாவிகள் மனந்திரும்பவேண்டும் என்பதை மனதில் வைத்து ஊழியக்காரர்கள் பிரசங்கம்பண்ணவேண்டும். ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு கர்த்தருடைய கிருபையின் வார்த்தைகளையும் சொல்லுகிறார்கள். அவருடைய எச்சரிப்பின் வார்த்தைகளையும் சொல்லுகிறார்கள். கர்த்தர் யூதாகுடும்பத்தாருடைய அக்கிரமங்களையும் பாவங்களையும் மன்னிக்க விரும்புகிறார். இது தேவனுடைய நீதி.

பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அப்போது கர்த்தர் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பார் . இது கர்த்தருடைய பொதுவான நியதி. ஆனாலும் கர்த்தர் கிருபையும் இரக்கமும் மிகுந்தவர். அவர் தம்முடைய ஜனங்களை எப்படியாவது மன்னிக்கவேண்டுமென்று விரும்புகிறார். பாவிகள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினால்தான் கர்த்தர் அவர்களை மன்னிப்பார் என்பது, அவருடைய பொதுவான நீதி. இருந்தாலும், பல சமயங்களில் கர்த்தருடைய இரக்கமும் கிருபையும், அவருடைய நீதியைவிட பெரிதாயிருக்கிறது.

கர்த்தர் பாவிகளுடைய அக்கிரமங்களையும் பாவங்களையும் மன்னிப்பதற்கு எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறார். பாவிகள் கர்த்தருடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். கர்த்தரோ தம்முடைய கிருபையினால், பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்று எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறார்.

கர்த்தர் கொடுக்கும் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வதற்கு பாவிகள் தங்களை தகுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். இதற்காகவே கர்த்தர் பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்தி, நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்புவதற்கு, நம்மை வழிநடத்துகிறார். நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்ப கர்த்தர் நமக்கு உதவிசெய்கிறார்.

பாருக்கு என்பவன் எரேமியாவின் சம்பிரதியாயிருக்கிறான். எரேமியா சொல்லுகிற வார்த்தைகளை பாருக்கு ஒரு புஸ்தக சுருளிலே எழுதுகிறான். பாருக்கு நேரியாவின் குமாரன். எரேமியா பாருக்கை அழைத்து, தான் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தைகளையும், ஒரு புஸ்தகத்தில் எழுதுமாறு சொல்லுகிறார். கர்த்தர் எரேமியாவிடம் தாம் சொன்ன எல்லா வார்த்தைகளையும் புஸ்தக சுருளிலே எழுதுமாறு சொல்லுகிறார். ஆனால் ஏதோ ஒரு காரணத்தினால் எரேமியா கர்த்தருடைய வார்த்தைகளை எழுதவில்லை. எரேமியா பாருக்கை எழுதுமாறு சொல்லுகிறார்.

ஒருவேளை எரேமியாவின் கையெழுத்து தெளிவில்லாததாகயிருக்கலாம். அவரால் வேகமாக எழுதமுடியாமல் இருக்கலாம். பாருக்கு ஒருவேளை விரைவாகவும், தெளிவாகவும் எழுதுகிறவராகயிருக்கலாம். எரேமியா பாருக்கின் தாலந்துகளை அறிந்திருக்கிறார். அவரை தன்னுடைய எழுத்தாணியைப்போல பயன்படுத்துகிறார்.

அப்போஸ்தலர் பவுல் தான் எழுதின நிருபங்களில் சிலவற்றை, தன்னுடைய சொந்த கைகளினால் எழுதினார். "என் கையெழுத்தாய் எவ்வளவு எழுதினேனென்று பாருங்கள்" (கலா 6:11). "இந்த நிருபத்தை எழுதின தெர்தியுவாகிய நான் கர்த்தருக்குள் உங்களை வாழ்த்துகிறேன்" (ரோம 16:22).

கர்த்தர் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான வரங்களைக் கொடுக்கிறார். ஒரு சிலருக்கு நன்றாய் பேசும் தாலந்து இருக்கிறது. வேறு சிலருக்கோ நன்றாய் எழுதும் தாலந்து இருக்கிறது. கர்த்தருடைய ஊழியத்தில் எல்லோருமே தேவைப்படுகிறார்கள். கர்த்தருடைய ஊழியம் நல்லமுறையில் நடைபெறுவதற்கு எல்லா வரங்களும் தேவையாயிருக்கிறது. ஆகையினால் கர்த்தருடைய வரங்களைப் பெற்றவர்கள் மற்றவர்களை ஏளனமாய் நினைக்கக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தில் அவர்கள் தேவையில்லை என்று சொல்லக்கூடாது.

"கண்ணானது கையைப்பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும்; தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது" (1கொரி 12:21).

கர்த்தருடைய ஆவியானவர் தம்முடைய வார்த்தைகளை எரேமியாவுக்குச் சொல்லுகிறார். எரேமியாவோ எழுதவேண்டிய வார்த்தைகளை பாருக்குக்குச் சொல்லுகிறார். பாருக்கு பிற்காலத்தில் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதர்கள் மத்தியில் தீர்க்கதரிசன ஊழியம் செய்தார் என்று சபை வரலாறு கூறுகிறது.

எரேமியா சொன்ன வார்த்தைகளையெல்லாம் பாருக்கு ஒரு புஸ்தக சுருளிலே எழுதுகிறார். இவை "வெல்லம்" என்று அழைக்கப்படும் தோல் சுருள்களில் எழுதப்பட்டிருக்கவேண்டும். ஒவ்வொரு பக்கத்தையும் நூலால் இணைத்து அதை புஸ்தக சுருளாக கோர்ப்பது வழக்கம்.

எரேமியா பாருக்கிடம் எழுதவேண்டிய வார்த்தைகளையெல்லாம் சொல்லுகிறார். பாருக்கு தான் எழுதின வார்த்தைகளையெல்லாம் ஜனங்களுக்கு முன்பாக வாசிக்கவேண்டும். எரேமியா தன்னைப்பற்றிச் சொல்லும்போது "நான் அடைக்கப்பட்டவன், நான் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கக்கூடாது" (எரே 36:5) என்று சொல்லுகிறார்.

எரேமியா இப்போது சிறைச்சாலையில் அடைக்கப்படவில்லை. அவர் ஏற்கெனவே சிறையிலடைக்கப்பட்டிருந்தால், எரேமியாவைப் பிடிக்கும்படி ராஜா கட்டளைகொடுக்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது (எரே 36:26). ஆனாலும் எரேமியா தேவாலயத்திற்குள் பிரவேசிக்கக் கூடாது என்று யோயாக்கீம் ராஜா தடைபண்ணியிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுலும் பல சபைகளுக்கு நிருபங்களை எழுதினார். தன்னால் போகமுடியாத சபைகளுக்கு, பவுல் நிருபங்களை எழுதியனுப்பினார். கர்த்தர் சொன்ன எல்லா வார்த்தைகளையும், புஸ்தக சுருளிலே எழுதி, அதை கர்த்தருடைய ஆலயத்திலே ஜனங்களுடைய செவிகள் கேட்க வாசிக்கவேண்டும். ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டு, ஒருவேளை தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்புவார்கள் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார் (எரே 36:3).

எரேமியா பாருக்கிடம் புஸ்தக சுருளிலுள்ள வாக்கியங்களை வாசிக்குமாறு சொல்லுகிறார். ஒருவேளை ஜனங்கள் கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக பணிந்து விண்ணப்பம்பண்ணி, தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்புவார்கள் என்று எரேமியா சொல்லுகிறார் (எரே 36:20).

கர்த்தருடைய கிருபையே நம்முடைய பொல்லாத வழிகளிலிருந்து நம்மைத் திருப்பும். ஆகையினால் கர்த்தருடைய கிருபைக்காக அவரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது.

எரேமியா பாருக்கிடம், "கர்த்தர் இந்த ஜனத்திற்கு விரோதமாக கூறியிருக்கிற கோபமும், உக்கிரமும் பெரியது" (எரே 36:7) என்று சொல்லுகிறார். பாருக்கு புஸ்தக சுருளிலுள்ள வர்த்தைகளை பயபக்தியோடும், தெய்வீக அதிகாரத்தோடும் வாசிக்கவேண்டும்.

எரேமியா பாருக்கிடம், " நீ உள்ளே பிரவேசித்து, என் வாய் சொல்ல நீ எழுதின சுருளிலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளைக் கர்த்தருடைய ஆலயத்தில் உபவாசநாளிலே ஜனங்களுடைய செவிகள் கேட்க வாசிப்பதுமன்றி, தங்கள் பட்டணங்களிலிருந்துவருகிற எல்லா யூதா கோத்திரத்தாரும் கேட்கும்படி அவைகளை வாசிப்பாயாக" (எரே 36:6) என்று சொல்லுகிறார்.

அப்படியே நேரியாவின் குமாரனாகிய பாருக்கு அந்தப் புஸ்தகத்தில், கர்த்தருடைய ஆலயத்தில் கர்த்தருடைய வார்த்தைகளை வாசிக்கும்படி எரேமியா தீர்க்கதரிசி தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்கிறார் (எரே 36:8). கர்த்தருடைய ஆலயத்தில், உபவாச நாளிலே ஜனங்களுடைய செவிகள் கேட்க, பாருக்கு புஸ்தக சுருளிலுள்ள வார்த்தைகளை வாசிக்கிறார்.

பாருக்கு புஸ்தக சுருளை வாசிக்கிறார்
எரே 36:9-19

எரே 36:9. யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம்என்னும் யூதா ராஜாவின் ஐந்தாம் வருஷத்து ஒன்பதாம் மாதத்திலே, எருசலேமிலிருக்கிற எல்லா ஜனத்துக்கும், யூதாவின் பட்டணங்களிலிருந்துஎருசலேமுக்கு வருகிற எல்லா ஜனத்துக்கும், கர்த்தருக்கு முன்பாக உபவாசம் செய்யவேண்டுமென்று கூறப்பட்டது.

எரே 36:10. அப்பொழுது பாருக்கு கர்த்தருடைய ஆலயத்தின் மேற்பிராகாரத்தில், கர்த்தருடைய ஆலயத்து வாசலின் நடைக்கு அருகான சாப்பானுடைய குமாரனாகிய கெமரியா என்னும் சம்பிரதியின் அறையிலே, அந்தப் புஸ்தகத்திலுள்ள எரேமியாவின் வார்த்தைகளை ஜனங்கள் எல்லாரும் கேட்க வாசித்தான்.

எரே 36:11. சாப்பானுடைய குமாரனாகிய கெமரியாவின் மகன் மிகாயா அந்தப் புஸ்தகத்திலுள்ள கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் வாசிக்கக்கேட்டபோது,

எரே 36:12. அவன் ராஜாவின் அரமனைக்குப்போய், சம்பிரதியின் அறையில் பிரவேசித்தான்; இதோ, அங்கே எல்லாப்பிரபுக்களும் சம்பிரதியாகிய எலிசாமாவும் செமாயாவின் குமாரனாகிய தெலாயாவும், அக்போரின் குமாரனாகிய எல்நாத்தானும், சாப்பானின் குமாரனாகிய கெமரியாவும், அனனியாவின் குமாரனாகிய சிதேக்கியாவும், மற்ற எல்லாப் பிரபுக்களும் உட்கார்ந்தார்கள்.

எரே 36:13. பாருக்கு ஜனத்தின் செவிகள் கேட்கப் புஸ்தகத்திலுள்ளவைகளை வாசிக்கையில், தான் கேட்ட எல்லா வார்த்தைகளையும் மிகாயா அவர்களுக்குத் தெரிவித்தான்.

எரே 36:14. அப்பொழுது எல்லாப் பிரபுக்களும் கூஷியின் குமாரனாகிய செலேமியாவின் மகனான நெத்தானியாவினுடைய குமாரனாயிருக்கிற யெகுதியைப் பாருக்கினிடத்தில் அனுப்பி, ஜனங்கள் கேட்க நீ வாசித்துக்கொண்டிருந்த சுருளை உன் கையில் எடுத்துக்கொண்டுவா என்று சொல்லச் சொன்னார்கள்; ஆகையால், நேரியாவின் குமாரனாகிய பாருக்கு சுருளைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, அவர்களிடத்துக்கு வந்தான்.

எரே 36:15. அவர்கள் அவனை நோக்கி: நீ உட்கார்ந்துகொண்டு, நாங்கள் கேட்கவாசி யென்றார்கள்; அவர்கள் கேட்க வாசித்தான்.

எரே 36:16. அப்பொழுது அவர்கள் எல்லா வார்த்தைகளையும் கேட்கையில் பயமுற்றவர்களாய் ஒருவரையொருவர் பார்த்து, பாருக்கை நோக்கி: இந்த எல்லா வார்த்தைகளையும் ராஜாவுக்கு நிச்சயமாய் அறிவிப்போம் என்றார்கள்.

எரே 36:17. அவன் வாய் சொல்ல, நீ இந்த வார்த்தைகளையெல்லாம் எவ்விதமாய் எழுதினாய். அதை எங்களுக்குச் சொல் என்று பாருக்கைக் கேட்டார்கள்.

எரே 36:18. அதற்குப் பாருக்கு: அவர் தமது வாயினால் இந்த எல்லா வார்த்தைகளையும் உரைத்து, என்னுடனே சொன்னார், நான் மையினால் புஸ்தகத்தில் எழுதினேன் என்றான்.

எரே 36:19. அப்பொழுது பிரபுக்கள் பாருக்கை நோக்கி: நீயும் எரேமியாவும் போய் ஒளித்துக்கொள்ளுங்கள்; நீங்கள் இருக்கும் இடத்தை ஒருவரும் அறியப்படாது என்று சொல்லி,

பாருக்கு எரேமியா சொன்ன வார்த்தைகளை புஸ்தக சுருளிலே எழுதி அதை ஜனங்களுடைய செவிகள் கேட்க வாசிக்கிறார். எப்போதெல்லாம் ஜனங்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க ஆயத்தமாயிருக்கிறார்களோ, அப்போதெல்லாம் பாருக்கு புஸ்தக சுருளை அவர்களுக்கு வாசிக்கிறார். கர்த்தர் சொன்ன வார்த்தைகளை புஸ்தக சுருளிலே எழுதி, அதை ஜனங்களுடைய காதுகள் கேட்க வாசிக்கவேண்டும் என்னும் கட்டளை, யோயாக்கீம் ராஜாவின் நாலாம் வருஷத்திலே உண்டாயிற்று.

கர்த்தர் எரேமியாவுக்கு கட்டளைகொடுத்து ஒரு வருஷத்திற்கு பின்பு, யோயாக்கீம் ராஜாவின் ஐந்தாம் வருஷம் ஒன்பதாம் மாதத்திலே, பாருக்கு கர்த்தருடைய வார்த்தையை வாசிக்கிறார் (எரே 36:9). ஒருவேளை பாருக்கு எரேமியாவின் வார்த்தைகளை எழுத மேலும் ஒரு வருஷம் எடுத்திருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். பாருக்கு எரேமியாவின் வார்த்தைகளை சரியாக எழுதி, அதிலுள்ள எழுத்து பிழைகளையெல்லாம் திருத்தி, அதை புஸ்தக சுருளாக கோர்ப்பதற்கு சுமார் ஒரு வருஷகாலம் ஆயிற்று.

இந்த மாதத்தில் எருசலேமிலிருக்கிற எல்லா ஜனத்திற்கும் கர்த்தருக்கு முன்பாக உபவாசம் செய்யவேண்டும் என்று கூறப்பட்டது (எரே 36:9). ஒருவேளை கல்தேயருடைய முற்றிக்கையிலிருந்து தாங்கள் விடுதலைபெறவேண்டும் என்பதற்காகவோ அல்லது தேசத்திலே மழை பெய்து, தேசம் செழிப்படையவேண்டும் என்பதற்காகவோ இந்த உபவாசம் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கலாம். "மழைத்தாழ்ச்சியைக் குறித்து எரேமியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்" (எரே 14:1).

கர்த்தருக்கு முன்பாக உபவாசம் செய்யவேண்டும் என்று எருசலேமிலிருக்கிற எல்லா ஜனத்திற்கும், யூதாவின் பட்டணங்களிலிருந்து எருசலேமுக்கு வருகிற எல்லா ஜனத்திற்கும் கூறப்பட்டது. ஒரு சிலர் பக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் தூரமாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் மெய்யான தேவபக்தியில்லை. பக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொள்கிறவர்கள், தெய்வபக்தியினால் வரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் உபவாசம் பண்ணினாலும், உபவாசத்தினால் வரும் வல்லமைக்கு அவர்கள் அந்நியராகவே இருப்பார்கள்.

உபவாசம்பண்ணும்போது, நம்முடைய உள்ளத்தின் ஆழத்திலிருந்து, கர்த்தரை நினைவுகூர்ந்து, உபவாசம்பண்ணவேண்டும். உபவாசம்பண்ணுகையில் நம்முடைய இருதயத்தை சுத்தம்பண்ணவேண்டும். நம்முடைய பாவங்களுக்கு விலகவேண்டும். இருதயமும் சுத்திகரிக்கப்படாமல், பாவத்திற்கும் விலகாமல், பெயருக்கு உபவாசம் என்று இருந்தால், தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு நம்மால் தப்பித்துக்கொள்ள முடியாது.

"அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப்பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லி யிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்" *(யோனா 3:10).*

பாருக்கு எரேமியாவின் பிரசங்கச் செய்தியை, ஒரு உபவாச நாளிலே, சம்பிரதியின் அறையிலே வாசிக்கிறார். அந்தப் புஸ்தகத்திலுள்ள எரேமியாவின் வார்த்தைகளை ஜனங்களெல்லோரும் கேட்க பாருக்கு வாசிக்கிறார். பாருக்கு கர்த்தருடைய ஆலயத்தின் மேற்பிராகாரத்தில், கர்த்தருடைய ஆலயத்து வாசலின் நடைக்கு அருகான சாப்பானுடைய குமாரனாகிய கெமரியா என்னும் சம்பிரதியின் அறையிலே, அந்தப் புஸ்தகத்திலுள்ள எரேமியாவின் வார்த்தைகளை ஜனங்கள் எல்லாரும் கேட்க வாசிக்கிறார் *(எரே 36:10).*

ராஜாவின் அரமனையில் சம்பிரதியின் அறை இருக்கிறது. அங்கே எல்லாப்பிரபுக்களும் சம்பிரதியாகிய எலிசாமாவும் செமாயாவின் குமாரனாகிய தெலாயாவும், அக்போரின் குமாரனாகிய எல்நாத்தானும், சாப்பானின் குமாரனாகிய கெமரியாவும், அனனியாவின் குமாரனாகிய சிதேக்கியாவும், மற்ற எல்லாப் பிரபுக்களும் உட்கார்ந்திருக்கிறார்கள் *(எரே 36:12).*

பாருக்கு கர்த்தருடைய ஆலயத்தில், புஸ்தகத்திலுள்ள எரேமியாவின் வார்த்தைகளை வாசிப்பதை, மிகாயா என்பவன் கேட்கிறான். இவன் சாப்பானுடைய குமாரனாகிய கெமரியாவின் மகன். மிகாயா பாருக்கு வாசித்ததைக் கேட்டு, ராஜாவின் அரமனையிலுள்ள சம்பிரதியின் அறைக்குப்போய், அங்கே உட்கார்ந்திருந்த பிரபுக்கள் எல்லோருக்கும், தான் கேட்ட எல்லா வார்த்தைகளையும் தெரிவிக்கிறான் *(எரே 36:13).*

தேசத்தின் பிரபுக்கள் எருசலேமிலிருக்கிற எல்லா ஜனத்திற்கும், யூதாவின் பட்டணங்களிலிருந்து எருசலேமுக்கு வருகிற எல்லா ஜனத்திற்கும், கர்த்தருக்கு முன்பாக உபவாசம் செய்யவேண்டும் என்று கட்டளை கொடுத்திருக்கிறார்கள். ஜனங்களெல்லோரும் பிரபுக்களின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தருடைய ஆலயத்திலே கூடிவந்து உபவாசம்பண்ணுகிறார்கள். ஆனால் உபவாசம்பண்ணுமாறு கட்டளைகொடுத்த பிரபுக்களோ ராஜாவின் அரமனையிலுள்ள சம்பிரதியின் அறையிலே கூடியிருக்கிறார்கள். ஜனங்கள் உபவாசம்பண்ணும்போது, பிரபுக்கள் உபவாசம்பண்ணாமலிருக்கிறார்கள். ஜனங்கள் உபவாசித்து, ஜெபம்பண்ணி, கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். பிரபுக்களோ அரமனையிலே தங்கள் சொந்த கதைகளைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

மிகாயா ராஜாவின் அரமனையிலுள்ள சம்பிரதியின் அறைக்குப்போகிறார். அங்கே உட்கார்ந்திருக்கிற பிரபுக்களிடம், பாருக்கு வாசித்த செய்திகளெல்லாவற்றையும் சொல்லுகிறார். அப்பொழுது எல்லாப் பிரபுக்களும் கூஷியின் குமாரனாகிய செலேமியாவின் மகனான நெத்தானியாவினுடைய குமாரனாயிருக்கிற யெகுதியைப் பாருக்கினிடத்தில் அனுப்பி, ஜனங்கள் கேட்க நீ வாசித்துக்கொண்டிருந்த சுருளை உன் கையில் எடுத்துக்கொண்டுவா என்று சொல்லச் சொன்னார்கள்; ஆகையால், நேரியாவின் குமாரனாகிய பாருக்கு சுருளைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, அவர்களிடத்துக்கு வருகிறான் (எரே 36:14).

பிரபுக்கள் பாருக்கை நோக்கி, "நீ உட்கார்ந்து, நாங்கள் கேட்க வாசி" என்று சொல்லுகிறார்கள். பாருக்கும் அவர்கள் கேட்க புஸ்தகத்திலுள்ளவைகளை வாசிக்கிறான். பிரபுக்கள் பாருக்கு வாசித்த வார்த்தைகளெல்லாவற்றையும் கேட்கையில் பயப்படுகிறார்கள். பிரபுக்கள் ஒருவரையொருவர் நோக்கி பார்க்கிறார்கள். அவர்கள் பாருக்கை நோக்கி, "இந்த எல்லா வார்த்தைகளையும் ராஜாவுக்கு நிச்சயமாய் அறிவிப்போம்" என்று சொல்லுகிறார்கள் (எரே 36:14).

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய சாட்சியை சொன்னபோது பேலிக்ஸ் ராஜா பயப்பட்டான். அதுபோலவே பாருக்கு கர்த்தருடைய வார்த்தைகளை வாசிக்கும் போது, அதைக் கேட்டு யூதாவின் பிரபுக்கள் பயப்படுகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய நீதியினால் ஜனங்களைக் கடிந்துகொள்கிறார். கர்த்தர் சொல்லியிருக்கிற தீர்க்கதரிசனங்கள் ஏற்கெனவே ஓரளவு நிறைவேறியிருக்கிறது. மீதமுள்ள தீர்க்கதரிசனமும் சீக்கிரத்தில் நிறைவேறக்கூடிய சூழ்நிலையிலிருக்கிறது. இதனால் பிரபுக்களெல்லோரும் பாருக்கு வாசித்த வார்த்தைகளைக் கேட்டு பயப்படுகிறார்கள்.

பாருக்கு புஸ்தகத்திலுள்ள எரேமியாவின் வார்த்தைகளை ஜனங்களெல்லோரும் கேட்க வாசித்தான் (எரே 36:10). அதைக் கேட்டு ஜனங்கள் பயப்பட்டார்களா என்பதும், அவர்களுடைய மனநிலை எப்படியிருந்தது என்பதும் தெளிவாகத் தெரியவில்லை.

ஆனால் பிரபுக்களோ பாருக்கு வாசித்த வார்த்தைகளைக் கேட்டு, பயமுற்றவர்களாய், ஒருவரையொருவர் நோக்கிப் பார்க்கிறார்கள். பாருக்குக்கு என்ன பிரதியுத்தரம் சொல்லவேண்டும் என்று அவர்களுக்கு தெரியவில்லை. ஆகையினால் இந்த வார்த்தைகளெல்லாவற்றையும் ராஜாவுக்கு நிச்சயமாய் அறிவிப்போம் என்று சொல்லுகிறார்கள்.

பாருக்கு, தான் வாசித்த வார்த்தைகளையெல்லாம் எப்படி எழுதினான் என்பதை அறிந்துகொள்ள பிரபுக்கள் விரும்புகிறார்கள். "நீ இந்த வார்த்தைகளையெல்லாம் எவ்விதமாய் எழுதினாய். அதை எங்களுக்குச் சொல்" என்று பிரபுக்கள் பாருக்கைக் கேட்கிறார்கள். அதற்குப் பாருக்கு: அவர் தமது வாயினால் இந்த எல்லா வார்த்தைகளையும் உரைத்து, என்னுடனே சொன்னார், நான் மையினால் புஸ்தகத்தில் எழுதினேன் என்று சொல்லுகிறான் (எரே 36:17,18).

ராஜா இந்த வார்த்தைகளைக் கேட்டு, பாருக்கை அங்கீகரித்தால், பிரபுக்களும் பாருக்கை அங்கீகரிப்பார்கள். ஆனாலும் யோயாக்கீம் ராஜாவுடைய மனது எப்படிப்பட்டது என்று பிரபுக்களுக்கு நன்றாய்த் தெரியும். அவன் கர்த்தருக்கும் பயப்படமாட்டான். கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கும் பயப்படமாட்டான். ராஜா பாருக்கு வாசித்த செய்திகளைக் கேட்டு, பாருக்கையும், எரேமியாவையும் தண்டிப்பதற்கு வாய்ப்புள்ளது.

அப்பொழுது பிரபுக்கள் பாருக்கை நோக்கி: நீயும் எரேமியாவும் போய் ஒளித்துக்கொள்ளுங்கள்; நீங்கள் இருக்கும் இடத்தை ஒருவரும் அறியப்படாது என்று சொல்லுகிறார்கள் (எரே 36:19). பிரபுக்கள் பாருக்கையும் எரேமியாவையும் பாதுகாக்கிறார்கள். யோயாக்கீம் ராஜா கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு மனந்திரும்புவதற்குப் பதிலாக, கர்த்தருடைய வார்த்தையைச் சொன்ன எரேமியாவின்மீதும், பாருக்கின்மீதும் கோபப்படுவதற்கு வாய்ப்புள்ளது.

பாருக்கு எரேமியாவுக்கு விரோதமாக சதிசெய்யவில்லை என்பதை உறுதிபண்ணிக் கொள்கிறார்கள். எரேமியா சொல்லித்தான், தான் அந்த வார்த்தைகளை மையினால் புஸ்தகத்தில் எழுதியதாக பாருக்கு உறுதிபண்ணுகிறான். அதன் பின்பே பிரபுக்கள் எரேமியாவையும் பாருக்கையும் பாதுகாக்கிறார்கள்.

யோயாக்கீம் ராஜா புஸ்தக சுருளை அக்கினியில் எறிந்துபோடுகிறான் எரே 36:20-26

எரே 36:20. சுருளைச் சம்பிரதியாகிய எலிசாமாவின் அறையிலே வைத்து, ராஜாவினிடத்துக்கு அரமனையிலே போய், ராஜாவின் செவிகளுக்கு இந்த வார்தைகளையெல்லாம் அறிவித்தார்கள்.

எரே 36:21. அப்பொழுது ராஜா அந்தச்சுருளை எடுத்துக்கொண்டுவர யெகுதியை அனுப்பினான்; யெகுதி அதைச் சம்பிரதியாகிய எலிசாமாவின் அறையிலிருந்து எடுத்துக்கொண்டுவந்து, ராஜா கேட்கவும், ராஜாவினிடத்தில் நின்ற எல்லாப் பிரபுக்களும் கேட்கவும் வாசித்தான்.

எரே 36:22. ஒன்பதாம் மாதத்திலே ராஜா, குளிர்காலத்துக்குத் தங்கும் வீட்டில் உட்கார்ந்திருந்தான்; அவனுக்கு முன்பாக கணப்பு மூட்டியிருந்தது.

எரே 36:23. யெகுதி மூன்று நாலு பத்திகளை வாசித்த பின்பு, ராஜா ஒரு சூரிக்கத்தியினால் அதை அறுத்து, சுருளனைத்தும் கணப்பிலுள்ள அக்கினியிலே வெந்துபோகும்படி, கணப்பிலிருந்த அக்கினியில் எறிந்துபோட்டான்.

எரே 36:24. ராஜாவாயினும், அந்த வார்த்தைகளையெல்லாம் கேட்ட அவனுடைய சகல ஊழியக்காரராயினும் பயப்படவுமில்லை, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவுமில்லை.

எரே 36:25. எல்நாத்தானும், தெலாயாவும், கெமரியாவுமோ: அந்தச் சுருளைச் சுட்டெரிக்க வேண்டாம் என்று ராஜாவினிடத்தில் விண்ணப்பம்பண்ணினார்கள்; ஆனாலும், அவர்களுக்கு அவன் செவிகொடாமல்,

எரே 36:26. பாருக்கு என்னும் சம்பிரதியையும் எரேமியா தீர்க்கதரிசியையும் பிடிக்கும்படிக்கு, ராஜா அம்மெலேகின் குமாரனாகிய யெரமெயேலுக்கும், அஸ்ரியேலின் குமாரனாகிய செராயாவுக்கும், அப்தெயேலின் குமாரனாகிய செலேமியாவுக்கும் கட்டளைகொடுத்தான்; ஆனாலும் கர்த்தர் அவர்களை மறைத்தார்.

பிரபுக்கள் பாருக்கின் கையிலிருக்கிற சுருளை சம்பிரதியாகிய எலிசாமாவின் அறையிலே பத்திரமாக வைக்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் அரமனைக்குப்போய் யோயாக்கீம் ராஜாவின் செவிகளுக்கு இந்த வார்த்தைகளையெல்லாம் அறிவிக்கிறார்கள். ராஜா அந்த சுருளை எடுத்துக்கொண்டு வர யெகுதி என்பவனை அனுப்புகிறான். யெகுதி அதைச் சம்பிரதியாகிய எலிசாமாவின் அறையிலிருந்து எடுத்துக்கொண்டுவந்து, ராஜா கேட்கவும், ராஜாவினிடத்தில் நின்ற எல்லாப் பிரபுக்களும் கேட்கவும் வாசிக்கிறான் (எரே 36:20,21).

புஸ்தக சுருளை பாருக்கு வாசிப்பதை யோயாக்கீம் ராஜா விரும்பவில்லை. எரேமியா சொல்ல தான் எழுதின வார்த்தைகளை பாருக்கால் தெளிவாக வாசிக்க முடியும். பாருக்கு அதை அதிகாரத்தோடும், அன்போடும் வாசிப்பார். ஆனால் பாருக்கு அதை வாசிப்பதை ராஜா விரும்பவில்லை. பாருக்குக்குப் பதிலாக, அந்த புஸ்தக சுருளை யெகுதி வாசிக்கவேண்டும் என்று ராஜா விரும்புகிறான்.

கர்த்தரைக் கனம்பண்ணாதவர்கள் அவருடைய வார்த்தையையும் கனம்பண்ண மாட்டார்கள். கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிற அவருடைய ஊழியக்காரரையும் கனம்பண்ணமாட்டார்கள். யோயாக்கீம் ராஜா கர்த்தரையும் கனம்பண்ணவில்லை. அவருடைய ஊழியக்காரரையும் கனம்பண்ண வில்லை. ராஜாவுக்கு ஆவிக்குரிய காரியங்களில் ஆர்வமில்லை. ஆகையினால் கர்த்தருடைய வார்த்தையை யார் வேண்டுமானாலும் வாசிக்கலாம் என்று தீர்மானித்து, யெகுதியை வாசிக்க சொல்லுகிறான்.

பாருக்கு வாசித்த புஸ்தக சுருளிலிருந்து யெகுதி மூன்று அல்லது நான்கு பத்திகளை வாசித்து முடிக்கிறார். இது ஒன்பதாம் மாதம். குளிர்காலம். ராஜா குளிர்காலத்திற்கு தங்கும் வீட்டில் உட்கார்ந்திருக்கிறார். ராஜாவுக்கு முன்பாக கணப்பு மூட்டியிருக்கிறது.

கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க யோயாக்கீம் ராஜாவுக்கு பொறுமையில்லை. யூதாதேசத்தின் பிரபுக்கள் பாருக்கு வாசித்த செய்தியை பொறுமையோடு கேட்டார்கள். ராஜாவோ வேறு சிந்தனையிலிருக்கிறான். யெகுதி புஸ்தகத்திலுள்ள செய்தியை வாசிக்கும்போது, யோயாக்கீம் ராஜா அதை வேண்டா வெறுப்புடன் கேட்கிறான்.

யெகுதி மூன்று நாலு பத்திகளை வாசித்த பின்பு, ராஜா ஒரு சூரிக்கத்தியினால் அதை அறுத்து, சுருளனைத்தும் கணப்பிலுள்ள அக்கினியிலே வெந்து போகும்படி, கணப்பிலிருந்த அக்கினியில் எறிந்துபோடுகிறான் (எரே 36:23).

கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலமாய் யோயாக்கீம் ராஜாவை கடிந்துகொள்கிறார். கர்த்தர் கடிந்து கொள்வதை யோயாக்கீமால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. யெகுதி பாருக்கு எழுதின புஸ்தகத்தை வாசித்தாலும், அந்த வார்த்தைகள் பாருக்கின் வார்த்தைகளல்ல. அது கர்த்தருடைய வார்த்தை. கர்த்தர் பரலோகத்திலிருந்து அனுப்பியிருக்கிற வார்த்தை. ஆனால் யோயாக்கீம் ராஜாவோ சர்வவல்லமையுள்ள தேவனுக்கு மதிப்பு கொடுக்கவில்லை. கர்த்தர் தன்னைக் கண்டித்து உணர்த்தும்போது அவன் கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தவில்லை.

ராஜாவாயினும், அந்த வார்த்தைகளையெல்லாம் கேட்ட அவனுடைய சகல ஊழியக்காரராயினும் பயப்படவுமில்லை, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவுமில்லை (எரே 36:24).

யோயாக்கீம் ராஜா புஸ்தக சுருளை அக்கினியிலே சுட்டெரிக்கிறான். எல்நாத்தானும், தெலாயாவும், கெமரியாவுமோ: அந்தச் சுருளைச் சுட்டெரிக்கவேண்டாம் என்று ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்கள்; ஆனாலும், ராஜா அவர்களுடைய விண்ணப்பத்திற்கு செவிகொடுக்கவில்லை.

ராஜாவுக்கு பாருக்கின்மீதும் எரேமியாவின்மீதும் கோபம் வருகிறது. பாருக்கும் எரேமியாவும் யோயாக்கீம் ராஜாவுக்கு அருகில் இருந்திருந்தால், புஸ்தக சுருளை அக்கினியில் எறிந்துபோட்டதுபோல, அவர்களையும் அக்கினியிலே தூக்கிப்போட்டிருப்பான். கர்த்தர் எரேமியாவையும் பாருக்கையும் மறைக்கிறார். யோயாக்கீமால் அவர்களை ஒன்று செய்யமுடியவில்லை.

யோயாக்கீம் ராஜா தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. தனக்கு சொல்லப்பட்ட எச்சரிப்பின் வார்த்தைகளுக்கும் அவன் செவிகொடுக்கவில்லை. புஸ்தக சுருளை அக்கினியிலே எறிந்துபோட்டால், அந்த சுருளில் எழுதப்பட்ட வார்த்தைகள் தனக்கு விரோதமாக நிறைவேறாது என்று யோயாக்கீம் நினைக்கிறான். கர்த்தருடைய வார்த்தையை அழிக்க முடியாது. கர்த்தருக்கு விரோதமாக யாராலும் யுத்தம்பண்ணி ஜெயிக்க முடியாது.

புஸ்தக சுருளை அக்கினியில் எறிந்துபோட்டதினால் அதில் எழுதப்பட்டிருக்கிற செய்திகள் யூதா தேசத்திலே பரம்பாது என்று யோயாக்கீம் நம்புகிறான். அந்தச் செய்தி அக்கினியிலே எறிந்துபோகும் என்றும், அதன்பின்பு அந்தச் செய்தியைக் கேட்பதற்கு வாய்ப்பு உண்டாகாது என்றும் யோயாக்கீம் நினைக்கிறான்.

புஸ்தக சுருளில் எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகள் ராஜாவுக்கு ஒரு பாதிப்பும் உண்டுபண்ணவில்லை. ராஜாவாயினும், அந்த வார்த்தைகளையெல்லாம் கேட்ட அவனுடைய சகல ஊழியக்காரராயினும் பயப்படவுமில்லை, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவுமில்லை (எரே 36:24). பிரபுக்கள் புஸ்தக சுருளிலுள்ள வார்த்தைகளைக் கேட்டபோது, அவர்கள் பயமுற்றவர்களாய் ஒருவரையொருவர் பார்த்து நடுங்கினார்கள் (எரே 34:16). ஆனால் இப்போது அவர்கள்கூட பயப்படவில்லை. அவர்களும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவில்லை.

புஸ்தக சுருளிலுள்ள வார்த்தைகளை ராஜா கேட்டு, அவர் வேதனைப்படுவாரோ என்று நினைத்து பிரபுக்கள் பயந்தார்கள். ராஜாவோ துணிகரமாய்ப் பாவம் செய்கிறான். புஸ்தக சுருளையே அக்கினியில் எறிந்துபோடுகிறான். அதைப் பார்த்து பிரபுக்களும் துணிகரம் கொள்கிறார்கள். அவர்களிடத்தில் காணப்பட்ட பயம் அவர்களை விட்டு நீங்கிப்போயிற்று. பிரபுக்களும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளாமல், கர்த்தருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கிறார்கள். துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

யூதா ராஜாவின் பிரபுக்களில் மூன்றுபேர் கர்த்தருக்கு பயந்தவர்களாயிருக்கிறார்கள். எல்நாத்தான், தெலாயா, கெமரியா ஆகிய மூன்று பிரபுக்களும், யோயாக்கீம் ராஜா புஸ்தக சுருளை அக்கினியிலே எறிந்துபோடும்போது, "அந்தச் சுருளை சுட்டெரிக்கவேண்டாம்" என்று ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணுகிறார்கள் (எரே 36:25). ஆனால் அவர்களுடைய முயற்சி வீணாய்ப்போயிற்று. யோயாக்கீம் ராஜா தன்னுடைய மூன்று பிரபுக்களின் விண்ணப்பங்களுக்கு செவிகொடுக்கவில்லை. புஸ்தக சுருளை அக்கினியிலே சுட்டெரிக்கிறான்.

யோயாக்கீம் புஸ்தக சுருளை சுட்டெரித்ததோடு, எரேமியாவையும் பாருக்கையும் பழிவாங்கவேண்டும் என்றும் நினைக்கிறான். பாருக்கு என்னும் சம்பிரதியையும் எரேமியா தீர்க்கதரிசியையும் பிடித்து வருமாறு, தன்னுடைய மனுஷரில் இரண்டு பேருக்கு கட்டளைகொடுக்கிறான். கர்த்தரோ எரேமியாவையும் பாருக்கையும் அவர்களுடைய கண்களுக்கு மறைக்கிறார் (எரே 36:26).

வேறொரு சுருள்
எரே 36:27,28

எரே 36:27. ராஜா அந்தச் சுருளையும், அதிலே எரேமியாவின் வாய்சொல்லப் பாருக்கு எழுதியிருந்த வார்த்தைகளையும் சுட்டெரித்தபின்பு, எரேமியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்:

எரே 36:28. நீ திரும்ப வேறொரு சுருளை எடுத்து, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் சுட்டெரித்த முதலாம் சுருளிலிருந்த முந்தின வார்த்தைகளையெல்லாம் அதிலே எழுது என்றார்.

யோயாக்கீம் ராஜாவால் புஸ்தக சுருளை மாத்திரமே சுட்டெரிக்க முடிகிறது. அதில் எழுதப்பட்டிருக்கிற கர்த்தருடைய வார்த்தைகளை அவனால் சுட்டெரிக்க முடியவில்லை. கர்த்தர் ஜீவனுள்ளவர். அவருடைய வார்த்தையும் ஜீவனுள்ளது. எரேமியாவுக்கு மறுபடியும் கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. யோயாக்கீம் ராஜா புஸ்தக சுருளையும், அதிலே எரேமியாவின் வாய் சொல்ல பாருக்கு எழுதியிருந்த வார்த்தைகளையும் சுட்டெரித்த பின்பு, எரேமியாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று (எரே 36:27).

கர்த்தர் எரேமியாவிடம் "நீ திரும்ப வேறொரு சுருளை எடுத்து, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் சுட்டெரித்த முதலாம் சுருளிலிருந்த முந்தின வார்த்தைகளையெல்லாம் அதிலே எழுது" (எரே 36:28) என்று சொல்லுகிறார்.

யோயாக்கீமைப்போலவே, பரிசுத்த வேதாகமத்தை எரித்துப்போடவேண்டுமென்று பலர் எழும்பினார்கள். அவர்கள் பரிசுத்த வேதாகமத்தின் பிரதிகளை அக்கினியிலே போட்டு எரித்தார்கள். ஆனாலும் அவர்களால் கர்த்தருடைய வார்த்தையை அழிக்க முடியவில்லை. கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறுவதை அவர்களால் தடைபண்ண முடியவில்லை. கர்த்தருடைய வார்த்தை என்றும் நிலைத்திருக்கும்.

யோயாக்கீமுடைய பிரேதம் எரே 36:29-32

எரே 36:29. மேலும் நீ யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமை நோக்கி: பாபிலோன் ராஜா நிச்சயமாய் வருவான் என்பதையும், அவன் இந்த தேசத்தை அழித்து அதிலிருந்து மனுஷரையும் மிருகங்களையும் ஒழியப்பண்ணுவான் என்பதையும் நீ அதில் எழுதினதேதென்று சொல்லி, அந்தச் சுருளை நீ சுட்டெரித்தாயே என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 36:30. ஆகையால் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமைக்குறித்து: தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்காரும்படி அவன் வம்சத்தில் ஒருவனும் இரான்; அவனுடைய பிரேதமோவென்றால், பகலின் உஷ்ணத்துக்கும் இரவின் குளிருக்கும் எறிந்து விடப்பட்டுக்கிடக்கும்.

எரே 36:31. நான் அவனிடத்திலும், அவன் சந்ததியினிடத்திலும், அவன் பிரபுக்களினிடத்திலும் அவர்கள் அக்கிரமத்தை விசாரித்து, அவன்மேலும் எருசலேமின் குடிகள்மேலும், யூதா மனுஷர்மேலும், நான் அவர்களுக்குச்சொன்னதும், அவர்கள் கேளாமற்போனதுமான தீங்களைத்தையும் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

எரே 36:32. அப்பொழுது எரேமியா வேறொரு சுருளை எடுத்து, அதை நேரியாவின் குமாரனாகிய பாருக்கு என்னும் சம்பிரதியினிடத்தில் கொடுத்தான்; அவன் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அக்கினியால் சுட்டெரித்த புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம், அதிலே எரேமியாவின் வாய் சொல்ல எழுதினான்; இன்னும் அவைகளுக்கொத்த அநேகம் வார்த்தைகளும் அவைகளோடே சேர்க்கப்பட்டது.

யோயாக்கீம் யூதாதேசத்திற்கு மாத்திரமே ராஜாவாயிருக்கிறார். கர்த்தரோ ராஜாதி ராஜாவாகவும், சர்வலோகத்திற்கும் அதிபதியாகவும் இருக்கிறார். கர்த்தாதி கர்த்தருடைய வார்த்தைகளை யோயாக்கீம் சுட்டெரித்துப்போட்டான். யோயாக்கீம் கர்த்தர்மீதும், அவருடைய வார்த்தையின்மீதும் கோபப்பட்டான். யோயாக்கீம் எரித்த புஸ்தக சுருளில், அவனுக்கு விரோதமாக கர்த்தர் சொன்ன வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கிறது.

"பாபிலோன் ராஜா நிச்சயமாய் வருவான் என்பதையும், அவன் இந்த தேசத்தை அழித்து அதிலிருந்து மனுஷரையும் மிருகங்களையும் ஒழியப்பண்ணுவான்" (எரே 36:29) என்று கர்த்தர் தம்முடைய வார்த்தையை எரேமியாவுக்கு வெளிப்படுத்தினார். எரேமியாவின் வாய் இந்த வார்த்தைகளைச் சொன்னபோது, பாருக்கின் கைகள் இந்த வார்த்தைகளை புஸ்தக சுருளில் எழுதிற்று. புஸ்தக சுருளில் தனக்கு விரோதமான வார்த்தைகள் எழுதப்பட்டிருப்பதினால், யோயாக்கீம் ராஜா கோபப்பட்டு அந்தப் புஸ்தக சுருளை எரித்துப்போட்டான். "அந்த சுருளை நீ சுட்டெரித்தாயே" என்று கர்த்தர் எரேமியாவை யோயாக்கீமிடம் கேட்கச் சொல்லுகிறார்.

கர்த்தரும் அவருடைய ஊழியக்காரர்களும் சத்தியத்தைப் பேசுகிறார்கள். இதனால் அவர்கள் பாவிகளுக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். யூதாதேசத்திற்கும், யோயாக்கீம் ராஜாவுக்கும் வரப்போகிற அழிவை கர்த்தர் வெளிப்படுத்துகிறார். அந்த அழிவுக்கு யோயாக்கீமால் தப்பித்துக்கொள்ள முடியாது.

"தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்காரும்படி அவன் வம்சத்தில் ஒருவனும் இரான்; அவனுடைய பிரேதமோவென்றால், பகலின் உஷ்ணத்துக்கும் இரவின் குளிருக்கும் எறிந்து விடப்பட்டுக்கிடக்கும்" (எரே 36:30) என்று கர்த்தர் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீமைக் குறித்து சொல்லுகிறார். தேவனுடைய கோபம் யோயாக்கீமின்மீதும் அவனுடைய குடும்பத்தின்மீதும் வருகிறது. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருடைய கைகளின் மூலமாய் யோயாக்கீமுக்கு முதலாவதாக தண்டனை வருகிறது.

யோயாக்கீம் பட்டயத்தினால் செத்துப்போவான். இந்த சம்பவம் நடைபெற்ற ஒரு சில வாரங்களுக்கு பின்பு, அவனுடைய குமாரன் சிங்காசனத்திலிருந்து கீழே தள்ளப்படுவான். அவனுடைய ராஜவஸ்திரத்திற்குப் பதிலாக அவனுக்கு சிறையிருப்பின் வஸ்திரம் உடுத்தப்படும். யோயாக்கீம் வம்சத்தில் தாவீதின் சிங்காசனத்தின்மேல் உட்காருவதற்கு ஒருவரும் இருக்கமாட்டார்கள். யோயாக்கீமுக்கும் அகாலமரணமுண்டாகும். அவனுடைய பிரேதத்தை நல்லடக்கம் பண்ணுவதற்கு கூட ஒருவரும் இருக்கமாட்டார்கள். கழுதையின் பிரேதத்தை குழியிலே தள்ளுவதுபோல, யோயாக்கீமின் பிரேதத்தை பகலின் உஷ்ணத்திற்கும் இரவின் குளிருக்கும் எறிந்துவிடுவார்கள்.

யோயாக்கீமின்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வந்ததுபோல அவனுடைய சந்ததியின்மீதும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும். யோயாக்கீமின் பிரபுக்கள் ராஜாவுக்கு உடந்தையாயிருந்து, அவனுடைய எல்லா பாவங்களுக்கும் பங்காளிகளாயிருந்தார்கள். ஆகையினால் கர்த்தர் யோயாக்கீமின் பிரபுக்களிடத்திலும் அவர்களுடைய அக்கிரமத்தை விசாரிப்பார் (எரே 36:30). பிரபுக்கள் யோயாக்கீம் ராஜாவுடைய பாவத்திற்காக தண்டிக்கப்படவில்லை. பிரபுக்கள் தங்களுடைய சொந்த பாவங்களுக்காகவே தண்டிக்கப்படுகிறார்கள்.

கர்த்தர் யோயாக்கீம் ராஜாவின்மீதும் யூதாமனுஷர்மேலும் தீங்குகள் வரும் என்று சொன்னார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காவிட்டாலும், கர்த்தர் "அவர்கள்மீது வரும்" என்று சொன்ன தீங்குகள் எல்லாவற்றையும், அவர்கள்மேல் வரப்பண்ணுவார் (எரே 36:31). யூதாவின் மனுஷரால் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கமுடியாது. யூதாவின் மனுஷர் மாத்திரமல்ல, பாவம் செய்கிற எந்த மனுஷனாலும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கவே முடியாது.

எரேமியா கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், வேறொரு சுருளை எடுத்து, அதை நேரியாவின் குமாரனாகிய பாருக்கு என்னும் சம்பிரதியிடம் கொடுக்கிறான். "அவன் யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அக்கினியால் சுட்டெரித்த புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம், அதிலே எரேமியாவின் வாய் சொல்ல எழுதுகிறான்" (எரே 36:32).

எரேமியா சொன்ன வார்த்தைகளை மாத்திரமல்ல, அவைகளுக்கொத்த அநேகம் வார்த்தைகளும் அவைகளோடே சேர்க்கப்பட்டு, புஸ்தக சுருளிலே எழுதப்படுகிறது. யூதாதேசத்தின்மீது இன்னும் புதிய நியாயத்தீர்ப்புக்கள் அறிவிக்கப்படுகிறது. அவர்கள் தேவனுடைய கற்பனைக்கு விரோதமாக நடந்ததினால், அக்கினி சூளை ஏழுமடங்கு அதிகமாய் சூடேற்றப்பட்டதுபோல, கர்த்தருடைய கோபம் யூதாமனுஷருக்கு விரோதமாக ஏழுமடங்கு அதிகரிக்கிறது. இதன் நிமித்தமாய் கர்த்தர் ஏற்கெனவே சொன்ன வார்த்தைகளுக்கு ஒத்த வார்த்தைகள் புஸ்தக சுருளிலே சேர்க்கப்படுகிறது. இந்த வார்த்தைகளெல்லாமே யூதாமனுஷர்மீது கர்த்தர் நியமித்திருக்கிற நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளாகும்.

37 அதிகாரம்

கல்தேயர் மூலமாய் எருசலேமுக்கு அழிவு சமீபமாய் வருகிறது. சிதேக்கியா ராஜாவின் கடைசிகாலத்தில் இந்த சம்பவம் நடைபெறுகிறது. சிதேக்கியா ராஜாவும் அவனுடைய ஊழியக்காரரும் கர்த்தர் எரேமியாவை கொண்டு சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை (எரே 37:1,2).

எரேமியா தங்களுக்காக கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணுமாறு சிதேக்கியா எரேமியா தீர்க்கதரிசிக்கு செய்தி சொல்லி அனுப்புகிறார் (எரே 37:3). எருசலேமை முற்றிக்கையிட்ட பாபிலோன் தேசத்தார், தங்கள் முற்றிக்கையை நிரந்தரமாக நீக்கிப்போடுவார்கள் என்று யூதாவின் மனுஷர் நம்புகிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீணானது (எரே 37:5).

எரேமியா இப்போது காவல் வீட்டில் இன்னும் போடப்படவில்லை. கல்தேயர்கள் மறுபடியும் எருசலேமுக்கு விரோதமாக வந்து, அதை முறிக்கைப்போடுவார்கள் (எரே 37:6-10). எரேமியா கைதுபண்ணப்படுகிறார் (எரே 37:11-15). கைதுபண்ணப்பட்ட எரேமியாவுக்கு சிதேக்கியா சலுகை காண்பிக்கிறார் (எரே 37:16-21).

கல்தேயர் திரும்பவும் வருவார்கள் எரே 37:1-10

எரே 37:1. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாதேசத்தில் ராஜாவாக நியமித்த யோயாக்கீமுடைய குமாரனாகிய கோனியாவின் பட்டத்துக்கு யோசியாவின் குமாரனாகிய சிதேக்கியா வந்து அரசாண்டான்.

எரே 37:2. கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியைக்கொண்டு சொன்ன வார்த்தைகளுக்கு அவனாகிலும், அவனுடைய ஊழியக்காரராகிலும், தேசத்தின் ஜனங்களாகிலும் செவிகொடுக்கவில்லை.

எரே 37:3. சிதேக்கியா ராஜாவோவெனில், செலேமியாவின் குமாரனாகிய யூகாலையும், மாசெயாவின் குமாரனாகிய செப்பனியா என்னும் ஆசாரியனையும் எரேமியா தீர்க்கதரிசியினிடத்தில் அனுப்பி: நீ நம்முடைய தேவனாகிய கர்த்தரை நோக்கி எங்களுக்காக விண்ணப்பம்பண்ண வேண்டும் என்று சொல்லச்சொன்னான்.

எரே 37:4. அப்பொழுது எரேமியா ஜனத்தின் நடுவே வரத்தும்போக்குமாயிருந்தான்; அவனை அவர்கள் காவல் வீட்டில் இன்னும் போடவில்லை.

எரே 37:5. பார்வோனின் சேனையோவென்றால், எகிப்திலிருந்து புறப்பட்டது; எருசலேமை முற்றிக்கைபோட்ட கல்தேயர் அவர்களுடைய செய்தியைக்கேட்டு, எருசலேமை விட்டு நீங்கிப்போனார்கள்.

எரே 37:6. அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர்:

எரே 37:7. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால், என்னிடத்தில் விசாரிக்கும்படி உங்களை என்னிடத்துக்கு அனுப்பின யூதாவின் ராஜாவை நீங்கள் நோக்கி: இதோ, உங்களுக்கு ஒத்தாசையாகப் புறப்பட்ட பார்வோனின் சேனை தன் தேசமாகிய எகிப்துக்குத் திரும்பிப்போகும்.

எரே 37:8. கல்தேயரோவென்றால், திரும்பிவந்து இந்த நகரத்துக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதைப்பிடித்து, அக்கினியால் சுட்டெரிப்பார்கள்.

எரே 37:9. கல்தேயர் நம்மைவிட்டு நிச்சயமாய்ப் போய்விடுவார்களென்று சொல்லி, நீங்கள் மோசம் போகாதிருங்கள், அவர்கள் போவதில்லை.

எரே 37:10. உங்களோடே யுத்தம்பண்ணுகிற கல்தேயருடைய சேனையையெல்லாம் நீங்கள் முறிய அடித்தாலும், மீந்தவர்கள் எல்லாரும் காயம்பட்டவர்களாயிருந்தாலும், அவர்கள் தங்கள் கூடாரங்களிலிருந்து எழும்பி, இந்த நகரத்தை அக்கினியால் சுட்டெரிப்பார்கள் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல்லுங்கள் என்றார்.

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியைக்கொண்டு தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார். அப்போது யோசியாவின் குமாரனாகிய சிதேக்கியா யூதாவுக்கு ராஜாவாயிருக்கிறார். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யோயாக்கீமுடைய குமாரனாகிய கோனியாவை, யூதாதேசத்தில் ராஜாவாக நியமித்தான். கோனியாவின் பட்டத்திற்கு சிதேக்கியா வந்து அரசாளுகிறார்.

கோனியா கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தான். கர்த்தருடைய வார்த்தைகளுக்கு அவன் செவிகொடுக்க வில்லை. இதனால் தேவனுடைய கோபம் அவன்மேல் வந்தது. சிதேக்கியாவுக்கு கோனியாவின் பரிதாபமான முடிவைப்பற்றி நன்றாய்த் தெரியும். ஆனாலும் சிதேக்கியா எச்சரிப்படையவில்லை. அவனும் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை.

கர்த்தர் தீர்க்கதரிசனமாய்ச் சொன்ன வார்த்தைகள் ஏற்கெனவே நிறைவேறிக்கொண்டு வருகிறது. இந்த சூழ்நிலையில்கூட, சிதேக்கியாவும் அவனுடைய ஊழியக்காரரும், யூதாதேசத்தின் ஜனங்களும் கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியைக் கொண்டு சொன்ன வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை *(எரே 37:2)*.

எரேமியா தங்களுக்காக ஜெபம்பண்ணினால் நன்றாயிருக்குமென்று சிதேக்கியா விரும்புகிறான். இதற்காக சிதேக்கியா ராஜா யூகாலையும் செப்பானியா என்னும் ஆசாரியனையும் எரேமியா தீர்க்கதரிசியினிடத்தில் அனுப்புகிறான். "நீ நம்முடைய தேவனாகிய கர்த்தரை நோக்கி எங்களுக்காக விண்ணப்பம்பண்ணவேண்டும்" என்று சிதேக்கியா இவர்கள் இருவர் மூலமாகவும் எரேமியாவுக்கு செய்தி சொல்லியனுப்புகிறான்.

இதற்கு முன்பு சிதேக்கியா இதே போன்ற காரியத்தை செய்திருக்கிறான். அப்போதும், சிதேக்கியா ராஜா செப்பனியா என்னும் தீர்க்கதரிசியை அனுப்பினான். அதே செப்பனியாவை சிதேக்கியா இப்போதும் எரேமியாவினிடத்தில் அனுப்புகிறான்.

"சிதேக்கியா ராஜா மல்கியாவின் குமாரனாகிய பஸ்கூரையும் ஆசாரியனான மாசெயாவின் குமாரனாகிய செப்பனியாவையும் எரேமியாவினிடத்தில் அனுப்பி: நீர் எங்களுக்காகக் கர்த்தரிடத்தில் விசாரியும்; பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எங்களுக்கு விரோதமாய் யுத்தஞ்செய்கிறான்; ஒருவேளை கர்த்தர் தம்முடைய எல்லா அற்புதச் செயலின்படியேயும் எங்களுக்கு அநுக்கிரகஞ்செய்து, அவனை எங்களைவிட்டுப் போகப்பண்ணுவார்" *(எரே 21:1,2)*.

சிதேக்கியா இந்த விஷயத்தில் நல்லவனாகயிருக்கிறான். அவனுக்குள் கர்த்தருக்கு பயப்படும் பயம் ஓரளவு இருக்கிறது. தனக்கு கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் தேவைப்படுகிறது என்பதை சிதேக்கியா புரிந்து வைத்திருக்கிறான். கர்த்தருடைய பரிசுத்தவான்கள், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினால், தேசத்திற்கு க்ஷேமம் உண்டாகும் என்று சிதேக்கியா நம்புகிறான்.

நமக்கு துன்பங்களும் வேதனைகளும் வரும்போது, நாமும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்களையும், நம்முடைய சபையாரையும் கர்த்தரிடத்தில் நமக்காக ஜெபம்பண்ணுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். இதன் மூலமாய் நாம் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். கர்த்தரை கனம்பண்ணுகிறோம். நம்முடைய கிறிஸ்தவ சகோதரர்களுக்கும் மரியாதை காண்பிக்கிறோம்.

ராஜாக்களும் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும். ராஜாக்கள் தங்கள் தேசத்தில் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிற பரிசுத்தவான்களை கனம்பண்ணவேண்டும். ஜெபமே தேசத்திற்கு பெலனைத் தரும்.

"எருசலேமின் குடிகள், சேனைகளின் கர்த்தராகிய தங்கள் தேவனுடைய துணையினால் எங்களுக்குப் பெலனானவர்கள் என்று அப்போது யூதாவின் தலைவர் தங்கள் இருதயத்திலே சொல்லுவார்கள்" *(சக 12:5).*

"நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" *(சக 12:10).*

சிதேக்கியா எரேமியாவை தனக்காக ஜெபம்பண்ணுமாறு வேண்டிக்கொண்டாலும், இதனால் சிதேக்கியாவுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை. எரேமியா சிதேக்கியாவை கர்த்தருடைய நாமத்தினால் கடிந்துகொள்கிறார்.

சிதேக்கியா எரேமியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசியாக அங்கீகரிக்கிறார். எரேமியா தனக்காகவும், தன்னுடைய தேசத்திற்காகவும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ண வேண்டுமென்று சிதேக்கியா எதிர்பார்க்கிறார். ஆனால் சிதேக்கியாவோ, அவனுடைய ஊழியக்காரரோ கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியைக் கொண்டு சொன்ன வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை.

சிதேக்கியா கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காவிட்டாலும், கர்த்தர் எரேமியாவின் விண்ணப்பத்திற்கு செவிகொடுப்பார் என்று எதிர்பார்க்கிறார். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லையென்றால், கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கு பதில் கொடுக்கமாட்டார். நம்முடைய ஜெபத்திற்கு மாத்திரமல்ல, நமக்காக வேண்டிக்கொள்கிற கர்த்தருடைய ஊழியக்காரரின் ஜெபத்திற்கும் பதில் கொடுக்கமாட்டார். நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லையென்றால், நமக்காக எத்தனைபேர் ஜெபம்பண்ணினாலும், நமக்கு ஒரு நன்மையும் உண்டாகாது. கர்த்தரிடத்திலிருந்து பதில் வராது.

எரேமியா தனக்காகவும், தன்னுடைய தேசத்து ஜனங்களுக்காகவும் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ண வேண்டுமென்று, சிதேக்கியா ராஜா தன்னுடைய ஆட்கள் மூலமாய் செய்தி சொல்லியனுப்புகிறான். இப்படி ஆட்களை அனுப்புவதற்குப் பதிலாக, சிதேக்கியா தானே நேரடியாகப்போய், எரேமியாவைப் பார்த்து, அவரோடுகூட கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணியிருந்தால், அது சிதேக்கியாவுக்கு நன்மையாயிருந்திருக்கும்.

கல்தேயர்கள் இதுவரையிலும் எருசலேமை முற்றிக்கைப்போட்டிருந்தார்கள். இதனால் எருசலேம் நகரத்திலும், யூதாவின் பட்டணங்களிலும் ஜனங்கள் மத்தியில் குழப்பமும், நெருக்கமும் உண்டாயிற்று. இப்போது கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிடுவதை விலக்கிக்கொண்டு, எருசலேம் நகரத்தைவிட்டு நீங்கிப்போகிறார்கள். இதனால் யூதாவின் மனுஷர் மத்தியிலும், எருசலேமின் குடிகள் மத்தியிலும் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. எரேமியாவும் ஜனத்தின் நடுவே வரத்தும் போக்குமாயிருக்கிறார். யூதாவின் மனுஷர் எரேமியாவை இன்னும் காவல் வீட்டிலே போடவில்லை.

எருசலேமும் கல்தேயரின் முற்றிக்கைக்கு நீங்கலாகி, ஆபத்துக்கு விலகியிருக்கிறது. பார்வோனின் சேனையோவென்றால், எகிப்திலிருந்து புறப்பட்டது; எருசலேமை முற்றிக்கைபோட்ட கல்தேயர் அவர்களுடைய செய்தியைக்கேட்டு, எருசலேமை விட்டு நீங்கிப்போனார்கள் *(எரே 37:5).*

சிதேக்கியா ராஜா பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் ஆளுகைக்குட்பட்டவன். சிதேக்கியா பாபிலோன் ராஜாவுக்கு பகுதி பணம் கட்டவேண்டும். சிதேக்கியா நேபுகாத் நேச்சாரின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, யூதாவை ஆளுகை செய்யவேண்டும். ஆனால் சிதேக்கியாவோ பாபிலோன் ராஜாவுக்குத் தெரியாமல், இரகசியமாக, எகிப்தின் ராஜாவாகிய பார்வோனோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறான்.

"இவன் அவனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து, தனக்குக் குதிரைகளையும் அநேகம் ஆட்களையும் அனுப்பவேண்டுமென்று தன் ஸ்தானாபதிகளை எகிப்துக்கு அனுப்பினான்; இப்படிப்பட்டவனுக்கு வாய்க்குமோ? இப்படிச் செய்கிறவன் தப்பித்துக்கொள்வானோ? உடன்படிக்கையை முறித்தவன் தப்பித்துக்கொள்வானோ?" (எசே 17:15).

சிதேக்கியா ராஜாவின் துரோகத்திற்கு தண்டனை கொடுப்பதற்காக பாபிலோன் ராஜா எருசலேமை முற்றிக்கை யிட்டிருக்கிறான். அப்போது எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், பாபிலோன் ராஜாவின் முற்றிக்கையிலிருந்து எருசலேம் நகரத்தை விடுவிப்பதற்காக, தன் படைகளோடு பாபிலோன் ராஜாவின் சேனைக்கு விரோதமாய் வருகிறான். அப்போது எருசலேமை முற்றிக்கைப்போட்ட கல்தேயர், எகிப்தியரின் சேனை தங்களுக்கு விரோதமாக வரும் செய்தியைக் கேட்டு, எருசலேமை விட்டு நீங்கிப்போகிறார்கள்.

கல்தேயர்கள் யூதாவின் மனுஷருக்கு பயந்தோ அல்லது எகிப்தியரின் சேனைக்கு பயந்தோ எருசலேமைவிட்டு நீங்கிப்போகவில்லை. தங்களுடைய யுத்த தந்திரத்தின் பிரகாரம், கல்தேயர்கள் எகிப்தியரோடு எருசலேமுக்கு அருகாமையில் யுத்தம் பண்ணுவதற்கு பதிலாக, எருசலேமைவிட்டு தூரத்திலேயே யுத்தம்பண்ண விரும்புகிறார்கள்.

எகிப்தியர்கள் எருசலேமுக்கு அருகாமையில் வந்துவிட்டால், யூதாவின் சேனையும் எகிப்தியரின் சேனையோடு சேர்ந்துகொள்ளும். கல்தேயர்கள் இவ்விரண்டு சேனைகளோடும் யுத்தம்பண்ணவேண்டும். கல்தேயர்கள் எருசலேமைவிட்டு நீங்கிப்போய் விட்டால், எகிப்தியரோடு தனியாகவும், யூதாதேசத்தாரோடு தனியாகவும் யுத்தம்பண்ண வாய்ப்புள்ளது.

எருசலேமைவிட்டு நீங்கிப்போன கல்தேயர்கள் மறுபடியும் திரும்பி வரமாட்டார்கள் என்று யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் நம்பிக்கையோடிருக்கிறார்கள். ஆனால் கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக மறுபடியும் திரும்பி வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"கல்தேயரோவென்றால், திரும்பிவந்து இந்த நகரத்துக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அதைப்பிடித்து, அக்கினியால் சுட்டெரிப்பார்கள். கல்தேயர் நம்மைவிட்டு நிச்சயமாய்ப் போய்விடுவார்களென்று சொல்லி, நீங்கள் மோசம்போகாதிருங்கள், அவர்கள் போவதில்லை" (எரே 37:8,9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பார்வோனின் சேனை யூதாதேசத்திற்கு ஒத்தாசையாக புறப்பட்டு வந்தார்கள். அவர்கள் மறுபடியும் தங்கள் தேசமாகிய எகிப்திற்கு திரும்பிப்போய்விடுவார்கள். அப்போது கல்தேயர்கள் மறுபடியும் எருசலேமுக்கு விரோதமாய் வருவார்கள்.

எருசலேமைவிட்டு நீங்கிப்போன கல்தேயர்கள், மறுபடியும் எருசலேமுக்கு விரோதமாக திரும்பி வரமாட்டார்கள் என்று நினைத்து சிதேக்கியா எரேமியா தீர்க்கதரிசியை கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணச் சொல்லுகிறார். எரேமியாவோ, "நீங்கள் மோசம்போகாதிருங்கள், அவர்கள் போவதில்லை" (எரே 37:9) என்று கர்த்தருடைய செய்தியை சிதேக்கியாவின் மனுஷருக்குச் சொல்லுகிறார்.

சாத்தான் வஞ்சிக்கிறவன். அவன் ஒளியின் வேஷத்தை தரித்துக்கொண்டு விசுவாசிகளை வஞ்சிப்பான். நம்மை நாமே வஞ்சிக்கும்போதுதான், சாத்தானால் நம்மை வஞ்சிக்க முடியும். நாம் மோசம் போகாதிருந்தால், சாத்தானால் நம்மை ஒன்றும் செய்யமுடியாது. எரேமியா சிதேக்கியாவின் மனுஷருக்கு புரியாத புதிர் வார்த்தைகளைச் சொல்லவில்லை. அவர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும்படி தெளிவாகப் பேசுகிறார்.

யூதாதேசத்தாருக்கு ஒத்தாசையாகப் புறப்பட்ட பார்வோனின் சேனை, தன் தேசமாகிய எகிப்திற்கு திரும்பிப்போகும் (எரே 37:7). எருசலேமைவிட்டு நீங்கிப்போன கல்தேயரும், திரும்பி வருவார்கள். எருசலேம் நகரத்தை மறுபடியும் முற்றிக்கைப்போடுவார்கள். கல்தேயர்கள் தங்களைவிட்டு நிச்சயமாய்ப் போய்விடுவார்கள் என்று சொல்லி, யூதாவின் மனுஷர் மோசம்போய்விடக்கூடாது (எரே 37:9). அவர்கள் எருசலேமைவிட்டு நீங்கிப்போகமாட்டார்கள். நிச்சயமாய் எருசலேமுக்கு விரோதமாய் திரும்பிவருவார்கள் (எரே 37:8).

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி அதைப்பிடித்து, அக்கினியால் சுட்டெரிப்பார்கள். எருசலேம் கல்தேயரின் கையில் ஒப்புக்கொடுக்கப்படும். கல்தேயரில் அநேகர் முறியடிக்கப்படுவார்கள். மீந்தவர்களில் அநேகர் காயம்பட்டிருப்பார்கள். ஆனாலும் காயம்பட்டிருக்கிற கல்தேயர்கள், தங்கள் கூடாரங்களிலிருந்து எழும்பி, எருசலேம் நகரத்தை அக்கினியால் சுட்டெரிப்பார்கள் (எரே 37:10).

கல்தேயருக்கும் யூதாவின் மனுஷருக்கும் இடையே நடைபெறுகிற யுத்தத்தில், இரண்டு சேனைகளிலும் உயிர்ச்சேதமுண்டாகும். யூதாவின் சேனையிலுள்ளவர்கள் கல்தேயருடைய சேனையை முறியடிப்பதற்கு வாய்ப்புள்ளது. கல்தேயரில் அநேகர் யூதாமனுஷரின் பட்டயத்தினால் வெட்டுண்டு விழுவார்கள். மீந்தவர்களெல்லோரும் காயம்பட்டு தங்கள் கூடாரங்களிலிருப்பார்கள்.

ஆனாலும் கல்தேயர்கள் தங்கள் பாபிலோன் தேசத்திற்கு தேற்று திரும்பிப்போவதில்லை. கல்தேயர்கள் காயம்பட்டவர்களாயிருந்தாலும், அவர்கள் தங்கள் கூடாரங்களிலிருந்து எழும்பி, எருசலேம் நகரத்தை அக்கினியால் சுட்டெரிப்பார்கள். எருசலேம் அழிந்துபோகும். அக்கினியால் சுட்டெரிக்கப்படும். எருசலேமின் குடிகளும், யூதாவின் மனுஷரும் தப்பிப்பதற்கு வாய்ப்பே இல்லை. கர்த்தர் நியமித்த அழிவு யூதாவின் மனுஷர்மீது வரும்.

காவற்கிடங்கின் நில்வறைகளில் எரேமியா
எரே 37:11-16

எரே 37:11. பார்வோனின் சேனை வருகிறதென்று, கல்தேயருடைய சேனை எருசலேமைவிட்டுப் போனபோது,

எரே 37:12. எரேமியா அவ்விடத்தைவிட்டு, ஜனத்தின் நடுவே ஜாடையாய் விலகி, பென்யமீன் தேசத்துக்குப்போக மனதாய் எருசலேமிருந்து புறப்பட்டுப்போனான்.

எரே 37:13. அவன் பென்யமீன் வாசலில் வந்தபோது, காவற்சேர்வையின் அதிபதியாகிய யெரியா என்னும் நாமமுள்ள ஒருவன் அங்கே இருந்தான்; அவன் அனனியாவின் குமாரனாகிய செலேமியாவின் மகன்; அவன்: நீ கல்தேயரைச் சேரப்போகிறவன் என்று சொல்லி, எரேமியா தீர்க்கதரிசியைப் பிடித்தான்.

எரே 37:14. அப்பொழுது எரேமியா: அது பொய், நான் கல்தேயரைச் சேரப்போகிறவனல்ல என்றான்; ஆனாலும் யெரியா எரேமியாவின் சொல்லைக்கேளாமல், அவனைப்பிடித்து, பிரபுக்களிடத்தில் கொண்டுபோனான்.

எரே 37:15. அப்பொழுது பிரபுக்கள்: எரேமியாவின்பேரில் கடுங்கோபங் கொண்டு, அவனை அடித்து, அவனைச் சம்பிரதியாகிய யோனத்தானுடைய வீட்டில் காவற்படுத்தினார்கள்; அவர்கள் அதைக் காவற்கூடமாக்கியிருந்தார்கள்.

எரே 37:16. அப்படியே எரேமியா காவற்கிடங்கின் நில்வறைகளில் பிரவேசித்து, அங்கே அநேகநாள் இருந்தான்.

எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில், அவருடைய வாழ்க்கை சரித்திரம் அதிகமாய் எழுதப்பட்டிருக்கிறது. மற்ற தீர்க்கதரிசிகளின் சரித்திரங்களைவிட, எரேமியாவின் சரித்திரமே, தீர்க்கதரிசன ஆகமங்களில் அதிகமாய் எழுதப்பட்டிருக்கிறது. எரேமியா இப்போது எருசலேம் நகரத்திலிருக்கிறார். கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை முற்றிக்கைப் போட்டிருக்கிறார்கள். பார்வோனின் சேனை எருசலேமுக்கு உதவியாக வருகிறது என்பதை கல்தேயர்கள் கேள்விப்படுகிறார்கள். இதன் நிமித்தமாய் கல்தேயர்கள் எருசலேமைவிட்டு நீங்கிப்போகிறார்கள்.

கல்தேயர்கள் எருசலேமைவிட்டு நீங்கிப்போனபோது, எரேமியா அவ்விடத்தை விட்டு, ஜனத்தின் நடுவே ஜாடையாய் விலகி, பென்யமீன் தேசத்துக்குப்போக மனதாய் எருசலேமிருந்து புறப்பட்டுப்போகிறார் (எரே 37:12). எரேமியா பென்யமீன் தேசத்திற்குப் போய்விடவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறார். எருசலேம் நகரத்திற்கு விரோதமாக கல்தேயரின் முற்றிக்கை விலக்கிக்கொள்ளப்பட்டிருக்கிறது. எரேமியா இந்த சூழ்நிலையை பயன்படுத்தி, பென்யமீன் தேசத்திற்குப் போகிறார்.

எரேமியா எருசலேம் நகரத்தில் பிரபலமானவர். அவரால் அங்கு வசதியாக வாழமுடியும். ஆனாலும் அவர் ஆனதோத் ஊரிலுள்ள ஆசாரியர்கள் மத்தியில் இருப்பதைவிட, பென்யமீன் தேசத்திற்குப் போக மனதாயிருக்கிறார். எரேமியா கர்த்தருடைய வார்த்தைகளை எருசலேமின் குடிகளுக்கு இதுவரையிலும் பிரசங்கம் பண்ணிக்கொண்டு வந்தார். அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவுமில்லை. எருசலேமில் இனிமேலும் ஊழியம் செய்வது வீணான காரியம் என்று தீர்மானித்து, எரேமியா பென்யமீன் தேசத்திற்குப்போக மனதாயிருக்கிறார்.

எரேமியா பென்யமீன் வாசலில் வந்தபோது, காவற்சேர்வையின் அதிபதியாகிய யெரியா என்னும் நாமமுள்ள ஒருவன் அங்கே இருக்கிறான்; இவன் பென்யமீன் வாசலுக்கு தலைமைக்காவல்காரன். அவன் அனனியாவின் குமாரனாகிய செலேமியாவின் மகன். அனனியா ஒரு கள்ளத்தீர்க்கதரிசி. எரேமியாவுக்கும் அனனியாவுக்கும் விரோதமாக ஏற்கெனவே வாக்குவாதமுண்டாயிருக்கிறது. "அப்பொழுது அனனியா என்கிற தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசியின் கழுத்திலிருந்த நுகத்தை எடுத்து அதை உடைத்துப்போட்டான்" (எரே 28:10).

காவற்சேர்வையின் அதிபதியாகிய யெரியா என்பவன் அனனியாவின் பேரன். தன் தாத்தாவுக்கும், எரேமியாவுக்கும் இடையே இருந்த பழைய பகையை யெரியா இன்னும் மறக்கவில்லை. யெரியா எரேமியாவிடம் "நீ கல்தேயரைச் சேரப்போகிறவன்" என்று சொல்லி, எரேமியா தீர்க்கதரிசியைப் பிடிக்கிறான் (எரே 37:13).

கல்தேயர்கள் ஏற்கெனவே எருசலேமைவிட்டு நீங்கிப்போய்விட்டார்கள். ஆனால் யெரியாவோ, எரேமியாவின்மீது "நீ கல்தேயரைச் சேரப்போகிறவன்" என்று பொய்யாய்க் குற்றம் சொல்லுகிறான். இந்த குற்றச்சாட்டில் உண்மையில்லை.

எரேமியா தன்னுடைய நிலமையை எடுத்துச் சொல்லுகிறார். எரேமியா தீர்க்கதரிசி யெரியாவிடம் "அது பொய், நான் கல்தேயரை சேரப்போகிறவனல்ல" என்று தன்னுடைய வாதத்தை எடுத்துச் சொல்லுகிறார். தான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று சொல்லி, யெரியா தன்மீது சொல்லும் குற்றச்சாட்டை எரேமியா மறுக்கிறார். தான் கல்தேயரை சேரப்போவதில்லை என்றும், பென்யமீன் தேசத்திற்குப் போக மனதாயிருப்பதாகவும் எரேமியா சொல்லுகிறார். ஆனால் யெரியாவோ எரேமியாவின் சொல்லைக் கேட்கவில்லை. அவன் எரேமியாவைப் பிடித்து பிரபுக்களிடத்தில் கொண்டு போகிறான்.

பிரபுக்கள் எரேமியாவின் பேரில் கடுங்கோபங்கொள்கிறார்கள். எரேமியாவைப் பிடித்து அடிக்கிறார்கள். அவர்கள் சம்பிரதியாகிய யோனத்தானுடைய வீட்டை காவற்கூடமாக்கியிருக்கிறார்கள். அந்த வீட்டிலே அவர்கள் எரேமியாவை காவற்படுத்துகிறார்கள். எரேமியா அந்தக் காவற்கிடங்கின் நிலவறைகளில் பிரவேசித்து, அங்கே அநேக நாள் இருக்கிறார் (எரே 37:11-16).

யெரியா எரேமியாவைப் பிடித்து விசாரிக்கும்போது, "நான் கல்தேயரை சேரப்போகிறவனல்ல" என்று தன்மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டை எரேமியா மறுக்கிறார். எரேமியா ஒரு தீர்க்கதரிசி. அவர் இந்த சூழ்நிலையில் கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு சொல்லியிருக்க முடியும். ஆனால் அவர்களோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காதவர்கள். அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லி, கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்க எரேமியா விரும்பவில்லை. யெரியாவும் எரேமியாவின்மீது மிகவும் கோபமாயிருக்கிறான். அவன் எரேமியாவை அதற்குமேல் ஒன்றும் விசாரியாமல், பிரபுக்களிடத்தில் கூட்டிக்கொண்டு போகிறான்.

பிரபுக்களும் எரேமியாவை விசாரிக்கவில்லை. அவர்கள் யெரியாவின் பேச்சை நம்புகிறார்கள். எரேமியாவின்மேல் கடுங்கோபங்கொள்கிறார்கள். எரேமியாவை அடித்து அவரை காவற்படுத்துகிறார்கள். அக்காலத்தில் சம்பிரதியாகிய யோனத்தானுடைய வீடு காவற்கூடமாயிருக்கிறது. இது மிகவும் கடினமாக காவற்கூடம். பிரபுக்கள் எரேமியாவை காவற்கிடங்கின் நிலவறைகளில் போட்டுவிடுகிறார்கள். எரேமியா இருளிலும், குளிரிலும், அசுத்தத்திலும் அங்கே அநேக நாள் இருக்கிறார்.

எரேமியாவும் சிதேக்கியாவும் எரே 37:17-21

எரே 37:17. பின்பு சிதேக்கியா ராஜா அவனை அழைத்தனுப்பி: கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ என்று ராஜா அவனைத் தன் வீட்டிலே இரகசியமாய்க்கேட்டான். அதற்கு எரேமியா: உண்டு, பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவீர் என்று சொன்னான்.

எரே 37:18. பின்னும் எரேமியா, சிதேக்கியா ராஜாவை நோக்கி: நீங்கள் என்னைக் காவல் வீட்டிலே அடைப்பதற்கு, நான் உமக்கும் உம்முடைய ஊழியக்காரருக்கும் இந்த ஜனத்துக்கும் விரோதமாக என்ன குற்றஞ்செய்தேன்?

எரே 37:19. பாபிலோன் ராஜா உங்களுக்கும் இந்த தேசத்துக்கும் விரோதமாக வருவதில்லையென்று உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொன்ன உங்களுடைய தீர்க்கதரிசிகள் எங்கே?

எரே 37:20. இப்போதும் ராஜாவாகிய என் ஆண்டவனே, எனக்குச் செவிகொடுத்து, என் விண்ணப்பத்துக்கு தயைசெய்து, என்னைச் சம்பிரதியாகிய யோனத்தானுடைய வீட்டிற்குத்திரும்ப அனுப்பவேண்டாம்; அனுப்பினால் நான் அங்கே செத்துப்போவேன் என்றான்.

எரே 37:21. அப்பொழுது எரேமியாவைக் காவற்சாலையின் முற்றத்தி லேகாக்கவும், நகரத்திலே அப்பமிருக்குமட்டும் அப்பஞ்சுடுகிறவர்களின் வீதியிலே தினம் ஒரு அப்பத்தை அவனுக்கு வாங்கிக்கொடுக்கவும் கட்டளையிட்டான்; அப்படியே எரேமியா காவற்சாலையின் முற்றத்திலே இருந்தான்.

எரேமியா காவற்கூடத்தின் நிலவறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார். சிதேக்கியா ராஜா எரேமியாவுக்கு ஆள் அனுப்பி அவரை தன்னுடைய அரண்மனைக்கு அழைத்து வருகிறார். ராஜா எரேமியாவிடம் பட்சமாய் நடந்துகொள்கிறார்.

கல்தேயர்கள் எருசலேமைவிட்டு நீங்கிப்போன பின்பு, சிதேக்கியா எரேமியாவைப்பற்றி நினைத்து கூட பார்க்கவில்லை. கல்தேயர்கள் யூதாதேசத்தை விட்டு நீங்கிப்போனவுடன், தனக்கு வந்த ஆபத்து எல்லாம் நீங்கிப்போயிற்று என்று சிதேக்கியா நினைத்தான்.

ஆனால் கல்தேயர்கள் மறுபடியும் திரும்பி வந்து எருசலேமுக்கு விரோதமாக முற்றிக்கைப்போடுகிறார்கள். யூதாதேசத்தை மறுபடியும் ஆபத்து சூழ்ந்துகொள்கிறது. சிதேக்கியாவின் நம்பிக்கை வீணாய்ப்போயிற்று. தன்னுடைய குழப்பத்திற்கு மத்தியில் சிதேக்கியா எரேமியாவைத் தேடி கண்டுபிடிக்கிறான்.

சிதேக்கியா ராஜா, எரேமியாவை அழைத்தனுப்பி, "கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ" என்று தன் வீட்டிலே இரகசியமாய்க் கேட்கிறான் (எரே 37:17), அதற்கு எரேமியா, "உண்டு, பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்" என்று சிதேக்கியாவுக்கு பதில் சொல்லுகிறார்.

சிதேக்கியா இதுவரையிலும் எரேமியாவை மதிக்கவில்லை. இப்போதோ எரேமியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசியாகப் பாவித்து அவரோடு பேசுகிறார். தன்னுடைய வீட்டிலே இரகசியமான இடத்தில் சிதேக்கியா எரேமியாவோடு கலந்து பேசுகிறார்.

தன்னுடைய அரண்மனையின் வேலைக்காரரோ, அல்லது யூதாதேசத்தின் பிரபுக்களோ அல்லது யூதாஜனங்களோ, தன்னை எரேமியா தீர்க்கதரிசியோடு ஒன்றாய் சேர்ந்து பார்த்துவிடக்கூடாது என்று சிதேக்கியா கவனமாயிருக்கிறான். எரேமியாவோடு கூடயிருப்பதற்கு சிதேக்கியா வெட்கப்படுகிறான்.

சிதேக்கியா எரேமியாவை தன் வீட்டில் இரகசியாக கூப்பிட்டு, "கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ" என்று கேட்கிறான். சிதேக்கியா கேட்கும் இந்த வாக்கியத்திற்கு, "கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஆறுதலான வார்த்தை எதுவும் உண்டா" என்பது பொருள்.

கல்தேயர்கள் மறுபடியுமாய் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, நகரத்தை முற்றிக்கைபோட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே எருசலேமைவிட்டு நீங்கிப் போனதுபோல, மறுபடியும் நீங்கிப்போவார்களா என்று தெரிந்துகொள்ள சிதேக்கியா விரும்புகிறான்.

எரேமியாவின் உயிரும் ஆறுதலும் சிதேக்கியாவின் கையிலிருக்கிறது. சிதேக்கியாவுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொன்னால், சிதேக்கியா எரேமியாவின்மீது பிரியமாயிருப்பான். சிதேக்கியா எரேமியாவுக்கு சில சலுகைகளை காண்பிப்பான். சிதேக்கியாவின் உதவியைப் பெற்றுக்கொள்ள எரேமியாவுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எரேமியாவோ கர்த்தர் சொன்னதை மாத்திரமே சொல்ல விரும்புகிறார்.

எரேமியா சிதேக்கியாவிடம் "உண்டு" என்று பிரதியுத்தரம் சொல்லுகிறார். "கர்த்தரால் உமக்கு ஒரு வார்த்தை உண்டு" என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையை சொல்ல ஆரம்பிக்கிறார் . "நீர் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்" (எரே 37:17) என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையை தெளிவாகப் பேசுகிறார். இது சிதேக்கியாவுக்கு ஆறுதலான வார்த்தையல்ல. எரேமியா இந்த வார்த்தையச் சொல்லுவதினால், அவருக்கு சிதேக்கியாவிடமிருந்து ஒரு அனுகூலமும் உண்டாகாது. ஆனாலும் எரேமியா கர்த்தருடைய வார்த்தையை அப்படியே சொல்லிவிடுகிறார்.

எரேமியா தன்னுடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் கலந்து ஆலோசனை செய்திருந்தால், எரேமியா சொன்ன வார்த்தைகள் வித்தியாசமாயிருந்திருக்கும். அவர் சிதேக்கியா ராஜாவுக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லியிருந்திருப்பார். ஆனால் எரேமியாவோ தன்னுடைய மாம்சத்தை கலந்து ஆலோசனை செய்யாமல், பரிசுத்த ஆவியானவரின் ஆலோசனையை மாத்திரமே கேட்கிறார். எரேமியாவுக்கு மனுஷருடைய உதவியைவிட, கர்த்தருடைய உதவியே பெரியதாய்த் தெரிகிறது. யூதாவின் ராஜாவுக்கு உண்மையாயிருப்பதற்குப் பதிலாக, ராஜாதி ராஜாவாகிய கர்த்தாதி கர்த்தருக்கு உண்மையாயிருக்கவேண்டு மென்று எரேமியா தீர்மானிக்கிறார்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை சிதேக்கியாவுக்கு சொல்லும்போது, தேசத்திலே பொய்யாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுகிற கள்ளத்தீர்க்கதரிசிகளைப்பற்றியும் பேசுகிறார். பாபிலோன் ராஜா யூதாதேசத்திற்கு விரோதமாக வருவதில்லை என்று கள்ளத்தீர்க்கதரிசிகள் பொய்யாய்த் தீர்க்க தரிசனம் சொன்னார்கள். அவர்களுடைய வார்த்தைகள் சித்திக்கவில்லை. கல்தேயர்கள் மறுபடியும் எருசலேமுக்கு விரோதமாக வந்து அதை முற்றிக்கைப் போட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தீர்க்கதரிசன வார்த்தைகள் பொய்யாயிற்று.

எரேமியா சிதேக்கியாவிடம் "பாபிலோன் ராஜா உங்களுக்கும் இந்த தேசத்துக்கும் விரோதமாக வருவதில்லையென்று உங்களுக்குத் தீர்க்கதரிசனம் சொன்ன உங்களுடைய தீர்க்கதரிசிகள் எங்கே?" (எரே 37:19) என்று கேட்கிறார்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை சிதேக்கியாவுக்கு சொல்லும்போது, தன்னுடைய நலத்தைப்பற்றியும் ஒரு விண்ணப்பம்பண்ணுகிறார். எரேமியா கர்த்தருடைய தீர்க்கதரிசியாகயிருந்தாலும் இப்போது காவற்கிடங்கிலே அடைக்கப்பட்டிருக்கிற சாதாரண கைதியாகவும் இருக்கிறார். அவருக்கு ராஜாவின் உதவி தேவைப்படுகிறது.

"இப்போதும் ராஜாவாகிய என் ஆண்டவனே, எனக்குச் செவிகொடுத்து, என் விண்ணப்பத்துக்கு தயைசெய்து, என்னைச் சம்பிரதியாகிய யோனத்தானுடைய வீட்டிற்குத்திரும்ப அனுப்பவேண்டாம்; அனுப்பினால் நான் அங்கே செத்துப்போவேன்" (எரே 37:20) என்று எரேமியா தன்னைப்பற்றி சிதேக்கியா ராஜாவினிடத்தில் முறையிடுகிறார்.

எரேமியாவின் நிலமை மிகவும் பரிதாபமாகயிருக்கிறது. அவருடைய ஜீவனுக்கு மோசம் வந்திருக்கிறது. அவர் காவற்கிடங்கிலே அநேக நாள் இருக்கிறார். இன்னும் சில நாட்கள் அங்கேயிருந்தால், எரேமியா அங்கேயே செத்துப்போவார்.

எரேமியா தன்னுடைய நிலமையைப்பற்றி சிதேக்கியா ராஜாவிடம் சொல்லும்போது, அவர் பிரபுக்கள்மீது ஒரு குற்றமும் சொல்லவில்லை. ராஜா தனக்கு உதவிசெய்யுமாறு மாத்திரமே கேட்கிறார்.

சிங்கம் கூண்டில் அடைக்கப்பட்டிருக்கும் போது, அது தன்னுடைய உண்மை நிலமையை புரிந்து கொள்ளவேண்டும். தன்னை காட்டில் சுதந்தரமாக திரியும் சிங்கமாகப் பாவித்து, கூண்டுக்குள் குதித்து திரியக்கூடாது. கூண்டிலிருக்கும் சிங்கத்திற்கும், மற்றொரு கூண்டிலிருக்கும் ஆட்டுக்கும் வித்தியாசமில்லை.

எரேமியா கர்த்தருடைய தீர்க்கதரிசியாகயிருந்தாலும், இப்போது காவற்கிடங்கில் அடைக்கப்பட்டிருக்கிற கைதியாகவே இருக்கிறார். எரேமியா தன்னுடைய உண்மையான சூழ்நிலையை அறிந்து, ராஜாவினிடத்தில் உதவி கேட்கிறார்.

கர்த்தருடைய வார்த்தை சிதேக்கியா ராஜாவுக்கு விரோதமாக வந்தது. இது எரேமியாவின் வார்த்தையல்ல. எரேமியா சொன்ன வார்த்தையைக் கேட்டு சிதேக்கியா ராஜா அவர்மீது கோபப்பட்டிருக்கலாம். ஆனாலும் ராஜா தனக்கு உதவிசெய்யவேண்டுமென்று எரேமியா, சிதேக்கியா ராஜாவினிடத்தில் பணிவோடு விண்ணப்பம்பண்ணுகிறார்.

சிதேக்கியா ராஜா எரேமியாவின் விண்ணப்பத்தை கருணையோடு பரிசீலிக்கிறார். அவருடைய விண்ணப்பத்தைக்கேட்டு அவருக்கு உதவிசெய்ய முன்வருகிறார். எரேமியா இப்போது யோனத்தானுடைய வீட்டிலுள்ள காவற்கிடங்கின் நிலவறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார். சிதேக்கியா அவரை அங்கிருந்து விடுவித்து, காவற்சாலையின் முற்றத்திலே போடுமாறு சொல்லுகிறார். நிலவறையில் காற்றே இல்லாமல் அடைக்கப்பட்டிருப்பதைவிட, காவற்சாலையின் முற்றத்திலே காற்றோட்டமாயிருப்பது எரேமியாவுக்கு உதவியாயிருக்கிறது.

எருசலேம் நகரத்தில் பஞ்சம் உண்டாயிருக்கிறது. அப்பம் சுடுகிறவர்கள் நகரத்தின் வீதியிலே ஜனங்களுக்குத் தேவையான அப்பங்களை குறிப்பிட்ட எண்ணிக்கையில் சுடுகிறார்கள். எரேமியாவுக்கு தினமும் ஒரு அப்பத்தை வாங்கிக்கொடுக்குமாறு சிதேக்கியா ராஜா கட்டளையிடுகிறார்.

சிதேக்கியா எரேமியாவுக்கு இவ்வளவு உதவி செய்கிறார். ஆனாலும் எரேமியாவை காவற்சாலையிலிருந்து விடுவிக்க சிதேக்கியாவுக்கு தைரியமில்லை. அவர் யூதாவின் மனுஷருக்கும், பிரபுக்களுக்கும் பயப்படுகிறார். எரேமியாவை விடுதலை பண்ணிவிட்டால் அவர்களெல்லோரும் தன்மீது கோபமாகயிருப்பார்கள் என்று பயந்து, சிதேக்கியா எரேமியாவை விடுவிக்கவில்லை.

ஆனாலும் சிதேக்கியா எரேமியாவுக்கு ஒரு சில உதவிகளைச் செய்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் எங்கேயிருந்தாலும் அங்கே அவர்களுக்கு கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் கிடைக்கும். நாம் சிறைச்சாலையின் முற்றத்தில் அடைக்கப்பட்டிருந்தாலும், கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் அங்கேயும் நம்மோடு கூடயிருக்கும். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களை ஒருபோதும் கைவிடுகிறதுமில்லை.

38 அதிகாரம்

யூதாவின் பிரபுக்கள் எரேமியாவுக்கு தீங்கு செய்கிறார்கள். யூதாவின் ராஜாவோ எரேமியாவுக்கு நன்மை செய்கிறார். யூதாவின் பிரபுக்கள் எரேமியாவை ஒரு குற்றவாளியாக தீர்மானித்து, காவற்கிடங்கின் நிலவறைகளில் போட்டுவிடுகிறார்கள் (எரே 38:1-6). எத்தியோப்பினாகிய எபெத்மெலேக் என்பவன் எரேமியாவுக்காக யூதா ராஜாவினிடத்தில் பரிந்துபேசுகிறான். ராஜாவின் கட்டளைப் பிரகாரம் எரேமியாவை காவற்கிடங்கிலிருந்து வெளியே தூக்கி எடுக்கிறான். எரேமியாவை அதன் பின்பு காவற்சாலையின் முற்றத்திலே போடுகிறார்கள் (எரே 38:7-13).

சிதேக்கியா ராஜாவும் எரேமியாவும் யூதாதேசத்தில் இப்போது இருக்கிற சூழ்நிலைகளைப்பற்றி தனிமையில் பேசிக்கொள்கிறார்கள் (எரே 38:14-23). தாங்கள் பேசியது மிகவும் இரகசியமாக இருக்கவேண்டுமென்று சிதேக்கியா ராஜா எரேமியாவுக்கு கட்டளைகொடுக்கிறான் (எரே 38:24-28).

உளையான துரவிலே எரேமியா எரே 38:1-6

எரே 38:1. இந்த நகரத்திலே தரித்திருக்கிறவன், பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவான்; கல்தேயரிடத்துக்குப் புறப்பட்டுப் போகிறவனோ உயிரோடிருப்பான்; அவனுடைய பிராணன் அவனுக்குக் கிடைத்த கொள்ளையுடைமையைப்போலிருக்கும்; அவன் பிழைப்பானென்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்றும்,

எரே 38:2. இந்த நகரம் பாபிலோன் ராஜாவினுடைய இராணுவத்தின் கையில் நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப்படும்; அவன் அதைப் பிடிப்பானென்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்றும்,

எரே 38:3. எரேமியா எல்லா ஜனத்தோடும் சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகளை மாத்தானின் குமாரனாகிய செப்பத்தியாவும், பஸ்கூரின் குமாரனாகிய கெதலியாவும், செலேமியாவின் குமாரனாகிய யூகாலும், மல்கியாவின் குமாரனாகிய பஸ்கூரும் கேட்டார்கள்.

எரே 38:4. அப்பொழுது பிரபுக்கள் ராஜாவை நோக்கி: இந்த மனுஷன் கொல்லப்பட உத்தரவாக வேண்டும்; அதேனென்றால், இந்த நகரத்தில் மீதியாயிருக்கிற யுத்த மனுஷரிடத்திலும்,மற்றுமுள்ள சகல ஜனங்களிடத்திலும், இவன் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறதினாலே அவர்களுடைய கைகளைத் தளர்ந்துபோகப்பண்ணுகிறான்; இவன் இந்த ஜனத்தின் ஷேமத்தைத் தேடாமல்,அவர்கள் கேட்டையே தேடுகிறான் என்றார்கள்.

எரே 38:5. அப்பொழுது சிதேக்கியா ராஜா: இதோ, அவன் உங்கள் கைகளில் இருக்கிறான்; உங்களுக்கு விரோதமாய் ராஜா ஒன்றும் செய்யக்கூடாது என்றான்.

எரே 38:6. அப்பொழுது அவர்கள் எரேமியாவைப் பிடித்து, அவனைக் காவற்சாலையின் முற்றத்திலிருந்த அம்மெலேகின் குமாரனாகிய மல்கியாவினுடைய துரவிலே போட்டார்கள்; எரேமியாவைக் கயிறுகளினால் அதிலே இறக்கிவிட்டார்கள்; அந்தத் துரவிலே தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்தது, அந்த உளையிலே எரேமியா அமிழ்ந்தினான்.

எரேமியா கர்த்தர் சொன்ன வார்த்தைகளை எல்லா ஜனத்தோடும் தெளிவாக பிரசங்கம்பண்ணுகிறார். "இந்த நகரத்திலே தரித்திருக்கிறவன், பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும் சாவான்; கல்தேயரிடத்துக்குப் புறப்பட்டுப்போகிறவனோ உயிரோடிருப்பான்; அவனுடைய பிராணன் அவனுக்குக் கிடைத்த கொள்ளையுடைமையைப்போலிருக்கும்; அவன் பிழைப்பான்" (எரே 38:1) என்பதே எரேமியாவின் பிரதான செய்தி.

மேலும், "இந்த நகரம் பாபிலோன் ராஜாவினுடைய இராணுவத்தின் கையில் நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப்படும்; அவன் அதைப் பிடிப்பான்" (எரே 38:2) என்றும் எரேமியா கர்த்தர் சொன்ன செய்தியைச் சொல்லுகிறார்.

எரேமியா கர்த்தர் சொன்ன செய்தியை அநேக நாட்களுக்கு பிரசங்கம்பண்ணுகிறார். ஆனாலும் அவரால் தொடர்ந்து பிரசங்கம் பண்ண முடியாதபடிக்கு தடை உண்டாயிற்று. எரேமியா எல்லா ஜனத்தோடும் சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகளை மாத்தானின் குமாரனாகிய செப்பத்தியாவும், பஸ்கூரின் குமாரனாகிய கெதலியாவும், செலேமியாவின் குமாரனாகிய யூகாலும், மல்கியாவின் குமாரனாகிய பஸ்கூரும் கேட்கிறார்கள் (எரே 38:3). இவர்கள் ஐந்துபேரும் யூதாவின் பிரபுக்கள்.

எரேமியாவின் பிரசங்கச் செய்தியை யாருமே கேட்க விரும்பவில்லை. அவர் ஏற்கெனவே சொன்ன செய்தியை திரும்பத் திரும்ப சொல்லுகிறார். ஜனங்கள் தன்னுடைய செய்தியைக் கேட்டாலும், கேட்காவிட்டாலும், எரேமியா தன்னுடைய பிரசங்கத்தை நிறுத்தவில்லை. எரேமியா யூதாவின் மனுஷருக்கு விரோதமாகவும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார். யூதாவின் பட்டணங்களுக்கு விரோதமாகவும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்.

யூதாவின் ஜனங்கள் கல்தேயரிடத்திற்கு போகவேண்டும். கல்தேயருக்கு முன்பாக பணிந்துகொண்டு, அவர்களுடைய இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். கல்தேயரிடத்தில் போகிறவர்கள் மாத்திரமே பிழைப்பார்கள். யூதாதேசத்தில் பஞ்சமும் கொள்ளைநோயும் உண்டாகும். கல்தேயரின் ஆதரவு இருந்தால் அவர்கள் பஞ்சத்திற்கும் கொள்ளைநோய்க்கும் தப்பித்து பிழைத்துக்கொள்வார்கள். இல்லையென்றால் யூதாவின் பட்டணங்களில் ஏராளமானோர் செத்துப்போவார்கள்.

எரேமியாவின் பிரசங்கச் செய்தியைக் கேட்டு யூதாவின் பிரபுக்கள் அவர்மீது கோபப்படுகிறார்கள். எரேமியா யூதாதேசத்திற்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்த தீர்க்கதரிசன செய்திக்கும் அவர் உண்மையுள்ளவராகவே இருக்கிறார். இப்போது எருசலேம் தெருவில் ராஜாவின் சார்பாக அப்பம் சுடப்படுகிறது. அந்த அப்பத்தில் எரேமியாவுக்கு தினமும் ஒரு அப்பம் கொடுக்கப்படுகிறது. எரேமியா ராஜாவின் அப்பத்தைப் புசித்து ஜீவனோடிருக்கிறார். ஆனாலும் எரேமியாவால் கர்த்தருடைய செய்தியைச் சொல்லாமல் அமைதியாயிருக்க முடியவில்லை.

எரேமியா இப்போது காவற்கிடங்கிலில்லாமல், காவற்சாலையிலிருக்கிறார். காவற்சாலையிலிருக்கிறவர்கள் அங்கும் இங்கும் நடந்து ஓரளவு சுதந்தரமாயிருப்பார்கள். எரேமியா தனக்கு கிடைத்த சுதந்தரத்தை தவறாக பயன்படுத்துகிறார் என்று யூதாவின் பிரபுக்கள் அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். எரேமியாவால் தேவாலயத்திற்குப் போய் பிரசங்கம்பண்ண முடியாது. ஆனாலும் சிறைச்சாலையில் தன்னைப் பார்க்க வருகிற ஜனங்களுக்கு, கர்த்தர் கொடுத்த செய்தியை அவரால் பிரசங்கம்பண்ண முடியும்.

எரேமியாவின் பிரசங்கச் செய்தியை யூதாவின் பிரபுக்கள் கேட்டு, ராஜாவினிடத்தில் போய் எரேமியாவைக் குறித்து முறையிடுகிறார்கள். "இந்த மனுஷன் கொல்லப்பட உத்தரவாக வேண்டும்; அதேனென்றால், இந்த நகரத்தில் மீதியாயிருக்கிற யுத்த மனுஷரிடத்திலும், மற்றுமுள்ள சகல ஜனங்களிடத்திலும், இவன் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லுகிறதினாலே அவர்களுடைய கைகளைத் தளர்ந்துபோகப்பண்ணுகிறான்; இவன் இந்த ஜனத்தின் க்ஷேமத்தைத் தேடாமல்,அவர்கள் கேட்டையே தேடுகிறான்" (எரே 38:4) என்று சொல்லுகிறார்கள்.

யூதாவின் பிரபுக்கள் எரேமியாவை ஒரு ஆபத்தான மனுஷன்போல ராஜாவிடத்தில் சொல்லுகிறார்கள். எரேமியா உயிரோடிருப்பது யூதாதேசத்திற்கு நல்லதல்ல என்று ராஜாவினிடத்தில் பரிந்து பேசுகிறார்கள். எரேமியா யூதாஜனத்தின் க்ஷேமத்தை தேடவில்லை என்றும், அவர்களுடைய கேட்டையே தேடுகிறார் என்றும் அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். எரேமியாவைப்போல எருசலேமின் நன்மையைத் தேடுகிறவர் அக்காலத்தில் வேறு ஒருவருமில்லை. எரேமியா யூதாவின் மனுஷருக்கு நன்மை செய்கிறார். ஆனால் எரேமியாவின் செய்கை அவர்களுக்கு கேடாய்த் தெரிகிறது.

எரேமியா ஜனங்களுடைய கைகளை தளர்ந்துபோகப்பண்ணுவதாக அவர்மீது ராஜாவினிடத்தில் குற்றம் சொல்லுகிறார்கள். எரேமியா யூதாமனுஷருடைய மனஉறுதியை இளைத்துப்போகச் செய்கிறார் என்று பிரபுக்கள் அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். துன்மார்க்கருடைய பார்வைக்கு கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்கள் சத்துருக்களைப்போலவே தெரிவார்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அநியாயத்திற்கும், அவபக்திக்கும் எதிர்த்து நிற்பார்கள். துன்மார்க்கரோ அநியாயத்திற்கு துணைபோவார்கள். எரேமியா அநியாயத்திற்கு எதிர்த்து நிற்பது யூதாவின் பிரபுக்களுக்கு பிடிக்கவில்லை.

யூதாவின் பிரபுக்கள் எரேமியாவின்மீது சொல்லும் குற்றச்சாட்டுக்களை சிதேக்கியாராஜா கவனமாய்க் கேட்கிறார். அப்பொழுது சிதேக்கியா ராஜா: "இதோ, அவன் உங்கள் கைகளில் இருக்கிறான்; உங்களுக்கு விரோதமாய் ராஜா ஒன்றும் செய்யக்கூடாது" *(எரே 38:5)* என்று சொல்லுகிறார்.

யூதாவின் பிரபுக்கள் எரேமியாவைத் துரவிலே போடுகிறார்கள். எரேமியா அந்த துரவிலேயே செத்துப்போகவேண்டும் என்பது பிரபுக்களின் விருப்பம். எரேமியா கர்த்தருடைய தீர்க்கதரிசி என்பதை சிதேக்கியா ராஜா நம்புகிறான். எரேமியா கர்த்தரால் அனுப்பப்பட்டவர் என்பதை புரிந்துகொண்டாலும், சிதேக்கியாவால் எரேமியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று வெளிப்படையாக அங்கீகரிக்க முடியவில்லை. அந்த அளவுக்கு எரேமியாவுக்கு தைரியமில்லை.

யூதாவின் பிரபுக்கள் எரேமியாவின்மீது குற்றம் சொல்லும்போது, "அவன் உங்கள் கைகளிலிருக்கிறான்" என்று சிதேக்கியா ராஜா எரேமியாவை அவர்களுடைய கைகளில் ஒப்புக்கொடுத்துவிடுகிறான்.

சிதேக்கியாவைப்போலவே இக்காலத்திலும் அநேகர் கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு இரகசிய சிநேகிதர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு இரகசியமாய் ஆதரவு கொடுக்கிறார்கள். ஆனாலும் ஊழியக்காரர்களுக்கு உண்மையிலேயே உதவிகள் தேவைப்படும் போது, அவர்கள் சிதேக்கியாவைப்போல உதவிசெய்யாமல் பின்வாங்கிப் போய்விடுவார்கள்.

யூதாவின் பிரபுக்கள் ராஜாவின் அனுமதியைப் பெற்றவுடன் எரேமியாவைப் பிடித்து, அவனைக் காவற்சாலையின் முற்றத்திலிருந்த அம்மெலேகின் குமாரனாகிய மல்கியாவினுடைய துரவிலே போடுகிறார்கள்; எரேமியாவைக் கயிறுகளினால் அதிலே இறக்கிவிடுகிறார்கள்; அந்தத் துரவிலே தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்தது, அந்த உளையிலே எரேமியா அமிழ்ந்தினார் *(எரே 38:6)*.

எரேமியாவை துரவிலே இறக்கும்போதே கயிறுகளினால் அவரை இறக்கிவிடுகிறார்கள். துரவில் தண்ணீர் இல்லை. அவருடைய கழுத்து வரையிலும் உளை இருந்திருக்கவேண்டும் என்று யோசபஸ் என்னும் சரித்திர ஆசிரியர் சொல்லுகிறார். இதுபோன்ற துரவிலே தள்ளிவிடப்படுகிறவர்கள் பசியாலும், பட்டினியாலும், குளிராலும், பயத்தாலும் செத்துப்போவார்கள்.

துரவிலே போடப்படுகிறவர்களின் மரணமும் இரகசியமாயிருக்கும். அவர்களுடைய பிரேதத்தை யாருக்கும் தெரியாமல் அடக்கம்பண்ணிவிடுவார்கள். எல்லா ஜனங்களுக்கும் முன்பாக, ஒரு குற்றவாளிக்கு மரணதண்டனை கொடுப்பது போல, எரேமியாவுக்கு மரணதண்டனை கொடுத்தால், எரேமியாவின்மீது ஜனங்களுக்கு அனுதாபம் உண்டாகும். ஜனங்கள் ராஜாவுக்கு விரோதமாகவும் பிரபுக்களுக்கு விரோதமாகவும் கலகம்பண்ணுவார்கள்.

எரேமியாவின் மூலமாய் அப்படிப்பட்ட பிரச்சனைகள் எதுவும் வரக்கூடாது என்று நினைத்து, எரேமியாவை ஒரு துரவிலே கயிறுகளினால் இறக்கிவிடுகிறார்கள். துரவும் தண்ணீரில்லாமல் உளையாயிருக்கிறது. அந்த உளையிலே எரேமியா அமிழ்ந்துபோகிறார். உயிருக்கு போராடுகிறார்.

எரேமியாவைப்போலவே கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களில் அநேகர் உபத்திரவங்களை அனுபவித்தார்கள். ஊழியக்காரர்களைத் துன்பப்படுத்தியவர்கள், அவர்களை சிறைச்சாலையிலடைத்து, பட்டினி போட்டு, வெளி உலகத்திற்கு தெரியாமல் இரகசியமாய்க் கொன்றுபோட்டார்கள். நியாயத்தீர்ப்பு நாளின்போது இரத்தசாட்சியாக மரித்த கர்த்தருடைய ஊழியக்காரரின் இரத்தம், நீதி கேட்டு கூப்பிடும்.

எரேமியா உளையான சேற்றிலே மிகுந்த வேதனைப்படுகிறார். தன்னுடைய வேதனைகளை புலம்பலின் புஸ்தகத்தில் இவ்வாறு எழுதுகிறார்.

"மகா ஆழமான கிடங்கிலிருந்து, கர்த்தாவே, உம்முடைய நாமத்தைப்பற்றிக் கூப்பிட்டேன். என் சத்தத்தைக் கேட்டீர்; என் பெருமூச்சுக்கும் என் கூப்பிடுதலுக்கும் உமது செவியை அடைத்துக்கொள்ளாதேயும். நான் உம்மை நோக்கிக் கூப்பிட்ட நாளிலே நீர் அணுகி: பயப்படாதே என்றீர்" (புல 3:55-57).

எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் எரே 38:7-13

எரே 38:7. அவர்கள் எரேமியாவைத் துரவிலே போட்டதை ராஜாவின் அரமனையில் இருந்த எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் என்னும் ஒரு பிரதானி கேள்விப்பட்டான்; ராஜாவோ பென்யமீன் வாசலிலே உட்கார்ந்திருந்தான்.

எரே 38:8. அப்பொழுது எபெத்மெலேக் ராஜாவின் அரமனையிலிருந்து புறப்பட்டுப் போய், ராஜாவை நோக்கி:

எரே 38:9. ராஜாவாகிய என் ஆண்டவனே, இந்தப் புருஷர் எரேமியா தீர்க்கதரிசியைத் துரவிலே போட்டுச் செய்தது எல்லாம் தகாத செய்கையாயிருக்கிறது; அவன் இருக்கிற இடத்திலே பட்டினியினால் சாவானே, இனி நகரத்திலே அப்பமில்லை என்றான்.

எரே 38:10. அப்பொழுது ராஜா எபெத்மெலேக் என்னும் எத்தியோப்பியனை நோக்கி: நீ இவ்விடத்திலிருந்து முப்பது மனுஷரை உன்னுடனே கூட்டிக்கொண்டுபோய், எரேமியா தீர்க்கதரிசி சாகாததற்கு முன்னே அவனைத் துரவிலிருந்து தூக்கிவிடு என்று கட்டளையிட்டான்.

எரே 38:11. அப்பொழுது எபெத்மெலேக் அந்த மனுஷரைத் தன்னுடனே கூட்டிக்கொண்டு, ராஜாவின் அரமனைப் பொக்கிஷசாலையின் கீழிருந்த அறைக்குள் புகுந்து, கிழிந்துபோன பழம் புடவைகளையும் கந்தைத்துணிகளையும் எடுத்துக் கொண்டு போய், அவைகளைக் கயிறுகளினால் எரேமியாவண்டைக்குத் துரவிலே இறக்கிவிட்டு,

எரே 38:12. எபெத்மெலேக் என்னும் எத்தியோப்பியன் எரேமியாவுடனே: கிழிந்துபோன இந்தப் பழம்புடவைகளையும் கந்தைகளையும் உம்முடைய அக்குள்களில் கயிறுகளுக்குள் அடங்கவைத்துப் போட்டுக்கொள்ளும் என்றான்; எரேமியா அப்படியேசெய்தான்.

எரே 38:13. அப்பொழுது எரேமியாவைக் கயிறுகளால் தூக்கி, அவனைத் துரவிலிருந்து எடுத்துவிட்டார்கள்; எரேமியா காவற்சாலையின் முற்றத்தில் இருந்தான்.

எரேமியா தீர்க்கதரிசி உளையாயிருக்கிற துரவிலே அமிழ்ந்து கொண்டிருக்கிறார். அவருக்கு ஆதரவாக ராஜாவின் அரமனையிலிருக்கிற எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக் என்னும் ஒரு பிரதானியை கர்த்தர் எழுப்புகிறார். யூதாவின் பிரபுக்கள் எரேமியாவை துரவிலே போட்டதை எபெத்மெலேக் கேள்விப்படுகிறான். இவனோ ஒரு எத்தியோப்பின். இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவன். ஆனாலும் இவனிடத்தில் மனிதாபிமானம் இருக்கிறது. இஸ்ரவேல் ஜனத்தாரிடம் தெய்வ பக்தியிருப்பதைவிட இந்த எத்தியோப்பினிடம் தெய்வபக்தி அதிகமாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து இந்தப் பூமியில் ஊழியம் செய்த காலத்தில், யூதர்களைவிட புறஜாதியார் மத்தியிலே அதிக விசுவாசம் இருப்பதைக் கண்டார். எபெத்மெலேக் சிதேக்கியா ராஜாவின் அரமனையிலிருக்கிறான். அங்கே துன்மார்க்கர் அதிகமாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமுமில்லை. மனுஷநேயமுமில்லை. ஆனாலும் எபெத்மெலேகிடத்தில் பயபக்தியும் நற்குணமும் மிகுதியாயிருக்கிறது.

கர்த்தர் தமக்கு மீதமானவர்களை எல்லா இடங்களிலும் வைத்திருக்கிறார். ராயனுடைய அரமனையில் கூட கர்த்தருடைய பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள் என்று ஒரு பழமொழி சொல்லப்படுவது வழக்கம். சிதேக்கியா ராஜா பென்யமீன் வாசலிலே உட்கார்ந்திருக்கிறான். ஜனங்களுடைய வழக்குகளை விசாரித்து தீர்ப்பதற்காக அங்கே அமர்ந்திருக்கிறான். ஜனங்கள் பென்யமீன் வாசலுக்கு வந்து, ராஜாவினிடத்தில் தங்களுடைய வழக்குகளை சொல்லுவார்கள்.

சிதேக்கியா ராஜா எங்கேயிருப்பான் என்பது எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக்குக்கு தெரிந்திருக்கிறது. யூதாவின் பிரபுக்கள் எரேமியாவை துரவில் போட்ட செய்தியைக் கேள்விப்பட்டவுடன் எபெத்மெலேக், ராஜாவின் அரமனையிலிருந்து புறப்பட்டுப்போய், பென்யமீன் வாசலிலே உட்கார்ந்திருக்கிற ராஜாவினிடத்திற்கு வருகிறான். எபெத்மெலேக் சிறிதும் காலதாமதம் பண்ணவில்லை. அவன் காலதாமதம் பண்ணினால் எரேமியாவின் உயிருக்கு ஆபத்து வந்துவிடும்.

எபெத்மெலேக் ராஜாவினிடத்தில் தைரியமாய்ப் பேசுகிறான். "ராஜாவாகிய என் ஆண்டவனே, இந்தப் புருஷர் எரேமியா தீர்க்கதரிசியைத் துரவிலே போட்டுச் செய்தது எல்லாம் தகாத செய்கையாயிருக்கிறது; அவன் இருக்கிற இடத்திலே பட்டினியினால் சாவானே, இனி நகரத்திலே அப்பமில்லை" *(எரே 38:9)* என்று சொல்லுகிறான்.

யூதாவின் பிரபுக்கள் எரேமியாவுக்கு தீங்கு செய்கிறார்கள் என்பதை ராஜாவினிடத்தில் சொல்ல எபெத்மெலேக் சிறிதும் பயப்படவில்லை. பிரச்சனையை ராஜாவே தீர்த்து வைக்கவேண்டும் என்று எபெத்மெலேக் முடிவு எடுக்கிறான். ராஜாவினிடத்தில் எரேமியாவைக் குறித்த காரியங்களை அப்படியே சொல்லுகிறான். "இந்தப் புருஷர் எரேமியா தீர்க்கதரிசியை துரவிலே போட்டு செய்ததெல்லாம் தாகாத செய்கையாயிருக்கிறது" என்று தன்னுடைய கருத்தையும் எபெத்மெலேக் ராஜாவினிடத்தில் சொல்லுகிறான்.

எபெத்மெலேக் ஒரு எத்தியோப்பியன். ராஜாவின் அரமனையில் இவன் ஒரு சாதாரண பிரதானி. யூதாதேசத்தில் எபெத்மெலேக் முக்கியமானவனுமல்ல. ஆனாலும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை ஆபத்திலிருந்து விடுதலைபண்ணுவதற்காக, சாதாரண மனுஷரையும் பயன்படுத்துகிறார். எபெத்மெலேக் எரேமியாவுக்கு சிநேகிதனுமல்ல.

யூதாவின் பிரபுக்கள் எரேமியாவுக்கு செய்த தீங்குகளை எபெத்மெலேக் கேள்விப்படுகிறான். அந்த செய்தியை கேள்விப்பட்ட உடனேயே, எரேமியாவுக்கு எப்படியாவது உதவிசெய்யவேண்டும் என்னும் எண்ணம் எபெத்மெலேக்கின் மனதில் உண்டாயிற்று. எபெத்மெலேக் சத்தியத்திற்கு ஆதரவாயிருக்கிறான். யூதாவின் பிரபுக்களோ தீங்குக்கு துணைபோகிறார்கள்.

எரேமியாவை உளையான துரவிலிருந்து விடுதலைபண்ணுமாறு சிதேக்கியா ராஜா உடனே உத்தரவு கொடுக்கிறான். தன்னுடைய உத்தரவை நிறைவேற்றும் பொறுப்பை சிதேக்கியாராஜா எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக்கிடம் ஒப்புக்கொடுக்கிறார். சிதேக்கியா ராஜாவின் உள்ளத்தில் அற்புதமான மாற்றமுண்டாயிற்று. சிதேக்கியா ராஜாதான் எரேமியாவை பிரபுக்களின் கைகளில் ஒப்புக்கொடுத்தவன். அதே சிதேக்கியா ராஜா இப்போது எரேமியாவை காப்பாற்ற மனதாயிருக்கிறான்.

சிதேக்கியா ராஜா எபெத்மெலேக் என்னும் எத்தியோப்பியனை நோக்கி: "நீ இவ்விடத்திலிருந்து முப்பது மனுஷரை உன்னுடனே கூட்டிக்கொண்டுபோய், எரேமியா தீர்க்கதரிசி சாகாததற்குமுன்னே அவனைத் துரவிலிருந்து தூக்கிவிடு" (எரே 38:10) என்று கட்டளையிடுகிறான்.

எபெத்மெலேக் ராஜாவிடம் முறையிட்டு வெற்றிபெறுகிறான். ராஜாவின் கட்டளை பிரகாரம் எபெத்மெலேக் முப்பது மனுஷரைத் தன்னுடனே கூட்டிக்கொண்டு, ராஜாவின் அரமனைப் பொக்கிஷசாலையின் கீழிருந்த அறைக்குள் புகுந்து, கிழிந்துபோன பழம்புடவைகளையும் கந்தைத்துணிகளையும் எடுத்துக்கொண்டுபோய், அவைகளைக் கயிறுகளினால் எரேமியாவண்டைக்குத் துரவிலே இறக்கிவிடுகிறான் (எரே 38:11).

எரேமியாவோ உளையான துரவிலே அமிழ்ந்துகொண்டிருக்கிறார். எபெத்மெலேக் துரவிலிருக்கிற எரேமியாவுடன் அன்பாய்ப் பேசுகிறான். "கிழிந்துபோன இந்தப் பழம்புடவைகளையும் கந்தைகளையும் உம்முடைய அக்குள்களில் கயிறுகளுக்குள் அடங்கவைத்துப் போட்டுக்கொள்ளும்" (எரே 38:12) என்று சொல்லுகிறான். எரேமியாவும் எபெத்மெலேக் சொன்ன பிரகாரம் செய்கிறார். எபெத்மெலேக்கின் செய்தி எரேமியாவுக்கு நற்செய்தியாயிருக்கிறது. புடவை பழையதாயிருந்தாலும், துணி கந்தையாயிருந்தாலும் அதுவே எரேமியாவை துரவிலிருந்து தூக்கிவிடுவதற்கு உதவியாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் 2000 வருஷம் பழமையானது. ஆனாலும் கிறிஸ்துவின் சுவிசேஷமே நம்முடைய பாவச்சேற்றிலிருந்து நம்மைத் தூக்கிவிடுவதற்கு உதவியாயிருக்கிறது.

எரேமியாவோ மிகவும் பலவீனமாயிருக்கிறார். அவருடைய சரீரத்தில் பெலனில்லை. பசியினாலும் பட்டினியினாலும் அவருடைய ஆரோக்கியம் அவரை விட்டு நீங்கிப்போயிற்று. அவரால் கயிற்றை கெட்டியாகப் பிடிக்க முடியாது. எபெத்மெலேக் பழம் புடவைகளையும் கந்தை துணிகளையும் எரேமியாவின் அக்குள்களில், கயிறுகளுக்குள் அடங்கவைத்து போட்டுக்கொள்ளுமாறு சொல்லுகிறார். எரேமியாவால் கயிற்றை பிடிக்க முடியாவிட்டாலும், பழம் புடவையும் கந்தையும் அவரைப் பிடித்துக்கொள்ளும். மேலேயிருக்கிற முப்பது புருஷர்களால் எரேமியாவை எளிதாக வெளியே தூக்கிவிடமுடியும்.

எபெத்மெலேக்கோடு கூடவந்திருக்கிற முப்பது புருஷரும் சேர்ந்து எரேமியாவை கயிறுகளால் தூக்குகிறார்கள். அவரை துரவிலிருந்து எடுத்து விடுகிறார்கள். அதன்பின்பு எரேமியா காவற்சாலையின் முற்றத்திலிருக்கிறார் (எரே 38:13).

சிதேக்கியா ராஜாவும் எரேமியாவும்
எரே 38:14-16

எரே 38:14. பின்பு சிதேக்கியா ராஜா, எரேமியா தீர்க்கதரிசியைக் கர்த்தருடைய ஆலயத்தில் இருக்கும் மூன்றாம் வாசலிலே தன்னிடத்திற்கு வரவழைத்தான்; அங்கே ராஜா, எரேமியாவை நோக்கி: நான் உன்னிடத்தில் ஒரு காரியம் கேட்கிறேன்; நீ எனக்கு ஒன்றும் மறைக்கவேண்டாம் என்றான்.

எரே 38:15. அப்பொழுது எரேமியா சிதேக்கியாவை நோக்கி: நான் அதை உமக்கு அறிவித்தால் என்னை நிச்சயமாய்க் கொலைசெய்வீரல்லவா? நான் உமக்கு ஆலோசனை சொன்னாலும், என்சொல்லை கேட்கமாட்டீர் என்றான்.

எரே 38:16. அப்பொழுது சிதேக்கியா ராஜா: நான் உன்னைக் கொல்லாமலும், உன் பிராணனை வாங்கத்தேடுகிற இந்த மனுஷர் கையில் உன்னை ஒப்புக்கொடாமலும் இருப்பேன் என்பதை, நமக்கு இந்த ஆத்துமாவை உண்டுபண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று எரேமியாவுக்கு இரகசியமாய் ஆணையிட்டான்.

சிதேக்கியா ராஜா எரேமியா தீர்க்கதரிசியோடு தனிமையில் பேசுகிறார். சிதேக்கியா ராஜாதான் எரேமியாவை யூதாவின் பிரபுக்கள் கைகளில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் எரேமியாவை தண்ணீரில்லாமல் உளையாயிருந்த துரவிலே இறக்கிவிட்டார்கள். இப்போது அதே சிதேக்கியா, எரேமியாவை துரவிலிருந்து தூக்கிவிடுவதற்கு உதவிசெய்கிறான். எரேமியாவோடு ரகசியமாகப் பேசுகிறான்.

சிதேக்கியா ராஜா எரேமியா தீர்க்கதரிசியை கனம்பண்ணுகிறான். எரேமியா துரவிலிருந்து தூக்கிவிடப்பட்ட பின்பு, சிதேக்கியா ராஜா, எரேமியா தீர்க்கதரிசியைக் கர்த்தருடைய ஆலயத்தில் இருக்கும் மூன்றாம் வாசலிலே தன்னிடத்திற்கு வரவழைக்கிறான் (எரே 38:14). சிதேக்கியா ராஜா எரேமியாவை மூன்றாம் வாசலில் சந்திக்கிறான். இதுவே தேவாலயத்திற்குப் போகும் பிரதான வாசலாகும்.

சிதேக்கியா ராஜா எரேமியாவை கர்த்தருடைய ஆலயத்தில் சந்திப்பதினால், அவன் கர்த்தருடைய ஆலயத்திற்கு கொடுக்கும் மதிப்பையும் மரியாதையையும் இதன் மூலமாய் தெளிவுபடுத்துகிறான். கர்த்தருடைய ஆலயத்திற்கு மதிப்பு கொடுக்கிற சிதேக்கியா, இப்போது எரேமியா மூலமாய் சொல்லப்படும் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க ஆவலாயிருக்கிறான்.

சிதேக்கியா எரேமியாவிடம் "நான் உன்னிடத்தில் ஒரு காரியம் கேட்கிறேன்" என்று சொல்லுகிறான். "நான் உன்னிடத்தில் கர்த்தருடைய வார்த்தையை கேட்க விரும்புகிறேன்" என்று சிதேக்கியா எரேமியாவிடம் சொல்லவில்லை. சிதேக்கியா ராஜா, தனக்கு சாதகமாகவும், ஆறுதலாகவும் இருக்கும் செய்தியை எரேமியா தீர்க்கதரிசன வார்த்தையாக சொல்லவேண்டுமென்று எதிர்பார்க்கிறான்.

"பின்பு சிதேக்கியா ராஜா அவனை அழைத்தனுப்பி: கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ என்று ராஜா அவனைத் தன் வீட்டிலே இரகசியமாய்க்கேட்டான். அதற்கு எரேமியா: உண்டு, பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர் என்று சொல்லுகிறார்" (எரே 37:17).

சிதேக்கியா ராஜா எரேமியாவிடம், "நீ எனக்கு ஒன்றும் மறைக்கவேண்டாம்" என்றும் சொல்லுகிறான். கர்த்தருடைய வார்த்தை எப்படியிருந்தாலும் அதை சிதேக்கியா கேட்க விரும்புகிறான். கர்த்தர் ஒருவேளை இப்போது மனம் மாறியிருப்பார் என்றும், அவர் இப்போது தன்மேல் கோபமாயிராமல் அன்பாயிருப்பார் என்றும் சிதேக்கியா எதிர்பார்க்கிறான். மனம் மாறுவதற்கு கர்த்தர் ஒரு மனுஷனல்ல. அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். இஸ்ரவேலின் தேவன் மாறாத தேவனாயிருக்கிறார்.

எரேமியா சிதேக்கியாவிடம் கர்த்தருடைய வார்த்தையை சொல்லுவதற்கு முன்பாக, தன்னுடைய ஜீவனுக்கு பாதுகாப்பை உறுதிபண்ணிக்கொள்கிறார். "நான் அதை உமக்கு அறிவித்தால் என்னை நிச்சயமாய் கொலைசெய்வீரல்லவா" (எரே 38:15) என்று எரேமியா சிதேக்கியா ராஜாவிடம் கேட்கிறார். "நான் கர்த்தருடைய வார்த்தையை சொன்னால், நீர் என்னை கொலைசெய்துவிடுவீர்" என்பது எரேமியா சொன்ன வாக்கியத்தின் பொருளாகும்.

சிதேக்கியா ராஜாவுக்கு யூதாவின் பிரபுக்கள் தீயஆலோசனைகளைச் சொல்லுகிறார்கள். அந்த பிரபுக்களே சிதேக்கியாவை வழிநடத்துகிறார்கள். எரேமியா சிதேக்கியா ராஜாவுக்கு சொன்ன வார்த்தைகளை, யூதாவின் பிரபுக்கள் கேட்டால், அவர்கள் ஏற்கெனவே எரேமியாவைப்பற்றி "இந்த மனுஷன் கொல்லப்பட உத்தரவாகவேண்டும்" (எரே 38:4) என்று சொன்னதுபோல, இப்போதும் சொல்லுவார்கள். சிதேக்கியாவும் "எரேமியா உங்கள் கையிலிருக்கிறான்" (எரே 38:5) என்று ஏற்கெனவே சொன்னதுபோல இப்போதும் சொல்லி, எரேமியாவை யூதாவின் பிரபுக்கள் கையில் ஒப்புக்கொடுத்துவிடுவான். அவர்கள் எரேமியாவைக் கொன்றுபோடுவார்கள்.

எரேமியா இப்போது மிகவும் ஞானமாய்ப் பேசுகிறார். எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார். எரேமியாவுக்கு இரத்த சேதாரம் வந்தாலும், அவர் கர்த்தருடைய வார்த்தையை உண்மையாய் அறிவிப்பார். ஆனாலும் எரேமியா தேவையில்லாமல் மரித்துப் போகவிரும்பவில்லை. சட்டப்படி தன்னுடைய ஜீவனுக்கு என்னென்ன பாதுகாப்புக்களெல்லாம் கிடைக்குமோ, அதையெல்லாம் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறார்.

இயேசுகிறிஸ்துவும் பல சமயங்களில் தம்முடைய சத்துருக்களின் கைகளில் பிடிபடாமல், தம்மை மறைத்துக்கொள்கிறார். அப்போஸ்தலர் பவுலும் இராயனுக்கு முன்பாக தன்னுடைய வழக்கை அபயமிட்டார். கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய நாமும் இந்த முன்மாதிரிகளைப் பின்பற்றவேண்டும். காரணமில்லாமல் செத்துப்போகக்கூடாது.

நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், அவருக்கேற்ற வேளையில், நமக்கு மரணம் வரும். அதற்கு முன்பாக நாம் நம்முடைய ஜீவனை மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கக்கூடாது. கர்த்தர் அனுமதிக்கிற காலம் வரையிலும், நாம் ஜீவனோடிருந்து, கர்த்தருடைய ஊழியங்களை செய்யவேண்டும்.

எரேமியா தீர்க்கதரிசி சிதேக்கியா ராஜாவுக்கு ஏராளமான ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறார். சிதேக்கியா தன்னை தண்ணீரில்லாத, உளையாயிருக்கிற துரவிலே இறக்கிவிடுவதற்கு காரணமாயிருந்தாலும், எரேமியா அவருக்கு ஆலோசனை சொல்ல விரும்புகிறார். ஆனாலும் சிதேக்கியா தான் சொல்லும் ஆலோசனையை கேட்பாரோ என்னும் சந்தேகம் எரேமியாவுக்கு உண்டாயிற்று. "நான் உமக்கு ஆலோசனை சொன்னாலும், என் சொல்லைக் கேட்கமாட்டீர்" (எரே 38:15) என்று எரேமியா சிதேக்கியாவிடம் சொல்லுகிறார்.

எரேமியா சிதேக்கியாவுக்கு சமாதானத்திற்கேதுவான வார்த்தைகளை சொல்ல விரும்புகிறார். எரேமியா சிதேக்கியாவுக்கு நல்ல ஆலோசனைகளைச் சொன்னாலும், அவர் எரேமியாவின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கமாட்டார். ஆகையினால் எரேமியா ஆலோசனை சொன்னாலும் அதனால் ஒரு பிரயோஜனமும் உண்டாகாது.

சிதேக்கியா இப்போது தன்னுடைய கடைசிகாலத்திலிருக்கிறார். அவர் இப்போதாவது எரேமியாவின் ஆலோசனையைக் கேட்டு, கல்தேயருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணாமல், பாபிலோன் ராஜாவுக்கு முன்பாக தன்னை ஒப்புக்கொடுக்கவேண்டும். ஆனால் சிதேக்கியா தன் குணத்தில் பிடிவாதமாயிருக்கிறார்.

"நான் உமக்கு ஆலோசனை சொன்னாலும் என் சொல்லைக் கேட்கமாட்டீர்" என்று எரேமியா சொல்லும்போது, "நான் உம்முடைய ஆலோசனையைக் கேட்பேன்" என்று சிதேக்கியா சொல்லவில்லை. இப்படி சொல்லுவதற்கு சிதேக்கியாவுக்கு மனமில்லை. ஆனாலும் எரேமியாவின் ஜீவனுக்கு பாதுகாப்பு கொடுப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

அப்பொழுது சிதேக்கியா ராஜா: நான்உன்னைக் கொல்லாமலும், உன் பிராணனை வாங்கத்தேடுகிற இந்த மனுஷர் கையில் உன்னை ஒப்புக்கொடாமலும் இருப்பேன் என்பதை, நமக்கு இந்த ஆத்துமாவை உண்டுபண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று எரேமியாவுக்கு இரகசியமாய் ஆணையிடுகிறான் (எரே 38:16).

கர்த்தரே சிதேக்கியாவுக்கும் எரேமியாவுக்கும் ஜீவனைக் கொடுத்திருக்கிறார். அவரே எல்லா மனுஷருக்கும் ஆத்துமாவை உண்டுபண்ணியிருக்கிறார். சிதேக்கியா எரேமியாவின் ஜீவனை அநியாயமாய் எடுத்துப்போட விரும்பவில்லை. எரேமியாவின் ஜீவனுக்கு மோசம்பண்ணினால், கர்த்தர் தன்னைக் கொன்றுபோடுவார் என்பது சிதேக்கியாவுக்கு தெரிந்திருக்கிறது. ஆகையினால் சிதேக்கியா தன்னுடைய வார்த்தைகளை "கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" என்று ஆணையிட்டு உறுதிபண்ணுகிறார்.

எரேமியாவின் ஆலோசனை
எரே 38:17,18

எரே 38:17. அப்பொழுது எரேமியா சிதேக்கியாவை நோக்கி: நீர் பாபிலோன் ராஜாவின் பிரபுக்களண்டைக்குப் புறப்பட்டுப் போவீரானால், உம்முடைய ஆத்துமா உயிரோடிருக்கும்; இந்தப் பட்டணம் அக்கினியால் சுட்டெரிக்கப் படுவதில்லை; நீரும் உம்முடைய குடும்பமும் உயிரோடிருப்பீர்கள்.

எரே 38:18. நீர் பாபிலோன் ராஜாவின் பிரபுக்களிடத்திற்குப் புறப்பட்டுப் போகாவிட்டால், அப்பொழுது இந்த நகரம் கல்தேயர் கையில் ஒப்புக்கொடுக்கப்படும், அவர்கள் இதை அக்கினியால் சுட்டெரிப்பார்கள்; நீர் அவர்களுக்குத் தப்பிப்போவதில்லை என்கிறதை இஸ்ரவேலின் தேவனும்சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

எரேமியா சிதேக்கியாவுக்கு நல்ல ஆலோசனையைச் சொல்லுகிறார். இந்த ஆலோசனைக்கு சிதேக்கியா ஏன் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்கான காரணத்தையும் எரேமியா தெளிவுபடுத்துகிறார். சிதேக்கியா தன்னுடைய சுயஞானத்தை சார்ந்திருக்கக் கூடாது. அவர் யூதாதேசத்தின் ராஜா. அவர் தன்னுடைய சுய நன்மையை மாத்திரம் பாராமல் யூதாதேசத்தாரின் பொதுவான நன்மையையும் பார்க்கவேண்டும். எரேமியா சொல்லுகிற ஆலோசனை அவருடைய சொந்த வார்த்தைகளல்ல. அவையெல்லாம் இஸ்ரவேலின் தேவனும், சேனைகளின் தேவனுமாகிய கர்த்தருடைய வார்த்தைகள்.

எரேமியா தீர்க்கதரிசி ஒரு ராஜதந்திரியைப்போல பேசவில்லை. அவர் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகவே பேசுகிறார். எரேமியாசி தேக்கியாவை நோக்கி: "நீர் பாபிலோன் ராஜாவின் பிரபுக்களண்டைக்குப் புறப்பட்டுப்போவீரானால், உம்முடைய ஆத்துமா உயிரோடிருக்கும்; இந்தப் பட்டணம் அக்கினியால் சுட்டெரிக்கப்படுவதில்லை; நீரும் உம்முடைய குடும்பமும் உயிரோடிருப்பீர்கள்" என்று சொல்லுகிறார் (எரே 38:17).

எரேமியா தீர்க்கதரிசி இதே ஆலோசனையை யூதாவின் மனுஷருக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்.

"இந்த நகரத்திலே தரித்திருக்கிறவன், பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும் சாவான்; கல்தேயரிடத்துக்குப் புறப்பட்டுப்போகிறவனோ உயிரோடிருப்பான்; அவனுடைய பிராணன் அவனுக்குக் கிடைத்த கொள்ளையுடைமையைப்போலிருக்கும்; அவன் பிழைப்பானென்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்றும், இந்த நகரம் பாபிலோன் ராஜாவினுடைய இராணுவத்தின் கையில் நிச்சயமாக ஒப்புக்கொடுக்கப்படும்; அவன் அதைப் பிடிப்பானென்பதைக் கர்த்தர் உரைக்கிறார் என்றும் எரேமியா எல்லா ஜனத்தோடும் சொல்லிக்கொண்டிருந்தார்" (எரே 38:1-3).

எரேமியா யூதாவின் மனுஷருக்கு தேவனுடைய தெய்வீக நியாயத்தீர்ப்பைப்பற்றி ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் அங்கீகரிக்கவேண்டும்.

"இந்த நகரத்திலே தரிக்கிறவன் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவான்; உங்களை முற்றிக்கைபோடும் கல்தேயர் வசமாய்ப் புறப்பட்டுப் போய்விடுகிறவனோ பிழைப்பான்; அவன் பிராணன் அவனுக்குக் கிடைத்த கொள்ளைபொருளைப்போல் இருக்கும்" (எரே 21:9).

எரேமியா யூதாவின் மனுஷருக்கு முன்பாக நன்மையையும் தீமையையும் வைக்கிறார். ஜீவனையும் மரணத்தையும் வைக்கிறார். யூதாவின் மனுஷர்தான் தங்களுக்கு எது தேவை என்பதை தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் எரேமியாவின் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு அதற்கு கீழ்ப்படிந்தால், அவர்களுக்கு நன்மையும் ஜீவனும் உண்டாகும். அவர்கள் எரேமியாவின் ஆலோசனைக்கு கீழ்ப்படியாமல், அதைப் புறக்கணித்தால் அவர்களுக்கு தீமையும் மரணமும் உண்டாகும்.

சிதேக்கியா ராஜா எரேமியாவின் ஆலோசனைகளைக் கேட்டு அதற்கு கீழ்ப்படிந்தால், அவருடைய ஆத்துமாவும் உயிரோடிருக்கும். அவரும் அவருடைய குடும்பமும் உயிரோடிருப்பார்கள். எருசலேம் நகரமும் அக்கினியால் சுட்டெரிக்கப்படாது. சிதேக்கியா கர்த்தருடைய ஆலோசனைக்கு கீழ்ப்படியவில்லையென்றால் ராஜாவுக்கும், யூதாவின் மனுஷருக்கும், எருசலேம் நகரத்திற்கும் மிகப்பெரிய தீங்கு உண்டாகும்.

"நீர் பாபிலோன் ராஜாவின் பிரபுக்களிடத்திற்குப் புறப்பட்டுப்போகா விட்டால், அப்பொழுது இந்த நகரம் கல்தேயர் கையில் ஒப்புக்கொடுக்கப்படும், அவர்கள் இதை அக்கினியால்சுட்டெரிப்பார்கள்; நீர் அவர்களுக்குத் தப்பிப்போவதில்லை என்கிறதை இஸ்ரவேலின் தேவனும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 38:18) என்று எரேமியா சிதேக்கியா ராஜாவிடம் சொல்லுகிறார்.

எரேமியாவின் ஆலோசனை பாவிகளெல்லோருக்குமே பொருந்தும் பொதுவான ஆலோசனையாயிருக்கிறது. பாவிகள் தேவனுடைய கிருபைக்கும், அவருடைய ஆளுகைக்கும் தங்களை கீழ்ப்படுத்தினால் அவர்கள் பிழைப்பார்கள். அவர்களுடைய ஆத்துமா உயிரோடிருக்கும். அவர்கள் கர்த்தருடைய கிருபைக்கு தங்களை ஒப்புக்கொடுக்கவில்லையென்றால், அவர்களுக்கு அழிவு நிச்சயம் வரும்.

சிதேக்கியாவின் தயக்கம் எரே 38:19

எரே 38:19. அப்பொழுது சிதேக்கியா ராஜா எரேமியாவை நோக்கி: கல்தேயர் தங்களைச் சேர்ந்துபோன யூதரின் கையிலே என்னைப் பரியாசம்பண்ண ஒப்புக்கொடுப்பார்களோ என்று நான் ஐயப்படுகிறேன் என்றான்.

எரேமியா தீர்க்கதரிசியின் ஆலோசனைகளை சிதேக்கியா ராஜா ஏற்றுக்கொள்ள தயங்குகிறான். சிதேக்கியாவுக்கு தெய்வீக அதிகாரத்தின் மீதும், தெய்வீக ஞானத்தின்மீதும் நம்பிக்கையில்லை. அவனால் தேவனுடைய சித்தத்தையும், திட்டத்தையும் புரிந்துகொள்ளமுடியவில்லை. சிதேக்கியா தன்னுடைய சுயபுத்தியை நம்புகிறான். கர்த்தருடைய பார்வையில் தான் எப்படியிருக்கிறோம் என்பதை தியானிப்பதற்கு பதிலாக, மனுஷருடைய பார்வையில் தான் எப்படியிருப்போம் என்பதை சிதேக்கியா கற்பனை பண்ணி பார்க்கிறான்.

யூதாதேசத்திலுள்ள யூதர்களில் அநேகர் ஏற்கெனவே கல்தேயரோடு சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சிதேக்கியாவின் ஆளுகையை புறக்கணித்து விட்டு, பாபிலோன் ராஜாவின் ஆளுகையை ஏற்றுகொண்டிருக்கிறார்கள். சிதேக்கியா ராஜா பாபிலோன் ராஜாவினிடத்தில் தன்னை ஒப்புக்கொடுத்தால், ஏற்கெனவே பாபிலோன் ராஜாவை சேர்ந்துகொண்ட யூதர்கள் தன்னை பரியாசம்பண்ணுவார்கள் என்று சிதேக்கியா பயப்படுகிறான்.

சிதேக்கியாவுக்கு கல்தேயரைப் பற்றியோ, கல்தேயரின் பிரபுக்களைப்பற்றியோ பயமில்லை. கல்தேயருடைய தேசத்தில் ஏற்கெனவே அடைக்கலம் பெற்றிருக்கிற யூதர்களை நினைத்து சிதேக்கியா பயப்படுகிறான். அவர்கள் ஏற்கெனவே கல்தேயரிடத்தில் போனபோது, சிதேக்கியாவும், அவனுடைய பிரபுக்களும் அவர்களை தடைபண்ணினார்கள். அவர்களுக்கு விரோதமாகப் பேசினார்கள். அவர்கள் பாபிலோன் தேசத்திற்கு போவதற்கு சிதேக்கியா எதிர்த்து நின்றான். இப்போதோ சிதேக்கியாவும் கல்தேயரிடத்திற்குப்போனால், அவர்கள் மத்தியிலிருக்கிற யூதர்கள், தன்னை பரியாசம்பண்ணுவார்கள் என்று சிதேக்கியா பயப்படுகிறான். சிதேக்கியா தன்னுடைய பயத்தை வெளிப்படுத்தாமல் "நான் ஐயப்படுகிறேன்" என்று சொல்லுகிறான்.

"அவர்களெல்லாரும் உன்னை நோக்கி: நீயும் எங்களைப்போல பலட்சயமானாயோ? எங்களுக்குச் சமானமானாயோ? என்று சொல்லுவார்கள்" (ஏசா 14:10).

சிதேக்கியா பாபிலோன் ராஜாவின் பிரபுக்களண்டைக்குப்போனால் அது அவனுக்கு முரண்பாடான காரியமாகவே இருக்கும். அவனுடைய சுயபுத்தியின் பிரகாரம் ஆலோசனைபண்ணினால், எரேமியாவின் ஆலோசனை தவறானதாகயிருக்கும். சிதேக்கியா தன் சுயபுத்தியை சாராமல், கர்த்தரை சார்ந்துகொள்ளவேண்டும். எரேமியாவின் ஆலோசனை கர்த்தருடைய ஆலோசனை என்பதை சிதேக்கியா புரிந்து கொள்ளவேண்டும். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்திலுள்ளது என்பதை சிதேக்கியா அறிந்துகொள்ளவேண்டும்.

கர்த்தருடைய ஆலோசனைகளுக்கு கீழ்ப்படிந்தால், அவர் தன்னை ஆளுகை செய்வார் என்றும், வழிநடத்துவார் என்றும், தீங்குகளுக்கு விலக்கி பாதுகாப்பார் என்றும் சிதேக்கியா கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும். சிதேக்கியா கர்த்தருக்கு பயப்பட்டால், மனுஷருக்கு பயப்படமாட்டான். அவனிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. ஆகையினால் யூதருக்கு பயப்படுகிறான். யூதர்கள் தன்னை பரியாசம்பண்ணுவார்களோ என்று பயப்படுகிறான். நடக்காத காரியத்தை நடக்கும் என்று நினைத்து, கற்பனை பண்ணி பயப்படுகிறான்.

சிதேக்கியா கர்த்தருடைய ஆலோசனைக்கு கீழ்ப்படிந்தால், அவன் தன்னுடைய ஜீவனையும் காத்துக் கொள்ளலாம். தன்னுடைய குடும்பத்தாரின் ஜீவனையும் காத்துக்கொள்ளலாம். எருசலேம் நகரத்தையும் காத்துக்கொள்ளலாம். யூதாவின் ஜனத்தையும், எருசலேமின் குடிகளையும் காத்துக்கொள்ளலாம். ராஜா தேசத்திற்கு பொதுவானவன். சிதேக்கியா ராஜாவோ தேசத்தின் பொதுவான நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தன்னுடைய சுயநலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறான்.

எரேமியாவின் வார்த்தைகள் எரே 38:20-23

எரே 38:20. அதற்கு எரேமியா: உம்மை ஒப்புக்கொடார்கள்; நான் உம்மிடத்தில் சொல்லுகிற கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடும், அப்பொழுது உமக்கு நன்மையாயிருக்கும், உம்முடைய ஆத்துமா பிழைக்கும்.

எரே 38:21. நான் புறப்படுகிறதில்லை என்பீரேயாகில், கர்த்தர் எனக்குத் தெரியப்படுத்தின வார்த்தையாவது:

எரே 38:22. இதோ, யூதா ராஜாவின் வீட்டிலே மீதியான எல்லா ஸ்திரீகளும் வெளியே பாபிலோன் ராஜாவின் பிரபுக்களண்டையில் கொண்டுபோகப்படுவார்கள்; அப்பொழுது, இதோ, அவர்கள்தானே உம்முடைய இஷ்டர்கள்; அவர்கள் உமக்குப் போதனை செய்து, உம்மை மேற்கொண்டார்கள் என்றும், உம்முடைய கால்கள் உளையிலே அமிழ்ந்தின பின்பு அவர்கள் பின்வாங்கிப்போனார்கள் என்றும் அந்த ஸ்திரீகளே சொல்லுவார்கள்.

எரே 38:23. உம்முடைய எல்லா ஸ்திரீகளையும், உம்முடைய பிள்ளைகளையும் வெளியே கல்தேயரிடத்தில் கொண்டு போவார்கள்; நீரும் அவர்கள் கைக்குத் தப்பிப்போகாமல் பாபிலோன் ராஜாவின் கையினால் பிடிக்கப்பட்டு, இந்த நகரம் அக்கினியால் சுட்டெரிக்கப்படக் காரணமாயிருப்பீர் என்றான்.

எரேமியா சிதேக்கியாவின் சந்தேகத்திற்கு பதில் சொல்லுகிறார். "கல்தேயர் தங்களை சேர்ந்துபோன யூதரின் கையிலே என்னை பரியாசம்பண்ண ஒப்புக்கொடுப்பார்களோ" என்று சிதேக்கியா கேட்கிறார். அதற்கு எரேமியா, "உம்மை ஒப்புக்கொடார்கள்" (எரே 38:20) என்று பதில் சொல்லுகிறார்.

சிதேக்கியா கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். அப்பொழுது அது நன்மையாயிருக்கும். அவருடைய ஆத்துமா பிழைக்கும். சிதேக்கியா கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்போது, அவருக்கு நன்மை உண்டாகும்.

சிதேக்கியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் முரட்டாட்டம்பண்ணினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்மீது வரும். "நான் புறப்படுகிறதில்லை என்பீரேயாகில், கர்த்தர் எனக்குத் தெரியப்படுத்தின வார்த்தையாவது" (எரே 38:21) என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையை சிதேகியாவுக்கு தெரியப்படுத்துகிறார்.

சிதேக்கியா பாபிலோன் ராஜாவின் கையினால் பிடிக்கப்படுவான். கல்தேயருக்கு தப்பித்துக்கொள்ளலாம் என்று சிதேக்கியா நினைக்கிறான். ஆனால் சிதேக்கியாவால் கல்தேயரின் கைகளுக்கு தப்பிக்க முடியாது (எரே 38:23). எருசலேம் நகரம் அக்கினியால் சுட்டெரிக்கப்படுவதற்கு சிதேக்கியா ராஜா காரணமாயிருப்பார். சிதேக்கியா கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, தன்னை பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்தால் எருசலேம் நகரம் அக்கினியால் சுட்டெரிக்கப்படாது.

பாபிலோன் தேசத்தார் சிதேக்கியா ராஜாவை தப்பிப்போகாமல் பிடிப்பார்கள். அவனுடைய எல்லா ஸ்திரீகளையும், எல்லா பிள்ளைகளையும் பிடித்து கல்தேயரிடத்தில் கொண்டுபோவார்கள். யூதா ராஜாவின் வீட்டிலே மீதியான எல்லா ஸ்திரீகளும், பாபிலோன் ராஜாவின் பிரபுக்களண்டையில் கொண்டுபோகப்படுவார்கள். ராஜாவின் அரமனையிலுள்ள ஸ்திரீகளே சிதேக்கியாவுக்கு விரோதமாகப் பேசுவார்கள். சிதேக்கியாவை நிந்திப்பார்கள்.

யூதாராஜாவின் அரமனையிலுள்ள ஸ்திரீகள், பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போகும்போது, அவர்கள் யூதாவின் பிரபுக்களுக்கு விரோதமாக சிதேக்கியாவிடம் குற்றம் சொல்லுவார்கள். இதோ, அவர்கள்தானே உம்முடைய இஷ்டர்கள்; அவர்கள் உமக்குப் போதனை செய்து, உம்மை மேற்கொண்டார்கள் என்றும், உம்முடைய கால்கள் உளையிலே அமிழ்ந்தின பின்பு அவர்கள் பின்வாங்கிப்போனார்கள் என்றும் அந்த ஸ்திரீகளே சொல்லுவார்கள் (எரே 38:22).

யூதா ராஜாவின் வீட்டிலுள்ள ஸ்திரீகள் சிதேக்கியா ராஜாவின் மனைவிகளுக்கும் பிள்ளைகளுக்கும் விரோதமாக இவ்வாறு குற்றம் சொல்லுவார்கள் என்று வேதபண்டிதர்கள் வியாக்கியானம் சொல்லுகிறார்கள்.

சிதேக்கியாவின் விண்ணப்பம் எரே 38:24-28

எரே 38:24. அப்பொழுது சிதேக்கியா எரேமியாவை நோக்கி: இந்த வார்த்தைகளை ஒருவருக்கும் அறிவிக்க வேண்டாம்; அப்பொழுது நீ சாவதில்லை.

எரே 38:25. நான் உன்னோடே பேசினதைப் பிரபுக்கள் கேள்விப்பட்டு, உன்னிடத்தில் வந்து: நீ ராஜாவோடே பேசிக் கொண்டதை எங்களுக்குத் தெரிவி, எங்களுக்கு ஒன்றும் மறைக்காதே, அப்பொழுது உன்னைக் கொல்லாதிருப்போம்; ராஜா உன்னோடு என்ன பேசினார் என்று உன்னைக் கேட்பார்களேயாகில்,

எரே 38:26. நான் யோனத்தானுடைய வீட்டிலே சாகாதபடிக்கு ராஜா என்னை அங்கே திரும்ப அனுப்பவேண்டாம் என்று, அவர் முகத்துக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணினேன் என்று சொல்வாயாக என்றான்.

எரே 38:27. பின்பு எல்லாப் பிரபுக்களும், எரேமியாவினிடத்தில் வந்து, அவனைக் கேட்டார்கள்; அப்பொழுது அவன்: ராஜா கற்பித்த இந்த எல்லா வார்த்தைகளின்படியே அவர்களுக்கு அறிவித்தான்; காரியம் கேள்விப்படாமற்போனபடியினால், அவனோடே பேசாமலிருந்துவிட்டார்கள்.

எரே 38:28. அப்படியே எரேமியா, எருசலேம் பிடிபடுகிற நாள்மட்டாக காவற்சாலையின் முற்றத்தில் இருந்தான்; எருசலேம் பிடிபட்டுப்போனபோதும் அங்கேயே இருந்தான்.

சிதேக்கியா ராஜா எரேமியாவோடு பேசின எல்லா காரியங்களையும் இரகசியமாக வைத்துக்கொள்ள விரும்புகிறான். "இந்த வார்த்தைகளை ஒருவருக்கும் அறிவிக்கவேண்டாம்" என்று சிதேக்கியா எரேமியாவிடம் சொல்லுகிறான். எரேமியாவின் ஆலோசனைகளை சிதேக்கியாவால் மறுக்க முடியவில்லை. எரேமியாவின் ஆலோசனைகள் மிகவும் நல்லவை. அதை மறுப்பதற்கு ஒன்றுமேயில்லை. ஆனாலும் சிதேக்கியாவால் எரேமியாவின் ஆலோசனைகளுக்கு கீழ்ப்படியவும் முடியவில்லை.

சிதேக்கியா எரேமியாவோடு பேசின எல்லா சம்பாஷணையையும் இரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறான். சிதேக்கியாவுக்கு எருசலேம் நகரத்தின் பாதுகாப்பைக் குறித்து அதிக அக்கரையில்லை. அவன் தன்னுடைய சுயமதிப்பையும், சுயமரியாதையும் குறித்தே அதிக கரிசனையோடிருக்கிறான்.

எரேமியா சிதேக்கியாவோடு பேசியதை யூதாவின் பிரபுக்கள் கேள்விப்படுவார்கள். "நீ ராஜாவோடு பேசிக்கொண்டதை எங்களுக்கு தெரிவி" என்று பிரபுக்கள் எரேமியாவிடம் கேட்பார்கள். அவர்களுக்கு என்ன பதில் சொல்லவேண்டும் என்றும் சிதேக்கியா எரேமியாவுக்கு ஆலோசனை சொல்லுகிறான்.

"பின்பு எல்லாப் பிரபுக்களும், எரேமியாவினிடத்தில் வந்து, அவனைக் கேட்டார்கள்; அப்பொழுது அவன்: ராஜா கற்பித்த இந்த எல்லா வார்த்தைகளின்படியே அவர்களுக்கு அறிவித்தான்; காரியம் கேள்விப்படாமற்போனபடியினால், அவனோடே பேசாமலிருந்துவிட்டார்கள்" (எரே 38:27).

"நான் யோனத்தானுடைய வீட்டிலே சாகாதபடிக்கு ராஜா என்னை அங்கே திரும்ப அனுப்பவேண்டாம் என்று, அவர் முகத்துக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணினேன் என்று சொல்வாயாக" (எரே 38:26) என்று சிதேக்கியா ராஜா எரேமியாவுக்கு ஆலோசனை சொல்லுகிறான். இந்த வார்த்தையில் உண்மையில்லை. ஆனாலும் எரேமியா, ராஜா கற்பித்த இந்த எல்லா வார்த்தைகளின்படியே யூதாவின் பிரபுக்களுக்கு அறிவிக்கிறார்.

ராஜாவும் எரேமியாவைக் கொல்லவில்லை. எரேமியா, எருசலேம் பிடிபடுகிற நாள்மட்டாக காவற்சாலையின் முற்றத்தில்இருக்கிறார்; எருசலேம் பிடிபட்டுப்போனபோதும் அங்கேயே இருக்கிறார் (எரே 38:28).

39 அதிகாரம்

பாபிலோன் ராஜா எருசலேமைப் பிடிப்பான் என்று எரேமியா இதுவரையிலும் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார். இப்போது அவர் சொன்ன சோகசம்பவம் நிறைவேறுகிறது. கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சொல்லுகிற தீர்க்கதரிசனங்கள் நிச்சயமாய் நிறைவேறும். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாவின் ராஜாவை சிறைப்பிடித்து கொண்டுபோகிறான். எருசலேம் நகரத்தை அக்கினியால் சுட்டெரிக்கிறான்.

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக பதினெட்டு மாதங்களாக முற்றிக்கைப்போட்டிருக்கிறார்கள். அதன் பின்பு கல்தேயரின் சேனை எருசலேம் நகரத்தைப் பிடிக்கிறார்கள் (எரே 39:1-3). சிதேக்கியா ராஜா கல்தேயரின் கையில் சிக்கிக்கொள்ளாமல் தப்பி ஓடுகிறான். கல்தேயரின் சேனை அவனைப் பின்தொடர்ந்து பிடித்து, பாபிலோன் ராஜாவுக்கு முன்பாக நிறுத்துகிறார்கள் (எரே 39:4-7).

கல்தேயர்கள் எருசலேமை சுட்டெரித்துப்போடுகிறார்கள். யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் கல்தேயர்கள் தங்கள் தேசத்திற்கு சிறைகளாக கொண்டு போகிறார்கள். ஒன்றுமில்லாத ஏழைகளை திராட்சத்தோட்டங்களை நாட்டுவதற்காக யூதாதேசத்திலேயே விட்டுவிடுகிறார்கள் (எரே 39:8-10).

கல்தேயர்கள் எரேமியாவை பட்சமாய் நடத்துகிறார்கள். அவருக்கு தேவையான சலுகைகளை காண்பிக்கிறார்கள் (எரே 39:11-14). எத்தியோப்பினாகிய எபெத்மெலேக்கு எரேமியாவுக்கு உதவியாயிருந்தான். எருசலேம் அழியும்போது கர்த்தர் எபெத்மெலேக்கை தப்புவிப்பதாக வாக்குப்பண்ணுகிறார் (எரே 39:15-18).

எருசலேமை சுட்டெரித்தார்கள் எரே 39:1-10

எரே 39:1. யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா அரசாண்ட ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதத்திலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதை முற்றிக்கைபோட்டார்கள்.

எரே 39:2. சிதேக்கியா அரசாண்ட பதினோராம் வருஷம் நாலாம் மாதம், ஒன்பதாம் தேதியிலே நகரத்து மதிலில் திறப்புக்கண்டது.

எரே 39:3. அப்பொழுது பாபிலோன் ராஜாவின் பிரபுக்களாகிய நெர்கல்சரேத்சேர், சம்கார்நேபோ, சர்சேகிம், ரப்சாரீஸ், நெர்கல்சரேத்சேர், ரப்மாக் என்பவர்களும், பாபிலோன் ராஜாவின் மற்ற எல்லாப் பிரபுக்களும் உட்பிரவேசித்து, நடு வாசலில் இருந்தார்கள்.

எரே 39:4. அப்பொழுது யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவும் சகல யுத்த மனுஷரும் அவர்களைக் கண்டபோது, ஓடி, இராத்திரிகாலத்தில் ராஜவுடைய தோட்டத்துவழியே, இரண்டு மதில்களுக்கு நடுவான வாசலால் நகரத்திலிருந்து புறப்பட்டுப் போனார்கள்; அவன் வயல்வெளியின் வழியே போய்விட்டான்.

எரே 39:5. ஆனாலும், கல்தேயருடைய இராணுவம் அவர்களைப் பின்தொடர்ந்து, எரிகோவின் சமபூமியில் சிதேக்கியாவைக் கிட்டி, அவனைப் பிடித்து, அவனை ஆமாத்தேசத்தின் ஊராகிய ரிப்லாவுக்கு, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடத்தில் கொண்டு போனார்கள்; அங்கே இவன் அவனைக் குறித்துத் தீர்ப்புச்செய்தான்.

எரே 39:6. பின்பு பாபிலோன் ராஜா ரிப்லாவிலே, சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டுவித்தான்; யூதா பிரபுக்கள் அனைவரையும் பாபிலோன் ராஜா வெட்டி,

எரே 39:7. சிதேக்கியாவின் கண்களைக் கெடுத்து, அவனை பாபிலோனுக்குக் கொண்டுபோக அவனுக்குஇரண்டு வெண்கல விலங்குகளைப் போட்டான்.

எரே 39:8. கல்தேயர் ராஜாவின் அரமனையையும் ஜனத்தின் வீடுகளையும் அக்கினியால் சுட்டெரித்து, எருசலேமின் மதில்களை இடித்துப் போட்டார்கள்.

எரே 39:9. நகரத்தில் தங்கியிருந்த ஜனங்களையும், தன் பட்சத்தில் ஓடிவந்து விட்டவர்களையும், மீதியான மற்ற ஜனங்களையும், காவற் சேனாதிபதியாகிய நேபுசராதான் பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோனான்.

எரே 39:10. காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் ஒன்றுமில்லாத ஏழைகளில் சிலரை யூதா தேசத்திலே வைத்து, அவர்களுக்கு அந்நாளிலே திராட்சத் தோட்டங்களையும் வயல்நிலங்களையும் கொடுத்தான்.

எரேமியா காவற்சாலையின் முற்றத்திலே பொறுமையோடு தங்கியிருக்கிறார். எருசலேம் நகரம் பிடிபடுகிற நாள்மட்டாகவும் எரேமியா காவற்சாலையின் முற்றத்திலிருக்கிறார். எருசலேம் பிடிபட்டுப்போனபோதும் அவர் அங்கேயே இருக்கிறார்.

எரேமியா சிதேக்கியா ராஜாவுக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னார். ஆனால் சிதேக்கியா கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. அதன் பின்பு எரேமியா சிதேக்கியாவை தொந்தரவு பண்ணவில்லை. அவருக்கு கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்கவில்லை.

சிதேக்கியா ராஜாவும், யூதாவின் பிரபுக்களும் அதன் பின்பு எரேமியாவுக்கு ஒரு தீங்கும் பண்ணவில்லை. எரேமியா காவற்சாலையின் முற்றத்தில் எருசலேம் நகரம் பிடிபடுகிற நாள்மட்டாகவும், நகரம் பிடிபட்டுப்போனபோதும் அங்கேயே இருக்கிறார்.

யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா அரசாண்ட ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதத்திலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதை முற்றிக்கைபோடுகிறார்கள் (எரே 39:1).

நேபுகாத்நேச்சார் தன்னுடைய படைத்தளபதிகளை எருசலேமுக்கு விரோதமாக அனுப்பி, நகரத்தை முற்றிக்கைப்போடச் சொல்லுகிறான். அவர்கள் எகிப்தியரின் சேனை வந்த செய்தியைக் கேட்டு எருசலேமைவிட்டுப் போனவர்கள். இப்போதோ நேபுகாத்நேச்சாரின் உத்தரவுப்படி, கல்தேயர்கள் மறுபடியும் எருசலேமுக்கு விரோதமாக வருகிறார்கள். எருசலேம் நகரத்தை தீவிரமாக முற்றிக்கைப்போடுகிறார்கள்.

சிதேக்கியா அரசாண்ட பதினோராம் வருஷம் நாலாம் மாதம், ஒன்பதாம் தேதியிலே நகரத்து மதிலில் திறப்புக்காண்கிறது (எரே 39:2). கல்தேயர்கள் திறப்பின் வழியாக நகரத்திற்குள்ளே பிரவேசிக்கிறார்கள். எருசலேம் நகரத்திற்குள்ளே இருக்கிற யூதாவின் மனுஷர் பஞ்சத்தினாலும் பட்டினியினாலும் மிகவும் பலவீனமாயிருக்கிறார்கள். அவர்களால் கல்தேயரை எதிர்த்து யுத்தம் பண்ண முடியவில்லை.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தர் யூதாதேசத்திற்கு காண்பித்த ஆதரவையும், பாதுகாப்பையும் விலக்கிக்கொள்கிறார். எருசலேம் நகரத்திற்கும், யூதாவின் மற்ற பட்டணங்களுக்கும் தேவனுடைய பாதுகாப்பு கிடைக்காமல் போயிற்று.

சிம்சோனின் நீண்ட தலைமயிர் கத்தரிக்கப்பட்டவுடன், அவனுடைய பலன் அவனை விட்டு நீங்கிற்று. அவன் மற்ற மனுஷரைப்போல சாதாரண மனுஷனாயிருந்தான். அதுபோலவே கர்த்தருடைய பாதுகாப்பு எருசலேம் நகரத்தைவிட்டு நீங்கினவுடன், எருசலேம் நகரமும் மற்ற நகரங்களைப்போல சாதாரண நகரமாய் பலவீனமடைந்தது.

அப்பொழுது பாபிலோன் ராஜாவின் பிரபுக்களாகிய நெர்கல்சரேத்சேர், சம்பார்நேபோ, சர்சேகிம், ரப்சாரீஸ், நெர்கல்சரேத்சேர், ரப்மாக் என்பவர்களும், பாபிலோன் ராஜாவின் மற்ற எல்லாப் பிரபுக்களும் உட்பிரவேசித்து, நடு வாசலில் இருக்கிறார்கள் (எரே 39:3).

நடுவாசல் என்பது இரண்டாம் வாசலைக் குறிக்கிற வார்த்தையாயிருக்கலாம். "அந்நாளிலே மீன்வாசலிலிருந்து கூக்குரலின் சத்தமும், நகரத்தின் இரண்டாம் பாகத்திலிருந்து அலறுதலும், மேடுகளிலிருந்து மகா சங்காரத்தின் இரைச்சலும் உண்டாகுமென்று கர்த்தர் சொல்லுகிறார்" (செப் 1:10). நடுவாசல் எருசலேம் நகரத்தை இரண்டாகப் பிரிக்கிறது.

பாபிலோன் ராஜாவின் பிரபுக்கள் நடுவாசலில் மிகுந்த எச்சரிப்போடு நிற்கிறார்கள். நடுவாசலைத் தாண்டி அவர்கள் அவசரப்பட்டு எருசலேம் நகரத்திற்குள் பிரவேசிக்கவில்லை. ஒருவேளை யூதாமனுஷருக்கு அருகாமையில் போனால் தங்களுடைய ஜீவனுக்கு சேதமுண்டாக வாய்ப்புள்ளது என்று பாபிலோன் தேசத்து பிரபுக்கள் நினைக்கிறார்கள்.

பாபிலோன் ராஜாவின் பிரபுக்கள் எருசலேம் நகரத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் போகிறார்கள். அங்கே தங்களுக்கு கண்ணிகள் வைக்கப்பட்டிருக்கிறதா, மறைவாக வலைகள் விரிக்கப்பட்டிருக்கிறதா, யூதாவின் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் எங்கேயாவது ஒழிந்திருக்கிறார்களா என்பதையெல்லம் கல்தேயர்கள் தேடிப் பார்க்கிறார்கள். யுத்தக்களத்திலிருக்கிறவர்கள் எப்போதும் எச்சரிக்கையோடிருப்பார்கள்.

எருசலேம் நகரத்தின் நடுவாசலில் எலியாக்கீம், எல்க்கியா போன்ற கர்த்தருடைய பரிசுத்தவான்கள் அமர்ந்திருப்பது வழக்கம். இவர்களுக்கு கர்த்தருடைய நாமம் சூட்டப்பட்டிருக்கிறது. இப்போதோ அவர்கள் அமர்ந்திருந்த நடுவாசலில் அந்நிய தேசத்தார் அமர்ந்திருக்கிறார்கள்.

நெர்கல்சரேத்சேர், சம்பார்நேபோ, சர்சேகிம், ரப்சாரீஸ், நெர்கல்சரேத்சேர், ரப்மாக் ஆகியோர் நடுவாசலில் அமர்ந்திருக்கிறார்கள். இவர்கள் பாபிலோன் ராஜாவின் பிரபுக்கள். இவர்களுக்கு கர்த்தருடைய நாமம் தரிக்கப்படவில்லை. இவர்களுடைய பெயர்களெல்லாம் அந்நிய தேசத்து தெய்வங்களுடைய பெயர்கள்.

சர்சேகிம், ரப்சாரீஸ் ஆகியோர் கல்தேயரின் சேனைத்தலைவர்கள். நெர்கல்சரேத்சேர் கல்தேயருடைய பளையத்திற்கு தலைவன். எரேமியா இவர்களைக் குறித்து ஏற்கெனவே தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார். எரேமியா சொன்ன தீர்க்கதரிசனம் இப்போது நிறைவேறுகிறது. வடதிசை ராஜ்யங்களின் பிரபுக்கள் எருசலேமின் வாசல் வழியாய் பிரவேசிக்கிறார்கள்.

"இதோ, நான் வடதிசை ராஜ்யங்களின் வம்சங்களையெல்லாம் கூப்பிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் வந்து அவனவன் தன் தன் சிங்காசனத்தை எருசலேமின் ஒலி முகவாசல்களுக்கும், அதின் சுற்றுமதில்கள் எல்லாவற்றிற்கும் விரோதமாகவும், யூதாதேசத்து எல்லாப் பட்டணங்களுக்கும் விரோதமாகவும் வைப்பார்கள்" (எரே 1:15).

பாபிலோன் ராஜாவின் பிரபுக்கள் எருசலேமின் நடுவாசலில் இருக்கும் செய்தியை சிதேக்கியா ராஜா கேள்விப்படுகிறான். தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றால், தான் கல்தேயருக்கு தப்பித்து ஓடிவிடவேண்டும் என்று சிதேக்கியா தீர்மானம்பண்ணுகிறான். மிகுந்த நடுக்கத்தோடும், பயத்தோடும் சிதேக்கியா அரமனையை விட்டு தோட்டத்தின் வழியே ஓடிப்போகிறான்.

யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவும் சகல யுத்த மனுஷரும் கல்தேயரின் பிரபுக்களை கண்டபோது, ஓடி, இராத்திரிகாலத்தில் ராஜவுடைய தோட்டத்துவழியே, இரண்டு மதில்களுக்கு நடுவான வாசலால் நகரத்திலிருந்து புறப்பட்டுப் போகிறார்கள்; சிதேக்கியா ராஜா வயல்வெளியின் வழியே போய்விடுகிறான் (எரே 39:4).

சிதேக்கியா ராஜா தப்பிப்போன செய்தி கல்தேயருக்கு தெரியவருகிறது. கல்தேயருடைய இராணுவம் சிதேக்கியாவையும் அவனுடைய சகல யுத்த மனுஷரையும் பின்தொடர்ந்து போகிறார்கள். எரிகோவின் சமபூமியிலே அவர்கள் சிதேக்கியாவைக் கிட்டி, அவனைப் பிடிக்கிறார்கள். கல்தேயரின் இராணுவத்தார் சிதேக்கியாவை ஆமாத்தேசத்தின் ஊராகிய ரிப்லாவுக்கு, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடத்தில் கொண்டு போகிறார்கள். அங்கே நேபுகாத்நேச்சார் ராஜா சிதேக்கியாவைக் குறித்து தீர்ப்பு செய்கிறான்.

இதன் பின்பு பாபிலோன் ராஜா ரிப்லாவிலே, சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டிப்போடுகிறான்; யூதா பிரபுக்கள் அனைவரையும் பாபிலோன் ராஜா வெட்டி, சிதேக்கியாவின் கண்களைக் கெடுத்து, அவனை பாபிலோனுக்குக் கொண்டுபோக அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குகளைப் போடுகிறான் (எரே 39:6,7).

சிதேக்கியாவுக்கு இப்போது முப்பத்திரண்டு வயதாகிவிட்டது. அவனுடைய குமாரர் இளவயதிலிருக்கிறார்கள். சிதேக்கியாவின் கண்களுக்கு முன்பாக பாபிலோன் ராஜா அவனுடைய குமாரரை வெட்டிப்போடுகிறான். அதைப் பார்ப்பதற்கு சிதேக்கியாவுக்கு கண்கள் இருக்கிறது. சிதேக்கியாவின் குமாரர்கள் அவனுடைய கண்களுக்கு முன்பாகவே செத்துப்போனது, அவனுக்கு மரணம் வந்ததுபோல இருந்திருக்கும். சிதேக்கியாவின் பாவமே அவனுடைய குமாரரின் மரணத்திற்கு காரணம்.

"உம்முடைய எல்லா ஸ்திரீகளையும், உம்முடைய பிள்ளைகளையும் வெளியே கல்தேயரிடத்தில் கொண்டு போவார்கள்; நீரும் அவர்கள் கைக்குத் தப்பிப்போகாமல் பாபிலோன் ராஜாவின் கையினால் பிடிக்கப்பட்டு, இந்த நகரம் அக்கினியால் சுட்டெரிக்கப்படக் காரணமாயிருப்பீர்" (எரே 38:23) என்று எரேமியா சிதேக்கியாவுக்கு தீர்க்கதரிசனம் சொன்னார். ஆனால் சிதேக்கியாவோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. இப்போது கர்த்தருடைய வார்த்தை நிறைவேறுகிறது. சிதேக்கியாவின் கண்களுக்கு முன்பாக அவனுடைய குமாரர்கள் செத்துப்போகிறார்கள்.

பாபிலோன் ராஜா யூதாவின் பிரபுக்கள் அனைவரையும் வெட்டிப்போடுகிறான். சிதேக்கியாவின் கண்களைக் கெடுத்துப்போடுமாறு நேபுகாத்நேச்சார் கட்டளைகொடுக்கிறான். கர்த்தருடைய வார்த்தை பிரத்தியட்சமாயிருந்தபோது சிதேக்கியா அதைப் பார்க்க மறுத்துவிட்டான். அவனுக்கு கண்கள் இருந்தும் குருடனைப்போல இருந்தான். இப்போதோ சிதேக்கியாவின் கண்கள் கெடுக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய வெளிச்சத்தில் நடக்க மறுத்தவன், இப்போது நித்திய இருளிலிருக்கிறான்.

பாபிலோன் ராஜா சிதேக்கியாவுக்கு இரண்டு வெண்கல விலங்குகளைப்போட்டு, அவனை பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகிறார்கள். சிதேக்கியா தன்னுடைய மீதமுள்ள ஆயுசுகாலத்தை, பாபிலோன் தேசத்தில் வேதனையோடு களிக்கவேண்டும்.

பாபிலோன் ராஜா சிதேக்கியாவை சிறைப்பிடித்த பின்பு, அவனுடைய அரமனையை கல்தேயர் அக்கினியால் சுட்டெரித்துப்போடுகிறார்கள். எருசலேமின் மதில்களையும் இடித்துப்போடுகிறார்கள். யூதா ஜனத்தின் வீடுகளையும் அக்கினியால் சுட்டெரிக்கிறார்கள் (எரே 39:8).

கல்தேயரின் காவற்சேனாபதியாகிய நேபுசராதான் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் பாபிலோனுக்கு சிறைகளாக கொண்டுபோகிறான். நேபுசராதான் எருசலேம் நகரத்தில் தங்கியிருந்த ஜனங்களையும், தன் பட்சத்தில் ஓடிவந்துவிட்டவர்களையும், மீதியான மற்ற ஜனங்களையும் பாபிலோனுக்கு சிறைகளாக கொண்டுபோகிறான் (எரே 39:9).

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கல்தேயரால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு நடந்தே போகவேண்டும். கல்தேயர்கள் அவர்களை மிருகங்களைப்போல நடத்துகிறார்கள்.

யூதாவின் மனுஷர் தங்கள் தேசத்தில் செழித்திருந்த காலத்தில், தங்களுடைய வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் மிகவும் கொடுமைப்படுத்தினார்கள். ஏழைகளை கொடுமைப்படுத்தின யூதர்களை, இப்போது கல்தேயர்கள் கொடுமைப்படுத்துகிறார்கள்.

யூதர்களின் எஜமானர்கள் தங்கள் வேலைக்காரர்களுக்கு இரக்கம் காண்பிக்கவில்லை. கல்தேயர்களோ இப்போது யூதர்களின் எஜமானர்களுக்கு இரக்கம் காண்பிக்கவில்லை.

காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் ஒன்றுமில்லாத ஏழைகளில் சிலரை யூதா தேசத்திலே வைத்து, அவர்களுக்கு அந்நாளிலே திராட்சத் தோட்டங்களையும் வயல்நிலங்களையும் கொடுக்கிறான் (எரே 39:10).

ஒருகாலத்தில் ஐசுவரியவான்கள் தரித்திரரை ஒடுக்கினார்கள். ஐசுவரியவான்களுடைய அநீதியினிமித்தம் தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது இப்போது வந்திருக்கிறது. ஐசுவரியவான்கள் இப்போது ஒடுக்கப்படுகிறார்கள். அவர்களால் ஒடுக்கப்பட்ட தரித்திரர்கள் இப்போது செழித்திருக்கிறார்கள். தரித்திரர்கள் தங்களுக்கு வந்த நிந்தைகளையும் வேதனைகளையும் பொறுமையோடு சகித்துக்கொண்டார்கள். கர்த்தரோ அவர்களுடைய பொறுமையினிமித்தமாய், அவர்களுக்கு இப்போது வெகுமதி கொடுக்கிறார்.

எரேமியாவுக்கு சலுகை
எரே 39:11-14

எரே 39:11. ஆனாலும் எரேமியாவைக் குறித்து, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதானை நோக்கி:

எரே 39:12. நீ அவனை அழைப்பித்து, அவனுக்கு ஒரு பொல்லாப்பும் செய்யாமல், அவனைப் பத்திரமாய்ப் பார்த்து, அவன் உன்னோடே சொல்லுகிறபடியெல்லாம் அவனை நடத்தென்று கட்டளைகொடுத்தான்.

எரே 39:13. அப்படியே காவற்சேனாதிபதியாகிய நேபுசராதானும், நேபுசஸ்பான், ரப்சாரீஸ், நெர்கல்சரேத்சேர், ரப்மாக் என்பவர்களும், பாபிலோன் ராஜாவின் எல்லாப் பிரபுக்களும்,

எரே 39:14. எரேமியாவைக் காவற்சாலையின் முற்றத்திலிருந்து வரவழைத்து, அவனை வெளியே வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோகும்படிக்கு அவனைச்சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவினிடத்தில் ஒப்புவித்தார்கள்; அப்படியே அவன் ஜனத்துக்குள்ளே தங்கியிருந்தான்.

எரேமியாவுக்கு கர்த்தருடைய கிருபையினால் விசேஷித்த பராமரிப்பு கிடைக்கிறது. எரேமியாவைக் குறித்து, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதானை நோக்கி: "நீ அவனை அழைப்பித்து, அவனுக்கு ஒரு பொல்லாப்பும் செய்யாமல், அவனைப் பத்திரமாய்ப் பார்த்து, அவன் உன்னோடே சொல்லுகிறபடியெல்லாம் அவனை நடத்து" (எரே 39:11,12) என்று கட்டளைகொடுக்கிறான்.

நேபுகாத்நேச்சார் ராஜாவின் கட்டளைக்கு காவற்சேனாபதியும், பாபிலோன் ராஜாவின் எல்லா பிரபுக்களும் கீழ்ப்படிகிறார்கள். நேபுகாத்நேச்சார் ராஜா சொன்ன பிரகாரம், காவற்சேனாதிபதியாகிய நேபுசராதானும், நேபுசஸ்பான், ரப்சாரீஸ், நெர்கல்சரேத்சேர், ரப்மாக் என்பவர்களும், பாபிலோன் ராஜாவின் எல்லாப் பிரபுக்களும், எரேமியாவைக் காவற்சாலையின் முற்றத்திலிருந்து வரவழைக்கிறார்கள். எரேமியாவை வெளியே வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோகும்படிக்கு சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவினிடத்தில் எரேமியாவை ஒப்புவிக்கிறார்கள்; அப்படியே எரேமியா ஜனத்துக்குள்ளே தங்கியிருக்கிறார் (எரே 39:13,14).

நேபுகாத்நேச்சார் பாபிலோன் தேசத்திற்கு ராஜாவாகயிருந்தாலும், சாதாரண தீர்க்கதரிசியாகிய எரேமியாவுக்கு இரக்கம் காண்பிக்கிறான். கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை சுட்டெரிப்பதற்கு முன்பாகவே, நேபுகாத்நேச்சார் எரேமியாவை விடுவிக்கிறார். எருசலேமின் அலங்கங்கள் இடிக்கப்படுவதற்கு முன்பாக, எரேமியாவுக்கு விடுதலை கிடைக்கிறது.

சிதேக்கியாவும் யூதாவின் பிரபுக்களும் எரேமியாவை காவலறையில் போட்டார்கள். பாபிலோன் ராஜாவும் அவனுடைய பிரபுக்களும், காவற்சாலையின் முற்றத்திலிருந்த எரேமியாவை விடுதலை பண்ணுகிறார்கள்.

எரேமியா கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்கிறார். கர்த்தரும் எரேமியாவுக்கு நல்ல வாக்குத்தத்த வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார்.

"உன்னில் மீதியாயிருப்பவர்கள் நன்மையடைவார்கள்; தீங்கின் காலத்திலும் நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்குச் சகாயஞ்செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்" (எரே 15:11) என்று கர்த்தர் எரேமியாவுக்குச் சொன்னார். கர்த்தருடைய வார்த்தை இங்கு நிறைவேறுகிறது.

கர்த்தர் தனக்கு கொடுத்த தீர்க்கதரிசன ஊழியத்தை எரேமியா உண்மையாய்ச் செய்கிறார். எரேமியா உண்மையுள்ளவர் என்று கர்த்தரும் அங்கீரித்து, எரேமியாவுக்கு வாக்குப்பண்ணின நன்மைகளை இங்கு நிறைவேற்றுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் பாபிலோன் ராஜாவை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார். நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய ஜனத்தை துன்பப்படுத்துகிறவர்களைத் தண்டிக்கிறான். சத்துருக்களால் துன்பப்படுத்தப்பட்ட கர்த்தருடைய ஜனங்களை நேபுகாத்நேச்சார் விடுதலைபண்ணுகிறான்.

நேபுகாத்நேச்சார் தன்னை காவற்சாலையின் முற்றத்திலிருந்து விடுதலைபண்ணினாலும், கர்த்தருடைய கரமே தன்னை விடுதலைபண்ணிற்று என்று எரேமியா நம்புகிறார். கர்த்தருடைய சித்தமில்லாமல் ஒன்றும் நடைபெறாது. கர்த்தர் தம்முடைய சித்தத்தையும் திட்டத்தையும் நிறைவேற்ற பாபிலோன் ராஜாவை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்.

எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக்குக்குச் சொல்லவேண்டியது எரே 39:15-18

எரே 39:15. இதுவுமல்லாமல், எரேமியா இன்னும் காவற்சாலையின் முற்றத்திலே அடைக்கப்பட்டிருக்கையில், அவனுக்குக் கர்த்தரால் உண்டான வசனம்:

எரே 39:16. நீ போய், எத்தியோப்பியனாகிய எபெத்மெலேக்குக்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால், இதோ, என்னுடைய வார்த்தைகளை இந்த நகரத்தின்மேல் நன்மையாக அல்ல, தீமையாகவே வரப்பண்ணுவேன்; அவைகள் அந்நாளிலே உன் கண்களுக்கு முன்பாக நிறைவேறும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர்சொல்லுகிறார்.

எரே 39:17. ஆனால் அந்நாளிலே உன்னைத்தப்புவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நீ பயப்படுகிற மனுஷரின் கையிலே ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை.

எரே 39:18. உன்னை நிச்சயமாக விடுவிப்பேன், நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை; நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் உனக்குக் கிடைத்த கொள்ளைப் பொருளைப்போல இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

எபெத்மெலேக்கு எரேமியாவுக்கு நன்மை செய்தான். எரேமியா தண்ணீரில்லாத உளையான துரவிலே கிடந்தபோது, எபெத்மெலேக்கு ராஜாவினிடத்தில் எரேமியாவின் நிலமையைப்பற்றிச் சொல்லி, எரேமியாவை துரவிலிருந்து தூக்கிவிடுவதற்கு உதவிசெய்தான். அவன் எரேமியாவுக்கு செய்த உதவிகளை கர்த்தர் நினைவுகூர்ந்து, அவனை ஆசீர்வதிக்கிறார். தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம், எபெத்மெலேக் எரேமியா தீர்க்கதரிசிக்கு உதவி செய்தான். கர்த்தர் தீர்க்கதரிசிக்குரிய வெகுமதிகளை எபெத்மெலேக்குக்கு கொடுக்கிறார்.

"இதோ, என்னுடைய வார்த்தைகளை இந்த நகரத்தின்மேல் நன்மையாக அல்ல, தீமையாகவே வரப்பண்ணுவேன்; அவைகள் அந்நாளிலே உன் கண்களுக்கு முன்பாக நிறைவேறும்" (எரே 39:16) என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"ஆனால் அந்நாளிலே உன்னைத்தப்புவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நீ பயப்படுகிற மனுஷரின் கையிலே ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை. உன்னை நிச்சயமாக விடுவிப்பேன், நீ பட்டயத்துக்கு இரையாவதில்லை; நீ என்னை நம்பினபடியினால் உன் பிராணன் உனக்குக் கிடைத்தகொள்ளைப்பொருளைப்போல இருக்கும்" (எரே 39:17,18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் எருசலேமுக்கு விரோதமாக சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறும். எபெத்மெலேக் எரேமியாவுக்கு நன்மை செய்ததினிமித்தம், கர்த்தர் அவனை அழிவுக்கு தப்புவிக்கிறார். எருசலேம் அழியும்போது எபெத்மெலேக் எருசலேம் நகரத்தோடு சேர்ந்து அழிந்துபோகமாட்டான். கர்த்தர் அவனைத் தப்புவிப்பார். அவனை கல்தேயரின் கையில் ஒப்புக்கொடுக்கமாட்டார்.

எரேமியாவை உளையான துரவிலிருந்து தூக்கி எடுப்பதற்கு எபெத்மெலேக் காரணமாயிருந்தார். கர்த்தரோ எருசலேமின் அழிவிலிருந்து எபெத்மெலேக்கை விலக்கி காத்துக்கொள்கிறார். எபெத்மெலேக் கர்த்தரை நம்புகிறான். இதனால் அவனுடைய பிராணனுக்கு சேதமுண்டாகாது. அவனுடைய பிராணன் அவனுக்கு கிடைத்த கொள்ளைபொருள் போலிருக்கும்.

எபெத்மெலேக் கர்த்தரை நம்பினான். மனுஷருக்கு பயப்படவில்லை. கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மனுஷருக்கு பயப்படமாட்டார்கள். எபெத்மெலேக்கிடம் நல்ல சுபாவங்கள் உள்ளது. அவன் கர்த்தரை நம்புகிறவன். நன்மை செய்கிறவன். தன்னுடைய கடமைகளை நேர்த்தியாய் நிறைவேற்றுகிறவன். அவன் கர்த்தருக்கு பிரியமானவன். அவன் கர்த்தருக்கு பிரயோஜனமானவன். கர்த்தர் எபெத்மெலேக்கை பட்டயத்திற்கு இரையாகாமல் பாதுகாக்கிறார். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

40 அதிகாரம்

பாபிலோன் ராஜா யூதர்களை சிறைப்பிடித்து தன் தேசத்திற்கு கொண்டு போனான். ஒன்றுமில்லாத ஏழைகளில் சிலரை யூதாதேசத்திலேயே விட்டுவிட்டான். யூதா தேசத்தில் தங்கியிருக்கிற யூதர்கள் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தவில்லை. அவர்களுடைய இருதயம் புதுப்பிக்கப்படவில்லை. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

காவற்சேனாதிபதி எரேமியாவை விடுதலை பண்ணுகிறான். எரேமியா கெதலியாவோடு சேர்ந்துகொள்கிறார் (எரே 40:1-6). கல்தேயர்கள் எருசலேமின்மீதும், யூதாவின் பட்டணங்களின் மீதும் யுத்தம்பண்ணியபோது, யூதாதேசத்திலிருந்த யூதர்களில் அநேகர் அந்நிய தேசங்களுக்கு சிதறிப்போனார்கள். பாபிலோன் ராஜா கெதலியாவை யூதாதேசத்திற்கு அதிகாரியாய் வைத்திருக்கிறான் என்பதை சிதறிப்போன யூதர்கள் கேள்விப்பட்டு, தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள் (எரே 40:7-12).

இஸ்மவேல் என்பவன் கெதலியாவுக்கு விரோதமாக சதிஆலோசனைபண்ணுகிறான் (எரே 40:13-16).

எரேமியாவும் கெதலியாவும் எரே 40:1-6

எரே 40:1. பாபிலோனுக்குக் கொண்டுபோகும்படி எருசலேமிலும் யூதாவிலும் சிறைகளாய்ப் பிடித்துவைக்கப்பட்ட ஜனங்களுக்குள் விலங்கிடப்பட்டிருந்த எரேமியாவைக் காவற் சேனாதிபதியாகிய நேபுசராதான் விடுதலையாக்கி ராமாவிலிருந்து அனுப்பிவிட்ட பின்பு, எரேமியாவுக்குக் கர்த்தரால் உண்டான வசனம்:

எரே 40:2. காவற்சேனாதிபதி எரேமியாவை அழைப்பித்து, அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தர் இந்த ஸ்தலத்துக்கு இந்தத் தீங்கு வருமென்று சொல்லியிருந்தார்.

எரே 40:3. தாம் சொன்னபடியே கர்த்தர் வரப்பண்ணியுமிருக்கிறார்; நீங்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற் போனீர்கள்; ஆகையால் உங்களுக்கு இந்தக் காரியம் வந்தது.

எரே 40:4. இப்போதும், இதோ, உன் கைகளிலிடப்பட்ட விலங்குகளை இன்று நீக்கிப் போட்டேன்; என்னோடே கூடப் பாபிலோனுக்கு வர உனக்கு நன்மையாய்த் தோன்றினால் வா, நான் உன்னைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்வேன்; என்னோடே கூடப் பாபிலோனுக்கு வர உனக்கு நன்றாய்த் தோன்றாவிட்டால், இருக்கட்டும்; இதோ, தேசமெல்லாம் உனக்கு முன்பாக இருக்கிறது, எவ்விடத்துக்குப்போக உனக்கு நன்மையும் செவ்வையுமாய்க் காண்கிறதோ அவ்விடத்துக்குப்போ என்றான்.

எரே 40:5. அவன் இன்னும் போகாமலிருக்கும்போது, அவன் இவனை நோக்கி: நீ பாபிலோன் ராஜா யூதா பட்டணங்களின்மேல் அதிகாரியாக வைத்த சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவினிடத்துக்குத் திரும்பிப்போய், அவனோடே ஜனங்களுக்குள்ளே தங்கியிரு; இல்லாவிட்டால், எவ்விடத்துக்குப் போக உனக்குச் செவ்வையாய்த் தோன்றுகிறதோ, அவ்விடத்துக்குப் போ என்று சொல்லி, காவற்சேனாதிபதி அவனுக்கு வழிச்செலவையும் வெகுமதியையும் கொடுத்து அவனை அனுப்பிவிட்டான்.

எரே 40:6. அப்படியே எரேமியா மிஸ்பாவுக்கு அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவினிடத்தில் போய், தேசத்தில் மீதியான ஜனங்களுக்குள் அவனோடே தங்கியிருந்தான்.

எரேமியா காவற்சாலையின் முற்றத்திலிருந்தார். அவரை யூதாராஜாவின் பிரபுக்கள் விடுதலைபண்ணி கெதலியாவினிடத்திற்கு ஒப்புவித்தார்கள் (எரே 39:13,14). இதன் பின்பு எரேமியா எருசலேம் நகரத்தில் ஜனங்கள் மத்தியில் போக்கும் வரத்துமாயிருக்கிறார். எருசலேமிலிருக்கிற யூதர்களை கட்டி சிறைப்பிடித்து பாபிலோனுக்கு கொண்டுவருமாறு, கல்தேயரின் சேனையிலுள்ள அதிகாரிகளுக்கு கட்டளை கொடுக்கப்படுகிறது. சிறிய அதிகாரிகளுக்கு எரேமியாவைப்பற்றி தெரியாது.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எரேமியாவுக்கு ஒரு பொல்லாப்பும் செய்யக்கூடாது என்றும், அவரை பத்திரமாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தன்னுடைய சேனாதிபதிகளுக்கும் பிரபுக்களுக்கும் கட்டளை கொடுத்திருக்கிறார் (எரே 39:11,12). பாபிலோன் ராஜாவின் கட்டளையை கல்தேயருடைய சேனையிலுள்ள சிறிய அதிகாரிகள் அறிந்திருக்கவில்லை. அவர்கள் எருசலேமிலுள்ள யூதர்களை சிறைகளாகப் பிடித்து விலங்கிட்டபோது, எரேமியாவையும் சிறைப்பிடித்து விலங்கிடுகிறார்கள்.

பாபிலோனுக்குக் கொண்டுபோகும்படி எருசலேமிலும் யூதாவிலும் சிறைகளாய்ப் பிடித்துவைக்கப்பட்ட ஜனங்களுக்குள் எரேமியாவும் விலங்கிடப்பட்டிருக்கிறார் (எரே 40:1). எரேமியாவை மற்ற யூதர்களோடு ராமாவுக்கு அழைத்துப் போகிறார்கள். சிறைகளாகப் பிடிக்கப்பட்டவர் மத்தியில் எரேமியாவும் இருப்பதை காவற்சேனாபதியாகிய நேபுசராதான் கண்டு பிடித்து, எரேமியாவை விடுதலையாக்கி, ராமாவிலிருந்து அனுப்பிவிடுகிறார்.

காவற்சேனாதிபதி எரேமியாவை கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசியாக அங்கீகரிக்கிறார். கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு அநேக எச்சரிப்புகளைச் சொல்லியிருந்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. இதனால் யூதாவின் மனுஷர்மேலும், எருசலேமின் குடிகள் மேலும் தீங்கு வந்தது என்று பாபிலோன் தேசத்து காவற்சேனாதிபதி சொல்லுகிறான்.

"காவற்சேனாதிபதி எரேமியாவை அழைப்பித்து, அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தர் இந்த ஸ்தலத்துக்கு இந்தத் தீங்கு வருமென்று சொல்லியிருந்தார். தாம் சொன்னபடியே கர்த்தர் வரப்பண்ணியுமிருக்கிறார்; நீங்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து, அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனீர்கள்; ஆகையால் உங்களுக்கு இந்தக் காரியம் வந்தது" (எரே 40:2,3)என்று சொல்லுகிறான்.

காவற்சேனாதிபதி எரேமியாவை நோக்கி இந்த வார்த்தைகளை விசேஷமாய்ச் சொன்னாலும், தனக்கு முன்னால் சிறைகளாக விலங்கிடப்பட்டு பிடித்து வைக்கப்பட்டிருக்கிற யூதர்கள் எல்லோருக்கும் பொதுவாக சொல்லுகிறான். யூதர்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்து, அவருடைய சத்தத்திற்கு செவிகொடாமல் போனபடியினால், அவர்களுக்கு இந்த தீங்கு உண்டாயிற்று என்று கல்தேயருடைய காவற்சேனாதிபதி சொல்லுகிறான்.

இஸ்ரவேலின் பிரபுக்களுக்கு கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் இதே சத்தியத்தைச் சொன்னார். இஸ்ரவேலின் பிரபுக்களும், யூதாவின் பிரபுக்களும் கர்த்தருடைய வார்த்தையை அங்கீகரிக்கவுமில்லை. புரிந்துகொள்ளவுமில்லை. கல்தேயருடைய காவற்சேனாதிபதி புறஜாதியானாகயிருந்தாலும், அவனுக்கு கர்த்தருடைய சித்தமும், அவருடைய திட்டமும் தெரிந்திருக்கிறது. இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவன், கர்த்தருடைய ஊழியக்காரன் போல பேசுகிறான்.

காவற்சேனாதிபதி எரேமியாவை விடுதலை பண்ணுகிறான். இரண்டாவது தடவையாக எரேமியா விடுவிக்கப்படுகிறார். எரேமியா தன்னோடே கூட பாபிலோனுக்கு வர விரும்பினால் வரலாம் என்றும் காவற்சேனாதிபதி அவரை அன்போடு அழைக்கிறான்.

"இப்போதும், இதோ, உன் கைகளிலிடப்பட்ட விலங்குகளை இன்று நீக்கிப் போட்டேன்; என்னோடேகூடப் பாபிலோனுக்கு வர உனக்கு நன்மையாய்த் தோன்றினால் வா, நான் உன்னைப் பத்திரமாய்ப் பார்த்துக்கொள்வேன்; என்னோடேகூடப் பாபிலோனுக்கு வர உனக்கு நன்றாய்த் தோன்றாவிட்டால், இருக்கட்டும்; இதோ, தேசமெல்லாம் உனக்கு முன்பாக இருக்கிறது, எவ்விடத்துக்குப்போக உனக்கு நன்மையும் செவ்வையுமாய்க் காண்கிறதோ அவ்விடத்துக்குப்போ" (எரே 40:4) என்று காவற்சேனாதிபதி எரேமியாவிடம் சொல்லுகிறான்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவை யூதா பட்டணங்களின்மேல் அதிகாரியாக வைத்திருக்கிறான். எரேமியா காவற்சேனாதிபதியோடு பாபிலோனுக்கு போக விரும்பவில்லையென்றால், அவர் கெதலியாவோடு தங்கியிருக்கலாம் என்றும் காவற்சேனாதிபதி சொல்லுகிறான்.

காவற்சேனாதிபதி எரேமியாவை நோக்கி, "நீ பாபிலோன் ராஜா யூதா பட்டணங்களின்மேல் அதிகாரியாக வைத்த சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவினிடத்துக்குத் திரும்பிப்போய், அவனோடே ஜனங்களுக்குள்ளே தங்கியிரு; இல்லாவிட்டால், எவ்விடத்துக்குப் போக உனக்குச் செவ்வையாய்த் தோன்றுகிறதோ, அவ்விடத்துக்குப் போ" (எரே 40:5) என்று சொல்லுகிறான்.

காவற்சேனாதிபதி எரேமியாவுக்கு வழிச்செலவையும் வெகுமதியையும் கொடுத்து அவரை அனுப்பிவிடுகிறான்.

கெதலியா ஒரு யூதன். இவன் ஏற்கெனவே கல்தேயருக்கு கீழ்ப்படிந்து பாபிலோன் தேசத்திற்கு போனவன். அங்கே பாபிலோன் ராஜாவுக்கு உண்மையுள்ளவனாகயிருந்தான். பாபிலோன் தேசத்து சட்டங்களுக்கு கீழ்ப்படிந்து ஜீவித்தான். இதனால் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், கெதலியாவை யூதாவின் பட்டணங்களுக்கு அதிகாரியாக வைத்தான்.

காவற்சேனாதிபதி எரேமியாவை தன்னோடு பாபிலோன் தேசத்திற்கு வருமாறு அழைக்கிறார். ஆனால் எரேமியாவோ அவனோடுகூட உடனே பாபிலோன் தேசத்திற்குப் போய்விடவில்லை. நேபுசராதான் எரேமியாவைக் கூப்பிடுகிறார். எரேமியாவோ தீர்மானம்பண்ண முடியாமல் யோசித்துக்கொண்டிருக்கிறார். பாபிலோன் தேசத்திற்குப் போவதா அல்லது கெதலியாவோடு யூதாதேசத்திலிருப்பதா என்று சிந்தித்துக்கொண்டிருக்கிறார்.

எரேமியா எப்படி தீர்மானம்பண்ணினாலும், சேனாதிபதியாகிய நேபுசராதான் அவருக்கு ஆதரவாயிருப்பான். எரேமியாதான் தீர்மானம்பண்ணவேண்டும். எரேமியாவோ பாபிலோன் தேசத்திற்குப் போவதற்குப் பதிலாக, யூதாதேசத்தில் கெதலியாவோடு கூடயிருந்து, அங்குள்ள ஜனங்களுக்கு கர்த்தருடைய ஊழியத்தை செய்யவேண்டும் என்று தீர்மானிக்கிறார்.

காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் எரேமியாவுக்கு வழிச்செலவையும் வெகுமதியையும் கொடுத்து அவரை அனுப்புகிறார். எரேமியாவும் அவருடைய அன்பளிப்புக்களை ஏற்றுக்கொள்கிறார். நேபுசராதானுடைய ஆலோசனையின்படி எரேமியா கெதலியாவினிடத்திற்குப் போகிறார். கெதலியா மிஸ்பாவிலிருக்கிறான். எரேமியா மிஸ்பாவிலுள்ள கெதலியாவினிடத்திற்குப்போய், அங்கே தேசத்தில் மீதியான ஜனங்களுக்குள் தங்கியிருக்கிறார் (எரே 40:6).

எரேமியா தன்னுடைய சுகவாழ்வை நாடவில்லை. அவருக்கு இஸ்ரவேல் தேசத்தின்மீது பிரியம் இருக்கிறது. யூதாவின் ராஜாக்களும், பிரபுக்களும் இஸ்ரவேல் தேசத்தின்மீது பிரியமில்லாதிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய சுயநலத்தை நாடினார்கள். எரேமியாவோ இஸ்ரவேல் தேசத்தை கைவிட்டுவிடவில்லை. பாபிலோன் ராஜாவோடும், அவனுடைய பிரபுக்களோடும் பரிசுத்தமில்லாத பாபிலோன் தேசத்தில் ஆடம்பரமாய் ஜீவிப்பதைவிட, கர்த்தருடைய பரிசுத்த தேசமாகிய இஸ்ரவேல் தேசத்தில், கைவிடப்பட்டிருக்கிற ஏழைகளோடு தங்கியிருந்து, யூதர்களோடு பாடுகளை அனுபவிப்பதையே தெரிந்துகொள்கிறார்.

சிதறிப்போன யூதர்கள்
எரே 40:7-12

எரே 40:7. பாபிலோன் ராஜா அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவை தேசத்தின் மேல் அதிகாரியாக்கினான் என்றும், பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோகப்பட்டிராத குடிகளில் ஏழைகளான புருஷரையும் ஸ்திரீகளையும் குழந்தைகளையும் அவனுடைய விசாரிப்புக்கு ஒப்புவித்தான் என்றும், வெளியிலிருக்கிற இராணுவச் சேர்வைக்காரர் அனைவரும் அவர்களுடைய மனுஷரும் கேட்டபோது,

எரே 40:8. அவர்கள் மிஸ்பாவுக்குக் கெதலியாவினிடத்தில் வந்தார்கள்; யாரெனில், நெத்தானியாவின்குமாரனாகிய இஸ்மவேலும், கரேயாவின் குமாரராகிய யோகனானும், யோனத்தானும், தன்கூமேத்தின் குமாரனாகிய செராயாவும், நெத்தோபாத்தியனாகிய ஏப்பாயின் குமாரரும், மாகாத்தியனான ஒருவனுடைய குமாரனாகிய யெசனியாவும் ஆகிய இவர்களும் இவர்களைச் சேர்ந்தவர்களுமே.

எரே 40:9. அப்பொழுது சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகன் கெதலியா அவர்களையும் அவர்கள் மனுஷரையும் நோக்கி: நீங்கள் கல்தேயரைச் சேவிக்கப் பயப்படவேண்டாம், நீங்கள் தேசத்திலிருந்து பாபிலோன் ராஜாவைச் சேவியுங்கள்; அப்பொழுது உங்களுக்கு நன்மையுண்டாகும்.

எரே 40:10. நானோவெனில், இதோ, நம்மிடத்திலே வருகிற கல்தேயரிடத்தில் சேவிக்கும்படி மிஸ்பாவிலே குடியிருக்கிறேன்; நீங்களோ போய், திராட்சரசத்தையும் பழங்களையும் எண்ணெயையும் சேர்த்து, உங்கள் பாண்டங்களில் வைத்து, உங்கள் வசமாயிருக்கிற ஊர்களில் குடியிருங்கள் என்று ஆணையிட்டுச் சொன்னான்.

எரே 40:11. மோவாபிலும் அம்மோன் புத்திரரிடத்திலும் ஏதோமிலும் சகல தேசங்களிலும் இருக்கிற யூதரும், பாபிலோன் ராஜா யூதாவில் சிலர் மீதியாயிருக்கக் கட்டளையிட்டானென்றும், சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவை அவர்கள் மேல் அதிகாரியாக்கினானென்றும், கேட்டபோது,

எரே 40:12. எல்லா யூதரும் தாங்கள் துரத்துண்ட எல்லா இடங்களிலுமிருந்து, யூதாதேசத்தில் கெதலியாவினிடத்தில் மிஸ்பாவுக்கு வந்து, திராட்சரசத்தையும் பழங்களையும் மிகுதியாய்ச் சேர்த்து வைத்தார்கள்.

பாபிலோன் ராஜா யூதர்களைச் சிறைப்பிடித்து பாபிலோனுக்கு கொண்டு போகிறான். யூதர்களில் ஏழைகளாயிருக்கிறவர்களை யூதாதேசத்திலேயே விட்டுவிடுகிறான். கெதலியாவை யூதாவின் பட்டணங்களுக்கு அதிகாரியாக வைக்கிறான். யூதா தேசத்தில் தங்கியிருக்கிற யூதர்களுக்கு சமாதானமும் ஆறுதலும் உண்டாயிற்று. அவர்களுடைய காலம் பிரகாசமாயிருந்தது. பல வருஷங்களுக்கு யூதாதேசத்தில் குழப்பம் ஒன்றும் உண்டாகவில்லை. அவர்களுக்கு வேறு பயங்கரங்களும் ஏற்படவில்லை.

கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் யூதாதேசத்தில் தங்கியிருக்கிற யூதர்களுக்கு கிடைத்தது. அவர்கள் கர்த்தரை நம்பி ஜீவித்தார்கள். மரித்துப்போனவர்கள் உயிரோடு எழும்பினதுபோல, அவர்களுக்கு புதிய ஜீவன் கிடைத்திருக்கிறது. அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாக ஜீவிக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு பிரியமுள்ளவர்களாயும், பிரயோஜனமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள்.

பாபிலோன் ராஜா அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவை யூதாதேசத்தின்மேல் அதிகாரியாக்கினான். இவன் சாப்பானுடைய பேரன். சாப்பான் யூதாவின் பிரபுக்களில் ஒருவன். கெதலியாவின் தகப்பனாகிய அகிக்காம், ஏற்கெனவே எரேமியாவுக்கு உதவிசெய்திருக்கிறான்.

"ஆகிலும் எரேமியாவைக் கொல்ல ஜனங்களின் கையில் ஒப்புக்கொடாதபடி, சாப்பானுடைய குமாரனாகிய அகீக்காம் அவனுக்குச் சகாயமாயிருந்தான்" (எரே 26:24).

அகிக்காம் ஞானமுள்ளவன். நீடிய பொறுமையுள்ளவன். அகிக்காமைப்போலவே அவனுடைய குமாரனாகிய கெதலியாவும் யூதாதேசத்தாரை ஞானத்தோடும், பொறுமையோடும் ஆட்சிசெய்கிறான். யூதாதேசத்தில் ஒரு சில யூதர்கள் மாத்திரமே மீதமாயிருந்தாலும், அவர்களெல்லோருமே கெதலியாவின் ஆட்சிக்காலத்தில் மிகுந்த சந்தோஷத்தோடிருக்கிறார்கள்.

பாபிலோன் ராஜா அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவை யூதாவின் பட்டணங்கள்மேல் அதிகாரியாக வைத்திருக்கிறான் என்பதை, பக்கத்து தேசங்களுக்கு சிதறிப்போன யூதர்கள் கேள்விப்படுகிறார்கள். கெதலியா இப்போது மிஸ்பாவிலிருக்கிறான். சிதறிப்போன யூதர்களும் மிஸ்பாவுக்கு கெதலியாவினிடத்தில் வருகிறார்கள். அவனுடைய ஆளுகைக்கு கீழ்ப்படிகிறார்கள். கெதலியாவின் பாதுகாப்பை பெற்றுக் கொள்கிறார்கள்.

கல்தேயர்கள் யூதாதேசத்தின்மீது யுத்தம்பண்ணியபோது, யூதாதேசத்திலே பிரபலமான ஜனங்களில் அநேகர் கல்தேயரைவிட்டு தப்பித்து ஓடிப்போனார்கள். பல தேசங்களுக்கு சிதறிப்போனார்கள். அவர்களில் பெரும்பாலானோர் இப்போது மறுபடியும் யூதாதேசத்திலுள்ள மிஸ்பாவுக்கு வந்து, கெதலியாவின் ஆளுகைக்கு தங்களை கீழ்ப்படுத்துகிறார்கள். அவர்களின் பெயர்கள் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"அவர்கள் மிஸ்பாவுக்குக் கெதலியாவினிடத்தில் வந்தார்கள்; யாரெனில், நெத்தானியாவின்குமாரனாகிய இஸ்மவேலும், கரேயாவின் குமாரராகிய யோகனானும், யோனத்தானும், தன் கூமேத்தின் குமாரனாகிய செராயாவும், நெத்தோபாத்தியனாகிய ஏப்பாயின் குமாரரும், மாகாத்தியனான ஒருவனுடைய குமாரனாகிய யெசனியாவும் ஆகிய இவர்களும் இவர்களைச் சேர்ந்தவர்களுமே" (எரே 40:8)

இவர்கள் எல்லோருமே யூதாதேசத்தில் பிரபல்யமானவர்கள். அவர்கள் தங்கள் வேலைக்காரரோடும், தங்கள் சேனைவீரர்களோடும் கெதலியாவினிடத்திற்கு திரும்பி வருகிறார்கள். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கெதலியாவின்மீது நல்ல எண்ணம் வைத்திருக்கிறான். கெதலியாவின் ஆட்சிக்காலத்தில், யூதாதேசத்திற்கு திரும்பி வருகிற யூதர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. யூதாதேசத்தின் ஜனத்தொகையும் வேகமாக வளர்ச்சி பெறுகிறது. பாபிலோன் ராஜா அதைப் பார்த்து பொறாமைப்படவில்லை. கெதலியாவின் ஆட்சியை பார்த்து சந்தோஷப்படுகிறான்.

கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கைப்போட்டபோது, யூதாதேசத்தில் ஏழைகளாகயிருந்தவர்கள் மோவாப் தேசத்திற்கும், அம்மோன் தேசத்திற்கும், ஏதோம் தேசத்திற்கும் சிதறிப்போனார்கள். அவர்கள் அந்நிய தேசத்திலே இருந்தாலும், தங்கள் சொந்த தேசமாகிய யூதாதேசத்தின்மீது பிரியமாயிருக்கிறார்கள். பாபிலோன் ராஜா அகிக்காமின் மகனான கெதலியாவை யூதாவின் மனுஷர்மேல் மேல் அதிகாரியாக ஆக்கினான் என்று கேள்விப்பட்டு, சிதறிப்போன யூதர்களெல்லோரும், யூதாதேசத்திற்கு திரும்பி வருகிறார்கள்.

"மோவாபிலும் அம்மோன் புத்திரரிடத்திலும் ஏதோமிலும் சகல தேசங்களிலும் இருக்கிற யூதரும், பாபிலோன் ராஜா யூதாவில் சிலர் மீதியாயிருக்கக் கட்டளையிட்டானென்றும், சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவை அவர்கள் மேல் அதிகாரியாக்கினானென்றும், கேட்டபோது, எல்லா யூதரும் தாங்கள் துரத்துண்ட எல்லா இடங்களிலுமிருந்து, யூதாதேசத்தில் கெதலியாவினிடத்தில் மிஸ்பாவுக்கு வருகிறார்கள்" (எரே 40:11,12).

கெதலியா யூதாதேசத்தின்மீது கர்த்தருக்கு பயந்து ஆட்சிசெய்கிறான். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கெதலியாவை யூதாவின் பட்டணங்களுக்கு அதிகாரியாக வைத்திருக்கிறான். கெதலியா கல்தேயருக்கு கட்டுப்பட்டவன். அவர்களுடைய சட்டங்களுக்கும், ஆளுகைக்கும் கெதலியாவும், யூதாதேசத்தாரும் கீழ்ப்படியவேண்டும்.

யூதாதேசத்தில் ஏற்கெனவே தங்கியிருக்கிற யூதர்களுக்கும், பல தேசங்களுக்கும் சிதறிப்போய், இப்போது யூதாதேசத்திற்கு திரும்பி வந்திருக்கிற யூதர்களுக்கும், கெதலியா நல்ல ஆலோசனைகளைச் சொல்லுகிறான். அவர்கள் கல்தேயரை சேவிக்கவேண்டும் என்றும், அப்பொழுது அவர்கள் எல்லோருக்கும் நன்மை உண்டாகும் என்றும் கெதலியா ஜனங்களுக்கு ஆலோசனை சொல்லுகிறான்.

அப்பொழுது சாப்பானுடைய குமாரனாகிய அகிக்காமின் மகன் கெதலியா அவர்களையும் அவர்கள் மனுஷரையும் நோக்கி: "நீங்கள் கல்தேயரைச் சேவிக்கப் பயப்படவேண்டாம், நீங்கள் தேசத்திலிருந்து பாபிலோன் ராஜாவைச் சேவியுங்கள்; அப்பொழுது உங்களுக்கு நன்மையுண்டாகும்" (எரே 40:9) என்று சொல்லுகிறான்.

தேவனுடைய பிரமாணத்தின்படி யூதர்கள் அந்நிய ஜாதியாரோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ளக்கூடாது. ஆனாலும் தேவனுடைய சித்தத்தின் பிரகாரம், யூதர்கள் இப்போது பாபிலோன் ராஜாவை சேவிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இது யூதர்களுக்கு அசுத்தமானதோ அல்லது தீட்டானதோ அல்லது அவமானமானதோ அல்ல. யூதர்கள் கல்தேயரை சேவிக்க பயப்படக்கூடாது. அதனால் தீயவிளைவுகள் வருமோ என்று தயங்கக்கூடாது.

யூதர்கள் கல்தேயரை சேவித்தால் அவர்களுக்கு நன்மை உண்டாகும். அவர்கள் சமாதானமாய் ஜீவிக்கலாம். யூதாதேசத்திலிருக்கிற யூதர்கள் கெதலியாவின் ஆட்சிக்கு விரோதமாகக் கலகம்பண்ணக்கூடாது. பாபிலோன் தேசத்திற்கு விரோதமாகவும் சதிபண்ணக்கூடாது. அப்போது கல்தேயரும் யூதர்களுக்கு தொந்தரவு கொடுக்கமாட்டார்கள். யூதர்கள் தங்கள் தேசத்தில் சமாதானமாய் ஜீவிக்கலாம்.

கெதலியா யூதாவின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கட்டளைப் பிரகாரம் செயல்படுகிறான். "நானோவெனில், இதோ, நம்மிடத்திலே வருகிற கல்தேயரிடத்தில் சேவிக்கும்படி மிஸ்பாவிலே குடியிருக்கிறேன்" (எரே 40:10) என்று கெதலியா சொல்லுகிறான். கல்தேயர்கள் யூதாதேசத்திற்கு வரும்போது கெதலியா அவர்களுக்கு கப்பம் செலுத்துகிறான். அவர்களுடைய உத்தரவுகளைப் பெற்றுக்கொண்டு, அதற்கு கீழ்ப்படிந்து யூதாதேசத்தை ஆட்சிசெய்கிறான்.

யூதாதேசத்திலிருக்கிற யூதர்களுக்கு கெதலியா ஆசீர்வாதமான வார்த்தைகளை சொல்லுகிறான். அவர்களை பாதுகாப்பதாக ஆணையிடுகிறான். "நீங்களோ போய், திராட்சரசத்தையும் பழங்களையும் எண்ணெயையும் சேர்த்து, உங்கள் பாண்டங்களில் வைத்து, உங்கள் வசமாயிருக்கிற ஊர்களில் குடியிருங்கள்" (எரே 40:10) என்று கெதலியா யூதர்களிடத்தில் ஆணையிட்டுச் சொல்லுகிறான்.

கெதலியா யூதாவின் மனுஷருக்கு ஆணையிட்டாலும், அவர்களும் தனக்கு ஆணையிடவேண்டும் என்று கெதலியா எதிர்பார்க்கவில்லை. யூதர்கள் தனக்கு உண்மையுள்ளவர்களாகயிருக்கவேண்டும் என்பதை அவர்கள் ஆணையிட்டு உறுதிபண்ணவேண்டும் என்று கெதலியா கட்டாயம் பண்ணவில்லை.

யூதாதேசம் முழுவதுமே இப்போது கல்தேயருக்கு சொந்தமானது. யூதர்கள் ஒரு சில நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு, அந்த நிலங்களில் குடியிருக்கலாம். அங்கே திராட்சத்தோட்டங்களை நாட்டலாம். திராட்சை ரசத்தையும், பழங்களையும் எண்ணெயையும் சேர்த்து வைக்கலாம். அதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்களை அனுபவிக்கலாம். அவர்களுடைய கைகளின் பிரயாசங்களை அனுபவிப்பதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் அவர்கள் கல்தேயரை சேவிக்கவேண்டும் என்பது பிரதான நிபந்தனை.

யூதர்கள் கெதலியாவின் ஆலோசனைக்கு கீழ்ப்படிகிறார்கள். எல்லா யூதரும் தாங்கள் துரத்துண்ட எல்லா இடங்களிலுமிருந்து, யூதாதேசத்தில் கெதலியாவினிடத்தில் மிஸ்பாவுக்கு வந்து, திராட்சரசத்தையும் பழங்களையும் மிகுதியாய்ச் சேர்த்து வைக்கிறார்கள் (எரே 40:12).

கல்தேயர்கள் எருசலேமைப் பிடிப்பதற்கு முன்பாக, நிலங்களில் அறுவடை செய்யப்படாமலிருந்தது. இப்போது யூதர்கள் நிலங்களில் அறுவடை பண்ணுகிறார்கள். திராட்சரசத்தையும் திராட்சப்பழங்களையும் மிகுதியாய்ச் சேர்க்கிறார்கள். ஜனங்கள் தங்கள் பழங்களை சேர்த்து வைப்பதையும் கெதலியா அனுமதிக்கிறார். கெதலியா ஜனங்களிடத்திலிருந்து அநியாயமாய் வரிவசூலிக்கவில்லை. கெதலியா நற்குணமுள்ளவன். அவன் தன்னுடைய சுயநலத்தை நாடவில்லை. யூதாதேசத்தார் சமாதானமாகவும், சந்தோஷமாகவும் இருக்கவேண்டும் என்றே கெதலியா விரும்புகிறான். யூதாமனுஷரின் பாதுகாப்புக்காக பிரயாசப்படுகிறான்.

யோகனானும் இஸ்மவேலும் எரே 40:13-16

எரே 40:13. அப்பொழுது கரேயாவின் குமாரனாகிய யோகனானும் வெளியிலே இருந்த சகல இராணுவச் சேர்வைக்காரரும் மிஸ்பாவுக்குக் கெதலியாவினிடத்தில் வந்து,

எரே 40:14. உம்மைக் கொன்றுபோடும்படிக்கு, அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய பாலிஸ் என்பவன், நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலை அனுப்பினானென்பதை நீர் அறியவில்லையோ என்றார்கள்; ஆனாலும் அகிக்காமின் குமாரனாகிய கெதலியா அவர்கள் வார்த்தையை நம்பவில்லை.

எரே 40:15. பின்னும் கரேயாவின் குமாரனாகிய யோகனான் மிஸ்பாவிலே கெதலியாவோடே இரகசியமாய்ப் பேசி: நான் போய் ஒருவரும் அறியாமல் நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலை வெட்டிப்போட உத்தரவாகவேண்டும்; உம்மிடத்தில் சேர்ந்த யூதரெல்லாரும் சிதறுண்டுபோகவும் யூதாவில் மீந்தவர்கள் அழியவும் அவன் உம்மைக் கொன்றுபோடவேண்டியதென்ன என்றான்.

எரே 40:16. ஆனாலும் அகிக்காமின் குமாரனாகிய கெதலியா கரேயாவின் குமாரனாகிய யோகனானை நோக்கி: நீ இந்தக் காரியத்தைச் செய்யாதே; இஸ்மவேலின்மேல் நீ பொய் சொல்லுகிறாய் என்றான்.

யூதாதேசம் மறுபடியும் உயிர்பெற்றது போல இப்போதுதான் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கெதலியாவை யூதா பட்டணங்களின்மேல் அதிகாரியாக வைத்திருக்கிறான். கெதலியாவின் ஆளுகையின்கீழ், யூதாதேசத்திலே இதுவரையிலும் சமாதானமும், ஆறுதலும், சந்தோஷமும் நிரம்பியிருந்தது. இப்போதோ இந்த புதிய தேசத்தில் புயல் போல பிரச்சனை வருகிறது.

அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய பாலிஸ் என்பவன் கெதலியாவை வெறுக்கிறான். கெதலியாவைக் கொன்றுபோடுவதற்கு சதிஆலோசனைபண்ணுகிறான். ஒருவேளை பாலிசுக்கு யூதர்கள்மீது வெறுப்பு இருக்கலாம். அல்லது இவனுக்கும் கெதலியாவுக்கும் இடையே தனிப்பட்ட முறையில் விரோதம் இருக்கலாம். "பாலிஸ்" என்னும் பெயர் அம்மோன் புத்திரரின் ராஜாவுடைய தாயாரைக் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் கருத்து சொல்லுகிறார்கள்.

யூதாதேசத்தில் யூதர்களின் எண்ணிக்கை குறைவாகயிருக்கிறது. அவர்கள் சொற்ப ஜனமாயிருக்கிறார்கள். பாபிலோன் ராஜா அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிறான். ஆகையினால் யூதாதேசத்திலுள்ள யூதர்கள் பாதுகாப்பாகயிருப்பார்கள் என்று எல்லோரும் பொதுவாக நினைக்கிறார்கள்.

ஆனாலும் யூதாதேசத்திற்கு சத்துருக்கள் மூலமாய் ஆபத்து வருகிறது. யூதாதேசத்தின் பிரபுக்களுக்குள்ளே போட்டிகளும் பொறாமைகளும் உண்டாயிற்று. எல்லோரும் ராஜாவாகவேண்டுமென்று விரும்புகிறார்கள். பாபிலோன் ராஜா கெதலியாவை யூதாவின் பட்டணங்களுக்கு அதிகாரியாக ஆக்கினதை யூதாவின் பிரபுக்களில் பலர் விரும்பவில்லை. அவர்கள் கெதலியாவுக்கு விரோதமாய் சதிஆலோசனைபண்ணுகிறார்கள்.

பாபிலோன் ராஜா யூதாவின் ராஜாவை பாதுகாத்தாலும், கெதலியாவுக்கு ஆபத்து சூழ்ந்திருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கோ ராஜாதி ராஜாவின் பாதுகாப்பு உண்டு. கர்த்தர் நம் பக்கத்திலிருக்கிறார். நமக்கு விரோதமாக யாராலும் தீங்கு செய்யமுடியாது. இந்த உலகத்தின் மிகப்பெரிய ராஜாவாக யிருந்தாலும், அவனால் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாய் ஒன்றும் செய்யமுடியாது. உலகத்து ராஜாக்கள் தங்களுடைய எல்லாவல்லமைகளையும் திரட்டி, கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக வந்தாலும், சத்துருக்கள் பெலனற்றுப் போவார்கள். கர்த்தர் நம்மோடு கூடயிருக்கிறார். அவர் நமக்காக யுத்தம்பண்ணுவார்.

அம்மோன் புத்திரரின் ராஜவாகிய பாலிஸ் என்பவன், கெதலியாவைக் கொன்று போடும்படிக்கு நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் என்பவனை அனுப்புகிறான். பாலிஸ் தன்னுடைய சதிஆலோசனைக்கு இஸ்மவேலை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறான். கெதலியாவைக் கொன்றுபோட்டால், யூதாதேசத்திற்கு இஸ்மவேலை ராஜாவாக ஆக்குவதாக, பாலிஸ் ஒருவேளை அவனுக்கு வாக்குப்பண்ணியிருக்கலாம்.

இஸ்மவேலும் கெதலியாவை வெறுக்கிறான். கெதலியா யூதாதேசத்தை ஆட்சிசெய்வதை இஸ்மவேல் விரும்பவில்லை. இஸ்மவேல் யூதாதேசத்திற்கு வந்து, கெதலியாவுக்கு கீழ்ப்படிகிறவன்போல நடிக்கிறான். யூதாதேசத்திற்கு உண்மையுள்ள பிரஜைபோல இஸ்மவேல் தன்னைக் காண்பித்துக்கொள்கிறான்.

இஸ்மவேல் ராஜாவம்சத்தைச் சேர்ந்தவன். பாபிலோன் ராஜா கெதலியாவை யூதாவின் பட்டணங்களுக்கு அதிகாரியாக வைக்கிறான். கெதலியாவோ தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவனல்ல. இஸ்மவேல் தாவீதின் வம்சத்தைச் சேர்ந்தவன். இதனால் இஸ்மவேலுக்கு கெதலியாவின்மீது பொறாமையும் கோபமும் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. இஸ்மவேல் கெதலியாவைக் கொன்றுபோட சதிஆலோசனை பண்ணுகிறான்.

கெதலியாவோடுகூட யோகனான் என்பவன் இராணுவ சேர்வைக்காரனாயிருக்கிறான். இவன் கெதலியாவின்மீது அன்பும், யூததேசத்தின்மீது பற்றுதலுமுள்ளவன். இவனுக்கு இஸ்மவேலின் சதிஆலோசனை தெரியவருகிறது. யோகனான் கெதலியாவிடம் இஸ்மவேலின் சதிஆலோசனையைப்பற்றிச் சொல்லுகிறான். அவனோடுகூட சகல இராணுவச்சேர்வைக்காரரும் மிஸ்பாவுக்கு வந்து, இஸ்மவேலின் சதிஆலோசனையைக் குறித்து கெதலியாவுக்குச் சொல்லுகிறார்கள். ஆனால் கெதலியா அவர்கள் வார்த்தையை நம்பவில்லை.

யோகனான் கெதலியாவிடம் இரகசியமாய்ப் பேசுகிறான். "நான் போய் ஒருவரும் அறியாமல் நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலை வெட்டிப்போட உத்தரவாகவேண்டும்; உம்மிடத்தில் சேர்ந்த யூதரெல்லாரும் சிதறுண்டுபோகவும் யூதாவில் மீந்தவர்கள் அழியவும் அவன் உம்மைக் கொன்றுபோடவேண்டியதென்ன" (எரே 40:15) என்று யோகனான் கெதலியாவிடம் சொல்லுகிறான்.

ஆனால் கெதலியாவோ யோகனானிடம், "நீ இந்தக் காரியத்தைச் செய்யாதே; இஸ்மவேலின்மேல் நீ பொய் சொல்லுகிறாய்" என்று சொல்லிவிடுகிறான் (எரே 40:16). கெதலியா இஸ்மவேலை அதிகமாய் நம்புகிறான். நம்பக்கூடாதவர்களை அதிகமாய் நம்பி அழிந்துபோனவர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். அவர்களில் கெதலியாவும் ஒருவன். இஸ்மவேலைப்பற்றி கெதலியாவுக்கு எச்சரிப்பு கொடுத்தும், அவன் எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. தனக்கு நன்மை உண்டாக ஆலோசனை சொல்லுகிற யோகனானின் வார்த்தைகளுக்கும் செவிகொடுக்கவில்லை. கெதலியாவுக்கு உண்மை பொய்யாகவும், பொய் உண்மையாகவும் தெரிகிறது.

41 அதிகாரம்

பாவிகளை தீமை பின்தொடரும். கல்தேயர்கள் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகிறார்கள். யூதர்களில் சிலர் கல்தேயருக்கு தப்பி, யூதாதேசத்திலேயே தங்கிவிடுகிறார்கள். தங்கள் சொந்த தேசத்திலிருப்பதினால் இவர்களுடைய இருதயத்தில் பெருமை உண்டாயிற்று. கெதலியாவின் ஆளுகையின்கீழ் தாங்கள் பாதுகாப்பாயிருப்பதாக நினைத்து இவர்கள் பெருமையோடிருக்கிறார்கள்.

இஸ்மவேல் கெதலியாவை பட்டயத்தால் வெட்டிக் கொன்றுபோடுகிறான் (எரே 41:1,2). கெதலியாவோடு கூடயிருக்கிற எல்லா யூதரையும் இஸ்மவேல் வெட்டிப்போடுகிறான் (எரே 41:3). வெட்டுண்ட பிரேதங்களை பள்ளத்திலே எறிந்துபோடுகிறான் (எரே 41:9).

பக்தியுள்ள யூதர்களில் எண்பதுபேர் எருசலேமிலுள்ள தேவாலயத்திற்கு வருகிறார்கள். இஸ்மவேல் அவர்களை வழியில் சந்தித்து, அவர்களில் எழுபது பேரை கொன்றுபோடுகிறான் (எரே 41:4-7). எண்பது யூதர்களில் பத்துப்பேர் மாத்திரமே உயிரோடு தப்புகிறார்கள் (எரே 41:8).

தன்னுடைய பட்டயத்திற்கு தப்பினவர்களை இஸ்மவேல் சிறைப்பிடித்து, அம்மோன் புத்திரரிடத்தில் கொண்டுபோகிறான் (எரே 41:10). இஸ்மவேலிடம் சிறைப்பட்டிருக்கிற யூதர்களை யோகனான் விடுதலை பண்ணுகிறான். இராணுவச் சேர்வைக்காரர் யோகனானுடைய தலைமைக்கு கீழ்ப்படிகிறார்கள் (எரே 41:11-16). யோகனான் மீதமுள்ள யூதர்களை கூட்டிக்கொண்டு எகிப்து தேசத்திற்குப்போக ஆயத்தமாயிருக்கிறான் (எரே 41:17,18).

கெதலியாவைப் பட்டயத்தால் வெட்டினார்கள் எரே 41:1-3

எரே 41:1. பின்பு ஏழாம் மாதத்திலே ராஜவம்சத்தில் பிறந்தவனும், எலிசாமாவின் குமாரனாகிய நெத்தானியாவின் மகனுமான இஸ்மவேலும், அவனுடனே கூட ராஜாவின் பிரபுக்களான பத்துப்பேரும் மிஸ்பாவுக்கு அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவினிடத்தில் வந்து, அங்கே ஏகமாய் போஜனம் பண்ணினார்கள்.

எரே 41:2. அப்பொழுது நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலும், அவனோடிருந்த பத்துப்பேரும் எழும்பி, பாபிலோன் ராஜா தேசத்தின்மேல் அதிகாரியாக வைத்த சாப்பானின் குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவைப் பட்டயத்தால் வெட்டினார்கள்.

எரே 41:3. மிஸ்பாவிலே கெதலியாவினிடத்தில் இருந்த எல்லா யூதரையும், அங்கே காணப்பட்ட யுத்தமனுஷராகிய கல்தேயரையும் இஸ்மவேல் வெட்டிப் போட்டான்.

யூதர்கள் மத்தியில் பிரிவினை உண்டாயிற்று. அவர்கள் எல்லோருமே யூதமார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். யாக்கோபின் சந்ததியிலே வந்தவர்கள். ஆனாலும் அவர்களுக்குள்ளே போட்டிகளும் பொறாமைகளும் உண்டாயிற்று. ஒருவருக்கொருவர் சதிஆலோசனை செய்து இரத்தம் சிந்துகிறார்கள்.

இஸ்மவேல் என்பவன் யூதாராஜாவின் வம்சத்தில் பிறந்தவன். இவன் எலிசாமாவின் குமாரனாகிய நெத்தானியாவின் மகன். இஸ்மவேல் கெதலியாவைக் கொன்றுபோட வேண்டுமென்று சதிஆலோசனை பண்ணுகிறான். பாபிலோன் ராஜா கெதலியாவை உயர்த்தியிருக்கிறான். அவனை யூதாதேசத்திற்கு கெதலியாவை அதிகாரியாய் நியமித்திருக்கிறான்.

கர்த்தரும் கெதலியாவின் நல்ல சுபாவங்களை அங்கீகரித்திருக்கிறார். கெதலியாவின் ஆளுகையின்கீழ் யூதாதேசம் செழிப்பாயிருக்கிறது. யூதஜனங்கள் பாதுகாப்பாயும், ஆறுதலாயும் இருக்கிறார்கள். கெதலியா யூதஜனத்தின் நன்மைகளை விசாரிக்கிறான். யூதாதேசம் செத்துப்போனதுபோல இருந்தது. இப்போது கெதலியாவின் ஆட்சியின்கீழ் யூததேசத்திற்கு மறுபடியும் உயிர் உண்டாயிற்று.

கெதலியா யூதாவின் பட்டணங்களுக்கு அதிகாரியாய் நியமிக்கப்பட்டதை தாவீதின் ராஜவம்சத்தில் பிறந்தவர்கள் சிலர் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் கெதலியாவின்மீது பொறாமை கொள்கிறார்கள். கெதலியாவை கொன்றுபோடவேண்டுமென்று விரும்புகிறார்கள். கெதலியாவுக்கு விரோதமாக எழும்பியிருக்கிற சத்துருக்களில் இஸ்மவேல் என்பவனும் ஒருவன். இவன் ராஜாவம்சத்தில் பிறந்தவன்.

இஸ்மவேலோடு பத்துபேர் எழும்பியிருக்கிறார்கள். இவர்கள் ராஜாவின் பிரபுக்கள். இவர்கள் எல்லோருமே இஸ்மவேலின் சதிஆலோசனைக்கு துணைபோகிறார்கள். இவர்கள் எல்லோரும் கெதலியாவுக்கு கீழ்ப்படிவதுபோல நடிக்கிறார்கள். இவர்கள் கெதலியாவினிடத்தில் வந்து ஏகமாய் போஜனம்பண்ணுகிறார்கள் (எரே 41:1).

“அவர்கள் மிஸ்பாவுக்குக் கெதலியாவினிடத்தில் வந்தார்கள்; யாரெனில், நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலும், கரேயாவின் குமாரராகிய யோகனானும், யோனத்தானும், தன் கூமேத்தின் குமாரனாகிய செராயாவும், நெத்தோபாத்தியனாகிய ஏப்பாயின் குமாரரும், மாகாத்தியனான ஒருவனுடைய குமாரனாகிய யெசனியாவும் ஆகிய இவர்களும் இவர்களைச் சேர்ந்தவர்களுமே” (எரே 40:8).

இஸ்மவேலும், அவனோடு கூடயிருக்கிற பத்து பிரபுக்களும் கெதலியாவின் ஆளுகையை அங்கீகரித்து, அவனிடத்திற்கு வருகிறார்கள். கெதலியா மிஸ்பாவிலிருக்கிறான். அவர்களும் மிஸ்பாவுக்கு வந்து, கெதலியாவோடு ஏகமாய் போஜனம்பண்ணுகிறார்கள். தங்களை கெதலியாவுக்கு சிநேகிதர்போல காண்பித்துக்கொள்கிறார்கள்.

கெதலியா இஸ்மவேலையும், அவனோடு கூடயிருக்கிற பத்து பிரபுக்களையும் அன்பாய் உபசரிக்கிறான். இராணுவசேர்வைக்காரனாகிய யோகனான் என்பவன், இஸ்மவேலையும், அவனோடு கூடயிருக்கிற மனுஷரையும், கெதலியாவுக்கு விரோதமாக அவர்கள் செய்கிற சதிஆலோசனையையும் ராஜாவுக்கு சொல்லுகிறான். ஆனால் கெதலியாவோ யோகனானின் வார்த்தைகளை நம்பவில்லை.

கெதலியாவோடு அப்பம் புசித்தவன், அவனுக்கு விரோதமாக தன்னுடைய குதிங்காலைத் தூக்குகிறான். இஸ்மவேலும் அவனோடு கூடயிருக்கிற பிரபுக்களும் கெதலியாவைக் கொன்றுபோடுவதற்கு சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கெதலியாவோடு ஏகமாய் போஜனம்பண்ணும்போது, இஸ்மவேலும், அவனோடிருந்த பத்துபேரும் எழும்பி, பாபிலோன் ராஜா யூதாதேசத்தின்மேல் அதிகாரியாக வைத்த, சாப்பானின் குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவை, பட்டயத்தால் வெட்டுகிறார்கள் (எரே 41:2).

கெதலியாவின் அரமனையில் யூதரும் கல்தேயரும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கெதலியாவினிடத்தில் பணிசெய்கிறவர்கள். யூதாதேசத்திலே யூதர்கள் திராட்சத்தோட்டங்களில் வேலை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். திராட்சை ஆலைகளில் திராட்சரசம் பிழிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே தங்களுடைய வயல்வெளியில் மும்முரமாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கெதலியாவின் அரமனையில் என்ன நடைபெறுகிறது என்பதே தெரியவில்லை.

இஸ்மவேலும் அவனோடு கூடயிருக்கிற பிரபுக்களும், சதிஆலோசனைபண்ணி, மிகவும் இரகசியமாக, கெதலியாவையும், அவனிடத்திலிருந்த எல்லா யூதரையும், அங்கே காணப்பட்ட யுத்தமனுஷராகிய கல்தேயரையும் வெட்டிப்போடுகிறார்கள் (எரே 41:3).

நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் எரே 41:4-10

எரே 41:4. அவன் கெதலியாவைக் கொன்ற பின்பு, மறுநாளிலே அதை ஒருவரும் இன்னும் அறியாதிருக்கையில்:

எரே 41:5. தாடியைச் சிரைத்து, வஸ்திரங்களைக் கிழித்து, தங்களைக் கீறிக்கொண்டிருந்த எண்பதுபேர் சீகேமிலும் சீலோவிலும் சமாரியாவிலுமிருந்து, தங்கள் கைகளில் காணிக்கைகளையும் தூபவர்க்கங்களையும், கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுபோகும்படி வந்தார்கள்.

எரே 41:6. அப்பொழுது நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் மிஸ்பாவிலிருந்து புறப்பட்டு, அவர்களுக்கு எதிராக அழுதுகொண்டே நடந்துவந்து, அவர்களைச் சந்தித்தபோது, அவர்களை நோக்கி: அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவினிடத்தில் வாருங்கள் என்றான்.

எரே 41:7. அவர்கள் நகரத்தின் மத்தியில் வந்தபோது, நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலும், அவனோடிருந்த மனுஷரும் அவர்களை வெட்டி ஒரு பள்ளத்திலே தள்ளிப்போட்டார்கள்.

எரே 41:8. ஆனாலும் அவர்களில் பத்துப்பேர் மீந்திருந்தார்கள்; அவர்கள் இஸ்மவேலைப்பார்த்து: எங்களைக் கொலை செய்ய வேண்டாம்; கோதுமையும் வாற் கோதுமையும் எண்ணெயும் தேனுமுள்ள புதையல்கள் எங்களுக்கு நிலத்தின் கீழ் இருக்கிறது என்றார்கள்; அப்பொழுது அவர்களை அவர்கள் சகோதரரோடுங்கூடக் கொலைசெய்யாமல் விட்டுவைத்தான்.

எரே 41:9. இஸ்மவேல் கெதலியாவினிமித்தம் வெட்டின மனுஷருடைய பிரேதங்களையெல்லாம் எறிந்துபோட்ட பள்ளமோவெனில், ஆசா என்னும் ராஜா இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவினிமித்தம் உண்டுபண்ணின பள்ளந்தானே; அதை நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் வெட்டுண்ட பிரேதங்களால் நிரப்பினான்.

எரே 41:10. பின்பு இஸ்மவேல் மிஸ்பாவில் இருக்கிற மீதியான ஜனத்தையெல்லாம் சிறைப்படுத்திக்கொண்டு போனான்; ராஜாவின் குமாரத்திகளையும் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவின் விசாரிப்புக்கு ஒப்புவித்துப்போன மிஸ்பாவிலுள்ள மீதியானசகல ஜனங்களையும் நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் சிறைப்படுத்திக் கொண்டு அம்மோன் புத்திரர் பட்சத்தில் போகப் புறப்பட்டான்.

எருசலேமின் அழிவுக்கு புலம்புவதற்காக பக்தியுள்ள யூதர்களில் எண்பதுபேர் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்திற்கு வருகிறார்கள். இவர்கள் சீகேமிலும், சீலோவிலும், சமாரியாவிலும் இருந்து தங்கள் கைகளில் காணிக்கைகளையும், தூபவர்க்கங்களையும், கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டுபோகும்படி வருகிறார்கள் (எரே 41:5) அவர்கள் தங்கள் தாடியை சிரைத்து, வஸ்திரங்களை கிழித்து, தங்களை கீறிக்கொண்டவர்களாயிருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் சீகேமும், சமாரியாவும், சீலோவும் இஸ்ரவேல் தேசத்தில் பிரசித்திப் பெற்ற பட்டணங்களாயிருந்தது. ஆனால் இப்போது அவையெல்லாம் இடிந்து அழிந்துபோயிற்று.

இவர்கள் எருசலேமிலுள்ள தேவாலயத்திற்குப் போகிறார்கள். யூதர்கள் தேவாலயத்திற்கு வெறுங்கையோடு போவதில்லை. இவர்கள் தங்கள் கைகளில் காணிக்கைகளையும், தூபவர்க்கங்களையும் கர்த்தருடைய ஆலயத்திற்கு கொண்டு போகிறார்கள். எருசலேமிலுள்ள தேவாலயத்தில் பலிபீடம் இல்லை. கல்தேயர்கள் வெண்கல பலிபீடத்தை பாபிலோன் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். ஆனாலும் இவர்கள் தேவாலயத்தில் பலிசெலுத்தும்படியாக காணிக்கைகளையும், தூபவர்க்கங்களையும் கொண்டுபோகிறார்கள்.

இவர்கள் தங்கள் தாடியை சிரைத்து, வஸ்திரங்களைக் கிழித்து, தங்களை கீறிக்கொண்டவர்களாயிருக்கி றார்கள். எருசலேமுக்கு போகும் வழியில் இஸ்மவேல் இவர்களை சந்திக்கிறான். இஸ்மவேலுக்கு இவர்கள்மீது வெறுப்பு உண்டாயிற்று. எருசலேமுக்கு போகிற இவர்கள் கெதலியாவுக்கு ஆதரவா யிருக்கிறார்கள். ஆகையினால் அவர்களை கொன்றுபோடவேண்டுமென்று இஸ்மவேல் சதிஆலோசனைபண்ணுகிறான்.

அப்பொழுது நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் மிஸ்பாவிலிருந்து புறப்பட்டு, அவர்களுக்கு எதிராக அழுது கொண்டே நடந்து வருகிறான். இஸ்மவேல் அவர்களைச் சந்தித்தபோது, அவர்களை நோக்கி: "அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவினிடத்தில் வாருங்கள்" என்று சொல்லுகிறான் (எரே 41:6).

எருசலேமின் அழிவுக்காக சமாரியாவிலிருந்து வந்தவர்கள் துக்கங்கொண்டாடுகிறார்கள். அவர்களைப் போலவே தானும் எருசலேமின் அழிவுக்காக துக்கங்கொண்டாடுவதுபோல இஸ்மவேல் தன்னைக் காண்பித்துக்கொள்கிறான். அவர்களுக்கு எதிராக அழுதுகொண்டே நடந்து வருகிறான்.

அவர்கள் கெதலியாவை ஆதரிக்கிறார்களா, கெதலியாவின் ஆட்சியை அங்கீகரிக்கி றார்களா என்பதை தெரிந்துகொள்ள இஸ்மவேல் சதிபண்ணுகிறான். அவர்களுக்கு கெதலியாவின்மேல் மதிப்பும் மரியாதையும் இருப்பதை இஸ்மவேல் புரிந்துகொள்கிறான். அவர்களை வழியிலே கொன்றுபோட வேண்டுமென்று சதிபண்ணுகிறான்.

இஸ்மவேல் அவர்களைப் பார்த்து, "கெதலியாவினிடத்தில் வாருங்கள்" என்று சொல்லுகிறான். அவர்கள் மிஸ்பாவுக்கு வந்து, கெதலியாவோடு வாழ அவர்களை அழைப்பதுபோல இஸ்மவேல் அவர்களிடத்தில் பேசுகிறான். இஸ்மவேல் கெதலியாவை ஏற்கெனவே கொன்றுபோட்டான். இப்போது கெதலியாவோடு சேர்ந்து இவர்களையும் கொன்றுபோட சதிஆலோசனை பண்ணுகிறான்.

அவர்கள் நகரத்தின் மத்தியில் வந்தபோது, நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலும், அவனோடிருந்த மனுஷரும் அவர்களை வெட்டி ஒரு பள்ளத்திலே தள்ளிப்போடுகிறார்கள். ஆனாலும் அவர்களில் பத்துப்பேர் மீந்திருக்கிறார்கள் (எரே 41:7,8).

இஸ்மவேல் கெதலியாவின் நிமித்தம் வெட்டின மனுஷருடைய பிரேதங்களையெல்லாம், பள்ளத்திலே எறிந்துபோட்டான். அந்தப் பள்ளம் ஆசா என்னும் ராஜா இஸ்ரவேலின் ராஜாவாகிய பாஷாவினிமித்தம் உண்டுபண்ணின பள்ளமாகும் (எரே 41:9).

எருசலேமுக்கு வந்த எண்பதுபேரில் பத்துப்பேர் உயிரோடு மீந்திருக்கிறார்கள். அவர்கள் இஸ்மவேலைப்பார்த்து: "எங்களைக் கொலை செய்ய வேண்டாம்; கோதுமையும் வாற் கோதுமையும் எண்ணெயும் தேனுமுள்ள புதையல்கள் எங்களுக்கு நிலத்தின் கீழ் இருக்கிறது" (எரே 41:8) என்று சொல்லுகிறார்கள்; அப்பொழுது இஸ்மவேல் அவர்களை அவர்கள் சகோதரரோடுங்கூடக் கொலைசெய்யாமல் விட்டுவைக்கிறான்.

இஸ்மவேல் அவர்கள்மீது பரிதாபப்பட்டு அவர்களைக் கொல்லாமல் உயிரோடு விடவில்லை. இஸ்மவேலுக்கு அவர்கள்மீது இரக்கமில்லை. ஆனாலும் அவர்கள் இஸ்மவேலோடு பேரம் பேசுகிறார்கள். கோதுமையும், வாற்கோதுமையும், எண்ணெயும், தேனும் அவனுக்கு கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். இஸ்மவேல் பணத்திற்கு ஆசைப்பட்டு, அந்தப் பத்துபேரையும் கொலைசெய்யாமல் விட்டு வைக்கிறான்.

பின்பு இஸ்மவேல் மிஸ்பாவில் இருக்கிற மீதியான ஜனத்தையெல்லாம் சிறைப்படுத்திக்கொண்டு போகிறான்; ராஜாவின் குமாரத்திகளையும், காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவின் விசாரிப்புக்கு ஒப்புவித்துப்போன மிஸ்பாவிலுள்ள மீதியானசகல ஜனங்களையும், நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் சிறைப்படுத்திக் கொண்டு அம்மோன் புத்திரர் பட்சத்தில் போகப் புறப்படுகிறான் (எரே 41:10).

கெதலியாவின் கீழ் இருந்தவர்கள் எல்லோரையும் இப்போது இஸ்மவேல் சிறைப்படுத்தியிருக்கிறான். அவர்களை அம்மோன் புத்திரரின் தேசத்திற்கு கொண்டுபோகிறான். சிறைப்பட்டிருக்கிற யூதர்கள் ஏற்கெனவே அநேக வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்திருக்கிறார்கள். இப்போது அவர்களுக்கு இஸ்மவேல் மூலமாய் புதிய உபத்திரவம் வந்திருக்கிறது.

கெதலியாவினிடத்திலிருந்த யூதர்களில் அநேகரை இஸ்மவேல் பட்டயத்தால் வெட்டிப்போட்டான். மீதமானவர்களை அம்மோன் புத்திரரின் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகிறான்.

நாம் இந்தப் பிரபஞ்சத்திலிருக்கும் வரையிலும் நமக்கு உபத்திரவங்கள் இருக்கும். பாடுகளும் வேதனைகளும் இருக்கும். பரலோகமே நமக்கு நித்திய மகிழ்ச்சியான ஸ்தலம். பரலோகத்தில் நமக்கு பாடுகளோ, கண்ணீரோ இருக்காது. அங்கே நமக்கு பரிபூரண சந்தோஷமும், சமாதானமும் உண்டாயிருக்கும்.

யோகனான்
எரே 41:11-18

எரே 41:11. நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் செய்த பொல்லாப்பையெல்லாம் கரேயாவின் குமாரனாகிய யோகனானும், அவனோடிருந்த எல்லா இராணுவச் சேர்வைக்காரரும் கேட்டபோது,

எரே 41:12. அவர்கள் புருஷரையெல்லாம் கூட்டிக்கொண்டு, நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலோடே யுத்தம்பண்ணப்போய், அவனைக் கிபியோனிலிருக்கும் பெருங்குளத்துத் தண்ணீரண்டையிலே கண்டார்கள்.

எரே 41:13. அப்பொழுது இஸ்மவேலோடிருந்த சகல ஜனங்களும் கரேயாவின் குமாரனாகிய யோகனானையும், அவனோடிருந்த எல்லா இராணுவச் சேர்வைக்காரரையும் கண்டு சந்தோஷப்பட்டு,

எரே 41:14. இஸ்மவேல் மிஸ்பாவிலிருந்து சிறைப்பிடித்துக்கொண்டுபோன ஜனங்களெல்லாம் பின்னிட்டுத் திரும்பி, கரேயாவின் குமாரனாகிய யோகனானிடத்தில் வந்துவிட்டார்கள்

எரே 41:15. நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலோ, எட்டுப்பேரோடுங்கூட யோகனானின் கைக்குத் தப்பி, அம்மோன் புத்திரரிடத்தில் போனான்.

எரே 41:16. கரேயாவின் குமாரனாகிய யோகனானும், அவனோடிருந்த எல்லா இராணுவச்சேர்வைக்காரரும், அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவை வெட்டிப் போட்ட நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் கொண்டுபோனதும், தாங்கள் கிபியோனிலே விடுதலையாக்கித் திரும்பப்பண்ணினதுமான மீதியான சகல ஜனமுமாகிய சேவகரான மனுஷரையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும், அரமனைப் பிரதானிகளையும் சேர்த்துக்கொண்டு,

எரே 41:17. பாபிலோன் ராஜா தேசத்தின் மேல் அதிகாரியாக்கின அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவை நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் வெட்டிப் போட்டதினிமித்தம், கல்தேயருக்குப் பயந்தபடியினால்,

எரே 41:18. தாங்கள் எகிப்துக்குப் போகப் புறப்பட்டு, பெத்லகேமுருக்கு அருகான கிம்காமின்பேட்டையில் தங்கியிருந்தார்கள்.

யோகனான் இஸ்மவேலின் சதிஆலோசனையை கெதலியாவுக்கு சொன்னான். ஆனால் கெதலியாவோ யோகனானை நம்பவில்லை. இஸ்மவேலை நம்பினான். கெதலியா யோகனானின் ஆலோசனையைக் கேட்டு, இஸ்மவேலுக்கு எச்சரிக்கையாயிருந்திருந்தால், அது அவனுக்கும், யூதாதேசத்திற்கும் நன்மையாயிருந்திருக்கும். ஆனால் கெதலியாவோ இஸ்மவேலை நம்பினான். இஸ்மவேல் கெதலியாவைக் கொன்றுபோட்டான்.

யோகனானும் அவனோடிருந்த இராணுவச்சேர்வைக்காரரும் கெதலியாவுக்கு மெய்க்காப்பாளர்களைப்போல இருக்கிறார்கள். இவர்கள் எப்போதும் கெதலியாவை சூழ்ந்திருக்கவேண்டும். ஆனால் இஸ்மவேலும் அவனுடைய பத்து பிரபுக்களும் கெதலியாவோடு ஏகமாய் போஜனம்பண்ணியபோது, யோகனானும், அவனுடைய இராணுவச்சேர்வைக்காரரும், கெதலியாவோடு அரமனையில் இல்லை. அவர்கள் ஏதோ ஒரு ராஜாங்க வேலையாக வெளியிலே போயிருந்திருக்கவேண்டும்.

யோகனானைப்போலவே இக்காலத்திலும் நமக்கு ஒரு சிலருடைய உதவிகள் தேவைப்படும். உதவி செய்கிறவர்கள் எப்போதும் நம்மோடு கூடவே இருந்தால் நன்றாயிருக்கும். ஆனால் நமக்கு உதவி தேவைப்படும்போது, அவர்களில் ஒருவரும் நமக்கு அருகாமையில் இருக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை கெதலியாவுக்கு உண்டாயிற்று. கெதலியாவை இஸ்மவேலின் பட்டயத்திற்கு தப்பிக்க, கெதலியாவோடுகூட ஒருவருமில்லை.

யோகனானும் அவனோடிருந்த எல்லா இராணுவச்சேர்வைக்காரரும் வெளியே ஏதோ ஒரு இடத்திலிருக்கிறார்கள். அவர்கள் இஸ்மவேல் செய்த எல்லா பொல்லாப்புக்களையும் கேள்விப்படுகிறார்கள். உடனே அவர்கள் புருஷரையெல்லாம் கூட்டிக்கொண்டு, நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலோடே யுத்தம் பண்ணப்போய், அவனைக் கிபியோனிலிருக்கும் பெருங்குளத்துத் தண்ணீரண்டையிலே காண்கிறார்கள் (எரே 41:12).

கிபியோனிலிருக்கும் பெருங்குளத்தைப்பற்றி 2சாமுவேல் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"அப்பொழுது செருயாவின் குமாரனாகிய யோவாபும் தாவீதின் சேவகரும் புறப்பட்டுப்போய், கிபியோனின் குளத்தண்டையில் ஒருவருக்கொருவர் எதிர்ப்பட்டு, குளத்திற்கு அந்தப்பக்கத்தில் அவர்களும், குளத்திற்கு இந்தப்பக்கத்தில் இவர்களும் இறங்கினார்கள்" (2சாமு 2:13).

இஸ்மவேல் மிஸ்பாவிலுள்ள மீதியான சகல ஜனங்களையும் சிறைப்படுத்தி அம்மோன் புத்திரர் தேசத்திற்கு கொண்டுபோகிறான். இஸ்மவேலிடம் சிறைப்பட்டிருக்கிறவர்களை விடுவிப்பதற்காக யோகனானும், அவனுடைய இராணுவச்சேர்வைக்காரரும் இஸ்மவேலுக்கு விரோதமாய் வருகிறார்கள்.

யோகனானையும் அவனோடு கூட வருகிற இராணுவச்சேர்வைக்காரரையும் பார்த்தபோது இஸ்மவேலின் இருதயம் நடுங்குகிறது. இஸ்மவேலால் யோகனானை எதிர்த்து யுத்தம்பண்ண முடியவில்லை.

அப்பொழுது இஸ்மவேலோடிருந்த சகல ஜனங்களும் கரேயாவின் குமாரனாகிய யோகனானையும், அவனோடிருந்த எல்லா இராணுவச் சேர்வைக்காரரையும் கண்டு சந்தோஷப்பட்டு, இஸ்மவேல் மிஸ்பாவிலிருந்து சிறைப்பிடித்துக்கொண்டு போன ஜனங்களெல்லாம் பின்னிட்டுத் திரும்பி, கரேயாவின் குமாரனாகிய யோகனானிடத்தில் வந்துவிடுகிறார்கள் (எரே 41:13,14).

தான் சிறைப்படுத்திக்கொண்டுபோகிற மிஸ்பாவின் ஜனங்களையும், இஸ்மவேலால் தன்னோடு பிடித்து வைக்க முடியவில்லை. அவர்கள் எல்லோருமே யோகனானின் பக்கமாகப் போய்விடுகிறார்கள். இஸ்மவேலோடுகூட இப்போது எட்டுப்பேர் மாத்திரமே இருக்கிறார்கள். இஸ்மவேல் கெதலியாவோடுகூட ஏகமாய் போஜனம்பண்ணியபோது, பத்து பிரபுக்கள் அவனோடு கூடயிருந்தார்கள். இப்போது இஸ்மவேலோடு எட்டுப்பேர் மாத்திரமே இருக்கிறார்கள். ஒருவேளை இரண்டு பிரபுக்கள் இஸ்மவேலைவிட்டுப் பிரிந்துபோயிருக்கலாம்.

தான் சிறைப்படுத்திக்கொண்டுபோகிற மிஸ்பாவின் ஜனங்களையும், இஸ்மவேலால் தன்னோடு பிடித்து வைக்க முடியவில்லை. அவர்கள் எல்லோருமே யோகனானின் பக்கமாகப் போய்விடுகிறார்கள். இஸ்மவேலோடுகூட இப்போது எட்டுப்பேர் மாத்திரமே இருக்கிறார்கள். இஸ்மவேல் கெதலியாவோடுகூட ஏகமாய் போஜனம்பண்ணியபோது, பத்து பிரபுக்கள் அவனோடு கூடயிருந்தார்கள். இப்போது இஸ்மவேலோடு எட்டுப்பேர் மாத்திரமே இருக்கிறார்கள். ஒருவேளை இரண்டு பிரபுக்கள் இஸ்மவேலைவிட்டுப் பிரிந்துபோயிருக்கலாம்.

நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலோ, எட்டுப்பேரோடுங்கூட யோகனானின் கைக்குத் தப்பி, அம்மோன் புத்திரரிடத்தில் போகிறான் (எரே 41:15). அதன்பின்பு இஸ்மவேலைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் வேறு ஒன்றும் எழுதப்படவில்லை.

பாபிலோன் ராஜா கெதலியாவை யூதாவின் பட்டணங்களின்மேல் அதிகாரியாக வைத்திருந்தான். இஸ்மவேலோ கெதலியாவை வெட்டிக் கொன்றுபோட்டான். இந்த செய்தியை பாபிலோன் ராஜாவும் கேள்விப்படுவான். அவன் யூதாவின் மனுஷர்மீது கோபப்பட்டு, எருசலேமுக்கு விரோதமாய் மறுபடியும் யுத்தம்பண்ண வருவான் என்று யோகனான் பயப்படுகிறான். நேபுகாத்நேச்சாருக்கு தப்பிக்கவேண்டுமென்றால், யூதா தேசத்தை விட்டு எகிப்து தேசத்திற்கு தப்பி ஓடிப்போய்விட வேண்டுமென்று யோகனான் தீர்மானம் பண்ணுகிறான்.

இஸ்மவேல் சிறைப்பிடித்து கொண்டுபோன யூதர்களையும், யூதாதேசத்திலிருக்கிற சகல ஜனங்களையும், சேவகரான மனுஷரையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும், அரமனை பிரதானிகளையும் யோகனான் ஒன்றுகூட்டிச் சேர்க்கிறான். எல்லோரும் எகிப்து தேசத்திற்கு புறப்பட்டுப்போகிறார்கள். போகும் வழியிலே அவர்கள் பெத்லகேம் ஊருக்கு அருகான கிம்காமின் பேட்டையில் தங்கியிருக்கிறார்கள்.

பெத்லகேம் தாவீதின் நகரம். யோகனான் எகிப்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறான். கிம்காமின் பேட்டை இப்போது யோகனானுக்கு தலைநகரமாயிருக்கிறது. யோகனான் கர்த்தரை நம்புவதற்கு பதிலாக எகிப்தின் ராஜாவாகிய பார்வோனை நம்புகிறான். ஒருவேளை யோகனானுக்கு எகிப்து தேசத்தின்மீது தனிப்பட்ட மரியாதை இருந்திருக்கலாம். யோகனானோடு கூட இராணுவச்சேர்வைக்காரரும் இருக்கிறார்கள். ஆனாலும் யோகனான் கல்தேயருக்கு பயப்படுகிறான்.

42 அதிகாரம்

யோகனானும் அவனுடைய எல்லா இராணுவச்சேர்வைக்காரரும் எகிப்து தேசத்தை நோக்கி புறப்பட்டுப்போகிறார்கள். ஒருவேளை அவர்களுக்கு பாபிலோன் தேசத்தைவிட எகிப்து தேசத்தின்மீது விருப்பம் அதிகமாயிருந்திருக்கலாம். அல்லது அப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில், எகிப்து தேசத்திற்கு போவதே தங்களுக்கு நல்லது என்று அவர்கள் தீர்மானம் செய்திருக்கலாம். ஆனாலும் அவர்கள் தங்கள் மாம்சத்தின் பிரகாரம் செயல்பட விரும்பவில்லை. கர்த்தருடைய சித்தத்தையும், அவருடைய வழிநடத்துதலையும் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள்.

எகிப்து தேசத்திற்கு போகும் விஷயத்தைப்பற்றி, கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுமாறு, யோகனானும் அவனுடைய இராணுவச்சேர்வைக்காரரும் எரேமியாவிடம் கேட்டுக்கொள்கிறார்கள் (எரே 42:1-6). கர்த்தர் எரேமியா மூலமாய் அவர்களுக்கு மறுஉத்தரவு கொடுக்கிறார். அவர்கள் யூதாவிலேயே தங்கியிருக்கவேண்டும் என்றும், அப்போது அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும், ஆசீர்வாதமும் கிடைக்கும் என்றும் எரேமியா சொல்லுகிறார் (எரே 42:7-12).

யோகனானும், அவனோடுகூட யூதாவின் மனுஷரும் எகிப்து தேசத்திற்குப்போவதை கர்த்தர் தடைபண்ணுகிறார். அவர்கள் எகிப்திற்குப்போனால் அங்கே அழிந்துபோவார்கள் (எரே 42:13-18).

யோகனானும் அவனுடைய இராணுவச்சேர்வைக்காரரும் கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ள விரும்பினார்கள். எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய சித்தத்தை அவர்களுக்கு அறிவித்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவில்லை. இதனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது (எரே 42:19-22).

எரேமியா
எரே 42:1-6

எரே 42:1. அப்பொழுது எல்லா இராணுவச்சேர்வைக்காரரும், கரேயாவின் குமாரனாகிய யோகனானும், ஓசாயாவின் குமாரனாகிய யெசனியாவும், சிறியோர் முதல் பெரியோர்மட்டுமான சகல ஜனங்களும் சேர்ந்துவந்து,

எரே 42:2. தீர்க்கதரிசியாகிய எரேமியாவை நோக்கி: உம்முடைய தேவனாகிய கர்த்தர் நாங்கள் நடக்கவேண்டிய வழியையும், செய்யவேண்டிய காரியத்தையும் எங்களுக்குத் தெரியப்பண்ணும்படிக்கு, நீர் எங்கள் விண்ணப்பத்துக்கு இடங்கொடுத்து, மீதியாயிருக்கிற இந்தச் சகல ஜனங்களாகிய எங்களுக்காக உம்முடைய தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணும்,

எரே 42:3. உம்முடைய கண்கள் எங்களைக் காண்கிறபடியே திரளான ஜனங்களில் கொஞ்சப்பேரே மீந்திருக்கிறோம் என்றார்கள்.

எரே 42:4. அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசி அவர்களை நோக்கி: நீங்கள் சொன்னதைக் கேட்டேன்; இதோ, உங்கள் வார்த்தையின்படியே உங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுவேன்; கர்த்தர் உங்களுக்கு மறு உத்திரவாகச் சொல்லும் எல்லா வார்த்தைகளையும் நான் உங்களுக்கு ஒன்றையும் மறைக்காமல் அறிவிப்பேன் என்றான்.

எரே 42:5. அப்பொழுது அவர்கள் எரேமியாவை நோக்கி: உம்முடைய தேவனாகிய கர்த்தர் உம்மைக்கொண்டு எங்களுக்குச் சொல்லியனுப்பும் எல்லா வார்த்தைகளின்படியும் நாங்கள் செய்யாவிட்டால், கர்த்தர் நமக்கு நடுவே சத்தியமும் உண்மையுமான சாட்சியாயிருக்கக்கடவர்.

எரே 42:6. அது நன்மையானாலும் தீமையானாலும் சரி, எங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்கு நாங்கள் கீழ்ப்படிவதினால் எங்களுக்கு நன்மையுண்டாகும்படி நாங்கள் உம்மை அனுப்புகிற எங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்போம் என்றார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி இஸ்மவேலின் பட்டயத்திற்கு தப்பித்துக்கொள்கிறார். கர்த்தரே எரேமியாவை இஸ்மவேலின் பட்டயத்திற்கு மறைக்கிறார். கர்த்தர் பல சமயங்களில், எரேமியாவை இது போன்ற மரணத்திற்கு தப்புவித்திருக்கிறார். எரேமியாவின் சத்துருக்களுக்கு மறைத்திருக்கிறார்.

சில காலமாக எரேமியாவை யாரும் தேடி வரவில்லை. ஆனால் இப்போதோ எல்லா இராணுவச் சேர்வைக்காரரும், கரேயாவின் குமாரனாகிய யோகனானும், ஓசாயாவின் குமாரனாகிய யெசனியாவும், சிறியோர் முதல் பெரியோர்மட்டுமான சகல ஜனங்களும் எரேமியா தேடிவருகிறார்கள் (எரே 42:1).

யூதாதேசத்தில் மீந்திருக்கிற சிறியோரும் பெரியோரும் எரேமியாவினிடத்தில் வருகிறார்கள். இதுவரையிலும் அவர்கள் எரேமியா தீர்க்கதரிசியை விட்டு விலகியே இருந்தார்கள். ஒருவேளை அவர்கள் எரேமியாவைப் பார்த்து வெட்கப்பட்டிருக்கலாம். தங்களுக்கு எரேமியாவின் உதவியும் ஆலோசனையும் தேவையில்லை என்று யூதாவின் மனுஷர் நினைத்திருக்கலாம். இப்போதோ அவர்களுக்கு எரேமியாவின் உதவி தேவைப்படுகிறது.

யோகனானும், யூதாவின் மனுஷரும் எகிப்து தேசத்திற்கு போகவேண்டுமென்று விரும்புகிறார்கள். கெதலியாவை இஸ்மவேல் பட்டயத்தால் வெட்டி கொன்றுபோட்டான். பாபிலோன் ராஜா இந்தச் செய்தியை கேள்விப்பட்டு, தங்கள்மேல் கோபப்படுவாரோ என்று பயந்து, யோகனானும், அவனோடுகூட யூதாவின் மனுஷரும் பாபிலோனுக்கு போக ஆயத்தமாயிருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை அவர்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள்.

யூதாவின் மனுஷர் எல்லோரும் எரேமியாவுக்கு அதிகமான மதிப்பும், மரியாதையும் காண்பிக்கிறார்கள். எரேமியா யூதாதேசத்திலுள்ள ஒரு சாதாரண மனுஷன். சமுதாயத்தில் தாழ்மையான அந்தஸ்திலிருக்கிறவர். ஆனாலும் அவர் கர்த்தருக்கு மிகவும் நெருக்கமாயிருக்கிறார். கர்த்தர் அவருடைய ஜெபத்தைக் கேட்பார் என்று யூதாவின் மனுஷர் நினைக்கிறார்கள். அவர் தங்களுக்காக ஜெபம்பண்ணினால், கர்த்தர் நிச்சயமாய் பதில் கொடுப்பார் என்று நம்புகிறார்கள்.

யோகனானும், யூதாவின் மனுஷரும், தீர்க்கதரிசியாகிய எரேமியாவை நோக்கி: "உம்முடைய தேவனாகிய கர்த்தர் நாங்கள் நடக்கவேண்டிய வழியையும், செய்யவேண்டிய காரியத்தையும் எங்களுக்குத் தெரியப்பண்ணும்படிக்கு, நீர் எங்கள் விண்ணப்பத்துக்கு இடங்கொடுத்து, மீதியாயிருக்கிற இந்தச் சகல ஜனங்களாகிய எங்களுக்காக உம்முடைய தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணும்" (எரே 42:2) என்று கேட்டுக்கொள்கிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கு ஜெபம்பண்ணத் தெரியவில்லை. தங்களுக்காக எரேமியா ஜெபம்பண்ணவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எரேமியாவிடம் கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, "உம்முடைய தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை "தங்களுடைய கர்த்தர்" என்று சொல்லுவதற்குக்கூட, தாங்கள் அபாத்திரராயிருப்பதாக யூதாவின் மனுஷர் நினைக்கிறார்கள். கர்த்தருடைய உதவியையும், ஒத்தாசைகளையும், கிருபைகளையும் பெற்றுக்கொள்வதற்கு தங்களிடத்தில் எந்த தகுதியுமில்லை என்று யூதாவின் மனுஷர் தங்களை வெகுவாய்த் தாழ்த்துகிறார்கள்.

யூதாதேசத்தில் மீதியாயிருக்கிற யூதர்கள், தங்களைப்பற்றி பெருமையாய் நினைக்காமல், மிகவும் தாழ்மையாய் நினைக்கிறார்கள். தாங்கள் பரிதாபத்திற்குரியவர்கள் என்றும், அனுதாபத்திற்குரியவர்கள் என்றும், தங்களுக்கு மனுஷருடைய உதவியும், கர்த்தருடைய உதவியும் தேவைப்படுகிறது என்பதையும் அங்கீகரிக்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் எரேமியாவிடம், "உம்முடைய கண்கள் எங்களைக் காண்கிறபடியே திரளான ஜனங்களில் கொஞ்சப்பேரே மீந்திருக்கிறோம்" (எரே 42:3) என்று சொல்லுகிறார்கள். யூதாவின் மனுஷரில் அநேகர் அழிந்துபோனார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பும், கோபமும் அவர்கள்மேல் வந்தது. அவர்களில் அநேகர் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போய்விட்டார்கள். ஏராளமானோர் பட்டயத்திற்கு இரையானார்கள். இப்போது கொஞ்சப்பேர் மாத்திரமே மீதியாயிருக்கிறார்கள்.

கர்த்தர் தங்களுடைய நிலமையை கிருபையாய் நோக்கிப் பார்ப்பார் என்றும், தாங்கள் நடக்க வேண்டிய வழியையும், தாங்கள் செய்யவேண்டிய காரியத்தையும், தங்களுக்கு தமது கிருபையினால் தெரிவிப்பார் என்றும் யூதாவின் மனுஷர் எதிர்பார்க்கிறார்கள். கர்த்தருடைய பிரசன்னம் தங்களோடு கூடயிருக்கவேண்டுமென்று யூதர்கள் விரும்புகிறார்கள். தாங்கள் எல்லோரும் எகிப்து தேசத்திற்குப் போகவேண்டுமா, அல்லது வேறு ஏதாவது செய்யவேண்டுமா என்று கர்த்தரிடத்தில் விசாரித்து தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள்.

எரேமியாவும் அவர்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண சம்மதிக்கிறார். அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசி அவர்களை நோக்கி: "நீங்கள் சொன்னதைக் கேட்டேன்; இதோ, உங்கள் வார்த்தையின்படியே உங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுவேன்; கர்த்தர் உங்களுக்கு மறுஉத்திரவாகச் சொல்லும் எல்லா வார்த்தைகளையும் நான் உங்களுக்கு ஒன்றையும் மறைக்காமல் அறிவிப்பேன்" (எரே 42:4) என்று சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் இதுவரையிலும் எரேமியாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எரேமியாவை ஒதுக்கி தள்ளிவிடுகிறார்கள். ஆனாலும் எரேமியா யூதாவின் மனுஷருக்காக கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ண சம்மதிக்கிறார்.

இஸ்ரவேல் மனுஷர் தீர்க்கதரிசியாகிய சாமுவேலையும் ஒதுக்கி தள்ளிவிட்டார்கள். ஆனாலும் சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணினார்.

"நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்" (1சாமு 12:23).

சாமுவேலைப்போலவே, இப்போது எரேமியாவும் யூதாவின் மனுஷருக்காக, கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண சம்மதம் தெரிவிக்கிறார்.

கர்த்தருடைய சித்தம் என்ன என்பது தங்களுக்கு அறிவிக்கப்பட்டவுடன், யூதாவின் மனுஷர் எல்லோரும் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவதாக வாக்குப் பண்ணுகிறார்கள். அவர்கள் முதலில் எரேமியாவிடம் கர்த்தரைப்பற்றிச் சொன்னபோது "உம்முடைய தேவனாகிய கர்த்தர்" என்று சொன்னார்கள். இப்போதோ அவர்கள் கர்த்தரை, "எங்கள் தேவனாகிய கர்த்தர்" என்று சொல்லுகிறார்கள். இஸ்ரவேலின் பரிசுத்தரை தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்கிறார்கள்.

யூதாமனுஷரின் வார்த்தைகளைக் கேட்டு எரேமியா தீர்க்கதரிசி உற்சாகமடைகிறார். "உங்கள் வார்த்தையின்படியே உங்கள் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணுவேன்" என்று சொல்லுகிறார். அவர்களும், கர்த்தரின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து நடப்போம் என்று உறுதியாய்ச் சொல்லுகிறார்கள்.

அப்பொழுது அவர்கள் எரேமியாவை நோக்கி: "உம்முடைய தேவனாகிய கர்த்தர் உம்மைக்கொண்டு எங்களுக்குச் சொல்லி யனுப்பும் எல்லா வார்த்தைகளின்படியும் நாங்கள் செய்யாவிட்டால், கர்த்தர் நமக்கு நடுவே சத்தியமும் உண்மையுமான சாட்சியாயிருக்கக்கடவர். அது நன்மை யானாலும் தீமையானாலும் சரி, எங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்கு நாங்கள் கீழ்ப்படிவதினால் எங்களுக்கு நன்மை யுண்டாகும்படி நாங்கள் உம்மை அனுப்புகிற எங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து நடப்போம்" (எரே 42:5,6) என்று சொல்லுகிறார்கள்.

எரேமியா மூலமாய் வெளிப்படும் கர்த்தருடைய வார்த்தை தங்களுக்கு தீமையாகயிருந்தாலும், அந்த வார்த்தைக்கும் கீழ்ப்படிய, யூதாவின் மனுஷர் ஆயத்தமாயிருக்கிறார்கள். கர்த்தருடைய கட்டளைகள் எல்லாமே தங்களுடைய நன்மைக்கேதுவாக இருக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அவர்கள் கர்த்தரோடு வழக்காட ஆயத்தமாயில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கும் சித்தத்திற்கும் முற்றிலுமாய் கீழ்ப்படிய மனதாயிருக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவது எளிதாகயிருந்தாலும், கடினமாகயிருந்தாலும், கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து நடப்போம் என்று உறுதியாய்ச் சொல்லுகிறார்கள்.

கர்த்தருடைய வார்த்தை எரே 42:7-12

எரே 42:7. பத்துநாள் சென்றபின்பு, கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று.

எரே 42:8. அப்பொழுது அவன், கரேயாவின் குமாரனாகிய யோகனானையும், அவனோடிருந்த எல்லா இராணுவச்சேர்வைக்காரரையும், சிறியோர்முதல் பெரியோர்மட்டும் உண்டான சகல ஜனங்களையும் அழைத்து,

எரே 42:9. அவர்களை நோக்கி: உங்களுக்காக விண்ணப்பஞ்செய்யும்படிக்கு நீங்கள் என்னை அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்,

எரே 42:10. நீங்கள் இந்த தேசத்திலே தரித்திருந்தால், நான் உங்களைக் கட்டுவேன், உங்களை இடிக்கமாட்டேன்; உங்களை நாட்டுவேன், உங்களைப் பிடுங்கமாட்டேன்; நான் உங்களுக்குச் செய்திருக்கிற தீங்குக்கு மனஸ்தாபப்பட்டேன்.

எரே 42:11. நீங்கள் பயப்படுகிற பாபிலோன் ராஜாவுக்கு பயப்படவேண்டாம், அவனுக்குப் பயப்படாதிருப்பீர்களாக என்று கர்த்தர் சொல்லுகிறார், உங்களை இரட்சிக்கும்படிக்கும், உங்களை அவன் கைக்குத் தப்புவிக்கும்படிக்கும் நான் உங்களுடனே இருந்து,

எரே 42:12. அவன் உங்களுக்கு இரங்குகிறதற்கும், உங்கள் சுயதேசத்துக்கு உங்களைத் திரும்பிவரப் பண்ணுகிறதற்கும் உங்களுக்கு இரக்கஞ்செய்வேன்.

தங்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுமாறு யூதாவின் மனுஷர் எரேமியாவிடம் கேட்டுக்கொள்கிறார்கள். எரேமியாவும் அவர்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். பத்துநாள் சென்றபின்பு, கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாயிற்று (எரே 42:7). பத்துநாட்களாக அமைதி உண்டாயிற்று. அந்த நாட்களில் கர்த்தருடைய வார்த்தை எப்படியிருக்கும் என்று ஒருவருக்கும் தெரியவில்லை.

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமே இந்த தாமதமுண்டாயிற்று. கர்த்தர் தமக்கு சித்தமான வேளையில் நம்முடைய ஜெபத்திற்கு பதில்கொடுப்பார். யூதாவில் மீதமாயிருக்கிற ஜனங்கள் மாய்மாலக்காரராயிருக்கிறார்கள். அவர்கள் எகிப்தை நோக்கி திரும்பியிருக்கிறார்கள். கர்த்தரையும் நோக்கிப் பார்க்கிறார்கள். யோகனான் கர்த்தருடைய சமுகத்திற்கு வருவதற்கு முன்பாகவே, எகிப்தையும் நோக்கி பார்க்கிறான். கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவதற்குப் பதிலாக, அவன் கிம்காமின் பேட்டைக்கு வந்துவிடுகிறான். கர்த்தர் அவர்களுடைய மாய்மாலத்தை அவர்களுக்கு உணர்த்தவேண்டும் என்பதற்காகவும், அவர்களைத் தண்டிக்கவேண்டும் என்பதற்காகவும், பத்துநாள் காலதாமதம் செய்திருக்கலாம்.

எரேமியா தானாக பேசமாட்டார். கர்த்தர் சொன்ன வார்த்தையை மாத்திரமே சொல்லுவார். யூதாவின் மனுஷர் எல்லோரும் எரேமியாவிடம் வந்து, "எங்களுக்காக கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்" என்று கேட்டவுடன், அவர் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ண ஆரம்பித்துவிடுகிறார். ஆனாலும் கர்த்தருடைய வார்த்தை தனக்கு வரும் வரையிலும் எரேமியா பொறுமையோடு காத்திருக்கிறார். எரேமியா அவசரப்பட்டு தன்னுடைய சொந்த வார்த்தைகளை, கர்த்தருடைய வார்த்தை என்று சொல்லிவிடவில்லை.

எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி, பத்துநாள் சென்றபின்பு அவருக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. தனக்கு கர்த்தருடைய வார்த்தை வெளிப்பட்டவுடன், எரேமியா அதை சகல ஜனங்களுக்கு முன்பாக அறிவிக்கிறார்.

அப்பொழுது எரேமியா, கரேயாவின் குமாரனாகிய யோகனானையும், அவனோடிருந்த எல்லா இராணுவச் சேர்வைக்காரரையும், சிறியோர்முதல் பெரியோர்மட்டும் உண்டான சகல ஜனங்களையும் அழைத்து, அவர்களை நோக்கி: "உங்களுக்காக விண்ணப்பஞ் செய்யும்படிக்கு நீங்கள் என்னை அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்" (எரே 42:8,9) என்று சொல்லி, எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்ல ஆரம்பிக்கிறார்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை ஒரு சிலருக்கு மாத்திரம் என்று இரகசியமாய்ச் சொல்லாமல், யூதாவின் மனுஷர் எல்லோரையும் அழைத்து வெளிப்படையாகச் சொல்லுகிறார். கரேயாவின் குமாரனாகிய யோகனானையும், அவனோடிருந்த எல்லா இராணுவச் சேர்வைக்காரரையும், சிறியோர்முதல் பெரியோர்மட்டும் உண்டான சகல ஜனங்களையும் எரேமியா அழைக்கிறார் (எரே 42:8).

யோகனானும், அவனோடு கூடயிருக்கிற இராணுவச்சேர்வைக்காரரும், யூதாவின் மனுஷரும் எரேமியாவிடம் வந்து, அவரை கர்த்தரிடத்தில் ஜெபிக்குமாறு சொல்லுகிறார்கள். எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபித்தபோது, பத்து நாள் சென்றபின்பு கர்த்தருடைய வார்த்தை அவருக்கு உண்டாயிற்று. எரேமியா கர்த்தருடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டு, அதை சகல ஜனங்களையும் அழைத்து சொல்லுகிறார்.

"உங்களுக்காக விண்ணப்பஞ்செய்யும் படிக்கு நீங்கள் என்னை அனுப்பின இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறதுஎன்னவென்றால்" (எரே 42:9) என்று சொல்லி எரேமியா கர்த்தருடைய வார்த்தையை அவர்களுக்கு சொல்லுகிறார்.

யோகனானும், இஜ்ஜனுவச்சேர்வைக் காரரும், யூதாவின் மனுஷரும் இப்போது யூதாதேசத்திலேயே இருக்கிறார்கள். அவர்கள் யூதாதேசத்திலே தரித்திருக்கவேண்டும். அது அவர்களுக்கு நன்மையாயிருக்கும். அவர்கள் யூதாதேசத்தில் தரித்திருந்தால், "நான் உங்களைக் கட்டுவேன், உங்களை இடிக்கமாட்டேன்; உங்களை நாட்டுவேன், உங்களைப் பிடுங்க மாட்டேன்" (எரே 42:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் யூதாதேசத்திற்குள் பிரவேசித்து, ஏராளமான யூதர்களை பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோனார்கள். எரேமியாவிடத்தில் ஜெபம்பண்ணுமாறு சொல்லுகிறவர்களோ, பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போகாமல், தப்பித்து, யூதாதேசத்திலேயே மீதமாக தங்கியிருக்கிறவர்கள். அவர்கள் யூதாதேசத்திலிருப்பதே கர்த்தருடைய கிருபை. அவர்கள் கர்த்தருடைய கிருபைக்கும் இரக்கத்திற்கும் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். கர்த்தர் அனுமதிக்கிற தேசத்தில் அவர்கள் தங்கவேண்டும். கர்த்தர் தங்களுக்கு வாக்குப்பண்ணின தேசத்தைவிட்டு விட்டு, அந்நிய தேசத்திற்கு போகவேண்டுமென்று ஆசைப்படக்கூடாது.

கர்த்தர் யூதாவின் மனுஷர்மீது கிருபையுள்ளவராகவும், இரக்கமுள்ள வராகவும், அன்புள்ளவராகவும் இருக்கிறார். யூதர்களுக்கு அநேக துன்பங்களும் வேதனைகளும் உண்டாயிற்று. அவர்களுக்கு தீங்கு வர கர்த்தரும் அனுமதித்தார். இப்போதோ இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், யூதாவின் மனுஷர்மீது அதிகமான இரக்கம் காண்பிக்கிறார். "நான் உங்களுக்கு செய்திருக்கிற தீங்குக்கு மனஸ்தாபப் பட்டேன்" (எரே 42:10) என்று கர்த்தர் யூதாவின் மனுஷரிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய மனதை மாற்றிக்கொள்ளவில்லை. அவர் மனம் மாறாதவர். ஆனாலும் கர்த்தர் தம்முடைய வழியை மாற்றிக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். யூதாவின் மனுஷருக்கு தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் காண்பிக்கக்கூடாது என்று கர்த்தர் தீர்மானித்திருந்தார். ஆனால் இப்போதோ, அவர்களுக்கு மறுபடியும் இரக்கம் காண்பிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.

யோகனானும், அவனுடைய இராணுவச்சேர்வைக்காரரும், யூதாவின் மனுஷரும் பாபிலோன் ராஜாவுக்கு பயப்படுகிறார்கள். கெதலியா மரித்துப்போனதினால், பாபிலோன் ராஜா தங்களை பழிவாங்குவானோ என்று நினைத்து யோகனானும், யூதாவின் மனுஷரும், நேபுகாத்நேச்சாருக்கு பயப்படுகிறார்கள். இவர்களால் பாபிலோன் ராஜாவை எதிர்த்து நிற்கமுடியாது. அவன் மிகுந்த பலமுள்ளவன். இவர்களோ பலமில்லாதவர்கள். இவர்களுடைய இராணுவச்சேர்வைக்காரர் சொற்ப எண்ணிக்கையிலிருக்கிறார்கள். பாபிலோன் ராஜாவின் இராணுவத்தாரோ பலத்திலும் எண்ணிக்கையிலும் மிகுந்தவர்கள்.

"பாபிலோன் ராஜா தேசத்தின் மேல் அதிகாரியாக்கின அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவை நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேல் வெட்டிப்போட்டதினிமித்தம், கல்தேயருக்குப் பயந்தபடியினால், தாங்கள் எகிப்துக்குப் போகப் புறப்பட்டு, பெத்லகேமூருக்கு அருகான கிம்காமின் பேட்டையில் தங்கியிருந்தார்கள்" (எரே 41:17,18)

கர்த்தர் அவர்களுடைய பயத்தை நீக்குவதற்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். "நீங்கள் பயப்படுகிற பாபிலோன் ராஜாவுக்கு பயப்படவேண்டாம், அவனுக்குப் பயப்படாதிருப்பீர்களாக" (எரே 42:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் பாபிலோன் ராஜாவுக்கு பயந்தால், அவர்களுடைய பயமே அவர்களுக்கு கண்ணியாக மாறிவிடும். கர்த்தர் யூதாவின் மனுஷரோடு கூடயிருக்கிறார். கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது, நமக்கு விரோதமாக எத்தனை சத்துருக்கள் வந்தாலும், கர்த்தர் அவர்களோடு யுத்தம்பண்ணுவார். கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுவார். யுத்தத்திலே கர்த்தரே ஜெயிப்பார். "உங்களை அவன் கைக்கு தப்புவிக்கும்படிக்கு நான் உங்களுடனே இருப்பேன்" (எரே 42:11) என்று கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு சொல்லுகிறார். கர்த்தர் நம்முடைய பட்சத்திலிருக்கும்போது நமக்கு விரோதமாக யாராலும் எதிர்த்து நிற்கமுடியாது.

யூதாவின் மனுஷருக்கு கர்த்தருடைய உதவியும், பாதுகாப்பும் கிடைக்கவேண்டுமென்றால், அவர்கள் யூதாதேசத்திலேயே தரித்திருக்கவேண்டும். அப்போது அவர்கள் பாபிலோன் ராஜாவுக்கு பயப்படாமல் பாதுகாப்பாயிருக்கலாம். அதே வேளையில் ராஜாதி ராஜாவாகிய கர்த்தருடைய பாதுகாப்பையும்பெற்றுக் கொண்டு சந்தோஷமாயும் இருக்கலாம்.

யூதாவின் மனுஷர் யூதாதேசத்திலேயே தரித்திருந்தால், கர்த்தர் அவர்களை, யூதாதேசத்தில் கட்டுவதாகவும், நாட்டுவதாகவும் வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் யூதாதேசத்தில் மறுபடியும் வேர்பற்றி தழைப்பார்கள். அவர்களுக்கு புதிய அஸ்திபாரம் போடப்படும். அவர்கள் மறுபடியும் செழிப்பான தேசமாய் எழும்புவார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், யூதாவின் மனுஷருக்கு விசேஷித்த கிருபைகளை வெளிப்படுத்துகிறார். அவர்கள் பாபிலோன் ராஜாவின் கைகளுக்கு பயப்படாமல் தப்பிப்பதோடு, கர்த்தருடைய இரக்கத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள். பாபிலோன் ராஜாவால் யூதர்களை அழிக்க முடியாது. அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பும் கிடைக்கும். அவர்கள் யூதாதேசத்தில் தங்கியிருந்தால், அவர்களுக்கு இரட்டிப்பான நன்மைகள் உண்டாகும். அவர்கள் யூதாதேசத்தில் தங்களை ஸ்தாபிப்பதற்கு, கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்வார்.

பாபிலோன் ராஜா யூதர்களுக்கு விரோதமாக வரமாட்டான். அது மாத்திரமல்ல, அவன் யூதர்களுக்கு இரக்கம் காண்பிப்பான். "பாபிலோன் ராஜா உங்களுக்கு இரங்குகிறதற்கும், உங்கள் சுயதேசத்துக்கு உங்களைத் திரும்பிவரப் பண்ணுகிறதற்கும் உங்களுக்கு இரக்கஞ்செய்வேன்" (எரே 42:12) என்று கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

கர்த்தர் நமக்கு கொடுக்கும் கடமைகளை நாம் கீழ்ப்படிதலோடு நேர்த்தியாய் செய்து முடிக்கவேண்டும். கர்த்தர் நம்முடைய கீழ்ப்படிதலுக்கு ஏற்ற பலனைக் கொடுப்பார். பலிசெலுத்துவதைப் பார்க்கிலும், கர்த்தருக்கு கீழ்ப்படிதலே உன்னதமானது.

எகிப்து தேசத்துக்கே போய், அங்கே தரித்திருப்போம் எரே 42:13-18

எரே 42:13. நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடாமல், நாங்கள் இந்த தேசத்திலே இருக்கிறதில்லையென்றும்,

எரே 42:14. நாங்கள் யுத்தத்தைக் காணாததும், எக்காள சத்தத்தைக் கேளாததும், அப்பத்தாழ்ச்சியினால் பட்டினியாய் இராததுமான எகிப்து தேசத்துக்கே போய், அங்கே தரித்திருப்போம் என்றும் சொல்வீர்களேயாகில்,

எரே 42:15. யூதாவில் மீந்திருக்கிறவர்களே, அதைக்குறித்து உண்டான கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்: நீங்கள் எகிப்துக்குப்போக உங்கள் முகங்களை திருப்பி, அங்கே தங்கப்போவீர்களானால்,

எரே 42:16. நீங்கள் பயப்படுகிற பட்டயம் எகிப்து தேசத்திலே உங்களைப் பிடிக்கும்; நீங்கள் ஜயப்படுகிற பஞ்சம் எகிப்திலே உங்களைத் தொடர்ந்துவரும், அங்கே சாவீர்கள்.

எரே 42:17. எகிப்திலே தங்கவேண்டுமென்று அவ்விடத்துக்குத் தங்கள் முகங்களைத் திருப்பின எல்லா மனுஷருக்கும் என்ன சம்பவிக்குமென்றால், பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவார்கள்; நான் அவர்கள்மேல் வரப்பண்ணும் தீங்கினாலே அவர்களில் மீதியாகிறவர்களும் தப்புகிறவர்களுமில்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 42:18. என் கோபமும் என் உக்கிரமும் எருசலேமின் குடிகள்மேல் எப்படி மூண்டதோ, அப்படியே என் உக்கிரம் நீங்கள் எகிப்துக்குப் போகும்போது, உங்கள்மேல் மூளும்; நீங்கள் சாபமாகவும் பாழாகவும் பழிப்பாகவும் நிந்தையாகவும் இருந்து, இவ்விடத்தை இனிக்காணாதிருப்பீர்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் இப்போது இருக்கிற பிரகாரமாக, யூதாதேசத்திலேயே தங்கிவிடவேண்டும். எகிப்து தேசத்திற்கு ஓடிப்போகவேண்டுமென்று நினைக்கக்கூடாது. இஸ்ரவேல் வம்சத்தாரின் முற்பிதாக்கள் ஏற்கெனவே எகிப்து தேசத்தில் அடிமைகளாயிருந்தார்கள். கர்த்தர் அவர்களை தமது பலத்த புயத்தினால் விடுவித்து, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து, அங்கே அவர்களை குடியேற்றினார். ஆனால் யூதர்களோ இப்போது, கானான் தேசத்திலிருந்து வெளியேறி, எகிப்து தேசத்திற்கு போகவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகள் அந்நிய தேசத்தாரோடு உடன்படிக்கை பண்ணக்கூடாது என்று கர்த்தர் அவர்களை பலமுறை எச்சரித்திருக்கிறார். ஆனால் யூதாவின் மனுஷரோ எகிப்தியரோடு சிநேகம் வைக்க விரும்புகிறார்கள். தாங்கள் இந்த யூதாதேசத்தில் இருக்கிறதில்லை (எரே 42:13) என்று திரும்பத் திரும்ப சொல்லுகிறார்கள். அவர்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை. கர்த்தர் தங்களை பாதுகாப்பார் என்னும் நம்பிக்கையும் அவர்களிடத்தில் இல்லை.

"நாம் எகிப்து தேசத்திற்குப்போய், அங்கே தரித்திருப்போம்" (எரே 42:14) என்று யூதாவின் மனுஷர் சொல்லுகிறார்கள். எகிப்திற்குப்போக கர்த்தர் தங்களை அனுமதித்தாலும், அனுமதிக்காவிட்டாலும், யூதாவின் மனுஷர் எகிப்து தேசத்திற்குப்போக ஆயத்தமாயிருக்கிறார்கள். அவர்களுடைய சரீரம்தான் யூதாதேசத்திலிருக்கிறது. அவர்களுடைய மனதும் இருதயமுமோ ஏற்கெனவே எகிப்து தேசத்திற்குப் போய்விட்டது.

"நாங்கள் யுத்தத்தைக் காணாததும், எக்காள சத்தத்தைக் கேளாததும், அப்பத்தாழ்ச்சியினால் பட்டினியாய் இராததுமான எகிப்து தேசத்துக்கே போய், அங்கே தரித்திருப்போம்" (எரே 42:14) என்று யூதாவின் மனுஷர் சொல்லுகிறார்கள்.

யூதர்கள் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் மீறுகிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் தம்முடைய நியாயத்தீர்ப்பை அவர்களுக்கு சொல்லுகிறார். "யூதாவில் மீந்திருக்கிறவர்களே, அதைக்குறித்து உண்டான கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்" (எரே 42:15) என்று எரேமியா யூதாவின் மனுஷருக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்ல ஆரம்பிக்கிறார்.

"நீங்கள் எகிப்துக்குப்போக உங்கள் முகங்களை திருப்பி, அங்கே தங்கப்போவீர்களானால், நீங்கள் பயப்படுகிற பட்டயம் எகிப்து தேசத்திலே உங்களைப் பிடிக்கும்; நீங்கள் ஐயப்படுகிற பஞ்சம் எகிப்திலே உங்களைத் தொடர்ந்துவரும், அங்கே சாவீர்கள்" (எரே 42:15,16) என்று கர்த்தர் எகிப்து தேசத்திற்குப்போக மனதாயிருக்கிற யூதாவின் மனுஷரைப் பார்த்து சொல்லுகிறார்.

எரேமியாவினிடத்தில் ஜெபம்பண்ணச் சொன்ன யூதாவின் ஜனங்கள், யூதாவில் மீந்திருக்கிறவர்கள். இவர்கள் சொற்ப எண்ணிக்கையிலிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய விசேஷித்த சித்தத்தின் பிரகாரமாய், இவர்களை யூதாதேசத்தில் மீந்திருக்கச் செய்திருக்கிறார். கர்த்தர் இவர்களை இழந்துபோக விரும்பவில்லை. ஆகையினால் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தை இவர்கள்மீது கடினமாய் வருகிறது.

யூதாதேசத்திலே பட்டயம் வரும் என்று மீந்திருக்கிற யூதர்கள் பயப்படுகிறார்கள். தங்கள் தேசத்திலே பஞ்சம் வரும் என்று இவர்கள் ஐயப்படுகிறார்கள். எகிப்து தேசமோ யுத்தத்தைக் காணாத தேசம் என்றும், எக்காள சத்தத்தை கேளாத தேசம் என்றும், அப்பத்தாழ்ச்சியினால் பட்டினியாயிராத தேசம் என்றும் மீந்திருக்கிற யூதர்கள் சொல்லுகிறார்கள்.

மீந்திருக்கிற யூதர்கள் எகிப்து தேசத்திற்குப்போனாலும், அவர்கள் பயப்படுகிற பட்டயம் அவர்களை எகிப்து தேசத்திலே பிடிக்கும். அவர்கள் ஐயப்படுகிற பஞ்சம் அவர்களை எகிப்திலே தொடர்ந்து வரும். அவர்கள் எகிப்து தேசத்திலே சாவார்கள். உயிரோடிருக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு யூதாதேசத்தைவிட்டு எகிப்து தேசத்திற்குப் போகிறவர்கள் அங்கே செத்துப்போவார்கள். மீந்திருக்கிற யூதர்கள் எகிப்திற்குப்போகாமல், யூதாதேசத்திலேயே தரித்திருந்தால் அவர்கள் பிழைத்துக் கொள்வார்கள். கர்த்தருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் அவர்களுக்கு கிடைக்கும்.

யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் எங்கே ஓடிப்போனாலும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்களை பின்தொடரும். அவர்கள் எகிப்து தேசத்திற்கு ஓடிப்போனாலும், அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்க முடியாது. யூதாவிலே மீந்திருக்கிறவர்கள் கர்த்தரை நம்பி, யூதாதேசத்தில் தரித்திருந்தால், அவர்கள் பயப்படுகிற பட்டயம் அவர்களுக்கு வராது. அவர்கள் ஐயப்படுகிற பஞ்சம் அவர்களைப் பிடிக்காது.

யூதாதேசத்தில் அவர்கள் கர்த்தருக்குள் சமாதானமாகவும், ஆறுதலாகவும், பாதுகாப்பாகவும் தங்கியிருப்பார்கள். கர்த்தருடைய தேசம் சமாதான தேசம். கர்த்தர் சமாதான பிரபு. கர்த்தருடைய பிள்ளைகள், அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால், சமாதானத்தின் பிள்ளைகளாயிருப்பார்கள்.

"எகிப்திலே தங்கவேண்டுமென்று அவ்விடத்துக்குத் தங்கள் முகங்களைத் திருப்பின எல்லா மனுஷருக்கும் என்ன சம்பவிக்குமென்றால், பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவார்கள்" (எரே 42:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் அவர்கள்மேல் தீங்கு வரப்பண்ணுவார். அந்தத் தீங்கினால் அவர்களில் மீதியாகிறவர்களும், தப்புகிறவர்களும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் எருசலேமை ஏற்கெனவே அழித்துப்போட்டார்கள். மீந்திருக்கிற யூதர்கள் அழிந்துபோயிருக்கிற எருசலேமைப் பார்த்து பயப்படுகிறார்கள். இந்த அழிவுக்கு தப்பித்துக்கொள்ளவேண்டும் என்று நினைத்து அவர்கள் எகிப்திற்குப் போக விரும்புகிறார்கள். அவர்கள் எகிப்திற்குப்போகும்போது, கர்த்தருடைய கோபமும் அவருடைய உக்கிரமமும் எருசலேமின் குடிகள்மேல் எப்படி மூண்டதோ, அப்படியே அவர்கள்மேல் மூளும் (எரே 42:18). அவர்கள் கர்த்தருடைய கோபத்தின் இரண்டாம் பகுதியை எகிப்து தேசத்திலே காண்பார்கள்.

கர்த்தருடைய ஜனத்தார் பாவத்திற்கு விலகி பரிசுத்தமாய் ஜீவிக்கவேண்டும். அந்நிய ஜாதியாரோடு ஒன்றாய்க் கலந்துவிடக்கூடாது. கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போய் விடக்கூடாது. விக்கிரகங்களுக்கு தூபங்காட்டக்கூடாது. யூதரில் மீந்திருக்கிறவர்கள், யூதாதேசத்திலே தரித்திருந்தால், கர்த்தருடைய வார்த்தைகளையும், அவருடைய உபதேசங்களையும் கேட்டு கர்த்தருக்கு பயந்து பரிசுத்தமாய் ஜீவிப்பதற்கு வாய்ப்புள்ளது. அவர்கள் எகிப்து தேசத்திற்கு போய்விட்டால் விக்கிரகங்களுக்கு தூபங்காட்ட வாய்ப்புள்ளது.

யூதாவின் மனுஷரில் மீந்திருக்கிறவர்கள் எகிப்து தேசத்திற்கு தங்கப்போனால், அங்கே அவர்கள் சாபமாகவும், பாழாகவும், பழிப்பாகவும், நிந்தையாகவும் இருப்பார்கள். அவர்கள் எகிப்து தேசத்திலே பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவார்கள். அவர்கள் இனிமேல் யூதா தேசத்தை காணாதிருப்பார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்துக்குப் போகாதிருங்கள் எரே 42:19-22

எரே 42:19. யூதாவில் மீதியானவர்களே, எகிப்துக்குப் போகாதிருங்கள் என்று கர்த்தர் உங்களைக் குறித்துச் சொன்னாரென்பதை இந்நாளில் உங்களுக்குச் சாட்சியாக அறிவித்தேன் என்று அறியுங்கள்.

எரே 42:20. உங்கள் ஆத்துமாக்களுக்கு விரோதமாய் உங்களை மோசம்போக்கினீர்கள்; நீ எங்கள் தேவனாகிய கர்த்தரைநோக்கி: எங்களுக்காக விண்ணப்பம்பண்ணி, எங்கள் தேவனாகிய கர்த்தர் சொல்வதையெல்லாம் எங்களுக்கு அறிவிக்கவேண்டும்; அதின்படியே செய்வோம் என்று நீங்கள் சொல்லி, என்னை உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்துக்கு அனுப்பினீர்கள்.

எரே 42:21. நான் இந்நாளில் அதை உங்களுக்கு அறிவித்தேன்; ஆனாலும், உங்கள் தேவனாகிய கர்த்தரின் சத்தத்துக்கும், அவர் என்னைக்கொண்டு உங்களுக்குச் சொல்லியனுப்பின எந்தக்காரியத்துக்கும் செவிகொடாமற் போனீர்கள்.

எரே 42:22. இப்போதும் தங்கியிருப்பதற்கு நீங்கள் போக விரும்புகிற ஸ்தலத்தில்தானே பட்டயத்தாலும் பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவீர்களென்று நிச்சயமாய் அறியுங்கள் என்றான்.

யோகனானும், யூதாவின் மனுஷரும் எரேமியா தீர்க்கதரிசியினிடத்தில் வந்து, தங்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுமாறு வேண்டிக்கொள்கிறார்கள். அவர்களுடைய வார்த்தையில் உண்மையில்லை என்பது கர்த்தருக்கு தெரியும். அவர்கள் மாய்மாலம் பண்ணுகிறார்கள். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ண விரும்புகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை கேட்க விரும்புகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்ட பின்போ, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்காமல், தங்களுடைய சுயஇஷ்டம்போல நடப்பார்கள். கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல், தங்களுடைய சுயஇஷ்டத்தின் பிரகாரமும், சுயசித்தத்தின் பிரகாரமும் நடந்துகொள்வார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது.

யூதாமனுஷரின் வார்த்தைகளைக் கேட்டு, எரேமியா கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை எரேமியா யூதாவின் மனுஷருக்கு அப்படியே சொல்லுகிறார். "யூதாவில் மீதியானவர்களே, எகிப்துக்குப் போகாதிருங்கள் என்று கர்த்தர் உங்களைக்குறித்துச் சொன்னாரென்பதை இந்நாளில் உங்களுக்குச் சாட்சியாக அறிவித்தேன் என்று அறியுங்கள்" (எரே 42:19) என்று எரேமியா சொல்லுகிறார்.

யூதாவிலே மீதியானவர்கள் எகிப்திற்கு போகக்கூடாது. இதுவே கர்த்தருடைய தெளிவான கட்டளை. அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிய வேண்டும். கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாதவர்கள் அவர்கள் தங்களுடைய ஆத்துமாக்களுக்கு விரோதமாக தங்களையே மோசம்போக்குகிறார்கள்.

யோகனானும், அவனுடைய இராணுவச்சேர்வைக்காரரும், யூதாவின் மனுஷரும் எரேமியாவினிடத்தில் வந்து, "நீ எங்கள் தேவனாகிய கர்த்தரைநோக்கி: எங்களுக்காக விண்ணப்பம்பண்ணி, எங்கள் தேவனாகிய கர்த்தர் சொல்வதையெல்லாம் எங்களுக்கு அறிவிக்கவேண்டும்; அதின்படியே செய்வோம்" (எரே 42:20) என்று சொல்லி, எரேமியாவை கர்த்தரிடத்திற்கு அனுப்பினார்கள்.

யூதாமனுஷர் தாங்கள் பொருத்தனை பண்ணின வார்த்தைக்கு உண்மையுள்ளவர்களாயில்லை. கர்த்தருடைய வார்த்தையின் படியே செய்வோம் என்று வாக்குப்பண்ணினார்கள். எரேமியாவும் கர்த்தரிடத்தில் அவர்களுக்காக ஜெபம்பண்ணினார்.

கர்த்தர் அவர்களைக் குறித்து சொன்ன வார்த்தைகளை எரேமியா அவர்களுக்கு அறிவித்தார். ஆனால் அவர்களோ கர்த்தரின் சத்தத்திற்கு செவிகொடுக்க வில்லை. கர்த்தர் எரேமியாவைக்கொண்டு அவர்களுக்கு சொல்லியனுப்பின எந்தக் காரியத்திற்கும் அவர்கள் செவிகொடுக்க வில்லை (எரே 42:21).

யூதாமனுஷரின் வார்த்தையில் உண்மையில்லை. அவர்கள் எரேமியாவை மோசம்போக்கியதாக நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் தங்கள் ஆத்துமாக்களுக்கு விரோதமாய் தங்களையே மோசம்போக்குகிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி யூதாமனுஷருடைய மாய்மாலத்தையும், கீழ்ப்படியாமையையும் கடிந்து சொல்லிவிட்டு, கர்த்தர் தன்னைக்கொண்டு அவர்களுக்கு சொல்லியனுப்பின வார்த்தையையும் சொல்லுகிறார்.

"இப்போதும் தங்கியிருப்பதற்கு நீங்கள் போக விரும்புகிற ஸ்தலத்தில்தானே பட்டயத்தாலும் பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவீர்களென்று நிச்சயமாய் அறியுங்கள்" (எரே 42:22) என்று எரேமியா தீர்க்கதரிசி எகிப்து தேசத்திலே தங்கப்போகிற யூதாவில் மீதியானவர்களைக் குறித்து, கர்த்தர் தன்னைக்கொண்டு சொலலியனப்பின வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

43 அதிகாரம்

கர்த்தர் தனக்கு சொன்ன செய்தியை எரேமியா யூதாவின் சகல ஜனங்களுக்கும் சொல்லுகிறார். ஆனால் அவர்களோ எரேமியா சொன்ன செய்தியை, தேவனுடைய செய்தி என்று அங்கீகரிக்கவில்லை (எரே 43:1-3). யூதாவில் மீந்திருக்கிற சகல ஜனங்களும் எகிப்து தேசத்திற்கு போகிறார்கள். அவர்கள் தங்களோடு எரேமியாவையும் கூட்டிக்கொண்டு போகிறார்கள் (எரே 43:4-7).

கர்த்தர் எரேமியாவுக்கு மற்றும் ஒரு செய்தியைச் சொல்லுகிறார். பாபிலோன் ராஜா எகிப்து தேசத்திற்கு விரோதமாக வருவான் என்னும் செய்தியை கர்த்தர் எரேமியா மூலமாய் முன்னறிவிக்கிறார் (எரே 43:8-13).

கர்த்தர் உன்னை எங்களிடத்துக்கு அனுப்பவில்லை எரே 43:1-3

எரே 43:1. எரேமியா சகல ஜனங்களுக்கும் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் தன்னைக்கொண்டு அவர்களுக்குச் சொல்லியனுப்பின எல்லா வார்த்தைகளையும் சொன்னான்; அவர்களுடைய தேவனாகிய கர்த்தருடைய எல்லா வார்த்தைகளையும் அவன் அவர்களுக்குச் சொல்லிமுடித்தபின்பு,

எரே 43:2. ஓசாயாவின் குமாரனாகிய அசரியாவும், கரேயாவின் குமாரனாகிய யோகனானும், அகங்காரிகளான எல்லா மனுஷரும் எரேமியாவை நோக்கி: நீ பொய் சொல்லுகிறாய்; எகிப்திலே தங்கும்படிக்கு அங்கே போகாதிருங்கள் என்று சொல்ல, எங்கள் தேவனாகிய கர்த்தர் உன்னை எங்களிடத்துக்கு அனுப்பவில்லை.

எரே 43:3. கல்தேயர் எங்களைக் கொன்றுபோடவும், எங்களைப் பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோகவும், எங்களை அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கும்படி, நேரியாவின் குமாரனாகிய பாருக்குத்தானே உன்னை எங்களுக்கு விரோதமாக ஏவினான் என்றார்கள்.

ஆதிகாலத்தில் பூமியெங்கும் ஒரே பாஷையிருந்தது. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக தங்கள் இருதயத்தில் பெருமை கொண்டு பாவம் செய்தார்கள்.

"அப்பொழுது கர்த்தர்: இதோ, ஜனங்கள் ஒரே கூட்டமாய் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையும் இருக்கிறது; அவர்கள் இதைச் செய்யத் தொடங்கினார்கள்; இப்பொழுதும் தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று இருக்கிறார்கள். நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார்" (ஆதி 11:6,7).

பாபேல் கோபுரத்தை ஜனங்கள் கட்டியபோது அவர்கள் தங்களுடைய இருதயத்தில் துர்ச்சிந்தையோடும், பெருமையோடும் இருந்தார்கள். "தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது" என்று தங்கள் இருதயத்தில் பெருமையோடு நினைத்துக்கொண்டார்கள். அதுபோலவே இப்போதும், யூதாவிலே மீதியாயிருக்கிற யூதரும் தங்களைப்பற்றி பெருமையோடு நினைக்கிறார்கள்.

யூதர்களுக்கு எகிப்து தேசத்தின்மீது பிரியம் இருக்கிறது. கர்த்தர் தங்களை அனுமதித்தாலும், அனுமதியாவிட்டாலும், தாங்கள் எகிப்து தேசத்திற்குப் போகவேண்டுமென்று யூதாவின் மனுஷர் உறுதியாயிருக்கிறார்கள். தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று தங்கள் இருதயத்தில் பெருமையோடு நினைக்கிறார்கள்.

கர்த்தர் யூதாவின் மனுஷரைக் குறித்து தன்னிடத்தில் சொன்ன எல்லா வார்த்தைகளையும், எரேமியா அவர்களுக்கு சொல்லுகிறார். கர்த்தரிடத்தில் தங்களுக்காக விசாரிக்குமாறு, யூதாவின் மனுஷர்களே எரேமியாவைக் கேட்டுக்கொண்டார்கள். இப்போதோ கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்துகிறார்.

எரேமியா சகல ஜனங்களுக்கும் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் தன்னைக்கொண்டு அவர்களுக்குச் சொல்லியனுப்பின எல்லா வார்த்தைகளையும் சொன்னார்; அவர்களுடைய தேவனாகிய கர்த்தருடைய எல்லா வார்த்தைகளையும் அவர் அவர்களுக்குச் சொல்லிமுடிக்கிறார் (எரே 43:1).

ஆனால் கர்த்தருடைய வார்த்தைகளில் அவர்களுக்கு பிரியமுண்டாகவில்லை. அவர்கள் எகிப்து தேசத்திற்குப்போகக்கூடாது என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனால் யூதாவின் மனுஷரோ எகிப்து தேசத்திற்கு போகவேண்டும் என்பதில் தீர்மானமாயிருக்கிறார்கள்.

எரேமியா சொல்லுவது கர்த்தருடைய வார்த்தையல்ல என்று யூதாவின் மனுஷர் சொல்லுகிறார்கள். "எங்கள் தேவனாகிய கர்த்தர் உன்னை எங்களிடத்திற்கு அனுப்பவில்லை" என்று எரேமியாவைப் பார்த்து சொல்லுகிறார்கள். எரேமியாவை கர்த்தருடைய தீர்க்கதரிசியாகக்கூட அங்கீகரிக்க மறுத்துவிடுகிறார்கள்.

"ஓசாயாவின் குமாரனாகிய அசரியாவும், கரேயாவின் குமாரனாகிய யோகனானும், அகங்காரிகளான எல்லா மனுஷரும் எரேமியாவை நோக்கி: நீ பொய் சொல்லுகிறாய்; எகிப்திலே தங்கும்படிக்கு அங்கே போகாதிருங்கள் என்று சொல்ல, எங்கள் தேவனாகிய கர்த்தர் உன்னை எங்களிடத்துக்கு அனுப்பவில்லை" (எரே 43:2) என்று எரேமியாவிடம் சொல்லுகிறார்கள்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை தங்களுக்கு சொல்லவில்லை என்றும், பாருக்கு எரேமியாவுக்கு சொன்ன பிரகாரமாக, அவர் தங்களிடத்தில் பேசுகிறார் என்றும், ஜனங்கள் எரேமியாவின்மீது பொய்யாய்க் குற்றம் சொல்லுகிறார்கள்.

"கல்தேயர் எங்களைக் கொன்றுபோடவும், எங்களைப் பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோகவும், எங்களை அவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கும்படி, நேரியாவின் குமாரனாகிய பாருக்குத்தானே உன்னை எங்களுக்கு விரோதமாக ஏவினான்" என்று யூதாவின் மனுஷர் எரேமியாவிடம் சொல்லுகிறார்கள் (எரே 43:3).

யூதாவில் மீந்திருக்கிற யூதர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. அவர்களுடைய மனதின் பெருமையே, அவர்களுடைய கீழ்ப்படியாமைக்கு காரணம். அவர்கள் அகங்காரிகளாயிருக்கிறார்கள். எரேமியாவின்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறார்கள். எகிப்திற்குப்போகவேண்டும் என்று அவர்கள் ஏற்கெனவே தங்கள் மனதில் திட்டம்பண்ணியிருக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைகளோ அவர்களுடைய திட்டத்திற்கு விரோதமாயிருக்கிறது.

தேவனுடைய ஆலோசனை தங்களுடைய சொந்த திட்டத்திற்கு விரோதமாயிருக்கக்கூடாது என்று யூதர்கள் எதிர்பார்க்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைகள் தங்களுடைய சுயவிருப்பங்களை கட்டுப்படுத்தவோ அல்லது ஆளுகை செய்யவோ அவர்கள் விரும்பவில்லை. தேவனுடைய தெய்வீக ஞானத்தைவிட தங்களுடைய ஞானமும், தங்களுடைய திட்டமும் மேலானது என்று யூதாவின் மனுஷர் நினைக்கிறார்கள்.

எரேமியா சொன்ன வார்த்தைகள் கர்த்தருடைய வார்த்தையல்ல என்று யூதாவின் மனுஷர் சொல்லுகிறார்கள். கர்த்தர் எரேமியாவைத் தங்களிடத்திற்கு அனுப்பவில்லை என்றே சொல்லிவிடுகிறார்கள். எரேமியா சொன்ன வார்த்தைகளுக்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை. தாங்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படியவில்லை என்னும் உண்மையை அவர்கள் அங்கீகரிக்கவில்லை. அதற்குப் பதிலாக கர்த்தர் எரேமியாவை தங்களிடத்திற்கு அனுப்பவில்லை என்று சொல்லி, எரேமியாவையும், அவருடைய வார்த்தைகளையும் புறக்கணித்துவிடுகிறார்கள்.

யூதாவின் மனுஷர்கள்தான் முதன்முதலில் எரேமியாவைப் போய் பார்த்தார்கள். அவரை கர்த்தருடைய தீர்க்கதரிசியாக அங்கீகரித்து, அவரை தங்களுக்காக ஜெபம்பண்ணுமாறு வேண்டிக்கொண்டார்கள். எரேமியாவுக்கு பத்து நாட்கள் சென்ற பின்பே கர்த்தருடைய வார்த்தை கிடைத்தது. அது வரையிலும் எரேமியா கர்த்தருடைய சமுகத்தில் பொறுமையோடு காத்துக் கொண்டிருந்தார். அந்தப் பத்துநாட்களாக யூதாவின் மனுஷரும் கர்த்தருடைய வார்த்தைக்காக காத்துக்கொண்டிருந்தார்கள்.

கர்த்தர் எரேமியாவை தம்முடைய தீர்க்கதரிசியாக அங்கீகரித்திருக்கிறார். கர்த்தரே எரேமியாவை யூதாவின் மனுஷர் மத்தியிலே அனுப்பியிருக்கிறார். யூதாவின் மனுஷருக்கும் எரேமியாவைக் குறித்து ஓரளவு நல்ல அபிப்பிராயம் இருக்கிறது. எரேமியா இப்போது தங்களுக்கு சொல்லுவது கர்த்தருடைய வார்த்தையுமல்ல, அது எரேமியாவின் வார்த்தையுமல்ல, அவையெல்லாமே பாருக்கின் வார்த்தைகள் என்று யூதாவின் மனுஷர் சொல்லுகிறார்கள்.

"நேரியாவின் குமாரனாகிய பாருக்குத்தானே உன்னை எங்களுக்கு விரோதமாக ஏவினான்" (எரே 43:3) என்று யூதாவின் மனுஷர் எரேமியாவிடம் கேட்கிறார்கள்.

எரேமியாவும் பாருக்கும் கல்தேயர்மீது பிரியமாகயிருந்திருந்தால், அவர்கள் ஏற்கெனவே நேபுசராதானோடு பாபிலோன் தேசத்திற்கே போயிருந்திருப்பார்கள். அவர்கள் யூதாதேசத்தில் மீதமாயிருக்கிற யூதர்களோடு இருந்திருக்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் யூதாதேசத்தையும், யூதாவின் மனுஷரையும் நேசிக்கிறார்கள். இதன் நிமித்தமாய் அவர்கள் பாபிலோன் தேசத்திற்குப் போகாமல், யூதாதேசத்திலேயே தங்கிவிடுகிறார்கள்.

எரேமியா பாபிலோன் தேசத்திற்கு போகவேண்டும் என்று தீர்மானம் செய்திருந்தால், அவர் அங்கு சிறைப்பட்டுப் போகவேண்டிய அவசியமில்லை. அவர் நேபுசராதானின் விசேஷித்த விருந்தினராக பாபிலோன் தேசத்திற்கு போயிருக்கலாம். ஆனால் எரேமியாவோ அந்நிய தேசத்தில் ஆடம்பரமாய் ஜீவிப்பதைவிட, யூதாதேசத்தில், யூதாவின் மனுஷரோடு பாடுகளை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டார்.

பாருக்குக்கு தங்களைப் பிடிக்கவில்லை என்றும், ஆகையினால் அவர் எரேமியாவிடம் தங்களைக் குறித்து தவறான செய்திகளை சொல்லச் சொல்லுகிறார் என்றும் யூதாவின் மனுஷர் நினைக்கிறார்கள். பாருக்கு கர்த்தருடைய நாமத்தை வீணாகப் பயன்படுத்துகிறார் என்று அவர்மீது குற்றம் சொல்லுகிறார்கள். எரேமியாவும் பாருக்கும் கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர்கள். கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை மாத்திரமே, எரேமியா யூதாவின் மனுஷருக்கு சொல்லுகிறார். எரேமியா தன்னுடைய சொந்த வார்த்தைகளை, கர்த்தர் சொன்னதாக யாரிடத்திலும் பேசினதில்லை.

தக்பானேஸ் மட்டும் போய்ச்சேர்ந்தார்கள் எரே 43:4-7

எரே 43:4. அப்படியே யூதாவின் தேசத்திலே தரித்திருக்கவேண்டும் என்னும் கர்த்தருடைய சத்தத்துக்குக் கரேயாவின் குமாரனாகிய யோகனானும், சகல இராணுவச் சேர்வைக்காரரும், சகல ஜனங்களும் செவிகொடாமற்போனார்கள்.

எரே 43:5. யூதா தேசத்தில் தங்கியிருப்பதற்கு, தாங்கள் துரத்துண்டிருந்த சகல ஜாதிகளிடத்திலுமிருந்து திரும்பிவந்த மீதியான யூதரெல்லாரையும், புருஷரையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும், ராஜாவின் குமாரத்திகளையும், காவற் சேனாதிபதியாகிய நேபுசராதான், சாப்பானின் குமாரனாகிய அகிக்காமின் மகனான கெதலியாவினிடத்தில் விட்டுப்போன சகல ஆத்துமாக்களையும், தீர்க்கதரிசியாகிய எரேமியாவையும், நேரியாவின் குமாரனாகிய பாருக்கையும்,

எரே 43:6. கரேயாவின் குமாரனாகிய யோகனானும் சகல இராணுவச் சேர்வைக்காரரும் கூட்டிக்கொண்டு,

எரே 43:7. கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடாதபடியினாலே, எகிப்து தேசத்துக்குப்போக எத்தனித்து, அதிலுள்ள தக்பானேஸ் மட்டும்போய்ச்சேர்ந்தார்கள்.

தாங்கள் எகிப்திற்குப் போகக்கூடாது என்று கர்த்தர் தங்களுக்கு கட்டளை கொடுத்தாலும், எப்படியாவது எகிப்திற்கு போய்விடவேண்டுமென்று யூதாவின் மனுஷர் தீர்மானமாயிருக்கிறார்கள். யூதாவின் தேசத்திலே தரித்திருக்கவேண்டும் என்னும் அக்கரை யூதாவில் மீதியாயிருக்கிற யூதர்கள் ஒருவரிடத்திலும் இல்லை. அவர்கள் யூதாவின் தேசத்திலே தரித்திருக்கவேண்டும் என்று கர்த்தர் அவர்களுக்கு கட்டளை கொடுத்திருக்கிறார்.

"யூதாவின் தேசத்திலே தரித்திருக்கவேண்டும் என்னும் கர்த்தருடைய சத்தத்துக்குக் கரேயாவின் குமாரனாகிய யோகனானும், சகல இராணுவச் சேர்வைக்காரரும், சகல ஜனங்களும் செவிகொடாமற்போனார்கள்" (எரே 43:4).

யூதாவிலே மீந்திருக்கிற யூதர்கள் எகிப்திற்குப்போகவேண்டுமென்று ஒருமனப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் தாங்கள் துரத்துண்டிருந்த சகல ஜாதிகளிடத்திலுமிருந்து திரும்பி வந்தவர்கள். இவர்கள் யூதாவின் தேசத்திலே தரித்திருக்கவேண்டும் என்றுதான், சிதறிப்போன அந்நிய தேசங்களிலிருந்து, யூதாதேசத்திற்கு திரும்பி வந்தவர்கள். ஆனால் இப்போதோ, யூதாவிலே மீதியான யூதர் எல்லோரும் எகிப்திற்குப் போகவேண்டும் என்று யோகனானும், அவனுடைய இராணுவச்சேர்வைக்காரரும் அவர்களை கட்டாயம்பண்ணுகிறார்கள்.

கரேயாவின் குமாரனாகிய யோகனானும், சகல இஜ்ணுவச்சேர்வைக் காரரும் தங்கள் இருதயத்தில் பெருமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் எகிப்து தேசத்திற்குப் போகவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இவர்கள் எகிப்திற்குப்போகவேண்டு மென்றால், இவர்கள் மாத்திரம் தனியாகப் போய்க்கொள்ளலாம். ஆனால் இவர்களோ, தங்களோடுகூட யூதாவிலே மீதியாயிருக்கிற யூதர்கள் எல்லோரும் எகிப்து தேசத்திற்கு வரவேண்டுமென்று கட்டாயம்பண்ணு கிறார்கள். தீர்க்கதரிசியாகிய எரேமியாவையும், நேரியாவின் குமாரனாகிய பாருக்கையும் தங்களோடுகூட எகிப்து தேசத்திற்கு கூட்டிக்கொண்டு போகிறார்கள்.

சகல தேசங்களிலும் துரத்துண்டிருந்த யூதர்கள், சகல ஜாதிகளிடத்திலுமிருந்து யூதாதேசத்திற்கு திரும்பி வந்திருக்கிறார்கள். இவர்களே யூதாவில் மீதியான யூதர்கள். யோகனானும், அவனுடைய சகல இராணுவச்சேர்வைக்காரரும், யூதாவிலே மீதியான யூதர் எல்லோரையும், புருஷரையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் ராஜாவின் குமாரத்திகளையும் எகிப்திற்கு கூட்டிக்கொண்டு போகிறார்கள். இவர்கள் எகிப்திற்குப்போகும்போது, தங்களோடுகூட எரேமியாவையும், பாருக்கையும் கூட்டிக்கொண்டு போகிறார்கள் (எரே 43:5).

யோகனானும், சகல இராணுவச்சேர்வைக்காரரும், அவர்களோடுகூட யூதாவிலே மீந்திருக்கிற யூதர்கள் அனைவரும், எரேமியாவும் பாருக்கும் எகிப்து தேசத்திலுள்ள தக்பானேஸ் மட்டும் போய்ச்சேருகிறார்கள். யோகனானும் சகல இராணுவச் சேர்வைக்காரரும் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை. அதனால் அவர்கள் யூதாதேசத்திலே தரித்திருக்காமல், எகிப்து தேசத்திற்குப்போக எத்தனிக்கிறார்கள்.

பாபிலோன் ராஜா எகிப்தை அழிப்பான் எரே 43:8-13

எரே 43:8. தக்பானேசிலே கர்த்தருடைய வார்த்தை எரேமியாவுக்கு உண்டாகி, அவர்:

எரே 43:9. நீ உன் கையிலே பெரிய கற்களை எடுத்துக்கொண்டு, யூதா ஜனங்களுக்கு முன்பாக அவைகளைத் தக்பானேசில் இருக்கிற பார்வோனுடைய அரமனையின் ஒலிமுகவாசல் இருக்கிற சூளையின் களிமண்ணிலே புதைத்து வைத்து,

எரே 43:10. அவர்களை நோக்கி: இதோ, என் ஊழியக்காரனாகிய நேபுகாத்நேச்சார் என்கிற பாபிலோன் ராஜாவை நான் அழைத்தனுப்பி, நான் புதைப்பித்த இந்தக் கற்களின்மேல் அவனுடைய சிங்காசனத்தை வைப்பேன்; அவன் தன் ராஜகூடாரத்தை அவைகளின் மேல் விரிப்பான்.

எரே 43:11. அவன் வந்து, எகிப்துதேசத்தை அழிப்பான்; சாவுக்கு ஏதுவானவன் சாவுக்கும், சிறையிருப்புக்கு ஏதுவானவான் சிறையிருப்புக்கும், பட்டயத்துக்கு ஏதுவானவன் பட்டயத்துக்கும் உள்ளாவான்.

எரே 43:12. எகிப்தின் தேவர்களுடைய கோவில்களில் அக்கினியைக் கொளுத்துவேன்; அவன் அவைகளைச் சுட்டெரித்து, அவைகளைச் சிறைபிடித்துப் போய், ஒரு மேய்ப்பன் தன் கம்பளியைப் போர்த்துக்கொள்ளுமாப்போல் எகிப்துதேசத்தைப் போர்த்துக் கொண்டு, அவ்விடத்திலிருந்து சுகமாய்ப் புறப்பட்டுப்போவான்.

எரே 43:13. அவன் எகிப்துதேசத்தில் இருக்கிற பெத்ஷிமேசின் சிலைகளை உடைத்து, எகிப்தின் தேவர்களுடைய கோவில்களை அக்கினியால் சுட்டுப்போடுவான் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

எரேமியா தீர்க்கதரிசி எகிப்து தேசத்திலே கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். அவர் இப்போது தக்பானேசில் இருக்கிறார். இது எகிப்தியரின் பிரதான பட்டணங்களுள் ஒன்று. அங்கே எகிப்து தேசத்தின் விக்கிரகாராதனைக்காரர்களும், கர்த்தருக்கு கீழ்ப்படியாத யூதர்களும் இருக்கிறார்கள். அவர்கள் மத்தியிலே எரேமியாவும் இருக்கிறார்.

எரேமியா தக்பானேசிலே இருக்கும்போது கர்த்தருடைய வார்த்தை அவருக்கு உண்டாயிற்று. கர்த்தருடைய ஜனம் எங்கேயிருந்தாலும், கர்த்தர் அவர்களை தேடி கண்டுபிடிப்பார். தமது கிருபையினாலும் இரக்கத்தினாலும் அவர்களை சந்திப்பார். தீர்க்கதரிசன ஆவியானவர் இஸ்ரவேல் தேசத்திலும் கிரியை செய்கிறார். அதே வேளையில் அவர் தமக்கு சித்தமான எல்லா இடங்களிலும் நடப்பிக்கிறார்.

எரேமியாவுக்கு எகிப்து தேசத்திற்குப்போக பிரியமில்லை. ஆனால் யோகனானும், அவனுடைய இராணுவச்சேர்வைக்காரரும் எரேமியாவை எகிப்து தேசத்திற்கு கட்டாயப்படுத்தி கூட்டிக்கொண்டு போகிறார்கள். எரேமியா எகிப்திற்குப் போனாலும், கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் அவரை விட்டு நீங்கிப்போகவில்லை. கர்த்தர் எரேமியாவோடு பேசுகிறார். தம்முடைய வார்த்தைகளை அவருக்கு தெரியப்படுத்துகிறார். கர்த்தர் தனக்கு சொல்லுகிற வார்த்தைகளை, எரேமியா யூதாவின் மனுஷருக்கு அறிவிக்கிறார்.

எரேமியா எகிப்து தேசத்திலிருக்கும்போது, கர்த்தர் அவருக்கு இரண்டு செய்திகளை வெளிப்படுத்துகிறார். ஒன்று எகிப்து தேசத்தைப்பற்றியது. மற்றொன்று எகிப்து தேசத்திலுள்ள யூதர்களைப்பற்றியது. கர்த்தர் தனக்கு வெளிப்படுத்திய இவ்விரண்டு செய்திகளையும், எரேமியா யூதாவின் மனுஷருக்கு சொல்லவேண்டும். எகிப்து தேசமும், எகிப்து தேசத்திலுள்ள யூதர்களும் அழிந்துபோவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவிலே மீந்திருக்கிற யூதர்கள், எகிப்து தேசத்திலே தங்கப்போவார்கள் என்றால், அவர்கள் பயப்படுகிறபட்டயம், அவர்களை எகிப்து தேசத்திலே பிடிக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் தாம் சொன்ன தீர்க்கதரிசன செய்தியை தெளிவுபடுத்தும் வண்ணமாக, நேபுகாத்நேச்சாரின் பட்டயம் யூதாவின் மனுஷரை தொடர்ந்து வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா இந்த தீர்க்கதரிசன செய்தியை ஒரு அடையாளத்தின் மூலமாய் யூதாவின் மனுஷருக்கு சொல்லவேண்டும். எரேமியா தன் கையிலே பெரிய கற்களை எடுத்துக்கொள்ளவேண்டும். எரேமியா அந்தக் கற்களை, யூதா ஜனங்களுக்கு முன்பாக, தக்பானேசில் இருக்கிற பார்வோனுடைய அரமனையின் ஒலிமுகவாலில் இருக்கிற சூளையின் களிமண்ணிலே புதைத்து வைக்கவேண்டும் (எரே 43:9).

எகிப்து தேசத்திலே செங்கற்களைச் செய்யும் வேலை மிகவும் பிரதானம். "செங்கல் வேலைக்கு நீங்கள் முன்போல இனி ஜனங்களுக்கு வைக்கோல் கொடுக்கவேண்டாம்; அவர்கள் தாங்களே போய்த் தங்களுக்கு வைக்கோல் சேர்க்கட்டும்" (யாத் 5:7).

எகிப்து தேசத்தின் அழிவு சூளையின் களிமண்ணிலே அஸ்திபாரம் போடப்படுகிறது. யோகனானும், அவனுடைய இராணுவச்சேர்வைக்காரரும், அவர்களோடுகூட யூதாவிலே மீந்திருக்கிற யூதர்களும் எகிப்து தேசத்திற்குப்போவதை எரேமியா தீர்க்கதரிசியால் தடுத்து நிறுத்த முடியாது. ஆனாலும் அவர்கள் எகிப்து தேசத்திற்கு போனதற்காக, எரேமியாவால் அவர்களை மனம் வருந்தவும், மனம் திருந்தவும் வைக்க முடியும்.

கர்த்தர் தனக்கு சொன்ன செய்திகளை எரேமியா யூதாவின் மனுஷர் மத்தியில் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். இப்போது பாபிலோன் தேசத்தில் நேபுகாத்நேச்சார் ராஜாவாயிருக்கிறான். அவன் எகிப்து தேசத்திற்கு விரோதமாய் வருவான். எரேமியா தீர்க்கதரிசி, தக்பானேசிலிருக்கிற பார்வோனுடைய அரமனையில் ஒலிமுகவாசலிலிருக்கிற சூளையின் களிமண்ணிலே, கர்த்தர் சொன்ன பெரிய கற்களை புதைத்து வைத்திருக்கிறார். அந்தக் கற்களின்மேல் பாபிலோன் ராஜா தன்னுடைய சிங்காசனத்தை வைப்பான் (எரே 43:10).

கர்த்தர் சொல்லுகிற தீர்க்கதரிசனம் எந்த சூழ்நிலையில் நிறைவேறும் என்பதையும் கர்த்தர் தெளிவுபடுத்துகிறார். கர்த்தர் தீர்க்கதரிசனமாய் முன்னறிவிக்கிற வார்த்தைகள் இங்கு உறுதிபண்ணப்படுகிறது. கர்த்தர் தீர்க்கதரிசனத்தைச் சொல்லும்போது, அது எப்படி நிறைவேறும் என்றும், எப்போது நிறைவேறும் என்றும் தெளிவாய்ச் சொல்லுகிறார். இதனால் கர்த்தருடைய வார்த்தைகளை கேட்கிறவர்கள், அவை மெய்யாகவே தெய்வீக வார்த்தைகள் என்பதை புரிந்துகொள்வார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் நேபுகாத்நேச்சார் ராஜாவைப்பற்றிச் சொல்லும்போது, அவரை "என் ஊழியக்காரன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். ஏனெனில் நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய தெய்வீக சித்தத்தை நிறைவேற்றுவான்.

நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்தை அழிப்பான். எகிப்தியரை சங்காரம் பண்ணுவான். கர்த்தரே பாபிலோன் ராஜாவை அழைத்தனுப்புவார். கர்த்தர் சொன்ன பெரிய கற்கள் எந்த இடத்தில் புதைக்கப்பட்டிருக்கிறதோ, அந்த இடத்தில் கர்த்தர் பாபிலோன் ராஜாவின் சிங்காசனத்தை வைப்பார். நேபுகாத்நேச்சார் தன் ராஜகூடாரத்தை அவைகளின்மேல் விரிப்பான் (எரே 43:10).

"நேபுகாத்நேச்சார் வந்து, எகிப்துதேசத்தை அழிப்பான்; சாவுக்கு ஏதுவானவன் சாவுக்கும், சிறையிருப்புக்கு ஏதுவானவான் சிறையிருப்புக்கும், பட்டயத்துக்கு ஏதுவானவன் பட்டயத்துக்கும் உள்ளாவான்" (எரே 43:11) என்று கர்த்தர் சொல்லுகிறார். நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்தின் மனுஷரில், யாரையெல்லாம் தன்னுடைய பட்டயத்தினால் வெட்டாமலிருக்கிறானோ, அவர்கள் எல்லோரையும் தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோவான்.

எகிப்து தேசத்தில் ஏராளமான விக்கிரக கோவில்கள் இருக்கிறது. நேபுகாத்நேச்சார் எகிப்தியரின் விக்கிரகங்களை சுட்டெரித்துப்போடுவான்.

"எகிப்தின் தேவர்களுடைய கோவில்களில் அக்கினியைக் கொளுத்துவேன்; நேபுகாத்நேச்சார் அவைகளைச் சுட்டெரித்து, அவைகளைச் சிறைபிடித்துப் போய், ஒரு மேய்ப்பன் தன் கம்பளியைப் போர்த்துக் கொள்ளுமாப்போல் எகிப்துதேசத்தைப் போர்த்துக் கொண்டு, அவ்விடத்திலிருந்து சுகமாய்ப் புறப்பட்டுப்போவான். பாபிலோன் ராஜா எகிப்துதேசத்தில் இருக்கிற பெத்ஷிமேசின் சிலைகளை உடைத்து, எகிப்தின் தேவர்களுடைய கோவில்களை அக்கினியால் சுட்டுப்போடுவான்" (எரே 43:12,13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பெத்ஷிமேஸ் என்னும் பெயருக்கு "சூரியனின் வீடு" என்று பொருள். எகிப்தியர்கள் பெத்ஷிமேசில் சூரியனுக்கு ஒரு கோவிலைக் கட்டியிருக்கிறார்கள். நேபுகாத்நேச்சார் பெத்ஷிமேசின் சிலைகளை உடைத்துப்போடுவான். பாபிலோன் ராஜாவும் விக்கிரகங்களை ஆராதிக்கிறவன். அவனுடைய தேசத்திலும் சூரியனுக்கு சிலைகளும் கோவில்களும் உள்ளன. ஆனாலும் அவன் எகிப்து தேசத்திலுள்ள சிலைகளையும் கோவில்களையும் உடைத்துப்போடுகிறான்.

நேபுகாத்நேச்சார் எகிப்து தேசத்திற்கும் அதிகாரியாயிருப்பான். எகிப்து தேசத்திலுள்ள பொன்னாபரணங்களையும், போராயுதங்களையும் கொள்ளையடித்து தன்னுடைய தேசத்திற்குக்கொண்டுபோவான். ஒரு மேய்ப்பன் தன் கம்பளியைப் போர்த்துக்கொள்ளுமாப்போல் எகிப்துதேசத்தைப் போர்த்துக் கொண்டு, அவ்விடத்திலிருந்து சுகமாய்ப் புறப்பட்டுப்போவான் (எரே 43:12).

மேய்ப்பர்கள் காலை வேளையில் தங்கள் ஆடுகளை மேய்ச்சலுக்கு வழிநடத்திக்கொண்டு போவார்கள். அவர்கள் பயமில்லாமலும், பதட்டமில்லாமலும், சுகமாய்ப் போவார்கள். பாபிலோன் ராஜாவும் எகிப்து தேசத்தின் பொக்கிஷங்களைக் கொள்ளையிட்டு, தன்னுடைய தேசத்திற்கு சுகமாய்ப்போவான்.

பாபிலோன் ராஜா எகிப்து தேசத்தை அழிப்பான் என்பதை எசேக்கியேலும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார்.

"ஆகையால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு எகிப்துதேசத்தைக் கொடுக்கிறேன்; அவன் அதின் ஏராளமான ஜனத்தைச் சிறைபிடித்து அதின் ஆஸ்தியைச் சூறையாடி, அதின் கொள்ளைப்பொருளை எடுத்துக்கொள்வான்; இது அவனுடைய சேனைக்குக் கூலியாயிருக்கும். அவன் அதிலே செய்த வேலைக்கு எகிப்துதேசத்தை நான் அவனுக்குக் கூலியாகக் கொடுத்தேன்; எனக்காக அதைச் செய்தார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே 29:19,20).

"கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரைக்கொண்டு எகிப்தின் சந்ததியை ஒழியப்பண்ணுவேன். இவனும் இவனோடேகூட ஜாதிகளில் மகா பலசாலிகளான இவனுடைய ஜனங்களும் தேசத்தை அழிப்பதற்காக ஏவப்பட்டு வந்து, தங்கள் பட்டயங்களை எகிப்துக்கு விரோதமாக உருவி, கொலையுண்டவர்களாலே தேசத்தை நிரப்புவார்கள்" (எசே 30:10,11).

44 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசி எகிப்து தேசத்திலுள்ள யூதர்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கம்பண்ணுகிறார். அவர்களுடைய விக்கிரகாராதனையைக் கடிந்துகொள்கிறார் (எரே 44:1-14). கர்த்தரும் எரேமியாவும் யூதர்களுடைய விக்கிரகாராதனையைக் கடிந்துகொண்டாலும், எகிப்து தேசத்திலுள்ள யூதர்கள் விக்கிரகங்களை தொடர்ந்து ஆராதிக்கவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறார்கள் (எரே 44:15-19).

யூதர்களுடைய விக்கிரகாராதனையினிமித்தமாய் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வருகிறது. எகிப்து தேசத்திலே செற்ப எண்ணிக்கையுள்ள யூதர்களைத் தவிர, மற்ற யூதர்கள் எல்லோரும் சங்காரமாவார்கள். எகிப்து தேசத்தின் ராஜாவும் பாபிலோன் ராஜாவின் கைகளில் விழுவான். எகிப்து தேசத்தின் ராஜாவால், தன்னுடைய தேசத்திலிருக்கிற யூதர்களை பாதுகாக்க முடியாது (எரே 44:20-30).

விக்கிரகாராதனை
எரே 44:1-14

எரே 44:1. எகிப்து தேசத்தில் குடியேறி, மிக்தோலிலும், தக்பானேசிலும், நோப்பிலும், பத்ரோஸ் சீமையிலும் வாசமான எல்லா யூதரையுங்குறித்து, எரேமியாவுக்கு உண்டான வசனம்:

எரே 44:2. இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் எருசலேமின் மேலும், யூதாவின் சகல பட்டணங்களின்மேலும், வரப்பண்ணின தீங்கையெல்லாம் நீங்கள் கண்டீர்கள்.

எரே 44:3. இதோ, அவர்களும் நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேவர்களுக்கு தூபங்காட்டவும், ஆராதனைசெய்யவும் போய், எனக்குக் கோபமூட்டும்படிக்குச் செய்த அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம், அவைகள் இந்நாளில் பாழாய்க்கிடக்கிறது, அவைகளில் குடியில்லை.

எரே 44:4. நான் வெறுக்கிற இந்த அருவருப்பான காரியத்தைச் செய்யாதிருங்களென்று, தீர்க்கதரிசிகளாகிய என் ஊழியக்காரரைக்கொண்டு உங்களுக்கு ஏற்கனவே சொல்லியனுப்பிக் கொண்டிருந்தேன்.

எரே 44:5. ஆனாலும் அவர்கள் அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டாதபடிக்கு, என் சொல்லைக்கேளாமலும், பொல்லாப்பைவிட்டுத் திரும்புவதற்குச் செவியைச் சாய்க்காமலும் போனார்கள்.

எரே 44:6. ஆகையால், என் உக்கிரமும் என் கோபமும் மூண்டு, யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் பற்றியெரிந்தது; அவைகள் இந்நாளில் இருக்கிறபடி வனாந்தரமும் பாழுமாய்ப்போயிற்று.

எரே 44:7. இப்போதும் இஸ்ரவேலின் தேவனும் சேனைகளின் தேவனுமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், நீங்கள் யூதாவின் ஒருவரையும் உங்களுக்கு மீதியாக வைக்காமல், உங்களில் புருஷனையும் ஸ்திரீயையும் பிள்ளையையும் பால்குடிக்கிற குழந்தையையும் வேரற்றுப்போகப் பண்ணும்படிக்கு, உங்கள் கைகளின் கிரியைகளாலே எனக்குக் கோபமூட்டுகிற பெரியபொல்லாப்பை உங்கள் ஆத்துமாக்களுக்கு விரோதமாகச்செய்து,

எரே 44:8. உங்களை வேரற்றுப்போகப்பண்ணுவதற்காகவும், நீங்கள் பூமியின் சகல ஜாதிகளுக்குள்ளும் சாபமும் நிந்தையுமாயிருப்பதற்காகவும், நீங்கள் தங்கியிருக்கவந்த எகிப்துதேசத்திலே அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டுவானேன்?

எரே 44:9. யூதாதேசத்திலும் எருசலேமின் வீதிகளிலும் உங்கள் பிதாக்கள் செய்த பொல்லாப்புகளையும், யூதாவின் ராஜாக்கள் செய்த பொல்லாப்புகளையும், அவர்கள் ஸ்திரீகள் செய்த பொல்லாப்புகளையும், நீங்கள் செய்த பொல்லாப்புகளையும், உங்கள் ஸ்திரீகள் செய்த பொல்லாப்புகளையும் மறந்துபோனீர்களோ?

எரே 44:10. அவர்கள் இந்நாள்மட்டும் மனம் நொறுங்குண்டதுமில்லை, அவர்கள் பயப்படுகிறதுமில்லை; நான் உங்கள் முன்பாகவும் உங்கள் பிதாக்கள் முன்பாகவும் வைத்த என் வேதத்தின்படியும் என் கட்டளைகளின்படியும் நடக்கிறதுமில்லை.

எரே 44:11. ஆகையால், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ, நான் உங்களுக்குத் தீங்குண்டாகவும், யூதாவனைத்தையும் சங்கரிக்கத்தக்கதாகவும், என் முகத்தை உங்களுக்கு விரோதமாகத் திருப்பி,

எரே 44:12. எகிப்துதேசத்திலே தங்கும்படிக்கு வரத் தங்கள் முகங்களைத்திருப்பின மீதியான யூதரை வாரிக்கொள்ளுவேன்; அவர்கள் அனைவரும் எகிப்துதேசத்திலே நிர்மூலமாவார்கள்; அவர்கள் சிறியவன்முதல் பெரியவன் வரைக்கும், பட்டயத்துக்கு இரையாகி பஞ்சத்தாலும் நிர்மூலமாவார்கள்; அவர்கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் செத்து, சாபமும் பாழும்பழிப்பும் நிந்தையுமாவார்கள்.

எரே 44:13. நான் எருசலேமை தண்டித்தபடி எகிப்துதேசத்திலே குடியிருக்கிறவர்களையும் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும் தண்டிப்பேன்.

எரே 44:14. எகிப்துதேசத்திலே தங்கவும், மறுபடியும் தங்கள் ஆத்துமா வாஞ்சித்திருக்கிற யூதா தேசத்திலே குடியேறுவதற்கு அங்கே திரும்பிப்போகவும் வேண்டுமென்று இங்கே வந்த மீதியான யூதரிலே மீதியாயிருக்கிறவர்களும் தப்புகிறவர்களுமில்லை; தப்பிப்போகிறவர்களாகிய மற்றவர்களேயொழிய அவர்களில் ஒருவரும் அங்கே திரும்புவதில்லையென்றார் என்று சொன்னான்.

யூதாதேசத்திலே மீதியாயிருந்த யூதர்கள் எகிப்து தேசத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் இப்போது மிக்தோல், தக்பானேஸ் நோப், பத்ரோஸ் ஆகிய ஊர்களிலெல்லாம் குடியேறியிருக்கிறார்கள். இந்த ஊர்களைத் தவிர யூதாவின் புத்திரர் எகிப்திலுள்ள மேலும் பல ஊர்களுக்கும் போய், அங்கேயும் குடியேறியிருக்கிறார்கள்.

எகிப்து தேசத்தில் குடியேறி, மிக்தோலிலும், தக்பானேசிலும், நோப்பிலும், பத்ரோஸ் சீமையிலும் வாசமான எல்லா யூதரையுங்குறித்து, எரேமியாவுக்கு கர்த்தரிடத்திலிருந்து வசனம் உண்டாயிற்று (எரே 44:1). எரேமியா தீர்க்கதரிசி இவர்கள் எல்லோருக்கும் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லவேண்டும்.

யூதாதேசமும் எருசலேம் நகரமும் ஏற்கெனவே அழிந்துபோயிற்று. கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு அந்த அழிவை இப்போது மறுபடியும் ஞாபகப்படுத்துகிறார். ஒருவேளை எகிப்து தேசத்தில் குடியேறி, இங்கே வாசம்பண்ணுகிற யூதர்கள், தங்களுடைய பழைய சரித்திரத்தை மறந்துபோயிருக்கலாம். கர்த்தர் அவர்களுக்கு பழைய சம்பவங்களை நினைவுபடுத்துகிறார். கர்த்தரே எருசலேமின்மேலும் யூதாவின் சகல பட்டணங்களின்மேலும் தீங்குகளை வரப்பண்ணினார். அந்த தீங்குகளை இவர்களெல்லோரும் தங்கள் கண்களால் கண்டார்கள் (எரே 44:2).

யூதாவின் சகல பட்டணங்களும் இப்போது அழிந்துபோயிருக்கிறது. அதில் ஜனங்கள் யாரும் குடியிருக்கவில்லை. எருசலேம் நகரம் பாழான வனாந்தரம் போலிருக்கிறது. இந்த தீங்குகளெல்லாம் யூதாவின் பட்டணங்களுக்கு எப்போது உண்டாயிற்று என்பதையும், எப்படி உண்டாயிற்று என்பதையும், யூதாவின் மனுஷர் மறந்துவிடாமல் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்.

கர்த்தருடைய உக்கிரமமும், கோபமும் யூதாவின் மனுஷர்மீது மூண்டது. அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக விக்கிரகங்களை ஆராதித்து, அவருக்கு கோபமூட்டினார்கள். கர்த்தருடைய கோபமும் உக்கிரமமும் யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் வீதிகளிலும் பற்றியெரிந்தது. அவைகள் இந்நாளிலிருக்கிறபடி வனாந்தரமும் பாழுமாய்ப்போயிற்று. அவைகளில் குடியில்லை (எரே 44:6). தேவனுடைய கோபத்தினாலேயே யூதாதேசம் அழிந்தது.

கர்த்தர் யூதாவின் மனுஷர்மீதும், எருசலேமின் குடிகள்மீதும் கோபமாயிருந்தார். தம்முடைய கோபத்திற்கான காரணத்தையும் கர்த்தர் இங்கு யூதர்களுக்கு மறுபடியும் தெளிவுபடுத்துகிறார். அவர்கள் விக்கிரகங்களுக்கு ஆராதனை செய்தார்கள். கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாப்பு செய்தார்கள்.

"இதோ, அவர்களும் நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேவர்களுக்கு தூபங்காட்டவும், ஆராதனைசெய்யவும் போய், எனக்குக் கோபமூட்டும்படிக்குச் செய்த அவர்களுடைய பொல்லாப்பினிமித்தம், அவைகள் இந்நாளில் பாழாய்க்கிடக்கிறது. அவைகளில் குடியில்லை" (எரே 44:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் தேவனுடைய இஸ்ரவேலர்கள். இவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். அவரை மாத்திரமே கனம்பண்ணவேண்டும். ஆனால் யூதாவின் மனுஷரோ கர்த்தருக்கு கொடுக்கவேண்டிய கனத்தையும் மகிமையையும் விக்கிரகங்களுக்கு கொடுத்தார்கள். அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டினார்கள். கர்த்தரை ஆராதியாமல் விக்கிரகங்களை ஆராதித்தார்கள்.

யூதாவின் மனுஷர் கர்த்தரை விட்டு விலகிப்போய்விட்டார்கள். அவர்கள் அந்நிய தேவர்களைப் பின்பற்றினார்கள். இந்த தேவர்களைப்பற்றி யூதாவின் மனுஷர் களுக்கோ, அவர்களுடைய முற்பிதாக் களுக்கோ ஒன்றும் தெரியாது. தாங்கள் அறியாத தேவர்களுக்கு அவர்கள் தூபங்காட்டி, கர்த்தருக்கு கோபமூட்டி னார்கள். இதனால் கர்த்தருடைய உக்கிரமமும் கோபமும் யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் வீதிகளிலும் பற்றியெறிந்தது. அவை வனாந்தரமும் பாழுமாய்ப்போயிற்று.

யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போனார்கள். கர்த்தருக்கு விரோத மாகப் பொல்லாப்புகளைச் செய்தார்கள். அவர்கள் செய்கிற காரியங்களை கர்த்தர் வெறுத்தார். விக்கிரகாராதனை கர்த்தருக்கு அருவருப்பானது. அவர்களுடைய பாவங்களையும், பொல்லாப்புகளையும் அவர்களுக்கு எச்சரித்து சொல்லுவதற்காக, கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளாகிய ஊழியக்காரரை அவர்கள் மத்தியிலே அனுப்பினார். கர்த்தர் அவர்கள் மூலமாய் தம்முடைய எச்சரிப்பின் வார்த்தைகளை சொல்லியனுப்பினார்.

"ஆனாலும் அவர்கள் அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டாதபடிக்கு, என் சொல்லைக்கேளாமலும், பொல்லாப்பைவிட்டுத் திரும்புவதற்குச் செவியைச் சாய்க்காமலும் போனார்கள்" (எரே 44:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகளாகிய ஊழியக்காரர்கள், யூதாவின் மனுஷரை எச்சரித்தார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். பாவத்தின் ஆபத்துக்களை தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்கு எச்சரிப்பாய்ச் சொன்னார்கள். கர்த்தருடைய பிள்ளைகள், அவர் வெறுக்கிற அருவருப்பான காரியங்களை செய்யக்கூடாது.

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு எச்சரிப்பாய்ச் சொன்ன செய்தி, நமக்கும் எச்சரிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய பாவங்களினாலும், பொல்லாப்புகளினாலும் நாம் கர்த்தருக்கு கோபமூட்டக்கூடாது. நம்முடைய முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும், முழுமனதோடும், கர்த்தரிடத்தில் அன்புகூரும்போது, நாம் மெய்யாகவே கர்த்தரைக் கனம்பண்ணுவோம். நாம் கர்த்தரிடத்தில் முழுமனதோடும், முழுஆத்துமாவோடும், முழுஇருதயத்தோடும் அன்புகூரவில்லையென்றால், பாவம் நமக்குள் பிரவேசிக்கும். நமக்கு அழிவு வரும். கர்த்தர் வெறுக்கிற காரியத்தை நாமும் வெறுக்கவேண்டும். கர்த்தருக்கு அருவருப்பான காரியம் நமக்கும் அருவருப்பாயிருக்கவேண்டும்.

யூதாவின் மனுஷரோ கர்த்தருடைய வார்த்தைக்கு செவிசாய்க்கவில்லை. அவர்கள் கர்த்தருடைய சொல்லையும் கேட்கவில்லை. தங்களுடைய பொல்லாப்பை விட்டு திரும்பவுமில்லை. கர்த்தர் அவர்களை எச்சரித்தார். அவர்களோ கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல் போனபடியால், கர்த்தருடைய கோபமும் உக்கிரமமும் அவர்கள்மீது வந்தது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் வார்த்தைகளை, அவருடைய வாயின் மூலமாய்க் கேட்டார்கள். அது மாத்திரமல்ல, அவருடைய நியாயத்தீர்ப்பின் தண்டனைகளை, அவருடைய கரங்களின் மூலமாய் நிறைவேற்றப்படுவதையும் கண்டார்கள். எகிப்து தேசத்திலே இருக்கிற யூதர்கள், கர்த்தருடைய கோபத்தின் வார்த்தைகளைக் கேட்டும், அவருடைய கோபமான கிரியைகளை கண்டும் இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் இன்னும் கர்த்தருக்கு பிரியமாய் ஜீவிக்காமல், கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள்.

எகிப்து தேசத்திலே குடியேறியிருக்கிற யூதர்கள் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். தாங்கள் தங்கியிருக்க வந்த எகிப்து தேசத்திலே அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். அவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளாலே கர்த்தருக்கு கோபமூட்டுகிறார்கள். தாங்கள் செய்கிற பெரிய பொல்லாப்புகளை, அவர்கள் தங்களுடைய ஆத்துமாக்களுக்கு விரோதமாகவே செய்கிறார்கள்.

யூதாவின் மனுஷர் விக்கிரகாராதனையை தொடர்ந்து செய்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை எச்சரிக்கிறார். ஏற்கெனவே அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் எகிப்து தேசத்திற்கு குடியேற வந்திருக்கிறார்கள். எகிப்து தேசம் விக்கிரகாராதனை நிரம்பிய தேசம். சோதனைகள் நிரம்பிய எகிப்து தேசத்திற்கு யூதர்கள் வரக்கூடாது என்று கர்த்தர் எச்சரித்தார். ஆனால் அவர்களோ கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல், எகிப்து தேசத்திற்கு வந்து, சோதனைகளில் சிக்கிக் கொள்கிறார்கள்.

நாம் பாவத்தைவிட்டு விலகி ஜீவிக்கவேண்டுமென்றால், பாவம் செய்வதற்கு ஆதரவாகயிருக்கிற சூழ்நிலைகளையும், பாவத்திற்கு துணைபோகும் சூழ்நிலைகளையும் விட்டு விலகிவரவேண்டும். வேண்டுமென்றே பாவத்தின் வலைகளிலும், பாவத்தின் கண்ணிகளிலும் விழுந்து சிக்கிவிடக்கூடாது. கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளையும் மீறி, நாம் பாவமான சூழ்நிலைகளில் பிரவேசிக்கும்போது, கர்த்தர் தம்முடைய நீதியினால் நம்மைவிட்டு விலகிப்போய் விடுகிறார். நம்முடைய பிரச்சனைகளை நாமே சமாளித்துக்கொள்ளுமாறு, நம்மை தனியே விட்டுவிடுகிறார்.

எகிப்து தேசத்திலிருக்கிற யூதாவின் மனுஷர் எல்லோருமே கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்களுடைய பாவங்களில், அவர்களுடைய குடும்பத்தார் எல்லோருமே பங்காளிகளாகயிருக்கிறார்கள். யூதா மனுஷருடைய புருஷரும், ஸ்திரீகளும், பிள்ளைகளும், பால்குடிக்கிற பிள்ளைகளும் ஒன்றுசேர்ந்து கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள்.

"நீங்கள் யூதாவின் ஒருவரையும் உங்களுக்கு மீதியாக வைக்காமல், உங்களில் புருஷனையும் ஸ்திரீயையும் பிள்ளையையும் பால்குடிக்கிற குழந்தையையும் வேரற்றுப்போகப்பண்ணும்படிக்கு, உங்கள் கைகளின் கிரியைகளாலே எனக்குக் கோபமூட்டுகிற பெரியபொல்லாப்பை உங்கள் ஆத்துமாக்களுக்கு விரோதமாகச்செய்கிறீர்கள்" (எரே 44:7) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தால், அவர்களுடைய ஆறுதலும், சமாதானமும் அவர்களைவிட்டு நீங்கிப்போகும். கர்த்தர் அவர்களை வேரற்றுப்போகப்பண்ணுவார். அவர்கள் சகல ஜாதிகளுக்குள்ளும் சாபமும் நிந்தையுமாகயிருப்பார்கள். யூதர்கள், தாங்கள் தங்கியிருக்க வந்த எகிப்து தேசத்திலே அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டினால், கர்த்தர் அவர்களை வேரற்றுப்போகப்பண்ணுவார். எகிப்து தேசத்திலே தங்கியிருக்க வந்த யூதர்கள் எல்லோருமே அழிந்துபோவார்கள்.

யூதருடைய பிதாக்கள், எகிப்து தேசத்திலும், எருசலேமின் வீதிகளிலும் பொல்லாப்புகளைச் செய்தார்கள். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். யூதாவின் ராஜாக்களும், அவர்களுடைய ஸ்திரீகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாப்புகளைச் செய்தார்கள். ராஜாக்களின் ஸ்திரீகளைப்போலவே, யூதாமனுஷரின் ஸ்திரீகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாப்புகளைச் செய்தார்கள். அவர்கள் செய்த பொல்லாப்புகளை கர்த்தர் மறக்கவில்லை. ஆனால் யூதர்கள் அதை மறந்துவிட்டார்களோ என்று நினைத்து, "நீங்கள் செய்த பொல்லாப்புக்களை மறந்துபோனீர்களோ" என்று கர்த்தர் கேட்கிறார் (எரே 44:9).

யூதருடைய முற்பிதாக்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாப்பு செய்ததுபோல, இப்போது, எகிப்து தேசத்திலே தங்கியிருக்க வந்த யூதர்களும் பொல்லாப்பு செய்கிறார்கள். இவர்கள் செய்கிற பெரிய பொல்லாப்புகளை தங்களுடைய ஆத்துமாக்களுக்கு விரோதமாகவே செய்கிறார்கள். கர்த்தர் தங்களுடைய பிதாக்களை தண்டித்ததையும், எகிப்திலே தங்கியிருக்க வந்த யூதர்கள் மறந்துபோனார்கள்.

யூதாவின் ராஜாவும், அவனுடைய ஸ்திரீகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாப்புகளைச் செய்தார்கள். கர்த்தர் அவர்களைத் தண்டித்தார். இராஜஸ்திரீகள் யூதாவின் ராஜாக்களை கர்த்தரைவிட்டு விலகிப்போகச் செய்தார்கள். அவர்களை விக்கிரகங்களுக்கு தூபங்காட்டப்பண்ணினார்கள். சாலொமோனின் மனைவிகள் அவரை விக்கிரகாராதனை செய்யப்பண்ணினார்கள். சாலொமோனின் மனைவிகளில், விசேஷமாக, எகிப்து தேசத்தின் ஸ்திரீகள், சாலொமோனை விக்கிரகாராதனைக்கு நேராக வழிநடத்தினார்கள்.

யூதர்கள் எருசலேமிலே செழிப்பாய் ஜீவித்தார்கள். கர்த்தருடைய ஆசீர்வாதமும், பாதுகாப்பும், பராமரிப்பும் அவர்களுக்கு கிடைத்தது. ஆனால் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக பொல்லாப்பு செய்ததினிமித்தமாய், கர்த்தருடைய ஆசீர்வாதமும், கிருபையும் அவர்களைவிட்டு விலக்கிக்கொள்ளப்பட்டது. எருசலேம் வனாந்தரமும் பாழுமாயிப்போயிற்று. "நீங்கள் செய்த பொல்லாப்புக்களையும், உங்கள் ஸ்திரீகள் செய்த பொல்லாப்புக்களையும் மறந்துபோனீர்களோ" (எரே 44:9) என்று கர்த்தர் யூதர்களிடம் கேட்கிறார்.

எகிப்து தேசத்திலே தங்கியிருக்க வந்த யூதர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்காமல், விக்கிரகாராதனை செய்கிறார்கள். தாங்களும், தங்களுடைய பிதாக்களும் அறியாத தேவர்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை, தம்முடைய தீர்க்கதரிசிகளாகிய ஊழியக்காரர்கள் மூலமாய் எச்சரித்தார். ஆனால் "அவர்கள் இந்நாள்மட்டும் மனம் நொறுங்குண்டதுமில்லை, அவர்கள் பயப்படுகிறதுமில்லை; நான் உங்கள் முன்பாகவும் உங்கள் பிதாக்கள் முன்பாகவும் வைத்த என் வேதத்தின்படியும் என் கட்டளைகளின்படியும் நடக்கிறதுமில்லை" (எரே 44:10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்திலே தங்கியிருக்க வந்த யூதர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து அவருக்கு கோபமூட்டுகிறார்கள். அவர்களுடைய பொல்லாப்புக்கள், அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு விரோதமாகயிருக்கும். இஸ்ரவேலின் தேவன் சேனைகளின் கர்த்தராயிருக்கிறார். யூதாவின் மனுஷரோ கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டி, சேனைகளின் கர்த்தருக்கு எதிர்த்து நிற்கிறார்கள்.

இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் தம்முடைய முகத்தை அவர்களுக்கு விரோதமாகத் திருப்புகிறார். தமக்கு விரோதமாக கலகம்பண்ணுகிற யூதாவின் மனுஷருக்கு தீங்குண்டாகவும், யூதா அனைத்தையும் சங்கரிக்கத்தக்கதாகவும் கர்த்தர் தம்முடைய முகத்தை அவர்களுக்கு விரோதமாகத் திருப்புகிறார் (எரே 44:11).

யூதாவிலே மீந்திருந்த யூதர்கள் எகிப்து தேசத்திற்கு வர தங்கள் முகங்களை திருப்பினார்கள். கர்த்தரோ தம்முடைய முகத்தை அவர்களுக்கு விரோதமாகத் திருப்புகிறார். எகிப்து தேசத்திலே தங்கியிருக்க வந்த யூதர்களை கர்த்தர் வாரிக்கொள்வார். அவர்கள் அனைவரும் எகிப்துதேசத்திலே நிர்மூலமாவார்கள்; அவர்கள் சிறியவன்முதல் பெரியவன் வரைக்கும், பட்டயத்துக்கு இரையாகி பஞ்சத்தாலும் நிர்மூலமாவார்கள்; அவர்கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் செத்து, சாபமும் பாழும்பழிப்பும் நிந்தையுமாவார்கள் (எரே 44:12).

"நான் எருசலேமை தண்டித்தபடி எகிப்துதேசத்திலே குடியிருக்கிறவர்களையும் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளை நோயாலும் தண்டிப்பேன்" (எரே 44:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணியபோது, அவர்களுக்கு இயற்கையான மரணம் வந்தது. எகிப்து தேசத்திலே தங்கியிருக்க வந்த யூதர்களுக்கும் மரணம் வரும். ஆனால் அது இயற்கையான மரணமாயிருக்காது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் வந்த மரணமாயிருக்கும். அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் வரைக்கும் பட்டயத்திற்கு இரையாவார்கள். அவர்கள் எல்லோரும் பஞ்சத்தால் நிர்மூலமாவார்கள்.

யூதர்கள் எகிப்து தேசத்திலே தங்கியிருப்பதற்காக வந்தாலும், அவர்களுடைய ஆத்துமா யூதாதேசத்திற்கு திரும்பிப்போக வேண்டும் என்று வாஞ்சிக்கிறது. எகிப்து தேசத்திலே தங்கியிருக்கிற யூதர்கள் எல்லோருமே யூதாதேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று விரும்பவில்லை. ஆனாலும் எகிப்திலே இருக்கிற யூதர்களில் ஒரு சிலர், யூதாதேசத்திற்கு திரும்பிப்போக வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

யூதாவின் மனுஷர், யூதாதேசத்திலிருந்த போது எகிப்து தேசத்திற்குப்போக வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள்.

"இப்போதும் தங்கியிருப்பதற்கு நீங்கள் போக விரும்புகிற ஸ்தலத்தில்தானே பட்டயத்தாலும் பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவீர்களென்று நிச்சயமாய் அறியுங்கள்" (எரே 42:22).

அவர்கள் எகிப்து தேசத்திலே தங்கியிருக்கும்போதோ, யூதாதேசத்திற்கு திரும்பிப்போகவேண்டுமென்று விரும்புகிறார்கள். எகிப்து தேசத்திற்கு தங்கவந்திருக்கிற யூதர்களால் மறுபடியும் யூதாதேசத்திற்கு திரும்பிப்போகமுடியாது. "எகிப்துதேசத்திலே தங்கவும், மறுபடியும் தங்கள் ஆத்துமா வாஞ்சித்திருக்கிற யூதா தேசத்திலே குடியேறுவதற்கு அங்கே திரும்பிப்போகவும் வேண்டுமென்று இங்கே வந்த மீதியான யூதரிலே மீதியாயிருக்கிறவர்களும் தப்புகிறவர்களுமில்லை; தப்பிப் போகிறவர்களாகிய மற்றவர்களேயொழிய அவர்களில் ஒருவரும் அங்கே திரும்புவதில்லை" (எரே 44:14) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வானராக்கினி
எரே 44:15-19

எரே 44:15. அப்பொழுது தங்கள் ஸ்திரீகள் அந்நியதேவர்களுக்குத் தூபங்காட்டினதாக அறிந்திருந்த எல்லாப் புருஷரும், பெரிய கூட்டமாய் நின்றிருந்த எல்லா ஸ்திரீகளும், எகிப்துதேசத்தில் பத்ரோசிலே குடியிருந்த சகல ஜனங்களும் எரேமியாவுக்குப் பிரதியுத்தரமாக:

எரே 44:16. நீ கர்த்தருடைய நாமத்தில் எங்களுக்குச்சொன்ன வார்த்தையின்படியே நாங்கள் உனக்குச் செவிகொடாமல்,

எரே 44:17. எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின் படியேயும் நாங்கள்செய்து, வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்ப்போம்; நாங்களும், எங்கள் பிதாக்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், யூதா பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் செய்ததுபோலவே செய்வோம்; அப்பொழுது நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம்.

எரே 44:18. நாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டாமலும், அவளுக்குப் பானபலிகளை வார்க்காமலும் போனது முதற்கொண்டு, எல்லாம் எங்களுக்குக் குறைவுபட்டது; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்துபோனோம்.

எரே 44:19. மேலும் நாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்த்தபோது, நாங்கள் எங்கள் புருஷரின் அநுமதியில்லாமல் அவளுக்குப் பணியாரங்களைச் சுட்டு, பானபலிகளை வார்த்து, அவளை நமஸ்கரித்தோமோ? என்றார்கள்.

தேவனுடைய வார்த்தைக்கு எகிப்து தேசத்திலே தங்கியிருக்க வந்த யூதாஜனங்கள் கீழ்ப்படிய மறுக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய வார்த்தையின் வல்லமைக்கு தங்களை கீழ்ப்படுத்தவில்லை. எரேமியா கர்த்தருடைய நாமத்தினால் அவர்களுக்கு வார்த்தைகளைச் சொன்னாலும், அவர்கள் எரேமியாவின் வார்த்தைக்கு செவிகொடாமல் போனார்கள்.

அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டின ஸ்திரீகள், அவர்களுடைய புருஷர்கள் எல்லோருமே கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள். எரேமியா யூதாவின் மனுஷர் மத்தியிலே விக்கிரகாராதனைக்கு விரோதமாகப் பேசுகிறார். அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டுவதினால், அவர்கள்மீது வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைபற்றியும் எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார். எகிப்தில் தங்கியிருக்க வந்த யூதாவின் மனுஷரோ, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பைப்பற்றி அறிந்திருந்தும், கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்க மறுத்துவிடுகிறார்கள்.

யூதாமனுஷருடைய ஸ்திரீகளே அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். ஸ்திரீகள் தங்கள் புருஷருக்குத் தெரியாமல் மறைவாக அந்நிய தேவர்களுக்கு தூபங்காட்டவில்லை. தங்கள் புருஷருக்கு அறிந்தே இந்தப் பாவத்தை செய்கிறார்கள். எரேமியா யூதாவின் மனுஷருக்கு கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தையைச் சொன்னபோது, "தங்கள் ஸ்திரீகள் அந்நியதேவர்களுக்குத் தூபங்காட்டினதாக அறிந்திருந்த எல்லாப் புருஷரும், பெரிய கூட்டமாய் நின்றிருந்த எல்லா ஸ்திரீகளும், எகிப்துதேசத்தில் பத்ரோசிலே குடியிருந்த சகல ஜனங்களும்" எரேமியாவுக்குப் பிரதியுத்தரமாகப் பேசுகிறார்கள் (எரே 44:15).

புருஷர்களைவிட ஸ்திரீகளே விக்கிரகாராதனையில் தங்களை அதிகமாய் ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். புருஷர்கள் இஸ்ரவேலின் தேவனுக்கு சமீபமாகவும், அவர்களுடைய ஸ்திரீகள் கர்த்தரைவிட்டு தூரமாகவும் இருக்கிறார்கள் என்று அவர்களுக்கு மத்தியிலே வித்தியாசமில்லை. ஸ்திரீகளைப்போலவே, அவர்களுடைய புருஷரும் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார்கள். யூதாதேசத்திலே தங்க வந்திருக்கிற, யூதாவின் மனுஷர் பொதுவாக நாஸ்திகர்களாகயிருக்கிறார்கள். அவர்களுக்கு இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்மீதும் நம்பிக்கையில்லை, அந்நிய தெய்வமாகிய வானராக்கினியின்மீதும் நம்பிக்கையில்லை.

யூதாவின் புருஷர் ஆவிக்குரிய காரியங்களுக்கு விலகியே ஜீவிக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆத்துமாக்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மார்க்க உபதேசங்களுக்கு செவிகொடுப்பதேயில்லை. யூதருடைய குடும்பத்தில், புருஷர்கள் ஆசாரியர்களைப்போல இருக்கவேண்டும். தங்கள் குடும்பத்திலுள்ள ஸ்திரீகளுக்கும் பிள்ளைகளுக்கும் தேவனுடைய பிரமாணத்தை உபதேசம்பண்ணவேண்டும். ஆனால் எகிப்து தேசத்திலே தங்க வந்திருக்கிற யூதாவின் புருஷர்களோ, கர்த்தரிடத்தில் பக்தியில்லாதவர்களாயிருக்கிறார்கள். அதனால் தங்கள் ஸ்திரீகள் விக்கிரகங்களை ஆராதனை செய்தாலும், புருஷர்கள் அவர்களைத் தடைபண்ணுவதில்லை. தங்களுடைய இஷ்டம்போல வானராக்கினிக்கு தூபங்காட்ட, புருஷர்கள் தங்கள் ஸ்திரீகளை அனுமதிக்கிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி யூதா மனுஷரிடத்தில் விக்கிரகாராதனையைப்பற்றி கடிந்துசொல்லுகிறார். அவர்களிடத்தில் தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தைகளைப் பேசுகிறார். எரேமியாவின் வார்த்தைகளைக் கேட்ட யூதாவின் ஸ்திரீகளும், புருஷரும் எரேமியாவுக்கு எதிர்த்து பேசுகிறார்கள். தங்கள் புருஷருக்கு தெரியாமல், தாங்கள் விக்கிரகங்களை ஆராதிக்கவில்லை என்று, ஸ்திரீகள் தெளிவுபடுத்துகிறார்கள்.

“நாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்குப்பானபலிகளை வார்த்தபோது, நாங்கள் எங்கள் புருஷரின் அநுமதியில்லாமல் அவளுக்குப் பணியாரங்களைச் சுட்டு, பானபலிகளை வார்த்து, அவளை நமஸ்கரித்தோமோ?” (எரே 44:19) என்று ஸ்திரீகள் எரேமியாவிடம் கேட்கிறார்கள்.

தங்கள் ஸ்திரீகளை விக்கிரகாராதனை செய்ய அனுமதித்ததன் மூலமாய், யூதாவின் புருஷரும் தங்கள் ஸ்திரீகளுடைய பாவத்திற்கு பங்காளிகளாயிருக்கிறார்கள். ஒருவேளை எரேமியா யூதாவின் ஸ்திரீகள்மீது அதிகமான குற்றச் சாட்டுக்களைச் சொல்லியிருக்கலாம். அது அவர்களுடைய மனதை தொட்டிருக்கலாம். புருஷர்களோ தெய்வநம்பிக்கையில்லாத நாஸ்திகர்களாயிருக்கிறார்கள். ஆகையினால் எரேமியாவுக்கு, யூதாவின் ஸ்திரீகளே மறுமொழி சொல்லுகிறார்கள்.

யூதாமனுஷர் எரேமியாவுக்கு பிரதியுத்தரம் சொல்லுவது, அவருக்கு மாத்திரமல்ல, அவர் மூலமாய் கர்த்தருக்கும் பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள். எரேமியா கர்த்தருடைய நாமத்தினால் யூதாவின் மனுஷரோடு பேசுகிறார். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கக் கூடாது என்று தீர்மானமாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவேண்டும் என்னும் சிந்தனையோ, அல்லது கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவேண்டும் என்னும் சிந்தனையோ சிறிதுமில்லை. அவர்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டி, பானபலிகளை வார்க்கவேண்டும் என்று தங்கள் இருதயத்தில் தீர்மானித்திருக்கிறார்கள். அதன்படியே செய்வோம் என்று எரேமியாவினிடத்தில் சொல்லுகிறார்கள்.

வானராக்கினி என்பது சூரியனையோ அல்லது சந்திரனையோ குறிக்கலாம். எகிப்து தேசத்தில் சூரியனை ஆராதிக்கும் வழக்கம் இருந்தது. “அவன் எகிப்துதேசத்தில் இருக்கிற பெத்ஷிமேசின் சிலைகளை உடைத்து, எகிப்தின் தேவர்களுடைய கோவில்களை அக்கினியால் சுட்டுப்போடுவான் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்” (எரே 43:13). பெத்ஷிமேஸ் என்பது சூரியனுக்கு கட்டப்பட்ட கோவில்.

யூதாதேசத்திலும் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைவிட்டு விலகி, சூரியனை ஆராதித்தார்கள். “கர்த்தரின் ஆலயத்திற்குள் போகிற இடந்தொடங்கி, பட்டணத்துக்குப் புறம்பே இருக்கிற நாத்தான்மெலெக் என்னும் பிரதானியின் அறைவீடுமட்டும் யூதாவின் ராஜாக்கள் சூரியனுக்கென்று வைத்திருந்த குதிரைகளை அகற்றி, சூரியனின் இரதங்களை அக்கினியில் சுட்டெரித்தான்” (2இராஜா 23:11).

வானராக்கினி என்னும் வார்த்தை, வானமண்டலத்திலுள்ள எல்லா நட்சத்திரங்களையும் குறிக்கிற பொதுவான வார்த்தை என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

"எனக்கு மனமடிவுண்டாக அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்க்கிறார்கள்; அவர்கள் வானராக்கினிக்குப் பணியாரங்களைச் சுடும்படி பிள்ளைகள் விறகு பொறுக்குகிறார்கள், பிதாக்கள் நெருப்பு மூட்டுகிறார்கள், ஸ்திரீகள் மாப்பிசைகிறார்கள்" (எரே 7:18).

எகிப்து தேசத்திலே தங்க வந்திருக்கிற யூதர்கள் விக்கிரகாராதனையில் பிடிவாதமாயிருக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி, இதற்கு முன்பு கர்த்தருடைய வார்த்தையை அவர்களிடத்தில் சொன்னபோது, "கர்த்தர் உன்னை எங்களிடத்தில் அனுப்பவில்லை" என்று சொன்னார்கள். அவர்கள் அப்போது கர்த்தரை அங்கீகரித்து, எரேமியாவை அங்கீகரியாமல் போனார்கள்.

"ஓசாயாவின் குமாரனாகிய அசரியாவும், கரேயாவின் குமாரனாகிய யோகனானும், அகங்காரிகளான எல்லா மனுஷரும் எரேமியாவை நோக்கி: நீ பொய் சொல்லுகிறாய்; எகிப்திலே தங்கும்படிக்கு அங்கே போகாதிருங்கள் என்று சொல்ல, எங்கள் தேவனாகிய கர்த்தர் உன்னை எங்களிடத்துக்கு அனுப்பவில்லை" (எரே 43:2).

இப்போதோ, எகிப்து தேசத்தில் தங்க வந்திருக்கிற யூதர்கள் எரேமியாவிடம், "நாங்கள் உனக்கு செவிகொடுக்கமாட்டோம்" (எரே 44:16) என்று தீர்மானமாகச் சொல்லுகிறார்கள்.

"எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியேயும் நாங்கள்செய்து, வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்குப் பானபலிகளை வார்ப்போம்; நாங்களும், எங்கள் பிதாக்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், யூதா பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் செய்ததுபோலவே செய்வோம்" (எரே 44:17) என்றும் யூதாவின் மனுஷர் தங்களுடைய தீர்மானத்தைச் சொல்லுகிறார்கள்.

வானராக்கினிக்கு தூபங்காட்டியபோது, தாங்கள் ஆசீர்வாதமாய் வாழ்ந்ததாக சாட்சியும் சொல்லுகிறார்கள். வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்கு பானபலிகளை வார்த்தபொழுது, "நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம்" (எரே 44:17) என்றும் வானராக்கினியை மகிமைப்படுத்தி, எரேமியா தீர்க்கதரிசியினிடத்தில் சாட்சியாக சொல்லுகிறார்கள்.

கர்த்தர் யூதாவின் மனுஷருக்கு விக்கிரகாராதனையை தடைபண்ணியிருக்கிறார். ஆனால் யூதர்களோ, கர்த்தர் தடைபண்ணியிருக்கிற விக்கிரகாராதனையை, தாங்கள் தொடர்ந்து செய்யவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறார்கள். பொதுவாக கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்கள், வரவர மோசம்போவார்கள். அவர்களுடைய இருதயம் கடினப்படும். பாவம் அவர்களை வஞ்சிக்கும்.

யூதர்கள் கர்த்தருக்குப் பயப்படாமல் வானராக்கினியை ஆராதிக்கிறார்கள். ஆரம்பத்தில் கர்த்தருக்கும் பயந்து, வானராக்கினியை ஆராதித்தார்கள். அதன்பின்பு கர்த்தருக்கு பயப்படும் பயம் அவர்களுடைய இருதயத்திலிருந்து நீங்கிப்போயிற்று. இப்போது அவர்களுடைய இருதயத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் சிறிதுமில்லை.

அவர்கள் தங்கள் முழுஇருதயத்தோடும், முழுஆத்துமாவோடும், முழுமனதோடும் வானராக்கினியை ஆராதிக்கிறார்கள். அவளுக்கு தூபங்காட்டி, பானபலிகளை வார்க்கிறார்கள். தங்களுடைய மனதின் இஷ்டப்படி அவர்கள் செய்தாலும், கர்த்தர் முடிவிலே அவர்களை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார்.

"வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி" (பிர 11:9).

தாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டுவதை எகிப்து தேசத்திலே தங்க வந்திருக்கிற யூதர்கள் நியாயப்படுத்துகிறார்கள். அவர்களுடைய பிதாக்களும், அவர்கள் ராஜாக்களும், அவர்கள் பிரபுக்களும் யூதாபட்டணங் களிலும், எருசலேமின் வீதிகளிலும் வானராக்கினிக்கு தூபங்காட்டினார்கள். அவர்கள் செய்ததுபோலவே தாங்களும் செய்வோம் என்று எகிப்து தேசத்திலுள்ள யூதர்கள் சொல்லுகிறார்கள் (எரே 44:17).

தங்களுடைய முன்னோர்கள் விக்கிரகங்களை ஆராதித்தபடியினால், தங்களுக்கும் விக்கிரகங்களை ஆராதிக்க உரிமை உண்டு என்று எகிப்து தேசத்தில் தங்க வந்திருக்கிற யூதர்கள் எரேமியா தீர்க்கதரிசியிடம் வழக்காடுகிறார்கள். இவர்கள் கர்த்தருக்கோ, கர்த்தருடைய தீர்க்கதரிசிகளாகிய ஊழியக்காரர்களுக்கோ கீழ்ப்படியவில்லை. ஆனால் தங்கள் முன்னோர்களுக்கு கீழ்ப்படிகிறார்கள். விக்கிரகங்களை ஆராதிக்கும் அதிகாரம், தங்களுடைய முன்னோர்களிடத்திலிருந்து தங்களுக்கு கிடைத்திருப்பதாக விவாதம்பண்ணுகிறார்கள்.

தாங்கள் செய்கிற பாவத்திற்கு, தங்கள் முன்னோர்கள்மீது பழிசொல்லுகிறார்கள். தங்களுடைய ராஜாக்களும் பிரபுக்களும் விக்கிரகங்களை ஆராதித்தார்கள் என்றும், தாங்களும் விக்கிரகங்களை ஆராதிக்கவேண்டுமென்று, அவர்கள் தங்களுக்கு கட்டளை கொடுத்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

கர்த்தரே இவர்கள்மீது ராஜாக்களை நியமித்தார். யூதாவின் ராஜாக்கள் எல்லோரும் தாவீதின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். யூதாவின் மனுஷராகிய தாங்கள் எல்லோரும் ஒற்றுமையாகவும், ஒருமனதோடும், தங்களுடைய ராஜாக்களுக்கு கீழ்ப்படிந்து, வானராக்கினிக்கு தூபங்காட்டுவதாகச் சொல்லுகிறார்கள்.

எகிப்து தேசத்தில் தங்கியிருக்கிற யூதர்கள் எல்லோரும், எரேமியாவுக்கு முன்பாக பெரியகூட்டமாய் நின்றுகொண்டிருக்கிறார்கள் (எரே 44:15).

தாங்கள் வானராக்கினியை ஆராதிப்பதில் ஒற்றுமையாகயிருப்பதினாலும், தங்களுடைய கூட்டம் பெரிய கூட்டமாகயிருப்பதினாலும், தாங்கள் வானராக்கினியை ஆராதிக்க வேண்டுமென்று தீர்மானித்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள்.

தங்கள் முன்னோர்கள் வானராக்கினியை, இஸ்ரவேல் தேசத்தில், ஏதோ ஒரு மூலையில், யாருக்கும் தெரியாமல் இரகசியமாக ஆராதிக்கவில்லை என்றும், அவர்கள் வெளிப்படையாக, எல்லோருக்கும் தெரியும் வண்ணமாக, பொதுவான இடங்களில் ஆராதித்தார்கள் என்று எகிப்து தேசத்தில் குடிவந்திருக்கிற யூதர்கள் சொல்லுகிறார்கள். "நாங்களும், எங்கள் பிதாக்களும், எங்கள் ராஜாக்களும், எங்கள் பிரபுக்களும், யூதாபட்டணங்களிலும், எருசலேமின் வீதிகளிலும் செய்ததுபோலவே செய்வோம்" (எரே 44:17) என்று சொல்லுகிறார்கள்.

தங்கள் முன்னோர்கள் வெளிப்படையாக, எல்லோரும் பார்க்கும் வண்ணமாக, பிரதியட்சமாக வானராக்கினிக்கு தூபங்காட்டினார்கள். அது ஏதோ ஒரு இருளிலோ அல்லது மறைவான விக்கிரகத்தோப்பிலோ நடைபெற்ற காரியமல்ல. விக்கிரகாராதனை யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் வீதிகளிலும், பிரத்தியட்சமாக நடைபெற்ற சம்பவம் என்று விவாதம்பண்ணுகிறார்கள்.

எருசலேமிலே யூதருடைய ஆலோசனைச்சங்கமுள்ளது. அதுவே அவர்களுக்கு தாய் சபையைப் போன்றது. தங்களுடைய முன்னோர்கள் எருசலேமில் செய்த காரியத்தை, தாங்கள் எகிப்து தேசத்திலே செய்வதாக யூதர்கள் விவாதம்பண்ணுகிறார்கள். எருசலேமிலுள்ள தாய் சபையில் கடைப்பிடிக்கப்பட்ட ஆராதனை முறைமை, எகிப்து தேசத்திலுள்ள கிளை சபையிலும் கடைப்பிடிக்கப்படுகிறது.

வானராக்கினிக்கு தூபங்காட்டியதினால், தங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதம் கிடைத்திருப்பதாகவும் எகிப்து தேசத்திலுள்ள யூதர்கள் சாட்சியாய்ச் சொல்லுகிறார்கள். "நாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம்" என்று யூதர்கள் வானராக்கினியை மகிமைப்படுத்துகிறார்கள்.

யூதர்கள் அப்பத்தினால் திருப்தியாகி ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருப்பது கர்த்தருடைய கிருபை. அது கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு காண்பிக்கும் அநுக்கிரகம். ஆனால் அவர்களோ கர்த்தரை அவருடைய கிருபைக்காக மகிமைப்படுத்தாமல், அந்தக் கிருபை வானராக்கினியிடமிருந்து தங்களுக்கு கிடைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

நன்மை உண்டாகும் என்பதற்காக, பாவம் செய்துகொள்ளலாம் என்பது கர்த்தருடைய பிரமாணமல்ல. கர்த்தருடைய பிள்ளைகள் விக்கிரகாராதனைக்கு விலகியிருக்கவேண்டும். இதுவே கர்த்தருடைய பிரமாணம். அவர்களுக்கு நன்மை வந்தாலும், தீமை வந்தாலும், அவர்கள் கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவேண்டும்.

முன்னோர்களுடைய பாரம்பரியத்திற்கு கீழ்ப்படிவதை, பாவம் செய்வதற்கு காரணமாய்ச் சொல்லக்கூடாது. நாம் மனுஷருடைய பிரமாணத்தின்படி நியாயந்தீர்க்கப்படாமல், கர்த்தருடைய பிரமாணத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுவோம்.

எகிப்து தேசத்தில் தங்க வந்திருக்கிற யூதர்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டுவதினால், தங்களுக்கு நன்மை உண்டாயிருப்பதாகவும், அவளுக்கு தூபங்காட்டாவிட்டால், தங்களுக்கு தீமை உண்டாகும் என்றும் சொல்லுகிறார்கள்.

நாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டாமலும், அவளுக்குப் பானபலி களை வார்க்காமலும் போனதுமுதற்கொண்டு, எல்லாம் எங்களுக்குக் குறைவுபட்டது; பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்து போனோம் (எரே 44:18) என்று சொல்லி, யூதாவிலிருக்கிற யூதர்கள் விக்கிரகாரா தனையை நியாயப்படுத்துகிறார்கள்.

இயேசுகிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப்பட்ட முதலாம் நூற்றாண்டில், விசுவாசிகளுக்கு ஏராளமான துன்பங்களும் உபத்திரவங்களும் உண்டாயிற்று. தம்முடைய விசுவாசிகளை துன்பப்படுத்தியவர்களை கர்த்தர் தண்டித்தார். அவர்களுடைய தேசங்களில் பொதுவான தீமையும், பஞ்சமும், கொள்ளைநோயும் உண்டாயிற்று.

கஷ்டங்களை அனுபவித்த ஜனங்கள், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு தங்கள்மீது வந்திருக்கிறது என்பதை புரிந்துகொள்ளவில்லை. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களை மொத்தமாக அழித்துப்போடாததினால்தான், தங்களுடைய தெய்வங்கள் தங்களை இவ்வாறு தண்டிப்பதாக காரணம் சொன்னார்கள். விசுவாசிகளை சிங்கத்தின் கெபிகளில் தூக்கிப்போட்டு கொன்றுபோடுங்கள், அப்போது தங்கள்மீது வந்திருக்கும் தீங்கு தங்களைவிட்டு நீங்கும் என்றும், தங்களுக்கு நன்மையும் ஆசீர்வாதமும் உண்டாகும் என்றும் சொன்னார்கள்.

எகிப்து தேசத்தில் தங்க வந்திருக்கிற யூதர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தை வானராக்கினியின் ஆசீர்வாதம் என்றும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை வானராக்கினியின் நியாயத்தீர்ப்பு என்றும் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு எல்லாமே வானராக்கினிதான். கர்த்தரை முற்றிலுமாய் மறந்துவிடுகிறார்கள்.

எகிப்து தேசத்தில் தங்க வந்திருக்கிற யூதர்களில், புருஷர்களைவிட, அவர்களுடைய ஸ்திரீகளே, வானராக்கினிக்கு அதிகமாய்த் தூபங்காட்டி, அவளுக்கு அதிகமாய் பானபலிகளை வார்க்கிறார்கள். ஸ்திரீகள் தங்கள் புருஷரின் அனுமதியோடு வானராக்கினியை ஆராதிக்கிறார்கள்.

"நாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்குப்பானபலிகளை வார்த்தபோது, நாங்கள் எங்கள் புருஷரின் அநுமதியில்லாமல் அவளுக்குப் பணியாரங்களைச் சுட்டு, பானபலிகளை வார்த்து, அவளை நமஸ்கரித்தோமோ?" (எரே 44:19) என்று எகிப்து தேசத்திலுள்ள யூதரின் ஸ்திரீகள் எரேமியாவிடம் கேட்கிறார்கள்.

வானராக்கினிக்கு பணியாரங்களை சுடுவதிலும், பானபலிகளை வார்ப்பதிலும், யூதாவின் ஸ்திரீகளுக்கு, அவர்களுடைய புருஷரின் அனுமதியும், உதவியும், ஒத்தாசையும் கிடைத்திருக்கிறது. அவர்கள் எல்லோருமே ஏகமாய் வானராக்கினியை ஆராதித்து, கர்த்தருக்கு விரோதமாய் ஏகமாய்ப் பாவம் செய்கிறார்கள்.

இந்த வாக்கியத்தை யூதருடைய புருஷர்கள் சொல்லியிருக்கலாம் என்றும் வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள். "தங்கள் ஸ்திரீகள் அந்நியதேவர்களுக்குத் தூபங்காட்டினதாக அறிந்திருந்த எல்லாப் புருஷரும், பெரிய கூட்டமாய் நின்றிருந்த எல்லா ஸ்திரீகளும், எகிப்துதேசத்தில் பத்ரோசிலே குடியிருந்த சகல ஜனங்களும் எரேமியாவுக்குப் பிரதியுத்திரம் சொல்லுகிறார்கள்" (எரே 44:15).

"நாங்கள் எங்கள் புருஷரின் அனுமதியில்லாமல் அவளுக்கு பணியாரங்களை சுட்டு, பானபலிகளை வார்த்து, அவளை நமஸ்கரித்தோமா" (எரே 44:19) என்று யூதருடைய புருஷர்களே சொல்லுகிறார்கள். இந்த வாக்கியத்தில் "புருஷர்" என்னும் வார்த்தை யூதருடைய மூப்பர்களையும், பிரபுக்களையும் குறிக்கும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

பணியாரங்களை சுடுவதும், பானபலிகளை வார்ப்பதும் ஸ்திரீகளுடைய வேலை. ஆகையினால் இந்த வாக்கியத்தை எகிப்து தேசத்திலிருக்கிற ஸ்திரீகளே சொன்னார்கள் என்று விளக்கம் சொல்லுவது சிறப்பாகயிருக்கும்.

"எனக்கு மனமடிவுண்டாக அந்நிய தேவர்களுக்குப் பானபலிகளை வார்க்கிறார்கள்; அவர்கள் வானராக்கினிக்குப் பணியாரங்களைச் சுடும்படி பிள்ளைகள் விறகுபொறுக்குகிறார்கள், பிதாக்கள் நெருப்பு மூட்டுகிறார்கள், ஸ்திரீகள் மாப்பிசைகிறார்கள்" (எரே 7:18).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு எரே 44:20-30

எரே 44:20. அப்பொழுது எரேமியா, தனக்கு இப்படிப்பட்ட மறுமொழி கொடுத்த சகல ஜனங்களாகிய ஸ்திரீபுருஷர்களையும் மற்ற யாவரையும் நோக்கி:

எரே 44:21. யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் வீதிகளிலும், நீங்களும் உங்கள் பிதாக்களும் உங்கள் ராஜாக்களும், உங்கள் பிரபுக்களும், தேசத்தின் ஜனங்களும் காட்டின தூபங்களை அல்லவோ கர்த்தர் நினைத்துத் தம்முடைய மனதிலே வைத்துக்கொண்டார்.

எரே 44:22. உங்கள் கிரியைகளின் பொல்லாப்பையும், நீங்கள் செய்த அருவருப்புகளையும், கர்த்தர் அப்புறம் பொறுத்திருக்கக்கூடாதபடியினால் அல்லவோ, உங்கள் தேசம் இந்நாளில் இருக்கிறபடி குடியற்ற அந்தரவெளியும் பாழும் சாபமுமாயிற்று.

எரே 44:23. நீங்கள் தூபங்காட்டி, கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடாமலும், அவருடைய வேதத்துக்கும், அவருடைய கட்டளைகளுக்கும், அவருடைய சாட்சிகளுக்கும் இணங்கி நடவாமலும் போனபடியினாலே இந்நாளில் இருக்கிறபடி இந்தத்தீங்கு உங்களுக்கு நேரிட்டது என்றான்.

எரே 44:24. பின்னும் எரேமியா சகல ஜனங்களையும், சகல ஸ்திரீகளையும் நோக்கி: எகிப்துதேசத்தில் இருக்கிற யூதராகிய நீங்கள் எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

எரே 44:25. இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், வானராக்கினிக்கு தூபங்காட்டவும், அவளுக்குப் பானபலிகளை வார்க்கவும், நாங்கள் நேர்ந்துகொண்ட பொருத்தனைகளை எவ்விதத்திலும் செலுத்துவோமென்று, நீங்களும் உங்கள் ஸ்திரீகளும், உங்கள் வாயினாலேசொல்லி, உங்கள் கைகளினாலே நிறைவேற்றினீர்கள்; நீங்கள் உங்கள் பொருத்தனைகளை ஸ்திரப்படுத்தினது மெய்யே, அவைகளைச் செலுத்தினதும் மெய்யே.

எரே 44:26. ஆகையால், எகிப்துதேசத்தில் குடியிருக்கிற யூதா ஜனங்களாகிய நீங்கள் எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; இதோ, கர்த்தராகிய ஆண்டவருடைய ஜீவனாணை என்று, எகிப்து தேசமெங்கும் ஒரு யூதா மனுஷன் வாயினாலும் இனி என் நாமம் வழங்கப்படுவதில்லையென்று நான் என் மகத்தான நாமத்தைக்கொண்டு ஆணையிடுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 44:27. இதோ, நான் அவர்கள்மேல் நன்மைக்கல்ல தீமைக்கே ஜாக்கிரதையாயிருப்பேன்; எகிப்து தேசத்திலிருக்கிற யூதா மனுஷர் எல்லாரும் ஒழிந்து தீருமளவும் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சங்காரமாவார்கள்.

எரே 44:28. ஆனாலும் பட்டயத்துக்குத் தப்புகிறவர்கள் எகிப்துதேசத்திலிருந்து யூதாதேசத்துக்குக் கொஞ்சம் பேராய்த் திரும்புவார்கள்; அப்படியே எகிப்துதேசத்திலே தங்கியிருக்கவந்த யூதாவில் மீதியான அனைவரும் அக்காலத்திலே தங்களுடைய வார்த்தையோ, என் வார்த்தையோ, யாருடைய வார்த்தை மெய்ப்படும் என்று அறிவார்கள்.

எரே 44:29. நான் இவ்விடத்தில் உங்களை தண்டிப்பேன் என்று உங்களுக்கு விரோதமாய்ச் சொன்ன என் வார்த்தைகள் மெய்ப்படுமென்று நீங்கள் அறிவதற்கு உங்களுக்கு இதுவே அடையாளம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 44:30. இதோ, நான் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவை, அவனுடைய சத்துருவும் அவன் பிராணனை வாங்கத்தேடினவனுமாகிய நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்தது போல, நான் பார்வோன் ஒப்பிரா என்னும் எகிப்தின் ராஜாவையும், அவனுடைய சத்துருக்களின் கையிலும், அவன் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

எரேமியா இதுவரையிலும் கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளை எகிப்து தேசத்தில் குடியிருக்க வந்திருக்கிற யூதர்களிடத்தில் சொன்னார். இப்போது எரேமியா தன்னுடைய மனதில் தோன்றுகிற சில வார்த்தைகளையும் அவர்களுக்கு சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திலிருக்கிற யூதர்கள், தங்களுக்கு அப்பம் குறைவுபட்டதாகவும், தாங்கள் பட்டயத்தாலும், பஞ்சத்தாலும் அழிந்துபோனதாகவும் சொல்லுகிறார்கள். தாங்கள் வானராக்கினிக்கு தூபங் காட்டாமலும், அவளுக்கு பானபலி வார்க்காமலும் போனதே தங்களுக்கு வந்த குறைவுக்கும், தீங்கும் காரணம் என்று எகிப்திலுள்ள யூதர்கள் எரேமியாவிடம் சொல்லுகிறார்கள். எரேமியா அவர்களுடைய வார்த்தைகளை மறுக்கிறார்.

எகிப்து தேசத்தில் தங்க வந்திருக்கிற யூதர்கள், ஏற்கெனவே வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்கு பானபலி வார்த்ததி னாலேயே அவர்களுக்கு அப்பம் குறைவுபட்டது என்றும், அவர்கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்து போனார்கள் என்றும் எரேமியா சொல்லுகிறார். அவர்கள் வானராக் கினிக்கு தூபங்காட்டாமல் போனதினாலோ அல்லது அவளுக்கு பானபலிகளை வார்க்காமல் போனதினாலோ அவர்களுக்கு ஒரு தீங்கும் வரவில்லை என்றும், அதனால் அவர்களுக்கு அப்பம் குறைவுபடவில்லை என்றும், அதனால் அவர்கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்துபோகவில்லை என்றும் எரேமியா எகிப்திலுள்ள யூதர்களுக்கு தெளிவுபடுத்துகிறார்.

இப்போது எகிப்து தேசத்தில் தங்க வந்திருக்கிற யூதர்களின் முன்னோர்களும், இவர்களைப்போல ஏற்கெனவே வானராக் கினிக்கு தூபங்காட்டினார்கள். அவளுக்கு பானபலிகளை வார்த்தார்கள். கர்த்தரோ அவர்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்கள் உடனே தண்டித்துவிடாமல் சிறிதுகாலம் பொறுமையாயிருந்தார். கர்த்தர் பொறுமையாயிருந்த காலத்தில், யூதர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பாமல், கர்த்தருடைய கிருபையையும், அவருடைய பொறுமையையும் அசட்டைபண்ணினார்கள். அக்காலத்தில் தாங்கள் அப்பத்தினால் திருப்தியாகி, ஒருபொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருந்தோம் என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தர் சிறிதுகாலம் மாத்திரமே அவர்களுடைய பொல்லாப்பை பொறுத்துக் கொண்டார். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து பொல்லாப்பு செய்தார்கள். கர்த்தர் அவர்களுடைய கிரியைகளின் பொல்லாப்பையும், அவர்கள் செய்த அருவருப்புக்களையும், அப்புறம் பொறுத்துக்கொள்ளவில்லை. அவரால் அதற்குமேல் அவர்களுடைய பொல்லாப்புகளை பொறுத்துக்கொள்ளக் கூடாமற்போயிற்று. அதன் நிமித்தமாகவே, அவர்களுடைய யூதாதேசம், இந்நாளிலிருக்கிறபடி குடியற்ற அந்தரவெளியும், பாழும் சாபமுமாயிற்று (எரே 44:22).

கர்த்தர் யூதாதேசத்தையும், யூதாவின் மனுஷரையும் தண்டித்தபோது, யூதர்களில் ஒரு சிலர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பினார்கள். சிலருடைய இருதயங்கள் மாத்திரம் புதுப்பிக்கப்பட்டது. ஆனாலும் அவர்களுடைய பழைய மாம்சசுபாவம் அப்படியே மாறாமலிருக்கிறது. அவர்களுடைய இருதயத்தை பாவமும் பொல்லாப்பும் நிரந்தரமாக தங்கியிருக்கிறது.

யூதாவின் மனுஷர் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். கர்த்தர் அவர்களுடைய பாவங்களை தம்முடைய மனதிலே நினைவில் வைத்துக்கொண்டார். யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் வீதிகளிலும், அவர்களும், அவர்கள் பிதாக்களும், அவர்கள் ராஜாக்களும், அவர்கள் பிரபுக்களும், தேசத்தின் ஜனங்களும் காட்டின தூபங்களை அல்லவோ கர்த்தர் நினைத்துத் தம்முடைய மனதிலே வைத்துக்கொண்டார் (எரே 44:21).

எகிப்து தேசத்தில் தங்க வந்திருக்கிற யூதாவின் மனுஷரும், அவர்களுடைய முன்னோர்களும் விக்கிரகங்களை ஆராதனை செய்ததற்காக பெருமைப்படுகிறார்கள். தாங்கள் செய்தது கர்த்தருக்கு விரோதமான பொல்லாப்பு என்பதை புரிந்துகொள்ளாமல், விக்கிராராதனையை மேன்மைப்படுத்துகிறார்கள்.

கர்த்தர் அவர்கள் செய்த அருவருப்புக்களையெல்லாம் மறந்துவிடவில்லை. அவர்களை நியாயந்தீர்க்கிறார். தம்முடைய கோபத்தினால் யூதாதேசத்தை அழித்துப்போடுகிறார். இப்போது யூதர்களுக்கு தீங்கு வந்திருக்கிறது. வானராக்கினிக்கு தூபங்காட்டாததினால் தங்களுக்கு அப்பம் குறைவுபட்டது என்றும், தாங்கள் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் அழிந்துபோவதாகவும் எகிப்திலுள்ள யூதர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டியதினால், அவர்களுக்கு இந்நாளிலிருக்கிறபடி இந்தத்தீங்கு நேரிட்டது என்று எரேமியா சொல்லுகிறார்.

"நீங்கள் தூபங்காட்டி, கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடாமலும், அவருடைய வேதத்துக்கும், அவருடைய கட்டளைகளுக்கும், அவருடைய சாட்சிகளுக்கும் இணங்கி நடவாமலும் போனபடியினாலே இந்நாளில் இருக்கிறபடி இந்தத்தீங்கு உங்களுக்கு நேரிட்டது" (எரே 44:23) என்று எரேமியா சொல்லுகிறார்.

எரேமியா இதுவரையிலும் தன்னுடைய மனதில் பட்ட வார்த்தைகளை எகிப்திலுள்ள யூதாவின் மனுஷருக்கு சொன்னார். இப்போதோ, எரேமியா மறுபடியும், கர்த்தருடைய வார்த்தைகளை அவர்களுக்கு சொல்லுகிறார். எரேமியா சொல்லுகிற வார்த்தைகள் எகிப்து தேசத்திலிருக்கிற யூதராகிய எல்லோருக்கும் பொதுவான வார்த்தைகளாகயிருந்தாலும், அவர் எகிப்திலிருக்கிற சகல ஸ்திரீகளுக்கும் கர்த்தருடைய விசேஷமான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

எகிப்திலிருக்கிற யூதருடைய ஸ்திரீகள், வானராக்கினியை புகழ்ந்து பேசினார்கள். எரேமியா சொன்ன வார்த்தைக்கு ஸ்திரீகள் மறுஉத்தரவு சொன்னார்கள். இப்போது எரேமியா சேனைகளின் கர்த்தராகிய தேவனுடைய வார்த்தைகளை அவர்களுக்கு சொல்லுகிறார். இந்த வார்த்தைகள் கர்த்தர் எகிப்திலிருக்கிற யூதர்களின் வார்த்தைகளுக்கு சொல்லும் மறுமொழியாகும்.

தாங்கள் ஏற்கெனவே செய்து வந்ததுபோல, இனிமேலும் வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்கு பானபலிகளை வார்ப்போம் என்று எகிப்திலுள்ள யூதர்களின் ஸ்திரீகள் சொல்லுகிறார்கள். அவர்கள் தங்களுடைய விக்கிரகாராதனையில் நிலைத்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கும் செவிகொடுக்கவில்லை. அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கும் பொல்லாப்புக்களுக்கும் மனந்திரும்ப மறுக்கிறார்கள்.

இதனால் கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பின் வார்த்தைகள் அவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. கர்த்தர் எகிப்திலுள்ள யூதர்களை தண்டிக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். யூதர்கள் கர்த்தரிடத்தில் சொன்ன அதே வார்த்தைகளை, கர்த்தர் இப்போது அவர்களுக்கு திரும்பவும் சொல்லுகிறார்.

"வானராக்கினிக்கு தூபங்காட்டவும், அவளுக்குப் பானபலிகளை வார்க்கவும், நாங்கள் நேர்ந்துகொண்ட பொருத்தனைகளை எவ்விதத்திலும் செலுத்துவோமென்று, நீங்களும் உங்கள் ஸ்திரீகளும், உங்கள் வாயினாலேசொல்லி, உங்கள் கைகளினாலே நிறைவேற்றினீர்கள்; நீங்கள் உங்கள் பொருத்தனைகளை ஸ்திரப்படுத்தினது மெய்யே, அவைகளைச் செலுத்தினதும் மெய்யே" (எரே 44:25) என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்திலுள்ள யூதர்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டுவது பாவமான செயல். அது கர்த்தருக்கு விரோதமான பொல்லாப்பு. ஆனாலும் அவர்கள் தங்களுடைய பாவத்திலும், பொல்லாப்பிலும் நிலைத்திருக்கப்போவதாக தீர்மானித்திருக்கிறார்கள். தங்களுடைய பாவங்களையும், பொல்லாப்புகளையும் நியாயப்படுத்துகிறார்கள். வானராக்கினிக்கு ஏன் தூபங்காட்டவேண்டும் என்றும், அவளுக்கு ஏன் பானபலிகளை வார்க்கவேண்டும் என்றும் காரணம் சொல்லுகிறார்கள்.

எகிப்து தேசத்தில் குடியிருக்கிற யூதாஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தாலும், "கர்த்தராகிய ஆண்டவருடைய ஜீவனாணை" என்றும் சொல்லுகிறார்கள். தாங்கள் செய்யும் பாவங்களை, தொடர்ந்து செய்யப்போவதாக, கர்த்தராகிய ஆண்டவருடைய நாமத்தினால் ஆணையிடுகிறார்கள். கர்த்தரோ அவர்களுக்கு பிரதியுத்தரமாக, அவர்களைத் தண்டிக்கப்போவதாக, தம்முடைய மகத்தான நாமத்தைக்கொண்டு ஆணையிடுகிறார்.

"எகிப்துதேசத்தில் குடியிருக்கிற யூதா ஜனங்களாகிய நீங்கள் எல்லாரும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்; இதோ, கர்த்தராகிய ஆண்டவருடைய ஜீவனாணை என்று, எகிப்து தேசமெங்கும் ஒரு யூதா மனுஷன் வாயினாலும் இனி என் நாமம் வழங்கப்படுவதில்லையென்று நான் என் மகத்தான நாமத்தைக்கொண்டு ஆணையிடுகிறேன்" (எரே 44:26) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தில் குடியிருக்கிற யூதாஜனங்கள், எகிப்தியரோடு சேர்ந்துகொண்டு, விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். ஆனாலும் எகிப்திலுள்ள யூதர்கள் ஆணையிடும்போது, எகிப்து தேசத்திலுள்ள தெய்வங்களின் பெயரினால் ஆணையிடுவதற்குப் பதிலாக, கர்த்தராகிய ஆண்டவருடைய நாமத்தினால் ஆணையிடுகிறார்கள். "கர்த்தராகிய ஆண்டவருடைய ஜீவனாணை" என்று சொல்லி, தம்முடைய வார்த்தைகளை உறுதிபண்ணுகிறார்கள்.

"கர்த்தராகிய ஆண்டவருடைய ஜீவனாணை" என்னும் வாக்கியத்திற்கு "ஜீவனுள்ள கர்த்தராகிய ஆண்டவருடைய நாமத்தினால் ஆணையிடுகிறேன்" என்று பொருள். அவர்கள் இஸ்ரவேலின் தேவனை ஜீவனுள்ள தேவனாக அங்கீகரிப்பதாக தங்களுடைய வாயினால் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுடைய இருதயத்திலோ வானராக்கினிக்கு தூபங்காட்டுவதும், அவளுக்கு பானபலிகளை வார்ப்பதுமே நிறைந்திருக்கிறது.

தாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டவேண்டுமென்று, ஜீவனுள்ள கர்த்தராகிய ஆண்டவருடைய நாமத்தில் ஆணையிட்டிருப்பதினால், தங்களுடைய ஆணையை நிறைவேற்றவேண்டும் என்று சொல்லி, வானராக்கினிக்கு தூபங்காட்டுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய நாமத்தில் ஆணையிட்டாலும், பாவம் செய்வதற்கு அவர்களுக்கு அனுமதியில்லை. யாரும் கர்த்தருடைய நாமத்தினால் பாவம் செய்ய முடியாது. கர்த்தர் பரிசுத்தர். அவர் பாவத்திற்கு துணைபோகிறவரல்ல.

எகிப்து தேசத்தில் குடியிருக்கிற யூதர்கள், வானராக்கினிக்கு தூபங்காட்ட வேண்டுமென்று, கர்த்தருடைய நாமத்தினால் தாங்கள் ஆணையிட்டிருப்பதினால், வானராக்கினிக்கு தூபங்காட்டுவது தங்களுடைய கடமை என்று விவாதம் பண்ணுகிறார்கள். ஒருவன் கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிடுவதினால், அவன் கர்த்தருடைய நாமத்தினால் அநியாயம் செய்யக்கூடாது. அவன் கர்த்தருக்கு விரோதமான எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது. கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிட்டிருப்பதினால், பாவம் செய்வது தன்னுடைய கடமை என்று ஒருவரும் சொல்லக்கூடாது.

விக்கிரகாராதனை பாவம் என்று கர்த்தர் ஏற்கெனவே தம்முடைய பிரமாணத்தில் சொல்லிவிட்டார். ஆனால் எகிப்து தேசத்தில் குடியிருக்கிற யூதர்களோ, நியாயப்பிரமாணத்தைப் புரட்டுகிறார்கள். கர்த்தருடைய பேரில் ஆணையிடுவதற்கு முக்கியத்துவம் கொடுத்து, விக்கிரகாராதனையை நியாயப்படுத்துகிறார்கள்.

எகிப்து தேசத்தில் குடியிருக்கிற யூதர்கள் மத்தியில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் கொஞ்சம் மாத்திரமே இருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களை மறந்துவிட்டார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்னும் ஆர்வமோ அக்கரையோ அவர்களிடத்தில் இல்லை. அவர்களிடத்தில் இருக்கிற கொஞ்சம் தெய்வபக்தியை வைத்து, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினால் ஆணையிடுகிறார்கள்.

எகிப்து தேசத்தில் குடியிருக்கிற யூதர்கள், இனிமேல் தம்முடைய நாமத்தினால் ஆணையிடுவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். "கர்த்தராகிய ஆண்டவருடைய ஜீவனாணை என்று, எகிப்து தேசமெங்கும் ஒரு யூதா மனுஷன் வாயினாலும் இனி என் நாமம் வழங்கப்படுவதில்லை" *(எரே 44:26)* என்று கர்த்தர் தம்முடைய மகத்தான நாமத்தைக் கொண்டு ஆணையிடுகிறார்.

"அவர்கள்: கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறோம் என்றாலும், பொய்யாணையிடுகிறார்களே" *(எரே 5:2).*

கர்த்தருடைய நாமத்தினால் பொய்யாணையிடுகிறவர்கள், கர்த்தருடைய நாமத்தையே பயன்படுத்தக்கூடாது. எகிப்து தேசத்தில் குடியிருக்கிற யூதர்கள் தங்கள் சொந்த தேசமாகிய யூதாதேசத்தைவிட்டு தூரமாய் வந்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரைவிட்டும் தூரமாய் விலகிப் போகிறார்கள். கர்த்தரும் அவர்களைவிட்டு விலகிப்போகிறார். தம்முடைய நாமத்தை அவர்கள் தங்கள் வாயினால் சொல்லக் கூடாது என்று கர்த்தர் தடைபண்ணி விடுகிறார்.

துணிகரமாய்ப் பாவம் செய்கிறவர்கள்மீது தேவனுடைய கோபம் வரும். கர்த்தர் அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கமாட்டார். நம்முடைய பாவங்களுக்கு நாம் மனம் வருந்தும்போது, கர்த்தர் நமக்கு இரக்கம் காண்பிக்கிற தேவனாயிருப்பார். நம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பாமல், துணிகரமாய்ப் பாவம் செய்யும்போது, கர்த்தர் நமக்கு நீதியுள்ள நியாயாதிபதி யாயிருப்பார். நியாயாதிபதியினிடத்தில் இரக்கத்தையோ, கிருபையையோ எதிர்பார்க்க முடியாது.

தாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டியபோது, தாங்கள் சுகமாய் வாழ்ந்ததாக எகிப்து தேசத்தில் குடியிருக்கிற யூதர்கள் சொல்லுகிறார்கள். தாங்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டாமல் போனபோது தங்களுக்கு தீங்கு வந்ததாகவும் சொல்லுகிறார்கள். தாங்கள் மறுபடியும் வானராக்கினிக்கு தூபங் காட்டினால், தாங்கள் அப்பதினால் திருப்தியாகி, ஒரு பொல்லாப்பையும் காணாமல் வாழ்ந்திருப்போம் என்றும் சொல்லுகிறார்கள்.

எகிப்து தேசத்தில் குடியிருக்கிற, யூதர்கள் வானராக்கினிக்கு தூபங்காட்டி, அவளுக்கு பானபலிகளை வார்ப்பதினால், கர்த்தர் அவர்கள்மேல் நன்மைக்கல்ல, தீமைக்கே ஜாக்கிரதையாயிருக்கிறார். "எகிப்து தேசத்திலிருக்கிற யூதா மனுஷர் எல்லாரும் ஒழிந்து தீருமளவும் பட்டயத்தாலும் பஞ்சத்தாலும் சங்காரமாவார்கள்" (எரே 44:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திலிருக்கிற யூதாமனுஷரில் ஒரு சிலர் மாத்திரம் பட்டயத்திற்கும் பஞ்சத்திற்கும் தப்பித்துக்கொள்வார்கள். அவர்களுடைய எண்ணிக்கை கொஞ்சமாயிருக்கும். பாபிலோன் சிறையிருப்பிலிருந்து, யூதாதேசத்திற்கு திரும்பி வருகிற ஜனங்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எகிப்து தேசத்திலே பட்டயத்திற்கும் பஞ்சத்திற்குத் தப்பினவர்களின் எண்ணிக்கை மிகவும் கொஞ்சமாயிருக்கும். பட்டயத்திற்கு தப்புகிறவர்கள் எகிப்து தேசத்திலிருந்து யூதாதேசத்திற்கு கொஞ்சம் பேராய் திரும்புவார்கள்.

எகிப்து தேசத்திலே தங்கியிருக்க வந்த யூதாவில் மீதியான அனைவரும் தங்களுடைய வார்த்தைகளையும், கர்த்தருடைய வார்த்தைகளையும் ஆராய்ந்து பார்ப்பார்கள். எது உண்மையான வார்த்தை என்பதை தியானித்துப் பார்ப்பார்கள்.

"எகிப்துதேசத்திலே தங்கியிருக்கவந்த யூதாவில் மீதியான அனைவரும் அக்காலத்திலே தங்களுடைய வார்த்தையோ, என் வார்த்தையோ, யாருடைய வார்த்தை மெய்ப்படும் என்று அறிவார்கள்" (எரே 44:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தம்முடைய வார்த்தை மெய்ப்படும் என்பதற்கு கர்த்தர் ஒரு அடையாளத்தையும் சொல்லுகிறார். "நான் இவ்விடத்தில் உங்களை தண்டிப்பேன் என்று உங்களுக்கு விரோதமாய்ச் சொன்ன என் வார்த்தைகள் மெய்ப்படுமென்று நீங்கள் அறிவதற்கு உங்களுக்கு இதுவே அடையாளம்" (எரே 44:29) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இக்காலத்தில் பார்வோன் ஒப்பிரா என்பவன் எகிப்து தேசத்திலே ராஜாவாயிருக்கிறான். கர்த்தர் அவனை, அவனுடைய சத்துருக்களின் கையிலும், அவன் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையிலும் ஒப்புக்கொடுப்பார்.

கர்த்தர் ஏற்கெனவே யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவை, அவனுடைய சத்துருவும் அவன் பிராணனை வாங்கத்தேடினவனுமாகிய நேபுகாத்நேச்சார் என்னும் பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்தார் (எரே 44:30). அதுபோலவே இப்போது எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் ஒப்பிராவை அவனுடைய சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுப்பார். கல்தேயர்கள் யூதாதேசத்தின்மீது யுத்தம்பண்ணுவார்கள். பாபிலோன் ராஜாவும் அவனுடைய சேனையும் எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் ஒப்பிராவை சிறைப்பிடிப்பார்கள். கர்த்தருடைய வார்த்தை நிறைவேறும் என்பதற்கு இவையெல்லாம் அடையாளமாகும்.

45 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசி பாருக்குக்கு கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். கல்தேயர்கள் எருசலேம் நகரத்தை அழித்துப்போட்டார்கள். யூதர்கள் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகப்பட்டார்கள். ஏராளமான யூதர்கள் அந்நிய தேசங்களிலே சிதறிப்போனார்கள். இந்த சரித்திரமெல்லாம் எழுதப்பட்ட பின்பு, எரேமியா பாருக்குக்கு சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகள் எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும் சரித்திரப் பிரகாரமாக, பாருக்குக்கு சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம், எருசலேம் நகரம் அழிவதற்கு முன்பாக சொல்லப்பட்டதாகும். யோயாக்கீம் என்னும் யூதாராஜாவின் நாலாம் வருஷத்திலே எரேமியா பாருக்குக்கு இந்த வசனங்களைச் சொல்லுகிறார்.

எரேமியாவின் புஸ்தக சுருளை வாசித்தபோது பாருக்குக்கு பயமும் மனக்கலக்கமும் உண்டாயிற்று (எரே 45:1-3). கர்த்தர் பாருக்கை பாதுகாப்பதாக வாக்குப்பண்ணுகிறார். பாருக்கின் பயத்தையும் கலக்கத்தையும் போக்குவதற்கு, கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் அவருக்கு உதவியாகயிருக்கிறது (எரே 45:4,5).

பாருக்கே
எரே 45:1-3

எரே 45:1. யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலே நேரியாவின் குமாரனாகிய பாருக் இந்த வசனங்களை எரேமியாவின் வாய் சொல்ல ஒரு புஸ்தகத்தில் எழுதுகையில், எரேமியா தீர்க்கதரிசி அவனிடத்தில் பேசி,

எரே 45:2. பாருக்கே, உன்னைக்குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்,

எரே 45:3. நீ: இப்பொழுது எனக்கு ஐயோ! கர்த்தர் என் நோவைச் சஞ்சலத்தால் வர்த்திக்கப்பண்ணினார், என் தவிப்பினால் இளைத்தேன், இளைப்பாறுதலைக் காணாதேபோனேன் என்று சொன்னாய் என்கிறார்.

எரேமியா சொல்லுகிற தீர்க்கதரிசன வார்த்தைகளை பாருக்கு எழுதி, அதை ஜனங்கள் மத்தியில் வாசிக்கிறார் (எரேமியா 36-ஆவது அதிகாரம்). யோயாக்கீம் ராஜா பாருக்கை கொன்றுபோட தீர்மானிக்கிறார். தேவனுடைய தெய்வீக பாதுகாப்பினால் பாருக்கு யோயாக்கீமுக்கு தப்பித்துக்கொள்கிறார். இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிற சம்பவம், எரேமியா 36-ஆவது அதிகாரத்தோடு தொடர்புடையதாகும்.

பாருக்கு ஜனத்தின் செவிகள்கேட்க புஸ்தகத்திலுள்ளவைகளை வாசிக்கிறார். எரேமியா சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகள் அந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. யூதாவின் பிரபுக்கள் பாருக்கைப்பற்றியும் அவர் வாசித்த செய்தியைப்பற்றியும் யோயாக்கீம் ராஜாவுக்கு சொல்லுகிறார்கள். பாருக்கு என்னும் சம்பிரதியையும் எரேமியா தீர்க்கதரிசியையும் பிடிக்கும்படி யோயாக்கீம் ராஜா தன்னுடைய இராணுவச்சேர்வைக்காரருக்கு கட்டளை கொடுக்கிறான். ஆனாலும் கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்கள் இருவரையும் சத்துருக்களுடைய கண்களுக்கு மறைத்துக்கொள்கிறார் (எரே 36:26).

பாருக்கு ஒரு வாலிபன். அவன் கர்த்தரை உண்மையான இருதயத்தோடு சேவிக்கிறான். கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எரேமியாவுக்கும் பாருக்கு உண்மையுள்ள ஊழியக்காரனாயிருக்கிறான். யோயாக்கீம் ராஜாவின் மூலமாய் தன்னுடைய ஜீவனுக்கு ஆபத்து வருவதைப் பார்த்தபோது, பாருக்கு பயப்படுகிறான். பயத்தினால் அலறுகிறான். "எனக்கு ஐயோ! கர்த்தர் என் நோவைச் சஞ்சலத்தால் வர்த்திக்கப்பண்ணினார், என் தவிப்பினால் இளைத்தேன், இளைப்பாறுதலைக் காணாதேபோனேன்" (எரே 45:3) என்று பயத்தினால் கதறுகிறான்.

யோயாக்கீம் அனுப்பின இராணுவச்சேர்வைக்காரர்கள் பாருக்கைப் பிடிக்க வருகிறார்கள். அவர்களுடைய கைகளில் பிடிபட்டால், யோயாக்கீம் பாருக்கை சிறையிலடைப்பான். அதன் பின்பு அவன் பாருக்கை கொன்றுபோடவும் செய்வான். இதை நினைத்து பாருக்கு மிகவும் வேதனைப்படுகிறான். "கர்த்தர் என் நோவை சஞ்சலத்தால் வர்த்திக்கப்பண்ணுகிறார்" என்று புலம்புகிறான்.

யூதாவின் பட்டணங்களும், எருசலேம் நகரமும் அழிந்துபோகும் என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். எரேமியா சொல்லும் வார்த்தைகளை பாருக்கு ஒரு புஸ்தகத்தில் எழுதுகிறார். அதை பாருக்கு ஜனங்கள் எல்லோரும் கேட்க வாசிக்கிறார். புஸ்தக சுருளில் எழுதப்பட்டிருக்கிற தீர்க்கதரிசன செய்தி, பாருக்கின் மனதை வேதனைப்படுத்துகிறது. இந்த செய்தியை புஸ்தக சுருளில் எழுதியதற்காகவும், ஜனங்களுக்கு முன்பாக வாசித்ததற்காகவும், யோயாக்கீம் ராஜா பாருக்கின்மீது கோபமாயிருக்கிறான். ராஜா பாருக்கை ஒரு குற்றவாளியாகப் பாவித்து, அவனைப் பிடிக்க சொல்லுகிறான்.

தன்னைப் பிடிப்பதற்கு யோயாக்கீம் ராஜா கட்டளை கொடுத்திருப்பதை அறிந்து பாருக்கு பயப்படுகிறான். இருதயத்தின் தவிப்பினால் இளைத்துப்போகிறான். "இளைப்பாறுதலை காணாதே போனேன்" என்று கதறிப் புலம்புகிறான். இந்த பாரம் பாருக்குக்கு மிகுந்த வருத்தத்தையும், வேதனையையும் கொடுக்கிறது. "என் தவிப்பினால் இளைத்தேன், இளைப்பாறுதலை காணாதே போனேன்" என்று பாருக்கு வேதனையோடு சொல்லுகிறான்.

பாருக்கைப்போலவே ஆரம்பகால ஊழியர்களில் அநேகர், சிறிய சோதனைகள் வந்தாலும் சோர்ந்துபோகிறார்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யும்போது சோதனைகள் வரலாம். முதலாவது வருகிற சோதனைகள் மிகவும் வேதனையாயிருக்கும். ஊழியத்தில் இதுவரையிலும் பிரச்சனைகளை சந்தித்திராதவர்கள், முதலாவதாகப் பிரச்சனைகளைச் சந்திக்கும்போது, மிகவும் சோர்ந்துபோவார்கள்.

காலாட்களோடு ஓடும்போதே நாம் இளைத்துப்போவோமென்றால், குதிரை வீரரோடு ஓடுவது மிகவும் சிரமமாயிருக்கும். ஆரம்பகாலத்து ஊழியர்கள் சிறிய பிரச்சனைகள் வந்தாலும், அதை தாங்கிக்கொள்ள முடியாமல் சோர்ந்துபோகிறார்கள். ஊழியத்தில் வளர்ச்சி பெறும்போது, அவர்களுடைய ஊழிய அனுபவமும் வளர்ச்சி பெறுகிறது. அதன் பின்பு அவர்கள் எவ்வளவு பெரிய பிரச்சனைகள் வந்தாலும், கர்த்தர் கொடுக்கும் ஞானத்தினாலும், கிருபையினாலும், அவற்றை நீடிய பொறுமையோடு சந்திப்பார்கள்.

"ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது" (நீதி 24:10). பாருக்கு பாடுகளை அனுபவிக்கும்போது கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும். கர்த்தருக்காக பாடுகளை அனுபவிப்பது நமக்கு கிடைத்திருக்கிற சிலாக்கியம். கர்த்தர் பாருக்கை பாடுகளை அனுபவிக்க பாத்திரவானாக எண்ணி, அவனுக்கு பாடுகள் வர அனுமதித்திருக்கிறார்.

எரேமியா தீர்க்கதரிசியும் பாருக்கோடு கூடயிருக்கிறார். நல்ல காரியத்திற்காக, நல்ல சிநேகிதரோடு பாடுகளை அனுபவிப்பது உத்தமமானது. ஆனால் பாருக்கோ பாடுகளை அனுபவிக்க மிகவும் வேதனைப்பட்டு, கர்த்தர்மீது குற்றம் சொல்லுகிறான். "கர்த்தர் என் நோவே சஞ்சலத்தால் வர்த்திக்கப்பண்ணினார்" என்று தன்னுடைய பாடுகளுக்கு கர்த்தரை காரணமாக்குகிறான்.

நான் கட்டினதையே இடிக்கிறேன்
எரே 45:4

எரே 45:4. இதோ, நான் கட்டினதையே நான் இடிக்கிறேன்; நான் நாட்டினதையே நான் பிடுங்குகிறேன்; இந்த முழுத்தேசத்துக்கும் இப்படியே நடக்கும்.

பாருக்கு பயப்படுவதையும், கலங்குவதையும் பார்த்து எரேமியாவும் தன்னுடைய மனதில் வேதனைப்படுகிறார். பாருக்குக்கு எப்படி ஆறுதல் சொல்லுவது என்று எரேமியாவுக்குத் தெரியவில்லை. பாருக்குக்கு எரேமியாவை ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லலாம். ஆனாலும் கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகள்தான் பாருக்குக்கு மெய்யான ஆறுதலையும், மெய்யான ஆசீர்வாதத்தையும் தரும்.

நம்முடைய வாழ்க்கையில் எல்லாமே நாம் விரும்பியபடி நடக்கவேண்டும் என்று நாம் ஆசைப்படுவோம். சில சமயங்களில் நாம் விரும்பாத காரியங்கள் நமக்கு நடக்கும்போது, நம்மால் அதை பொறுமையோடு சகித்துக்கொள்ள முடியாது. நம்முடைய வாழ்க்கையில் துன்பமும், சோதனையும், வேதனையும் வந்துவிட்டால், நம்மால் அதைத் தாங்கிக்கொள்ளவே முடியாது.

நம்முடைய சரீரத்திற்கு நல்ல ஆரோக்கியத்தையும், குடும்பத்திற்கு அதிகமான சம்பத்துக்களையும் நாம் எதிர்பார்க்கிறோம். உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களை அதிகமாய் விரும்புகிறோம். உலகத்தின் மேன்மைகளையும், உலகத்தின் ஆசீர்வாதங்களையும் அதிகமாய் விரும்புவது கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமானது.

எரேமியாவும் பாருக்கும் யூதாதேசத்தில் ஊழியம் செய்துகொண்டிருக்கும் காலம், யூதருக்கு மிகவும் இக்கட்டான காலமாகும். யூதாதேசம் அழியப்போகிறது. எருசலேம் நகரம் மண்மேடாய்ப்போகப்போகிறது. கப்பலே மூழ்கும்போது, கப்பலிலுள்ள பொருட்கள்மீது ஆசைப்பட்டு ஒரு பிரயோஜனமுமில்லை. யூதாதேசத்திற்கு மொத்தமான அழிவு வரும்போது, பாருக்கு தன்னுடைய சுகவாழ்வை விரும்பக்கூடாது.

கர்த்தர் தாம் கட்டினதையே இடிக்கிறார். கர்த்தரே எருசலேம் நகரத்தைக் கட்டினார். அவரே இப்போது அந்த நகரத்தை இடித்துப்போடுகிறார். கர்த்தரே யூதாதேசத்தில் திராட்சத்தோட்டத்தை நாட்டினார். தாம் நாட்டியதை கர்த்தரே இடித்துப்போடுகிறார்.

தேசத்திற்கு மொத்தமான அழிவு வரும்போது பாருக்கு தனக்கு பெரிய காரியங்களைத் தேடக்கூடாது. பாருக்கு உலகப்பிரகாரமான ஐசுவரியங்களையோ, உலகப்பிரகாரமான மேன்மையையோ நாடக்கூடாது. எல்லோரும் தாழ்ந்திருக்கும்போது, பாருக்கு மாத்திரம், தான் உயர்ந்திருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. யூதாதேசம் முழுவதற்கும் பொதுவாக நடக்கும் சம்பவம், பாருக்குக்கும் நடக்கும். கர்த்தர் தனக்கு மாத்திரம் விசேஷித்த சலுகைகளையும், சிலாக்கியங்களையும் காண்பிப்பார் என்று பாருக்கு எதிர்பார்க்கக்கூடாது.

நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடாதே எரே 45:5

எரே 45:5. நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ? தேடாதே; இதோ, மாம்சமான யாவர்மேலும் தீங்கை வரப்பண்ணுகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆனாலும், நீ போகும் சகல ஸ்தலங்களிலும் உன் பிராணனை உனக்குக் கிடைக்கும்கொள்ளைப் பொருளாகத் தருகிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று அவனுடனே சொல் என்றார்.

பாருக்கு உலகப்பிரகாரமாக பெரியவனாகயிருக்கமாட்டான். ஆனாலும் அவனுடைய பிராணன் பாதுகாப்பாகயிருக்கும். ஒருவன் இந்த உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன்னுடைய ஜீவனை நஷ்டப்படுத்தினால், அவனுக்கு ஒரு லாபமும் இல்லை. கர்த்தர் பாருக்கின் பிராணனை பாதுகாப்பாக வாக்குப்பண்ணுகிறார். "நீ போகும் சகல ஸ்தலங்களிலும் உன் பிராணனை உனக்குக் கிடைக்கும் கொள்ளைப் பொருளாகத் தருகிறேன்" என்று கர்த்தர் பாருக்கைப்பற்றி சொல்லுகிறார்.

பாருக்கு யோயாக்கீம் ராஜாவுக்கு பயந்து, தன் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள, ஒவ்வொரு இடமாக ஓடி ஒளிந்துகொண்டிருக்கிறான். கர்த்தர் பாருக்கின் பிராணனைக் காப்பாற்றுவதாக வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் மாம்சமான யாவர்மேலும் தீங்கை வரப்பண்ணுகிறார். ஆனாலும் பாருக்குக்கு அவனுடைய பிராணனை அவனுக்கு கிடைக்கும் கொள்ளைப்பொருளாக தருகிறார்.

கர்த்தர் யோயாக்கீம் ராஜாவின் கண்களுக்கு எரேமியா தீர்க்கதரிசியை மறைப்பதுபோல, பாருக்கையும் மறைப்பார். பாருக்கு யோயாக்கீமுக்கு தப்பித்துக்கொள்வான். ஒருவேளை பாருக்குக்கும் மரணத்திற்கும் இடையில் தூரம் அதிகமில்லாமலிருக்கலாம். ஆனாலும் கர்த்தர் பாருக்கின் பிராணனை பாதுகாப்பதாக வாக்குப்பண்ணுகிறார்.

பாருக்கின் பிராணன் அவனுக்கு கிடைத்த கொள்ளைப்பொருள் போலிருக்கும். பல ஆபத்துக்களை சந்தித்து, அதிகமாய்க் கஷ்டப்பட்டு கொள்ளைப்பொருளை சம்பாதிப்பார்கள். அதுபோலவே பாருக்கும், தன்னுடைய பிராணனை காப்பாற்றிக்கொள்ள அதிகமாய்க் கஷ்டப்படவேண்டியதிருக்கும். அவன் அநேக ஆபத்துக்கள் வழியாக கடந்து செல்ல வேண்டியதும் வரும். பாருக்கின் பிராணன் அக்கினியில் அகப்பட்டு தப்பித்ததுபோல இருக்கும்.

46 அதிகாரம்

நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும் காலமாயிருக்கிறது. ஆனாலும் அந்த நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலேயே முடிந்துபோவதில்லை. யூதாதேசத்திற்கு அருகாமையிலிருக்கிற தேசங்கள்மீதும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். பாபிலோன் ராஜா மூலமாய் அந்த தேசங்களெல்லாம் அழிந்துபோகும். யூதாவுக்கு அண்டை தேசங்கள்மீது தேவனுடைய தீர்ப்பு வரும் என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். முதலாவது தீர்க்கதரிசனம் எகிப்து தேசத்திற்கு விரோதமாகச் சொல்லப்படுகிறது.

கல்தேயரின் சேனை கர்கேமிசிலே எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் நேபோவின் சேனையை முறியடிப்பார்கள் (எரே 46:1-12). நேபுகாத்நேச்சார் எருசலேமை அழித்து, சில வருஷங்களுக்கு பின்பு எகிப்து தேசத்தையும் அழித்துப்போடுவான் (எரே 46:13-26). எகிப்து தேசத்திற்கு துன்பங்களும் வேதனைகளும் வரும்போது தேவனுடைய இஸ்ரவேலுக்கு எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார் (எரே 46:27,28).

எகிப்தைக்குறித்து கர்த்தருடைய வசனம்
எரே 46:1-11

எரே 46:1. புறஜாதிகளுக்கு விரோதமாய் எரேமியா தீர்க்கதரிசிக்கு உண்டான கர்த்தருடைய வசனம்:

எரே 46:2. எகிப்தைக்குறித்தும், ஐப்பிராத்து நதியண்டையிலே கர்கேமிசிலே இருந்ததும் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலே முறிய அடித்ததுமான பார்வோன்நேகோ என்னப்பட்ட எகிப்து ராஜாவின் ராணுவத்தைக்குறித்தும் அவர் சொல்லுகிறது என்னவென்றால்:

எரே 46:3. கேடகங்களையும் பரிசைகளையும் ஆயத்தம்பண்ணி, யுத்தத்துக்கு வாருங்கள்.

எரே 46:4. குதிரைவீரரே, குதிரைகளின் மேல் சேணங்களை வைத்து ஏறி, தலைச்சீராயை அணிந்துகொண்டு நில்லுங்கள்; ஈட்டிகளைத் துலக்கி, கவசங்களைத் தரித்துக்கொள்ளுங்கள்.

எரே 46:5. அவர்கள் கலங்கி, பின்வாங்குகிறதை நான் காண்கிறதென்ன? சுற்றிலுமுண்டான பயங்கரத்தினிமித்தம் அவர்களுடைய பராக்கிரமசாலிகள் முறியுண்டு, திரும்பிப்பாராமல் ஓட்டமாய் ஓடிப்போகிறார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 46:6. வேகமாய் ஓடுகிறவன் ஓடிப்போகவேண்டாம்; பராக்கிரமசாலி தப்பிப் போகவேண்டாம்; வடக்கே ஐப்பிராத்து நதியண்டையிலே அவர்கள் இடறிவிழுவார்கள்.

எரே 46:7. பிரவாகம்போல் புரண்டுவருகிற இவன் யார்? அலைகள் மோதியடிக்கிற நதிகள்போல் எழும்பிவருகிற இவன் யார்?

எரே 46:8. எகிப்தியனே பிரவாகத்தைப் போல் புரண்டுவருகிறான், அவனே அலைகள் மோதியடிக்கிற நதிகள்போல எழும்பிவருகிறான்; நான் போய், தேசத்தைமூடி, நகரத்தையும் அதில் குடியிருக்கிறவர்களையும் அழிப்பேன் என்றான்.

எரே 46:9. குதிரைகளே, போய் ஏறுங்கள்; இரதங்களே, கடகட என்று ஓடுங்கள்; பராக்கிரமசாலிகளும், கேடகம் பிடிக்கிற எத்தியோப்பியரும், பூத்தியரும், வில்லைப்பிடித்து நாணேற்றுகிற லீதியரும் புறப்படக்கடவர்கள்.

எரே 46:10. ஆனாலும், இது சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரின் நாளும், அவர் தம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிற நாளுமாயிருக்கிறது; ஆகையால், பட்டயம் பட்சித்து, அவர்களுடைய இரத்தத்தால் திருப்தியாகி வெறித்திருக்கும்; வடதேசத்தில் ஐப்பிராத்து நதியண்டையிலே சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவருக்கு ஒரு யாகமும் உண்டு.

எரே 46:11. எகிப்தின் குமாரத்தியாகிய கன்னிகையே, நீ கீலேயாத்துக்குப் போய், பிசின் தைலம் வாங்கு; திரளான அவிழ்தங்களை நீ கூட்டுகிறது விருதா, உனக்கு ஆரோக்கியமுண்டாகாது.

யூதாதேசத்திற்கு அருகாமையில் புறஜாதி தேசத்தார் இருக்கிறார்கள். புறஜாதிகளுக்கு விரோதமாய் கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை எரேமியா தீர்க்கதரிசி மூலமாய் சொல்லுகிறார். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் புறஜாதிகளுக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொன்னார். புதிய ஏற்பாட்டுக்காலத்திலோ, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து புறஜாதிகளுக்கு ஆதரவாக தம்முடைய அன்பான, ஆதரவான வார்த்தைகளைச் சொன்னார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் புறஜாதி ஜனங்கள் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களாகவும், கர்த்தருக்கு தூரமானவர்களாகவும் இருந்தார்கள். புதிய ஏற்பாட்டுக்காலத்திலோ, இரட்சிக்கப்பட்ட புறஜாதி ஜனங்கள் எல்லோரும் கர்த்தருடைய சபையில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். அவர்களும் கர்த்தருடைய காணியாட்சிக்கு உட்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

கர்த்தர் புறஜாதிகளுக்கு விரோதமாகச் சொல்லும்போது, முதலாவதாக எகிப்து தேசத்திற்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். எகிப்து தேசத்தாரே இஸ்ரவேல் ஜனங்களை ஆதிகாலத்திலிருந்தே ஒடுக்கினவர்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை அடிமைப்படுத்தி வைத்திருந்தார்கள். கர்த்தருடைய ஜனத்தாரை எகிப்தியர்கள் வஞ்சித்தார்கள்.

புறஜாதிகளுக்கு விரோதமாய் எரேமியா தீர்க்கதரிசிக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டானபோது, எகிப்து தேசத்திலே பார்வோன் நேகோ என்பவன் ராஜாவாக ஆட்சி செய்கிறான். யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலே, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், பார்வோன் நேகோ என்னப்பட்ட எகிப்து ராஜாவின் இராணுவத்தை முறியடிக்கிறான்.

இந்த சம்பவம் 2இராஜாக்கள் புஸ்தகத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. "எகிப்தின் ராஜா அப்புறம் தன் தேசத்திலிருந்து புறப்பட்டு வரவில்லை; எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதிமட்டும் எகிப்தின் ராஜாவுக்கு இருந்த யாவையும் பாபிலோன் ராஜா பிடித்திருந்தான்" *(2இராஜா 24:7)*.

யோசியாவின் நாட்களில், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்நேகோ அசீரியா ராஜாவுக்கு விரோதமாய் ஐபிராத்து நதிக்கு போகிறபோது ராஜாவாகிய யோசியா அவனுக்கு எதிராகப் புறப்பட்டான்; பார்வோன்நேகோ அவனை மெகிதோவிலே கண்டபோது, அவனைக் கொன்றுபோட்டான் *(2இராஜா 23:29)*.

பார்வோன் நேகோ யூதாவின் ராஜாவாகிய யோசியாவைக் கொன்றுபோட்டதற்காக, கர்த்தர் பார்வோன் நோகோவைப் பழிவாங்குகிறார். எரேமியா தீர்க்கதரிசி பார்வோன் நேகோவுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தைகளை ஆனந்த சந்தோஷத்தோடு சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தில் குதிரைகளும், குதிரைவீரர்களும் மிகவும் பிரபல்யமானவர்கள். அவர்கள் யுத்தத்திற்கு ஆயத்தமாகிறார்கள். தங்களால் யுத்தத்திற்கு எப்படியெல்லாம் ஆஸ்த்தம் பண்ண முடியுமோ, அப்படியெல்லாம் ஆயத்தம்பண்ணுமாறு எரேமியா எகிப்தியருக்கு சொல்லுகிறார்.

"கேடகங்களையும் பரிசைகளையும் ஆயத்தம்பண்ணி, யுத்தத்துக்கு வாருங்கள். குதிரைவீரரே, குதிரைகளின் மேல் சேணங்களை வைத்து ஏறி, தலைச்சீராயை அணிந்துகொண்டு நில்லுங்கள்; ஈட்டிகளைத் துலக்கி, கவசங்களைத் தரித்துக்கொள்ளுங்கள்" (எரே 46:3,4) என்று எரேமியா எகிப்து ராஜாவின் இராணுவத்திற்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தின் இராணுவத்தார் ஏற்கெனவே யுத்தத்திற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். யுத்த ஆயுதங்களும் அவர்களிடத்தில் ஏராளமாயிருக்கிறது. அவையெல்லாம் துலக்கப்பட்டு யுத்தத்திற்கு ஆயத்தமாயிருக்கிறது.

எகிப்து தேசத்தின் இராணுவ வீரர்கள் வெள்ளம் போல பிரவாகித்து வருகிறார்கள். நைல் நதி பிரவாகம்போல் புரண்டு வரும்போது எப்படி வருமோ, அப்படியே எகிப்து தேசத்தின் இராணுவத்தாரும் யுத்தம்பண்ண வருகிறார்கள்.

"பிரவாகம்போல் புரண்டுவருகிற இவன் யார்? அலைகள் மோதியடிக்கிற நதிகள்போல் எழும்பிவருகிற இவன் யார்? எகிப்தியனே பிரவாகத்தைப் போல் புரண்டுவருகிறான், அவனே அலைகள் மோதியடிக்கிற நதிகள்போல எழும்பிவருகிறான்" (எரே 46:7,8) என்று எரேமியா எகிப்தியரைப்பற்றி கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

நைல் நதி பிரவாகம்போல புரண்டு வரும்போது, அதன் கரைகள் உடைந்து, அண்டை தேசங்களுக்கெல்லாம் வெள்ளம் பாய்ந்தோடும். அதுபோலவே எகிப்து தேசத்தாரின் இராணுவமும், வெள்ளம் போல அண்டை தேசத்தின்மீது யுத்தம்பண்ணப்போவார்கள்.

எகிப்தியர்கள் யுத்தத்திற்கு புறப்படும்போதே, தாங்கள் எதிரி தேசத்தாரை அழிப்பதாகவும், தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்றும் ஆர்ப்பரிக்கிறார்கள். "நான் போய், தேசத்தை மூடி, நகரத்தையும் அதில் குடியிருக்கிறவர்களையும் அழிப்பேன்" (எரே 46:8) என்று எகிப்து தேசத்தின் இராணுவத்தார் சொல்லுகிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி எகிப்து தேசத்தாரின் இராணுவத்தை யுத்தத்திற்கு முன்னேறி போகுமாறு சொல்லுகிறார். "குதிரைகளே, போய் ஏறுங்கள்; இரதங்களே, கடகட என்று ஓடுங்கள்; பராக்கிரமசாலிகளும், கேடகம் பிடிக்கிற எத்தியோப்பியரும், பூத்தியரும், வில்லைப்பிடித்து நாணேற்றுகிற லீதியரும் புறப்படக்கடவர்கள்" (எரே 46:9) என்று எரேமியா தீர்க்கதரிசி எகிப்து தேசத்தின் இராணுவத்தாருக்கு கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

தங்களுக்கு எத்தனை குதிரைகள் இருந்தாலும், எத்தனை இரதங்கள் இருந்தாலும் அவையெல்லாவற்றையும் யுத்தத்தில் பயன்படுத்துமாறு எரேமியா எகிப்தியருக்கு சொல்லுகிறார். எகிப்தியரோடு சேர்ந்து எத்தியோப்பியரும், பூத்தியரும், லீதியரும் புறப்படக்கடவர்கள் என்றும் எரேமியா சொல்லுகிறார். எத்தியோப்பியரும் எகிப்தியரும் ஒரே வம்சத்திலிருந்து வந்தவர்கள். "காமுடைய குமாரர், கூஷ், மிஸ்ராயீம், பூத், கானான் என்பவர்கள்" (ஆதி 10:6).

லீதியரும் பூத்தியரும் எகிப்து தேசத்திற்கு அண்டை தேசத்திலுள்ளவர்கள். இவர்கள் எகிப்தியரோடு இராணுவ உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். இவர்கள் ஆப்பிரிக்க தேசத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய தேசம் எகிப்திற்கு மேற்கு திசையிலுள்ளது. எகிப்தியர்கள் தங்கள் இராணுவத்தின் ஒரு துணைப்பிரிவை பூத்தியர் மத்தியிலும் லீதியர் மத்தியிலும் யுத்தத்திற்கு ஆயத்தமாக நிறுத்தியிருக்கிறார்கள்.

எகிப்து தேசத்தாரின் இராணுவ பலமெல்லாம் வீணாய்ப்போகும். அவர்களுடைய குதிரைகளும் இரதங்களும் அவமாய்ப்போகும். எகிப்தியரின் குதிரை வீரரும், பராக்கிரமசாலிகளும் பலனற்றுப் போவார்கள். எகிப்து தேசத்தின் இராணுவத்தாருக்கு தோல்வி உண்டாகும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார். இதனால் எகிப்தியர்கள் தோல்வியடைந்து அவமானப்பட்டுப் போவார்கள்.

"கர்த்தருக்கு விரோதமான ஞானமுமில்லை, புத்தியுமில்லை, ஆலோசனையுமில்லை. குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்" (நீதி 21:30,31).

எகிப்து தேசத்தின் இராணுவத்தார் யுத்தத்திற்குப் புறப்பட்டுப்போகும்போது, தங்களுக்கு யுத்தத்திலே வெற்றி கிடைக்கும் என்னும் நிச்சயத்தோடு போகிறார்கள். மிகுந்த எதிர்பார்ப்போடு முன்னேறிச் செல்லுகிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் பேராசை இருக்கிறது. அவர்களுக்கு கர்த்தரைப்பற்றியும் தெரியாது, கர்த்தருடைய திட்டத்தையும், சித்தத்தையும் பற்றியும் தெரியாது.

"சீயோன் தீட்டுப்படுவாளாக, எங்கள் கண் அவளைக் காண்பதாக என்று சொல்லி, அநேக ஜாதியார் உனக்கு விரோதமாகக் கூடியிருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய நினைவுகளை அறியாமலும், அவருடைய யோசனையை உணராமலும் இருக்கிறார்கள்; அவர் அரிக்கட்டுகளைப் போல அவர்களைக் களத்திலே சேர்ப்பார்" (மீகா 4:11,12).

எகிப்தியர்கள் யுத்தத்திற்கு புறப்பட்டுப்போகும்போதே, "நான் போய், தேசத்தை மூடி, நகரத்தையும் அதில் குடியிருக்கிறவர்களையும் அழிப்பேன்" (எரே 46:8) என்று சொல்லிக்கொண்டு போகிறார்கள்.

தங்களுக்கு விரோதமாக எத்தனை பட்டணங்கள் வந்தாலும், அவையெல்லாவற்றையும் தங்களால் அழித்துப்போட முடியும் என்று எகிப்தின் இராணுவத்தார் சொல்லுகிறார்கள்.

இந்த எகிப்தியரைப்போலவே, அக்காலத்தில் எகிப்தின் ராஜாவாகிய பார்வோன், இஸ்ரவேல் ஜனங்களை பின்தொடர்ந்து, அவர்களைப் பிடிப்பேன் என்று சொன்னான். இஸ்ரவேல் ஜனத்தாரை பார்வோனும் அவனுடைய இரதவீரர்களும் பின்தொடர்ந்தார்கள். செங்கடல் அவர்களை மூடிப்போட்டது. அவர்களெல்லோரும் செங்கடலில் மூழ்கி மாண்டார்கள். கர்த்தருக்கு விரோதமாகவும், அவருடைய ஜனத்திற்கு விரோதமாகவும் தீங்கு செய்ய நினைக்கிறவர்கள் அழிந்துபோவார்கள்.

எகிப்தியர்கள் கர்த்தருடைய நாளில் புறப்பட்டுப்போகிறார்கள். "இது சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரின் நாளும், அவர் தம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிற நாளுமாயிருக்கிறது" (எரே 46:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். தம்முடைய நாளில் கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணி, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவார்.

எகிப்தியர்கள் யுத்தத்திற்கு புறப்பட்டுப்போகும்போது, "நான் போய் தேசத்தை மூடி, நகரத்தையும் அதில் குடியிருக்கிறவர்களையும் அழிப்பேன்" (எரே 46:8) என்று தைரியமாகச் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுடைய இருதயமோ கலங்கியிருக்கிறது. எகிப்தின் இராணுவத்தார் யுத்தம்பண்ண முன்னேறிப்போகாமல் பின்வாங்குகிறார்கள்.

"சுற்றிலுமுண்டான பயங்கரத்தினிமித்தம் அவர்களுடைய பராக்கிரமசாலிகள் முறியுண்டு, திரும்பிப்பாராமல் ஓட்டமாய் ஓடிப்போகிறார்கள்" (எரே 46:5) என்று எகிப்தின் இராணுவத்தினரைப்பற்றி கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்தியர்கள் யுத்தம்பண்ண ஆயத்தமாயிருந்தாலும், அவர்களுடைய இருதயத்தில் யுத்தம்பண்ணும் தைரியமில்லை. அவர்கள் பயத்தினால் கலங்கிப் போயிருக்கிறார்கள். ஆயத்தம் பெரிதாயிருக்கிறது. ஆனால் யுத்தம் பண்ணவோ அவர்களுக்கு பெலனில்லாமலிருக்கிறது. அவர்களெல்லோரும் பராக்கிரமசாலிகளைப்போல தோற்றமளிக்கிறார்கள். ஆனால் உள்ளத்திலோ பயந்து நடுங்குகிறார்கள்.

கல்தேயருடைய சேனை எகிப்தியரின் இராணுவத்தை சுற்றி வளைக்கிறார்கள். அதைப் பார்த்து எகிப்தியர்கள் பயப்படுகிறார்கள். எகிப்தின் இராணுவத்திலுள்ள பராக்கிரமசாலிகள் முறியுண்டு திரும்பிப்பாராமல் ஓட்டமாய் ஓடிப்போகிறார்கள். கோழைகள் யுத்தம்பண்ணாமல் தோற்று ஓடிப்போவதுபோல, எகிப்து தேசத்தின் இராணுவ வீரர்கள் தோற்று ஓடிப்போகிறார்கள்.

எகிப்து தேசத்து இராணுவத்திலுள்ளவர்கள் பராக்கிரமசாலிகள். ஆனால் அவர்கள் கல்தேயரின் இராணுவத்தைப் பார்ப்பதற்கே பயப்படுகிறார்கள். கல்தேயரை திரும்பிப் பாராமல், அவர்களுக்கு பயந்து ஓடுகிறார்கள். எகிப்தின் இராணுவத்தைச் சுற்றிலும் கல்தேயர் மூலமாய் மிகுந்த பயங்கரம் உண்டாயிருக்கிறது.

எகிப்தியர்கள் கல்தேயருக்கு பயந்து திரும்பிப் பாராமல் ஓட்டமாய் ஓடிப்போனாலும், அவர்களால் தப்பிக்க முடியாது. அவர்கள் ஓடும்போது இடறிவிழுவார்கள். அவர்கள் வடக்கே ஐப்பிராத்து நதியண்டையிலே இடறி விழுவார்கள். வடக்கே கல்தேயருடைய தேசம் இருக்கிறது. அவர்கள் தங்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ண வந்திருக்கிற கல்தேயருடைய தேசத்திற்கு அருகாமையிலேயே இடறி விழுந்துவிடுவார்கள். எகிப்தியர்களால் கல்தேயருக்கு தப்பிக்க முடியாது.

"வேகமாய் ஓடுகிறவன் ஓடிப்போகவேண்டாம் பராக்கிரமசாலி தப்பிப்போகவேண்டாம்" (எரே 46:6) என்று கர்த்தர் எகிப்தியருக்குச் சொல்லுகிறார். அவர்கள் மத்தியில் கலக்கமும் குழப்பமும் உண்டாயிருக்கிறது. அவர்கள் கல்தேயரைப் பார்த்து, பயந்து, தோற்று ஓடிப்போகிறார்கள். எகிப்தியர்கள் பயத்தினால், தங்கள் தேசத்திற்கு திரும்பி ஓடிப்போவதற்குப் பதிலாக, கல்தேயரின் தேசத்தை நோக்கி ஓடிப்போகிறார்கள். அங்கே அவர்கள் இடறி விழுகிறார்கள்.

எகிப்து தேசத்தின் இராணுவத்தாருக்கு யுத்தத்திலே அதிகமான காயமுண்டாயிற்று. உயிர்ச்சேதமுண்டாயிற்று. தங்களுக்கு ஏற்பட்ட சேதத்திலிருந்து எகிப்தியரால் மீண்டு வரமுடியவில்லை. "எகிப்தின் குமாரத்தியாகிய கன்னிகையே, நீ கீலேயாத்துக்குப் போய், பிசின் தைலம் வாங்கு; திரளான அவிழ்தங்களை நீ கூட்டுகிறது விருதா, உனக்கு ஆரோக்கியமுண்டாகாது" (எரே 46:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தார் ஆடம்பரமாய் வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு இதுவரையிலும் யுத்தத்திலே தோற்றுப்போய் பழக்கமில்லை. எகிப்து தேசத்தின் பராக்கிரமசாலிகளுக்கு இதுவரையிலும் காயமுண்டானதில்லை. அவர்கள் யுத்தத்திலே தோற்றுப்போய் இடறிவிழுந்ததுமில்லை. ஆனால் இப்போதோ எகிப்து தேசத்தின் இராணுவத்தார் இடறி விழுந்து காயம்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய காயத்தை குணப்படுத்துவதற்கு, கீலேயாத்தின் பிசின் தைலம் உதவியாயிருக்கும் என்று நினைக்கிறார்கள்.

எகிப்து தேசத்தாருக்கு ஏற்பட்டிருக்கிற இழப்புகளை சரிசெய்வதற்கு, அவர்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சிகளெல்லாமே வீணாய்போகும். எகிப்தியருக்கு ஆரோக்கியமுண்டாகாது என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் காயத்தைக் குணப்படுத்துவதற்கு திரளான அவிழ்தங்களை கூட்டுகிறார்கள். ஆனால் அவர்களுடைய முயற்சிகளெல்லாமே விருதா என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்தின் இராணுவத்தார் பலம் மிகுந்தவர்களாயிருந்தார்கள். அவர்களிடத்தில் கேடகங்களும் பரிசைகளும் திரளாயிருந்தது. குதிரைகளும் குதிரைவீரரும் ஏராளமாயிருந்தது. எகிப்தியரால் தங்களுடைய பழைய இராணுவபலத்தை திரும்பப் பெறமுடியாது. மகிமையாயிருந்த எகிப்து தேசம் இப்போது அவமானமான தேசமாகயிருக்கிறது. பலமாயிருந்த எகிப்து தேசம் இப்போது பலவீனப்பட்டுப்போயிற்று.

"ஜாதிகள் உன் இலச்சையைக் கேள்விப்பட்டார்கள்; உன் கூக்குரலால் தேசம் நிறைந்தது; பராக்கிரமசாலியின்மேல் பராக்கிரமசாலி இடறி, இருவரும் ஏகமாய் விழுந்தார்கள்" (எரே 46:12) என்று கர்த்தர் எகிப்து தேசத்தைக் குறித்து சொல்லுகிறார்.

எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் பாழாக்கப்பட்டான் எரே 46:12-26

எரே 46:12. ஜாதிகள் உன் இலச்சையைக் கேள்விப்பட்டார்கள்; உன் கூக்குரலால் தேசம் நிறைந்தது; பராக்கிரமசாலியின்மேல் பராக்கிரமசாலி இடறி, இருவரும் ஏகமாய் விழுந்தார்கள் என்றார்.

எரே 46:13. எகிப்துதேசத்தை அழிக்கப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வருவானென்பதைக்குறித்து, எரேமியா தீர்க்கதரிசியினிடத்தில் கர்த்தர் சொன்ன வசனம்:

எரே 46:14. ஆயத்தப்பட்டு நில், பட்டயம் உன்னைச் சுற்றிலும் உண்டானதைப் பட்சித்துப்போடுகிறதென்று சொல்லி, எகிப்திலே அறிவித்து, மிக்தோலிலே கூறி, நோப்பிலும் தக்பானேசிலும் பிரசித்தம்பண்ணுங்கள்.

எரே 46:15. உன் வீரர் வாரிக்கொள்ளப்படுகிறதென்ன? கர்த்தர் அவர்களைத் தள்ளினதால் அவர்கள் நிலைநிற்கவில்லை.

எரே 46:16. அநேகரை இடறப்பண்ணுகிறார்; அவனவன் தனக்கடுத்தவன்மேல் விழுகிறான்; அவர்கள்: எழுந்திருங்கள், கொல்லுகிற பட்டயத்துக்குத் தப்ப நமது ஜனத்தண்டைக்கும், நாம் பிறந்த தேசத்துக்கும் திரும்பிப்போவோம் என்கிறார்கள்.

எரே 46:17. எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் பாழாக்கப்பட்டான்; அவனுக்குக் குறித்த காலம் முடிந்ததென்று அங்கே சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள்.

எரே 46:18. பர்வதங்களில் தாபோரும், சமுத்திரத்தின் அருகே கர்மேலும் இருக்கிற நிச்சயம்போல் அவன் வருவானென்று சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள ராஜா தம்முடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறார்.

எரே 46:19. எகிப்துதேசவாசியாகிய குமாரத்தியே, சிறையிருப்புக்குப் போகும் பிரயாண சாமான்களை ஆயத்தப்படுத்து, நோப் பாழாகும்; அது குடியில்லாமல் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கும்.

எரே 46:20. எகிப்து மகா நேர்த்தியான கடாரி, அடிக்கிறவன் வடக்கேயிருந்து வருகிறான்.

எரே 46:21. அதின் நடுவில் இருக்கிற அதின் கூலிப்படைகள் கொழுத்த காளைகள் போலிருக்கிறார்கள்; இவர்களும் நிற்காமல், திரும்பிக்கொண்டு ஏகமாய் ஓடிப்போவார்கள்; அவர்கள் விசாரிக்கப்படுகிற அவர்களுடைய ஆபத்துநாள் அவர்கள்மேல் வந்தது.

எரே 46:22. அவன் பாம்பைப்போல் சீறிவருவான், இராணுவபலத்தோடே நடந்து காடுவெட்டிகளைப் போல் கோடரிகளோடு அதின்மேல் வருவார்கள்.

எரே 46:23. எண்ணப்படாத மரங்களாயிருந்தாலும் அந்தக் காட்டை வெட்டுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்கள் வெட்டுக்கிளிகளைப்பார்க்கிலும் அதிகமானவர்கள், அவர்களுக்குத் தொகையில்லை.

எரே 46:24. எகிப்தின் குமாரத்தி கலங்குவாள்; வடதிசை ஜனத்தின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாள்.

எரே 46:25. இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் நோ என்னும் பட்டணத்திலுள்ள திரளான ஜனங்களையும், பார்வோனையும், எகிப்தையும், அதின் தேவர்களையும், அதின் ராஜாக்களையும், பார்வோனையும், அவனை நம்பியிருக்கிறவர்களையும் விசாரித்து,

எரே 46:26. அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களின் கையிலும், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும், அவனுடைய சேவகரின் கையிலும், அவர்களை ஒப்புக்கொடுப்பேன்; அதற்குப்பின்பு அது பூர்வகாலத்தில் இருந்ததுபோல் குடியேற்றப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்திற்கு குழப்பமும் பயங்கரமும் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார். எகிப்து தேசத்தாரால் மற்ற தேசங்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியாது. அவர்களால் மற்ற தேசங்களோடு உடன்படிக்கை செய்யவும் முடியாது. ஆனாலும் எகிப்தியர்கள் மற்ற தேசங்களைவிட பெலமுள்ளவர்களாகவே இருப்பார்கள்.

எகிப்திற்கு அருகாமையிலிருக்கிற மற்ற தேசத்தாராலும், எகிப்து தேசத்தின்மீது யுத்தம்பண்ண முடியாது. எகிப்தியர்கள் தங்கள் இராணுவபெலத்தினால் பெருமையோடிருக்கிறார்கள். தங்கள்மீது யுத்தம்பண்ணி யாராலும் ஜெயிக்க முடியாது என்று ஆணவத்தோடிருக்கிறார்கள்.

எகிப்து தேசத்தை அழிக்க பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் வருவான் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 46:13). பாபிலோன் ராஜாவைப்பற்றிய எச்சரிப்பின் வார்த்தைகள் எகிப்து தேசத்திலே சொல்லப்படும். "பட்டயம் உன்னைச் சுற்றிலும் உண்டானதை பட்சித்துப்போடுகிறது" (எரே 46:14) என்று எகிப்து தேசத்தில் அறிவிக்கப்படும்.

எகிப்து தேசத்தைச் சுற்றிலுமாய் நேபுகாத்நேச்சாரின் பட்டயம் வந்திருக்கிறது. எகிப்தியர்கள் கல்தேயரை சந்திப்பதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். கல்தேயரை வரவேற்க முடியாது. அவர்கள் எகிப்தியருக்கு சத்துருக்களாய் வருகிறார்கள்.

நேபுகாத்நேச்சாரின் பட்டயம் எகிப்திற்கு விரோதமாக வரும்போது, அவர்கள் மற்ற வேலைகளில் கவனம் செலுத்தாமல், ஆயத்தப்பட்டு நிற்கவேண்டும். கல்தேயர்கள் தங்கள் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள் என்னும் செய்தியை, அவர்கள் மிக்தோலிலே கூறி, நோப்பிலும் தக்பானேசிலும் பிரசித்தம்பண்ணவேண்டும்.

எகிப்து தேசத்திலுள்ள மிக்தோலிலும், நோப்பிலும், தக்பானேசிலும் யூதர்கள் வந்து குடியிருக்கிறார்கள். யூதாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் எகிப்து தேசத்திலே குடியேற வந்திருக்கிறார்கள்.

"எகிப்து தேசத்தில் குடியேறி, மிக்தோலிலும், தக்பானேசிலும், நோப்பிலும், பத்ரோஸ் சீமையிலும் வாசமான எல்லா யூதரையுங்குறித்து, எரேமியாவுக்கு உண்டான வசனம்" (எரே 44:1).

எகிப்து தேசத்திலே குடியேற வந்திருக்கிற யூதர்களுக்கு மறுபடியும் கர்த்தருடைய வார்த்தை அறிவிக்கப்படுகிறது. அவர்கள் முறிந்த நாணலை நம்பி எகிப்திற்கு வந்திருக்கிறார்கள். எகிப்து தேசத்தாரால் தங்களுக்கு ஆதரவையோ, பாதுகாப்பையோ கொடுக்க முடியாது என்பதை, எகிப்து தேசத்திலே குடியேற வந்திருக்கிற யூதர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

எகிப்து தேசத்தார், தங்கள் தேசத்திற்கு அருகாமையிலுள்ள தேசத்தின் இராணுவத்தினரை, கூலிக்கு அமர்த்தியிருக்கிறார்கள். அவர்கள் எகிப்தியருக்கு உதவியாக வந்து யுத்தம் பண்ணவேண்டும். ஆனால் அவர்களோ, "நேபுகாத்நேச்சார் எகிப்திற்கு விரோதமாக வருகிறான்" என்னும் செய்தியைக்கேட்டு, எகிப்து தேசத்தைவிட்டே சிதறி ஓடிப்போய்விடுகிறார்கள்.

அந்நிய தேசத்து வீரர்களில் சிலர் எகிப்து தேசத்தின் எல்லைப்பகுதியில் காவலுக்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வாரிக்கொள்ளப் படுகிறார்கள். கர்த்தர் அவர்களை தள்ளினதினால், அவர்கள் நிலைநிற்கவில்லை (எரே 46:15). எகிப்து தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிற கல்தேயர்கள், எகிப்தின் எல்லைப்பகுதியிலுள்ள வீரர்களை பட்டயங்களினால் வெட்டுகிறார்கள். பட்டயத்திற்கு தப்பின வீரர்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக்கொள்ள பல இடங்களுக்கும் ஓடிப்போகிறார்கள்.

எகிப்து தேசத்தின் வீரர்கள் எல்லோரும் அவர்களுடைய சத்துருக்களால் வாரிக்கொள்ளப்படுகிறார்கள். அவர்கள் வெள்ளமாய் அடித்துக்கொண்டுபோகிற மழையைப்போலிருக்கிறார்கள். "ஏழைகளை ஒடுக்குகிற தரித்திரன் ஆகாரம் விளையாதபடி வெள்ளமாய் அடித்துக்கொண்டுபோகிற மழையைப் போலிருக்கிறான்" (நீதி 28:3).

எகிப்து தேசத்தாருடைய இராணுவ வீரர்களின் கால்கள், யுத்தக்களத்தில் நிலைத்து நிற்கவில்லை. கர்த்தர் அவர்களை தள்ளுகிறார். ஆகையினால் அவர்களால் நிலை நிற்கமுடியவில்லை. எகிப்து தேசத்தின் வீரர்கள் எல்லோரும், தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஸ்தானத்தில் நின்று, தங்களுடைய சத்துருக்களோடு யுத்தம்பண்ணவேண்டும். கர்த்தரோ எகிப்தியரை தள்ளிவிடுகிறார். ஆகையினால் அவர்களால் தங்கள் ஸ்தானத்தில் நிற்கமுடியவில்லை. கல்தேயருக்கு பயந்து ஓட்டமாய் ஓடுகிறார்கள். கல்தேயர்கள் எகிப்தியரைப் பிடிக்க, அவர்களைப் பின்தொடர்ந்து ஓடுகிறார்கள்.

கர்த்தர் எகிப்தியருடைய வீரர்களில் அநேகரை இடறப்பண்ணுகிறார். இதனால் எகிப்தின் வீரர்கள், தனக்கடுத்தவன்மேல் விழுகிறார்கள். அவர்கள்: "எழுந்திருங்கள், கொல்லுகிற பட்டயத்துக்குத் தப்ப நமது ஜனத்தண்டைக்கும், நாம் பிறந்த தேசத்துக்கும் திரும்பிப்போவோம்" (எரே 46:16) என்கிறார்கள்.

கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், எகிப்தியர்கள் கல்தேயரோடு யுத்தம்பண்ண முடியாமல் தோற்று ஓடிப்போகிறார்கள். எகிப்தியர் ஓடும்போது, ஒருவர்மேல் ஒருவர் விழுந்து ஓடுகிறார்கள். தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போவோம் என்று சொல்லிக்கொண்டே எகிப்தியர்கள் ஓடுகிறார்கள். அவர்களால் கல்தேயருக்கு விரோதமாய் நின்று யுத்தம்பண்ண முடியவில்லை.

எகிப்தியர்களால் கூலிக்கு அமர்த்தப்பட்ட கூலிப்படைகள், கொழுத்த காளைகளைப்போல இருக்கிறார்கள். இவர்களும் நிற்காமல், திரும்பிக்கொண்டு ஏகமாய் ஓடிப்போகிறார்கள். இவர்களுடைய சரீரம் பார்வைக்கு பராக்கிரமமுள்ளதாயிருக்கிறது. இவர்களோ கூலிப்படையினர். பணத்திற்காக சண்டைபோடுகிறவர்கள். இவர்கள் பேராசை பிடித்தவர்கள். யுத்தத்தில் ஜெயித்தால், தோற்றுப்போனவர்களுடைய பொக்கிஷங்களைக் கொள்ளையிடுகிறவர்கள். ஆனால் இப்போதோ கூலிப்படையினரும் தோற்று ஓடிப்போகிறார்கள். சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்குப் பதிலாக, கூலிப்படைகள், திரும்பிக்கொண்டு ஏகமாய் ஓடிப்போகிறார்கள்.

கூலிப்படையைச் சேர்ந்தவர்கள் கல்தேயருக்கு விரோதமாய் யுத்தம் பண்ணாமல், தோற்று ஓடிப்போகும்போது, எகிப்து தேசத்திற்குத் திரும்பிப்போகாமல், தங்கள் ஜனத்தண்டைக்கும், தாங்கள் பிறந்த தேசத்திற்கும் திரும்பிப்போகிறார்கள். கல்தேயரின் பட்டயத்திற்கு தப்பி, தங்கள் சொந்த தேசத்திலே போய் பாதுகாப்பாக ஒளிந்துகொள்ளலாம் என்று நினைக்கிறார்கள்.

கூலிப்படையைச் சேர்ந்தவர்கள் பணத்திற்காக யுத்தம்பண்ணுவார்கள். இவர்களுக்கு யுத்தம்பண்ணவேண்டும் என்னும் ஆர்வம் இருக்காது. இவர்கள் யுத்த ஆயுதங்களை நம்பவுமாட்டார்கள். அதைப் பயன்படுத்தி வீரமாய் யுத்தம்பண்ணவுமாட்டார்கள். தங்களுடைய ஜீவனுக்கு ஆபத்து வரும் என்று தெரிந்தவுடன், கூலிப்படையைச் சேர்ந்தவர்கள் தப்பித்து ஓடிவிடுகிறார்கள்.

கூலிப்படை வீரர்கள் கல்தேயருக்கு பயந்து தப்பித்து ஓடினாலும், இந்த தோல்விக்கு காரணம், தங்களுடைய கோழைத்தனம் என்பதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எகிப்தின் ராஜாவாகிய பார்வோனே யுத்தத்தில் தோல்வி உண்டானதற்கு காரணம் என்று சொல்லுவார்கள். பார்வோன் தங்களுக்கு போதுமான ஆயுதங்களைக் கொடுக்கவில்லை என்றும், தங்களுக்கு சரியான கூலிகளைக் கொடுக்கவில்லை என்றும், ஏதாவது காரணங்களைச் சொல்லி, தங்கள் தேசத்திற்கு ஓடிப்போவார்கள். பார்வோன்மீது குற்றம் சொல்லுவார்கள்.

பார்வோன் கூலிப்படைகளை தன்னுடைய தேசத்தின் எல்லைப்பகுதியில் நிறுத்தி வைத்திருந்தான். அந்நிய தேசத்தார் எகிப்து தேசத்தின்மீது யுத்தம் பண்ண வரும்போது, தன்னுடைய படைகளை எல்லைப்பகுதிக்கு அனுப்பி வைப்பதாக, பார்வோன் கூலிப்படையினருக்கு சொல்லியிருந்தான். ஆனால் தான் சொன்ன பிரகாரமாக, பார்வோனால் தன்னுடைய இராணுவத்தை, தன்னுடைய தேசத்தின் எல்லைப்பகுதிக்கு அனுப்பி வைக்க முடியவில்லை. தங்களுக்கு உதவி வராததினால், எகிப்தின் எல்லைப்பகுதியிலுள்ள கூலிப்படையினர் சோர்ந்துபோகிறார்கள். கல்தேயரை எதிர்க்க முடியாமல் தங்கள் சொந்த தேசங்களுக்கு தோற்று ஓடிப்போகிறார்கள்.

அவர்கள் போகும்போது "எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் பாழாக்கப்பட்டான்; அவனுக்குக் குறித்த காலம் முடிந்தது" (எரே 46:17) என்று அங்கே சத்தமிட்டுச் சொல்லுகிறார்கள். பார்வோன் தன்னுடைய வார்த்தையைக் காப்பாற்றவில்லை. கூலிப்படையினர் அவனுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தைக் கொடுத்திருந்தார்கள். அந்தக் காலத்திற்குள் பார்வோனால் தன்னுடைய இராணுவத்தை, கூலிப்படைக்கு உதவியாக அனுப்ப முடியவில்லை. கூலிப்படையினர் பார்வோனுக்கு குறித்த காலம் முடிந்துவிட்டது. ஆகையினால் அவர்கள் எகிப்தின் எல்லைப்பகுதியில் நின்று, கல்தேயரோடு யுத்தம்பண்ணுவதற்குப் பதிலாக, தங்கள் சொந்த தேசத்திற்கு தோற்று ஓடிப்போகிறார்கள்.

கர்த்தர் கல்தேயருடைய இராணுவலத்தைப்பற்றி இங்கு சொல்லுகிறார். இஸ்ரவேலின் தேவன் சேனைகளின் கர்த்தராயிருக்கிறார். கர்த்தரே ராஜாதி ராஜா. சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள ராஜா, தம்முடைய ஜீவனைக் கொண்டு, கல்தேயரின் வல்லமையைப்பற்றிச் சொல்லுகிறார். "பர்வதங்களில் தாபோரும், சமுத்திரத்தின் அருகே கர்மேலும் இருக்கிற நிச்சயம்போல் கல்தேயர்கள் வருவார்கள்" (எரே 46:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தாபோரும் கர்மேலும் சமுத்திரத்திற்கு அருகாமையிலிருக்கிறது. இரண்டு பர்வதங்களும் சமுத்திரத்திற்கு முன்பாக உயரமாயிருக்கிறது. பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும், எகிப்து தேசத்தின் இராணுவத்திற்கு முன்பாக, தன்னுடைய வல்லமையில் உயர்ந்திருப்பான். அவர்கள் இராணுவபலத்தோடே நடந்து காடுவெட்டிகளைப் போல் கோடரிகளோடு அதின்மேல் வருவார்கள்" (எரே 46:22) என்று கர்த்தர் பாபிலோன் ராஜாவையும், அவனுடைய சேனைகளையும் பற்றிச் சொல்லுகிறார்.

எகிப்தியர்களால் கல்தேயருக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது. எகிப்தியர்கள் எண்ணிக்கையில் அநேகராயிருக்கிறார்கள். அவர்கள் எண்ணப்படாத மரங்களைப்போல ஏராளமானோராயிருக்கிறார்கள். ஆனால் கல்தேயரோ காடு வெட்டிகளைப்போல கோடாரியோடு, அந்த மரங்களின்மேல் வருகிறார்கள். அந்தக் காட்டில் எத்தனை மரங்கள் இருந்தாலும், கல்தேயர்கள் தங்கள் கோடரிகளால், அந்தக் காட்டை வெட்டிவிடுவார்கள் (எரே 46:23).

எகிப்து தேசம் இப்போது செல்வச்செழிப்போடிருக்கிறது. தேசத்திலே ஐசுவரியமும் மிகுதியாயிருக்கிறது. எகிப்து மகாநேர்த்தியான கடாரிபோலிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார். எகிப்தின் நடுவிலிருக்கிற அதின் கூலிப்படைகள் கொழுத்த காளைகள் போலிருக்கிறார்கள். பார்ப்பதற்கு கெம்பீரமாயிருக்கிறார்கள்.

கொழுத்த காளையை வீட்டு வேலைக்கு பயன்படுத்த முடியாது. அது நுகத்தை சுமப்பதற்கு தன்னுடைய கழுத்தை கொடுக்காது. நன்றாக சாப்பிடும். சாப்பிட்டு கொழுத்திருக்கும்.

எகிப்து தேசத்திலிருக்கிற கூலிப்படையினர், கொழுத்த காளைகளைப்போல நன்றாக சாப்பிடுகிறார்கள். ஆனால் அவர்கள் பார்வோனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து, கல்தேயரோடு யுத்தம்பண்ணமாட்டார்கள். கல்தேயர் வருவதைப் பார்த்து கூலிப்படைகள் திரும்பிக்கொண்டு ஏகமாய் ஓடிப்போவார்கள். "அவர்கள் விசாரிக்கப்படுகிற அவர்களுடைய ஆபத்து நாள் அவர்கள்மேல் வந்தது" (எரே 46:21) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"கொழுத்த காளைகள்" என்னும் வார்த்தை எகிப்து தேசத்திலுள்ள "ஆபிஸ்" என்னும் காளை உருவம் கொண்ட விக்கிரகத்தைக் குறிக்கலாம். இது எகிப்தியரின் தெய்வம். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலுள்ள ஆபிசைப்பார்த்து, வனாந்தரத்திலே தங்களுக்கு ஒரு பொன்கன்றுக்குட்டியைச் செய்து, அதை ஆராதித்தார்கள். எகிப்தியர்கள் காளையை ஆராதிப்பதைப் பார்த்து, இஸ்ரவேலர்கள் பொன்கன்றுக்குட்டியை ஆராதித்தார்கள்.

எகிப்து தேசம் ராஜகுமாரத்தியைப் போல அலங்காரமாயிருக்கிறாள். ஆனாலும் கல்தேயர்கள் எகிப்து தேசத்திற்கு விரோதமாக வருவதைப் பார்த்து, எகிப்தின் குமாரத்தி கலங்குவாள். கல்தேயர்கள் எகிப்து தேசத்திற்கு வடதிசையிலிருந்து வருவார்கள். எகிப்தின் குமாரத்தியோ வடதிசை ஜனத்தின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவாள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 46:24).

எகிப்து தேசத்தின் இராணுவத்திலுள்ளவர்கள் பாம்பைப்போல சீறிவருவார்கள். பாம்பின் சத்தம் பிரமாண்டமான சத்தமாகயிருக்காது. அது சீறினாலும், அந்த சத்தம் மெல்லிய சத்தமாகவே இருக்கும். அது பலவீனமான சத்தமாயிருக்கும். எகிப்து தேசத்தின் கூலிப்படைகள் தோற்று ஓடிப்போகும்போது, அவர்களால் சத்தம்போட்டு அலற முடியாது. அவர்கள் பாம்பைப்போல மெதுவாக சீறுவார்கள். பயந்து ஓடுகிற பாம்பைப்போல எகிப்தின் கூலிப்படைகள் ஓடுவார்கள். கல்தேயர்களோ கோடரிகளோடு பாம்பைத் துரத்துவதுபோல, எகிப்தின் கூலிப்படைகளைத் துரத்துவார்கள்.

கல்தேயர்கள் தங்களைத் துன்பப்படுத்தியதையோ, தங்களை பட்டயத்தினால் வெட்டியதையோ, தங்களை வேதனைக்குட்படுத்தியதையோ எகிப்தின் கூலிப்படையால் சத்தம்போட்டு சொல்லமுடியாது. அவர்களுடைய ஜீவனில் பெரும்பகுதி அவர்களைவிட்டு விலகிப்போய்விட்டது. மூச்சுவிடுவதற்குக்கூட அவர்களிடத்தில் பெலனில்லை. மிகவும் பலவீனமாயிருக்கிறார்கள். அதிகமாய்க் காயப்பட்டிருக்கிறார்கள். கூலிப்படைகள் தங்களுடைய வேதனைகளை மிகவும் மென்மையான சத்தத்தில் முறுமுறுக்கிறார்கள். அவர்களால் சத்தம்போட்டு பேசமுடியவில்லை. எகிப்தின் கூலிப்படைகளால் யுத்தவீரர்களைப்போல கெம்பீரமாய் சத்தமிட முடியவில்லை. தரித்திரர்களும் பிச்சைக்காரர்களும், பிச்சையெடுக்கும்போது, கெஞ்சி மன்றாடுவதுபோல, எகிப்தின் கூலிப்படைகள் தங்களுடைய ஜீவனைக் காப்பாற்றிக்கொள்ள, கல்தேயரிடம் கெஞ்சுகிறார்கள்.

கல்தேயரோ எகிப்து தேசத்தின் இராணுவத்தாரையும், அவர்களுடைய கூலிப்படையையும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோவார்கள். "எகிப்துதேசவாசியாகிய குமாரத்தியே, சிறையிருப்புக்குப் போகும் பிரயாண சாமான்களை ஆயத்தப்படுத்து, நோப் பாழாகும்; அது குடியில்லாமல் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கும்" (எரே 46:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எகிப்து தேசத்தின் குமாரத்தி தன்னுடைய தேசத்தில் பாதுகாப்பாகயிருப்பதாக நினைத்தாள். தன்னுடைய தேசத்திற்கு ஒரு ஆபத்தும் வராது என்று நிச்சயமாய் நம்பினாள். ஆனால் எகிப்திற்கு சிறையிருப்பு நியமிக்கப்பட்டிருக்கிறது. எகிப்து தேசவாசியாகிய குமாரத்தி இப்போது ஆடம்பரமான வஸ்திரங்களை அணிந்திருக்கிறாள். ஐசுவரியமுள்ளவளைப் போல தன்னை அழகுபடுத்தியிருக்கிறாள். ஆனால் கல்தேயர்கள், எகிப்து தேசத்தாரின் ஆடம்பரமான வஸ்திரங்களை உரிந்துபோட்டு, அவர்களுக்கு அடிமையின் வஸ்திரத்தை தரிப்பிக்கக்கொடுப்பார்கள்.

எகிப்து தேசத்தாரால் இனிமேல் தங்கள் தேசத்தில் சுகமாய் ஜீவிக்க முடியாது. அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போகவேண்டும். அதற்கு தேவையான பிரயாண சாமான்களை அவர்கள் ஆயத்தம்பண்ணவேண்டும். அலங்கார வஸ்திரங்களுக்குப் பதிலாக, அடிமையின் வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளவேண்டும். சிறையிருப்பின் வேதனைகளையும் கஷ்டங்களையும் தாங்கிக்கொள்ளவேண்டும்.

தங்கள் தேசத்தின் பட்டணங்கள் பாதுகாப்பாயிருக்கும் என்று எகிப்தியர்கள் நினைக்கிறார்கள். "நோப் பாழாகும்; அது குடியில்லாமல் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கும்" (எரே 46:19) என்று கர்த்தர் சொல்லுகிறார். எகிப்தியர்களால் தங்கள் தேசத்தில் பாதுகாப்பாக தங்கியிருக்க முடியாது. தங்கள் வீடுகளையும், பட்டணங்களையும் காலிசெய்துவிட்டு, தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள, ஓடிப்போவதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும். கல்தேயர்கள் நோப் பட்டணத்தையும், எகிப்து தேசத்திலுள்ள மற்ற எல்லா பட்டணங்களையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போடுவார்கள்.

நோப்பிலே ஏராளமான ஜனங்கள் குடியிருக்கிறார்கள். "நதிகள் மத்தியிலிருந்த நோஅம்மோனைப்பார்க்கிலும் நீ சிரேஷ்டமோ? அதைச் சுற்றிலும் தண்ணீர் இருந்தது; சமுத்திரம் அதின் அரணும், சமுத்திரக்கால் அதின் மதிலுமாயிருந்தது" (நாகூ 3:8). நோப் பட்டணம் குடியில்லாமல் சுட்டெரிக்கப்பட்டு கிடக்கும். அவர்கள் கையோடு கைகோர்த்தாலும் அவர்களால் அழிவுக்கு தப்பிக்க முடியாது.

கர்த்தர் எகிப்து தேசத்தையும், எகிப்தின் பட்டணங்களையும், எகிப்தின் ராஜாவாகிய பார்வோனையும் எகிப்து தேசத்தின் தேவர்களையும் அழித்துப்போடுவார். "நான் நோ என்னும் பட்டணத்திலுள்ள திரளான ஜனங்களையும், பார்வோனையும், எகிப்தையும், அதின் தேவர்களையும், அதின் ராஜாக்களையும், பார்வோனையும், அவனை நம்பியிருக்கிறவர்களையும் விசாரிப்பேன்" (எரே 46:25) என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

யூதாதேசத்திலிருந்து எகிப்து தேசத்திற்கு குடியேறின யூதர்கள், எகிப்தையும், எகிப்தின் தேவர்களையும், அதின் ராஜாக்களையும் நம்பினார்கள். அவர்களுடைய நம்பிக்கை வீணாய்ப்போயிற்று. அவர்களை நம்பின யூதர்களை கர்த்தர் விசாரிப்பார். அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர்மீது நம்பிக்கை வையாமல், எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்மீது நம்பிக்கை வைத்தார்கள். கர்த்தர் எகிப்தியரையும், எகிப்தியரை நம்பின யூதரையும், வடதிசை ஜனமாகிய கல்தேயரின் கையில் ஒப்புக்கொடுப்பதாகச் சொல்லுகிறார் (எரே 46:24).

"அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களின் கையிலும், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரின் கையிலும், அவனுடைய சேவகரின் கையிலும், அவர்களை ஒப்புக்கொடுப்பேன்" (எரே 46:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் எகிப்து தேசத்தின் பட்டணங்களை தீயினால் சுட்டெரித்துப்போடுவார்கள். அந்தப் பட்டணங்களெல்லாம் குடியில்லாமல் போகும். கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றின பின்பு, எகிப்து தேசத்தை மறுபடியும் கட்டியெழுப்புவார். "அதற்கு பின்பு எகிப்து தேசம் பூர்வகாலத்திலிருந்ததுபோல் குடியேற்றப்படும்" (எரே 46:26) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

என் தாசனாகிய யாக்கோபே எரே 46:27,28

எரே 46:27. என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே; இஸ்ரவேலே, நீ கலங்காதே; இதோ, நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியை அவர்கள் சிறையிருப்பின் தேசத்திலுமிருந்து விடுவித்து இரட்சிப்பேன்; அப்பொழுது யாக்கோபு திரும்பிவந்து, அமைதியோடும் சாங்கோபாங்கத்தோடும் இருப்பான்; அவனைத் தத்தளிக்கப்பண்ணுவார் இல்லை.

எரே 46:28. என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னுடனே இருக்கிறேன்; உன்னைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்; உன்னையோ நான் நிர்மூலமாக்காமல், உன்னை மட்டாய் தண்டிப்பேன்; ஆனாலும் உன்னை நான் குற்றமில்லாமல் நீங்கலாக விடுவதில்லையென்கிறார்.

தேவனுடைய இஸ்ரவேலுக்கு கர்த்தர் ஆறுதலான வார்த்தைகளையும், சமாதானமான வார்த்தைகளையும் சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலி ருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை மறந்துவிடவில்லை. அவர்கள்மீது இன்னும் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய பிள்ளைகள் சோர்ந்துபோயிருக்கும்போது, கர்த்தர் அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். அவர்களை உற்சாகப்படுத்தும் வண்ணமாய் நன்மையான வாக்குத்தத்தங்களைக் கொடுக்கிறார்.

தேசங்கள் மத்தியிலே தேவனுடைய நியாயத்தீர்ப்பு வந்திருக்கிறது. பூமியில் துன்மார்க்கமாய் ஜீவிக்கிறவர்கள் கர்த்தருடைய நியாயத்தீர்ப்புக்குப் பயப்படவேண்டும். ஆனால் கர்த்தருடைய தாசனாகிய யாக்கோபு, அவருடைய நியாயத்தீர்ப்பை நினைத்து பயப்பட வேண்டியதில்லை. "என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே; இஸ்ரவேலே, நீ கலங்காதே" (எரே 46:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்தை எப்போதும் பயப்படும் ஜனமாகவும், கலங்கும் ஜனமாகவும் வைத்திருக்கமாட்டார். கர்த்தர் தம்முடைய ஜனங்களின் பயத்தையும் கலக்கத்தையும் நீக்கிப்போடுவார். அவர்கள் எங்கேயிருந்தாலும் கர்த்தர் அவர்களை ஒன்றாய்க் கூட்டிச்சேர்ப்பார். "நான் உன்னைத் தூரத்திலும், உன் சந்ததியை அவர்கள் சிறையிருப்பின் தேசத்திலுமிருந்து விடுவித்து இரட்சிப்பேன்" (எரே 46:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் யாக்கோபை விடுவிப்பார். யாக்கோபு தன்னுடைய சுதந்தர தேசத்திற்கு திரும்பி வந்து, அங்கே அமைதியோடும், சாங்கோபாங்கத்தோடும் இருப்பான். அவனைத் தத்தளிக்கப் பண்ணுவார் ஒருவரும் இருக்கமாட்டார்கள். "என் தாசனாகிய யாக்கோபே, நீ பயப்படாதே என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உன்னுடனே இருக்கிறேன்" (எரே 46:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஜனத்திற்கு தீங்கு செய்த எல்லா ஜாதிகளுக்கும் விரோதமாக கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். "உன்னைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்" (எரே 46:28) என்று கர்த்தர் யாக்கோபுக்குச் சொல்லுகிறார்.

யாக்கோபும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறான். ஆனால் கர்த்தரோ யாக்கோபின்மீது கிருபையாய் இரங்கி, அவனை நிர்மூலமாக்காமல், மட்டாய்த் தண்டிக்கிறார். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிறவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும்.

யாக்கோபு பாவம் செய்தாலும், கர்த்தர் அவனை குற்றமில்லாமல் நீங்கலாக விட்டுவிடமாட்டார். அவனையும் தண்டிப்பார். ஆனாலும் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், யாக்கோபை நிர்மூலமாக்கிப்போடாமல் மட்டாய்த் தண்டிப்பார்.

யாக்கோபைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளையும் கர்த்தர் நிர்மூலமாக்குவார். அவர்கள் அழிந்துபோவார்கள். இந்த உலகத்திலுள்ள எல்லா தேசங்களுக்கும், எல்லா ஜாதிகளுக்கும் முடிவு நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட காலங்களில் செழித்திருப்பார்கள். அவர்களுடைய காலங்கள் முடிந்துபோன பின்பு, அவர்கள் அழிந்துபோவார்கள்.

கர்த்தருடைய சபை தேவனுடைய ஆவிக்குரிய இஸ்ரவேலாயிருக்கிறது. பூமியிருக்கும் வரையிலும், இந்தப் பூமியிலே கர்த்தருடைய சபை இருக்கும். கர்த்தருடைய சபை செழித்து வளரும். அது ஒருபோதும் அழிந்துபோவதில்லை.

47 அதிகாரம்

எரேமியா தீர்க்கதரிசி பெலிஸ்தருக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். நேபுகாத்நேச்சார் எகிப்தியரை அழித்துப்போட்டதுபோல, அவன் பெலிஸ்தியரையும் அழித்துப்போடுவான். இந்த அழிவில் தீருவுக்கும் சீதோனுக்கும் பங்கு இருக்கும்.

பெலிஸ்தரை அழிக்கிறவன் வடக்கேயிருந்து வருவான் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 47:1-5). பெலிஸ்தருக்கும் கல்தேயருக்கும் விரோதமான யுத்தம் நீண்டகாலம் நடைபெறும். முடிவில் பெலிஸ்தர்கள் அழிந்துபோவார்கள். பெலிஸ்தருடைய யுத்தமுயற்சிகளெல்லாம் வீணாய்ப்போகும் (எரே 47:6-7).

பெலிஸ்தர் அழிவார்கள் எரே 47:1-7

எரே 47:1. பார்வோன் காத்சாவை அழிக்குமுன்னே, பெலிஸ்தருக்கு விரோதமாய்த் தீர்க்கதரிசியாகிய எரேமியாவுக்கு உண்டான கர்த்தருடைய வசனம்:

எரே 47:2. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, வடக்கேயிருந்து ஜலம் பொங்கி பிரவாகமாகி தேசத்தின்மேலும், அதிலுள்ள எல்லாவற்றின்மேலும், நகரத்தின்மேலும், அதில் குடியிருக்கிறவர்களின்மேலும் புரண்டு ஓடும்; அப்பொழுது மனுஷர் கூக்குரலிட்டு, தேசத்தின் குடிகளெல்லாரும் அலறுவார்கள்.

எரே 47:3. அவர்களுடைய பலத்த குதிரைகளுடைய குளம்புகளின் சத்தத்தையும், அவர்களுடைய இரதங்களின் கடகடப்பையும், அவர்களுடைய உருளைகளின் இரைச்சலையும் கேட்டு, தகப்பன்மார் தங்கள் கை அயர்ந்துபோனதினால் தங்கள் பிள்ளைகளையும் நோக்கிப் பாராதிருப்பார்கள்.

எரே 47:4. பெலிஸ்தரையெல்லாம் பாழாக்கவும், தீருவுக்கும் சீதோனுக்கும் மீதியான சகாயரையெல்லாம் சங்காரம்பண்ணவும் வருகிற நாளிலே இப்படியாகும்; கப்தோர் என்னும் கடற்கரையான தேசத்தாரில் மீதியாகிய பெலிஸ்தரையும் கர்த்தர் பாழக்குவார்.

எரே 47:5. காத்சா மொட்டையடிக்கப்படும்; அவர்களுடைய பள்ளத்தாக்கிலே மீதியாகிய அஸ்கலோன் சங்காரமாகும்; நீ எத்தமட்டுந்தான் உன்னைக் கீறிக்கொள்ளுவாய்.

எரே 47:6. ஆ கர்த்தரின் பட்டயமே, எந்த மட்டும் அமராதிருப்பாய்? உன் உறைக்குள் திரும்பிவந்து, ஓய்ந்து அமர்ந்திரு.

எரே 47:7. அது எப்படி அமர்ந்திருக்கும்? அஸ்கலோனுக்கு விரோதமாகவும் கடல்துறை தேசத்துக்கு விரோதமாகவும் கர்த்தர் அதற்குக் கட்டளைகொடுத்து, அவ்விடங்களுக்கென்று அதைக் குறித்தாரே.

எகிப்தியரை நம்பமுடியாது. அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு சிநேகிதரைப்போல நடித்து, பல சமயங்களில் அவர்களை வஞ்சித்துவிட்டார்கள். பெலிஸ்தரோ ஆரம்பகாலத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரருக்கும், இஸ்ரவேலின் தேவனுக்கும் சத்துருக்களாயிருக்கிறார்கள். பெலிஸ்தர் மிகவும் பயங்கரமானவர்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்திற்கு அருகாமையிலிருப்பது, கர்த்தருடைய ஜனத்திற்கு மிகுந்த ஆபத்தாயிருக்கிறது.

தாவீதின் ஆட்சிக்காலத்தில் பெலிஸ்தர்கள் பலவீனமாயிருந்தார்கள். தாவீது அவர்களை ஒடுக்கி தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். தாவீதின் ஆட்சிக்காலத்திற்கு பின்பு பெலிஸ்தர் மறுபடியும் தலையெடுத்து பெலப்பட்டார்கள்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பல தேசங்கள்மீது யுத்தம்பண்ணி அவர்களை ஜெயித்தான். அவன் யுத்தம்பண்ணிய தேசங்களில் பெலிஸ்தருடைய தேசமும் ஒன்று. கர்த்தர் முன்னறிவித்தபடி பாபிலோன் ராஜா பெலிஸ்தரை சங்காரம்பண்ணினான். அது வரையிலும் பெலிஸ்தர்கள் பெலப்பட்டிருந்தார்கள்.

பார்வோன் காத்சாவை அழிக்கும் முன்னே, கர்த்தர் எரேமியாவுக்கு பெலிஸ்தரைப்பற்றி தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். பார்வோன் காத்சாவை எப்போது அழித்தான் என்பது சரியாகத் தெரியவில்லை. கர்த்தர் பெலிஸ்தரைப்பற்றி தம்முடைய வார்த்தையைச் சொல்லும்போது, பெலிஸ்தர்கள் பெலத்திருக்கிறார்கள். அவர்கள் செழிப்பாயிருக்கிறார்கள். அவர்களுக்கு அழிவு வருவதற்கான அடையாளம் எதுவும் காணப்படவில்லை. ஆனாலும் எரேமியா கர்த்தர் தனக்கு சொன்ன பிரகாரமாக, "பெலிஸ்தருக்கு அழிவு வரும்" என்று தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்.

பெலிஸ்தரை அழிப்பதற்கு வடக்கேயிருந்து சத்துருக்கள் வருவார்கள். "வடக்கேயிருந்து ஜலம் பொங்கி பிரவாகமாகி தேசத்தின்மேலும், அதிலுள்ள எல்லாவற்றின்மேலும், நகரத்தின்மேலும், அதில் குடியிருக்கிறவர்களின்மேலும் புரண்டு ஓடும்" (எரே 47:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தேசத்தில் குளிர்காலமாயிருக்கும் போது, அந்த தேசத்தின்மீது சூறாவளி காற்று வீசுகிறது. அது புயல்காற்றுபோல எல்லாவற்றையும் அடித்துக்கொண்டு போகிறது. கல்தேயருடைய சேனை பெலிஸ்தருடைய தேசத்தின்மீது பெருவெள்ளம்போல பிரவாகித்து வருவார்கள். அப்பொழுது பெலிஸ்தர்கள் கூக்குரலிடுவார்கள். அவர்களுடைய தேசத்தின் குடிகள் எல்லோரும் அலறுவார்கள்.

கல்தேயர்கள் பெலிஸ்தரை முற்றிலுமாய் அழித்துப்போடுவார்கள். அவர்கள் யாரையும் தப்பவிடமாட்டார்கள். இதனால் பெலிஸ்தருடைய தேசத்தின் எல்லா பகுதிகளிலும் கூக்குரலின் சத்தமும், அலறுதலின் சத்தமும் கேட்கும். பெலிஸ்தருடைய தேசத்தில் புலம்பல் சத்தத்தைத் தவிர வேறு சத்தம் எதுவும் கேட்கப்படாது.

கல்தேயர்கள் பெலிஸ்தரை பட்டயத்தால் வெட்டிப்போடுவதற்கு முன்பாக, பெலிஸ்தருடைய தேசத்தில் பலத்த குதிரைகளுடைய குளம்புகளின் சத்தமும், அவர்களுடைய இரதங்களின் கடகடப்பான சத்தமும், அவர்களுடைய உருளைகளின் இரைச்சல் சத்தமும் கேட்கும். இந்த சத்தங்களைக் கேட்டு பெலிஸ்தர்கள் எல்லோரும் பயப்படுவார்கள். சிறியோரும் பெரியோரும் இந்த இரைச்சல் சத்தத்தைக் கேட்டு கலங்கிப்போவார்கள்.

இரதங்களின் சத்தமும், குதிரைகளுடைய குளம்புகளின் சத்தமும் பெலிஸ்தருடைய பெற்றோருக்கு பயத்தைக் கொடுக்கும். அந்த சத்தத்தைக் கேட்டு தகப்பன்மாருடைய கைகள் அயர்ந்துபோகும். பெற்றோர் இயல்பாகவே தங்கள் பிள்ளைகள்மீது பாசமாயிருப்பார்கள். அவர்களுக்கு ஆதரவு கொடுப்பார்கள். ஆனால் தகப்பன்மார் பலத்த குதிரைகளுடைய குளம்புகளின் சத்தத்தைக் கேட்டு, அயர்ந்துபோய், தங்கள் பிள்ளைகளையும் நோக்கிப் பாராதிருப்பார்கள். பெற்றோர் தங்கள் பாதுகாப்பைத் தேடுவார்களேயல்லாமல், தங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்கவேண்டும் என்று நினைக்கமாட்டார்கள். பெற்றோரால் தங்கள் பிள்ளைகளை கல்தேயரிடத்திலிருந்து பாதுகாக்கவும் முடியாது.

கர்த்தரே பெலிஸ்தரை பாழாக்குகிறார். பெலிஸ்தருடைய தேசம் பாழாய்ப்போகும். தீருவும் சீதோனும் பெலனான பட்டணங்கள். அவற்றில் ஐசுவரியம் மிகுதியாயிருக்கிறது. அவர்கள் பெலிஸ்தருக்கு உதவிசெய்வது வழக்கம். இப்போது பெலிஸ்தருக்கு அழிவு வந்திருக்கிறது. பெலிஸ்தர் அழியும்போது, அவர்களுக்கு சகாயராயிருக்கும் தீருவுக்கும் சீதோனுக்கும் அழிவு வரும்.

கர்த்தர் பெலிஸ்தரையெல்லாம் பாழாக்குகிறார். பெலிஸ்தருக்கு உதவிசெய்து சாகாயம்பண்ணுகிற தீருவின் ஜனத்தாரையும், சீதோனின் ஜனத்தாரையும் கர்த்தர் சங்காரம்பண்ணுகிறார்.

கர்த்தர் இங்கு கப்தோர் என்னும் கடற்கரையான தேசத்தாரில் மீதியாகிய பெலிஸ்தரைப்பற்றிச் சொல்லுகிறார். கப்தோர் தேசம் எங்கே உள்ளது என்று தெளிவாகத் தெரியவில்லை. இவர்கள் பெலிஸ்தருக்கு நெருங்கிய உறவின் முறையைச் சேர்ந்தவர்கள்.

"பத்ருசீமையும், பெலிஸ்தரின் சந்ததிக்குத் தலைவனாகிய கஸ்லூகீமையும், கப்தொரீமையும் பெற்றான்" (ஆதி 10:14).

ஒருவேளை கப்தோர் தேசம் அழிந்துபோனபோது, அதிலே மீதியான பெலிஸ்தர்கள், பெலிஸ்தியருடைய பிரதான தேசத்திலே வந்து குடியேற வந்திருக்கலாம்.

கர்த்தர் இங்கு காத்சா, அஸ்கலோன் ஆகிய பட்டணங்களைப்பற்றிச் சொல்லுகிறார். "காத்சா மொட்டையடிக்கப்படும்; அவர்களுடைய பள்ளத்தாக்கிலே மீதியாகிய அஸ்கலோன் சங்காரமாகும்; நீ எந்தமட்டுந்தான் உன்னைக் கீறிக்கொள்ளுவாய்" (எரே 47:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பெலிஸ்தர்கள் மொட்டையடிக்கப்படுவார்கள். பெலிஸ்தர்மீது யுத்தம்பண்ண வந்திருக்கிற கல்தேயர்கள், அவர்களுடைய பொக்கிஷங்களையும், ஆபரணங்களையும் உரிந்துகொள்வார்கள். பெலிஸ்தர்கள் சங்காரமாவார்கள்.

எரேமியா கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாகச் சொல்லும்போது, அழிந்து போகிற ஜனங்கள்மீது பரிதாபப்படுகிறார். "நீ எந்தமட்டுந்தான் உன்னைக் கீறிக்கொள்ளுவாய்" (எரே 47:5) என்று எரேமியா பெலிஸ்தரிடத்தில் கேட்கிறார். மனுஷருக்கு மிகுந்த துக்கமும் வேதனையும் வரும்போது, அவர்கள் தங்களுடைய சரீரங்களைக் கீறிக்கொள்வது வழக்கம்.

பெலிஸ்தருக்கு துன்பம் வந்திருப்பதற்கான காரணத்தையும் எரேமியா தெளிவுபடுத்துகிறார். "ஆ கர்த்தரின் பட்டயமே, எந்த மட்டும் அமராதிருப்பாய்? உன் உறைக்குள் திரும்பிவந்து, ஒய்ந்து அமர்ந்திரு" (எரே 47:6) என்று எரேமியா பெலிஸ்தருக்காகப் பரிந்துபேசுகிறார். கர்த்தர் தம்முடைய பட்டயத்தை திரும்பவும் உறையிலே போடவேண்டும். கர்த்தர் பெலிஸ்தரை பாழாக்கவேண்டும் என்று எரேமியா விரும்புகிறார்.

இப்போது பெலிஸ்தருக்கும் கல்தேயருக்கும் இடையே யுத்தம் நடைபெறுகிறது. இந்த யுத்தம் நீண்டகாலமாக நடைபெறுகிறது. எரேமியா இந்த யுத்தத்தை மனதுருக்கத்தோடு பார்க்கிறார். பெலிஸ்தர்கள் சங்காரமானாலும், எரேமியா அவர்களையும் மனதுருக்கத்தோடு பார்க்கிறார். இந்த யுத்தம் சீக்கிரத்தில் முடிவுபெறவேண்டுமென்று எரேமியா விரும்புகிறார்.

"ஆ கர்த்தரின் பட்டயமே, எந்தமட்டும் அமராதிருப்பாய்" என்று எரேமியா ஆரம்பத்தில் பெலிஸ்தருக்காக பரிந்து பேசினார். இப்போதோ எரேமியா தன்னுடைய கேள்விக்கு தானே பதில் சொல்லுகிறார். "அது எப்படி அமர்ந்திருக்கும்" என்று எரேமியா பிரதியுத்தரமாய்ச் சொல்லுகிறார்.

கர்த்தரே பெலிஸ்தரை அழிக்கிறார். பெலிஸ்தருக்கு சகாயராயிருந்த தீருவையும் சீதோனையும் சங்காரம்பண்ணுகிறார். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. கர்த்தர் அஸ்கலோனுக்கு விரோதமாகவும், கடல்துறை தேசத்திற்கு விரோதமாகவும் கட்டளை கொடுத்திருக்கிறார். இந்தக் கட்டளையை வடதேசமாகிய கல்தேயரின் இராணுவத்தாரிடம் கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் தம்முடைய பட்டயத்தை உருவும்போது, தாம் செய்ய நினைத்த காரியத்தை செய்து முடித்துவிட்டுத்தான், அதை உறைக்குள் வைப்பார். அது வரையிலும் கர்த்தருடைய பட்டயம் தன்னுடைய வேலையைச் செய்யும். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கர்த்தருடைய பட்டயமாயிருக்கிறான். அவன் பெலிஸ்தரையெல்லாம் பாழாக்கிப்போடுவான். காத்சாவை மொட்டையடிப்பான். அஸ்கலோனை சங்காரம்பண்ணுவான்.

கர்த்தருடைய வார்த்தை இருபுறமும் கருக்குள்ள பட்டயமாயிருக்கிறது. பட்டயம் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றுவது போல, கர்த்தருடைய வார்த்தையும் அவருடைய சித்தத்தை நிறைவேற்றும்.

48 அதிகாரம்

ஏசாயா மோவாப் தேசத்தைக் குறித்து கர்த்தருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். மோவாபைக் குறித்து ஏசாயா சொன்ன தீர்க்கதரிசனங்கள் ஏசாயா 15; 16 ஆகிய அதிகாரங்களில் எழுதப்பட்டிருக்கிறது. ஆமோஸ் தீர்க்கதரிசியும் மோவாபைக் குறித்து தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார் (ஆமோ 2:1). அசீரியர்கள் சல்மநேசாரின் கீழ் மோவாபின்மீது யுத்தம்பண்ணியபோது, மோவாபுக்கு சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் நிறைவேறிற்று.

மோவாப் தேசத்திற்கு கல்தேயர் மூலமாய் அழிவு வரும் என்று எரேமியா கர்த்ததருடைய வார்த்தையை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். எருசலேம் அழிந்து ஐந்து வருஷங்களுக்கு பின்பு நேபுசராதான் மோவாப் தேசத்தை அழித்துப்போடுவான்.

மோவாபின் அழிவைப்பற்றிய தீர்க்கதரிசனம் (எரே 48:1-6,8). மோவாபின் அழிவைப்பற்றி எரேமியா மறுபடியும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார் (எரே 48:21-25,34). மோவாபை அழிக்கிறவர்கள் அவர்கள்மீது சடுதியாய் வருவார்கள். மோவாப் செட்டைகளை அடித்து பறந்துபோகுமளவுக்கு அவர்களைத் துரத்துவார்கள் (எரே 48:9).

கல்தேயர்கள் மோவாபியரில் அநேகரை சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டுபோவார்கள் (எரே 48:12,46). மோவாபின் சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக சீக்கிரமாய் வருவார்கள் (எரே 48:16). அவர்கள் விரைவாக வந்து மோவாபியருக்கு திகில் உண்டாக்குவார்கள் (எரே 48:40,41). நேபுசராதான் மோவாபை முற்றிலுமாய் அழித்துப்போடுவான் (எரே 48:10). மோவாபியரின் தேசம் பாழாக்கப்படும் (எரே 48:14,15). மோவாபியரில் யாரும் கல்தேயருக்கு தப்பிக்க முடியாது (எரே 48:42,45).

மோவாபியர் கல்தேயரிடத்தில் தோற்றுப்போனதினால், தங்கள் விக்கிரகங்களை நினைத்து வெட்கப்படுவார்கள். மோவாபியர் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுவதை நிறுத்திவிடுவார்கள் (எரே 48:13,35). மோவாப் தேசத்திலிருந்து சந்தோஷமும் களிப்பும் முற்றிலுமாய் நீங்கிப்போகும் (எரே 48:33,34).

மோவாப் அழியும்போது அதன் சுற்றுப்புறத்தாரும் அவர்களுக்காக அங்கலாய்ப்பார்கள் (எரே 48:17-19). எரேமியா தீர்க்கதரிசியும் மோவாபினிமித்தம் அலறி கூக்குரலிடுகிறார் (எரே 48:31,36).

மோவாபியரின் பெருமையும், சுயநம்பிக்கையும் அவர்களுடைய அழிவுக்கு காரணங்களாகும் (எரே 48:7,11,14,29). மோவாபியர் கர்த்தரைத் தூஷித்தார்கள். கர்த்தருடைய ஜனத்திற்கு தீங்கு செய்தார்கள் (எரே 48:26,27,30). கர்த்தர் கடைசிநாளில் மோவாபின் சிறையிருப்பைத் திருப்புவார் (எரே 48:47).

மோவாப் நொறுங்குண்டது எரே 48:1-13

எரே 48:1. மோவாபைக்குறித்து இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், ஐயோ! நேபோ பாழாக்கப்பட்டது; கீரியாத்தாயீம் வெட்கப்பட்டு, பிடிக்கப்பட்டுப் போயிற்று; மிஸ்காப் வெட்கப்பட்டு, கலங்கிப்போயிற்று.

எரே 48:2. எஸ்போனைக்குறித்து மோவாபுக்கு இருந்த பெத்தரிக்கம் இனி இராது; அது ஒரு ஜாதியாயிராதபடிக்கு அதை நிர்மூலமாக்குவேன் வாருங்களென்று அதற்கு விரோதமாகப் பொல்லாப்பை நினைத்திருக்கிறார்கள்; மத்மேனே, நீயும் சங்காரமாவாய்; பட்டயம் உன்னைத் தொடரும்.

எரே 48:3. பாழ்க்கடிப்பினாலும் பெரிய நொறுக்குதலினாலும் உண்டாகிற கூப்பிடுதலின் சத்தம் ஒரொனாயிமிலிருந்து கேட்கப்படும்.

எரே 48:4. மோவாப் நொறுங்குண்டது; அதிலுள்ள சிறுவர்கள் கூப்பிடும் சத்தம் கேட்கப்படுகிறது.

எரே 48:5. லூகித்துக்கு ஏறிப்போகிற வழியிலே அழுகையின்மேல் அழுகை எழும்பும்; ஒரொனாயிமுக்கு இறங்கிப்போகிற வழியிலே நொறுக்குதல் செய்கிறதினால் உண்டாகிய கூக்குரலைச் சத்துருக்கள் கேட்கிறார்கள்.

எரே 48:6. உங்கள் பிராணன் தப்ப ஓடிப்போங்கள்; வனாந்தரத்திலுள்ள கறளையாய்ப்போன செடியைப் போலிருப்பீர்கள்.

எரே 48:7. நீ உன் சம்பத்தையும் உன் பொக்கிஷங்களையும் நம்புகிறபடியினாலே நீயும் பிடிக்கப்படுவாய், அப்பொழுது கேமோஷ் சிறையாக்கப்பட்டுப்போம்; அதின் ஆசாரியரும் பிரபுக்களும் ஏகமாய்ச் சிறைப்பட்டுப்போவார்கள்.

எரே 48:8. பாழாக்குகிறவன் எல்லாப் பட்டணங்களின்மேலும் வருவான்; ஒரு பட்டணமும் தப்பிப்போவதில்லை; பள்ளத்தாக்குகளும் கெட்டுப்போகும்; சமனான பூமியும் அழிக்கப்படும் என்று கர்த்தர் சொன்னார்.

எரே 48:9. மோவாபுக்குச் செட்டைகளைக் கொடுங்கள்; அது பறந்துபோகட்டும்; அதின் பட்டணங்கள் குடிகளில்லாமல் பாழாய்ப்போகும்.

எரே 48:10. கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்; இரத்தம் சிந்தாதபடிக்குத் தன் பட்டயத்தை அடக்கிக்கொள்ளுகிறவன் சபிக்கப்பட்டவன்.

எரே 48:11. மோவாப் தன் சிறுவயதுமுதல் சுகமாய் வாழ்ந்தது; அது ஒரு பாத்திரத்திலிருந்து மறு பாத்திரத்தில் வார்க்கப்படாமலும், அதின் வண்டல்களின் மேல் அசையாமலும் இருந்தது; அது சிறையிருப்புக்குப் போனதில்லை; ஆதலால் அதின் ருசி அதில் நிலைத்திருந்தது; அதின் வாசனை வேறுபடவில்லை.

எரே 48:12. ஆகையால், இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது கவிழ்த்துப்போடுகிறவர்களை அதற்கு அனுப்புவேன்; அவர்கள் அதைக் கவிழ்த்து, அதின் பாத்திரங்களை வெறுமையாக்கி, அதின் ஜாடிகளை உடைத்துப்போடுவார்கள்.

எரே 48:13. அப்பொழுது இஸ்ரவேல் சந்ததி தங்கள் நம்பிக்கையான பெத்தேலாலே வெட்கப்பட்டதுபோல், மோவாப் கேமோஷாலே வெட்கப்படும்.

இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் மோவாபுக்கு அழிவு வரும் என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய ஜனங்கள். மோவாபியர்கள் நீண்டகாலமாகவே கர்த்தருடைய ஜனத்திற்கு சத்துருக்களாகயிருந்தார்கள். அவர்களுக்கு தீங்கு செய்தார்கள். மோவாபியர்கள் ஆதிகாலத்திலிருந்து, இன்று வரையிலும், இஸ்ரவேலுக்கு செய்த தீங்குகளினிமித்தம், கர்த்தர் அவர்களை இப்போது தண்டிக்கிறார் (எரே 48:1).

மோவாபியரைத் தண்டிப்பதற்கு கர்த்தர் பாழாக்குகிறவனை அனுப்புகிறார். அவன் எல்லா பட்டணங்களின்மேலும் வருவான் (எரே 48:8). மோவாபியரை பட்டயம் தொடரும் (எரே 48:2). பாழாக்குகிறவன் எஸ்போனுக்கு விரோதமாக வருவான். எஸ்போன் மோவாபியரின் பிரதான பட்டணங்களில் ஒன்று.

பாழாக்குகிறவர்கள் மோவாபியரின் தேசத்தை அழித்துப்போடவேண்டும் என்றே வருகிறார்கள். "மோவாபியரை ஒரு ஜாதியாயிராதபடிக்கு அதை நிர்மூலமாக்கவேண்டும்" என்று அவர்களுக்கு விரோதமாக வருகிறவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் மோவாபியருக்கு விரோதமாக பொல்லாப்பை நினைத்திருக்கிறார்கள் (எரே 48:2).

மோவாபியரின் சத்துருக்கள் சீக்கிரமாய் வருவார்கள். அவர்கள் வேகமாய் வருவார்கள். அவர்கள் மோவாபியரை முற்றிலுமாய் அழித்துப்போடுவார்கள். அவர்கள் மோவாபியரை அழிப்பது கர்த்தருடைய வேலை. கர்த்தருடைய வேலையை யாரும் அசதியாய் செய்யக்கூடாது. "கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்; இரத்தம் சிந்தாதபடிக்குத் தன் பட்டயத்தை அடக்கிக்கொள்ளுகிறவன் சபிக்கப்பட்டவன்" (எரே 48:10) என்று எரேமியா சொல்லுகிறார். மோவாபியரின் சத்துருக்கள் கர்த்தரின் வேலையை அசதியாய் செய்யமாட்டார்கள். அவர்கள் மோவாபியரை முற்றிலுமாய் அழித்துப்போடுவார்கள்.

எரேமியா இங்கு சொல்லுகிற வார்த்தை, கர்த்தருடைய ஊழியத்தில் பங்குபெற்றிருக்கிற எல்லா ஊழியக்காரர்களுக்கும் பொருந்தும். நாம் கர்த்தருடைய ஊழியத்தை அசதியாய் செய்யக்கூடாது. கர்த்தருடைய ஊழியத்தை அசட்டைபண்ணுகிறவர்களும், அசதியாய் செய்கிறவர்களும், உண்மையாய் ஊழியம் செய்யாமல் ஏமாற்றுகிறவர்களும் சபிக்கப்பட்டவர்கள்.

மோவாபியருக்கு அழிவு வரும். நேபோ பட்டணம் பாழாக்கப்படும். கீரியாத்தாயீம் பிடிக்கப்பட்டு வெட்கப்பட்டுப்போகும். மிஸ்கா பட்டணமும் வெட்கப்பட்டு கலங்கிப்போகும். மோவாபின் எல்லா பட்டணங்களும் அழிந்து பாழாய்ப்போகும். மோவாபியர் எஸ்போனைக் குறித்து பெருமைப்பட்டார்கள். அதிகமாய்ப் பெருமைப்படுவதற்கு "பெத்தரிக்கம்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எஸ்போனைக் குறித்து மோவாபுக்கு இருந்த பெத்தரிக்கம் இனி இராது (எரே 48:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோவாபின் பட்டணங்கள் அழிக்கப்படும். மோவாபியர்கள் எல்லோரும் நிர்மூலமாவார்கள். மோவாபின் பட்டணங்களெல்லாம் குடியில்லாமல் பாழாய்ப்போகும் (எரே 48:9). மோவாபை பாழாக்குகிறவன் எல்லா பட்டணங்களின் மேலும் வருவான். ஒரு பட்டணத்தையும் தப்பவிடாமல் எல்லா பட்டணத்தையும் அழித்துப்போடுவான். மோவாப் தேசத்திலுள்ள பள்ளத்தாக்குகளையும், சமானான பூமியையும் அழித்துப்போடுவான் (எரே 48:8).

மோவாப் தேசத்தின் பள்ளத்தாக்குகளில் தானியங்களும், ஆட்டுமந்தைகளும் திரளாயிருக்கும். அவை பள்ளத்தாக்கு முழுவதும் நிரம்பியிருக்கும். பள்ளத்தாக்கிலே பயிரிடுகிறவர்களின் சந்தோஷப்பாடல்களும், மேய்ப்பர்களின் ஆனந்த கீதங்களும் எப்போதும் கேட்டுக்கொண்டிருக்கும். மோவாபை பாழாக்குகிறவன் இந்தப் பள்ளத்தாக்குகளை அழித்துப்போடுவான். தானியங்களை கொள்ளையிடுவான். ஆட்டுமந்தைகளை தன்னுடைய தேசத்திற்கு ஓட்டிக்கொண்டு போய்விடுவான்.

மோவாப் தேசத்திலுள்ள ஆசாரியர்களும் பிரபுக்களும் சிறையிருப்புக்குப்போவார்கள். கேமோஷ் என்பது மோவாபியரின் தெய்வம். மோவாபியர்கள் கேமோசுக்கு தூபங்காட்டி அதை ஆராதிக்கிறார்கள். மோவாப் தேசத்திற்கு அழிவு வரும்போது கேமோசுக்கும் அழிவு வரும். மோவாபியரின் சத்துருக்கள் கேமோசின் கோவிலை இடித்துப்போட்டு, அதை தீவைத்து கொளுத்திவிடுவார்கள்.

மோவாப் தேசத்தில் வெட்கமும், குழப்பமும், அவமானமும் உண்டாகும். இஸ்ரவேல் சந்ததி தங்கள் நம்பிக்கையான பெத்தேலாலே வெட்கப்பட்டதுபோல, மோவாப் கேமோஷாலே வெட்கப்படும் (எரே 48:13). மிஸ்காப் வெட்கப்பட்டு கலங்கிப்போவதுபோல கோமேசும் வெட்கப்பட்டு கலங்கிப்போகும்.

மோவாபியரின் சத்துருக்கள் கீரியாத்தாயீம் பட்டணத்தைப் பிடிப்பார்கள். இதனால் அந்தப் பட்டணம் மிஸ்காபைப் போல வெட்கப்படும். மோவாபியர் எஸ்போனை பெருமையாக நினைத்தார்கள். இனிமேல் அவர்கள் எஸ்போனைக் குறித்து பெருமையாக நினைக்கமாட்டார்கள். மோவாபியர்கள் தங்கள் விக்கிரகங்களையும் குறித்து இனிமேல் பெருமை பாராட்டமாட்டார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் பெத்தேலிலே பொன்கன்றுக்குட்டிகளை வைத்து அவற்றிற்கு தூபங்காட்டினார்கள். அசீரியர்கள் இஸ்ரவேல் வம்சத்தார்மீது யுத்தம்பண்ண வந்தபோது, பெத்தேலிலுள்ள பொன்கன்றுக்குட்டிகள் தங்களை பாதுகாக்கும் என்று நம்பினார்கள். ஆனால் பொன்கன்றுக்குட்டிகள் இஸ்ரவேல் வம்சத்தாரை பாதுகாக்கவில்லை. அசீரியர்கள் பெத்தேலை அழித்துப் போட்டார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டு போய்விட்டார்கள். இஸ்ரவேல் சந்ததி தங்கள் நம்பிக்கையான பெத்தேலாலே வெட்கப்பட்டது.

இஸ்ரவேல் பெத்தேலையும், அதிலுள்ள பொன்கன்றுக்குட்டியையும் நம்பியதுபோல, மோவாப் கேமோஷ் என்னும் விக்கிரகத்தை நம்புகிறார்கள். இஸ்ரவேல் சந்ததியைப்போலவே மோவாபியரும், தங்கள் நம்பிக்கையான கேமோஷாலே வெட்கப்பட்டுப்போவார்கள். கல்தேயர்கள் மோவாப் மீது யுத்தம்பண்ண வருகிறார்கள். தாங்கள் நம்புகிற கேமோஷ், கல்தேயரின் கைக்கு தங்களை தப்புவிக்கும் என்று மோவாபியர் நம்புகிறார்கள். ஆனால் மோவாபியரின் நம்பிக்கை சித்திக்காது. கல்தேயர்கள் மோவாபியரை சிறைப்பிடித்து கொண்டுபோவார்கள். மோவாப் கேமோஷாலே வெட்கப்படும்.

மோவாபியர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவேண்டும் என்றும், பள்ளத்தாக்குகளுக்கு இறங்கிப்போக வேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் பிராணன் தப்ப ஓடிப்போகவேண்டும். அவர்கள் லூகித்துக்கு ஏறிப்போகிற வழியிலே அழுகையின்மேல் அழுகை எழும்பும். ஒரொனாயிமுக்கு இறங்கிப்போகிற வழியிலே நொறுக்குதல் செய்கிறதினால் உண்டாகிய கூக்குரல் கேட்கப்படும்.

மோவாபியர்கள் தங்கள் பிராணன் தப்ப மலைகளுக்கு ஏறிப்போனாலும், பள்ளத்தாக்குகளுக்கு இறங்கிப்போனாலும், அவர்கள் வனாந்தரத்திலுள்ள கறளையாய்ப் போன செடியைப்போலிருப்பார்கள். காய்ந்துபோன செடி ஒன்றுக்கும் பிரயோஜனப்படாது. மோவாபியர்கள் ஒரு காலத்தில் செழிப்பாயிருந்தார்கள். இப்போதோ காய்ந்துபோன செடியைப்போல இருக்கிறார்கள்.

மோவாபியரின்மீது ஆபத்து திடீரென்று வந்திருக்கிறது. அவர்கள் வனாந்தரத்திலுள்ள கறளையாய்ப்போன செடியைப்போலிருந்தாலும், அவர்கள் தங்கள் பிராணன் தப்ப ஓடிப்போகவேண்டும். அவர்கள்மீது ஆபத்து திடீரென்றும், வேகமாகவும் வருகிறது. அவர்கள் தப்பி ஓடிப்போகும்போது நடந்துபோகாமல் பறந்துபோகவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். "மோவாபுக்குச் செட்டைகளைக் கொடுங்கள்; அது பறந்துபோகட்டும்; அதின் பட்டணங்கள் குடிகளில்லாமல் பாழாய்ப்போகும்" (எரே 48:9) என்று கர்த்தர் சொல்லுகிறார். கல்தேயர்கள் மோவாபியரை வேகமாய்த் துரத்துகிறார்கள். மோவாபியர்கள் பறந்துபோனால்தான் கல்தேயருக்கு தப்பிக்க முடியும்.

தங்களுக்கு ஆபத்து வருவதற்கு முன்பாக, தாங்கள் பாதுகாப்பாயிருப்பதாக மோவாபியர்கள் நினைத்தார்கள். அவர்கள் தங்களுடைய சம்பத்தையும், தங்கள் பொக்கிஷங்களையும் நம்பினார்கள் (எரே 48:7). அவர்களுடைய சம்பத்தும் பொக்கிஷமும் அவர்களுக்கு உதவிசெய்யாது. மோவாபியர்கள் மாயையை நம்பினதினால், கல்தேயர்கள் அவர்களை சிறைப்பிடிப்பார்கள்.

"இதோ, தேவனைத் தன் பெலனாக எண்ணாமல், தன் செல்வப்பெருக்கத்தை நம்பி, தன் தீவினையில் பலத்துக்கொண்ட மனுஷன் இவன்தான் என்பார்கள்" (சங் 52:7).

மோவாப் தேசம் நீண்டகாலமாக ஒரு பிரச்சனையுமில்லாமல் பாதுகாப்பாயிருந்தது. அந்நியர்கள் யாரும் அவர்கள்மீது யுத்தம்பண்ண வரவில்லை. இஸ்ரவேல் தேசம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாகவே, மோவாப் தேசம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மோவாப் மிகவும் பழமையான தேசம். அது சிறிய தேசமாகயிருந்தாலும், அதிலே சம்பத்தும், பொக்கிஷங்களும் அதிகமாயிருந்தது. அது செல்வச்செழிப்போடு சிறப்பாயிருந்தது.

மோவாபியர்கள் இதுவரைக்கும் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போனதில்லை. அந்நியர்கள் யாரும் இவர்கள்மீது யுத்தம்பண்ணவும் வரவில்லை. இவர்களை சிறைப்பிடிக்கவுமில்லை. மோவாபியரோ விக்கிரகங்களை நம்பி, அவற்றிற்கு தூபங்காட்டுகிறார்கள்.

இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய ஜனத்தார். கர்த்தர் அவர்களை பாதுகாத்து பராமரிக்கிறார். அவர்களை சத்துருக்களுக்கு மறைத்துக்கொள்கிறார். கர்த்தருடைய மறைவிலிருக்கிறவர்களுக்கு விரோதமாக ஒரு சில ஜாதியார் உபாயதந்திரங்களை யோசிக்கிறார்கள். அவர்களில் மோவாபியரும் ஒரு ஜாதியார்.

"உமது ஜனத்துக்கு விரோதமாக உபாய தந்திரங்களை யோசித்து, உமது மறைவிலிருக்கிறவர்களுக்கு விரோதமாக ஆலோசனைபண்ணுகிறார்கள்" (சங் 83:3)

"இப்படி, ஏதோமின் கூடாரத்தாரும், இஸ்மவேலரும், மோவாபியரும், ஆகாரியரும், கேபாலரும், அம்மோனியரும், அமலேக்கியரும், தீருவின் குடிகளோடு கூடிய பெலிஸ்தரும், ஏகமனநிர்ணயமாய் ஆலோசனை செய்து, உமக்கு விரோதமாய் ஒப்பந்தம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்" (சங் 83:5-7).

மோவாபியர்கள் நீண்டகாலமாகவே பாவத்திலும் அக்கிரமத்திலும் ஜீவிக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் குணப்படவுமில்லை. புதுப்பிக்கப்படவுமில்லை. மோவாபியர்கள் தங்கள் சம்பத்துக்களையும் பொக்கிஷங்களையும் நம்புகிறார்கள். அவர்கள் உலகத்தை சிநேகிக்கிறார்கள். தங்களுக்கு அதிகமான ஐசுவரியம் இருப்பதினால், தங்களுக்கு அதிகமான பாதுகாப்பு உண்டு என்று நம்புகிறார்கள். மோவாபியர்கள் ஆதியிலே எப்படி துன்மார்க்கராயிருந்தார்களோ, அப்படியே இப்போதும் துன்மார்க்கராயும் பாவிகளாயும் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் நன்மைக்கேதுவான மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

மோவாப் அழிந்தது
எரே 48:14-47

எரே 48:14. நாங்கள் பராக்கிரமசாலிகளென்றும், நாங்கள் யுத்தசன்னத்தரென்றும் நீங்கள் சொல்லுகிறதென்ன?

எரே 48:15. மோவாப் அழிந்தது, அதின் பட்டணங்கள்எரிந்துபோயின; அதின் திறமையுள்ள வாலிபர் கொலைக்களத்துக்கு இறங்குகிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள ராஜாசொல்லுகிறார்.

எரே 48:16. மோவாபின் ஆபத்துவரச் சமீபமாயிருக்கிறது; அதின் தீங்கு மிகவும் தீவிரித்துவருகிறது.

எரே 48:17. அதின் சுற்றுப்புறத்தாரும் அதின் பேரை அறிந்தவர்களுமாகிய நீங்கள் எல்லாரும் அதற்காக அங்கலாய்த்துக் கொள்ளுங்கள்; பெலனானதடியும் அலங்காரமான கோலும் எப்படி உடைந்ததென்று சொல்லுங்கள்.

எரே 48:18. தீபோன் பட்டணவாசியான குமாரத்தியே, நீ உன் மகிமையை விட்டிறங்கி, தாகத்தோடே உட்கார்ந்திரு; மோவாபைப் பாழாக்குகிறவன் உனக்கு விரோதமாய் வந்து, உன் அரண்களை அழித்துப்போடுவான்.

எரே 48:19. ஆரோவேரில் குடியிருக்கிறவளே, நீ வழியிலே நின்று பார்த்துக் கொண்டிரு; நடந்ததென்னவென்று ஓடிவருகிறவனையும் தப்பிவருகிறவளையும் கேள்.

எரே 48:20. மோவாப் முறிய அடிக்கப்பட்டபடியினால் கலங்கிப் போயிற்று; அலறிக் கூப்பிடுங்கள்; மோவாப் பாழாக்கப்பட்டதென்று அர்னோனில் அறிவியுங்கள்.

எரே 48:21. சமனான பூமியாகிய ஓலோனின் மேலும், யாத்சாவின்மேலும், மேப்காத்தின்மேலும்,

எரே 48:22. தீபோனின்மேலும், நேபோவின் மேலும், பெத்திப்லாத்தாயீமின் மேலும்,

எரே 48:23. கீரியாத்தாயீமின்மேலும், பேத்கமூலின்மேலும், பெத்மெயோனின் மேலும்,

எரே 48:24. கீரியோத்தின்மேலும், போஸ்றாவின்மேலும், மோவாப் தேசத்திலே தூரத்திலும் சமீபத்திலும் இருக்கிற எல்லாப் பட்டணங்களின்மேலும் நியாயத்தீர்ப்பு வரும்.

எரே 48:25. மோவாபின் கொம்பு வெட்டுண்டது; அவன் புயம் முறிக்கப்பட்டது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 48:26. அவனை வெறிகொள்ளச் செய்யுங்கள்; கர்த்தருக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டினான்; மோவாப் தான் வாந்திபண்ணி அதிலே புரளுவான்; அவன் பரியாசத்துக்கிடமாவான்.

எரே 48:27. இஸ்ரவேல் உனக்குப் பரியாசமாயிருந்தான் அல்லவோ? அவன் திருடருக்குள் கண்டுபிடிக்கப்பட்டானோ? நீ அவனைக்குறித்துப் பேசுகிற போதெல்லாம், தலையைத் துலுக்குகிறாயே.

எரே 48:28. மோவாப் தேசத்தின் குடிகளே, நீங்கள் பட்டணங்களை விட்டுப்போய், கன்மலையில் தங்கி, குகையின் வாய் ஓரங்களில் கூடுகட்டுகிற புறாவுக்கு ஒப்பாயிருங்கள்.

எரே 48:29. அவன் மெத்தப் பெருமைக்காரன், மோவாபின் பெருமையையும், அவன் மேட்டிமையையும், அவன் அகந்தையையும், அவன் பெத்தரிக்கத்தையும், அவன் இருதயத்தின் மேட்டிமையையும் குறித்துக் கேட்டேன்.

எரே 48:30. அவன் மூர்க்கத்தை நான் அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அப்படியாகாது, அவன் வீம்பு செல்லாது என்கிறார்.

எரே 48:31. ஆகையால் மோவாபினிமித்தம் நான் அலறி, மோவாப் தேசம் அனைத்தினிமித்தமும் கூக்குரலிடுவேன்; கீராரேஸ் மனுஷரினிமித்தம் பெருமூச்சுவிடப்படும்.

எரே 48:32. சிப்மாவூரின் திராட்சச்செடியே, யாசேருக்காக நான் அழுததுபோல உனக்காகவும் அழுவேன்; உன் கொடிகள் கடலைக் கடந்துபோயின; அவைகள் யாசேர் கடல்மட்டும் போய் எட்டின; பாழாக்குகிறவன் உன் வசந்தகாலத்துப் பழங்களின்மேலும், உன் திராட்சப்பழ அறுப்பின்மேலும் விழுந்தான்.

எரே 48:33. பயிர்வெளியிலும் மோவாப் தேசத்திலுமிருந்து சந்தோஷமும் களிப்பும் நீங்கிப்போயிற்று; திராட்சரசம் ஆலைகளிலிருந்து பொழிகிறதை ஓயப்பண்ணினேன்; ஆலையை மிதிக்கிறவர்களின் பாடல் இல்லை; அது ஆரவாரமேயல்லாமல் ஆலை மிதிக்கும் பாடலல்ல.

எரே 48:34. எஸ்போன்துவக்கி எலெயாலேமட்டும் யாகாஸ்வரைக்கும் உண்டாகும் கூக்குரலினிமித்தம் அவர்கள் மூன்றுவயதுக் கடாரியைப்போல், சோவார்துவக்கி ஒரொனாயிம்மட்டும் சத்தமிடுவார்கள்; நிம்ரீமின் ஜலங்களும் வற்றிப்போகும்.

எரே 48:35. மோவாப் தேசத்து மேடைகளில் பலியிடுகிறவனையும் தன் தேவர்களுக்கு தூபங்காட்டுகிறவனையும் ஓயப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 48:36. ஆகையால், மோவாபினிமித்தம் என் இருதயம் நாகசுரம்போல் துயரமாய் தொனிக்கும்; கீராரேஸ் மனுஷரினிமித்தமும், என் இருதயம் நாகசுரம் போல் துயரமாய் தொனிக்கும்; அவர்கள் சம்பாதித்த ஐசுவரியம் அழிந்து போகிறபடியினால் அப்படி தொனிக்கும்.

எரே 48:37. தலைகள் எல்லாம் மொட்டையிடப்பட்டும், தாடிகள் எல்லாம் கத்தரிக்கப்பட்டும் இருக்கும்; கைகளில் எல்லாம் கீறுதல்களும், அரைகளில் இரட்டுடுப்பும் உண்டு.

எரே 48:38. மோவாபின் சகல வீடுகளின் மேலும் அதின் தெருக்களிலேயும் ஏகப் புலம்பல் உண்டாகும்; ஒருவரும் விரும்பப்படாத பாத்திரம்போல மோவாபை உடைத்துப்போட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 48:39. மோவாப் எவ்வளவாய் முறிந்து போயிற்றென்று அலறுகிறார்கள்; அது முதுகைக்காட்டி எவ்வளவாய் வெட்கப்படும்? இப்படி மோவாப் தன் சுற்றுப்புறத்தார் அனைவருக்கும் பரியாசமும் திகைப்புமாயிருக்கும்.

எரே 48:40. இதோ, ஒருவன் கழுகைப்போல பறந்துவந்து, மோவாபின்மேல் தன் செட்டைகளை விரிப்பான்.

எரே 48:41. கீரியோத் பிடிக்கப்படும், கோட்டைகள் கைவசமாகும்; அந்நாளிலே மோவாபின் பராக்கிரமசாலிகளுடைய இருதயம் பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயின் இருதயம் போல இருக்கும்.

எரே 48:42. மோவாப் கர்த்தருக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினபடியால், அது ஒரு ஜனமாயிராதபடிக்கு அழிக்கப்படும்.

எரே 48:43. மோவாப் தேசத்தின் குடியானவனே, திகிலும், படுகுழியும், கண்ணியும் உன்மேல் வரும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 48:44. திகிலுக்கு விலக ஓடுகிறவன் படுகுழியிலே விழுவான்; படுகுழியிலிருந்து ஏறுகிறவனோ கண்ணியிலே பிடிபடுவான்; அவர்கள் விசாரிக்கப்படும் வருஷத்தை அதின்மேல், அதாவது மோவாபின்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 48:45. வல்லடிக்குத் தப்ப ஓடிப்போகிறவர்கள் எஸ்போனின் நிழலில் தரித்து நின்றார்கள், ஆனாலும் நெருப்பு எஸ்போனிலும், அக்கினிஜுவாலை சீகோன் நடுவிலுமிருந்து புறப்பட்டு, மோவாப் தேசத்தின் எல்லைகளையும், கலகஞ்செய்கிறவர்களின் உச்சந்தலையையும் பட்சிக்கும்.

எரே 48:46. மோவாபே, உனக்கு ஐயோ! கேமோஷ் விக்கிரகத்தையடுத்த ஜனம் அழியும், உன் குமாரரும் சிறைபிடிக்கப் படுகிறார்கள்; உன் குமாரத்திகளும் சிறைபிடிக்கப்பட்டுப் போகிறார்கள்.

எரே 48:47. ஆனாலும் கடைசிநாட்களில் மோவாபின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். மோவாபின்மேல் வரும் நியாயத்தீர்ப்பின் செய்தி இத்தோடே முடிந்தது.

மோவாப் தேசம் அழிந்துபோகும். மோவாபுக்கு விரோதமாக கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை எரேமியாவுக்கு சொல்லிக் கொண்டு வருகிறார். மோவாபியர்கள் தங்கள் பாவங்கள உணரவேண்டும். பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்களுடைய இருதயம் புதுப்பிக்கப்படவேண்டும். அவர்கள் மனந்திரும்பினால், அவர்களுக்கு வரப்போகும் அழிவுக்கு அவர்கள் தப்பித்துக்கொள்ளலாம்.

மோவாபியர் ஒவ்வொருவரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும். அவர்கள் ஏகமாய்ப் பாவம் செய்யும்போது, கர்த்தருடைய கோபம் மோவாபியர் அனைவர்மேலும், மோவாப் தேசத்தின்மேலும் வரும். தேவனுடைய கோபம், அவரைக் கோபப்படுத்துகிற ஜனங்கள்மேல் வரும். கர்த்தரை கோபப்படுத்துகிறவர்கள், அவருடைய அன்பையும், இரக்கத்தையும், கிருபையையும் அசட்டைபண்ணுகிறார்கள்.

மோவாபுக்கு திடீரென்று அழிவு வரும். மோவாபியர்கள் எதிர்பாராத வேளையிலே அவர்களுக்கு அழிவு வருவதினால், அவர்கள் எல்லோரும் ஆச்சரியப்படுவார்கள். மோவாபியருக்கு வரப்போகும் சடுதியான அழிவைப்பற்றி, எரேமியா தீர்க்கதரிசி அவர்களுக்கு எச்சரிப்பாய்ச் சொல்லுகிறார்.

மோவாபியர்கள் தங்களை பராக்கிரமசாலிகள் என்று சொல்லிக்கொள்கிறார்கள். அவர்கள் தங்களை யுத்தசன்னத்தராகவும் நினைத்துக்கொள்கிறார்கள் (எரே 48:14). ஆகையினால் தங்களுக்கு விரோதமாக, எவ்வளவு பெரிய சத்துரு வந்தாலும், தங்களால் அவனோடு யுத்தம் பண்ண முடியும் என்று மோவாபியர் நினைக்கிறார்கள். மோவாபின் ஆபத்து வர சமீபமாயிருக்கிறது என்றும் அதின் தீங்கு மிகவும் தீவிரித்து வருகிறது என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (எரே 48:16).

கழுகு தன்னுடைய இரையைப் பிடிக்கும்போது, அதன்மீது வேகமாக பறந்துவரும். அதுபோலவே கல்தேயர்கள் மோவாபியர்மீது தீவிரித்து வருகிறார்கள். தங்கள் சிறகுகளை மோவாப் பட்டணங்கள்மீது விரிக்கிறார்கள். "இதோ, ஒருவன் கழுகைப்போல பறந்துவந்து, மோவாபின்மேல் தன் செட்டைகளை விரிப்பான்" (எரே 48:40) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயரின் சேனைகள் எல்லாம், மோவாபியரின் பட்டணங்களை சூழ்ந்து கொள்கிறார்கள். கல்தேயர்கள் மோவாபியரின் எல்லா பட்டணங்களின்மேலும் வரும்போது, ஒரு பட்டணமும் தப்பிப்போவதில்லை.

"கீரியோத் பிடிக்கப்படும், கோட்டைகள் கைவசமாகும்; அந்நாளிலே மோவாபின் பராக்கிரமசாலிகளுடைய இருதயம் பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயின் இருதயம் போல இருக்கும்" (எரே 48:41) என்று கர்த்தர் சொல்லுகிறார். மோவாபியர்கள் தங்கள் முழுபலத்தையும் சேர்த்து கல்தேயருக்கு எதிர்த்து நின்றாலும், அவர்களால் கல்தேயரை எதிர்க்க முடியாது.

மோவாபியரை திடீரென்று பயம் பிடித்துக்கொள்ளும். இந்தப் பயத்திலிருந்து விடுதலை பெறுவதற்கே, அவர்களுக்கு விசேஷித்த பெலன் வேண்டும். மோவாபின் பராக்கிரமசாலிகளோ பயத்தினால் கலங்கிப்போயிருப்பார்கள். அவர்களால் கல்தேயரை எதிர்த்து யுத்தம்பண்ண முடியாது. இந்தப் பயம் தங்கள்மீது திடீரென்று வந்ததினால், மோவாபியர்கள் திகைத்து நடுங்குவார்கள்.

"மோவாப் அழிந்தது, அதின் பட்டணங்கள் எரிந்துபோயின; அதின் திறமையுள்ள வாலிபர் கொலைக்களத்துக்கு இறங்குகிறார்கள்" (எரே 48:15) என்று சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள ராஜாசொல்லுகிறார். மோவாப் முறிய அடிக்கப்பட்டபடியினால் கலங்கிப்போயிற்று (எரே 48:20).

மோவாப் தேசம் இதுவரையிலும் மற்ற தேசங்கள் மத்தியில் உயர்ந்திருந்தது. மற்ற தேசத்தார் மோவாபியருக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்தார்கள். மோவாப் தேசம் மிகுந்த அதிகாரத்தோடும் கண்ணியத்தோடும் இருந்தது. ஆனால் இப்போது "மோவாபின் கொம்பு வெட்டுண்டது; அவன் புயம் முறிக்கப்பட்டது" (எரே 48:25) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோவாபியரின் வல்லமைக்கு அடையாளமான கொம்பு முறிக்கப்பட்டு விட்டது. அவர்களால் தங்களை பாதுகாக்கவும் முடியவில்லை. மற்ற தேசத்தார்மீது யுத்தம்பண்ணவும் முடியவில்லை. அவர்களுடைய வல்லமை முற்றிலுமாய் அவர்களைவிட்டு நீங்கிப்போயிற்று. அவர்களுடைய புயம் முறிக்கப்பட்டதினால், மோவாபியரால் யுத்தம் பண்ணவும் போகமுடியவில்லை. தங்கள்மீது யுத்தம்பண்ண வருகிறவர்களையும் தடுத்து நிறுத்த முடியவில்லை. மோவாபியரால் தங்கள் கைகளால் அடிக்கவும் முடியவில்லை, சத்துருக்கள் தங்களை அடிக்கும்போது, தங்கள் கைகளால் அந்த அடிகளை தடுத்து நிறுத்தவும் முடியவில்லை. மோவாபியர் முற்றிலும் பெலனற்றுப்போயிருக்கிறார்கள்.

மோவாப் தேசத்தில் திறமையுள்ள வாலிபர்கள் இருக்கிறார்கள். அவர்கள் யுத்தத்திற்குப்போனால், யுத்தத்தில் ஜெயித்து திரளான கொள்ளைப்பொருளை கொண்டு வரலாம் என்று நினைக்கிறார்கள். மோவாபியரின் இராணுவத்தலைவர்களும் வாலிபர்களுக்கு அதிகமான நன்மைகளை வாக்குப்பண்ணுகிறார்கள். ஆனால் மோவாபின் திறமையுள்ள வாலிபர், கல்தேயருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, அவர்கள் கொலைக்களத்திற்கு இறங்குகிறார்கள் (எரே 48:15) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோவாபியரின் வாலிபர்களுக்கு யுத்தத்தில் வெற்றி கிடைக்காது. யுத்தத்திற்குப்போன மோவாபியரின் வாலிபர்கள் யுத்தக்களத்திலிருந்து தங்கள் வீட்டிற்கு திரும்பி வரமாட்டார்கள். கல்தேயரின் பட்டயத்தால் யுத்தக்களத்திலேயே செத்துப்போவார்கள். கல்தேயரோடு யுத்தம்பண்ணுகிற களம், மோவாபியரின் திறமையுள்ள வாலிபருக்கு கொலைக்களமாகயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோவாபியர்கள் கர்த்தருடைய ஜனத்திற்கு சத்துருக்களாகயிருந்தார்கள். கர்த்தரோ அவர்களை ஒன்றுமில்லாமல் வெறுமையாக்கிப்போடுகிறார். மோவாபியர் இனிமேல் ஜனங்களாகயிருக்கமாட்டார்கள். அவர்கள் கொலைக்களத்திலே பிரேதங்களாகயிருப்பார்கள்.

மோவாபின் அழிவை நினைத்து எரேமியா தீர்க்கதரிசியும் துக்கப்படுகிறார். "மோவாபினிமித்தம் நான் அலறி, மோவாப் தேசம் அனைத்தினிமித்தமும் கூக்குரலிடுவேன்" (எரே 48:31) என்று எரேமியா சொல்லுகிறார். கீராரேஸ் மனுஷரினிமித்தம் பெருமூச்சுவிடப்படும்.

எரேமியா தீர்க்கதரிசி சிப்மா ஊரின் திராட்சச்செடிக்காகவும் அழுகிறார். "சிப்மாவூரின் திராட்சச்செடியே, யாசேருக்காக நான் அழுததுபோல உனக்காகவும் அழுவேன்; உன் கொடிகள் கடலைக் கடந்துபோயின; அவைகள் யாசேர் கடல்மட்டும் போய் எட்டின; பாழாக்குகிறவன் உன் வசந்தகாலத்துப் பழங்களின்மேலும், உன் திராட்சப்பழ அறுப்பின்மேலும் விழுந்தான்" (எரே 48:32) என்று சொல்லி எரேமியா மோவாபுக்காக அழுது புலம்புகிறார்.

மோவாபினிமித்தம் எரேமியாவின் இருதயம் மிகவும் வேதனைப்படுகிறது. அவர் மோவாபியரின் ஒவ்வொரு அழிவையும் பார்த்து, மிகவும் துக்கப்படுகிறார். "மோவாபினிமித்தம் என் இருதயம் நாகசுரம்போல் துயரமாய் தொனிக்கும்; கீராரேஸ் மனுஷரினிமித்தமும், என் இருதயம் நாகசுரம் போல் துயரமாய் தொனிக்கும்; அவர்கள் சம்பாதித்த ஐசுவரியம் அழிந்து போகிறபடியினால் அப்படி தொனிக்கும்" (எரே 48:36) என்று எரேமியா வேதனையோடு சொல்லுகிறார்.

பாவிகள் அழிந்துபோவது கர்த்தருக்கு பிரியமான காரியமல்ல. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்புவதே கர்த்தருக்கு பிரியமானது. கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாமும், பாவிகள் அழிந்துபோகும்போது சந்தோஷப்படக்கூடாது. எரேமியாவைப்போல, நமக்கும், பாவிகள் அழிந்துபோவதைப் பார்க்கும்போது, மனவேதனையும், துக்கமும் உண்டாகவேண்டும்.

எரேமியா மோவாபுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். ஏசாயா தீர்க்கதரிசி மோவாபுக்கு விரோதமாக சொன்ன தீர்க்கதரிசனங்களுக்கு, எரேமியாவின் தீர்க்கதரிசனமும் ஒத்திருக்கிறது.

"மோவாபின் பாரம். இரவிலே மோவாபிலுள்ள ஆர் என்னும் பட்டணம் பாழாக்கப்பட்டது, அது சங்காரமாயிற்று; இரவிலே மோவாபிலுள்ள கீர் என்னும் பட்டணம் பாழாக்கப்பட்டது, அது சங்காரமாயிற்று" (ஏசா 15:1).

ஏசாயாவும் எரேமியாவும் காலத்தால் பிரிந்திருக்கிறார்கள். அவர்கள் இருவரும் வெவ்வேறு காலங்களில் மோவாபுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தைகளை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார்கள். ஆனாலும் ஒரே ஆவியானவரே இவ்விரண்டு தீர்க்கதரிசிகளையும் ஆளுகை செய்கிறார். அதை ஆவியானரே மோவாபுக்கு விரோதமாக தம்முடைய செய்தியைச் சொல்லுமாறு இவ்விரண்டு தீர்க்கதரிசிகளையும் ஏவுகிறார்.

மோவாபியரும் தங்களுக்கு வரப்போகும் அழிவுக்காக அழுது புலம்பவேண்டும். அவர்கள் இப்போது மகிமையில் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஐசுவரியத்திற்கு நடுவிலிருக்கிறார்கள். ஆகையால் மகிழ்ந்து களிகூருகிறார்கள். அவர்கள் தங்கள் மகிமையைவிட்டு இறங்கவேண்டும். காய்ந்த நிலத்தில் தாகத்தோடு உட்கார்ந்திருப்பது போல அமர்ந்திருக்கவேண்டும். அவர்கள் ஆறுதலில்லாமல் பரிதபிக்கவேண்டும்.

"தீபோன் பட்டணவாசியான குமாரத்தியே, நீ உன் மகிமையை விட்டிறங்கி, தாகத்தோடே உட்கார்ந்திரு; மோவாபைப் பாழாக்குகிறவன் உனக்கு விரோதமாய் வந்து, உன் அரண்களை அழித்துப்போடுவான்" (எரே 48:18) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோவாப் தேசத்திலே ஆரோவேர் பட்டணம் அதன் எல்லைப்பகுதியிலுள்ளது. அது தூரத்திலிருந்தாலும், அவர்கள் ஓடி வருகிறவர்களையும், கல்தேயருக்கு தப்பி வருகிறவர்களையும் பார்ப்பார்கள். அவர்களிடத்தில் "என்ன நடந்தது" என்று கேட்டு விசாரித்து தெரிந்துகொள்வார்கள். "ஆரோவேரில் குடியிருக்கிறவளே, நீ வழியிலே நின்று பார்த்துக் கொண்டிரு; நடந்ததென்னவென்று ஓடிவருகிறவனையும் தப்பிவருகிறவனையும் கேள்" (எரே 48:19) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஆரோவேரில் குடியிருக்கிற மோவாபியருக்கு, மோவாப் முறியடிக்கப்பட்ட செய்தி அறிவிக்கப்படுகிறது. அதனால் ஆரோவேரிலே இருக்கிறவர்கள் கலங்கிப்போயிருக்கிறார்கள். மோவாப் பாழாக்கப்பட்டது என்று அவர்கள் அர்னோனில் அறிவிக்கவேண்டும். மோவாப் முறியடிக்கப்பட்டதினால், மோவாபியர்கள் அதன் வேதனையைத் தாங்கமுடியாமல் அலறி கூப்பிடவேண்டும் (எரே 48:20).

மோவாப் தேசத்தின் குடிகள் தங்கள் பட்டணங்களை விட்டுவிட்டு, கன்மலையில் போய் தங்கியிருப்பார்கள். கல்தேயருக்கு பயந்து ஓடி ஒளிந்துகொள்வார்கள். அவர்கள் குகையின் வாய் ஓரங்களில் கூடுகட்டுகிற புறாவுக்கு ஒப்பாயிருப்பார்கள் (எரே 48:28).

"அவர்களில் தப்புகிறவர்கள் தப்புவார்கள்; ஆனாலும் அவர்கள் அனைவரும் அவனவன் தன் தன் அக்கிரமத்தினிமித்தம் துக்கித்துக் கூப்பிடுகிற பள்ளத்தாக்குகளின் புறாக்களைப்போல மலைகளில் இருப்பார்கள்" (எசே 7:16) என்று எசேக்கியேல் சொல்லுகிறார்.

மோவாபியர்கள் பயிர் வெளியிலும், தேசத்திலும் சந்தோஷத்தோடும் களிப்போடும் இருப்பார்கள். அவர்கள் தங்கள் திராட்சத்தோட்டத்தின் பழங்களையும், திரட்சியான அறுவடையையும், ஏராளமான திராட்சரசத்தையும் பார்த்து ஆனந்தமடைவார்கள். அவர்களுடைய மாம்சம் சந்தோஷமாயிருக்கும். உலகப்பிரகாரமான சம்பத்துக்களையும், ஐசுவரியங்களையும் பார்த்து அவர்கள் சந்தோஷப்பட்டு களிகூருவார்கள்.

கல்தேயர்கள் மோவாபியரின் பயிர் வெளிகளை அழித்துப்போடுவார்கள். அவர்களுடைய திராட்சப்பழங்களையும், திராட்சரசங்களையும் தங்களுடைய தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். அப்போது அவர்களுடைய சந்தோஷமும், களிப்பும் அவர்களை விட்டு நீங்கிப்போகும்.

"பயிர்வெளியிலும் மோவாப் தேசத்திலுமிருந்து சந்தோஷமும் களிப்பும் நீங்கிப்போயிற்று; திராட்சரசம் ஆலைகளிலிருந்து பொழிகிறதை ஓயப்பண்ணினேன்; ஆலையை மிதிக்கிறவர்களின் பாடல் இல்லை; அது ஆரவாரமேயல்லாமல் ஆலை மிதிக்கும் பாடலல்ல" (எரே 48:33) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அவளுடைய எல்லா மகிழ்ச்சியையும், அவளுடைய பண்டிகைகளையும், அவளுடைய மாதப்பிறப்புகளையும் அவளுடைய ஓய்வுநாட்களையும், சபைகூடுகிற அவளுடைய எல்லா ஆசரிப்புகளையும் ஒழியப்பண்ணுவேன். என் நேசர்கள் எனக்குக் கொடுத்த பணையம் என்று அவள் சொன்ன அவளுடைய திராட்சச்செடிகளையும், அவளுடைய அத்திமரங்களையும் நான் பாழாக்கி, அவைகளைக் காடாய்ப்போகப்பண்ணுவேன்; காட்டுமிருகங்கள் அவைகளைத் தின்னும்" (ஓசி 2:11,12).

உலகப்பிரகாரமான சந்தோஷம் நிலைத்திருக்காது. மாம்சப்பிரகாரமான சந்தோஷம் சீக்கிரத்தில் அழிந்துபோகும். உலகஆசீர்வாதங்கள்மீதும், உலகஐசுவரியங்கள்மீதும் நம்முடைய நம்பிக்கையை வைக்கும்போது நமக்கு ஏமாற்றமே உண்டாகும். உலகஐசுவரியங்கள் நம்மைவிட்டு நீங்கிப்போகும்போது, நம்முடைய சந்தோஷமும் நம்மைவிட்டு நீங்கிப்போகும். நமக்கு மிகுந்த துக்கமும் வேதனையும் உண்டாகும்.

கர்த்தருக்குள் நாம் சந்தோஷமாயிருக்கவேண்டும். ஆவிக்குரிய சந்தோஷமே நிலையான சந்தோஷம். அதுவே நிலைத்திருக்கும். கர்த்தருக்குள் சந்தோஷமாகயிருக்கிறவர்கள், அத்திப்பழம் பழுத்தாலும், பழுக்காவிட்டாலும் சந்தோஷமாயிருப்பார்கள். திராட்சப்பழம் கொடிகளிலே காய்த்தாலும், காய்க்காவிட்டாலும் சந்தோஷமாயிருப்பார்கள்.

மோவாபுக்கு சீக்கிரத்தில் அழிவு வரும். அது சடுதியாய் வரும். மோவாபின் ஆபத்துவரச் சமீபமாயிருக்கிறது; அதின் தீங்கு மிகவும் தீவிரித்துவருகிறது (எரே 48:16). தங்களுக்கு வரும் அழிவைப் பார்த்து மோவாபியர் கலங்கவேண்டும். தங்களுக்காக அழுது புலம்பவேண்டும். மோவாப் தேசத்தின் சுற்றுப்புறத்தில் அநேக ஜாதியார் இருக்கிறார்கள். அவர்களும் மோவாபியருக்காக துக்கப்படவேண்டும்.

"அதின் சுற்றுப்புறத்தாரும் அதின் பேரை அறிந்தவர்களுமாகிய நீங்கள் எல்லாரும் அதற்காக அங்கலாய்த்துக் கொள்ளுங்கள்; பெலனானதடியும் அலங்காரமான கோலும் எப்படி உடைந்ததென்று சொல்லுங்கள்" (எரே 48:17) என்று கர்த்தர் சொல்லுகிறார். சுற்றுப்புறத்தார் எல்லோரும் மோவாபியருக்கு ஆறுதல் சொல்லவேண்டும்.

மோவாபியர் தங்கள் சம்பத்தையும், தங்கள் பொக்கிஷங்களையும் நம்பினதினால் அவர்களுக்கு அழிவு உண்டாயிற்று. இந்த எச்சரிப்பின் வார்த்தை மோவாபியருக்கு மாத்திரமல்ல, எல்லோருக்குமே சொல்லப்பட்டிருக்கிறது. நாமும் கர்த்தரை நம்பாமல், நம்முடைய சம்பத்தையும் ஐசுவரியத்தையும் நம்பினால் நமக்கும் அழிவு வரும். நம்முடைய சுயபலத்தின்மீது நாம் நம்பிக்கை வைக்கக்கூடாது. தங்களுடைய சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும் சாராமல், கர்த்தரையே சார்ந்துகொள்கிறவர்கள் பாக்கியவான்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பு நம்மீது வரும்போது, நம்முடைய ஐசுவரியமோ, நம்முடைய பெலமோ நமக்கு பாதுகாப்பைத் தராது.

மோவாபியர்கள் கர்த்தருக்கு விரோதமாக பெருமை பாராட்டினார்கள். "அவனை வெறிகொள்ளச் செய்யுங்கள்; கர்த்தருக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டினான்; மோவாப் தான் வாந்திபண்ணி அதிலே புரளுவான்; அவன் பரியாசத்துக்கிடமாவான்" (எரே 48:26) என்று கர்த்தர் சொல்லுகிறார். மோவாபியருக்கு வெட்கமும் வேதனையும் உண்டாகும். அவர்கள் அவமானப்பட்டுப்போவார்கள்.

மோவாபியரின் திராட்சப்பழங்களும், தானியங்களும் அழிந்துபோனதுபோல அவர்கள் சம்பாதித்த ஐசுவரியமும் அழிந்துபோகும். நாம் சேமித்து வைத்த ஐசுவரியத்தை எப்படித்தான் நம்முடைய கைகளால் இறுகப்பற்றிக்கொண்டாலும், அது நம்மைவிட்டு விலகிப்போய்விடும். ஐசுவரியம் நிலையானதல்ல. அது அழிந்துபோகக்கூடியது. நம்முடைய சம்பத்து காற்றில் பறக்கிற தூசியைப்போன்றது. காற்று வேகமாய் வீசும்போது தூசி பறந்துபோவதுபோல, அழிவு சீக்கிரத்தில் வரும்போது, நாம் சேமித்து வைத்த ஐசுவரியமும் அழிந்துபோகும். அது நம்மைவிட்டு ஒழிந்துபோகும்.

மோவாபியர்கள் விக்கிரகங்களை தெய்வங்களாக நம்புகிறார்கள். அவர்கள் மேடைகளில் பலியிடுகிறார்கள். தங்கள் தேவர்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய மேடைகளை அழித்துப் போடுவார். அவர்கள் தூபங்காட்டுகிற பலிபீடங்களும் அழிந்துபோகும். மோவாபியரின் ஆசாரியரும் கல்தேயருடைய தேசத்திற்கு சிறைப்பட்டுப்போவார்கள் (எரே 48:7).

"மோவாப் தேசத்து மேடைகளில் பலியிடுகிறவனையும் தன் தேவர்களுக்கு தூபங்காட்டுகிறவனையும் ஓயப்பண்ணுவேன்" (எரே 48:35) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய நீதியின் பிரகாரமாகவே மோவாபியர்மீது அவருடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அவர்களுடைய இருதயம் பெருமையினால் நிறைந்திருக்கிறது. அவர்களுடைய பாவத்தினாலேயே அவர்களுக்கு அழிவு உண்டாயிற்று. "மோவாபியர் மெத்தப்பெருமைக்காரன்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"அவன் மெத்தப் பெருமைக்காரன், மோவாபின் பெருமையையும், அவன் மேட்டிமையையும், அவன் அகந்தையையும், அவன் பெத்தரிக்கத்தையும், அவன் இருதயத்தின் மேட்டிமையையும் குறித்துக் கேட்டேன்" (எரே 48:29) என்று மோவாபியரைப்பற்றி கர்த்தர் சொல்லுகிறார்.

மோவாபியரின் பெருமையைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசியும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். "மோவாபின் பெருமையையும், அவன் மேட்டிமையையும், அவன் அகங்காரத்தையும், அவன் உக்கிரத்தையும் குறித்துக் கேட்டோம்; அவன் மெத்தப் பெருமைக்காரன்; ஆனாலும் அவன் வீம்பு செல்லாது" (ஏசா 16:6) என்று ஏசாயா சொல்லுகிறார். மோவாபியரின் பெருமையை, ஏசாயாவைவிட, எரேமியா விரிவாகச் சொல்லுகிறார்.

மோவாபியரின் பெருமைக்கு இரண்டு எடுத்துக்காட்டுக்கள் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன : 1. மோவாபியர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டினார்கள். 2. அவர்கள் இஸ்ரவேலை பரியாசம்பண்ணினார்கள்.

மோவாபியர் பெருமை பிடித்தவர்கள். அவர்கள் மற்ற ஜாதியாருக்கு விரோதமாய் பெருமை பாராட்டியதோடு மாத்திரமல்ல, கர்த்தருக்கு விரோதமாகவும் பெருமை பாராட்டினார்கள் (எரே 48:26). இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே பரிசுத்தர். அவரே பெரியவர். ஆனால் மோவாபியரோ கேமோஷை தங்களுடைய தெய்வமாகப் பாவித்து, அதை கர்த்தரைவிட உயர்த்தினார்கள். கர்த்தருக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. மோவாபியர் தங்கள் கேமோஷை கர்த்தருக்கு ஒப்பாக்கினதோடு, அதை கர்த்தருக்கு மேலாகவும் உயர்த்தி பாவம் செய்தார்கள்.

மோவாபியர் பெருமையும், மேட்டிமையும் மிகுந்தவர்கள். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை மதிக்காமல், அவர்களை பரியாசம்பண்ணினார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போனபோது, மோவாபியர்கள் அவர்களை ஏளனம்பண்ணினார்கள்.

"இஸ்ரவேல் உனக்குப் பரியாசமாயிருந்தான் அல்லவோ? அவன் திருடருக்குள் கண்டுபிடிக்கப்பட்டானோ? நீ அவனைக்குறித்துப் பேசுகிறபோதெல்லாம், தலையைத் துலுக்குகிறாயே" (எரே 48:27) என்று கர்த்தர் மோவாபியரிடத்தில் கேட்கிறார்.

இஸ்ரவேல் வம்சத்தார் வேதனைகளை அனுபவிப்பது மோவாபியருக்கு சந்தோஷமாயிருக்கிறது. கல்தேயர்கள் இஸ்ரவேல் புத்திரரை சிறைப்பிடித்து சென்றதை பார்த்து, மோவாபியர்கள் ஆனந்த சந்தோஷமடைந்தார்கள். யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் ஏளனமாய்ப் பேசினார்கள். அதே கல்தேயர்கள் இப்போது மோவாபியருக்கு விரோதமாக வருகிறார்கள். இஸ்ரவேல் வம்சத்தாரை சிறைப்பிடித்த கல்தேயர்கள், இப்போது மோவாபியரை சிறைப்பிடித்து, தங்கள் தேசத்திற்கு கொண்டுபோகப் போகிறார்கள்.

மோவாபியர்கள் மூர்க்கத்தனமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். "அவன் மூர்க்கத்தை நான் அறிவேன்; அப்படியாகாது, அவன் வீம்பு செல்லாது" (எரே 48:30) என்று மோவாபியரைப்பற்றி கர்த்தர் சொல்லுகிறார். மோவாபியர்கள் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக மூர்க்கத்தனமாய் நடந்துகொள்கிறார்கள். அவர்களுக்கு அன்பும், ஆதரவும் காண்பிப்பதற்குப் பதிலாக, அவர்களை ஏளனம்பண்ணி கேவலப்படுத்துகிறார்கள். அவர்களை கடினமாய் நடத்தி தங்களுடைய மூர்க்ககுணத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

"தேசத்துக் குடிகளே, திகிலும், படுகுழியும், கண்ணியும் உங்களுக்கு நேரிடும். அப்பொழுது, திகிலின் சத்தத்திற்கு விலகி ஒடுகிறவன் படுகுழியில் விழுவான்; படுகுழியிலிருந்து ஏறுகிறவன் கண்ணியில் அகப்படுவான்; உயர இருக்கும் மதகுகள் திறவுண்டு, பூமியின் அஸ்திபாரங்கள் குலுங்கும்" (ஏசா 24:17,18).

இஸ்ரவேல் வம்சத்தார் வீழ்ச்சியடைந்ததைப்பார்த்து மோவாபியர்கள் சந்தோஷப்படுகிறார்கள். கல்தேயர்கள் இஸ்ரவேலை சிறைப்பிடித்தாலும் மோவாபியர்கள் தங்களுக்கே வெற்றி கிடைத்ததுபோல சந்தோஷப்படுகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் கீழே விழுந்தாலும் எழுந்திருப்பார்கள். கர்த்தர் தமது வலதுகரத்தினால் கீழே விழுந்திருக்கிற தம்முடைய பிள்ளைகளை தூக்கிவிடுவார். அவர்களை மறுபடியும் நிறுத்துவார். அவர்களை மறுபடியும் நாட்டுவார்.

மோவாபியரோ கீழே விழுந்தால் எழுந்திருக்கமாட்டார்கள். கர்த்தர் அவர்களுக்கு உதவி செய்யமாட்டார். அவர்களுடைய தெய்வமாகிய கேமோசும் அவர்களுக்கு உதவிசெய்யாது. கேமோசுக்கு ஜீவனோ பெலனோ இல்லை.

"திகிலுக்கு விலக ஓடுகிறவன் படுகுழியிலே விழுவான்; படுகுழியிலிருந்து ஏறுகிறவனோ கண்ணியிலே பிடிபடுவான்; அவர்கள் விசாரிக்கப்படும் வருஷத்தை அதின்மேல், அதாவது மோவாபின்மேல் வரப்பண்ணுவேன்" (எரே 48:44) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மோவாபியர்கள் திகிலுக்கு விலக ஓடுகிறார்கள். அவர்கள் படுகுழியிலே விழுகிறார்கள். குழியிலிருந்து ஏறினாலும் கண்ணியிலே பிடிபடுகிறார்கள். மோவாபியருக்கு ஒரு காரியமும் சித்திக்கவில்லை. சகலமும் அவர்களுக்கு தீங்காய் நடைபெறுகிறது. எல்லாமே அவர்களுடைய அழிவுக்கு ஏதுவாய் நடைபெறுகிறது.

மோவாபியருக்கு வரும் தீங்கைப்பற்றி எரேமியா ஒரு எடுத்துக்காட்டைச் சொல்லுகிறார். கல்தேயர்கள் மோவாப் தேசத்திற்கு விரோதமாக வருகிறார்கள். மோவாப் தேசத்தின் நாட்டுப்புறங்களிலிருக்கிற மோவாபியர்கள், கல்தேயரின் சேனைக்கு தப்பி ஓடிவருகிறார்கள். அவர்கள் எஸ்போனின் நிழலிலே தரித்து நிற்கிறார்கள். எஸ்போனில் தங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்று நம்புகிறார்கள்.

எரேமியா இதைப்பற்றிச் சொல்லும்போது, "வல்லடிக்குத் தப்ப ஓடிப்போகிறவர்கள் எஸ்போனின் நிழலில் தரித்து நின்றார்கள்" (எரே 48:45) என்று சொல்லுகிறார். இந்த வசனத்தில் "வல்லடி" என்னும் வார்த்தை சத்துருவின் சேனையைக் குறிக்கும். எஸ்போன் அரணிப்பான பட்டணம். யுத்தம்பண்ணுகிற இராணுவத்தார் சில சமயங்களில், அரணிப்பான பட்டணங்களில் வந்து, அங்கே தங்கியிருந்து ஒய்வெடுப்பது வழக்கம். யுத்தத்தில் காயம்பட்டிருந்தால், தங்கள் காயங்களை ஆற்றுவதற்கு இங்கே காயம்கட்டுவார்கள். அரணிப்பான பட்டணம் அவர்களுக்கு பாதுகாப்பாயிருக்கும்.

மோவாபியர்கள் எஸ்போனிலே தங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்து, எஸ்போனின் நிழலில் தரித்து நிற்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அங்கு பாதுகாப்பு கிடைக்காது. அங்கே அவர்களுக்கு ஏமாற்றமும் ஆபத்தும் உண்டாகும். திகிலுக்கு விலக ஓடுகிறவன் படுகுழியிலே விழுவதுபோல, மோவாபியர்கள் கல்தேயருக்கு பயந்து எஸ்போனின் நிழலுக்கு வந்திருக்கிறார்கள். படுகுழியிலிருந்து ஏறுகிறவன் கண்ணியிலே பிடிபடுவதுபோல, மோவாபியர்கள் எஸ்போன் என்னும் கண்ணியில் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

"நெருப்பு எஸ்போனிலும், அக்கினிஜுவாலை சீகோன் நடுவிலுமிருந்து புறப்பட்டு, மோவாப் தேசத்தின் எல்லைகளையும், கலகஞ்செய்கிறவர்களின் உச்சந்தலையையும் பட்சிக்கும்" (எரே 48:45) என்று கர்த்தர் சொல்லுகிறார். எஸ்போன் நிழலாகயிருக்கும் என்று மோவாபியர்கள் அங்கே நம்பி வந்தார்கள். ஆனால் எஸ்போனோ நெருப்பாகவும், அக்கினி ஜுவாலையாகவும் இருக்கிறது. எஸ்போனின் நிழலில் தரித்து நின்று ஒய்வெடுத்துக்கொள்ளலாம் என்று மோவாபியர்கள் அங்கே வந்திருக்கிறார்கள். ஆனால் எஸ்போனிலுள்ள நெருப்பும் அக்கினி ஜுவாலையும் மோவாபியரின் உச்சந்தலையை பட்சிக்கும்.

எஸ்போனில் யாருக்கும் அடைக்கலம் கிடைக்காது என்றும், அங்கே வருகிறவர்களை அக்கினிபட்சித்துப்போடும் என்றும் மோசே ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். "எஸ்போனிலிருந்து அக்கினியும் சீகோனுடைய பட்டணத்திலிருந்து ஜுவாலையும் புறப்பட்டு, மோவாபுடைய ஆர் என்னும் ஊரையும், அர்னோனுடைய மேடுகளிலுள்ள ஆண்டவமார்களையும் பட்சித்தது" (எண் 21:28).

கல்தேயர்கள் மோவாபியரை சிறைப்பிடித்து கொண்டுபோகிறார்கள். அவர்களுடைய குமாரர்களையும், குமாரத்திகளையும் சிறைப்பிடிக்கிறார்கள். கோமேஷ் விக்கிரகத்தை நம்பின ஜனம் அழிந்துபோகிறது. ஆனாலும் கர்த்தர் கடைசிநாளிலே மோவாபின் சிறையிருப்பை திருப்புவதாக வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தரே மோவாபியரை பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்கு அனுப்பினார். அதே கர்த்தரே மோவாபியரை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுதலைபண்ணுகிறார். கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கு அன்பும் ஆதரவும் காண்பிப்பதுபோல, மோவாபியருக்கும் அன்பும் ஆதரவும் காண்பிக்கிறார். மோவாபியர்கள் கர்த்தரோடு எப்போதும் யுத்தம்பண்ணிக்கொண்டிருக்கமாட்டார்கள். கர்த்தருடைய கோபமும் மோவாபியர்மீது நித்திய காலமாக நிலைத்திராது.

எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. மோவாபியரின் கலகத்திற்கும், கர்த்தருடைய கோபத்திற்கு ஒரு முடிவு உண்டு. மோவாபியருக்கு ஏராளமான வேதனைகள் வந்தாலும், கர்த்தருடைய கிருபையினால் அவர்களுக்கு சமாதானமான முடிவு உண்டாகிறது. "மோவாபின் மேல் வரும் நியாயத்தீர்ப்பின் செய்தி இத்தோடே முடிந்தது" (எரே 48:47) என்று சொல்லி எரேமியா மோவாபுக்கு விரோதமாகச் சொன்ன தீர்க்கதரிசன செய்தியை நிறைவு செய்கிறார்.

49 அதிகாரம்

தத்தளிப்பின் பாத்திரம் மற்ற தேசங்களுக்கும் அனுப்பப்படுகிறது. அந்த தேசங்களெல்லாம் அந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணவேண்டும் (எரே 25:15). அம்மோன் புத்திரரைக் குறித்து கர்த்தர் சொல்லுகிறது (எரே 49:1-6). ஏதோமைக்குறித்து சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது (எரே 49:7-22). தமஸ்குவைக் குறித்து சொல்லுவது (எரே 49:23-27). கேதாரையும் காத்சோருடைய ராஜ்யங்களையும் குறித்து கர்த்தர் சொல்லுகிறது (எரே 49:28-33). ஏலாமுக்கு விரோதமாக கர்த்தருடைய வசனம் (எரே 49:34-37).

அம்மோன் புத்திரர்
எரே 49:1-6

எரே 49:1. அம்மோன் புத்திரரைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேலுக்குக் குமாரர் இல்லையோ? அவனுக்குச் சுதந்தரவாளி இல்லையோ? அவர்கள் ராஜா காத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, அதின் ஜனம் இவன் பட்டணங்களில் குடியிருப்பானேன்?

எரே 49:2. ஆகையால், இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவிலே யுத்தத்தின் ஆர்ப்பரிப்பைக் கேட்கப்பண்ணுவேன்; அது பாழான மண்மேடாகும்; அதற்கடுத்த ஊர்களும் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்; ஆனாலும் இஸ்ரவேல் தன் தேசத்தைச் சுதந்தரித்துக் கொண்டவர்களின் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 49:3. எஸ்போனே, அலறு; ஆயி பாழாக்கப்பட்டது; ரப்பாவின் குமாரத்திகளே, ஓலமிடுங்கள்; இரட்டை உடுத்திக்கொண்டு, புலம்பி, வேலிகளில் சுற்றித்திரியுங்கள்; அவர்கள் ராஜா அதின் ஆசாரியர்களோடும் அதின் பிரபுக்களோடுங்கூடச் சிறைப்பட்டுப்போவான்.

எரே 49:4. எனக்கு விரோதமாய் வருகிறவன் யார் என்று சொல்லி, உன் செல்வத்தை நம்பின சீர்கெட்ட குமாரத்தியே, நீ பள்ளத்தாக்குகளைப் பற்றிப் பெருமை பாராட்டுவானேன்? உன் பள்ளத்தாக்குக் கரைந்துபோகிறது.

எரே 49:5. இதோ, உன் சுற்றுப்புறத்தார் எல்லாராலும் உன்மேல் திகிலை வரப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நீங்கள் அவரவர் தம்தம் முன் இருக்கும் வழியை ஓடத் துரத்தப்படுவீர்கள்; வலசைவாங்கி ஓடுகிறவர்களைச் சேர்ப்பார் ஒருவருமில்லை.

எரே 49:6. அதற்குப்பின்பு அம்மோன் புத்திரருடைய சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அம்மோன் புத்திரர் மோவாபியருக்கு அருகாமையிலிருக்கிறார்கள். அவர்கள் மோவாப் புத்திரருக்கு நெருங்கிய உறவின் முறையைச் சேர்ந்தவர்கள். அம்மோன் புத்திரருக்கு விரோதமாக கர்த்தர் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். அவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய சுதந்தரவீதங்களை அநியாயமாக அபகரித்துக்கொண்டார்கள். அம்மோனியர் கானான் தேசத்திற்கு அருகாமையிலிருக்கிறார்கள் (எரே 49:1).

அசீரியாவின் ராஜா கீலேயாத்தியரை தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோனான். இதனால் கீலேயாத்தியரின் தேசத்தில் குடியில்லாமல் போயிற்று. அவர்களுக்கு அருகாமையிலிருந்த அம்மோன் புத்திரர், கீலேயாத்தியரின் காத் தேசத்தை அநியாயமாய் அபகரித்துக்கொண்டார்கள்.

"இஸ்ரவேலின் ராஜாவாகிய பெக்காவின் நாட்களில் அசீரியாவின் ராஜாவாகிய திகிலாத்பிலேசர் வந்து, ஈயோனையும், பெத்மாக்கா என்னும் ஆபேலையும், யனோவாகையும், கேதேசையும், ஆத்சோரையும், கீலேயாத்தையும், கலிலேயாவாகிய நப்தலி தேசமனைத்தையும் பிடித்து, குடிகளைச் சிறையாக அசீரியாவுக்குக் கொண்டுபோனான்" (2இராஜா 15:29).

"ஆகையால் இஸ்ரவேலின் தேவன் அசீரியா ராஜாவாகிய பூலின் ஆவியையும், அசீரியா ராஜாவாகிய தில்காத்பில்நேசரின் ஆவியையும் எழுப்பினதினாலே, அவன் ரூபனியரும் காத்தியரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருமாகிய அவர்களைச் சிறைபிடித்து, இந்நாள்வரைக்கும் இருக்கிறதுபோல, ஆலாவுக்கும் ஆபோருக்கும் ஆரோவுக்கும் கோசான் ஆற்றங்கரைக்கும் கொண்டுபோனான்" (நாளா 5:26).

கர்த்தர் அம்மோன் புத்திரரிடம் தம்முடைய ஜனங்களுக்காக வழக்காடுகிறார். "இஸ்ரவேலுக்குக் குமாரர் இல்லையோ? அவனுக்குச் சுதந்தரவாளி இல்லையோ? அவர்கள் ராஜா காத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, அதின் ஜனம் இவன் பட்டணங்களில் குடியிருப்பானேன்?" (எரே 49:1) என்று கர்த்தர் அம்மோன் புத்திரரிடம் கேட்கிறார்.

அசீரியாவின் ராஜா காத்தியரை சிறைப்பிடித்துக்கொண்டு போனாலும், அவர்களில் இன்னும் மீதமானவர்கள் இருக்கிறார்கள். காத் தேசம் அவர்களுக்கே சொந்தம். ஆனால் அம்மோன் புத்திரரின் ராஜாக்கள் காத் தேசத்தை சுதந்தரித்துக் கொண்டார்கள். அம்மோனியர்கள் காத்தின் பட்டணங்களில் குடியிருக்கிறார்கள். காத் தேசத்தில் காத்தியர்கள் குடியில்லாவிட்டாலும், அவர்களுக்கு சொந்தமான இஸ்ரவேல் புத்திரர்கள் அங்கே குடியிருக்கவேண்டும். அம்மோன் புத்திரரைவிட, இஸ்ரவேல் புத்திரரே காத்தியருக்கு மிகவும் நெருங்கின சொந்தமானவர்கள்.

காத் தேசம் கர்த்தருடைய ஜனத்திற்கு சுதந்தரவீதமாக கிடைத்திருக்கிறது. இஸ்ரவேலின் தேவனை ஆராதிக்கிறவர்கள் மாத்திரமே காத் தேசத்தில் குடியிருக்கவேண்டும். அம்மோன் புத்திரரோ மில்கோம் என்னும் விக்கிரகத்தை ஆராதிக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய சுதந்தரத்தில் பங்குமில்லை, பாத்தியமுமில்லை. ஆனாலும் அம்மோன் புத்திரரின் ராஜாக்கள் காத் தேசத்தை சுதந்தரித்துக்கொள்கிறார்கள். கர்த்தரை ஆராதிக்க வேண்டிய காத் தேசத்தில் மோவாபியர்கள் மில்கோம் என்னும் விக்கிரகத்தை ஆராதிக்கிறார்கள்.

"மோவாப் செய்த நிந்தனையையும், அம்மோன் புத்திரர் என் ஜனத்தை நிந்தித்து, அவர்கள் எல்லையைக் கடந்து பெருமைபாராட்டிச் சொன்ன தூஷணங்களையும் கேட்டேன். ஆகையால் மோவாப் சோதோமைப்போலும், அம்மோன் புத்திரரின் தேசம் கொமோராவைப்போலுமாகி, காஞ்செறி படரும் இடமும், உப்புப் பள்ளமும், நித்திய பாழுமாயிருக்கும்; என் ஜனத்தில் மீந்தவர்கள் அவர்களைக் கொள்ளையிட்டு, என் ஜாதியில் மீதியானவர்கள் அவர்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்" (செப் 2:8,9).

அம்மோன் புத்திரர் பேராசை பிடித்தவர்கள். மற்றவர்களுடைய நிலங்களுக்கும், உடமைகளுக்கும் ஆசைப்படுகிறார்கள். பிறருடைய தேசங்களை தங்களுக்கு சொந்தமாக்கிக்கொள்ள விரும்புகிறார்கள். எந்தெந்த பொருட்கள் மீதெல்லாம் தங்கள் கைகளை வைக்கிறார்களோ, அந்தப் பொருட்களெல்லாம் தங்களுக்குரியது என்று பேராசையோடு சொல்லுகிறார்கள்.

காத் தேசம் காத்தியருக்கு சொந்தமானது. அவர்களுடைய சந்ததியாருக்கு சொந்தமானது. காத்தியரை வஞ்சித்து, அவர்களுடைய தேசத்தை அபகரித்துக்கொள்வது மிகப்பெரிய பாவம். அம்மோன் புத்திரருக்கு காத்தியரின் உரிமையைப்பற்றித் தெரியவில்லை. காத் தேசம் தங்களுக்கு எப்படி கிடைத்தது என்பதுகூட தெரியவில்லை. அவர்கள் நீண்டகாலமாக, காத்தியரின் தேசத்தை அபகரித்து, தங்களுக்குச் சொந்தமாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

அம்மோன் புத்திரர் காத் தேசத்தை அநியாயமாக சுதந்தரித்துக்கொண்டதினால், அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. "ஆகையால், இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது அம்மோன் புத்திரரின் பட்டணமாகிய ரப்பாவிலே யுத்தத்தின் ஆர்ப்பரிப்பைக் கேட்கப்பண்ணுவேன்; அது பாழான மண்மேடாகும்; அதற்கடுத்த ஊர்களும் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்" (எரே 49:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ரப்பா பட்டணம் அம்மோன் புத்திரரின் தலைநகரம். இது அரணான பட்டணம். மிகவும் பெலமுள்ளது. ஆனாலும் அங்கே யுத்தத்தில் சத்தம் கேட்கப்படும். ரப்பா பாழான மண்மேடாகும். அம்மோன் தேசத்தில் மற்ற ஊர்களும் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்.

அம்மோன் புத்திரர் தங்கள் செல்வத்தை நம்பி சீர்கெட்டுப்போயிருக்கிறார்கள். தங்களுக்கு விரோதமாக யாராலும் வரமுடியாது என்று பெருமையோடு சொல்லுகிறார்கள். அம்மோன் தேசத்தில் பள்ளத்தாக்குகளைக் குறித்து அவர்கள் பெருமைப்படுகிறார்கள். கர்த்தரோ அம்மோன் புத்திரருக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

"எனக்கு விரோதமாய் வருகிறவன் யார் என்று சொல்லி, உன் செல்வத்தை நம்பின சீர்கெட்ட குமாரத்தியே, நீ பள்ளத்தாக்குகளைப்பற்றிப் பெருமை பாராட்டுவானேன்? உன் பள்ளத்தாக்குக் கரைந்துபோகிறது" (எரே 49:4).

அம்மோன் புத்திரர் நீதிமானாகிய லோத்தின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் அம்மோன் புத்திரரோ கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப் போயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரைக் கனம்பண்ணாமல் தங்கள் தேசத்தின் பள்ளத்தாக்குகளைப்பற்றி பெருமை பாராட்டுகிறார்கள். இந்தப் பள்ளத்தாக்குகள் அம்மோன் புத்திரருக்கு சுதந்தரவீதமான தேசமல்ல. அவர்கள் அதை இஸ்ரவேலிடமிருந்து பலவந்தமான அபகரித்துக்கொண்டார்கள்.

அம்மோன் புத்திரரின் பள்ளத்தாக்குகளைச் சுற்றிலும் உயர்ந்த பர்வதங்கள் இருக்கிறது. பள்ளத்தாக்குகள் மிகவும் பாதுகாப்பாயிருக்கிறது. அந்நிய தேசத்தாரால் உயர்ந்த பர்வதங்களைத் தாண்டி, அம்மோன் புத்திரரின் பள்ளத்தாக்குகளுக்கு வரமுடியாது. ஆகையினால் அம்மோன் புத்திரர் "எனக்கு விரோதமாய் வருகிறவன் யார்" என்று ஆணவத்தோடு கேட்கிறார்கள்.

அம்மோன் புத்திரர் இப்போது செல்வச்செழிப்போடிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் செல்வத்தையும், சம்பத்தையும், ஐசுவரியத்தையும் நம்புகிறார்கள். தங்களுடைய செல்வத்திற்கு ஒரு குறைவும் இருக்காது என்று நினைக்கிறார்கள். தாங்கள் இன்று பாதுகாப்பாகவும், ஆசீர்வாதமாகவும் இருப்பதுபோலவே, நாளைக்கும் இருப்போம் என்று சொல்லுகிறார்கள். தங்களுடைய செல்வம் தங்களுக்கு பாதுகாப்பைத் தரும் என்று நினைக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை நம்பாமல், தங்கள் செல்வத்தை நம்புவதினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது.

"எஸ்போனே, அலறு; ஆயி பாழாக்கப்பட்டது; ரப்பாவின் குமாரத்திகளே, ஓலமிடுங்கள்; இரட்டை உடுத்திக்கொண்டு, புலம்பி, வேலிகளில் சுற்றித்திரியுங்கள்; அவர்கள் ராஜா அதின் ஆசாரியர்களோடும் அதின் பிரபுக்களோடுங்கூடச் சிறைப்பட்டுப் போவான்" (எரே 49:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் அம்மோன் புத்திரரை சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு போவார்கள். அவர்களுடைய ராஜாவும், ஆசாரியர்களும், பிரபுக்களும் பாபிலோன் தேசத்திற்கு சிறைப்பட்டுப்போவார்கள். அம்மோன் தேசத்தை சுற்றியிருக்கிற எல்லா தேசத்தாரும், அம்மோன் புத்திரருக்கு விரோதமாக வருவார்கள்.

"இதோ, உன் சுற்றுப்புறத்தார் எல்லாராலும் உன்மேல் திகிலை வரப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நீங்கள் அவரவர் தம்தம் முன் இருக்கும் வழியை ஓடத் துரத்தப்படுவீர்கள்; வலசைவாங்கி ஓடுகிறவர்களைச் சேர்ப்பார் ஒருவருமில்லை" (எரே 49:5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அம்மோன் புத்திரர்கள் துரத்தப்படுவார்கள். அவர்களை சேர்த்துக் கொள்வதற்கு ஒருவரும் இருக்கமாட்டார்கள். ஒருவரும் தங்களுடைய வீட்டின் கதவுகளைத் திறந்துகொடுத்து, அவர்களை தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அப்போது இஸ்ரவேல் புத்திரர்கள் அம்மோன் புத்திரரின் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். "இஸ்ரவேல் தன் தேசத்தைச் சுதந்தரித்துக் கொண்டவர்களின் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்" (எரே 49:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அம்மோன் புத்திரர்மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரும். அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருப்பார்கள். அதற்கு பின்பு கர்த்தர் மோவாபியருக்கு இறங்கினதுபோல, அம்மோன் புத்திரருக்கும் இறங்குவார். "அதற்குப்பின்பு அம்மோன் புத்திரருடைய சிறையிருப்பைத் திருப்புவேன்" (எரே 49:6) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏதோம்
எரே 49:7-22

எரே 49:7. ஏதோமைக்குறித்துச் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: தேமானிலே இனி ஞானமில்லையோ? ஆலோசனை விவேகிகளை விட்டு அழிந்ததோ? அவர்களுடைய ஞானம் கெட்டுப்போயிற்றோ?

எரே 49:8. தேதானின் குடிகளே, ஓடுங்கள், முதுகைக்காட்டுங்கள், பள்ளங்களில் பதுங்குங்கள்; ஏசாவை விசாரிக்கும் காலத்தில் அவன் ஆபத்தை அவன் மேல் வரப்பண்ணுவேன்.

எரே 49:9. திராட்சப்பழங்களை அறுக்கிறவர்கள் உன்னிடத்திலே வந்தார்களாகில், பின்பறிக்கிறவதற்குக் கொஞ்சம் வையார்களோ? இராத்திரியில் திருடர்வந்தார்களாகில், தங்களுக்குப் போதுமென்கிறமட்டும் கொள்ளையடிப்பார்கள் அல்லவோ?

எரே 49:10. நானோ ஏசாவை வெறுமையாக்கி, அவன் ஒளித்துக்கொள்ளக்கூடாதபடிக்கு அவனுடைய மறைவிடங்களை வெளிப்படுத்திப்போடுவேன்; அவனுடைய சந்ததியாரும் அவனுடைய சகோதரரும் அவனுடைய அயலாரும் அழிக்கப்படுவார்கள்; அவன் இனி இரான்.

எரே 49:11. திக்கற்றவர்களாய்ப்போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்; உன் விதவைகள் என்னை நம்புவார்களாக.

எரே 49:12. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, பாத்திரத்தில் குடிக்கவேண்டுமென்கிற நியாயத்தீர்ப்புக்கு உள்ளாயிராதவர்கள் அதில் குடித்தார்கள்; நீ குற்றமற்று நீங்கலாயிருப்பாயோ? நீ நீங்கலாயிராமல் அதில் நிச்சயமாய்க் குடிப்பாய்.

எரே 49:13. போஸ்றா பாழும் நிந்தையும் அவாந்தரமும் சாபமுமாக இருக்குமென்றும், அதின் பட்டணங்கள் எல்லாம் நித்திய வனாந்தரங்களாயிருக்குமென்றும் என்னைக்கொண்டு ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 49:14. நீங்கள் கூடிக்கொண்டு, அதற்கு விரோதமாக வந்து, யுத்தம்பண்ணுகிறதற்கு எழும்புங்கள் என்று சொல்ல, ஜாதிகளிடத்தில் ஸ்தானாதிபதியை அனுப்புகிற செய்தியைக் கர்த்தரிடத்திலே கேள்விப்பட்டேன்.

எரே 49:15. இதோ, உன்னை ஜாதிகளுக்குள்ளே சிறியதும், மனுஷருக்குள்ளே அசட்டை பண்ணப்பட்டதுமாக்குகிறேன் என்கிறார்.

எரே 49:16. கன்மலை வெடிப்புகளில் வாசம்பண்ணி, மேடுகளின் உச்சியைப் பிடித்திருக்கிறவனே உன்னால் உன் பயங்கரமும் உன் இருதயத்தின் அகந்தையும் உன்னை மோசம்போக்கிற்று; நீ கழுகைப்போல் உயரத்தில் உன் கூட்டைக் கட்டினாலும் அங்கேயிருந்து உன்னை விழப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 49:17. அப்படியே ஏதோம் பாழாகும்; அதைக் கடந்துபோகிறவன் எவனும் அதின் எல்லா வாதைகளினிமித்தமும் பிரமித்து ஈசல்போடுவான்.

எரே 49:18. சோதோமும் கொமோராவும் அவைகளின் சுற்றுப்புறங்களும் கவிழ்க்கப்பட்டதுபோல இதுவும் கவிழ்க்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அங்கே ஒருவனும் குடியிருப்பதில்லை, அதில் ஒரு மனுபுத்திரனும் தங்குவதில்லை.

எரே 49:19. இதோ, புரண்டு ஓடுகிற யோர்தானிடத்திலிருந்து சிங்கம் வருவதுபோல் பலவானுடைய தாபரத்துக்கு விரோதமாக வருகிறான்; அவனைச் சடிதியிலே அங்கேயிருந்து ஓடிவரப் பண்ணுவேன்; நான் அதற்கு விரோதமாய்க் கட்டளையிட்டு அனுப்பத் தெரிந்துகொள்ளப்பட்டவன் யார்? எனக்குச் சமானமானவன் யார்? எனக்கு மட்டுக்கட்டுகிறவன் யார்? எனக்கு முன்பாக நிலைநிற்கப்போகிற மேய்ப்பன் யார்?

எரே 49:20. ஆகையால் கர்த்தர் ஏதோமுக்கு விரோதமாக யோசித்த ஆலோசனையையும், அவர் தேமானின் குடிகளுக்கு விரோதமாக நினைத்திருக்கிற நினைவுகளையும் கேளுங்கள்; மந்தையில் சிறியவர்கள் மெய்யாகவே அவர்களைப் பிடித்திழுப்பார்கள், அவர்கள் இருக்கிற தாபரங்களை அவர் மெய்யாகவே பாழாக்குவார்.

எரே 49:21. அவைகளுக்குள் இடிந்துவிழும் சத்தத்தினாலே பூமி அதிரும்; கூக்குரலின் சத்தம் சிவந்த சமுத்திரமட்டும் கேட்கப்படும்.

எரே 49:22. இதோ, ஒருவன் கழுகைப்போல எழும்பி, பறந்துவந்து, தன் செட்டைகளைப் போஸ்றாவின்மேல் விரிப்பான்; அந்நாளிலே ஏதோமுடைய பராக்கிரமசாலிகளின் இருதயம் பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயின் இருதயம்போல இருக்கும் என்கிறார்.

ஏதோமியரும் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதிகளாயிருக்கிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு ஏதோமியர்மீது வருகிறது. எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தைகளை ஏதோமுக்கு விரோதமாகச் சொல்லுகிறார். ஒபதியா தீர்க்கதரிசியும் ஏதோமுக்கு விரோதமாக அநேக தீர்க்கதரிசன வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார். ஏதோமைக் குறித்து, எரேமியா சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளும், ஒபதியா சொன்ன தீர்க்கதரிசன வார்த்தைகளும் ஒத்திருக்கிறது. தீர்க்கதரிசிகள் வெவ்வேறு நபர்களாகயிருந்தாலும், அவர்களை ஏவுகிற பரிசுத்த ஆவியானவர் ஒருவரே.

ஏதோம் தேசம் முழுவதும் அழிந்து பாழாய்ப்போகும். ஏசாவை விசாரிக்கும் காலத்தில், அவன் ஆபத்தை அவன்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே 49:8). இந்த ஆபத்துக்கு ஏசா பாத்திரவானாயிருக்கிறான். அவனுடைய பழைய பாவங்களுக்கு கர்த்தர் அவனுக்கு இப்போது தண்டனை கொடுக்கிறார். கர்த்தர் ஏசாவை விசாரிக்கும் காலம் சமீபத்திலிருக்கிறது. அவன் தன்னுடைய பாவமான கிரியைகளையெல்லாம் கர்த்தருடைய சமுகத்திலே வந்து கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

கர்த்தர் ஏசாவை விசாரிக்கும்போது அவர்கள் பட்டயத்திற்கு பயந்து ஓடுவார்கள். கல்தேயரோடு யுத்தம்பண்ண முடியாமல் தோற்று ஓடிப்போவார்கள். காடுகளிலும் மேடுகளிலும் பதுங்கிக்கொள்வார்கள். "தேதானின் குடிகளே, ஓடுங்கள், முதுகைக்காட்டுங்கள், பள்ளங்களில் பதுங்குங்கள்" (எரே 49:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் ஏதோமின்மீது யுத்தம்பண்ணி, அவர்களிடத்தில் இருக்கிறதெல்லாவற்றையும் கொள்ளையடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டுபோய் விடுவார்கள். அவர்களுக்கு மீதமாக ஒன்றும் வைக்கமாட்டார்கள். கர்த்தர் ஏசாவை வெறுமையாக்குவார். கல்தேயர்கள் ஏதோமியரை தங்களுக்கு போதுமென்கிற மட்டும் கொள்ளையடிப்பார்கள். ஏசா கல்தேயருக்கு பயந்து பள்ளங்களில் பதுங்கியிருப்பான். கர்த்தரோ அவன் ஒளித்துக்கொள்ளக்கூடாதபடிக்கு, அவனுடைய மறைவிடங்களை வெளிப்படுத்திப்போடுவார்.

"திராட்சப்பழங்களை அறுக்கிறவர்கள் உன்னிடத்திலே வந்தார்களாகில், பின்பறிக்கிறவதற்குக் கொஞ்சம் வையார்களோ? இராத்திரியில் திருடர்வந்தார்களாகில், தங்களுக்குப் போதுமென்கிறமட்டும் கொள்ளையடிப்பார்கள் அல்லவோ? நானோ ஏசாவை வெறுமையாக்கி, அவன் ஒளித்துக்கொள்ளக்கூடாதபடிக்கு அவனுடைய மறைவிடங்களை வெளிப்படுத்திப்போடுவேன்" (எரே 49:9,10) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏதோமியரோடு சேர்ந்து, அவனுடைய சந்ததியாரும், அவனுடைய சகோதரரும், அவனுடைய அயலாரும் அழிக்கப்படுவார்கள்; "அவன் இனி இரான்" (எரே 49:10) என்று கர்த்தர் சொல்லுகிறார். மோவாபியர், பெலிஸ்தர் ஆகியோர் ஏதோமியருக்கு அயலாராயிருக்கிறார்கள். ஏதோமியருக்கு வருகிற அழிவு, மோவாபியருக்கும், பெலிஸ்தருக்கும் வரும். ஏதோமுக்கு அழிவு வரும்போது, மோவாபியராலோ, பெலிஸ்தராலோ அவர்களுக்கு உதவிசெய்ய முடியாது.

ஏதோமியர் தங்கள் சகோதரராகிய மோவாபியரிடத்திலும், தங்கள் அயலாராகிய பெலிஸ்தரிடத்திலும் உதவிகளை எதிர்பார்ப்பார்கள். கர்த்தரோ அவர்களையும் அழித்துப்போடுவார்.

ஏதோமியருக்கும், மோவாபியருக்கும், பெலிஸ்தருக்கும் அழிவு வரும்போது, கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கு விசேஷித்த கிருபைகளையும், பாதுகாப்புக்களையும் கட்டளையிடுகிறார். கல்தேயர்கள் ஜாதிகள்மீது யுத்தம்பண்ணும்போது, அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு விசேஷித்த சலுகைகளைக் காண்பிப்பார்கள்.

இஸ்ரவேல் சந்ததியாரே "திக்கற்றவர்களாய்ப்போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்; உன் விதவைகள் என்னை நம்புவார்களாக" (எரே 49:11) என்று கல்தேயர்கள், கர்த்தருடைய வார்த்தையை இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லுவார்கள்.

ஏதோமியரின் திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் கல்தேயர்கள் பாதுகாக்கமாட்டார்கள். அவர்களைப் பராமரிக்கமாட்டார்கள். ஆனால் கல்தேயர்கள் இஸ்ரவேல் புத்திரரின் திக்கற்ற பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் விசேஷித்த பாதுகாப்புக்களையும், விசேஷித்த பராமரிப்புக்களையும் காண்பிப்பார்கள். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், கல்தேயர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு விசேஷித்த சலுகைகளை காண்பிக்கிறார்கள்.

ஏதோமியர்கள் ஜாதிகளில் பெலத்தவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கையில் திரளாயிருக்கிறார்கள். கர்த்தரோ அவர்களை ஜாதிகளுக்குள்ளே சிறியதும், மனுஷருக்குள்ளே அசட்டை பண்ணப்பட்டதுமாக ஆக்குவார் (எரே 49:15)

"இதோ, நான் உன்னை ஜாதிகளில் சிறுகப்பண்ணினேன்; நீ மெத்தவும் அசட்டைபண்ணப்பட்டிருக்கிறாய்" (ஒப 1:2). ஏதோமிலே ஒருவனும் குடியிருப்பதில்லை. அதில் ஒரு மனுபுத்திரனும் தங்குவதில்லை (எரே 49:18).

கர்த்தர் ஏதோமை அழிக்க வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறார். அவர்களை அழிப்பதற்கு கர்த்தர் கல்தேயரை தமது கருவியாகப் பயன்படுத்துகிறார். பாபிலோன் ராஜா பெலமுள்ளவன். அவன் கர்த்தருடைய விருப்பத்தின் பிரகாரம் ஏதோம் தேசத்தின்மீது வேகமாய் வருவான். ஏதோமியரை சங்காரம்பண்ணுவான். ஏதோமின் பட்டணங்களை இடித்து, அவற்றை பாழாக்கிப்போடுவான்.

கர்த்தர் நேபுகாத்நேச்சாரின் பலத்தையும் பராக்கிரமத்தையும் பற்றிச் சொல்லுகிறார். "அவன், இதோ, புரண்டு ஓடுகிற யோர்தானிடத்திலிருந்து சிங்கம் வருவதுபோல் பலவானுடைய தாபரத்துக்கு விரோதமாக வருகிறான்" (எரே 49:19) என்று கர்த்தர் பாபிலோன் ராஜாவைப்பற்றிச் சொல்லுகிறார்.

கர்த்தர் நேபுகாத்நேச்சாரைப்பற்றிச் சொல்லும்போது, "அவனைச் சடிதியிலே அங்கேயிருந்து ஓடிவரப்பண்ணுவேன்; நான் அதற்கு விரோதமாய்க் கட்டளையிட்டு அனுப்பத்தெரிந்துகொள்ளப்பட்டவன் யார்? எனக்குச் சமானமானவன் யார்? எனக்கு மட்டுக்கட்டுகிறவன் யார்? எனக்கு முன்பாக நிலைநிற்கப்போகிற மேய்ப்பன் யார்?" (எரே 49:19) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தர் ஏதோமுக்கு விரோதமாக ஆலோசனைகளை யோசித்திருக்கிறார். அவர் தேமானின் குடிகளுக்கு விரோதமாக தம்முடைய நினைவுகளை நினைத்திருக்கிறார். மந்தையில் சிறியவர்கள் மெய்யாகவே அவர்களைப் பிடித்திழுப்பார்கள், அவர்கள் இருக்கிற தாபரங்களை கர்த்தர் மெய்யாகவே பாழாக்குவார் (எரே 49:20). நேபுகாத்நேச்சாரின் சேனையிலுள்ள சாதாரண இராணுவவீரர்கள் கூட, ஏதோமியரைப் பிடித்து இழுப்பார்கள். அவர்களை பட்டயத்தால் கொன்றுபோடுவதற்கு இழுத்துக்கொண்டு போவார்கள். தங்களுக்கு கீழ்ப்படியுமாறு அவர்கள் ஏதோமியரை கட்டாயம்பண்ணுவார்கள்.

நேபுகாத்நேச்சார் மிருகங்களின் ராஜாவாகிய சிங்கம்போலவும் வருவான். அவன் பறவைகளின் ராஜாவாகிய கழுகு போலவும் வருவான். "இதோ, ஒருவன் கழுகைப்போல எழும்பி, பறந்துவந்து, தன் செட்டைகளைப் போஸ்றாவின்மேல் விரிப்பான்" (எரே 49:22) என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்நாளிலே ஏதோமுடைய பராக்கிரமசாலிகளின் இருதயம் பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீயின் இருதயம்போல இருக்கும்.

கழுகு வேகமாக பறந்து வரும். அதுபோலவே நேபுகாத்நேச்சாரும் கழுகைப்போல வேகமாய் வருவான். கழுகு பலமுள்ள பறவை. நேபுகாத்நேச்சரின் இராணுவமும் பலமுள்ளது. நேபுகாத்நேச்சாருக்கு ஏதோமியரால் எதிர்த்து நிற்கமுடியாது. அவனோடு எதிர்த்து நின்று யுத்தம்பண்ணுவது ஏதோமியருக்கு விருதாவான காரியமாயிருக்கும்.

ஏதோமியர்கள் தங்கள் சுயஞானத்தை நம்புகிறார்கள். தங்கள் தேசத்திலுள்ள விவேகிகளின் ஆலோசனைகளை நம்புகிறார்கள். ஏதோமியருக்கு அழிவு வரும்போது, அவர்களுடைய நம்பிக்கைகளெல்லாம் அவமாய்ப்போகும். அவர்களுடைய ஞானமும், விவேகிகளின் ஆலோசனைகளும் ஆபத்து காலத்தில் உதவிசெய்யாது.

"தேமானிலே இனி ஞானமில்லையோ? ஆலோசனை விவேகிகளை விட்டு அழிந்ததோ? அவர்களுடைய ஞானம் கெட்டுப்போயிற்றோ?" (எரே 49:7) என்று ஏதோமைக்குறித்துச் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

ஏதோம் தேசம் ஞானத்தில் புகழ் பெற்ற தேசம். அங்கே ஏராளமான ஞானிகளும் விவேகிகளும் இருக்கிறார்கள். அவர்கள் அரசியல் சாதுரியங்களில் வல்லவர்கள். ஆனாலும் நேபுகாத்நேச்சாருக்கு முன்பாக அவர்களுடைய அரசியல் தந்திரங்கள் சித்திக்காது. அவர்களுடைய இராணுவ யோசனைகளெல்லாம் அவமாய்ப்போகும். நேபுகாத்நேச்சார் ஏதோமியர்மீது சிங்கம் போலவும், கழுகைப்போலவும் வருவான்.

நேபுகாத்நேச்சாரும், அவனுடைய சேனையும் வேகமாய் வருவதைப் பார்த்து, ஏதாமுடைய பராக்கிரமசாலிகளின் இருதயம் கலங்கிப்போகும். அவர்களைப் பார்த்து ஏதோமிலுள்ள ஞானிகளாலும் விவேகிகளாலும் தெளிவாக சிந்திக்க முடியாது. அவர்களால் நல்ல ஆலோசனைகளைச் சொல்லமுடியாது. அவர்கள் எல்லோரும் குழப்பத்திலிருப்பார்கள். தேமானிலே ஞானம் இல்லாததுபோல இருக்கும். விவேகிகளின் ஆலோசனைகள் அழிந்துபோனதுபோல இருக்கும்.

கர்த்தர் ஒரு தேசத்திற்கும், ஒரு ஜாதிக்கும் அழிவை தீர்மானிக்கும்போது, கர்த்தருடைய தீர்மானத்திற்கு விரோதமாக யாராலும் எதிர்த்து நிற்கமுடியாது. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது. மனுஷர் எவ்வளவுதான் ஆலோசனை பண்ணினாலும், அவர்களுடைய ஞானம் கர்த்தருடைய சர்வஞானத்திற்கு ஒப்பாயிராது. "அவர் நம்பிக்கையுள்ளவர்களுடைய வாக்கை விலக்கி, முதிர்வயதுள்ளவர்களின் ஆலோசனையை வாங்கிப்போடுகிறார்" (யோபு 12:20).

ஏதோமியர்கள் தங்கள் சுயபலத்தை நம்புகிறார்கள். கல்தேயரிடமிருந்து தப்பிப்பதற்கு, ஏதோமியரின் சுயபலமோ, சுயபராக்கிரமமோ உதவிசெய்யாது. அவர்கள் தங்கள் பெலத்தினால் கன்மலை வெடிப்புக்களில் வாசம்பண்ணுகிறார்கள். அவர்கள் மேடுகளின் உச்சியைப் பிடித்திருக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் அகந்தையிருக்கிறது. அவர்களுடைய அகந்தையே அவர்களை மோசம் போக்கிற்று. "நீ கழுகைப்போல் உயரத்தில் உன் கூட்டைக் கட்டினாலும் அங்கேயிருந்து உன்னை விழப்பண்ணுவேன்" (எரே 49:16) என்று கர்த்தர் ஏதோமியரைப் பார்த்து சொல்லுகிறார்.

ஏதோமியர்கள் தங்களுடைய சுயபலத்தை நம்புகிறார்கள். அவர்களுடைய இராணுவமும் பெரியதாயிருக்கிறது. தங்களுக்கு அருகாமையிலுள்ள தேசத்தாருக்கு, ஏதோமியர்கள் பயங்கரமானவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ஏதோமியரின் மகத்தான சேனையைப் பார்த்து பயப்படுகிறார்கள். தங்களால் ஏதோமியரை எதிர்த்து யுத்தம்பண்ண முடியாது என்று மற்ற தேசத்தார் ஒதுங்கியே இருக்கிறார்கள்.

ஏதோமியரின் பயங்கரமும், அவர்களுடைய இருதயத்தின் அகந்தையும் அவர்களை மோசம்போக்கிற்று. மற்ற தேசத்தார் தங்களைப் பார்த்து பயப்படுவதை ஏதோமியர் கவனிக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் பெருமை உண்டாயிற்று. தங்களுக்கு அருகாமையிலுள்ள மற்ற தேசங்களைவிட ஏதோமியர் பெலமுள்ளவர்களாகயிருந்தாலும், அவர்களுடைய பெலம் கல்தேயருடைய பெலத்திற்கு ஒப்பாயிராது. கல்தேயர்கள் மிகவும் பெலமுள்ளவர்கள்.

ஏதோம் தேசத்தில் ஏராளமான பர்வதங்கள் இருக்கிறது. அங்கே அநேக வெடிப்புக்கள் உண்டு. ஏதோமியர்கள் கன்மலை வெடிப்புகளில் தங்கியிருக்கிறார்கள். இதுவே தங்களுக்கு பாதுகாப்பு என்று நினைக்கிறார்கள். அவர்கள் மேடுகளின் உச்சியில் தங்கியிருக்கிறார்கள். தங்கள் தேசத்திற்கு விரோதமாக யுத்தம் பண்ண வருகிறவர்களால், கன்மலையின் வெடிப்புகளுக்கும், மேடுகளின் உச்சிகளுக்கும் வரமுடியாது என்றும், அங்கே வந்து தங்களைப் பிடிக்க முடியாது என்றும் ஏதோமியர் நினைக்கிறார்கள்.

"கன்மலை வெடிப்புகளாகிய உன் உயர்ந்த ஸ்தானத்திலே குடியிருந்து, என்னைத் தரையிலே விழத்தள்ளுகிறவன் யார் என்று உன் இருதயத்தில் சொல்லுகிறவனே, உன் இருதயத்தின் அகந்தை உன்னை மோசம்போக்குகிறது. நீ கழுகைப்போல உயரப்போனாலும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன்கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஒப 3,4)

"அந்நாளில் அல்லவோ நான் ஏதோமிலுள்ள ஞானிகளையும், ஏசாவின் பர்வதத்திலுள்ள புத்திமான்களையும் அழிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஒப 8).

கர்த்தர் ஏதோமியருக்கு அழிவை நியமித்திருக்கிறார். இது கர்த்தருடைய சித்தமும் தீர்மானமும் ஆகும். தங்களுக்கு வரும் அழிவிலிருந்து ஏதோமியரால் தப்பிக்க முடியாது.

"இதோ, பாத்திரத்தில் குடிக்கவேண்டுமென்கிற நியாயத்தீர்ப்புக்கு உள்ளாயிராதவர்கள் அதில் குடித்தார்கள்; நீ குற்றமற்று நீங்கலாயிருப்பாயோ? நீ நீங்கலாயிராமல் அதில் நிச்சயமாய்க் குடிப்பாய். போஸ்றா பாழும் நிந்தையும் அவாந்தரமும் சாபமுமாக இருக்குமென்றும், அதின் பட்டணங்கள் எல்லாம் நித்திய வனாந்தரங்களாயிருக்குமென்றும் என்னைக் கொண்டு ஆணையிட்டேன்" (எரே 49:12,13) என்று கர்த்தர் ஏதோமியரைக் குறித்து சொல்லுகிறார்.

கர்த்தர் தத்தளிப்பின் பாத்திரத்தை ஏதோமியருக்கு கொடுத்திருப்பதுபோலவே, அவர்களுடைய அண்டை தேசத்தாருக்கும் கொடுத்திருக்கிறார். அவர்கள் எல்லோரும் அதிலே பானம்பண்ணவேண்டும்.

ஏதோமுக்கு வரும் அழிவு இரகசியமாயிருக்காது. அந்த அழிவு உலகம் முழுவதற்கும் பிரத்தியட்சமாய்த் தெரியும். அவைகளுக்குள் இடிந்துவிழும் சத்தத்தினாலே பூமி அதிரும்; கூக்குரலின் சத்தம் சிவந்த சமுத்திரமட்டும் கேட்கப்படும் (எரே 49:21).

"ராஜாவாகிய சாலொமோன் ஏதோம் தேசத்தில் சிவந்த சமுத்திரக்கரையிலே ஏலோத்துக்குச் சமீபத்திலுள்ள எசியோன்கேபேரிலே கப்பல்களைச் செய்வித்தான்" (1இராஜா 9:26).

தமஸ்கு
எரே 49:23-27

எரே 49:23. தமஸ்குவைக் குறித்துச் சொல்வது: ஆமாத்தும் அர்ப்பாத்தும் கலங்குகிறது; பொல்லாத செய்தியை அவர்கள் கேட்டபடியினால் கரைந்து போகிறார்கள்; சமுத்திரத்தோரமாய்ச் சஞ்சலமுண்டு; அதற்கு அமைதலில்லை.

எரே 49:24. தமஸ்கு தளர்ந்துபோம், புறங்காட்டி ஓடிப்போம்; திகில் அதைப்பிடித்தது; பிரசவ ஸ்திரீயைப்போல இடுக்கமும் வேதனைகளும் அதைப்பிடித்தது.

எரே 49:25. சந்தோஷமான என் ஊராகிய அந்தப் புகழ்ச்சியுள்ள நகரம் தப்பவிடப்படாமற்போயிற்றே!

எரே 49:26. ஆதலால் அதின் வாலிபர் அதின் வீதிகளில் விழுந்து, யுத்தமனுஷர் எல்லாரும் அந்நாளிலே சங்காரமாவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 49:27. தமஸ்குவின் மதில்களில் தீக்கொளுத்துவேன்; அது பெனாதாத்தின் அரமனைகளைப் பட்சிக்கும் என்கிறார்.

சீரியா தேசம் கானான் தேசத்திற்கு வடக்கிலுள்ளது. தமஸ்கு சீரியாவின் தலைநகரம். சீரியர்கள் தேவனுடைய இஸ்ரவேல் ஜனத்திற்கு நீண்டகாலமாகவே சத்துருக்களாக இருக்கிறார்கள். அக்காலத்தில் தமஸ்கு மிகவும் பிரபல்யமான பட்டணமாக விளங்கிற்று. தமஸ்குவுக்கு அருகாமையில் ஆமாத்தும், அர்ப்பாத்தும் இருக்கிறது. இவையும் சீரிய தேசத்தில் முக்கியமான பட்டணங்களாகும்.

சீரியாவின் ராஜாவாகிய பெனாதாத் தமஸ்குவிலே தனக்கு அரமனைகளைக் கட்டினான். கர்த்தர் தமஸ்குவின் மதில்களை தீக்கொளுத்துவேன் என்றும், அது பெனாதாத்தின் அரமனைகளை பட்சிக்கும் என்றும் சொல்லுகிறார் (எரே 49:27). "ஆசகேலின் வீட்டிலே தீக்கொளுத்துவேன்; அது பெனாதாத்தின் அரமனைகளைப் பட்சிக்கும்" (ஆமோ 1:4).

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு சீரியர்மீது வருகிறது. அப்போது தமஸ்கு தளர்ந்துபோகும். தங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிற தேசத்தார்மீது சீரியா தேசத்தாரால்யுத்தம் பண்ண முடியாது. அவர்கள் சத்துருவுக்கு பயந்து புறங்காட்டி ஓடிப்போவார்கள். திகில் தமஸ்குவைப் பிடிக்கும். பிரசவ ஸ்திரீயைப்போல இடுக்கமும் வேதனைகளும் தமஸ்குவைப் பிடித்துக்கொள்ளும் (எரே 49:24).

பாபிலோன் ராஜா தமஸ்குவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருவான். அந்தச் செய்தி தமஸ்குவிலிருக்கிறவர்களுக்கும், ஆமாத்திலும் அர்ப்பாத்திலும் இருக்கிறவர்களுக்கும் பொல்லாத செய்தியாகயிருக்கிறது. அந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே ஆமாத்தும் அர்ப்பாத்தும் கலங்குகிறது. தமஸ்குவிலிருக்கிறவர்கள் கரைந்துபோகிறார்கள். "சமுத்திரத்தோரமாய்ச் சஞ்சலமுண்டு; அதற்கு அமைதலில்லை" (எரே 49:23) என்று கர்த்தர் தமஸ்குவைப்பற்றிச் சொல்லுகிறார்.

நேபுகாத்நேச்சார் தமஸ்குவுக்கு விரோதமாக பெரிய சேனையோடு வருகிறான். அந்தச் செய்தியைக் கேட்கும்போதே சீரியருடைய இருதயம் கரைந்துபோகிறது. சமுத்திரம் தத்தளிப்பதுபோல அவர்களுடைய மனதும் தத்தளிக்கிறது. ஏதோமியர் கொந்தளிக்கும் கடலைப்போல இருக்கிறார்கள். அவர்களுடைய ஆத்துமா கிலேசத்தால் கரைந்துபோகிறது.

"துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக்கூடாமல், அதின் ஜலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது" *(ஏசா 57:20).*

"அவர்கள் ஆகாயத்தில் ஏறி, ஆழங்களில் இறங்குகிறார்கள், அவர்கள் ஆத்துமா கிலேசத்தினால் கரைந்து போகிறது" *(சங் 107:26).*

நேபுகாத்நேச்சார் தங்களுக்கு விரோதமாக வரும் செய்தியைக் கேட்டு, முதலாவதாக தமஸ்குவிலுள்ளவர்கள் கலங்குகிறார்கள். அதன் பின்பு ஆமாத்து, அர்ப்பாத்து ஆகிய பட்டணங்களிலுள்ளவர்களும் கலங்குகிறார்கள். அதன் பின்பு இந்த பொல்லாத செய்தியை சமுத்திரக்கரை ஓரமாய் இருக்கிறவர்களும் கேட்டு, சஞ்சலப்படுகிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் அமைதலில்லை. கலங்கிப்போகிறார்கள்.

"தமஸ்கு தளர்ந்துபோம், புறங்காட்டி ஓடிப்போம்; திகில் அதைப்பிடித்தது; பிரசவ ஸ்திரீயைப்போல இடுக்கமும் வேதனைகளும் அதைப்பிடித்தது" *(எரே 49:24)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

தமஸ்கு சந்தோஷமான நகரம். அது புகழ்ச்சியுள்ள நகரம். ஆனால் கல்தேயர்கள் அவர்களுக்கு விரோதமாக வரும்போது, அவர்களுடைய சந்தோஷமும், புகழ்ச்சியும் அவர்களைவிட்டு நீங்கிப்போகும். "சந்தோஷமான என் ஊராகிய அந்தப் புகழ்ச்சியுள்ள நகரம் தப்பவிடப்படாமற் போயிற்றே" *(எரே 49:25)* என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களுக்கு சந்தோஷத்திற்கும் புகழ்ச்சிக்கும் பதிலாக, இடுக்கமும் வேதனைகளும் வந்திருக்கிறது.

தமஸ்கிலுள்ளவர்கள் கர்த்தரை புகழமாட்டார்கள். அவர்கள் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்வார்கள். தமஸ்குவுக்கு வருகிற அந்நிய தேசத்தார் எல்லோரும், அந்த நகரத்தை பார்த்து ஆச்சரியப்படுவார்கள். தமஸ்குவிலுள்ளவர்களை புகழ்ந்து பேசுவார்கள். தமஸ்கு எப்போதுமே சந்தோஷமான ஊராகயிருந்தது. ஆனால் இப்போதோ அது இடுக்கமும் வேதனைகளும் நிரம்பிய ஊராகயிருக்கிறது.

தமஸ்குவின் வாலிபர் அதன் வீதிகளில் விழுந்துகிடப்பார்கள். அந்நாளிலே தமஸ்குவின் யுத்தமனுஷர் எல்லோரும் சங்காரமாவார்கள். தமஸ்குவுக்கு அழிவு வரும். அது அக்கினியினால் சுட்டெரிக்கப்படும். தமஸ்குவிலுள்ளவர்கள் எல்லோரும் பட்டயத்தால் மடிந்துபோவார்கள். தமஸ்குவின் மதில்களெல்லாம் தீக்கொளுத்தப்படும். அந்த தீ தமஸ்குவிலுள்ள வீடுகளையும், பெனாதாத் கட்டின அரமனைகளையும் பட்சிக்கும்.

சீரியர்கள் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகத் தீங்கு செய்தார்கள். கர்த்தர் அவர்களை நியாயம் விசாரித்து, தம்முடைய நீதியான நியாயத்தீர்ப்பை அவர்களுக்கு கொடுக்கிறார். தமஸ்கு தீக்கொளுத்தப்படுகிறது. சீரியா தேசம் முற்றிலுமாய் அழிந்துபோகிறது. கர்த்தருடைய இஸ்ரவேலுக்கு விரோதமாக தீங்கு செய்தவர்கள் அழிந்துபோகிறார்கள்.

கேதாரும் காத்சோரும் எரே 49:28-33

எரே 49:28. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் முறியடிக்கும் கேதாரையும் காத்சோருடைய ராஜ்யங்களையும் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: எழும்பி, கேதாருக்கு விரோதமாகப் போய், கீழ்த்திசைப்புத்திரரைப் பாழாக்குங்கள்.

எரே 49:29. அவர்களுடைய கூடாரங்களையும் அவர்களுடைய மந்தைகளையும் வாங்கி, அவர்களுடைய திரைகளையும் அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்டுகளையும் அவர்களுடைய ஒட்டகங்களையும் தங்களுக்கென்று கொண்டுபோய், எத்திசையும் பயம் என்று சொல்லி, அவர்கள்மேல் ஆர்ப்பரிப்பார்கள்.

எரே 49:30. காத்சோரின் குடிகளே, ஓடி, தூரத்தில் அலையுங்கள்; பள்ளத்தில் ஒதுங்கிப் பதுங்குங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் உங்களுக்கு விரோதமாக ஆலோசனை செய்து, உங்களுக்கு விரோதமாக உபாயங்களைச் சிந்தித்திருக்கிறான்.

எரே 49:31. அஞ்சாமல் நிர்விசாரமாய்க் குடியிருக்கிற ஜாதிக்கு விரோதமாக எழும்பிப்போங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அதற்கு வாசல்களுமில்லை, தாழ்ப்பாள்களுமில்லை; அவர்கள் தனிப்படத் தங்கியிருக்கிறார்கள்.

எரே 49:32. அவர்களுடைய ஒட்டகங்கள் கொள்ளையும், அவர்களுடைய ஆடுமாடுகளின் ஏராளம் சூறையுமாகும்; நான் அவர்களைச் சகல திசைகளுமான கடையாந்தர மூலைகளில் இருக்கிறவர்களிடத்துக்குச் சிதறடித்துவிட்டு, அதினுடைய சகல பக்கங்களிலுமிருந்து அவர்களுக்கு ஆபத்தை வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 49:33. ஆத்சோர் வலுசர்ப்பங்களின் தாபரமாகி, என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கும்; ஒருவனும் அங்கே குடியிருப்பதில்லை, ஒரு மனுபுத்திரனும் அதிலே தங்குவதுமில்லையென்கிறார்.

கேதாரின் குடிகள் இஸ்மவேலின் குமாரனாகிய கேதாரின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அரபியாவின் ஒரு பகுதியில் வாசம்பண்ணுகிறார்கள். காத்சோருடைய ஜனங்கள் பூர்வத்திலே கானான் தேசத்தைச் சேர்ந்தவர்கள். காத்சோருடைய ராஜ்யம் கானான் தேசத்திற்கு வடக்கு பகுதியிலுள்ளது. யாபின் காத்சோரின் ராஜா. அவன் அங்கிருந்து துரத்தப்பட்டு, அரபியாவின் பாலைவனங்களில் குடியேறினான்.

கேதாரின் ஜனங்களும், காத்சோரின் ஜனங்களும் கூடாரங்களில் குடியிருக்கிறவர்கள் கூடாரங்களுக்கு சுவர்களைக் கட்டாமல் திரைகளை விரித்திருப்பார்கள் (எரே 49:29). அவர்களுடைய பட்டணங்களும் அரணிப்பான பட்டணங்களல்ல. ஆகையினால் அவர்களுக்கு வாசல்களும் இல்லை. தாழ்ப்பாள்களும் இல்லை. அவர்கள் தனிப்பட தங்கியிருக்கிறார்கள் (எரே 49:31).

கேதாரின் ஜனங்களும் காத்சோரின் ஜனங்களும் மேய்ப்பர்கள். அவர்களிடத்தில் ஐசுவரியங்கள் எதுவுமில்லை. ஒட்டகங்களும், ஆடுமாடுகளும் மாத்திரம் அவர்களிடத்தில் இருக்கிறது. அவர்களுக்கு யுத்தவீரர்களும் இல்லை. ஆனாலும் அவர்கள் யாருக்கும் அஞ்சாமல் நிர்விசாரமாய்க் குடியிருக்கிறார்கள். அவர்கள் ஒருவருக்கும் பயப்படாமல் தனிப்பட தங்கியிருக்கிறார்கள். அவர்கள் வியாபாரம்பண்ணுவதில்லை. அவர்களிடத்தில் பொன்னோ வெள்ளியோ இல்லை. அவர்களிடத்தில் ஒட்டகங்களும், ஆடுமாடுகளும் திரளாயிருக்கிறது. அதுவே அவர்களுடைய செல்வம். அவர்களிடத்தில் பணம் இல்லாவிட்டாலும், அவர்களுடைய ஆடுமாடுகளின் பெருக்கத்தினால், அவர்கள் ஐசுவரியமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

தங்களுடைய தேவைகளுக்கு போதுமான அளவு செல்வம் வைத்திருக்கிறவர்கள் எல்லோருமே ஐசுவரியவான்கள். நம்மிடத்தில் போதுமென்கிற மனம் இருக்கவேண்டும். பண ஆசை இருக்கக்கூடாது. நம்முடைய தேவைகள் குறைவில்லாமல் சந்திக்கப்படவேண்டும். இதுவே மெய்யான ஐசுவரியம். ஐசுவரியவான்களைப் பார்ப்பதற்காக இராஜாவின் அரமனைகளில்போய், அவர்களுடைய பொக்கிஷங்களை எண்ணிப் பார்க்க வேண்டிய தேவையில்லை. அல்லது பெரிய ஐசுவரியவான்களையோ, தனவந்தர்களான வணிகர்களையோ போய்ப்பார்த்து, அவர்களுடைய பொக்கிஷங்களை கணக்கு பார்க்கவேண்டும் என்னும் அவசியமுமில்லை. கூடாரங்களில் குடியிருக்கிற சாதாரண மேய்ப்பர்களிடத்திலும் ஐசுவரியமுள்ளது.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் பெரிய பட்டணங்களையெல்லாம் பிடித்தான். அங்குள்ள பொக்கிஷங்களையெல்லாம் தன்னுடைய தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போனான். அரணிப்பான பட்டணங்களையெல்லாம் அழித்துப்போட்டான். சாதாரண கூடாரங்களிலிருக்கிறவர்களையும் அவன் விட்டு வைக்கவில்லை. அவன் கழுகைப்போல பறந்து வருகிறான். கழுகின் பார்வைக்கு எதுவும் தப்பாது. நேபுகாத்நேச்சாரின் கண்களுக்கும் ஒருவரும் தப்பிக்க முடியாது. பெரிய பட்டணங்களும் தப்பிக்கவில்லை. சாதாரண கூடாரங்களும் தப்பிக்கவில்லை.

கேதாரின் ஜனங்கள் பெரிய பட்டணங்களுக்கு அருகாமையில், வயல்வெளியில், கூடாரங்களில் தங்கியிருக்கிறார்கள். இவர்களிடத்தில் ஏராளமான ஆடுமாடுகளும், ஒட்டகங்களும் இருக்கிறது. கர்த்தர் நேபுகாத்நேச்சாரிடம் " நீ எழும்பி, கேதாருக்கு விரோதமாகப் போய், கீழ்த்திசைப்புத்திரரைப் பாழாக்குங்கள்" *(எரே 49:28)* என்று சொல்லுகிறார்.

கேதாரின் ஜனங்கள் கர்த்தருக்கு நன்றியில்லாதவர்களாயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை விசேஷமாய் ஆசீர்வதித்திருக்கிறார். அவர்களுக்கு ஆடுமாடுகளின் பெருக்கத்தைக் கொடுத்திருக்கிறார். ஆனால் அவர்களோ கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். தங்களுக்கு அருகாமையிலுள்ள பட்டணத்திற்கு அழிவு வரும்போது, அதற்கு அருகாமையில் தங்கியிருக்கிற கேதாரின் ஜனங்களும் பயப்படுகிறார்கள். "எத்திசையும் பயம்" என்று கல்தேயர்கள் கேதாரின் குடிகளிடத்தில் சொல்லுகிறார்கள்.

கல்தேயர்கள் கேதாருடைய கூடாரங்கள்மீதும் யுத்தம்பண்ண வருகிறார்கள். கல்தேயர்கள் அவர்களுடைய கூடாரங்களையும் அவர்களுடைய மந்தைகளையும் வாங்கி, அவர்களுடைய திரைகளையும் அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்டுகளையும் அவர்களுடைய ஒட்டகங்களையும் தங்களுக்கென்று கொண்டுபோய், எத்திசையும் பயம் என்று சொல்லி, அவர்கள்மேல் ஆர்ப்பரிப்பார்கள் *(எரே 49:29)*.

கேதாரின் ஜனங்களிடத்தில் பொன்னோ, வெள்ளியோ இல்லை. அவர்களுடைய கூடாரங்களின் திரைகளும், வீட்டில் பயன்படுத்துகிற தட்டுமுட்டு சாமான்களும் மாத்திரமே அவர்களிடத்தில் இருக்கிறது. கல்தேயரோ எதையும் விட்டு வைக்காமல், தட்டுமுட்டு சாமான்களையும் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார்கள்.

கல்தேயர்கள் கேதாரியரின் ஒட்டகங்களையும் தங்களுக்கென்று கொண்டுபோகிறார்கள். இதனால் அவர்களுடைய ஒட்டகங்கள் கொள்ளையாயிற்று. அவர்களுடைய ஆடுமாடுகளின் ஏராளம் குறைந்துபோயிற்று. கர்த்தர் கேதாரின் ஜனங்கள்மீது அழிவை வரப்பண்ணுகிறார். "நான் அவர்களைச் சகல திசைகளுமான கடையாந்தர மூலைகளில் இருக்கிறவர்களிடத்துக்குச் சிதறடித்துவிட்டு, அதினுடைய சகல பக்கங்களிலுமிருந்து அவர்களுக்கு ஆபத்தை வரப்பண்ணுவேன்" *(எரே 49:32)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் கேதாரின் புத்திரரை வெட்டிக்கொன்றுபோட்டாகளா என்று இந்த வசனப்பகுதியில் எழுதப்படவில்லை. ஒருவேளை கேதாரியர்கள் கல்தேயருக்கு விரோதமாக யுத்தம் செய்திருக்கமாட்டார்கள். தங்களுடைய ஜீவனுக்கு ஈடாக, கேதாரியர் தங்கள் கூடாரங்களையும், மந்தைகளையும் கிரயமாக கொடுத்திருப்பார்கள்.

கல்தேயர்கள் கேதாரியரின் மந்தைகளையும், கூடாரங்களையும், தட்டுமுட்டுகளையும் கொள்ளையடித்து கொண்டுபோனபின்பு, கேதாரின் ஜனங்களும், காத்சோருடைய ஜனங்களும் அங்கே தங்கவில்லை. அவர்கள் அந்த இடத்தை காலிசெய்துவிட்டு வெளியேறி விடுகிறார்கள். ஆத்சோர் வலுசர்ப்பங்களின் தாபரமாகும் என்றும், அது என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அங்கே ஒருவனும் குடியிருப்பதில்லை என்றும், ஒரு மனுபுத்திரனும் அதிலே தங்குவதில்லை என்றும் கர்த்தர் சொல்லுகிறார் (எரே 49:33).

பட்டணத்து ஜனங்களில் யாரும் கேதாருக்கும் காத்சோருக்கும் ஆதரவு கொடுக்கவில்லை. இவர்களை தங்களுடைய பட்டணங்களில் குடியிருக்க ஒருவரும் அனுமதிக்கவில்லை. ஆகையினால் கேதாரின் ராஜ்யமும், காத்சோருடைய ராஜ்யமும் என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏலாம்
எரே 49:34-39

எரே 49:34. யூதா ராஜாவாகிய சிதேக்கியாவினுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே, ஏலாமுக்கு விரோதமாக எரேமியா என்னும் தீர்க்கதரிசிக்கு உண்டான கர்த்தருடைய வசனம்:

எரே 49:35. சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் ஏலாமின் வில்லென்னும் அவர்களுடைய பிரதான வல்லமையை முறித்துப்போட்டு,

எரே 49:36. வானத்தின் நாலு திசைகளிலுமிருந்து நாலு காற்றுகளை ஏலாமின் மேல் வரப்பண்ணி, அவர்களை இந்த எல்லாத் திசைகளிலும் சிதறடிப்பேன்; ஏலாம் தேசத்திலிருந்து துரத்துண்டவர்கள் சகல ஜாதிகளிலும் சிதறப்படுவார்கள்.

எரே 49:37. நான் ஏலாமியரை அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாகவும், அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களுக்கு முன்பாகவும் கலங்கப்பண்ணி, என் கோபத்தின் உக்கிரமாகிய தீங்கை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் அவர்களை நிர்மூலமாக்குமட்டும் பட்டயத்தை அவர்களுக்குப் பின்னாக அனுப்பி,

எரே 49:38. என் சிங்காசனத்தை ஏலாமிலே வைத்து, அங்கேயிருந்து ராஜாவையும் பிரபுக்களையும் அழித்துப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 49:39. ஆனாலும் கடைசிநாட்களிலே நான் ஏலாமின் சிறையிருப்பைத் திருப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சிதேக்கியாவினுடைய ராஜ்யபாரத்தின் துவக்கத்திலே, கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசிக்கு, ஏலாமுக்கு விரோதமான வார்த்தைகளைச் சொல்லுகிறார். ஏலாமியர்கள் பெர்சியர்கள் என்றும், அவர்கள் சேமின் குமாரனாகிய ஏலாமின் சந்ததியைச் சேர்ந்தவர்கள் என்றும் வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். "சேமுடைய குமாரர், ஏலாம், அசூர், அர்பக்சாத், லூத், ஆராம் என்பவர்கள்" (ஆதி 10:22).

பெர்சிய தேசத்தின் ஒரு பகுதி யூதர்களுடைய தேசமாகிய இஸ்ரவேலுக்கு மிகவும் அருகாமையிலிருக்கிறது. அவர்கள் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக தீங்கு செய்தார்கள். ஏலாமியர்கள் வில்லையும் அம்பையும் பயன்படுத்துவதில் தேர்ச்சி பெற்றவர்கள். இவர்கள் இஸ்ரவேல் ஜனத்தார்மீது அநேகந்தரம் யுத்தம் செய்திருக்கிறார்கள்.

"ஏலாமியன் அம்பறாத்தூணியை எடுத்து, இரதங்களோடும் காலாட்களோடும் குதிரைவீரரோடும் வருகிறான்; கீர் கேடகத்தை வெளிப்படுத்தும்" (ஏசா 22:6).

இதனால் கர்த்தருடைய கோபம் ஏலாமியர்மீது வந்திருக்கிறது. "நான் ஏலாமியரை அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாகவும், அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களுக்கு முன்பாகவும் கலங்கப்பண்ணி, என் கோபத்தின் உக்கிரமாகிய தீங்கை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்" (எரே 49:37) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

ஏலாமியரின் சேனை நிர்மூலமாகும். அவர்கள் பெலனற்றுப்போவார்கள். கர்த்தர் ஏலாமின் பிரதான வல்லமையை முறித்துப்போடுவார். வில்லே அவர்களுடைய பிரதான வல்லமை. கர்த்தர் வானத்தின் நாலுதிசைகளிலுமிருந்து நாலு காற்றுக்களை ஏலாமின்மேல் வரப்பண்ணுவார். அந்தக் காற்றுக்கள் ஏலாமியரை அழித்துப்போடும். கர்த்தர் அவர்களை எல்லா திசைகளிலும் சிதறடிப்பார். ஏலாம் தேசத்திலிருந்து துரத்துண்டவர்கள் சகல ஜாதிகளிலும் சிதறடிக்கப்படுவார்கள் (எரே 49:36).

கர்த்தர் நாலு காற்றுக்களை ஏலாமின்மேல் வரப்பண்ணுகிறார். இந்த நாலு காற்றுக்களும், வானத்தின் நாலு திசைகளிலுமிருந்து வருகிறது. ஏலாமின்மீது காற்று மாறி மாறி வீசும். எல்லா திசைகளிலுமிருந்தும் ஏலாமுக்கு விரோதமான காற்று வீசும். கர்த்தர் ஏலாமிலிருந்து, அதன் ராஜாவையும், பிரபுக்களையும் அழித்துப்போடுவார் (எரே 49:38).

"என் சிங்காசனத்தை ஏலாமிலே வைப்பேன்" (எரே 49:38) என்று கர்த்தர் சொல்லுகிறார். நேபுகாத்நேச்சாரின் சிங்காசனம் ஏலாமிலே வைக்கப்படும். அல்லது கோரேசு ராஜாவின் சிங்காசனம் அங்கே வைக்கப்படும். கோரேசுக்கு முதன்முதலில் ஏலாமிலுள்ள எலிமாசில் ஜெயம் கிடைத்தது. "என் சிங்காசனத்தை ஏலாமிலே வைப்பேன்" என்று கர்த்தர் சொல்லுவதற்கு, "கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் சிங்காசனம் ஏலாமிலே வைக்கப்படும்" என்பது அர்த்தமாகும் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

ஏலாமின் ராஜா ஆதிகாலத்திலேயே பிரசித்திப்பெற்றவன். "சிநெயாரின் ராஜாவாகிய அம்ராப்பேலும், ஏலாசாரின் ராஜாவாகிய அரியோகும், ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேரும், ஜாதிகளின் ராஜாவாகிய திதியாலும் இருந்த நாட்களில்" (ஆதி 14:1). ஏலாமின் ராஜாவாகிய கெதர்லாகோமேர் பெலன் மிகுந்தவன். இவன் அதிக வல்லமையுள்ளவன். தன்னுடைய காலத்தில் கெதர்லாகோமேர் ஒரு பராக்கிரமசாலி. ஆனாலும் இவனுக்கு பின் வந்தவர்கள், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு தீங்கு செய்தார்கள். இதனால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு ஏலாமியர்மேல் வருகிறது.

கர்த்தர் ஏலாமிலிருந்து ராஜாவையும் பிரபுக்களையும் அழித்துப்போடுவதாகச் சொல்லுகிறார். ஆனாலும் அவர்களுக்கு நித்திய அழிவு உண்டாகாது. "கடைசிநாட்களிலே நான் ஏலாமின் சிறையிருப்பைத் திருப்புவேன்" (எரே 49:39) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கோரேசு ராஜா பாபிலோன் தேசத்தை அழித்துப்போடுவான். பாபிலோன் தேசம் பெர்சியருடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படும். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த ஏலாமியர்கள் விடுவிக்கப்பட்டு, தங்கள் தேசத்திற்கு சந்தோஷமாய்த் திரும்பி வருவார்கள். "கடைசி நாட்களிலே" ஏலாமுக்கு விடுதலை கிடைக்கும். மேசியாவின் நாட்கள் பூரணமாய் நிறைவேறும்போது, ஏலாமியர்கள் விடுவிக்கப்படுவார்கள்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி விசுவாசிகள்மீது ஊற்றப்பட்டது. அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள். ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே அவர்கள் வெவ்வேறு பாஷைகளில் பேசத்தொடங்கினார்கள். அந்த சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷைகளில் அவர்கள் பேசுகிறதைக் கேட்டு கலக்கமடைந்தார்கள். கலக்கமடைந்தவர்களில் ஏலாமியரும் இருந்தார்கள். இவர்கள் "எலாமீத்தர்" என்று அழைக்கப்படுகிறார்கள் (அப் 2:9).

50 அதிகாரம்

கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாய் பாபிலோனுக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். எரேமியா புறஜாதி தேசங்களுக்கு விரோதமாய்ச் சொன்ன தீர்க்கதரிசனங்களில், பாபிலோனுக்கு விரோதமான தீர்க்கதரிசனங்களை கடைசியாகச் சொல்லுகிறார். ஏனெனில் பாபிலோனுக்கு விரோதமான வார்த்தைகளே கடைசியாக நிறைவேறுகிறது.

புறஜாதி தேசங்களைத் தண்டிப்பதற்காக கர்த்தர் பாபிலோன் தேசத்தை தம்முடைய கையிலுள்ள கோலாகப் பயன்படுத்தினார். கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றி முடித்த பின்பு, பாபிலோன் என்னும் கோலை, அக்கினியிலே எரிந்துபோடுகிறார்.

கோரேசு ராஜா மூலமாய் பாபிலோன் தேசத்துக்கு அழிவு வரும். ஏசாயா தீர்க்கதரிசி இந்த அழிவைப்பற்றி ஏற்கெனவே தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். இப்போது இந்த அழிவை எரேமியா தீர்க்கதரிசியும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லி உறுதிபண்ணுகிறார். பாபிலோன் தேசம் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் வளர்ந்து செழிப்பாயிருந்தது. அதன் காலம் முடிந்த பின்போ, அந்த தேசம் இலைகளை உதிர்த்து பட்டுப்போன மரம் போலிருக்கிறது. அது வெட்டப்படுவதற்கு ஏதுவாயிற்று.

ஏசாயா தீர்க்கதரிசி பாபிலோன் தேசத்து அழிவையும், இஸ்ரவேல் ஜனங்களின் விடுதலையையும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். ஏசாயாவின் தீர்க்கதரிசனம் புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளுக்கு அடையாளமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. விசுவாசிகள் இப்போது பாவத்தின் பிடியிலும், அந்தகாரத்தின் வல்லமையிலும் இருந்தாலும், கர்த்தர் அவர்களை அவர்களுடைய பாவங்களுக்கு விடுதலையாக்கி இரட்சிப்பார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் மனுஷருடைய ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பு உண்டாகும்.

எரேமியா தீர்க்கதரிசியும் பாபிலோன் தேசத்து அழிவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்து பாபிலோனுக்கு விரோதமாக, இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ சபை ஜெயம் பெறும்.

எரேமியா தீர்க்கதரிசி பல தேசங்களுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தைகளைச் சொன்னார். அந்த தேசங்களில், பாபிலோன் தேசமே மிகவும் பெரியதும், அதிக வலிமையுமுள்ள தேசமாகும். ஆகையினால் பாபிலோன் தேசத்தின் அழிவு மிகவும் பிரத்தியட்சமாகவும், விசேஷமாகவும் இருக்கும். எரேமியா தீர்க்கதரிசி மற்ற தேசங்களுக்கு விரோதமாக பொதுவாகச் சொன்ன வார்த்தைகளை, இப்போது பாபிலோன் தேசத்திற்கும் விரோதமாகச் சொல்லுகிறார் *(எரே 25:12; 27:7)*.

எரேமியா தீர்க்கதரிசி பாபிலோன் தேசத்திற்கு விரோதமாகச் சொல்லும் தீர்க்கதரிசன வார்த்தைகள் மிகவும் தெளிவாகயிருக்கிறது. அந்த வார்த்தைகளில் தேவனுடைய கோபம் பிரத்தியட்சமாய் வெளிப்படுகிறது. கர்த்தருடைய ஜனத்தார் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். பாபிலோன் தேசம் அழியும்போது, இஸ்ரவேல் வம்சத்தாரின் விடுதலையின் கதவுகள் திறக்கப்படும்.

பாபிலோன் தேசத்தின் அழிவு *(எரே 50:1-3)*. எரேமியா மறுபடியும் *(எரே 50:9-16)*, மறுபடியும் *(எரே 50:21-22)*. மறுபடியுமாக *(எரே 50:35-46)*. பாபிலோன் தேசத்தின் அழிவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய ஜனம் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து மீட்கப்படுவார்கள் *(எரே 50:4-9)* என்பதை மறுபடியும் *(எரே 50:17-20)*. மறுபடியுமாக *(எரே 50:33,34)*. எரேமியா தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்.

பாபிலோனும் கல்தேயர் தேசமும் எரே 50:1-3

எரே 50:1. கர்த்தர் தீர்க்கதரிசியாகிய எரேமியாவைக்கொண்டு பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்துக்கும் விரோதமாக உரைத்த வசனம்:

எரே 50:2. பாபிலோன் பிடிபட்டது; பேல் வெட்கப்பட்டது; மெரொதாக் நொறுங்குண்டது; அதினுடைய சிலைகள் இலச்சையடைந்தது; அதினுடைய விக்கிரகங்கள் நொறுங்கிப்போயின என்று ஜாதிகளுக்குள்ளே அறிவித்துப் பிரசித்தம்பண்ணுங்கள்; இதை மறைக்காமல் கொடியேற்றி விளம்பரம்பண்ணுங்கள்.

எரே 50:3. அதற்கு விரோதமாய் வடக்கேயிருந்து ஒரு ஜாதி வந்து, அதின் தேசத்தைப் பாழக்கிப்போடும்; அதிலே குடியிருப்பாரில்லை; மனுஷரோடே மிருகங்களும் ஓடிப்போய்விடும்.

கர்த்தர் பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்திற்கும் விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். பாபிலோன் தேசத்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், எரேமியா தீர்க்கதரிசியின்மீது அன்பாகவும், கரிசனையாகவும் நடந்துகொள்கிறான். ஆனாலும் பாபிலோன் தேசத்து அழிவைப்பற்றி கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வார்த்தைகளை, எரேமியா அப்படியே சொல்லவேண்டும்.

கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியானவரால் ஆளுகை செய்யப்பட வேண்டும். அவர்கள் உலகத்தின் ஆசாபாசங்களாலோ, உலகப்பிரகாரமான சலுகைகளினாலோ, பொருளாதார நன்மைகளினாலோ ஆளுகை செய்யப்படக்கூடாது.

இந்த உலகத்தில் நமக்கு அநேகர் சிநேகிதர்களாகயிருக்கலாம். அவர்கள் கர்த்தருக்கு சத்துருக்களாகயிருப்பார்களென்றால், கர்த்தருடைய நாமத்தினால் அவர்களுக்கு நாம் சமாதானம் சொல்லக்கூடாது. அவர்கள் நம்முடைய சிநேகிதர்களாகயிருந்தாலும், அவர்கள் கர்த்தருக்கு சிநேகிதர்களல்ல. அவர்கள் கர்த்தருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். கர்த்தருக்கு விரோதமானவர்களுக்கு சமாதானமில்லை.

எரேமியா தீர்க்கதரிசி பாபிலோன் தேசத்து அழிவைப்பற்றிச் சொல்லும்போது, அது ஏற்கெனவே அழிந்துபோனது போலவே சொல்லுகிறார். "பாபிலோன் பிடிபட்டது; பேல் வெட்கப்பட்டது; மெரொதாக் நொறுங்குண்டது; அதினுடைய சிலைகள் இலச்சையடைந்தது; அதினுடைய விக்கிரகங்கள் நொறுங்கிப்போயின" (எரே 50:2) என்று எரேமியா சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்திற்கு பூரணமான அழிவு உண்டாயிற்று. அது முற்றிலுமாய் அழிந்துபோயிற்று. பாபிலோன் தேசத்திலுள்ள சிறைகளும் உடைந்துபோயிற்று. பாபிலோன் தேசத்தார் அவர்களுடைய சிலை விக்கிரகங்களுக்கு தூபங்காட்டி ஆராதித்தார்கள். தங்கள் தேசத்தைப் பாதுகாப்பதுபோல, தங்கள் சிலைகளையும் பாதுகாத்தார்கள். ஆனால் பாபிலோன் தேசத்தினுடைய சிலைகள் இலச்சையடைந்தது என்றும், அதினுடைய விக்கிரகங்கள் நொறுங்கிப்போயிற்று என்றும் எரேமியா சொல்லுகிறார்.

பேல், மெரொதாக் ஆகிய விக்கிரகங்கள் பாபிலோன் தேசத்து பிரதான தெய்வங்கள். இவ்விரண்டு சிலைகளுமே நொறுங்கிப்போயிற்று. அவற்றிற்கு இலச்சை உண்டாயிற்று. பாபிலோன் தேசமும் பாழாய்ப்போயிற்று. அதிலே குடியிருப்பார் ஒருவருமில்லை. பாபிலோன் தேசத்திலிருந்து மனுஷரும் ஓடிப்போனார்கள். மிருகங்களும் அங்கேயிருந்து ஓடிப்போயிற்று.

பாபிலோனுக்கு விரோதமாய் வடக்கே இருந்து ஒரு ஜாதி வருகிறது. இது அசீரியருடைய சேனையைக் குறிக்கும். அசீரியாவின் ராஜாவாகிய கோரேசு பாபிலோனுக்கு விரோதமாக வந்து, அந்த தேசத்தை பாழாக்கிப்போடுகிறான்.

இஸ்ரவேல் புத்திரர்
எரே 50:4-8

எரே 50:4. அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேல் புத்திரர் வருவார்கள்; அவர்களும் யூதா புத்திரரும் ஏகமாய் அழுது, நடந்துவந்து, தங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 50:5. மறக்கப்படாத நித்திய உடன்படிக்கையினால் நாம் கர்த்தரைச் சேர்ந்துகொள்வோம் வாருங்கள் என்று சீயோனுக்கு நேராய் முகங்களைத் திருப்பி, சீயோனுக்குப் போகிற வழி எதுவென்று கேட்டு விசாரிப்பார்கள்.

எரே 50:6. என் ஜனங்கள் காணாமற்போன ஆடுகள், அவர்களுடைய மேய்ப்பர்கள் அவர்களைச் சிதறப்பண்ணி, பர்வதங்களில் அலையவிட்டார்கள்; ஒரு மலையிலிருந்து மறுமலைக்குப் போனார்கள்; தங்கள் தொழுவத்தை மறந்து விட்டார்கள்.

எரே 50:7. அவர்களைக் கண்டுபிடித்தவர்கள் எல்லாரும் அவர்களைப் பட்சித்தார்கள்; அவர்களுடைய சத்துருக்கள்: எங்கள் மேல் குற்றமில்லை; அவர்கள் நீதியின் வாசஸ்தலத்திலே கர்த்தருக்கு விரோதமாக, தங்கள் பிதாக்கள் நம்பின கர்த்தருக்கு விரோதமாகவே, பாவஞ்செய்தார்கள் என்றார்கள்.

எரே 50:8. பாபிலோனின் நடுவிலிருந்தோடி, கல்தேயரின் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, மந்தையின் முன்நடக்கும் கடாக்களைப்போல் இருங்கள்.

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய ஜனத்திற்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருக்கும் யூதா புத்திரருக்கும் கர்த்தருடைய ஆசீர்வாதமான வார்த்தைகளை ஏகமாய்ச் சொல்லுகிறார். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்கு திரும்பி வருவார்கள். அதன் பின்பு அவர்கள் தங்கள் சொந்த தேசமான கானான் தேசத்திற்குத் திரும்பி வருவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக தாங்கள் செய்த எல்லா பாவங்களுக்கும் மனம் வருந்துவார்கள். மனந்திரும்புவார்கள். அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்படும். கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் ஆயத்தமாயிருப்பார்கள். கர்த்தருடைய வாக்குத்தத்தங்களெல்லாம் அவர்களுடைய ஜீவியங்களில் நிறைவேறுவதற்கு, அவர்கள் புதுப்பிக்கப்பட்ட இருதயத்தையும், ஜீவனையும் பெற்றிருப்பார்கள்.

"அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேல் புத்திரர் வருவார்கள்; அவர்களும் யூதா புத்திரரும் ஏகமாய் அழுது, நடந்துவந்து, தங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுவார்கள். மறக்கப்படாத நித்திய உடன்படிக்கையினால் நாம் கர்த்தரைச் சேர்ந்துகொள்வோம் வாருங்கள் என்று சீயோனுக்கு நேராய் முகங்களைத் திருப்பி, சீயோனுக்குப் போகிற வழி எதுவென்று கேட்டு விசாரிப்பார்கள்" (எரே 50:4,5) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் அழுது கொண்டே கர்த்தரைத் தேடுவார்கள். கர்த்தருக்கு விரோதமாக தாங்கள் செய்த பாவங்களையும், அதன் நிமித்தமாய் தாங்கள் அனுபவிக்கிற வேதனைகளையும் நினைத்து இஸ்ரவேல் ஜனத்தார் அழுது புலம்புவார்கள். சாமுவேலின் காலத்தில் இஸ்ரவேல் வீட்டார் எல்லோரும் கர்த்தருக்கு முன்பாக அழுததுபோல இப்போதும் அழுவார்கள்.

"பெட்டி கீரியாத்யாரீமிலே அநேகநாள் தங்கியிருந்தது; இருபது வருஷம் அங்கேயே இருந்து; இஸ்ரவேல் குடும்பத்தாரெல்லாரும் கர்த்தரை நினைத்து, புலம்பிக்கொண்டிருந்தார்கள்" (1சாமு 7:2).

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து திரும்பி வருகிற இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் அழுதுகொண்டு நடப்பார்கள். அழுதுகொண்டே தங்கள் கர்த்தராகிய தேவனைத் தேடுவார்கள். இந்த அழுகை இரட்சிப்புக்கேதுவான துக்கத்தினாலும், பக்திவிருத்திக்கேதுவான துக்கத்தினாலும் உண்டாயிற்று. தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி அவர்கள் கண்ணீர் விடுகிறார்கள். அவர்கள் தேவனுடைய நன்மைகளை நினைத்து சந்தோஷமாக கண்ணீர் விடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரும், யூதா புத்திரரும் பாபிலோன் தேசத்திலே எழுபது வருஷங்களாக சிறையிருப்பிலிருந்தார்கள். கர்த்தர் அவர்களுடைய சிறையிருப்புக்காலத்தை மாற்றியிருக்கிறார். அவர்கள் விடுதலையோடு தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போகும்போது, முதலாவதாக கண்ணீரோடு கர்த்தரைத் தேடுகிறார்கள். சிறையிருப்பில் அவர்களுக்கு அநேக வேதனைகளும், துன்பங்களும், உபத்திரவங்களும் உண்டாயிற்று. இவையெல்லாமே தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப அவர்களுக்கு உதவி செய்தது.

கர்த்தருடைய ஜனம் அந்நிய தேசத்து சிறையிருப்புக்குப்போனாலும், சிறையிருப்பின் வேதனைகள் அவர்களை கர்த்தரிடத்திலிருந்து துரத்திவிடவில்லை. அவர்கள் கண்ணீரோடே தங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுகிறார்கள். சிறையிலிருப்பிலிருந்த யூதர்கள் தங்கள் துக்கத்திலும், வருத்தத்திலும் மூழ்கிப்போய்விடவில்லை. வேதனையினால் அவர்களுடைய கண்களில் கண்ணீர் உண்டாயிற்று. ஆனாலும் அவர்கள் ஏகமாய் அழுது, நடந்து வந்து, தங்கள் தேவனாகிய கர்த்தரைத் தேடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்தில் எழுபது வருஷங்களாக சிறையிருப்பிலிருந்தாலும், அவர்கள் அந்த தேசத்தின் விக்கிரகங்களுக்கு அடிமையாகவில்லை. கர்த்தருடைய ஜனம் பாபிலோனுக்கு அடிமைப்பட்டாலும், பாபிலோனுடைய பேலுக்கோ, மெரொதாக்குக்கோ அடிமைப்படவில்லை. கர்த்தருடைய ஜனத்திற்கும் பாபிலோன் தேசத்து விக்கிரகங்களுக்கும் பங்குமில்லை, பாத்தியமுமில்லை.

இஸ்ரவேல் புத்திரர் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன் தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று தீர்மானம் பண்ணுகிறார்கள். கர்த்தருடைய கிருபையினாலும், அவருடைய இரக்கத்தினாலும் தங்களுக்கு விடுதலை கிடைத்தாலும், கர்த்தர் தங்களுக்கு கொடுத்த தேசத்திற்கு திரும்பிப்போவது தங்களுடைய கடமை என்று தீர்மானித்து, சீயோனுக்குப் போகிறார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட யூதர்கள் தங்கள் முகங்களை சீயோனுக்கு நேராகத் திருப்புகிறார்கள். சீயோனுக்குப்போகிற வழி எது என்று கேட்டு விசாரிக்கிறார்கள். அவர்கள் நீண்ட பிரயாணம் செய்யவேண்டும். பாபிலோன் தேசத்திலிருந்து சீயோன் தேசம் வெகுதொலைவிலுள்ளது. அவர்களுக்கு சீயோனுக்குப்போகிற வழியும் தெரியாது. ஆனாலும் அவர்கள் சீயோனுக்குப் போகிற வழி எது என்று கேட்டு விசாரித்துக்கொண்டே சீயோனுக்குப் போகிறார்கள்.

இந்த சம்பவம் ஆத்துமாக்கள் கர்த்தரிடத்தில் திரும்பி வருவதற்கு அடையாளமாயிருக்கிறது. தங்கள் பாவங்களுக்கு உண்மையாய் மனந்திரும்புகிறவர்கள் கர்த்தரிடத்திற்கு திரும்பி வருவார்கள். கர்த்தர் தங்களுக்கு நியமித்து வைத்திருக்கிற ஆவிக்குரிய இலக்கை அடையவேண்டுமென்று தீர்மானமாயிருப்பார்கள். கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பார்கள்.

கர்த்தருடைய ஜனம் சீயோனுக்குப் போகும்போது, கர்த்தரோடு தாங்கள் செய்து கொண்ட உடன்படிக்கையைப் புதுப்பித்துக்கொள்கிறார்கள். "மறக்கப்படாத நித்திய உடன்படிக்கையினால் நாம் கர்த்தரை சேர்ந்துகொள்வோம் வாருங்கள்" என்று பாபிலோன் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட யூதர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் கர்த்தரை இன்னும் நெருக்கமாய்க் கிட்டிச்சேருவதற்கு, கர்த்தருடைய உடன்படிக்கை அவர்களுக்கு உதவிசெய்யும். கர்த்தர் மாறாதவர். அவருடைய உடன்படிக்கையும் மாறாதது.

இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பில் மிகவும் பரிதாபமான சூழ்நிலையிலிருக்கிறார்கள். அவர்கள் இந்த தேசத்தில் எழுபது வருஷங்களாக பாடுகளையும் வேதனைகளையும் அனுபவித்து வருகிறார்கள். "என் ஜனங்கள் காணாமற்போன ஆடுகள்" (எரே 50:6) என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரைக் குறித்து சொல்லுகிறார். அவர்களுக்கு நல்ல மேய்ச்சல் கிடைக்கவில்லை. அவர்கள் ஒரு மலையிலிருந்து மறுமலைக்குப் போனார்கள்.

இஸ்ரவேல் புத்திரர்கள் தங்கள் தொழுவத்தை மறந்துவிட்டார்கள். தங்கள் சொந்த தேசத்தையே மறந்துவிட்டார்கள். அவர்கள் ஒரு மலையிலிருந்து மறுமலைக்குப்போனதினால், தங்கள் தொழுவத்திற்கு எப்படி திரும்பிப்போவது என்பதுகூட அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டபோது, தங்கள் சொந்த தேசமாகிய சீயோனுக்கு திரும்பிப்போகும் பாதை அவர்களுக்கு தெரியவில்லை.

இஸ்ரவேல் ஜனங்கள் காணாமல்போன ஆடுகளைப்போல அங்கும் இங்கும் அலைந்துகொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்டுபிடித்தவர்கள் எல்லோரும் அவர்களைப் பட்சித்தார்கள். அவர்களைத் தங்களுக்கு இரையாக்கிக்கொண்டார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரின் சத்துருக்கள் அவர்களைப் பார்த்து ஏளனமாய்ப் பேசினார்கள். "எங்கள் மேல் குற்றமில்லை; அவர்கள் நீதியின் வாசஸ்தலத்திலே கர்த்தருக்கு விரோதமாக, தங்கள் பிதாக்கள் நம்பின கர்த்தருக்கு விரோதமாகவே, பாவஞ்செய்தார்கள்" (எரே 50:7) என்று இஸ்ரவேல் புத்திரரின் சத்துருக்கள் சொன்னார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் தீர்க்கதரிசிகளும், அவர்களுக்கு அழிவு வரும் என்று தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அவர்கள் இப்போது அனுபவிக்கிற துன்பங்களுக்கு அவர்களுடைய பாவங்களும், அக்கிரமங்களுமே காரணம் என்று தீர்க்கதரிசிகள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் இப்போது அனுபவிக்கிற தண்டனைகள் எல்லாவற்றிற்கும் அவர்கள் பாத்திரவான்களாயிருக்கிறார்கள் என்றும் அவர்களுடைய தீர்க்கதரிசிகள் சொல்லியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் சத்துருக்கள் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக தீங்கு செய்தபோது, அவர்கள் "எங்கள்மேல் குற்றமில்லை" என்று காரணம் சொல்லுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் அனுபவிக்கிற தீங்குகளுக்கு அவர்களே காரணம் என்றும், கர்த்தருக்கு விரோதமாக அவர்கள் செய்த பாவங்களே காரணம் என்றும் சொல்லுகிறார்கள்.

எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயம் நீதியின் ஸ்தலம். ஆனால் எருசலேமின் குடிகள் கர்த்தருடைய ஆலயத்தைத் தீட்டுப்படுத்தினார்கள். தங்கள் முன்னோர்களின் பாரம்பரியங்களைப் பின்பற்றவேண்டும் என்பதற்காக, அவர்களைப்போலவே இவர்களும் கர்த்தரைவிட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போனார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். ஆகையினால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இப்படிப்பட்ட வேதனைகள் உண்டாயிற்று என்று அவர்களுடைய சத்துருக்கள் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் காணாமல்போன ஆடுகளைப்போல சிதறியிருப்பதற்கு, அவர்களுடைய மேய்ப்பர்களும் காரணமாயிருக்கிறார்கள். அவர்களுடைய மேய்ப்பர்கள் அவர்களை சிதறப்பண்ணி, பர்வதங்களில் அலையவிட்டார்கள்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற கர்த்தருடைய ஜனம், அந்த தேசத்தைவிட்டு சீக்கிரமாய்ப் புறப்பட்டுப்போகவேண்டும். விடுதலையின் கதவு திறந்தவுடன் அவர்கள் வெளியேறிவிட வேண்டும். "பாபிலோன் நடுவிலிருந்தோடி கல்தேயரின் தேசத்தைவிட்டுப் புறப்படுங்கள்" (எரே 50:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் தீவிரித்துப் புறப்பட்டுப்போகவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகள் சீயோனுக்குத் திரும்பிப்போகும்போது, பயந்த கோழைகளைப்போல போகக்கூடாது. அவர்கள் மந்தையின் முன்நடக்கும் கடாக்களைப்போல இருக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்லுகிறார். மந்தையில் முன்நடக்கும் கடா, மந்தையிலுள்ள மற்ற ஆடுகளை வழிநடத்தும். அந்தக் கடாவைப்போலவே, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிற யூதர்கள், தங்களுடைய ஜனங்களை சீயோன் தேசத்திற்கு வழிநடத்திக் கொண்டுபோகவேண்டும்.

மேதியரும் பெர்சியரும் எரே 50:9-20

எரே 50:9. இதோ, நான் பாபிலோனுக்கு விரோதமாக வடதேசத்தில் இருக்கும் பெரிய ஜாதிகளின் கூட்டத்தை எழுப்பி, அதை வரப்பண்ணுவேன்; அவர்கள் அதற்கு விரோதமாக ஆயத்தம்பண்ணுவார்கள்; அங்கேயிருந்து வருகிறவர்களால் அது பிடிக்கப்படும்; அவர்களுடைய அம்புகள் சாமர்த்தியமுள்ள பராக்கிரமசாலியின் அம்புகளைப்போல் இருக்கும்; அவைகள் விருதாவாய்த் திரும்புவதில்லை.

எரே 50:10. கல்தேயா கொள்ளையாகும்; அதைக் கொள்ளையிடுகிறவர்கள் எல்லாரும் பரிபூரணமடைவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 50:11. என் சுதந்தரத்தைக் கொள்ளையிட்ட நீங்கள் சந்தோஷித்தீர்களே, களிகூர்ந்தீர்களே, புல்மேய்ந்து கொழுத்த கடாரியைப்போல் பூரித்து, வலியரிஷபம்போல் முக்காரம் போடுகிறீர்களே.

எரே 50:12. உங்கள் தாய் மிகவும் வெட்கி, உங்களைப் பெற்றவள் நாணமடைவாள்; இதோ, அவள் ஜாதிகளுக்குள்ளே கடைசியாவதுமன்றி, வனாந்தரமும் வறட்சியும் அந்தரவெளியுமாவாள்.

எரே 50:13. கர்த்தரின் கோபத்தினாலே அது குடியற்றதும் பெரும்பாழுமாயிருக்கும்; பாபிலோனைக் கடந்துபோகிற எவனும் அதின் எல்லா வாதைகளினிமித்தமும் பிரமித்து, ஈசல்போடுவான்.

எரே 50:14. நீங்கள் எல்லாரும் பாபிலோனுக்கு விரோதமாய்ச் சுற்றிலும் அணிவகுத்து நின்று, வில்லை நாணேற்றி, அதின்மேல் அம்புகளை எய்யுங்கள்; அம்புச்செலவைப் பாராதேயுங்கள்; அது, கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தது.

எரே 50:15. அதற்கு விரோதமாய்ச் சுற்றிலும் ஆர்ப்பரியுங்கள்; அது தன்னைக் கையளித்தது; அதின் அஸ்திபாரங்கள் விழுந்தது, அதின் மதில்கள் இடிக்கப்பட்டது; இது கர்த்தர் வாங்கும் பழி; அதினிடத்தில் பழிவாங்குங்கள்; அது செய்ததுபோலவே நீங்களும் அதற்குச் செய்யுங்கள்.

எரே 50:16. விதைவிதைக்கிறவனையும் அறுப்புக்காலத்தில் அரிவாளைப் பிடிக்கிறவனையும் பாபிலோனில் இராதபடிச் சங்காரம்பண்ணுங்கள்; கொல்லுகிற பட்டயத்துக்குத் தப்ப அவரவர் தங்கள் ஜனத்தண்டைக்குத் திரும்பிக்கொண்டு, அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப்போவார்கள்.

எரே 50:17. இஸ்ரவேல் தெறிப்பட்டுப்போன ஆடு, சிங்கங்கள் அதைத் துரத்தின; முதலில் அசீரியா ராஜா அதைப் பட்சித்தான்; கடைசியில் பாபிலோன் ராஜாவாகிய இந்த நேபுகாத்நேச்சார் அதின் எலும்புகளை முறித்தான்.

எரே 50:18. ஆகையால், இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் அசீரியா ராஜாவை தண்டித்ததுபோல் பாபிலோன் ராஜாவையும் அவன் தேசத்தையும் தண்டித்து,

எரே 50:19. இஸ்ரவேலை அதின் வாசஸ்தலத்துக்குத் திரும்பிவரப் பண்ணுவேன்; அப்பொழுது அது கர்மேலிலும் பாசானிலும் மேயும்; எப்பிராயீமின் மலைகளிலும் கீலேயாத்திலும் அதின் ஆத்துமா திருப்தியாகும்.

எரே 50:20. அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும்; யூதாவின் பாவங்கள் தேடப்பட்டாலும் அவைகள் கிடையாதிருக்கும்; நான் மீதியாக வைக்கிறவர்களுக்கு மன்னிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், எரேமியா தீர்க்கதரிசி மூலமாய், பாபிலோன் தேசத்திற்கு விரோதமாய் தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். கர்த்தர் பாபிலோனை அழிப்பதற்காக வடதேசத்திலிருக்கும் பெரிய ஜாதிகளின் கூட்டத்திற்கு கட்டளை கொடுக்கிறார். மேதியரும் பெர்சியரும், அவர்களோடு கூட்டுச்சேர்ந்திருக்கிற மற்ற தேசத்தாரும், வடதேசத்திலிருக்கும் பெரிய ஜாதிகளின் கூட்டம் என்று அழைக்கப்படுகிறார்கள். கர்த்தரே இவர்களை எழுப்புகிறார். தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு கர்த்தர் அவர்களை தகுதிப்படுத்துகிறார். தம்முடைய அனுமதியோடு கர்த்தர் மேதியரையும் பெர்சியரையும் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக வரப்பண்ணுகிறார்.

"நீங்கள் எல்லாரும் பாபிலோனுக்கு விரோதமாய்ச் சுற்றிலும் அணிவகுத்து நின்று, வில்லை நாணேற்றி, அதின்மேல் அம்புகளை எய்யுங்கள்; அம்புச்செலவைப் பாராதேயுங்கள்; அது கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தது. அதற்கு விரோதமாய்ச் சுற்றிலும் ஆர்ப்பரியுங்கள்; அது தன்னைக் கையளித்தது; அதின் அஸ்திபாரங்கள் விழுந்தது, அதின் மதில்கள் இடிக்கப்பட்டது; இது கர்த்தர் வாங்கும் பழி; அதினிடத்தில் பழிவாங்குங்கள்; அது செய்ததுபோலவே நீங்களும் அதற்குச் செய்யுங்கள்" (எரே 50:14,15) என்று கர்த்தர் மேதியருக்கும் பெர்சியருக்கும் கட்டளை கொடுக்கிறார்.

கர்த்தர் கட்டளை கொடுக்கும்போது, தம்முடைய கட்டளையை நிறைவேற்றுகிறவர்களுக்கு வெற்றியையும் கொடுக்கிறார். அவர்கள் பாபிலோன்மேல் அம்புகளையும் எய்யவேண்டும். அதற்கு விரோதமாய்ச் சுற்றிலும் ஆர்ப்பரிக்கவும் வேண்டும். இந்த ஆர்ப்பரிப்பு வெற்றியுள்ள ஆர்ப்பரிப்பு. அவர்கள் யுத்தம்பண்ணுவதற்கு முன்பாகவே, வெற்றி பெற்றதற்கு அடையாளமாக ஆர்ப்பரிக்கவேண்டும்.

பாபிலோன் தேசத்திற்கு அழிவு வரும். அந்த அழிவு மிகவும் பயங்கரமானதாயிருக்கும். கொஞ்சமும் மீதியாகயில்லாமல், பாபிலோன் தேசம் மொத்தமாய் அழிந்துபோகும். பாபிலோன் தேசம் எப்படியெல்லாம் அழியும் என்று, கர்த்தர் எரேமியா மூலமாய் வெளிப்படுத்துகிறார்.

பாபிலோன் தேசத்தாருடைய ஐசுவரியங்களும் பொக்கிஷங்களும் அழிந்துபோகும். கல்தேயா கொள்ளையாகும் என்று கர்த்தர் சொல்லுகிறார். மேதியரும் பெர்சியரும் பாபிலோன் தேசத்தின்மீது யுத்தம்பண்ணி ஜெயிப்பார்கள். மேதியரும் பெர்சியரும் பாபிலோனிலுள்ள எல்லா பொக்கிஷங்களையும் கொள்ளையிடுவார்கள், மேதியர்கள் எல்லோரும் பரிபூரணமடைவார்கள் (எரே 50:10).

பாபிலோன் தேசம் மொத்தமாய் அழிந்துபோகும். அங்கே ஒருவரும் குடியிருக்கமாட்டார்கள். கர்த்தரின் கோபத்தினாலே அது குடியற்றதும், பெரும்பாழுமாயிருக்கும். "பாபிலோனைக் கடந்துபோகிற எவனும் அதின் எல்லா வாதைகளினிமித்தமும் பிரமித்து, ஈசல்போடுவான்" (எரே 50:13) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்தாரால் மேதியருக்கும் பெர்சியருக்கும் விரோதமாய் யுத்தம்பண்ண முடியாது. பாபிலோனியர்கள் தங்கள் சத்துருக்களைப் பார்த்து பயப்படுவார்கள். கல்தேயருடைய கோழைத்தனத்தைப் பார்த்து, அவர்களுடைய முன்னோரும் வெட்கப்படுவார்கள். கல்தேயர்கள் மேதியரைப் பார்த்து பயந்து ஓடிவிடுகிறார்கள். "உங்கள் தாய் மிகவும் வெட்கி, உங்களைப் பெற்றவள் நாணமடைவாள்; இதோ, அவள் ஜாதிகளுக்குள்ளே கடைசியாவதுமன்றி, வனாந்தரமும் வறட்சியும் அந்தரவெளியுமாவாள்" (எரே 50:12) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசம் செழித்திருந்த காலத்தில், அதன் பக்கத்து தேசத்தார் எல்லோரும், அதன் செழிப்பையும், வல்லமையையும் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் இப்போதோ பாபிலோன் தேசம் முற்றிலுமாய் அழிந்துபோயிற்று. பாபிலோன் தேசத்தில், கடைசி எல்லையிருக்கக்கூடிய பகுதிகளைக்கூட மேதியர்கள் அழித்துப்போடுவார்கள். பாபிலோன் முற்றிலும் அழிந்துபோவதுபோல, அதன் எல்லைப்பகுதியிலுள்ள ஊர்களும் அழிந்துபோகும். அவை வனாந்தரமும் வறட்சியும், அந்தரவெளியுமாகும் (எரே 50:12).

பாபிலோன் தேசத்தின் பிரதான பகுதிகள் குடியற்றதும், பெரும்பாழுமாயிருக்கும். கர்த்தருடைய கோபம் பாபிலோன் தேசத்தின்மீது வந்திருக்கிறது. கர்த்தர் கல்தேயரைப் பழிவாங்குகிறார். அவர்கள் கர்த்தருடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலைக் கொள்ளையிட்டார்கள். அப்போது மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

"என் சுதந்தரத்தைக் கொள்ளையிட்ட நீங்கள் சந்தோஷித்தீர்களே, களிகூர்ந்தீர்களே, புல்மேய்ந்து கொழுத்த கடாரியைப்போல் பூரித்து, வலியரிஷபம்போல் முக்காரம் போடுகிறீர்களே" (எரே 50:11) என்று கர்த்தர் கல்தேயரைப் பார்த்து சொல்லுகிறார். கல்தேயர்கள் இஸ்ரவேலைக் கொள்ளையிட்டார்கள். கர்த்தர் கல்தேயரைப் பழிவாங்குகிறார். இப்போது மேதியரும் பெர்சியரும் கல்தேயரைக் கொள்ளையிடுகிறார்கள்.

பாபிலோன் தேசத்தில் ஐசுவரியவான்களும் சங்காரமாவார்கள். தரித்திரரும் சங்காரமாவார்கள். கர்த்தர் பாபிலோன் தேசத்தைப் பழிவாங்குகிறார். கல்தேயர்கள் மற்றவர்களை பழிவாங்கினார்கள். இப்போது மேதியரும் பெர்சியரும் கல்தேயரைப் பழிவாங்குகிறார்கள்.

பாபிலோன் தேசத்திலுள்ள விதை விதைக்கிறவர்களையும், அறுப்புக்காலத்தில் அரிவாளைப் பிடிக்கிறவர்களையும், மேதியரும் பெர்சியரும் சங்காரம்பண்ணுகிறார்கள். அவர்கள் கொல்லுகிற பட்டயத்துக்குத் தப்ப அவரவர் தங்கள் ஜனத்தண்டைக்குத் திரும்பிக் கொண்டு, அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப்போவார்கள் (எரே 50:16) என்று கர்த்தர் கல்தேயரின் அழிவைப்பற்றிச் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்திற்கு அறுவடை காலம் வரும். ஆனால் விளைந்த தானியத்தை அறுவடை பண்ணுவதற்கு அரிவாளைப் பிடிக்கிறவன் ஒருவனும் இருக்கமாட்டான். கல்தேய தேசத்திலே விதை விதைப்புக்காலமும் வரும். ஆனால் விதை விதைப்பதற்கு அங்கே ஒருவனும் இருக்கமாட்டான்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவே பாபிலோன் தேசத்தை அழித்துப்போடுகிறார். கர்த்தருடைய கோபத்தினால் பாபிலோன் தேசம் குடியற்றதும் பெரும்பாழுமாயிருக்கிறது (எரே 50:13). பாபிலோன் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தது (எரே 50:14). ஆகையினால் கர்த்தர் அம்புச்செலவைப் பாராமல், பாபிலோனை அழித்துப்போடுகிறார்.

கல்தேயர்கள் இஸ்ரவேல் ஜனத்தை கொள்ளையிட்டபோது மிகவும் சந்தோஷப்பட்டார்கள். களிகூர்ந்தார்கள். கொழுத்த கடாரியைப்போல் பூரித்திருந்தார்கள். இஸ்ரவேலின் அழிவைப் பார்த்து கல்தேயருக்கு இரக்கமுண்டாகவில்லை. ரோமப்பேரரசின் இராயனாகிய தீத்து வெஸ்பாசின் எருசலேமை அழித்துப்போட்டான். எருசலேம் அழியும்போது அவன் கண்ணீர் விட்டழுதான். ஆனால் கல்தேயர்களோ எருசலேமைக் கொள்ளையிட்டு சந்தோஷப்பட்டார்கள்.

எருசலேமின் ஐசுவரியங்களையும் பொக்கிஷங்களையும் கொள்ளையிட்டு, கல்தேயர்கள் சுகமாய் வாழ்ந்தார்கள். தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றினார்கள். பிறருடைய ஐசுவரியங்களை அநியாயமாய்க் கொள்ளையிட்டவர்கள் இப்போது பாடுகளை அனுபவிக்கிறார்கள். கல்தேயருடைய ஐசுவரியங்களை மேதியர் கொள்ளையிடுகிறார்கள்.

பாபிலோன் மேதியரிடத்திலும் பெர்சியரிடத்திலும் தன்னைக் கையளிக்கிறது (எரே 50:15). கல்தேயர்கள் மேதியரிடத்தில் சரணடைகிறார்கள். கல்தேயர்கள் தங்களுடைய ஆயுதங்களையும் ஐசுவரியங்களையும் மேதியருடைய பாதபடியில் வைத்து சரணடைகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் காணாமல்போன ஆடுகளைப் போல இருந்தார்கள். அவர்கள் கர்த்தருடைய ஜனங்கள். கர்த்தருடைய இஸ்ரவேலை முற்றிலுமாய் அழித்துப்போட வேண்டும் என்பதே கல்தேயரின் நோக்கம். இஸ்ரவேல் ஜனத்தாரால் கல்தேயரை எதிர்த்து யுத்தம்பண்ண முடியவில்லை. அவர்கள் ஒரு மலையிலிருந்து மறுமலைக்கு சிதறிப்போனார்கள் (எரே 50:6).

"இஸ்ரவேல் தெறிப்பட்டுப்போன ஆடு, சிங்கங்கள் அதைத் துரத்தின; முதலில் அசீரியா ராஜா அதைப் பட்சித்தான்; கடைசியில் பாபிலோன் ராஜாவாகிய இந்த நேபுகாத்நேச்சார் அதின் எலும்புகளை முறித்தான்" (எரே 50:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

அசீரியாவின் ராஜா இஸ்ரவேல் வம்சத்தாரில் பத்துக்கோத்திரங்களை சிறைப்பிடித்துக் கொண்டுபோனான். கர்த்தருடைய ஜனத்தை அவன் பட்சித்துப் போட்டான். அதன் பின்பு பாபிலோன் ராஜா இஸ்ரவேலில் மீதமுள்ள இரண்டு கோத்திரங்களை தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோனான்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய ஆடுகளாகயிருந்தாலும், அவை தெறிப்பட்டுப்போன, பரிதாபமான ஆடுகளாயிருக்கிறார்கள். அவர்கள் துரத்துண்டவர்களாகவும், சதை பட்சிக்கப்பட்டவர்களாகவும், எலும்பு முறிக்கப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இஸ்ரவேல் ஜனங்கள்மீது பரிதாபப்படவில்லை. அவன் கடைசியில் இஸ்ரவேல் ஜனத்தாரின் எலும்புகளை முறித்தான். கர்த்தர் அசீரியாவின் ராஜாவைத் தண்டித்ததுபோல, பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரையும் தண்டிக்கிறார்.

"இதோ, நான் அசீரியா ராஜாவை தண்டித்ததுபோல் பாபிலோன் ராஜாவையும் அவன் தேசத்தையும் தண்டிப்பேன்" (எரே 50:18) என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு கிருபையையும் இரக்கத்தையும் வாக்குப்பண்ணுகிறார். அவர்கள் அந்நியதேசத்து சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். கர்த்தர் இஸ்ரவேலை அதின் வாசஸ்தலத்திற்கு திரும்பி வரப்பண்ணுவார். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தொழுவத்தை மறந்து, ஒரு மலையிலிருந்து மறுமலைக்கு சிதறிப்போனார்கள். கர்த்தரோ அவர்களைக் கூட்டிச்சேர்த்து, அவர்களுடைய தொழுவத்திற்கு அவர்களை திரும்பி வரப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் இழந்துபோன ஐசுவரியங்கள் அவர்களுக்கு திரும்பக் கொடுக்கப்படும். அவர்கள் இழந்துபோன செழிப்பும், நன்மையும், தெய்வீக பாதுகாப்பும் பராமரிப்பும் அவர்களுக்கு திரும்பக் கிடைக்கும். அவர்கள் தங்கள் தேசத்தில் சுகமாய் ஜீவிப்பார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் என்னும் கர்த்தருடைய ஆடுகள் கர்மேலிலும், பாசானிலும் மேயும். அவர்களுடைய ஆத்துமாக்கள் எப்பிராயீமின் மலைகளிலும் கீலேயாத்திலும் திருப்தியாகும். கானான் தேசத்தில் எப்பிராயீமும் கீலேயாத்தும் செழிப்பான பிரதேசங்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் தேசத்தில் மறுபடியும் குடியேறுவார்கள். அவர்கள் சுகமாய் செழித்திருப்பார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டபோது, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பிப்போகவேண்டும் என்று விரும்புவார்கள். தங்கள் முகங்களை சீயோனுக்கு நேராய்த் திருப்பி, "சீயோனுக்குப்போகிற வழி எது" (எரே 50:5) என்று கேட்டு விசாரிப்பார்கள். அவர்கள் சீயோனிலே தங்கள் கர்த்தரை சேவிக்கவும், அவரை ஆராதிக்கவும் விரும்புகிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்திலிருந்தபோது, அவர்களால் அங்கே கர்த்தரை ஆராதிக்க முடியவில்லை. அவர்கள் மறுபடியும் சீயோனுக்கு திரும்பி வந்து, தங்கள் கர்த்தரை துதியோடும், கீதசத்தத்தோடும் ஆராதிக்க விரும்புகிறார்கள்.

பாபிலோன் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட யூதர்கள் முதலாவதாக சீயோனுக்கு திரும்பி வரவேண்டும் என்றுதான் விரும்பினார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களை எப்பிராயீமின் மலைகளுக்கும், கீலேயாத்திற்கும் திரும்ப வரப்பண்ணுகிறார். அங்கே அவர்களுக்கு திருப்தியான மேய்ச்சலைக் கொடுக்கிறார். அவர்களைப் போஷிக்கிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வந்தது. கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களை அந்நிய தேசத்து சிறையிருப்புக்கு ஒப்புக்கொடுத்தார். இப்போதோ கர்த்தர் தம்முடைய ஜனத்தை கிருபையாக மன்னித்து, அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கிறார். அவர்களுடைய அக்கிரமங்களையும், பாவங்களையும் மன்னிக்கிறார்.

"அந்நாட்களிலும் அக்காலத்திலும் இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும்; யூதாவின் பாவங்கள் தேடப்பட்டாலும் அவைகள் கிடையாதிருக்கும்; நான் மீதியாக வைக்கிறவர்களுக்கு மன்னிப்பேன்" (எரே 50:20) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் ஜனங்கள் தமக்கு விரோதமாகச் செய்த பாவங்களையும் அக்கிரமங்களையும் கர்த்தர் மன்னிக்கிறார். அவர்களுடைய பாவங்களினிமித்தம் கர்த்தர் அவர்களுக்கு கொடுத்த தண்டனைகளையும் அவர்களை விட்டு விலக்குகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தின் பாவங்களை மன்னித்து, அவற்றை மறந்து, அவர்களோடு ஒப்புரவாகுகிறார். "யூதாவின் பாவங்கள் தேடப்பட்டாலும் அவைகள் கிடையாதிருக்கும்" என்றும், "இஸ்ரவேலின் அக்கிரமம் தேடப்பட்டாலும் அது காணாதிருக்கும்" என்றும் கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து சீயோனுக்கு திரும்பி வருகிற இஸ்ரவேல் ஜனத்தாரின் இருதயம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கர்த்தருக்கு பயப்படும் பயத்தோடும், கர்த்தரைத் துதிக்கும் துதியோடும் தங்கள் தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தின் பாவங்களை மன்னித்து, தாம் அவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்திருந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தை நீதிமான்களாக்குகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தில் மகிமைப்படுகிறார்.

கோரேசு ராஜாவின் சேனை
எரே 50:21-32

எரே 50:21. மெரதாயீம் தேசத்துக்கு விரோதமாகவும் பேகோது குடிகளுக்கு விரோதமாகவும் நீ போய், அவர்களைத் துரத்தி, யாவையும் பாழாக்கிச் சங்காரம்பண்ணி, நான் உனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 50:22. தேசத்திலே யுத்தத்தின் சத்தமும் மகா சங்காரமும் உண்டு.

எரே 50:23. சர்வ பூமியின் சம்மட்டி எப்படி முறித்து உடைக்கப்பட்டது! ஜாதிகளுக்குள்ளே பாபிலோன் எப்படிப் பாழாய்ப்போயிற்று!

எரே 50:24. பாபிலோனே, உனக்குக் கண்ணிவைத்தேன், நீ அதை அறியாமல் அதிலே சிக்குண்டுபோனாய்; நீ அகப்பட்டும் பிடிபட்டும் போனாய், நீ கர்த்தரோடே யுத்தங்கலந்தாயே.

எரே 50:25. கர்த்தர் தம்முடைய ஆயுதசாலையைத் திறந்து, தம்முடைய சினத்தின் அஸ்திராயுதங்களை எடுத்துக்கொண்டு வந்தார்; இது கல்தேயர் தேசத்திலே சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் செய்கிற கிரியை.

எரே 50:26. கடையாந்தரத்திலிருந்து அதற்கு விரோதமாக வந்து, அதின் களஞ்சியங்களைத் திறந்து, குவியல் குவியலாகக் குவித்து, அதில் ஒன்றும் மீதியாகாதபடிக்கு அதை முற்றிலும் அழித்துப்போடுங்கள்.

எரே 50:27. அதின் காளைகளையெல்லாம் வெட்டுங்கள்; அவைகள் கொலைக்களம் சேரக்கடவது; ஐயோ! அவர்கள் விசாரிக்கப்படும் நாள் வந்ததே.

எரே 50:28. நம்முடைய தேவன் பழிவாங்கினதை, அவர் தமது ஆலயத்துக்காகப் பழிவாங்கினதையே, சீயோனிலே அறிவிக்கும்படிக்கு, பாபிலோன் தேசத்திலிருந்து தப்பியோடிவந்தவர்களின் சத்தம் கேட்கப்படும்.

எரே 50:29. பாபிலோனுக்கு விரோதமாய் வரும்படி வில்வீரரை அழையுங்கள்; வில் வளைக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் அதற்கு விரோதமாய்ச் சுற்றிலும் பாளயமிறங்குங்கள், ஒருவரையும் தப்பவிடாதிருங்கள்; அதின் கிரியைக்குத்தக்க பலனை அதற்குச் சரிக்கட்டுங்கள்; அது செய்ததின்படியெல்லாம் அதற்குச் செய்யுங்கள்; அது இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தருக்கு விரோதமாக இடும்புசெய்தது.

எரே 50:30. ஆகையால் அதின் வாலிபர் அதின் வீதிகளில் விழுவார்கள்; அதின் யுத்தவீரர் எல்லாரும் அந்நாளிலே சங்காரமாவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 50:31. இதோ, இடும்புள்ளவனே, நான் உனக்கு விரோதமாக வருகிறேன் என்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்; நான் உன்னை விசாரிக்குங்காலமாகிய உன்னுடைய நாள் வந்தது.

எரே 50:32. இடும்புள்ளவன் இடறிவிழுவான்; அவனை எடுத்து நிறுத்துவாரில்லை; நான் அவனுடைய பட்டணங்களில் அக்கினியைக் கொளுத்துவேன், அது அவன் சுற்றுப்புறத்தார் எல்லாரையும் பட்சிக்கும்.

பாபிலோன் தேசத்தை அழிப்பதற்கு கர்த்தர் கோரேசு ராஜாவை, அவர்களுக்கு விரோதமாக அனுப்புகிறார். பாபிலோன் தேசத்தை அழித்துப்போடுமாறு கர்த்தர் கோரேசுக்கு கட்டளை கொடுக்கிறார். "மெரதாயீம் தேசத்துக்கு விரோதமாகவும் பேகோடு குடிகளுக்கு விரோதமாகவும் நீ போய், அவர்களைத் துரத்தி, யாவையும் பாழாக்கிச் சங்காரம்பண்ணி, நான் உனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்" *(எரே 50:21)* என்று கர்த்தர் கோரேசு ராஜாவிடம் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக கோரேசு ராஜா எல்லா திசைகளிலுமிருந்து வந்து யுத்தம்பண்ணவேண்டும். கடையாந்தரத்திலிருந்தும் பாபிலோனுக்கு விரோதமாக வரவேண்டும். கோரேசு பாபிலோன் தேசத்தின் களஞ்சியங்களைத் திறந்து, குவியல் குவியலாகக் குவித்து, அதில் ஒன்றும் மீதியாகாதபடிக்கு, அதை முற்றிலும் அழித்துப்போடவேண்டும் *(எரே 50:29)*.

கர்த்தர் தம்முடைய ஆயுதசாலையைத் திறந்து, தம்முடைய சினத்தின் அஸ்திராயுதங்களை எடுத்துக்கொண்டு வந்தார்; இது கல்தேயர் தேசத்திலே சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் செய்கிற கிரியை *(எரே 50:25)*. கர்த்தருடைய கோபமே அவருடைய ஆயுதசாலை. கர்த்தர் தம்முடைய சினத்தின் அஸ்திராயுதங்களை பாபிலோனுக்கு விரோதமாய்ப் பயன்படுத்துகிறார். மேதியரும் பெர்சியரும் இப்போது கர்த்தருடைய ஆயுதசாலையாகயிருக்கிறார்கள். கோரேசு ராஜாவும், அவனுடைய இராணுவ வீரர்களும் கர்த்தருடைய சினத்தின் அஸ்திராயுதங்களாயிருக்கிறார்கள்.

கோரேசு ராஜா பாபிலோன் தேசத்தில் என்ன செய்யவேண்டும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். அவர்கள் பாபிலோன் தேசத்திலுள்ள களஞ்சியங்களைத் திறக்க வேண்டும். அவர்களுடைய ஐசுவரியங்களைக் கொள்ளையிடவேண்டும். களஞ்சியங்களை முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டும். பாபிலோன் தேசத்து சம்பத்துக்களையும் பொக்கிஷங்களையும் குவியல் குவியலாய்க் குவித்து, தங்கள் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போகவேண்டும்.

மேதியரும் பெர்சியரும் கல்தேயருடைய பிரபுக்களையும், பராக்கிரமசாலிகளையும் தங்கள் பட்டயத்தால் கொன்றுபோடவேண்டும். யுத்தக்களம் கொலைக்களமாயிருக்க வேண்டும். பாபிலோன் தேசத்திலே யுத்தம்பண்ணுவதற்கு ஒரு வீரனும் உயிரோடிருக்கக்கூடாது. "அதின் காளைகளையெல்லாம் வெட்டுங்கள்; அவைகள் கொலைக்களம் சேரக்கடவது; ஐயோ! அவர்கள் விசாரிக்கப்படும் நாள் வந்ததே" (எரே 50:27) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மேதியரும் பெர்சியரும் பாபிலோனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி ஜெயம்பெறுவார்கள். கர்த்தர் அவர்களுக்கு ஜெயத்தை வாக்குப்பண்ணுகிறார். மேதியர்கள் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, அதன் பிரகாரம் பாபிலோனுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவேண்டும்.

கோரேசு ராஜா கர்த்தருக்காக யுத்தம்பண்ணுகிறான். கர்த்தருடைய திட்டத்தின்படியும், அவருடைய சித்தத்தின்படியும் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக யுத்தபண்ணி அதை அழித்துப்போடுகிறான். பாபிலோனுக்கு விரோதமான யுத்தத்திலே தனக்கு வெற்றி கிடைக்குமோ என்று, கோரேசு ராஜா சந்தேகப்படவேண்டிய அவசியம் எதுவுமில்லை. யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் கோரேசுக்காக யுத்தம்பண்ணுகிறார். கோரேசுக்கு யுத்தத்திலே ஜெயம் நிச்சயமுண்டாகும்.

கோரேசு பாபிலோனை முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டும். கல்தேயர் எல்லோரையும் சங்காரம்பண்ணவேண்டும். கர்த்தர் இதற்கான காரணங்களையும் கோரேசுக்கு தெளிவுபடுத்துகிறார்.

பாபிலோன் பல வருஷங்களாக தன் அயலாரை பட்சித்துப்போட்டார்கள். தங்கள் தேசத்திற்கு அருகாமையிலிருந்த எல்லா ஜாதியாருக்கும் தீங்கு செய்தார்கள். அவர்கள் சர்வபூமியின் சம்மட்டிபோல செயல்பட்டு, எல்லா தேசத்தாரையும் நொறுக்கிப்போட்டார்கள் (எரே 50:23). பாபிலோன் சர்வபூமியின் சம்மட்டியாகயிருந்தாலும், கர்த்தர் அதை முறித்து உடைத்துப்போடுவார். பாபிலோன் தேசத்தார் மற்ற ஜாதிகளை பாழாக்கினாலும், கர்த்தர் பாபிலோன் தேசத்தையும் பாழாக்குவார்.

கர்த்தரே எல்லா தேசங்களுக்கும் அதிபதியாயிருக்கிறார். அவரே ராஜாதி ராஜா. கர்த்தாதி கர்த்தரும் அவரே. கர்த்தர் எல்லா தேசங்களையும் நீதியாய் ஆளுகை செய்கிறார். தம்முடைய சித்தத்தின் பிரகாரமாய் கர்த்தர் ராஜாக்களை சிங்காசனத்தில் அமரச்செய்கிறார். தம்முடைய தெய்வீக திட்டத்தின் பிரகாரமாக, ராஜாக்களை சிங்காசனத்திலிருந்து தள்ளியும் விடுகிறார்.

எல்லா தேசங்களும் தங்களுடைய எல்லைகளுக்குள் கட்டுப்பட்டிருக்கவேண்டும். அந்நிய தேசத்து பூமியின்மீது ஆசைப்படக்கூடாது. மற்ற தேசத்தார்மீது அநியாயமாய் யுத்தம் செய்து, அவர்களுடைய நிலங்களை பலவந்தமாய் அபகரித்துக் கொள்ளக்கூடாது. இது அநீதியான செயல்.

பாபிலோன் தேசத்தார் நீண்டகாலமாகவே, மற்ற தேசத்தாருக்கு அநியாயமும் அக்கிரமமும் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய நிலங்களை பலவந்தமாய் அபகரித்திருக்கிறார்கள்.

பாபிலோன் தேசத்தார், தங்கள் அண்டையதேசத்தாரோடு யுத்தம்பண்ணியது போல, கர்த்தரோடும் யுத்தங்கலந்தார்கள் (எரே 50:24). அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக வழக்காடினார்கள். கர்த்தரோடு எதிர்த்து நின்றார்கள். கர்த்தரை எதிர்த்தவர்கள் அழிந்துபோவார்கள். பாபிலோன் தேசம் கண்ணியிலே சிக்குண்டு போயிற்று. அவர்கள் மேதியரிடம் அகப்பட்டுக்கொண்டார்கள்.

"பாபிலோனே, உனக்குக் கண்ணியை வைத்தேன், நீ அதை அறியாமல் அதிலே சிக்குண்டுபோனாய்; நீ அகப்பட்டும் பிடிபட்டும் போனாய், நீ கர்த்தரோடே யுத்தங்கலந்தாயே" (எரே 50:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்தார் கர்த்தருடைய பரிசுத்த நகரமாகிய எருசலேமை அழித்துப் போட்டார்கள். யூதாவின் பட்டணங்களை தீவைத்து எரித்துவிட்டார்கள். கர்த்தர் தம்முடைய ஆலயத்திற்காக பழிவாங்குவார். கல்தேயர்கள் எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தை தீயிட்டு கொழுத்திவிட்டார்கள். தேவாலயத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுக்களையெல்லாம் தங்கள் தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

யூதாவின் மனுஷராலும், எருசலேமின் குடிகளாலும் கல்தேயரை எதிர்க்க முடியவில்லை. பாபிலோன் தேசத்தார் சர்வபூமியின் சம்மட்டி போல உறுதியாயும் வலுவாயும் இருந்தார்கள். அவர்களை எதிர்த்தவர்கள் எல்லோரும் நொறுங்கிப்போனார்கள்.

கர்த்தர் தம்முடைய ஆலயத்திற்காக பாபிலோனைப் பழிவாங்குகிறார். சர்வபூமியின் சம்மட்டியாகயிருந்த பாபிலோனை முறித்து உடைத்துப்போடுகிறார். பாபிலோன் சர்வபூமியின் சம்மட்டியாகயிருந்தாலும், சீயோன் சர்வபூமியின் சந்தோஷமாகவும், மகிமையாகவும் இருக்கிறது.

கர்த்தர் தம்முடைய சீயோனுக்காக பாபிலோனை பழிவாங்குகிறார். "நம்முடைய தேவன் பழிவாங்கினதை, அவர் தமது ஆலயத்துக்காகப் பழிவாங்கினதையே, சீயோனிலே அறிவிக்கும்படிக்கு, பாபிலோன் தேசத்திலிருந்து தப்பியோடிவந்தவர்களின் சத்தம் கேட்கப்படும்" (எரே 50:28) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் பெருமையுள்ள தேசம். கல்தேயர்கள் துன்மார்க்கர்கள். கர்த்தரோ அவர்களை அவர்கள் இருக்கிற ஸ்தலத்திலேயே அழித்துவிடுகிறார். "பெருமையுள்ளவனையெல்லாம் கவனித்து, அவனைப் பணியப்பண்ணி, துன்மார்க்கரை அவர்களிருக்கிற ஸ்தலத்திலே மிதித்துவிடு" (யோபு 40:12).

கல்தேயர்களை யாரும் கீழே தள்ளிவிடவில்லை. அவர்களே தடுமாறி கீழே விழுந்துவிடுகிறார்கள். அவர்கள் அகந்தையினாலும், பெருமையினாலும் தங்கள் தலைகளை எப்போதுமே உயரத்தில் நோக்கிப்பார்க்கிறார்கள். தங்களுடைய காலில் என்ன இருக்கிறது என்பதை அவர்களால் குனிந்து பார்க்கமுடியாது. அவர்களுடைய பெருமை அவர்கள் குனிவதைத் தடைபண்ணுகிறது. ஆகையினால் பாபிலோன் தேசத்தார் தங்கள் பெருமையினால், தங்கள் காலுக்கு அருகில் தடைக்கற்கள் இருப்பதை பார்க்காமல், அதிலே தாங்களாகவே இடறிவிழுந்துவிடுகிறார்கள். தங்களுடைய பெருமையினால் கல்தேயர்கள் தாங்களாகவே அழிந்துபோகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் எரே 50:33,34

எரே 50:33. சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேல் புத்திரரும் யூதா புத்திரரும் ஏகமாய் ஒடுங்குண்டார்கள்; அவர்களைச் சிறையாக்கின யாவரும் அவர்களை விடமாட்டோம் என்று கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார்கள்.

எரே 50:34. அவர்களுடைய மீட்பரோவெனில் வல்லமையுள்ளவர், சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்; தேசத்தை இளைப்பாறப்பண்ணுவதற்கும், பாபிலோன் குடிகளைத் தத்தளிக்கப் பண்ணுவதற்கும் அவர்களுடைய வழக்கை அவர் நடத்துவார்.

கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாரின் பாடுகளைப்பற்றிச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரரும் யூதாபுத்திரரும் ஏகமாய் ஒடுங்குண்டார்கள். அசீரியர்கள் ஆரம்பத்தில் இஸ்ரவேல் வம்சத்தாரின் பத்துக்கோத்திரங்களை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோனார்கள். அப்போது இஸ்ரவேல் தேசம், வடக்கு இஸ்ரவேல் தேசம் என்றும், தெற்கு யூதாதேசம் என்றும் இரண்டாய்ப் பிரிந்திருந்தது.

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தை அசீரியர்கள் சிறைப்பிடித்தாலும், கல்தேயர்கள் அசீரிய தேசத்தின்மீது யுத்தம்பண்ணி, அவர்களை யுத்தத்தில் ஜெயித்து, அசீரிய தேசத்தை தங்கள் தேசத்தோடு இணைத்துக்கொண்டார்கள். இதனால் இதுவரையிலும் அசீரிய தேசத்தில் சிறைப்பட்டிருந்த இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார், இப்போது கல்தேயருடைய சிறையிருப்பிலிருக்கிறார்கள்.

இதன் பின்பு கல்தேயர்கள் இஸ்ரவேலில் மீதமுள்ள இரண்டு கோத்திரத்தாரையும் சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு வந்தார்கள். கல்தேயருடைய தேசத்தில், இஸ்ரவேலின் பத்துக்கோத்திரத்தார் ஏற்கெனவே சிறையிருப்பிலிருக்கிறார்கள். இவர்களோடு தெற்கு யூதாதேசத்திலிருந்த, இஸ்ரவேலின் மீதி இரண்டு கோத்திரத்தாரும் சிறையிருப்புக்கு வருகிறார்கள்.

கல்தேயருடைய தேசத்தில் இஸ்ரவேல் புத்திரரும், யூதாபுத்திரரும் ஏகமாய் சிறையிருப்பிலிருக்கிறார்கள். அவர்கள் ஏகமாய் ஒடுங்குண்டார்கள். அவர்களைச் சிறையாக்கின யாவரும் அவர்களை விடமாட்டோம் என்று கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டார்கள் (எரே 50:33).

இஸ்ரவேல் புத்திரரும், யூதாபுத்திரரும் ஏகமாய் ஒடுக்கப்பட்டாலும், கர்த்தர் அவர்களுக்கு ஆறுதலான செய்தியைச் சொல்லுகிறார். கர்த்தருடைய இஸ்ரவேலர்கள் பலவீனராயிருந்தாலும், இஸ்ரவேலின் தேவன் வல்லமையுள்ளவர். அவரே அவர்களுடைய மீட்பர். சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம். கர்த்தர் தம்முடைய நாமத்தின் பிரகாரமாக கிரியை நடப்பிப்பார். இஸ்ரவேல் ஜனங்கள் பலவீனமாயிருந்தாலும், பலமுள்ள தங்கள் கர்த்தரை சார்ந்துகொள்ளவேண்டும். "தேசத்தை இளைப்பாறப்பண்ணுவதற்கும், பாபிலோன் குடிகளைத் தத்தளிக்கப்பண்ணுவதற்கும் அவர்களுடைய வழக்கை கர்த்தர் நடத்துவார்" (எரே 50:34).

இஸ்ரவேல் ஜனத்தார் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்தாலும், கர்த்தர் அவர்களை விடுவித்து, அவர்களுடைய சொந்த தேசத்தில் இளைப்பாறப்பண்ணுவார். அவர்களுடைய சத்துருக்கள் யாரும் இனிமேல் அவர்களை தொந்தரவுபண்ணமாட்டார்கள். கர்த்தரே தம்முடைய ஜனத்திற்கு பாதுகாப்பாயிருப்பார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கும், யூதாபுத்திரருக்கும் சொல்லுகிற வார்த்தைகள், புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகள் எல்லோருக்கும் பொதுவான வார்த்தைகளாகும். நம்முடைய பலவீனத்தினால் நாம் பாவத்திற்கு அடிமையாகயிருக்கிறோம். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்முடைய சுயபலத்தினால் நம்மால் விடுதலை பெறமுடியவில்லை.

நாம் பலவீனராயிருந்தாலும் நம்முடைய மீட்பர் வல்லமையுள்ளவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களிலிருந்து நம்முடைய மீட்பரால் நம்மை விடுவிக்க முடியும். கர்த்தர் நம்மை விடுவிப்பார். பாவம் நம்மை ஆளுகை செய்யாது. கர்த்தர் விடுவிக்கும்போது, நாம் மெய்யாகவே விடுதலையாவோம். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு வாக்குப்பண்ணியிருக்கிற ஆறுதலையும், ஆசீர்வாதத்தையும், இளைப்பாறுதலையும் நமக்குக் கொடுப்பார்.

கல்தேயரும் பாபிலோன் குடிகளும்
எரே 50:35-46

எரே 50:35. பட்டயம் கல்தேயர்மேலும், பாபிலோன் குடிகள்மேலும், அதினுடைய பிரபுக்கள்மேலும், அதினுடைய ஞானிகள்மேலும் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 50:36. பட்டயம் பொய்களைப் பிணைக்கிறவர்கள்மேலும் வரும்; அவர்கள் பைத்தியக்காரராவார்கள்; பட்டயம் அதின் பராக்கிரமசாலிகள் மேலும் வரும், அவர்கள் கலங்குவார்கள்.

எரே 50:37. பட்டயம் அதின் குதிரைகள் மேலும், அதின் இரதங்கள்மேலும், அதின் நடுவில் இருக்கிற பல்ஜாதியான ஜனங்கள் யாவர்மேலும் வரும், அவர்கள் பேடிகளாவார்கள்; பட்டயம் அதின் பொக்கிஷங்களின்மேல் வரும், அவைகள் கொள்ளையாகும்.

எரே 50:38. வறட்சி அதின் தண்ணீர்கள்மேல் வரும், அவைகள் வறண்டுபோம்; அது விக்கிரக தேசம்; அருக்களிப்பான சிலைகளின்மேல் மனமயங்கியிருக்கிறார்கள்.

எரே 50:39. ஆகையால் காட்டுமிருகங்களும் ஓரிகளும் அதிலே குடியிருக்கும்; கோட்டான்கள் அதிலே தங்கும்; இனி என்றென்றைக்கும் அது குடியேற்றப்படுவதில்லை; தலைமுறை தலைமுறையாக ஒருவரும் அதில் சஞ்சரிப்பதுமில்லை.

எரே 50:40. தேவன் சோதோமையும் கொமோராவையும் அதின் சுற்றுப்புறங்களையும் கவிழ்த்துப் போட்டது போல இதையும் கவிழ்த்துப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஒருவரும் அதில் குடியிருப்பதில்லை, ஒரு மனுபுத்திரனும் அதில் தங்குவதுமில்லை.

எரே 50:41. இதோ, வடக்கேயிருந்து ஒரு ஜனமும் பெரிய ஜாதியும் வரும்; பூமியின் எல்லைகளிலிருந்து பலத்த ராஜாக்கள் எழும்புவார்கள்.

எரே 50:42. அவர்கள் வில்லும் வேலும் பிடித்துவருவார்கள்; அவர்கள் இரக்கமில்லாத கொடியர்; அவர்கள் இரைச்சல் சமுத்திர இரைச்சல்போல் இருக்கும்; பாபிலோன் குமாரத்தியே, அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தத்துக்கு ஆயத்தப்பட்ட ஆட்களாய்க் குதிரைகளின்மேல் ஏறி வருவார்கள்.

எரே 50:43. அவர்கள் வருகிற செய்தியை பாபிலோன் ராஜா கேட்கையில் அவன் கைகள் தளரும்; இடுக்கமும் பிரசவ வேதனைப்படுகிறவளுக்குண்டாகும் வேதனையைப்போன்ற வேதனையும் அவனைப் பிடிக்கும்.

எரே 50:44. இதோ, புரண்டு ஓடுகிற யோர்தானிலிருந்து சிங்கத்தைப்போல் பலவானுடைய தாபரத்துக்கு விரோதமாக வருகிறான்; அவனை அங்கேயிருந்து சடிதியிலே ஓடிவரப்பண்ணுவேன்; நான் அதற்கு விரோதமாகக் கட்டளையிட்டு, அனுப்பத் தெரிந்து கொள்ளப்பட்டவன் யார்? எனக்குச் சமானமானவன் யார்? எனக்குத் திட்டஞ்சொல்பவன் யார்? எனக்கு முன்பாக நிற்கப்போகிற மேய்ப்பன் யார்?

எரே 50:45. ஆகையால் கர்த்தர் பாபிலோனுக்கு விரோதமாக யோசித்த ஆலோசனையையும், அவர் கல்தேயர் தேசத்துக்கு விரோதமாக நினைத்திருக்கிற நினைவுகளையும் கேளுங்கள்; மெய்யாகவே மந்தையில் சிறியவர்கள் அவர்களைப் பிடித்திழுப்பார்கள்; மெய்யாகவே அவர்கள் இருக்கிற தாபரங்களை அவர் பாழாக்குவார்.

எரே 50:46. பாபிலோன் பிடிப்பட்டதின் சத்தத்தினால் பூமி அதிரும், அதின் கூப்பிடுதல் ஜாதிகளுக்குள்ளே கேட்கப்படும்.

பாபிலோன் தேசம் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறது. கர்த்தர் அந்த தேசத்தினுடைய பாவத்தினிமித்தமாக, அதை தம்முடைய நீதியினால் தண்டிக்கிறார். பாபிலோன் தேசத்தாரிடம் பிரதானமாக இரண்டு பாவங்கள் காணப்படுகிறது. அவையாவன: 1. விக்கிரகாராதனை 2. மற்ற ஜனங்களை உபத்திரவப்படுத்துவது.

பாபிலோன் தேசத்தார் கர்த்தருடைய ஜனங்களை ஒடுக்கினார்கள். அவர்களை சிறைப்படுத்தினார்கள். சிறையிருப்பிலிருந்து அவர்களை விடமாட்டோம் என்று கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டார்கள் (எரே 50:33).

"உலகத்தை வனாந்தரமாக்கி, அதின் நகரங்களை அழித்து, சிறைப்பட்டவர்களைத் தங்கள் வீடுகளுக்குப் போகவிடாமலிருந்தவன் என்பார்கள்" (ஏசா 14:17).

பாபிலோன் தேசத்தார் கர்த்தரோடும் யுத்தங்கலந்தார்கள். கர்த்தருடைய ஆலயத்தை இடித்துப்போட்டார்கள். அவருடைய ஆலயத்திலுள்ள பணிமுட்டுகளையெல்லாம் தங்கள் தேசத்திற்கு கொண்டுபோய் விட்டார்கள். பாபிலோன் தேசத்தார் கர்த்தருக்கு செலுத்தவேண்டிய மகிமையை விக்கிரகங்களுக்கு செலுத்துகிறார்கள். பாபிலோன் தேசம் விக்கிரக தேசம். அவர்கள் அருக்களிப்பான சிலைகளின்மேல் மனமயங்கியிருக்கிறார்கள் (எரே 50:38).

இந்த வசனத்தில் "சிலைகள்" என்னும் வார்த்தைக்கு "ஏனிம்" என்னும் எபிரெய பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த எபிரெய வார்த்தைக்கு "பயங்கரங்கள்" என்று பொருள். ஏனிம் என்னும் பெயர் பொதுவாக இராட்சதருக்கு கொடுக்கப்படும் பெயர். பாபிலோனியர்கள் தங்களுக்கு சிலைகளை செய்யும்போது, அவற்றை இராட்சதர்களின் உருவங்களைப்போல பயங்கரமாய்ச் செய்வார்கள். அவை பார்ப்பதற்கே பயங்கரமாயிருக்கும். சாதாரண ஜனங்கள் பாபிலோன் தேசத்தாரின் சிலைகளைப் பார்த்தால், பயத்தினால் நடுங்கிப்போய்விடுவார்கள்.

"மேலும் இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது" (வெளி 17:5). பாபிலோன் தேசம் வேசிகளின் தாயாகயிருப்பதுபோல, அது விக்கிரகாராதனைக்கும் தாயாகயிருக்கிறது. பாபிலோன் தேசத்திலிருந்து விக்கிரகாராதனை பல தேசங்களுக்கும் பரவிற்று.

கல்தேயருடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் தம்முடைய நீதியினால் பாபிலோனை அழித்துப்போட சித்தமுள்ளவராயிருக்கிறார். பாபிலோனுக்கு இருக்கிற ஆதரவும், பாதுகாப்பும் அழிந்துபோகும். பட்டயம் அவர்கள்மேல் வரும். பட்டயம் அவர்களை முற்றிலுமாய் சங்காரம்பண்ணும்.

"பட்டயம் கல்தேயர்மேலும், பாபிலோன் குடிகள்மேலும், அதினுடைய பிரபுக்கள்மேலும், அதினுடைய ஞானிகள்மேலும் வரும் (எரே 50:35) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் பல வருஷங்களாக கர்த்தருடைய பட்டயமாகயிருந்தார்கள். கர்த்தர் கல்தேயரைப் பயன்படுத்தி, பாவமான ஜாதிகளையெல்லாம் அழித்துப்போட்டார். இப்போதோ கல்தேயரும் பாவமான ஜாதியாகயிருக்கிறார்கள். அழிந்துபோன தேசத்தாரைப்போல கல்தேயரும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய பட்டயம் கல்தேயர்மேலும், பாபிலோன் குடிகள்மேலும் வருகிறது.

கர்த்தருடைய பட்டயம் யுத்தத்தின் பட்டயம். கர்த்தருடைய கரத்தில் நீதியின் பட்டயம் இருக்கிறது. கர்த்தருடைய பட்டயம் பாபிலோன் தேசத்து பிரபுக்கள்மேலும், அவர்களுடைய ஞானிகள் மேலும் வரும். பாபிலோன் தேசத்தில் தத்துவ ஞானிகள் ஏராளமானோர் இருக்கிறார்கள். நேபுகாத்நேச்சாருக்கு யுத்த ஆலோசனைகளை சொல்லுகிறவர்கள் இருக்கிறார்கள். அங்கே கல்விமான்களும், ஞானிகளும் இருக்கிறார்கள். இவையெல்லாமே உலகஞானம். அவர்களுடைய ஞானமும் அறிவும் அவர்களை கர்த்தருடைய பட்டயத்திலிருந்து பாதுகாக்காது.

பாபிலோன் தேசத்தில் குறிசொல்லுகிறவர்களும், நட்சத்திரங்களைப் பார்க்கிறவர்களும் ஏராளமானோர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் பொய்யர். அவர்கள் பொய்களை பிணைக்கிறவர்கள். "பட்டயம் பொய்களைப் பிணைக்கிறவர்கள்மேலும் வரும்; அவர்கள் பைத்தியக்காரராவார்கள்; பட்டயம் அதின் பராக்கிரமசாலிகள்மேலும் வரும், அவர்கள் கலங்குவார்கள்" (எரே 50:36) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயருடைய தேசத்திலுள்ள குறிகாரர்களும், ஜோசியக்காரர்களும், தங்களுடைய தேசத்தாரை வஞ்சிக்கிறார்கள். அவர்களுக்கு சமாதானமும் செழிப்பும் வரும் என்று வாக்குப்பண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் குறிசொன்ன பிரகாரம் அவர்களுக்கு சமாதானம் வரவில்லை. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் கல்தேயர்மேல் யுத்தம் வருகிறது. அவர்களுக்கு செழிப்பு வரவில்லை. அதற்கு பதிலாக அழிவு வருகிறது.

பாபிலோன் தேசம் செழித்திருக்கும் என்று குறிகாரர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் "பட்டயம் அதின் குதிரைகள் மேலும், அதின் இரதங்கள்மேலும், அதின் நடுவில் இருக்கிற பலஜாதியான ஜனங்கள் யாவர்மேலும் வரும்" (எரே 50:37) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் ஒரு காலத்தில் பராக்கிரமசாலிகளாயிருந்தார்கள். அவர்கள் இனிமேல் பேடிகளாவார்கள். பாபிலோன் தேசம் ஒருகாலத்தில் செல்வச்செழிப்போடிருந்தது. அங்கே ஐசுவரியம் மிகுந்திருந்தது. பட்டயம் கல்தேயருடைய பொக்கிஷங்களின்மேல் வரும் என்றும், அவைகள் கொள்ளையாகும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கல்தேயர்கள் தங்கள் பொக்கிஷங்களை நம்பினார்கள். இப்போதோ அவர்களுடைய பொக்கிஷங்களை மேதியர் கொள்ளையிடுகிறார்கள். கல்தேயருடைய பொக்கிஷங்கள் இனிமேல் அவர்களுக்கு விரோதமாக பயன்படுத்தப்படும்.

பாபிலோன் தேசம் வனாந்தரமாகும். அதின் தண்ணீர்கள்மேல் வறட்சி வரும். அது வறண்டுபோகும். பாபிலோன் தேசத்திற்கு தேவையான தண்ணீர் கிடைக்காது. கோரேசு ராஜா ஐப்பிராத்து நதியில் ஏராளமான கால்வாய்களை வெட்டியிருக்கிறான். அந்தக் கால்வாய்கள் மூலமாக அவன் தன்னுடைய இராணுவத்தை பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக அனுப்புகிறான். தரை பாதையைவிட நதிப்பாதையில் போனால் பாபிலோனுக்கு சீக்கிரத்தில் போய்விடலாம். பாபிலோனின் அலங்கங்களை பிடித்துவிடலாம்.

ஐப்பிராத்து நதி வழியாக யாரும் பிரயாணம்பண்ண முடியாது என்று பாபிலோன் தேசத்தார் நினைத்தார்கள். ஆனால் மேதியரும் பெர்சியரும், ஐப்பிராத்து நதியை, தங்களுக்கு நீர்போக்குவரத்து பாதைகளைப்போல மாற்றிக்கொண்டார்கள். ஐப்பிராத்து நதியில் வெள்ளம் பிரவாகித்து ஓடாதபடி, கர்த்தர் அதின் தண்ணீர்கள்மேல் வறட்சியை உண்டுபண்ணுகிறார். ஐப்பிராத்து நதி வறண்டுபோகும்.

பாபிலோன் தேசத்திற்கு ஐப்பிராத்து நதியே தேவையான தண்ணீரைக் கொடுக்கிறது. அந்த நதியே அதன் விளைச்சல் நிலங்களை செழிப்பாக்குகிறது. இப்போது கர்த்தருடைய கோபத்தினால் ஐப்பிராத்து நதி வறண்டுபோகிறது. பாபிலோன் தேசம் இனி என்றென்றைக்கும் குடியேற்றப்படுவதில்லை. தலைமுறை தலைமுறையாக ஒருவரும் அதில் சஞ்சரிப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்திலே காட்டுமிருகங்களும் ஓரிகளும் குடியிருக்கும். கோட்டான்கள் அங்கே தங்கும். பாபிலோன் தேசம் ஒரு விக்கிரக தேசம். பாபிலோன் தேசத்தார் தங்களுடைய அருக்களிப்பான சிலைகளின்மேல் மனமயங்கியிருக்கிறார்கள். இதனால் கர்த்தருடைய சாபம் பாபிலோன் தேசத்தின்மீது வந்திருக்கிறது.

ஏசாயா தீர்க்கதரிசியும் பாபிலோன் தேசத்திற்கு வரும் அழிவை தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார்.

"ராஜ்யங்களுக்குள் அலங்காரமும், கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல கவிழ்க்கப்படும். இனி ஒருபோதும் அதில் ஒருவரும் குடியேறுவதுமில்லை, தலைமுறைதோறும் அதில் ஒருவரும் தங்கித் தரிப்பதுமில்லை; அங்கே அரபியன் கூடாரம் போடுவதுமில்லை; அங்கே மேய்ப்பர் மந்தையை மறிப்பதுமில்லை. காட்டுமிருகங்கள் அங்கே படுத்துக்கொள்ளும்; ஊளையிடும் பிராணிகள் அவர்கள் வீடுகளை நிரப்பும், கோட்டான்கள் அங்கே குடிகொள்ளும்; காட்டாடு அங்கே துள்ளும். அவர்கள் பாழான மாளிகைகளில் ஓரிகள் ஊளையிடும்; வலுசர்ப்பங்கள் அவர்கள் செல்விக்கையான அரமனைகளில் ஏகமாய்க் கூடும்; அதின் காலம் சீக்கிரம் வரும், அதின் நாட்கள் நீடித்திராது" (ஏசா 13:19-22).

பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக வடக்கேயிருந்து ஒரு ஜனமும் பெரிய ஜாதியும் வரும். இது மேதிய பெர்சிய தேசத்தாரை குறிக்கும் வார்த்தை. பூமியின் எல்லைகளிலிருந்து பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக பலத்த இராஜாக்கள் எழும்புவார்கள். கோரேசு ராஜாவும், அவனோடுகூட யுத்தஉடன்படிக்கை பண்ணியிருக்கிற மற்ற ராஜாக்களும், பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக வருவார்கள்.

"அவர்கள் வில்லும் வேலும் பிடித்துவருவார்கள்; அவர்கள் இரக்கமில்லாத கொடியர்; அவர்கள் இரைச்சல் சமுத்திர இரைச்சல்போல் இருக்கும்; பாபிலோன் குமாரத்தியே, அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தத்துக்கு ஆயத்தப்பட்ட ஆட்களாய்க் குதிரைகளின்மேல் ஏறி வருவார்கள்" (எரே 50:42) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

மேதியரும் பெர்சியரும் தங்கள் தேசத்திற்கு விரோதமாக யுத்தம் பண்ண வருகிறார்கள் என்னும் செய்தியை கேட்கும்போது, பாபிலோன் ராஜாவும், அவனுடைய தேசத்தாரும் பயந்து நடுங்குவார்கள். கலங்குவார்கள்.

அவர்கள் வருகிற செய்தியை பாபிலோன் ராஜா கேட்கையில் அவன் கைகள் தளரும்; இடுக்கமும் பிரசவ வேதனைப்படுகிறவளுக்குண்டாகும் வேதனையைப்போன்ற வேதனையும் அவனைப் பிடிக்கும் (எரே 50:43).

பாபிலோன் தேசத்தார் இரக்கமில்லாதவர்கள். அவர்கள் மற்ற ஜாதியாருக்கும், மற்ற தேசத்தாருக்கும் இரக்கம் காண்பிக்கவில்லை. அவர்கள் ஏராளமான தேசங்கள்மீது யுத்தம்பண்ணி அவற்றை ஜெயித்தார்கள். அந்த தேசத்திலுள்ள ஜனங்களை தங்கள் பட்டயத்தால் சங்காரம்பண்ணினார்கள். அவர்களில் மீதமானவர்களை சிறைப்பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டு வந்தார்கள். அவர்களை அடிமைப்படுத்தி வேலை வாங்கினார்கள்.

பாபிலோன் தேசத்தார் யாருக்கும் இரக்கம் காண்பிக்காததினால், அவர்களுக்கும் யாரும் இரக்கம் காண்பிக்கமாட்டார்கள். அவர்கள் மற்ற ஜாதியார்மீது மிகவும் கடுமையாக நடந்துகொண்டதினால், மற்ற ஜாதியாரும் பாபிலோன் தேசத்தார்மீது கடுமையாக நடந்துகொள்வார்கள். பிறருக்கு இரக்கம் காண்பிக்காதவர்கள், பிறரிடத்திலிருந்து இரக்கத்தை எதிர்பார்க்கக்கூடாது.

மேதியரும் பெர்சியரும் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக வேகமாக வருவார்கள். கர்த்தர் அவர்களுடைய வருகையைப்பற்றிச் சொல்லும்போது, "இதோ, புரண்டு ஓடுகிற யோர்தானிலிருந்து சிங்கத்தைப்போல் பலவானுடைய தாபரத்துக்கு விரோதமாக வருகிறான்" (எரே 50:44) என்று சொல்லுகிறார். அவர்கள் பாபிலோன் தேசத்தை மொத்தமாய் அழித்துப் போடுவார்கள். பாபிலோன் தேசத்தாரால் அவர்களுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியாது.

கர்த்தரே மேதியரையும் பெர்சியரையும் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக அழைத்து வருகிறார். கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமாகவே கோரேசு ராஜா பாபிலோன் தேசத்தின்மீது யுத்தம்பண்ண வருகிறான். பாபிலோன் தேசத்தார் கோரேசுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டுமென்றால், அவர்கள் கோரேசை அனுப்பின கர்த்தருக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ண வேண்டும்.

"அவனை அங்கேயிருந்து சடிதியிலே ஓடிவரப்பண்ணுவேன்; நான் அதற்கு விரோதமாகக் கட்டளையிட்டு, அனுப்பத் தெரிந்து கொள்ளப்பட்டவன் யார்? எனக்குச் சமானமானவன் யார்? எனக்குத் திட்டஞ்சொல்பவன் யார்? எனக்கு முன்பாக நிற்கப்போகிற மேய்ப்பன் யார்?" (எரே 50:44) என்று கர்த்தர் கேட்கிறார்.

மேதியரும் பெர்சியரும் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக யுத்தம் செய்து, அவர்களுடைய தாபரங்களை பாழாக்கிப்போடுவார்கள். கர்த்தரே பாபிலோனுக்கு விரோதமாக ஆலோசனைகளை யோசித்திருக்கிறார். அவர் கல்தேயருக்கு விரோதமாக நினைவுகளை நினைத்திருக்கிறார். கர்த்தருடைய ஆலோசனைகளும் அவருடைய நினைவுகளும் நிறைவேறும். கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் ஒருபோதும் தடைபடாது.

பாபிலோன் தேசத்தார் ஒரு காலத்தில் பலமிக்கவர்களாகயிருந்தார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் பலவீனப்பட்டுப்போனார்கள். மேதியருடைய மந்தையில் சிறியவர்கள்கூட, பாபிலோன் தேசத்து பலவான்களைப் பிடித்து இழுப்பார்கள். இது கர்த்தருடைய யுத்தம். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் மேதியரை பலப்படுத்தி, பாபிலோனியரை பலவீனப்படுத்தி யுத்தம் பண்ணுகிறார். இந்த யுத்தத்தில் பாபிலோனியர் தோற்றுப்போய் சங்காரமாவார்கள்.

பாபிலோன் அழிந்துபோகும் செய்தியை அவர்களுடைய அயல்தேசத்தார் கேள்விப்பட்டு நடுங்குவார்கள். பலமுள்ள பாபிலோன் அழிந்து போனதை நினைத்து ஆச்சரியப்படுவார்கள். எல்லா தேசத்தாருக்கும் இதனால் மிகுந்த பயமுண்டாகும். "பாபிலோன் பிடிப்பட்டதின் சத்தத்தினால் பூமி அதிரும், அதின் கூப்பிடுதல் ஜாதிகளுக்குள்ளே கேட்கப்படும்" (எரே 50:46) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஏதோமின் அழிவைக்குறித்து சொன்னபோது இதே வார்த்தைகளையே பயன்படுத்தினார்.

"இதோ, புரண்டு ஓடுகிற யோர்தானிடத்திலிருந்து சிங்கம் வருவதுபோல் பலவானுடைய தாபரத்துக்கு விரோதமாக வருகிறான்; அவனைச் சடிதியிலே அங்கேயிருந்து ஓடிவரப்பண்ணுவேன்; நான் அதற்கு விரோதமாய்க் கட்டளையிட்டு அனுப்பத்தெரிந்துகொள்ளப்பட்டவன் யார்? எனக்குச் சமானமானவன் யார்? எனக்கு மட்டுக்கட்டுகிறவன் யார்? எனக்கு முன்பாக நிலைநிற்கப்போகிற மேய்ப்பன் யார்? ஆகையால் கர்த்தர் ஏதோமுக்கு விரோதமாக யோசித்த ஆலோசனையையும், அவர் தேமானின் குடிகளுக்கு விரோதமாக நினைத்திருக்கிற நினைவுகளையும் கேளுங்கள்; மந்தையில் சிறியவர்கள் மெய்யாகவே அவர்களைப் பிடித்திழுப்பார்கள், அவர்கள் இருக்கிற தாபரங்களை அவர் மெய்யாகவே பாழாக்குவார். அவைகளுக்குள் இடிந்துவிழும் சத்தத்தினாலே பூமி அதிரும்; கூக்குரலின் சத்தம் சிவந்த சமுத்திரமட்டும் கேட்கப்படும்" (எரே 49:19-21).

அப்போது கல்தேயர்கள் ஏதோமை அழித்துப்போட்டார்கள். இப்போதோ கல்தேயருக்கு அழிவு வருகிறது. அழித்தவர்கள் அழிந்துபோகிறார்கள். கர்த்தருடைய திட்டமும் சித்தமும் நிறைவேறுகிறது.

51 அதிகாரம்

பாபிலோன் தேசத்தின் வீழ்ச்சியைப்பற்றிய தீர்க்கதரிசனங்களை எரேமியா இந்த அதிகாரத்திலும் தொடர்ந்து சொல்லுகிறார். எரேமியாவின் தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு, மற்ற தீர்க்கதரிசிகளும் சாட்சிகளாயிருக்கிறார்கள். எரேமியாவின் தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு ஒத்த வார்த்தைகளை மற்ற தீர்க்கதரிசிகளும் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார்கள்.

பாபிலோன் தேசத்தின் அழிவை எரேமியா விரிவாகச் சொல்லுகிறார். அவர்களுடைய அழிவுக்கு அவர்களே காரணம். கர்த்தருடைய ஜனங்கள் பாபிலோன் தேசத்தாரால் மிகுந்த வேதனைகளையும் கஷ்டங்களையும் அனுபவிக்கிறார்கள். பாபிலோன் தேசத்தின் அழிவு தேவனுடைய இஸ்ரவேலுக்கு ஆறுதலாயிருக்கிறது (எரே 51:1-58).

பாபிலோன்மேல் வரும் எல்லா தீங்கையும், பாபிலோனுக்கு விரோதமாக எழுதப்பட்ட எல்லா வசனங்களையும் எரேமியா ஒரு புஸ்தகத்தில் எழுதி அதை செராயா என்னும் பிரபுவுக்கு கொடுக்கிறார். அவர் அந்தப் புஸ்தகத்தை பாபிலோனில் வாசித்து தீர்ந்தபோது, அதிலே ஒரு கல்லைக்கட்டி, அதை ஐப்பிராத்து நடுவில் எறிந்துவிடவேண்டும் (எரே 51:59-64).

பாபிலோன் அழியும் எரே 51:1-58

எரே 51:1. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் பாபிலோனுக்கு விரோதமாகவும், எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்களின் மத்தியில் குடியிருக்கிறவர்களுக்கு விரோதமாகவும் அழிக்கும் காற்றை எழும்பப்பண்ணி,

எரே 51:2. தூற்றுவாரைப் பாபிலோனுக்கு அனுப்புவேன்; அவர்கள் அதைத் தூற்றி வெறுமையாக்கிப் போடுவார்கள்; ஆபத்துநாளிலே அதற்கு விரோதமாய்ச் சூழ்ந்துகொண்டிருப்பார்கள்.

எரே 51:3. வில்லை நாணேற்றுகிறவனுக்கு விரோதமாகவும், தன் கவசத்தில் பெருமை பாராட்டுகிறவனுக்கு விரோதமாகவும், வில்வீரன் தன் வில்லை நாணேற்றக்கடவன்; அதின் வாலிபரைத் தப்பவிடாமல் அதின் சேனையை எல்லாம் சங்காரம்பண்ணுங்கள்.

எரே 51:4. குத்திப்போடப்பட்டவர்கள் கல்தேயரின் தேசத்திலும், கொலைசெய்யப்பட்டவர்கள் அதின் வீதிகளிலும் விழுவார்கள்.

எரே 51:5. அவர்கள் தேசம் இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோதமாகச் செய்த அக்கிரமத்தினால் நிறைந்திருந்தும், யூதா தன் தேவனாலும் இஸ்ரவேல் சேனைகளின் கர்த்தராலும் கைவிடப்படவில்லை.

எரே 51:6. நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடி, அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவியுங்கள்; இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது; அவர் அதற்குப் பதில் செலுத்துவார்.

எரே 51:7. பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணினது; அதின் மதுவை ஜாதிகள் குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் புத்திமயங்கிப்போனார்கள்.

எரே 51:8. பாபிலோன் சடிதியில் விழுந்து தகர்ந்தது; அதற்காக அலறுங்கள்; அதின் நோவை ஆற்றப் பிசின் தைலம் போடுங்கள்; ஒருவேளை குணமாகும்.

எரே 51:9. பாபிலோனைக் குணமாக்கும்படிப் பார்த்தோம், அது குணமாகவில்லை; அதை விட்டுவிடுங்கள்; நாம் அவரவர் நம்முடைய தேசங்களுக்குப் போகக்கடவோம்; அதின் ஆக்கினை வானமட்டும் ஏறி ஆகாயமண்டலங்கள் பரியந்தம் எட்டினது.

எரே 51:10. கர்த்தர் நம்முடைய நீதியை வெளிப்படுத்தினார்; நம்முடைய தேவனாகிய கர்த்தரின் செயலைச் சீயோனில் விவரிப்போம் வாருங்கள்.

எரே 51:11. அம்புகளைத் துலக்குங்கள்; கேடகங்களை நன்றாய்ச் செப்பனிடுங்கள்; கர்த்தர் மேதியருடைய ராஜாக்களின் ஆவியை எழுப்பினார்; பாபிலோனை அழிக்கவேண்டுமென்பதே அவருடைய நினைவு; இது கர்த்தர் வாங்கும் பழி, இது தமது ஆலயத்துக்காக அவர் வாங்கும் பழி.

எரே 51:12. பாபிலோனின் மதில்கள்மேல் கொடியேற்றுங்கள், காவலைப் பலப்படுத்துங்கள், ஜாமங் காக்கிறவர்களை நிறுத்துங்கள், பதிவிருப்பாரை வையுங்கள்; ஆனாலும் கர்த்தர் எப்படி நினைத்தாரோ அப்படியே தாம் பாபிலோனின் குடிகளுக்கு விரோதமாகச் சொன்னதைச் செய்வார்.

எரே 51:13. திரளான தண்ணீர்களின் மேல் வாசம்பண்ணுகிறவளே, திரண்ட சம்பத்துடையவளே, உனக்கு முடிவும் உன் பொருளாசைக்கு ஒழிவும் வந்தது.

எரே 51:14. மெய்யாகவே, பச்சைக்கிளிகளைப்போல் திரளான மனுஷரால் உன்னை நிரம்பப்பண்ணுவேன்; அவர்கள் உன்மேல் ஆரவாரம்பண்ணுவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் தம்முடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டார்.

எரே 51:15. அவர் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார்.

எரே 51:16. அவர் சத்தமிடுகையில் திரளான தண்ணீர் வானத்தில் உண்டாகிறது; அவர் பூமியின் எல்லைகளிலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டசாலையிலிருந்து ஏவிவிடுகிறார்.

எரே 51:17. மனுஷர் அனைவரும் அறிவில்லாமல் மிருக குணமானார்கள்; தட்டார் அனைவரும் சுரூபங்களாலே வெட்கிப் போகிறார்கள்; அவர்கள் வார்ப்பித்த விக்கிரகம் பொய்யே, அவைகளில் சுவாசம் இல்லை.

எரே 51:18. அவைகள் மாயையும் மகா எத்துமான கிரியையாயிருக்கிறது; அவைகள் விசாரிக்கப்படும் நாளிலே அழியும்.

எரே 51:19. யாக்கோபின் பங்காயிருக்கிறவர் அவைகளைப்போல அல்ல, அவர் சர்வத்தையும் உண்டாக்கினவர்; இஸ்ரவேல் அவருடைய சுதந்தரமான கோத்திரம்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

எரே 51:20. நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன்; நான் உன்னைக் கொண்டு ஜாதிகளை நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு ராஜ்யங்களை அழிப்பேன்.

எரே 51:21. உன்னைக்கொண்டு குதிரையையும், குதிரை வீரனையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு இரதத்தையும் இரதவீரனையும் நொறுக்குவேன்.

எரே 51:22. உன்னைக்கொண்டு புருஷனையும் ஸ்திரீயையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு கிழவனையும் இளைஞனையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு வாலிபனையும் கன்னிகையையும் நொறுக்குவேன்.

எரே 51:23. உன்னைக்கொண்டு மேய்ப்பனையும் அவனுடைய மந்தையையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு உழவனையும் அவனுடைய உழவுகாளைகளையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு அதிபதிகளையும் அதிகாரிகளையும் நொறுக்குவேன்.

எரே 51:24. பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்தின் சகல குடிகளுக்கும், அவர்கள் உங்கள் கண்களுக்கு முன்பாகச் சீயோனில் செய்த அவர்களுடைய எல்லாப் பொல்லாப்புக்காகவும் பழி வாங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:25. இதோ, பூமியை எல்லாம் கெடுக்கிற கேடான பர்வதமே, நான் உனக்கு விரோதமாக வந்து, என் கையை உனக்கு விரோதமாக நீட்டி, உன்னைக் கன்மலைகளிலிருந்து உருட்டி, உன்னை எரிந்துபோன பர்வதமாக்கிப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:26. மூலைக்கல்லுக்காகிலும் அஸ்திபாரக்கல்லுக்காகிலும் ஒரு கல்லையும் உன்னிலிருந்து எடுக்கமாட்டார்கள்; நீ என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கிற ஸ்தலமாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:27. தேசத்திலே கொடியேற்றுங்கள்; ஜாதிகளுக்குள் எக்காளம் ஊதுங்கள்; ஜாதிகளை அதற்கு விரோதமாக ஆயத்தப்படுத்துங்கள்; ஆரராத், மின்னி, அஸ்கெனாஸ் என்னும் ராஜ்யங்களை அதற்கு விரோதமாக வரவழைப்பிடுங்கள்; அதற்கு விரோதமாகத் தளகர்த்தனுக்குப் பட்டங்கட்டுங்கள்; கூனையுள்ள வெட்டுக்கிளிகள்போன்ற குதிரைகளை வரப்பண்ணுங்கள்.

எரே 51:28. மேதியாதேசத்தின் ராஜாக்களும் அதின் தலைவரும் அதின் சகல அதிகாரிகளும் அவரவருடைய ராஜ்யபாரத்துக்குக் கீழான சகல தேசத்தாருமாகிய ஜாதிகளை அதற்கு விரோதமாக ஆயத்தப்படுத்துங்கள்.

எரே 51:29. அப்பொழுது தேசம் அதிர்ந்து வேதனைப்படும்; பாபிலோன் தேசத்தைக் குடியில்லாதபடிப் பாழாக்க, பாபிலோனுக்கு விரோதமாய்க் கர்த்தர் நினைத்தவைகள் நிலைக்கும்.

எரே 51:30. பாபிலோனின் பராக்கிரமசாலிகள் யுத்தம்பண்ணாமல், கோட்டைகளில் இருந்துவிட்டார்கள்; அவர்கள் பராக்கிரமம் அழிந்து பேடிகளானார்கள்; அதின் வாசஸ்தலங்களைக் கொளுத்திப் போட்டார்கள்; அதின் தாழ்ப்பாள்கள் உடைக்கப்பட்டது.

எரே 51:31. கடையாந்தர முனைதுவக்கி அவனுடைய பட்டணம் பிடிபட்டது என்றும், துறைவழிகள் அகப்பட்டுப் போய், நாணல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், யுத்த மனுஷர் கலங்கியிருக்கிறார்கள் என்றும் பாபிலோன் ராஜாவுக்கு அறிவிக்க,

எரே 51:32. அஞ்சற்காரன்மேல் அஞ்சற்காரனும் தூதன்மேல் தூதனும் ஓடுகிறான்.

எரே 51:33. பாபிலோன் குமாரத்தி மிதிக்கப்படுங் களத்துக்குச் சமானம்; அதைப் போரடிக்குங் காலம் வந்தது; இன்னும் கொஞ்சக்காலத்திலே அறுப்புக்காலம் அதற்கு வரும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:34. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னைப் பட்சித்தான், என்னைக் கலங்கடித்தான், என்னைவெறும் பாத்திரமாக வைத்துப்போனான்; வலுசர்ப்பம்போல என்னை விழுங்கி, என் சுவையுள்ள பதார்த்தங்களால் தன் வயிற்றை நிரப்பினான், என்னைத் துரத்திவிட்டான்.

எரே 51:35. எனக்கும் என் இனத்தாருக்கும் செய்த கொடுமையின் பழி பாபிலோன் மேல் வரக்கடவதென்று சீயோனில் வாசமானவள் சொல்லுகிறாள்; என் இரத்தப்பழி கல்தேயர் தேசத்துக் குடிகளின்மேல் வரக்கடவதென்று எருசலேம் என்பவளும் சொல்லுகிறாள்.

எரே 51:36. ஆகையால் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் உனக்காக வழக்காடி, உன் பழிக்குப் பழிவாங்கி, அதின் கடலை வறளவும் அதின் ஊற்றைச் சுவறவும் பண்ணுவேன்.

எரே 51:37. அப்பொழுது பாபிலோன் குடியில்லாத மண்மேடுகளும், வலுசர்ப்பங்களின் தாபரமும், பாழும், ஈசல்போடப்படுதலுக்கு இடமுமாய்ப் போகும்.

எரே 51:38. ஏகமாய் அவர்கள் சிங்கங்களைப் போலக் கெர்ச்சித்து, சிங்கக்குட்டிகளைப்போலச் சத்தமிடுவார்கள்.

எரே 51:39. அவர்கள் களிக்கும் சமயத்திலே நான் அவர்கள் குடிக்கும் பானத்தை அவர்களுக்குக் குடிக்கக்கொடுத்து அவர்கள் துள்ளத்தக்கதாக அவர்களை வெறியாக்குவேன்; அதினால் அவர்கள் என்றென்றைக்கும் விழிக்காத நித்திரை அடைவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:40. அவர்களை ஆட்டுக்குட்டிகளைப்போலவும், ஆட்டுக்கடாக்களைப்போலவும், வெள்ளாட்டுக்கடாக்களைப்போலவும் அடிக்கப்பட இறங்கிப்போகப் பண்ணுவேன்.

எரே 51:41. சேசாக்கு பிடியுண்டு, பூமிமுழுதும் புகழும் புகழ்ச்சி அகப்பட்டது எப்படி? ஜாதிகளுக்குள்ளே பாபிலோன் பிரமிப்பானது எப்படி?

எரே 51:42. சமுத்திரம் பாபிலோன்மேல் புரண்டுவந்தது; அதின் அலைகளின் திரட்சியினால் அது மூடப்பட்டது.

எரே 51:43. அதின் பட்டணங்கள் பாழுமாய், வறட்சியும் வனாந்தரமுமான பூமியுமாய், ஒரு மனுஷனும் குடியிராததும் ஒரு மனுபுத்திரனும் கடவாததுமான நிலமுமாய்ப்போயிற்று.

எரே 51:44. நான் பாபிலோனில் இருக்கிற பேலைத் தண்டிப்பேன்; அது விழுங்கினதை அதின் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன்; ஜாதிகள் இனி அதினிடத்திற்கு ஓடிவரமாட்டார்கள், பாபிலோனின் மதிலும் விழும்.

எரே 51:45. என் ஜனங்களே, நீங்கள் அதின் நடுவிலிருந்து புறப்படுங்கள்; கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்துக்குத் தப்பும்படி அவனவன் தன்தன் ஆத்துமாவை இரட்சித்துக்கொள்ளக்கடவன்.

எரே 51:46. உங்கள் இருதயம் துவளாமலும், தேசத்தில் கேட்கப்படும் செய்தியினால் நீங்கள் பயப்படாமலும் இருங்கள்; ஒரு வருஷத்திலே ஒரு செய்தி கேட்கப்பட்டு, பின்பு மறுவருஷத்திலே வேறு செய்தி கேட்கப்படும்; தேசத்திலே கொடுமை உண்டாகும்; ஆளுகிறவன்மேல் ஆளுகிறவன் வருவான்.

எரே 51:47. ஆகையால், இதோ, நான் பாபிலோனின் விக்கிரகங்களை தண்டிக்கும் நாட்கள் வரும், அப்பொழுது அதின் தேசம் எல்லாம் கலங்கும்; அதில் கொலையுண்கிற யாவரும் அதின் நடுவில் விழுந்துகிடப்பார்கள்.

எரே 51:48. வானமும் பூமியும் அவைகளிலுள்ள யாவும் பாபிலோன்மேல் கெம்பீரிக்கும்; பாழ்க்கடிக்கிறவர்கள் அதற்கு வடக்கேயிருந்து வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்;

எரே 51:49. பாபிலோன் இஸ்ரவேலில் கொலையுண்டவர்களை விழப்பண்ணினதுபோல, பாபிலோனிலும் சமஸ்த தேசங்களிலும் கொலையுண்கிறவர்கள் விழுவார்கள்.

எரே 51:50. பட்டயத்துக்குத் தப்பினவர்களே, தங்கித்தரியாமல் நடந்துவாருங்கள்; தூரத்திலே கர்த்தரை நினையுங்கள்; எருசலேம் உங்கள் ஞாபகத்தில் வரக்கடவது.

எரே 51:51. நிந்தையைக் கேட்டதினால் வெட்கப்பட்டோம்; கர்த்தருடைய ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலங்களின்மேல் அந்நியர் வந்ததினால் நாணம் நம்முடைய முகங்களை மூடிற்று.

எரே 51:52. ஆகையால், கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் அதின் விக்கிரகங்களுக்கு விரோதமாய் விசாரிக்கும் நாட்கள் வரும்; அப்பொழுது அதின் தேசமெங்கும் கொலையுண்கிறவர்கள் கத்துவார்கள்.

எரே 51:53. பாபிலோன் வானபரியந்தம் ஏறினாலும்,அது தன் பலமான அரணை உயர்த்தினாலும், அதைப் பாழாக்குகிறவர்கள் என்னிடத்திலிருந்து வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:54. பாபிலோனிலிருந்து கூக்குரலின் சத்தமும், கல்தேயர் தேசத்திலிருந்து மகா சங்காரமும் கேட்கப்படும்.

எரே 51:55. கர்த்தர் பாபிலோனைப் பாழாக்கி அதிலுள்ள பெரிய சத்தத்தை ஒழியப்பண்ணுவார்; அவர்களுடைய அலைகள் திரளான தண்ணீர்களைப்போல இரையும், அவர்களுடைய சத்தம் அமளியாயிருக்கும்.

எரே 51:56. பாபிலோனைப் பாழாக்குகிறவன் அதின்மேல் வருகிறான்; அதின் பராக்கிரமசாலிகள் பிடிபடுவார்கள்; அவர்களுடைய வில்லுகள் முறிந்துபோகும்; சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தர்நிச்சயமாகப் பதில் அளிப்பார்.

எரே 51:57. அதின் பிரபுக்களையும் அதின் ஞானிகளையும் அதின் தலைவரையும் அதின் அதிகாரிகளையும் அதின் பராக்கிரமசாலிகளையும் வெறிக்கப்பண்ணுவேன்; அப்பொழுது அவர்கள் என்றென்றைக்கும் விழிக்காத தூக்கமாய்த் தூங்கி விழுவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள ராஜா சொல்லுகிறார்.

எரே 51:58. பாபிலோனின் விஸ்தீரணமான மதில்கள் முற்றிலும் தரையாக்கப்பட்டு, அதின் உயரமான வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்; அப்படியே ஜனங்கள் பிரயாசப்பட்டது விருதாவும், ஜாதிகள் வருத்தப்பட்டுச் சம்பாதித்தது அக்கினிக்கு இரையுமாகுமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம் எரே 51:7,20,21,22,23

எரே 51:7 பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்; அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணினது; அதின் மதுவை ஜாதிகள் குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் புத்திமயங்கிப்போனார்கள்.

எரே 51:20 நீ எனக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன்; நான் உன்னைக் கொண்டு ஜாதிகளை நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு ராஜ்யங்களை அழிப்பேன்.

எரே 51:21. உன்னைக்கொண்டு குதிரையையும், குதிரை வீரனையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு இரதத்தையும் இரதவீரனையும் நொறுக்குவேன்.

எரே 51:22. உன்னைக்கொண்டு புருஷனையும் ஸ்திரீயையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு கிழவனையும் இளைஞனையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு வாலிபனையும் கன்னிகையையும் நொறுக்குவேன்.

எரே 51:23. உன்னைக்கொண்டு மேய்ப்பனையும் அவனுடைய மந்தையையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு உழவனையும் அவனுடைய உழவுகாளைகளையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு அதிபதிகளையும் அதிகாரிகளையும் நொறுக்குவேன்.

பாபிலோன் ஒரு காலத்தில் ஐசுவரியமும் ஆடம்பரமும் மிகுந்த தேசமாய் விளங்கிற்று. "பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம்" (எரே 51:7). கர்த்தர் தம்முடைய சித்தத்தையும் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு, பாபிலோனை தம்முடைய கோலாகப் பயன்படுத்தினார்.

கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாகவே பாபிலோன் தேசம் அவருடைய கையிலுள்ள பொற்பாத்திரமாயிருந்தது. அது பூமி அனைத்தையும் வெறிக்கப்பண்ணினது; அதின் மதுவை ஜாதிகள் குடித்தார்கள்; ஆகையால் ஜாதிகள் புத்திமயங்கிப் போனார்கள் (எரே 51:7).

பாபிலோன் தேசம் பொன்னகரியாய் விளங்கிற்று. "நீ பாபிலோன் ராஜாவின்மேல் சொல்லும் வாக்கியமாவது: ஒடுக்கினவன் ஒழிந்துபோனானே! பொன்னகரி ஒழிந்துபோயிற்றே! " (ஏசா 14:4).

பாபிலோன் தேசம் பொன்னாலான தலை. "சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்தத் தலை நீரே" (தானி 2:38).

பூமியிலுள்ள ஜாதிகள் பாபிலோன் என்னும் பொற்பாத்திரத்திலிருந்து குடித்தார்கள். இதனால் அவர்கள் புத்திமயங்கிப்போனார்கள். ஏராளமான ஜாதிகள் பாபிலோன் தேசத்தின் சந்தோஷத்தையும், ஆடம்பரத்தையும் பானம்பண்ணி புத்திமயங்கிப்போனார்கள். வேறு சிலரோ பாபிலோன் தேசத்தின் வல்லமையைப் பார்த்து, திகிலடைந்து புத்திமயங்கிப் போனார்கள். பாபிலோன் அவர்களை பட்சித்துப்போட்டது.

பாபிலோன் தேசம் பூமியிலுள்ள ராஜாக்களுக்கெல்லாம் தன்னுடைய மதுவைக் குடிக்கக் கொடுத்தது என்று புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஏழு கலசங்களையுடைய அந்த ஏழு தூதரில் ஒருவன் வந்து என்னோடே பேசி: நீ வா, திரளான தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற மகா வேசியோடே பூமியின் ராஜாக்கள் வேசித்தனம்பண்ணினார்களே, அவளுடைய வேசித்தனமாகிய மதுவால் பூமியின் குடிகளும் வெறிகொண்டிருந்தார்களே" (வெளி 17:1).

"அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுவை எல்லா ஜாதிகளும் குடித்தார்கள்; பூமியின் ராஜாக்கள் அவளோடே வேசித்தனம்பண்ணினார்கள்; பூமியின் வர்த்தகர் அவளுடைய செல்வச்செருக்கின் மிகுதியினால் ஐசுவரியவான்களானார்கள் என்று விளம்பினான்" (வெளி 18:3).

பாபிலோன் தேசம் கர்த்தருக்கு தண்டாயுதமும் அஸ்திராயுதமுமானவன் (எரே 51:20). கர்த்தர் பாபிலோன் தேசத்தைக் கொண்டு ஜாதிகளை நொறுக்கினார். அவர்களைக்கொண்டு மற்ற தேசங்களை அழித்தார்.

"உன்னைக்கொண்டு குதிரையையும், குதிரை வீரனையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு இரதத்தையும் இரதவீரனையும் நொறுக்குவேன். உன்னைக் கொண்டு புருஷனையும் ஸ்திரீயையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு கிழவனையும் இளைஞனையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு வாலி பனையும் கன்னிகையையும் நொறுக்குவேன். உன்னைக்கொண்டு மேய்ப்பனையும் அவனுடைய மந்தையையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு உழவனையும் அவனுடைய உழவுகாளைகளையும் நொறுக்குவேன்; உன்னைக்கொண்டு அதிபதிகளையும் அதிகாரிகளையும் நொறுக்குவேன்" (எரே 51:21-23) என்று கர்த்தர் பாபிலோன் தேசத்தைப்பற்றிச் சொல்லுகிறார்.

குதிரையும், குதிரைவீரரும், இரதங்களும் இரதவீரரும் தங்கள் தேசத்தின் இராணுவத்தைப் பலப்படுத்துகிறவர்கள். பாபிலோன் தேசத்தாரோ இவர்களை நொறுக்கிப்போடுகிறார்கள். தேசம் செழித்திருப்பதற்கு இளைஞரும், வாலிபரும், கன்னிகையும் திரளாயிருக்கவேண்டும். ஆனால் பாபிலோன் தேசத்தாரோ இவர்கள் எல்லோரையும் நொறுக்கிப்போடுகிறார்கள்.

தேசத்தின் பொருளாதாரத்திற்கு மேய்ப்பரும், அவர்களுடைய மந்தையும் தேவை. உழவனும், அவனுடைய உழவு காளைகளும் தேவை. பாபிலோன் தேசமோ அவையெல்லாவற்றையும் நொறுக்கிப் போடுகிறது. தேசங்களின் அதிபதிகளையும் அதிகாரிகளையும் பாபிலோன் தேசத்தார் நொறுக்கிப்போட்டு, தேசத்தில் ஆளுகை செய்வதற்கு ஒருவருமில்லாமல், அங்கே குழப்பத்தை உண்டுபண்ணிவிடுகிறார்கள்.

கர்த்தரே பாபிலோன் தேசத்தை தம்முடைய தண்டாயுதமாகவும், அஸ்திராயுதமாகவும் பயன்படுத்தினார். தம்முடைய கோபத்தை நிறைவேற்றுவதற்கு கர்த்தர் பாபிலோன் தேசத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். தேசங்களை சிட்சிப்பதற்கும், அவர்களை தண்டிப்பதற்கும் கர்த்தர் பாபிலோனை தம்முடைய மிலாறாகப் பயன்படுத்தினார்.

பாபிலோன் குணமாகவில்லை எரே 51:9,34,35

எரே 51:9. பாபிலோனைக் குணமாக்கும்படிப் பார்த்தோம், அது குணமாகவில்லை; அதை விட்டுவிடுங்கள்; நாம் அவரவர் நம்முடைய தேசங்களுக்குப் போகக் கடவோம்; அதின் ஆக்கினை வானமட்டும் ஏறி ஆகாயமண்டலங்கள் பரியந்தம் எட்டினது.

எரே 51:34. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னைப் பட்சித்தான், என்னைக் கலங்கடித்தான், என்னைவெறும் பாத்திரமாக வைத்துப்போனான்; வலுசர்ப்பம்போல என்னை விழுங்கி, என் சுவையுள்ள பதார்த்தங்களால் தன் வயிற்றை நிரப்பினான், என்னைத் துரத்திவிட்டான்.

எரே 51:35. எனக்கும் என் இனத்தாருக்கும் செய்த கொடுமையின் பழி பாபிலோன் மேல் வரக்கடவதென்று சீயோனில் வாசமானவள் சொல்லுகிறாள்; என் இரத்தப்பழி கல்தேயர் தேசத்துக் குடிகளின்மேல் வரக்கடவதென்று எருசலேம் என்பவளும் சொல்லுகிறாள்.

இப்போதோ பாபிலோன் தேசத்தாரின் பாவங்களினிமித்தமாய் அவர்கள்மீது கர்த்தருடைய கோபம் எழும்புகிறது. கர்த்தர் இப்போது பாபிலோன் தேசத்தை தண்டிக்கிறார்.

கர்த்தர் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக தம்முடைய குற்றச்சாட்டுக்களைச் சொல்லுகிறார். பாபிலோன் தேசம் குணமாகவில்லை. அது குணமாகும் என்று கர்த்தர் எதிர்பார்த்தார். ஆனால் பாபிலோன் தேசத்தாரோ குணப்படாமல் போனார்கள் (எரே 51:9).

கர்த்தருடைய ஜனம் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தர் பாபிலோன் தேசத்தின் பாவங்களைப்பற்றிச் சொல்லும்போது, தம்முடைய இஸ்ரவேல் ஜனங்களுக்கும் கட்டளை கொடுக்கிறார். பாபிலோன் தேசத்தை விட்டுவிடுங்கள் என்றும், "நாம் அவரவர் நம்முடைய தேசங்களுக்கு போகக்கடவோம்" (எரே 51:9) என்று சொல்லுமாறு, கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்திடம் சொல்லுகிறார். பாபிலோன் தேசத்தின் ஆக்கினை வானமட்டும் ஏறி, ஆகாயமண்டலங்கள் பரியந்தம் எட்டினது.

"வானத்தையும் பூமியையும் உண்டாக்காத தெய்வங்கள், பூமியிலும் இந்த வானத்தின்கீழும் இராதபடிக்கு அழிந்துபோகும் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள்" (எரே 10:11) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசம் விக்கிரகாராதனை தேசம். அவர்கள் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டி ஆராதனை செய்கிறார்கள். அவர்களுடைய விக்கிரகாராதனையினிமித்தமாகவே, கர்த்தர் பாபிலோன் தேசத்தின்மீது அழிவை வரப்பண்ணுகிறார். பாபிலோன் தேசத்தாரால் தங்கள் விக்கிரகங்களை விட்டுவிட்டு வரமுடியவில்லை. அவர்கள் விக்கிரகங்களோடும், விக்கிரகாராதனையோடும் ஒன்றாய்க் கலந்திருக்கிறார்கள்.

பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக மேதியரும் பெர்சியரும் யுத்தம் பண்ண வருகிறார்கள். பாபிலோன் தேசத்தாரால் அவர்களை தனியாக எதிர்க்க முடியவில்லை. தங்களுக்கு உதவியாக பாபிலோனியர் கூலிப்படைகளை அமர்த்தியிருக்கிறார்கள். பாபிலோன் தேசத்திற்கு தோல்வி உண்டாகும் என்பதை அவர்களுடைய கூலிப்படையினர் அறிந்துகொள்கிறார்கள்.

"பாபிலோனைக் குணமாக்கும்படிப் பார்த்தோம், அது குணமாகவில்லை; அதை விட்டுவிடுங்கள்; நாம் அவரவர் நம்முடைய தேசங்களுக்குப் போகக் கடவோம்; அதின் ஆக்கினை வானமட்டும் ஏறி ஆகாயமண்டலங்கள் பரியந்தம் எட்டினது" (எரே 51:9) என்று பாபிலோன் தேசத்தார் தங்களுடைய உதவிக்காக அமர்த்தின கூலிப்படையினர், பாபிலோன் தேசத்தாருக்கு விரோதமாகச் சொல்லுவதாக வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

பாபிலோன் தேசத்தாரின் கூலிப்படைகள், பாபிலோனியரோடு சேர்ந்து, மேதியருக்கும் பெர்சியருக்கும் விரோதமாக யுத்தம்பண்ணாமல், தங்களுடைய தேசங்களுக்கு ஓடிப்போய்விடுகிறார்கள். பாபிலோன் தேசத்தாரின் அக்கிரமங்களினிமித்தம், அவர்களுக்கு ஆக்கினை வந்திருக்கிறது என்றும், பாபிலோனியருக்கு யுத்தத்தில் ஜெயமுண்டாகாது என்றும் தீர்மானித்து, பாபிலோனியரின் கூலிப்படைகள் தங்கள் தேசத்திற்குப் போய்விடுகிறார்கள்.

பாபிலோன் தேசத்தார் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாகவும் தீங்கு செய்தார்கள். கல்தேயர்கள் அநேக ஜாதியாரை சிறைப்பிடித்தார்கள். அவர்களெல்லோரையும் கொடுமைப்படுத்தினார்கள். ஆனாலும் கல்தேயர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாக செய்த தீங்குகள் மிகவும் அதிகம். தாங்கள் பட்ட வேதனைகளையும், துன்பங்களையும், உபத்திரவங்களையும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தின் கதறலை செவிகொடுத்து கேட்கிறார்.

"பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னைப் பட்சித்தான், என்னைக் கலங்கடித்தான், என்னைவெறும் பாத்திரமாக வைத்துப்போனான்; வலுசர்ப்பம்போல என்னை விழுங்கி, என் சுவையுள்ள பதார்த்தங்களால் தன் வயிற்றை நிரப்பினான், என்னைத் துரத்திவிட்டான். எனக்கும் என் இனத்தாருக்கும் செய்த கொடுமையின் பழி பாபிலோன் மேல் வரக்கடவதென்று சீயோனில் வாசமானவள் சொல்லுகிறாள்; என் இரத்தப்பழி கல்தேயர் தேசத்துக் குடிகளின்மேல் வரக்கடவதென்று எருசலேம் என்பவளும் சொல்லுகிறாள்" (எரே 51:34,35).

கல்தேயர்கள் சீயோனுக்கும் எருசலேமுக்கும் விரோதமாக கொடுமை செய்தார்கள். அவர்களைப் பட்சித்தார்கள். அவர்களுடைய பிள்ளைகளைக் கொன்றுபோட்டார்கள். கல்தேயர்கள் யூதாவின் மனுஷரையும், எருசலேமின் குடிகளையும் தங்கள் பட்டயங்களால் வெட்டினார்கள். கர்த்தருடைய ஜனத்தின் இரத்தம் வீதியிலே சிந்தப்பட்டது. தங்களுடைய இரத்தப்பழியை கர்த்தர் கல்தேயரிடத்தில் விசாரிக்கவேண்டும் என்று இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள்.

நான் உனக்காக வழக்காடுவேன் எரே 51:10,24,36,56

எரே 51:10. கர்த்தர் நம்முடைய நீதியை வெளிப்படுத்தினார்; நம்முடைய தேவனாகிய கர்த்தரின் செயலைச் சீயோனில் விவரிப்போம் வாருங்கள்.

எரே 51:24 பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்தின் சகல குடிகளுக்கும், அவர்கள் உங்கள் கண்களுக்கு முன்பாகச் சீயோனில் செய்த அவர்களுடைய எல்லாப் பொல்லாப்புக்காகவும் பழி வாங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:36. ஆகையால் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் உனக்காக வழக்காடி, உன் பழிக்குப் பழிவாங்கி, அதின் கடலை வறளவும் அதின் ஊற்றைச் சுவறவும் பண்ணுவேன்.

எரே 51:56. பாபிலோனைப் பாழாக்குகிறவன் அதின்மேல் வருகிறான்; அதின் பராக்கிரமசாலிகள் பிடிபடுவார்கள்; அவர்களுடைய வில்லுகள் முறிந்துபோகும்; சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தர் நிச்சயமாகப் பதில் அளிப்பார்.

தம்முடைய ஜனங்கள் கல்தேயருக்கு விரோதமாக முறையிடுவதை கர்த்தர் செவிகொடுத்து கேட்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்திடம், "இதோ, நான் உனக்காக வழக்காடி, உன் பழிக்குப் பழிவாங்கி, அதின் கடலை வறளவும் அதின் ஊற்றைச் சுவறவும் பண்ணுவேன்" (எரே 51:36) என்று சொல்லுகிறார். கர்த்தரே வானத்திற்கும் பூமிக்கும் நீதியுள்ள நியாயாதிபதி. அவர் இஸ்ரவேலின் வழக்குகளை பாபிலோன் தேசத்தாரிடம் விசாரிக்கிறார்.

பழிவாங்குதல் கர்த்தருக்குரியது. நமக்கு விரோதமாகத் தீங்குசெய்தவர்களை, நாமே பழிவாங்கவேண்டுமென்று கோபப்படக்கூடாது. நம்முடைய வழக்குகளை கர்த்தரிடத்தில் சொல்லவேண்டும். கர்த்தர் நம்முடைய சத்துருக்களிடத்தில் பழிவாங்குவார். கல்தேயர்கள் எருசலேமிலே கர்த்தருடைய ஜனத்தின் இரத்தத்தை சிந்தினார்கள். அவர்கள் சிந்தின ஒவ்வொரு சொட்டு இரத்தத்திற்கும், கல்தேயர்கள் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

இஸ்ரவேல் வம்சத்தாரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். இதனால் அவர்கள் கர்த்தரிடத்திலிருந்து எந்த நன்மையையும் பெற்றுக் கொள்ள தகுதியில்லாதவர்களாயிருக்கிறார்கள். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினால் அவர்களுக்கு நன்மை செய்கிறார். கர்த்தர் இஸ்ரவேலை மறந்துவிடவுமில்லை. அவர்களை கைவிடவுமில்லை. அவர் இன்னும் இஸ்ரவேலின் தேவனாகவே இருக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக தம்மை சேனைகளின் கர்த்தராக வெளிப்படுத்துகிறார். தம்முடைய பிள்ளைகளை துன்பப்படுத்தின சத்துருக்களுக்கு விரோதமாக, கர்த்தர் தம்முடைய சர்வவல்லமையினால் யுத்தம்பண்ணுகிறார்.

"கர்த்தர் பாபிலோனைப் பாழாக்கி அதிலுள்ள பெரிய சத்தத்தை ஒழியப்பண்ணுவார்; அவர்களுடைய அலைகள் திரளான தண்ணீர்களைப்போல இரையும், அவர்களுடைய சத்தம் அமளியாயிருக்கும். பாபிலோனைப் பாழாக்குகிறவன் அதின்மேல் வருகிறான்; அதின் பராக்கிரமசாலிகள் பிடிபடுவார்கள்; அவர்களுடைய வில்லுகள் முறிந்துபோகும்; சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தர் நிச்சயமாகப் பதில் அளிப்பார்" (எரே 51:55,56) என்று எரேமியா கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறார்.

"பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்தின் சகல குடிகளுக்கும், அவர்கள் உங்கள் கண்களுக்கு முன்பாகச் சீயோனில் செய்த அவர்களுடைய எல்லாப் பொல்லாப்புக்காகவும் பழி வாங்குவேன்" (எரே 51:24) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர்கள் யூதர்களை எந்த அளவினால் அளந்தார்களோ, அந்த அளவினால் கோரேசு ராஜா கல்தேயரை அளப்பான். கர்த்தர் தம்முடைய நீதியை வெளிப்படுத்துவார் (எரே 51:10). கர்த்தருடைய பிள்ளைகள் சீயோனிலே ஆர்ப்பரிப்பார்கள்.

கல்தேயர்கள் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக அநீதி செய்தார்கள். யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கல்தேயருக்கு விரோதமாக ஒரு தீங்கும் செய்யவில்லை. ஆனாலும் கல்தேயர்கள் யூதாவின் மனுஷரை பட்டயத்தினால் வெட்டி, மீதமான யூதர்களை தங்கள் தேசத்திற்கு சிறைப்பிடித்துகொண்டு போனார்கள். கர்த்தர் இப்போது கல்தேயர்மீது தம்முடைய நீதியை வெளிப்படுத்துகிறார். கர்த்தருடைய கிரியையை அவருடைய ஜனங்கள் ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் ஒருவரையொருவர் பார்த்து, "நம்முடைய தேவனாகிய கர்த்தரின் செயலை சீயோனிலே விவரிப்போம் வாருங்கள்" (எரே 51:10) என்று சொல்லிக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தரைத் துதிக்கிறார்கள். தாங்கள் கர்த்தரைத் துதிக்கும்போது மற்றவர்களும் தங்களோடு சேர்ந்து வந்து கர்த்தரைத் துதிக்குமாறு அழைக்கிறார்கள். கர்த்தர் நல்லவர். கர்த்தருக்கு பயந்தவர்களுக்கு அவருடைய கிருபை என்றென்றைக்குமுள்ளது.

திரளான மனுஷர்
எரே 51:14-19

எரே 51:14. மெய்யாகவே, பச்சைக்கிளிகளைப்போல் திரளான மனுஷரால் உன்னை நிரம்பப் பண்ணுவேன்; அவர்கள் உன்மேல் ஆரவாரம் பண்ணுவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் தம்முடைய ஜீவனைக்கொண்டு ஆணையிட்டார்.

எரே 51:15. அவர் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார்.

எரே 51:16. அவர் சத்தமிடுகையில் திரளான தண்ணீர் வானத்தில் உண்டாகிறது; அவர் பூமியின் எல்லைகளிலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டசாலையிலிருந்து ஏவிவிடுகிறார்.

எரே 51:17. மனுஷர் அனைவரும் அறிவில்லாமல் மிருக குணமானார்கள்; தட்டார் அனைவரும் சுரூபங்களாலே வெட்கிப் போகிறார்கள்; அவர்கள் வார்ப்பித்த விக்கிரகம் பொய்யே, அவைகளில் சுவாசம் இல்லை.

எரே 51:18. அவைகள் மாயையும் மகா எத்துமான கிரியையாயிருக்கிறது; அவைகள் விசாரிக்கப்படும் நாளிலே அழியும்.

எரே 51:19. யாக்கோபின் பங்காயிருக்கிறவர் அவைகளைப்போல அல்ல, அவர் சர்வத்தையும் உண்டாக்கினவர்; இஸ்ரவேல் அவருடைய சுதந்தரமான கோத்திரம்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்.

பாபிலோன் தேசத்தார் சீயோனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள். கல்தேயர்கள் தங்களுடைய வல்லமையை நினைத்து பெருமைப்பட்டார்கள். பாபிலோனுக்கு விரோதமாக மேதியரும் பெர்சியரும் எழும்பியிருக்கிறார்கள். கர்த்தர் மேதியரையும் பெர்சியரையும் திரளான சேனையினால் நிரப்புகிறார். அவர்கள் பச்சைக்கிளிகளைப்போலவும் வெட்டுக்கிளிகளைப்போலவும் திரளான எண்ணிக்கையுள்ளவர்களாயிருப்பார்கள். கர்த்தர் பாபிலோன் தேசத்தினுடைய வல்லமையை முறித்துப்போடுவார்.

கர்த்தர் சர்வவல்லமையுள்ளவர். கர்த்தருடைய வல்லமையைப்பற்றி எரேமியா ஏற்கெனவே தீர்க்கதரிசனமாய்ச் சொல்லியிருக்கிறார். கர்த்தரைப்பற்றிச் சொல்லப்பட்ட வாக்கியங்கள் இங்கு மறுபடியுமாய்ச் சொல்லப்படுகிறது.

"அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினால் விரித்தார். அவர் சத்தமிடுகையில் வானத்திலே திரளான தண்ணீர் உண்டாகிறது; அவர் பூமியின் கடையாந்தரத்திலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டகசாலைகளிலிருந்து புறப்படப்பண்ணுகிறார். மனுஷர் அனைவரும் அறிவில்லாமல் மிருககுணமுள்ளவர்களானார்கள்; தட்டார் அனைவரும் வார்ப்பித்த சுரூபங்களாலே வெட்கிப்போகிறார்கள்; அவர்கள் வார்ப்பித்த விக்கிரகம் பொய்யே, அவைகளில் ஆவி இல்லை. அவைகள் மாயையும், மகா எத்தான கிரியையுமாயிருக்கிறது; அவைகள் விசாரிக்கப்படும் நாளிலே அழியும். யாக்கோபின் பங்காயிருக்கிறவர் அவைகளைப்போல் அல்ல, அவர் சர்வத்தையும் உருவாக்கினவர்; இஸ்ரவேல் அவருடைய சுதந்தரமான கோத்திரம்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்" (எரே 10:12-16).

கர்த்தர் தம்மைப்பற்றி, தம்முடைய வார்த்தைகளால் சொல்லும்போது அதை ஒரு சிலர் செவிகொடுத்து கேட்பதில்லை. அவர் தம்மைப்பற்றி, தம்முடைய கிருபைகளால் உறுதிபண்ணும்போது, எல்லா மனுஷரும் பயந்து நடுங்குகிறார்கள். கர்த்தர் சொல்லுகிறதை செய்கிறவர். செய்கிறதை சொல்லுகிறவர். கர்த்தருடைய வார்த்தையும் அவருடைய கிரியையும் முரண்படாமல் ஒன்றாயிருக்கும்.

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார். அவர் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தமது ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தமது பேரறிவினால் விரித்தார் (எரே 51:15).

தாம் உருவாக்கின எல்லா சிருஷ்டிகளுக்கும் கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். கர்த்தரே மேகங்களையும், மழையையும், காற்றையும் உண்டாக்குகிறவர். அவர் சத்தமிடுகையில் திரளான தண்ணீர் வானத்தில் உண்டாகிறது; அவர் பூமியின் எல்லைகளிலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டசாலையிலிருந்து ஏவிவிடுகிறார் (எரே 51:16).

விக்கிரகங்கள் ஜீவனும் பெலனும் இல்லாதவை. அவைகளில் சுவாசமில்லை. அவைகள் மாயையும் மகாஎத்துமாயிருக்கிறது. கர்த்தர் விக்கிரகங்களையும், விக்கிரகங்களை ஆராதித்தவர்களையும் தம்முடைய நாளில் விசாரிப்பார். அப்போது அவைகளெல்லாம் அழியும். "மனுஷர் அனைவரும் அறிவில்லாமல் மிருக குணமானார்கள்; தட்டார் அனைவரும் சுரூபங்களாலே வெட்கிப் போகிறார்கள்" (எரே 51:17) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் ஜீவனுள்ளவர். அவர் சர்வவல்லமையுள்ளவர். விக்கிரகங்கள் மாயையும் மகாஎத்துமான கிரியையாயிருக்கிறது. கர்த்தரோ மெய்யானவர். கர்த்தரை விக்கிரகத்தோடோ, விக்கிரகத்தை கர்த்தரோடோ ஒப்பிடக்கூடாது. கர்த்தர் யாக்கோபின் பங்காயிருக்கிறவர். அவர் விக்கிரங்களைப்போன்றவரல்ல. கர்த்தர் சர்வத்தையும் உண்டாக்கினவர்; இஸ்ரவேல் அவருடைய சுதந்தரமான கோத்திரம்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம் (எரே 51:19). கர்த்தருக்கும் அவருடைய ஜனத்திற்கும் நெருங்கிய உறவும், ஐக்கியமும், சம்பந்தமும் இருக்கிறது. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் பங்காயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகள் கர்த்தருக்குரியவர்கள்.

கர்த்தர் மேதியருடைய ராஜாக்களின் ஆவியை எழுப்பினார் எரே 51:1,2,11,16

எரே 51:1. கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் பாபிலோனுக்கு விரோதமாகவும், எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்களின் மத்தியில் குடியிருக்கிறவர்களுக்கு விரோதமாகவும் அழிக்கும் காற்றை எழும்பப்பண்ணி,

எரே 51:2. தூற்றுவாரைப் பாபிலோனுக்கு அனுப்புவேன்; அவர்கள் அதைத் தூற்றி வெறுமையாக்கிப் போடுவார்கள்; ஆபத்துநாளிலே அதற்கு விரோதமாய்ச் சூழ்ந்துகொண்டிருப்பார்கள்.

எரே 51:11. அம்புகளைத் துலக்குங்கள்; கேடகங்களை நன்றாய்ச் செப்பனிடுங்கள்; கர்த்தர் மேதியருடைய ராஜாக்களின் ஆவியை எழுப்பினார்; பாபிலோனை அழிக்கவேண்டுமென்பதே அவருடைய நினைவு; இது கர்த்தர் வாங்கும் பழி, இது தமது ஆலயத்துக்காக அவர் வாங்கும் பழி.

எரே 51:16. அவர் சத்தமிடுகையில் திரளான தண்ணீர் வானத்தில் உண்டாகிறது; அவர் பூமியின் எல்லைகளிலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டசாலையிலிருந்து ஏவிவிடுகிறார்.

பாபிலோன் தேசத்தை அழிப்பதற்கு கர்த்தர் மேதியரையும் பெர்சியரையும் எழுப்புகிறார். அம்புகளைத் துலக்குங்கள் என்றும், கேடகங்களை நன்றாய்ச் செப்பனிடுங்கள் என்றும் கர்த்தர் மேதியருக்கு சொல்லுகிறார். கர்த்தர் மேதியருடைய ராஜாக்களின் ஆவியை எழுப்புகிறார். பாபிலோனை அழிக்கவேண்டுமென்பதே அவருடைய நினைவு; இது கர்த்தர் வாங்கும் பழி, இது தமது ஆலயத்துக்காக அவர் வாங்கும் பழி (எரே 51:11).

தரியு ராஜாவும், கோரேசு ராஜாவும், தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக வருகிறார்கள். பாபிலோனை அழிக்கவேண்டும் என்பதே கர்த்தருடைய சித்தம்.

பாபிலோன் தேசத்தை அழிப்பதற்கு கர்த்தரால் பயன்படுத்தப்படுகிறவர்கள் அழிக்கும் காற்றைப்போல எழும்பி வருவார்கள் (எரே 51:1).

"இதோ, நான் பாபிலோனுக்கு விரோதமாகவும், எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்களின் மத்தியில் குடியிருக்கிறவர்களுக்கு விரோதமாகவும் அழிக்கும் காற்றை எழும்பப்பண்ணி, தூற்றுவாரைப் பாபிலோனுக்கு அனுப்புவேன்; அவர்கள் அதைத் தூற்றி வெறுமையாக்கிப் போடுவார்கள்; ஆபத்துநாளிலே அதற்கு விரோதமாய்ச் சூழ்ந்துகொண்டிருப்பார்கள்" (எரே 51:1,2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பலத்த காற்று பனிமழையோடு வீசுகிறது. இது விருட்சங்களிலுள்ள எல்லா கனிகளையும் கீழே உதிர்த்துவிடுகிறது. பலத்த காற்று சூறாவளிபோல வேகமாக வீசுவதினால் தனக்கு எதிராகயிருக்கும் எல்லாவற்றையும் கீழே தள்ளிவிடுகிறது. கர்த்தர் காற்றை தமது பண்டசாலையிலிருந்து ஏவிவிடுகிறார் (எரே 51:16). கர்த்தருடைய காற்று அவருடைய சத்துருக்களை அழிக்கும் காற்றாயிருக்கிறது. கர்த்தர் தம்முடைய காற்றை பாபிலோனுக்கு விரோதமாக எழும்பப்பண்ணுவார்.

மேதியரும் பெர்சியரும் தூற்றுவாருக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அவர்கள் தானியத்தைப் போரடிக்கும்போது, காற்றிலே அதைத் தூற்றுவார்கள். மேதியரும் பெர்சியரும் பாபிலோன் தேசத்தை தூற்றி, அவர்களை வெறுமையாக்கிப்போடுவார்கள். கல்தேயருக்கு ஒன்றும் மீதியாயிராது. காற்றிலே பதர் பறந்துபோவதுபோல கல்தேயர்கள் பறந்துபோய்விடுவார்கள்.

இதற்கு முன்புகல்தேயர்கள் கர்த்தருடைய ஜனத்தை தூற்றுவாராயிருந்தார்கள். "தேசத்தின் வாசல்களில் அவர்களைத் தூற்றுக்கூடையால் தூற்றிப் போடுவேன்; என் ஜனங்கள் தங்கள் வழிகளைவிட்டுத் திரும்பாதபடியினால் நான் அவர்களைப் பிள்ளைகள் அற்றவர்களாக்கி அழிப்பேன்" (எரே 15:7). இப்போதோ மேதியரும் பெர்சியரும் கல்தேயரை தூற்றுகிறார்கள்.

வில்வீரன் தன் வில்லை நாணேற்றக்கடவன் எரே 51:3,27,28

எரே 51:3 வில்லை நாணேற்றுகிறவனுக்கு விரோதமாகவும், தன் கவசத்தில் பெருமை பாராட்டுகிறவனுக்கு விரோதமாகவும், வில்வீரன் தன் வில்லை நாணேற்றக்கடவன்; அதின் வாலிபரைத் தப்பவிடாமல் அதின் சேனையை எல்லாம் சங்காரம்பண்ணுங்கள்.

எரே 51:27. தேசத்திலே கொடியேற்றுங்கள்; ஜாதிகளுக்குள் எக்காளம் ஊதுங்கள்; ஜாதிகளை அதற்கு விரோதமாக ஆயத்தப்படுத்துங்கள்; ஆரராத், மின்னி, அஸ்கெனாஸ் என்னும் ராஜ்யங்களை அதற்கு விரோதமாக வரக்கூப்பிடுங்கள்; அதற்கு விரோதமாகத் தளகர்த்தனுக்குப் பட்டங்கட்டுங்கள்; சுணையுள்ள வெட்டுக்கிளிகள்போன்ற குதிரைகளை வரப்பண்ணுங்கள்.

எரே 51:28. மேதியாதேசத்தின் ராஜாக்களும் அதின் தலைவரும் அதின் சகல அதிகாரிகளும் அவரவருடைய ராஜ்யபாரத்துக்குக் கீழான சகல தேசத்தாருமாகிய ஜாதிகளை அதற்கு விரோதமாக ஆயத்தப்படுத்துங்கள்.

கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் மேதியரும் பெர்சியரும் பாபிலோன் தேசத்தின்மீது யுத்தம் பண்ண வருகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய விருப்பத்தை நிறைவேற்றவேண்டும். பாபிலோன் தேசத்தை முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டும். பாபிலோன் தேசத்திலுள்ள வாலிபர்களை தப்பவிடக்கூடாது. மேதியரும் பெர்சியரும் பாபிலோனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, பாபிலோனின் சேனையிலுள்ள எல்லோரையும் சங்காரம்பண்ணவேண்டும். "வில்லை நாணேற்றுகிறவனுக்கு விரோதமாகவும், தன் கவசத்தில் பெருமைபாராட்டுகிறவனுக்கு விரோதமாகவும், வில்வீரன் தன் வில்லை நாணேற்றக்கடவன்" (எரே 51:3) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்தாரோடு யுத்தம் பண்ணுவதற்கு, மேதியரும் பெர்சியரும் தங்களை ஆயத்தம்பண்ணிக்கொள்ள வேண்டும். "தேசத்திலே கொடியேற்றுங்கள்; ஜாதிகளுக்குள் எக்காளம் ஊதுங்கள்; ஜாதிகளை அதற்கு விரோதமாக ஆயத்தப்படுத்துங்கள்; ஆரராத், மின்னி, அஸ்கெனாஸ் என்னும் ராஜ்யங்களை அதற்கு விரோதமாக வரக்கூப்பிடுங்கள்; அதற்கு விரோதமாகத் தளகர்த்தனுக்குப் பட்டங்கட்டுங்கள்; சுணையுள்ள வெட்டுக்கிளிகள்போன்ற குதிரைகளை வரப்பண்ணுங்கள். மேதியாதேசத்தின் ராஜாக்களும் அதின் தலைவரும் அதின் சகல அதிகாரிகளும் அவரவருடைய ராஜ்யபாரத்துக்குக் கீழான சகல தேசத்தாருமாகிய ஜாதிகளை அதற்கு விரோதமாக ஆயத்தப்படுத்துங்கள்" (எரே 51:27,28) என்று கர்த்தர் மேதியருக்கும் பெர்சியருக்கும் சொல்லுகிறார்.

மேதியருக்கும் பெர்சியருக்கும் ஒரே கொடி இருக்கவேண்டும். அவர்களுடைய யுத்தவீரர்கள் எல்லோரும் இந்தக் கொடியின்கீழ் ஒன்றுகூடி வரவேண்டும். மேதியர்களும் பெர்சியர்களும் எக்காளம் ஊதி தங்களுடைய ஜனங்களை ஒன்றாய்க் கூட்டிச் சேர்க்கவேண்டும். கோரேசு ராஜாவின் சேனையில் ஏராளமான வீரர்கள் வந்து சேரவேண்டும். அவர்கள் பாபிலோனுக்கு விரோதமாக தங்கள் ஜாதிகளை ஆயத்தம்பண்ணவேண்டும்.

"பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது; வெட்டுக்கிளி விட்டதைப் பச்சைக்கிளி தின்றது; பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப்பூச்சி தின்றது" (யோவே 1:4).

கர்த்தர் மேதியருடைய ராஜாக்களின் ஆவியை எழுப்பினார் எரே 51:11,12,29,30,56-58

எரே 51:11. அம்புகளைத் துலக்குங்கள்; கேடகங்களை நன்றாய்ச் செப்பனிடுங்கள்; கர்த்தர் மேதியருடைய ராஜாக்களின் ஆவியை எழுப்பினார்; பாபிலோனை அழிக்க வேண்டுமென்பதே அவருடைய நினைவு; இது கர்த்தர் வாங்கும் பழி, இது தமது ஆலயத்துக்காக அவர் வாங்கும் பழி.

எரே 51:12. பாபிலோனின் மதில்கள்மேல் கொடியேற்றுங்கள், காவலைப் பலப்படுத்துங்கள், ஜாமங் காக்கிறவர்களை நிறுத்துங்கள், பதிவிருப்பாரை வையுங்கள்; ஆனாலும் கர்த்தர் எப்படி நினைத்தாரோ அப்படியே தாம் பாபிலோனின் குடிகளுக்கு விரோதமாகச் சொன்னதைச் செய்வார்.

எரே 51:29. அப்பொழுது தேசம் அதிர்ந்து வேதனைப்படும்; பாபிலோன் தேசத்தைக் குடியில்லாதபடிப் பாழாக்க, பாபிலோனுக்கு விரோதமாய்க் கர்த்தர் நினைத்தவைகள் நிலைக்கும்.

எரே 51:30. பாபிலோனின் பராக்கிரமசாலிகள் யுத்தம்பண்ணாமல், கோட்டைகளில் இருந்துவிட்டார்கள்; அவர்கள் பராக்கிரமம் அழிந்து பேடிகளானார்கள்; அதின் வாசஸ்தலங்களைக் கொளுத்திப் போட்டார்கள்; அதின் தாழ்ப்பாள்கள் உடைக்கப்பட்டது.

எரே 51:56. பாபிலோனைப் பாழாக்குகிறவன் அதின்மேல் வருகிறான்; அதின் பராக்கிரமசாலிகள் பிடிபடுவார்கள்; அவர்களுடைய வில்லுகள் முறிந்துபோகும்; சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தர்நிச்சயமாகப் பதில் அளிப்பார்.

எரே 51:57. அதின் பிரபுக்களையும் அதின் ஞானிகளையும் அதின் தலைவரையும் அதின் அதிகாரிகளையும் அதின் பராக்கிரமசாலிகளையும் வெறிக்கப் பண்ணுவேன்; அப்பொழுது அவர்கள் என்றென்றைக்கும் விழிக்காத தூக்கமாய்த் தூங்கி விழுவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள ராஜா சொல்லுகிறார்.

எரே 51:58. பாபிலோனின் விஸ்தீரணமான மதில்கள் முற்றிலும் தரையாக்கப்பட்டு, அதின் உயரமான வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்; அப்படியே ஜனங்கள் பிரயாசப்பட்டது விருதாவும், ஜாதிகள் வருத்தப்பட்டுச் சம்பாதித்தது அக்கினிக்கு இரையுமாகுமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

கல்தேயர்களுடைய பலன் அவர்களை விட்டு நீங்கிப்போயிற்று. அவர்கள் இப்போது பலவீனராயிருக்கிறார்கள். அவர்களால் மேதியருக்கும் பெர்சியருக்கும் விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியாது. கர்த்தர் கல்தேயரை யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணுமாறு பரியாசம்பண்ணுகிறார். "அம்புகளைத் துலக்குங்கள், கேடகங்களை நன்றாய்ச் செப்பனிடுங்கள்" (எரே 51:11) என்று கர்த்தர் கல்தேயரிடம் சொல்லி, அவர்களை பரியாசம்பண்ணுகிறார். கல்தேயரால் அம்புகளைத் துலக்கவும் முடியாது. அவர்களுடைய கேடகங்களை செப்பனிடவும் முடியாது. அவர்கள் பலனற்றுப்போயிருக்கிறார்கள்.

கல்தேயரின் அம்புகளும் கேடகங்களும் யுத்தத்திலே பயன்படுத்தப்படாமல், துருப்பிடித்து கிடக்கிறது. பாபிலோன் தேசத்தில் அநேக வருஷங்களாக சமாதானம் இருந்தது. அவர்கள் சமீபத்தில் எந்த தேசத்தோடும் யுத்தம்பண்ணவில்லை. பாபிலோன் தேசத்தார் தங்களுடைய வில்லையும் கேடகத்தையும், பலவருஷங்களாக பயன்படுத்தவே இல்லை. அவையெல்லாம் துருப்பிடித்து கெட்டுப்போய்க்கிடக்கிறது.

பாபிலோன் தேசத்தார் பலவீனராயிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை பரியாசம்பண்ணுகிறார். "பாபிலோனின் மதில்கள்மேல் கொடியேற்றுங்கள், காவலைப் பலப்படுத்துங்கள், ஜாமங் காக்கிறவர்களை நிறுத்துங்கள், பதிவிருப்பாரை வையுங்கள்" (எரே 51:12) என்று கர்த்தர் பாபிலோனியரிடம் சொல்லி, அவர்களை பரியாசம்பண்ணுகிறார்.

பாபிலோனின் மதில்கள்மேல் கல்தேயர்கள் கொடியேற்றவேண்டும். அவர்கள் தங்கள் காவலைப் பலப்படுத்தவேண்டும். ஆனால் அவர்களோ மேதியரையும் பெர்சியரையும் பார்த்து பயத்தினால் நடுங்கிப்போயிருக்கிறார்கள். அவர்களுடைய இருதயம் கரைந்துபோயிற்று. பாபிலோன் தேசம் அதிர்ந்து வேதனைப்படுகிறது. பாபிலோன் தேசத்தைக் குடியில்லாதபடிப் பாழாக்க, பாபிலோனுக்கு விரோதமாய்க் கர்த்தர் நினைத்தவைகள் நிலைக்கும் (எரே 51:29).

பாபிலோன் தேசத்தில் யுத்தவீரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு காலத்தில் பராக்கிரமசாலிகள். இப்போதோ அவர்கள் பயப்படுகிற கோழைகள். பராக்கிரமசாலிகளாகயிருந்தவர்கள் இப்போது பேடிகளாயிருக்கிறார்கள்.

"பாபிலோனின் பராக்கிரமசாலிகள் யுத்தம்பண்ணாமல், கோட்டைகளில் இருந்துவிட்டார்கள்; அவர்கள் பராக்கிரமம் அழிந்து பேடிகளானார்கள்; அதின் வாசஸ்தலங்களைக் கொளுத்திப்போட்டார்கள்; அதின் தாழ்ப்பாள்கள் உடைக்கப்பட்டது" (எரே 51:30) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் பாபிலோன் தேசத்தின் பராக்கிரமசாலிகளிடத்தில் காணப்பட்ட பெலத்தையும் தைரியத்தையும் நீக்கிப்போடுகிறார். அவர்களுடைய இருதயம் கரைந்துபோகிறது. ஆவி முறிந்துபோகிறது. அவர்கள் யுத்தகளத்திற்குப்போகாமல் பயந்து போய் கோட்டைகளில் இருந்துவிடுகிறார்கள்.

பாபிலோன் தேசத்தைச் சுற்றிலும் மேதியரும் பெர்சியரும் யுத்தம் பண்ண வந்திருக்கிறார்கள். கல்தேயர்கள் யுத்தக்களத்திற்குப்போய் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். ஆனால் அவர்களோ பயந்துபோய் தங்கள் கோட்டைகளில் இருந்துவிடுகிறார்கள். மேதியரையும் பெர்சியரையும் எதிர்ப்பதற்கு கல்தேயர் ஒருவர்கூட இல்லை. அவர்கள் பாபிலோன் தேசத்தின் அரமனைக்கு வந்து, அவர்களுடைய வாசஸ்தலங்களை கொளுத்திப்போடுகிறார்கள். கோட்டைகளின் தாழ்ப்பாள்களை உடைத்துப்போடுகிறார்கள். தங்களை எதிர்ப்பதற்கு ஒருவருமில்லாமல், மேதியரும் பெர்சியரும் பாபிலோன் தேசத்திற்குள் தாராளமாய்ப் பிரவேசிக்கிறார்கள்.

"பாபிலோனைப் பாழாக்குகிறவன் அதின்மேல் வருகிறான்; அதின் பராக்கிரமசாலிகள் பிடிபடுவார்கள்; அவர்களுடைய வில்லுகள் முறிந்துபோகும்; சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தர்நிச்சயமாகப் பதில் அளிப்பார். அதின் பிரபுக்களையும் அதின் ஞானிகளையும் அதின் தலைவரையும் அதின் அதிகாரிகளையும் அதின் பராக்கிரமசாலிகளையும் வெறிக்கப்பண்ணுவேன்; அப்பொழுது அவர்கள் என்றென்றைக்கும் விழிக்காத தூக்கமாய்த் தூங்கி விழுவார்கள் என்று சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ள ராஜா சொல்லுகிறார். பாபிலோனின் விஸ்தீரணமான மதில்கள் முற்றிலும் தரையாக்கப்பட்டு, அதின் உயரமான வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்படும்; அப்படியே ஜனங்கள் பிரயாசப்பட்டது விருதாவும், ஜாதிகள் வருத்தப்பட்டுச் சம்பாதித்தது அக்கினிக்கு இரையுமாகும்" (எரே 51:56-58) என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

மேதியரும் பெர்சியரும் பாபிலோன் தேசத்திற்குள் வரும்போது, பாபிலோன் தேசத்தாரின் வில்லுகளெல்லாம் முறிந்துபோகிறது. அவர்களுடைய அரசியல் தந்திரங்கள் மேதியருக்கு முன்பாக சித்திக்கவில்லை. பாபிலோன் தேசத்தாரின் ஞானமும், யுத்தஆலோசனைகளும் வெற்றி பெறவில்லை. மேதியர்கள் பாபிலோன் தேசத்தை அக்கினியினால் சுட்டெரிக்கிறார்கள். அவர்கள் வருத்தப்பட்டு சம்பாதித்ததெல்லாம் அக்கினியில் எறிந்துபோகிறது.

பாபிலோன் தேசத்தாரின் பிரபுக்களும், படைத்தளபதிகளும், அரமனையில் அமர்ந்து யுத்தகாரியங்களைக் குறித்து ஆலோசனைபண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்று. அவர்களால் மேதியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியவில்லை. தங்கள் அரண்மனையின் உயரமான மதில்கள் தங்களுக்கு பாதுகாப்பாயிருக்கும் என்று பாபிலோன் தேசத்தார் நினைத்தார்கள். ஆனால் மேதியர்களோ, பாபிலோன் தேசத்தாரின் மதில்களை முற்றிலுமாய் இடித்து தரைமட்டமாக்கிப்போடுகிறார்கள்.

பாபிலோன் தேசத்தைச் சுற்றிலும் ஐப்பிராத்து நதி ஓடுகிறது. அதில் வெள்ளம் பிரவாகித்து ஓடும். ஐப்பிராத்து நதி பாபிலோன் தேசத்திற்கு இயற்கையான அரணைப்போல் இருக்கிறது. ஐப்பிராத்து நதியைத் தாண்டி யாராலும் தங்கள் தேசத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்று பாபிலோன் தேசத்தார் நினைக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் பாபிலோனுக்குள் பிரவேசித்துவிட்டாலும், தங்களுடைய மதில்கள் விஸ்தீரணமாயிருக்கிறது என்றும், அதைத் தாண்டி யாராலும் பாபிலோனுக்குள் வரமுடியாது என்றும் கல்தேயர்கள் நினைக்கிறார்கள்.

மேதியரும் பெர்சியரும் ஐப்பிராத்து நதியில் ஏராளமான கால்வாய்களை வெட்டி, அதன் வழியாக பாபிலோன் தேசத்திற்குள் வந்துவிடுகிறார்கள். பாபிலோனின் விஸ்தீரணமான மதில்களை இடித்து, அவற்றை முற்றிலும் தரைமட்டமாக்கிப் போடுகிறார்கள். கல்தேயர்களால் அவர்களை எதிர்க்க முடியவில்லை.

பாபிலோனின் மதில்கள் மூன்று வரிசையாகக் கட்டப்பட்டிருக்கும் என்று சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள். பாபிலோன் நகரம் மூன்று மதில்களுக்குள் பாதுகாப்பாயிருக்கிறது. மூன்றடுக்கு பாதுகாப்பு இருந்தாலும், மேதியரும் பெர்சியரும் பாபிலோனின் விஸ்தீரமான மதில்களை தரைமட்டமாக்கிப்போடுகிறார்கள். அவர்களை எதிர்ப்பதற்கு கல்தேயர்கள் ஒருவர்கூட வரவில்லை. கல்தேயரின் பராக்கிரமசாலிகளெல்லாம் பேடிகளைப்போல பயப்படுகிறார்கள். பாபிலோனின் மதில்கள் தரையாக்கப்படுகிறது. அதின் உயரமான வாசல்கள் சுட்டெரிக்கப்படுகிறது.

பாபிலோன் சடிதியில் விழுந்து தகர்ந்தது
எரே 51:8,13,25,26,31,32,33,37, 38,39,42,43,44,47,53

எரே 51:8. பாபிலோன் சடிதியில் விழுந்து தகர்ந்தது; அதற்காக அலறுங்கள்; அதின் நோவை ஆற்றப் பிசின் தைலம் போடுங்கள்; ஒருவேளை குணமாகும்.

எரே 51:13. திரளான தண்ணீர்களின் மேல் வாசம்பண்ணுகிறவளே, திரண்ட சம்பத்துடையவளே, உனக்கு முடிவும் உன் பொருளாசைக்கு ஒழிவும் வந்தது.

எரே 51:25. இதோ, பூமியை எல்லாம் கெடுக்கிற கேடான பர்வதமே, நான் உனக்கு விரோதமாக வந்து, என் கையை உனக்கு விரோதமாக நீட்டி, உன்னைக் கன்மலைகளிலிருந்து உருட்டி, உன்னை எரிந்துபோன பர்வதமாக்கிப்போடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:26. மூலைக்கல்லுக்காகிலும் அஸ்திபாரக்கல்லுக்காகிலும் ஒரு கல்லையும் உன்னிலிருந்து எடுக்கமாட்டார்கள்; நீ என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கிற ஸ்தலமாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:31. கடையாந்தர முனைதுவக்கி அவனுடைய பட்டணம் பிடிபட்டது என்றும், துறைவழிகள் அகப்பட்டுப் போய், நாணல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், யுத்த மனுஷர் கலங்கியிருக்கிறார்கள் என்றும் பாபிலோன் ராஜாவுக்கு அறிவிக்க,

எரே 51:32. அஞ்சற்காரன்மேல் அஞ்சற்காரனும் தூதன்மேல் தூதனும் ஓடுகிறான்.

எரே 51:33. பாபிலோன் குமாரத்தி மிதிக்கப்படுங் களத்துக்குச் சமானம்; அதைப் போரடிக்குங் காலம் வந்தது; இன்னும் கொஞ்சக்காலத்திலே அறுப்புக்காலம் அதற்கு வரும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:37. அப்பொழுது பாபிலோன் குடியில்லாத மண்மேடுகளும், வலுசர்ப்பங்களின் தாபரமும், பாழும், ஈசல்போடப்படுதலுக்கு இடமுமாய்ப் போகும்.

எரே 51:38. ஏகமாய் அவர்கள் சிங்கங்களைப் போலக் கெர்ச்சித்து, சிங்கக்குட்டிகளைப்போலச் சத்தமிடுவார்கள்.

எரே 51:39. அவர்கள் களிக்கும் சமயத்திலே நான் அவர்கள் குடிக்கும் பானத்தை அவர்களுக்குக் குடிக்கக்கொடுத்து அவர்கள் துள்ளத்தக்கதாக அவர்களை வெறியாக்குவேன்; அதினால் அவர்கள் என்றென்றைக்கும் விழிக்காத நித்திரை அடைவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே 51:42. சமுத்திரம் பாபிலோன்மேல் புரண்டுவந்தது; அதின் அலைகளின் திரட்சியினால் அது மூடப்பட்டது.

எரே 51:43. அதின் பட்டணங்கள் பாழுமாய், வறட்சியும் வனாந்தரமுமான பூமியுமாய், ஒரு மனுஷனும் குடியிராததும் ஒரு மனுபுத்திரனும் கடவாததுமான நிலமுமாய்ப்போயிற்று.

எரே 51:44. நான் பாபிலோனில் இருக்கிற பேலைத் தண்டிப்பேன்; அது விழுங்கினதை அதின் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன்; ஜாதிகள் இனி அதினிடத்திற்கு ஓடிவரமாட்டார்கள், பாபிலோனின் மதிலும் விழும்.

எரே 51:47. ஆகையால், இதோ, நான் பாபிலோனின் விக்கிரகங்களை தண்டிக்கும் நாட்கள் வரும், அப்பொழுது அதின் தேசம் எல்லாம் கலங்கும்; அதில் கொலையுண்கிற யாவரும் அதின் நடுவில் விழுந்துகிடப்பார்கள்.

எரே 51:53. பாபிலோன் வானபரியந்தம் ஏறினாலும்,அது தன் பலமான அரணை உயர்த்தினாலும், அதைப் பாழாக்குகிறவர்கள் என்னிடத்திலிருந்து வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக கர்த்தருடைய கோபம் வந்திருக்கிறது. தேவனுடைய தெய்வீக வல்லமைக்கு எதிராக எந்த வல்லமையாலும் எதிர்த்து நிற்கமுடியாது. ஆகையினால் பாபிலோனுக்கு நிச்சயமாகவே அழிவு வரும். "பாபிலோன் சடுதியில் விழ்ந்து தகர்ந்தது, அதற்காக அலறுங்கள்" (எரே 51:8) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரேமியா தீர்க்கதரிசி பாபிலோனுக்கு விரோதமாக கர்த்தருடைய வார்த்தையைச் சொன்னபோது அந்த தேசம் மிகவும் செழிப்பாகயிருந்தது. அதற்கு பின்பும் பல வருஷங்களாக பாபிலோன் தேசம் அதிக பலமுள்ளதாகவும், அதிக செழிப்புள்ளதாகவும் விளங்கிற்று.

கர்த்தர் தம்முடைய நீதியினால் பாபிலோன் தேசத்தை அழிக்கிறார். பாபிலோன் தேசத்தார் மெத்த பெருமைக்காரராயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவும், கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகவும் பாவம் செய்கிறார்கள். இதனால் தேவனுடைய கோபம் பாபிலோன் தேசத்தின்மேல் வருகிறது. அது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பை சந்தித்தே ஆகவேண்டும். அழிவிலிருந்து தப்பிப்பதற்கு பாபிலோனுக்கு வழியே இல்லை.

"இதோ, பூமியை எல்லாம் கெடுக்கிற கேடான பர்வதமே, நான் உனக்கு விரோதமாக வந்து, என் கையை உனக்கு விரோதமாக நீட்டி, உன்னைக் கன்மலைகளிலிருந்து உருட்டி, உன்னை எரிந்துபோன பர்வதமாக்கிப்போடுவேன்" (எரே 51:25) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

உயர்ந்த மலையிலிருந்து ஒரு பெரிய கல்லை உருட்டி விடும்போது அது எப்படி உருண்டு விழுமோ, அதுபோலவே பாபிலோன் தேசமும் தரையிலே விழும். பாபிலோன் தேசமே ஒரு பர்வதம் போலயிருக்கிறது. அந்தப் பர்வதம் கன்மலைகளிலிருந்து உருட்டி விடப்பட்டு கீழே விழுந்து கிடக்கும்.

"பாபிலோன் குமாரத்தி மிதிக்கப்படுங் களத்துக்குச் சமானம்; அதைப் போரடிக்குங் காலம் வந்தது; இன்னும் கொஞ்சக்காலத்திலே அறுப்புக்காலம் அதற்கு வரும்" (எரே 51:33) என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் என்னும் களத்தில் இஸ்ரவேல் என்னும் குமாரத்தி நீண்டகாலமாக மிதிக்கப்பட்டாள். இப்போதோ பாபிலோன் மிதிக்கப்படும் காலம் வந்திருக்கிறது. பாபிலோனுக்கு போரடிக்கும் காலம் வந்தது என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் அரணிப்பான பட்டணம். பாபிலோன் தேசத்தைச் சுற்றிலும் இயற்கையான பாதுகாப்புக்கள் இருக்கிறது. பாபிலோன் தேசம் திரளான தண்ணீர்களின்மேல் வாசம்பண்ணுகிறது (எரே 51:13). பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக யாராலும் நெருங்க முடியாது. ஐப்பிராத்து நதியை கடந்து வருவது மிகவும் சிரமம்.

பாபிலோன் தேசம் திரண்ட சம்பத்துடையவள். ஆனாலும் பாபிலோனுக்கு முடிவும், அவளுடைய பொருளாசைக்கு ஒழிவும் வந்தது (எரே 51:13) என்று கர்த்தர் சொல்லுகிறார். பாபிலோனைச் சுற்றிலும் ஐப்பிராத்து நதி இருந்தாலும், அது அவர்களுக்கு மெய்யான பாதுகாப்பாகயிராது. அவர்களுடைய திரண்ட சம்பத்து அவர்களைப் பாதுகாக்காது.

கோரேசு ராஜா பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ண தன்னுடைய சேனையை ஆயத்தம்பண்ணுகிறான். ஒவ்வொரு வருஷமும் கோரேசு ராஜாவின் ஆயத்தம் அதிகமாயிருக்கிறது. கோரேசின் யுத்த ஆயத்தத்தைப்பற்றிய செய்தி பாபிலோன் தேசத்திற்கு வருகிறது. பாபிலோன் தேசத்தார் மேதியரோடு சமாதானமாகயிருந்திருக்கலாம். அவர்களோடு சமாதான உடன்படிக்கை செய்து யுத்தம் பண்ணுவதை தவிர்த்திருக்கலாம். ஆனால் பாபிலோன் தேசத்தார் மெத்த பெருமைக்காரராயிருக்கிறார்கள். அவர்கள் இடும்புள்ளவர்கள். அவர்களுடைய இருதயம் கடினப்பட்டிருக்கிறது. மேதியருக்கு விரோதமாக தங்களால் யுத்தம்பண்ண முடியும் என்று பாபிலோன் தேசத்தார் தங்கள் சுயபலத்தை நம்புகிறார்கள். ஐப்பிராத்து நதியையும், தங்களிடத்திலுள்ள திரளான சம்பத்துக்களையும் நம்புகிறார்கள். பாபிலோன் தேசத்தார் அழிந்துபோவதற்கு அவர்களே காரணமாயிருக்கிறார்கள்.

மேதியர்கள் பாபிலோன் தேசத்தின்மீது யுத்தத்தை ஆரம்பிக்கும்போது, அவர்கள் பாபிலோனின் எல்லையில் ஆரம்பிக்கிறார்கள். பாபிலோன் ராஜாவோ யுத்தக்களத்திற்கு வெகுதூரத்தில் தன்னுடைய அரண்மனையிலிருக்கிறான். யுத்தம் தனக்கு அருகாமையில் வராது என்று அவன் ஆணவத்தோடு சொல்லுகிறான்.

கடையாந்தர முனை துவக்கி அவனுடைய பட்டணம் பிடிபட்டது என்றும், துறைவழிகள் அகப்பட்டுப் போய், நாணல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது என்றும், யுத்த மனுஷர் கலங்கியிருக்கிறார்கள் என்றும் பாபிலோன் ராஜாவுக்கு அறிவிக்க, அஞ்சற்காரன்மேல் அஞ்சற்காரனும் தூதன்மேல் தூதனும் ஓடுகிறான் (எரே 51:31,32).

பாபிலோன் தேசத்திலுள்ள ஐப்பிராத்து நதியின் துறைவழிகளை மேதியர்கள் பிடித்துக்கொண்டார்கள் என்றும், பாபிலோனின் எல்லைப்பட்டணங்களையும் அவர்கள் பிடித்துக்கொண்டார்கள் என்றும் பாபிலோன் ராஜாவுக்கு அறிவிக்கப்படுகிறது. அஞ்சற்காரனும், தூதனும் வேகமாக ஓடிவந்து அந்த அழிவை ராஜாவுக்கு அறிவிக்கிறார்கள். ஐப்பிராத்து நதியிலுள்ள நாணல் புற்களையெல்லாம் மேதியர்கள் தீவைத்து கொளுத்திவிடுகிறார்கள். அக்கினியின் வெளிச்சத்தில் மேதியர்கள் கல்தேயர்களை சங்காரம்பண்ணுகிறார்கள். இந்த செய்திகளையெல்லாம் அஞ்சற்காரர்கள் பாபிலோன் ராஜாவுக்கு அறிவிக்கிறார்கள். பாபிலோன் தேசம் மேதியர்களை நினைத்து பயப்படுகிறது.

பாபிலோன் ராஜா கேள்விப்படுகிற செய்தி மெய் என்பது நிரூபிக்கப்படுகிறது. ராஜாவுக்கு அஞ்சற்காரர்கள் இந்த செய்தியை அறிவிக்கும்போது, மேதியர்களும் பெர்சியர்களும், பாபிலோன் ராஜாவின் அரமனைக்குள் பிரவேசித்துவிடுகிறார்கள். அவனுடைய அரமனையிலேயே அவனை சங்காரம்பண்ணுகிறார்கள்.

"அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான்" *(தானி 5:30).*

பாபிலோன் தேசம் அழிந்துகொண்டிருக்கும்போது, பாபிலோனின் அரமனையில் விருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கல்தேயரின் ராஜாவும், அவனுடைய பிரபுக்களும் மதுபானம் அருந்தி வெறித்திருக்கிறார்கள். பாபிலோன் ராஜாவின் அரமனையைப் பிடிப்பதற்கு மேதியர்கள் விரைந்து வருகிறார்கள்.

ஆனால் பாபிலோன் அரமனையிலோ, கல்தேயரின் ராஜா மதுபானம் அருந்திக்கொண்டிருக்கிறான். குடித்து வெறித்திருக்கிறான். யுத்தத்திற்கு தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளாமல் பாவத்தில் விழுந்துகிடக்கிறான்.

"பாபிலோனியர் களிக்கும் சமயத்திலே நான் அவர்கள் குடிக்கும் பானத்தை அவர்களுக்குக் குடிக்கக்கொடுத்து அவர்கள் துள்ளத்தக்கதாக அவர்களை வெறியாக்குவேன்; அதினால் அவர்கள் என்றென்றைக்கும் விழிக்காத நித்திரை அடைவார்கள்" *(எரே 51:39)* என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் ராஜா மதுபானம் குடித்து, அவனும் அவனுடைய பிரபுக்களும் சிங்கங்களைப்போல கெர்ச்சிக்கிறார்கள். சிங்கக்குட்டிகளைப்போல சத்தமிடுகிறார்கள். மதுபானம் அவர்களுடைய தலைக்கு ஏறியிருக்கிறது. அவர்கள் வெறித்திருக்கிறார்கள். மதுபானத்தின் பாத்திரத்தை ராஜா தன்னுடைய பிரபுக்கள் எல்லோருக்கும் கொடுக்கிறான். ராஜா சிங்கம்போல கெர்ச்சிக்கிறான். அவனுடைய பிரபுக்கள் சிங்கக்குட்டிகளைப்போல சத்தமிடுகிறார்கள்.

"தன் தோழருக்குக் குடிக்கக் கொடுத்துத் தன் துருத்தியை அவர்களண்டையிலே வைத்து, அவர்களுடைய நிர்வாணங்களைப் பார்க்கும்படிக்கு, அவர்களை வெறிக்கப்பண்ணுகிறவனுக்கு ஐயோ! நீ மகிமையினால் அல்ல, இலச்சையினால் நிரப்பப்படுவாய்; நீயும் குடித்து விருத்தசேதனமில்லாதவன் என்று விளங்கு; கர்த்தருடைய வலதுகையில் இருக்கிற பாத்திரம் உன்னிடத்திற்குத் திரும்பும்; உன் மகிமையின்மேல் இலச்சையான வாந்திபண்ணுவாய்" *(ஆப 2:15,16).*

கல்தேயரின் ராஜாவும், அவனுடைய பிரபுக்களும் குடித்து வெறித்திருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய உக்கிரத்தின் பாத்திரத்தை அவர்களுக்கு குடிக்க கொடுக்கிறார். அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான் *(தானி 5:30).*

மேதியரும் பெர்சியரும் சமுத்திரம் போல பெலமுள்ளவர்களாயிருக்கிறார்கள். "சமுத்திரம் பாபிலோன்மேல் புரண்டுவந்தது; அதின் அலைகளின் திரட்சியினால் அது மூடப்பட்டது" (எரே 51:42) என்று கர்த்தர் மேதியரையும் பெர்சியரையும் பற்றிச் சொல்லுகிறார். சமுத்திரத்தின் அலைகளுக்கு எல்லைகளை நிர்ணயம்பண்ண முடியாது. அதற்கு விரோதமாக சுவர்களை எழுப்ப முடியாது. சமுத்திரத்தின் அலைகளை வேலியடைத்து தடுத்து நிறுத்த முடியாது. மேதியரும் பெர்சியரும் சமுத்திரம்போல பாபிலோன்மேல் புரண்டு வருகிறார்கள். சமுத்திரத்தில் அலைகளுக்குமேல் அலைகள் வருவதுபோல, மேதியரும் பெர்சியரும் பாபிலோன் தேசத்தின்மீது அலையலையாய் வருகிறார்கள். அவர்கள் பாபிலோன் தேசத்தையே மூடிப்போடுகிறார்கள். பாபிலோனின் சேனையை மேற்கொள்கிறார்கள்.

பாபிலோன் தேசத்தின் பட்டணங்கள் பாழுமாய், வறட்சியும் வனாந்தரமுமான பூமியுமாய், ஒரு மனுஷனும் குடியிராததும் ஒரு மனுபுத்திரனும் கடவாததுமான நிலமுமாய்ப்போயிற்று (எரே 51:43).

பாபிலோன் தேசம் அழியும்போது பாபிலோனிலுள்ள விக்கிரகங்களும், விக்கிரகக்கோவில்களும் அழிந்துபோகிறது. "இதோ, நான் பாபிலோனின் விக்கிரகங்களை தண்டிக்கும் நாட்கள் வரும், அப்பொழுது அதின் தேசம் எல்லாம் கலங்கும்; அதில் கொலையுண்கிற யாவரும் அதின் நடுவில் விழுந்துகிடப்பார்கள். வானமும் பூமியும் அவைகளிலுள்ள யாவும் பாபிலோன்மேல் கெம்பீரிக்கும்; பாழ்க்கடிக்கிறவர்கள் அதற்கு வடக்கேயிருந்து வருவார்கள்" (எரே 51:47,48) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் மறுபடியுமாய் பாபிலோன் தேசத்திலுள்ள விக்கிரகங்களுக்கு விரோதமாக தம்முடைய வார்த்தைகளைச் சொல்லுகிறார். "இதோ, நான் அதின் விக்கிரகங்களுக்கு விரோதமாய் விசாரிக்கும் நாட்கள் வரும்; அப்பொழுது அதின் தேசமெங்கும் கொலையுண்கிறவர்கள் கத்துவார்கள். பாபிலோன் வானபரியந்தம் ஏறினாலும், அது தன் பலமான அரணை உயர்த்தினாலும், அதைப் பாழாக்குகிறவர்கள் என்னிடத்திலிருந்து வருவார்கள்" (எரே 51:51,52) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

பாபிலோன் தேசத்தை அழிக்க வருகிற மேதியரும் பெர்சியரும் விக்கிரகாராதனைக்காரர்கள்தான். அவர்களும் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். ஆனாலும் அவர்கள் பாபிலோன் தேசத்திற்கு விரோதமாக யுத்தம்செய்து, பாபிலோன் தேசத்திலுள்ள விக்கிரகங்களையும், விக்கிரக கோவில்களையும் அழித்துப்போடுகிறார்கள்.

பாபிலோன் தேசத்தில் பேல் என்னும் விக்கிரகம் மிகவும் பிரதானமானது. "நான் பாபிலோனில் இருக்கிற பேலைத் தண்டிப்பேன்; அது விழுங்கினதை அதின் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன்; ஜாதிகள் இனி அதினிடத்திற்கு ஓடிவரமாட்டார்கள், பாபிலோனின் மதிலும் விழும்" (எரே 51:44) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் பாபிலோனிலிருக்கிற பேலைத் தண்டிப்பார். பாபிலோனியர்கள் பேல் என்னும் விக்கிரகத்திற்கு ஏராளமான பலிகளைச் செலுத்துகிறார்கள். கர்த்தர் பேலைத் தண்டிக்கும்போது, அதற்கு தூபங்காட்ட ஒருவரும் வரமாட்டார்கள். பேலின் பலிபீடத்தை பாபிலோன் தேசத்தார் மறந்துவிடுவார்கள். பேல் தங்களை கைவிட்டுவிட்டது என்னும் வருத்தமும் கோபமும் பாபிலோன் தேசத்தாரின் மனதிலிருக்கும்.

மேதியரும் பெர்சியரும் பாபிலோன் தேசத்தை முற்றிலுமாய் அழித்துப்போடுவார்கள். அப்பொழுது பாபிலோன் குடியில்லாத மண்மேடுகளும், வலுசர்ப்பங்களின் தாபரமும், பாழும், ஈசல்போடப்படுதலுக்கு இடமுமாய்ப் போகும் (எரே 51:37). மூலைக்கல்லுக்காகிலும் அஸ்திபாரக்கல்லுக்காகிலும் ஒரு கல்லையும் பாபிலோனின் அழிவிலிருந்து எடுக்கமாட்டார்கள்; "நீ என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கிற ஸ்தலமாவாய்" (எரே 51:26) என்று கர்த்தர் சொல்லுகிறார். பாபிலோன் தேசம் இடிந்து கிடக்கும் பொழுது, அந்த இடுபாடுகளின் கற்களை யாரும் கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தமாட்டார்கள். ஒருவரும் பாபிலோனின் கற்களை வைத்து தங்கள் வீடுகளுக்கு அஸ்திபாரம் போடமாட்டார்கள். பாபிலோன் கர்த்தரால் சபிக்கப்பட்ட தேசம். அது விக்கிரகங்களின் தேசம்.

பாபிலோனின் நடுவிலிருந்து ஓடி தப்புங்கள்
எரே 51:6,45,46,50-52

எரே 51:6. நீங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகாதபடிக்கு அதின் நடுவிலிருந்து ஓடி, அவரவர் தங்கள் ஆத்துமாவைத் தப்புவியுங்கள்; இது கர்த்தர் அதினிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது; அவர் அதற்குப் பதில் செலுத்துவார்.

எரே 51:45. என் ஜனங்களே, நீங்கள் அதின் நடுவிலிருந்து புறப்படுங்கள்; கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்துக்குத் தப்பும்படி அவனவன் தன்தன் ஆத்துமாவை இரட்சித்துக்கொள்ளக்கடவன்.

எரே 51:46. உங்கள் இருதயம் துவளாமலும், தேசத்தில் கேட்கப்படும் செய்தியினால் நீங்கள் பயப்படாமலும் இருங்கள்; ஒரு வருஷத்திலே ஒரு செய்தி கேட்கப்பட்டு, பின்பு மறுவருஷத்திலே வேறு செய்தி கேட்கப்படும்; தேசத்திலே கொடுமை உண்டாகும்; ஆளுகிறவன்மேல் ஆளுகிறவன் வருவான்.

எரே 51:50. பட்டயத்துக்குத் தப்பினவர்களே, தங்கித்தரியாமல் நடந்துவாருங்கள்; தூரத்திலே கர்த்தரை நினையுங்கள்; எருசலேம் உங்கள் ஞாபகத்தில் வரக்கடவது.

எரே 51:51. நிந்தையைக் கேட்டதினால் வெட்கப்பட்டோம்; கர்த்தருடைய ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலங்களின்மேல் அந்நியர் வந்ததினால் நாணம் நம்முடைய முகங்களை மூடிற்று.

எரே 51:52. ஆகையால், கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ, நான் அதின் விக்கிரகங்களுக்கு விரோதமாய் விசாரிக்கும் நாட்கள் வரும்; அப்பொழுது அதின் தேசமெங்கும் கொலையுண்கிறவர்கள் கத்துவார்கள்.

பாபிலோன் தேசம் அழியும்போது இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார்கள். கர்த்தருடைய ஜனங்கள் பாபிலோனின் அக்கிரமத்தில் சங்காரமாகிவிடக்கூடாது. அவர்கள் பாபிலோனின் நடுவிலிருந்து ஓடி தங்கள் ஆத்துமாவை தப்புவிக்கவேண்டும்.

பாபிலோன் தேசத்தார் கர்த்தருடைய ஜனத்தை துன்பப்படுத்தினார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தர் பாபிலோனை பழிவாங்குகிறார். இது கர்த்தர் பாபிலோனிடத்தில் பழிவாங்குகிற காலமாயிருக்கிறது. கர்த்தர் பாபிலோனுக்கு பதில் செலுத்துவார். கர்த்தர் பாபிலோனை பழிவாங்கும்போது, இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்திற்கு நடுவிலிருந்து சங்காரமாகிவிடக்கூடாது என்று, கர்த்தர் தம்முடைய ஜனங்களை எச்சரிக்கிறார் (எரே 51:6).

"என் ஜனங்களே, நீங்கள் அதின் நடுவிலிருந்து புறப்படுங்கள்; கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்துக்குத் தப்பும்படி அவனவன் தன்தன் ஆத்துமாவை இரட்சித்துக்கொள்ளக்கடவன்" (எரே 51:45) என்று கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்திற்கு சொல்லுகிறார்.

நாம் சோதனைக்காரனுக்கு அருகாமையிலிருக்கக்கூடாது. கர்த்தருடைய கிருபையினால் நாம் சாத்தானுக்கு விலகி தூரமாயிருக்கவேண்டும். சாத்தான் அதையும் மீறி நமக்கு சோதனைகளைக் கொடுக்கும்போது, நாம் சோதனைக்கு விலக்கியிருக்கவேண்டும். சோதனைக்கு மத்தியில் சிக்கிக்கொள்ளக்கூடாது.

கர்த்தருடைய ஜனங்கள் பாபிலோன் தேசத்திற்கு நடுவிலிருக்கக்கூடாது. கல்தேயர்கள் ஆரம்பத்தில் இஸ்ரவேலரை ஒடுக்கினார்கள். இப்போதோ பெர்சியர்கள் கல்தேயரை சங்காரம்பண்ணுகிறார்கள். அந்த சங்காரத்தில் இஸ்ரவேல் ஜனத்தார் சிக்கிக்கொள்ளக்கூடாது. பெர்சியர் பாபிலோன் தேசத்திலுள்ள எல்லோரையும் சங்காரம்பண்ணுவார்கள். அவர்கள் கல்தேயர் என்றும், இஸ்ரவேலர் என்றும் வித்தியாசம் பார்க்கமாட்டார்கள். இஸ்ரவேலர்கள் பெர்சியருடைய பட்டயத்திற்கு தப்பிக்க வேண்டுமென்றால், அவர்கள் பாபிலோனில் தங்கியிருக்கக்கூடாது. பாபிலோன் இஸ்ரவேல் ஜனத்தாரின் தேசமல்ல. கானான் தேசமே இஸ்ரவேல் ஜனத்தார் இளைப்பாறுகிற தேசம்.

இஸ்ரவேல் ஜனங்கள் பாபிலோன் தேசத்தை விட்டு வெளியேறி, தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பி வருகிறார்கள். அவர்கள் எருசலேமில் கல்தேயர் மூலமாய் அனுபவித்த வேதனைகளை நினைவுகூருகிறார்கள்.

"நிந்தையைக் கேட்டதினால் வெட்கப்பட்டோம்; கர்த்தருடைய ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலங்களின்மேல் அந்நியர் வந்ததினால் நாணம் நம்முடைய முகங்களை மூடிற்று" (எரே 51:51) என்று தங்களுக்கு ஏற்பட்ட சோகமான அனுபவங்களை நினைவுகூருகிறார்கள். அந்த வெட்கத்தையும், வேதனையையும் நினைத்துப் பார்க்கும்போது, அவர்களுடைய மனதில் சந்தோஷமுண்டாகவில்லை. முகத்தை துக்கமும் நாணமும் மூடிற்று.

கர்த்தரோ தம்முடைய ஜனத்தின் துக்கத்தை நீக்குகிறார். அவர்களுடைய இலச்சையைப் போக்குகிறார். அவர்களுடைய முகத்தை மூடியிருக்கிற நாணத்தை விலக்குகிறார். "இதோ, நான் அதின் விக்கிரகங்களுக்கு விரோதமாய் விசாரிக்கும் நாட்கள் வரும்; அப்பொழுது அதின் தேசமெங்கும் கொலையுண்கிறவர்கள் கத்துவார்கள்" (எரே 51:52) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் பாபிலோனை பழிவாங்குவார். பாபிலோன் தேசத்திலுள்ள விக்கிரகங்களை அழித்துப்போடுவார். கர்த்தரே பெரியவர் என்பதை பாபிலோன் தேசத்தாரும், இஸ்ரவேல் தேசத்தாரும் அறிந்துகொள்வார்கள். பாபிலோன் தேசத்திலுள்ள பேல் என்னும் விக்கிரகத்தைவிட, இஸ்ரவேலின் பரிசுத்தரே பெரியவர், அவரே சர்வவல்லவர் என்பதையும் எல்லோரும் புரிந்துகொள்வார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும் அறிந்து கொள்வார்கள். அப்போது அவர்களுடைய முகத்தை மூடியிருக்கிற நாணம் அவர்களை விட்டு நீங்கும்.

பாபிலோனிலிருந்து கூக்குரலின் சத்தம் கேட்கப்படும் எரே 51:41,48,54,55

எரே 51:41. சேசாக்கு பிடியுண்டு, பூமிமுழுதும் புகழும் புகழ்ச்சி அகப்பட்டது எப்படி? ஜாதிகளுக்குள்ளே பாபிலோன் பிரமிப்பானது எப்படி?

எரே 51:48. வானமும் பூமியும் அவைகளிலுள்ள யாவும் பாபிலோன்மேல் கெம்பீரிக்கும்; பாழ்க்கடிக்கிறவர்கள் அதற்கு வடக்கேயிருந்து வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்;

எரே 51:54. பாபிலோனிலிருந்து கூக்குரலின் சத்தமும், கல்தேயர் தேசத்திலிருந்து மகா சங்காரமும் கேட்கப்படும்.

எரே 51:55. கர்த்தர் பாபிலோனைப் பாழாக்கி அதிலுள்ள பெரிய சத்தத்தை ஒழியப்பண்ணுவார்; அவர்களுடைய அலைகள் திரளான தண்ணீர்களைப் போல இரையும், அவர்களுடைய சத்தம் அமளியாயிருக்கும்.

மேதியரும் பெர்சியரும் பாபிலோன் தேசத்தை அழித்துப்போடுவார்கள். தங்கள் தேசம் அழிந்துபோனதைப் பார்த்து பாபிலோனியர்கள் அழுது புலம்புவார்கள்.

பாபிலோனிலிருந்து கூக்குரலின் சத்தமும், கல்தேயர் தேசத்திலிருந்து மகா சங்காரமும் கேட்கப்படும். கர்த்தர் பாபிலோனைப் பாழாக்கி அதிலுள்ள பெரிய சத்தத்தை ஒழியப்பண்ணுவார்; அவர்களுடைய அலைகள் திரளான தண்ணீர்களைப்போல இரையும், அவர்களுடைய சத்தம் அமளியாயிருக்கும் (எரே 51:54,55).

பாபிலோன் தேசத்தார் தங்கள் தேசத்தின் அழிவுக்காக அழுதுபுலம்புவார்கள். அவர்களுடைய அழிவு அவர்களுக்கே ஆச்சரியமாயிருக்கும். தங்கள் அழிவைப் பார்த்து பாபிலோனியர் பிரமிப்படைவார்கள். "சேசாக்கு பிடியுண்டு, பூமிமுழுதும் புகழும் புகழ்ச்சி அகப்பட்டது எப்படி? ஜாதிகளுக்குள்ளே பாபிலோன் பிரமிப்பானது எப்படி?" (எரே 51:41) என்று பாபிலோன் தேசத்தார் அழுது புலம்புவார்கள்.

பாபிலோன் தேசம் செழிப்பான தேசமாயிருந்தது. அங்கே ஐசுவரியம் மிகுதியாயிருந்தது. அது பலமுள்ள தேசமாகவும், அரணிப்பான தேசமாகவும் இருந்தது. தங்கள் தேசத்திற்கு அழிவே வராது என்று பாபிலோன் தேசத்தார் இருமாப்பாயிருந்தார்கள். பாபிலோன் தேசத்தை பார்க்கிற மற்ற தேசத்தாரும், அதன் பாதுகாப்பைப் பார்த்து பிரமித்தார்கள்.

அப்படியிருந்த பாபிலோன் தேசம் இப்போது அழிந்துபோயிற்று. பூமி முழுவதும் புகழும் புகழ்ச்சியாயும் இருந்த பாபிலோன் தேசம் இப்போது பாழாய்ப்போயிற்று. பாபிலோனின் மேன்மையைப் பார்த்து பிரமித்தவர்கள், இப்போது அதன் அழிவைப் பார்த்து பிரமிக்கிறார்கள்.

பாபிலோன் தேசம் அழிந்துபோனதைப் பார்த்து, பாபிலோனியர்கள் அழுது புலம்புகிறார்கள். ஆனாலும் பாபிலோன் தேசம் அழிந்ததற்காக வானமும் பூமியும் அவைகளிலுள்ள யாவும் சந்தோஷமாய் கெம்பீரிக்கிறது (எரே 51:48). பாபிலோன் அழிந்துபோனதற்காக இவையெல்லாம் சந்தோஷப்படுகிறது. தேவனுடைய நீதியான நியாயத்தீர்ப்பு பாபிலோன் தேசத்தின்மேல் வந்திருக்கிறது. பாபிலோன் தேசம் அழிந்துபோனதினால், எழுபது வருஷங்களாக பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் இப்போது விடுவிக்கப்படுகிறார்கள்.

எரேமியா தீர்க்கதரிசி செராயாவுக்கு கற்பித்த வார்த்தை எரே 51:59-64

எரே 51:59. பாபிலோன்மேல் வரும் எல்லாத் தீங்கையும், பாபிலோனுக்கு விரோதமாக எழுதப்பட்ட இந்த எல்லா வசனங்களையும் எரேமியா ஒரு புஸ்தகத்தில் எழுதினான்.

எரே 51:60. யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா ராஜ்யபாரம்பண்ணும் நாலாம் வருஷத்திலே பாபிலோனுக்குப் போன சமயத்தில் அவனோடே கூடப்போன மகசெயாவின் மகனாகிய நேரியாவின் குமாரனும் சாந்தகுணமுள்ள பிரபுவுமாகிய செராயாவுக்கு எரேமியா தீர்க்கதரிசி கற்பித்த வார்த்தை.

எரே 51:61. எரேமியா செராயாவை நோக்கி: நீ பாபிலோனுக்கு வந்தபின்பு நீ இதைப் பார்த்து, இந்த எல்லா வசனங்களையும் வாசித்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்:

எரே 51:62. கர்த்தாவே, இந்த ஸ்தலத்திலே மனுஷனும் மிருகமுமுதலாய்த் தங்கித் தரிக்காதபடிக்கும், அது என்றென்றைக்கும் பாழாய்க் கிடக்கும்படிக்கும், அதை அழித்துப்போடுவேன் என்று தேவரீர் அதைக்குறித்து உரைத்தீர் என்பதை நீசொல்லி,

எரே 51:63. நீ இந்தப் புஸ்தகத்தை வாசித்துத் தீர்ந்தபோது, அதிலே ஒரு கல்லைக் கட்டி, அதை ஐப்பிராத்து நடுவில் எறிந்துவிட்டு,

எரே 51:64. இப்படியே பாபிலோன் முழுகிப்போகும், நான் அதின்மேல் வரப்பண்ணும் தீங்கினால் எழுந்திருக்கமாட்டாமல் இளைத்து விடுவார்கள் என்றார் என்று சொல்லுவாயாக என்றான். எரேமியாவின் வசனங்கள் இவ்வளவோடே முடிந்தது.

பாபிலோன்மேல் வரும் எல்லாத் தீங்கையும், பாபிலோனுக்கு விரோதமாக எழுதப்பட்ட இந்த எல்லா வசனங்களையும் எரேமியா ஒரு புஸ்தகத்தில் எழுதினார் (எரே 51:59). இந்த அதிகாரத்தில் பாருக்கைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. எரேமியா தீர்க்கதரிசியே தன்னுடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை ஒரு புஸ்தகத்தில் எழுதுகிறார்.

பாபிலோன் தேசத்திலே யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் சிறையிருப்பிலிருக்கிறார்கள். எரேமியா தீர்க்கதரிசி தான் எழுதின தீர்க்கதரிசன புஸ்தகத்தை செராயா என்பவர் மூலமாக பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலுள்ள யூதர்களுக்கு கொடுத்தனுப்புகிறார். யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா ராஜபாரம் பண்ணும் நாலாம் வருஷத்திலே பாபிலோனுக்கு போன சமயத்தில், அவனோடுகூட மசெயாவின் மகனாகிய நேரியாவின் குமாரனும் சாந்தகுணமுள்ள பிரபுவுமாகிய செராயா என்பவனும் பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போனான். அப்போது எரேமியா இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை சிரேயாவுக்கு கற்பித்தார் (எரே 51:60).

செராயா சாந்தகுணமுள்ளவன். யூதாதேசத்திலே அவனுக்கு நல்ல மதிப்பு இருந்தது. இருதயத்தில் பெருமையில்லாதவன். எருசலேமின் சமாதானத்தை விரும்புகிறவன். பாபிலோன் தேசத்தில் யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் சிறையிருப்பிலிருக்கிறார்கள். அந்த வேளையில் பாபிலோன் மேல் வரும் எல்லா தீங்கையும் கர்த்தர் எரேமியாவுக்கு வெளிப்படுத்துகிறார். இந்த வசனங்களையெல்லாம் எரேமியா ஒரு புஸ்தகத்தில் எழுதுகிறார். இந்த புஸ்தகத்தை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலுள்ள யூதர்களுக்கு யார் மூலமாகவாவது கொடுத்தனுப்பவேண்டும் என்று எரேமியா விரும்புகிறார். செராயாவின் கையில் தன்னுடைய புஸ்தகத்தைக் கொடுத்தனுப்புவது மிகவும் பாதுகாப்பாயிருக்கும் என்று தீர்மானித்து, எரேமியா செராயா மூலமாய் தான் எழுதின தீர்க்கதரிசன புஸ்தகத்தை பாபிலோன் சிறையிருப்பிலுள்ள யூதர்களுக்கு கொடுத்தனுப்புகிறார்.

செராயாவும் இப்போது பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிறார். சிறையிருப்புக்குப்போவதற்கு முன்பாக, எரேமியா செராயாவை நோக்கி, "நீ பாபிலோனுக்கு வந்த பின்பு, நீ இதைப் பார்த்து, இந்த எல்லா வசனங்களையும் சிறையிருப்பிலுள்ள யூதர்களுக்கு வாசித்து சொல்லவேண்டும்" (எரே 51:61) என்று சொல்லுகிறார்.

பாபிலோன் தேசம் மிகப்பெரிய தேசம். பாபிலோன் பட்டணம் ஐசுவரியமும், பேரும், புகழும் மிகுந்த பட்டணம். அது அரணிப்பானது. பாபிலோன் தேசத்தைப் பார்க்கும்போது, அதற்கு அழிவு வராது என்று எல்லோரும் பொதுவாக நினைப்பார்கள். அது அழிந்துபோகாமல் நித்தியகாலமாய் நிலைத்திருக்கும் என்று தங்களுக்குள் சிந்தித்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் பாதுகாப்பாகயிருப்பார்கள் என்றும் அவர்களுக்கு விரோதமாக யாரும் யுத்தம் பண்ண வரமாட்டார்கள் என்றும் ஜனங்கள் சொல்லுவார்கள்.

கர்த்தரோ பாபிலோனுக்கு தீங்கு வரும் என்று சொல்லுகிறார். பாபிலோன் தேசம் அழிந்துபோகும் என்றும் சொல்லுகிறார். பாபிலோன் தேசத்தில் மனுஷனும் மிருகமும் தங்கித்தரிக்காது என்றும், அது என்றென்றைக்கும் பாழாய்க்கிடக்கும் என்றும் கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர்தாமே பாபிலோன் தேசத்தை அழித்துப்போடுவதாகவும் எரேமியாவுக்குச் சொல்லுகிறார் (எரே 51:62).

கர்த்தர் தனக்கு சொன்ன வார்த்தைகளையெல்லாம் எரேமியா ஒரு புஸ்தத்தில் எழுதியிருக்கிறார். இதை செராயா பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலுள்ள யூதர்கள் மத்தியில் வாசிக்கவேண்டும். அவர்கள் பாபிலோன் தேசத்தின் பலத்தையும், பராக்கிரமத்தையும் தங்கள் கண்களால் பிரத்தியட்சமாகப் பார்க்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, கர்த்தருடைய பலத்தையும், அவருடைய பராக்கிரமத்தையும், தங்களுடைய விசுவாச கண்களால் பார்க்கவேண்டும். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. கர்த்தர் செய்ய நினைக்கிற காரியம் தடைபடாது. பாபிலோன் தேசம் அரணிப்பான தேசமாகயிருந்தாலும், கர்த்தர் அதை அழித்துப்போடுவதாகச் சொல்லுகிறார். கர்த்தரால் பாபிலோனை அழிக்க முடியும் என்று சிறையிருப்பிலிருக்கிற யூதர்கள் நம்பவேண்டும். பாபிலோனின் முடிவை தங்கள் விசுவாசக்கண்களால் காணவேண்டும்.

செராயா பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலுள்ள யூதர்களுக்கு எரேமியாவின் புஸ்தகத்தை வாசித்து தீர்ந்தபோது, அதிலே ஒரு கல்லைக்கட்டி, அதை ஐப்பிராத்து நடுவில் எறிந்துவிட வேண்டும் என்றும் எரேமியா அவருக்கு சொல்லியிருக்கிறார் (எரே 51:63).

செராயா பாபிலோனுக்கு வந்தபோது, அவர் பாபிலோன் தேசத்தின் பெலனையும், பராக்கிரமத்தையும், அரணையும், செழிம்பையும் பார்க்கிறார். அவர் எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தை, சிறையிருப்பிலுள்ள யூதர்களுக்கு வாசிக்கும்போது, அவரும் பாபிலோன் தேசத்தின் அழிவை விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்கவேண்டும்.

நாம் இந்த உலகத்தைப் பார்க்கும்போது இது மகிமையுள்ளதாகவும், அழகானதாகவும் இருக்கும். கர்த்தரோ இந்த உலகம் அழியும் என்று சொல்லுகிறார். இந்த உலகம் இப்பொழுது எவ்வளவு கவர்ச்சியாகயிருந்தாலும், நம்முடைய கண்களின் இச்சைகளில் மயங்கிவிடக் கூடாது. கர்த்தர் சொன்ன வார்த்தையை நம்பவேண்டும். கர்த்தர் சொன்ன பிரகாரம் இந்த உலகம் அழியும் என்பதை விசுவாசிக்கவேண்டும்.

நம்முடைய நம்பிக்கையை அழிந்துபோகிற இந்த உலகத்தின்மீது வைக்காமல், கர்த்தர்மீது வைக்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை நம்பவேண்டும். உலகத்தின் ஆசாபாசங்களை நம்பாமல், பரலோகத்தின் மகிமையை நம்பவேண்டும். நாம் மாம்சப்பிரகாரமான கண்களால் நம்மைச் சுற்றிலுமுள்ள காரியங்களை பிரத்தியட்சமாய்ப் பார்த்தாலும், நம்முடைய விசுவாசக் கண்களால் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களையும் பார்க்கவேண்டும். நம்முடைய விசுவாசக் கண்கள் பிரகாசமுள்ளதாயிருந்தால்தான், கர்த்தர் சொல்லுகிற வாக்குத்தத்தங்களை நம்மால் நோக்கிப் பார்க்க முடியும்.

செராயா எரேமியாவின் புஸ்தகத்தை வாசித்து தீர்ந்தபோது, அதிலே ஒரு கல்லைக்கட்டி, அதை ஐப்பிராத்து நடுவில் எறிந்துவிடவேண்டும். அந்தப் புஸ்தகம் ஐப்பிராத்து நதியிலே மூழ்கிப்போகும். இப்படியே பாபிலோன் மூழ்கிப்போகும். கர்த்தர் அதின்மேல் தீங்கு வரப்பண்ணுவார். அந்த தீங்கினால் பாபிலோன் தேசத்தார் எழுந்திருக்கமாட்டாமல் இளைத்து விடுவார்கள்.

எரேமியா கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளை செராயாவுக்கு சொல்லுகிறார். செராயா இந்த வார்த்தைகளை பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருக்கிற யூதர்களுக்கு விசுவாசத்தோடு சொல்லவேண்டும்.

பாபிலோன் விழும். அது மறுபடியும் எழுந்திருக்காது. இதுவே கர்த்தருடைய செய்தி. புஸ்தகத்தில் கட்டப்பட்டிருக்கிற கல், புஸ்தகத்தை ஐப்பிராத்து நதிக்குள் மூழ்கடித்துவிடும். புஸ்தகம் மறுபடியும் மேலே மிதந்து எழும்பாது. அந்தப் புஸ்தகத்தை மூழ்கச் செய்கிற கல் வலுவானது. பாபிலோன் தேசத்தின் மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறது. பாபிலோன் தேசம் மூழ்கிப்போகும். ஒரு கல் தண்ணீரில் மூழ்குவதுபோல பாபிலோனும் மூழ்கும்.

எரேமியா தீர்க்கதரிசன புஸ்தகத்தின் முடிவில் "எரேமியாவின் வசனங்கள் இவ்வளவோடே முடிந்தது" (எரே 51:64) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த தீர்க்கதரிசனம் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா ராஜ்யபாரம் பண்ணும் நாலாம் வருஷத்திலே எழுதப்பட்டது (எரே 51:59). எரேமியா தன்னுடைய தீர்க்கதரிசன ஊழியத்தை முடிப்பதற்கு முன்பாகவே, கர்த்தர் பாபிலோனைப்பற்றிய செய்திகளை எரேமியாவுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனாலும் எரேமியா புறஜாதியாருக்கு விரோதமாகச் சொன்ன தீர்க்கதரிசனங்களில், இந்த தீர்க்கதரிசனமே கடைசியாக நிறைவேறுகிறது.

"புறஜாதிகளுக்கு விரோதமாய் எரேமியா தீர்க்கதரிசிக்கு உண்டான கர்த்தருடைய வசனம்" (எரே 46:1).

எரேமியா 52-ஆவது அதிகாரத்தை எரேமியா எழுதவில்லை. இந்த அதிகாரத்தை கர்த்தருடைய பரிசுத்தவான்களில் வேறொருவர் எழுதியிருக்கவேண்டும் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இந்த அதிகாரத்தில் சரித்திரம் சம்பந்தப்பட்ட செய்திகள் எழுதப்பட்டிருக்கிறது.

52 அதிகாரம்

கர்த்தர் சொன்ன தீர்க்கதரிசன வாக்கியங்கள் சரித்திரத்தில் ஒவ்வொன்றாய் நிறைவேறி வருகிறது. எருசலேமும் யூதாராஜ்யமும் அழிந்துபோகும் என்று கர்த்தர் சொன்னார். இந்த தீர்க்கதரிசனம் கர்த்தர் சொன்ன பிரகாரம் அப்படியே நிறைவேறிற்று. இது சம்பந்தமான சரித்திர ஆதாரங்கள் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

2இராஜா 24; 25 ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்ட சம்பவமே இந்த அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்திற்கும், எரேமியா தீர்க்கதரிசியின் புலம்பல் புஸ்தகத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. புலம்பல் புஸ்தகத்திற்கு ஆதாரமான செய்திகள் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளன.

சிதேக்கியா ராஜாவின் மோசமான ஆட்சிக்காலம் (எரே 52:1-3). கல்தேயர்கள் எருசலேமை முற்றிக்கையிட்டு அதைப் பிடிக்கிறார்கள் (எரே 52:4-7). சிதேக்கியா ராஜாவுக்கும் அவனுடைய பிரபுக்களுக்கும் பாபிலோன் ராஜா கடுமையான தண்டனை கொடுக்கிறான் (எரே 52:8-11).

நேபுசராதான் எருசலேம் நகரத்தையும், தேவாலயத்தையும் இடித்துப்போடுகிறான் (எரே 52:12-14). யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் சிறைப்பிடித்து பாபிலோன் தேசத்திற்கு கொண்டு போகிறான் (எரே 52:15,16). பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன யூதர்களின் எண்ணிக்கை (எரே 52:28-30).

கல்தேயர்கள் தேவாலயத்திலுள்ள பணிமுட்டுக்களையும், ஆலயத்திலுள்ள மற்ற பொருட்களையும் தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போகிறார்கள் (எரே 52:17-23). கல்தேயர்கள் ஆசாரியரையும், யூதாதேசத்தில் பிரபலமானவர்களையும் கொன்று போடுகிறார்கள் (எரே 52:24-27).

நேபுகாத்நேச்சார் மரித்துப்போன பின்பு, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனுக்கு பாபிலோன் ராஜாவாகிய ஏவில் மெரொதாக் என்பவன் சில சலுகைகளைக் காண்பிக்கிறான் (எரே 52:31-34).

சிதேக்கியா ராஜா
எரே 52:1-11

எரே 52:1. சிதேக்கியா ராஜாவாகிறபோது இருபத்தொரு வயதாயிருந்தான்; அவன் பதினொரு வருஷம் எருசலேமில் ராஜ்யபாரம்பண்ணினான்; அவனுடைய தாயின்பேர் அமுத்தாள், அவள் லீப்னாஊரானாகிய எரேமியாவின் குமாரத்தி.

எரே 52:2. யோயாக்கீம் செய்தபடியெல்லாம் அவனும் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான்.

எரே 52:3. எருசலேமையும் யூதாவையும் கர்த்தர் தம்முடைய சமுகத்தைவிட்டு அகற்றித் தீருமளவும், அவைகளின் மேலுள்ள அவருடைய கோபத்தினால் இப்படி நடந்ததும் அல்லாமல், சிதேக்கியா பாபிலோனிலே ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான்.

எரே 52:4. அவன் ராஜ்யபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும், அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதற்கு எதிராகப் பாளயமிறங்கி, சுற்றிலும் அதற்கு எதிராகக் கொத்தளங்களைக் கட்டினார்கள்.

எரே 52:5. அப்படியே சிதேக்கியா ராஜாவின் பதினோராம் வருஷமட்டும் நகரம் முற்றிக்கை போடப்பட்டிருந்தது.

எரே 52:6. நாலாம் மாதம் ஒன்பதாம் தேதியிலே பஞ்சம் நகரத்திலே அதிகரித்து, தேசத்தின் ஜனத்துக்கு ஆகாரமில்லாமல்போயிற்று.

எரே 52:7. நகரத்தின் மதில் இடிக்கப்பட்டது; அப்பொழுது கல்தேயர் நகரத்தைச் சூழ்ந்திருக்கையில், யுத்தமனுஷர் எல்லாரும் இராத்திரிகாலத்தில் ஓடி, ராஜாவுடைய தோட்டத்தின் வழியே இரண்டு மதில்களுக்கும் நடுவான வாசலால் நகரத்திலிருந்து புறப்பட்டு, வயல் வெளியின் வழியே போய்விட்டார்கள்.

எரே 52:8. ஆனாலும் கல்தேயருடைய இராணுவத்தார் ராஜாவைப் பின்தொடர்ந்து, எரிகோவின் சமனான பூமியில் சிதேக்கியாவைக் கிட்டினார்கள்; அப்பொழுது அவனுடைய இராணுவத்தார் எல்லாரும் அவனைவிட்டுச் சிதறிப்போயிருந்தார்கள்.

எரே 52:9. அவர்கள் ராஜாவைப் பிடித்து, அவனை ஆமாத்தேசத்தின் ஊராகிய ரிப்லாவுக்குப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரிடத்துக்குக் கொண்டு போனார்கள்; அங்கே இவனுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுத்தான்.

எரே 52:10. பின்பு பாபிலோன் ராஜா சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டினான்; யூதாவின் பிரபுக்களெல்லாரையும் ரிப்லாவிலே வெட்டினான்.

எரே 52:11. சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கி, அவனுக்கு இரண்டு விலங்குகளைப் போடுவித்தான்; பின்பு பாபிலோன் ராஜா அவனைப் பாபிலோனுக்குக் கொண்டுபோய், அவன் மரணமடையும் நாள்மட்டும் அவனைக் காவல் வீட்டில் அடைத்துவைத்தான்.

சிதேக்கியா ராஜாவின் ஆட்சிக்காலத்திலிருந்து, யூதர்களின் சரித்திரம் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. சிதேக்கியா ராஜாவின் காலத்திற்கு முன்பாகவே இரண்டு சிறையிருப்புக்கள் நடைபெற்றிருக்கிறது. முதலாவது சிறையிருப்பு யோயாக்கீம் ராஜாவினுடைய ஆட்சிக்காலத்தின் நான்காம் வருஷத்தில் நடைபெற்றது. இரண்டாவது சிறையிருப்பு எக்கோனியா ராஜாவின் ஆட்சிக்காலத்தில் முதல் வருஷத்தில் நடைபெற்றது.

யூதாவின் மனுஷரும் எருசலேமின் குடிகளும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். கர்த்தரைவிட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றினார்கள். அவர்கள் விக்கிரகங்களுக்கு தூபங்காட்டினார்கள். யூதாமனுஷரின் பாவத்தினிமித்தமாய் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்தது. கர்த்தர் எருசலேமின்மீதும், யூதாதேசத்தின்மீதும் கோபமாயிருந்தார். கர்த்தர் எருசலேமையும் யூதாவையும் தம்முடைய சமுகத்தைவிட்டு அகற்றிப்போட்டார்.

கர்த்தருடைய கோபம் அவைகளின்மேல் மிகவும் அதிகமாயிருந்தது. யூதாதேசத்தின்மீது தம்முடைய கோபத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக, கர்த்தர் யூதாவுக்கு இதுவரையிலும் கொடுத்து வந்த பாதுகாப்பையும், பராமரிப்பையும் அகற்றிப்போடுகிறார்.

எருசலேம் நகரம் கர்த்தருக்கு பரிசுத்தமான நகரம். அங்கே கர்த்தருடைய தேவாலயமுள்ளது. கர்த்தருடைய பிரசன்னம் எருசலேமில் தங்கியிருந்தது. கர்த்தருடைய கிருபையின் உடன்படிக்கைக்கும், அவருடைய அன்புக்கும் எருசலேமிலுள்ள தேவாலயம் அடையாளமாயிருந்தது. கர்த்தரோ இப்போது எருசலேமின்மீதும் யூதாவின்மீதும் கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம், எருசலேமைவிட்டு நீங்கிப்போயிற்று.

சிதேக்கியா ராஜாவும் துன்மார்க்கனாயிருந்தான். அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்காமல் பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான். சிதேக்கியா யூதாவின் மனுஷரை கர்த்தருக்கு பயந்து ஆளுகை செய்யவில்லை. அவன் ராஜாவாகியபோது இருபத்தொரு வயதாயிருந்தான். இவன் விக்கிரகங்களை ஆராதிக்கவில்லை. ஆனாலும் கர்த்தருடைய பார்வைக்கு சிதேக்கியா பொல்லாப்பானதை செய்தான்.

யோயாக்கீம் செய்தபடியெல்லாம், சிதேக்கியாவும் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்தான் (எரே 52:2). சிதேக்கியா கர்த்தருக்கு பயந்து யூதாதேசத்தை ஆளுகை செய்யவேண்டும். அவன் யூதாதேசத்திற்கும், எருசலேம் நகரத்திற்கும், யூதாவின் மனுஷருக்கும் நன்மை செய்யவேண்டும். ஆனால் அவனோ கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான். அவனுடைய பொல்லாப்பினிமித்தமாய் கர்த்தருடைய கோபம் சிதேக்கியா ராஜாவின்மீது வந்தது.

சிதேக்கியா பாபிலோன் தேசத்திற்கு கீழ்ப்படிந்து யூதாதேசத்தை ஆட்சிசெய்யவேண்டும். அவன் கல்தேயருக்கு கப்பம் கட்டவேண்டும். ஆனால் சிதேக்கியாவோ பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணினான் (எரே 52:3). இது சிதேக்கியா ராஜாவின் பாவமும், அவனுடைய மதியீனமும் ஆகும். சிதேக்கியாவின் பாவத்தினால் யூதாவுக்கும், யூதாவின் ஜனங்களுக்கும் அழிவு வந்தது. கர்த்தரும் சிதேக்கியாவின்மீது கோபமாயிருந்தார். பாபிலோன் ராஜாவும் அவன்மீது கோபமாயிருந்தான். இதனால் யூதாதேசத்திற்கு சடுதியில் அழிவு உண்டாயிற்று.

"இவன் அவனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து, தனக்குக் குதிரைகளையும் அநேகம் ஆட்களையும் அனுப்பவேண்டுமென்று தன் ஸ்தானாபதிகளை எகிப்துக்கு அனுப்பினான்; இப்படிப்பட்டவனுக்கு வாய்க்குமோ? இப்படிச் செய்கிறவன் தப்பித்துக்கொள்வானோ? உடன்படிக்கையை முறித்தவன் தப்பித்துக்கொள்வானோ? தன்னை ராஜாவாக ஏற்படுத்திய ராஜாவினுடைய ஆணையை அசட்டைபண்ணி, அவனுடைய உடன்படிக்கையை முறித்துப்போட்டவன், அந்த ராஜாவினுடைய ஸ்தானமாகிய பாபிலோன் நடுவிலே அவனண்டையில் இருந்து மரணமடைவானென்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எசே 17:15,16).

கல்தேயர்கள் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். அவர்கள் எருசலேமின் நகரத்தை பதினெட்டு மாதங்களாக முற்றிக்கைபோடுகிறார்கள்.

சிதேக்கியா ராஜ்யபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும், அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதற்கு எதிராகப் பாளயமிறங்கி, சுற்றிலும் அதற்கு எதிராகக் கொத்தளங்களைக் கட்டினார்கள். அப்படியே சிதேக்கியா ராஜாவின் பதினோராம் வருஷமட்டும் நகரம் முற்றிக்கை போடப்பட்டிருந்தது (எரே 52:4,5).

சிதேக்கியா ராஜா ராஜ்யபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷத்தில், பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தான். இந்த மாதத்தை நினைவுகூரும் வண்ணமாக, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதர்கள் ஒவ்வொரு வருஷமும் ஒன்பதாம் மாதத்தில் உபவாசம்பண்ணினார்கள். ஒன்பதாம் மாதத்தோடு, அவர்கள் மேலும் சில மாதங்களிலும் உபவாசம்பண்ணினார்கள்.

"நாலாம் மாதத்தின் உபவாசமும், ஐந்தாம் மாதத்தின் உபவாசமும், ஏழாம் மாதத்தின் உபவாசமும், பத்தாம் மாதத்தின் உபவாசமும், யூதா வம்சத்தாருக்கு மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் நல்லபண்டிகைகளாகவும் மாறிப்போகும்; ஆகையால் சத்தியத்தையும் சமாதானத்தையும் சிநேகியுங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (சக 8:19).

ஐந்தாம் மாதத்தில் எருசலேமிலுள்ள தேவாலயம் இடிக்கப்பட்டு அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டது. ஏழாம் மாதத்தில் கெதலியாவை பட்டயத்தால் வெட்டிக் கொன்றார்கள். இவற்றை நினைவுகூரும் வண்ணமாக, பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த யூதர்கள், அந்தந்த மாதங்களில் உபவாசம்பண்ணுவது வழக்கம்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும், அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாக பதினெட்டு மாதங்கள் முற்றிக்கைப் போட்டார்கள். சிதேக்கியா ராஜாவின் பதினொரு வருஷமட்டும் நகரம் முற்றிக்கைப்போடப்பட்டிருந்தது.

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தைச் சுற்றிலும் ஒன்றரை வருஷங்களாக முற்றிக்கைப்போட்டிருந்தாலும், சிதேக்கியா ராஜா கல்தேயரிடம் சரணடையவில்லை. நகரத்திற்குள்ளே இருக்கிறவர்களுக்கு போஜனம் கிடைக்கவில்லை. நகரத்திலே பஞ்சம் அதிகரித்தது. இதைத் தொடர்ந்து எருசலேம் மதில் இடிக்கப்பட்டது.

நாலாம் மாதம் ஒன்பதாம் தேதியிலே பஞ்சம் நகரத்திலே அதிகரித்து, தேசத்தின் ஜனத்துக்கு ஆகாரமில்லாமல்போயிற்று. நகரத்தின் மதில் இடிக்கப்பட்டது; அப்பொழுது கல்தேயர் நகரத்தைச் சூழ்ந்திருக்கையில், யுத்தமனுஷர் எல்லாரும் இராத்திரிகாலத்தில் ஓடி, ராஜாவுடைய தோட்டத்தின் வழியே இரண்டு மதில்களுக்கும் நடுவான வாசலால் நகரத்திலிருந்து புறப்பட்டு, வயல் வெளியின் வழியே போய்விட்டார்கள் (எரே 52:6,7).

எருசலேம் நகரத்தைச் சுற்றிலும் பெரிய மதில் சுவர்கள் இருந்தாலும், அந்தச் சுவர் நகரத்திற்கு மெய்யான பாதுகாப்பைத்தராது. கர்த்தரே எருசலேமுக்கு பாதுகாப்பைத் தருகிறவர். கர்த்தர் இப்போது யூதாவின் மனுஷர்மீதும், எருசலேம் நகரத்தின்மீதும் கோபமாயிருக்கிறார். அந்த நகரத்திற்கு தாம் இதுவரையிலும் கொடுத்து வந்த பாதுகாப்பை கர்த்தர் விலக்கிக்கொள்கிறார். இதனால் எருசலேம் நகரத்திற்கு பாதுகாப்பு இல்லாமல் போயிற்று. நகரத்தின் மதில் இடிக்கப்பட்டது.

நகரத்தைப் பாதுகாப்பதற்கு யுத்த மனுஷர்கள் தேவை. நகரத்திலோ பஞ்சம் அதிகரித்ததினால், எல்லோரும் பட்டினியாயிருக்கிறார்கள். நகரத்து மதிலைப் பாதுகாப்பதற்கு ஒருவரிடத்திலும் சரீர பெலனில்லை. அவர்கள் நகரத்தைப் பாதுகாக்காமல், தங்கள் உணவைத் தேடி அலைகிறார்கள். எருசலேமின் மதில் சுவர் பெரியதாகவும், வலிமையுள்ளதாகவும் இருந்தாலும், மனுஷரில்லாத மதில் சுவருக்கு வலிமையிருக்காது. கர்த்தரும் எருசலேமைப் பாதுக்காக்கவில்லை. யூதாவின் மனுஷரும் எருசலேமின் மதிலை பாதுகாக்கவில்லை. இதனால் நகரத்தின் மதில் இடிக்கப்பட்டது.

கல்தேயர் எருசலேம் நகரத்தை சூழ்ந்திருக்கிறார்கள். யூதாவின் யுத்தமனுஷர் எல்லோரும் இராத்திரி காலத்திலே கல்தேயருக்கு தப்பி ஓடுகிறார்கள். அவர்கள் ராஜாவுடைய தோட்டத்தின் வழியே இரண்டு மதில்களுக்கும் நடுவான வாசல்வழியாக நகரத்திலிருந்து புறப்பட்டு, வயல்வெளியின் வழியே தப்பித்து ஓடுகிறார்கள். அவர்களோடு சேர்ந்து சிதேக்கியா ராஜாவும் தப்பித்து ஓடுகிறான் (எரே 52:7).

ஆனாலும் கல்தேயருடைய இராணுவத்தார் சிதேக்கியா ராஜாவை பின்தொடர்ந்து போகிறார்கள். அப்பொழுது சிதேக்கியாவின் இராணுவத்தார் எல்லோரும் அவனை விட்டு சிதறிப்போயிருந்தார்கள். சிதேக்கியாவுக்கு பாதுகாப்பு கொடுக்க, அவனோடுகூட ஒரு வீரனுமில்லை. சிதேக்கியாவைப் பின்தொடர்ந்த கல்தேயருடைய இராணுவம் எரிகோவின் சமனான பூமியில் அவனைக் கிட்டினார்கள்.

கல்தேயருடைய இராணுவத்தார் சிதேக்கியா ராஜாவை எரிகோவின் சமனான பூமியிலே பிடித்து, அவனை நேபுகாத்நேச்சாரிடத்திற்கு கொண்டு போனார்கள். அப்போது பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் ஆமாத் தேசத்தின் ஊராகிய ரிப்லாவிலே இருந்தான். அந்த ஊரில் நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவுக்கு நியாயத்தீர்ப்பு கொடுத்தான் (எரே 52:9).

சிதேக்கியா ஏற்கெனவே நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாக கலகம்பண்ணினவன். நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை தேசத்துரோகியாக தீர்ப்பு செய்து, அவனுக்கு கடினமான தண்டனை கொடுத்தான்.

பாபிலோன் ராஜா சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டினான்; யூதாவின் பிரபுக்களெல்லாரையும் ரிப்லாவிலே வெட்டினான். சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கி, அவனுக்கு இரண்டு விலங்குகளைப் போடுவித்தான் (எரே 52:10,11).

பாபிலோன் ராஜா சிதேக்கியாவை ரிப்லாவிலே விட்டுவிடவில்லை. சிதேக்கியாவின் இரண்டு கண்களையும் குருடாக்கி, அவனை பாபிலோனுக்கு கொண்டுபோனான். சிதேக்கியா மரணமடையும் நாள்மட்டும் நேபுகாத்நேச்சார், அவனை பாபிலோனிலுள்ள காவல் வீட்டில் அடைத்து வைத்தான் (எரே 52:11). சிதேக்கியாவின் வாழ்நாள் முழுவதும் இருளடைந்தது. அவனுடைய கண்கள் குருடாக்கப்பட்டது.

சிதேக்கியா பாபிலோனுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவனுக்கும் யூதாதேசத்திற்கும் இதுபோன்ற தீங்கு வரும் என்று, எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையை ஏற்கனவே அறிவித்தார். ஆனால் சிதேக்கியாவோ எரேமியாவின் வார்த்தைக்கு செவிகொடுக்கவில்லை. கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியவில்லை. ஆகையினால் இப்போது சிதேக்கியா பாபிலோன் தேசத்தில், கண்கள் குருடாக்கப்பட்டவனாக, தன் வாழ்நாள் முழுவதும் சிறையிருப்பிலிருக்கிறான்.

நேபுசராதான்
எரே 52:12-23

எரே 52:12. ஐந்தாம் மாதம் பத்தாந்தேதியிலே, பாபிலோன் ராஜாவுக்கு முன்பாக நிற்கிறவனாகிய காவற்சேனாதிபதியான நேபுசராதான் எருசலேமுக்கு வந்தான்; அது நேபுகாத்நேச்சார்என்னும் ராஜா பாபிலோனை அரசாளுகிற பத்தொன்பதாம் வருஷமாயிருந்தது.

எரே 52:13. அவன் கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரமனையையும், எருசலேமிலுள்ள எல்லா வீடுகளையும், ஒவ்வொரு பெரிய மனிதனுடைய வீட்டையும் அக்கினியினால் சுட்டெரித்துப் போட்டான்.

எரே 52:14. காவற்சேனாதிபதியோடிருந்த கல்தேயரின் இராணுவத்தாரெல்லாரும் எருசலேமைச் சுற்றிலும் இருந்த அலங்கங்களை இடித்துப்போட்டார்கள்.

எரே 52:15. ஜனத்தில் ஏழைகளான சிலரையும் நகரத்தில் மீதியான மற்ற ஜனத்தையும், பாபிலோன் ராஜாவின் வசமாக ஓடிவந்துவிட்டவர்களையும், மற்ற ஜனங்களையும் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் சிறைகளாகக் கொண்டுபோனான்.

எரே 52:16. ஆனால் தேசத்தாரில் ஏழைகளான சிலரைக் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் திராட்சத் தோட்டக்காரராகவும் பயிரிடுங்குடிகளாகவும் விட்டு வைத்தான்.

எரே 52:17. கர்த்தருடைய ஆலயத்திலிருந்து வெண்கலத் தூண்களையும், கர்த்தருடைய ஆலயத்திலிருந்த ஆதாரங்களையும், வெண்கலக் கடல்தொட்டியையும் கல்தேயர் உடைத்துப்போட்டு, அவைகளின் வெண்கலத்தையெல்லாம் பாபிலோனுக்கு எடுத்துக்கொண்டு போனார்கள்.

எரே 52:18. செப்புச்சட்டிகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், வெட்டுக் கத்திகளையும், கலங்களையும், கலயங்களையும், ஆராதனைக்குரிய சகல வெண்கலப்பணிமுட்டுகளையும் எடுத்துக்கொண்டு போனார்கள்.

எரே 52:19. பசும்பொன்னும் சுத்தவெள்ளியுமான கிண்ணங்களையும், தூபகலசங்களையும், கலங்களையும், சட்டிகளையும், விளக்குத் தண்டுகளையும், கலயங்களையும், கரகங்களையும் காவற்சேனாதிபதி எடுத்துக்கொண்டான்.

எரே 52:20. சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்து வைத்த இரண்டு தூண்களும் ஒரு கடல் தொட்டியும் ஆதாரங்களின் கீழ்நின்ற பன்னிரண்டு வெண்கல ரிஷபங்களும் ஆகிய இவைகளுக்குரிய வெண்கலத்துக்கு நிறையில்லை.

எரே 52:21. அந்தத் தூண்களோவெனில், ஒவ்வொரு தூணும் பதினெட்டுமுழ உயரமாயிருந்தது; பன்னிரண்டு முழ நூல் அதைச் சுற்றும்; நாலு விரற்கடை அதின் கனம்; உள்ளே குழாயாயிருந்தது.

எரே 52:22. அதின்மேல் வெண்கலக் குமிழ் இருந்தது; ஒரு குமிழின் உயரம் ஐந்து முழம், குமிழிலே சுற்றிலும் பின்னலும் மாதளம்பழங்களும் செய்திருந்தது; எல்லாம் வெண்கலமாயிருந்தது; அதற்குச் சரியாய் மற்றத் தூணுக்கும் மாதளம்பழங்களும்செய்திருந்தது.

எரே 52:23. தொண்ணூற்றாறு மாதளம்பழங்கள் நான்கு திசைகளுக்கும் எதிராகச் செய்திருந்தது; குமிழைச் சுற்றிலும் செய்திருந்த மாதளம்பழங்கள் நூறு.

கல்தேயர்கள் எருசலேம் நகரத்தைப் பிடித்துக்கொண்டார்கள். ஒரு மாதம் சென்ற பின்பு, பாபிலோன் ராஜாவின் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் என்பவன் எருசலேமுக்கு வருகிறான். இவன் ஐந்தாம் மாதம் பத்தாந்தேதியிலே எருசலேமுக்கு வருகிறான். அது நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா பாபிலோனை அரசாளுகிற பத்தொன்பதாம் வருஷமாயிருந்தது.

நேபுசராதான் எருசலேமுக்கு வந்து கர்த்தருடைய ஆலயத்தை அக்கினியினால் சுட்டெரித்துப்போடுகிறான். தேவாலயத்திலுள்ள எல்லா பொருட்களையும் தன்னுடைய தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். எருசலேமிலுள்ள தேவாலயம் கர்த்தருக்கு பரிசுத்தமான வாசஸ்தலமாகும். இங்கு யூதாமனுஷரின் முற்பிதாக்கள் கர்த்தரைத் துதித்து ஆராதித்தார்கள்.

"எங்கள் பிதாக்கள் உம்மைத் துதித்த பரிசுத்தமும் மகிமையுமான எங்களுடைய ஆலயம் அக்கினிக்கு இரையாகி, இன்பமான எங்களுடைய ஸ்தானங்களெல்லாம் பாழாயின" *(ஏசா 64:11).*

நேபுசராதான் எருசலேமுள்ள ராஜாவின் அரமனையையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போடுகிறான். சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டினபின்பு, தனக்கு ஒரு அரமனையைக் கட்டினார். நேபுசராதான் அக்கினியினால் சுட்டெரித்தது, சாலொமோன் ராஜா கட்டின அரமனையாக இருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

நேபுசராதான் கர்த்தருடைய ஆலயத்தையும், ராஜாவின் அரமனையையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போட்டு, அதோடு எருசலேமிலுள்ள எல்லா வீடுகளையும், ஒவ்வொரு பெரிய மனிதனுடைய வீட்டையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போடுகிறான்.

காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் கல்தேயரின் இராணுத்தாரோடு எருசலேமுக்கு வந்திருக்கிறான். அவர்களெல்லோரும் எருசலேமைச் சுற்றிலுமிருந்த அலங்கங்களை இடித்துப்போடுகிறார்கள் *(எரே 52:14).* பாபிலோன் தேசத்தார் எருசலேமுக்கு விரோதமாக பதினெட்டு மாதங்கள் முற்றிக்கைப் போட்டிருந்தார்கள். முற்றிக்கைக் காலம் அதிகமாயிருந்தது. ஆனாலும் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியா பாபிலோன் ராஜாவினிடத்தில் உடனே சரணடைய வரவில்லை. இதனால் கல்தேயருக்கு யூதாதேசத்தின்மீதும், எருசலேம் நகரத்தின்மீதும் மிகுந்த கோபமுண்டாயிற்று. தங்களுடைய கோபத்தை வெளிப்படுத்தும் வண்ணமாக கல்தேயரின் இராணுவத்தார் எல்லாரும் எருசலேமைச் சுற்றிலுமிருந்த அலங்கங்களை இடித்துப்போடுகிறார்கள்.

"நீர் நகரத்தை மண்மேடும், அரணான பட்டணத்தைப் பாழுமாக்கினீர்; அந்நியரின் ராஜதானியை ஊராயிராதபடிக்கும், என்றைக்கும் கட்டப்படாதபடிக்கும் செய்தீர்" *(ஏசா 25:2).*

நேபுசராதான் யூதாவின் மனுஷரில் அநேகரை தன்னுடைய தேசத்திற்கு சிறைகளாகக் கொண்டுபோகிறான். ஜனத்தில் ஏழைகளான சிலரையும் நகரத்தில் மீதியான மற்ற ஜனத்தையும், பாபிலோன்ராஜாவின் வசமாக ஓடிவந்துவிட்டவர்களையும், மற்ற ஜனங்களையும் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் சிறைகளாகக் கொண்டு போனான் *(எரே 52:15).* சிறைப்பிடிக்கப்பட்டவர்கள் எல்லோரும் பட்டயத்திற்கும், பஞ்சத்திற்கும் தப்பினவர்கள்.

ஆனால் தேசத்தாரில் ஏழைகளான சிலரைக் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் திராட்சத் தோட்டக்காரராகவும் பயிரிடுங்குடிகளாகவும் விட்டுவைத்தான் (எரே 52:16).

நேபுசராதான் கர்த்தருடைய ஆலயத்தை அக்கினியினால் சுட்டெரித்துப்போடும்போது, அங்கே பரிசுத்த பணிமுட்டுக்கள் ஏராளமாயிருக்கிறது. இவையெல்லாம் யூதருக்கு மிகவும் முக்கியமானவை. நேபுசராதான் தேவாலயத்திலிருந்த எல்லாவற்றையும் தன்னுடைய தேசத்திற்கு எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். ஒன்றையும் மீதியாய் வைக்கவில்லை.

பசும்பொன்னும் சுத்தவெள்ளியுமான கிண்ணங்களையும், தூபகலசங்களையும், கலங்களையும், சட்டிகளையும், விளக்குத்தண்டுகளையும், கலயங்களையும், கரகங்களையும் காவற்சேனாதிபதி எடுத்துக்கொண்டான் (எரே 52:19).

நேபுசராதானோடு, கல்தேயருடைய இராணுவத்தார் எல்லோரும் கர்த்தருடைய ஆலயத்திலுள்ளவைகளை கொள்ளையிடுகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயத்திலிருந்து வெண்கலத் தூண்களையும், கர்த்தருடைய ஆலயத்திலிருந்த ஆதாரங்களையும், வெண்கலக் கடல்தொட்டியையும் கல்தேயர் உடைத்துப்போட்டு, அவைகளின் வெண்கலத்தையெல்லாம் பாபிலோனுக்கு எடுத்துக்கொண்டு போனார்கள். செப்புச்சட்டிகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், வெட்டுக் கத்திகளையும், கலங்களையும், கலயங்களையும், ஆராதனைக்குரிய சகல வெண்கலப்பணிமுட்டுகளையும் எடுத்துக் கொண்டு போனார்கள் (எரே 52:17,18).

கல்தேயரின் இராணுவத்தார் கொண்டுபோனது எல்லாமே வெண்கலங்கள். இவை பொன்னையும் வெள்ளியையும்விட குறைவான மதிப்புள்ளவை. கல்தேயரின் இராணுவத்தார் எருசலேமைச் சுற்றிலுமிருந்த அலங்கங்களை இடித்துப்போடும்போது, அவர்கள் கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கல தூண்களையும் உடைத்துப்போடுகிறார்கள்.

கர்த்தருடைய ஆலயமும், ஆலயத்திலுள்ள பரிசுத்த பணிமுட்டுகளும் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளம். கல்தேயரோ கர்த்தருடைய ஆலயத்திலுள்ள எல்லாவற்றையும் உடைத்துப்போட்டு, அவற்றை தங்கள் தேசத்திற்கு தூக்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு அடையாளமாகயிருந்த சகலமும் எருசலேமைவிட்டு நீங்கிப்போயிற்று.

கர்த்தர் நம்மைப் பாதுகாக்கவில்லையென்றால், நமக்கு மெய்யான பாதுகாப்பு வேறு எதுவும் கிடையாது. கர்த்தர் எருசலேமைவிட்டு விலகிப்போன பின்பு, அவர்களுடைய தூண்களோ, அலங்கங்களோ எருசலேமின் குடிகளை பாதுகாக்கவில்லை.

கர்த்தருடைய ஆலயத்திலுள்ள தூண்கள் அலங்காரத்திற்காக நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் தூண்களுக்கு யாகின் என்றும், போவாஸ் என்றும் பெயர். யாகின் என்னும் பெயருக்கு "கர்த்தர் ஸ்தாபிப்பார்" என்றும், போவாஸ் என்னும் பெயருக்கு "அவருக்குள் பெலமுள்ளது" என்றும் பொருள். கல்தேயர்கள் கர்த்தருடைய ஆலயத்திலிருந்த வெண்கல தூண்களை உடைத்துப் போட்டதினால், கர்த்தர் இனிமேல் இஸ்ரவேல் வம்சத்தாரை ஸ்தாபிக்கமாட்டார் என்பதற்கும், கர்த்தருடைய வல்லமை இஸ்ரவேல் ஜனத்தாரோடு தங்கியிருக்காது என்பதற்கும் அடையாளமாயிற்று.

கர்த்தருடைய ஆலயத்திலுள்ள இரண்டு வெண்கல தூண்களைப்பற்றி, இங்கு விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

"சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்து வைத்த இரண்டு தூண்களும் ஒரு கடல் தொட்டியும் ஆதாரங்களின் கீழ்நின்ற பன்னிரண்டு வெண்கல ரிஷபங்களும் ஆகிய இவைகளுக்குரிய வெண்கலத்துக்கு நிறையில்லை. அந்தத் தூண்களோவெனில், ஒவ்வொரு தூணும் பதினெட்டுமுழ உயரமாயிருந்தது; பன்னிரண்டு முழ நூல் அதைச் சுற்றும்; நாலு விரற்கடை அதின் கனம்; உள்ளே குழாயாயிருந்தது. அதின்மேல் வெண்கலக் குமிழ் இருந்தது; ஒரு குமிழின் உயரம் ஐந்து முழம், குமிழிலே சுற்றிலும் பின்னலும் மாதளம்பழங்களும் செய்திருந்தது; எல்லாம் வெண்கலமாயிருந்தது; அதற்குச் சரியாய் மற்றத் தூணுக்கும் மாதளம்பழங்களும் செய்திருந்தது. தொண்ணூற்றாறு மாதளம்பழங்கள் நான்கு திசைகளுக்கும் எதிராகச் செய்திருந்தது; குமிழைச் சுற்றிலும் செய்திருந்த மாதளம்பழங்கள் நூறு" (எரே 52:20-23).

கர்த்தருடைய ஆலயத்திலிருந்த இரண்டு தூண்களும் எவ்வாறு செய்யப்பட்டன என்று 1இராஜாக்கள் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"இவன் இரண்டு வெண்கலத் தூண்களை உண்டாக்கினான்; ஒவ்வொரு தூண் பதினெட்டு முழ உயரமும், ஒவ்வொரு தூணின் சுற்றளவு பன்னிரண்டு முழ நூலளவுமாயிருந்தது. அந்தத் தூண்களுடைய தலைப்பில் வைக்க, வெண்கலத்தால் வார்க்கப்பட்ட இரண்டு கும்பங்களை உண்டாக்கினான்; ஒவ்வொரு கும்பமும் ஐந்துமுழ உயரமாயிருந்தது. தூண்களுடைய முனையின்மேலுள்ள கும்பங்களுக்கு வலைபோன்ற பின்னல்களும் சங்கிலிபோன்ற தொங்கல்களும், ஒவ்வொரு கும்பத்திற்கும் எவ்வேழாக இருந்தது" (1இராஜா 7:15-17).

தூண்களைப் பண்ணின விதமாவது: தலைப்பின்மேலுள்ள கும்பங்களை மூடும்படிக்கு, கும்பங்கள் ஒவ்வொன்றிலும் பின்னலின்மேல் சுற்றிலும் இரண்டு வரிசை மாதளம்பழங்களைச் செய்வித்தான். மண்டபத்தின் முன்னிருக்கும் அந்தத் தூண்களுடைய தலைப்பின்மேலுள்ள கும்பங்கள் லீலி புஷ்பங்களின் வேலையும், நாலுமுழ உயரமுமாயிருந்தது. இரண்டு தூண்களின்மேலுமுள்ள கும்பங்களில் செய்யப்பட்ட பின்னலுக்கு அருகே இருந்த இடத்தில் விம்பிய இருநூறு மாதளம்பழங்களின் வரிசைகள் சுற்றிலும் இருந்தது; மற்றக் கும்பத்திலும் அப்படியே இருந்தது (1இராஜா 7:18-20).

"அந்தத் தூண்களை தேவாலய வாசல் மண்டபத்தில் நிறுத்தினான்; அவன் வலதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு யாகீன் என்றும், இடதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு போவாஸ் என்றும் பேரிட்டான். தூண்களுடைய சிகரத்தில் லீலி புஷ்பவேலை செய்யப்பட்டிருந்தது; இவ்விதமாய்த் தூண்களின் வேலை முடிந்தது" (1இராஜா 7:21-22).

யூதாவின் அக்கிரமம் அதிகமாயிற்று. அவர்களுடைய அக்கிரமங்கள் நிவிர்த்தியாவதில்லை. கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்தது. யூதாவின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் கர்த்தரைவிட்டு விலகிப்போனார்கள். கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போனார். இதனால் எருசலேமுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு இல்லாமல் போயிற்று. கல்தேயர்கள் எருசலேமைப் பிடித்து, அதை அக்கினியால் சுட்டெரித்துப்போடுகிறார்கள். கர்த்தருடைய ஆலயத்திலுள்ளது எல்லாவற்றையும் கொள்ளையடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டுபோய்விடுகிறார்கள்.

யூதாமனுஷருடைய அக்கிரமம் ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் போலிருக்கிறது. "நான் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாகச் சொன்ன யாவையும், அவன்மேல் அந்நாளிலே வரப்பண்ணுவேன்; அதைத் தொடங்கவும் அதை முடிக்கவும் போகிறேன். அவன் குமாரர் தங்கள்மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்பு செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன். அதினிமித்தம் ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் ஒருபோதும் பலியினாலாவது காணிக்கையினாலாவது நிவிர்த்தியாவதில்லை என்று ஏலியின் குடும்பத்தைக்குறித்து ஆணையிட்டிருக்கிறேன் என்றார்" (1சாமு 3:12-14).

சாலொமோன் ராஜா கர்த்தருடைய ஆலயத்துக்காகச் செய்து வைத்த இரண்டு தூண்களும் ஒரு கடல் தொட்டியும் ஆதாரங்களின் கீழ்நின்ற பன்னிரண்டு வெண்கல ரிஷபங்களும் ஆகிய இவைகளுக்குரிய வெண்கலத்துக்கு நிறையில்லை (எரே 52:20).

இந்தத் தூண்களும் கடல்தொட்டியும் செய்யப்பட்டபோது, அதில் ஏராளமான வெண்கலங்கள் பயன்படுத்தப்பட்டது. "இந்தச் சகல பணிமுட்டுகளின் வெண்கலம் மிகவும் ஏராளமுமாயிருந்தபடியால், சாலொமோன் அவைகளை நிறுக்கவில்லை; அதினுடைய நிறை இவ்வளவென்று ஆராய்ந்து பார்க்கவுமில்லை" (1இராஜா 7:47).

"இந்தப் பணிமுட்டுகளையெல்லாம் சாலொமோன் வெகு ஏராளமாய் உண்டு பண்ணினான்; வெண்கலத்தின் நிறை தொகைக்கு அடங்காததாயிருந்தது" (2நாளா 4:18).

வியாபாரம்பண்ணுகிறவர்கள்தான் பொருட்களை நிறுத்துப்பார்த்து விற்கவும் வாங்கவும் செய்வார்கள். கல்தேயரின் இராணுவத்தாரோ தேவாலயத்தைக் கொள்ளையிட வந்திருக்கிறார்கள். கொள்ளைக்காரர்கள் ஒன்றையும் நிறுத்துப் பார்த்து கொள்ளையிடமாட்டார்கள். தங்கள் கண்களில் பட்டதையும், கைகளில் சிக்குவதையும் எடுத்துக்கொள்வார்கள். அதுபோலவே கல்தேயரின் இராணுவத்தார், தேவாலயத்திலுள்ள எல்லா பொருட்களையும் கொள்ளையிட்டு, தங்கள் தேசத்திற்கு கொண்டு போய்விடுகிறார்கள்.

பாபிலோன் ராஜா
எரே 52:24-30

எரே 52:24. காவற்சேனாதிபதி பிரதான ஆசாரியனாகிய செராயாவையும், இரண்டாம் ஆசாரியனாகிய செப்பனியாவையும், வாசற்படியின் மூன்று காவற்காரரையும் பிடித்துக்கொண்டுபோனான்.

எரே 52:25. நகரத்திலேயென்றால் அவன் யுத்த மனுஷரின் விசாரிப்புக்காரனாகிய பிரதானி ஒருவனையும், ராஜாவின் மந்திரிகளில் நகரத்தில் அகப்பட்ட ஏழுபேரையும், தேசத்தின் ஜனத்தைச்சேவகம் எழுதுகிற தலைமையான சம்பிரதியையும், தேசத்து ஜனத்திலே பட்டணத்தின் நடுவில் அகப்பட்ட அறுபது பேரையும் பிடித்துக்கொண்டு போனான்.

எரே 52:26. அவர்களைக் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் பிடித்து, அவர்களை ரிப்லாவுக்குப் பாபிலோன் ராஜாவினிடத்திற்குக் கொண்டுபோய்விட்டான்.

எரே 52:27. அப்பொழுது பாபிலோன் ராஜா ஆமாத் என்னும் தேசத்தின் பட்டணமாகிய ரிப்லாவிலே அவர்களை வெட்டிக் கொன்றுபோட்டான்; இவ்விதமாக யூதர்கள் தங்கள் தேசத்திலிருந்து சிறைகளாய்க் கொண்டுபோகப் பட்டார்கள்.

எரே 52:28. நேபுகாத்நேச்சார் சிறைபிடித்துப்போன ஜனங்களின் தொகை எவ்வளவென்றால், ஏழாம் வருஷத்தில் மூவாயிரத்து இருபத்துமூன்றுயூதரும்,

எரே 52:29. நேபுகாத்நேச்சாருடைய பதினெட்டாம் வருஷத்தில் எருசலேமிலிருந்து எண்ணூற்று முப்பத்திரண்டு பேர்களும் கொண்டுபோகப்பட்டார்கள்.

எரே 52:30. நேபுகாத்நேச்சாருடைய இருபத்துமூன்றாம் வருஷத்தில் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் யூதரில் எழுநூற்று நாற்பத்தைந்து பேர்களைச் சிறைபிடித்துக் கொண்டுபோனான்; ஆக நாலாயிரத்து அறுநூறு பேர்களாம்.

பாபிலோன் ராஜவாகிய நேபுகாத்நேச்சார், ஆமாத் என்னும் தேசத்தின் பட்டணமாகிய ரிப்லாவிலே, இஸ்ரவேலின் மூப்பர்களை வெட்டிப்போட்டான். இஸ்ரவேல் தேசத்தில் எழுபது மூப்பர்கள் இருந்தார்கள்.

"அப்பொழுது மோசே புறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்குச் சொல்லி, ஜனங்களின் மூப்பரில் எழுபதுபேரைச் கூட்டி, கூடாரத்தைச் சுற்றிலும் அவர்களை நிறுத்தினான். கர்த்தர் மேகத்தில் இறங்கி, அவனோடே பேசி, அவன்மேலிருந்த ஆவியை மூப்பராகிய அந்த எழுபதுபேர் மேலும் வைத்தார்; அந்த ஆவி அவர்கள்மேல் வந்து தங்கினமாத்திரத்தில் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்; சொல்லி, பின்பு ஒய்ந்தார்கள்" (எண் 11:24,25).

"காவல் சேனாபதி பிரதான ஆசாரியனாகிய செராயாவையும், இரண்டாம் ஆசாரியனாகிய செப்பனியாவையும், வாசல்காக்கும் மூன்று காவற்காரரையும் பிடித்தான். நகரத்திலே அவன் யுத்த மனுஷரின் விசாரிப்புக்காரனாகிய பிரதானி ஒருவனையும், ராஜாவின் மந்திரிகளிலே நகரத்தில் அகப்பட்ட ஐந்துபேரையும், தேசத்தின் ஜனத்தைச் சேவகம் எழுதுகிற தலைவனான இராணுவச்சம்பிரதியையும், தேசஜனத்திலே நகரத்தில் அகப்பட்ட அறுபதுபேரையும் பிடித்தான்" (2இராஜா 25:18,19).

இந்த அதிகாரத்தில் ராஜாவின் மந்திரிகளில் நகரத்தில் அகப்பட்டவர்கள் ஏழுபேர் (எரே 52:25) என்று எழுதப்பட்டிருக்கிறது. 2இராஜா 25:18,19-ஆகிய வசனங்களிலோ ராஜாவின் மந்திரிகளில் நகரத்தில் அகப்பட்டவர்கள் ஐந்துபேர் என்று எழுதப்பட்டிருக்கிறது. மீதமுள்ள இரண்டுபேரும் எரேமியா, எபெத்மெலேக் என்போராவர். இவர்கள் ஆரம்பத்தில் சிறைப்பிடிக்கப்பட்டாலும் பின்பு விடுவிக்கப்படுகிறார்கள். பாபிலோன் ராஜவாகிய நேபுகாத்நேச்சார் சிதேக்கியா ராஜாவின் மந்திரியில் ஐந்துபேரை மாத்திரமே வெட்டினான்.

யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவின் பிரபுக்களில் செராயா என்பவன் சாந்தகுணமுள்ள பிரபு (எரே 51:60). பிரதான ஆசாரியனாகிய செராயாவோ கலககுணமுள்ளவன். அவன் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாய் எதிர்த்து நின்றான். பிரபுவாகிய செராயாவும், பிரதான ஆசாரியனாகிய செராயாவும் வெவ்வேறு நபர்கள்.

காவற்சேனாதிபதி பிரதான ஆசாரியனாகிய செராயாவையும், இரண்டாம் ஆசாரியனாகிய செப்பனியாவையும், வாசற்படியின் மூன்று காவற்காரரையும் பிடித்துக்கொண்டுபோனான் (எரே 52:24).

யூதாதேசத்தின் பிரபுக்கள், யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் தவறான பாதைகளில் வழிநடத்திச் சென்றார்கள். இதன் நிமித்தமாய் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு முதலாவதாக யூதாவின் ராஜாமீதும், அவனுடைய பிரபுக்கள்மீதும், அவனுடைய பிரதான ஆசாரியன்மீதும் வருகிறது.

நேபுகாத்நேச்சார் யூதாதேசத்திலுள்ள யூதர்களை தன்னுடைய தேசத்திற்கு சிறைப்பிடித்து கொண்டுபோகிறான். யூதர்களும் தங்கள் தேசத்திலிருந்து சிறையாகக் கொண்டுபோகப்பட்டார்கள் (எரே 52:27)

"நீங்கள் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே பிறந்தவனானாலும் உங்கள் நடுவே தங்குகிற அந்நியனானாலும் இந்த அருவருப்புகளில் ஒன்றையும் செய்ய வேண்டாம்" (லேவி 18:28).

யூதாதேசத்திலிருந்து பாபிலோன் தேசத்திற்கு சிறைகளாக கொண்டுபோகப்பட்ட யூதர்களின் எண்ணிக்கையும் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. யூதர்கள் இரண்டு தடவை பாபிலோன் தேசத்திற்கு சிறைகளாகக் கொண்டுபோகப்பட்டார்கள். முதலாவது சிறையிருப்பு நேபுகாத்நேச்சாருடைய ஆட்சிக்காலத்தின் ஏழாம் வருஷத்தில் நடைபெற்றது. இந்தச் சிறையிருப்பு அவனுடைய ஆட்சிக்காலத்தின் எட்டாம் வருஷத்தில் உண்டாயிற்று என்று 2இராஜாக்கள் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"அப்பொழுது யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனும், அவன் தாயும், அவன் ஊழியக்காரரும், அவன் பிரபுக்களும், பிரதானிகளும் பாபிலோன் ராஜாவினிடத்திற்குப் புறப்பட்டுப்போனார்கள்; அவனைப் பாபிலோன் ராஜா தன் ஆளுகையின் எட்டாம் வருஷத்திலே பிடித்துக் கொண்டான்" (2இராஜா 24:12).

யூதாவின் மனுஷருக்கு இரண்டாவது சிறையிருப்பு பாபிலோன் ராஜாவின் பதினெட்டாம் வருஷத்தில் உண்டாயிற்று. இந்தச் சிறையிருப்பு அவனுடைய பத்தொன்பதாம் வருஷத்தில் உண்டாயிற்று என்று இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"ஐந்தாம் மாதம் பத்தாந்தேதியிலே, பாபிலோன் ராஜாவுக்கு முன்பாக நிற்கிறவனாகிய காவற்சேனாதிபதியான நேபுசராதான் எருசலேமுக்கு வந்தான்; அது நேபுகாத்நேச்சார் என்னும் ராஜா பாபிலோனை அரசாளுகிற பத்தொன்பதாம் வருஷமாயிருந்தது" *(எரே 52:12)*.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப் போனவர்களின் எண்ணிக்கையிலும் வித்தியாசமுள்ளது. நேபுகாத்நேச்சார் ஏழாம் வருஷத்தில் மூவாயிரத்து இருபத்து மூன்று யூதர்களை சிறைப்பிடித்துக்கொண்டுபோனான் என்று இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"நேபுகாத்நேச்சார் சிறைபிடித்துப்போன ஜனங்களின் தொகை எவ்வளவென்றால், ஏழாம் வருஷத்தில் மூவாயிரத்து இருபத்துமூன்று யூதர்" *(எரே 52:28)*.

தங்கள் தேசத்திலிருந்து பாபிலோனுக்கு சிறைகளாகக் கொண்டுபோகப்பட்டவர்களின் எண்ணிக்கை பதினெட்டாயிரம் யூதர்கள் என்று 2இராஜாக்கள் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"எருசலேமியர் அனைவரும் சகல பிரபுக்களும் சகல பராக்கிரமசாலிகளுமாகிய பதினாயிரம்பேரையும், சகல தச்சரையும் கொல்லரையும் சிறைபிடித்துக் கொண்டு போனான்; தேசத்தில் ஏழை ஜனங்களே அல்லாமல் வேறொருவரும் மீதியாயிருக்கவில்லை. அவன் யோயாக்கீனையும், ராஜாவின் தாயையும், ராஜாவின் ஸ்திரீகளையும், அவன் பிரதானிகளையும், தேசத்தின் பராக்கிரமசாலிகளையும் எருசலேமிலிருந்து பாபிலோனுக்குச் சிறைபிடித்துக் கொண்டு போனான். இப்படியே பாபிலோன் ராஜா பராக்கிரமசாலிகளான மனுஷராகிய ஏழாயிரம்பேரையும், தச்சரும் கொல்லருமாகிய ஆயிரம்பேரையும், யுத்தம்பண்ணத்தக்க பலசாலிகளையும் பாபிலோனுக்குச் சிறைபிடித்துக் கொண்டுபோனான்" *(2இராஜா 24:14-16)*.

காவற்சேனாபதியாகிய நேபுசராதான் யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் சிறைப்பிடித்து, அவர்களை ரிப்லாவிலிருந்த நேபுகாத்நேச்சாரிடத்திற்கு கொண்டுபோனான். அப்பொழுது நேபுகாத்நேச்சார், ரிப்லாவிலே, அவர்களை வெட்டிக்கொன்றுபோட்டான். அவர்களில் அநேகர் பட்டயத்தினால் செத்துப்போனார்கள். இதன் நிமித்தமாய் சிறையிருப்புக்குப்போன யூதர்களின் எண்ணிக்கையில் இந்த வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. யூதர்கள் ரிப்லாவிலே வெட்டப்படுவதற்கு முன்பாக, அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாயும், அவர்கள் வெட்டப்பட்ட பின்பு, அவர்களுடைய எண்ணிக்கை குறைவாயும் இருக்கிறது.

யூதர்கள் தங்கள் தேசத்திலிருந்து மூன்றாம் முறையாகவும் சிறைகளாய்க் கொண்டுபோகப்பட்டார்கள். இந்த சம்பவம் இதற்கு முன்பு இராஜாக்கள் புஸ்தகத்திலோ அல்லது நாளாகமம் புஸ்தகத்திலோ எழுதப்படவில்லை. இந்த அதிகாரத்தில் மாத்திரமே எழுதப்பட்டிருக்கிறது. யூதர்களின் மூன்றாவது சிறையிருப்பு நேபுகாத்நேச்சாருடைய இருபத்து மூன்றாம் வருஷத்தில் உண்டாயிற்று. எருசலேம் அழிக்கப்பட்டு நான்கு வருஷங்களுக்கு பின்பு யூதர்களின் மூன்றாவது சிறையிருப்பு உண்டாயிற்று.

"நேபுகாத்நேச்சாருடைய இருபத்துமூன்றாம் வருஷத்தில் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதான் யூதரில் எழுநூற்று நாற்பத்தைந்துபேர்களைச் சிறைபிடித்துக்கொண்டுபோனான்; ஆக நாலாயிரத்து அறுநூறு பேர்களாம்" *(எரே 52:30)*.

நேபுகாத்நேச்சார் யூதாதேசத்திற்கு கெதலியாவை அதிகாரியாக நியமித்திருந்தான். ஆனால் கெதலியாவை அவனுடைய விரோதிகள் கொன்றுபோட்டார்கள். இதன் நிமித்தமாய் பாபிலோன் ராஜாவுக்கு யூதர்கள்மீது மிகுந்த கோபமுண்டாயிற்று. அவன் தன் காவற்சேனாதிபதியாகிய நேபுசராதானை யூதாதேசத்திற்கு அனுப்பினான். அப்போது நேபுசராதான் யூதாவுக்கு வந்து, யூதரில் எழுநூற்று நாற்பத்தைந்து பேர்களை சிறைகளாகப் பிடித்து பாபிலோனுக்கு கொண்டுபோனான்.

பாபிலோன் தேசத்து சிறையிருப்புக்குப்போன யூதர்களின் எண்ணிக்கை நாலாயிரத்து அறுநூறு பேர்கள். இவர்கள் சொற்ப எண்ணிக்கையில் இருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை பாபிலோன் தேசத்திலே ஆசீர்வதிக்கிறார். அங்கே அவர்கள் பலுகிப்பெருகுகிறார்கள். பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்து யூதர்கள் விடுவிக்கப்பட்டபோது, அவர்கள் ஆயிரக்கணக்கானோராயிருந்தார்கள். சத்துருக்கள் கர்த்தருடைய பிள்ளைகளை எந்த அளவுக்கு அதிகமாய் ஒடுக்கினார்களோ, அந்த அளவுக்கு கர்த்தருடைய பிள்ளைகள் அதிகமாய்ப் பெருகினார்கள்.

யோயாக்கீன்
எரே 52:31-34

எரே 52:31. யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனுடைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் இருபத்தைந்தாம் தேதியிலே, ஏவில்மெரொதாக் என்னும் பாபிலோன் ராஜா, தான் ராஜாவான வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச் சிறைச்சாலையிருந்து வெளிப்படப்பண்ணி, அவன் தலையை உயர்த்தி,

எரே 52:32. அவனோடே அன்பாய்ப் பேசி, அவனுடைய ஆசனத்தைத் தன்னோடே பாபிலோனில் இருந்த ராஜாக்களுடைய ஆசனங்களுக்கு மேலாகவைத்து,

எரே 52:33. அவனுடைய சிறையிருப்பு வஸ்திரங்களை மாற்றினான்; அவன் உயிரோடிருந்த சகல நாளும் தன் சமுகத்தில் நித்தம் போஜனம்பண்ணும்படி செய்தான்.

எரே 52:34. அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவனுடைய மரணநாள் பரியந்தமும், அவனுடைய செல்வுக்காகப் பாபிலோன் ராஜாவினால் கட்டளையான அநுதினத் திட்டத்தின்படி, அநுதினமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது.

யோயாக்கீன் ராஜா பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த சம்பவம் 2இராஜாக்கள் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

"யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனுடைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வருஷம் பன்னிரண்டாம் மாதம் இருபத்தேழாந்தேதியிலே, ஏவில் மெரொதாக் என்னும் பாபிலோன் ராஜா, தான் ராஜாவான வருஷத்திலே, யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீனைச் சிறைச்சாலையிருந்து புறப்படப்பண்ணி, அவன் தலையை உயர்த்தி, அவனோடே அன்பாய்ப் பேசி, அவனுடைய சிங்காசனத்தைத் தன்னோடே பாபிலோனிலிருந்து ராஜாக்களின் சிங்காசனங்களுக்கு உயரமாக வைத்து, அவனுடைய சிறைச்சாலை வஸ்திரங்களை மாற்றினான்; அவன் உயிரோடிருந்த சகல நாளும் நித்தம் தனக்கு முன்பாகப் போஜனம்பண்ணும்படி செய்தான். அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவனுடைய செலவுக்காக, ராஜாவினால் கட்டளையான அநுதினத் திட்டத்தின்படி, அநுதினமும் கொடுக்கப்பட்டுவந்தது" *(2இராஜா 25:27-30)*.

யோயாக்கீன் ராஜா பாபிலோன் தேசத்து சிறையிருப்பிலிருந்த சம்பவம் இங்கு மறுபடியுமாய் எழுதப்பட்டிருக்கிறது. 2இராஜாக்கள் புஸ்தகத்தில் இருபத்தேழாந் தேதி என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தில் இருபத்தைந்தாம் தேதி என்று எழுதப்பட்டிருக்கிறது *(எரே 52:31)*.

பாபிலோன் தேசத்து ராஜாவாகிய ஏவில்மெரொதாக் யோயாக்கீனை விடுவிக்குமாறு இருபத்தைந்தாம் தேதியிலே உத்திரவிட்டிருக்கலாம். ராஜாவின் உத்தரவு இருபத்தேழாம் தேதியிலே நிறைவேற்றப்பட்டிருக்கலாம்.

நேபுகாத்நேச்சார் யோயாக்கீனை தன்னுடைய வாழ்நாள் முழுவதும் சிறையிலடைத்திருந்தான். நேபுகாத்நேச்சாரின் குமாரனாகிய ஏவில்மெரொதாக்கோ, யோயாக்கீன்மீது அன்பாயிருந்தான். ஆனாலும் நேபுகாத்நேச்சார் யோயாக்கீனை சிறைச்சாலையிலிருந்து விடுதலைபண்ணவில்லை. அவனுக்கு ஒரு சலுகையும் காண்பிக்கவில்லை. நேபுகாத்நேச்சார் மரித்த பின்பே, ஏவில்மெரொதாக்கால் யோயாக்கீனுக்கு சலுகை காண்பிக்க முடிந்தது.

யோயாக்கீன் யூதாதேசத்தின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆட்சிபுரிந்தவன். நேபுகாத்நேச்சார் அவனுடைய சிங்காசனத்திலிருந்து அவனை இறக்கிவிட்டு, சிறைச்சாலையில் அடைத்துவிட்டான். ஏவில்மெரொதாக் யோயாக்கீனை மறுபடியும் சிங்காசனத்தில் அமரச்செய்தான். அவனுடைய சிறையிருப்பு வஸ்திரங்களை மாற்றினான். சிறைச்சாலை சாப்பாட்டிற்கு பதிலாக, தன்னுடைய சமுகத்தில் நித்தம் போஜனம்பண்ணுமாறு செய்தான்.

ஏவில்மெரொதாக் யோயாக்கீனோடு அன்பாய்ப் பேசி, அவனுடைய ஆசனத்தைத் தன்னோடே பாபிலோனில் இருந்த ராஜாக்களுடைய ஆசனங்களுக்கு மேலாகவைத்து, அவனுடைய சிறையிருப்பு வஸ்திரங்களை மாற்றினான்; அவன் உயிரோடிருந்த சகல நாளும் தன் சமுகத்தில் நித்தம் போஜனம்பண்ணும்படி செய்தான் (எரே 52:32,33).

யோயாக்கீன் ஒருகாலத்தில் ராஜவஸ்திரம் அணிந்திருந்தான். நேபுகாத்நேச்சார் அவனுடைய ராஜவஸ்திரங்களை உரிந்துபோட்டு அவனுக்கு சிறையிருப்பு வஸ்திரங்களை உடுத்தினான். இப்போதோ ராஜாவின் குமாரனாகிய ஏவில்மெரொதாக், யோயாக்கீனுடைய சிறையிருப்பு வஸ்திரங்களை மாற்றி, அவனுக்கு மறுபடியும் ராஜவஸ்திரங்களைத் தரிப்பிக்கிறான். யோயாக்கீன் உயிரோடிருந்த சகல நாளும் அவனுக்கு பாபிலோன் ராஜாவின் கண்களில் தயவு கிடைத்தது.

யோயாக்கீன் ராஜாவைப்போலவே நமக்கும் நீண்டகாலத்திற்கு பாடுகள் இருக்கலாம். அது நம்மைவிட்டு சீக்கிரத்தில் நீங்காவிட்டாலும், நம்முடைய பாடுகளும் வேதனைகளும் நம்மைவிட்டு நீங்கும் என்று நாம் பொறுமையோடு காத்திருக்கவேண்டும்.

யோயாக்கீன் பதினெட்டு வயதில் சிறையிலடைக்கப்பட்டான். முப்பத்தேழு வருஷங்களாக சிறையிருப்பிலிருந்தான். இத்தனை வருஷங்களாக அவன் சிறையிருப்பின் பாடுகளையும், வேதனைகளையும் அனுபவித்தான்.

ஆனாலும் யோயாக்கீனுக்கு கர்த்தருடைய கண்களில் தயவு கிடைத்தது. கர்த்தருக்குகேற்ற வேளையில் யோயாக்கீனுக்கு நன்மை உண்டாயிற்று.

கர்த்தருடைய கிருபை வெளிப்படும்போது, நம்மைத் துன்பப்படுத்துகிறவர்கள்கூட நமக்கு உதவிசெய்வார்கள். அதுவரையிலும் நமக்கு சத்துருக்களாயிருந்தவர்கள், இனிமேல் சகாயராயிருப்பார்கள். நமக்கு விரோதமாக கடின இருதயத்தோடிருந்தவர்கள், நம்மீது அன்பாயிருப்பார்கள்.

"அவர்கள் கூப்பிடுதலை அவர் கேட்கும்போதோ, அவர்களுக்கு உண்டான இடுக்கத்தை அவர் கண்ணோக்கி, அவர்களுக்காகத் தமது உடன்படிக்கையை நினைத்து, தமது மிகுந்த கிருபையின்படி மனஸ்தாபப்பட்டு, அவர்களைச் சிறைபிடித்த யாவரும் அவர்களுக்கு இரங்கும்படி செய்தார்" (சங் 106:44-46).

கர்த்தருக்காக காத்திருக்கிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். கர்த்தருடைய இரட்சிப்புக்காக காத்திருக்கிறவர்கள் ஏமாந்துபோக மாட்டார்கள். நாம் கர்த்தருடைய சமுகத்தில் பொறுமையோடு காத்திருக்க பழகிக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய சித்தம் நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறும் வரையிலும், நாம் அவருடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிருக்கவேண்டும்.

எரேமியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் விசுவாசிகளாகிய நமக்கு எச்சரிப்பாக எழுதப்பட்டிருக்கிறது. சபையிலும், சமுதாயத்திலும் உயர்ந்த அந்தஸ்துக்களில் இருப்பவர்கள்கூட, கர்த்தரைவிட்டுவிலகி பின்வாங்கிப்போவதற்கு வாய்ப்புள்ளது.

நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பவில்லையென்றால், தேவனுடைய கோபம் நம்மீது வரும். நம்முடைய அழிவுக்கு நாமே காரணமாகயிருப்போம். கர்த்தர் கிருபையுள்ளவர். அவர் நீதியுள்ளவராகவும் இருக்கிறார்.